# ஜனோபிமானி.

## PEOPLES' FRIEND.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக
உழைத்துவரும் ஒரு உயர்ந்த மாஸாந்தரப் பத்ரிகை.

OFFICE OF THE REGISTRAR ... 4 - MAY 1917 MADRAS

EDITOR

**G. A. Vaidyaraman B. A.**

பத்ராதிபர்

**ஜி. எ. வைத்யராமன் பி. எ.**

VOL. VIII.] 1916 [8-ம் புஸ்தகம்

உள்நாட்டுக்கு சந்தா ரூபா **4-0-0** வெளி நாட்டுக்கு சந்தா ரூபா **6-0-0**

G. A. VAIDYARAMAN & CO.,
PUBLISHERS,
MADRAS.

ஜி. எ. வைத்யராமன் அண்டு கம்பெனி

**மதராஸ்.**

10-3-17

162032

# அட்டவணை.


பக்கம்.

**விசேஷ வ்யாஸங்கள்.—**

முதலாளியும் உழைப்பாளியும்—
  டி. லக்ஷ்மிநாராயண அய்யங்கார், பி.ஏ.... 2
கொடுமையாய் ஹிம்ஸை செய்யும் செடிகள் ... 5
பொருளாதார ஸம்பந்தமாய் இந்தியாவுக்கு வேண்டியவை ... 8
பள்ளிக்கூடங்களில் தேசபாஷைகள் கற்பித்தல்—
  எஸ். யக்ஞஸாமி ... 10
இயற்கைக்கு மாறான பிறவிகள் ... 12
ஒரு பெண் கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்கள்—
  எ. கே. பத்மனுபாசாரி, பி. ஏ., ... 14
சென்னை மாகாண கோவாபரேடிவ் கான்பரென்ஸ் ... 18
படகுப் பாலங்கள் ... 21
யுத்தத்தில் எதிரிகளை ஏமாற்றுதல் ... 58
தஞ்சாவூர் ஜில்லாவில் ஆடு வளர்க்கும் விதம்—
  ஜி. சேஷாத்ரி, பி.ஏ., ... 61
கைத்தொழில்களின் அபிவ்ருத்தி ... 63
எலிகள்—
  ஆர். பி. ஸ்ரீநிவாஸய்யர் ... 66
தவணைதப்பிக் கடன் செலுத்துவது ... 69
பானம் பருகுவதும் அதற்கேற்ற ஸமயமும் 71
மாணக்கருக்கு நீதிபோதனை ... 73
யுத்தமும் கடுதாசி வ்யாபாரமும் ... 75
நிலத்தீர்வை ஸெட்டில்மெண்டுகளை ஒழுங்கு படுத்துவது ... 78
முள்கம்பி வேலிகள் ... 106
தென்னை சாகுபடி—
  ஜி. சேஷாத்ரி, பி. ஏ. ... 109
எலிகள்—
  ஆர். பி. ஸ்ரீநிவாஸய்யர் ... 112
இந்திய யுத்தங்களில் கருணை ... 116
விவஸாய விளை பொருள்களை ஜப்தி செய்தல் ... 117
இந்தியாவில் பெண்கல்வி ... 119
தமிழும் அதன் தற்போதைய நிலைமையும்—
  வி. அங்கண்ணன் ... 123
புது வரிகள் ... 125
தண்ணீரும் செடிகளும்—
  டி. எஸ். ராமய்யர் ... 127
சென்னை ராஜதானியின் 1916-17-ம் வருஷத்திய வரவு செலவு மதிப்பு திட்டம் ... 154

வ்யாபார விளம்பரம்—
  என். கே. வைத்யநாதய்யர் ... 157
குழந்தையின் மனோபாவம்—
  கே. டி. ஸுந்தரராஜன் ... 161
பன்றி—
  டி. எஸ். வைத்யநாதன் ... 163
ஜப்பானில் விவஸாய அபிவ்ருத்தி ... 165
கோரைப்புல்—
  தி. ப. ஸுப்பராய ஐயர் ... 166
கைத்தொழில் கமிஷன் ... 169
இந்தியாவில் பெண்கல்வி ... 170
சென்னை மாகாண கான்பரென்ஸ் ... 172
ராஜ வம்சங்களில் கல்யாணச் செலவு ... 174
லார்ட் ஹார்டிஞ்ஜின் ஆட்சி—
  வே. முத்துஸாமி ஐயர், எம்.ஏ., எல்.டி. 176
யுத்தகளத்தில் பீரங்கிகளை மறைத்துவைத்தல் ... 202
இந்தியாவைப்பற்றிய சில கணக்கு விவரங்கள் ... 204
புஷ்பங்களின் பாகங்களும் அவற்றின் நிறமும்—
  டி. எஸ். ராமய்யர் ... 208
ருமேனியரின் வழக்கங்களும் அவரது குருட்டு நம்பிக்கைகளும்—
  வி. ஸுப்ரமணிய ஐயர் ... 209
அன்புக்கும் அழிவோ?—
  ஏ. வி. ராமஸ்வாமி ... 212
ஓர் விவஸாயக் குடியேற்றம்—
  கந்தஸாமி குப்தன் ... 218
தூக்கம் ... 219
கோயம்புத்தூரில் ஸ்தாபிக்கக்கூடிய தொழில்கள் ... 221
ஸ்த்ரீ உளவாளிகள் ... 222
ஜெர்மானியர்களுடைய வ்யாபார முறைகள் ... 250
சப்பாத்துக்கள்ளியின் சில உபயோகங்கள்... 252
போர்புரியும் எறும்புகள் ... 254
சென்னை ராஜதானியின் கடல் வ்யாபாரம்... 257
மிக ப்ரும்மாண்டமான புஸ்தகம் ... 260
குழந்தைகளை கவனிக்கும்படி செய்வது—
  கே. டி. ஸுந்தரராஜன், பி.ஏ., எல்.டி. ... 262
நிலத்தீர்வையும் அது விஷயமாய்ச் சட்டம் செய்தலும் ... 264
அன்புக்கும் அழிவோ—
  ஏ. வி. ராமஸ்வாமி ... 267
யுத்தத்தின் செலவு ... 298

| | பக்கம். |
|---|---|
| மூளை— | |
| ஏ. கே. ஸுந்தரராஜன் ... | 300 |
| அல்யூமினியம் ... | 302 |
| ஜன்புக்கும் அழிவோ— | |
| ஏ. வி. ராமஸ்வாமி ... | 304 |
| குடியின் கேடு— | |
| வி. எஸ். சிவராமக்ருஷ்ண சர்மா ... | 316 |
| கால்நடைகளின் தொற்று வ்யாதிகள் ... | 318 |
| ரம்ஸான்— | |
| மகமது முஸ்டாபா ... | 320 |
| இந்திய கைத்தொழில் கமிஷன் ... | 322 |
| யுத்தத்தில் த்ரவரூபமான நெருப்பு ... | 346 |
| வேலிக்கு உபயோகமாகும் செடிகள்— | |
| ஓய். எஸ். வெங்கட்டரமணய்யர், பி. ஏ.... | 347 |
| காலராவும் அதைத் தடுத்தலும் ... | 351 |
| யாழில் என்னும் பறைச்சி— | |
| வீதாபதி ... | 352 |
| கோபம்— | |
| பண்டித வி. ஸுப்ரமண்ய ஐயர் ... | 357 |
| இந்திய கைத்தொழில் கமிஷன் ... | 359 |
| பூச்சிகள் விரோதிகளிடமிருந்து காத்துக் கொள்ளும் உபாயங்கள் ... | 360 |
| மாஸலில் மதிப்புகள் தயார் செய்யும் முறை... | 362 |
| ஸைன்யத்தில் டெலிபோன் ... | 386 |
| வெக்கை ... | 387 |
| நவராத்ரி-துஷ்டநிக்ரஹம்— | |
| பண்டித வி. ஸுப்ரமண்ய அய்யர் ... | 390 |
| வாதுமை ... | 394 |
| பூச்சிகள் விரோதிகளிடமிருந்து காத்துக் கொள்ளும் உபாயங்கள் ... | 395 |
| நல்ல தூக்கம் வருவதெப்படி? ... | 397 |
| ஞாபக சக்தியும் அதை வ்ருத்திசெய்யும் விதமும்— | |
| கே. டி. ஸுந்தரராஜன் ... | 398 |
| ஜாவர தேசத்து ஸ்த்ரீகள் ... | 401 |

| | பக்கம். |
|---|---|
| இந்திய வ்யாபாரத்தின் போக்கு ... | 402 |
| ருமேனியாவும் யுத்தமும் ... | 426 |
| அஞ்ஜிப்பழம் ... | 428 |
| காப்பி குடிப்பதின் கெடுதிகள் ... | 429 |
| தீபாவளி— | |
| பண்டித வி. ஸுப்ரமண்ய அய்யர் ... | 430 |
| ம்ருகங்களுக்குள் ஐக்ய பாவம் ... | 432 |
| அரபியர்களுடைய விவாக வழக்கங்கள் ... | 434 |
| இரவில் கவனிக்கவேண்டிய ஸுகாதார விதிகள் ... | 436 |
| இங்க்லண்டின் செல்வமும் வருமானமும் ... | 438 |
| சாயத்தொழில் ... | 440 |
| இந்தியாவில் பயிர்கள் சாகுபடியாகும் விஸ்தீரணமும் மாஸுலும் ... | 441 |
| நானாதேசங்களில் கல்வி நிலைமை ... | 443 |
| இந்தியாவின் தரித்ர நிலைமை ... | 466 |
| நானாஸாஹிபும் கான்பூரில் நடந்த பெருங் கொலையும் ... | 468 |
| தொண்டையடைப்பான் ... | 471 |
| கார்த்திகை— | |
| பண்டித வி. ஸுப்ரமண்ய அய்யர் ... | 473 |
| கோவாபரேஷன் முறையில் வீடு கட்டுதல்... | 477 |
| ஜீவராசிகளின் 'பீரங்கிகள்' ... | 480 |
| நானாதேசங்களில் கல்வி நிலைமை ... | 482 |
| யுத்தத்தில் உபயோகப்படுகிற பெரிய பீரங்கிகள் ... | 506 |
| பசுந்தாள் உரமிடுதல் ... | 509 |
| அஹம்பாவம் அழிவுறும்— | |
| ஆர். ஹரி ராவ் ... | 511 |
| இந்தியாவின் க்ராமக் கைத்தொழில்கள் ... | 515 |
| நானாதேசங்களில் கல்வி நிலைமை ... | 517 |
| ஆருத்ரா தர்சனம்— | |
| பண்டித வி. ஸுப்ரமண்ய அய்யர் ... | 521 |
| மலச்சிக்கல் ... | 523 |

பத்திரிகை ஆராய்ச்சி—25, 81, 129, 177, 225, 277, 325, 365, 405, 445, 485, 525.

பகுதிக் குறிப்புகள்.—

வித்யா விஷயம்—33, 85, 133, 181, 229, 279, 327, 367, 407, 447, 487, 527.
தமிழ்க்கல்வி—34, 86, 134, 182, 230, 280, 328, 368, 408, 448, 488, 528
சாஸ்த்ரமும் நூதனகற்பிதமும்—35, 87, 135, 183, 231, 281, 329, 369, 409, 449, 489, 529.
ஸுகாதாரமும் வைத்யமும்—36, 88, 136, 184, 232, 282, 330, 370, 410, 450, 490, 530.
சட்டம்—37, 89, 137, 185, 233, 283, 331, 371, 411, 451, 491, 531.
மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்—38, 90, 138, 186, 234, 372.
ஜனஸமூகமும் மதமும்—39, 91, 139, 187, 235, 284, 332, 372, 412, 452, 492, 532.
யுக்திகளும் முறைகளும்—40, 92, 140, 188, 236, 285, 333, 373, 413, 453, 493, 533.
விவஸாயம்—41, 93, 141, 189, 237, 286, 334, 374, 414, 454, 494, 534.



கோவாபரேஷன்—42, 94, 142, 190, 238, 287, 335, 375, 415, 455, 495, 535.
வ்யாபாரம்—43, 95, 143, 191, 239, 288, 336, 376, 416, 456, 496, 536.
இந்தியாவில் வ்யாபார ஊக்கம்—43, 95, 143, 191, 239, 288, 336, 416, 456.
விலையுள்ள பொருள்கள்—44, 96, 144, 192, 240, 289, 337, 377, 417, 457, 497, 537.
பையன்கள் பக்கம்—45, 97, 145, 193, 241, 290, 338, 378, 418, 458, 498, 538.
ஸ்த்ரீகள் பக்கம்—46, 98, 146, 194, 242, 291, 339, 379, 419, 459, 499, 539.
இதரதேசங்களில் இந்தியர்கள்—47, 99, 147, 195, 243, 381.
வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்—48, 100, 148, 196, 244, 292, 340, 380, 420, 460, 500, 540.
விநோதங்கள்—49, 101, 149, 197, 245, 293, 341, 381, 421, 461, 501, 541.
நாநாஸங்கதி—50, 150, 246, 294, 342, 382, 422, 462, 502, 542.
மாஸவர்த்தமானம்—53, 102, 150, 198, 246, 295, 343, 382, 423, 463, 503, 543.
ஐரோப்பிய யுத்தம்—53, 102, 150, 198, 246, 295, 343, 382, 423, 463, 503, 543.
இந்திய வர்த்தமானம்—54, 103, 151, 199, 248, 344, 384, 424, 464, 504.

படங்கள்—

க்ரூப் பீரங்கி, 505
செம்ஸ்போர்ட்டு, லார்ட், 57.
த்ரவ நெருப்பு வெளியிடும் யந்த்ரம், 347.
பன்னிரண்டு அங்குல ஸ்கோடா ஹவிட்ஸர்கள், 505.

# விஷய ஸூசிகை.


பக்கம்.

அ

அக்கிக்கு மோர் வைத்யம் ... 146
அடமானம் ... 491,531
அடியளவு ... 45
அடியில் பிரம்பு பின்னிய நாற்காலிகளை சுத்தம் செய்ய ... 453
அடிவானத்தின் தூரம் ... 538
அடுப்புக்கரியின் உபயோகங்கள் ... 333
“ அடைக்கலங்காத்தல் ” ... 34
அதிககாலம் ஜீவித்திருத்தல் ... 184
அபிஸ்வீனியா (கல்வி நிலைமை) ... 517
அப்பம், எடுக்க எடுக்கக் குறையாத, ... 501
அமெரிக்கா ஐக்ய நாடுகள் (கல்வி நிலைமை)... 518
அமெரிக்காவிலுள்ள ரொம்ப பெரியமரங்கள் 241
அமெரிக்காவில் லைப்ரரிகள் ... 279
அம்பட்டனின் நாய் ... 340
அயலானுடைய கோழி வராதிருக்க உபாயம் ... 100
அரண்மனை, ஐரோப்பாவிலுள்ள பெரிய,... 293
அரபியர்களுடைய விவாக வழக்கங்கள் ... 434
அரேபியாவில் புனர்விவாகம் ... 197
அர்ச்சக இனும் ... 451
அர்ஜெண்டைன் ரிபப்ளிக் (கல்விநிலைமை)... 519
அலெக்ஸியீப், ஜெனரல், ... 38
அல்யூமினியம் ... 302
அல்லகபாத்தில் கோவாபரேஷன் ... 495
அவிபக்த குடும்பத்தில் குற்றஞ் செய்து ஓடிப்போனவன் பாகம் ... 331
அவிபக்த குடும்பத்தில் பாகத்தை ஜப்தி செய்தல் ... 233
அவிபக்த குடும்பத்தில் பாகம் செய்தல் ... 137
,, குடும்பத்தைப்பற்றிய ஒரு முக்ய தீர்மானம் ... 371
அவிபக்த குடும்ப ஸொத்து ... 331
அளிஞ்சி ... 349
அறிவில்லாத தாய் ... 46
அனந்தாசிரமம் விதவைசெய்த பராதீனமும் ... 491
அனந்தவார்ஸ் வ்யாஜ்யம் ... 233
அன்புக்கும் அழிவோ?—
எ. வி. ராமஸ்வாமி 212,267,304
அன்ய நாடுகளில் ப்ரயாணம் செய்த இந்தியர்கள் ஸங்கம் ... 412
அன்னாசிப்பழம் ... 428
அஜீர்ணபேதிக்கு கைகண்ட ஔஷதம் ... 282

பக்கம்.

அஹம்பாவம் அழிவுறும்—
R. ஹரி ராவ் ... 511

ஆ

ஆகாயப்படகு, ஒரு ப்ரும்மாண்டமான ... 281
ஆகாரங்கள், செயற்கை, ... 231
ஆகாரத்தை சூடாக வைத்திருப்பது ... 449
ஆகாரத்தைப்பற்றி சாஸ்திரங்கள் ... 282
,, மென்று தின்னல் ... 232
ஆக்பருடைய கிறிஸ்தவ மனைவி ... 378
ஆசார சீர்திருத்தக்காரர்கள் ... 372
ஆடும் சீட்டுகள் ... 416
,, நிலத்தின் வளமையும் .. 374
ஆதிநாராயணய்யா, காலஞ்சென்ற திவான் பகதூர், எம். ... 138
“ஆத்திச்சூடி நீதிக்கதைகள்” ... 182
ஆமணக்கெண்ணெய் ... 232
ஆயுர்வேத வைத்யஸங்கம், தென் இந்திய ... 184
ஆருத்ரா தர்சனம்—
பண்டித வி. ஸுப்ரமண்ய அய்யர் ... 521
ஆழமான கிணறுகள் ... 338
ஆள்வள்ளிக்கிழங்கு ... 525
ஆறு என்னும் எண்ணின் ரகஸ்யம் ... 421
ஆறுமுகம் என்னும் கணக்கு நிபுணனின் மரணம் ... 150
ஆற்றேரட்டத்தில் தீபாலங்காரம் ... 476
ஆஸன்னவர்க்க மூலத்தைக்கண்டுபிடிக்க, ஒரு எண்ணின், ... 145
ஆஸ்ட்ரேலியா (கல்வி நிலைமை) ... 484
ஆஸ்ட்ரியா (கல்வி நிலைமை) ... 444
,, சக்ரவர்த்தியும் கெய்ஸரும் ... 234

இ

இங்க்லண்டில் கல்வி ... 487
,, பணத்தை வட்டி நஷ்டமாக வீட்டில் சேர்த்து வைத்தல் ... 294
இங்க்லண்டின் செல்வமும் வருமானம் ... 438
இங்க்லீஷ் ஸ்திரீகளின் முட்டாள்தனம்: பெருங்கொலை (கான்பூரில்) ... 471
இஞ்சி ... 454
இஞ்சியை வற்றல் போடுவது ... 188
இடியும் மின்னலும் தாக்கிச்சாவது ... 87
இடலி (கல்வி நிலைமை) ... 444
இடாலியர்களுடைய பாட்டில்ப்ளேன்கள்.. 409
இதர தேசங்களில் இந்தியர்கள் 47, 99, 147, 195 ... 243
இந்தப் பூமி அசைவற்று நின்றால் ... 529





பக்கம்.

இந்திய ஒப்பந்தக் கூலி ஏற்பாடு ... 195
,, கைத்தொழில் கமிஷன் ... 322,359
,, ,, கான்பரென்ஸ் ... 456
,, யுத்தங்களில் கருணை ... 116
இந்தியரின் சராசரி வருமானம் ... 466
இந்தியர்களுக்காகும் செலவு ... 467
இந்திய வர்த்தமானம் 54, 103, 151, 199, 248, 344, 384, 424, 464 ... 504
இந்திய வ்யாபாரத்தின் போக்கு, 1914-15-ம் வர்ஷத்தில் ... 402
இந்திய வ்யாபாரிகளும் ஜப்பானும் ... 456
,, ஸ்த்ரீகளுக்கான யூனிவர்ஸிட்டி ... 194
இந்தியா (கல்வி நிலைமை) ... 520
இந்தியாவில் கோவாபரேஷன் அபிவ்ருத்தி 142
,, செய்யப்படும் மூக்குக்கண்ணாடிகள் ... 143
இந்தியாவில் நெல் மாஸூல் ... 141
,, பயிர்கள் சாகுபடியாகும் விஸ்தீரணமும் மாஸூலும் ... 441
இந்தியாவில் பெண்கல்வி ... 119,170
,, வ்யாபார ஊக்கம் 43,95,143, 191, 239, 288, 336, 416 ... 450
இந்தியாவில் ப்ரைமரிக் கல்வி ... 327
,, மோட்டார் வண்டிகள் ... 191
,, வெளியாகும் புஸ்தகங்கள் ... 487
,, ஜனன மரணவிகிதம் ... 450
,, ஸர்வகலாசாலைகள் ... 229
இந்தியாவின் க்ராமக் கைத்தொழில்கள் ... 515
இந்தியாவில் தரித்ர நிலைமை ... 466
,, விளைபொருள்கள் ... 205
,, ஜனஸமூக நிலைமை ... 207
இந்தியாவுக்கேற்ற கட்டிடஸங்கம் ... 477
இந்தியாவைப்பற்றிய சில கணக்குவிவரங்கள் 204
“ இந்து புண்ய கதைகள் ” ... 86
இயற்கைக்கு மாறான பிறவிகள் ... 12
இயற்கைப் பாடத்துக்கு விஷயங்கள் ... 367
இரண்டு குலைகளுள்ள வாழைமரம் ... 101
இருமல், கக்குவான் ... 242
இலக்கணமாய்ப் பேசுதல் ... 244
இலவம்பஞ்சு ... 44
இலைகளால் ஆகாயம் சுத்தமடைவது ... 489
இலைக்கள்ளி ... 350
இன்ஸ்பெக்டர்களைப் பயிற்சி செய்வது, கோவாபரேடிவ் ... 287

ஈ

ஈக்களைக் கொல்ல ஒரு உபாயம் ... 493
,, கொல்லும் விஷம் ... 285
ஈக்வெடார் (கல்வி நிலைமை) ... 519
ஈரத்தால் பாதிக்கப்படாத வஜ்ரம் ... 413
ஈஜிப்ட் (கல்வி நிலைமை) ... 517

பக்கம்.

உ

உடுத்திக்கொண்டிருக்கும் உடைகளில் தீப்பிடித்தல் ... 140
உடுப்புகளை பத்ரப்படுத்தி வைத்தல் ... 453
உண்ணிச்செடி ... 350
உண்மை முதலில் ஒருவர்க்கும் பிடியாது ... 528
உத்தரவுப்படி முடித்தது ... 540
உபாத்யாயரும் மாணவரும் ... 380,460
உபாத்யாயர்களுக்குப் போதனைகள் ... 326
,, களைப் பயிற்றுவித்தல் (பெண் பள்ளிக்கூடங்களுக்கான) ... 171
உப்புக் கடுதாசி ... 533
,, வரி ... 127
உரமிடுதல், பசுந்தாள், ... 509
உருகுவே (கல்வி நிலைமை) ... 519
உலகத்தின் பருத்தி விளைவு ... 417
,, ஜனத்தொகை ... 193
உழைப்புவரின் பாத்யதை ... 3
உழைப்பவர்கள் கூட்டு முதலாளிகளாதலால் உண்டாகும் நன்மைகள் ... 4
உழைப்பவர்கள் கூட்டு முதலாளிகளாதல்... 4
உழைப்பாளியின் அச்ரத்தை ... 2
,, ஸ்திதி ... 2
உழைப்பின் சிறப்பு ... 182
உற்பத்தி (எலுமிச்சை சாகுபடி) ... 225
உஷ்ணமான ப்ரதேசம், ரொம்ப, ... 193

ஊ

ஊனமுள்ள குழந்தைகளின் கல்வி ... 527

எ

எடிஸனும் முட்டைகளும் ... 48
எடுக்க எடுக்கக் குறையாத அப்பம் ... 541
எதிரிகளை ஏமாற்றுதல், யுத்தத்தில் ... 58
எதிரி தேசங்களோடு வ்யாபாரம் ... 288
எம்டன் பீரங்கிகள் ... 51
எரு, த்ரவரூபமான, ... 189
,, புகையிலைக்கு, ... 237
,, (ரோஜா சாகுபடி) ... 177
எலிகளின் அவயவங்கள் ... 114
,, அழிவு ... 112
,, இன வ்ருத்தி ... 112
,, குணங்கள் ... 115
எலிகளைத் தொலைத்தல். ... 413
எலிகள் ... 66,112
எலித்தோல் வ்யாபாரம் ... 417
எலிமிச்சை சாகுபடி ... 334
எலிமெண்டரி வகுப்பு உபாத்யாயர்களுக்கு போதனை ... 226
எலிமெண்டரி ஸ்கூல் உபாத்யாயர்களின் சம்பளம் ... 372

பக்கம்.

எலிமெண்டரி ஸ்கூல்களில் ரெஜிஸ்டர்கள் வைக்கும் விதம் ... 448
எலுமிச்சம்பழ ரஸத்தை பத்ரப்படுத்தி வைத்தல் ... 40
எலுமிச்சம்பழ விதையிலிருந்து எண்ணெய் 377
எலுமிச்சை சாகுபடி ... 225
எலெக்ஷன் தன்னுபடி செய்யப்பட்டது, ஒரு 422
எறும்புகள், போர்புரியும் ... 254

ஏ

"ஏகாதசிமகிமை" ... 34
"ஏப்ராஹம் லிங்கன் சரித்திரம்" ... 86
ஏரோப்ளேனில் ரொம்ப உயரம் பறப்பது... 418
ஏரோப்ளென்கள், தேசங்களை ஆராய்ச்சி செய்வதற்கு ... 281
ஏரோப்ளேன், டார்ப்பிடோ குழாயுள்ள ... 529

ஐ

ஐக்ய மாகாணங்களில் கோவாபரேஷன் ... 335
,, க்ராமப் பஞ்சாயத்துகள் ... 382
ஐரோப்பாவிலுள்ள தேசங்களின் கல்வி நிலைமை ... 444
ஐரோப்பாவிலுள்ள பெரிய அரண்மனை ... 293
ஐரோப்பாவில் உழைப்பாளிகளை கவனித்தல் ... 5
ஐரோப்பிய முதலாளிகளின் முயற்சி ... 3
,, யுத்தம் 53, 102,150, 198, 246, 295, 343, 382, 423, 463, 503 ... 543
ஐரோப்பிய ஸ்த்ரீகளுக்கு மாலைபோடுதல் ... 91

ஒ

ஒடிந்த மர ஸாமானை ஒட்டுதல் ... 493
ஒப்பந்தக்கூலி ... 99
,, ஏற்பாடு, இந்திய ... 195
ஒப்பந்தத்தை மீறுவதும் நஷ்டஈடும் ... 451
ஒன்பது என்னும் எண்ணின் விநோதங்கள் 338

ஓ

ஓரான் என்னும் ஜாதியார் ... 532

க

கக்குவான் இருமல் ... 242
கசாப்புக் கடைக்காரன் ... 148
கடமைகள், ஸ்த்ரீகளின், ... 485,526
கடமையைச் செய்வதில் ச்ரத்தை ... 500
கடலில் அலைகள் ... 498
கடலின் அடித்தரை இடிந்து விழுந்துவிட்டால் ... 449
கடல் பறவைகள் ... 49
,, வ்யாபாரம், சென்னை ராஜதானியின், 257
கடன்காரன் செய்த பராதீனம் ... 185
கடன்பட்டவர் ஸொத்தைப் பராதீனம் செய்வது ... 89

பக்கம்.

கடியாரங்களுக்கு மின்ஸார உதவியால் சாவி கொடுத்தல் ... 449
கடிவேலன் ... 349
கடுதாசி, உப்புக், ... 533
,, கூழ், பருத்தித் தான்களிலிருந்து 537
,, செய்தல் ... 95
,, ,, நிக்கலிலிருந்து, ... 183
,, தொழில்சாலை, புனலூர். ... 191
,, புல்லிலிருந்து ... 192
கடுதாசியிலிருந்து புதிய ஸாமான்கள் ... 192
கட்டிட ஸங்கங்களின் அவசயம் ... 477
,, ஸங்கங்களுக்கு ஸர்க்கார் உதவி ... 535
கணித விநோதங்கள் ... 290
கணேச கந்திலுள்ள கால்நடைப் பண்ணை... 454
கண்களைக் காப்பாற்றும் முறை ... 278
கண்ணீர் விடுதல் ... 445
கத்திகளைப் பிடிகளில் பொருத்திவைக்க ... 443
கமிஷன், கைத்தொழில் ... 169
கம்பளி நெசவுகளில் கலந்துள்ள பருத்தியைக் கண்டு பிடிக்க ... 236
கயிறு, காகிதக் ... 289
காந்தை தமிழ் ஸங்கம் ... 368
காராச்சி போலீஸாரின் தந்த்ரம் ... 381
கரிப்பிலா ; விட்டில் ... 350
கருஞ்சுவராக்குவது ... 33
கரும்பு ... 442
கரும்புச்சக்கையின் சாம்பல் ... 44
கர்ம வ்யாதி, மதுரையில் ... 282
கலப்படமான தேயிலை ... 285
கலவை வடாம் ... 242
கல்கத்தா ஹைகோர்ட்டும், மிஸ் குஹாவும் 379
கல்யாணச்செலவு, ராஜவம்சங்களில் ... 174
கல்யாண முருங்கை ... 348
கல்யாணத்தின்போது தானம் கொடுத்தல்... 185
கல்யாணத்தை நிறுத்த வ்யாஜயம் போட்டது 283
கல்வி ... 134
,, இந்தியாவில் பெண் ... 170
,, இலவச ப்ரைமெரி, ... 181
,, ஊனமுள்ள குழந்தைகளின் ... 527
கல்விக்கு ஆகும்செலவு ... 527
கல்விநிலைமை, நானுதேசங்களில் 443,482,517
கவர்ன்மெண்டாரும் கல்வியும் ... 447
,, கைத்தொழிலும் ... 416
கவியின் பதில் ... 380
கழிக்கப்பட்ட பொருள்களை உபயோகிப்பது 496
களாச் செடி ... 350
களிமண் (செங்கல் அறுப்பதற்கு) ... 179
கறைகளை எடுக்க ... 286
கற்கள், விநோதக் ... 541
கற்றாழை ... 350
கனக எருமை மாம் . ... 197
கனடா (கல்வி நிலைமை) ... 518





பக்கம்.

கனடாவுக்குக் குடிப்போவது ... 47
கனவின்பலன் கைமேல் கிட்டியது ... 341
கஸ்தூரி வேலன் ... 349

கா

காகிதக்கயிறு ... 289
காகிதப் பஞ்சத்துக்கு ஒரு யுக்தி ... 149
காகிதம்செய்யக் கண்டுபிடித்த விதம் ... 193
காடிமாலா (கல்வி நிலைமை) ... 519
காட்டுக்கொட்டை, காட்டாமணக்கு ... 350
காட்டு மிளகு ... 348
காமசோடி நடராஜன், மிஸ் ... 419
காப்பி ஒரு க்ருமிஹர மருந்தாவது ... 373
,, குடிப்பதின் கெடுதிகள் ... 429
காயங்கள், ரத்தம்வரும் ... 533
காயமுண்டாக்கும் செடிகள் ... 197
காயம் முதலிய ஆபத்துகளில் செய்ய வேண்டிய முதல் உதவி ... 134
காரை முள் ... 349
கார்த்திகை ... 473
காலராவும் அதைத் தடுத்தலும் ... 351
கால ஸ்திதி ... 55
காலா லெழுதுகிறவன் ... 541
கால் நடைகளின் தொற்று வ்யாதிகள் ... 318
கால் நடைகளை ஈக்கள் தொந்தரவு செய்யாதபடி பார்த்துக்கொள்வது ... 141
கால் நடைகளை வ்ருத்தி செய்தல் ... 237
,, பால்தயிர்ப்பண்ணைகளுக்கு நிலங்கள் ... 374
காற்கோடி; நிலரேகு ... 348
காற்றின் வேகம் ... 529
கான்பரென்ஸ், சென்னை மாகாண ... 172
,, மாகாண ஸோஷல் ... 187
கான்பூர் கலகம் ... 468

கி

கிச்சனர், காலஞ்சென்ற லார்ட் ... 234
கிடங்கு யுத்தம்; மண்மாரி ... 481
கிணறுதோண்டுதல் வேலைகள், ஜலமிறைத்தல் ... 237
"கிருட்டினன் தூது சுருக்கம்" ... 34
கிரோவிலைக்கொண்டு நெருப்பை அவித்தல் ... 409
கில்ட் சட்டங்களை புதியதுபோல் செய்ய ... 40
கிளி, 120-வயதிலிருந்து ஒரு ... 458
கிளுவை ... 348
கினிபுல் என்னும் கொழுக்கட்டைப் புல் ... 374
கின்ன கழற்கோடி ... 349

குடலில் புழுக்கள் ... 140
குடியின் கெடுதி ... 316
குடியேற்றம், ஓர் விவஸாயக் ... 218
குடும்ப தர்மங்கள் ... 406

பக்கம்.

குதிரைகளை உபயோகப்படுத்தல், யுத்தத்தில் இறந்த ... 192
குதிரை நன்றாக ஓடுமோ? ... 109
குதிரையுள்ள மோட்டார் வண்டி ... 541
குமஸ்தா, எல்லா லக்ஷணங்களும் பொருந்திய ... 293
குரங்குக் குழந்தை, ஒரு ... ,,
குழந்தைகளின் ஆகாரம் ... 98
,, தூக்கம் ... 291,459
,, வாய்ப்புண் ... 499
குழந்தைகளுக்கு ஏற்ற உணவு ... 379
,, உணவு அளிக்கும் விதம் ... 446
குழந்தைகளுக்கும் மெலிந்தவர்களுக்கும் ஏற்ற உணவு ... 98
குழந்தைகளுக்கு வயிற்றிலுண்டாகும் கட்டிகள் ... 405
குழந்தைகளை கவனிக்கும்படி செய்வது ... 262
குழந்தை, நல்ல ... 148
குழந்தையின் ஆகாரத்தில் ஜலத்தின் அளவு. 46
,, மனோபாவம் ... 161
குளிர்ந்த ஜலமும், வெந்நீரும் ... 232
குறிப்பிட்ட நேரத்துக்குமேல் வேலை செய்தலும், களைப்பும் ... 536
குறிப்புகளும் குறிப்புப் புஸ்தகங்களும் ... 25
குறைந்த சம்பளம் ... 336
கூட்டுத்தொழில் மொத்த வ்யாபாரம் ... 29
கூலியாட்கள், ஸிலோனிலுள்ள தமிழ் ... 294

கெ

கெட்ட வழக்கங்கள் ... 97
கெய்ங் என்றும் புல் ... 457
கெய்ஸரும், ஆஸ்ட்ரிய சக்ரவர்த்தியும் ... 234
,, கொல்லனும் ... 541
கெய்ஸர் சக்ரவர்த்தி ... 292
,, பயிர் அறுவடை செய்தார் ... 418
,, வைத்திருக்கும் கவசம் ... 421

கொ

கொசுக்களைப் போக்கும் சில செடிகள் ... 88
கொச்சி தேசத்து காடர்கள் ... 32
,, ராஜாவின் புத்ரர் ... 294
கொடுப்பதாய்ச் சொன்ன வெகுமதியை உபயோகிக்க கற்றுக்கொண்ட பையன்... 244
கொடுமையாய் ஹிம்ஸை செய்யும் செடிகள். 5
கொதிக்கும் ஜலமுள்ள பாத்ரத்தை கையால் எடுப்பது ... 183
கொத்து (ரோஜா சாகுபடியில்) ... 178
கொலம்பியா (கல்வி நிலைமை) ... 519
கொலுக் காட்சி சாலை ... 391
கொலை தண்டனை தினத்துக்கு முன் கல்யாணமானது ... 381
கொழுக்கட்டைப் புல் ... 454
கொறுக்காப்புளி ... 349

பக்கம்.

கோ

கோணிப்புளியங்காய் ... 349
கோபம் ... 357
கோமாரி அல்லது ம்ருகங்களின் கால் நோய், வாய் நோய் ... 286
கோயம்புத்தூரில் கட்டிட ஸங்கம் ... 415
,, ஸ்தாபிக்கக்கூடிய தொழில்கள் ... 221
கோயில்களில் பூஜை ... 393
கோரைக்கிழங்கின் பயன் ... 168
கோரைப்புல் ... 166
கோர்ட்டில் காதைப்பிடித் திழுத்தது ... 292
,, ஸத்யம் செய்தல் ... 341
கோவாபரெடிவ் எருஸங்கம் ... 455
,, இன்ஸ்பெக்டர்களைப் பயிற்சி செய்வது ... 287
கோவாபரெடிவ் தான்யபாங்கிகள் ... 287,335
,, வைத்யசாலை ... 455
,, ஸங்கங்களும் ஸுகாதாரமும் ... 415
கோவாபரேஷனும் க்ராமஸுகாதாரமும் ... 190
,, விவஸாயக் கருவிகளும் 238
,, ஸர்க்கார் மேற்பார்வையும் ... 190
கோவாபரேஷனைப் பற்றிப் பரிசீலனை செய்த கமிட்டி ... 42
கோவாபரேஷன் 12, 94, 142, 190, 238, 287, 335, 375, 415, 455, 495 ... 535
கோவாபரேஷன் பேஹாரில் ... 42
,, முறையில் கால்நடை அபிவ்ருத்தி செய்தல் ... 335
கோவாபரேஷன் முறையில் வீடுகட்டுதல் .. 477
,, ,, ஜலம் பாய்ச்சுதல் 495
,, ரஷ்யாவில் ... 190
,, ஸம்பந்தமான ஒரு கதை 42
,, ஜெர்மனியில் விவஸாய ... 535
"கோவிந்தன்" ... 528
கோஸ்டாரிகா (கல்வி நிலைமை) ... 518

கை

கைத்தொழில் அபிவ்ருத்தி, சென்னையில் ... 239
,, கமிஷன் ... 169
,, களின் அபிவ்ருத்தி ... 63
,, கள், இந்தியாவின் க்ராமக் ... 515
,, காட்சி ... 376
,, ஸபை, ஒரு ... 536

கௌ

"கௌண்ட் லியோ டால்ஸ்டாயும் மகாத்துமா காந்தியும்" ... 230

க்

க்யூபா (கல்வி நிலைமை) ... 519
க்ராமக் கைத்தொழில்கள், இந்தியாவின் ... 515
க்ராம ஸுகாதாரமும், கோவாபரேஷனும் 190
,, ஸுகாதாரம் ... 282
க்ரீஸ் (கல்விநிலைமை) ... 444
க்ருஷ்ணஸ்வாமி அய்யர், காலஞ்சென்ற மிஸ்டர். வி. ... 138
க்வீன்ஸ்லண்ட் (கல்விநிலைமை) ... 484

ச

சங்கம் குப்பி ... 350
சட்டம் 37, 89, 137, 185, 233, 283, 331, 371, 411, 451, 491 ... 531
சணலுக்குப்ரதி ... 497
சதஞ்சீவிகள் ... 149
சதஞ்ஜீவியாயிருத்தல் ... 490
சதபதப்ராம்மணம் ... 326
சதுரக்கள்ளி ... 350
சந்தனத் தைலச்சாலை ... 456
சந்தனத்தைலம், மைஸூரில் ... 239
சப்பாத்தி ... 348
சப்பாத்திக்கள்ளி ... 333,349
சப்பாத்திக்கள்ளியின் சில உபயோகங்கள் ... 252
சமையல்காரன்மேல் முறைப்பாடு ... 292
"சம்பகமாலினி" ... 34
சர்க்கரைலாடு ... 339
சர்க்கரைவள்ளிக்கிழங்கு ... 31
சர்க்கரை (வ்யாபாரம்) ... 258
சவுக்குமரம் நடுவதற்கு நிலம் குத்தகைக்கு விடுதல் ... 137

சா

சாகுபடியில் ஒரு புதுமுறை, நெல் ... 325
சாக்கடல் ... 193
சாப்பிடும்போது ஜலம்குடித்தல் ... 530
சாயங்கள் (வ்யாபாரம்) ... 258
சாயச் சரக்குகளின் சாஸ்த்ர ஆராய்ச்சி ... 288
சாயத் தொழில் ... 440
"சாரங்கதாஸம்ஹிதை" ... 328
சாரதாவிலாஸ ஸபை ... 488
சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும் 35, 87, 135, 183, 231 281, 329, 369, 409, 449, 489 ... 529

சி

சிகப்பு அல்லது பவளப்புலா ... 350
சிகிளிப்பொட்டு வளையல்கள் ... 194
சிசுக்களைப்பற்றி கவனிக்க வேண்டிய விஷயங்கள் ... 194
சிசுமரணம் ... 339
சிதம்பரக்ஷேத்ரம் (ஆருத்ராதர்சனம்) ... 522
சிராத்தம் செய்ய ராஜா ... 48
சிலி (கல்விநிலைமை) ... 519
சிவ ஸ்தோத்ர நாமாவளி ... 132
சிவஸ்வாமி அய்யர், ஸர். ... 234
சிறுவர்களுக்கு நீதிபோதனை ... 45





பக்கம்.

சிறுவர்கள் செய்யக்கூடாதவைகள் ... 418
சிறுவள்ளிக்கிழங்கு ... 32

சீ

சீயக்காய் செடி ... 349
சீனர்களுடைய பஞ்சாங்கம் ... 418
சீனா (கல்விநிலைமை) ... 484

சு

சுக்ரன் ... 87
சுண்ணும்புமண் (செங்கல் அறுப்பதற்கு) ... 179
"சுதேச வைத்யரத்னம்" ... 230
சுத்திஷடை ... 412
சுருக்கெழுத்து, தெலுங்கில், ... 181
சுவர்களுக்கு அடிக்க மலிவான வர்ணம் ... 140

செ

செங்கல் ... 179
,, அறுப்பதற்கு உபயோகப்படும் மண்ணின் விதம் ... 179
செங்கல்லின் குணமும் உருவமும் ... 179
செடிகள், வேலிக்கு உபயோகமான ... 347
,, வைத்தல் (எலுமிச்சை சாகுபடி) ... 226
செட்டான நிர்வாகம் ... 422
செட்டுக்குடித்தனம், யுத்தத்தில், ... 246
செம்பாட்டை ... 348
செம்ஸ்போர்ட், லார்ட் ... 38
செயற்கை ஆகாரங்கள் ... 231
செயற்கைப்பால் ... 135
செலவு, கல்விக்கு ஆகும் ... 527
,, நெல் ஸாகுபடிக்காகும் ... 534
,, ராஜ வம்சங்களில் கல்யாணச் ... 174
சென்னைக்கு ஒரு வியாபார பொருள்காட்சி 59
,, செந்தமிழ் ஸங்கம் ... 408
,, தமிழ் ஸங்கம் ... 368
,, நகரில் மரண விகிதம் ... 410
சென்னைப் பொருள்காட்சி ... 52
சென்னைப்பொருள் காட்சியில் கைத்தொழில்கள் ... 43
சென்னைப் பொருள்காட்சியில் விவஸாய விஷயங்கள் ... 41
சென்னை மாகாண கான்பரென்ஸ் ... 172
,, ,, கோவாபரெடிவ் கான்பரென்ஸ் ... 18
சென்னையிலிருந்து ஜனங்கள் வெளி நாடுகளுக்குப் போவது ... 243
சென்னையில் கோவாபரேஷன் ... 238,495
,, கைத்தொழில் அபிவ்ருத்தி ... 239
,, சட்டத்துக்கு வாசிக்கும் மாணவர்கள் ... 367
சென்னையில் சட்டம் கற்றுக்கொள்ளும் மாணவர்கள் ... 407
சென்னை ராஜதானியின் கடல் வ்யாபாரம் ... 257
,, 1916-17-ம் வருஷத்திய வரவு செலவு மதிப்பு திட்டம் ... 154
சென்னை ஸ்த்ரீகள் காலேஜ் ... 367
,, ஹைகோர்ட் ... 451

சொ

சொக்கப்பானை ... 473
சொல்வதெழுதல் ... 229
சொன்னசொல் தவறவில்லை ... 244

சோ

சோம்பேறித்தனம் ... 388

ச்

ச்ரேஷ்டர்கள் ... 290
ச்வாஸகாசத்துக்கு வைத்யம் ... 373

ஞா

ஞாபகசக்தியும் அதை வ்ருத்தி செய்யும் விதமும் ... 398
ஞானவெட்டியை இயற்றினவர் ... 328

டா

டாமினிகன் குடியரசு (கல்விநிலைமை) ... 519
டார்ப்பிடோ குழாயுள்ள ஏரோப்ளேன் ... 529
டாஸ்மேனியா (கல்வி நிலைமை) ... 484

டி

டிக்ரியை மேடோவர் செய்வது ... 331

டெ

டெலிபோன் மூலமாக மதப்ரஸங்கம் செய்தல் ... 369
டெலிபோன், ஸைன்யத்தில் ... 386
டென்மார்க் (கல்வி நிலைமை) ... 444
டென்மார்க்கில் கோவாபரேஷன் ... 142

த

தசராப்பண்டிகை ... 393
தச்சர்களுக்குள் கோவாபரேஷன் ... 94
தச்சன் சாட்சி சொன்னது ... 331
தஞ்சாவூர் ஜில்லாவில் ஆடு வளர்க்கும் விதம் ... 61
தண்ணீரில் சேதமடையாத நீக்குச்சிகள் ... 382
தண்ணீரும் செடிகளும் ... 127
தண்ணீர் க்ஷயரோகிகளுக்கு உத்தமௌஷதம் ... 36
தந்தி சார்ஜுகள் ... 502
"தமன்யரூபி" ... 134
தமிழில் சாஸ்த்ரீய பதங்கள் ... 448
தமிழும் அதன் தற்போதைய நிலைமையும் ... 123
தமிழ் ஆராய்ச்சி ... 408
,, எழுத்தில் ஸம்ஸ்க்ருதத்தை எழுதுவது ... 230
தமிழ்க்கல்வி 34, 86, 134, 182, 230, 280, 328, 368, 408, 448, 488 ... 528
தமிழ்ச்சங்கம், மதுரைத் ... 280
தமிழ்நடை ... 448,488
"தமிழ்நாவலர் சரிதை" ... 182

பக்கம்.

தமிழ் மொழியும் உயர்தரக் கல்வியும் ... 86
தர்மம் நடத்துவதற்காக ஸொத்துக்கள் வைத்தல் ... 371
தலைப்பேன் ... 373
தலைமயிர் உதிர்வதற்கு சிகித்ஸை ... 285, 330
,, ,, மருந்து ... 453
தவணை தப்பிக் கடன் செலுத்துவது ... 69
தவிட்டின் ஔஷத உபயோகங்கள் ... 81

தா

தாசாணிச் செடி ... 348
தாம்ரப் பாத்ரங்கள் ... 46
தாயும் மகளும்; ஓர் ஸம்பாஷணை ... 14
தாய்மார்கள் அறியவேண்டிய விஷயங்கள் ... 146
தாருகாவனத்து ரிஷிகளும் ஈச்வரனும் ... 523
தாவர வஸ்துக்களால் செய்யப்பட்ட ஜோடுகள் ... 421
தாழ்ந்த வகுப்புகளை உயர்த்துவது ... 235
,, ஜாதிகளை உயர்த்தல் ... 332
தான சாஸனமும் அதை ரெஜிஸ்டர் செய்தலும் ... 531
தாஞ்ஞூர் ஸோப் தொழில்சாலை ... 456
தான்ய பாங்கிகள், கோவாபரெடிவ் ... 287

தி

திருகு கள்ளி ... 350
திருச்சிமலைக் கோட்டைக்கு ஒரு பெரிய மணி ... 378
திருநெல்வேலி ஜில்லாவில் ஸம்ஸ்க்ருத பாடசாலைகள் ... 447
திருப்பதி யாத்ரிகர் ரக்ஷண ஸங்கம் ... 187
திருவண்ணாமலை ... 465
திருவள்ளுவர் ... 528
திருவாங்கூரில் கோவாபரேஷன் ... 142

தீ

தீபாவளி-ஸுப்பிரமணிய அய்யர் ... 430
தீப்பறவை, மனிதத் ... 245
தீய குருவும் ஜனஸமூக சீர்திருத்தமும், ஒரு ... 452
தீர்மானங்கள் (சென்னை மாகாண கான்பரென்ஸ்) ... 173
தீவனப் பயிர்கள் ... 414
தீக்ஷித கீர்த்தனைகள் ... 30

து

துப்பாக்கியுள்ள தொப்பி ... 489
துப்புதல் ... 481
துருக்கி (கல்வி நிலைமை) ... 444

தூ

தூக்கம் ... 219
,, குழந்தைகளின் ... 291
,, வருவதெப்படி, நல்ல ... 397

தெ

தெய்வமிகமேல் ... 34
தெருக்கூட்டும் மோட்டார் ஸைக்கில் ... 101
தெலுங்கில் சுருக்கெழுத்து ... 181
தென்னாட்டு வித்வான்களுக்குப் பட்டங்கள். 90
தென்னாப்ரிக்கா இந்தியர்களும் யுத்தமும் ... 243
,, (கல்வி நிலைமை) ... 518
தென்னாப்ரிக்காவில் இந்தியர்களின் நிலைமை. 99
,, ஹிந்துக்களும் மகம்மதியர்களும் ... 47
தென்னிந்திய ஆயுர்வேத வைத்ய ஸங்கம் ... 184
தென்னிந்தியா வாஸிகளின் வ்ருதாநுஷ்டானம் (ஆருத்ரா தர்சனம்) ... 522
தென்னை சாகுபடி ... 109
,, விஷயமான ஆராய்ச்சிப் பண்ணைகள் ... 141
தெற்கு ஆஸ்ட்ரேலியா (கல்விநிலைமை) ... 484

தே

தேசப்பயிற்சி ... 232
தேங்காய்த்தோசை ... 499
தேங்காய் வெண்ணெய் ... 240
தேசங்களின் ஆஸ்தி ... 299
தேசங்களை ஆராய்ச்சிசெய்வதற்கு வீரோப்போன்கள் ... 281
தேயிலை, கலப்படமான ... 285
'தேரையர் கரிசிலை'' ... 86
தேவியின் இரக்கம் ... 390
தேனீக்களுக்கு ஆகாரம் சேகரித்தல் ... 183
தேனும் அதன் உபயோகமும் ... 457
தேன், ஒருசாண்டி ... 498
,, மெழுகு ... 143

தை

தைர்யமுள்ள ஸ்த்ரீ ... 339

தொ

தொடர்வட்டி ... 97
தொண்டைப்புண் ... 188
,, யடைப்பான் ... 471
தொருவாட்டு ... 348
தொழில்படிப்புக்கு உபகாரச்சம்பளம் ... 33

தோ

தோட்ட வேலைசெய்யும் கூலியாட்களும் பழையதும் ... 370
தோல் துண்டுகளை உபயோகப்படுத்துவது 377

த்

த்ரவநெருப்பு வெளியிடும் யந்த்ரம் ... 347
த்ரவரூபமான எரு ... 189
த்ராக்ஷைக்கொடியிலிருந்து கடுதாசி ... 144

ந

நகரத்தார்களுக்குள் விவாகம் ... 492
நஞ்சுண்டன் ... 348
நடக்கக்கூடிய மரக்குதிரை ... 458
நத்தைச்சூரி என்னொரு வித்து ... 530
நந்தனார் சரித்ரம் ... 522





பக்கம்.

நரபலி, யாழ்ப்பாணத்தில் ... 293
நல்லதூக்கம் வருவதெப்படி ... 397
,, மண்ணை தெரிந்தெடுத்தல் (செங்கல் அறுப்பதற்கு) ... 179
நவராத்திரி ... 390
,, கொலுவினால் விளையும் நன்மைகள் ... 392
நவராத்திரி துஷ்டநிக்ரஹம் ... 390
"நனவர்ஷத்திய சுதேசமித்திரன் பொது விஷய விளக்கம்" ... 280
நற்போதனை ... 378
"நீற்றிணை" ... 34
நக்ஷத்ரங்கள் மின்மினுத்தல் ... 281

நா

நாகதாளி ... 349
நாகரீகம், மேல்நாட்டு, ... 228
நாகோஜிராவ், காலஞ்சென் றாவ்பகதூர், வி. 90
நாடகசாலைகளில் மிட்டாய்கள் தின்பது ... 49
நாட்களின் பெயர் ... 538
நாட்டுக்கோட்டை ஜாதியில் ஒரு புதியவழக்கம் ... 332
நாநாஸங்கதி 50, 150, 24, 294, 342, 382, 422, 462, 502, ... 542
நாநாஸாகிபும் கான்பூரில் நடந்த பெருங்கொலையும் ... 468
நாநாஸாகிப் ... 469
,, பீஷ்வா பட்டம் தரித்தது ... 469
நாய்களும் வ்யாதிகளும் ... 87
நார் சில்பாச்ரமம் ... 242
நார்வே (கல்விநிலைமை) ... 444
"நாலடியார்" ... 86
நாற்றுப் பாவுதல் (மரு, மயிர்க்கொழுந்து) ... 277
நானுதேசங்களில் கல்வி நிலைமை 443, 482, 517
நான்கு குழந்தைகள், ஒரு ப்ரஸவத்தில் ... 101
4-மைல் உயரத்திலிருந்து கேட்கலாம் ... 241

நி

நிகராகுவா (கல்வி நிலைமை) ... 518
நிக்கலிலிருந்து கடுதாசி செய்தல் ... 183
நிக்கல் இரும்பு ... 329
நிலத்திலும் நீரிலும் போகக்கூடிய ஒரு மோட்டார்வண்டி ... 97
நிலத்தில் புகாதபடி தடுக்க வ்யாஜ்யம் போடுதல் ... 283
நிலத்தின்மேல்மண்ணை புழுதியாக்கிவைத்தல் ... 41
நிலத்தீர்வையும் அது விஷயமாய்ச் சட்டம் செய்தலும் ... 264
நிலத்தீர்வை ஸெட்டில்மெண்டுகளை ஒழுங்கு படுத்துவது ... 78
நிலம் பரிவர்த்தனை செய்வதில் பாத்யம் ... 233
நிலஸ்வாமும் குடியும் ... 185

நீ

நீரிழிவு ரோகத்துக்கு தேன் ... 333
நீர்த்தீர்வை ... 37
நீர் பாய்ச்சலும் நாற்றுகள் நடுவதும் (மரு, மயிர்க்கொழுந்து) ... 178
நீர்ப்பாசனம், ஒரு புதுமாதிரியான ... 329

நூ

நூதன கணிதம் ... 244

நெ

நெய் ... 537
நெருப்பால் கெடுதியடையாத ஒரு ஸாது ... 101
நெருப்புக் காயங்களுக்கு சிகித்ஸை ... 490
நெருப்புப் புண்களுக்கு சிகித்ஸை ... 333
நெருப்பு, யுத்தத்தில் த்ரவரூபமான ... 346
நெல் ... 442
,, பயிருக்கு எருவிடுதல் ... 454
,, ஸாகுபடிக்காகும் செலவு ... 534

நே

நேபாளம் (கல்வி நிலைமை) ... 484

நோ

நோயாளிகளைப் பராமரிக்கையில் கவனிக்கவேண்டியவை ... 291

ந்

ந்யூமோனியா என்னும் க்ஷயரோகம் வராதபடி பார்த்துக்கொள்வது ... 450
ந்யூஸீலண்ட் (கல்வி நிலைமை) ... 484
ந்யூ ஸௌத் வேல்ஸ் (கல்வி நிலைமை) ... 484

ப

பகவத்கீதை ஸம்பூர்ணமானதா? ... 284
பகுதிக்குறிப்புகள் 33, 85, 133, 181, 229, 279, 327, 367, 407, 447, 487, ... 527
பக்தியோகம் ... 25
பங்காளிப் பிரிவினை ... 451
பசுந்தாள் உரமிடுதல் ... 509
,, பயிரும் நன்செய் நெல்பயிரும் ... 494
பஞ்சமர்களின் வரலாறு ... 373
பஞ்சாங்கம் ... 58
படகுப் பாலங்கள் ... 21
படங்களுள்ள போஸ்ட்கார்டுகள் ... 280
படிக்கவேண்டிய முறை ... 329
பட்டு முதல் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட விவரம் ... 89
பணத்தைச் சேகரிக்கும் வழி ... 479
பணம் ஸம்பாதித்தவிதம் ... 292
பண்டம், உழைப்பு, மூதல் ... 2
பண்டித விஷ்ணு நாராயணதார் ... 502
பதப்படுத்தல் (செங்கல் அறுப்பதற்கு) ... 180
பதினெட்டு மாஸத்தில் ஒன்பது குழந்தைகள்பெற்றது ... 149

பக்கம்.
பத்ராதிபரும் சந்தாதாரரும் ... 340
பத்ரிகை ஆராய்ச்சி 25, 81, 129, 177, 225, 277, 325, 365, 405, 445, 485 ... 525
பத்ரிகைகளில் பிழையில்லாமல் எழுதுவது 101
பத்ரிகைகளும் ஜனங்களும் ... 502
பமபாயில் கோவாபரேஷன் ... 94
பம்பாய் ஜனஊழிய சங்கம் ... 91
பயித்தியக்காரன் பிள்ளை தத்து எடுத்துக் கொள்ளுதல் ... 233
பயிராகத் தகுந்த பூமி (கோரைப் புல்) ... 167
பயிற்சியடைந்தஉபாத்யாயர்களும் பயிற்சியடையாதவர்களும் ... 527
பாருவே (கல்வி நிலைமை) ... 519
பரங்கிப் பிஞ்சு துவையல் ... 419
பரமசிவன் செய்த மத்யஸ்தம் ... 474
பரிவர்த்தனை, ஸொத்து ... 531
பருத்தி ... 442
,, கொட்டை யெண்ணெய் ... 377
,, செடியின் தாள்கள் ... 96
,, தாள்களிலிருந்து கடுதாசிக்கூழ் ... 537
,, பயிரில் ஒன்றுக்கு ஒன்று உள்ள தூரம் ... 414
பருத்தியில் நெருப்புப் பிடிக்காமல்செய்ய ... 240
பருத்தியை எடுக்கும் யந்த்ரம் ... 369
பல்கேரியா (கல்வி நிலைமை) ... 482
பல்விப்பூண்டு ... 334
பல்வலி ... 36
பழுதிப்போய் விட்டது ... 540
பழங்கடுதாசிகள் ... 96
பழையவழக்கப்படி அச்சடித்தல் ... 49
பளபளபபான எஃகு ஸாமானை துருப்பிடிக்காமல் பாதுகாக்க ... 413
பள்ளிக்கூட உபாத்யாயர் ... 48
பள்ளிக்கூடங்களில் தேசபாஷைகள் கற்பித்தல் ... 10
பள்ளிக்கூடங்களில் வைத்ய விசாரணை ... 181
,, விஸிமாடாகிராப் யுத்தப் படங்கள் ... 133
பள்ளிக்கூடங்களில் ஸுகாதாரம் ... 85
பள்ளிக்கூடங்களுக்கு க்ராண்டுகள் ... 407
பற்பல தேசங்களில் உள்ள எழுதப்படிக்கத் தெரியாதவர்களின் கணக்கு ... 133
பற்பொடி, கருவேலங்காய் ... 493
பனாமா (கல்வி நிலைமை) ... 519
பனை ... 350
பன்றிகளும் பருத்திக்கொட்டையும் ... 494
பன்றி யானைக்குட்டியை ஈன்றது ... 341
பன்று ... 163
பன்னிரண்டு அங்குல பீரங்கியின் ஆயுள் ... 281
பஸிபிக் ஸமுத்ரத்தின் ஆழம் ... 458
பக்ஷிகளின் த்ருஷ்டி ... 193

பக்கம்.
பா
பாகசாஸ்த்ரம், இந்து, ... 182
பாகவதம் ... 326
பாகம் செய்தல், அவிபக்த குடும்பத்தில் ... 37
பாக்கெட்டில் கொண்டுபோகக் கூடிய விளக்கு ... 236
பாங்கிகளில் ஸ்த்ரீகள் ... 499
பாடக்குறிப்புகள் ... 486
பாடசாலைகளில் தண்டனை ... 84
,, சிறு தொழில்களை கற்றுக் கொடுக்க ஒரு, ... 327
பாடம்செய்யும் விதம் (கோரைப்புல்) ... 167
பாதங்களின் அடையாளங்கள் ... 231
பாய்கள் நெசவுசெய்யப்படும் இடங்கள் (கோரைப்புல்) ... 168
பார்லி கஞ்சி ... 539
பார்வைக் குறைவு ... 89
பாலர்வகுப்பு ... 486
பாலைவனம் ... 460
பால்காரன் ஏமாந்தது ... 244
பால்ய குற்றவாளிகள் ... 491
,, விவாகம் ஏற்பட்டதின் காரணங்கள் 235
பானம் பருகுவதும் அதற்கேற்ற ஸமயமும் 71
பி
பித்தளை நகைகளை சுத்தம் செய்ய ... 40
பித்தளையை சுத்தம்செய்ய ... 453
பிப்பலி சூர்ணம் ... 330
"பிரகலாதாழ்வான் சரிதை" ... 134
"பிரதாப முதலியார் சரித்திரம்" ... 280
பிறவி, ஓர் அதிசய ... 501
பீங்கான் தட்டுகள், விரிந்துபோன ... 493
"பீமலா அல்லது திவானின்மகள்" ... 280
பீரங்கிகளின் தன்மை ... 480
பீரங்கிகளை மறைத்துவைத்தல், யுத்தகளத்தில், ... 202
பீரங்கிகள், யுத்தத்தில் உபயோகப்படுகிற பெரிய ... 506
பீஜித்தீவில் இந்தியர்கள் ... 147
பு
புகையிடுதல், மரமரங்களுக்கு ... 189
புகையிலை, கழிவு ... 44
புகையிலைக்கு எரு ... 237
புகையிலைச் சாம்பல் ... 497
புகையிலையின் கெடுதிகள் ... 365
,, விதை யெண்ணெய் ... 289
புதுக்கோட்டை ராஜாவுக்கு புத்ரன் பிறந்தது ... 342
புதுவகை நோய், ஒரு ... 459
புத்ரர்களின் ஸம்மதத்தைக் கேட்காமல் பாகம் செய்வது ... 531
புயல்காற்று, ஒரு பெரும் ... 542



பக்கம்.
புராணகதை (கார்த்திகை) ... 474
புருஷர்கள் நவராத்ரியை கொண்டாடும் விதம் ... 391
புல் பாயின் பயன் (கோரைப்புல்) ... 167
புல்லிலிருந்து கடுதாசி ... 192
புனர்விவாகம், அரேபியாவில் ... 197
புனலூர் காகிதத் தொழில்சாலை ... 191,376
புஸ்தகங்களை தெரிந்தெடுத்தல் ... 83
புஸ்தகம், மிக ப்ரும்மாண்டமான ... 260
புஷ்பங்களின் பாகங்களும் அவற்றின் நிறமும் ... 208
பூ
பூகோளப்பாடம் ... 100
பூசனிக்காய் கருவடாம் ... 46
பூச்சிகளின் உணவு ... 241
பூச்சிகள் விரோதிகளிடமிருந்து காத்துக் கொள்ளும் உபாயங்கள் ... 360,395
பூட்ஸுகள், புது ... 140,493
பூதம் வந்து பார்க்கும் ஒரு குளம் ... 501
பூமியின்கீழ் ஒரு நிலவறை ... 801
பூமி (ரோஜா சாகுபடியில்) ... 177
பூவந்திமரம் ... 417
பெ
பெண்கல்வி ... 82,499
,, இந்தியாவில் ... 119,170
,, கான்பரென்ஸ் ... 367
பெண்களின் ப்ரைமெரி கல்வியை நிர்வகிப்பது ... 121
பெண்களுக்கான ஸெகண்டரி ஸ்கூல்கள் ... 170
பெண்களுக்கு ஸங்கீதம் ... 539
பெண் கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்கள், ஒரு ... 14
பெண் பாடசாலைகளை இன்ஸ்பெக்ட் செய்வது ... 172
பெரிய பீரங்கி—வெடியும் ம்ருகங்களும் ... 489
பெரு (கல்வி நிலைமை) ... 519
பெரு நெருப்பின்மீது நடத்தல் ... 421
பெலூன் ரெயில் ... 498
பெல்ஜியம் (கல்வி நிலைமை) ... 482
பெற்றோரும் பிள்ளைகளும் ... 144
பே
பேர் இரவலாக பாராதீனம் செய்வது ... 37
பை
பையன்கள் பக்கம் 45, 97, 145, 193, 241, 290, 338, 378, 418, 458, 498 ... 538
பையன்கள் ரஸ்தாக்கள் போடுதல் ... 241
பொ
பொது விஷய விளக்கம், ஸ்வர்ஷத்திய சுதேசமித்திரன் ... 280
பொதுஜன வேலைக்குத் தயாராவது ... 447

பக்கம்.
பொத்தான் கைத்தொழில் ... 95
பொருத்தமான பதில் ... 196
பொருளாதார ஸம்பந்தமாய் இந்தியாவுக்கு வேண்டியவை ... 8
பொலிவியா (கல்வி நிலைமை) ... 520
போ
போதாயனர் ... 326
போர்த்துகல் (கல்வி நிலைமை) ... 482
போர்புரியும் எறும்புகள் ... 254
போஜன ப்ரியம் ... 51
ப்
ப்ரபலமாய் நவராத்ரி கொண்டாடப்படும் ஸ்தலங்கள் ... 393
ப்ரயாணிகளுக்கான ரெயில் வண்டிகள் குறைக்கப்படும் ... 542
ப்ராமணரல்லாதவர்களுக்கு சடங்கு முதலியவைகள் ... 332
ப்ராமணரல்லாதவர்களுடைய கல்வி ... 407
ப்ராமணர்கள் மற்றவர்களுக்கு வந்தனம் செய்வது ... 420
ப்ராமிஸரி நோட் ... 531
ப்ரான்ஸ் (கல்வி நிலைமை) ... 482
ப்ரும்மாண்டமான ஆகாயப் படகு ... 281
,, கறி காய்கள் ... 541
ப்ரெஞ்ச் போர்வீரன் ... 540
ப்ரேஸில் (கல்வி நிலைமை) ... 520
ப்ரைமெரிக் கல்வி, இலவச ... 181
ப்ரைமெரி பாடசாலைக் கட்டிடங்கள் ... 229
ப்ளேகுக்கு ஒரு பரிஹாரம் ... 36
ம
மகம்மதிய உபாத்யாயர்களுக்கு ஒரு ட்ரெய்னிங் ஸ்கூல் ... 133
மகம்மதியர்களுக்கு ஒரு காலேஜ், வாணியம்பாடியில் ... 527
"மகான் முகம்மது நபி அவர்களின் உபதேசரத்னம்" ... 488
மஞ்சீத் ... 350
மணல்மண் (செங்கல் அறுப்பதற்கு) ... 179
மண் (எலுமிச்சை சாகுபடி) ... 225
மண்ணுண்ணிப் பாம்பின் உபயோகம் ... 534
மண்ணை பரிசோதிக்கும் வழி (செங்கல் அறுப்பதற்கு) ... 179
மதராஸ் நிர்வாக கௌன்ஸில் ... 429
மதுபானம் செய்யாமை ... 419
மதுரைத் தமிழ் சங்கம் ... 230
மதுரையில் கர்ம வ்யாதி ... 282
மத்யஸ்த கமிட்டிகள் ... 39
மரக்கூழால் கிடங்குகள் ... 52
மரங்கள், அமெரிக்காவிலுள்ள ரொம்ப பெரிய ... 241

பக்கம்.

மருதாணி ... 349
மருத்துவச்சிகளும் நர்ஸுகளும் ... 419
மலச்சிக்கல் ... 523
மலம் பீச்சுதல் ... 480
மலிவான வர்ணம் ... 236
மலேயா நாடுகளுக்கு குடிப்போவது ... 47
மலேரியா ... 88
மழை வரவழைப்பது ... 183
மனிதத்தீப்பறவை ... 245
மனிதர்களின் தலைமயிர் ... 337
மனிதர்களைப்பற்றிய குறிப்புகள் 38, 90, 138, 186, 234 ... 372
மனு ஸ்ம்ருதி ... 326
மாகாண ஸோஷல் கான்பரென்ஸ் ... 187
மாடுகளுக்கு பருத்திக்கொட்டை தீனி ... 334
மாணுக்கருக்கு நீதி போதனை ... 73
மாணுக்கரும் உபாத்யாயரும் ... 89
மாண்டிநிக்ரோ (கல்வி நிலைமை) ... 482
மாதுளை ... 136
மாமரங்களுக்குப் புகையிடுதல் ... 189
மாலர்களுக்கு ஒரு ராத்ரி பாடசாலை ... 39
மாஸவர்த்தமானம் 53, 102, 150, 198, 246, 295, 343, 382, 423, 463, 503, 543
மாஸுல்மதிப்புகள் தயார் செய்யும் முறை... 362

மி

மிகப்ரும்மாண்டமான புஸ்தகம் ... 260
மிதபோஜனமும் மதுவிலக்கும் ... 280
மிளகாய் சாகுபடி ... 366
மிளகின் உபயோகங்கள் ... 490

மீ

மீன்களுடைய தூக்கம் ... 369
மீன் பிடிக்கும் செடி ... 461

மு

முகம் பார்க்கும் கண்ணுடி முதலியவைகளை சுத்தம் செய்ய ... 373
முட்டைகள் கெடாமலிருக்க ... 413
முதலாளியும் உழைப்பாளியும் ... 2
மூத்தங்கொடுத்துப் பணம் ஸம்பாதிக்கும் ஸ்திரீகள் ... 197
முத்தை சுத்திசெய்யும் முறை ... 413
முந்திரிப்பருப்பு ... 289
முள்கம்பி வேலிகள் ... 106
முள்ளு கரணை ... 348
முறைக்காய்ச்சலைப்பற்றிய ஒரு புதிய கோட்பாடு ... 184
முனிஸிபாலிட்டிகள், பணம் பெருத்த ... 462

மூ

மூத்ர எரு ... 414
மூர்ச்சையில் கவனிக்கத்தகுந்த சிகித்ஸை ... 285
மூளை ... 300

"மூன்று சகோதரர்கள்" ... 182
,, தலை முறையில் ஏக கால ப்ரஸவம் 293

மெ

மெக்ஸிகோ (கல்வி நிலைமை) ... 519
மெத்தையால் செய்யப்பட்ட தெப்பம் ... 538

மே

மேல் ஆப்ரிக்க நாட்டாரின் நாணயம் ... 381
,, நாட்டு நாகரீகம் ... 228
மேற்கு ஆஸ்ட்ரேலியா (கல்விநிலைமை) ... 484
மேற்குப் போர்முகத்தில் கிடங்குகள் ... 52

மை

மைனர் விசவை ஸ்வீகாரம் செய்துகொள்வது 451
மைஸூரில் கோவாபரேஷன் ... 415
,, சந்தனத்தைலம் ... 239
,, புதிய பாடசாலைகள் ஸ்தாபிப்பது ... 279
,, ஸோப் செய்யும் தொழில் ... 43

மொ

மொத்தத்தில் வாங்குவது ... 535
மொரிஷஸ் தீவில் இந்தியர்கள் ... 147
மொழிபெயர்ப்பவர் கவனிக்கவேண்டிய விஷயங்கள் ... 182

மோ

மோட்டார்வண்டி ... 100
மோட்டார்வண்டிகள், இந்தியாவில் ... 191
மோயாபுல் ... 96
மோக்ஷம் ... 532

மௌ

மௌன வ்ரதம்பூண்ட ஒரு வழக்காளி ... 341

ம்

ம்ருகங்களின் கால்நோய் வாய்நோய், கோமாரி அல்லது ... 286
ம்ருகங்களுக்குள் ஐக்யபாவம் ... 432

ய

யஜுர்வேத ஆரண்யகம், ஜலத்தைப்பற்றி ... 326

யா

யாழ்ப்பாணத்தில் நரபலி ... 293
யானைக்கு எலியினிடம் பயம் ... 378
யானை தந்தத்தை வெளுத்தல் ... 140
யாஜ்ஞவல்க்யஸ்ம்ருதி, ஜலத்தைப்பற்றி ... 326
யாஹில் என்னும் பறைச்சி ... 352

யு

யுக்திகளும் முறைகளும் 40, 92, 140, 188, 236, 285, 333, 373, 413, 453, 493... 533
யுத்தத்தில் இறந்த குதிரைகளை உபயோகப்படுத்துதல் ... 192
யுத்தத்தில் உபயோகப்படுகிற பெரிய பீரங்கிகள் ... 506





பக்கம்.

யுத்தத்தில் எதிரிகளை ஏமாற்றுதல் ... 58
,, செட்டிக்குடித்தனம் ... 246
,, த்ரவரூபமான நெருப்பு ... 346
,, பீரங்கிகளை மறைத்துவைத்தல் 202
யுத்தத்தின் செலவு ... 298,342
யுத்தமும் கடுதாசி வ்யாபாரமும் ... 75
,, தென்னாப்ரிக்கா இந்தியர்களும் ... 243
,, நாஸ்திக மதமும் ... 139
யுத்தம் உக்ரமாய் நடக்குமிடத்தில் சண்டைசெய்தல் ... 460
யுனைடட்கிங்டம் (கல்வி நிலைமை) ... 482

யூ

யூனிவர்ஸிட்டி, இந்திய ஸ்திரீகளுக்கான ... 194

ர

ரகஸ்யமாய்ப் பணஉதவி செய்தல் (ஜெர்மனி) ... 251
ரத்த ஓட்டம் ... 244
ரத்தம் வரும் காயங்கள் ... 537
ரம்பத்துன் ... 457
ரம்ஸான் ... 320
,, மாஸத்தில் தொழும் விதம் ... 321
,, மேலான மாஸம் ... 321
ரயத்துகளின் நிலம் ஸர்க்காருக்கு ஸொந்தமா? ... 277
ரஷ்யாராணுவ உத்யோகஸ்தர், ஒரு ஸாமர்த்யமுள்ள ... 340
ரஷ்யா (கல்வி நிலைமை) ... 482
ரஷ்யாவில் கோவாபரேஷன் ... 190
ரஷ்யாவின் ஜனத்தொகை ... 246
ரக்ஷண்ய சேனையும் குடியேற்றமும் ... 47
ராக்பெல்லர் கோடீஸ்வரரின் மனைவி ... 459
ராமானுஜமய்யங்கார் ... 145
ராமாயணம் ... 326
"ராஜயோகம்" ... 368
ராஜவம்சங்களில் கல்யாணச்செலவு ... 174
"ராஜாமணி" ... 134

ரு

ருதுமதி விவாகத்தைப் பற்றிய சாஸ்த்ர தாத்பர்யங்கள் ... 129
ருமேனியா (கல்விநிலைமை) ... 483
ருமேனியாவில் முக்யஸ்தர்கள் ... 427
ருமேனியாவின் அரசர் ... 427
,, கப்பல்படை ... 427
ருமேனியாவின் வழக்கங்களும் அவாதி குருட்டு நம்பிக்கைகளும் ... 209
ருமேனியாவின் ஸைன்யம் ... 427
ருமேனியாவும் யுத்தமும் ... 426

ரெ

ரெயில்வண்டிகள் குறைக்கப்படும், ப்ரயாணிகளுக்கான ... 542

ரொ

ரொட்டி சுடுவதில் ரத்தத்தின் உபயோகம்... 35
ரொட்டியின் விநோத உபயோகங்கள் ... 245
ரொம்ப உஷ்ணமான ப்ரதேசம் ... 378
,, சிறிய ரெயில்வேக்கள் .. 498

ரோ

ரோஜா சாகுபடி ... 177
,, செடிகள் வைக்கும்விதம் ... 177
ரோஜாவுக்குள்ள வ்யாதிகள் ... 178

ல

லக்ஸம்பர்க் (கல்வி நிலைமை) ... 483
லவங்கம் ... 44

லா

லாண்ட் என்க்ரோச்மெண்ட் ஆக்ட் ... 185
லாபத்தில் பங்கு ... 3
லாபமும் ரிஸர்வ்பண்டும் ... 375
லால்குடி வித்யாகாட்சி சாலை ... 342

லை

லைப்ரரிகள், மைஸூரில் ... 279

வ

வக்கீலும் கக்ஷிக்காரனும் ... 196
வக்கீல், சின்ன ... 148
வடாம், கல்லை ... 242
வடிகட்டும் கருவி, ஒரு மலிவான ... 490
வட்டிக்கு பதிலாக பண்ணையாள் வேலை செய்வது ... 491
வட்டிக்கு பதிலாக வேலைசெய்தல் ... 331
,, வ்யாஜ்யம் ... 331
வணக்கம் ... 500
வாதகஷிணை ... 452
வரவுக்கேற்ற செலவு ... 467
வரிகள், இறக்குமதி ... 125
,, ஏற்றுமதியர்கும் சரக்குகளின்மேல். 126
,, புது ... 125
வருணஸ்த்ரம் ... 481
வருமானவரி ... 37,127
வர்ணமுள்ள பட்டுகளையும் கம்பளி உடைகளையும் சுத்தம் செய்தல் ... 40
வர்ணம், ஒரு மலிவான ... 236
வர்ஷாந்த்ரச் செலவு ... 479
வலம்புரி ... 348
வலாரி ... 348
வளையல்கள், சிகிளுப் பொட்டு ... 194
வறுமையின் கெடுதிகள் ... *468
வஜ்ரத்தை உருக்க ... 40
வாதுமை ... 394
வாய்க்கால் வெட்டுதல் ... 233
வாழை ... 537
வாணியம்பாடியில் மகம்மதியர்களுக்கு ஒரு காலேஜ் ... 527

பக்கம்.

வி

"விகடேச்வரன்" ... 368
விக்கலை நிறுத்த ... 188
விக்டோரியா (கல்வி நிலைமை) ... 484
விசித்ரப்ரஸவங்கள் ... 461
விட்டோபா சரித்ரம் ... 182
விதவாச்ரமம் ப்ரொபஸர் கார்வேயின் ... 146
விதவைக்கு ஜீவனாம்சம் பெறபாத்யம் ... 451
விதவையால் செய்யப்பட்ட பாராதீனம் .. 185
விதவைவாங்கின சொத்து ... 331
விதவைசொத்தில் ஒரு பாகத்தை பாராதீனம் செய்வது ... 89
விதைதெரிந்தெடுத்தல் (எதுமிச்சை சாகுபடி) ... 225
விதைநெல்லை நல்லதாகத் தெரிந்தெடுத்தல் ... 286
விதை ஸ்டோர்கள் ... 494
வித்யா கான்பரென்ஸ் ... 85
,, விஷயம் 33, 85, 133, 181, 229, 279, 327, 367, 407, 447, 487 ... 527
விநோதங்கள் 49, 101, 149, 197, 245, 293, 341, 381, 421, 461, 501 ... 541
வியாஸ பௌர்ணிமை ... 412
விலையுள்ள பொருள்கள் 44, 96, 144, 192, 240, 289, 337, 377, 417, 457, 497 ... 537
வில்லிங்டனும் இந்தியச் சிறுவர்களும், லார்ட் ... 196
விவஸாய கணிதம் ... 420
விவஸாயக் கருவிகளும், கோவாபரேஷனும் 238
,, குடியேற்றம், ஓர் ... 218
விவஸாயப் பிள்ளைகள் ... 454
விவஸாயம் 41, 93, 141, 189, 237, 286, 334, 374, 414, 454, 494 .. 534
விவஸாய விளை பொருள்களை ஜப்தி செய்தல் 117
விவாக ஸம்பந்தமான மூட நம்பிக்கைகள் ... 461
விவாகம், ஒரு சிசு ... 341
விளக்கு, பாக்கெட்டில் கொண்டுபோகக் கூடிய ... 236
விளக்கு புகையாமலிருக்க ... 40,373
விளம்பரம் செய்வதால் பெருத்த லாபம் கிடைப்பது ... 536
விளம்பரம், வ்யாபார ... 157
விஷமதாரி ... 350
விஷ ஜந்துக்கடி ... 188
"விஷ்ணு ஸ்தலமஞ்சரி" ... 134
,, ஸ்மிருதி (ஜலத்தைப்பற்றி) ... 326

வீ

வீட்டில் பாம்பு வாராதபடி செய்ய ... 453

வெ

வெக்கை ... 387
வெடிக்கும் த்ரவம் ... 481
வெடியின் சப்தம் ... 135
வெட்டுக்காயம் ... 194
வெண்ணெயைப் பரிசோதிக்க ... 188
வெண்ணெய், தேங்காய் ... 240
வெந்தயக்கறி ... 539
வெந்நீரும் குளிர்ந்த ஜலமும் ... 232
வெளிச்சம் தரும் பூச்சிகள் ... 49
வெளி நாடுகளிலிருந்து வரும் கூலியாட்களுக்குத் தனி வண்டிகள் ... 462
வெளிநாடுகளுக்குப் போவது, சென்னையிலிருந்து ஜனங்கள் ... 243
வெள்ளைப் புலா ... 350
வெள்ளியை சுத்தம்செய்ய ... 49
வெள்ளிவண்டி ... 339
வெள்ளைக்காகம் ... 149
வெற்றிலைவள்ளிக்கிழங்கு ... 32

வே

வேடிக்கையும் துக்கடாக்கதைகளும் 48, 100, 148, 196, 244, 292, 340, 380, 420, 460, 500 ... 540
வேப்பமரம், ஒரு விநோத ... 149
வேம்பு ... 144
வேர்க்கடலை ... 189
வேர்க்கடலையை தான்யப் பயிருடன் கலந்து பயிர் செய்தல் ... 141
வேர்க்கடலை (வ்யாபாரம்) ... 259
வேலிக்கு உபயோகமான செடிகள் ... 347

வை

வைத்யப் பயிற்சிக்கு ஸௌகர்யங்கள் ... 370
வைத்ய விசாரணை, பள்ளிக்கூடங்களில் ... 181
வைத்யஸங்கம், தென் இந்திய ஆயுர்வேத ... 184
வைப்பாட்டி பிள்ளைக்கு சொத்துக் கொடுத்தல் ... 185
வைரங்களை சோதித்தல் ... 453
வைரத்தைவிடக் கெட்டியான ஒரு உலோகம் 51

வ்

வ்யவஸாய அபிவ்ருத்தி, ஜப்பானில் ... 165
வ்யாதிக்காரனும் அவன் வைத்யமும் ... 380
வ்யாபார உளவாளிகள் (ஜெர்மனி) ... 250
வ்யாபாரக்கடன்களும் அவிபக்த குடும்பமும் 451
,, நீதிகள்—12 ... 496
,, ப்ரதி நிதிகள் (ஜெர்மனி) ... 252
,, முறைகள், ஜெர்மானியர்களுடைய, 250
வ்யாபாரம் 43, 95, 143, 191, 239, 288, 336, 376, 416, 456, 496, ... 536
,, எதிரி தேசங்களோடு, ... 288
,, தொழில், வ்யாபாரக்கணக்கு கள் இவைகளுக்கான பள்ளிக்கூடம் ... 447
வ்யாபார விளம்பரம் ... 157
வ்யாஜ்யத்துக்காக கார்டியன் ... 283





பக்கம்.

ஜ

ஜட்கா வண்டிக்காரன் ... 540
ஜப்பானில் விவஸாய அபிவ்ருத்தி ... 165
ஜப்பானின் கைத்தொழில் அபிவ்ருத்தி ... 336,376
ஜப்பான் (கல்வி நிலைமை) ... 484
,, சக்ரவர்த்தி ... 538
,, பாஷையில் அச்சுக்கோத்தல் ... 245
ஜலதோஷம் ... 330
ஜலத்தில்நடக்க ஜோடுகள் ... 409
ஜலத்தைப்பற்றி சாஸ்த்ரங்கள் சொல்வன ... 325
ஜலமிறைத்தல், கிணறு தோண்டுதல் வேலைகள் ... 237
ஜலம் குடித்தல் ... 136
,, சாப்பிடும்போது ... 530
ஜனத்தொகை, உலகத்தின் ... 193
,, ரஷ்யாவின் ... 246
ஜனஸமூகமும் மதமும் 39, 91, 139, 187, 235, 284, 332, 372, 412, 452, 492... 532

ஜா

ஜாதி ... 187
ஜாதிவாரியான பள்ளிக்கூடங்களும், பையன்களும் பெண்களும் சேர்ந்து வாசிக்கும் பாடசாலைகளும் ... 122
ஜாவாதேசத்து ஸ்த்ரீகள் ... 401

ஜீ

ஜீவராசிகளின் பீரங்கிகள் ... 480
ஜீவித்திருத்தல், அதிக காலம் ... 184

ஜூ

ஜூட் நாருக்கு பதில் ... 377

ஜெ

ஜெயங்கொண்ட சோழபுரம் திருச்சினுப்பள்ளி ரெயில்வே ... 52
ஜெயில் கைதிகளுக்காகும் செலவு ... 466
ஜெர்மனி (கல்வி நிலைமை) ... 483
ஜெர்மனியில் ஆகாய விமானிகள் ... 52
,, யுத்தத்துக்கு லாயக்காயிருப்பவர்களின் தொகை ... 150
ஜெர்மனியில் விவஸாய கோவாபரேஷன் ... 535
ஜெர்மன் சேனைத்தலைவர்களின் வயது ... 50
,, வெடிகுண்டு, ஒரு புது ... 462
,, வில்வர் ... 281
ஜெர்மானியர்களுடைய உபயோகத்துக்காகப் பாலங்கட்டினது ... 420
ஜெர்மானியர்களுடைய வ்யாபார முறைகள் ... 250
ஜெர்மானியர்கள் பொய்யர்கள் ... 292

ஜோ

ஜோட்பூர் மஹாராஜா ... 90

ஷா

ஷாமாய்த்தோலை சுத்தம் செய்ய ... 453

க்ஷ

க்ஷயரோகமும் குடியிருப்பு வீடுகளும் ... 184
க்ஷவரம் செய்துகொள்வதும் சோப்பும், ... 285

ஸ

ஸகோதரிக்கு கல்வி கற்றுக் கொடுத்தது ... 380
ஸதிபதிகள் இருவரும் மாண்டது ... 342
ஸப்மரீன்களை வ்யாபாரக் கப்பல்களாக உபயோகிப்பது ... 422
ஸம்ஸ்க்ருதத்தை எழுதுவது, தமிழ்எழுத்தில் 230
ஸரஸ்வதி பூஜை ... 392
"ஸரோஜா" ... 438
ஸர்க்காருக்கு சொந்தமா, ரயத்துக்களின் நிலம் ... 277
ஸர்க்கார் உதவி, கட்டிடஸங்கங்களுக்கு, ... 535
ஸர்வ கலாசாலைகள், இந்தியாவில் ... 229
ஸநாதன தர்ம கான்பரென்ஸ் ... 139

ஸா

ஸாமான் வாங்குவதற்கான ஒரு கோவாபரேடிவ் ஸங்கம் ... 375
ஸால்வேடார் (கல்வி நிலைமை) ... 519

ஸி

ஸிதோபலாதி சூர்ணம் ... 410
ஸிலோனில் உள்ள தமிழ் கூலியாட்கள் ... 294
ஸினிமட்டோக்ராப் படம் காட்டுதல், இருட்டில்லாமல், ... 183

ஸு

ஸுகாதார க்ராண்டுகள் ... 342
,, போதனை, ஸ்த்ரீகளுக்கு ... 242
ஸுகாதாரமும் வைத்யமும் 36, 88, 136, 184, 232, 282, 330, 370, 410, 450, 490, ... 530
ஸுகாதார விதிகள், இரவில் கவனிக்க வேண்டியது ... 436
ஸுப்ரமண்ய அய்யர், காலஞ்சென்ற ஜி. ... 186
ஸுப்ரமண்யஸ்வாமி ... 532
ஸுல்தானுடைய தீர்ப்பு ... 100

ஸூ

ஸூர்யகாந்தி ... 337
ஸூர்யகாந்திப்பூவும் மலேரியாவும் ... 330

ஸெ

ஸெண்ட்ரல் பாங்கிகளும் ஜில்லா பாங்கிகளும் ... 20
ஸெப்பலின் கப்பல்கள்வருவதை யறிந்து கொள்வது ... 35
ஸெர்வியா (கல்வி நிலைமை) ... 488

ஸை

ஸைடார், நீரிலும் நிலத்திலும் உபயோகப்படக் கூடிய ... 458
ஸையாம் (கல்வி நிலைமை) ... 484

ஸைன்யங்கள் உபயோகிக்கும் சிவப்பு நிற
  மூன்ன உடைகள் ... பக்கம். 231
ஸைன்யத்தில் டெலிபோன் ... 386

ஸொ

ஸொத்துக்கு பூராபாத்யமில்லாதவர்களைப்
  பற்றிய மசோதா ... 411
ஸொத்து பரிவர்த்தனை , ... 531

ஸோ

ஸோப்பும் க்ஷவரம் செய்துகொள்வதும் ... 285
ஸோயா அவரை ... 457

ஸ்

ஸ்க்ரூ ஆணிகளை கழற்றுதல் ... 40
ஸ்த்ரீகளின் கடமைகள் ... 485,526
ஸ்த்ரீகளுக்கு நற்போதனை ... 459
  ,, வீட்டுக் கைத்தொழில்கள் ... 379
  ,, ஸுகாதார போதனை ... 242
  ,, ஹாரம் போடுதல் ... 39
ஸ்த்ரீகளும் நகைகளும் ... 379
ஸ்த்ரீகள் நவராத்ரியை கொண்டாடும்விதம் 391
  ,, பக்கம் 46, 98, 146, 194, 242,
  291, 339, 379, 419, 459, 499 ... 539
ஸ்த்ரீ வைதிகள் ... 499
  ,, மாணவர்களுக்கு ஒரு ஹோஸ்டல் ... 33
  ,, வக்கீல் உத்யோகம்செய்ய முன் வந்
  திருப்பது, ஒரு ... 291
ஸ்நானமும் அதன் உபயோகங்களும் ... 180
ஸ்பெய்ன் (கல்வி நிலைமை) ... 483

பக்கம்.
ஸ்வதேச வைத்யமுறைகள் ... 136
  ,, ஸமஸ்தானங்களில் மதுவிலக்கு ... 452
ஸ்வப்னங்கள் ... 135
ஸ்விட்ஸர்லண்ட் (கல்வி நிலைமை) ... 483
ஸ்வீகாரபுத்ரன், சூத்திரர்களில் ... 451
ஸ்வீடன் (கல்வி நிலைமை) ... 483

ஹ

ஹங்கேரி (கல்விநிலைமை) ... 444
ஹம்ஸத்வனி ... 98
ஹரிஹரர்களின் அத்வைதபாவம் ... 412
ஹவிட்ஸர் பீரங்கி, சத்தமில்லாத ... 462

ஹா

ஹார்டிஞ்ஜின் ஆட்சி, லார்ட், ... 176
ஹார்டிஞ்ஜ், லார்ட், ... 234
ஹாண்டுராஸ் (கல்விநிலைமை) ... 519
ஹாலண்ட் (கல்விநிலைமை) ... 483

ஹி

ஹிந்துக்கள் வீடுகளில் பூஜை ... 390
ஹிந்து ஸர்வகலாசாலை ... 33

ஹெ

ஹெய்ட்டி (கல்விநிலைமை) ... 519

ஸ்ரீ

ஸ்ரீ சிவஸுப்ரமண்ய நாமாவளி ... 492
ஸ்ரீநிவாஸாச்சார்யாருடைய ப்ரசங்கள் ... 34
"ஸ்ரீமதி" ... 230

JUSTICE PRINTING WORKS, SECOND LINE BEACH, MADRAS—1917.

# ஜனுபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

**THE PEOPLE'S FRIEND.**

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE.'



ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A. EDITOR.



புஸ்தகம் 8. Vol. 8. — ராக்ஷஸ, தைமீ, JAN—FEB, 1916. — ஸஞ்சிகை 1 No. 1.


## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. | A. | P. | | Foreign. Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | ... ... | 6 | 0 | 0 |
| Single copy ... | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |
| Sample copy | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 Page | ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do | ... | 2 | 8 | 0 | do |
| ¼ do | ... | 1 | 4 | 0 | do |
| $\frac{1}{10}$ do | ... | 1 | 0 | 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication It will be understood that the publishers may, at their discretion, republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனுபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணுக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனுபிமானி'யை வாங்கிவருகிறுர்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | | | அந்ய நாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 | 0 | 0 | ... | 6 | 0 | 0 |
| தனிப்ரதி ... | 0 | 6. | 0 | ... | 0 | 8 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் | ஒன்றுக்கு | 5 | 0 | 0 |
| ½ ,, | ,, | ,, | 2 | 8 | 0 |
| ¼ ,, | ,, | ,, | 1 | 4 | 0 |
| $\frac{1}{10}$ ,, | ,, | ,, | 1 | 0 | 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேண்டுமானுலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருபநேயர்கள் அறியவேண்டும்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

ஜனோபகாரி.

புஸ்தகம் 8.] ராக்ஷஸ௵ தைமீ. [ஸஞ்சிகை 1.

## THE EMPLOYER AND THE EMPLOYED.

BY T. LAKSHMI NARAYANA AIYANGAR, B. A.,
*Commercial Assistant, Salem College.*

## முதலாளியும் உழைப்பாளியும்.

### பண்டம், உழைப்பு, முதல்.

பூமியின் பலவிடங்களில் அகப்படும் பொருள்களிலிருந்தும், விளையும் பொருள்களிலிருந்தும் அவரவர்களுக்கு வேண்டிய பொருள்களைச் செய்துகொள்ளுவதும், அவைகளைத் தங்கள் அவச்யத்துக்குத்தகுந்தபடி தங்களுக்குள் மாற்றிக்கொள்ளுவதும் ஜனங்களுக்குள் எங்கும் பழையகால முதல் ஸகஜமாகவே இருந்துகொண்டுவருகிறது. பண்டம் ஒருபக்கத்தில் கிடப்பதும், பணம் ஒரு பிசினாரி கையில் தூங்குவதும், ஏழைகள் வேலையில்லாமல் திண்டாடுவதும், பொதுஜன க்ஷேமத்திற்கு மிகவும் குந்தகமானவைகள் என்று எப்போதும் ஒப்புக் கொள்ளப்படும். பண்டம், உழைப்பு, முதல்—இவைகள் ஒன்றுக்கொன்று ஸம்பந்தப்பட்டால்தான் பல தொழில்களும் வர்த்தகங்களும் நடைபெறுவது முடியும். ஆகையால் பண்டங்களை உபயோகப்படுத்துவதற்காக முதலும் உழைப்பும் எப்படி சேரவேண்டும் என்பதை இப்போது கவனிப்போம்.

### உழைப்பாளிகளின் ஸ்திதி.

முதலாளி வேண்டிய பணத்தைமாத்ரம் கையில் வைத்துக்கொண்டு வர்த்தகமோ மற்றதொழிலோ அதற்குத் தகுந்த மனிதர்களின் ஸகாயத்தைக் கொண்டல்லது செய்வது முடியாது. இம்மனிதர்கள் தங்களுக்குத் தெரிந்தவேலையைக் கோரும் ஏதாவது ஒரு முதலாளியிடம் அமர்ந்துகொள்ளாமல் ஜீவிப்பதும் அஸாத்யம். ஆகையால் முதலாளிகளுக்கு உழைப்பாளிகள் வேண்டும். உழைப்பாளிகளுக்கு முதலாளிகள் வேண்டும். இப்படி முதலும் உழைப்பும் ஒன்றின்மேலொன்று சார்ந்துள்ள போதிலும், உலகத்தில் முதலாளிகள் உயர்ந்தும் உழைப்பாளிகள் தாழ்ந்தும் இருக்கிறார்கள். ஏனென்றால் முதலுள்ளவர்கள் சிலர். இல்லாதவர்கள் பலர். பழையகாலத்தில் இவ்வுழைப்பாளிகள் முதலாளிகளிடம் அடிமைகளாயிருந்தார்கள். பிறகு நாகரிகம் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரிக்க இவர்கள் முறையே கூலிக்காரர்களாயும், கார்யஸ்தர்களாயும், கூட்டாளிகளாயும் விருத்தியடைய இடம் கொடுக்கப்பட்டது. இம்மாதிரி இவர்களுடைய ஸ்திதியைப் பொறுத்தே முதலாளிகளின் தொழிலும் லாபமும் வலுக்கும்.

### அவர்களின் அச்ரத்தை.

ஐரோப்பிய தொழிலாளிகளில் அநேகர் இதன் உண்மையை அப்போதைக்கப்போது நன்றாகத் தெரிந்துகொண்டு தங்களிடம் வேலைக்கு அமர்ந்திருப்பவர்களுடைய க்ஷேமத்தையும் தங்களால் கூடியமட்டில் கவனித்து வருகிறார்கள். அவர்களைக் கசக்கி வேலைவாங்கி தொழிலை நடத்திவந்தின் லாபம் முழுவதும் முதலாளிகளுக்கே சேருவதின் தீமை மிகவும் கொடூரமானது. கூலிக்காக உழைப்பவர்களுக்கு தங்கள் செய்யும் வேலையில் அதிகமாக உத்ஸாகம் இருக்காது. "உழைத்த நாளுக்குக் கூலி, உழைக்க முடியாமலிருந்த நாளுக்கு யார் கொடுப்பார்கள். அதிக ப்ரயாஸம் எடுத்துக்கொள்ளுவதனால் வரும் அதிக லாபத்தில் நமக்கு ஏதாவது அதிக கூலிவருமா? இந்தக் கூலிக்கு இவ்வளவு ச்ரத்தை போதுமானதே. நமக்கு இட்டவேலையை நாம் முடித்தபிறகு எது எப்படிப்போனால் என்ன;" என்று இவ்வாறு நினைத்து தங்கள் வேலையில் ஒருவிதமான அலக்ஷ்யமும் அச்ரத்தையும் கொள்கிறார்கள். முதலாளி தன் தொழிலை சரிவர நடத்துவதற்காக தானே நேராகநின்று அவர்களிடம் வேலை வாங்குகிறான். எதிரிலே நின்று வற்புறுத்தினால் வேலை செய்வதும், இல்லாவிட்டால் சோம்பி இருப்பதுமாயுள்ள இவர்களை நச்சி வேலைவாங்குவது மிகவும் ப்ரயாஸமானது. முதலாளியும் இவர்கள் செய்யும் வேலைக்கு இந்தக் கூலி போதுமானது என்கிறான். இதனால் முதலாளியின் வேலை கெடுவதோடு கூட, இவ்வுழைப்பாளிகளின் ஸன்மார்க்கமும் கெட்டுப்போக இடமுண்டாகிறது.

### ஐரோப்பிய முதலாளிகளின் முயற்சி.

மேலும், வரவர எந்தத் தொழிலிலும் வர்த்தகத்திலும் லக்ஷக்கணக்காகவும் கோடிக்கணக்காகவும் பணம்சேர்த்து முதலிடப்பட்டு நீராவி, மின்ஸாரம், முதலியவைகளின் சக்தியைக்கொண்டும், நூற்றுக் கணக்கும் ஆயிரக் கணக்குமான உழைப்பாளிகளைக் கொண்டும், முன்செய்ததைவிட ஆயிரம்மடங்கு அதிகமான வேலைசெய்யப்பட்டுவருகிறது. இவ்வளவு பரப்படைந்த தொழிற்சாலைகளும் வர்த்தகங்களும் லாபமடைந்து விருத்தியாவது அநேகமாய் இவ்வுழைப்பாளிகளைப் பொறுத்ததாகிறது. ஆகையால் புத்திசாலியான பல ஐரோப்பிய முதலாளிகள் இதைப்பற்றி வெகுகாலமாக யோசித்து இவ்வித நிலைமையை ஏதாவது ஒருவழியில் ஒழுங்குபடுத்த வேண்டுமென்று விசாரித்து, தங்களால் ஸாத்யப்பட்டவரையில் ப்ரயத்னம் செய்கிறார்கள். ஆரம்பத்தில் ஒரே முதலாளியால் வேலை முழுவதையும் மேல்பார்வை பார்க்கமுடியாததோடுகூட பெரிய முதலும் போடமுடியாததனாலும், பலர் சேர்ந்து தங்கள் முதல்களை ஒன்றாகச் சேர்த்து பெரிய தொழிற்சாலைகளையும் வர்த்தகங்களையும் நடத்தத்தொடங்கினார்கள். இதில் சில நன்மைகள் உண்டு. ஒரே முதலாளி முழு லாபத்தையும் விழுங்கி பணக்காரனாவதைவிட பல முதலாளிகள் சேர்ந்து லாபத்தைப் பங்கிட்டுக்கொள்ளுவது விசேஷமானது. நஷ்டம்வந்தகாலத்திலும் பலபேர் நஷ்டத்திற்கு பாத்யப் படுவார்கள். வேலையும் மொத்தத்தில் முந்தியைவிட செம்மையாயிருக்கும். ஆனால் உழைப்பாளிகளின் குறைகள் மாத்ரம் முன்போலவே இருந்தன.

### லாபத்தில் பங்கு.

பிறகு சில நல்லெண்ணமுள்ள பெரிய முதலாளிகள் ஒருவிதமாக யோசித்தார்கள். அதாவது, வேலைக்காரர்களுக்கு தினசரியோ வாராந்தரமோ, மாஸாந்தரமோ உள்ள கூலியைக் கொடுப்பதைத்தவிர வருஷக்கடைசியில் ப்ரத்யேகமாக வெகுமதி (போனஸ்) கொடுக்கலாம் என்று தீர்மானித்தார்கள். இன்னும் சிலர் வர்ஷத்தில்வரும் மொத்தலாபத்தில் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேல் கிடைக்கும் லாபமெல்லாம் உழைப்பாளிகளுக்கே அவரவர்கள் திறமையின்பேரில் கொடுக்கலாம் என்று தீர்மானித்தார்கள். இதில், வேலைக்காரர்கள் தங்கள் வேலையை ஜாக்ரதையோடும் கூடியமட்டும் ஸாமர்த்யத்தோடும் செய்து பண்டங்களை வீணாக்காமலும் இருந்து வர்ஷக்கடைசியில் தங்கள் முதலாளிகளுக்கு குறிப்பிட்ட தொகைக்குமேல் லாபங்காட்ட முயற்சி செய்தால் தங்களுக்கு ஸாதாரணமாகக் கிடைக்கும் கூலியைத்தவிர மேல்வருமானம் ஸம்பாதித்துக் கொள்ளலாம்.

### உழைப்பவரின் பாத்யதை.

தங்கள் வேலைக்காரர்கள் அஜாக்ரதையாயிருப்பதால் அதிக சேதமுண்டாகிறதென்றும், பண்டங்களை வீணாக்காமல் காப்பாற்றினால் எவ்வளவோ அதிக லாபம் கிடைக்கும் என்றும், இவர்களுக்கு என்னகூலி கொடுத்தாலும் அப்படியே செய்கிறார்கள் என்றும், சில நாட்டு முதலா

ளிகளில் அநேகர் மிகவும் வருத்தப்படுகிறார்கள். இந்த கனவான்கள் ஐரோப்பியரைப் போல தங்கள் வேலைக்காரர்களுக்கு மேற்சொன்னபடி ஏதாவது ஒரு நன்மையைக்காட்டி அவர்களிடமிருந்து ஏன் தக்கவேலை வாங்க முடியாது? ஸாதாரணமாக வேலைக்காரர்களுக்கு பண்டிகைப் பருவங்களில் இனாம் கொடுப்பது, இன்னும் குடும்ப விசேஷ காலங்களில் ஏதாவது உபகாரம் பண்ணுவது முதலான வழக்கங்கள் வேலைக் காரர்களின் திறமையையும் முதலாளியின் இஷ்டத்தையும் பொருத்தது. உழைப்பவர்களுடைய பாத்யதையை கவனிப்பது போலாகாது. கடைசியில் வரும் லாபம் அதிகமாவதற்கு உழைப்பாளிகள் தடை செய்கிறார்கள் என்றால், அந்த அதிக லாபத்தில் ஒரு பாகத்தை அவர்களுக்கு ஏன்பிரித்துக்கொடுத்து அவர்களை உத்ஸாகப்படுத்தி செம்மையாய் வேலை செய்யச் சொல்லக்கூடாது? அப்படி செய்வதினால் முதலாளிக்கு மற்ற பாகம் மிஞ்சுவதோடு கூட உழைப்பாளிகளும் ப்ரயோஜனமடைவார்கள்.

### அவர்கள் கூட்டு முதலாளிகளாதல்.

ஸாதாரணமாகவே ஐரோப்பிய முதலாளிகள் ப்ரதி வர்ஷமும் கிடைக்கும் லாபத்தில் ஒரு பாகத்தை உழைப்பாளிகளுக்கு பிரித்துக் கொடுக்கிறார்கள். அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு நன்றாய் வேலைசெய்து மொத்த லாபத்தை அதிகப் படுத்துகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கு அதினின்று கிடைக்கும் பாகமும் அதிகப்படும். இன்னும் சில விடங்களில் உழைப்பாளிகளுக்கு இதற்குமேலும் நன்மையைச் செய்து முதலாளிகள் இதற்குமேல் தங்கள் தொழில்களை வலுக்கச் செய்கிறார்கள். அதாவது, இதுவரையில் சொன்னபடி லாபத்தில் ஏதேனும் ஒருவிதமான பாத்யதையைக் கொடுப்பதோடு கூட, அவர்களை முதலாளிகளோடு கூட்டமைவதற்கும் இடங்கொடுப்பது. உழைப்பாளிகள் தங்களுடைய ஸ்வல்ப ஸம்பாத்யத்தில் மிச்சம் பிடித்து சேர்த்து ஒரு முதலாக்கிக் கொள்ளுவார்கள் என்பது அஸாத்யம். ஆகையால் இவர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளும் முதலாளிகள் முன் சொன்னபடி இவர்களுக்கு லாபத்தில் ஒரு பாகம் கொடுப்பதை முழுவதையுமாவது அல்லது அதில் கொஞ்ச தொகையையாவது ஒவ்வொரு வர்ஷமும் தாங்களே பிடித்துக்கொண்டு, அதை இவ்வேலைக்காரர்கள் பேரில் எழுதி வைத்து, அத்தொழிலின் முதலோடு கூட சேர்த்து வைத்திருக்கிறார்கள்.

### இதன் நன்மைகள்.

மாதம் இருபத்தைந்து ரூபாய் சம்பளமுள்ள ஒரு வேலைக்காரனுக்கு ஒரு வர்ஷத்தில் இருபது ரூபாய் லாபம் கொடுக்கப்படுகிறது என்று வைத்துக் கொள்ளுவோம். இந்த இருபது ரூபாயையும் வர்ஷா வர்ஷம் சேர்த்துப்பிடித்து வைப்பதனால் பத்து வர்ஷத்தில் முதல் மாத்ரம் இருநூறு ரூபாய் ஆகும். இது ஒவ்வொரு வர்ஷமும் தொழில் முதலில் ஒரு பாகமாகக் கொள்ளப்படுவதால், இச்சிறு முதலுக்குத் தகுந்த வட்டியும் லாபமும் கொடுக்கப்படும். ஆக, எல்லாம் சேர்ந்து பத்து வர்ஷத்தில் ஒரு முந்நூறு அல்லது முந்நூற்றைம்பது ரூபாய்க்குக் குறையாமல் ஆகிவிடும். ஒருவன் அதே இடத்தில் இருபது அல்லது இருபத்தைந்து வர்ஷம் வேலைசெய்தால் இவன் வேலைக்கு லாயக்கில்லாமல் வயது சென்றபின் வீட்டுக்குப் போகும் போது ஸாதாரணமாய் ஆயிரம் அல்லது ஆயிரத்தைந்நூறு ரூபாய் ஸொத்துக்காரனாய் விடுவான். இந்த வேலைக்காரன் மாதம் இருபது ரூபாய் சம்பளத்திலேயே இருக்காமல், இதற்குமேல் சம்பளம் உயரும் என்பதும் நிச்சயம். ஆகையால் இவன் ஸம்பாத்யத்துக்குத் தகுந்தபடி கடைசியில் இவன் முதலும் அதிகரிக்கும். மேலும், இவனுடைய முதல் எவ்வளவு அல்பமாயிருந்தா



லும் தான் உழைக்கும் தொழிலின் முதலாளிகளுள் ஒருவனாகிறான். அதில் வரும் லாப நஷ்டங்களுக்கெல்லாம் பாத்யப்படுகிறான். இவன் சேர்ந்துள்ளது ஒரு பெரிய தொழிற் சாலையாகவாவது, கம்பெனியாகவாவது இருந்தால் அதை நிர்வகிப்பதில் இவனுக்கு சில அதிகாரங்களுமுண்டு. அதன் வரவு செலவு விவரங்களைக் கேட்பதிலும், டிரெக்டர் முதலான அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதிலும், இன்னும் தங்கள் குறைகள் முதலியவற்றைச் சொல்லி கவனிக்கச் செய்வதிலும் இவன் சேர்ந்து கொள்ளலாம். இவ்விதமாக இவன் கூலிக்கு வேலை செய்பவனாக மாத்ரம் இராமல், முதலாளிகளின் க்ஷேமத்தைத் தன்னுடையதாக பாவித்து வேலை செய்து வருவான். இம்மாதிரியாக உழைப்பாளிகளைக்கொண்டு தொழில்களை நடத்தினால் ஏன் அத்தொழில் லாபத்தைக் கொடுக்காது? முதலாளிகள் எப்போதும் தங்கள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க, வேலைக்காரர்களை கடுகடுவென்று அதட்டிக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

### ஐரோப்பாவில் உழைப்பாளிகளை கவனித்தல்.

முதலுள்ளவர்கள் தங்களிடத்தில் பணமிருந்ததனாலேயே உழைப்பவர்களை விட ஏதோ உன்னதமான பதவியை அடைந்து விட்டதாகவும், உழைப்பாளிகள் தங்களுக்கு எவ்விதத்திலும் கடமைப்பட்டவர்கள் என்றும் எண்ணிக்கொள்வது எவ்விதத்திலும் ப்ரயோஜனப்படாது. உழைப்பாளிகளின் அவச்யத்தை நன்றாக உணர்ந்து அவர்களைத் தகுந்தபடி கௌரவப்படுத்தி வேலை வாங்கினால் அவர்களும் இம்முதலாளிகளிடம் வேலை செய்து பிழைப்பார்கள். உழைப்பாளியின் ஸௌகர்யத்தைக்குறித்து ஐரோப்பிய நாடுகளில் அநேக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவர்கள் அஸௌக்யமடைந்து வேலை செய்ய முடியாமலிருக்கும் காலங்களிலும், வேலையை விட்டு நீக்கப்படுங்காலத்திலும், அவர்கள் கூலி, பாத்யதை முதலானவை குறைவுபட நேர்ந்தபோதும், அவர்களுக்கு ஒத்தாசை செய்ய அநேக கனவான்கள் உழைக்கிறார்கள். இக்கூட்டத்தார் வரவர அதிகமாய் முன்னுக்கு வருகிறார்கள். ராஜாங்க ஸபைகளிலும் இவர்களுக்கு இடங்கொடுத்திருக்கிறார்கள். இவர்கள் உழைப்பாளிகளுடைய க்ஷேமத்தைக் கருதி என்ன செய்யவேண்டுமோ அவைகளைக் குறைவற நடத்தும்படி ஸர்க்காரார்க்கு எடுத்துக் காட்டுவார்கள். இங்கிலாந்தில் ஸமீபமாக இக்கூட்டத்தாருள் ஒருவர் ராஜாங்க மந்திரிகளுள் (காபினெட்) ஒருவராக நியமிக்கப்பட்டார்.

இப்படியிருக்க, நம் நாட்டில் மாத்ரம் அநேகர் உழைப்பின் கௌரவத்தை உணராமல் இருக்கிறார்கள். நாம் எந்தத் தொழிலை நடத்தினாலும், எந்த வ்யாபாரத்தில் புகுந்தாலும், நமக்கு ஸஹாயமாய் அமர்த்திக்கொள்ளும் வேலைக்காரர்களுக்கு மேற்சொன்னபடி உசிதமாய் நம்மால் இயன்றவளவிற் செய்யவேண்டும். மூலதனம் ஒருவரிடத்தில் இருப்பதைக்காட்டிலும் பல பேரிடத்திலிருப்பது நலம். அதிலும் வேலை செய்வோர் எல்லாரையும் ஒருவித முதலாளிகளாகக் கருதுவது ஸகலருக்கும் க்ஷேமத்தைக் கொடுக்கும்.

ஸ்ரீ லக்ஷ்மீ நாராயண அய்யங்கார், பி. ஏ.

## CRUEL PLANTS.

## கொடுமையாய் ஹிம்ஸை செய்யும் செடிகள்.

அநேக செடி கொடிகள் தங்களுக்கு வேண்டிய உணவை அடைவதற்காக சில பூச்சி வகைகளைக் கொல்லுகின்றனவென்று சென்ற 1914-ம் வருஷத்து அக்டோபர் மாஸத்து 'ஜனாபிமானி'யில் தெரிவித்தோம். இன்னும் வேறு சில செடிகள் அவைகளுடைய வம்சம் அழிந்து போகாமலிருப்பதற்காக சில கொடிய வர்த்தனைகளை [illegible]

ருக்கின்றன. இன்னும் சில செடிகள் ப்ராணிகள் தின்று அழிந்து போகாமலிருக்க சில ஸாதனங்களுடையனவாக இருக்கின்றன. ஆனால் இந்த ஸாதனங்களில் அநேகம் அனாவச்யமாய் மற்ற ஜீவராசிகளுக்குத் துன்பமும் சில ஸமயங்களில் மரணமும் உண்டாக்கக் கூடியவையாயிருக்கின்றன. பூச்சிகளைக் கொன்று தின்னும் செடியானது, அவைகளைப் பிடித்த மாத்ரத்திலே கொன்றுவிட்டால் அந்தப் பூச்சிகளுக்கு அனாவச்யமான ஹிம்ஸை ஏற்படாது. ஆனால் இயற்கை அமைப்புகள் அற்புதமானவையாயிருக்கின்றன. கீழே சில செடிகள் எவ்விதம் ப்ராணிகளுக்கு அனாவச்யமான ஹிம்ஸையை உண்டாக்கின்றனவென்பதை எழுதுகிறோம்.

வட அமெரிக்காவில் "டார்லிங்டோனியா" என்று ஒரு செடி இருக்கிறது. இதன் இலையின் நுனிப்பாகம் ஒரு குழாய் போலிருக்கும். குழாயின் மேல் பாகம் மூடியிருப்பதோடு, ஒரு குல்லாய் போலிருக்கும். அடிப்பாகத்தில்தான் அதற்குள் போக வழியிருக்கும். அந்த இலையில் தேன் போன்ற த்ரவம் கசிந்து கொண்டிருக்கும். ஏதேனும் ஒரு பூச்சி தேனுக்காசைப்பட்டு அங்குவந்து தேனைக்குடித்து அந்த குழாய்க்குள் புகுந்து விட்டால் பிற்பாடு அது இறந்து போகவேண்டியதுதான். குழாயின் மேல் பாகத்தில் இலைப்பாகம் சில இடங்களில் கண்ணாடி போல இருக்கும். மற்ற பாகங்களில் வெளிச்சம் ஊடுருவிச் செல்ல முடியாது. பூச்சி எந்த வழியாக உள்ளேபோயிற்றோ அந்தவழி இருட்டாயிருப்பதால் பூச்சி அதை அறிந்து கொண்டு அதன் வழியாக வெளியே ஓட முடியாது. மேலே கண்ணாடி போன்ற பாகங்களை வாஸ்தவமானவழிகள் என்று எண்ணி பூச்சியானது அவைகளின் வழியாக வெளியேபோக முயன்று அவைகளின்மேல் மோதிக்கொள்ளும். இப்படிப் பல தடவை மோதியும் ப்ரயோஜனப்படாமல் கடைசியில் சோர்ந்து குழாயின் அடிப்புறத்திலுள்ள விஷத்தன்மை பொருந்திய ஒரு த்ரவத்தில் விழுந்து சாகும். இந்தச் செடியில் அகப்பட்டுக் கொள்ளும் பூச்சிகள் சாகுமுன் மணிக்கணக்காக கண்ணாடி போன்ற பாகங்களில் மோதிக் கொண்டிருந்து கஷ்டப்படும். இறந்த பூச்சி செடிக்கு ஆகாரமாகிறது.

ஸாரஸீனியா என்று ஒரு செடி இருக்கிறது. இதன் புஷ்பங்கள் ஒரு நீண்ட ஜாடி போல் இருக்கும். இதற்குள் புகுந்த பூச்சி மறுபடியும் திரும்பி வெளியில் வர முடிவதில்லை. உள்ளே போவதற்கு மாத்ரம் பூச்சிக்குப் பிடித்த மதுரமான த்ரவம் அதில் அமைக்கப்பட்டிருக்கிறது. பூச்சி வெளியே வரலாமென்றால் ஜாடி போன்ற பாகத்தின் வாயில் அநேக முள்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த முட்களெல்லாம் வெளிநோக்கியிராமல் உள் நோக்கியிருப்பதால் பூச்சி அவைகளின் மேல் ஊர்ந்து வெளி வருவது முடியாது. பல தடவை பூச்சி முயன்று பார்க்கும். கடைசியில் முடியாமல் ஜாடிபோன்ற பாகத்தினுள்ளே விழுந்து இறந்து போய் செடிக்கு உணவாகி விடுகிறது.

வினஸ் ப்ளைட்ராப் என்று ஒரு செடி இருக்கிறது. இதன் இலைகள் பெரும் பூச்சிகளை மூடிக்கொள்வது முடியாது. ஆனால் அதன் இலைகளில் சிறிய முட்கள் இருக்கின்றன. ஏதாவது பூச்சி அதன்மேல் பறந்துபோய் அதில் பட்டால், பூச்சியின் கால்கள் அந்த முட்களில் அகப்பட்டுக் கொள்ளுகின்றன. பூச்சியானது அந்த முட்களிலிருந்து விடுவித்துக்கொள்ள முடியாமல் கஷ்டப்பட்டு இறந்துபோகும்.

ஜியம் என்னும் ஒருவகைச் செடியின் காய்களில் ஏராளமான கொக்கிகளுள்ள முட்கள் இருக்கின்றன. பூச்சிகள் இவற்றில் பட்டால் கொக்கிகள் பூச்சிகளை நன்றாய்ப் பிடித்துக்கொள்ளும். பூச்சிகள் என்ன ப்ரயத்தனப்பட்டாலும் முட்களிலிருந்து விடுவித்துக்கொள்ள முடியாமல்



கடைசியில் இறந்துபோகும். இறந்துபோன பூச்சிகளாலோ செடிக்கு யாதொரு ப்ரயோஜனமும் ஏற்படுவதில்லை. இதனால் பூச்சிகளுக்கு ரொம்ப அனாவச்யமான தொந்தரவுதான் ஏற்படுகிறதென்னலாம்.

செடிகள் வ்ருத்தியடையும் பொருட்டு அவைகளின் விதைகள் முளைப்பதற்கேற்ற இடங்களுக்குக் கொண்டு போகப்படவேண்டும். இதற்காக இயற்கையில் பல ஸாதனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் சில ப்ராணிகளுக்கு ரொம்ப ஹிம்ஸையை உண்டுபண்ணக் கூடியவையாயிருக்கின்றன. தென்னமெரிக்காவில் மார்ட்டினியா என்று ஒரு செடியிருக்கிறது அதன் விதைகளில் நீண்ட கொக்கிகள் இருக்கின்றன. இந்தக் கொக்கிகள் ஐந்தாறு அங்குல நீளங்கூட இருப்பதுண்டு. ஏதாவது ஒரு ம்ருகம் அதன் மேல் பட்டுக்கொண்டுபோனால், அந்தக் கொக்கிகள் ம்ருகத்தின் தோலில் பாய்ந்து பிடித்துக் கொள்ளுகின்றன. கொக்கியோடு விதையும் ம்ருகத்தோடு தொங்குகிறது. பிறகு கொக்கிகள் தைத்திருக்கும் இடங்களில் கொடுமையான புண்கள் உண்டாகின்றன. இந்தக் கொக்கிகள் சதைவரையில் பாயுமாதலால் ம்ருகங்கள் ரொம்ப அவஸ்தைப்படும். தென்னமெரிக்காவிலுள்ள எருமைகள் இந்தக் கொக்கிகளால் ரொம்ப ஹிம்ஸையடைந்து வெறிகொண்டுவிடுகின்றன. கொக்கிகளும் விதைகளும் லேசில் கீழே விழுவதில்லை. அநேக வாரங்கள் வரையில் தோலிலேயே ஒட்டிக்கொண்டிருக்கும். கடைசியில் அவைகள் விழுந்தவிடத்தில் முளைக்கின்றன. இதனால் செடி பரவுவதற்கு ஸாதகமேற்படுகிறதென்றாலும் அநேக ம்ருகங்கள் அனாவச்யமாய் ஹிம்ஸைக்குள்ளாகின்றன.

தென்னமெரிக்காவில் க்ராப்பிள் என்று ஒரு செடி இருக்கிறது. இது ரொம்ப உயரம் வளராது. தரையோடு தரையாய் வளர்ந்துகொண்டிருக்கும். இதற்குப் பெரிய காய்கள் உண்டு. இந்தக் காய்களில் பெரிய கொக்கிகளுள்ள முட்கள் உண்டு. இதன் விதைகள் பூமியில் விழுந்திருக்கும்போது ஆடு, மான் முதலிய ப்ராணிகள் அவைகளின்மேல் நடந்துபோனால் அந்த விதைகளின் முட்கள் ம்ருகங்களினுடைய பாதங்களில் உள்ள ம்ருதுவான பாகங்களில் தைத்து விடுகின்றன. ம்ருகங்கள் அந்தமுள்ளை உதறியெறிவதென்பது முடியாது. அவை காலைத்தூக்கி நொண்டிக்கொண்டு திரியவேண்டியதுதான். முள் தைத்தவிடங்களில் பெரிய புண்கள் உண்டாகி ம்ருகத்துக்கு ரொம்ப ஹிம்ஸை உண்டாகும். அது நொண்டிக்கொண்டு போவதால் வேறு ம்ருகங்கள் அதை அடித்துக் கொல்லவும் கூடும். சில ஸமயங்களில் இது ஸம்பந்தமாக அடிக்கடி விநோத ஸம்பவங்கள் நேரிடுகின்றன. க்ராப்பிள் காயின் முள் தைத்த ஒருமானை ஒரு சிங்கம் பிடித்துக் கொல்லுகிறதென்று வைத்துக்கொள்வோம். சிங்கம் மானைத்தின்னுகையில் அதன் காலையும் தின்கிறது. காலில் க்ராப்பிள் முள் இருப்பதால், காலோடு கொக்கி முள்ளும் வாய்க்குள் போய் வாயில் தைத்துக்கொள்ளுகிறது. சிங்கம் அந்த முள்ளை எடுக்க என்ன ப்ரயத்தனம் செய்தாலும் முடிவதில்லை. வலி அதிகரித்து வாய்ரொம்பப் புண்ணாகிறது. சிங்கம் எவ்வளவுக்கெவ்வளவு முள்ளை அப்புறப்படுத்த முயலுகிறதோ, அவ்வளவு வலியும் புண்ணும் அதிகரிக்கிறது. சிங்கத்துக்கு இரை தின்ன முடிவதில்லை. அதனால் அது மெலிந்துபோய்க் கடைசியில் இறந்துபோகிறது.

செடிகள் ப்ராணிகளால் நாசமடையாமலிருப்பதற்காக அவைகளுக்கு சில ஸாதனங்கள் அமைந்திருக்கின்றன. ஆனால் அவைகளுள் அநேகம் ம்ருகங்களை ரொம்ப ஹிம்ஸை செய்யக்கூடியவையாயிருக்கின்றன. உதாரணமாக, பூனைக் காஞ்சொறிச்செடியைச் சொல்லலாம். இதன் இலைகளிலும் கிளைகளிலும் நட்டமான மயிர்போன்ற முட்கள் இருக்கின்றன. இவை [illegible]

த்தில் பட்டால் தோலில்புகுந்து ஒருவித விஷத்தை ரத்தத்தில் செலுத்துகின்றன. இதனால் தேகத்தில் காஞ்சொறி பட்டவர்கள் அநேக மணிநேரம் ரொம்பவும் கஷ்டப்படவேண்டியிருக்கிறது. சில ஸமயங்களில் இதனால் உண்டாகும் எரிச்சல் நாள் கணக்காகவும் இருக்கிறதாம்.

சப்பாத்துக் கள்ளியின் முட்களில் இரண்டு வகைகள் இருக்கின்றன. ஒன்று பெரிய முட்கள். மற்றொன்று சிறிய சுனைகள். செடியை ம்ருகங்கள் அழிக்காமல்காக்க பெரியமுள் போதுமென்று சொல்லலாம். சிறிய சுனைகள் அனாவச்யமென்றே சொல்லவேண்டும். ஏதாவது ஒரு ம்ருகம் கள்ளியின்மேல் பட்டால், அதிலுள்ள இந்தச் சிறிய சுனைகள் ம்ருகத்தின் உடம்பில் தைத்து ஒட்டிக்கொள்ளுகின்றன. இவை செடியில் ஏராளமாயிருப்பதோடு, எளிதில் செடியிலிருந்து பிரிந்துவிடக்கூடுமாதலால், ம்ருகத்தின் தோலில் ஏராளமாக முட்கள் ஒட்டிக்கொள்ளுகின்றன. இந்தச் சுனைகளால் மனிதர்களும் ரொம்ப கஷ்டப்படுவதுண்டு. இந்த சுனைகள் ஸ்வதாவாகத் தோலிலிருந்து ஸுலபமாக விழுவதில்லை. அவை யிருக்கும் வரையில் ப்ராணிகளுக்கு ரொம்ப ஹிம்ஸையை அனாவச்யமாய் உண்டுபண்ணி வருகின்றன.

## THE ECONOMIC NEEDS OF INDIA.

## பொருளாதார ஸம்பந்தமாய் இந்தியாவுக்கு வேண்டியவை.

சென்ற மாஸம் பம்பாயில் நடந்த வ்யாபார காங்க்ரஸில் ஆனரபில் ஸர் பஸுல்பாய் கரீம்பாய் ப்ரெஸிடெண்டாக இருந்து ப்ரஸங்கம் செய்தபோது, பொருளாதார ஸம்பந்தமாய் இந்தியாவுக்கு வேண்டியிருப்பவைகளைப் பற்றிப் பேசினார்.

இந்தியாவின் தற்கால ராஜாங்க நிலைமையையும்பொருளாதார நிலைமையையும் உத்தேசிக்கையில் சேம்பர் அப் காமர்ஸ் என்னும் வ்யாபார ஸங்கங்களின் யூனியன் ஒன்று ஏற்படுத்தவேண்டியது ரொம்ப அவச்யமாகிறது. பல வ்யாபார ஸங்கங்கள் சேர்ந்த பெடரேட் சேம்பர் அப் காமர்ஸ் என்னும் வ்யாபாரஸங்கத்தில்தான் பொது ஜன அபிப்ராயமானது ஒழுங்குபட்டு ஒற்றுமையடைந்து கவர்ன்மெண்டாரின் கவனத்தைக் கவரக் கூடியதாக பலமடைந்துவரும். நமதுதேசம் ஸ்வய ஆட்சியுள்ள நாடல்ல: ஆகையால் அதிகாரிகளின் கொள்கைகளையும் செயல்களையும் நமது விருப்பத்துக்கு இணங்கும்படி மாற்றவேண்டுமானால், பொதுஜன அபிப்ராயமானது ஒற்றுமையுள்ளதாயும் பலமுள்ளதாயும் இருக்கவேண்டும். வேறு தேசத்துக்குக் கீழ்ப்பட்ட தேசத்திலுள்ள ஜனங்களுக்கு சில அஸௌகர்யங்கள் இருக்கின்றன. தேசத்தின் அரசாட்சிக் கொள்கைகள் தேசிய விருப்பங்களில் அபிமானமில்லாமலிருந்து, அரசாட்சியை நடத்துவோரும் அந்த தேசத்தவர்களாயிராமலும், ராஜாங்கத்தார் ஜனங்களுடன் கலந்து கொள்ளாமலுமிருந்தால், அந்த கவர்ன்மெண்டார் ஜனங்களுடைய க்ஷேமத்தை அபிவ்ருத்தி செய்ய எவ்வளவுதான் நல்லெண்ணமுடையவர்களாக இருந்தபோதிலும், அவர்களுக்கு ஜனங்களுடைய உண்மையான எண்ணங்கள் இன்னவையென்பதும், அவர்களுக்கு உண்மையில் வேண்டியிருப்பவை யின்னவையென்பதும் தெரியமாட்டா. இதோடு, தேசத்தை ஆண்டுவரும் தேசத்தார்களுடைய விருப்பங்களும் உரிமைகளும், கீழ்ப்பட்ட தேசத்தாருடைய விருப்பங்கள் உரிமைகள் ஆகிய இவைகளுக்கு விரோதமாக இருந்து, தங்களுக்கு வேண்டியபடி, கீழ்ப்பட்ட தேசத்து கவர்ன்மெண்டாரும் அதை ஆண்டுவரும் தேசத்து கவர்ன்மெண்டார் சொன்னபடி கேட்டுவருவார்களென்றால், கீழ்ப்பட்ட தேசத்தார்களுடைய கஷ்டம் இன்னும் அதிகரிக்குமென்னலாம். இந்தியாகவர்ன்மெண்டார் இந்தியர்களின் விருப்பங்களுக்கும் உரிமை



களுக்கும் ஏற்றவாறு தங்களுடைய வ்யாபாரக் கொள்கைகளையும் கைத்தொழிலபிவ்ருத்திக் கொள்கைகளையும் மாற்ற அசக்தர்களாயிருக்கிறார்களென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். ப்ரிட்டிஷ் தொழிலாளிகளும் வ்யாபாரிகளும் பார்லிமெண்டில் தங்களுக்குள்ள வோட்டுகளால் வ்யாபார ஸம்பந்தமான எல்லாவிஷயங்களையும் தங்களுடைய ஸௌகர்யம்போல் மாற்றிக்கொள்கிறார்கள். அவர்கள் இட்டதுதான் சட்டமாகிறது. இதனால் என்ன நேருகிறதென்றால், இந்தியா கவர்ன்மெண்டார் அநேக ஸமயங்களில் தங்களுக்குப் பிடிக்காததும், ஜனங்களுடைய உரிமைகளுக்கு விரோதமாக உள்ளவுமான கார்யங்களைச் செய்யவேண்டியவர்களாகிறார்கள். கவர்ன்மெண்டார் தங்களிஷ்டம்போல் செய்ய முடிவதில்லை. வரிவிஷயங்களில் அவர்கள் தாங்களாக ஒன்றும் செய்யமுடிவதில்லை. இந்தியா கவர்ன்மெண்டார் வரும்படிக்காகக் கூட, நமது தேசத்திற்கு வரும் மற்றதேசத்துச் சரக்குகளோடு ப்ரிட்டிஷ் கைத்தொழில் சரக்குகளின் மேல் வரிபோட முடியாது. அப்படிச்செய்வதாயிருந்தால் இந்தியாவில் செய்யப்படும் அதேசரக்குகளின் மேல் எக்ஸைஸ் வரி போடவேண்டும்.

இந்தியா கவர்ன்மெண்டுக்கு கைத்தொழில்களையும் வ்யாபாரத்தையும் அபிவ்ருத்தி செய்ய மனமிருக்கிறது. ஆனால் அதற்காக எதுவும் செய்வதற்கு ஸ்வதந்த்ரம் இல்லை. இந்த தேசத்தவர்களாகிய நாம்தான் கவர்ன்மெண்டாருக்கு இது விஷயமாய் என்ன உதவி செய்ய வேண்டுமோ அதைச் செய்யவேண்டும். அப்படி நாம் கவர்ன்மெண்டாருக்குத் துணைசெய்வதாயிருந்தால், அதற்கு இந்திய வ்யாபார ஸங்கங்கள் ஒன்றுசேர்ந்து பொது வ்யாபார ஸங்கம் ஒன்று ஸ்தாபிக்கவேண்டியது அவச்யம்.

இந்த யுத்தத்தில் இந்தியர்கள் ராஜ விச்வாஸத்துடனும் முழுமனஸுடனும் இங்க்லண்டுக்கு உதவிபுரிந்துவருவதைப்பற்றி அநேக ப்ரிட்டிஷ் பத்ரிகைகளும், ப்ரிட்டிஷ் ராஜதந்த்ரிகளும் ச்லாகித்துப் பேசி, இப்படி இந்தியர்கள் செய்துவருவதற்காக ப்ரதி உபகாரம் செய்ய வேண்டுமென்றும், இந்தியர்களுடைய க்ஷேமத்தை அபிவ்ருத்தி செய்ய முயற்சிக்கவேண்டுமென்றுஞ் சொல்லுகிறார்கள். எல்லாவற்றுள்ளும் முக்யமாய் நமக்கு வேண்டியதென்னவென்றால், இந்தியா கவர்ன்மெண்டார் ஜனப்ரதிநிதிகளோடு ஆலோசித்து, இந்தியாவுக்கு தொழில் ஸம்பந்தமாகவும் வ்யாபார ஸம்பந்தமாகவும் என்ன செய்யவேண்டியதோ அவைகளைத் தெரிந்து அவைகளைச் செய்ய கவர்ன்மெண்டுக்கு ஸ்வதந்த்ரம் ஏற்படவேண்டும். இப்படி கவர்ன்மெண்டார் செய்வதை இந்தியா மந்த்ரியாவது ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டாவது எவ்விதத்திலும் தடை செய்யக்கூடாது. இவ்வித ஸ்வதந்த்ரம் இல்லாவிட்டால் நாம் வ்யாபாரத்தில் முன்னேற்றமடைந்தாலுங்கூட நமது வ்யாபார அபிவ்ருத்தி தக்க அஸ்திவாரமில்லாததாகும்.

அடுத்தபடியாக, நாம் கவனிக்கவேண்டிய விஷயம் ஏற்றுமதி இறக்குமதி வரிகளாகும். இந்த யுத்தத்தால் கவர்ன்மெண்டுக்கு அதிக பணநெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பணநெருக்கடியை சீக்ரம் சரிப்படுத்தவேண்டும்.

இன்னும் யுத்தம் சிலகாலம் நடந்துவருமானால் இன்னும் பணக்கஷ்டம் ஏற்படும். அப்போது ஏதாவது புது வரிகள் போடவேண்டியிருக்கும். எந்த தேசத்திலும் வ்யாபார வரிகளால்தான் அதிக வரும்படி கிடைக்கும். இந்தியாவில் வ்யாபார வரிகளால் வரும்படியடைய கவர்ன்மெண்டார் இதுவரையில் ஒன்றும் செய்யவில்லை. தற்போது கவர்ன்மெண்டுக்குப் பணம் வேண்டியிருப்பதால் ஏற்றுமதி இறக்குமதி வரிகளை சீர்திருத்தி மாற்றவேண்டியது அவச்யமாகிறது. அப்படி செய்வதாயிருந்தால், கவர்ன்மெண்டார் இந்திய வ்யாபாரிகளினுடைய அபிப்ராயத்தைக் கேட்டு அதன்படி நடக்கவேண்டும்.

இந்த விஷயத்தை கவர்ன்மெண்டுக்கு எடுத்துச் சொல்வதை ஒரு முக்ய நோக்கமாகக் கொண்டு தான் ஒன்று சேர்ந்த இந்திய சேம்பர் அப் காமர்ஸ் என்னும் வ்யாபார ஸங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வ்யாபார ஸங்கம் கவனிக்கவேண்டியதாய் இன்னொரு முக்ய விஷயம் இருக்கிறது. அதாவது, தேசத்திலும், ஸமுத்ரத்திலும் போக்குவரத்து ஸாதனங்களை அபிவ்ருத்திசெய்வது. ஸமுத்ரப் போக்குவரத்துக்குரிய கப்பல்கள் வேண்டியவளவு வேகமாய்ப் போகின்றனவென்றாலும், கப்பல் கூலி ரொம்ப ஜாஸ்தியாயிருக்கிறது. உள்நாட்டிலோ என்றால் போக்குவரவுக்குரிய ஜலாதாரங்கள் த்ருப்திகரமாயில்லை. அவைகள் வேண்டிய அளவு அபிவ்ருத்தி யடையவில்லை. சில இடங்களில் அவைகள் க்ஷீணதசையடைந்து வருகின்றன. முன்பு கப்பல் போக்குவரத்துக்கு ஏற்றவையாயிருந்து அதிக வ்யாபாரச் சரக்குகளை ஸ்வல்ப செலவில் ஓரிடம்விட்டு மற்றவிடம் கொண்டுபோக உபயோகப்பட்டு வந்தகால்வாய்கள் மண்மேடிட்டுப்போயும், அவைகளில் மரஞ்செடிகள் வளர்ந்தும், அவைகளின் முக த்வாரத்தில் மணல் திட்டுகள் ஏற்பட்டும் போக்குவரத்துக்கு லாயக்கில்லாமலிருக்கின்றன. தற்காலம் ரெயில்வேக்கள் தீவிரமாய் அபிவ்ருத்தியடைந்து வருவதால் கால்வாய்களைப்பற்றி யாவரும் அச்ரத்தையாயிருக்கிறார்கள். இந்தக் கால்வாய்களை சீர்திருத்த இதுவரையில் ஒருவரும் தக்க கவனம் செலுத்தவில்லை. இதனால் நேர்ந்த பலன் என்னவென்றால், அநேகவிடங்களில் சிறு குட்டைகளும் நீர்த்தேக்கங்களும் சதுப்பு நிலங்களும் உண்டாகி, மலேரியாபோன்ற வ்யாதிகள் உண்டாவதற்கு ஸாதகமாக இருக்கின்றது. தேசத்தின் வடிகால் ஏற்பாடு தடைபட்டிருக்கிறது.

நதிகளையும், கால்வாய்களையும் சீர்திருத்தினால் தேசத்தில் வடிகால் வஸதி ஏற்பட்டு, வ்யாபாரத்துக்கு ஸௌகர்ய மேற்படுவதோடு, பாசனத்துக்கு வேண்டிய கால்வாய்களை ஸ்வல்ப செலவில் வெட்டி வைப்பதும் முடியும். பாசனம் வ்ருத்தியானால் தொழில்மூலப் பொருள்கள் அதிகமாக உற்பத்தியாகும். இதனால் ஏற்றுமதி வ்யாபாரம் அதிகமாகும். விவஸாயிகளும் தனவந்தர்களாவார்கள்.

பிறகு மிஸ்டர் பஸூல்பாய் கரீம்பாய் ரெயில்வேக்களின் அபிவ்ருத்தி, கிளை இருப்புப்பாதைகள் போடுவது, நாணயவிஷயங்கள் ஆகிய இவைகளைப்பற்றியும் பேசினார்.

## THE TEACHING OF VERNACULAR IN SCHOOLS.

BY S. YAGNASWAMI.

## பள்ளிக் கூடங்களில் தேச பாஷைகள் கற்பித்தல்.

பாடசாலைகளில் கற்பிக்கும் பல பாடங்களில் பேசும் பாஷையே முக்யமானது. நாம் இங்கு முக்யமாய் தமிழை எடுத்துக் கொள்வோம். இதுவே எலிமெண்டரி பாடசாலைகளிலும், ஸெகெண்டரி பாடசாலைகளில் கீழ் வகுப்புகளிலும், பல பாடங்களும் கற்றுக் கொடுப்பதற்கு உதவியாயிருக்கிறது. இப்படியிருந்தும் பல காரணங்களைக் கொண்டு இப்பாடத்தை அலக்ஷ்யம் செய்வதால் பையன்களும் இதை படிப்பதில் த்ருப்தியில்லாமல் இருந்து வருகிறார்கள். இதற்கு முக்யமாக இரண்டொரு காரணங்களை இங்கு கூறுவோம். (1) பள்ளிக்கூடங்களில் இதைக் கற்பிக்கிறதற்கு வேண்டிய அளவு காலம் கொடுக்காமலிருப்பது (2) மற்றப் பாடங்களைப் போல் இதை அவ்வளவு கவனிக்காமலிருப்பது. (3) இப்பாடத்தைத் தற்கால முறையை அனுஸரித்து கற்பிக்கும்படியான நல்ல உபாத்யாயரும் இல்லை. பண்டிதர்கள் நவீன முறைகள் ஒன்றும் தெரியாமல், பகுத்தறிவு (Reasoning), பாவனா சக்தி (Imagination), தீர்மானம் (Judgment)



என்ற மனதுக்குரிய ச்ரேஷ்டமான குணங்களை அபிவ்ருத்தி செய்யாமல் அலக்ஷ்யம் செய்து, பாராமல் மனப் பாடம் செய்வது என்ற முறையையே கையாண்டுவந்தார்கள். அப்படிச் செய்து வந்ததினால் 'சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை" என்பது போல், பிள்ளைகள் திருப்பித் திருப்பிச்சொல்லி வந்தார்களே யொழிய அவற்றின் கருத்தை ஒன்றும் அறிந்தார்களில்லை. அறிவும் வ்ருத்தியாவதில்லை. நல்ல நடத்தைகளும் படிவதில்லை.

இவற்றை எல்லாம் விட்டு விட்டு புதிய முறைகளை யனுஸரித்து ஒவ்வொரு உபாத்யாயரும் பாஷைப் பாடத்தைக் கற்பிக்க வேண்டும். அப்படிச் செய்தால் பையன்களுக்கு பாஷைப்பாடத்தை படிப்பதில் ஒருவித ஆவல் ஏற்படும்.

ஒவ்வொரு உபாத்யாயரும் குழந்தைகளை கீழ் வகுப்பிலிருந்து சரியான முறைப்படி பழக்கி வர வேண்டும். கிண்டர்கார்டன் வகுப்பிலேயே பொருள் பாடம் முதலியவை கற்பிக்கும் பொழுது ஸம்பாஷணை மூலமாக அவர்களுக்கு எவ்வளவோ கற்பிக்கலாம். உபாத்யாயர் பேசும் பொழுதெல்லாம் தெளிவாயும், சிறிய வாக்யங்களிலேயும் பேசி வர வேண்டும்.

அம்மாதிரியே குழந்தைகளையும் பேசத் தூண்ட வேண்டும். இப்படிக் கற்பிக்கும் பொழுது உபாத் யாயர்களும் பையன்களும் அனுஸரிக்க வேண்டிய சில முக்யமான விஷயங்களைக் கூறுவோம்.

1. பையன்களை எதையும் கவனித்துப் பார்க்கும்படி செய்யவேண்டும்.

2. அப்படி கவனித்துத் தெரிந்தவைகளை தெளிவாகவும் சரியாகவும் சுருக்கிச் சொல்லும்படி செய்யவேண்டும். அவற்றை எழுதவும் செய்யலாம்.

8. அப்படி எழுதும் பொழுது கண் மூடித்தனமாய் எழுதாமல், தெளிவாய் யாவரும் அறியும்படி எழுதவேண்டும். எதை எழுதினாலும் ஒரு நோக்கத்துடன் எழுதவேண்டும். எழுதுவது ஒரு வித ஒழுங்கை அனுஸரித்திருக்க வேண்டும். ஸமாசாரங்களை வரிசை வரிசையாகவும் எழுதவேண்டும். இவற்றில் உபாத்யாயர்கள் பையன்களுக்கு வேண்டிய உதவிகள் செய்து அவர்களை உத்ஸாகப்படுத்த வேண்டும்.

கீழ் வகுப்புகளிலிருந்தே குழந்தைகளை தங்கள் மனதிலுள்ளவைகளை தெளிவாக வெளிப்படுத்தப் பழக்கவேண்டும். அவர்கள் ப்ரதிதினமும் பள்ளிக் கூடத்திலேயும் வீடுகளிலேயும் பார்க்கிற வஸ்துக்களைப் பற்றியே கவனித்து தெளிவாய் சிறு வாக்யங்களாகச் சொல்லும்படி செய்ய வேண்டும். உபாத்யாயர்கள் குழந்தைகள் சற்று யோசித்தே பதில் சொல்லும்படியான கேள்விகள் கேட்டு அவர்களை யோசிப்பதில் பழக்க வேண்டும்.

கொஞ்சங் கொஞ்சமாக குழந்தைகளுடைய வெளியிடும் சக்தி வ்ருத்தியாக, அவர்களை வெளியில் பல இடங்களுக்கு அழைத்துக் கொண்டு போய், அங்கே கவனிக்கும்படி செய்து, அப்படிக் கவனித்தவைகளை காகிதத்தில் வரையச் செய்யலாம். இப்படி அழைத்துக் கொண்டு போகக் கூடிய இடங்களில் முக்யமானவை கோவில்கள், ஸமுத்ரக்கரைகள், சந்தை கூடுமிடங்கள், திருவிழா நடக்கிற இடங்கள், முதலியனவாகும்.

இவையோடு கூட, சிறிய கதைகள் சொல்லி அவற்றை ஸொந்த வாக்யங்களில் திருப்பிச் சொல்லும்படியும் செய்யலாம். இப்படிச் சொல்லும் கதைகளை இரண்டொரு பாகங்களாக பிரித்துக் காட்டி, அவற்றை எழுதும் பொழுது பாரா, பாராவாக எழுதும்படி செய்ய வேண்டும். இவ்விதமாய் கொஞ்சங் கொஞ்சமாய் சிறிய வ்யாஸங்கள் எழுதும்படி பழக்க வேண்டும். வ்யாஸங்களுக்காகத் தெரிந்தெடுக்கிற பாடங்கள், சரித்ரம், பூகோளம், இயற்கை பதார்த்தங்கள், இன்னும் பலவற்றை அனுஸரித்

திருத்தல் நலம். குழந்தைகள் வ்யாஸம் எழுதுவதற்கு கீழே குறிப்பிட்டிருக்கிற முறையை அனுஸரித்தல் நல்லது.

1. ஏற்கனவே படித்த ஒரு செய்யுளைக் கொடுத்து அதின் அர்த்தத்தை விவரித்து எழுதல்.

2. ஒரு பழமொழியையோ அல்லது ஒரு கருத்தையோ கொடுத்து அதற்குத்தகுந்த ஓர் கதை எழுதச்சொல்லுதல்.

3. தமிழ் பத்ரிகைகளில் எழுதப்பட்டிருக்கும் வ்யாஸங்களை சுருக்கி எழுதச்சொல்லுதல்.

4. இங்கிலீஷ் பாஷையிலிருந்து தமிழில் மொழி பெயர்த்தல்.

5. எதையாவது குறித்து சுருக்கமாக கரும்புப் பலகையில் உபாத்யாயர் எழுதிவிட்டு அதை விஸ்தரித்து எழுதும்படி சொல்லலாம்.

6. தைர்யம், நிஜம் பேசுதல், பொறுமை, ஸ்வயநலம் பாராட்டாமை, இவை போன்றவைகளைக் கொடுத்து வ்யாஸம் எழுதச் சொல்லலாம்,

இவற்றை யெல்லாம் அனுஸரித்து எழுதக் கொடுக்கிற வ்யாஸங்கள் ஒரே சீராய் இருத்தல் வேண்டும். ஏராளமாகவும் கடினமாகவும் இருக்கக்கூடாது. பையன்களை தங்களிஷ்டப்படிக்கு எழுதும்படி விடக்கூடாது. எழுத ஆரம்பிக்கு முன் தீர யோசனை செய்யவேண்டும். பிறகு பல பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவின் கீழ் எழுதும்படி கற்பிக்க வேண்டும். உபாத்யாயர்களும் சில ஸமயங்களில் எழுத வேண்டிய வ்யாஸத்தை, பிரிவுகளாகப் பிரித்து, அவைகளுக்கு தலைப்புப் பெயர்கள் (heading) எழுதிக் கொடுக்கலாம். இப்படி அவர்கள் எழுதும் வ்யாஸங்களை சரிவரத் திருத்தி, பையன்களுடைய பிழைகளை கவனித்துக் குறித்து, அவற்றைப் பையன்களுக்கு தெரியப்படுத்தி, சரியாய் எழுதும்படி செய்யவேண்டும். முக்யமாய் எழுத்துப் பிழை, சொற்பிழை, இலக்கணம், தமிழின் பொதுநடை இவற்றை கவனித்தல் அவச்யமாகும்.

எஸ். யக்ஞஸாமி,

# MONSTERS.

## இயற்கைக்கு மாறான பிறவிகள்.

நமது புராண இதிஹாஸங்களிலும் க்ரீஸ் தேசத்தின் பழைய காலக்கதைகளிலும் இயற்கைக்கு விரோதமான பிறவிகளைப்பற்றி ரொம்பவும் ப்ரஸ்தாபம் செய்யப்பட்டிருக்கிறது.

பத்து தலைகளுள்ள ராவணன், ஐந்தலைநாகம், ஆயிரம் தலைகளுள்ள ஆதிசேஷன், நான்கு தலைகளுள்ள ப்ரும்மா, ஆறு தலையுள்ள ஸுப்ரமண்யர், ஒரு தலையும் நான்கு கைகளுமுள்ள ஸ்ரீக்ருஷ்ண பகவான், கழுத்துக்குமேல் ஸிம்மரூபமும், கழுத்துக்குக்கீழ் மனிதரூபமும் உடைய நரஸிம்ம அவதாரம், ஆகிய இவர்கள் நமது தேசத்தைச் சேர்ந்தவர்கள். க்ரீஸின் பழங் கதைகளில் வருபவர்களில் சிலரைப்பற்றிக் கூறுவோம். ஸைக்லாப்ஸ் என்னும் ஒரு ராக்ஷஸனுக்கு நெற்றியின் நடுவில் ஒரே கண் தானிருந்தது. ஸெர்பிரஸ் என்னும் நாய்க்கு இரண்டு தலையுண்டு. ஹார்ப்பீஸ் என்னும் சில ராக்ஷஸிகளுக்கு தலைகள் மனிதர்களுடைய தலைபோலவும், தேகம் பறவைகளினுடையவை போலவும் இருந்தன. ஸெண்டார்ஸ் என்பவர்களுக்கு உடலின் மேல் பாகம் மனித ரூபமும், கீழ்பாகம் ம்ருக ரூபமுமாகும். மெடுஸா என்னும் ஸ்த்ரீக்கு தலை மயிரெல்லாம் பாம்புகளாம். இவர்களைப்போல் இன்னும் பல விநோதப் பிறவிகள் உண்டு.

இவைகளை இதுவரையில் பலர் கட்டுக்கதைகளென்றே நம்பி வருகிறார்கள். ஆனால் தற்காலம் மேல்நாட்டில் ஜீவ தத்வ சாஸ்த்ரம் அபிவ்ருத்தியாகவே, மேற்கூறிய இயற்கைக்கு விரோதமான பிறவிகளில் அநேகம் உண்மையாயிருக்கலாமென்றும், பண்டைக்காலத்தினர் தாம் நேரில் பார்த்தவைகளையே புஸ்தகங்களில் எழுதி வைத்திருக்கக் கூடுமென்றும், ஊகிக்கிறார்கள். இவ்விதம் ஊகிப்பதற்கு பலமான ஆதாரங்களும் கண்டு பிடித்திருக்கிறார்கள்.



மேல்நாடுகளிலுள்ள சாஸ்த்ர வித்பன்னர்கள் வெகுவாய் க்ரீஸின் பழைய சரித்ரங்களில் ப்ரஸ்தாபித்துள்ள விபரீதப் பிறவிகளைப் பற்றியே ஆராய்ச்சி செய்திருக்கிறார்களாதலால் அவைகளையே இங்கு எழுதுகிறோம்.

மேல்நாட்டு சாஸ்த்ர வித்பன்னர்களில் சிலர் மேற்சொன்ன விபரீதப் பிறவிகளை உண்டு பண்ணியிருக்கிறார்கள். ஆனால் இந்தப் பிறவிகள் பண்டைக்காலக் கதைகளில் ப்ரஸ்தாபம் செய்திருக்கிற பிறவிகளைப்போல் அவ்வளவு பெரியனவாக இல்லை. என்றாலும், பண்டைக் காலப் பிறவிகளில் என்னமாதிரியான விபரீத ஸ்வபாவங்கள் உண்டோ அவைகளில் பலவற்றை ச்ருஷ்டித்திருக்கிறார்கள். ப்ரொபஸர் கோல்ட்பார்ப் என்பவர் ஒரு தேகத்தில் இரண்டு, மூன்று, நான்கு தலைகளுள்ள பிறவிகளை உற்பத்தி செய்திருக்கிறார். இவைகளை உற்பத்தி செய்ய, ப்ராணிகளின் முட்டைகள் குஞ்சு பொரிக்கும்போது இருக்கும் இடத்தின் நிலைமையை தக்கபடி மாற்றியும், சில ஸமயங்களில் இரண்டு அல்லது அதிகமான முட்டைகளை ஒன்றுசேர்த்தும், மேற்சொன்ன விபரீதப்பிறவிகளை உண்டாக்கி யிருக்கிறார். அவர் ஸீ-அர்ச்சின் என்னும் ஜலராசியின் முட்டைகளை எடுத்து கடல் ஜலம் வைத்துள்ள ஒரு பாத்ரத்தில் வைத்து, அந்த ஜலத்தோடு ஸாதாரண உப்புக் கரைத்த ஜலத்தை ஊற்றினார். இந்த இரண்டு வகையும் கலந்த ஜலத்தில் மேற்சொன்ன முட்டைகள் ரொம்ப பசையுள்ளனவாக மாறி, ஒன்றோடொன்று சேர்ந்துகொண்டன. இதனால் என்ன நேர்ந்ததென்றால், ஒரே உடலும் அநேக தலைகளும் உள்ள ஸீ-அர்ச்சின்கள் உண்டாயின. இவைகளைக்கொண்டு பார்த்தால், பழையகாலக் கதைகளில் ப்ரஸ்தாபிக்கப்படும் ராக்ஷஸாதியர் உண்மையில் இருந்தார்கள் என்று எண்ண இடமிருக்கிறதென்று அவர் சொல்லுகிறார். மேலும் அவர் சொல்லுவதாவது :—விசித்ரமான ஸீ-அர்ச்சின் உண்டானதற்குக் காரணம், அதன் முட்டைகளை வைத்திருந்த உப்பு ஜலத்தின் தன்மையை மாற்றினதே. ஒவ்வொரு ப்ராணியினுடைய ஜீவமூலமும் உப்பு ஜலத்தில் இருந்துவருகிறது. மனிதருடைய ரக்தமானது பெரும்பாகம் சாப்பிடும் உப்புக்கலந்த ஒரு த்ரவமாகும். நாம் பிறக்கு முன் நமது தேகம் உப்பு ஜலம் ஸம்பந்தப்பட்டிருந்தது. உண்மையில் மனிதஜீவமூலம், தாயின் வயிற்றில் இருக்கும் போது எவைகளோடு ஸம்பந்தப்பட்டிருக்கிறதோ, அவைகளைப்போன்ற பொருள்களோடு தான் ஸீ-அர்ச்சினுடைய முட்டைகளும் குஞ்சுபொரிபதற்கு முன்னால் ஸம்பந்தப்பட்டிருக்கின்றன வென்று ஜீவதத்வ சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவ்வித ஆராய்ச்சியால் மனிதர்களுக்கு ரொம்ப ஸாதகமேற்படலாம். ஸீ-அர்சின் போன்ற ஜீவராசிகளை ஆராய்ச்சி செய்து வந்தால், மனிதர்களுக்குள்ளும் விபரீதமான பிறவிகள் பிறப்பதற்குக் காரணமின்னவென்று கண்டு பிடிப்பதும், அதனால் அவ்விதம் மனிதர்களுக்குள் விபரீதமான பிறவிகள் உண்டாகாதபடி தடுப்பதும் ஸுலபமாகலாம். இரண்டு தலையுடன் ஆட்டுக்குட்டிமுதலியவைகள் பிறப்பது, இரண்டு உடல்கள் ஒன்றோடொன்று சேர்ந்து குழந்தைகள் பிறப்பது முதலிய ஸம்பவங்களை தடுத்துவிடலாம். ஏதாவது ஒரு குடும்பத்தில் விபரீதப்பிறவிகள் உண்டாகி வந்தால் அந்தக் குடும்பத்திலும் ஸ்திரீகளின் ரக்தத்தை சோதித்து, ஏதாவது கோளாறுகள் இருந்தால், மருந்துகளைக் கொண்டு சரிப்படுத்தலாம். தற்காலத்தில் நாம் இரண்டு தலைகளுள்ள கன்றுக்குட்டிகளை ப்ரத்யக்ஷமாய்ப் பார்க்கும்போது பூர்வத்தில் இரண்டு தலைகளுள்ள ஸெர்பிரஸ் என்னும் நாய் இருந்ததென்பதில் ஆச்சர்யமென்ன?

டாக்டர் ஸ்டாக்கிர்ட் என்பவர் ஒரே கண்ணுள்ள மீன்களை, உற்பத்தி செய்திருக்கிறார். அவர் ஒரு பாத்ரத்தில் கடல் ஜலம் ஊற்றி

அதில் மாக்னீஷ்யம் என்னும் உலோகம் ஸம்பந்தப்பட்ட உப்புக்களைக் கரைத்து, அதில் மீன்களின் நுண்ணிய குஞ்சுகளைப் போட்டு வளர்த்தார். இப்படி வளர்த்ததில் மேற்சொன்னபடி அவைகளுக்கு தலையின் மத்தியில் ஒரே ஒரு கண்தான் இருந்தது. சிலவற்றிற்கு இரண்டு கண்களும் ரொம்ப நெருக்கமாயிருந்தன. சில மீன்களுக்கு கண்ணே ஏற்படவில்லை. இதனால் ஒரேகண்ணுள்ள ஸைக்ளாப்ஸ் என்னும் ராக்ஷஸன் உண்மையிலிருந்திருக்கக்கூடுமென்று அவர் எண்ணுகிறார். அவரும் வேறு சில சாஸத்ர விற்பன்னர்களும் சொல்லுவதென்னவென்றால், ஸைக்ளாப்ஸ் போன்ற ஒற்றைக்கண்ணர்களுடைய முன்னோர்கள் மாக்னீஷயம் ஸம்பந்தப்பட்ட உப்புக்களை தங்களுடைய ஆகாரத்தில் அதிகமாகச் சாப்பிட்டிருக்கக் கூடும், அதனால் தான் அவர்கள் ஏகாக்ஷிகளானார்கள் என்பதே.

இன்னொரு வித்வான், தவளையின் முட்டைகளை பாகம் செய்து, வெவ்வேறு பாகங்களை ஒன்றோடு ஒன்று சேரவிட்டு, இரண்டு மூன்று தலைகளுள்ள தவளைகளை ச்ருஷ்டித்திருக்கிறார். இன்னொருவர் இரண்டு மூன்று முட்டைகளை ஒன்று சேர்த்துக் குஞ்சுபொரிக்க வைத்து, ஒரே பெரிய தவளையை உற்பத்தி செய்திருக்கிறார். ஒரு ஸமயம் 12 முட்டைகளிலுள்ள ஜீவமூலங்களை ஒன்றுசேர்த்து வ்ருத்தி செய்ததில் 2 அடி உயரமுள்ள தவளை உண்டாயிற்று.

ப்ரொபஸர் லோப் என்பவர், தாய் வயிற்றிலிருக்கும் மனித ஜீவமூலத்தின் சிற்றறைகள், முதல் தடவை பிரியும்போதும் அதற்குச் சற்று முன்னும் பிறகும், அந்த ஜீவமூலத்தைச்சுற்றியுள்ள த்ரவமானது சற்று புளிப்பாயிருந்து, அந்த த்ரவத்தில் கலந்திருக்கவேண்டிய மூன்று முக்யமான உலோகங்களில் ஒன்று குறைந்திருந்தால், முதலில் பிரிந்த இரண்டு சிற்றறைகளும் மறுபடியும் ஒன்று சேராமல் தனியாகவே இருந்து, இரட்டைக் குழந்தைகளாகப் பிறக்குமென்று சொல்லுகிறார்.

# WHAT A GIRL SHOULD KNOW.

BY A. K. PADMANABHACHARI B. A.,
*Headmaster, Board Secondary School, Kollegal.*

## ஒரு பெண் கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்கள்.

### தாயும்-மகளும். ஓர் ஸம்பாஷணை.

செல்லம்.—அம்மா! நான் இப்போது வேலையை நிறுத்தலாமா? தயவுசெய்து சொல். இன்று எனக்கு மிகவும் ச்ரமமாய் இருக்கிறது.

தாய்.—என் கண்ணே! நீ செய்திருக்கும் வேலை மிகவும் குறைந்தது. இன்னும் ஒரு பக்கங்கூட தைத்தாக வில்லையே.

செ.—இருந்தபோதிலும், இதைவிட இப்போது கொஞ்சம் எழுதவாவது படிக்கவாவது செய்யலாமா என்று இருக்கிறது.

தா.—ஆம், உன் அபிப்ராயத்தை நான் அறிவேன். சொன்னவேலை ஏதோ அதைத் தவிர மற்றெதையாவது செய்வாயல்லவா?

செ.—அல்ல, அம்மா; அல்ல. இந்தவேலையில் கூடியவரைக்கும் தேர்ச்சியடைந்திருக்கிறேன் என்பது உனக்கே தெரியும். இன்னும் நான் கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்கள் பலவுள. அயல்வீட்டு தனத்தைப் பார். தையலில் அவளுக்கு என்னில்பாதிகூட வரவில்லை. இதற்குள் அவள் ஸங்கீதமும், சித்ரமும் அப்யஸித்துவருகிறாள். அவளுக்கு இன்னும் என்னென்ன வருமோ நானறியேன். அவர்கள் பாடசாலையில் அவ்வளவாய்ப் படிப்பதே இல்லையென்றும், எல்லாம் விளையாட்டுத்தானென்றும் அவள் சொல்லுகிறாள்.

தா.—குட்டி, செல்லம்! நீ வரவர பேச்சுக்காரியாய் விட்டாய். முதலாவது, உனக்கு ஊசியைப் பிடிக்கவே தெரியாது. இல்லாவிட்டால் உன் மேலாக்கிலுள்ள இந்த சிறு கிழிசலைத் தைக்க உனக்கு இவ்வளவு கஷ்டமாயிருந்திராது. அதிருக்கட்டும். தங்கள். பெண்களுக்கு இன்னதவச்யம், இன்னது அவச்யமல்லவென்பது இவர்களைவிடத் தாய்மார்களுக்குத்தான் நன்றாய்த் தெரியுமென்பதை நீ ஒப்புக்கொள்கிறாயா?



செ.—அட்டியென்ன, அம்மா! இவ்விஷயங்களையெல்லாம் எப்போதாவது ஒரு ஸமயத்தில் கற்றுக்கொள்ள வேண்டியதுதான் என்று அபிப்ராயப்படுகிறேனாதலால், நான் சீக்ரத்திலேயே அவற்றை ஆரம்பிப்பது உமக்கும் ஸம்மதமாய்த்தான் இருக்கும் என்று எண்ணினேன். ஏனெனில், சிறுவர்களுக்கு அவர்கள் அவச்யமாய்க் கற்றுக்கொள்ள வேண்டியவற்றை எவ்வளவுக்கெவ்வளவு பால்யத்திலேயே புகட்டுகின்றோமோ அவ்வளவும் நல்லதென்று நீ அடிக்கடி சொல்வதை நான் கேட்டிருக்கிறேன்.

தா.—அது முற்றிலும் உண்மையே. ஆயினும் எல்லாருக்கும் விஷயங்கள் ஒரேமாதிரி இன்றியமையாதவைகளாயிருப்பதில்லை. ஒருவருக்கு மிக்க அவச்யமான ஒரு விஷயம், மற்றவர்க்குக் கொஞ்சமேனும் ப்ரயோஜனப்படுவதில்லை.

செ.—ஏனம்மா?

தா.—காரணமென்னவென்றால், ஒருவர்க்கு பால்யத்திற் கற்பிக்கப்படும்வித்தையானது அவர் பின்னிட்டுத் தம் வாழ்நாட்களிற் செய்யும் தொழில் அல்லது வ்ருத்திக்கு ஏற்றதாய் இருக்கவேண்டும். இந்த விஷயத்தில் பெண்களுடைய படிப்பிற்கும் பிள்ளைகளுடையபடிப்பிற்கும் அளவற்ற வித்யாஸமுண்டென்று நான் உனக்குச் சொல்லவேண்டியதே யில்லை.

செ.—அப்படியா! எல்லா ஸ்த்ரீகளும் ஒரே மாதிரிதான் என்றல்லவா நான் நினைத்தேன்.

தா.—வேறெந்த விதமான விசாரமும் இல்லாமல், கற்றறிந்த பெண்களையெல்லாம் சீமாட்டிகளென்றாவது, பெரிய மனிதர்கள் வீட்டுப் பெண்களென்றாவது, சொல்வது ஸகஜமே. ஆயினும், சற்றே யோசித்தால், சிலர் மற்றவர்களைவிட வேறுவிதமாயிருப்பதை நீ யறிந்துகொள்ளலாம். இவர்களுடைய பெற்றோர்களும் புருஷன்மார்களும் வெவ்வேறு அந்தஸ்துள்ளவர்களா யிருக்கிறார்களல்லவா?

செ.—நிஜந்தான். சிலர் ஐச்வர்ய வந்தர்களாயும், சிலர் நடுநிலைமையிலுள்ளவர்களாயும், சிலர் வைதீகர்களாயும், சிலர் லௌகிகர்களாயும், வேறு சிலர் வைத்யர்களாயும், மற்றும் சிலர் வ்யாபாரிகளாயும், இன்னும் சிலர் வித்வான்களாயும், இப்படி பலவித தொழில்களிலமர்ந்தவர்களாய் இருப்பதை நானறிவேன்.

தா.—நல்லது; மேற்கூறியவர்களின் மனைவி மக்கள்மார் அனைவரும் அவரவர் செய்யவேண்டிய கடமைகள் ஒரேவிதமாகத்தான் இருக்குமென்று எண்ண இடமுண்டா? நம்ம வீட்டிலேயே நான் எப்படி "க்ரக க்ருத்யம்" செய்து வருகிறேன் என்பதை நீயே பார்த்து வருகிறாயல்லவா. நம் ஸம்ஸாரத்திற்கு வேண்டிய வருஷாந்தர ஸாமான்களைத் தயார் செய்ய, அகவிலை, சந்தைவிலை விசாரித்துத் தெரிந்துகொள்ளவேண்டும். மாட்டுக்காரன், வாயில் பெருக்கி, முதலிய வேலையாட்களை மேல்பார்வை பார்க்கவேண்டும். உங்களப்பாவையும், குழந்தைகளாகிய உங்களையும், பாதுகாத்து வரவேண்டும். உங்கள் உடுப்பு முதலியவைகளைச் சுத்தமாய் வைக்கவேண்டும். உங்கள் வேலையை நீங்கள் சரியாய்ச் செய்யும்படிக்கும், உங்களுக்கு நல்லறிவு நன்னடக்கைவரும்படிக்கும் நடத்த வேண்டும். இதுவுமல்லாமல், உங்கள் சட்டை பாவாடைகளைத் தைக்கவும் வேண்டும். இதுவுமல்லாமல், நம்ம வீட்டிற்கு வரும் பந்துக்கள், விருந்தாளிகள், முதலானவர்களை உபசரிப்பதோ, வெளியிலுள்ள நம்ம பந்துமித்ரர்களை அடிக்கடி கண்டு வருவதோ, ஆகிய இவையனைத்தும் என் பொறுப்பே. இதெல்லாம் முடித்து ஏதாவது கொஞ்ச ஸாவகாசமிருந்தால், சற்று இளைப்பாறுவதற்காக பாட்டோ, படிப்போ, அல்லது வேறே ஏதாவது விளையாட்டோ, இவைகளில் என் ப்ரியத்தைச் செலுத்துகிறேன். ஆனால்

இவற்றுள் பெரும்பான்மையை தனம், பாக்யம் இவர்கள் யாரும் செய்யக்கூடியவர்களல்ல. ஏனெனில், இவர்கள் ஒவ்வொன்றிற்கும் வேலையாட்களையோ அல்லது கார்யஸ்தர்களையோ நியமித்திருக்கிறார்கள். ஆகையால் இவர்கள் தங்கள் காலத்தைப் பாட்டிலும், விளையாட்டிலும், பலவிதமான ஸந்தோஷங்களிலும், ஊக்கமுள்ளவர்களாய்க் கழிப்பது இவர்களுக்குத் தகும்.

செ.—அப்படியானால் நானும் உன்னைப்போலவே ஸம்ஸாரத்தை நடத்தவேண்டியிருக்குமோ?

தா.—என் கண்ணே, உனக்கு நாளைவரும் பதவி இத்தகையதுதான் என்று சொல்வது முடியாத கார்யம். ஆனால் நீயும் ஒரு ஸம்ஸாரத்தை வகித்து நடத்திவந்தால் என் வேலையைவிட நீ செய்யவேண்டியது குறைச்சலாயிருக்குமென்று எண்ண யாதொரு ந்யாயமுமில்லை. நீ கற்கும் வித்தை இத்தகைய தொழிலுக்கு ஸாதகமானதாய்த்தான் இருக்கவேண்டும். மேற்கூறிய வேலைக்கு நீ எவ்வளவு தகுந்தவளாகக் கருதுகிறாயோ அவ்வளவு ப்ரயோஜனமுள்ளதாயும் இன்றியமையாததாயும் காணும், நீ கற்கும் வித்தை?

செ.—நானும் யௌவனத்தை யடைந்து ஒரு ஸ்த்ரீயானால் நம்ம சண்பகம், சுந்த்ராவைப் போல் ஸ்நேகிதர்களைப்பார்த்து வரவும், விருந்து முதலியவற்றிற்கு அடிக்கடி போகவும் வேண்டியிராதா?

தாய்.—அம்மாதிரி உத்ஸாகங்களில் நீ ப்ரியப்படவேண்டியிருக்குமென்பது ந்யாயமே. அப்பொழுதுங்கூட நீ செய்யவேண்டிய வேலைகள் சிலவிருக்கும். அவற்றை முடிக்க உனக்குக் கொஞ்சம் ஸாவகாசமாகும். அப்போது உன் கடமைகளைக் குறைவற நிறைவேற்றாமல், உன் அந்தஸ்திற்குத் தக்கதாயினும், உத்ஸாகங்களில் உன் கவனத்தை செலுத்துவது அழகன்று.

செ.—இவை எம்மாதிரி வேலைகள் அம்மா?

தா.—உனக்குக் கொஞ்சம் வயதானதும் நம்ம வீட்டு வேலைகளில் உன்னாலானமட்டும் எனக்கு உதவி செய்வது உனக்கு நியாயமாய்த் தோன்றவில்லையா?

செ.—தடையென்ன? அப்படிச் செய்வது எனக்கு ப்ரியந்தானே?

தா.—நல்லது, இப்பொழுது யோசித்துப்பார். அந்த வேலைக்கு வேண்டிய ஸாமர்த்யம் என்னவென்று வெளியாகும். நன்றாய்த் தைக்கத் தெரிந்துகொள்வது ஒரு விசேஷமான குணமாய்த் தோன்றவில்லையா?

செ.—நானும் அப்படியேதான் நினைக்கிறேன்.

தாய்.—அதன் ப்ரயோஜனம் எனக்குதவி செய்தல் மாத்ரமேயன்று. உன் வேலையை நீயே செய்யக் கற்றுக்கொள்வதுமே.

ஸுலக்ஷ்மமதி நம்முடன் சிலநாளிருந்தாளல்லவா. அவள் தானாகவே தன் உடைகளை ஸாமர்த்யமாய்ச் செய்து முடித்ததைப் பார்த்து நாம் எவ்வளவு மெச்சினோம். அப்படியன்றி தையற்காரனிடம் கொடுத்திருந்தால் அவளுக்கு என்ன செலவாயிருக்கும்?

செ.—அம்பிக்கு ஒரு நேர்த்தியான குல்லாவும், எனக்கு ஒரு புதுதினுஸு சட்டையும் ஒரு நிமிஷத்தில் செய்துமுடித்தாளே?

தா.—பார்த்தையா அவள் திறமையை? தன் வேலையைச் செய்துகொள்வது மாத்ரமல்லாமல் மற்றவர்கள் வேலையையும் அவள் செய்கிறாளல்லவா? நல்லது. இப்பொழுது இந்தவேலை முக்யமா, அல்லவா, என்று உன் மனதிற்குப் பட்டிருக்குமென்று நான் நினைக்கிறேன்.

செ.—ஒப்புக்கொண்டேனம்மா.

தா.—"எண்ணுமெழுத்தும் கண்ணெனத் தகும்." என்பது ஔவையார் வாக்யம். நான் அதைப்பற்றி உனக்குச் சொல்ல வேண்டியதில்லை.

செ.—வேண்டியதில்லை. ஏனெனில் எனக்கே படிப்பில் அதிகமான ஆசையுண்டு.

தா.—ஆம், ஆம். புஸ்தகத்தில் மட்டும் கதைகள் இனியவையாயின் உன் ப்ரியம் அளவற்றதே. ஆனால் ஒன்று. புத்தியை பரவச் செய்ய வேண்டிய புஸ்தகங்கள் பலவுள. அவையெல்லாம் ஆரம்பத்தில் நீ சொன்னபடி ப்ரியத்தை உண்டாக்கவே மாட்டா.



செ.—இதற்காக அவ்வளவு புத்தகங்களிருப்பானேன்?

தா.—ஒவ்வொன்றும் ஒவ்வொரு மார்க்கத்தைக்காட்டும். சில நம்மைப் படைத்தவர்க்கு நாம் செய்யவேண்டிய முறையைக் காட்டும். பூகோள சாஸ்த்ரமும் கொஞ்சம் தெரிந்திருக்க வேண்டியதே. இலங்கைக்குத் தான் எப்போதாவது போகவேண்டியிருந்தால் மாட்டு வண்டியில் தான் போவேன் என்று மலினமதி சொன்னபோது எல்லாரும் சிரித்தது உனக்கு நினைவிருக்கிறதா?

செ.—இலங்கை ஒரு தீவு. நாலுபுறமும் நீரால் சூழப்பட்டது. அவ்விடத்திற்கு வண்டியில் போகமுடியாது என்னும் யோசனை இல்லாமல் அவள் பிதற்றியதற்குச் சிரித்தார்கள்.

தா.—இன்னும் ஜீவவர்க்கம், வ்ருக்ஷவர்க்கம், தாதுவர்க்கம், இவற்றைக் குறித்தும் நாம் தெரிந்து கொள்ள வேண்டியதே. ஏனெனில் ஒவ்வொன்றும் ஏதாவது ஒரு விதத்தில் நமக்கு ப்ரயோஜனமுள்ளதாயிருக்கிறது. சரித்ரமும் நாம் அறியவேண்டியதே. முக்யமாய் நாம் எந்த தேசத்திலிருக்கிறோமோ அந்தத் தேசத்தின் சரித்ரத்தை அவச்யம் அறியவேண்டும். சுருக்கிச் சொல்லுமளவில், நாம் கற்றறிந்தவர்களுடனும், பகுத்தறிவுள்ள விவேகசாலிகளுடனும் பேசிப்பழக என்னென்னவேண்டுமோ அவையனைத்தும் தக்க தருணத்தில் நாம் கற்றுக்கொள்ளவேண்டியதுதான். எல்லாவற்றிலும் முக்யமாய் நன்றாய் எழுதத்தெரியவேண்டும். அதோடு கணிதசாஸ்த்ரமும் அறிந்துகொள்ள வேண்டியது மிக்க அவச்யம்.

செ.—அதென்ன சாஸ்த்ரமம்மா? அதன் ப்ரயோஜனமென்ன?

தா.—அதுதான் கணக்கு என்பார்கள். நம்முடைய வரவு, செலவு இரண்டையும் தவறாமல் குறிக்கவும், வரவுக்கு மீறிய செலவு செய்யாமல் இருக்கவும், நாம் கற்றுக்கொள்ளவேண்டியது கணிதந்தான். எனக்குக் கணக்கு சுத்தமாய்த் தெரிந்திராவிட்டால், கடைச் செலவு, வீட்டுச் செலவு முதலியவற்றை நான் எப்படி குறிப்பாய்ச் சொல்லக்கூடும்? இந்த கணிதமானது ஸ்த்ரீ, புருஷர்கள் யாருக்கும் மிக்க அவச்யமே. நான் ஒருநாள் தெருவழியாய்ப்போகும்போது, ஒருத்தி விறகு சுமை விலைபேசிக்கொண்டிருந்தாள். விறகுக்காரன் சுமை எட்டேகால் துட்டென்று சொன்னான். அவள் "அது எனக்குத்தெரியாது. 3 அணாவும் 3 காசுந்தான் தருவேன்" என்றாள். இம்மாதிரியே இவள் ஒவ்வொரு வ்யாபாரமும் செய்து வந்தால் ஸம்ஸாரம் முன்னுக்கு வருவதெப்படி? "ஆற்றிலே கொட்டினாலும் அளந்து கொட்டு" என்னும் பழமொழியைக் கேட்டதில்லையா? கணக்கில்லாமலிருந்தால் எவ்வளவு தனவானானபோதிலும் சடுதியில் தரித்ரனாய் விடுவான்.

செ.—அப்படியே ஸங்கீதமும் சித்ரமும் எனக்குத் தெரியவேண்டாமா, அம்மா?

தா.—இவ்விரண்டும் கற்றுக்கொள்ளவேண்டியவைதான். இவை தெரிந்தமட்டும் மேன்மையே. ஆனால் இவை தெரிந்திராவிட்டால் மற்றவைகளைப்போல் அதற்காகக் குற்றஞ் சொல்ல ந்யாயமில்லை. தவிர, இவற்றிற்கு இயற்கையிலேயே ஒரு வகையான லப்யம் இருக்கவேண்டும். கேட்டதில்லையா "சாரீர ஸம்பத்தென்று". அன்றியும் ஸாவகாசமும் இருக்கவேண்டும். இவ்விரண்டிலும் சித்ரமெழுதுதல் மிக அவச்யமானது. இவற்றைப்பற்றி நாம் யோசித்தாலும் சரியே, என்ன இருந்தபோதிலும் நமக்கு இன்றியமையாதவை எவையோ அவற்றை நன்றாய்க் [illegible]

தற்குமுன் மற்றவைகளைப்பற்றி யோசித்தல் தகாது. இதற்குள் நீயும் உனக்குக் கொடுத்த வேலையை முடித்துவிட்டதாய்க் காண்கிறது. அல்லது உன் அப்பா வரும் வேளையாய்விட்டது. ஆகையால் நான் ராச்சாப்பாடு தயார் செய்ய வேண்டும். நீயும் சற்று உன் தோழிமாருடன் விளையாடி வா.

எ. கே. பத்மனாபாசாரி.

## THE MADRAS PROVINCIAL CO-OPERATIVE CONFERENCE.

## சென்னை மாகாண கோவாபரேடிவ் கான்பரென்ஸ்.

நான்காவது, சென்னை மாசாண கோவாபரேடிவ் கான்பரென்ஸ் ஜனவரி மாஸம் 22-ந் தேதியன்று சென்னையில் கூடிற்று. ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியனுடைய ப்ரெஸிடெண்டாகிய திவான்பகதூர் எம். ஆதிநாராயணய்யா கான்பரென்ஸுக்கு வந்திருந்த ப்ரதிநிதிகளை வரவேற்று ப்ரஸங்கம் செய்தார்.

அவர் தமது ப்ரஸங்கத்தில், கோவாபரேடிவ் முயற்சியைப் பற்றிப் பரிசிலனை செய்த மக்லாகன் கமிட்டியார் எழுதியிருக்கும் ரிபோர்ட்டானது மிகவும் ச்லாக்யமாயிருக்கிறதென்றும், அதை எல்லா கோவாபரேஷன் அபிமானிகளும் வாசிக்க வேண்டுமென்றும், மதராஸ் ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் யூனியன் ஸபையார் அந்த ரிபோர்ட்டிலுள்ள விஷயங்களை இந்த மாகாணத்தில் வழங்கிவரும் முக்யமான தேச பாஷைகளில் மொழி பெயர்த்து வெளியிட உத்தேசித்திருக்கிறார்களென்றும் சொன்னார்.

கோவாபரேடிவ் கமிட்டியார் கோவாபரேடிவ் ஸங்க ரெஜிஸ்ட்ரார் உத்யோகத்தை சாச்வதமாக்க செய்யவேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறார்கள். இப்படிச் செய்தால் கோவாபரேடிவ் முயற்சியானது ஸர்க்காரால் நடத்தப்படும் ஒரு முயற்சியாகக் கருதப்படும் என்று சிலர் பயப்படுகிறார்கள். ஆனால் இந்த முயற்சியானது இன்னும் ஆரம்ப தசையிலேயே இருப்பதாலும், இதனால் ப்ரயோஜனம் அடைகிற ஜனங்களில் பெரும்பாலார் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாயிருப்பதாலும், இன்னும் சிலகாலம் வரையில் கவர்ன்மெண்டாருடைய மேற்பார்வை இருக்கவேண்டியது அவச்யமாகிறது.

கோவாபரேடிவ் முயற்சி கடைத்தேறுவதென்பது மூன்று அம்சங்களைப் பொறுத்திருக்கிறது. அவையாவன,—1-சரியான தொழில் முறைகளையும் கோவாபரேடிவ் கொள்கைகளையும் அனுஸரித்து ப்ரதம ஸங்கங்களை நடத்தி வருவது. 2-இந்த ஸங்கங்களின் நடவடிக்கைகளை ஊக்கத்துடனும் அடிக்கடியும் மேற்பார்வை செய்வது. 3-தக்க விதத்தில் இவைகளுக்குப் பணம் கிடைக்கும்படி ஏற்பாடு செய்வது. தற்போது கோவாபரேடிவ் ஸங்கங்களின் நிலைமை த்ருப்திகரமாயிருக்கிறதென்றாவது, ஸங்கங்களை நடத்துகிறவர்கள் கோவாபரேஷனின் கொள்கைகளை நன்றாயறிந்திருக்கிறார்களென்றாவது சொல்லமுடியாது. இந்த நிலைமை சீக்ரம் சீர்திருந்தி விடுமென்றும் சொல்வதற்கில்லை. ஆகையால் ஸங்கங்களின் நடவடிக்கைகளை அடிக்கடி நன்றாய் சோதிக்க தக்க ஏற்பாடுகள் செய்வதோடு, கோவாபரேஷன் கொள்கைகளை ஜனங்களிடம் பரவச்செய்யவும் ஏற்பாடு செய்யவேண்டும்.

கோவாபரேடிவ் ஸங்கங்களின் பணவிஷயங்களில் ஒரு முக்யமான குறையிருக்கிறது. அதாவது, ஸங்கங்கள் ஸ்வல்பகாலத் தவணையில் கடன் வாங்கி நீண்டகாலத் தவணையின்மேல் கடன் கொடுக்கின்றன. மேலும் ஸங்கங்களுக்குக் கிடைக்கும் பணத்துக்குக் கொடுக்கிறவட்டி அதிகமாயிருப்பதால் அவைகளுக்கு லாபம் ரொம்பக் குறைவாகவே யிருக்கிறது. இதனால் கோவாபரேடிவ் ஸங்கங்களும் ஸெண்ட்ரல் பாங்கிகளும் சீக்ரத்தில் அவைகளுடையவையென்று ஸொந்தத்தில் ஸொத்துசேர்ப்பது முடியாது. இதற்கு செய்யவேண்டியதென்னவென்றால், ஸங்கங்கள் முடியுமான ஸமயங்களில் நீண்டகாலத் தவணையின் மேல் கடன் வாங்க முயலவேண்டும். பண விஷயங்களில் ஸங்கங்கள் மற்ற ஸங்கங்களின் உதவியை எதிர்பாராமலிருக்கும்படி முயற்சி செய்ய வேண்டும். இப்படி ஆதிநாராயணய்யா பேசிய பிறகு சென்னை நிர்வாக ஸபையின் மெம்பராகிய ஆனரபில் மிஸ்டர் எ. ஜி. கார்ட்யூ ப்ரெஸிடெண்டாக இருந்து ப்ரஸங்கம் செய்தார்.



கோவாபரேஷனானது கவர்ன்மெண்டார் செய்யவேண்டிய வேலைகளில் ஒன்றாகாது. அது ஜனங்கள் ஸொந்தத்தில் செய்துகொள்ள வேண்டிய முயற்சிகளில் ஒன்றாகும். கோவாபரேஷன் என்னும் வார்த்தைக்கு அர்த்தம் ஒற்றுமை அல்லது ஒத்து உழைத்தல் என்பது. அதாவது ஜனங்கள் ஸொந்தத்தில் தங்களுடைய நன்மைக்காக ஒன்றுசேர்ந்து உழைப்பதாகும். இங்கிலண்டில் கோவாபரேஷனுக்காக முதல் முதலில் பாடுபட்டவர்கள் ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் அல்லர். பொதுஜனங்களே. அவர்கள் ஸர்க்கார் உதவியையாவது, ஸர்க்காருடைய ஆதரிப்பையாவது எதிர்பார்க்கவில்லை. அந்தக் காலத்தில் அங்கே கோவாபரேஷன் பரவுவதற்கு இடைஞ்சலாயிருந்த சட்ட ஸம்பந்தமான சில தடைகளை நீக்குவதற்கு மாத்ரம் ஸர்க்கார் உதவியை நாடினார்கள்.

ஆனால் இந்தியாவிலே அப்படியல்ல. இங்கே கோவாபரேடிவ் முயற்சி உத்யோகஸ்தர்களால் ஆரம்பிக்கப்பட்டது. கவர்ன்மெண்டாருடைய உத்தரவின்மேல் ஒரு ஸர்க்கார் உத்யோகஸ்தர் கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிப்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்து ரிபோர்ட் செய்ய, அதன்மேல் கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. அதனால் சென்னையில் இந்த முயற்சியானது ஸர்க்காருடைய வேலை போல் தொடங்கி ஸர்க்காருடைய ப்ராபல்யமே அதிகமாயிருக்கிறது. அதேசமயம் இந்த முயற்சியில் முதலில் நாணய ஸங்கங்கள் ஸ்தாபிப்பதே நோக்கமாக இருந்து வந்தது. இப்போதும் இந்த முயற்சியில் நாணய ஸங்கங்கள் ஸ்தாபிப்பதில்தான் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த மாதிரி ஸங்கங்களில், மேல் நாடுகளிலும் கூட ஸர்க்கார் மேற்பார்வை அவச்யமாயிருந்து வருகிறது.

இந்தியாவில் கவர்ன்மெண்டார் கோவாபரேடிவ் முயற்சி அபிவ்ருத்தியடைவதற்காக மேற்கொண்டிருக்கும் வேலைகளெல்லாம் அவச்யமானவையாகவே இருக்கின்றன. ஆனால் கோவாபரேஷன் கடைத்தேறுவதற்கு ஜனங்கள் தாங்களே முயற்சியெடுத்து உழைத்து வரவேண்டியது அவச்யமென்பதை நாம் மறக்கக்கூடாது. ஜனங்கள் தாங்களாகவே முன்வந்து இடைவிடாமல் முயற்சியெடுத்து உழைத்தால்தான் கோவாபரேடிவ் முயற்சி வ்ருத்தியடைய முடியும். கோவாபரேடிவ் ஸங்கங்களில் சேர்ந்துள்ள ஒவ்வொரு நபரும், தாம் ஸொந்தத்தில் உழைத்து வந்தால்தான் கோவாபரேடிவ் முயற்சி அபிவ்ருத்தியடையுமென்றும், கோவாபரேஷன் ஸம்பந்தமான பொது வேலையில் தமக்குள்ள பாகத்தைச் செய்யவேண்டியது தமது கடமையென்றும் உணர்ந்தாலொழிய கோவாபரேடிவ் முயற்சி நன்றாய் அபிவ்ருத்தியடைவதென்பது முடியாத காரியமாகும்.

கோவாபரேஷன் அபிவ்ருத்தியடைய ஒவ்வொரு மெம்பரும் இரண்டு முக்யமான விஷயங்களை கைக்கொள்ளவேண்டியது அவச்யமாகும். அவையாவன, தன்னடக்கமும், தன்மதிப்பும் ஆகும்.

ஒவ்வொரு மெம்பரும் தாம் கொடுக்கவேண்டிய வட்டியை சரியான காலத்தில் க்ரமமாய்க் கொடுத்து வரவேண்டும். அதோடு, தாம் திருப்பிச் செலுத்தவேண்டிய கடனையும் மற்ற [illegible]வைகளையும் தவணை தவறாமல் செலுத்தவேண்டியது அவச்யமாகும். ஒவ்வொரு மெம்பரும் இவைகள் தமது கடமையென்று உணர்ந்து அதன்படி செய்துவரவேண்டும்.

மெம்பர்கள் தங்களுடைய ஸங்க நடவடிக்கைகளில் தாமஸமாயும் அச்ரத்தையாயும் இருந்து கொண்டிருந்தால், கான்பரென்ஸில் பற்பல தீர்மானங்கள் செய்வதாலும், ஊக்கம் பாராட்டிப் பேசுவதாலும் யாதொரு ப்ரயோஜனமும் உண்டாகமாட்டாது. சென்ற இரண்டொரு வர்ஷமாக மெம்பர்களும், ஸங்கங்களும் தாங்கள் திருப்பிச் செலுத்தவேண்டிய கடன் தொகைகளையும் வட்டித் தொகைகளையும் செலுத்துவதில் அச்ரத்தையாயிருந்து வருகிறார்களென்று தெரிகிறது. இந்த நிலைமையை சீர்திருத்தாவிட்டால் ஐக்ய முயற்சி முழுவதுக்குமே கெடுதல் நேரிடக்கூடும்.

கோவாபரேஷனுடைய கொள்கைகளை நாணய வ்யவஹாரத்துக்கே யல்லாமல் வேறு வ்யவஹாரங்களிலும் உபயோகித்துக்கொள்ளலாம். முதலாவது, ரொம்ப விலையுயர்ந்த யந்த்ரங்களை வாங்கி உபயோகிப்பதற்கு கோவாபரெடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிப்பது நல்லது. விலையுயர்ந்த யந்த்ரங்களை ஒரு விவஸாயியோ, அல்லது ஒரு தொழிலாளியோ, ஸொந்தத்தில் வாங்கி உபயோகிப்பது முடியாத கார்யம். அந்த யந்த்ரத்தை உபயோகிக்கக்கூடிய பலர் ஒன்றுசேர்ந்து ஒரு ஸங்கம் ஏற்படுத்தி யந்த்ரங்களை வாங்குவதென்றால், அது ஸௌலபமாகும்.

தற்காலம் நிலக்கடலை ஸாகுபடிசெய்யும் விவஸாயிகள் வேர்க்கடலையை ஜலத்தில் நனைத்துப் பிறகு தடியாலடித்து பருப்பைப் பிரித்தெடுக்கிறார்கள். கடலையை ஈரமாக்குவதால் உள்ளிருக்கும் பருப்பானது ஈரமாகி, கடைசியில் பூஞ்சணம் பூத்து ஒன்றுக்கும் உதவாமல்போகிறது. இதை வாங்கும் வ்யாபாரிகளுக்கும் ரொம்ப நஷ்டம் ஏற்படுகிறது. வேர்க்கடலையை உடைத்துப் பருப்பெடுக்க ஒரு யந்த்ரம் உபயோகித்தால் நல்ல பருப்புக் கிடைக்கும். ஆனால் இந்த யந்த்ரத்தை உபயோகிப்பதென்றால் அதை ஓட்ட ஒரு ஆயில் எஞ்ஜின் வேண்டியிருக்கிறது. இந்த யந்த்ரம் ரொம்ப விலை அதிகமாகையால், ஒரு விவஸாயி தனியாக ஸொந்தத்தில் விலைக்கு வாங்கி உபயோகிப்பதென்பது முடியாது. ஆனால் ஒரே க்ராமத்திலுள்ள விவஸாயிகள் ஒரு கோவாபரெடிவ் ஸங்கம் ஸ்தாபித்து ஷை யந்த்ரத்தை வாங்கி எல்லாரும் உபயோகித்துக்கொள்ளலாம். இதே மாதிரி கரும்பாலை, எண்ணெய் ஆட்டும் ப்ரெஸ், ரெசவு கருவிகள் முதலியவைகளுக்கும் கோவாபரெடிவ் ஸங்கங்கள்ஸ்தாபிப்பது நல்லது.

ஐரோப்பாவில் நார்வே, ஸ்வீடன் என்னும் தேசங்களிலும், ஐயர்லண்ட் தேசத்திலும், கோவாபரெடிவ் பால் சாலைகள் ரொம்ப அபிவ்ருத்தியடைந்திருக்கின்றன. இந்தியாவிலும் கோவாபரெடிவ் பால்சாலைகள் ஸ்தாபிப்பதைப்பற்றி யோசிக்கவேண்டும். இன்னும் கட்டிட ஸங்கங்களும் ஸ்தாபித்து ஏழை ஜனங்களுக்கு ஸௌலபமாய் வீடுகள் கிடைக்கும்படி ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

இந்தக் கான்பரென்ஸில் செய்யப்பட்ட தீர்மானங்களில் சில பின்வருமாறு.

ஆடிட்,-ஸங்கத்தினுடையகணக்குகளை தணிக்கை செய்யும் வேலையை கவர்ன்மெண்டாரே அவர்களுடைய ஸொந்த செலவில் செய்து வர வேண்டும். ஒவ்வொரு ஸங்கத்தினுடைய கணக்குகளையும் பூராவாகதணிக்கை செய்யவேண்டும். ஸங்கங்களை மேற்பார்வை செய்வதை மாத்ரம் யூனியன்களுக்கு விட்டுவிடவேண்டும்.

ரிஸர்வ் பண்ட்.—கோவாபரெடிவ் ஸங்கங்கள் ஆக்டின்படி கவர்ன்மெண்டார் ப்ரசுரம் செய்திருக்கும் IX (a) 2-என்னும் ரூலில் நிகரான லாபத்தில் பாதியை ரிஸர்வு பண்டில் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று கண்டிருக்கிறது. இந்த ரூலானது ஸங்கங்களுக்கு ரொம் பாதகம் உண்டுபண்ணும்.

ஸெண்ட்ரல் பாங்கிகளும் ஜில்லா பாங்கிகளும்.—கபர் மெம்பர்கள் அதிகமாக இருக்கும் ஜில்லா பாங்கிகளிலும் ஸெண்ட்ரல் பாங்கிகளிலும் கோவாபரெடிவ் ஸங்கங்கள் அதிகமாய் மெம்பர்களாகச் சேரும்படிக்கும், அந்த ஸங்கங்களுக்கு அதிக வோட்டுகள் கிடைக்கும்படிக்கும் ஷை பாங்கிகளின் அமைப்பைத் திருத்தும்படி அவைகள் (ஷை பாங்கிகள்) கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

பணங் கோடுத்து உதவும் ஸங்கங்கள்.—ஸெண்ட்ரல் பாங்கிகள், ஜில்லா பாங்கிகள் ஆகிய இவைகளுள் ஒன்றுக் கொன்று இருக்க வேண்டிய ஸம்பந்தத்தை பற்றியும், இந்த பாங்கிகள் எங்கெந்த ப்ரதேசங்களிலிருந்து டெபாஸிட்டுகள் வாங்கலா மென்பதைப்பற்றியும், அந்த பாங்கிகள் டெபாஸிட்டுகளுக்கு ஒன்றுக்கொன்று வித்யாஸமானவட்டி விகிதங்கள் ஏற்படுத்தலாமா என்பதைப்பற்றியும், இந்த ஸங்கங்கள் பொறுப்புவரையறுக்கப்பட்டஸங்கங்களுக்கு எவ்வளவு தூரம் கடன் கொடுக்கலா மென்பதைப் பற்றியும் ஆராய்ச்சி செய்ய கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டி ஏற்படுத்த வேண்டும்.

கோவாபரெடிவ் கமிட்டியார் தமது ரிபோர்ட்டின் 10-வது பாராவில், 1912-ம் வர்ஷத்திய கோவாபரெடிவ் ஸங்கங்கள் ஆக்டினால் ஏற்படும் நன்மைகளை சில வகுப்பாருக்கு மாத்ரம் கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்று ப்ரேரித்திருப்பது சரியல்லவென்று இந்தக் கான்பரென்ஸ் அபிப்ராயப்படுகிறது.

கவர்ன்மெண்டார் கோவாபரேஷன் ஸம்பந்தமாக ஏதாவது புதிதாக மாறுபாடுகள் செய்ய வேண்டியிருந்தால், அப்படிச் செய்யும்படி உத்தரவு போடுவதற்கு முன்னால், அவர்கள் கோவாபரேஷனில் அபிமானமுள்ள உத்யோகஸ்தர்களல்லாத கனவான்களை அபிப்ராயங்கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்.

தக்க இடங்களில் கூட்டுமுறையில் சிறு தொழில்களைஏற்படுத்துவதற்காக, கவர்ன்மெண்டார் ராஜதானியின் பற்பலஜில்லாக்களில் ஆராய்ச்சி செய்யும்பொருட்டு சில உத்யோகஸ்தர்களை ப்ரத்யேகமாக நியமிக்கவேண்டும்.



## PONTOON BRIDGES.

## படகுப் பாலங்கள்.

யுத்தம் செய்யும் ஸைன்யங்கள் முன் செல்லும் போது சில ஸமயங்களில் நதிகளைக் கடக்க வேண்டிவரும். ஏற்கனவே நதிகளின் மேல் பாலங்கள் இல்லாவிட்டால் அவ்வப்போது உதவக் கூடிய பாலங்களைக் கட்டி அவைகளின் மூலமாய் நதிகளைக் கடக்க வேண்டியிருக்கும். நதிகள்மேல் பாலங்கள் இருந்தாலும் எதிரிகள் அவைகளை நாசம் செய்து உபயோக மற்றவைகளாகச் செய்து விடுவதுண்டு. இப்படிப்பட்ட ஸமயங்களில் துருப்புகள் சீக்ரம் நதியைக் கடக்க வேண்டியிருந்தால், அதற்காக படகுப் பாலம் அமைப்பார்கள். இதற்கு இங்கிலீஷில் பாண்டூன் ப்ரிட்ஜ் என்று பெயர். பாண்டூன் ப்ரிட்ஜ் என்பது படகுகளை யாவது பரிசல்களையாவது நதியில் ஒன்றுக் கொன்று ஸம தூரத்தில் நிறுத்தி, அவை அசையாதபடி நங்கூரம் போட்டு, அவைகளின் மேல் தண்டவாளங்களாலும் பலகைகளாலும் அமைக்கப்பட்ட பாலமாகும்.

இந்த படகுகளும், அவைகளை பாலமாக்க வேண்டிய மற்ற ஸாமான்களும் எப்படியிருக்க வேண்டுமென்பதைப்பற்றி ஒவ்வொரு தேசத்து ராணுவ டிபார்ட்மெண்டாரும் கவனம் செலுத்தி வந்திருக்கிறார்கள். அவர்கள் ஸமாதான காலங்களிலேயே யுத்தம் நடக்கக்கூடிய தேசங்களில் இருக்கும் நதிகள், அவைகளின் [illegible] தன்மை, அங்குள்ள சாச்வதமான பாலங்கள் முதலியவைகளைத் தெரிந்து கொண்டு, [illegible] ஸைன்யம் அந்த தேசத்தில் போக வேண்டியிருந்தால் எங்கெங்கே பாலங்கள் [illegible] வேண்டுமென்பதைத் தீர்மானம் [illegible] பார்கள்.

படகுப் பாலம் [illegible] [illegible] 1[illegible]1-ம் வர்ஷத்தில் அமெரிக்கர் [illegible]

கக்ஷிகளாகப் பிரிந்து ஒருவரோடொருவர் யுத்தம் செய்தார்கள். அப்போது தான் அவர்கள் படகுப் பாலம் கட்டும் வேலையை ரொம்ப அபிவ்ருத்தி செய்தார்கள். அது முதல் மற்றெல்லா தேசங்களிலும் இந்த விஷயத்தைப்பற்றி கவனிக்கத் தொடங்கினார்கள்.

படகுப் பாலங்களை பகலில் கட்டுவது வழக்கமில்லை. ஏனென்றால் நதியின் அக்கரையில் எதிரிகள் இருந்து, அவர்களுக்கு இவ்விஷயம் தெரிந்து விட்டால், அவர்கள் ஸ்வல்பமாயிருந்தாலும், பாலங்கட்டுவதைத் தடுத்துவிடக்கூடும்.

அமெரிக்காவில் ஜனங்களுக்குள் நடந்த மேற்சொன்ன சண்டையில் ஒரு தளகர்த்தர் பகல் நேரத்தில் அவஸரமாய் ஒரு நதியைக் கடக்க வேண்டி பல [illegible]வை படகுப்பாலம் கட்ட முயன்றும், எதிர்க்கரையில் இருந்த எதிரிகளின் ஸ்வல்ப ஸைன்யம் படகு கட்ட முடியாதபடி தடுத்து விட்டது. அதன்மேல் மேற்சொன்ன தளகர்த்தர் பகல் நேரத்தில், பாலங்கட்டுவதை நிறுத்தி, இருட்டின பிற்பாடு படகுப் பாலங் கட்டி அக்கரை சேர்ந்தார்.

இருட்டில் கட்டினாலும் சரி, பகல் நேரத்தில் கட்டினாலும் சரி, ஜனச்சேதம் ஏற்படாமலிராது. ஆனால் ராத்ரிக் கட்டும்போது அதிக சேதம் ஏற்படுவதில்லை. ஆகையால் ஸாதாரணமாய் இரவிலே தான் படகுப்பாலம் கட்டுவது வழக்கம். ஆனால் தற்கால யுத்தத்தில் சில ஸமயங்களில் இரவு வருகிறவரையில் காத்திராமல் உடனே நதியைக் கடக்கவேண்டியிருப்பதுண்டு. அப்போது நதியின் எதிர்க் கரையில் எதிரிகள் இருந்து தாக்கிக்கொண்டிருந்தாலும் பாதகமில்லை யென்று பாலம் கட்டத் தொடங்குவார்கள். ஆனால் அப்படிக் கட்டுவதற்குமுன்னால், பாலங்கள் கட்ட உதவும் படகுகளில், போர்வீரர்களை ஏற்றி எதிர்க்கரையில் கூடியமட்டும் ஸமீபமான இடங்களுக்கு அவைகளைத் தள்ளிக்கொண்டு போய், போர்வீரர்களை அங்கே இறக்கிவிடுவார்கள். போர்வீரர்கள் ஏறியிருக்கும் படகுகள் எதிர்க் கரைக்கு போகும்போது, அதைச் சேர்ந்த கக்ஷியார் தங்களுடைய பீரங்கிகளைக்கொண்டு எதிர்க்கரையிலிருக்கும் எதிரிகளைத் தாக்கி, அந்த எதிரிகளால் படகுகளுக்கு கெடுதி நேராதபடி பார்த்துக்கொள்வார்கள். படகுகளிலுள்ள போர்வீரர்கள் எதிர்ப்பக்கத்துக் கரையில் இறங்கின பிறகு அங்குள்ள எதிரிகளைத் தாக்கித் துரத்துவார்கள். எதிர்ப்பக்கத்துக் கரையில் போர்வீரர்கள் போய்ச் சேர்ந்தவுடன் அந்தப் படகுகள் திரும்பி இக்கரை சேர்ந்துவிடும். உடனே இந்தக் கரையிலிருந்துகொண்டு படகுப்பாலங்கள் கட்ட ஆரம்பிப்பார்கள்.

படகுப்பாலங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று லேசான பாலங்கள். இவைகள் ஸாதாரணமாய் நமது தேசத்து நதிகளில் கட்டப்படுகிற பரிசல்களாலும் மற்ற பலகை முதலியவைகளாலும் கட்டப்படும். நமது நாட்டில் போல் பரிசலுக்கு தோல் உபயோகிக்காமல் கெட்டிக் கித்தானை உபயோகிப்பார்கள். இவைகளை குதிரைப்படைகளே விசேஷமாய் உபயோகிக்குமாகையால் இவைகள் ரொம்ப லேசாக இருக்கும். ஆனால் இந்தப் படகுகள் சீக்ரம் கெட்டுப் போய்விடும். படகில் ஏதாவது குண்டு விழுந்தாலோ, அது பிறகு ஒன்றுக்கும் லாயக்கில்லாமல் போய்விடும்.

இரண்டாவது வகுப்புப் பாலம் ரொம்ப கனமானவை. இது வேலைக்கு நன்றாய் உதவும். இதில் உபயோகிக்கப்படும் படகுகள் மரத்தாலாவது தகரத்தாலாவது செய்யப்படும்.

படகுப் பாலங் கட்ட நான்கு வழிகள் இருக்கின்றன. முதலாவது படகுகளை ஒரு பக்கத்துக் கரையிலிருந்தோ, இரண்டு கரைகளிலிருந்துமோ, ஜலத்தில் தள்ளிக்கொண்டு போய், அததற்கு ஏற்பட்ட இடங்களில் நிறுத்தி, அவைகளின்மேல் தொடர்ச்சியாக பாலம் அமைப்பார்கள். இரண்டாவது வழியாவது ஒவ்வொரு படகின்மேலும்



போடப்படும் பாலத்தின் பாகத்தை கரையோரமாக போட்டுக் கட்டி, ஒவ்வொரு படகாக ஜலத்தில் தள்ளிக்கொண்டு போய் ஒவ்வொன்றையும் அததற்கேற்ற இடத்தில் அமைத்து பாலத்தின் பாகங்களை ஒன்றோடொன்று சேர்த்து ஒரே பாலமாக்குவது. சில ஸமயங்களில் கரையோரத்தில் ஐந்தாறு படகுகளை ஸமதூரத்தில் நிறுத்தி அவைகளின்மேல் தொடர்ச்சியாகப் பாலம் போட்டு வைப்பார்கள். இப்படி மொத்தத்தில் நதிக்கு எத்தனை சிறு பாலங்கள் வேண்டியிருக்குமோ அத்தனையும் கட்டிக்கொண்டு, பிறகு அந்தச் சிறு பாலங்களை நதியில் தள்ளிக்கொண்டு போய் ஒன்றோடொன்று இணைத்து ஒரே தொடர்ச்சியான பாலமாகச் செய்வார்கள். இது மூன்றாவது வழியாகும். நான்காவது வழியாவது, நதியைக் கடக்க எவ்வளவு நீளத்துக்குப் பாலங்கட்ட வேண்டுமோ அவ்வளவு நீளத்துக்கு படகுப் பாலத்தை கரையோரமாகக் கட்டி பாலத்தின் ஒரு முனையை கரையில் கட்டி பாலத்தை நீர்ப்போக்கில் மிதக்கவிட்டு, மற்ற கோடி அக்கரையைத் தொடும்போது அதைக் கயிறு முதலியவைகளால் எதிர்க் கரையில் பத்ரமாகக் கட்டிவிடுவது.

இந்த நான்காவது முறையை 1809ம் வர்ஷத்தில் நெப்போலியன் என்னும் ப்ரெஞ்ச் சக்ரவர்த்தி ஆஸ்ட்ரியாவின்மேல் படையெடுத்துப் போனபோது உபயோகித்தார். அவருடைய ஸைன்யம் ஆஸ்ட்ரியாவின் தலை நகராகிய வியன்னாவுக்குத் தெற்கில் டான்யூப் நதியில் லாபௌ என்னும் தீவில் தங்கியிருந்தது. நதியின் எதிர்க் கரையில் ஆஸ்ட்ரிய ஸைன்யங்கள் இருந்தன. ஒவ்வொரு படகாக ஆற்றில் கொண்டுபோய் நிறுத்தி அவைகளின்மேல் தொடர்ச்சியாகப் பாலம் போடுவதானால், ஆஸ்ட்ரியர்கள் அவ்விஷயத்தை யறிந்து கொண்டு, பாலம் போடுபவர்களைத் தாக்கி பாலம் போட முடியாதபடி செய்து விடுவார்கள். அதோடு, ஆஸ்ட்ரியர்கள் எதிர்க்கரையில் ஏராளமாக வந்து தங்கி ப்ரெஞ்ச் துருப்புகளைத் தாக்கக்கூடும். ஒரு ப்ரெஞ்ச் இஞ்ஜினியர் நெப்போலியனிடம் வந்து முழுப்பாலத்தையும் கரையோரமாகக் கட்டி அதன் ஒரு கோடியை கரையில் கட்டிவைத்து, மற்ற பாகங்களை நீர்ப்போக்கில் மிதக்கவிட்டு, மற்றகோடி எதிர்ப்பக்கத்துக்கரையண்டை போய்ச் சேர்ந்ததும் அங்கே அதைக் கட்டி அசையாமல் செய்துவிடலாமென்று சொன்னார். நெப்போலியன் அதற்கு ஸம்மதிக்கவே, அப்படியே முழுப்பாலத்தையும் கரையோரமாகக் கட்டி மிதக்கவிட்டு, ஆஸ்ட்ரியர்களுக்குவிஷயம் தெரிவதற்கு முன்னால் பாலத்தின் வழியாய் ஸைன்யத்தை நடத்திக் கொண்டுபோய், ஆஸ்ட்ரியர்கள் எதிர்பாராதிருந்த ஸமயத்தில் அவர்களைத் தாக்கினார்கள்.

அதிக அகலமில்லாத நதியாயிருந்தால் ஒவ்வொரு படகாக ஆற்றில் தள்ளிக்கொண்டுபோய் தக்க இடத்தில் நிறுத்தி அவைகளின்மேல் தொடர்ச்சியாகப் பாலம் கட்டுவது வழக்கம். எதிர்பக்கத்துக் கரையில் எதிரி ஸைன்யம் இருப்பதாகவும் நதியைக் கடக்கவேண்டியிருக்கிறதாகவும் வைத்துக்கொள்ளுவோம். அப்போது நதியைக்கடக்க விரும்புபவர்கள் பின்வருமாறு செய்வார்கள்.

நதியைக் கடக்கவேண்டிய ஸைன்யத்தைச் சேர்ந்த இஞ்ஜினியர்கள் படகுகளை வண்டிகளிலிருந்து கொண்டுவந்து ஜலத்தில் மிதக்கப்போடுவார்கள். எதிர்க்கரையிலுள்ள எதிரிகளைத் துரத்துவதற்காக சில போர்வீரர்கள் துப்பாக்கிகளுடன் படகுகளில் ஏறிக்கொள்வார்கள். படகோட்டிகள் படகுகளைத் தள்ளிக்கொண்டுபோய் அக்கரை சேருவார்கள். படகுகளின் அமைதியைக் கெடுக்கக் கூடிய எந்தக்காரியத்தையும் படகிலுள்ள ஒருவரும் செய்யக்கூடாதென்று கண்டிப்பாய் உத்தரவிட்டிருப்பார்கள். எதிரியின் குண்டுகளால் படகிலுள்ளவர் யாராவது காயப்பட்[illegible]

கூட மற்றவர்கள் அவருக்கு யாதொரு உதவியும் செய்யக்கூடாது. ஏனென்றால் அப்படிச் செய்யப்போனால் படகுநிலைதவறிக் கவிழ்ந்துபோகும். படகிலுள்ள ஸோல்ஜர்கள் எந்தக் காரணத்தைக்கொண்டும் தங்கள் துப்பாக்கிகளை சுடுவதற்குஉபயோகிக்கக்கூடாது.இப்படிப்படகுகள் போய்க்கொண்டிருக்கும்போது, அவைகளைச் சேர்ந்த பீரங்கிப் படைகள் எதிரிகளினுடைய பீரங்கிகளையும் ஸைன்யங்களையும் தாக்கி, அந்த எதிரிகள் படகுகளைத் தாக்காதபடி பார்த்துக்கொள்ளும்.

படகுகள் எதிர்க் கரையை அடைந்ததும், போர்வீரர்கள் படகுகளிலிருந்து கரையில் இறங்கி,அங்குள்ளஎதிரிகளைத் தாக்கித் துரத்துவார்கள். வீரர்கள் இறங்கியானதும் படகுகள் திரும்பிவிடும். அதன்மேல் பாலங்கட்டத் தொடங்குவார்கள். முதலில் ஒரு படகை கரைக்குச் சற்றுதூரத்தில் ஜலத்தில் நிறுத்தி அதற்கும் கரைக்கும் பாலம் போடுவார்கள்.

படகுகளின் மேல் பாலம்போடத் தண்டவாளங்களையும் பலகைகளையும் உபயோகிப்பார்கள். பாலம் தண்ணீரின் வேகத்தால் ஓடிவிடாதபடி அதை கரையில் உறுதியாய்க் கட்டிவைப்பார்கள். அதோடு ஒவ்வொரு படகுக்கும் நங்கூரம் போடுவார்கள். கரைக்கும் முதல் படகுக்கும் பாலம் கட்டியானவுடன், இன்னொரு படகை முதல் படகுக்கு சற்று தூரத்தில் நிறுத்தி முதல் படகுக்கும் இரண்டாவது படகுக்கும் பாலம் போடுவார்கள். பாலத்தின் முதல் பாகத்தையும் இரண்டாவது பாகத்தையும் தக்கபடி உறுதியாய்க் கட்டிவைப்பார்கள். இப்படியே மற்ற படகுகளையும் ஒவ்வொன்றாய் அதது நிற்க வேண்டிய இடத்தில் நிறுத்தி பாலம் போட்டுப் பூர்த்தி செய்வார்கள்.

படகுகளில் எதிரியின் குண்டுகள் பட்டால் அவைகள் நாசமடைந்து பாலம் முழுவதும் வீணாய்விடுமாதலால், பாலத்தோரமாக அநேக படகுகளையும் படகுகளின்மேல் கட்டிய பாலப் பிரிவுகளையும் நிறுத்திவைப்பார்கள், ஏதாவது ஒருபடகு சேதமாய்ப் போனால், அதற்குப் பதிலாக அதிகப்படியாய் வைத்திருக்கும் படகை உடனே உபயோகித்து பாலத்தை சரிப்படுத்துவார்கள்.

பாலம் பூர்த்தியானதும், போர்வீரர்கள் கூட்டமில்லாதபடி ஒவ்வொருவராய் பாலத்தில் மெதுவாய் நடந்துபோவார்கள். ஸாதாரணமாய் ஸோல்ஜர்கள் நடந்து போகும்போது ஒவ்வொரு அடியையும் சேர்ந்தாற்போலக் கணக்காக எடுத்துவைப்பார்கள். இதைப் போலீஸ்காரர்கள் ட்ரில் பழகுகையில் பார்க்கலாம். இப்படி நடந்தால் பாலம் ரொம்ப ஆடுமாகையால், அவர்கள் பாலத்தில் நடந்து போகும்போது ஸாதாரண ஜனங்கள் நடந்து போவதுபோலவே நடப்பார்கள். குதிரைப் படைப் போகும்போது போர்வீரர்கள் குதிரையை விட்டு கீழே இறங்கி, குதிரையை நடத்திக் கூட்டிக்கொண்டு போவார்கள். பாலத்தின் எந்த பாகத்திலும் ஸோல்ஜர்கள் கூட்டமாயிராதபடி ஜாக்ரதையெடுத்துக்கொள்வார்கள். ஏனெனில் எந்த பாகத்திலாவது கூட்டம் அதிகமானால் படகுகள் அமிழ்ந்து விடக்கூடும்.


## A Good Tamil Novel.

ஒரு உயர்ந்த தமிழ் நாவல்

### காதல்வெற்றி.

இது ஹாஸ்ய ரஸம் பொருந்திய ஒரு உயர்ந்த தமிழ் நாவல். இதில் ஒரு பெண் தனது மனஸுக்குப் பிடிக்காத பையனைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்பாமல், தனது நெருங்கின பந்துவும் பால்யநேசனுமாகிய ஒரு வாலிபனைக் கல்யாணம் செய்துகொண்ட கதை விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இதில் புருஷனை எதிர்த்துப் பேசும் ஸ்த்ரீகளின் ஸ்வபாவமும், வைதீகர்களினுடைய வேடிக்கையான செய்கைகளும், மனைவிக்கு அடங்கி நடக்கும் புருஷர்களின் இயல்பும் விரிவாகவும் வேடிக்கையாகவும் எழுதப்பட்டிருக்கிறது. சிறுவர் சிறுமியர் முதல் யாவரும் தாராளமாய் வாசிக்கக் கூடியது. இதன் விலை அணா 4.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, 4, கொண்டி செட்டித் தெரு, மதராஸ்.




## REVIEW OF THE PRESS.

## பத்ரிகை ஆராய்ச்சி.

### BAKTHI YOGA

### பக்தியோகம்.

கும்பகோணத்தில் வெளியாகும் 'ஆர்யதர்மம்' என்னும் பத்ரிகையில் பக்தியோகம் என்பதைப்பற்றி ஒரு வ்யாஸம் வெளியாகியிருக்கிறது.

பரலோகத்துக்குரிய ஸாதனங்களை கவனிப்பதே இம்மனிதப் பிறவிக்கு முக்யமான பயனென்று தெரிகிறது. ஆனால் இது முக்யமாயிருந்தாலும், "கொஞ்சகால மிவ்வுலக வாழ்க்கையிலிருந்து, பிறகு அந்த ஸாதனத்தை யனுஷ்டானம் செய்தாலும் நற்கதியடையலாமே; இந்த ஸமயத்திலேயே எதற்காக நாமதை கவனிக்கவேண்டு"மென்று சிலருக்கு சங்கையுண்டாகலாம். அது சரியல்ல. மனிதர்களுடைய சரீர சக்தியும் இந்த்ரியங்களுடைய சக்தியும் இவ்வளவு காலம்வரையில் தவறாமல் வேலைசெய்யக்கூடிய ஸ்திதியிலிருக்கும் என்கிற தீர்மானமிருந்தால் ஒருஸமயம் நினைக்கலாம். பலவிதங்களான வ்யாதிகள் இந்த சரீரத்தை சத்ருக்கள் போல் எப்போதும் ஹிம்ஸித்துக்கொண்டிருக்கின்றன. ஜரா என்கிற புலியானது பாய்ந்து பிடித்துக்கொள்ளும் வண்ணம் எதிரில் நின்றுகொண்டிருக்கிறது. இக்கிழப் புலியின் வாயிலகப்பட்டுக்கொண்டால் ஜீவித்திருந்தாலும் ஒன்றையும் நடத்தவிடாது. ஆயுள்விஷயத்திலேயோ கூறவே வேண்டாம். அடியில் த்வாரமுள்ள ஓட்டைக் குடத்தில் வைக்கப்பட்ட நீர்போல் நிலையற்றது. இவ்வித அநர்த்த பரம்பரையோடுகூடிய இந்த சரீரத்தை எங்ஙனம் நம்பமுடியும். ஆகையால் அவரவர்களும் பின்னொரு காலத்தை எதிர்பார்த்து வீண்போகாமல், இப்பொழுதே பரலோகத்திற்குவேண்டிய ஸாதனங்களைத் தேடவேண்டியது முக்யம். அந்த ஸாதனங்களை பல ஜனங்கள் பலவிதமாய் சொல்லிக்கொண்டிருந்தாலும் நமது சாஸ்த்ரங்களை ஆராய்ச்சி செய்யின், கர்மா, பக்தி, ஞானம் என்கிற இம்மூன்றுகள் தான் ஸாதனங்களாகத் தெரிகின்றன. இவைகளில் அதிகமான தோஷங்களால் பீடிக்கப்பட்டு கெட்ட காரியங்களில் விருப்பத்துடன் ப்ரவேசிக்கும் மனத்திற்கு அந்ததோஷங்கள் யாவையும் விலக்கி நற்கார்யங்களில் ப்ரவ்ருத்தியை யுண்டுபண்ணுவதற்கு கர்மாவென்பது முதலாவது ஸாதனமாகும். இரண்டாவது ஸாதனம் பக்தியோகம். முதலாவதான கர்மயோகத்தைப்போலின்றி இது எல்லா ஜனங்களாலும் காலம், தேசம், அதிகாரிமுதலிய வேற்றுமையின்றி அனுஷ்டிக்கக்கூடியதாயிருக்கிறது. கர்மாவில் பலவித நியமங்களுண்டு. அதாவது குறிப்பிட்ட காலத்தில் செய்யவேண்டும்; வேறு ஸமயத்தில் செய்தாலுபயோகமில்லை; தோஷமுண்டு; எவையென்றால் ச்ராத்தம் முதலியவைகள். அதிகாரிகளையனுஸரித்தும் சில பேதங்களுண்டு. ஸந்தியாவந்தனமுதலியவைகள் ஸ்த்ரீ சூத்ரர்கள் செய்யக்கூடாதென்று நிஷேதமிருக்கின்றன. இதற்கோ தேசம், காலம், அதிகாரி முதலிய யாதொரு நியமுமில்லை. எந்த இடத்தில் இதர வ்யாபாரங்களில் ப்ரவ்ருத்தியில்லாமல் சித்தத்திற்கு ஏகாக்ரத்தன்மையேற்படுகிறதோ அதுதான் இதற்கு ஸ்தலமென்று பாதஞ்சலயோக சாஸ்த்ரத்தில் வ்யாஸபகவானால் சொல்லப்பட்டிருக்கிறது. சில கர்மாக்களிலதிகாரமில்லை என்று நிஷேதிக்கப்பட்ட ஸ்த்ரீசூத்ரர்களுக்கு மிதிலதிகாரமுண்டு. ஆகையால்தான் கீதையில் ஸ்திரீகளாயிருந்தாலும், வைச்யர்களாயிருந்தாலும், சூத்ரர்களாயிருந்தாலும், கெட்ட ஆசாரமுள்ளவர்களாயிருந்தாலும், சஞ்சலமில்லாத சித்தத்தால் எவர்கள் என்னை யடைகிறார்களோ அவர்களை ஸாதுக்களென்றே நினைக்கவேண்டும்; அவர்கள் உத்தமகதியையுமடைவார்கள் என்று பகவானாலும் சொல்லப்பட்டிருக்கிறது. இதையே உபாஸ்தி என்கிற பெயராலும் வழங்குவார்கள். ஒரு மனிதன் உத்தமமான ஞானத்தை அடையவேண்டுமானால் இதிலிருந்துதான் அடையவேண்டும். இவ்வளவு பெரிதாய்க் கூறப்பட்ட பக்தி என்கிற பதத்திற்குப் பொருள் யாது. அதின் அனுஷ்டானம் எங்ஙனமென சங்கையுண்டாகலாம். பக்தி என்கிற பதத்திற்கு சலனமில்லாத தன் சித்தவ்ருத்தியை இஷ்டமான ஏதாவதோர் ஈச்வரமூர்த்திவிஷயமாய் அர்ப்பணம் செய்வதென்று பொருள். ஆனால் சஞ்சலமான பதார்த்தங்களுள் முதன்மையான இந்த மனதானது எவ்வித தீரர்களுக்கும் வெளியிலுள்ள விஷயங்களிலிருந்து திரும்பி நமதிஷ்டப்படி கட்டுப்பட்டு வருவதென்பது மிகவும் ச்ரமம். ஒரு ஸமயம் இந்த மனதிற்கு இதரேந்த்ரியங்களின் வாயிலாக வெளியிற் சென்று ரூபம், கந்தம், முதலியவற்றை க்ரஹிக்கவேண்டியிருப்பதால், அவைகளுக்கு தானாகவோ அல்லது நிர்ப்பந்த வசத்தாலோ சக்திக்குறைவேற்பட்டாலும், இது தான் ஸஞ்சாரத்திற்கு வேறு ஸகாயத்தை

விரும்பாமலே உள்ளிருந்துகொண்டே முன்னைக் காட்
டிலும் பதின்மடங்கதிகமாய் பலவிடங்களிலும் போகு
மேயன்றி நமக்கு ஸ்வாதீனப்படமாட்டாது.

கீதையிலும், "மனதின் சலனத்தை விலக்கி எங்கும்
ஸமத்ருஷ்டி என்கிற உயர்ந்ததான யோகத்தை நீ
அனுஷ்டிக்கவேண்டு" மென்றுபதேசித்த பகவானைப்
பார்த்து, "ஓய் க்ருஷ்ணபகவானே, இந்த மனஸ்ஸா
னது சஞ்சலமுள்ளது; இந்த்ரியங்களை அடக்கி தன்னிஷ்
டப்படி இழுத்துக்கொண்டு போகக்கூடியது; பல ஜன்
மாக்களில் அனுபவித்த விஷய வாஸனைகளை அதிகம்
வைத்துக்கொண்டிருப்பதால், எவ்வளவு ப்ரயாஸப்பட்
டாலும் விஷயங்களிலிருந்து அது திரும்பாது; ஆகை
யால் இவ்வளவு விபரீத பலத்தையடைந்த மனதை
நமக்கு ஸ்வாதீனமாய்ச் செய்துகொள்வது எப்பொழு
தும் எந்த விடங்களிலும் ஸஞ்சாரம் செய்துகொண்
டிருக்கும் வாயுவை அடக்கி நிறுத்துவதுபோல் மிகவும்
ச்ரமமென்று நினைக்கிறே" னென அர்ஜுனன்
சொன்ன வார்த்தையைக்கேட்டு, ஸ்ரீபகவானும் அவன்
வார்த்தையை அனுஸரித்தே சலனமுள்ள மனதை
ஸ்வாதீனப்படுத்துவது மிகவும் ச்ரமம் என்று அங்கீ
கரித்திருக்கிறார். ஆனால் இவ்விதம் சொல்லுகிறவர்க
ளெல்லாம் கட்டுப்படுவது ச்ரமமென்று மாத்ரம் கூறு
கிறார்களே தவிர, ஸாத்யமில்லை என்று ஒருவருமபிப்
ராயப்படவில்லை. எவ்விதத்திலதை ஸ்வாதீனம் செய்ய
லா மென்றால் க்ரமமாய்ப் பழக்கம் செய்வதாலும், விஷ
யங்களில் தோஷ த்ருஷ்டியால் உண்டாகும் வை
ராக்யத்தாலும் ஸ்வாதீனப்படுமென்று யோக சாஸ்த்
ரம் கீதைமுதலான அனேக விடங்களில் சொல்லியபடி,
சரியான ஸாதனங்களைக்கொண்டு அந்த மனதைத்
தனக்கு வசமாக்கிக் கொண்டு ஈச்வர மூர்த்தியில் பற்
றுதலுள்ளதாகச் செய்வது. இதுதான் பக்தி எனப்
படும்.

ஸ்ரீ ஜகத்கு சங்கராச்சார்யாரும், அழிஞ்சில் விதை
யானது அதின் மரத்தை யடைவது போலும், ஊசியா
னது தன்னை இழுக்கின்ற காந்தமென்கிற கல்லை
பற்றுதல் போலும், பதிவ்ரதா ஸ்த்ரீயானவள் தன்
கணவனையடைவது போலும், கொடிகள் மரத்தை
ஆச்ரயிப்பது போலும், நதிகள் ஸமுத்ரத்தை யடை
வது போலும் சித்த வ்ருத்தியானது ஸ்ரீ பசுபதியினு
டைய சரணாரவிந்தத்தை யடைந்து எப்பொழுது மிருப்
பதே பக்தி என்று சொல்லியிருக்கிறார். இங்கு ஐந்து
த்ருஷ்டாந்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதி
காரிகளின் பேதத்தை யனுஸரித்து ஐந்து படிகளாக
நிரூபணம் செய்து, ஒவ்வொரு படிக்கும் ஒவ்
வொன்றை த்ருஷ்டாந்தமாகக் கூறியிருக்கிறார். இவ்
வுலகிலுள்ள விஷயங்களையே பெரிய புருஷார்த்தமாய்
எண்ணிக் கொண்டிருக்கும் ஒரு மனிதனுக்கு முன்
ஜன்மத்தின் புண்ய பரிபாகத்தால் ஈச்வர பக்தி
செய்ய வேண்டுமென்று தோன்றி அவ்விதமே ஆரம்
பித்தால் அப்பொழுது அவன் சித்த வ்ருத்தியானது,
கொடியானது மரத்தை யடைவதுபோல், பகவானு
டைய சரணாரவிந்தங்களை அடையுமென்று முதற்படியி
லிருக்கின்றவர்களின் நிலைமையைத் தெரிவிக்கிற
தற்காக லதா த்ருஷ்டாந்தம் கொடுக்கப்பட்டிருக்கி
றது. இதினால் கிடைத்த கருத்த தென்னவென்றால்,
ஒரு கொடியானது மரத்தைப் பிடிப்பதற்காக கிட்டப்
போகும் ஸமயத்தில் பெருங்காற்றால் பல தடவை
இங்குமங்கும் தள்ளப்பட்டு பிடிப்பு நிலைக்காமல் எப்படி
ச்ரமப்படுமோ, அதுபோல் ஆரம்ப காலத்தில் பகவானு
டைய சரணத்தை நாம் அடையவேண்டுமென்று தா
னாக மிகவும் ச்ரமப்பட்டு தேடிக்கொண்டு செல்லும்
பக்தனுடைய மனதை காற்றுப்போலிருக்கும் விஷயங்
கள் பலாத்காரமாயிழுத்து பல விடங்களிலுமலையும்
படி செய்து ச்ரமத்தை யுண்டுபண்ணும். காற்றினால்
எவ்வளவு ச்ரமம் நேர்ந்தாலுமதைப் பெரிதாய் நினையா
மல் எப்படி லதையானது மரத்தை யடைகிறதோ,
அது போல் ஆரம்பகாலத்தில் விஷயங்களால் உண்டு
பண்ணப்படு மிடையூற்றை பெரிதாயெண்ணி விலகா
மல் விடா முயற்சியிருந்தா லிஷ்டஸித்தியை க்ரம
மாயடையலா மென்பது பொதுவான கருத்து.

இவ்விதம் கொஞ்சகாலம் முதற்படியிலிருந்து அல்ப
அவலம்பம் ஏற்பட்ட பிறகு இரண்டாவது படிக்குவரு
கிறான். அப்படியிலிருப்பவன் சித்தவ்ருத்தியானது
ஊசியானது காந்தமென்கிற சிலையையடைவதுபோல்
ஈச்வரனுடைய சரணாரவிந்தங்களை யடைகிறது. ஊசி
யானது காந்தத்தை தனக்கு எதிரில் பார்த்தவுடன்
அதிவேகமாய்ச் சென்று அதைப் பிடித்துக்கொள்வது
போல், இந்த இரண்டாவது படியிலிருப்பவன் சித்த
மும் பகவானுடைய ஸாமீப்யம் நேருங்கால் எவ்வளவு
விஷயவாஸனை யிருந்தாலும் அதை விலக்கிவிட்டு தா
னாகவே விரைவாகச்சென்று கடவுளின் திருவடிகளை
நாடி நிற்கும். இதன் பிறகு மூன்றாவதுபடி. இரண்



டாவது படியிலிருப்பவனுடைய சித்தமானது பகவத்
ஸாமீப்யம் நேர்ந்தால் மட்டும தானாகவே சீக்ரமவ்விட
த்தில் செல்லும். அவ்விடத்தை விட்டு விலகினால்
பூர்வமிருந்ததுபோல் விஷயங்களில் பற்றுதலையடைந்
திருக்கும். மூன்றாவது படியிலிருப்பவன் மனதானது
பதியைவிட வேறு தெய்வம் ஸ்த்ரீகளுக்கில்லையென்
கிற சாஸ்த்ரங்களின் கருத்துக்கிணங்க, பர்த்தாதான்
நமக்குத் தெய்வமென்று எப்பொழுதும் பதியையே
த்யானம்செய்து கொண்டிருக்கும் உத்தமஸ்திரீயைப்
போல், எந்த ஸமயமும் ஈசன் சரணங்களிலேயே இரு
க்குமேயன்றி அவைகளைவிட்டு விலகாது. இதினால்
பதிவ்ரதா ஸ்த்ரீயானவள் தன்னைப்பார்க்குமிதர ஜனங்
களுக்கு அவர்களைப்போல் தானும் லோக வ்யாபா
ரத்தில் பற்றுதலுள்ளவள் போலதையுமனுஷ்டானம்
செய்துகொண்டு சித்தத்தை மாத்ரம் தனக்காராதிக்க
வேண்டிய பதியாகிற தெய்வத்தினிடம் வைத்துக்கொ
ண்டிருப்பதுபோல், இம்மூன்றாவது படியிலிருப்பவ
னும் பார்க்கும் ஜனங்களுக்கு லோக வ்யவஹாரங்களில்
ப்ரவ்ருத்தி யுடையவனென்று சொல்லும்படியாய்
தன் மனதைமாத்ரம் எந்தஸமயத்திலும் பகவானுடைய
சரணகமலங்களி லர்ப்பணம் செய்துகொண்டிருப்பா
னேயன்றி அவைகளைவிட்டு விலக்கமாட்டான். இதன்
பிறகு நான்காவது படி. எறழிஞ்சி என்கிற ஓர் மரத்
தின் வித்தானது மரத்திலிருந்து விழுந்தவுடன் அம்
மரத்திலேயே தானாகப்போய் ஒட்டிக்கொண்டு அதை
விட்டு விலகாமல் க்ரமமாய் அதிலேயே ஏகீபாவத்தை
யடைகிறது. இக்காரணத்தினால் மரத்துக்கு வித்துண்
ணி என்கிற ஓர் காரணப் பெயருமுண்டு. அந்த வித்தா
னது மரத்தை பிடித்துக்கொண்டிருக்கும் ஸமயத்தில்
பார்த்தால் இரண்டுமொன்றாகத் தோன்றாமல் வேறாக
வே காணப்படும். பார்வைக்கவ்விதம் தோன்றினாலும்
அதை எடுத்துப் பார்த்தால் மறுபடி முளைப்பதற்குரிய
பீஜபாவமற்றுத் துவக்கு மாத்ரம் மிச்சமாயிருக்கும்.
இவ்விதம் தன் சித்தவ்ருத்தியை பரமாத்மாவினிடம்
ஸமர்ப்பித்து விஷயங்களில் பற்றுதலின்றி எப்பொழு
தும் ஸ்வரூபத்தில் லயத்தையடைந்திருப்பான். அப்
படியிருந்தாலும் பார்க்கும் ஜனங்களுக்கு அங்கோல
வ்ருக்ஷத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் பீஜமானது அ
தோடுகூட ஏகீபாவத்தை யடைந்திருந்தாலும் துவக்கு
டைய பேதத்தால் எப்படி வேறாகக் காணப்படுகின்ற
தோ, அவ்விதம் இவனும் ஸ்தூல சரீரபேதத்தால் பேத
முள்ளவன்போல் காணப்படுவான். இதுதான் ஜீவன்
முக்தாவஸ்தை. இதிலிருந்தும் கடைசியான ஐந்தா
வது படிக்குச்செல்லுகிறான்.

நதியானது ஸமுத்ரத்தில் போய்ச் சேருகிறதற்கு
முந்தி, பலவித பேத வ்யவகாரங்களை யடைந்திருந்தா
லும் அதில் போய்ச் சேர்ந்து அந்த ஜலத்துடன் ஒன்
றாகப் போனபிறகு எங்ஙனம் இது நதியின் ஜலமென்
றும், இது ஸமுத்ரத்தின் ஜலமென்றும் பேத வ்யவ
ஹாரத்திற்கிடமின்றி ஸமுத்ர மென்கிற ஒரே பெய
ராலேயே வழங்கப்படுகிறதோ, அங்ஙனமே இந்த ஐந்
தாவது படியிலிருப்பவனும், பகவத் ஸ்வரூபத்தில்
ஏகீபாவத்தையடைந்து, முந்தி சில பேத வ்யவஹாரங்
களுக்குத் தான் பாத்யப்பட்டவனாக இருந்தபோதி
லும், இப்படிக்கு வந்தபிறகு அவைகள் யாவுமற்று
ஒன்றான ஈச்வர ஸ்வரூபமாகவே ஆய்விடுகிறான்.

இங்கு சொல்லப்பட்ட ஐந்து படிகளிலும் க்ரமமாய்
இருந்துதான் பிறகு கடைசியான படியை யடைய
வேண்டுமென்கிற நியமமில்லை. பூர்வ ஜன்மத்தின்
விசேஷமான புண்யகர்ம பரிபாகத்தால் உத்தமாதிகாரி
யாயிருந்தால், ஆரம்ப காலத்திலேயே மூன்றாவது, அல்
லது நான்காவது படியையே யடையலாம். இவ்விதம்
அந்தந்த அதிகாரிகளின் பேதத்தை யனுஸரித்து பக்
தியை ஐந்து படியாக நிரூபித்திருந்தாலும், அவைக
ளுக்குள் கடைசியான படிதான் மிகவும் முக்யமென்
றும், அத்வைதாத்ம ஸாக்ஷாத்காரத்தால்தான் உத்தம
மான ச்ரேயஸ்ஸை யடையலாமென்றும், நமது ஜகத்
குரு ஸ்ரீ பரமாசார்யாவர்கள் அபிப்ராய ப்பட்
டிருக்கிறாரென்று நன்கு வெளியாகிறது. இதுவரை
யில் நிரூபிக்கப்பட்ட விஷயங்களால் பக்தி என்கிற
பதத்திற்கு ஈச்வரனுடைய சரணாரவிந்தங்களில் நமது
சித்த வ்ருத்தியை ஸ்திரமாய் வைப்பதுதான் பொரு
ளென்றேற்படுகிறது.

## NOTES AND NOTE BOOKS.

## குறிப்புகளும் குறிப்புப் புஸ்தகங்களும்.

சில வர்ஷங்களுக்கு முன் வரையில் எல்லாப்
பாடசாலைகளிலும் குறிப்புப் புஸ்தகங்கள் அமிதமாக
வழங்கிவந்தன. இங்கே குறிப்புப் புஸ்தகங்கள் என்
றது பாடப்புஸ்தகங்களிலுள்ள விஷயங்களை மாணா
வர்களுக்கு தெளிவாக்கும் நோக்கத்துடன் எழுதப்
பட்ட உரைகளாகும். வாசகபுஸ்தகம், கணிதம், பூகோ

ளம், சரித்ரம், ஸுகாதாரம் முதலிய எல்லா நூல்களுக்கும் குறிப்புப் புஸ்தகங்கள் பல ஏற்பட்டிருந்தன. இவைகள் இன்ன வகுப்புப் புஸ்தகங்களுக்குத்தான் எழுதப்படுமென்று ஒருவரையறை கிடையாது. முதல் பாட புஸ்தகத்துக்குங்கூட குறிப்புப் புஸ்தகம் ஏற்பட்டிருந்தது. பிள்ளைகள் சில ஸமயங்களில் பாடப்புஸ்தகத்தை வாங்காமலே குறிப்புப் புஸ்தகங்களை படித்து த்ருப்தி யடைந்தார்கள் என்று "நல்லாசிரியன்" எழுதுகிறது. மேல்வகுப்புப் புஸ்தகங்களுக்குத்தான் குறிப்பு எழுதுகிறார்கள் என்றால், முதல்வகுப்பாகிய அவ்வளவு சிறு வகுப்பிற்கும் எழுதுவது எவ்வாறென்று இக்காலத்திய நண்பர்கள் சிலர் எண்ணலாம். 'இதை நல்லாசிரியன்' பின்வருமாறு விளக்குகிறது. "முதல் வகுப்புப் பாடபுஸ்தகத்தில் கடினபதம் ஒன்றும் இராது. அதற்கு என்ன செய்வது. எப்படியோ சில பதங்களுக்கு அர்த்தம் எழுதிவிட வேண்டியது, சில வினு விடைகள் எழுதி விடவேண்டியது என்று எண்ணிக் குறிப்புகள் எழுதி விட்டார்கள். அவற்றில் சில வருமாறு :—

பூனை = மார்ஜாலம்
கிணறு = கேணி
கீரி = நகுலம்

இவ்வாறு அர்த்தம் எழுதுவது. எவரேனும் என்னவென்று கேட்டால் பூனைக்கு மார்ஜாலம் என்னும் ஒரு பேர் இருக்கிறதென்று பையன் தெரிந்து கொள்ளட்டுமே என்பார்கள். இப்படியே வினு விடையும். பூனைக்கு எத்தனை கால்? நான்கு கால். பூனைக்கு எத்தனை வால்? ஒரு வால்.

இப்படிப் பல கேள்விகளால் புஸ்தகம் நிறைந்திருக்கும். இது இப்படியிருக்க ஹைஸ்கூல், காலேஜ் வகுப்புகளுக்கு ஏற்படும் பாட புஸ்தகங்களுக்கும் வருஷா வருஷம் குறிப்புகள் பற்பல வெளியாவது நிற்பதில்லை. கணித புஸ்தகங்களுக்கும் குறிப்புப் புஸ்தகங்கள் வெளிவந்தன. பாட புஸ்தகம் ஒன்று விலையானால் குறிப்புப் புஸ்தகம் பத்து விலையாகத் தலைப்பட்டது."

இவ்வித குறிப்புப் புஸ்தகங்களால் தீமையே யொழிய நன்மை ஏற்படாது. இதை அறிந்த வித்யாதிகாரிகள் அவைகளை ஒழிக்கத் தலைப்பட்டார்கள். இந்தத் தீங்கு ஒருவாறு ஒழிந்ததென்றாலும் அதற்கு ப்ரதியாக இன்னொரு தீங்கு ஏற்பட்டு வ்ருத்தியடைந்து வருகிறதென்று "நல்லாசிரியன்" எழுதுகிறது. அது என்னவெனில் அச்சிட்ட குறிப்புப் புஸ்தகங்களுக்கு பதிலாக கையெழுத்து நோட்டுப் புஸ்தகங்கள் ஏற்பட்டிருப்பதே. இதைப்பற்றி "நல்லாசிரியன்" பின் வருமாறு எழுதுகிறது.

"இக்காலத்தே புதிய முறைகளை அனுசரிக்கிறோமென்று பேர் வைத்துக்கொண்டு எடுத்ததற்கெல்லாம் நோட்டுப் புஸ்தகம் உபயோகிக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். இப்போது முதல் வகுப்புமுதல் காலேஜ் வகுப்புவரையில் கணக்கற்ற நோட்டுப் புஸ்தகங்கள் பெருகலாயின. இதைக் கவனிக்கும்போது முன் முறையே மோசமில்லை என்னலாம். முன்பு அச்சிட்ட குறிப்பு, இப்போது கையால் எழுதுங் குறிப்பு. ஆனால் முன்போல் பதவுரையும் பொழிப்புரையும் கருத்துரையும் வினுவிடையும் எழுதுவது இப்போதில்லை. இப்போது கொஞ்சம் திருத்தமான வேலைகளே நடைபெறுகின்றன. ஆயினும் நோட்டுப் புஸ்தகங்களின் கணக்கைப் பார்த்தால் ஆச்சரியமுண்டாகிறது. நோட்டுப் புஸ்தகம் இதற்குத்தான் உபயோகிப்பது என்னும் நியதியில்லை. எடுத்ததற்கெல்லாம் நோட்டுப் புஸ்தகம், நினைத்ததற்கெல்லாம் நோட்டுப் புஸ்தகம். ரூல் போட்ட நோட்டு, ரூல் போடாத நோட்டு, அறைகள் போட்ட நோட்டு, ஒருபக்கம் ரூல் போட்ட நோட்டு என்று இப்படி யெல்லாம் ஒன்றைப் பலவாகப் பெருக்கி ஆசாரத்திற்குக் கொண்டுவருகின்றனர். மூன்றாம் வகுப்பில் வாசிக்கும் ஒரு பையனுக்கு 27 நோட்டுப் புஸ்தகம் வேண்டுமென்று ஓர் உபாத்யாயர் எழுதிக் கொடுத்திருக்கிறார். இத்தனை நோட்டுப் புஸ்தகங்களில் உள்ள ஏடுகளையாவது திருப்பிப்பார்க்க இந்த உபாத்யாயருக்கு அவகாசம் உண்டா? உள்ளபடியே அவர் அத்தனை புஸ்தகங்களுக்கும் வேலை கொடுத்து செய்யச்சொல்லி திருத்தமுடியுமா? தமது வகுப்பில் உள்ள நாற்பது பிள்ளைகளுக்கும் எத்தனை நோட்டுப் புஸ்தமாகும்? இவற்றை எல்லாம் ஒரு வருஷத்தில் எத்தனைமுறை திருத்தக்கூடும்? இப்படிப்பட்ட உபாத்யாயர்களின் எண்ணமென்ன? பையனை ஹிம்ஸிக்கவேண்டுமென்பதா? பெற்றோர்க்கு அபராதம் விதிக்கவேண்டுமென்பதா? பள்ளிக்கூடத்திற்குக் கௌரவம் உண்டாக்கவேண்டுமென்பதா? கடைக்காரனுக்கு லாபம் வரட்டும் என்பதா? பார்ப்பவர்கள் ப்ரமிக்க வேண்டும் என்பதா? எமக்கு ஒன்றும் புலப்படவில்லை. பாடசாலை திறந்ததும் தனக்கு



பிதமற்ற நோட்டுப் புஸ்தகங்களை வாங்கும்படி செய்து, இஷ்டமானபோது ஏதோ ஓர் அப்யாஸம் கொடுத்து எழுதி வரும்படி சொல்லி, அதையும் பாராமல் விட்டுவிடுகின்றனர் பல உபாத்யாயர்கள். நாம் பலமுறையும் பல இடங்களிலும் பார்த்தமட்டில் நோட்டுப் புஸ்தகங்களில் நாலைந்து பக்கங்களே எழுதி யிருக்கக் கண்டிருக்கிறோம். மற்ற இடங்களில் எல்லாம் காலியாக இருக்கும். சில நாட்களில் பிள்ளைகளுக்கு ஊக்கங்குன்றி மீதியான பக்கங்களில் தமக்கு இஷ்டம்போல் ஏதோ கிறுக்கி வைக்கிறார்கள். அதிலும் இன்ஸ்பெக்டர் பரீக்ஷைக்கு வருங்காலத்தில் பின்னும் சில நோட்டுப் புஸ்தகங்கள் புதிதாக ஏற்படும். இப்படி யெல்லாம் செய்வதில் பயன் ஏற்படுமா? பெருமை யுண்டாகுமா? மதிப்பு உண்டாகுமா?"

இப்படி எழுதிவிட்டு "நல்லாசிரியன்" இவையனைத்தும் தாறுமாறான காரியங்களென்றும், இக்காலத்தில் பாடங்களெல்லாம் முறைப்பட்டு ஒவ்வொரு தொகுதியாக அமையப்பெற்றிருக்கின்றனவென்றும், தற்காலம் தொடர்முறைப்போதனை அனுஸரிக்கப்படுவதால் ஒன்றுக்கொன்று பொருத்தமான பாடத்தொகுதிகளுக்கு ஒரே நோட்டுப் புஸ்தகம் உபயோகிக்கலாமென்றும், உதாரணமாக தமிழ்ப்பாடம் என்று எடுத்துக்கொண்டால் செய்யுள், வசனம், இலக்கணம் ஆகிய பாடங்களுக்குத் தனித்தனியே நோட்டுப்புஸ்தகங்கள் அமைப்பதைவிட அவைகளுக்கெல்லாம் பொதுவாய் ஒரே நோட்டுபுஸ்தகம் அமைக்கலாமென்றும் எழுதுகிறது.

"பிள்ளைகள் எவ்வளவு செய்யக்கூடுமென்பதையும் உபாத்யாயர் பார்க்கக்கூடும் என்பதையும் கவனித்து நோட்டுப்புஸ்தகங்களை அமைக்கவேண்டும். நோட்டுப் புஸ்தகம் வாங்கினால்மட்டும்போதுமா—பிள்ளைகள் எழுதவேண்டாமா? உபாத்யாயர் பார்க்க வேண்டாமா? இதைக் கவனித்தாவது நண்பர்கள் நோட்டுப் புஸ்தக உபயோகத்தைக் கூடியமட்டும் குறைப்பார்கள் என்று எண்ணுகிறோம்."

## CO-OPERATIVE WHOLESALE TRADE.

## கூட்டுத்தொழில் மொத்த வ்யாபாரம்.

சென்னை கூட்டுத்தொழில் வர்த்தமானியில் மிஸ்டர் ஓ. நம். வெங்கடநாத அய்யங்கார் ஒருவ்யாஸம் எழுதியிருக்கிறார்.

நம் ராஜதானியில் ஐக்ய முயற்சியானது நாணய வகையிற் சற்று முன்னுக்கு வருகிறதேயல்லாது நாணய வகையல்லாத மற்றவகையில் வ்ருத்திக்கு வரவில்லை என்றே சொல்லவேண்டும். இப்பொழுது இந்த ராஜதானியில் செங்கல்பட்டு ஜில்லாவில் காஞ்சிபுரத்தில் நெசவுஸங்கமும், மாம்பலத்தில் எண்ணெய் உத்பத்தி ஸங்கமும், திருவல்லிக்கேணி, கோயம்பத்தூர், மதுரை முதலிய சில இடங்களில் மாத்ரம் பண்டகசாலைகளும், மதுரை, கோயம்பத்தூர் இவ்விடங்களில் கட்டிடஸங்கங்களும், இன்னும் சில இடங்களில் ஊழியக்காரர் ஸங்கங்களும் மாத்ரம் ஏற்பட்டிருக்கின்றன.

க்ராமாந்தரங்களில் உற்பத்தியாகும் தான்யங்களை வ்யாபாரிகள் கைவிலைக்கோ அல்லது கடனுக்கோ வாங்கிக்கொண்டு இடையிலுள்ள மற்றொரு வ்யாபாரிக்குக் கொடுக்க, அந்த வ்யாபாரி சில்லரையாக விற்பவர்களுக்கு கொடுக்கிறான். இதில் உற்பத்தி செய்யும் மனிதனிடமிருந்து குறைந்தது 3 வ்யாபாரிகள் கை மாறி பண்டம் கொள்பவருக்கு விலைக்காகப் போகிறது. இப்படி மத்தியில் குறைந்தது மூன்று வ்யாபாரக்காரர்கள் பண்டங்களை மாற்றுவதால் உற்பத்தி செய்கிறவனுக்கும் பண்டம் கொள்பவனுக்கும் லாபகரமாக இல்லாமல் நஷ்டமாகவே முடிகின்றன. உதாரணமாக நெல்லூர் ஜில்லாவில் உற்பத்தியாகும் நெல்லை சில்லரை வ்யாபாரிகள் கைக்கொண்டு பெரிய முதலாளிகளுக்கு விற்கிறார்கள். சில்லரை வ்யாபாரிகள் ஜனங்களுக்கு சில்லரையாக விற்கிறார்கள். ஆகையால் மூன்று பெயர்கள் இந்த நெல்லின்மேல் தங்களுக்கு கிடைக்கவேண்டிய லாப முதலியவைகளை சேர்க்கு செய்கிறார்கள். இப்படிச் செய்வதில் பண்டத்தை உற்பத்தி செய்கிறவனும் குறைவான விலைக்கு விற்க வேண்டியிருக்கிறது. பண்டத்தை வாங்குகிறவனும் அதிக விலைக்கு நஷ்டப்பட்டு வாங்குகிறான். ஆகையால் இரண்டு வ்யாபாரிகள் விற்பதைத்தடுத்து ஒரு வ்யாபாரியாக இருக்கும்படி நாம் ப்ரயத்தனம் செய்தோமானால் பண்டத்தை உற்பத்தி செய்கிறவனுக்கும் வாங்குகிறவனுக்கும் நஷ்டமில்லாமல் லாபகரமாகவே முடியும். எப்பொழுதும் வ்யாபாரத்தில் நடுவில் ஒரு வ்யாபாரி இல்லாமல் முடியாது. இப்படி நடு வ்யாபாரியாக ஒரு ஐக்ய ஸங்கம் நின்றால், அது இந்த முயற்சிக்கு ஊன்று கோலாக நிற்கும் என்பதிற் தடையில்லை. தற்காலம் செங்கல்பட்டு ஜில்லாவில் காஞ்சி

250-ஐக்ய நாணய ஸங்கங்கள் இருக்கின்றன. மெம்பர்கள் தங்களுடைய தான்யங்களை விற்றுத்தான் நாணய ஸங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய வட்டி, முதல் இவைகளைச் செலுத்துகிறார்கள். இப்படி விற்கப்பட்ட தான்யங்களை மேல் கொள்ளவாவது, நபி வ்யாபாரக்காரர்கள் கைக்கொள்வதை நிறுத்தி மத்யஸ்தராக ஒருவரையே ஏற்படுத்தலாம். அதாவது சென்னையில் கூட்டுமொத்த வியாபார ஸங்கமொன்றை ஏற்படுத்தி அந்த ஸங்கத்திற்கு ஒவ்வொரு க்ராமத்திலிருக்கும் ஸங்கங்களில் உள்ள மெம்பர்களின் தான்யங்களை ஒன்று சேர்த்து வண்டியில் அனுப்பினால், அவைகளை சென்னையில் இந்த ஸங்கம் மூலமாக மாற்றி பணம் நயமாகப் பெறலாம். இம்மாதிரி சரக்குகள் வந்தவுடன் சரக்கை வைத்துக்கொண்டு சரக்குக் கொண்டுவந்தவர்களுக்கு முக்கால்விலையை மாத்ரம் கொடுத்துவிட்டு, விற்றபிறகு கணக்குகளைப் பார்த்து லாபத்துடன் மீதியைக் கொடுத்துவிடலாம். இப்படிச் செய்தால் எவ்வளவு லாபம் உண்டாகும் என்பதைப் பார்க்கலாம். பிறகு இப்படியே மற்ற ஜில்லாக்களினின்றும் எல்லாவித விளைபொருள்களையும் மொத்தமாய் விற்றால் ஐக்ய கூட்டுறவினர்களுக்கும் மற்றவர்களுக்கும் லாபம் உண்டாகும் என்பதிற் தடையில்லை.

இப்பொழுது சென்னையில் மேற்சொன்ன விஷயங்களுக்காக மொத்தமாய் விற்கும் விற்பனை ஸங்கம் ஒன்றை ஸ்தாபித்து சிலநாள் வரையில் வேலைசெய்து பார்த்தால் அனுபவத்தில் இதின் வ்ருத்தியைக் காணலாம்.

இப்பொழுது இம்மாதிரி ஸங்கம் ஒன்று ஏற்பட சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள ஜில்லாக்களிலும் கூட்டுறவினர் அல்லது வேறு சிலர் சேர்ந்து கூட்டுறவு ஸங்கங்களின் சட்டத்தின்படி ஒரு கூட்டம் கூடவேண்டும். ஸுமார் 20, 25 பெயர்கள் சேர்ந்து ஸங்கம் ஏற்படுத்ினால் போதும். அந்த ஸங்கம் லிமிடெட் ஸங்கமாக இருக்கவேண்டும். அதில் ஒருபங்கு 20 ரூ. வீதம் 1,000 பங்குகள் உள்ள ரூ. 20,000 மூலதனமாக ஆரம்பித்தால், சென்னையிலும் மற்ற இடங்களிலும் வேண்டியபங்குகள் இரண்டொரு மாதத்தில் சேர்ந்துவிடும். உடனே இக்காரியங்களை ஆரம்பித்து நடத்தினால், போகப்போக குறைவுகளை நிவர்த்திசெய்து மொத்தமாய் பண்டங்களை மாற்றியாவது விற்பனை செய்தாவது ஏழைவிவஸாயிகளை முன்னுக்குக் கொண்டுவர முயற்சிசெய்யலாம்.

## SONGS OF DIKSHITAR.

## தீக்ஷித கீர்த்தனைகள்.

இதைப்பற்றி ஸங்கீத ப்ரகாசிகையில் ஒரு வ்யாஸம் இருக்கிறது. இக்காலத்தில் நம்முடைய தேசத்தில் விசேஷ கௌரவத்துடன் மதிக்கப்பட்டு வருகிற பூர்வீக கீர்த்தனை கர்த்தர்களாகிய சாமாசாஸ்த்ரியார், ஸதாசிவராவ், பட்டணம் ஸுப்பிரமண்ய அய்யர் முதலிய காயகோத்தமர்களுடைய வகுப்பில் தீக்ஷிதர்களும் சேர்ந்தவர்களேயாம்.

நமது தேசத்தில் தீக்ஷிதர் என்று யாரோ ஒரு காயகோத்தமரிருந்ததாகவும், அவரால் அனேகம் கீர்த்தனைகள் செய்யப்பட்டதாகவும், அக் கீர்த்தனைகளுக்கு தீக்ஷித கீர்த்தனைகளெனப் பெயர் வழங்கி வருவதாகவும், பலர் உண்மை இன்னதென் றறியாமல் சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

இப்பொழுது தீக்ஷித கீர்த்தனைகள் எனப் பெயர் வழங்கிவருகிற எல்லா கீர்த்தனங்களும் ஒருவரால் செய்யப்பட்டவையல்ல. அவைகள் தீக்ஷித வம்சஸ்தர்களால் செய்யப்பட்டவைகள். மேலும் தீக்ஷித வம்சஸ்தருடைய சிஷ்யகோடிகளாலும் இந்த தீக்ஷித பரம்பரையை ஆதரித்துவந்த எட்டியாபுரம் ஸமஸ்தானாதிபதிகளில் சிலராகிய ராஜ ஜகத்வீரராம வெங்கடேச்வர எட்டப்ப மஹாராஜா, ராஜ ஜகத்வீர ராமகுமார எட்டப்ப மஹாராஜா, முதலானவர்களாலும் செய்யப்பட்ட கீர்த்தனைகளையும் தீக்ஷித கீர்த்தனைகளென்றே சொல்லுகிறார்கள்.

1577-ம் வருஷம் முதல் 1614-ம் வருஷம் வரையில் தஞ்சாவூரி லாண்டுவந்த அரசன் அச்சுதப்ப மஹா ராஜனிடத்தில் அமைச்சத் தொழில் புரிந்துவந்த கோவிந்த தீக்ஷிதர் காலத்திலிருந்து தீக்ஷித பரம்பரையிலும், அவர்களுடைய சிஷ்ய பரம்பரைகளிலும் சாஸ்த்ரோக்தமான ஸங்கீதம் வ்ருத்தியடைய வாரம்பித்தது. இந்த கோவிந்த தீக்ஷிதர் குமாரர் தான் வெங்கடமகி என்று சொல்லப்பட்ட வெங்கடேச தீக்ஷிதர். சதுர் தண்டி ப்ரகாசிகை என்னும் ஓர் ஸங்கீத லக்ஷண கிரந்தம் இந்த வெங்கடமகி என்பவரால் இயற்றப்பட்டிருக்கிறது. இப்பொழுது அக் கிரந்தம் எட்டியாபுரம் ஸமஸ்தானத்தில் வித்வானாக விருந்த ஸுப்பராம தீக்ஷிதருடைய வம்சத் தவர்களிடத்திலிருப்பதாகத் தெரியவருகிறது. இந்த வெங்கடமகியினுடைய தாய்மாமனின் பேரப்பிள்ளையாகிய வெங்கட வைத்யநாத தீக்ஷிதரிடத்தில் சிஷ்யராக விருந்தவர் ராமஸ்வாமி தீக்ஷிதர். இவரால் தான் முதல் முதல் ஹம்ஸத்வனி ராகம் கற்பனை செய்யப்பட்டு அதே ராகத்தில் ஓர் லக்ஷண கீதமும் எழுதப்பட்டது. இவருடைய குமாரர்களான முத்து ஸ்வாமி தீக்ஷிதர், சின்னஸ்வாமி தீக்ஷிதர், பாலஸ்வாமி தீக்ஷிதர் முதலியவர்கள் 19-வது நூற்றாண்டில் த்யாகராஜ ஸ்வாமிகளுடைய காலத்திலிருந்தவர்கள்.



முத்துஸ்வாமி தீக்ஷிதரால் செய்யப்பட்ட கீர்த்தனைகள் மிக இனிமையாகவும் அர்த்தபுஷ்டி ராக புஷ்டி உடையவைகளாகவும் மிருக்கின்றன. இவருடைய கீர்த்தனங்கள் தான் இப்பொழுது விசேஷமாய் எங்கும் பாடப்பட்டு வருகின்றன. ஸுப்பராம தீக்ஷிதர் முதலானவர்கள் இவருடைய காலத்திற்குப் பின்னிட்டவர்கள்.

த்யாகய்யரும் தீக்ஷித வம்சஸ்தரில் முத்துஸ்வாமி தீக்ஷிதர் முதலியவர்களும் ஸஹஜீவிகளாதலால், இவர்களும் த்யாகராஜ ஸ்வாமிகளும் தங்கள் தங்களால் செய்யப்பட்ட கீர்த்தனைகளின் வர்ணமெட்டுக்களை ஒத்திட்டுக் கொண்டு நடை, பாவம், பாஷை வர்ணமெட்டு முதலியவைகளில் ஒருவரை ஒருவ ரொட்டாமல் தீக்ஷித பரம்பரையி லுள்ளவர்கள் வடமொழியிலும் த்யாகய்யரவர்கள் தெலுங்கு பாஷையிலும் கீர்த்தனைகளை எழுதினார்களென்று சிலர் சொல்லுகிறார்கள்.

## SWEET POTATO.

## சர்க்கரை வள்ளிக்கிழங்கு.

இது கிழங்குப்பயிர் இனத்தைச் சேர்ந்தது. இது கரிகாய்க்கு ப்ரயோஜனப் படுத்தப்படுகிறது. இதில் சிவப்புக்கிழங்கென்றும், வெள்ளை வள்ளி என்றும், சிறுவள்ளி என்றும் மூன்றுவிதங்கள் உண்டு. வெள்ளை தினுஸில் மாஸூல் அதிகம் கிடைக்கும். சிகப்பு கம்மியாயிருக்கினும் ருசி சர்க்கரையைப்போல் இருக்கும். சிறுவள்ளியும் மாஸூல் அதிகம் கொடுக்கும்; ஆனால் இது ஏதாவது ஒருவித செடிகளின்மேல் படரவிடப்படும்.

**பயிரிடத்தக்க பூமி.**—கிழங்குப்பயிர்களுக்கெல்லாம் மண் பொலபொலத்தும் மணல் ஸம்பந்தப்பட்டும் இருக்கவேண்டும். நீர்பிடிப்புள்ள இடம் கூடாது. தோட்டக்கால் நிலங்களிலெல்லாம் நன்றாய்ப் பயிராகும்.

**தகுந்த எருவகைகள்.**—இதற்கு சாம்பல் எருவே முக்யம். ஆடுமாடுகளின் கிடையும் அவச்யம். கூடு மானால் தக்கை, அவுரி முதலிய பசுந்தாள் உரம் இடுவது நன்று. மட்கிய சாணி ஏகருக்கு 30 வண்டிக்குக் குறையாமலும் போடலாம். எவ்வித எருவுக்கும் மரச்சாம்பல் கூட இருப்பது நலம்.

**செய் நேர்த்தி.**—ஆனி, ஆடியீ முதல் கொண்டு நிலத்தை செவ்வையாய் ஆழ உழுது, புல் பூண்டின்றி பண்படுத்தி புரட்டாசியீத்தில் எருவிட்டு மறுசால் உழுது பண்படுத்தி பாத்திகள் அல்லது ஏழி மஞ்சிகள் கட்டவேண்டும். பாத்திகளைவிட முகடுகளே நலம். பாத்திகள் போடும்பக்ஷத்தில் 10-அடி நீளமும் 5-அடி அகலமும், முகடுகள் 10-அடி நீளமும் ஒன்றுக்கொன்று இரண்டடி இடையும் இருக்கவேண்டும்.

**நாற்றங்கால்.**—தை மாசியில் மாஸூல் எடுக்கும் போது நல்ல முதிர்ந்த செடிகளை அறுத்து 3-கணுக்களையுடைய பதியன்களாக நறுக்கி இரண்டுகணு தரையிலும் ஒன்று மேலுமாக வைத்து நாத்தங்கால் பாத்திகளில் புதைத்து தண்ணீர் இறைத்து களைவெட்டி காப்பாற்றிவரவேண்டும். இப்படிச் செய்தால் கொடிகள் செழுமையாய் பூமியை மூடிக்கொண்டிருக்கும். இவைகளிலிருந்து பதியன்களை முன்மாதிரியே நறுக்கி முன்சொன்னபடி தயார்செய்யப்பட்ட பூமிகளில் நடவேண்டும். நல்ல பதியன்களை நாத்தங்கால் கொடிகளின் அடியிலும் நுனியிலும் இல்லாமல் மையத்திலிருந்தே எடுக்கவேண்டும். இவைகளால் மாஸூல் வ்ருத்தியாகும்.

**பாசனம்-பின்செய்நேர்த்தி.**—ஒரு ஏகர்நட ஸுமார் 15,000-பதியன்கள் போதும். பாத்திகளில் நட்டால் 20,000-பதியன்கள் செல்லும். முகடுகளில் நட்டால் பாசனம் குறைவுபடுவதுடன் செடிகளும் வெளுக்காது. மழை இல்லாவிடில் வாரம் ஒரு முறைவீதம் ஜலம் இறைத்துவரவேண்டும். பயிர் பூமியில் படருகிறவரையில் களை எடுக்கவேண்டும்.

பயிர் செழித்து வளர்கிற ஸமயத்தில் கொடிகளை பூமியின்பேரில் தூக்கிவிட்டு கண்ட இடங்களில் வேர் விடாதபடி செய்யவேண்டும். இப்படி செய்யாவிட்டால் பாசனங்களினால் ஒவ்வொரு கணுவிலும் வேர் இறங்கி கிழங்கு சிறுத்தும் உபயோகமில்லாமலும் போய்விடும். அதிக செழிப்பாய் வளர்ந்தாலும் கொடியின் நுனிகளை அரிந்து மாட்டுக்கு உபயோகிக்கலாம்.

**அறுப்பு.**—இது நான்குமுதல் 5-மாதம்வரையில் பூமியின் ஸத்துக்கு தகுந்தபடி இருக்கும். புரட்டாசிமாதம் நட்டால் தைமாதத்தில் வெட்டலாம். இலைகள் பழுத்து

உதிர்தலும், கணுக்களிடத்தில் கெட்டியாக நார் இருப்பதும், கிழங்கை வெட்டி கத்தியால் அறுத்து கறுப்பு நிறம் அடையாதிருப்பதும் பயிர் முதிர்ந்துவிட்டதற்கு அடையாளங்கள். கொடிகளை எடுத்து, அடுத்தபயிருக்கு வேண்டிய பதியன்கள் போட்டுக் கொண்டதுபோக மிச்சத்தை மாட்டுக்கு உபயோகிக்கலாம். கிழங்குகள் மண்வெட்டியால் வெட்டப்படும். ஏகருக்கு 30-முதல் 50-பாரம் வரையில் கிடைக்கும். விலை ஸுமார் 200-ரூ. முதல் 300-வரையில் கிடைக்கும். செலவெல்லாம் ஸுமார் 50-ரூ. முதல் 75-ரூ வரை ஏகருக்கு செல்லும். இது ஏழைக் குடிகளால் அநேகமாய் ஆகாரமாக உட்கொள்ளப்படுகிறது. இதிலிருந்து மாவும் எடுக்கிறார்களாம்.

**சிறுவள்ளிக் கிழங்கு.**—இது வள்ளியைப்போல் கணுக்களில் கிழங்குவிடாமல் வேரிலேயே கிழங்கிடும். என்றாலும் நல்ல வள்ளி 1-செடியின் கிழங்கைவிட ஜாஸ்தியே கிடைக்கும். அதிலும் இது சித்திரை வைகாசி மாதங்களில், சிறு கிழங்குகளாக மிளகாய் கத்தரி, வெண்டை மாறும் ஸமயங்களில் ஷை மூன்று செடிகளின்கீழ் நடப்படுகிறது. இது நட உத்தேசிப்பவர் முன் நடும் மிளகாய் பயிரிலேயே அதிகமான உரம் கொடுக்கவேண்டும். இந்த உரம் முன் நல்ல வள்ளிக்கு சொன்னமாதிரிதான். அல்லது செடி முளைத்து களை வெட்டியவுடன் உரம்வைத்து மண் அணைத்து இறைக்கலாம். கத்தரியின் கீழ்நட்ட கிழங்கின் செடிகள் பலக்குறைவுதான். இதற்கு நிலம் வள்ளிக்கு வேண்டிய நிலமேதான். தனிமையாக நட உத்தேசிப்பவர் ஆமணக்கு முன்னடி பயிர்செய்து அதன்கீழ் பயிரிடலாம். ஆனால் ஆமணக்கு தழைக்குமுன் நடவேண்டும். அல்லது சவுக்கு வேலன் முதலிய மிலாறுகளை முகடுகளின் மத்தியில் சாலை சாலையாக நடலாம். இதை வைகாசிமீத்தில் நட்டால் தை மாசி மாதங்களில் வெட்டலாம். ஒரு ஏக்கர் நட விதை 3-பாரம் கிழங்கு செல்லும். இதன் மாசூலும் வள்ளிக் கிழங்கைவிட ஜாஸ்தியாகக்கிடைக்கும். ஆனால் வயது ஜாஸ்தியாயிருப்பதால் இதை அவ்வளவாக அதிக விஸ்தீர்ணத்தில் பயிர் செய்வதில்லை.

**வெற்றிலை வள்ளிக்கிழங்கு.**—இது தோட்டங்களில் வெற்றிலையைப்போல் மரங்களில் படர விடப்படும். இது உடம்புக்கு ஆரோக்யம் என்கிறார்கள். மற்ற விவரம் சிறுவள்ளியைப்போலவே.—கிருஷிகனில், பி. எஸ். ஸ்ரீநிவாஸாச்சாரி,

## KADARS OF COCHIN.

### கோச்சி தேசத்துக் காடர்கள்.

கொச்சி ஸமஸ்தானத்துக் காடுகளில் காடர்கள் என்று ஒரு ஜாதியார் இருக்கிறார்கள். இவர்கள் சப்பட்டையான மூக்கும், கருப்பான சுருட்டைமயிரும் உடையவர்கள். கொச்சி ஸமஸ்தானத்திலுள்ள நெல்லியம்பட்டி, பெரம்பிக்குளம், முதலிய காடுகளில் இந்த ஜாதியார் விசேஷமாக வஸிக்கிறார்கள். இவர்கள், காய், கனி, கிழங்குவகைகளையே தின்று ஜீவிக்கிறார்கள். இவர்கள் மிகுந்த தெய்வபக்தியை யுடையவர்கள். தேவி என்ற ஒரு அம்மனைக்குறித்து பூஜை செய்கிறவர்கள். பட்டணங்களில் வஸிக்கும் ஹிந்துக்களுக்குள்ள பண்டிகைகளைப்போலவே, அநேகமாக இவர்களுக்கும் பண்டிகைகளுண்டு. பண்டிகை தினங்களில் குடும்பங்களில் எல்லோரும் சாராயம் குடிப்பார்கள். இவர்கள் காதிலும் கழுத்திலும் இலைகளினாலும் ஓலைகளினாலும் அலங்காரம் செய்து கொள்வார்கள். இவ்வனவாஸிகள் தேன்கூடு பொறுக்குவதிலும் மெழுகு சேர்ப்பதிலும் மிகுந்த திறமைசாலிகள். மரங்களில் வெகு சுளுவாக குரங்குகள்போல் ஏறுவார்கள். காடுகளில் இவர்கள் பனைநாரெடுப்பதிலும் வாழைநாரெடுப்பதிலும் உழைத்து வருகிறார்கள். காட்டிலாகாவைச் சேர்ந்த ஸர்க்கார் சிப்பந்திகளுக்கு வெகு உதவி செய்து வருகிறார்கள்.

இக்காடர்கள் சூதுவாது ஒன்றும் அறியாதவர்கள். தம் ஜாதியாரானாலும் வேறு ஜாதியாரானாலும் தமக்கு கெடுதலும் தீங்குமிழைத்தவரொழிய மற்றவர்களிடம் கிட்ட நெருங்கமாட்டார்கள். அவர்கள் ஏகபத்னி வ்ரதம் கொண்டவர்கள். ஆனால் விவாஹம் ஆனபிறகு ஸ்திரீயோ அல்லது புருஷனோ முன் இறந்துவிட்டால் அவனோ அவளோ மறுபடியும் வேறொருவரை விவாஹம் செய்துகொள்ளலாமென்று இவர்களுக்குள் ஒரு வழக்கமிருக்கிறது. இவர்கள் சொன்னசொல் தவறமாட்டார்கள்; எடுத்த கார்யத்தைச் செய்துமுடிக்கும் திறமையுள்ளவர்கள்; வெகு சுறுசுறுப்புடையவர்கள்; ஸ்த்ரீகள் மாதவிடாய் காலங்களில் குடிசையினுள் ஒரு மூலையில் மூன்றுநாள் ஒதுங்குகிறார்கள். அங்கு புருஷர் போவது கிடையாது. நான்காம் தினம் ஸ்நானம் செய்த பிற்பாடுதான் மற்றவர்களோடு சாப்பிட வருவார்கள்.

ப்ரஸவ காலத்திலும் இவர்கள் 10 தினங்கள் ப்ரஸவ அறையைவிட்டு வருவதில்லை. காடர் ஸ்திரீகள் மிகுந்த கற்புடையவர்களென்று கூறப்படுகின்றனர். ஒரு விவாஹமான ஸ்திரீ தனது புருஷனையே தெய்வமென்று கொண்டாடுவாள். காடர்களின் தலைவனுக்கு மூப்பன்மார் என்று பெயர். தலைவன் சொல் ப்ரகாரம் மற்றவர்கள் நடப்பார்கள். இவர்களில் யாரேனும் இறந்துவிட்டால் அவனைப் புதைத்து விடுவார்களாம்,



# Departmental Notes.

# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.

## வித்யாவிஷயம்.

### Technical Scholarships.

**தொழில் படிப்புக்கு உபகாரச் சம்பளம்.**—இந்தியாவின் தொழில்களை அபிவ்ருத்தி செய்யும் நோக்கத்துடன் இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியர்களுக்கு அன்யதேசங்களில் போய் தொழில் கல்வி கற்க ஸ்காலர்ஷிப்பு கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கவர்ன்டார் வர்ஷந்தோறும் மொத்தம் 10 ஸ்காலர் ஷிப்புகள் கொடுப்பார்கள். வர்ஷந்தோறும் ஒவ்வொரு மாகாணத்துக்கும் குறைந்தது ஒரு ஸ்காலர்ஷிப்பு கிடைக்கலாம்.

ஸ்காலர்ஷிப்பு பெற்றவர்கள் ஸாதாரணமாக 2-வர்ஷம் படிக்கவேண்டும். ஆனால் சில ஸந்தர்ப்பங்களில் அவர்கள் 3-வர்ஷகாலம் வரையிலாவது, அல்லது இரண்டுவர்ஷத்துக்கும் குறைவாகவாவது வாசிக்க அனுமதிபெறலாம். இந்த ஸ்காலர்ஷிப்பின் மதிப்பு ஒரு வர்ஷத்துக்கு ஒரு நபருக்கு 150-பவுனாகும். பள்ளிக்கூடச்சம்பளமும் அன்யதேசத்துக்குப்போய் வரஏற்படும் செலவும் இதில் சேராது. யாராவது ஒரு மாணவருக்கு மேற்சொன்ன தொகை போதாதென்று தெரிந்தால், கவர்ன்மெண்டார் இன்னும் கொஞ்சம் அதிகமாக பண உதவி செய்வதைப்பற்றி ஆலோசிப்பார்கள். ஸ்காலர்ஷிப் பெற்றவர்கள் க்ரேட் ப்ரிட்டனில் போய் கல்வி கற்கவேண்டும். வேறு அன்யதேசங்களுக்குப்போய் வாசிக்கவேண்டுமானால், இந்தியாமந்த்ரியின் அனுமதியைப் பெறவேண்டும்.

### How to Make a Wall Black-Board.

**கருஞ்சுவராக்குவது.**—பூமிமட்டத்திலிருந்து 2½-அடி உயரம்வரை சுவரிலுள்ள சாந்தைச் சுரண்டியெடுத்துவிட்டுக் கல் தெரியும்படிச் செய்யவேண்டும். அதன் பின் நாலுநாள் வரையில் விட்டு விட்டுச் சுவரை நனைத்துக்கொண்டேயிருக்கவேண்டும். ஐந்தாம்நாள் ஒரு பங்கு சிமிட்டி, ஒருபங்கு எரித்த கொட்டாங்கைச்சி, இருபங்கு மணல் ஆகிய இவைகளைக் கூட்டவேண்டும். கொட்டாங்கைச்சியைத் தூளாகும்படி எரிக்கப்படாது. கரியை அம்மியில் வைத்து அரைக்கத் தக்க விதமாக எரிக்கவேண்டும். அப்படி எரித்துக் கரியானதை அம்மியில் வைத்து அரைத்துக் கூட்டவேண்டும். இப்படிக் கலக்கப்பட்ட சாந்தை நனைக்கப்பட்ட சுவரில் ½-அங்குல கனத்துக்குப் பூசவேண்டும், அதன் பின் மணலை நீக்கி ஒரு பங்கு சிமிட்டியும் மற்றொரு பங்கு கொட்டாங்கைச்சிக் கரியும் கூட்டி இரண்டாவது பூச்சுப் பூசவேண்டும். அதற்குப்பிறகு மெருகுகல்கொண்டு தேய்த்துப் பளபளப் புண்டுபண்ணவேண்டும். இவ்வாறெல்லாம் வேலைசெய்து முடித்த பின்னர் 10-தினம் வரை அதற்கு ஈரமுண்டாக்கிக் கொண்டிருக்கவேண்டும். இந்தப் பத்துத்தினம் கழியும்வரை அதிலொன்றும் எழுதலாகாது.—சத்குரு

### Hindu University.

**ஹிந்து ஸர்வ கலாசாலை.**—ஹிந்து ஸர்வகலாசாலையில் கல்வி கற்பிக்கும் வேலையை இந்த வர்ஷம் ஜூலை மாஸத்திலேயே ஆரம்பிக்க வேண்டுமென்று சிலர் எண்ணியிருந்தார்கள். ஸமீபத்தில் ஸர்வகலாசாலை ஸ்தாபகர்களும் ஸர் ஹார்கோர்ட் பட்லரும் இது விஷயமாய் கலந்து யோசித்து, தற்போதுள்ள கட்டிடங்கள் வேண்டிய அளவு விஸ்தாரமாயில்லாததால், பாடம் கற்பிக்கும் வேலையை இப்போது ஆரம்பிக்க வேண்டியதில்லையென்று தீர்மானித்திருக்கிறார்கள்.

காசிக்குப் பக்கத்தில் நக்வாயென்னுமிடத்தில் யூனிவர்ஸிட்டி கட்டிடம் கட்டப்பட்டு 1917-ம் வர்ஷத்தில் முடிந்துபோகுமாதலால், அந்த வர்ஷம் கல்வி கற்பிக்கும் வேலை ஆரம்பமாகலாம்.

மைஸூர் மஹாராஜா ஹிந்து யூனிவர்ஸிட்டிக்கு 2-லக்ஷம் ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறார். இதோடு பத்து வர்ஷகாலம் வரையில் வர்ஷந்தோறும் 12000 ரூபாய் பண உதவிசெய்து வருவாராம்.

### A Hostel for Women Students.

**ஸ்திரீமாணவர்களுக்கு ஒரு ஹோஸ்டல்.**—சென்னை திருவல்லிக்கேணி கவர்ன்மெண்ட் ஸெகண்டரி அண்ட் ட்ரெய்னிங் பாடசாலையை ஒட்டி ப்ராமணரல்லாத உயர்வகுப்பு ஹிந்து ஸ்த்ரீ மாணவர்களுக்கு ஒரு ஹோஸ்டல் ஸ்தாபிக்க கவர்ன்மெண்டார் ஸாங்க்ஷன் கொடுத்திருக்கிறார்கள்.

# TAMIL LITERATURE.

## தமிழ் நூல்.

### Mr. Srinivasachar's Publications.

**மிஸ்டர் ஸ்ரீநிவாஸாச்சார்யாருடைய ப்ரசுரங்கள்.**- வேலூர் காலேஜ் தமிழ் ப்ரதம பண்டிதராகிய பு. க ஸ்ரீநிவாஸாசார்யார் பின்வரும் புஸ்தகங்களை நமது பார்வைக்கு அனுப்பியிருக்கிறார்.

**சம்பகமாலினி.**—இது பி. எம். வேணுகோபால நாயுடு எழுதிய ஒரு கதையாகும். இங்க்லீஷ் கவியாகிய லார்ட் டென்னிஸன் இயற்றிய லான்ஸெலட் அண்ட் எலெய்ன் என்னும் செய்யுள்நூலின் வழிநூலாகும். இதன் நடை தெளிவாகவும் இனிமையாகவும் இருக்கிறது. இதன் விலை அணா 4.

**கிருட்டினன் தூது சருக்கம், மூலமும் உரையும்.**—வில்லிப்புத்தூரார் பாரதத்தின் ஒரு பிரிவாகிய இந்த சருக்கம் 1917-ம் வர்ஷத்து எப். ஏ. பரீக்ஷைக்குப் பாடமாக வைக்கப்பட்டிருக்கிறது. இந்த பாகத்தை புதுக்கோட்டை மகாராஜா காலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய மிஸ்டர் வி. டி. ஸ்ரீநிவாஸய்யங்காரும், மிஸ்டர் பி. கே. ஸ்ரீநிவாஸாச்சார்யாரும் கடின ஸந்திகள் பிரித்து பொருள் ஸுலபமாய் விளங்கும்படி பதிப்பித்திருக்கிறார்கள். இந்த பாகம் வ்யாஸ பாடத்துக்காக வைக்கப்பட்டிருக்கிற படியால், மாணவர்கள் வ்யாஸம் எழுதுவதற்கு உதவியாக ஒவ்வொரு செய்யுளுக்கும் தெளிவான பொழிப்புரை எழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 10.

**அடைக்கலங்காத்தல்,**—இது மிஸ்டர் ஆர். ஹரிஹரய்யர் இயற்றிய புராணஸம்பந்தமான சிறு புஸ்தகமாகும். இதில் சிபி சக்ரவர்த்தி புறாவைக் காப்பாற்றிய கதையும், விபீஷணன் ராமரிடத்தில் சரணமடைந்த கதையும் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. இது சிறுவர்கள் வாசிப்பதற்கேற்ற புஸ்தகமாகும். விலை. 2-அணா.

**தெய்வமிகமேல்.**—இதுவும் மிஸ்டர் ஆர். ஹரிஹரய்யர் இயற்றியதாகும். தக்ஷன், ஹிரண்யகசிபு ஆகிய இவர்கள் முறையே பரமசிவனையும் மகாவிஷ்ணுவையும் நிந்தித்துக் கஷ்டப்பட்டதைக் கூறுவது. இது சிறுவர் சிறுமியர்கள் வாசிக்க ஏற்றது. விலை அணா-2.

**ஏகாதசி மகிமை.**—இது மிஸ்டர் பி. கே. ஸ்ரீநிவாஸாச்சார்யார் இயற்றியது. இதில் ஏகாதசியின் வரலாறும் அந்த வ்ரதத்தை அனுஷ்டிக்க வேண்டிய முறைகளும், ருக்மாங்கத சரித்ரமும் அடங்கியிருக்கின்றன. இதன் விலை 1-அணா.

மிஸ்டர் ஸ்ரீநிவாஸாச்சார்யர் ஒரு அழகிய காலண்டரும் நமக்கு அனுப்பியிருக்கிறார். புஸ்தகங்கள் வேண்டுவோர் மெஸ்ஸர்ஸ் ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3, 4, கொண்டி செட்டித் தெரு, .மதராஸ் என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

### Natrinai.

**நற்றிணை.**—இது கடைச் சங்கத்து நூல்களாகிய எட்டுத் தொகையுள் ஒன்றாகும். இது பற்பல புலவர்கள் அகத்திணையைப் பற்றிப் பாடியுள்ள செய்யுட்களில் ஒன்பதடி முதல் பன்னிரண்டடி வரையிலுள்ள நானூறு அகவல் பாக்களை ஒன்று சேர்த்துத் தொகுக்கப்பட்ட நூலாகும். கும்பகோணம் டௌன் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதராயிருந்து இரண்டு வர்ஷங்களுக்கு முன் காலஞ்சென்ற பின்னத்தூர் அ. நாராயணஸாமி அய்யர் இந்த நூலுக்கு உரையெழுதி மூலத்துடன் வெளியிட விரும்பி அவ்வாறே உரையை எழுதி முடித்தார். அதனோடு பாடினோர் வரலாறும், பாடப்பட்டோர் வரலாற்றில் பெரும்பாகமும் எழுதி முடித்தவுடன் அவர் இறந்து போனார். இப்போது அந்த நூலின் மூலமும் அவரெழுதிய உரையும் பாடினோர் பாடப்பட்டோர் வரலாறுகளும் வெளியாகியிருக்கின்றன. அவர் எழுதிய உரையால் பண்டைக் காலத்துத் தமிழர்களின் நிலைமை நன்கு வெளியாகிறது. அவரெழுதிய பாடினோர் பாடப்பட்டோர் வரலாறுகளில் அந்தந்தப் புலவர்கள், சிற்றரசர்கள், கனவான்கள் முதலியவர்களின் ஜிவ்ய சரித்ரங்களை சங்கத்து நூல்கள் பலவற்றைக் கொண்டு ஆராய்ச்சி செய்து எழுதியிருப்பதால், அந்த வரலாறுகள் தமிழ் நாட்டுச் சரித்ர ஆராய்ச்சிக்காரர்களுக்குப் பெரிதும் பயன்படும். அவரது உரை தெளிவாகவும், நுட்பமான விஷயங்களை எடுத்துக் காட்டுவதாகவும் இருக்கிறது. புஸ்தகம் ஸுமார் 650-பக்கங்கள் கொண்டது. இந்த நூலின் விலை ரூ. 5 வேண்டுவோர். தஞ்சாவூர் ஜில்லா, திருத்துறைப்பூண்டி தாலூகா பின்னத்தூர் க்ராமம் அ. ஸுப்ரமண்ய அய்யருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.



# SCIENCE AND INVENTION.

## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### Detecting the Approach of Zeppelins.

**ஸெப்பலின் கப்பல்கள் வருவதை யறிந்துகொள்வது.**—யுத்தத்தின் ஆரம்பத்தில் ஜெர்மன் ஸெப்பலின்கள் பகல்காலத்தில் இங்க்லண்டிலும் ப்ரான்ஸிலும் பறந்துபோய் அநேக விடங்களில் வெடிகுண்டுகள் போட்டன. ஆனால் அந்த ஸமயம் நேச அரசுகளைச் சேர்ந்த பீரங்கிப்படைகளும் ஆகாயக் கப்பல்களும் அவைகளைத் தாக்கித் துரத்திவிட்டன. அதன்மேல் ஜெர்மானியர்கள் பகலில் பட்டணங்களைத் தாக்குவது கஷ்டமென்றுகண்டு இரவில் மூடுபனியிருக்கும்போதும், மேகங்கள் பூமிக்கு ஸமீபத்தில் இருக்கும்போதும் பட்டணங்களைத் தாக்க முயற்சி செய்தார்கள். மூடுபனியிருக்கும்போது வந்தால் ஸெப்பலின்கள் வருவது ஜனங்களுக்குத் தெரியாது. மேகங்களுக்குமேல் பறந்துகொண்டிருந்தாலும் அவைகளை ஜனங்கள் கண்டுபிடிப்பது கஷ்டம். இப்படி ஜெர்மானியர்கள் சிறிதுகாலம் கஷ்டமில்லாமல் எதிரிகளின் பட்டணங்களையும் க்ராமங்களையும் தாக்கி வந்தார்கள். ஆனால் தற்போது ஸெப்பலீன்கள் வருவதைத் தெரிந்துகொள்ள நேசதேசத்தார் சில உபாயங்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவைகளில் ஒன்றை விவரிக்கிறோம்.

ராத்ரிக்காலங்களில் நிலவு வெளிச்சமில்லாத இருட்டு ஸமயங்களிலும், மூடுபனியுள்ள நேரங்களிலும் ஸெப்பலின்கள் மேலே பறந்து வரும்போது, கீழிருக்கும் ஜனங்களுக்கு அவைகளைப்பார்க்க முடியாதென்றாலும், அவைகளின் சிறகுகள் அடித்துக்கொள்ளுவதாலும், எஞ்ஜின்கள் வேலைசெய்வதாலும் உண்டாகும் சத்தமானது கீழிருக்கும் ஜனங்களுக்கு நன்றாய்க் கேட்கும்.

ஸெப்பலின்கள் ரொம்ப தூரத்திலாவது உயரத்திலாவது இருந்தால் சத்தம் கொஞ்சம் குறைவாய்க் கேட்கும். இந்த சத்தத்தை க்ரஹித்துக்கொள்ள க்ராம்போனிலுள்ள பெரிய குழாய்களைப்போல நான்கு குழாய்கள் கொண்ட ஒரு யந்த்ரம் வைத்திருக்கிறார்கள். ஸெப்பலின் வருவதா லுண்டாகும் சத்தமானது ரொம்ப ஸ்வல்பமா யிருந்தாலுங்கூட இந்தக் குழாய்கள் அதை க்ரஹித்துக்கொள்கின்றன. இந்தக் குழாய்களால் கிடைக்கும் சப்தத்தை மைக்ரபோன் என்னும் ஒரு கருவியால் உரத்த சப்தமாகச்செய்து, அந்த அதிகமாக்கப்பட்ட சப்தத்தால் ஸெப்பலீன்கள் வருவதை யறிந்துகொள்கிறார்கள். இந்த யந்த்ரத்தில் ஸெப்பலின்கள் பறந்துவரும் திசையையும் தூரத்தையும் அறிந்துகொண்டு, அதற்குத்தகுந்தபடி, ஸெப்பலின்களைத் தாக்குவதற்கு வைத்திருக்கும் பீரங்கிகளை சரியானபடி திருப்பி, ஸெப்பலின்களைத் தாக்குகிறார்கள். ஸெப்பலின்கள் ஆகாயத்தில் கண்ணுக்குத் தெரியாமல் மேகங்களால் மறைபட்டிருந்தாலுங்கூட அவைகள் பறப்பதாலேற்படும் சப்தத்தைக்கொண்டு அவைகளிருக்குமிடத்தை கிட்டத்தட்ட சரியாய் அறிந்துகொள்ளலாமாம். ஸெப்பலின்கள் வருவது தெரிந்தவுடன், அவ்விஷயத்தை ஆகாயப்படைகளுக்குத் தெரிவித்தால், அந்த ஆகாயப்படைக்காரர்கள் மேலே போய் ஸெப்பலின்களைத் தாக்குவார்கள்.

அமெரிக்காவில் இன்னொரு யந்த்ரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதன்மூலமாய் ஸெப்பலின்கள் வரும் திசையை அறிவதோடு, அவைகள் எவ்வளவு தூரத்திலிருக்கின்றனவென்று தவறில்லாமல் நிச்சயித்துவிடலாம். இதனால் பீரங்கிக்காரர்கள் தங்கள் பீரங்கிகளை சரியாய் திருப்பி குறிபார்த்து ஸெப்பலின்களைத் தாக்குவது ஸுலபமாகும்.

### Use of Blood in Bread Making.

**ரொட்டி சுடுவதில் ரத்தத்தின் உபயோகம்.**—ருஷ்யாவைச்சேர்ந்த பால்டிக் மாகாணங்களில் எஸ்தோனியர்கள் என்ற ஒரு ஜாதியார் இருக்கிறார்கள். அவர்கள் செய்யும் ரொட்டிகளில் ரத்தத்தைச் சேர்க்கிறார்களாம். அவர்கள் ரை என்னும் தான்யத்திலிருந்து ரொட்டி செய்கிறார்கள். மாவோடு நூற்றுக்கு 10-பங்கு பன்றியின் ரத்தத்தைக் கலப்பதுண்டாம். பிட்ரோக்ராடுக்குப் பக்கத்திலுள்ள இடங்களில் வஸிக்கும் இந்த ஜாதியார் பன்றியின் ரத்தத்துக்கு பதிலாக மாட்டின் ரத்தத்தைச் சேர்ப்பதுண்டாம். ரத்தம் சேர்த்துச் செய்த ரொட்டி தேகத்திற்கு ரொம்ப புஷ்டியுண்டாக்கக்கூடியதென்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஏனென்றால் அந்த ரொட்டியில் பாஸ்பரஸின் அம்சங்களும், நரம்புக்கு பலங்கொடுக்கக்கூடிய உப்பு வகைகளும் இருக்கின்றனவாம். மாட்டுரத்தம் சேர்த்துச்செய்த ரொட்டி சீக்ரம் உலர்ந்துபோவதால், அந்த ரொட்டி செய்கையில் உருளைக்கிழங்கு மாவையும் கொஞ்சம் சேர்த்துக் கொள்வதுண்டாம்.

# SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

### A Remedy for Plague.

**ப்ளேகுக்கு ஒரு பரிஹாரம்.**—தற்போது சேலம், கோயம்புத்தூர், பழனி முதலிய இடங்களிலும் வேறு பல இடங்களிலும் ப்ளேக் நோய் பலமாக இருந்து வருகிறதென்று தெரிகிறது. இந்த ப்ளேக் நோயை வாராமல் தடுப்பதற்கும், வந்தால் போக்குவதற்கும் டிங்ச்சர் அப் அயோடைன் (Tincture of Iodine) என்னும் மருந்து ரொம்ப ச்லாக்யமானது என்று ரக்ஷண்ய சேனையைச் சேர்ந்த கமிஷனர் பூத் டக்கர் என்பவர் தெரிவிக்கிறார். இந்த மருந்தை சென்றவர்ஷம் பஞ்சாப் மாகாணத்தில் கவர்ன்மெண்டார் உபயோகித்ததில் ரொம்ப த்ருப்தியாயிருந்ததாம். ப்லேக்கண்ட 705-பேர்களுக்கு இந்த மருந்தைக் கொடுத்ததில் 573-பேர்கள் ஸ்வஸ்தமடைந்தார்களாம். அதாவது நூற்றுக்கு 80-பேர் வீதம் ஸ்வஸ்தம் அடைந்தார்கள் ப்ளேக் கண்டால் இன்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றி பஞ்சாப் கவர்ன்மெண்டார் ஒரு துண்டு பத்ரிகை வெளியிட்டிருக்கிறார்கள். அதில் உள்ள விஷயம் வருமாறு.

(1) நோயாளிகள் ரொம்ப விசாலமானதும், காற்றோட்டமுள்ளதுமான அறையில் படுத்துக்கொண்டு ஒன்றும் செய்யாமல் களைப்பாறவேண்டும். மப்பு மந்தாரமாயில்லாமல் ஸூர்யன் நன்றாய் ப்ரகாசித்துக் கொண்டிருந்தால், வ்யாதிஸ்தர்கள் வெளியில் நிழலில் படுத்துக்கொள்ளவேண்டும். (2) த்ரவரூபமான ஆகாரத்தைத்தான் சாப்பிடவேண்டும். (3) தாகமாயிருந்தால் ஒன்றும் கலக்காத சுத்தமான குளிர்ந்த ஜலத்தைக் குடிக்கவேண்டும். ப்ளேக் நோயாளி தாகமாயிருப்பதாகச் சொன்னால் அவருக்கு வேண்டியமட்டும் குளிர்ந்த ஜலம் கொடுக்கவேண்டும். குடிக்க ஜலம் கொடுக்காமலிருப்பது பிசகு. (4) டிங்க்ச்சர் அப் அயொடைன் மருந்தில் ஒரு துளியை அரை ஔன்ஸ் ஜலத்தில் விட்டு இரண்டுமணி நேரத்துக்கு ஒரு தடவை நோயாளிக்கு குடிக்கக் கொடுக்கவேண்டும். ஆனால் நோயாளி தூங்கிக்கொண்டிருந்தால் அவரை மருந்து சாப்பிடுவதற்காக எழுப்பக்கூடாது. (5) ப்ளேக் புண்கள், தொப்புளங்கள் பேரில் தினந்தோறும் காலையிலும் மாலையிலுமாக இரண்டு தடவை டிங்க்ச்சர் அப் அயடைன் மருந்தைத் தடவவேண்டும். வேறொரு மருந்தும் நோயாளிக்குக் கொடுக்கவேண்டியதில்லை.

### Water for Consumption.

**தண்ணீர் க்ஷயரோகிகளுக்கு உத்தமௌஷதம்.**—க்ஷய வ்யாதியால் வருந்தும் ஒரு பிணியாளியை "நீ ஸாதாரணமாய் எவ்வளவு தண்ணீர் குடிக்கிறாய்?" என்று கேட்டால், "வெகு கொஞ்சம்" என்று தான் பதில் கூறுவது வழக்கமென்பதைக் குறித்துக்கொள்ளுங்கள். அந்த ரோகி ஆஹாரவேளைகளுக்கு இடையில் ஆறு அல்லது எட்டுக்கோப்பை யளவு தண்ணீரைக் குடிக்கும்படியான நிலைமையைப் பெற்றானால், (அல்லது இன்னும் சிறிது குறைவாகக் குடித்தால்) இவ்யாதிக்கு முக்ய நிதானக்குறிகளாயுள்ள மலபந்தம், மேலோங்கிய காங்கை, தலைவலி, அன்ன த்வேஷம், இருமல் முதலியவை நிவ்ருத்தியாயிருக்கக் காணலாம்; அல்லது அவை குறைந்து விசேஷமான குணங்கள் ஏற்பட்டிருப்பதையாவது நிச்சயமாகப் பரீக்ஷித்தறியலாம். உணவுகளோடு அதிக அளவாக உப்பை உபயோகித்து வந்தால், அதிக ஜலம் குடிக்கும்படி நேரிடும்; இவ்வுபாயத்தினாலாவது க்ஷய ரோகிகளை அதிக ஜலம் குடிக்கும்படிச் செய்வது அத்யாவச்யம். ஆஹாரம் சாப்பிடுவதற்கு அரைமணி நேரம் முன்பாக மிகவும் நிர்மலமான குளிர்ந்த ஜலத்தை ஒரு கோப்பை யளவு பருகினால் இரைப்பையில் ஜீர்ணத்திற்கு வேண்டிய த்ரவப்பொருள் நன்கு சுரப்பதுடன் பசியும் விசேஷமாய் உண்டாகும்.—வைத்திய கலாநிதி.

### Toothache.

**பல்வலி.**—பல்வலியால் கஷ்டப்படுகிறவர்கள் பின்வரு முறைகளை உபயோகித்துப் பார்க்கலாம். கொஞ்சம் பருத்தியை க்ராம்புத் தைலத்தில் நனைத்து பல்லிடுக்குகளில் வைக்கவும். அது முடியாவிட்டால், டிங்க்ச்சர் அப் அயொடைன் மருந்தை பல்லைச்சுற்றியுள்ள ஈறுகளின் மேல் தடவவும். பணிக்கட்டியை வைத்துள்ள ஒரு துணியால் ஒத்தடம் கொடுத்தாலும், சூடான ஜலம் வைத்த வீஸாக்களால் ஒத்தடம் கொடுத்தாலும் வலி நிற்கும்.



# LAW.

## சட்டம்.

### Benami Alienation.

**பேர் இரவலாக பராதீனம் செய்வது.**—வாதியும் நான்காவது ப்ரதிவாதியாகிய அவருடைய தம்பியும் பாகமாகாமலிருந்தார்கள். தமது மாமனார், மைத்துனர் ஆகிய இவர்களுடன் வஸித்துவந்த வாதி, தாம் மேஜரானவுடன், 1900-ம் வர்ஷத்தில் குடும்ப ஸொத்தில் தமது தம்பிக்குள்ள பாகமுள்பட ஒரு பாகத்தை தமது மைத்துனருக்குப் பராதீனம் செய்தார். 1906-ம் வர்ஷத்தில் ஸகோதரர்கள் பாகம் செய்துகொண்டார்கள். பாகம் செய்துகொண்டபோது பராதீனம்செய்த ஸொத்துப்போக பாக்கியாயுள்ள ஸொத்தை இருவரும் பங்கிட்டுக்கொண்டார்கள். பிறகு தம்பி, 1900-ம் வர்ஷம் செய்த ஸொத்து விற்பனையானது பேர் இரவலாகச் செய்யப்பட்டதென்றும், வாஸ்தவமாக விற்கவில்லையென்றும், தன்னை மோசம் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் ஸொத்து பராதீனம் செய்யப்பட்டதென்றும் தெரியவர, 1911-ம் வர்ஷத்தில் வாதியின் மைத்துனர்மேல் வ்யாஜ்யம் கொண்டுவந்து பராதீனமான ஸொத்தில் பாதிபாகத்துக்குத் தீர்ப்புப்பெற்றார். இந்த வ்யாஜ்யம் விசாரணையாகிக்கொண்டிருக்கையில் வாதியானவர் தமது மைத்துனரின்மேல், தம்பி வ்யாஜ்யம் கொண்டுவந்ததுபோலவே, மைத்துனரிடம் பராதீனம் செய்த ஸொத்தில் தமக்குள்ள பாகம் கிடைக்க வேண்டுமென்று வ்யாஜ்யம் போட்டார்.

இது ஹைகோர்ட்டுக்கு அப்பீலுக்கு வந்ததில், ஹைகோர்ட்டார் பின் வருமாறு தீர்மானித்தார்கள். மைத்துனருக்கு செய்த விற்பனையானது தம்பியை மோசம்செய்யும் கருத்துடன் செய்யப்பட்டது. அந்த விற்பனையின்படி ஸொத்தை மைத்துனர்வசம் சேர்த்தாலும், விற்பனையான ஸொத்துக்களை நீக்கி பாகம் செய்ததாலும் விற்பனையின் கருத்து நிறைவேறிவிட்டது. இதனால் வாதிக்கு மைத்துனருடன் செய்த ஏற்பாட்டை மீறி ஸொத்தை மீட்டுக்கொள்வதற்கு வ்யாஜ்யம் போட அதிகாரமில்லை.

### Partition of Joint Family.

**அவிபக்த குடும்பத்தில் பாகம் செய்தல்.**—ஒரு ஹிந்து அவிபக்த குடும்பத்தைச்சேர்ந்த ஒருவர் தமது தகப்பனார்மேல் ஸொத்தை பாகம் செய்யவேண்டுமென்று வ்யாஜ்யம் போட்டார். அந்தக் குடும்பத்துக்கு வரவேண்டியதாய் ஒரு பெந்தகக்கடன் இருந்தது அதை வ்யாஜ்ய ஸொத்தில் சேர்த்திருந்தாலும், அதை உபயோக மற்றதென எண்ணி பாகம் பண்ணுவதற்கு சேர்த்துக்கொள்ளவில்லை. பிறகு தகப்பனார் பெந்தகக்கடனைத் திருப்பியடைய வ்யாஜ்யம் போட்டார். இந்தக் கடன் தகப்பனாருக்கும் பிள்ளைக்கும் ஸொந்தமென்றும், ஆகையால் பிள்ளையையும் வாதியாகச் சேர்க்கவேண்டுமென்றும், அப்படிச் சேர்க்காததால் வ்யாஜ்யம் செல்லாதென்றும் வாதிக்கு விரோதமாக வாதிக்கப்பட்டது.

கீழ்க் கோர்ட்டார் தகப்பனாருடைய வ்யாஜ்யத்தைத் தள்ளிவிட்டார்கள். இது ஹைகோர்ட்டுக்கு அப்பீலுக்குவரவே, ஹைகோர்ட்டார் முதலில் பாகம் செய்தபோது பாகமாகாமல் நின்ற ஸொத்துகள் அவிபக்த குடும்ப ஸொத்துக்களாகுமென்று தீர்மானித்து, தகப்பனார் கொண்டுவந்த வ்யாஜ்யத்தைத் தள்ளிவிட்டது சரியென்று தீர்ப்புசெய்தார்கள்.

### Incometax.

**வருமானவரி.**—ப்ரிட்டிஷ் இந்தியாவைச் சேராத ஒருவர் கொஞ்சகாலம் ப்ரிட்டிஷ் இந்தியாவின் ஒருபாகத்தில் வந்து தங்கியிருந்தார்; அவருக்கு மைஸூர் கவர்ன்மெண்டார் வர்ஷந்தோறும் சில தொகைகள் கொடுத்துவந்தார்கள். அவர் ப்ரிட்டிஷ் இந்தியாவில் இருந்தபோது, அவருக்குச் சேரவேண்டிய தொகையை மைஸூரிலுள்ள அவருடைய ஏஜெண்ட் வாங்கி அவருக்கு அனுப்பினார். அப்படியானால் அந்தப்பணமானது 1886-ம் வர்ஷத்து வருமானவரி ஆக்ட் 5-வதுபாகம் 2-வது ஷெடூல் ப்ரகாரம் 'வருமானம்' ஆகும். அது ப்ரிட்டிஷ் இந்தியாவில் கிடைத்த வருமானம் ஆகும். ஆகையால் அந்த வரும்படிக்கு ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் வருமானவரி போடலாம்.

### Water Cess.

**நீர்த்தீர்வை.**—ஒரு நதியின் அடித்தரையும், கரைகளும் ஒரு ஜமீன்தாருக்கு ஸொந்தமாக உள்ள ஒரு இடத்திலிருந்து ஒரு வாய்க்கால் வெட்டி அதன்மூலமாக நிலங்களுக்கு ஜலம் பாய்ச்சினால், அப்படி ஜலத்தை உபயோகிப்பவரிடமிருந்து, கவர்ன்மெண்டார் தண்ணீர்த்தீர்வை விதிக்க பாத்யமில்லை. ஏனென்றால் வாய்க்கால்பிரியும் இடத்தில் நதியானது கவர்ன்மெண்டுக்கு ஸொந்தமானதல்ல. 3 லாவீக்லி 119.

## PERSONAL NOTES.
## மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

### Lord Chelmsford.

**லார்ட் செம்ஸ்போர்ட்.**—நமது அரசர் லார்ட்செம்ஸ்போர்ட் என்பவரை இந்தியாவின் வைஸ்ராயாக நியமித்திருக்கிறார். லார்ட் செம்ஸ்போர்ட் 1868-ம் வர்ஷம் பிறந்தவர். அவர் பால்யத்தில் ஆக்ஸ்பர்டில் கல்வி பயின்றார். அவர் 1892—வர்ஷத்தில் எம். எ. பட்டம் பெற்றார். அவர் பாரிஸ்டர் பரீக்ஷைக்கு வாசித்துத்தேறி கொஞ்சகாலம் பாரிஸ்டராக உத்யோகம்செய்தார். அவருக்கு 1894—ம் வர்ஷம் கல்யாணமாயிற்று. அவருக்கு 2 புத்ரர்களும் 4 பெண்களும் உண்டு.

அவர் பள்ளிக்கூடப் படிப்பு முடிந்ததும் பொது ஜன விஷயங்களில் ஊக்கமெடுத்து வந்தார். அவர் சில காலம் லண்டன் ஸ்கூல் போர்ட் என்னும் ஸபையிலும், லண்டன் கௌண்டி கௌன்ஸில் என்னும் ஸ்தல ஸ்தாபனத்திலும் மெம்பராக இருந்து வந்தார்.

பிறகு 1905-ம் வர்ஷத்தில் அவர் ஆஸ்ட்ரேலியாவிலுள்ள க்வீன்ஸ்லண்ட் மாகாணத்துக்கு கவர்னராக நியமிக்கப்பட்டார். அவர் அங்கே கவர்னராக இருந்தபோது ரொம்ப ஸாமர்த்யமாய் ஆட்சி புரிந்து வந்தாராம். 1909-ம் வர்ஷத்தில் அவர் 'ந்யூ ஸௌத் வேல்ஸ்' என்னும் மகாணத்துக்கு கவர்னராக நியமிக்கப்பட்டார். அந்த மாகாணத்திலும் அவருடைய ஆட்சி ரொம்ப த்ருப்திகரமாக இருந்ததென்று சொல்லப்படுகிறது. அவர் அந்த மாகாணத்துக்கு கவர்னராயிருந்தபோது வங்காளத்து கவர்னராகிய லார்ட் கார்மிகேல் அதற்குப்பக்கத்து மாகாணமாகிய விக்டோரியாவுக்கு கவர்னராயிருந்தார்.

அவர் சிறிது காலம் ஆஸ்ட்ரேலியாவுக்கு கவர்னர் ஜெனரலாகவும் ஆக்ட் செய்தார்.

அவர் 1913—ம் வர்ஷம் மார்ச்சு மாஸத்தில் இங்லண்டுக்குத் திரும்பிப்போனார். அங்கே அவர் லண்டன் கௌண்டி கௌன்ஸிலில் சேர்ந்து பொது ஜன வேலைகளில் உழைத்துவந்தார். யுத்தம் ஆரம்பித்ததும் அவர் டெரிட்டோரியல் ஸைன்யத்தில் சேர்ந்து ஒரு ரெஜிமெண்டுக்குக் காப்டனாக ஆனார். அவர் 1914—ம் வர்ஷம் நவம்பர் மாஸத்தில் தமது ரெஜிமெண்டுடன் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார்.

அவருடைய ரெஜிமெண்ட் ஸிம்லாவுக்குப் பக்கத்திலுள்ள ஜூடாக் என்னுமிடத்தில் தங்கியிருந்தது. அவர் அங்கிருந்தபோது அடிக்கடி ஸிம்லாவுக்கு வந்து போவது வழக்கமாம். இதனால் அவருக்கு இந்திய உத்யோகஸ்தர்களிடம் பழக்க மேற்பட்டதோடு, இந்திய கனவான்களுடனும் பரிச்ய மேற்பட்டது. அவர் இந்தியாவில் மொத்தம் 14—மாஸகாலம் இருந்திருக்கிறார்.

அவர் ராஜாங்க விஷயங்களில் இந்தியாவுக்கு ஸாதகமாயில்லாத யூனியனிஸ்ட் கக்ஷியைச் சேர்ந்தவரென்று பலர் சொல்லிவந்தாலும், அவர் உண்மையில் ஒரு கக்ஷியிலும் சேர்ந்தவரில்லையென்று சொல்லப்படுகிறது. அவர் ஸ்தல ஸ்வய ஆட்சியை ரொம்பவும் ஆதரிப்பவராம். பொருளாதார விஷயங்களில் ரொம்ப ஊக்கமுள்ளவராம். மேலும் பொதுஜனங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கவேண்டுமென்ற கொள்கையுடையவராம். வங்காளத்து கவர்னராகிய லார்ட் கார்மிகேல் லார்ட் செம்ஸ்போர்டினுடைய ஆட்சி ரொம்ப த்ருப்திகரமாக இருக்குமென்று அபிப்ராயப்பட்டிருக்கிறார்.

### General Alexief.

**ஜெனரல் அலெக்ஸியிப்.**—சென்ற அக்டோபர் மாஸத்து 'ஜனாபிமானி'யில் ரஷ்யாவின் தளகர்த்தர்களில் ஒருவராகிய ஜெனரல் அலெக்ஸியிப் என்பவரைப்பற்றித் தெரிவித்தோம். அவரைப்பற்றி இன்னும் சில விவரங்கள் தெரிவிக்கிறோம்.

ஜெனரல்அலெக்ஸியிப்புக்கு பால்யம்முதல்கொண்டு ராணுவ வேலையில்தான் ப்ரியமதிகம். அநேகர் பொழுது போக்குக்காக வேறு தொழில்களைச் செய்துவருவதுபோல அவருக்கு வேறு பொழுதுபோக்குத் தொழில் ஒன்றும் கிடையாது. அவர் ஸதாகாலம் வேலையிலேயே கவனம் செலுத்திவருவார். யுத்தத்தில் எப்படி வெற்றிபெறுவதென்பதைப்பற்றியே ஸதாகாலம் யோசித்துக்கொண்டிருப்பார். அவர் ரொம்ப உழைப்பாளி. காலையில் 7-மணிக்கு படுக்கையை விட்டெழுந்தாரானால் இரவு இரண்டு அல்லது மூன்று மணிக்கு முன்னால் படுத்துக்கொள்ளமாட்டார். இடையில் ஒரு மணி அல்லது 1½-மணி நேரந்தான் வேலையைவிட்டிருப்பார்.

அவரிடம் படாடோபம் கிடையாது. ஒருவரிடமும் அதிகமாய்ப் பேசுவது கிடையாது. உத்தரவுகள்கூட ரொம்ப ஸங்க்ரஹமாக இருக்கும். அவர் ராணுவ வேலைகளைத் தாமே கவனித்து வருகிறார். யோசனை சொல்லும் உத்யோகஸ்தர்கள் பேருக்குத்தான் யோசனை சொல்லுபவர்களேயொழிய வாஸ்தவத்தில் அவர் சொல்லும் யோசனைகளைக் கேட்டு நடப்பவர்கள்தான்.



## SOCIETY AND RELIGION.
## ஜன ஸமூகமும் மதமும்.

### Garlanding Ladies.

**ஸ்த்ரீகளுக்கு ஹாரம் போடுதல்.**—உத்யோகஸ்தர்களை உபசரிக்கும்போதும், வேறு உத்யோக ஸம்பந்தமான விசேஷங்களிலும் ஐரோப்பிய கனவான்களுக்கும், ஸ்த்ரீகளுக்கும் இந்தியர்கள் ஹாரங்கள் போடுவது ஸகஜமாக இருந்து வருகிறது. ஸமீபத்தில் நடந்த சென்னை நிலஸ்வான்கள் ஸங்கத்தின் மீட்டிங்கில் பொப்பிலி மகாராஜா ஸ்திரீகளுக்கு ஹாரமிடுவது சரியல்லவென்றுசொன்னார். உயர்ந்த பதவியிலிருப்பவர்களும், மதத்தலைவர்களும் குருக்களும் தங்கள் மனைவிகளுடன் பெரிய கோயில்களுக்குப்போனால், அர்ச்சனை முதலியவைகள் முடிந்தபிறகு கோயில் அர்ச்சகர்கள் புருஷர்களுக்கு மாத்ரம் மாலை போடுகிறார்களே தவிர ஸ்த்ரீகளுக்கு மாலைபோடுவது கிடையாது. ஸ்த்ரீகளுக்குப் புஷ்பங்கள் மாத்ரந்தான் கொடுப்பது வழக்கம். கோவிலுக்கு வந்தவர்கள் ரொம்ப கௌரவமுள்ளவர்களாயிருந்தால் அவர்களுக்கு இரட்டைமாலை போடுவதுண்டு. இப்படி கோவில்களில் நடந்துவரும் அனுஷ்டானத்தையறிந்த நாம் ஐரோப்பிய ஸ்த்ரீகள் விஷயத்திலும் ஏன் அவ்விதம் செய்யக் கூடாதென்று மகாராஜா சொன்னார். இன்னும் அவர் சொன்னதாவது: அந்த ஸ்த்ரீகளுக்குமாலை போடாமலிருப்பதே நல்ல முறை. ஐரோப்பிய ஸ்த்ரீகளுக்கு மாலைபோடுவதின் தாத்பர்யம் அவர்களுக்கு மரியாதை செய்யவேண்டுமென்பதே என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் அவ்விதம் மரியாதை காட்டுவது அதை ஏற்பவருக்குப் பிடிக்காததாயிருக்கக் கூடுமென்பதையும் கவனிக்க வேண்டும். மேலும் நமது தேச ஸம்ப்ரதாயப்படி ஒரு ஸ்த்ரீக்கு மாலையிடுவது அவளைக் கல்யாணம் செய்து கொள்வதுபோலாகும். ஆகையால் நிலஸ்வான்கள் இது விஷயமாய்த் தீர ஆலோசித்துப் பார்க்கவேண்டும். விசேஷ காலங்களில் இங்க்லீஷ் கனவான்களுக்கு மாலை போட்டு இங்க்லீஷ் ஸ்த்ரீகளுக்கு புஷ்பச்செண்டு மாத்ரம் கொடுத்தால் போதுமானது.

### Arbitration Boards.

**மத்யஸ்த கமிட்டிகள்.**—இந்தியர்களுக்குள்ளே மத ஸம்பந்தமாயும்; ஸமூகவாழ்க்கை ஸம்பந்தமாயும் ஏற்படும் சச்சரவுகளைத் தீர்த்துவைக்க மத்யஸ்த போர்டுகள் நிரந்தரமாய் ஏற்பாடு செய்வதைப்பற்றி ஆனரபில் ஸர் பஸல்பாய் கர்ரிம்பாய் 1914-ம் வருஷம் பிப்ரவரிமாதம் 4-ந்தேதி நடந்த ராஜப்பிரதிநிதி சட்டஸபை மீட்டிங்கில் ஒரு தீர்மானம் கொணடுவந்தார். அந்த தீர்மானத்தைப்பற்றி ஸம்வாதம் நடந்தபோது இந்தியா கவர்ன்மெண்டார் அம்மாதிரி போர்ட்கள் அமைக்கப்படுவதைப்பற்றி யோசிப்பதாய் உறுதிகூறி மாகாண கவர்ன்மெண்டுகளை அபிப்ராயங்கள் தெரிவிக்கும்படி கேட்டுவிட்டார்கள். அவைகளின் அபிப்ராயங்கள் வந்துவிட, இப்போது இந்தியா கவர்ன்மெண்டார் இது விஷயமாய் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். என்னவெனில், நிரந்தர மத்யஸ்த போர்டுகளைவிட ஸம்வாதங்கள் நேரும்போது ஏற்பாடு செய்யப்படும் மத்யஸ்த கமிட்டிக்கு அதிக செல்வாக்கிருக்கக்கூடுமென்று திட்டமாய் நம்பப்படுகிறபடியால், நிரந்தர மத்யஸ்த கமிட்டிகள் ஏற்படுத்தப்பட வேண்டியதில்லையென்று தீர்மானித்துவிட்டார்கள்.

### A Night School for Malas.

**மாலர்களுக்கு ஒரு ராத்ரி பாடசாலை.**—கடப்பை ஜில்லாவில் எர்ரகுண்டலா என்று ஒரு ஸ்டேஷனிருக்கிறது. அவ்விடத்துக்குப் பக்கத்தில் கடப்பைக் கற்கள் கிடைக்கின்றன. அந்தக் கற்களை வெட்டியெடுத்து வ்யாபாரம் செய்யும் டி. க்ருஷ்ணராவ் அண்ட் ஸன்ஸ் என்னும் கம்பெனியார் அவ்விடத்திலுள்ள மாலர்கள் என்னும் தாழ்ந்த ஜாதிஜனங்களை வேலையில் அமர்த்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த ஊரில் ஸுமார் 60-மாலர் வீடுகள் இருக்கின்றன. மேற்சொன்ன கம்பெனியார் தங்களிடம் வேலைசெய்யும் மாலர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்காக ஒரு ராத்ரிப் பாடசாலை ஏற்படுத்தி நடத்திவருகிறார்கள். தங்களிடம் வேலைசெய்யும் எல்லா மாலர்களும் அந்தப் பள்ளிக்கூடத்தில் வாசிக்கவேண்டுமென்று ஏற்படுத்தியிருப்பதால் மாலச்சிறுவர்களெல்லாம் அந்தப் பள்ளிக்கூடத்தில் வாசித்து வருகிறார்கள். மாலர்களுக்கு இங்க்லீஷும் தெலுங்கும் கற்பிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மாணவர்களுக்கெல்லாம் புஸ்தகம் முதலியவைகளை கம்பெனியார் கொடுத்து உதவிவருகிறார்கள்.

இந்தக் கம்பெனியார் மற்ற தாழ்ந்த வகுப்பாரையும் கவனித்து வருகிறார்கள்.

# HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### Preserving Lime Juice.

**எலுமிச்சம்பழரஸத்தை பத்ரப்படுத்திவைத்தல்.**— எலுமிச்சம் பழத்தை முழுசாக சுண்ணாம்பு ஜலத்தில் 6-மணிநேரம் போட்டுவைத்திருந்தால், தோலின்மேலுள்ள கசப்பான எண்ணெய்ப்பசை நீங்கும். பிறகு பழங்களை அறுத்து ரஸத்தைப் பிழிந்து வடிகட்டிக் காய்ச்சி வீஸாக்களில் நிறைய ஊற்றவேண்டும். அதோடு அரைப்படி ரஸத்துக்கு ஒரு டீஸ்பூன் (தேயிலைக்கரண்டி) வீதம் பொடிசெய்த கரியைச் சேர்க்க வேண்டும். பிறகு வீஸாவைக் கார்க்கால்மூடி வீலைவத்துவிடவேண்டும். இதைத் திறக்காமலிருந்தால் ரஸம் வெகுகாலம் கெடாமலிருக்கும். ஆனால் திறந்து விட்டால் ஒருவாரத்துக்குள் உபயோகித்துவிடவேண்டும். இல்லாவிட்டால் ரஸம் கெட்டுப்போகும்.

### To Melt Glue.

**வஜ்ரத்தை உருக்க.**—வஜ்ரத்தை ஒரே பாத்ரத்தில் வைத்து உருக்கினால் சிலஸமயம் பாத்ரத்தில் அதிக உஷ்ணந்தாக்கி பாத்ரத்தோரமாயுள்ள வஜ்ரம் எரிந்துபோகும். இதற்கு ஒரு பாத்ரத்தில் ஜலம்விட்டு அதன்நடுவில் இன்னொருபாத்ரம் வைத்து இரண்டாவது பாத்ரத்தில், ஜலத்தில் ஊறவைத்த வஜ்ரத்தைப் போட்டு உருக்கவேண்டும். நெருப்புத்தாக்கும் பாத்ரத்தில் ஸாதாரண ஜலம்விடாமல், 3-பங்கு ஜலத்தில் ஒருபங்கு உப்பைக்கரைத்து அந்த ஜலத்தை ஊற்றிக் காய்ச்சினால் உள்ளிருக்கும் பாத்ரத்தில் உள்ள வஜ்ரம் நன்றாய்க் கொதிக்கும்.

### To Clean Brass Ornaments.

**பித்தளை நகைகளை சுத்தம் செய்ய.**—கில்ட் கொடுக்காத பித்தளை நகைகளை சுத்தம் செய்ய வேண்டுமானால் பின் வரும் முறையை உபயோகிக்கலாம். நவச்சாரத்தை நன்றாய்த்தூளாக்கி கொஞ்சம் ஜலம் விட்டுப் பிசைந்து, பித்தளை நகைகளின் மேல் தடவி, கரிநெருப்பின் மேல் சுட வைக்க வேண்டும். பிறகு அவைகளை தவிட்டாலும், ஒய்ட்டிங் என்னும் நயமான சாக்கட்டித்தூளாலும் தேய்த்து எடுக்கவேண்டும். அப்போது பித்தளை ரொம்ப ப்ரகாசமா யிருக்கும்.

### Cleaning Silver.

**வெள்ளியை சுத்தம் செய்ய.**—புஷ்பங்கள் போடாத அல்ல சித்தரிக்கப்படாத வெள்ளிப்பாத்ரங்களையும் ஸாமான்களையும் சுத்தம் செய்யவேண்டுமானால், ஒரு அலுமினியம் பாத்ரத்தில் ஜலம்விட்டு அதில் ஒரு தேயிலைக்கரண்டி ஸோடா உப்பைப்போட்டுக் கொதிக்கவைத்து அதில் வெள்ளிப்பாத்ரங்களை சற்றுநேரம் அமிழ்த்தி வைத்திருந்தால் மங்கலாயிருந்த வெள்ளி ரொம்ப ப்ரகாசமடையும்.

### To Clean Coloured Silk and Woollen Dresses.

**வர்ணமுள்ள பட்டுகளையும் கம்பளி உடைகளையும் சுத்தம் செய்தல்.**—ஸோப் 4 ஔன்ஸ்; தேன் 4 ஔன்ஸ்; ஒரு முட்டையின் வெண்கரு; ஜின் ஸாரயம் 2 ஔன்ஸ்; இவைகளை ஒன்றுசேர்த்து நன்றாய்க் கலந்து ஒரு கெட்டியான ப்ரஷ்ஷினால் எடுத்து உடுப்புகளின்மேல் தேய்க்கவும். இப்படி உடுப்புகள் முழுவதும் தேய்க்கவேண்டும். பிறகு குளிர்ந்த ஜலத்தில் அலசியெடுத்துப் பிழியாமல் அப்படியே தொங்கவிடவும். ஜலம் நன்றாய் வடிந்தபிறகு ஈரமாயிருக்கும்போதே இஸ்த்ரி செய்யவும்.

### To Loosen Screw and Nails.

**ஸ்க்ரு ஆணிகளைக் கழற்றுதல்.**—மரங்களில் அடித்திருக்கும் ஸ்க்ரு ஆணிகளும் மற்ற ஆணிகளும் துருப்பிடித்துப்போயிருந்து அவைகளை வெளியில் எடுக்க வேண்டியிருந்தால், அவைகளின்மேல் கொஞ்சம் கிரஸின் எண்ணெயை ஊற்றி எண்ணெய்,மரத்தில் ஊறினபிறகு சற்றுநேரங்கழித்து ஆணிகளை எடுத்தால் அவைகள் ஸுலபமாய் வந்துவிடும்.

### To Restore Gilt Frames.

**கில்ட் சட்டங்களை புதியவைபோல் செய்ய.**—படங்களின் கில்ட் சட்டங்கள் ரொம்ப நாளாகிப் பழையவைபோலானால் ஒரு ஸ்பஞ்ஜை (கடற்பஞ்சு) டர்ப்பண்டைன் எண்ணெயில் தோய்த்தெடுத்து சட்டங்களின்மேல் மெதுவாய்த் தேய்க்கவும். சட்டங்கள் புதியவை போலாகிவிடும்.

### To Prevent a Lamp Smoking.

**விளக்குப் புகையாமலிருக்க.**—கிரஸின் விளக்குகள் புகைந்துகொண்டிருந்தால், திரியை காரமான காடியில் நனைத்து உபயோகிக்கவும். அப்போது விளக்கு ரொம்ப ப்ரகாசமாகவும் புகையில்லாமலும் எரியும்.



# AGRICULTURE.

## விவஸாயம்.

### Agriculture at the Madras Exhibition.

**சென்னைப் பொருள்காட்சியில் விவஸாய விஷயங்கள்.**—சென்ற டிஸம்பர்மாஸத்தின் கடைசிவாரத்திலும் ஜனவரிமாஸத்தின் முதல்பாகத்திலும் சென்னையில் நடந்த பொருள் காட்சியில் விவஸாய ஸம்பந்தமாக ஒரு பிரிவு ஏற்படுத்தி யிருந்தார்கள். அதில் விவஸாய விஷயங்களை ஜனங்களுக்கு ஸுலபமாய்த் தெரிவிக்கிறதற்காக பல விவஸாயப் பொருள்களையும் முறைகளையும் யந்த்ரங்களையும் வைத்துக் காட்டியிருந்தார்கள். அங்கே கோழிவளர்த்தல், பட்டுப்புழு வளர்த்துப் பட்டெடுத்து நூற்றுத் துணிநெய்தல், பால் தயிர்ச்சாலை ஸம்பந்தமான கருவிகள், முறைகள், பருத்தி ஸாகுபடி தொழில், கரும்பு, சர்க்கரை, வேர்க்கடலை, பூச்சிகள், பயிரின் நோய்கள், விவஸாயக் கருவிகள், தேயிலை காப்பி முதலிய தோட்டப்பயிர்கள் ஆகிய இவைகளுக்காக பல அறைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

பட்டு ஸம்பந்தமான பொருள்கள் வைத்திருந்த அறையில் முட்டையிலிருந்து துணிநெய்தல்வரையில் எல்லாவேலைகளையும் செய்யக் கருவிகள் வைக்கப்பட்டிருந்தன. அவைகளில் சில கருவிகளை அங்கிருந்த பொருள்காட்சி வியாபாரிகள் உபயோகித்துக் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

பால்சாலை ஸம்பந்தமான அறையில் பாலேடு எடுத்தல், வெண்ணெய் எடுத்தல் முதலிய வேலைகளை வியாபாரிகள் செய்து காட்டிக்கொண்டிருந்தார்கள்.

கரும்புப் பகுதியில் ஒருவிசேஷமென்னவென்றால் கரும்பிலிருந்து, மற்ற தான்யப் பயிரைப்போல் விதை தான்யம் எடுத்து, அதை விதைத்துக் காட்டியிருந்ததே. விதைகள் முளைத்து ஸுமார் இரண்டங்குலம் முளைத்திருந்தன. அங்கே ஒரு கரும்பாலையும் அதை ஓட்ட ஒரு ஆயில் எஞ்ஜினும், சர்க்கரைகாய்ச்சும் அடுப்புகளும் வைத்து வேலைசெய்து காட்டிக்கொண்டிருந்தார்கள்.

அங்கே இன்னொரு உபயோகமுள்ள யந்த்ரம் காட்டப்பட்டிருந்தது. அதாவது நிலக்கடலையை உடைத்துப் பருப்பெடுக்கும்யந்த்ரம். விவஸாயிகள் வேர்க்கடலையை ஜலத்தில் நனைத்து உடைத்துப் பருப்பெடுப்பதால், பருப்பு பூஞ்சணம்பூத்துக் கெட்டுப்போகிறதென்பதைக்காட்ட பூஞ்சணம்பூத்த பருப்பு ஒரு கோணியில் வைத்திருந்தார்கள். அப்படிச் செய்யாமல் யந்த்ரத்தால் உடைத்துப் பருப்பெடுத்தால் நல்ல பருப்புக் கிடைக்கிறதென்பதை யந்த்ரத்தை ஓட்டி வேலைசெய்து காட்டினார்கள்.

இன்னொரு அறையில் பற்பல பூச்சிகளும் அவைகளைக் கொல்ல உபயோகிக்க வேண்டிய மருந்துகளும், களைப்பயிர்களும் வைக்கப்பட்டிருந்தன. இன்னொரு பிரிவில் பல நெல் தினுஸுகளும் பசுந்தாள் பயிரின் விதைகளும் வைக்கப்பட்டிருந்தன. அதற்குப் பக்கத்தில் விதைநெல்லை நாற்றங்காலில் அடர்த்தியாயும் பரவலாயும் தெளிப்பதின் நன்மை தீமைகளைக் காட்ட நெல்லைப் பாத்திகளில் விதைத்துக் காட்டியிருந்தார்கள். அவைகளோடு அநேக பசுந்தாள் பயிர்களும் தீவனப் பயிர்களும் பயிரிட்டிருந்தார்கள். இன்னொரு அறையில் பயிர்களின் நோய்களையும் அவைகளைத் தடுக்கும் முறைகளையும் காட்டியிருந்தார்கள்.

இவைகளோடு கிணறு இறைக்கும் யந்த்ரமும், ஜலமிறைக்கும் யந்த்ரமும் வேலைசெய்துகொண்டிருந்தன.

இந்த விவஸாயப் பிரிவில் விவஸாயப் பஞ்சாங்கங்களும், விவஸாயத் துண்டுப்பத்ரிகைகளும் ஜனங்களுக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்டன.

### The Dust Mulch.

**நிலத்தின் மேல்மண்ணை புழுதியாக்கிவைத்தல்.**—பயிர்களிலிருந்து நல்ல மாஸுல் அடைவதற்கு அவைகளுக்குப் போதுமான ஜலம் இருக்கவேண்டியது அவச்யம். ஸாதாரணப் பயிர்களில் எவ்வளவு நிறை உலர்ந்த தான்யம் கிடைக்கிறதோ அதற்கு 300-முதல் 500-மடங்குவரை ஜலம் வேண்டியிருக்கிறது. இதனால் பூமியிலுள்ள ஜலம் ஆவியாய்ப் போகாதபடி பார்த்துக் கொள்ளவேண்டியது அவச்யமென்று தெரியவரும். இதற்கு நிலத்தின் மேல்மண்ணைப் புழுதியாக்கிவைத்திருப்பதுதான் சிறந்தவழி.

மேல்மண்ணை ரொம்ப ஆழம் புழுதியாக வைத்திருக்க வேண்டியது அவச்யமில்லை. மேல்மண்ணை மூன்று நான் கங்குலம் ஆழத்துக்குக் கொத்திவைத்திருந்தால் போதுமானது.

மண் மணல்பாங்காக இருந்தால் இவ்வளவு ஆழம் கூடக் கொத்திவிடவேண்டாம். களியான நிலங்களில் தான் இவ்வளவு ஆழம் கொத்திவிடவேண்டும். மேல்மண்ணை அதிக ஆழம் கொத்திவிடக் கூடாதென்பதற்குக்காரணம், மேல்மண் அடிமண்ணைவிட அதிக வளமையுள்ளதாகையால், ஸ்வல்ப கனத்துக்கு மண்ணைப் புழுதியாக வைத்திருந்தால் வேர்கள் நன்றாய்ப் பரவக்கூடுமென்பதே.

புழுதியாக்கிவைத்திருந்த நிலத்தில் மழைபெய்தால், மழைபெய்த பிறகு மறுபடியும் மேல்மண்ணைக் கொத்திவிட்டுப் புழுதியாக்கவேண்டும்.

# CO-OPERATION.

# கோவாபரேஷன்.

### The Committee on Co-operation.

கோவாபரேஷனைப் பற்றிப் பரிசீலனை செய்த கமிட்டி.—சென்ற 1914-ம் வர்ஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் கோவாபரெடிவ் முயற்சியின் நிலைமையைப் பற்றியும், முக்யமாய் அவைகளினுடைய பண நிலைமையைப் பற்றியும் பரிசீலனை செய்து தக்க யோசனைகள் சொல்லும்படி ஒரு கமிட்டி நியமித்திருந்தார்கள். அந்தக் கமிட்டியார் அந்த வர்ஷக் கடைசியில் பரிசீலனை செய்யத் தொடங்கினார்கள். அவர்கள் சென்ற வர்ஷத்தில் அதைப்பற்றி 209 ப்ரோரணைகள் செய்து ஒரு பெரிய ரிபோர்ட்டு எழுதி யனுப்பினார்கள். அவர்களுடைய பரிசீலனையால் இரண்டு முக்யமான விஷயங்கள் தெளிவாகின்றன. அநேக ப்ரதம கோவாபரெடிவ் ஸங்கங்கள் கோவாபரேஷனுடைய லக்ஷ்யங்களுக்கு ஏற்றவாறு நடைபெறவில்லை யென்பது ஒன்று. கோவாபரெடிவ் பாங்கிகளுக்குக் கிடைத்துவரும் டெபாஸிட்டுகள் வரவர அதிகரித்து வருவதால், அந்த பாங்கிகள் செலுத்தவேண்டிய கடன்களை குறித்தகாலத்தில் செலுத்திவருகின்றன வென்றாலும், அவைகள் தங்கள் பணத்தை வேண்டும்போது கிடைக்கக்கூடிய விதமாய் வைத்திருக்க வேண்டியது அவச்யமானது. அவைகளுடைய பண நிலைமையை பலமாக்கவேண்டும். இது இரண்டாவது விஷயமாகும்.

இந்தியா கவர்ன்மெண்டார் மேற்படி கமிட்டியாரின் யோசனைகளைப்பற்றி இப்போது ஒன்றும் முடிவான உத்தரவுகள் போடாமல் சில ப்ரோரணைகளைப்பற்றி மாகாண கவர்ன்மெண்டுகளின் அபிப்ராயத்தைக் கேட்டுவிட்டிருக்கிறார்கள். இன்னும் சில ப்ரோரணைகளை மாகாண கவர்ன்மெண்டுகள் கூடுமானவரையில் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். பாக்கி ப்ரோரணைகளைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டார் பிற்பாடு உத்தரவு போடுவார்கள்.

### A Co-operative Story.

கோவாபரேஷன் ஸம்பந்தமான ஒரு கதை.—சென்ற மாஸத்தில் 'க்ராமாந்தர கோவாபரெடிவ் ஸங்கங்கள்' என்னும் வ்யாஸத்தில் கோவாபரெடிவ் ஸங்கங்களிலுள்ள மெம்பர்களில் பலருக்கு தங்களுடைய ஸங்கங்களின் நிலைமை நன்றாய்த் தெரியாதென்று எழுதியிருந்தோம். இது ஸம்பந்தமாக வாஸ்தவத்தில் நடந்த ஒரு கதை வழங்கிவருகிறது.

ஒரு உத்யோகஸ்தர் ஒரு க்ராமத்தின் வழியாக மோட்டார் வண்டியில் போகும்போது கோவாபரெடிவ் ஸங்கம் நடந்து கொண்டிருந்த ஒரு இடத்தில் வண்டியை நிறுத்தி, அங்கே நின்று கொண்டிருந்த ஒரு மெம்பரைப் பார்த்து, கோவாபரேஷன், வரையறுக்கப்பட்ட ஸங்கம், வரையறுக்கப்படாத ஸங்கம் ஆகிய இவைகளைப் பற்றிக் கேட்டார். அதற்கவர் "எனக்கு அவைகளைப்பற்றி ஒன்றும் தெரியாது, என்னை ப்ரெஸிடென்டாக நியமித்தார்கள். அவ்வளவுதான் எனக்குத் தெரியும்" என்றார். உத்யோகஸ்தர், ஸங்கத்தின் பண நிலைமை எப்படி யிருக்கிறதென்று கேட்டார். அதற்கு ப்ரெஸிடெண்ட், அவைகளையெல்லாம் பற்றி கவனிக்கத் தான் ஸெக்ரெடரி யிருக்கிறாரே என்றும், அதற்காக அவருக்கு சம்பளம் கொடுபட்டு வருகிறதென்றும் சொன்னார்.

### Co-operation in Behar.

பேஹாரில் கோவாபரேஷன்...பேஹார் ஒரிஸ்ஸா மாகாணங்களிலுள்ள கோவாபரெடிவ் ஸங்கங்கள் இதர வேலைகளோடு ஆரம்பப்படிப்பையும் வெகுவாய் கவனித்து வருகின்றனவென்று அந்த மாகாணங்களின் ரெஜிஸ்ட்ரார் தமது ரிபோர்ட்டில் தெரிவிக்கிறார். ஐக்ய முயற்சியின் முன்னேற்றத்திற்கு ஆரம்பப் படிப்பே முக்யமாகும். பல இடங்களிலும் ஸங்கங்களால் புதிய ப்ரைமரி பாடசாலைகள் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இன்னும் பல பாடசாலைகள் ஏற்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறார்கள். மேலும் ஸங்கங்களின் டிரக்டர்களும் கௌரவ ஸூபர்வைஸர்களும் இது விஷயமாய் ஆங்காங்கு போய்ப் பார்த்துக் கவனித்து வருகிறார்கள். மேலும், விவஸாயம், கைத்தொழில்கள், கால்நடை வளர்த்தல், கல்வி முதலிய பல விஷயங்கள் அபிவ்ருத்தி அடையும்படி செய்வதற்காகப் பல பல யோசனைகள் செய்யப்பட்டு வருகின்றன. அதனால், பலவாறான வகுப்பாரும் ஐக்ய முயற்சியில் கலந்துகொள்ளும்படி யிருப்பதோடு, ஸங்கங்களில் அதிக ச்ரத்தை காட்டி அவைகளை முன்னுக்குக் கொண்டுவரவும் காரணமாகிறது.



# COMMERCE.

# வ்யாபாரம்.

### Business Enterprise in India.

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.—சென்ற மாஸத்து ஜனோபிமானியில் 1913-14-ம் வர்ஷத்திலும், 1914-15-ம் வர்ஷத்திலும் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகளைப் பற்றி சில விவரங்கள் கொடுத்தோம். அந்த இரண்டு வர்ஷங்களில் இன்ன வகையில் இத்தனை கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன என்பதைக் குறிப்பிடுகிறோம்.

| | 1913-14 | 1914 15 |
|---|---|---|
| பாங்கி, லேவாதேவி | 75 | 11 |
| இன்ஷூரன்ஸ் | 49 | 8 |
| ரெயில்வே, ட்ராம்வேக் கம்பெனிகள் | 6 | 3 |
| கப்பல் வ்யாபார ஸம்பந்தமானவை | 0 | 1 |
| அச்சிட்டு ப்ரசுரம் செய்தல் | 16 | 2 |
| வ்யாபாரம் | 110 | 47 |
| மில்லுகளும் ப்ரெஸ்ஸுகளும் | 36 | 9 |
| தேயிலை முதலிய தோட்டக் கம்பெனிகள் | 27 | 9 |
| சுரங்கவேலை | 15 | 7 |
| நிலம், கட்டிடம் | 3 | 2 |
| பனிக்கட்டி செய்பவை | 4 | 0 |
| சர்க்கரை செய்பவை | 2 | 1 |
| மற்றவை | 2 | 7 |
| மொத்தம் | 345 | 107 |

சென்ற 1915-ம் வர்ஷம் நவம்பர் மாஸத்தில் அடியில் கண்ட விவரப்படி 6 ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | ரூ. |
|---|---|
| 1 பாங்கி லேவாதேவி கம்பெனி | 50,000 |
| 1 வ்யாபாரக் கம்பெனி | 1,00,000 |
| 1 சணல் மில் கம்பெனி | 19,00,000 |
| 2 தேயிலைத் தோட்டக் கம்பெனி | 3,20,000 |
| 1 நிலக்கட்டிடக் கம்பெனி | 2,00,000 |
| 6 | 25,70,000 |

### Industries at the Madras Exhibition.

சென்னை பொருட்காட்சியில் கைத்தொழில்கள்:—சென்ற டிஸம்பர் மாஸத்திலும் இந்த மாஸத்திலும் நடந்த சென்னைப் பொருள் காட்சியில் கைத் தொழில் ஸம்பந்தமாக அநேக ஸாமான்களும், கருவிகளும் வைக்கப்பட்டிருந்தன. அங்கே அநேக நூதன யந்த்ரங்கள் வைக்கப்பட்டிருந்ததோடு, அவைகளில் பல வற்றை பொருள் காட்சியார் வேலை நடத்திக் காட்டிக் கொண்டிருந்தார்கள். அவைகளில் சிலவற்றை இங்கு குறிப்பிடுகிறோம்.

பூராப்பட்டுள்ள கரைகள் போட்ட வேஷ்டிகள் நெய்வதற்கும், காலிரங்காத புடவைகள் நெய்வதற்கும் ஏற்றதாய் ஒரு ஸுலபமான தறி நிருபித்துக் காட்டியிருந்தார்கள். பின்னி அண்ட் கம்பெனியார் யந்த்ரத்தால் ஓடும் ஒரு தறியை வேலை செய்து காட்டிக் கொண்டிருந்தார்கள். பென்ஸில்கள் செய்யும் யந்த்ரம் ஒன்று அங்கே வைக்கப்பட்டிருந்தது. அதில் பென்ஸில் செய்யும் வேலை ஸங்க்ரஹமாகச் செய்து காட்டப்பட்டது. இவைகளோடு சுருட்டுகள் செய்ய உதவும் யந்த்ரங்களையும், எலும்பைக் கொண்டும், கொட்டாங்கச்சியைக் கொண்டும் பொத்தான்கள் செய்யும் யந்த்ரங்களையும் நடத்திக் காட்டிக்கொண்டிருந்தார்கள்.

தென்னிந்தியாவிலுள்ள பற்பல தொழில்கள் ஸம்பந்தமான யந்த்ரங்களும், மூலப் பொருள்களும், விற்பனைக்குத் தயாராக்கப்பட்ட ஸாமான்களும் வைக்கப்பட்டிருந்தன.

### Soap Industry in Mysore.

மைஸூரில் ஸோப் செய்யும் தொழில்.—சென்ற பிப்ரவரி மாஸத்தில் மைஸூர் கவர்ன்மெண்டார் ஸோப் தொழிலைப் பற்றிப் பரிசீலனை செய்ய ஒரு நிபுணரை நியமித்தார்கள். அவர் பங்களூரிலுள்ள இண்டியன் இன்ஸ்டிட்யூட் அப் ஸயன்ஸ் என்னும் சாஸ்த்ர ஆராய்ச்சி சாலையில் பரீக்ஷைகள் செய்து பார்த்து, பங்களூரில் கவர்ன்மெண்டாரே ஒரு ஸோப் தொழில் சாலை ஏற்படுத்தலாமென்று யோசனை சொன்னார். அதன் மேல் கவர்ன்மெண்டார் பரீக்ஷார்த்தமாக பங்களூரில் ஸோப் தொழில் சாலை ஏற்படுவதற்காக ரூ. 15000-ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்.

# ECONOMIC PRODUCTS.

## விலையுள்ள பொருள்கள்.

### Cloves.

**லவங்கம்.**—இவ்வுலகில் லவங்கத்தை உபயோகிக்காதவர் ஒருவருமிலர். லவங்கம் என்பது ஒரு செடியின் மொட்டு. இது அக்டோபர், டிஸம்பர் மாதங்களில் சேகரிக்கப்படுகிறது. இந்து மகாஸமுத்ரத்திலுள்ள மொலுக்கஸ் முதலிய தீவுகளில் க்ராம்பு ஏராளமாய் உற்பத்தியாகிறது. க்ராம்பு, ஜாதிக்காய், ஏலம் முதலிய வாஸனை த்ரவியங்கள் அங்கு ஏராளமாய் விளைவதால், அந்த தீவுகளுக்கு வாஸனைத்தீவுகள் என்ற பெயர் வழங்குகிறது. சென்ற 16-ம் நூற்றாண்டில் அத்தீவுகளில் போர்த்துக்கேசியர் குடியேறியிருந்தார்கள். அவர்கள் க்ராம்புத் தோட்டத்திலிருந்து ஏராளமாய் பொருள் ஸம்பாதித்தார்கள். 1605-ம் வருஷத்தில் டச்சுக்காரர்கள் அந்தத் தீவுகளில் போய் போர்த்துக்கேசியரை துரத்திவிடவே அவர்களுடன் க்ராம்புத் தோட்டங்களும் அழிந்துபோயின. இப்பொழுது ஆப்பிரிக்கா கண்டத்தின் கீழ்ப்பாகத்திலிருக்கும் ஸான்ஸிபார், பெம்பா எனும் தீவுகளில் லவங்கம் ஏராளமாய் விளைகிறது. நீலகிரி ப்ரதேசத்தின் ஓர் பாகத்திலும் உண்டாகிறது. மேற்படி தீவுகளிலிருந்து தான் க்ராம்பு உலக முழுவதற்கும் ஏற்றுமதியாகிறது. க்ராம்பு தோட்டம் வைப்பது அராபியரின் முக்ய தொழிலாயிருக்கிறது. அவர்கள் தங்கள் க்ராம்புத் தோட்டங்களில் வேலைசெய்யும் ஒவ்வொருவனுக்கும் கொஞ்சம் நிலங்களை மான்யமாக விட்டிருக்கிறார்கள். இக்காரணத்தைக் கொண்டே இதர தொழிலாளிகள் கூட தங்கள் வேலையை விட்டுவிட்டு க்ராம்புத் தோட்ட வேலையை கைக்கொள்ளுகிறார்கள். ஸத்குவணம், ரஜோகுணம், தமோகுணம் என்ற த்ரிகுணங்களில் லவங்கம் ரஜோகுணத்தை மேலாகக் கொண்டது. இது காரரஸமுடையது. இதனால் செவிநோய், கண்ணிற் பூப்படலம் முதலிய அநேக வித நோய்கள் போம். மலக்கட்டுபோய் ஸௌக்ய முண்டாகும். இதன் புட்டை அதிசாரம்; தாது நஷ்டம், பற்பல விஷங்கள், சிலந்தி விஷம், பாம்பு விஷம் ச்வாசகாஸம் முதலிய நோய்களை விலக்கும்.—சுதேசமித்திரனில் ஒரு நிருபர்.

### Waste Tobacco.

**கழிவு புகையிலை.**—புகையிலை தயார்செய்யும்போது சிறிதுபாகம் புகையிலையை கழிவாக நீக்கி விடுவதுண்டு. ஸ்விட்ஸர்லண்ட் தேசத்தில் இந்தக் கழிவு புகையிலையிலிருந்து நிகோடின் என்னும் புகையிலை ஸாரம் இறக்குகிறார்களாம். புகையிலையைச் செடியிலிருந்து நறுக்கியெடுக்கும்போது ரொம்ப உத்தமான இலைகளை மாத்ரம் எடுத்துப் பக்வம் செய்வது வழக்கம். கழித்துவிட்ட மட்டமான இலைகளிலிருந்து நிகோடைன் தயார் செய்வார்கள். ஆனால் மட்டமான இலைகளையும் அடிக்கட்டைகளையும் பிடுங்காமல் நிலத்திலேயே விட்டிருந்து, நிலத்தைக் கொத்திவிட்டு ஸோடியம் நைட்ரேட் என்னும் உரத்தைப் போட்டால், செடிகளில் இன்னும் இலைகள் வளரும். இந்த அதிக இலைகளால் சில ஸமயங்களில் நூற்றுக்கு 75-பாகம் அதிகமான நிகோடின் ஸத்துக்கிடைக்கிறதாம். இந்த ஸத்தானது இலைகளில் குறைவாகவும் வேர்கள், புது முளைகள் ஆகிய இவைகளில் அதிகமாகவும் கிடைக்கிறதாம். இதனால் தான் அடிக்கட்டைகளுக்கு மேற்சொன்ன உரமிடுகிறார்களாம்.

### Kapok.

**இலவம்பஞ்சு.**—இலவம்பஞ்சு பற்பல வேலைகளுக்கு உதவுகிறது. இதைக்கொண்டு மெத்தைகள், தலையணைகள், உயிர்க்கச்சைகள், உடுப்புகளுக்கு லைனிங்குகள், உள்சட்டைகள் முதலியவை செய்கிறார்கள். இதனால் செய்த உடுப்புகள் தேகத்தின் உஷ்ணத்தை வெளிவிடாமலும், வெளியிலுள்ள உஷ்ணத்தை உள்ளேவிடாமலும் காக்கின்றன. இலவம்பஞ்சினால் செய்த உயிர்ச்சட்டையைப் போட்டுக்கொண்ட ஒருவன் ஜலத்தில் கார்க்கைப்போல் மிதப்பானும். இலவம்பஞ்சானது அதன் நிறையைப்போல் 175 மடங்குநிறையை ஜலத்தில் அமிழ்ந்துபோகாமல் தாங்கும். இது ஜலத்தில் வெகுகாலம் இருந்தாலும் கெடுவதில்லை.

### Sugar-cane Ashes.

**கரும்புச் சக்கையின் சாம்பல்.**—பிலிப்பைன் தீவுகளில் உள்ள சர்க்கரைச் சாலைகளில் கரும்பை ஆலை ஆட்டிய பிறகு கிடைக்கும் கரும்புச் சக்கையை அடுப்பெரிக்க உபயோகிக்கிறார்கள். இதன் சாம்பலை அங்கே ரஸ்தாக்களிலும், தொழில் சாலையிலுள்ள பள்ளங்களிலும் கொட்டிவிடுகிறார்கள். இந்தச் சாம்பலில் செடி உணவு இருக்கிறதென்றும் இதை கரும்புப் பயிருக்கே உபயோகிக்கலாமென்றும் ஒரு பத்ரிகை எழுதுகிறது.



# BOYS' PAGE.

## பையன்கள் பக்கம்.

### The Foot Measure.

**அடியளவு.**—தற்காலத்தில் அடியென்றும் கஜமென்றும் மேல்நாட்டு அளவுகள் இந்தியாவில் வழங்கி வருகின்றன. இந்த அடியென்னும் அளவு முன்பு மேல்நாடுகளில் ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு விதமாக இருந்தது. ஒவ்வொரு தேசத்தாரும் மனிதருடைய காலடியையே அடியின் நீளமென்று உபயோகித்து வந்தார்கள். ஆனால் மனிதரின் கால் வளர்ச்சிக்குத்தக்கபடி ஒவ்வொருவருடைய அடியளவும் வித்யாஸப்படுமாகையால் யாராவது ஒருவருடைய காலடியை பொது அளவாக வைத்துக்கொள்ள வேண்டியது அவச்யமாயிற்று. பண்டைக்காலத்து க்ரேக்கர்கள், தங்களுடைய தேசவீரராகிய ஹெர்க்குலீஸ் என்பவருடைய காலின் நீளத்தை அடியின் அளவாக வைத்துக்கொண்டார்கள். இந்த அடியானது தற்காலக் கணக்கின்படி 12.14 அங்குலமாக இருந்தது. மாஸிடோனியாவிலுள்ளவர்கள் ஒரு ராக்ஷஸனுடைய காலடி நீளத்தை அடி அளவாக வைத்துக்கொண்டார்கள். அவர்களுடைய அடி 14.08 அங்குலமாகும். ஜினீவாவில் ஒருகாலத்தில் 19.21 அங்குலம் நீளமுள்ள அடி உபயோகத்திலிருந்தது. அதே இடத்தில் ஒரு ஸமயம் 23.22 அங்குலம் நீளமுள்ள அடியும் உபயோகத்திலிருந்ததாம். ஸிஸிலி தீவில் முன்பு அடியென்பது 8.75 அங்குலம் நீளமுள்ளதாகத்தானிருந்ததாம்.

சில நூற்றாண்டுகளுக்குமுன் ஜெர்மானியர்கள் அடியளவைத் தீர்மானிக்கப் பின்வரும் முறையை அநுஸரித்து வந்தார்கள். அதாவது, ஒரு ஞாயிற்றுக் கிழமையன்று கோவிலுக்குப் போய், ஜபம் முடிந்து ஜனங்கள் கோவிலிலிருந்து வெளிவரும்போது, அவர்களில் சேர்ந்தாற்போல்வரும் 16-பேர்களை நிற்கச்சொல்லி அவர்களுடைய இடதுகாலின் மொத்த நீளத்தைக் கணக்கிட்டுக்கொள்ளவேண்டும். இந்த அளவு நிலங்களை அளக்க ஏற்பட்ட ரூட் என்னும் அளவாகும். இதில் 16-ல் ஒருபாகம் ஒரு அடியாகும். ஆனால் இந்த முறைப்படி கிடைக்கும் அளவானது எல்லாவிடத்திலும் ஒரேமாதிரியாக இராது. 1324-ம் வர்ஷத்தில் இங்கிலண்டில் ஆண்டுவந்த இரண்டாவது எட்வர்ட் அரசர் உருண்டையாயும் காய்ந்துமிருக்கும் 3-பார்லி என்னும் வால் கோதுமையை ஒன்றின்பின் ஒன்றாய் நீளப்போக்கில் வைத்தால் அவைகளின் மொத்த நீளம் ஒரு அங்குலமாகுமென்று ஏற்படுத்தினார். ஆனால் வால் கோதுமைகளின் நீளம் வித்யாஸப்படுமாகையால் இந்த அளவும் சரியாகாது. 1855-ம் வர்ஷம் இங்க்லீஷ் பார்லிமெண்டில் கஜத்தின் அளவைத் தீர்மானித்த பிறகு தான் அடி அங்குலம் ஆகிய இவைகளின் அளவு நிச்சயப்பட்டது.

### Advice to Boys.

**சிறுவர்களுக்கு நீதிபோதனை.**—கோனுப்பட்டு பெ. அ. வெ. அண்ணாமலை செட்டியாரின் பொருளுதவியால் அச்சிடப்பட்டு இனமாய்க் கொடுக்கப்பட்டுவரும், ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை என்னும் நூல்களடங்கிய சிறு புஸ்தகத்தில் பின்வரும் நீதிவாக்யங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

1. காலையில் எழுந்து கடவுளைப் போற்று
2. கால்கை கழுவிப் பால்போல் நீறணி.
3. கற்ற பாடத்தை முற்றவும் சிந்தைசெய்.
4. காலத்திலுண்டு கலாசாலை சேர்ந்து கல்.
5. வழியிற் பிறரொடு விளையாடாதே.
6. ஆசான் சொல்வதை அடக்க முடன்கேள்.
7. கேட்ட பாடத்தை மீட்டும் படித்துணர்.
8. உடன் படிப்போருடன் ஒற்றுமையாயிரு.
9. புத்தகம் கிழியாது வைத்துப் பேணு.
10. நித்தம் குளித்துச் சுத்தமாயிரு.
11. உடையொரு சிறிது மழுக்கடையாதிரு.
12. யாவருடனும் இன்சொற் பேசு.
13. கடுஞ்சொற் சொல்லிற் கண்டோர் பகைப்பர்.
14. கெட்ட பழக்கம் சற்று மொட்டாதிரு.
15. புத்தகஞ் சுவரிவை பொலன்கெடக் கீறேல்.
16. உண்மையும் நேர்மையும் உறப் பாலனவே.
17. சீவ காருணியம் சிறந்த வொழுக்கம்.
18. தந்தையும் தாயும் வந்தனைக் குரியார்.
19. குருவை வழிபடல் பெரிய கடமை.
20. ஒழுங்குடன் நடுமமே கண்ணு மெழுகு.
21. கடவுளை நினைந்து கற்றபடி நட.

## LADIES' PAGE.

## ஸ்த்ரீகள் பக்கம்.

### Water in Infantile Diet.

குழந்தைகளின் ஆகாரத்தில் ஜலத்தின் அளவு.—ஒரு குழந்தை சரியாய் வளரவேண்டுமென்றால் அதற்கு சரியான ஆகாரம் கொடுத்தால் மட்டும் போதாது. வேண்டிய அளவு ஜலமும் குடிக்கக்கொடுக்கவேண்டும். வயது வந்தவர்களுக்கு அவர்களின் ஆகாரத்துக்குத் தகுந்தபடி எவ்வளவு ஜலம் குடிக்கக் கொடுக்கிறோமோ அதை விட அதிகமாக குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும்.

பெரியவர்கள் தங்கள் நிறையில் நூற்றுக்கு 3½ பாகம் நிறையுள்ள ஜலம் குடித்தால் போதுமானது. ஆனால் வளரும் குழந்தையோ அதன் நிறையில் நூற்றுக்கு 15 பாகம் ஜலம் உட்கொள்ளவேண்டியது அவச்யமாகும். ஆகாரத்தின் தன்மையில் யாதொரு குறையுமில்லாலிருந்து, அதில் சேர்ந்துள்ள ஜலம் மாத்ரம் குறைவாயிருந்தால் குழந்தை நோயில்லாமலிருந்தாலும், அது நன்றாய் வளராது. அதன் நிறை அப்படியேயிருப்பதோடு சில ஸமையம் குறைந்தும் வரும். ஆகாராதிகள் ஸரியாயிருந்தும் குழந்தைதக்கபடி வளராமல் இருந்தால், அதன் உணவில் வேண்டிய அளவு ஜலம் கலக்க வேண்டியது அவச்யமாகும்.

சில தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு முலைப் பால் கொடுக்காமல் கட்டிப்பால், மெல்லின்ஸ் ஆகாரம் முதலிய செயற்கை ஆகாரங்களைக் கொடுத்து வளர்க்கிறார்கள். இவைகளைக் கொடுக்கு முன் வேண்டிய அளவு ஜலத்தில் கரைத்துக் கொடுக்க வேண்டியது அவச்யமாகும்.

குழந்தைகள் வேண்டிய அளவு ஜலம் தனியாகவோ, ஆகாரத்தில் கலந்தோ குடிக்காவிட்டால் அவைகளின் வளர்ச்சி தடைபட்டுப் போவதோடு, காய்ச்சல் முதலிய வ்யாதிகளும் நேரிடும்.

### Copper Vessels.

தாம்ரப் பாத்ரங்கள்.—இப்பொழுது அமெரிக்காவில் ஒரு யூனிவர்ஸிடியில் இருந்து வரும் டாக்டர் ராபிடின் அஹமெட் என்பவர் தாம்ரத்தைப்பற்றி ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார். அதன் ஸாராம்சம் பின் வருமாறு:—ஹிந்துக்களில் விசேஷமாய் ப்ராமணர்கள் தாம்ர பாத்ரங்களை உபயோகித்து வருகிறார்கள். தாம்ர பாத்ரங்களில் ஜலம் முதலியவைகளை வைத்து உட்கொண்டுவருகையில், காலக்ரமத்தில் சிறுகச் சிறுக அதன் ஸத்துக்களுடைய ஸூக்ஷ்மாம்சங்கள் தேகத்தில் ஊறி, ரத்தத்தில் ஸம்பந்திக்கும் வ்யாதிக்குக் காரணமான நுண்ணுயிர்களை அழிக்கும். பற்களின் இடுக்குகளில் சேரும் ஸூக்ஷ்ம க்ருமிகளையும் ஒருவாறு அழிக்கும். குடல் முதலியவற்றில் ஸம்பந்திக்கும் காலராவுக்குக் காரணமான விஷப்பொருட்களுக்கும் தாம்ர ஸத்து விரோதமானது. அநேகவித பரிசோதனைகள் செய்து பார்த்ததில், சரீரத்தை எப்பொழுதும் பலவித வ்யாதிகளிடமிருந்து முன்னதாய்க் காப்பாற்றுவதற்கு தாம்ரம் சிறந்த வஸ்துவென்று தெரிகிறது. —வைத்ய கலாநிதி.

### Pumpkin Karuvadam.

பூசணிக்காய்க் கருவடாம்.—கால்படி வெண்மையான உளுத்தம்பருப்பை ஒருநாளிரவு ஜலத்தில் ஊற வைக்கவேண்டியது. அப்பொழுதே, பெரும் பூசணிக்காய்த் துருவலில் 10-பலம் எடுத்து ஓர் துணியில் முடிப்புக்கட்டி ஒரு பலகையின் மேல் வைத்து மேலே ஒரு பலகையை வைத்து அதன்மேல் பளுபோட்டு வைக்கவேண்டியது. மறுநாள் விடியற்காலையில் மேற்படி பருப்பை வெண்ணெய்போல் அரைத்து, அதனோடு பூசணிக்காய்த் துருவலைச் சேர்த்து கலந்து கொள்ளவேண்டும். ஒரு பலம் மிளகாய், அரையேயரைக்கால் பலம் காயம், ஒன்றரைப்பலம் உப்பு, இம்மூன்று வஸ்துக்களையும் இடித்து, அரைக்கால் பலம் சீரகத்தையும், பொடியாய் நறுக்கிய அரைபலம் பச்சை மிளகாயையும் சேர்த்து எல்லாவற்றையும் மேற்படி பூசணிக்காய்த் துருவல்கலந்த மாவில் போட்டு செம்மையாய் அரைத்து வடாமிட்டு உபயோகிக்க வேண்டியது. இந்த வடாத்தைப்பொரித்து கூட்டு குழம்புகளில் உபயோகிப்பதுண்டு.—விச்வகர்மன்

### An Ignorant Mother.

அறிவில்லாத தாய்.—இங்கலண்டில் ஒரு ஸ்த்ரீ தனது 5-மாஸக் குழந்தைக்குக் கக்குவான் இருமல் கண்டிருக்க, அதற்கு வைத்யம் செய்ய ஒரு நத்தையைப் பிடித்து ஒரு மஸ்லின் துணியில் போட்டு அதோடு சர்க்கரையையும் சேர்த்துத் தொங்கவிட்டு, அதிலிருந்து விழும் த்ராவத்தை குழந்தைக்குக் கொடுத்தாளாம். குழந்தை இறந்துபோயிற்று. " க்ராமங்களிலுள்ள அநேக இங்க்லீஷ் ஸ்த்ரீகள் இவ்விதம் மூடவைத்யம் செய்கிறார்களாம்.



## INDIANS ABROAD.

## இதர தேசங்களில் இந்தியர்கள்.

### Hindus and Mahomedans in S. Africa.

தென்னாப்ரிக்காவில் ஹிந்துக்களும் மகம்மதியர்களும்.—தென்னாப்ரிக்காவில் உள்ள டர்பன் என்னும் பட்டணத்திலுள்ள நேட்டால் இந்தியன் அஸோஸியேஷன் என்னும் ஸங்கத்தார் ஸமீபத்தில் அங்கிருந்து இந்தியாவுக்கு வரும் மிஸ்டர் இமாம் அப்துல் காதர் பவாஸிர் என்பவருக்கும், மிஸ்டர் ஸோராப்ஜி ரஸ்டோம்ஜி என்பவருக்கும் பிரிவு உபசார பத்ரம் ஒன்று வாசித்துக் கொடுத்தார்கள். அவர்கள் இருவரும் கொஞ்சகாலத்துக்கு முன் தென்னாப்ரிக்காவில் நடந்த இந்தியப் போராட்டத்தில் ப்ரமுகர்களாயிருந்தவர்கள். மிஸ்டர் இமாம் அப்துல் காதர் பவாஸிர் என்பவரை ஜனங்கள் இமாம் ஸாகிப் என்று சொல்வது வழக்கமாம். அவர் ட்ரான்ஸ்வாலிலுள்ள ஹமிடியா இஸ்லாமிக் ஸங்கத்துக்குப் ப்ரெஸிடெண்டாயிருப்பவர். அவருக்கு ரொம்ப செல்வாக்குண்டு. அவர் எல்லா இந்திய வகுப்புகளும் ஒற்றுமையாயிருக்க வேண்டுமென்று ஜனங்களுக்கு போதித்து வந்தார். அவர் எல்லா ஜனங்களாலும் நன்கு மதிக்கப்பட்டிருப்பவர். அவர் தமது ஸ்நேகிதர்களுக்கு எழுதியிருக்கும் ஒரு கடிதத்தில் ஹிந்துக்களும் மகம்மதியர்களும் ஒற்றுமையாயிருக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார். அவர் சொல்வதாவது: "இந்த தேசத்தில் நாமெல்லோரும் ஐரோப்பியர்களுக்கு இந்தியர்களாகவே இருக்கிறோம். பொது ஜன விஷயங்களில் நாம் இது வரையில் ஹிந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் வித்யாஸம் பாராட்டினதில்லை. இருவகுப்பாருக்கும் வித்யாஸம் உண்டென்பதை நாம் எப்போதும் மறந்து விடுவோமானால், இந்த தேசத்தில் நமது நிலைமையை பலப்படுத்த முடியும். மகம்மதியர்களாகிய நாம், ஹிந்துக்களைப் போலவே, இந்தியாவை நமது தாய் நாடாக எண்ணியிருக்கிறோம். இந்தியாவுக்கு உழைக்கிற கார்யங்களில் நாம் எல்லோரும் நமது வேற்றுமைகளைத் தள்ளிவிட்டு, ஒற்றுமையாக இருக்கவேண்டும். இந்த நோக்கத்துடன் நாம் உழைப்போமானால் நாம் அபிவ்ருத்தியடைந்து மற்ற ஜாதியாருடன் கௌரவத்துடனும் பெருமையுடனும் வாழமுடியும்."

### Salvation Army and Emigration.

ரக்ஷண்ய சேனையும் குடியேற்றமும்.—பஞ்சாபிலுள்ள ரக்ஷண்ய சேனையைச் சேர்ந்த கமிஷனர் பூத் டக்கர் என்பவர் அஸ்ஸாம் கவர்ன்மெண்டாருடனும் அஸ்ஸாமிலுள்ள தேயிலைத் தோட்டக்காரர்களுடனும் கூலியாள்கள் சேர்த்துக்கொடுப்பது விஷயமாக ஒரு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார். அவர் ரக்ஷண்ய சேனையின் ஆதீனத்திலுள்ள குற்றம் செய்யும் வகுப்பாருடைய ஊர்களிலிருந்து அந்த வகுப்பு ஜனங்களை அஸ்ஸாமிலுள்ள தேயிலைத் தோட்டங்களுக்குக் கூலியாள்களாக அனுப்புவார். இதனால் அந்த ஜாதியாருக்கு நல்ல ஜீவனம் கிடைக்குமாம். வேலையாட்களை அஸ்ஸாமுக்குக் கூட்டிக்கொண்டு போக ஏற்படும் செலவை தோட்டக்காரர்கள் ஏற்றுக்கொள்வார்களாம். அஸ்ஸாமில் கூலியாட்கள் வேலையை ஏற்றுக்கொண்ட பிற்பாடு, அவர்கள் ரக்ஷண்ய சேனையின் பொது மேற்பார்வையின்கீழ் இருப்பார்களாம். முதலில் 300-வேலையாட்கள் இந்த ஏற்பாட்டின்மேல் அஸ்ஸாமுக்குப் போகப் போகிறார்களாம்.

### Emigration to Malay States.

மலேயா நாடுகளுக்குக் குடிப்போவது.-பிடரேட் மலேயா நாடுகளில் இந்தியர்களுக்கு போலீஸ், ராணுவம் ஆகிய இலாகைகளில் உத்யோகம், சாலைகளில் கார்டுவேலை, காவல்வேலை முதலிய வேலைகள் கிடைப்பது அரிதென்று மலேயா நாட்டு கவர்ன்மெண்டார் இந்தியா கவர்ன்மெண்டுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகையால் எந்த மாகாணங்களிலிருந்து இந்தியர்கள் அந்த நாடுகளுக்குப்போகக் கூடுமோ அந்த மாகாணங்களில் மாகாண கவர்ன்மெண்டுகள் இவ்விஷயத்தை ஜனங்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்றும், இந்தியர்கள் கப்பலேறிப் போகக்கூடிய துறைமுகங்களில், அவர்களுக்கு மலேயா நாடுகளில் வேலைகிடைப்பது கஷ்டமென்பதைத் தெரிவிக்கவேண்டுமென்றும் இந்தியா கவர்ன்மெண்டார் மாகாண கவர்ன்மெண்டுகளுக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

### Emigration to Canada.

கனடாவுக்குக் குடிப்போவது—அமெரிக்காவிலுள்ள கனடா கவர்ன்மெண்டார் 1916-ம் வருஷம் மார்ச்சு மாஸம் 31-ந் தேதி வரையில் ப்ரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்திற்கு அன்ய தேசங்களிலிருந்து தேர்ந்த தொழிலாளிகளும், தேர்ச்சியுள்ள அல்லது தேர்ச்சியடையாத மற்ற கூலியாட்களும் வரக் கூடாதென்று உத்தரவிட்டிருக்கிறார்கள்.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### Leave to Perform Ceremony.

ச்ராத்தம் செய்ய ரஜா.—கல்கத்தாவில் ஒரு பெரிய இங்க்லீஷ் வ்யாபாரக் கம்பெனியில் ஒரு வங்காள ஹிந்து குமாஸ்தாவாக அமர்ந்திருந்தான். அவன் ஒரு நாள் தனது ஐரோப்பிய யஜமானரிடம்போய், தனது தந்தைக்கு ச்ராத்தம் செய்யவேண்டும் என்றும், ஆகையால் அடுத்தநாள் ரஜாவேண்டுமென்றும் கேட்டான். யஜமானருக்கு ச்ரார்த்தம் என்னும் கர்மாவின் விவரம் தெரியாது. அவர் ரஜா கொடுக்க முடியாதென்றும், அந்தக் கர்மாவை ஒரு ஞாயிற்றுக்கிழமை செய்துகொள்ளலாமென்றும், அப்போது ரஜாவாங்க வேண்டிய அவச்யம் ஏற்படாதென்றும் சொல்லிவிட்டார். நாள் தப்பி ச்ராத்தம் செய்வது முறையல்ல வென்பதைத் தனது யஜமானருக்கு விளக்கிக் கூறமுயன்றால், அவர் கோபம் கொள்வாரென்று எண்ணி வருத்தத்துடன் வீடுவந்து சேர்ந்தான். லீவு எடுத்துக்கொள்ளாமல் வீட்டிலேயே இருந்தால் வேலைபோய்விடும். ச்ராத்தம் செய்யாவிட்டாலோ, அவனது இனத்தார் அவனை ஜாதிப்ரஷ்டம் செய்துவிடுவார்கள். இதைப்பற்றி அவன் வெகுநேரம் யோசித்துக் கடைசியில் ஒரு யுக்தி செய்தான். மறுநாள் அவன் வழக்கம்போல ஆபீஸுக்குப் போனான். ஆனால் போகும்போது தனியாகப்போகாமல், தனது ஆசார்யரைக் கூட்டிக்கொண்டு ச்ராத்தத்துக்கு வேண்டிய எல்லா ஸாமக்ரியைகளையும் எடுத்துக் கொண்டுபோனான். அந்த ஆபீஸில் நடுப்பகலில் சிற்றுண்டி சாப்பிடுவதற்கேற்ற அறையில் உட்கார்ந்து ச்ராத்தம் செய்து முடித்தான். ச்ராத்தம் முடிந்ததும் அந்த நாட்டில் சங்கு ஊதுவது வழக்கம். வழக்கம்போல சங்கூதவே, சங்கின் சப்தம் கேட்ட ஐரோப்பிய அதிகாரி விசேஷம் என்னவென்று விசாரித்தார். ஸங்கதி தெரியவே அவர் அந்த குமஸ்தாவைக் கூப்பிட்டு விசாரித்தார். குமாஸ்தா அப்போது தைரியங்கொண்டு, தனக்கு லீவு கிடைக்காததாலும், ச்ராத்தத்தை நிறுத்தத் தனக்கு அதிகாரமில்லாததாலும், சிற்றுண்டி சாப்பிடும் அறையில் தான் ச்ராத்தம் செய்ய நேர்ந்ததென்று சொன்னான்.

அதிகாரி தாம் அனாவச்யமாய்க் கடுமையாக இருந்ததையறிந்து வருத்தப்பட்டு குமாஸ்தாவுக்கு சம்பளத்துடன் ஒருவாரம் ரஜாகொடுத்தார்.

### The Schoolmaster.

பள்ளிக்கூட உபாத்யாயர்:—உபாத்யாயத் தொழிலில் அமர்ந்துள்ளவர்களை, படகு, வண்டி, துடைப்பம், நாரத்தங்காய் ஊறுகாய் முதலியவைகளுக்கு ஸமானமாகச் சொல்வதுண்டு. உபாத்யாயர் சாணைக்கல்லுக்கும் ஸமானம் என்று ஒருபத்ரிகை எழுதுகிறது.

க்ராமத்துப் பள்ளிக்கூடத்தில் ஒருவர் உபாத்யாயராக இருந்தார். அவரிடத்தில் படித்தமாணவர்கள் எப்.ஏ., பி.ஏ. முதலிய பரிக்ஷைகளிற் தேறியவர்களாக விளங்கினர். ஒரு ஸமயம் இந்த உபாத்யாயர், "நான் சாணைக்கல்லுக்கு ஸமானமாக இருக்கிறேன். அதாவது சாணைக்கல் கத்தியைக் கூர்மைப்படுத்துவது போல் பையன்களின் புத்தியைக் கூர்மையாக்குகிறேன். சாணைக்கல் தேய்வது போல் நான் மழுங்கிப் போகிறேன்," என்று மிகுந்த வருத்தத்துடன் கூறினார்.

### Edison and the Eggs.

எடிஸனும் முட்டைகளும்.—பற்பல நூதன யந்த்ரங்களைக் கண்டுபிடித்திருக்கும் மிஸ்டர் எடிஸனுக்கு பால்யத்திலேயே நூதன கற்பிதங்களில் அவா இருந்ததாம். அவர் 5-வயது சிறுவராயிருந்தபோது அவருடைய தகப்பனார் அவரை வீட்டில் காணாமல் பற்பலவிடங்களில் தேடினார். ஓரிடத்திலும் அவர் அகப்படவில்லை. அதன்மேல் அவாது தமக்கை தற்செயலாய் கோழிகள் விட்டிருந்த ஒரு அறைக்குள் போக நேரிட, அவர் அங்கு உட்கார்ந்திருக்கக் கண்டாள். பையன் தரையில் உட்கார்ந்திருந்தான். அவனுடைய உடைகளெல்லாம் உடைந்த கோழிமுட்டைகளின் துண்டுகளும் கருக்களுமாயிருந்தன.

"இங்கேனடா உட்கார்ந்துகொண்டிருக்கிறாய்" என்று தமக்கை கேட்டாள்.

"எனக்கா, கோழி முட்டைமேல் உட்காருவதால் முட்டை குஞ்சு பொரிக்கிறதல்லவா? கோழிக்கு பதிலாக நாமே உட்கார்ந்தால் குஞ்சு பொரிக்குமா என்று பார்த்தேன்" என்று பதில் சொன்னான்.

### Why He was Good Natured.

அவன் நல்ல பையனாயிருப்பதற்குக் காரணம்.—ஒரு இரட்டை நாடியான பையனைப் பார்த்து அவனது ஸ்நேகிதன்:—ஊளைச்சதைபோட்டிருக்கும் நீங்களெல்லாம் வம்புசண்டைக்குப் போகாமல் எப்போதும் ஸாதுவாயிருக்கிறீர்களே, அதேன்?

இரட்டைநாடியான பையன்:—நாங்கள் ஸாதுவாகத்தான் இருக்கவேண்டியிருக்கிறது. எங்களால் சண்டை பிடிக்கவும் முடியாது. ஓடவும் முடியாது.



# CURIOSITIES.

## விநோதங்கள்.

### Phosphorescent Insects.

வெளிச்சம்தரும் பூச்சிகள்—மின்மினிப்பூச்சியை நாம் நாட்டில் எங்கும் மாரிக்காலத்தில் காண்கிறோம். ப்ரிட்டிஷ் கயானாவிலுள்ள ஸுரினாம் என்ற ஊரிலுள்ள ஒரு வகைப்பூச்சி சிறு லாந்தரைப்போன்ற வெளிச்சந் தருகிறதாம். அவ்வூரார் எங்கேயாவது வெளியே போகவேண்டுமானால், காலில் இந்தப் பூச்சி ஒன்றை ஒட்டிவைத்துச் செல்வார்கள். அந்த வெளிச்சத்தைக்கொண்டு எந்த இருட்டிலும் செல்லுவார்கள். அவர்களுக்கு லாந்தர், அல்லது 'சுளுந்து' வேண்டியதில்லை.

இதேமாதிரி கடலில் வாழும் ஜந்துக்களில் ஒன்று வெளிச்சம்தரக் கூடியதாக இருக்கிறது. அந்த ஜெந்து கடல் மட்டத்துக்கு 16,000 அடிக்குக் கீழ் உள்ளது. அதற்கு ஆப்லபாரெஸ் க்ரிமால்டி (Oplaphorus Grimaldi) என்று பெயரிட்டிருக்கிறார்கள். அதன் வாய்க்கு ஸமீபத்தில் இரண்டு த்வாரமுண்டு. அதிலிருந்து ஒரு த்ராவகம்போன்ற வஸ்துவை வெளியிடும். அந்தத் த்ராவகம் உப்பு ஜலத்திற் கலந்தவுடன் ஒரு நேர்த்தியும் மங்களுமான நீல வெளிச்சமுண்டாகும். அது வஸிக்கும் அகாத ஆழத்தில் எங்கு மிருட்டாயிருக்கும். அது எதையாவது பார்க்கவிரும்பினால், உடனே அவ்வாறான த்ராவகத்தை வெளியிட்டு வெளிச்சம் உண்டு பண்ணிக்கொள்ளும். சிறு ப்ராணிகளை ஆகாரத்துக்குத் தேடிக்கொள்ளவேண்டிய ஸமயத்திலும் அவ்வாறு செய்யும்.

### Old Fashioned Printing.

பழைய வழக்கப்படி அச்சடித்தல்.—தற்காலம் அச்சடிப்பதில் ஒவ்வொரு தனித்தனி எழுத்துக்கும், எழுத்தின் தனித்தனி பாகங்களுக்கும் தனித்தனி அச்சுகள் வார்த்து அவைகளை வேண்டியபடி ஒன்றாய்ச் சேர்த்து உபயோகிப்பது வழக்கம். 'உபயோகம்' என்னும் வார்த்தையை அச்சடிக்க வேண்டுமென்றால், உ,ப,யே,ா,க,ம், என்னும் ஏழு வடிவங்களுக்கு ஏழு ப்ரத்யேகமான அச்சுகளை எடுத்து ஒன்றுசேர்த்து அச்சடிப்பார்கள். இப்படியே எல்லா வார்த்தைகளையும் வாக்யங்களையும் ஒவ்வொரு எழுத்தாகச்சேர்த்து அந்த எழுத்துக்களின்மேல் மைதடவி கடுதாசியில் அச்சடிப்பார்கள். ஆனால் முற்காலத்தில் சில தேசங்களில், முக்யமாய், டிபெட், சீனாமுதலிய தேசங்களில், அச்சடிக்க வேண்டியவைகளை யெல்லாம் தலைகீழாக ஒரேமரக்கட்டையில் செதுக்கி அச்சடித்து வந்தார்கள். தற்காலத்திலும் திபேத், ஸைபீரியா என்னும் தேசங்களிலுள்ள பௌத்தசமய குருக்கள் அச்சடிக்க வேண்டியிருக்கும் விஷயங்களை பக்கம் பக்கமாக மரக் கட்டைகளில் செதுக்கி அச்சடிக்கிறார்களாம்.

### Sea Birds.

கடல் பறவைகள்.—கடல் பறவைகளில் சில ஜாதிகள் சில ஸமயங்களில் வாரக்கணக்காக ஸமுத்ரங்களிலேயே பறந்துகொண்டிருக்கின்றனவாம். இவைகள் தாகமாயிருக்கும்போது வானத்திலிருந்து விழும் மழைஜலத்தைக் குடித்து தாகசாந்தி யடைகின்றனவென்று சிலர் நம்புகிறார்கள். இவைகளுக்கு கண்பார்வை ரொம்ப கூர்மையானது. இவைகள் மழையும் காற்றும் உண்டாவதற்கு சற்று முன்னால் மேகங்களுக்கு அடியில் கூட்டங் கூட்டமாய் பறந்துகொண்டிருக்குமாம். மேகங்களிலிருந்து மழைத்துளிகள் விழும்போது பறவைகள் அந்த மழைத்துளிகளை அலகில் ஏந்திக் குடிக்கின்றனவென்று சிலர் சொல்லுகிறார்கள்.

### Eating Sweets in Theatres.

நாடகசாலைகளில் மிட்டாய்கள் தின்பது.—மேல் நாடுகளில், முக்யமாய் பாரிஸ் பட்டணத்தில், நாடகம் பார்க்கப்போகும் ஸ்த்ரீகள், நாடகம் பார்க்கும்போது தின்றுகொண்டிருப்பதற்காக மிட்டாய்கள் எடுத்துக் கொண்டுபோவது வழக்கமாம். ஆனால் சிலருக்கு மிட்டாய்களைக் கொண்டுபோய்த் தின்பது கௌரவக்குறைவாகத் தோன்றும். தின்னாமலு மிருப்பது ச்ரமமாயிருக்கும். இப்போது அதிக நாகரீகமுள்ள சில ஸ்த்ரீகள் நாடகசாலைகளுக்கு மிட்டாய் முதலிய தின்பண்டங்கள் கொண்டுபோவதில்லை. பார்வைக்குப் புஷ்பக் கொத்துகளைப்போ லிருக்கும்படி செய்த மிட்டாய்களை அந்த ஸ்த்ரீகளோடு துணைக்குவரும் புருஷர்கள் கொண்டு போகிறார்களாம். ஸ்த்ரீகள் அதை வாங்கி மடியில் வைத்துக்கொண்டு புஷ்ப இதழ்களைத் தின்பதுபோல அந்த புஷ்ப மிட்டாய்களைத் தின்னுகிறார்களாம்.

# MISCELLANEOUS NEWS.

## நாநா ஸங்கதி.

### Discovery of Silk.

**பட்டு முதல் முதலில் கண்டு பிடிக்கப்பட்ட விவரம்.**—சீனுவில் தான் முதல் முதல் பட்டுப்பூச்சி கண்டு பிடிக்கப்பட்டதாம். அங்குதான் முதலில் பட்டு நூலெடுத்து நெய்ய ஆரம்பித்தார்களாம். அது முதலில் கண்டு பிடிக்கப்பட்ட விவரம் சீனர்கள் சொல்லுகிறபடி பின்வருமாறு:

ஸுமார் 4550-வர்ஷங்களுக்கு முன்னுல் சீனுவில் சக்ரவர்த்தினியாயிருந்த ஸிலிங் சி என்பவர் ஒரு நாள் தமது அரண்மனைத் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருக்கையில் ஒரு பசுமையான புழு முசுக்கட்டைச் செடியின் இலையில் ஊர்ந்து அதைத்தின்று கொண்டிருக்கக் கண்டார். அதைக்கண்டு ஆச்சரியமடைந்து தினந்தோறும் அவர் அங்கே வந்து அந்தப் புழு இலைதின்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்தப் புழு தினந்தோறும் கொஞ்சங் கொஞ்சமாய் வளர்ந்து கடைசியில் ஒரு பட்டுக் கூடுசெய்து தன்னை மூடிக்கொண்டது. இதை அவர் சக்ரவர்த்தியிடம் தெரிவிக்க அவர் அந்தப் பட்டுக்கூட்டை எடுத்து நூலைப்பிரித்து வஸ்த்ரம் நெய்ய உபயோகிக்கும்படி செய்தார். அதுதான் முதல் பட்டு வஸ்த்ரம் ஆகும்.

அது முதல் சீனர்கள் பட்டுத்தொழிலை ஒருவருக்கும் கற்றுக் கொடுக்காமல் ரகஸ்யமாய் வைத்திருந்தார்கள். இதரதேசங்களிலிருந்து வ்யாபாரிகள் அந்த தேசத்துக்கு வந்துப் பணங்கொடுத்துப் பட்டு வாங்கிப் போனுர்கள்.

ஆரும் நூற்றுண்டில் இரண்டு ஐரோப்பிய ஸன்யாஸிகள் சீனுவுக்குப்போய் அங்கிருந்து சிலபட்டுப்புழு முட்டைகளைத் தமது தடிகளில் மறைத்து வைத்துக் கொண்டு ஐரோப்பாவுக்குப்போய், அவைகளை கிழக்கு ரோமன் ராஜ்யத்து சக்ரவர்த்தியிடம் கொடுத்தார்கள். அந்தச் சக்ரவர்த்தி அந்த முட்டைகளிலிருந்து பட்டுப்புழுவும், பட்டும் உற்பத்திசெய்து, பட்டுத்தொழிலை வ்ருத்தி செய்தார். அந்தச் சக்ரவர்த்தி பட்டுத்தொழில் பிறதேசங்களுக்குப் போகாதபடி பார்த்து வந்தார். அவர் இறந்துபோனபிறகு ஐரோப்பா கண்டத்தில் பட்டுத் தொழில் பரவி வ்ருத்தியடையலாயிற்று.

பட்டுப் புழுக்களில் அநேகவிதம் உண்டு. இங்கு சொன்னது முசுக்கட்டைப் பட்டுப்புழுவாகும். இந்தப் பட்டுப் புழு பட்டுக்கூடு கட்டியானதும், புழு பூச்சியாக வெளி வருவதற்கு முன்னுல், கூட்டை வெந்நீரில் போட்டு புழுவைக்கொன்று கூட்டின் பட்டு இழையைப் பிரித்தெடுக்க வேண்டும்.

எரி அல்லது எண்டிபட்டுப் புழு என்று ஒரு பட்டுப் புழு இருக்கிறது. இதன் ஆகாரம் ஸாதாரண ஆமணக்கின் இலையாகும். இந்தப் புழுவின் கூட்டிலிருந்து பட்டெடுக்க புழுவை வெந்நீரில் போட்டுக் கொல்லவேண்டிய தில்லை. புழு தானுகவே பூச்சியாக வெளியில் வந்த பிறகு பட்டுக்கூட்டை சுத்தம் செய்து பட்டை எடுத்து, நூல் நூற்கும் கதிரினுல் பட்டு நூல் நூற்றுக் கொள்ளலாம். அஸ்ஸாமிலும் வேறு சில இந்திய ஜில்லாக்களிலும் உள்ள ஸாமான்ய ஜனங்கள் தங்கள் வீடுகளில் எரி பட்டுப் புழுவை வளர்த்து லாபமடைகிறுர்கள். டஸ்ஸுர் பட்டென்று ஒருவிதப் பட்டும் இருக்கிறது.

### Longevity of German Commanders

**ஜெர்மன் சேனைத்தலைவர்களின் வயது.**—நமது நாட்டிலே எவருக்காவது வயது 50, 60 ஆய்விட்டால், அவர்களைப் பழுத்த கிழவர்களென்றும், திடபுத்தி யில்லாதவர்களென்றும் சிலர் நினைக்கிறுர்கள். அவ்வாறு 50, 60 வயதாய்விட்டவர்களிற் பலரும் பல்விழுந்து தடியூன்றி நடக்கிறுர்கள். ஆனுல் மேல் நாட்டில் 50,60 வயஸு கிழத்தனத்தைக்காட்டாது. தற்போது யுத்தகளத்தில் இருகக்ஷியிலும் 60-வயஸுக்கு மேல்பட்ட தளகர்த்தர்கள் அநேகர் இருக்கிறுர்கள்.

துருக்கியரின் சேனையைச் சீர்திருத்தி, டார்ட்னல்ஸ் ஜலஸந்திக் கரையைப் பலமாகப் பந்தோபஸ்து செய்து அங்கே துருக்கியின் சேனையை நடத்திவருவதாகச் சொல்லப்படும் வான் டர் கோல்ட்ஸ் என்னும் ஜெர்மன் தளகர்த்தருக்கு இப்பொழுது வயது 72-ஆகிறது.

கிழக்காங்கத்தில் ஜெர்மன் சேனுதிபதியாய் இருந்து ஜெர்மானியரால் ப்ரமாதமாகக் கொண்டாடப்படும் வான் ஹிண்டன்பர்க் என்பவர் இப்பொழுது 68 வயதுடையவர். பெல்ஜியத்தின் வடமேற்கிலிருந்து ப்ரான்ஸின்மீது படையெடுத்துச்சென்று பாரிஸை நெருங்கியும் உடனே திரும்பிவிட்ட வான் க்ளக் என்பவரின் வயது 69. அவர் இப்பொழுது மேற்காங்கத்தில் சேனைத்தலைமை வகித்து வருகிறுர். கலிஷ்யாவிலே



ஜெர்மன் சேனைகளின் தலைமையை வகித்து, லெம்பர்க் ப்ரிஸமில் முதலிய கோட்டைகளை ரஷ்யரிடமிருந்து மீட்டு, ருஷ்யாவுக்குள் ப்ரமாதமாய்ப் படையெடுத்துச் சென்று, பீரங்கிகளையே நம்பிப் புது மாதிரியாய்ப் போரை நடத்திவந்த வான் மாகன்ஸன் என்பவர் 66-வயது கொண்டவர்.

போலண்டின் தலை நகரமான வார்ஸாவுக்குள் முதன் முதல் புகுந்து ரஷ்யரிடம் போர்புரிந்துவரும் பவேரிய நாட்டு அரசராகிய ப்ரின்ஸ் லெப்பெல்ட் என்பவருக்கு வயது இப்பொழுது 69 ஆகிறது. யுத்த ஆரம்பத்திலே சீப் அப் தி ஜெனரல் ஸ்டாபாக இருந்த வான் மோல்ட்கே என்பவருக்கு வயது 67. லீயஜ்கோட்டையைப் பிடித்துஅதற்குள் ப்ரவேசித்த வான் எம்மிச் என்பவருக்கும் வயது 67. ஆண்ட்வர்ப் கோட்டையை முற்றுகை போட்டு அதைப் பிடித்த வான் பேஸ்லர் என்பவர் 79-வயதுள்ளவர். வான் ஹிண்டன்பர்க் என்பவருடன் உதவியாய் சேனைத்தலைமை பூண்டிருக்கும் வான்புலோ என்பவருக்கு வயது 71 ஆகும். வான் மோல்ட்கே என்பவருக்குப் பதிலாய் சீப் அப் ஜெனரல் ஸ்டாபாக நியமிக்கப்பட்ட வான் பாகன்ஹீன் என்பவருக்கு வயது 71. ஸெப்பலின் என்னும் ஆகாயக் கப்பல்களைக் கண்டு பிடித்துக் கட்டிய கௌண்ட் ஸெப்பலின் என்பவருக்கு வயது 80-ஆகிறது. இன்னமும் அவர் அக்கப்பல் விஷயமாய்த் திருத்தங்கள் செய்து வருகிறுர். பவேரியா, வுர்டம்பர்க், ப்ரஷ்ஷியா ஆகிய இந்நாடுகளின் இளவரசர்களுக்கு முறையே வயது 46, 50, 33 ஆகும். அம்மூவரில் ஜெர்மன் இளவரசரே மற்ற இருவரிலும் குறைந்த வயதுள்ளவர்.

### A Metal Harder than Diamond.

**வைரத்தைவிடக் கெட்டியான ஒரு உலோகம்.**—ஜனங்கள் வைரத்தைவிடக் கெட்டியான பதார்த்தம் கிடையாது என்றே எண்ணி வருகிறுர்கள். நம் நாட்டிலும் நல்ல கெட்டியான மரத்துக்கும் வைரம் பாய்ந்த மரம் என்று கூறுவது இயல்பு. இதைவிட கெட்டியான பதார்த்தம் ஒன்று இருப்பதாக தெரியவருகிறது. இது டாண்டலம் என்னும் அபூர்வ உலோகம். இதன் கெட்டியான குணத்தை ஒரு த்ருஷ்டாந்தத்தால் கூறுவோம். இதன் ஒரு லேசான தகட்டை வைரச்சாணையில் வைத்து இரவும் பகலும் மூன்று நாள் வேலைசெய்து பார்த்ததில் டாண்டலத்தில் ஒரு கோடு கிழித்திருந்தது. வைரம் தேய்ந்து போயிற்றெனக் கண்டார்கள். டாண்டலம் உண்டாக்குவது மிகவும் கஷ்டம். ஆனுல் அதிகமாய்க் கிடைக்கக் கூடுமானுல் மிகவும் உபயோகமான வஸ்துவாயிருக்கும். அதன் பலஉபயோகங்களுள் ஒன்று வைரத்தை வெட்டுவது. இப்பொழுது வைரத்தை வெட்ட வைர ஊசி வேண்டியிருக்கிறது. மின்சார விளக்குக்கு வேண்டிய பிலமெண்டு ஸாமானைச் செய்யவும் இது உதவும். இந்த உலோகம் சிறிதும் உடையக்கூடிய தல்ல; மிகவும் கெட்டியானது.

### The Guns of thé " Emden "

**எம்டன் பீரங்கிகள்.**—ஆஸ்ட்ரேலியா தேசத்துக் கப்பல் படையைச் சேர்ந்த 'ஸிட்னி' என்ற க்ருஸர் 'எம்டன்' என்ற ஜெர்மன் கப்பலின் மீது பீரங்கிகளை ப்ரயோகஞ் செய்து 'எம்டனை' மூழ்கடிக்கச் செய்தது. 'எம்டன்' கப்பல் பீரங்கிகளுடன் கடலில் மூழ்கிப் போகவே அதிலிருந்த பீரங்கிகள் ஸமுத்ரத்திலிருந்து எடுக்கப்பட்டு ஆஸ்ட்ரேலியாவுக்கு கொண்டு போய்ச் சேர்க்கப் பட்டன. அந்தப் பீரங்கிகளில் ஒன்று லண்டனில் வைக்கப்பட்டிருக்கிறது. 'எம்டன்' கப்பல் சென்னையைத் தாக்கின படியால், 'எம்டன்' பீரங்கிகளில் ஒன்றைச் சென்னைக்கு அதிருதியாக அனுப்ப வேண்டுமென்று சென்னை போர்ட் ட்ரஸ்டாரும் சென்னை வ்யாபார ஸங்கத்தாரும், சென்னைக் கார்பொரேஷன் அதிகாரிகளும், தென்னிந்தியா வ்யாபார ஸங்கத்தாரும் ஒன்று சேர்ந்து ஆஸ்ட்ரேலியா கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொண்டிருக்கிறுர்கள்.

### Gluttony.

**போஜன ப்ரியம்.**—சாப்பாட்டில் கோழி கொறிக்கிறது போல் சாப்பிடுகிறவர்கள் அநேகர் இருக்கிறுர்கள். மனிதர்கள் குக்ஷியை நிரப்புவதற் கென்றே உத்யோகம் முதலியன செய்கிறுர்கள். அந்தச் சாண் வயிற்றுக்கும் வஞ்சனை பண்ணுகிறவர்களும் அநேகர் உண்டு. வட இந்தியாவில் முந்தி ஷெ்டு .......ன், பீஹாரில் ராமலால் ஸர்மாவின் ஜ்யேஷ்ட ஸஹோதரனின் ச்ராத்த காரியம் நடந்தேறிற்று. 500-ப்ராமணர்களுக்குப் போஜனம் செய்விக்கப்பட்டது. 200-பக்கிரிகளுக்கும் ஆகாரம் கொடுக்கப்பட்டது. இவர்களுள் அஸுர போஜனக்காரன் ஒருவன் இருந்

தான். அவன் ஸுமார் 16-பவுண்டு நிறையுள்ள 80-பூரிகளைத் தின்றான். பூரிகள் வயிற்றில் பூர்த்தியான பிற்பாடு 4-பவுண்டு பருப்பும் சருக்கரையும் உண்டான். இவனன்றோ அஸுர போஜனக்காரன்.

## Trenches in the Western Front.

**மேற்குப் போர் முகத்தில் கிடங்குகள்.**—ப்ரான்ஸின் வடக்குக் கோடியிலே வடகடலிருந்து, தெற்கே ஸ்விட்ஸர்லண்ட் தேசம் வரையிலுள்ள மேற்கரங்கத்தின் நீளம் ஸுமார் 500-மைலாகும். அங்கே போர் முனை நெடுக ஒரு பக்கத்தில் ப்ராஞ்சு பிரிட்டிஷ் துருப்புகளும், மற்றொரு பக்கத்தில் ஜெர்மன் துருப்புகளுமாக அணிவகுத்து நின்று, கிடங்குகளில் தங்கியிருந்து போர் புரிந்து வருவதை நேயர்கள் அறிவர். இரு பக்கத்தாரும் அந்த 500-மைல் தூரத்தில் ஒன்றன் பின் ஒன்றாகப் பலவரிசை கிடங்குகளைக் கட்டியிருக்கிறார்கள். அவ்வாறு 500-மைல் தூரத்திலும் சேசத்துருப்புகள் ஒன்றன்பின் ஒன்றாக 10-ஆயிரம் மைல் நீளமுள்ள அரண்களைக் கட்டியிருக்கிறார்களென்று தெரிகிறது.

## The Madras Exhibition.

**சென்னைப் பொருள் காட்சி.**—சென்ற டிஸம்பர் மாஸம் 27-ந் தேதி முதல் ஜனவரி மாஸம் 16-ந் தேதி முடிய சென்னையில் பீபிள்ஸ் பார்க் சந்தையை ஒட்டி ஒரு பொருள்காட்சி நடத்தப்பட்டது. இந்தப் பொருள் காட்சியில் விவஸாயம், காட்டுப் பொருள்கள், மீன் தொழில், கைத்தொழில்கள், சித்ரக் கைத்தொழில்கள், ஸுகாதாரம், க்ராமக் கைத் தொழில்கள் முதலியவைகள் ஸம்பந்தமாக அநேக இயற்கைப் பொருள்களும், செயற்கைப் பொருள்களும், யந்த்ரங்களும், வைக்கப்பட்டிருந்தன. காட்சி நடந்த நாட்களில் சிலவற்றில் விவஸாயம், கைத் தொழில்கள் ஸுகாதாரம் ஆகிய இவை ஸம்பந்தமான விஷயங்களைப் பற்றி ப்ரஸங்கங்கள் நடந்தன. இந்தப் பொருள் காட்சிக்கு திருவாங்கூர் கவர்ன்மெண்டாரும், கொச்சி கவர்ன்மெண்டாரும் அநேக காட்சிப் பொருள்கள் அனுப்பியிருந்தார்கள்.

## Air-craft in Germany.

**ஜெர்மனியில் ஆகாய விமானிகள்.**—யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னால் ஜெர்மனிக்கு 1500-ஏரோப்ளேன்களும், 40-ஸெப்பலின் என்னும் ஆகாயக் கப்பல்களும் இருந்தனவாம். இவைகளில் அநேகம் ஜெர்மனியில் ரகஸ்யமாய்க் கட்டப் பட்டனவாம். இதனால் அநேகருக்கு ஜெர்மனியின் ஆகாயப்படைப் பலம் இவ்வளவு என்பது தெரியாமலிருந்தது. யுத்தத்தின் முதல் வருஷத்தில் ஜெர்மனிக்கு 170-ஏரோப்ளேன்கள் சேதமாயின. இதில் 74 ஏரோ ப்ளேன்கள் ரஷ்யப் போர் முகத்தில் சேதமாயின. ஸெப்பலின் ஆகாயக் கப்பல்களில் 14 ரஷ்யப் போர் முகத்தில் சேதமாயினவாம்.

## Wood Pulp Trenches.

**மரக்கூழால் கிடங்குகள்.**—போர்க்களத்தில் கிடங்குகள் தோண்டும் போது, கையில் என்ன ஸாமான்கள் கிடைக்குமோ அவைகளைக் கொண்டு கிடங்குகளை சீர்ப்படுத்துவார்கள். ப்ரான்ஸின் வட பாகத்தில் ஒரு ஜெர்மன் ரெஜிமெண்ட் ஒரு கடுதாசிக் கூழ்ச்சாலைக்குப் பக்கத்தில் தங்கியிருந்தது. அந்த ரெஜிமெண்டிலுள்ளவர்கள் கடுதாசிக் கூழைக் கொண்டு கிடங்குகளை சீர்ப்படுத்தினதோடு, பின் கிடங்குகளிலும் படிக்கட்டுகள், பீரங்கி த்வாரங்கள் முதலியவைகள் கட்டுவதற்கு கடுதாசிக்கூழையே உபயோகித் திருக்கிறார்களாம்.

## Jayankondac holapuram Trichinopoly Ry.

ஜெயங்கொண்ட சோழபுரம் திருச்சிறுப்பள்ளி ரெயில்வே.—பண்ருட்டியி லிருந்து திருச்சிறுப்பள்ளிக்கு ஒரு ரெயில்வே போடுவதாக ஒரு ப்ரேரணை இருந்து வருவதைப்பற்றி நேயர்கள் பலர் அறிந்திருப்பார்கள். இந்த ரெயில்வே திருச்சிறுப்பள்ளிக்கு வருமிடத்தில் ஸந்திக்கும்படியாக திருச்சிக்குப் பக்கத்தில் கொள்ளிடத்தின் வட கரையில் ஓரிடத்திலிருந்து உடையார் பாளையத்திலுள்ள ஜெயங்கொண்ட சோழபுரத்துக்கு ரெயில்வே போடுவதற்காக ஸர்வே செய்ய ரெயில்வே போர்டார் ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள். இந்த ரெயில்வேயின் நீளம் ஸுமார் 50-மைலாகும்.



# DIARY OF THE MONTH.

# மாஸ வர்த்தமானம்.

## THE WAR IN EUROPE.

## ஐரோப்பிய யுத்தம்.

ஜனவரி 17-தேதி.

ரஷ்யர்கள் கெர்மான்ஷாவுக்குப் போகும் வழியில் கான்வார் என்னும் இடத்தைப் பிடித்தார்கள்.

மாண்டிநிக்ரர்கள் ஸெட்டிஞ்ஜை விட்டுவிட்டு தெற்கிலும் மேற்கிலும் ஓடினார்கள். ஆஸ்ட்ரியர்கள் ஸ்பிஸ்ஸா என்னும் ஊரைப் பிடித்தார்கள்.

20-தேதி.

மாண்டிநிக்ரோ இன்னும் கீழ்ப்படியவில்லையென்று தெரிகிறது. மாண்டிநிக்ரர்கள் இன்னும் யுத்தம் செய்து வருகிறார்கள். மாண்டிநிக்ர அரசரின் மனைவியும் அவருடைய புத்ரிகளும் இட்டலிக்குப் போயிருக்கிறார்கள்.

ஸெர்விய கவர்ன்மெண்டார் கார்பூவுக்கு வந்திருக்கிறார்கள்.

காகேஷ்யாவில் டார்ட்டம் எரிக்கும் ஷாரியன் நதிக்கும் நடுவில் உள்ள 60 மைல் நீளமுள்ள போர்முகத்தில் ரஷ்யர்கள் துருக்கியர்களைத் தோற்கடித்தார்கள். எதிரிகள் எர்ஸிரம் என்னும் இடத்தை நோக்கிப் பின் வாங்கினார்கள். எர்ஸிரமுக்கு 33 மைல் கிழக்கிலுள்ள காப்ரிகினியை ரஷ்யர்கள் பிடித்திருக்கிறார்கள்.

21-தேதி.

கெய்ஸரும் பல்கேரியாவின் அரசரும் ஸந்தித்தபோது, பல்கேரிய அரசர் கெய்ஸருக்கு தைர்யத்துக்காகக் கொடுக்கப்படும் பல்கேரிய க்ராண்ட் க்ராஸ் என்னும் விருதையளித்தார். பல்கேரியர்களும் ஜெர்மானியர்களும் பரஸ்பரம் விருதுகள் கொடுத்தார்கள்.

24-தேதி.

துருக்கியர்கள் எர்ஸிரம் என்னும் பட்டணத்தை நோக்கிப் பின்வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

பெர்ஸியாஎன்னும் ப்ரிட்டிஷ் தபால்கப்பலை ஆஸ்ட்ரிய ஸப்மரீன்கப்பல் ஒன்றும்மூழ்கடிக்கவில்லையென்று ஆஸ்ட்ரியா தெரிவித்திருக்கிறது.

25-தேதி.

32 ப்ரெஞ்ச் ஏரோப்ளேன்கள் மொனஸ்டரிலுள்ள கண்டேன்மெண்டையும் கெல்க்லி என்னும் ஊரையும் தாக்கின.

ரஷ்யர்கள் எர்ஸிரம் கோட்டைகளை இடைவிடாமல் தாக்குகிறார்கள். வான் ஏரிக்கு வடக்கில் குர்ட் ஜாதியார்சேர்ந்த ஒரு படை ரஷ்யர்களால் தோற்கடிக்கப்பட்டது.

ஸர்ஜான் ப்ரெஞ்சுக்கு வைகௌண்ட்பட்டம் கிடைத்திருக்கிறது. இனிமேல் அவர் பெயர் வைகௌண்ட் (லார்ட்) ப்ரெஞ்ச் அப் யிப்ரஸ்.

26-தேதி.

2 ஜெர்மன் ஏரோப்ளேன்கள் டன்கர்க்கின்மேல் பறந்துபோய் வெடிகுண்டுகள் போட்டன.

ரஷ்யர்கள் எர்ஸிரம் ப்ரதேசத்தில் துருக்கியர்களைத் துரத்திக்கொண்டு வருகிறார்கள்.

27-தேதி.

ஆஸ்ட்ரிய சக்ரவர்த்தியின் தேகஸ்திதி ரொம்ப கவலைக்கிடமாயிருக்கிறதென்றும், அவர் நாளுக்கு நாள் மெலிந்துவருகிறாரென்றும் சொல்லப்படுகிறது.

29-தேதி

அல்பேனியாவிலுள்ள ஜனத்தலைவராகிய எஸ்ஸட் பாஷா வலோனாவிலுள்ள இட்டாலியர்களோடு சேர்ந்து கொண்டு தெற்கு அல்பேனியாவிலுள்ள முக்யமான இடங்களை பலப்படுத்திவருகிறாராம்.

ரஷ்யர்கள் காகேஷ்யாவிலுள்ள மெலாஸ் கெர்ட் ப்ரதேசத்தில் ஒரு பெரிய துருக்கியப்படையைத் தோற்கடித்தார்கள். அவர்கள் எர்ஸிரமுக்கும் மஷுக்கும் மத்தியில் க்ரிஸ் காலா என்னும் ஊரைப் பிடித்துக்கொண்டார்கள்.

பிப்ரவரி 1-தேதி.

ரஷ்யர்கள் ஒருவாரமாக யுத்தம் செய்து 60 மைல் நீளமுள்ள போர்முகத்திலிருந்து துருக்கியர்களைத் துரத்தியிருக்கிறார்கள்.

2-தேதி.

ப்ரிடரிக்ஸ்டாட் என்னுமிடத்தில் ஜெர்மானியர்கள் ட்ரினா நதியைக்கடக்க முயன்றதை ரஷ்யர்கள் தடுத்து விட்டார்கள். ரஷ்யர்கள் பச்ஸாக்ஸ் என்னுமிடத்தில் ஆஸ்ட்ரியர்களைத் தோற்கடித்தார்கள்.

இந்தியப்படையெடுப்பு ஸைன்யத்தின் தலைவராகிய லெப்டினண்ட் ஜெனரல் ஸர் ஜேம்ஸ் வில்காக்ஸ் என்பவருக்கு ஜெனரல் பதவி கிடைத்திருக்கிறது.

துருக்கியின் இளவரசர் தற்கொலை செய்துகொண்

டாராம். அவர் 'பால்ய துருக்கியர்' என்னும் ராஜாங்கக் கட்சியாருக்கு விரோதமாக இருந்தாரென்றும், அதனால் அவர் கொலைசெய்யப்பட்டாரென்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

ஜெர்மன் ஸெப்பலின்கள் இங்கிலண்டில் டெர்பிஷைர், லீஸ்டர்ஷைர், லிங்கன்ஷைர், ஸ்டாப்போர்ட்ஷைர் என்னும் ஜில்லாக்களிலுள்ளக்ராமங்களில் வெடிகுண்டுகள்போட்டார்கள், 54-பேர்கள் இறந்துபோனார்கள். 67-பேர்கள் காயமடைந்தார்கள்.

ரஷ்யாவின் ப்ரதம மந்த்ரியாகிய மா. காரெமிகின் தேக அஸௌக்யம் காரணமாக ராஜீநாமா செய்துவிட்டார். அவருக்கு பதிலாக மா. ஸ்டர்மர் ப்ரதம மந்த்ரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

3-தேதி.

ரஷ்யர்கள் பாரஸீகத்தில் எதிரிகளை கெங்கோவெண்ட் என்னுமிடத்தை நோக்கித் துரத்தினார்கள்.

4-தேதி.

ஒரு ஜெர்மன் ஸெப்பலின் கப்பல் வடகடலில் மூழ்கிப் போனதாகத் தெரிகிறது.

7-தேதி.

ஆஸ்ட்ரியர்கள் அல்பேனியாவில் க்ரோஜா என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள். அவர்களில் ஒரு ஸைன்யம் இஷ்மி நதிக்குப்போய்ச் சேர்ந்திருக்கிறது.

## INDIAN NEWS.

## இந்திய வர்த்தமானம்

19-தேதி

**லேடி செம்ஸ்போர்ட்.**—அட்வகேட் அப் இந்தியா என்னும் பத்ரிகையின்நிருபர் லேடி செம்ஸ்போர்டைப் போய்ப் பார்வையிட்டபோது, அவர், காலஞ்சென்ற லேடி ஹார்டிஞ்ச் செய்துவந்த ப்ரோபகார வேலைகளை இடையறாமல் தாமும் செய்துவரத் தீர்மானித்திருப்பதாகவும், இந்திய ஸ்த்ரீகளும், குழந்தைகளும் அபிவ்ருத்தியடைவதற்கு வேண்டிய வழிகளைப்பற்றித் தாம் ரொம்பவும் கவனித்து வருவாரென்றும் சொன்னார்.

22-தேதி.

**சென்னை மாகாண கோவாபரேடிவ் கான்பரென்ஸ்.**—சென்னை மாகாண கோவாபரேடிவ் கான்பரென்ஸ் இன்று மதராஸில் கூடிற்று. ப்ரொவின்ஷல் கோவாபரேடிவ் கான்பரென்ஸின் ப்ரெஸிடெண்டாகிய திவான் பகதூர் எம். ஆதிநாராயணய்ய உபசரிப்பு கமிட்டியின் சேர்மனாக இருந்து ப்ரஸங்கம் செய்தார். அனரபில் மிஸ்டர் எ. ஜி. கார்ட்யூ ப்ரெஸிடெண்டாக இருந்து கோவாபரேஷனுடைய அபிவ்ருத்திக்கு என்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றிப் பேசினார்.

**கொள்ளைக்காரர்கள் வாக்குத் தத்தத்தை நிறைவேற்றியது.**—சில நாள்களுக்கு முன்னால் சில கொள்ளைக்காரர்கள் ஆயுதபாணிகளாய் ஒரு இங்கிலீஷ்காரர் வீட்டில் புகுந்து 6000 ரூபாயையும் சில தஸ்தாவேஜிகளையும் திருடிக்கொண்டு போனார்கள். போகும்போது அவர்கள் அந்தக் கடுதாசிகள் தங்களுக்கு ப்ரயோஜனப்படாவிட்டால் திருப்பியனுப்பிவிடுவதாகச் சொல்லிவிட்டுப்போனார்கள். இரண்டு நாள்களுக்குமுன் அவர்கள் அந்தக்கடுதாசிகளை ஒருகூடையில் வைத்து மேலே பழங்களையும் தின்பண்டங்களையும் வைத்து மூடி ஒரு கூலியான்வசம் கொடுத்து அந்த வீட்டாருக்கு அனுப்பினார்கள். வீட்டார் அதைக்கண்டதும் ஆச்சர்யமடைந்தார்கள்.

27-தேதி.

**பங்களூரில் ஒரு சிவிங்கிப் புலி.**—பங்களூர் நகரத்தில் முனிபல் ஆபீஸ். காண்பவுண்டில் இன்று காலை ஒரு மரத்தின்மேல் ஒரு சிவிங்கிப் புலி இருந்தது. அந்த மரத்தில் ஒரு வண்டிக்காரன் தனது மாட்டைக் கட்டும்போது அவன் அதைக்கண்டான். அதன்மேல் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் அதைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றார். சிவிங்கிப்புலி இருக்கும் காடு அந்த ஊருக்கு 15 மைல் தூரமிருப்பதால், அந்த ம்ருகம் எப்படி எவருக்கும் தெரியாமல் பட்டணத்துக்குள் போயிற்றென்பது ரகஸ்யமாயிருக்கிறது.

**பழனியில் ப்ளேக்.**—பழனியில் ப்ளேக் வந்திருப்பதாகவும், யாத்ரிகள் அங்கே அதிகமாய் வருவதில்லையென்றும் தெரிகிறது.

**லார்ட் ஹார்டிஞ்ஜுக்கு எல். எல். டி. பட்டம்.**—லார்ட் ஹார்டிஞ்ஜ் இந்தியாவை விட்டுப் புறப்பட்டுப் போகும்போது அவருக்கு டாக்டர் அப் லாஸ் என்னும் பட்டம் கொடுப்பதாக பம்பாய் யூனிவர்ஸிட்டியார் தீர்மானித்திருக்கிறார்கள்.

**வைஸ்ராய்க்குப் பிரிவு உபசாரப்பத்ரம்.**—வைஸ்ராய் தமது உத்யோகத்தை புது வைஸ்ராய் வசம் ஒப்புவிக்க பம்பாய்க்குவரும்போது அவருக்கு ஒருஉபசரிப்பு நடத்த பம்பாயில் ப்ரயத்தனங்கள் நடந்துவருகின்றன.



இந்தியாமுழுவதிலுமிருந்து ப்ரதிநிதிகளை வரவழைத்து, அவர்களைக்கொண்டு லார்ட் ஹார்டிஞ்ஜுக்கு ஒரு பிரிவு உபசாரப்பத்ரம் வாசித்துக் கொடுக்க வேண்டுமென்று பம்பாயில் அபிப்ராய மிருந்து வருகிறது.

28-ந் தேதி.

**கைதிகள் ஓடி விட்டார்கள்.**—பர்மாவைச் சேர்ந்த மௌல்மீன் ஜெயிலில் உள்ள சில கைதிகள் இன்று ஜெயிலுக்கு வெளியில் ஒரு தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கையில் தப்பி ஓடி விட்டார்கள். பக்கத்திலுள்ள காட்டில் அவர்களைத் தேடியும் அவர்கள் அகப்படவில்லை.

**ஒரு தலைமை உபாத்யாயர் கொலை செய்யப்பட்டது.**—வங்காளத்தில் மால்டா என்னும் ஊரிலுள்ள ஜில்லா ஹைஸ்கூல் தலைமை உபாத்யாயர் இன்று பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குப் போய்க்கொண்டிருக்கையில் சில மாணவர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு கத்தியாலும் ஈட்டியாலும் குத்திக் காயப்படுத்தினார்கள். தலைமை உபாத்யாயரை ஆஸ்பத்ரிக்குக் கொண்டு போனவுடன் அவர் இறந்து போய் விட்டார்.

**மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி.**—இன்று மிஸ்டர் தாதாபாய் நௌரோஜிக்கு கல்கத்தா யூனிவர்ஸிட்டியார் எல். எல். டி. என்னும் வித்யா பட்டம் கொடுத்தார்கள். இனிமேல் அவருடைய பெயர் டாக்டர் தாதாபாய் நௌரோஜியாகும்.

30-தேதி

**இரட்டைக் கொலை.**-வங்காளத்தைச் சேர்ந்த ஜெஸ்ஸூர் ஜில்லாவில் ஒரு மகம்மதியன் தன் மேல் மனஸ்தபம் கொண்டிருந்த இரண்டு மகமதியர்களை, அவர்கள் ஒரு க்ராம ரஸ்தாவின் வழியாகப் போய்க்கொண்டிருந்தபோது ஒரு செடி மறைவில் மறைந்திருந்து ஸமயம் பார்த்து வெளியில்வந்து துப்பாக்கியால் சுட்டுக் கொன்றான். கொன்ற பிறகு அவன் எங்கேயோ தப்பி ஓடிவிட்டான்.

பிப்ரவரிமீ 3-தேதி.

**பாட்னா ஹைக்கோர்ட்.**—பேஹார் ஒரிஸ்ஸா மாகாணங்களில் பாட்னாவில் உள்ள ஹைக்கோர்ட்டை லார்ட் ஹார்டிஞ்ஜ் இன்று திறந்துவைத்தார்.

4-தேதி.

**ஹிந்து யூனிவர்ஸிட்டி.**—இன்று வைஸ்ராய் லார்ட் ஹார்டிஞ்ஜ் காசிக்குப்பக்கத்தில் நக்வா என்னுமிடத்திலுள்ள ஹிந்து யூனிவர்ஸிட்டிக் கட்டிடத்துக்கு அஸ்திவாரக்கல்லை நாட்டினார்.

# SEASON

# கால ஸ்திதி

## Rainfall.

மழை.—1915ஞு எப்ரல்மீ 1உ யி லிருந்து 1915ஞு பிப்ரவரிமீ 4உ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை. அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை. அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 61·61 | 43·83 |
| வால்டேர் | 52·48 | 36·02 |
| காக்கினாடா | 46·06 | 38·04 |
| மஸூலிப்பட்டணம் | 61·04 | 39·36 |
| நெல்லூர் | 51·83 | 34·70 |
| மதராஸ் | 46·50 | 49·04 |
| கூடலூர் | 31·26 | 49·79 |
| நாகப்பட்டணம் | 37·33 | 52·50 |
| பாம்பன் | 33·72 | 35·08 |
| கொழும்பு | 84·95 | 78·39 |
| திருவனந்தபுரம் | 82·86 | 61·06 |
| கொச்சி | 120·97 | 111·07 |
| கள்ளிக்கோட்டை | 121·09 | 116·27 |
| மங்களூர் | 106·62 | 126·96 |
| மெர்க்காரா | ... | ... |
| ஐதராபாத் | 52·20 | 30·44 |
| பல்லாரி | 32·93 | 19·71 |
| கர்நூல் | 23·05 | 26·48 |
| கடப்பை | 28·97 | 31.45 |
| ஹாஸ்ஸான் | 33·75 | 35·54 |
| பெங்களூர் | 35·11 | 34·81 |
| கொடைக்கானல் | 47·92 | 57·78 |
| உதகமண்டலம் | 63·92 | 54·71 |
| கோயம்புத்தூர் | 22·98 | 21·38 |
| வேலூர் | 40·77 | 44·72 |
| சேலம் | 42·10 | 39·40 |
| திருச்சினாப்பள்ளி | 34·98 | 31·73 |
| புதுக்கோட்டை | 36·45 | 32·60 |
| மதுரை | 40·97 | 33·36 |
| திருநெல்வேலி | 27·11 | 25·25 |

# Calendar—பஞ்சாங்கம்.

| அம்ருதாதி | உதயலக் | அஹஸ் | துலு | இங் | தமி | வாரம் | கலி-5017, சாலி-1838, கொல்ல-1091 பஸலி-1325, இங்கி-1916-பிப்ரவரி-மார்ச்சுமீ } 49-ராக்ஷஸஹூ மாசிமீ { மாகம்-பால்குனம், உத்தராயணம்-சிசிருது ஹிஜரி-1334ஹூ ரப்யூஸானி-ஜமாதிலவ்வல்மீ |
|---|---|---|---|---|---|---|---|
| யோக | நா வி | நா வி | உ | உ | உ | | |
| சி | 4 16 | 29 6 | 9 | 13 | 1 | ஞா | தச-38-1, மிரு-60-0, வை-27-18, தை-4-41, தி-14-8, கும்பதசமீதி, வைசிரா, விருத்யர்க்கம் |
| அசி | 4 7 | 7 | 10 | 14 | 2 | தி | ஏகா-44-37, மிரு-6-4, விஷ்-29-41, வணி-11-20, ரா-0-38, ஸர்வஏகாதசீ |
| மசி | 3 58 | 9 | 11 | 15 | 3 | செ | த்வா-50-49, திரு-13-38, ப்ரீ-31-50, பவ-17-47, ரா-18-5, திலபத்மத்வாதசீ |
| சி | 50 | 10 | 12 | 16 | 4 | பு | த்ர-56-11, புன-20-37, ஆயு-33-28, கவு-23-37, ரா-13-35, ப்ரதோஷம், கல்பாதி |
| அசி | 41 | 11 | 13 | 17 | 5 | வி | சதி-60-0, பூச-26-43, ஸவு-34-20, கர-28-28, த்ரிதினஸ்ப்ருக் |
| ம | 32 | 13 | 14 | 18 | 6 | வெ | சதி-0 26, ஆயி-31-40, சோ-34-16, பத்-32-6, தி-1-30, மாகீ |
| அசி | ஒ23 | 14 | 15 | 19 | 7 | ச | ○-3-27, மக-35-25, அதி-33-17, பால-34-30, தி-3-41, ரா-27-9, மீனாயனம்-55-12-மாகபகுள, இஷ்டி, ஆகாமாவை, மாசிமகம் |
| சிஅ | 15 | 15 | 16 | 20 | 8 | ஞா | ப்ர-5-13, பூர-37-57, சுக-31-19, தை-35-38, சே-0-23, ரா-27-14, மாகபகுளம் |
| சி | 3 6 | 17 | 17 | 21 | 9 | தி | த்வி-5-44, உத்-39-21, திரு-28-27, வணி-35-34, சே-0-29 |
| சி | 2 57 | 19 | 18 | 22 | 10 | செ | த்ரி-5-7, ஹஸ்-39-42, சூல-24-42, பவ-34-26, தி-0-35, ரா-30-16, அலப்யம், ஸங்கடசதுர்த்தீ |
| சி | 49 | 20 | 19 | 23 | 11 | பு | சது-3-28, சித்-39-5, கண்-20-12, கவு-32-17, சே-3-35, ரா-23-28 |
| அசி | 40 | 21 | 20 | 24 | 12 | வி | பஞ்-0-52, ஷஷ்-57-26, சுவா-37-37, வ்ரு-14-59, கர-29-15, ரா-21-47, அவம |
| சி | 31 | 23 | 21 | 25 | 13 | வெ | ஸப்-53-14, விசா-35-22, துரு-9-5, பத்-25-24, ரா-15-33, இராமா |
| சி | 23 | 24 | 22 | 26 | 14 | ச | அஷ்-48-23, அனு-32-27, வ்யா-2-38, ஹர்-55-39, பால-20-53, ரா-16-17, காலாஷ்டமீ, ஏகாஷ்டா, திவாமா |
| மஅ | 14 | 26 | 23 | 27 | 15 | ஞா | நவ-42-59, கேட்-28-58, வஜ்-48-15, தை-15-44, ரா-18-14, கரிநாள் |
| சிஉ | 2 5 | 27 | 24 | 28 | 16 | தி | தச-37-6, மூல-24-57, ஸித்-40-28, வணி-10-5, தி-21-14, ரா-17-48, கரிநாள் |
| சிபி | 1 56 | 28 | 25 | 29 | 17 | செ | ஏகா-30-55, பூரா-20-38, வ்ய-32-28, பவ-4-2, கவு-57-46, ரா-9-40, வ்யசிரா, ஸர்வஏகாதசீ, கரிநாள் |
| அசி | 48 | 30 | 26 | 1 | 18 | பு | த்வா-24-36, உரா-16-9, வரீ-24-21, கர-51-30, தி-25-24, த்வாதசீதி, ப்ரதோஷம், சிரவணத்வாதசீ |
| சி | 39 | 32 | 27 | 2 | 19 | வி | த்ர-18-24, சிர-11-44, பரி-16-20, பத்-45-26, தி-21-1, திதித்வயம், மஹாசிவராத்ரி |
| சி | 30 | 34 | 28 | 3 | 20 | வெ | சதி-12-35, அவி-7-39, சிவ-8-37, சது-39-55, தி-24-32, அமாதிதி, அலப்யம், யுகாதி |
| அம | 22 | 35 | 29 | 4 | 21 | ச | ●-7-26, சத-4-13, சித்-1-26, சாத்-55-0, கிம்-35-12, தி-19-26, பிண்டபிதிரு, இஷ்டி |
| சிஅ | 13 | 36 | 30 | 5 | 22 | ஞா | ப்ர-3-15, பூட்-1-44, சுப-49-35, பால-31-39, தி-25-4, பால்குனசுத்த, சந்திரதர்சனம், இராமா |
| சி | 1 4 | 38 | 1 | 6 | 23 | தி | த்வி-0-23, த்ரி-59-4, உட்-0-31, சுப்-45-21, தை-29-32, ரா-0-50, அவம, திவாமா |
| சி | 0 56 | 39 | 2 | 7 | 24 | செ | சது-59-29, ரே-0-49, ப்ரா-42-27, வணி-29-4, ரா-22-43, சதுர்த்தீவிருத, பௌமசதுர்த்தீ |
| மசி | 47 | 41 | 3 | 8 | 25 | பு | பஞ்-60-0, அசு-2-50, மா-41-0, பவ-30-24, தி-28-7, த்ரிதினஸ்ப்ருக் |
| சிம | 38 | 43 | 4 | 9 | 26 | வி | பஞ்-1-43, பர-6-35, வை-40-52, கவு-33-31, ரா-9-25, வைசிரா-கிருத்திகை, ஷஷ்ட்யுபவாஸம் |
| சிம | 29 | 44 | 5 | 10 | 27 | வெ | ஷஷ்-5-40, கிரு-11-59, விஷ்-41-54, கர-38-12, ரா-26-37 |
| அசி | 21 | 45 | 6 | 11 | 28 | ச | ஸப்-11-1, ரோ-18-41, ப்ரீ-43-49, பத்-44-4, சே-0-20, ரா-4-39, கும்பாஷ்டமீதிதி |
| சி | 0 12 | 29 47 | 7 | 12 | 29 | ஞா | அஷ்-17-16, மிரு-26-10, ஆயு-46-13, பால-50-35, ரா-20-7, அதிதி |

(உதயலக் column: கும்பம்; இங் column: மார்ச்சு; துலு column: ஜமாதிலவ்வல்மீ; தமி column: கும்பமீ)

| | | | |
|---|---|---|---|
| குரு சு | | | ச |
| ர | 20-மே-சு<br>26-கும்-பு | | ௴ச கே |
| பு ரா | | | |
| | | | |

**LORD CHELMSFORD.**
**Viceroy-Elect.**

**லார்ட் செம்ஸ்போர்ட்,**
இந்தியாவின் புது வைஸ்ராய்.
(இவர் அடுத்த ஏப்ரல் மாஸத்தில் வைஸ்ராய் உத்யோகத்தை ஏற்றுக்கொள்வார்.)


# ஜனோபிமானி

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

**THE PEOPLE'S FRIEND.**

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE.'

ஜி. எ. வைத்யராமன், பி. எ.,
பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A.
EDITOR.

புஸ்தகம் 8. Vol. 8. — ராக்ஷஸஹு, மாசிமீ, FEB—MAR, 1916. — ஸஞ்சிகை 2 No. 2.


## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Half-yearly ... | 2 0 0 | ... ... | 3 0 0 |
| Sample copy | 0 6 0 | ... ... | 0 8 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | |
|---|---|---|---|
| 1 Page | ... | 5 0 0 | per month. |
| ½ do | ... | 2 8 0 | do |
| ¼ do | ... | 1 4 0 | do |
| 1/10 do | ... | 1 0 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion, republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, George-town, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணுக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | அந்ய நாடு |
|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 0 0 | ... | 6 0 0 |
| ஆறுமாஸத்துக்கு ... | 2 0 0 | ... | 3 0 0 |
| மாதிரி காபி ... | 0 6 0 | ... | 0 8 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | | 5 0 0 |
| ½ ,, | ,, | ,, | 2 8 0 |
| ¼ ,, | ,, | ,, | 1 4 0 |
| 1/10 ,, | ,, | ,, | 1 0 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேண்டுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருப நேயர்கள் அறியவேண்டும்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்

# ஜனாபிமானி.

புஸ்தகம் 8.] ராக்ஷஸ௵ மாசி௴. [ஸஞ்சிகை 2.

## DECEPTION IN WAR.

## யுத்தத்தில் எதிரிகளை ஏமாற்றுதல்.

ப்ராணிகள் தங்களை எதிர்க்க வரும் மற்ற ப்ராணிகளை ஏமாற்ற பற்பல ஸாதனங்களை அடைந்திருப்பது போலவே, தற்போது நடந்து வரும் யுத்தத்தில் ஒவ்வொரு கக்ஷியாரும் மற்ற கக்ஷியாரை ஏமாற்றி அவர்களைத் தாக்கவும், எதிர்க் கக்ஷியார் தங்களைத் தாக்காமலிருக்கவும் பற்பல ஸாதனங்களைக் கையாடிவருகிறார்கள். யுத்தத்தில் எதிரிகளை எப்படி ஏமாற்றுகிறார்களென்பதற்கு சென்ற அக்டோபர் மாஸத்து ஜனாபிமானியில் 746-ம் பக்கத்தில் சில விவரங்கள் தெரிவித்தோம். இப்போது இன்னும் சில விவரங்கள் கொடுக்கிறோம்.

எதிரிகளை ஏமாற்ற உபயோகிக்கும் ஸாதனங்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். முதலாவது அந்தந்த ப்ரதேசத்தினுடைய சுற்றுப்புறத்தின்வர்ணத்துக்குத்தக்கவாறு வீரர்கள் தக்க வர்ணங்களுள்ள உடைகளைத் தரித்துக்கொள்வதும், ஆயுதங்களுக்குத் தக்க வர்ணங்கள் பூசுவதும்.

இரண்டாவது ஸாமான் வண்டிகள், பெரிய பீரங்கிகள், போர்க்கிடங்குகள், எதிரிகளைக் கவனிப்பதற்கு ஏற்பட்டுள்ள இடங்கள் ஆகியஇவைகளை எதிரிக்குத் தெரியாமல் மறைக்க, அவைகளுக்குப் பக்கத்திலும் அவைகளுக்கு மேலும் மரங்கள், புதர்கள், செடிகளுள்ள வேலிகள், வயல்கள், வைக்கோல் போர்கள் முதலியவைகளைப்போல் அப்போதைக்கப்போது செய்து கொள்வது.

மூன்றாவது என்னவென்றால், அபாயமில்லாத இடத்திலும், பொருள்களிலும் அபாயமிருப்பது போல கற்பிதம் செய்தல்.

சென்ற அக்டோபர் மாஸத்து வ்யாஸத்தில், போர்வீரர்கள் எதிரிகளுக்குத் தெரியாமலிருப்பதற்காக காக்கி என்னும் வர்ணமுள்ள உடைகளையும் வேறு சில வர்ணங்களுள்ள உடுப்புகளையும் தரித்துக் கொள்ளுகிறார்கள் என்று எழுதியிருந்தோம். இந்த வர்ணங்கள் அவ்வளவு ச்லாக்கியமில்லை என்று ஒருவர் தெரிவிக்கிறார். பீல்ட் க்ரே என்னும் ஒருவகை சாம்பல் நிற உடுப்புகள் தான் கிட்டத்திலிருந்து பார்த்தால் கூட கண்ணுக்குத் தெரியாமலிருக்கின்றனவாம். இந்த நிறத்தை உபயோகித்தால் ஸோல்ஜர்கள் தெருக்களிலிருந்தாலும், மூடுபனியிலிருந்தாலும், வயல்களிலிருந்தாலும் பசும்புல் தரைகளிலிருந்தாலும் எதிரிகள் கண்ணுக்குத் தென்படமாட்டார்களாம். இந்த வர்ணமுள்ள உடைகளை ஜெர்மானிய ஸோல்ஜர்கள் தரித்துக் கொண்டிருக்கிறார்களாம்.

பனிக்கட்டிவிழுந்துள்ள ப்ரதேசங்களில் தான் இந்த நிறம் எடுத்துக்காட்டும். ஆனால் அந்த இடங்களில் போகும் போது ராணுவ அதிகாரிகள் வெண்மையான உடுப்புகளை ஸோல்ஜர்களுக்குக் கொடுக்கிறார்களாம். ஜெர்மானியர்கள் இவ்விதம் ஸோல்ஜர்களுடைய உடுப்புகளுக்கு மாத்ரந்தான் இந்த நிறத்தை உபயோகிக்கிறார்களென்பதில்லை. பீரங்கிகள், வண்டிகள், முதலிய யுத்தக்கருவிகளுக்குங்கூட ஸமயோசிதம்போல் பீல்ட்க்ரே வர்ணமோ, வெண்மைவர்ணமோ பூசி எதிரிகளுக்குத் தெரியாதபடி செய்து விடுகிறார்கள்.

யுத்தக்கப்பல்களுக்கும் இந்த மாதிரியே தக்க வர்ணம் பூசிவைக்கிறார்கள். அவைகள் எந்தக்



கடலில் யுத்தம் செய்யவேண்டியிருக்குமோ அந்தக்கடலின் நிறத்துக்கும் வானத்தின் நிறத்துக்கும் ஏற்றவாறு கப்பல்களுக்கு வர்ணம் பூசுவார்கள். வடகடலிலுள்ள ஜெர்மன் யுத்தக்கப்பல்களுக்கு இளம் சாம்பல் வர்ணம் பூசுகிறார்கள். வடகடலிலுள்ள இங்கிலீஷ் கப்பல்களுக்கும் பால்டிக் கடலிலுள்ள ரஷ்யக்கப்பல்களுக்கும் ஆழ்ந்த சாம்பல்வர்ணம் பூசுகிறார்கள். ஆனால் டார்ப்பிடோக்கப்பல்களுக்கு இந்த வர்ணம் பூசுவதில்லை. அவைகள் ராத்ரிக்காலங்களில்தான் வெகுவாய் தாக்குமாதலால் அவைகளுக்கு வேறு வர்ணம் பூசுகிறார்கள். இங்கிலீஷ், ஜெர்மன் டார்ப்பிடோக் கப்பல்களுக்குக் கருப்பு வர்ணம் பூசுகிறார்கள். ரஷ்ய டார்ப்பிடோக் கப்பல்களுக்கும் ஸப்மரீன்களுக்கும ஆழ்ந்த நீல வர்ணம் பூசுகிறார்கள். ரஷ்யக் கருங்கடல் கப்பல் படையைச் சேர்ந்த யுத்தக் கப்பல்களும் க்ரூஸர்களும் இளம் சாம்பல் நிறமாயும், டார்ப்பிடோக் கப்பல்கள் கருஞ்சாம்பல் நிறமாயும், ஸப்மரீன் கப்பல்கள் சாம்பல் நிறமும் பசுமை நிறமும் கலந்தனவாயும் இருக்கும்.

ப்ரான்ஸின் யுத்தக் கப்பல்கள் வெகுவாய் அட்லாண்டிக் ஸமுத்ரத்தில் யுத்தம் செய்யவேண்டியிருக்குமாதலால், அந்த ஸமுத்ரத்தின் நிறத்துக் கேற்ப நீலமும் சாம்பல் நிறமும் கலந்தனவாக வர்ணம் பூசப்படும். ப்ரெஞ்ச் டார்ப்பிடோக் கப்பல்கள் கரும் சாம்பல் நிறமாயும், ஸப்மரீன் கப்பல்கள் பசுமை நிறமாகவும் இருக்கும்.

யுத்தகளத்தில் முன் சொல்லியவாறு பீரங்கிகள், வண்டிகள் முதலியவைகளுக்குத் தக்க வர்ணம் பூசுவதால் தூரத்திலிருக்கும் எதிரிகளுக்கு அவை தெரியாமலிருக்குமென்றாலும் ஆகாய கமனிகள் மேலே பறந்துவந்தால், அவைகளினுடைய உருவங்களைக்கண்டு இருப்பிடத்தையும் அவை யின்னவென்பதையும் கண்டுபிடித்துவிடலாம். இதற்காக பூமியில் பள்ளந்தோண்டி பீரங்கிகளை அவைகளில் வைத்து, மேலே பலகைகளைப் போட்டு மூடி, அந்தப் பலகைகளின் மேல் சுற்றுப்புறத்து நிலத்தின்தன்மைக்கேற்றபடி மண்ணோ, புல், செடி, கொடிகளோ, போட்டு வைப்பார்கள். இப்படிப் போட்டுவைப்பதால் பீரங்கிக் குழாய்களின் வாயைத்தவிர வேறொன்றும் தெரியாது. குழாயின் வாயும் ஆகாயத்திலிருந்து பார்ப்பவர்களுக்குக் கொஞ்சமும் தெரியாது.

பீரங்கிகளை க்ராமங்களுக்குப் பக்கத்தில்வைத்திருந்தால், பீரங்கிகளுக்கு ஸாதாரண கொட்டகைகளும், குடிசைகளும் கட்டி ஆகாய விமானிகளுக்குத் தெரியாமல் மறைத்து விடுவார்கள். தோப்பு துரவுகளுக்குப் பக்கத்தில் பீரங்கிகள் இருந்தால், மரங்களை வெட்டிக் கொண்டுவந்து பீரங்கிகளுக்குப் பக்கத்தில்நட்டு வைத்து ஆகாய விமானிகளுக்கு ஒரு சிறு தோப்புபோல் காணும்படிசெய்து விடுவார்கள். இதனால் ஆகாய விமானிகள் பீரங்கிகளையும் மனிதர்களையும் பார்க்கமுடியாமல் போகும்.

ஆகாயக் கப்பல்களுக்குங் கூட மேகங்களுள்ள வானத்தின் நிறத்தைப்போல் வர்ணம் பூசுவதுண்டு. ஏரோப்ளேன்களுக்கு கண்ணாடி போன்ற சிறகுகளும் அமைப்பதுண்டு.

ஸாமான் வண்டிகளும் பீரங்கி வண்டிகளும் போவது ஆகாய விமானிகளுக்குத் தெரியாமலிருப்பதற்காக அவைகளின்மேல் மரங்களைக் கட்டி வைப்பதுண்டென்று ஏற்கனவே தெரிவித்திருக்கிறோம். ஆகாயக் கப்பல்கள் வரும் சத்தம் கேட்டவுடன் இந்த வண்டிகள் உடனே நின்றுவிடும். ஆகாயத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு இவைகள் காடுகள் போலவும், தோட்டங்கள் போலவும், மரஞ் செடிகள் அடர்த்தியாயுள்ள வேலிகள் போலவும் தோன்றும்.

யுத்த களத்தில் போர்வீரர்கள் தங்களுடைய குல்லாய்களையும், தலைச்சீராக்களையும் கல்பேர்

ணிப் செடி முதலியவைகளின் மேல் வைத்து விடுவதுண்டு. இதைக்கண்ட எதிரிகள் குல்லாய்களையும், தலைச்சிராக்களையுங் கண்டு, ஸோல்ஜர்கள் இருப்பதாக எண்ணி அவைகளைத் தாக்க வருவார்கள். ஸமீபத்தில் மேற்குப் போர்க்களத்தில் ப்ரெஞ்ச் துருப்புகள் டர்னிப் கிழங்குகள் பயிரிட்ட ஒரு வயலில் அந்தச் செடிகளின் மேல் தங்கள் குல்லாய்களை வைத்திருந்தன. ஜெர்மானியர்கள் அங்கே ப்ரெஞ்ச் துருப்புகள் இருப்பதாக எண்ணி பீரங்கிகளைக் கொண்டு குல்லாய்களைத் தாக்கினார்கள்.

ஒரு ஸமயம் ஜெர்மானியர்கள் வைக்கோல் வெட்டும் யந்த்ரங்களை சாய்த்து வைத்து பீரங்கிகளைப் போலிருக்கும்படி செய்தார்கள். அவர்கள் மண்குழாய்களால் பீரங்கிகள்செய்து, அவைகளை உபயோகிக்க உள்ளே வைக்கோலடைத்த சட்டைகளையும் குல்லாய்களையும் பக்கத்தில் மனிதர்கள்போல் நிறுத்தி, எதிரிகளுக்கு வாஸ்தவமான பீரங்கிகளும் மனிதர்களும் இருப்பது போல் காட்டுவது முண்டாம்.

சில ஸமயம் ஜெர்மானியர்கள் தங்களுடைய சனியன்களின்மேல் தலைச்சிராக்களையும் உடுப்புகளையும் வைத்துக்கொண்டு எதிரிகளைத்தாக்கப்போவார்கள். எதிரிகள், ரொம்ப நட்டையானவர்கள் தங்களைத்தாக்க வருவதாக எண்ணி சனியன்மேலுள்ள தலைச்சிராவையும் செட்டையும் குறிபார்த்து உயரமாகச் சுடுவார்கள். இதனால் ஜெர்மானியர்களுக்குள் அதிக ஜனச்சேதம் ஏற்படுவதற்கில்லையாம்.

ஒரு ஸமயம் ரஷ்யர்கள் மிமல் நதியோரமாக உள்ள ஜெர்மன் போர்க்களத்தில் பாராத்துருப்புகள் இன்னவிடத்திலிருக்கின்றன என்பதை அறியும் பொருட்டு, அவர்கள் ஒரு தெப்பத்தில் வைக்கோலால் செய்த மனித உருவங்களை நிறுத்தி போலி பீரங்கியும் அதில் வைத்து, மீமல் நதியில் மிதக்க விட்டார்கள். இதன் நோக்கமென்னவென்றால், ஜெர்மானியப் பாராத்துருப்புகள் இந்த தெப்பத்தைக் கண்டவுடன் எதிரிகள் உண்மையாய்த் தங்களுடைய இருப்பிடத்தை அறிய விரும்புவதாக நினைத்து அந்தத் தெப்பத்தைத் தாக்குமாகையால், ஜெர்மன் பாராத் துருப்புகள் எங்கிருக்கின்றனவென்பதை ரஷ்யர்கள் அறிந்து கொள்ளலாம். ஆனால் ஜெர்மானியர்கள் சீக்ரம் இந்த தந்த்ரத்தை யறிந்துகொண்டு சும்மா இருந்து விட்டார்கள்.

சில சேனைத் தலைவர்கள் எதிரிகளினுடைய ஸங்கேத வார்த்தைகளை, உபயோகித்து அந்த எதிரிகளினுடைய இருப்பிடத்தையும் பலத்தையும் அறிந்துகொள்வதுண்டு. ஒரு ஸமயம் ஒரு ஜெர்மன் பாராத்துருப்பு ஒரு காட்டின் வழியாகப் போய்க்கொண்டிருக்கையில் ஒரு ரஷ்ய பாராக்காரன் அவர்களைப் பார்த்து, "நில்லுங்கள், யார் நீங்கள்?" என்று ஜெர்மன் பாஷையில் கேட்டான். தங்கள் ஸொந்த பாஷையில் பாராக்காரன் பேசுவதைக்கேட்ட ஜெர்மானியர்கள், தாங்கள் இன்னாரென்பதையும், தாங்கள் தங்கள் போர்க்களத்துக்கு முன்னுள்ள ப்ரதேசத்தை ஆராய்ச்சி செய்யப்போவதாகவும் சொன்னார்கள். இப்படிச் சொனனதும் இவர்களை நிறுத்தின பாராக்காரன் ஜெர்மானியனாக இருந்திருந்தால் "போகலாம்" என்று பதில் சொல்லியிருப்பான். ஆனால் அந்தரஷ்ய பாராக்காரன் எதிரிகளின் நிலைமையை அறியவேண்டி நின்றுகொண்டிருந்ததால், "போகலா" மென்று, சொல்லாமல், விஸில் அடித்தான். அதன்மேல் ஜெர்மானியர்களை நோக்கி குண்டுகள் ப்ரயோகிக்கப்பட்டன. ஆனால் ஜெர்மானியர்கள் இந்த தந்த்ரத்தை உடனே அறிந்துகொண்டு ஓடிவிட்டார்கள். இதேமாதிரி ஸம்பவம் ஒன்று 1870-71-ம் வர்ஷத்து ப்ரெஞ்ச்-ஜெர்மானிய யுத்தத்திலும் நடந்தது. ஸெடான் யுத்தத்தில் ப்ரெஞ்ச் துருப்புகள் தோற்றுப்போனபோது, சில ப்ரெஞ்ச் ஸோல்ஜர்கள் காட்டுக்கு ஓடிவிட்டார்கள், அவர்களைப் பிடிப்பதற்காக ஒரு ஜெர்மன்



ஜெனரல் ஒருப்ரெஞ்ச் வாத்யக்காரனைப்பிடித்து ப்ரெஞ்ச் ஸோல்ஜர்களைக்கூப்பிடும் ஒரு ஸங்கேதத்தை பேரிகையில் அடிக்கச்சொன்னார். அவன் அப்படியே செய்ய, காட்டில் ஒளித்திருந்த ப்ரெஞ்ச் ஸோல்ஜர்களெல்லாம் ஜெர்மானியர்கள் இருந்தவிடம்வந்து அகப்பட்டுக் கொண்டார்கள்.

## SHEEP FARMING IN THE TANJORE DISTRICT.

BY G. SESHADRI, B.A.

## தஞ்சாவூர் ஜில்லாவில் ஆடு வளர்க்கும் விதம்.

இவ்வுலகத்தில் கடவுள் ச்ருஷ்டிகளிலெல்லாம் மிகவும் பாவம் பண்ணினதும், புண்யம் செய்ததும், ஆடு தவிர வேறில்லை. அறிவில்லா ம்ருகமென்று அதற்குப் பெயர் வந்தபோதிலும், அது தன்னை வளர்த்த மனிதனிடத்தில் பற்று வைத்து, அவனே தன் சரீரத்தை ப்ரயோஜனப் படுத்தும்படி கொடுத்துவிடுகிற நன்றியறிவுள்ள ப்ராணி. உலகத்திலுள்ள ஸகல ப்ராணிகளிலும் அதன் மாம்ஸத்தை விரும்பாத ஜந்து சில ஹிந்துக்களைத் தவிர, வேறு இல்லை. இந்த வ்யாபாரத்துக்கு, சில தெய்வங்களும் பங்குக்கு வந்து விடுகின்றன. ஆனால் மனிதன் தெய்வத்துக்கென்று சாக்கிட்டு தன்னுடைய ஆசையைத் தீர்க்கிறான். பகலில் ஸொந்தக்காரன், ப்ரியமாக காப்பாற்றினாலும், இரவில் நாய், நரி, சிறுத்தை, இவைகள் எப்போது ஸமயம் வாய்க்குமென்று பார்க்கின்றன. திருடர்கள் ஒன்றும் அகப்படாவிட்டால், ஆட்டைத் திருடிக் கறிக்குக் கொண்டு போவது வழக்கம். ஆனால் மானிட ஜன்மங்களின் வயிற்றில் ஸமாதி வைக்கப்படுகிற புண்யமே, அதற்குப் பெரிய பாக்யம். திருச்சினாப்பள்ளியைப் போல் மகம்மதியர்கள் வஸிக்கும் பெரிய பட்டணங்களில், ஸாயங்காலங்களில், கசாப்புக்கடைக்குப் போகும் ஆட்டு மந்தைகளைப் பார்த்தால், இவ்வளவு ப்ராணிகள் ஒவ்வொரு நாளைக்கும் பலியாகுமானால், அங்கேயுள்ள ஆடுகளெல்லாம் சீக்ரம் நாசமாகி விடுமென்று நினைக்க ஹேதுவாகும்.

இவைகள் இப்படி மடிந்துபோனாலும், எப்படி இவைகளை வளர்க்கலாமென்று யோசிப்போம். ஆடு, நல்ல திடல்களிலும், மலைச்சாரலிலும், புல் நிறைந்த இடங்களிலும், மனிதனுக்கு அதிக ச்ரமமில்லாமல் மேய்ந்து வளரும். நில ஆக்ரமிப்புச் சட்டம் மிராசுதார்களைத் துன்பப் படுத்துவதும், நிலங்கள் அதிக விலையாயிருப்பதால் வரப்புகளுக்குச் சச்சரவு செய்வதும், திடல்களை யெல்லாம் தோப்பாக்கி, புஞ்சை சாகுபடிக்குக் கொணர்ந்து விடுவதும் ஸகஜமாயிருக்கிற தஞ்சாவூர் ஜில்லாவில், இவைகள் படும் கஷ்டம் சொல்லி முடியாது.

தஞ்சாவூர் ஜில்லாவில், வெள்ளாடு, செம்மறியாடு, என இரண்டு ஜாதிகள் காணப்படுகின்றன. மலைப் பாகங்களிலுள்ள பெரிய மயிரடர்ந்த ஆடுகளை இவ்விடத்தில் கொணர்ந்தால், வெகு நாளைக்குள், மயிர் உதிர்ந்து, கஷ்டப்படுகின்றன.

பள்ளையாடு (வெள்ளாடு) தான் வீட்டில் வளர்க்கப்படுகிறது. இதன் மாம்ஸம், எல்லாவற்றையும் விட விரும்பத்தக்கது. இந்த ஆடு போஷணையால் நல்ல புஷ்டியாயிருந்தால், ஒரு தடவைக்கு நான்கு குட்டிகள் போடும். வீட்டுக்கு அருகாமையிலிருப்பதால் நரிக்கு அநேகமாய் ஆகாரமாகாது. நாங்கள் வாங்கின ஒரு ஆடு, பன்னிரண்டு வருஷத்தில், நாற்பது உருப்படி வரையில் பெருகியது. அப்படியிருந்தும் மந்தையாக சேர்த்து வளர்ப்பது வெகுகஷ்டம், இவைகளில் கொடியாடு, மந்தையாக வளரும், நரிக்குப்பயப்படாது. மரங்களிலுள்ள இலைகளைக் கூட எட்டிப்புசிக்கும். கள்ளி இதழ்களில் முள்ளில்லாவிட்டால், கள்ளிக்காடுகளை அழிக்க அதிகப்பணமும் கஷ்டமும் வேண்டாம். அநேகமாய் கருவைக்கன்றுகளெல்லாம், வயல்வரை

ளில் வளராமலிருப்பதற்கு, இவைகளே காரணமாகும். ஆடு குடியானவர்களுக்கு மிகவும் ப்ரயோஜனமுள்ளதாயிருக்கிறது.

வெள்ளாடுகளைப்போல் தோலுக்கும், மாம்ஸத்துக்கும் அவ்வளவு உசிதமில்லாமல்போனாலும், செம்மறி ஆடு விவஸாயத்துக்கு இன்றியமையாதது. இவைகள், அநேகமாய் மந்தையாய்த்தான் வளர்க்கப்படுகிறது. வயல்களில் இரவில் அடையவைத்தால் மூத்ரமும் சாணமும் நல்ல உரமாகும். தவிர, மாட்டுச்சாணத்தை திருட்டுத்தனமாகப் பொருக்கிக்கொண்டு போவதுபோல், இதன் சாணத்தை திருடமுடியாது. உரங்களிலெல்லாம் அதிகப்பலனைத்தரத்தக்கது இது தவிர வேறில்லை.

இந்த ஆடுகளை எப்படி வ்ருத்திசெய்யலாம்? கோடைகாலத்தில், இந்த ஆடுகள் வயல்களில் மேய்ந்து விட்டு தண்ணீருக்கு வெகுதூரம் சென்று, ஸாயந்திரம் வயல்களில் வந்து அடையும்போது, இடையர்கள் நரிவாயிலிருந்து இவைகளைத் தப்புவிக்க தங்கள் நாயுடன் காத்திருப்பார்கள். ஆனால் என்ன பத்ரமாயிருந்தபோதிலும் 'காப்பானில் கள்வன் மிகு' மாதலால் அநேகம் ஆடுகள் நரிகளுக்கு இரையாகி விடுகின்றன. ஏழை இடையர்கள் நரிவலை வாங்கமுடியாது. அப்படி வாங்கினாலும் பலமான நரிகள் வலையைத் தாண்டிக் குதித்து ஆடுகளைக் கொண்டுபோவது ஸகஜம். அதற்கு பதிலாக நரிகளிருக்கும் புதர்களுக்கு அருகாமையில், கண்ணிகுத்தி (சுளுக்கு வைத்துப்) பதுங்கியிருந்து, நரிகளை அடித்துவிடலாம். இல்லாவிட்டால் இரண்டு மாடுகளை புதர்களின்பக்கத்தில் படுக்கப்போட்டு, இரவில், அவைகளுக்கு மத்தியில் படுத்துக்கொண்டு நரிகள் கத்திக் கொண்டு தின்னவரும்போது, தடிகளால் கொன்றுவிடலாம். குடியானவர்கள் ஸாகுபடி காலங்களில் வளைத்துக்கொண்டு அடித்து விடுவார்கள்.

கோடைகாலத்தில் இடையர்கள் ஆட்டுக்கடாவை பெண் ஆடுகளோடு சேரவிடாமல், தடுத்துவிடவேண்டி, கடாவை பின்னங்காலிலிருந்து, முன்னங்காலில் ஒருக்குக் காலுக்கு, கயிறுகட்டி நாடமுடியாமல் செய்யவேண்டும்.

ஏனெனில், சித்திரை வைகாசி மாதங்களில் தரிக்கும் பலன்கள், ஐப்பசி கார்த்திகை மாதங்களில் குட்டிபோடு மாகையால், மழை காலத்தில் குட்டிகள் குளிரில் மடிந்துபோம்.

அநேகமாய், ஆடிமாதத்தில் இந்தக் கயிற்றை எடுத்துவிடவேண்டும். இந்தக் காலத்திலிவ்வாடுகளுக்குள்ள அதிக ரோமத்தை, நல்ல வெயிலாயுள்ள மத்யானத்தில், கத்தரித்து விடவேண்டும். வெயில் காலத்தில் அதிக ரோமம் வ்யாதி உண்டாக்குவதோடு, கோடையில் இரவில் மழை பெய்தால், வயல்களில் படுத்திருக்கும் இந்த ஆட்டின் மயிர்களில், ஈரக்களிமண் ஒட்டிக்கொண்டு, ஆடுகள் எழுந்திருக்கமுடியாமலும், அப்படி எழுந்திருந்தாலும், மழையில் வெகுதூரம் நடந்து திடல்களுக்குப் போவதற்குள், கீழேவிழும்படியும் செய்துவிடும்.

கத்தரித்த மயிர்களை வெற்றிலைக் கொடிக்கால் முதலியவைகளுக்கு எருவாக உபயோகிக்கலாம்.

மழைக்காலத்தில் செம்மறியாடுகளைக் காப்பாற்றுவது வெகுகஷ்டம். இக்காலத்தில் அவை புல் கொஞ்சம் ஈரமாயிருந்தாலும் அதைத் தின்னா. வெய்யில் இல்லாவிட்டால் வெளியே வாரா. கொஞ்சம் மழையில் நனைந்தால் ஜலம் தலையிலேறிக்கொண்டு இறந்துவிடும். ஈரமான தரையில் படுத்திருந்தால் மாண்டுபோம். மழை விடாமல் பெய்தால், மாடு குதிரைகளைப்போல், அறுத்துவைத்த புல்லைத் தின்னமாட்டா. மரக்கிளைகளை ஒடித்துப் போட்டால், இலைகளைத் தின்னுமென்றாலும், க்ராமங்களில் மரங்களில் ஒடிக்கவிட மாட்டார்கள்.

தவிர கொட்டகையில் ஈரமில்லாமல் வைக்கோல் போட்டிருக்க வேண்டும். மூத்ரம் பெய்த வைக்கோலில், படுக்காதாதலால் அடிக்கடி வைக்கோலைப் புதுப்பிக்க வேண்டும். மிராசுதார்கள் மாடுகளுக்கு வைக்கோலில்லாமல் கஷ்டப் படுகையில், ஆடுகளுக்குப் படுப்பதற்கு காய்ந்த வைக்கோல் அகப்படுவது ஸாத்யமல்ல. குளிர்ந்த காற்று அடிக்காமலிருக்க, கொட்டகை தாழ்ந்து இருக்கவேண்டும், இரவில் குளிர்காய்வதற்கு நெருப்புமிருக்கவேண்டும். இக்காலத்தில் குட்டிபோடுமானால், குட்டிகளையும், ஆட்டையும், பத்திரமாகக் காப்பாற்றுவிட்டால் அவை இறந்துபோம். ஒரு வருஷத்து மழைகாலத்தில் எங்கள் ஆடுகளில் நூறு ஆடுகள் குளிரில் மடிந்துவிட்டன. இதற்காக தோட்டத்தில் ஒரு பாகத்திலேயே ஒதுக்கி, மேடாக உயர்த்தி, கொட்டகையைத் தணித்துப்போட்டு, சுற்றி செடிகளை காற்றடைப்பாக பயிராக்கி, அதைச்சுற்றி நரி வராமல் ஏற்பாடுசெய்து, தரைக்கு மணலடித்து சோளத்தட்டைகளைப் பரப்பிப் பார்த்ததில், அடுத்த வருஷம் ஆடுகள் சேதமேயில்லை. இப்படியாக தோட்டத்திலே இடம் மாற்றி மாற்றிப் போட்டால் மூத்ரமும் சாணமும் தோட்டத்துக்கு உரமாகிவிடும். திடல்களில் கொட்டகை கட்டுவதால் உண்டாகும் நஷ்டம் வராது.

தவிர, குட்டிகளுக்கு இடையர்கள் ஆமை முதுகுபோன்ற, பெரியகூடு வைத்திருப்பார்கள். இந்தக்கூடுகள் பலமாயும் கனமாயுமிருக்கவேண்டும். இல்லாவிட்டால் நரிகள் கூட்டைக்கிழித்தாவது, தூக்கியாவது. குட்டிகளைக்கொண்டு போய்விடும். இக்காலத்தில் காட்டுப்பூனைகள் ஈரமண்ணைத் தோண்டி, கீழாக நுழைந்துகுட்டிகளைத்தின்றுவிடும். இதற்காகப் பூனைக்கண்ணி குத்திவைத்து, அவைகளைக்கொன்று விடலாம்.

பெரிய மிராசுதார்கள் செம்மறியாட்டுமந்தை வைத்திருப்பது அவசியம். பெரிய மிராசுதார்களுக்கு நாற்றங்கால்களுக்கு வேண்டிய உரம், கூட போதுமான அளவு கிடைக்காதாகையால், இந்த மந்தை வைத்திருந்தால் நல்லலாபமுண்டு. ஒரு மிரா[illegible] ஸுமார் 80 ஆடுகள் வைத்திருந்து அவைகளைப்பார்த்துக்கொள்ள ஒரு ஆளும் நியமித்தால் தோட்டத்துக்கும் வயல்களுக்கும் நல்ல பலனைக்கொடுக்கும்படி உரம்கொடுத்து, நல்ல லாபத்தை அடையலாம்.

ஜி. சேஷாத்ரி, பி. ஏ.

## DEVELOPMENT OF INDUSTRIES.

## கைத்தொழில்களின் அபிவ்ருத்தி.

ஸமீபத்தில் நடந்த சென்னை சட்டஸபையில் ஆனரபில் மிஸ்டர் பி. என். சர்மா கைத்தொழில் அபிவ்ருத்தி விஷயமாக ஒரு தீர்மானங் கொண்டுவந்தார். அதாவது, சில சிறு கைத்தொழில் சாலைகளிலோ அல்லது வேறு இடங்களிலோ, இந்த ராஜதானியின் நிலைமைகளுக்கு ஏற்ற கைத்தொழில் முறைகளைப்பற்றிய ஆராய்ச்சிகளை விடாமல் நடத்திக்கொண்டு வரவேண்டுமென்றும், கூடுமானால் அந்த ஆராய்ச்சிகளை இன்னும் அதிகமாகச் செய்துபார்க்க வேண்டுமென்றும், இந்த வேலைக்காகவும், இந்தியர்களை கைத்தொழிலில் பழக்குவதற்காகவும், வேண்டுமான ஸந்தர்ப்பங்களில் நிபுணர்களை வேலையில் அமர்த்திக் கொள்ளவேண்டுமென்றும் இந்தக் கௌன்ஸில் சிபார்சு செய்கிறது.

இந்தத் தீர்மானத்தை ப்ரேரிக்கையில் மிஸ்டர் சர்மா பேசினதாவது.—கவர்ன்மெண்டார் இப்போது கண்ணாடி, ஸோப், பென்ஸில் செய்தல் முதலிய தொழில்களைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்திக்கொண்டு வருகிறார்களென்றும், கவர்ன்மெண்டார் கைத்தொழில்களை ஸ்தாபித்து நடத்துவது விஷயமாய் இந்தியா மந்த்ரி நிபந்தனைகள் ஏற்படுத்தி யிருப்பதால் அவர்கள் விசேஷமாய் ஒன்றும் செய்யமுடியாதவர்களாயிருக்கிறார்களென்றும், ஆனாலும் கைத்தொழில் முறைகளை ஆராய்ச்சி செய்து அவைகளைச் சீர்திருத்த எண்ணியிருக்கிறார்களென்றும், தாம் கொண்டுவந்திருக்கும் தீர்மானமானது இந்தியா மந்த்ரியின் உத்தரவுகளுக்கு விரோதமாக இல்லை

யென்றும், கவர்ன்மெண்டார் தமது ஆராய்ச்சிகளை நடத்த சிறிய தொழில் சாலைகளை ஏற்படுத்தி நடத்திவந்தால், பிற்பாடு தொழிலபிமானிகள் அந்த தொழில்சாலைகளை கவர்ன்மெண்டினிடமிருந்து வாங்கி ஸொந்தத்தில் நடத்திவர ஸௌகர்ய மேற்படுமென்றும் சொன்னார்.

இன்னும் அவர் சொன்னதாவது—கவர்ன்மெண்டார் முக்யமாய் எண்ணெய்த் தொழிலை அபிவ்ருத்தி செய்வதோடு, அந்தத் தொழிலில் கிடைக்கும் உபபொருள்களை உபயோகிக்கும் மார்க்கத்தைப்பற்றியும் பரிசீலனை செய்யவேண்டும். இதைப்போலவே கடுதாசித் தொழிலைப்பற்றியும் ஆராய்ச்சி செய்யலாம். நமது தேசத்தில் கடுதாசி செய்ய வேண்டிய மூலப்பொருள்கள், இருக்கின்றன. ஆராய்ச்சிகளை நடத்துவதற்கும் இந்தியர்களை வேலையில் பழக்கிவிடவும், அன்ய நாடுகளிலிருந்து நிபுணர்களை வரவழைக்கவேண்டும். அவர்களை வேலைக் கெடுத்துக் கொள்ளும்போது, அவர்கள் இந்தியர்களை வேலையில் பழக்க வேண்டுமென்று ஒரு நிபந்தனை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இப்படி மிஸ்டர் சர்மா பேசினார்.

சென்னை ட்ரேட்ஸ் அஸோஸியேஷன் ப்ரதிநிதியாகிய மிஸ்டர் ஜே. ஓ. ராபின்ஸன் என்பவர் இந்தத் தீர்மானத்தை ஆக்ஷேபித்துப் பேசுகையில், இந்தத் தீர்மானம் அனுபவத்துக்கு ஒத்ததாக இல்லையென்றும், யுத்தம் முடிந்தபிறகு இந்தியாவிலும் ப்ரிட்டிஷ் ராஜ்யத்தின் மற்ற பாகங்களிலும் கைத்தொழில்களை வ்ருத்தி செய்யத் தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கு மென்றும், இந்தியாவில் கைத் தொழில் ஸ்தாபித்து நடத்துவதற்கு ஏற்ற அம்சங்கள் இன்னின்ன இருக்கின்றன வென்பதை இங்க்லண்டிலுள்ள கைத் தொழிலாளிகளுக்கு எடுத்துக் காட்ட வேண்டு மென்றும், இது விஷயமாய் கவர்ன் மெண்டார் உதவி செய்ய வேண்டு மென்றும், இந்தியாவிலுள்ள சேம்பர் அப் காமர்ஸ் என்னும் வ்யாபார ஸங்கத்தார் இந்தியாவில் கைத் தொழில் ஸ்தாபிப்பதைப் பற்றி இங்க்லண்டிலுள்ள கைத்தொழில் கம்பெனிகளுக்குத் தெரிவித்தால், அந்த கம்பெனிகள் தங்களுடைய நிபுணர்களை இந்தியாவுக்கு அனுப்பி இந்தியாவில் தொழில்சாலைகளை ஸ்தாபிக்கக் கூடுமென்றும், இந்தியாவிலுள்ளவர்களுக்குக் கைத்தொழில் விஷயங்களைக் கற்பிப்பதற்காக நிபுணர்களை நியமிப்பது சரியல்லவென்றும் சொன்னார்.

சென்னை சேம்பர் அப் காம்பர்ஸின் ப்ரதிநிதியாகிய ஆனரபிள் மிஸ்டர் கோர்டன் ப்ரேஸரும் தீர்மானத்தை ஆக்ஷேபித்துப் பேசினார். அவர் சொன்னதாவது, சிறிய தொழில்சாலையை ஸ்தாபித்து லாபகரமாக நடத்துவது முடியாது. அப்படி நடத்தினாலும், செய்யப்படும் ஸாமான்களை அதிகமாகச் செய்து, அவைகளின் அயன் விலையைக் குறைக்க முயற்சி செய்வார்கள். இதற்காக தொழில்சாலையைப் பெரியதாக நடத்தி அதற்கு கவர்ன்மெண்டுப் பணத்தை அதிகமாய்ச் செலவழிக்க நேரிடும். இன்னும் சிறிய தொழில்சாலைகளில் ஸ்வல்பமாக சரக்குகள் செய்தால் அவைகளைத் தக்கபடி விலைப்படுத்துவதும் கஷ்டம்.

இந்தியர்களைத் தொழில்களில் பயிற்சி செய்விக்க நிபுணர்களை வரவழைக்க வேண்டியதில்லை. தென்னிந்தியாவிலேயே அநேகம் பெரிய தொழில்சாலைகள் இருக்கின்றன. ஆனால் அவைகளில் பயிற்சியடைய படிப்புள்ள இந்தியர்கள் போய்ச் சேர்ந்து கொள்வதில்லை. கல்வியறிவுள்ள இந்திய வாலிபர்கள் தொழிற்சாலைகளில் சேர்ந்து முதலில் கூலியாட்கள் செய்யும் வேலைகளைச்செய்து பழகி பிறகு படிப்படியாய் உயர்ந்த வேலைகளைச் செய்ய ஸம்மதித்தால், தொழில் படிப்பு அதிகரிக்கு மென்று சொல்லலாம். இப்படி மிஸ்டர் ப்ரேஸர் பேசினார்.

ஆனாலும் கவர்ன்மெண்டார் இந்த [illegible]னத்தை ஏற்றுக்கொண்டார்கள். கஜகூதார் கை[illegible]க்கா



கப் பேசின ஆனரபில் மிஸ்டர் டாண்டர், நிபுணர்கள் அகப்படுவது ச்ரமமாயிருக்கிறதென்றும், கவர்ன்மெண்டார் சில வர்ஷங்களுக்கு முன்னால் க்ரோம் முறையால் பதனிடுதல், மீன்தொழில், ஸோப்செய்தல் ஆகிய கைத்தொழில்களை ஸ்தாபிக்க ஸாத்யப்பட்டதற்குக்காரணம் நிபுணர்களை வரவழைத்ததல்லவென்றும், இந்தியாவிலிருந்து சிலபேர்களை அன்யதேசங்களுக்குத் தொழில் கற்க அனுப்பினதே இதற்குக்காரணம் என்றும், முன்பு அன்யதேசங்களுக்கு தொழில் கற்கப் போன மிஸ்டர் சாட்டர்ட்டன், ஸர் ப்ரிடரிக் நிக்கல்ஸன் ஆகிய இவர்களைப்போல் அநேக மாணவர்கள் அன்யதேசங்களுக்குப் போக அகப்படுவார்களானால், நிபுணர்களை வரவழைக்க வேண்டியிராதென்றும், இந்தியாவின் கைத்தொழில் ரொம்ப நல்ல நிலைமையை அடையுமென்றும் சொன்னார். நிபுணர் வரவழைப்பது விஷயமாய் அவர் சொன்னதாவது: ஒரு தொழில்சாலையை ஸ்தாபிக்கத் தகுந்தவர் தொழில் நிபுணரல்ல. மேலும் ஒரு தொழிலை அபிவ்ருத்தி செய்ய முதலில் நிபுணரை வரவழைக்க வேண்டியதுமில்லை. தற்காலத்து கைத்தொழில்களில் அநேக தொழில் முறைகள் கலந்திருக்கின்றன-வாதலால், அவைகளுக்கு ஒரு தொழில் நிபுணர் போதாது. அநேக தொழில் நிபுணர்கள் வேண்டியிருக்கும். ஒரு தொழிலை ஸ்தாபிப்பதில் ஆரம்பத்திலேயே நிபுணரை வரவழைக்க வேண்டியிராது. முதலிலேயே அவரை வரவழைப்பது வீண் பணச்செலவே. முதல்முதலில் செய்ய வேண்டியது என்ன வென்றால், அந்தத் தொழிலை ஸ்தாபிப்பதால் என்ன பலா பலன்கள் உண்டாகும், அதற்கு என்ன ஸாதகங்கள் இருக்கின்றன வென்பவைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டும். பிறகு தொழிலில், நிபுணர் தேவையாயிராத பாகங்களை ஏற்படுத்தவேண்டும். இவ்வளவெல்லாம் செய்தபிறகு நிபுணரை வரவழைத்து நியமித்தால் வேலை நன்றாய் நடைபெறக்கூடும். கவர்ன்மெண்டார் ஏற்கனவே சில நிபுணர்களை நியமித்திருக்கிறார்கள். வொர்க்ஷாப்புகளிலும், தொழில் சாலைகளிலும் தொழில் கற்கவரும் மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்காக சில ஏற்பாடுகள் செய்ய உத்தேசித்திருக்கிறார்கள். ரொம்ப சீக்ரத்தில் அநேக தொழில்களுக்கு சிறு தொழில்சாலைகள் ஸ்தாபித்து நடத்த கவர்ன்மெண்டார் உத்தேசித்திருக்கிறார்கள். இப்படி மிஸ்டர் டாண்டர் பேசினார்.

ஆனரபிள் டாக்டர் நாயர் இதுவிஷயமாய் பேசுகையில், கவர்ன்மெண்டார் இந்தியர்களைத் தொழில்களில் பயிற்சி செய்விக்கும் நோக்கத்துடன் தொழில்சாலைகள் ஸ்தாபிக்கவேண்டுமேயொழிய, வ்யாபாரம் செய்வதற்காக தொழில் சாலைகள் ஸ்தாபிக்கக்கூடாதென்று சொன்னார். ஏனென்றால் வ்யாபாரம் செய்யும் நோக்கத்துடன் தொழில்சாலையை ஸ்தாபித்தால் தொழில் சாலையில் செய்த பொருள்களை விற்கும்போது வ்யாபாரிகளோடு போட்டி போடவேண்டிவரும். இதனால் வ்யாபாரிகள் இந்த ஏற்பாட்டை பலமாய் ஆக்ஷேபிப்பார்கள். மாணவர்களைப் பயிற்சி செய்யும் நோக்கத்துடன் தொழில்சாலை ஏற்படுத்தினால் இந்தக்கஷ்டம் நேரிடாது. இங்க்லண்டில் தொழில்கல்விப் பாடசாலைகளில் செய்யும் பொருள்களை அப்போதைக்கப்போது விற்காமல் வர்ஷத்துக் கொருதடவை ஏலம்போடுகிறார்கள். இதனால் வ்யாபாரிகள் ஆக்ஷேபம் செய்வதற்கு இடமேற்படாது.

மேலும் இந்திய மாணவர்கள் இங்க்லண்டில் போய்ப்படிக்கலா மென்றால், அங்குள்ள வ்யாபாரிகள் தொழில் முறையை சரியாய்க் கற்றுக் கொடுக்க உடன்படுவதில்லையென்று தெரிகிறது. இந்தியாவிலுள்ள இங்க்லிஷ் தொழில் சாலைக்காரர்கள் இந்தியாவுக்கு வ்யாபாரம் செய்ய வந்திருப்பவர்களே யொழிய, ஜனோபகாரமாய் இங்கு வந்திருப்பவர்களல்லர். அவர்களிடம்

தொழில் கற்கவரும் இந்தியர்கள் தொழில் முறைகளைக் கற்றுக்கொண்ட பிறகு, அவர்களுக்குப் போட்டியாய் தொழில் சாலைகள் ஏற்படுத்த கூடுமாகையால், அந்த இங்க்லீஷ் வ்யாபாரிகள் இந்தியர்களுக்கு தொழில்முறைகளைக் கற்றுக் கொடுக்க உடன்படுவது கிடையாது. ஆகையால் இந்தியர்களுக்குத் தொழில் கல்வி கற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் கவர்ன்மெண்டார் தொழில்சாலைகள் ஸ்தாபிக்கவேண்டியது அவச்யமாகும்.

## RATS.

BY R. P. SRINIVASA AIYAR.

## எலிகள்.

நம்முடைய சத்ரு ஜந்துக்களில் எலிகள் முக்யமானவையென்று நாம் எண்ணிக்கொண்டிருக்கிறோம். நம்முடைய வீடுகளில் நாம் பழங்கள், பக்ஷணங்கள் ஏதாவது வைத்திருந்தால், அவை எப்படியோ எலிகளுக்குத் தெரிந்துவிடுகின்றன. அதற்குப் பிறகு அவ்வஸ்துக்கள் நம்முடையவையல்ல வென்று நாம் எண்ணவேண்டியதுதான். ஆகையால் நாம் எப்பொழுது எலிகளைக் கண்டாலும் அவைகளை உடனே கொன்றுவிட வேண்டுமென்று எண்ணங்கொள்ளுகிறோம்.

எலிகளின் திருட்டுக் குணங்களினால் நாம் அவைகளை வெறுக்கும்படி நேரிடுகிறது. இருந்தாலும் அவைகள் நம்முடைய நன்மையையே கோரிக்கொண்டு நமக்கு ஊழியஞ் செய்யும் வேலைக்காரர்களென்று நாம் எண்ண வேண்டியதாயிருக்கிறது.

மாதம் ஒன்றுக்கு ரூபாய் இருபதுவரையில் சம்பளம் கொடுத்து ஒரு வேலைக்காரனை வைத்துக்கொண்டாலும், எலிகள் நம்வீட்டைச் சுத்தமாக செய்வதுபோல் அவனால் செய்யமுடியாது. ஒரு காக்கை எங்கேயிருந்தாவது ஒரு மாம்ஸத்துண்டையாவது அல்லது அழுகின வாழைப்பழம் ஒன்றையாவது திருடிக்கொண்டு வந்து நம் வீட்டுக் கூரையின்மேல் உட்கார்ந்து பாதி தின்றுவிட்டு பாக்கியை அங்கேயே போட்டுவிட்டுப் போகிறது. கொஞ்சநாளைக்குள் அது அழுகிப்போய் மிகவும் கெட்ட நாற்றத்தை உண்டாக்கிவிடுகிறது. இதனால் அவ்வீட்டிலும் அக்கம் பக்கத்து வீடுகளிலும் குடியிருக்கும் ஜனங்கள் வ்யாதியடைய ஹேதுவாகிறது. ஆனால் அவ்வண்ணம் உண்டாகாமலிருக்கும்படி உடனே அவ்வஸ்துவைத் தின்று மனிதர்களுக்கு யாதொரு கெடுதியும் உண்டாகாமலிருக்கும்படி செய்வது எலிகளுடைய வேலை. நமக்குத் தெரியாமல் நம் வீடுகளில் அழுகிப்போய்க் கிடக்கும் வஸ்துக்களைத் தின்று நம்வீட்டைச் சுத்தமாய் வைத்துக் கொள்வதற்காகவே எலிகள் ச்ருஷ்டிக்கப் பட்டிருக்கின்றனவென்று நாம் சொல்லலாம்.

எலிகளில் அநேகவிதங்களுண்டு. வீடுகளின் கூரைகளில் குடியிருந்துகொண்டு இரவில் சுவர்களின் வழியாய்க் கீழே யிறங்கி வீட்டில் வைத்திருக்கும் வஸ்துக்களைத் திருடித் தின்னும் ஜாதி இத்தேசத்தில் முக்யமானது. வீட்டின் தரையில் கீழே குடைந்துகொண்டு அந்த த்வாரங்களில் குடியிருப்பது வேறொரு ஜாதி. இதே மாதிரி பல வீடுகளையும் ஸம்பந்தப் படுத்தி ஒன்றுக்கொன்று ரெயில்வே டன்னல் மாதிரி அடியில் த்வாரம் செய்யும் பெருச்சாளி வேறொரு ஜாதி. இவைகள் ஒரு வீட்டுக்கடியில் குடியிருந்தால் அவ்வீட்டின் தரை வெகு சீக்ரத்தில் இடிந்து மேடு பள்ளமாகிவிடுகிறது. இவைகள் உண்டாக்கும் டன்னல்கள் சில ஸமயத்தில் ஒரு பர்லாங்கு தூரம் வரையில் செல்லுகின்றன. சுண்டெலி, மூஞ்சூறு முதலிய மற்றவகைகளுமுண்டு. இவைகளில் சுமார் நூற்றைம்பது ஜாதிவரையிலிருக்கின்றன வென்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

ஆகாரம்.—எலிகள் அநேகமாய் எல்லா தாவர, ஜீவித வஸ்துக்களையும் தின்னும் குணமுடையன. சரியாய்ப்பார்த்தால் மற்ற ஜீவப்ராணிகளுக்கு ஆகாரமாகக் கூடிய வஸ்துக்களில் எலிகள் தின்னக் கூடாத வஸ்துக்களுண்டா என்று சொல்வதுதான் மிகவும் கஷ்டம்.



மாம்ஸம், பழம், தான்யம் முதலியவைகள் நன்றாய் முதிர்ந்து பக்வமான ஸ்திதியிலிருந்தாலும் சரி, நன்றாய் வளராவிட்டாலும் சரி, அல்லது அழுகிப்போனாலும் சரி, அவைகளை எலி வேண்டாமென்று சொல்லும் வழக்கம் கிடையாது. அவைகளுக்குத் தகுந்த ஆகாரம் எவ்விடத்தில் ஏராளமாய் கிடைக்கும் என்று அறியும் சக்தி அவைகளுக்கு மிகவும் அதிகம். நாம் ஒரு ஆகாரவஸ்துவை எவ்வளவு ரகஸ்யமாய் ஒரு இடத்தில் வைத்திருந்தாலும், எலிகள் அவ்வஸ்துவின் வாஸனையினால் அது இருக்கும் இடத்தை அறிந்துகொள்ளுகின்றன. ஆகாரம் ஒரு இடத்தில் ஏராளமாய் இருக்கிறது என்று ஒரு எலிக்குத்தெரிந்தால், அது தான்மாத்ரம் அதைத்தின்னவேண்டுமென்று எண்ணம் கொள்ளுகிறதில்லை.

உடனே அது தன் ஸ்நேகிதர்களுக்கும் கூட்டாளிகளுக்கும் அவ்விஷயத்தைப்பற்றித் தெரிவித்து அவைகளையெல்லாம் அழைத்துக்கொண்டு விருந்துக்கு வருகிறது. தாங்கள் செய்யும் காரியம் திருட்டுத்தனமாயிருந்தபோதிலும் அக்காரியத்தை ரகஸ்யமாய் செய்ய வேண்டுமென்னும் எண்ணம் அவைகளுக்குக் கிடையாது. ஆகாரத்தை வயிறுநிரம்பத் தின்றவுடன் அவைகளுக்கெல்லாம் உத்ஸாகம் ஜாஸ்தியாயுண்டாகி வெகு சீக்ரத்தில் அவைகளுக்குள் சண்டை இரைச்சலெல்லா முண்டாகின்றன.

ஆகாரத்துண்டு ஒன்று ஒரு எலிக்குக் கிடைத்தால், அது முதலில் அதை நாக்கினால் நக்கி நல்ல ருசியுள்ளதா வென்று பார்க்கிறது. பிறகு தான் தின்ன ஆரம்பிக்கிறது. முதலில் ஒரு கவளத்தைக் கடித்து, அதை நன்றாய் மென்று வயிற்றுக்குள் செலுத்தின பிறகுதான் அடுத்த கவளத்தைக் கடிக்கும். இவ்வழக்கம் நம்மவருக்குள் அநேகருக்கு இல்லாமையினால், அவர்கள் அஜீர்ணம் முதலிய வ்யாதிகளினால் கஷ்டப்படுகிறார்கள்.

எலி ஆகாரத்தை மெல்லும் போது அதன் உதடுகள் வெகு வேகமாய் மேலும் கீழும் போகின்றன. ஆகாரத்தோடு தண்ணீரும் எலிக்கு மிகவும் அவச்யமாயிருக்கிறது. உடனே யில்லாவிட்டாலும் கொஞ்ச நேரத்துக் குள்ளாவது ஏராளமாய்த் தண்ணீர் குடிக்க வேண்டும். எலி நாயைப்போல் தண்ணீரை நக்கிக் குடிக்குமே யொழிய, பசுவைப்போல் உறிஞ்சிக் குடிக்காது.

எலிகள் மாம்ஸ பக்ஷணிகளா யிருக்கின்றன. அதாவது ஒரு எலி மற்றொரு எலியைத் தின்றுவிடும். ஒரு எலிக்கு ஏதாவது காயமுண்டானால் அதற்கு பலஹீன முண்டாகிறது. அப்பொழுது மற்ற எலிகள் அதைத் தின்று காயப்பட்ட எலிக்கு இனிமேல் இவ்வுலகத்தில் ஸுகதுக்கங் களொன்று மில்லாமல் செய்து விடுகின்றன. இவ்வழக்கமும் ஒருவிதத்தில் உலகத்துக்கு நன்மையென்றே சொல்ல வேண்டும். ஏனென்றால் மற்ற எல்லா ப்ராணிகளைப்போலவே எலிகளுக்கும், தேகத்தில் காயமுண்டானாலும், அல்லது வேறு எவ்விதத்திலாவது வ்யாதியுண்டானாலும் தனியாய்த்தன்னிருப்பிடத்தில் போய் இறக்கவேண்டு மென்னும் எண்ணமுண்டாகிறது. ஆகையால் அது தன் வளைக்குள் போய் அங்கே இறந்து போகிறது.

பிறகு, அதன் தேகம் அழுகிப்போய் மிகவும் கெட்ட நாற்றத்தை யுண்டாக்கும். அதன் இருப்பிடத்தை வேறொரு எலி தான் கண்டு பிடிக்கக் கூடுமேயொழிய நம்மால் முடியாது. ஆகையால் செத்த எலியின் நாற்றம் நமக்குக் கெடுதல் செய்யாவண்ணம் மற்ற எலிகள் அதைத் தின்று நம் வீட்டைச் சுத்தம் செய்கின்றன.

ஒரு எலி ஏதாவது கொஞ்சம் விஷத்தைத் தின்று அதனால் இறந்துவிட்டால் மற்ற எலிகள் அதைத் தின்றுத் தாங்களும் இறக்கின்றன. இவ்விதமாக ஒரு எலியைக் கொண்டு அதன் கூட்டாளிகளெல்லாவற்றையும் கொல்லலாம். ஆனால் நாம் குடியிருக்கும் வீடுகளில் இவ்விதமாய் எலிகளைக் கொல்லுவது ச்லாக்யமான வழியல்ல. ஏனென்றால் எலிகள் வளைக்குள் இறந்துவிட்டால், அவைகள் அங்கேயே அழுகிப் போய் நமக்கு மிகவும் கெடுதலை யுண்டாக்கும்.

எலிக்குஞ்சுகளுக்கு ஏதாவது அபாயமுண்டாகுமென்று தாயெலி அறிந்தால், அது தன்னால் கூடியமட்டில் அவ்வபாயத்தினின்று அவைகளைக் காக்க முயற்சி செய்யும். அது ஸாத்யப்படாவிட்டால், தானே அவைகளைத் தின்று அவ்வபாயத்தினின்றும் அவைகளைக் காப்பாற்றும். ச்ருஷ்டியின் அமைப்பில் இதுவும் ஒரு விசித்ரமே.

நாம் நம் வீடுகளில் கம்பிக்கூடுகளை வைத்து எலிகளைப் பிடிக்கிறோமல்லவா? ஒரே தடவையில் இரண்டு மூன்று எலிகள் கூட்டுக்குள் சில ஸமயம் அகப்பட்டுக்கொள்ளுகின்றன. ஒருவிதமான ஆகாரமும் கிடைக்காமல் அவைகள் கூட்டுக்குள் இரண்டு மூன்றுநாளிருந்தால் அவைகள் ஒன்றுக்கொன்றுசண்டைபோட்டுக்கொண்டு, அவைகளுக்குள் பலமுள்ள எலி மற்றவைகளைத் தின்றுவிடுகிறது. எலிகளின் ஸங்க்யை அபரிமிதமாக உலகத்தில் ஆகாவண்ணம் கடவுள் இவ்வழக்கத்தையும் அவைகளுக்குக் கொடுத்திருக்கிறாரென்றே சொல்லவேண்டும்.

**வாஸ ஸ்தலம்.**—ஸாதாரணமாய் எலிகள் நம் வீட்டுக் கூரைகளிலும் தரையினடியிலும் குடியிருக்கும். வயல் வெளிகளில் தண்ணீரில்லாவிட்டால் அங்கே வளைகளை யுண்டாக்கி அங்கேயும் குடியிருக்கும். ஐப்பசி கார்த்திகை மாஸங்களில் வயல்களில் தண்ணீரதிகமாயிருப்பதனால், எலிகளுக்கு அங்கே குடியிருப்பது ஸௌகர்யமாயிருக்கிறதில்லை. அப்பொழுது நம் வீடுகளில் நம்மைக் கேட்காமலே நம் விருந்தாளிகளாக வந்து விடுகின்றன.

இம்மாதங்களில் நம் வீட்டிலிருக்கும் ஆகார வஸ்துக்களை நாம் வெகு ஜாக்ரதையாய் வைத்துக்கொண்டிருந்தாலொழிய, அவைகளில் பாதிக்குமேல் எலிக்குப் பங்குண்டு. மார்கழி மாதத்தில் வயல்களில் தண்ணீர்வற்றி பயிர் முதிர்ந்திருக்கும் ஸமயத்தில், எலிகள் நம்வீட்டைவிட்டு வயல்களுக்குப் போய் தாங்கள் குடியிருப்பதற்கு வளைகளைத் தோண்டிக்கொண்டு அதற்குப் பிறகு ஐந்தாறு மாஸத்திற்கு வேண்டிய ஆகாரங்களை சேகரிக்கத் தொடங்குகின்றன. நெல்முதலிய தான்யங்களை குடியானவன் அறுப்பதற்கு முன் அவைகள் அறுத்து வளைக்குள் சேர்த்துக்கொள்ளுகின்றன. அங்கே ஆனி, ஆடி மாஸம் வரையில் ஸௌக்யமா யிருக்கின்றன.

பிறகு குடியானவர்கள் வயல்களில் தண்ணீரைப் பாய்ச்சினவுடன் அவ் வளைகளெல்லாம் ஜலங் கொண்டு விடுகின்றன. தாங்கள் வெகு காலமாய் ஸுகமாகக் குடியிருந்தவீடு வெள்ளங் கொண்டவுடன் எலிகள் அக் குடியானவர்களை ஒரு புறம் வைதுக் கொண்டும், ஒரு புறம் வாழ்த்திக் கொண்டும் வேறிடம் போகப் புறப்படுகின்றன. தங்களை வீட்டை விட்டுத் துரத்துவதற்காக குடியானவனை நிந்தித்துக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும் அடுத்த வருஷம் தங்களுக்கு ஆகாரத்துக்குத் தான்யங்களைப் பயிர் செய்ய குடியானவன் இவ்வளவு கஷ்டப்படுகிறானென்று அவனுக்கு நன்றி பாராட்டிக் கொண்டு அவன் வீட்டுக்கே வந்து சேருகின்றன. மற்றும் சில எலிகள் அக்குடியானவனுடைய களஞ்சியத்தில் சிறு பூச்சிகள் முதலியன இல்லாமலிருக்கும்படி சுத்தம் செய்து அவ்வேலைக்குக் கூலியாக அக்களஞ்சியத்தி லிருக்கும் நெல்லைத் தின்னுகின்றன! வேறு சில எலிகள் அவனுடைய மாட்டுக்



கொட்டில், குதிரை லாயம் முதலிய விடங்களுக்குப் போய் அந்த ப்ராணிகளுக்கு வைக்கப்படும் கொள்ளு பருத்திக்கொட்டை முதலியவைகளைத் திருடித் தின்னுகின்றன. அவைகளின் சாணிலத்திகளோடு ஜீர்ணமாகாமல் வெளிவந்திருக்கும் தானியங்களையும் பொறுக்கித் தின்னுகின்றன.

எலிகளுக்கு அதிகமாய்க் குளிர் தாங்குகிறதில்லை. ஆகையால் குளிர்காலங்களில் வைக்கோல் போர் முதலிய கொஞ்சம் வெதுவெதுப்பான விடங்களில் பதுங்கிக்கொண்டிருக்கும். இதனால் தான் தை மாசி மாதங்களில் இரவில் முன்நேரத்தில் மாத்ரம் நம் வீடுகளில் எலி உபத்ரவம் கொஞ்சமிருந்தாலுமிருக்குமேயொழிய, பின்னேரத்தில் அதிகமாயிருக்கிறதில்லை. ஏனென்றால் இம்மாதங்களில் பின்னிரவில் குளிர் அதிகமாயிருக்கும். அப்பொழுது குளிரடக்கமாய் எங்கே இடமகப்பட்டாலும் அங்கேயே படுத்துக்கொள்ளும். ஒரு ஸமயம் நம்முடைய படுக்கையிலேயே போர்வைக்குள் பதுங்கிக்கிடப்பதுமுண்டு. கொஞ்சம் தைரியமுள்ள எலிகள் நம் தேக உஷ்ணத்தை அனுபவிப்பதற்காக நம்மேலேயே படுத்துக்கொள்ளுவது முண்டு!

எலிகளுக்குத் தகுந்த ஆகாரம் ஓரிடத்தில் அகப்படாவிட்டால், அவைகள் ஒரே கூட்டமாய் அவ்விடத்தை விட்டு வேறோரிடத்துக்குப் போய்விடும். தாங்கள் குடியிருக்குமிடம் ஜலங் கொண்டுபோனாலும் அல்லது அதிககுளிராயிருந்தாலும், அப்பொழுதும் வேற்றூருக்கு ஒரே கூட்டமாய் ப்ரயாணமாய்விடும். அல்லது மனிதனுடைய உபத்ரவம் மிகவும் அதிகமாய் விட்டால், அப்பொழுதும் வெளியூருக்குப் போகும் வழக்கமுண்டு. எப்பொழுதும் எலிக்கூட்டம் ஓரூரிலிருந்து வேற்றூருக்குப்போக வேண்டுமானால் அவைகள் இரவில் பயணம் போவது தான் வழக்கம்.

இப்பொழுது ஐரோப்பாவில் கறுப்பெலியென்றும், செம்பட்டை எலியென்றும் இரண்டு ஜாதி எலிகளிருக்கின்றன. அவைகளில் கறுப்பெலி தான் ஐரோப்பா கண்டம் முழுவதையும் ஆதியில் ஸ்வயேச்சையாய் ஆண்டுகொண்டிருந்தது. ஆசியா கண்டத்தை ஸ்வதேசமாகவுடைய செம்பட்டை எலிகள் ஐரோப்பாவை ஸுமார் ஆயிர வருஷங்களுக்கு முன் படை யெடுக்க ஆரம்பித்தன.

இரு ஜாதி எலிகளுக்கும் அகோரயுத்தம் நடந்து அநேக வருஷங்களுக்குப்பின் கறுப்பெலிகள் தோல்வியடைந்து விட்டன. துப்பாக்கி, கத்தி முதலிய ஆயுதங்களை உபயோகப்படுத்த எலிகளுக்குத் தெரியாமையினால், தேகபலமும் பல் பலமும் உள்ள எலிகள்தான் யுத்தத்தில் ஜயிக்கின்றன. ஆகையால் இப்பொழுது கறுப்பெலிகள் அநேகமாய் நசித்துப்போய் சிற்சில இடங்களில் மாத்ரம் வஸித்துக்கொண்டிருக்கின்றன. செம்பட்டை எலிகளே அக்கண்டம் முழுவதையும் ஆண்டுகொண்டிருக்கின்றன.

ஆர். பி. ஸ்ரீநிவாஸய்யர்.

## DEFAULT IN REPAYMENT.

## தவணை தப்பிக் கடன் செலுத்துவது.

கோவாபரெடிவ் ஸங்கங்களால் ஜனங்களுக்கு ரொம்ப நன்மை ஏற்படக்கூடுமென்றாலும், அந்த ஸங்கங்களை கோவாபரெடிவ் கொள்கைகளை அனுஸரித்து நடத்திவந்து, மெம்பர்களும் தங்களுடைய கடமைகளை சரிவரச் செய்துவந்தாலொழிய அதிக நன்மைகளேற்படுமென்பதற்கில்லை. கோவாபரேஷனின்முக்யகொள்கைகளுள் ஒன்று ஒவ்வொரு மெம்பரும் தவணை தவறாமல் குறிப்பிட்ட காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டு மென்பது. எந்த ஸங்கத்திலாவது மெம்பர்கள் திருப்பி செலுத்தவேண்டிய கடன் தொகை ரொம்ப அதிகமாயிருந்தால், அந்த ஸங்கம் சரியாய் நடந்துவரவில்லை யென்று சொல்லலாம். அந்த ஸங்கத்தால் ஜனங்களுடைய பொருளா

தார நிலைமை உயருமென்று சொல்வதற்கில்லை. ஆகையால் ஒவ்வொரு ஸங்கத்திலும் உள்ள எல்லா மெம்பர்களும் தங்கள் ஸங்கத்தையும் அதன் மூலமாகத் தங்களுடைய நிலைமையையும் உயர்த்துவதற்காக ரொம்பவும் ச்ரமப்படவேண்டும்.

சிலர், கடனைத்திருப்பி செலுத்தாமலிருப்பதால் யாதொரு கெடுதலுமில்லையென்றும், கடன் எவ்வளவுகாலம்திருப்பிச்செலுத்தப்படாமலிருக்கிறதோ அவ்வளவுகாலம் அதற்கு வட்டி வந்துகொண்டிருக்குமென்றும், குறித்த காலத்தில் திருப்பிச் செலுத்தாத. கடன்களுக்கு அபராதவட்டி செலுத்துவதால், அதிக வட்டியும் கிடைக்குமென்றும், ஆகையால் தவணைதப்பிச் செலுத்துவதால் பாதகம் ஒன்றுமில்லையென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் ஒரு விஷயம் கவனிக்கத்தக்கது. கடன் நிலுவையாயிருக்கிறதென்றால் குறித்த தவணையில் செலுத்தவில்லையென்று ஏற்படுகிறது. குறித்த தவணையில் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லையென்றால், மெம்பர்கள் தங்கள் வாக்குதத்தத்தை நிறைவேற்றவில்லையென்றும், அவர்கள்சொன்ன சொல் தவறிவிட்டார்களென்றும் ஏற்படும்.

எந்த வ்யாபாரத்திலும், அதிலும் முக்யமாய் பாங்கி லேவாதேவி வ்யாபாரத்தில், நாணயம் தவறினால் அந்த வ்யாபாரம் கடைத்தேறாதென்பது யாவரும் அறிந்த விஷயம். நிற்க, கோவாபரேடிவ் ஸங்கமென்பது கடன் கொடுக்க ஏற்பட்ட ஒரு ஸாதனமே தவிர வேறில்லை. கோவாபரேடிவ் பாங்கிக்கும், க்ராம லேவாதேவிக் காரனுக்கும் வித்யாஸமென்ன வென்றால், கோவாபரேடிவ் பாங்கியில் வட்டி நயம்; லேவாதேவிக் காரனிடத்திலோ வட்டி விகிதம் ரொம்ப கடுமை. கோவாபரேடிவ் ஸங்கத்தில் ஏற்படும் லாபத்தை அதன் மெம்பர்களே பங்கிட்டுக் கொள்ளுகிறார்கள். லேவாதேவிக் காரனுக்குக் கிடைக்கும் வட்டித் தொகையோ அவனுக்கே போய்ச் சேருகிறது. கோவாபரேடிவ் ஸங்கமானது அதிலுள்ள மெம்பர்களின் ஸௌகர்யத்தை கவனிக்க ஏற்பட்டுள்ளது. லேவாதேவிக்காரன் தனது ஸௌகர்யத்தைப் பார்ப்பானேயொழிய, தன்னிடம் கடன் வாங்க வருபவர்களினுடைய ஸௌகர்யத்தைப் பார்க்கமாட்டான். இரண்டுபேருக்கும் இவ்வளவு வித்யாஸமிருந்தபோதிலும், கடன் கொடுத்து வட்டி ஸம்பாதிப்பதில் ஒற்றுமையிருக்கிறது.

ஒரு க்ராமவாஸி லேவாதேவிக்காரனிடமிருந்து கடன் வாங்கிக் குறித்த காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்தாமலிருந்து, மறுபடியும் லேவாதேவிக்காரனிடம் போய் பழைய கடன் இன்னும் செலுத்தாமலிருக்கும்போதே புதிதாய்க் கடன் கேட்டால், லேவாதேவிக்காரன் கடன் கொடுப்பானா? பழைய கடனுக்கு வட்டிக்கு வட்டிபோட்டு அஸலுக்கும்வட்டிக்கும் புதிய கடன் பத்ரம் எழுதிவாங்கிக்கொள்வானேயொழிய, கடனைத் திருப்பிச் செலுத்த வழியில்லாத க்ராமவாஸிக்கு மறுபடியும் கடன் கொடுக்க உடன்படுவான் என்பது துர்லபம்.

அதே மாதிரி ஒரு மெம்பர் தான் ஸங்கத்துக்குக் கொடுக்கவேண்டிய கடனை வெகுகாலம் திருப்பிச் செலுத்தாமலிருந்து புதிதாய் ஒரு கடன் கேட்டால், ஸங்கம் எப்படிக் கொடுக்கலாம்? அவர் ஸங்கத்தில் திரும்பியும் கடன் கேட்டுக் கிடைக்காவிட்டால் மறுபடியும் லேவாதேவிக்காரனிடம் போகிறார். ஸங்கத்துக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைத் திருப்பிக்கொடுக்கமுடியாத அவருக்கு லேவாதேவிக்காரன் கடன் கொடுப்பானென்பது ஸந்தேகம். இதனால், அந்த மெம்பர் பணத்துக்குக் கஷ்டப்பட நேரிடும்.

கோவாபரேடிவ் ஸங்கமென்பது லேவாதேவி நடத்துவதற்கேற்பட்ட ஒரு இடமாகும். அதில் பணம் வந்துபோய்க்கொண்டிருந்தால்தான் ஸங்கம் சரிவர நடக்கமுடியும். கொடுக்கல் வாங்கல் நின்றுவிட்டால் பாங்கியை மூடிவிடவேண்டியதுதான். மெம்பர்கள் தாங்கள் கொடுக்கவேண்டிய கடன்களை சரியானகாலத்தில் திருப்பிக் கொடுக்காவிட்டால் ஸங்கத்தின்கொடுக்கல் வாங்கல் குறைகிறது. இதனால் ஸங்கத்தின் அபிவ்ருத்திக்குத் தடையேற்படுகிறது. ஆகையால் கடன்களைச் செலுத்தாமலிருக்கும் மெம்பர்கள் ஸங்கங்களுக்கு சத்ருக்கள் போலாகிறார்கள். ஒவ்வொரு மெம்பரும் கடன்வாங்கும் விஷயத்தில் 4 முக்யமான விஷயங்களை கவனிக்கவேண்டும்.

(1) முக்யமான செலவுகளுக்கு குறைந்தது எவ்வளவு பணம் வேண்டுமோ அவ்வளவு பணந்தான் கடன் வாங்கவேண்டும்.

(2) எந்த கார்யத்துக்காகக்கடன் வாங்கப்பட்டதோ அந்தக்கார்யத்துக்குத்தான் அந்த பணத்தைச் செலவழிக்கவேண்டும்.

(3) சிக்கனவழக்கத்தைக் கைப்பற்றவேண்டும். எவ்வளவு ஸ்வல்ப தொகையாயினும் சரி மாஸாமாஸம் மிச்சம் பிடிக்க முயலவேண்டும். பலதுளிகள் சேர்ந்து பெருவெள்ளமாகும்.

(4) கையில் பணம் கிடைத்தவுடன் அதை கடனுக்காகச் செலுத்திவிடவேண்டுமேயொழிய வீட்டில் வைத்துக்கொள்ளக்கூடாது. வீட்டிலுள்ள பணம் செலவழிந்து போய்விடும். அல்லது திருட்டுப்போய்விடலாம். பாங்கியில் போட்டால் கடனுவது அடையும், அல்லது வ்ருத்தியாகும்.

## WHAT TO DRINK AND WHEN TO DRINK IT.

## பானம் பருகுவதும் அதற்கேற்ற ஸமயமும்.

தாக சாந்திக்காகவும் மற்ற காரணங்களுக்காகவும் ஒவ்வொருவரும் இன்ன பான வகைகள் பருகலாமென்பதைப் பற்றியும், எப்போது குடிக்கலாமென்பதைப் பற்றியும் பலர் பலவிதமாக அபிப்ராயப்படுகிறார்கள். சிலர் சாப்பாட்டு மத்தியில் தீர்த்தமே குடிக்கக்கூடாதென்றும், அப்படிக் குடித்தால் உணவு சரியாக ஜீர்ணமாகாதென்றும் சொல்லுகிறார்கள். சிலர் சாப்பாட்டுக்கு முன்னும் பின்னும் ஜலமாவது வேறு பானமாவது குடிக்கக்கூடாதென்றும், சாப்பிட்ட இரண்டு மூன்று நாழிகைக்குப் பிறகே ஜலம் குடிக்கலாமென்றும் சொல்லுகிறார்கள். சிலர் தாகம் ஏற்பட்டவுடன் குடிக்காமலிருப்பது சரியல்லவென்கிறார்கள். இவ்விஷயத்தைப்பற்றி ஒரு இங்க்லீஷ் கனவான் சில விஷயங்களை எழுதியிருக்கிறார். அவைகளை இங்கே எழுதுகிறோம்.

ஸுகசரீரிகளாகிய ஜனங்கள் எப்போது தீர்த்தம் குடிப்பது, எவ்வளவு தீர்த்தம் குடிப்பதென்பதை தாகமெடுப்பதால் அறிந்து கொள்ளலாம். ஆனால் தாகம் எடுப்பதால் ஜலம் குடிக்கவேண்டுமென்பதுமாத்ரம் தெரிகிறதே ஒழிய ஜலத்தைத்தவிர மற்ற பானவகைகள் குடிக்கலாமா, குடிக்கக் கூடாதா வென்பதை அறிந்து கொள்வது முடியாது.

தற்காலம் அநேகர் இயற்கைக்கு ஏற்ற விதிகளை அனுஸரியாமல் தங்கள் மனோபாவப்படி ஜலம் குடித்து வருகிறார்கள். நமது முன்னோர்கள் வெகு காலமாக இயற்கைக்கு விரோதமில்லாமல் நடந்து வந்து, அதனால் ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு தங்களுடைய ஆகாராதி நியமங்களை ஒழுங்கு படுத்தியிருப்பதால் அவர்களுடைய ஆகாராதி ஒழுங்குகளை அலக்ஷ்யம் செய்வது சரியல்ல. கூடியமட்டும் அவர்களுடைய வழக்கங்களையே அனுஸரித்து வரவேண்டும்.

நாம் குடிக்கும் ஜலமானது கூடியமட்டும் ஆகாரத்தோடு ஸம்பந்தபட்டதாயிருக்க வேண்டும். நாம் சாப்பிடும் ஒவ்வொரு நேரத்திலும் ஜலமானது ஏதாவது ஒரு ரூபத்தில் ஆகாரத்தோடு சேர்ந்து தேகத்துக்குள் போகிறது. இங்க்லீஷ்காரர்களும் மற்ற மேல் நாட்டார்க

ளும் தினம் நான்கு தடவை சாப்பிடுகிறார்கள். நமது தேசத்து ஜனங்களில் தற்கால நாகரீகத்தால் மாறுபடாத, 'கர்நாடக' ரென்று சொல்லப்படும் அநேகர் இரண்டு வேளையே சாப்பிடுகிறார்கள். நாகரீகமாய் ஜீவனம் செய்யும் சில இந்தியர்கள் மேல் நாட்டாரைப் போல் 4-அல்லது 5-தடவை போஜனம் செய்கிறார்கள். 'நாகரீகமான' இந்தியர்கள் காலையில் ஒரு சிற்றுண்டியும், 10-அல்லது 11-மணிக்கு காலை போஜனமும், 2-அல்லது மூன்று மணிக்கு ஒரு சிற்றுண்டியும், ஸாயந்திரம் 5-மணிக்கு டீயும், இரவில் இராச் சாப்பாடும் சாப்பிடுகிறார்கள். மேல் நாட்டாரும் காலை, நடுப்பகல், பிற்பகல், இரவு என்று நான்கு வேளைகளில் போஜனம் செய்கிறார்கள்.

இப்படி சாப்பிடும் ஒவ்வொரு ஸமயத்திலும், ஏதாவது ஒருவகை பானம் சாப்பிடுவது வழக்கமாயிருக்கிறது. சாப்பாட்டுக்கு மத்தியிலும் தாகமெடுத்த போதும் ஜலம் குடிப்பதுண்டு. தாகமெடுக்காத போது ஜலமல்லாத வேறு பானவகைகளைத் குடிப்பது ரொம்ப கெடுதலானது.

அநேகர் சாப்பிடும்போது பானம் பருகுவது கூடாதென்று சொல்லுகிறார்கள். ஏனென்றால் உமிழ் நீரிலும், காஸ்ட்ரிக் ஜூஸ் என்று சொல்லப்படும் உணவை ஜீர்ணம் செய்வதற்கு உதவுகிற பாசக நீரிலும் ஜலம் கலந்து அவைகளின் வேகம் குறைந்துபோய் ஜீர்ணம் தடைபட்டுப்போகு மென்றும், தாழ்ந்த மிருகங்கள் தீனி தின்னும்போது ஜலம் குடிப்பதில்லையாகையால், அதுபோல நாமும் ஜலம் குடிக்காம லிருக்க வேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் சாப்பாடு விஷயத்தில் நாம் ரொம்ப சீர்திருத்தம் பெற்று அது விஷயத்தில் நாமும் மிருகங்களும் ரொம்பவும் வித்யாஸப்படுவதால் அவைகளின் வழக்கங்களை ஒரு உதாரணமாகக் கொள்வது சரியல்ல. இன்னும் சாப்பிடும்போது மிதமாக பானங்கள் குடிப்பதால் ஆகாரம் சரியாக ஜீர்ணமாகிற தென்பது அநேகருடைய அனுபவமாயிருந்து வருகிறது. ஆகையால் தான் மேல்நாட்டாரில் அநேகர் காலைப்போஜனத்தோடு தேயிலை, காப்பி, பால் முதலியவைகளையும், நடுப்பகல் சிற்றுண்டியோடு காரமில்லாத ஒய்ன், ஸோடா முதலியவைகள், சுத்தஜலம் ஆகிய இவைகளையும், பிற்பகலில் ரொட்டியோடு தேயிலைக் கஷாயமும், இரவில் மேற்சொன்ன பான வகைகளோடு ஸூப்பும் குடிக்கிறார்கள்.

ஆகாராதிகள் ரொம்ப கெட்டியாயிருந்து ஜலஸம்பந்தமில்லாமலிருந்தால் அவைகளை தக்கபடி மென்று தின்பது கஷ்டம். இக்காலத்தில் ஜனங்களுக்குப் பற்கள் கெட்டுப்போயிருப்பதால் ரொம்ப கெட்டியான பதார்த்தங்களை அப்படியே மென்று தின்பது முடியாது. மேலும் நாகரீக முதிர்ச்சியால் நமது வாயிலுள்ள உமிழ்நீர் சுரக்கும் கருவிகள் சுருங்கிப்போய் அதிக உமிழ்நீர் சுரப்பதில்லையென்று சொல்லலாம். ஆகையால் ஆகாரத்தை நன்றாய் மென்று தின்ன ஆகாரம் சற்று த்ரவம் கலந்ததாகவாவது இருக்கவேண்டும். அல்லது இடையிடையே பானவகைகள் குடிக்கவேண்டும். ஆனால் சாப்பிடும்போதும், அதற்குப்பிறகு உடனேயும் மிதமாகத்தான் பானவகைகள் குடிக்கலாமே யொழிய ஏராளமாய் பானவகைகள் குடிப்பது சரியல்ல. ஏராளமாய்க் குடித்தால் முன் சொன்ன பாசகநீர் என்பதில் ஜலம் அதிகமாகக் கலந்து ஜீர்ணம் தடைபட்டுப் போகும். ஜீர்ணம் சரியாக ஆகாவிட்டால் சாப்பிட்டு இரண்டுமணியான பிறகு ஒரு கோப்பை தண்ணீர் குடித்தால் ஆகாரம் ஜீர்ணமாகிவிடும்.

மற்றெல்லா பானங்களைவிட சுத்த ஜலந்தான் சிறந்தது. அது தாகத்தை சாந்தி செய்வதோடு ஆகாரமாகவும் ஆகிறது. நமது தேகத்தில் 5-ல் 4-பாகம் ஜலமாகும். தேகத்திலுள்ள இந்த ஜலத்தை ஸதாவெளிப்படுத்திப் புது ஜலம்

சேர்த்துக்கொண்டே யிருக்கவேண்டும். ஜலத்தை தேகத்தின் எந்த இடத்திலும் தங்கியிருக்கும்படி விடக்கூடாது. ஜலம் ஸதா தேகத்தில் ஓடிக்கொண்டே யிருக்கவேண்டும். ஜலத்தில் தாது ஸம்பந்தமான உப்புக்கள் இருப்பதால் தேக வளர்ச்சிக்கு ஸாதகமாகிறது. ஜலம் தகுந்த அளவில் சேர்ந்திருப்பதால் தான் தேகத்திலுள்ள நுண்ணிய ஜீவ அறைகள் தங்கள் தங்கள் வேலைகளை ஸரிவரச்செய்ய முடிகின்றது. தேகத்திலுள்ள கழிவு பதார்த்தங்கள் ஜலத்துடன்கலந்து வெளியே போய்விடுகின்றன. அநேகர் ரொம்ப கொஞ்சமாக ஜலம்குடிக்கிறார்கள். சிலர் தாகமெடுத்தால் சுத்த ஜலம் குடிக்காமல் ரொம்ப காரமுள்ள சாராயம் முதலிய பானங்களைக் குடித்து தேகத்துக்கு கெடுதியுண்டாக்கிக்கொள்ளுகிறார்கள். அது சரியல்ல. அதிக ஜலம் குடித்துவிட்டால் அந்த அதிக ஜலத்தை வெளிப்படுத்த தேகத்தில் வேண்டிய உபாயங்கள் அமைந்திருக்கின்றன. ஆனால் குறைவாய்க் குடித்தாலோ தேகத்திலுள்ள கழிவு பதார்த்தங்களை சுத்தம்செய்ய முடியாமல் போகிறது. வேண்டிய அளவுஜலம் குடித்துவந்தால் மித மீறிய ஆகாரம் சாப்பிடுவதால் ஏற்படும் கெடுதிகளை நீக்கிவிடலாம். தினந்தோறும் காலையிலும் ராத்ரிப் படுத்துக்கொள்ளப் போகும் போதும் ஒரு டம்ளர் சுடுஜலம் குடித்துவந்தால் தேகத்திலுள்ள அநேக வ்யாதிகள் ஸுலபமாய் நீங்கிவிடும்.

## ADVICE TO STUDENTS.

## மாணாக்கருக்கு நீதிபோதனை.

மாணாக்கர்கள் தாங்கள் செய்யவேண்டிய கடமைகளை சரியான காலத்தில் ஒழுங்காகச்செய்து வந்து, தங்களுடைய பாடங்களை சரியான காலங்களில் படித்துவந்தால் தேகஸௌக்யம் கெடாமலிருப்பதோடு படிப்பும் வ்ருத்தியடையும்.

மாணாக்கர்கள் எப்போதும் அதிகாலையில் படுக்கையைவிட்டு எழுந்திருக்கவேண்டும். கிழக்கு வெளுத்த பிறகு தூங்குவது சரியல்ல: காலையில் தானாகவே தூக்கத்தை விட்டு எழுந்திருக்க முடியாவிட்டால், வீட்டிலுள்ளவர்களை எழுப்பும்படி சொல்லவேண்டும். பெற்றோரோடும், மற்ற பந்துக்களோடும் வஸிக்காமல், தனியாக அயலூர்களில் வஸித்து வாசித்துக்கொண்டிருப்பவர்கள் காலையில் எழுந்திருக்கும் வழக்கம் ஏற்படுவதற்காக ஒரு 'அலாரம்' உள்ள கடியாரம் வைத்துக்கொள்வது நல்லது. சில நாள் விடியற்காலையில் எழுந்திருக்கப் பழகிவிட்டால், பிறகு கடியாரம் எழுப்பாமலே தானாக விழித்துக்கொள்ளலாம்.

தூங்கிவிழித்துக்கொண்டபிறகு படுக்கையில் படுத்துக்கொண் டிருக்கக்கூடாது. தூக்கமில்லாதபோதும் படுக்கையில் படுத்துப்புரண்டு கொண்டிருந்தால் சோம்பல் வ்ருத்தியாகும். படுக்கையைவிட்டு எழுந்தபிறகு ஒன்றும் செய்யாமல் உட்கார்ந்திருப்பதும், வீண்வார்த்தை பேசிக்கொண்டிருப்பதும், வாசிப்பதும் நல்லதல்ல. எழுந்தவுடன் மலஜலோபாதைகளைக் கழிக்கவேண்டும். மலச்சிக்கல் ஏற்பட்டு சரியான காலத்தில் மல ப்ரவர்த்தி யாகாமலிருந்தால் பெற்றோர்களையாவது வைத்யர்களையாவது கேட்டுத் தக்க பரிஹாரம் தேடவேண்டும். தினந்தோறும் சரியான காலத்தில் மலப்ரவர்த்தியாவது தேகஸௌக்யத்துக்கு ரொம்ப ஸாதகமாகும்.

பிறகு ஒவ்வொருவரும் சிறிது நேரமாவது தேகப்யாஸம் செய்யவேண்டியது அவச்யமாகும். தேகப்பயிற்சி செய்வதில் ஒழுங்காயும் காலந்தவறாமலும் செய்யவேண்டியது அவச்யமாகும், ஒருநாள் அதிகநேரம் செய்வதும், இன்னொருநாள் ஸ்வல்பநேரம் தேகப்பயிற்சி செய்வதும், இன்னொருநாள் தேகப்பயிற்சி செய்யாமலேயிருப்பதும் சரியல்ல. ஒவ்வொருநாளும் தேகப்பயிற்சிசெய்யுங் காலமும், நேரமாதிரியாயிருக்கவேண்டும். தினந்தோறும் காலையில் கால்மணி நேரம் விடாமல் செய்து வந்தால் போதுமானது.

ஸாதாரண "டம்பெல்," க்ரிப் டம்பெல் "முதலியவைகளைக் கொண்டு தேகப்பயிற்சி செய்யலாம். அவைகளை வாங்க சக்தியில்லாவிட்டால் தண்டால், பஸ்கி, கரலாபோடுதல் முதலிய ஸ்வதேச தேகாப்யாஸங்களைச் செய்து வரலாம்.

அதற்குப் பிறகுப் பற்களைத் துலக்கவேண்டும். பல்துலக்க அநேகர் பொடிகளும் குச்சிகளும் உபயோகிக்கிறார்கள். ஸாதாரண கரியையும் உப்பையும் பொடிசெய்து உபயோகிப்பது நல்லது. அல்லது சாக் பொடி, படிக்காரம், கற்பூரம் ஆகிய இவைகளைப் பொடிசெய்து கலந்தும் உபயோகிக்கலாம். கடைகளில் விற்கும் பல்பொடிகளை உபயோகிப்பது அவச்யமல்ல, கூடுமானால் வேல், கருவேல், இவைகளின் குச்சிகள் ஆலம்விழுது இவைகளைத் தேய்க்க உபயோகிப்பது நல்லது. இவைகள் ப்ரக்ஷாவதோடு பற்களையும் சுத்தம் செய்கின்றன. பல்லும் கெட்டிப்படுகின்றது.

பல் விளக்கியானதும் ஸ்நானம் செய்ய முடியாவிட்டால், முகத்தையும் கைகால்களையும் குளிர்ந்த ஜலத்தால் கழுவி சுத்தம்செய்யவேண்டும். ஆனால் தினம் காலையில் ஸ்நானம் செய்வதுதான் நல்லது. ஸ்நானம் செய்ய குளிர்ந்த ஜலமே ச்லாக்யமானது. ஸ்நானம் செய்கையில் முதலில் தலையில் ஜலத்தை விட்டுக்கொள்ள வேண்டும். மாணவர்கள் அதிகமாகப் படிப்பதாலும், பாடங்களைப்பற்றி அதிகமாக சிந்தனை செய்வதாலும், தேகத்திலுள்ள ரக்தமானது தலைக்கேறி மூளையில் அதிகமாகத் தங்கியிருக்கும். குளிர்ந்த ஜலத்தை முதலில் தலையில் ஊற்றிக்கொள்வதால் மூளையிலுள்ள ரக்தத்தில் அதிகமாயுள்ளது தேகத்திற்குத் திரும்பி வந்துவிடும். ஸ்நானம் செய்யும்போது காக்கை முழுகுவதுபோல் முழுகாமல், தேகத்தை நன்றாய்த் தேய்த்து ஸ்நானம்செய்யவேண்டியது அவச்யம். ஸ்நானம் செய்தபிறகு உலர்ந்த துணியால் தேகத்தையும் தலையையும் துடைத்து நன்றாய்க் காய்ந்த வஸ்த்ரத்தால் தேகத்தைப் போர்த்திக் கொள்ளவேண்டும்.

எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்வதாயிருந்தால், அதற்கும் காலை நேரமே ஏற்றது. அப்போது குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்யாமல் வெந்நீரில் ஸ்நானம் செய்யவேண்டும். வாரத்துக்கு ஒருதடவைக்குக்குறையாமல் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டும்.

எண்ணெய் தேய்த்துக்கொண்ட தினத்தில் தேகம் சோர்வடைந்திருக்குமாதலால், விடுமுறை நாட்களில் அப்யங்கனம் செய்துகொள்வதுதான் மாணவர்களுக்கு ஸௌகர்யமானது.

ஸ்நானமான பிறகு அவரவர்கள் தங்கள் தங்கள் ஜாதியாசாரத்துக்குத் தக்கபடி நெற்றியில் விபூதியோ, நாமமோ, சந்தனமோ இட்டுக் கொள்ளவேண்டும். ஒருவர் ஸ்நானம்செய்தபிறகு நெற்றியில் ஒன்றும் இட்டுக் கொள்ளாவிட்டால், அவர் சாவு ஸம்பந்தமான அசுசியுள்ளவரென்று பலர் எண்ண இடமேற்படும். அல்லது ஆசார விஷயத்தில் அச்ரத்தையுள்ளவரென்று வது பிறர் எண்ண ஹேதுவாகும்.

ப்ராமணர்கள் காலையிலும் மாலையிலும் தினந்தோறும் ஸந்த்யாவந்தனம் செய்யவேண்டியது அவச்யமாகும். மாத்யான்னிகம் செய்யும் நேரம் நடுப்பகலாகையால் பாடசாலைகளில் வாசிப்பவர்களும் உத்யோகம் செய்பவர்களும் அந்த நேரத்தில் அதைச் செய்வதென்பது முடியாது. ஆனால் அந்தக் கர்மாவை விடுவது சரியல்லவாகையால், காலை போஜனத்துக்குமுன் அதைச் செய்துவிடவேண்டும். ஸந்த்யாவந்தனம் செய்ய அதிகாரமில்லாத ஜாதியார் ஸ்நானம் செய்தபிறகு தங்கள் பெரியோர்களின் ஆசாரப்படி கடவுளை வணங்கவேண்டியது அவச்யமாகும்.

மேற்சொன்ன இந்த வேலைகளுக்கு ஸுமார் ஒருமணி ஸாவகாசம் செல்லும். ஆகவே ஒரு மாணவர் காலையில் 5-மணிக்குப் படுக்கையை



விட்டு எழுந்திருந்தால் 6-மணிக்குள் எல்லா வேலைகளையும் முடித்துவிடலாம்.

இவைகளுக்குப் பிறகு மாணாக்கர்கள் வாசிக்க ஆரம்பிக்கலாம். ஆனால் சிலருக்கு ஸ்வல்ப ஆகாரம் சாப்பிடுவது அவச்யமாயிருக்கும், ஏனெனில் அவர்கள் பள்ளிக்கூடம் போகுமுன் ஸுமார் 9-மணிக்கோ அதற்கு சற்றுப் பிறகோ சாப்பிட நேரிடுவதாலும், காலை 6-மணி முதல் அந்நேரம் வரையில் குடலில் ஒன்றுமில்லாமலிருக்குமாதலாலும், அவர்களுடைய படிப்புக்குத் தடையேற்படலாம். ஆனால் யாருக்கு 9-அல்லது $9\frac{1}{4}$-மணிவரையில் சாப்பிடாமலிருக்க முடியுமோ, அவர் ஒன்றும் சாப்பிடாமலிருப்பதே உத்தமம்.

அல்ப ஆகாரம் சாப்பிடவேண்டியிருந்தால் சுத்தமாயும் ஜலம் கலக்காமலுமிருக்கும் பாலைக் குடிப்பது நல்லது. பெரிய பட்டணங்களில் சுத்தமான பால் கிடைப்பது அரிதாகையால், கிடைத்ததை நன்றாய்க் காய்ச்சிவிட்டுக் குடிக்கலாம். இதற்கு பதிலாக கோதுமை, ராகி, அரிசி இவைகளால் பால்கஞ்சி செய்தும் சாப்பிடலாம். காப்பி குடிக்கும் வழக்கம் தற்கால நாகரிகங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. ஆனால் மாணவர்கள் இதைக் குடிக்கவேண்டிய அவச்யங்கிடையாது. காப்பி குடிப்பதால் தேகமும் மூளையும் சுறுசுறுப்பாக இருக்குமென்று சொல்வது ஸகஜம். ஆனால் இரவில் தூங்கிவிட்டுக் காலையில் ஸ்நானம் செய்துவிட்டாலேயே தேகத்தில் சுறுசுறுப்பு ஏற்பட்டுவிடுவதால், காப்பி குடிப்பது அனாவச்யமே. தினந்தோறும் காப்பி குடிப்பதால் ஜீர்ணசக்தி குறைந்துபோய் பிற்காலத்தில் நரம்புத்தளர்ச்சியும் நரம்பு ஸம்பந்தமான வ்யாதிகளும் உண்டாக ஹேதுவாகுமாம். மேலும் காப்பி குடிப்பதால் ஏழையான இந்தியர்களுக்கு அனாவச்யமான செலவும் ஏற்படுகிறது.

இதற்குப்பிறகு மாணவர்கள் வாசிக்க ஆரம்பிக்கவேண்டும். வாசிக்கும்போது வேறுவிஷயங்களைப்பற்றிய ஞாபகமில்லாமல், படிக்கவேண்டிய பாடத்தில் மனத்தைச் செலுத்தவேண்டும். மனஸை ஒரு நிலைப்படுத்தி வாசிப்பதால், விஷயங்கள் நன்றாய் மனஸில் படியும். புஸ்தகத்தை எதிரில் திறந்து வைத்துப் பார்த்துக்கொண்டு பாடத்தை கவனிக்காமல் வேறு விஷயத்தை சிந்தித்துக்கொண்டிருப்பது காலத்தை வீணாக்குவதாகும். பாடத்தில் கவனம் செலுத்த முயற்சி செய்தும் முடியாவிட்டால், சிறிது நேரம் புஸ்தகத்தை மூடி உலாத்திவிட்டு பிறகு வாசிக்க ஆரம்பிக்கவேண்டும்.

பள்ளிக்கூடம் உள்ள நாட்களில் $9\frac{1}{4}$ அல்லது 9 மணிக்கு சாப்பிடுவது நல்லது. விடுமுறை நாள்களில் இவ்வளவு சீக்ரமாக சாப்பிடவேண்டியதில்லை. பள்ளிக்கூட நாள்களில் வீட்டிலுள்ளவர்கள் தினந்தோறும் காலையில் சீக்ரமாக சமையல்செய்து போடவேண்டியிருப்பதால், விடுமுறை நாள்களிலாவது அவர்கள் அவஸரப்படாமல் சற்று நேரங்கழித்து சமையல் செய்யும்படி விடுவது நல்லது. அந்நாட்களில் மாணவர்கள் $10\frac{1}{2}$ அல்லது 11-மணிக்கு சாப்பிடலாம்.

சாப்பிட்டவுடன் தேகத்துக்கு ச்ரமம் கொடுக்கக்கூடாது. சற்று இளைப்பாரவேண்டியது அவச்யமாகும். பாடசாலை சற்று தூரமாயிருந்தால் நடக்கத்தான் வேண்டிவரும். இருந்தாலும் சற்று முன்னாடியே சாப்பிட்டிருந்தால் கால்மணி நேரமாவது இளைப்பாறியிருந்து பாடசாலைக்கு நடந்துபோகலாம்.

## THE WAR AND THE PAPER TRADE.

## யுத்தமும் கடுதாசி வ்யாபாரமும்.

யுத்தத்தினால் பற்பல தொழில்களுக்கும் வ்யாபாரங்களுக்கும் கஷ்டம் நேர்ந்திருப்பது போலவே கடுதாசி செய்யும் தொழிலுக்கும் ச்ரமம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவில் கல்வியின் அபிவ்ருத்தியால் கடுதாசியின் உபயோகம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஸுமார்

7-வர்ஷங்களுக்கு முன்னால் நாம் அன்ய தேசங்களிலிருந்து கிட்டத்தட்ட 1-கோடி ரூபாய் மதிப்புள்ள கடுதாசி தருவித்து வந்தோம். ஆனால் சென்ற 1914-ம் வர்ஷம் மார்ச்சு மாஸம் 31உ-யோடு முடிவான 1-வர்ஷத்தில் $1\frac{1}{2}$-கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள கடுதாசி, கடுதாசி அட்டைகள், முதலியன வரவழைத்திருக்கிறோம். இந்தியாவில் தற்போது கடுதாசி செய்ய 5-பெரிய மில்லுகள் இருக்கின்றன. இவைகளைத் தவிர மட்டமான கடுதாசி செய்யும் மில்லுகளும் இரண்டு இருக்கின்றன. இவைகளிலிருந்து கிடைக்கும் ஸுமார் 75-லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள கடுதாசியும் நமது தேசத்திலேயே செலவழிந்து போகிறது. ஆகவே நமது தேசத்துக்கு வர்ஷந்தோறும் ஸுமார் $2\frac{1}{4}$-கோடி ரூபாய்க்குக் கடுதாசி வேண்டியிருக்கிறது.

வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி யாகும் கடுதாசியில் பாதிக்கு மேல் இங்கிலண்டிலிருந்தும், கால் பாகம் ஆஸ்ட்ரியா-ஹங்கேரி, ஜெர்மனி ஆகிய தேசங்களிலிருந்தும், மற்ற கால் பாகம் பெல்ஜியம், நார்வே, ஸ்வீடன், ஹாலண்டு முதலிய தேசங்களிலிருந்தும் வந்து கொண்டிருந்தன. யுத்தத்தினால் எதிரி தேசங்களாகிய ஜெர்மனி, ஆஸ்ட்ரியா தேசங்களிலிருந்து கடுதாசி வருவது நின்று போயிற்று. இதே காரணத்தால் மற்ற தேசங்களிலிருந்து வரும் கடுதாசியின் மொத்தமும் குறைந்து போயிற்று. இங்கிலண்டில் கடுதாசி செய்வதற்கு வேண்டிய மரக்கூழும், புல் வகைகளும் போதுமான அளவு ஸ்வீடன் நார்வே முதலிய வெளி தேசங்களிலிருந்து வருவது நின்று போனதால், அங்கே கடுதாசியின் விலை உயர்ந்து போய் விட்டது.

மேலும் இந்தியாவில் உள்ள கடுதாசி மில்லுகளுக்கு வேண்டிய கடுதாசிக் கூழும் அன்ய தேசங்களிலிருந்து வந்துகொண்டிருந்தது; யுத்தம் ஆரம்பிக்கவும், அதன் விலையும் உயர்ந்து போய்விட்டது. இந்தியாவில் கிடைக்கிற கடுதாசி செய்ய உதவும் புல் வகைகளின் விலையும் உயர்ந்துவிட்டது. இத்யாதி காரணங்களால் யுத்தம் ஆரம்பித்தவுடனே இந்தியாவில் கடுதாசியின் விலை அதிகரிக்கலாயிற்று. கடுதாசிக்கு விலை சொல்லும்போது ஸாதாரணமாய், அதன் நிறையை அறிந்து இவ்வளவு நிறைக்கு இவ்வளவு விலையென்று சொல்வது வழக்கம். இந்தப் பத்ரிகை அச்சடித்திருக்கும் கடுதாசியின் விலையானது யுத்தத்துக்கு முன் ராத்தல் 2-அணா முதல் $2\frac{1}{4}$-அணா வரையில் விற்றுக்கொண்டிருந்தது. யுத்தம் ஆரம்பித்ததும் இதன் விலை $3\frac{1}{2}$-அணா ஆக உயர்ந்துவிட்டது.

இந்திய கவர்ன்மெண்டுகள் வெகுவாய் இந்திய மில்லுகளிலிருந்தே கடுதாசி வாங்கிவருகின்றன. பூனாவுக்குப் பக்கத்திலுள்ள ஒரு மில்லில் செய்யப்படும் கடுதாசியில் அநேகமாய் எல்லாவற்றையும் பம்பாய் கவர்ன்மெண்டாரே வாங்கிவருகிறார்களாம். மற்ற மில்லுகள் மேற்சொன்ன மில்லைவிட அதிக கடுதாசி செய்கின்றனவென்றாலும், எல்லா மில்லுகளும் சேர்ந்து, மொத்தம் இந்தியாவுக்கு வேண்டியிருக்கும் கடுதாசியில் மூன்றில் ஒரு பாகந்தான் செய்கின்றன. இதில் பெரும்பாகம் கவர்ன்மெண்டுகளுக்குப் போய் விடுகின்றன. பாக்கியுள்ள ஸ்வல்ப கடுதாசிதான் பொது ஜனங்களுக்குக் கிடைக்கும். பொது ஜனங்கள் தங்களுக்கு வேண்டிய கடுதாசிக்கு அந்ய நாடுகளையே எதிர்பார்க்கவேண்டியதாகிறது.

இங்கிலண்டில் கடுதாசியின் விலை உயர்ந்து போய்விட்டதால், அங்கே அநேக முக்யமான பத்ரிகைகள் யுத்தம் ஆரம்பித்தவுடன் பக்கம் குறைந்து வெளிவரலாயின. சிலவாரப் பத்ரிகைகள் மாஸப் பத்ரிகைகளாகவும், மாஸப் பத்ரிகைகள் 3-மாஸத்து ஒரு முறை வெளியாகும் பத்ரிகைகளாகவும் வெளிவரலாயின. ஆனால் இந்தியாவில் கடுதாசி விலை அதிகமாகியும் [illegible] பத்ரிகைகள் பக்கம் குறையாமல் ஒரே சீராய் ப்ரசுரமாயின. ஸமீபத்தில் ஸ்வீடன் கவர்ன்மெண்டார் தங்கள் தேசத்திலிருந்து கடுதாசி செய்ய உதவும் மரக் கூழை இங்கிலண்டுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாதென்று உத்தரவு போட்டுவிட்டதால், இங்கிலண்டில் கடுதாசியின் விலை ரொம்பவும் அதிகமாகிவிட்டது. இதனால் அங்கே சில பத்ரிகைகள் நின்று போயின. இந்தியாவிலும் கடுதாசியின் விலை $3\frac{1}{4}$ அணாவாக இருந்தது $4\frac{1}{2}$ அணாவாக ஏறிற்று.



யுத்தத்தில் ஸாமான்களையும் ஸைன்யங்களையும் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குக் கொண்டுபோக அநேகம் கப்பல்கள் வேண்டியிருப்பதால், தற்போது இங்கிலண்டில் வ்யாபாரத்துக்கு வேண்டிய அளவு கப்பல்கள் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. மேலும் யுத்தம் நடப்பதற்கு பணம் வேண்டியிருப்பதால், அநாவச்யமான செலவுகளை ஜனங்கள் குறைக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டார் எண்ணி அநாவச்யமான ஸாமான்களைக் கப்பல்களில் கொண்டுவராமல் தடுத்து அவச்யமான சரக்குகளை மட்டும் இறக்குமதி செய்ய அனுமதி கொடுக்கிறார்கள். தற்போது கவர்ன்மெண்டார் சுருட்டு, புகையிலை, கடுதாசி முதலியவைகளை வ்யாபாரிகள் தங்களிஷ்டப்படி இறக்குமதி செய்யாதபடி தடுத்து அவைகளை இறக்குமதி செய்ய லைஸென்ஸ் வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். இப்படிச் செய்வதில் கடுதாசி, கடுதாசி செய்வதற்கு வேண்டிய கூழ், இவைகளில் நூற்றுக்கு 40-பாகத்தைக் குறைத்துவிடப் போகிறதாகத் தெரிகிறது. இந்த ஸமாசாரம் சிலநாள்களுக்குமுன்னால் இந்தியாவுக்குத் தெரியவரவே, இங்கே ராத்தல் $4\frac{1}{2}$-அணாவாக இருந்த கடுதாசி தற்போது (24-தேதி) 6-அணாவாக உயர்ந்திருக்கிறது. மேலே சொன்னபடி இந்திய மில்லுகள் கவர்ன்மெண்டுக்குக் கடுதாசி செய்துகொடுத்து வருவதால் ஜனங்களுக்கு இந்தியாவில் செய்த கடுதாசி கிடைப்பது கஷ்டம். மேலும் மார்க்கெட்டில் கடுதாசி கொஞ்சமாயிருப்பதாலும், அன்ய தேசங்களிலிருந்து கடுதாசி வருவது கஷ்டமாகையாலும் விலை இன்னும் அதிகரிக்கும் போலிருக்கிறது.

இங்கிலண்டில் முன் சொன்னபடி கடுதாசி க்ராக்கி ஏற்பட்டிருப்பதோடு, இன்னும் ஒருகஷ்டம் ஏற்படுமென்று தெரிகிறது. முன்பு எவ்வளவு கடுதாசியும் கடுதாசிக்கூழும் இறக்குமதியாயிற்றோ அதில் 100-க்கு 60-பாகந்தான் இறக்குமதி செய்யலாமென்று கவர்ன்மெண்டார் உத்தரவு போட்டுப்போகிறார்களாம். மேலும் கடுதாசி மில்லுகளோடு கடுதாசி செய்துகொடுக்கச் செய்திருக்கும் காண்ட்ராக்டுகளெல்லாம் சட்டப்படி செல்லாதென்று உத்தரவு போடப்போகிறார்கள்.

இதனால் பத்ரிகைகளுக்கு கடுதாசி விஷயத்தில் ச்ரமம் நேரிடும். இந்தக் கஷ்டத்தை உத்தேசித்து பத்ரிகை அச்சிடுவதில் சில மாறுபாடுகள் செய்யப்போகிறார்கள். இதுவரையில் அவர்கள் செய்துவந்ததென்னவென்றால் சந்தாதாரர்களுக்குவேண்டிய மொத்த பத்ரிகைகளோடு இன்னும் அதிகமாக பத்ரிகைகள் அச்சிட்டு, கடைகளிலும் தெருக்களிலும் விற்றுவந்தார்கள். மொத்தம் அச்சடித்த பத்ரிகைகளில் 5-ல் ஒரு பாகம் விற்பனையாகாமல் திரும்பி வந்துவிடும். அதைக் கடைக்காரர்களுக்கு வீண் கடுதாசியாக விற்றுவந்தார்கள். இப்போது எவ்வளவு ப்ரதிகள் விலைப்போகுமோ அவ்வளவு ப்ரதிகளே அச்சடிக்க உத்தேசித்திருக்கிறார்கள். இதனால் தற்போது செலவாகும் 5-ல் ஒருபாகம் காகிதத்தை மிச்சம்பிடிக்கலாம். இன்னும் கடுதாசிக் கஷ்டத்தைக் குறைக்க பத்ரிகையின் பக்கங்களை 5-ல் ஒருபாகம் குறைத்து விடப்போகிறார்கள். இதனால் முன் சொன்ன 100-க்கு 40-பங்கு குறைவு சரிப்பட்டுப்போகும்.

# REGULATING LAND REVENUE SETTLEMENTS.

## நிலத்தீர்வை ஸெட்டில்மெண்டுகளை ஒழுங்குபடுத்துவது.

கவர்ன்மெண்டார் நிலத்தீர்வையை முப்பது வர்ஷத்துக்கொருதடவை மாற்றி வருகிறார்கள். அவ்விதம் மாற்றுவதை கவர்ன்மெண்டார் தங்களுக்கு யுக்தமென்று தோன்றுகிறபடி செய்யாமல் சட்ட ஸபையின் அனுமதி பெற்றுச்செய்ய வேண்டுமென்று சட்ட ஸபை மெம்பர்களில் அநேகர் வற்புறுத்தி வருகிறார்கள். இப்போது ஆனரபிள் ராவ் பகதூர் வி. கே. ராமானுஜாச்சாரியார் சென்னை சட்டஸபையில் இதைப்பற்றி ஒருமசோதாகொண்டுவர உத்தேசித்திருக்கிறார். அந்த மசோதாவும், அதைக் கொண்டுவருவதற்குக் காரணங்களும் அதன் நோக்கமும் பின்வருமாறு.

இம்மாகாணத்திலே நிலத்தீர்வை விதித்திருப்பதை திருத்தி யமைக்கும்பொழுது அதை சட்டபூர்வமாய் ஒழுங்கு படுத்தவேண்டு மென்பது அவச்யமாதலால், கீழே கண்டவாறு சட்டம் செய்யப்படுகிறது.

1. இந்தச் சட்டமானது “லாண்டு ரெவினியூ ரிவிஷன் ஆக்டு” எனப்படும்.

2. இம்மாகாணத்தின் எந்த ஜில்லாவிலும், எந்த ஜில்லாவின் எப்பாகத்திலும் சட்டஸபையின் அனுமதியில்லாமல் நிலத்தீர்வையை மறுஸெட்டில்மெண்ட் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்வதும், தீர்வைவிகிதங்களைத் திருத்தியமைப்பதும் கூடாது.

### நோக்கங்களும் காரணங்களும்.

நிலத்தீர்வையானது கவர்ன்மெண்டுக்கு ப்ரஜைகள் கொடுக்கும் ஒரு வரியாக இருந்தாலும் சரி, அல்லது நிலஸ்வானுக்கு நிலத்தை ஸாகுபடிக்கு எடுத்துக் கொண்டவன் கொடுக்கும் ஒரு வாடகையாக, இருந்தாலும் சரி அந்தத் தீர்வையை மாற்றுவதை ஒழுங்கு படுத்த ஒரு மசோதா ஏற்பட வேண்டியது அவச்யம்.

எந்த நாகரீகம் வாய்ந்த தேசத்திலும் பாவிக்கப்படுவதுபோல நிலத்தீர்வையை வரி யென்றால், அதை விதிப்பதையும், அதை உயர்த்துவதையும் மற்ற எல்லா வரிகளையும் போல சட்டஸபையால் ஒழுங்கு படுத்த வேண்டும்.

நிலத்தீர்வையைத் திருத்தி விதிப்பதனால் கிடைக்கக்கூடிய அதிக வருயானமானது மாகாணத்தின் செலவுகளுக்கு அவச்யமாயிருந்தாலும், அவச்ய மில்லா விட்டாலும், 30-வருஷத்திற்கு ஒருமுறை நிலத் தீர்வையைத் திருத்தி விதிப்பது இப்பொழுது அனுபவத்திலிருந்து வருகிறது. இவ்விதம் நிலத் தீர்வையைத் திருத்தி உயர்த்துவதனால் அனாவச்யமான செலவுகள் செய்யும்படி இடமுண்டாகிற தென்று சொல்வது தப்பாகாது. ஸெட்டில்மெண்டில் அதிக வருமானம் கிடைக்கும்பொழுது வேறு எந்தவரியையாவது, க்வர்ன்மெண்டார் தள்ளிக் கொடுப்பதாகத் தெரியவில்லை. கவர்ன்மெண்டாரோ ஸாதாரண ஜனங்களைப்போல் தங்களுடைய வருமானத்திற்கு ஏற்றபடி செலவை ஒழுங்குப்படுத்திக் கொள்ளுதல் கூடாது. அப்படிக் கில்லாமல் அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்றால், திறமையாக நிர்வாகம் நடத்துவதற்கு எவ்வளவு தொகை அவச்ய மென்பதை முதலில் நிர்ணயித்துக் கொண்டு, எல்லா ஜனங்களிடமிருந்தும் ஏற்றபடி வரியை விதித்து வாங்கவேண்டும்.

3. நிலத்தீர்வையை குத்தகைக்காரர் நிலஸ்வானுக்கு கொடுக்கும் வாடகையாகப் பாவித்தாலும், மேலே கண்டவாறு சட்டபூர்வமாய் அதை ஒழுங்குபடுத்த வேண்டுமென்பது அவச்யமாகிறது. நிலங்களைத் தங்களுடைய ஆஸ்தி யென்றும், மிராசுதார்களை வாடகைக்குச் சாகுபடி செய்வோரென்றும் பாத்யங்கொண்டாடும் கவர்ன்மெண்டு உலகத்திலே வேறொன்று உண்டோ என்பது ஸந்தேகம். முன்பு ஈஸ்ட் இந்தியா கம்பெனியானது வ்யாபாரக் கம்பெனியாயிருந்து அதிக லாபம் அடையவேண்டுமென்ற நோக்கத்துடன் எவ்வளவு வருமானம் அடையக்கூடுமோ அவ்வளவு வருமானத்தையும் அடைவதற்காக நிலங்களை தங்களுடைய ஆஸ்தியென்று பாவித்துக் கொண்டாடியதனால், அக்கம்பெனிக்குப்பின் அதன் வார்ஸாக வந்த கவர்ன்மெண்டாரும் நிலங்களைத் தங்களுடைய ஆஸ்தியென்று எண்ணுகிறார்கள் போலும். கவர்ன்மெண்டாரையே மிராசுதார்களாக வைத்துக்கொண்டபோதிலும், நிலத்தீர்வையை உயர்த்தும் விஷயத்தில் அவர்களுடைய அதிகாரத்தை சட்டபூர்வமாய் ஒழுங்கு படுத்தவேண்டும். மிராசுதாருடைய ஸ்வபாவம் என்னவென்றால், நிலங்களை சாகுபடி செய்வோரிடம் எவ்வளவு பணம் பெறலாமோ அவ்வளவு பணத்தைப் பெறவேண்டு மென்பதேயாகும். சாகுபடி செய்வோரின் ஸுகத்தையாவது க்ஷேமலாபத்தையாவது மிராசுதார் கவனித்தறிவது அவரது ஸௌகர்யத்துக் கேற்றதல்ல.

இந்த ஸ்வபாவமானது ஒரு இயற்கை ப்ரமாணமாகும். நிலஸ்வான் ஸாதாரண மனிதனாக விருந்தாலுஞ்சரி, அல்லது விசாலமான கொள்கைகளையுடைய கவர்ன்மெண்டாக விருந்தாலுஞ்சரி, அவர்களுக்கு இந்த ஸ்வபாவம் இருக்குமென்றுதான் கொள்ளவேண்டும். இந்த விஷயத்தை ஒப்புக் கொண்டவர்களாய்த்தான் கவர்ன்மெண்டாரும் சாச்வத ஸெட்டில்மெண்டுள்ள ப்ரதேசங்களில் நிலஸ்வானுக்கும் ஸாகுபடி செய்பவனுக்கும் உள்ள ஸம்பந்தம் இப்படியிருக்க வேண்டுமென்பதை ஒழுங்கு படுத்த “எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட்” என்றுசட்டம் செய்திருக்கிறார்கள். கவர்ன்மெண்டார் விஷயத்திலோ வென்றால், அவர்கள் ஜனங்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை சரியாய் உணர்ந்திருப்பவர்களாதலால், வரியைஉயர்த்தும் ஸ்வபாவமானது ஒருகட்டுக்குள் அடங்கியிருக்குமென்று எதிர்பார்க்கலாம். ஆனால் கவர்ன்மெண்டார்செய்திருக்கும் மறுஸெட்டில்மெண்டுகளையும், அவைகள் விஷயமாய் ஜனங்களும், அவர்களுடைய ப்ரதிநிதிகளும் ந்யாயமாய் ஆக்ஷேபித்ததை எப்படி கவர்ன்மெண்டார் கவனித்தார்களென்பதையும் பார்த்தால், கவர்ன்மெண்டார் ஜனங்களுடைய க்ஷேமத்தை அதிகம் கவனிக்காமல், வரி அதிகமாய்க் கிடைப்பதையே அதிகமாக கவனித்து வருகிறார்களென்று எண்ணவேண்டியிருக்கிறது. இப்படி நேரிடுவதற்குக் காரணமென்னவென்றால், ராஜாங்கத்தை நிர்வகிக்கும் உத்யோகஸ்தர்கள் மாறிக்கொண்டேயிருப்பதால் கவர்ன்மெண்டார் குடிகளுக்குச் செய்ய வேண்டிய கடமை யின்ன தென்பதைப்பற்றிய அபிப்ராயமும் அடிக்கடி மாறிக்கொண்டே யிருக்கிறது. ஆகையினால்தான் நிலத் தீர்வையை மாற்றும் ஒவ்வொரு ஸமயத்திலும் சட்டஸபையின் அனுமதியைப் பெறவேண்டியது அவச்யமாகிறது.

4. கவர்ன்மெண்டாருக்கும் பூஸ்திதியை அனுபவிப்பர், அல்லது சாகுபடி செய்வோர் ஆகிய இவர்களுக்கும் இடையில் புதிதாக ஒருவர் ஏற்பட்டுப் பலனடைந்து வருகிறார்களென்பதாக கவர்ன்மெண்டின் நிர்வாகத்தில் பொறுப்புள்ள உத்யோகஸ்தர்கள் பலமுறை வருத்தப்பட்டு சொல்லி யிருக்கிறார்கள். நிலத்தை உண்மையில் சாகுபடி செய்வோருக்கு எவ்வளவு தேவையோ அதைவிட அதிகமான வருமானத்தை விட்டு வருவதனால், இடையே ஒருவர் அந்தப்பலனை யனுபவித்து வருகிறார்களென்று சொல்லப்படுகிறது. ஆகவே அவ்விதம் கிடைக்கும் அதிகவருமானத்தை நிலத்தீர்வை மூலமாகத் தாங்களே அடைவதில் கவர்ன்மெண்டாருக்குச் ஸந்தோஷமுண்டென்று சொல்வது தப்பாகாது. இதற்காக நிலத்தீர்வையை உயர்த்த வேண்டுமென்று ஒரு கலெக்டர் சிபார்சு செய்தார். இதைக் கவர்ன்மெண்டார் மறுதளிக்கவில்லை, ஏனென்றால் மேலே கண்டவாறுள்ள

அதிக வருமானமானது நிலத்தை யனுபவிப்போருக்கு கிடைக்குமானால் அவ்வருமானம் சாராயக் கடைகளுக்குப் போய்விடுமென்று கவர்ன்மெண்டார் சொல்லுகிறார்கள்.

இந்தக் கொள்கையை ஏற்று அதன்படி நடந்தால், நிலஸ்வான்கள் அன்றாடங்காய்ச்சி ஜீவனம் செய்யும் குடிகளாக ஆகிவிடுவார்கள். ஸர்க்கார் வரும்படியை அதிகப்படுத்த அதிக ஆவலுள்ள கவர்ன்மெண்ட் மெம்பர்களும், ஸெட்டில்மெண்ட் உத்யோகஸ்தர்களும், ஜில்லா கலெக்டர்களும் அநேக ஜனங்களுடைய க்ஷேமலாபத்தை பாதிக்கும் இந்த விஷயத்தை தங்களுடைய மனோபாவப்படி தீர்மானிக்காமல் தடுப்பதற்காக, நிலத்தீர்வையை மறுஸெட்டில்மெண்டு செய்வது, இது விஷயமாய் முடிவான தீர்மானத்துக்கு வருவது ஆகிய இரண்டையும் சட்ட பூர்வமாய் ஒழுங்குபடுத்துவது ரொம்பவும் முக்யமாகும்.

5. எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் அவச்யமானதென்பதைக் காட்டுவதற்காக ஆனரபிள் மிஸ்டர் போர்ப்ஸ் சொல்லியதென்ன வென்றால், "உரிமைகளை நிச்சயமாய்த் திட்டப்படுத்தி உறுதிசெய்யாதுபோனால், குடிகள் மெதுவாய் அவர்களுக்குத் தெரியாமலே க்ஷீணதிசை யடைந்துவிடுவார்கள். ஜமீன்தார் வெள்ளப்பெருக்குள்ள ஆற்றுக்கு ஸாமனமானவர்கள். குடிகளோ அந்நதிகளின் கரைகள்போலாவார்கள். எளியவரைக் காத்து ரக்ஷிக்கவேண்டுமென்பதை உத்தேசிக்கும் பொழுதும் ராஜீய விஷயத்தையும் பொருளாதார விஷயத்தையும் யோசித்துப்பார்க்கும்பொழுதும் கவர்ன்மெண்டார் இது விஷயமாய் ஒன்றும் செய்யாமல் சும்மா இருக்கமுடியாது".

இனி, மிராசுதார்களை அதிகமான தீர்வை செலுத்தவேண்டுமென்று எப்பொழுதும் கவர்ன்மெண்டார் கேட்டுக்கொண்டே வரும்பொழுது, ஜனப்ரதிநிதிகளும் அதைக்கண்டு சும்மாவிருக்க முடியாதென்று நான் நினைக்கிறேன். ஜமீன்தார்களையும் அவர்களுக்கு உட்பட்ட குடிகளையும்பற்றி கனம் மிஸ்டர் போர்பஸ் பேசியிருப்பதானது கவர்ன்மெண்டார், ரயத்துவாரி மிராசுதார்கள் ஆகிய இவர்களுக்குள்ளும் இன்னும் அதிகப் பொருத்த முள்ளதாகும்.

6. தஞ்சாவூரிலுள்ள ஜனங்களின் பொருளாதார நிலைமையைக் குறித்து விசாரணை செய்யவேண்டுமென்று சென்ற சட்டஸபை மீட்டிங்கில் நான் தீர்மானங் கொண்டு வந்தபோது, அதைப் பற்றி நடந்த விவாதத்தைக் கவனித்தால், நிலத்தீர்வை விஷயமாய் கவர்ன்மெண்டார் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைக்கு ஒரு வரையறை இருக்கவேண்டு மென்பது வெளியாகும். கவர்ன்மெண்டார் தங்களுடைய வருமானத்தைக் கவனித்து இத் தீர்மானத்தை லேசாய்ப் பாவித்து விட்டார்கள்.

7. இந்தியா கவர்ன்மெண்டோடு மாகாண கவர்ன்மெண்டுகள் ஸெட்டில்மெண்டு செய்து கொள்ளும் விஷயமாய்த் தலையிட வேண்டுமென்பது இம் மசோதாவின் நோக்க மல்ல. நிலத்தீர்வையைத் திருத்தி யமைக்கும் பொழுது, அதை சட்ட பூர்வமாய் ஒழுங்கு படுத்த வேண்டு மென்பதே இம்மசோதாவின் உத்தேசமாகும்.

8. நிலத்தீர்வையைத் திருத்தி யமைக்கும் காலத்தைப்பற்றியாவது, அதை நூற்றுக்கு எவ்வளவு உயர்த்துவதென்பதைப்பற்றியாவது, இன்னும் அதைபற்றிய இதரவிஷயங்களைப்பற்றியாவது இந்த மசோதா ஒரு நிபந்தனையும் ஏற்படுத்தவில்லை. நிலத்தீர்வை விஷயமாய் நிர்வாக கவர்ன்மெண்டார் என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டபோதிலும் அவைகளை, சட்டஸபையின் அங்கீகாரத்தையும் அனுமதியையும் ஒட்டியே செய்யவேண்டு மென்பதுதான் இம்மசோதாவின் நோக்கமாகும்.

## REVIEW OF THE PRESS.

## பத்ரிகை ஆராய்ச்சி.

### THE MEDICINAL USES OF BRAN.

### தவிட்டின் ஔஷத உபயோகங்கள்.

ஸாதாரணமாய் நெல்லைக்குத்தி அரிசி யெடுக்கும்போது, உமித் தவிடு என்றும், தீட்டரிசித் தவிடு என்றும் இரண்டு வகையான தவிடுகள் கிடைக்கின்றன. இவைகளைத்தவிர நுட்பமான தவிடு இன்னும் அரிசியில் ஒட்டிக் கொண்டிருக்கிறது. அரிசியை உலை நீரில் கொட்டுமுன் அதைக் கழுவும்போது இந்த நுட்பமான தவிட்டிலும் ஒரு பாகம் அரிசியை விட்டு நீங்கி விடுகிறது. ஆயினும் சிறிது நுட்பமான தவிடு இன்னும் அரிசியில் ஒட்டிக்கொண்டிருக்கும். ஆனால் அரிசி குத்தும் யந்த்ரத்தில் நெல்லைக் குத்தினால் அரிசியில் கொஞ்சங்கூட தவிடு இருக்காது. இவ்விதம் தவிடு முழுவதையும் எடுத்து விட்ட அரிசியும் அதைச்சமைத்த சாதமும் பார்வைக்கு லக்ஷணமாயிருப்பதால் அநேகர் நன்றாய்த்தீட்டிய அரிசியையே உபயோகிக்க ப்ரியப்படுகிறார்கள். ஆனால் அந்த அரிசியை உபயோகிப்பது ரொம்ப கெடுதலாயிருப்பதோடு, ரொம்ப உபயோகமுள்ள ஒரு பதார்த்தத்தை அதாவது தவிட்டை வீணில் உபயோகிக்காமல் விட்டுவிடுகிறோமென்று 'வைத்தியகலாநிதி'யில் ஒரு நிருபர் சொல்லுகிறார். அவர் சொல்லும் காரணமாவது:

தேஹத்திற்கு வேண்டிய வலுவைத் தரக்கூடியது தவிடு. இது தேஹத்திற்குக் கெடுதி யுண்டாக்கும் நுண்ணுயிர்களைச் சேரவிடாமல் தடுத்துவிடும் சக்தியை யுடையது; அவ்வித நுண்ணுயிர்களைக் கொல்லும் சக்தியும் இதற்குண்டு. யந்த்ரங்களில் குத்தி யெடுத்த அரிசியையாவது, அல்லது வெகு வெண்மையாகத் தீட்டிய அரிசியையாவது சில நாள் உபயோகிக்காமல் வைத்திருந்தால், அதில் பூச்சிகள் உண்டாய் அது கெட்டுப் போகிறது. நன்றாகத் தீட்டாத அரிசியையாகிலும், அல்லது நன்கு பளபளப்பாகத் தீட்டிய அரிசியோடு, தவிட்டைக் கலந்தாகிலும் சில நாள் வைத்திருந்தோமானால், அதில் அவ்வளவு சீக்ரத்தில் பூச்சிகள் பிடிப்பதில்லை யென்பதை நாம் அநுபவத்தில் ப்ரத்யக்ஷமாகப் பார்த்து வருகிறோம். ஸ்வதேச வைத்யர்களில் சிலர், ரணங்களைக் கழுவி நிர்மலமாக வைப்பதற்காக அரிசி கழுவிய நீரைக் காய்ச்சி உபயோகிப்பதாகவும், ரணங்களின் மேல் தவிட்டைத் தூவுவதாகவும் தெரிய வருகிறது. அவர்கள் அவ்விதம் செய்வதற்குக் காரணம், தவிட்டுக்கு க்ருமிஹாரமான சக்தி யுண்டென்பதை அவர்கள் ஒருவாறு அறிந்திருக்கவேண்டு மென்பதேயாம்.

சென்னை மாகாணத்தின் வடபாகத்திலுள்ள சில ஜில்லாக்களில் வெகு வெள்ளையாகத் தீட்டிய அரிசியை உபயோகிப்பதால் பெரி பெரி யென்னும் வ்யாதி உண்டாவதாகவும், தவிட்டை வேண்டியவளவு உபயோகிப்பதாலும், அல்லது தவிட்டிலிருந்து தயார் செய்த ஒருவித ஔஷதத்தை உபயோகிப்பதாலும், அதிகமாகத் தீட்டி வெண்மையாக்காத அரிசியைச் சமையல் செய்து உண்பதாலும், இந்த வ்யாதி நிவ்ருத்தியாவதாகவும் தெரிகிறது. புழுங்கலரிசியை உபயோகிப்பவருக்கு இந்த வ்யாதி வருகிறதில்லை யென்று தெரியவருகிறது. புழுங்கலரிசியில் தவிடாகப் பிரியக் கூடிய சில அம்சங்கள், நெல்லைப் புழுக்கும்போது அரிசியோடு வெகு வலுவாகப் பற்றிக் கொண்டு விடுவதாலும், அந்த நெல்லைக் குத்தும்போது மேலுள்ள உமி எளிதில் அரிசியிலிருந்து நீங்கி விடும்படி அவ்வளவு பக்வமாயிருப்பதாலும், புழுங்கலரிசியில் தவிடு அவ்வளவு அதிகமாகப் பிரிந்து விடுவதில்லை. ஆகவே அந்த அரிசியும் பெரி பெரி வ்யாதியைத் தடுப்பதற்கோ, ஸ்வஸ்த்தம் செய்வதற்கோ உபயோகப் படுகிறதென்று தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

மிகவும் சுத்தமாகத் தீட்டிய அரிசியைக் கோழிகளுக்கு ஆஹாரமாகப் போட்டு வந்தால், அவைகளுக்கு நரம்பு ஸம்பந்தமான வ்யாதிகள் (nervous affections) ஸம்பவித்து அவை மரித்து விடுகின்றனவென்றும், வ்யாதி அதிகரிக்காததற்கு முன்னமே தவிடு கலந்த அரிசியையோ, அல்லது நன்றாகக் குத்தாத அரிசியையோ உணவாகப் போட்டு வந்தால் அவற்றிற்கு உண்டான வ்யாதி ஸ்வஸ்த்தமாய், அவை பிழைத்து விடுகின்றன வென்றும் பரிசோதனைகளால் சிலர் நிச்சயித்திருக்கிறார்கள்.

தவிடு நீங்கிய அரிசியை உபயோகிப்பதால் உண்டாகும் கெடுதி, இத்துடன் வெவ்வேறு காய்கறி முதலிய வ்யஞ்ஜனங்களைக் கூட்டிப் புஜிப்பதால் ஒரு

வாறு குறைவடையும். இதர வ்யஞ்ஜனங்களைக் விசேஷமாகச் சேர்த்து உபயோகிக்கச் சக்தியில்லாத ஏழை ஜனங்கள் இவ்வித அரிசியை உபயோகித்து வருவார்களாகையால், அவர்கள் இதனால் மேற்சொன்ன கெடுதிகளுக்கு உள்ளாகவேண்டி நேரிடுகிறது.

தான்யங்களின்–முக்யமாய் இங்கு அரிசியின், மேல் தோலான உமியை மெதுவாக உடைத்து நீக்கிய பிறகு, குத்தப்படும்போது அரிசியின்மேற் ஒட்டிக்கொண்டிருக்கும் பசையுள்ள சில பொடிகள் அரிசியிலிருந்து வெளிப்படுகின்றன; இந்த பாகமும் சரியான தவிடாகக் கருதப்படுகிறது. சரீரத்தின் போஷணைக்கு இன்றியமையாத அல்ப்யூமின் என்னும் (ஸம்ஸ்க்ருதத்தில் அதுவே ஓஜோதாது வென்று கூறப்படுவதாய் அறிகிறோம்.) தாதுவை வ்ருத்தி செய்வதற்கான ஸத்வம் இத்தவிட்டில் விசேஷமாய் அடங்கியிருப்பதாய் சாஸ்த்ரவல்லோர் பரிசோதித்து அறிந்திருக்கிறார்கள். ஆகவேதான் தவிடு நீங்கிய அரிசி தேக போஷணைக்கு அவ்வளவாய் ஏற்றதல்லவென்று கூறப்படுகிறது. இக்காரணத்தினாலேயே நாய்கள் தவிட்டு ரொட்டியை மட்டும் தின்று வலிவுடன் ஜீவித்திருக்கக்கூடுமென்று நிச்சயித்து, மேனாட்டார் அநேகர், நாய்களுக்கு விசேஷமாய் தவிட்டுப் பணியாரங்களையே ஊட்டமாகக் கொடுத்துவருகிறார்கள் என்றும் நாம் கேள்வியுறுகிறோம். உமி மாத்ரம் நீங்கிய அரிசியைக் குத்தாமலே, தவிட்டோடு சமையல்செய்து புஜித்தால், அது மலத்தை நன்றாக வெளிப்படுத்துமென்றும், ஆகவே அஜீர்ணரோகத்தில் அவ்வாறு செய்வது உத்தமமென்றும் மேனாட்டு வைத்ய பண்டிதர்களும் அபிப்ராயப்படுகிறார்கள்.

## FEMALE EDUCATION.

## பெண்கல்வி.

எவ்விதமான கல்வியைப் பெண்களுக்குக் கற்றுக்கொடுப்பதென்பதைப்பற்றி ‘வித்யாபானு’ பத்ரிகை சில குறிப்புகள் எழுதியிருக்கிறது.

காலத்தின் நிலைமையை அனுஸரித்து பெண் கல்வி இரண்டு விதமாயிருக்க வேண்டுமென்று அந்தப் பத்ரிகை சொல்லுகிறது. எல்லாப் பெண்களுக்கும் ஏற்றதான பொதுக் கல்வி ஒன்று. உத்யோகங்களை அபேக்ஷிக்கும் பெண்களுக்கேற்றகல்வி இரண்டாவது. பொதுக் கல்வியானது ஆண் பிள்ளைகளின் படிப்பைப் போலிராமல் பெண்களுக் கேற்றவிதமாயிருக்கவேண்டும். தற்கால ஹிந்துக்களின் தேசாசாரப்படி பெண்கள் 5-வயது முதல் 11-அல்லது 12-வயது வரையில்தான் பள்ளிக்கூடங்களில் வாசிக்கிறார்களாகையாலும், இந்த தேசாசாரத்தை அசட்டை செய்யக்கூடாதாகையாலும், இந்த ஸ்வல்பகாலத்தில் அவர்களுக்கு எவை முக்யமோ அந்த விஷயங்களை மாத்ரம் கற்பிக்கவேண்டும்.

எல்லாப் பெண்களுக்கும் எழுத வாசிக்கத் தெரியவேண்டியது அவச்யம். தேசபாஷைப் புஸ்தகத்தில் எந்த விஷயத்தையும் வாசிக்கத் தெரியவேண்டும். ஸாதாரண விஷயங்களை எழுதத் தெரியவேண்டும் கணக்கு விஷயத்தில் வீட்டுவேலைக்கு வேண்டிய அளவு எல்லாப் பெண்களுக்கும் தெரிந்தால் போதுமானது. மேல் பரீக்ஷைகளுக்குவேண்டிய கணக்குகளுக்கெல்லாம் அடிப்படையிலேயே அஸ்திவாரம் போடுவதாகச் சொல்லி, அவர்களில் அநேகம் பேர்களுக்கு, ஜீவ்யகாலத்தில் வேண்டாத கணக்குகளையெல்லாம், பையன்களுக்குச் சொல்லிக் கொடுப்பது போல, சொல்லிக்கொடுக்க வேண்டியதில்லை. ஸுகாதார விஷயங்களை கட்டாயம் கற்பிக்கவேண்டும்.

தேக தத்வசாஸ்த்ரம் ஸ்த்ரீகளுக்குப் படங்கள் மூலமாகவும், பூதக்கண்ணாடிகள் மூலமாகவும் அவச்யம் கற்பிக்கப் படவேண்டும். ஏனெனில் ப்ரஸவத்துக்கும் குழந்தை பராமரிப்புக்கும் இந்த சாஸ்த்ரப்பயிற்சி மிகவும் அவச்யமானது. சித்ரம் எழுதுவது (கோலம்போடுவது), தையல்வேலை ஆகிய இவைகளும் அவச்யமான பாடங்களாகும். இல்லாண்மை அடுத்த முக்யமான விஷயமாகும். இவ்வளவு விஷயங்களையும் பெண்களுக்கு அவர்கள் பாடசாலைக்குப் போகிற ஆறேழு வர்ஷங்களிலே கற்றுக்கொடுத்து விடலாமென்று அந்தப் பத்ரிகை எழுதுகிறது.

முதல் மூன்று வர்ஷம் எழுதப்படிக்கவும், கணக்குப்போடவும், கோலம் போடவும் கற்றுக்கொடுக்க வேண்டும். பிறகு வர்ஷாவர்ஷம் ஒன்றிரண்டு பாடங்களைச் சேர்த்து வரலாம். எல்லா வகுப்பிலும் தேகப்பயிற்சியும் ஏதாவது கைத்தொழிலும் ஸங்கீதமும் கட்டாயம் ப்ரதிதினமும் கற்றுக்கொடுக்கவேண்டும். குடும்ப வைத்யம் ஸ்வல்பம் கற்பித்தல் அவச்யம். ஸம்ஸ்க்ருதம், இங்லீஷ் முதலியவைகளை, பெண்கள் 12-வயஸுக்குமேல் பள்ளிக்கூடத்தில் படிப்பார்களானால் அப்பொழுது ஒருகால் சொல்லிக்கொடுக்கலாம்.



இவ்வளவும் எல்லாப்பெண்களுக்கும் கற்பிக்கவேண்டிய ப்ரதமப்படிப்பாகும். பெண்கள் உபாத்யாயர்வேலை, வைத்யவேலை, தபாலிலாகாவேலை முதலிய வேலைகளுக்குப்போக ப்ரியப்பட்டால், அவர்களுக்கு ஸெகண்டரி பாடசாலைகளிலும் காலேஜுகளிலும் அந்த உத்யோகங்களுக்கேற்ற படிப்பைக் கற்றுக்கொடுக்கலாம். இவ்விதம் எழுதிவிட்டு “வித்யாபானு” சமையல்வேலையை கற்பிப்பதைப்பற்றிப் பின் வருமாறு எழுதுகிறது.

“க்ருக க்ருத்யங்களுக்கு வேண்டிய சமயல்தொழில் முதலியவைகளைத் தாய்மாரே வீட்டிற் பழக்கவேண்டும். ஐந்திலே வளையாதது ஐம்பதிலே வளையாது. ஆகையால் வீட்டு வேலைகளில் பால்யம் முதல்கொண்டே தாய்மார்கள் பழக்கிவைப்பது பெண்களுக்கு மிகவும் அநுகூலமாகும். வீட்டு வேலைகளில் ஒன்றிலும் பழகாமல் ஸதா பள்ளிக்கூடத்துப் படிப்பிலேயே தங்கள் காலத்தைச் செலவிடும் பெண்கள் பிற்காலத்தில் பெருங் கஷ்டப்படுகிறார்கள். கஷ்டப்பட்டு வேலை செய்யவேண்டியது பெண்களுக்கு இன்றியமையாதது. ப்ரஸவம் முதலான கஷ்டங்களை இயற்கையிலேயே தெய்வம் அவர்களுக்கு அமைத்திருப்பதாலும், குழந்தைகள் விஷயத்தில் பல கஷ்டங்களை அவர்களே அநுபவிக்கவேண்டியிருப்பதாலும், அவற்றை அவர்கள் மனஞ்சலியாது தாங்குவதற்கு பால்யம் முதலே வேலையில் பழக்கப்படவேண்டும். அவ்வாறு செய்யாமல் சில தாய்மார்கள் தங்கள் பெண்களைச் செல்வமாய் வளர்த்துவிடுகிறார்கள். அதன் கஷ்டம் பின் தான் அவர்களுக்குத் தெரியும். ஆகையால் பெண்கள் வாழ்நாளுக்குஉதவும்படியான கல்வியேஉத்தமக் கல்வியாம்.”

## SELECTION OF BOOKS.

## புஸ்தகங்களைத் தேர்ந்தெடுத்தல்.

தற்காலம் அச்சடிக்கும் தொழில் அபிவ்ருத்தியடைந்து அநேக புஸ்தகங்கள் ப்ரசுரமாகி வருகின்றன. இவைகளில் சில நல்லவையாகவும் சில தீயவையாகவும் இருக்கின்றன.

நமது வாழ்நாள் ஸ்வல்பமா யிருப்பதாலும், கற்கவேண்டிய நூல்கள் அதிக மாயிருப்பதாலும், இன்ன நூல்கள் உபயோகமுள்ளவை, இன்ன நூல்கள் தீங்குள்ளவையெனத் தெரிந்து தீங்குள்ளவைகளைத் தள்ளிவிட்டு நல்ல நூல்களையே வாசிக்கவேண்டும். இது விஷயமாய் “விவேகசிந்தாமணி” பத்ரிகை சில குறிப்புகள் எழுதியிருக்கிறது.

புஸ்தகங்களை உத்தமம், மத்திமம், அதமம் என்று மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

அவற்றில்–சுத்த அப்ரயோசனமும், அருவருப்பும், தொட்டோர், கேட்டோர், பார்த்தோர் மனங்களில் நித்யமான கெடுதியை பிறப்பிக்கத் தக்கதுமான அதம நூல்கள் உலகத்துக்குக் கேடாய் உற்பத்தியாயிருக்கின்றன என்பதற்கு ஸந்தேகமில்லை.

ஒரு பெரியவர் குறித்தபடி, இவ்வுலகத்தில் தீமைக்கிடமாகிய, விஷ ஸர்ப்பங்களும், காய்கனிகளும், பொது மாதரும் கண்ணுக்கு அதிக பகட்டாய்த்தோன்றுவதுபோல் அதம புஸ்தகங்களும் உத்தம நூல்களைப் பார்க்கிலும் ஸாதாரணமாய் அதிக சொற்சிறப்புற்றவைகளாய், நாவுக்கு நயத்தையும், செவிக்கு இன்பத்தையும் கொடுக்கிறவைகளா யிருக்கின்றன.

மத்திம புஸ்தகங்கள் விஷத்துளிகள் கலந்த நிறைபால் குடம்போலும், மணலோடு விரவின அரிசிபோலும் நல்விஷயங்களும் தீயவிஷயங்களும் அமைந்தனவாயிருக்கின்றன. மூன்றாம் வகையாகிய உத்தமபுஸ்தகங்கள் தொகையில் குறைவாயிருப்பினும் அவற்றில் நமது ஜீவிதகாலமுழுவதும் கற்றுணரத்தக்க போதனைகள் உண்டு. மனிதர் வாசித்தறியவேண்டிய ஸகல விஷயங்களிலும் ஆத்ம விஷயமே அத்யந்த முக்யமானது. இப்படிப்பட்ட உத்தம புஸ்தகங்களையே தெரிந்தெடுத்து வாசிக்க வேண்டும்.

“புஸ்தகங்கள் இவ்வளவு திரளாயிருக்க, அவைகளில் நல்லதின்னது, தீயதின்னது என்று பகுத்தறிவதெப்படி என்று சிலர் கேட்கலாம். அறிவது அதிக ப்ரயாஸமல்ல. எப்படியென்றால், ஒரு புஸ்தகத்தின் லக்ஷணத்தை, அதைச் செய்தவருடைய தன்மை, நோக்கம் முதலியவைகளை கவனிப்பதனாலும், அவர் செய்திருக்கும் மற்ற நூல்களின் பொது லட்சணத்தைக் கொண்டும், அப்புஸ்தகத்தின் பிரிவுகள் பொருள் அட்டவணைகளை நோக்குவதினாலும், இவைகளினால் விளங்காவிடில் அப்புஸ்தகங்களில் ஒரு பாகத்தை [illegible]மாய் வாசிப்பதனாலும் அறியலாம். ஒரு [illegible]வழி என்னவென்றால் அப்புஸ்தகங்களைப்பற்றி, நம்மைவிட அறிவாளிகளும் யோக்யருமானவர்களுடைய அபிப்ராயத்தை அறிவதே. நல்ல மரங்களும் [illegible] மரங்களும் மிக்கவாயினும், உலகத்தில் ப்ரத்யக்ஷமாய்த் [illegible]

திருக்கிறதுபோல, ஸத்குணரான வித்வான்களுக்கு நூல்களுடைய குணதோஷங்கள் களங்கமறத் தெரியுமாதலால் அவர்களைக்கேட்டு உலகப்ரஸித்தமான நல்ல புஸ்தகங்களைக் ஐயமின்றி வாசிக்கலாம்."

"புஸ்தகங்களை இத்தனை திட்பநுட்பமாய்த்தெரிந்து வாசிக்கத்தேவையென்ன?என்று விசாரிக்க ஏதுவுண்டு. அது மிகவும் அவச்யந்தான். எப்படியென்றால் நாம் வாசிக்கும் புஸ்தகங்களின் தன்மைக்குத் தக்கதாகவே நாம் அடையும் அறிவும் நமது ஸம்பாஷணைப்போக்கும் எழுத்துப்போக்கும், நமது மனோமுயற்சியும்; நமது குணங்குறிகளும் நடபடிகளும், அவற்றால் ஏபிக்கும் இம்மை மறுமை அனுபவங்களும் ஒருவாறு இருக்கும்.

"விசேஷமாய் பால்யத்தில் வாசிக்கும் புஸ்தகங்களைக் குறித்து கவனமாயிருப்பது அவச்யம். ஏனென்றால், அவைகளால் உண்டாகும் அபிப்ராயங்கள் "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்றபடி மனதில் பலமாய்ப்பதிந்து ஜீவகால முழுவதும் மனதோடுகூட வளர்ந்து ஸ்திரப்படும். தகாத தன்மையுடைய ஒரே புஸ்தகத்தை வாசிப்பதால் நமது குணங்குறிகள் இம்மையிலும் நித்ய கெடுதியடையக்கூடும். ஆகையால் சொல்லில்,பொருளில் சிறந்தபுஸ்தகங்களையே தெரிந்து வாசித்தால் எவ்வளவோ அவச்யம்!"

## PUNISHMENT IN SCHOOLS.

### பாடசாலைகளில் தண்டனை.

'பெண்கல்வி'ப் பத்ரிகையின் ஸமீப ஸஞ்சிகையொன்றில் ஒரு நிருபர், பள்ளிக்கூடங்களில் தண்டனையைக் குறைப்பதற்கேற்றவையான சில உபாயங்களைத் தெரிவிக்கிறார். அவையாவன :

1. நீர் விழிப்பாய் இரும். நீர் விழிப்பாயிருந்தால் சிறுவர்கள் குற்றஞ் செய்ய இடமிராது. குற்றஞ் செய்த பிறகு தண்டிப்பதைக்காட்டிலும் குற்றம் வாரமலே தடுப்பது விவேகம்.

2. மாணுக்கருக்குப் பாடசாலைக் காலத்தில் பூர்ண வேலையை கொடும். துஷ்டத்தனத்துக்கு அப்போது அவகாசமிராது. வேலையில்லாச் சோம்பேறிகளே வெகு துஷ்டர்களாவார்கள்.

3. உம்முடைய போதனையை உல்லாஸகரமாக்கி அதைக் கேட்பதில் சிறுவர்கட்கு விருப்பை யுண்டுபண்ணும். அப்போது குறும்புகள்செய் மாணுக்கர்யத்தனப்படார். குறும்புகள் இல்லாதவிடத்து தண்டனையேது?

4. தாங்கள் செய்யவேண்டியது இன்னதென்று பிள்ளைகளுக்குத் தெரியும்படி சொல்லும். அநேக குற்றங்கள் விளைவதற்குக் காரணம் தமது கடமை இன்னதென்று அவர்கள் அறியாமலிருப்பதே.

4. பிள்ளைகளை எல்லாம் உமது பக்கமாய் வசப்படுத்தும். அநேகர் உம்முடைய பட்சமிருந்தால் எவனும் உமக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்ய அஞ்சுவான். அப்போது தண்டனையை உபயோகியாமல் நல்ல பிள்ளைகளைக்கொண்டே துஷ்டனைத் திருத்துவிக்கலாம்.

6. பிள்ளைகளை மரியாதையாய் நடத்தும். அப்போது தண்டனை அவமானமென்றெண்ணி பையன்கள் குற்றங்கள் செய்ய அஞ்சுவார்கள்.

7. மாணுக்கருடைய வீட்டுக்குப்போய் தாய்தந்தையரோடு ஸ்நேகங்கொண்டு பிள்ளைகள் விஷயமாய் சிரத்தை பாராட்டி வருவீரானால், பெற்றோரும் உம் பக்கம் சேர்ந்து உமது க்ரம சிக்ஷைக்கு அனுகூலமாய்த் தம்மக்களை நடத்திவருவார்கள். பிள்ளைகளுக்கும் உம்மிடத்தில் பெருந்தாக்ஷிண்யம் தோன்றி உமக்குக் கோபம் வருங்கார்யத்தைச் செய்யஅஞ்சுவார்கள்.

8. கோப மும்முரத்திலேயே தண்டிக்கப்புகாதேயும். சற்று ஸாவதானப்பட்டால் தண்டனை வேண்டாமென்றாவது அல்லது அதைக் குறைக்க வேண்டுமென்றாவது தோன்றும். கோபம் ஓர் பைத்யம்.

9. மற்ற உபாயங்கள் கைகூடாவிட்டாலல்லது தண்டனையை உபயோகிக்காதேயும். சதுர்வித உபாயங்களுள் தண்டம் கடைசியதென்று நீர் 'பஞ்சதந்திர'த்தில் வாசித்ததில்லையா ?

10. தண்டிப்பது அவச்யமென்று தீர்மானித்த பிறகும் கூடியமட்டில் குறைந்த தண்டனையைக் கொடும். கையில் பிரம்பு வைத்திருந்தால் பிரம்படிதான் சரியென்று தோன்றுவதுண்டு. ஆகையால் அதை அப்புறமே வைத்திருக்கவேண்டும்.

11. வாஸ்தவமான துன்மார்க்கங்களுக்காகத் தண்டிக்கலாமேயொழிய, சிறுவர்கட்கு இயற்கையான சில்லரைச் சேஷ்டைகளுக்கெல்லாம் தண்டிக்கக் கூடாது.

12. துன்மார்க்கத்தை முளையிலேயே அற்பதண்டனையால் அப்போதைக்கப்போது கிள்ளிப்போடும். முற்றவைப்பதனால் பெருந்தண்டனைகளாகிய கோடரிகள் வேண்டியிருக்கும்.

13. தண்டனைவருவது நிச்சயமென்று பிள்ளைகள் அறியட்டும். அறிந்தால் பிள்ளைகள் குற்றஞ்செய்யார். நெருப்பு சுடுமென்பது நிச்சயமாகையால் நெருப்பை யாரும் தொடுகிறதில்லை. குற்றஞ் செய்யுந்தோறும் தண்டித்துவரவேண்டும்.



# Departmental Notes.

# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.

## வித்யாவிஷயம்.

### An Educational Conference.

ஒரு வித்யா கான்பரென்ஸ் —க்ராண்ட்-இன்-எய்ட் கோடு சட்டம், வித்யா சட்டம் ஆகிய இவைகள் ஸம்பந்தமான சிலவிஷயங்களைப்பற்றிப் பரிசீலனை செய்வதற்காக கவர்ன்மெண்டார் ஒரு கான்பரென்ஸ் கூட்ட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதில் உத்யோகஸ்தர்களே யன்றி உத்யோகஸ்தர்களல்லாத வித்யாபிமானிகளும் மெம்பர்களாக இருப்பார்கள். இந்தக் கான்பரென்ஸ் மார்ச்சுமீ 10உ யன்று கூடும். இதில் பின் வரும் விஷயங்களைப்பற்றி கவனிப்பார்கள்.

(1) பப்ளிக் மானேஜ்மெண்டின்கீழுள்ள அதாவது கவர்ன்மெண்ட், முனிஸிபாலிடி, லோகல்போர்டுகள் ஆகிய இவைகளின் மேற்பார்வையிலுள்ள எலிமெண்டரி பள்ளிக்கூடங்களில் இப்போதுள்ள சம்பள விகிதங்களை மாற்றவேண்டுமா? அப்படியானால், எவ்விதம், எவ்வளவுதூரம் மாற்றவேண்டும்.

(2) மேற்சொன்ன பாடசாலைகளுள் இன்பண்ட் வகுப்பு முதல் நான்கு வகுப்புகள் மாத்ரம் உள்ள பள்ளிக்கூடங்களில் வஸூலான சம்பளத்தை தலைமை உபாத்யாயர்கள் எடுத்துக்கொள்ளும் ஏற்பாட்டை அப்படியே விட்டுவிடுவதா, நிபந்தனைக்குள்ளாக்குவதா, அல்லது ஒழித்துவிடுவதா ?

(3) பொதுஸ்தாபனங்களின் மேற்பார்வையிலுள்ள பள்ளிக்கூடங்களில் பயிற்சியடைந்த உபாத்யாயர்களுக்கு காபிடேஷன் அலவன்ஸ் கொடுத்துவரும் ஏற்பாடு பயிற்சியடைந்த உபாத்யாயர்களை எவ்வளவுதூரம் உபாத்யாயர்களாக வருவதற்குத் தூண்டுகிறது? இதற்கு பதிலாக பயிற்சியடைந்த உபாத்யாயர்களின் சம்பளத்தை உயர்த்துவது நல்லதா.?

(4) உபாத்யாயர்களுக்கு காபிடேஷன் க்ராண்டுகளும் அலவன்ஸும் கொடுக்கும் ஏற்பாடு அப்படியே இருக்கலாமென்றால், அவைகளை வகுப்புகள் வாரியாகக் கொடுத்து வரலாமா? அப்படியானால் எவ்விதம் பங்கிட்டுக் கொடுப்பது ?

(5) எலிமெண்டரி ஸ்கூலிலிருந்து ஸெகண்டரி ஸ்கூலுக்குப் பிள்ளைகள் போவதைப்பற்றிய 99-வது மதராஸ் வித்யாவிதியை மாற்ற வேண்டுமா? அல்லது அதை எடுத்து விடவேண்டுமா?

(6) தற்போது ஸெகண்டரி ஸ்கூல்களுக்கு க்ராண்டு கொடுத்து வருவதற்குள்ள ஏற்பாட்டைத் திருத்த வேண்டுமா? திருத்தவேண்டுமானால், எவ்விதத்தில் என்ன நோக்கத்தை உத்தேசித்து?

(7) கல்வியில் முன்னேற்ற மடையாத வகுப்பார்களின் ஜாபிதாவைப்பற்றியும் பப்ளிக் மானேஜ்மெண்டின்கீழ் நடத்தப்பட்டு வரும் எலிமெண்டெரி ஸ்கூல்களிலும் செக்கெண்டெரி ஸ்கூல்களிலும் வந்து சேரும் இந்த வகுப்பு பிள்ளைகளின் சம்பளத் தொகையை குறைப்பதைப்பற்றியும், சம்பளம் இல்லாமல் சேர்த்துக் கொள்ளும்விஷயமாக ஏற்பட்டிருக்கும் விதிகளைப் பற்றியும், அவ்வித மாணுக்கர்களின் விஷயமாய் கொடுக்கப்பட வேண்டிய காபிடேஷன் அலவன்ஸ், அல்லது உதவிப்பணம்இவைகள் ஸம்பந்தமான விதிகளைப் பற்றியும் கவனித்தல்.

### School Hygiene.

பள்ளிக்கூடங்களில் ஸுகாதாரம்.—ஸமீபத்தில் ஐக்யமாகாணங்களில் நடந்த வித்யாகான்பரென்ஸில் டாக்டர் டி. ஆர். ரஞ்ஜித்ஸிங் என்பவர் பள்ளிக்கூடங்களில் ஸுகாதாரம் என்னும் விஷயத்தைப் பற்றிப் பேசினார். அவர் சொன்னதின் ஸாராம்சம் பின்வருமாறு. பள்ளிக்கூடங்களில் வஸிக்காமல், வீடுகளில் வஸித்துக்கொண்டு பள்ளிக்கூடங்களுக்கு வந்து வாசிக்கும் மாணுக்கர்களுடைய தேகஸ்திதியை வைத்யர்களைக் கொண்டு க்ரமமாக பரீட்சை செய்யவேண்டும். இவ்விதம் செய்யாவிட்டால், கண், காது, முதலியவை ஸம்பந்தமான வ்யாதிகள் வ்ருத்தியடைந்து மாணுக்கர்களுக்கு ரொம்ப கெடுதியை உண்டாக்கும் (2) மாணுக்கர்களுக்கு ஆகாரம், தேகாப்யாஸம் முதலியவைகளைப் பற்றிய ஸுகாதார விதிகளையும்,வ்யாதிவாராமல் தடுக்க எடுத்துக்கொள்ள வேண்டிய உபாயங்களையும் கற்பிக்க வேண்டும். (3) பள்ளிக்கூடங்களில் மாணுக்கர்கள் வஸிக்கும் அறைகள், கக்கூஸுகள், பள்ளிக்கூடம், காலேஜுகளைச் சேர்ந்த ஹோட்டல்களின் சமையலறைகள், சாக்கடைகள் முதலியவைகளை க்ரமமாய் சோதித்து ஏதாவது சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமா என்பதை கவனிக்கவேண்டும். (4) ஹோட்டல்களில் உபயோகிக்கும் ஆகார ஸாமான்கள் ஸரியானவையா என்பதைப் பார்க்கவேண்டும். (5) பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கப்படும் தேகப்பயிற்சி ஏற்பாடு த்ருப்திகரமானதா என்பதை வைத்யர்களைக்கொண்டு நிர்ணயிக்கவேண்டும்.

# TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

**Hindu Feasts and Festivities.**

**இந்து புண்ய கதைகள்.**—இது சென்னை ஆர்க்கேயலாஜிகல் டிபார்ட்மெண்ட் மானேஜர் மிஸ்டர் பி. வி. ஜகதீசய்யர் இயற்றியது. இதில் விநாயக சதுர்த்தி முதலிய வ்ரதங்கள், ஏகாதசி முதலிய புண்ய தினங்கள் ஆகிய இவைகளின் மகாத்மியம், வரலாறு முதலியவைகள் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. இன்னும் இதில் கலியின் தர்மங்களைப்பற்றியும் ஸ்த்ரீ புருஷர்களின் ஒழுக்கத்தைப் பற்றியும் ஹிந்துக்கள் அறிய வேண்டிய அநேக விஷயங்களைப் பற்றியும் விரிவான வ்யாஸங்கள் இருக்கின்றன. நமது மதாசாரங்களைப்பற்றி அறிய விரும்பும் ஒவ்வொரு ஹிந்துவும் இந்தப் புஸ்தகத்தை வாங்கி வாசிக்க வேண்டியது அவசியமாகும். இதன் விலை அணா 8. வேண்டுவோர் மெஸ்ஸர்ஸ் ஜி. ஏ. வைத்யாமன் அண்ட் கம்பெனி, 3,4, கொண்டி செட்டித் தெரு மதராஸ் என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

**Tamil and Higher Education.**

**தமிழ் மொழியும் உயர்தரக் கல்வியும்.**—இப் பெயர் கொண்ட ஒரு துண்டுப் பத்ரிகையை அறப்புக் கோட்டை ரேஞ்சு பாடசாலை ஸப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டராகிய மிஸ்டர் வி. முத்துஸாமி அய்யர் நமது பார்வைக்கு அனுப்பியிருக்கிறார். அதில் அவர், காலேஜுகளிலும் உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும் தமிழ் பாஷை புறக்கணிக்கப்படுகிறதென்றும், மாணவர்களுக்குத் தாய்ப்பாஷையில் விஷயங்களைக் கற்பிப்பதால் அவர்கள் விஷயங்களை நன்றாய் க்ரஹிப்பார்களாதலால், இங்க்லீஷ் பாஷைப்பாடம், (சில்காலம் வரை) சாஸ்த்ர பாடங்கள் ஆகிய இவைகளைத் தவிர மற்ற பாடங்களை தமிழிலேயே கற்பிக்க வேண்டுமென்றும் சொல்லுகிறார்.

இந்த ஏற்பாட்டால் நன்மை உண்டாகுமென்றும், இதை ஆக்ஷேபிப்பதற்கு தக்க ஆதாரங்களில்லையென்றும் பல ந்யாயங்களால் அவர் விளக்கிக் காட்டுகிறார்.

**Therayar Karisilai etc.,**

**தேரையர் கரிசிலை-300 ; கல் நண்டு சூத்திரம்-12 ; யூகிமுனி கரிசிலை-36.**—இந்த மூன்று நூல்களும் அடங்கிய ஒரு புஸ்தகம் சென்னை கோமளீச்வரன் பேட்டை அம்பா விலாஸ புஸ்தக சாலையாரால் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த நூல்கள் சித்தர்கள் எழுதியவை யாதலால், இவை நம் நாட்டு வைத்யர்களுக்கு ரொம்பவும் ப்ரயோஜன முள்ளவையாயிருக்கும். இவைகளில் பஸ்மங்கள், த்ராவகங்கள், தைலங்கள், மாத்திரைகள் முதலிய பல மருந்துகள் செய்வதற்கு முறைகள் கூறப்பட்டிருக்கின்றன. இந்த நூலின் விலை அணா 12.

**The Life of Abraham Lincoln.**

**ஏப்ரஹாம் லிங்கன் சரித்திரம்.**—இது கும்பகோணம் டௌன் ஹைஸ்கூலில் உபாத்தியாயராயிருந்து காலஞ்சென்ற கே. வெங்கடராமய்யர் இயற்றியது.

ஏப்ரஹாம் லிங்கன் என்பவர் அமெரிக்க ஐக்கியநாடுகளின் குடியரசுக்கு 16-வது ப்ரெஸிடெண்டாவார். அவர் ஸாமன்யபதவியிலிருந்து படிப்படியாக உயர்ந்து கடைசியில் ப்ரெஸிடெண்ட்பதவியை அடைந்தார். அவர் அடிமை வ்யாபாரத்தையும், இன்னும் தீமைக்கிடமான கொள்கைகளையும் வெறுத்தவராதலால், அமெரிக்கா ஐக்கிய நாடுகளுள் அடிமை வ்யாபாரத்துக்குச் சார்பான சில நாடுகள் இவர்மேல் வெறுப்புக்காட்டின. இதனால் அங்கே உள்நாட்டு யுத்தம் ஏற்பட்டு சில வருஷம் நடந்தது. அந்த காலத்தில் மிஸ்டர் லிங்கன் வெகு ஸாமர்த்யமாய் அரசாட்சியை நடத்தினதோடு யுத்தத்திலும் ஜயமடைந்தார். இந்தப்புஸ்தகத்தில் அவருடைய குணாதிசயங்களைப்பற்றியும், அவர்செய்த வேலைகளைப் பற்றியும் விரிவாய் எழுதப்பட்டிருக்கிறது. இதன்விலை அணா 12 வேண்டுவோர் கும்பகோணம் ஹிந்து எடுகேஷனல் ட்ரேடிங் கம்பெனிக்கு எழுதப்பெற்றுக்கொள்ளலாம்.

**Naladiyar**

**நாலடியார்.**—இது மாணவர்கள் படிக்கத்தகாத இடக்கரான செய்யுள்கள் நீங்க மற்ற செய்யுள்களும், அவற்றிற்கு அரும்பதவுரையும் கொண்டது. வேலூரிலுள்ள வூர்ஹீஸ்காலேஜ் பண்டிதராகிய மிஸ்டர். பி. கே. ஸ்ரீநிவாஸாச்சார்யார் பதிப்பித்தது. உரை தெளிவாக இருக்கிறது. மாணவர்கள் வாசிக்க ஏற்றது. இதன்விலை, அணா 8. வேண்டுவோர் ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி 3,4, கொண்டி செட்டித்தெரு, மதராஸ், என்று எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.



# SCIENCE AND INVENTION.

## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

**Death by Lightning.**

**இடியும் மின்னலும் தாக்கிச் சாவது.**—இடியும் மின்னலும் தாக்கிச் சாகிறவர்களுக்கு இடி தாக்கினவுடனே ப்ரஜ்ஞை தப்பிப்போகிறதென்றும், அவர்களுக்கு இடி தாக்கினதால் யாதொரு கஷ்டமும் ஏற்படுகிறதில்லையென்றும் ஒரு இங்க்லிஷ் வித்வான் சொல்லுகிறார். ஏனென்றால் இடி தாக்கினவுடன் உணர்ச்சியானது இல்லாமல்போய்விடுகிறது. உணர்ச்சிக்கு இருப்பிடம் மூளையாகும். சப்த, ஸ்பர்சம் முதலிய உணர்ச்சிகளை தேகத்திலுள்ள நரம்புகள் க்ரஹித்து மூளைக்குக் கொண்டுபோனால்தான், அந்த உணர்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன என்ற அறிவு மனிதனுக்கு ஏற்படுகிறது. இப்படி நரம்புகள் வெளியிலிருந்து விஷயங்களை க்ரஹித்து அவ்விஷயங்களின் உணர்ச்சியை மூளைக்குக் கொண்டுபோக கொஞ்சநேரம் செல்லும். நரம்புகள் விஷயங்களின் உணர்ச்சியை மூளைக்குக் கொண்டுபோக ஏற்படும் ஸாவகாசத்தைப்பற்றிஒருவர் ஆராய்ச்சி செய்ததில் அவைகள் ஒரு ஸெக்கண்டுக்கு 100-அடி வீதம் வேகத்துடன் விஷயங்களை மூளைக்குக் கொண்டு போகின்றனவென்று தெரியவந்திருக்கிறது. விஷயங்களை க்ரஹிப்பதற்குமுன் மூளையானது ஒருவித ஒழுங்குக்கு வரவேண்டியிருக்கிறது. இதற்கு ஒரு ஸெக்கண்டில் பத்தில் ஒரு பாகம் வேண்டியிருக்கிறதாம். மின்னலும் இடியும் உண்டாவதற்குக் காரணமாகிய மின்ஸாரமானது இன்னும் ரொம்பவேகமாகப் போகக்கூடியதாம். மின்ஸார சக்தியானது பூமிக்கும் சந்த்ரனுக்கும் எவ்வளவுதூரம் உண்டோ அவ்வளவு தூரத்தையும் ஒரு ஸெக்கண்டில் கடந்துபோக முடியும். மின்னல் தாக்கிய ஒருவனுடைய தேகத்தில் மின்ஸாரமானது அதிவேகமாய்ப் பாயுமாதலால், அதற்குள் அவன் ப்ரஜ்ஞை தப்பிப்போய், வலி ஏற்படுவதும், ஏற்படாததும் அவனுக்குத் தெரியாமல் அவன் இறந்துவிடுவானாம்.

**Venus.**

**சுக்ரன்.**—செவ்வாய் என்னும் க்ரகத்தில் ஜனங்கள் இருப்பதாகவும், அவர்கள் அந்த க்ரகத்திலுள்ள ஜலக் குறைவுக்காக பற்பல கால்வாய்கள் வெட்டியிருப்பதாகவும் சில வான்சாஸ்த்ரிகள் வாதித்துவருகிறார்கள். தற்போது ஒரு இங்க்லீஷ் இஞ்ஜினியர் சுக்ரன் என்னும் க்ரகத்தைப்பற்றிப் பரிசீலனைசெய்துபார்த்து, இந்த க்ரகத்திலும் ஜனங்கள் இருக்கக்கூடுமென்று சொல்லுகிறார். சுக்ரனானது எப்போதும் ஒரு பாதி உருண்டை பாகத்தை ஸூர்யன் பக்கமாகத் திருப்பிக்கொண்டிருக்கிறதாம். ஆகையால் மற்ற பக்கமானது ஸதாகாலமும் ஸூர்ய வெளிச்சமில்லாமல் இருட்டாயிருக்கவேண்டும். இந்த க்ரஹத்தில் ஜலம் உண்டென்றால் ஸூர்யன் படாத இந்தப் பாகத்தில் ஜலமெல்லாம், எப்போதும் பனிக்கட்டியாக உறைந்துபோயிருக்கும். மற்ற பாகமானது எப்போதும் ஸூர்யன் ப்ரகாசிக்கக்கூடியதாயிருப்பதால் அந்த பாகம் ரொம்ப உஷ்ணமாயிருக்கும். இந்த க்ரஹத்தில் ஜனங்கள் வஸிக்கக்கூடுமானால் அவர்கள் பனிக்கட்டியுள்ள இருட்டான ப்ரதேசத்தை அடுத்தாற்போலுள்ள வெளிச்சமுள்ள ப்ரதேசத்தின் ஒரு பாகத்தில்தான் வஸிக்கக்கூடும். அவர்கள் தங்களுக்குவேண்டிய ஜலத்துக்கு இருட்டான ப்ரதேசத்திலுள்ள பனிக்கட்டியை உருக்கி அந்த ஜலத்தை குழாய்கள் மூலமாகக் கொண்டுவந்து உபயோகிக்க வேண்டுமாம். திறந்த கால்வாய்களில் வெகுதூரம் கொண்டுபோனால் ஜலம் சீக்ரம் ஆவியாகப்போய்க் குறைந்துவிடும்.

**Dogs and Diseases.**

**நாய்களும் வ்யாதிகளும்.** — அமெரிக்காவிலுள்ள ஒரு நிபுணர் நாய்களால் அநேக வ்யாதிகள் மனிதர்களுக்குள் பரவுகின்றனவென்று சொல்லுகிறார். ஏனென்றால் நாய்களின் ஸுகாதார நிலைமையானது தற்கால ஜன ஸுகாதார நிலைமைக்கு ஏற்றவாறு இல்லை. ஆகையால் வ்யாதிகள் பரவாமலிருக்கவும், அதனால் மனிதர்கள் இறந்துபோகாமலிருக்கவும் அதிகப்படியாயுள்ள நாய்களைக் கொன்றுவிடுவது நல்லது என்று அவர் சொல்லுகிறார். மேலும், நாதனில்லாமல் திரியும் நாய்களையும், நாதனிருந்தும் வீட்டில் ஸுகாதாரக்கொள்கைகளுக்கு ஏற்றவிதமாக பாதுகாக்கப்படாத நாய்களையும் கொன்றுவிட வேண்டுமாம். இப்படிக் கொன்றுவிட்டால் மனிதர்களின் சாவு விகிதம் குறைவுபடுவதோடு, தேசத்தின் மொத்தவரும்படியும் அதிகமாகுமாம். நாய்கள் வைத்திருப்பவர்கள் நாய்களோடு அதிகமாய்க் கொஞ்சி விளையாடக்கூடாது. குழந்தைகளின் முகத்தையும் தேகத்தையும் நாய்கள் நக்கும்படி விடக்கூடாது. முக்யமாய் நாய்களை குழந்தைகளின் மிட்டாய்களை நக்கும்படி விடக்கூடாது.

## SANITATION AND MEDICINE.

## ஸௌகாதாரமும் வைத்யமும்.

### Malaria.

**மலேரியா.**—விவஸாயத்துக்கும் மலேரியாவுக்கும் நெருங்கின ஸம்பந்த மிருக்கிறதென்று சொல்லப்படுகிறது. எவ்வளவுக் கெவ்வளவு விவஸாயம் அபிவ்ருத்தி யடைகிறதோ அவ்வளவுக்கு மலேரியா குறைவென்று டாக்டர் பெண்ட்லி என்பவர் கூறுகிறார். பங்காளத்தில் விவஸாயம் சீர் கேடடைந்த போதெல்லாம் அங்கே மலேரியா என்னும் விஷம ஜ்வரம் ரொம்ப அதிகமாயிருந்ததென்று அவர் சொல்லுகிறார். வங்காள கவர்ன்மெண்டின் ரிபோர்ட்டுகளால் மலேரியா உள்ள ப்ரதேசங்களில் விவஸாயம் க்ஷீணித்திருக்கிறதென்று தெரிய வருகிறதாம். வங்காளத்தில் எந்த விடத்தில் ஜலம் யதேஷ்டமாயிருக்கிறதோ அங்கே வ்யவஸாயமும் நல்ல ஸ்திதியிலிருப்பதால், அங்கே மலேரியா குறைவாயிருக்கிறதாம். எங்கே ஜலம் குறைந்து போய் விவஸாயத்துக்குத் தடை யேற்படுகிறதோ அங்கே மலேரியா அதிகமாயிருக்கிறதாம்.

மலேரியா ஜ்வரம் கண்டால் இன்ன செய்ய வேண்டு மென்பதைப்பற்றி ஒரு டாக்டர் பின்வருமாறு சொல்லுகிறார். மலேரியா ஜ்வரம் கண்டவுடனேயே மருந்து சாப்பிட வேண்டியது அவச்யமாகும். மருந்து சாப்பிடு முன் பேதிக்கு மருந்து சாப்பிட்டுவிட்டு, இரவில் படுக்கப் போகும்போது பத்து க்ரெய்ன் க்வினைன் உட்கொள்ள வேண்டும். இப்படியாக ஒரு வாரம் வரையில் தினந்தோறும் இரவில் க்வினைன் மருந்து சாப்பிட வேண்டும் அதற்குப்பிறகு ஒரு வாரம் அல்லது பத்து நாள் வரையில் ஒன்று விட்டொரு நாள் மருந்து சாப்பிடவேண்டும். வ்யாதிதோன்றினவுடன் இவ்விதம் 2-வாரம் மருந்து சாப்பிட்டுவிட்டால் வ்யாதி ஸ்வஸ்தமாகிவிடும்.

மலேரியாவுள்ள ப்ரதேசத்திலிருந்து வேறு இடங்களுக்குப்போய்விட்டால் அந்த 2 வாரத்திற்குமேல் மருந்து சாப்பிடவேண்டியதில்லை. மலேரியாவந்து நாலைந்து தடவைமுறைக்காய்ச்சலடித்தும் மருந்து சாப்பிடாமலிருந்துவிட்டால், அதாவது, மலேரியா தோன்றிப் பத்து நாட்கள் வரையில் மருந்துசாப்பிடாமலிருந்துவிட்டால் அதை ஸ்வஸ்தம் செய்வது கஷ்டம். இப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களில் அநேகவாரங்கள் மருந்து சாப்பிட்டுக்கொண்டுவரவேண்டியிருக்கும். அல்லது மருந்தை ரத்தத்தில் த்ரவரூபமாய் செலுத்தவேண்டியிருக்கும். இதற்கு இஞ்ஜெக்ட்செய்தல் என்று பெயர்.

### Weak Sight.

**பார்வைக் குறைவு.**—இது உண்டாவதற்கு அனேக காரணங்கள் இருக்கின்றன.

பட்டினி கிடந்து களைப்பாய் இருக்கும் போது வாசித்தல்; நுட்பமாகப் பார்த்தல்; ப்ரகாசமான வெளிச்சத்தைப் பார்த்தல்; அந்த வெளிச்சத்தில் எழுதுதல்; தைத்தல். ஸந்தியாகாலத்தில் படித்தல்; மங்கலான விளக்கை படிக்க உபயோகித்தல்; வண்டியில் போகும் போது வாசித்தல்; ப்ரகாசமான விளக்காயிருந்தாலும் காற்றினால் அசையும் ஸமயத்தில் வாசித்தல்; வெகு நேரம் வாசித்தல்; அனாவச்யமாக தூக்கம் விழித்தல்; ரக்தமின்மையினால் தேஹம் மெலிந்திருந்த காலத்தில் படித்தல், கண் புண்ணடைந்து கஷ்டப்படும் காலத்தில் வெகு யோசனை செய்தல்; அடிக்கடி துக்கத்தைத் தருவித்துக் கொள்ளுதல்; வேலை வேலையென்று சொல்லி வேளா வேளையில் சாப்பிடாமலிருத்தல்; தேஹத்திற்குக் கடினமான வேலை கொடுத்தல்; தீய வழிகளில் புத்தியைச் செலுத்தி கெட்டுப் போதல்; ஆகிய இவைகளே முக்யமானவைகள். தாய் தகப்பன்மார்கள் தாங்கள் மேல் சொன்னவைகளை கவனித்து ஜாக்ரதையாயிருப்பதோடு தங்கள் குழந்தைகளையும் கண் விஷயத்தில் ஸரிவர கவனித்துக்கொள்ள வேண்டும்.—பெண் கல்வி.

### Plants that Drive away Mosquitoes.

**கொசுக்களைப் போக்கும் சில செடிகள்.**—ஆமணக்குஞ்செடி யிருக்குமிடத்தில் கொசுக்கள் அணுகுவதில்லையென்று மிஸ்டர் ஆல்பெர்ட் என்பவர் கூறுகிறார். ஓர் அறையில் ஒரு ஆமணக்கஞ் தண்டு அல்லது தழை முதலியவை இருந்தாலும் கொசுக்களை அவ்விடம் வரவிடாமற் செய்யப்போதுமானது. அநேகம் பூச்சிகளும் இச்செடியினிடம் அணுகுவதில்லையாம். ஸாரிமூர் என்பவரின் கொள்கைப்படி திருநீற்றுப்பத்ரியென்னும் மூலிகை யிருக்குமிடத்தில்கூட கொசு முதலிய ஜந்துக்கள் சேருவதில்லையென்று தெரிய வருகிறது.—வைத்தியகலாநிதி.



## LAW.

## சட்டம்.

### Pupil Versus Master.

**மாணாக்கனும் உபாத்யாயரும்.**—உபாத்யாயர்கள் மாணாக்கர்களை கெட்ட நடத்தைக்காகவாவது, பள்ளிக்கூட ரூல்களுக்கு விரோதமாக நடந்ததற்காகவாவது எவ்வளவு தூரம் கண்டிக்கலாமென்பதை பற்றி நிர்ணயிக்கக் கூடிய ஒரு கேஸ் இங்க்லண்டில் அப்பீல் விசாரணையில் இருந்துவருகிறது. அந்தக்கேஸின் விவரம் பின்வருமாறு:

ஒரு பையன் ஒரு பள்ளிக்கூடத்தில் வாசித்துக்கொண்டு, அங்கேயே தங்கியிருந்தான். அவனுடைய ஸகோதரன் ஒருவன் சில நாட்களுக்கெல்லாம் ராணுவத்தில் சேர எண்ணியிருந்தான். பையன் தன்னுடைய ஸகோதரனைப் பார்க்கவேண்டு மென்று, அவனுடைய தகப்பனார் அவனை (பையனை) ஒருநாள் லீவு வாங்கிக்கொண்டுவரச் சொன்னார். அப்படியே பையன் தனது உபாத்யாயரிடம் ஒரு பகல் வேளைக்கு லீவு வாங்கிக்கொண்டு அன்றிரவே பள்ளிக்கூடத்துக்கு வருவதாகச் சொல்லி வீட்டுக்குப் போனான். ஆனால் அதற்குள் ஸகோதரன்வேறொரு ஊருக்குப் போய்விட்டான். அதன்மேல் பையன் அந்த ஊருக்குப் போய் ஸகோதரனைப் பார்த்துவிட்டு மறுநாள் ஸாயங்திரம் பள்ளிக்கூடத்துக்குப்போய்ச் சேர்ந்தான். உபாத்யாயர் ரொம்ப கண்டிப்பானவர் என்று தோன்றுகிறது. பையன் பள்ளிக்கூட ஒழுங்குகளை மீறி நடந்ததற்காகவும், அவன் தன் வாக்குப்படி நடக்காததற்காகவும், அவனை உபாத்யாயர் பிரம்பாலடித்து தண்டித்தார் பையனும் அவனுடைய தகப்பனாரும் இவ்விதம் தண்டித்தது சரியல்ல வென்றெண்ணி, கோர்ட்டில் ப்ராது கொடுத்தார்கள். உபாத்யாயர் பையனைக் கெட்ட எண்ணத்துடன் அடிக்கவில்லை யென்றும், தண்டனை ரொம்ப ஜாஸ்தியில்லையென்றும் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் ஜூரர்கள் உபாத்யாயர் செய்தது சரியல்ல வென்று அபிப்ராயப்படவே, ஜட்ஜும் உபாத்யாயருக்கு விரோதமாகத் தீர்ப்புக்கொடுத்தார். அதன்மேல் உபாத்யாயர் அப்பீல் கோர்ட்டுக்கு அப்பீல் செய்திருக்கிறார்.

### Debtor Transferring Property.

**கடன்பட்டவர் ஸொத்தைப் பராதீனம் செய்வது.**—இன்ஸால்வென்ஸி விஷயமாய் நடவடிக்கைகள் எற்பட்டாலொழிய, கடன்பட்ட ஒருவர், கடன் கொடுத்தவர்களில் ஒருவருக்கு பூராத்தொகையும் கொடுத்து மற்றவர்களுக்கு பணம் செலுத்தாமலிருக்கலாம். அப்படி ஒரு கடன்காரருக்கு பணம்கொடுப்பதால், கடன் பட்டவருடைய மற்ற ஸொத்துக்கள், மற்ற கடன்களை அடைப்பதற்குப் போதுமானதாயில்லாவிட்டாலுங்கூட கடன்பட்டவர் ஒரு கடன்காரருக்குப் பணம் செலுத்தக் கூடாதென்று சொல்வதற்கில்லை.

இன்ஸால்வென்ஸீ நடவடிக்கையில்லாத ஒரு கேஸில் வாஸ்தவமான கடனை யடைப்பதற்காக, கடன்பட்டவருக்கு யாதொரு லாபஸௌகர்யமும் இல்லாதபடி ஒரு ஸொத்தை தக்க ப்ரதி ப்ரயோஜனத்துக்கும் கடன் கொடுத்தவர்களில் ஒருவருக்கும் பராதீனம் செய்திருந்தால், அந்தப் பராதீனத்தால் கடன் கொடுத்த இன்னொருவருக்கு நஷ்டமேற்படு மென்பதனாலேயே, அந்தப் பராதீனமானது ட்ரான்ஸ்பர் அப் ப்ராபர்ட்டி ஆக்ட் 53-வது ஸெக்ஷனால் செல்லாதென்பதற்கில்லை.

கடன்பட்ட ஒருவர் தமக்குக் கடன் கொடுத்தவர்களும், ஒருவர்க் கொருவர் நெருங்கின பந்துக்களுமாகிய இரண்டு பேருக்கு ஸொத்துக்களில் சிலவற்றைப் ஒரே தினத்தில் பராதீனம் செய்ததாகக் குறிப்பிட்டுள்ள இரண்டு பத்ரங்களில் ஒன்று பொய்ப் பத்ரமாகவும் மோசக்கருத்துடன் செய்யப்பட்டதாகவும் இருந்தது. இதனால் அது ட்ரான்ஸ்பர் அப் ப்ராபர்ட்டி ஆக்ட் 53-வது ஸெக்ஷன்படி செல்லாமல் போய் விட்டது.

இதனாலேயே தக்க ப்ரதிப்ரயோஜனத்தின் மேல் செய்யப்பட்ட மற்ற பராதீனத்தின் பத்ரமும் செல்லாதென்று சொல்லுவதற்கில்லை. இப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களில் ஒவ்வொரு பத்ரமும் செல்லும் செல்லாதென்பது அதனதனுடைய தன்மையைப் பொருத்தது. 3 லாவீக்லி 207.

### Partial Alienation by a Widow.

**விதவை ஸொத்தில் ஒரு பாகத்தைபராதீனம் செய்வது.**—ஒரு ஹிந்து விதவை தமது அடுத்த அனந்தரவார்ஸின் ஸம்மதத்தின்மேல் தமது ஸொத்தின் ஒரு பாகத்தைப் பராதீனம்செய்தால், அந்தப் பராதீனமானது செல்லாது. அது விதவை இறந்தபின் ஸொத்துக்கு பாத்யக்காரராக எற்படும் அனந்தவார்ஸைக் கட்டுப்படுத்தாது.

# PERSONAL NOTES.

## மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

### Titles for South Indian Pundits.

தென்னாட்டு வித்வான்களுக்குப் பட்டங்கள்.—சென்ற டிஸம்பர் மாதத்தில் காசியில் கூடிய பாரத தர்ம மஹா மண்டலத்தில் 6-வது மகாதிவேசன காலத்தில், நமது ப்ராந்திய வித்வான்களும், தர்ம காரிய ப்ரவர்த்தர்களும் லோகோபகாரிகளுமான, அடியிற் கண்ட சில கனவான்களுக்கு, யோக்யதா பத்ரமும், பட்டங்களும் அளிக்கப்பட்டன.

(1) சென்னப்பட்டணம் ப்ரொபெஸர் எம். ரங்காச்சாரியார், எம்-ஏ-க்கு "மகோபதேசகர்," "வித்யாரத்நம்" என்றும்,

(2) கும்பகோணம் ப்ரொபெஸர், கே. ஸுந்தர ராமய்யர், எம். ஏ-க்கு "தர்மபூஷண" என்றும்,

(3) திருவிசை நல்லூர், மஹா மஹோபாத்யாய ப்ரம்ஹஸ்ரீ ராமஸுப்பா சாஸ்த்ரிகளுக்கு "சாஸ்த்ர ஸிரோமணி" என்றும்,

(4) கும்பகோணம், சதுஸ் சாஸ்த்ர கல்பதரு ப்ரம்ஹஸ்ரீ சேஷாச்சாரியாருக்கு "வித்யாதாண ஸதாசார" மான பத்ரமும்,

(5) கும்பகோணம் அத்வைத ஸபை பண்டிதர் ப்ரம்ஹ ஸ்ரீ கிருஷ்ண சாஸ்த்ரியளுக்கு "மஹோபதேசகர்", "வேதாந்த விபூஷண" என்றும்.

(6) திருச்சிறுப்பள்ளி ஸெண்ட் ஜோஸப் காலேஜ் பண்டிதர் டி. வி. ஸ்ரீனிவாசாச்சார்யருக்கு—"ஸாகித்ய ரத்ந" என்றும்,

(7) திருச்சிறுப்பள்ளி வக்கீல் ஏ. வி. கோபாலாச்சாரியார் (எம். ஏ. பி. எல்.) க்கு—"மீமாம்ஸ ரத்ந" என்றும்,

(8) ஸ்ரீரங்கம், தேசபூஷண ஆர். கே. ப்ரஸந்ந வெங்கடேச ராயருக்கு—"வித்யௌஷத தான தர்மசாலா ப்ரதிஷ்டாதி" மான பத்ரமும்.

(9) திருச்சிறுப்பள்ளி, டி. வி. ஸாமிநாதய்யர் (பி. ஏ. எல். டி.) க்கு—"தர்மகார்ய ஸகாயதா பரோபகார ப்ரவ்ருத்தியாதி" மான பத்ரமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

### The Late Rao Bahadur C. Nagoji Row.

காலஞ் சென்ற ராவ்பகதூர் ஸி. நாகோஜி ராவ்.—[illegible] இன்ஸ்பெக்டராக இருந்து பென்ஷன் வாங்கிக் கொண்டு விலகின ராவ் பகதூர் ஸி. நாகோஜிராவ் பிப்ரவரி மாஸம் 13-ந்தேதியன்று இறந்துபோனதைக் கேட்டு விஸனமடைகிறோம். அவர் 1852-ம் வர்ஷத்தில் ஜனனமானார். அவர் தமது 19-வது வர்ஷத்தில் பி. ஏ. பரீக்ஷையில் தேறி பிறகு வித்யா இலாகாவைச் சேர்ந்து நல்ல க்யாதியுடன் வேலைபார்த்துவந்து கடைசியில் இன்ஸ்பெக்டர் அப் ஸ்கூல்ஸாக ஆனார். அவர் 1906-ம் வர்ஷத்தில் கும்பகோணம் காலேஜ் ப்ரின்ஸிபலாக ஆக்ட் செய்ய நியமிக்கப்பட்டார். அந்த வர்ஷம் அவர் சென்னை யூனிவர்ஸிட்டியின் கான்வகேஷன் அட்ரஸ் ப்ரஸங்கம் செய்தார். 1907-ம் வர்ஷத்தில் அவர் பென்ஷன் வாங்கிக்கொண்டார். அவர் சென்னை யூனிவர்ஸிட்டி ஸெனேட்டில் ஒரு பெல்லோ அதாவது மெம்பராக இருந்துவந்தார். மிஸ்டர் நாகோஜிராவ் பள்ளிக்கூடங்களின் கீழ்வகுப்பு மாணவர்களுக்கு ஸங்கீதம் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று அபிப்ராயப்பட்டு அது விஷயமாய் ஊக்கமெடுத்து வந்ததோடு, சில ஸங்கீத புஸ்தகங்களும் ப்ரசுரித்திருக்கிறார். வேலையிலிருந்து பென்ஷன் வாங்கிக்கொண்ட பிறகு அவர் பொது ஜனவிஷயங்களில் அதிக ஊக்கமெடுத்து வந்தார்.

### The Maharaja of Jodhpur.

ஜோட்பூர் மஹாராஜா.—இந்த பிப்ரவரி மாஸம் 25உ வைஸ்ராய் லார்ட் ஹார்டிஞ்ஜ், ஜோட்பூரின் அரசராகிய ஸ்ரீ ஸுமர்ஸிங்கை ஸிம்மாஸநத்தில் ஏற்றி அவருக்கு ராஜ்ய நிர்வாக அதிகாரத்தைக் கொடுத்தார். ஸ்ரீ ஸுமர்ஸிங் 1911-ம் வர்ஷத்தில் பட்டத்துக்கு வந்தார். அப்போது மைனராயிருந்ததால் அவர் தகப்பனரின் ஸகோதரரும் இடார் ஸமஸ்தானத்து அரசருமாகிய மேஜர் ஜெனரல் மஹாராஜா ஸர் ப்ரதாபஸிங்கும், ஜோட்பூர் ராஜகுடும்பத்தைச் சேர்ந்த வேறு சில ப்ரமுகர்களும் சேர்ந்து ரீஜண்டாக இருந்து அந்த ஸமஸ்தானத்தை நிர்வகித்துவந்தார்கள்.

ஜோட்பூர் ஸமஸ்தானத்து மன்னர்கள் ரஜபுத்ர ஜாதியாரில் ராதோர் வகுப்பைச்சேர்ந்தவர்கள். இவர்கள் ஸ்ரீ ராமருடைய வம்சத்தைச் சேர்ந்தவர்களாம். இந்த ஸமஸ்தானம் 1818-ம் வர்ஷத்தில் இங்க்லீஷ்காரர்களுடைய ஆதரவின் கீழ்ப்பட்ட ராஜ்யமாயிற்று. இந்த ஸம்ஸ்தானத்தின் ஜனத்தொகை 20-லக்ஷம் பேராகும்.

தற்போது ஸிம்மாஸனமேறிய மகாராஜா 1914-ம் வர்ஷத்தில் லெப்டினெனண்ட் பதவியை அடைந்தார். இந்த யுத்தத்தில் அவர் ஸர் ப்ரதாபஸிங்குடன் போர் முனைக்குப் போயிருந்தார்.



# SOCIETY AND RELIGION.

## ஜன ஸமூகமும் மதமும்.

### Bakthi.

பக்தி.—இயற்கையாகவே ஈச்வரனிடத்தில் பக்தியேற்படாத அநேகர் ஈச்வரனிடத்தில் பக்தியாயிருக்கும்பொருட்டு நமது முன்னோர்கள், பல ஸாதனங்களை அமைத்திருக்கிறார்கள். இதுவிஷயமாய் "ஆர்ய தர்மம்" சொல்லுவதாவது: இவர்களை உத்தேசித்தே ஆங்காங்கு அநேக தேவாலயங்களும், அவைகளில் சிவன் விஷ்ணு முதலிய தேவதைகளுடைய விக்ரஹ ப்ரதிஷ்டைகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளை ஒவ்வொருநாளும் தர்சனம் பண்ணினால் க்ரமமாய் அப்யாஸ மேற்படும். அதற்காகவே சாஸ்த்ரங்களிலும் பலவிடங்களில் ஈச்வர தர்சனமும், பூஜனமும் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த மூர்த்திகளைக்கூட தர்சனம்பண்ணாத மந்தாதிகாரிகளை யுத்தேசித்து ஆபரணாதிகளைப் போட்டாவது தர்சனம் செய்யும்படி செய்ய வேண்டுமென்றே அவைகளும் போடப்படுகின்றன. உத்தமாதிகாரிகளுக்கோ வென்றால் இவையெல்லாம் வேண்டியதில்லை.

பக்தியை நமது சாஸ்த்ரங்களில் 9-விதமாகப் பிரித்திருக்கிறார்கள். அவையாவன ஸ்ரீவிஷ்ணு பரமாத்மாவினுடைய ச்ரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், பாத ஸேவநம், அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம், ஸக்யம், ஆத்ம நிவேதநம் என்பவைகளே.

ச்ரவணமாவது பகவானுடைய சரித்ரம் குணம் முதலியவைகளைக் கேட்பது. கீர்த்தனமாவது, பெரியோர்கள் முகமாய்க் கேட்டதைத் தன் வாயால் சொல்லுவது ஸ்மரணமாவது கேட்ட பகவத் குணத்தை த்யானம் பண்ணிக்கொண்டிருத்தல். பாதஸேவன மென்பது ஆலயத்தை சுத்திசெய்வது முதலிய ஈச்வர கைங்கர்யமாகும். பகவானுக்கு ப்ரியமான வேதமந்த்ரங்களாலும், அவருடைய நாமாவினாலும் அவரைப் பூஜித்தல் அர்ச்சனமாகும். பகவானை ப்ரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்தல் வந்தனமாகும். தாஸ்யமென்பது பகவானுக்கு அடிமையாகி எப்பொழுதும் அவரால் வைப்பட்ட வேலைகளைச் செய்வது. ஸக்யமென்பது அர்ஜுனனைப்போல் பகவானிடத்தில் ஸக்யம் கொள்வது. ஆத்ம நிவேதநம் என்பது நாமென்கிற பேதபுத்தியை விலக்கி எல்லாம் பகவத் ஸ்வரூபமே யன்றி அதைக் காட்டிலும் வேறில்லை என்று எல்லாவற்றையும் பகவத் ஸ்வரூபத்தில் அர்ப்பணம் செய்வதாகும்.

### The Bombay Social Service League.

பம்பாய் ஜன ஊழிய ஸங்கம்.—பம்பாயில் ஸோஷல் ஸர்விஸ் லீக் என்று ஒரு ஜன ஊழிய ஸங்கம் இருக்கிறது. இது ரொம்ப நன்றாய் நடந்து வருகிறதென்று சொல்லப்படுகிறது. இது கல்வி விஷயமாய் ரொம்ப அக்கரை பாராட்டி வருகிறதாம். கல்வியைப் பரவச் செய்வதற்கு அந்த ஸபையார் சுற்றித்திரியும் புஸ்தகசாலைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த ஸபைக்கு 6600 புஸ்தகங்களுக்கு மேலிருக்கின்றன. இவைகளில் சிலவற்றைத் தெரிந்தெடுத்து ஒரு பெட்டியில் போட்டு, ஒவ்வொரு ஊர் அல்லது ஊரின் பிரிவாக அனுப்புகிறார்கள். அந்தந்த விடங்களிலுள்ளவர்கள் அவைகளை வாசித்தபிறகு பெட்டியை இன்னொரு இடத்துக்கு அனுப்பிவிடுவார்கள். இப்படிப் பல பெட்டிகள் ஒவ்வொரு இடத்துக்கும் அனுப்பப்படுகின்றன.

இந்த ஸங்கத்தார் எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்கு புஸ்தகம் முதலியவைகளை வாசித்துக்காட்டுகிறார்கள். சென்ற வர்ஷத்தில் அவர்கள் இவ்விதம் 272-தடவை வாசித்துக் காட்டினார்களாம். 3300-படிப்பில்லா ஜனங்கள் இப்படி வாசிப்பதைக் கேட்டுப் பயனடைந்தார்களாம்.

இந்த ஸங்கத்தார் ஒரு ஆஸ்பத்ரி வைத்து நடத்தி ஏழைகளுக்கு இலவசமாக மருந்து கொடுத்துவருகிறார்கள். இந்த ஸங்கத்தின் வரும்படி சென்ற வர்ஷத்தில் 9500-ரூபாயாம்.

### Garlanding European Ladies.

ஐரோப்பிய ஸ்த்ரீகளுக்கு மாலைபோடுதல்.—சென்றமாஸம் பொபபிலி மகாராஜா ஐரோப்பிய ஸ்த்ரீகளுக்கு மாலை போடவேண்டியதில்லை யென்று சொன்னதைப்பற்றி எழுதினோம். இதைப்பற்றி சென்னை 'டைம்ஸ்' பத்ரிகை எழுதுகையில், ஐரோப்பிய கனவான்களுக்கும் மாலைபோட வேண்டியதில்லை யென்றும், ஸ்த்ரீகளுக்கு மாலைபோடுவதால் அவர்களுடைய பட்டு உடுப்புகள் வீணாகிவிடுகின்றன வென்றும், புருஷர்களும் மாலைபோட்டுக்கொண்டால் பார்ப்பதற்கு விநோதமாக இருக்கிறார்களென்றும், ஸ்த்ரீகளுக்கு ஒரு புஷ்பச்செண்டும், கனவான்களுக்கு சட்டை [illegible] தில் வைத்துக்கொள்ள ஒரு புஷ்பமும் கொடுத்தால் போதுமென்றும், பசரிப்பு விசேஷத்தில் அநேக கனவான்களுக்கும் ஸ்த்ரீகளுக்கும் மாலைபோட வேண்டியிருக்குமாதலால், இதற்கு அதிக செலவு ஏற்படுமென்றும், இதை [illegible] மென்றும் அபிப்ராயப்படுகிறது.

## HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### Fainting.

**மயக்கம் போடுவது.**—மயக்கத்தில் ஞாபகமாக கவனிக்கவேண்டிய முக்ய விஷயம் கீழ் வருமாறு. மயக்கம் வருவதற்குமுன், நல்ல தேகஸ்திதியிலிருக்கும் வாலிபனாவது, நடுப்ராயமுள்ள மனிதனாவது கூட்டத்தில் நெருங்கினதினாலோ, பயத்தினாலோ அல்லது ரக்தம் கொட்டுதலைக்கண்டு மனக்குழப்பத்தாலோ மயக்கங்கொண்டு உணர்ச்சியில்லாமலிருப்பானானால், முகம் வெளுத்துவிடும்; உதடுகள் நீலம் பாய்ந்து கிடக்கும்; நாடி அடங்கி ஒலிக்கும்; இக்குறிகள் ஏற்படுமானால் மயக்கமாயிருக்கலாம் என்று நம்பலாம்.

மயக்கத்தின் ஆரம்பத்தில் காணக்கூடியன வர வர உடம்பதிகமாக வெளுத்தலும், பலமுறை கொட்டாவி விடுதலுமே. இக்குறிகளைச் சடுதியில் கண்டால், இக்குறிகளுக்கு உள்ப்பட்டவனை கலவரத்தை யுண்டாக்கிய அவ்விடத்திலிருந்து உடனே பிரித்து நல்ல காற்றுலாவுமிடத்தில் கொண்டுபோகவேண்டியது. ஒரு விசிறியை எடுத்து வெகு தீவரமாக அவனுக்கெதிராக விசிறவும். அதே ஸமயத்தில் குளிர்ந்த தண்ணீரைக் குடிக்கச்செய்து, முகத்தில் குளிர்ந்த ஜலத்தால் தடவ வேண்டும். அவ்வாறு செய்வதால் மூர்ச்சையின் முழுவேகமும் பரவாமலிருக்கும்படி தடுக்கலாம். மூர்ச்சையடைந்தவனை காலைக்காட்டிலும் உடம்பும், உடம்பைக் காட்டிலுந் தலையும் தாழ்ந்திருக்கும்படிப் படுக்கவைக்க முடியுமானால் அப்படிச் செய்யவும். அப்படிப் படுக்கவைக்க முடியாதானால், மூர்ச்சையடைந்தவன், உட்கார்ந்த நிலையிலிருந்தால், அவன் தலையை, முன்வந்து முழந்தாள்வரையுங் குனிந்துத் தொங்கும்படிச் செய்யவும். இந்த நிலையில் வைத்தால் மூர்ச்சையடைந்த ஆள் எளிதில் தெளிவடைவான். இப்படிச் செய்வதால் மூர்ச்சையடைந்தவனுக்குக் கஷ்டங்கொடுப்பதை எவ்வளவு குறைக்கலாமோ, அவ்வளவு குறைக்கலாம். அசுத்தமான இடத்திலாவது, அழுக்குள்ள தரைமேலாவது அந்த ஆளைப் படுக்க வைப்பதையுந் தடுக்கலாம். முடியுமானால், மயக்கமடைந்தவனை தரைமேல் முதுகு படும்படி நிமிரப்படுக்கவைத்து, நல்ல காற்று அவ்விடத்தில் உலாவும்படிச் செய்யவும்; அல்லது விசிறியைக்கொண்டு விசிறவும்; பின், ஜில்லென்றிருக்கும் நல்ல நீரை பானஞ்செய்யச் செய்யவும். ஸ்மெல்லிங் ஸால்ட் என்னும் உப்பை முகரும்படிச் செய்யலாம். சிறிது கற்பூர நீரையாவது, ப்ராந்தியையாவது உள்ளுக்குக் கொடுக்கலாம்; ஸாதாரணமாக இவை அவச்யமில்லை.—விவேகபோதினி

### Cleaning Glass Vessels.

**கண்ணாடிப் பாத்ரங்களை சுத்தம் செய்தல்.**—எல்லாக் கண்ணாடிப் பாத்ரங்களையும் சுத்தம் செய்யும்போது முதலில் ஸோப் கரைத்த ஜலத்தில் கழுவிப் பிறகு சுத்த ஜலத்தில் கழுவவேண்டும். பிறகு சுத்தமான துணியால் துடைத்துப் பள பளப்பாக்க வேண்டும். பால் வைத்திருந்த பாத்ரத்தை சுத்தம் செய்யுமுன் முதலில் அதை ஜலத்தில் சற்று ஊறப்போட வேண்டும்.

### Bamboo Furniture.

**மூங்கில் ஸாமான்.**—நாற்காலி முதலிய மூங்கில் ஸாமான்களை சுத்தம் செய்யவேண்டுமானால் வெதுவெதுப்பான ஜலத்தில் உப்பைக்கரைத்து, அதில் ப்ரஷை நனைத்தெடுத்து அந்த ஸாமான்களை சுத்தம் செய்யவும். ஜலத்தில் உப்புக்கலந்திருப்பதால் மூங்கில் நிறங் கெடாது. மஞ்சள் நிறமாகாது. பிறகு ஒரு ம்ருதுவான துணியால் ஈரத்தைத்துடைத்து ஸாமானைச் சற்றுக் காற்றாட விடவும்.

### Egg shells.

**முட்டை யோடுகள்.**—வீஸாக்களை சுத்தம் செய்வதற்கு முட்டை யோடுகள் ரொம்ப ச்லாக்யமானவை. ஓடுகளை உடைத்து தூளாக்கி, வீஸாவில் போட்டு, அதில் சுத்தஜலம் விட்டுக் கலக்கி சற்று நேரம் வைத்திருந்து, பிறகு மறுபடியும் கலக்கி ஓட்டையும் ஜலத்தையும் கொட்டி விட்டு, சுத்த ஜலத்தால் வீஸாவை சுத்தம் செய்யவும்.

### Marking Clothes.

**துணிகளுக்கு அடையாளம் போடுதல்.**—துணிகளுக்கு இங்கியால் அடையாளம் போடுமுன் ஸாதாரண பென்ஸிலால் எழுதிப் பிறகு அதன் மேல் இங்கியால் எழுதவும். இங்கியானது துணியில் பரவாது. ஒவ்வொரு தடவையும் எழுதும்போது புது நிப்பை உபயோகப்படுத்த வேண்டும்.



## AGRICULTURE.

## விவஸாயம்.

### Plant Diseases.

**பயிர்களில் தோன்றும் நோய்கள்.**—சென்ற டிஸம்பர்-ஜனவரிமாஸங்களில் சென்னையில் நடந்த பொருள் காட்சியின் விவஸாயப் பகுதியில் பயிர்களுக்கு உண்டாகும் நோய்கள், அவைகளுக்கு பரிகாரங்கள் ஆகிய இவைகள் ஸம்பந்தமாக அநேக பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன. இங்கே சில நோய்களுக்குக் குறிப்பிட்டிருந்த பரிஹாரங்களை எழுதுகிறோம்.

(1) சோளத்தில் தோன்றும் கரிப்பூட்டைநோய்: இதுசோளப்பயிர் கதிராகி பால் பிடிக்கும்போது உண்டாகும். இதுவாரமல் தடுக்க ஒரு வீஸா ஜலத்தில் ஒரு தோலா மயில்துத்தத்தைக் கரைத்து, அந்த ஜலத்தில் விதைச்சோளத்தை 15-நிமிஷம் முதல் அரைமணி நேரம்வரையில் ஊறவைத்து எடுத்துக் காயவைத்து விதைக்கவேண்டும்.

(2) கரும்பில் செம்புள்ளி கரும்புள்ளி நோய்வராமல் தடுக்க, இவ்விதநோய் சற்றுக்கூட இல்லாத கரும்புகளிலிருந்து விதை எடுத்து நடவேண்டும்.

(3) கம்பில் உண்டாகும் வெறி நோவுக்கும், பாக்கு மரத்தில் உண்டாகும் கொட்டைப்பாக்கு அழுகல் நோய்க்கும், மிளகாய் அழுகல் நோய்க்கும் போர்டோ மிக்ச்சர் என்னும் மருந்தை பின்வருமாறு செய்து உபயோகிக்கவேண்டும்.

ஒரு பாத்ரத்தில் பக்காப் படியால் 12-படிசுத்த ஜலம் ஊற்றி அதில் 2-ராத்தல் மயில் துத்தத்தைச் சேர்த்துக் கரைக்கவும். 2-ராத்தல் சுண்ணும்புக் கல்லில் சிறிது ஜலம் ஊற்றித்தாளித்து, அதில் 12-பட்டணம்படிஜலம் ஊற்றிக் கரைக்கவும். மயில் துத்த ஜலத்தையும் சுண்ணும்பு ஜலத்தையும் ஒன்றாய்க் கலந்து நன்றாய்க் கலக்கி விடவும். இந்த ஜலத்தை ஸ்ப்ரேயர் என்னும் யந்த்ரத்தாலாவது, பீர்ச்சாங்குழலாலாவது மரங்கள், பயிர்களின் மேல் தெளிக்கவும். மழை காலத்தில் இந்த மருந்தை உபயோகித்தால், மழையில் இது கரைந்து போகுமாகையால், 32-தோலா ரோசனத்தையும் 16-தோலா ஸோடாவையும் $1\frac{1}{2}$-பட்டணம் படி ஜலத்தில் போட்டுக் கொதிக்க வைத்து மேற்சொன்ன போர்டோ மிக்ச்சர் மருந்தில் கலக்கவும். இதனால் மருந்தானது பயிர்களில் நன்றாய் ஒட்டிக்கொள்ளும்.

### Aquatic Seeds in Wet Lands.

**நன்செய் நிலங்களில் வேப்பம் பாசி.**—நன்செய் நிலங்களில் ஒருமுறை வேப்பம் பாசி உண்டாகிவிட்டால் பிறகு அதைத் தொலைப்பது மிகவும் கஷ்டம் இந்தக் களை உண்டாயிருக்கும் நிலங்களில் நெற்பயிர் சரியாய் வளருவதில்லை. இந்தப் பாசியைத் தொலைக்க அநேகவிடங்களில் அநேக முறைகளைக் கையாளுகிறார்கள். அவைகளில் அநேகம் த்ருப்திகரமாயிருப்பதில்லை.

எல்லாவற்றிற்கும் ச்லாக்யமான பக்வம் எதுவென்றால் ஆடாதோடை என்னும் காட்டுச் செடியின் தழையை வெட்டிக்கொண்டு வந்து நடுகை செய்வதற்கு முன் நிலத்தில் போட்டு மிதித்துவிடுவதே யென்று 'கிருஷிகன்' எழுதுகிறது. இப்படிச் செய்தால் இந்தப், பாசி யுண்டாகாமலே தடுக்கலாம். ஒருவேளை இப்படி முன்கூட்டிப் போடத் தவறிவிட்டால், பயிரின் ஊடே களையெடுக்கும்போது இந்தத் தழைகளைப் போட்டு மிதித்துவிட்டாலும் பாசி எடுபட்டுப்போகும். இதைப் பரீக்ஷிக்க யாராவது விரும்பினால் ஒரு தொட்டியில் தண்ணீர்விட்டு இதில் வேப்பம்பாசியைப் போட்டு ஆடாதோடைத் தழையை இடித்து சார்பிழிந்து அந்தப் பாசியில் கலந்தால் அது நிர்மூலமாவது தெரியும். இந்த ஆடாதோடைச் செடியை எல்லாவிடங்களிலும் வேலிகளில் வைத்து உண்டாக்கலாம். வேப்பம் பாசி உண்டாகாத வயல்களிலும் இந்தத் தழை நல்ல தழையெருவாக உபயோகப்படும். வயல்களிலுள்ள திடர்களில் இந்தச் செடியை நட்டு வ்ருத்திசெய்யலாம். இந்தச் செடியை கொண்வேர்து நட்டு வ்ருத்திசெய்வது மிகவும் எளிது. இதன் கிளைகளை வெட்டி நிலத்தில் நட்டு வைத்து கொஞ்சம் தண்ணீர் விட்டால் போதுமானது. மழைகாலத்தில் இப்படி நட்டுவிட்டால் வேறு உதவியின்றி தானாகவே வ்ருத்தியாகிவிடும்.

### Protecting Cattle from Flies.

**கால்நடைகளை ஈக்கள் தொந்தரவு செய்யாதபடி பார்த்துக்கொள்வது.**—அமெரிக்கா ஐக்ய நாடுகளின் விவஸாய டிபார்ட்மெண்டார் இதுவிஷயமாய் ஏராளமான பரீக்ஷைகள் செய்து பார்த்திருக்கிறார்கள். சில த்ரவப் பொருள்களை கால்நடைகளின் தேகத்தில் தடவி வைத்தால் அவைகளை ஈக்கள் சிலநாட்கள் வரையில் தொந்தரவுசெய்வதில்லை. அதோடு அந்த ஈக்கள் கால்நடைகளின் மேலுள்ள ரணங்களில் உட்கார்ந்து முட்டையிடுவதுமில்லை. இந்த த்ரவப்பொருள்களில் முக்யமானவை மட்டமான பெட்ரோலியம் எண்ணெய், பருத்திக்கொட்டை யெண்ணெய், மீன் எண்ணெய் ஆகிய இவைகளாகும்.

# CO-OPERATION.

# கோவாபரேஷன்.

## Co-operation among Carpenters.

**தச்சர்களுக்குள் கோவாபரேஷன்.**—வடக்கே பாரிலி என்னும் ஊரில் 1913-ம் வர்ஷத்தில் தச்சர்களுக்காக ஒரு கோவாபரெடிவ் ஸங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அது தற்போது ரொம்ப நன்ருய் நடந்துவருகிறதென்று தெரிகிறது. அதற்கு முன்னுல் அந்த ஊரில் பணமுள்ள கண்ட்ராக்டர்களும் வ்யாபாரிகளும் தச்சர்களுடன் ஸாமான் செய்து கொடுக்கும்படி ஒப்பந்தம் பேசிக்கொள்வது வழக்கமாம். தச்சர்கள் ஸாமான்களை இன்ன காலத்துக்குள் இன்ன விலைக்குச் செய்து கொடுக்கவேண்டுமென்று, நிபந்தனை ஏற்பட்டிருக்கும். இதில் தச்சர்களுக்கு வேலைக்குத் தக்க கூலி கிடைப்பதில்லை. ஏதாவது அஸந்தர்ப்பத்தால் ஒப்பந்தப்படி ஸாமான்களைச் செய்து கொடுக்காவிட்டால், கண்ட்ராக்டர்கள் தச்சர்களை ரொம்பவும் ஹிம்ஸித்துவருவார்கள். சிலஸமயங்களில் கண்ட்ராக்டர்கள் தச்சர்களை ஜெயிலுக்கு அனுப்புவதாக பயமுறுத்ினதுமுண்டு. இவர்களுடைய நிலைமையை உயர்த்துவதற்காக 1913-ம் வர்ஷத்தில் 30-தச்சர்கள்கொண்ட ஸங்கம் ஒன்று ஸ்தாபித்தார்கள்.

இந்த ஸங்கத்தில் எல்லா ஜாதித் தச்சர்களும் சேரலாம். ஸங்கத்துக்கு வேண்டிய மூலதனத்துக்கு மெம்பர்கள் ஷேர்கள் எடுத்துக்கொள்ளுகிருர்கள். ஒரு ஷேரின் மதிப்பு 50-ரூபாயாகும். மெம்பர்கள் பங்கு ஒன்றுக்கு மாஸம் 1-க்கு 1-ரூபாய் வீதம் செலுத்தவேண்டும். தற்போது அதன் பங்கு மூலதனம் 885-ரூபாயாகும். இதன் ஆதாரத்தின்மேல் இந்த ஸங்கம் ஜில்லா கோவாபரெடிவ் பாங்கியிலிருந்தும் மற்ற விடங்களிலிருந்தும் கடன் வாங்குகிறது. இந்த ஸங்கத்துக்கு 6-டிரெக்டர்கள் கொண்ட ஒரு மானேஜ்மெண்ட் போர்ட் இருக்கிறது. அந்த ஊரில் கோவாபரேஷனில் ஊக்கம் காட்டிவரும் ஒரு இங்க்லீஷ் கனவானும் அவ்வூர் தச்சுவேலை ஸ்கூலின் தலைமை உபாத்யாயரும் அதில் டிரெக்டர்களாயிருக்கிருர்கள். மேற்சொன்ன தச்சு ஸ்கூல் உபாத்யாயர் அதில் சேர்ந்திருப்பதால் ஸங்கத்துத் தச்சர்கள் செய்யும் ஸாமான்கள் ரொம்ப நேர்த்தியாயும் வேலைப்பாடுள்ளனவாயு மிருக்குமென்றும், அவர்களுடைய தொழில்முறையில் சீர்திருத்தங்கள் ஏற்படுமென்றும் சொல்லப்படுகிறது.

ஸங்கத்தின் கமிட்டியார் இன்ன ஸாமான்கள் செய்யவேண்டுமென்பதை நிர்ணயித்து, தச்சர்களுக்கு வேலை கொடுத்து வேலைக்குத் தகுந்த கூலிகொடுக்கிருர்கள். வேலைக்கு வேண்டிய மரம் முதலிய மூலப்பொருள்களை ஸங்கத்தார் வாங்கிவைத்திருக்கிருர்கள். மரம் அறுத்தல் முதலிய சில்லறை வேலைகளை வெளிவேலையாட்களைக்கொண்டு நடத்திவருகிருர்கள். சென்ற வர்ஷத்தில் மெம்பர்களுக்கு நூற்றுக்கு பத்து வீதம் டிவிடெண்டும், தாங்கள் செய்த வேலைக்குத் தகுந்தபடி ரூபாய்க்கு ஓரணு வீதம் இனுமும் கிடைத்தது. இவ்விதம் நல்லகூலி கிடைப்பதோடு வேலை செய்வதற்கேற்ப இனும் கிடைப்பதால் தச்சர்கள் அதிக ஊக்கமெடுத்து வேலை செய்கிருர்களாம்.

## Co-operation in Bombay.

**பம்பாயில் கோவாபரேஷன்.**—பம்பாயில் இந்திய ஊழிய ஸங்கத்தார் தாழ்ந்த ஜாதிகளுக்குள் அநேக கோவாபரெடிவ் ஸங்கங்கள் ஸ்தாபித்திருக்கிருர்கள். தற்போது அவ்வித ஸங்கங்கள் 14 இருக்கின்றன. இவைகளிலுள்ள மொத்த மெம்பர்கள் 468. இவர்கள் ஸங்கங்களில் சேருவதற்கு முன்னுல் ரொம்ப வட்டியின் மேல் கடன் வாங்கியிருந்தார்கள். இந்த ஸங்கங்களில் சேர்ந்ததனுல் தற்போது இவர்களுக்குள்ள கடன் குறைந்திருப்பதோடு, இவர்கள் செலுத்தும் வட்டியும் ஒன்றுக்குக் காலாகக் குறைந்திருக்கிறது. அநேக மெம்பர்கள் தங்களுடைய ஆயுளை இன்ஷூர் செய்திருக்கிருர்கள்.

அந்த ராஜதானியிலுள்ள கைத்தறி நெசவுக்காரர்களுக்குள் கோவாபரேஷன் அபிவ்ருத்தியடையவில்லையென்று தெரிகிறது. அவர்கள் கோவாபரெடிவ் முயற்சியில் கலந்துகொள்ள முன்வருவதில்லையாம். தங்கள் தொழிலை வ்யாபார முறையில் நடத்தவாவது கணக்குகள் வைத்துக் கொள்ளவாவது அவர்களுக்குத் தெரியவில்லையாம். இதனுல் அவர்களுக்கு நூல் முதலிய மூலப் பொருள்களை கோவாபரெடிவ் முறையில் வாங்கிக் கொடுப்பதற்கும், நெய்த துணிகளை லாபகரமாய் விற்பதற்கும் ஸங்கங்கள் ஸ்தாபிப்பது முடியவில்லையாம். அந்த மாகாணத்தில் மொத்தம் 29-நெசவுக்காரர்கள் ஸங்கம் இருக்கின்றன. இவைகளில் அநேகம் கொடுக்கல் வாங்கல் வ்யாபாரத்தோடு நின்றிருக்கின்றன. இவைகளில் சிலதான் ஒழுங்காய் நடைபெறுகின்றன.



# COMMERCE.

# வ்யாபாரம்.

## Paper Manufacture.

**கடுதாசி செய்தல்.**—சென்னை நாஷனல் பண்ட் ஸபையாரின் ஆதரவில் நடந்த ஒரு மீட்டிங்கில் கடுதாசித் தொழிலைப்பற்றி ஒரு உபன்யாஸம் நடந்தபோது, சென்னைக் கைத்தொழில் இலாகா டிரெக்டர் இந்தத் தொழிலைப்பற்றி சில விஷயங்கள் சொன்னுர். சில வர்ஷங்களுக்கு முன்னுல் திருவாங்கூர் கவர்ன்மெண்டார் கடுதாசித் தொழிலை நடத்த உத்தேசித்து $4\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய் செலவுசெய்து புனலூரில் ஒரு கடுதாசி மில் ஸ்தாபித்தார்கள். ஆனுல் அது த்ருப்தியாய் நடந்து வராததால், அதை விற்றும் விடும்படி நேரிட்டது. சென்ற வர்ஷம் கடுதாசித் தொழிலை நடத்திப் பார்க்க வேண்டுமென்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படவே, மிஸ்டர் ட்ரெஸ்லர் புனலூர் பேபர் மில்ஸ் ஸொந்தக்காரரை, அந்த மில்லை ஆராய்ச்சிக்குக் கொடுக்கும்படி கேட்டார். ஆனுல் அந்த மில்லை அவர்கள் இந்த மாஸம்தான் டிபார்ட்மெண்டின் வசம் விட ஒப்புக்கொண்டார்கள்.

அங்கேயுள்ள யந்த்ரங்கள் பழைய மாதிரியாயிருக்கிறதாம். அவைகளைக்கொண்டு வேலை நடத்தினுல் லாபம் கிடைப்பது கஷ்டம். அவைகளில் உயர்ந்த கடுதாசி வகைகள் செய்வது முடியாது.

ஒரு நல்ல கடுதாசித் தொழில்சாலை ஏற்படுத்துவதற்கு 3 லக்ஷம் ரூபாய் வேண்டியிருக்கும். அதற்கு மூங்கில் ஏராளமாய் வேண்டியிருக்கும். இதில் என்ன லாபம் வருமென்பது தெரியாவிட்டால், எவரும் பணம் போட முன்வருவது ச்ரமம். கடுதாசி செய்ய சிறிய தொழில்சாலை ஸ்தாபித்தால் தக்க பலன் ஏற்படாது. இதின் வரும்படியைக் கொண்டு, பெரிய தொழில்சாலைகளில் என்னலாபம் வருமென்று கணக்கிடுவது சரியல்ல. கடுதாசி செய்வதில், ஏற்படும் செலவில் ஸ்வல்ப தொகை அனுக்கணக்கில் ஏறினுலும் குறைந்தாலும் அதற்குத் தகுந்தபடி லாபநஷ்டமேற்படக்கூடும்.

மிஸ்டர் ட்ரெஸ்லர் ஒருபோதும் கடுதாசி செய்ய உடன்படவில்லையாம். ஆனுல் தற்போது கடுதாசிக்கு ரொம்ப க்ராக்கி ஏற்பட்டிருப்பதால், தற்போதைய நெருக்கடிக்கு ஸாதகமாக ஏதாவது செய்யலாமென்று அவர் எண்ணியிருக்கிருராம். திருவாங்கூர் கவர்ன்மெண்டார் தீர்வையின்றி 1000 மூங்கில்கள் கொடுக்க ஸம்மதித்திருக்கிருர்கள். சென்னை கவர்ன்மெண்டார் ஒரு இஞ்ஜினியரையும் கடுதாசி செய்பவரையும் வேலைக்கு வைத்துக்கொள்ள அனுமதிகொடுத்திருக்கிருர்கள். ஆனுல் தற்போது காகிதக்கூழை வெள்ளையாக்க யந்த்ரம் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. தற்போது பத்ரிகைகளுக்கு உபயோகப்படும் கடுதாசி மரக்கூழிலிருந்து செய்யப்படுவதால், அதுவிஷயமாய் தாம் ஏதாவது செய்யக் கூடுமென்று மிஸ்டர் ட்ரெஸ்லர் சொன்னுர்.

## A Commercial Museum for Madras.

**சென்னைக்கு ஒரு வ்யாபாரப்பொருள் காட்சி.**—இந்தியா கவர்ன்மெண்டார் கல்கத்தாவில் வ்யாபாரக் கைத்தொழில் பொருள் காட்சி ஸ்தாபித்திருப்பதை உத்தேசித்து, சென்னையிலும் அதன் கிளையாக ஒரு பொருள் காட்சிசாலை ஏற்படுத்தவேண்டுமென்று சென்னை சேம்பர் ஆப் காமர்ஸ் என்னும் ஸபையார் ஸமீபத்தில் மதராஸ் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொண்டார்கள். சென்னை கவர்ன்மெண்டார் அதுவிஷயமாய் கவனம் செலுத்தி வருவதாகவும், ஆனுல் தற்போது அது விஷயமாய் ஒரு வேலையும் செய்வதற்கில்லையென்றும் தெரிவித்திருக்கிருர்கள்.

## Button Industry.

**பொத்தான் கைத்தொழில்.**—திருவனந்தபுரத்தில் மிஸ்டர் நரஸிம்ம ஐயர் என்பவர் கொட்டாங்கச்சிகளைக் கொண்டு பொத்தான் செய்ய ஒரு தொழிற்சாலை ஸ்தாபித்திருக்கிருர். அந்தத் தொழிற்சாலையில் செய்யப்படும் பொத்தான்கள் ஆங்கிலேயரால் செய்யப்படும் பொத்தான்களுடன் வ்யாபாரத்தில் போட்டி போடத் தகுந்ததாயிருப்பதாகத் தெரிய வருகிறது.

## Business Enterpise in India.

**இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.**—இந்தியாவில் சென்ற டிஸம்பர்மாஸத்தில் அடியில்கண்ட விவரப்படி 8-ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| 5 | வ்யாபாரக் கம்பெனிகள் | 7,85,000 |
| 1 | அச்சடிக்கும் கம்பெனி | 15,000 |
| 1 | தேயிலைத்தோட்டக்கம்பெனி | 5,00,000 |
| 1 | ரெயில்வே கம்பெனி | 10,00,000 |
| 8 | | 23,00,000 |

# ECONOMIC PRODUCTS.

## விலையுள்ள பொருள்கள்.

**Cotton Stalks.**

பருத்திச் செடியின் தாள்கள்—பருத்தி பயிரிடும் ப்ரதேசங்களில் பருத்தி செடியின் தாள்கள் வீணாகப் போவதோடு, அவைகளை அப்புறப்படுத்துவதற்கும் செலவு ஏற்படுகிறது அமெரிக்காவில் ஒரு டன் பருத்தி விளையும் ஒரு ப்ரதேசத்தில் 5-டன் தாள்கள் கிடைக்கின்றனவாம். இவைகளைப் பிடுங்கி எரிப்பதற்கு ஒரு டன் தாளுக்கு 3-ரூபாய் வரையில் செலவாகிறதாம். இந்த உபயோகமற்ற பொருளும் இனி தொழில்களில் உபயோகப்படும் என்று சொல்லப்படுகிறது. இந்தத் தாளிலிருந்து கடுதாசி செய்யலாமாம். மரக்கூழிலிருந்து செய்யப்படும் கடுதாசியை விடப் பருத்தித்தாள் கடுதாசி ரொம்ப உறுதியாயும் சேர்த்தியாயுமிருக்கிறதாம். அமெரிக்காவில் இதற்காக ஒரு தொழில் சாலையும் ஸ்தாபித்து வருகிறார்களாம்.

இந்தத் தாளிலிருந்து கிடைக்கும் மரக்கூழிலிருந்து கன் காட்டன் என்னும் வெடிமருந்தும் செய்யலாமாம். இது அபிவ்ருத்தி யடையுமானால், வெடிமருந்து செய்ய உதவும் பருத்தியை வேறு கார்யங்களுக்கு உபயோகிக்க முடியும்.

பருத்தித்தாள் கூழை ஒரு மருந்து ஜலத்தில் கரைத்தால் ஒரு பசையான பொருள் கிடைக்கிறதாம். இந்தப் பொருளிலிருந்து நூல் நூற்றால் அது பட்டுப் போலிருக்குமாம். பட்டு இழையை மெல்லியதாகவோ கெட்டியாகவோ நூற்கலாமாம். இந்த நூலைக் கொண்டு துணிகள் செய்து ஆடைகளுக்கு உபயோகிக்கலாமாம். ஆனால் இந்த செய்ற்கைப்பட்டானது ரொம்ப நாள் நிற்காது. இருந்தாலும் இது ரொம்ப ஸ்வல்ப விலைக்குக் கிடைக்குமாகையால், இந்தக்குறை ஒரு பெரிய விஷயமாகாது.

இந்த பசையான பொருளில் தக்க சாயங்கள் கலந்து ஸாதாரண தோல் அல்லது முதலையின் தோல் இவைகளைப்போன்ற செயற்கைத் தோல்கள் செய்யவும் முடியுமாம்.

பருத்தித்தாள் கூழிலிருந்து அநேக ரஸாயனப் பொருள்கள் செய்யவும் கூடுமாம்.

பருத்திக் கூழ் செய்யும் தொழில் வ்ருத்தியடைந்தால் பருத்தி ஸாகுபடிக்கு ரொம்ப அனுகூலமேற்படுமாம். தற்போது அமெரிக்காவில் பருத்தித்தாளை அப்புறப்படுத்த அதை வேரோடு பிடுங்காமல் வேரும் கொஞ்சம் தாளையும் விட்டு வெட்டுகிறார்கள். பருத்திப் பயிரைத்தாக்கும் பூச்சிகள் அடிக்கட்டையில் தங்கியிருந்து மறுபடியும் பருத்தி ஸாகுபடி செய்யும்போது,வ்ருத்தியாகி பயிரை அழிக்கின்றன. பருத்திச்செடியின் வேரும்கடுதாசிசெய்ய உதவுமாதலால்,இனி தாளை அப்புறப்படுத்துபவர்கள், செடியை வேரோடு பிடுங்குவார்கள். அப்போது பூச்சிகளுக்குத் தங்குமிடமும் ஆகாரமுமில்லாமல் போய் வயலைவிட்டு வேறிடத்துக்குப் போக நேரிடும். இதனால் அடுத்துப் பயிர் செய்யப்படும் பயிரில் பூச்சிகள் அதிகமாய் ஏற்படமாட்டா.

**Moya Grass.**

மோயா புல்.—வடக்கே மத்ய மாகாணங்களில் மோயா புல் என்று ஒரு புல் ஏராளமாய் இருக்கிறது. இது காகிதக்கூழ் செய்ய ஏற்றதென்று சொல்லப்படுகிறது. இந்தப் புல்லிலிருந்து நூற்றுக்கு 39-வீதம் காகிதக் கூழ் கிடைக்குமாம். இதை எளிதில் வெளுப்பாக்கவும் முடியுமாம். அந்த மாகாணங்களிலுள்ள ஒரு பள்ளத்தாக்கில் மாத்ரம் 15,000 முதல் 20,000 டன்வரை புல் கிடைக்குமாம். இதைச் சேகரித்து மில்லுகளுக்கு ஸப்ளை செய்ய டன்னுக்கு 15-ருபாய்க்கு மேலாகாதாம்.

**Old Papers.**

பழங்கடுதாசிகள்.—இட்டாலியர்கள் பழங்கடுதாசிகளை போர்முனையில் அடுப்பெரிக்க அனுப்புகிறார்களாம். ஆபிஸுகளிலிருந்தும் வீடுகளிலிருந்தும் பழங்கடுதாசிகளை சேகரித்து ஒரு தொழில் சாலைக்குக் கொண்டுபோய் யந்த்ரங்களில் கொடுத்து சுருட்டி அமுக்கி உருண்டை விறகுகள்போலச் செய்வார்கள். இந்தக் கடுதாசி விறகில் மட்டமான கொழுப்பு, நாப்தலீன், பாபீன் முதலிய எண்ணெய்ப் பொருள்களைச் செலுத்துவார்கள்.

இவைகளை தக்க அளவில் நறுக்கி மூட்டைகளில் போட்டுக்கட்டி போர்முனைக்கு அனுப்புகிறார்களாம். இந்தக கடுதாசிச் சுருளானது 20-நிமிஷம் எரியுமாம். நாலைந்து சுருள்களைக்கொண்டு பட்டணம் படியால் ஒரு படி ஜலத்தை 10-நிமிஷத்தில் கொதிக்கவைக்கலாம். இந்தமாதிரிக் காகிதச் சுருள்களை ஏராளமாக இட்டாலியப் போர்முனைக்கு அனுப்பிவருகிறார்களாம். இட்டாலியர்கள் யுத்தம் செய்யுமிடத்தில் ரொம்ப குளிராயிருப்பதால் இவைகள் ஸோல்ஜர்களுக்கு ரொம்ப ப்ரயோஜனமுள்ளவைகளாக இருக்கின்றனவாம்.



# BOYS' PAGE.

## பையன்கள் பக்கம்.

**Compound Interest.**

தொடர் வட்டி.—ஒரு ஸ்வல்ப தொகையை ஸ்வல்ப வட்டிக்கு விட்டு, வர்ஷந்தோறும் கிடைக்கும் வட்டியை முதலுடன் சேர்த்து அதையும் முன்போலவே தொடர் வட்டிக்கு விட்டுவந்தால், முதலில் போட்ட தொகையானது சில வர்ஷங்களுக்குள் ஏராளமாய் வளர்ந்து விடும். இப்போது கிறிஸ்து பிறந்து 1916-ம் வர்ஷம் நடக்கிறது. கிறிஸ்து பிறந்த வர்ஷத்தில் ஒரு அணாவை நூற்றுக்கு வர்ஷத்துக்கு 5 வீதம் வட்டிக்கு விட்டு, ஒவ்வொரு வர்ஷமும் கிடைக்கும் வட்டியை முதலுடன் சேர்த்து வட்டியும் முதலும் வளரும்படி விட்டால், தற்போது அந்தத் தொகை எவ்வளவுக்கு அபிவ்ருத்தி யடைந்திருக்குமென்றால், அதை லக்கங்களால் எழுதிவாசிக்கமுடியாது. அந்தப் பணத்தை ஒரே தங்கக்கட்டியாகச் செய்தால் நமது பூமியின் பரிமாணத்தைப்போல் 50 லக்ஷம் மடங்கு பெரியதாயிருக்குமாம்.

சில வர்ஷங்களுக்கு முன் ஒரு ப்ரெஞ்ச் ஜனோபகாரி தமது உயிலில் 500 லீவர் என்னும் ப்ரெஞ்ச் நாணயத்தை ஜனோபகாரார்த்தமாக விட்டுவிட்டுப்போனார். இந்தப்பணத்தை உபயோகிக்கப் பின்வருமாறு எழுதியிருந்தார். அதாவது இந்த 500 லிவரையும் 5 பாகமாகப் பிரிக்கவேண்டும். ஒரு நூறு லிவரை 100 வர்ஷத்துக்கு தொடர்வட்டிக்கு விட்டால் அந்தத் தொகை 13,100 லிவராக வ்ருத்தியடைந்திருக்கும். இந்தத் தொகையைக்கொண்டு, பணத்தை வட்டிக்கு விடுவது ந்யாயமென்பதைப் பற்றி வ்யாஸங்கள் எழுதுவோர்களுக்கு பரிசுகள் கொடுக்கவேண்டும்.

இரண்டாவது நூறு லிவரும் 200-வது வர்ஷக்கடைசியில் 17,00,000 லிவராக வ்ருத்தி யடைந்திருக்கும். சித்ரகலை முதலியவைகளில் தேர்ச்சியுள்ளவர்களுக்கு இனும் கொடுப்பதற்காக இந்தத் தொகையை சாச்வத பண்டாக வைக்கவேண்டும். மூன்றாவது நூறு லிவரும் மூன்றாவது நூற்றாண்டின் கடைசியில் 22½-கோடி லிவராகும். இதைக்கொண்டு பாங்கிகளும் ம்யூஸியங்களும் ஸ்தாபிக்க வேண்டும். நான்காவது தொகை நான்காவது நூற்றாண்டின் கடைசியில் 30,000-கோடியாகும். இந்தத் தொகையைக் கொண்டு ப்ரான்ஸில் ஒவ்வொன்றிலும் 1½-லக்ஷம் ஜனங்கள் வஸிக்கக்கூடியதாக 100-பட்டணங்கள் கட்ட வேண்டும். 5-வது தொகை 5-வது வது நூற்றாண்டின் கடைசியில் 4-லக்ஷம் கோடியாகும். இதைக் கொண்டு ப்ரிட்டன், ப்ரான்ஸ் இந்த தேசங்களின் ராஜாங்கக் கடன்களை அடைத்து விடலாம். இதுபோக பாக்கிப் பணத்தைக் கொண்டு ஸொத்துகள் வாங்கலாம், பள்ளிக்கூடங்கள், வைத்ய சாலைகள், ஆச்ரமங்கள், முதலியவைகளை நிர்வகிக்கலாம். இன்னும் எத்தனையோ கார்யங்களைச் செய்யலாம். அப்படிச் செய்தாலும் இன்னும் பணம் மிச்சமாகும். அந்த உயிலை நிறைவேற்றுபவர்கள் தங்கள் யுக்தம்போல் செலவழித்துக் கொள்ள வேண்டும்.

**Land and Water Motor Car.**

நிலத்திலும் நீரிலும் போகக்கூடிய ஒரு மோட்டார்வண்டி.—அமெரிக்காவில் ஒரு கனவான் நிலத்திலும் நீரிலும் போகக்கூடியதாய் ஒரு மோட்டார்வண்டி செய்திருக்கிறார். இதற்கு 'ஆம்பிபியன்' என்று பெயர். இதில் ஸாதாரண மோட்டார்வண்டியின் அங்கங்களெல்லாம் இருப்பதோடு ஜலத்தில் மிதப்பதற்கு வேண்டிய ஸாதனங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இது ஸமுத்ரக்கரையிலுள்ள மணலில் மணிக்கு 75-மைல் வீதம் ஓடுமாம். வண்டிக்காரர் ஏரி அல்லது நிறுகட்டுக்கு வந்தவுடன் வண்டியை நிறுத்தாமல் ஜலத்தில் விடுகிறார். இது மிதப்புகளின் உதவியால் மிதந்துகொண்டு ஜலத்தில் மணிக்கு 15-மைல்வீதம் போகிறது. இந்த வண்டியில் ஓட்டுபவரைத்தவிர 5-ப்ரயாணிகள் உட்காரலாமாம்.

**Bad Habits.**

கெட்ட வழக்கங்கள்.—கை நகங்களைக் கடிப்பது, விரலை வாயில் வைத்துக்கொள்வது, எழுதுகோலின் பேனாக்கட்டையைப் பல்லில் இடுக்கிக் கொள்வது, கற்பலகையில் எழுதியதை அழிப்பதற்காக எச்சிலுமிழ்வது, ஈயபென்ஸில் கருமையாய் எழுதும்பொருட்டு அதன் நுனியை நாவினால் நனைப்பது, தபால் தலைகளையும் உறைகளின் பசை விளிம்புகளையும் ஒட்டுவதற்காக அவைகளை நாவினால் தடவி ஈரமாக்குவது முதலிய வழக்கங்கள் அழுக்கானவை.... [illegible] ... தீமை பயக்கத்தக்கவை யென்றும், ... வெறுக்கத்தக்கவையென்றும் ... சொல்லாமலே ஏற்படும்.—நல்லாசிரியன்.

# LADIES' PAGE.

# ஸ்திரீகள் பக்கம்.

## Food for Infants and Invalids.

**குழந்தைகளுக்கும் மெலிந்தவர்களுக்கும் ஏற்ற உணவு.**—மேல் நாடுகளிலிருந்து வரும் கட்டிப்பால், மெல்லின்ஸ் ஆகாரம் முதலியவைகளுக்கு பதிலாக ஒரு ஸுலபமான ஆகாரம் தயார்செய்து குழந்தைகளுக்கும் மெலிந்தவர்களுக்குச் சாப்பிடக் கொடுக்கலாமென்று மிஸ்டர் பி. கே. வெங்கட்டராமய்யா நமக்கு எழுதுகிறார். அவர் சொல்லுவதாவது. "கேழ்வரகு ஸாதாரணமாய், எவ்விடத்திலும், எவர்க்கும், எளிதில், மலிவாய், அகப்படக்கூடியது. அதை தேவையான ப்ரமாணம், ஜலத்தில் ஸுமார் ½-மணிநேரம்வரைக்கும் ஊற வைத்து, பிறகு அரைத்து, அதனுடைய, வெண்மையான பாலை, மெல்லியவஸ்த்ரத்தினால் வடிகட்டி எடுத்துக்கொண்டு, அதனுடன் கொஞ்சம் நெய், பனங்கற்கண்டு இவைகளைசேர்த்து கொதிக்கவைத்து, கொஞ்சம் கெட்டியாகும்போது இறக்கிவைத்துக்கொண்டு, பிறகு குழந்தைகளுக்கு கொடுக்கலாம். தினந்தோறும் அம்மாதிரிசெய்ய அனுகூலப்படாமலிருக்கும்பக்ஷத்தில் ஒரேதடவையில் 1-அல்லது 2-படி கேழ்வரகை நன்றாய் உலர்த்தி, குத்திப்புடைத்து, அரைத்து, மெல்லிய வஸ்த்ரத்தினால் வஸ்த்ரகாயம் செய்து வைத்துக்கொண்டு, தேவையான அளவு, ஜலத்தில் கரைத்து மேல்சொன்னமாதிரி ஆகாரம் செய்யலாம். எவ்விதத்திலும் பழகிய கேழ்வரகை உபயோகித்தால் அதிக நலம். இந்த உணவு ஸாதாரணமாய் 10-நாள் சிசுக்களுக்குக்கூட கொடுக்கலாம். இந்த உணவை குழந்தைகளுக்கும், வயதுமுதிர்ந்தவர்களுக்கும் கொடுக்க, அதிக வலுவும், ஸமதாதுவும் உண்டாகும். தேகத்திற்கு அசெளக்யம் கிடையாது. தற்ஸமயம் அநேககனவான்கள்கூட உபயோகித்துக்கொண்டு வருகிறார்கள். தவிர நானும் அதை உபயோகித்துவருவதுண்டு."

## Hamsadvani.

**ஹம்ஸத்வனி.**—இந்தராகம் ஸுமார் 100-வருஷங்களுக்குமுன் ராமஸ்வாமி தீக்ஷிதரால் கல்பனை செய்யப்பட்டது. 1735ளு முதல் 1815-வருஷம் வரையில் ராமஸ்வாமி தீக்ஷிதர் ஜீவதிசையோடிருந்ததாகத் தெரியவருகிறது. இவர் ஓர் சிறந்த அத்வைதி. அதினாலேயே "அஹம் ப்ரும்மோஸ்மி" என்கிற அத்வைத தத்துவத்தை த்வனிக்கும்பொருட்டு அத்வைத மந்திரமாகிய "ஹம்ஸோ ஹம்ஸோ" என்னும் ஹம்ஸ மந்த்ரத்தை இந்த ராகத்திற்கு பெயரிட்டாரெனவமையும்.

லக்ஷணம்:—இந்த ஹம்ஸத்வனி ராகம் ஆரோஹணத்திலும் அவரோஹணத்திலும் முறையே ஐந்து ஸ்வரங்களை யுடைய ஔடவராகமென்று சொல்லப்படுகிறது. இதில் மத்யமம் (ம) தைவதம் (த) இவ்விரண்டு ஸ்வரங்களும் (வர்ஜ்யம்) விலக்கப்பட்டிருக்கின்றன. அந்தர காந்தார காகலி நிஷாதங்கள் ராகத்தின் நிழலை (ராகச் சாயையை) காட்டும் ஸ்வரங்களாம். ஸகரிப-கநிபஸ்-பரி-ஸ்பநிக-பரிகஸ-கநிபகரி-பரிஸநிப-ரிநிகபரி முதலிய "தாட்டு ஸ்வரப் பிரயோகங்கள்" இந்த ராகத்தில் மிகவும் ராக ரஞ்சகமானவைகளாக விருக்கின்றன. தற்காலத்தில் வழங்கி வருகிற 75-மேளகர்த்தா ப்ரகாரம் இந்த ராகம் 29-வது மேளகர்த்தாவாகிய தீரசங்கரா பரணத்தில் (ஜன்யம்) பிறந்தது. கால நிபந்தனைகளில்லாமல் எப்பொழுதும் பாடத்தகுந்தது.—ஸங்கீதப் பிரகாசிகை.

## Children's Food.

**குழந்தைகளின் ஆகாரம்.**—சிறுவயதிலேயே குழந்தைகளுக்கு சரியாகச் சாப்பிடக் கற்றுக்கொடுக்கவேண்டும். குழந்தைகள் ஸாதாரணமாய் சாப்பிட்ட பிறகே ஜலம் குடிப்பது நல்லது. தொண்டை வரண்டிருந்தால்மாத்ரம் கொஞ்சம் ஜலம் சாப்பிடுமுன் குடிக்கலாம். சாப்பாட்டு நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் குழந்தைகளுக்கு ஒன்றும் தின்னக் கொடுக்கக் கூடாது. சாப்பாட்டு நேரத்துக்கு இடையில் தின்பண்டங்களைத் தின்னக்கொடுப்பது தேகஸுகத்துக்கு ரொம்ப கெடுதாக ஏற்படும். குழந்தைகளை ஆகாரத்தைக் கையால் அளைந்து விளையாடாமலிருக்கும்படிக்கும், சீக்ரம்போதுமான அளவு சாப்பிடும்படிக்கும் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆகாரம் ரொம்ப ஆறிப்போகும்படி குழந்தைகளை மெதுவாய் சாப்பிட விடக்கூடாது. குழந்தைகள் சாப்பிடும்போது அவைகளை அடித்து வைவது கூடாது. அப்படிச் செய்தால் ஜீர்ணசக்தி குறைந்து போகக்கூடும்.



# INDIANS ABROAD.

# இதர தேசங்களில் இந்தியர்கள்.

## The Situation in South Africa.

**தென்னாப்ரிக்காவில் இந்தியர்களின் நிலைமை.**—தென்னாப்ரிக்காவிலுள்ள இந்தியர்களின் குறைகளை நிவர்த்திசெய்ய மிஸ்டர் காந்தியும் அவரைச்சேர்ந்த சில கனவான்களும் வெகுகாலம் அதிகாரிகளோடு போராடினபின்மேல், இந்தியர்களின் குறைகளைப்பற்றி விசாரிக்கவும், அதுவிஷயமாய் யோசனைகள் சொல்லவும், தென்னாப்ரிக்கா கவர்ன்மெண்டார் ஒரு கமிஷன் நியமித்தார்களென்றும், அதனால் இந்தியர்களின் குறைகளில் பெரும்பாகம் நிவர்த்தியாயிற்றென்றும் அநேகர் பத்ரிகைகளில் வாசித்திருக்கலாம். ஆனால் இந்தியர்களின்நிலைமை இன்னும் கேவலமாகவே இருக்கிறதென்று தெரியவருவதாக "இந்தியன் எமிக்ரண்ட்" பத்ரிகை எழுதுகிறது.

இந்தியர்கள் ஒப்பந்தக்கூலிகளாயில்லாமல் ஸ்வயமாக வேலைசெய்துவந்தால் அவர்கள் தலைக்கு வர்ஷமொன்று 3-பவுன் (45-ரூபாய்) வரி கொடுக்கவேண்டுமென்று முன்பு அங்கே சட்டமிருந்தது. மிஸ்டர் காந்தி எடுத்துக்கொண்ட முயற்சியால் அந்தவரி ரத்தாயிற்று. அது ரத்தாயுங்கூட இந்தியர்களின் நிலைமை முன்னிலிருந்தபடியே யிருக்கிறதாம். முன்பு இந்தியர்கள் தங்கள் பெயர்களை ரெஜிஸ்டர் செய்துகொள்ளவேண்டுமென்றிருந்தது. முதலில் அவர்கள் ரெஜிஸ்டர் செய்துகொள்ள மறுத்தார்கள். ஆயினும் கடைசியில் அவர்கள் தங்கள் பெயர்களை ரெஜிஸ்டர் செய்துகொள்ளவே, ஏஷியாடிக் சட்டத்தில் அப்போதுள்ள இந்தியர்களை ரெஜிஸ்டர் செய்யவேண்டுமென்னும்பாகத்தைமாத்ரம், அது இனி அவச்யமாயிராமையால், அதிகாரிகள் ரத்துசெய்துவிட்டார்கள். ஆனால் அங்குள்ள இந்தியர்களுக்கு குழந்தைகள் பிறக்குமானால் அவைகளின் பெயர்களை ரெஜிஸ்டர் செய்யவேண்டியிருக்கிறதாம். இவ்விதம் ஒரு நிருபர் இந்தியன் எமிக்ரண்ட் பத்ரிகைக்கு எழுதுகிறார்.

மேற்சொன்ன 3-பவுன் வரியைப்பற்றி அவர் எழுதுவதாவது: 1875-ம் வர்ஷத்து சட்டத்தின்படி, ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டில் இல்லாத கூலிகள் அந்தத்தேசத்திலிருக்கவேண்டுமானால் வர்ஷத்துக்கு 3-பவுன் வரி செலுத்தவேண்டும். வரி செலுத்த இஷ்டப்படாத ஸ்வயேச்சையான இந்தியர்கள் வரிசெலுத்த இஷ்டப்படாவிட்டால் ஒன்று ஒப்பந்தக்கூலிகளாக வேலைசெய்யவேண்டும். இல்லாவிட்டால் இந்தியாவுக்குத் திரும்பிவிடவேண்டும், இப்போது 3-பவுன் வரி செலுத்தவேண்டுமென்னும் பாகத்தைமாத்ரம் ரத்துசெய்திருக்கிறார்கள். அதிகாரிகள் இஷ்டப்பட்டால் இந்தியர்களை இந்தியாவுக்கு விரட்டிவிடலாம். அல்லது ஒப்பந்தக் கூலியாக வேலைசெய்யும்படி கட்டாயப்படுத்தலாம். இந்தியா கவர்ன்மெண்டின் அபிப்ராயத்துக்கிணங்கி தென்னாப்பிரிக்கா கவர்ன்மெண்டார் மேற்சொன்ன இந்த இரண்டு நிபந்தனைகளையும் அமுலுக்குக்கொண்டு வராமலிருக்கிறார்கள். ஆனால் இந்தியர்களின் குறையை நிவர்த்திசெய்வதற்காக ஏற்படுத்தின இந்தியன் ரிலீப் ஆக்டின் நோக்கமென்னவென்றால் இந்தியர்கள் ஸ்வதாவாக இந்தியாவைவிட்டுப்போக வேண்டுமென்பது. அவ்விதம் இந்தியர்கள் அந்த நாட்டைவிட்டு வெளியேறுவிட்டால் அதிகாரிகள் தங்கள் எண்ணத்தைநிறைவேற்ற ஷை பாகங்களை கண்டிப்பாய் அமுலுக்குக் கொண்டுவருவார்களென்பது நிச்சயம்.

## Indentured Labour.

**ஒப்பந்தக்கூலி.**—கல்கத்தாமார்வாரி ஸங்கத்தார் ஒப்பந்தகூலி ஏற்பாட்டை அடியோடு ஒழித்துவிடவேண்டுமென்று கவர்ன்மெண்டாருக்கு ஒரு விண்ணப்பம் எழுதியனுப்பியிருக்கிறார்கள். அந்த விண்ணப்பத்தோடு, குடியேற்ற நாடுகளுக்குப்போய் அங்கே சில காலம் தங்கியிருந்து பிறகு இந்தியாவுக்குத் திரும்பி வந்த இந்தியர்களின் வாக்குமூலங்களையும் சேர்த்து அனுப்பியிருக்கிறார்கள்.

இது விஷயமாக 'இந்தியன் எமிக்ரண்ட்' பத்ரிகை சில குறிப்புகள் எழுதியிருக்கிறது. இந்த ஒப்பந்த ஏற்பாடானது 50-வர்ஷத்துக்கு மேலாக நடந்துவருகிறதென்றும, ஆகையால் கவர்ன்மெண்டார் ஒப்பந்தக் கூலிகள் விஷயத்தில் அதிக பொறுப்பு எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் மார்வாரி ஸங்கத்தார் தங்கள் விண்ணப்பத்தில் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அத்தனை காலமாக ஒப்பந்தக்கூலி ஏற்பாடு இருந்து வந்திருக்க இதைப்பற்றி இந்தியர்கள் இதுவரையில் என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்களென்று "இந்தியன் எமிக்ரண்ட்" பத்ரிகை கேட்கிறது. மேலும் இது வரையில் பொது ஜனங்களாலனுப்பப்பட்ட இந்திய ப்ரதிநிதிகள் எவரும் குடியேற்ற நாடுகளிலுள்ள இந்தியர்களின் நிலைமையைப்பற்றி ஆராய்ச்சி செய்யப் போனதேயில்லை. ஸுமார் 50 வர்ஷமாய் [illegible] எதுவும் எடுத்துக்கொள்ளாதது இந்தியர்கள் [illegible] அச்ரத்தையாயிருக்கிறார்களென்பதை எடுத்துக்காட்டுகிறது. மேலும் சில இந்தியர்கள் இந்தியாவில் [illegible] யாட்கள் குறைவாயிருக்கிறார்களென்பதை உத்தேசித்து ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டை ஆக்ஷேபிக்கிறார்களே ஒழிய, அந்த ஏற்பாட்டினால் கூலியாட்களுக்கு ஏற்படும் [illegible] ஆக்ஷேபிக்கவில்லை. ஆகையால் இந்தியர்கள் இது விஷயத்தில் அதிக சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அந்தப் பத்ரிகை எழுதுகிறது.

# FUN AND ANECDOTE.
## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### The Sultan's Decision.

ஸுல்தானுடைய தீர்ப்பு. — ஐரோப்பாவிலுள்ள ஒரு கவர்ன்மெண்டார் தமது உத்யோகஸ்தர் ஒருவரை துருக்கிக்கு தூதராக நியமித்து, கான்ஸ்டாண்டிநோபிளுக்கு அனுப்பியிருந்தார்கள். தூதருக்கு வயஸு அதிகமில்லை. மேலும் அந்த உத்யோகத்தில் பயிற்சியும் இடையாது. அவர் ஒரு நாள் ஸுல்தானுடைய அந்தப்புரத்து ஸ்த்ரீகள் ஏறியிருந்த வண்டியைக் கண்டார். அது நன்ருய் மூடப்பட்டிருந்த ஒரு கோச்வண்டி. அதில் ஒரு ஜன்னல் மாத்ரம் திறந்திருந்தது. ஒரு பேடி அதற்குக் காவலாக இருந்தான். தூதர் அந்த வண்டியில் அவ்வளவு பத்ரமாயிருப்பவர் யாரென்று அறிய ஆவல் கொண்டு, அந்த ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்க முயன்ருர். ஆனல் உடனே அந்தப் பேடி, தூதரை, முகத்தில் நன்ருய் அறைந்தான். அதன் மேல் தூதர் அது விஷயமாய்க் கலவா மூண்டாக்கினதோடு, அப்தல் ஹமீது ஸுல்தானிடம் ப்ராது செய்தார். ஸுல்தான் தூதரை வரவழைத்து விஷயத்தைக் கேட்கவே தூதர் தமது புகாரைத் தெரிவித்துக் கொண்டார். அவர் சொல்லி முடித்ததும் ஸுல்தான் சொன்னதாவது. "ஐயா, உமது வழக்கு முழுவதும் கேட்டேன். நீரோ ஒரு கனவான். ஆகையால் நீர் மரியாதைக் குறைவான ஒரு கார்யத்தை செய்திருக்க மாட்டீர். ஆகையால் ஒரு பேடியும் உம்மை அடிக்கக் காரண மேற்படாது. ஆகையால் இந்தக் கேஸைத் தள்ளிவிடுவோம்," என்ருர்.

### Will the Horse Run Fast ?

குதிரை நன்ருக ஓடுமோ?—ஒரு வித்வானுக்குக் கடன் கொடுத்திருந்த வ்யாபாரி பலமுறை வித்வானைத் தேடியும் அகப்படவில்லை. ஒரு ஸமயம் இருவரும் ஒரு தெருவில் ஸந்திக்கும்படி நேர்ந்தது. வித்வான் நடந்து போனர். வ்யாபாரி குதிரைமீது சென்ருர். இம்முறை வ்யாபாரியை ஏமாற்ற முடியாதென்று கண்ட வித்வான், "செட்டியார் வாள், பேஷ் குதிரை! இது ஓட்டத்தில் எப்படி?" என்று கேட்டார். வ்யாபாரி உடனே குதிரையைத் தட்டிவிட்டார். அது வேகமாகச்சென்றது. வித்வான் தன் வழியேசென்ருர்.

### How to Get Rid of Neighbour's Hens.

அயலானுடைய கோழி வாராதிருக்க உபாயம்.— பட்டணத்திலிருந்து வந்த ஸ்நேகிதன்:—உன் பக்கத்து வீட்டுக்காரனுடைய கோழிகள் உன் தோட்டத்திற்குள் வந்து தொந்தரவு செய்கின்றனவென்று முன்பு சொன்னயே. இப்பொழுதும் அவை வருவதுண்டோ?

க்ராமவாஸி:—இப்பொழுது அவைகள் வெளியில் வருவதேயில்லை. பக்கத்து வீட்டுக்காரன் அவைகளைக் கோழிக்கூட்டில் அடைத்து வைக்கிருன்.

பட்டணவாஸத்தான்:—"எனப்படி யவன் செய்கிருன்? நீ என்ன செய்தாய்?"

க்ராமவாஸி:—"ஒவ்வொரு நாளும் இரவில் தோட்டத்துப் புல்லில் பத்துப் பதினைந்து கோழிமுட்டைகளை மறைத்து வைத்து, மறுநாள் காலையில் பக்கத்து வீட்டான் எனது தோட்டத்தை எட்டிப் பார்க்கும்போது, அந்த முட்டைகளை அவனுக்குத் தெரியும்படி வெளியிலெடுத்து வீட்டுக்குள் கொண்டுபோனேன். நாலைந்து நாள்களுக்குப் பிறகு அவன் கோழிகளை வெளியில் விடுவதேயில்லை."

### Geography Lesson.

பூகோளப்பாடம்.—நீ ஏன் பூகோளப்பாடம் படிக்கவில்லை என்று ஹாரலட் என்னும் தமது மாணுக்கனை உபாத்யாயர் கேள்விகேட்க, அதற்கு அவன் "ஐயா, தாங்கள் சிலதினங்களுக்குமுன் இப்போது நடந்தேறிவரும் யுத்தத்தினுல் பூகோளபடங்களில் காட்டியிருக்கிற அந்தந்தத் தேசங்களின் எல்லைகளெல்லாம் மாறுபட்டுப்போம் என்று சொன்னது என் ஞாபகத்தில் நன்ருயிருக்கிறது. ஆகையால் அந்த மாறுதல்களுக்குப்பின் ஒரேமூச்சாய்ப் படித்துவிடலாமென்று காத்திருக்கிறேன்" என்ருன்.

### The Motor Car.

மோட்டார் வண்டி.—ஒரு குதிரை வண்டிக்காரன்:—உமது வண்டியில் ஒரு பக்கத்தில் என்னவோ வைத்திருக்கிறீரே அதென்ன?

மோட்டார் வண்டி ஓட்டுபவன்:—அதுவா, சக்கரத்திற்கு ஏதாவது கெடுதல் உண்டாகி விட்டால் உபயோகித்துக் கொள்வதற்காக அதிகப்படியாக ரப்பர் டையர் (பட்டா) வைத்திருக்கிறது. இது உனக்குத் தெரியாதா?

கு. வ:—அப்படியா, வேடிக்கையாயிருக்கிறதே. நான் 20-வர்ஷமாய் வண்டி யோட்டி வருகிறேன். அதிகப்படி பட்டா ஒருநாளும் நான் கொண்டுபோனதேயில்லையே.



162032

# CURIOSITIES.
## விநோதங்கள்.

### Accuracy in Journalism.

பத்ரிகைகளில் பிழையில்லாமல் எழுதுவது.— டெய்லி டெலிக்ராப் என்னும் இங்க்லிஷ் பத்ரிகை பின்வருமாறு எழுதிற்ரும். "லார்ட் ஹார்டிஞ்ஜுக்கு 1910-ம் வர்ஷத்தில் பாரன் பட்டம் கொடுக்கப்பட்டது. அந்த வர்ஷத்தில் அவர், லார்ட் கர்ஸனுக்குப் பிறகு இந்தியாவின் வைஸ்ராயாக வந்தார்."

லார்ட் கர்ஸன் லார்ட் மிண்டோவுக்கு முன் வைஸ்ராயாக இருந்தவர். லார்ட் மிண்டோவுக்குப் பிறகு லார்ட் ஹார்டிஞ்ஜ் வைஸ்ராயாக வந்தார். இப்படித் தவருக எழுதினது ப்ரிட்டிஷ் பத்ரிகைகள் இந்திய விஷயங்களை எவ்வளவுதூரம் அறிந்திருக்கின்றன என்பதற்கு ஒரு தக்க உதாரணமாகுமென்று அல்லகபாத்து 'லீடர்' பத்ரிகை எழுதுகிறது.

ஸமீபத்தில் தமிழ்ப் பத்ரிகைகளில் சில ஜெர்மானியர்கள் உபயோகிப்பதாகச் சொல்லப்படும் 42-ஸெண்டி மீட்டர் வாயளவுள்ள பீரங்கிகளைப்பற்றி எழுதுகையில் அவைகளை, ஸெண்டிமிட்டர் பீரங்கிகள், என்று குறிப்பிட்டன. ஸெண்டி மீட்டர்என்பது நீட்டலளவையில் ஒன்ருகும். அது ஒரு அங்குலத்தில் ஐந்தில் 2-பாகமாகும்.

ஜெர்மானியர் உபயோகித்த 42-ஸெண்டி மீட்டர் பீரங்கியானது 16.8-அங்குலம் வாயளவுள்ளது. அதாவது கிட்டத்தட்ட 17-அங்குலமாகும். இத்தனைஸெண்டிமீட்டர் என்று குறிப்பிடாமல், சும்மா "ஸெண்டி மீட்டர் பீரங்கி" என்று எழுதுவதானது இத்தனை அங்குலமென்று குறிப்பிடாமல் "அங்குல பீரங்கிகள்" என்றெழுதுவதைப் போலாகும்.

### Banana with Two Bunches.

இரண்டு குலைகளுள்ள வாழைமரம்.—சிலஸமயங்களில் வாழைமரம் இரண்டு தாறு போடுவதுண்டாம். பங்களூரில் ஸமீபத்தில் ஒரு தோட்டத்தில் இப்படிப் பட்ட மரம் ஒன்று இருந்ததாம். ஜமெய்க்காவில் ஒரு வாழைத் தோட்டத்தில் இவ்விதமரமொன்று இருந்ததாம். அதைத் தோட்டக்காரர் போட்டோ எடுத்து ஒரு பத்ரிகைக்கு அனுப்பினர். அந்தப் படம் 'மைஸூர் எகனமிக் ஜர்னல்' என்னும் பத்ரிகையில் வெளியாகியிருக்கிறது. அதன் காய்கள் ரொம்ப சிறியவையா யிருக்கின்றனவாம். மொத்தத்தில் இரண்டு குலைகளிலும் உள்ள காய்களின் எண்ணிக்கை அதிகமானுலும், அவைகளின் மொத்த நிறை ஸாதாரணவளர்ச்சியுள்ள ஒருமரத்தின் குலையிலுள்ள காய்களினுடைய மொத்த நிறையைவிட அதிகமாயிருக்குமாவென்பது ஸந்தேகமாம்.

### A Fire-proof Sadhu.

நெருப்பால் கெடுதியடையாத ஒரு ஸாது.— மூன்று மாதங்களுக்கு முன் விஜயநகரத்தில் ஒருஸாது 2-அடி நீளம், 2-அடி அகலம், 4-அடி ஆழத்தில் ஒரு குழிவெட்டச்செய்துஅதில் தீவளர்த்திஇரவு 9மணிக்கு அதில் குதித்தார். கழுத்தளவிற்கு மண்ணுல் மூடப்பட்டது. பிறகு பலகைகளால் மூடிக்காற்று ப்ரவேசியாமல் மண்ணுல் மூடி 15-20 வண்டி விறகுகளையதன் மேல்போட்டு 12 மணிவரையில் கொளுத்தினர்கள். இதை வேடிக்கை பார்த்த ஆயிரக்கணக்கான ஜனங்கள் அவர் செத்திருப்பாரென்று நினைத்தார்கள். ஆனல் அவர் சாகாமல் தெளிவான முகத்தோடும் சுத்தமான வுடையோடும் வெளியேவந்து எல்லோரையும் ஆசீர்வதித்தாரென்று ஒரு நிருபர் ஒரு பத்ரிகையில் தெரிவிக்கிருர்.

### A Motor Cycle Street Sweeper.

தெருக்கூட்டும் மோட்டார் ஸைக்கில்.—அமெரிக்காவில் ஒரு பட்டணத்தில் தெருக்கூட்ட மோட்டார் ஸைக்கிளை உபயோகிக்கிருர்களாம். மோட்டார்ஸைக்கிளுக்கு முன்புறத்தில் ஒரு உருக்கு ப்ரஷ் அமைக்கப்பட்டிருக்கிறது. வண்டியை ஓட்டிக்கொண்டு போகும்போது அது தெருவிலுள்ள குப்பைகளைக் கிளறிவிடுகிறது. ஸைக்கிளின் பின்புறத்தில் ஒரு அகன்ற தொட்டிப்பம் அமைக்கப்பட்டிருக்கிறது. ப்ரஷ்கிளறிவிட்ட குப்பைகளை அது சேகரிக்கிறது. இந்த குப்பை கூட்டும் மோட்டார் ஸைக்கிள் நன்ருய் வேலைக்கு உதவுகிறதாம்.

### Four Children in a Birth.

ஒரு ப்ரஸவத்தில் நான்கு குழந்தைகள்.—மைஸூர் ஜில்லாவில் ஒரு ஊரில் வெங்காபாய் என்னும் ஒரு ப்ராமணஸ்த்ரீ ஸமீபத்தில் ஒரே ப்ரஸவத்தில் அரைமணி நேரத்துக்குள் 4 குழந்தைகளைப் பெற்ருளாம். ப்ரஸவவேதனை அதிகமாயிருந்ததாம். முதல் குழந்தையும் மூன்ருவது குழந்தையும் ஆண்களாம். மற்றவை பெண்களாம். முதலில் பிறந்த 2 குழந்தைகள் ஒன்பது நாளும், மற்றவை 13-நாள்களும் உயிரோடிருந்தனவாம்.

3L
m211, N09JB N09.8

# DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

### THE WAR IN EUROPE.

### ஐரோப்பிய யுத்தம்.

பிப்ரவரி௴ 10-தேதி.

ரஷ்யர்கள் ஸெர்னோவிட்ஸுக்கு 42-மைல் வடமேற்கில் நீஸ்டர் நதியின் வடகரையிலுள்ள உஸஸ்கோ ப்ரதேசத்தைப் பிடித்துக்கொண்டார்கள்.

இரண்டு ஜெர்மன் ஸீப்ளேன் என்னும் ஆகாயக்கப்பல்கள் இங்க்லண்டில் ராம்ஸ்கேட், ப்ராட்ஸ்டேர்ஸ் என்னுமிடங்களில் வெடிகுண்டுகள் போட்டன.

ஜெர்மனி பெல்ஜியத்துடன் தனியாக ஸமாதானம் செய்து கொள்ள விரும்புவதாகச் சொன்னதாகவும், அதற்கு பெல்ஜியம் ஸம்மதிக்கவில்லை யென்றும் தெரிகிறது.

11-தேதி.

ரஷ்யர்கள் லக்குக்கும் ரோவ்னுவுக்கும் மத்தியில் ஒரு குன்றைப்பிடித்தார்கள். அவர்கள் நீஸ்டர்நதியின் மேற்குக்கரைக்கு கடந்து போனார்கள்.

இன்று க்ரீஸின் பார்லிமெண்டில் க்ரீஸின் ப்ரதம மந்த்ரியானவர், அந்த தேசம் யுத்தத்தில் ஒரு கக்ஷியிலும் சேராமல் தனித்து இருக்கத் தீர்மானித்திருப்பதாகச் சொன்னார்.

சில ஜெர்மன் டிஸ்ட்ராயர் கப்பல்கள் இங்க்லண்டுக்குப் பக்கத்திலுள்ள டாகர்பாங்க் என்னும் இடத்துக்குப் பக்கத்தில் கடல்வெடிகுண்டுகள் வாரியெடுக்கும் ப்ரிட்டிஷ் கப்பல்கள் நான்கோடு யுத்தம்செய்து ஒன்றை மூழ்கடித்தன.

14-தேதி.

'அரிதுஸா' என்னும் ப்ரிட்டிஷ் க்ரூஸர் இங்க்லண்டின் கிழக்குக்கரையில் ஒரு கடல் வெடிகுண்டில்தாக்கி சேதமடைந்தது. 10-பேர்கள் உயிரிழந்தார்கள். கப்பல்முழுவதும் நாசமாகிவிடும் என்று தோன்றுகிறதாம்.

இட்டாலியப் போர்முனையில் எதிரிகள் ராம்பான் ப்ரதேசத்தில் சில இடங்களைப் பிடித்துக்கொண்டார்கள்.

ரஷ்யப் போர்முகத்தில் இல்லக்ஸ்டுக்குப் பக்கத்தில் பலமான பீரங்கி யுத்தம் நடந்தது. ரஷ்ய டிஸ்ட்ராயர் கப்பல்கள் கருங்கடலில் 8-எதிரிக் கப்பல்களை மூழ்கடித்தன.

ரஷ்யர்கள் எர்ஸிரம் ப்ரதேசத்தில் முன் சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் காப் என்னும் இடத்தையும், பெர்ஷியாவில் டௌலாடாபாட் என்னும் ஊரையும் பிடித்துக்கொண்டார்கள்.

15-தேதி.

லார்ட் பரெஞ்ச் ஆகாயப் பாதுகாப்பு வேலைக்குத் தலைவராக நியமிக்கப் பட்டிருக்கிறார்.

16-தேதி.

எர்ஸிரமிலுள்ள 8-கோட்டைகளை ரஷ்யர்கள் பிடித்தார்கள்.

17-தேதி.

ரஷ்யர்கள் 5-நாள் யுத்தம் செய்து எர்ஸீரம் கோட்டையைப் பிடித்திருக்கிறார்கள். எர்ஸீரமுக்குத் தென் கிழக்கில் ரஷ்யர்கள் எதிரிகளைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

18-தேதி.

ப்ரிட்டிஷ் ஸைன்யங்கள் ஆப்ரிக்காவில் காமரூன்ஸ் ப்ரதேசத்தைப் பிடித்திருக்கின்றன. ஜெர்மன் சேனைத் தலைவர் அங்கிருந்து ஸ்பயினுடைய ப்ரதேசத்துக்கு ஓடிவிட்டார்.

மாண்டிநிக்ரோவின் அரசரும் அவரது மனைவியும் ப்ரான்ஸிலுள்ள போர்டோவில் தங்கியிருக்கிறார்கள்.

ப்ரெஞ்ச் யுத்தக்கப்பல்கள் அட்ரியாடிக் கடலில் 2-எதிரி ஸப்மரீன் கப்பல்களை மூழ்கடித்தன.

21-தேதி.

ரஷ்யர்கள் ஆஸியா துருக்கியில் மஷ், அலாட் என்னுமிடங்களைப் பிடித்திருக்கிறார்கள்.

23-தேதி.

ஜெர்மானியர்கள் கிவெஞ்சிவுட் என்னும் காட்டிலும், வெர்டின் ப்ரதேசத்திலும் சில இடங்களைப் பிடித்தார்கள். அவர்கள் பொமாண்ட் தோப்பையும் இன்னும் சில இடங்களையும் கைப்பற்றினார்கள்.

ஜெர்மன் கப்பல் படைக்கு முன்பு தலைவராயிருந்த வான்போல் என்பவர் இறந்துவிட்டதாகத் தெரிகிறது.



ஒரு ஜர்மன் கப்பல் டெனரிப்புக்குப் பக்கத்தில் 7-ப்ரிட்டிஷ்கப்பல்களை மூழ்கடித்து அதிலிருந்த ஜனங்களை இன்னொரு ப்ரிட்டிஷ் கப்பலில் ஏற்றி டெனரிப்புக்கு அனுப்பிவிட்டது.

24-தேதி.

ஜெர்மானியர்கள் வெர்டுனுக்குப் பக்கத்தில் நேசத் துருப்புகளை பலமாகத்தாக்குகிறார்கள். ப்ரெஞ்ச் துருப்புகள் ஹௌமாண்ட் க்ராமத்தை காலிசெய்து விட்டன.

ஆஸ்ட்ரியர்கள் டுர்ராஸோவுக்குத் தென்மேற்கில் முன்சென்று கொண்டிருக்கிறார்கள்.

25-தேதி.

வெர்டுன் சண்டை இன்னும் பலமாகவே நடந்து வருகிறது. ப்ரெஞ்ச் துருப்புகள் ப்ராபாண்ட் என்னும் ஊரைக் காலிசெய்துவிட்டார்கள்.

26-தேதி.

வெர்டுன்யுத்தம் இன்னும் நடக்கிறது. ப்ரெஞ்சுக்காரர்கள் வெர்டுனுக்கு வடக்கிலுள்ள ஒரு புதிய இடத்தில் தங்கியிருக்கிறார்கள்.

ரஷ்யர்கள் பெர்ஷியாவில் கெர்மான்ஷா என்னுமிடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

ஸெர்வியர்களும் மாண்டிநிக்ரர்களும் அல்பானியா முழுவதையும் காலிசெய்துவிட்டார்கள்.

27-தேதி.

"மலோஜா" என்னும் தபால் கப்பல் மூழ்கின போது அதிலுள்ள ஜனங்களுக்கு உதவிசெய்யப்போன 'எம்ப்ரெஸ் அப் போர்ட் வில்லியம்' என்னும் கப்பலும் கடல் வெடிகுண்டுதாக்கி மூழ்கிப்போயிற்று. மொத்தம் 411-கப்பல் ஜனங்களில் 260-பேர்கள் காப்பாற்றப்பட்டிருக்கிறார்களாம்.

ரஷ்யர்கள் எர்ஸிரத்தைப் பிடித்தபோது 13,000 துருக்கியர்களைக் கைதுசெய்தார்களாம்.

28-தேதி.

வெர்டுனுக்குப் பக்கத்தில் பலமாக சண்டை நடந்து வருகிறது. ப்ரெஞ்சுக்காரர்கள் பின்வாங்கியிருக்கிறார்கள். வெர்டுனுக்கு 6-மைல் வடமேற்கில் உள்ள போர்ட் டௌமாண்ட் என்பதை ஜெர்மானியர்கள் பிடித்ததாகச் சொல்லுகிறார்கள்.

ஆஸ்ட்ரியர்கள் டுர்ராஸோவைக் கைப்பற்றியிருக்கிறார்கள்.

எர்ஸிரமுக்கு 30-மைல் மேற்கிலுள்ள ஆஷ்காலா என்னுமிடத்தை ரஷ்யர்கள் பிடித்திருக்கிறார்கள்.

மார்ச்சு௴ 3-தேதி.

வெர்டுனுக்குப் பக்கத்தில் யுத்தம் கடுமையாய் நடக்கிறது. ஜெர்மானியர்கள் ரிகாவுக்கு மேற்கில் கப்பல் பீரங்கிகளைக்கொண்டு ரஷ்யர்களைத் தாக்கினார்கள். ரஷ்யர்கள் பிட்லிஸுக்கு வடக்கிழக்கில் 7-மைல் தூரத்திலுள்ள காமாக், நகவான்க் கன்வெண்டு என்னுமிடங்களைப் பிடித்திருக்கிறார்கள். துருக்கியர்கள் பின்வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

4-தேதி.

ஜெர்மானியர்கள் டௌவாமாண்ட் என்னும் ஊரில் புகுந்திருக்கிறார்கள்.

ரஷ்யர் பிட்லிஸ் என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள்.

6-தேதி.

ரஷ்ய டிஸ்ட்ராயர் கப்பல்கள் பால்டிக் கடலோரமாக உள்ள துருக்கியைச் சேர்ந்த ட்ரெபிஸாண்ட் என்னும் ஊரைத் தாக்கின.

ஜெர்மானிர்கள் டௌமெண்ட் என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள்.

ரஷ்யர்கள் பாரஸீகத்தில் ஹ்ராமாடானுக்கு 90-மைல் வடமேற்கில் உள்ள பிஜார் என்னுமிடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

7-தேதி.

ஜெர்மானியர்கள் மேற் காங்கத்தில் போர்ஜஸ் என்னும் ஊரைப் பிடித்தார்கள். ரஷ்யர்கள் கருங்கடல் கரையில் ட்ரெபிஸாண்ட் என்னும் ஊருக்கு 60-மைல் கிழக்கில் உள்ள ஏடிஜே என்னும் ஊரைப் பிடித்தார்கள்.

### INDIAN NEWS.

### இந்திய வர்த்தமானம்.

பிப்ரவரி௴ 11-தேதி.

**இந்திய ஸங்கீதத்தின் சீர்திருத்தம்.**—மேல்நாட்டில் ஸங்கீதம் அபிவ்ருத்தி யடைந்திருப்பதற்கேற்ப இந்திய ஸங்கீதத்தைச் சீர்திருத்துவதைப்பற்றி ஆலோசிப்பதற்காக பரோடாவில் ஒரு ஸங்கீதகான்பரென்ஸ் நடத்த பம்பாயிலும் பரோடாவிலும் ஏற்பாடுகள் நடந்துவருகின்றன.

14-தேதி.

**ஒரு பீரங்கிப்படை வீரனின் பரிதாப மரணம்.**—வங்காளத்தில் பாரக்பூர் என்னுமிடத்திலிருந்த ஒரு பீரங்கிப்படை வீரன் ஸமீபத்தில் பைத்யம் பிடித்துப்போனான். அவனை பவானிப்பூர் ஆஸ்பத்ரிக்கு அனுப்பி, எங்கும் அவன் ஓடாதபடி ராணுவ பந்தோபஸ்து செய்திருந்தார்கள். அவன் இன்றுகாலையில் ஸ்நானம் செய்யும் அறைக்குப்போய் அங்கிருக்கும் ஜன்னல் வழியாக கூரைமேல் ஏறி அங்கிருந்து பூமியில் தாவிக்குதித்தான். குதித்ததும் உடனே இறந்துவிட்டான்.

**காசி ஸதியாலோசனைக் கேஸ்.**—காசியில் விசாரணையாகிவரும் காசி ஸதியாலோசனைக்கேஸில் இன்று கோர்ட்டார் தீர்ப்புச்சொன்னார்கள். மொத்தம் 15-பேர்களில் 4-பேர்கள் விடுதலையடைந்தார்கள். ஸதியாலோசனைத் தலைவனாகிய ராஜேந்திரநாத்ஸன்யாலுக்கு ஆயுள்பரியந்தம் தீவாந்தரசிக்ஷையும், மற்றவர்களுக்கு 2-முதல் 7-வர்ஷம் வரையில் கடுங்காவல் சிக்ஷையும் விதித்தார்கள்.

15-தேதி.

**தென்னை ஆராய்ச்சிப் பண்ணைகள்.**—மலையாளம் ஜில்லாவில் சில இடங்களில் தென்னந்தோட்ட ஸாகுபடியைப்பற்றி ஆராய்ச்சிகள் செய்வதற்காக கவர்ன்மெண்டார் சில பண்ணைகள் ஸ்தாபிக்கப்போகிறார்களாம்.

17-தேதி.

**ஸ்த்ரீ வைத்யகாலேஜ்.**—இன்று வைஸ்ராய் லார்ட் ஹார்டிஞ்ஜ் டெல்லியில் லேடி ஹார்டிஞ்ஜ் ஸ்த்ரீ வைத்ய கலாசாலையைத் திறந்துவைத்தார். இது 1912 லேடி ஹார்டிஞ்ஜின் முயற்சியால் கட்ட ஆரம்பிக்கப்பட்டது.

19-தேதி.

**காலஞ்சென்ற மிஸ்டர் கோகலே.**—மிஸ்டர் கோபால க்ருஷ்ண கோகலே இறந்து இன்று 1-வர்ஷமாகிறது. அவர் இறந்ததினத்தைக் கொண்டாடுவதற்காக சென்னை ப்ரமுகர்கள் ஒரு மீட்டிங்கூடினார்கள். மிஸ்டர் கோகலேயின் குணாதிசயங்களைப்பற்றி சிலர் ப்ரஸங்கம் செய்தார்கள். சென்னையிலேயன்றி, நாக்பூர், பம்பாய் முதலிய இடங்களிலும் இவ்விதமீட்டிங்குகள் நடந்தன.

**மூன்றாவது மதனப்பள்ளி டிவிஷனல் கான்பரென்ஸ்**—இந்தக் கான்பரென்ஸ் இன்று வாயல்பாடில் கூடிற்று. மிஸ்டர் ராமதாஸ் பந்துலு ப்ரெஸிடெண்டாக இருந்து க்ராமப்பஞ்சாயத்துகள், க்ராமஸங்கங்கள், ரெவின்யூ ஸெட்டில்மெண்டு, ஸ்தல ஸ்வயஆட்சி ஆகிய இவைகளைப்பற்றிப்பேசினார்.

22-தேதி.

**மிஸ்டர் ஹார்டிங்க்.**—திருச்சினாப்பள்ளியில் ஜில்லா கோர்ட் ஜட்ஜாக இருந்த மிஸ்டர் எச். ஒ. டி. ஹார்டிங்க் இன்று ஒரு மகம்மதியனால் குத்திக் கொல்லப்பட்டார். அவரைக் காக்க முயன்ற டபேதாரும் காயமடைந்தான். மகம்மதியனுடைய பெயர் ஸையத் இஸ்மேல். அவனைச் சிறையில் வைத்திருக்கிறார்கள்.

24-தேதி.

**கல்கத்தாவில் வ்யாபார ம்யுஸியம்.**—இன்று வங்காளத்து கவர்னர், லார்ட் கார்மிக்கேல், கல்கத்தாவில் வ்யாபார ம்யுஸியத்தை (பொருள்காட்சி சாலையை)த் திறந்துவைத்தார். இதில் இந்திய கைத்தொழில் சரக்குகளின் மாதிரிகளும், கல்கத்தாவுக்கு இறக்குமதியாகும் அன்யச் சரக்குகளின் மாதிரிகளும் வைக்கப்பட்டிருக்கின்றன.

**பெண்கள் கல்வி.**—இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியாவில் பெண் கல்வியை அபிவ்ருத்திசெய்வது விஷயமாக மாகாண கவர்ன்மெண்டுகளுக்குக் கடிதங்கள் எழுதப்போகிறார்களாம்.

**உஷ்ணதேச வ்யாதிகளுக்கான ஹாஸ்பிடல்.**—கல்கத்தாவிலுள்ள மெடிகல் காலேஜை ஒட்டி ஸ்தாபிக்கப்படும் உஷ்ண தேச வ்யாதிகளுக்கான ஆஸ்பத்ரியின் கட்டிடத்துக்கு வங்காளத்து கவர்னர் லார்ட் கார்மிகேல் அஸ்திவாரக்கல் நாட்டினார்.

26-தேதி.

**ஜோட்பூர்.**—ராஜபுதனத்திலுள்ள ஸ்வதேச ஸமஸ்தானமாகிய ஜோட்பூரின் அரசர் இன்று முதல் ராஜ்யபாரம் வகிக்கத் தொடங்கினார். ராஜ ப்ரதிநிதி லார்ட் ஹார்டிஞ்ஜ் ஜோட்பூர் அரசரை ஸிம்மாஸன மேற்றுவித்தார்.

**வைஸ்ராய்க்கு எல். எல். டி. பட்டம்.**—பம்பாய் யூனிவர்ஸிட்டியார் வைஸ்ராய் லார்ட் ஹார்டிஞ்ஜுக்கு எல். எல். டி. பட்டம் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.


# ஜனோபகாரி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

**THE PEOPLE'S FRIEND.**

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE.'

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A. EDITOR.

புஸ்தகம் 8. Vol. 8. ராக்ஷஸ வருஷ, பங்குனிமீ, MAR—APRIL 1916. ஸஞ்சிகை 3 No. 3.


## 'The People's Friend.'

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | | | Foreign. Rs. A. P. | | |
|---|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | ... ... | 6 | 0 | 0 |
| Half-yearly ... | 2 | 0 | 0 | ... ... | 3 | 0 | 0 |
| Sample copy | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 Page | ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do | ... | 2 | 8 | 0 | do |
| ¼ do | ... | 1 | 4 | 0 | do |
| 1/10 do | ... | 1 | 0 | 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion, republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, George-town, Madras.

## ஜனோபகாரி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபகாரி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | | | அந்ய நாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 | 0 | 0 | ... | 6 | 0 | 0 |
| ஆறுமாஸத்துக்கு ... | 2 | 0 | 0 | ... | 3 | 0 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | | 5 | 0 | 0 |
| ½ ,, | ,, | ,, | 2 | 8 | 0 |
| ¼ ,, | ,, | ,, | 1 | 4 | 0 |
| 1/10 ,, | ,, | ,, | 1 | 0 | 0 |

**வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.**

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேண்டுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருபநேயர்கள் அறியவேண்டும்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# ஜனோபிமானி.

புஸ்தகம் 8.] ராக்ஷஸ௵ பங்குனிமீ. [ஸஞ்சிகை 3

## BARBED WIRE ENTANGLEMENTS.
## முள் கம்பி வேலிகள்.

தற்போது நடந்துவரும் யுத்தத்தில் இருகக்ஷியிலுமுள்ள ஸைன்யங்கள் கிடங்குகளில் இருந்துகொண்டு யுத்தம் செய்துவருகிறார்கள். கிடங்குகள் எப்படித்தோண்டுவது, அவைகளிலிருந்துகொண்டு எப்படி யுத்தம் செய்வதென்பவைகளைப்பற்றி சென்ற ஸெப்டம்பர் மாஸத்து ஜனோபிமானியில் விவரித்திருக்கிறோம். இருகக்ஷியின் கிடங்குகளிலுள்ளவர்களை எதிரிகள் வந்துதாக்குவதை தடைசெய்வதற்காக, அவர்கள் கிடங்குகளுக்கு முன்னால் முள் கம்பிகளால் வேலிபோட்டிருப்பார்கள். இந்த வேலிகள் ரொம்ப அடர்த்தியாக இருக்கும். எதிரிகள் இந்த வேலிகளைத் தாண்டித்தான் கிடங்குகளுக்குப் போகவேண்டியிருக்கும். முள்வேலிகளை அப்புறப்படுத்த ராணுவ அதிகாரிகள் சிலமுறைகளை அநுஸரிக்கிறார்கள்.

சில வர்ஷங்களுக்கு முன்னால் ராணுவ அதிகாரிகள் முள் வேலிகளை அப்புறப்படுத்தச் செய்ததென்னவென்றால், ஸோல்ஜர்களிடம் சிறு குறடுகளையாவது, கத்திரிகளையாவது கொடுத்தனுப்பி முள் கம்பிகளை நறுக்கிவிடச் செய்வது. ஸோல்ஜர்கள், தங்கள் கைகளில் முட்கள் குத்தாமலிருக்கும்படி, கைகளுக்கு உறைகள் போட்டுக்கொள்வார்கள். இவ்விதம் கம்பிகளை நறுக்கிவிட்டு, வழி யுண்டாக்குவது ரொம்ப ஆபத்தான கார்யம். ஏனென்றால் ஒன்றன்பின் ஒன்றாக பல முள்கம்பிகள் அடர்த்தியாயிருந்தால், அவைகளை நறுக்கி அப்புறப்படுத்த சிறிதுநேரம் பிடிக்கும். அதற்குள் எதிரிகளின் மெஷீன் பீரங்கிகளாவது, அல்லது நன்றாய்க் குறிபார்த்துச் சுடக்கூடிய எதிரி ஸோல்ஜர்களாவது வேலியை நறுக்கிக் கொண்டிருப்பவர்களைத் தாக்கிக் கொன்றுவிடக்கூடும். ஸாதாரணமாய்ப் போலிச்சண்டைகளில் இந்தமாதிரி வேலிகளைநறுக்கி அப்புறப்படுத்த $1\frac{1}{2}$-நிமிஷ நேரம் பிடிக்கும். இந்த நேரத்தில் 7-அடி அகலமுள்ள பாதையை செய்து விடலாம். ஆனால் இது போலிச் சண்டையில் தெரியவந்த விஷயம். வாஸ்தவமான யுத்தத்தில் நிமிஷத்துக்கு நூற்றுக் கணக்காக ரவைகளை ப்ரயோகிக்கும் எதிரிகளின் மெஷீன் பீரங்கிகளும், எதிரி ஸோல்ஜர்களும் இடைவிடாமல் தாக்கிக் கொண்டிருக்கும்போது, இவ்வளவு சீக்ரத்தில் வேலியை அப்புறப்படுத்துவது ஸாத்யமாகாதென்னலாம். மேலும் அநேக வீரர்கள் எதிரியின் குண்டுகளுக்கு இரையாகலாம். யுத்த அவஸரத்தில் குழப்பமேற்பட்டு, அவர்கள் செய்யவேண்டிய வேலையை சரிவரச் செய்ய முடியாமலும் போகலாம். ஆகவே முள் கம்பி வேலிகளை அப்புறப்படுத்த புதிதாக ஒரு உபாயம் கண்டுபிடிக்க வேண்டுமென்று பற்பல தேசத்து ராணுவ அதிகாரிகள் சில காலமாக முயற்சி செய்து வந்தார்கள். அவர்கள் கண்டுபிடித்த ஸாதனங்களில் ஒன்று என்னவென்றால், ஒரு இரும்பு அல்லது மரக்கழியின் நுனியில் இன்னொரு கழியை குறுக்காக அமைத்து, அந்த இரண்டாவது கழியில் பல இரும்பு கொக்கிகளையமைத்து, இந்த ஆயுதத்தை முள்வேலியில், எதிரியின் பக்கமாக கொக்கிகள் பூமியை நோக்கியிருக்கும்படி, போட்டு கழியைப்பிடித்து இழுப்பது. இதை இழுப்பதற்கு ஸுமார் 30-பேர்கள் வேண்டியிருக்குமாதலால், அவர்களத்தனைபேரும் சேர்ந்து இழுப்பதற்காக, முதல் கழியில் ஒரு இரும்புச் சங்கிலியைக்கட்டியிருப்பார்கள். வீரர்கள் பலபேர்கள் இந்தச் சங்கிலியைப் பிடித்து பலமாக இழுத்தால் முள் கம்பிகள் அறுந்து வந்துவிடும். இதனால் வேலியில் $11\frac{1}{2}$-அடி அகலமுள்ள இடை வெளி ஏற்படும். ஆனால் இந்த முறையிலும் நேரம் செல்லுகிறதென்று எண்ணி ராணுவ அதிகாரிகள் வேறு யுக்திகள் கண்டு பிடிக்கலானார்கள். சிலர் கம்பிகளை நறுக்குவது, அல்லது இழுத்து அறுப்பது ஆகிய இவைகளில் ச்ரமப்படுவதை விட, அந்த வேலிகளின் மேல், பலகைகள், ஏணிகள், வைக்கோல் அடைத்த மெத்தைகள் ஆகிய இவைகளைப் போட்டு, இவைகளின் மேல் நடந்து போகலாமென்று எண்ணினார்கள். இவைகளைப் பரீக்ஷார்த்தமாக உபயோகித்துப் பார்த்ததில், இவைகளுக்கும் ரொம்ப நேரம் பிடிக்கிறதென்று தெரிய வந்தது. ஆகையால் இவைகளும் உபயோகமில்லையென்று கண்டு வேறு ஒரு ஸாதனம் கண்டு பிடித்தார்கள். அதை இங்கு விவரிக்கிறோம்.

இந்த யுத்தம் ஆரம்பிப்பதற்கு சற்று முன்னால் ப்ரெஞ்ச் ராணுவ அதிகாரிகள், முள் கம்பி வேலிகளை சீக்ரம் அப்புறப் படுத்துவதற்கு, அதை வெடி மருந்தால் நாசம் செய்வதே ஸுலபமான வழியென்று நிச்சயித்து அவ்விதம் நாசமாக்குவதற்காக ஒரு ஸாதனம் கண்டு பிடிக்கலானார்கள். இந்த ஸாதனமானது மற்ற ஐரோப்பிய வல்லரசுகளால் அவைகளுக்கு யுக்தமென்று தோன்றியபடி மாற்றி உபயோகிக்கப்பட்டு வருகிறதாம். ப்ரெஞ்சுக்காரர்கள் செய்வதென்னவென்றால், $16\frac{1}{2}$-அடி நீளமும், 3-அங்குல அகலமும், ஒன்றே முக்கால் அங்குல கனமும் உள்ள ஒரு நீண்ட கழியில் மெலினைட் என்னும் வெடி மருந்தை கட்டுகிறார்கள். இந்த மருந்து நீண்ட குச்சிகளாக இருக்கும். இந்த குச்சிகளில் மூன்றை ஒரு கட்டாகக் கட்டி, அப்படிப்பட்ட கட்டுகளை ஒன்றன் பின் ஒன்றாய், ஒன்றோடொன்று பட்டுக் கொண்டிருக்கும்படி மேற்சொன்ன கழியில் கட்டிவைக்கிறார்கள்.

முள்கம்பிகள் ஒன்றன்பின்னொன்றாக அநேகமிருந்து, பின்னிக்கொண்டிருந்து ஒருகழி போதாமலிருந்தால், முதலில் சொன்ன கழியோடு இன்னொரு கழியைப் பொருத்திவைக்க வேண்டிய ஸாதனம் அதில் அமைக்கபட்டிருக்கும். முதல் கழியின் முன்பக்கத்தில், நீண்டு கூர்மையான ஒரு மரப்பாகம் அமைக்கப்பட்டிருக்கும். இதைச் சுற்றிலும் இரும்பினால் ஒரு மூடி போட்டிருக்கும். கழியை முள்கம்பி வேலியினடியில் பூமியின் மேல் ஸுலபமாய்த் தள்ளுவதற்காக இரண்டு சிறு சக்கரங்கள் அந்தக் கழியின் முனையில் அமைக்கப்பட்டிருக்கும். இதனால், இந்தக்கழியை கம்பிவேலிக்குள் மெதுவாய்த் தள்ளி வைத்து விடலாம். இந்தக் கழியிலுள்ள மெலினைட் கட்டுகளில் கடைசியாக, அதாவது கழியை வேலிக்குள் தள்ளுபவர் பக்கமாக உள்ள கட்டில் ஒரு திரி அமைக்கப்பட்டிருக்கும். இந்தத்திரியை பற்றவைத்துவிட்டு வீரர்கள் 160 அடி தூரம் ஓடிப்போய் விடுவார்கள். மெலினைட் மருந்து வெடித்து வேலியை நாசம் செய்துவிடும். மருந்துவைத்த ஒரு கழியானது 13-அடி அகலமுள்ள பாதை ஏற்படும்படி வேலியை நாசம் செய்யக்கூடுமாம்.

ரஷ்ய ராணுவ அதிகாரிகள் ப்ரெஞ்சுக்காரர்கள் உபயோகிக்கும் மருந்துக்கழியைப்போல், ஆனால் சிலமாறுபாடுகளுடன், ஒரு மருந்துக்கழி செய்தார்கள்.

ப்ரெஞ்சுக் கழியில் ஒரு குறையென்னவென்றால், அதை வேலிக்கடியில் பூமியின்மேல் தள்ளும்போது, பூமியில் ஒரு சிறிய பள்ளமிருந்தாலுங்கூட, கழியின் நுனியிலுள்ள சக்கரங்கள் பள்ளத்தில் அகப்பட்டுக்கொண்டு முன்செல்ல முடியாமல்போகும். ஏதாவது கற்களிருந்தா

னும், அவை கழியைத் தடுத்துவிடும் இப்படிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்வதற்காக, ரஷ்யர்கள் உபயோகிக்கும் கழியின் நுனியில் ஒரு நீண்ட கயிற்றை கட்டியிருக்கிறார்கள். ஏதாவது கற்கள் தடுக்கினாலும், அல்லது சக்கரங்கள் பள்ளத்தில் அகப்பட்டுக்கொண்டாலும், இந்தக் கயிற்றைப்பிடித்து கழியின் நுனியைத் தூக்கி விட்டு ஸுலபமாய் உள்ளே தள்ளலாம். ஆனால் ரஷ்யர்களுடைய முறையில் ஒரு கழியை இன்னொரு கழியோடு சேர்க்கையில் ஒரு வளையம் போட்டுக் கட்டுவதால் இந்த வளையத்தால் தடையேற்பட்டு, கழி ஸுலபமாய்ப் போகமுடியாமல் போகிறதாம்.

இங்க்லீஷார் கண்டுபிடித்திருக்கும் முறை ரொம்ப ச்லாக்யமாயிருக்கிறதென்று சொல்லப் படுகிறது. அவர்கள் இந்த முறையை பங்களூரில் செய்து பார்த்ததில் ரொம்ப த்ருப்திகரமாயிருந்ததாம். அவர்கள் கழிக்குப் பதிலாக ஒரு குழாயை உபயோகிக்கிறார்கள். முள்வேலி எவ்வளவு அகலமிருக்கிறதோ அவ்வளவு நீளமுள்ள குழாயை உபயோகிக்க வேண்டுமென்றும், குழாயை பூமியின்மேல் பட்டுக் கொண்டிருக்கும்படி தள்ளாமல், வேலி எவ்வளவு உயரமாயிருக்கிறதோ அதில் பாதி உயரத்தில் முள் கம்பிகளின்மேல் செலுத்தி மருந்தை வெடிக்கவிட்டால், வெடியின் வேகமானது நாலாபக்கங்களிலும் பரவுமென்றும், மருந்தை மேடுபள்ளமில்லாத ஒரு குழாயில் போட்டு மூடி வேலியில் தள்ளினால் அது ஸுலபமாய்ப்போகுமென்றும் அவர்கள் எண்ணி, அதற்கேற்றபடி ஒரு குழாயைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் செய்திருக்கும் குழாய்க்கு டார்ப்பிடோ என்று பெயர். இந்தக் குழாய் உருக்குத்தகட்டால் செய்யப்படும். $2\frac{1}{2}$ அங்குலம் குறுக்களவும், $6\frac{1}{2}$ அடி. நீளமும் உள்ளது. அதில் ஒரு முனை மூடப்பட்டிருக்கும். மற்ற முனை திறந்திருக்கும். இதில் வேண்டிய மருந்தைப் போடுவார்கள். ரொம்ப அகலமான வேலியை நாசஞ்செய்ய வேண்டியிருந்தால் $6\frac{1}{2}$ அடி நீளமுள்ள இந்தக் குழாய் போதாதாகையால், அதற்காக இன்னொரு குழாயைச் சேர்ப்பதற்காக முதல் குழாயின் திறந்த வாயில் இரண்டாவது குழாயின் மூடின பக்கத்தைச் சேர்த்துவைப்பதற்காகத் தக்க ஸாதனங்கள் அமைக்கப்பட்டிருக்கும். இப்படி இரண்டு குழாயைச் சேர்ப்பதில் முதல் குழாயில் உள்ள மருந்தானது இரண்டாவது குழாயின் மூடின பக்கத்தைத் தொட்டுக்கொண்டிருக்கும். இதில் இரண்டு குழாய்களிலுமுள்ள மருந்து ஒன்றோடொன்று பட்டுக்கொண்டிராவிட்டாலும் அதனால் பாதகம் ஏற்படுவதில்லையாம். இவ்விதம் எத்தனை குழாய்களை வேண்டுமென்றாலும் சேர்த்துக்கொள்ளலாம். குழாய்களைப் போர்க்களத்தில் தூக்கிக்கொண்டு போகும்போது குழாயின் திறந்த வாயை அப்படியே திறந்துவைத்திருந்தால், உள்ளே யிருக்கும் மருந்து கீழே விழுந்துவிடும். அதற்காக அந்த வாய்க்குக் கழற்றக் கூடிய ஒரு மூடிபோட்டிருக்கும். அது பிடியாகவும் உபயோகப்படும். இரண்டு மூன்று குழாய்களை ஒன்றோடொன்று சேர்க்கும்போது இந்தப் பிடியை எடுத்து விடுவார்கள். பல குழாய்களைச் சேர்த்து உபயோகிக்கும்போது கடைசிக்குழாயின் திறந்தவாயில் தான் பிடியிருக்கும். இந்தப் பிடியில் வெடிதீர்ப்பதற்கான உபாயங்களும் திரியும் அமைத்திருப்பார்கள். குழாயின் மூடின பக்கத்தில் மரத்தால் செய்ததும் அடி பருத்து உருண்டையாய் வர வர சிறுத்துக் கூர்மையா யிருக்கும்படி செதுக்கிய ஒரு துண்டைப் பொருத்தி யிருப்பார்கள். குழாய்க்கு இந்தக் கூர்மையான பாகம் இருப்பதால்எவ்வளவு அடர்த்தியான வேலியிலும்குழாயைத் தள்ளலாம். பல குழாய்களை ஒன்றுசேர்க்கும்போது, முதல் குழாயில் உள்ள மூடினபக்கத்துக்கு மாத்ரம் இந்தக் கூர்மையான மரத்துண்டை அமைப்பார்கள். கடைசிக் குழாயின்



திறந்த வாயில் மாத்ரம் பிடியிருக்கும். இப்படிப்பட்ட குழாயை வேலியின் சரிபாதி உயரத்தில் சொருகிவைத்து பிடியில் அமைத்திருக்கும் திரியில் நெருப்பு வைத்துவிட்டு வீரர்கள் ஸுமார் 300-அடிதூரம் விலகிப்போவார்கள். குழாய்களிலுள்ள மருந்தானது வெடித்து வேலியை நாசமாக்கி வழி உண்டாக்கும்.

முட்கம்பி வேலிகளை நாசஞ்செய்ய இன்னொரு முறை யென்னவென்றால், பீரங்கிகளைக்கொண்டு தாக்குவது. இந்த பீரங்கிகளில் உபயோகிக்கும் குண்டுகள் வேலியில் பட்டவுடன் வெடிக்கக் கூடியவையா யிருக்கும். ஒவ்வொரு குண்டிலும் 60-ராத்தல் மருந்து இருக்கும். குண்டின் மேல் பாகமாகிய இரும்பு ஓடானது மிகவும் மெல்லியதாக இருக்கும். குண்டு வெடித்தவுடன் உள்ளே யிருக்கும் மருந்தால் ஏற்படும் காற்றானது வேலியை அப்புறப்படுத்தும். இந்த முறையில் விசேஷ மென்னவென்றால், வேலியைத் தாக்குவது தூரத்திலுள்ள பீரங்கி யாதலால் மனிதச் சேதம் ஏற்படாது. வேலையும் சீக்ரம் ஆகிவிடும்.

## COCOANUT CULTIVATION.

BY G. SESHADRI, B. A.

## தென்னை சாகுபடி

கடல் கரை யோரத்திலும், நீர் வளம் நில வளம் பொருந்திய பெரிய தெய்வ நதிகள் பாயுமிடங்களிலும் வளர்கிற மிக ப்ரயோஜன முள்ளதான இத்தென்னையை, வெவ் வேறிடங்களில், பற்பல விதமாகப் பயிரிட்டு வருகிறார்கள்.

மானிடர்களுக்கு, பிறப்பு முதல் இறப்பு வரையில் எக்காரியத்துக்கும் இன்றியமையாத இம்மரங்கள், தக்கபடி சாகுபடி செய்யப்படுமானால், நூறு வருஷத்துக்குக் குறையாமலிருந்து, இப்பொழுது கொடுக்கிற பலனை விடப் பதின் மடங்கு, பலன் கொடுத்து, நாட்டுக்கு க்ஷேமத்தைத் தரும். நிலம் வைத்திருக்கும் மிராசுதார்களில் சிலர், க்ராமத்தில் வஸிக்க ப்ரியப்படாமல், நிலங்களைக் குத்தகைக்கு விட்டு, தென்னந் தோப்புகளில் குறைந்த வரும்படி வருகிறதென்று, லாபமாக கள்ளுக் குத்தகை செய்து, கன்றுக் குட்டிகள் சாகும்படி, பாலைக் கறந்து காப்பி சாப்பிட்டு, கவலையில்லாமல், பட்டணங்களில், ஒழிந்த வீடுகளிலும், கிளப்புக்களிலும், சீட்டு ஆடித் திரிந்து காலத்தை வீண் கழிப்பதை விட்டு விட்டு, தங்கள் நிலங்களைக் கொஞ்சம் கவலை யெடுத்து, சாகுபடி செய்தால் தகுந்த லாப மடையலாம்.

நல்ல தென்னைமரம் பயிரிடவேண்டு மென்றால், தென்னை நெற்று சாற்றுவதில் ரொம்ப கவலை எடுத்துக் கொள்ள வேண்டும். அதிக வயதுள்ள மரத்திலிருந்தும், ரொம்ப இளமரத்திலிருந்தும் நெற்றுகள் எடுக்காமல், சரியான வயதுள்ள மரத்துக் காய்களை, பழுத்த பிறகு, கயிற்றைக் கொண்டு கீழேயிறக்கி, வீட்டுக் கருகாமையில், உறமுள்ள மண் மேடுகளில் புதைத்து, ஸதா ஈர மிருக்கும்படி தண்ணீர் விட்டு வந்தால், நான்கு மாதத்தில் முளைகள் கிளம்பும். நெற்று அதிகப் பருமனாயிருந்தால் மரங்களில் காய்கள் அதிக மிராது. அதற்காக நடுத்தரமான நெற்றுக்களைத்தான் நட வேண்டும். சில தீவுகளில் தென்னை தானாக வளரும். இவைகளில், யாழ்ப் பாணத்துத் தென்னம் பிள்ளைகளை சிலர் வாங்குகிறார்கள். அப்படி வாங்கி வளர்த்தால், சீக்ரம் பலன் தருமே தவிர, அதிக நாளிருந்து காய்க்கமாட்டா.

பெயர்த்து நடுதல்.-தென்னம்பிள்ளைகளை தமிழ் நாடுகளில் தை,மாசிமாதத்திலாவது, ஆடிமாதத்திலாவது நடுவதுதான் வழக்கம். கன்றுகள் நடுவதற்குமுன், கொல்லைகளைக் கொத்திப்போட்டு, மண்மடிந்த பிறகு, இரண்டு கஜம் சதுரம், இரண்டுகஜம் ஆழமுள்ள குழிகள் தோண்டி, கள்ளி, தழை இவைகளைப் போட்டு, மழைகாலத்தில் தண்ணீர் தங்கும்படி செய்து, அழுக வைத்து

வேண்டும். பிள்ளைகளைப் பெயர்த்துவைக்கும்போது கள்ளியைப்போட்டு, உலக்கையால் இடித்து, கிளிஞ்சல்களைக் கொட்டி, உப்பும் மணலும் கலந்து வைத்தல்வேண்டும். பிள்ளைகளுக்கு இடையில் குறைந்தது 15-அடி அகலம் இருப்பது நலம். பிள்ளைகள் நடப்பட்ட இடத்திலேயே, மரமாக வளர்ந்து காய்ப்பது தமிழ்நாட்டில் ஸகஜம். தெலுங்கு தேசங்களில் இப்படிப் பிள்ளை வைத்த மூன்று வருஷத்திற்கெல்லாம் அடிமரம் காணப்படும். அப்படி அடிமரம் உண்டான பிறகு, பிள்ளைகளை ஒரு சாண்வேர் வைத்து வெட்டிவிட்டு, வேறுஇடங்களில் பெயர்த்துப் போடுவது அங்கேவழக்கம். இதனால்மரம் சீக்ரம் காய்க்கிறதில்லை. ஆனால் தமிழ் நாட்டு மரத்தைப்போல நாளுக்கு நாள், நுனிமரம் சிறுத்துப், பட்டுப்போகாமல், பருமனாயிருந்து, வெகுகாலம் வரையில் காய்த்துப் பலன்தரும்.

**தண்ணீர் பாய்ச்சுவது.**—சிலர் தென்னம்பிள்ளைகளுக்கு அடிவேரில் தான் ஜலம் விடுவது வழக்கம். இதனால் பிள்ளைகளைச் சுற்றிலும் சிறுசெடிகளும் பூண்டுகளும் பயிராகி, அதன் வேரைப் பரவ விடாமல் செய்து, சிறு பூச்சிகளுக்கும் வண்டுகளுக்கும், கரையானுக்கும் இடங்கொடுத்து பிள்ளைகளைக் கெடுத்துவிடுகின்றன. அப்படிக் இல்லாமல் தண்ணீரைத் தலையில் கொட்டினால் வெயிலில் வறண்டு போன இலைகளுக்கு ஈரங்கொடுத்து ஜலத்தை எல்லா வேர்களுக்கும் படும்படி சிதறசெய்யும். கோடை காலங்களில் குடிப்பதற்குக் கூட ஜலம் அகப்படாதபோது மரங்களுக்குத் தண்ணீர் விடுவது கஷ்டமாகையால், அதற்கு சோம்பி அநேகர் மரம் வைக்க ப்ரியப்படுகிறதில்லை. வெயில் காலத்தில் பிள்ளைகளுக்கு காலையில் தண்ணீர் வார்த்தால், வெயிலில் தண்ணீர் வெந்நீராய் மாறி கெடுதல் விளைக்கு மாதலால், மாலையிலேயேதான் வார்க்கவேண்டும். ஸூர்ய வெப்பத்தினால் ஜலம் ஆவியாகாமலிருப்பதற்காக தென்னம் பிள்ளைகளைச் சுற்றிச் சிறுகற்களை மண்ணோடு கலந்து போடுவோமானால், தண்ணீர் இதனடியிலிருந்து, ஸதா ஈரத்தைக் காத்துக்கொண்டிருக்கும். இல்லாவிடில் மண் சட்டிகளைக்கொணர்ந்து அடியில் பற்பல சிறுத்வாரங்களிட்டு, தென்னம்பிள்ளைகளைச் சுற்றி, இரண்டு மூன்று புதைத்துவைத்து, கோடைகாலத்தில், இச்சட்டிகளில் தண்ணீரை ஊற்றினால், அடிக்கடி தண்ணீர் ச்ரமப்பட்டு பாய்ச்சவேண்டுவதில்லை. சட்டியிலிருக்கிற ஜலம் கொஞ்சம் கொஞ்சமாக வேர்களுக்குச் செல்லும். பிள்ளைகளும் காய்ந்துபோகா. வேர்களும் சட்டியைச் சுற்றியே பரவி நிற்கும். செடிகளும் பூண்டுகளும் முளையா.

**உரம்.**—தென்னைமரங்கள் மிகுதியாய் வளர்ந்து பலனைத் தருகிற மலையாளதேசத்திலே, மீன்களை பொடிப்பொடியாய் நறுக்கி உரம்போடுவது வழக்கம். இதனால் மரங்கள் செழுமையாய் வளர்ந்து நன்றாய் காய்க்கும். ஆனால் இக்கொழுமையான உரம் எப்போதும் போடவேண்டிவரும். அப்படிக்கின்றி ஒருவருஷம்போட்டு மறுவருஷம் நிறுத்திவிட்டால், மரங்கள் ஏங்கி பலனைத் தருவதில்லையென்பது விவஸாய வித்வான்களின் கொள்கை. தமிழ் நாட்டிலே சிலபாகங்களில் தென்னந்தோப்புகளில் காய் தான்யங்களை சாகுபடி செய்து, ஏற்கனவேயுள்ள உரத்தையும் எடுத்து விடுகிறார்கள். ஒவ்வொரு வருஷமும் தென்னந்தோப்புகளை உழுது, கொத்தி பழைய வேர்களை அறுத்துவிடவேண்டும். கடல்கரையோரங்களிலுள்ள மணல்பாங்கான இடங்களில் மரத்தைச் சுற்றிலுமுள்ள வேர்கள் மூடும்படி, உரமான களிமண்ணைக் கொட்டினால் நலம். தவிர ஆடுமாடுகளை வெயில் காலத்தில் உயர்ந்த தோப்புகளில் கட்டலாம். நல்லகாற்று வீசும். மாடுகளை இடம் மாற்றிக் கட்டிவந்தால், உண்ணி முதலிய ஜந்துக்களின் ஹிம்ஸை குறையும். உரம் விழும். தினந்தோறும் காலையில் காகம் முதலிய பறவைகள் மாடுகள் இருக்குமிடம் வந்து, அவை



களின் மேலுள்ள உண்ணி முதலிய பூச்சிகளையும் வேறு பூச்சிப் புழுக்களையும் தின்பதோடு, தென்னையைக் கெடுக்கும் பூச்சிகளையும் விழுங்கும். ஆனால் சாணக்குவியல்கள் அருகாமையிலிருப்பது அவஸ்தைக்கிடமாகும்.

தென்னையை அழிக்கிற ப்ராணிகள் பலஉள. ரைனொஸரஸ் பீட்டில் (Rhinoceros Beetle) என்று நெற்றியில் கொம்புள்ள ஒரு கருவண்டு உண்டு. இத்தென்னம் வண்டு மட்டைகளையும், இலைகளையும், குருத்துகளையும், வெட்டித்தின்றிருப்பதை பார்க்கலாம். இவ்வண்டுகள் மட்டைகளில் பொந்திட்டுக்கொண்டிருக்கும். ஒருஅடி நீளமுள்ளபெரிய ஊசிகளின் முனையை அம்புபோல் வளைத்து, கூராக்கி, மட்டைகளில் செய்திருக்கும் துவாரங்களில் குத்தினால், இவ்வண்டுகள் வெளியேவந்துவிடும். கொன்றுவிடலாம். இல்லாவிடில், நீளமாக மூங்கில் குழாய் செய்து, காய்ந்த வாழையிலைகளடைத்து, தீயிட்டு, இம்மட்டையின் துவாரங்களில்வைத்து, புகையை ஊதினால், வண்டுகள் வெளியேவந்துவிடும். இவ்வண்டுகள் சாணக்குவியல்களிலும் அழுகின இலைகளிலும் முட்டைவைத்திருக்கும். அதற்காக தோப்புக்கருகாமையில், சாணக் குவியல்களைப் போடாமல், எடுத்துவிடுவதோடு மரத்திலுள்ள பழைய பாளைகளையும் மட்டைகளையும் களைந்துவிட்டு அங்குள்ள அழுகின இலைகளையும் எடுத்துவிடவேண்டும். இம்முட்டைகளைத் தொலைக்கவேண்டி இலைகளை தோப்பில் ஒரு குழியில் அழுகவைத்தால், அதில் வண்டுகள் முட்டைகளையிடும். அவைகளைப் பிறகு எடுத்துக் கொன்றுவிடலாம். சிலர், செங்கரையான் தென்னமரத்தினுள்ளாகக் குடைந்துசென்று, மரத்தைக் கெடுத்துவிடுவதாக எண்ணி, அதைத் தடுப்பதற்காக, தென்னைமரங்களில் பெரிய த்வாரங்கள் செய்வதுண்டு. ஆனால் அப்படி மரத்தைக் கெடுப்பது செங்கரையானல்லவென்றும், த்வாரமிடுவது மரத்துக்குத் தீமை விளைவிக்குமென்றும், அப்படி த்வாரம் செய்வதை நிறுத்திவிடவேண்டுமென்றும் மிஸ்டர் பார்பர் என்னும் விவஸாய நிபுணர் அபிப்ராயப்படுகிறார்.

உண்மையாக மரத்தைக் கெடுப்பது யானைத் துதிக்கைபோன்ற மூக்குள்ள ‘ரெட் வீவில்’ (Red weevil) என்னும் சிறிய செவ்வண்டுதான். இது தென்னம்வண்டுசெய்த த்வாரங்களிலாவது, கள்ளுக்கட்டுவதினாலுண்டாகும் காயங்களிலாவது முட்டையிடும். இம்முட்டைகளிலிருந்து உண்டாகும் புழுக்கள் மரத்தின் குருத்துக்கு இவ்வழியாகக் குடைந்துசென்று மரத்தை பட்டுப்போகச் செய்கின்றன. தென்னம் வண்டு செய்த த்வாரத்தில், செவ்வண்டு முட்டையிட்டும், செவ்வண்டு சென்றவிடத்தில் தென்னம் வண்டு பின்தொடர்ந்தும் ஒன்றை ஒன்று உதவி செய்கிறது. ஒருதடவை செவ்வண்டு முட்டையிட்டுவிட்டால் அதன் உபத்ரவத்தை ஒழிப்பது ப்ரயாஸம்.

ஆதலால் தென்னம்வண்டை முன்சொல்லியபடி எடுத்துவிட்டு, அவைகள் கடித்த இடத்தில், கீலையும் மணலையும் கலந்து அடைத்துவிடலாம். அப்படிச்செய்தால் வண்டுகள் கடிக்கமாட்டா. உப்பையும், மணலையும் கலந்து மட்டைகளினிடையில் தெளித்தால் வண்டுகள்வரா. செவ்வண்டால் பட்ட மரங்களை வெட்டி எரித்துவிடவேண்டும்.

அணில்களும் மரநாய்களும் குரும்பைகளைக் கடித்துவிடுகின்றன. அணில் கூடுகளை எடுத்துவிட்டு அணில்களையும் அடித்துவிடலாம். மரநாய்கள் இராக்காலங்களில், மரத்திலேறி காய்களைக் குடைந்துவிடுமாகையால், அவைகளை எலிபிடிக்கிற யந்த்ரத்தால் பிடித்துவிடலாம்.

இவை யெல்லாம் விட மிகத் துன்பம் செய்வது வேர்க்கரையான். இது எல்லா மரத்தையும் கெடுத்துவிடும். தென்னம்பிள்ளைகள் வைக்கும்போதே கிளிஞ்சல்களைக் கொட்டுவது இப்பூச்சிகளைத் தடுக்கத்தான். இவைகள் சிறு பிள்ளைகளைத் தின்றுவிடும். பெரிய மரத்தைப் பட்டுப்

போகச்செய்யும். இதற்காக சில பரீக்ஷைகள் செய்ததில் கண்டதைக் கூறுவோம். தென்னம்பிள்ளைகளையும் வேறு எக்கன்றுகளையும், வைக்கும்போது, சுற்றி சோற்றுக்கத்தாழையை வைத்துப் பயிராக்கினால், கரையான் வருவதேயில்லை. பெரிய மரங்களின் மேல்பட்டைகளைத் தின்னுமலிருக்க அடி மரத்தில் கொஞ்சதூரத்துக்குக் கீல், அல்லது தார் (tar) தடவிவிட்டால் கரையான் வராது.

மரங்கள் அநேக இடங்களில் வேறொரு காரணமில்லாமல் குருத்து முதல் ஒவ்வொரு மட்டையாய் பழுத்துப் பட்டுப்போவதை நம் நாட்டில் கரையான் வெட்டுவதென்று சொல்லுவது வழக்கம். பட்ட மரத்தின் மட்டைகளையும் இலைகளையும் பார்த்தால் பழுப்பு நிறமுள்ள புள்ளிகளிருக்கும். ஏராளமான வண்டுகளும் குடிகொண்டு, ஒருவித துற்நாற்றமும் வீசும். ஆனால் வண்டுகளெல்லாம் மரத்தின் சிகரம் அழுகின பிறகு தான் வருகின்றன. இதற்குக் காரணம் வெகு நுட்பமான கண்ணுக்குத்தெரியாத பூச்சிகள்தான். மட்டையிலுள்ள புள்ளிகளை உற்றுப் பார்த்தால், சிலந்தி வலைபோல வெளுப்பான வலை சில புள்ளிகளில் தெரியும். இதுதான் கெடுதல் விளைவிக்கிற பூச்சி. இப்புள்ளிகளிலிருந்து மட்டைகளின் வழியாக அநேகாயிரம் பூச்சிகள் உட்சென்று தீங்குவிளைவிக்கும். இப்பூச்சிகள் காற்றினாலும், சாணார்கள் கத்தியினாலும் சில ப்ராணிகளாலும் ஏனைய மரங்களுக்குப் பரவிவிடும்.

இதற்கு நிவர்த்தி புள்ளி கண்டவுடனே மட்டைகளையும் இலைகளையும் வெட்டி எரித்துவிடுவதே. ஏராளமான புள்ளிகளுமிருந்து மரமும் காயுந்தருணமாயிருந்தால் முழுமையும் எரித்துவிடுவது நலம். அதனால் வேறு மரங்களைக் காப்பாற்றலாம். இந்தவ்யாதியால் பீடித்த மரங்களையும் மட்டைகளையும் விறகுக்காக வெட்டிக் காயப்போடாமல் எல்லாவற்றையும் உடனே தீயிட்டு நாசஞ்செய்யவேண்டும்.

ஜி. சேஷாத்ரி.

## RATS.

BY R. P. SRINIVASA AIYAR.

## எலிகள்.

(பிப்ரவரி௴ 69-ம் பக்கத் தொடர்ச்சி.)

**இன வ்ருத்தி.**—எலிகளுக்குத் தங்கள் இனத்தை வ்ருத்திசெய்யும் சக்தி அபரிமிதமாயிருக்கிறது. ஸாதாரணமாய் எட்டுவாரம் வயதானவுடன் எலி குட்டிபோட ஆரம்பிக்கிறது. மூன்று நான்கு வர்ஷத்துக்கொருதரம் மிகவும் பூஞ்சையான ஒரு குழந்தையைப்பெற்று அதையும் வளர்ப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் மனித ஜாதியைப்போல் எலிகள் இருப்பதில்லை. வர்ஷம் ஒன்றுக்கு மூன்றுதரம் எலி குட்டிபோடும். ஒவ்வொரு தடவையும் பன்னிரண்டு முதல் பதினாறு வரையில் குட்டிகள் பிறக்கும்.

ஒரு வர்ஷத்தின் ஆரம்பத்தில் ஒரு ஜோடி எலிகளிலிருந்து உண்டாகும் ஸந்ததிகள் மேற்சொன்ன கணக்கு ப்ரகாரம் இரண்டு வருஷத்தில் எவ்வளவு ஆகுமென்று கொஞ்சம் கஷ்டப்பட்டுக் கணக்கிட்டுப் பாருங்கள். சுமார் ஐந்து கோடிக்கு மேலாகின்றனவென்று கண்டு கொள்ளுவீர்கள். ஒரு ஜோடி எலிகளுக்கு இரண்டு வருஷத்தில் ஐந்துகோடி ஸந்ததிகளுண்டானால், இப்பொழுது உலகத்திலிருக்கும் எலிகளின் குழந்தைகளெல்லாம் சாகாமல் இன்னம் இரண்டு வருஷகாலம் வளர்ந்துகொண்டிருந்தால், உலகத்தில் எவ்வளவு எலிகளுண்டாகுமென்று நினைக்கவே நமக்கு பயமாயிருக்கிறது. அப்பொழுது உலகத்தில் வேறு ஜந்துக்கள் யாதொன்றும் குடியிருப்பதற்குக்கூட இடம் கிடைக்காமல் போய்விடும்.

**அழிவு.**—இருந்தாலும் நாம் பயப்படவேண்டிய அவச்யமில்லை. ஸர்வவல்லமையுள்ள ச்ருஷ்டி கர்த்தாவே எலியின் உபத்ரவம் உலகத்தில் மிதமாயிருக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார். எலிகளுக்கு ஏராளமாய் சத்ருக்கள் இருக்கிறார்கள்.



மனிதர்கள், நாய், கீரி, கழுகு, பாம்பு முதலிய ஜந்துக்களெல்லாம் எலியின் நாசத்தைக் கோரி வெகுவேலை செய்கிறார்கள்.

எலிகளுக்கு அநேகமாய் எல்லா வஸ்துக்களும் ஆகாரமாவது போல எலிகளும் அநேகமாய் எல்லா ப்ராணிகளுக்கும் ஆகாரமாகின்றன. புலி, சிங்கம் முதலிய பெரிய ப்ராணிகள் எலியின் மாம்ஸத்தை அலக்ஷ்யமாய் எண்ணி அவைகளைத் தின்கிறதில்லை. மற்ற சிறிய ஜந்துக்களில் மாம்ஸபக்ஷணிகளாயிருப்பவைகள் எல்லாம் எலியை வெகு ருசியுடன் தின்கின்றன. பெரிய ப்ராணிகளைவிட சிறிய ப்ராணிகளே உலகத்தில் ஸங்க்யை அதிகமாயிருக்கிறபடியால், சிறிய ஜந்துக்கள் எலிகளுக்கு செய்யும் நாசத்தைப்போல் பெரியவைகள் செய்ய முடியாது.

எலிகளுக்கு எலிகளே சத்ருக்கள் என்று முந்தியே சொல்லியிருக்கிறோம். ஒரு எலிக்குத் தேகத்தில் காயம்பட்டால், அந்த எலியை உடனே மற்ற எலிகள் தின்றுவிடும். மனிதர்களைப்போலவே எலிகளுக்கும் பலமில்லாவிட்டால் ஜயமில்லை. பெண்ணெலிகளைவிட ஆணெலிகளுக்கே பல மதிகமாயிருக்கிறபடியால், ஒரு பெரிய ஆணெலியைக் கண்டால் மற்ற எலிகளெல்லாவற்றுக்கும் நடுக்கந்தான்.

எலியின் உற்பத்தி அதிகமாயிருக்கும்படி ஏற்பாடு செய்திருக்கும் கடவுளே, அவ்வர்க்கத்தின் அழிவுக்காக பெண்ணெலிகளை விட ஆணெலிகள் அதிகமாயிருக்கும்படி ச்ருஷ்டித்திருக்கிறார். இதனாலேயே உலகத்தில் எலியின் ஸங்க்யை அதிகமாகாமலிருக்கிறது.

சில ஸமயங்களில் தாயெலியே தன் குஞ்சுகளைத்தின்று விடுகிறது. அவைகளுக்கு அபாயமுண்டாகுமென்று தோன்றினாலும், அல்லது அவைகளுக்கு ஆகாரம் ஸம்பாதித்துக் கொடுக்க முடியாமல் போனாலும், அவைகளைத் தனக்கு ஆகாரமாக்கிக் கொள்ளுகிறது. மேற் கூறிய இரண்டு காரணங்களினாலும் உலகத்திலுண்டாகும் எலிகளில் பாதிக்கு மேல் மற்ற எலிகளாலேயே சாகின்றன.

மனிதர்கள் எலிகளை அழிக்க விரும்பினால் அவர்கள் பொறி, விஷம், நாய், கீறி முதலிய ஜந்துக்கள் ஆகிய இவைகளை உபயோகப்படுத்துகிறார்கள். விஷங்களுக்கு பாஸ்பரஸ் (phosphorus,) பாஷாணம் (arsenic,) ரஸ பாஷாணம் (corrosive sublimate,) எட்டிக்கொட்டை ஸத்து (strychnine) முதலிய விஷ வஸ்துக்களை உபயோகப்படுத்துவது வழக்கம். ஆனால் நாம் குடியிருக்கும் வீடுகளில் இவ்விஷ வஸ்துக்களை உபயோகப் படுத்துவது அவ்வளவு ச்லாக்யமல்ல. ஏனென்றால் எலி பாஷாணத்தைத் தின்று கொஞ்சம் தலை மயக்கங் கொண்டவுடன், இயற்கையாய் எல்லா ப்ராணிகளுக்கு முள்ள வழக்கம் போல், தனியாய் இருப்பதற்காக தன் வளைக்குள் செல்லுகிறது. அங்கே அது இறந்து போனால், அதை நாம் கண்டு பிடிக்க முடியாது. நம் வீடு முழுவதும் துர் நாற்றத்தை யுண்டாக்கி நமக்கும் வ்யாதியை யுண்டாக்கக்கூடும். இறந்த எலியை மற்ற எலிகள் கண்டு தின்றாலும் அவைகளும் இறந்து விடுகின்றன. இதனால் நம் தேக ஸௌக்யத்துக்குக் கெடுதலுண்டாகக் கூடும்.

எலிகள் ஏராளமாய் அபிவ்ருத்தி யாகிறபடியால் ஒன்று அல்லது இரண்டு எலிகளை மாத்ரம் பிடித்துக் கொல்லுவதினால் யாதொரு பயனுமுண்டாகாது. எலி வர்க்கத்தை அழிப்பதற்கு நம்மைத் தேடாமலே கடவுள் வேறு ஏற்பாடு செய்திருக்கிறபடியால் நாம் கூடியமட்டில் நம் வீட்டுக்குள் அவைகளுடைய உபத்ரவமில்லாமலிருக்கும்படி செய்துகொண்டால் போதும். இப்படி செய்து கொள்ளுவதற்கு மிகவும் லகுவான வழி யொன்றுண்டு. அதாவது நம் பிக் கூட்டினால் உயிருடன் இரண்டு மூன்று எலிகளைப் பிடித்து அவைகளின் மேல் தார், அற்

பூரத்தைலம் முதலிய அதிக வாஸனையுள்ள த்ரவ வஸ்து ஒன்றைத் தடவி அவைகளை வளைக்குள் திரும்பிப் போகும்படி விட்டு விட வேண்டியது. வளை முழுவதும் வாஸனை பரவினவுடன் அதைப் பொறுக்க மாட்டாமல் எல்லா எலிகளும் ஒரே கூட்டமாய் அவ்வீட்டை விட்டு ஓடிப்போய் விடுகின்றன.

கம்பிக் கூட்டைக் கொண்டு ஆரம்பத்தில் இரண்டு மூன்று நாளைக்கு எலிகளைப் பிடிக்கலாம். ஆனால் எலிகள் மிகவும் புத்தி கூர்மையுள்ளவைகளாகையால், சீக்ரத்தில் அக்கூட்டின் குணத்தை யறிந்து கொள்ளுகின்றன. பிறகு அதற்குள் எலிகள் ஒன்றும் விழுகிறதில்லை. அதுமாத்ரமல்ல. அயல் வீடுகளிலுள்ள எலிகளும் இங்கே வந்து கூட்டினருகில் விளையாடிக் கொண்டிருக்கின்றன. ஆனால் ஒன்றும் கூட்டுக்குள் அகப்பட்டுக் கொள்ளுகிறதில்லை. ஆகையால் இவ்வழியினால் நமக்கு உபத்ரவமுண்டாகிறதே யொழிய ஸௌகர்ய முண்டாகிறதில்லை. கள்ளக் கதவுள்ள ஒரு பெட்டியினால், நாம் ஏராளமாய் எலிகளை ஒரே நாளில் பிடித்துக் கொள்ளலாம். ஸாதாரணமான ஒரு கள்ளிப் பெட்டியை எடுத்து அதன் வாயைவிட இரண்டு பங்கு நீளமுள்ளதாகவும் அதைவிட கொஞ்சம் குறைவான அகலமுடையதாகவும் ஒரு மூடியை ஸம்பாதித்துக்கொள்ளவேண்டியது. மூடிப் பலகையின் மத்தியில் கீலைப்பூட்டி பெட்டிக்கு மூடி செய்யவேண்டியது. இதனால் மூடிப் பலகையின் ஒரு பாதி பெட்டிக்கு மூடியாயிருக்கிறது. மற்றொரு பாதி பெட்டிக்கு வெளியே நீண்டுகொண்டிருக்கும். பெட்டிக்கு மேலிருக்கும் பாகத்தை கொஞ்சம் அழுத்தினால் மூடி பெட்டிக்குள்ளே, இறங்கும். முதலிரண்டு மூன்று நாளைக்கு பெட்டி மூடி அசையாமலிருக்கும்படி ஆணியை அடித்துவிட்டு பெட்டியின்மேலுள்ள பாகத்தில் கொஞ்சம் பக்ஷணத்தை வைத்து கட்டிவிட்டு பெட்டிக்கு வெளியேயுள்ள பாகத்தில் அதற்கு ஸம இடையுள்ள ஒரு கல்லை வைக்கவேண்டியது. இரண்டு மூன்று நாளைக்கு எலிகள் தாராளமாய் வந்து பக்ஷணத்தைத் தின்றுவிட்டுப் போகும் இதனால் அவைகளுக்கு பெட்டியின்மேல் கொஞ்சமும் பயமில்லாமல் வரும் வழக்க முண்டாகும். மறுநாள் பெட்டியின் மூடியைப் பிடித்துக் கொண்டிருக்கும் ஆணியைப் பிடுங்கிவிட்டு மேற்கூறிய ப்ரகாரம் பெட்டியின்மேலுள்ள மூடியின் பாகத்தில் பக்ஷணத்தையும் மற்றபாகத்தில் கல்லையும் கட்டிவைத்து மூடியை ஸமநிலையில் நிற்கும்படி செய்யவேண்டியது.

எலி பக்ஷணத்தைத் தின்பதற்காக மூடியின் மேல் வந்தவுடன், அதன் கனம் தாங்க மாட்டாமல் மூடி கீழே சாய்ந்து எலி பெட்டிக்குள் விழும். உடனே கல்லின் கனத்தினால் மூடி பழைய ஸ்திதிக்கு வந்துவிடும்.

இன்னொரு எலி அங்கே வந்தவுடன் அதுவும் பெட்டிக்குள் விழும். இம்மாதிரி ஒவ்வொரு எலியும் பக்ஷணத்தை ருசி பார்க்கக்கூட முடியாமல் பெட்டிக்குள் விழுந்துவிடும்.

பெட்டிக்குள் கொஞ்சம் தண்ணீரை வைத்திருந்தால் கீழே விழுந்த எலி நீந்தி சத்தம்செய்து கொண்டிருக்கும். பெட்டிக்குள் ளுண்டாகும் சத்தத்துக்குக் காரணமென்னவென்று அறிந்து கொள்ள மற்ற எலிகளும் மூடிப் பலகையின் மேல் வந்து பெட்டிக்குள் விழுந்துவிடும். இவ்விதமாய் இருபது முப்பது எலிகளை ஒரே இரவில் பிடித்துக்கொள்ளலாம்.

**அவயவங்கள்.**—எலியின் அவயவங்களுக்குள் வாலும் பல்லும் மிகவும் விசேஷமானவை. அவற்றுள் பற்கள் எலியின் ஆயுள் முழுவதும் வளர்ந்து கொண்டே யிருக்கின்றன. அவைகள் ஆப்பைப் போன்ற உருவத்துடன் மிகவும் கூர்மையாயிருக்கின்றன. அவற்றின் உள்பக்கம் கொஞ்சம் மெதுவான தந்தத்தைப் போலிருக்கிறது. வெளிப்பக்கம் மிகவும் கெட்டியாய் கண்ணாடியைப் போலிருக்கிறது. அதன் அடிப் பக்கம் கூடாயிருக்கிறது. இதற்குள் பிசினைப் போன்ற ஒரு வஸ்து விருக்கிறது இவ்வஸ்துவுடன் தாது வர்க்க வஸ்துக்கள் சேர்ந்து தான் கெட்டியான பல்லுண்டாகிறது.



மேல் வாயிலும் கீழ் வாயிலும் இரண்டிரண்டு பற்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பல்லின் மத்தியும் தன் னெதிரிலிருக்கும் பல்லின் மத்தியின்மேலுறைத்து கொஞ்சம் கொஞ்சமாய் தேய்ந்துபோகிறது. இப்படிப் பல்லின் மெதுவான பாகம் தேயத்தேய அடியிலிருந்து அது கொஞ்சம் கொஞ்சமாய் வளருகிறது. இதனால் பல்லின் அளவு எப்பொழுதும் ஒரேமாதிரி யிருக்கிறது.

ஒரு எலிக்கு மேல்வாயிலாவது கீழ்வாயிலாவது ஒருபல் மாத்ரம் விழுந்துவிட்டால், அதற்கு எதிரே யிருக்கும் பல்லைத் தேய்ப்பதற்கு ஒன்றுமில்லாமையால், அது வளர்ந்துகொண்டே யிருக்கிறது. மேல்வாய்ப்பல் வளர்ந்தால் கோரைப் பல்லாய்க் கீழுதட்டுக்கு வெளியே இறங்கும். கீழ்ப்பல் வளர ஆரம்பித்தால் இது மேல்வாய்க்கு நேராய் ஏறி வாயை மூடுவதுகூட கஷ்டமாக்கிவிடும். சில ஸமயங்களில் இது வெகுகாலம் வளர்ந்து ஒரே வட்டமாக ஆவதுமுண்டு. இவ்விஷயங்களினால் எலிக்கு மிகவும் கஷ்டமுண்டாவதுண்டு.

காதுகள் கேட்கும் சக்தியில் மிகவும் திறமையுடையன. எலிகளுக்கு சத்ருக்கள் ஏராளமாயிருக்கிறபடியால், அவைகள் எப்பொழுதும் வெகு ஜாக்ரதையா யிருக்கவேண்டியது அவசியம். எலிகளை ஸாதாரணமாய் தூங்கிக்கொண்டிருக்கும்போது பார்ப்பது மிகவும் அரிது. அப்படி தூங்கும்போது உடல் முழுவதையும் ஒரு பந்துபோல் சுருட்டி அதன்மேல் வாலைச் சுற்றிக்கொள்ளும். அப்பொழுது ஒரு பந்தின் மேல் இரு காதுகளைச் சொருகிவைத்திருப்பது போல் தோன்றும். அப்போது வெகு நுட்பமான சத்தமுண்டானாலும் உடனே எலி விழித்துக்கொண்டு அபாயத்தினின்று தப்பித்துக் கொள்ளும்படி ஏற்பாடு செய்துகொள்ளும்.

வால் அநேக சிறிய எலும்புகளை யுடையது. இவைகள் ஏராளமான தசைநார்களினால் ஒன்றோடொன்று கட்டப்பட்டிருக்கின்றன. எலி மெல்லியதான குச்சி அல்லது பலகையின்மேல் ஓடும்போது வால் மிகவும் உபயோகப்படுகிறது. ஒரு செப்படி வித்தைக்காரன் கயிற்றின்மேல் நடக்கும்போது கையில் மூங்கில் ஒன்றை வைத்துக்கொண்டு நடக்கிறானல்லவா? அவன் ஸமயத்துக்குத் தக்கபடி இங்குமங்கும் மூங்கிலை ஆட்டி தன் நிலையை நிறுத்திக்கொள்ளுகிறான். அதே மாதிரி எலி ஒரு மெல்லிய மூங்கில் கொடியின் மேல் ஓடும்போது, வாலை இங்குமங்கும் ஆட்டி தன் தேகத்தை நிலைநிறுத்திக்கொள்ளுகிறது. இதேமாதிரி குரங்குகளும் வாலை ஆட்டிக் கொண்டு மெல்லிய மரக்கிளைகளின்மேல் ஓடுகின்றன. மரக்கிளைகளில் மிகவும் அபாயமான மெல்லிய இடங்களில் ஓடவேண்டியிருந்தால், குரங்கைப்போலவே எலியும் வாலினால் கிளையைச் சுற்றிக்கொண்டு வெகு ஜாக்ரதையாய் ஓடும்.

கீழேயிருந்து மேலே தாவவேண்டியிருந்தால், எலி தன் வாலை ஒரு வில்லைப்போல் வளைத்து திடீரென்று அதை நிமிர்த்தி அதன் வேகத்தினால் மேலேகிளம்பும்.

**குணங்கள்.**—எலிகளுக்கு அநேக சத்ருக்களிருக்கிறபடியால், அவைகள் எப்பொழுதும் வெகு ஜாக்ரதையா யிருக்கின்றன. சில ஸமயங்களில் அவைகள் மனிதர்களையுங் கூட எதிர்க்கும். ஆனால் அவைகள் அப்படி செய்வது மிகவும் பயத்தினா லிருக்குமேயொழிய, வேறு காரணத்தாலல்ல. எங்கே ஆகாரம் கிடைக்குமென்பது அவைகளுக்கு எப்படியோ வெகு சீக்ரத்தில் தெரிந்து விடுகிறது. அவைகளை நாம் பிடித்தால் பிடித்த உடனே வெகு கோபமும் மூர்க்கத்தனமு முடையனவாக ஆகிவிடுகின்றன. ஆனால் சில மணிநேரம் கூட்டுக்குள் அடைத்து வைத்திருந்தால் அவைகளின் குணம் கொஞ்சம்

படிமானத்துக்கு வருகிறது. நம்முடைய பொழுது போக்குக்காக அவைகளை நாம்பிடித்துப் பழக்கலாம். அவைகளுக்குத் தண்ணீரில்லாமல் அதிகநேரம் இருக்க முடியாதாகையால் அவைகள் கொஞ்சநேரம் கூட்டுக்குள் ளடைபட்டிருந்த பிறகு ஒரு கரண்டியில் கொஞ்சம் தண்ணீரை எடுத்து கூட்டுக்குள் செலுத்தினால் அவைகளின் மூர்க்க குணம் கொஞ்சம் குறையும். பிறகு கொஞ்சம் கொஞ்சமாய் அவைகளிடத்தில் பக்ஷம்காட்டி நாம் பழக்கி நம்மோடு விளையாடும்படிசெய்து கொள்ளலாம். அவைகளின் தேகம் மிகவும் மிருதுவானதாகையால்நாம் அவைகளைக் கொஞ்சம் அழுத்திப்பிடித்தால் உடனே இறந்து போய்விடும். ஆகையால் அவைகளை வளர்க்க வேண்டுமென்று எண்ணமிருந்தால், அவைகளின் மேல் வெகு பக்ஷமாயிருக்கவேண்டும்.

பிளேக் என்னும் பெரு வ்யாதி ஓரிடத்தில் புதிதாய் வருவதாயிருந்தால் அதைப்பற்றி எலி மூந்தியே அறிக்கை கொடுக்கிறது. முதலில் எலிகளுக்குத்தான் ப்ளேக்குண்டாகிறது. பிறகு தான் மனிதர்களுக்குண்டாகிறது.

ஒரு வீட்டில் அகாரணமாய் எலிகள் அகால மரணமடைந்து கீழே விழுந்தால் அவ்வீட்டில் வெகு சீக்ரம் ப்ளேக் வருவது நிச்சயம். உடனே அவ்வீட்டில் குடி யிருப்பவர்கள் அவ்வீட்டை விட்டு வெளியேறி விட்டால், அவர்கள் அந்த வ்யாதியினின்றும் தப்பித்துக்கொள்ள வழியுண்டு. எலிகள் விழுவதை அலக்ஷ்யம்செய்து கவனிக்காமலிருந்தால், வீட்டுக்காரர்கள் சீக்ரத்தில் பெரு வ்யாதியினால் இறக்க நேரிடும்.

ஆர். பி. ஸ்ரீநிவாஸய்யர்.

## HUMANITY IN INDIAN WARFARE.

## இந்திய யுத்தங்களில் கருணை.

பூர்வீகத்தில் நமது தேசத்தில் அரசர்கள் ஒருவரோடொருவர் யுத்தம் செய்தபோது சில ஒழுங்குகளை அனுஸரித்து வந்தார்கள் என்று தெரிகிறது. அந்த ஒழுங்குகளை மீறி யுத்தம் செய்வது அதர்ம யுத்தமாகும். பாரத யுத்தம் ஆரம்பிக்குமுன் கௌரவ ஸைன்யங்களின் தலைவராயிருந்த பீஷ்மர் இன்னவிதமாய் யுத்தம் செய்யவேண்டுமென்பதைப்பற்றி சில ப்ரேரணைகளை யுதிஷ்டிரருக்கு தெரிவிக்கும்படி அவரிடம் தூதர்களை அனுப்பினார். அந்த ப்ரேரணைகளாவன.

(1) இருகக்ஷியாரும் மோசக்கருத்தான காரியங்களையாவது, தந்தரங்களையாவது கைக்கொள்ளாமல் யுத்தம் செய்ய வேண்டும்.

(2) போரிலிருந்து ஓடுபவன், ஆயுதங்களைக் கீழே போட்டு விடுகிறவன், பேரிகை யடிப்பவன், ஸாரதி ஆகிய இவர்களைத் தாக்கிக்கொல்லக் கூடாது.

(3) ஒரு வீரனும், தனது எதிரிக்கு எச்சரிக்கை செய்யாமல் அந்த எதிரியோடு யுத்தம் செய்யக்கூடாது.

(4) இரண்டு எதிரிகள் ஒருவரோடொருவர் யுத்தம் செய்யும்போது, வேறெவரும் அந்தச் சண்டையில் தலையிடக்கூடாது.

இவைகளோடு இன்னும் சில நிபந்தனைகளையும் பீஷ்மர் தெரிவித்திருந்தார். பீஷ்மர் அனுப்பின தூதர்கள் யுதிஷ்டிர மஹாராஜாவிடம் போய் விஷயத்தைத் தெரிவித்ததும், அவர் "பீஷ்மர் சொல்லும் வார்த்தைகள் நமக்கு ப்ரமாணமாகு" மென்றுசொல்லி அந்த நிபந்தனைகளின்படியே யுத்தம் செய்ய ஒப்புக்கொள்வதாகத் தெரிவித்தார்.

இந்த நிபந்தனைகள் மனுஸ்ம்ருதியில் இருக்கின்றன. மனுவும் மற்ற ஸ்ம்ருதிக்காரர்களும் தர்மயுத்தம் எப்படி நடக்கவேண்டுமென்பதைப் பற்றி ரொம்பவும் எழுதியிருக்கிறார்கள். அவைகள் ஸங்க்ரஹமாய்ப் பின்வருமாறு.

ஸாதாரண யுத்தங்களில் ஒவ்வொரு வகைப் படையும் அந்தந்த வகைப்படையுடன் தான் யுத்தம்செய்யவேண்டும். குதிரைப்படை குதிரைப் படையோடும், காலாள் காலாளோடும், யானைப்



படை யானைப்படையோடுந் தான் யுத்தம் செய்யலாம். ஆனால் ஒரு கக்ஷியில் ஒருபடையிருந்து அந்தப்படை எதிர்க்கக்ஷியில் இல்லாவிட்டால் பின்வருமாறு செய்யவேண்டும். 5-குதிரைவீரர்கள் ஒரு யானை வீரனை எதிர்க்கலாம். 15-காலாள்களும் 4-குதிரைவீரர்களும் ஒரு யானையையாவது ஒரு ரதத்தையாவது எதிர்க்கக்கூடும். ஒரு குதிரைவீரனை 3-காலாட்படைகள் எதிர்க்கலாம். எதிரியைத்தாக்கி யுத்தத்துக்கு லாயக்கில்லாமல் செய்தபிறகு அந்த எதிரியைக் கொல்லக்கூடாது. தொந்தரவு உண்டாக்கக் கூடிய ஆயுதங்கள், விஷமுள்ள அம்புகள், முட்கள் அல்லது கொக்கிகளுள்ள அம்புகள் ஆகிய இவைகளை உபயோகிக்கக்கூடாது. சண்டை செய்ய லாயக்கில்லாதவர்களைத் துரத்துவதும் அவர்களைத் தாக்குவதும் கூடாது. ரதம், யானை அல்லது குதிரைகளை இழந்த வீரர்களைத் தாக்கக்கூடாது. ஆயுதமில்லாதவர்கள், தாங்கள் தோற்றுப் போனதைத் தெரிவிப்பதற்காக கையைக் கட்டிக்கொண்டிருப்பவர்கள், உட்கார்ந்திருப்பவர்கள் தோற்றுப்போனதாக ஒப்புக்கொள்ளுபவர்கள், சரணாகதியடைந்தவர்கள், ஆயுதங்கள் முறிந்துபோனவர்கள், தூங்கிக்கொண்டிருப்பவர்கள், யுத்தத்துக்குத் தயாராயில்லாதவர்கள், யுத்தம்பார்க்கவருபவர்கள், ஒரு கக்ஷியிலும் சேராதவர்கள், பயந்த ஸ்வபாவமுள்ளவர்கள், புறங்காட்டி ஓடுபவர்கள், ஸாரதிகள், யுத்தக்கருவிகளைக் கொண்டுபோகும் ம்ருகங்கள், அவைகளை ஓட்டும் மனிதர்கள், வாத்யக்காரர்கள் ஆகிய இவர்களோடு யுத்தம் செய்யக்கூடாது. ஒவ்வொருவரும் தமக்கு ஸமானமானவருடன்தான் யுத்தம் செய்யலாம். யுத்தத்தில் கைதியானவர்களை மரியாதையாய் நடத்தவேண்டும். எதிரி காயமடைந்துவிட்டால் தக்க ரணவைத்யர்களைக் கொண்டு ஸ்வஸ்தம் செய்யவேண்டும். ஒரு நகரத்தை ஒரு அரசன் பிடித்தால் அந்த விடத்திலுள்ள வ்யாதியஸ்தர்கள், பித்தம் பிடித்தவர்கள், சில்பம் முதலிய கலைகளில் தேர்ந்தவர்கள், மோக்ஷத்தையே கோரி அதை யடைய முயற்சி செய்துவரும் யோகிகள், ஸ்த்ரீகள் ஆகிய இவர்களை ஒரு போர்வீரனும் தொந்தரை செய்யக் கூடாதென்று அரசர் தமது வீரர்களுக்குக் கட்டளையிடவேண்டும்.

## ATTACHIING AGRICULTURAL PRODUCE.

## விவஸாய விளைபொருள்களை ஜப்திசெய்தல்.

பிப்ரவரி மாஸம் முதலில் நடந்த சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் ஆனரபில் மிஸ்டர் பி. கேசவப்பிள்ளை விவஸாயிகளின் மாஸூலில் ஒரு பாகத்தை ஜப்திசெய்யக்கூடாதென ரூல்கள் ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கத்துடன் ஒரு தீர்மானங்கொண்டுவந்தார். அந்தத் தீர்மானமாவது.

ஸொந்தத்தில் பயிர்த்தொழில் செய்து ஜீவிக்கும் விவஸாயி கடன்பட்டு, கோர்ட்டில் கடனுக்குக்காகத் தீர்ப்பாகி, அந்தத் தீர்ப்பை நிறைவேற்றுவதற்காக அவருடைய மாஸூலை ஜப்திசெய்தால், அந்த விவஸாயியும், அவருடைய குடும்பத்தாரும் அடுத்த அறுவடைக் காலம் வரும்வரையில் ஜீவனம் செய்ய மாஸூலில் எவ்வளவு பாகம் வேண்டி யிருக்குமோ அவ்வளவு பாகத்தை ஜப்தி செய்யவாவது விற்பனை செய்யவாவது கூடாதென்று ஸிவில் ப்ரொஸீஜர் கோடு 61-வது ஸெக்ஷன்படி ரூல்கள் ஏற்படுத்த வேண்டுமென்றும், அதற்காக மாகாண கவர்ன்மெண்டார் இந்தியா கவர்ன்மெண்டின் அனுமதியைப் பெற வேண்டுமென்றும் இந்தக் கௌன்ஸில் சிபார்சு செய்கிறது.

ஆனரபிள் மிஸ்டர் கேசவப்பிள்ளை இதைப் பற்றி பேசுகையில், இதுவரையில் கவர்ன்மெண்டார் விவஸாயி கடன்பட்டு கடனுக்கு அவன் மேல் தீர்ப்பாகிவிட்டால், அடுத்த அறுவடைக் காலம் வரையில் அவனும் அவனுடைய

குடும்பமும் ஜீவனம் செய்வதற்கு மாஸூலில் ஒரு பாகத்தை ஜப்தி செய்யாமல் விட்டுவிட யாதொரு ரூலும் ஏற்படுத்தவில்லை; ஆனால் சில ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள், கூலியாட்கள், வீட்டு வேலையாட்கள், ஆகிய இவர்களுடைய விஷயத்தில் அவர்களுடைய வரும்படியில் ஒரு பாகத்தை ஜப்தி செய்யாமல் விட்டுவிட வேண்டுமென்று ரூல் ஏற்படுத்தியிருக்கிறார்கள்; இப்படி ஏற்படுத்தியிருப்பதால் ஒரு பாதகமும் ஏற்படாததால், இந்தத் தீர்மானத்தில் கேட்டுக்கொண்டபடி விவஸாயியின் மாஸூலில் ஒரு பாகத்தை ஜப்தி செய்யாமல் விட்டுவிட ஏற்பாடு செய்வதற்கும் ஆக்ஷேபணை சொல்வதற்கில்லை என்று சொன்னார்.

இன்னும் அவர் சொன்னதாவது. ஸொந்தத்தில் பயிர்த்தொழில் செய்யும் ஏழை விவஸாயிகள் எவ்வளவு தூரம் கடனாளிகளாயிருக்கிறார்களென்பதை மாகாண கவர்ன்மெண்டார் நன்றாய் அறிந்துகொள்ளவில்லையென்று தோன்றுகிறது. இம்பீரியல் (இந்தியா) கவர்ன்மெண்டார் ரயத்துகளின் நிலைமையை நன்குணர்ந்து விவஸாய மாஸூலில் ஒரு பாகத்தை ஜப்தி செய்யக்கூடாதென மாகாண கவர்ன்மெண்டார் உத்தரவு போடலாமென்று 1908-ம் வர்ஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோடில் ஒரு நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் மாகாண கவர்ன்மெண்டுகள் இதுவரையில் அவ்விதம் ரூல்கள் ஒன்றும் போடவில்லை. இந்தத் தீர்மானத்தின் நோக்கமென்னவென்றால், விவஸாயிகளுக்கு மாஸூலில் ஒரு பாகம் விட்டு அவர்களுடைய நிலைமையை உயர்த்துவதும், அந்த பாகத்தை நடுவிலுள்ளவர்கள் அடித்துக்கொண்டு போகாமல் தடுப்பதுமே. இவ்விஷயங்களை எடுத்துச் சொல்லிவிட்டு, மிஸ்டர் கேசவப்பிள்ளை, விவஸாயிகள் தேசக்ஷேமத்துக்கு [illegible]மானவர்களென்றும், அவர்கள் நிர்க்கதி [illegible], அந்ய தேசங்களுக்குப் போய் விடுவார்களாதலால், இந்தியாவில் கூலியாட்களின் தொகை ரொம்பவும் குறைந்து போகுமென்றும், ஆகையால் சென்னை கவர்ன்மெண்டார் மாஸூலின் ஒரு பாகத்தை ஜப்தி செய்யாமல் விட்டுவிட வேண்டுமென உத்தரவு போட வேண்டுமென்றும் சொன்னார்.

சென்னை நிர்வாக ஸபையின் மெம்பராகிய ஆனரபிள் மிஸ்டர் கார்ட்யூ இது விஷயமாய்ப் பேசுகையில், மிஸ்டர் கேசவப்பிள்ளை சொல்லுகிறபடி ஒரு ரூல் ஏற்படுவதில் ரொம்ப ஸங்கடங்களிருக்கின்றனவென்று சொன்னார். இதற்கு முன் அமுலிலிருந்த ஸிவில் ப்ரொஸீஜர் கோடில் கடன்பட்ட விவஸாயியின் மாஸூலில், அவனுக்கும் அவனுடைய குடும்பத்துக்கும் அடுத்த மாஸூல் அறுவடையாகும் வரையில் ஜீவனம் செய்ய எவ்வளவு வேண்டியிருக்குமோ, அவ்வளவு மாஸூலை ஜப்தி செய்யக் கூடாதென ரூல் ஏற்படுத்தலா மென்றிருந்தது. 1903-ம் வர்ஷத்தில் ஸி. பு. கோடைப்பற்றிப் பரிசீலனை செய்த ஸெலெக்ட் கமிட்டியார் இந்தரூல் அனுவத்தில் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவது முடியாதென்று கண்டு, அதற்கு பதிலாக மாஸூல் பூராவையும் ஜப்தி செய்து பிறகு அதில் ஒரு பாகத்தை கடன்பட்ட விவஸாயிக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்று ரூல் ஏற்படுத்தினார்கள். ஆனால் 1908-ம் வர்ஷத்தில் ஸி. பு. கோடைப் பற்றிப் பரிசீலனை செய்த ஸெலெக்ட் கமிட்டியார் புது ரூலை மாற்றி பழைய ரூலைச் சேர்த்துக்கொண்டு, மாகாண கவர்ன்மெண்டுகள், மாஸூலின் ஒரு பாகத்தை ஜப்தி செய்யக் கூடாதென உத்தரவு போடலா மென்று ஏற்படுத்தினார்கள். இப்படி ரூல்கள் மாறியிருப்பதால், இது எவ்வளவு கஷ்டமான விஷய மென்பது நன்றாய் ஏற்படுகிறது. மேலும் ஒரு மாகாண கவர்ன்மெண்டும் இதுவரையில் இது விஷயமாய் ரூல்கள் போடவில்லை. ஒரு நீதி இலாகா



உத்யோகஸ்தரைத் தவிர மற்றெந்த நீதியிலாகா உத்யோகஸ்தரும் இப்படி ஒரு ரூல் போட வேண்டியது அவசியமென்று தெரிவிக்கவில்லை.

இப்படி ஒரு ரூல் போடுவதில் ரொம்ப கஷ்டமும் இருக்கிறது. 1903-ம் வர்ஷத்து ஸெலக்ட் கமிட்டியார், மாஸூலில் எவ்வளவு பாகத்தை ஜப்தி செய்யாமல் விடவேண்டு மென்பது ஒவ்வொரு கேஸின் தன்மையைப் பொருத்த தென்று தெரிவித்திருக்கிறார்கள். அப்படியானால் ஒவ்வொரு கேஸிலும் கோர்ட்டார் கடனாளியின் நிலைமைகளைப்பற்றி விசாரிக்க வேண்டிவரும். ஸ்வல்ப நிலங்களுள்ள விவஸாயிகளினுடைய நிலைமை வேறு; அதிக நிலங்களுள்ள விவஸாயிகளினுடைய நிலைமை வேறு. மேலும் கடனாளியின் இதர வரும்படியையும் அவனுடைய குடும்பத்தாருடைய இதர வரும்படியையும் கவனிக்க வேண்டிவரும். ஆகையால் உத்தேசமாய் இவ்வளவு மாஸூலை ஜப்தி செய்யலாம், இவ்வளவு மாஸூலை விட்டு விட வேண்டுமென்று ஒரு ரூல் போட்டால், சில ஸமயம் கடனாளிக்கும் சில ஸமயம் கடன் கொடுத்தவர்களுக்கும் பாதகமாய் முடியும்.—என்று மிஸ்டர் கார்ட்யூ சொல்லிவிட்டு, கவர்ன்மெண்டார் இந்த விஷயத்தை ஜில்லா கலெக்டர்களுக்கும் ஹைக்கோர்ட்டுக்கும் தெரிவித்து, மேற்சொன்ன 61-வது ஸெக்ஷன்படி ஏதாவது ரூல்கள் போட வேண்டியது அவச்யமா என்பதைப் பற்றி அபிப்ராயம் தெரிவிக்கும்படி கேட்டார்களென்று சொன்னார்.

மிஸ்டர் கார்ட்யூ இதைப்பற்றி விசாரிப்பதாக அதாவது கலெக்டர்கள் ஹைக்கோர்ட்டார் ஆகிய இவர்களுடைய அபிப்ராயத்தைக் கேட்பதாகச் சொன்னதன்மேல் மிஸ்டர் கேசவப்பிள்ளை தமது தீர்மானத்தை வாபஸ் வாங்கிக் கொண்டார்.

## FEMALE EDUCATION IN INDIA.

## இந்தியாவில் பெண் கல்வி.

இந்தியாவில் பெண் கல்வி விஷயமாய் கவர்ன்மெண்டாரும், பொது ஜனங்களும் கவனம் செலுத்திவந்தபோதிலும், பெண் கல்வி விஷயமானது ரொம்ப தாழ்ந்த நிலைமையிலிருக்கிறதென்பது யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயமாகும். பெண் கல்வி நிலைமையை அபிவ்ருத்தி செய்வதற்காக சென்ற வர்ஷம் அக்டோபர் மாஸத்தில் சில இந்தியர்களும், இந்திய விஷயங்களில் ஊக்கங் காட்டிவரும் சில இங்க்லீஷ் ப்ரமுகர்களும் இந்தியா மந்த்ரியைக் கண்டுபேசி, இந்தியாவில் பெண் கல்வியை அபிவ்ருத்தி செய்வதைப்பற்றி ஆராய்ச்சிசெய்ய ஒரு கமிட்டி ஏற்படுத்தவேண்டுமென்று மனுசெய்துகொண்டார்கள். அப்போது இந்தியா மந்த்ரியானவர், அந்த ஸமயம் கமிட்டி ஏற்படுத்துவதற்கில்லையென்றும், ஆனால், அவர்கள் கொடுத்த விண்ணப்பத்தை இந்தியாகவர்ன்மெண்டுக்கு அனுப்புவதாகவும் சொன்னார். அதன்படியே இந்தியா மந்த்ரி அந்த விண்ணப்பத்தை அனுப்பவே, இந்தியா கவர்ன்மெண்டார், பெண் கல்வி விஷயமாய் இன்ன செய்யவேண்டுமென்பதை நிர்ணயிப்பதற்காக மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு ஒரு சுற்றுக்கடிதம் எழுதி அவைகளுடைய அபிப்ராயத்தைத் தெரிவிக்கும்படி கேட்டுவிட்டிருக்கிறார்கள். இந்தியா கவர்ன்மெண்டாரும், இந்தியா மந்த்ரியைப்போலவே இப்போது கமிட்டி நியமிக்கமுடியாதென்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் பெண் கல்வியைப்பற்றிய ப்ரச்னைகளனைத்தையும்பற்றி இப்போது ஆலோசிக்கலா மென்றும், அது விஷயமாய் செய்யக்கூடிய கார்யங்களை இப்போதே செய்யலாமென்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

ஸ்த்ரீகளுக்குக் கல்வி கற்பிக்க வேண்டுமென்பதற்கு அநேக காரணங்கள் இருக்கின்றன. இதுவரையில் ஹிந்துக்களில் பெரும்பாலார்

அவிபக்த குடும்பங்களாகச் சேர்ந்திருந்து வஸித்துவந்தார்கள். இப்போது அந்த வழக்கம் குறைந்துகொண்டு வருகிறது. தாய், தகப்பன், இவர்களுடைய குழந்தைகள் ஆகிய இவர்கள் மாத்ரம் கொண்ட தனிக்குடும்பங்கள் இப்போது அதிகமாக ஏற்பட்டுவருகின்றன. பெண்களும், அதிக வயதாகாத ஸ்த்ரீகளும் அந்தக் குடும்பங்களுக்குத் தலைவர்களாக இருக்கிறார்கள். முற்காலத்தில் இப்படிப்பட்ட இளம் வயதுள்ள ஸ்த்ரீகள், அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்திருந்ததால், அவர்களுக்கு அந்த அவிபக்த குடும்பத்திலுள்ள பெரியோர்களினுடைய துணையும் ஆதரவும் இருந்துவந்தன குழந்தைகளைப் பராமரிக்கும் விஷயத்திலும் வீட்டிலுள்ள பெரிய ஸ்த்ரீகளின் உதவி இருந்துவந்தது. இப்போதோ, அவர்களுக்குப்பெரியவர்களின் துணையும் உதவியும் இல்லாததால், தாங்களே தங்கள் பொறுப்பில் குடும்பத்தை நிர்வகிக்கவும், பெரியவர்களுடைய யோசனைகளைக் கேட்க முடியாமலே குழந்தைகளைப் பராமரிக்கவும் வேண்டியிருக்கிறது. குழந்தைகளுடைய தேகஸௌக்யத்தைக் கவனிக்கவேண்டியது தேசத்தாரின் பொறுப்பாகிறது. இதற்கு தாய்மார்களுக்குக் கல்விகற்பிக்காமல் முடியாது.

இதே காரணத்தால், அதாவது அவிபக்த குடும்பங்கள் நாளடைவில் பாகப்பட்டு, சிறுசிறு குடும்பங்களாக மாறுகின்றன என்கிற காரணத்தால், விதவைகளுக்கும் ஆதரவு குறைந்து வருகிறது. முன்பு அவிபக்த குடும்ப ஏற்பாட்டில் விதவைகள் அந்தக்குடும்பத்திலிருந்துகொண்டு, அதிலுள்ள பெரியோர்களின் ஆதரவையடைந்து வந்தார்கள். அதோடு அவர்கள் அந்தக் குடும்பத்திலுள்ள மற்றவர்களுடைய நன்மைக்காகப் பாடுபடவும் வஸதிகளிருந்தன. சிறு தனிக்குடும்பங்கள் வ்ருத்தியாகவே விதவைகளுக்கு ஆதரவு குறைந்து வருவதோடு, பந்துக்களுக்காக உழைப்பதற்கும் வஸதிகளில்லாமலிருக்கிறது. அவிபக்த குடும்பங்கள் கொஞ்சங்கொஞ்சமாகத் தனிக்குடும்பங்களாகப் பிரிந்துவரும் இந்த ஸந்தர்ப்பத்திலேயே, ஸ்த்ரீகளுக்குத் தக்க கல்விகொடுத்துவர ஏற்பாடுசெய்தால், பின்னால் தனிக் குடும்பங்களே அதிகமாக ஆகும்போது, விதவைகளை நிர்க்கதியாக இருக்கவிடாமல் அவர்களுடைய நிலைமையை வ்ருத்திசெய்வது முடியும்.

இப்போது பையன்களுக்கு ஏற்பட்டுள்ள பாடங்களே பெண்களுக்கும் கற்பிக்கப்பட்டுவருகின்றன. இந்தப் பாடங்கள் பையன்களுக்கேற்றவையா, அல்லவா என்பது ஒருபுறமிருக்க, இவைகள் பெண்களுக்கு ஏற்றவையல்லவென்பது பொது அபிப்ராயமாக இருந்துவருகிறது. இதனால் பெண்களுக்கு எவ்விதக் கல்வி கற்பிக்கவேண்டுமென்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டியது அவச்யமாகிறது

இவைகளை யுத்தேசித்து இந்தியா கவர்ன்மெண்டார் பெண்கல்வி விஷயத்தைப்பற்றி ஆலோசனைசெய்ய ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள். இப்போது பெண்கல்வியின் நிலைமை எப்படியிருக்கிறதென்பதை அறிந்து கொள்ள பெண்கல்வி ஸம்பந்தமான விஷயங்களைப் பற்றி அபிப்ராயம் கொடுக்கத் தகுந்தவர்களிடமிருந்து அபிப்ராயங்களைக் கேட்டு தமக்குத் தெரிவிக்க வேண்டுமென்று மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு இந்தியா கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள். மாகாணகவர்ன்மெண்டுகள் இதுவிஷயமாய் இன்னசெய்யவேண்டுமென்பதைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டார் பின்வருமாறு தெரிவிக்கிறார்கள்.

மாகாண கவர்ன்மெண்டுகள் 1913-ம் வர்ஷம் முதல் பெண்கல்வி விஷயமாய் என்ன முயற்சிகள் செய்திருக்கின்றனவென்பதைப்பற்றித் தெரிவிக்கவேண்டும். ஒவ்வொரு மாகாணகவர்ன்மெண்டாரும் தங்கள் தங்கள் மாகாணங்களில் (1) பெண்களின் மூலாதாரக் கல்வியின் அபிவ்



ருத்திக்காகச் செய்திருக்கும் அதிகப்படியான ஸௌகர்யங்கள் என்ன? பெண்களுக்குக் கற்பிக்கும் கல்வியின் தன்மையில் என்ன மாறுபாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன? பெண்களுக்கான ப்ரைமெரி ஸ்கூல்களுக்கு பண உதவி செய்வது விஷயமாயும், அவைகளை மேற்பார்வை செய்வது விஷயமாயும் என்ன ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன? ஆகிய இவ்விஷயங்களைப்பற்றியும்; (2) பெண்களுக்கான உயர்தரப் பாடசாலைகளில் அதிகப்படியான வஸதிகள் என்ன உண்டு? அந்தப் பாடசாலைகளில் கற்பிக்கும் கல்வியில் மாறுபாடுகள் ஏதாவது செய்யப்பட்டிருக்கின்றனவா? அந்தப் பாடசாலைகளுக்கு பண வுதவி செய்வது, அவைகளை நிர்வகிப்பது ஆகிய இவைகளுக்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன, ஆகிய இவ்விஷயங்களைப் பற்றியும்; (3) ஸ்த்ரீ உபாத்யாயர்களைப் பயிற்சி செய்வதைப்பற்றியும்; (4) பெண்பாடசாலைகளை இன்ஸ்பெக்ட் செய்வதைப் பற்றியும் சுருக்கமான ரிபோர்ட்டுகள் எழுதியனுப்ப வேண்டும்.

இதோடு மாகாண கவர்ன்மெண்டார்கள் பெண் கல்வி விஷயமாக என்ன முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதைப்பற்றி தங்களுடைய அபிப்ராயங்களையும் தெரிவிக்க வேண்டும். இப்படிச்செய்வதில் அவர்கள் பெண் கல்வி ஸம்பந்தமான ப்ரசனைகளைப்பற்றி அபிப்ராயம் கொடுக்கத் தகுந்தவர்களிடமிருந்து அபிப்ராயங்களைக் கேட்டு, அவைகளோடு தாங்கள் கொள்ளும் அபிப்பிராயங்களையும் சேர்த்தனுப்ப வேண்டும். இதற்கு, ஸ்கூல் இன்ஸ்பெக்ட்ரஸ்ஸுகள், பி. ஏ. பாஸ் செய்த ஸ்த்ரீகள், பெண் பாடசாலைகளை நேராக நிர்வாகம் செய்யும் ஸ்தல ஸ்தாபன அதிகாரிகள் ஆகிய இவர்களுடைய அபிப்ராயங்கள் உபயோகமுள்ளவைகளாக இருக்கும். இன்னும் இவர்கள் தங்களுக்கு ரொம்ப அனுபோகமுள்ள ப்ரதேசங்களின் நிலைமைகளைப்பற்றியும், தங்களுக்குத் தெரிந்த விஷயங்களைப் பற்றியும் அபிப்ராயம் கொடுத்தால், அந்த அபிப்ராயங்கள் ரொம்ப உபயோகமுள்ளவைகளாக இருக்கும். மேலும் எந்த விடத்திலாவது பெண் கல்வி விஷயத்தைக் கவனிக்க ஏதாவது ஸ்டாண்டிங் கமிட்டியிருந்தால், அந்தக் கமிட்டியாரின் அபிப்ராயத்தையும் கேட்கலாம்.

இவ்விதம் மாகாண கவர்ன்மெண்டுகள் செய்யும் பரிசீலனையில் கிடைக்கும் விஷயங்களையும், அவைகளைப்பற்றி அவர்கள் கொள்ளும் அபிப்ராயங்களையும், செய்யும் ப்ரேரணைகளையும், நான்கு அம்சங்களாகப் பிரித்து எழுதியனுப்பவேண்டும். அவைகளாவன: (1) பெண்களின் மூலாதாரப் படிப்பு, (2) பெண்களின் ஸெகண்டரிப் படிப்பும், உயர்தப் படிப்பும், (3) பெண்பாடசாலைக்கு உபாத்யாயர்கள், (4) பெண் கல்விப் பாடசாலைகளை இன்ஸ்பெக்ட் செய்வது.

இந்தியா கவர்ன்மெண்டார் தமது சுற்றுக் கடிதத்தில் பெண்கல்வி விஷயமாக சில குறிப்புகள் எழுதியிருக்கிறார்கள்.

**பொது ஸ்தாபனங்கள் பெண்களின் ப்ரைமெரி கல்வியை நிர்வகிப்பது.**—பொதுவாய் ப்ரைமரி ஸ்கூல்களை ஸ்தலஸ்தாபனங்களே நிர்வகித்துவரலாம். இந்தக் கொள்கையை பெண்பாடசாலைகள் விஷயத்திலும் அனுஷ்டிக்கலாம். அதாவது பெண்பாடசாலைகளை ஸ்தலஸ்தாபனங்களே வெகுவாய் நடத்திவரலாம். ஏனென்றால், ஜனங்களுக்கு எந்தவிதமான கல்விவேண்டுமோ அந்தக் கல்வியையே கற்பிக்கவேண்டுமோதலாலும், ஜனங்களுடைய ஆதரவும் அனுதாபமும் இல்லாமல், பெண்கல்வியில் அபிவ்ருத்தி ஏற்படாதாகையாலும், பெண்பாடசாலைகளை பொதுஸ்தாபனங்களே நிர்வகித்து வரவேண்டியிருக்கும். இந்தக் கொள்கை எவ்வளவு தூரம் ஏற்றதென்பதைப் பற்றியும், இப்போது பெண்பாடசாலைகளைநிர்வகிக்க ஸ்தலஸ்தாபனங்களிருப்பதற்குப் பதிலாக, ப்ரத்யேகமாக வித்யா கமிட்டிகள் ஏற்

படுத்த வேண்டுமோ என்பதைப்பற்றியும், எந்தெந்த இடங்களில் ப்ரத்யேகமான வித்யா கமிட்டிகள் ஏற்படுத்தவேண்டுமென்பதைப் பற்றியும் மாகாண கவர்ன்மெண்டுகள் ஆலோசனை செய்து தெரிவிக்கவேண்டும்.

**ஜாதிவாரியான பள்ளிக்கூடங்களும், பையன்களும் பெண்களும் சேர்ந்து வாசிக்கும் பாடசாலைகளும்.**—பெண்கல்வி ஸம்பந்தமான ஏற்பாடுகள் பொதுவாய் ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகத்துக் குள்பட்டிருக்க வேண்டுமென்று வைத்துக்கொண்டால், கணக்கு, வாசிப்பு, எழுதுதல் ஆகிய இந்தப்பாடங்களை மாத்ரம் கற்பிக்கும் பாடசாலைகளுள் பெண் பள்ளிக்கூடங்களில் ஆண்களையும், ஆண்களுக்கான பள்ளிக்கூடங்களில் பெண்களையும் சேர்த்துக்கொள்ளலாமா, சேர்த்துக்கொள்ளக்கூடாதா என்னும் விஷயங்களை ஸ்தலஸ்தாபனங்களே தீர்மானித்துக்கொள்ளும்படி விடுவது யுக்தமென்று ஏற்படும். பெண் பள்ளிக்கூடங்களில்-ஆண்களைச் சேர்த்துக்கொள்வதாயிருந்தால், இத்தனை பேருக்குமேல் ஆண்களைச் சேர்த்துக்கொள்ளக் கூடாதென்று ஒரு நிபந்தனை ஏற்படுத்த வேண்டியிருக்கும். அப்படி ஏற்படுத்தாவிட்டால், அந்தப் பாடசாலைகளில் வரவரப் பெண்களின் தொகை குறைந்துபோய், ஆண்களின் தொகை அதிகமாகி விடக்கூடும். ஆண்களுக்கான பள்ளிக்கூடங்களில் உள்ள தாழ்ந்த வகுப்புகளில் பெண்கள் அதிகமாகச் சேர்ந்து வாசிக்கும்பொருட்டு, சில மாகாணங்களில் அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு அதிகமாக காபிடேஷன் க்ராண்டு கொடுத்து வருவதுபோல, எல்லாவிடங்களிலும் காபிடேஷன் க்ராண்டை உயர்த்தலாமா என்பதைப்பற்றியும் மாகாண கவர்ன்மெண்டுகள் ஆலோசனை செய்யவேண்டும்.

இதுபோலவே, பெண் பாடசாலைகளின் நிர்வாகத்தை ஸ்தலஸ்தாபனங்களிடம் விட்டுவிடுவதாயிருந்தால், அந்தந்த ஸ்தல ஸ்தாபனங்களின் ஆதீனத்தில் உள்ள ப்ரதேசங்களில் எவ்வளவு தூரம் ஜாதிவாரியாக அல்லது வகுப்பு வாரியாக பாடசாலைகள் ஸ்தாபிக்க வேண்டியிருக்குமென்பதை அந்தந்த ஸ்தல ஸ்தாபனங்களே நிர்ணயிக்க வேண்டியிருக்கும்.

சில இடங்களில் ஒரு பெண்பாடசாலையில் தாழ்ந்த வகுப்புப் பெண்களைச் சேர்த்துக்கொள்வதால், மற்ற உயர்ந்த வகுப்புப் பெண்கள் வாசிக்க வராமல் போகக்கூடும். சில ஸ்வதேச ஸமஸ்தானங்களில் உயர்ந்த வகுப்பு ஹிந்து பெண்கள் வாசிக்கும் பாடசாலைகளில் தாழ்ந்த ஜாதிப் பெண்களைச் சேர்க்காமலிருப்பதால், அங்கே பெண்களின் படிப்பு ரொம்ப அபிவ்ருத்தி யடைந்திருக்கிறதென்று சிலர் சொல்லுகிறார்கள். இந்த ந்யாயம் ஒருகால் சரியாயிருந்தாலுமிருக்கலாம்.

சில இடங்களில் ஸ்தல ஸ்தாபனங்கள் பற்பல வகுப்பாருக்கு தனித்தனிப் பாடசாலைகள் ஏற்படுத்துவது ஸௌகர்யமாயிருக்கும். ஆனால் அப்படிப்பட்ட இடங்களில் ஸ்தல ஸ்தாபனங்கள் தாழ்ந்தஜாதிகளுக்கான பாடசாலைகளையும் ஹிந்துக்களல்லாதவர்களுக்கான பாடசாலைகளையும் அதிகம் கவனிக்காமல், உயர்ந்த ஜாதி ஹிந்துக்களுக்கானபாடசாலைகளைமாத்ரம் கவனிப்பதுகூடாது. தாழ்ந்தஜாதி ஹிந்துப்பெண்களுக்கான பாடசாலைகளில் உயர்ந்த ஜாதிப்பெண்களைச் சேர்த்துக்கொள்ள ஆக்ஷேபம் செய்யவேண்டியிராது. ஆனால் அப்படி உயர்ந்த ஜாதிப்பெண்களைச் சேர்த்துக்கொள்வதாயிருந்தால், வரவரஉயர்ந்தஜாதிப் பெண்கள் அதிகமாகச் சேர்ந்து அந்தப் பள்ளிக்கூடங்கள் உயர்ந்த ஜாதிகளுக்கு மாத்ரமான பாடசாலைகளாக ஆகிவிடுமாதலால், அப்படிப்பட்டநிலைமை ஏற்படாமலிருக்கும்படி தக்க நிபந்தனைகள் ஏற்படுத்த வேண்டியது அவச்யமாகும்.

**இன்ன பாடங்களைக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்பதை நிர்ணயித்தல்.**—பெண்களுக்கு இன்ன பாடங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்பதையும் ஸ்தல ஸ்தாபனங்களே நிர்ணயிக்கும்படி விடுவது யுக்த மென்று சொல்லலாம். பெண்களுக்கு தாய்ப்பாஷையை வாசிக்கவும் எழுதவும், கணக்குப் போடவும் கற்றுக் கொடுக்க வேண்டியது அவச்ய மென்று ஜனங்கள் அபிப்ராயப் பட்டு வருகிறார்களென்பதில் ஸந்தேகமில்லை. ஆனால் மேற்சொன்ன பாடங்களைத் தவிர மற்ற பாடங்களைக் கற்றுக்கொடுக்கலாமா, கூடாதா என்பதை, (முன் சொன்ன ந்யாயத்தின் படி, அதாவது பெண் கல்வி விஷயத்தைப் பெரும்பாலும் ஸ்தல ஸ்தாபனங்களே கவனித்துக் கொள்ள வேண்டுமென்னும் கொள்கையின் படி) ஸ்தல ஸ்தாபனங்களே கவனித்துக் கொள்ளும்படி விட வேண்டியிருக்கும். ஏனென்றால் பெண் கல்வியில் தக்க அபிவ்ருத்தி ஏற்பட வேண்டுமென்றால், ஸ்தல ஸ்தாபனங்களின் அநுதாபமும் ஒத்துழைப்பும் அவச்யம்வேண்டியிருக்கின்றன. வித்யா டிபார்ட்மெண்டார் பெண்களுக்கு இன்னபாடங்களைக் கற்றுக்கொடுக்கவேண்டுமென்று பாட ஜாப்தாக்கள் ஏற்படுத்துவதும் யுக்தமல்ல: அவர்கள், பெண்களுக்குக் கற்றுக் கொடுக்கக்கூடிய பாடங்களை சில தொகுதிகளாகச்(க்ரூப்) சேர்த்து, அவைகளில் எந்தத் தொகுதியை வேண்டுமென்றாலும் பள்ளிக்கூடங்களில் கற்றுக்கொடுக்கலாமென்று தெரிவித்தால் போதும். பெண்களுக்கு உபயோகமான கல்வி ஏதாவது கற்பிக்க வேண்டுமென்பதே கவர்ன்மெண்டின் நோக்கமாதலால், அப்படிப்பட்ட கல்வி கற்பிப்பதில் நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்துவது உசிதமல்லவென்று கவர்ன்மெண்டார் அபிப்ராயப்படுகிறார்கள்.

ஸ்த்ரீகளின் ஸெகண்டரிப்படிப்பு, காலேஜ் படிப்பு, உபாத்யாயர்களின்பயிற்சி, பள்ளிக்கூடங்களை இன்ஸ்பெக்ட் செய்வது ஆகிய இவைகளைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டார் தெரிவித்திருப்பவைகளைப்பற்றி பின்னால் எழுதுவோம்.



## TAMIL AND ITS PRESENT STATE.

BY C. ANGANNAN.

## தமிழும் அதன் தற்போதைய நிலைமையும்.

தமிழ் என்னும் பதம் இனிமை என்று பொருள்படும். இத்தமிழ், த்ராவிட பாஷைகளில் ஒன்றாயும், மற்றைய த்ராவிட பாஷைகள் யாவற்றிற்கும் முந்தியதாயும், சிறந்ததாயும், ஸம்ஸ்க்ருதத்திற்குக் கீழ்ப்படியாததாயும், பல ஆயிர வருஷங்களாக, தென் இந்தியாவில் வழங்கி வருகிறது. இது தற்காலத்தில் இந்தியாவில் 'குணகடல், குமரி, குடகம், வேங்கடம்' எனும் நான்கு எல்லையுள்ளிட்ட ப்ரதேசத்திலும், ஈழதேசத்து வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையாயும், மற்றைய மாகாணங்களில், சிறுபான்மையாயும், ரங்கூன், பினாங்கு, சிங்கப்பூர் முதலிய இடங்களிலும், ஆப்ரிகா கண்டத்தின் தென்முனையிலும் வழங்குகிறது. இத்தகைய தமிழ் பாஷை, ஐம்பத்து எண்ணாயிரத்து ஐந்நூறு சொற்களை உடையதாக இருக்கிறது.

இந்த பாஷை, அநாதியாய், இத் தென் இந்தியாவில் உள்ள, எல்லாருடைய நாட்டிலும், வீட்டிலும் வழங்கிவருவதான, நம் தாய் பாஷையாகும். ஓர் வித்வத்சிகாமணி சொல்லியதுபோல், நம்மை பெற்றதும் தமிழ், வளர்த்ததும் தமிழ்; நம்மை தாலாட்டி தூங்கவைத்ததும் தமிழ்; நம்முடைய மழலைச்சொல்லால், நமது தாய் தந்தையரை ஸந்தோஷிப்பித்ததும் தமிழ்; நம் குழந்தைப் பருவத்தில் பேச ஆரம்பித்ததும், உச்சரித்ததும் தமிழ்; நம் தாய் தந்தையர்கள் நமக்கு பாலோடு புகட்டினதும் தமிழ்; தந்தை, தாய், குரு முதலானவர்கள், நமக்கு ஆதியில் உபதேசித்ததும் தமிழ்; ஆதிகாலம் முதல், நம் முன்னோர்கள் எல்லாரும் பேசின பாஷையும், எழுதிவைத்த பாஷையும் தமிழ்; இப்போது நம்மு

டைய மாதா, பிதாக்களும், பந்துஜனங்களும், இஷ்டமித்ரர்களும் பேசுகிற பாஷையும் தமிழ்; இதன் பெருமையும், சிறப்பும், இவ்வளவு, அவ்வளவு என்று வரையறுக்கமுடியாது.

இத்தகைய தமிழ் பாஷை, நமக்கு ஸ்வய பாஷையாய் இருந்தும், பெரும்பான்மையோருக்கு இது நன்றாகத் தெரியாது. அநேகருக்கு, இங்க்லீஷ் பாஷை தெரிந்த அளவு, தமிழ் தெரியாது. சிலர், தமிழில் பேசுவோருக்கு, இங்க்லீஷில் ப்ரதி உத்தரம் சொல்வார்கள். தமிழிலே தொடங்கி இங்கிலீஷில் முடிப்பார்கள். அவர்கள் தாங்கள் விரும்பிய ஒரு விஷயத்தை, தமிழில் ஸ்பஷ்டமாகவாவது, விசிதமாகவாவது சொல்வது அஸாத்யமாகும்.

இக்காலத்தில், ராஜபாஷையாகிய இங்க்லீஷில் பயிற்சி ஏற ஏற, நம்மவர்களுக்கு, நமது ஸ்வயபாஷையான தமிழில் மனஊக்கமும், அபிமானமும், பயிற்சியும் நாளுக்குநாள் குறைந்து வருகிறது. இங்க்லீஷ் பாஷை வாசித்தவர்கள் ஒருவர்க்கொருவர் எழுதும் கடிதங்களை, ஆயிரம் பிழையுடனேயானாலும், இங்க்லீஷிலேயே எழுதிக்கொள்ளுகிறார்கள். ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளுகிறபோதும், இங்கிலீஷில் பேசுவதே அவர்களுக்கு ஸம்மதம். இங்க்லீஷில் தேர்ச்சி இல்லாவிடினும், அந்த பாஷையில் பேசுவதை பெருமையாக எண்ணுகிறார்கள். அப்படிக்கு அல்லாமல், தமிழில் ஏதாவது ஒரு ஸமயத்தில் பேசும்படி நேரிட்டால், நாழி தமிழுடன் குறுணி இங்கிலீஷைக் கலந்து, தமிழை அலங்கோலப் படுத்துகிறார்கள்.

இங்க்லீஷ் தெரிந்திருப்பது கௌரவம் என எண்ணுகிறார்களேயன்றி, தமிழில் பேசுவதற்கு கூட தமக்கு தெரியாமல் இருப்பது கௌரவக் குறைவென்று அவர்களுக்குத் தோற்றுவதே இல்லை. குழூஉக்குறியா யிருப்பனவற்றையும், அவைத்தன மூறைமையால் நிலைத்த வார்த்தைகளையும் வழங்குவதில் ஆக்ஷேபம் ஒன்றும் இல்லையாயினும், அவச்யமில்லாமலே தமிழுடன் இங்க்லீஷ் வார்த்தைகளைக் கலந்து பேசுவதையும், எழுதுவதையும் நிதானித்து யோசித்தால், மிகவும் பரிஹாஸமாக இருக்கிறது. மனதில் உதிக்கும் கருத்தை, தமிழில் சொல்லவாவது, எழுதவாவது, கற்றுக்கொள்ளாமல் இருப்பது, தமக்கும், தம் பாஷைக்கும், முறையே குற்றமென்றும், கனக்குறைவென்றும், அவர்களுக்கு தோற்றவில்லையே! ஆங்கிலேயருக்கு, ஆங்கிலேய பாஷையினிடத்தில் இருக்கிற அபிமானத்தில், லக்ஷத்தில் ஒரு பங்கு, தமிழருக்கு தமிழினிடத்தில் உண்டானால், தமிழ் சீக்ரத்தில் சிறப்புற்று ஓங்கும் என்பதற்கு ஸந்தேகம் உண்டோ?

ஆனால், நாம் நடந்துகொள்ளவேண்டிய சட்ட திட்டங்கள், ந்யாயப்ரமாணங்கள், இவைகள் ஆங்கிலேய பாஷையிலிருப்பதால், அந்த பாஷையில் நமக்கு வ்ருத்தி இல்லாவிடில் ஆங்கிலேய ராஜ்யத்தில் நாம் எப்படி நிர்வஹிக்கக்கூடும்? அவகாசம் உள்ளவர்கள், ஸொந்த பாஷைகளோடு கூட, அந்தபாஷையையும் படிப்பது, அதிக விசேஷந்தான். ஆயினும், ஸொந்த பாஷையை நன்றாய் வாசிக்காமல், கைவிட்டு, ராஜ பாஷைகளைமட்டும், படிப்பது சரியல்ல. எவ்வளவுதான் ராஜ பாஷையைப் படித்தாலும், அதனால், நம்முடைய ஸ்வயபாஷையைக் கைவிடக் கூடாதென்பதற்கு ஆங்கிலேயரையே ஸாக்ஷியாகச் சொல்லலாம். நம்மை இப்போது ஆங்கிலேயர் ஆண்டுவருவது போல், முன் அவர்களையே நார்மன்ஸ் என்னும் ஜாதியார் அடக்கி ஆண்டுகொண்டுவந்தபோது, அவர்கள் ஆங்கிலேய நாட்டில், நார்மன் பாஷையை நிலைநிறுத்தப் பார்த்தும், முடியாமல், ராஜாங்கபாஷையுங்கூட ஆங்கிலேயமாய்த்தான் இருக்கவேண்டுமென்று, ஆங்கிலேய ஜனங்கள் தமது ஸ்வதேசாபிமானத்தாலும், ஊக்கத்தாலும், ஒற்றுமையாலும், ஒரேபிடியாய் கடைப்பிடித்து ஸாதிக்கவில்லையா?

தமிழ் பாஷையைக் கைசோரவிட நமக்கு மனம் வரலாமா? "காக்கையும்தன் குஞ்சைப் பொன்குஞ்சாக பாவிக்க, நமது பாஷையை, தினே தினே ஓங்கி வளர்ந்தேறச் செய்வது நமது கடமை அன்றோ? தமிழ் இருந்த நிலைமையை நோக்குங் காலத்து, "நீ இருந்த உச்சியென்ன, நீ விழுந்த பள்ளமென்ன" என சொல்லிக்கொள்ள வேண்டியிருக்கிறதே! நம்மால் கூடியவரையில், நம் தமிழ் பாஷையை வாசிப்போமாக! வ்ருத்தி செய்வோமாக! விசாரிப்போமாக! இது நமக்கு ஏற்பட்டிருக்கும் கடமையாகும்.

ஸி. அங்கண்ணன்.



## THE NEW TAXES.

## புது வரிகள்.

இந்த மார்ச்சு மீ 1-ந்தேதியன்று வைஸ்ராய் சட்ட ஸபையில், இந்தியா கவர்ன்மெண்டின் வரவுசெலவு மெம்பராகிய ஸர் வில்லியம் மேயர் அடுத்த ஸர்க்கார் வர்ஷமாகிய 1916-1917-ம் வர்ஷத்துக்கு வரவுசெலவு மதிப்புத் திட்டங்களை விவரித்துச் சொன்னார். புதுவரிகள் ஒன்றும் போடாமலிருந்தால் அடுத்தவர்ஷத்தில் (1916-17) 123-கோடியே 82-லக்ஷம் ரூபாய் ஸர்க்காருக்கு வரும்படி கிடைக்கும். அதே வர்ஷத்தில் ஸர்க்காருக்கு ஏற்படக்கூடிய செலவு 128-கோடியே 26-லக்ஷம் ரூபாயாகுமென்று மதிப்பிட்டிருக்கிறார்கள். ஆகையால் 4-கோடியே 44-லக்ஷம் ரூபாய் வரவுக்குமேல் செலவாகிறது.

இதில் ஏறக்குறைய 54-லக்ஷம் ரூபாய் மாகாண கவர்ன்மெண்டுகளின் அதிகப்படி செலவாகும். அதுபோக 3 கோடியே 90 லக்ஷம் ரூபாய் இந்தியாகவர்ன்மெண்டின் அதிகப்படி செலவாகும்.

இந்த வர்ஷத்திலும் 6-கோடி ரூபாய் வரவுக்கு மேல் செலவு ஏற்படுமென்று மதிப்பிட்டிருந்தார்கள். இந்த அதிகப்படித் தொகைக்காக கவர்ன்மெண்டார் கடன் வாங்கினார்கள். வருகிற 1916-17-ம் வர்ஷத்தில் வரவுக்குமேல் அதிகமாக ஏற்படுமென்று மதிப்பிட்டிருக்கும் அதிகப்படிச் செலவுக்காக கடன் வாங்கலாமென்றால், தற்போது இங்கிலண்டில் கடன்வாங்க ஸௌகர்யமில்லாமலிருக்கிறதென்று இந்தியா மந்த்ரி தெரிவித்திருக்கிறார். இந்தியாவில் அதிகமாய் கடன் கிடைப்பதென்பது கஷ்டம். இவைகளை உத்தேசித்து இந்தியா கவர்ன்மெண்டார் புதுவரிபோட்டிருக்கிறார்கள். இந்தப் புதுவரிகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். (1) ஏற்றுமதி இறக்குமதி வரிகளை உயர்த்துவது, (2) உப்புவரியை உயர்த்துவது (3) வருமானவரி விகிதங்களில் சில மாறுபாடுகள் செய்வது.

I. (1) இறக்குமதி வரிகள்.—இதுவரையில் அநேக இறக்குமதிப் பொருள்களுக்கு அவைகளின் மதிப்பில் நூற்றுக்கு 5 வீதம் வரி போட்டு வந்தார்கள். இப்படி மதிப்பில் நூற்றுக்கு 5-வீதம் வரிபோட்டிருந்த பொருள்களில் சர்க்கரையைத் தவிர மற்றவைகளுக்கெல்லாம் மதிப்பில் 100-க்கு $7\frac{1}{2}$-வீதம் வரி போட்டிருக்கிறார்கள். இப்படி வரியை உயர்த்துவதால் 63-லக்ஷம் ரூபாய் அதிகப்படி வருமானம்கிடைக்கும்.

சர்க்கரை நமது தேசத்துக்கு ஏராளமாய் இறக்குமதியாகிறது. இந்தியாவில் சர்க்கரை செய்ய வஸதிகள் இருக்கின்றனவாதலால், அதன் இறக்குமதி வரியை உயர்த்துவதால் ஜனங்களுக்கு அதிக கஷ்டமேற்படாதென்று எண்ணி, கவர்ன்மெண்டார் முன்பு சர்க்கரைக்கு நூற்றுக்கு 5-வீதம் போட்டிருந்த வரியை 10-வீதம் உயர்த்தியிருக்கிறார்கள். இதனால் 60-லக்ஷம் ரூபாய் அதிக வருமானம் கிடைக்கும்.

அநேக ஸாமான்கள் வரியில்லாமல் இறக்குமதியாகி வந்தன. இப்போது அவைகளில் சிலவற்றிற்கு நூற்றுக்கு $2\frac{1}{2}$-வீதமும், சில வற்றிற்கு நூற்றுக்கு $7\frac{1}{2}$-வீதமும் வரி போட்டிருக்கிறார்கள். நூற்றுக்கு $2\frac{1}{2}$-வீதம் வரிபோட்டிருக்கும் ஸாமான்களாவன: தான்யங்கள், பருப்பு வகைகள்; தேயிலைப்பெட்டிகள், இந்தப் பெட்டி

கள் செய்ய உதவும் ஈயத் தகடுகள், விறகு, அச்சடிக்க உதவும் ஸாமான்கள், பருத்தி நூற்பதற்கும் நெய்வதற்கும்உபயோகப்படும் யந்த்ரங்களை தவிர மற்ற யந்த்ரங்கள் ; ரெயில்வே போடுவதற்கு வேண்டிய ஸாமான்கள், கப்பல்கள், ஆகிய இவைகளாகும்.

நிலக்கரி, சுட்ட நிலக்கரி, அடுப்பெரிக்க உதவும் வேறு சரக்குகள் ஆகிய இவைகளுக்கு கிட்டத்தட்ட மதிப்பில் நூற்றுக்கு $2\frac{1}{2}$-வீதம் வரி ஏற்படும்படியாக ஒரு டன்னுக்கு $\frac{1}{2}$-ரூபாய் வீதம் வரி போட்டிருக்கிறார்கள்.

முன்பு வரியில்லாமல் இறக்குமதியான பின் வரும் ஸாமான்களுக்கு 100-க்கு $7\frac{1}{2}$-வீதம் வரி போட்டிருக்கிறார்கள். புதிய பழங்கள், காய்கறிகள், மீன் குடல்கள், மூங்கில், நார்களும் முள்களும், கொம்பு, பக்வப்படுத்தாத சணல், பிண்ணாக்கு, செடிகள், வைரம், சிவப்பு முதலிய கற்கள், முத்து, பரங்கிஸாம்ப்ராணி, ஸாமான்கள் ஏற்றிக் கொண்டு போவதற்கான மோட்டார் வண்டிகள், மண், ஸாதாரண களிமண், மணல்; ஆகிய இவைகளாகும்.

இவ்விதம் வரியில்லாத இறக்குமதிப் பொருள்களுக்கு வரி போடுவதால் 24-லக்ஷம் ரூபாய் அதிக வருமானம் கிடைக்கும்.

இரும்புக்கும் எஃகுக்கும் முன்பு 100-க்கு 1-வீதம் வரியிருந்தது. அதை இப்போது நூற்றுக்கு $2\frac{1}{2}$-வீதம் உயர்த்தியிருக்கிறார்கள். மற்ற உலோகங்களுக்கு முன்பு நூற்றுக்கு 5-வீதம் வரிபோட்டிருந்தார்கள். இப்போது நூற்றுக்கு $7\frac{1}{2}$-ஆக வரியை உயர்த்தியிருக்கிறார்கள். இப்படி உலோகங்களின் வரியை உயர்த்தினதில் 12-லக்ஷம் ரூபாய் அதிகம் கிடைக்கும்.

துப்பாக்கி முதலிய ஆயுதங்களுக்கும் அவைகளுக்கு வேண்டிய மருந்துகளுக்கும் முன்பு நூற்றுக்கு 10-வீதம் வரி போடப்பட்டிருந்தது. அதை இப்போது நூற்றுக்கு 20-வீதம் உயர்த்தியிருக்கிறார்கள். இதனால் 3-லக்ஷம் ரூபாய் அதிகம் கிடைக்கும். மதுபான வகைகளின் மேல் உள்ள இறக்குமதி வரியையும், இந்தியாவில் செய்யப்படும் மதுபான வகைகளுக்குள்ள வரிகளையும் உயர்த்தியிருக்கிறார்கள். இவைகளால் $19\frac{1}{2}$-லக்ஷம் ரூபாய் அதிக வருமானம் கிடைக்கும்.

புகையிலை, சுருட்டு, ஸிகரட்டு முதலியவைகளின்மேல் போடப்படும் வரி பின் வருமாறு. பதம் செய்யாத புகையிலைக்கு ராத்தலுக்கு ஒரு ரூபாவரியாகும். சுருட்டு, ஸிகரெட்டு ஆகிய இவைகளுக்கு விலை மதிப்பின் மேல் நூற்றுக்கு 50-வீதம் வரி. மற்ற புகையிலைச் சரக்குகளுக்கு ராத்தலுக்கு $1\frac{1}{2}$-ரூபாய் வீதம் வரி. இந்த வரிகளால் $4\frac{1}{2}$-லக்ஷம் ரூபாய் அதிகம் கிடைக்கும்.

இறக்குமதியாகும் வெள்ளியின் மேல் ஔன்ஸுக்கு 4-அணா வீதம் போட்டிருக்கும் வரியை அப்படியே விட்டு விடுகிறார்கள். வெள்ளி ஸாமான்களில் உள்ள வெள்ளிப் பாகத்துக்கு ஔன்ஸுக்கு 4-அணா வீதமும், மற்ற பாகத்துக்கு நூற்றுக்கு $7\frac{1}{2}$-வீதமும் வரியை உயர்த்திப் போட்டிருக்கிறார்கள். ஆனால் வெள்ளி ஸாமான்களில் இவ்வளவு பாகம் வெள்ளி இவ்வளவு பாகம் வேறு ஸாமான்கள் என்று குறிப்பிடாமலிருந்தால், அந்த ஸாமான்களின் மொத்தமதிப்பில் நூற்றுக்கு 15-வீதம் வரி செலுத்த வேண்டும்.

(2) ஏற்றுமதியாகும் சரக்குகளின் மேல்வரிகள்.- இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் தேயிலைக்கு 100-ராத்தலுக்கு $1\frac{1}{2}$-ரூபாய்வீதம் வரிபோட்டிருக்கிறார்கள். இந்தத் தேயிலை வரியால் 45-லக்ஷம் ரூபாய் கிடைக்கும். உபயோகமற்ற தேயிலைக்கழிவுக்கு ஏற்றுமதிவரி கிடையாது.

சணலுக்கு 400-ராத்தல் கொண்ட பேலுக்கு $2\frac{1}{4}$-ரூபாய் வீதம் ஏற்றுமதி வரிபோட்டிருக்கிறார்கள்.

சாக்குகள், கயிறுகள், சணல்நூல் முதலிய சணல் பொருள்களுக்கு டன்னுக்கு 10-ரூபாய் வீதமும், மற்ற சணல்பொருள்களுக்கு டன்னுக்கு 16-ரூபாய் வீதமும் வரிபோட்டிருக்கிறார்கள். இந்தச் சணல் வரிகளால் 87-லக்ஷம் ரூபாய் அதிகவரும்படி கிடைக்கும்.



மேற்சொன்ன ஏற்றுமதி இறக்குமதி வரி விகிதங்களை கடல் வ்யாபாரத்துக்கேயல்லாமல், தரைமூலமாய் அன்ய தேசங்களுடன் நடக்கும் வ்யாபாரச் சரக்குகளுக்கும் போட்டிருக்கிறார்கள். தரை வ்யாபாரத்தில் $4\frac{1}{2}$-லக்ஷம் ரூபாய் அதிகமாகக் கிடைக்கும். இப்படி வ்யாபாரவரிகளால் மொத்தத்தில் 3-கோடியே $22\frac{1}{2}$-லக்ஷம் ரூபாய் அதிகவருமானம் கிடைக்கும்.

II. உப்புவரி.—உப்பு வரிமுன்பு மணங்குக்கு 1-ரூபாயாக இருந்ததை $1\frac{1}{4}$-ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். இதனால் 90-லக்ஷம் ரூபாய் அதிக வருமானம் கிடைக்கும்.

3 வருமானவரி.—வர்ஷத்துக்கு 5000-ரூபாய்க்குக் குறைவான வரும்படியுள்ளவர்களுக்கு ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் வரிவிகிதங்களில் யாதொரு மாறுதலும் கிடையாது. 5000-ரூபாய் முதல் 9999 ரூபாய் வரையில் வருமானமுள்ளவர்களுக்கு ரூபாய்க்கு $\frac{1}{2}$-அணா வீதம் வரி போட்டிருக்கிறார்கள். 10000-ரூபாய் முதல் 24,999-ரூபாய் வரையில் வருமானமுள்ளவர்கள் ரூபாய்க்கு 9-பை வீதம் வரிசெலுத்தவேண்டும். 25-ஆயிரம் ரூபாயும் அதற்கு மேலும் வரும்படியுள்ளவர்கள் ரூபாய்க்கு 1-அணா வீதம் வரி செலுத்தவேண்டும்.

ஆக மொத்தம் அதிக வரும்படி 5-கோடியே $47\frac{1}{2}$-லக்ஷம் ரூபாய். முன்பு இந்தியாகவர்ன்மெண்டுக்கு அடுத்த வர்ஷம் வரவுக்கு மேல் 3-கோடியே 90-லக்ஷம் ரூபாய் செலவாகுமென்று மதிப்பிட்டிருக்கிறதாகத் தெரிவித்தோம். இந்த அதிகச் செலவுக்கு வேண்டியதுபோக 1-கோடியே 57-லக்ஷம் ரூபாய் ஸர்க்காரிடம் கையில் மிச்சமாக இருக்கும்.

## WATER AND PLANTS.

BY T. S. RAMA AIYAR.

## தண்ணீரும் செடிகளும்.

க்ருஷ்ணன் கோபாலன் என்ற இரண்டு ஸ்நேகிதர்கள் தங்கள் பள்ளிக்கூடத்திலுள்ள பூந்தோட்டத்தைப் பார்த்துவிட்டு, தாவர சாஸ்த்ர ஆராய்ச்சி அறைக்குள் நுழைந்தார்கள். அங்கே ஒரு ஸீஸாவில் கொஞ்சம் தண்ணீரும், அதனுள் அநேக இலைகளுடைய ஒரு கொப்புமிருந்தன. பக்கத்தில் மேஜையின்மேலும் ஒரு கொப்பு இருந்தது. அப்போது,

கோபாலன்.—க்ருஷ்ணா, இதென்ன ஆச்சரியம், பார்த்தாயா! இந்தக் கொப்புகளிரண்டும் ஒரே மரத்திலுள்ளவை போல் தோன்றுகின்றன. என்றாலும் ஸீஸாவில் இருக்கப்பட்ட கொப்பானது சற்று தளதளப்பாயிருக்க, மேஜையின்மேலுள்ள கொப்புமட்டும்வாடியிருக்கிறதே. ஏன் ?

க்ருஷ்ணன்.—கோபாலா நீ சொல்வது வாஸ்தவமே. ஸீஸாவில் இருப்பது என்னவென்று பார்த்தாயா ?

கோ.—ஆம். பார்த்தேன். ஸீஸாவிலிருப்பது தண்ணீர்தானே. தண்ணீரினால் அந்தக் கொப்புத் தளதள என்று இருப்பானேன். இதை எனக்குச் சற்றுத் தெளிவாய் சொல்லவேண்டும்.

க்ரு.—அதைப்பற்றி எனக்கு நன்றாய் தெரியாது. என்றாலும் நீ அன்புடன் கேட்பதால் எனக்குத் தெரிந்தவரை சொல்லுகிறேன் கவனமாய்கேள்.

நாம் தண்ணீர் சாப்பிடாமலிருக்கமுடியுமா ? அதுபோலவே செடிகளும் தண்ணீரில்லாமல் ஜீவித்திருக்க முடியாது. இந்தக் கொப்புகள் மரத்துடன் சேர்ந்திருந்தபோது அவற்றிற்குத் தண்ணீர் பூமியிலிருந்து வேர்கள் வழியாய் வந்து கொண்டிருந்தது.

செடியின் பாகங்களாகிய இலை, தண்டு முதலியவைகளில் அநேகம் அறைகளிருக்கின்றன.

இவ்வறைகளின் மத்தியில் "ப்ரோடோப்ளாஸம்" என்று சொல்லப்பட்ட ஜீவவஸ்து இருக்கிறது. இந்த வஸ்து அறை எங்கும் பரவியிருக்கும். இப்படிப்பட்ட அறைக்கு நல்ல நிலைமையிலுள்ள அறை என்று பெயர். அந்த ஜீவவஸ்து வாடாமல் அறை எங்கும் பரவியிருக்கிறதற்குத் தண்ணீரே முக்ய காரணமாயிருக்கிறது. தண்ணீரில்லாமற்போனால் மேற்சொன்ன ஜீவவஸ்து சுருங்குகிறது. இதனால் அவ்வறையும் சுருங்குகிறது. இப்படி ஒவ்வொரு அறையும் சுருங்குமானால் அவ்வறைகளாகிய செடி முழுவதும் வாடுகிறது. இப்படிக் கொஞ்சநாள் தண்ணீரில்லாமலிருந்தால் அந்தச் செடி முற்றிலும் பட்டுப்போம்.

இவ்விதம் சுருங்கல் ஏற்படுமுன் கொப்பைத் தண்ணீரில் போட்டுவைத்திருந்தால் அது சுருங்காமல் நன்றாயிருக்கும். நம் வீடுகளில் கீரை விதைத்து சொற்பநாளில் அதைப்பிடுங்கி மற்றோரிடத்தில் நடுகிறோம். நட்ட தினத்தன்று அவைகள் வாடித் தலைசாய்ந்திருக்கின்றன. இரண்டுநாள் அதற்கு ஜலம்பாய்ச்சினோமானால், அவை மறுபடியும் தலைதூக்கி நல்ல நிலைமைக்கு வருகின்றன. அதுபோலவே ஸீஸாவில் போட்டிருக்கப்பட்ட கொப்புத் தண்ணீரிலிருப்பதால் அதின் பாகங்கள் சுருங்காமலிருக்கின்றன. மேஜையின்மேலுள்ள கொப்புக்குத் தண்ணீரில்லாமையால் அது வாடிப்போயிற்று. செடிகள் வாடாமல் நல்ல நிலைமையிலிருக்கவேண்டுமானால் தண்ணீர் அவச்யம். மேலும் செடிகளுக்குப் பூமியிலுள்ள சில பொருள்கள் ஆகாரமாகின்றன. அவை வேர்களின் வழியாய் த்ரவமாய் செல்லுகின்றன. இதற்குத் தண்ணீர் அவச்யம். செடிகளின் உட்பாகங்களில், ப்ரயோஜனமற்றதும் அவற்றிற்கே கெடுதலையுண்டுபண்ணக் கூடியதுமான சில வஸ்துக்களுண்டாகின்றன. இவையெல்லாம் த்ரவமாய் பூமிக்குள் வேர் வழியாய் செல்லுகின்றன. இப்படிப் போவதற்கும் தண்ணீர் வேண்டியது அவச்யமே.

இன்னும், இரண்டு தொட்டிகளுள் ஒன்றில் ஈரமான மரத்தூளையும், மற்றொன்றில் நன்றாய் உலர்ந்த மரத்தூளையும் போட்டு ஒவ்வொன்றிலும், பட்டாணி, மொச்சை இவை போன்ற காய்ந்த விதைகளை விதைக்கவும்: ஒன்று அல்லது இரண்டு வாரம் கழிந்தபிற்பாடு அவ்விரண்டு தொட்டிகளிலுள்ளவைகளையும்ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, விதைகள் முளைப்பதற்குத் தண்ணீர் அவச்யம் வேண்டுமென்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்கும்.

தவிரவும் டெஸ்ட் ட்யூப்என்று சொல்லப்படும் ஒரு பக்கம் மூடிய கண்ணாடிக் குழாயை எடுத்து அதில், பட்டாணி, மொச்சை இவை போன்ற காய்ந்த விதைகளில் ஒன்று அல்லது இரண்டைப் போட்டு சாராய விளக்கில் சுடப்பண்ணவும். கொஞ்சநேரத்தில் குழாயின் குளிர்ந்த பாகங்களில் முத்து முத்தாய் தண்ணீர் ஒட்டிக்கொண்டிருக்கும். இவ்விதைகளை சிறுசிறு துண்டுகளாக்கி சுட வைத்திருந்தால் தண்ணீர் வெகு சீக்ரத்தில் குழாயின் பக்கங்களில் ஒட்டிக் கொண்டிருக்கக் காணலாம். இவ்விதம் "காய்ந்த விதைகளென்று" சொல்லப்பட்டவைகளிலும் தண்ணீரிருக்கிறதென்று ரூபிக்கலாம்.

சில விதைகளை யெடுத்து அவற்றை ஒரு தராசில் போட்டு நிறுத்து, அவற்றின் நிறையைக் குறித்துக்கொள்ளவும். பிற்பாடு ஒரு கிண்ணத்தில் மணலைப் போட்டு அதில் இவ்விதைகளை வைத்து அடியில் ஒரு விளக்கு வைத்துச் சுடப்பண்ணவும். கொஞ்சநேரம் கழிந்த பிற்பாடு, அவ்விதைகளை யெடுத்து நிறுத்துப் பார்த்தால் அவைகளின் நிறை குறைந்திருக்கும், இதனால் இவற்றிலுள்ள தண்ணீரானது உஷ்ணத்தினால் ஆவியாய்ப் போயிற்றென்றும், அதனால் நிறை குறைகிறதென்றும் தெரிகிறது.

ஆகவே, தண்ணீரானது செடிகளுக்கு வேண்டிய முக்யமான வஸ்துக்களிலொன்று.

டி. எஸ். ராமய்யர்.



# REVIEW OF THE PRESS.

## பத்ரிகை ஆராய்ச்சி.

### THE SASTRAS ON POST PUBERTY MARRIAGE.

### ருதுமதீ விவாகத்தைப்பற்றிய சாஸ்த்ர தாத்பர்யங்கள்.

பெரியகுளம் வக்கீல் எம். ஆர். ஸ்ரீநிவாஸய்யர் மதுரை 'செந்தமிழ்ப்' பத்ரிகையில், பெண்களுக்கு ருதுவானபிறகு கல்யாணம் செய்வது யுக்தமா என்னும் விஷயத்தைப்பற்றி ஒரு நீண்ட வ்யாஸம் எழுதிவருகிறார். அந்த வ்யாஸத்தில் விவரித்த கொள்கைகளைப் பற்றி 'செந்தமிழ்' பத்ராதிபராகிய மிஸ்டர் திருநாராயணய்யங்கார் ஒரு பராமர்சமும் அதோடு எழுதிவருகிறார். அந்த வ்யாஸத்தில் ருதுமதீ விவாகம் சாஸ்த்ர ஸம்மதமா என்பதைப்பற்றி இருவரும் எழுதுவதை இங்கு சுருக்கி எழுதுகிறோம். மிஸ்டர் ஸ்ரீநிவாஸய்யர் ருதுமதீ விவாகம் சாஸ்த்ர சம்மதமென்றும், மிஸ்டர் நாராயணய்யங்கார் அது சாஸ்த்ர ஸம்மதமல்லவென்றும் ஸாதிக்கிறார்கள்.

மிஸ்டர் ஸ்ரீநிவாஸய்யர் சொல்லுவதாவது:—

1. சில ஸ்ம்ருதிகளில் ருதுவான பின்பு விவாஹம் செய்விக்கும் தகப்பனுக்கும், அவ்வதூவரர்களுக்கும் ஏதோ பாபம் ஸம்பவிக்குமென்றுமட்டும் சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய, ஒரு ஸ்ம்ருதியிலாவது ருதுமதீ விவாகம் விவாஹமேயல்லவென்றாவது, அவ்விவாஹம் செய்துகொண்ட வதூவரர்கள் ஜாதி ப்ரஷ்டர்களாவார்களென்றாவது சொல்லப்படவில்லை. ஆனால் நாரதர், பெண் பெரியவளானபிறகு அவளுக்கு சீக்ரம் விவாஹம் நடக்கவேண்டுமென்று கூறுகிறார். க்ருஹ்ய ஸூத்ரத்தில் பெண் பெரியவளான மூன்று வர்ஷத்துக்குள் அவளுக்கு விவாகம்செய்து வைக்காவிட்டால், அவளுடைய தகப்பன் பாபமுள்ளவனாகிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதற்கு செந்தமிழ் பத்ராதிபர் எழுதுவதாவது:—

இங்கு, "ருதுமதீவிவாஹத்துக்கு ஏதோ பாபம் சொல்லப்பட்டிருப்பதல்லது ஒரு ஸ்மிருதியிலாவது அது விவாஹமாகமாட்டாதென்றாவது, செய்யப்பெற்றவர்கள் ஜாதிப்ரஷ்டர்களாவரென்றாவது சொல்லப்படவில்லை" என்ற விஷயங்கள். நாம் உத்தேசிக்கும் ருதுமதீ விவாஹத்துக்கு எவ்வளவுதூரம் ஸாதகமாகின்றனவென்று பார்ப்போம்.

ஸ்ம்ருதிகள், ருதுமதீவிவாஹம் பாபக்ருத்யமென்று சொல்லியிருப்பதைத் தெரிந்துகொண்டே ப்ரவிர்த்திக்கும் நாம், அப்பாபத்துக்குப் ப்ராயச்சித்தமுண்டா இல்லையாவென்பதை அவச்யம் அறியவேண்டியவர்களாயிருக்கிறோம். ப்ராயச்சித்தமில்லையென்று ஏற்பட்டுவிட்டால், ப்ராயச்சித்தமில்லாத புத்திக்ருத பாபம் ஜாதிப்ரம்சந காரணமாகுமா ஆகாதா வென்பதையும் பார்க்கவேண்டும். அது ஜாதிப்ரம்சந காரணமாகும் பக்ஷத்தில் ஜாதிப்ருஷ்டர்களாவார்களென்று சாஸ்த்ரம் சொல்லவேண்டியதில்லையே! ருதுமதீவிவாஹம் பாபகர்மமென்று சொல்லப்பட்டிருக்கும்போது, புண்யகர்மமாகிய விவாஹமாக மாட்டாதென்பது தனியாய்ச் சொல்லவேண்டிய தவசியமா! ஆகையால் பாபமுண்டென்று தெரிந்து செய்யப்பட்ட ருதுமதீவிவாஹத்துக்கு ப்ராயச்சித்தமுண்டா இல்லையாவென்பதைப் பரியாலோசித்து, ப்ராயச்சித்தமுண்டென்று தெரிந்துகொண்டாலன்றி, ருதுமதீ விவாஹம் விவாஹமில்லையென்றாவது, செய்தவர் ஜாதிப்ருஷ்டர்களென்றாவது ஸ்மிருதிகள் சொல்லாதிருப்பதே அநுகூலமென்று கொள்ளுவதற் கிடமில்லையென்று தோன்றுகிறது.

"பெண் பெரியவளானபிறகு சீக்ரம் விவாஹம் நடக்கவேண்டும்" என்ற நாரதவாக்யம் ருதுமதீவிவாஹ நிஷேதவாக்யங்களை விரோதிப்பதுபோலத் தோன்றுகிறது. இது எந்தமட்டில் விரோதிக்கிறதென்பதைப் பரியாலோசிப்போம். இந்த வாக்யத்துக்குப் பெண் பெரியவளானபிறகு விவாஹம் செய்யவேண்டும் என்பதில் தாத்பர்யமா? அல்லது பெண் பெரியவளாய்விட்டால் விவாஹம் தாமஸிக்கலாகாது என்பதில் தாத்பர்யமா? என்பதைப் பரியாலோசிக்கவேண்டும். சீக்ரம் என்று விரைவுபடுத்துவதால், தாமஸிக்கக்கூடாதென்பதில் முக்யநோக்கமென்றும், இவ்வளவுகாலத்துக்குள் என்று சொல்லாமையால் ந்யாயமாய் எவ்வளவுதூரத்துக்குள் செய்யமுடியுமோ அவ்வளவுக்குள் செய்துவிடவேண்டுமென்றும், கீழெல்லை சொல்லாமையால் ஸ்நாநாந்தரமே செய்யக்கூடுமானாலும் செய்துவிடவேண்டுமென்றும், அப்படிச்செய்யாமல் தாமஸித்துச்செய்தால் அந்த விவாஹம் விதிப்படிசெய்ததாகமாட்டாதென்றும் தாத்பர்யங்கொள்ளக்கிடக்கிறது.

அன்றியும், ருதுமதியானால், சீக்ரம் விவாஹம் செய்ய

வேண்டுமென்று விரைவுபடுத்துவதால் ருதுமதியாகு முன்னே பிதா ஸாவகாசமாக விவாஹம் செய்விக்கக் கடமைப்பட்டவனென்பதும், அப்படிச் செய்யாதிருப்பது விவாஹகால நிர்ணயத்தைக் கடப்பதாயிருக்கிறதென்பதுமான அபிப்பிராயத்துடன் கூடியிருப்பதால், நாரதருக்கும் கந்யாவிவாஹமே அங்கீகாரமென்பதும், ருதுவானபின் தாமஸிப்பதில் இஷ்டமில்லையாதலால், தாமஸித்துச்செய்யும் விஷயத்தில் ருதுமதீவிவாஹ நிஷேதவாக்யங்களில் தமக்கு ஆக்ஷேபமில்லையென்பதும் வெளியாகின்றன.

இதனால் விவாஹங்கள், கந்யாவிவாஹம், ருதுமதீ சீக்ரவிவாஹம், ருதுமதீவிளம்பவிவாஹம் என மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றன. அவற்றுள், கந்யா விவாஹத்தால் பிதாவுக்கு ஊர்த்வலோக ப்ராப்திக்கு ஹேதுவாகிய புண்யம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் அது புண்யகர்மமாகிறது. காலவிளம்ப ருதுமதீவிவாஹத்தால் பிதாவுக்கும் வதூவரர்களுக்கும் பாபம் சொல்லப்பட்டிருப்பதால், அது பாபகர்மமாகிறது. இவ்விரண்டு விஷயத்திலும் நாரதவாக்யத்துக்கும் ஒரே அபிப்ராயமென்பதை ஆக்ஷேபிக்க இடமில்லை. ஆனால் ருதுமதி சீக்ர விவாஹத்தில்மட்டும் கந்யாவிவாஹ விதிவாக்யங்களையும், ருதுமதி விவாஹ நிஷேதவாக்யங்களையும் விரோதிப்பதுபோல் தோன்றுகிறது. அதுவும் வாஸ்தவமா என்பதைப் பரியாலோசிப்போம்.

சாஸ்த்ரவாக்யங்களெல்லாம் விதிநிஷேதங்களையே விஷயமாகக் கொண்டுள்ளன. அவை விதித்தவிஷயத்தையே நிஷேதித்தாலும், நிஷேதித்த விஷயத்தையே விதித்தாலும் ஒரேவிதமான அபிப்ராய மில்லையென்று சொல்லலாம். இங்கே விதித்ததை நிஷேதிக்கிறதா, நிஷேதித்ததை விதிக்கிறதாவென்று பார்க்கவேண்டும். காலக்ரமத்தில் முன்னாலே கந்யாவிவாஹம் விதிக்கப்பட்டிருக்கிறது. பின்னாலே ருதுமதீவிவாஹம் நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. இவ்விரண்டுக்கும் நடுவே அஸூரஸந்திபோல ருதுமதி சீக்கிர விவாஹமொன்று ப்ராப்தமாகவே, ருதுமதியானகாரணத்தைக்கொண்டு, ருதுமதீ விவாஹ நிந்தாவாக்யம் நிஷேதிக்கத்தொடங்கலாம். ஆனால், கந்யாவிவாஹம் செய்விக்க ப்ரதீக்ஷித்திருக்கும் பிதா தெய்வாதீனமாய் ப்ராப்தமான ருதுவுக்குக் காரணமாகாமையால், அவனைப் பாபத்துக்குள்ளாக்குவது ந்யாயமில்லாதிருப்பதாலும், ம்ருததிதியில் பண்ணக்கடவதான ச்ராத்தத்தை ஆசௌசாதிகளாலுபஹதியுண்டாகவே, அது கழிந்தவுடனே தாமஸியாது வேறுதிதியிற் செய்தாலும் தத்தினசிராத்தமாகவே பாவிக்கப்படுவதுபோல், ருதுமதீ சீக்ரவிவாஹமும் கந்யா விவாஹம்போலவே பாவிக்கத்தகுமென்று தோன்றுவதாலும் சீக்ரம் செய்துகொள்ளும்படி எச்சரிக்கத்தக்கதாகவே யிருக்கிறது.

ஆகையால் இங்குக் காட்டப்பட்ட நாரதவாக்யமானது, ருதுமதீ விவாஹ நிஷேதவாக்யத்தையாவது கந்யாவிவாஹவிதி வாக்யத்தையாவது விரோதியாமலே ஆதரித்துக்கொண்டு, அவ்விதி நிஷேதங்களிரண்டும் கூடிச்செய்த ஒரு எச்சரிக்கை நோட்டீஸ்போலிருப்பதால் மூன்றும் ஒரேவித அபிப்ராய முடையவாயிருக்கின்றன. ஆகையால் இங்குக் காட்டப்பட்ட நாரதவாக்யமானது நாம் உத்தேசிக்கும் ருதுமதீ விவாஹத்துக்கு ஆதாரமில்லாமற்போவதுமன்றி விரோதமுள்ளதாகவும் இருக்கிறதென்று தோன்றுகிறது.

“ருதுமதீயானவளுக்கு மூன்று வர்ஷத்துக்குள் விவாஹம் செய்துவைக்காத பிதா பாபமுள்ளவனாகிறான்” என்ற க்ருஹ்யஸூத்ர வாக்யத்தைப் பார்க்கும்பொழுது, ருதுமதீ விவாஹ விஷயத்தில் தாராள சிந்தையோடு அநுகூலம் செய்வதாயிருப்பதுபோலத் தோன்றுகிறது. ஆயினும் அதன் தாத்பரியமும் எப்படி யிருக்கிறதென்று பார்க்கவேண்டும். இது ருதுமதீ விவாஹவிதி வாக்யமா நிஷேதவாக்யமா என்பதை ஆராயுமிடத்து, மூன்று வர்ஷத்துக்குள் விவாஹம் செய்துவைக்கவேண்டும் என்பது சொற்பொருளாயில்லாமையால் விதிவாக்யமாகிறதில்லை. குறிப்பிட்ட மூன்று வருஷகாலத்தையும் அதிக்ரமித்தவன் பாபத்தையடைகிறான் என்று நிஷித்தபலமே சொற்பொருளாயிருப்பதால் நிஷேதவாக்யமாகிறது. இது ருதுமதீ விவாஹத்தை எப்படி நிஷேதிக்குமென்றால் மூன்று வருஷத்தை அதிக்ரமித்துச் செய்வதும், மூன்று வருஷத்துக்குள் செய்யாமையும் ஒன்றேயாகையால் மூன்று வருஷத்தை அதிக்ரமித்து ருதுமதிக்கு விவாஹம் செய்யும் பிதா பாபத்தை யடைகிறான் என்பது தாத்பர்யமாயிருப்பதால் இது ருதுமதீ விவாஹ நிஷேதவாக்யமாகவே யிருக்கிறது. இது கந்யா விவாஹ விதிவாக்யத்துக்கு விரோதமில்லாமலும் அதை ஆதரித்துமிருக்கிறது.

எப்படியென்றால், கந்யாவிவாஹம் பண்ணக் கடவ



னான பிதா அந்தப் புண்யத்தால் ஊர்த்வலோக ப்ராப்தியடைபவனா யிருக்க, அதனை யிழக்காது கந்யாவிவாஹம் செய்யச் சித்தனாகவேயிருப்பான். அப்படிச் செய்வதற்குள் அவசமாய் ருதுமதியாய்விட்டால் அது அவன் செய்த தவறாகமாட்டாது. அவசமாய்த் தவறிய காரியத்தைக் கால தாமஸமில்லாமல் அடுத்துச் செய்யவேண்டுவது அவச்யமாகையால் ருதுமதியானவளுக்கு சீக்ரம் விவாஹம்செய்யக் கடமைப்பட்டிருக்கிறான். ஆனால் ஒரு விவாஹம் நடப்பதற்கு அநுரூபமானவரனைத் தேடவும், த்ரவ்ய ஸம்பாதனம் செய்யவும், முஹூர்த்தகாலங்கள் வாய்க்கவும், எதிர்பாராது நேரக்கூடிய இடையூறுகள் நீங்கவும் போதுமான ஸாவகாசமிருக்கவேண்டுமாகையால், அவற்றிற்கெல்லாம் பரமாவதியாக மூன்றுவருஷம் போதுமான ஸாவகாசம் வைத்துக்கொள்ளட்டும் என்று தாராளமான காலாவதியும் கொடுக்க, அதையும் கடப்பானாகில், அவன் புத்திபூர்வமாகவே சாஸ்த்ரத்தைக் கடந்தவனாக மதிக்கப்பட்டுப் பாபத்துக்குள்ளாவதால் பஹிரங்க பாபியாகிறான் என்று தாற்பரியம் பண்ணுவதற்குப் பொருந்துவதாயிருக்கிறதன்றி, ருதுமதீ விவாஹத்தை ச்லாகித்ததாகக்கொள்ள இடமில்லையாகையாலும், விளம்பிக்கலாகாதென்பதே முக்ய தாத்பரியமாகையாலும், சீக்ரம் செய்யவேண்டுமென்ற நாரத வாக்ய தாத்பரியமும், தாமஸிக்க லாகாதென்ற ப்ரகிருதவாக்ய தாத்பரியமும் ஒன்றாகவே யிருக்கிறது. சீக்ரமென்றதனாற் கீழெல்லைமட்டுங் குறிக்கப்பட்ட நாரதவாக்யத்தின் சேஷமாகவே, மூன்றுவருஷங் கடக்கலாகாதென்று மேலெல்லை சொல்லியபடியால் இரண்டும் ஒன்றாய்க் கந்யா விவாஹத்திலேயே நோக்குள்ளனவா யிருக்கின்றன. ஆகையால் இந்த ருதுமதீ சீக்ர விவாஹ ப்ரஸங்கமானது யதாயோக்யமாக (எற்புழிக்கோடலால்) உபநயனம்போலப் பன்னிரண்டு வயதுக்குமேல் விவாஹகாலம் விதிக்கப்பட்ட பிராஹ்மணேதர கந்யாவிஷயங்களில் ஸ்வபாவ சித்தயாகவே ஸம்பவித்துச் சரிதார்த்தமாயிருப்பதால், அவ் வயதுக்குள் விவாஹ காலம் விதிக்கப்பட்ட பிராஹ்மண கந்யாவிஷயத்திற் ப்ரவர்த்திப்பதில் ஸாமர்த்யமற்றதா யிருக்கிறதென்று சாஸ்த்ர த்ருஷ்டியால் அறியத்தக்கதா யிருக்கிறது.

மிஸ்டர் ஸ்ரீநிவாஸய்யர் சொல்லும் இன்னொரு காரணமாவது:—

பௌத்யாயனர், மனு, கௌதமர், வஸிஷ்டர், யாக்ஞவல்க்யர், ஆபஸ்தம்பர் ஆகிய இவர்களுடைய ஸ்ம்ருதிகளிலும், க்ருஹ்யஸூத்ரங்களிலும், விவாஹம் செய்த நாலாவதுநாள் சாந்திமுகூர்த்தம் (கர்ப்பாதானம்) செய்யவேண்டியது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் ஷை ஸ்ம்ருதிகர்த்தாக்களில் சிலர் ருதுவாவதற்கு முன் விவாஹம் செய்யவேண்டுமென்ற அபிப்ராயத்துக்கு இது விரோதமாக இருக்கிறது.

அதுவுமல்லாமல் கல்யாணத்தில் சொல்லப்படுகிற ஒவ்வொரு மந்த்ரமும் உடனே க்ரஹஸ்தாச்ரம தர்மத்தை நடத்தக்கூடிய புத்தியறிந்த பெண்ணுக்கும், அவள் புருஷனுக்கும் ஒப்பந்தப் பேச்சுகள் ஏற்படுத்துவதுபோ லிருக்கிறது. பாணிக்ரஹண மானபிறகு பெண் தன் புருஷன் வீட்டுக்குப்போய் 3-நாள் இருவரும் ப்ரும்மசர்ய வ்ருதத்தை அனுஷ்டித்து 4-வது தினம் படுக்கையறையில் விடப்பட்டு சாந்தி முகூர்த்தமும் அப்பொழுதே நடத்தப் படுத்துவதாகவும் தெரிகிறது.

இதற்கு செந்தமிழ்ப் பத்திராதிபர் சொல்லும் ஸமாதானமாவது:—

பௌத்யாயன முதலிய ஸ்ம்ருதிகளிலும், க்ருஹ்யஸூத்ரங்களிலும் விவாஹம்செய்த நாலாம்நாள், கர்ப்பாதானம் செய்யவேண்டுமென்று சொல்லி யிருப்பதானது, விவாஹ கந்நிகைக்குக் கர்ப்பாதான யோக்யமான ஆர்த்தவத்வம் இருக்கவேண்டுமென்னும் ஊஹத்துக் கிடம்கொடுக்கிறது. இந்த ஊஹமானது கந்யா விவாஹவிதி வாக்யத்தை விரோதிப்பதுபோலத்தோன்றுகிறது. ஆனாலும் வாஸ்தவத்தில் விரோதிப்பதில்லை. ஏனென்றால் சப்த ப்ரமாணமில்லாத இடங்களில் ஊகம் தலையெடுப்பதல்லது, சப்த ப்ரமாணமுள்ள இடங்களில் அதற்கு ப்ரதிகூலமாக ஊகம் தலையெடுக்க மாட்டாதென்பது சாஸ்த்ர ஸம்மதமாயிருக்கிறது.

இதனைச் “சொல்லில் வழியது உய்த்துணர்வு” எனச் சேனாவரையர் பலவிடங்களிற் காட்டுதலாலும் அறியலாம்.

அன்றியும், கர்ப்பாதானமானது பீஜசுத்தியின்பொருட்டுச் செய்யப்படும் மாந்திரிக ஸம்ஸ்கார விசேஷமாகையால், அது ஸார்த்தகமாகவே யிருக்கவேண்டுமென்னும் நியமமில்லை. ஆயினும் யதாயோக்கியம் வர்ணாந்தரவிவாஹத்தில் ஸார்த்தக மாந்திரிக ஸம்ஸ்காரமாய்ச் சரிதார்த்தமாகிறபடியால், ப்ராஹ்மண விவாஹ விஷயத்திற் கேவலமாந்திரிக ஸம்ஸ்காரமா யிருப்பதால் கந்யாவிவாஹ விதிவாக்யங்களை விரோதிக்க வில்லையென்று தோன்றுகிறது.

இந்த ஸம்ஸ்காரம் ருதுமதியானபின்பே செய்யத்தக்கதா யிருந்தபோதிலும் ருதுவானவுடன் காமாதுர ஸங்கமனம் நேர்ந்தாலும், பீஜசுத்தி யுண்டாயிருக்கும் பொருட்டு விவாஹத்தில் ஆகர்ஷித்து ஸங்க்ரஹமாகச் செய்யப்படுகிறது. அப்படிச் செய்யப்பட்டிருந்தபோதிலும், ஆகர்ஷித்துச் செய்யுங் கர்மங்களைப் (ஷோடசமாஸிகாதிகளை) பின்னும்செய்தற்குரிய அவ்வக்காலங்களில் விஸ்தரித்துச் செய்வதுபோலவே, ருதுசாந்தியிலும் விஸ்தரித்துச் செய்யப்படுகிறது. ஆகையால் விவாஹத்தில் விதிக்கும் கர்ப்பாதான ஸம்ஸ்காரமா

ணது ப்ராஹ்மண வர்ணத்திலும் ருதுமதீ விவாஹம் சாஸ்த்ரசித்தமென் றாகிப்பதற்கு ஸாதகமாகுமென்று தோன்றவில்லை.

அன்றியும், சுப முஹூர்த்தங்களை ப்ரதீக்ஷித்துச் செய்யுங் க்ரியாவிசேஷங்களில் அபேக்ஷயபூர்த்தி யிருக்க வேண்டுமென்னும் நியமமில்லை யென்பதை, மழை பெய்யாதிருக்கும் போதே உழவுகொடாத நிலத்திலும் கர்ஷகர் நாளேர்வைப்பதாலும், உத்ஸவங்களில் விதான ஸாமக்ரிவருமுன்னமே நாட்கால் நடுவதாலும், க்ருஹ நிர்மாண ஸாமக்ரிகள் வருமுன்னமே வாஸ்து செய்வதாலும் அறியலாம்.

விவாஹத்தில் தம்பதிகளின் ஒப்பந்தப் பேச்சான மந்த்ரங்களெல்லாம் புத்தியறிந்த பெண்ணுக்கும் புருஷனுக்கும் நடக்கும் ஒப்பந்தப் பேச்சுகள்போ லிருந்த போதிலும் அவையும் வர்ணாந்தர விஷயத்திலும், ப்ராஹ்மண விஷயத்திலும் முறையே ஸார்த்தக கேவல மாந்திரிக ஸம்ஸ்காரணங்களாய் யதாயோக்ய மூபபந்நங்களாகவே யிருக்கின்றன. இப்படிக் கொள்ளாவிட்டால் உபநயநத்தில், குரு சிஷ்ய ஸம்பாஷணரூபமாகவும், ப்ரார்த்தனரூபமாகவும், தேவதாஸ்தோத்ரரூபமாகவும் வேதமந்த்ரங்கள் சொல்லப்படுவதால் உபநயநமும் வேதவாக்யார்த்த க்ரஹண ஸாமார்த்யமுள்ளவனுக்கே செய்யவேண்டுமென்று கொள்ளவேண்டியதாய் முடியுமென்று தோன்றுகிறது.

## IN PRAISE OF SIVA.

### சிவ ஸ்தோத்ர நாமாவளி.

ஸமீபத்தில் வெளியான 'லோகோபகாரியில்' சென்னை ப. ரத்னஸபாபதிசெட்டியார் சிவபிரான்மேல் பின்வரும் ஸ்தோத்ரங்களை கவனம்செய்து வெளியிட்டிருக்கிறார். அவைகளை இங்கு ப்ரசுரிக்கிறோம்.

சிவனார் முழுமுதற் கடவுளராம்.
சீருறு மங்கள சங்கரராம்.

[illegible]ழில்பெற எவர்க்கு முறையோராம்.
எழுறக் காமனை யெரித்தோராம்.

கங்கா சிரமொளிர் காரணராம்.
கடுவிடமுண்ட கறைமிடறாம்.

கொடுந்தொழிற் கூற்றை யுதைத்தோராம்.
குன்றம் வில்லாய்க் குழைத்தாராம்.

ஏற்றுயர் வாகன மேறினராம்.
எழில்பெறு சோதியுட் சோதியராம்.

திரியம் பகனெனத் திகழ்பவராம்.
திகழ்சல மகடவழ் சடையோராம்.

முக்கணுயொளிர் நாயகராம்.
[illegible]கோரிடம் நயந்தாராம்.

முக்கட்பகவன் அவர் பெயராம்.
மூதில கோர்புகழ் பசுபதியாம்,

பரமன் கருணை லயநிதியாம்.
பைந்தொடைக் கொன்றைச் சூடுவராம்.

கொலைமழுவாளி அவர் பெயராம்.
கோதறு ஈமத் தாடுவராம்.

பிஞ்ஞக னெனும்பேர் பூண்டோராம்.
பித்த னுயுயி ராண்டோராம்.

ஆனை யுரித்ததள் அணிந்தோராம்
அரன்சிவன் ருத்ரன் அவர்பெயராம்.

காலனைக் காலா லுதைத்தோராம்.
கபால மேந்திய மூர்த்தியராம்.

நீல நிறமுறு கழுத்தினராம்.
நீறணிக் கடவு ளென்பவராம்.

அரவா பரண மணிந்தவராம்.
ஆரழ லாடி நிறைந்தவராம்.

பிறையது சூடிப் பிறங்குவராம்.
பெருமான் உமாபதி அவர்பெயராம்.

அழலது வேந்தி ஆடுவராம்.
அமல னெனப்பலர் தேடுவராம்.

ஆநந்த னுய்க்களித் தாடுவராம்.
அவிர் பரசேந்தின பாணியராம்.

ஆடுவர் சுடலையி லவர்தொழிலாம்.
அருமறை கூறுவ தவர்திறமாம்.

மானிட மேந்தி விளங்குவராம்.
மறைமுத லியோகியா யிலங்குவராம்.

புலித்தோலாடை யுடுப்பவராம்.
புரமென் றெரித்து நகைப்பவராம்.

பினாகங் கொண்ட பாணியராம்.
பேயோ டாடித் திரிபவராம்.

பூதநாத னவர் பெயராம்.
புணர்கங் காள மவர்க்ரமமாம்.

ஞான மூர்த்தியா யிருப்பவராம்.
நலமரு ளீச னநாதியராம்.

ஐம்முகப் பகவ னவாராம்.
ஆதி பாண்டரங்கப் பேராராம்.

அந்தி வண்ண மடைந்தாராம்.
ஆலமர் தேவாய் அமர்ந்தாராம்.

நந்தி நாமம் பெற்றவராம்.
நம்ப னெனும்பே ருற்றவராம்.

நாத தற்பர வென்பாராம்.
நானிலத் தன்பாய் நவில்வாராம்.

கண்ணுதல் பாதப் புகலோராம்.
கைலை யாளியென் பெரியாராம்.

இன்னன சிவன்பெய ரென்பாராம்.
இப்புவி மிசையொளிர் பெரியோராம்.

சிவசிவ சிவவென் றேற்றுவராம்.
சீருடை யான்கழல் போற்றுவராம்.



# Departmental Notes.

# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.

### வித்யாவிஷயம்.

**World Statistics of Illiteracy.**

பற்பல தேசங்களில் உள்ளஎழுதப்படிக்கத் தெரியாதவர்களின் கணக்கு.—மற்றெல்லா தேசங்களையும் விட நமது தேசத்தில்தான் எழுதப்படிக்கத் தெரியாதவர்களின் தொகை ரொம்ப அதிகமாயிருக்கிறது. அடியில்வரும் கணக்கால் ஒவ்வொரு தேசத்திலும் 12-வயதுக்கு மேல்பட்டவர்களுள் நூற்றுக்கு இத்தனைபேருக்கு எழுதப்படிக்கத் தெரியாதென்பது தெரியவரும்.

| | |
|---|---|
| ஜெர்மனி | 1 |
| நார்வே | 1 |
| ஸ்வீடன் | 1 |
| ஸ்விட்ஸர்லண்ட் | 1 |
| ந்யூஸீலண்ட் | 4 |
| ப்ரான்ஸ் | 5 |
| யுனைடட் கிங்டம் | 6 |
| ஆஸ்ட்ரேலியா | 9 |
| ஹாலண்ட் | 10 |
| அமெரிக்கா ஐக்யநாடுகள் | 10 |
| பெல்ஜியம் | 12 |
| ஆஸ்ட்ரியா | 31 |
| இட்டலி | 44 |
| ஐரோப்பிய ரஷ்யா | 78 |

அடியில் வரும் கணக்குகள் அந்தந்த தேசங்களில் பத்து வயதுக்கு மேற்பட்டவர்களின் மொத்தத் தொகையில் நூற்றுக்கு இத்தனைபேர் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் என்பதைக் காட்டுகின்றன.

| | |
|---|---|
| இலங்கை | 78·3 |
| இந்தியா | 92·5 |
| பிலிப்பைன் தீவுகள் | 55·5 |
| ஆசியாவிலுள்ள ரஷ்யா | 87·3 |
| அமெரிக்க நீக்ரோக்கள் | 36·3 |

**War Films in Schools.**

பள்ளிக்கூடங்களில் ஸினிமாடோகிராப் யுத்தப் படங்கள்.—இந்த மாஸம் நடந்த இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் ஆனரபிள் மிஸ்டர் தாதாபாய் எல்லா கவர்ன்மெண்ட் பாடசாலைகளிலும் யுத்த ஸம்பந்தமான ஸினிமாடோக்ராப் படங்களைக் காட்டுவதற்கும், ஸுகாதாரம், வைத்யம், விவஸாயம் முதலிய பாடங்களைக் கற்பிக்க பொதுவாய்ப் பள்ளிக்கூடங்களில் ஸினிமோடோக்ராப் யந்த்ரத்தை உபயோகிக்கவும் கவர்ன்மெண்டார் வேண்டிய ஏற்பாடுகள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று ஒரு தீர்மானங் கொண்டு வந்தார். ஸபையிலுள்ள சில மெம்பர்கள் விவஸாயத்துக்கு ஸினிமாடோக்ராப் உபயோகிப்பது முடியாதென்றும், பொதுவாய் ஸினிமாடோ க்ராப்பால் மாணவர்களின் பார்வை கெட்டுப்போகிறதென்றும், அதனால் வேறு சில கெடுதிகள் ஏற்படுகின்றனவென்றும், மேல்நாட்டில் அநேக வித்யா ஸ்தாபனங்கள் ஸினிமாடோக்ராப்பு உபயோகிப்பதை ஆக்ஷேபிக்கின்றனவென்றும், சொன்னார்கள். கவர்ன்மெண்டுக்காகப் பேசின மிஸ்டர் ஷார்ப் என்பவர், கவர்ன்மெண்டார் ஸினிமாட்டோ க்ராப் படங்களை நேரில் தருவிப்பதற்கில்லையென்றும், ஆனால் வ்யாபாரிகள் ஸினிமாட்டோ க்ராப்பை நடத்திக்காட்டினால், அதை ஆதரிக்கும்படி மாகாண கவர்ன்மெண்டுகளைக் கேட்கக் கூடுமென்றும் சொன்னதோடு, தீர்மானத்தைப் பின் வருமாறு மாற்றினால் ஒப்புக்கொள்வதாயும் சொன்னார்.

ஸினிமாட்டோக்ராப் யுத்தக்காட்சிப்படங்களைக் காட்டுவதற்கும், அவைகளைப் பார்க்க கவர்ன்மெண்ட் ஸ்கூல் மாணவர்களுக்கு ஸௌகர்யங்கள் செய்துகொடுக்கவும், பொதுவில் பாடங்களை நிதர்சனமாகக் கற்றுக்கொடுக்கவும் கவர்ன்மெண்டார் வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று இந்த ஸபை வைஸ்ராயுக்கு சிபார்சு செய்கிறது. இந்தமாற்றிய தீர்மானத்தை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டார்கள்.

**A Training School for Mohamedans.**

மகம்மதிய உபாத்தியாயர்களுக்கு ஒரு ட்ரெய்னிங் ஸ்கூல்.—இந்த வர்ஷம் ஏப்ரல் மாஸம் 1-ந்தேதிமுதல் மூன்று வர்ஷத்துக்கு வேலூரில் மகம்மதிய எலிமெண்டரி ட்ரெய்னிங் ஸ்கூல் ஸ்தாபிக்க கவர்ன்மெண்டார் ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்,

## TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

**First Aid in Accidents.**

**காயம் முதலிய ஆபத்துகளில் செய்யவேண்டிய முதல் உதவி.**—இது சென்னையில் இங்க்லீஷ் வைத்யம் செய்துவரும் ராவ்ஸாகிப் யு. ராமராவ் இயற்றியது. இதில் ரக்த ஒழுக்கு, எலும்பு ஒடிந்துபோதல், தண்ணீரில் மூழ்கிப்போதல், மயக்கம்போடுதல், சுட்ட புண்கள், பூச்சிமுதலிய ஜந்துக்கள் கடித்தல் முதலிய பல ஆபத்துகளில் ஒவ்வொருவரும் இன்ன செய்து ஆபத்துக்குள்ளானவர்களைக்காப்பாற்றவேண்டுமென்பதற்கு அநேக முறைகளும் வழிகளும் தெளிவாகவும் விரிவாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. இதில் அநேக படங்கள் சேர்க்கப்பட்டிருப்பதால், புஸ்தகத்தை வாசித்து விஷயங்களை க்ரஹித்துக்கொள்வது ஸுலபமாகும். இது ஒவ்வொருவரும் வாசித்தறியவேண்டிய புஸ்தகமாகும். இதன் விலை அணா-8. வேண்டுவோர் மெஸ்ஸர்ஸ் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, புஸ்தகவியாபாரிகள், 3, 4, கொண்டிசெட்டித்தெரு, மதராஸ் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**The Vaishnavite Pilgrims Manual.**

**விஷ்ணுஸ்தல மஞ்சரி.**—இது மயிலை கோ. பட்டாபிராமமுதலியார் இயற்றியது. இதில் தென்னிந்தியாவிலும் வடஇந்தியாவிலும் உள்ள ஸுமார் 160 விஷ்ணுஸ்தலங்களின் ப்ரபாவங்களும் அவ்விடங்களுக்கு யாத்ரை செய்ய விரும்புவோர் ஏறவேண்டிய ரெயில்வே, இறங்கவேண்டிய ஸ்டேஷன், ஸ்டேஷனுக்கும் ப்ரதிஸ்தலத்துக்குமுள்ள தூரம், மார்க்கம், அங்கு தங்குவதற்கு உள்ள ஸௌகர்யங்கள் ஆகிய இவைகள் தெளிவாய் எழுதப்பட்டிருக்கின்றன. இது விஷ்ணுஸ்தல யாத்ரிகர்களுக்கு மிகவும் உபயோகப்படும். இதன் விலை அணா 8. வேண்டுவோர் எம். வி. பட்டாபிராமமுதலியார், க்ளர்க், லோகோ ஸுபரிண்டண்டண்ட் ஆபீஸ், பெரம்பூர், மதராஸ் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

**Rajamani.**

**ராஜாமணி.**—இது 'ராமாதீட்சதர்' என்னும் நாவலின் ஆசிரியராகிய, அ. ஹரிஹரய்யரால் எழுதப்பட்ட ஒரு கீர்த்தியான நாவலாகும். இதன் கதைப்போக்கும், நடையும் கீர்த்தியாயிருக்கிறது. கோடையிடி ராமஸ்வாமி அய்யருடைய வாதங்கள் வாசிக்க ரஸமாயிருக்கும். இது யாவரும் தாராளமாய் வாசிக்கக்கூடியது. வேண்டுவோர் மெஸர்ஸ் ஜி. எ. வைத்யாராமன் அண்ட் கம்பெனி, புஸ்தக வ்யாபாரிகள், 3, 4, கொண்டிசெட்டித்தெரு, மதராஸ் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**Thamanyaroopee.**

**தமன்யரூபி.**—இது தூத்துக்குடி வித்வான் எம். எ. பிரிஸ் இயற்றிய ஒரு நாவலாகும். இது முக்யமாய் ஸ்த்ரீகளின் அடக்கம், கற்பு முதலிய நற்குணங்களை விளக்கிக்கூறுகிறது. இதன் நடை ஸுலபமாயும் இனிமையாயும் இருக்கிறது. இதன் விலை ரூ. 1–4–0. வேண்டுவோர் தூத்துக்குடி, பீச்ரோட், 22, நெ. வீட்டிலுள்ள மிஸ்டர் பி. க்ரமஸ் என்பவருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

**The Story of Prahlada.**

**பிரகலாதாழ்வான் சரிதை**—இது வேலூர் வூர்ஹீஸ் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் மிஸ்டர் ஸ்ரீநிவாஸாச்சாரியார் கம்பராயணத்திலுள்ள இரண்ணியன் வதைப் படலத்தை யனுஸரித்து எழுதிய ப்ரஹ்லாதருடைய சரித்ரமாகும். இதுயாவரும் வாசிக்கக்கூடியவாறு ஸுலபமான நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 6. வேண்டுவோர் மெஸ்ஸர்ஸ் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3,4, கொண்டி செட்டித்தெரு, மதராஸ் என்று எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

**Other Books.**

**மற்ற புஸ்தகங்கள்.**—(1) **கல்வி.** இது கல்வியின் பெருமையைப்பற்றிக் கூறும் ஒரு சிறு புஸ்தகம். இது ரங்கூன் மங்கமாரி வீதி 111-ம் நம்பர் வீட்டிலுள்ள நவீன கதா புஸ்தக சாலையாரால் ப்ரசுரம் செய்யப்பட்டது. இனாமாகக் கொடுக்கப்படும்.

(2) **தலேச முனிவர் சரித்திரச் சுருக்கம்.**—இது உயர்ந்த செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ள ஒரு சிறு கதை. இதன் விலை முக்காலணா. வேண்டுவோர் ரா. சந்திரகாசன், மேலவூர், தூத்துக்குடி என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

(3) **பெற்றோரும் பிள்ளைகளும்.**—இது பெற்றோரும் பிள்ளைகளும ஒருவர்க்கொருவர் செய்துகொள்ளவேண்டிய கடமைகளைப் பற்றி விரிவாய்க் கூறுவது. பண்டிதர் எம். எம். நாராயணஸ்வாமி அய்யர் இயற்றியது. விலை அணா-1. வேண்டுவோர் ஜி. எ. வைத்யாராமன் அண்ட் கம்பெனி, புஸ்தக வ்யாபாரிகள், கொண்டிசெட்டித்தெரு, மதராஸ் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.



## SCIENCE AND INVENTION.

## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

**Dreams.**

**ஸ்வப்னங்கள்.**—ஸ்வப்னங்களில் நாம் பல கார்யங்களைச் செய்வதாகக் காண்கிறோம். விழித்துக் கொண்டிருக்கும்போது இந்தக் கார்யங்களில் சிலவற்றைச் செய்வதற்கு கொஞ்ச நேரம், வேறு சில ஸ்வப்ன கார்யங்களுக்கு அதிக நேரமும் வேண்டியிருக்கிறது. அப்படியிருந்தும் நமக்கு ஸ்வப்னத்தில் தோற்றும் காட்சிகளும் நாம் செய்யும் வேலைகளும் அதி ஸ்வல்பமான நேரத்தில் ஆரம்பித்து முடி வடைகின்றன வென்று ஒரு இங்க்லீஷ் பத்ரிகை தெரிவிக்கிறது.

ஒரு கனவான் ப்ரான்ஸில் ராஜாங்கப் புரட்சி ஏற்பட்ட காலத்தைப்பற்றி ஒரு ஸமயம் கனக் கண்டாராம். அந்த ஸ்வப்னத்தில் அவர் அக்காலத்தில் இருந்த கொடிய காட்சிகளையும், அவரைக் கலகக் காரர்கள் பிடித்து கோர்ட்டுக்கு இழுத்துக் கொண்டுபோய் விசாரித்ததையும், அவர் குற்றவாளி யென்று ரூபிக்கப்பட்டு அவரை சிரச் சேதம் செய்யக் கொண்டு போனதையும், கடைசியில் வெட்டும் ஆயுதம் தமது கழுத்தில் விழுந்ததையும் வ்யக்தமாகக் கண்டார். இதற்கு, உண்மையானஸம்பவமானால், அதிகமாகவே நேரம் பிடிக்கும். ஒருதிரையில் கட்டியிருந்த ஒரு கழி அவர்மேல்விழுந்ததால் இந்த ஸ்வப்னம் உண்டாயிற்று அவர் சொல்லுகிறார். இது மேலே விழ ஆரம்பித்த போது ஸ்வப்னக் காட்சிகள் ஆரம்பமாகி கழி கழுத்தில் பட்டு, அவர் விழித்தவுடன் முடிவடைந்து விட்டனவாம்.

ஒரு ப்ரஸித்திபெற்ற ஆசிரியர் ஒருநாள் இரவில் வெகு நேரம் ஒரு க்ரந்தம் எழுதிக் கொண்டிருந்தாராம். அதை அவர் அன்றைய இரவே முடித்து விட வேண்டுமென்று எண்ணியிருந்தார். அப்படி எழுதிக் கொண்டிருந்த போது சடுதியில் தூக்க முண்டாகி ஒரு ஸ்வப்னமும் கண்டார். அந்த ஸ்வப்னத்தில் யாரோ ஒருவர் அந்த அறைக்குள் வந்து, அந்த ஆசிரியர் மான்செஸ்டர் என்ற ஊருக்குப் போக வேண்டுமென்று சொன்னார். அதன்மேல் ஆசிரியர் அறையை விட்டு வெளியே போய், தமது ப்ரயாணப் பெட்டியில் வேண்டிய ஸாமான்களை வைத்து எடுத்துக் கொண்டு, மான்சஸ்டருக்குப் போய் அங்கே அநேக நாள் தங்கியிருந்தாராம், அநேக ஸ்நேகிதர்களையும் பந்துக்களையும் போய்ப் பார்த்தாராம். பிறகு ஊருக்குத் திரும்பி வந்து, தமது பட்டணத்தில் எத்தனையோ வ்யவஹாரங்களை நடத்தினதோடு இன்னொரு புஸ்தகம் எழுதுவதற்கு ஒரு புஸ்தக வ்யாபாரியோடு ஒப்பந்தம் செய்து கொண்டு, புஸ்தகமும் எழுதத் தொடங்கினாராம். பிறகு விழித்துக் கொண்டபோது, தாம் ஸ்வப்னத்துக்கு முந்தி எழுதின கடைசி வார்த்தையின் மைஈரம் இன்னும் உலரவில்லையாம்.

**Sound of Gunfire.**

**வெடியின் சப்தம்.**—ரொம்ப பெரிய பீரங்கிகளின் சப்தம் ரொம்பதூரம் வரையில் நன்றாய்க் கேட்குமாம். இங்க்லண்டைச் சேர்ந்த ஸஸ்ஸக்ஸ் என்னும் ஜில்லாவிலுள்ள செம்ஸ்பொர்ட் என்னும் ஊருக்குப் பக்கத்திலுள்ள ஒரு க்ராமத்தில் ஒருவர் இருந்துகொண்டு கவனித்ததில் அதற்கு 125 மைல் தூரத்திலுள்ள யிப்ரஸ் என்னும் பெல்ஜியபட்டணத்தில் வெடிதீர்க்கும் பீரங்கிகளின் சப்தம் நன்றாய்க் கேட்டதாம். இங்க்லண்டின் தென்கிழக்குக் கரையிலுள்ள அநேக ஊர்களிலும் யிப்ரஸில் வெடிதீர்க்கும் பீரங்கிகளின் சப்தம் நன்றாய்க் கேட்கிறதாம். பெரிய பீரங்கிகளின் சப்தம் 140 மைல் தூரம் வரையில் நன்றாய்க் கேட்குமாம். அதற்கு மேற்பட்ட தூரத்திலும் கேட்குமோ என்பது ஸந்தேகமாம்.

**Synthetic Milk.**

**செயற்கைப் பால்.**—இங்க்லண்டில் பசும்பாலுக்கு பதிலாக 'ஸோலக்' என்று பெயர் கொண்ட ஒருவித செயற்கைப்பாலை சில விடங்களில் உபயோகித்து வருகிறார்களாம். இது பசும்பாலை விட ரொம்ப மலிவானதாம். பார்வைக்கு பசும்பாலைப் போலிருப்பதோடு ருசியும் ஒரே மாதிரியாயிருக்கிறதாம். ரஸாயனக் கூறுபாட்டில் இயற்கைப் பசும்பாலுக்கும் செயற்கைப் பாலுக்கும் வித்யாஸம் கிடையாதாம். இது ஸோயா அவரையிலிருந்து தயார் செய்யப்படுகிறதாம். இது உலர்ந்த பொடியாகவும் விற்கப்படுகிறதாம். இந்த உலர்ந்த பொடி வெகு நாள் கெடாமலிருக்குமாம் இந்தப் பாலைத் தயார் செய்யுமிடங்களில் வ்யாதி க்ருமிகள் சேருவதற்கில்லை யென்று சொல்லப்படுகிறது.

# SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

### Drinking Water.

ஜலம் குடித்தல்.—சாப்பிடும்போது ஜலம் குடிப்பதைப்பற்றிப் பலர் பலவிதமாக அபிப்ராயப்பட்டு வருகிறார்கள். கீழே இரண்டு மேல்நாட்டு வைத்யர்களின் அபிப்ராயங்களை எழுதுகிறோம். டாக்டர் கட்லர் என்பவர் சொல்லுவதாவது, சாப்பாட்டோடு ஜலத்தைக் குடித்து வந்தால் தேகத்தின் நிறை அதிகமாகும். தேகத்திலுள்ள அதிகமான நைட்ரொஜின் மூத்ர ரூபமாகவும் வேறுவிதமாகவும் வெளியே போய்விடும். சாப்பிடும்போது ஏராளமாய் ஜலம் குடிப்பதால், ஆகாரத்தை ஜீரணம் செய்யும் ரஸங்கள் குறைவாகச் சுரப்பதில்லை. அப்படிக்கில்லாமல், அதிகஜலம் குடிப்பதானது, அந்த ஜீர்ண நீர்கள் நன்றாய் சுரப்பதற்குதக்க தூண்டுகோலாக இருக்கிறது. ஜீர்ண நீர்களில் ஜலம் கலப்பதால், அந்த நீர்களின் வேகம் குறைந்துபோவதில்லை. அப்படிக்கின்றி, ஜீர்ண நீரில் ஜலம் கலப்பதால், ஆகாரம் ரொம்ப பூர்த்தியாக ஜீர்ணமாகிறது. ஆகையால் ஸாதாரண தேகஸ்திதியுள்ளவர்கள் ஆகாரத்தோடு வேண்டிய அளவு தீர்த்தம் குடிக்கலாம். ஒவ்வொரு வேளையும் 2-முதல் 4- டம்ளர் தீர்த்தம் வரையில் குடிக்கலாம் இப்படிச் செய்வதால் தேகம் கெடாமலிருக்கும். ஆனால் ஆகாரத்தை நன்றாய் மென்று உமிழ் நீரோடு கலந்து விழுங்கின பிறகுதான் ஜலம் குடிக்க வேண்டும்.

இன்னொரு டாக்டர் சொல்லுவதாவது. சாப்பாட்டோடு அதிக ஜலம் குடித்தால் ஆகாரம் ஜீர்ணமாவதற்கு ரொம்ப ஸௌகர்ய மேற்படுவதோடு, முக்யமாய் எண்ணெய் உணவுப்பொருள்கள் நன்றாய் ஜீர்ணமாகின்றன. காஸ்ட்ரிக் ஜூஸ், பான்க்ரியாடிக் ஜூஸ் என்னும் ஜீர்ண த்ரவங்கள், ஜலம் குடிப்பதால் அதிகமாகச் சுரப்பதோடு, அவைகள் ஜலத்தோடு கலந்துகொண்டு ஆகாராதிகளை நன்றாய் ஜீர்ணம் செய்து, உணவு ஸத்தை சீக்ரம் தேகத்தில் சேர்த்துவிடுகின்றன.

### Pomegranate.

மாதுளை.—அஜீர்ணபேதிமுதலியரோகங்கள் ஆரம்பமாகும்பொழுது மாதுளம்பழத் தோலில் ஒரு பங்கும் வெந்நீர் பத்துப்பங்கும் கூட்டி வாஸனைக்காக கொஞ்சம் கறுவா அல்லது கிராம்புத்தூள் சேர்த்து கால்மணி நேரம் கொதிக்கவைத்து இக்கஷாயத்தை வடிகட்டிக் குளிர்ந்தவுடன் தினம் ஒன்றுக்கு மூன்று தரம் ஒவ்வொரு வேளையும் இரண்டு அவுன்ஸ் வீதம் கொடுத்து வந்தால் ஸௌக்ய மேற்படுமென்று ஸ்வதேச வைத்யர்கள் கூறுகிறார்கள்.

மாதுளம் வேரின் கஷாயம் குடலிலுள்ள டேப் வொர்ம் என்னும் கிருமிகளை (tape-worms) வெளிப்படுத்த மிகவும் விசேஷமான மருந்து. இடித்த மாதுளம் வேரின் பச்சைப்பட்டையை எடுத்து அதில் ஒரு பங்குக்கு இருபது பங்குஜலங்கூட்டி சுண்டக்காய்ச்சி வடிகட்டிவெறும் வயிற்றில் இரண்டு அவுன்ஸ்வீதம் அரை மணிநேரத்துக்கொருமுறை நாலுதரம் கொடுத்து உடன் பின்னர் சிற்றாமணக்கெண்ணெயை பேதிக்குக் கொடுத்தால் க்ருமிகள் வெளிப்படும். கஷாயத்துக்குப் பதிலாக வேர்ப்பட்டை ரஸம் அரை அவுன்ஸ் வீதம் கொடுக்கலாம்.—சமத்தொழில் விளக்கம்.

### Indigenous Systems of Medicine.

**ஸ்வதேச வைத்ய முறைகள்.**—ஸமீபத்தில் கூடிய ராஜப்ரதிநிதி சட்டஸபையில் ஆனரபில் மிஸ்டர் ஆஸட் அலிகான், இந்தியா கவர்ன்மெண்டார், மாகாண கவர்மெண்டுகளோடு கலந்துகொண்டு இந்தியாவிலுள்ள பழையகால வைத்யமுறைகளை சாஸ்த்ரத்தை அனுஸரித்திருக்கும்படி திருத்தி, அபிவ்ருத்தி செய்வதைப் பற்றியும், அவைகள் ஜனங்களுக்கு ரொம்ப உபயோகமாகும்படி செய்வதைப் பற்றியும் ஆராய்ச்சிகள் செய்ய வேண்டுமென்று ஒரு தீர்மானங்கொண்டு வந்தார்.

மிஸ்டர் ஆஸட் அலிகான், இந்திய வைத்ய முறைகள் ரொம்ப செலவு குறைவாயிருப்பதாலும், இந்தியர்களுடைய வைதீகக் கொள்கைக்கு ஏற்றவைகளாக இருப்பதாலும், அவைகளை அபிவ்ருத்தி செய்தால், ஜனங்களிடம் ரொம்பவும் பரவு மென்று சொன்னார். இந்தியா கவர்ன்மெண்டார் அந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

நமது ராஜதானியில் ஆயுர்வேத வைத்ய சாஸ்த்ரத்தையும், யுனானி வைத்ய சாஸ்திரத்தையும் கற்பிப்பதற்கு தற்போது அனுஷ்டானத்திலுள்ள முறைகளைப் பற்றியும், அந்த முறைகளால் ஏற்படும் பலாபலன்களை பற்றியும் தெரிவிக்கும்படி, சென்னை கவர்ன்மெண்டார் பண்டித கோபாலாசார்லுவையும், ஆனரபில் டாக்டர் ஸைன லாபுடினையும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.



# LAW.

## சட்டம்.

### Partition in Joint Family.

**அவிபக்த குடும்பத்தில் பாகம் செய்தல்.**—ஒரு ஹிந்து அவிபக்த குடும்பத்திலுள்ள ஒரு மைனருடைய கார்டியன் அந்த மைனருடைய க்ஷேமத்தை உத்தேசித்தல்லாமல் மற்றபடி குடும்ப ஸொத்துக்களை பாகம் செய்யும்படி கட்டாயப்படுத்துவதற்கில்லை. ஆனால் அந்தக் குடும்பத்திலுள்ள மேஜரான பாகஸ்தர்கள் குடும்ப ஸொத்தை பாகம்செய்யவேண்டுமென்று வற்புறுத்தி, அவ்விதமே ஸொத்துக்களை பாகம்செய்து அவரவர்கள் தங்களுடைய பாகங்களை அடையலாம். குடும்பத்திலுள்ள மைனர்கள் அவ்விதம் பாகம் செய்வதைத் தடுப்பதற்கில்லை. மைனர்களுடைய கார்டியன்கள் செய்யக்கூடியதெல்லா மென்னவென்றால், மைனர்களுடைய பாத்யதைகளை பாகத்தின்போது சரிவர பாதுகாப்பதே.

பாகத்தின்போது மைனர்களுடைய இயற்கையான கார்டியன்கள் அந்த மைனர்களுடைய பாத்யதைகளைப் பற்றி கவனித்துவந்தால், அந்த கார்டியன்கள் மைனர்களுடைய பாத்யதைகள் விஷயத்தில் மோசக்கருத்தாயோ, அலக்ஷ்யமாயோ இருந்தார்கள் என்று ரூபிக்கப்பட்டாலொழிய, அந்த பாகமானது குடும்பத்திலுள்ள மேஜர்களோடு மைனர்களையும் கட்டுப்படுத்தும். குடும்பஸொத்தை பாகம்செய்வதென்பது குடும்பஸௌகர்யமான ஒரு ஏற்பாடாகும். பொதுவாய் குடும்பத்தில் சண்டைசச்சரவு இல்லாமலிருக்கும்படி செய்யவும், குடும்பஸொத்துகளைக் காப்பாற்றவும் இவ்விதம் பாகம் செய்யப்படுகிறது. பாககாலத்தில் ஒவ்வொருபாகஸ்தரும் ஸொத்துவிஷயமான விவரங்களை மற்றபாகஸ்தர்களைப் போலவே அறிந்திருக்கவேண்டும். பாகம் செய்யும் விஷயத்தில் மோசமாவது பித்தலாட்டமாவது இருக்கக்கூடாது. எல்லா பாகஸ்தர்களும் பாகம் செய்யும் விவரங்களை ஒரேமாதிரியாக அறிந்திருந்தால், பாகம் செய்ததில் ஏதாவது தவறு இருந்தாலும் பாதகமில்லை.

ஒருவாதி ஒரு குடும்பப்பிரிவினை சரியான பிரிவினையாகமாட்டாதென்று சொன்னால் அதை அவரே ரூபிக்கவேண்டும். அப்படிச்சொல்லும் வாதி மைனராயிருந்தாலும், அந்த மைனர்வாதிதான் அதை ரூபிக்கவேண்டும். சில கேஸுக்களில் பாக நடவடிக்கைகளின் தன்மையாலும், பாகம் செய்துகொண்ட முறையாலுமே அந்தப் பிரிவினையானது மைனருக்கு பாதகமானதா அல்லவா என்பதை அறிந்துகொள்ளலாம். அப்படிப்பட்ட கேஸுகளிலும், குடும்பப்பிரிவினையைப்பற்றின விஷயங்களில் சில விஷயங்கள் ஒரு பாகஸ்தருக்கு மாத்ரம்தெரிந்திருக்கும் கேஸுகளிலும், ப்ரதிவாதியே பாகம் சரியாய்ச் செய்யப்பட்டிருக்கிறதென்பதை ரூபிக்கவேண்டும்.

ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் மைனராயிருந்தபோது குடும்பம் பாகமாயிற்று. அவர் மேஜரான பிறகு அந்த குடும்பப் பிரிவினை சரியாகச் செய்யப்படவில்லையென்றும், பாக காலத்தில் சில ஸொத்துக்களை, ஒரு பாகஸ்தரின் ஸ்வயார்ஜித ஸொத்துக்களென்று சொல்லிக் குடும்ப ஸொத்தில் சேர்க்காமல் விட்டுவிட்டார்களென்றும், அந்த ஸொத்துக்கள் உண்மையில் அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்த ஸொத்துக்களென்றும், அந்த ஸொத்துக்களிலும் தமக்கு பாகம் கொடுக்கவேண்டுமென்றும் சொல்லி, பாகத்தை ரத்துசெய்யவேண்டுமென்று கோர்ட்டில் வ்யாஜ்யம் போட்டார். அப்படியானால் இங்கே கவனிக்கவேண்டிய விஷயம், ஸ்வயார்ஜிதம் என்று சொல்லப்படும் ஸொத்தானது குடும்ப ஸொத்துக்குக் கெடுதல் ஏற்படாமலும் குடும்பப் பணத்தின் உதவியில்லாமலும் ஸம்பாதிக்கப் பட்டதா என்பதல்ல. பாகக்காலத்தில் வயதுவந்த பாகஸ்தர்கள் அந்த ஸொத்தை நல்லெண்ணத்துடன் ஸ்வயார்ஜித ஸொத்தென்று அதை அடைந்தவனுக்குக் கொடுத்தார்களா என்பதே.

குடும்பத்திலுள்ள ஒரு பாகஸ்தர் தாம் ஸம்பாதிக்கும் வரும்படியை குடும்ப பொதுப்பணத்தில்சேர்த்தாரென்றாவது, அல்லது எல்லா பாகஸ்தர்களும் சேர்ந்து ஸம்பாதித்தார்களென்றாவது சொல்வதற்கு தகுந்த ஆதாரம் இல்லாவிட்டால் அந்த பாகஸ்தர் ஸம்பாதிக்கும் வரும்படியானது பொதுக் குடும்பத்தைச் சேர்ந்ததென்று சொல்லுவதற்கில்லை. 3 லா வீக்லி 322.

### Lease for Planting Casuarina Trees.

**சவுக்குமரம் நடுவதற்கு நிலம் குத்தகைக்கு விடுதல்.**—சவுக்கு மரம் நடுவதற்கு நிலத்தைக் குத்தகைக்கு விட்டால், அப்படிக் குத்தகைக்கு விட்டது விவசாயத்துக்குக் குத்தகைக்கு விட்டதாகமாட்டாது. அந்தக் குத்தகை ஒப்பந்தத்தை எழுதி ரெஜிஸ்டர் செய்யாவிட்டால், அது சட்டப்படி செல்லாது.

3 லா வீக்லி 319.

## PERSONAL NOTES.

## மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

### The Late Mr. M. Adinarayanayya.

**காலஞ்சென்ற திவான் பகதூர் எம். ஆதிநாராயணய்யா.**—சென்னை ரெவின்யூ போர்டில், ஸெட்டில்மெண்ட் டெபுடி கமிஷனராயிருந்து பென்ஷன் பெற்று பிறகு சென்னையில் பற்பல பொதுஜன விஷயங்களில் ஊக்கத்துடன் உழைத்து வந்த திவான் பகதூர் எம். ஆதிநாராயணய்யா இந்த மாஸம் 17-தேதி இறந்துபோனதையறிந்து வருத்தமடைகிறோம். மிஸ்டர் ஆதிநாராயணய்யா 1847-ம் வர்ஷம் ஜனனமானார். அவர் இறந்தபோது அவருக்கு வயது 69. அவர் பால்யத்தில் எப். ஏ. பரீக்ஷையில் தேறி, சென்னையில் போர்ட் அப் ரெவின்யூ ஆபீஸில் உத்யோகம் அடைந்தார். பிறகு அந்த ஆபீஸில் ரெஜிஸ்ட்ராராகவும் அஸிஸ்டெண்ட் கமிஷனராகவும் உத்யோகம் பார்த்துக் கடைசியில் ஸெட்டில்மெண்ட் டிபார்ட்மெண்டில் டெபுடி கமிஷனர் வேலையை அடைந்தார். 1902-ம் வர்ஷத்தில் அவர் பென்ஷன் பெற்றுக்கொண்டார்.

அவர் 30-வர்ஷகாலம் ஸர்க்கார் உத்யோகம் செய்து வந்தார். அது முதல் அவர் ராஜரீகவிஷயம், ஜனஸமுகத்திருத்தம், விவஸாயம், கைத்தொழில், கோவாபரேஷன் முதலிய பலவிஷயங்களில் ஊக்கமெடுத்து வந்தார்.

அவர் ஸெட்டில்மெண்ட் டெபுடி கமிஷனர் வேலையைத் திறமையுடன் பார்த்ததற்காக கவர்ன்மெண்டார் அவருக்கு திவான்பகதூர் பட்டம் கொடுத்தார்கள். அதோடு அவரை சிலகாலம் சென்னை சட்டஸபையில் ஒரு மெம்பராகவும் நியமித்தார்கள்.

சென்னையில் விவஸாய விஷயங்களைக் கவனிப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்டிருந்த ஸென்ட்ரல் அக்ரிகல்சரல் கமிட்டி என்னும் விவஸாயக் கமிட்டியில் அவர் ஜாயிண்ட் ஸெக்ரெடரியாக இருந்தார். அது சென்ற வர்ஷம் நின்றுபோயிற்று. அது முதல் அவர் விவஸாயத்தில் கோவாபரேஷன் முறைகளைப் பரவச்செய்வதைப் பற்றி கவனம் செலுத்தி வந்தார். இதற்காக அவர் இந்த ராஜதானியிலுள்ள பலவிடங்களுக்கு சுற்றுப்ரயாணம் செய்து விவஸாயக் கோவாபரேஷனைப் பற்றி ப்ரஸங்கங்கள் செய்தார். கோவாபரேஷனில் அவருக்கு விசேஷ பற்று உண்டு. கோவாபரேடிவ் ஸங்க [illegible] 1904-ம் வர்ஷம் செய்யப்பட்ட உடன், அவர் கோவாபரேஷனைப் பற்றிய ஸகல விஷயங்களையும் நன்றாய் அறிந்துகொண்டு அதைப் பரவச் செய்வதற்காகப் பாடுபட்டார். நமது ராஜதானியில் ஸ்தாபிக்கப்பட்ட முதல் கோவபரேடிவ் ஸங்கம் அவருடைய பிறந்த ஊரில் தான் ஸ்தாபிக்கப்பட்டது.

நமது ராஜதானியில் ஸ்தாபிக்கப்பட்ட முதல் ஜில்லா பாங்கியும் இவருடைய ஊக்கத்தால் தான் ஸ்தாபிக்கப்பட்டது. இவர் சென்னை ப்ரொவின்ஷியல் கோவாபரெடிவ் யூனியனின் ப்ரெஸிடெண்டாக இருந்து வந்தார்.

### The Late Mr. V. Krishnaswami Aiyar.

**காலஞ்சென்ற மிஸ்டர் வி. க்ருஷ்ணஸ்வாமி அய்யர்.**—சென்னை ஹைக்கோர்ட்டில் ஜட்ஜாயிருந்தபிறகு சென்னை கவர்ன்மெண்டின் நிர்வாக ஸபையில் ஒரு மெம்பராயிருந்து 1911-ம் காலஞ்சென்ற கனம் மிஸ்டர் வி. க்ருஷ்ணஸ்வாமி அய்யருடைய உருவச் சிலையொன்று இந்த மாஸம் சென்னை ஸெனேட் ஹௌஸில் நமது கவர்னரால் திறந்துவைக்கப்பட்டது.

அந்த ஸமயம் ஆனரபிள் மிஸ்டர் ஸ்ரீநிவாஸய்யங்கார் மிஸ்டர் க்ருஷ்ணஸ்வாமி அய்யருடைய குணாதிசயங்களைப்பற்றிப் புகழ்ந்துபேசினார். அவர் பேசினதின் ஸாராம்சமாவது. மிஸ்டர் க்ருஷ்ணஸ்வாமி அய்யர் ஒரு நடுத்தரநிலைமையிலிருந்த குடும்பத்தைச்சேர்ந்தவர். அவர் தமது ஸாமர்த்யத்தாலும், உழைப்பாலும், உயர்ந்த நடத்தையாலும், வரவர உயர்ந்த பதவியை அடைந்து, தேர்ந்த வக்கீல்களில் ஒருவரானார். அவர் ஸாக்ஷிகளை குறுக்கு விசாரணை செய்வதில் பேர்போனவர். சட்ட விஷயங்களை நன்குணர்ந்தவர். கேஸை நன்றாய் எடுத்துச்சொல்லுவதில் தேர்ந்தவர். அவர் 1909-ம் வர்ஷம் அக்டோபர் மாஸத்தில் சென்னை ஹைக்கோர்ட்டில் ஜட்ஜாக நியமிக்கப்பட்டார். 1910-ம் வர்ஷத்தில் சென்னை நிர்வாகஸபையில் மெம்பராக நியமிக்கப்பட்டார். அவர் ஒரு பெரிய தேசாபிமானி. காங்க்ரெஸ் முயற்சியில் விசேஷ ஊக்கம் பாராட்டிவந்தார். அவர் சிலகாலம் சென்னை யூனிவர்ஸிட்டியின் ப்ரதிநிதியாக சென்னை சட்டஸபையில் ஸ்தானம் வகித்துவந்தார்.

அவருக்கு ஸம்ஸ்க்ருதத்தில் விசேஷ அபிமானம் உண்டு. நல்ல தர்மசிந்தனையுண்டு. அநேக வித்யாஸ்தாபனங்களுக்கு அவர் பணம்கொடுத்து உதவினார்.



## SOCIETY AND RELIGION.

## ஜன ஸமூகமும் மதமும்.

### Sanathana Dharma Conference

**ஸநாதன தர்ம கான்பரென்ஸ்.**—இரண்டாவது எல்லா இந்திய ஹிந்து ஸநாதன தர்ம கான்பரென்ஸ் மார்ச்சுமாஸம் 23-ந்தேதி யன்று வடமதுரையில் கூடிற்று. தர்பங்கா மகாராஜா ப்ரெஸிடெண்டாக இருந்து ப்ரஸங்கம் செய்தார். அவர் தமது ப்ரஸங்கத்தில் ஜாதி தர்மங்களை விடக்கூடாதென்றும், சிலர் ஜாதி ஏற்பாட்டால்தான் இந்தியா சீர்கேடான நிலைமைக்கு வந்திருக்கிறதென்று சொல்லுகிறார்களென்றும், அது தவறென்றும், ஜாதி ஏற்பாட்டால்தான் ஹிந்துக்களாகிய நாம் இந்தியாவில் எவ்வளவோ ஆபத்துகளும் மாறுபாடுகளும் நேர்ந்துங்கூட நாம் உயர்ந்த வம்சத்தவர்கள் என்பதை மறவாமல் இருக்கிறோமென்றும், நாம் வர்ணாச்ரம தர்மத்தை சரிவர பின்பற்றி வாராததால்தான் நாம் தற்போது தாழ்ந்த நிலைமையை அடைந்திருக்கிறோமென்றும், ஆகையால் எல்லாரும் ஸநாதன தர்மத்தைப் பின்பற்றவேண்டியது அவச்யமென்றும் சொன்னார். பெண்கல்வியைப்பற்றி அவர் பேசுகையில் பெண்களுக்கு கல்வி கற்பிக்க வேண்டியது அவச்யமென்றாலும் அவர்களுக்கு தற்காலக் கல்வி ஏற்றதில்லையென்றும், அவர்களை உத்யோகம் செய்பவர்களாகவும், வ்யாபாரிகளாகவும் பயிற்றுவது கூடாதென்றும், ஸ்த்ரீகள் பதிவ்ரதைகளாகவும், பெண்களுக்குள்ள மற்ற நற்குணங்கள் உள்ளவர்களாகவும் ஆவதற்கு ஏற்ற கல்வியே அவர்களுக்குத் தகுந்ததென்றும் சொன்னார்.

ஹிந்துமதத்தைச் சேர்ந்த பற்பல ஜாதிகள் ஒன்றோடொன்று சண்டை சச்சரவு இல்லாமல் ஒற்றுமையாய் இருக்கவேண்டுமென்றும், உபாத்யாயம் பண்ணிவைக்கும் சாஸ்த்ரிகள் முதலியவர்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டுமென்றும், டெல்லியில் ஒரு ஸநாதன தர்ம காலேஜ் ஸ்தாபிக்க வேண்டுமென்றும், குழந்தைகளுக்கு விவாகம் செய்வது கூடாதென்றும், இங்க்லீஷ் பாடசாலைகளில் மதஸம்பந்தமான கல்வி கற்பிக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

### War and Atheism.

**யுத்தமும் நாஸ்திக மதமும்.**—தற்போது நடக்கும் யுத்தத்தால் மேல்நாடுகளில் அநேகர் கடவுள் ஒருவர் உண்டா என்று ஸந்தேகிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். "கடவுள் என்று ஒருவர் உண்டென்றால், அவர் ஸர்வவல்லமையுள்ளவராய், ஸர்வஜ்ஞராய், எல்லாரிடத்திலும் தயை உடையவராய் இருக்கிறார் என்றால், இந்தக் கொடுமையான யுத்தம் உண்டாகும்படி அவர் விடுவானேன்? அதையேன் உடனே நிறுத்தி யிருக்கக்கூடாது." என்றுசிலர் கேட்கிறார்கள். "உலகத்தில் தீமையே இருக்கக்கூடாதென்று விரும்பும் ஒரு கடவுள், அந்தத் தீமைஉலகத்திலிருக்காமல் செய்யக்கூடியவராயிருக்க, அதை அதாவது தீமையை உலகத்தில் இருக்கும்படி ஏன்விட்டிருக்கிறார்" என்று சிலர் கேட்கிறார்கள். வேறு சிலர் "எனது ஒரே புத்ரன் யுத்தகளத்தில் சனியனால் குத்தப்பட்டு, ரத்தமொழுகக் கீழே விழுந்து, ஆதரவு சொல்லுவார் ஒருவருமில்லாமல் பரிதாபமாய் மரணமடைந்தபோது, கடவுள் என்று சொல்லப்பட்டவர் எங்குபோ யிருந்தார்" என்று கேட்கிறார்கள். இவ்வித கேள்விகளுக்கு கிரிஸ்தவ ஆஸ்திகர்கள் சொல்லும் ஸமாதானங்கள் நாஸ்திகர்களில் பலருக்கு திருப்திகரமாயில்லையாம்.

ஒரு ப்ரபல நாஸ்திகர்சொல்லுவதென்னவென்றால், கடவுள் என்று ஒருவர் இருந்து ஜனங்களை ரக்ஷிப்பதென்பது சுத்தத்தவறு. அநேக கோவில்கள் உள்ள பெல்ஜியத்தில் எதிரிகள் புகுந்து அந்தக் கோவில்களில் பலவற்றை நாசம் செய்தபோது, கடவுள் ஜனங்களை ரக்ஷித்தார்களா? பெல்ஜியத்தின் ஜனங்கள் மற்ற மேல்நாட்டு ஜனங்களைவிட ரொம்ப கடவுள் பக்தியுடையவர்களாயிற்றே. அதற்காகவாவது கடவுள் அவர்களை ரக்ஷித்தாரா? அந்த நாட்டிலுள்ள ஸ்திரீகளை ஜெர்மனியர்கள் ஹிம்ஸித்தபோது கடவுள் ஒன்றும் செய்யவில்லையே. ஆகையால் கடவுள் காப்பாற்றுவார் என்று நம்பிக்கை வைப்பதில் யாதொரு ப்ரயோஜனமும் இல்லை என்று அவர்சொல்லுகிறார். இவ்விதம் மேல்நாடுகளில் அநேகர் கடவுள்ஒருவர் உண்டென்பதையே ஸந்தேகிக்கிறார்கள்.

## HINTS AND RECIPES.
## யுக்திகளும் முறைகளும்.

**Fire on Clothes.**

**உடுத்திக்கொண்டிருக்கும் உடைகளில் தீப்பிடித்தல்.**—உடுத்திக்கொண்டிருக்கும் உடைகளில் தீப்பற்றிக்கொண்டால் இன்ன சிகித்ஸை செய்யவேண்டுமென்பதை "காயம் முதலிய ஆபத்துகளில் செய்ய வேண்டிய முதல் உதவி" என்னும் புஸ்தகத்திலிருந்து எடுத்து எழுதுகிறோம். (இது டாக்டர் யு. ராமரா● எழுதியது.)

ஒருவன் ஒரு அறையில் தனியாக இருந்து, அவன் உடையில் தீப்பற்றிக்கொண்டு, அது எரியாமல் புகைந்துகொண்டிருந்தால், உடனே அதைக் கசக்கி உடையின் தீப்பற்றாத மடிப்புகளிலாவது முழங்கால்களின் மத்தியிலாவது அமுக்கிவிடவேண்டியது. தீபற்றியெறிந்துகொண்டிருந்தால், உடனே நோயாளியைக் கீழே படுக்கவைத்து எரிந்துகொண்டிருக்கும் பாகம் மேல்பக்கமாக இருக்கும்படி செய்யவேண்டும். ஏனெனில் தீயானது எப்போதும் மேல்நோக்கிச் செல்லும் குணமுடையதாதலால், கண், முகம் ஆகிய இவைகளை ரணமாக்கிவிடும். காற்றில்லாவிட்டால் தீ எரியாது. ஆனதுபற்றி தீப்பற்றி எரியும் உடையை கம்பளம், மேஜைத்துணி, அங்கி முதலியவற்றால் போர்த்துவிடவேண்டும். இவை உடனே தீயை அணைத்துவிடும். நோயாளி அறையில் தனிமையாக இருந்தால் மெள்ளமெள்ள தரையோடு நகர்ந்துகொண்டேபோய், அருகாமையில் உள்ள கம்பளி, துணி, முதலியவற்றை எடுத்து தானே சுற்றிக்கொள்ளவேண்டியது எவ்வித காரணத்தாலும் தீப்பற்றி எரியும்போது வெளியிலே ஓடிப்போகக் கூடாது. ஓடினால் தீயானது விசிறிகொண்டு விசிறினால் எப்படி ஜ்வலிக்குமோ அப்படி வெளிக்காற்று அதை ஜ்வலிக்கும்படிசெய்யும்.

**A Cheap Paint for Walls.**

**சுவர்களுக்கு அடிக்க மலிவான வர்ணம்.**—சுவர்களுக்கு வெள்ளையடிக்கவும் வேறுவர்ணம் பூசவும் பின்வருமாறு சுண்ணும்பைத் தயார்செய்து உபயோகிக்கலாமென்று 'வர்த்தக மித்திரன்' எழுதுகிறது. 14-ராத்தல் நல்ல உப்பை எடுத்து வேண்டிய அளவு தண்ணீரில் கரைத்து அடுப்பில் வைத்துச் சூடுகாட்டவும். பிறகு ½-ராத்தல் வஜ்ரத்தை அதோடு கலக்கவும். இந்த ஜலம் காய்ந்துகொண்டு வரும்போது 400-ராத்தல் தாளிக்காத சுண்ணும்பை எடுத்து அதில்போட்டு மூடிவிடவும்.

பிறகு 3 ராத்தல் அரிசியை நன்றாய் மையஅரைத்து மேற்சொல்லிய பாத்ரத்தில் போட்டு நன்றாய் கலக்கிவிடவும். இவை எல்லாம் சேர்ந்து குழ குழ வென்று கலந்துவரும். இக்கூழை எப்பொழுதும் சூடாகவே இருக்கும்படி வைத்துக்கொள்ளவேண்டும். சூடாயிருக்கும்போதே வேண்டிய விடங்களில் ப்ரஷ்ஷைக் கொண்டு தடவிவர வேண்டும். இதனை அடுப்பிலேயே வைத்திருந்து உலர்ந்து போகும்படி செய்துவிடக்கூடாது. அதிகம் குறைவில்லாமல் நிதானமாய்ச்சாயத்தை நாலாபக்கங்களிலும் படும்படி அடிக்கவேண்டும். இது வெள்ளைச் சாயமாகையால் இதற்கு ஏதாவது வேறு வர்ணம் வேண்டுமானாலும் அவ்வர்ணத்தைக் கலந்துகொள்ளலாம். இவ்வாறு செய்யப்படும் வெள்ளையில் 2½-சேரானது 3 சதுர அடி இடத்திற்கு பூசிவர உபயோகமானது. இதனை எண்ணெய் சாயத்திற்குப் பதிலாக மரம், கல், செங்கல் முதலியவைகளின் பேரிலும் பூசலாம். இவ்வர்ணம் பல வருஷம் வரையிலும் கெடுவதில்லை

**New Boots.**

**புது பூட்ஸுகள்.**—புது பூட்ஸுகளை நன்றாய் பாலிஷ் செய்ய முடியாவிட்டால், ஒரு எலுமிச்சம்பழத்தில் பாதியை எடுத்து பூட்ஸின் மேல் தேய்த்து நன்றாய் ஈரம் உலர்ந்து போகும் வரையில் விட்டுவைத்திருந்து பிறகு பாலிஷ் தடவி சுத்தம் செய்யவும்.

**Bleaching Ivory.**

**யானை தந்தத்தை வெளுத்தல்.**—இத்தந்தத்தை படிக்காரம் அதிகமாய் போட்ட தண்ணீரில் 16-மணி நேரம் ஊறப்போட வேண்டும். பிறகு அதை எடுத்து கம்பளித்துணியில் துடைத்து மற்றொரு துணியில் காயும்வரையில் சுருட்டி வைக்கவேண்டும்.-ஜனோபகாரி.

**Worms in the Stomach.**

**குடலில் புழுக்கள்.**—பாலில் 5 முதல் 10 துளிகள் வரையில் டர்பெண்டைன் எண்ணெயை ஊற்றிக் கலந்து சேர்ந்தாற்போல் மூன்றுநாள் காலையில் வெறும் வயிற்றில் உட்கொண்டால், வயிற்றிலுள்ள புழுக்கள் நாசமடையுமாம். பாலில் டர்பெண்டைனைக் கலப்பதற்கு பதிலாக சர்க்கரையில் டர்ப்பெண்டைனைக் கலந்தும் உட்கொள்ளலாமாம்.



## AGRICULTURE.
## விவஸாயம்.

**Protecting Cattle from Flies.**

**கால் நடைகளை ஈக்கள் தொந்தரவு செய்யாதபடி பார்த்துக்கோள்வது.**—பின்வரும் முறைப்படி ஒரு மருந்தைத் தயார்செய்து கால்நடைகளின்மேல் தடவினால் ஈக்கள் அவைகளைத் தொந்தரவு செய்யா.

துணிகள் வெளுக்க உதவும் ஸாதாரண ஸோப் 1-ராத்தல்; ஜலம் 9½-பட்டணம்படி படி; க்ரூட் பெட்ரோலியம் எண்ணெய் 2·4 பட்டணம்படி; பொடி செய்த நாப்தலீன் மருந்து 4-அவுன்ஸ், இவைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். ஸோப்பை மெல்லியதாய்ச் சீவி ஜலத்தைச் சற்று சூடாக்கி அதில்போட்டுக் கரையவிடவேண்டும். க்ரூட் பெட்ரோலியம் எண்ணெயில் நாப்தலீனைப் போட்டுக் கரைய விடவேண்டும். பிறகு இரண்டு த்ரவங்களையும் ஒன்றாய்க்கலந்து உபயோகிக்கவேண்டும். உபயோகிக்குமுன் மருந்தைக் கலக்கி உபயோகிக்கவேண்டும். வாரத்துக்கிரண்டுமுறை உபயோகிக்கலாம். மீன் எண்ணெயை மாத்ரம் உபயோகிப்பதாயிருந்தால் இரண்டுமூன்று நாள்களுக்கு ஒருதடவை உபயோகிக்கவேண்டும். இந்த மருந்துகளை ப்ரஷினால் எடுத்து மெல்லிய படையாகத் தடவவேண்டும்.

**The Indian Rice Crop.**

**இந்தியாவில் நெல் மாஸூல்.**— இதற்குமுன் விளைந்த நெல்மாஸூல்களெல்லாவற்றையும் விட இந்த வர்ஷத்திய அதாவது 1915-16-ம் வர்ஷத்திய மாஸூல் ரொம்ப ஜாஸ்தியா யிருக்குமென்று மதிப்பிட்டிருக்கிறார்கள். சென்ற வர்ஷம் 2, 72, 42000-டன் அரிசி கிடைக்குமென்று மதிப்பிட்டிருந்தார்கள். இந்த வர்ஷம் 3, 28, 77,000-டன் அரிசி கிடைக்குமென்று மதிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது சென்ற வர்ஷத்தைவிட நூற்றுக்கு 21 - பாகம் அதிகமாக மாஸூல் கிடைக்கும்.

மொத்தம் இந்தியாவில் நெல் பயிராகும் ஏகர்களில் காலில் ஒரு பாகம் வங்காளத்தைச் சேர்ந்தது. இந்த மாகாணத்தில் இந்த வர்ஷத்திய மாஸூல் சென்ற வர்ஷத்தியதைவிட நூற்றுக்கு 35-பாகம் அதிகமாயிருக்கிறதாம். பேஹார் ஒரிஸ்ஸா மாகாணங்களின் மாஸூல் சென்ற வர்ஷத்தியதைவிட நூற்றுக்கு 58-பங்கு அதிகமாயிருக்கிறதாம். இதனால் இந்த வர்ஷம் (1915-16) பருவ நிலைமை ரொம்ப ஸாதகமாயிருந்ததென்று தெரியவருகிறது. ஐக்ய மாகாணங்கள், சென்னை, பர்மா, மத்ய மாகாணங்கள் ஆகிய இந்த ப்ரதேசங்களிலும் நெல் மாஸூல் த்ருப்திகரமா யிருந்திருக்கிறது. ஆனால் அஸ்ஸாம் மாகாணத்தில் வெள்ளத்தினால் மாஸூல் சற்றுக் குறைந்துவிட்டது. மொத்தத்தில் பார்க்கும்போது அரிசி விளைவு நூற்றுக்கு 21-வீதம் அதிகமாயிருப்பதால், வருகிற வர்ஷம் அரிசி விலை குறைவாயிருக்குமென்று தோன்றுகிறதென ஒரு பத்ரிகை எழுதுகிறது. மேலும் யுத்தத்தினால் அரிசி ஏற்றுமதி குறைவடையுமாம். கிழக்கு நாடுகளில்,முக்யமாய் இண்டோசீனாவில் நெல் விளைவு த்ருப்திகரமா யிருப்பதால் அவ்விடங்களுக்கு அதிக அரிசி தேவையாயிராதாம்.

**Sowing Groundnuts with Cereals.**

**வேர்க்கடலையை தான்யப்பயிருடன்கலந்து பயிர் செய்தல்.**-வேர்க்கடலையை தான்யப்பயிருடன் கலந்து பயிர்செய்தால் பல அநுகூலங்களிருக்கின்றனவென்று 'ஜனோபகாரி' எழுதுகிறது. அவையாவன.

1. செய்யும் பயிர்கள் ஜாஸ்தியாய் கொத்தப்படுகின்றன. 2. அதனால் நிலம் சுத்தமாகிறது 3. அதிக மாஸூல் கிடைக்கிறது. 4. மனிதர்கட்கு தான்யமும் மாடுகளுக்குத் தீனியும் கிடைக்கிறது. 5. பின்னால் பயிர்கள் ச்லாக்யமாய்ப் பயிராகின்றன. 6. இரண்டு பயிர்களில் ஒருபயிரின் மாஸூல் கிடைப்பது நிச்சயம்.

வேர்க்கடலையை மட்டும் தனியாய் விதைத்தால் அதன் ப்ரதிகூலங்கள்.

1. கலப்புப்பயிரைப்போல் இதில் களை வெட்டப்படுவதில்லை. 2. களை ஜாஸ்தி. 3. மாஸூல் கம்மி. 4. தான்யப்பயிரின் மாஸூலும், மாட்டுக்குத்தீவனமும் கிடைப்பதில்லை. 5. பின்னால் செய்யப்படும் பயிர் கேவல ஸ்திதியை யடைகிறது.

**Cocoanut Experimental Stations.**

**தென்னை விஷயமான ஆராய்ச்சிப் பண்ணைகள்.**-சென்னை கவர்மெண்டார் தென்னை ஸாகுபடி விஷயமாக ஆராய்ச்சிகள் நடத்துவதற்காக மலையாளம் தென்கன்னடக் கரையோரமாக சில ஊர்களில் சில பண்ணைகள் ஸ்தாபிக்கப் போகிறார்கள். இதற்கு அவர்கள் 4000-ரூபாய் ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்.

# CO-OPERATION.

# கோவாபரேஷன்.

## Cooperative Progress in India.

**இந்தியாவில் கோவாபரேஷனின் அபிவ்ருத்தி.**—சென்ற 1914-15-ம் வர்ஷத்தில் இந்தியாவில் 17,327 கோவாபரெடிவ் ஸங்கங்கள் இருந்தன. அதற்கு முந்தின வர்ஷமாகிய 1913-14-ம் வர்ஷத்தில் 15673-ஸங்கங்கள் இருந்தன. ஆகவே சென்றவர்ஷத்தில் 1654-ஸங்கங்கள் அதிகமாயின. சென்ற வர்ஷக் கடைசியில் இருந்த ஸங்கங்களுள் 397 ஸங்கங்கள் ஸெண்ட்ரல் பாங்கிகளாகும். 16,016-ஸங்கங்கள் விவஸாயிகளுக்கான ஸங்கங்களாகும். 914-ஸங்கங்கள் மற்றவர்களுக்கான ஸங்கங்களாகும். 1913-14-ம் வர்ஷத்தைவிட 1914-15-ம் வர்ஷத்தில் 1478- விவஸாயிகளுக்கான ஸங்கங்கள் அதிகமாயிருந்தன. 1914-15-ம் வர்ஷக் கடைசியில் இருந்த மெம்பர்களின் மொத்த ஸங்க்யை 8,24,469. ஸங்கங்களின் நடைமுதல் பணம் 896½-லக்ஷம் ரூபாய்.

ஸெண்ட்ரல் பாங்கிகளின் மொத்த வரவு, வர்ஷமுதலில் இருந்த கையிருப்பைச் சேர்த்துப் பார்த்தால் 487-லக்ஷம் ரூபாயாகும். அவைகளின் மொத்த பட்வாடா 465-லக்ஷம் ரூபாய். ஆகவே அந்த வர்ஷக்கடைசியில் அந்த பாங்குகளினிடம் கையிருப்பாயிருந்தது, 22-லக்ஷம் ரூபாயாகும். விவஸாயிகளுக்கான ஸங்கங்களின் மொத்த வரவு 374-லக்ஷம் ரூபாயாகும். செலவு 356¾ லக்ஷம் ரூபாயாகும். வர்ஷக்கடைசியில் கையிருப்பு 17¼-லக்ஷம் ரூபாயாகும். விவஸாயிகளல்லாதவர்களுக்கான ஸங்கங்களின் வரவு, வர்ஷ முதலில் இருந்த கையிருப்பு உள்பட 193-லக்ஷம் ரூபாயாகும். எல்லா பட்வாடா ப்ரபத்துகளும்போகக் கையிருப்பு 6¼-லக்ஷம் ரூபாயாகும். எல்லாவகை ஸங்கங்களையும் சேர்த்துப் பார்க்கும்போது மொத்தத்தில் அவைகளினிடம் வர்ஷ கடைசியில் கையிருப்பாக 45½-லக்ஷம் ரூபாயிருந்தது. அதற்கு முந்தின வர்ஷத்தின் கடைசியில் கையிருப்புத் தொகை 35½-லக்ஷம் ரூபாயாகும். இதனால் சென்ற வர்ஷத்தில் கோவாபரெடிவ் ஸங்கங்களில் அதிகம் கொடுக்கல் வாங்கல் இருந்ததென்று தெரிகிறது. ஸங்கங்களின் லாப விவரம் பின்வருமாறு.

ஸெண்ட்ரல் ஸங்கங்கள் 7,71,807 ரூ; விவஸாயிகளுக்கான ஸங்கங்கள் 18,58,091 ரூ; விவஸாயிகளல்லாதவர்களுக்கான ஸங்கங்கள் 4,88,338 ரூ. எல்லா ஸங்கங்களுக்கும் மொத்தம் லாபம் 31,18,236-ரூபாய்.

## Co-operation in Travancore.

**திருவாங்கூரில் கோவாபரேஷன்.**–திருவாங்கூரில் திவானாக இருந்த பி. ராஜகோபாலசார்யார் காலத்தில் கோவாபரெடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிப்பதற்காக ஒரு ரெகுலேஷன் செய்யப்பட்டது. அதன்மேல் அந்த நாட்டு கவர்ன்மெண்டார் ஒரு கோவாபரெடிவ் ரெஜிஸ்ட்ராரை நியமித்து, சென்னையில்போய் கோவாபரேஷன் விஷயங்களில் பயிற்சியடைந்து வரும்படி அனுப்பினார்கள். அவர் சென்றவர்ஷ நடுவில் திரும்பிவந்த தன்மேல் திருவனந்தபுரத்தில் ஒரு ஸெண்ட்ரல் பாங்கியொன்றை ஸ்தாபித்தார்.

இது ஸ்தாபிதமான பிறகு சென்ற தைமாஸத்துக்குள் 7-கோவாபரெடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இவைகளுள் ஒன்று விற்பனை ஸங்கமாகும். மற்ற 6-ஸங்கங்கள் நாணயஸங்கங்களாகும்.

அந்த ஸமஸ்தானத்தின் கோவாபரெடிவ் ரெஜிஸ்ட்ரார் அங்குள்ள பற்பல தாலுக்காக்களில் சுற்றுப்ப்ரயாணம் செய்து கோவாபரேஷன் கொள்கைகளைப் பரவச்செய்து வருகிறார்.

## Co-operation in Denmark.

**டென்மார்க்கில் கோவாபரேஷன்.**—டென்மார்க்கில் உள்ள சிறு விவஸாயிகளின் ஸங்கங்கள் ஜனங்களுக்குள் விவஸாயம், கால்நடை வளர்த்தல், காய்கறி ஸாகுபடி, கோழி வாத்து வளர்த்தல் முதலியவைகளைப் பற்றிய அறிவைப் பரவச்செய்ய ஏற்பாடு செய்கின்றனவாம். அந்த தேசத்தில் ஒரு மெம்பரும் 12 ஏக்கருக்குமேல் நிலம் வைத்துக்கொள்ளக் கூடாதாம். அவர்களுக்கு ஸாகுபடிக்கு ஏற்படும் செலவில் பாதி பாகத்தை ஸர்க்கார் கொடுத்து உதவுகிறார்கள். பயிரிடுவோரின் ஸங்கமென்று ஒரு ஸங்கமிருக்கிறது. இந்த ஸங்கத்தார், ப்ரஸங்கங்கள், விவஸாயத்தைப்பற்றிய விவாதங்கள், கால்நடைக் காட்சிகள், யந்திரக் காட்சிகள் முதலியவை நடத்த ஏற்பாடு செய்கிறார்கள். இந்த ஸங்கத்துக்கு கவர்ன்மெண்டார் பண உதவி செய்துவருகிறார்கள். இன்னும் அந்த தேசத்தில் சாஸ்த்ரோக்தமாய் குதிரை கால்நடை முதலியவைகளை வ்ருத்தி செய்வதற்கும், எல்லாவிதமான இன்ஷூரன்ஸுகளுக்கும் கோவாபரெடிவ் ஸங்கங்களிருக்கின்றன.



# COMMERCE.

# வ்யாபாரம்.

## Beeswax.

**தேன்மெழுகு.**—தேன் மெழுகானது இந்தியாவில் பற்பலவிடங்களில் உள்ள காட்டு ஜனங்களால் சேகரிக்கப்பட்டு விற்பனைக்கு வருகிறது. இது பற்பல தொழில்களுக்கு உதவுகிறதென்று சொல்லப்படுகிறது. அதோடு ஸாதாரண காலங்களில் ஜெர்மனி, இங்கிலண்ட், ப்ரான்ஸ், பெல்ஜியம், ஸ்ட்ரெய்ட்ஸ் ஸெட்டில்மெண்ட்ஸ் முதலிய விடங்களுக்கு அதிகமாக ஏற்றுமதியாகிறது. 1913-14-ம் வர்ஷத்தில் 8881 அந்தர்நிறையுள்ள தேன்மெழுகு இவ்விடங்களுக்கு ஏற்றுமதியாயிற்று. தேன்மெழுகு சேகரிக்கும் விதம் பின்வருமாறு: தேன் அடையிலிருந்து தேனைப்பிழிந்து எடுத்த பிறகு, தேன் அடையை ஜலத்தில்போட்டு நன்றாய்க் கழுவுகிறார்கள். இதனால் அதிலுள்ள, ஜலத்தில் கரையக்கூடிய அழுக்கெல்லாம் போய்விடுகிறது. பிறகு அதை, ஒருபாத்ரத்தில் போட்டு, அந்தப் பாத்ரத்தில் பாதியளவுக்கு ஜலம்வார்த்து அதைக் காய்ச்சிப் பிறகு ஒரு துணியில் வடிகட்டிக்கிடைத்த மெழுகை உருண்டையாகச்செய்து விற்பனைக்கு அனுப்புவார்கள். சில ஸமயம் அதை மறுபடியும்காய்ச்சி, அதற்கு மஞ்சள் நிறம் ஏற்படுவதற்காக சிறிது மஞ்சள் பொடியையும் சேர்த்து உருக்கி ஜலமுள்ள பாத்ரத்தில்விட்டு, உறைந்தவுடன் எடுத்து விற்பனைக்கு அனுப்புவார்கள்.

இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குப் போகும் தேன்மெழுகு சுத்தமாயில்லையென்றும் பாரபின்மெழுகை அதில் கலக்கிறார்களென்றும் சிலகாலமாகப் புகார் இருந்துகொண்டுவருகிறது. இதனால் இந்தியாவிலிருந்துபோகும் சில தேன்மெழுகு வகைகளில் நல்ல வ்யாபாரம் நடப்பதில்லையாம்.

ரஷ்யாவில் உள்ள கோவில் அதிகாரிகள் அங்குள்ள கோவில்களுக்கு வேண்டியமெழுகுவர்த்திகளைச் செய்ய தேன்மெழுகை உபயோகிக்கிறார்கள். இதுவரையில் அவர்களுக்கு ஜெர்மனியிலிருந்து தேன்மெழுகு கிடைத்துவந்தது. இப்போது, யுத்தத்தால், அது கிடைக்காததால், அவர்கள் இந்தியத் தேன்மெழுகை உபயோகிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் உபயோகிக்கும் தேன்மெழுகு கலப்படமாயிராமல் சுத்தமாயிருக்கவேண்டுவதாலும், இந்தியாவிலிருந்து போகும் தேன்மெழுகு கலப்படமாயிருப்பதாலும், அவர்கள் இனி இந்தியத் தேன்மெழுகை உபயோகிக்கமாட்டார்கள் என்று தோன்றுகிறது. ஆகையால் இந்திய வ்யாபாரிகள் இதுவிஷயத்தில் ஜாக்ரதையாயிருந்து தேன் மெழுகில் வேறு பொருள்களைக் கலப்படம் செய்யாமல் ப்பார்த்து அனுப்பவேண்டியது அவச்யமாகிறது.

## Indian Made Spectacles.

**இந்தியாவில் செய்யப்படும் மூக்குக் கண்ணாடிகள்.** பம்பாயிலே மூக்குக் கண்ணாடி வ்யாபாரத்தில் பாலிவாலா அண்டு ஹோமி என்னும் இந்திய கம்பெனியார் ப்ரபலமானவர்கள். மூக்குக் கண்ணாடிகளைத் தயாரிக்கும் தொழிலை அக்கம்பெனியாரே முதன்முதல் இந்தியாவில் உண்டாக்கினர் என்று சொல்லலாம். அத்தொழிலை அவர்கள் தற்கால யந்த்ர ஸாதனங்களுடன் மின்ஸார சக்திகொண்டு தயாரித்து வருகிறார்கள். மிகப் பெரிய மின்ஸார தொழிற்சாலையொன்று அவர்களுக்குண்டு. மிகவும் ச்லாக்யமான கண்ணாடிகள் சரிவர அவர்களால் செய்யப்படுகின்றன. மேனாடுகளிலிருந்து தருவிக்கப் படுபவைகளை விட அக்கம்பெனியார் தயாரிப்பவைகள் ச்லாக்யமாக இருக்கின்றனவாம். தஞ்சாவூருக்கு அடுத்த வல்லத்திலும் மூக்குக் கண்ணாடிகள் செய்யப்படுகின்றன.

## Business Enterprise in India.

**இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.**—இந்தியாவில் சென்ற ஜனவரி மாஸத்தில் அடியில் கண்ட விவரப்படி 13 ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ஸ்தாபிக்கப்பட்டன. இதனால் அந்த மாஸத்தில் இந்தியாவில் வ்யாபார ஊக்கம் எப்படி யிருந்ததென்பதை அறிந்துகொள்ளலாம்.

| | |
|---|---|
| 2 பாங்கி லேவாதேவி கம்பெனிகள் | 2,18,000 |
| 1 இன்ஷூரன்ஸ் கம்பெனி | 50,000 |
| 1 ரெயில்வே ட்ராம்வே கம்பெனி | 9,00,000 |
| 5 வ்யாபாரக் கம்பெனிகள் (மேலே சொன்னவை தவிர) | 9,50,000 |
| 1 ஜூட் மில்ஸ் கம்பெனி | 20,00,000 |
| 1 மில் ப்ரெஸ் கம்பெனி (மேலே சொன்னது தவிர | 20,000 |
| 2 தேயிலைதோட்டக் கம்பெனி | 7,50,000 |
| 13 மொத்தம். | 48,88,000 |

# ECONOMIC PRODUCTS.

## விலையுள்ள பொருள்கள்.

**Margosa.**

**வேம்பு.**—ஹிந்துக்கள் வைசூரிக்கு வேப்பிலையை உபயோகிப்பது வழக்கம். இலையை மெத்தையைப் போல் பரப்பி அதன்மேல் நோயாளியைப் படுக்கச் செய்வார்கள். இலையை விசிறியாய்ப் பாவிப்பார்கள். வேப்பிலை கசப்பான சுவையைக் கொடுக்கும். விஷந் தீண்டினபோது வேப்பிலையை வாயில் மென்றால் மயக்கந் தீரும். அது ஒரு உஷ்ணகாரி. அதை அரிசிமாவுடன் அரைத்து களிசெய்து கெட்ட ரணங்களுக்குப் போடலாம். விசேஷமாக சொறி சிரங்கு முதலிய ரோகங்களுக்கு உபயோகிக்கலாம்.

வேம்பு வீடுகளுக்குக் கிட்டவும் க்ராமங்களிலும் நிற்பதால் குளிர்ச்சியைக் கொடுப்பதுமன்றி, மலேரியா (Malaria) என்னும் விஷமஜ்வரத்தை வராமல் தடுக்குமென ஆங்கில வைத்யர்கள் அபிப்ராயப்படுகிறார்கள். வேப்பம்பட்டையை பொடிசெய்து அல்லது தண்ணீரில் கஷாயஞ்செய்து விஷமஜ்வரத்துக்கு மருந்தாகப் பாவிப்பார்கள். பசியையுமுண்டாக்கும். வேப்பங்குச்சியை பல்துலக்க உபயோகப்படுத்தினால், பல்லீறுகள் பலமடைவதோடு, வாயிலுள்ள துர்நாற்றமும் போகும். குரல் நல்ல நிலைமையை அடையும்.

வேப்பங்கொழுந்துடன் ஓமம், மிளகு, வசம்பு, பூண்டு இவைகளைச் சேர்த்தரைத்துக் கொடுத்தால், வயிற்றுப் பொருமல் நீங்கும். வேப்பம்பூவைத் துவையல்செய்து சாப்பிட்டால் மலச்சிக்கலை நீக்கும். வேப்பம்பழம் சாப்பிட்டால் மலச்சிக்கலை நீக்கும். வேப்பம் விதையில் வடிக்கு மெண்ணெய் பலவிதமாயுபயோகிக்கப்படும். விளக்குகளுக்கு உபயோகித்தால் கண்ணுக்குக் குளிர்ச்சியைக்கொடுக்கும். காற்றைச் சுத்திபண்ணும். விசேஷமாகக் குழந்தைகளிருக்கும் அறைகளில் வேப்பெண்ணெய் விளக்கை உபயோகிப்பதுண்டு. வேப்பெண்ணெய் ரணங்களை ஆற்றும். வாதரோகங்களுக்கு மேலுக்குப் பூசலாம். க்ருமிகளையும் போக்கும். உட்கொண்டால் வயிற்றிலுள்ள புழுக்களைக் கொல்லுவதுமல்லாமல் ஸுகபேதியை யுண்டாக்கும். சுதேச வைத்யர்கள் குழந்தைகள் பிறந்தவுடன் வேப்பெண்ணெய் கொடுப்பது நலமெனக் கூறுவார்கள். குஷ்டரோகத்துக்கு மேலே பூசுவார்கள். பேன் முதலிய க்ருமிகளைக் கொன்றுவிடும்.—உதயதாரகையில் ஒரு நிருபர்.

**Paper from Vine.**

**த்ராக்ஷைக் கொடியிலிருந்து கடுதாசி.**—தற்காலம் உலகமெங்கும் நாகரீக வ்ருத்தியால் கடுதாசியின் உபயோகம் அதிகரித்துக்கொண்டு வருகிறது. அதற்கேற்றபடி கடுதாசி செய்வதற்கேற்ற மூலப்பொருள்கள் அதிகமாக அபிவ்ருத்தி யடையவில்லையென்று சொல்லப்படுகிறது. காடுகள் ஓர் வரையின்றி அழிக்கப்பட்டு அவைகளிலுள்ள மரங்கள் மரக்கூழ் செய்ய உபயோகிக்கப்படுகின்றன. இதோடு, கடுதாசிக்கூழிலிருந்து ஸெல்லுலாய்ட் என்னும் ஒருவித செயற்கைப் பொருளும், செயற்கைப்பட்டும், கன் காட்டன் என்னும் யுத்தமருந்துப் பொருளும் செய்வதால், நாளுக்குநாள் கடுதாசியின் விலை அதிகரித்துவருவதாகச் சொல்லப்படுகிறது. இதை உத்தேசித்து அநேக காகிதத் தொழில்காரர்களும் மற்ற தொழில் வித்பன்னர்களும், காகிதக்கூழ் செய்ய வேறு தக்க மூலப்பொருள்கள் கிடைக்குமா என்பதைப்பற்றி ஆராய்ச்சிகள் செய்து வருகிறார்கள். நமது பத்ரிகையில் முன்பு பருத்தித் தாளிலிருந்தும், இன்னும் வேறு பொருள்களிலிருந்தும் கடுதாசிக்கூழ் செய்ய முடியுமென சாஸ்த்ர வித்பன்னர்கள் கண்டுபிடித்திருக்கிறதாகத் தெரிவித்திருக்கிறோம். இப்போது ப்ரான்ஸில் சிலர் த்ராக்ஷைக் கொடிகளிலிருந்து கடுதாசி செய்திருக்கிறார்களென்று தெரிகிறது.

தற்போது ப்ரான்ஸில் யுத்தம் நடக்கு மிடங்களில் உள்ள காடுகளில் கிடைக்கக்கூடிய மரங்கள், யுத்தம் முடியுமளவும் மரக்கூழ் செய்ய உதவாவாகையால், வேறு பொருள்களிலிருந்து கடுதாசி செய்வதைப்பற்றி ப்ரெஞ்ச் வித்பன்னர்கள் ஆராய்ச்சி செய்ய நேர்ந்ததாம்.

த்ராக்ஷைக் கொடியிலிருந்து மொத்தம் நிறையில் நூற்றுக்கு 30-பாகம் காகிதக்கூழ் கிடைக்குமென்று அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஸாதாரணமாய்க் காகிதம் செய்ய உதவும் 'பாப்லர்' என்னு மரத்திலிருந்து நூற்றுக்கு 35-வீதம் மரக்கூழ் கிடைக்கிறதாம். த்ராக்ஷைக் கூழை அப்படியே உபயோகிப்பதற்கில்லையென்று சொல்லப்படுகிறது. இதோடு பைன் மரத்தின் கூழையும் ஒரு குறிப்பிட்ட அளவில் சேர்த்தால் தான் நல்ல கடுதாசி கிடைக்கிறதாம். இதைக்கொண்டு உயர்ந்த கடுதாசி செய்வதில் அதிக செலவு ஏற்படுவதால் இந்தக் கூழை வேறு காகிதக்கூழுடன் சேர்த்து கொஞ்சம் மட்டமான கடுதாசி செய்யலாமாம். தற்போது ப்ரான்ஸில் த்ராக்ஷையிலிருந்து கடுதாசிசெய்ய ஸுமார் 20 காகிதத் தொழில்சாலைகள் வரையில் இருக்கின்றனவென்று தெரிகிறது.



# BOYS' PAGE.

## பையன்கள் பக்கம்.

**To Find the Nearest Square Root.**

**ஒரு எண்ணின் ஆஸன்ன வர்க்க மூலத்தைக் கண்டுபிடிக்க.**—ஸுலபமாய்வர்க்கமூலம்கண்டுபிடிக்க முடியாத ஒரு எண்ணின் கிட்டதட்டச்சரியான வர்க்க மூலத்தைக்கண்டுபிடிக்க ஒருவழி 'ஆர்யதர்மம்' என்னும் பத்ரிகையில் வெளியாகி இருக்கிறது.

ஒரு எண்ணை அதனாலேயே ஒருதடவை பெருக்கி வரும் தொகை வர்க்கராசியாகும். முதலில் சொன்ன எண் வர்க்கராசிக்கு வர்க்க மூலமாகும். சில எண்களுக்கு வர்க்கமூலம் கண்டுபிடிப்பது ஸுலபமாகும். உதாரணம் 16;144;256. சில எண்களின் வர்க்கமூலத்தைக் கண்டு பிடிப்பது முடியாது. அவைகளுக்குக் கிட்டத்தட்ட ஸரியான வர்க்கமூலத்தைத்தான் கண்டு பிடிக்கமுடியும். கிட்டத்தட்ட ஸரியான வர்க்கமூலத்துக்கு ஆஸன்ன மூலமென்று பெயர். இப்படி ஒரு எண்ணுக்கு ஆஸன்னவர்க்க மூலத்தைக் கண்டுபிடிக்க 'லீலாவதி' யென்னும் கணித சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கும் முறையென்னவென்றால், ஒரு ராசியின் பகுதி, தொகுதிகளின் பெருக்குத் தொகையை விரும்பின அளவு பெரியதான ஒரு வர்க்கராசியால் பெருக்கி வந்த தொகையின் வர்க்க மூலத்தை, பகுதியெண்ணிற்கும் பெரியவர்க்க ராசியின் மூலத்திற்கும் பெருக்க வரும் பெருக்குத் தொகையால் வகுக்கவும்; கிடைத்த ஈவு ராசியின் கிட்டின வர்க்க மூலமாகும்.

உதாரணம்: 2-ன் கிட்டின வர்க்க மூலம் என்ன? 2, என்பது முழு எண்ணாதலால் 1-ஐப்பகுதி எண்ணாகக் கல்பித்துக்கொள்ள வேண்டியது. இந்த ராசியின் (எண்ணின்) பகுதி தொகுதிகளினுடைய பெருக்குத் தொகை $1 \times 2 = 2$. இங்கு விரும்பிய அளவு பெரிய வர்க்காராசி 1,66,464 என்று எடுத்துக்கொள்வோம். இந்த வர்க்காராசியை எவ்வளவுக் கெவ்வளவு பெரியதாய் எடுத்துக் கொள்ளுகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு ஆஸன்ன வர்க்கமூலம் வாஸ்தவ வர்க்க மூலத்துக்குக் கிட்டினதாயிருக்கும். பகுதி தொகுதிகளின் பெருக்குத் தொகையாகிய 2-ஐ நாம் எடுத்துக்கொண்ட வர்க்க ராசியினால் பெருக்க வரும் பெருக்குத்தொகை $2 \times 1,66,464 = 3,32,928$. இந்தத் தொகைக்கு ஸாதாரண விதிப்படி வர்க்கமூலம் கண்டுபிடித்தால் கொஞ்சங் குறைய 577-வரும். வழக்கத்தில் கொஞ்சத்தை விட்டுவிடலாம் இந்த 577-ஐ, இங்கெடுத்துக்கொண்ட 1,66,464, ஆகிய வர்க்க ராசியின் மூலம் 408-க்கும் பகுதி எண்ணாகிய 1-க்கும் பெருக்கி வந்த தொகையால் வகுத்தால் $\frac{577}{408} = 1\frac{66}{408}$ வரும். இதுவே 2-ன் ஆஸன்ன வர்க்க மூலமாகும்.

**Mr. S. Ramanujam Iyengar.**

**மிஸ்டர் எஸ். ராமானுஜமய்யங்கார்.**—ஸுமார் மூன்று வர்ஷங்களுக்கு முன்னால் கணித சாஸ்த்ரத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்து தமது அறிவை அபிவ்ருத்தி செய்ய, கேம்ப்ரிட்ஜ் ஸர்வகலாசாலைக்குப்போன மிஸ்டர் எஸ். ராமானுஜமய்யங்கார் ரொம்ப ச்லாகிக்கத்தக்க விதமாய் கணித சாஸ்த்ரத்தில் அபிவ்ருத்தியடைந்து வருவதாகத் தெரிகிறது. அவர் ஸமீபத்தில் கணித சாஸ்த்ர விஷயமாய் சில வ்யாஸங்கள் எழுதி யூனிவர்ஸிட்டியின் கணித சாஸ்த்ர போர்டாருக்குக் காட்டினதில், அந்த ஸபையார் அவைகளில் கண்ட விஷயங்கள் மிஸ்டர் ராமானுஜமய்யங்காரால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டவையாகுமென்றும், அவைகள் ரொம்ப ச்லாக்யமாயிருக்கின்றனவென்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

மிஸ்டர் ராமானுஜ மய்யங்கார் சென்னை யூனிவர்ஸிட்டியில் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறி சென்னைபோர்ட் ட்ரஸ்ட் ஆபீஸில் 20-ரூபாய் சம்பளத்தில் வேலைபார்த்து வந்தார். அப்போது முதல்கொண்டே அவருக்கு கணிதசாஸ்த்ரத்தில் விசேஷ ஆவலுண்டாம். அந்த ஆபீஸிலிருந்துகொண்டே, இங்க்லண்டில் வெளியாகும் கணிதசாஸ்த்ர பத்ரிகைகளில் எழுதப்படும் கடினமான கணக்குகளுக்கு விடையெழுதி யனுப்பியும், அநேக வித்வான்கள் விடை கண்டுபிடிக்க முடியாதென்று கைவிட்ட கணிதக்கேள்விகளுக்கு பதில்எழுதியும் வந்தார். இதனால் அவருடைய பெயர் அங்கு பரவலாயிற்று. அங்குள்ள இங்க்லீஷ் வித்வான்கள் இவருடைய ஸாமர்த்யத்தைப் பற்றி ச்லாகிக்கலானார்கள். மூன்று வர்ஷங்களுக்கு முன்னால் ஒரு கேம்ப்ரிட்ஜ் வித்வான் சென்னை யூனிவர்ஸிட்டியில் ப்ரஸங்கங்கள் செய்யவந்தபோது, இவரைக்கண்டு, இங்க்லண்டுக்குப்போய் தமது அறிவை அபிவ்ருத்தி செய்துகொள்ளும்படி தூண்டினார். சென்னை யூனிவர்ஸிட்டியார் 3-வர்ஷ காலத்துக்கு 3000-ரூபாய் ஸ்காலர்ஷிப் கொடுக்க ஒப்புக்கொள்ளவே, மிஸ்டர் ராமானுஜமய்யங்கார் கேம்ப்ரிட்ஜுக்குப்போய் வாசித்து வருகிறார்.

## LADIES' PAGE.

## ஸ்த்ரீகள் பக்கம்.

### Things Worth Knowing.

**தாய்மார்கள் அறியவேண்டிய விஷயங்கள்.**—சுத்தமான காற்றுள்ள இடத்தில் குழந்தைகளை இருக்கச் செய்து, ரொம்ப காரம், தித்திப்பு முதலிய உணவுகளை கொடுக்காமல் ஸாமான்யமான ஆகாரம் கொடுத்து வந்தால், குழந்தைகள் நல்ல பலசாலிகளாவதோடு, அவர்களுடைய தேகாத்தமும் சுத்தமாயிருக்கும்.

குறிப்பிட்டகாலத்தில் சாப்பாடு போடுவதென்று வைத்துக்கொண்டு, இடைநேரத்தில் பக்ஷணம் முதலிவைகளைக் கொடுக்காமலிருந்தால், சிறுவர்களுக்கு சாப்பாட்டு நேரத்தில் நன்றாய்ப் பசியெடுக்கும்.

குழந்தைகளுக்கு எவ்வளவுக்கெவ்வளவு கண்ட பக்ஷணங்களைக் கொடுக்காமலிருக்கிறோமோ, அவ்வளவுக்கு அவர்களுக்கு தேகம் ஸௌக்யமாயிருக்கும்; வ்யாதி வருவது துர்லபம்.

வளரும் குழந்தைகள் அதிக நேரம் தூங்கவேண்டியது அவச்யம். முக்யமாய் பள்ளிக்கூடம் போகும் சிறுவர்கள் அதிக நேரம் தூங்கவேண்டும்.

சிறுவர்களின் கால்களும் பாதங்களும் எப்போதும் சூடாயிருக்கவேண்டும்.

சிறுவர்கள் படுக்கும் அறையில் காற்று தாராளமாய் வந்து போய்க்கொண்டிருக்கவேண்டும்.

சில குழந்தைகள் போர்வையால் தங்களுடைய முகத்தை மூடிக்கொள்ளும். இப்படிச் செய்வதை தாய்மார்கள் தடுக்கவேண்டும்.

கோபத்தால் குழந்தைகளை அடிப்பதும், வைவதும் கூடாது.

அவர்களுடைய குற்றங்களை கவனித்துக்கொண்டிருக்கவேண்டும். ஆனால் அந்தக் குற்றங்களை அடிக்கடி எடுத்துக்காட்டுவதைவிட, அவைகளுக்கு எதிரிடையான நல்லகார்யங்களைச் செயயும்படிசொல்லிக்கொடுக்கவேண்டும்.

தாய்மார்கள் எப்போதும் உண்மை பேசவேண்டும். தாங்கள் சொன்ன சொல் தவறக்கூடாது. அப்போதுதான் சிறுவர்களும் உண்மை பேசுவதோடு சொன்ன சொல் தவறாமலிருக்கப் பழகவும் ஸாத்யமாகும்.

சிறுவர்களுடைய விளையாட்டு ஸாமான்களை வைக்க ஒரு இடம் கொடுக்க வேண்டியது அவச்யமாகும். அதோடு, அவர்களை அந்த ஸாமான்களை அந்த இடங்களில் வைத்துக்கொள்ளும்படி கட்டாயப்படுத்த வேண்டும். அவர்கள் ஒரு குறிப்பிட்டகாலத்தில் விளையாடுவதற்கு அனுமதி கொடுக்கவேண்டும்.

### Prof. Karve's Widow's Home.

**ப்ரொபஸர் கார்வேயின் விதவாச்ரமம்.**—ப்ரொபஸர் கார்வே பூனாவில் ஸ்தாபித்திருக்கும் விதவாச்ரமத்தின் 20-வது வர்ஷாந்திர ரிப்போர்ட் ஸமீபத்தில் வெளியாயிருப்பதிலிருந்து, அது த்ருப்திகாமாக நடந்து வருகிறதென்று தெரிகிறது. அந்த ஆச்ரமத்தின் நோக்க மென்னவென்றால், விதவைகளுக்குக் கல்வி கற்பித்து அவர்கள் கௌரவமாய் ஸம்பாதித்து பிழைக்க உதவிசெய்வது; கல்யாணமாகாத பெண்களுக்கு, அதிக வயஸாகும்வரையில் கல்விகற்பிப்பதோடு, அவர்களுடைய கல்யாண வயஸையும் உயர்த்துவது; கல்யாணமான பெண்களுக்குக் கல்வி கற்பித்து அவர்கள் தங்கள் புருஷர்களுக்கு உதவியாக இருக்கும்படி பயிற்றுவது; அதாவது, பொதுவாய்ச் சொல்லுமிடத்து, ஸ்த்ரீகள் தங்கள் தேகஸ்திதியையும், மனோசக்திகளையும் அபிவ்ருத்தி செய்ய ஸாத்யமாகும்படி அவர்களுக்குத் தக்க கல்வி கற்பிப்பது.

இந்த ஆச்ரமத்தில் தற்போது 226-மாணவர்கள் இருக்கிறார்கள். இவர்களுள் பெரும்பாலார் ப்ராமண பெண்களாகும். சென்ற வர்ஷம் 11-பெண்கள் பம்பாய் வெர்னகுலர் ஸ்கூல் பைனல் பரீக்ஷைக்குப் போனதில் 7-பேர்கள் தேறினார்கள். இந்த ஆச்ரமத்துக்குச் சென்றவர்ஷம் 45,693-ரூபாய் வரும்படியும் 35403-ரூபாய் செலவும் எற்பட்டன. ஆச்ரமத்தின் மொத்தக் கையிருப்புத் தொகை 50,212-ரூபாயாகும். இதில் 10,664-ரூபா சாச்வத நிதியைச் சேர்ந்ததாகும்.

### Buttermilk for Erysipelas.

**அக்கிக்கு மோர் வைத்யம்.**—அக்கியில் மோரை உபயோகிப்பது ரொம்ப அனுகூல மென்று தெரிவதாக 'வைத்திய கலாநிதி' தெரிவிக்கிறது. இந்தவ்யாதியின் நிலைமை எவ்விதமாயிருந்த போதிலும், வ்யாதிக்குக் காரணமான தோஷங்களைப் போக்குவதிலும் வலியை சாந்தப்படுவதிலும் இது நிகரற்ற தென்றும், அக்கியின்மேல் உபயோகித்தவுடன் எரிச்சலும் மற்ற விகாரங்களும் தணிந்து விடுகின்றனவென்றும சொல்லப்படுகிறது.



## INDIANS ABROAD.

## இதர தேசங்களில் இந்தியர்கள்.

### Indians in Fiji.

**பீஜித்தீவில் இந்தியர்கள்.**—பீஜித்தீவில் உள்ள இந்தியர்களின் நிலைமை ரொம்ப கேவலமாக இருக்கிறதென்று பலர் சொல்லுகிறார்கள். அங்குள்ள இந்தியர்களுக்குள் தற்கொலை அதிகமென்றும், இதற்குக் காரணம் ஸ்த்ரீகள் விஷயமாய் எற்படும் சண்டைகளென்றும் தெரியவருகிறது. அங்குள்ள இந்தியர்களுக்குள் துன்மார்க்க நடத்தை அதிகமென்றும் சொல்லப்படுகிறது. இங்க்லண்டிலிருந்து ஆஸ்ட்ரேலியாவுக்குப் போக சீக்ரமான மார்க்கம் இங்க்லண்டிலிருந்து அட்லாண்டிக் ஸமுத்ரத்தின் வழியாக அமெரிக்காவிலுள்ள ந்யூயார்க்குக்குப்போய், அங்கு ரெயிலேறி, ஸான் ப்ரான்ஸிஸ்கோவுக்குப் போய், அங்கிருந்து கப்பலேறி பஸிபிக் ஸமுத்ரத்தின் வழியாக ஸாண்ட்விச் தீவுகள், பீஜி தீவுகள் ஆகிய இவைகளில் உள்ள துறைமுகங்களுக்கு வந்துவிட்டு ஆஸ்ட்ரேலியாவுக்குப் போவதே. இவ்விதம் சீக்ரமாக ஆஸ்ட்ரேலியாவுக்குப் போகும் அமெரிக்கர்கள், கனடியர்கள், இங்க்லீஷ்காரர்கள் முதலியவர்கள் பீஜி தீவுகளில் சிறிதுநேரம் தங்கும்போது, அங்குள்ள வெள்ளைக்காரத் தோட்டக்காரர்கள், ஸர்க்கார் உத்யோகஸ்தர்களிடம் பேச நேரிடும். இவர்கள் மூலமாக அங்குள்ள இந்தியர்களின் நிலைமையை அறிந்துகொண்டு, பீஜி தீவுகளிலுள்ள இந்தியர்களைப்போல் ஸன்மார்க்கம் குறைந்தவர்களாய்த்தான் இந்தியாவிலுள்ள இந்தியர்களும் இருப்பார்களென்று நினைக்கக் கூடும். இதனால் இந்தியர்களைப்பற்றி முன் சொன்ன அமெரிக்கர், கனடியர்கள் முதலாயினோர் தாழ்ந்த அபிப்ராயம் கொள்ளக்கூடுமென்று 'இந்தியன் ஸோஷல் ரிபார்மர்' என்னும் பத்ரிகை சொல்லுகிறது. இவ்விதம் பீஜித்தீவிலுள்ள இந்தியர்களின் நிலைமையால் இந்தியாவிலுள்ள இந்தியர்களின் கௌரவம் குறைந்து போவதால், இந்திய ஒப்பந்தக்கூலி எற்பாட்டை இப்போது முற்றிலும் ஒழிக்க ஸாத்யப்படாவிட்டாலும், பீஜித்தீவு ஸம்பந்தப்பட்டமட்டிலாவது அந்த எற்பாட்டை இனிக் கொஞ்சங்கூடத் தாமஸிக்காமல் ஒழித்து விடவேண்டுமென்று அந்தப் பத்ரிகை சொல்லுகிறது.

பீஜித்தீவில் இந்தியர்களுக்கு வித்யா வஸதிகள் ரொம்ப குறைவாயிருப்பதாகச் சென்ற ஸெப்டம்பர் மாஸத்து 'ஜனோபிமானி'யில் தெரிவித்திருக்கிறோம். ஸமீபத்தில் அங்குள்ள இந்தியர்களின் நிலைமையை ஆராய்ச்சி செய்யப்போயிருந்த ரெவரண்ட் ஸி. எப். ஆண்ட்ரூஸ் என்பவர் பீஜித்தீவு இந்தியர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்காக இந்தியாவிலிருந்து 20 உபாத்யாயர்கள் அங்கே போய் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்து அவர்களுக்குக் கல்வி கற்பித்து அவர்களை உயர்த்த வேண்டுமென்று தெரிவிக்கிறார்.

### Indians in Mauritius.

**மோரிஷஸ் தீவில் இந்தியர்கள்.**—மொரிஷஸ் (மோர்சு) தீவிலுள்ள மொத்த ஜனத்தொகை 3,77,083. இதில் 257,697 பேர்கள் இந்தியர்களாவார்கள். அந்தத் தீவில் உள்ள கவர்ன்மெண்டார் ஹிந்துக்கள், மகம்மதியர்கள் முதலியவர்கள் தங்கள் மதாசாரப்படி செய்து கொள்ளும் கல்யாணங்களை அங்கீகரிப்பதில்லை. சட்டரூல்களின்படி யாதொரு சடங்குகளுமில்லாமல் கல்யாணம் செய்துகொள்வதாக ரெஜிஸ்டர் செய்யப்படும் கல்யாணங்களையே அங்கீகரிக்கிறார்கள். ஆகையால் இப்படி ரெஜிஸ்டர்செய்து கல்யாணம் செய்யாமல், ஆனால் தங்கள் மதாசாரப்படி கல்யாணம் செய்துகொள்ளுபவர்களை கல்யாணமாகாதவர்களென்று கணக்கிடுகிறார்கள். இதனால்தான் அங்குள்ள இந்தியர்களில் நூற்றுக்கு 86-வீதம் கல்யாணமாகாமலிருக்கிறார்களென்று கவர்ன்மெண்டு கணக்குகளில் கண்டிருக்கிறது. ஆகையால் மேற்சொன்ன நூற்றுக்கு 86-வீதம் ஜனங்கள் கவர்ன்மெண்ட் கணக்குகளின்படி கல்யாணமாகாதவர்களென்பதைக்கொண்டு, அத்தனை பேரும் கெட்ட நடத்தையுள்ளவர்களென்று சொல்வதற்கில்லை. அந்த தீவின் கவர்ன்மெண்டார் இந்திய மதாசாரங்களின்படி நடக்கும் கல்யாணங்களை கல்யாணமென்று அங்கீகரிக்காதது இந்தியர்களுடைய குறைகளுள் ஒன்றாகும்.

அங்குள்ள இந்தியர்களின் படிப்பு நிலைமையும் ரொம்ப தாழ்ந்த நிலைமையிலிருக்கிறது. அந்த தீவிலுள்ள மொத்தம் ஜனங்களில்நூற்றுக்கு 41.9-பேர்கள் வீதம் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாயிருக்க, இந்தியர்களுள் நூற்று 1.7-பேர்கள்தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாயிருக்கிறார்கள்.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### The Butcher.

**கசாப்புக் கடைக்காரன்.**—ஒரு கசாப்புக் கடைக்காரன் ஒரு நாள் ம்ருகங்களின் நாக்குகளை ஏராளமாய் விற்பனைக்கு வைத்திருந்தான். அங்கே ஒரு மனிதன் ஓடிவந்து, கடைக்காரனைப்பார்த்து, "இந்தத் தெருவில் ஒரு பெரிய கருப்பு நாய் வாயில் ஒரு நாக்குடன் ஓடிக்கொண்டிருக்கிறது." என்றான். உடனே கசாப்புக் கடைக்காரன் "அப்படியா, திருட்டு நாய்," என்று சொல்லி, ஒரு கத்தியை எடுத்துக்கொண்டு நாயைத் தேடி ஓடினான். தெருக்கோடியில் ஒரு பெரிய கருப்பு நாய் ஓடிக்கொண்டிருந்தது. அந்த நாய்தான் தனது கடையிலிருந்த நாக்கை எடுத்துக்கொண்டு ஓடிற்றென்று எண்ணி அதைத் துரத்திக்கொண்டு ஓடினான். ஆனால் அது சீக்ரம் மறைந்துவிட்டது. அதன்மேல் அவன் தெருவில் போய்க்கொண்டிருந்த சிலரை "வாயில் ஒரு நாக்குடன் ஒரு கருப்பு நாய் போனதை யாராவது பார்த்தீர்களா" என்று கேட்டான். அவர்களில் ஒருவன்; "நாக்குள்ள நாயா? நாக்கில்லாத நாயை எங்கேயாவது பார்த்திருக்கிறாயா" என்று சிரித்துக்கொண்டு பதில் சொன்னான். கசாப்புக் கடைக்காரன் ஓகோ, மோசம் போனேனென்று எண்ணி கடைக்கு வந்து பார்க்கையில், எல்லா நாக்குகளும் திருட்டுப் போயிருந்தன. தன்னை ஏமாற்றினவனும் ஓடிவிட்டான்.

### The Young Lawyer.

**சின்ன வக்கீல்.**—ஒரு கோர்ட்டில் ஒருவனை கொலைக்குற்றம் சாட்டி விசாரித்துக்கொண் டிருந்தார்கள். அவனுக்கு வக்கீல் ஒருவரும் இல்லை. கொலையாளியின் கேஸை எடுத்துச்சொல்ல அவனுக்கு ஒரு வக்கீலும் இல்லாதிருந்த பரிதாப நிலைமையைப்பார்த்து, ஜட்ஜானவர், கோர்ட்டில் இருந்த அதிக அனுபவமில்லாதவரும், சிறுவயதினருமாகிய ஒரு வக்கீலைப்பார்த்து, "இந்தக் குற்றவாளிக்கு ஒருவக்கீலுமில்லை. இவனைக் கோர்ட்டுக்குப் பின்னால் உள்ள அறைக்குக் கூட்டிக்கொண்டுபோய், அவனுடைய கேஸைக்கேட்டு, எது ரொம்ப நல்ல யோசனையென்று உமக்குத் தோன்றுகிறதோ அந்த யோசனையை அவனுக்குத் தெரிவித்து வாரும்" என்றார்.

அதன்மேல் வக்கீலும் குற்றவாளியும் கோர்ட் அறையைவிட்டு வெளியில்போனார்கள்.

அரைமணிநேரம் சென்றபிறகு வக்கீல்மாத்ரம் தனியாகத் திரும்பிவந்தார் "குற்றவாளியெங்கே" என்று ஜட்ஜ்கேட்டார். வக்கீல் சொன்னதாவது:— "நீங்கள் சொன்னப்ரகாரம் அவனை அழைத்துக்கொண்டுபோய், கேஸ் விஷயமாய் அவன் சொன்னவற்றையெல்லாம் கேட்டேன். பிறகு எனக்கு ரொம்ப நல்ல யோசனையென்று தோன்றினதை அவனுக்குத் தெரிவித்தேன்: 'குற்றவாளியே, நான் உனது நிலைமையில் இருந்தால் என்ன செய்வேன்தெரியுமா? இந்த ஜன்னல் வழியாகக் குதித்து, கம்பிநீட்டிவிடுவேன்' என்றேன். அதன்மேல் அவன் ஜன்னல் வழியாகக் கீழே இறங்கி அரைமைல் தூரம்போய் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்ததும் நான் திரும்பிவந்துவிட்டேன்."

### He Should'nt have Gone there.

**அவர் அங்குபோயிருக்கக் கூடாதுதான்.**—வாசல் காப்போன்.—எஜமான் வேறு மனுஷாளுடன் பேசிக்கொண்டிருக்கிறார். உள்ளே போகப்படாது.

வித்வான்.—அப்பா, நான் உன் எஜமானனை அவச்யம் பார்க்கவேண்டும். வழி விடு.

வாசற் காப்போன்.—உம்மைப் பார்த்தால் யோக்யராகத் தோற்றுகிறதே. நான் சொல்வதை நீர் கேட்கவில்லையா? உமக்கு இங்கு வேலையில்லை போம்.

வித்வான்.—ஆமப்பா, யோக்யர்களுக்கு இங்கு வேலையில்லை யென்பதை நான் அறிந்துகொண்டேன்.—வைச்யமித்திரன்.

### A Good Child.

**நல்ல குழந்தை.**—ஒரு இங்க்லீஷ் குழந்தைக்கு அவளுடைய தாயார் காட்லிவர் ஆயில் என்னும் எண்ணெயை மருந்தாகக் கொடுத்து வந்தாள். குழந்தை அந்த நாற்றமுள்ள மருந்தை ஸுலபமாய்க் குடிப்பதற்காக அதற்கு ஒவ்வொரு தடவை குடிக்கும்போது ஒரு அணா கொடுப்பது வழக்கம். இவ்விஷயத்[illegible] அந்தக் குழந்தை ஒருவரிடம் சொல்லிக்கொண்டிருந்தது.

"அந்தக் காசையெல்லாம் நீ என்னசெய்வாய்?"

"என் தாயார் அந்தக்காசை இரண்டு ரூபாய் ஆகிறவரையில் எனது பெட்டியில் போட்டுவைப்பாள்."

"பிறகு என்ன செய்வாய், அந்தப் பணத்தை?"

"அப்புறமா? அந்தப் பணத்தைக்கொண்டு எனது தாயார் புதிதாக காட்லிவர் ஆயில் மருந்து ஸீஸா வாங்குவாள்."

# CURIOSITIES.

## விநோதங்கள்.

### A Strange Margossa Tree.

**ஒரு விநோத வேப்பமரம்.**—வந்தவாசித் தாலுக்கா கொவளை க்ராமத்தில் பாலக்கவுண்டர் வகையறாக்களுக்கு ஸொந்தமான புலத்திலுள்ள ஸுமார் 30 - வயதுள்ள ஒரு வேப்பமரத்திலிருந்து ஸுமார் ஒரு மாதகாலமாய் பால் பெருகி வருகிறது. ஸாதாரணமாக வேப்பமரமே அம்மனுக்கு உகந்தமரம் என்று மதிப்புடனும் பக்தியுடனும் கொண்டாடப்படுகிறது. பின்னும் பால்பெருகி வந்துகொண்டிருக்கும் வேப்பமரம் என்றால் ஜனங்கள், முக்யமாக பிணியாளர் அதிக பக்தி பாராட்டி அந்தப் பாலைக் குடித்து மரத்தைச்சுற்றிக் கும்பிட்டு வருகிறார்கள் என்பது ஆச்சரியமல்ல. இப்போது இவ்வூரில் பால்பெருகி வந்துகொண்டிருக்கும் வேப்பமரத்தைப்பற்றிக்கேள்விப்பட்ட அனேக ஊரார் தூரத்தை கவனியாது தினந்தோறும் பார்வையிட்டு சுற்றிச்சுற்றிக் கும்பிட ஆவலுடனும் பக்தியுடனும் வருகிறார்கள். குன்ம வ்யாதியினால் வருந்திவந்த அனேகர் இம்மரத்தைச் சுற்றிச் சுற்றிக் கும்பிட்டு, அதினின்றும் பெருகிவரும் பாலைக் குடித்தால் அந்தக் குன்ம வ்யாதி தீரும் என்று கேள்விப்பட்டு இங்கேவந்து அந்தப் பாலைக் குடித்து, தங்களை வருத்திய பிணியை (தேர்ந்த வைத்தியர்களாலேயே கைவிட்டு விடப்பட்ட பிணியை) உட[illegible]ன ஸ்வஸ்தப்படுத்திக் கொ[illegible]ார்கள். நாள்தோறும் பிணியோடு இங்கே வருகிறவர்கள் அந்த மரத்தைச் சுற்றிக் கும்பிட்டு, அதன் பாலைக்குடித்து வீட்டுக்குப் போவதற்குள்ளேயே அனேகருக்குப் பிணி தொலைந்து ஆரோக்யம் அடைந்திருக்கிறார்களென்று ஊரெல்லாம் முழக்கமாக இருக்கிறது. ஆகவே தினந்தோறும் புதுப்புது ஊர்களிலிருந்து அதிக ஜனங்கள் இவ்விந்தையான வேப்பமரத்தைப் பார்க்க வந்துகொண்டிருக்கிறார்களென்று, 'சுதேசமித்திர'னில்ஒரு நிருபர் எழுதுகிறார்.

### Solving the Paper Famine.

**காகிதப் பஞ்சத்துக்கு ஒரு யுக்தி.**—காகிதத்தின் விலை ஏறியிருப்பதால் அநேக ஜனங்களுக்கு எழுதுவதற்கு ஆகும் கடுதாசிச் செலவு அதிகமாயிருக்கிறது. இதைக் குறைக்க இங்க்லண்டில் அநேகர் அநேக யுக்திகள் தெரிவிக்கிறார்கள். ஒரு ஆசிரியர் சொல்லுவதாவது: "நான் எழுதும் வ்யாஸங்களை எப்போதும் பென்ஸிலால் எழுதுகிறேன். அதை டைப் அடிக்கிறவரிடம் கொடுத்து, டைப் அடிக்கச் சொல்லுகிறேன். அந்த வேலை முடிந்ததும், எழுதின கடுதாசிகளை தூர எறிந்துவிடாமல், ரப்பரால் எழுத்துகளை அழித்துவிட்டு மறுபடியும் எழுத உபயோகிக்கிறேன். இப்படி நான்கு தடவை அழித்து எழுதலாமாதலால், ஒவ்வொரு தாளும் மொத்தம் 5-தடவை எழுத உதவும். நான்கு தடவை அழித்தபிறகு கடுதாசி ரொம்ப மெல்லியதாகப் போய்விடுமாதலால் மறுபடி அது எழுத உதவாது. அந்தக் கடுதாசிகளை மெல்லிய நெருப்புக் குச்சிகளைப் போல் சுருட்டி, விளக்கேற்ற உபயோகிக்கிறேன்."

### White Crow.

**வெள்ளைக்காகம்.**—வெள்ளைக்காகமும் கேரியூதென்னமரமும் வலியச்செத்த குரங்கும் காணுதல் அரிதென்பர். லங்கையில் களுத்துறையிலேயுள்ள நாகோடா என்னுமூரிலே அப்புஹாமி என்னுமொருவர் வெள்ளைக் காகத்தை கூட்டில்வைத்து வளர்த்து வருகிறாராம். பேதைச் சனங்கள் அதையொரு பூஜ்ய பொருளாகக் கொள்ளுகிறார்களாம். காகமிருக்கும் கூட்டுக்குள்ளே அது எச்சமிடுந்தடிக் கருகிலே ஒரு பெட்டி யிருக்கிறது. வெள்ளைக்காக நூதனத்தைப் பார்க்க வருபவர்கள் அதற்குள்ளே தர்மம் போடுகிறார்களாமென்று 'சத்திய வேத பாதுகாவலன்' எழுதுகிறது.

### Mother of Nine in Eighteen Months.

**பதினெட்டு மாஸத்தில் ஒன்பது குழந்தைகள் பெற்றது.**—அமெரிக்கா ஐக்ய மாகாணங்களில் உள்ள ஒரு ஊரில் ஒரு ஸ்த்ரீ பதினெட்டு மாஸத்தில் 9-குழந்தைகளைப் பெற்றாளாம். அந்த ஸ்திரீக்கு வயது முப்பதாம். சென்ற 1914 - ம் வர்ஷம் மே மாஸத்தில் அவள் 5-குழந்தைகளை பெற்றாளாம். 1915-ம் வர்ஷம் நவம்பர் மாஸத்தில் 4 - குழந்தைகளைப் பெற்றாளாம். பிறந்த குழந்தைகள் எல்லாம் ஆண்களாம். அவளுக்கு இப்போது 7-பிள்ளைகள் உயிரோடிருக்கின்றனவாம்.

### Centenarians.

**சதஞ்சீவிகள்.**—விலோனியில் பாடெல்லா ஆஸ்பத்திரியில் ஸமீபத்தில் 102-வயது வரையில் வஸித்திருந்த மிஸ்டர் ஜோஸப் விஸ்க் என்னும் கிழவர் இறந்துபோனாராம். கண்ணனூருக்கு ஸமீபத்தில் சொக்காயில் 106-வயதுள்ள தீயன் ஸமீபத்தில் இறந்துபோனானும்.

## MISCALLANEOUS NEWS.

## நாநா ஸங்கதி.

### Germany's Man Power.

**ஜெர்மனியில் யுத்தத்துக்கு லாயக்காயிருப்பவர்களின் தொகை.**—ஜெர்மனியில் இப்போது போர்முனையிலிருப்பவர்களைத் தவிர ஸுமார் 7½-லக்ஷம் வீரர்கள்தான் அதிகப்படியாக இருக்கிறார்களென்று ஒரு ப்ரெஞ்ச் ராணுவ உத்யோகஸ்தர் ஒரு பத்ரிகையில் எழுதுகிறார். யுத்த ஆரம்பத்தில் ஜெர்மனிக்கு ராணுவவேலைக்கு லாயக்குள்ளவர்களாய் 93¾-லக்ஷம் பேர்களிருந்தார்களாம். இவர்களில் தற்போது 45-லக்ஷம் பேர்கள் போர்முனையிலிருக்கிறார்களாம். சென்ற 16-மாஸங்களிலும் மாஸமொன்றுக்கு 2-லக்ஷம் பேர்கள் வீதம் சேதம் ஏற்பட்டதால், 32-லக்ஷம் பேர் குறைந்து போனார்கள். ராணுவக் கருவிகள் செய்து கொண்டும் தேசத்தின் இதர வேலைகளைச்செய்து கொண்டும் 7-லக்ஷம் பேர் இருக்கிறார்கள். 2-லக்ஷம் ஜெர்மானியர்கள் இதர தேசங்களில் இருக்கிறார்கள். இவர்கள் போக பாக்கி 7¾-லக்ஷம் பேர்கள் தான் ஜெர்மனிக்கு உண்டு. இவர்களும், போரில் காயம் பட்டவர்களில் ஸ்வஸ்தமடைந்து, ராணுவ வேலைக்கு லாயக் காயிருப்பவர்களுந்தான் இன்னும் ஜெர்மனிக்கு இருக்கும் அதிகப்படியான சேனா பலமென்று அவர் சொல்லுகிறார்.

### Death of Arumugam.

**ஆறுமுகம் என்னும் கணக்கு நிபுணனின் மரணம்.**—எவ்வித பெரிய கணக்கையும் மனதில் கணித்துப் பிழையறச் சொல்லிப் பெருமதிசயம் விளைத்த ஆறுமுகம் என்னும் பையன் தனது ஜனனவூராகும் திருநெல்வேலியில் சடுதியில் வலி காரணமாக சென்ற ஸங்க்ராந்தியன்று இறந்து விட்டான். இவன் இறக்கும்போது வயது 20. இவன் கொழும்பிலிருந்தபோது இவனது கையைப்பார்த்து ப்ரொபஸர் கெண்டல் என்னும் கை ரேகை சாஸ்த்ரி அவன் நாலைந்து வருஷங்களுக்குள் சடுதியிலிறப்பானென்று சொல்லியிருந்தாராம். இவனைப்போலக் கணக்கு நிபுணராகவிருந்த வேறுசிலரும் இளமை ப்ராயத்திலேயே இறந்திருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள சில சாஸ்த்ர வித்பன்னர்கள் சோதித்துப் பார்ப்பதற்கு இவனது தலையைக் கொடுக்கும்படி இவனது தாயைக் கேட்டதற்கு, அவள் கொடுக்க மறுத்து விட்டாளாம்.

## DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

### THE WAR IN EUROPE.

### ஐரோப்பிய யுத்தம்.

மார்ச்சுமீ 8-ந்தேதி

ஜெர்மானியர்கள் வெர்டூனில் முன்சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் 265-வது குன்றையும், ப்ரெஸ்னெஸ் என்னும் ஊரையும் பிடித்திருக்கிறார்கள். ரஷ்யர்கள் துருக்கியர்களை ட்ரெபிஸாண்டை நோக்கித் துரத்துகிறார்கள். அவர்கள் கெர்மான்ஷாவுக்கு 25-மைல் மேற்கிலுள்ள கோலா என்னும் ஊரைப்பிடித்திருக்கிறார்கள்.

9-தேதி.

வெர்டூன் யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. ஜெர்மானியர்கள் ஹார்டமண்ட் பாதுகாப்பு வேலைகளைப் பிடித்துக்கொண்டார்கள்.

ரஷ்யர்கள் ட்ரெபிஸாண்ட் என்னும் இடத்துக்கு 41-மைல் கிழக்கிலுள்ள ரிஸே என்னும் ஊரைப்பிடித்திருக்கிறார்கள்.

10-தேதி.

ஜெர்மனி போர்த்துகலின்மேல் யுத்தம் தொடங்கியிருக்கிறது.

13-தேதி.

வெர்டூனில் யுத்தம் பலமாக நடக்கிறது. ரஷ்யர்கள் பெர்ஷியாவில் உள்ள டெரிண்ட் என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள்.

14-தேதி.

வெர்டூன் சண்டையில் இதுவரையில் ஜெர்மானியர்களுக்கு 2-லக்ஷம் பேர்கள் சேதமாம்.

15-தேதி.

ஜெர்மானியர்கள் வெர்டூனில் சில இடங்களில் பலமாய்த்தாக்கி இரண்டு இடங்களில் முன்சென்றார்கள்.

இட்டாலியர்கள் இஸான்ஸோ போர்முகத்தில் ஸான்



மார்ட்டினோவுக்குப் பக்கத்தில் ஒரு பாதுகாப்பு வேலையைப் பிடித்துக்கொண்டார்கள்.

17-தேதி.

ப்ரெஞ்சுக்காரர்கள் வெர்டூனுக்குப் பக்கத்தில் முன் சென்றிருக்கிறார்கள். ஈஜிப்டின் எல்லை ப்ரதேசத்தில் வடமேற்கில் உள்ள ஸால்லம் என்னும் ஊரை ப்ரிட்டிஷ் துருப்புகள் பிடித்திருக்கின்றன. ரஷ்யர்கள் துருக்கியர்களைத் துரத்திக்கொண்டிருக்கிறார்கள்.

17-ந்தேதி.

வெர்டூன் யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. ஜெர்மானியர்கள் இரண்டு மூன்று இடங்களில் முன்செல்ல முயன்றும் முடியவில்லை.

18-தேதி.

ரஷ்யர்கள் எர்ஸிரமுக்கு 60-மைல் மேற்கிலுள்ள மாமாகாடூன் என்னுமிடத்தைப் பிடித்திருக்கிறார்கள். இஸான்ஸோ போர்முகத்தில் ரொம்ப பலமான பீரங்கி யுத்தம் நடந்தது.

20-தேதி.

வெர்டூனில் ப்ரெஞ்சுக்காரர்கள் ஜெர்மானியர்களை எதிர்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

இட்டாலியப் போர்முகத்தில் டால்மினோப்ரதேசத்தில் பலமான பீரங்கி யுத்தம் நடந்தது. ஆஸ்ட்ரியர்கள் சில இட்டாலியக் கிடங்குகளைப் பிடித்தார்கள்.

21-தேதி.

ரஷ்யர்கள் ட்வெரெட்ச் என்னுமிடத்துக்குக் கிழக்கிலுள்ள வாய்கோஸெல்ஸ் என்னுமிடத்தைப் பிடித்தார்கள்.

இட்டாலியர்கள் ஸாண்டா மாரியாவிலிருந்து சற்றுப் பின்வாங்கி யிருக்கிறார்கள்.

24-தேதி.

ரிகாப்ரதேசத்தில் யுத்தம் நடக்கிறது.

25-தேதி.

ஜெர்மன் கிழக்கு ஆப்ரிக்காவில் ப்ரிட்டிஷ் துருப்புகள் ஆர்ன்ஷா, கிலோவா, காஹோ முதலிய இடங்களைப் பிடித்திருக்கின்றன.

28-தேதி.

ஜாகப்ஸ்டாட் ப்ரதேசத்தில் யுத்தம் நடக்கிறது. ட்ரெபிஸாண்டுக்கு 30-மைல் கிழக்கில் ரஷ்யர்கள் பால்டாட்ச் என்னும் நதியைக் கடந்து சென்றார்கள்.

29-தேதி.

ரஷ்யர்கள் பாஸ்டலிக்கு வடமேற்கில் சற்றுப் பின் வாங்கினார்கள். அவர்கள் ட்ரெபிஸாண்டுக்கு 30-மைல் கிழக்கில் ஒருஊரையும் பிட்லிஸுக்கு 25-மைல் தென் கிழக்கிலுள்ள கிஸான் என்னும் ஊரையும் பிடித்தார்கள். ஜெர்மன் டிஸ்ட்ராயர் கப்பல்களுக்கும் ப்ரிட்டிஷ் லைட்க்ரூஸர் கப்பல்களுக்கும் யுத்தம் நடந்ததாகவும், அதில் ஒரு ஜெர்மன் டிஸ்ட்ராயர் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதாகவும்தெரிகிறது.

31-தேதி.

வெர்டூன் சண்டையில் ஜெர்மானியர்கள் மாலன்கோர்ட் என்னும் ஊரை பலமாகத் தாக்கினதால், ப்ரெஞ்ச் துருப்புகள் அதைக் காலிசெய்து விட்டன.

## INDIAN NEWS.

## இந்திய வர்த்தமானம்.

மார்ச்சு மீ 15-தேதி.

**ஒங்கோல் கால்நடைக் காட்சி.**—இன்று ஒங்கோலில் கால் நடைக்காட்சி ஒன்று நடந்தது. போர்ட் அப் ரெவின்யூ மெம்பராகிய மிஸ்டர் பக்லி அதைத் திறந்து வைத்தார்.

16-தேதி.

**ஹார்டிஞ்ஜ் லைப்ரரி.**—நமது வைஸ்ராய், அவரது காலஞ்சென்ற மனைவி இவர்களுடைய ஞாபகார்த்தமாக டெல்லியில் ஹார்டிஞ்ஜ் புஸ்தகசாலையென்று ஒரு புஸ்தகசாலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதற்காகக் கட்டப்பட்டுவந்த புதுக்கட்டிடங்கள் இன்று ஸர் சங்கரன்நாயரால் திறந்துவைக்கப்பட்டன.

17-தேதி.

**ஒப்பந்தக்கூலி.**—ஐக்யமாகாணங்களின் காங்க்ரெஸ் கமிட்டியார் இந்திய ஒப்பந்தக் கூலி ஏற்பாட்டை ஒழித்துவிடவேண்டுமென்று இந்தியா மந்த்ரிக்கு இந்தியா கவர்ன்மெண்ட் மூலமாக ஒரு விண்ணப்பம் எழுதியனுப்பியிருக்கிறார்கள்.

18-தேதி.

**கோதாவரி ஜில்லா கான்பரென்ஸ்.**—கோதாவரி ஜில்லா கான்பரென்ஸ் இன்று நடைபெற்றது. பொலவாம் ஜமீன்தாராகிய ஆனரபிள் மிஸ்டர் கே. ஆர். வீ. க்ருஷ்ணாராவ் ப்ரெஸிடெண்டாக இருந்து ஸ்தல ஸ்வயஆட்சி, க்ராமப் பஞ்சாயத்துகள், கோவாபரெடிவ் முயற்சி முதலியவைகளைப்பற்றிப் பேசினார்.

**சித்தூர் ஜில்லா கான்பரென்ஸ்.**—இது இன்று சித்தூரில் கூடிற்று. மிஸ்ஸஸ் அனிபெஸண்ட் ப்ரெஸிடெண்டாக இருந்து காங்க்ரெஸ் கமிட்டிகள், க்ராமத்

கல்வி, உயர்தரக் கல்வி, இலவசக் கல்வி, பஞ்சாயத்து கள் முதலியவைகளைப் பற்றிப் பேசினர்.

**தெனலி-ரேபள்ளி ரெயில்வே.**—இன்று சென்னை கவர்னர் குண்டூர்ஜில்லாவில் தெனலி-ரேபள்ளி ரெயில்வேயைத் திறந்துவைத்தார். இது குண்டூர் ஜில்லா போர்டார் போட்டுவைத்ததாகும்.

22-தேதி.

**எல்லா இந்திய ஸங்கீத கான்பரென்ஸ்.**—இது பரோடாவில் கூடிற்று. இந்தியாவிலுள்ள பற்பல இடங்களிலிருந்து அநேக ஸங்கீத வித்வன்னர்கள் வந்திருந்தார்கள். பரோடா மஹாராஜ கான்பரென்ஸை ஆரம்பித்து வைத்தார். ஸங்கீதத்தைப்பற்றி அநேக வ்யாஸங்கள் வாசிக்கபட்டன.

**லார்ட் ஹார்டிஞ்ஜ்.**—லார்ட் ஹார்டிஞ்ஜ் வைஸ்ராயாக இருந்ததின் ஞாபகார்த்தமாக அவருக்கு ஒரு உருவச்சிலையும் வேறு ஞாபகச்சின்னங்களும் செய்து வைக்க வேண்டுமென்று டெல்லியில் கூடியசில இந்தியப்ரமுகர்கள் தீர்மானித்திருக்கிறார்கள்.

24-தேதி.

**எல்லா இந்தியா ஹிந்து கான்பரென்ஸ்.**—இது இன்று வடமதுரையில் தர்பங்கா மஹாராஜாவின் அக்ராஸனத்தின் கீழ்கூடிற்று. தர்பங்கா மஹாராஜா இந்தியர்களின் மதலக்ஷ்யங்களைப்பற்றிப் பேசினர்.

27-தேதி.

**எல்லா இந்திய ஸங்கீத கான்பரென்ஸ்.**—இது 6-நாள் நடைபெற்றது, ஹிந்துஸ்தானி ஸங்கீதத்தில் சாஸ்த்ர ரீதியான ராக ஏற்பாடு அமைக்க வேண்டுமென்றும், ஸங்கீதத்தை பாடசாலைகளில் கற்பிப்பதற்காக அநேக ஸங்கீத புஸ்தகங்கள் எழுதவேண்டுமென்றும், ஸங்கீத வித்யாசாலை ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

28-தேதி.

**காலஞ்சென்ற மிஸ்டர் க்ருஷ்ணஸ்வாமி அய்யர்.**-சென்னை நிர்வாக ஸபையில் மெம்பராயிருந்த காலஞ்சென்ற மிஸ்டர் க்ருஷ்ணஸ்வாமி அய்யரின் உருவச்சிலையொன்று சென்னை ஸெனேட் ஹௌஸில் சென்னை கவர்னரால் திறந்து வைக்கப்பட்டது.

29-தேதி.

**ஆயுர்வேத யுனானி வைத்யகாலேஜ்.**—ஆயுர்வேத, யுனானி வைத்ய முறைகளைக் கற்பிப்பதற்காக டெல்லியில் ஒரு வைத்ய காலேஜ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதன் கட்டிடத்துக்கு லார்ட் ஹார்டிஞ்ஜ் அஸ்திவாரக்கல்லை நாட்டினர். இந்தக் காலேஜில் ஆண்களுக்கேயன்றிப் பெண்களுக்கும் வைத்ய சாஸ்த்ரம் கற்பிக்கப்படும்.

**மைஸூருக்கு யூனிவர்ஸிட்டி.**—மைஸூரில் ஒரு ப்ரத்யேக யூனிவர் ஸிட்டி ஸ்தாபிக்க மைஸூர் கவர்ன்மெண்டாருக்கு இந்தியா கவர்ன்மெண்டார் அனுமதி கொடுத்திருக்கிறார்கள்.

30-தேதி.

**லாகூர் ஸதியாலோசனை கேஸ்.**—லாகூர் ஸதியாலோசனைக்கேஸில் இன்று தீர்ப்புச் சொல்லப்பட்டது. மொத்தம் 74-குற்றவாளிகளில், 6-பேருக்கு மரணதண்டனையும், 45-பேர்களுக்கு ஆயுள்பரியந்தரம் தீவாந்தர சிக்ஷையும், 8-பேருக்கு ஜெயில் வாஸமும், தண்டனை விதிக்கப்பட்டது. 15-பேர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தை ஒழிக்க முயற்சி செய்தார்களென்பதே இவர்கள்மேல் சாட்டப்பட்ட குற்றமாகும்.

31-தேதி.

**கண்ணம்பாடி அணைக்கட்டு.**—கண்ணம்பாடி அணைக்கட்டை 120-அடி உயரத்துக்குக் கட்டலாமென்று காவேரி மத்யஸ்தக் கமிட்டியார் செய்த தீர்ப்பை இந்தியா கவர்ன்மெண்டார் உறுதிசெய்துவிட்டார்கள்.

**லார்ட் ஹார்டிஞ்ஜ்.**—லார்ட் ஹார்டிஞ்ஜ் பம்பாயில் புதிய வைஸ்ராயிடம் தமது உத்யோகத்தை ஒப்புவித்து இங்கலண்டுக்குப் போவதற்காக இன்று டெல்லியை விட்டுப் புறப்பட்டார்.

ஏப்ரல்மீ 3-தேதி.

**லார்ட் ஹார்டிஞ்ஜுக்கு எல் எல்-டி பட்டம்.**—இன்று பம்பாய் யூனிவர் ஸிட்டியார் லார்ட் ஹார்டிஞ்ஜுக்கு எல்-எல்-டி பட்டம் கொடுத்தார்கள்.

**லார்ட் ஹார்டிஞ்ஜுக்கு ஒரு விருந்து.**—இன்று பம்பாய் வாஸிகள் லார்ட் ஹார்டிஞ்ஜுக்கு ஒரு பிரிவு உபசாரவிருந்துக் கச்சேரிவைத்து உபசரித்தார்கள். அந்த விருந்துக்கு அநேக ஸ்வதேச ராஜாக்கள் வந்திருந்தார்கள். பம்பாய் ராஜதானி வாஸிகள் அவருக்கு அநேக அட்ரெஸுகள் வாசித்துக் கொடுத்தார்கள்.

4-ந்தேதி-

**லார்ட் செம்ஸ்போர்ட்.**—லார்ட் செம்ஸ்போர்டும், அவரது மனைவியும் புத்ரிகளும் இன்று பம்பாய்க்கு வந்து சேர்ந்தார்கள். பம்பாம் கவர்னர் அவர்களை வரவேற்றார்கள். பிறகு பம்பாய் முனிஸிபாலிட்டியார் அவருக்கு ஒரு உபசார பத்ரம் வாசித்துக் கொடுத்தார்கள்.

**லார்ட் ஹார்டிஞ்ஜ்**—லார்ட் ஹார்டிஞ்ஜ் இன்றைய தினம் பம்பாயைவிட்டுப் புறப்பட்டு தமது தேசத்துக்குப்போனர்.


# ஜனோபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

**THE PEOPLE'S FRIEND.**

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE.'

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ., பத்ராதிபர். | G. A. VaidyaRaman, B. A. EDITOR.

புஸ்தகம் 8. Vol. 8. | ராக்ஷஸஹுப, சித்திரைமீ, APRIL—MAY 1916. | ஸஞ்சிகை 4. No. 4.


## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. | A. | P. | | | Foreign. Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | ... | ... | 6 | 0 | 0 |
| Half-yearly ... | 2 | 0 | 0 | ... | ... | 3 | 0 | 0 |
| Sample copy | 0 | 6 | 0 | ... | ... | 0 | 8 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 Page | ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do | ... | 2 | 8 | 0 | do |
| ¼ do | ... | 1 | 4 | 0 | do |
| 1/10 do | ... | 1 | 0 | 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion, republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணுக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

**தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.**

| | உள் நாடு. | | | | அந்ய நாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 | 0 | 0 | ... | 6 | 0 | 0 |
| ஆறுமாஸத்துக்கு ... | 2 | 0 | 0 | ... | 3 | 0 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

**விளம்பர விகிதங்கள்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | | 5 | 0 | 0 |
| ½ ,, | ,, | ,, | 2 | 8 | 0 |
| ¼ ,, | ,, | ,, | 1 | 4 | 0 |
| 1/10 ,, | ,, | ,, | 1 | 0 | 0 |

**வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.**

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை, கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேண்டுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருபநேயர்கள் அறியவேண்டும்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

ஜனோபிமானி.

புஸ்தகம் 8.] ராக்ஷஸஹு சித்திரைமீ. [ஸஞ்சிகை 4.

# THE MADRAS BUDGET ESTIMATE FOR 1916-17.

## சென்னை ராஜதானியின் 1916-17-ம் வர்ஷத்திய வரவு செலவு மதிப்பு திட்டம்.

சென்ற மார்ச்சு மாஸம் 13-ந் தேதி யன்று கூடிய சென்னை சட்ட ஸபையில் ஸர் ஹாரொல்ட் ஸ்டூவர்ட் சென்னை கவர்ன்மெண்டின் 1916-17-ம் வர்ஷத்திய வரவு செலவு திட்டத்தை வாசித்தார். நமது தேசத்தில் ஒவ்வொரு மாகாண கவர்ன்மெண்டாரும், இந்தியா கவர்ன்மெண்டாரும் ஒவ்வொரு வர்ஷக்கடைசியிலும், வரப்போகிற வர்ஷத்துக்கு வரவுசெலவு இவ்வளவாகுமென்று உத்தேசமாய் மதிப்புப்போடுவது வழக்கம். அப்படி மதிப்புப்போடும்போது, சென்றுபோன வர்ஷத்தின் வரவு செலவு இவ்வளவு என்பதையும், நடக்கும் வர்ஷத்துக்கு இவ்வளவு வரவு செலவு என்று மதிப்புப்போட்டதையும் வைத்துக்கொண்டு, வருகிற வர்ஷத்தின் நிலைமை எப்படி யிருக்குமென்பதை உத்தேசமாய் நிதானித்து, அதற்குத்தகுந்தபடி வரப்போகிற வர்ஷத்து வரவு செலவு இவ்வளவாகுமென்று நிதானிப்பார்கள்.

நமது தேசத்தில் ஸர்க்கார் வர்ஷமென்பது ஒரு வர்ஷத்தில் ஏப்ரல் மாஸம் 1-ந் தேதி முதல் அடுத்த வர்ஷம் மார்ச்சு மாஸம் 31-ந் தேதி முடிய உள்ள காலமாகும். இந்த ஏப்ரல் மாஸம் முதல் 12 மாஸங்கள்கொண்ட ஒரு வர்ஷத்தின் அதாவது 1916-17-ம் வர்ஷத்தின் வரவு செலவை நிதானிக்கும்போது, 1914-15-ம் வர்ஷத்தின் வரவு செலவு கணக்குகளையும், 1915-16-ம் வர்ஷத்தின் உத்தேச கணக்குகளையும் கவனிப்பார்கள். 1914-15-ம் வர்ஷத்திய வரவு செலவு இவ்வளவு என்பது நிச்சயமாய்த் தெரியக்கூடியது. ஆனால் 1915-16-ம் வர்ஷம் முடியு முன்னமேயே அதற்கு அடுத்த வர்ஷமாகிய 1916-17-ம் வர்ஷத்துக்கு வரவுசெலவை நிர்ணயிக்க வேண்டியிருப்பதால், இந்த 1915-16-ம் வர்ஷத்தின் கணக்குகள் நிச்சயமாய்த் தெரியாது. 1916-17-ம் வர்ஷத்துக்கு மதிப்புத் திட்டம் போடும்போது 1915-16-ம் வர்ஷம் முடிய இன்னும் நாலைந்து மாஸங்களிருக்கு மாகையால், அந்த நாலைந்து மாஸங்களில் இன்னசெலவு ஏற்படும், இன்ன வரும்படி கிடைக்குமென்று நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. ஆனால் அந்த வர்ஷத்தில் கடந்துபோன மாஸங்களின் வரவு செலவை வைத்துக்கொண்டும், அப்போது நாட்டிலுள்ள நிலைமையைக்கொண்டும் வர்ஷக்கடைசியில் வரவு இவ்வளவாகும், செலவு இவ்வளவு ஏற்பட்டிருக்கும் என்று கிட்டத்தட்ட சரியாக நிதானித்துவிடலாம். 1915-16-ம் வர்ஷத்துக்கு அந்த வர்ஷக்கடைசியில் நிதானித்த கணக்கைத்தவிர, 1914-15-ம் வர்ஷக்கடைசியில் 1915-16-ம் வர்ஷத்துக்கு ஒரு மதிப்புப்போட்டிருந்தார்கள். ஆகவே 1915-16-ம் வர்ஷத்துக்கு அந்த வர்ஷத்துக்கு முந்தின வர்ஷக்கடைசியில் ஒருமதிப்பும், அந்த வர்ஷக் கடைசியில் போட்டிருக்கும் கிட்டத்தட்ட சரியானதாய் திருத்தப்பட்ட மதிப்பும் ஆக இரண்டு மதிப்புகள் உண்டு. இப்படிக்கிடைத்த ஒவ்வொரு வர்ஷக்கணக்குகளிலும் விசேஷ காரணங்களால் ஏற்பட்ட வரவு செலவுகளைக் கழித்தால், ஸாதாரண காலத்தில் ஒரு வர்ஷத்தில் இவ்வளவு



வரவு செலவு ஏற்படுமென்பது தெரியும். இந்த ஸாதாரண வரவு செலவு கணக்குகளோடு, வரப்போகிற வர்ஷத்தில் விசேஷ காரணங்களால் இன்ன வரவு செலவு அதிகமாக ஏற்படுமென்பதைச் சேர்த்தால் அடுத்த வர்ஷத்தின் வரவு செலவு திட்டம் ஏற்படும்.

கீழேகண்ட அட்டவணையில் சென்ற 1914-15-ம் வர்ஷத்திய அயன் வரவு செலவு கணக்கும், 1915-16-ம் வர்ஷத்திய முதல் திட்டக்கணக்கும் மறுதிட்டக்கணக்கும், 1916-17-ம் வர்ஷத்தில் ஏற்படக்கூடிய வரவு செலவு திட்டமும் காட்டப்பட்டிருக்கின்றன.

| | 1914-15. | 1915-16. | | 1916-17. மதிப்பு திட்டம் |
|---|---|---|---|---|
| | | முதல் திட்டம் | மறு திட்டம் | |
| | லக்ஷம் ரூ. | லக்ஷம் ரூ. | லக்ஷம் ரூ. | லக்ஷம் ரூ. |
| வரவு ... | 757·34 | 764·69 | 763·96 | 770·15 |
| செலவு ... | 822·78 | 780·33 | 771·92 | 773·14 |
| வரவுக்குமேல் செலவு. | —65·44 | —15·64 | —7·96 | —2·99 |

இந்தக் கணக்குகளின்படி 1915-16-ம் வர்ஷத்திய மறுதிட்டக் கணக்கைவிட 1916-17-ம் வர்ஷத்தில் 6·19 லக்ஷம் ரூபாய் அதிக வரும்படி கிடைக்குமென்றும், 1·22 லக்ஷம் ரூபாய் அதிக செலவு ஏற்படுமென்றும் மதிப்பிட்டிருக்கிறார்கள். ஆனாலும் மொத்த வரும்படியைவிட செலவு 2·99 லக்ஷம் ரூபாய் அதிகமாக இருக்கிறது. கவர்ன்மெண்டாரிடம் கையில் மிச்சமாகவுள்ள ஸுமார் 100 லக்ஷம் ரூபாயிலிருந்து இந்த அதிகச்செலவைச்செய்துகொள்ளுவார்கள். வரவு பாபத்தில் 6·19 லக்ஷம் ரூபாய் அதிகம் கிடைக்குமென்பதற்குக் காரணங்கள் வருமாறு.

ஸ்டாம்ப் வரும்படியில் வருகிற வர்ஷத்தில் ஸுமார் 4 லக்ஷம் ரூபாய் அதிகமாக வரக்கூடுமென்று மதிப்பிட்டிருக்கிறார்கள். இந்த பாபத்தானது வர்ஷந்தோறும் அதிகரித்து வருகிறது. இந்த 4 லக்ஷம் ரூபாயில் மாகாண கவர்ன்மெண்டுக்கு 2-லக்ஷம் ரூபாய் சேரும்.

எக்ஸைஸ் வரியால் வரும் வருமானத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் போட்டிருக்கும் புதுவரிகளால் கிடைக்கும் அதிக வரும்படி இந்தியா கவர்ன்மெண்டைச் சேரும். ஏனென்றால் அந்த வரியானது, இந்தியா கவர்ன்மெண்டாரின் பணக்குறையை நிவர்த்தி செய்வதற்காகவென்று போடப்பட்டது. வரிவிகிதங்கள் உயர்ந்ததால் ஏற்பட்ட அதிக வரும்படிபோக ஸாதாரணமாய் வருமானம் 1915-16-ம் வர்ஷத்தியதைவிட 4-லக்ஷம் ரூபாய் அதிகமாக இருக்குமென்று மதிப்பிடுகிறார்கள். இந்த 4-லக்ஷம் ரூபாயில் சென்னை கவர்ன்மெண்டாருக்கு 2-லக்ஷம் ரூபாய் சேரும்.

காட்டிலாகாவினால் 16-ஆயிரம் ரூபாய் அதிக வரும்படி கிடைக்குமென்று மதிப்பிட்டிருக்கிறார்கள்.

யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னால் ரெஜிஸ்ட்ரேஷன் இலாகாவின் வரும்படி வர்ஷந்தோறும் அதிகரித்துக் கொண்டுவந்தது. யுத்தம் ஆரம்பித்ததும் இதன் வரும்படி குறையலாயிற்று. ஆனால் சென்ற ஆகஸ்ட்டு மாஸம் முதல் முன்போலவே வரும்படி அதிகமாகிக்கொண்டு வருகிறது. இந்த 1916-17-ம் வர்ஷத்தில் இந்த இலாகாவினால் 1 லக்ஷம் ரூபாய் அதிக வரும்படி கிடைக்குமென்று மதிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த அதிக வரும்படி பாபத்துகளோடு மற்ற சில்லரை பாபத்துகளையும் சேர்த்தால் மொத்தம் அதிக வரும்படி 6·19 லக்ஷம் ரூபாயாகும்.

இந்த 1916-17-ம் வர்ஷத்திய செலவு விவரம் வருமாறு. இந்த வர்ஷம், நிலவரி வஸூல், போலீஸ், கல்வி, மராமத்திலாகா ஆகிய இவைகளுக்கு மொத்தத்தில் 19·96-லக்ஷம் ரூபாய் அதிகமாகச் செலவழிக்கப் போகிறார்கள். ஆனால் வைத்யம், ஸாதாரண மராமத்து வேலைகள் முதலிய வேறு சில பாபத்துகளின் செலவை 18·74 லக்ஷம் ரூபாய் குறைத்து விடுவதால், வரவுக்கு மேல் நிகரான அதிகப்படிச் செலவு 1.22-லக்ஷம் ரூபாய்தான்.

நிலவரி வஸூலுக்காக 3·18 லக்ஷம் ரூபாய் அதிகச் செலவு ஏற்படும். காரணமென்னவென்றால், ரயத்வாரி க்ராமங்களிலும், ஜமீன் முதலிய க்ராமங்களிலும் உள்ள க்ராம உத்யோகஸ்தர்கள், ஸிப்பந்திகள் முதலியவர்களுக்காகச் செலவு அதிகமாக ஏற்படும்; சென்ற வர்ஷம் ஜமீன் செலவில் ஜமீன் க்ராமங்களை ஸர்வே செய்து வந்த ஒரு ஸர்வே பார்ட்டி இந்த வர்ஷம் ஜமீன் க்ராம ஸர்வேயை முடித்துவிட்டு, கவர்ன்மெண்ட் க்ராமங்களை ஸர்வே செய்யும்போது அந்தச் செலவு கவர்ன்மெண்டைச் சேர்ந்ததாகையால் அந்த பாபத்துக்கு செலவு ஏற்படும். இந்தக் காரணங்களால் மேற்சொன்ன 3·18 லக்ஷம் ரூபாய் அதிகச் செலவு ஏற்படுகிறது.

போலீஸ் டிபார்ட்மெண்டுக்கு 5·03 லக்ஷம் ரூபாய் அதிகச் செலவு ஏற்படும். இதன் விவரம் பின்வருமாறு: சென்ற ஸெப்டம்பர் மாஸம் முதல் சென்னப்பட்டணத்து போலீஸ் கான்ஸ்டபிள்களுக்கு சம்பளம் உயர்த்தியிருப்பதால், இதற்காக இந்த வர்ஷம் 35 ஆயிரம் ரூபாய் அதிகச் செலவு ஏற்படும். இந்த வர்ஷம் வெளி ஜில்லாக்களிலுள்ள போலீஸ் கான்ஸ்டபிள்களின் சம்பளத்தை உயர்த்தப்போகிறார்கள். ஏனென்றால் தற்போது தக்க ஆட்கள் போலீஸ் கான்ஸ்டபிள்களாகச் சேருவதில்லையாம். இப்படி அதிக சம்பளம் கொடுப்பதற்கு இந்த வர்ஷத்துக்கு 4-லக்ஷம் ரூபாயாகுமென்று மதிப்பிட்டிருக்கிறார்கள். இதோடு, க்ராம போலீஸுக்கும் மாட்டுப்பட்டிக்கும் அதிக செலவு ஏற்படுமாம்.

கல்விக்காக கவர்ன்மெண்டார் இந்த வர்ஷம் 4·01 லக்ஷம் ரூபாய் அதிகமாக செலவு செய்ய எண்ணியிருக்கிறார்கள். இதில் 1·37 லக்ஷம் ரூபாய் ஸாதாரண ஸர்க்கார் பாடசாலைகளுக்காகும், ஸ்தல ஸ்தாபனங்களின் கீழுள்ள பாடசாலைகளுக்கு காபிடேஷன் க்ராண்டு அதாவது பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் பிள்ளைகளின் கணக்கின்மேல் தலைவீதமாக க்ராண்டுகள் கொடுப்பதற்கும், புது எலிமெண்டரி ஸ்கூல்கள் ஸ்தாபிப்பதற்கும், ஸ்தல ஸ்தாபனங்களின் கீழுள்ள எலிமெண்டரிஸ்கூல்களில் மேல்வகுப்புகள் ஏற்படுத்துவதற்கும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு மேற்சொன்ன 1·37 லக்ஷம் ரூபாயில் 1·27 லக்ஷம் ரூபாய் அதிகப்படி க்ராண்டுகள் கொடுக்கப்போகிறார்கள். ப்ரத்யேகமான கவர்ன்மெண்ட் ஸ்கூல்கள் அதாவது உபாத்யாயர்களுக்கான ட்ரெய்னிங் ஸ்கூல்கள் முதலியவைகளுக்காக 94 ஆயிரம் ரூபாய் அதிகப்படி செலவு ஏற்படும். பள்ளிக்கூடங்களுக்கு 64 ஆயிரம் ரூபாய் அதிக க்ராண்டுகள் கொடுப்பார்கள். இவைகளைத்தவிர இன்ஸ்பெக்ஷன் செலவு, கவர்ன்மெண்ட் காலேஜ்கள் ஆகிய இவைகளிலும் அதிகச் செலவு ஏற்படும்.

இனி எந்தெந்த பாபத்துகளில் செலவு குறைந்திருக்கிறதென்பதைத் தெரிவிக்கிறோம்.

வைத்யச் செலவில் 11·11 லக்ஷம் ரூபாய் குறைவு ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணங்கள் (1) சென்ற 1915-16-ம் வர்ஷத்தில் ஜலவஸதி, வடிகால் வஸதிகளுக்காக சென்னை கார்ப்பரேஷனுக்கு 7-லக்ஷம் ரூபாய் ப்ரத்யேகமான க்ராண்டுகள் கொடுத்தார்கள். இந்த வர்ஷம்



MADRAS.

இந்த ப்ரத்யேக க்ராண்டுகள் கொடுக்கப்போகிறதில்லை. (2) ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ஜலவஸதிக்காகவும், வடிகால் வஸதிக்காகவும் கொடுத்து வரும் க்ராண்டுகளில் இந்த வர்ஷம் 4-லக்ஷம் ரூபாய் குறைக்கப் போகிறார்கள். (3) வேறு சில்லரை ஸுகாதார வேலைகளுக்குக் கொடுக்கும் க்ராண்டுகளில் 2·18 லக்ஷம் ரூபாய் குறைக்கப் போகிறார்கள். ஆக மொத்தம் குறைவு 13·18 லக்ஷம் ரூபாயாகும். ஆனால் ஸ்த்ரீகள், குழந்தைகளுக்கான ஆஸ்பத்ரிகளுக்கு 50 ஆயிரம் ரூபாயும், ஸ்தல ஸ்தாபனங்கள் ஸ்தாபிக்கும் புது ஆஸ்பத்ரிகளுக்கு 19 ஆயிரம் ரூபாயும், ஸிவில் அஸிஸ்டண்ட் ஸர்ஜன்களின் சம்பளத்தை உயர்த்த 37 ஆயிரம் ரூபாயும் மதராஸ் ஜெனரல் ஆஸ்பத்ரியில் உள்ள நர்ஸுகளை அதிகமாக்க 11 ஆயிரம் ரூபாயும், ராயபுரத்திலுள்ள புது ஆஸ்பத்ரியின் நிர்வாகத்துக்கு 86 ஆயிரம் ரூபாயும் அதிகச் செலவு ஏற்படும். இந்த அதிகப்படிச் செலவையும் சேர்த்துப் பார்த்தால் ஸுகாதார வைத்யத்துக்காக 11·11 லக்ஷம் ரூபாய் குறைவாகச் செலவு ஏற்படுகிறது.

ஜில்லா போர்டுகளுக்குக் மாராமத்து வேலைகளுக்காகக் கொடுக்கும் க்ராண்டுகளில் 5·26 லக்ஷம் ரூபாய் குறைக்கப் போகிறார்கள்.

இன்னும் வேறு சில பாபத்துகளில் செலவைக் குறைத்திருக்கிறார்கள்.

விவஸாயத்துக்காக 58 ஆயிரம் ரூபாய் அதிகமாக செலவழிக்கப் போகிறார்கள். இதற்குக் காரணங்கள், புதிதாக மூன்று விவஸாய டெபுடி டிரெக்டர்கள் நியமிப்பதும், விவஸாய டிபார்ட்டுமெண்டு, கால்நடை வைத்ய டிபார்ட்மெண்டு ஆகிய இவைகள் அபிவ்ருத்தியடைவதால் இவைகளுக்கு அதிகச் செலவு ஏற்படுவதுமே.

மீன் தொழில் பரிசோதனை டிபார்ட்மெண்டில் லோப் செய்வது ஸம்பந்தமாக ஆராய்ச்சிகள் நடத்த 75 ஆயிரம் ரூபாய் ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்.

## BUSINESS ADVERTISING

BY N. K. VAIDYANATHA AIYAR.

## வ்யாபார விளம்பரம்.

நமது நாட்டில் வ்யாபார விளம்பரத்தைப் பற்றி எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். ஆயினும் முற்காலத்தில் செய்யப்பட்ட விளம்பரத்திற்கும் இக்காலத்தில் செய்யப்படுவதற்கும் ஜாஸ்தி வித்யாஸமிருப்பதாலும், ஒருதேசத்தின் வ்யாபாரமானது வ்ருத்தியடைவதற்கும் அழிந்துபோவதற்கும் இதுவே காரணமாக இருப்பதினாலும் இதைப்பற்றி இங்கு கொஞ்சம் சொல்வதவச்யமாகிறது.

விளம்பரம் செய்யும் மாதிரியானது அப்போதைக்கப்போது வேறுபட்டுக்கொண்டும் வ்ருத்தியாகிக்கொண்டும் வந்திருக்கிறதென்று நாம் புஸ்தகங்களிலிருந்து அறிகிறோம். இந்த மாறுதலுக்குக்காரணம் வ்யாபார அபிவ்ருத்தியே. இக்காலத்தில் வ்யாபாரத்தில் முதன்மையாகச் சொல்லப்படும் அமெரிக்காக்கண்டத்து ஐக்யமாகாணமும் இங்கிலண்டு தேசமும் இந்த நிலைமைக்கு வரக் காரணமென்னவென்று பார்க்கும்போது, அத்தேசத்தார்கள் செய்யும் பலவிதமான விளம்பரங்களேயொழிய வேறல்லவென்று யாவரும் எளிதில் அறியக்கூடும். ஏனெனில் கைத்தொழிலில் எவ்வளவு தேர்ச்சியடைந்து ஸகலவிதமான சரக்குகளையும் செய்தபோதிலும், அவைகளைத் தேக்கமின்றி விற்பனை செய்தாலொழிய, கைத்தொழில் முன்னுக்கு வரமாட்டாது. வ்யாபாரிகளும் தொழில்சாலையார்களும் இதை யுணர்ந்து சரியானவழியில் விளம்பரம் செய்து தங்கள் தங்கள் குறைவை நிவர்த்தி செய்துகொள்ளத் தவறுவதினாலேயே வ்யாபாரம் அதிக வ்ருத்தியை யடைகிறதில்லை. ஆகையால் விளம்பரம் செய்வதின் அத்யாவச்யமும் உபயோகமும் ஜாஸ்தி சொல்லப்படாமலே நன்றாய்த் தெரியும்.

விளம்பரம் செய்யும் வழிகளில் ஸாதாரணமாக வழக்கத்திலிருக்கிறவைகளில் முக்யமானவைகள் பின்வருவனவேயாம்.

(1) தினஸரி சமாசாரப் பத்ரிகைகள், வாரத்திற்கு மும்முறை, இருமுறை வெளியாகும் பத்ரிகைகள், வாரப் பத்ரிகைகள், பக்ஷப் பத்ரிகைகள், மாதப் பத்ரிகைகளில் விளம்பரம்செய்தல்.

(2) விவரமாய் ஒரு ஸாமானைப்பற்றித் தெரிவிக்கும் காடலாக் (Catalogue), அதே ஸமாசாரத்தை சுருக்கமாய் காட்டும் புக்லெட் (Booklet), அதிலும் சுருக்கமாயிருக்கும் பாம்ப்லட் (Pamphlet) லீப்லெட் (Leaflet) முதலியவைகளை ஜனங்களிடம் ப்ரசுரம் செய்தல்.

(3) பலவித வர்ணமுள்ள மைகளில் அழகாயும் பெரியதாயும் அச்சிட்டு சுவரில் ஒட்டும் காகிதங்கள் (Posters) துக்கடா நோட்டீஸ்கள் (Hand Bills)

(4) வெளியே ப்ரயாணம் செய்யும் ஏஜண்டுகள்.

இப்போது மேல்கண்டவைகளைப்பற்றித் தனித்தனியாய் கவனிப்போம். ஒவ்வொரு வ்யாபாரியும் எந்த ஸாமானை எவ்விதமாக உலகத்தின் எந்தபாகத்தில் ப்ரஸித்தம் செய்தால், தான் எதிர்பார்க்கும் முழுபலனையும் அடையலாமென்று யோசித்து அறிந்துசெய்வதே அவருடைய முதல்கார்யம். அப்பேர்ப்பட்ட சரக்கை எந்த வகுப்பார்கள் உபயோகிக்கிறார்கள் என்றும், முன்னே சொல்லப்பட்ட எவ்வகையான விளம்பரத்தினால் அவர்களுக்குத் தெரியப்படுத்தலாமென்றும் அறிந்துகொள்ளவேண்டிய தவச்யம். ஏனெனில் யோசனையில்லாமல் பொருளை வீணில் செலவிட்டு தன் கார்யத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியாதபடி மோசம்போகிற அநேகரை யாவரும் பார்த்திருக்கலாம். மேற்சொல்லியபடி தெரிந்தெடுத்து வ்யாபாரிகள் செய்தால் அவர்கள் செலவுசெய்யும் பொருள் 1-க்கு 10-மடங்காக லாபத்தைக்கொடுத்து வ்யாபாரத்தை மேன்மேலும் ஓங்கச்செய்யும். இந்த மாதிரி தன் விளம்பரமானது பூராலாபத்தைக் கொடுக்கிறதென்று அறிந்தபின் ஒருபோதும் விளம்பரம் செய்வதை நிறுத்தக்கூடாது. அதே மாதிரி ஸாமானைச்செய்து விற்றுவரும் மற்றொரு வ்யாபாரி தருணம்பார்த்து இவன் விளம்பரம் செய்வதை நிறுத்தின ஸமயத்தில், ஜாஸ்தி விளம்பரம் செய்வானாகில், முன்சொன்ன வ்யாபாரியினுடைய ஒருவித வ்யாபாரக்குறியுள்ள (Trade mark) ஸாமானானது பின்சொன்ன வ்யாபாரியின் விளம்பரப்படுத்திய வ்யாபாரக் குறியையுடைய ஸாமானைவிட குணத்திலோ, அளவிலோ, நிறையிலோ குறைவுபட்டதென்றே ஜனங்கள் நம்பக்கூடியதாகி பின்சொன்ன வ்யாபாரிக்கு வரவர வ்யாபாரம் ஜாஸ்தியாக, முன்சொன்னவருக்கு அதேக்ரமத்தில் குறைவுபட்டுக்கொண்டுவரும். எந்தச் சரக்கைப்பற்றி எந்த வ்யாபாரக் குறியுடன் விளம்பரம் செய்யப்படுகிறதோ அந்த சரக்கே தானே தன்னை வாங்குபவரிடத்தில் தன் உபயோகம் விலை முதலியவற்றைப் பற்றிபேசுவதுபோலாகும். இப்படி விடாமல் விளம்பரம் செய்வது ஏனென்றால், ஜனங்களிடத்தில் ஒருவித அபிப்ராயத்தைப் பதியச்செய்து ஊசியைக்காந்தம்போல அந்த ஸாமானிடத்தில் அவர்களுக்கு ஒருவித அவாவை உண்டுபண்ணி எவரையும் வாங்கச்செய்து விடுகிறது. குழந்தைகளின் ஆகாரம் விற்கும் மெல்லின்ஸ் புட் கம்பெனியாரும் வில்ஸன் வீலர் என்னும் தையல் மெஷின் கம்பெனியாரும் 40-வருஷ காலத்துக்கு முன்னமே தொடங்கி இன்றைக்கும் ஏராளமான பொருளைச் செலவிட்டு விளம்பரம் செய்து வருகிறார்களென்றால், விளம்பரம் செய்வதின் உபயோகத்தைப்பற்றி நாம்இங்கு எடுத்துச் சொல்வது அனாவச்யமாகும். ஸ்வல்ப காலத்திற்கு ஒரு பத்ரிகையிலும் பின்பு மற்றொரு பத்ரிகையிலும் அல்லது ஒரே பத்ரிகையில் நீண்ட காலம் விட்டுவிட்டும் விளம்பரம் செய்வதனால்



கொஞ்சமும் ப்ரயோஜனமில்லை. மூன்று வருஷங்களுக்குக் குறையாமல் விடாமல் விளம்பரம் செய்தாலன்றி நாம் உத்தேசிக்கும் பலனை அடைய முடியாதென்றும், அதற்குள்ளாகவே நிறுத்தப்படும் விளம்பரங்கள் ஆரம்பம்செய்யாமலிருந்தால் எவ்வளவு ஸ்திதியி லிருக்குமோ அதைவிட அதிக மேலாக மாட்டாதென்றும் தன்னுடைய நீடித்த அனுபவத்தினால் ஒரு பெரிய ஆங்கில விளம்பர நிபுணர் சொல்லுகிறார்.

அதி முக்யமாக இங்கு சிறிது சொல்லப்படவேண்டிய தொன்றவச்யம். அதாவது தேசத்திலுள்ள அநேக ஸமாசாரப் பத்ரிகைகளில் ஒவ்வொன்றின் உபயோகத்தைப் பற்றியும் விளம்பரம் செய்யுமுன் ஒருவர் அறிந்து கொள்ளவேண்டிய எல்லா விஷயங்களையும் நன்றாய் கற்றுத்தெரிந்து வைத்திருக்கும் விளம்பர ஏஜண்டுகள் மூலமாக விளம்பரம் செய்வது நன்மை. ஏனெனில், தனவான்கள் உபயோகிக்கக்கூடிய விலையுயர்ந்த மோட்டார்க் காரைப்பற்றி ஸாமான்யர்களுள் பரவும் ஸமாசாரப் பத்ரிகைகளில் விளம்பரம் செய்வதும், அதேமாதிரி ஸாமானியர்கள் உபயோகித்து வரும் பைஸிக்கிலைப்பற்றி மேல் தரத்தாருள் பரவும் பத்ரிகையில் அதிகக் கட்டணம்கொடுத்து விளம்பரம்செய்வதும் வீணாகும். வ்யாபாரிகள் தங்கள் வேலையைத் தாங்களே நேரில் பூராவும் கவனிப்ப தரிதாக இருக்கும் போது விளம்பரத்திற்கு வேண்டிய ஸமாசாரம் முழுமையும் தாங்களே தெரிந்து கொள்வதென்றால் லகுவில் முடியாத காரியம். ஆகையால் விளம்பரம் எழுதுவதில் மிகத் தேர்ச்சியடைந்திருக்கும் ஒருவருடைய ஒத்தாசையைக்கொண்டு தன் காரியத்தை விளம்பர ஏஜண்டுகள் மூலமாய் முடித்துக்கொள்வது நலம். அல்லது விளம்பரமெழுதும் சாஸ்த்ரத்தில் தேர்ச்சியடைந்த பலரை நியமித்து வைத்திருக்கும் ஒரு விளம்பர ஏஜண்டாபீஸ் மூலமாக தன் கார்யத்தை செய்து முடித்துக் கொள்வது அதிலும் மிக்க நன்மை.

அமெரிக்கா தேசத்து ஐக்ய நாடுகளிலும், அதுபோல வ்யாபாரத்தில் செழித்திருக்கும் மற்ற தேசங்களிலும் ஒவ்வொரு கைத்தொழிலும் ஸம்பந்தப்பட்ட வரையில் ப்ரத்யேகமான ஸமாசாரப் பத்ரிகைகளிருக்கின்றன. பற்பல தொழிலில் தேர்ச்சியடைந்த வித்வான்கள் அவரவர்கள் புதிதாய்க் கண்டுபிடிக்கும் ஒவ்வொரு நுட்பமான ஸமாசாரத்தையும் அப்பத்ரிகைகள் மூலமாய் வெளியிட்டு வ்யாபாரத்தை ஒவ்வொரு நிமிஷமும் வ்ருத்தி செய்ய அவரவர்களால் கூடியவரையில் உழைக்கிறார்கள். அவ்ரவர்களுடைய வ்யாபாரத்தைப்பற்றி தெரிந்து கொள்ளவோ அல்லது தங்கள் தங்கள் வ்யாபாரத்தைப்பற்றி மற்றவர்களுக்கு அறிவிக்கவோ, வ்யாபாரிகளுக்கு இப்படிப்பட்ட தொழில் பத்ரிகைகளும் வ்யாபாரப் பத்ரிகைகளும் செய்யும் உதவியைவிட வேறு பேருதவி வேண்டியதில்லை. அம்மாதிரியே, நமது நாட்டிலும் படிப்பில் தேர்ச்சியடைந்தவர்கள் ஒன்றுகூடி தொழில் பத்ரிகைகளும் வ்யாபாரப் பத்ரிகைகளும் வெளியிட்டால், அவையவை ஸம்பந்தப்பட்ட தொழில்சாலையார்களும் வ்யாபாரிகளும் தங்கள் தங்கள் குறைகளை தெரிவிக்கவோ அல்லது பிறருடைய தேவையைத் தெரிந்துகொள்ளவோ அவைகள் மூலமாய் விளம்பரம் செய்து எவ்வளவு உதவி பெறுவார்களென்று நாம் சொல்லி முடியாது. ஸாதாரணமான பொது ஸமாசாரப் பத்ரிகையில் விளம்பரம் செய்து அடையும் லாபத்தைக் காட்டிலும் இதைவிடக் குறைந்த பணச் செலவில் ஜாஸ்தி லாபத்தை இப்படிச் செய்வதினால் அடையலாமென்பது நிச்சயம். ஆகையால் இம்மாதிரி செய்து எதற்கும் ஆதிகாரணமாக இருக்கும் வ்யாபாரத்தை விருத்திக்குக் கொண்டுவர வேண்டியது ஒவ்வொரு உண்மையான வ்யாபாரபிமானியின் கடமை.

இப்படி ஸமாசாரப் பத்ரிகையில் விளம்பரம் செய்வதால் ஜனங்கள் அந்த வ்யாபாரத்தைப் பற்றியோ அல்லது குறித்த ஸாமானைப்பற்றியோ விசாரித்து எழுதும் கடிதங்களுக்கு பதில் விபரமாய் கொடுப்பது கஷ்டமானதால் முன்னமே சொல்லப்பட்ட காடலாக், புக்லெட், லீப்லெட் இவைகளில் கோருதலுக்கு தகுந்த படி பதில் கடிதத்துடன் தாமதமின்றி யனுப்ப வேண்டும். அதுபோல சுவரில் பொதுஸ்தலங்களில் ஒட்டும் காகிதங்களின் ப்ரயோஜனமென்னவென்றால் ஸமாசாரப் பத்ரிகைகள் பாராத இத்தேசத்து பெரும் பகுதியார்களுக்கு இதனாலே தான் அவரவர்கள் ரஸ்தா வழியாய் செல்லும்போது படிக்கத் தெரிந்தோர்களுக்கு படித்துத் தெரிந்துகொள்ளவும், படிக்கத் தெரியாதவர்கள் தெரிந்தவர்களைக்கேட்டு அறிந்துகொள்ள ஊக்கமுண்டாகிறது.

வெளியே ப்ரயாணம் செய்யும் ஏஜண்டுகள் ஒரு பெரிய வ்யாபாரிகளுக்கு மிகவும் அவச்யமானவர்கள். ஸாதாரணமாய் தினந்தோறும் சீமையிலுள்ள வ்யாபாரிகளுக்காக ப்ரதிநிதிகள் எவ்வளவோ பேர்கள் வந்திறங்குவதை நாம் பட்டணத்தில் பார்க்கிறோம். அவர்கள் எந்த வ்யாபாரத்திற்காக வந்திருக்கிறார்களோ அதே வ்யாபாரத்தை பட்டணத்தில் செய்யும் ஒவ்வொருவருடைய விலாஸத்தையும் வைத்துக்கொண்டு ஒன்று இரண்டு தினங்களுக்குள் எல்லாரையும் நேரில்போய் பார்த்து வருகிறார்கள். அப்படிச் செய்வதில் தாங்களனுப்பும் ஸாமான்களை பொது ஜனங்கள் எப்படி அபிப்ராயப் படுகிறார்களென்பதை எளிதில் அறிந்து கொள்ளுகிறார்கள். தங்கள் ஸாமான்களில் என்ன கெடுதல்களிருக்கின்றனவென்றும் எவ்வித மாறுதல் செய்யப் படவேண்டுமென்றும் மிகவும் ஸரஸமான ஸம்பாஷணையிலேயே அறிந்துகொண்டு, தங்கள் தங்கள் சீமை ஹெட்ஆபீஸுக்கு அடிக்கடி தெரியப் படுத்திக்கொண்டே, ஒவ்வொரு தேசமாகப் போகிறார்கள். தவிர அதே மாதிரி சரக்குகள் வேறு எந்த வயாபாரக் குறியுடன் அங்கு ப்ரபலமாயிருக்கிறதென்பதையும் அவைகளுக்கும் தங்கள் ஸாமான்களுக்கும் உள்ள குணகுண பேதங்களையும் தெரிந்து கொண்டு, தங்களுடைய வ்யாபாரத்தைச் சீர் திருத்தம் செய்து போட்டிக்காரர்களுடைய ஸாமான்களை விட ஜாஸ்தி விற்பனையாக வழிதேடி வ்யாபாரத்தை அப்போதைக்கப்போது பலப்படுத்திக் கொள்ளுகிறார்கள். ஆகவே இப்படிச் செய்வதால் நாளுக்கு நாள் தங்களிடத்தில் சரக்கு எடுப்போர்கள் ஜாஸ்தியாகிறார்கள். தவிர அப்பேர்ப்பட்ட ப்ரதிநிதிகள் நேரில் வராமலிருக்கும் பக்ஷத்தில் இவர்கள் வேறு வ்யாபாரிகளுக்கு தங்களுடைய தேவைக்கு ஆர்டரை அனுப்பி விடுவதுமுண்டு. அப்படிச் செய்வதற்கு இப்பொழுது காரணமில்லை. மேலும் வ்யாபார ப்ரதிநிதிகள் வரும்போதெல்லாம் தங்கள் வ்யாபார மாதிரி ஸாமான்களை ஜாஸ்தி கொண்டு வருவதுடன், இந்த வ்யாபாரிகளுக்கும் இலவசமாய் வேண்டியபடி கொடுக்கிறார்கள். புதிது புதிதாக பலவித வர்ணமுள்ள மைகளால் அச்சிட்டு பார்வைக்கு அழகாகவும் படிப்பதற்கு ரம்யமாகவு மிருக்கும் சுவரில் மாட்டக்கூடிய காலண்டர்களைக் கொண்டும் நமது நாட்டு வ்யாபாரிகளைக் கைவசப்படுத்துகிறார்கள். அதுபோலவே நமது தேசத்தில் வ்யாபாரிகள் ஏஜண்டுகளைக்கொண்டு எவ்வளவு ப்ரயோஜன மடையலாமோ அவ்வளவையும் அடையவேண்டிய தவச்யம். நமது நாட்டில் இப்போது காலண்டர் எதற்காக அச்சிடுகிறதென்பதை வ்யாபாரிகள் அறிந்திருந்தாலும், தாங்கள் ப்ரயோஜன மடையவேண்டிய விதத்தில் செலவிடுவது ரொம்பவும் அபூர்வம். ஆகவே கைத்தொழில் வ்யாபார முதலிய அபிவ்ருத்திக்கு மேலே சொல்லப்பட்ட பலவித விளம்பரங்கள் இன்றியமையாததா யிருக்கின்றன.

என். கே. வைத்யநாதய்யர்.



## THE PSYCHOLOGY OF THE CHILD

K. T. SUNDARA RAJAN, B.A., L.T.

## குழந்தையின் மனோபாவம்.

எல்லா தேசங்களிலும் அநேகமாய் குழந்தைகளை ஐந்தாவது அல்லது ஆறுவது வயதில் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவது வழக்கமாயிருக்கிறது. ஏன் அப்படி ஐந்து அல்லது ஆறு வயஸு வரையில் வீட்டிலேயே வைத்துக்கொண்டிருந்து பிற்பாடு பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப வேண்டுமென்று யோசித்தால், அப்படிச் செய்வதுதான் மிகவும் ச்லாக்யமாக தோன்றுகிறது.

குழந்தை பிறந்து ஐந்து வயஸு வரைக்கும் சரியானபடி பேசத்தெரியாமலும், தான் பார்ப்பதை தாய் தந்தைகளுக்கு இன்னதென்று சொல்லும் திறமை இல்லாமலும், இது நல்லது, இது கெட்டது என்று பகுத்தறியும் சக்தியில்லாமலு மிருக்கிறது. மேலும் குழந்தைகள் ஒரே வஸ்துவை ஸுமார் 20 அல்லது 30 நிமிஷங்களுக்குமேல் பார்க்கமாட்டார்கள். இதற்கெல்லாம் காரணங்கள் என்னவென்று நாம் கொஞ்சம் கவனித்துப் பார்ப்போம். குழந்தைகள் பிறந்து ஸுமார் மூன்று அல்லது நான்குமாஸங்கள் வரையில் அசைந்து கொடுக்கக்கூட சக்தியற்றவைகளாய் போட்ட இடத்திலேயே இருக்கின்றன. பிறகு கொஞ்சம் அசைந்து கொடுக்கவும், அழவும் சக்திவருகிறது. நாளுக்குநாள் முக்ய அவயவங்களாகிய கால், கை முதலியன வளர்ந்துகொண்டே வருகின்றன; இப்படி முக்ய அவயவங்கள் வளர்ந்ததன் பிறகுதான் கைவிரல்கள், கால் விரல்கள், கண்கள், காதுகள் முதலிய சிறிய அவயவங்கள் வளர ஆரம்பிக்கின்றன.

இவ்விதமாக, இந்த சிறிய உறுப்புகள் வளர ஆரம்பிக்கும் காலந்தான் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பத்தகுந்த காலம். குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் காலத்தை மூன்றுவிதமாக பிரிக்கலாம்; அதாவது 5-8, 9-15, 16-21. ஐந்து வயஸு முதல் எட்டு வயஸுக்குள் ப்ரைமரி படிப்பையும், ஒன்பதுவயஸு முதல் பதினைந்துவயஸுக்குள் ஸெகண்டரிப் படிப்பையும், அதற்கு பிறகு காலேஜ் படிப்பையும், படித்து விடலாம்.

குழந்தைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி கொஞ்ச நாள் ஆனபிறகு, அவர்கள் பள்ளிக்கூடத்திற்கு போக ப்ரியப்படுவதில்லை. ஏனென்றால், அவர்கள் வீட்டில் இருக்கும்பொழுது இஷ்டப்போல் விளையாடிவந்தவர்கள். ஆனால் பள்ளிக்கூடத்தில் அதற்கு ஸௌகர்யங்கள் இல்லை. மேலும், சில பள்ளிக்கூடங்களில் போதுமான காற்றும், வெளிச்சமும் இல்லாமலிருப்பதால், குழந்தைகள் கஷ்டமும்படும். தவிர பள்ளிக்கூடத்தில் அவரவர்கள் இஷ்டம்போல் குதிக்கவும், குதிக்கவும் ஸௌகர்யங்கள் இல்லாமலிருக்கின்றன. இந்த அஸௌகர்யங்களை எல்லாம் போக்கடிப்பதற்கு தகுந்த ஏற்பாடுகளை உபாத்யாயர்கள் செய்யவேண்டும். அந்த ஏற்பாடுகளில் சிலவற்றை இங்கே கூறுவோம்.

முதலாவது, தகுந்த அறைகளில் பிள்ளைகளுக்கு படிப்புச் சொல்லிக்கொடுப்பது.

இரண்டாவது, போதுமான அளவு பள்ளிக்கூடத்து அறைகளில் வெளிச்சம் பரவும்படியாயும், தகுந்தபடி காற்றுவீசும்படியாயும் செய்விப்பது.

மூன்றாவது, பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்கு ச்ரமம் தோற்றாமலும் அவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படாமலும் உட்காரவைப்பது.

நான்காவது, அவர்கள் படிக்கும் புஸ்தகங்களையும், நோட்டு புஸ்தகங்களையும் தகுந்தபடி தெரிந்தெடுப்பது.

ஐந்தாவது, அவர்கள் படிக்கும் அறைகளை, அவர்கள் ஸந்தோஷப்படக்கூடிய படங்கள், சித்ர வஸ்துக்கள் இவைகளால் சிங்காரிப்பது.

ஆறுவது, அவர்கள் சோர்ந்து போகாதபடி

கொஞ்சநேரம் படிப்பும் பிறகு விளையாட்டுமாக, படிப்பு கற்றுக்கொடுப்பது.

இவ்வளவும் செய்வதோடுகூட பிள்ளைகளுக்கு படிப்பை எல்லா அவயவங்களாலும் கற்பிக்க வேண்டும். சில பையன்களுக்கு கேட்டு கேட்டு ஞாபகமிருக்கும். இன்னும் சிலர்களுக்கு பார்த்துப் பார்த்து ஞாபகமிருக்கும். இன்னும் சில பேர்களுக்கு உணர்ந்து உணர்ந்து ஞாபகமிருக்கும், மற்றும் சிலபேர்களுக்கு பேசிப்பேசி ஞாபகமிருக்கும். ஆனதினால் உபாத்யாயர்கள். அடிக்கடி கேள்விகளை கேட்கவேண்டும், பையன்களைக் கொண்டு பதில்களை சொல்லச் செய்யவேண்டும். போர்டின்மேல் சிறு பையன்கள் மனதில் சரியாய் பதியும்படி அடிக்கடி விஷயங்களை எழுதிக் காட்டவேண்டும். உபாத்யாயர்களும் பெற்றோர்களும் குழந்தைகளை பொருட் காட்சிகளுக்கு அழைத்துச்சென்று, அங்கே வைத்திருக்கும் ஸாமான்களை தொட்டுப்பார்க்கும்படி செய்ய வேண்டும். சிறுவர்களைக் கேள்விகள் கேட்டு நாமாகவே எல்லாவற்றிற்கும் பதில்களைச் சொல்லாமல் பதில்களை அவர்களிடத்திலிருந்தே வாங்கவேண்டும்.

மேலேசொன்ன ஏற்பாடுகளெல்லாம் பின் சொல்லப்படும் காரணங்களைப்பற்றி மிகவும் அனுகூலமாயிருக்கின்றன.

1. பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் படிக்கும் அறை ஸுமார் 30 அடி நீளமுள்ளதாயும், 25 அடி அகலமுள்ளதாயும், 13 அடி உயரமுள்ளதாயுமிருக்கவேண்டும். பிள்ளைகளை வரிசை வரிசையாய், ஒருவரிசைக்குப்பின் மற்றொரு வரிசையாக உட்காரச் செய்யவேண்டும். அப்படிக் இல்லாவிட்டால் போர்டை நேராக பார்க்க முடியாது. தவிர, எழுத்துக்களின் ஸ்வபாவ வடிவமும் தெரியமாட்டாது.

2. வெளிச்சம் குறையக்குறைய பையன்களுடைய கண்களுக்கு ச்ரமம் அதிகம். பெரிய மனிதர்களைக்காட்டிலும் சிறுவர்களுக்கு அதிக வெளிச்சம் வேண்டும். ஆகையினால்தான் குழந்தைகள் அதிகாலையில் படுக்கையைவிட்டு எழுந்திருக்க விருப்பமில்லாதவர்களாய் ரொம்பநேரம் தூங்கி, ஸூர்ய உதயமான பிறகு எழுந்திருக்கிறார்கள். வர்ணச்சாக்குகள் உபயோகிக்கும் இடங்களில் ஸுமார் இரண்டுபங்கு வெளிச்சம் வேண்டும்.

வெளிச்சம் அறைக்குள் அதன் இடதுபக்கமாய் வரும்படி செய்யவேண்டியது. இல்லாவிட்டால் பிள்ளைகள் படிக்கும்பொழுதும், எழுதும்பொழுதும் நிழல் தட்டும். சரியானபடி படிக்கவும் எழுதவும் முடியாது.

பிள்ளைகள் வாசிக்கும் அறைகளில் காற்று தகுந்தபடி வரும்படியாயும், போகும்படியாயும் ஜன்னல்கள் வைக்கவேண்டியது அவச்யம். ஜன்னல்களைப் பெரியவைகளாயும், கூரைக்கு அருகாமையிலும் வைப்பது நல்லது.

சிலபேர்கள், சிறுகுழந்தைகளுக்கு கொஞ்சங் காற்றோட்டமிருந்தால் போதுமென்றும், பெரியவர்களுக்கு அதிக காற்றோட்டம் வேண்டுமென்றும் தெரியாமையினால் சொல்வதுண்டு. அது முற்றிலும் பிசகு. பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் ஒரேவிதமான காற்றோட்டம்வேண்டும். அதாவது ஒவ்வொருவருக்கும் ஸுமார் 240 கன அடி காற்று உள்ள இடம் (air Space) வேண்டியது அவச்யம். இந்த வீதப்படி மேற்கூறிய அறைகளில் 40 பையன்கள் உட்காரலாம்.

3. இந்த மூன்றாவது காரணத்தை உபாத்யாயர்கள் மிகவும் ஜாக்ரதையாய் கவனிக்க வேண்டும். பையன்கள் ஒவ்வொருவரையும் ஒரு தனி பெஞ்சியில் உட்காரவைப்பது நல்லது. அது ரொம்பவும் செலவான கார்யமானதால் பெஞ்சிக்கு இரண்டு பேர்கள் வீதம் உட்காரவைக்கிறார்கள். உபாத்யாயர்களுக்கு படிப்புச் சொல்லிக் கொடுக்கும் இடமாகிய சைதாப்பேட்டை டீச்சர்ஸ் காலேஜில் கீழ்வகுப்புகளில் ஒவ்வொரு பையனுக்கு ஒவ்வொரு நாற்காலியும்,



மேல் வகுப்புகளில் இரண்டுபேர்களுக்கு ஒரு பெஞ்சியுமாயிருக்கின்றன.

உட்கார்ந்து ஒருபாடம் எழுதினால், அடுத்த பாடம் நின்று கேட்கும்படியாக யிருக்க வேண்டும். இப்படிப்பட்ட ஸௌகர்யங்களிருக்கும்படி உபாத்யாயர்கள் டைம் டேபிள்களை செய்து கொள்ளவேண்டும். மேலும் சரியானபடி காது கேட்காமலிருக்கிற பையன்களையும், சரியானபடி கண் தெரியாத பையன்களையும் முன் பெஞ்சியில் உட்கார வைக்கவேண்டும். பையன்கள் ஒருவர்மேல் மற்றொருவர் படாமல் சற்று விசாலமாய் உட்கார வேண்டும். அவர்கள் உட்கார்ந்திருக்கும் பொழுது முதுகு டெஸ்கில் பட்டுக்கொண்டும், உடம்பு நேராகவும், கால்கள் தரையில் பட்டுக்கொண்டும் இருக்க வேண்டும். இவைகளைச் சரியானபடி உபாத்யாயர்கள் கவனிக்கவேண்டும். இல்லாவிட்டால், அடிக்கடி " சரியாய் உட்காரு," " கவனி ". என்று உபாத்யாயர்கள் சொல்லவேண்டியதாய் ஏற்படும். இந்த விஷயத்தை முதலிலேயே சரியானபடி கவனித்தால் பின்னால் பிள்ளைகளுக்கு அது ஒரு வழக்கமாய்ப் போய்விடும்.

4. பிள்ளைகளின் புஸ்தகங்களில் அவர்கள் பார்த்து ஆனந்திக்கும்படியான படங்கள் இருக்க வேண்டும். புஸ்தகம் அச்சுப் பெரியதாயும், கனமான கடுதாசியில் அச்சிட்டதாயும், வரிகளுக்கு இடையில் இடமுள்ளதாயும், கனம் அதிகமில்லாததாயுமிருக்கவேண்டும். அவர்கள் களைத்து போகாதபடி, பள்ளிக்கூடத்துத் தோட்டங்களில் கூட்டிக்கொண்டுபோய் விளையாடும்படி செய்யலாம். இப்படியெல்லாம் செய்வதினால் அவர்கள் ச்ரமம் தோற்றாமல் படிப்பில் ஜாக்ரதைகொண்டு ஆவலுடன் படிப்பார்கள். இப்படிப் பிள்ளைகள் படிப்பில் ச்ரத்தை கொள்ளும்படி செய்யவேண்டியது உபாத்யாயர்கள் கடமையாகும்.

கே. டி. ஸுந்தரராஜன்.

# PANNAH.

BY T. S. VAIDYANATHAN.

## பன்னா.

சில நூற்றாண்டுகளுக்கு முன் ராஜபுதனத்தைச் சேர்ந்த மீவார் என்னும் தேசத்தில் ஸங்ராம்ஸிங் என்ற பெயரையுடைய ஒரு அரசன் ராஜ்யபாரம் செய்து வந்தான். நீதி நெறி தவறாது செங்கோல் செலுத்திவந்த இம்மன்னவனுக்கு ரணவீரன் என்ற பெயரையுடைய ஒரு மந்த்ரி இருந்தான். ரணவீரன் தாழ்மையான ஒரு வேலைக்காரனாயிருந்து யுக்தியினாலும் புத்தியினாலும், தந்த்ரத்தினாலும் அரசனை ஸமயம் நேரிடுங்காலத்திலெல்லாம் மகிழச் செய்து இவ்வுன்னத நிலைமையைப் பெற்றிருந்தான். அந்தரங்கத்தில் ரணவீரனுக்கு அரசனிடம் என்னளவும் விச்வாஸமும் ப்ரியமும் கிடையாது. ராஜ்யத்தை தன் வசமாக்கிக் கொள்ள ஸமயம் பார்த்துக்கொண்டே யிருந்தான். அரசனோவெனில் ரணவீரனை முற்றிலும் நம்பியிருந்தான். ஆகவே தானிறக்குங் காலத்தில், தன்னுடைய ஒரே குமாரனும், தாயில்லாதவனும், 6 வயதுள்ளவனுமான உதயஸிங்குக்கு பிராயம் வருமளவும் ரணவீரனை ரீஜெண்டா யிருக்க நியமித்துவிட்டுப் போனான். இவ்விதமாக ஸமயம் வாய்க்கவும் ரணவீரன் அடங்காத மகிழ்ச்சியடைந்தான். ஆனாலும் அவன் ஆசைக்கு அளவில்லாமலிருந்தது. இவ்வளவும் அரசபட்டத்துக்கு ஈடாகாது என்றெண்ணினான். ஆனபடியால் தனக்கும் அரசபட்டத்துக்கும் இடையில் இடையூறாக இருந்தவன் உதயஸிங் ஒருவனே யானபடியால் அவனை எவ்விதத்திலும் கொன்று தான் அரசாள எண்ணங்கொண்டான்.

இளவரசனுடைய தாய் அவனைப் பெற்றவுடனேயே இறந்துவிட்டாளாதலால், அவன் பன்னா என்ற பெயரையுடைய ஒரு தாதி வசமாக ஒப்புவிக்கப்பட்டு வளர்ந்து வந்தான். பன்னாவும் அவளுடைய முன்னோர்களும் வம்சபரம்பரை

யாக அரண்மனையிலேயே ஸேவகம் செய்து பற்பல ஸமயங்களில் அரசனுடைய உதவியை பெற்றிருந்தார்கள். ஆகவே வம்ச பரம்பரையாகவே பன்னாவுக்கு அரண்மனையைச் சேர்ந்தவர்களிடம் ஒருவித உள்ளன்பும் விச்வாஸமும் உண்டாயிருந்தன. இளவரசனுக்கு தாய் பால்யத்திலேயே இறக்கவும், அக்குழந்தையை இன்னும் அதிக அன்புடன் வளர்த்து வந்தாள். இப்பன்னாவுக்கும் 6 வயதுள்ள ஒரு ஆண் குழந்தையிருந்தது. தாழ்ந்த ஸ்திதியிலிருந்த இந்த ஸ்திரீ ரணவீரனுடைய அந்தரங்கத்தை யறிந்திருந்தாள். இவள் மாத்ரமேயல்ல, அரண்மனை அம்பட்டனான ஒரு கிழவனும் ரணவீரனை முற்றிலும் அறிந்திருந்தான். அவன் ஆதியிலிருந்து ரணவீரனை ஒருவித ஸந்தேகத்துடனேயே கவனித்துவந்தான். அவனுடைய உத்யோகம் வெகு கேவலமானதா யிருந்தபோதிலும், ஈசன் அவனுக்கு மேலான குணங்களையும் தீக்ஷ்ணமான புத்தி கூர்மையையும் கொடுத்திருந்தார். ரணவீரன் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் தான் முன்னாலேயே அறிந்துகொள்ளு ஸாமர்த்ய முடையவனாயிருந்தான். இவனுக்கும் பன்னாவுக்கும் வெகு ஸ்நேகமானபடியால், இருவரும் இளவரசனுக்கு ஏதாவது ஆபத்து நேரிட்டால் தங்கள் உயிரைக் கொடுத்தாவது அவனைக் காப்பாற்றவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டார்கள். இவ்விதமாக சிலகாலம் கழிந்து வந்தது.

ஒரு நாளிரவு அரண்மனையெங்கும் நிச்சப்தமாயிருந்தது. சுமார் பன்னிரண்டுமணி யிருக்கும். சயனக்ருஹத்தில் இளவரசனை மஞ்சத்தின் பேரில் படுக்கவைத்துவிட்டு, தன்னுடைய குழந்தையுடன் தானுமாக பன்னா கீழே படுத்திருந்தாள். மெதுவாக அறைக்கதவு திறக்கப்பட்டு உள்ளே அம்பட்டன் வந்தான். காலடி சப்தம் கேட்டவுடன் பன்னா எழுந்திருந்து அம்பட்டனை அங்கு கண்டதும் ஏதோ விபரீதம் நடந்திருக்க வேண்டுமென்று கவலைகொண்டவளாய், அவனருகில் வந்து பரபரப்புடன் மெல்லிய குரலில் "என்ன, என்ன இந்த அர்த்த ராத்ரி வேளையில் நீ இங்கு வரக்காரணமென்ன? அந்த மஹாபாவி என்ன செய்ய நிச்சயித்திருக்கிறான், சீக்கிரம் சொல்லு". என்றாள்.

அம்பட்டன், "பன்னா, நாம் எதிர் பார்த்தது வந்துவிட்டது. வெகுகாலமாக அரண்மனையின் அன்னத்தை உண்டதின் விச்வாஸத்தை இன்று தான் காட்டவேண்டும். இன்னும் அரை நாழிகைக்குள் ரணவீரன் இளவரசனைக் கொல்ல இங்குவர எண்ணியிருக்கிறான். ஒரு நிமிஷமும் தாமஸிக்கக்கூடாது. எவ்விதத்திலும் அரசகுமாரனைக் காப்பாற்றவேண்டியது நம்முடைய கடமை. ரணவீரன் இன்றையதினம் வெளியில் காவல்காரர்களை இரண்டுமடங்கு ஏற்படுத்தியிருக்கிறான். இன்றிரவு அரண்மனையை விட்டு வெளியே யாரும் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது என்று அவர்களுக்கு கண்டிப்பான உத்திரவிட்டிருக்கிறான். ஆனபடியால் ஏதாவது யுக்தி செய்து உதயஸிங்கை அப்புறப்படுத்த வேண்டியது" என்றான். இம்மொழிகளை பன்னா வெகு கவனத்துடன் கேட்டுவிட்டு சற்று ஆழ்ந்த யோசனை செய்தாள். திடீரென்று ஒரு யுக்தி தோன்றியது. அவ்வறையில் ஒரு கூடையிருந்தது. அதை யெடுத்தாள். இளவரசனை மெதுவாகத் தூக்கி அதினுள் வைத்தாள். மேலே அங்குகிடந்த குப்பையைப் போட்டு மூடினாள். பிறகு அம்பட்டனைப்பார்த்து, "ஈசன் தான் எனக்கு இந்த ஸமயத்தில் புத்தியைக்கொடுத்து உதவினார். சீக்ரமாக இக்கூடையை உன் தலையின்பேரில் வைத்துக்கொண்டு 'ஜாடுமாலி' மாதிரியாக அரண்மனையைக் கடந்து [illegible] — உன்னுடைய வீட்டில் கொண்டுபோய் சேர்த்து[illegible] பிறகு பயமில்லை" என்றாள். அம்பட்டன் உடனே கூடையைத் தலையில் எடுத்து வைத்துக்கொண்டு அரண்மனை காவல்காரரை ஏமாற்றிவிட்டு பன்னா



குறிப்பிட்ட ஸ்தலத்தில் குழந்தையைச் சேர்த்துவிட்டான்.

அம்பட்டன் சென்றதும் பன்னா தன்னுடைய குழந்தையைத் தூக்கி உதயஸிங் படுத்திருந்த மஞ்சத்தில் படுக்கவைத்துவிட்டு ரணவீரன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். சில நிமிஷங்களுக்கெல்லாம் கதவு மறுபடியும் திறக்கப்பட்டு ரணவீரன் உல்லாஸமாக உள்ளே வந்தான், அந்நேரம் பன்னா விழித்திருப்பதைப் பார்த்து சற்றே திகிலடைந்தவனாய், "பன்னா இளவரசன் ஸுகமாய் தூங்கிக்கொண்டிருக்கிறானா," என்று சொல்லிக்கொண்டே மஞ்சத்தண்டைபோய் தானணிந்திருந்த கட்டியை உருவி குழந்தையின் மார்பில் குத்தினான். இதைக் கண்டதும் பன்னா அலறிக்கொண்டு மூர்ச்சையுற்றவளாய் கீழே விழுந்தாள். ரணவீரன் உடனே அறையைவிட்டு வெளியே ஓடிப்போனான். பன்னா அலறின சப்தம் கேட்டு அரண்மனையிலிருந்த எல்லாரும் அங்குவந்து சேர்ந்தார்கள். எல்லாரும் இளவரசன் கொல்லப்பட்டான் என்றே நிச்சயமாய் எண்ணினவர்களாய் அழுதார்கள். பன்னா மூர்ச்சை தெளிந்ததும் நடந்த ஸங்கதி யாதொன்றையும் யாருக்கும் வெளிப்படுத்தவில்லை. ரணவீரன் தான் இளவரசனைக் கொன்றுவிட்டதாகவே எண்ணி மகிழ்ச்சியடைந்தான். ஆனால் இளவரசனுக்குப் பதிலாக, மழலைச்சொல்மாறாத வேறொரு குழந்தை ஜீவனை விட்டதென்ற உண்மை அம்மூடனுக்குத் தெரியாமலே யிருந்தது. இது நடந்ததும், பன்னா அரண்மனை வேலையை விட்டுவிட்டு உதயஸிங் இருந்த இடத்திற்கு வந்துசேர்ந்து அவனை முன்னிலும் பதின்மடங்கு அன்புடன் வளர்த்து வந்தாள். உதயஸிங்குக்கு பிராயம் வரவும் தன்னை வெளிப்படுத்திக்கொண்டு தான் இன்னவிதமாக உயிர் பிழைத்ததாகவும், தனக்காக இன்னார் உயிர்மாண்டதாகவும் ராஜ்யத்தில் தெரியப் படுத்திவிட்டு ஸிம்ஹாஸனத்தி லேறினான். ரணவீரன் அப்பொழுது அந்த ஸமாசாரத்தைக் கேட்டதும் இடிவிழுந்தவன்போலானான். ஜனங்களெல்லாரும் அடங்காத ஆனந்தத்தை யடைந்தார்கள். ரணவீரன் தூக்குப்போடப்பட்டான். உதயஸிங் பன்னாவை உயிரோடு இருக்கும் வரைக்கும் தன்னுடைய ஸொந்த தாயாகவே எண்ணி பூஜித்துவந்தான். அவளும் காலம் சென்றபிறகு ராஜ்யமெங்கும் ஜனங்கள் அவளை நினைத்து துக்கம் கொண்டாடினார்கள். உதயஸிங் வெகுகாலம் அரசுபுரிந்தான். இவ்விதமாக நாம் சரித்ரத்தில் வாசித்திராததும் காதில் கேட்டிராததுமான ஆச்சர்யமான செய்கையை பன்னா செய்து அழிவில்லாத கீர்த்தியையடைந்தாள். இவ்விதமாக முன்காலத்தில் ராஜவிச்வாஸம் ஜனங்களிடம் பூர்ணமாக விருந்தது. நாமும் அப்படியே என்றும் இருப்போமாக.

டி. எஸ். வைத்யநாதன்.

## AGRICULTURAL PROGRESS OF JAPAN.

## ஜப்பானில் விவஸாய அபிவ்ருத்தி.

ஜப்பான் தேசத்தில் ஏறக்குறைய ஆறில் ஒரு பங்கு நிலந்தான் விவஸாயத்திற்கு உபயோகப்பட்டு வருகிறது. நூற்றுக்கு அறுபதுபேர்கள் விவஸாயத் தொழிலில் அமர்ந்திருக்கிறார்கள். பூமி அதிக ஸாரமானதல்ல. அநேக வர்ஷங்களாக சாகுபடியாகும் நிலங்களும் அதிகரிக்கவில்லை. அப்படி யிருந்தாலும் பத்துவருஷங்களுக்கு முன்னிருந்ததைவிட இப்போது விளைபொருள்கள் பலமடங்கு அதிகமாயிருக்கின்றன. இதற்குக் காரணம் ஜப்பானிய ராஜாங்கத்தார் செய்திருக்கும் ஏற்பாடுகளே. அவைகளை ஐந்து, ஆறு பாகங்களாகப் பிரித்துச் சொல்லலாம்.

(1) வயல்களின் மத்தியிலும் வேறு இடங்களிலும் சாகுபடி செய்யாமல் காலியாயிருக்கும் நிலங்களை ஸாகுபடி செய்யும்படி செய்வதும், வயல்களுக்கு மத்தியிலுள்ள வரப்புகளின் அகலத்தைக் குறைப்பதும்.

(2) ஒருவனுக்கு ஸொந்தமாயுள்ள பலவிடங்களில் கிடக்கும் துண்டு நிலங்களை ஒருங்கு சேர்த்து கொடுக்க ஏற்பாடுசெய்வதும், அப்படி ஒருங்குசேர்த்த நிலத்தின் உருவத்தை நேராகச் செய்வதும்.

(3) நீர்ப்பாசனத்திற்கு வேண்டிய ஸாதனங்களை ஜாஸ்திசெய்வதும்,

(4) விவஸாயிகளின் நிலங்களிலுள்ள ஜலம் வடிந்து போவதற்கு வேண்டிய வஸதிகளைச் செய்துகொடுத்து அதனால் நெல் அறுவடையானதும் நீரை வடிக்கவிட்டு, ஒரு புன்செய் தான்யம் சாகுபடி செய்யும்படி செய்தலும், விவஸாயிகளுக்கு புதுமுறைகளையும், புதுக் கருவிகளையும் உபயோகிப்பதால் உண்டாகும் நன்மைகளைப்பற்றி அவர்களுக்கு நிரூபித்துக்காட்டுவதும், அப்பேர்ப்பட்ட முறைகளையும் கருவிகளையும் கையாளுவதற்கு சக்தியற்றவர்களாயிருப்பவர்களை ஸுலபமாய் அவைகளை உபயோகித்துவர ஏற்பாடு செய்வதுமாம்.

1872-ஆம் வர்ஷம்முதல் மேல்சொன்ன முறைகளை அனுபோகத்திற்குக் கொண்டுவர ஏற்பாடுசெய்தார்கள்.

ஜப்பானிய ராஜாங்கத்தார் ஆரம்ப முதற்கொண்டே விவஸாயிகளிடத்தில் புதுமுறைகளையும் புதுக்கருவிகளையும் உபயோகிப்பதால் உண்டாகும் நன்மைகளை வாயால் சொல்லி ப்ரசுரம்செய்ததுமில்லாமல், அவைகளை விவஸாயிகள் கையாளுவதற்கு வேண்டிய ஸாதனங்களையும் செய்து வந்தார்கள். இந்த விஷயமாய் செய்த சீர்திருத்தங்கள் இரண்டு வகைப்படும். முதலாவது ஏழை விவஸாயிகளுக்குப் பண உதவி செய்வதும், இரண்டாவது, விவஸாயிகளுக்கு நூதனமான கருவிகளெல்லாம் அவர்களுக்கு ஸமீபத்திலேயே அகப்படும்படி செய்வதுமாம். இவர்களுக்குப் பணஉதவி செய்வதற்காக விவஸாய பாங்கிகளும், கூட்டுறவு ஸங்கங்களும் ஏற்பாடாயின. கூட்டுறவு ஸங்கங்களுக்கு தபாலாபீஸ் ஸேவிங்க்ஸ் பாங்கிகளிலிருந்து ஒரு பாகம் பணம் கடன் கொடுக்கவேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

மேலும் ராஜாங்கத்தார், விவஸாய விஷயங்களைப்பற்றி அடிக்கடி பரீக்ஷை செய்வதற்காக, அங்கங்கே 'பரீக்ஷை சாலைகள்' ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவ்வவ்விடங்களில் பரீக்ஷித்துத் தெரிந்துகொண்ட விஷயங்களை எல்லாரும் நன்றாய் அறியும்படி பலவிதமாய் வெளிப்படுத்துகிறார்கள். பரீக்ஷிக்கப்படுகிற விஷயங்கள் முக்யமாய் பூமியின் தராதரம், விதைகள், எருக்கள், விவஸாயக்கருவிகள், பயிர்களுக்கு வரும் நோய்கள், கால்நடைகள், இன்னும் இவைபோன்றவைகளாம்.

விவஸாயிகள் தாங்கள் ஒருவருக்கொருவர் உதவிபுரிந்து வருமாறு விவஸாய ஸங்கங்களும், கூட்டங்களும் அநேகவிடங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. தவிர, ப்ரத்யேகமான தொழில் ஸங்கங்கள் ஏற்படுத்தவும் ஸாதனங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. உதாரணமாக தேயிலை ஸங்கங்களைப்பற்றிச் சொல்வோம். 1914-ம் வர்ஷத்தில் ஸுமார் 200-ஸங்கங்களிருந்தன. இவைகளெல்லாம் ஒன்றுக்கொன்று வேற்றுமையில்லாமல் தங்கள் தேசத்துத் தேயிலை விளைச்சலை அதிகரித்தும், வ்யாபாரத்தை வ்ருத்தி செய்கிற விஷயத்தைப்பற்றி கலந்து பேசியும் வந்தன. தங்கள் தேசத்து தேயிலையையே ஜனங்கள் ஏராளமாக உபயோகிக்குமாறு மிகவும் உயர்ந்த தேயிலையை கொஞ்சகாலமாக தாழ்ந்த விலைக்கு விற்றும் வருகிறார்கள்.

## KORAI GRASS.

BY T. P. SUBBARAYA AIYAR.

## கோரைப்புல்.

இந்தப் புல்லால் செய்யப்பட்ட பாய் மனிதர் படுப்பதற்கு உபயோகப்படுகிறது. இது தேகத்திற்கு குளிர்ச்சியைத்தந்து ஸுகத்தையும் தருகின்றது. நித்யப்பட்டினி பேர்வழிகளும் இந்த புல்பாயை உபயோகிக்கின்றார்கள்.



**புல்பாயின் பயன்.**—கோரைப் புல்லால் செய்யப்படும் (நெய்யப்படும்) பாயானது மனிதருக்கு பலவிதத்திலும் ப்ரயோஜனப்படும். ஸாதாரண ஜனங்கள் இந்தப் பாய்களை படுப்பதற்கும், த்ரவிய ஸம்பன்னர்கள் தங்கள் வீடுகளிலும் பங்களாக்களிலும் தரையில் விரிப்பதற்கும், ஸ்க்ரீனென்னும் மறைப்புக்கும், பங்காக்களுக்கும், சென்னை முதலிய விடத்தார்கள் மூன்றந்தஸ்துள்ள முக்கோண மேஜைகளுக்கும், ஸகலரும் விவாகாதி சுபகாலத்தில் தம்பதிகளையுட்கார வைப்பதற்கும், சோபன முகூர்த்தத்தில் விலைபெற்ற மெத்தை முதலிய சீர் கொடுப்பினும் இந்தக் கோரைப்புல்லால் செய்த பலவர்ணப் பட்டுப்பாயையும் வரிசையாக முக்யமாய் கொடுப்பதற்கும், மலையாளப் பக்கத்தார் விவாககாலத்தில் ஸம்பந்திகளுண்ணும்போது பந்திப்பாய் என்று இந்தப் பலவர்ணமுள்ள பாயை நீள விரித்து உட்கார மரியாதை செய்வதற்கும், மகம்மதியர்களும் நாட்டுக்கோட்டை செட்டிமார்களும் இம்மாதிரி கார்யங்களுக்கும் உபயோகிக்கிறார்கள்.

மற்றொரு கோரைப்புல்பாய் தோட்டப்பாய் என்னும் பெயரையடைந்து, நெல் முதலிய தான்யங்களை வெயிலில் காயவைக்கவும், தஞ்சை ஜில்லா கீழ்ப்பாதியிலுள்ள பல க்ராமத்து இல்லத்தார் பனிகாலத்தில் போர்த்துக் கொள்ளவு முபயோகப்படுகிறது. இந்தக் கோரை சுற்றளவில் முக்கோண வடிவாக, 2, அடி நீளத்திற்குமேல் நீளாமல் கும்பகோணம், மாயவரம் தாலூக்காகளில் தரிசு கிடக்கும் நஞ்சை நிலங்களிலும், வாய்க்கால்களின் நீரோடியில் இருபுறங்களிலும் வளரும். இதை அந்தந்த க்ராமத்துப் பிராமண ஸ்த்ரீகள் அரிவாள் கொண்டறுத்துவந்து காயவைத்து இஷ்டப்பட்ட அகல நீளத்தில் முரடாக கையால் பின்னுகிறார்கள். அவைகள் அவ்வவ் வில்லங்களுக்குத் தான் காணும்.

**பயிராகத்தகுந்த பூமி.**—முதலில் சொன்ன பலவித உபயோகங்களுக்காகும் கோரை செழித்தோங்கி வளரலாயக்காகும் பூமி காவேரி, கொள்ளிடப் படுகைகளில் சதுப்பு நிலமாகவும், ஸதா ஈரமுள்ள களிவாய் நிலமாகவுமிருக்கவேண்டும். தண்ணீர் கட்டி நிற்கும் பள்ளத்தாக்குகளே கோரைப்புல் பயிராக யோக்யமுடையது.

**பயிர் செய்யும்விதம்.**—பங்குனி, சித்திரை, வைகாசி மாஸங்களில் முன் சொன்ன பூமியை மண்வெட்டிகொண்டு கொத்தியாவது, கலப்பையால் நன்றாய் உழுதாவது புழுதி செய்யவேண்டும். அந்த நிலத்தில் மேற்படி கோரையின் கிழங்குகளை ஆனி, ஆடி மாஸங்களில் 4, 5, அங்குலங்களுக்கு ஒன்றாக பூமியில் புதைத்துவிடவேண்டும். 15-தினத்திற்குள் கிழங்குகள் கீழுள்ள தண்ணீர் நைப்பால் பலகிளைகளுடன் முளைத்துவிடும். பூமியின் செழுமைக்குத் தக்கபடி 3 முதல் 6 அடி உயரும். அதிகம் நெருக்கமாயுள்ள விடத்துக் கோரைகள் சுற்றளவில் ஊசியின் பருமனுமிருக்கும். இந்தப் பருமனுள்ளது தான் பாய் நெய்வதற்கு ச்லாக்யம். அதற்காக பருமனுள்ள கோரைகளை நாலாய்க் கிழித்து நெய்வார்கள்.

**பாடம்செய்யும் விதம்.**—மார்கழி மாஸத்தில் முற்றியிருக்கும் கோரைகளை தரை மட்டத்தில் அறுத்து நுனியிலிருக்கும் பூவைக்கொய்துவிட்டு பரந்த மணல் ப்ரதேசத்தில் விரித்துக் காயவைப்பார்கள். 4, 5, நாட்களில் நன்றாய்க்காய்ந்து வெண்மை நிறமாய்விடும். பனிப்பதத்தில் கட்டி, அதற்கென்று தயாரித்திருக்கும் கொட்டகையில் பூமிக்குமேல் ஒரு முழ உயரத்தில் கட்டப்பட்டிருக்கும் பரண்களிலும், விட்டினுத்திரங்களிலும் அடுக்கி வைப்பார்கள். இல்லையேல் கரையான் தின்றுவிடும். காயும்போதே பருமனுயுள்ளவைகளைத் தனியாய் எடுத்துவிடுவார்கள். அவைகளைக்கொண்டு தான் மட்டமான பாய்களை நெய்து ஏழை ஜனங்கள் லகுவிலையில்

வாங்கி யுபயோகிக்க விற்கிறார்கள். வருஷத்திற்கொரு தரந்தான் இக்கோரை பயன்தரும். இந்தக் கோரையைத் தவிர பல விடங்களிலும் சதுப்பு நிலத்தில் சுண்டுவிரல் பருமனுள்ளதாக ஓர் வகையுண்டாகிறது. அதற்கு வாள்கோரை யென்று பெயர். இக்கோரையை நாலாகக்கிழித்து வெயிலி லுலர்த்தி கயிறுமுறுக்கி அக்கயிற்றை பலகார்யங்களுக்கு உபயோகிக்கிறார்கள். அது தண்ணீர் இறைக்கவும், மாடு கட்டவும், தயிர் கடையவும், மற்றும் ஸாமான்கள் கட்டவும், உபயோகமாகும்.

**பாய்நெசவு.**—துணிநெய்ய குழித்தறி எப்படி செய்யப்பட்டிருக்கிறதோ, அதேமாதிரி தயாரிப்பதில் "பாவு" க்கு கற்றாழை நாரினால் ஸன்னமாய் இழைமுறுக்கியபின் அகலத்துக்கு தக்கபடி "பாவு" தயாரித்து, கோரைகளை 2, 3 அங்குல அகலமுள்ள மெல்லிய மரச்சட்டத்தின் மத்தியில் கோரைக்கனம் கொள்ளும் பள்ளத்தில் கோரையை வைத்து நெசவுசெய்வார்கள். இப்படிச் செய்வது மட்டப் பாய்கள். விலையதிகம் பெறும் பாய்களுக்கு ட்வைனின் சரட்டினாலும், பருத்திநூல் சரட்டினாலும் பாவுதயாரித்துதிருநெல்வேலி ஜில்லா பத்தமடையில் பாய் நெசவு செய்கிறார்கள். பாய் ஒன்றுக்கு ரூபாய் 2-முதல் ரூபாய் 30-40-வீதம் விற்கிறார்கள். அவ்விதம் நெசவு செய்வதில் பலவிதமாய் பெயர் முதலியவைகளை வர்ணக்கோரைகளால் கண்கவரத்தக்கவிதமாயும் செய்கிறார்கள். பல காட்சிச்சாலைகளுக்கு அனுப்பி தக்க மரியாதைகளும் பதக்கங்களும் பெற்றிருக்கிறார்கள்.

**பாய்கள் நெசவு செய்யப்படும் இடங்கள்.**—தஞ்சை ஜில்லாவில், சீர்காழி தாலுக்கா ஆணிக்காரன் சத்திரம், ஐயம்பேட்டை, கும்பகோணம், அதின் சுற்றுப்பக்கங்களிலும் திருவாதிக்கு மேற்கேயுள்ள வைத்திநாதன்பேட்டை, திருக்காட்டுப்பள்ளி, குழித்தலை தாலுகா கட்டளை; திருச்சி, உறையூர், திருச்சி தாலுக்கா தாழக்குடி, திருநெல்வேலி ஜில்லா பத்தமடை முதலிய விடங்களிலும், புதுகோட்டை ஸம்ஸ்தானம் கறம்பக்குடி, பட்டுக்கோட்டை தாலுகா கல்லாகோட்டை, மன்னார்குடி தாலுக்காவில் சில ஊர்கள் ஆகிய இந்த விடங்களிலும் நெசவாகின்றன. பத்தமடையில் தயாரிப்பதுதான் மகாராஜாக்களும் வாங்கி யுபயோகிக்கத்தக்கவை.

**கோரைக் கிழங்கின்பயன்.**—இக்கிழங்கு ஆயுர்வேதப்படி பல ஔஷதங்களுக்கும் தைலங்களுக்கும் முபயோகப்படுவதுடன், பச்சை கர்ப்பூரமென்னும் ஸுகந்தவஸ்துச்செய்யவும்ஆகும். பெண்கள்பூசிக் குளிக்கும் வாசனைப் பொடியில் சேரும் பலவஸ்துக்களி லிதுவும் சேர்க்கப்படுகிறது. ஊதுபத்தி யென்னும் ஸாம்பிராணிபத்தி செய்யும் கூட்டு வாணியர்கள், சந்தனபில்லைகளுக்கு இக்கிழங்கையும் முக்யமாய்ச் சேர்ப்பார்கள். மருந்துகளுக்குச் சிறந்த மூலிகைகளிலிதுவுமொன்று.

சென்ற 2-வருஷங்களாக இக்கோரைப் புல்லுக்கு அதிகம் விலை யேற்பட்டுவிட்டது. பல விடங்களிலிருந்து இக்கோரை வ்யாபாரம் செய்யும் வர்த்தகர்கள் 1000-கணக்கான ரூபாய்களைக் கட்டிக்கொண்டு கோரையகப்படும் சீர்காழி, திருத்துறைப்பூண்டி மன்னார்குடி முதலிய விடங்களில் ஜனவரி, பிப்ரவரிமாதங்களி லலைகிறார்கள். அல்ப வஸ்து வென்று நினைக்கும் இக்கோரைக் குண்டாயிருக்கும் க்ராக்கியைப் பார்த்தாவது நம்மவர்கள் விழித்துக்கொள்வார்களா?

இவ்விடத்திய பாய் நெசவுக்காரர்கள் சிவப்பு, பச்சை, மஞ்சள் சாயம்போட பிறநாடுகளிலிருந்துவரும் அந்தந்த வர்ண டினுஸ்ப் பவுடர்களைத் தண்ணீரில் கரைத்துக்கோரைகளை அதில் கட்டிப்போட்டு, அடுப்பில் கொதிக்கவைத்து எடுத்துப் பாய்நெசவுக்கு உபயோகிக்கிறார்கள்.

தி. பாலஸுப்ராய ஐயர்.



# THE INDUSTRIAL COMMISSION.

## கைத்தொழில் கமிஷன்.

ஸமீபத்தில் நடந்த இம்பீரியல் லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில் மீட்டிங்கில் ஆனரபிள் ஸர் இப்ராஹீம் ரஹிம்துல்லா, இந்தியாவில் கைத்தொழில்களின் அபிவ்ருத்திக்காக இன்ன ஏற்பாடுகள் செய்யவேண்டு மென்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய உத்யோகஸ்தர்களும் உத்யோகஸ்தர்களல்லாதவர்களும் சேர்ந்த ஒரு கமிட்டி நியமிக்க வேண்டுமென ஒரு தீர்மானங் கொண்டுவந்தார். கவர்ன்மெண்டார் இதை ஏற்றுக்கொண்டதோடு, இது விஷயமாய் இந்தியா மந்திரிக்கு எழுதி அவருடைய ஸம்மதத்தை யடைந்திருப்பதாகவும் தெரிவித்தார்கள். தற்போது இந்தியாவில் பருத்தி, ஜூட் (கோணி நெய்வதற்கான நார்) ஆகிய இந்த இரண்டு தொழில்களே முக்யமானவை. இன்னும் இவைபோன்ற சில இருக்கின்றன என்றாலும், பொதுவாய்ப் பேசும்பொழுது இந்தியாவில் விளை பொருள்களே முக்யமே ஒழிய கைத்தொழில் முக்யமல்லவென்றே சொல்லவேண்டும். ஆனாலும், இந்தியாவில் பலர் கைத்தொழில்களை வ்ருத்திசெய்யவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறார்கள். இப்படியே கவர்ன்மெண்டாரும் எண்ணி இந்தியாவில் கைத்தொழில்களை பலப்படுத்தி அவைகளை நல்ல ஸ்திதியில் வைத்துவிடலாமென்றும் தீர்மானித்திருக்கிறார்கள்.

இதுவரையில் இந்தியா கைத்தொழில்களில் முன்னேற்றம் பெறாமல்போனதற்கு பல காரணங்களிருக்கின்றன. அவைகளில் ஒன்று கைத்தொழில்கள் ஏற்படுத்த ஜனங்கள் லகுவில் ஸம்மதித்து முன் வருவதில்லை. இரண்டாவது தொழில்களை நடத்த தக்கநிபுணர்களும் வேலையாட்களும் அகப்படுவதில்லை. மூன்றாவது எந்த விளைபொருள்களைக்கொண்டு என்ன ஸாமான்கள் செய்யலாமென்பது பொதுவாய்த் தெரியாது. இந்த விஷயங்களைப்பற்றி நன்றாய் ஆராய்ந்தறிவதற்கே மேற்சொன்ன கைத்தொழில் கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கமிஷனில் இந்தியாவின் விஷயங்களை நன்றாய் அறிந்த சில ப்ரமுகர்களும், இதர தேசங்களில் கைத்தொழில்கள் வ்ருத்தியான வழிகளை யறிந்த சில ப்ரமுகர்களும், இன்னும் பொதுவாய் கைத்தொழில், வ்யாபாரம் ஆகியஇவைகளை யறிந்த சிலரும் மெம்பர்களாக இருப்பார்கள். இந்தியாவில் கைத்தொழில்கள் வ்ருத்திக்கு வரவேண்டுமானால், அந்யதேசங்களிலிருந்து போட்டியாகிவரும் ஸாமான்களின் மேல் காப்புவரி போட்டு அவைகளை வர வொட்டாமல் செய்ய வேண்டுமென்பது அநேகரின் அபிப்ராயம். இப்படி காப்புவரிகள் போட்டால் அதனால் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கும் அந்யதேச கவர்ன்மெண்டுகளுக்குமுள்ள ஸம்பந்தங்களில் சில ஸங்கடங்கள் நேரிடக்கூடும். ஆகையால் இவைகளைப்பற்றி இப்பொழுது ஒன்றும் யோசிக்காமல் யுத்தம் முடிந்ததும் யோசிப்பார்கள். ஆகவே இந்த காப்புவரி விஷயமாயும் இந்தியாவின் வரவுசெலவு விஷயமாயும் மேற்சொன்ன கமிட்டியார் ஒரு விசாரணையும் செய்யமாட்டார்கள். தவிர, தொழில் படிப்பு விஷயமாய் இங்கிலண்டிலும் இந்தியாவிலும் சில கமிட்டியார்கள் விசாரணை செய்திருக்கிறார்கள். அவர்களுடைய ரிபோர்ட்டுகளை இந்தியா கவர்ன்மெண்டார் பரிசீலனை செய்துவருவதால், தொழில் படிப்பு விஷயமாயும், மேற்சொன்ன கமிட்டியார் ஒருவித விசாரணையும், செய்யமாட்டார்கள்.

ஆகவே காப்புவரி, தொழில் படிப்பு, இவைகளைத் தவிர, வேறு எவ்விதங்களால் இந்தியாவின் கைத்தொழில்களை வ்ருத்திக்குக் கொண்டுவரலாமென்று மேற்சொன்ன கமிட்டியார் விசாரிப்பார்கள். முக்யமாய், முதல்போட்டால், கைத்தொழிலிலும் வ்யாபாரத்திலும் நல்ல லாபம் ஸம்பாதிக்க புதிய துறைகள் இருக்கின்றனவா, அதற்கு கவர்ன்மெண்டார் பயன்படத் தக்க

விதமாய் ஒத்தாசை செய்யலாமா, அப்படியானால் எவ்விதமாய் ஒத்தாசை செய்யலாம், தக்க நிபுணர்களைக்கொண்டு உதவி செய்யலாமா, லாபம் கிடைக்கும் என்பதைக் காண்பிக்க குறிப்பிட்ட தொழில்களைச் செய்து காட்டலாமா, கைத்தொழில்கள் ஏற்படுத்துகிறவர்களுக்கு நேரிலேயோ அல்லது வேறு விதமாகவோ, பண உதவி செய்யலாமா, தற்போது நடந்து வரும் இந்தியா கவர்ன்மெண்டு வரவு செலவு மாதிரிகளுக்கு விரோதமில்லாமல் எந்த விதங்களில் உதவி செய்யலாமென்று கைத்தொழில் கமிட்டியார் விசாரணைசெய்து ஒரு வர்ஷத்துக்குள் ரிபோர்ட்டு செய்வார்கள். இந்தக் கமிஷனுக்கு, முன்பு இந்தியாவில் பூதத்வ இலாகாவில் டிரெக்டர் ஜெனரலா யிருந்த ஸர் தாமஸ் ஹாலெண்ட் என்பவர் ப்ரெஸிடெண்ட். இதன் மெம்பர்கள் முன்பு சென்னை ராஜதானியில் கைத்தொழில் டிரெக்டராயிருந்து இப்போது மைஸூரில் கைத்தொழில் டிரெக்டரா யிருக்கும் ஆல்ப்ரெட் சாட்டர்டன், பம்பாயில் பெரிய பஞ்சாலைகளுக்கு ஸொந்தக்காரராகிய ஸர் பஸூல்பாய் கரிம்பாய், பம்பாயில் பெரிய பஞ்சாலைகளுக்கு ஸொந்தக்காரரும், தாதா இரும்புச்சாலையில் முக்யஸ்தருமான ஸர் தொராப் தாதா, வங்காளத்தில் பெரிய இஞ்சினியர் கம்பெனிக்கு ஸொந்தக்காரராகிய ஸர் ஆர். என். முகர்ஜி, ஐக்ய மாகாணங்களில் ப்ரமுகராகிய பண்டித மதன்மோஹன் மாளவியா, ஐயர்லாந்தில் விவஸாயிகளுக்காக உழைத்து அவர்களுக்குள் கூட்டுறவை உண்டுபண்ணி அவர்களை கைதூக்கி வரும் ஸர் ஹாரெஸ் ப்ளங்கெட், இங்கிலாந்தில் பெரிய இஞ்ஜினியராகிய ஹாப்கின்ஸ், இந்தியா கவர்ன்மெண்டின் வ்யாபார டிபார்ட்மெண்டின் காரியதரிசியாகிய ஸி. இ. லோ, வங்காளத்தில் வ்யாபார ஸங்கத்தைச் சேர்ந்த எப். எச். ஸ்டீவர்ட் ஆகிய இவர்கள்.

# FEMALE EDUCATION IN INDIA.

## இந்தியாவில் பெண் கல்வி.

சென்ற பங்குனி மாஸத்து 'ஜனாபிமானி'யில் இந்தியாவில் பெண்கல்வியை அபிவ்ருத்தி செய்வதைப்பற்றி இந்தியாகவர்ன்மெண்டார் மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு அனுப்பியிருக்கும் ஒரு சுற்றுக்கடிதத்தில் பெண் கல்வியின் அவச்யம், எலிமெண்டரி படிப்பு ஆகிய இவைகளைப்பற்றிய பாகங்களை எழுதினோம். இங்கே அந்த உத்தரவின் மற்ற பாகங்களை ஸங்க்ரஹமாக எழுதுகிறோம்.

பெண்களுக்கான ஸெகண்டரி ஸ்கூல்கள்:—மாகாண கவர்ன்மெண்டார், தாங்கள் பெண்கல்வி விஷயமாய் இந்தியா கவர்ன்மெண்டுக்கு எழுதியனுப்பும் பதிலில், பெண்களின் எலிமெண்டரி படிப்பு விஷயத்தை ஸ்தல ஸ்தாபனங்களின் (லோகல் பாடீஸ்) மேற்பார்வையில் விடுவதைப் போல், பெண்களின் ஸெகண்டரி படிப்பையும் அவைகளின் மேற்பார்வையில் விடலாமா என்பதைப்பற்றியும், அப்படிச்செய்வதில் ஏதாவது அஸௌகர்யங்கள் இருந்தால், எந்தவிதமான பள்ளிக்கூடங்களை அவ்விதம் ஸ்தல ஸ்தாபனங்களின் மேற்பார்வையில் விடலாம், எவைகளை ப்ரத்யேகமான கமிட்டிகளின் மேற்பார்வையில் விடலாமென்பதைப்பற்றியும், அப்படி கமிட்டிகளின் மேற்பார்வையில் விடுவதானால், ப்ரைமெரி ஸ்கூல் கமிட்டிகளின் மேற்பார்வையில் விடலாமா, அல்லது ப்ரத்யேகமான ஸெகண்டரி ஸ்கூல் கமிட்டிகளின் மேற்பார்வையில் விடவேண்டுமா என்பதைப்பற்றியும் தெரிவிக்கவேண்டும்.

ஸெகண்டரி ஸ்கூல்களில் பாடங்களை நிர்ணயிக்கும் விஷயத்தை ஸ்தல ஸ்தாபனங்களிடமாவது, ப்ரத்யேக கமிட்டிகளினிடமாவது விட்டுவிடலாம். ப்ரைமெரி ஸ்கூல்களைப்போலவே ஸெகண்டரி ஸ்கூல்களிலும், பாட ஜாப்தாக்கள்



ஜனங்களின் அபிப்ராயத்தை அனுஸரித்துப் பலவிதமாக இருக்கும். அநேகர் பெண்களுக்கு மதஸம்பந்தமான கல்வியும் ஸங்கீதமும் கற்றுக் கொடுக்கவேண்டுமென்கிறார்கள். பிள்ளைகளை வளர்ப்பது, அவைகளினுடைய ஆகாரம், குழந்தைகளின் நோய்கள், ஸுகாதாரம், முதலிய வீட்டு விஷயங்களைப் பெண்களுக்குக் கற்றுக் கொடுக்கவேண்டியது அவச்யமென்று பலர் அபிப்ராயப்பட்டு வருகிறார்கள். வேறு சிலர் பெண்களுக்கு இங்க்லீஷ் படிப்பு சொல்லிக்கொடுக்கவேண்டுமென்று எண்ணுகிறார்கள். சிலர் காலேஜுகளில் வாசிக்க ப்ரியப்படுவார்களாதலால், அவர்களுடைய ஸெகண்டரி படிப்பானது காலேஜ் படிப்புக்கு ஏற்றதாக இருக்கவேண்டியிருக்கும்.

ஆகையால் இவ்விஷயங்களில் வித்யாதிகாரிகள் ரொம்ப ஜாக்ரதையாக இருக்கவேண்டியிருக்கும். படிப்பால் ஸ்த்ரீகள் ஸ்வதந்த்ரமடைந்து நாட்டு வழக்கங்களை விட்டுவிடுவார்களென்று எண்ணி அவர்களுடைய படிப்பில் விருப்பங்கொள்ளாத ஜனங்களுக்காக அவர்களுடைய மனஸுக்குப் பிடித்ததாக ஏற்படுத்தும் பாட ஜாப்தாவானது மற்றவர்களுக்கு ஏற்றதாயிராது. ஆகையால் பற்பல வகுப்பாருக்கு ஏற்றதாய் பற்பல பாட ஜாப்தாக்களை ஏற்படுத்திக்கொடுப்பது நல்லது.

இதுவரையில் ஸெகண்டரி கல்வி அபிவ்ருத்தியடையாததற்குக் காரணம் அநேகமாய் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்படும் பாடங்கள் ஜனங்களுக்கு ஏற்றதாயிருந்து வராமை எனலாம். வித்யா டிபார்ட்மெண்டார் இன்ன பாடம் ஏற்படுத்துவதென்பதை ஸ்தல ஸ்தாபனங்களிடம் விட்டுவிட்டு, பற்பல பாட ஜாப்தாக்களை மாத்ரம் தயாரித்துக் கொடுத்துவரவேண்டும்.

பெண்களின் உயர்தரப் படிப்பு.—மேற்சொன்ன ஏற்பாட்டின்படி படித்த பெண்களில், லாடின், க்ரீக், ஸம்ஸ்க்ருதம்போன்ற பாஷைகளில் தேர்ச்சியடைந்தவர்கள் காலேஜுகளில் சேர்ந்து தங்களுடைய பாஷாஞானத்தை வ்ருத்திசெய்ய எண்ணக்கூடும். ஸுகாதாரம் முதலிய பாடங்கள் படித்தவர்கள் வைத்யத்துக்குப் படிக்க ப்ரியப் படுவார்கள். ஆனால் இப்படி மேற்படிப்புப் படிக்க ப்ரியப் படுபவர்கள் தற்காலம் ஸ்வல்பமாகவே யிருப்பார்களாதலால், அவர்கள் மேற்படிப்புப் படிக்க முடியாமலிருந்து, அவர்களுக்கென்று ஒரு காலேஜ் ஸ்தாபிக்க போதுமான பேர்களுமில்லாமலிருந்தால், அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுத்து இப்போதுள்ள பெண்களுக்கான வித்யா ஸ்தாபனங்களிலோ, அல்லது அவர்கள் இஷ்டப்பட்டால், பையன்களுக்கான காலேஜுகளிலோ படிக்கும்படி தூண்டலாம்.

இப்போது செய்யக்கூடியதெல்லாமென்னவென்றால் இப்போதுள்ள ஹைஸ்கூல்களில் பெண்கள் சேர்ந்து வாசிக்க அதிக ஸௌகர்யங்கள் செய்து கொடுப்பதும், கவர்ன்மெண்டுக்கு பணங்கிடைத்தால், அவச்யமானால், பெண்களுக்காக அதிகமாக ஹைஸ்கூல்கள் ஸ்தாபிப்பதும், ஏற்கனவேயுள்ள ஹைஸ்கூல்களில் காலேஜ் வகுப்புகள் ஏற்படுத்துவதுமே.

உபாத்யாயர்களைப் பயிற்றுவித்தல்.—ஸ்த்ரீ உபாத்யாயர்களைப் பயிற்சிசெய்விக்க வேண்டிய ஸௌகர்யங்கள், ஆண் உபாத்யாயர்களுக்குள்ளவைபோலிருக்கின்றனவா, அல்லது இப்போதுள்ள ஏற்பாட்டில் ஏதாவது மாறுபாடுகள் செய்யவேண்டுமா என்பதைப்பற்றியும் மாகாண கவர்ன்மெண்டார் தங்களுடைய பதிலில் தெரிவிக்க வேண்டும். தற்போது ஸ்த்ரீ உபாத்யாயர்கள் ரொம்ப குறைவு. க்ரமமாய் ஸ்த்ரீகள் பயிற்சியடைந்து உபாத்யாயர்களாவதென்றால், வெகுகாலம் வரையிலும் ஸ்த்ரீ உபாத்யாயர்களின் தொகை குறைவாகவே இருக்கும். தற்போது பலவிடங்களில் உள்ள பயிற்சியடையாத உபாத்யாயர்களுக்கு ஸ்வல்பகாலத்துக்கோ, அல்லது அவர்களுடைய விடுமுறைநாட்களிலோ

போதனா முறையைக் கற்பித்தும், அவர்களுக்கு ஊரூராய்ப் போய் போதனா முறையைக் கற்றுக் கொடுக்க உபாத்யாயர்களை நியமித்தும்வர ஏற்பாடு செய்வதைப் பற்றி மாகாண கவர்ன்மெண்டார் ஆலோசனை செய்ய வேண்டும்.

பெண் பாடசாலைகளை இன்ஸ்பெக்ட் செய்வது.—இது விஷயமாய் இந்தியா கவர்ன்மெண்டார் சொல்லும் யோசனையாவது: இன்ஸ்பெக்டர் செய்ய வேண்டிய நிர்வாக ஸம்பந்தமான வேலைகளை அதாவது பாடசாலையின் ஸுகாதாரம், அமைப்பு, மேஜை, நாற்காலி, பெஞ்சுகளின் வஸதிகள், பாடங்கற்பிக்க ஏற்ற கருவிகள், சம்பளம் முதலிய விஷயங்களை ஆண் இன்ஸ்பெக்டர்களிடம் விட்டு விடலாம். பாட ஜாப்தாக்களைப் பரிசோதிப்பது, பாடங்களை சரியாய்க் கற்றுக் கொடுக்கிறார்களா என்று பார்ப்பது ஆகிய இந்த விஷயங்களை (ஸ்த்ரீ) இன்ஸ்பெக்ட்ரஸுகளிடம் விடலாம். இன்ஸ்பெக்ட்ரஸுகள் தாங்களே வகுப்புகளுக்கு பாடங்கற்பித்துக் காட்ட சக்தியுள்ளவர்களா யிருக்கவேண்டும்.

## THE MADRAS PROVINCIAL CONFERENCE.

## சென்னை மாகாண கான்பரென்ஸ்.

சென்னை மாகாண கான்பரென்ஸ் மே மாஸம் 15-ந்தேதியன்று மதுரையில் கூடிற்று. ராமநாதபுரம் ராஜா வரவேற்புக் கமிட்டியின் சேர்மனாக இருந்து ப்ரதிநிதிகளை வரவேற்று ப்ரஸங்கம் செய்தார். அவர் தமது ப்ரஸங்கத்தில் முதலில் மதுரைப் பட்டணத்தின் சிறப்பைப் பற்றியும், பாண்டியநாட்டின் சரித்ரத்தைப் பற்றியும் மதுரையில் முன்பு நடந்துவந்த தமிழ்ச்சங்கங்களைப் பற்றியும் ப்ரஸ்தாபித்தார். பிறகு அவர் தேச பாஷைகளைப் பற்றிப் பேசுகையில் அவைகளைப் புறக்கணிக்கக் கூடாதென்றும், அவைகளையும் பள்ளிக்கூடங்கள், கலாசாலைகளில் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், அநேக பாடங்களை தேச பாஷைகளில் கற்றுக் கொடுப்பதைப்பற்றி வித்யாபிமானிகள் ஆலோசிக்க வேண்டுமென்றும் சொன்னார். அவர் பேசிய மற்ற விஷயங்கள் ஸங்க்ரஹமாய்ப் பின் வருமாறு.

இந்திய வாலண்டியர் படை ஏற்படுத்தவேண்டும். இந்தியாவுக்கு ஸொந்தத்தில் கப்பல்படை இருக்கவேண்டும். ஜனத் தலைவர்களும் படித்தவர்களும் தேச க்ஷேமத்துக்காக ரொம்ப உழைக்கவேண்டும். நீதி நிர்வாக அதிகாரங்களைப் பிரித்துவிடவேண்டும். மதராஸ் எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்டினால் பல தொந்தரவுகள் ஏற்படுவதால் அதை தக்கபடி மாற்றவேண்டும். அதே மாதிரி தர்ம ஸொத்து நிர்வாக ஆக்ட்டையும் மாற்றவேண்டும். ஆயுதச் சட்டத்தை முற்றிலும் ரத்து செய்வது ஜனங்களின் க்ஷேமத்துக்கு ஏற்றதல்ல வாதலால், அதை முழுவதும் ரத்து செய்யாமல் இந்தியர்களுக்கு கௌரவக் குறைவாயுள்ள நிபந்தனைகளை எடுத்துவிடவேண்டும். ஆயுதங்கள் வைத்திருக்க லைஸென்ஸ் கொடுப்பது விஷயத்தில் ஸர்க்கார் அதிகாரிகள் தாராளமா யிருக்கவேண்டும். ஸ்தல ஸ்தாபனங்களில் அதிகாரிகளின் செல்வாக்கு அதிகமாயிராதபடி லோகல் போர்ட்ஸ் ஆக்ட்டை சீர்திருத்தவேண்டும். க்ராம பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கவேண்டும். பெண் கல்வியை அபிவ்ருத்தி செய்யவேண்டும். இந்தியாவானது தற்போது ஸ்வய ஆட்சியை அடையத் தகுந்தபடி லாயக்கில்லாமலிருப்பதால், ஜனங்கள் அதற்கு லாயக்குள்ளவர்களாவதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

இப்படி ராமநாதபுரம் ராஜா பேசினபிறகு, ஆனரபில் மிஸ்டர் கேசவப்பிள்ளை ப்ரெஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அவர் தமது ப்ரஸங்கத்தில் காலஞ்சென்ற இந்திய தேசாபிமானிகளைப்பற்றியும், யுத்தத்தைப்பற்றியும் பேசினார்.



யுத்தத்துக்குப்பிறகு ஏற்படக்கூடிய ப்ரச்னைகளைப்பற்றி இங்க்லண்டிலும் அதைச் சேர்ந்த குடியேற்ற நாடுகளிலும் உள்ள ராஜதந்த்ரிகள் கவனம் செலுத்திவருகிறார்கள். இதைப்பற்றிப் பேசுகையில் மிஸ்டர் கேசவப்பிள்ளை அந்த ப்ரச்னைகளில் இந்தியாவைப்பற்றி ஒரு ப்ரஸ்தாபமும் இல்லையென்றும், இங்க்லண்டும், குடியேற்ற நாடுகளும் ஒன்று சேர்ந்து ஒரே ஏகாதிபத்யத்தைச் சேர்ந்தனவாக இருக்கவேண்டுமெனவும், இவைகளே ஏகாதிபத்யத்திலுள்ள வெள்ளைக்காரர்களல்லாத 34-கோடி ஜனங்களை ஆட்சி செய்யவேண்டுமெனவும், அதற்காக ப்ரிட்டிஷ் சிறுவர்களை அந்த வேலைக்குத் தயாராக்க வேண்டுமெனவும் ப்ரிட்டிஷ் ராஜ தந்த்ரிகள் சொல்லி வருகிறார்களென்றும், இங்க்லண்ட் நம்மை ஆண்டு வருவதில் என்ன குறைகளிருந்த போதிலும், அதனிடத்தில் நாம் அபிமானமுள்ளவர்களாக இருக்கிறோமென்றும், ஆனால் இந்தியர்களைப் பலவிதங்களில் ஹிம்ஸித்த தென்னாப்ரிக்கா கவர்ன்மெண்டும், இந்தியர்களையும் வெள்ளைக் காரர்களல்லாத மற்ற ஜாதிகளையும் குடியேறவிடாத ஆஸ்ட்ரேலியாவும், இந்தியர்களை பலவந்தமாக அப்புறப்படுத்திய கனடாவும் இந்தியாவை அவைகளின் இஷ்டம்போல் ஆளுவதென்றால், இந்தியர்கள் ஏகோபித்து அந்த ஏற்பாட்டை வெறுத்து ஆக்ஷேபிக்கவேண்டி யிருக்குமென்றும் சொன்னார்.

அவர் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களின் அமைப்பைப்பற்றிப் பேசினபோது அவைகள் லார்ட்மார்லி எழுதியனுப்பிய கடிதத்தை அநுஸரித்து தாராள சிந்தையுடன் அமைக்கப்படவில்லையென்றும், இருந்தாலும் அவைகள் முன்பு இருந்த லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களைவிட சீர்திருந்தி யிருக்கின்றனவென்றும், ஜன ப்ரதிநிதிகளுக்கு முன்னிருந்ததைவிட அதிக ஸ்வதந்த்ரங்கள் உண்டென்றும் சொன்னார்.

பிறகு மிஸ்டர் கேசவப்பிள்ளை அதிகாரப் பிரிவினை, ஸ்தல ஸ்வய ஆட்சி, இந்தியர்கள் அன்ய நாடுகளுக்குக் குடிப்போவது, மறு ஸெட்டில்மெண்ட் முதலிய விஷயங்களைப்பற்றியும் பேசினார்.

### தீர்மானங்கள்.

இந்தக் கான்பரென்ஸில் செய்யப்பட்ட சில முக்யமான தீர்மானங்களை இங்கு குறிப்பிடுகிறோம்.

ரயத்வாரி நிலங்களின் நிலத்தீர்வையை சாச்வதமாக்க வேண்டும். அப்படிச் செய்யும் வரையில் சட்ட ஸபையின் அநுமதியில்லாமல் ஸெட்டில்மெண்ட் ரிவிஷன் செய்யக்கூடாது.

தென்னிந்திய ரெயில்வேயிலும், மதராஸ் தென்மராட்டா ரெயில்வேயிலும், 3-வது வகுப்பு ப்ரயாணிகளுக்கு வண்டிகளில் போதுமான இடமில்லாமல் ரொம்ப கஷ்டங்கள் ஏற்படுவதால், கவர்ன்மெண்டார் இந்தக் கஷ்டங்களை நிவர்த்தி செய்ய சீக்ரம் வேண்டிய முயற்சி எடுத்துக் கொள்ளும்படி ரெயில்வே அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும்.

மதராஸ் கவர்ன்மெண்டார் ஆயுர்வேத,யுனானி வைத்ய முறைகளை சீர்திருத்தவும், அவைகளைக் கற்றுக் கொடுக்கவும், அந்த வைத்ய முறைகளை அபிவ்ருத்தி செய்யவும் வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

ஸர்க்காரிட மிருந்து பண உதவிபெறும் பள்ளிக் கூடங்களில் மத ஸம்பந்தமான கல்வி கற்பிக்கப்பட்டு வந்தால், அந்த பள்ளிக்கூடத்தில் தமது பிள்ளைகளை வாசிக்க அனுப்பும் பெற்றோர்கள், இஷ்டப்பட்டால் தங்கள் பிள்ளைகளை மத பாடத்தை கவனிக்காமல் இருக்கும்படி செய்யலாமென ஏற்பட வேண்டும்.

தேசத்தின் க்ஷேமத்தை உத்தேசித்து சிறுவர்களுக்கு கட்டாயமாயும் இலவசமாயும் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யவேண்டியது அவச்யம். முனிஸிபாலிடிகளும் ஜில்லா போர்டுகளும் தங்களுடைய அதிகார ப்ரதேசங்களில் சிறுவர்க

ளுக்கு கட்டாயப்படுத்தி இலவசமாய்க் கல்வி கற்பிக்க அவைகளுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும்.

ஜனங்கள் ரொம்ப ஏழையாயிருப்பதை உத்தேசித்து வரிகளை, முக்யமாய், உப்பு வரியைக் குறைக்க வேண்டும்.

1910-ம் வர்ஷத்து அச்சுச் சட்டத்தை ரத்து செய்வதோடு 1867-ம் வர்ஷத்து அச்சுச் சட்டத்தை அச்சடிப்பவர்களுக்கு பாதக மேற்படாதபடி தக்க விதமாக மாற்ற வேண்டும்.

மாகாண ஸ்வய ஆட்சி ஏற்படவேண்டியதை உத்தேசித்து, மாகாண கவர்ன்மெண்டின் அமைப்பில் பின் வரும் சீர் திருத்தங்கள் செய்ய வேண்டும்.

1. மாகாண லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் உள்ள மெம்பர்களில் 5-ல் 4-பாகத்தார் ஜனங்களால் தெரிந்தெடுக்கப் பட்டவர்களா யிருக்க வேண்டும். (2) நிர்வாக ஸபை மெம்பர்களின் தொகையில் பாதிக்குக் குறையாமல் சட்ட ஸபையின் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களால் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். (3) ஸாதாரணமாக, சாச்வதமான பப்ளிக் ஸர்விஸைச் சேர்ந்த (அதாவது கவர்ன்மெண்டு) உத்யோகஸ்தர்களை நிர்வாக ஸபை மெம்பர்களாக நியமிக்கக் கூடாது. (4) தக்க நிபந்தனைகளுக்கு உள்பட்டு, மாகாண லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலார் வரி வஸூலித்தல், செலவழித்தல் முதலிய விஷயங்களை மேற்பார்வை செய்ய வேண்டும். (5) மாகாண சட்ட ஸபையார் பொது ஜன விஷயங்களைப் பற்றித் தீர்மானங்கள் செய்யலாம். நிர்வாக ஸபையார் இஷ்டப் படாவிட்டால், அந்தத் தீர்மானங்களை ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. ஆனால் ஒரு தீர்மானம் அங்கீகரிக்கப்படாமல் போனபிறகு ஒரு வர்ஷத்துக்குள்ளாக அதே தீர்மானம் சட்ட ஸபையில் கொண்டுவரப்பட்டு நிறைவேறி விட்டால், நிர்வாக ஸபையார் அந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

## COST OF ROYAL WEDDINGS.

## ராஜ வம்சங்களில் கல்யாணச் செலவு.

நமது நாட்டில் ரொம்ப ஏழையா யிருப்பவர்கள்கூட கல்யாணங்களில் கடன் வாங்கியாவது அதிகமாகச் செலவு செய்கிறார்கள். ரொம்பப் பணக்காரர்களா யிருக்கிறவர்கள் வெகுவாய் தங்கள் சக்திக்கு மீறியே செலவுசெய்வது வழக்கம். ஸாமான்ய குடும்பங்களிலேயே கல்யாணங்களுக்கு அதிகமாகச் செலவழியுமானால் ராஜகுடும்பங்களில் செலவு ஏராளமாயிருக்குமென்று சொல்லவேண்டியதில்லை. மேல்நாட்டு ராஜகுடும்பங்களில் கல்யாணங்களுக்கு என்ன செலவு ஏற்படுமென்பதற்கு சில கல்யாணச் செலவு விவரங்களை எழுதுகிறோம்.

நமது சக்ரவர்த்தியின் பாட்டியாராகிய விக்டோரியா ராணியாருக்கு 1840-ம் வர்ஷம் பிப்ரவரி மாஸம் 10-தேதியன்று கல்யாணம் நடந்தபோது உடுப்பு, சீர்வகையறாவைத் தவிர மற்ற கல்யாணச் செலவுகளுக்கு மாத்ரம் $1\frac{1}{2}$-லக்ஷம் பவுனாயிற்றாம் அவருடைய உடுப்புகள் மிகவும் விலையுயர்ந்தவை. அவருடைய உடுப்புகளிலுள்ள ஸரிகை மாத்ரம் பதினையாயிரம் ரூபாய் விலையுள்ளது. நமது நாட்டுக் கல்யாணங்களில் பருப்புத் தேங்காய் முதலிய பக்ஷணங்கள் செய்வதுபோல மேல்நாடுகளில் கல்யாணங்களில் கல்யாணப் பணியாரம் என்று ஒரு பணியாரம் தயார்செய்வதுண்டு. அந்தப் பணியாரம் ரொம்ப செலவு செய்து தயார் செய்யப்படும். விக்டோரியாவின் கல்யாணத்தில் செய்யப்பட்ட பணியாரங்களுக்கு 15,000 ரூபாய் செலவாயிற்றாம். இதில் பெரிய பணியாரம் 14-அங்குலம் கனமுள்ளதாயும், 12-அடி சுற்றளவுள்ளதாயும் இருந்ததாம். இதைத் தவிர வேறு சிறியவையான பணியாரங்களும் செய்யப்பட்டன. ஹிந்துக்களின் கல்யாணங்களில் சீராக வைக்கும் பருப்புத் தேங்காய், முறுக்கு முதலிய பக்ஷணங்களை கல்யாணவீட்டார் தங்களுடைய பந்துக்களுக்கும், ஸ்நேகிதர்களுக்கும், மற்றும் ஊரிலுள்ளவர்களுக்கும் விநியோகம் செய்வதுபோல், விக்டோரி ராணியாரின் கல்யாணத்துக்காகச் செய்யப்பட்ட பணியாரங்கள் உலகம் முழுவதும் விநியோகம் செய்யப்பட்டன. அவருடைய கல்யாண தினத்தன்று இரவில் எல்லா நாடகசாலைகளிலும் ஜனங்கள் பணமில்லாமல் நாடகம் பார்க்க விடப்பட்டார்கள். அநேக நகரங்களில் ஏழைகளுக்கு விருந்துச்சாப்பாடு போடப்பட்டன. இதற்கு பணம் ஏராளமாகச் செலவாயிற்று. விக்டோரியாவின் கல்யாணத்தைப்போல் அவ்வளவு சிறப்பாய் இங்க்லண்டில் ஒரு கல்யாணமாவது நடக்கவேயில்லையாம். விக்டோரியா ராணியின் மூத்த பெண்ணாகிய விக்டோரியா ராஜகுமாரியின் கல்யாணத்திலும் பணம் ஏராளமாய் செலவழிக்கப்பட்டதாம். அவருடைய உடுப்பு, ஸாமான்கள் சீர்வகையராக்களைகொண்டு போவதற்குமாத்ரம் 50-பெரிய வண்டிகள் வேண்டியிருந்தனவாம்.

காலஞ் சென்ற எட்வர்ட் சக்ரவர்த்தியின் கல்யாணமும் வெகு விமரிசையாக நடைபெற்றது. அவரது மனைவியாகிய அலெக்ஸாண்ட்ரா ராணியார் டென்மார்க் அரசரின் புதல்வி. அவர் தமது கல்யாணத்துக்கு லண்டனுக்கு வந்த ஸமயத்தில் லண்டன் முனிஸிபாலிடியார் அவரை உபசரிக்கவும் அவருக்கு கல்யாணத்தில் ஒரு தக்க சீர் கொடுக்கவும் $6\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய் செலவழித்தார்கள். அலெக்ஸாண்ட்ரா ராணி கல்யாணத்தின்போது உடுத்தியிருந்த உடுப்புகள் ரொம்ப விலையுயர்ந்த ஸரிகை வேலைப்பாடுள்ளவை. அப்போது அவருடைய உடுப்பும் நகைகளும் சேர்ந்து $4\frac{1}{2}$-லக்ஷம் ரூபாய் விலையுள்ளவையாயிருந்தன. கல்யாண காலத்தில் ராஜதம்பதிகளுக்குக் கொடுக்கப்பட்ட சீர்வகையறாக்கள் ஏராளமானவை. அவைகளில் ஒன்றாகிய வைரமும் முத்தும் சேர்ந்த மாலை ஒன்று மாத்ரம் $1\frac{1}{2}$ லக்ஷம் ரூபா விலையுள்ளதாம்.

ஜார்ஜ் அரசருக்கு 1893-ம் வர்ஷம் ஜூலை மாஸம் கல்யாணம் நடைபெற்றது. கல்யாணப் பெண்ணின் (மேரி ராணியின்) உடுப்புகள், ஸொந்தஸாமான்கள் ஆகிய இவைகளுக்கு மாத்ரம் 6-லக்ஷம் ரூபாய் செலவாயிற்றாம். இவர்களுடைய கல்யாணத்துக்கு மூன்று பாகசாஸ்த்ர நிபுணர்கள் ஐந்துவாரம் ச்ரமப்பட்டு கல்யாணப் பணியாரம் செய்தார்களாம்.

ஜெர்மனியின் சக்ரவர்த்தியாகிய கெய்ஸருக்கு 1881-ம் வர்ஷம் கல்யாணம் நடைபெற்றபோது அதற்கு 30-லக்ஷம் ரூபாய் செலவழிந்தது. இவ்வளவு செலவழிந்ததென்றால் கல்யாணம் எவ்வளவு சிறப்பாய் நடந்திருக்க வேண்டுமென்பதை நாம் ஊகித்துக்கொள்ளலாம்.

மற்றெல்லாக் கல்யாணங்களைவிட தற்போது ரஷ்யாவின் சக்ரவர்த்தியாயிருக்கும் நிக்கலாஸின் கல்யாணத்தில்தான் பணச்செலவு அதிகம். அந்த ஸமயத்தை யொட்டி அவருடைய பட்டாபிஷேகமும் நடைபெற்றது. இரண்டிற்குமாக $1\frac{1}{2}$-கோடி ரூபாய் செலவழிந்தது.

அமெரிக்காவில் கோடீச்வரர்களில் ஒருவராயிருந்த மிஸ்டர் பியர்பாண்ட் மார்கன் என்பவருடைய புத்ரிக்கு கல்யாணம் நடைபெற்றபோது $7\frac{1}{2}$-லக்ஷம் ரூபாய் செலவாயிற்றாம். கல்யாண விருந்துக்கு 2000-விருந்தாளிகள் வந்திருந்தார்கள். கல்யாணம் நடைபெற்ற இறிஸ்தவகோவிலைப் புஷ்பங்களால் அலங்கரிப்பதற்கு புஷ்பச்செலவு மாத்ரம் 37,500 ரூபாய் ஆயிற்று. கல்யாணத்தில் கல்யாணப்பெண் உடுத்திக்கொள்ளும் 'கௌன்' என்னும் உடுப்புக்கு 15,000 ரூபாய் கொடுக்கப்பட்டது. கல்யாணத்தை நடத்திவைத்த குருவுக்கு 3,000 ரூபாய் தக்ஷிணை கொடுக்கப்பட்டது.

# ADMINISTRATION OF LORD HARDINGE.

BY V. MUTHUSWAMI AIYAR, M. A., L. T.

## லார்ட் ஹார்டிஞ்ஜின் ஆட்சி.

*மாட்சிமை மிகுந்து விளங்கிய இந்திய ராஜப் ப்ரதிநிதி லார்ட் ஹார்டிஞ்ச் அவர்கள் மீது, அவர்களது ஆட்சி நிறைவுற்ற போது பாடியது.*

நேரிசை ஆசிரியப்பா.

*சீர்வளர் இந்திய தேச ஆட்சியில்*
*நேர்மையும் அன்பும் நிலைத்த சிந்தையும்,*
*நேர்வுறு துன்பம் நினைப்பரி தாயினும்*
*சோர்வுற லறியாச் சூழ்ச்சியின் அகலமும்,*
*மதிவலம் படைத்து மாண்புசேர் உரிமைகள்*

*இதமுற வேண்டும் இந்தியர் தமக்கு*
*நன்மை விளைத்தலில் நாடிய வூக்கமும்,*
*இன்னவை பிறவும் இயலிலும் செயலிலும்*
*மன்னிய[1] ராஜ ப்ரதிநிதி மாட்சியொடு*
*மன்னியல்[2] மாட்சிதேர் ஹார்டிஞ்ஜ வள்ளால்!*

*நினதாட் சியினில் நிகர்விலா முடிசூட்*
*டெனும்மவை பவத்தை ஏற்பாடு செய்து*
*மதிநல மாட்சியும் மட்டிலா அன்பும்*
*பொதுநலக் கொள்கையும் பொருந்தும் பெருந்தகை*
*மன்னவர் ஐந்தாம் ஜியார்ஜ் மகிபரைப்*

*பொன்முடி டில்லியிற் புனைவித் தருளும்அச்*
*சித்திரச் செயலினைச் செப்பி மகிழ்தலோ,*

*அதுவே யன்றியும்,*

*அத்தினம் நற்றின மாகச் சிறக்கக்*
*கல்வி மேம்பாடு கருதிக் கனநிதி*
*நல்கவும், வங்க நாட்டுப் பிரிவினை*

*மாறுதல் செய்து மன்பதை[3] யோர்பேர்*
*ஆறுதல் கூரவும், அரசர் பிரான்திரு*
*வாய்மலர்ந் தருளும் வண்ணம் இயற்றிய*
*தூயசிந் தைத்திறம் துதித்து வியத்தலோ,*

*அதுவே யன்றியும்,*

*புராதன அத்தின புரியாம் டில்லியை*
*நராதிபர்[4] விருப்பால் தலைநக ராக்க*
*விழவுக்[5] காட்சி விளங்கநீ செல்கையில்*
*இழவுக் காட்சியோர் இழிமகன் இயற்றிநின்*
*திருவுடற் கின்னா[6] செய்த காலையில்*
*வெருவுற் றியாவரும் விதிர்விதிர்ப் புறவும்*

*சிந்தையில் பொறை[7] தனை சிறிதும் மாறாது*
*இந்திய ஆட்சியின் இயக்கப் போக்கு*
*மறச்செயல் இதனால் மாறா திறை[8] யுமென்*
*றறச்செயல் ஓம்பிய ஆற்றல் போற்றுதலோ,*

*அதுவே யன்றியும்,*

*காசியில் இந்து கலாசங்க மொன்று*
*[9]ஆசற ஓங்குதற் காவன புரிந்தும்*
*மற்றும் மைஸூர் வாஸிகள் தமக்கே*
*உற்றதோர் உயர்கலா சங்கம் நிறுவ[10]*
*வேண்டும் அனுமதி விருப்புடன் அளித்தும்*
*மாண்டகு கலைவளம் வளர்த்தலை வழுத்தலோ,*

*அதுவே யன்றியும்,*

*தன்னிகர் இலதெனச் சரித்திர நூலோர்*
*பன்னும் ஐரோப்பியப் படுபோ ரிதனில்*
*ஆங்கில வீரரோ டணிபெறச் சேர்ந்து*
*ஈங்குநம் இந்திய வீரரும் எதிரியைச்*
*சிதைக்குமா செய்து சேனை முறையில்*

*இதற்குமுன் இராத இதம்புரி நற்சீர்*
*திருத்தம் புணர்த்திய திறம்பா ராட்டலோ,*

*அதுவே யன்றியும்,*

*வேற்று நாடுகளில் மேவுவோர் தமதுகை*
*ஊற்றங் கருதி உறுதொழில் நடத்தக்*
*கூலியே லைக்குக் கொள்ளும் இந்தியர்*

*சால வருந்துந் தன்மை யுணர்ந்தே*
*உழைப்பு வேலையில் ஒப்பந் தங்கொளல்*
*இழுக்குள தென்றெடுத் தியம்பியப் பேதையர்*
*தொழும்பர்[11] போலத் தயருறற் கிரங்குநின்*
*விழுமிய[12] மனச்சீர் வியந்து போற்றலோ*

*இவற்றுள் அம்ம!*

*செய்வதி யாதெனத் தெரியாதிவையெலாம்*
*எய்துதற் குற்றநல் ஏதுவாய் நின்மனத்*
*தூற்றெழு மன்பெனும் உயர்குணம் போற்றி*
*ஆங்கில ஆட்சியில் அனுதாபம் இனும்*
*ஓங்கிடில் அரசினுக் கோங்கும் புகழெனும்*

*அரசவாக்குக் கமைந்த காட்[13] டாகிநீ*
*அரச ப்ரதிநிதி யாகஇந் நாட்டை*
*ஆட்சி செய்த் ஆங்கில ப்ரபுக்களின்*
*நீட்சிசேர் வரிசையில் முதற்கண்[14] நிலவிடும்*
*மாட்சியை மதித்து மலர்தலை[14] யுலகெலாம்*

*ஆட்சி செய்யும் ஆண்டவன் நினக்கு*
*ஆக்கமும் ஊக்கமும் ஆயுட் பெருக்கமும்*
*நீக்க மில்லா நிர்மல சிந்தையும்*
*தப்பா தருள்செயத் தாமரை*
*ஒப்பா மவனடி உவந்தரு ளுவமே.*

வே. முத்துஸாமி ஐயர், எம். ஏ., எல். டி.

---

1. மன்னிய-சேர்ந்த, 2. மன் இயல்-ராஜலக்ஷணம், 3. மன்பதையோர்-ஜனங்கள், 4. அரசர், 5. விழவு-திருவிழா, 6. இன்னா-துன்பம், 7. பொறை-பொறுமை, 8. இறையும்-சிறிதும், 9. ஆசு-குற்றம், 10. ஸ்தாபிக்க, 11. தொழும்பர்-அடிமைகள், 12 சிறந்த, 13. காட்டு-உதாரணம், 14. விரிந்த இடமுடைய.



# REVIEW OF THE PRESS.

## பத்ரிகை ஆராய்ச்சி.

### ROSE CULTIVATION.

ரோஜா சாகுபடி.

ரோஜாச் செடிகளைத் தோட்டங்களில் வைத்துப் பயிர்செய்து லாபமடைவதைப்பற்றி ஒரு நிருபர் 'கிருஷிகனில்' ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார்.

**பூமி.**—ரோஜா பயிரிடுவதற்கு ஏற்றது சற்று மணல் கலந்த களிமண் பூமியே. மணலே கலவாமல் அதிக பிசுபிசுப்பாயுள்ளதில் மணல் கலந்துக்கொள்ளலாம். 50-அடி சதுரமுள்ள ஒருதாக்கில் 1-அல்லது 1½-அடி ஆழம் செவ்வையாய்க் கொத்தி அதில் 4-வண்டி மணல் கலந்து மறுபடியும் கொத்திப் பாத்திகள் கட்டி நடுவே நடுவே கால் நடைரோட்டும் அமைத்து பாத்திகளின் கரையோரங்களில் ரோஜாச்செடிகளை நட்டுப் பயிராக்கவும். செவ்வல் பூமி அவ்வளவு ச்லாக்யமானதன்று. அதிகமாய் வண்டல் படிந்த பூமியானால் அது ச்லாக்கியமே. ஆற்றோரத்து படுகையில் அதிகமாய் மணல் கலந்திருப்பதால் அவ்வளவு ச்லாக்யமல்ல. களிமண் பூமியும், வண்டல் பூமியும், ரோஜாப் பயிருக்கு தகுந்தவைகளே.

பாத்திகளின் வரப்பு ஓரங்களில் ரோஜாச்செடிகளை நட்டதுபோக நடுவேயுள்ள பூமியில் மரு, மயிர்க்கொழுந்து, கதிர்ப்பச்சை இவைபோன்ற வாஸனைப் பூண்டுகளைப் பயிரிடலாம். இவையும் லாபந்தரும்.

**எரு.**—ஸாதாரணமாய் நம்முடைய நாட்டு எருவே இந்த ரோஜாப் பயிருக்குப் போதுமானது. ஒவ்வொரு பாத்தியையும் செவ்வையாய்க் கொத்தி அதில் பாத்தியின் விஸ்தீர்ணத்துக்குத் தக்கபடி 2-அல்லது 3-கூடை செவ்வையாய் மக்கின எருவை பின்வருகிறபடிசேர்த்து கலந்துகொள்ளவும். இவ்வாறு எருக்கலந்து இப்பாத்திகளில் ரோஜாவும், மற்றவாஸனைப் பூண்டுகளும் பயிரிட்டால் இந்த எருவின் ஸத்தை இரண்டும் அடைகின்றன.

ஒரு வருஷம் குழியில் செவ்வையாய் மக்கின சாணம், இலை தழைகளின் எரு 1-பங்கு, செம்மண்ணும், மணலும் இரண்டும் 1-பங்கு இவை மூன்றையும் கலந்து செவ்வையாய்ப் பொடியாக்கி அவைகளில் கற்களும் மக்காத இலைகளும் இல்லாமல் சல்லடையால் சலித்து அடியில் தங்கும் பொடியானதை இப்பாத்திகளில் கொட்டிக் கலந்துக் கொள்ளவும்.

**நாற்றுப் பாவுதல்.**—மரு, மயிர்க்கொழுந்து இவைகளுக்கு சிறு பாத்தியில் மேற்சொல்லியபடி எருக்கலந்து கற்களில்லாமல் பொடியாக்கி, விதைகளை மார்கழிமீத்தில் ஒரு தரமும், புரட்டாசிமீத்தில் ஒருதரமும் ஆக இரண்டு தரம் விதைத்து, விதைகள் முளைத்து வருமட்டும் அவைகளை எறும்புகள் கொண்டுபோய் விடாமல் பாத்தியைச் சுற்றிலும் வாய்க்காலில் தண்ணீர் நிறுத்திவைக்கவேண்டும். பாத்தியின்மேலேயும் வெயில் அதிகமாய்ப்படாமல் ஒரு தென்னங்கீற்றை மூடிவைப்பது நலம். விதைகளை எறும்புகள் தொடாமல் இருப்பதற்கு இன்னொரு உபாயம் உண்டு. அதாவது ஒருதுண்டு வசம்பையும் ஒரு மஞ்சள் கொம்பையும் செவ்வையாய்ப் பொடியாக்கி அதைக்கொஞ்சம் நல்லெண்ணெய் விட்டுக் கலக்கி, அதை இந்த விதைகளோடு கொஞ்சம் சேர்த்து செவ்வையாய்த் தேய்த்து கொஞ்சநேரம் வெயிலில் காயவைத்துப் பிறகு விதைக்கலாம்.

**செடிகள் வைக்கும் விதம்.**—ரோஜாச் செடிகளை 6-அடித் தூரத்துக்கு ஒவ்வொன்றாக வைப்பது அதிக உத்தமம். ஏனென்றால் செடிகள் பெருத்து வளரும்போது கிளைகள் அதிகமாய் பக்கங்களில் நீண்டுவரும். அப்போது, அவைகளில் முட்களுள்ளனவால், ஒன்றுக்கொன்று பின்னிக் கொள்ளும். செவ்வையாய் வளர்ந்து நீண்டுவரும் கிளைகளில் சிலவற்றைவளைத்து பதியன்போட்டு-வேறு இடங்களில் எடுத்தும் வைக்கலாம் இன்னும் நெருக்கமாய் வைத்தால் பதியன்கள் போட இடமிராது.

அதிகமாய் ரோஜாச் செடிகள் வைத்துப் பயிர்செய்ய வேண்டுமானால், தோட்டக்காரர்கள் பங்களூர் முதலான விடங்களுக்குப் போய் நல்ல வாஸனையும் ரோஜாவர்ணமுள்ள பூக்கள் உள்ளதான செடிகளைப்பார்த்து வாங்கி வருவது நல்லது. வேறுவர்ண புஷ்பங்களுள்ள ரோஜாச்செடிகளிலும் சில வாங்கி வைத்துப் பயிராக்கலாம். ஆரம்பத்தில் 100-செடிகள் வைத்துப் பயிராக்கினால் போதும். இதற்கு 50-அடி சதுரம் உள்ள நிலம் போதும். பிறகு அடுத்தவர்ஷம் இந்தச் செடிகளிலிருந்தே பதியன்கள் போட்டுக்கொள்ளலாம்.

ஸாதாரணமாய் 100-ரோஜாச் செடிகள், மருக்கொ

மூந்து முதலியவைகளின் விதைகள் இவைகள் வாங்கவும், செய்நேர்த்தி, தண்ணீர்பாய்ச்சுதல் ஆகிய இவைகளுக்கும் ஸுமார் 100-ரூபாய் செலவு ஏற்படும்.

இம்மாதிரி செலவிட்டு ஒரு துண்டு ரோஜாத் தோட்டம் வைத்தால் ஒரு வருஷத்தில் மரு மயிர்க்கொழுந்தில் தவருமல் 80-ரூபாயும், ரோஜாவில் 20-ரூபாயும் ஆக 100-ரூபாயும் கிடைப்பதில் தடையில்லை. மரு, மயிர்கொழுந்து விதைகள் பெங்களூரிலேயே கிடைக்கும். முதல் ஒரு வருஷத்தில் ரோஜாச்செடி செவ்வையாய் வேர் பிடித்து வளர்ந்து சில புஷ்பங்கள் தான் கொடுக்கும். மறுவருஷம் முதல் செடி 1-க்கு $\frac{1}{2}$-ரூபாய்க்குக் குறையாமல் புஷ்பம் கிடைக்கும்.

**நீர் பாய்ச்சலும் நாற்றுகள் நடுவதும்.**—மரு, மயிர்க்கொழுந்து இவைகளைப் பாத்திகளில் பயிர் செய்திருக்கும்போது அவைகளுக்கு வாரம் இரண்டு முறை தண்ணீர் போதும். இந்த ஈரமே ரோஜாச் செடிகளுக்கும் தாக்கும். கோடையில் 3 தண்ணீர் விட்டால் நலம். வருஷத்தில் இரண்டுமுறை இந்தப் பூண்டுகளைப் பயிரிடுவது வழக்கம்.

ரோஜாச் செடிகள் நட்டிருக்கும் பாத்திகளில் வாஸனைப் பூண்டுகளை இரண்டு வருஷங்கள் பயிர்செய்து வருவதுதான் யுக்தமானது. அதற்குள் இன்னும் 100 செடிகள்போல் முன் நட்ட ரோஜா செடிகளிலேயே பதியன் இறக்கி வைத்துக்கொண்டு அவைகளையும் நடுவே ஒரு வரிசை நட்டுவிடலாம், இம்மாதிரி முழுவதும் வெறும் ரோஜா தோட்டமாகவே செய்து வாஸனைப் பூண்டுகளுக்குப் பதில் சுகந்த ரோஜாவென்னும் வெள்ளையாயும் வாசனையாயுமுள்ள செடியை வைத்துவிடலாம்.

ஒரு ரோஜாச்செடி நட்ட 5-6 வருஷங்கள் வரையில் நல்ல பலனைக் கொடுக்கிறது. பிறகு சரியாய்ப் பூக்கிறதில்லை. ஆகையால் 6-வது வருஷத்தில் முதல் வருஷம் வைத்த தாக்கிலுள்ள செடிகளின் மீதுள்ள கிளைகளை யெல்லாம் வளைத்துப் பதியன்போட்டு அறுத்துக்கொண்டு அவ்வேர்க் கட்டைகளை யெல்லாம் பெயர்த்து எடுத்து தோட்டத்தின் ஓர் பாகத்தில் குவித்துக் காய்ந்தபின் சுட்டெரித்து அந்தச் சாம்பலை மற்றப் பாத்திகளுக்கு எருவிடுவது நலம்.

**கொத்து.**—வாஸனைப் பூண்டுகள் பயிரிட்டு வரும் பாத்திகளில் அப்பூண்டுகள் 3-மாதங்களில் வளர்ந்து பலனுக்கு வந்துவிடுகிறபடியால் இதற்குள் கொத்து போடுவதில்லை. ஆனால் நடுவே நடுவே முளைக்கும் களைப் பூண்டுகளைப் பிடுங்கி விடுகிறார்கள். இப்பலன் பூராவும் அடைந்த பிறகு 4-வது மாதத்தில் மறுபடியும் கொத்தி எருவிடுகிறார்கள். ஆகவே ஒரு வருஷத்தில் ரோஜாச் செடிகளுக்கும் 3-கொத்துகள் ஆகிறது. வாஸனைப் பூண்டுகள் இல்லாமல் தனி ரோஜாச் செடிகள் இருக்கும் பாத்திகளுக்கு வாரம் இரண்டு தண்ணீரும் வருஷம் 3-கொத்தும் எரு அணைத்தலும் வேண்டும்.

**ரோஜாவுக்குள்ள வ்யாதிகள்.**—சில ஸமயங்களில் சில ரோஜாச் செடிகளில் ஓர்வித பச்சை வர்ணமான பூச்சிகள் வந்து சேர்ந்துவிடும். அப்போது அச்செடிகள் செவ்வையாய் வளராமல் கட்டை பாய்ந்து விடும். அதாவது குறுகிவிடும். அப்போது அதில் காணப்படும் பூச்சிகளின் மேல் புகையிலைத் தண்ணீரை பீச்சாங் குழாயினால் அடித்தால் புழுப் பூச்சிகள் செத்தும் ஓடியும் போகின்றன. பிறகு செடிகள் செவ்வையாய் வளரும் புகையிலையையாவது அல்லது அதன் தண்டு கிடைத்தால் அதையாவது ஒரு பாத்ரத்தில் கொஞ்சம் தண்ணீர் ஊற்றி அதில் செவ்வையாய்க் காய்ச்சினால் தேயிலைத்தண்ணீர் வர்ணமாகும். இத்தண்ணீரைத்தான் அச்செடிகளின்மேல் பீச்சாங்குழலால் இறைக்க வேண்டும்.

சில ஸமயங்களில் செடியின் ஒவ்வோர் இலைகளிலும் பூஞ்சணம் போன்ற வெள்ளை நிறமான சில சிறு பூச்சிகளும் காணப்படும். அப்போதும் இந்தத் தண்ணீரையே இறைக்கலாம்.

சில ஸமயங்களில் ரோஜாச்செடியின் வேர்களில் கறையான் பிடித்து அவ்வேர்களைத் தின்று விடும். அப்போது அச்செடிகள் அடியோடு பட்டுப்போய் விடும். ஆகையால் ஒவ்வோர் தரம் கொத்துப்போடும்போதும் ஒவ்வோர் ரோஜாச் செடியையும் சுற்றியுள்ள மண்ணை சோதித்துப் பார்த்து அதில் கறையான் காணப்பட்டால் அவைகளைப் போக்கடிக்க அடியில் வருமாறு மருந்து தயார்செய்து உபயோகிக்கவும்.

20 பங்கு தண்ணீரில் ஒரு பங்கு சுண்ணாம்புக்கல் போட்டு அது நன்றாய்க் கரைந்தால் தண்ணீர் இரண்டு நாட்களில் தெளிந்துவரும். இந்தத் தண்ணீரோடு புளித்த தயிர் 1-பங்கும், சீமை எண்ணெய் 1-பங்கும் சேர்த்து ஒரு வீஸாவில்விட்டு செவ்வையாய் ஆட்டி அச் சுண்ணாம்புத் தண்ணீரோடு கலந்துகொண்டு ஷை செடியின் மேல் பீச்சாங் குழாயினால் இத்தண்ணீரை அடித்துவிட்டு மீதியுள்ளதை செடியைச் சுற்றியும் மண்ணைப் பறித்து அதிலு ஊற்றி ஒரு நாள் திறந்து வைத்திருந்து மறுநாள் மண்ணைப் போட்டுவிட்டால் ஷை கறையான் பாதை நீங்கும்.



## BRICKS

## செங்கல்.

ஸமீபத்தில் வெளியான 'வர்த்தக மித்ர' னில் ஒரு நிருபர் செங்கல் அறுப்பதற்கு மண்ணைப் பரிசோதித்துத் தெரிந்தெடுத்து பதப்படுத்துவதைப்பற்றி ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார்.

**செங்கல்லின் குணமும் உருவமும்.**—கற்களின் குணம், அவை செய்யப்படும் மண்ணின் குணத்தையும் பதப்படுத்தும் விதத்தையும் பொறுத்திருக்கிறது. அதன் உருவம் அறுப்பதையும், காயவைப்பதையும், சுடுவதையும், எடுத்துக்கொள்ளும் ச்ரமத்தையும் பொறுத்து நிற்கிறது. எந்தக்கல் ஸமநிறமாகவும், காற்றுக்கொப்பளமும் விரிசல்களுமில்லாமல் உறுதியாகவும், கூர்மையான நுனிகளுடனும், தட்டிப்பார்க்கும்போது கணீர் என்ற சப்தத்துடனும் தண்ணீரில் போட்டு எடுக்கும்போது தன் நிறையில் 15-ல் ஒரு பங்குக்கு அதிகபடாமல் நீரை இழுத்துக்கொள்ளும் குணத்துடனு மிருக்கிறதோ, அதைத்தான் நல்ல செங்கல் எனச் சொல்லவேண்டும். ஸதாரணமாக நமது நாட்டுக் கற்கள் அவைகளின் நிறையில் 5-ல் ஒரு பங்குக்கு அதிகமாகவே நீரை உட்கொள்வதாகச் சொல்லப்படுகின்றன.

**செங்கல் அறுப்பதற்கு உபயோகப்படும் மண்ணின் விதம்.**—இதற்கு உபயோகப்படும் மண்ணின் விதம் மூன்று. அது களிப்பு அதிகமிருப்பின் களிமண்ணென்றும், மணல் அதிக மிருப்பின் மணல் மண்ணென்றும், சுண்ணாம்பு அதிக மிருப்பின் சுண்ணாம்பு மண்ணென்றும், மூவகையாய்ப் பிரிக்கப்படும்.

**களி மண்.**—இது அதிகக் களிப்புடையது. இதைக் கல்லாக அறுப்பதில் கஷ்டமிராது. ஆனால் அறுத்துக் காயவைத்திடும்போது அதிகமாகத் தன் அளவில் குறைவுபடுவது மல்லாமல், சுடும்போது உருகிப்போகும் குணமுடையது. வேண்டிய அளவுக்கு மணல் மண்ணைச் சேர்த்துப் பதப்படுத்தி இதன் துர்க்குணத்தைத் தடுக்கலாம்.

**மணல் மண்.**—இம் மண்ணில் அறுக்கப்படும் கற்கள் வலுவற்றதாயும் புலபுலவென்று நொருங்கி போகும் தன்மையுடையதாகவு மிருக்கும். இத்துடன் களி மண்ணையாவது சுண்ணாம்பு மண்ணையாவது வேண்டிய அளவுக்கு கலந்து பதப்படுத்தி நல்ல கல்லறுக்கலாம்,

**சுண்ணாம்பு மண்.**—சுண்ணாம்பு ஸம்பந்தப்பட்ட மண்ணில் கல் அறுக்கும்படி நேரிட்டால் அதனுடன் வேண்டிய அளவுக்கு மணல் மண் சேர்த்துப் பதப்படுத்தி அறுக்கவேண்டும். மிதமிஞ்சின சுண்ணாம்பு மண்ணிலிருக்குமானால் கல்சீக்ரம் உருகுவதற்கு வழி கொடுக்கும்.

செங்கல் அறுப்பவன் செய்யும் வேலை ஐந்துவிதமாசப் பிரிக்கப்படும். அவையாவன:—(1) நல்ல மண்ணைத் தெரிந்தெடுத்தல், (2) பதப்படுத்தல், (3) உருவாக்குதல், (4) காயவைத்தல், (5) சுடுதல்.

**நல்ல மண்ணைத் தெரிந்தெடுத்தல்.**—செங்கல் அறுக்க யத்தனிப்பதற்கு முன் அதை அறுக்க உத்தேசிக்கும் மண்ணை முதலில் பரிசோதிக்கவேண்டும். பரிசோதித்தால் அது நல்லதா இல்லையா யென்றும், எந்த மண் அல்லது மணலைச் சேர்த்தால் நலமாகும் என்றும் அறிந்துகொள்ளலாம். களிப்பு அதிகமான மண்ணாகவிருந்தால் மணலை அதிகம் சேர்க்கவேண்டிவரும். சிறு கற்கள் ஸம்பந்தமில்லாமலும் வேண்டிய அளவுக்கு இயற்கையாலேயே மண்ணும் மணலும் கலந்தும் கிடைக்கக்கூடியதுதான் கல்லறுக்க நல்ல மண்ணென்று சொல்லப்படும். ஸாதாரணமாக 5-பங்கு மண்ணுடன் 1-பங்கு மணலைச்சேர்த்து அரைத்து அறுக்கப்படும் கற்கள் நன்ருக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. நமது தேசத்தில் செங்கலறுப்பதில் பணச்செலவு அதிகமில்லாமலிருக்கவேண்டுமென்ற எண்ணத்தால் வேலை செய்யவேண்டிய இடத்துக்கு ஸமீபத்தில் உள்ள பூமியில் விசேஷமாகக் கல்லறுக்கிறார்கள். அறுக்கப்படும் மண் நல்லதாயிருந்தால் நல்ல கற்கள் கிடைக்கும். கெடுதலாகயிருந்தாலோ அதனால் கட்டப்படும் கட்டிடம் கெட்டியாகவிருக்க வகையிராது. இரண்டு மூன்றுவித மண்ணைச் சேர்த்து அறுக்கப்படும் கற்கள் கூடியவரையில் நல்லதாக விருக்குமெனச் சொல்லப்படுகிறது.

**மண்ணைப் பரிசோதிக்கும் வழி.**—ஸாதாரணமாக மூன்றுவிதமாய் மண்ணைப்பரிசோதிக்கலாம். (1) கொஞ்சம் மண்ணெடுத்து அதில் தண்ணீர் தெளித்து கெட்டியாகப் பிசைந்து தண்ணீர் வைத்துள்ள பாத்ரத்தில் சிறிதுநேரம் வைத்திருந்தால் மணல் ஸம்பந்தம் அதிகமிருந்தால் அது சடுதியிற் கரைந்துவிடும். களிமண் அதிகமிருந்தால் கரையாது. இந்தக்கட்டி கரைவதற்கு

பிடிக்கும் நாழியை கணக்கிட்டு இதன் குணத்தை தெரிந்துகொள்ளலாம்.

(2) கொஞ்சம் மண்ணை எடுத்துப் பொடியாக்கி நிறுத்துப் பிறகு அதில் தண்ணீர்விட்டு மணலில் ஒட்டியிருக்கும் மண் கரைந்துபோகும் வரையில் பலமுறை சுத்தம்செய்து மீதியுள்ள மணலை நிறுத்துப்பார்க்க ஏற்படும் வித்யாஸம் அதில் கலந்திருந்த மண் என்று தெரிந்து கொள்ளலாம்.

(3) மண்ணில் கொஞ்சம் த்ராவகத்தை ஊற்றிடும் போது, அது கொதித்தால், சுண்ணும்பு ஸம்பந்தப்பட்டதென்று தெரிந்துகொள்ளலாம்.

**பதப்படுத்தல்.**—எந்த விடத்திலிருந்து மண்ணை எடுத்துக் கல்லறுக்க உத்தேசிக்கிறோமோ அந்த இடத்திலுள்ள புல் முதலியவைகளைக் களைந்து எடுத்து சுத்தம் செய்துஸுமார் 1-அடி ஆழத்திற்குக் கொத்தி 3-மாஸ காலம் வைத்திருக்கவேண்டும். பிறகு வேண்டிய அளவிற்கு தண்ணீர் ஊற்றி ஒருநாள் வைத்திருந்து மறுநாள் காலையில் சில வேலைக்காரர்களைக் கொண்டு துவைத்து இவ்விதமே 3-நாள் பதப்படுத்திக் கல்லறுக்கவேண்டும். துவைக்கும்போது அதிலுள்ள சிறுகற்களை பொறுக்கி எறிந்துவிட வேண்டியதுடன், தப்பித்தவறி கிடக்கும் புல் பூண்டு முதலியவைகளையும் நீக்கிவிடவேண்டும். கல்லறுக்கச் சேகரிக்கப்பட்டிருக்கும் மண்ணைப் பதப்படுத்துவதால் உண்டாகும் நன்மை பலவாக விருப்பதால், இதுவிஷயத்தை அவஸரப்படாமல் செய்யவேண்டும். பதப்படுத்தும்போது தண்ணீரை அளவுக்குத்தகுந்த வீதம் சேர்த்தல்வேண்டும். தண்ணீர் அதிகமாகச் சேர்த்துப் பதப்படுத்தி அறுக்கப்படும் கற்கள் சீக்ரம் உலர்ந்து புலபுலவென்று போகின்றன. ஒருகன அடிமண்ணுக்கு அரைக்கன அடி தண்ணீர் சேர்த்துப் பதப்படுத்தல் நன்மையெனச் சொல்லப்படுகிறது. பதப்படுத்துவதில் எடுத்துக்கொள்ளும் ச்ரமத்துக்கு தக்கவாறுதான் நல்ல கற்கள் கிடைக்கும். சரியாய்ப் பதப்படுத்தப்பட்ட மண்ணினின்றும் அறுக்கப்படும் கற்கள் வழவழப்பாகவும் கெட்டியாகவும் வெகுநாளிருக்கக்கூடியதாகவுமிருக்கும்.

## BATHING AND ITS USES.

### ஸ்நானமும் அதன் உபயோகங்களும்.

'வைத்திய கலாநிதி' யில் ஒரு வைத்யர் ஸ்நானத்தால் ஏற்படும் நன்மைகளைப்பற்றி ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார். ஸ்நானத்தினால் தேஹத்தின் மேலுள்ள அழுக்குகளும், வியர்வை முதலியவைகளும் மாத்ரம் போய்விடுகின்றன வென்பதில்லை; தேஹத்தின் தாதுக்களில் அப்போதைக் கப்போது சேர்ந்துவரக் கூடிய மலபதார்த்தங்களும், மானஸிகமான விகாரங்களுங்கூட நிவாரணமாகின்றன. ஆகையினால் ஸ்நானமென்பது வெளியில் ஸகல அவயவங்களையும் நிர்மலமான நிலைமையில் இருத்தி இவ்வுலக ஸுகங்களை அனுபவிக்கக்கூடிய ஆரோக்யாவஸ்தையைத் தருவதுடன், மானஸிகமான தோஷங்களைப் போக்கி, லோகாந்தர ஸுகங்களையும் அளிக்கவல்லதாயிருக்கிறதென்று நம்பலாம். ஆகையினாலேயே எல்லா வைதிக காரியங்களிலும் முதல் முதல் செய்யவேண்டியது ஸ்நாநம் என்று பெரியோர் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். தினந்தோறும் ஸ்நாநம் செய்து வருபவநுக்கு தேஹம் நிர்மலமாகவும் ப்ரகாசமாகவும் காணப்படும்; மனது தெளிவடைந்து ஸந்தோஷ முற்றிருக்கும்; முகத்தில் ஒருவிதமான பொலிவும் தோன்றும்; இந்த்ரியங்கள் யாவும் தெளிவாக அதனதன் இயற்கை வேலைகளைச் செய்துவரும். ஸ்நாநம் செய்யாதவர்களுடைய தேஹமும் மனதும் முற்கூறிய ஸுகங்களை யிழந்து, பற்பல சர்ம வ்யாதிகளாலும், ரத்த ஸம்பந்தமான ரோகங்களாலும், அஜீர்ணம் பசியின்மை முதலியவற்றாலும், மனோ விகாரங்களாலும் பீடிக்கப்பட்டு, வீணில் துன்பத்திற்கு ஆளாய் விடுகிறது.

"ஸ்நாநமானது பசியை உத்தீபநம் செய்யும்; சுக்லத்ராதுவை வ்ருத்தி செய்யும் வ்ருஷ்யம் என்கிற குணம் அதற்குண்டு; அது ஆயுளையும் வ்ருத்தி பண்ணும்; உத்ஸாஹமுண்டாக்கும்; தேஹ வன்மையைக் கொடுக்கும்; சொறி சிரங்கு, மலபந்தம், பலவிதமாக தேஹத்திற் சேரும் அழுக்குகள், சரீர ச்ரமம், வியர்வை, சோம்பல், நாவறட்சி, அழற்சி இவற்றையும், பாவத்தையுங்கூட போக்க வல்லது ஸ்நாநம்" என்று பெரியோர் வைத்ய சாஸ்த்ரங்களில் கூறி யிருக்கிறார்கள்.

ஆரோக்ய நிலைமையிலுள்ளவர்கள் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்வதே உத்தமம். அது தான் எப்பொழுதும் ஸுகமுண்டாக்கக் கூடியது. ஸௌகர்யத்திற்கும் ஏற்றதானது. கழுத்துக்குக் கீழே வெந்நீரில் குளிப்பதும் நலமே; ஆனால் அது வழக்கமாகிவிட்டால் நிறுத்த முடியாது. மேலும் எல்லோருக்குமே வெந்நீர் கிடைப்பதரிது. தலையில் உஷ்ண ஜலத்தை ஊற்றிக்கொள்வது பிசகாகும். "கழுத்துக்குக் கீழுள்ள அவயவங்கள உஷ்ணஜல ஸ்நானத்தால் பலமடையும். அதே ஜலத்தால் சிரஸ்நானம் செய்தால் தலை மயிர்களும் நேத்ரங்களும் பலமிழந்துவிடும்." மிகவும் சூடான வெந்நீரைத் தலையில் ஊற்றிக்கொண்டு ஸ்நாநம் செய்பவருடைய தலையிலுள்ள மயிர்கள் காலக்ரமத்தில் வெளிறி பலங்குன்றி சிறுகச் சிறுக உதிர்ந்தும் விடுகின்றன. இதற்கு உதாரணமாக மலையாளத்தில் குளிர்ந்த ஜலத்திலேயே ஸ்நாநம் செய்துவரும் ஸ்த்ரீ புருஷர்களுடைய தலை மயிர்களையும், சென்னை ப்ராந்தியத்தில் உஷ்ண ஜலத்திலேயே ஸ்நாநம் செய்து வருபவர்களுடைய தலை மயிர்களையும் உற்றுப் பார்க்கலாம்.



# Departmental Notes.

# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.

### வித்யாவிஷயம்.

**Free Primary Education.**

இலவச ப்ரைமெரிக் கல்வி.—மைஸூர் ராஜ்யத்தில் 7-முதல் 11-வயது வரையுள்ள சிறு குழந்தைகள் ப்ரைமெரிக் கல்வியைக் கட்டாயமாய் கற்கவேண்டுமென்று அந்த கவர்ன்மெண்டார் சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்படி இலவசமாய் ப்ரைமெரிக் கல்வியைப் பரவச் செய்வதில் ஸர்க்காருக்கு அதிகச் செலவு ஏற்படும். இந்தப் பணச் செலவுக்கு அஞ்சுவதால் தான் நம்முடைய ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தில் அம்மாதிரி கல்வி பரவாமல் தடைபட்டிருக்கிறது. ஆனால் ப்ரைமெரிக் கல்வியை பரவச் செய்ய வேண்டியதுதான் ஸர்க்காரின் முக்கிய வேலை. ஏனெனில் ராஜாங்கத்திற்கு கிடைக்கும் வரும்படிகள் முக்யமாய் விவஸாயிகளிடமிருந்து வருகின்றன. வேளாண்மைத் தொழில் பூண்டவர்களுக்கே இந்த ப்ரைமெரி படிப்பு மிகவும் அவச்யமானது. வித்யா விஷயத்துக்கென்று, ஸர்க்காரார் செலவழிக்கும் தொகையில், பெரும் பாகத்தை ப்ரைமெரி கல்வியின் அபிவ்ருத்தியிலேயே செலவழிக்க வேண்டும். ஆனால் இப்பொழுது அப்படியில்லாமல் ஸெக்கண்டரி கல்விக்கு அதிகமாய் செலவு செய்யப்படுகிறது. ப்ரைமெரி கல்விக்கு நூற்றுக்கு இருபத்தாறு வீதம் மாத்ரந்தான் செலவாகிறது. இங்லண்ட் தேசத்தில் ப்ரைமெரிக் கல்விக்காக நூற்றுக்கு எண்பதும், ஸெக்கண்டரிக் கல்விக்காக நூற்றுக்குப் பத்தும், ஸர்வகலா சாலைகளின் விஷயமாய் மிகவும் ஸ்வல்பமென்னும்படியான தொகையும் செலவாகிறது. இதனால் ஸெக்கண்டரி கல்வியும், ஸர்வகலாசாலை கல்வியும் ஸர்க்காரால் கொடுக்கப்படும் பணத்தை கொண்டல்லாமல் பொதுஜனங்களின் ஆதரவையைக்கொண்டு நடக்க வேண்டுமென்பது கருத்து. இது ஐரோப்பியருடைய அபிப்ராயம். இதை நம்மவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

**Medical Inspection in Schools.**

பள்ளிக்கூடங்களில் வைத்ய விசாரணை.—பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் பையன்களின் தேகாரோக்யத்தைப்பற்றி குறிப்பிட்ட காலங்களில் தக்க வைத்யர்களைக்கொண்டு விசாரணை செய்யவேண்டும். ஸாதாரணமாய் நம்முடைய சிறுவர்களில் அனேகருக்கு கண்கள் சரியாயில்லாமல் அதனால் பல தீங்குகள் ஏற்படுகின்றன. பிசகுகளை உடனுக்குடனே சரிப்படுத்தாவிட்டால், அவைகள் முடிவில் மிகக் கெடுதிகளை உண்டாக்கும். பள்ளிக்கூடத்துப் பையன்கள் இன்னும் பலவித நோய்களாலும் அவஸ்தைப்படுகிறார்கள்.

இம்மாதிரியாக அவர்கள் அவஸ்தைப்படாமலிருக்கும் பொருட்டு, அவர்களுக்கு ஸாதாரணமாக வ்யாதிகள் வராமல் தடுப்பதற்குள்ள ஞானத்தை போதிக்க வேண்டும். இன்னின்ன விதமான உணவு உட்கொள்ளவேண்டும், தேகப்பயிற்சி செய்யவேண்டும் என்று சொல்லிவைக்கவேண்டும். தவிர அவர்கள் சாப்பாட்டுக்குரிய வஸ்துக்களையும், ஸாமான்களையும், பால், நெய் முதலியவைகளையும் அடிக்கடி பரீக்ஷிக்கவும் வேண்டும்.

ஒரு நாட்டிலிருக்கும் வாலிபர்களின் தேக வளர்ப்பத்துக்குப் போதுமான ஏற்பாடுகள் செய்வதுதான் அந்த ராஜாங்கத்தாருக்கு முதன்மையான வேலை என்று ஒரு டாக்டர் சொல்லுகிறார். ஆனதினால் ஒவ்வொரு கலாசாலையிலும், தக்க வைத்யர்களைக்கொண்டு மாணவர்களை பரீக்ஷித்துப் பார்க்கவும், அதனால் ஏற்படும் செலவுகளை ஸர்க்கார் ஒப்புக்கொள்ளவும் வேண்டியது அவச்யமாகும்.

**Telugu Shorthand.**

தெலுங்கில் சுருக்கெழுத்து.—சில வர்ஷங்களுக்கு முன்னால் தமிழ் பாஷையில் 'ஷார்ட் ஹாண்ட்' என்னும் ஸங்க்ரஹ லிபியைக் கண்டுபிடித்த எம். ஸ்ரீநிவாஸ ராவ் என்பவர் தெலுங்கிலும் ஷார்ட் ஹாண்ட் முறை ஒன்று ஏற்படுத்தி யிருக்கிறார். மிஸ்டர் ஸ்ரீநிவாஸ ராவ் வேலூர் போலீஸ் ட்ரெய்னிங் ஸ்கூலில் ஷார்ட் ஹாண்ட் உபாத்யாயர். அவர் இங்லீஷில் பிட்மன் என்பவர் கண்டுபிடித்த ஸங்க்ரஹ லிபிமுறையை அனுஸரித்து தமிழ் தெலுங்கு பாஷைகளில் ஷார்ட்ஹாண்ட் என்னும் ஸங்க்ரஹ லிபியை ஏற்படுத்தியிருக்கிறார். அவர் தெலுங்கு பாஷைக்கு எழுதியிருக்கும் ஷார்ட் ஹாண்ட் புஸ்தகத்தை கவர்ன்மெண்டார் தங்களுடைய செலவில் ப்ரசுரம் செய்திருக்கிறார்கள். ஆசிரியருக்கு இதற்காக கவர்ன்மெண்டார் 500 ரு. ஸன்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

# TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### Hints for Translating.

**மொழிபெயர்ப்பவர் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.**—மொழி பெயர்க்கப்படும் புஸ்தகத்தில் கண்ட விஷயங்களைத் தாம் நன்றாயறியவேண்டும். அறிந்த பின்னர் எந்த பாஷையில் அக்கருத்துகளை வெளியிட உத்தேசமோ அந்த பாஷையில் வழங்கும் வார்த்தைகளை நன்றாய் அறியவேண்டும். ஒருவேளை அந்தப்பாஷையில் வழக்கிலில்லாத வார்த்தைகளை ப்ரயோகிக்க வேண்டியிருந்தால், அந்தப் பதங்களை சிருஷ்டித்து அதன்பொருளை சில வார்த்தைகளால் விளக்கிக் காட்டவேண்டும். வார்த்தைக்கு வார்த்தையாய் மொழி பெயர்த்தல் அவ்வளவு அவச்யம் அன்று. கூடுமான மட்டில் அஸலில் உள்ள கருத்துக்கள் அந்த பாஷையறியாதவர்களுக்குத் தென்படுமாறு தெளிவாய்ச் சொல்லப்பட வேண்டும். மொழி பெயர்ப்பை வாசிக்கிறோம் என்ற புத்தி படிப்போருக்குத் தோன்றாதபடி இயல்பான தெளிவான நடையில் எழுதவேண்டும். இல்லாவிடில் மொழி பெயர்ப்பின் ப்ரயோஜனம் கிடைக்க மாட்டாது. ஆங்கிலத்தை மொழி பெயர்க்குமிடத்து ஆங்கில பதங்களையாவது அக்ஷரங்களையாவது ஆங்கில எழுத்துகளிலேயே உபயோகிப்பது சரியற்றதாகும். ஏனெனில் ஆங்கில எழுத்து அறியாதவர்க்கென்று அல்லவோ மொழிபெயர்க்கப்பட்டது.—பூர்ணசந்திரோதயம்.

### The Story of the Tamil Poets.

**தமிழ் நாவலர் சரிதை.**—இது ஸுமார் 250-வருஷங்களுக்கு முன்னால் ஒரு புலவரால் தொகுக்கப்பட்ட செய்யுள் நூலாகும். இதுவரை அச்சில் வெளிவராதது. இதில் சங்கத்தார்முதல் அந்தகக்கவி வீரராகவ முதலியார் வரையில் இருந்த புலவர்கள் அவ்வப்போது பாடிய செய்யுள்களை இன்னஸமயத்தில் இதற்காகப் பாடினார்கள் என்பதை விளக்கிக்காட்டி யிருக்கிறது. இதிலுள்ள விஷயங்கள் தற்காலத்தில் வழக்கத்திலிருந்துவரும் விஷயங்களுக்கு மாறுபட்டிருந்தாலும், ஸுமார் 240-வருஷங்களுக்கு முன்னிருந்த படிக்காசுப் புலவர் இயற்றிய தொண்டைமண்டல சதகத்திலும், ஆற்பாதப் புலவர்பாடிய சோழமண்டல சதகத்திலும் காணப்படும் விஷயங்களுக்கு ஒத்திருக்கின்றனவென்று தெரியவருகிறது. இதற்கு பதிப்பாசிரியர் ஒரு விசேஷக் குறிப்புரை எழுதியிருக்கிறார். இந்த நூல் தமிழபிமானிகள் யாவருக்கும் பயன்படும். இதன் விலை அணா-8. வேண்டுவோர் சி. கு. நாராயணஸாமி முதலியார், 118, தாமஸ்வீதி, கோயமுத்தூர் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

### Life of Vittoba.

**விட்டோபா சரித்ரம்.**—இது திருநெல்வேலியைச் சேர்ந்த கல்லிடைக்குறிச்சி வி. முத்துக்ருஷ்ணய்யர் இயற்றியது. இது மகாராஷ்ட்ர பக்தர்களில் ஒருவராகிய விட்டோபாவின் ஜீவ்ய சரித்ரமாகும். இது யாவரும் வாசிக்க ஏற்றது. விலை அணா-8. வேண்டுவோர் ஜி.எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3,4, கொண்டிசெட்டித்தெரு, மதராஸ், என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

### Three Brothers.

**மூன்று சகோதரர்கள் அல்லது உழைப்பின் சிறப்பு.**—இது 'லலிதா' என்னும் கதை எழுதிய எஸ். யக்ஞஸாமி அய்யர் எழுதியது. இதன் கதைப் போக்கு நோத்தியாயிருப்பதுடன் நடையும் ஸுலபமாயிருக்கிறது. சிறுமியர் சிறுமியர்கள் இதை வீட்டுப் பாடமாக வாசித்துப் பயனடையலாம். இதன் விலை அணா. 4. வேண்டுவோர் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3, 4, கொண்டிசெட்டித் தெரு, மதராஸ் என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

### Attisoodi Moral Stories.

**ஆத்திச்சூடி நீதிக்கதைகள்**—இதில் ஆத்திச்சூடியிலுள்ள ஒவ்வொரு செய்யுளுக்கும் விரிவான அர்த்தமும், அதன் விஷயத்தை விளக்க கதையும் அடங்கியிருக்கின்றன. இதன் நடை ஸுலபமாயிருக்கிறது. இது சிறுவர் சிறுமியர்கள் வாசிக்க மிகவும் ஏற்றது. வேண்டுவோர் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, சென்னை என்றெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

### Hindu Cookery & Housewifery.

**இந்து பாக சாஸ்த்ரம்.**—இந்தச் சிறு புஸ்தகம் மிஸ்டர் பி. வி. ஜகதீசய்யர் இயற்றியது. இதில் பாக சாஸ்த்ர ஸம்பந்தமாய் அநேக பழைய புஸ்தகங்களிலுள்ள விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன. இதில் அன்ன வகைகள், காய் கறிகள், பச்சடி துவையல்கள், பக்ஷணங்கள் முதலியவைகள் தயார் செய்யும் விதங்களும், தயிர், பால், நெய், ஜலம் முதலியவைகளின் குணங்களும், ஸ்த்ரீ தர்மங்களும் இன்னும் பல விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. இந்தப் புஸ்தகத்தின் விலை அணா 6. வேண்டுவோர் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, ஜார்ஜ் டவுன், மதராஸ் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.



# SCIENCE AND INVENTION.

## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### Cinematograph Without Darkness.

**இருட்டில்லாமல் ஸினிமட்டோக்ராப் படம் காட்டுதல்.**—ஸினிமாட்டோக்ராப் என்னும் அசையும் படங்களைக் காட்டுபவர்கள் இருட்டான அறையில் ஒரு வெண்மையான திரையைக்கட்டி அதில் படங்கள் விழும்படி ஏற்பாடு செய்திருப்பார்கள். அறை இருட்டாயிருக்கும்போதுதான் திரையில் படங்கள் நன்றாய்த் தெரியும். அறையிலுள்ள விளக்குகளை ஏற்றிவிட்டால் படங்கள் தெளிவாயிருக்கமாட்டா. அறை இருட்டாயிருப்பதால் படம் பார்ப்பவர்களுக்கு கண்ணுக்குக் கெடுதி ஏற்படுவதோடு, இருட்டில் இருப்பதே ஸங்கடமாக இருக்கிறது. ஆனால் தற்போது அமெரிக்காவில் ஒருவர் ஒரு புது திரை கண்டுபிடித்திருக்கிறாராம். இந்தத் திரையை நல்ல வெளிச்சமுள்ள அறையிலும் வைத்து அதில் படங்கள் விழும்படி செய்யலாமாம். வெளிச்சமிருந்துங்கூட படங்கள் ரொம்ப தெளிவாயிருக்கின்றனவாம். இதில் கண்களுக்கு அதிக கெடுதியேற்படுவதற்கில்லையாம்.

### Handling Vessel of Boiling Water.

**கொதிக்கும் ஜலமுள்ள பாத்ரத்தை கையால் எடுப்பது.**—கொதித்துக் கொண்டிருக்கும் ஜலத்துடன் கூடிய ஒரு பாத்ரத்தை அடுப்பிலிருந்து எடுத்து, கொதி அடங்கும் வரையில், உள்ளங்கையில் யாதொரு சிரமும் இல்லாமல் வைத்துக் கொண்டிருக்கலாமென்று ஒரு நிருபர் ஒரு அமெரிக்கப் பத்ரிகையில் எழுதுகிறார்.

அடுப்பிலிருந்து எடுத்த கெட்டில் முதலிய பாத்ரங்களிலுள்ள ஜலம் கொதிக்கும் வரையில், அந்த ஜலம் கொதிப்பதற்காக சூடு வேண்டியிருக்கிறது. பாத்ரத்தை அடுப்பிலிருந்து எடுத்து விட்டதால், அடுப்புச் சூடு அதற்குக் கிடைக்காது. பாத்ரத்திலுள்ள சூடானது, ஜலம் கொதிப்பதற்காக, ஜலத்துக்குப் போவதால், பாத்ரம் சூடு குறைந்து போகிறது. சூடு குறைந்த பாத்ரமானது, அது வைக்கப்பட்டிருக்கும் கையிலுள்ள சூட்டையும் க்ரஹித்துக் கொள்வதால் கையும் சூடு குறைந்து குளிர்ச்சி யடைகிறது. இதனால் கைக்கு யாதொரு சூடும் தெரிவதில்லை. கொதி நின்றவுடன் பாத்ரத்தின் சூட்டில் குறைவு ஏற்படாமல் போவதால், அந்த சூட்டைக் கை தாங்க முடியாமல் போகிறது, என்று மேற் சொன்ன பத்ரிகை எழுதுகிறது.

### The Artificial Production of Rain.

**மழை வரவழைப்பது.**—ஆஸ்ட்ரேலியாவில் ஒருவர் சென்ற நான்கு வர்ஷங்களாக மின்ஸாரத்தின் உதவியைக்கொண்டு மழையை வரவழைக்க முயற்சி செய்துவருகிறார். அவர் தற்போது, ஒரு அறையில் நீராவியை நிரப்பிவைத்துப் பிறகு மின்ஸாரம் முதலியவைகளின் உதவியால் அந்த அறையிலுள்ள நீராவி முழுவதையும் மழைத்துளிகளாக்கி, அறையின் தரையில் விழச்செய்கிறாராம். அவர் இந்த ஏற்பாட்டை ஆதாரமாகக் கொண்டுசெய்த யந்த்ரங்களால் ஆகாயத்திலுள்ள மேகங்களை மழை வர்ஷிக்கும்படி செய்ய உத்தேசித்திருக்கிறார். இதற்கு ஆஸ்ட்ரேலியாவின் ஒரு மாகாணமாகிய ந்யூ ஸௌத் வேல்ஸின் கவர்ன்மெண்டார் பண உதவிசெய்து வருவார்களாம். இவருடைய ஏற்பாட்டால் செயற்கை மழை வரவழைக்க ஏற்பட்டுள்ள ஸாதனங்கள் அமைக்கப்பட்டிருக்கும் இடங்களில் இடி, மின்னல் முதலியவைகள் உண்டாகாவாம்.

### Paper from Nickel.

**நிக்கலிலிருந்து கடுதாசி செய்தல்.**—நிக்கலை மெல்லிய தகடாக அடித்து அந்த மெல்லிய ரேக்கைக் கடுதாசிக்குப் பதிலாக உபயோகப்படுத்தக் கூடுமென்று அமெரிக்காவில் உள்ள எடிஸன் என்பவர் சொல்லுகிறாராம். நிக்கல் ரேக்கானது நன்றாய் வளையக்கூடியதாம். 40,000 நிக்கல் ரேக்குகளை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிவைத்தால் அவையெல்லாம் சேர்ந்து 2-அங்குலம் கனந்தானிருக்குமாம். இப்படி ஒரு அங்குலத்தில் 20,000-த்தில் ஒரு பங்கு மெல்லியதான நிக்கல்ரேக்கு ஸாதாரண கடுதாசியைவிட வலிவாயிருப்பதோடு, அதைவிட அதிககாலம் கெடாமலிருக்குமாம்.

### Gathering Food for Bees.

**தேனீக்களுக்கு ஆகாரம் சேகரித்தல்.**—ஸ்காட்லண்டிலும் வேறு சில இடங்களிலும் தேனீ வளர்ப்பவர்கள் புஷ்பங்களிலுள்ள மகரந்தப் பொடியை வாருவம் க்ளீனர் என்னும் ஒரு யந்த்ரத்தால் சேகரித்து தேனீக்களுக்கு ஆகாரமாகப் போடுகிறார்களாம். சில இடங்களில் தேனீக்குஞ்சுகளுக்கு இதையே வெகுவாய் ஆகாரமாக உபயோகிக்கிறார்களாம்.

# SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

### A New Theory of Malaria.

முறைக்காய்ச்சலைப் பற்றிய ஒரு புதிய கோட்பாடு.—சதுப்பு நிலப்ரதேசங்களினால் மலேரியா என்னும் விஷ ஜ்வரம் உண்டாகிறதென்றும், அதற்குத் தகுந்த பரிகாரம் அவ்விடங்களிலுள்ள ஜலத்தை வற்றடிப்பதுதானென்றும் நாம் தெரிந்துகொண்டிருக்கிறோம். ஆனால் சென்ற பிப்ரவரி மாஸம் கல்கத்தாவில் இது விஷயமாய் டாக்டர் சார்லெஸ் பென்ட்லீ என்றவர் செய்த உபந்யாஸத்தினால் ஜலப் பெருக்கமும், நீர்த்தேக்கமுமே விஷ ஜ்வரத்தை உண்டாக்காமல் தடுக்கின்றனவென்று தெரிய வருகிறது.

சேற்று நிலங்களின் அருகிலே குளிர் ஜ்வரம் உண்டாகிறதென்று ரொம்ப காலமாய் நாம் அறிந்திருந்தும், இந்த வ்யாதியே ஏற்படாத அப்படிப்பட்ட சில தேசங்களிருக்கின்றன. சுமார் 2000 வர்ஷங்களுக்கு முன்பு, ஆப்ரிக்காவிலுள்ள அலெக்ஸாண்ட்ரியா என்னும் பட்டணம், சதுப்புநிலத்தினால் சூழ்ந்திருந்த போதிலும், அங்கே விஷ ஜ்வரமே கிடையாதாம். சில வர்ஷங்களுக்கு முன் இத்தாலியா தேசத்தில் போ நதியின் முகத்துவாரத்திலுள்ள ரெவென்னா என்னும் பட்டணத்தில் அதிகமாய் சதுப்பு நிலங்களிருந்தும், மலேரியா யுண்டாகாமலிருந்து கொஞ்ச காலத்திற்குப் பின்பு அவ்வூரிலுள்ள சதுப்பு நிலங்களிலிருந்து தண்ணீரை வற்றடித்ததின்மேல் ஜனங்களுக்கு குளிர் ஜ்வரம் வந்ததாம். அலெக்ஸாண்ட்ரியாவிலோ நாளது வரையும் சதுப்பு நிலங்களிலுள்ள தண்ணீரை வற்றடிக்க யாதொரு வித ப்ரயத்தன மில்லாமலிருந்தும், தேகாரோக்யத்துக்கு ஒருவிதமான கெடுதலுமில்லாமலிருக்கிறது. ஆகவே கிராமங்களில் பூமியை வேறு விதமாய் உபயோகிக்காமல் இயற்கையிலிருந்தாற்போலவே விட்டிருக்கும் வரையில் விஷ ஜ்வரமில்லாமல் தேகாரோக்யத்துக் கனுகூலமாகவே யிருக்கிறதாம்.

### Long Life.

அதிக காலம் ஜீவித்திருத்தல்.—அதிககாலம் ஜீவித்திருப்பதற்கு பின்வரும் முறைகளைக் கைப்பற்ற வேண்டுமென்று ஒரு சீன உத்யோகஸ்தர் தெரிவிக்கிறார்.

1. தினம் 2-தடவை சாப்பிடுதல்.

2. மாம்ஸ ஆகாரம் சாப்பிடாமலிருப்பது. அரிசி சாதம், தவிடுநீக்காத கோதுமையால் செய்த ரொட்டி, புதிதாகவுள்ள சாக பதார்த்தங்கள், பழங்கள், வாதுமை, வேர்க்கடலை முதலிய கொட்டை வகைகள் ஆகிய இவைகளையே தின்னவேண்டும்.

3. காப்பி, கோக்கோ, மதுபான வகைகள், கார வஸ்துக்கள், பல ஸாமான்கள் சேர்த்து செய்யப்பட்ட பக்ஷணங்கள் ஆகிய இவைகளைத் தள்ளிவிடவேண்டும்

4. உப்பைத் தின்னக்கூடாது.

5. வாயில் போட்டுக்கொள்ளும் ஒவ்வொரு கவளம் ஆகாரத்தையும் நன்றாய் மென்ற பிறகுதான், அதை விழுங்கவேண்டும்.

6. சாப்பிடும்போது ஜலமே குடிக்கக்கூடாது. ஆகார வேளைக்கு மத்தியிலாவது, சாப்பிட்ட ஒரு மணிக்குப் பிறகாவது பானவகைகள் குடிக்கவேண்டும்.

7· ச்வாஸத்தை மெதுவாய் நிறைய உள்ளிழுத்து மெதுவாய் வெளிவிட வேண்டும்.

8. மிதமாக தேகப்பயிற்சி செய்து வரவேண்டும்.

### South Indian Ayurvedic Medical Society.

தென் இந்திய ஆயுர்வேத வைத்ய ஸங்கம்.—சில மாஸங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஸங்கம் ஸமீபத்தில் ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறதென்று தெரியவருகிறது. இந்த ஸங்கத்தின் நோக்கங்களாவன.

அகஸ்தியர், தேரையர் முதலியோர் இயற்றிய நூல்களை நல்ல மாதிரியில் வெளியிடுதல், அந்த நூல்களை வித்யார்த்திகளுக்குப் போதிக்கப் பாடசாலைகள் ஏற்படுத்துவது, அவற்றையடுத்து தர்ம வைத்ய சாலைகள் ஏற்படுத்துதல், மற்றும் ஆயுர்வேத வைத்யத்தை வ்ருத்தி செய்வதற்கு வேண்டிய கார்யங்களைச் செய்தல்.

### Tuberculosis and Housing.

க்ஷயரோகமும் குடியிருப்பு வீடுகளும்.—க்ஷயரோகிகளில் குடியிருக்கப் போதுமான இடமில்லாத வீடுகளில் மட்டும் நூற்றுக்கு 70 அல்லது 80-பேர்களுக்குக் குறையாமல் இந்த வ்யாதியால் அவஸ்தைப்படுகிறார்கள். மூன்று அறைகளுள்ள வீடுகளிலேயே இம்மாதிரியான க்ஷயரோகம் உண்டாகிறதென்றால் ஓரறை, இரண்டறைகள் மாத்ரமுள்ள வீடுகளில் குடியிருக்கும் ஜனங்கள் அதிகமாய் அவஸ்தைப் படுவார்கள் என்பது நிச்சயம். இப்படிச் சிறு வீடுகளுள்ள நகரங்களில் தான் இந்த ரோகம் அதிகம். இதற்கு பரிஹாரம் குடியிருப்பதற்கு தகுந்த நெருக்கடி யில்லாத வெளிச்சமும், காற்றோட்டமுமுள்ள வீடுகளை அமைப்பதே.



# LAW.

## சட்டம்.

### Alienation by Widow.

விதவையால் செய்யப்பட்ட பராதீனம்.—ஒரு விதவை தன் புருஷனிடத்திலிருந்து கிடைத்த ஸொத்தை அனந்தர வார்ஸுகளுக்காக ட்ரஸ்டியைப் போல் கட்டிக் காத்துவைக்க வேண்டியதில்லை. அப்படிப்பட்ட ஸொத்தை புருஷன்பட்ட கடனை தீர்ப்பதற்காக பராதீனம் செய்யும் பக்ஷத்தில் கடன்காரர்களுடைய உபத்ரவம் ரொம்ப இருந்ததால் அப்படிச் செய்தாள் என்றும் ரூபிக்க வேண்டியதில்லை பராதீனம் செய்ததற்கு அவச்யம் இருந்ததா என்றதை ரூபிக்க வேண்டியளவு ருஜுவானது பராதீனம் செய்யப்பட்ட காலத்தைப் பொருத்திருக்கிறது. அதாவது ரொம்ப காலமாய்விட்டால் ஸ்வல்ப ருஜுவிருந்தால் போதும். லிமிடேஷனாய்ப்போன புருஷனால் ஏற்பட்ட கடனைத் தீர்க்க ஒரு விதவை ஸொத்தை நல்ல எண்ணத்துடன் பராதீனம் செய்யும் பக்ஷத்தில் அது ஒப்புக்கொள்ளத் தக்கதே.—3 லா வீக்லி 19.

### Land Encroachment Act.

லாண்ட் என்க்ரோச்மெண்ட் ஆக்ட்.—ஸர்க்கார் நிலத்தில் என்க்ரோச்மெண்டு செய்த ஒருவரை மதராஸ் லாண்ட் என்க்ரோச்மெண்டு ஆக்டுப்படி, எழுத்து மூலமாய் கலெக்டரின் உத்தரவைப்பெற்று தாசில்தார் அப்புறப் படுத்திவிடலாம். அப்படி அப்புறப் படுத்தப் பட்டவர் நிலத்தை அடைய வ்யாஜ்யம் போடவேண்டுமானால் என்க்ரோச்மெண்டு ஆக்டுப்படி போடவேண்டுமே யொழிய, நிலத்தை திருப்பி அடைவதற்கான பொதுச் சட்டப்படி வ்யாஜ்யம் செய்யக்கூடாது. இதற்கு லிமிடேஷன் காலமும் என்க்ரோச்மெண்டு ஆக்டில் சொல்லியதே.—3 லா வீக்லி 315.

### Alienation by a Debtor.

ஒரு கடன்காரன் செய்த பராதீனம்.— ஒருவனுக்கு மூத்த தாரம் இறந்துபோய்விட்டாள். அவளுக்குக் குழந்தைகளிருந்தன. மறுபடியும் அவன் இளையாள் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று யோசித்தபோது, மூத்த தாரத்தைச் சேர்ந்தவர்கள் அவனுடைய குழந்தைகளுக்கு ஸர்வ சொத்தையும் கொடுத்துவிட்டால், மறு கல்யாணம் செய்துகொள்ளலாமென்று சொல்லவே, அவர் அப்படியே கொடுத்துவிட்டார். அப்படிச் செய்யும்பொழுது அவருக்கு அதிக கடனிருந்தது. இருந்தபோதிலும், அவர் செய்தானது கடன்காரர்களை மோசம் செய்வதற்காகச் செய்த பராதீனமாகாது.—3 லா வீக்லி 287.

### Gift of Property to Illegitimate Son.

வைப்பாட்டி பிள்ளைக்கு ஸொத்துக் கொடுத்தல்.—ஒரு ஹிந்து அவிபக்த குடும்பத்திலுள்ள ஒரு பாகஸ்தர் இறந்துபோனதன்மேல், அவருடைய க்ரமமான புத்ரர்கள் தயாவிஷயமாய் அவருடைய வைப்பாட்டி பிள்ளையின் ஜீவனத்துக்காக ஸொத்துக்களை சாஸனம் செய்தார்கள். அப்படியானால் அப்படிக் கொடுக்கப்பட்ட ஸொத்தானது பூர்வீக ஸொத்தாக மாட்டாது. வைப்பாட்டி பிள்ளையின் புத்ரனுக்கு அந்த ஸொத்தில் யாதொரு பாத்யமும் கிடையாது. வைப்பாட்டி பிள்ளை அந்த ஸொத்தை எவ்விதமாக வேண்டுமானாலும் பராதீனம் செய்யலாம்.

3 லா வீக்லி 317.

### Land-Lord and Tenant.

நிலஸ்வானும் குடியும்.—ஒரு குத்தகைப் பத்ரத்தில் ஒரு நிலஸ்வான் தமது நிலத்தை ஒரு குடிக்கு ஒரு வர்ஷத்துக்குக் குத்தகைக்கு விடுவதாயும், அந்தக் குடி அந்த வர்ஷத்துக்குப் பிறகும் நிலத்தை சாகுபடி செய்துவந்தால் குத்தகைப் பணத்தை வர்ஷந்தோறும் கொடுத்துவர வேண்டுமென்றும் கண்டிருந்தது. அதோடு அந்தப் பத்ரத்தில் நிலஸ்வான் கேட்கும்போது குடி நிலத்தை விட்டுவிட வேண்டுமென்றும் கண்டிருந்தது. குத்தகைக்கு எடுத்துக்கொண்டவர் ஒரு வர்ஷமானபிறகும் குத்தகை நிலத்தை சாகுபடி செய்துகொண்டு வந்தார். அப்படியானால் நிலஸ்வான் குத்தகைக்காரனை ஒருவர்ஷக் கடைசியில், அடுத்த வர்ஷம் ஆரம்பிக்குமுன் நிலத்தை விட்டுவிடவேண்டுமென்று சொல்ல முடியாது.—3 லா வீக்லி 189.

### Marriage Gifts.

கல்யாணத்தின்போது தானம் கொடுத்தல்,—ஒரு ஹிந்து மாமனார் தமது பெண்ணுக்கும், அந்தப் பெண்ணின் புருஷனுக்கும் அவர்களுடைய கல்யாணகாலத்தில் ஸ்தாவரஸொத்துக்களை தானம் செய்தால், தானம் வாங்கிய அவர்கள் ஸொத்துக்களை ஆளுக்குப் பாதியாக அனுபவிக்கிறவர்களாவார்கள், ஒவ்வொருவரும் தமது பாகத்தைத் தங்களிஷ்டம்போல் உபயோகிக்கலாம்,

## PERSONAL NOTES.

## மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

### The Late Mr. G. Subramania Aiyar.

**காலஞ்சென்ற ஜி. ஸுப்ரமண்ய அய்யர்.**—முன்பு சென்னை 'ஹிந்து' பத்ரிகையின் பத்ராதிபராயும், பிறகு 'சுதேசமித்திர'னின் பத்ராதிபராயும் இருந்த ப்ரபல தேசாபிமானியாகிய மிஸ்டர் ஜி. ஸுப்ரமண்ய அய்யர் ஏப்ரல் மாஸம் 18-உ காலஞ்சென்றதைக்கேட்டு விஸனமடைகிறோம். மிஸ்டர் ஸுப்ரமண்ய அய்யர் 1855-ம் வர்ஷத்தில் திருவையாற்றில் ஜனனமானார். அவருடைய தகப்பனாராகிய மிஸ்டர் கணபதி அய்யர் அந்த ஊரில் டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் கோர்ட்டில் வக்கீலாக இருந்தார். ஸுப்ரமண்ய அய்யர் பால்யத்தில் திருவையாற்றில் வாசித்துப் பிறகு தஞ்சாவூரில் இருந்த ஸெண்ட் பீட்டர்ஸ் காலேஜில் சேர்ந்து வாசித்து 1871-ம் வர்ஷத்தில் எப். ஏ. பரீக்ஷையில் தேறினார். பிறகு 1874-ம் வர்ஷத்தில் சென்னைக்குப்போய், சைதாப்பேட்டையில் இருந்த நார்மல் ஸ்கூலில் சேர்ந்து வாசித்து உபாத்யாயர் வேலைக்குத் தயாராக்கிக் கொண்டார். பிறகு 1875-ம் வர்ஷத்தில் சென்னையில் .வி. எஸ். எம். காலேஜில் உபாத்யாயராக அமர்ந்தார். 1878-ம் வர்ஷத்தில் சென்னை பச்சையப்பன் காலேஜில் உபாத்யாயராகச் சேர்ந்து வேலை பார்த்து வந்தார். அதற்கு முன்பே பி. ஏ. பரீக்ஷைக்கு வீட்டிலிருந்துகொண்டே படித்துத் தேறி 1878-ம் வர்ஷத்தில் பீ. ஏ. பட்டம் பெற்றார். பிறகு வேறு சில பள்ளிக்கூடங்களில் உபாத்யாயராக வேலைபார்த்து வந்தார்.

உபாத்யாயரா யிருக்கும்போதே அவருக்கு பத்ரிகை நடத்த ஆவலிருந்தது. அந்தக் காலத்தில் சென்னையில் இந்தியர்களுடைய அபிப்ராயங்களை தெரிவிக்கத்தக்க இந்தியப்பத்ரிகை ஒன்றுமில்லை. இந்தக்குறையை நிவர்த்திக்க வேண்டி, அவர் 1878-ம் வர்ஷத்தில் 'ஹிந்து' பத்ரிகையை ஒருவாரப் பத்ரிகையாக ஆரம்பித்து நடத்தி, தாமே அதற்கு பத்ராதிபராக இருந்து வந்தார். அது நாளுக்கு நாள் அபிவ்ருத்தியடைந்து வந்தது. அது பல ஜனப்ரமுகர்களாலும் ஆதரிக்கப்பட்டு வந்தது.

பிறகு 1882-ம் வர்ஷத்தில் மிஸ்டர் ஸுப்ரமண்ய அய்யர் இங்க்லீஷ் தெரியாதவர்களுக்கு உபகாரமாக 'சுதேசமித்திரனை' ஒருவாரப் பத்ரிகையாக ஸ்தாபித்தார்.

1884-ம் வர்ஷத்தில் ஹிந்து பத்ரிகையை வாரம் மும்முறை வெளிவரும் பத்ரிகையாகவும், 1889-ம் வர்ஷத்தில் தினசரிப் பத்ரிகையாகவும் மாற்றினார்.

மிஸ்டர் ஸுப்ரமண்ய அய்யர் வெகுகாலமாக ராஜாங்க விஷயங்களைப் பற்றி கவனம் செலுத்திவந்தார். இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ், சென்னை மஹாஜன ஸபை முதலிய ஸ்தாபனங்களில் ரொம்பவும் ஊக்கம் காட்டிவந்தார். இந்தியாவின் வரவு செலவு விஷயங்களைப்பற்றிப் பரிசீலனை செய்ய வெல்பி கமிஷன் என்று ஒரு கமிஷன் இங்க்லண்டில் நியமிக்கப்பட்டபோது, மிஸ்டர் ஸுப்ரமண்யர் அங்கே போய் அந்தக் கமிஷனில் ஸாக்ஷ்யம்சொன்னார். அவர்சொன்ன ஸாக்ஷ்யம் அப்போது பலராலும் ச்லாகிக்கப்பட்டது.

1898-ம் வர்ஷத்தில் அவர் ஹிந்து பத்ரிகையினின்றும் விலகிக்கொண்டு, 1899-ம் வர்ஷத்தில் 'சுதேசமித்ரனை' ஒரு தினசரிப்பத்ரிகையாக மாற்றினார். இறந்து போவதற்கு சில மாஸங்கள் முன்னால்வரையில் அதைத் தாமே நடத்திவந்தார்.

மிஸ்டர் ஜி. ஸுப்ரமண்ய அய்யர் 1902-ம் வர்ஷம் காக்கினாடாவில் நடந்த ப்ரொவின்ஷல் கான்பரென்ஸுக்கும், 1907-ம் வர்ஷத்தில் வட ஆற்காடு ஜில்லா கான்பரென்ஸுக்கும் ப்ரெஸிடெண்டாக இருந்தார்.

மிஸ்டர் ஸுப்ரமண்ய அய்யர் கவர்ன்மெண்டின் கார்யங்களை தாராளமாகக் கண்டித்துப் பேசுபவர். அவர் 1907-ம் வர்ஷத்தில் தமது 'சுதேசமித்ரன்' பத்ரிகையில் கவர்ன்மெண்டின் கொள்கைகளைப்பற்றி எழுதினது சட்ட விரோதமாக இருந்தது என்று கவர்ன்மெண்டார் எண்ணினதால், அவர்கள் மிஸ்டர் அய்யரை ப்ராஸிக்யூஷன் செய்தார்கள். ஆனால் அவர் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவே ப்ராஸிக்யூஷனை நிறுத்திக் கொண்டார்கள்.

மிஸ்டர் ஸுப்ரமண்ய அய்யர் சில வர்ஷங்களாக வ்யாதியினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்ததால், அவர் ஜனஸமூக விஷயங்களில் கலந்து கொள்ளமுடியாமல் போயிற்று. ஆயினும் அவர் பத்ரிகைகளுக்கு தமது அபிப்ராயங்களை எழுதிவந்தார்.



## SOCIETY AND RELIGION.

## ஜன ஸமூகமும் மதமும்.

### Tirupati Pilgrim Protection Society.

**திருப்பதி யாத்ரிகள் ரக்ஷண ஸங்கம்.**—திருப்பதியில் சில ஜனங்கள் யாத்ரிகளுக்கு வழிகாட்டுவதாகச் சொல்லி அந்த யாத்ரிகளைப் பலவிதங்களில் மோசம் செய்து பணம் பறிக்கிறார்கள். அவர்கள் ரெயில்வே ஸ்டேஷன்களுக்குப் போய் யாத்ரிகர்களுடன் கலந்து பேசி உறவாடி, அவர்களிடம் யோக்யர்கள் போல் நடந்து தங்களை நம்பச்செய்து, தங்குமிடங்களுக்கு அழைத்துப்போய் அங்கிருக்கச்செய்து அங்கே யாத்ரிகளைப் பலவிதங்களில் மோசம் செய்து பணம் பறிக்கிறார்கள். யாத்ரிகள் கொண்டுவந்திருக்கும் ப்ரார்த்தனை முடிப்புகளை வீடுகளின் ஓர் அறையில் வைக்கும்படி அந்த வழிகாட்டிகள் தூண்டுவார்கள். யாத்ரிகள் அவ்விதமே செய்தால், வழிகாட்டிகள், வீட்டுக்காரர்களின் உதவியைக்கொண்டு ப்ரார்த்தனை முடிப்பை எடுத்துக் கொண்டு, ஸ்வல்ப தொகையோ, அல்லது தாழ்ந்த நகைமுதலியவைகளோ வைத்துக் கட்டிய முடிப்புகளை வைத்துவிடுவதுண்டு. இந்த வழிகாட்டிகள் ப்ரயாணிகளின் விலையுயர்ந்த ஸாமான்களை வீட்டில் வைத்திருக்கும்போது அபகரித்துக் கொள்வதும் உண்டு. இவர்கள் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாளுக்கு ம்லேச்ச நாணயங்களை ஸமர்ப்பிக்கக் கூடாதென்றும், பழைய ஹிந்து ராஜாக்களின் நாணயங்களையே காணிக்கையாகச் செலுத்தவேண்டுமென்றும் யாத்ரிகளுக்குச் சொல்லி, அவர்களை நம்பச்செய்து பழைய போலி நாணயங்களை அவர்களுக்கு விற்று ஏராளமாய்ப் பணம் ஸம்பாதிப்பதுண்டு.

சில வழிகாட்டிகள் ப்ராமண ஸந்தர்ப்பணை செய்து வைப்பதாயும், பெருமாளை ஊர்வலம் கொண்டு வந்து வைப்பதாகவும், அபிஷேகம் நைவேத்யம் செய்வதாயும் சொல்லி யாத்ரிகளிடமிருந்துப் பணம் வாங்கிக் கொண்டு, அவைகளை குறைந்த செலவில் செய்து முடித்து பாக்கி பணத்தைத் தாங்களே அபஹரித்துக் கொள்வதுண்டு. அல்லது காலரா, ப்ளேக் முதலிய நோய்கள் ப்ரபலமாயிருப்பதால் அவைகளை நடத்தி வைக்க முடியவில்லை யென்று சொல்லி யாத்ரிகளை ஏமாற்றிவிடுவது முண்டு.

இவர்கள் யாத்ரிகளுடைய ஸாமான் மூட்டைகளைத் தூக்க கூலியாட்கள் பேசிவைப்பார்கள். கூலியாட்கள் இவர்களுடைய உள்ளாட்களாக இருப்பார்கள். அந்தக் கூலியாட்கள் மூட்டைகளில் சிலவற்றையோ அல்லது முழுவதையுமோ எடுத்துக்கொண்டு கம்பி நீட்டிவிடுவதுண்டு.

இந்த வழிகாட்டிகள் இன்னும் வேறுவகையிலும் யாத்ரிகளை மோசம் செய்கிறார்கள். இப்படி மோசம் நடப்பதைத் தடுத்து ப்ரயாணிகளுக்கு ஸௌகர்யங்கள் செய்து கொடுப்பதற்காக திருப்பதியில் உத்யோகஸ்தர்களும் உத்யோகஸ்தர்க ளல்லாதவர்களும் சேர்ந்து யாத்ரிகள் ரக்ஷண ஸங்கமென்று ஒரு ஸங்க மேற்படுத்தியிருக்கிறார்கள்.

### Caste.

**ஜாதி.**—தற்போதுள்ள ஜாதி ஏற்பாடானது பௌத்தமதம் ஸ்தாபிதமான பிறகு உண்டாயிற்றென்றும், அதற்கு முன்னால் இவ்வித ஏற்பாடு வழக்கத்தில் இல்லையென்றும். பங்களூரைச் சேர்ந்த மிஸ்டர் ஆர். சாமாசாஸ்த்ரி ஸாதிக்கிறார். ஹிந்துக்கள் ஆதிகாலத்தில் மாம்ஸ போஜனம் செய்பவர்களாகவும் எல்லா ஜாதிகளிலிருந்தும், வகுப்புகளிலிருந்தும் பெண்களைக் கல்யாணம் செய்துகொள்பவர்களாயுமிருந்தார்களென்றும், அப்போது அவர்கள், இப்போதுள்ளபடி ஒன்றுக்கொன்று ஸம்பந்தம் செய்துகொள்ளாத ஜாதிகளாயிராமல் கொள்வினை கொடுப்பனவுள்ள வகுப்புகளாகப் பிரிந்திருந்தார்களென்றும், பௌத்தமதம் தலையெடுத்த பிறகுதான், அந்த மதக்கொள்கைகளை அனுஸரித்து மாம்ஸபோஜனம், பல மனைவிகளைக் கலியாணம் செய்து கொள்வது முதலிய வழக்கங்களை ஒழித்து இப்போதுள்ளபடி ஜாதிகளாகப் பிரிந்தார்களென்றும் அவர் சொல்லுகிறார்.

### Provincial Social Conference.

**மாகாண ஸோஷல் கான்பரென்ஸ்.**—சென்னை மாகாண ஸோஷல் கான்பரென்ஸ் மேமீ 17உ யன்று மதுரையில் கூடிற்று. சென்னை அட்வகேட் ஜெனரலாகிய ஆனரபிள் மிஸ்டர் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் ப்ரெஸிடெண்டாக இருந்து, ஜாதி ஏற்பாடானது தேச ஒற்றுமைக்குக் கெடுதலாக இருக்கிறதென்றும், இதனால் பற்பல வகுப்பாருக்குள் மனஸ்தாபம் ஏற்படுகிறதென்றும், ஆகையால் அதை ஒழித்துவிட வேண்டுமென்றும், ருதுமதீ விவாகம் செய்யவேண்டியது அவச்யமென்றும் சொன்னார். பெண்கல்வி அபிவ்ருத்தி, தாழ்ந்த ஜாதியாரை உயர்த்தல், விதவாச்ரமங்கள் ஏற்படுத்துதல், ஜாதி ஏற்பாட்டின் கெடுதி முதலியவைகளைப்பற்றி பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

# HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### Bites of Poisonous Insects.

**விஷஜெந்துக்கடி.**—தேள் கொட்டினால் கொட்டின வாயைச் சுத்தம் செய்து அம்மோனியா, அல்லது சாராயம் கலந்த தண்ணீரால் கொட்டின வாயைக் கழுவலாம். ஸோடா உப்பைக் கொட்டுவாயில் தேய்க்க வேண்டும். ஸோடா உப்பு அல்லது போடாஷ் உப்புக் கலந்த தண்ணீரைக் கொட்டு வாயில் விடுதல் நோயைக் குறைக்கும். ஈரவெங்காயம், கையாந்தரை முதலிய மருந்துகளும் தேய்க்கப்படலாம். உடனே வலி நிற்பதற்குக் காடியை—(மால்டு வினிகரை) தேய்க்கலாம். கடித்த இடத்தைப் பொறுக்கக்கூடிய சூடுள்ள வெந்நீரில் 10 நிமிஷம் வைத்திருந்தால் வலி வாங்கிவிடும்.

ஜலமண்டலி கடித்தால் வியர்வையதிகமாய் யுண்டாகும். உடனே சரீரத்தைத் துடைத்துத் தேங்காய்ப் பாலை உள்ளே சாப்பிடக்கொடுத்துக் கம்பளியால் போர்த்தவேண்டும். காப்பியாவது பாலாவது கொடுக்க வேண்டும்.

வெறிநாய், நரி கடித்தால் பிற்பாடு தொந்தரவு ஏற்படுமாகையால் உடனே கடித்த இடத்தில் கார்பாலிக் ஆஸிடைச் செவ்வையாக அழுத்தித் தேய்க்கவேண்டும். கூடிய சீக்ரத்தில் குன்னூரில் உள்ள பாஸ்டர் இன்ஸ்டிட்யூட்டுக்குப்போய் சிகித்ஸை செய்துகொள்ள வேண்டும்.

### Preserved Ginger.

**இஞ்சியை வற்றல் போடுவது.**—இலைகள் நன்றாய் விட்டு முதிர்ந்து உதிர்வதற்குமுன் இஞ்சியை வெட்டி எடுத்து, சுத்தமாய்த் தண்ணீரில் கழுவி, சிறு துண்டுகளாக நறுக்கி உப்பும் தண்ணீரும் கலந்த ஜாடிகளில் கொஞ்சநேரம் ஊறவைத்தால் அந்த இஞ்சியோடு சேர்ந்து வீசும் மண்வாடை நிவர்த்தியாகும். பிறகு அந்த இஞ்சித்துண்டுகளை நல்ல தண்ணீரில் மறுபடியும் அலசி வெள்ளைச் சர்க்கரைப் பாகு நிறைந்துள்ள வேறு ஜாடியிலிட்டு வைத்திருக்க வேண்டும்.

மூன்று அல்லது நான்கு நாள்களுக்கு ஒரு தடவை சர்க்கரைப்பாகை மாற்றவேண்டும். அல்லது பாகு சீக்ரம் புளிக்க ஆரம்பித்தால் உடனே அந்தப்பாகை மாற்றி விடவேண்டியது. பழய பாகிலேயே இன்னும் கொஞ்சம் சர்க்கரையைச் சேர்த்து அடுப்பிலிட்டு கொதித்த பிறகு இஞ்சித்துண்டுகளின் மேல் திரும்பவும் ஊற்றலாம். இம்மாதிரி மூன்று, நான்கு முறை செய்தால் இஞ்சியின் காரம்மாறி, மிகவும் இனிப்பாயும், நல்ல வாஸனையோடு கூடியுமிருக்கும். அப்படியே எடுத்து பத்திரப் படுத்திவைத்தால் பின்னால் உபயோகப் படுத்துவதற்கு அநுகூலப்படும்.

### To Test Butter.

**வெண்ணெயைப் பரிசோதிக்க.**—ஒரு பக்கம் மூடியுள்ள ஒரு சிறிய கண்ணாடிக் குழாயில் பரீக்ஷிக்கவேண்டிய வெண்ணெயில் கொஞ்சம் போட்டு, அவ்வெண்ணெயை உருக்கப் போதுமான உஷ்ணமுள்ள வெந்நீரில் வைத்து உருக்கி ஸுமார் அரைமணி நேரம் குழாயில் உருக்கினபடியே வைத்துப் பார்க்கவேண்டும். கலப்படமில்லாத நல்ல முதல்தரமான வெண்ணெயாயிருந்தால், உருக்கின நெய் மங்கலாயில்லாமல் பார்வைக்குச் சுத்தமாயிருக்கும். அப்படியில்லாமல் மங்கலாயிருந்தால் அது வேறு பொருள்கள் கலந்த சரக்கேயாகும். இதைக்காட்டிலும் ஸுலபமாகப் பரீக்ஷை செய்ய வேறு ஒருவிதம் உண்டு. அதாவது, நெல்லிக்காய் அளவுள்ள வெண்ணெயை ஒரு சிறு கரண்டியிலிட்டு அடுப்பின்மேல் வைத்துக் காய்ச்சினால், நல்லதாயிருக்கும்பக்ஷத்தில் யாதொருசப்தமுமில்லாமல் கொதித்து உருகும். அப்படியில்லாமல், நெருப்பில் ஈரமான இலைகளைப்போட்டால் எப்படிச் சடபடவென்று சத்தமுண்டாகுமோ அம்மாதிரி சத்தமுண்டானால், வெண்ணெய் சுத்தமில்லாதது என்று அறிந்துகொள்ளலாம்.

### Sore Throat.

**தொண்டைப்புண்.**—தொண்டைப்புண்ணுக்கு பின் வரும் சிகித்ஸை நல்லது. ஒரு டம்ளர் ஜலத்தில் அரைத் தேயிலைக்கரண்டி உப்பை (டேபிள் ஸால்ட்) ப்போட்டுக் கரைத்து, அந்த ஜலத்தை வாயிலூற்றிக் கொப்பளிக்கவும். பனிக்கட்டிபோட்ட ஜலத்தில் ஒரு துணியை நனைத்துப் பிழிந்தெடுத்து கழுத்தில் வைத்தாலும் வலி குறையும். தொண்டைப் புண்ணால் கஷ்டப்படுகிறவர்கள் விரேசன மருந்து சாப்பிடுவது நல்லது.

### To Stop Hiccough.

**விக்கலை நிறுத்த.**—ஒரு பிடி சர்க்கரையைக் காடியில் நனைத்து, வாயில் போட்டுக்கொண்டால் உடனே விக்கல் நின்று போகுமாம்.



# AGRICULTURE.

## விவஸாயம்.

### Groundnut.

**வேர்க்கடலை.**—நமது ராஜதானியில் வேர்க்கடலையைத் தக்கவிதம் தோலுரிக்காததால் பருப்பு சீக்ரம் கெட்டுப்போகிறது. இதனால் சென்னை ராஜதானிப் பருப்பு அவ்வளவு ச்லாக்யமானதில்லை யென்று மார்ஸேல்ஸ் முதலிய விடங்களில் குறைபாடாக இருந்து வருகிறது. மேலும் பருப்பு நன்றாயிராவிட்டால், யுத்தத்தால் குறைபட்ட வேர்க்கடலை வ்யாபாரம் பழைய ஸ்திதிக்கு வருவது கடினம். ஸமீபத்தில் நடந்த சென்னை சட்டஸபை மீடிங்கில் ஆனரபில் ஸர் ப்ரான்ஸிஸ் ஸ்ப்ரிங் இந்த விஷயத்தைத் தெரிவித்து, வேர்க்கடலை பயிராகும் ஜில்லாக்களில் கலெக்டர்கள், தாசில்தார்கள், க்ராம உத்யோகஸ்தர்கள் ஆகிய இவர்களைக் கொண்டு, வேர்க்கடலை விவஸாயிகளுக்கு வேர்க்கடலையை சரியாய் தோலுரிக்காமல் போவதால் ஏற்படும் கெடுதலை எடுத்துக் காட்டவேண்டுமென்றும், வேர்க்கடலை வ்யாபாரம் நடக்கும் க்ராமங்களிலும், பட்டணங்களிலும் உபயோகிக்கத் தகுந்ததாய் வேர்க்கடலையின் தோலுரித்துப் பருப்பெடுக்கும் யந்த்ரம் இன்னது இப்போது கிடைக்கக்கூடிய தென்பதைப்பற்றி யறிய விவஸாய கைத்தொழில் டிரெக்டர்கள் மூலமாய் ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும் கவர்ன்மெண்டாரைக் கேட்டார். அதற்கு கவர்ன்மெண்டார் சொன்ன பதிலாவது; தற்போது விவஸாய டிபார்ட்மெண்டாரும், கைத்தொழில் டிபார்ட்மெண்டாரும் பற்பல பருப்பெடுக்கும் யந்த்ரங்களைப் பரீக்ஷித்துக்கொண்டு வருகிறார்கள். க்ராமாந்தர நிலைமைக்கேற்றதாய் ஒரு யந்த்ரம் கிடைத்தவுடன் வேர்க்கடலை பயிராகும் முக்யமான ஜில்லாக்களில் அதை ஜனங்கள் உபயோகிக்கும்படி செய்யவும், தற்போது க்ராமாந்தரங்களில் அனுஷ்டானத்திலிருந்துவரும் கெடுதலான முறைகளைத் தடுக்கவும் கவர்ன்மெண்டார் வேண்டிய முயற்சிகள் செய்வார்கள்.

### Smoking Mango Trees.

**மாமரங்களுக்குப் புகையிடுதல்.**—பிலிப்பைன் தீவுகளிலுள்ள ஜனங்கள் மாமரங்களுக்கு பூப்பதற்கு முன்னும், பூத்துக்கொண்டிருக்கும்போதும் புகையிடுவது வழக்கம். அப்படிப் புகையிடுவதால் மரங்கள் சீக்ரம் புஷ்பிக்கின்றனவாம். காய்களும் சீக்ரம் பழுக்கின்றனவாம். மேலும் புஷ்பங்கள் பனியால் ஈரமாய்ப் போய்க் கெடுதலடையாதபடி காக்கப்படுகின்றன. மாம்பூக்களுக்கும், காய்களுக்கும் கெடுதலுண்டு பண்ணும் பூச்சிகளும் பூஞ்சணநோய்களும் மாமரங்களை விட்டு விலகுகின்றனவாம். அந்தத் தீவுகளின் வாஸிகள் மாந்தோட்டங்களிலுள்ள புல்பூண்டுகள், உதிர்ந்த இலைகள், குப்பை ஆகிய இவைகளை மரத்தின் அடியில் குவித்து அதற்கு நெருப்பிட்டுப் புகையவிடுகிறார்கள். அது கொழுந்துவிட்டு எரியாமலிருப்பதற்காக, அதன் மேல் உமி, வாழைச்சருகு, ரம்பத்தூள் முதலியவைகளை எரிகிற நெருப்பின்மேல் போடுகிறார்கள். புகையானது மேல்நோக்கிப்போய் மரங்களின் கிளைகளில் பரவவேண்டுமாதலால், காற்றால் புகை வேறிடங்களில் சிதறிப்போகாதபடி காற்றுவரும் பக்கங்களில் மூங்கில் தட்டிகளை வைக்கிறார்கள். ஸாதாரணமாய் மரங்கள் பூக்குமுன்னமேயே புகைபோட ஆரம்பித்து, பூக்கள் பூத்து பிஞ்சுவிட்டு வடுக்கள் கோலியளவாகும் வரையில் புகைபோட்டு வருகிறார்கள். அதற்குப் பிறகு புகைபோடுவதை நிறுத்திவிடுகிறார்கள்.

### Liquid Manure.

**த்ரவ ரூபமான எரு.**—த்ரவ ரூபமாயிருக்கும் எருவில் முக்யமாய் ம்ருகங்களின் மூத்ரமும் சாணக்குவியல்களிலிருந்து வெளிப்படும் கசிவும் மழை ஜலமுமே இருக்கும். இவைகளில் மூத்ரமே விசேஷமானது. அதில் நைட்ரொஜன் பொடாஷ் ஆகிய இவ்விரண்டும் அதிகமாகவும் பாஸ்பேட் மிகவும் ஸ்வல்பமாகவுமிருக்கின்றன. மூத்ரத்தின் தன்மை ம்ருகங்கள் உணவோடு உட்கொள்ளும் நீரினளவைப் பொருத்திருக்கிறது. மூத்ரத்திலிருக்கும் நைட்ரஜனும்; பொட்டாஷும் பயிர்கள் உடனே உபயோகித்துக் கொள்ளும்படியான ஸ்திதியிலிருக்கின்றன. ஆகையால் இந்த எருவே மிகவும் ச்லாக்யமானது. 1000, காலன் நிறையுள்ள த்ரவரூபமுள்ள எரு ஸுமார் 10,000 ராத்தல் அல்லது 4½-டன் நிறையுள்ளது. அதில் 20½-ராத்தல் நிறையுள்ள நைட்ரொஜினும், 3-ராத்தல் பாஸ்பாரிக் ஆஸிட்டும், 46½-ராத்தல் பொடாஷும், 2-ராத்தல் சுண்ணாம்பு மிருக்கின்றனவாம்.

# CO-OPERATION.

# கோவாப்ரேஷன்.

## Co-operation and Official Control.

**கோவாபரேஷனும் ஸர்க்கார் மேற்பார்வையும்.**—கோவாபரேடிவ் ஸங்கங்கள் விஷயத்தில் ஸர்க்கார் உத்யோகஸ்தர்களின் மேற்பார்வை அதிகமாயிருந்தால் அந்த ஸங்கங்கள் வெகுவாய் ஸர்க்காருடைய உதவியையே எதிர்பார்த்துக்கொண்டிருக்குமென்று எண்ணி, கவர்ன்மெண்டார் ஸர்க்கார் உத்யோகஸ்தர்களுடைய மேற்பார்வை அதிகாரத்தைக் குறைப்பது விஷயமாய் சிலகாலமாய் யோசித்து வந்தார்கள். மேலும் கோவாபரேடிவ் முயற்சி நாளுக்கு நாள் வ்ருத்தியடைந்து வருவதற்கேற்ப ஸர்க்காருக்கு செலவும் அதிகரித்து வருகிறது. இந்தச் செலவில் ஒருபாகத்தை கோவாபரேடிவ் ஸங்கங்கள் பொறுத்துக் கொள்ளவேண்டியது ந்யாயமென்று கவர்ன்மெண்டார் நினைக்கிறார்கள். இதற்காக ஸங்கங்களினிடமிருந்து தணிக்கை பீஸ் வஸூலிக்கலாமென்றால், அது சில காரணங்களை யுத்தேசித்து ஆக்ஷேபணைக்கிடமாயிருக்கிறது. இதற்காக கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறதென்னவென்றால், ஸங்கங்களின் தணிக்கை வேலையை ஸர்க்கார் உத்யோகஸ்தர்களே பார்க்கும்படி விட்டு, தணிக்கையொழிந்த மற்ற ஸூபர்விஷன் அதாவது மேற்பார்வை வேலையை பல ஸங்கங்கள் சேர்ந்த யூனியன்களிடமாவது, ஜில்லா பாங்கிகளிடமாவது விட்டுவிடுவதே. ஆனால் ஒரு ஸங்கத்தில் தணிக்கை ஸம்பந்தமான வேலைகள் யாவை, ஸூபர்விஷன் ஸம்பந்தமான வேலைகள் யாவை என்பதை ஒரு திட்டமாய் இப்போது சொல்வதற்கில்லை. கோவாபரேடிவ் ரெஜிஸ்ட்ரார் தணிக்கையையும் ஸூபர்விஷனையும் பிரித்துக் கொடுப்பது விஷயமாய்ச் செய்துள்ள ப்ரேரணையில், ப்ரதம தணிக்கை வேலைகளையும், வரவு செலவுகள் தயாரிப்பதையும், ஸெண்ட்ரல் பாங்கிகள், லோகல் யூனியன்கள் ஆகிய இவைகளுக்குள்பட்ட மேற்பார்வை ஸிப்பந்திகளிடம் விடவேண்டுமென்றும், கடைசியாய் செய்யப்படும் பூர்த்தியான தணிக்கை வேலைகளை ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் செய்து வரவேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார். இந்த ப்ரேரணையை கவர்ன்மெண்டார் பொதுவாய் ஏற்றுக்கொண்டு, ஸர்க்கார் ஸிப்பந்திகளுக்கு கோவாபரேடிவ் ஸங்கங்கள் விஷயமாய் என்ன வேலை கொடுப்பது, ஸெண்ட்ரல் பாங்கிகள், யூனியன்கள் ஆகிய இவைகளின் கீழுள்ள ஸிப்பந்திகளுக்கு என்ன வேலைகள் கொடுப்பது என்பதைப்பற்றி ரெஜிஸ்ட்ரார் வ்யக்தமான ரூல்கள் தயாரிக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள்.

## Co-operation and Village Sanitation.

**கோவாபரேஷனும் க்ராம ஸுகாதாரமும்.**—க்ராம ஸுகாதார வேலைகளை கோவாபரேடிவ் ஸங்கங்களிடம் வேலை நடத்தும்படி விட்டால் வேலை த்ருப்திகரமாக நடந்துவருகிறதென்று தெரியவருகிறது. வடமலைபுரத்தில் புதுக்கிணறு வெட்டவும், பழைய கிணறுகளை ரிபேர் செய்யவும், தெருக்களில் வாறுகால் கட்டவும் கவர்ன்மெண்டார் ரூ. 1750 ஸாங்க்ஷன் செய்தார்கள். இந்த வேலைகளை கண்ட்ராக்டர்களிடம் விட்டிருந்தால் வேலை அவ்வளவு த்ருப்திகரமாக நடந்திராதாம். மேலும் ஸாங்க்ஷனான தொகையில் ஒரு பாகம் கண்ட்ராக்டருக்குப் போய்ச் சேர்ந்திருக்கும். ஷை ஸங்கத்தார் தங்களுக்குள் சிலரை ஒவ்வோர் வேலையையும் மேற்பார்வைசெய்ய நியமித்ததால், கட்டிட ஸாமான்கள் நல்லவைகளாகக் கிடைத்ததோடு, வேலையும் நன்றாய்ச் செய்யப்பட்டது. இன்னும் அந்த ஸங்கத்தார் ஷை தொகை முழுவதையும் செலவழித்ததோடு க்ராமத்தார் தங்கள் கையிலிருந்து நானூற்றுச் சில்லரை ரூபாய் செலவழித்து, அவ்வூர் தெருக்களில் உறுதியான ரோடுகளும் போட்டிருக்கிறார்களாம்.

## Co-operation in Russia.

**ரஷ்யாவில் கோவாபரேஷன்.**—மற்றெல்லா தேசங்களையும்விட ரஷ்யாவில்தான் கோவாபரேடிவ் ஸங்கங்கள் அதிகம். அங்கே 37,000 ஸங்கங்கள் இருக்கின்றன. இவற்றுள் 15,000 நாணய ஸங்கங்களாகும். 11,000 விற்பனை ஸங்கங்களாகும்; 10,000 விவஸாய கோவாபரேடிவ் ஸங்கங்களாகும். 1000 ஸங்கங்கள் ஸாமான்கள் செய்துவிற்கும் ஸங்கங்களாகும். ஸங்கங்களிலுள்ள மொத்த மெம்பர்களின் ஸங்க்யை 1-கோடியே 30-லக்ஷம், மொத்தம் மூலதனம் 150-கோடி ரூபாய். இப்படி ரஷ்யாவில் கோவாபரேஷன் அபிவ்ருத்தியடைந்ததற்குக் காரணம் ஜனங்களுடைய முயற்சியேயல்லாமல், கவர்ன்மெண்டாரும் விசேஷமாய் உதவிசெய்துவந்ததே.



# COMMERCE.

# வ்யாபாரம்.

## Motor Cars in India.

**இந்தியாவில் மோட்டார் வண்டிகள்.**—நம்முடைய தேசத்தில் சென்ற வர்ஷத்தில் ஏப்ரல்மாஸம் முதல் நவம்பர்மாஸம் வரையிலும் அமெரிக்கா ஐக்யமாகாணங்களிலிருந்து 26½-லக்ஷம் ரூபாய் விலையுள்ள 1,117 மோடார் வண்டிகளும், இங்கிலாந்திலிருந்து 22⅓-லக்ஷம் ரூபாய் விலையுள்ள 565 வண்டிகளும் தருவிக்கப்பட்டன.

1914-வது வர்ஷத்தில் இதே 8-மாஸக்காலத்தில் 32¼-லக்ஷம் ரூபாய்க்கு இங்கிலாந்திலிருந்து 780-வண்டிகளும், அமெரிக்காவில் ஐக்யமாகாணங்களி லிருந்து 7¼-லக்ஷம் ரூபாய்க்கு 329-வண்டிகளும், இந்தியாவிற்கு வந்தன.

1915-வது வர்ஷம் ஜூன்முதல் நவம்பர் வரைக்கும் நம்முடைய தேசத்திற்கு வந்த வண்டிகளின் தொகையும், விலையும் பின்வருமாறு.

| மாஸம். | வண்டிகளின் தொகை. | விலை ரூபா |
|---|---|---|
| **இங்கிலாந்திலிருந்து** | | |
| ஜூன் | 65 | 287,000 |
| ஜூலை | 85 | 270,000 |
| ஆகஸ்டு | 32 | 111,000 |
| ஸெப்டம்பர் | 29 | 130,000 |
| அக்டோபர் | 63 | 266,000 |
| நவம்பர் | 95 | 385,000 |
| **அமெரிக்கா ஐக்யமாகாணங்களிலிருந்து** | | |
| ஜூன் | 155 | 324,000 |
| ஜூலை | 44 | 109,000 |
| ஆகஸ்டு | 85 | 204,000 |
| ஸெப்டம்பர் | 157 | 439,000 |
| அக்டோபர் | 267 | 632,000 |
| நவம்பர் | 230 | 603,000 |
| **எல்லாதேசங்களிலுமிருந்து** | | |
| ஜூன் | 241 | 694,000 |
| ஜூலை | 134 | 411,000 |
| ஆகஸ்டு | 140 | 427,000 |
| ஸெப்டம்பர் | 196 | 611,000 |
| அக்டோபர் | 338 | 945,000 |
| நவம்பர் | 329 | 1,000,000 |

அமெரிக்கா ஐக்ய மாகாணங்களிலுள்ள சில மோட்டார் முதலிய வண்டிகள் செய்பவர்கள், தங்களுடைய வண்டிகளே ப்ரிட்டிஷ் இந்தியாவில் வெகுவாய் உபயோகமாவதற்கு தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டி, எல்லோரும் ஒருவருக்கொருவர் போட்டிசெய்யாமல் ஒன்றுகூடி அவர்களுடைய ப்ரதி நிதிகளை அனுப்புவதாக யத்தனம்செய்து வருகிறார்களென்று தெரியவருகிறது. இவர்கள் ஸ்வல்ப விலையுள்ள வண்டி முதல் அதிக விலைபெற்ற வண்டி வரையுள்ள எல்லாவித வாகனங்களையும் அனுப்புவார்களாம்.

உலகத்தில் எல்லா தேசங்களுக்கும் அமெரிக்காவிலிருந்து விசேஷமாய் ஏற்றுமதியாகும் பெரிய பார வண்டிகளும், அநேக ஜனங்கள் ஏறிப்போகலாயக்கான வாடகை மோட்டார் வண்டிகளும் இந்தியாவில் தேவையாயிருக்கும் என்று நம்புவதற்கு இடமிருப்பதால் நம்முடைய தேசத்திலுள்ள ராஜதானிகளுக்கும் பெரிய நகரங்களுக்கும் அதிக சம்பளத்தில் 6-பேரை அவ்வண்டிகளை விற்பனை செய்வதற்காக அனுப்பப் போகிறார்களாம்.

## Business Enterprise in India.

**இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.**—இந்தியாவில் சென்ற பிப்ரவரி மாஸத்தில் அடியில்கண்ட விவரப்படி 8 ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| 2 | பாங்கி லேவாதேவி கம்பெனிகள் | 7,50,000 |
| 1 | ரெயில்வே ட்ராம்வே கம்பெனி | 30,00,000 |
| 2 | வ்யாபாரக் கம்பெனிகள் (மேலே சொன்னவை தவிர) | 3,30,000 |
| 1 | பருத்தி சணல், ஸ்க்ரூ ப்ரெஸ் கம்பெனி | 2,00,000 |
| 1 | தேயிலை தோட்டக் கம்பெனி | 5,00,000 |
| 1 | சுரங்க வேலை, கல் வெட்டுவேலை கம்பெனி | 1,00,000 |
| 8 | | 48,80,000 |

## The Punalur Paper Mills.

**புனலூர் கடுதாசித் தொழில் சாலை.**—புனலூரிலுள்ள கடுதாசித் தொழில் சாலையில் விற்பனைக்காக அநேகவித பழுப்புக் கடுதாசிகள் செய்துவருகிறார்களென்றும், வெள்ளைக்கடுதாசி செய்வதற்கு வேண்டிய கடுதாசிக்கூழை வெண்மையாக்கும் யந்த்ரமும் வேறு யந்த்ரங்களும் தருவிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்களென்றும் 'கொச்சின் ஆர்கஸ்' பத்ரிகை தெரிவிக்கிறது.

## ECONOMIC PRODUCTS.

## விலையுள்ள பொருள்கள்.

### Utilising Horses Slain in Battle.

**யுத்தத்தில் இறந்த குதிரைகளை உபயோகப்படுத்துதல்.**—இந்த யுத்தத்தில் அநேக குதிரைகள் மடிந்து போய்க் கொண்டிருக்கின்றன. இறந்த குதிரைகளை அப்படியே விட்டிருந்தால், அவைகள் நாற்றமெடுத்து ஆகாயம் அசுத்தமடையக்கூடுமாதலாலும், ஈக்கள் வ்ருத்தியாக ஹேதுவாகக் கூடுமாதலாலும் ராணுவ அதிகாரிகள் அவைகளை சீக்ரம் குழிவெட்டி புதைத்துவிடுகிறார்கள். தற்போது ஜெர்மானியர்களில் சிலர் இறந்த குதிரைகளை ஆகாரமாக உபயோகிப்பதைப்பற்றி ஆலோசித்து வருகிறார்கள். முன்காலத்து ஜெர்மானியர்களும் ஸ்காண்டிநேவியர்களும் குதிரை மாம்ஸத்தைத் தின்று வந்தார்களாம். கிறிஸ்தவ மதம் பரவின போது கிறிஸ்தவ குருமார்கள் குதிரை மாம்ஸத்தைத் தின்பது கூடாதென்று ஏற்படுத்தினார்கள். அதுமுதல் ஜனங்கள் குதிரைமாம்ஸத்தை ஒழித்து அதை வெறுக்கலானார்கள். ஆனால் ஆகாரப்பஞ்சம் அதிகமான காலத்தில் ஜனங்கள் குதிரைமாம்ஸத்தைத் தின்றுவந்திருக்கிறார்கள். 1816-17-ம் வர்ஷத்தில் ஜெர்மனியிலும் ஸ்விட்ஸர்லண்டிலும் பஞ்சம் ஏற்பட்டபோது ஜனங்கள் குதிரைமாம்ஸத்தை தாராளமாய்த் தின்றார்களாம். 1847-ம் வர்ஷத்தில் பெர்லினிலும், 1863-ம் வர்ஷத்தில் கிழக்கு ப்ரஷ்யா மாகாணத்திலும் உள்ள ஜனங்கள் குதிரைமாம்ஸத்தைத் தின்றார்கள். 1870-ம் வர்ஷத்தில் நடந்த ப்ராங்கோ—ப்ரஷ்ய யுத்தத்தில் பாரிஸ் முற்றுகை நடந்தபோது, பாரிஸிலுள்ளவர்கள் குதிரை மாம்ஸத்தைத் தின்றார்கள். இப்போதும் ஆசியாவில் ரஷ்யாவுக்கு ஸொந்தமாயுள்ள ப்ரதேசங்களில் உள்ளவர்கள் குதிரைமாம்ஸத்தைத் தின்கிறார்கள். இவர்களில் அநேகர் ஜெர்மனியில் கைதிகளா யிருப்பதால் அவர்களுக்கு இந்த மாம்ஸத்தை ஆகாரமாகக் கொடுக்கலாமென்று ஒரு ஜெர்மானியர் சொல்லுகிறார். இதற்கு யுத்தகளத்தில் கொல்லப்பட்டும், குற்றுயிராயும் இருக்கும் குதிரைகளைத் தேடி எடுத்து, உடனே அவைகளின் தோல்களை யுரித்து பெர்மாங்கனேட் அப் பொடாஷ் என்னும் மருந்து கரைத்த ஜலத்தில் நனைத்த கோணிப்பைகளில் மாம்ஸத்தை கட்டி பத்ரப்படுத்தி வைத்துக்கொண்டால், அது ஸுமார் 2-வாரம் வரையில் கெடாம லிருக்குமாம். அந்த மாம்ஸங்களை ஆகாரமாக உபயோகிக்கலாமாம்.

### New Articles from Paper.

**கடுதாசியிலிருந்து புதிய ஸாமான்கள்.**—ஜெர்மானியர்கள் சிலகாலமாக கடுதாசியை ஒரு புது முறையால் தயார்செய்து அதிலிருந்து கயிறு, சாக்கு, பூட்ஸுகளுக்கு உதவும் தோல்முதலியவைகள் செய்கிறார்கள். அவர்கள் கடுதாசியை ஈரந்தாக்காதபடி தயார்செய்கிறார்கள். இதனால் அது உறுதியுள்ளதாகவும் அதிககாலம் வேலைக்கு உதவக்கூடியதாகவும் ஆகிவிடுகிறது. இந்தக் கடுதாசியிலிருந்து தயார்செய்தமேற்சொன்ன ஸாமான்கள் வேலைக்கு நன்றாய் உதவுகின்றனவாம். கடுதாசிச்சாக்குகள் ரொம்ப உறுதியாயிருப்பதோடு ஸாதாரண சணல் சாக்குகளைவிட ரொம்ப மலிவாயுமிருக்கின்றனவாம். இந்தப் புதுமுறையால் தயார்செய்த கடுதாசியை ஹாஸ்பிடல்களில் பருத்தி, லினன், முதலியவைகளுக்கு பதிலாக, காயங்கள் முதலியவைகள் கட்டவும், வேறு வேலைகளுக்கும் உபயோகிக்கிறார்களாம்.

இந்தப் புதுக்கடுதாசியில் இன்னொரு விசேஷம் என்னவென்றால், இதனால் செய்யப்பட்ட பாங்கிநோட்டுகளை, அழுக்காய்ப்போனால், ஸோப், ஜலம் ஆகிய இவைகளால் சுத்தம் செய்யலாமாம். இப்போது வழக்கத்திலுள்ள ஸாதாரண பாங்கிநோட்டுகளோ பழையதாய்ப்போனால் அழுக்கடைந்து ஒருவரிடமிருந்து இன்னொருவரிடம் வ்யாதி பரவுவதற்கு ஹேதுவாயிருக்கின்றன. புதுக்கடுதாசியால் செய்த நோட்டுகளை ஜலம் ஸோப்பால் சுத்தம் செய்யக்கூடுமாகையால், இவைகளால் யாதொரு கெடுதலும் ஏற்படுவதற்கில்லை.

### Paper From Grass.

**புல்லிலிருந்து கடுதாசி.**—அமெரிக்காவில் சில இடங்களில் வையர் க்ராஸ் என்று ஒருவகைப்புல் இருக்கிறது. இதிலிருந்து கடுதாசி செய்ய முடிகிறதாம். இந்தப் புல்லிலிருந்து செய்யப்படும் காகிதம் நல்ல உறுதியாயிருப்பதோடு, மற்ற மரங்களிலிருந்து செய்யப்படும் கடுதாசியைப்போல் நேர்த்தியாக இருக்கிறதாம். இது விஷயமாக அமெரிக்க ஐக்ய நாடுகளின் விவஸாய டிபார்ட்மெண்டார் ஆராய்ச்சிகள் நடத்தி வருகிறார்கள்.



## BOYS' PAGE.

## பையன்கள் பக்கம்.

### The Invention of Paper.

**காகிதம் செய்யக் கண்டுபிடித்த விதம்.**—ரொம்ப காலத்துக்கு முன், உலகத்தில் மற்ற நாட்டார் காகிதம் செய்யக் கண்டு பிடிப்பதற்கு முன்பே சீனா, ஜப்பான் தேசங்களில் அதை உபயோகித்து வந்ததாகத் தெரிய வருகிறது. காகிதம் முதலில் ஒரு ஜப்பான் தேசத்து கனவானால் கண்டு பிடிக்கப் பட்டதாம். இவர் ஒரு வ்யாபாரி யானதால் அவருடைய ஸாமான்களை சிறு சிறு மூட்டைகளாகக் கட்டி வாரா வாரம் வெளியே அனுப்ப வேண்டியிருந்தது. அவைகள் சிறு பட்டுத் துண்டுகளில் சுத்தி யனுப்பப் பட்டதால் செலவு அதிகமாயிற்று. ஆகவே, பணச்செலவு அதிக மேற்படாமல் வேறு எவ்விதமாய் அந்த ஸாமான்களைச்சுற்றியனுப்பலாமென்று ஸதாகாலம் யோசித்துக்கொண்டிருந்தார். இப்படி யிருக்க, ஒரு நாள் அவர் தம் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருக்கும் பொழுது, ஒரு குளவி கூடு கட்டியிருந்ததைப் பார்த்தார். அந்தக் கூட்டை கட்டுவதற்கு அந்தக் குளவி ஏதோ ஒருவித மரத்தின் பாகங்களை நன்றாகக் கடித்து, உமிழ் நீரைக்கொண்டு ஒரு வித பசையுண்டாக்கி, அதைக்கொண்டு கூடுகட்டியிருந்ததாம்.

அதன் மேல், அவர் இடைவிடாமல் யோசித்து பல மரங்களைப் பரிசோதித்து நல்ல பசை கொடுக்கவல்ல மரத்திலிருந்து காகிதம் செய்யும் முறையைக் கண்டு பிடித்தாராம்.

### The Eyesight of Birds.

**பக்ஷிகளின் த்ருஷ்டி.**—அதிக உயரத்தில் பறந்தாலும், ராஜாளி, பூமியின்மேலுள்ள வானம்பாடிபோன்ற சிறிய ப்ராணிகளை, மேலிருந்தபடியே நன்றாகப் பார்க்கும் சக்தியுள்ளதாம். மனிதர்களின் த்ருஷ்டியைப் பார்க்கிலும் ராஜாளியினது பார்வை சக்தி இருபது மடங்குள்ளது. நம்முடைய கண்ணுக்கு எட்டாத உயரத்தில் பறக்கும் கருடன், பூமியிலோடும் பல்லியையும் சுண்டெலியையும் கண்டு பிடித்து அவைகளின் மேல் பாயும் திறமை யுள்ளது. கழுகு முதலிய பறவைகள் நாம் நம்பக்கூடாத உயரத்தில் பறந்து அவைகள் தின்னும் ப்ராணிகளைக் கண்டுபிடிக்கக்கூடும். பக்ஷிகளுக்கு திருஷ்டியைப் பார்க்கிலும், மூகரும் சக்தி அதிகமென்று இதுவரையிலும் பக்ஷி சாஸ்த்ரிகள் எண்ணியிருந்தார்கள். ஆனால் இப்பொழுது பறவைகளுக்கு த்ருஷ்டிதான் மிகவும் கூர்மை யுள்ளது என்று சொல்லுகிறார்கள்.

### Dead Sea.

**சாக்கடல்.**—ஆசியா துருக்கியிலுள்ள பாலஸ்டீன் ப்ரதேசத்தில் டெட் ஸீ அதாவது சாக்கடல் என்று ஒரு ஏரி இருக்கிறது. ஸாதாரண கடல்ஜலத்தில் அமிழ்ந்து போகக்கக்கூடிய அநேக பொருள்கள் இந்த ஏரியின் ஜலத்தில் மிதக்குமாம். இந்த ஏரி பாலஸ்டீனுக்குப் பக்கத்திலுள்ள மத்யதரைக் கடலின் மட்டத்துக்கு 1200-அடி கீழே இருக்கிறது. பூமியிலுள்ள மற்றெல்லா ஏரிகளையும் விட இதுதான் ரொம்ப தாழ்ந்த மட்டத்தில் இருக்கிறதாம். இதன் ஜலம் ரொம்ப கசப்பானதால், இதில் மீன்கள் வஸிப்பதில்லையாம். அட்லாண்டிக் ஸமுத்ரத்தில் ஒரு டன் ஜலம் எடுத்து உப்புக் காய்ச்சினால் 31-ராத்தல் உப்புக் கிடைக்கும். இந்த சாக்கடலில் அதே அளவு ஜலத்திலிருந்து 187 ராத்தல் உப்புக் கிடைக்குமாம். ஜலத்தில் இவ்வளவு உப்பிருப்பதால் இதில் மனிதர்கள் விழுந்தாலும் அவர்கள் முழுகமாட்டார்கள்.

### The Hottest Place in the World.

**ரொம்ப உஷ்ணமான ப்ரதேசம்.**—பெர்ஷியாவின் தென் மேற்குக் கரையில் பாரஸீக வளை குடாவோரமாக உள்ள ப்ரதேசந்தான் உலகத்திலுள்ள மற்ற ப்ரதேசங்களெல்லாவற்றையும் விட ரொம்ப உஷ்ணமானதாம். சென்ற வர்ஷம் ஜூலை ஆகஸ்ட் மாஸங்களில் அந்த ப்ரதேசத்தின் சீதோஷ்ண ஸ்திதி இரவிலும் பகலிலும் 100-டிக்ரிக்குக் குறைவே யில்லையாம். சில ஸமயம் 128-டிக்ரி வரையில் உஷ்ணமாகவும் இருந்ததாம்.

### Population of the World.

**உலகத்தின் ஜனத்தொகை.**—உலகத்திலுள்ள ஜனங்களின் மொத்த ஸங்க்யை 177-கோடியே 28-லக்ஷமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. வர்ஷந் தோறும் 6-கோடி குழந்தைகள் பிறக்கின்றன. குழந்தைகளின் மரண விகிதம் ஒரு கோடியே 60-லக்ஷமாகும். தற்போது யுத்தத்தில் சேர்ந்திருக்கும் தேசங்களில் மொத்தமாக 2½-கோடி குழந்தைகள் வர்ஷந்தோறும் பிறக்கின்றன. இவைகளுள் 60-லக்ஷம் குழந்தைப் பருவத்திலேயே இறந்து போகின்றன.

# LADIES' PAGE.

## ஸ்த்ரீகள் பக்கம்.

### Concerning Babies.

**சிசுக்களைப்பற்றி கவனிக்கவேண்டிய விஷயங்கள்.**—(1) பல் முளைக்க ஆரம்பிக்கும்பொழுது அடிக்கடி குடிக்க ஜலம் கொடுக்கவேண்டும்.

(2) குழந்தைகளை தூளியிலாவது தொட்டிலிலாவது போட்டு ஆட்டவாவது அல்லது ஸந்தோஷத்தில் குலுக்கவாவது கூடாது. மிகவும் அமைதியாக எடுத்துக் கொள்ளவேண்டியது.

(3) குழந்தைகளுடன் அதிகப் பேச்சுங்கூடாது. அவர்களுக்கு அதிக மனக்கிளர்ச்சியும் உண்டாக்கலாகாது.

(4) ஒழுங்காய் காலாகாலங்களில் உணவு கொடுக்க வேண்டியது.

(5) குழந்தைகள் தூங்கும்போதும், விழித்துக்கொண்டிருக்கும்போதும் கண்களில் அதிக வெளிச்சம் படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

(6) குழந்தை அடிக்கடி கத்தித் தொந்திரவு செய்தால் ஸுமாரான சூடுள்ள வெந்நீரில் ஸ்நானம் செய்வித்து பார்க்கவும்.

(7) வாயில் முத்தமிடக்கூடாது.

(8) குழந்தை தூங்கும்போது கால்களையும், பாதங்களையும் துணியினால் நன்றாய் போர்த்திவைக்கவேண்டும். இல்லாவிட்டால் சரியாய் தூங்காது.

(9) தவிர, காலில் குளிர்ச்சியாயிருந்தால், அது அஜீர்ணத்தை யுண்டாக்குவதோடு அதிக ஜலதோஷத்தையும், இருமலையும் உண்டாக்கும்.

(10) அடிக்கடி மலச்சிக்கல் கொண்டால் எண்ணெயில் நனைத்த ஒரு சிறு ஸோப்புத் துண்டை ஆஸனத்வாரத்தில், தினமும் குறித்த காலத்தில் வைக்கவேண்டும். ஸோப்பை விரல்போல் வெட்டிக்கொள்ளவும்.

(11) வியர்வை உண்டாகும்படி குழந்தைகளைப் போர்த்தக்கூடாது.

(12) ஏற்பட்ட ஆகாரத்தைத் தவிர்த்து வேறு எவ்விதமான பானங்களும் கொடுக்கலாகாது.

### Indian Women's University.

**இந்திய ஸ்த்ரீகளுக்கான யூனிவர்ஸிட்டி.**—பூனாவில் விதவாச்ரமம் ஒன்றையும், கல்யாணமாகாத பெண்கள் வாசிப்பதற்காக மஹிள வித்யாலயமென்று ஒரு ஸ்தாபனத்தையும் ஏற்படுத்தி நடத்திவரும் ப்ரொபஸர் டி. கே. கார்வே இந்திய ஸ்த்ரீகள் உயர்தரக்கல்வி கற்பதற்காக அவர்களுக்கென்று தனியாக ஒரு ஸர்வகலா சாலை ஏற்படுத்த முயற்சிசெய்து வருகிறார். இந்த ஸர்வகலாசாலையின் நோக்கங்களாவன: இந்திய தேச பாஷைகளின் மூலமாய் ஸ்த்ரீகளுக்கு உயர்தரக் கல்வி கற்பித்தல். பெண்களின் ஹைஸ்கூல் ப்ரைமெரிஸ்கூல் படிப்பை ஒழுங்குபடுத்தி, அவர்களுக்கு ஏற்றவாறு பாடங்களை அமைத்தல். ப்ரைமெரி ஸெகண்டரி ஸ்கூல்களுக்கு வேண்டிய உபாத்யாயர்களைப் பயிற்சிசெய்விப்பது. இன்னும் பெண்கல்வி அபிவ்ருத்திக்கு ஏற்ற கார்யங்களைச் செய்தல்.

யூனிவர்ஸிட்டியின் அபிமானிகள் தற்போது கவர்ன்மெண்டாரின் உதவியையும், அவர்களுடைய ஆதரிப்பையும் எதிர்பார்க்கவில்லை. பொது ஜனங்களின் உதவியையே எதிர்பார்த்து வருகிறார்கள். இந்தியாவின் பற்பல பாகங்களில் அநேகர் இதற்கு பண உதவி செய்ய முன்வந்திருக்கிறார்கள். தற்போது யூனிவர்ஸிட்டிகமிட்டியார் ஒரு ஸ்த்ரீகள் காலேஜை ஸ்தாபித்து, அதை யூனிவர்ஸிட்டியோடு சேர்த்து, அந்தக் காலேஜில் ஸ்த்ரீகளுக்கு உயர்தரக்கல்வி கற்றுக்கொடுப்பார்கள்.

### A Cut.

**வெட்டுக்காயம்.**—வெட்டுண்ட பாகத்தை நன்றாய் வெந்நீரால் கழுவவேண்டும். ரத்தம் அதிகமாய் வடிந்தால், ஸோடா உப்பை வெட்டுவாயில் வைத்து பலமாய் கட்டவேண்டும். காயம் அதிகப்பட்டு ரொம்ப ரத்தம் கொட்டினால், வெட்டுப்பட்ட இடத்திற்கும் ஹ்ருதயத்திற்கும் மத்தியில் ஒரு கயிற்றால் இருக்கிக் கட்டி உடனே வைத்யரிடம் காண்பிக்கவேண்டியது.

### Fancy Bangles.

**சிகிறுப்போட்டு வளையல்கள்.**—தஞ்சாவூரில் வெங்கடேசப்பெருமாள் கோயில் தெரு, 802-ம் நம்பர் க்ரஹத்தில் உள்ள ஆர். பி. தவே அண்ட் ஸன்ஸ் கம்பெனியார் சிலகாலமாக நேர்த்தியான சிகிறுப்பொட்டு வளையல்கள் செய்து விற்று வருகிறார்கள். இவைகள் நல்ல வேலைப்பாடுள்ளவைகளாக இருக்கின்றன. இந்த வளையல்களின் உள்புறத்தில் கறுத்துபோகாததும், துருபிடிக்காததுமான ஒருவகை உலோகத்தின் தகடு கொடுத்திருக்கிறதால், இவை சீக்ரம உடைந்துபோவதில்லையென்று சொல்லப்படுகிறது. இந்த வளையல்களுக்குக் கீல் வைத்திருப்பதால் ஸுலபமாய்க் கையில் போட்டு எடுக்கலாம்.



# INDIANS ABROAD.

## இதர தேசங்களில் இந்தியர்கள்.

### Indian Indentured Labour.

**இந்திய ஒப்பந்தக்கூலி ஏற்பாடு.**—ஒப்பந்தத்தின் மேல் இந்தியர்கள் வெளிநாடுகளுக்குக் கூலிகளாக அனுப்பப்படும் ஏற்பாடானது இனி சீக்ரம் ஒழிந்துவிடுமென்று யாவரும் ஸந்தோஷப் படலாம். இதை ஒழித்துவிடுவதற்கு இந்தியா மந்த்ரி ஸம்மதங் கொடுத்திருக்கிறார்.

இந்த ஒப்பந்தக் கூலி ஏற்பாடானது சென்ற 80-வர்ஷகாலமாக நடந்து வருகிறது. 1834-ம் வர்ஷத்தில் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அடிமை வ்யாபாரத்தை நிறுத்திவிட்டதன் பேரில் அடிமைகளை வேலையாட்களாக வைத்துக்கொண்டு விவஸாயமும் கைத்தொழில்களும் நடத்திவந்த, ப்ரிட்டிஷ் குடியேற்ற நாட்டு ஜனங்கள் இந்தியாவிலுள்ள கூலியாட்களை ஒப்பந்த ஏற்பாட்டில் தங்கள் நாட்டுக்கு அழைத்துப்போக ஏற்பாடு செய்தார்கள். அவர்கள் இந்தியர்களை வேலை கெடுத்துக்கொண்ட நிபந்தனைகள் இந்தியர்களுக்கு பாதகமாயும், அவர்களுக்கு ஸாதகமாயும் இருந்தன. அதனால் ஏற்பட்ட கெடுதிகளை அறிந்த இந்தியா கவர்ன்மெண்டார் 1883-ம் வர்ஷத்தில் கூலியாட்கள் குடியேற்ற நாட்டுகளுக்குப் போகுமுன் அந்தக் கூலியாட்களைத் தக்கபடி மேற்பார்வை செய்யவேண்டுமென்று ஒரு சட்டம் ஏற்படுத்தினார்கள். இருந்தாலும் ஒப்பந்தக் கூலியாட்கள் நாளது வரையில் கஷ்டப்பட்டுக் கொண்டே யிருக்கிறார்கள்.

சென்ற மார்ச்சுமாஸம்கூடிய இம்பீரியல் சட்ட ஸபையில் ஆனரபிள் பண்டித மதன்மோஹன் மாளவியா குடியேற்ற நாடுகளில் உள்ள இந்தியக்கூலியாட்களின் கஷ்டங்களை எடுத்துக்கூறி, ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டை அடியோடு ஒழித்துவிட இந்தியா கவர்ன்மெண்டார் சீக்ரம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்.

இந்தியா கவர்ன்மெண்டார் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். கவர்ன்மெண்டுக்காகப் பேசின லார்ட் ஹார்டிஞ்ஜ், இந்தியா மந்த்ரியானவர் ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டை ஒழித்துவிடஸம்மதித்திருக்கிறாரென்றும், ஆனால் இந்த ஏற்பாட்டை திடீரென்று நிறுத்திவிட்டால்,குடியேற்ற நாடுகளில் இந்தியக் கூலியாட்களால் அபிவ்ருத்தியடைந்த விவஸாயமும் கைத்தொழில்களும் பாதகமடையுமாதலால், என்ன நிபந்தனைகளின்மேல் கூலியாட்கள் அந்த நாடுகளுக்குப்போகலாம், அந்த நாடுகளில் கூலியாட்களுக்கு என்ன ஸௌகர்யங்கள் ஏற்படுத்தவேண்டும் ஆகிய இவைகளை ஆலோசிப்பதற்கும், புதுஏற்பாட்டுக்குத் தகுந்தபடி குடியேற்ற நாட்டார் தங்களுடைய நிலைமைகளை மாற்றிக்கொள்ளவும் எவ்வளவு காலம் செல்லுமோ அதுவரையில் இப்போதுள்ள ஏற்பாடு நடந்துவரவேண்டுமென இந்தியா மந்த்ரி தெரிவித்திருப்பதாகவும் சொன்னார்.

இதுவிஷயமாய் லார்ட் ஹார்டிஞ்ஜ் சொன்னதாவது. இப்படித் தாமஸிப்பதினால் ஜனங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. ஏற்கனவே இந்தியக் கூலிகள் விஷயமாய் சில குடியேற்ற நாடுகள் சீர்திருத்தங்கள் செய்திருக்கின்றன. கூலி வேலை ஸம்பந்தமான குற்றங்களுக்கு கூலியாட்களை ஜெயிலுக்கு அனுப்புவது கூடாதென்று பிஜி கவர்ன்மெண்டார் சட்டம் செய்திருக்கிறார்கள். அந்தத் தீவிலுள்ள இந்தியர்களுக்கு நிலம் வாங்கிக்கொடுத்து அவைகளை நிர்வகித்துவர ஒரு ஸ்தாபனம் ஏற்பாடாகி வருகிறது. ட்ரினிடாடிலும் வேலை ஸம்பந்தமான குற்றங்களுக்கு வேலையாட்களை ஜெயிலுக்கு அனுப்புவது கூடாதென்று சட்டம் செய்யப்போகிறார்கள். இப்படியே சட்டம் செய்யும்படி குடியேற்ற நாட்டு மந்த்ரி மற்ற குடியேற்ற நாட்டு கவர்ன்மெண்டுகளுக்கும் தெரிவித்திருக்கிறார்.

மேலும் இந்தியக் கூலிகளினுடைய ஸௌகர்யங்களை உத்தேசித்து ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டை ஒழிப்பதில் சற்று தாமஸிக்கவேண்டியது அவச்யமாகிறது. இந்தியக்கூலியாட்களை சேர்ப்பது, அவர்கள் வெளிநாடுகளுக்குப்போவது ஆகிய இவைகளை மேற்பார்வைசெய்ய தக்க ஏற்பாடுகள் செய்துகொள்ளாமல் திடீரென்று ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டை நிறுத்திவிட்டால், கவர்ன்மெண்டாருக்கு வெளிநாடுகளுக்குப்போகும் கூலியாட்களை மேற்பார்வைசெய்ய அதிகாரம் இல்லாததால், ஆள் சேர்ப்பவர்கள் பலவிதங்களில் ஜனங்களை மோசஞ்செய்து, வெளிநாடுகளுக்கு அனுப்பிவிடுவார்கள். ஆகையால் கூலியாட்கள் வெளிநாடுகளுக்குப்போவதை மேற்பார்வைசெய்வது விஷயமாய் கவர்ன்மெண்டார் என்ன ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று யோசித்துத் தீர்மானிக்கும் வரையில் இந்த ஒப்பந்தக்கூலி ஏற்பாடு நடந்துவர வேண்டியதாகிறது.

பிறகு லார்ட் ஹார்டிஞ்ஜ் இந்தியா கவர்ன்மெண்டார் ஒப்பந்தக்கூலிகள் விஷயமாய் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும், ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டில் உள்ள குறைகளையும் எடுத்துக்கூறினார்.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### Lord Willingdon and Indian Children.

**லார்ட் வில்லிங்டனும் இந்தியச் சிறுவர்களும்.**—லார்ட் வில்லிங்டனுக்கு இந்தியச் சிறுவர் சிறுமிகளிடம் விசேஷ அன்பு உண்டென்பதைக் காட்ட ஒரு கதை வழங்கிவருகிறது. ஸமீபத்தில் வாடியா தர்மஸ்தாபனங்களின் வர்ஷாந்தர மீட்டிங் நடந்தபோது, லார்ட் வில்லிங்டன் ப்ரஸங்கம் செய்ய நேர்ந்தது. அவர் ப்ரஸங்கம் செய்ய எழுந்தபோது, ஸுமார் 200 இந்தியக் குழந்தைகள் கவர்னரின் முன்னால் கூட்டமாய் நின்றுகொண்டார்கள். தூரத்திலிருந்த பலருக்கு கவர்னர் பேசுவது தெரியவில்லை. கவர்னர் சில நிமிஷநேரம் பேசினதும், குழந்தைகளுக்குப் பின்புறமிருந்த சிலர் குழந்தைகளை அப்புறப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அப்படியே சிலர் செய்யவே, கவர்னர் என்ன சந்தடி யென்று கேட்டார். குழந்தைகளைத் துரத்தும் சத்தம் அதிகமாயிருந்ததால் கவர்னர் பேசினது ஒருவருக்கும் கேட்கவில்லை. பையன்களையும் சிறுமிகளையும் சிலபேர்கள் அப்புறம் துரத்திக்கொண்டிருந்தார்கள். அதைக்கண்ட கவர்னர் "பையன்களும் சிறுமிகளும் எனதருகிலேயே இருக்கட்டும்; அவர்களுடன் நான் பேசவேண்டு" மென்று சொன்னார். சத்தத்தில் அவருடைய பேச்சு ஒருவருக்கும் கேட்கவில்லை. குழந்தைகளோ வெளியில் போய்க்கொண்டிருந்தன. தாம் சொல்லுவது ஒருவருக்கும் கேட்காததை யறிந்த கவர்னர் தமது நாற்காலியில் உட்கார்ந்துவிட்டார். பையன்களும் சிறுமிகளும் ஹாலின் பின்புறம் போய், கவர்னருக்கு முன்னால் குழந்தைகள் இருந்த இடம் காலியானதும், ஒரு கனவான் கவர்னரிடம் வந்து "இப்போது எல்லாம் சரியாயிருக்கிறது" என்றார். உடனே கவர்னர் "ஒன்றும் சரியாயில்லை. குழந்தைகளெல்லாரையும் இங்கு கூட்டிவரவேண்டும். நான் அவர்களுடன் பேசவேண்டும். யாருக்காவது இங்கு நடப்பதைப் பார்க்க முடியாமலிருந்தால், அவர் முன்னால் வந்து உட்காரட்டும்" என்றார்.

அதன்மேல் சிலபேர்கள் பையன்களையும் பெண்களையும் கவர்னருக்கு முன்னால் கொண்டுவந்து உட்கார வைக்கவே, கவர்னர் அவர்களுடன் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தார். குழந்தைகளுக்கு அப்போதிருந்த ஸந்தோஷத்துக்கு அளவில்லை.

### A Fitting Reply.

**பொருத்தமான பதில்.**—ஒரு பலசரக்கு வர்த்தகனுக்கு ஓரிடைச்சி அன்றாடம் ஒரு ராத்தல் வெண்ணெயை வாடிக்கையாய் விற்றுவந்தாள். அந்த வெண்ணெய் ஒரு ராத்தல் நிறை சரியாயிருக்கமாட்டாதென்ற ஸந்தேகம் அவ்வர்த்தகனுக்குச் சில தினங்களுக்குப்பின் உண்டாகவே, அதை நிறுத்துப் பார்த்தான். அவன் ஸந்தேகித்தபடி வெண்ணெய் ஒரு ராத்தலுக்கு இரண்டு ஒளன்ஸ் குறைவாகவே யிருந்தது. மறுநாள் வர்த்தகன் ஷை இடைச்சியைச் சந்தையில் கண்டபோது, தனக்கு அவள் கொடுத்த வெண்ணெய் ஒரு ராத்தலுக்கு இரண்டு ஒளன்ஸ் குறைவாயிருந்த விஷயத்தைப் பற்றித் தெரிவித்து "சரியான படிக்கல்போட்டு நிறுத்துவிற்கிறாயா, இல்லையா?" என்று அவளைக் கேட்டான். அதற்கவள் "ஐயா நான் தினந்தோறும் தங்கள் கடையில் ஒரு ராத்தல் அடங்கின தேயிலைக் கட்டை (பாக்கெட்) வாங்கிப்போகிறேனே. அது சரியான நிறைதானோ?" என்று வர்த்தகனை விசாரித்தாள். அதற்கவன் "அதைப்பற்றி இப்போதென்ன பேச்சு? தேயிலைக்கும் வெண்ணெய்க்கும் என்ன ஸம்பந்த மிருக்கிறது" என்று சொன்னான். அப்போது இடைச்சி, அந்த வர்த்தகனுடைய கடையில் அன்றாடம் வாங்கிப்போகும் தேயிலைக் கட்டின்பேரில் ஒரு ராத்தல் என்று குறித்திருப்பது சரியான பாரமாயிருக்குமென்று எண்ணி படிக்கல்லுக்குப்பதிலாய் அந்தத் தேயிலைக் கட்டையே தராசின் ஒரு தட்டில் வைத்து அப்பாரத்துக்குச் சரியாய் மறுதட்டில் வெண்ணெயை வைத்து நிறுத்து அவனுக்குக் கொடுத்து வந்ததாகச் சொன்னாள். வர்த்தகன் தான் ஏமாற்ற நினைத்ததில், தானே ஏமாந்து போனதைப்பற்றி வருத்தப்பட்டு ஒன்றும் பேசாமல் வந்த வழியே திரும்பிப் போனான்.

### A Lawyer and His Client.

**வக்கீலும் கக்ஷிக்காரனும்.**—கக்ஷிக்காரன் (ஒரு திருடன்) விடுதலையானவுடன் தனது வக்கீலைப்பார்த்து "சீக்ரம் தங்களுடைய வீட்டுக்கு வந்து தங்களைப் பார்க்கிறேன்."

வக்கீல்,—"நல்லது. ஆனால் பகல் பொழுதில் வா; ராத்ரி வரவேண்டாம்."



# CURIOSITIES.

## விநோதங்கள்.

### Plants which Produce Bruise.

**காயமுண்டாக்கும் செடிகள்.**—சில வர்ஷங்களுக்கு முன்னால் வங்காளத்தில் சில கைதிகள் தங்கள் தேகத்தின்மேல் சோரங்கொட்டைப் பாலைத் தடவிக் காயமுண்டானதுபோல் செய்துகொண்டு போலீஸ் கான்ஸ்டெபில்கள் தங்களை அடித்துத் தொந்தரவு செய்ததாக அந்தக் கான்ஸ்டபில்களின்மேல் பிராது கொடுத்தார்களாம். ஆனால் இந்த ஸூக்ஷ்மத்தை யறிந்த ஜெயில் அதிகாரிகள் பிராதைத் தள்ளிவிட்டார்கள். சோரங்கொட்டைப்பாலைத் தடவினதால் உண்டாகும் காயக்குறிகளை பார்த்த சில டாக்டர்கள் வாஸ்தவமாய் அடித்ததால் உண்டான காயமென்றே எண்ணினார்களாம். வங்காளத்தில் ரக்த சிதா என்று பெயர்கொண்ட ஒரு செடியின் தண்டை கையில் தடவினால் உடனே கையானது நன்றாய் அடித்ததுபோல் வீங்கிப்போகிறதாம். இந்த ஸூக்ஷ்மத்தை யறிந்த கைதிகள் அந்தச் செடியின் தண்டை மேலே தடவிக்கொண்டு போலீஸ்காரர்கள் தங்களைத் தொந்தரவு செய்ததாகச் சொல்லுவதுண்டாம்.

### Kanaka Erumai Tree.

**கனக எருமை மரம்.**—இந்த வ்ருக்ஷம் மிகவும் அபூர்வமானது. இது புளியமரம்போலிருக்கும். இலை வக்கணத்தி இலையின் நீளமிருக்கும். பூ, காட்டாளிப் பூப்போன்றது. அதன் அடி சிவப்பாயும், மேல் வெண்மையாயும், உட்புறம் ஸ்வல்பம் சிவந்துமிருக்கும். இதன் பாலை எடுக்கும்விதம் அதிசயமானது. மரத்தண்டைபோய் எருமைக் கன்றுபோல் கனைத்து பின் அரிவாளால் கொத்தி ஒரு கிண்ணத்தை அடியில் வைத்தால் பால் வடியும். ரப்பர் மரத்தினின்று பால் எடுப்பது போலவே எடுத்தல் வேண்டும். எருமைக் கன்றுபோல் கனைத்துப் பால் எடுப்பதால் இதற்குக் கனக எருமை மரம் என்ற பெயர் வந்தது. இந்த மரம் கொல்லிமலையின் வடசார்பில் வேப்பந்தூர் சரகத்தில் அகப்படக்கூடியது. இதன் பால் மிகவும் காரமானது. இல்லம் பாலைக்காட்டிலும் கொடியது. இப்பால் பட்ட இடம் உடனே புண்ணாகும். இப் பாலால் 64-வகைப் பாஷாணங்களும் சுத்தமாகும். இதைக்கொண்டு மெழுகு, நீற்றினம் இவை செய்யலாம்.—பெண்கல்வி.

### Re-Marriage in Arabia.

**அரேபியாவில் புனர் விவாகம்.**—அரேபியா தேசத்து ஸ்த்ரீ தன்னுடைய முதல் புருஷன் இறந்தபிறகு, மறு விவாகம் செய்துகொள்ள வேண்டுமானால், அவன் கல்யாணத்திற்காக குறித்திருக்கும் நாளைக்கு முந்தின ராத்ரி தன் புருஷன் அடக்கம் செய்யப்பட்ட இடத்திற்கு ஒரு கழுதையின்பேரில் ஆட்டுத் தோலினால் செய்யப்பட்ட இரண்டு குடங்கள் நிறைய குளிர்ந்த தண்ணீர் கொண்டுபோவாள். போனவுடன் கல்லறைக்கு எதிரே முழங்காலிட்டு இறந்த கணவனைக் குறித்து ஸ்தோத்ரம் செய்து தான் மறுவிவாகம் செய்துகொள்ளப் போவதாகத் தெரிவித்து தன்பேரில் கோபமும் பொறாமையும் கொள்ளாமலிருக்கும்படி வேண்டிக்கொள்வாள். இது ஆனபிறகு, தான் செய்துகொள்ளப்போகும் காரியத்தைப் பார்த்து மனது குளிர்ந்திருப்பதற்காக வரும்போது கொண்டுவந்த தண்ணீரை அங்கே கொட்டுவாள்.

### Birth of a Monster Child.

**அந்தக் கேடான குழந்தை.**—இந்தியாவில் ஐக்ய மாகாணங்களைச் சேர்ந்த பிஜ்நார் என்னும் ஊரில் ஒரு அந்தக் கேடான பெண் குழந்தை பிறந்ததாம். வாயில் மேலே இரண்டும் கீழே இரண்டுமாக நாலு பற்களிருந்தனவாம். வலது பக்கத்தில் ஒரு காதும், இடது பக்கத்தில் ஒன்றன்கீழ் ஒன்றாக மூன்று காதுகளும் தென்பட்டனவாம். இந்தக் குழந்தையின் மார்போடு ஒட்டிக்கொண்டு முகம் கீழ் நோக்கினபடியே ஒரு ஆண் குழந்தையுமிருந்ததாம். இந்தக் குழந்தையின் அடிப்பாகமெல்லாம் அதிக வளர்ச்சி பெற்றும் கைகளிரண்டும் வளராதபடியும் யிருந்ததாம். ஒவ்வொரு கையிலும் ஒரே விரல் மாத்ரந்தான் இருந்ததாகத் தெரிகிறது. குழந்தை ஜனிக்கும்போதே இறந்துபோயிற்றாம்.

### Females Earn by Kissing.

**முத்தங்கொடுத்துப் பணம் ஸம்பாதிக்கும் ஸ்த்ரீகள்.**-அமெரிக்கா ஐக்ய நாடுகளில் ஒன்றாகிய ஓஹையோவைச்சேர்ந்த குலம்பியென்னும் நாட்டில் வசிக்கும் பெண்கள் முத்தங்கொடுப்பதைத் தொழிலாக வைத்துக்கொண்டு 2000-பவுண்டு வரையில் ஸம்பாதித்திருக்கிறார்கள். இப்பெண்கள் நான்கு ஷில்லிங் (மூன்று ரூபாய்) கொடுக்கும் எந்தப் புருஷனுக்கும் முத்தங் கொடுப்பார்களாம்.

# DIARY OF THE MONTH

## மாஸ வர்த்தமானம்.

### THE WAR IN EUROPE.

### ஐரோப்பிய யுத்தம்.

எப்ரல்மீ 3-தேதி.

ரஷ்யாவுக்கு ஸொந்தமான 'போர்த்துகல்' என்னும் ஆஸ்பத்திரிக் கப்பல் கருங்கடலில் ஒரு ஜெர்மன் ஸப்மரீனால் மூழ்கடிக்கப்பட்டது.

4-தேதி.

ப்ரெஞ்சுக்காரர்கள் வாக்ஸ் க்ராமத்தின் மேற்கு பாகத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

6-தேதி.

ப்ரெஞ்சுக்காரர்கள் இன்று பெதின்கோர்ட்டைக் காலிசெய்து விட்டார்கள்.

9-தேதி.

ஆப்ரிக்காவில் கிலிமாஞ்ஜரோவுக்கு 40-மைல் தெற்கில் அருஷா ப்ரதேசத்தில் ஒரு ஜெர்மன் ஸைன்யம் ப்ரிட்டிஷாரிடம் சரண் அடைந்தது.

10-தேதி:

இட்டாலியர்கள் ரௌச்சாபல் என்னுமிடத்தில் பிடித்திருந்த இடங்களைக் காலிசெய்துவிட்டார்கள்.

15-தேதி.

ஜெர்மானியர்கள் வெர்டேனில் சில இடங்களைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். துருக்கியர்கள் எர்ஸிரமுக்கு மேற்கில் 6-நாள் ரஷ்யர்களுடன் யுத்தஞ்செய்துதோற்றுப்போய்ப் பின்வாங்கினார்கள்.

17-தேதி.

ட்ரெபிஸாண்டுக்குக் கிழக்கில் காரடரி நதியின் இடது கரையில் இருந்த துருக்கியர்களை ரஷ்யர்கள் துரத்திவிட்டார்கள். ஆஸ்ட்ரேலியர்கள் ஸூயஸ்கால்வாய்க்குக் கிழக்கில் ஜூஜாபாவிலிருந்த துருக்கிய காம்பைத் தாக்கிப் பிடித்துக்கொண்டார்கள். காடியா ஓயஸிஸ் என்னும் பாலைவனத்தின் மத்தியிலுள்ள ஒரு செழிப்பான ப்ரதேசத்தைப் பிடித்துக்கொண்டார்கள்.

18-தேதி.

ட்ரெபிஸாண்ட் பட்டணத்தை ரஷ்யர்கள் பிடித்திருக்கிறார்கள்.

20-தேதி.

எர்ஸிரமுக்கு மேற்கில் ஆஷ்காலா ப்ரதேசத்தில் ரஷ்யர்கள் ஒருமலைத்தொடரைப் பிடித்திருக்கிறார்கள். கால்டிலாஞ என்னுமிடத்தில் இட்டாலியர்கள் மாண்டி அங்கோரா என்னும் மலையின் மேற்கு சிகரத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

21-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் வாக்ஸ் என்னுமிடத்துக்கு மேற்கிலுள்ள சில இடங்களைப் பிடித்தன.

ரஷ்யத் துருப்புகள் ப்ரெஞ்ச் போர்முகத்தில் யுத்தம் செய்வதற்காக மார்ஸேல்ஸுக்கு வந்திருக்கின்றன.

25-தேதி.

சில ஐரிஷ்காரர்கள் ஐயர்லண்டில் கலகம் செய்வதற்காக துப்பாக்கி முதலிய யுத்தக்கருவிகளை ஐயர்லண்டிற்குக் கொண்டுவர முயன்றார்கள். ஒரு ஜெர்மன் உதவி யுத்தக்கப்பலை நடுநிலைமைத் தேசக்கப்பல்போல் தோற்றும்படி செய்து, அதில் யுத்தக்கருவிகளை ஏற்றி ஒரு ஜெர்மன் ஸப்மரீன் கப்பலின் உதவியைக்கொண்டு ஐயர்லண்டிற்குக் கொண்டுவர முயற்சிசெய்தார்கள். ப்ரிட்டிஷ் அதிகாரிகள் இதை அறிந்து ஸாமான் கப்பலை மூழ்கடித்து அநேக கலகக்காரர்களை கைதுசெய்தார்கள். கைது செய்யப்பட்டவர்களில் ஸர் ரோஜர் கேஸ்மெண்ட் என்பவர் ஒருவராவர். ப்ரெஞ்ச் துருப்புகள் வெர்டேனில் காரட்ஸ் காட்டில் சற்று முன் சென்றன. இட்டாலியர்கள் கார்ஸோ ப்ரதேசத்தில் வடக்கு ஸெட்ஸ் பள்ளத்தாக்கைக் காலிசெய்தார்கள்.

26-தேதி.

நேற்றுகாலை ஒரு ஜெர்மன் யுத்த க்ரூஸர் படை லோஸ்டாப்ட் என்னும் இடத்துக்கருகில் வந்து அங்கிருந்த இங்க்லிஷ் கப்பல் படையோடு யுத்தம்செய்து திரும்பிவிட்டது.

27-தேதி.

வெர்டேன் யுத்தத்தில் இதுவரையில் ஜெர்மானியர்களுக்கு 2,80,000 ஜனங்கள் சேதமாம்.

29-தேதி.

ரஸ்ஸல் என்னும் ப்ரிட்டிஷ் யுத்தக்கப்பல் மத்யதரைக் கடலில் ஒரு வெடிகுண்டில் பட்டு மூழ்கிவிட்டது.

மேமீ 3-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் டௌவாமாண்ட் கோட்டைக்குத் தென் கிழக்கில் சில ஜெர்மன் கிடங்குகளைப் பிடித்திருக்கின்றன.



8-தேதி.

வெர்டேன் சண்டை பலமாக நடக்கிறது. ஜெர்மானியர்கள் பலமாய்த் தாக்கினதால், ப்ரெஞ்சுக்காரர்கள் 304-வது குன்றில் ஒரு பாகத்தைக் காலிசெய்துவிட்டார்கள்.

ரஷ்யர்கள் பாக்டாடுக்குப் போகும் வழியிலுள்ள ஸெரிஞல்கெரிண்ட் என்னும் இடத்திலிருந்து துருக்கியர்களைத் துரத்திவிட்டார்கள்.

10-தேதி.

வெர்டேன் ப்ரதேசத்தில் ம்யூஸுக்கு கிழக்கில் உள்ள தியாமாண்ட் தோட்டத்தை ஜெர்மனியர்கள் கைப்பற்றியிருக்கிறார்கள்.

11-தேதி.

ரஷ்யர்கள் பாக்டாடுக்குப் போகும் வழியிலுள்ள காஸ்ரிஷிரின் என்னுமிடத்தைப் பிடித்துக் கொண்டார்கள்.

15-தேதி.

துருக்கியர்கள் ஆஷ்காலா ப்ரதேசத்தில் ரஷ்யர்களை சற்றுப் பின்னுக்குத் தள்ளினார்கள்.

16-தேதி.

ரஷ்யர்கள் மோஸுலுக்கு 80 மைல் கிழக்கேயுள்ள ரெவாண்டஸ் என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள்.

17-தேதி.

ஆஸ்ட்ரியர்கள் அடிஜ் நதிக்கும் ஆஸ்டிகோவுக்கும் மத்தியில் முன்சென்றார்கள்.

19-தேதி.

ப்ரெஞ்சுக்காரர்கள் 304-ம் நம்பர் குன்றின் வடகிழக்குச் சரிவில் ஒரு கோட்டையைப் பிடித்தார்கள்.

21-தேதி.

ப்ரிட்டிஷ் கப்பல்களும் ஆகாயக் கப்பல்களும் ஸிரியாவுக்கும் ஈஜிப்டுக்கும் போக்கு வரவுப் பாதையிலுள்ள எல்அரிஷ் என்னும் ஊரைத்தாக்கின. அங்குள்ள கோட்டைகள் நாசமாயினவென்று தோன்றுகிறது.

இட்டாலியர்கள் ரொவரெட்டோவுக்கு தெற்கிலுள்ள ஸக்னடோர்ட்டா என்னும் இடத்தைக் காலிசெய்து விட்டார்கள்.

22-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகளும் ரஷ்யர்களும் டைக்ரிஸ் நதிக்கரையில் ஒன்று சேர்ந்துகொண்டு குட் அல் அமாரா என்னும் ஊரைத்தாக்கப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

ரஷ்யர்கள் உரிமியா ஏரிக்குத் தெற்கேயுள்ள ஸாக்கிஸ் என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள்.

23-தேதி.

விமி குன்றுக்கு வடகோடியில் உள்ள சில கிடங்குகளை ஜெர்மானியர்கள் பிடித்தார்கள்.

வெர்டேனில் ப்ரெஞ்ச் துருப்புகள் சில கோட்டைகளைப் பிடித்திருக்கின்றன.

24-தேதி.

வெர்டேன் யுத்தம் பலமாக நடக்கிறது. இட்டாலியர்கள் ஆஸ்டிகோவுக்கும் ப்ரெண்டாவுக்கும் நடுவில் பின்வாங்கினார்கள். ரஷ்யர்கள் மோஸுலுக்கு அருகில் ஸர்டாஷ்ட் என்னும் ஊரில் புகுந்திருக்கிறார்கள்.

26-தேதி.

இதுவரையில் 50 லக்ஷம் ப்ரிட்டிஷ் ஜனங்கள் ஸ்வதாவாக ஸைன்யத்தில் சேர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

ஜெர்மானியர்கள் வெர்டேனில் சிலவிடங்களில் முன்சென்றிருக்கிறார்கள்.

27-தேதி.

வெர்டேன் யுத்தத்தின் கடுமை குறைந்துவருகிறது. ஆஸ்ட்ரியர்கள் பலமாய்த்தாக்கினதால் இட்டாலியர்கள் அஸிட்கோவில் சில இடங்களிலிருந்து பின்வாங்கினார்கள்.

### INDIAN NEWS.

### இந்திய வர்த்தமானம்.

எப்ரல்மீ 10-தேதி.

**மகம்மதிய யூனிவர்ஸிட்டி.**—மகம்மதிய யூனிவர்ஸிட்டி கமிட்டியார் இன்று லக்னௌவில் கூடி ஹிந்து யூனிவர்ஸிட்டி அமைப்பை அனுஸரித்து மகம்மதிய யூனிவர்ஸிட்டி ஸ்தாபிக்க கவர்ன்மெண்டாரிடம் அனுமதி கேட்கவேண்டுமென்றும், மற்ற யூனிவர்ஸிட்டிகளைப்போல, அலிகார் பட்டணத்தைத் தவிர மற்றவிடங்களிலுள்ள கலாசாலைகளை யூனிவர்ஸிட்டியில் சேர்த்துக்கொள்ள அனுமதி கொடுக்கும்படி கவர்ன்மெண்டாரைக் கேட்க வேண்டுமென்றும் தீர்மானித்தார்கள்.

13-தேதி.

**ஹிந்து யூனிவர்ஸிட்டி.**—கவர்னர் ஜெனரல் மைஸூர் மஹாராஜாவை ஹிந்து யூனிவர்ஸிட்டியின் சான்ஸலராகவும், க்வாலியர் மகாராஜாவை ப்ரோ-சான்ஸலராகவும் நியமித்திருக்கிறார்.

14-தேதி.

ஆகாகான்.—கோஜா மகம்மதியர்களின் தலைவராகிய ஆகாகானுக்கு பம்பாய் ராஜதானியில் ஒரு சிற்றரசருடைய அந்தஸ்து கிடைத்திருக்கிறது. அவருக்கு இனிமேல் 11-மரியாதை குண்டுகள் போடப்படும்.

18-தேதி.

காலஞ்சென்ற மிஸ்டர் ஜி. ஸுப்ரமண்ய அய்யர்.- சென்னை சுதேசமித்ரன் ஹிந்து ஆகிய இந்தப் பத்திரிகைகளின் அதிபராக இருந்தவரும், ஜனசாரசீர்திருத்தம், தேச அபிவ்ருத்தி முதலியவைகளுக்காக ரொம்பவும் உழைத்தவருமான மிஸ்டர் ஜி. ஸுப்ரமண்ய அய்யர் இன்று இறந்துபோனார்.

23-தேதி.

விவஸாய டிபார்ட்மேண்ட்.—இயற்கை நீலியை ஓரே தன்மை யுள்ளதாகச் செய்யவேண்டிய ப்ரயத்தனங்களைப்பற்றிப் பரிசீலனை செய்வதற்காக இந்தியா மந்த்ரி மிஸ்டர் டேவிஸ் என்பவரை நீலி ரஸாயன சாஸ்த்ரியாக நியமித்திருக்கிறார்.

27-தேதி.

மைஸூரில் கட்டாயக் கல்வி.—மைஸூர் கவர்ன்மெண்டார் அந்த ராஜ்யத்திலுள்ள எல்லா ஜில்லாக்களிலும் 7-வது வயஸு முதல் 11-வது வயஸு வரையில் உள்ள பையன்களெல்லாம் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து வாசிக்க வேண்டுமென்று சட்ட மேற்படுத்தியிருக்கிறார்கள்.

மேமீ 7-தேதி.

ஸர் சிவஸ்வாமி அய்யர்.—சென்னை கவர்னர் ஸர் சிவஸ்வாமி அய்யரை சென்னை யூனிவர்ஸிட்டியின் வைஸ் சான்ஸலராக நியமித்திருக்கிறார்.

8-தேதி.

ஆந்த்ரா கான்பரென்ஸ்.— நான்காவது ஆந்த்ரா கான்பரென்ஸ் இன்று காக்கிநாடாவில் கூடிற்று. ஆனரபில் ராவ்பகதூர் எம். ராமச்சந்த்ரராவ் ப்ரெஸிடெண்டாக இருந்து ஆந்த்ரக்கிளர்ச்சி, பாஷை வாரியாக மாகாணங்கள் ஏற்படுத்துவது, ஆந்த்ரா யூனிவர்ஸிட்டி, ஸெகண்டரி கல்வி, முதலிய விஷயங்களைப்பற்றிப் பேசினார்.

9-தேதி.

பம்பாயில் ஸ்த்ரீகளுக்காக ஒரு வைத்யசாலை.— தமது பெயரைத் தெரிவிக்க விரும்பாத ஒரு கனவான் பம்பாயில் ஸ்த்ரீகளின் ப்ரஸவ வைத்யத்துக்கும், ஸ்த்ரீகளுக்கும் குழந்தைகளுக்கும் வ்யாதி நிவாரணத்துக்கும் ஒரு வைத்யசாலை கட்ட 5-லக்ஷம் ரூபாய் கொடுக்க முன்வந்திருப்பதாக லேடி வில்லிங்டன் பம்பாய் கார்ப்பரேஷனுக்குத் தெரிவித்திருக்கிறார்.

15-தேதி

சென்னை மாகாண ப்ரோவின்ஷல் கான்பரென்ஸ்.—இது இன்று மதுரையில் கூடிற்று. ஆனரபிள் மிஸ்டர் கேசவ பிள்ளை ப்ரெஸிடெண்டாக இருந்தார்.

16-தேதி.

செங்குந்தர் கான்பரென்ஸ்.—இன்று செங்குந்தர் கான்பரென்ஸ் ஈரோடில் கூடிற்று. பெரியகுளம் முனிஸிபல் கௌன்ஸிலர் மிஸ்டர் ஸுந்தர முதலியார் ப்ரெஸிடெண்டாக இருந்தார்.

16-தேதி.

வர்ணாச்ரம தர்ம கான்பரென்ஸ்.—இது இன்று மதுரையில் கூடிற்று. திருவாங்கூர் திவான் பேஷ்கார் டாக்டர் என். ஸுப்ரமண்ய அய்யர் ப்ரெஸிடெண்டாக இருந்து வர்ணாச்ரம தர்மத்தைப் பற்றியும், அது இந்தக்காலத்திலும் எவ்விதம் ஏற்ற தென்பதைப் பற்றியும் பேசினார்.

17-தேதி

வர்ணாச்ரமதர்ம கான்பரென்ஸ்.—இன்று இது மதுரையில் கூடி வர்ணாச்ரம தர்மத்தை ஸ்தாபித்து நிலைநிறுத்த வேண்டுமென்றும், ஹிந்து மதஸொத்துகளை நிர்வகிக்கும் ஸ்தாபனங்களில் வைதீகக் கொள்கையுடையவர்களும் மெம்பர்களாக இருக்கவேண்டுமென்றும், கவர்ன்மெண்டார் கல்யாணம் முதலிய ஜன ஸமூக மத ஸம்பந்தமான விஷயங்களில் தலையிடுவது சரியல்ல வென்றும், கல்யாணம், போஜனம் ஆகிய இவைகள் விஷயத்திலுள்ள நிபந்தனைகள் தேச ஒற்றுமைக்கு தடைசெய்பவை யல்லவென்றும், மடாதிபதிகள் வர்ணாச்ரம தர்மத்தை ஸ்தாபிக்கும் முயற்சியில் கலந்துகொண்டு ஒத்துழைக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

25-தேதி

போலீஸ் கான்ஸ்டபிளின் கொலை.—கூடலூரில் ஒரு போலீஸ் கான்ஸ்டபிளை யாரோ ஒருவர் அடித்துக் கொன்று ரெயில்வே லயனில் போட்டு விட்டார். கொலையின் காரணம் தெரியவில்லை.

27-தேதி

'ந்யூ இந்தியா' பத்ரிகை.—கவர்ன்மெண்டார் 'ந்யூ இந்தியா' பத்ரிகைக்கு 2,000-ரூபாய் ஜாமின் கேட்டிருக்கிறார்கள்.


# ஜனுபிமானி

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

**THE PEOPLE'S FRIEND.**

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE.'

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ.,
பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A.,
EDITOR.

புஸ்தகம் 8. Vol. 8. — ராக்ஷஸ(வரு), வைகாசிமீ, MAY—JUNE 1916. — ஸஞ்சிகை 5. No. 5.


## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | | | Foreign. Rs. A. P. | | |
|---|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | ... ... | 6 | 0 | 0 |
| Half-yearly ... | 2 | 0 | 0 | ... ... | 3 | 0 | 0 |
| Sample copy | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 Page | ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do | ... | 2 | 8 | 0 | do |
| ¼ do | ... | 1 | 4 | 0 | do |
| $\frac{1}{10}$ do | ... | 1 | 0 | 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion, republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, George-town, Madras.

## ஜனுபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனுபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | | | அந்ய நாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 | 0 | 0 | ... | 6 | 0 | 0 |
| ஆறுமாஸத்துக்கு ... | 2 | 0 | 0 | ... | 3 | 0 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | | மாஸம் ஒன்றுக்கு | 5 | 0 | 0 |
| ½ | ,, | ,, ,, | 2 | 8 | 0 |
| ¼ | ,, | ,, ,, | 1 | 4 | 0 |
| $\frac{1}{10}$ | ,, | ,, ,, | 1 | 0 | 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேண்டுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை, நிருபேயர்கள் அறியவேண்டும்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

ஜனபிமானி.

புஸ்தகம் 8.] ராக்ஷஸ௵ வைகாசிமீ. [ஸஞ்சிகை 5.

## THE MASKING OF ARTILLERY IN THE FIELD.

## யுத்தகளத்தில் பீரங்கிகளை மறைத்து வைத்தல்.

தற்காலத்து யுத்தங்களில், ஆகாய விமானங்கள் அதிகமாக உபயோகப்பட்டு வருகின்றன. முற்காலத்தில் எதிரி சைன்யங்கள் இருக்குமிடம், அவைகளின் போக்குவரவு, பலம் முதலியவைகளை அறிந்துவந்து தெரிவிக்க குதிரைப்படையைச் சேர்ந்த வீரர்களை அனுப்புவது வழக்கம். இப்போதோ அவ்வேலைகளை ஆகாய விமானிகள் நன்றாய்ச் செய்துவருகிறார்கள். அவர்கள் இப்போது கவனிக்கும் விஷயங்களில் முக்யமானது பீரங்கிகள் எங்கிருக்கின்றனவென்பது. தற்காலம் பீரங்கிகளின் குண்டுகள் வெகுதூரம் போகக்கூடுமாகையால், அவைகளைக் காலாள்படைக்கு ரொம்பப் பின்னால் வைத்து வருகிறார்கள். அவைகள் இன்னவிடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை குதிரைவீரர்களாவது, மோட்டார் சைக்கிளில் ஏறிப்போகும் வீரர்களாவது கண்டுபிடித்துத் தெரிவிப்பது அபூர்வம். ஆகவே இவ்வேலையை ஆகாய விமானிகளே செய்யவேண்டியதாகிறது. ஆகாயவிமானிகள் ஏரோப்ளேனில் போகும்போது தூரத்ருஷ்டிக் கண்ணாடிகளைக்கொண்டு போவார்கள். அவைகளின் வழியாய்ப் பார்த்தால், பூமியிலுள்ள பீரங்கிகளும், மருந்து, குண்டுகள் ஸப்ளை செய்யும் ஸ்டேஷன்களும் நன்றாய்த் தெரியும். அவைகளைத் தக்கபடி மறைத்து வைக்காவிட்டால், ஆகாய விமானிகள் அவைகளின் இருப்பிடங்களையறிந்து தமது கக்ஷி சைன்யங்களுக்குத் தெரிவித்து, அவைகளைத் தாக்கச் செய்வார்கள்.

பீரங்கிகளை மறைக்க பற்பல உபாயங்கள் வழக்கத்திலிருந்து வருகின்றன. அவைகளில் சிலவற்றை சென்ற ஐப்பசி, மாசி மாஸத்து ஸஞ்சிகைகளில் விவரித்திருக்கிறோம். இங்கே இன்னும் சிலவற்றைத் தெரிவிக்கிறோம்.

ஆஸ்ட்ரியாவுக்கும் இட்டலிக்கும் மத்தியில் ஆல்ப்ஸ் மலையென்று ஒரு மலையிருக்கிறது. அதில் பற்பல கணவாய்களும் இடைவெளிகளும் இருக்கின்றன. இவைகளின் வழியாக சைன்யங்கள் போகக்கூடுமாதலால், ஆஸ்ட்ரியா, இட்டலி ஆகிய இரண்டு தேசத்தாரும் அக்கணவாய்களைப் பாதுகாக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அக்கணவாய்களின் ஓரமாயுள்ள மலையில் செங்குத்தான பாறையில் இருக்கக் கூடிய சிறிய குகைகளைப் பெரியவையாகச் செய்து, (குகைகள் இல்லாத விடத்து குகைகள் குடைந்து) அந்தக் குகைகளில் எப்படியோ ச்ரமப்பட்டு பீரங்கிகளை ஏற்றி வைத்திருக்கிறார்கள். அந்த குகைகளின் வாய்களைத் தக்கபடி பெருங்கற்களால் மூடிவைத்திருக்கிறார்கள். பீரங்கியால் சுடுவதற்கு மாத்ரம் சிறிய த்வாரம் விடப்பட்டிருக்கும். எதிரிகளின் பீரங்கிகளிலிருந்து வெளிவரும் குண்டுகள் அந்தச் சிறுத்வாரத்தில் நேராகப் போனாலொழிய, குகைக்குள்ளிருக்கும் பீரங்கிகளுக்காவது, போர்வீரர்களுக்காவது யாதொரு அபாயமும் ஏற்படாது. குகைக்குள்ளிருக்கும் பீரங்கியைச் சுடும்போது, அதிர்ச்சி ரொம்ப அதிகமாயிருக்குமாதலால், அங்குள்ள வீரர்களுக்கு காதுகேட்காமல் போகக் கூடும். அல்லது அவர்களுடைய நரம்புகளுக்கு ஏதாவது கெடுதல் ஏற்படும். இவ்விதம் கெடுதி ஏற்படாமலிருப்பதற்காக அங்கே வேண்டிய சௌகர்யங்கள் அமைத்திருப்பார்கள். இந்தக் குகைகளும் குகைக்குள்ளிருக்கும் பீரங்கிகளும் எதிரிகளினுடைய ஆகாய விமானிகளுக்குத் தெரிவது அபூர்வம். குகைகளிலுள்ள பீரங்கிப் படையாட்கள் கணவாய்களில் போகக்கூடிய எதிரிகளைத் தாக்கி வருவார்கள்.



வயல்களில் பீரங்கிகளை வைக்கவேண்டுமென்றால், வயல்களிலுள்ள பயிரை அறுத்துத் தாள்களைக் கட்டாகக்கட்டி, பீரங்கிகளை வேண்டிய இடத்தில் அமைத்து அவைகளின்மேல் அந்தத் தாள் கட்டுகளைப் போட்டு வைப்பார்கள். அல்லது அறுவடையான வயலானால், பீரங்கிகளை அதில் வேண்டிய இடத்தில் வைத்து, எங்கிருந்தாவது தாள் கட்டுகள் கொண்டுவந்து அவைகளின்மேல் போட்டுவைப்பார்கள்.

உயர இருந்து பார்க்கும் ஆகாய விமானிகளுக்கு அவைகள் புதிதாய் அறுவடைசெய்த வயலில் அங்கங்கே தாள்கட்டுகள் போட்டுவைத்திருப்பதுபோலத் தோன்றும். பீரங்கிகள் மறைத்து வைத்திருக்குமிடங்களுக்குப் பக்கத்தில் பூமியில் குழிதோண்டி, அக்குழிகளை மறைத்திருப்பது தெரியாதபடி தக்கவிதமாக மறைத்து, அவைகளுக்குள் பீரங்கியைச் சுடும் வீரர்கள் தங்கியிருப்பார்கள்.

இந்தக் குழிகளின்மேல் குண்டுகள் விழுந்தாலும் அவைகளில் வசிக்கும் வீரர்களுக்குக் கெடுதி ஏற்படாதபடி மண் மூட்டைகள் முதலியவைகளைக்கொண்டு, குழிவாயைத் தக்கபடி மறைத்திருப்பார்கள். இந்தக் குழிகளில் தான் பீரங்கிப்படை வீரர்கள் வசித்துவருவார்கள்.

பீரங்கிப்படை வீரர்கள் பற்பல வழிகளில் தங்கள் பீரங்கிகளை மறைத்து வைப்பதால், ஆகாய விமானிகள் குளங்குட்டை, ஆறுகள் ஆகிய இவைகளைத் தவிர மற்ற எந்த விடங்களையும் ஸந்தேகிப்பதை ஒரு வழக்கமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பூமியில் ஏதாவது ஒன்று உயர்ந்தோ, நீட்டிக்கொண்டோ இருந்தால் போதும், அதை ஆகாயவிமானிகள் கண்டுவிட்டால், உடனே அச்செய்தியை தங்கள் கக்ஷியைச்சேர்ந்த பீரங்கிப் படைக்குத் தெரிவிப்பார்கள். பீரங்கிப் படைக்காரர்கள் தக்ஷணமே அந்தவிடத்தை நோக்கி பீரங்கியால் சுடுவார்கள். பீரங்கிகள் குறி தப்புவது ரொம்ப அபூர்வம். ஸந்தேகித்த விடத்தில் விழும் குண்டோ அங்குள்ள எல்லாவற்றையும் நாசம்செய்து நாலாபக்கமும் சிதறியடிக்கும். பீரங்கிகளிருக்கும் இடத்துக்கு மேலே எதிரியின் ஆகாயவிமானங்கள் பறந்துகொண்டிருந்தால், எதிரிகளோடு நேருக்குநேர் யுத்தம் செய்துகொண்டிருந்தாலொழிய, மற்றபடி பீரங்கிக்காரர்கள் மறைவான இடங்களுக்கு ஓடிப்போய் ஒளிந்து கொள்வார்கள். பீரங்கிவைத்திருக்கும் இடத்தை எதிரியின் ஆகாயவிமானங்கள் கண்டுகொண்டதாக பீரங்கிக்காரர்களுக்கு ஸந்தேகமுண்டானால், அவர்கள் பீரங்கிகளை இரவில் வேறிடங்களுக்குக் கொண்டுபோய் மறைத்து வைப்பார்கள். குன்றுகள் உள்ள ப்ரதேசங்களில் சிறுபாறைகள் இருந்தால், அவைகளில் பள்ளம்வெட்டி, அந்தப் பள்ளங்களின்மேல் செடிகொடிகளைப் போட்டுமூடி, பாறைகள் ஒரே ஸமனாயிருப்பதாய்த் தெரியும்படி செய்து, பள்ளத்தில் பீரங்கிகளை மறைத்துவைப்பதுண்டு.

பீரங்கிகளை வைக்கும் வண்டிகளுக்கு அது நிற்கக்கூடிய இடத்தின் நிறத்துக்கு ஒத்ததான வர்ணம் பூசுவார்கள். சில ஸமயங்களில் வர்ணம் பூசிய பாகங்களில் வேறுவர்ணங்களை சிற்சிலவிடங்களில் கலந்து விடுவதுண்டு. இப்படிப் பலவர்ணங்கள் கலந்திருப்பதால் ஆகாய விமானிகளுக்கு பீரங்கிகள் நன்றாய்த் தெரிவதில்லையாம்.

பீரங்கிகளுக்குமேல் செடி கொடிகளைப் போட்டுவைப்பதுண்டென்பதைப்பற்றி ஏற்கனவே தெரிவித்திருக்கிறோம்.

போர்க்களத்தின் பின் பாகத்திலிருக்கும் பீரங்கிப் படைகளுக்கு எதிரிகளிருக்குமிடம் தெரியாது. எதிரிகள் இருக்குமிடம், திசை, தூரம் முதலியவைகளை அறிந்து சொல்வதற்காகவும், பீரங்கிகள் சரியாகக் குறிபார்த்துச் சுடுகின்றனவா என்பதைப் பார்த்துச் சொல்வதற்காகவும், சில வீரர்கள் கோபுரங்களின் மேலும், பெரிய மரங்களின்மேல் கவசம் போட்ட கூடுகளிலும் உட்கார்ந்துகொண்டு எதிரிகளின் நடமாட்டத்தை யறிந்து டெலிபோன் மூலமாக பீரங்கிப்படைகளுக்கு அறிவிப்பார்கள். டெலிபோன் கம்பி ஒன்று மாத்ரம் இருந்தால், ஒரு ஸமயம் அந்தக் கம்பியில் குண்டுகள் தாக்கினால் கம்பி அறுந்துபோய் வெகுநேரம் வரை அதாவது மறுபடியும் டெலிபோன் கம்பி போடும் வரையில் எதிரிகளின் நடமாட்டத்தை யறியும் வீரர்கள் விஷயங்களை பீரங்கிப்படைகளுக்குத் தெரிவிக்கமுடியாமல்போகும். அதற்காக மரம் அல்லது கோபுரங்களுக்கும் பீரங்கிப் படைக்கும் அநேக தந்திக்கம்பிகள் போட்டிருப்பார்கள்.

எதிரிகளின் ஆகாய விமானிகள் மரங்களிலும் கோபுரங்களிலு முள்ளவர்களைத் தான் ரொம்பவும் கவனிப்பார்கள். அவர்களின் இருப்பிடத்தைத் தெரிவித்து பீரங்கிகளைக்கொண்டு தாக்கச்செய்வார்கள். ஏனென்றால், இப்பேர்ப்பட்ட ஒரு மரத்தைத் தாக்கி நாசம்செய்துவிட்டால் அந்த மரத்திலுள்ளவரிடமிருந்து எதிரிகளின் நடமாட்டத்தை யறியும் பீரங்கிப்படை சிலகாலம்வரை ஒன்றும் செய்யமுடியாமல் போகும். இந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்காக ஒவ்வொரு பீரங்கிப்படையை பற்பல மரங்களுடன் டெலிபோன் தந்திக் கம்பிகளால் ஸம்பந்தப்படுத்தியிருப்பார்கள்.

---

## SOME STATISTICS ABOUT INDIA.

## இந்தியாவைப்பற்றிய சில கணக்கு விவரங்கள்.

போது விவரம்.—இந்தியாவின் விஸ்தீர்ணம், 18,02,192 சதுர மைலாகும். இது ஜெர்மனியை விட 7-மடங்கும் ஜப்பானைவிட 10-மடங்கும், ப்ரிட்டிஷ் ஐல்ஸ் அதாவது இங்க்லண்ட், ஸ்காட்லண்ட், ஐயர்லண்ட் ஆகிய இவைகளின் மொத்த விஸ்தீரணத்தைவிட 15-மடங்கும் பெரியது.

இந்தியாவின் ஜனத்தொகை 31,50,00,000. இது உலகத்தின் மொத்த ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பாகமாகும்.

இந்தியாவின் வ்யாபாரமானது ஆசியாக் கண்டத்திலுள்ள மற்றதேசங்களைவிட அதிகமானது. அடியில் கண்ட அட்டவணையில் ஆசியாவிலுள்ள முக்யமான தேசங்களில் நடக்கும் ஏற்றுமதி இறக்குமதி வ்யாபாரத்தில் மதிப்பைக் காட்டுகிறோம்.

| | ரூ. |
|---|---|
| 1 இந்தியா | 435,88,84,215 |
| 2 சீனு | 151,27.80,000 |
| 3 ஜப்பான் | 134,17,35,000 |
| 4 ஸ்ட்ரெய்ட் ஸெட்டில்மெண்ட்ஸ் | 110,62,35,000 |
| 5 துருக்கி | 91,08,60,0d0 |
| ஈஜிட்ட் | 68,72,25000 |

உலகம் முழுவதையும் கவனிக்கும்போது, இந்தியாவானது வ்யாபாரப் பெருக்கத்தில் 6-வது தேசமாக இருக்கிறது.

| | |
|---|---|
| 1 க்ரேட் ப்ரிட்டன் | 1632,68,25,000 |
| 2 ஜெர்மனி | 1139,34,75,000 |
| 3 அமெரிக்மா ஐக்ய நாடுகள் | 952,24,65,000 |
| 4 ப்ரான்ஸ் | 677,06,40,000 |
| 5 ஹாலண்ட் | 604,83,00,000 |
| 6 இந்தியா | 435,88,84,215 |
| இந்தியாவினுடைய இறக்குமதியின் மதிப்பு | 197,52,62,850 |
| ஏற்றுமதியின் மதிப்பு | 238,36,21,365 |



இந்தியாவிலுள்ள ஜனங்களில் 100-க்கு 70 பாகம் பேர் விவஸாயத் தொழிலில் அமர்ந்திருக்கிறார்கள். 8-பாகம் ஜனங்கள் கைத்தொழில்களிலும், 2-3 பாகம் ஜனங்கள் வ்யாபாரங்களிலும் அமர்ந்திருக்கிறார்கள். பிச்சையெடுக்கும் ஜனங்கள், ஸன்யாஸிகள் முதலியவர்கள் மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்கு 1·34 வீதமாவார்கள். நூற்றுக்கு 9-பேர்கள் குருக்கள். நூற்றுக்கு 6-பேர்கள் கடைவைத்திருப்பவர்கள்.

இந்தியாவின் விளைபோருள்கள்.—வர்ஷந்தோறும் இந்தியாவில் 3,00,73,000 டன் அரிசி மாஸூல் கிடைக்கிறது. சீனுவில் 2,21,10,000 டன்னும், ஜாவாவில் 47,04,000 டன்னும், ஜப்பானில் 46,93,000 டன்னும் கிடைக்கின்றன.

கோணிப்பை செய்ய உதவும் ஜூட் என்னும் சணல் இந்தியாவிலன்றி வேறு தேசத்தில் விளைகிறதில்லை. 4829 சதுரமைல் விஸ்தீரணமுள்ள நிலத்தில் ஜூட் விளைகிறது. இதில் கிடைக்கும் ஜூட்நாரின் மொத்தமதிப்பு ரூ. 38,56,31,775.

இத்தனை ரூபாயையும் ஒன்றன்மேலொன்றாக அடுக்கிவைத்தால், ஹிமயமலையிலுள்ள எவரஸ்ட் சிகரத்தைப்போல் 80-மடங்கு உயரமிருக்கும். அத்தனை ரூபாய்களையும் ஒன்றின்பக்க மொன்றாய் நீளத்தில் வைத்துக்கொண்டே போனால் பூமியை மூன்றுதடவை சுற்றிவரும்.

பற்பல தேசங்களின் கரும்புச் சர்க்கரை மாஸூலைக் கீழ்வரும் அட்டவணையில் தெரிவிக்கிறோம்.

| | | |
|---|---|---|
| இந்தியா | 2,0,51,900 | டன் |
| ஜாவா | 9,45,774 | ,, |
| க்யூபா | 9,40,130 | ,, |
| ஹாவை | 5,21,123 | ,, |
| ப்ரிட்டிஷ் மேற்கு இந்திய தீவுகளும் கயானுவும் | 2,93,410 | ,, |
| அமெரிக்கா ஐக்ய நாடுகள் | 2,21,719 | ,, |

இந்தியாவிலும் மற்ற தேசங்களிலும் விளையும் தேயிலை மாஸூலின் நிறை பின்வருமாறு.

| | ராத்தல். |
|---|---|
| இந்தியா | 24,80,20 398 |
| சீனு | 21,46,83,333 |
| லங்கை | 17,98 34,462 |
| ஜப்பான் | 6,04,55,913 |
| ஜாவா | 2,61,29,110 |

ஒவ்வொரு தேசங்களிலுமுள்ள கால்நடைகளின் ஸங்க்யை பின்வருமாறு.

| | |
|---|---|
| இந்தியா | 9,16,66,000 |
| அமெரிக்கா ஐக்ய நாடுகள் | 7,12,67,000 |
| ரஷ்யா | 4,32,04 000 |
| அர்ஜன்டைன் | 2,58,44 000 |
| ஜெர்மனி | 2,05,89,000 |
| க்ரேட்ப்ரிட்டன் | 1,41,10,000 |

அடியில் வரும் அட்டவணையில் பற்பல தேசங்களின் கோதுமை மாஸூல் இவ்வளவென்பது காட்டப்பட்டிருக்கிறது. இதிலிருந்து இந்தியாவானது கோதுமை விஷயத்தில் உலகத்திலுள்ள தேசங்களுக்குள் 5-வதாக இருக்கிறதென்பது தெரியவரும்.

| | புஷல். |
|---|---|
| அமெரிக்கா ஐக்ய நாடுகள் | 66,46,00,000 |
| ரஷ்யா | 56,95,00,000 |
| ப்ரான்ஸ் | 31,05,00,000 |
| ஆஸ்ட்ரியா | 22,93,00,000 |
| இந்தியா | 22,91,00,000 |
| இட்டலி | 15,08,00,000 |
| ஜெர்மனி | 13,84,00,000 |
| க்ரேட் ப்ரிட்டன் | 5,77,00,000 |

ஒரு புஷல் என்பது பட்டணம் படியால் 19·2-படி கொண்டது.

முன்பு இந்தியாவில்தான் பருத்தி விசேஷமாய் விளைந்து வந்தது. ஆனால் இப்போது பருத்தி விஷயத்தில் இந்தியாவானது பின் தங்கிவிட்டது. அமெரிக்கா ஐக்யநாடுகளில் ஒரு

வர்ஷத்தில் 588,60,93,107 ராத்தல் பருத்தி கிடைக்க, இந்தியாவில் 160,03,40,000 ராத்தல் பருத்திதான் கிடைக்கிறது. 2,08,65,000 ரூபாய் மதிப்புள்ள பஞ்சு அன்ய நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியாகிறது. 45,78,00,000 ரூபாய் மதிப்புள்ள பருத்தித் துணிகள், பருத்தியால் செய்யப்பட்ட நூல் முதலிய சரக்குகள் இந்தியாவுக்கு வருகின்றன. இந்தியாவிலிருந்து 29,50,00,000 ரூபாய் மதிப்புள்ள பஞ்சும், 2,19,00,000 ரூபாய் மதிப்புள்ள பருத்தியால் செய்யப்பட்ட நூல் துணிகளும் ஏற்றுமதியாகின்றன.

உலகத்திலுள்ள முக்யமான தேசங்களில் எத்தனை நூல் நூற்கும் ராட்டினங்கள் இருக்கின்றனவென்பது அடியில் வரும் கணக்கால் தெரியவரும்.

| | ராட்டினங்கள். |
|---|---|
| யுனைடட்கிங்டம் | 54,00,000 |
| அமெரிக்கா ஐக்யநாடுகள் | 2;40,00,000 |
| ஜெர்மனி | 90,00,000 |
| ரஷ்யா | 80,00,000 |
| ப்ரான்ஸ் | 60,00,000 |
| இந்தியா | 58,00,000 |

ஜப்பானில் பயிர்செய்யத்தகுந்த பூமி எவ்வளவிருக்கிறதோ அதைப்போல் 24 மடங்கு விஸ்தீரணமுள்ள பூமி இந்தியாவில் பயிர் செய்யத்தகுந்ததாயிருக்கிறது. இந்தியாவின் மொத்த விஸ்தீரணத்தில் மூன்றில் ஒரு பாகம் ஸாகுபடிக்கேற்றது. அதாவது 6,00,000 சதுரமைல். ஜப்பானின் மொத்த விஸ்தீரணத்தில் 6-ல் ஒரு பாகம் ஸாகுபடிக் கேற்றது. அதாவது 24,700 சதுரமைல்.

இந்தியாவிலுள்ள கால்வாய்களின் மொத்த நீளம் 50436 மைல்.

தொழில் நிலைமை.—சில முக்யமான தேசங்களில் மொத்தம் எத்தனை மைல் நீளம் ரெயில் போடப் பட்டிருக்கிறதென்பது அடியில் வரும் கணக்கால் தெரியவரும்.

| | |
|---|---|
| அமெரிக்கா ஐக்ய நாடுகள். | 2,55,000 |
| ரஷ்யா | 44,950 |
| ஜெர்மனி | 37,026 |
| இந்தியா | 31,490 |
| கனடா | 25,400 |
| ப்ரான்ஸ் | 24,191 |
| க்ரேட் ப்ரிட்டன் | 23,387 |
| ஜப்பான் | 3000 |
| சீனு | 3000 |

1902-ம் வர்ஷத்தில் இந்தியாவில் 1,378 ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் இருந்தன. இவைகளின் மூலதனம் 37,90,99,695 ரூபாய். 1912-ம் வர்ஷத்தில் 2,409 கம்பெனிகள் இருந்தன. இவைகளின் மூலதனம் 79,02,57,480 ரூபாய் ஆகவே 10-வர்ஷத்துக்குள்ளாக ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகளின் ஸங்க்யை 100-க்கு 82-வீதம் அதிகரித்திருக்கிறது.

இந்தியா முழுவதிலும் 1905-ம் வர்ஷத்தில் 283 கோவாபரெடிவ் க்ரெடிட் ஸங்கங்கள் இருந்தன. இவைகள் மெம்பர்களுக்கு 3,40,050 ரூ. கடனாகக் கொடுத்திருந்தன. 1914-ம் வர்ஷத்திலோ 15,673 ஸங்கங்கள் இருந்தன. இவைகள் 10,33,00,000 ரூபாய் கடன் கொடுத்திருந்தன.

இந்தியாவில் முன்பு ரொம்ப ப்ரபலமாயிருந்த பருத்தித்தொழில், அவுரி, நீலம் செய்யும் தொழில், சர்க்கரைத்தொழில் ஆகிய இவை மூன்றும் தற்போது ரொம்பவும் க்ஷீணதசையடைந்திருக்கின்றன. முன்பு இந்தியாவிலிருந்து உலகமுழுவதுக்கும் நீலி ஏற்றுமதியாகிவந்தது. இப்போது இந்தியாவிலிருந்து 37,58,000 ரூ. பெறுமானமுள்ள நீலச்சாயந்தான் ஏற்றுமதியாகிறது. இதற்குக் காரணம் ஜெர்மனியின் செயற்கைச் சாயங்களே. ஜெர்மனியிலிருந்து 50,88,86,000 ரூபாய் மதிப்புள்ள நீலச்சாயம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.



பருத்தி விஷயத்திலோ வென்றால் உலகத்திற்கு வேண்டியிருக்கும் மொத்த பருத்தியில் (2,25,00,000 பேல்கள்) இந்தியாவானது 34,42,000 பேல் பருத்திதான் ஏற்றுமதிசெய்கிறது. கருப்பு ஸாகுபடி செய்யும் தேசங்களுள் இந்தியா முதன்மையாயிருந்தும், 11,90,00,000 ரூபாய் மதிப்புள்ள சர்க்கரை அன்யதேசங்களிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியாகிறது.

இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் சர்க்கரையின் மதிப்போ 14,65,000-ரூபாயாகும்.

ஜனஸமூக நிலைமை.—இந்தியா ரொம்ப ஏழையான தேசம், மற்றெல்லா தேசங்களையும் விட அமெரிக்கா ஐக்யநாடுகள் தான் ரொம்ப பணக்காரதேசமாகும். அங்கே சராசரியில் ஒவ்வொருவருக்கும் 5895-ரூபாய் ஆஸ்தியுண்டு, க்ரேட் ப்ரிட்டனில் ஒவ்வொருக்கும் சராசரியில் 5700-ரூ. ஆஸ்தி.

| | |
|---|---|
| ப்ரான்ஸில் | 3750-ரூ. |
| ஜெர்மனியில் | 3700-ரூ. |
| ரஷ்யாவில் | 1288-ரூ. |
| ஜப்பானில் | 750-ரூ. |

ஆனால் இந்தியாவிலோ சராசரியில் ஒவ்வொருவருக்கும் 300-ரூபாய் ஆஸ்திதான் உண்டு.

இந்தியாவில் ஜனங்களுக்கு வைத்ய உதவி கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. 10-கோடி ஜனங்களுக்கு வைத்ய உதவியே கிடைப்பதற்கில்லையென்று சொல்லப்படுகிறது.

சாவு விகிதமும் இந்தியாவில் ரொம்ப அதிகம். இங்கே 1000-த்தில் 32-பேர்கள் வர்ஷந்தோறும் பற்பல காரணங்களினால் இறந்து போகிறார்கள். ப்ரான்ஸில் சாவுவிகிதம் ஆயிரத்துக்கு 19·7 பேரும், ஜெர்மனியில் 18·4 பேரும், க்ரேட்ப்ரிட்டனில் 15·4 பேருமாக இருக்கிறது. இந்தியாவில் வருஷந்தோறும் இறந்துபோகிறவர்களின் கணக்கு விவரம் பின்வருமாறு.

| சாவின் காரணம் | |
|---|---|
| காய்ச்சல்கள் | 42,07,000 |
| ப்ளேக் | 7,33,000 |
| காலரா | 3,54,000 |
| வயிற்றுக்கடுப்பு, வயிற்றுக்கழிச்சல் | 253369 |
| அம்மை | 58,535 |

இந்தியாவிலுள்ள ஸ்த்ரீகளில் ஆறில் 1-பாகம் விதவைகளாகும்,

5-வயதுக்குள்பட்ட பெண்களுள் கல்யாணமானவர்களின் தொகை 3,02,425;

10-வயஸுக்குள்பட்ட பெண்களில் கல்யாணமானவர்களின் தொகை 25,22,203.

15-வயஸுக்குள்பட்ட பெண்களில் கல்யாணமானவர்களின் தொகை 90,77,677.

5 வயஸுக்குள்பட்ட விதவைகளின் தொகை 17,703; 10 வயஸுக்குள்பட்ட விதவைகளின் தொகை 1,11,973; 15வயஸுக்குள் பட்ட விதவைகளின் தொகை 3,35,015.

இந்தியாவில் மொத்தம் ஆண்களுள் நூற்றுக்கு 90பேர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியாது. ஸ்த்ரீகளுள் 100க்கு 99பேர் களுக்கு எழுதப் படிக்கத் தெரியாது.

பள்ளிக்கூடத்தில் வாசிக்கத்தகுந்த வயஸுள்ள பையன்களுள் நூற்றுக்கு 23பேர் வீதந்தான் பள்ளிக்கூடத்தில் வாசித்து வருகிறார்கள்.

வாசிக்கத் தகுந்த வயஸுள்ள பெண்களுள் நூற்றுக்கு 5பேர் வீதந்தான் பள்ளிக்கூடங்களில் வாசித்துவருகிறார்கள்.

ஜப்பானிலோ பையன்களுள் 100-க்கு 99பேர் வீதமும், பெண்களுள் நூற்றுக்கு 98-பேர் வீதமும் பள்ளிக்கூடங்களில் வாசித்து வருகிறார்கள்.

## PARTS OF FLOWERS AND THEIR COLOUR.

BY T. S. RAMA IYAR.
C. S. SCHOOL, SRIVAIKUNTAM.

## புஷ்பங்களின் பாகங்களும் அவற்றின் நிறமும்.

ஸுந்தரம், கோபாலன், என்ற இரு ஸகபாடிகள், தங்கள் பள்ளிக்கூடத்திலுள்ள பூந்தோட்டத்தைப்பார்த்துவரும் பொருட்டு சென்றார்கள். அத்தோட்டம் மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, சண்பகம், ரோஜா, செம்பருத்தி, ஜெவந்தி, ஸூர்யகாந்தி முதலிய பற்பல புஷ்பங்களுடன், பார்ப்பதற்கு ரொம்ப ஸந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியதாயிருந்தது. அவைகளை ஆனந்தமாய் பார்த்துவரும்போது அவ்விருவர்களுக்கும் பின்வருமாறு ஸம்பாஷணை உண்டாயிற்று.

ஸுந்தரம்.—கோபாலா. இந்தக்காட்சி எவ்வளவு அழகாயிருக்கிறது! இந்த ரோஜா செம்பருத்தி முதலானவை சிவப்பாயும்; ஜெவந்தி ஸூர்யகாந்தி முதலியவை மஞ்சள் நிறமாயும்; இன்னும் சில வெள்ளை முதலிய பலவர்ணங்களோடுமிருக்கின்றன. செடியின் மற்றப் பாகங்களெல்லாம் அநேகமாய் பச்சை நிறமாயும் இவை மட்டும் பற்பல வர்ணங்கள் அமைந்துள்ளனவாயுமிருப்பானேன்? புஷ்பங்களின் பாகங்களையும், அவற்றிற்கு வர்ணம் ஏற்படவேண்டியதை பற்றியும் சற்றுத் தெளிவாய்ச் சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

கோவிந்தன்.—ஸுந்தரம்! நீ இவ்விஷயத்தை பற்றி அறிய மிகுந்த ஆவலுடன் கேட்பதால் எனக்குத் தெரிந்தவரை கூறுகிறேன். கவனமாய்க்கேள்.

நீ இப்புஷ்பத்தை (தங்கூளிப் பூவைச்சுட்டி) அடிக்கடி பார்த்திருப்பாய் என்று நம்புகிறேன்.

ஸுந்தரம்.—ஆம், பார்த்திருக்கிறேன்.

கோவிந்தன்.—இதற்கு அநேக பாகங்களுண்டு. புஷ்பத்தை மரக்கிளையில் சேர்த்துக் கொண்டிருப்பது காம்பு. அதன்மேல் இலைபோல் பசுமை நிறமானதும் மணிபோன்ற வடிவமுடையதுமான பாகம் புறவிதழ்(Sepals)என்று பெயர். இவற்றின் மேல் அமைந்துள்ளதும் நல்ல மஞ்சள் நிறமுடையதுமான பாகத்திற்கு இதழ் (Petals) என்றுபெயர். இதுதான் புஷ்பத்திற்கு அழகைக் கொடுக்கிறது. இவைகளை மேலே சொன்ன புறவிதழ் தாங்குகிறது. (புஷ்பங்களின் இதழ்கள் பற்பல வடிவமுடையதாயுமிருக்கும். உதாரணமாக பூவரசம் பூவில் மணிபோன்ற வடிவமாயும், வேறு சில புஷ்பங்களில் குழாய்போன்ற வடிவமுடையதாயுமிருக்கின்றன.) புஷ்பத்தினுள் நூல்போன்ற நாலு வஸ்துக்களிருக்கின்றன. அவற்றிற்கு மகரந்தத் தாள்கள் என்றுபெயர். அவை ஒவ்வொன்றின் நுனியிலும் ஒரு சிறிய பெட்டி இருக்கிறது. இதற்கு மகரந்தப் பை என்று பெயர். இவற்றில் மஞ்சள் நிறமான பொடி இருக்கிறது. இதற்கு மகரந்தப் பொடி யென்று பெயர். இவைகளின் நடுவில் இருக்கப்பட்டதற்கு பிஸ்டில் என்று பெயர். இதன் அடிப்பாகம் ஓவரி என்றுபெயர். இது தான் காயாகிப் பழமாகிறது. இதின் நுனிப் பாகத்திற்கு ஸ்டிக்மா என்று பெயர்.

அன்பா! இவ்வுலகத்தை ஒரு பம்பரம்போல் ஆட்டிவைக்கிற ஸர்வவல்லமையுள்ளவர் இப்புஷ்பங்களுக்கு வர்ணங்களை அளித்திருப்பதற்கு அநேக காரணங்களுண்டு. அவற்றுள் எனக்குத் தெரிந்த சிலவற்றைச் சொல்லுகிறேன்.

இந்த ரோஜாச்செடியைப் பார். இதில் எந்தப் பாகம் உன் கவனத்தை இழுக்கிறது? புஷ்பமல்லவோ. இதற்குக் காரணம் அதன் அழகிய சிவந்த நிறமேயாம். புஷ்பங்கள் பார்ப்போருக்கு மிகவும் அழகாயிருக்கும்பொருட்டு அவைகளுக்கு நிறத்தைக் கொடுத்திருக்கிறார்.

பக்ஷி ஜாதிகளில் சிலவும், தேனீ, வண்டு முதலானவைகளும் ஏன் புஷ்பங்களை நாடிச் செல்லுகின்றன?

ஸுந்தரம்—அவற்றில் தேனிருப்பதாகவும், அதை அருந்துவதற்காகச் செல்வதாயும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

கோ.—ஆம். அப்படியே. அவைகள் தேனுக்காக புஷ்பங்களைத் தேடிச்செல்லும்போது பூக்களும், இலை முதலானவைகளும் ஒரே நிறமாயிருந்தால் பூக்கள் இருக்குமிடம் தெரியாது. நாம் புஷ்பம் பறிக்கவேண்டுமென்றாலும் செடியின் பாகங்களெல்லாம் ஒரே நிறமாயிருந்தால் பூக்களைக் கண்டுபிடிப்பது கஷ்டம். ஆகையால் கடவுள் அவைகளுக்கு நிறத்தைக் கொடுத்திருக்கிறார்.

மேலும், மல்லிகை, முல்லை, இருவாக்ஷி முதலியவை மாலையில், இருட்டுகிற ஸமயத்தில் மலருகிறபடியால் அவைகளுக்கு வெள்ளை நிறத்தை அளித்திருக்கிறார். மற்ற நிறங்கள் இருட்டில் அவ்வளவு நன்றாய் தெரியாது. ஈ, வண்டு முதலியவை வெளிச்சமற்ற ஸமயத்தில் இவற்றைத் தேடி வருவதால் இவைகளுக்கு இந்நிறம் ஏற்பட்டது.

புஷ்பங்களில் மகரந்தப்பொடி இருக்கிறது என்று முன்பு சொன்னேனல்லவா. அவை ஜந்துக்களுக்கு ஆகாரமாகின்றது. புஷ்பங்கள் நல்ல நிறமுடையவைகளாயிருந்தால்தான் அவைகளைத் தேடிவரும் ஜந்துக்களுக்கு வெகுதூரத்திலிருந்தாலும் கண்ணுக்குப் புலப்படும்.

இன்னும் சில புஷ்பங்கள் ஜந்துக்களுக்கு வாஸஸ்தலத்தைக் கொடுக்கிறது. உதாரணமாக—ஆலமரத்தின் புஷ்பத்தில் சிறு பூச்சிகள் வாஸம்செய்து அதிலேயே முட்டையிடுகின்றன. ஸாதாரணமாய் நாம் ஆலங்காய் என்று சொல்லுகிறோமே அது பூவாகும். அதனுள் சிறு பூச்சிகளிருப்பதை நாம் நன்றாய் பார்க்கலாம். ஆகவே புஷ்பங்களுக்கு நிறம் அவச்யம் வேண்டும்.

தேனீ, வண்டு முதலியவை தேன் குடிப்பதற்காக மாத்ரம் புஷ்பங்களை வர்ணமுள்ளனவாகக் கடவுள் ச்ருஷ்டிக்கவில்லை. இதற்கு வேறு காரணமுண்டு. ஒரு வண்டு புஷ்பத்தில் வந்துட்கார்ந்து தேன் குடிப்பதற்காக அதனுள் போகும்போது, அதிலுள்ள மகரந்தப்பொடியில் கொஞ்சம் ஜந்துவின்மேல் படுகிறது. உடனே அது மற்றொரு புஷ்பத்திலுள்ள தேனுக்காக செல்லும்போது அதன்மேலுள்ள மகரந்தப்பொடி அந்தப் பூவின் ஸ்டிக்மாவில் படுகிறது. இதன் வழியாய், மகரந்தப்பொடி ஓவரியென்னும் அண்டாசயத்தில் போய் சேருகிறது. அதன்மேல் கொஞ்சகாலத்தில் வித்துண்டாகிறது.

இப்படி வித்துண்டாவதற்குக் காரணம் மகரந்தப்பொடி. இவற்றை எடுத்துச் செல்வதற்கு ஜந்துக்கள் காரணமாகின்றன. ஜந்துக்கள் புஷ்பங்களைத் தேடிவரும்பொருட்டு புஷ்பங்களுக்கு நிறம் ஏற்பட்டது. ஜந்துக்கள் புஷ்பங்களை வெகுதூரத்திலிருந்தே கண்டறிவதற்குக் காரணம் அவற்றின் அழகிய நிறமேயாம்.

இப்படிப் புஷ்பங்களுக்கு அழகிய நிறம் ஏற்படாவிட்டால், அவைகளிடம் தேனீக்களும் வண்டுகளும் வரமுடியாமல் போய், புஷ்பங்களிலிருந்து காயும் பழமும் விதையும் உண்டாவது கஷ்டம். இதற்காகவே கடவுளும் புஷ்பங்களுக்கு பகட்டான வர்ணங்களைக் கொடுத்திருக்கிறார்போலும்.

சுந்தரம்.—கோபாலா! "நீ எனக்கு இவ்விஷயத்தைப்பற்றி அறிவித்ததற்காக நான் உனக்கு என்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டவனாகிறேன். நாம் வெகு நேரமாய் இவ்விடம் பேசிக் கொண்டிருந்து விட்டோம். நேரமாகிறது. போவாம்வா", என்றவுடன், இருவரும் தோட்டத்தை விட்டுநீங்கி வீடுபோய்ச் சேர்ந்தனர்.

டி. எஸ். ராமய்யர்.

## RUMANIAN CUSTOMS & SUPERSITIONS.

BY PANDIT V. SUBRAMANIA AIYAR.

## ருமேனியரின் வழக்கங்களும் அவரது குருட்டு நம்பிக்கைகளும்.

ருமேனியா தேசம் ஐரோப்பாவிலுள்ளது. இதில் ப்ரயாணம் செய்து பார்த்தவர் யாவரும்

பூமியில் இதைக்காட்டிலும் குருட்டு பக்தி கொண்ட தேசம் வேறில்லை என்று சொல்லுவார்கள். ஒரு குழந்தைக்குத் தாயாவதற்குள்ளேயே ஒரு ருமேனிய ஸ்திரீ தன் தேசாசாரங்கள் முழுவதையும் தெரிந்துகொண்டு விடுகிறாள். அவள் இன்னது செய்யலாம், இன்னது செய்யக்கூடாது என்ற விஷயங்கள் முழுவதையும் அறிந்துகொள்கிறாள். ஏதாவது ஒரு பொருளைத் தாய் திருடினால், அதனுடைய உருவம் அவளுக்குப் பிறக்கும் குழந்தையின் முகத்தில் பிரதிபிம்பித்துக் காட்டுமாம். ஆகையினால் அவள் எதையும் திருடுவதில்லை.

ருமேனியக் குழந்தையை, வெள்ளை வாத்தை நனைத்த சூடான ஜலத்தில் குளிப்பாட்டுவார்கள். இப்படிச் செய்வதனால் யாதொரு துர்த்தேவதையும் குழந்தையினிடம் சேராதாம்.

இந்தியாவில் தென்னாற்காடு ஜில்லாபோன்ற பாகங்களில் குழந்தை பிறந்ததும் அதை வெந்நீரில் குளிப்பாட்டும் வழக்கமுண்டு.

ஸ்நானம் செய்வித்த பிறகு மரச்சாம்பலில் சிறிது உமிழ்நீர் கலந்து குழந்தைக்கு பொட்டிடுவது வழக்கம். இப்படிப் பொட்டு இடுவதனால் குழந்தைக்கு கண் த்ருஷ்டியால் ஏற்படும் தோஷம் நீங்கும் என்பது ரொமேனியர்களின் அபிப்ராயம்.

“புவியில் வாய் நீருமிழ்ந்து அணிவிரலினால்
தேய்த்து புது நுதல் திலதமிட்டு மகிழ்பூத்த
பூதித்த திருக்காப்பணிந்து” என்று

திருத்தணிகைச் சந்நிதிமுறை, பிள்ளைத்தமிழ் செங்கீரைப் பருவத்தில் சொல்லியபடி, நம் தேசத்தில் குழந்தைக்கு மேற்கூறியபடியன்றி, விபூதித் திருக்காப்பையும் ரக்ஷையாக இடும் வழக்கம் நாளதுவரையில் இருப்பது கவனிக்கத்தக்கது.

குழந்தைக்கு நாமகரணம் செய்கிறவரையில் ருமேனியாவில் குழந்தையைத் தனியாய் விடுவதில்லை. அப்படிவிட்டால் ஏதாவது பிசாசு அக்குழந்தையினிடம் போய் அதனைச் சிவந்த நிறமுள்ள வேறு பிசாசாக மாற்றிவிடினும் விடலாம். அல்லது அங்குமிங்கும் திரிந்துகொண்டிருக்கும் ரத்தம் குடிக்கும் ராக்ஷஸாம்சமுள்ள வாம்பையர் என்ற வெளவால் அக்குழந்தையினிடம் வந்து அக்குழந்தையைத் தன்ஜாதி வெளவாலாக மாற்றிவிடலும் கூடுமாம். ஆனால் சில வேளைகளில் குழந்தைகளை அப்படியே விட்டுப்போகும் காலமும் ஸம்பவிப்பதுண்டு. அப்போது துர்த்தேவதைகள் அணுகாமலிருப்பதற்காக அக்குழந்தையின் பக்கத்திலோ எதிரிலோ ஒரு விளக்குமாற்றைவைத்துப் போவதுண்டு. விளக்குமாற்றைக்கண்டு இப்பேய்கள் குழந்தையினிடம் வரப் பயப்படுமாம். அதற்காகவே ருமேனியர் அவ்வாறு செய்கிறார்கள்.

இந்தியாவிலும் துர்த்தேவதைகள் விளக்குமாற்றைக்கண்டு பயப்படுவதாக ஐதீகமுண்டு. சில பிசாசுகளை துடைப்பங்கொண்டு வெருட்டினால் அவை ஓடிப்போய் விடுகின்றனவென்று இந்தியர்களில் பலர் எண்ணிவருகிறார்கள்.

குழந்தை படுத்திருக்கிற தொட்டிலை ருமேனியாவில் எவரும் தாண்டக்கூடாது. தாண்டினால் குழந்தை உயரமாக வளராதாம். தாய் தன் குழந்தையின் வலதுகையில் முத்தமிட்டால் குழந்தை பிற்காலத்தில் கௌரவமுடையதாம். இடதுகையில் முத்தமிட்டால் அது திருடனாகி விடுமாம். கழுத்தில் முத்தமிட்டால் அக்குழந்தை தன்னயங்கருதுவதாகி, கீழ்ப்படியும் ஸ்வபாவமில்லாததாகி கடைசியில் கெட்டபையனாகவே மாறிவிடுமாம்.

குழந்தை மட்டுமல்ல, மற்றெப்பொருளையும் போட்டுத்தாண்டக் கூடாதென்பது இந்தியர்களின் கொள்கை. குழந்தை தூங்குகையில் முத்தம் கொடுத்தல் இந்தியாவில் நல்லவிஷயமாக நினைக்கப்படுவதில்லை. குழந்தை பேசுவதற்கு முன்னால் அதற்குக் கண்ணாடி காட்டினால் அது ஊமையாக மாறிவிடுமென்பதும், குழந்தைக்கு மையிட்டால் அது ஸபைகோழையாய் போய்விடுமென்பதும் இந்தியரின் கொள்கைகள். ருமேனியாவில் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் குழந்தையாயிருக்கும்போதே செய்துவிடுவார்கள். அப்போது குழந்தை சிறிது அழவேண்டும். அது அந்த ஸமையத்தில் அழாமல் போனால், ஒரு அபசகுனமாகுமாம். அப்படி அழாமலிருக்கும் குழந்தையை, அதன் ஆயுஸு முழுமையும் கரித்துக் கொட்டுவார்கள். ஆகையால் ருமேனியர் ஞானஸ்நானம் செய்விக்கக் கொண்டுபோகும்போது அழாமலிருக்கும் குழந்தையை ஒருவருமறியாது சிறுகிள்ளு கிள்ளி அழவைப்பதுண்டு.

இந்தியாவில் குழந்தை பூமியில் விழுந்தபொழுதே ஜடம்என்ற வாயுவினால் தாக்கப்பட்டு அழவேண்டும் அழாமல்போனால் நல்ல ஊசிகளை பழுக்கக் காய்ச்சிக் கொஞ்சங்கூட இரக்கம் காட்டாமல் அதன் நெற்றி வயிறுகளில் அது வீறிட்டழுமட்டும் சூடுவார்கள். இச்சூட்டின் தழும்புகள் அதிக வயஸான பிற்பாடு கூட மறையாமலிருப்பதைப் பார்க்கலாம். ஜடம் என்ற வாயுவினால் தாக்கப்படாது அழாமலிருக்கும் குழந்தையை சடகோபர், மாறன் என்று வைஷ்ணவ சமயிகள் பெயரிட்டழைப்பார்கள்.

ருமேனியாவில் கல்யாணம் குறைந்த பக்ஷம் மூன்று நாட்கள் நடக்கிறது. கல்யாணத்தில் சமையல் சாப்பாடு முதலியவற்றிற்கு அங்கு ஒரு நியமம் ஏற்பட்டிருக்கிறது. அதில் தவறினால் தம்பதிகளுக்கு விசேஷ ஆபத்து ஸம்பவித்து விடுமென்பது ருமேனியரின் கொள்கை. எப்பொழுதும் வியாழக்கிழமையிலேயே எல்லாக் கல்யாணங்களும் ஆரம்பமாகவேண்டும். அடுத்த சனிக்கிழமையில் தம்பதிகளைச் சேர்த்து ஒரு நல்ல விருந்திடுவார்கள். கலியாணத்தின் பூர்வாங்கங்களெல்லாம் பெண், பிள்ளைகளின் இரு பெற்றோர்களின் வீடுகளிலும் நடந்தேறுகின்றன. உத்தராங்கங்களெல்லாம் தம்பதிகள் அப்புறம் வஸிக்கும் வீட்டில் நடந்தேறுகின்றன.

விருந்தினர் தம் வீட்டில் முதல் முதல் வந்து சேர்ந்ததும், அவர்கள்மேல் கல்யாணப் பெண் குளிர்ந்த ஜலத்தை கரண்டியினால் எடுத்துத் தெறிப்பது ருமேனியர்களின் வழக்கம். குளிர்ந்த தண்ணீர்ப் பொட்டுக்கள் தெறிப்பது அவர்களை நல்வரவேற்பதற்காகும். எல்லா விருந்தினரும் வந்து சேர்ந்தவுடன் அவர்களுக்கு விருந்து செய்யப்படுகிறது. சனிக்கிழமை இரவு தொடங்கி, ஞாயிற்றுக்கிழமை முடிய இந்த விருந்து நடக்கிறது. ஞாயிற்றுக்கிழமையன்றுதான் கல்யாணம் என்பது ஸரியாக நடக்கிறது. க்ராமத்தலைவனால் முதன் முதலில் இக்கல்யாணம் நடத்தப்படுகிறது. அதற்குப் பிறகு அத்தம்பதிகள் தேவாலயம் செல்லுகிறார்கள். பின்னிட்டு வீட்டுக்கு வந்து பெரிய விருந்துச் சாப்பிடுகிறார்கள். இதனுடன் கல்யாணம் முடிகிறது. மறுநாள் முழுவதும் தம்பதிகளைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள்.

சாகுந்தருவாயி லிருக்கும் மனிதனை ருமேனியா நாட்டார் இருட்டில் சாகவிடுவதில்லை. அவனுடைய ஆவி பிரியும்போது, அவன் கையில் ஒரு மெழுகுவர்த்தி எரிந்துகொண்டே இருக்கும். செத்துப்போகும்போது வெளிச்சமில்லாமல்போனால் துர்த்தேவதைகள் சாகும் மனிதனுடைய உயிரைப்பிடித்துக்கொண்டு தொந்தரவு செய்யுமாம். வெளிச்சமிருக்கும்பக்ஷத்தில் இத்தொந்தரவு யாதொன்றுமில்லாமல் உடம்பை விட்டு நீங்கும். ஜீவன் ஸ்வர்க்கத்திற்கு நேரே போகுமாம். இறந்துபோகும் மனிதன் ப்ராணனை விட்டதும், அவன் இருந்த அறையின் ஜன்னல் கதவுகளை நன்றாகத் திறக்கவேண்டுமாம். அல்லது கதவின் ஜன்னல் கண்ணாடிகளி லொன்றை உடைக்க வேண்டுமாம். அல்லது கண்ணாடிகளுக்குப் பதிலாக உபயோகத்திலிருக்கிற எண்ணெய்க் கடிதாசுகளை கிழிக்கவேண்டுவதவச்ய

மாம். அப்படிச் செய்யாவிட்டால், உயிர் அவ்விடம்விட்டு ஸுலபமாய்ப் போக முடியாதாம். சவத்திற்குரிய அந்தியக் கிரியைகளெல்லாம் நடந்தபிறகு, எல்லாரும் உடலைவிட்டு நீங்கின உயிர் மோக்ஷமடைந்து ஸுகத்தை அடைவதற்காக, மதுபானம் பண்ணுகிறார்கள். ஆனால் அப்படிச் செய்வதன்முன்னால் சில சாராயத் துளிகளை அவர்கள் பூமியில் சிந்தாமலிருப்பதில்லை.

பண்டித வி. ஸுப்ரமண்ய அய்யர்.

## LOVE NEVER LOST.

BY A. V. RAMASWAMI.

## அன்புக்கும் அழிவோ.

### I. அத்யாயம்.

மாலை 5½-மணியாயிற்று. வெயிலின் உக்ரமும் சற்றுத் தணிந்து, ஸுகந்த காற்று வீச ஆரம்பித்தது. அன்றையதினம் வியாழக்கிழமையாதலால் ராமநாதய்யர் கருடதரிசனம் செய்யக்கருதி தெருத்திண்ணையில் வெற்றிலைபோட்டு மென்றுகொண்டே ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தவண்ணமாய் உட்கார்ந்திருந்தார். சற்று நேரத்திற்கெல்லாம் வெளியே போயிருந்த செல்லம் கண்ணில் நீர் தளும்ப தெருக்கோடியில் அழுதுகொண்டு வருவதைக்கண்டார். அவள் அருகில் வந்தவுடன் "ஏனம்மா அழுகிறாய்? யார் உன்னை என்ன செய்தார்கள்?" என்று அன்பாகக் கேட்டார். செல்லம் ஒன்றும் பதில் சொல்லாமல் மேன்மேலும் விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள். அந்த ஸமயத்தில் யாரோ ஒரு கனவான் ராமநாதய்யரைக் கண்டு பேச வந்ததனால், அவர் வாசல் குறட்டில் நின்றுகொண்டு உள்ளே வீட்டுக் கார்யங்களைச் செய்துகொண்டிருந்த தம் மனைவியை கூப்பிட்டு "குழந்தை செல்லம் என்னமோ அழுகிறாள். கூப்பிட்டு விசாரி" என்று சொல்லிவிட்டு வந்தவருடன் ஸம்பாஷணை செய்துகொண்டிருந்தார். விசாலாக்ஷி செல்லத்தை உள்ளே அழைத்துக்கொண்டுபோய் அழுவதற்கு காரணத்தை கேட்டாள். அவளும் அழுதுகொண்டே, "நானும், லக்ஷ்மியும் காவேரியாத்திலே சோழியாடிவிட்டு ஆத்துக்கு வரும்பொழுது, அவாத்து பொன்னு மாடியிலே யிருந்து என்னைக் காட்டி, பக்கத்திலேயிருந்த யாரோ ஒருத்தியிண்டே 'இந்தப் பெண்ணைப் பார்த்தயாடி, குட்டிச்சுவரைப்போல் வயஸாச்சு, செக்கொலக்கை மாதிரியிருக்கு, இன்னும் கல்யாணம் பண்ணாதே வைத்துக்கொண்டிருக்கா. அவர் தைரியந்தான் என்ன தைரியமோ. இதுவும் ஒண்ணும் கேழ்க்காதே தின்றுவிட்டு ஊர் சுத்திக்கொண்டிருக்கு. இதனுடனொடுத்த பொங்களுக்கெல்லாம் கலியாணமாய் எட்டு பிள்ளை பெத்தாச்சு?" என்று தன்னைக் குறைவாகச் சொன்னதாக சொல்லிவிட்டு ஓவென்று அலறி அழ ஆரம்பித்தாள். இதைக்கேட்ட விசாலாக்ஷிக்குக் கோபம் பொங்கிற்று. உதடு துடிதுடித்தது. கண்களில் பொரி பறந்தன. தனது வருத்தத்தை செல்லத்திற்கு காட்டி அவளை இன்னும் அதைர்யப்படுத்தாமல் ஒருவாறு அடக்கிக்கொண்டு, "அவள் இவ்வூரில் ஒரு பெரிய வம்புக்காரி யென்று உனக்கு தெரியாதா? அவளுக்கு வம்பு அகப்படாவிட்டால் அவள் உயிர் போய்விடும். யாரை யாவது ஒருவரைப்பற்றி ஏதாவது சொல்லிக் கொண்டிருந்தால்தான் அவளுக்கு பொழுது போகும். அவள் சொல் ஒரு லக்ஷ்யமா. ஊரிலே பலபேர் பல சொல்லுவார்கள். அதை யெல்லாம் நாம் காதில் போட்டுக் கொள்ளலாமோ, அசடே, உனக்கு எல்லாந் தெரிந்திருந்தும் ஒன்றும் தெரியாதவள்போல் அழுகிறாயே. கண்களிரண்டும் கோவைப் பழம்போல் சிவந்துவிட்டனவே" என்று சொல்லித் தேற்றிக்கொண்டிருந்தாள். அந்த ஸமயத்தில் ராமநாதய்யரும் ஸம்பாஷணை முடிந்தவுடன் வாசலிலிருந்து உள்ளே சென்று ஸமாசாரத்தை விசாரித்தார். ஒன்றும் தோன்றாது சற்று நேரம் திகைத்து நின்று பிறகு பக்கத்திலிருந்த கட்டிலில் சாய்ந்துகொண்டு ஆலோசனையிலாழ்ந்துவிட்டார்.



பெற்றோர்களுக்கு செல்லம் ஒரே பெண். அவளுக்குமுன் மூன்று குழந்தைகள் பிறந்து இறந்தன. ஆகையால் ராமநாதய்யரும் அவரது மனைவி விசாலாக்ஷியும் செல்லத்தை மிகவும் அருமையாக வளர்த்து வந்தார்கள். செல்லம் என்னும் அவள் பெயரே, அவர்கள் அவளிடத்தில் வைத்திருந்த ஆசையின் மிகுதியைக் குறிக்கும். செல்லத்தின் விஷயத்தில் எவ்வளவு பணமென்றாலும் ராமநாதய்யர் அலுப்பு சலுப்பில்லாமல் செலவழிப்பார். கால் முதற்கொண்டு தலைவரையிலும் அவளுக்கு நகைகள் பூட்டியிருந்தார். ராமநாதய்யருக்கு பணத்துக்குத் தான் கேட்பானேன்! அவர் பெற்றோர்கள் ஏராளமான ஸொத்தை வைத்து உயிர் துறந்தார்கள். ராமநாதய்யரும் தனது மாதா பிதாக்களுக்கு ஏக புத்ரனாகையால் அவ்வளவு ஆஸ்தியையும் தாமே அடைந்தார். ஏழு தலைமுறைகளுக்கு உட்கார்ந்து சாப்பிட்டாலும் அந்த ஸொத்து அழியாது. அவ்வளவு பெரிய தனிகரிடத்தில் செல்வபுத்ரியாக அவதரித்த செல்லம் உடம்பு முழுவதும் நகைபோட்டுக்கொண்டிருப்பது ஓர் அதிசயமாகுமா? அல்லது முதலில் மூன்று குழந்தைகள் இறந்து கடைசியில் ஒன்று செல்வமாகப் பிறந்து வளர்ந்து தம்மைக் களிப்பிக்கும் புத்ரியினிடத்து பெற்றோர்கள் அவ்வளவு அன்பு பாராட்டுவது தான் ஓர் அதிசயமாகுமா?

ஆனால் ஒன்று. ராமநாதய்யர் தனவந்தரானபோதிலும் கர்வம் பாராட்டாமல் எல்லோரிடத்திலும் அமைதியாகப் பேசுவார். எவரையும் அலக்ஷியம் செய்யார். இளகிய மனதையுடையவர். ஒரு பிச்சைக்காரனையும் "சீ, போ" என்று சொல்லமாட்டார். பிறர் வருத்தத்தை தம் வருத்தம்போல் பாராட்டுவர். இதனால் ஊர் ஜனங்களுக்கு இவரிடம் அதிக ப்ரீதி உண்டாயிற்று. ஊரில் ஒருவரும் இவரைப் பற்றி குறை கூறுவதில்லை. எல்லோரும் இவரிடம் மரியாதையாகவே நடந்து கொள்வார்கள். இப்பொழுது யாரோ ஒரு விதவை தனது அன்பான பெண்ணை குறைவாகச் சொன்னவுடன் துக்கம் மனதைப் பிளந்தது. தன்னையறியாமலே கண்ணீர்விட்டார். இதைக்கண்ட அவர் மனைவி, "இது என்ன அறியாமைத்தனம். யாரோ ஒருத்தி ஏதோ ஒன்றைசொன்னால், அதற்காக நீங்கள் வருத்தப்பட்டுக் கொண்டு உட்கார்ந்துவிட்டீர்களே. எழுந்திருங்கள். அந்த முண்டைக்கு நமது பேரில் ஆங்காரம்" என்றாள்.

"என்ன ஆங்காரம்?" என்று கேட்டார் ராமநாதய்யர்.

"ஆமாம், போனமாஸம் அவள் அம்மா ஜானகிக் கிழவி செத்துப்போய் விட்டாளாம். நான் அதற்கு உபசாரம் கேட்கவில்லையாம். அதுதான் ஆங்காரம். வேறே என்ன இருக்கு. கிழவிக்கு என்ன உபசாரம் என்றுதான் பேசாமலிருந்துவிட்டேன்" என்றாள் விசாலாக்ஷி.

ராமநாதய்யர் சற்றுநேரம் பொறுத்து "நமது குழந்தை செல்லத்துக்கு இப்பொழுது என்ன வயஸாகிறது." என்றார்.

"வாளைய ஆனிக்கு பதினொன்றாவது நிறைந்து, பன்னிரண்டாவது வயஸு பிறக்கிறது. இவளும் அவாத்து மீனாக்ஷி பெண் கமலாம்பாளும் சரிவயஸு. அவள் ஆனிமாசம் பதினெட்டாந்தேதி பிறந்தாள். இவள் இருபத்திரண்டாந் தேதி பிறந்தாள். அப்படி யென்ன இவளுக்கு வயஸாய் விட்டது. அந்த முண்டை வொண்ணு செக்கொலக்கைபோலே இருக்கு. குட்டிச் சுவருக்கு ஆறவயசாகிற தென்றாள். அவள் தமக்கை பொண்ணுக்கு பூரா பதினைந்து வயஸாகிறது. குதிரைபோல் நிற்கிறது. வரன் அகப்படாதே திண்டாடறா. நம்ப செல்லத்துக்கென்ன. ஆயிரம் பேர் ராஜா வாட்டமா காத்துக்கொண்டிருக்கா. இப்பொழுது சொன்னால் போராதா. பட்டணத்

தில் ராமக்ருஷ்ணய்யருக்கு இருபது வயஸில் ஒரு பிள்ளையிருக்காப். இந்த வருஷம் பணங் கட்டி பீ. ஏ. பரீக்ஷைக்கு போயிருக்கானும். பதினாயிரம் ரூபாய்க்கு சொத்து இருக்கு. ஆனால் அவாள் ரொம்ப சிக்கனம். ஒரு தம்படி கூட செலவழிக்கமாட்டா. எதிர் ஜாமீன் இரண்டாயிரம் ரூபாய் கேழ்க்கிறா. போனமாஸம் அந்த பிள்ளைக்கு அத்தை இந்த ஊருக்கு வந்திருந்தாள். பெண்ணைக் கொடுத்தால் இன்றைய தேதியில் பண்ணிக்கொள்வதாகச் சொன்னாள்" என்றாள் விசாலாக்ஷி.

ராமனாதய்யர் "பட்டணத்தில் எந்த ராமக்ருஷ்ணய்யரைச் சொல்லுகிறாய். இந்த ஊரில் ஸுப்ரமணிய அய்யர் இருக்கிறாரே அவர் தமக்கை பிள்ளையோ?" என்று கேட்டார்.

விசாலாக்ஷி "அவர் இல்லை. அவருக்குப் பிள்ளையே கிடையாது. புதுச்சேரியில் உங்கள் பெயர்கொண்டவரிருக்கிறாரே அவருக்கு சிறுதாயார் பிள்ளை." என்றாள்.

"ஓகோ, அவரோ தெரிந்துக்கொண்டேன். அவருக்கு பட்டணத்தில் "போர்டு ஆபீஸில்" வேலை. மாதம் 250-ரூபாய் சம்பளம். மனுஷர்களெல்லாம் நல்லவர்கள்தான். அவருக்குப் பெண் கிடையாது. நம்ம குழந்தையைக் கொடுத்தால் பெண்ணுக்கு பதில் பெண்ணாக வைத்துக் கொள்வார்கள். ஆனால் அவர் என்ன பாவத்தைப் பண்ணினாரோ கால்முழுவதிலும் வெள்ளை குஷ்டம்" என்றார் ராமனாதய்யர்.

விசாலாக்ஷி உடனே "அவருக்கு வெள்ளை குஷ்டமானால் பிள்ளைக்கென்ன. கட்டுக்குடுமியும் அதுவுமா கண்ணுக்கு லக்ஷணமாயிருக்கிறான். இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கலாம்." என்றாள்.

"தவிர அது நூதன ஸம்பந்தம். சைதாப்பேட்டையில் சதாசிவய்யரிருக்கிறாரே. அவருக்கு ஒரு பிள்ளை இருக்கிறான். கொடுத்தால் பண்ணிக்கொள்வார்கள். ஆனால் பையனுக்கு படிப்பு போராது. ஆஸ்திபாஸ்தியுமில்லை. இப்பொழுது என்னமோ அவர் 300-ரூபாய் சம்பளம் வாங்குகிறார். இன்றைக்கு அவர் படுத்துக் கொண்டு விட்டால் மறுநாள் செம்பை எடுத்துக்கொண்டுதான் போகவேண்டும்" என்றார் ராமனாதய்யர்.

இதைச் சொன்னதும் அவர் மனைவி "நன்றாகப் பார்த்துக் கண்டு பிடித்தீர்கள். தெரியாதா ஸமாசாரம் உங்களுக்கு?" என்றாள்.

உடனே ராமனாதய்யர் மிகவும் ஆவலாய் "என்ன என்ன" வென்று கேட்டார். அதற்கு விசாலாக்ஷி "அவருக்கு தங்கை ஒருவள் இருக்கிறாள். அவள் பால்யத்திலேயே அமங்கலியாய் விட்டாள். மிகவும் கெட்ட நடத்தையையுடையவள். ஒருவரும் அந்த இடத்தில் கொண்டு கொடுத்து ஸம்பந்தம் செய்வதில்லை" என்றாள்.

இதைக் கேட்டதும் ராமனாதய்யர் "அப்படியா ஸமாசாரம். எனக்கு இதுவரையிலும் தெரியாதே. அந்த இடம் வேண்டவே வேண்டாம். நான் பட்டணத்திலிருந்துவந்தபொழுது அவரை சைதாபேட்டை ரயில்வே ஸ்டேஷனில் கண்டேன். அப்பொழுது கல்யாண ப்ரஸ்தாபம் வந்தது. 'உங்களுக்கு பெண் இருக்காமே. கொடுத்தால் என் பையனுக்கு பண்ணிக் கொள்ளுகிறேன். நமது பால்ய ஸ்நேகிதம் மாறாமலிருக்கும். ஊருக்குப்போய் பெண் ஜாதகத்தை அனுப்புங்கள்' என்று சொன்னார். அது இப்பொழுது எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. அதனால் தான் சொன்னேன்" என்றார்.

பிறகு விசாலாக்ஷி "இவ்வளவு தூரம் அசலில் பார்ப்பானேன். நமது சுப்பரமணியனுக்கே கொடுத்துவிட்டால் போகிறது" என்றாள்.

ராமனாதய்யர்.—"உன் தமயனுக்கு கடிதம் எழுதிகேட்டேன். 'பையனுக்கு இன்னும் வயஸாகவில்லை. இப்பொழுதே கல்யாணம் பண்ணிவிட்டால் படிப்பு கெட்டுப் போய்விடும். இன்னும் இரண்டு அல்லது மூன்று வருஷம் கழித்துத்தான் கல்யாணம் செய்யப் போகிறேன்' என்று பதில் எழுதிவிட்டா"னென்றுசொன்னார்.



இதைக்கேட்டதும் விசாலாக்ஷிக்கு கோபம் வந்தது. "அவன் நம்ப செல்லத்தை பண்ணிக் கொள்கிறேனென்று அவள் பிறந்த நாளன்றே பிடித்து சொல்லிக்கொண்டு வருகிறான். இரண்டு வயஸு வித்யாஸமிருக்கிறது. ஜாதகமும் பொருத்தமாயிருக்கிறதென்று அவனே பலதடவைகளில் என்னிடம் சொல்லியிருக்கிறான். ஆனால் மன்னிக்கு செல்லத்தை பண்ணிக்கொள்ள இஷ்டமில்லை. அவனுக்கு வேப்பிலையடித்து அவன் இஷ்டத்தை மாத்தியிருக்கிறாள். அவள் உறவில் யாரோ ஒரு பெண் இருக்கிறதாம். அதை பண்ணிக் கொள்ளப்போகிறாளாம். அவள் தன் உறவிலேயே பண்ணிக்கொள்ளட்டும். அப்புறம் நம்ப செல்லத்துக்கு யாராவது ஆம்படையான் அகப்படுவானோ! அவள் பிள்ளை அழகுசொட்டுகிறது. நம்ப செல்லம் அழகில்லை. வேறே அழகா எலுமிச்சம் பழத்தைப்போலே பெண் பார்த்து பிள்ளைக்கு கலியாணம் பண்ணிக்கொள்ளட்டும். செல்லம் ஆம்படையானே இல்லாமல் நின்றுவிடட்டும். அவள் பிள்ளையை காட்டித்தானே செல்லத்தை பிறப்பித்திருக்கிறது" என்று கோபமாகச் சொன்னாள்.

ராமநாதய்யர்.—"அவள் பண்ணிக் கொள்ளுகிறேனென்று சொன்னாலும் எனக்கு கொடுக்க இஷ்டமில்லை. எப்பொழுதும் உறவில் ஸம்பந்தம் செய்யக்கூடாது. மனஸ்தாபத்திற்கு இடமுண்டாகும்; நாளைக்கு ஒரு வார்த்தைக்கு இடம் வைத்துக்கொள்ளக் கூடாதென்றே, பரியாதைக்காக உன் தமயனுக்கு கடிதம் எழுதிக் கேட்டேன். இப்பொழுது செல்லத்தை புதுச்சேரியில் ஸாமிநாதய்யர் பிள்ளை அபிராமனுக்குத் தான் கொடுப்பதாய் யோஜனை பண்ணுகிறேன். ஏதோ கொஞ்சம் எழுதப் படிக்கத் தெரியும். சோத்துத் துணிக்கு இருக்கிறது. கஷ்டப்படவேண்டாம். பிள்ளை நல்ல மாதிரி" என்றார்.

அவர் மனைவி உடனே "அவர்கள் அவ்வளவாக பணக்காரரில்லையே. பிள்ளைக்கு படிப்பும் இல்லை. ஒன்று ஆஸ்தியாவது இருக்கவேண்டும். அல்லது படிப்பாவது இருக்கவேண்டும். இரண்டில் ஒன்றும் சரியாக இல்லை. அந்த இடத்தில் கொடுக்க எனக்கு இஷ்டமில்லை" என்றாள்.

"ஏதோ பத்து ரூபாய் பிள்ளை ஸம்பாதிப்பான். அதைப்பற்றித் தடையில்லை. போறாக்குறைக்கு நாம் கொடுத்துப் பார்த்துக்கொண்டால் போகிறது. அப்படிப்பட்ட பிள்ளைகள் தான் டம்பம் பாராட்டாமல் அடங்கி நடக்கும். பெண்ணையும் நன்றாக வைத்துக்கொள்ளும்" என்றார் ராமநாதய்யர்.

இதைக் கேட்டதும் விசாலாக்ஷி கொஞ்சம் அருவருப்பாய் "யாருக்கு வேண்டுமென்றாலும் கொடுங்கள். ஒரு பரிசாரகன் காலில் கட்டினாலும் கட்டுங்கள். பொழுதுபோய்விட்டது ராத்திரிக்கு சமைக்க அடுப்புமூட்டவேண்டும்" என்று பதில் சொல்லிவிட்டு, தூணில் சாய்ந்து கண்களைத் துடைத்துக்கொண்டிருந்த செல்லத்தைக் கையைப்பிடித்து அழைத்துக்கொண்டு தன் காரியங்களைப் பார்க்கப் போய்விட்டாள். ராமனாதய்யரும் தெருவில் எழுந்து வந்துவிட்டார்.

## II. அத்யாயம்.

அன்றையதினம் ராத்ரி ராமனாதய்யரும் அவர் மனைவியும் சீக்ரமே படுத்துறங்கிவிட்டார்கள். விளக்கு ப்ரகாசமாக எரிந்துகொண்டிருந்தது. செல்லத்திற்கோ தூக்கம் வரவில்லை. பற்பல விஷயங்களைப்பற்றி சிந்திக்க ஆரம்பித்தாள்.

செல்லத்திற்கு பள்ளிக்கூடத்தில் வாசிப்பதற்கு ப்ரியமதிகம். இதை தெரிந்துகொண்டே அவள் பெற்றோர்கள் இதுவரையில் அவள் விவாக விஷயத்தைப்பற்றிப் பேசாமலிருந்தார்கள். செல்லத்தின் ஸ்நேகிதர்களுக்கெல்லாம் சிறுவயதிலேயே கல்யாணமாய் விட்டதனால் படிப்பை நிறுத்திவிட்டார்கள். சில ஸம

யங்களில் அவர்களெல்லோரும் செல்லத்தை பார்த்து "நீ பெண்பிள்ளைதானே, எதற்காக வாசிக்கிறாய், என்ன உத்யோகம் செய்யப்போகிறாய், நாங்களெல்லோரும் நின்றுவிடவில்லையா" என்று கேட்பது வழக்கம். செல்லம் உடனே "ஆண்பிள்ளைகள் தான் படிக்கவேண்டுமென்று எந்த சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறது. நாம் படித்தால் வராதோ. அவர்கள் தான் மனித வர்க்கத்தில் சேர்ந்தவர்களோ. நாம் எல்லாம் மாடுகளா. படிக்காதவர்களுக்கும் ம்ருகஜாதிகளுக்கும் என்ன வித்யாஸம்? என்ன உத்யோகம் செய்யப்போகிறாய்? என்று கேட்கிறீர்களே. நமது புத்தியை வ்ருத்தி பண்ணுவதற்கேயன்றி உத்யோகம் செய்வதற்காகத்தான் வாசிப்பதோ? நன்றாய்ச் சொன்னீர்கள். நீங்கள் கொஞ்சம் வாசித்திருந்தால் இப்படி சொல்லியிருக்கமாட்டீர்கள்" என்பாள். அவர்கள் மறுபடியும் "நாமெல்லாம் அதிகமாக படிக்கக்கூடாது. படித்தால் நமது புருஷர்களுக்கு அடங்கி நடக்கமாட்டோமாம்" என்பார்கள். அதற்கு செல்லம் "அது மதியீனர் சொல்வது. புருஷன் பெண்சாதி இருவரும் படித்தவர்களாக இருப்பாரேயானால், ஒரு மனப்பட்டு இன்புற்று வாழ்வார்கள். இருவருக்கும் நல்லது, கெட்டது என்னும் பகுத்தறியும் சக்தி இருக்கும். ஒருவர் படித்து, ஒருவர் படிக்காமல் இல்லறம் நடத்துவது எப்படியிருக்குமென்றால், ஒரு வண்டியில் கட்டி ஓட்டும் இரண்டுமாடுகள், ஒன்று முன்புறமும் மற்றொன்று பின்புறமும் இழுப்பதுபோலாகும். இரண்டு எருதுகளும் ஒரு மனதுடன் ஓரே பக்கத்திலிழுத்தா லெப்படி யிருக்குமென்று நீங்களே யோஜித்துப்பாருங்கள்" என்றுதனது உபந்யாஸத்தை ஆரம்பித்துவிடுவாள். அதைக் கேட்டவுடன் அவர்கள், அவளுடன் பேசுவது அனர்த்தம் என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு அந்தப் பேச்சை நிறுத்திவிட்டு, வேறு விஷயங்களைப்பற்றி பேசஆரம்பிப்பார்கள்.

இப்பொழுது செல்வம் தன் விவாக விஷயத்தைப்பற்றி ஸாயங்காலம் தனது பெற்றோர்கள் பேசினதை நினைத்துக்கொண்டாள். "விவாகமாகும்பக்ஷத்தில் எனது படிப்பை நிறுத்திவிடவேண்டியிருக்குமே. ஒருவருக்கு அடிமை யாகாதவரையில் இஷ்டம்போல் படிக்கலாம். விவாகமானபிறகு பள்ளிக்கூடத்தில் படிப்பதற்கு பெற்றோர்களும் ஸம்மதிக்கமாட்டார்கள். புக்ககத்தி லிருப்போரும் ஸம்மதியார்களே. ஊரிலுள்ளோரும் இப்பெண் கலியாணம் ஆனபிறகு கூட வாசிக்கிறது' என்று பரிகாஸம் செய்ய ஆரம்பிப்பார்களே" என்று எண்ணிக்கொண்டாள். சற்றுநேரத்திற்கெல்லாம் மறுபடியும் "என்றைக்கிருந்தாலும் கல்யாணம் செய்துகொள்ள வேண்டியதுதானே. எப்படிக்கிருந்தாலும் நன்றாய் எழுத படிக்கத் தெரிந்துவிட்டது. வீட்டிலேயே தெரிந்த படிப்பை மறக்காமல் வ்ருத்திசெய்தால் போகிறது. ஆனால் இன்று ஸாயங்காலம் எனது தகப்பனார் என்னை புதுச்சேரியில் அபிராமனுக்கு கல்யாணம் செய்துகொடுப்பதாகச் சொன்னாரே. அவருக்கு ஏன் இவ்வித விபரீதபுத்தி தோன்றியிருக்கிறதோ. இத்தனைநாள் பேசாமலிருந்துவிட்டு கடைசியில் நல்ல மாப்பிள்ளையாக தேர்ந்தெடுத்தார். 'செல்லம், பயப்படாதே. உனக்கு நன்றாக படித்தவனும் அழகாயிருக்கிறவனுமாகப்பார்த்து கல்யாணம் செய்துகொடுக்கிறேன்' என்று சொன்னாரே. இப்பொழுது எல்லாவற்றையும் மறந்து, எழுத்து வாஸனையையே அறியாதவனும், ஸர்வ ஏழையும், அவலக்ஷணத்திற்கு தலைவனுமான அபிராமனுக்குத் தான் கொடுக்கப் போகிறேன் என்று வாய் கூசாமல் சொல்லுகிறாரே. அவ்வார்த்தைகளைச் சொல்ல அவருக்கு எப்படித்தான் மனம் துணிந்ததோ. என் தாயார் மறுத்தபொழுது 'ஏழைப்பிள்ளை தான் அடங்கி நடக்கும், பணக்கார இடத்தில் கொடுத்தால் பிள்ளை டம்பம் பாராட்டும், மரியாதையாகவே நடக்



காது' என்று சொல்லுகிறாரே. இவைகளை அவர் மனப்பூர்த்தியாகச் சொல்லுகிறாரோ அல்லது பரிகாஸமாகச் சொல்லுகிறாரோ தெரியவில்லையே. அவர் சொன்ன மாதிரியைப் பார்த்தால் உண்மையாகத்தான் சொன்னதுபோல் தோன்றுகிறது. அவைகளை சொன்னவுடன் எனது மனம் பகீர் என்றதே. இதற்காகவோ என்னை இவ்வளவு அருமையாக வளர்த்தார்? என் மனம் கோணாமல் நடந்தார்? நான் என் மனதில் முன்னமேயே ஒரு கணவனை வரித்துவிட்டேனே. என் ஆசை முழுவதையும் அவர் கவர்ந்துகொண்டாரே. அந்த ஆசையை மீளவும் நான் அவரிடத்திலிருந்து க்ரஹிப்பது எங்ஙனம்?" என்று சொல்லிக்கொண்டே மறுபக்கம் திரும்பினாள். விளக்கு வெளிச்சத்தில் எதிரே சுவரில் மாட்டியிருந்த படம் ஒன்று கண்ணுக்கு புலப்பட்டது. அது துஷ்யந்தனும், ஸகுந்தலையும், ஒருவரை யொருவர் கட்டியணைத்து முத்தமிடும் பாவனையாக எழுதப்பட்டிருந்தது. அதை பார்த்தவுடன் செல்லத்திற்கு மனம் கலங்கிற்று. "ஐயோ, துரை, நீ என்றைக்கு என்னை இதுபோல் உன் மெல்லிய கரங்களைக்கொண்டு கட்டியணைத்து முத்தம் கொடுப்பாய். என் அன்பு முழுவதையும் நீ கொள்ளை கொண்டாயே. நான் உன்னை என் மனப்பூர்த்தியாக நேசிக்கிறேனே. உன்னைத் தவிர வேறே ஒருவரையும் கல்யாணம் செய்து கொள்வதில்லையென்று ஸத்யமாகச் சொல்லுகிறேனே. ஸதா ஸர்வ காலமும் உன்னையே நினைத்து மனமுருகுகிறேனே. இரவில் நித்ரை பிடிக்காமல் படுத்துப் புரளுகிறேனே. எனதன்பு உனது மனதிற்பாய்ந்து என்னை நினைக்கும்படி தூண்டவில்லையா. நீ என்னை உண்மையாக நேசிக்கிறாயோ. என்னைத் தவிர வேறே ஒருவரையும் கல்யாணம் செய்து கொள்வதில்லையென்று சொல்லுகிறாயோ—என்ன அவ்வளவு இழிவாக சொல்லிவிட்டேன். உனது நடத்தைகளைப் பார்த்தால் என்னைப்போலவே வருத்தப்படுவதுபோல் தோன்றுகிறது. நீ கோவிலில் சிவராத்ரி யன்றையதினம் என்னைக் கண்டு 'உன்னைத்தவிர வேறே ஒருத்தியையும் மணம் புரிவதில்லை. நீயும் உன் தகப்பனார் கேட்கும்பொழுது என்னைத்தான் மணம்புரிவேனென்று பிடிவாதமாகச் சொல்லு' என்று சொன்னாயே. அதை இன்று மறந்திருக்க மாட்டாயென்று நினைக்கிறேன். எனது தகப்பனார் விருப்பத்திற்கு மாறாக இது வரையில் நான் நடந்ததில்லையே. அவருக்கு எதிராக நின்று நான் அபிராமனை விவாகம் செய்துகொள்ளமாட்டேன், உன்னைத் தான் செய்துகொள்வேன் என்று எப்படிச்சொல்வேன். அவருக்கு என்பேரில் கோபம் உண்டாகாதா. என்னை இழிவாக நினைத்து 'என் இஷ்டத்திற்கு மாறுபாடாக நடப்பதிற்காகவா உன்னை அருமையாக வளர்த்தேன்' என்று சொல்லமாட்டாரா? ஐயோ, ஜகதீசா, எப்படியாவது அவர் எண்ணத்தை மாற்றும். என் ஆசைக்கண்ணாளனுக்கு கொடுப்பதாக சொல்லச் சொல்லித் தூண்டும். என்பேரில் க்ருபை வைத்து என் கவலையை மாற்றி மகிழ்விக்கச் செய்யும்.

"உள்ளூரிலிருக்கும் மன்மதனை விட்டு அயலூரில் பிள்ளைக்காகத் தேடுகிறார்களே. கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவார்களுண்டோ. என் ஆசைக்கண்ணாளனைப்பற்றி ஏதாவது ப்ரஸ்தாபம் வரும் என்று அவர்கள் பேசும்பொழுது எதிர்பார்த்திருந்தேனே. உள்ளூர் விஷயத்தைப்பற்றியே எடுக்கவில்லையே. அந்தமட்டும் எனது மாமா, தன் பிள்ளையை எனக்கு கொடுக்க மறந்துவிட்டாரே. எனக்கு அதைப்பற்றி மிக்க ஸந்தோஷம். ஆனால் என் தாயாருக்கு மாத்ரம், தமயன் இப்படி செய்துவிட்டானென்று வருத்தம் போல் தோன்றுகிறது." என்று தன்னை மறந்து பிதற்றினாள். உடனே திடுக்கென்று எழுந்து "என்ன இப்படியெல்லாம் என்னை மீறி பிதற்றிவிட்டேன். தாயார் விழித்துக்கொண்டிருக்கிறா

ளோ பார்ப்போம்" என்று சொல்லிக்கொண்டே அவளருகில் சென்று பார்த்தாள். அவள் நன்றாக அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். மறுபடியும் செல்லம் தனது படுக்கையில்வந்து படுத்துக்கொண்டாள். அப்பொழுது மணியும் இரண்டு அடித்தது. எல்லா விஷயத்திற்கும் காலையில் பார்த்துக்கொள்ளலாமென்று எண்ணி செல்லம் நித்ரை செய்யலானாள்.

எ. வி. ராமஸ்வாமி.

## AN AGRICULTURAL COLONY.

BY KANDASAMI GUPTA.

## ஓர் விவஸாயக் குடியேற்றம்.

நமது தேசத்தில் விவஸாயத்தின் அபிவ்ருத்திக்குப் பெருந்தடையாக இருப்பது, கல்விப்பயிற்சி யில்லாதவும், அதிலும் அநேகர் மீளக்கூடாத கடனாளிகளாகவுமுள்ள குடியானவர்கள் கையில் விவஸாய மிருப்பதே. தங்களுடைய பூஸ்திதிகளை கிழ்க்குத்தகைக்குக் கொடுத்துவிட்டோ, அல்லது மேல்வாரத்திற்கு விட்டுவிட்டோ, அதனால் வரும் ஊதியத்தை மாத்ரம் வைத்துக்கொண்டு ஸுகஜீவனஞ் செய்துவரும் ஜமீன்தார்கள், தனிகர்கள், பலருளர். விவஸாய அபிவ்ருத்தியின் பொருட்டு நம் ராஜாங்கத்தாரும் ச்ரத்தையுடன் உழைக்கும் இக்காலத்தில், வேண்டிய ஸாவகாசமும் செல்வமுள்ள இவர்கள் தங்களுடைய வாழ்நாளை வீண்நாளாக்காமல், விவஸாயத்தை அபிவ்ருத்தி செய்ய எவர்களுடைய வழியைப் பின்பற்ற வேண்டுமோ அதைக் கைப்பற்றுமாறு அவர்களிற் சிலருடைய மாதிரியை சொல்வதே எனது நோக்கம். இந்த வ்யாஸத்தில், மிஸ்டர் போமான்ஜி ஆர்டிஷிர் தலால் (Mr. Bomanji Ardishir Dalal) எனும் ஓர் பார்ஸி ப்ரபு பம்பாய் ராஜதானியில் ஓர் விவஸாய குடியேற்றம் (An Agricultural Colony) ஸ்தாபித்த விதத்தை சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

மிஸ்டர் தலால், பம்பாய் ராஜதானியிலுள்ள பஞ்சமஹால் ஜில்லாவில் ஹலோல் தாலூகாவில் ஒரே விடத்தில் சுமார் 3,000 ஏக்ரா தரிசு நிலத்தை 1881-84 வர்ஷங்களுக் கிடையில் குத்தகைக்கு வாங்கினார். அப்பொழுது அந்த தரிசு நிலத்தில் சிறு தூறுகள் நிறைந்திருந்தனவேயன்றி விளைச்சல் ஒன்றுங் கிடையாது, அந்த நிலத்தின் சீதோஷ்ண ஸ்திதியோ விஷவாயுவுள்ளதாயும், ஆரோக்ய மற்றதாயும், அருஞ்செயல் செய்வதற்கு இடையூறாகவு மிருந்தது. மிஸ்டர் தலாலோ மனத்தளர்ச்சி சற்றேனுமடையாது இதர கிராமங்களிலிருந்து விவஸாயிகளை அங்கு கொண்டுவந்து குடியேற்றினார். அவர், அங்கு குடியிருக்க அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தும், உழுமாடுகள் வாங்கவும், விதைக்க விதைவாங்கவும், அவர்கள் ஜீவனத்திற்காகவும் முன் பணம் கொடுத்தும் உதவினார். அவர்களுடைய வீடுகள் அக்னிபகவானுக்கு இரையாகாமலிருக்க, ஒவ்வொரு தெருவிலும் தண்ணீர் நிரப்ப நீர்த்தொட்டிகளைக் கட்டி தீயவிக்கும் யந்த்ரம் ஒன்றும் அவர்களுக்குக் கொடுத்துதவினார். அன்றியும், அவர்கள் குடிக்க பரிசுத்தமான ஜலத்திற்கும் தகுந்த ஏற்பாடு செய்தார். நிழலைத்தர அநேக மரங்களை நட்டார். பாசன வஸதிக்காக அநேக கிணறுகளை வெட்டினார். அவர், விவஸாயிகள் புதிய விவஸாய முறைகளை அனுஸரிக்கும்படிச் செய்ததோடு, ஆங்காங்குப் பண்ணைச் சாலைகளை தற்காலத்திற்கு வேண்டிய வண்ணம் திருத்தி அமைத்தார். பின்னும், அவர் ஓர் தர்ம வைத்யசாலை, தபாலாபீஸ், அவர்கள் பிள்ளைகள் படிப்பதற்காக, தேசபாஷை பள்ளிக்கூடம், இவைகளையும் ஏற்படுத்தினார். தாம் அழைத்துவந்து குடியேற்றின விவஸாயிகளுக்குப் பணமாகவும், தான்யமாகவும், வஸ்த்ரமாகவும், அவர் முன்பொருள் கொடுத்ததுமன்றி, அவர்கள் ஸம்பாதித்தபொருளைச் சேர்த்துவைப்பதற்கென்று ஓர் சேமிப்பு நிதியையும் ஸ்தாபித்து, மட்டாகவும் செட்டாகவும் செலவு செய்வதில் பயிற்சிபெற தூண்டுகோலாகவும் இருந்தார். அவர் தமது நிலங்களில் மக்காச் சோளம், சீனு பருத்தி, அமெரிக்கா புல், சிறுசணல், வெள்ளைக் கோதுமை முதலியவைகளை பரீக்ஷார்த்தமாகப் பயிரிட்டார்.

"மிஸ்டர் தலால் தமது நிலத்தில் மூலதனத்தை வைத்து, வேலைசெய்ததுமன்றி வேளாண்மையின் மேல் சாஸ்த்ர ஸம்பந்தமான விதிகளைச் சுமத்தினார்" என்று குஜராத்து நாட்டில் அப்பொழு திருந்த கம்மிஷனர் சொன்னார். மிஸ்டர் தலால் அந்த நிலத்தைத் திருத்திக் குடியேற்றுவதற்காக, 3 லக்ஷ ரூபாய் வரையில் செலவழித்திருக்கிறார். இப்பொழுதும், அவர் தாம் செய்த திருத்தங்களினால் அழியாத நன்மையைச் செய்தவராவர். மிஸ்டர் தலால் உண்டாக்கிய குடியேற்றநாடு இப்பொழுது 3,500 ஏக்ரா (கொஞ்சங் குறைய மூன்று சதுரமைல்) பரப்பும், 2,000 ஜனத்தொகையுங் கொண்டதாயு மிருக்கிறது. இவ்வளவு ஜனங்களும் அவருடைய அபிவ்ருத்திக் கநுகூலமான ஆசரிப்பினால் தூண்டப்பட்டு அவ்விடத்திற் குடியேறினவர்களே யன்றி, வேறில்லை. முப்பது வர்ஷங்களுக்கு முன்போ அவ்விடத்தில் ஸுமார் 20 ஏக்ரா மாத்ரம் பயிரிடப்பட்டு ஒரே ஒரு குடும்பந்தானிருந்தது. இப்பொழுது அவ்விடத்தில், 2;000 கால்நடைக ளிருக்கின்றன.

நம் மிந்தியா தேசத்தின் எல்லா பாகங்களிலும் இவ்விதமான தரிசு நிலங்கள் ஏராளமாக விருக்கின்றன. ஆதலால் நமது ஜமீன்தாரர்களும் நிதிபதிகளும், மிஸ்டர் தலாலின் பெருந்தகைமையான வழியைப் பின்பற்று வார்களாயின் நமது தேசம் சீக்ரம் முன்னேற்ற மடையுமென்பதிற்கு ஸந்தேகமில்லை.

கந்தசாமி குப்தன்.



## SLEEP.

## தூக்கம்.

சிலர் இரவில் சீக்ரமே படுத்துக்கொண்டு தூங்கினபோதிலும், காலையில் விழித்தவுடன் ரொம்ப சோம்பலாயும், ச்ரமம் உள்ளவர்களாயும், எழுந்திருக்க மனமில்லாதவர்களாயு மிருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் தூக்கக்கலக்கம் விடாமலிருக்கிறது. சிலர் இரவில் வெகுநேரம் விழித்திருந்துங்கூட, சில மணிநேரம் தூங்கினபிறகு யாதொரு ச்ரமமும் அலுப்புமில்லாமல் காலையில் எழுந்திருக்கிறார்கள். இவர்களுக்கு காலையில் தூக்கக்கலக்கம் இருப்பதில்லை. இப்படி ஸ்வல்ப நேரமே தூங்கியும் ச்ரமமில்லாம லிருப்பதற்கும், அதிகநேரம் தூங்கியும் அலுப்பாயிருப்பதற்குக் காரணமென்னவென்றால், அவர்கள் தூங்கும்போது படுத்திருந்த நிலைமை சரியாயோ தவறாகவோ இருந்ததேயாம்.

சிலர் படுத்துக்கொள்ளும்போது ஒரு கையால் தலையணையை அணைத்துக்கொள்ளுகிறார்கள். சிலர் மல்லாந்து படுத்துக்கொண்டு கைகளை மார்பின்மேல் கோத்துக்கொண்டிருப்பார்கள். சிலர் மல்லாந்து படுத்துக்கொண்டு, தங்கள் கைகளைத் தலையின் அடியில் தலையணைபோல் வைத்துக் கொள்கிறார்கள். வேறு சிலர் சரியானபடி படுத்துக்கொள்ளாமல் தங்கள் கைகளை ஓரிடத்திலிருந்து இன்னோரிடம் மாற்றிக்கொண்டே யிருக்கிறார்கள். இந்த நிலைமைகளெல்லாம் சரியான தூக்கத்துக்கேற்ற நிலைமைகளல்ல. எது இயற்கையான நிலைமையோ அந்த நிலைமையில் படுத்துக் கொண்டால்தான் தூக்கம் நன்றாய் வரும். இல்லாவிட்டால் ஸ்வப்னங்கள் உண்டாகி தூக்கத்தைக் கெடுத்துவிடும். போட்டோ பிடிக்கும்போது, போட்டோ பிடிப்பவர் ஒரு குறிப்பிட்ட நிலைமையில் இரண்டொரு நிமிஷங்கள் அசையாமலிரென்றால், நமக்கு ரொம்ப கஷ்டமாயிருக்கிறதல்லவா? ஏனெனில், அவர் இருக்கச்சொல்

லும் நிலைமையானது பெரும்பாலும் இயற்கைக்கு விரோதமானதாகவே இருக்கும். இந்தநிலைமைகளில் தசை நார்களுக்கு ரொம்ப ச்ரமம் ஏற்படும்.

அதேமாதிரி தசை நார்களுக்கு ச்ரமம் கொடுக்கக்கூடியவிதமாய் படுத்துக்கொண்டால் அந்தத் தசை நார்களுக்கு ச்ரமபரிஹாரம் ஏற்படாமல் போகிறது. உதாரணமாக மல்லாந்து படுத்துக்கொண்டு, கைகளை மார்பின்மேல் மடித்து ஒன்றோடொன்று பிடித்துக்கொண்டிருந்தால் தூக்கத்தால் ச்ரம பரிஹாரம் ஏற்படாது.

மேலும் மல்லாந்து படுத்துக்கொள்வதால் ஸ்வப்னங்கள் உண்டாகின்றன. ஆனால் மல்லாந்து படுத்துக்கொண்டு, கைகளை தேகத்தையொட்டி படுக்கையில் கிடக்கவிட்டால் வெகுவாய் நல்ல தூக்கம் உண்டாகும். ஆனால் அப்படிப் படுப்பவர்கள் ஸாதாரணமாய் குறட்டைவிடுவது ஸகஜம். ஆனால் இப்படிக் கைகளை படுக்கையில் கிடக்கவிட்டு மல்லாந்து படுத்துத் தூங்குவதில் மறுநாள் காலையில் சற்று களைப்புத் தோன்றுவதுண்டு. ஏனென்றால், அப்படிப் படுப்பதில் தேகத்தின் தசைநார்களும் நரம்புகளும் தளர்ந்துபோகும். மறுபடி விழித்துக்கொள்ளும்போது அவைகள் முன்போல முறுக்கடைந்து தங்கள் தங்கள் வேலையைச் செய்ய சிறிது நேரம் வேண்டியிருக்குமாதலால் அதுவரையில் நமக்கு ச்ரமமாகவே தோற்றும். ஆனால் அது உண்மையான களைப்பல்ல.

சிலர் படுத்துத் தூங்கும்போது தலையணையைக் கைகளால் அணைத்துக் கொள்வார்கள். இவர்கள் வெகுவாய் பந்துக்களிடத்தில் விச்வாஸமுள்ளவர்கள் என்று சொல்லப்படுகிறது. அதிலும் ஸ்த்ரீகளே வெகுவாய் இவ்வித வழக்கமுடையவர்களாம். இப்படிப் படுத்துத் தூங்குவதில் கை நரம்புகளுக்கும் தசைநார்களுக்கும் வேலை ஏற்படுவதால் தூக்கத்தால் முற்றிலும் ச்ரமபரிஹாரம் ஏற்படுவதில்லை.

இம்மாதிரிதான் கைகளை தலையின்கீழ் தலையணையாக வைத்துத் தூங்குவதும். இதுவும் நல்ல தூக்கத்துக்கு இடைஞ்சலே.

படுத்துக் கொள்ளும்போது தேகத்தின் எல்லாபாகங்களும் சரியான நிலைமையில் இல்லாவிட்டால், அடிக்கடி புரண்டு கொடுக்கவோ, கைகளை இருந்த இடம்விட்டுமாற்றவோ, வேண்டியிருக்கும். கால்களையும் கணுக்கால்களையும் ஒன்றின்மேல் ஒன்றுபோட்டு, ஒரு கணுக்கால் எலும்பு இன்னொரு கணுக்கால் எலும்பின்மேல் பட்டுக்கொண்டிருந்தாலும் அது ச்ரமமாய்த் தோன்றும்; அதனால் தூக்கத்தில் கால்களை இடம்விட்டு மாற்றவேண்டியிருக்கும்.

நன்றாய்த் தூங்கவேண்டுமானால், மல்லாந்தும் குப்புறவும் படுக்காமல், ஒருபக்கமாய் ஒருக்களித்துப் படுத்துக்கொள்ளவேண்டும். தேகமானது சற்று முன்புறம் சாய்ந்திருக்கவேண்டும். தலையானது தலையணையில் முன்புறம் சாயாமல் சற்று பின்புறம் சாய்ந்திருந்தால், வாயும், மூக்கும் தலையணையில் படாமல் இருக்கும். கீழ்பக்கமுள்ள கையானது மடிந்து யாதொரு ச்ரமமும் இல்லாமல் தலையணையில் கிடக்கவேண்டும். உள்ளங்கை மேல் நோக்கியிருக்க வேண்டும். கைவிரல்கள் பாதி மூடிக்கொண்டிருக்கவேண்டும். கை கீழ்நோக்கியிருந்தால் கைவிரல்கள் அகன்று தரையோடுதரையாய்க்கிடக்கும், அல்லது அவைகள் துணிகளைப் பிடித்துக்கொள்ளும். இது இயற்கைக்கு விரோதமான நிலைமையாகும். மற்ற கையின் மேல்பாகமானது விலாவெலும்பில் பட்டுக்கொண்டும், முன் கையானது சற்று வளைந்து கீழே விழுந்தும் இருக்கவேண்டும். கைவிரல்கள் பாதி மூடியிருக்கவேண்டும்.

இவ்விதம் படுத்துத்தூங்கினால் மறுநாள் யாதொரு ச்ரமமுமில்லாமல், சுறுசுறுப்பாய் எழுந்திருக்கலாம்.

---



## INDUSTRIAL OPENINGS IN COIMBATORE.

## கோயம்புத்தூரில் ஸ்தாபிக்கக்கூடிய தொழில்கள்.

ஸமீபத்தில் கோயம்புத்தூரில் நடந்த வ்யாபாரக் கைத்தொழில் கான்பரென்ஸில் ப்ரெஸிடெண்டாக இருந்த ராவ்பகதூர். பி. த்யாகராஜ செட்டியார் தமது ப்ரஸங்கத்தில் கோயம்புத்தூரின் பொருளாதார நிலைமையையும் கைத்தொழில் நிலைமையும் வ்ருத்தி செய்வதைப்பற்றியும், முக்யமாய் அங்கே இன்னதொழில்கள் ஸ்தாபிக்கலாமென்பதைப் பற்றியும் விஸ்தாரமாய்ப் பேசினார். அவர் பேசிய விஷயங்கள் மற்ற ஜில்லாக்களுக்கும் ஒருவாறு ஏற்குமாதலால், அவர் பேசியவைகளை இங்கு சுருக்கி எழுதுகிறோம். கோயம்புத்தூர் ஜில்லாவில், மற்ற ஜில்லாக்களைப் போலவே, ஜனங்கள் தங்கள் ஜீவனோபாயத்துக்கு நிலத்தையே நம்பியிருக்கிறார்கள். அந்த ஜில்லாவில் ஸாகுபடியாகக் கூடிய நிலத்தில் அநேகமாய் எல்லாம் ஸாகுபடிக்கு வந்துவிட்டன. ஸாகுபடியாகாத ஸ்வல்ப பூமியானது ஸௌகாதாரக் குறைவாக இருப்பதாலும், அவ்விடங்களில் ஜனத்தொகை குறைவாயிருப்பதாலும் அந்தவிடங்களை ஸாகுபடிக்குக்கொண்டு வருவது ச்ரமமாயிருக்கிறது. ஜனங்களில் பெரும்பாலார் இப்படி விவஸாயத்தையே நம்பியிருப்பது அநேக ஸமயங்களில் கஷ்டத்துக்கிடமாகிறது. அவர்களுக்கு ஸாதாரணகாலங்களில் கிடைக்கிற மாஸூலிலிருந்து எதுவும் அதிகமாக மிச்சம் பிடித்துப் பணக்காரர்களாவது துர்லபம். ஒரு வர்ஷத்தில் மழைபெய்யாமல் போனால்அவர்கள் ரொம்ப கஷ்டப்படவேண்டியதாகிறது. இரண்டு வர்ஷம் சேர்ந்தாற் போல மழை பெய்யாமல் போனாலோ தேசத்தில் பஞ்சம் ஏற்படுகிறது. விவஸாயிகளுக்குப் பஞ்சவிலையில் உணவுப்பொருள்களை வாங்கப்போதுமான பணம் கிடையாது. அவர்கள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். இப்படி ஜனங்கள் விவஸாயத்தையே நம்பியிருப்பதால் தான் அவர்களுடைய பொருளாதார நிலைமை ரொம்பதாழ்ந்ததாயிருக்கிறது. ஜனங்கள் ஒரு தொழிலையே நம்பியிராமல் பற்பல தொழில்களில் அமர்ந்திருந்தால்தான் அவர்களுடைய பொருளாதார நிலைமை உயர்வடையக்கூடும் அப்பொழுது தான் அவர்களுக்கு செல்வம் வ்ருத்தியாகக் கூடும்.

கோயம்புத்தூர் ஜில்லாவில் முதலில் கவனிக்கவேண்டிய விஷயம் பருத்தித் தொழிலாகும். அங்கே ஸுமார் 3 லக்ஷம் ஏகர் நிலத்தில் பருத்தி ஸாகுபடியாகிறது. இது சென்னை ராஜதானியில் பருத்தியின் விஸ்தீரணத்தில் எட்டில் ஒருபாகமாகும் அந்த ஜில்லாப் பருத்தி ரொம்ப உயர்ந்ததாயிருப்பதால், ரொம்ப தூரத்திலுள்ளவர்களும் அதை விசேஷமாய் வாங்கி வருகிறார்கள். அந்த ஜில்லாவில் விளையும் பருத்தியில் அநேகமாய் முழுவதும் வெளியூர்களுக்கே அனுப்பப் படுகிறது. கோயம்புத்தூரில் ஒரு ஏக்கரில் 67ராத்தல் சுத்தமான பருத்தி கிடைக்கிறது. இது கால்வாய் பாசனமில்லாத நிலங்களின் மாஸூலாகும். பாசனமுள்ள நிலங்களில் நூற்றுக்கு 20பங்கு அதிக மாஸூல் கிடைக்கலாம். ஆகவே அந்த ஜில்லாவில் மொத்தத்தில் 20கோடி ராத்தல் பருத்தி கிடைக்கிறது. இதில் ஸ்வல்பபாகந்தான் அந்த ஜில்லாவிலேயே உபயோகப்படுகிறது. கோயம்புத்தூர் வாஸிகள் வெளிநாடுகளுக்கு அனுப்பும் பருத்தியைக் கொண்டு ஸாமான்யமான துணிகள் நெய்து வெளியிலனுப்பி லாபமடையலாம். ஷர்ட் துணிகள்நெய்தால் சென்னை ராஜதானி முழுமைக்கும் ஸப்ளை செய்யக்கூடும். மைஸூர் ராஜ்யத்தில் நல்ல ஷர்ட் துணிகள் நெய்யும்போது, அந்த ஜில்லாவில் நெய்வது கடினமானதல்ல. நமது ராஜதானிக்கு வர்ஷந்தோறும் 4-கோடியே 20-லக்ஷம் கஜம் ஷர்ட் துணி அன்யநாடுகளிலிருந்து

இறக்கு மதியாகிறது. இதன் மதிப்பு 15-லக்ஷம் ரூபாயாகும். ஒரு ராத்தல் ஷர்ட் துணிக்கு 6-கஜம் என்று வைத்துக் கொண்டால் மொத்தம் சென்னை ராஜதானியில் இறக்கு மதியாகும், ஷர்ட் துணியின் நிறை 70-லக்ஷம் ராத்தலாகும். கோயம் புத்தூரில் இவ்வளவு துணியையும் இதற்கு மேலும் நெய்துவிடலாம். ஆனால் இதற்கு கைத்தொழிலில் திறமையும் ஒற்றுமையையும், ரொம்ப மூலதனமும் வேண்டிய தவச்யம்.

அந்த ஜில்லாவில் உள்ள கரும்புத் தொழிலையும் வ்ருத்திசெய்யலாம். அங்குள்ள கரும்பு ரொம்ப உயர்ந்ததென்று சொல்லப்படுகிறது. கோயம்புத்தூர் வாஸிகள் கரும்புத் தொழிலைப் பற்றி தக்க கவனம் செலுத்தினால், தங்கள் ஜில்லாவுக்கு வேண்டிய சர்க்கரையை செய்துகொள்வதோடு, பக்கத்திலுள்ள ஜில்லாக்களுக்கும் வேண்டிய சர்க்கரையை செய்து விற்கலாம். இதற்கு சீர்திருந்திய சர்க்கரைசெய்யும் சாலை வேண்டிய தவச்யம்.

தோல்பதனிடும் தொழிலும் ரொம்ப முக்யமானது. கோயம்புத்தூர் ஜில்லாவில் ஆட்டுத் தோலும் மாட்டுத்தோலும் ஏராளமாய் பதனிடப்படுகின்றன. பதனிடும்போது அநேக பொருள்கள் வீணாய்ப் போகின்றன. அவைகளைக்கொண்டு அநேக உபயோகமுள்ள சரக்குகள் செய்யலாம். உதாரணமாக தோலைப் பதனிடும்போது வீணாகப்போகும் தோல்துண்டுகளைக்கொண்டு வஜ்ரம்ம் அச்சடிக்க உதவும், ரோலர்களுக்கு வேண்டிய பசையும் ஏராளமாய்ச் செய்யலாம். இன்னும் பழைய முறையால் தோலைப்பதனிடாமல் க்ரோம் முறையால் பதனிடும் தொழிலையும் ஸ்தாபிக்கலாம்.

கோயம்புத்தூரில் உயர்ந்த வேலைப்பாடுள்ள துணிகளும் புடவைகளும் நெய்யப்படுகின்றன. இதற்கு சரிகை வேண்டியிருக்கிறது. தற்போது ஸரிகைமுழுவதும் ப்ரான்ஸிலிருந்து வருகிறது. இரண்டு அல்லது 2½-லக்ஷம் ரூபாய் முதல் போட்டால் ஒரு நல்ல சரிகைசெய்யும் சாலை ஏற்படுத்தக்கூடும். அதிலிருந்து கிடைக்கும் சரிகை அந்த ஜில்லாவுக்குப் போதுமானது. இதில் போட்டமுதலுக்கு நல்ல லாபம் கிடைப்பதோடு ஏழை ஜனங்களுக்கும் வேலைகிடைக்கும். கோயம்புத்தூர் ஜில்லாவின் சீதோஷ்ண ஸ்திதி இந்தத் தொழிலுக்கு ரொம்ப ஏற்றதாயிருக்கிறது.

கோயம்புத்தூரில் நல்ல காடுகளிருப்பதால், அங்கே மேஜை நாற்காலி முதலியவைகளும், கூடைகள், குடைகள் முதலிய ஸாமான்களும் செய்வதற்கு வேண்டிய மூலப்பொருள்கள் ஏராளமாய் அகப்படும்.

## THE WOMAM SPY.

## ஸ்த்ரீ உளவாளிகள்.

புருஷர்களேயன்றி ஸ்த்ரீகளும் உளவாளிகளாயிருந்து பிறதேசங்களின் ராணுவ ரகஸ்யங்களை யறிந்து தங்களுடைய தேசத்து ராணுவ அதிகாரிகளுக்குத் தெரிவிக்கிறார்களென்றும், முக்யமாய் ஜெர்மன் ஸ்த்ரீகள் பற்பலவிதங்களில் அன்யதேசத்து ராணுவ உத்யோகஸ்தர்களை மயக்கி அவர்களிடமிருந்து ராணுவ ரகஸ்யங்களை கேட்டறிந்து தங்களுடைய தேசத்து கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்கிறார்களென்றும், 1915-ம் வர்ஷம் மார்ச்சுமாஸத்திய 'ஜனாபிமானி'யில் விரிவாய் எழுதியிருக்கிறோம். ஸ்த்ரீகளுக்கு அழகும் பகட்டும் உளவறிவதற்குத் துணையாயிருப்பதோடு, ஸ்த்ரீஜாதியைச் சேர்ந்திருப்பதே ஒரு தக்க ஆதாரவாயிருக்கிறது.

ராணுவ உத்யோகஸ்தர்கள் ஸ்த்ரீகளை வெகுவாய் ஸந்தேகிப்பதில்லை. அவர்களைப்பற்றி அதிகமாக கவனிப்பதும் இல்லை. இதனால் அநேக ஆண் உளவாளிகள் தாமறிந்த ராணுவ ரகஸ்யங்களை ஸ்திரீகள் மூலமாய்த் தங்கள் தேசங்களுக்கு அனுப்புகிறார்கள்.

ஸமீபத்தில் ஒரு ஸ்த்ரீ ப்ரான்ஸின் எல்லைப்புறத்திலிருந்து ஸ்விட்ஸர்லண்டுப் போக முயன்றாள். அப்போது அவளை அதிகாரிகள் பிடித்து அவள் ஒரு உளவாளியிருக்கக்கூடுமோ என்று ஸந்தேகித்து, ஒரு ஸ்த்ரீயைச் சோதிக்கச் சொன்னார்கள். அப்படிச் சோதித்ததில் உளவறிதல் ஸம்பந்தமாக ஏதுவும் அகப்படவில்லை. ஆனால் அவள் செய்த சிலகார்யங்களால் சில உத்யோகஸ்தர்கள் அவள்மேல் ரொம்ப ஸந்தேகம் கொண்டார்கள். அதன்மேல் அவளை இன்னும் நன்றாய் சோதிக்கும்படி ப்ரெஞ்ச் ரகஸ்யப் போலீஸில் உள்ள ரொம்ப தேர்ந்த உத்யோகஸ்தர் ஒருவரை நியமித்தார்கள். அவர் அந்த ஸ்த்ரீயைப் பல வழிகளில் சோதித்துக் கடைசியாய் அவளுடைய சட்டை முதலியவைகளைக் கழற்றச்சொல்லி, அவளுடைய முதுகு கதகதவென்றிருக்கும் நெருப்புப் பக்கமாயிருக்கும்படி அவளை ஒரு நாற்காலியில் உட்காரவைத்து, நாற்காலியோடு அவளைச் சேர்த்துக்கட்டினார். அவளுடைய முதுகில் அனல் நன்றாய்த் தாக்கிற்று. தாக்கவே முதுகில் ஒரு விசித்ரமான பட்டுப்பூச்சியின் உருவம் காணப்பட்டது. பட்டுப் பூச்சியின் உருவம் ஏன் அவள் முதுகில் வரையப்பட வேண்டும்? உளவறியும் தொழிலில் பழகாதவர்களுக்கு அது பட்டுப்பூச்சியென்று தோன்றுமே யொழிய அவர்களுக்கு வேறொரு ஸந்தேகமும் உண்டாகாது. ஆனால் அந்தப் பட்டுப் பூச்சியின் படமானது உண்மையில் ஒரு ப்ரெஞ்ச்கோட்டையின் ப்ளானாகும். கோட்டையில் உள்ள பீரங்கிகளின் இருப்பிடம், அவைகளின் அளவுகள், பீரங்கிகளின் மொத்தத்தொகை, கோட்டைகளின் விஸ்தீரணம், கோட்டையில் பலமற்ற பாதுகாப்பு வேலைகள் எங்கிருக்கின்றன என்பது முதலிய பலவிஷயங்கள் அந்த பட்டுப் பூச்சிப் படத்தில் குறிக்கப்பட்டிருந்தன. இந்தக் கோட்டையானது யுத்தம் ஆரம்பித்த பிறகு புதுமாதிரியில் கட்டியமைக்கப் பட்டிருக்கிறது. இந்தக் கோட்டையின் புது ப்ளான் ஜெர்மனியருக்குத் தேவையாயிருந்தது. ஆனால் ப்ரான்ஸிலிருக்கக்கூடிய ஜெர்மன் உளவாளிகள் அந்தக் கோட்டையின் ப்ளானை அடைந்த போதிலும் ஜெர்மனிக்கு எடுத்துப்போவது முடியாத கார்யம். ஆதலால் ஒரு ஜெர்மனிய உளவாளி அக்கோட்டையின் ப்ளானை எப்படியோ அடைந்து மேற்சொன்ன ஸ்த்ரீயின் முதுகில் பட்டுப் பூச்சியின் உருவம் எழுதி அதில் கோட்டையின் பற்பல பாகங்களை யமைத்து விட்டார் போலும்.

ஸாதாரணமையால் எழுதினால் பார்ப்பவர்களுக்கு ஸுலபத்தில் தெரிந்து விடுமாதலால் உலர்ந்தவுடன் கண்ணுக்குத் தெரியாமல் போகக் கூடியதான, செம்பு கலந்த ஒரு த்ரவத்தால் அந்தப் படம் எழுதப்பட்டிருந்தது. அந்த த்ரவத்தால் எழுதின பாகத்தை நெருப்பில் காட்டினால் நல்ல நீலநிறமான உருவம் காணப்படும். நெருப்பில் காட்டாத வரையில் முதுகில் ஏதுவும் தெரியாது.

முற்காலத்தில் நடந்த யுத்தங்களில் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு உளவு சமாசாரம் அனுப்புவதற்கு உளவாளிகள் ஸ்திரீகளின் தேகத்தில் தோலில் பச்சை குத்துவது போல் அனுப்ப வேண்டிய ஸமாசாரங்களை எழுதியனுப்புவதுண்டு. ஆனால் தற்காலம் உளவாளிகளைக் கண்டுபிடிப்பதிலேயே கண்ணாயிருக்கும் உத்யோகஸ்தர்கள் ரொம்ப ஜாக்ரதையாயிருப்பதால், இவ்விதம் பச்சை குத்துவது ப்ரயோஜனப்படுவதில்லை. இதற்காக உளவாளிகள், எழுதின பிறகு எழுத்துகள் கண்ணுக்குத் தெரியாமலிருக்கும் மைகளைக்கொண்டு விஷயங்களையோ ப்ளான்களையோ ஸ்த்ரீகளின் தேகத்தில் எழுதியனுப்புகிறார்கள். இந்த மைகளில் ஒன்று மேற்சொன்னதாம்ரம் கலந்த த்ரவம். வேறு சில த்ரவங்களால் எழுதப்பட்ட எழுத்துகள் அவைகளின்மேல் ஸூர்ய உஷ்ணம் படும்படி செய்வதால் கண்ணுக்குத் தென்படும்.

இவ்விதம் ஸ்த்ரீகளின் தேகத்தில் ரகஸ்யங்

களை எழுதியனுப்புவானேன் என்றால், முன் சொன்னபடி அவர்களை ராணுவ அதிகாரிகள் வெகுவாய் ஸந்தேகிப்பதில்லை. இவ்வழியால் மாத்ரமல்ல; வேறு வழிகளிலும் ஸ்த்ரீகள் ரகஸ்யங்களை மறைத்துக்கொண்டுபோய் தெரிவிக்க வேண்டியவர்களிடம் தெரிவித்துவிடுகிறார்கள். இந்த யுத்தத்தில் ஒரு ஸ்த்ரீ தனது காதில் ரொம்பப் பெரியதான முத்துக்கள் உள்ள ஆபரணங்கள் தரித்திருந்தாள். ஸந்தேகத்தின் மேல் அவைகளை சோதிக்கையில் முத்துக்களில் ரொம்ப ஸமாசாரங்கள் எழுதிய கடிதத்துண்டுகள் அடைத்திருந்தன. இன்னொரு ஸ்த்ரீயினிடம் ரொம்ப சடைமயிருள்ள ஒரு சிறிய நாய் இருந்தது. அதைப் பரீக்ஷித்துப் பார்க்கையில், மயிர்கள் ஸ்வபாவமாய் நாயின் தேகத்தில் வளர்ந்தவையல்லவென்றும், வேறு நாயின் மயிர்களை ஒட்டவைத்திருந்ததென்றும் தெரிந்தது. மயிர்களை அப்புறப்படுத்திப் பார்க்கையில் மயிர்களுக்குள் ராணுவ ப்ளான்கள் இருந்தன. இன்னொரு ஸ்திரீக்குப் பல்லில்லை. அவள் பொய்ப்பல் வைத்திருந்தாள். அந்தப் பொய்ப் பல்லின் தகட்டில் ஒரு முக்ய ஸமாசாரம் எழுதப்பட்டிருந்ததாம்.

கோட்டைகளின் ப்ளான்களை பட்டுப்பூச்சிகளின் படத்திலுள்ள கோடுகள் புள்ளிகளோடு கலந்து எழுதுவது அநேக உளவாளிகளுடைய வழக்கமாகும். இன்னது பீரங்கியைக்குறிக்கும், இன்னவை பாலங்கள், இன்னவை நன்றாய் பாதுகாக்கப்படாத இடம் என்று ஸங்கேதம் ஏற்படுத்தி அதன்படி பட்டுப்பூச்சியின் படத்தில் எழுதுவார்கள். ஒரு உத்யோகஸ்தர் சில காலத்துக்கு முன்னால் பட்டுப்பூச்சிகளைப்பற்றி ஆராய்ச்சி செய்வதாக நடித்து, பட்டுப்பூச்சிகளின் படங்கள் உள்ள புஸ்தகமொன்றை எடுத்துக்கொண்டு, அன்ய தேசங்களுக்குப் போய் அங்குள்ள கோட்டைகளின் ப்ளான்களை அறிந்துகொண்டு அந்த ப்ளான்களை பட்டுப்பூச்சியின் சிறகுகளிலுள்ள பற்பல கோடுகளோடு பொருத்தமாய்ச் சேர்த்து எழுதிக்கொண்டார். இந்தப் புஸ்தகத்தைப் பார்க்கும் ஸாதாரண ஜனங்கள் பட்டுப் பூச்சிகளைப் பற்றிய புஸ்தகமென்று நினைப்பார்களே யொழிய ராணுவ ஸம்பந்தமான ரகஸ்யங்கள் நிறைந்துள்ள புஸ்தகமென்று நினைக்கமாட்டார்கள். உளவாளிகளுடைய தந்த்ரங்களை ரொம்ப நன்றா யறிந்தவர்களுக்குத்தான் இதன் ரகஸ்யம் தெரியும்.

உளவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் உடனே கொல்லப்படுவார்கள். அப்படியிருந்தும் மேல்நாட்டில் 'அநேக ஜனங்கள் அன்ய தேசங்களின் ராணுவ விஷயங்களை உளவறிந்து தமது நாட்டு அதிகாரிகளுக்குத் தெரிவிப்பதே சிறந்த தேசாபிமானம் என்று எண்ணி உளவறியும் தொழிலில் அமர்ந்திருக்கிறார்கள்

ஸாதாரண ஜனங்கள் மாத்ரமல்ல, ஸாதாரணமாய் அன்யநாடுகளில் தூதர்களாக இருக்கும் உத்யோகஸ்தர்களும், அவர்களுடைய ஸிப்பந்திகளும் அவர்களிடமுள்ள ராணுவ உத்யோகஸ்தர்களும் உளவறிதலை ஒரு முக்ய தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள்.

## சுதேச வைத்திய ரத்தினம்

இது கும்பகோணம் டாக்டர் எஸ். சந்திரசேகரர் இயற்றியது. இந்தியாவில் உள்ள மருந்துக்கு உதவும் செடிகள், மருந்துக்குச் சரக்குகள் ஆகிய இவைகளின் குணமும், அவைகளை வ்யாதி நிவாரணத்துக்கு உபயோகப்படுத்தும் விதமும், ரோகங்களுக்கு பரிஹாரங்களும் இதில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

**விலை ரூபா 2—8—0.**

**ஜீ. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,**
**3.4, கொண்டி செட்டித் தெரு,**
**ஜார்ஜ் டவுன் மதராஸ்.**



# REVIEW OF THE PRESS.

# பத்ரிகை ஆராய்ச்சி.

## LIME CULTIVATION.

## எலுமிச்சை சாகுபடி.

**மண்.**—வடிகால் வஸதியுள்ளதும் செம்மண் சாள் கண்டமுள்ளதும், ஜலவஸதியுள்ளதுமான தோட்டக்கால் நிலமே எலுமிச்சை சாகுபடிக்கு அதி ச்லாக்யமானது. படுகை மண்ணுள்ள நிலங்களிலும், கழிக்கால் நிலங்களிலும் வடிகால் வஸதி போதுமானபடி ஏற்படுத்தக் கூடுமானால் அந்நிலங்களிலும் ஷை பயிர் செய்யக்கூடும்.

**உற்பத்தி.**—இம் மரத்தை பதியங்கள் போட்டும், ஒட்டுக் கட்டியும், விதைபோட்டும் உண்டாக்கலாம். இம் மூன்று வகைகளில் எது அதிக சிலாக்யமாய் உண்டாகுமென்பது நிலத்தின் இயல்பையும், பயிரிடுவோரின் திறத்தையும், விற்கும் இடத்தையும் பொறுத்ததாயிருக்கிறது. ஏனென்றால் விதைபோட்டு கன்றுகளுண்டாக்கி, நட்டு ஐந்து வருஷங்களாகிறவரையில் விதையிலிருந்து உற்பத்தி செய்த செடிகள் காய்க்கா. பதியம் போட்ட செடிகளாவது ஒட்டுக்கட்டிய செடிகளாவது வைத்த வருஷத்தில்கூட காய்க்கும். பதியங்களிலிருந்து எடுத்த கன்றுகளும், ஒட்டுக்கட்டிய கன்றுகளும் சிலவருஷங்கள் காய்த்து அப்பால் செத்துப்போம். ஆனால் விதையிலிருந்து பயிர் செய்த மரங்களோ பதியம் போட்டுண்டாக்கிய மரங்களைவிட குறைந்தது இரண்டுபங்கு வருஷங்களாவது ஜீவித்து பலன்தரும்.

பதியங்களாவது ஒட்டுகளாவது வ்யாபாரிகளிடமிருந்து வாங்கி வைத்துவிடலாம். ஏனெனில் அப்பழம் ஒரு வருஷத்தில் நல்லதா அல்லவா என்று தெரிந்துவிடும். நல்லதல்லாவிட்டால் மாற்றக்கூடும். விதையிலிருந்து உண்டாக்கிய செடிகளோ காய்க்க ஸுமார் ஐந்து வருஷங்களாகுமாகையால் அதுவரையில் கஷ்டப்பட்டுப் பயிர் செய்து பழங்கள் நல்ல ஜாதியாயில்லாவிட்டால் என் செய்வது? எடுத்து வேறு வைப்பதானால் 5-வருஷங்களின் வேலை வீணாகிறது. எடுக்காவிட்டால் இருக்கும் ஜாதியோடு திருப்தியடைந்திருக்கவேண்டும். ஆகையால் நாமே பழங்களை நேரில் பார்த்து விதைபாவி பயிருண்டாக்கி நடுவதுதான் ச்லாக்யம். இப்படிச் செய்ய பொறுமையும் திறமையும் அவச்யம்; அல்லது அனுபோகமாவது வேண்டும், பதியங்களாவது, ஒட்டுகளாவது செடிகள் விற்போரிடம் வாங்கலாம். ஆனால் விதைச் செடிகளோ நமக்கு நம்பிக்கை யுள்ளவர்களிடமிருந்தாவது வாங்கவேண்டும் அல்லது நாமாவது பயிரிடவேண்டும்.

**விதை தெரிந்தெடுத்தல்.**—நமக்கு நல்ல ஜாதிப் பழமென்று தெரிந்த ஜாதிச் செடியில் இளஞ்செடியாயில்லாமலும் கிழச்செடியாயில்லாமலும் நடுத்தர வயதுடையதாயும் நமக்கு வேண்டிய ஜாதிப் பழமுடையதாயுமுள்ள செடியைத் தெரிந்தெடுத்து, அச் செடியிலுள்ள பழத்தை அறுக்காமல் தானாக விழும்படிவிட்டு, விழுந்த பழங்களில் பெரிதானதாயும் வளமானதாயும் பொறுக்கி ஓர் கூடையில் வைக்கோல்போட்டு தண்ணீர் தெளித்து அதன்மேல் பழங்களை அடுக்கி அதன்மேலும் வைக்கோல்போட்டு தண்ணீர் தெளித்து வரவேண்டும். ஸுமார் 4, 5 - தினங்களில் பழங்கள் கொழகொழவென்று அழுகினதுபோலிருக்கும். அப்போது எடுத்து கத்தியால் அறுக்காமல் கையால் நசுக்கி எடுத்தால் விதைகளில் ஒன்றுகூட சேதப்படாமல் வரும். அப்படி எடுத்த விதைகளில் திரட்சியாயும் வளமாயுமிருக்கும் விதைகளை மட்டும் எடுத்துக்கொண்டு கேவலமானவைகளை எறிந்துவிடவேண்டும்.

அவ்விதைகளின் மேலுள்ள ஈரம் காயுமுன் நன்றாய் மக்கின ஆடுமாடுகளின் சாணமும் மண்ணும் கலந்த மண்ணில் இவ்விதைகளை தரைமட்டத்திலிருந்து ஒரு அங்குல ஆழத்திற்குள் ஒரு அங்குலம் இடைவிட்டு விதைத்து மூடி தண்ணீர் விட்டுவரவேண்டும். அகலமாயுள்ள பாட்டம் என்னும் தொட்டிகளில் விடுவது ச்லாக்யம். (மேற்சொன்ன தொட்டிகள் அகப்படாவிட்டால் பூமி மட்டத்திற்குமேல் அரை அடி உயரமான பாத்திகள் செய்து அதில் நாற்றுப் பாவுவது நலம்.) எத்தனை நாளைக்கொருதரம் ஜலம் ஊற்றவேண்டுமென்பது அந்தந்த இடத்தின் சீதோஷ்ண பேதங்களைப் பொறுத்திருக்கும். (மண் அதிகமாய் காயாமலும், ஈளைப்பற்றும்படி சோராக இருக்காமலும் நிதானமாய் தண்ணீர் ஊற்றி வரவேண்டும்.) செடி முளைத்து மூன்று இலை பிடித்த உடன் அத்துடன் முளைத்திருக்கும் புல் பூண்டு முதலியவைகளை ஜாக்ரதையாய் எடுத்துவிட்டு சிறு கூச்சியால் வேர் அறுந்துபோகாதபடி ஜாக்ரதையாய்க் கூச்சகளைபோட்டுவிடவேண்டும்.

செடிகள் முளைத்த சில தினங்களுக்குள் களைபோட வேண்டுமானால், சிறுவிரல் பருமனும் ஒரு சாண் உயரமுடைய ஒரு கடினமான மரத்தின் குச்சியை எடுத்து அதின் ஒரு முனையை பென்ஸல் சீவுவதைப்போல் 2 அங்குல உயரத்திற்கு சீவி, அப்படிச் சீவிய பாகத்தால் இளஞ்செடிகளாவது அவைகளின் வேர்களாவது அறுந்துபோகாமல் களைபோடுவதற்குத்தான் கூச்சுக்களைப் போடுதல் எனச் சொல்லப்படும்.

மண்ணிலுள்ள ஈரம் பூராவாய்க் காய்ந்து செடிகள் சற்று வதங்கும் வரையில் விட்டு தண்ணீர் விடவேண்டும். இந்த ஸமயத்தில் ஷை கன்றுகளை பச்சை நிறமான புழுக்கள் நாசம் செய்யும். ஆகையால் ப்ரதிகாலையிலும் நாற்றைப்பார்த்து புழுக்கள் அணுகினால் அவைகளைக் கையால் எடுத்து நசுக்கிக் கொல்லவேண்டும். மூன்று நான்கு தினங்கள் பார்க்காவிட்டால் ஒரு இலைகூட இல்லாமல் ஷை புழுக்கள் செடிகளை நாசஞ்செய்துவிடும். ஆகையால் இப்புழுக்கள் விஷயத்தில் அதிக ஜாக்ரதையாக இருக்கவேண்டும். செடிகள் 5, 6-அடி உயரம் வளரும் வரையில்கூட இப்புழுக்களின் பாதையுண்டு.

மேலே சொன்னபடி 15-நாட்களுக் கொருமுறை களை போட்டுவந்தால் 3 அல்லது 4-மாதக் காலத்தில் 3-அங்குல உயரம் வளரும். அப்போது இன்னும் அதிகமாக எருவிட்டு நிலம் தயார்செய்து 4-அங்குலம் இடைவிட்டு ஷை கன்றுகளை பதியம்போட்டு வெயில் விழாதபடி 1-வாரத்திற்கு பந்தல்போட்டு வைக்கவேண்டும். 1-வாரத்திற்கப்பால் பந்தலை அப்புறப்படுத்திவிடலாம். பதியம்போட்ட பின்னும் புல் பூண்டு முளைக்காமல் களைவெட்டி வரவேண்டும். பதியம்போட்ட எட்டு மாஸங்களுக்குள் ஸுமார் 6-அங்குல உயரம் வளரும். அப்போது கூடைகள் தயார்செய்து ஒவ்வொரு கூடையிலும் ஒவ்வொரு கன்று வீதம் போட்டு தண்ணீர் ஊற்றி வரவேண்டும். ஒரு வருஷம் கூடையிலிருந்த கன்றுகளைத்தான் நடுவது ச்லாக்யம். தண்ணீர் ஓடும் கால்களிலும் ஷை பதியங்களை நட்டு வளர்த்து பின் நடுவதும் உண்டு.

செடிகளை வைத்தல்.—செடிகள் வைக்க உத்தேசித்திருக்கும் நிலத்தை நன்றாய் உழுது தெள்ளு புழுதியாக்கி நிலவளத்திற்குத் தக்கபடி 15 அல்லது 20-அடிக்கு ஒரு குழியாக மூன்று அடி ஆழம், மூன்றடி சச்சவுக்கமுள்ள குழிகளாய்த்தோண்டி ஒருமாஸம் குழியை அலறக் காயவிடவேண்டும். காய்ந்தபின் குழியின் கீழ் நாகதாளிபோட்டு மக்கின ஆடுமாடுகளின் சாணி கலந்த மண்ணைத்தள்ளி செடிகள் நட்டுத் தண்ணீர் ஊற்றவேண்டும். செடிகளுக்கு மத்தியில் காற்றோட்டமில்லாமலிருந்தால்தான் நல்ல மாஸுல் கிடைக்கும். இப்படிச் செடிகள் வைத்த ஒருவருஷம் வரையில் இச்செடிகளின் இடைவெளியில் கத்தரி, வெண்டை, பாகல் முதலிய காய்கறிச் செடிகளாவது, வாழையாவது பயிரிடலாம். ஒரு வருஷத்திற்கப்பால் இன்னும் ஒரு வருஷம் காய்கறி மட்டும் பயிரிடலாம். வாழை பயிரிடலாகாது. காய்கறி வாழைக்குப்பாயும் தண்ணீரிலேயே எலுமிச்சை செடியும் வளர்ந்துவரும். அதற்காக வேறு செலவில்லை. ஏறக்குறைய இந்த ஸமயத்தில் ஸுமார் 4-வருஷங்களாகும். அப்போது ஊடு பயிர் செய்வதை நிறுத்திவிட்டு நிலத்தை செடிகள் ஒடியாதபடி ஜாக்ரதையாக உழுதாவது அல்லது நன்றாய்க் கொத்தியாவது விட்டு, பாத்திகளில் புல் பூண்டு இல்லாமல் வைத்திருக்கவேண்டும். மழைகாலம் தீர்ந்தவுடன் ஷை நிலத்தை உழுதாவது கொத்தியாவதுவிட்டு தண்ணீர் இறைக்காமல் ஸுமார் ஒன்று அல்லது ஒன்றரைமாதம்விட்டு வைக்கவேண்டும். அப்போது ஸுமார் ஐந்து வருஷங்களாகுமாதலால் செடிகளில் மொக்குகள் கட்டும். உடனே செடியைச் சுற்றிலும் ஒரு அடி விட்டுவிட்டு அப்பாலுள்ள மண்ணைதோண்டி அதில் எருப்போட்டு மூடி பாத்திகட்டி ஈரம் காயாமலும் ஈளை பற்றாமலும் இடத்திற்குத் தக்கபடி 2 நாளைக்கொரு தண்ணீரோ மூன்று நாளைக்கொரு தண்ணீரோ இறைத்து வந்தால் புஷ்பங்கள் பிஞ்சு பிடித்து பழுக்கும். எலுமிச்சம் செடியிலுள்ள காய்ந்த முனைகளை மட்டும் கத்திரியால்வெட்டி சாக்காடு பரவாதபடி செய்து வரவேண்டும்.—கிருஷிகன்.

## ADVICE. T ELEMENTARY TEACHERS.

## எலிமெண்டரி வகுப்பு உபாத்யாயர்களுக்கு போதனை.

ஸமீபத்தில் வெளிவந்த 'நல்லாசிரியனில்' மிஸ்டர் எஸ். பாஷ்யமய்யங்கார் எலிமெண்டரி வகுப்பு உபாத்யாயர்கள் கவனிக்கவேண்டிய சில விஷயங்களை குறிப்பிடுகிறார்.

காலத்தை வீணாக்காதேயும். வீண்வம்பு பேசாதேயும். சோம்பேறிகள் தாம் காலமில்லை என்பார்கள். சிறு



குழந்தைகளைப்போல் ஊக்கத்துடன் அறிவை வ்ருத்தி செய்துகொண்டேயிரும்.

கெட்ட எண்ணங்களையும் கெட்ட உணர்ச்சிகளையும் வேரோடு களையவேண்டும். துர் அபிப்ராயங்களை மனதில் பதிந்து வைத்துக்கொள்ளாதேயும். பக்ஷபாதமில்லாமல் கபடமின்றி கல்வியறிவை மாணவர்களுக்கு கற்பிக்கவேண்டும். என்ன கோபம் வந்தபோதினும் கெட்ட பாஷையையும் கெட்ட நடத்தையையும் வ்ருத்தி செய்யவே கூடாது. சிறுவர்களுக்குப் புத்திமதி சொல்லும். திருந்தாவிடில் ஸாம தான பேத தண்ட முதலிய நான்கு உபாயங்களையும் க்ரமமாய் உபயோகியும்.

நீர் இல்லாத வேளையில் மாணவர்கள் எப்படி நடக்கிறார்கள் என்பதைக் கவனியும். கோட் சொல்லுதலையும் குறை கூறுவதையும் நீக்கி நல் விஷயங்களைச் சொல்லக் கேளும்.

நீர் பிள்ளைகளை கண்யமாய் நடத்தினால் அவர்களும் உம்மை கண்யப்படுத்துவார்கள். உமது மேலதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்து உண்மையாய் உமது வேலையை செய்யும்.

யோசனையின்றி கட்டளையிடாதேயும். கட்டளையிடுமுன் இரண்டுதரம் யோசிக்கவேண்டும். கீழ்ப்படியத் தெரிந்தவர்களே உத்தரவளிக்கத் தகுந்தவர்கள்.

கற்பிக்கையில் தெரிந்த விஷயங்களிலிருந்து தெரியாத விஷயங்களைக் கற்பிக்கவேண்டும். ஆராயுந் தன்மையை வ்ருத்தி செய்யும். பிள்ளைகள் கேள்வி கேட்டால் கோபிக்காமல் அவர்களுக்குத் தகுந்த விடையளிக்கவேண்டும்.

பிள்ளைகளை யோக்யர்களாகவும் ராஜ விச்வாஸமுள்ளவர்களாகவும் இருக்கும்படி உபாத்யாயர்கள் தூண்டவேண்டும்.

மாணவர்களின் முன்னிலையில் வீண் வம்பு வளர்க்கலாகாது. காலத்தை வீணாக்க வம்புதான் அஸ்திவாரக் கல்.

சிறு பிள்ளைகளைப் பரிகாஸம் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால், அவர்களும் உம்மைப் பரிகாஸம் செய்வார்கள்.

உபாத்யாயர் முன்னிலையில் அமைதியாயிருப்பதுபோல் குருவில்லாத காலத்திலும் நடந்துகொள்ளும்படி பிள்ளைகளுக்கு வற்புறுத்த வேண்டும்.

பிள்ளைகள் விளையாட்டுக் கருவிகளென்று நினையாதேயும். இன்றைக்குச் சிறு பிள்ளைகள்; நாளைக்கு அவர்களே தகப்பன்மார்கள்.

பரிசுத்தமும் கண்யமும் அதிகாரமும் உள்ள உமது நிலைமையைப்பற்றி ஆலோசித்து, பிள்ளைகளின் நல்லெண்ணங்களை வ்ருத்திசெய்து கெட்ட எண்ணங்களை வேரோடு களைந்து வரவேண்டும். சுத்தவீரர்களின் கதைகளையும் கற்புடைய ஸ்திரீகளின் கதைகளையும் இளமையிலேயே புகட்டவேண்டும். நல்ல புஸ்தகங்களைப் படிக்கும்படி தூண்டவேண்டும்.

மாணவர்களுக்குப் பரிசு கொடுப்பதில் கவனிக்கவேண்டியவை யாதெனில்—மிட்டாய்களையும் பொம்மைகளையும் பரிசளிப்பதற்குப் பதிலாக, பிள்ளைகளின் நோக்கத்திற்கு தக்கவாறு நல்ல கதைப் புஸ்தகங்களை வாங்கி பரிசளிக்க வேண்டும். இதுதான் மேலோர் கைகண்ட முறை.

உம் வேலையை நீரே செய்யும். பிறரை நம்பாதேயும். ஆஜர் பட்டியை நீரே கூப்பிடும். மாணவர்களிடத்தில் அந்த வேலையை ஒப்புவியாதேயும். தண்டிக்கவேண்டிய காலங்களில் தண்டிக்கத் தவறாதேயும். தவறினால் மாணவர்கள் சீர்கெட்டுப் போவார்கள்.

பிறக்கும்போதே நல்ல ஆசிரியராக ஒருவரும் பிறப்பதில்லை. ஆயினும் பயிற்சி அனுபவம் ஊக்கம் முதலியவைகளைக்கொண்டு எவரும் நல்லாசிரியராகலாம்.

பூசனிக்காய் அளவு கற்றுக்கொண்டிருந்தால்தான் கடுகளவு போதிக்க முடியும்.

உபாத்யாயர்கள் காலதாமதமின்றி பள்ளிக்குச்செல்லவேண்டும். உபாத்யாயர் சரியாய் இருந்தால்தான் மாணவர்களும் சரியாய் இருக்க முடியும். க்ரம சிக்ஷைதான் படிப்பிற்கு அஸ்திவாரக் கல்.

ஒற்றுமையையும் அந்யோந்ய விச்வாஸத்தையும் வ்ருத்தி செய்யும்படி பிள்ளைகளைத் தூண்டும்.

கற்பிக்கையில் முழு வகுப்பையும் கவனித்து உத்ஸாகமாய் கற்பிக்கவேண்டும். பிள்ளைகளும் உத்ஸாகமாய்க் கற்றுக் கொள்வார்கள். பிள்ளைகள் சில வேளைகளில் தங்கள் ஸந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள உபாத்யாயரைக் கேள்விக் கேட்பார்கள். அப்பொழுது மாணாக்கர்களைக் கோபிக்கக்கூடாது. கேள்விக்குத் தகுந்த விடையை அளிக்கவேண்டும்.

சரியாய் கற்பிக்க வழி தெரியாத ஆசான்கள் மாணவர்களை அடிக்கடித் தண்டித்துக்கொண்டும் கோபித்துக் கொண்டும் பிழை கண்டுபிடித்துக்கொண்டும் இருப்

பார்கள். பிள்ளைகளின் தாரதம்ய மறிந்து கற்பிக்க வேண்டும். உபாத்யாயர் சரிவர கற்பித்தால் மாணவர்கள் அறிந்து கொள்வார்கள். படிப்பில் ஆசையும் ஊக்கமும் உண்டாகும்படியான வழிகளை உபாத்யாயர்கள் கையாடவேண்டும்.

பிள்ளைகளை அவர்களின் கெட்ட நடத்தைக்காகவும் கெட்ட ஸகவாஸத்திற்காகவும் கட்டாயம் தண்டிக்க வேண்டும். தவறினால் அவர்கள் பெரிய பிசகு செய்யத் தலைப்படுவார்கள்.

உபாத்யாயர் ப்ரஸங்கியாமல் கற்பிக்க வேண்டும். விடைகளை பிள்ளைகளிடமிருந்து வருவிப்பது சாலவும் சிறப்பானது. அவர்கள் யோசிக்க அவகாசம் தரவேண்டும். மாணாக்கர்கள் அதிசீக்ரத்தில் மிகவும் கெட்டிக்காரர்களாகவேண்டும் என்கிற நோக்கத்துடன் அளவுக்கு மிஞ்சி கற்பிக்கலாகாது. அப்படிச் செய்யின் அது ஒரு குழந்தை சீக்ரம் பெரிதாக வேண்டும் என்று ஒரு தாய் அதற்கு அதிக சாப்பாட்டை வாயில்போட்டு அடைத்து சாப்பிடும்படி கட்டாயப்படுத்தினால் குழந்தை சோற்றைச் சாப்பிடச் சக்தியின்றி அவஸ்தைப்பட்டு மரிப்பதை ஒக்கும். அதுபோல மாணாக்கர்களும் அவர்களின் மூளையும் எல்லா விஷயங்களையும் க்ரஹிக்க சக்தியின்றி, அறிந்த விஷயங்களையும் மறந்துவிடுவார்களென்பதில் என்ன ஸந்தேகம்?

சிறுகச் சிறுக நல்விஷயங்களை மாணாக்கர்களுக்கு கற்பித்தால் அவை நீண்ட காலம் அவர்களின் இளம் மனதில் நிலைபெறும். உபாத்யாயரும் சரிவரக் கற்பிக்க இயலும்.

உபாத்யாயர் பதின்மடங்கு அதிக கவனமாய் இருக்க வேண்டும். இல்லாவிடில் மாணவர்கள் குருவை ஏமாற்றிவிடுவார்கள். பிள்ளைகளிடத்தில் உபாத்யாயரைத் தாங்கள் ஏமாற்றிவிடலாம் என்னும் எண்ணம் உதிக்க கிஞ்சித்தேனும் இடம் தரலாகாது. அவர் தம் காது, கண், வாய், உடம்பு, புத்தி முதலியவைகளைச் ஸதாகாலம் சிதறவிடாமல் அதிக விழிப்பினராய் இருக்க வேண்டும்.

உபாத்யாயர் கற்பிப்பது ஒன்றும் பேசுவது ஒன்றும் நடப்பது ஒன்றும் இருக்கக்கூடாது.

நீர் மாணவர்களுக்கு தோழனைப்போலும், தகப்பனைப்போலும் வழித்துணைபோலும் இருப்பதுதான் உம்முடைய முக்ய நோக்கமாய் இருக்கவேண்டும்.

## WESTERN CIVILISATION.

### மேல்நாட்டு நாகரீகம்.

ப்ரஸித்திபெற்ற சாஸ்த்ரியாகிய ஜகதீச சந்த்ர வஸுவின் மனைவி மேல்நாட்டு நாகரீகங்களைப்பற்றிப் பின் வருமாறு அபிப்ராயப்படுவதாக 'பெண்கல்வி' எழுதுகிறது.

மேல்நாட்டு நாகரிகத்தைக் கண்டு மயங்கிவிடாதே; மேல்நாட்டார் வழக்கங்கள் யாவும் சிறந்தவை யென்ற தப்பு அபிப்ராயம் கொள்ளாதே.

மேல்நாட்டார்கள் கேவலம் பணத்தை ஸம்பாதிப்பதிலும் பட்டப்பெயர் பெறுவதிலும், தங்கள் சரீரபலத்தை வ்ருத்தி செய்வதிலும் தம் காலம் முழுவதையும் செலவழிக்கிறார்கள்.

இந்தியாவில் எப்படி ஜாதி பேதங்களிருக்கின்றனவோ, அப்படியே மேல்நாடுகளிலும் இருக்கின்றன. ஆனால், இவை இரண்டிற்கும் ஒரு வித்யாஸம் இருக்கிறது. மேல்நாட்டு ஜாதிபேதத்தின் காரணம் பவுன்களும் டாலர்களுமேயாம். மேலும், அவர்களது பேதம் தோல் நிறத்தால் உண்டாகிறது. ஆனால் ஹிந்துக்களின் ஜாதி பேதங்களுக்குக் காரணமோ குணத்தினால் உண்டாகிறது.

மேல் நாட்டு ஜன ஸமூகக் கட்டுப்பாடுகள் கூடிய சீக்ரத்தில் சிதறவடிக்கப்படும். அப்பொழுது அவர்கள் தம் ஜன ஸமூகக் கட்டிடத்தை ஹிந்துக்களுடையதைப் போல் நிர்மாணிக்கவேண்டி வரும்.

இந்தியாவை நாம் நேசிக்கவேண்டும்; அதற்கு ஸேவை செய்யவேண்டும்; ஆனால், அந்ய நாட்டாரை வெறுக்கலாகாது. இயேசு கிறிஸ்துவின் "அன்பு" என்னும் மதத்தைப் போதிக்கவரும் அயல் நாட்டுப் பாதிரிகள் சில விஷயங்களில் நம்மிந்தியாவுக்குப் பிழை செய்தாலும், அவர்களை நாம் வெறுக்கக்கூடாது; ஸத்யமே ஜயிக்கும்.

ஐரோப்பியர்களுக்கும் ஹிந்துக்களுக்கும் ஒருபோதும் பரஸ்பர விவாஹம் நடக்கக்கூடாது, அவர்கள் நம்முடன் ஒத்துவாழ ஒருக்காலும் முடியாது. அவர்கள் நம்முடைய மனோ லக்ஷியங்களை மதிக்கமாட்டார்கள். அவர்கள் நமது பழைய வழக்கங்களின் மேன்மையை ஸரியானபடி உணரமாட்டார்கள்.

அமெரிக்கப் பெண்மணிகள், மனதைக் கவரத்தக்க இனிமை பொருந்தியவர்கள்தான். ஆனால், அவர்கள் அதிகச் செலவாளிகள்; ஏழை இந்தியர்கள் அவர்களின் டம்பச் செலவுகளுக்கெல்லாம் பணம் கொடுக்கச் சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள்.



# Departmental Notes.

# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.

## வித்யாவிஷயம்.

### Dictation.

சொல்வதெழுதுதல்.—சொல்வதெழுதுதல் பாடத்தில் உபாத்யாயர்கள் வாக்யங்களை வாசிக்கும்போது சில முக்யமான விஷயங்களை கவனிக்கவேண்டும். உபாத்யாயர்கள் வகுப்பில் உலாவிக்கொண்டே பாடத்தை வாசிக்கக்கூடாது. அப்படி வாசித்தால் பிள்ளைகள் உபாத்யாயரின் கண்ணோக்கினின்று விலக நேரிடுகிறது. இதனால் சில பிள்ளைகள் மற்றவர்கள் எழுதுவதைப் பார்த்து எழுத வஸதி ஏற்படும். எழுதவேண்டிய பாகங்களை மெதுவாக வாசித்தால், பிள்ளைகளும் மெதுவாகவே எழுதப்பழகுவார்கள். அதனால் அவர்களுக்கு எழுதுவதில் ச்ரத்தை குறைகிறது. சொல்வதெழுதவில் பிள்ளைகள் பிழையில்லாமல் எழுதப் பழகுவதோடு வேகமாயும் எழுதப் பழகவேண்டுமாதலால், எழுதவேண்டியதைச் சற்று வேகமாய் வாசிக்கவேண்டும். ஒரு தடவை சொன்ன வாக்யங்களை அல்லது வாக்யங்களின் பாகங்களை பல தடவை சொல்லக்கூடாது. ஏனென்றால் இன்னொரு தடவைதான் உபாத்யாயர் சொல்லுவாரே என்ற தைர்யத்தால் மாணவர்கள் வசனங்களை சரியாய் க்ரஹித்து மனதில் வைத்துக்கொள்ளாமலிருந்துவிடுவார்கள். சிறுவர்கள் நீண்ட வாக்யங்களை சரியாய் ஞாபகத்தில் வைத்து எழுதுவது கஷ்டமாகையால், அவைகளை தக்க பிரிவுகளாகப் பிரித்து வாசிக்கலாம். ஆனால் ரொம்ப சிறு சிறு வார்த்தைகளாகப் பிரித்து ஒவ்வொரு வார்த்தையாகச் சொல்லி எழுதச் செய்வதும் சரியல்ல.

### The University Movement.

இந்தியாவில் ஸர்வகலாசாலைகள்.—இந்தியாவில் அநேக இடங்களில் ஸர்வகலாசாலைகள் ஏற்படுத்த வேண்டி விசேஷமான ப்ரயத்னங்கள் கொஞ்சகாலமாய் நடந்துவருகின்றன. பீஹார், நாகபூர், அலிகார், ஹைதராபாத், ரங்கூன், மைஸூர், ஆகிய இவ்விடங்களில் ஸர்வகலாசாலைகள் ஸ்தாபிக்கச் செய்த பிரயத்னங்களில் மைஸூர் ஸர்வகலாசாலை கைகூடிவிட்டது. இந்த ஸர்வகலாசாலையில் படிக்குங்காலம் முடிய ஸ்வதேச பாஷையைப் படித்துத்தீரவேண்டும். இங்லீஷை ஸாதாரணமாய் எழுதப்படிக்கவும், ஸுமாராய் பேசவும் தெரிந்தால் போதுமென்று தெரிகிறது.

### Primary School Buildings.

ப்ரைமெரி பாடசாலைக் கட்டிடங்கள்.—கட்டிடங்களில் பணத்தைச் செலவு செய்யாமல் ஐக்யமாகாணங்களில் ப்ரைமெரிப் பள்ளிக்கூடத்திற்கு ஏற்ற கட்டிடங்கள் இன்ன மாதிரிதானிருக்கவேண்டுமென்று, இரண்டு வருஷங்களுக்கு முன்மாதிரிப் ப்ளான்கள் தயாராகியிருக்கின்றன. இந்த மாதிரி கட்டிடங்களில் தொண்ணூறு பையன்களிருக்கவேண்டிய ஸௌகர்யங்கள் செய்ய ரூபாய் 2,650 செலவாகும். கட்டிடங்களில் அதிகப் பணச்செலவு செய்யாமல் மேற்சொன்ன மாதிரி கட்டிடங்களையே கட்டி, ப்ரைமெரி படிப்பு சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று ஸமீபத்தில் அந்த மாகாண கவர்ன்மெண்டார் லோகல் போர்டுகளுக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

பாலர் வகுப்புகளை ஸௌகர்யமாய் நிழலடர்ந்த மரத்தினடியிலும், மழையும், காற்றுமடிக்கிற காலங்களில் பக்கத்திலிருக்கும் நல்ல வீடுகளிலும் வைத்து நடத்தலாமாம்.

### The Place of Reading.

படிக்கவேண்டிய முறை.—ஒருவன் எப்படி வேளா வேளைகளில் சாப்பிடுகிறானோ அப்படியே குறிப்பிட்ட நேரங்களில் படிக்கவும் வேண்டும். ஒழிவு ஏற்பட்ட பொழுது வாசிப்பது நல்லதேயானாலும் தினே தினே செய்யும் கார்யங்களில் புஸ்தகங்களைப் படிப்பதையும் ஒரு கார்யமாக ஏற்படுத்தி விடவேண்டும். இப்படிச் செய்துவந்தால் நாளடைவில் புஸ்தகங்கள் அத்யாவச்யமாகிவிடும். ஆகவே இப்படித் தினந்தோறும் விடாமல் படித்து வருபவர்கள் சரியான மனோவிருத்தியடைவார்கள் என்பதற்குத் தடையில்லை.

## TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### The Madura Tamil Sangam.

**மதுரைத் தமிழ்ச் சங்கம்.**—இந்த ஸங்கத்தின் 15-வது வர்ஷாந்தக் கூட்டமானது மே மாஸம் நடைபெற்றது. அந்த ஸமயம் வாசிக்கப்பட்ட ரிபோர்ட்டால் ஸங்கத்தைப்பற்றிப் பின் வரும் விவரங்கள் தெரியவருகின்றன.

இந்த ஸங்கத்தில் 327 மெம்பர்களிருக்கிறார்கள். சென்ற வர்ஷத்தில் 52 பேர்கள் புதிதாய் மெம்பர்களாகச் சேர்ந்துகொண்டார்கள்.

இந்தச் சங்கத்தார் நடத்திவரும் கலாசாலையில் 23-மாணவர்கள் கல்வி பயின்றுவருகிறார்கள். இவர்களுள் 19-பேர்களுக்கு தமிழ்ச்சங்கத்தார் உபகாரச்சம்பளம் கொடுத்துதவுகிறார்கள். இந்த ஸங்கத்தினின்று வெளிவரும் செந்தமிழ்ப்பத்ரிகைக்கு 240 சந்தாதாரர்களே இருக்கிறார்கள். இந்த பத்ரிகை மூலமாக திருப்புல்லாணி மாலையென்ற ஒரு அரிய நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. பழமொழி யென்னும் நீதிநூல் ஒரு பழைய உரையுடன் செந்தமிழ் வாயிலாக வெளிவந்துகொண்டிருக்கிறது. தொல்காப்பியச் செய்யுளியலின் நச்சினார்க்கினியருரையில் சிலபாகம் முன்பு தமிழ்ச் சங்கத்தாரால் செந்தமிழ் வாயிலாக வெளியிடப்பட்டது. மீதியை சேது ஸமஸ்தான வித்வானாகிய ரா. ராகவய்யங்கார் பரிசோதித்து செந்தமிழ் பத்ரிகைக்கு அனுப்பியிருக்கிறார். அதுவும் சீக்ரத்தில் வெளிவரும்.

### Swadesa Vaithya Ratnam.

**சுதேச வைத்திய ரத்தினம்.**—தினந்தோறும் நமது கண்ணில் படும் புல் பூண்டு செடி கொடிகளும் மரங்களும் பல ஔஷத குணங்கள் பொருந்தியிருக்கின்றன. இவைகளின் வேர், பட்டை, இலை, பூ, காய், பழம், பிசின் முதலிய பாகங்கள் பல விதங்களில் மருந்து செய்வதற்கு உபயோகப்படக்கூடியவை. இவைகளையும் ஸாதாரணமாய் மருந்துக்கடைகளில் அகப்படக்கூடிய ஸாமான்யச் சரக்குகளையும்கொண்டு பற்பலவிதமான மருந்துகள் செய்யலாம். இந்த நோக்கத்துடன் கும்பகோணம் வைத்யர் எஸ். சந்த்ரசேகரர் என்பவர் சுதேச வைத்ய ரத்னம் என்னும் ஒரு நூலை வசன நடையில் எழுதி வெளியிட்டிருக்கிறார். இதில் அநேக வைத்யச் சரக்குகள் மூலிகைகளின் குணங்களும், ஆயுர்வேத முறைப்படியும் ஐரோப்பிய வைத்ய முறைப்படியும் மருந்துகள் செய்து வ்யாதிகளுக்குக் கொடுக்கும் விதமும், ரோகங்களின் வகைகளும் அவைகளுக்கேற்ற மருந்துகளும் கூறப்பட்டிருக்கின்றன. இது ஸாதாரணமாய் யாவரும் வாசித்தறியக்கூடிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூ. 2—8—0 வேண்டுவோர் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3, 4, கொண்டிசெட்டித் தெரு மதராஸ் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

### Sanskrit in Tamil Characters.

**தமிழ் எழுத்தில் ஸம்ஸ்க்ருதத்தை எழுதுவது.**—தமிழ்நூல்களில் ஸம்ஸ்க்ருத ச்லோகங்களை உதாரணமாக எடுத்துக்காட்ட வேண்டுமானாலும், ஸம்ஸ்க்ருத நூல்களுக்கு தமிழில் அர்த்தம் வேண்டுமானாலும் சில ஆசிரியர்கள் ஸம்ஸ்க்ருத வார்த்தைகளையும் ச்லோகங்களையும் தமிழ் எழுத்திலேயே எழுதிவிடுகிறார்கள். ஸம்ஸ்க்ருதம் அறியாதவர்கள் இதை வாசிப்பார்களானால் பிசகான உச்சரிப்புக் களஞ்சியங்களாவார்கள் என்பதில் ஐயமில்லை என்று 'பூர்ண சந்த்ரோதயம்' எழுதுகிறது. ஸம்ஸ்க்ருதம் தெரிந்தவர்கள்கூட தமிழில் எழுதிய ஸம்ஸ்க்ருத ச்லோகங்களைப்படிப்பது சிரமமாயிருக்கின்றது. ஆகையால் க்ரந்த லிபியில் ச்லோகங்களை எழுதுவதே தமிழும் ஸம்ஸ்க்ருதமும் கலந்தபுத்தகங்களுக்கு ச்லாக்யத்தைத் தரும்.

### Tolstoy and Gandhi.

**கௌண்ட் லியோ டால்ஸ்டாயும் மகாத்மா காந்தியும்.**—இது மிஸ்டர் க்ருஷ்ணஸாமி சர்மா எழுதியது. இதில் ரஷ்ய தேசாபிமானியாகிய கௌண்ட் லியோ டால்டாய், இந்திய தேசாபிமானியாகிய மிஸ்டர் காந்தி ஆகிய இவர்களுடைய ஜீவ்ய சரித்திரங்களும், இவர்களுடைய கொள்கைகளும் விரிவாக எழுதப்பட்டிருக்கின்றன. இவைகளோடு பாஸிவ் ரெஸிஸ்டென்ஸ் என்னும் ஸாத்வீக எதிர்ப்பின் தன்மையும், மிஸ்டர் காந்தி அகமதாபாத்தில் ஸ்தாபித்திருக்கும் ஸத்யாக்ரஹம் என்னும் ஆச்ரமத்தின் அமைப்பும் எழுதப்பட்டிருக்கின்றன.

### Srimati.

**ஸ்ரீமதி.**—இது திருச்சி வக்கீல் எஸ். ராமஸ்வாமி அய்யர் இயற்றிய ஒரு நாடகமாகும். இது வாசிக்க இனிமையாயிருப்பதோடு, நடையும் ஸுலபமாயிருக்கிறது. வேண்டுவோர் ஜி-எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி 3, 4, கொண்டிசெட்டித் தெரு மதராஸ் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.



## SCIENCE AND INVENTION.

## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### Foot-prints.

**பாதங்களின் அடையாளங்கள்.**—போலீஸார் குற்றவாளிகளின் அடையாளத்தை எப்போதும் மறவாமலிருப்பதற்காக அவர்களுடைய கைவிரல் நுனிகளிலுள்ள ரேகைகளை மையால் அச்சடித்து எடுத்து வைத்துக் கொள்ளுகிறார்கள். இந்த ரேகைகளில் ஒன்றாவது மற்றொன்றைப் போலிருப்பதில்லை. ஆகையால் குற்றவாளி எங்கேயாவது ஓடிப்போய் வேறுவேஷம் தரித்து ஆள் அடையாளம் தெரியாமல் செய்துகொண்ட போதிலும், அவனை ஸந்தேகித்துப் பிடித்தால் அவனுடைய விரலிலுள்ள ரேகை அடையாளத்தால் அவனை இன்ன குற்றவாளிதானா அல்லவா என்று நிச்சயித்துவிடலாம். விரலிலுள்ள ரேகைகளைப் போலவே கால்விரல்களிலுள்ள ரேகைளும் ஒருவருடையதைப்போல் இன்னொருவருடைய திருப்பது கிடையாதாம். இந்த விஷயமானது அமெரிக்காவைச் சேர்ந்த சிக்காகோவிலுள்ள ஒரு ஆஸ்பத்திரியில் ரொம்ப உபயோகமுள்ளதாயிருக்கிறதாம். அது ஒரு ப்ரஸவ ஆஸ்பத்ரியாகும். அதற்கு அநேக ஸ்த்ரீகள் ப்ரஸவிக்க வருகிறார்கள். அங்குள்ள குழந்தைகள் தட்டுமாற்றாய் ஒரு தாயிடமிருந்து இன்னொரு தாயிடம் மாறிவிடக்கூடும். அல்லது, வேண்டுமென்றே சிலர் குழந்தைகளை மாற்றிவிடக்கூடும். அப்படிக் குழந்தைகள் மாறிவிட்டால், இன்ன குழந்தைதான் இன்னாருடையதென்று தீர்மானமாய்ச் சொல்வது கஷ்டமானது. அதற்காக ஆஸ்பத்ரி அதிகாரிகள் குழந்தை பிறந்த ஒருமணி நேரத்திற்கெல்லாம் அதன் காலில் இங்கியைத் தடவி அதன்மேல் கடுதாசியை வைத்தழுத்தி எடுக்கிறார்கள். எடுத்த கடுதாசியில், குழந்தை இன்னாருடையதென்று குறிப்பிட்டு, அதை ஆபீஸில் பத்ரப்படுத்திவைக்கிறார்கள். குழந்தை விஷயமாய் ஏதாவது ஸந்தேகமோ, தகராறோவந்தால் இதை ஆதாரமாகக்கொண்டு குழந்தை இன்னாருடையதென்று நிச்சயித்துவிடுகிறார்கள்.

### Red Uniforms.

**ஸைன்யங்கள் உபயோகிக்கும் சிவப்பு நிறமுள்ள உடைகள்.**—எந்த நிறமுள்ள உடைகளை ஸைன்யங்கள் உபயோகித்தால் சத்ருக்கள் அடையாளங் கண்டுபிடிக்க மாட்டார்கள் என்று அறிந்துகொள்ள சில சோதனைகள் ஸமீபத்தில் செய்யப்பட்டன.

வெள்ளை யதிகங்கலந்த சாம்பல் நிறம்,

கருப்பு மிகுதியாயுள்ள சாம்பல்வர்ணம்,

பச்சை நிறம்,

சுத்த நீலம்,

நல்ல சிவப்பு.

ஆக இந்த ஐந்து நிறமுள்ள துணிகளில் சட்டைகள் தைத்து ஒவ்வொரு நிறத்திலும், இரண்டு சிப்பாய்களை சட்டைகள் போட்டுக்கொள்ளச் செய்தார்கள். பிறகு இந்த பத்துவீரர்களையும் சேர்ந்தாற்போல் நடக்கச் சொல்லி, சில ராணுவ உத்யோகஸ்தர்கள் கவனமாய்ப் பார்த்துவந்தார்கள். கொஞ்சதூரம் அவர்கள் நடந்து போகவே, வெள்ளை யதிகங்கலந்த சாம்பல் நிறமுள்ள துணி முதலில் கண்ணுக்கு மறைந்தது. இரண்டாவதாக நல்ல சிவப்புத்துணி மறைந்தது.

பிறகு ஒன்றன்பின் ஒன்றாய் கருப்பு மிகுதியாயுள்ள சாம்பல் வர்ணமும், சுத்தநீலமும் கண்ணுக்குத் தெரியவில்லையாம். ஆனால் பச்சைநிறமுள்ள சட்டை மட்டும் பார்வைக்கு நன்றாய்த் தெரிந்தது. பிறகு, நீலம், சிவப்பு இந்த இரண்டு வர்ணங்களாலும் தனித்தனியே செய்த குறிகளை தூரத்திலிருந்து சுட்டதில், சிவப்பைக்காட்டிலும் நீலநிறமுள்ள குறி, எளிதாய் கண்ணுக்குப் புலப்பட்டதாம். ஆகையால் ப்ரெஞ்சு துருப்புகள் செய்வது போல் சிவப்பு நிறமுள்ள சட்டைகளை உடுப்பது கெடுதலல்லவென்று ஏற்படுகிறது.

### Artificial Foods.

**செயற்கை ஆகாரங்கள்.**—ஆகாரத்திலுள்ள ஸத்வங்கள், ஸ்டார்ச் என்னும் மாப்பொருள், ப்ரொடீன், எண்ணெய், தாதுப்பொருள்கள் என நான்குவகைப்படும். இவைகளுள் ப்ரொடீன்தான் ரொம்ப முக்யமானது. இது சதை வளர்ச்சிக்கு ரொம்ப அவச்யமாகிறது. ப்ரொடீன் உள்ள ஆகாரப்பொருள்கள் ஜெர்மனியில் குறைவாயிருப்பதால் ஜெர்மானியர்கள் ப்ரொடீனையே தயார்செய்ய முயற்சி செய்துவருகிறார்கள். ரொட்டிகள் செய்ய உதவும் யெஸ்ட் என்னும் புளிப்பு த்ரவத்தில் உள்ள சிறு க்ருமிகளுக்கு சர்க்கரையும் ஆகாயத்திலுள்ள நைட்ரொஜீனும் ஆகாரமாகக் கொடுக்கிறார்கள். அந்த க்ருமிகள் அவை இரண்டையும் உபயோகித்து ப்ரொடீனை உண்டாக்குகின்றனவாம்.

# SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

### Chewing the Food.

**ஆகாரத்தை மென்று தின்னல்.**—ஆகாரத்தைவாயில் போட்டவுடன் அப்படியே விழுங்காமல், அதை மென்று தின்பதால், வாயிலுள்ள உமிழ் நீரானது ஆகாரத்தில் கலந்துகொண்டு, அதை சீக்ரம் ஜீர்ணம் செய்ய உதவியாயிருக்கிறது. ஆனால் உமிழ்நீர் சில ஆகாரப் பொருள்கள் விஷயத்தில் ப்ரயோஜனமுள்ளதேயொழிய, எல்லா உணவுப்பொருள்கள் விஷயத்திலும் உபயோகமுள்ளதல்ல.

சிலர் எந்த விதமான ஆகாரம் சாப்பிட்டாலும் சரி ஒவ்வொரு கவளத்தையும் சலிக்காமல் அநேகம் தடவை மென்று, பிறகு தான் அதை விழுங்கவேண்டுமென்றும், அப்படிச்செய்வதால் ஆகாரம் சரியாய் ஜீர்ணயாவதோடு, ரத்தோட்டம் வ்ருத்தியடைதல், ஹ்ருதயம் பலப்படுதல், ஆகாரம் அதிக சேதமில்லாமல் தேகத்தில் கலந்துகொள்வது முதலிய பல ஸௌகர்யங்கள் ஏற்படுவதாகச் சொல்லிவருகிறார்கள். அது முற்றிலும் சரியல்லவென்று ஒரு அமெரிக்க வைத்யப்பத்ரிகை எழுதுகிறது. ப்ரொடீன் ஸம்பந்தமுள்ள ஆகாரப் பொருள்கள் அதாவது மாம்ஸம், பால், பருப்புவகைகள் முதலியவைகளை சாப்பிடும்போது அதிகமாய் மெல்லுவதிலும் குறைவாய் மெல்லுவதிலும் குணத்தில் அதிக வித்யாஸம் ஒன்றும் ஏற்படுவதில்லையாம். அதிகமாய் மென்று தின்பதால் மொத்தம் ஆகாரத்தில் எவ்வளவு பாகம் தேகத்தில் சேருகிறதோ, அதைவிட நூற்றுக்கு 1-6 பாகம் குறைவாகத்தான், கொஞ்சமாய் மென்றுதின்பதில் தேகத்தில் சேருகிறது. இவ்வளவு ஸ்வல்ப வித்யாஸத்துக்காக இவ்வளவு ச்ரமப்பட்டு மென்று தின்ன வேண்டியதில்லை. ஆனால் மாப்பண்டங்கள், மாஸத்து அதிகமுள்ள கிழங்குகள், தான்யங்கள் ஆகிய இவைகளை மென்று தின்பதில் ரொம்ப ஸௌகர்யமிருக்கிறதென்று அந்தப் பத்ரிகை எழுதுகிறது.

### Physical Exercise.

**தேகப்பயிற்சி.**—மிதம்மீறி தேகப் பயிற்சி செய்தால் தேகத்துக்குப் பற்பல கெடுதல்கள் நேரிடக்கூடும். சிலஸமயம் அற்பாயுஸுக்குக் காரணமுமாகும். பயில்வான்கள் வெகுவாய் அற்பாயுஸாகவே இறந்துபோகிறார்கள். தேகப்பயிற்சி செய்யும்போது நாம் நமது தசைநார்களுக்கு ரொம்ப ச்ரமம் கொடுக்கக்கூடாது. எந்த பயிற்சியில் தசைநார்களுக்கு ச்ரமம் ஏற்படும், எதில் ஏற்படாதென்பது அவரவர்களின் தேகஸ்திதியைப் பொறுத்தது. தேகப்பயிற்சி ஆரம்பித்த இரண்டொரு நாள்களிலேயே பயில்வான்களைப்போல் ச்ரமமான பயிற்சிகளைச் செய்யவேண்டுமென்பது பிசகான எண்ணமாகும். முதலில் சிறிதளவு செய்து பிறகு கொஞ்சங் கொஞ்சமாக தேகப்பயிற்சியை அதிகமாக்கிக் கொண்டு போகவேண்டும். எப்போதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டியதென்னவென்றால், தசைநார்களுக்கு ச்ரமமும் வலியும் உண்டாக்கக்கூடிய எந்தப்பயிற்சியையும் செய்யக்கூடாதென்பதே.

### Hot and Cold Water.

**வெந்நீரும் குளிர்ந்த ஜலமும்.**—வெந்நீர் குடிப்பது ஒரு சிறந்த வழக்கமாகும். சாப்பிடும்போது குளிர்ந்த ஜலத்துக்கு பதிலாக வெந்நீரைக் குடித்தால் சிலஸமயங்களில் ஜீர்ணத்தை வ்ருத்திசெய்யும். சாப்பிடுவதற்கு ஒருமணிக்கு முன்னால் வெந்நீர் குடித்தால் இரைப்பை சுத்தமாகும். அதிகாலையில் காலைப்போஜனத்துக்கு முன்னால் வெந்நீர் குடிப்பது ரொம்ப நல்லது. வெந்நீர் குடிப்பவர்களுக்கு தேகபலம் ஏற்படுவதோடு, ச்ரமம் தோன்றாமலுமிருக்கும். ப்ரயாணம் செய்பவர்கள் வெந்நீர் குடிப்பது ரொம்ப நல்லது. ஜப்பானிய ஸோல்ஜர்கள் ஓரிடமிருந்து இன்னோரிடம் நடந்து போகும்போது வெந்நீர் குடிக்கிறார்களாம்.

குளிர்ந்த ஜலத்தை அதிகமாய்க் குடிக்காமல் குறைந்த அளவில் குடித்துக் கொண்டுவந்தால் ஜீர்ணக்கருவிகளுக்கு பலமேற்படும். குளிர்ந்த ஜலமானது குடலில் உள்ள பாசகநீர் சுரக்கும் கருவிகளுக்கு அதிக பலம் கொடுத்து ஆகாரத்தை நன்றாய் ஜீர்ணம்செய்ய உதவி செய்யும்.

### Castor Oil.

**ஆமணக்கெண்ணெய்.**—ஸாதாரண ரணங்களிலும், எரிப்புண்களிலும் ஆமணக்கெண்ணெய் மிகவும் உபயோககரமான பதார்த்தம். சில கேஸுகளில் டிஞ்சர் அயோடைன் உபயோகித்து ப்ரயோஜனமில்லாமற்போக, ஆமணக்கெண்ணெயை கட்டு கட்டும்போது உபயோகித்ததில் குறிப்பிடக் கூடியவாறு சீக்ரத்தில் குணம் உண்டாயிற்று. இந்த எண்ணெயில் ஸல்லாத்துணியை நனைத்து ஸாதாரண ரணங்களின்மேல் வைத்துக்கட்டினால் சீழ்ப்பிடிக்காமல் ரணம் ஆறத்தொடங்கும். விலையில் மலிவானதும், எங்கும் எளிதில் கிடைக்கக்கூடியதுமான இந்த எண்ணெயின் உபயோகம் மெச்சத் தகுந்தது என்று ஒரு வைத்யர் தெரிவிப்பதாக 'வைத்ய கலாநிதி' எழுதுகிறது.

# LAW.

# சட்டம்.

### Title in Exchange of Land.

நிலம் பரிவர்த்தனை செய்வதில் பாத்யம்.—வாதியும் ப்ரதிவாதியும் நிலங்களை பரிவர்த்தனை செய்துகொண்டார்கள். பிற்பாடு ப்ரதிவாதியின் நிலம் அனந்தர வார்ஸைக் கட்டுப்படுத்த முடியாத விதவை விற்ற ஸொத்தென்று அனந்தர வார்ஸ் வ்யாஜ்யம் வரவே, வாதி அனந்தர வார்ஸுக்கு 875-ரூ. கொடுத்து நிலத்தை வைத்துக்கொள்ளுகிறதென்று ராஜினாமா செய்துகொண்டார். அதன்மேல் முதலில் பரிவர்த்தனையாகக் கொடுத்த தன் நிலமோ அல்லது அதன் க்ரயமோ கிடைக்கவேண்டுமென்று ப்ரதிவாதியின்மேல் வ்யாஜ்யம் கொண்டுவந்தார். வாதியும் ப்ரதிவாதியும் பரிவர்த்தனை செய்துகொண்டபோது ப்ரதிவாதி ஸொத்து தன்னுடையதென்று சொன்னதாகுமென்றும், ஆனாலும் வாதியின் நிலத்தைத் திருப்பிக்கொடுக்கவேண்டியதில்லை யென்றும், அவர் அடைந்த நஷ்டத்தை அதாவது 875-ரூபாயை மட்டும் ப்ரதிவாதி கொடுக்கவேண்டுமென்றும் மதராஸ் ஹைக்கோர்ட்டில் தீர்மானிக்கப்பட்டது. 3 லாவீக்லி 260

### Judgment in Criminal Case.

ஒரு க்ரிமினல் கேஸில் தீர்ப்பு.—ஒரு க்ரிமினல் கேஸில் ஒரு மாஜிஸ்ட்ரேட் கேஸை விசாரித்து தீர்ப்பெழுதிவிட்டார். ஆனால் கோர்ட்டில் தீர்ப்பை வாசிக்கவில்லை. அதற்குள் அவருக்கு மாற்றுதலாகிவிட்டது. அப்படியானால் அவருக்குப் பிறகு வருகிற மாஜிஸ்ட்ரேட் முன் மாஜிஸ்ட்ரேட் எழுதிவைத்த தீர்ப்பை வாசிக்கவேண்டு மென்பது அவச்யமில்லை. அப்படி வாசிக்கும்படியும் அவரை கட்டாயப்படுத்த முடியாது. ஆயினும் பின் வந்த மாஜிஸ்ட்ரேட் இஷ்டப்பட்டால், முன் மாஜிஸ்ட்ரேட் எழுதிவைத்த தீர்ப்புக்கு தேதி, தன் கையெழுத்து முதலியவைகளைப்போட்டு வாசிக்கலாம். அப்படிச் செய்தால் அது அவருடைய தீர்ப்பாகவே எண்ணப்படும். ஆனால் குற்றவாளி மறு விசாரணை செய்யவேண்டுமென்று கேட்டால் அப்படிச் செய்யலாமோ என்பது ஸந்தேகம்.

### Guardian Ad litem.

வ்யாஜ்யத்துக்காக கார்டியன்.—ஒரு அப்பீல் வ்யாஜ்யத்தில் மேஜரான ஒருவரும் இரண்டு மைனர்களுக்கு வ்யாஜ்யத்துக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு கார்டியனும் ப்ரதிவாதியாக இருந்தார்கள். அப்பீல் நடவடிக்கையிலிருக்கும்பொழுது மைனர் ப்ரதிவாதிகளின் கார்டியன் இறந்துபோய்விட்டார். ஆனால் மைனர்களுக்கு மறுபடியும் கார்டியன் நியமிக்காமல் அப்பீல் தீர்மானமாகி மைனர்களுக்கு விரோதமாகிவிட்டது. மைனர் ஸொத்துகள் ஜப்திசெய்யப்பட்டு, கோர்ட்டு மூலமாய் விற்பனையானபோது ஒருவர் வாங்கினார். இப்படி கார்டியன் இறந்துபோன பிறகு நடந்த நடவடிக்கைகளெல்லாம் செல்லாதவை யென்றும், அந்த ஸொத்துக்களை வாங்கினவருக்கு யாதொரு பாத்யமுமில்லை யென்றும் தீர்மானிக்கப்பட்டது. 3 லாவீக்லி 25-ம் பக்கம்.

### Attachment of Undivided Interest.

அவிபக்த குடும்பத்தில் பாகத்தை ஜப்தி செய்தல்.—அவிபக்த குடும்பத்தைச்சேர்ந்த ஒரு பங்காளி ஒளிந்துகொண்டுவிட்டதற்காக அவனுடைய பங்கைக் க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் 88-ம் ஸெக்ஷன்படி கவர்ன்மெண்டார் ஜப்தி செய்தார்கள். அதனால் அவர்களுக்கு ஸொத்தில் ஸ்வதந்த்ரம் ஏற்பட்டுவிடாது. அந்த ஸொத்திலிருந்து கிடைக்கும் வரும்படியை அடையலாம். ஒளிந்துகொண்ட பாகஸ்தனுக்கு என்ன பாத்யங்கள் உண்டோ அவைகளைவிட அதிக பாத்யங்கள் கவர்ன்மெண்டுக்கு ஏற்படா. ஆகையால் ஜப்தியானபிறகு பிறந்த பிள்ளைகளுக்கும் ஸொத்திலிருந்து கிடைக்கும் வரும்படியில் பாகம் உண்டு.

### Adoption by a Lunatic.

பயித்தியக்காரன் பிள்ளை தத்து எடுத்துக்கொள்ளுதல்.—1858-ம் வர்ஷத்து பயித்தியக்காரரைப்பற்றிய 35-ம் ஆக்ட்படி பயித்தியக்காரன் என்று தீர்மானிக்கப்பட்ட ஒருவன் பிள்ளை தத்து எடுத்துக்கொள்ள ஆக்ஷேபனை யில்லை. ஆனால் அவன் தத்து எடுத்துக்கொள்ளும்போது நல்ல புத்தியோடிருந்தானென்று ருஜுப்படுத்த வேண்டியது அவச்யமாகும்.

### Suit by Reversioner.

அனந்தர வார்ஸ் வ்யாஜ்யம்.—ஸொத்துக்கு அனந்தர வார்ஸ் வ்யாஜ்யம் போடுகிறவர் இறந்துபோனவருக்கு என்ன உறவு என்று ரூபிப்பதோடு, அவருக்குத் தெரிந்தமட்டில் வேறு முன் பாத்யதையுள்ள வார்ஸுகளில்லைஎன்றும் கோர்ட்டார் ஒப்புக்கொள்ளும்படி செய்யவேண்டும். வேறு எவராவது வ்யாஜ்யம் செய்தவனைக்காட்டிலும் முன் பாத்யமிருப்பதாகச் சொல்லும் பக்ஷத்தில், அந்த மற்றவரே அதை ரூபிக்கவேண்டியது. 3 லா வீக்லி 331,

## PERSONAL NOTES.

## மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

### The Austrian Emperor and the Kaiser.

**ஆஸ்ட்ரிய சக்ரவர்த்தியும் கெய்ஸரும்.**—ஸ்விட்ஸர்லண்ட் தேசத்து வைத்ய ஸங்கத்தைச் சேர்ந்தவரும், நரம்பு மனம் ஆகிய இவைகள் ஸம்பந்தமான வ்யாதிகளில் தேர்ச்சிபெற்றவருமான டாக்டர் நீப் என்பவர் ஆஸ்ட்ரியா சக்ரவர்த்தியாகிய ப்ரான்ஸிஸ் ஜோஸெப், ஜெர்மன் சக்ரவர்த்தியாகிய கெய்ஸர் ஆகிய இரண்டு பேர்களுடைய வ்யாதிகளின்னமாதிரி யென்றும், அவர்கள் தங்கள் வாழ்நாட்களை இன்னமாதிரியாகக் கழிப்பார்களென்றும் தெரிவித்திருக்கிறார்.

ஆஸ்ட்ரிய சக்ரவர்த்திக்கு தேகம் ரொம்ப திடமானது. அதற்குத் தகுந்தபடி அவருடைய நரம்பு அமைப்புகள் சரியாயில்லை. எந்த விஷயத்தையும் அவர் சரியாய் க்ரஹிக்கமுடியாது. நல்லது பொல்லாததைக்கண்டு மகிழவும் துக்கப்படவும் அவரால் முடியாது. தமக்குப் பிடிக்காத விஷயங்களில் ரோசம் கொள்வதும் ரொம்பக்குறைவுதான். அவர் தம்மைச் சுற்றிலும் என்ன நடக்கிறதென்பதை சரியாய் அறிந்திருப்பாரென்பதும் ஸந்தேகம். தமது குடும்பத்தில் ரொம்ப பரிதாபமான துக்கங்கள் ஏற்பட்டும், ராஜாங்க விஷயமாக அநேக கலவரங்கள் ஏற்பட்டுங்கூட அவர் மனம் கொஞ்சங்கூட அவைகளைப்பற்றி நினையாமல், தினப்படி நடக்கும் ஸாமான்ய விஷயங்களையும் விளையாட்டுகளையும் கவனிப்பதிலேயே செல்லுகிறது. அவருடைய ராஜ்யம் அழிந்து போனாலுங்கூட, அவர் மனமுறிந்து போகாமல் இன்னும் சில வர்ஷங்கள் உயிரோடிருந்து, பிறகு தேகத்தளர்ச்சியின் காரணமாக இறந்து போவார்.

கெய்ஸருடைய நிலைமை வேறு. அவருக்கு அபார புத்தியுண்டு. அவர் ஸாதாரண நிலைமையுள்ளவராகப் பிறந்திருந்தால், நல்ல ஸர்க்கார் உத்யோகஸ்தர் என்று பேர் வாங்கியிருப்பார். அவர் பிறந்த சில்காலத்துக்கெல்லாம் ப்ரஷ்யாவானது 1866-ம் வர்ஷத்தில் ஆஸ்ட்ரியாவோடும், 1870-ம் வர்ஷத்தில் ப்ரான்ஸோடும் யுத்தம் செய்து ஜயித்து க்யாதியடைந்ததால், கெய்ஸருக்கு தமது ஜாதியைப் பற்றிய பெருமை ரொம்ப அதிகமாகி, தாமும் ரொம்ப நாடுகள் பிடித்து அரசாளவேண்டுமென்னும் ஆசை யதிகமாயிற்று. அப்போது அவருடைய மனோ பலமும் குறைந்துபோய் அவருடைய வீண் ஆசைகளை நிறுத்த முடியாமல் போயிற்று. இப்படி அவருக்கு ஏற்பட்ட அபார ஆசைகளுக்கும், மன உறுதிக் குறைவுக்கும் காரணம் அவருக்குப் பிறவியிலேயே ஏற்பட்ட சில ஊனங்களாகும். இந்த ஊனங்கள் அவருக்கு அநேகம் இருக்கின்றன. அவருக்கு ஒரு கை ஸ்வாதீனமில்லை. கால் கைக் கணுக்களில் வீங்கினதுபோல் புடைத்திருக்கிறது. காதிலும் ஊனமுண்டு. அவருக்கு சில ஸமயம் கொடுமையான தலைவலி உண்டாவதுண்டு. அடிக்கடி தூக்கமின்மையும் உண்டாகும். அவர் அடிக்கொரு நினைவுள்ளவர். அவர் கடைசியில் தற்கொலைசெய்து மாண்டுபோகக் கூடும். அல்லது பைத்யம் பிடித்துப் போகக்கூடுமென்று மேற்சொன்ன டாக்டர் தெரிவிக்கிறார்.

### The Late Lord Kitchener.

**காலஞ்சென்ற லார்ட் கிச்சனர்.**—யுத்தம் ஆரம்பமானது முதல் இந்தமாஸம் வரையில் இங்க்லண்டின் யுத்தமந்த்ரியாயிருந்த லார்ட் கிச்சனர் 'ஹாம்ப்ஷைர்' என்னும் க்ரூஸர் கப்பலில் ஏறி ரஷ்யாவுக்குப் போய்க்கொண்டிருக்கையில், கப்பல் ஒரு வெடிகுண்டின்மேல் படவே, அது தாக்கிக் கப்பல் மூழ்கி, அதிலிருந்த லார்ட் கிச்சனரும் மூழ்கி இறந்துபோய்விட்டார் என்பதைக்கேட்டு விஸனமடைகிறோம்.

லார்ட் கிச்சனர் இங்க்லண்டிலும் மற்ற நாடுகளிலும் யாவராலும் நன்குமதிக்கப்பட்டிருந்தார். அவர் ரொம்ப மன உறுதியும் விடாமுயற்சியும் ஊக்கமும் உள்ளவர். முன் யோசனை அவருக்கு அதிகம் உண்டு. யுத்தம் ஆரம்பித்ததும் அவர், யுத்தம் குறைந்தது மூன்று வர்ஷம் நடக்குமென்று தெரிவித்து, அவ்வளவு காலம் யுத்தம் நடத்துவதற்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்யவேண்டுமோ அவைகளைச் செய்துவந்தார். இந்த ஸமயத்தில் அவர் இறந்தது ரொம்பவும் வருத்தப்படத்தக்கது.

### Sir Sivaswami Aiyar.

**ஸர் சிவஸ்வாமி அய்யர்.**—சென்னை - கவர்ன்மெண்டின் நிர்வாக ஸபையில் ஒரு மெம்பராகிய ஸர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யருக்கு சென்னை யூனிவர்ஸிட்டியின் வைஸ்சான்ஸலர் ஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

### Lord Hardinge.

**லார்ட் ஹார்டிஞ்ஜ்.**—நமது வைஸ்ராயாக விருந்த லார்ட் ஹார்டிஞ்ஜுக்கு இந்தியாவில் வைஸ்ராய் உத்யோகத்தைத் திறமையாய் வகித்ததற்காக நைட் அப் கார்ட்டர் என்னும் பட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது.



## SOCIETY AND RELIGION.

## ஜன ஸமூகமும் மதமும்.

### Reasons for Early Marriage.

**பால்யவிவாகம் ஏற்பட்டதின் காரணங்கள்.**—ப்ராம்மணர்களுக்குள் பெண்கள் ருதுவாவதற்கு முன் கல்யாணம் செய்யும் வழக்கம் ஏற்பட்டதற்குக் காரணமின்னதென் பதைப்பற்றி மிஸ்டர் ஸ்ரீநிவாஸய்யர் 'செந்தமிழில்' ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார்.

முன்பு இந்தியாவில் வரவர க்ஷத்ரியர்களின் வலிமைகள் குறைந்து, அவர்களில் முக்யமான வம்சங்கள் குறைந்து போகவே, ப்ராம்மணர்கள் தங்கள் மதத்தையும் ஸ்த்ரீகளையும் காப்பாற்ற சக்தியற்றவர்களா யிருந்திருக்கிறார்கள். ஸுமார் 1000-வர்ஷங்களுக்கு முன் தொடங்கி மகம்மதியர்கள் இந்தியாவில் வந்து குடியேறி அரசாட்சி செய்துவந்திருக்கிறார்கள். அவர்கள் முரட்டுஜாதியானபடியால், அவர்கள் தாங்கள் ஜயித்த நாடுகளைக் கொள்ளையடிப்பதும் அகப்பட்ட ஸ்த்ரீகளைச் சிறைபிடித்துப்போவதும் ஸகஜமாயிருந்தது. விவாகமான பெண்ணை பலாத்காரம் செய்தால் மிகுந்தபாபமும் ஜாதியார்களுக்குள் நிந்தையும் ஏற்பட்டிருப்பதை உத்தேசித்து, மகம்மதியர்களுள், துஷ்டரா யுள்ளவர்கள், கல்யாணமாகாமல், ப்ரௌடையாய்த் தகப்பன் வீட்டிலிருக்கும் பெண்களை விசேஷமாய் அபகரித்துக்கொண்டுவந்தார்கள். அதனால் எப்படியாவது தங்களுடைய மதத்தையும், ஸ்த்ரீஜாதிகளின் மானத்தையும் காப்பாற்றிக்கொள்ளவேண்டுமென்று, பயந்த ஸ்வபாவமுடையவர்களும் வலிமையற்றவர்களுமான ப்ராம்மணர்களில், கற்றறிந்து முதன்மையா யுள்ளவர்கள், பெண்ருதுவாவதற்கு முன் ஒரு புருஷனுக்கு அவளை மணஞ்செய்து கொடுத்துவிட்டால், துஷ்டர்களுடைய நிர்ப்பந்தம் தங்களுக்கு ஏற்படாதென்று யோசித்து, அவர்களை ப்ரௌடையாவதற்குமுன் கட்டாயம் கல்யாணம் செய்து கொடுக்கவேண்டுமென்று கண்டிப்பான நிபந்தனைகள் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்று தோன்றுகிறது. அதை அனுஸரித்து சிலர், எப்பேர்ப்பட்ட விஷயத்தைச் செய்தாலும், அதற்கு ஆதாரவாக சாஸ்த்ர ஸம்மதமில்லாவிட்டால் இதரஜனங்கள் அதை அனுஷ்டிக்கமாட்டார்களென்றகாரணத்தைக்கொண்டு, அதற்கு ஆதாரமாக சில ஸ்ம்ருதிகளில் ப்ரௌடாவிவாகத்தைக் கண்டித்து ச்லோகங்கள் சேர்த்திருக்கிறார்கள். ஷை நிர்ப்பந்தம் மேன்மேலும் இருந்துவந்ததால் ருதுவாவதற்கு முன்னமேயே பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுப்பது தொடர்ந்த வழக்கமாக ஏற்பட்டு வந்துவிட்டது.—என்றிப்படி மிஸ்டர் ஸ்ரீநிவாஸய்யர் அபிப்ராயப்படுகிறார்.

இவ்வபிப்ராயத்தை 'செந்தமிழ்'ப்பத்ராதிபர் ஆக்ஷேபித்துப் பின்வருமாறு எழுதுகிறார்.

"மகம்மதிய அரசாட்சியில் அநீதியாக அவர்கள் இந்தியப் பெண்களைச் சிறைபிடியா திருக்கும்பொருட்டு கன்யா விவாகம் கட்டாயமாய் ஏற்பட்டதென்றால், அது ப்ராம்மண வர்ணத்தில்மட்டும் நியதமாயும் மற்ற வர்ணங்களில் நியதமில்லாமலுமிருக்கக் காரணமில்லை. ப்ராம்மணரல்லாத ஹிந்துக்கள் பலாட்டியர்களாயிருந்தபடியால் அவர்களிடம் மகம்மதியர்கள் செல்லவில்லையென்றால், அவர்களுக்கு குருமாராய் அவர்களால் போற்றப்பெற்ற ப்ராம்மணர்களுக்கும் அவர்களாதரவிருந்தபடியால், மகம்மதியரால் இடைஞ்சலுண்டாயிருக்கமாட்டாதென்றே சொல்லவேண்டியதா யிருக்கிறது. அன்றியும் ப்ராம்மணவகுப்பில் பலாட்டியரா யுள்ள மஹாராஷ்ட்ரர்களாவது மற்றவர்களைப்போல் ப்ரௌடா விவாஹத்தைக் கவனித்தவராயிருக்கவேண்டுமே! அதுவுமில்லையென்று தெரிகிறது. அல்லாமலும், மகமதிய அரசாட்சிக்கு ஒருகாலுமுள்ளாகாத பரோடா முதலான ஹிந்துராஜ்யங்களிலுள்ள ப்ராம்மணர்களும் கட்டாயமாக கன்யாவிவாகத்தையே கைக்கொண்டிருப்பதற்கும் இதுகாரணமாக மாட்டாதென்பதையும் நாம் யோசிக்கவேண்டும்.

ஆகையால் மகம்மதிய ஆட்சியிலிருந்து, ப்ராம்மண வகுப்பில் ப்ரௌடா விவாகம் விலக்கப்பட்டிருக்கவேண்டும் என்னும் ஊகமானது யுக்தமென்று தோன்றவில்லை"

### Amelioration of Depressed Classes.

**தாழ்ந்த வகுப்புகளை உயர்த்துவது.**—சென்ற மார்ச்சு மாஸம் கூடிய வைஸ்ராய் சட்டஸபையில் ஆனரபிள் மிஸ்டர் எம். பி. தாதாபாய் தாழ்ந்த ஜாதிகளுடைய பொருளாதார நிலைமை, ஸன்மார்க்கநிலைமை, கல்வி ஆகிய இவைகளை சீர்திருத்த கவர்ன்மெண்டார் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு தீர்மானங் கொண்டுவந்தார். கவர்ன்மெண்டார் இதுவிஷயமாய் ஏற்கனவே என்னமுயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன, இன்னும் என்ன ஏற்பாடுகள் செய்யலாமென்பவைகளைப்பற்றி மாகாணகவர்ன்மெண்டுகளுக்கு எழுதிக் கேட்பதாகச் சொன்னதின்மேல், ஆனரபிள் மிஸ்டர் தாதாபாய் தீர்மானத்தை வாபஸு வாங்கிக் கொண்டார்.

# HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### A Cheap Paint.

**ஒரு மலிவான வர்ணம்.**—மரங்களுக்கும், கல், செங்கற்களுக்கும், சுவர்களுக்கும் பூசக்கூடிய ஒரு மலி மலிவான வர்ணம் பின்வருமாறு தயார்செய்து பூசலாமென்று ஒரு அமெரிக்கப் பத்ரிகை எழுதுகிறது.

பட்டணம் படியால் 9½ படி சுண்ணாம்புக்கல்லை ஒரு பாத்ரத்தில் போட்டு, அதில் வேண்டியவளவு கொதிக்கும் ஜலத்தை ஊற்றித் தாளிக்கவும். ஜலத்தை ஊற்றினவுடன் கிளம்பும் ஆவி வெளியே போகாதபடி பாத்ரத்தைமூடி வைக்க வேண்டும். நன்றாய்த் தாளித்த பிறகு சுண்ணாம்பு நீரை வடிகட்டி எடுத்துக்கொள்ளவும். வடிகட்டுவதற்குமுன், பட்டணம் படியால் 4¼ படி உப்பை வேண்டிய வள்வு சுடு ஜலத்தில் கரைத்து வைத்துக்கொள்ள வேண்டும். 3 ராத்தல் அரிசிமாவை இளகலான கூழ்போல் காய்ச்சி வைத்துக்கொள்ள வேண்டும். சுண்ணாம்பு நீறை வடி கட்டினதும், உப்பு ஜலத்தையும், கூழையும் சுண்ணாம்பில் ஊற்றி சூடாயிருக்கும்போதே கிளறிக்கொடுக்க வேண்டும். அதோடு அரை ராத்தல் ஸ்பானிஷ் ஒய்ட்டிங் என்னும் சுத்தமான சீமைச் சுண்ணாம்புத் தூளையும்,ஒரு ராத்தல் சுத்தமான வஜ்ரத்தை ஜலத்தில் கரைத்து அதையும் சுண்ணாம்பு நீரில் கலக்கவேண்டும். (வஜ்ரத்தைக்கரைக்க முதலில் குளிர்ந்த ஜலத்தில் ஊறப்போட்டுப் பிறகு அது வைத்துள்ள பாத்ரத்தை ஜலமுள்ள வேறொரு பாத்ரத்தில் வைத்து எல்லாவற்றையும் மெதுவாய் எரியும் நெருப்பில் வைத்தால் வஜ்ரம் இளகி தண்ணீரோடு கலந்துகொண்டு பசையாகும்) எல்லாவற்றையும் கலந்தபிறகு பட்டணம் படியால் 12 படி சுடுஜலம் ஊற்றி நன்றாய்க் கலந்து, தூசுபடியாதபடி பாத்ரத்தை மூடி, அப்படியே சில நாளைக்கு வைத்திருக்க வேண்டும். இதை சுவர்களுக்கும் மரங்களுக்கும் வெள்ளையடிக்க உபயோகிக்கலாம். இதை உபயோகிக்கும்போது சூடாயிருக்க வேண்டுமாதலால், இதை ஒரு தொட்டியில் ஊற்றித் தணலில் வைத்து சூடாக்கிக் கொள்ளலாம். இதற்கு வேண்டிய சாயங்களையும் கலந்து கொள்ளலாம்.

### A Pocket Light.

**பாக்கேட்டில் கொண்டுபோகக்கூடிய விளக்கு.**—இரவில் நெருப்புக் குச்சியில்லாமல் வெளிச்ச முண்டு பண்ணப் பின் வருமாறு ஒரு விளக்குசெய்து வைத்துக் கொள்ளலாம் இதை வேண்டும்போது வெளிச்சம் உண்டாக்கும்படி செய்துகொள்ளலாம். வெண்மையானதும், ரொம்ப தெளிவானதுமான ஒரு சிறு ஸீஸாவில், ஒரு பட்டாணியின் பருமனுள்ள பாஸ்பரஸ் என்னும் சரக்கை (இது இங்க்லீஷ் மருந்துக் கடைகளில் கிடைக்கும்.) போட்டு, கொதிவரும்போல் நன்றாய்க்காய்ச்சின ஆலிவ் ஆயில் என்னும் எண்ணெயை, ஸீஸாவில் 3-ல் ஒரு பாகம் கொள்ளும் வரையில் ஊற்றி, நன்றாய்க் காற்றுப் புகாதபடி கார்க்கால் மூடிவிடவும். இரவில் அதை உபயோகிக்க வேண்டுமானால், கார்க்கை வெளியிலெடுத்து, ஸீஸாவுக்குள் கொஞ்சம் காற்றுப் புகவிட்டுப் பிறகு கார்க்கால் நன்றாய் மூடிவிடவும். உடனே ஸீஸாவில் எண்ணெயில்லாத பாகமெல்லாம் ரொம்ப ப்ரகாசமடைந்து வெளிச்சங்காட்டும். அதன் வெளிச்சம் ஒரு மந்தமான விளக்கு வெளிச்சம்போலிருக்கும். வெளிச்சத்தின் ப்ரகாசம் குறைந்துபோனால் மறுபடியும் கார்க்கை திறந்து சற்றுநேரம் கழித்து மூடவும்.

மாரிகாலத்தில் ஸீஸாவைக் கையால் தேய்த்துச் சூடாக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் உள்ளேயிருக்கும் எண்ணெய் இளகும். இந்த ஸீஸாவானது 6-மாஸத்துக்கு உபயோகத்துக்கு வரும். இப்படிப் பட்ட விளக்குகளை பாரிஸிலுள்ள காவல்காரர்கள் உபயோகித்து வருகிறார்களாம்.

### To Detect Cotton in "All Wool".

**கம்பளி நெசவுகளில் கலந்துள்ள பருத்தியைக் கண்டு பிடிக்க.**—ஒரு அகன்ற பீங்கான் தட்டில் ஒரு கிண்ணம் தண்ணீர் வார்க்கவும். இதில் காஸ்டிக் ஸோடா என்னும் மருந்தைச் சேர்க்கவும். இது இங்க்லீஷ் மருந்துக்கடைகளில் குச்சி குச்சிகளாக விற்கும். இதில் இரண்டங்குல நீளமுள்ள குச்சியை ஷை ஜலத்தில் சேர்த்தால் போதும். இந்த மருந்து நமது தேகத்தில் படாதபடி பார்த்துக்கொள்ளவேண்டியது அவச்யம். பிறகு பீங்கான் தட்டை அடுப்பின்மேலிட்டு நிதானமாய்க் காய்ச்சி, பொங்கின உடனே பரீக்ஷிக்கவேண்டிய கம்பளித்துணியை அதில் அமிழ்த்திவைத்து இன்னும் கால்மணிநேரம் கொதிக்கவிடவும். கம்பளித்துணி ஸ்வயக் கம்பளியா யிருந்தால், அத்துணி முழுவதும் கரைந்துபோயிருக்கும். பருத்தி கலந்திருந்தால், பருத்தி நூல் மாத்ரம் கரைந்துபோகாமலிருக்கும். ஷை ஜலத்தை வடிகட்டினால் பருத்தி நூல்கள் கிடைக்கும்.



# AGRICULTURE.

## விவஸாயம்.

### Manure for Tobacco.

**புகையிலைக்கு எரு.**—சுருட்டுக்காகப் பயிர் செய்யப்படும் புகையிலைப் பயிருக்கு ஸாதாரணமாய் சாம்பல் கார ஸத்து சேர்ந்த உரமே விசேஷம். சாம்பல்கார ஸத்து ஜாஸ்தியாயுள்ள எருக்களை உபயோகித்தால் புகையிலை ஜாஸ்தி காரமில்லாமலும், சுருட்டு நன்றாய் எரிந்து அந்த சுருட்டின் சாம்பல் வெண்ணிறமாயுமிருக்கும், உப்பு வாயு ஸத்துள்ள எருக்கள் போட்டால், இலையில் ஜாஸ்தி காரம் ஏறி சுருட்டு சரியானபடி எரியாமல் அடிக்கடி நெருப்பு பற்றவைக்க வேண்டியதாயும், அப்படி எரிந்த சுருட்டின் சாம்பல் கறுத்துமிருக்கும். ஐரோப்பியர்களுக்கு சுருட்டு காரமில்லாமல் நன்றாய் எரிவதோடு சுருட்டு எரிந்த சாம்பல் வெள்ளையாயுமிருக்கவேண்டும். ஹிந்துக்களுக்கு புகையிலை எவ்வளவுக்கு எவ்வளவு காரம் ஜாஸ்தியோ அவ்வளவு நல்லதென்று நினைப்பார்கள். சுருட்டு அடிக்கடி அணைந்துபோனாலும் பரவாயில்லை. காரம் ஒன்றே குறி. ஆகையால் விவஸாயிகள் பயிரிட உத்தேசித்திருக்கும் புகையிலையை என்னவிதம் விற்க உத்தேசித்திருக்கிறார்களென்பதையும், அந்த புகையிலையை உபயோகப்படுத்தப்பட்டவர்கள் யார் என்பதையும் யோசித்து அதற்கு தகுந்தபடி எருச்செய்யவேண்டும்.

காரமில்லாத புகையிலை வேண்டுமானால் வெடியுப்பை ஏகரா ஒன்றுக்கு ஸுமார் 3 அந்தர்வரை செடி வளரும்போது இரண்டு அல்லது 3 தடவைகளில் தூள் செய்து செடிகளின் மூட்டில்போட்டு தண்ணீர் பாய்ச்சலாம். புகையிலை காரமுள்ளதா யிருக்கவேண்டுமென்ற எண்ணமிருக்கும் பக்ஷத்தில், புங்கம் பிண்ணாக்கை உரமாக உபயோகிக்கலாம். நிலத்தில் புகையிலையை நட்டு செடி வேர் ஊன்றியபின் எவ்வளவு பிண்ணாக்கு எரு போட உத்தேசமோ அதை சாக்குகளின் போட்டுக் கட்டி தண்ணீர் இறைக்கும் கவலைத் தொட்டியில் போட்டுவிட்டால் ஒவ்வொரு சால் தண்ணீரும் கொஞ்சம் கொஞ்சமாய் பிண்ணாக்கிலிருக்கும் ஸத்தை கரைத்துக்கொண்டு செடிகளுக்கு கொண்டுபோகும். ஒவ்வொருதடவை ஜலம் பாய்ச்சப்படும்போதும் கொஞ்சம் கொஞ்சமாய் எருவும் செடிகளுக்கு ப்ரயோசனப்படும். மீன் எரு, பிண்ணாக்கு எரு, மாட்டுசாணி முதலியவைகளில் உப்புவாயு ஸத்து ஜாஸ்தியாயிருப்பதால் அவை புகையிலைக்கு காரம் ஏற்றக்கூடியஎருக்கள்.-கிருஷிகன்.

### Cattle Breeding.

**கால்நடைகளை விருத்திசெய்தல்.**—சென்னை கவர்ன்மெண்டார் கால்நடைகளை விருத்திசெய்வது விஷயமாயும், பால் தயிர் விஷயமாயும் ஆராய்ச்சிகள் நடத்த அவ் வேலைகளில் தேர்ந்த ஒரு ஐரோப்பியரை நியமித்திருக்கிறார்கள். அவர் செய்யப்போகிற வேலையாவன.

(1) நல்ல ஜாதிமாடுகள் அதிகமாயுள்ள இடங்களில் கால்நடைப் பண்ணைகள் ஏற்படுத்தி நிர்வகிப்பது.

(2) அந்தப் பண்ணைகளில் உயர்ந்த ஜாதிமாடுகளை விருத்திசெய்து, அவைகளை ஜனங்களுக்கு விற்றல்.

(3) கடாரிகளையும் காளைகளையும் சரியாய்த் தெரிந்தெடுத்து அவைகளின் மூலமாய் அதிக பால்கறக்கும் மாடுகளையும், நன்றாய் வண்டி, பாரம் இழுக்கும் மாடுகளையும் விருத்திசெய்தல்.

(4) ஒவ்வொரு மாடும் இவ்வளவு பால்கறக்குமென்பதைத் தெரிந்து கணக்குகள் வைக்க ஸங்கங்கள் ஏற்படுத்தி, அவைகளின் உதவியைக்கொண்டு தக்க காளைமாடுகள் தெரிந்தெடுத்தல்.

(5) இந்த ராஜதானியின் சீதோஷ்ண நிலைமையை அனுஸரித்து, வெகுதூரங்களுக்கு பாலைக் கெடாமல் அனுப்புவதற்கான வழிகளைப்பற்றி ஆராய்ச்சி செய்தல்.

(6) பால் வெண்ணெய் வேலைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்தல்.

(7) பால் வெண்ணெய் வேலைகளைபற்றியும், முக்யமாய் பட்டணங்களில் பால்கிடைக்கும்படி செய்வதைப் பற்றியும் யோசனை சொல்லுவதும் உதவி செய்வதும்.

### Pumping and Boring Operations.

**ஜலமிறைத்தல், கிணறு தோண்டுதல் வேலைகள்.**—விவஸாயிகளுக்கு ஜலமிறைத்தல், கிணறு வெட்டுதல் ஆகிய இவைகள் விஷயமாய் யோசனை சொல்வது, யந்த்ரங்கள் வாங்கிக் கொடுப்பது, கிணறுகள் வெட்டுவதைப்பற்றி பரீக்ஷைகள் நடத்துவது ஆகிய இந்த வேலைகளை இதுவரையில் கைத்தொழில் டிபார்ட்மெண்டார் நடத்திவந்தார்கள். இப்போது கவர்ன்மெண்டார் அந்த வேலைகளை விவஸாய டிபார்ட்மெண்டாரிடம் விட்டிருக்கிறார்கள். அதோடு, அதற்காக ஒரு விவஸாய இஞ்ஜினியர், உதவி விவஸாய இஞ்ஜினியர் ஆகிய இரண்டு உத்யோகஸ்தர்களையும் நியமிக்கப்போகிறார்கள்.

# CO-OPERATION.

# கோவாப்ரேஷன்.

## Co-operation and Agricultural Implements.

**கோவாபரேஷனும் விவஸாயக் கருவிகளும்.**—விவஸாயக்கருவிகளை விவஸாயிகளுக்குக் கொடுத்துதவும் ஸங்கங்கள் மேல் நாடுகளில் அதிகமாயிருக்கின்றன. இவைகள் விசேஷமாய் இங்க்லண்டிலும் அயர்லண்டிலுந்தான் அதிகம். அங்குள்ள கோவாபரெடிவ் ஸங்கங்கள் மெம்பர்களுடைய உபயோகத்துக்கு வேண்டியிருக்கும் விவஸாயக் கருவிகளை தங்களுடைய ஸொந்தப் பணத்திலிருந்து வாங்கி மெம்பர்களுக்கு வாடகைக்கு கொடுத்து உதவுகின்றன. வாடகை விகிதமானது ஸங்கத்துக்கு லாபம் வரும்படியாகவே ஏற்படுத்தப்படும். சில காலம் வாடகைக்கு விடுவதாலேயே கருவிகளுக்குப்போட்ட முதல் பணம் கிடைத்துவிடும். வாடகைப் பணத்தை அவ்வப்போது ஒரு பொது நிதியில் சேர்த்து வருவார்கள். அந்த நிதிப் பணத்தைக் கொண்டு வேறு விவஸாயக் கருவிகளை வாங்குவார்கள். இவ்விதம் செய்வதில் அநேக ஸங்கங்களுக்கு சில வர்ஷ காலத்துக் குள்ளாக அநேக சீர்திருந்திய கருவிகளை வாங்குவது ஸாத்யமாகிறது. இப்படி உயர்ந்த விவஸாயக் கருவிகளை வாடகைக்குக் கொடுப்பதால் விவஸாயிகள் தங்கள் விவஸாயத்தை அபிவ்ருத்தி செய்ய முடிகிறது. அநேகர் முன்னிருந்ததைவிட அதிகமான நிலங்களை ஸாகுபடி செய்து வருகிறார்கள். வேறு பலர் கூலிச் செலவைக் குறைத்து லாபமடைகிறார்கள்.

விவஸாயக் கருவிகள் இரண்டு வகைப்படும். முதலாவது வேலையைக் குறைக்கக் கூடியவை. இரண்டாவது வேலையைத் திருத்தமாய்ச் செய்யக் கூடியவை. ஸ்வல்ப நிலங்கள் வைத்திருக்கும் விவஸாயிகளுக்கு அதிக விலையுள்ளவும் ஆனால் மனிதர்களுடைய வேலையைக் குறைக்கக் கூடியவுமான யந்த்ரங்கள் முதலியவைகள் வேண்டியிரா. உதாரணமாக நூற்றுக்கணக்கான ஏகர் நிலங்களை சீக்ரம் உழக்கூடிய யந்த்ரங்கள் சிறு விவஸாயிகளுக்கு வேண்டியதில்லை. ஆனால் அவர்களுக்கு, ஸாதாரண நாட்டுக் கருவிகளைவிட நன்றாயும் திருத்தமாயும் வேலை செய்யக் கூடிய கலப்பை முதலிய விலை மலிவான கருவிகள் தேவையாயிருக்கும். இன்னும் சில விவஸாயக் கருவிகள் ரொம்ப உபயோகப்படக் கூடுமென்றாலும், ஸாதாரண விவஸாயிகள் அவைகளை வாங்கி உபயோகிப்பது லாபகரமாயிராது. ஏனென்றால் அவைகள் வர்ஷத்தில் சில காலமே வேலைக்கு உதவக்கூடும். கோவாபரெடிவ் ஸங்கங்கள் அந்தக் கருவிகளை வாங்கி வைத்து விவஸாயிகளுக்கு மலிவாக வாடகைக்கு விடலாம்.

இப்படிப்பட்ட ஸங்கங்கள் நன்றாய் நடந்துவர வேண்டுமெனறால், மெம்பர்கள் வாடகைப் பணத்தை குறித்த கெடு தவறாமல் செலுத்தி வரவேண்டும். இது விஷயத்தில் மெம்பர்களாவது, ஸங்கத்து மானேஜர்களாவது அச்ரத்தையா யிருக்கக்கூடாது.

## Co-operation in Madras.

**சென்னையில் கோவாபரேஷன்.**—சென்னை ராஜதானியில் சென்ற 1914-15-ம் வர்ஷத்தில் விவஸாயிகளுக்கான ஸங்கங்கள் 191-ம் மற்றவர்களுக்கான ஸங்கங்கள் 53-ம் முந்திய வர்ஷத்தைவிட அதிகமாயின. இதோடு 4 கட்டிட ஸங்கங்கள், 3 ஸாமான்கள் விற்கும் ஸங்கங்கள், விதைகளை மொத்தத்தில் வாங்கி மெம்பர்களுக்குக் கொடுக்க 2 ஸங்கங்கள், அதிகப் படியாக ஸ்தாபிக்கப் பட்டன.

1913-14-ம் வர்ஷத்தில் எல்லா ஸங்கங்களின் ரிஸர் பண்ட் 8,19-லக்ஷம் ரூபாயாக இருந்தது. 1914-15 வர்ஷத்தில் 8,24 லக்ஷம் ரூபாய் ரிஸர்வ் பண்டாக இருந்தது. விவஸாயிகளல்லாதவர்களுக்கான நாணய ஸங்கங்கள் நன்றாய் நடந்து வந்ததாகத் தெரிகிறது. அந்த ஸங்கங்களில் மெம்பர்களில் பெரும்பாலர் கடன்களை குறித்த தவணையில் செலுத்தியிருந்தார்கள். அவர்கள் வாங்கியிருந்த கடன்களில் நூற்றுக்கு 13 பாகந்தான் லாபம் தராத கார்யங்களுக்கு உபயோகப் படுத்தப்பட்டது. இதில். 11·04-பாகம் கல்யாணச் செலவுகளுக்காகும். யுத்தத்தால் பருத்தி வேர்க்கடலை ஆகிய இவைகளின் விலை குறைந்துபோயிற்று. சில ஜில்லாக்களில் அநேக விவஸாயிகள் தாங்கள் ஸங்கங்களுக்குக் கொடுக்க வேண்டிய கடனைத் திருப்பிக்கொடுக்க இந்த மாஸூல்களையே எதிர்பார்த் திருந்தார்கள். இப்படி இந்த மாஸூல்களின் விலை குறைந்துபோகவே, அவர்கள் சரியாக கடன்களைத் திருப்பிக்கொடுக்க முடியாமல் போயிற்றென்று தெரிகிறது.



# COMMERCE.

# வ்யாபாரம்.

## Industrial Development in Madras.

**சென்னையில் கைத்தொழில் அபிவ்ருத்தி.**—ஸமீபத்தில் நடந்த சென்னை சட்ட ஸபையில் கவர்ன்மெண்டார் தாங்கள் கைத்தொழில் வ்யாபார அபிவ்ருத்தி விஷயமாய் செய்துவரும் முயற்சி இன்னவென்பதைத் தெரிவித்தார்கள்.

தற்போது கவர்ன்மெண்டார், எண்ணெயாட்டுதல், பென்ஸில் செய்தல், கண்ணாடிசெய்தல், கடுதாசிக்கூழ்செய்தல், ஸோப் செய்தல், செங்கல் செய்தல், கரும்பு ஆலையாட்டுதல் ஆகிய இந்தத் தொழில்களைப் பற்றி ஆராய்சசிகள் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த வேலைகளைப்பற்றிய ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. சென்னை இஞ்ஜினியரிங் காலேஜைத் திருத்தியமைத்து அபிவ்ருத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் அமுலுக்கு வந்துகொண்டிருக்கின்றன. மதுரை டெக்னிகல் இன்ஸ்டிட்யூட்டில் மெக்கானிகல் இஞ்ஜினிரியங்,நெசவு, சாயம்போடுதல் ஆகிய இந்தவேலைகள் கற்றுக் கொடுக்கப்படும். அந்தக் கல்விச்சாலைக்காக புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுவருகின்றன. காக்கிநாடாவில் உள்ள லோகல்பண்ட் வொர்க் ஷாப்பை ஒட்டி ஒரு மெக்கானிகல் இஞ்ஜினியரிங் ஸ்கூல் ஸ்தாபிக்க ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. சென்னையில் தோல் தொழிலைப்பற்றிக் கற்பிக்க ஏற்பட்டிருக்கும் பாடசாலை ஆரம்பமாகி நடந்துவருகிறது. கவர்ன்மெண்டல்லாத ப்ரைவேட் தொழில் சாலைகளிலும் வொர்க் ஷாப்பிலும் வேலைகற்று வருபவர்களுக்கு மெக்கானிகல் இஞ்ஜினியரிங் பாடங்களைக் கற்றுக் கொடுக்க சென்னையில் ஒரு தொழில் பள்ளிக்கூடம் ஸ்தாபிப்பதைப்பற்றி ஆலோசனை நடந்து வருகிறது. விசாகப்பட்டணம், தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய இந்த இடங்களில் உள்ள ப்ரைவேட் கைத்தொழில் பள்ளிக்கூடங்களை அபிவ்ருத்திசெய்வது விஷயமாயும் கவர்ன்மெண்டார் ஆலோசனைகள் செய்துவருகிறார்கள். கைத்தொழில் வ்யாபாரம் முதலிய டெக்னிகல் கல்வி கற்பிக்கும் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்திநடத்தும் விஷயமாக வித்யாடிரெக்டர் சில விதிகளை தயாரித்திருக்கிறார். அவைகளைப்பற்றியும் கவர்ன்மெண்டார் ஆலோசனை செய்துவருகிறார்கள்.

## Business Enterprise in India.

**இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.**—இந்தியாவில் சென்ற மார்ச்சு மாஸத்தில் அடியில்கண்ட விவரப்படி 18-ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | |
|---|---|
| 2 பாங்கி லேவாதேவி கம்பெனிகள் | 4,23,000 |
| 1 அச்சடித்து ப்ரசுரம் செய்யும் கம்பெனி | 3,00,000 |
| 6 வ்யாபாரக் கம்பெனிகள் (மேலே சொன்னவை தவிர) | 17,70,000 |
| 1 அரிசியில் கம்பெனி | 26,000 |
| 2 தேயிலைத் தோட்டக் கம்பெனி | 9,00,000 |
| 1 தோட்டக் கம்பெனி (மேலே சொன்னவை தவிர) | 2,00,000 |
| 1 நிலக்கரிச் சுரங்கக் கம்பெனி | 1,00,000 |
| 2 சுரங்கம், கல்வெட்டுதல் கம்பெனி (மேலே சொன்னவை தவிர) | 1,50,000 |
| 1 நிலம் கட்டிடக் கம்பெனி | 10,000 |
| 1 கம்பெனி (மேலே சொன்னவை தவிர) | 20,000 |
| 18 | 38,99,000 |

## Sandalwood Oil in Mysore.

**மைஸூரில் சந்தனத்தைலம்.**—மைஸூர் சந்தனக்கட்டைகள் இந்த யுத்தத்தால் அதிகம் விலைப்போகவில்லை. சந்தனக் கட்டையை வ்யாபாரிகள் வெகுவாய் தைலமிறக்கவே வாங்குகிறார்கள். இந்தியாவில் இறக்கப்படும் சந்தனத் தைலம் மட்டமாயும் கலப்படமாயும் இருப்பதால், ஐரோப்பிய வ்யாபாரிகள் சந்தனக்கட்டைகளை வாங்கி ஸொந்தத்தில் தைலமிறக்கிக் கொள்ளுகிறார்கள். மைஸூர் கவர்ன்மெண்டார் நவீன முறைகளில் மைஸூர் ராஜ்யத்திலேயே சந்தனக் கட்டைகளிலிருந்து தைல மிறக்கி வெளிநாடுகளில் விற்க எண்ணி, அது விஷமயாய் ஆராய்ச்சிகள் செய்ய ஏற்பாடு செய்ததில், அந்த ஆராய்ச்சிகள் த்ருப்திகரமா யிருந்தனவாம். இப்போது அந்த கவர்ன்மெண்டார் பரீக்ஷார்த்தமாக 1-லக்ஷ ரூபாய் செலவில் ஒரு தைலமிறக்கும் சாலை ஸ்தாபித்து வருகிறார்கள். இந்தச் சாலையில் மாஸமொன்றுக்கு 2000 ராத்தல் சந்தனத் தைல மிறக்கக்கூடுமாம்.

# ECONOMIC PRODUCTS.

## விலையுள்ள பொருள்கள்.

### Cocoanut Butter.

**தேங்காய் வெண்ணெய்.**—ஆஸ்ட்ரியாவில் தேங்காயிலிருந்து வெண்ணெய் செய்வதுண்டு. இந்தியாவிலிருந்து போகும் தேங்காய் பருப்புத்தான் இதற்கு உபயோகப்படுகிறது. பருப்பை சிறு துண்டுகளாக நறுக்கி ஸாதாரண யந்த்ரங்களால் அதிலிருந்து எண்ணெய் எடுக்கிறார்கள். இப்படி எடுத்த எண்ணெயில் ஸோப்புக்கு உதவும் தைலமிருக்கும். இதன் வாஸனையும் நன்றாயிராது. இந்த எண்ணெயைப் பெரிய தொட்டியில் ஊற்றி அதில் பொடிசெய்த சாக்கை (சீமைச் சுண்ணும்பு)ப் போடுவார்கள். சீமைச்சுண்ணும்பானது ஸோப்புத்தைலத்தை க்ரஹித்துக்கொண்டு அடியில் தங்கிவிடும். மேலாக உள்ள தெளிவான எண்ணெயை வேறொரு தொட்டிக்கு பம்பால் இறைத்து அதை நாலைந்துதடவை வடிகட்டுவார்கள். பிறகு அதை, நீராவியுள்ள குழாய்களால் 270-முதல் 318-டிக்ரி வரையில் சூடாக்கப்பட்ட ஒரு தொட்டியில் ஊற்றுவார்கள். எண்ணெய் ஸ்படிகம்போல் தெளிவாய்ப்போய் கொதிக்கத் தொடங்கும். அப்போது உடனே அதை ஒரு நிறுக்கும் யந்த்ரத்தில் ஊற்றுவார்கள். அந்த யந்த்ரமானது எண்ணெயை வேண்டிய அளவுக்கு நிறுத்து, அச்சுகளில் வார்த்து கட்டிகளாகச் செய்துவிடும். இந்தக் கட்டிகளே தேங்காய் வெண்ணெயாகும்.

சீமைச்சுண்ணும்போடு கலந்த எண்ணெயைத் தனியாய் எடுத்து, அதில் கந்தகத்ராவகம் ஊற்றினால், சீமைச்சுண்ணும்பானது கரைந்துபோகிறது. த்ராவகத்தின்மேல் தேங்காய் எண்ணெய் மிதக்கும். அதை ஜாக்ரதையா யிறுத்து எடுத்து; ஸோப் செய்கிறவர்களுக்கு விற்பார்கள்.

தேங்காய்ப் பிண்ணாக்கை மாவாகச்செய்து கால்நடைகளுக்கும் பன்றிகளுக்கும் ஏற்ற உணவாக விற்கிறார்கள்.

தேங்காய் வெண்ணெய் ஸ்வபாவத்தில் வெண்மையானது. ஆனால் சில ஸமயங்களில் அதற்கு நிறங்கொடுப்பதுமுண்டு. சில ஸமயங்களில் தேங்காயெண்ணெயொடு நல்லெண்ணெயும் சேர்ப்பதுண்டு. அப்படிச் சேர்த்தால் வெண்ணெய்க்கட்டி ரொம்ப கெட்டியாயிராமல் மெதுவாக இருக்குமாம். தேங்காய் வெண்ணெய் அநேக மாஸமானாலும் கெடாமலிருக்கிறதாம். கோடைகாலத்திலும் அது கெடுவதில்லையாம். ஆஸ்ட்ரியாவில் யுத்தத்துக்கு முன் தினந்தோறும் 400-டன் வெண்ணெய் செய்வார்களாம். 200-ராத்தல் வெண்ணெயின் விலை 125-ரூபாயாகும்.

### Preventing Cotton Fires.

**பருத்தியில் நெருப்புப் பிடிக்காமல் செய்ய.**—அமெரிக்காவில் ஒருவர் பருத்தியில் நெருப்புப் பிடிக்காமலிருக்க ஒரு உபாயம் கண்டுபிடித்திருக்கிறார். இப்போது வ்யாபாரிகள் பருத்தியை பேல்களாகக் கட்டி வெளியூர்களுக்கு அனுப்புகிறார்கள். அவைகளை ஸ்டேஷன்களிலும், வேறு வ்யாபாரக் கட்டிடங்களிலும் போட்டுவைத்திருக்கும்போது தப்பித்தவறி ஏதாவது நெருப்புப்பொறியோ அல்லது நெருப்புத்தணலோ அவைகளில் விழுந்துவிட்டால், அவைகள் சீக்ரம் நெருப்புக் கிரையாகிவிடுகின்றன. இப்போது கண்டுபிடித்திருக்கிற முறைப்படி, பருத்தி பேல்களை ஒரு வகை த்ராவகத்தில் போட்டு நனைத்து எடுக்கிறார்கள்.

அதன் பிறகு பருத்தி காய்ந்துபோனாலுங்கூட, நெருப்புப் பற்றுவதில்லையாம். இவ்விஷயத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்த ஒரு அமெரிக்க இஞ்ஜினியர் அப்படித் தயார் செய்த பருத்தி பேல்களின்மேல் பெரிதும் சிறிதுமான நெருப்புத்தணல், எரியும் நெருப்புக்குச்சிகள், பற்றவைத்த சுருட்டுகள், ஸிகரெட்டுகள் முதலியவைகளைப் போட்டதில், அவைகள் பட்ட இடத்தில் பருத்தி சற்றுக் கறுகியிருந்ததேதவிர, நெருப்புப்பிடிக்கவேயில்லையாம். இப்படித் தயார்செய்த பருத்தி எவ்விதத்திலும் கெடவுமில்லையாம். இந்தப் பருத்தியால் செய்த நூல்கள் பலம் குறையாமலிருந்ததோடு, சாயம் ஏற்றுவதிலும் கஷ்டமில்லாமலிருந்ததாம். இந்த நூதன முறையால் பருத்தி வ்யாபாரிகளுக்கு ரொம்ப ஸௌகர்ய மேற்பட்டிருக்கிறதாம். பருத்தி ஸுலபத்தில் நெருப்புப் பிடித்துக் கெடக்கூடியதாகையால் அதை வெளியூர்களுக்கு அனுப்பும்போது இன்ஷூர் செய்கையில் அதிக தொகைகட்டி இன்ஷூர் செய்ய வேண்டியிருந்தது. புதுமுறையின் உபயோகத்தையறிந்த சில இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் புது முறையால் பக்வம் செய்த பருத்திக்கு இன்ஷூரன்ஸ் விகிதத்தைக் குறைத்திருக்கிறார்கள். இந்த முறையால் வேறுவிதமாயும் வ்யாபாரிகளுக்கு ஸௌகர்ய முண்டு. இந்தப் பருத்தியை எந்தவிடத்திலும் திறந்த வெளியிலும் போட்டுவைக்கலாம். பருத்தியின் தன்மை கெடுவதில்லை. இந்தப் புதுமுறையில் அதிக செலவு மில்லையாம்.



# BOYS' PAGE.

## பையன்கள் பக்கம்.

### Food of Insects.

**பூச்சிகளின் உணவு.**—பூச்சிகள் பறக்குந் தன்மையை அடையுமுன் லார்வா என்று சொல்லப்பட்ட புழுவாயிருக்கும். அந்த நிலைமையில்தான் அது வளர வேண்டுமாதலால், அப்போது அது ஏராளமாய் தீனி தின்கிறது. மீட் ப்ளை என்னும் ஈயானது, புழு நிலைமையிலிருக்கும்போது ஒருநாளில் தன் நிறையைவிட 200-மடங்கு தீனி அதிகமாகத் தின்னும். ஜிப்ஸி மாத் என்னும் பூச்சியானது கம்பளிப்பூச்சி நிலைமையி லிருக்கும்போது ஏராளமாய் இலை தின்னும். இந்தப் பூச்சியில் ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து ஸந்ததியுண்டாக்கி அவைகளினுடைய ஸந்ததி 8-வர்ஷம் வ்ருத்தியாகிக்கொண்டே வந்தால், தேசத்தில் புல் பூண்டு ஒன்றுமே யிராதாம். பூச்சிகளில் அநேகம் தங்கள் வம்சத்தை ரொம்ப வேகமாய் வ்ருத்தி செய்யக்கூடியவை. உருளைக்கிழங்கை நாசம் செய்யும் வண்டுகளில் ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து வம்சத்தை வ்ருத்தி செய்து, அதன் ஸந்ததிகளும் வம்சத்தை வ்ருத்தி செய்து, அவைகளை வேறெந்த ஜந்துவும் கொன்று தின்னாமலிருந்தால், ஒரு வர்ஷக் கடைசியில் அவைகளின் ஸந்ததிகள் 6-கோடி வண்டுகளாகும்.

அப்பிஸ் என்றொரு ஒரு பூச்சி இருக்கிறது. இது செடி கொடிகளை அழிக்கக்கூடியது. இதற்கு வர்ஷத்தில் 13-ஸந்ததிகள் உண்டாகும். ஒரு ஜோடி அப்பிஸ் பூச்சி ஸந்ததியை வ்ருத்தி செய்துகொண்டுபோய், அவைகளின் ஸந்ததிகளும் வ்ருத்தி செய்துகொண்டேபோய், அவைகளில் ஒன்றாவது 1-வர்ஷம் சாகாமலிருந்தால், முதல் தலைமுறை முதல் 12-வது தலைமுறை முடிய உள்ள பூச்சிகளைக் கணக்கிட்டால் எத்தனை யிருக்குமென்று கணக்கிட்டுச் சொல்வது ரொம்ப கஷ்டம். ரொம்ப ச்ரமப்பட்டுக் கணக்கிட்டதில் ஒருவர் பின்வருமாறு தெரிவிக்கிறார். ஒரு அங்குலத்துக்கு 10-பூச்சியாக எல்லா பூச்சிகளையும் ஒன்றின் பக்கம் ஒன்றாக வைத்துக்கொண்டே போகவும். பூச்சியை வைக்க ஆரம்பித்த இடம் பூமி யென்றும், அது முடியுமிடம் ஆகாசத்தில் ஒரு இடமென்றும் வைத்துக்கொண்டால், ஆகாசத்திலுள்ள முனையிலிருந்து ஒருவன் ஸெகண்டுக்கு 1,84,000-மைல் வீதம் வருவானானால், அவன் பூமிக்குவர 2,500-வர்ஷங்கள் செல்லுமாம்.

இப்படியே அநேகவிதப் பூச்சிகள் வ்ருத்தியாகக் கூடியவை. ஆனால் இவைகளுள் ஒன்றுக்கொன்று ஆகாரமாவதாலும், வேறு பறவைகளும், ஜந்துக்களும் அவைகளைத் தின்பதாலும், இந்தப் பூச்சிகள் மேற்சொன்ன அளவுக்கு வ்ருத்தி யடைவதில்லை.

### Boys Make Roads.

**பையன்கள் ரஸ்தாக்கள் போடுதல்.**—அமெரிக்காவிலுள்ள மான்ஸ்பீல்ட் என்னும் பட்டணத்தைச் சுற்றி நல்ல ரஸ்தாக்கள் இல்லாததை உத்தேசித்து அந்தப் பட்டணத்து மேயர் என்னும் அதிகாரி, அவ்வூரிலுள்ள பையன்களை ஒன்று சேர்த்து நல்ல ரஸ்தாக்கள் போடும் ஸங்கமென்று ஒரு ஸங்கம் ஸ்தாபித்தாராம். சென்ற ஆகஸ்ட் மாஸத்தில் அந்த ஸங்கத்தைச் சேர்ந்த 50 பையன்கள் மேயருடன் போய் ரஸ்தாக்களை செப்பனிட்டு, உயர்ந்த ரஸ்தாக்களாக்கினார்கள். பையன்களுடைய ஊக்கத்தைக் கண்ட அநேக விவஸாயிகளும் மற்றவர்களும் பையன்களுடன் சேர்ந்து வேலை செய்தார்களாம். ரஸ்தாவிலுள்ள பாறைகளை வெட்டி, பள்ளமான இடங்களில் கொட்டி, ஸமனாக்கி, போதாவிடங்களுக்கு வேறு இடங்களிலிருந்து சரளைகள் கொண்டுவந்து போட்டார்கள். இப்போது அந்த ஸங்கத்துக்கு மான்ஸ்பீல்ட் முனிஸிபாலிட்டியார் பண உதவி செய்து வருகிறார்கள். ஸங்கம் சாச்வதமாய் நடந்து வரவும், ரஸ்தாக்கள் சீர்திருத்தும் வேலையை எப்போதும் கவனித்து வரவும் வேண்டிய ஏற்பாடுகள் நடந்து வருகின்றனவாம்.

### Hearing from a Height of 4 Miles.

**4 மைல் உயரத்திலிருந்து கேட்கலாம்.**—பூமியின் கீழ் நாய்கள் குலைத்தால், அச்சத்தத்தை ஆகாயத்தே விமானத்தில் 4 மைல் உயரத்திலிருந்துகொண்டு கேட்கலாமென்று ஆகாய விமானிகள் சொல்லுகிறார்களாம்.

### Largest Trees in America.

**அமெரிக்காவிலுள்ள ரொம்பப் பெரிய மரங்கள்.**—அமெரிக்காவில் உள்ள மரங்களுள் ஸைக்காமூர் என்னும் மரந்தான் ரொம்ப பெரியதாம். ஒன்றின் அடிமரத்தின் சுற்றளவு 42 அடியாகும். அதன் உயரம் 150 அடியாம். இதற்கு அடுத்த படியாயுள்ளது ஒரு ஓக் மரமாகும். இதன் அடிமரத்தின் சுற்றளவு 37 அடியாம்.

## LADIES' PAGE.

## ஸ்த்ரீகள் பக்கம்.

### Hygienic Education for Women.

**ஸ்த்ரீகளுக்கு ஸுகாதாரபோதனை.**—ஸ்த்ரீகளுக்கு ஸுகாதார விஷயங்களைக் கற்பிப்பதால் பல நன்மைகள் ஏற்படுகின்றன என்றும், ஆகையால் அவர்களுக்கு இளமையிலேயே இவ்விஷயங்களைக் கற்பிக்க வேண்டுமென்றும் மிஸ்டர் ராஜகோபாலாசாரியார் 'வைத்ய கலாநிதியில்' எழுதுகிறார்.

பெண்களுக்கு ஸுகாதாரக் கல்வி பலவகையில் பயன்படுகிறது.

ஸுகாதார விஷயங்கள் ஸ்த்ரீகளுக்கு நன்றாகத் தெரிந்திருந்தால் எவ்விடத்தில் எவ்விதமான அபாயம் நேரிட்டாலும் உடனே அதற்குத் தக்க பரிஹாரம் தேடிக்கொள்ள வகை உண்டாகும்; அன்றியும் வைத்யர்கள் வந்து பார்த்து உபசாரம் செய்யும்போது அவர்களுக்குத் தம்மாலான உதவிசெய்யவும், வைத்யர்கள் சொல்லுகிறபடி நோயாளிகளுக்கு உபசாரம் செய்யவும் திறமையுண்டாகும். ஒரு ஸ்த்ரீக்கு ஸுகாதாரம் நன்றாய்த் தெரிந்திருந்தால், அவள் தன் புருஷனுடைய ஸௌக்யத்தை நன்றாய் கவனிக்கக்கூடும். குழந்தைகளை நோய் முதலியவையின்றிப் பாதுகாக்கலாம். வீட்டை ஸுகாதார நிலைமையில் வைத்துக்கொள்ளலாம். ஆகாராதிகளை சரியாய் பக்வம் செய்யலாம். இன்னும் இந்த ஸுகாதார அறிவு ஸ்த்ரீ உபாத்யாயர்கள், தாதிமார்கள் முதலியவர்களுக்கும் உபயோகப்படும்.

ஸுகாதாரக் கல்வி இவ்வளவு உபயோகமுள்ளதாதல்ால், பெற்றோர்கள் தங்கள் பெண்களுக்கு இளமைப் பருவத்திலேயே ஸுகாதார விஷயங்களைக் கற்றுக்கொடுக்கவேண்டும். பெண்களுக்குக் கற்றுக்கொடுக்கக் கூடிய விஷயங்களாவன.

தேஹ தத்துவசாஸ்த்ரத்துடன் பதார்த்த தத்வசாஸ்த்ரம், நோயாளிகளுக்கு உபசாரம் செய்யும்முறை, வீட்டை சுத்தமாகவும் நல்லகாற்று உலாவும்படியாகவும் வைத்திருக்கவேண்டிய வழி, உணவும் அதனுபயோகமும், சமையல்செய்யும் வகை (பாகசாஸ்திரம்) ஆகிய இவைகளும், இவற்றைச்சேர்ந்த நல்ல ஜலம், நல்ல உணவு, நல்ல உடை, தேஹப்பயிற்சி, இளைப்பாறுதல் முதலானவற்றின் விவரங்களுமேயாம்.

### Mixed "Vadam"

**கலவை வடாம்.**—நெல்பொறி ¼-படி, அவல் ¼-படி; முட்டைப்பொறி ¼-படி. இம்மூன்றையும் கொஞ்சநேரம் ஜலத்தில் ஊறவைத்து ஜலத்தை வடித்தெடுத்துக்கொண்டு ஈயம் பூசின பாத்ரத்தில் போட்டு, அவற்றோடு நறுக்கின பச்சை மிளகாய் 1-பலம்; நறுக்கின கொத்தமல்லி 1-பலம்; அரிசிபோல் நறுக்கின வாழைத்தண்டு 2-பலம்; பூசணிக்காய்த் துருவல் 3-பலம்; தோலெடுத்த எள் 6-பலம்; காரப்பொடி 2-பலம் இவற்றையெல்லாம் சேர்த்து கொஞ்சம் சுத்த ஜலத்தைவிட்டுப் பிசைந்து வடாமிட்டு உலர்த்தி உபயோகிக்கவேண்டியது. மிளகாய் 1-பலம், உப்பு 2-பலம், பெருங்காயம் கால்பலம் இவைகளை தனித்தனியே பொடிசெய்து கலந்ததற்கு காரப்பொடியென்று பெயர். இந்த அளவில் சேர்த்து செய்த காரப்பொடியில் 2-பலத்தை வடாத்துக்குச் சேர்த்துக்கொள்ளவும்.

### Whooping Cough.

**கக்குவான் இருமல்.**—இது ஸாதாரண இருமல் மாதிரி ஆரம்பித்து பிறகு இடைவிடாதபடி அடிக்கடி கொன், கொன் என்று கொஞ்சநேரத்துக்கு இருமச்செய்கிறது. இது தொத்து வ்யாதியானதால் ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்கும் பரவும். இந்த இருமலுக்கு வாந்தி அதிகம் ஏற்பட்டால், இருமல் அடங்கின உடனே கொஞ்சம் பால் கொடுக்கவேணும். கக்குவான் கண்ட குழந்தையை வீட்டிற்குள்ளே வைத்துக்கொள்ளாமல் அநேகமாய் வெளியிலேயே வைத்துக்கொண்டிருப்பது நல்லது. ஆகாயத்தில் மப்பு மந்தாரம் போட்டால் குழந்தையை நன்றாகப் போர்த்தி வைத்திருத்தல் அவசியம். தேகத்தில் சூட்டை வ்ருத்தி செய்யத்தக்க அப்யாஸங்களை நிறுத்திவிடவேண்டும். இல்லாவிடில் ஒவ்வொரு ஸமயங்களில் அது விபத்தாய் முடியும்.

### Nari Silpasram.

**நாரீ சில்பாச்ரமம்.**—ஸொந்தத்தில் வேலைசெய்து ஸம்பாதித்து ஜீவிக்கவேண்டிய ஸ்த்ரீகளுக்குத் தக்க கைத்தொழில்களைக் கற்பிக்க கல்கத்தாவில் நாரீசில்பாச்ரமம் என்று ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஜப்பானில் ஸ்த்ரீகள் தங்கள் வீடுகளிலிருந்துகொண்டு கைத் தொழில்கள் செய்வதால், அங்கே ஸாமான்களின் விலை குறைவாக இருக்கிறதாம். அதுபோல இந்தியாவிலும் ஸ்த்ரீகளுக்கு கைத்தொழில் கற்பித்தால், அவர்கள், வெகுவாய் தொழில் சாலைகளுக்குப் போக ப்ரியப் படுவதில்லையாதலால், தங்கள் வீடுகளிலேயே யிருந்து வேலைசெய்து பொருள் ஸம்பாதிப்பதோடு, அதனால் இங்கேயுள்ள ஸாமான்களின் விலையும் வெகுவாய்க் குறைவடையும்.



## INDIANS ABROAD.

## இதர தேசங்களில் இந்தியர்கள்.

### Emigration from Madras.

**சென்னையிலிருந்து ஜனங்கள் வெளிநாடுகளுக்குப் போவது.**—சென்ற வர்ஷத்திய சென்னை மாகாணக் குடியேற்றத்தைப்பற்றிய ரிபோர்ட்டு ஸமீபத்தில் வெளியாயிருக்கிறது. சென்ற வர்ஷம் ஜூலை மாஸம் வரையில் பிஜித்தீவுக்கு ஆட்கள் சேர்க்கப்பட்டு அனுப்பப்பட்டார்கள். சென்னை மாகாணத்திலிருந்து பீஜிக்குப் போனவர்களின் ஸங்க்யை 1,115-பேர்களாகும். சென்ற ஜூலை மாஸம் 7-ந்தேதி தொடங்கி ஸெப்டம்பர் மாஸம் வரையில் ப்ரிட்டிஷ் கயானவுக்கு கூலி ஆட்கள் சேர்க்கப்பட்டார்கள். சென்னையிலிருந்தும் கல்கத்தாவிலிருந்தும் 737-இந்தியர்கள் ப்ரிட்டிஷ் கயானவுக்கு அனுப்பப்பட்டார்கள். இந்தியாவிலிருந்து கூலியாட்களை அனுப்பும்போது 100-ஆண்களுடன் 30 ஸ்த்ரீகளையும் சேர்த்தனுப்பவேண்டுமென்று ஒரு நிபந்தனை இருக்கிறது. சென்ற வர்ஷம் சென்னையிலிருந்து போன கூலியாட்களில் ஸ்த்ரீகளின் விகிதம் மேற்சொன்ன விகிதத்துக்குக் குறைந்திருந்ததாம். அந்தக் குறையை நிவர்த்திசெய்ய கல்கத்தாவிலிருந்து வேண்டிய அளவு ஸ்த்ரீகளை அனுப்பினார்கள்.

சென்ற வர்ஷத்தில் அக்டோபர் மீ முதல் வர்ஷம் முடிய ட்ரினிடாடுக்கும் ஆள் சேர்த்தார்கள். ஆனால் அவ்வர்ஷத்தில் ட்ரினிடாடுக்கு கூலியாட்கள் அனுப்பப்படவில்லை. மொரிஷஸ் ஸெஷல்ஸ் ஸ்தீவுகளுக்கு சென்ற வர்ஷம் கூலியாட்கள் போகவில்லை.

சென்றவர்ஷத்தில் நேட்டாலிலிருந்து 3,217-இந்தியர்களும், பீஜித்தீவிலிருந்து 73-பேர்களும், மொரிஷஸ் தீவிலிருந்து 207-பேர்களும் இந்தியாவுக்குத் திரும்பி வந்தார்கள்.

ஸ்ட்ரெய்ட் ஸெட்டில்மெண்ட்ஸ் நாடுகளுக்கு சென்றவர்ஷம் கூலியாட்கள் அதிகமாகப்போனார்கள். இதற்குக் காரணம் மலேயாவிலுள்ள ரப்பர் தோட்டங்களில் கூலியாட்கள் அதிகமாக வேண்டியிருந்ததே. தஞ்சாவூர் ஜில்லாவில் விலைவாசி அதிகமானதும் இப்படிக் கூலியாட்கள் அதிகமாக மலைநாடுகளுக்குப் போனதற்கு ஒரு காரணமாகச் சொல்லப்படுகிறது. பர்மாவுக்கு சென்ற வர்ஷம் ப்ரயாணிகள் அதிகமாய்ப் போனார்கள். இதற்குக் காரணங்கள் யுத்த ஆரம்பத்தில் பர்மாவில் மூடப்பட்டுப்போன மில்லுகளில் சென்ற வர்ஷம் வேலை மறுபடி ஆரம்பமானதும், அங்கே கூலியாட்கள் அதிகமாய் வேண்டியிருந்ததும், கூலியாட்களுக்கு அதிகச் சம்பளம் கொடுத்ததுமே என்று சொல்லப்படுகிறது.

சென்ற வர்ஷத்தில் சென்னை மாகாணத்திலிருந்து 8,348-பேர்கள் இந்தியாவின் மற்ற பாகங்களுக்குக் குடியேறிப்போனார்கள். பர்மா, ஸிங்கப்பூர் முதலிய இடங்களில் கூலியாட்கள் அதிகமாய் வேண்டியிருந்தாலும், சம்பளம் அதிகமாயிருந்தாலும் அவ்விடங்களிலிருந்து கூலியாட்கள் குறைவாகவே இந்தியாவுக்குத் திரும்பிவந்தார்கள். 1914-ம் வர்ஷத்தில் ஸிலோனுக்குக் கூலியாட்கள் குறைவாய்ப்போயிருந்ததாலும், கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் தினசரிக் கப்பல் போக்குவரத்து இல்லாததாலும் ஸிலோனிலிருந்து அதிகமாகக் கூலியாட்கள் இந்த மாகாணத்துக்கு வரவில்லை.

### South African Indians and the War.

**தென்னாப்ரிக்கா இந்தியர்களும் யுத்தமும்.**—தென்னாப்ரிக்காவிலுள்ள இந்தியர்கள் இந்த யுத்தத்தில் கவர்ன்மெண்டாருக்கு உதவியா யிருந்து வருகிறதாகத் தெரிகிறது. சென்ற வர்ஷத்தில் நெட்டாலில் 237-இந்தியர்கள் யுத்த ஸம்பந்தமான வேலைகளுக்குத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இவர்கள் ஜெர்மன் தென்மேற்கு ஆப்ரிக்காவில் ஆஸ்பத்ரி ஆர்டர்லி வேலை பார்க்க அனுப்பப் பட்டார்கள். இன்னும் 114-பேர்கள் ஜெர்மன் கிழக்கு ஆப்ரிக்காவில் காயம்பட்டவர்களுக்கு உதவிசெய்ய அனுப்பப்பட்டார்கள். ஜெர்மன் தென்மேற்கு ஆப்ரிக்காவுக்கு அனுப்பப்பட்ட இந்தியர்கள் யாதொரு சேதமுமின்றி திரும்பிவந்து சேர்ந்தார்கள்.

ஜெர்மன் கிழக்கு ஆப்ரிக்காவுக்குப் போனவர்கள் சற்றுநாள் கழித்து புறப்பட்டுப் போனார்கள். அவர்கள் விசேஷமாய் புதிதாகக் குடியேறின இந்தியர்களும், ஏற்கனவே குடியேறியிருந்த இந்தியர்களுக்குப் பிறந்த இந்தியர்களுமாவார்கள். சென்ற வர்ஷக் கடைசியில் இன்னும் இரண்டு இந்தியப்படைகள் சேர்க்கப்பட்டு வந்தன. அவைகளும் இப்போது ஆஸ்பத்ரி வேலையாக போர்முனைக்கு புறப்பட்டுப் போயிருக்கலாம்.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### He Kept His Word.

சொன்னசொல் தவறவில்லை.—ஒருவன் ரொம்ப கடனாளியாகி கடனைத் திருப்பிச்செலுத்த வகையில்லாமலிருந்தான். அவனுக்குக் கடன்கொடுத்தவர்களில் ஒருவருக்கு ரொம்ப பணத்தட்டு ஏற்பட்டதால், கடனாளியினிடம் வந்து, தாம் ரொம்ப கஷ்டப்படுவதாகவும், கடன் தொகையில் ஒருபாகமாவது கொடுத்தால் ஸௌகர்யமா யிருக்குமென்றும் கெஞ்சிக்கேட்டார்.

கடனாளி.—உமது நிலைமையைக் கேட்க ரொம்ப வருத்தமாயிருக்கிறது. இருந்தாலும் "இந்த மாஸம் நான் ஒன்றும் கொடுப்பதற்கில்லை."

கடன் கொடுத்தவர்.—"போன மாஸமும் அப்படித்தான் சொன்னாய்."

கடனாளி.—"ஆமாம், நான் சொன்னபடியே நடக்கவில்லையா?"

### Learning to Use the Promised Reward.

கொடுப்பதாய்சொன்ன வெகுமதியை உபயோகிக்க கற்றுக்கொண்ட பையன்.—தகப்பன்,—நீ பரீக்ஷையில் தேறினால் உனக்கு ஒரு பைஸிகல் வாங்கித் தருவதாகச் சொன்னேன். நீ எல்லாப் பாடங்களிலும் தவறிவிட்டாயே. இத்தனைநாளாக வாசிக்காமல் என்ன செய்துகொண்டிருந்தாய்?

பையன்.—ஸைகில் ஏறக் கற்றுக்கொண்டிருந்தேன்.

### The New Arithmetic.

நூதன கணிதம்.—"ஆம், எனக்கு மாத்ரம் எப்போதும் அது அவ்வாறே தோற்றுகிறது. விவாகம் கூட்டல்; குழந்தைகள் தோன்றியதும், பெருக்கலாகிறது; தம்பதிகளின் ஸந்தோஷத்துச்கு இடையூறாக விவாதங்கள் நேருங்கால், அது வகுத்தலாகிறது; வாழ்நாளின் இறுதியில் ஸதி பதிகள் ஒருவரைவிட்டொருவர் பிரியும்படி வரும்போது கழித்தலாகிறது" என்று கண்களில் ஆநந்தம் தோன்றக் கணிதாசிரியர் புகன்றார்.

"ஆனால், இருவரும் இவ்வுலக வாழ்க்கையிலேயே ஒத்துக் கொள்ளாமல் பிரியும்படி நேர்ந்தால் அதற்கென்னவென்று பெயர்" என்றார் எதிரிலிருந்தவர்.

"ஆஹா! அப்போது அது பின்னங்களின் கீழ் கணக்கிடப்படும்" என்று பகர்ந்தார் கணிதாசிரியர்.

—வைசியமித்திரன்.

### The Milkman Deceived.

பால்காரன் ஏமாந்தது.—ஒரு பால்காரன் தினந்தோறும் காலையில் வாடிக்கைக்காரர்களுக்குப் பால் போட பாலெடுத்துக்கொண்டு போகும்போது, பாலில் ஜலம் கலந்துகொண்டுபோவது வழக்கம். ஒரு நாள் அவன் ஏதோ காரணத்தால் பாலில் ஜலம் கலக்க மறந்துவிட்டான். அவன் போன முதல் வீட்டில், ஒரு பீப்பாயில் நிறைய ஜலமிருந்தது. பால்காரன் உடனே ஸந்தோஷங்கொண்டு, பாலில் ஜலம் கலக்க இதுதான் நல்ல ஸமயமென்று எண்ணி, வேண்டியவளவு ஜலத்தைப் பாலில் கலந்துகொண்டான். ஜலம் ஊற்றி முடிந்ததும், வீட்டெஜமானன் ஒரு அறையிலிருந்து வெளிவந்து, "பால்காரா, வேண்டிய அளவு ஜலம் கலந்தாய் விட்டதா?" என்று கேட்டார்.

பால்காரன் திகைத்துப் போய்விட்டான்.

"நான் பால்காரனாக விருந்தால் இந்த ஜலத்தைப் பாலில் கலந்திருக்கமாட்டேன். வேறு ஏதாவது ஜலம் தேடியிருப்பேன். எனது வைத்யர் ஸமுத்ர ஜலஸ்நானம் செய்யச் சொன்னார். அதற்காக இந்தப் பீப்பாய்களில் ஜலங்கொண்டுவந்து வைத்திருக்கிறேன். உனது வாடிக்கைக் காரர்களுக்கு உப்பு கலந்த பால்தான் தேவையோ?" என்றார்.

### The Circulation of Blood.

ரக்த ஓட்டம்.—ஒரு உபாத்யாயர் ஒரு வகுப்பில் ரக்தோட்டத்தைப்பற்றிப் பாடம் கற்பித்துக்கொண்டிருந்தார்.

உபா;—"நான் தலைகீழாய் நின்றால், ரக்தமானது என் தலைக்குப் போகுமல்லவா?"

பையன்கள்:—"ஆம், ஐயா"

உபா:—அப்படியானால் நான் ஸாதாரணமாக நின்றுகொண்டிருக்கும்போதுமாத்ரம், ஏன் ரக்தம் காலுக்குப் போவதில்லை?"

சற்றுநேரம் ஒருவரும் பதில் சொல்லவில்லை. பிறகு, ஒரு சிறுபையன்:—"ஏனென்றால் காலில் காலியான இடம் ஒன்றுமில்லை."

### Speaking Grammatically.

இலக்கணமாய்ப் பேசுதல்.—கர்வமுள்ள ஒரு தமிழ் வித்வான் சிறுவன் ஒருவனை நோக்கி இலக்கணமாகப் பேசினால் இவனுக்குத் தெரியாது என்று எண்ணி, "தம்பி! சோறு எங்கே விக்கும்?" என்றார்.

சிறுவன்:—"அதுவா? தொண்டேலே விக்கும்"



# CURIOSITIES.

## விநோதங்கள்.

### Strange Uses for Bread.

ரொட்டியின் விநோத உபயோகங்கள்.—ஸாதாரணமாக ஜனங்கள் ரொட்டியை ஆகாரமாக உபயோகிக்கிறார்கள். ஆசியா மைனர், அரேபியா, துருக்கிஸ்தானம், மெஸபொடேமியா ஆகிய இந்த இடங்களிலுள்ள ஜனங்கள் அதை வேறு பல காரியங்களுக்கும் உபயோகிக்கிறார்களாம். அவர்கள் செய்யும் ரொட்டியானது 40-அங்குல நீளமும் 80-அங்குல அகலமும் உள்ளது. அவர்கள் அதை விசேஷமாய் சுருளாகச் சுருட்டிவைத்திருப்பார்கள். வெயிலடித்தாலும் மழை பெய்தாலும் அதை மேலே போட்டுக்கொள்வார்கள். சில ஸமயம் ரொட்டியின்மேல் வாதுமை யெண்ணெயையாவது, ஆட்டுக்கொழுப்பையாவது தடவுவதுண்டு. இதனால் மழையானது ரொட்டியைக் கெடுப்பதில்லை. மத்யதரைக் கடலோரமாயுள்ள தேசங்களில் ப்ரயாணிகளும் மற்றவர்களும் ஒட்டகத்தின்மேல் ஏறிப்போகும்போது, மழை வந்துவிட்டால் இரண்டொரு ரொட்டிச் சுருள்களை மேலே போர்த்துக்கொண்டு ஸாவதானமாய் ப்ரயாணம் செய்வார்கள். நடுவில் பசியெடுத்தால், குடையாக உதவும் ரொட்டியிலிருந்து பிய்த்துத் தின்பார்கள். அரபியர்கள் ரொட்டிச்சுருளை போர்த்திக்கொள்ள உபயோகிக்கிறார்கள். இதைப் போர்த்திக்கொள்வதால், தேகம் கதகதப்பாயிருப்பதோடு, வெளியிலுள்ள குளிரும் தேகத்தைத் தாக்குவதில்லையாம்.

துருக்கியிலுள்ளவர்கள் ரொட்டித்துண்டுகளை ஜன்னல் கதவுகளாக உபயோகிக்கிறார்கள். அங்குள்ள கடைக்காரர்கள் தாங்கள் விற்கும் தின்பண்டங்களை ரொட்டி சுருளில் கட்டிக்கொடுப்பார்கள். தின்பண்டம் வாங்குபவர்கள் தின்பண்டங்களோடு ரொட்டியையும் தின்றுவிடுவார்கள். பாஸ்பரஸ் ஜலஸந்தியில் ஜனங்கள் பழங்களிலிருந்து செய்யப்படும் பானவகைகளை வாங்கிக் குடிக்க ரொட்டித்தாளைத் தக்கபடி மடித்து உபயோகிக்கிறார்கள்.

### Human Ostrich.

மனிதத் தீப்பறவை.—மனிதர்களில் சிலர் தீப்பறவையைப்போல் ஆணி நாணயங்கள், கம்பிகள் முதலியவைகளைத் தின்கிறார்களாம். இவர்களுக்கு ஒருவிதப் பைத்யம் ஏற்படுவதால், இவர்கள் இப்படி இயற்கைக்கு மாறான உணவுகளைத் தின்கிறார்களாம்.

ஸமீபத்தில் ஒரு துறைமுகத்தில் கப்பலில் ஸாமான் ஏற்றி யிறக்குமிடத்தில் வேலையாளாயிருந்த 32-வயஸுள்ள கூலியாள் வயிற்றில் நோவென்றும், அடிக்கடி வாந்தி எடுக்க நேரிடுகிறதென்றும் சொல்லி ஒரு ஆஸ்பத்திரிக்கு சிகித்ஸைக்கு வந்தான். வைத்யர்கள் அவனது அன்னாசயத்தை பரீக்ஷித்துப் பார்த்ததில் அதில் 3-ராத்தல் 11-ஔன்ஸ் நிறையுள்ள உலோக ஸாமான்கள் இருந்தனவாம். அந்த ஸாமான்களாவன; 11-ஔன்ஸ் நிறையுள்ளதும் 5-அங்குலம் நீளமுள்ளதுமான ஒரு உளி, பெரியதும் சிறியதுமான நாணயங்கள், இரும்புக் கம்பிகள், ஸ்க்ரூக்கள், வளையங்கள், இரும்பு வேலையில் உபயோகிக்கப்படும் ரிவெட்டுகள், நட்டுகள் முதலியன. இவைகளோடு பல கல் துண்டுகளும் இருந்தன. இவைகளை வெளியிலெடுத்து, தக்க வைத்யம் செய்ததில், அந்த வேலையாள் ஸ்வஸ்தமடைந்து வீடுசென்றான். பிறகு ஆறுமாஸங்கழித்து அவன் மறுபடியும் முன் மாதிரியாகவே அவஸ்தைப்படுவதாகச்சொல்லி ஆஸ்பத்ரிக்கு வந்தான். எக்ஸ்ரே என்னும் ஜோதியால் அவனது அன்னாசயத்தை சோதிக்கையில், அதில் 4-அங்குலம் நீளமுள்ள ஒரு தகரத்தகடும், ஒரு ஸ்லேட் பென்ஸிலும், இருந்தன. வயிற்றை ஆபரேஷன் செய்து அவைகளை வெளியில் எடுத்துவிட்டார்கள். அந்த வேலையாளுடைய மனோநிலையை ஆஸ்பத்ரி அதிகாரிகள் கவனித்து வந்தார்கள். அவன் ஆஸ்பத்ரியி லிருக்கும்போது ஒரு ஸோப்புத்துண்டை விழுங்கினதோடு, கெடுதல் செய்யக்கூடிய இன்னும் சில பொருள்களையும் அவன் விழுங்கினானாம். இவைகளால் அவனுக்கு யாதொரு கெடுதியும் ஏற்படவில்லையாம். இவைகளையும் டாக்டர்கள் வயிற்றி லிருந்து எடுத்துவிட்டு, அவனை பைத்யக்காரனென்று நிச்சயித்து, பைத்யக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விட்டார்கள்.

### Type Setting in Japanese.

ஜப்பான் பாஷையில் அச்சுக்கோத்தல்.—ஜப்பான் பாஷையில் சுமார் 5,000-அக்ஷரங்களிருப்பதினால், அந்த பாஷைகளில் ஸமாசாரப் பத்ரிகைகளை அச்சடிப்பது மிகவும் ச்ரமமான காரியம். இருந்தாலும், ஹானலூலு என்னும் தீவில் ஜப்பான் பாஷையில் ஒரு பத்ரிகை போடுகிறவர் அந்த 5,000 அக்ஷரங்களையும் நூறு எழுத்துக்களுக்கும் குறைவாகச் சுருக்கி அவைகளை தாம் கண்டு பிடித்திருக்கும் ஒரு யந்த்ரத்தின் உதவியால் அதிசீக்ரத்தில் அச்சுக் கோத்து விடுகிறாராம். அந்த யந்த்ரத்தைக் கொண்டே சீனபாஷையிலும் அச்சுக் கோக்கவும் ஸாத்யப் படுமாம்.

## MISCELLANEOUS NEWS.

## நாநா ஸங்கதி.

**War Economy.**

**யுத்தத்தில் சேட்டுக் குடித்தனம்.**—இங்க்லண்டில் உள்ள ஒரு குடும்பத்தலைவர் யுத்தத்தின் காரணமாகப் பின் வருமாறு தமது செலவுகளைக் குறைத்துவருகிறாராம்.

(1) எல்லா வேலையாட்களும் யுத்தம் முடியும்வரையில் முக்கால் சம்பளத்தில் வேலை செய்யவேண்டும்.

(2) வீட்டில் விருந்தாளிகள் ஒருவரும் அதிக காலம் தங்கக்கூடாது.

(3) மாமூலாயில்லாத உபசரிப்புகள் ஒன்றும்கூடாது. நாடகசாலைக்கு செலவழிக்கக்கூடாது. அதிகச் செலவு ஏற்படக்கூடிய உல்லாஸ ஸஞ்சாரம் ஒன்றும் கூடாது. கோச் முதலிய குதிரைவண்டி ஏறிப்போகக் கூடாது. எப்போதும் ரெயிலில் மூன்றாவது வகுப்பு வண்டியில் தான் ப்ரயாணம் செய்யவேண்டும்.

(4) சாராயம், ஒய்ன், சுருட்டுகள் முதலியனவற்றை உபயோகிக்கக்கூடாது.

(5) வீட்டிலுள்ள எவரும் ஒரு வர்ஷம் வரையில் புது உடுப்புகள் ஒன்றும் வாங்கக்கூடாது.

(6) ஒருதினசரி, ஸ்த்ரீகளுக்கான ஒரு வாரப்பத்ரிகை இவைகளுக்குமேல் ஒரு பத்ரிகையும் வாங்கக்கூடாது.

(7) க்ரிஸ்ட்மஸ்தினம், பிறந்தநாள், கல்யாணம் இவைகளுக்காக இனாங்கள் வாங்கி யனுப்புவது கூடாது.

(8) சாப்பாடு விஷயத்தில் அதிகச் செட்டாயிருக்க வேண்டும். வீட்டுத் தோட்டத்துப் பழங்களைத் தவிர வேறு கடைகளிலிருந்து பழங்கள் வாங்கி உபயோகிக்கக்கூடாது.

(9) நிலக்கரி, விளக்கேற்ற உதவும் வாயு, மின்ஸாரம் ஆகிய இவைகளை உபயோகிப்பதில் ரொம்ப செட்டாயிருக்கவேண்டும்.

**Population of Russia.**

**ரஷ்யாவின் ஜனத்தொகை.**—ரஷ்யா தேசத்தின் ஜனத்தொகையானது இங்லண்டு, ஜெர்மனி, ப்ரான்ஸ், இட்டலி, இந்த நான்கு தேசத்திலும் உள்ள ஜனத்தொகைக்கு சரியாயிருக்கிறது. ரஷ்யாவில் வர்ஷம் ஒன்றுக்கு 76-லட்சம் குழந்தைகள் பிறக்கின்றன. அந்த தேசத்தில் வருஷத்தில் 48-லட்சம் மரணங்கள் தான் ஏற்படுவதினால், வருஷாவருஷம் ரஷ்யாவின் ஜனத்தொகை 30-லட்சம் அதிகமாகிறது. இதனால் சண்டையில் உண்டாகும் ஜனநஷ்டத்தை ரஷ்யா தாங்கமுடியும்.

## DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

### THE WAR IN EUROPE.

### ஐரோப்பிய யுத்தம்.

*மேமீ 29-தேதி.*

ப்ரெஞ்ச் துருப்புகள் குமியர்ஸ் க்ராமத்தின் கிழக்குப் பக்கத்தில் புகுந்திருக்கின்றன.

இட்டாலியர்கள் ஸுகுண பள்ளத்தாக்கில் பின்வாங்கின தோடு, மாண்டிகிவரோன் என்னுமிடத்தைக் காலி செய்தார்கள். அவர்கள் மாண்டி ஸிமோன் என்னுமிடத்தையும் காலிசெய்தார்கள்.

பல்கேரியர்கள் டெமிர் ஹிஸ்ஸாருக்குப் பக்கத்தில் க்ரீஸில் புகுந்து ருபல் என்னுமிடத்தைக் கைப்பற்றியிருக்கிறார்கள்,

31-தேதி.

ஜெர்மனியர்கள் வெர்டோனில் சில இடங்களைப் பிடித்திருக்கிறார்கள்.

இட்டாலியர்கள் ஆஸியாகோவைப் பிடித்திருக்கிறார்கள்.

31-தேதி.

ஜட்லண்ட் தீபகல்பத்துக்குப் பக்கத்தில் இங்க்லிஷ் கப்பல் படைக்கும் ஜெர்மன் கப்பல் படைக்கும் யுத்தம் நடந்தது. ப்ரிட்டிஷாருக்கு 14 கப்பல் சேதம். ஜெர்மானியருடைய சேதம் இன்னும் அதிகமென்று சொல்லப்படுகிறது.

ஜூன்மீ 1-தேதி.

வெர்டேனில் ப்ரெஞ்ச் துருப்புகள் காரெட்ஸ் தோப்பில் சில இடங்களைக் காலிசெய்தன. இட்டாலியர்கள் ஆர்ஸிரோவுக்கு வடகிழக்கில் உள்ள புன்லாகார்க்கின் என்னும் இடத்தைக் காலிசெய்தார்கள்.

2-தேதி.

வெர்டேனில் ஜெர்மானியர்கள் டௌவாமாண்டுக்கும் வெக்ஸ் குளத்துக்கும் மத்தியில் சில இடங்களைப் பிடித்தார்கள். ஆஸ்ட்ரியர்கள் ஆஸியா கோவிலும், ஆர்ஸிரோவிலும் புகுந்தார்கள்.

துருக்கியர்கள் மமாகாட்டும் என்னுமிடத்தைப் பிடித்தார்கள்.

3-தேதி.

வெர்டேனில் ஜெர்மானியர்கள் கெய்லட் காட்டிடாம்லூப் க்ராமத்திலும் முன்சென்றிருக்கிறார்கள்.

5-தேதி.

இங்க்லண்டின் யுத்த மந்த்ரியாகிய லார்ட் கிச்சனர் "ஹாம்ப்ஷைர்" என்னும் க்ரூஸர் கப்பலில் ஏறி ரஷ்யாவுக்குப் போய்க்கொண்டிருக்கையில் அந்தக் கப்பல் வெடிகுண்டிலோ டார்ப்பிடோவிலோ தாக்கி மூழ்கி விட்டது. லார்ட் கிச்சனர் மூழ்கிப்போனார்.

யிப்ரஸுக்குத் தென்கிழக்கில் யுத்தம் பலமாக நடந்தது. ஜெர்மானியர்கள் ஹில்லாஹிகியென்னு மிடத்துக்குப் பக்கத்தில் 700-கஜம் முன் சென்றார்கள். வெர்டேன் யுத்தம் பலமாக நடக்கிறது.

6-தேதி.

இட்டாலியர்கள் ஆர்ஸீயிரியோ என்னுமிடத்தில் பின்வாங்கினார்கள். ரஷ்யர்கள் மும்மரமாக யுத்தத்துக்கு ஆரம்பித்து முன்செல்ல ப்ரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

7-தேதி.

இங்க்லண்டின் ப்ரதம மந்த்ரியாகிய மிஸ்டர் ஆஸ்கவித் தற்கால ஏற்பாடாக யுத்தமந்த்ரி வேலையையும் பார்த்துவருவாரென்று சொல்லப்படுகிறது.

யிப்ரஸில் யுத்தம் நடக்கிறது. ஹூஜ் க்ராமத்திலுள்ள ஒரு இடங்கை ஜெர்மானியர்கள் கைப்பற்றினார்கள்.

ரஷ்யர்கள் வால்ஹினியா, கலீஷ்யா, புகோவினா என்னும் இடங்களில் ஜயமடைந்து வருகிறார்கள். ஆஸ்ட்ரியர்கள், லட்ஸ்க் ப்ரதேசத்தில் பின்வாங்கி யிருக்கிறார்கள்.

8-தேதி.

ஜெர்மானியர்கள் வெர்டேனில் வாக்ஸ் கோட்டையைப் பிடித்திருக்கிறார்கள்.

9-தேதி.

ரஷ்யர்கள் லட்ஸ்க் என்னும் பட்டணத்தையும் அப்பெயர்கொண்ட ஜில்லாவையும் பிடித்திருக்கிறார்கள். மற்ற இடங்களிலும் ரஷ்யர்கள் முன்சென்று கொண்டிருக்கிறார்கள்.

10-தேதி.

ரஷ்யர்கள் ப்ரிபெட் நதியிலிருந்து ருமேனியா வரையில் உள்ள போர்முகத்தில் எதிரிகளைத் தாக்கி முன் சென்றுகொண்டிருக்கிறார்கள். ரஷ்யர்கள் லெம்பர்க் திசையைநோக்கிப்போய் ஸ்ட்ரிபா நதியைத் தாண்டி அதற்கு மேற்கில் உள்ள ஸ்லாடிபோடக் நதியண்டை போயிருக்கிறார்கள். வாக்ஸ் கோட்டையைப் பிடித்த ஜெர்மானியர்கள் வெர்டூனைப் பிடிக்க பலமாக முயன்று வருகிறார்கள்.

12-தேதி.

இதுவரையில் வெர்டேன் சண்டையில் மாத்ரம் ஜெர்மானியர்களுக்கு 10 - லக்ஷம் பேர்கள் சேதமென்று பாரிஸ் பத்ரிகை ஒன்று தெரிவிக்கிறது

ரஷ்யர்கள் டப்னோ கோட்டையையும் பட்டணத்தையும் பக்ஸாக்ஸ் என்னும் ஊரையும் பிடித்தார்கள்.

இட்டாலியர்கள் அடீஜ், அஸ்டிகோ ப்ரதேசங்களிலும் முன் சென்றார்கள்.

14-தேதி.

கனடியர்கள் ஸில்லிபிக் என்னுமிடத்துக்குப் பக்கத்தில் சில இடங்களைப் பிடித்தார்கள்.

ரஷ்யர்கள் முன் சென்றுகொண் டிருக்கிறார்கள், அவர்கள் கலீஷ்யாவில் ப்யூஸாக்ஸுக்கு வடக்கில் ஒரு ஊரைப் பிடித்திருக்கிறார்கள். ஸெர்னோவிட்ஸுக்குப் பக்கத்தில் யுத்தம் நடக்கிறது.

15-தேதி.

வெர்டேனில் யுத்தம் குறைந்திருக்கிறது. ரஷ்யர்கள் ஸெர்னோவிட்ஸுக்கு 20 - மைல் வடமேற்கிலுள்ள ஸ்னியாடின் என்னுமிடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

16-தேதி.

'ஈடன்' என்னும் டிஸ்ட்ராயர் கப்பல் வேறு ஏதோ ஒரு கப்பலில் மோதி மூழ்கிப்போயிற்று.

17-தேதி.

இட்டாலியர்கள் மான்பால்கோனுக்குக் கிழக்கில் சில இடங்களைப் பிடித்திருக்கிறார்கள்.

சென்ற பத்துநாள் யுத்தத்தில் ரஷ்யர்கள் $1\frac{1}{2}$-லக்ஷம் எதிரி ஸோல்ஜர்களையும் 3476-ஆபிஸர்களையும் கைது செய்தார்கள்.

ரஷ்யர்கள் லட்ஸாக்குப் பக்கத்தில் 30-மைல் நீளமுள்ள போர்முனையில் 40-மைல் முன்சென்றிருக்கிறார்கள். அவர்கள் கோவனுக்குப் பக்கத்தில் வந்துகொண்டிருக்கிறார்கள். ரஷ்யர்கள் புகோவினாவில் முன்சென்றிருக்கிறார்கள்.

பால்டிக் கடலில் போய்க்கொண்டிருந்த சில ஜெர்மன் ஸ்டீமர்களையும், அவைகளுக்குத் துணையாயிருந்த ஜெர்மன் யுத்தக் கப்பல்களையும் ரஷ்ய டார்ப்பிடோ கப்பல்கள் தாக்கி ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு உதவி க்ரூஸரையும், 2-டார்ப்பிடோக் கப்பல்களையும் மூழ்கடித்தன. ரஷ்யர்களுக்கு சேதமொன்றுமில்லை.

ரஷ்யர்கள் ஆஸ்ட்ரியப் போர்முனையில் கோவனுக்கு 25-மைலிலுள்ள ஸ்டாகாட் என்னுமிடத்தையும் லட்ஸாக்கு 3 -மைல் மேற்கில் உள்ள லோகாட்சி என்னுமிடத்தையும் பிடித்திருக்கிறார்கள்.

ஆஸ்ட்ரியர்கள் ஸொர்ஜெ விட்ஸைக் காலிசெய்தார்கள். ரஷ்யர்கள் அதைக் கைப்பற்றி யிருக்கிறார்கள்.

18-தேதி.

ஜெனரல்வான் மோல்ட்கே இன்று ஜெர்மன் பார்லிமெண்டில் திடீரென்று இறந்து போய் விட்டதாகத் தெரிகிறது.

19-தேதி.

இட்டாலியர்கள் மாண்டி இவிடோரோ என்னுமிடத்தைப் பிடித்தார்கள்.

20-தேதி.

புகோவினாவிலுள்ள ஆஸ்ட்ரியா ஸைன்யம் இரண்டு பாகமாகப் பிரிந்தது; ஒரு பாகம் ருமேனியாப் பக்கமாயும், இன்னொரு பாகம் கார்ப்பேதியன் மலைப்பக்கமாயும் [illegible] ரஷ்யர்கள் [illegible] மாய் [illegible] பிடித்தார்கள்.

## INDIAN NEWS

## இந்திய வர்த்தமானம்

[illegible]

[illegible] — இது இன்று [illegible]

ராகவும் தெரிந்தெடுக்கப் பட்டார்கள். விண்டிகேட் என்னும் ஸபையும் ஏற்படுத்தப்பட்டது.

12-தேதி.

**இந்திய அச்சுச் சட்டம்.**—இன்று சென்னை ப்ரமுகர்கள் சென்னை விக்டோரியா ஹாலில் ஒன்று கூடி, 'ந்யூ இந்தியா' பத்ரிகைக்கு ஜாமீன் கேட்டதைப் பற்றி வருத்தப்படுவதாகவும், அச்சுச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் செய்தார்கள்.

17-தேதி.

**சென்னை ஹைக்கோர்ட்.**—சென்னை ஹைக்கோர்ட் சீப் ஜஸ்டிஸாகிய ஸர் ஜான் வாலிஸ் லீவில் போகிறபடியால் அவருக்குப் பதிலாக ஜஸ்டிஸ் அப்துர் ரஹீம் சீப் ஜட்ஜ் வேலை பார்க்கும்படி நியமிக்கப் பட்டிருக்கிறார். சென்னை ஸ்மால்காஸ் கோர்ட் சீப் ஜட்ஜாகிய மிஸ்டர் வி. க்ருஷ்ணன் ஹைக்கோர்ட் ஜட்ஜாக வேலை பார்க்கும்படி நியமிக்கப் பட்டிருக்கிறார்.

17-தேதி.

**ஸைடன்ஹாம் வ்யாபாரக் காலேஜ்.**— பம்பாயிலுள்ள இந்தக் காலேஜில் தேசத்தின் நிலைமைகளைப் பற்றி கணக்குகள் சேகரித்து ஆராய்ச்சிசெய்ய ஒரு டிபார்ட்மெண்ட் ஏற்படுத்தி வருகிறார்கள்.

20-தேதி.

**பகதூர் ஷாவின் கத்தி.**—டெல்லியை ஆண்ட மொகலாய அரசர்களுள் கடைசியான பகதூர் ஷாவுக்கு ஸொந்தமான கத்தியொன்றை, ஸர் ரோலண்ட் வில்ஸன் என்பவர் டெல்லி ம்யூஸத்துக்கு இனாமாகக் கொடுத்திருக்கிறார்.

21-தேதி.

**தேசபாஷைகள் மூலமாய்க் கல்வி கற்பிப்பது.**—இந்தியா கவர்ன்மெண்டார் தேச பாஷைகள் மூலமாகக் கல்வி கற்பிப்பதைப்பற்றி அபிப்ராயம் தெரிவிக்கும்படி மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு சுற்றுக் கடிதம் ஒன்று எழுதி யனுப்பப் போகிறார்களாம்.

22-தேதி.

**பஞ்சாபுக்கு ஹைக்கோர்ட்.**—யுத்தத்துக்குப் பிறகு பஞ்சாபிலுள்ள சீப் கோர்ட்டை ஹைக்கோர்ட்டாக [illegible] இந்தியா கவர்ன்மெண்டார் தெரி[illegible]



# பொது விஷய விளக்கம்.

நள வருஷம்.

1916-17.

நமது ராஜீய தேசீய விவரங்களுக்கு இதோர் பிரமாண நூல்.

ஸ்ரீமான் ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்களால் முகவுரை எழுதப்பெற்றது.

---

கனம் ராவ்பகதூர். வி. கே. ராமாநுஜாச்சாரியார், கனம் ராவ்பகதூர். எம். ராமச்சந்திர ராவ், மிஸ்டர் வித்யாசாகர பாண்டியா, மிஸ்டர் ஏ. ரங்கசாமி ஐயங்கார் முதலான பிரமுகர்களால் எழுதப்பட்ட பல விசேஷ வியாஸங்களும், காங்கிரஸ், மூஸ்லீம் லீக், ஜனோபகார சங்கங்கள் முதலான சமூக சம்பவங்களின் வரலாறும், ராஜாங்க நிர்வாக அமைப்பும் சுதேச சமஸ்தான நிலைமையும், சுருக்கமாய்ச் சொல்ல பிரிட்டிஷ் பிரஜைகளின் சுதந்திரங்களும், கடமைகளும், நன்மைகளும், பொறுப்பும் யாவற்றும் இவ்வரும் பெரும் நூலில் காணலாம்.

---

விலை ரூபா

1-8-0.

தபால் சார்ஜ் பிரத்யேகம்.

இப்புத்தகத்தின் இரண்டாம் பாகம் முழுவதும் இப்போது நடக்கும் மகா யுத்தத்தின் விருத்தாந்தம் அடங்கியது. யுத்தத்தின் பகிரங்க அந்தரங்க காரண காரணங்களும், யுத்த நடவடிக்கையின் உண்மையான விருத்தாந்தமும், யுத்த ஸ்தல படங்களும், யுத்த நூதன சிருஷ்டி படங்களும், யுத்த சம்பந்தமாக யாவற்றும், இதில் நன்கறியலாம்.



மானேஜர்
சுதேசமித்திரன் ஆபீஸ்,
சென்னை.

THE SWADESAMITRAN PRESS.

# ஜனோபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

**THE PEOPLE'S FRIEND.**

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE.'

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 8. Vol. 8. — நளவருஷ, ஆனிமீ, JUNE—JULY 1916. — ஸஞ்சிகை 6. No. 6.

## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. | A. | P. | | Foreign. Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | ... ... | 6 | 0 | 0 |
| Half-yearly ... | 2 | 0 | 0 | ... ... | 3 | 0 | 0 |
| Sample copy | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 Page | ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do | ... | 2 | 8 | 0 | do |
| ¼ do | ... | 1 | 4 | 0 | do |
| 1/10 do | ... | 1 | 0 | 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion, republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணுக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

**தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.**

| | உள் நாடு. | | | | அந்ய நாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 | 0 | 0 | ... | 6 | 0 | 0 |
| ஆறுமாஸத்துக்கு ... | 2 | 0 | 0 | ... | 3 | 0 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

**விளம்பர விகிதங்கள்.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | பக்கத்திற்கு | மாஸம் | ஒன்றுக்கு | 5 | 0 | 0 |
| ½ | ,, | ,, | ,, | 2 | 8 | 0 |
| ¼ | ,, | ,, | ,, | 1 | 4 | 0 |
| 1/10 | ,, | ,, | ,, | 1 | 0 | 0 |

**வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.**

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேண்டுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிரூபர்கள் அறியவேண்டும்

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

ஜனாபிமானி.

புஸ்தகம் 8.] நளஹு ஆனிமீ. [ஸஞ்சிகை 6.

## GERMAN TRADE METHODS.

## ஜெர்மானியர்களுடைய வ்யாபார முறைகள்.

ஜெர்மானியர்கள் ஸ்வல்பகாலத்துக்குள்ளாக உலகத்து வ்யாபாரத்தில் பெரும்பாகத்தைக் கைப்பற்றியிருக்கிறார்கள். இப்படி அவர்கள் தங்களுடைய வ்யாபாரத்தை வ்ருத்திசெய்யக் காரணமென்னவென்பதைப் பற்றிப் பலர் பலவிதமாகச் சொல்லுகிறார்கள். ஜெர்மானியர்கள் ரொம்ப புத்திசாலிகளாகவும் ஊக்கமுள்ளவர்களாகவும் இருப்பது; அந்த தேசத்தில் கல்வி முறையானது, முக்யமாய் தொழில் வ்யாபாரக் கல்வி முறையானது, ரொம்ப உயர்ந்ததாயிருப்பது; வ்யாபாரத்துக்கும் கைத் தொழிலுக்கும் ஸாதகமேற்படும்படி காப்புவரிகள் போட்டிருப்பது; ஜெர்மன் ராஜாங்கத்தார் வ்யாபாரிகளைப் பலவிதங்களில் ஆதரித்து உதவி செய்வது: என்றிப்படிப்பட்ட காரணங்களால் ஜெர்மானியர்களுடைய வ்யாபாரம் வ்ருத்தியாகியிருக்கிறதென்று சொல்லுகிறார்கள்.

கெய்ஸர் சக்ரவர்த்தி ஜெர்மானியர்களுடைய வ்யாபாரவிஷயத்தில் ரொம்ப ஊக்கங்காட்டுவதாக ஜெர்மானியர்களே சொல்லுகிறார்களாம்.

இவைகளோடு இன்னொரு காரணமும் சொல்லுகிறார்கள். அதாவது ஜெர்மனியிலுள்ள பாங்கிகள் ஏதாவது ஒருதொழில் லாபகரமானதென்று தெரிந்தால் அந்தத் தொழிலின் அபிவ்ருத்திக்காக எவ்வளவு பணம் வேண்டுமென்றாலும் கொடுத்துதவுகின்றன என்பதே. இந்தக் காரணங்களெல்லாம் சரியானவைதான்.

ஆனால் இவைகளைத் தவிர வேறு சில முக்யமான காரணங்களும் இருக்கின்றன. அவைகளை இங்கு விவரிக்கிறோம்.

ஜெர்மானியர்களுக்கு குழந்தைப் பருவம் தொடங்கி கற்பிக்கப்படும் விஷயமாவது, யார் எந்தத் தொழிலில் அமர்ந்திருந்தாலுஞ்சரி அவர் அந்தத் தொழிலில் உன்னதபதவி யடைவதே அவருடைய நோக்கமா யிருக்கவேண்டும் என்பது. இதுவே அவர்கள்கொள்கையின்படி, வாழ்நாளின் லக்ஷ்யமாகும். கார்யம் ஸித்தியானால் போதும், என்ன உபாயம் கைக்கொண்டாலும் பாதகமில்லையென்பது அவர்களுடைய மதமாகும். ஸன்மார்க்கக் குறைவானதோ, ஸன்மார்க்க முள்ளதோ, ச்லாகிக்கக் கூடியதோ, தூஷிக்கக்கூடியதோ, எப்படிப்பட்ட மார்க்கமாயிருந்தாலுஞ்சரி, அது வ்யாபாரத்தை வ்ருத்தி செய்யுமென்றால் அந்த முறையைக் கைக்கொள்வது ஜெர்மானியர்களுக்குள் ந்யாயமானதே. இதரதேசங்களில் நம்பிக்கை த்ரோகமானதென்றும், வெட்கங் கெட்டதென்றும் தள்ளப்பட்ட வ்யாபார முறைகளுங்கூட ஜெர்மானியர்களுக்குள் ஸாதாரணமாய் உபயோகத்தி லிருக்கின்றன. அவைகளி லிரண்டொன்று பின்வருமாறு.

**வ்யாபார உளவாளிகள்.**—இந்த யுத்தத்துக்கு முன்னால் அநேக ஜெர்மன் வாலிபர்கள் இங்க்லண்ட், ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகள், ப்ரான்ஸ், இட்டலி, ரஷ்யா முதலிய நாடுகளுக்கு வ்யாபாரத்தைப்பற்றி உளவறிவதற்காகப் போய் வந்தார்கள். அவர்களுக்கு ஜெர்மன் கவர்ன்மெண்டார் தக்க உதவிசெய்து வந்தார்கள். அவர்கள் (வாலிபர்கள்) அன்யநாடுகளி லிருந்துகொண்டு வ்யாபார விஷயங்களை அறிந்து அப்போதைக்கப்போது ஜெர்மன் அதிகாரிகளுக்குத் தெரிவித்து வந்தார்கள். ஜெர்மனியிலுள்ள ஒவ்வொரு பட்டணத்தி லிருந்தும் புத்திசாலியான அநேக வாலிபர்களை அன்யநாடுகளில் போய் அவர்களுக்கு இஷ்டமான தொழில்சாலைகளிலோ, வ்யாபாரக் கம்பெனிகளிலோ வேலை கற்றுக்கொள்ளும்படி, பட்டணத்தார்கள் தூண்டி வந்தார்கள். இந்த வாலிபர்களுக்கு ஏற்படும் செலவை பட்டணத்து ஜனங்களே பொறுத்துக்கொள்வதால், இவர்கள் சம்பளமில்லாமல் வேலைபார்க்கக்கூடும். இவர்கள் வேலை தேடும்போது, அந்த தேசத்து பாஷையைக் கற்பதற்காகவே தாங்கள் அங்கே வந்திருப்பதாக அந்த அன்ய தேசத்து வ்யாபாரிகளிடம் சொல்லி, அந்த வ்யாபாரிகளிடமிருந்து வேலை பார்த்து வருவார்கள். அங்கிருந்துகொண்டு தாங்கள் அமர்ந்திருக்கும் கம்பெனியின் விவரம்; அந்த கம்பெனி செய்யும் வேலை; அங்கு எவ்வளவு ஸாமான்கள் செய்யப்படுகின்றன; ஸாமான்கள் செய்யும் முறைகள், செய்வதற்கேற்படும் செலவு; அந்தக் கம்பெனியினிடமிருந்து ஸாமான் வாங்கும் வாடிக்கைக்காரர்களின் பெயர்; வாடிக்கைக்காரர்கள் எப்படிப் பணம் செலுத்துகிறார்களென்பது; விற்கும்விலை; அவைகளுக்குத் தள்ளிக்கொடுக்கும் கமிஷன் ஆகிய இவைகளைப் பற்றி விரிவான கடிதங்கள் வாரந்தோறும் ஜெர்மன் அதிகாரிகளுக்கு அனுப்புவார்கள். மேலும் கம்பெனிக்கு வரும் பிறருக்குத் தெரியக்கூடாத வ்யாபாரக் கடிதங்களுக்கு, கூடுமானால், நகலெடுத்து அனுப்புவார்கள். முக்யமாய் அன்யதேசங்களிலுள்ள வ்யாபாரிகள் எழுதும் கடிதங்களை எழுதி யனுப்புவதோடு, அவர்கள் எதற்காகக் கடிதங்கள் எழுதினார்கள்; அவர்கள் விலை விஷயமாய் சொல்வதென்ன; எவ்வளவு ஸாமான்களுக்கு ஆர்டர் கொடுத்தார்களென்பதைப்பற்றிய விவரங்களையும் எழுதி யனுப்புவார்கள். இதோடு இந்த வாலிபர்கள் தாங்கள் அமர்ந்திருக்கும் கம்பெனிகளில் செய்யப்படும் ஸாமான்களின் மாதிரிகளையும் ஜெர்மனிக்கு அனுப்புவார்கள். இவ்விதமாக அன்யதேசங்களிலுள்ள வ்யாபாரக் கம்பெனிகளின் ஏற்பாடுகளும் முறைகளும் ஜெர்மன் வ்யாபாரிகளுக்கும் தொழில்சாலைக்காரர்களுக்கும் நன்றாய்த் தெரிந்துவிட்டன. அவர்கள் வாலிபர்கள் அனுப்பிய மாதிரிச் சரக்குகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு அதே சரக்குகளையோ, அவைகளைவிட சற்று உயர்ந்த சரக்குகளையோ செய்து வாலிபர்கள் குறிப்பிட்ட இதரதேசங்களிலுள்ள வ்யாபாரிகளுக்கு விலை ஸகாயமாக விற்று அன்ய வ்யாபாரத்தை வ்ருத்திசெய்யலானார்கள்.

ஜெர்மன் வ்யாபாரிகள் இதர தேசங்களில் வ்யாபாரம் செய்யும்போது அன்யர்களுடைய போட்டி ஏற்படக்கூடுமாதலால், அப்படிப்பட்ட போட்டியை ஒழிக்கப் பண உதவி கேட்டால் கொடுப்பதாக ஜெர்மன் கவர்ன்மெண்டார் சொல்லிவந்தார்கள். வேண்டுமானால், அன்ய வ்யாபாரிகள் விற்கும் விலைக்கு சற்று குறைத்து விற்கும்படி கவர்ன்மெண்டே சொல்லிக்கொடுத்து வந்தார்கள். இன்னும் ஸாமான் வாங்கும் வ்யாபாரிகளுக்கு அன்ய வ்யாபாரிகள் பணஞ்செலுத்த எவ்வளவுகாலம் தவணையாகக் கொடுக்கிறார்களோ அதைவிட அதிககாலம் தவணை கொடுக்கும்படிக்கும், ஜெர்மன் வ்யாபார முறையும், ஜெர்மன் சரக்குகளுமே மற்றவர்களுடையவற்றைவிட உயர்ந்தனவென்று சரக்கு வாங்குபவர்களுக்குப் படும்படி செய்ய என்ன செய்யவேண்டுமோ அவைகளையெல்லாம் செய்யும்படிக்கும் கவர்ன்மெண்டார் தூண்டி வந்தார்கள்.

**ரகஸ்யமாய்ப் பண உதவி செய்தல்.**—பற்பல பாஷைகள் கற்பிக்கும் பாடசாலை ஒன்றுக்கு ஜெர்மன் கவர்ன்மெண்டார் ரகஸ்யமாய்ப் பண உதவி செய்கிறார்களென்று சொல்லப்படுகிறது. இந்தமாதிரிப் பாஷைப் பள்ளிக்கூடங்களில் பல

பாஷைகள் கற்றுக் கொடுக்கப்படும். இங்கலண்டிலும் வேறு தேசங்களிலும் உள்ள வ்யாபாரிகள் அன்யதேசங்களிலிருந்து தங்களுக்குவரும் கடிதங்களில் ஏதாவது அன்யபாஷைகளில் எழுதப்பட்டிருந்து, அவைகளில் கண்ட விஷயங்களை அறிந்துகொள்ள முடியாவிட்டால், அவர்கள் அக்கடிதங்களை மேற்சொன்ன பாஷைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி மொழிபெயர்த்துக் *கொடுக்கும்படி சொல்லுவார்கள். அப்பாஷைப் பள்ளிக்கூட அதிகாரிகள் யோக்யர்களாயிருந்தால் கடிதங்களில் உள்ள விஷயங்களை ஒருவருக்கும் தெரிவிக்காமல் மொழிபெயர்த்தனுப்பிவிடுவார்கள். அயோக்யர்களாயிருந்தால், கடிதங்களில் கண்ட வ்யாபார ரகஸ்யங்களை பணம்வாங்கிக்கொண்டு வேண்டுகிறவர்களுக்கு எழுதிக்கொடுப்பார்கள். இப்படிவரும் கடிதங்களில் அன்ய நாடுகளின் வ்யாபார நிலைமையைப்பற்றியும், அங்கே வேண்டியிருக்கும் ஸாமான்களைப் பற்றியும் விவரங்கள் இருக்கும். இப்படி அன்யர்களுடைய வ்யாபார ரகஸ்யங்களை அறிவதற்காகவே ஜெர்மன் கவர்ன்மெண்டார் ஒரு பாஷைப் பள்ளிக்கூடத்துக்கு ரகஸ்யமாய்ப் பண உதவி செய்கிறார்களென்று சொல்லப்படுகிறது.

**வ்யாபார ப்ரதிநிதிகள்.**—ஜெர்மானியர்கள் செயும் இன்னொரு தந்த்ரம் பின்வருமாறு. அவர்கள் தங்களுடைய ப்ரதிநிதிகளை, அன்யதேசங்களுக்கு அனுப்பி அங்குள்ள தொழிற்சாலைக்காரர்களின் ஸாமான்களை விற்கும் ஏஜெண்டுகளாக அமர்ந்துகொள்ளச் செய்வார்கள். அவர்கள் இங்கலண்டுக்குப் போய் லண்டனிலாவது, மான்சஸ்டரிலாவது தங்குகிறார்களென்று வைத்துக்கொள்வோம். அவர்கள் இங்லீஷ் ஸாமான்களில் விசேஷமானவையும், வேறு தேசங்களில் செய்யப்படாதவையுமான சரக்குகள் செய்யும் கம்பெனிகளுக்கு ஏஜெண்டுகளாக அமர்ந்துகொண்டு, அந்தச் சரக்குகளில் நல்ல வ்யாபாரம் ஏற்படும்படி பாடுபடுவார்கள். இவ்விதம் செய்து வ்யாபாரம் அபிவ்ருத்தியான பிறகு, தாங்கள் விற்கும் ப்ரிட்டிஷ் ஸாமான்களில் சிலவற்றை மாதிரியாக ஜெர்மனிக்கு அனுப்புவார்கள். ஜெர்மன் வ்யாபாரிகள் அவைகளை மாதிரியாக வைத்துக்கொண்டு அவைகளைப்போலவே யுள்ளதாய் ஸாமான்கள் செய்து இங்கலண்டிலுள்ள மேற்சொன்ன ஜெர்மன் ஏஜெண்டுகளுக்கு அனுப்புவார்கள். அந்த ஏஜெண்டுகள் இந்த ஸாமான்களையே விசேஷமாக தங்களுடைய வாடிக்கைக்காரர்களுக்கு விற்பார்கள். இதனால் காலக்ரமத்தில் ப்ரிட்டிஷ் வ்யாபாரிகளுடைய வ்யாபாரமானது, அவர்களுடைய தேசத்திலேயே அவர்களுடைய ஜெர்மன் ஏஜெண்டுகளால் கெட்டுப் போய்விடுகிறது. இந்த வ்யாபார முறைகளை ஜெர்மன் கவர்ன்மெண்டாரேயன்றி, ஜெர்மனியிலுள்ள உயர்ந்த வகுப்பார்களென்று சொல்லப்படும் ஜனங்களும் ஆதரிக்கிறார்களாம்.

## SOME USES OF PRICKLY PEAR.

## சப்பாத்துக்கள்ளியின் சில உபயோகங்கள்.

அநேக க்ராமங்களில் சப்பாத்துக் கள்ளியால் ரொம்ப கெடுதல்கள் நேரிடுகின்றன. சப்பாத்துக்கள்ளி ஏராளமாய் முளைத்திருப்பதால், அநேக இடங்கள் ஸாகுபடிக்கு லாயக்கில்லாமலிருக்கின்றன. சப்பாத்துக்கள்ளிப் புதரில் பாம்புவந்தடைந்து ஜனங்களுக்கும் ம்ருகங்களுக்கும் ஆபத்துக் கிடமாகின்றன. அநேக விடங்களில் ரஸ்தாக்களோரமாகவுள்ள சப்பாத்திக் கள்ளிப் புதர்கள் ரொம்ப வளர்ந்து ரஸ்தாக்களைக் குறுகலாக்கிவிட்டதாகத் தெரிகிறது. இன்னும் அநேக இடங்களில் இந்தக் கள்ளியால் புறம்போக்குநிலங்கள் ஒன்றுக்கும் உதவாத நிலங்களாகிவிட்டன. இந்தக் கள்ளியின் பக்கத்திலுள்ள மறைவான இடங்களில் க்ராமவாஸிகள் மலஜலத்துக் கொதுங்குகிறார்கள். இதனால் கள்ளி வ்ருத்தியாவதற்கும் ஸௌகர்ய மேற்படுகிறது.



இந்தக் காரணங்களால் சப்பாத்திக்கள்ளியை ஒழிப்பது ரொம்ப அவச்யமான விஷயமாகிறது, சென்னை விவஸாய டிரெக்டராகிய மிஸ்டர் சாட்விக் இதை ஒழிப்பது விஷயமாக ஒரு துண்டுப் பத்ரிகை தயார் செய்திருக்கிறார். அதில் அவர் இந்தக் கள்ளியை எருவாக உபயோகிப்பதைப் பற்றி எழுதியிருக்கிறார்.

கோயம்புத்தூர் ஜில்லாவில் விவஸாயிகள் சப்பாத்திக் கள்ளியை மட்கவைத்து கம்பு, சோளம் ராகி முதலிய புன்செய்ப் பயிர்களுக்கும், மிளகாய், புகையிலை, கோதுமை, வாழை, கரும்பு ராகி முதலிய தோட்ட ஸாகுபடிப் பயிர்களுக்கும் எருவாக உபயோகிக்கிறார்கள். ஆனால் எல்லாரும் இப்படி உபயோகிப்பதில்லை. அப்படி உபயோகிப்பவர்களில் பெரும்பாலாரும் தங்கள் வயல்களோரமாயுள்ள சப்பாத்திக் கள்ளியைத்தான் வெட்டி மட்கவைத்து உபயோகிக்கிறார்கள். சில விவஸாயிகள் சப்பாத்திக்கள்ளி ஏராளமாய் முளைத்திருந்து, இடமும் ரொம்ப ஸமீபமாயிருந்தால், அதை வெட்டி மட்கவைத்து எருவாய் உபயோகிக்கிறார்கள். அநேக விவஸாயிகள் சப்பாத்திக் கள்ளியின் அடியிலுள்ள மண்ணையெடுத்து வயல்களுக்குப் போட்டு வயல்களை செழிப்பாக்குகிறார்கள். இந்த மண்ணுக்காக விலை கிடையாது. அதை வெட்டியெடுத்து வயலுக்குக் கொண்டுபோக மாத்ரம் வண்டியொன்று 2-அணா வீதம் கொடுக்கிறார்கள். இப்போது வேலையாட்களின் கூலி அதிகரித்திருப்பதால் மண்ணைவெட்டி எடுத்துக்கொண்டு போகக் கூலியும் அதிகரித்து வருகிறது. இந்த மண்ணானது எருவிடுதற்கு ரொம்ப சிறந்தது. இதில் மட்கின இலையும், காற்றில் அடித்துவந்த இந்த்ரிய வஸ்துக்களும் இருக்கின்றன. சப்பாத்துக் கள்ளியிலும் நூற்றுக்கு 60 பாகம் இந்த்ரிய வஸ்து இருப்பதால், இரண்டையும் சேர்த்து மட்கவிட்டால் உயர்ந்த எருக்கிடைக்கும். சப்பாத்திக் கள்ளியை இவ்விதம் எருவாக்குவதில் விவஸாயிகளுக்கு இரண்டு ஸௌகர்யங்கள் ஏற்படுகின்றன. முதலாவது சப்பாத்திக்கள்ளி அழிந்துபோகிறது. இரண்டாவது நிலத்துக்கு நல்ல எருக்கிடைக்கிறது.

சப்பாத்திக் கள்ளியை மட்க வைக்க மிஸ்டர் சாட்விக் சில முறைகள் தெரிவிக்கிறார்.

(1) கோடை மழைக்காலத்துக்கும் அடுத்த மழைப் பருவத்துக்கும் மத்தியில் ஸௌகர்யப்பட்டபோது 3 அல்லது 4 அடி ஆழமும் 6 அடி அகலமும் வேண்டிய அளவு நீளமுள்ளதாய் ஒரு குழி தோண்டவேண்டும். பிறகு மழை காலத்தில் அதிக வேலையில்லாத ஸமயத்தில் சப்பாத்திக் கள்ளியை வெட்டிக்கொண்டுவந்து குழியில் போட்டு நிரப்பி, குழியிலிருந்து எடுத்த மண்ணை அதன்மேல் போட்டு மூடிவிடவும். சிலநாள் சென்ற பிறகு, குழியிலுள்ள சப்பாத்திக்கள்ளி அழுகுவதால் மேலே போட்டிருக்கும் மண் அமுங்கும். அப்போது வெட்டியெடுத்த சப்பாத்திக் கள்ளியின் கீழ் உள்ள மண்ணை வெட்டிக் கொண்டுவந்து குழியின் மேல் போடவேண்டும். நல்ல மழை பெய்யுமிடங்களில் கள்ளியானது ஒரு வர்ஷத்தில் நன்றாய் மட்கி எருவாக இருக்கும். முட்கள் நன்றாய் மட்கி யிராவிட்டால், குழியை அப்படியே இன்னொரு வர்ஷம் விட்டுவைக்க வேண்டும். இரண்டாவது வர்ஷத்தில் முட்களும் மடிந்துபோகும்.

(2) ஸ்வல்ப மழையுள்ள இடங்களில், விவஸாயிகள் ஸௌகர்யமானபோது சப்பாத்திக்கள்ளியை வெட்டி குவியலாகப் போட்டுவைக்கலாம். சிலகாலமான பிறகு அது காய்ந்திருக்கும். அப்போது உலர்ந்த செடிகொடிகளையும், புற்களையும், குப்பை செத்தைகளையும் காய்ந்த சப்பாத்திக் குவியல்களின்மேல் போட்டு அவைகளுக்கு நெருப்பிட வேண்டும். இதனால் முட்கள் வெகுவாய் எரிந்துபோகும். பிறகு சப்பாத்திக்கள்ளி வெட்டின இடத்தின் மண்ணையாவது, அல்லது பக்கத்து பூமியின் மண்ணையாவது சப்பாத்திக் குவியல்களின்மேல் போட்டுவிட வேண்டும்.

மூன்று நான்கு வர்ஷமானபிறகு இந்தக் குவியல்கள் நன்றாய் மட்கி எருவாகி யிருக்கும்.

(3) மேற்சொன்ன மாதிரிக் குழிகள் வெட்டவும், குவியல்களாகப் போடவும் வேண்டிய அளவு இடம் இல்லாவிட்டால், காறை (கட்டிடச் சாந்து) அரைப்பதற்கு வட்டமான குழிவெட்டுவதுபோல் வெட்டி, குழியில் சப்பாத்திக் கள்ளியை வெட்டிக்கொண்டுவந்து போட்டு, அரைக்க வேண்டும். சப்பாத்திக் கள்ளியில் ஜலம் அதிகமாகையால், அரைத்தவுடன் கெட்டியான கூழ்போலாகிவிடும். இதை மண்வெட்டியால் வாரியெடுத்து, குழிகளில்போட்டு மூடலாம். அல்லது குவியலாய்க் குவித்துவைத்து மேலே மண்ணைப்போட்டு மூடலாம். இந்தக் கூழானது சீக்ரம் மட்கிவிடும். மேலும் இதில் முட்கள் நேராயிராமல் படுத்திருப்பதால், இதுவும் ஒரு ஸௌகர்யமே. இப்படிச் செய்வதில் ஆறு முதல் எட்டு மாஸத்தில் அந்தக் கூழ் நல்ல எருவாக மாறிவிடும்.

சப்பாத்திக்கள்ளியை சுவர்களுக்கு சுண்ணாம்பு படிப்பதிலும் உபயோகிக்கலாம். சப்பாத்திகள்ளியை சிறு துண்டுகளாக நறுக்கி, ஒரு ஸாதாரண மண் சட்டியில் நிறையப்போட்டு, சட்டி நிறைய ஜலத்தையும் ஊற்றி ஸுமார் 3 மணி நேரம் வேகவைக்க வேண்டும். வேகும்போது அதை அடிக்கடி கிளறிக் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். பிறகு, சட்டியிலுள்ள ஜலம் ஆறின பிறகு, அந்த ஜலத்தை வடிகட்டி வைத்துக்கொள்ளவேண்டும். சுண்ணாம்படிக்கத் தயார் செய்து வைத்திருக்கும் சுண்ணாம்பு ஜலத்தில் 150 படிக்கு ஒருபடி சப்பாத்தி ஜலம் வீதம் சேர்த்து நன்றாய்க் கலந்து சுவர்களுக்கு அடித்தால், சுண்ணாம்பு சுவரில் நன்றாய்ப் பிடித்துக் கொள்கிறது. அது லேசில் உதிர்ந்துவிடுவதுமில்லை. அப்படிப் பூசின சுவர்களில் நமது தேகம், துணிகள் பட்டாலும், சுண்ணாம்பு அவைகளில் ஒட்டுவதில்லை.

## THE FIGHTING ANTS.

## போர்புரியும் எறும்புகள்.

சென்ற 1914-ம் வர்ஷத்தில் ஐரோப்பாவிலுள்ள எறும்புகள் ஒன்றோடொன்று சண்டை செய்வதில் அதிக தேர்ச்சியுள்ளனவாய்க் காணப்பட்டதாக, எறும்புகளின் இயல்பை கவனித்து வரும் பற்பல வித்வான்கள் அபிப்ராயப்படுகிறார்கள். எறும்புகள் தங்கள் ஸைன்யங்களை நடத்தி செல்வதிலும், எதிரிகளை தாக்குவதிலும் சீர்திருந்தி யிருந்தனவாம்.

எறும்புகளுக்கு இப்போது வேண்டுமென்று சண்டை செய்யும் குணம் வ்ருத்தியாகி யிருப்பதாகச் சொல்லப்படுகிறது. முன்பு சாந்த குணமுடையனவாயிருந்த எறும்பினங்கள் இப்போது எளிதில் கோபம் கொள்ளக் கூடியவையாயும், முரட்டுத்தன முள்ளவையாயும் ஆகியிருக்கின்றனவாம். முன்பு ஆகாரம் ஸம்பாதிக்கும் ஒரே நோக்கத்துடன் சண்டை செய்துவந்த எறும்பினங்கள் இப்போது சண்டை போடவேண்டுமென்னும் விருப்பத்தைத்தவிர வேறு யாதொரு காரணமும் இன்றி மற்ற இனங்களுடன் வலுச் சண்டைக்குப் போகின்றனவாம். இவைகளை ஆராயுமிடத்து ஐரோப்பாவில் ஜனங்களுக்குள் யுத்த ஆவேசம் ஏற்பட்டிருப்பதுபோல், எந்தக் காரணத்தாலோ அறிவு மிகுந்த எறும்புகளுக்குள்ளும் யுத்த ஆவேசம் ஏற்பட்டுவிட்டது என்று எண்ணவேண்டி யிருக்கிறது. அல்லது ஜனங்களுக்குள் ஏற்பட்ட யுத்த ஆவேசத்தை யறிந்த எறும்புகள் அவைகளும் யுத்தப் பைத்ய முள்ளவைகளாகப் போய்விட்டனவோ என்னவோ. அல்லது நமது பூமியானது ஆகாசத்தில் உள்ள யுத்தப் பைத்யம் உண்டுபண்ணக்கூடிய ஏதோ ஒரு நுண்ணிய வஸ்துவின்மேல் மோதிவிட்டதோ? இவ்விதம் மேல்நாட்டில் பலர் பலவிதமாக ஸந்தேகிக்கிறார்கள். ஏனென்றால் அப்படிப்பட்ட காரணங்கள் ஒன்றும் இல்லாவிட்டால் பல நூற்றாண்டுகளாக ஒரே மாதிரியாக வஸித்துவந்த எறும்புகள் திடீரென்று குணத்தில் மாறுபாடு அடைவானேன்?



ஹெர்குலீஸ் என்று ஒரு ஜாதி எறும்புகள் இருக்கின்றன. இவைகள் முன்பு வேறு எறும்பினங்கள் வஸிக்கும் எறும்பு வளைகளுக்குள் போய் அங்குள்ளவைகளைத் தாக்கி, அங்குள்ள ஆகாராதிகளையும், எறும்பின் குஞ்சுகளையும் அபகரித்து வருவது வழக்கம். இப்போதோ அவைகள் எதிரிகளின் வளைகளுக்குள் போனால் ஆகாராதிகளைத் தொடுவதே யில்லை. எதிரிகளைக் கொல்வதைத் தவிர வேறு ஒன்றையும் கவனிப்பதே யில்லை. சண்டை முடிந்து வீட்டுக்குத் திரும்பும்போது வெறுங்கையாகவே திரும்புகின்றன. தங்கள் இனத்தில் காயமடைந்தவைகளைத் தவிர வேறொன்றையும் அவைகள் கொண்டு வருவதில்லை. அவைகளுடைய நோக்கமெல்லாம் ஜீவநாசனந்தான்.

எறும்புகளின் ஆயுதங்கள் ஆறு கால்களும், வாயின் இருபக்கத்திலுமுள்ள இடுக்கிபோல் உபயோகப்படும் இரண்டு அவயவங்களுமே. கால்கள் ரொம்ப பலமுள்ளவை. இடுக்கிகளும் ரொம்ப உறுதியாயும் கூர்மையாயும் இருக்கும். சில எறும்புகளுக்கு இடுக்கிகளின் நுனிகள் ஊசிபோல் கூர்மையாயிருக்கும். இந்த ஆயுதங்களைத் தவிர எறும்புகளுக்கு ஒரு சிறு விஷப்பையும் உண்டு. இதுதான் அவைகளுடைய பீரங்கிப்படை! இந்த விஷத்தை உபயோகிக்கும்போது எறும்பானது பின்னங்காலால் நிமிர்ந்து நிற்கவேண்டும். இப்படி நின்றுகொண்டு விஷத்தை ப்ரயோகித்தால், அது 2-அடி தூரத்துக்குமேலும் போகக்கூடும்!

எறும்புகளின் செயல்களை கவனித்துவந்த ஒருவர் ஒரு ஸமயம் இரண்டு ஜாதி எறும்புகள் எப்படிச் சண்டை செய்தன என்பதைப்பற்றி எழுதி யிருக்கிறார்.

'ஹெர்க்குலிஸ்' என்றும் 'ஸான்க்வின்' என்றும் இரண்டு எறும்பு பினங்கள் ஒன்றுக்கொன்று ஸமீபமாயுள்ள இரண்டு மரப் புற்றுகளில் தங்கி யிருந்தன. ஹெர்க்குலீஸ் எறும்புகள் ஒருநாள் அவைகள் வஸித்துவந்த மரத்திலிருந்து வெளி வந்து கூட்டமாய்ப் போய் ஸாங்க்வின் எறும்புகள் வஸித்துவந்த மரத்தண்டை போயின. ஸான்க்வின் எறும்புகள் ஹெர்க்குலிஸின் ஆகிருதியில் பாதிதானிருக்கும். தங்களுக்கு விரோதியான எறும்புகள் தங்கள் வீட்டண்டை வரக் கண்ட ஸாங்க்வின் எறும்புகள் கூட்டமாய் வெளி வந்து ஹெர்க்குலிஸ் எறும்புகள் தங்கள் வீட்டுக்குள் புகாதபடி தடுத்து நின்றன. ஸாங்க்வின் எறும்புகள் ரொம்ப அதிகமாயிருந்தபோதிலும், ஹெர்க்குலிஸ் எறும்புகள் பெரியவையானவையால், ஸாங்க்வின் எறும்புகளுக்கு ரொம்ப சேதம் ஏற்பட்டது. அநேக ஸாங்க்வின் எறும்புகள் சண்டையில் மடிந்துபோயின. தாங்கள் தோற்றுப்போவது நிச்சயமென்று கண்ட அந்தஸாங்க்வின் எறும்புகள் அந்த மரத்தில் தங்கியிருப்பது யுக்தமல்லவென்று நினைத்து, சற்றுதூரத்திலுள்ள வேறோரிடத்துக்குப் போகத் தீர்மானித்து, ஸுமார் 50-அடி தூரமுள்ள வேறோர் புற்றுக்குப்போக ஆரம்பித்தன. அப்படி இடம் மாறும்போது ஹெர்க்குலிஸ் எறும்புகள் தடை செய்து சண்டைக்குவந்தாலென்ன செய்கிறதென்று பயந்து, தங்கள் வளைக்குப் பக்கத்தில் சற்றுதூரத்துக்கு ஒன்றாய் சில எறும்புக்கூட்டங்களைக் காவல் துருப்புகளாக நிறுத்தின. இப்படி நிறுத்திவிட்டு மற்ற எறும்புகளெல்லாம் முன்பு தங்கியிருந்த வளையிலிருந்து தங்களுக்கு வேண்டிய ஸாமான்கள் எல்லாவற்றையும் தூக்கிக் கொண்டுபோய் புது வளையில் சேர்த்தன. ஹெர்க்குலிஸ் எறும்புகளும் சும்மா விருக்கவில்லை; அவைகளில் சில பாராக்காரர்களாயிருந்த ஸாங்க்வின் எறும்புகளை எதிர்த்துச் சண்டை செய்தன.

ஸாங்க்வின் எறும்புகளெல்லாம் வேறிடத்துக்

குப் போனபிறகு, ஹெர்க்குலியன் எறும்புகள் அந்த இடத்துக்குப் போய்த் தாக்கின. ஸாங்க்வின் எறும்புகள் ரொம்ப ஆவேசத்துடன் அவைகளை எதிர்த்தன. ரொம்ப கடுமையாய்ச் சண்டை நடந்தது. ஸாங்க்வின் எறும்புகள் ஹெர்க்குலியன் எறும்புகள்மேல் விழுந்து அவைகளின் தலையைக் கடித்து அவைகளின்மேல் விஷத்தை ப்ரயோகிக்கும். இப்படிச் செய்தானதும் அந்த ஸாங்க்வின் எறும்புகள் தமதிடத்துக்குத் திரும்பிவந்துவிடும். ஆனால் அநேக ஸமயங்களில் ஹெர்க்குலியன் எறும்புகளின் கால்களுக்கிடையில் அகப்பட்டுக்கொள்ளும். அப்படி அகப்பட்டுக்கொண்டால் இரண்டும் ஒன்றையொன்று கட்டிக்கொண்டு புழுதியில் புரண்டு மிகக் கடுமையாய் யுத்தம் செய்யும். இப்படி சண்டை செய்கையில் ஆரம்பத்தில் ஹெர்க்குலியன் எறும்பே ஜயமடையும்போலிருந்தது. ஆனால் தோற்றுப்போகும்போலிருக்கும் ஸாங்க்வின் எறும்புக்கு அதைச்சேர்ந்த மற்ற எறும்புகள் உதவிக்கு வந்து, ஹெர்க்குலியன் எறும்பைக் கடித்தும், கொடுக்கால் பிடித்தும் பலவிதத்தில் ஹிம்ஸை செய்து, ஹெர்க்குலியன் எறும்பைக் கொன்றும் காயப்படுத்தியும் வந்தன. இப்படி வெகுநேரம் யுத்தம் செய்தும் கடைசியில் ஹெர்க்குலியன் எறும்புகள் தோற்றுப்போகவே வந்தவழி திரும்பிவிட்டன. அதன்மேல் ஸாங்க்வின் எறும்புகள் யாதொரு பயமுமில்லாமல் வாழலாயின.

இந்த யுத்தமானது பழைய முறைப்படி நடக்கும் யுத்தமாகும். இதில் எறும்புகள் யாதொரு ஏற்பாடும் ஒழுங்குமின்றி அகப்பட்ட எதிரிகளைத்தாக்கின. ஆனால் தற்போது எறும்புகளுக்குள் நடப்பதாகச் சொல்லும் சண்டைகளோ அப்படியல்ல. ரொம்ப ஒழுங்காக நடக்கின்றனவாம். அவைகளில் ஒன்றை விவரிக்கிறோம்.

ஒரே ஜாதியைச் சேர்ந்த இரண்டு எறும்புக் கூட்டங்கள் இடையில் 100 அடி தூரமுள்ள இரண்டு வளைகளில் வஸித்துவந்தன. இந்த இரண்டு கூட்டங்களும் ஒருநாள் யுத்தம் செய்யலாயின. இரண்டு கூட்டங்களும் வளையிலிருந்து வெளிக்கிளம்பி இரண்டு வளைக்கும் மத்தியில் ஸந்தித்தன. 100 அடி நீளமும் 2 அடி அகலமும் உள்ள ஓரிடத்தில் எறும்புகள் ஒரே கூட்டமாயிருந்தால் எத்தனை எறும்புகள் இருந்திருக்கவேண்டுமென்று நாமே யூகித்துக்கொள்ளலாம். எல்லா எறும்புகளும் ஒழுங்காகப் புறப்பட்டுப்போயின. ஒவ்வொரு கக்ஷியின் ஸைன்யமும் 50 அடி நீளமும் 2 அடி அகலமும் இருந்தன. முன்னாலிருந்த எறும்புகள் யுத்தம் செய்வதற்கேற்ற இடங்களைத்தேடி அந்த இடங்களில் தங்கின. எங்கேயாவது பூமி சற்று உயர்ந்திருந்தாலும், அல்லது கல் முதலியவைகள் இருந்தாலும் அவைகளின்மேல் ஆயிரக்கணக்கான எறும்புகள் ஏறி நின்றுகொண்டு அங்கிருந்து எதிரிகளின்மேல் விஷத்தை ப்ரயோகிக்கும். விஷத்தை 2 அடி தூரம்வரையில் ப்ரயோகிக்கலாமென்று ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். இதுதான் அவைகளுக்குள் பீரங்கி யுத்தமாகும். வேறு பல எறும்புகள் விஷத்தை ப்ரயோகிக்காமல் எதிரியோடு வாய்ப்பக்கமுள்ள இடுக்கிகளால் சண்டை செய்தன. இவைகளை காலாள்படை யென்று சொல்லலாம். அந்தச் சண்டையில் பல எறும்புகள் உபய கக்ஷியிலும் இறந்தன. இறந்த எறும்புகளால் காலியான இடங்களுக்கு பின்புறத்திலிருந்து எறும்புகள் வந்து எதிரிகளோடு சண்டைசெய்தன. எதிரிகளைக் கொல்வதோடு, அவைகளிலிருந்து பல எதிரி எறும்புகளைக் கைதிசெய்து பின்னால் அனுப்பின. பின்னால் இருந்த எறும்புகள் எதிரிக் கைதிகளைப் பிடித்துப் பின்புறம் கொண்டுபோயின. முதலில் போர்முகம் 2 அடி அகலமிருந்தது. வரவர 3 அடியாகிவிட்டது. யுத்தகளத்தைச் சுற்றிலும் ரொம்ப கெட்ட நாற்றம் வீசலாயிற்று. எறும்புகள் ஆவேசம் கொஞ்சமும் குறையாமல் போர் புரிந்தன. நூற்றுக்கணக்கான எறும்புகள் விஷத்தால் மூடப்பட்டு இறந்துகிடந்தன.



இரவு ஸமீபித்ததும் யுத்தம் கொஞ்சங்கொஞ்சமாய்க் குறைந்தது. பிறகு உபய கக்ஷிகளும் தங்களிருப்பிடத்துக்குத் திரும்பின. ஆனால் மறுநாள் காலையில், நிலந்தெளிந்ததும், இரண்டு கக்ஷி எறும்புகளும் கூட்டங் கூட்டமாய்ப் புறப்பட்டுப்போய் முன் சண்டை செய்த இடத்திலேயே சண்டை செய்யலாயின. முதல் நாளைவிட மறுநாள் எறும்புகள் ரொம்ப ஆவேசத்துடன் சண்டைசெய்தன. வெகுநேரம் வரையில் எந்தக் கக்ஷி தோற்கும் என்று சொல்வது முடியாமலிருந்தது. ஆனால் நடுப்பகல் வேளைக்கு ஒருகக்ஷி ஸுமார் 10 அடி முன்சென்றுவிட்டது. சண்டை செய்யும்போது எறும்புகள் சுற்றுப்புறத்தில் நடப்பதைக் கவனிக்கவேயில்லையாம். அந்தச் சண்டையை கவனித்துத்தெரிவித்த டாக்டர் ஸாஞ்ஜீன் என்பவர் தாம் போர்முனையோரமாக அங்குமிங்கும் நடமாடினபோதும், எறும்புகள் தம்மை கவனிக்கவில்லையென்று சொல்லுகிறார். எறும்புகள் எதிரிகளைக் கொல்வதிலேயே கண்ணாயிருந்தனவாம்.

சில எறும்புகள் கையாடும் யுத்தமுறைகள் தற்போது நடக்கும் யுத்தத்து முறைகளுக்கு ஒத்திருப்பதாக ப்ரொபஸர் பாரட் என்பவர் தெரிவிக்கிறார். ஸாங்க்வின் எறும்புகளும் பாவ்ஸ் என்னும் எறும்புகளும் ஒன்றுக்கொன்று ஸமீபமான இரண்டு இடங்களில் வளைகள் தோண்டி வஸித்துவந்தன. இவைகளுக்குள் எல்லைத்தகராறு சிலகாலமாக இருந்துவந்ததாம். இந்தத்தகராறு விஷயமாக இரண்டு வகுப்பு எறும்புகளுக்குள்ளும் அடிக்கடி சிறுசண்டைகள் நடந்துவந்தன. இந்தத் தகராறை ஒழிக்க ஒரு பெரிய சண்டை உண்டாயிற்று. பாவ்ஸ் ஜாதி எறும்புகள் கூட்டங்கூட்டமாய்ப் புறப்பட்டு, ஸாங்க்வின் எறும்புகள் தங்கியிருந்த "க்ராம"த்துக்குப் போக யத்தனித்தன. இதைக் கண்ட ஸாங்க்வின் எறும்புகள் தங்கள் கூடுகளுக்கு சற்று தூரத்தில் ஒழுங்காய் கூட்டங்கூட்டமாய் நின்றுகொண்டு எதிரியின் வரவை எதிர் பார்த்திருந்தன. வேறு சில ஸாங்க்வின் கூட்டங்கள் மறைவான இடங்களிலிருந்துகொண்டு ஸமயோசிதமாய், முன்செல்லும் பாவ்ஸ் எறும்புக் கூட்டங்களை எதிர்த்தன. ஸாங்க்வின் எறும்புகள் யுத்தம் செய்வதற்கு ஏற்றதான ஓரிடத்தண்டை 'பாவ்ஸ்' எறும்புகள் வந்ததும், யுத்தத்துக்குத் தயாராயிருந்த ஸாங்க்வின் எறும்புகளில், சில தங்கள் 'க்ராமத்து'க்குப் போய் இன்னொரு பெரிய ஸைன்யத்தை அழைத்து வந்தன. அதன்மேல் பாவ்ஸ் எறும்புகள் பின் வாங்க முயன்றன. இரண்டாவது தடவை வந்த ஸாங்க்வின் எறும்புகள் திரும்பிப்போக முடியாதபடி தடுத்தன. முன்னும் பின்னும் ஸாங்க்வின் எறும்புகள் தாக்கவே, பாவ்ஸ் எறும்புகளில் பெரும்பாகம் மடிந்துபோயின. பாக்கியாயிருந்த பாவ்ஸ் எறும்புகள் புறங்காட்டி ஓடினபோதும் ஸாங்க்வின் எறும்புகள் அவைகளைத் தாக்கி சிதற அடித்துவிட்டன.

சில ஜாதி எறும்புகள் ஸமாதான காலங்களில் ஸைன்யங்களைப் பழக்குவதுண்டென்று ஸ்விட்ஸர்லண்ட் தேசத்து சாஸ்த்ர நிபுணர் ஒருவர் சொல்லுகிறார்.

## SEA-BORNE TRADE OF MADRAS.

## சென்னை ராஜதானியின் கடல் வ்யாபாரம்.

சென்ற 1915-16-ம் வர்ஷத்திய சென்னை ராஜதானியின் மொத்த கடல் வ்யாபார மதிப்பு 48-கோடியே 87-லக்ஷம் ரூபாயாகும். இது அதற்கு முந்தின வர்ஷத்தியதைவிட 19-லக்ஷம் ரூபாய் அதிகமாகும். அதாவது நூற்றுக்கு 0·39-வீதம் அதிகம்.

சென்ற வர்ஷம் யுத்தத்தால் வ்யாபாரத்துக்குப் பலவிதங்களில் அஸௌகர்யங்கள் ஏற்பட்டன. வேண்டிய அளவு கப்பல்கள் கிடைக்கவில்லை. அகப்பட்ட கப்பல்களுக்கும் அதிக

கூலி கொடுக்கவேண்டியிருந்தது. ஸாதாரண வ்யாபாரப் போக்குவரத்துகள் அநேகவிடங்களில் நின்றுபோய்விட்டன. அப்படியிருந்தும் முன் சொன்னபடி மொத்த வ்யாபார மதிப்பில் 19-லக்ஷம் ரூபாய் அதிகமாயிருக்கிறது. அன்ய தேச இறக்குமதி வ்யாபாரம் யுத்தம் ஆரம்பித்தது முதல் குறைந்துபோய்விட்டது. ஏற்றுமதி வ்யாபாரம் சற்று அதிகமாயிற்று. சென்ற வர்ஷம் இங்க்லண்டுக்கு சரக்குகள் அதிகமாக அனுப்பப்பட்டன. அவைகளுள் முக்யமானவை நீலியும் பதனிட்ட தோலுமாகும். அந்த வர்ஷத்தின் பின்பாகத்தில் பருத்தி அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்தக் காரணங்களால் இறக்குமதி வ்யாபாரம் குறைந்துங்கூட அன்ய தேச வ்யாபாரமானது 35-கோடி ரூபாயிலிருந்து 36-கோடியே 49-லக்ஷம் ரூபாயாக அதிகரித்தது. அதாவது நூற்றுக்கு 4-வீதம் அதிகம்.

உள்நாட்டுக் கடல்கரை வ்யாபாரமானது 13-கோடியே 11-லக்ஷம் ரூபாயிலிருந்து 11-கோடியே 56-லக்ஷம் ரூபாயாக குறைந்தது. அதாவது நூற்றுக்கு 12-வீதம் குறைவு.

இனி முக்யமான சரக்குகளின் வ்யாபாரத்தைப்பற்றி சில குறிப்புகள் எழுதுகிறோம்.

சர்க்கரை.—சென்ற 1914-15-ம் வர்ஷத்தில் 56·25-லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள 5,72,272 அந்தர் சர்க்கரை சென்னை ராஜதானியில் இறக்குமதியாயிற்று. ஆனால் சென்ற வர்ஷத்திலோ 58·39 லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள 4,34,348 அந்தர் இறக்குமதியாயிற்று. ஆகவே இறக்குமதியான சர்க்கரையின் நிறை நூற்றுக்கு 24-வீதம் குறைவடைந்தபோதிலும், அதன் மதிப்பு நூற்றுக்கு 4-வீதம் உயர்ந்திருக்கிறது. 1914-15-ம் வர்ஷமும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வர்ஷமாகையால் யுத்தத்தால் பாதிக்கப்படாத வர்ஷங்களின் வ்யாபாரத்தோடு ஒத்திட்டுப் பார்ப்போம். 1913-14-ம் வர்ஷத்தோடு முடிந்த 5-வர்ஷத்தின் சராசரி கணக்கோடு இதை ஒப்பிட்டுப்பார்த்தால், அந்த 5-வர்ஷத்தின் சராசரி இறக்குமதிக்கு சென்ற வர்ஷத்திய இறக்குமதி வ்யாபாரமானது நிறையில் 100-க்கு 20-வீதம் குறைந்துபோயிருக்கிறது. ஆனால் மதிப்பில் 100-க்கு 22-வீதம் அதிகரித்திருக்கிறது. சுத்திசெய்த சர்க்கரையின் இறக்குமதி நிறையில் நூற்றுக்கு 26-வீதமும் மதிப்பில் நூற்றுக்கு 4-வீதமும் குறைந்துபோயிற்று. இங்க்லண்டில் பீட்கிழங்கு சர்க்கரைக்குப் பதிலாக கரும்புச்சர்க்கரை உபயோகப்பட்டு வருகிறது. இதனால் ஜாவாவிலிருந்தும் மொரீஷஸிலிருந்தும் கரும்புச்சர்க்கரை அதிகமாக இங்க்லண்டுக்கு அனுப்பப்பட்டது. இதனால் ஜாவாவிலிருந்தும் மொரீஷஸிலிருந்தும் சர்க்கரை குறைவாக சென்னைக்கு வந்தன. ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் சென்ற வர்ஷம் மொரீஷஸிலிருந்து சர்க்கரை ஏராளமாக விலைக்கு வாங்கினதால் அங்கிருந்து வரும் சர்க்கரை 100-க்கு 70-வீதம் குறைந்துபோயிற்று. சென்ற வர்ஷத்தில் ஒரு விசேஷமென்னவென்றால் முதன் முதலாக ஈஜிப்டிலிருந்து 4000 அந்தர் சர்க்கரை சென்னையில் இறக்குமதியாயிற்று.

சுத்தி செய்யாத சர்க்கரை ரொம்ப அதிகமாக இறக்குமதியாயிற்று. இது ஜாவாவிலிருந்து ரொம்ப ஸ்வல்பமாய் வந்தபோதிலும் மொரீஷஸிலிருந்து ஏராளமாய் இறக்குமதியாயிற்று. இது வெகுவாய் நெல்லிக்குப்பத்திலுள்ள சர்க்கரைச்சாலையில் சுத்திசெய்ய வாங்கப்பட்டதாகத் தெரிகிறது.

சாயங்கள்.—யுத்தத்தால் சாயங்களின் இறக்குமதி ரொம்பவும் குறைந்துபோய்விட்டது. இப்போது கிடைப்பதெல்லாம் பெரும்பாலும் யுத்தத்தில் பிடிபட்ட எதிரி தேசங்களின் கப்பல்களிலிருந்த சாயங்களேயாகும். ஜெர்மனியிலிருந்துவந்த சாயங்களுக்கு பதிலாக அவுரிச்சாயத்தை உபயோகிக்கக் கூடும். இதற்காக அநேக விவஸாயிகள் அவுரியை அதிகமாய்



ஸாகுபடி செய்துவருகிறார்கள். ஆனால் இங்க்லண்டில் அவுரிச்சாயத்துக்கு ரொம்ப க்ராக்கியிருந்தாலும், அங்கே விலை அதிகமாயிருந்ததாலும் இங்கே விளைந்த அவுரிச்சாயத்தில் பெரும்பாகம் இங்க்லண்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

சாயக்குறைவால் சாயங்களுக்கு விலை அபரிமிதமாய் உயர்ந்துவிட்டது. உதாரணமாக யுத்தத்துக்கு முன் ராத்தல் 7-அணுவாக விற்ற அலிஸாரின் சாயங்கள் ஸமீபத்தில் 7-ரூபாயாக விற்றதாகத் தெரிகிறது.

வேர்க்கடலை:—சென்ற வர்ஷத்தில் வேர்க்கடலையின் ஏற்றுமதி அதற்கு முந்தின வர்ஷத்தியதைவிட நிறையில் 100-க்கு 31-வீதமும் மதிப்பில் 100-க்கு 14-வீதமும் அதிகரித்தது. சென்ற வர்ஷத்தில் வேர்க்கடலை ஸாகுபடியான நிலத்தின் விஸ்தீர்ணம் 100-க்கு 25-வீதம் குறைந்துபோனபோதிலும், மொத்த மாஸூல் நூற்றுக்கு 9-வீதம் அதிகமென்று மதிப்பிடப்பட்டிருந்தது. காலஸ்திதி வேர்க்கடலை ஸாகுபடிக்கு ஏற்றதாயிருந்தது. சென்ற வர்ஷத்தின் முதல் 4-மாஸத்தில் இதன் ஏற்றுமதி ஸ்வல்பமாயிருந்தது. ஆனால் மற்ற மாஸங்களில் ரொம்ப அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டது. 1915-ம் வர்ஷம் ஆரம்பத்தில் வேர்க்கடலையின் விலை ரொம்ப குறைவாக இருந்தது. அந்த வர்ஷம் மார்ச்சுமாஸத்தில் கண்டி 1-க்கு ரூ. 20-ஆக உயர்ந்தது. ஜூலை மாஸத்தில் $36\frac{1}{2}$-ரூபாயாக இருந்தது. வர்ஷக் கடைசியில் 35-ரூபாயாக இருந்தது.

மொத்தம் ஏற்றுமதியான வேர்க்கடலையில் 5-ல் 4-பாகம் ப்ரான்ஸிலுள்ள மார்ஸேல்ஸுக்கு அனுப்பப்பட்டது. இந்த பட்டணத்துக்கு கப்பல் சார்ஜ் இப்போது ரொம்ப அதிகமாகிவிட்டது. யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னே அதாவது 1914-ம் வர்ஷம் ஜூலை மாஸத்தில் ஒரு டன் சரக்குக்குக் கப்பல் சார்ஜ் 18-ரூபாயாகவிருந்தது. 1915-ம் வர்ஷம் ஜனவரி மாஸம் $41\frac{1}{4}$ ரூபாயாக உயர்ந்தது. 1915-ம் வர்ஷம் ஏப்ரல் மாஸத்தில் இன்னும் உயர்ந்துபோய் 65-ரூ. 10-அணுவாக இருந்தது. பிறகு வரவர வ்யாபாரத்துக்குக் கப்பல்கள் கிடைப்பது குறைந்துபோய், மத்யதரைக் கடலில் எதிரிகளின் ஸப்மரீன் கப்பல்களால் கஷ்டம் ஏற்படவே, கப்பல் சார்ஜ் இன்னும் அதிகமாயிற்று. சென்ற நவம்பர் மாஸத்தில் $93\frac{3}{4}$-ரூபாயாக இருந்தது. சென்ற ஜனவரி மாஸத்தில் 120-ரூபாயாயிற்று. சென்ற மார்ச்சு மாஸத்தில் 135-ரூபாயாகவிருந்தது.

1914-15-ம் வர்ஷத்தில் வங்காளத்துக்கு வேர்க்கடலை அதிகமாய் ஏற்றுமதியாயிற்று. இதற்குக் காரணம் அந்த வர்ஷத்தில் கடுகெண்ணெயும் ரேப்விதை யெண்ணெயும் ரொம்ப க்ராக்கியாயிருந்ததால், வேர்க்கடலை யெண்ணெயை அவைகளோடு கலப்படம் செய்து விற்றுவந்தார்கள். ஆனால் சென்ற 1915-16-ம் வர்ஷத்தில் அந்த நாட்டில் மேற்சொன்ன கடுகும் ரேப்விதையும் நன்றாய் விளைந்ததால் அவைகளின் எண்ணெய் விலை மலிந்து போயிற்று. இதனால் சென்றவர்ஷத்தில் வங்காளத்துக்கு வேர்க்கடலை அதற்கு முந்தின வர்ஷத்தைப்போல் அதிகமாகப் போகவில்லை.

அடியில்வரும் கணக்கால் சென்னையிலுள்ள பற்பல துறைமுகங்களிலிருந்து அன்யதேசங்களுக்கு எவ்வளவு வேர்க்கடலை ஏற்றுமதியாயிற்றென்பது தெரியவரும்.

| | 1913-14 | 1914-15 | 1915-16 |
|---|---|---|---|
| | டன்கள்.* | டன்கள். | டன்கள். |
| சென்னை | 72,653 | 38,704 | 75,636 |
| கூடலூர் | 48,195 | 35,874 | 42,923 |
| நாகப்பட்டணம் | 32,388 | 16,647 | 19,805 |
| பரங்கிப்பேட்டை | 20,030 | 20,717 | 12,476 |
| மற்ற துறைமுகங்கள் | 19,052 | 3,215 | 396 |
| மொத்தம் | 1,97,318 | 1,15,157 | 1,51,236 |

* ஒரு டன் என்பது 20-அந்தராகும்.

புதுச்சேரியிலிருந்து சென்றவர்ஷம் 42308-டன் வேர்க்கடலை ஏற்று மதியாயிற்று. அதற்கு முந்தின வர்ஷம் 51490-டன் வேர்க்கடலை ஏற்று மதியாயிற்று.

தேங்காய்ப்பருப்பு.—இதன் ஏற்றுமதி யுத்தத்தால் ரொம்பவும் குறைந்து போயிற்று. சென்ற 3-வர்ஷங்களின் ஏற்றுமதி விவரம் பின்வருமாறு.

| வர்ஷம். | நிறை அந்தர். | மதிப்பு லக்ஷம்ரூ. |
|---|---|---|
| 1913–14 | 7,61,726 | 1,55·46 |
| 1914–15 | 6,34,722 | 1,22·97 |
| 1915–16 | 3,12,060 | 57·04 |

ஆகவே 1915-16-ம் வர்ஷத்தில் தேங்காய்ப் பருப்பின் ஏற்றுமதியானது அதற்கு முந்தின வர்ஷத்தியதைவிட நிறையில் 100-க்கு 51-வீதமும் மதிப்பில் நூற்றுக்கு 54-வீதமும்குறைந்து போயிற்று. முன்பு ஜெர்மனிதான் தேங்காய்ப் பருப்பை ஏராளமாய் வாங்கிவந்தது. அதற்கடுத்த படியாக பெல்ஜியமும் ரஷ்யாவும் தேங்காய்ப்பருப்பை அதிகமாக வாங்கிவந்தன. யுத்தம் ஆரம்பமானதுமுதல் இந்த தேசங்களுக்கு தேங்காய்ப் பருப்பு அனுப்பப்படவேயில்லை.

இப்படி இந்த தேசங்களுக்கு தேங்காய் பருப்பு அனுப்பாததால் 66-லக்ஷம் ரூபாய் நஷ்டமேற்பட்டிருக்கிறது. ஆனால் தற்போது தேங்காயெண்ணெய் முன்னைவிட சற்று அதிகமாக ஏற்றுமதியானதால் நஷ்டம் கொஞ்சம் குறைந்திருக்கிறது.

## THE GREATEST BOOK IN THE WORLD.

## மிக ப்ரும்மாண்டமான புஸ்தகம்.

எல்லா விஷயங்களையும் பற்றிக் கூறும் புஸ்தகத்துக்கு இங்கிலீஷில் "என்ஸைக்ளோபீடியா" என்று பெயர். தமிழில் இதை வித்யா மண்டலம் என்று சொல்லலாம். இப்படிப்பட்ட புஸ்தகங்கள் மேல்நாடுகளில் விசேஷமாய் உண்டு. இங்கிலீஷில் மிகப் பெரியதான என்ஸைக்ளோபீடியாவுக்கு "என்ஸைக் ளோபிடியா ப்ரிட்டானிக்கா" என்று பெயர். 29-வால்யங்கள் கொண்டது. 4,40,00,000 வார்த்தைகள் உள்ளது. இதைப் போல வேறுசில என்ஸைக் ளோபீடியாக்கள் ஏறக்குறைய பெரியவையாயிருக்கின்றன. ஆனால் சீனாவில் பலவர்ஷங்களுக்கு முன் எழுதப்பட்ட என்ஸைக்ளோபீடியாவை உத்தேசிக்கையில் இவைகளெல்லாம் ரொம்ப ஸாமான்யமென்று சொல்லலாம். நமது தேசத்தில் ரொம்ப ப்ரஸித்திபெற்ற ராமாயணம், மகாபாரதம், கதாசரித்ஸாகரம் முதலிய க்ரந்தங்களெல்லாம் மேற்சொன்ன சீன புஸ்தகத்தைவிட பலமடங்கு சிறியவையாகும். சீனாதேசத்து என்ஸைக்ளோபீடியாவானது 11,100 வால்யூங்கள் கொண்டது. இவ்வளவு பெரிய புஸ்தகம் எழுதப்பட்ட விவரத்தைக் கீழே எழுதுகிறோம்.

1403-ம் வர்ஷத்தில் சீனாவில் ஆண்டுவந்த யங் லோ என்னும் சக்ரவர்த்தி தேசத்தில் வெளியான எல்லா நூல்களையும் எல்லாவிஷயங்களையும் பற்றிக் கூறுவதாய் ஒரு பெரிய புஸ்தகம் எழுதவேண்டுமென்று எண்ணினார். அவர் அக்காலத்தில் அந்த தேசத்தில் ரொம்ப ப்ரஸித்தி பெற்றிருந்த ஸ்யேசின் என்னும் வித்வானைக் கூப்பிட்டு தமது விருப்பத்தைத் தெரிவித்தார். அவர் 146-வேறு வித்வான்களை உதவிக்கு வைத்துக்கொண்டு, புஸ்தகம் எழுத ஆரம்பித்து 16-மாஸத்தில் அதை முடித்தார். அதைக் கொண்டுபோய் சக்ரவர்த்தியினிடம் காட்டவே, சக்ரவர்த்தி இவ்வளவு பெரிய புஸ்தகமும் போதாதென்றெண்ணி, இன்னும் பெரியதாய் ஸகல விஷயங்களையும்பற்றிக் கூறுவதான ஒரு க்ரந்தம் தயார்செய்யும்படி உத்தரவிட்டார்.

அதன்பிறகு ஸியேசின் என்னும் வித்வானும், இன்னும் இரண்டு வித்வான்களும் சேர்ந்து கொண்டு, இந்தப் பெரிய வேலையை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய 5-டிரெக்டர்கள், 20-உதவி டிரெக்டர்கள், புஸ்தகத்தை எழுத 2141-உதவி வித்வான்கள் ஆக இத்தனைபேர்களையும் வைத்துக்கொண்டு தத்வசாஸ்த்ரம், தேசசரித்ரம், இலக்கிய இலக்கணங்கள், வானசாஸ்த்ரம், பூமிசாஸ்த்ரம், மதங்கள், கைத்தொழில்கள், முதலிய ஸகலவிஷயங்களையும் உள்ளடக்கி ஒரு பெரிய க்ரந்தத்தை எழுதினார்கள். இது 11,100-வால்யூங்கள் அதாவது புஸ்தகங்கள் கொண்டதாயிருந்தது. இதில் 22877-பிரிவுகளும், பொருளட்டவணைக்காக 60-பிரிவுகளும் இருந்தன. ஒவ்வொரு புஸ்தகமும் ½-அங்குலம் கனமிருந்தது. புஸ்தகங்களை ஒன்றின்மேலொன்றாய் வைத்தடுக்கினால் 450-அடி உயரமிருக்கும். இந்தப் பெரிய நூலை எழுதிமுடிக்க 4-வர்ஷம் சென்றது.

ஒவ்வொரு புஸ்தகமும் 1 அடி 8 அங்குல நீளமும் 1 அடி அகலமும் உள்ளது. ஸாதாரண கடுதாசி அட்டையில் பைண்ட் செய்யப்பட்டிருந்தது. மேலே மஞ்சள் பட்டால் சித்ரவேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

சீன என்ஸைக்ளோபீடியாவில் உள்ள 11,100 புஸ்தகங்களில் 22877 பிரிவுகள் உண்டென்று சொன்னோம். ஒவ்வொரு பிரிவிலும் 40 பக்கங்கள் உண்டு. ஆகமொத்த பக்கங்கள் 9,17,480. ஒவ்வொரு பக்கமும் 16 பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு பத்தியிலும் 25 அக்ஷரங்கள் உண்டு. ஆகவே அந்தப் புஸ்தகத்தில் மொத்தம் 36,69,92,000 அக்ஷரங்கள் உண்டு. சீனபாஷையானது ரொம்ப ஸங்க்ரஹமாக எழுதப்படும். ஸாதாரணமாய் 100 சீன அக்ஷரங்கள் 150 இங்கிலீஷ் வார்த்தைக்கு ஸரி. இதன்படிபார்க்க அந்தப் புஸ்தகத்தில் உள்ள வார்த்தைகளின் மொத்த மதிப்பு 40 கோடியாகும். ரொம்ப பெரிய இங்கிலீஷ் புஸ்தகமாகிய என்ஸைக்ளோபீடியா ப்ரிட்டானிக்காவில்கூட 4 கோடியே 40 லக்ஷம் வார்த்தைகள் தான் இருக்கின்றன.

இவ்வளவு பெரிய புஸ்தகத்தைக்கண்ட சக்ரவர்த்தி ரொம்ப ஸந்தோஷங்கொண்டு அதை அச்சிட உத்தேசித்தார். ஆனால் அதற்கு ஏற்படும் செலவு ஏராளமாகுமென்று எண்ணி அச்சிடாமல் விட்டுவிட்டார். அந்தப் புஸ்தகம் நான்கிங் பட்டணத்தில் வைக்கப்பட்டிருந்தது. 1421-ம் வர்ஷத்தில் அதை பீகிங்குக்குக் கொண்டுபோய் அங்குள்ள அரண்மனையில் ஒரு மண்டபத்தில் வைத்தார்கள்.

பிறகு ஸுமார் 140 வர்ஷங்களுக்குப் பிறகு, அப்போதிருந்த சக்ரவர்த்தி, அதை அச்சிடமுடியாததுகண்டு, அதற்கு இரண்டு நகல் ப்ரதிகள் எழுதும்படி ஆக்ஞாபித்தார். 100 வித்வான்கள் ஒன்றுசேர்ந்து 5-வர்ஷத்தில் 2-ப்ரதிகள் நகலெடுத்தார்கள்.

ஆனால் ஸுமார் 80 வர்ஷங்களுக்குப் பிறகு அஸல் புஸ்தகமும் நகல்களில் ஒன்றும் தீக்கிரையாய்விட்டன. பாக்கி ஒரே ஒரு ப்ரதிதானிருந்தது. அந்த ஒரு ப்ரதியை பீகிங்குக்கு வெளியில் உள்ள ஹான்லின் காலேஜில் வைத்துக் காப்பாற்றி வந்தார்கள்.

இந்தப் புஸ்தகத்தைப் பற்றிய விவரமெல்லாம் அந்த தேசத்து கவர்ன்மெண்டால் வெளியிடப்படும் காடலாக்கில் வெளியிடப் பட்டிருந்தன. ஆனால் அன்யர்களெல்லாரும் 11,100 வால்யூங்கள் கொண்டதாய் ஒரு பெரிய புஸ்தகம் இருக்கக்கூடியதா என்று ஸந்தேகித்தார்கள். ஏனெனில் அந்தப் புஸ்தகத்தை கவர்ன்மென்டார் அன்யர்களுக்குக் காட்டவேயில்லை. ஆனால் இவ்வளவு பெரிய புஸ்தகம் ஸுமார் 500 வர்ஷகாலமாக பத்ரமாய்க் காப்பாற்றப் பட்டிருந்தும் சீனர்களுக்குக்கொடுத்து வைக்காமல்போயிற்று. 1900-ம் வர்ஷம் சீனாவில் பாக்ஸர் கலகமென்று ஒரு கலக மேற்பட்டபோது, கலகக்காரர்கள் 11,1000 வால்யூங்களும் வைக்கப்பட்டிருந்த ஹான்லின் காலேஜைக் கொளுத்திவிட்டார்கள். தீக்கிரையாகாமல் காப்பாற்றப்பட்ட சில வால்யூங்கள் தவிர ஆயிரக்கணக்கான மற்ற வால்யூங்களெல்லாம் தீக்கிரையாயின.

மேற்படி சாலேஜ் நாசமடைந்தபிறகு அதைப் போய்ப் பார்வையிட்ட லான்ஸெலட் கைல்ஸ் என்பவருக்கு அங்கே ஒரு வால்யூம் அகப்பட்டதாம். அதற்குப்பிறகு அவருடைய தகப்பனார் இன்னும் 5 வால்யூங்கள் ஸம்பாதித்தார். சென்ற 1914-ம் வர்ஷத்தில் லண்டனில் 2 வால்யூங்கள் விலைக்கு வந்தன. அவைகள் இப்போது லண்டன் லைப்ரரியில் இருக்கின்றனவாம்.

கைல்ஸ் என்பவர் ஸம்பாதித்த புஸ்தகங்களில் செய்யுள், கணிதம், தேசசரித்திரம், உடைகள், முதலிய விஷயங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றனவாம்.

இவ்வளவு பெரிய புஸ்தகத்தை எழுதியும் அதற்கு அநேக ப்ரதிகள் இல்லாததால் புஸ்தகம் நாசமடைய ஹேதுவாயிற்று.

நகல் எடுத்தபிறகு இருந்த மூன்று ப்ரதிகளில் இரண்டு நெருப்புக்கிரையானபோதே, மறுபடியும் சில நகல்கள் தயாரித்திருந்தால், இரண்டொரு நகல்கள் சேதமானாலும் மற்றவையாவது பத்ரமாயிருந்திருக்கும்.

## HOW TO MAKE THE CHILD ATTENTIVE.

BY K. T. SUNDARARAJAN, B.A., L.T.

## குழந்தைகளை கவனிக்கும்படி செய்வது.

சித்திரை மாஸம் வெளிவந்த ஜநோபிமானியில் 161-163-ம் பக்கங்களில் குழந்தையின் மனோபாவத்தைக்குறித்து மிகவும் பொதுவாக சொன்னோம். இப்பொழுது குழந்தைகளை எப்படி பாடத்தில் ச்ரத்தை யுள்ளவர்களாயும், தங்கள் காரியங்களில் குறியுள்ளவர்களாயும் செய்ய முடியுமென்பதை ஆராய்ந்து பார்ப்போம்.

உபாத்யாயர்கள் சொல்வதைக் கேட்பதில் பள்ளிக்கூடத்து பிள்ளைகளுக்கு ரொம்பவும் ச்ரத்தைவேண்டும். பிள்ளைகள் ச்ரத்தையுடன் உபாத்யாயர்கள் சொல்வதை கவனியாவிட்டால், அவர்கள் அ[illegible] விஷயங்களை அறிவது முடியாது. உ[illegible], பிள்ளைகளுக்கு பாடங்களில் ச்ரத்தையை உண்டாக்கி சொல்லிக்கொடுக்காவிட்டால், அவர்கள் பட்ட ச்ரமம் வீணாய் முடியும். ஆகையினால் பள்ளிக்கூடத்து பையன்களிடத்தில் கவனிக்கும் தன்மையை உண்டாக்க வேண்டியது உபாத்யாயர்கள் கடமையாகும். அப்படி கவனிக்கும் தன்மையை வ்ருத்தி செய்வதற்கு மனோதத்வ சாஸ்த்ர வித்பன்னர்கள் சில பொது விதிகளை விதித்திருக்கிறார்கள். அவைகளில் முக்யமானவை வருமாறு.

(1) இதற்குமுன் வெளிவந்த ஸஞ்சிகையில் சொன்ன ப்ரகாரம், தகுந்தபடி காற்றோட்டம், வெளிச்சம், விசாலமான இடம் இவைகளுடன் கூடின இடங்களில் படிப்பு கற்பித்துக்கொடுப்பது.

(2) உபாத்யாயர் "கடு கடு" என்று கோபமான முகத்துடன் கூடினவரா யிராமல், உத்ஸாஹத்துடன் கூடினவராயும், அந்த உத்ஸாஹத்தை பிள்ளைகளுக்கு ஊட்டும் சக்தியுள்ளவராயும் இருக்கவேண்டியது. ஏனென்றால் உத்ஸாஹமாகிற ஔஷதம், மனஸிலுள்ள சோர்வையும், சோம்பலையும் போக்கடிப்பதற்கு, மிகவும் தகுந்த மருந்தாக வைத்ய நிபுணர்கள் சொல்லுகிறார்கள்.

(3) உபாத்யாயர்கள், பாடம் சொல்லிக்கொடுக்கும் ஸமயத்தில், பையன்கள் பாடங்களை பின் தொடர்கிறார்களாவென்று ரொம்பவும்கவனித்து பார்க்கவேண்டும். அவர்கள் மிகவும், விரைவாய் பாடங்களை கற்பிக்கக்கூடாது. அப்படிக் கற்பித்தால், பிள்ளைகள் அவர்கள் சொல்வதை, இன்னதென்று அறிந்து,தங்கள் தங்கள் மனஸில் ஆழப் பதியும்படி செய்துகொள்ளமுடியாது. உபாத்யார்கள் மிகவும் மெள்ளவும் கற்பிக்கக்கூடாது. அப்படி மிகவும் மெள்ளக் கற்பித்தால், பிள்ளைகளுக்கு படிப்பில் உத்ஸாஹம் குறைந்து, முன் சொன்னதிற்கும் பின் சொன்னதிற்கும் உள்ள ஸம்பந்தம் தெரியாமல், படித்த பாடம் வ்யர்த்தமாய்போய்விடும். ஆகையினால், உபாத்யாயர்கள், பையன்களை, நன்றாய் கவனித்து, அவர்கள் சரி



யானபடி தாங்கள் கற்பிப்பதை பின் தொடர்கிறார்களா என்று, அடிக்கடி கவனித்துக்கொண்டே கற்பிக்கவேண்டியது.

(4) ஒரு பாத்ரம் நிறைய தண்ணீர் இருக்கும் ஸமயத்தில், எப்படி யெண்ணெயும், அதே பாத்ரத்தில், அதே ஸமயத்தில் இருக்க முடியாதோ, அதேமாதிரி பையன்களினுடைய மனஸு சில விஷயங்களினாலே நிறைந்திருக்கும் ஸமயத்தில், வேறே ஸமாசாரங்கள் அவர்கள் மனஸில் பதியமாட்டா. இந்தக் காரணத்தைப்பற்றி உபாத்யாயர்கள் தாங்கள் பாடங்களை ஆரம்பிக்கு முன் பையன்களினுடைய மனஸி லிருக்கும்படியான எல்லா விஷயங்களையும் போக்கடித்து, பாடத்துக்கேற்ற சில ஸமாசாரங்களை கற்பித்து பாடத்தில ச்ரத்தையை உண்டாக்கவேண்டும். இதைத்தான் 'ப்ரிபரேஷன் ஸ்டெப்' என்று ரொம்பவும் ச்லாக்யமாய் ஹெர்பார்ட்டு என்னும் ஜெர்மன் நிபுணர் சொல்லியிருக்கிறார். இது, ஹிந்துக்களினுடைய ஸகல கார்யங்களுக்கும், ஸங்கல்பம் எப்படியோ, அதே மாதிரியாக எல்லா பாடங்களிலும் மனதை பதியும்படி செய்விக்கிறது. இது பையன்களின் மனோசக்திக்கேற்றதாயும், பாடத்துக் கொத்ததாயும், உபாத்யாயரின் கெட்டிக்காரத்தனத்திற்கு தகுந்ததாயு மிருக்கவேண்டியது.

5. சிறு பிள்ளைகள் ஒரே கார்யத்தை ரொம்ப நாழிகை கவனிக்க முடியாது. ஆகையினால் பாடங்கள் சுருக்கமாயும், ஒன்றுக்கொன்று வித்யாஸப்பட்டதாயும் இருத்தல் வேண்டும்.

(6) சிறு பையன்கள் படித்ததை நாடக ரூபமாய் நடிப்பதற்கும், ஒருவருக்கொருவர் ஸம்பாஷணை செய்துகொள்வதற்கும், ட்ராயிங் மூலமாய் வரைவதற்கும், அவர்களுக்கு உபாத்யாயர்கள் உத்தரவளிக்கவேண்டும். இப்படிக்கெல்லாம் செய்வதினால் பாடங்கள் அவர்கள் மனஸில் நன்றாய்ப் பதிந்துவிடும். அவர்கள் மிகவும் ஜாக்ரதையாய் கவனிப்பார்கள்.

(7) உபாத்யாயர்கள் கற்பிக்கும் பாடங்களில், பிள்ளைகளுக்கு கவனமிருக்கிறதாவென்று பார்க்க அடிக்கடி பையன்களை கேள்விகள் கேட்டு, பதில்களை அவர்களிடத்திலிருந்தே வாங்கவேண்டும். கவனியாத பையன்களுக்கு சிக்ஷையையும், கவனித்த பிள்ளைகளுக்கு வெகுமானத்தையும் அளிக்கவேண்டும்.

(8) பையன்களுக்கு, உபாத்யாயர்கள் செய்வதைத் திருப்பிசெய்வதில் உத்ஸாஹம் அதிகம். அவர்கள் பாடம்படித்துக் கொண்டிருக்கும் ஸமயத்தில், உபாத்யாயர்கள் ஏதாவது விநோதமாய் சில கார்யங்களை செய்தால், பையன்கள் தங்கள் பாடத்தை விட்டுவிட்டு அந்த விநோத காரியங்களிலே நோக்கமுள்ளவர்களாக ஆய்விடுவார்கள். சில உபாத்யாயர்களுக்கு "டு யு அண்டர்ஸ்டாண்ட், தெரிந்ததா" என்று அடிக்கடி சொல்வது வழக்கமாய்விடும். பையன்கள் இதையே கவனிப்பார்களாகையினால், உபாத்யாயர்கள் தங்களாலான மட்டிலும் இப்படிப்பட்ட பேச்சு வழக்கங்களை (mannerisms) போக்கடிக்க முயல வேண்டும்.

(9) மேலும் உபாத்யாயர்கள் பாடம் கற்பிக்கும் ஸமயத்தில் பையன்கள் ரஸிக்கிறார்களா என்று பார்க்கவேண்டும். அநுதாபப்படவேண்டிய ஸமயத்தில் அநுதாபம் காட்டுகிறார்களா என்றும், சிரிக்கவேண்டிய ஸமயத்தில் சிரிக்கிறார்களா என்றும் பார்க்கவேண்டும். இப்படி எல்லாம் செய்வதால்தான், அவர்களுக்கு படிக்கும் பாடத்திலிருக்கும் ச்ரத்தை வெளிப்படும். அப்படிச் செய்யமுடியாதபடி பிள்ளைகளை யடக்குவது முற்றிலும் பிசகு.

(10) மேலும் பிள்ளைகளின் கவனிக்கும் சக்தியை வ்ருத்திப்படுத்த ஒரே ஸமாசாரத்தை புதிது புதிதாய் அவர்களுக்கு கற்பிக்கவேண்டியது. "உண்மைபேசுவது மிகவும் நல்லது" என்று கற்பிக்க வேண்டுமானால், அதற்கு அநுகுணமான அநேக கதைகளைச் சொல்லவேண்டி

யது. அவர்களையும் நாம் சொன்ன மாதிரிக்கு ஒப்பாயிருக்கிற கதைகளை வீட்டிலிருந்து அறிந்துகொண்டு வரும்படி செய்யவேண்டும்.

(11) புதுப் பாடத்தைத் துவக்குமுன், நடந்த பாடத்தை எந்தமட்டிலும் பிள்ளைகள் படித்து அறிந்திருக்கிறார்களென்று அறிந்துகொள்ள வேண்டும். இதை இரண்டொரு கேள்விகளைக் கொண்டு அறிந்துகொள்ளலாம். தான் புதிதாய்ச் சொல்வதற்கும்,பையன்கள் முன் படித்ததற்கும் அதிக வித்யாஸம் தோன்றாதபடி, படிப்பு கற்பிப்பது அவச்யம். தற்காலம் நடக்கும் போதனாமுறைக்கு ("concentric method of teaching") கான்ஸெண்ட்ரிக் போதனாமுறை என்று பெயர். முதலில் ரொம்பவும் பொதுவான பாகங்களைக் கற்பித்து, பிறகு கொஞ்சங் கொஞ்சமாய் நுட்பமான பாகங்களை உபாத்யாயர்கள் கற்பிக்க வேண்டும். அப்படிக்கில்லாமல் முதலிலேயே ரொம்பவும் கடினமான பாகங்களை கற்பிக்கத் தொடங்கிவிட்டால், பையன்களுக்கு ஒன்றும் தெரியாமல், அவர்களுக்கு படிப்பில் கவனம் குறைந்துவிடும்.

(12) உபாத்யாயர்கள் கற்பிக்கும் பாடத்தின் கருத்தை பாடம் ஆரம்பிக்கு முன்னமேயே பையன்களுக்கு தெரியும்படி சொல்லவேண்டியது. அப்படிச் சொல்வதினால், பையன்கள் உபாத்யாயர் சொல்வது ஒவ்வொன்றும், எப்படி அவர் முதலில் சொன்ன கருத்துக்கு ஒத்திருக்கிறதென்று யோசித்துப் பார்ப்பார்கள். அப்படிக்கில்லாவிட்டால் உபாத்யாயர் என்ன காரணத்திற்காக இந்த ப்ரகாரம் சொல்லுகிறாரென்பது தெரியாமல், அவர் சொல்வதில் கவனம் குறைந்து அதை மறந்துவிடுவார்கள்.

மேலே சொல்லப்பட்ட அநேகவித ஸாதனங்களைக்கொண்டு குழந்தைகளின் கவனிக்கிற சக்தியை வ்ருத்திசெய்து, அவர்களின் அபிவ்ருத்தியைக் கோருவது உபாத்யாயர்களின் கடமையாகும்.

## LAND REVENUE AND LEGISLATION.

## நிலத்தீர்வையும் அதுவிஷயமாய்ச் சட்டம் செய்தலும்.

சில வர்ஷங்களுக்கு முன்னால் அதிகாரப் பிரிவினையைப்பற்றிப் பரிசீலனைசெய்த டிஸெண்ட்ரலைஸேஷன் கமிட்டியார் நிலத்தீர்வை வஸூல் செய்வது விஷயமாய் ஒரு ப்ரேரணை செய்தார்கள். அதாவது நிலத்தின் நிகரான வரும்படியிலிருந்து எவ்வளவு பாகம் கவர்ன்மெண்டார் வாங்கிக்கொள்ளலாம் என்பதையும், எத்தனை வர்ஷங்களுக்கு ஒருதடவை மறு ஸெட்டில்மெண்ட் செய்யலாமென்பதையும், அதிகாரிகளை தங்கள் யுக்தம்போல் நிர்ணயிக்கவிடாமல், பம்பாயில் செய்திருப்பதுபோல அதை சட்டபூர்வமாக விதித்துவிட வேண்டுமென்பதே. இதைப் பற்றி இந்தியா கவர்ன்மெண்டார் ஆலோசனை செய்து, 1910-ம் வர்ஷத்தில் இந்தியா மந்த்ரிக்கு ஒரு கடிதம் எழுதி, அந்த ப்ரேரணையை அப்போது ஏற்றுக்கொள்வதற்கில்லையென்று தெரிவித்தார்கள். இந்தியா மந்த்ரியும் இந்தியா கவர்ன்மெண்டாரின் தீர்மானத்தை அங்கீகரித்து பதில் கடிதம் எழுதினார். அந்தக் கடிதங்களை இப்போது இந்தியா கவர்ன்மெண்டார் ப்ரசுரம் செய்திருக்கிறார்கள். ஆறு வர்ஷங் கழித்து இவ்விஷயத்தை வெளியிடுவதற்குக் காரணமின்னதென்பது வ்யக்தமாய்த் தெரியவில்லை. ஆனரபிள் மிஸ்டர் வி. கே. ராமானுஜாச்சார்யார் நிலத்தீர்வை ஸெட்டில்மெண்டை சட்டஸபையின் அனுமதி பெற்று கவர்ன்மெண்டார் செய்யவேண்டுமென்று வற்புறுத்த ஒரு மசோதாத் தயாரித்திருப்பதாக சென்ற மாஸிமாஸத்து ஜனாபிமானியில் தெரிவித்தோம். அதே ஸஞ்சிகையில் அந்த மசோதாவையும் ப்ரசுரித்தோம். மிஸ்டர் ராமானுஜாச்சார்யார் ஷை மசோதாவை சட்ட ஸபைக்குக் கொண்டுவருவதில் பயனில்லையென்பதைத் தெரிவிப்பதற்காகவே கவர்ன்



மெண்டார் ஆறுவர்ஷத்துக்குமுன் எழுதப்பட்ட கடிதங்களை இப்போது ப்ரசுரப்படுத்தியிருக்கிறார்களோ என்று எண்ணவேண்டியிருக்கிறது.

இனி இந்தியா கவர்ன்மெண்டார் ரெவின்யூக் கொள்கைகளைப்பற்றி சட்டம் செய்ய இஷ்டப்படாததற்கு அவர்கள் சொல்லும் காரணங்களைத் தெரிவிக்கிறோம். பம்பாய் ராஜதானியில் உள்ள நிலவரிச் சட்டமானது, டிஸெண்ட்ரலைஸேஷன் கமிட்டியார் சொல்லுவதுபோல், நிகரான நிலவரும்படியில் இவ்வளவு பாகத்தை கவர்மெண்டார் வரியாக வஸூல் செய்யவேண்டுமென்றாவது, இத்தனை வர்ஷங்களுக் கொருதடவை ஸெட்டில்மெண்ட் செய்யவேண்டுமென்றாவது நிர்ணயிக்கவில்லையென்று இந்தியா கவர்ன்மெண்டார் சொல்லுகிறார்கள். அந்த மாகாணத்தில் நிலத்தின் நிகரான லாபத்தில் எவ்வளவு பாகத்தை வரியாக வஸூலிப்பதென்பதற்கு யாதொரு சட்டமாவது ஸர்க்கார் உத்தரவாவது கிடையாது. பம்பாய் ரெவின்யூ சட்டத்தில் சொல்லியிருப்பதெல்லாம் என்னவென்றால், நிலத்தின் மதிப்பு, அல்லது ஸாகுபடியாகும் நிலமானால் நிலத்தினால் கிடைக்கும் லாபம் இவைகளை கவனித்துக்கொண்டு, ஸர்வே. ஆபீஸர் அவருக்கு யுக்தமானபடி நிலத்தீர்வையை ஏற்படுத்த வேண்டுமென்பதே. ஸெட்டில்மெண்ட் செய்வது விஷயத்திலும் இத்தனை வர்ஷத்துக் கொருதடவை ஸெட்டில்மெண்ட் செய்ய வேண்டுமென்று பம்பாய் நிலத்தீர்வைச் சட்டத்தில் சொல்லப்படவில்லை. அதில் சொல்லியிருப்பதெல்லாம் என்னவென்றால் ஒருதடவை ஸெட்டில்மெண்ட் செய்து விதித்த தீர்வையை, விவஸாய நிலங்களில் 30 வர்ஷத்துக்கு மேற்படாத ஒரு காலம் வரையில் மாற்றக்கூடாதென்றும், மற்ற நிலங்களில் 99-வர்ஷங்களுக்கு மேற்படாத ஒருகாலம் வரையில் மாற்றக்கூடாதென்றும் கவர்னர் உத்தரவு போடலாமென்பதே.

ஆகவே ஷை கமிஷன் உதாரணமாக எடுத்துக்காட்டும் பம்பாய் ரெவின்யூ சட்டமானது கமிஷனுடைய நோக்கத்துக்கு ஏற்றதாயில்லை. கமிஷன் சொல்லும் ப்ரேரணையை அனுஸரித்து சட்டம் செய்வது பம்பாய் ராஜதானிக்கும் மற்ற மாகாணங்களுக்கும் ஏற்றதாயிராது.

இந்தியாவில் நிலத்தீர்வை விதிப்பதற்கு ஆதாரமான கொள்கை யென்னவென்றால், பழைய நாளைய தேசவழக்கப்படி ஸாகுபடியாகும் நிலங்களிலிருந்து கிடைக்கும் மொத்த மாஸூலில் ராஜாங்கத்தாருக்கு ஒரு பாகம் உண்டென்பதே. இவ்வளவு பாகமுண்டென்பதற்கு ஒருவரையறையுங்கிடையாது. ஆனால் கவர்ன்மெண்டாரே நிலத்தில் தமக்குள்ள பாத்யதைகளைக்குறைக்கும்படியாக அவ்வப்போது உத்தரவுகள் பிறப்பித்திருக்கிறார்கள். மொத்தவரும்படியில் ஒருபாகம் வரியாக வஸூலிப்பதை விட்டுவிட்டு, நிகரான வரும்படியை மாத்ரம் இப்போது கணக்கிட்டு அதில் ஒரு பாகத்தை வரியாக வஸூலித்து வருகிறார்கள். ஏனென்றால் மொத்த வரும்படியிலிருந்து ஒரு பாகத்தை வரியாக வஸூலிப்பதில் ஜனங்களுக்கு அதிக வரி ஏற்படுகிறது. மேலும் அது தற்கால நோக்கங்களுக்கு ஏற்றதாயில்லை.

இப்போது அநேக மாகாணங்களில் செலவு போகக் கிடைக்கும் மாஸூலில் பாதிக்கு மேற்படாத ஒருபாகத்தைப் பணமாக்கினால் எவ்வளவாகுமோ அவ்வளவை தீர்வையாக விதிக்கவேண்டுமென்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். மேலும் எல்லா மாகாணங்களிலும் அந்தந்த ப்ரதேசங்களின் அபிவ்ருத்திக்கு ஏற்றபடி ரொம்பவர்ஷங்களுக்கொருதடவையாகத்தான், அதாவது, 20, 30-வர்ஷங்களுக்கு ஒருதடவையாகத்தான் மறு ஸெட்டில்மெண்ட் செய்யலாமென்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே இந்த ஏற்பாடுகளெல்லாம் கவர்ன்மெண்டார் தாங்களே செய்துகொண்டவைகளாகுமே யொழிய; நிலவரி விதிப்பதைப்பற்றிய மூலாதாரக் கொள்கைகளாக

மாட்டா. இந்த ரூல்களெல்லாம் இடத்துக்கும் காலத்துக்கும் தகுந்தபடி மாறியிருக்கவேண்டும். இவைகளை சட்ட பூர்வமாய் விதித்துவிட்டால் ரொம்ப கஷ்டங்கள் ஏற்படுவது நிச்சயம். பம்பாய்நிலத் தீர்வைச் சட்டத்தில் எப்போதும் நிலங்களைத் தரம்வாரி பிரிக்கலா மென்பதற்கு விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தக் கொள்கைகளை அனுஸரித்துத் தான் சென்னையிலும் நிலங்களை தரம்வாரி பிரித்து வருகிறார்கள். பம்பாயில் இதற்கு சட்ட மேற்பட்டிருப்பது போல் சென்னையில் யாதொரு சட்டமும் கிடையாது. அப்படி சட்டமில்லாமலிருப்பது ஸௌகர்யமே. நிலங்களை இன்னின்ன காலங்களில் தான் தரம்வாரியாகப் பிரிக்கலாமென்று ஏற்படுத்திவிட்டால், குடிகளினுடைய ஸௌகர்யத்தை உத்தேசித்து எப்போதாவது நிலங்களின் தரத்தை மாற்றவேண்டுமானால் அப்படிச் செய்வது முடியாமல் போகும்.

இப்போது நிலங்களுக்குப் போடப்படும் தீர்வையானது, பெரும்பாலும் உயர்ந்த பக்ஷம் எவ்வளவு போடலாமென்று விதிக்கப்பட் டிருக்கிறதோ அந்த அளவுக்கு குறைவாகவே இருக்கிறது. தீர்வை விதிப்பதில் ஏதாவது குறைபாடுகள் இருந்தாலும், அதை ஆக்ஷேபிக்கும் ஜனங்கள் ரொம்ப இருப்பதில்லை. அப்படித் தீர்வையை யாராவது ஆக்ஷேபித்தாலும், அந்த ஆக்ஷேபணைக் கேஸுகளை ரெவின்யூ ஆபிஸர்களே விசாரித்துத் தீர்த்துவிடுகிறார்கள். நிலத்தீர்வை ஸம்பந்தமான விஷயங்களை ஒரு சட்டமாக்ச் செய்துவிட்டால் வ்யாஜ்ய வழக்குகள் ரொம்ப அதிகமாகி விடும். ஜனங்கள் எல்லாரும் தங்களுடைய நிலங்களுக்குப் போடப்பட்டிருக்கும் தீர்வையை ஆக்ஷேபித்துக் கோர்ட்டுகளுக்குப் போகத் தலைப்படுவார்கள். ரெவின்யூ தீர்வை விதிப்பது ஸம்பந்தமான வ்யவஹாரங்களை, ஜனங்களிடத்தில் கலந்து, பயிர்களை நேரிடையாகப்பார்த்து க்ராமநிலைமைகளை யறிந்துள்ள உத்யோகஸ்தர்கள் விசாரித்து தீர்க்கவேண்டுமே யொழிய, கோர்ட்டார் விசாரிக்கும்படி விடுவது சரியல்ல.

அப்படிச் செய்தால் வ்யவஹாரங்கள்சிக்கலுள்ளவையாகி வீண் செலவுக் கிடமுண்டாகும். நிலத்தீர்வை ஸம்பந்தமான கொள்கைகளை சட்டமாக்குவதென்றால் நிலங்களுக்கு விதித்த தீர்வைகளைக் கோர்ட்டார் மாற்றலாமா என்று ஒரு கேள்வி யுண்டாகிறது. அப்படி மாற்றும்படி விடக்கூடாதென்று பம்பாய் கவர்ன்மெண்டாரும், ஐக்ய மாகாணங்களின் கவர்ன்மெண்டாரும் தக்க ந்யாயங்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்தியா கவர்ன்மெண்டாரும் இதேமாதிரி அபிப்ராயப் படுகிறார்கள்.

நிலத்திலிருந்து கிடைக்கும் நிகரான வரும்படியில் இவ்வளவு பாகம் தீர்வையாக வஸூல் செய்யலாமென்பதை சட்ட பூர்வமாக விதிப்பதில் ஜனங்களுக்குக் கெடுத லேற்படக்கூடும். கவர்ன்மெண்டார் நாளதுவரையில் நிலத்திலிருந்து கிடைக்கும் லாபத்தில் தங்களுக்குள்ள பாகத்தை குறைத்துக்கொண்டே வந்திருக்கிறார்கள். இன்னும் நிலத்தின் மேல் போடப்படும் வரியைப் பலவிதங்களில் குறைக்கவும் முயற்சி செய்து வந்திருக்கிறார்கள். இப்போது சட்ட பூர்வமாய் இவ்வளவு பாகத்தை வரியாக வஸூலிக்க வேண்டுமென்று விதித்துவிட்டால், அவ்விதம் குறைத்துக்கொண்டு வருவது முடியாமல் போகும், ஸாதாரணமாய் வழக்கத்திலிருந்து வரும் தீர்வை விகிதமென்னவென்றால் நிலத்திலிருந்து கிடைக்கும் நிகரானவரும்படியில் பாதியாகும். பாதி வரும்படியை எப்படி நிர்ணயிக்கிறதென்பதற்கு தக்க விதிகள் ஏற்படுத்துவது ரொம்ப கஷ்டமானது. அப்படி விதிகள் ஏற்படுத்தாமல் வரும்படியில் பாதியை தீர்வையாக வஸூலிக்க வேண்டுமென்று மாத்ரம் விதித்துவிட்டால் நிலஸ்வான்கள்பாடு திண்டாட்டமாகிவிடும்.

மேலும் தீர்வை விகிதத்தை இவ்வளவென்று சட்ட பூர்வமாய் விதித்துவிட்டால், கவர்ன்மெண்



டாருக்குப் பணத்தட்டு ஏற்படும் காலங்களில், தீர்வை குறைவாயுள்ள நிலங்களுக்கு சட்டப்படியுள்ள தீர்வைவிகிதத்தைப்போட கவர்ன்மெண்ட் அதிகாரிகளுக்கு தூண்டுதல் ஏற்படும். ஆகையால் இந்தக் காரணங்களால் கமிஷன் சொல்லுகிறபடி சட்டம் செய்வதற்கில்லையென்று இந்தியா கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள். இந்தியா மந்த்ரியும் இந்தியா கவர்ன்மெண்டின் அபிப்ராயததை ஏற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

## LOVE NEVER LOST.

BY A. V. RAMASWAMI.

## அன்புக்கும் அழிவோ.

(வைகாசி மாஸத்து ஸஞ்சிகையில் 218-ம் பக்கத் தொடர்ச்சி.)

### III - அத்யாயம்.

“துரைஸாமி, அடே, துரைஸாமி, எழுந்திரு. மணி எட்டு அடிக்கப்போகிறதே. இன்னும் தூங்குகிறாயே” என்று ஸுப்பலக்ஷ்மி துரைஸாமியை எழுப்பினாள். துரைஸாமி உடனே கண்களைத் துடைத்துக்கொண்டு, சோம்பல் முறித்துவிட்டு, படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான். உடனே ஸுப்பலக்ஷ்மி அவனைப் பார்த்து, “நீயா வாசிக்கும் பிள்ளை. காலையில் பத்துமணிவரையில் தூங்குகிறாயே. நீ அசலூரில் என்னத்தை வாசித்துக் குப்பைகொட்டிவிடப்போகிறாய். அவாத்து க்ருஷ்ணஸாமியைப் பார். விடியற்காலம் நாலுமணிக்கெல்லாம்எழுந்து வாசிக்கிறான். எப்பொழுதும் புஸ்தகமும் கையுமாய் இருக்கிறான். சற்றுநேரங்கூட புஸ்தகத்தைக் கீழே வைப்பதில்லை. நீ லீவுக்கு ஊருக்கு வந்தால் புஸ்தகத்தை கையால் தொடுவதேயில்லை. காலத்தை வீணைப்போக்குகிறாய். நான் சொல்வதில் என்ன ப்ரயோஜனம். உனக்கு வயஸாய்விட்டது. நீயே தெரிந்துகொள்ளவேண்டும்” என்று கோபித்துக்கொண்டாள். துரைஸாமி “என்ன அம்மா, காலையில் எழுந்திருக்கும்பொழுதே கோபித்துக் கொள்ளுகிறாய். லீவு எதற்கு விடுவது தெரியுமா? பள்ளிக்கூடத்தில் கஷ்டப்பட்டுவிட்டுவந்தால் ஸுகமாக வீட்டிலிருப்பதற்கு. க்ருஷ்ணஸாமி மிகவும் கெட்டிக்காரன். அவனுக்கு எல்லாம் தெரியும். எனக்கு ஒன்றும் தெரியாது. அவன் கெட்டிக்காரனானதினால் தான் பன்னிரண்டு ரூபாய் பரீக்ஷைக்கு மூன்று வர்ஷம் போய் ப்ளக்கு ஆனான். நான் ஒன்றும் தெரியாதவனானதினால்தான் ஒரே வர்ஷத்தில் பாஸ்செய்தேன். என்ன அம்மா, புஸ்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டிருந்துவிட்டால் படித்ததாகிவிடுமா? லீவில் ஊருக்குவந்தால் பார்ப்பவர்களுக்கு மிகவும் படிப்பதுபோல் தெரியவேண்டுமென்று, ஏதாவது ஒரு பெரிய இங்க்லீஷ் புஸ்தகத்தை, அவன் கையில் எடுத்து வைத்துக்கொள்வது வழக்கம். அதைப் பார்த்துவிட்டு ஊரிலிருப்பவர்கள் அவன் எப்பொழுதும் வாசித்துக்கொண்டே யிருக்கிறான் என்று சொல்லுகிறார்கள். நானும் இனிமேல் ஒரு பெரிய புஸ்தகத்தை கையில் வைத்துக்கொண்டு வம்பு பேசுகிறேன். அவன் பன்னிரண்டு ரூபாய் பரீக்ஷையில் ப்ளாக்கான வர்ஷத்தில் கூட இந்த ஊரில் எல்லாரும் ‘அவன் அவ்வளவு நன்றாக வாசித்தான். என்னபண்ணுகிறது, அத்ருஷ்டமில்லை’ என்றார்கள். அவன் வாசித்ததும், வாசிக்காததும் எனக்கல்லவோ தெரியும். ஒருநாளில் புஸ்தகத்தை கையால் தொட்டிருக்கமாட்டான்” என்றான்.

ஸுப்பலக்ஷ்மி “ஒவ்வொரு வகுப்பிலும் தவறாமல், பாஸ்செய்துகொண்டு வருகிறாயென்று பெருமை அடிக்காதே. இன்னும் குறைவர்ஷங்களெல்லாம் ஆகட்டும்” என்று சொல்லிக்கொண்டே, தன் வீட்டுக் கார்யங்களைச் செய்யப் போய்விட்டாள். துரைஸாமியும் உடனே எழுந்து தன் காலைக் கடன்களையெல்லாம் முடித்துவிட்டு, தனது புஸ்தகங்களை எடுத்து வைத்துக்கொண்டு வாசிக்க ஆரம்பித்தான்.

துரைஸாமி படிப்பில் மிகவும் கெட்டிக்காரன். புஸ்தகத்தை ஒருதரம்பார்த்தால் எல்லாவற்றையும் ஸுலபமாகத் தெரிந்துகொண்டு விடுவான். இவனுடன் வாசிக்கும் பிள்ளைகளில் சிலர் பரீக்ஷை ஸமயத்தில் இவனுடன் கூடிக்கொண்டு ஊர் சுற்றுவது வழக்கம். ஆனால் துரைஸாமி, பரீக்ஷைக்கு இரண்டுநாள் முன்னதாக வாசிக்க ஆரம்பித்து எல்லாருக்கும் முதலில் பாஸ் செய்து விடுவான். மற்றப் பிள்ளைகள் 'பெயில்' ஆய்விடுவார்கள். ஸுப்பலக்ஷ்மிக்கும் தன் பிள்ளை கெட்டிக்காரனென்று நன்கு தெரியும். ஆனால் அவனெதிரில் அப்படிச் சொல்லக்கூடாதென்று 'எப்பொழுதும் வாசிப்பதில்லை, வாசிப்பதில்லை' என்பாள். வேறு யாராவது அவள் பிள்ளையைப்பற்றிக் கேட்டால் "என் பிள்ளை இப்பொழுது பி. ஏ. வகுப்பில் வாசிக்கிறான். வர்ஷம் முழுவதிலும் புஸ்தகத்தைக் கையால்தொட மாட்டான். பரீக்ஷைக்கு இரண்டு நாள் முன்னதாக உட்கார்ந்து எல்லாவற்றையும் வாசித்து முதலில் பாஸ் செய்து விடுவான்" என்று பெருமை செய்துகொள்ளுவாள்.

ஸுப்பலக்ஷ்மியின் கணவன் இறந்து இரண்டு வர்ஷமாயிற்று. அவர் பெயர் ஸீதாராமய்யர். அவர் 'மாஜிஸ்ட்ரேட்' வேலையிலிருந்து நன்றாக ஸம்பாதித்தார். ஐந்து வேலி நிலங்களையும், இரண்டு மாடி வீடுகளையும் வாங்கினார். அவருக்கு ஒரு பங்கு சம்பளமென்றால் இரண்டு பங்கு மேல் வரும்படி வரும். இது தவிர, வீட்டுக்கு வேண்டிய ஸாமான்களெல்லாம் இனாமாய் வந்து விழுந்து விடும். சம்பளத்தை அப்படியே மீத்து வைத்து விடுவார். அவருக்கு பெரிய பிள்ளை ஒருவனிருந்தான். அவனை ஸீதாராமய்யர் பி. ஏ. வரைக்கும் படிக்கவைத்து நல்ல இடமாகப் பார்த்து கல்யாணம் செய்தார். பிறகு அவன் எண்பது ரூபாய்க்கு வேலையில் அமர்ந்தான். கடைசியில் சாந்தி முகூர்த்தமான இரண்டா மாஸம் இறந்து விட்டான். அந்தப் புத்ர சோகத்தைத் தாங்கமுடியாமல் கொஞ்ச நாளைக்கெல்லாம் தேகம் மெலிந்து அவரும் செத்துப்போய் விட்டார். சிற்சில ஸமயங்களில் ஸுப்பலக்ஷ்மி அவைகளை யெல்லாம் நினைத்துக்கொண்டு, "ஐயோ நான் தக்க கணவனைத் தான் கல்யாணம் செய்துகொண்டேன். காலாகாலத்தில் பிள்ளைகளைப் பெற்றேன். ஊருக்கெல்லாம் ஒரு முழம் உயர்த்தியாகத் தான் இருந்தேன். எனக்கு என்ன குறை இருந்தது. என்னைக் காட்டிலும் உயர்ந்தவர் வேறொருவருமில்லை யென்றிருந்தேனே. தெய்வத்துக்கு அவைகளெல்லாம் பொறுக்க வில்லையே. 'இவளும் இவ்வளவு அந்தஸ்துள்ளவளா யிருப்பதா, ஸுகமா யிருப்பதா' என்று எண்ணி என்னை மட்டம் தட்டிவிட்டாரே. நான் ஸுகப்பட வந்திருந்தால் ஏன் என் அருமைப்பிள்ளை செத்துப் போகிறான். இருபத்து நாலு வயஸு அன்பாக வளர்த்தேனே. நல்ல பெண்ணாகப் பார்த்துக் கல்யாணம் செய்தேனே. ஊரிலெல்லாரும் 'பெண்ணாகப் பிறந்தாலும் ஸுப்பலக்ஷ்மியைப்போல் சவரணையாகப் பிறக்கவேண்டும்' அவளுக்கென்ன குறை. அகமுடையான் மாஜிஸ்ட்ரேட் வேலையிலிருந்து கொண்டு வலைபோட்டு வாருகிறான். தலைச்சன் பிள்ளையாகப் பெற்று விட்டாள், பி. ஏ. வரைக்கும் படிக்க வைத்து விட்டாள். இப்பொழுது அந்தப் பிள்ளையும் தகப்பனாருக்கு சரியா ஸம்பாதிக்கிறது. சாந்தி முகூர்த்தமாய் விட்டது. இனிமேல் ஸுப்பலக்ஷ்மி கார்யங்கூட செய்யவேண்டாம். நாட்டுப் பெண் செய்துவிடும். அல்லது பரிசாரகன் வைத்துக் கொள்ளலாம். இன்னும் இரண்டு வர்ஷத்தில் பேரன், பேர்த்தி எடுத்துவிடுவாள்' என்று சொன்னார்களே. அதற்கு மாறாக வந்து முடிந்ததே. என்னப்பா, நீ ஏண்டா செத்துப் போய் விட்டாய். உனக்கு என்ன குறையிருந்தது. உன் தகப்பனார் என்னைக்காட்டிலும் உன் பேரில் அதிக ஆசை வைத்திருந்தாரோ ? அவரை மாத்



ரம் உன்னுடன் கூடவே அழைத்துக் கொண்டு விட்டாயே. நீயும் போய், உன் தகப்பனாரும் போய், எனக்கு இவ்வுலகத்தில் என்ன இருக்கிறது. நீங்கள் போய் நானிருக்கலாமோ. எல்லாரும் என்னை 'பாவி' என்று சொல்லமாட்டார்களா? என்னையும் அழைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டேனே. துரைஸாமியும், மீனாம்பாளும் என்ன செய்வார்கள். அநாதரவாக நின்று விடுவார்களே. அவர்களை அன்புடன் யார் ஆதரிப்பார்கள். எனது துரைஸாமிக்கு எங்கேயாவது தக்க இடத்தில் பெண் பார்த்து கல்யாணம் செய்து, அவன் ஸம்பாதிக்க ஆரம்பித்த பிறகும், மீனாம்பாளுக்கு நல்ல பிள்ளையாகப் பார்த்து கல்யாணம்செய்து கொடுத்த பிறகும், என்னால் அவர்களுக்கு ஒரு உபயோகமுமில்லை யென்ற அப்புறமன்றோ, நான் போகவேண்டும். நாளைக்கே துரைஸாமிக்கும், மீனாம்பாளுக்கும் கல்யாணம் பண்ணினால் நான் எப்படி கண்டுகளிப்பேன். ஐயோ, நாராயணஸாமி, கல்யாணம் கார்த்திகை எல்லாவற்றையும் உதறிவிட்டு, என் தலைமேல் போட்டுவிட்டு, நீ உன் தகப்பனாரையும் அழைத்துக்கொண்டு போய் விட்டாயே, உன் மனது கல்மனதோ. நீயும் உன் தகப்பனாரும் உயிருடனிருந்து, துரைஸாமிக்கும், மீனாம்பாளுக்கும் கல்யாணமாய் நான் கண்டு களிப்பேனென்றிருந்தேனே. நீ மீனாம்பா பேரில் அவ்வளவு ஆசையாயிருந்தாயே. 'நான் அவளுக்குப் பிள்ளை தேடிக்கொண்டு வருகிறேன். அவனைப்போல் பிள்ளையை இதுவரையில் நீங்கள் எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா பார்' என்று சொன்னாயே. அவள்பேரில் வைத்திருந்த ஆசையை எப்படிடா மறந்தாய்? இனிமேல் ஸந்தோஷமாக கல்யாணம், கார்த்தி செய்வதற்கில்லாமல் போய்விட்டதே. முப்பத்தொன்பது வயதிற்கெல்லாம் நான் பேரன் பேத்தி எடுத்து ஸுகமாக இருப்பேனென்றார்களே. அதைத்தவிர்த்து, என் அருமை பிள்ளையையும், கணவனையும், துறந்துவிட்டு நிற்கிறேனே. இனிமேல் எனக்கென்ன இருக்கிறது. நான் பாவியாய்விட்டேன். என் பேரைச் சொல்லாமல் துரைஸாமியும், மீனாம்பாளும் ஊரார் பேரைசொல்லி வளரட்டும்" என்று சொல்லி அழுவாள். மற்றொரு ஸமயத்தில் "நம் துரைஸாமிக்கு சீக்ரம் கல்யாணம் பண்ணவேண்டும். நாராயணஸாமிக்கு கல்யாணம் பண்ணி நாட்டுப் பெண் ஆத்துக்கு வந்து இரண்டு மாஸமாவதற்குள் அவன் செத்துப்போய்விட்டானே. அவளை வைத்துக்கொண்டு கொஞ்சநாள்கூட என் ஆசை தீர குடித்தனம் செய்யவில்லையே. துரைஸாமிக்கு சீக்ரம் கல்யாணம் செய்து, அவன் பெண்டாட்டி ஆத்துக்கு வந்தால்தான், என் மனம் கொஞ்சமாவது ஆறுதலடையும். துரைஸாமிக்கு நல்ல பெண்ணாகப் பார்த்துக் கல்யாணம் செய்யவேண்டாம். நாராயணஸாமிக்கு நல்ல பெண்ணாகப் பார்த்து கல்யாணம் செய்து நான் என்ன பாக்யத்தை யடைந்தேன். அவளை வைத்துக்கொண்டு குடித்தனம் செய்ய நான் கொடுத்துவைக்க வில்லையே. நான் பாவி; அதிர்ஷ்ட மில்லாதவள். அவள் எனக்கு நாட்டுப் பெண்ணாக வர நான் கொடுத்துவைத்தவளா. அவள் அழகென்ன, அடடா, இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கலாமே. ஐயோ, அவள் வேறு எங்கேயாவது 'எவனையாவது கல்யாணம் செய்து கொண்டிருக்கக்கூடாதா. இந்த ஸுகத்தை அனுபவிக்கவா இந்த இடத்தில் இவனைத் தேடி வாழ்க்கைப்பட்டாள். அவள் வயிற்றிலும், என் வயற்றிலும் என்றும் ஆறாத நெருப்பை வைத்துவிட்டுப் போய் விட்டானே. அவ்வளவு ஸௌந்தர்யமுள்ள உன் மனைவியை எப்படிடா விட்டுப்போக மனம் துணிந்தது. நீ அற்பாயுஸு என்று எனக்கு முன்னமேயே தெரிந்திருந்தால் உன் மேல் ஆசையே வைத்திருக்கமாட்டேனே. இது அக்ரமம். பெற்றவளை இப்படிப் புழுபோல் துடிக்க வைத்துவிட்டு நீ போகக்கூடாது. இது உனக்குத் தகாது. நீ

போனதினாலல்லவா உனது தகப்பனாரும் கூடவே வந்துவிட்டார்," என்று பிதற்றுவாள். வேறொரு ஸமயத்தில் தெருவில் அழகிய பெண்கள் நல்ல புடவைகள் கட்டிக்கொண்டு, பலவித ஆபரணங்கள் தரித்துக்கொண்டு போகும்பொழுது பார்த்தால், "நாமும் துரைஸாமிக்கு அழகிய பெண்ணைப்பார்த்து கல்யாணம் செய்யவேண்டும். சில ஸமயத்தில் நல்ல பெண்ணைப் பார்த்து கல்யாணம் செய்யவேண்டாம்; நாராயணஸாமிக்கு நல்ல பெண்ணைப் பண்ணி அவளை வைத்துக்கொண்டு குடித்தனம் செய்யவில்லை யென்று நினைத்தோமே; என்ன மூடத்தனம். அதிலென்ன இருக்கிறது. அத்ருஷ்டமிருந்தால் பயமில்லை. துரைஸாமிக்கு நல்ல பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்தால் தான் என் மனது த்ருப்தி யடையும்" என்று நினைப்பாள்.

ஸுப்பலக்ஷ்மிக்கு இவ்வித எண்ணங்களெல்லாம் துரைஸாமி லீவில் ஊருக்கு வந்திருக்கும்பொழுது தோன்றுவதில்லை. அவன் முகத்தைப் பார்த்தவுடன் அவளுடைய துக்கங்களெல்லாம் ஒருவாறு ஆறிவிடும். துரைஸாமியும் "உனக்கு நானிருக்கும்பொழுது என்னம்மா கவலை. அவர்கள் இறக்கப்படாது. இறந்துவிட்டார்களே. என்ன செய்யலாம். அவர்கள் கூடவே செத்துப் போகிறோமா என்ன, அப்பாவுக்கென்றாலும் போகத் தெரிந்தது. நாராயணஸாமி செத்துப் போன நாலு மாதத்திற்கெல்லாம் அவரும் செத்துப்போய்விட்டார். நமக்கோ போகத் தெரியவில்லை, என்ன செய்யலாம்? எல்லாரும் முன்னையோ, பின்னையோ, எப்பவோ ஒரு நாளில் செத்துப்போகிறவர்கள்தான், நீ ஏன் வருத்தப்பட்டு உடம்பை வீணாகக் கெடுத்துக்கொள்ளுகிறாய். இருக்கும்வரையில் திடமாக இருக்கவேண்டாமா. மனக் கவலையை விட்டுவிடு. உன் உடம்பு நாளுக்குநாள் உருகுகிறது" என்று சொல்லித் தேற்றுவான். அவனும் வாசிப்பதற்கு ஊருக்குப் போய்விட்டால் ஸுப்பலக்ஷ்மிக்கு வீடெல்லாம் 'வெறுச்சென்று' தோன்றும். மீனும்பாளும் பள்ளிக்கூடம் போய்விடுவாள். இவள் மாத்ரம் தனியாக உட்கார்ந்துகொண்டு பற்பல விஷயங்களைப்பற்றி சிந்தித்துக்கொண்டிருப்பாள். யாரையாவது கூப்பிட்டு உட்கார வைத்துக்கொண்டு ஞானமார்க்கங்களைக்குறித்துப் பேசுவாள். ஒழிந்தவேளைகளில் அந்த ஊரிலிருக்கும் சிறு பெண்களுக்கெல்லாம் பற்பல விதமாக தலைவாரிப் பின்னி அனுப்புவாள்.

ராமனுதய்யர் வீட்டுக்கும் இவள் வீட்டுக்கும் மிகவும் ஸமீபம். மற்றப் பெண்களைப்போலவே செல்லமும், ஸுப்பலக்ஷ்மியிடம் வந்து பின்னிக்கொண்டு போவதுண்டு. மற்றப் பெண்களைக் காட்டிலும் ஸுப்பலக்ஷ்மிக்கு செல்லத்தின்மேல் ப்ரியமதிகம். அவளுக்குமாத்ரம் நன்றாகப் பின்னி யனுப்புவாள். செல்லத்தைப் பார்த்து "உன் தலையைப் பின்னுவதற்கு ஆசையாயிருக்கிறது. மயிர் கட்டைபோ வில்லாமல் மெல்லியதாயும், மழமழப்பாயு மிருக்கிறது" என்பாள். செல்லத்தை பார்த்துவிட்டால் ஸுப்பலக்ஷ்மிக்கு தன் துக்கங்களெல்லாம் மறைந்துவிடும். தான் எந்தக்கார்யம் செய்துகொண்டிருந்தாலும் அதை அப்படியே போட்டுவிட்டு அவளுக்கு தலைவாரிப் பின்ன உட்கார்ந்து விடுவாள். சில ஸமயத்தில் 'செல்லம் எவ்வளவு கெட்டிக்காரியாயிருக்கிறாள். துரைஸாமிக்கு கல்யாணம் செய்தால் செல்லத்தைத் தான் பண்ண வேண்டும். ஆனால் நாம் அவள் பெற்றோர்களைக் கேட்பதற்கில்லையே. விசாலாக்ஷிக்கு தமயன் பிள்ளை ஒருவன் இருக்கிறானே; அவனுக்குக் கொடுத்துவிடுவார்கள். இருந்தாலும் கல்யாண ப்ரஸ்தாபம் வரட்டும். நாமும் ஸமயம் வந்தால் துரைஸாமிக்கு கொடுப்பார்களா வென்று கேட்டுப் பார்ப்போம்" என்று நினைத்துக்கொள்ளுவாள். செல்லம் தன் வீட்டுக்கு வரும்பொழுதே ஸுப்பலக்ஷ்மி அவள் பேரைச்சொல்லி கூப்பிடாமல் "நாட்டுப்பெண்ணே வா" என்று கூப்பிடுவது வழக்கம். செல்லமும் வெட்கத்தினால் கொஞ்சம் தலை குனிந்து புன்னகை செய்துகொண்டு "என்ன அம்மாமி பரிகாஸம் செய்கிறீர்கள்" என்பாள். உடனே ஸுப்பலக்ஷ்மி, "அதென்னடி, பரிகாஸமென்கிறாய், உண்மையாகத்தான் சொல்லுகிறேன். எங்க துரைஸாமியை பண்ணிக்கொள்ள உனக்கு இஷ்டமில்லையா யென்ன" என்று கேட்பாள். செல்லம் ஒன்றும் பதில் சொல்லாமல் புன்னகை செய்துகொண்டிருந்துவிடுவாள். அப்பொழுது அவள் முகத்தை உற்று நோக்கும்பக்ஷத்தில் துரைஸாமியைக் கல்யாணம் செய்துகொள்வதில் முழு அபிப்ராயம் இருப்பதாகத் தோன்றும்.

## IV - அத்யாயம்.

பற்பல விஷயங்களைக் குறித்து ராத்ரி சிந்தித்துவிட்டு, சற்றுநேரம் நித்ரை செய்த செல்லம் காலையில் விழித்துக்கொண்டு தனது பாடபுஸ்தகங்களை யெல்லாம் வைத்துக்கொண்டு வாசிக்க ஆரம்பித்தாள். படிப்பின்மேல் புத்தி செல்லவில்லை. தகப்பனார் தன் விருப்பத்திற்கு மாறாக துரைஸாமியை விட்டு வேறு யாருக்காவது கல்யாணம் செய்து கொடுத்துவிடப் போகிறாரேயென்று மன ஏக்கம் கொண்டிருக்கும் செல்லத்திற்கு படிப்பின்மேல் எப்படி புத்திசெல்லும்? உடனே புஸ்தகங்களை வைத்து விட்டு தெருவில் சற்றுநேரம் வந்து நின்றாள்.

தினந்தோறும் காலையில் துரைஸாமி அந்த வழியாக போவது வழக்கம். அவனைப் பார்க்கலாமென்றே செல்லம் வாசலில் வந்துநின்றாள். வெகுநேரம் நின்றுகொண்டிருந்தும் அவன் வரவில்லை. செல்லத்திற்கு அவனைப் பார்த்தால்தான் தன் வருத்தங்கள் கொஞ்சம் மாறும்போலிருந்தது. ஆகையால் உடனே தன் தலைப்பின்னலை அவிழ்த்துக் கட்டிக்கொண்டு, தன் தாயார் கார்யம் செய்துகொண்டிருக்கும் ஸமயம்பார்த்து, "அம்மா தலையை பின்னிவிடுகிறாயா" என்று கேட்டாள். அதற்கு அவள் தாயார் "ஏன் நேற்று ஸாயங்காலந்தானே தாழம்பூ வைத்துப் பின்னினேன். பூக்கூட இன்னும் வாடவில்லையே, அதற்குள் ஏன் அவிழ்த்துக்கொண்டாய்" என்று சொல்லிவிட்டு, "நான் கார்யமாக இருக்கிறேனே. எல்லாம் ஸாயந்தரம் பின்னிக் கொள்ளலாம்" என்று சொன்னாள். உடனே செல்லம் "தலையை அவிழ்த்துக்கொண்டு விட்டேனே, அவாத்து ஸுப்பலக்ஷ்மி மாமியிடம்போய் பின்னிக் கொண்டு ஒரு நொடியில் வந்து விடுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே, தன் தாயார் பதில் சொல்லுமுன் புறப்பட்டுப்போனாள். வாசற்படியைவிட்டு கீழே இறங்கும் ஸமயத்தில் பாடகர் வந்து சேர்ந்தார். மனது அறுவறுப்புடனே "இது என்ன இப்படித் தட்டுகிறது, நாம் ஒரு கார்யத்தைக் குறித்துப் போவோமென்றால் அதற்கு தடங்கல் ஏதாவது வருகிறதே" என்று எண்ணிக்கொண்டு, மறுபடியும் உள்ளே நுழைந்து, கீழே கம்பளியைவிரித்து, பாடகரை உட்காரவைத்துவிட்டு, ஹார்மோனியப் பெட்டியை எடுத்துக் கொண்டுவந்து, தானும் உட்கார்ந்து பாட ஆரம்பித்தாள். சற்றுப் பாடினவுடன் "இன்றைக்கு இதுமட்டில் போதும், உடம்பு என்னமோ ஒருமாதிரியாக இருக்கிறது" என்று சொல்லி, அவரை சீக்ரமே அனுப்பிவிட்டு, விரைவாக ஸுப்பலக்ஷ்மி வீட்டுக்குச் சென்று, உள்ளே உடனே போகாமல் சற்றுநேரம் நடைவாசலில் நின்றுகொண்டு எட்டிப் பார்த்தாள். துரைஸாமி ஏதோ ஓர் புஸ்தகத்தை வைத்துக் கொண்டு வாசித்துக் கொண்டிருந்தான். மீனும்பாள் வீட்டிலில்லை. ஸுப்பலக்ஷ்மி கிணற்றண்டை ஏதோ கார்யம் செய்துகொண்டிருந்தாள். துரைஸாமிமட்டு மிருக்கும் ஸமயத்தில் உள்ளே நுழைய செல்லத்திற்கு வெட்கமா யிருந்ததால், ஸுப்பலக்ஷ்மி உள்ளே வருமளவும் வாசலிலேயே காத்திருந்து, பிறகு புன்னகை செய்துகொண்டே, "அம்மாமி, சற்று தலையை வாரிக் கட்டிவிடுகிறீர்களா" என்று கேட்டுக்கொண்டே

உள்ளே நுழைந்தாள். ஸுப்பலக்ஷ்மி "வாடி செல்லம், ஏது அத்தி பூத்தாப்போலிருக்கிறது. முன்னேயெல்லாம் அடிக்கடி வருவாய், இப்பொழுது வருவதையே காணோம், என்னடீ ஸமாசாரம்" என்று கேட்டாள். அதற்கு செல்லம் "என்ன அம்மாமி அப்படிச் சொல்லுகிறீர்கள். முந்தா நாள் கூடவந்து தலை பின்னிக்கொண்டு போனேனே. நேற்றுத் தான் வரவில்லை. அம்மாவுக்கு கை ஒழிந்திருந்தது. அவளே தலை பின்னி விட்டாள். மறுபடியும் இன்றைக்கு இதோ வந்திருக்கிறேன். இதற்குள் நீங்கள் அத்தி பூத்ததுபோ லிருக்கிறதென்று சொல்லுகிறீர்களே" என்று சொல்லிவிட்டு துரைஸாமியின் முகத்தைப்பார்த்து சிரித்தாள். செல்லத்தைக் கண்டவுடன் துரைஸாமி புஸ்தகத்தை மூடி வைத்துவிட்டு அவளையே உற்றுநோக்கிக் கொண்டிருந்தான். அவள் இப்பொழுது தன்னைப் பார்த்துச் சிரித்தவுடன் தானும் அவளைப்பார்த்து சிரித்தான்.

ஸுப்பலக்ஷ்மி செல்லத்தை உட்காரச்சொல்லிவிட்டு, தலைக்குத் தடவ எண்ணெய் எடுத்துக்கொண்டு வருவதற்காகப் போனாள். அதற்குள் துரைஸாமி எழுந்து உள்ளே போய் தன்னிடமிருந்த 'காமினியா ஆயிலை' எடுத்துக்கொண்டு வந்து "என்ன அம்மா, செல்லத்திற்கு தலைக்குத் தடவ நல்லெண்ணெய் எடுத்துக்கொண்டு வருகிறேனென்று போகிறாயே. அவள் அந்த எண்ணெயை தடவிக் கொள்ளுவாளா? அவ்வளவு கேவலமாக எண்ணிவிட்டாயே. இந்தா இதைத் தடவு" என்று அவள் கையில் கொஞ்சம் தைலத்தைவிட்டான். அதை அவள் வாங்கித் தடவி நன்றாகப் பின்னினாள். அவள் பின்னிக்கொண்டிருக்கும்பொழுது துரைஸாமியும் அருகிலேயே உட்கார்ந்துகொண்டு செல்லத்தைப் பலவிதமாக பரிகாஸம் செய்து கொண்டிருந்தான். தன் தாயாரிடம் "செல்லத்தின் தலைமயிரைப் பார்த்தாயா. நாகப்பழம்போல் கருப்பா யிருக்கிறது. நான் செல்லத்தைப்போல் அழகா யிருப்பவளாகப் பார்த்துத் தான் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன்" என்று சொன்னான். உடனே அவன் தாயார் "செல்லத்தைப்போல இருப்பவளைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறேனென்கிறாயே, செல்லத்தையே பண்ணிக்கொள்ளேன்" என்று துரைஸாமிக்கு பதில் சொல்லிவிட்டு, செல்லத்தினிடம் "ஏண்டி, நான் சொல்வது சரிதானே; துரைஸாமியைப் பண்ணிக்கொள்ள உனக்கு இஷ்டமா" என்று கேட்டாள். அவள் "நம்முடைய இஷ்டத்திலென்ன விருக்கிறது, பகவானிஷ்டப்படி நடக்கப்போகிறது" என்று சிரித்துக்கொண்டே சொன்னாள். உடனே துரைஸாமி "என்ன அம்மா, நம்மையெல்லாம் அவள் பண்ணிக்கொள்ளுவாளா, அவளுக்கு அம்மாஞ்சி ஸுப்ரமணியனிருக்கிறான். அவனைக் காட்டிலும் நாமென்ன அந்தஸ்துள்ளவர்களா" என்று சொல்லிவிட்டு சிரித்தான்.

ஸுப்பலக்ஷ்மி, செல்லத்திற்கு தலை பின்னினவுடன், அவளை தான் வருமளவும் இருக்கும்படிச் சொல்லிவிட்டு கிணற்றண்டை குளிக்கச் சென்றுவிட்டாள். இப்பொழுது துரைஸாமியும், செல்லமும் தனியாக இருக்க ஸமயம் வாய்த்தது. செல்லம் வீட்டிற்கு வரும்பொழுதே துரைஸாமி அவள் முகக்குறியினால் ஏதோ அவள் மனதில் வருத்த மிருப்பதாகத் தெரிந்து கொண்டான். அதற்கு காரணமென்னவென்று இப்பொழுது செல்லத்தைக் கேட்டான். அவளும் தன் பெற்றோர்கள் தன் விவாக விஷயத்தைப்பற்றி பேசினதாகவும், தன் விருப்பத்திற்கு மாறாக தன்னை அபிராமனுக்குக் கல்யாணம் செய்துகொடுப்பதாக தீர்மானித்தார்களென்றும் சொல்லி, அதை மாற்ற என்ன செய்யலாமென்று கேட்டாள். துரைஸாமிக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. சற்றுநேரம் பொறுத்து "என்னைப் பற்றி ஏதாவது ப்ரஸ்தாபம் வந்ததா" என்று கேட்டான். செல்லம் இல்லையென்று சொன்னவுடன், துரைஸாமி "ஒருவேளை என் நினைவு அவர்களுக்கு வந்திராது. என்னைப்பற்றி அவர்களுக்கு ஏதாவது சொல்லி ஞாபகப்படுத்து. அதன் பிறகு என்ன சொல்லுகிறார்களென்பதை எனக்குத் தெரியப்படுத்து. உன்னை யாரைக் கல்யாணம் செய்து கொள்ளப்போகிறாயென்று கேட்கும்பக்ஷத்தில் என்னைத் தான் பண்ணிக்கொள்வேனென்று சொல். இப்பொழுது வேறு யுக்தி எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. அப்படி உன் இஷ்டத்திற்கு மாறாக அபிராமனுக்குக் கொடுப்பதாக நிச்சயித்து விட்டால், அதை எவ்விதமாகவாவது நிறுத்தி விடுகிறேன்" என்று சொன்னான். இதற்குள் ஸுப்பலக்ஷ்மியும் ஸ்நானம்செய்துவிட்டு வந்தாள். செல்லம் போய்வருவதாகச் சொல்லிவிட்டு, வீட்டுக்கு வந்தாள்.

அந்த ஸமயத்தில் ராமனாதய்யர் தெருத்திண்ணையில் உட்கார்ந்துகொண்டு கையில் ஏதோ ஒரு ஜாதகத்தை வைத்துக்கொண்டு பார்த்துக்கொண்டிருந்தார். கொஞ்சநேரத்திற் கெல்லாம் உள்ளே வந்து, தன் மனைவியிடம் "செல்லத்தை அபிராமனுக்குக் கல்யாணம்செய்து கொடுக்கப் போவதாய்ச் சொன்னேனே. ஜாதகம் சரியாக இல்லை. வேறு எங்கேயாவது தான் பிள்ளை பார்க்கவேண்டும். எப்படி யிருந்தாலும் இந்த வர்ஷத்தில் கட்டாயம் கல்யாணம் செய்துவிடவேண்டும்." என்று சொல்லிவிட்டு, உள்ளூரிலேயே ஏதாவது பிள்ளைகள் இருக்கின்றனவா என்று கேட்டார். விசாலாக்ஷி உடனே "சிவராமய்யர் பிள்ளை க்ருஷ்ணஸாமி இருக்கிறான். ஆனால் அவன் படிப்பில் மந்தம். கண்ணுக்கும் அழகாயில்லை" என்று சொன்னாள். ராமனாதய்யர் அவனைத்தவிர வேறு யாராவது இருக்கிறார்களா என்று கேட்டார். விசாலாக்ஷிக்கு துரைஸாமியை நன்கு தெரிந்திருந்தபோதிலும், அப்பொழுது ஞாபகத்திற்கு வராமையால் "எனக்குத் தெரிந்த வரையில் வேறொருவரு மில்லை" என்று சொல்லிவிட்டாள். செல்லம் தன் தாயார் துரைஸாமியைப் பற்றிச் சொல்லுவாள் என்று எதிர் பார்த்திருந்தாள். அவள் வேறொருவருமில்லையென்று சொன்னவுடன், தான் அவனைப் பற்றி ஞாபகப்படுத்த அதுதான் தக்க ஸமயமென்றெண்ணி தன் தாயாரிடம் மெதுவாக "ஏனம்மா, ஸுப்பலக்ஷ்மி மாமியாத்தில் ஒருவனிருக்கிறானே, அவனுக்கு கல்யாணமாய்விட்டதா? அவனுக்கென்ன வயஸிருக்கும்?" என்று கேட்டாள். இதைக் கேட்டதும் விசாலாக்ஷிக்கு துரைஸாமியின் ஞாபகம் வந்தது. தன் கணவனைப் பார்த்து "அவாத்து ஸுப்பலக்ஷ்மி பிள்ளை துரைஸாமி யிருக்கிறான். பீ. ஏ. க்ளாஸில் வாசிக்கிறான். பையன் கெட்டிக்காரன், கண்ணுக்கும் லக்ஷணமாக இருக்கிறான். ஸுப்பலக்ஷ்மியும் நல்லவள் மற்ற இடங்களைக்காட்டிலும் அங்கே கொடுக்கலாம். எனக்கு இஷ்டந்தான்" என்றாள். உடனே ராமனாதய்யர் அந்த இடத்தில் கொடுக்கலாம். சீதாராமய்யரும் நானும் பட்டணத்தில் ஒன்றாக வாசித்தோம். அவர்மிகவும் நல்லவர். "மாஜிஸ்ட்ரேட்" வேலையிலிருந்துகொண்டு நன்றாக ஸம்பாதித்தார். ஆனால் அதை வைத்துக்கொண்டு அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை. அதற்குள் யமன் கொண்டுபோய்விட்டான். அவர் ஸம்ஸாரம் மாதிரி யெப்படியோ, எனக்குத் தெரியாது" என்றார். விசாலாக்ஷி அவள் மிகவும் நல்லமாதிரியென்று சொன்னாள். ராமனாதய்யர் சற்றுநேரம் ஆலோசனை செய்துவிட்டு செல்லத்தினிடம் "உனக்கு அவனைப் பண்ணிக்கொள்ள ஸம்மதமா" என்று கேட்டார். செல்லத்துக்கு உள்ளுக்குள் ஸந்தோஷம் பொங்கிற்று. ஆனாலும் அதை மேலுக்குக்காட்டாமல் அடக்கிக்கொண்டு, "உங்களிருவருக்கும் ஸம்மதமானால் எனக்கும் ஸம்மதந்தான்" என்று பதில் சொன்னாள்.

ராமனாதய்யர் ஸ்நானம் செய்து போஜனம் செய்துவிட்டு ஸுப்பலக்ஷ்மியின் வீட்டுக்கு வந்தார். அந்த ஸமயத்தில் துரைஸாமி சாப்பிட்

டுக்கொண்டிருந்தான். அதைப்பார்த்ததும் ராமனாதய்யர் "நல்ல ஸமயத்தில் தான் வந்தோம். சகுனம் நன்றா யிருக்கிறது" என்று மனதில் எண்ணிக்கொண்டு, கல்யாண ப்ரஸ்தாபத்தைப் பற்றி பேசினார். ஸுப்பலக்ஷ்மி முன்னமேயே தன் பிள்ளைக்கு செல்லத்தைக் கல்யாணம் பண்ணவேண்டு மென்று எண்ணியிருந்தாளல்லவா? இப்பொழுது ராமனாதய்யரே வலுவில் வந்து கேட்கவே, மிகவும் ஸந்தோஷத்துடன் ஸுப்பலக்ஷ்மி தன்பிள்ளைக்கு செல்லத்தைப் பண்ணிக்கொள்ள ஸம்மதித்துவிட்டாள். ராமனாதய்யர், துரைஸாமியைப் பார்த்து "உனக்கு செல்லத்தை விவாகம் செய்துகொள்ள இஷ்டமா" என்று கேட்டார். அவனும் "என் தாயாரும் ஸம்மதித்துவிட்டாள். நீங்களும் கொடுப்பதாகச் சொல்லிவிட்டீர்கள். என் தாயார் வார்த்தையை மறுத்துப் பேசப் போகிறேனா என்ன? நீங்கள் கெட்டுப் போவதற்காகவா ஒரு கார்யத்தைச் செய்வீர்கள். நீங்கள் ஸம்மதித்து விட்டதனால், எனக்கும் ஸம்மதந்தான்" என்று கௌரதையாக இருவர் வார்த்தைகளுக்கும் மரியாதைகொடுத்துச் சொல்லிவிட்டான்.

ராமனாதய்யர் துரைஸாமியின் ஜாதகத்தை வாங்கிப்பார்த்தார். பொருத்தமா யிருந்தது. கல்யாணம் அடுத்த வைகாசி மாஸத்தில் வைப்பதாகத் தீர்மானம் செய்யப்பட்டது. ராமனாதய்யர் பஞ்சாங்கம் கொண்டுவரச்சொல்லி அதைப் பார்த்துவிட்டு, வைகாசி மாஸம் ஐந்தாந்தேதியில் ஒரு முகூர்த்தமும், இருபத்தெட்டாந் தேதியில் ஒரு முகூர்த்தமும், இருப்பதாகச் சொன்னார். அவர் பஞ்சாங்கம் பார்த்துக்கொண்டிருந்தபோது, துரைஸாமி பரபரவென்று போய், அடுத்த வீட்டிலிருந்த வாத்யார் குப்புஸாமி சாஸ்த்ரியைக் கூப்பிட்டுக்கொண்டு வந்தான். அவரும் பஞ்சாங்கத்தைப் பார்த்துவிட்டு, 28-ந் தேதி முகூர்த்தத்தைவிட 5-ந் தேதி முகூர்த்தம் சிறந்ததென்று சொன்னார்.

வைகாசி மாஸம் இருபத்தெட்டாந் தேதியன்று திருப்பதியில் ஸுந்தரேசய்யர் பிள்ளை அநந்த க்ருஷ்ணனுக்கு உபநயனம். அதற்காக குப்புஸாமி சாஸ்த்ரியள் திருப்பதிக்குப் போக வேண்டியிருந்தது. துரைஸாமி கல்யாணத்தை இருபத்தெட்டாந் தேதியில் வைத்துவிட்டால், தான் அந்த ஸமயத்தில் திருப்பதியிலிருக்கவேண்டும், வரும்படியெல்லாம் போய்விடும். ஆகையால் ஐந்தாந்தேதியிலேயே வைத்துவிட்டால் இரண்டு இடத்திலும் ஸம்பாதித்து விடலாமென்ற கருத்துடன் முதல் முகூர்த்தம் மற்றதைக் காட்டிலும் சிறந்தது; எல்லாம் பொருத்தமாயிருக்கிறதென்றுசொன்னார். ராமனாதய்யர் "முகூர்த்தத்தை ஸமீபத்தில் வைத்துக்கொண்டு விட்டால், ஸ்த்ரீகள் கல்யாணத்திற்கு வேண்டிய ஸாமான்களையெல்லாம் செய்து முடிக்கவேண்டாமா? 28-ந் தேதி முகூர்த்தத்தையே வைத்துக்கொண்டாலென்ன", என்று வாத்யாரைக் கேட்டார். அவர் "நான் அதைக் காட்டிலும் 5-ந்தேதி முகூர்த்தம் ச்ரேஷ்டமாயிருந்ததால் சொன்னேன். அப்புறம் தங்களிஷ்டம், கடைசியில் வைத்துக் கொண்டாலும் குற்றமில்லை" என்று சொன்னார். ராமனாதய்யர் சற்றுநேரம் ஆலோசனை செய்துவிட்டு, "தாங்கள் முதல் முகூர்த்தம் நன்றாயிருக்கிறதென்று சொல்வதால் தங்களிஷ்டப்படியே செய்துவிடலாம்" என்று வாத்யாருக்குச் சொல்லிவிட்டு வீட்டுக்குப் புறப்பட்டு வந்தார்.

செல்லம், தன் தகப்பனார் ஸுப்பலக்ஷ்மியின் வீட்டுக்குப் போனதும், சீக்ரமாக ஸ்நானம் செய்து சாப்பிட்டுவிட்டு, மாடியின்மேல் ஏறி, தனது அறையின் ஜன்னலின் வழியாக தன் தகப்பனார் திரும்பி வருகிறாரோ வென்று பார்த்துக்கொண்டிருந்தாள். ஒருவேளை தன் தகப்பனாரின் எண்ணம் மாறிவிடப் போகிறதேயென்று நினைத்தாள். "என்ன, முன்னமேயே போனாரே. இன்னும் வரவில்லையே? அங்குதான் போயிருக்கிறாரோ அல்லது வேறு எங்கேயாவது தான் போயிருக்கிறாரோ" என்று எண்ணினாள். அப்பொழுது கொஞ்சதூரத்தில் தன் தகப்பனாரைக் கண்டதும் அவரை நன்கு உற்று நோக்கினாள். அவர் சிரித்துக்கொண்டே வீட்டினுள்ளே நுழைந்தார். அதைப் பார்த்ததும் செல்லத்திற்கு ஸந்தோஷம் உண்டாய்விட்டது. தன் கார்யம் ஸித்தித்ததென்று மனதில் எண்ணிக்கொண்டு, விரைவாக கீழே இறங்கினாள். ராமனாதய்யர் அவளைப் பார்த்ததும் சிரித்துக்கொண்டே "என்னடீ செல்லம், கல்யாணம் நிச்சயமாய்விட்டது. நல்ல 'அகம்படையானா'கத்தான் கிடைத்தான்" என்று சொன்னார். இந்த வார்த்தைகள் விசாலாக்ஷியின் காதில் பட்டதும், அவளும் சமையலறையிலிருந்து வெளியே வந்து, "கல்யாணம் நிச்சயமாய்விட்டதா? முகூர்த்தம் என்றைக்கு வைத்திருக்கிறீர்கள்" என்று கேட்டாள். ராமனாதய்யர் ஐந்தாந்தேதி வைத்திருப்பதாகவும், முகூர்த்தம் மிகவும் அருகிலிருப்பதால் கல்யாணக் கார்யங்களெல்லாம் விரைவாக நடக்கவேண்டுமென்றும் சொல்லிவிட்டு, அவள் தமயனுக்கு தாயாரை அனுப்பும்படி கடிதம் எழுதுவதாகவும், சொன்னார். விசாலாக்ஷி "அவர்களுக்கு கல்யாணம் நிச்சயம் செய்ததே தெரியவேண்டாம். அம்மா வராமல் கல்யாணக் கார்யங்களாகாதா என்ன, ஸொந்த மனுஷ்யாளில்லாதவர்களுக்கு ஊரிலிருப்போரெல்லாம் மனுஷ்யர்கள் தான். ஊரில் நாலுபேரைக் கூப்பிட்டால், எல்லா கார்யங்களையும் செய்துவிட்டுப் போகிறார்கள். இதற்கென்ன விசாரம்? எல்லாம் கல்யாண ஸமயத்தில் ஒரு கடிதம்போட்டால் போதும், இப்பொழுது ஒன்றும் போடவேண்டாம்". என்று கோபமாகச் சொன்னாள். இதைக் கேட்டதும், ராமதனாய்யர், "நீ உன் தாயாரின்மேல் கோபித்துக் கொள்வதில் ப்ரயோஜனமில்லை. அவள் என்ன செய்யக்கூடும்? ஸுப்ரமணியனுக்கு செல்லத்தைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளவேண்டுமென்று அவள் சொன்னால், அதை அவர்கள் கேட்கப்போகிறார்களா என்ன? கார்யம் செய்வதற்காக அவளை யனுப்பும்படி கடிதம் எழுதவில்லை, வந்தால்கூட அவள் என்ன கார்யத்தைச் செய்யப்போகிறாள். பெரியவளாக ஒருத்தி யிருந்தால் இன்னின்னது செய்ய வேண்டுமென்பதெல்லாம் தெரிந்துகொள்ளலாம்" என்று சொல்லிவிட்டு, செல்லத்திற்கு கல்யாணம் நிச்சயமாய் விட்டதாகவும், தன் மாமியாரை சீக்ர மனுப்பும்படிக்கும் விசாலாக்ஷி தமயனுக்கு ராமனாதய்யர் கடிதமெழுதினார்.

தன் பெண்ணுக்கு விவாகம் நிச்சயமானதும், விசாலாக்ஷிக்கு முன்னிருந்ததைவிட நான்கு பங்கு பலம் வந்து விட்டது. அன்றையதினமே ராமனாதய்யரை கடையிலிருந்து சில ஸாமான்களை வாங்கிவரச் சொல்லி, கல்யாணக் காரியங்களை விரைவாகச் செய்ய ஆரம்பித்தாள். கல்யாணத்திற்கு பதினைந்து நாட்கள் தானிருந்ததால், ராமனாதய்யரும் வேண்டியவைகளை யெல்லாம் தயார்செய்ய ஆரம்பித்தார். மாப்பிள்ளைக்கு எழுநூறு ரூபாயில் கடுக்கன் வாங்கினார். தட்டானைக் கூப்பிட்டு பன்னிரண்டு பவுனில் கைக்குக் காப்பு அடிக்கச் சொன்னார். புடவை வ்யாபாரியைக் கூப்பிட்டு அதிக விலையில் புதிது புதிதாக சேலைகள் நெய்துகொண்டு வரச்சொன்னார். வீட்டிற்கெல்லாம் வெள்ளையடித்து, பாத்ரங்களுக்கெல்லாம் ஈயம் பூசச் செய்தார். உற்றாருறவினருக்கெல்லாம் திருமணப்பத்ரிகை அச்சடித்து அனுப்பினார். இதற்குள் கல்யாணம் கிட்டே நெருங்கியது. இரண்டு நாட்கள் தானிருந்தன. ராமனாதய்யர் தெருவில் பெரிய பந்தல் போடுவித்து எல்லா விடங்களிலும் பற்பல படங்கள் மாட்டுவித்து கொத்துக் கொத்தாக விளக்குகளும் போடுவித்தார். பந்தலின் இரு பக்கங்களிலும் வாழை மரங்கள் கட்டி, தேங்காய் முதலியவைகள் கட்டுவித்தார். ஒவ்வொரு ரெயிலுக்கும் ராமனாதய்யர் ஸ்டேஷனுக்கு வண்டி

களனுப்புவித்தார். பெண்வீட்டு உறவினர் பிள்ளைவீட்டு உறவினர் அனைவரும் வந்திறங்கினார்கள்.

செல்லம் தான் நினைத்தபடியே கார்யம் முடியப் போவதை யெண்ணி ஸந்தோஷப்பட்டாள். என்றையதினம் கல்யாணம் வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். கல்யாணத்தன்று முதல்நாள் மத்யானம் "நாளையதினம் இந்த வேளைக்கெல்லாம் கல்யாணமாய்விடும்" என்று எண்ணிக்கொண்டாள். முதல் நாள் ராத்ரி நிச்சயதார்த்தம் நடந்தது. மறுநாள் பத்துமணிக்கெல்லாம் தாலிகட்டி முடிந்தது. செல்லத்தின் எண்ணம் நிறைவேறிவிட்டது. இனிமேல் மாற்றப்போவதில்லை. தாலி கட்டியாகும் வரையில் செல்லத்திற்கு நிச்சயமில்லை. ஏனென்றால் ஸௌப்பலக்ஷ்மிக்கு தமயன் ஒருவன் இருந்தான். ஸௌப்பலக்ஷ்மி தன் தமயனுக்கு இதுபோல் கல்யாணம் நிச்சயம் செய்திருப்பதாக எழுதினவுடன், அவன் நேரிடவந்து அவளிடம் செல்லத்தைப் பண்ணிக்கொள்ள வேண்டாமென்றும், மூவ்வாயிரம் ரூபாய் எதிர்ஜாமீன் வேறு யாரோ ஒருவர் தருவதாய்ச் சொன்னதாகவும், அந்த இடத்தில் ஸம்பந்தம் செய்துகொள்ளலாமென்றும் சொல்லி அவளைக் கலைக்கப் பார்த்தான். ஆனால், ஸௌப்பலக்ஷ்மி பணத்திற்காக ஆசைப்படவில்லை. அவளுக்கு செல்லத்தைவிட மனம் வரவில்லை. துரைஸாமிக்கு செல்லத்தைத்தான் கல்யாணம் பண்ணப்போகிறதாகச் சொல்லிவிட்டாள். அதன்பேரில், அவள் தமயன் கோபித்துக்கொண்டுபோய் கல்யாணத்திற்கு வருவதில்லை யென்று கடிதமெழுதி விட்டான். இதைத் தவிர, துரைஸாமிக்கும் செல்லத்துக்கும் கல்யாணமாவதைப் பார்க்க விரும்பாத பொறாமை கொண்டிருக்கும் சில ஊர் வம்புக்காரிகள், கல்யாணத்தைக் கலைக்க எண்ணி, ஸௌப்பலக்ஷ்மியினிடம் வந்து, "என்னடி ஸௌப்பலக்ஷ்மி, உன் தமயன் கல்யாணத்திற்கு வரவில்லையென்று கடிதமெழுதிவிட்டானாமே. உனக்கு இப்பொழுது வேறு யாரிருக்கிறார்கள். அவனில்லாமல் நடத்தும் கல்யாணம் என்ன கல்யாணம்? ஊரிலெல்லாரும் பரிகாஸம் செய்யமாட்டார்களா? கல்யாணத்தை நிச்சயம்செய்யுமுன் நீ அவனை ஒரு வார்த்தை கேட்டிருக்கவேண்டாமா. இப்பொழுது தான் என்ன முழுகிப்போய்விட்டது. என் தமயனுக்கு இஷ்டமில்லையென்று சொல்லிவிடு. அந்தப்பெண் என்ன அப்படி அழகு. இதற்கு மேல் அழகான பெண்கள் ஆயிரத்தெட்டிருக்கு. இது தப்பிவிட்டால், வேறே அகப்படாதா என்ன. இந்தக் காலத்தில் பெண்களுக்கென்ன, காலில்விழுந்து கொடுக்க காத்துக்கொண்டிருக்கிறா. ஒண்ணுமில்லாததற்கெல்லாம் ஆயிரமும், இரண்டாயிரமும் கொடுத்து கல்யாணம் பண்ணிக்கொடுக்கிறா. உன் பிள்ளைக்கென்ன, கூனா, குருடா, நொண்டியா? ராஜா வாட்டமாயிருக்கான். பீ. ஏ. க்ளாஸிலே வாசிக்கிறான். இவனுக்குத்தானா பெண் அகப்படாது? கல்யாணத்துக்குத்தான் அதற்குள் அவனுக்கென்ன அவஸரம்? அப்படிஒன்றும் வயஸாகவில்லையே. வயஸானால்தான் என்ன? பெண்ணா தொரண்டு விடுவதற்கு. எல்லாம் இப்பொழுது நிறுத்திவிடு. அடுத்தவிசை பார்த்துக்கொள்ளலாம். உன் தமயனுக்கு இஷ்டமில்லாத கார்யத்தைச் செய்யாதே" என்று புத்தி புகட்டினார்கள்.

ஸௌப்பலக்ஷ்மிக்கு ஸ்வயபுத்தி கிடையாது. அவள் ஸ்வபாவத்தில் தனக்கு ஹிதம்போல் பேசுபவர்களை நம்பிவிடுவாள். அவர்கள் தனக்கு நிச்சயமாய் அநுகூலத்தின்பொருட்டு சொல்லுகிறார்களா, அல்லது பிரதிகூலத்தின் பொருட்டுச் சொல்லுகிறார்களா, என்பதை யோசிக்கமாட்டாள். இப்பொழுது அவர்களனைவரும் தனக்கு அநுகூலம்போல் ஒருமனப்பட்டு சொன்ன வார்த்தைகளைக் கேட்டவுடன், ஸௌப்பலக்ஷ்மி நல்ல எண்ணத்துடன் சொல்லுகிறார்களா, அல்லது கெட்ட எண்ணத்துடன் சொல்லுகிறார்களா வென்பதை யறியாமல், கல்யாணத்தை அடுத்த வர்ஷத்தில் செய்யலாமா என்று யோசித்தாள்.

(இன்னும் வரும்.)



# REVIEW OF THE PRESS.

# பத்ரிகை ஆராய்ச்சி.

## IS THE RYOTS LAND THE PROPERTY OF GOVERNMENT ?

## ரயத்துகளின் நிலம் ஸர்க்காருக்கு ஸொந்தமா ?

நிலவரியானது என்ன நியமங்களின் மேல் விதிக்கப்படுகிறதோ அந்த நியமங்களைக் கண்டு சட்டம்செய்துவிடவேண்டுமென்று அதிகாரப் பிரிவினைக் கமிஷன் செய்த சிபார்சை இந்தியா மந்த்ரி ஒப்புக்கொண்டுவிடாமல் செய்ய, இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியா மந்த்ரிக்கு சென்ற 1910-ம் வர்ஷம் ஒரு கடிதம் எழுதினார்கள். அதை இந்த ஸஞ்சிகையில் சுருக்கமாக எழுதியிருக்கிறோம். அதில் அவர்கள் "இப்பொழுது ப்ரிட்டிஷ் இந்தியாவில் வரி வஸூல் செய்யப்படும் முறையானது தேசத்தின் பூர்வீக வழக்கத்தின்மேல் ஏற்பட்டிருக்கிறது. அதன்படி சாகுபடியாகும் எல்லா நிலத்திலும் விளையும் மாஸூலில் ராஜாங்கத்துக்கு ஒரு பங்குண்டு; ஆனால் எவ்வளவென்பது நிஷ்கர்ஷிக்கவில்லை" என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கொள்கைக்கு ஆதாரம் ஒன்றுமில்லை யென்று 'சுதேசமித்திரன்' எழுதுகிறது. வேதங்களுக்கு அடுத்தாற்போல் பூர்வீக க்ரந்தமாகிய மீமாம்ஸையில் ஜெய்மினி ரிஷி இவ்விஷயமாய் விரிவாய்ச் சொல்லியிருக்கிறார். விச்வஜித் என்ற யாகத்தைச் செய்யும் கர்த்தா தன்னுடைய ஸொத்தையெல்லாம் யாகத்தைச் செய்விக்கும் ஹோதாக்களுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று அவர் சொல்லிவிட்டு, யாக கர்த்தா அரசனாகவாவது சிற்றரசனாகவாவது இருந்தால், அவன் தன்னுடைய ராஜ்யபூமியை யெல்லாம் கொடுத்துவிடலாமா என்று விசாரிக்கிறார். அரசனுக்கோ சிற்றரசனுக்கோ ஸொந்தமாகத் தனி ஸொத்திருக்கலாம், அதைத்தவிர ராஜ்யத்திலுள்ள பூமி அவனுக்கு ஸொந்தமில்லை யென்கிறார். ஒருவன் தன்னுடைய பராக்ரமத்தால் ஒரு நாட்டை ஜயித்துவிடுகிறான்; அவன் அடைந்தது என்ன? துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலன அதிகாரத்தை அடைந்தானே ஒழிய, பூமியின் ஸொந்தத்தையல்ல.

ஜெய்மினி ஸூத்ரங்களுக்குப் பிற்பட்ட தர்ம சாஸ்த்ரங்களிலும் கவர்ன்மெண்டின் கொள்கைக்கு ஆதாரமாய் ஒன்றுமில்லை; ஆனால் ஒவ்வொரு ப்ரஜையின் ஒவ்வொரு விதமான வருமானத்திலிருந்தும், ஆறிலொன்று, பத்திலொன்று, இருபதிலொன்று, முப்பத்திரண்டிலொன்று, ராஜாவுக்குக் கிடைக்கவேண்டுமென்று தர்ம சாஸ்த்ரங்கள் சொல்லியிருக்கின்றன. ராஜாவின் அதிகாரத்தைக்கொண்டு வரி விதிக்க அவனுக்கு அதிகாரமிருந்ததாக இதிலிருந்து தெரிகிறதேயல்லாமல், பூமியே அவனுக்கு ஸொந்தமென்று கருதப் பட்டதாகத் தெரியவில்லை. தர்மசாஸ்த்ரங்களுக்குப் பிற்பட்ட சுக்ர நீதி முதலிய அர்த்த சாஸ்த்ரங்களிலும் கவர்ன்மெண்டின் கொள்கைக்கு ஆதாரத்தைக் காணக் கூடவில்லை. வரி வஸூலிக்கிறவன், வரி இனங்களைப் பற்றி சுக்ர நீதி சொல்லுங்கால், மான்யங்கள் என்றும், சேனைக்கு ஆள் அனுப்பும் க்ராமமென்றும், தான்யமாகவோ, ஆடுமாடுகளாகவோ, பொன்னாகவோ வேறுபண்டங்களாகவோ, வரி செலுத்தும் க்ராமங்களென்றும், நாட்டிலுள்ள பூமியை யெல்லாம் தண்டல்காரன் வகுத்துவிட வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறது. வரி செலுத்தும் க்ராமங்களென்று சொல்லியிருக்கிறதேயல்லாமல், வாரமளக்கும் க்ராமமென்று சொல்லியிருக்கவில்லை. ஆகையால் இப்பொழுது வரி விதிக்க கவர்ன்மெண்டார் அனுஷ்டிக்கும் வழியானது பூர்வீக ஆசாரணையைப் பின்பற்றினதென்று சொல்வதற்கு ஆதாரமேயில்லை. ப்ரிட்டிஷார் இந்தியாவில் தோன்றி நாடு பிடிக்க ஆரம்பித்த காலத்தில் சிற்சில ப்ரதேசங்களில் இருந்த அமளிப்பட்ட அனுஷ்டானமே இப்பொழுதுள்ள முறைக்கு ஆதாரமென்று சொல்வதுதான் பொருந்தும். அக்காலத்தில் தேசமானது சீர்குலைந்து, சின்னபின்னப்பட்டு வலிமை யுள்ளவர்களுக்கு மட்டில் அடங்கியிருந்தது. முகம்மதியர்களும் மகாராஷ்டிரர்களும் துணிவான வீரர்களின் கீழ் பல விடங்களில் வ்யாபித்து, சிறுசிறு நாடுகளைத் தங்கள் வசப்படுத்திக்கொண்டு, தர்மசாஸ்த்ரங்களைக் கவனிக்காமல் தங்களிஷ்டப்படி வஸூல் செய்யக்கூடியவரையில் முழுதும் வஸூல் செய்துகொண்டு வந்தனர். அவர்கள் ராஜநீதியை அனுஷ்டித்தவர்களல்ல. எப்பொழுதும் சத்ரு பயமுடையவர்களாகையால், காற்றுள்ளபோதே தூற்றிக்கொண்டார்கள். அவ்விதக் கொள்ளைக்காரர்களை அடக்கி ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ராஜ்யமாளத் தலைப்பட்டார்கள். ஆகையால் அவர்கள் தங்களுக்கு முன்னிருந்தவர்களுடைய முறையை அனுஸரித்து பூமி தங்களுக்கு ஸொந்தமென்ற ஒரு கொள்கையைக் கொண்டார்கள்.

இந்தக் கொள்கைப்படி அனுஷ்டிக்க ஆரம்பித்தால், விவஸாயிகள் ஓடிப்போய்விடுவார்களென்பதை, அக்காலத்திய ப்ரிட்டிஷ் ராஜதந்த்ரிகள் அறிந்து மிதமாய் வஸூல் செய்யவேண்டுமென்று ஸித்தாந்தம் செய்தார்கள். நிலமொன்றிலிருந்தே ராஜாங்கத்திற்கு முக்யமான வரும்படி கிடைப்பதாயிருந்ததால், மாஸூலில் ராஜாங்கத்துக்கு பாத்யம் உண்டென்று சொல்வதும், பாத்யம் கொண்டாடுவதும் அவச்யமாகி, இப்பொழுது ஒரு பூர்வீக ஆசாரணையுமாய் விட்டது!

## THE HOW TO PRESERVE THE EYESIGHT.

### கண்களைக் காப்பாற்றும் முறை.

'ஸர்வேந்த்ரியாணாம் நயனம் ப்ரதான' மாகையால், நாம் நமது கண்களுக்கு கெடுதல் ஏற்படாதபடி நமது வாழ்க்கை இயல்பை அமைத்துக் கொள்வதோடு, கெடுதல் உண்டாக்கக்கூடிய செய்கைகளைக் கூடியமட்டும் ஒழித்துவிடவேண்டும். கண்கள் விஷயமாய் இன்ன செய்யலாம், இன்ன செய்யக் கூடாதென்பதைப்பற்றி 'விவேகசிந்தாமணி' சில குறிப்புகள் எழுதுகிறது. சிலர் தாம் எடுத்துக்கொண்ட வாசிப்பு, எழுதுதல் முதலிய வேலைகளை சீக்ரம் முடித்துவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் ஸாயந்த்ரம் வெளிச்சம் குறைந்துபோயுங்கூட கண்ணை இறுத்துக்கொண்டு வாசிக்கிறார்கள். இது மிகவும் கெடுதலானது. அதுபோலவே ராத்ரிக் காலங்களில் குறைவான வெளிச்சத்தில் கண்ணை இறுத்து விழித்துச் செய்யத்தக்க எந்த வேலையையும் செய்யாமலிருக்க வேண்டியது நமது கடமை. அப்படி ஏதேனும் அவச்யமாகச் செய்யவேண்டிய வேலை இருந்தால், ப்ரகாசமான வெளிச்சத்தைக்கொண்டு சீக்ரம் முடித்துவிடுவது நல்லது. தவிர சீக்ரத்தில் முடியாத வேலையாயிருந்தால், மறுநாள் செய்து கொள்ளலாமென்று நிறுத்திவைப்பது உத்தமம்.

அளவுக்கு மேற்பட்டுக் கண்ணைக் கொட்டாமல் விழித்துக்கொண்டிருப்பது நல்லதல்ல.

அதிக வேலைசெய்து கண்ணுக்கு எரிச்சல் உண்டாகும்போது, அதை கவனியாமல் வேலை செய்வதும், வ்யாதியால் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும்போது கண்ணுக்கு வேலை கொடுப்பதும், நோய்நீங்கி ஸௌக்யமுண்டாகும் ஸமயத்தில், புஸ்தகங்களை வாசித்தல், எழுதுதல் முதலிய வேலைகளைச் செய்வதும் பெரும்பான்மையும் கண்ணுக்குக் கெடுதலையுண்டாக்கும்.

கண்ணுக்கு எரிச்சல் கொடுக்கும்படியான கிரவின் போன்ற எண்ணெய் விளக்குகளை உபயோகப்படுத்திக்கொண்டு அளவுக்கு மிஞ்சிப் படித்தலும் எழுதுவதும் மோசமானது. கிரவின் எண்ணெயை உபயோகிக்கிறவர்களுக்குத் தலைவலி, பித்தவாந்தி முதலியவைகள் ஸர்வஸாதாரணமாக இருக்கும். கண்களுக்கும் அதிக கெடுதலானதே. ஆகையால் தங்கள் த்ருஷ்டி குறையாமலிருக்க எண்ணமுள்ளவர்கள் 'கிரவின்' எண்ணெயை உபயோகிக்காமலிருப்பதே நலம்.

நாடகம், பாட்டுக்கச்சேரி முதலியவைகளில் தூக்கம் வந்து தள்ளும்பொழுது கவனியாமல் (புகையிலை தூள்) பொடி போட்டுக்கொண்டு விழித்திருத்தலும் தப்பிதமானதே.

இனி கண்ணுக்கு ஹிதமான கார்யங்களைப்பற்றி அந்தப் பத்ரிகை கூறுகிறது. காலையில் படுக்கையை விட்டு எழுந்தவுடன் அதிக குளிர்ச்சியும் சூடுமில்லாத ஸாதாரணமான ஜலத்தைக்கொண்டு கண்ணைத்துடைத்துக்கொள்ளுவதுடன், வாயில் ஜலத்தைவிட்டு நாக்கை வழித்து, முகத்தையும் கழுவிக் கொள்ளுவது நலம்.

தலைக்கு எண்ணெய் தேய்த்துக்கொண்டு ஸ்நானஞ்செய்யும்போது சிலர் கண்ணுக்குள் எண்ணெயை விட்டுத் தேய்ப்பதுண்டு. இது அனுபோகத்தில் நன்மை பயப்பதாகத் தோற்றவில்லையென்று அந்தப் பத்ரிகை கூறுகிறது. எண்ணெய் ஸ்வயமானதாக வில்லாவிட்டால் கண் பொங்கிக்கொண்டு வருத்தத்தைக் கொடுக்கிறது. தவிர, கண் என்பது ஒரு நீரேயல்லாமல் வேறொன்றுமில்லை. அது அதிக மெல்லியதான உறுப்பு. அதில் எவ்விதமான வஸ்துக்களையும் இடக்கூடாதென்பது பல ஐரோப்பிய வைத்ய சாஸ்த்ரிகளுடைய கருத்து. அப்படி கண்ணுக்குள் எண்ணெய் முதலியவைகளை இடுவதால் கண் வரவா சிறுத்துக்கொண்டே வருமென்பதில் தடையில்லை. ஆகையால் தலையுச்சியில் ஸ்வயமான எண்ணெயைத் தேய்ப்பதும், உள்ளங்காலில் எண்ணெயை இட்டுத் தேய்ப்பதுமே மகா ச்ரேஷ்டமானது. உள்ளங்காலுக்கும் கண்ணுக்கும் நெருங்கிய இரத்தவோட்ட ஸம்பந்தங்கள் இருப்பதாக பெரியோர் சொல்லுகிறார்கள். அக்காரணத்தினாலேயே உள்ளங்கால், நடக்கும்பொழுது தரையில் படாதபடி உள்ளமைந்திருப்பதாகவும் சொல்லுகிறார்கள். ஆகையால் உள்ளங்காலில் எண்ணெயை விட்டுத் தேய்ப்பதால் கண்ணுக்கு வெகு நன்மையுண்டாகும்.



# Departmental Notes.
# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.
## வித்யாவிஷயம்.

### Opening New Schools in Mysore.

மைஸூரில் புதிய பாடசாலைகள் ஸ்தாபிப்பது.— மைஸூரில் எலிமெண்டரிக் கல்வியைப் பிள்ளைகளுக்குக் கட்டாயப்படுத்திச் சொல்லிக்கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்களென்று ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். அங்கே புதிதாகப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிப்பது ஸம்பந்தமாக கவர்ன்மெண்டார் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். புதிதாகப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிப்பதில் முதலில் அதிக ஜனத்தொகையுள்ள க்ராமங்களிலும், பிறகு படிப்படியாக ஸ்வல்ப ஜனத்தொகையுள்ள க்ராமங்களிலுமாகப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கவேண்டும். அதிக ஜனத்தொகையுள்ள க்ராமத்தில் ஏற்கனவே ஒரு பள்ளிக்கூடமிருந்தால் அதில் பள்ளிக்கூடம் ஸ்தாபிப்பதைவிட, பள்ளிக்கூடமேயில்லாத சிறுக்ராமத்தில் அதை ஸ்தாபிப்பது நல்லது. எய்டட் ஸ்கூல்கள் ஏற்படுத்தவேண்டிய க்ராமங்களுள் ஐந்தாறு பர்லாங்கு தூரத்துக்குள்பட்ட சில க்ராமத்தொகுதிக்கு மத்ய ஸ்தானமாயிருக்கும் க்ராமத்தில்தான் முதலில் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கவேண்டும்.

எந்த க்ராமத்திலும் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்குமுன் க்ராமவாஸிகள் குறைந்தது 25-பேர்களை பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதாக வாக்களிக்க வேண்டும். அதோடு தினம் பாடசாலைக்கு வருபவர்களின் தொகை 15-க்குக் குறையக்கூடாது. க்ராமவாஸிகள்-ஒரு பள்ளிக்கூடக் கட்டிடம் கட்டிக்கொடுப்பதோடு, உபாத்யாயருக்கு வாடகையில்லாமலோ குறைந்த வாடகையிலோ வீடு கொடுக்கவேண்டும். இதோடு அவர்கள் உபாத்யாயரின் சம்பளத்துக்காக 5-ரூபாய் ரொக்கமாகவோ, ஸாமான்களாகவோ கொடுக்கவேண்டும். இவைகளெல்லாம் ஸர்க்கார் உதவிபெற்ற பள்ளிக்கூடங்களைப்பற்றியவை.

முக்யமாய் பெண்களுக்கும், தாழ்ந்தவகுப்பாருக்கும், கல்விக்காக ப்ரத்யேக முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டிய ப்ரதேசங்களிலுந்தான் கவர்ன்மெண்ட் பாடசாலைகள் ஸ்தாபிக்கப்படும்.

### Libraries in America.

அமெரிக்காவில் லைப்ரரிகள்.—இந்தியாவிலும் ஐரோப்பாவிலும் லைப்ரரிகளை ஸ்தாபித்து நிர்வகிப்பவர்கள் புஸ்தகங்கள் பத்ரமாயிருக்கவேண்டுமென்பதையே முக்ய நோக்கமாய்க் கொண்டிருக்கிறார்களென்றும், அமெரிக்காவிலோ வாசிப்பவர்களுக்கு ஸௌகர்ய மேற்படுத்துவதையே முக்யமாகக் கொண்டிருக்கிறார்களென்றும் ஒரு அமெரிக்க லைப்ரரி நிபுணர் தெரிவிக்கிறார். இந்தியாவிலும் ஐரோப்பாவிலும் லைப்ரரிகளில் புஸ்தகங்களை பீரோக்களில் வைத்துப் பூட்டியிருப்பதால், வாசிக்க வருகிறவர்களுக்கு புஸ்தகம் எடுத்துக்கொடுப்பதில் தாமஸம் ஏற்படுகிறது. ஐரோப்பாவில் லைப்ரரிக்குப் போகிறவர்கள் ஏதாவது புஸ்தகம் வேண்டுமென்று சொன்னால், அதை எடுத்துக்கொடுக்க சில ஸமயம் ஒருநாள் பிடிக்கிறதாம். அமெரிக்காவிலுள்ள நல்ல புஸ்தக சாலைகளில் புஸ்தகங்களைத் திறந்த பீரோக்களில் வைத்திருப்பார்களாம். வாசிக்க வருகிறவர்கள் யாதொரு தாமஸமுமில்லாமல் புஸ்தகத்தை எடுத்து வாசிக்கலாம். அமெரிக்காவில் இப்படி யிருப்பதற்கும் இந்தியாவில் வேறுவிதமா யிருப்பதற்கும் காரணமென்னவென்றால், அமெரிக்காவில் லைப்ரரிகளுக்குள் போக ஒரே வழிதானுண்டு, வெளியில் வருவதற்கும் ஒரு வழிதானுண்டு. இதனால் வாசிக்க வருபவர்கள் திறந்த பீரோக்களில் உள்ள புஸ்தகங்களை எடுத்துக்கொண்டு போய்விடுவது சிரமம். இந்தியாவிலுள்ள லைப்ரரிக் கட்டிடங்களிலும், ஐரோப்பிய லைப்ரரிக் கட்டிடங்களிலும் பல வழிகளிருப்பதால், புஸ்தகங்களைத் திறந்த அலமாரிகளில் வைத்திருந்தால், யாராவது புஸ்தகங்களை எடுத்துக்கொண்டு லைப்ரரி ஸிப்பந்திகளுக்குத் தெரியாமல் போய்விடக்கூடும். ஆகையால் புஸ்தகங்களை பீரோக்களில் வைத்துப் பூட்டவேண்டியிருக்கிறது. அமெரிக்காவைப்போல் இந்தியாவிலும் லைப்ரரிக் கட்டிடங்களை அமைத்து, புஸ்தகங்களை திறந்த பீரோக்களில் வைத்தால், வாசிக்க வருபவர்களுக்கு ஸௌகர்யமாயிருக்குமென்று மேற்சொன்ன லைப்ரரி நிபுணர் தெரிவிக்கிறார். இன்னும் அவர் பலர் வாசிக்கக்கூடிய புஸ்தகங்களில் ஸாமான்யப் பதிப்புகளை ஒவ்வொன்றிலும் அதிகமான ப்ரதிகள் இருக்கும்படி வாங்கிவைப்பது நல்லதென்கிறார்.

## TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### The Swadesamitran Year Book.

**நளவருஷத்திய சுதேசமித்திரன் பொது விஷய விளக்கம்.**—இது சுதேசமித்திரன் ஆபீஸில் வெளியிடப்பட்ட ஒரு நவீன புஸ்தகமாகும். இது இங்கிலீஷில் வெளியாகும் ‘ இயர்புக்’ என்னும் புஸ்தகங்களைப் போல் ராஜாங்க நடவடிக்கைகளையும் ஜனஸமூக விஷயங்களையும் தெரிந்துகொள்வதற்காக எழுதப்பட்டிருக்கிறது. இதில் இந்தியாவின் ராஜாங்கநீதி, சென்னை ராஜதானியின் நிலத்தீர்வை ஏற்பாடுகள், இந்தியாவின் பண லேவாதேதி, நீர்ப்பாசன வஸதிகள், விவஸாயம், கைத்தொழில் நிலைமை முதலிய பல விஷயங்களைப்பற்றி விரிவான வியாஸங்கள் அந்தந்த விஷயங்களில் நிபுணர்களான கனவான்களால் எழுதப்பட்டிருக்கின்றன. இன்னும் ஜனோபகார ஸபைகள், கவர்ன்மெண்டாரின் பற்பல டிபார்ட்மெண்டுகள் முதலிய பல விஷயங்களைப்பற்றி குறிப்புகளும், தற்போது நடக்கும் ஐரோப்பியயுத்தத்தைப்பற்றி 2-விரிவான வ்யாஸங்களும் இதில் இருக்கின்றன. இதன் விலை ரூ. 1–8–0. வேண்டுவோர் ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3, 4, கொண்டிசெட்டித் தெரு, மதராஸ் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

### Prathapa Mudaliar Charitram.

**ப்ரதாப முதலியார் சரித்திரம்.**— காலஞ்சென்ற மாயவரம் மாஜி முன்ஸிப் வேதநாயகம்பிள்ளை இயற்றிய ப்ரதாப முதலியார் சரித்திரத்தின் ஆறுவது பதிப்பு ப்ரதியொன்று வரப்பெற்றோம். இது மிகவும் ப்ரஸித்திபெற்ற புஸ்தகமாகையால் இதைப்பற்றி இங்கே விவரிக்க வேண்டியது அவச்யமில்லை. ஒரு தடவை வாசித்தபின் மறுதடவை வாசிக்க ரஸிக்காத இக்காலத்திய நாவல்களைப்போலன்றி, இது படிக்குந்தோறும் இனிமை குறையாதிருக்கிறது. இது சொற்சுவையும் பொருள் சுவையும் பொருந்தியதாய், பல நீதிகளடங்கிய ஒரு உயர்ந்த கதைப் புஸ்தகமாகும். இதை அநேகர் ரொமான்ஸ் என்னும் கதை வகுப்பைச் சேர்ந்ததாகச் சொல்லுவார்கள். இது யாவரும் வாசித்துப் பயன்பெறலாம். இதன் விலை 1 ரூ. வேண்டுவோர் ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3, 4, கொண்டிசெட்டித் தெரு, மதராஸ் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

### Picture Post Cards.

**படங்களுள்ள போஸ்ட் கார்டுகள்.**— சென்னை ஆர்க்கயலாஜிகல் டிபார்ட்மெண்ட் மானேஜராகிய மிஸ்டர் பி. வி. ஜகதீசய்யர் ஹிந்து தெய்வங்களின் படங்களை போஸ்ட் கார்டுகளில் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். ஒவ்வொரு தொகுதியிலும் ஆறு வெவ்வேறு படங்கள்கொண்ட 6-கார்டுகள் இருக்கின்றன. அவை யாவன : ஸுப்ரமண்யர், விநாயகர், பார்வதி, லிங்கம், ஏகாதசி தேவதை, நாராயணர். கார்டின் ஒரு பக்கத்தில் படமும், இங்கிலீஷில் படங்களைப்பற்றிய விவரமும் அச்சிடப்பட்டிருக்கின்றன. மறு பக்கத்தின் இடபாகத்தில் ஸமாசாரத்தையும், வலதுபாகத்தில் விலாஸத்தையும் எழுதலாம். வேண்டுவோர் சென்னை மைலாப்பூரிலுள்ள மிஸ்டர் ஜகதீசய்யருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

### On Temperance.

**மிதபோஜனமும் மதுவிலக்கும்.**—இது பாடசாலை ஸப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர் எஸ். பஞ்சாபிகேச சர்மா இயற்றியது. இதில் மிதமாகச் சாப்பிடுவதின் அவச்யம், சாராயம், கள், முதலியவைகள் குடிப்பதின் கெடுதிகள், புகையிலையை உபயோகிப்பதின் தீமைகள் ஆகிய இவைகளைப்பற்றி பல கதைகளுடன் விரிவாய் எழுதப்பட்டிருக்கிறது. பாடசாலை உபாத்யாயர்களுக்கேற்றது. விலை அணா 1. வேண்டுவோர் செங்கல்பட்டிலுள்ள இதன் ஆசிரியருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

### Bhimala.

**பீமலா அல்லது திவானின் மகள்.**—இது காலஞ்சென்ற ரோமேச சந்த்ர தத்தர் எழுதிய இப்பெயர் கொண்ட ஒரு நாவலின் தமிழ் அமைப்பாகும். இது அக்பர் சக்ரவர்த்திகாலத்தில் நடந்த ஒரு கதையாகும். இதைத் தமிழில் அமைத்தவர் மிஸ்டர் ஆர். பி. குழந்தை ஸாமிபிள்ளை. இதன் நடை ஸுலபமாயும், தெளிவாயும் இருக்கிறது. யாவரும் வாசிக்கக்கூடியது. இதன் விலை அணா 6. வேண்டுவோர் சென்னை, மைலாப்பூர், ஜெனரல் ஸப்ளை கம்பெனிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.



## SCIENCE AND INVENTION.

## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### A Monster Air Boat.

**ஒரு ப்ரம்மாண்டமான ஆகாயப் படகு.**—அமெரிக்காவில் ஏரோப்ளேன்கள் செய்யும் பெனுய்ஸ்ட் என்பவர் ஒரு ப்ரம்மாண்டமான ஆகாயப் படகு செய்திருக்கிறார். இதில் ஏறிப் பலதடவை பறந்து பார்த்ததில், இதில் ஏறிக்கொண்டு அட்லாண்டிக் ஸமுத்ரத்தைக் கடந்து ஐரோப்பாவுக்குப் போகலாமென்று சொல்லப்படுகிறது. இதைக்கண்டுபிடித்தவர் பற்பல சீதோஷ்ண நிலைமைகளிலும், காற்று நிலைமைகளிலும் இந்தப்படகு உதவுமா என்பதை யறிய இன்னும் சில பரீக்ஷைகள் செய்து கூடியசீக்ரம் அட்லாண்டிக் ஸமுத்ரத்தைக் கடக்க முயற்சி செய்வாராம். இந்தப் படகில் உபயோகிக்கப்படும் மோட்டார் யந்த்ரம் ரொம்ப சக்தியுள்ளது. இந்தப் படகில் உள்ள சிறகுகள் ரொம்பப் பெரியவை. அவைகள் விரிந்திருக்கும்போது அவைகளின் மொத்த நீளம் 65-அடியாகும். முதலில் பரீக்ஷைகள் செய்தபோது இந்தப் படகில் 7-பேர் ஏறிப்போனார்கள். யந்த்ரத்தை ஓட்டுவதற்கு எரிப்பதற்காக 72-பட்டணம் படி எண்ணெயும் படகில் ஏற்றியிருந்தார். ரொம்ப தூரம் படகு ப்ரயாணம் செய்யும்போது அதிக ப்ராயாணிகளை ஏற்றுவதற்கு பதிலாக எண்ணெயை அதிகமாக ஏற்றிக்கொண்டுபோவாராம்.

### German Silver.

**ஜெர்மன் ஸில்வர்.**—ஜெர்மன் ஸில்வர், ஜெர்மன் வெள்ளி யென்று பெயர்கொண்ட கலப்பு உலோகத்து இப்போது நிக்கல் ஸில்வர் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. யுத்தத்தால் இவ்விதம் பெயர் மாற்றப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. இது பேருக்கு ஜெர்மன் வெள்ளியே ஒழிய ஜெர்மனியில் செய்யப்படவில்லை. அதில் வெள்ளியும் சேரவில்லை. அது முதன் முதலில் சீனாவிலிருந்து கொண்டுவரப்பட்டது. செம்பு, நிக்கல், நாகம் ஆகிய இந்த மூன்று லோகங்களும் சேர்த்து உருக்கி ஜெர்மன் வெள்ளி செய்கிறார்கள். இதில் நிக்கல் எவ்வளவுக்கு அதிகம் சேருகிறதோ அவ்வளவுக்கு ஜெர்மன் ஸில்வர் உயர்ந்ததாகும். நல்ல ஜெர்மன் ஸில்வரில் நூற்றுக்கு 30 பாகம் நிக்கலும், நூற்றுக்கு 50-க்குமேல் செம்பும், நூற்றுக்கு 20-பாகம் நாகமும் இருக்கும். நாகத்தை எப்போதும் குறைவாய்ச் சேர்க்கவேண்டும்.

### Life of a Twelve Inch Gun.

**12-அங்குல பீரங்கியின் ஆயுள்.**—12 அங்குல பீரங்கிபோன்ற பெரிய பீரங்கிகள் மொத்தத்தில் உபயோகப்படக்கூடிய காலம் 3-ஸெக்கண்டுகள் என்று குண்டுகள் செய்வதில் பேர்போன ஒரு இங்கிலீஷ் கனவான் தெரிவிக்கிறார். அதாவது ஒரு பீரங்கியைக் கொண்டு எத்தனை தடவை சுடலாமோ அந்த எண்ணைக்கொண்டு பீரங்கியில் மருந்து வைத்திருக்கும் இடத்திலிருந்து அதன் வாய்க்கு குண்டுபோவதற்கு எவ்வளவு நேரம் பிடிக்குமோ அந்தக் காலத்தைப் பெருக்கினால் வரும் தொகை 3-ஸெக்கண்டாகும். $1\frac{1}{2}$ லக்ஷம் அல்லது $1\frac{3}{4}$ லக்ஷம் பெறும்படியான ஒரு 12 அங்குல பீரங்கியானது 3-ஸெக்கண்டுதான் ப்ரயோசனப் படுமென்றால், அது உபயோகப்படக்கூடிய காலம் குறைவென்றே சொல்லவேண்டும்.

### Aeroplanes for Exploration.

**தேசங்களை ஆராய்ச்சி செய்வதற்கு ஏரோப்ளேன்கள்.**—ஆப்ரிக்காவிலும், ந்யூகினிபோன்ற தீவுகளிலும் அநேக இடங்களில் ஐரோப்பியர்கள் போனதேயில்லை. அவ்விடங்களில காட்டு ஜனங்கள் வஸித்து வருகிறார்கள். அந்த ப்ரதேசங்களின் நிலைமைகளை யறிந்துவரப்போனால் அநேக இடங்களில் நடந்தே போகவேண்டிவரும். காட்டு ம்ருகங்களால் தொந்தரை ஏற்படக்கூடும். அநேக இடங்களில் நடந்துபோவதே ச்ரமமாயிருக்கும். இப்படிப்பட்ட ப்ரதேசங்களை ஆராய்வதற்கு ஏரோப்ளேனில் ஏறிப்போகலாமென்று ஸ்விட்ஸர்லண்ட் தேசத்து கனவான் ஒருவர் தெரிவிக்கிறார். அவர் ந்யூகினி தீவில் அவ்விதம் ஏரோப்ளேனில் ஏறிப் போய் ஆராய்ச்சி செய்வதற்கு அந்த தீவின் கவர்னரை அனுமதி கேட்டிருக்கிறாராம். இவ்விஷயம் ஆஸ்ட்ரேலியா கவர்ன்மெண்டாருக்கு அபிப்ராயத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

### Twinkling of the Star.

**நக்ஷத்ரங்கள் மின்மினுத்தல்.**—நக்ஷத்ரங்கள் மினுமினுப்பதற்குக் காரணம் அவைகளுக்கும் பூமிக்கும் நடுவில் உள்ள காற்றானது ஸதா அசைந்துகொடுப்பதே. நக்ஷத்ரங்கள் குளிர்ந்த காலத்திலும், காற்று பலமாய் அடித்துக்கொண்டிருக்கும்போதும் ரொம்ப மின்னுகின்றன.

# SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

### Leprosy in Madura.

**மதுரையில் கர்மவ்யாதி.**—கர்ம வ்யாதியென்றும் பெரிய வ்யாதியென்றும் சொல்லப்படும் கருங்குஷ்டரோகம் மதுரையில் சென்ற 5-வர்ஷகாலமாக அபரிமிதமாக அதிகரித்து வருகிறதென்று ஒரு நிருபர் மதுரை 'ஸௌத் இண்டியன் மெய்ல்' தமிழ் அனுபந்தத்தில் தெரிவிக்கிறார். உடல் முழுவதுமாவது உடலின்பாகமாவது வீங்கி முதலில் கை, கால், விரல்களிலும், செவிகளிலும், பிறகு உடம்புமுழுவதிலும் த்வாரமுண்டாகி அதிலிருந்து சீழ்வடியும் ரோகமே இங்கு குறிக்கப்படுகிறது. தற்போது மதுரையில் 100-க்கு 5-பேர்கள் இந்த வ்யாதியால் வருந்துவதாக அந்த நிருபர் அபிப்ராயப்படுகிறார்.

இந்த வ்யாதிஸ்தர்கள் இல்லாத இடம் காண்பதரிதாயிருக்கிறது. ஸ்வாமி ஸந்நதியிலும், கிழக்குச் சித்திரை வீதியிலும் பழ வ்யாபாரம் செய்பவர்களில் சிலர் இவர்களே. மத்ய மார்க்கட்டில் காய் கறி வ்யாபாரம் செய்பவரிற் சிலர் இத்தகையரே: சாமியார்கள் என்று சொல்லிக்கொண்டு கீழச்சித்திரை வீதியிலும் சிலர் இந்த வ்யாதிக்கிரையாயிருக்கிறார்கள். இந்த வ்யாதி மதுரை வாஸிகட்கு பால், தயிர், நெய் முதலிய உணவுப்பொருள்களை விற்கும் இடையர் தெருவிலும், ப்ராமணர் தெருவிலும் ஆங்காங்கு தலையெடுத்து வெகு விரைவாய் பரவ ஆரம்பித்துவிட்டது. இன்னும் இந்த வ்யாதியஸ்தரைப் பார்க்காத இடம் மதுரையில் அபூர்வமாகி விட்டது. இவர்கள் தெருவில் நடப்பதே மிகப் பயங்கரமானதென்றால் தின்பண்டங்களை விற்பது எத்துணை தீயது! இது தொத்து வ்யாதி என்பதை அறியாத பாமர ஜனங்கள் "கர்மமிருந்தால் வருவது வந்தே தீருமென" இப்படிப்பட்டவர்களிடத்தில் எப்பொருளும் பெறுகிறார்கள். இதைப்பற்றி மதுரை முனிஸிபாலிடியாரும் ஸுகாதார உத்யோகஸ்தர்களும் கவனிக்கவேண்டும்.

### Sastras on Food.

**ஆகாரத்தைப்பற்றி சாஸ்த்ரங்கள்.**—நமக்குத் தேவையான வஸ்துக்களுக்குள் போஜன பதார்த்தங்கள் அதிக முக்யமானவைகளானதனால் அவைகள் சுத்தமாயிருக்க வேண்டுமென்பதைப்பற்றி ஸ்ம்ருதிகளில் விதிகள் ஏற்பட்டிருக்கின்றன.

ஆபஸ்தம்ப ஸூத்திரத்தில் சொல்லி யிருப்பதாவது: பிணம் கிடக்கிற வீட்டிலும் ஆசௌசமுள்ள வீட்டிலும் சாப்பிடக் கூடாது. (இதற்குக் காரணம் என்னவென்றால், அப்படிப்பட்ட இடங்களில் தொத்து வ்யாதிகளுக்குக் காரணமான க்ருமிகள் போஜன பதார்த்தங்களின் மூலமாய் மற்றவர்களுக்குப் பாவும் என்பதாம்) சூத்ரர்களினால் தொடப்பட்ட போஜனம், மயிர் பூச்சி, எலிப்புழுக்கை முதலியவைகளினால் அசுத்தப்படுத்தப்பட்ட வஸ்துக்கள், கால், வஸ்த்ரம் முதலியவைகள் பட்ட போஜன பதார்த்தங்கள், பக்வம் செய்து கடையில் விற்கப்பட்ட போஜன பதார்த்தங்கள், முந்திய தினத்தில் பக்வம் செய்யப்பட்ட போஜனம் ஆகிய இவைகளைப் புசிக்கக்கூடாது. ஒருநாளைக்கு இரண்டு வேளை நியமத்தின்படி சாப்பிடவேண்டும். வயிறு நிறைய சாப்பிடக்கூடாது. ஒவ்வொருநாளும் குறித்த காலத்தில் சாப்பிடாவிட்டாலும், அதிகமாய்ச் சாப்பிட்டாலும் வயிறு ஸம்பந்தமான அநேக வ்யாதிகள் உண்டாகும்.—வித்யாபானு.

### Rural Sanitation.

**க்ராம ஸுகாதாரம்.**—சென்னை கவர்ன்மெண்டார் 20-கோவாபரெடிவ் ஸங்கங்களைத் தெரிந்தெடுத்து, க்ராம ஸுகாதார வேலைகளைச் செய்வதற்காக அவைகளிடம் பணங்கொடுத்தார்கள். இந்தக் கோவாபரெடிவ் ஸங்கங்களில் பெரும்பான்மையானவை தங்களிடம் விட்ட வேலைகளை நன்றாயும் த்ருப்திகரமாயும் செய்தனவென்று அந்த க்ராமங்களைச் சேர்ந்த தாலுக்கா போர்ட் ப்ரெஸிடெண்டுகள் தெரிவித்திருக்கிறார்கள். இதில் ஒருவிசேஷமென்னவென்றால் கோவாபரெடிவ் ஸங்கங்களின் பஞ்சாயத்தார்கள் இந்த ஸுகாதார வேலைகள் நிறைவேறும்பொருட்டு, யாதொரு ப்ரதிப்ரயோஜனமும் சம்பளமுமின்றி வேலை செய்தார்களென்பதே. இன்னும் இந்த ஸங்கங்கள் வேலைகளை நடத்தினதால் ஏற்பட்ட செலவானது ஸாதாரணமாய் கண்ட்ராக்டர்களால் நடத்தப்பட்டால் ஏற்படும் செலவைவிடக் குறைவாயிருந்தது.

### Remedy for Diarrhea.

**அஜீர்ணபேதிக்கு கைகண்ட ஔஷதம்.**—வெட்பாலரிசியும், பெருங்காயமும் ஸம அளவாகப் பொடித்து உட்கொள்ள 5-அல்லது 6-வேளையில் அஜீர்ணபேதி நிவ்ருத்தியாகும்.—வைத்ய கலாநிதி.



# LAW.

## சட்டம்.

### Suit for Injunction Restraining Marriage.

**கல்யாணத்தை நிறுத்த வ்யாஜ்யம்போட்டது.**—குண்டூர் ஜில்லாவில் உள்ள ஒரு க்ராமத்தில் அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்திருந்த ஒருவர் 1906-ம் வர்ஷம் இறந்துபோனார். அவருக்கு இரண்டு மைனர் பெண்களும் ஒரு மனைவியும் உண்டு. அவர் இறந்துபோன பிறகு, அவரது மனைவி பெண்களுக்கு கார்டியனாக இருந்தாள். மனைவி தன் தாயாரை பெண்களுக்கு கார்டியனாக உயில் மூலமாக நியமித்துவிட்டு இறந்து போனாள். மைனர் பெண்களின் பாட்டியும் 1911-ம் வர்ஷம் இறந்துபோனாள். இறந்துபோவதற்கு முன், மைனர் பெண்களின் தகப்பனாருடைய ஸகோதரரை கார்டியனாக நியமித்திருந்தாள். அந்த ஸகோதரர் பெண்களை ஒப்புக்கொண்டு பெரிய பெண்ணுக்குத் தன் ஸொந்தச் செலவில் கல்யாணம் செய்து வைத்தார். சிறிய பெண் கல்யாண வயஸடைந்ததும், அவர் ஒரு நல்ல குடும்பத்தில் கல்யாணம் செய்துகொடுக்க ஏற்பாடு செய்திருந்தார். ஆனால் நடுவில் அவருக்கும் பெண்ணின் மாமனுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது. மாமன் அந்தப் பெண்ணை தனது பந்துவின் புத்ரன் ஒருவனுக்கு கல்யாணம் செய்து கொடுக்க வேண்டுமென்று விரும்பினார். பெண்ணுக்குக் கார்டியனான தகப்பனின் ஸகோதரர் இந்த ஸம்பந்தத்தை ஒப்புக்கொள்ளவில்லை. இதன்மேல் பெண்ணின் மாமன், பெண் வஸித்துவரும் பந்துக்களுடன் ஒக்குமத்தாயிருந்துகொண்டு, கார்டியனுக்குத் தெரியாமலும் அவரது ஸம்மதத்தைப் பெறாமலும் அவரது குடும்பத்துக்கு விரோதமாயிருந்த ஒரு குடும்பத்திலுள்ள ஒருவனுக்குக் கல்யாணம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்துவிட்டார். அதன்மேல் கார்டியனானவர் தான் கார்டியன் என்று கோர்ட்டில் உத்தரவாகும்படிக்கும், அதுவரையில் பெண்ணுக்கு நிச்சயமாயிருக்கிற கல்யாணத்தை நடத்தாமலிருக்கும்படி பெண்ணின் மாமனுக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் உத்தரவிடும்படிக்கும் கோர்ட்டில் மனுப்போட்டார். ஹைகோர்ட்டார் கல்யாணத்தை நடத்தக்கூடாதென்று உத்தரவு போட்டார்கள்.

### Silt Clearance.

**வாய்க்கால்வெட்டுதல்.**—ரெவின்யூ டிபார்ட்மெண்டார் கும்பகோணத்திலுள்ள ஒருபாசன வாய்க்காலிலுள்ள மண்ணைவாரி சீர்திருத்தினார்கள். இதற்கு குடிமராமத்து சட்டப்படி ஒவ்வொரு மிராசுதாரும் வேலையாளனுப்பவேண்டும். அல்லது பணம் கொடுக்க வேண்டும். கும்பகோணத்திலுள்ள ஐராவதம் செட்டியாரென்பவர் வேலையாளனுப்பவும் இல்லை. பணமும் கொடுக்கவில்லை. அதன்மேல் ரெவின்யூ டிபார்ட்மெண்டார் ஷை செட்டியாரிடம் பணம்கேட்டு, அவர் கொடாததால், அவருடைய வெள்ளிக்குடமொன்றை ஜப்தி செய்யவே, செட்டியார் பணத்தைச் செலுத்திவிட்டு, கவர்ன்மெண்டின்மேல் பணத்தை வாப்ஸ்செய்யும்படி கும்பகோணம் ஜில்லா முன்ஸிப் கோர்ட்டில் வ்யாஜ்யம் போட்டார். வாய்க்கால் வெட்ட மிராசுதார்கள் ஆள் அனுப்புவதும், பணங் கொடுப்பதும் அந்த ஊரில் வழக்கமில்லையென்றும், அந்த வாய்க்கால் வடிகாலாக உபயோகமானதுமுதல் கும்பகோணம் முனிஸிபாலிட்டியாரே அந்த வாய்க்காலை வெட்டி மண்வாரி யிருக்கிறார்களென்றும், செட்டியார் வாதித்தார். கவர்ன்மெண்ட் தரப்பில், மிராசுதார்கள் வாய்க்காலை சீர்திருத்த ஆள் அனுப்புவதும், இல்லாவிட்டால் பணம் கொடுப்பதும் வெகுகாலமான வழக்கமென்று வாதிக்கப்பட்டது. இதை முன்ஸிப் ஏற்றுக்கொண்டார். ஆனால் கும்பகோணம் முனிஸிபாலிடியார் 1907-ம் வர்ஷத்தில் வாய்க்கால் வெட்டும் செலவை தாங்களே ஏற்றுக் கொள்வதாகத் தீர்மானித்திருப்பதால், ஷை செட்டியாரிடம் வஸூல் செய்யப்பட்ட தொகையை வாப்ஸ் செய்யவேண்டுமென்று தீர்ப்பு செய்தார்.

### Suit for Injunction against Trespass.

**நிலத்தில் புகாதபடி தடுக்க வ்யாஜ்யம்போடுதல்.**—ஒரு நிலம் சிலருக்கு பொதுவில் ஸொந்தமாயிருந்தது. ஆனால் அவர்களில் ஒருவர்மாத்ரம் அதை தன்வசத்தில் வைத்திருந்தார். அது அவருடைய வசத்தில் இருக்கும்போது, அந்த நிலத்தில் யாராவது புக எண்ணியிருந்து, அதைத் தடுக்க வ்யாஜ்யம் போடும்போதும், அந்த நிலம் அவர் ஒருவருடைய வசத்திலேயே இருக்கும்பக்ஷத்தில், அவர் மற்ற பாத்யஸ்தர்களை பார்ட்டிகளாகச் சேர்க்காமலே, நிலத்தில் புக எண்ணினவர்களை புகாதபடி தடுக்க வ்யாஜ்யம் போடலாம்.

3, லாவீக்லி-542,

## SOCIETY AND RELIGION.

## ஜன ஸமூகமும் மதமும்.

### Is the Bagavat Gita Complete?

பகவத்கீதை ஸம்பூர்ணமானதா?-- இப்போது வழங்கிவரும் பகவத்கீதை ஸம்பூர்ணமா என்பதைப் பற்றி பத்ரிகைகளில் விவாதம் பலமாக நடந்துவருகிறது. இதை ஆரம்பித்தவர் மிஸ்டர் வி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார். தற்போது வழங்கிவரும் கீதையில் 700 ச்லோகங்களே இருக்கின்றன. மிஸ்டர் அய்யங்கார் சொல்லுவதென்னவென்றால், பகவத்கீதையின் 18-வது அத்யாயத்துக்குப் பிறகு உள்ள அத்யாயத்தின் முதல் ச்லோகத்தில் 'கீதையில் அடங்கின ச்லோகங்களில் 620 ஸ்ரீகிருஷ்ணனால் சொல்லப்பட்டன; 57 அர்ஜுனனால் சொல்லப்பட்டன. 67 ஸஞ்ஜயனால் சொல்லப்பட்டன. 1 த்ருதராஷ்டிரனால் சொல்லப்பட்டது. ஆக கீதையின் ச்லோகக் கணக்கு 745 என்று கண்டிருக்கிறது. அப்படியானால் மிகுதியான 45 ச்லோகங்கள் எங்கே?

நமது தேசத்தில் வெகு காலமாய் கீதையைப்பற்றின பாஷ்யங்களையும், டீகைகளையும், டிப்பணிகளையும், ஸ்வதந்த்ர க்ரந்தங்களையும் மொழிபெயர்ப்புக்களையும் எழுதின மகான்கள் இதைப்பற்றி யாதொன்றும் சொல்லவில்லை. இதற்குக் காரணத்தையும் தெரிவிக்கவில்லை. மதுஸூதன ஸரஸ்வதி மாத்ரம் பாரதத்தில் காணப்படும் ச்லோகம் ப்ரக்ஷிப்தமென்றும் (கற்பனை என்றும்) பிரமாணமாகாதென்றும் சொல்லுவதாகத் தெரிகிறது.

இப்படிச் சொல்லிவிட்டு, மிஸ்டர் அய்யர்கார் நமது கீதை ஸம்பூர்ணமல்லவென்கிறார். அதோடு அவர் இதுவரையில் ஸாமான்ய ஜனங்களுக்குக்கிடைக்காத கண்டரகஸ்யமென்னும் க்ரந்தத்தால் இந்தக் குறைநீங்கக் கூடுமென்றும், அந்த க்ரந்தத்தில் கீதையில் இப்பொழுது காணப்படாத ச்லோகங்கள் எவ்விடத்தில் ந்யாயமாயிருக்க வேண்டுமென்றும், இருந்தனவென்றும், பிற்காலங்களில் எப்படி நஷ்டமாயினவென்றும் தெளிவாய் சொல்லப் படுகிறது என்று சொல்லுகிறார்.

சிலநிருபர்கள் இதற்குச் சொல்லும் ஆக்ஷேபமாவது: பகவத்கீதை ச்லோகங்களின் ஸங்க்யையைக் குறிக்கும் ச்லோகம் அநேக பதிப்புகளில் காணப்படவில்லை. ஆனால் பம்பாய் நகரத்தில் ஸ்ரீநீலகண்டருடைய வ்யாக்யானத்துடன் அச்சிடப்பட்ட பாரதத்தில் அந்தச்லோகமிருக்கிறது.

வ்யாக்யானம் செய்த நீலகண்டர் கௌட தேசத்துப் பாடத்தில் அந்த ச்லோகமில்லையென்று தள்ளியிருக்கிறார். அவ்விதம் தள்ளுவதற்கு நல்ல காரணமுண்டு. ஏனெனில் அந்த ச்லோகம் வைசம்பாயனர் பேசியதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலந்த ஸந்தர்ப்பத்தில், வைசம்பாயனர் பேசவேண்டிய ந்யாயமொன்றையுங் காணோம். பின் அத்யாயத்துக் கடைசியில் (அதாவது கீதையின் 18-வது அத்யாயத்தில்) ஸஞ்சயன் த்ருதராஷ்ட்ர மஹாராஜாவுக்கு க்ருஷ்ணார்ஜுன ஸம்பாஷணையைச் சொல்லி, எவ்விடத்தில் யோகேச்வரனான க்ருஷ்ண பகவானோ, எங்கே வில்தரித்த அர்ச்சுனனோ அங்கே ஜயமிருப்பது நிச்சயமென்ற தன் நம்பிக்கையை வெளியிட்டு, பின்னர் யுத்தத்தின் வரலாற்றைச் சொல்வேண்டியது உசிதம். அங்ஙனமே அடுத்த அத்யாயத்தில் ஸஞ்ஜயன் யுத்த சரித்ரத்தைச் சொல்லத்தொடங்கி யிருக்கிறான். ஆகையாலிதற்கு நடுவில் வைசம்பாயனர் பேச யாதொரு நியாயமுமில்லை. அதுபற்றி அவர் பேசியதாய் இரண்டொரு புத்தகங்களில் மட்டும் காணப்படுகிற அந்த ச்லோகத்தை, அதிக பாடமென்று நீலகண்டர் சொல்லியவண்ணம் தள்ளிவிட வேண்டும்.

மேலும், கீதையில் 745 சுலோகங்களென்ற கணக்குப் பிரகாரம், அர்ச்சுனன் 57 ச்லோகங்கள் பேசினானென்று சொல்லப்படுகிறது. ஆயினும் இப்பொழுதெண்ணினால் 57 ச்லோகங்களுக் கதிகமாகவே அர்ஜுனன் பேசியிருக்கிறான். இவ்விதமேன் ச்லோகங்களதிகமாயிருக்கின்றன என்று நன்கு விளங்கவில்லை.

கடைசியாய் ஸ்ரீசங்கராசார்யர் தாமியற்றிய கீதாபாஷ்யத்தில் கீதையில் 700 ச்லோகங்கள் தான் உண்டென்று ஸ்பஷ்டமாகச் சொல்லி யிருக்கிறார். காணாமற்போன 45 ச்லோகங்களவர்க்கும் அகப்படவில்லையென்று நம்புவது அஸாத்யமாயிருக்கிறது. சங்கராச்சார்யார் அதிக ச்லோகங்களை ஏற்றுக்கொள்ளாததே அவைகள் கீதையில் சேர்ந்தவையென்பதற்குத் தகுந்த ஆதாரமாகும்.

மிஸ்டர் வி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார் கண்ட ரகஸ்யத்தில் பகவத்கீதையைப் பற்றி ப்ரஸ்தாபம் செய்யும் பாகத்தை மொழிபெயர்த்து வெளியிடப் போவதாகத் தெரிகிறது. அதில் மேற்சொல்லிய ஆக்ஷேபனைகளுக்கும், அவைபோன்ற மற்றவைகளுக்கும் தக்க ஸமாதானம் சொல்லியிருப்பதாக மிஸ்டர் ஸ்ரீநிவாஸய்யங்கார் தெரிவிக்கிறார். ஆகையால் அது வெளிவந்தால் பகவத்கீதை விஷயத்தை ஆராய்ச்சி செய்ய அனுகூலமாயிருக்கும்.



## HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### Treatment for Fainting.

மூர்ச்சையில் கவனிக்கத்தகுந்த சிகிச்சை.—மூர்ச்சை ஒருவனுக்கு உண்டானால் அதற்குக் காரணம் எதுவாயிருந்தபோதிலும் பொதுவாக அந்த ஸமயத்தில் பிணியாளிக்குச் செய்யவேண்டிய சிகித்ஸோபசாரம் சில உண்டு —

1. பிணியாளியை நிமிர்ந்தவாக்கில், கைகால்களை விரித்து, தலை உடம்பினும் தாழ்ந்திருக்குமாறு படுக்க வைத்து விடுவது.

2. உடம்பிலுள்ள வஸ்த்ரம் முதலியவற்றின் எல்லாக் கட்டுகளையும் அவிழ்த்துத் தளர்த்திவிடுவது.

3. கூடுமானால் வெளிச்சம் பிணியாளியின்மேல் தாக்காதபடி நிழலை உண்டுபண்ணுதல்.

4. ரோகியின் அருகில் ஜனங்களை வராமல்செய்வது.

5. குளிர்ந்த ஜலத்தை முகத்தின்மேலும் மார்பிலும் தெளிப்பது.

6. கை கால்களை ஹ்ருதயத்தை நோக்கியவாறு உருவிப்பிடித்து விடுதல்.

7. உத்தீபநம் செய்வித்தல்: இதில் நவாச்சார வாயுவை நாசியில் ஏற்றலாம்; பிணியாளிக்கு ஒருவாறு ஞாபகசக்தியிருந்தால், அம்மோனியாவை ஒரு ட்ராம் அளவில் எடுத்து இரண்டு அவுன்ஸ் ஜலம்சேர்த்து விளாவி உட்கொள்ளச் சொல்லலாம்.

8. வியாதி ரொம்பவும் கடுமையா யிருக்குமானால்,—

(1) முன்னந்தண்டிற்கு நேராகப் பனிக்கட்டியால் தேய்ப்பது.

(2) ஹ்ருதயத்திற்கு நேராக மார்பின்மேல் கடுகு பொட்டலிகையைப் (mustard plaster) ப்ரயோகிப்பது.

(3) காப்பியைக் குழம்பாகக் காய்ச்சி பாலில்லாமல் உட்கொள்ளக் கொடுப்பது,

இப்படி ஒரு டாக்டர் தெரிவிப்பதாக 'வைத்ய கலாநிதி' எழுதுகிறது.

### Soap and Shaving.

ஸோப்பும் க்ஷவரம் செய்துகொள்வதும்.—அநேகர் க்ஷவரம் செய்துகொள்ளும்போது ஸோப்புஜலத்தால் மயிரைத் தேய்த்துப் பிறகு க்ஷவரம் செய்யச் சொல்லுகிறார்கள். இது மேல்நாடுகளில் ரொம்ப விசேஷமாய் அனுஷ்டானத்தி லிருந்துவருகிறது. இப்போது ஒரு மேல்நாட்டுக் கனவான் இந்த ஏற்பாடு அனாவச்யமென்றும், சுத்த ஜலத்தால் மயிர்க்கால்களை நன்றாய்த் தேய்த்தால் போதுமென்றும் சொல்கிறார். மேலும் ஸோப்பில்லாமல் க்ஷவரம் செய்துகொள்ளுவதால் செலவு குறைவதோடு, தோலில் எரிச்சல் அதிகமாய் உண்டாவதில்லையென்றும், கத்தி சீக்ரம் மழுங்கிப்போவதில்லை யென்றும், வேலையும் சீக்ரத்தில் முடிந்துவிடுகிறதென்றும் அவர் சொல்லுகிறார்.

### Adulterated Tea.

கலப்படமான தேயிலை.—சில வ்யாபாரிகள் தேயிலை நல்ல ரங்கா யிருப்பதற்காக அதில் சாயம் கலப்பார்கள். தேயிலை ஸ்வயமானதா, சாயங்கலந்ததா என்பதைக் கண்டு பிடிக்க ஸுலபமானவழி யென்னவென்றால், அதை ஒரு நல்ல வெண்மையான துணியில் போட்டுத் தேய்க்கவும், துணியில் வர்ணம் உண்டானால் தேயிலைக்குச் சாயமேற்றி யிருக்கிறதென்றும், துணி வெள்ளையாகவே இருந்தால், தேயிலை நல்லதென்றும் கண்டுகொள்ளலாம்.

### Fly - Poison.

ஈக்களைக் கொல்லும் விஷம்.—பார்மலின் என்னும் மருந்தை இங்க்லீஷ் மருந்துக்கடைகளில் வாங்கி, அதில் ஒரு தேயிலைக்கரண்டி யெடுத்து மூன்று மேஜைக்கரண்டி யளவு பாலில் கலந்து ஒரு அகன்ற பீங்கான் தட்டில் ஊற்றி, ஈக்கள் அதிகமாயுள்ள இடத்தில் வைக்கவும். ஈக்கள் அது ஒரு சிறந்த பானமென்றெண்ணிக் குடிக்க வந்து இறந்துபோகும். இது கைகண்ட முறையென்று சொல்லப்படுகிறது.

### To Remove Stains.

கறைகளை எடுக்க.—காப்பி அல்லது தேயிலைக் கஷாயம் விழுந்து துணியில் கறை ஏற்பட்டால், கறைபட்ட இடத்தை ஜலத்தில் நனைத்து, இரண்டுமணி நேரம் அப்படியே ஈரமாக வைத்திருக்கவேண்டும். பிறகு ஸோப்பால் தேய்த்து சுத்தம் செய்யவும். கறை விட்டுப்போகும். அப்படிப் போகாவிட்டால் மறுபடியும் முன்போல செய்யவும்.

### Treatment for Falling Hair.

தலைமயிர் உதிர்வதற்கு சிகித்ஸை.—மிளகாயை ஜலத்தில் கொதிக்கவைத்து அந்த ஜலத்தை இறுத்து எடுத்து தலையில் தேய்த்தால் தலைமயிர் உதிர்வது நின்றுவிடுமென்று ஒரு இங்க்லீஷ் வைத்யப்பத்ரிகை எழுதுகிறது.

## AGRICULTURE.

## விவஸாயம்.

### Selection of Seed Paddy.

**விதை நெல்லை நல்லதாகத் தேர்ந்தெடுத்தல்.**—நெல் வயலில் அறுவடையாவதற்கு முன் நல்ல செழுமையாய் வளர்ந்திருக்கும் கதிர்களிலிருந்து விதையெடுத்து நாற்றுவிட்டு, அதை நட்டால் மாஸூல் அதிகமாகிறதென்று ஒரு மிராசுதார் 'சுதேசமித்திர'னில் எழுதுகிறார்.

தஞ்சாவூர் ஜில்லா கலெக்டர் மிஸ்டர் வுட் என்பவர் அவருக்கு இதுவிஷயமாக சிலயோசனைகள் சொன்னாராம். அதாவது: "செம்மையாய் விளைந்திருக்கும் நிலத்தில் வாளிப்பாய் உள்ள கதிர்களில் இருக்கும் அதிக திறமான நெற்களைப் பொறுக்கி விதையாக வைத்துக்கொண்டு, அடுத்த விதைவிடும் காலத்தில் ஒரு ஸெண்டு நிலத்தை நாற்றங்காலாக பரீக்ஷார்த்தமாய் எடுத்துக்கொண்டு, அதில் மேற்படி விதைகளை விதைத்து அதனால் உண்டாகும் மாஸூலைக்கொண்டு மறு வருஷத்திற்கு விதையாக வைத்துக்கொள்ள வேண்டும். அந்த மாஸூல் அறுவடைக்குமுன் அதிலுள்ள வாளிப்புள்ள கதிர்களில் முன்போல விதை பொறுக்கி வைத்து மறுபடியும் நல்ல நாற்றங்காலில் விதை தெளிக்கவேண்டும். அவ்விதமாய் வருஷா வருஷம் விதை பொறுக்கித் தெளித்துக்கொண்டு போனால் 12-வது வர்ஷத்தில் ஏகர் 1-க்கு ஸாதாரணமாய் விளைந்ததைப் பார்க்கிலும் இரட்டிப்பு மடங்கு விளையும் என்பது அவருடைய அபிப்ராயம்". மேற்சொன்ன மிருபர் கலெக்டர் சொன்ன யோசனையை அனுஸரித்ததில் அவருக்கு மாஸூல் அதிகம் கிடைத்திருக்கிறதாம். 1912-ம் வர்ஷத்தில் கதிர்களிலிருந்து விதை பொறுக்கியெடுத்து 1913-ம் வர்ஷத்தில் நாற்று விட்டாராம். அந்த நாற்றுகளை வயலில் நட்டதில் ஒரு ஏக்கருக்கு 45-கலம் வீதம் கிடைத்ததாக அவர் சொல்லுகிறார். இது குறுவை நெல்லாகும். 1913-ம் வர்ஷத்தில் சம்பா விதை நெல்லைப் பொறுக்கி அடுத்த வர்ஷங்களில் நாற்று விட்டு நட்டுவந்ததில், 1914-ம் வர்ஷத்தில் ஏகர் 1-க்கு 25-கலமும், 1915-ம் வர்ஷத்தில் 27-கலமும், 1916-ம் வர்ஷத்தில் 30-கலமும் கிடைத்தனவாம். இந்த அதிக மாஸூலானது விதை பொறுக்குவதில் மாத்ரம் ஏற்பட்டது. மற்றப்படி எரு முதலியவை ஒன்றும் போடப்படவில்லையாம். விதை பொறுக்குவதை தொடர்ச்சியாக 12-வர்ஷம் செய்து வந்தால் மிஸ்டர் வுட் சொல்லுகிறபடி இரட்டிப்பு மாஸூல் கிடைக்குமென்று ஷை மிருபர் அபிப்ராயப்படுகிறார்.

### Foot and Mouth Disease.

**கோமாரி அல்லது ம்ருகங்களின் கால்நோய், வாய்நோய்.**—இந்த நோய் கண்ட உடனே அந்த ம்ருகத்துக்கு அரை ராத்தல் நிறையுள்ள ஆலிவ் ஆயில் என்னும் ஜெயதூன் எண்ணெயை உள்ளுக்குக் கொடுக்கவேண்டும். இப்படிச் செய்வதில் அநேகமாய் காலில் நோவிருக்கும்போது இவ்யாதி வாயில் உண்டாவதில்லையாம். ஆனால் வாயிலும் நோய் கண்டவிடத்து, கருவேலந்தழையை நன்றாக அறைத்து நெய்யோடு கலந்து வாயில் நன்றாகத் தேய்த்தால் மூன்று அல்லது நாலு நாள்களில் ஸௌக்யமாகும். காலில் கண்ட நோய்க்குக் காய்ந்த கருவேலங்காயில் விதையை எடுத்தெறிந்துவிட்டு தோலை மாத்ரம் நன்றாகத் தூள் செய்து வெங்காயத்தோடு சேர்த்துக் காலில் போடவேண்டும். வெங்காயப்பசையை பின் வருமாறு செய்யலாம்.

அரை ராத்தல் வெங்காயத்தை பாணலியில்போட்டு நிறைய ஜெயதூன் எண்ணெய் விட்டு கருகும் வரையில் பொரித்தெடுக்கவேண்டும். பிறகு இன்னும் ஜெயதூண் எண்ணெய் விட்டு அரைத்து இந்தப் பசையை காலில் தடவி யதன்மேல் கருவேலங்காயின் தோல் தூளைத் தூவவேண்டும். ஒருவேளை அந்த ம்ருகம் அந்தப் பாகத்தை நக்குமானால் காலை கோணிச்சாக்கினால் நன்றாக மூடிக் கட்டிவிடவேண்டும். இல்லாவிட்டால் அப்படிக் கட்டவேண்டியதில்லை. இம்மாதிரி செய்த பிறகு அந்த ம்ருகத்தை வெதுவெதுப்பான புழுதியில் நடக்கச்செய்யவேண்டும். ம்ருகம் காலை நக்கினால் பிறகு அதேயிடத்தில் புதிதாய் மாம்ஸ முடிச்சுகள் ஏற்படும். இவைகளின்மேல் பழுக்கக் காச்சின இரும்புக்கொழுவையிட்டு இழுத்து அதன்மேல் துத்தத்தை நன்றாகப் பொடித்து சூடாக்கிப் போடவேண்டும். பிறகு பழைய புளியை வைத்துக் காலில் கட்டவேண்டும். இந்த நோய் ஸௌக்யமாகும் வரைக்கும் ஸ்வல்பமாக குளிர்ச்சி யுண்டாக்கக்கூடிய உணவு கொடுத்து வரவேண்டியது.



## CO-OPERATION.

## கோவாபரேஷன்.

### Co-operative Graln Banks.

**கோவாபரேடிவ் தான்ய பாங்க்கள்.**—வடக்கே பேஹாரில் கோவாபரெடிவ் நாணய பாங்கிகள் என்று ஒருவகை கோவாபரெடிவ் ஸங்கங்கள் நடந்து வருகின்றன. மற்ற கோவாபரெடிவ் ஸங்கங்கள் பணத்தில் கொடுக்கல், வாங்கல் நடத்தி வருவதுபோலன்றி, இவைகள் தான்யங்களிலேயே கொடுக்கல் வாங்கல் நடத்திவருகின்றன. இந்த பாங்கிகளின் முக்ய நோக்கம் பஞ்சகாலத்தில் ஜனங்களுக்கு உதவி செய்வதே. க்ராமத்திலுள்ள ஜனங்கள் நன்றாய் விளையுங் காலங்களில் தங்களுடைய மாஸூலிலிருந்து, தங்களுடைய சக்திக்கு இயன்றவாறு, அதிகமாகவோ குறைவாகவோ தான்யத்தை பாங்கியிடம் ஒப்புவிக்கிறார்கள். விளையாத காலங்களில் பாங்கியிலுள்ள தான்யத்திலிருந்து வேண்டியவர்களுக்குக் கடன் கொடுக்கிறார்கள். கடன் வாங்குகிறவர்கள் வாங்கின தான்யத்துக்கு ஒரு குறிப்பிட்ட அளவு தான்யம் வட்டியாகக் கொடுக்கிறார்கள். இந்த வட்டி தான்யம் வர்ஷா வர்ஷம் சேர்ந்து நாளடைவில் அதிகமாகி பஞ்சம் நேர்ந்த காலத்தில் ஜனங்களுக்கு உபயோகப்படுகிறது.

இந்த பாங்கியின் ஸௌகர்யங்கள் பின்வருமாறு:—

(1) இதை ஒவ்வொருக்ராமத்திலும் ஏற்படுத்தலாம். இதற்கு அன்யர்களிடமிருந்து உதவியை எதிர்பார்க்க வேண்டாம்.

(2) ஒவ்வொருவரும் ஸ்வல்ப தான்யமே பாங்கியில் சேர்ப்பதால் எவருக்கும் மீத்து வைப்பதில் கஷ்டம் கிடையாது.

(3) ஸங்கத்தை நடத்தி வருவதில் செலவு அதிகம் ஏற்படாது.

(4) நாணயபாங்கிகளில் அதிகமாகக் கடன் வாங்குவதுபோல் இந்த தான்ய பாங்கிகளில் கடன் அதிகமாய் வாங்க இடம் ஏற்படாது.

(5) புது தான்யம் அறுவடையானவுடன் பழைய தான்யத்தை விற்றுவிட்டு, புது தான்யத்தை வாங்கிக் களஞ்சியத்தில் கொட்டிவைக்கலாம். இதனால் லாபமேற்படும். மேலும் பழைய தான்யம் கிடைக்காமல் புது தான்யம் சாப்பிடுகிறவர்களுக்கு நோய் ஏற்படுவதுண்டு. அதைத் தடுத்துவிடலாம்.

(6) விவஸாயிகள் சாப்பிடுவதற்கு நல்ல தான்யம் பாங்கியிலிருந்து பெறக்கூடுமாதலால், தங்களுடைய மாஸூலை நல்ல விலை கிடைக்கும் வரையில் காத்திருந்து விற்கலாம்.

(7) தான்ய பாங்கியானது க்ராமத்துக்கு பொதுவில் ஸொந்தமாதலாலும், அதில் உள்ள தான்யத்தை விற்க யாருக்கும் அதிகாரமில்லையாதலாலும், க்ராமத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு தான்யம் இருந்துகொண்டே இருக்கிறது.

(8) க்ராம தான்ய பாங்கிகள் தேசமெங்கும் ஏற்பட்டால், பஞ்சகாலத்தில் கஷ்டமிராது.

(9) பஞ்சமேற்பட்ட காலத்தில் ரெயில்வே இல்லாத ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு தான்யம் கொண்டுபோவதென்றால் ரொம்பகஷ்டமாயிருக்கிறது. ஒவ்வொரு க்ராமத்திலும் மேற்சொன்ன தான்ய பாங்கிகள் ஏற்படுத்திவிட்டால், யாதொரு கஷ்டமும் ஏற்படாது.

### Training Co-operative Inspectors.

**கோவாபரேடிவ் இன்ஸ்பெக்டர்களைப் பயிற்சி செய்வது.**—சித்திரை மாஸத்து 'ஜனோபிமானி'யில் கோவாபரெடிவ் ஸங்கங்களைத் தணிக்கை செய்வது ஸூபர்விஷன் ஆகிய இவைகளை இன்னின்னாரிடம் பிரித்துக் கொடுக்கிறதென்பதைப்பற்றி கவர்ன்மெண்டார் போட்டிருக்கும் உத்திரவைத் தெரிவித்தோம். அவ்வேலைக்கு வேண்டியிருக்கும் கோவாபரெடிவ் இன்ஸ்பெக்டர்கள் ஸூபர்வைஸர்கள் ஆகிய இவர்களைப் பயிற்சி செய்வது விஷயமாய் ஒரு உத்தரவுபிறப்பித்திருக்கிறார்கள். அவ்வேலையில் பழக ப்ரியப் படுகிறவர்கள் ஸ்கூல் பைனல் பரீக்ஷையில் தேறியிருக்கவேண்டும். அவர்கள் தங்களுடைய ஸொந்தச் செலவில் கோவாபரெடிவ் ரெஜிஸ்ட்ராரின் கீழ் பயிற்சி பெறவேண்டும். அவர்கள் ரெஜிஸ்ட்ராரும் அவருடைய உதவி உத்யோகஸ்தர்களும் நடத்தும் கோவாபரேஷன் வகுப்புகளில் வாசித்துப் பயிற்சி அடைவதோடு, ஒரு தெரிந்தெடுத்த பயிற்சி அடைந்த கோவாபரெடிவ் இஸ்பெக்டரின் கீழிருந்து இன்ஸ்பெக்ஷன், ஸூபர்விஷன் வேலைகளைச் செய்து பழகவேண்டும்.

இப்படிப் பயிற்சி அடைந்தவர்களின் ஜாப்தாவொன்று ரெஜிஸ்ட்ரார் வைத்திருப்பார். அவர்களை கவர்ன்மெண்டார் வேண்டும்போது வேலைக்கெடுத்துக் கொள்வார்கள். கோவாபரெடிவ் ஸங்கங்களுக்கு வேண்டியிருந்தால் அவர்களை அந்த ஸங்கங்களுக்கு வேலை செய்ய அனுப்புவார்கள்.

# COMMERCE.

## வ்யாபாரம்.

### Scientific Enquiry about Dyes,

**சாயச் சரக்குகளின் சாஸ்த்ர ஆராய்ச்சி.**—பற்பல விதமான சாயச் சரக்குகளுக்கும் இதுவரையில் பெரும்பாலும் ஜெர்மனியையே எதிர்பார்த்திருந்த நாம், இனி அச்சரக்குகளை நாமே தயாரிக்க வேண்டுமாயின், அவ்விஷயமான சாஸ்த்ர ஆராய்ச்சியையும் பயிற்சியையும் தேடிக்கொள்ள வேண்டியது அவசியமாகும். அத்தகைய சாஸ்த்ரத்தில் ஜெர்மானியர் விசேஷஞானம் பெற்றிருப்பதனுல்தான், அவர்கள் ஆதிக்கமடைய முடிந்தது. இங்லண்டிலுள்ள ஹட்டர்ஸ்பீல்ட் என்னும் நகரிலிருக்கும் சாஸ்த்ரக் கலாசாலையை நடத்துபவர்கள் மேற்படி விஷயங்களை நன்குணர்ந்து, சாயச் சரக்குகள், வர்ணங்கள், அவை ஸம்பந்தமான இதர பொருள்கள், ஆகிய இவைகளைப்பற்றிய சாஸ்த்ர ஆராய்ச்சியையும் பயிற்சியையும் தேடிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். அதற்கென்று அக்கலாசாலையிலே தனியே ஓர் இலாகாவை ஏற்படுத்தவும் தீர்மானித்து விட்டார்கள். அடுத்த ஸெப்டம்பர் மாஸம் முதல் அந்த இலாகாவில் வேலை துவக்கப்படும். சாயச் சரக்குகளைப்பற்றிய ரஸாயன சாஸ்த்ரத்தில் ஆராய்ச்சி நடத்துவதற்கேற்ற ஸாதனங்கள் யாவும் தேடிக் கொடுக்கப்படும். தொழில் ஸம்பந்தமான ரஸாயன சாஸ்த்ரங்களைப் பயிற்றுவிக்க வேண்டுமென்பதே அவர்களுடைய நோக்கமாகும். பகல் முழுவதும் வந்து பயிற்சிபெறக்கூடிய மாணவர்களுக்குமட்டுமேயல்லாமல், காலையிலும் மாலையிலும் மட்டும் வந்து பயிற்சிபெற விரும்பும் மாணவர்களுக்கும வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும். சாயச் சரக்குகளைத் தயாரிப்பதற்கென்றே ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டிடமிருந்து பண உதவி பெற்று, சென்ற வர்ஷம்முதல் நடந்து வரும் "ப்ரிட்டிஷ் சாயச்சரக்குகள் கம்பெனி" என்ற கம்பெனியின் டிரெக்டர்கள் அந்த ஏற்பாட்டுக்கு ஆதரவாயிருப்பதோடு, வேண்டிய பணவுதவி புரியவும் தயாராக இருக்கிறார்கள். அக்கலாசாலையிலே மேற்படி இலாகாவில் சேர்ந்து வாசிப்பதற்காகப் பல உபகாரச் சம்பளங்களும் கொடுக்கப்படுமென்று தெரிய வருகிறது. அங்கே லீட்ஸ் என்னும் மற்றொரு நகரிலுள்ள யூனிவர்ஸிடியிலும் அத்தகைய இலாகா ஒன்று முன்பே ஏற்பட்டிருக்கிறது.—ஸ்தேசமித்திரன்.

### Trade with Enemy Countries.

**எதிரி தேசங்களோடு வ்யாபாரம்.**—ஜெர்மனி, ஆஸ்ட்ரியா ஆகிய இந்த தேசங்கள் நமது தேசத்தில் எவ்வளவு வ்யாபாரம் செய்துவந்தன வென்பதை அடியில் வரும் கணக்கால் அறிந்துகொள்ளலாம். அதில் அந்த எதிரி தேசங்கள் மொத்தம் ஏற்றுமதியான ஒவ்வொரு சரக்கிலும் நூற்றுக்கு எவ்வளவுபாகம் இந்தியாவுக்கு அனுப்பி வந்ததென்பது காட்டப்பட்டிருக்கிறது.

| | மொத்தம் இறக்கு மதியில் நூற்றுக்கு எவ்வளவென்பது. |
|---|---|
| அலிஸாரைன் சாயங்கள் | 68 |
| அனிலைன் சாயங்கள் | 79 |
| செயற்கை நீலச்சாயம் | 88 |
| கண்ணாடி வளையல்கள் | 93 |
| விளக்குக்கு வேண்டிய கண்ணாடிஸாமான்கள் | 69 |
| எனமல் பாத்ரங்கள் | 89 |
| கம்பளி நூல்கள் | 82 |
| கம்பளி சால்வைகள் | 81 |

இவைகளைத் தவிர வேறு சரக்குகளிலும் அந்த எதிரி தேசங்கள் ரொம்ப வ்யாபாரம் செய்துவந்தன. மேலும் ஏற்றுமதி வ்யாபாரத்திலும் அநேக சரக்குகள், முக்யமாய் பதனிடாத தோல்கள், ஏராளமாய் எதிரிகளுக்குப் போயின. யுத்தம் ஆரம்பித்ததும் இந்த தேசங்களோடு வ்யாபாரம் முற்றிலும் நின்றுவிட்டது.

### Business Enterprise in India.

**இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.**—இந்தியாவில் சென்ற ஏப்ரல் மே மாஸங்களில் அடியில்கண்ட விவரப்படி 12-ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ஸ்தாபிக்கப்பட்டன.

மே மாஸம்.

| | | |
|---|---|---|
| 1 | பாங்கிலேவாதேவி கம்பெனி | 50,00,000 |
| 1 | வ்யாபாரக் கம்பெனி | 25,000 |
| 1 | மாவுமில் கம்பெனி | 8,00,000 |
| 3 | தேயிலைத் தோட்டக்கம்பெனி | 14,00,000 |
| 6 | மொத்தம். | 72,25,000 |

ஏப்ரல் மாஸம்

| | | |
|---|---|---|
| 3 | பாங்கி லேவாதேவி கம்பெனி | 90,000 |
| 1 | வ்யாபாரக் கம்பெனி | 1,00,000 |
| 1 | தேயிலைத் தோட்டக் கம்பெனி | 2,00,000 |
| 1 | நிலம்கட்டிடக் கம்பெனி | 50,000 |
| 6 | | " 4,40,000 |



# ECONOMIC PRODUCTS.

## விலையுள்ள பொருள்கள்.

### Cashew Nuts.

**முந்திரிப் பருப்பு.**—முந்திரிப்பருப்புக்கு இப்போது இங்லண்டில் ரொம்ப க்ராக்கி ஏற்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. இங்லண்டில் வாதாம்பருப்புதான் விசேஷம். ஆனால் தற்போது அது அதிகமாய் அங்கே கிடைப்பதில்லையாகையால், முந்திரிப்பருப்பு விசேஷமாய் விலைபோகிறதாம். ஐரோப்பாவின் மற்ற தேசங்களிலும் இதற்கு ஸாதாரண காலங்களில் க்ராக்கி உண்டு. முந்திரிமரம் ஆதியில் தென்னமெரிக்காவிலும் மத்ய அமெரிக்காவிலுந்தான் பயிராகிவந்ததாம். இப்போது அது இந்தியா, இண்டோசைனா, மலேயா தீபகல்பம், பிலிப்பைன் தீவுகள், மேற்கு ஆப்ரிக்கா, கிழக்கு ஆப்ரிக்கா, மடகாஸ்கர், முதலிய இடங்களில் விசேஷமாய்ப் பயிராகிறது.

அது ஸாதாரணமாய் 16-அடி முதல் 30, 40-அடி வரையில் உயர்ந்து வளரும். மணல் பாங்கான நிலமே அதற்கேற்றது. காய்ச்சல் தாங்கக்கூடியது. ஆனால் மரங்களுக்குத் தக்கபடி ஜலம் பாய்ச்சினால் நன்றாய்க் காய்க்கும். அது கடல்கரையோரம் நன்றாக உயர்ந்து வளருவதில்லை. மேலும் அதிகக்காற்றும் அதற்காகாது. இந்தியாவில் அது விசேஷமாக கோவாஜில்லாவில் கடல்கரையோரமாக உள்ள காடுகளில்தான் வளருகிறது.

அது சீக்ரம் வளர்ந்து பலன் கொடுக்கக்கூடியது. 3-அல்லது 4-வது வர்ஷத்திலேயே அது பலன் கொடுக்கும். என்றாலும் 8-அல்லது 10-வது வர்ஷத்தில்தான் அதிக மாஸூல் கிடைக்கும். இதன் கொட்டைகள் 1-முதல் 1¼-அங்குலம் நீளமுள்ளது. கொட்டைக்கு அடியில் உள்ள காம்பானது பருத்து ரஸமுள்ள பழமாக மாறுகிறது. உண்மையில் பூவின் காம்பே இவ்விதம் மாறுபாடடைந்திருக்கிறது.

கொட்டையின் மேல் தோலில் ஒருவித தைலம் இருக்கிறது. அது தேகத்தில் பட்டால் சீக்ரம் கொப்புளிக்கச்செய்யும் குணமுடையது.

பருப்பை வறுத்துத் தின்பதுண்டு. அது அநேக பணியார வகைகளிலும் சேருகிறது. முந்திரிக்கொட்டையை உடைத்து ஓட்டை எடுக்காமல் வைத்திருந்தால், ஓட்டிலுள்ள எண்ணெயானது பருப்பைக் கெடுத்துவிடும். ஓட்டை யெடுக்க, கொட்டையை சற்று வறுக்கவேண்டும். வறுத்தால், ஓடு வெடிக்கும். பிறகு அதை ஸுலபமாய்ப் பிரித்தெடுக்கலாம். கொட்டையை வறுக்கும்போது, ஓட்டிலிருக்கும் எண்ணெய் புகையாய் மாறிக் கிளம்புமாதலாலும், அந்தப் புகை கண்ணிலும் முகத்திலும் பட்டால் கெடுதலேற்படு மாகையாலும், வறுப்பதில் ஜாக்ரதையாயிருக்கவேண்டும். வறுப்பதால் பருப்பு கெடாமலிருக்கும். ஆனால் அதன் நிறம் மஞ்சளான பழுப்பு நிறமாக மாறிவிடுகிறது.

இங்லண்டில் வாதாம்பருப்பு அதிகமாய்க் கிடைக்கும்போது, முந்திரிப்பருப்புக்கு அதிக விலை கிடைப்பதில்லை. வாதாம்பருப்பு அகப்படாவிட்டால்தான் அதிக விலைக்கு விற்கிறது. இந்த வர்ஷ ஆரம்பத்தில் அது அந்தர் 1-க்கு 41¼-ரூபாய் முதல் 48¾-ரூபாய் வரையில் விலைபோயிற்று. பருப்பின் மேலுள்ள மெல்லிய தோலை எடுத்திருந்தால் அதற்கு 54-ரூபாய் விலை கிடைக்கும். முந்திரிப்பருப்பிலும் ஒருவித தைலம் இருக்கிறது. இது குணத்தில், ஐரோப்பாவில் விசேஷமாய் உபயோகப்படும் ஆலிவ் ஆயில் என்னும் ஜெயதூன் எண்ணெயைவிட உயர்ந்ததாயும், வாதுமை எண்ணெய்க்கு ஸமமாயும் இருக்கிறதாம்.

### Tobacco Seed Oil.

**புகையிலை விதை யெண்ணெய்.**—புகையிலை விதையில் எண்ணெய் இருக்கிறதென்றும் அந்த எண்ணெய் வார்னிஷ் செய்ய உதவுமென்றும் சொல்லப்படுகிறது. புகையிலைச் செடியில் நுனியிலுள்ள இலைகளைப் பறித்த பிறகு விதையைச் சேகரிக்க வேண்டுமாம். ஒரு ஏக்கர் நிலத்தில் 3 அந்தர் புகையிலை விதை கிடைக்குமாம். இதிலிருந்து 1¼ அந்தர் எண்ணெய் கிடைக்குமாம். பிண்ணாக்கில் நூற்றுக்கு 4·2 பாகம் நைட்ரொஜின் இருப்பதால் அது எரு முதலியவைகளுக்கு உபயோகப்படுமாம். ஆனால் இந்த விதைகளை சேகரிப்பதில் சற்று ச்ரமமுண்டென்றும், அந்தக் கஷ்டங்களை நிவர்த்தி செய்தால் விதையால் நல்ல லாபம் கிடைக்குமென்றும் சொல்லப்படுகிறது.

### Paper Twine.

**காகிதக் கயிறு.**—மேல் நாட்டு இஞ்ஜினியர் ஒருவர் காகிதத்திலிருந்து கயிறு செய்ய ஒரு முறை கண்டுபிடித்திருக்கிறாராம். அந்தக்கயிறு ஸாதாரண ட்வைன் போல உறுதியாயிருக்கிறதாம்.

## BOYS' PAGE.
## பையன்கள் பக்கம்.

### Great Men.

**ச்ரேஷ்டர்கள்.**—பாண்டவர்களும் துர்யோதனாதியர்களும் குருக்ஷேத்ரத்திலே யுத்தம் ஆரம்பிக்கத் தயாராகி அணிவகுத்து நின்றுகொண்டிருக்கையில், பாண்டவர்களில் ஒருவராகிய அர்ஜுனன் தனது இனத்தாரோடு சண்டைசெய்ய மனமில்லாமல் யுத்தம் செய்ய மாட்டேனென்று, தனது தேர்ப்பாகனாகவிருந்த ஸ்ரீக்ருஷ்ணபகவானோடு சொன்னபோது, ஸ்ரீக்ருஷ்ண பகவான் அவருக்கு போர்புரிவது தர்மமாகுமென்று வற்புறுத்துவதற்காக பகவத்கீதை என்னும் உபதேசத்தை அவருக்கு அருளினார். அதில் ஒரு ச்லோகத்தில் "மேலானவன் எதெதை அநுஷ்டிக்கிறானோ அதனைத்தான் மற்ற ஜனங்களும் அநுஷ்டிக்கிறார்கள். அவன் எதை ப்ரமாணமாய் ஸ்தாபிக்கின்றானோ, அதைத்தான் மற்றவர்களும் அநுஸரிக்கின்றார்கள்." என்று சொல்லியிருக்கிறார்.

இதில் ச்ரேஷ்டன் என்பவன், எக்காரணத்தாலாவது அந்தந்த ஜனஸமூகத்துக்குத் தலைவன் அல்லது பெரியவன், அல்லது செல்வாக்குடையவனாயிருக்க வேண்டும். அவ்விதத் தலைமை, படிப்பு, பணம், பலம், ஜனக்கட்டு முதலான எக்காரணத்தாலும் ஏற்படலாம். உதாரணமாக கல்வியே ப்ரதானமாய்க் கொண்ட ஜனஸமூகத்துக்கு வித்வான் ச்ரேஷ்டனாகிறான். செல்வத்தைத் தேடும், வ்யாபாரிகள் முதலானவர்களுக்குத் தனிகனே தலைவனாகிறான். பலமே ப்ரதானமாய்க் கொண்ட யுத்த வீரர்களுக்குப் பலவான் ச்ரேஷ்டன் ஆகின்றான். ஆதலால் ஒவ்வொரு ஸமூகத்திலும், அதஅதன் புருஷார்த்தத்தில் சிறந்தவனே தன் அதிகாரத்தைச் செலுத்தக்கூடிய ச்ரேஷ்டனாகின்றான். அப்படி ச்ரேஷ்டனானவன் சொல்லுவதையே மற்றவர்களும் அநுஷ்டிக்கிறார்கள். இக்கருத்தமைந்துள்ள,

"வல்லான் வகுத்ததே வாய்க்காலெனும் பெரு
வழக்குக் கிழுக்கு முண்டோ"—என்னும் தாயுமானவரின் பாட்டும் கவனிக்கத்தக்கது.

இதனால் நாம் முக்யமாய்க் கவனிக்கத்தக்கதாவது. தலைவனாயுள்ளவன் நல்ல வழியை யநுஸரித்தால் மற்றவர்களும் அவ்வாறே நடப்பார்கள். அப்படிக்கல்லாது, அவன் துர்ச்செய்கை செய்ய நேரிடின், மற்றவர்களும் அதை யநுஸரிக்க நாளடைவில் அந்த ஸமூகமே அழிந்துவிடும்.

இந்தப்ரகரணத்தில் சொல்லப்பட்ட கீதாவாக்யமானது, குருக்ஷேத்ர யுத்தபூமியில் அர்ஜுனன் யுத்தஞ் செய்ய மாட்டேனென்று வில்லை எறிந்த காலத்தில் ஸ்ரீகிருஷ்ணபகவானால், கூறப்பட்டது. அதே கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் "லோக நன்மையை உத்தேசித்தாவது உன் கடமையைச் செய்" (iii—20) என்றார். அதாவது "நீ யுத்தம் செய்யாது விடுவாயாகில், உன்னை ஒரு உதாரணமாய்க்கொண்டு மற்றவர்களும் தம் தம் கடமைகளையும் விட்டுவிடுவார்கள்." அடுத்த (iii–21) ச்லோகத்தில் "எனக்கு இம்மூவுலகிலும் ஆகவேண்டியதொன்றுமில்லை. அப்படியிருக்க நானே என் கர்மங்களைச் செய்கிறேனல்லவா" என்றார்.—பூர்ண சந்திரோதயம்.

### Arithmetical Curiosities.

**கணித விநோதங்கள்.**—ஏதாவது ஒரு தொகையை 2-ல் பெருக்கவும். பெருக்குத் தொகையிலுள்ள ஒவ்வொரு எண்ணையும் சேர்த்துக் கூட்டவும். கூட்டுத் தொகை பத்து அல்லது அதற்கு மேற்பட்டிருந்தால் அதிலுள்ள எண்களை ஒன்றாய்க்கூட்டி பத்துக்குக் கீழ்பட்ட எண்ணாக வைத்துக்கொள்ளவும். இந்த எண்ணானது, முதலில் எடுத்துக்கொண்ட தொகையிலுள்ள எண்களின் கூட்டுத் தொகை 2-ல் பெருக்கி வரும் தொகைக்கு சரியாயிருக்கும். இந்தத் தொகை 9-க்கு மேற்பட்டிருந்தால் அதிலுள்ள எண்களை ஒன்றாய்க்கூட்டி பத்துக்குக் கீழ்ப்பட்ட எண்ணாகக் கொண்டு வரவும்.

உதாரணம்.—

(1) 25-என்னும் எண்ணை எடுத்துக் கொள்வோம். இதை இரண்டால் பெருக்கினால் 50; இதிலுள்ள 5-ஐயும், 0-வையும் கூட்டினால் 5 வருகிறது. 25-ல் உள்ள 2-ஐயும் 5-ஐயும் கூட்டினால் 7; இதை 2-ஆல் பெருக்கினால் 14; இதிலுள்ள எண்களைக் கூட்டினால் 5-வருகிறது.

(2) $74 \times 2 = 148$; $1+4+8 = 13$; $1+3 = 4$

$74$; $7+4 = 11$; $1+1 = 2 \times 2 = 4$

எந்தத் தொகையையாவது 3-ஆல் பெருக்கினால், பெருக்குத் தொகையின் எண்களைக் கூட்டிவரும் தொகையானது, முதல் சொன்ன தொகையின் எண்களைக் கூட்டிவரும் தொகையை 3-ல் பெருக்கி, இந்தப் பெருக்குத் தொகையிலுள்ள எண்களைக் கூட்டி வரும் எண்ணுக்கு ஸமனாகும், உதாரணம்:—

(1) $23 \times 3 = 69$; $6+9 = 15$; $1+5 = 6$

$23$; $2+3 = 5$; $5 \times 3 = 15$; $1+5 = 6$

(2) $179 \times 3 = 537$; $5+3+7 = 15$; $1+5 = 6$; $179$; $1+7+9+17$; $1+7 = 8$; $8 \times 3 = 24$; $2+4 = 6$.



## LADIES' PAGE.
## ஸ்த்ரீகள் பக்கம்.

### Hints on Nursing.

நோயாளிகளைப் பாராமரிக்கையில் கவனிக்க வேண்டியவை.—

(1) நோயாளி படுத்துக்கொள்ளும் படுக்கை சுருங்கியிருத்தல் கூடாது.

(2) அந்தப் படுக்கையில் வேறொருவர் சாய்ந்துகொள்ளவும், உட்காரவும் கூடாது.

(3) உபயோகப்பட்டு கெட்டுப்போன புஷ்பங்கள் அந்த அறையில் கூடாது.

(4) கவலைகொண்டவர்கள்போல் இருக்கக் கூடாது. அப்படியிருந்தால், வியாதியஸ்தர்களுக்கு மனோ தைர்யம் குறையும்.

(5) காகிதங்களைக் கிழித்தாலும் அல்லது அவைகளினாலுண்டாகும் சலசலப்பு சத்தம் ஏற்பட்டாலும் நோயாளிகளுக்கு அதிக ஹிம்ஸையுண்டாகும்.

(6) வ்யாதியஸ்தர்களிருக்கும் அறையின்கீழே ரத்னகம்பளம் விரித்திருக்காமல் அதற்குப் பதிலாக நல்ல பாய் போட்டிருப்பது உசிதம். தவிர, அங்கே ஓரிடத்தில் ஈரமான தேயிலைகளைத்தூவி வைத்திருந்தால் அந்த அறை சுத்தமாயிருக்கும். அவ்விலைகளைப் பிறகு துடைப்பத்தால் கூட்டி எறிந்துவிடலாம்.

(7) அந்த அறையில் போதுமான வெளிச்சமும் நல்ல சுத்தமான காற்றோட்டமு மிருக்கவேண்டும். அந்த அறையைப் பார்த்தாலே ஒருவித உத்ஸாக முண்டாகும்படி வைத்திருக்கவேண்டும்.

(8) அவ்விடத்தில் சமையலறைக் காற்றும், புகையும் எட்டக்கூடாது. வெளிக்காற்று வீசுவதுதான் முக்யம். ஆனால் ஒருவேளை அது ரொம்பவும் ஜில்லென்றிருந்தால், அந்த அறையில் ஒரு கணப்பு வைத்துக்கொள்ள வேண்டியது.

(9) வ்யாதியஸ்தர்கள் அதிக ப்ரகாசத்தினால் கண் கூசாமலிருப்பதற்கு வேண்டியபடி திரைகள்போட்டிருக்க வேண்டும்.

(10) நோயாளிகளுக்கு ஆகாரத்தில் ப்ரியமேற்படும்படி செய்யவேண்டும். நல்ல சுத்தமாயும் நேர்த்தியாயுமுள்ள பாத்ரங்களில் ஆகாரம் கொடுப்பது நல்லது.

(11) அவருடைய தேகஸ்திதியை அனுஸரித்து பத்யத்தை வெவ்வேறு தினுஸாய் பக்வம் செய்து கொடுக்க வேண்டியது. நோயாளிக்கு பசியை உண்டாக்கவும், வ்ருத்தி செய்யவும் வேண்டிய வழிகளை அநுஸரித்து நடத்தல் வேண்டும்.

(12) ரொட்டியை முதலில் அடுப்பின்மேலிட்டு வாட்டி பிறகு நெய் அல்லது வெண்ணெய் தடவி கொடுப்பதுதான் நல்லது. அது ருசியாயிருப்பதோடு எளிதில் ஜீர்ணமும் ஆகிவிடும்.

(13) அதிக தாகத்திற்கு பின் சொல்லியபடி செய்யலாம். சுத்தமான தண்ணீரில் கொஞ்சம் தவிடு கலந்து ஒருமணி நேரம் அடுப்பிலிட்டு கொதித்த பிறகு ஆறவைத்து, நன்றாக வடிகட்டி ஸ்வல்ப சர்க்கரையும், எலுமிச்சம் பழத்தின் ரஸத்தையும் சேர்த்துக் கொடுத்தால், நல்லவாஸனையா யிருப்பதோடுகூட, உடனே தாகத்தையும் தணித்துவிடும். ஆனால் இப்படி பானம் தயார்செய்து கொடுக்கலாமா என்பதை வைத்யர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

### Children's Sleep.

**குழந்தைகளின் தூக்கம்.**—குழந்தைகளுக்கு சாப்பிடுவதும் தூங்குவதும் தவிர ஒரு வேலையும் கிடையாது. வயிற்றைப் பசிக்கும்பொழுது கத்த ஆரம்பிக்கும். இதை அறிந்து தாய்மார்கள் பால்கொடுக்கவேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு குழந்தைகள் பகலிலும் இரவிலும் தூங்குகிறதோ அவ்வளவுக் கவ்வளவு தேகத்துக்கு நலம். குழந்தை படுத்து உறங்கும் அறைக்குள் ஒருவரும் திடீரென்று நுழையக்கூடாது. பிசாசுமாதிரி கத்தவும் கூடாது. குழந்தை பயந்துவிட்டால் தேகத்துக்கு அபாயம் உண்டாகும். நாயாவது பூனையாவது குழந்தை தூங்கும் அறையில் தனியாக இருக்கக் கூடாது. பூனையானது மிகவும் கபடமான ஜந்துவாதலால் தனியாக விட்டுவைத்தால் குழந்தைக்குக் காலனாக வந்து முடியும்.

### A Lady to be a Pleader.

**ஒரு ஸ்த்ரீ வக்கீல் உத்யோகம் செய்ய முன்வந்திருப்பது.**—மிஸ் ரெஜினா குஹா என்னும் ஸ்த்ரீ ப்ளீடர் என்னும் வக்கீலாக உத்யோகம் செய்ய அனுமதி கொடுக்கவேண்டுமென்று கல்கத்தா ஹைகோர்ட்டுக்கு மனுப்போட்டிருக்கிறாள். கல்கத்தா ஹைகோர்ட்டார் அதை விசாரித்துத் தீர்மானிக்கப் போவதாகத் தெரிகிறது.

## FUN AND ANECDOTE.
## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

**The Kaiser.**

**கெய்ஸர் சக்ரவர்த்தி.**—கெய்ஸர் சக்ரவர்த்தி மூடநம்பிக்கையுள்ளவர். 13-என்னும் எண்ணைக் கண்டால் அவருக்குப் பிடிக்காது. ஐரோப்பாவில் அநேகர் இதேமாதிரி மூடநம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். எந்த ஸபையிலாவது, போஜனம் செய்யும்போதாவது, தமாஷாயிருக்கும்போதாவது 13-பேர்கள் இருந்தால் அது கெடுதலானதாம். அநேக ஸமயங்களில் கெய்ஸர் விருந்தில் 13-பேர்களிருக்கக்கண்டு பயந்து, அருகிலிருந்த ஒரு ராணுவ உத்யோகஸ்தனை சாப்பிட உட்காரச் சொன்னதுண்டாம்.

கெய்ஸர் தாம் ஒரு கொலைபாதகனால் கொல்லப்படுவாரென்று எண்ணி யிருக்கிறாராம். அவர்கதி இவ்விதமாகுமென்று அநேகர் அநேகந்தடவை குறி சொல்லியிருக்கிறார்களாம். அவர் கலீஷ்யாவில் தமது ஸ்நேகிதரான காலஞ்சென்ற ஆஸ்ட்ரியா இளவரசரைப் பார்க்கப் போயிருந்த ஸமயத்தில் ஹங்கேரியிலுள்ள ஜிப்ஸி என்னும் ஜாதியைச் சேர்ந்த சிலர் இந்தமாதிரி ஜோஸ்யம் சொன்னார்களாம். கெய்ஸர் தமது ஸ்நேகிதர்களுடன் பேசும்போதெல்லாம் இதைப்பற்றி பேசுவதுண்டாம். அவருக்கும் ஆஸ்ட்ரிய சக்ரவர்த்திக்கும், ஸ்வப்பனங்களில் ரொம்ப நம்பிக்கை உண்டு. தங்களுக்கு நேர்ந்த அநேக துன்பங்கள் வருமென்பதை ஸ்வப்பனங்கள் முன்னாடியே தெரிவித்ததுண்டாம். இரண்டு சக்ரவர்த்திகளுக்கும் வெள்ளிக்கிழமை கெட்டநாளாகும்.

**Pulling Ears in a Court of Law.**

**கோர்ட்டில் காதைப் பிடித்திழுத்தது.**—வடக்கே ஒரு முன்ஸிப் கோர்ட்டில் ஒரு வக்கீல் குமாஸ்தா பெஞ்ச் க்ளார்க்கினிடம் ஒரு பெடிஷனைக் கொடுக்கப் போனது சரியல்லவென்று முன்ஸிப் எண்ணி அந்த குமாஸ்தாவுக்கு 5-ரூபாய் அபராதம் போட்டார். அதைக்கொடுக்க இஷ்டப்படாவிட்டால் ஒரு உத்யோகஸ்தர் குமாஸ்தாவின் காதைப் பிடித்திழுத்தால் போதுமென்றார். அதன்படியே குமாஸ்தா காதை ஒரு கோர்ட்டு உத்யோகஸ்தர் பிடித்திழுத்தார். அந்தமட்டும் அபராதம் கொடுக்காமல் போனது அவருடைய அதிருஷ்டமென்று பலர் எண்ணக்கூடும். ஆனால் அந்த குமாஸ்தா வக்கீல்களுக்கு முன் முன்ஸிபினுடைய உத்தரவு சட்டவிரோதமானதென்றும், அபராதத்துக்கு பதிலாக காதைப் பிடித்து இழுத்ததால் அவருடைய கௌரவம் குறைந்து போயிற்றென்றும், ஆகையால் 1500-ரூபாய் மானநஷ்ட ஈடாகக் கொடுக்க வேண்டுமென்றும், முன்ஸிபுக்கு ஒரு வக்கீல் மூலமாக நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்.

**How He became Rich.**

**பணம் ஸம்பாதித்த விதம்.**—தற்பெருமைத் தாண்டவராயன்:—என்னைப் பார்த்தாயா, நான் பதினைந்து வயதில் ஒரு பலசரக்குக் கடையில் எடுபிடி ஆளாக ஆரம்பித்தேன். இருபதாவது வயதில் நான் 500-ரூபா ஆஸ்தியுடையவனானேன்.

வாயாடி வைத்தா:—ஸரிதான். ஆனால் இந்தக்காலத்தில் அந்தப் பப்பு வேகாது என்பது தெரியாதோ உமக்கு? முன்னைப்போல் கடைக்காரர்கள் எடுபிடியாள்களிடம் இப்போது அவ்வளவு நம்பிக்கை வைப்பதில்லையே.—வைசியமித்திரன்.

**The Complaint against the Cook.**

**சமையல்காரன்மேல் முறைப்பாடு.**—ஒரு காலேஜில் தங்கி வாசித்துக்கொண்டிருந்த மாணாக்கர்கள், அந்த காலேஜ் தலைவரிடம் சென்று, காலேஜைச் சேர்ந்த ஹோட்டலின் சமையல்காரன் மேல் அநேக பெரிய குறைகள் சொல்லிக்கொண்டார்கள். காலேஜ் தலைவர் சமையல்காரனைக் கூப்பிட்டு, குறைகளைத் தெரிவித்து, இனிமேல் சரியாய் நடந்துகொள்ள வேண்டுமென்று சொன்னார். அதற்கு சமையல்காரன் சொன்னதாவது: "இந்த மாணவர்கள் சொல்லும் பேச்சுக்களில் நம்பிக்கையே வைக்காதேயுங்கள். இவர்கள் இப்படித்தான் நீங்கள் காலேஜில் ப்ரஸங்கம்செய்வதைப் பற்றியும் என்னிடம் குறை சொல்லுகிறார்கள்."

**Germans are Liars.**

**ஜெர்மானியர்கள் பொய்யர்கள்.**–போர்க்களத்தில் பிணக்குவியல்களுக்கு மத்தியில் காயம்பட்டு விழுந்து கிடந்த ஒரு ஜெர்மன் ஸோல்ஜர், அப்பக்கம் போய்க் கொண்டிருந்த சில இங்க்லீஷ் வீரர்களைக் கண்டு, "நான் சாகவில்லை, நான் சாகவில்லை, என்னைக் காப்பாற்றுங்கள்" என்றான். இங்க்லீஷ் வீரர்களில் ஒருவர் மற்றவர்களைப் பார்த்து, "அந்தப் பேச்சை நம்பாதே; அவர்கள் ஜெர்மானியர்கள், சுத்தப் புளுகணிகள்" என்றான்.



## CURIOSITIES.
## விநோதங்கள்.

**The Ideal Clerk.**

**எல்லா லக்ஷணங்களும் பொருந்திய குமாஸ்தா.**–ஸமீபத்தில் ஒரு இன்ஷூரன்ஸ் கம்பெனியார் 20-வர்ஷ அனுபோகமுள்ளவரும், பார்வைக்கு லக்ஷணமானவரும், எல்லாவேலைகளும் செய்யக்கூடியவருமான ஒரு குமாஸ்தா வேண்டுமென்றும், அவருக்கு 80-பவுன் சம்பளம் கொடுக்கப்படுமென்றும் விளம்பரம் செய்தார்கள். அதற்கு ஒருவர் பின்வருமாறு மனு எழுதிப்போட்டார்.

"எனக்கு 45-வயஸாகிறது. இன்ஷூரன்ஸில் எல்லாவகை வேலைகளிலும் 27-வர்ஷ அனுபோகமுண்டு. நான் பார்வைக்கு லக்ஷணமுள்ளவனென்று எல்லாராலும் போற்றப்படுகிறேன். எனக்கு ப்ரெஞ்ச், ஐரிஷ், அமெரிக்கன், ஹிந்தி, லாடின், எஸ்பெராண்டோ முதலிய பாஷைகள் பேசத்தெரியும். இதைத் தவிர இன்னும் அநேக பாஷைகளில் பரிச்சயம் உண்டு. அந்த பாஷைகளெல்லாவற்றையும் இங்கு குறிக்க இடமில்லை. ஷார்ட் ஹாண்ட் (சுருக்கெழுத்து), ரௌண்ட் ஹாண்ட் (வட்டவெழுத்து), பாக்ஹாண்ட் (பின்புறம் சாய்ந்த எழுத்து) இவைகளில் தேர்ந்தவன். வேண்டுமானால் இரண்டு கையாலும் ஏககாலத்தில் எழுதக்கூடும். மேலும் எனக்கு ஒரு மனைவியும், 6 குழந்தைகளும் உண்டு. நல்ல சம்பளம் கொடுப்பதை உத்தேசித்து அவர்களும் வேலைசெய்யக்கூடும். யோக்யதா பத்ரங்கள் வேண்டுமானால், தெரிவித்தால் அவைகளை ரெயில்வே ஸாமான்வண்டியில் (கூட்ஸ் ட்ரெய்ன்) போட்டனுப்புகிறேன்!"

**A Monkey Child.**

**ஒரு குரங்குக் குழந்தை.**—"காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பதுபோல, ஸிலோனில் வதுளை ஜில்லா அரிசிப்பத்தனைத் தோட்டத்தில் 9-வயதுள்ள ஒரு குரங்குப் பெண்ணை அதன் பெற்றோர்கள் வெகு அருமையாய்ப் பேணி வளர்க்கிறார்களாம். பெற்றவளுக்கே தெரியும் அந்தப் பிள்ளைவருத்தம்! அப்பெண்ணின் முகம், கண், புருவம், சிரஸு அனைத்தும் குரங்குக்கு இருப்பது போலவே உள்ளனவாம். அது வானர சேஷ்டை யனைத்தும் செய்கிறதாம். துணி கட்டவோ, பேசவோ அதற்கு தெரியவில்லையாம், மனிதருக்குள்ளதுபோன்ற நாக்கு இல்லைபோலும்! இதுவும் ஒரு பரிதாபக் காட்சிதான். கர்ப்ப காலத்தின்போது மாதர்களின் நினைப்புக்கும், அவர்களின் காட்சிக்கு எதிர்ப்படுகின்ற உருவங்கட்கும் பொருந்த கர்ப்பத்திலுள்ள சிசுவின் உருவம் அமையும் என்று சாஸ்த்ரவல்லோர் கூறுவார்கள். அவ்வாறான ஸம்பவம் ஏதேனும் இக்குரங்குப் பெண்ணின் தாயினிடத்து நேர்ந்ததோ என்னவோ.—திராவிடாபிமானி.

**Human Sacrifice in Jaffna.**

**யாழ்ப்பாணத்தில் நரபலி.**—யாழ்ப்பாணத்தில் சில ஹிந்துக்கள் ஏதோ ஓரிடத்தில் புதையலிருப்பதாகக் கனவுகண்டு, குற்றம் குறையில்லாத ஒரு வாலிபனை முத்துமாரி என்னும் தேவதைக்கு பலிகொடுத்தால் புதையல் கிடைக்குமென்று நம்பி, 20-வயஸுள்ள ஒரு வாலிபனை அந்த தெய்வத்தின் கோயிலுக்குக் கூட்டிக்கொண்டுபோய், அவனுக்கு மருந்துகொடுத்து மயக்கமுண்டாக்கி அவனை பலியிட்டார்கள். ஆனால் இது போலீஸாருக்குத் தெரியவே, 9-பேர்களைக் கைதிசெய்திருக்கிறார்கள். இவர்களுள் ஒருவர் கோவில் குருக்களாம். விசாரணை நடந்துகொண்டிருப்பதாக ஒரு ஸிலோன் பத்ரிகை தெரிவிக்கிறது.

**The Largest Palace in Europe**

**ஐரோப்பாவிலுள்ள பெரிய அரண்மனை.**—ஸ்பெயின் தேசத்து ராஜதானியாகிய மாட்ரிட் பட்டணத்துக் கருகாமையிலுள்ள அரண்மனையே ஐரோப்பாவிலுள்ள அரண்மனைகளெல்லாவற்றுள்ளும் மிகப்பெரியதாம். அதிலுள்ள ஸகல அறைகளுள்ளும் நுழைந்து பார்க்கவேண்டுமானால் நான்குநாள் செல்லுமாம். அதாவது 125-மைல் தூரம்போலிருக்குமென்று கூறப்படுகிறது.

**Simultaneous Child births**

**மூன்று தலைமுறையில் ஏககால ப்ரஸவம்.**—தாயும் மகளும் ஏககாலத்தில் மக்கட்பேற்றை யடைவது ஸாதாரணம். ஆனால், பாட்டியார், தாயார், மகள் ஆகிய மூவரும் ஒரே ஸமயத்தில் குழந்தைகளைப் பெற்றார்களென்று நாம் இதுவரையில் கேள்வியுற்றதில்லை. ஸமீபத்தில் இவ்வதிசயஸம்பவம் கலீஷ்யாவில் நடந்ததாம்.

## MISCELLANEOUS NEWS.

### நாநா ஸங்கதி.

**Tamil Coolies in Ceylon.**

*ஸிலோனில் உள்ள தமிழ் கூலியாட்கள்.*—ஸிலோனில் உள்ள ஒரு மாகாணத்தில் தமிழ் நாட்டுக் கூலியாட்களின் நிலைமையைப்பற்றிப் பரிசீலனை செய்ய ஸமீபத்தில் ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அந்தக் கமிட்டியார் பின்வருமாறு ப்ரேரணைகள் செய்திருக்கிறார்கள்.

(1) தோட்டங்களில் உள்ள வைத்ய சாலைகளில் மருந்துகொடுக்கும் உத்யோகஸ்தர்களை தேர்ந்தவர்களாகத் தெரிந்தெடுத்து நியமித்தல்.

(2) தோட்டங்களில்உள்ள கூலியாட்களில் நோயால் வருந்துபவர்களைப்பற்றி தோட்டத்தைச் சேர்ந்த வைத்யசாலை ஸிப்பந்தி தினந்தோறும் ரிபோர்ட்டு எழுதும்படி செய்தல்.

(3) வ்யாதியுள்ள கூலியாட்களை கவர்ன்மெண்ட் ஆஸ்பத்ரிகளுக்கு எடுத்துக்கொண்டு கையால் தூக்கிக்கொண்டோ, சக்கரங்கள் அமைத்துத் தள்ளிக்கொண்டோ போகும்படியான ஸ்ட்ரெட்சர்களை கட்டாயம் உபயோகிக்கும்படி செய்தல்.

(4) பயிற்சிபெற்ற மருத்துவச்சிகளை தோட்ட ஆஸ்பத்ரிகளில் நியமித்தல்.

(5) கூலியாட்கள் வஸிக்கும் இடங்களை க்ரமமாக இன்ஸ்பெக்ட் செய்து அவைகளின் ஸுகாதார நிலைமையை வ்ருத்தி செய்தல்; குப்பை செத்தைகளை தக்க விதமாய் அப்புறப்படுத்தல்; ஓடிப்போய்விட்டதாக ஸந்தேகித்த தோட்டத்துக் கூலியாட்களைக் கைது செய்துகொண்டுவர சிங்கள வேலையாட்களை நியமிக்கும் அநீதமான வழக்கத்தை நிறுத்தி விடுதல்.

(6) தமிழ் நாடுகளிலிருந்து புதிதாய்வந்த கூலியாட்களுக்கு, ரெஜிஸ்டர் செய்யும்போது இத்தனை காலம் வேலை செய்யவேண்டும், இன்னமாதிரியான வேலை, இன்ன சம்பளம் என்பவைகளை விவரித்துச் சொல்லுதல். ஆள் சேர்க்கும் கங்காணிகள் பி. பாரம் என்னும் நமூனாவை அதிகமாய் உபயோகிக்கவேண்டும். இதன் நோக்கமென்னவென்றால் பொய்சொல்லி ஏமாற்றி ஆட்கள் சேர்ப்பதைக் குறைப்பதே.

(7) எந்தக் கூலியாவது ஏமாற்றிக் கூட்டிக்கொண்டு வரப்பட்டதாக ருசுவாகும் பக்ஷத்தில், அவனை தோட்டக்காரர்களின் செலவில் அவன் எங்கிருந்து வந்தானோ அவ்விடத்துக்கு அனுப்பி விடுதல்.

**Hoarding in England.**

*இங்க்லண்டில் பணத்தை வட்டி நஷ்டமாக வீட்டில் சேர்த்து வைத்தல்.*—இந்தியாவில் முன்காலத்தில் ஜனங்கள் திருடர்களுக்கு அஞ்சித் தங்கள் பணத்தை பூமியிலும், சுவர்களிலும் புதைத்துவைப்பார்களென்றும், இப்போதும் அந்த வழக்கம் இந்தியாவிலிருந்து வருகிறதென்றும், இந்த வழக்கத்தை விட்டுவிட்டு இந்தியர்கள் தங்கள் பணத்தை பாங்கிகளிலும் கைத்தொழில்களிலும் போடவேண்டுமென்றும் சிலர் சொல்லிவருகிறார்கள். பெரும்பாலும் ஏழையான இந்தியர்களிடம் இவ்வழக்கம் இருக்கிறதா இல்லையா என்பது ஒருபுறமிருக்க, ரொம்ப நாகரீகம்வாய்ந்த இங்க்லண்டிலும் அநேக க்ராமவாஸிகள் பணத்தை பாங்கியில் போடவாவது, கவர்ன்மெண்ட் கடன் பத்ரங்களை வாங்கவாவது விரும்பாமல் அவைகளை வீடுகளில் படுக்கைக்கு அடியில் மரப்பெட்டிகளிலும், தகரப்பெட்டிகளிலும், இன்னும் வேறு இடங்களிலும் மறைத்து வைக்கிறார்களென்று கேட்கப் புதுமையாயிருக்கிறது. அவர்கள் அவ்வப்போது கிடைக்கும் தங்கநாணயங்களை பணத்தோடு பணமாய் சேர்த்துவைக்கிறார்களாம். அவர்களில் அநேகர் பாங்கிகள், போஸ்டாபீஸ் ஸேவிங்க்ஸ் பாங்கிகள் ஆகிய இவைகளிடம் ஸந்தேகம் கொண்டிருக்கிறார்களாம். மேலும் தங்களுடைய ஸொத்து இவ்வளவென்பதைப் பிறர் அறியக்கூடாதென்றும் அவர்கள் எண்ணுகிறார்களாம்.

**Raja of Cochin's Son.**

*கொச்சி ராஜாவின் புத்ரர்.*—யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னால் ஜெர்மனிக்குப் போயிருந்த கொச்சி ராஜாவின் ஒரு புத்ரரை ஜெர்மன் கவர்ன்மெண்டார் யுத்தம் ஆரம்பித்ததும், அவர் இங்க்லண்டுக்குக் கீழ்ப்பட்ட ஒரு சிற்றரசரென்றுசொல்லி ஜெர்மனியிலேயே நிறுத்தி வைத்துக்கொண்டார்கள். அவர் இந்தியாவுக்கு வருவதற்கு இல்லாமல் போயிற்று. சென்ற வர்ஷக் கடைசியில் கொச்சிராஜா சென்னைக்கு வந்திருந்தபோது, காத்தொலிக் கிறிஸ்தவர்களின் மதகுருவாகிய போப்பைக்கொண்டு தமதுபுத்ரனை ஜெர்மனியிலிருந்து தருவித்துக் கொள்ள எண்ணி, மைலாப்பூரிலுள்ள போர்த்துகீஸ் பிஷப்புக்கு விஷயத்தைத் தெரிவித்து, அவரைக்கொண்டு ஜெர்மன் கவர்ன்மெண்டாரை கொச்சிராஜாவின் புத்ரனை விடுவிக்க ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொண்டார். மைலாப்பூர் பிஷப்பும் அதற்கு ஸம்மதித்து, ரோமிலுள்ள போப்புக்கு விஷயத்தைத் தெரிவித்து ராஜகுமாரரின் விடுதலையைப்பற்றி வேண்டிக்கொள்ள, போப்பானவர் ராஜபுத்ரரை விடுதலை செய்யும்படி ஜெர்மன் கவர்ன்மெண்டாருக்கு எழுதிக் கேட்டுக்கொண்டார். ஜெர்மன் கவர்ன்மெண்டாரும் அதற்கு ஸம்மதித்து கொச்சி ராஜாவின் புத்ரனை விடுதலை செய்தார்கள்.



## DIARY OF THE MONTH.

### மாஸ வர்த்தமானம்.

**THE WAR IN EUROPE.**

ஐரோப்பிய யுத்தம்.

*ஜூன்மீ 21-தேதி.*

ஆஸ்ட்ரியர்களும் ஜெர்மானியர்களும், ரஷ்ய துருப்புகள் கோவலுக்குப் போகாதபடி தடுத்து வருகின்றன.

*22-தேதி.*

ரஷ்யர்கள் துருக்கியில் கோலே என்னும் இடத்தைப் பிடித்திருக்கிறார்கள். ப்ரிட்டிஷ் துருப்புகள் ஜெர்மன் கிழக்கு ஆப்ரிக்காவில் ஹாண்டனி என்னுமிடத்தைப் பிடித்திருக்கின்றன. நியாஸ்ஸா ஏரியோரமாயுள்ள லாங்கன்பர்க் என்னும் இடத்தையும் அவைகள் பிடித்திருக்கின்றன.

*24-தேதி.*

வெர்டூனில் ஜெர்மானியர்கள் தியாமாண்ட் தோட்டத்தைப் பிடித்திருக்கிறார்கள். ரஷ்யர்கள் புகோவினாவில் அநேக ஊர்களைப் பிடித்திருக்கிறார்கள். ஆஸ்ட்ரியர்கள் கார்ப்பேதியன் மலையை நோக்கி ஓடுகிறார்கள்.

*26-தேதி.*

வெர்டூனில் ப்ரெஞ்ச் துருப்புகள் முன்சென்று வருகின்றன. ரஷ்யர்கள் கிம்பொலங், குடி என்னும் இடங்களைப் பிடித்திருக்கிறார்கள். புகோவினா முழுவதும் இப்போது அவர்கள் கையில் இருக்கிறது. இட்டாலியர்கள் சில இடங்களில் முன்சென்று வருகிறார்கள்.

*27-தேதி.*

இட்டாலியர்கள் ஸெஞ்ஜியோ, ஸிமோன் என்னும் குன்றுகளைப் பிடித்திருக்கிறார்கள். ரஷ்யர்கள் கார்ப்பேதியன் மலைகளண்டை வந்திருக்கிறார்கள்.

*28-தேதி.*

ப்ரெஞ்ச் துருப்புகள் தியாமாண்டில் முன்சென்று வருகின்றன. இட்டாலியர்கள் ஆர்ஸியரோ, ஆஸியாகோ என்னும் இடங்களைப் பிடித்திருக்கிறார்கள். ரஷ்யர்கள் இதுவரையில் 2-லக்ஷம் கைதிகளைப் பிடித்திருக்கிறார்கள்.

*29-தேதி.*

இட்டாலியர்கள் ஆஸ்ஸியா பள்ளத்தாக்கில் புகுந்திருக்கிறார்கள். ஆஸியாகோ பீடபூமியிலும் அநேக பாகங்களைப் பிடித்திருக்கிறார்கள்.

*30-தேதி.*

வெர்டூனில் மறுபடியும் யுத்தம் ஆரம்பமாயிருக்கிறது.

*ஜூலைமீ 1-தேதி.*

ப்ரெஞ்ச் துருப்புகள் தியாமாண்டைத் திரும்பப் பிடித்திருக்கின்றன. ரஷ்யர்கள் கொலோமியா என்னுமிடத்தைப் பிடித்திருக்கிறார்கள். இதனால் ஹங்கேரிக்கும் கலீஷியாவுக்கும் ரெயில்வே போக்குவரவு தடைபட்டிருக்கிறது. ஜெர்மானியர்கள் வினிவ்கா என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள்.

*3-தேதி.*

ஸோம் நதிக்கரையில் ப்ரிட்டிஷார் பலமாக யுத்தம் செய்து 3,500 கைதிகளைப் பிடித்தார்கள். ப்ரிட்டிஷ் துருப்புகள் மாண்டாபான், ப்ரிகோர்ட், மாமட்ஸ், என்னும் க்ராமங்களைப் பிடித்திருக்கின்றன.

ப்ரெஞ்ச் துருப்புகள் கார்லு க்ராமத்தைப் பிடித்து ஹார்ட்கோர்ட் க்ராமத்தில் ஓரத்தில் புகுந்திருக்கின்றன. வெர்டூனிலும் யுத்தம் பலமாக நடக்கிறது.

திவ்பாலுக்குத் தெற்கில் ஜெர்மானியர்கள் ப்ரிட்டிஷ் துருப்புகளை விரட்டி அவைகள் பிடித்திருந்த இடங்களைக் கைப்பற்றினார்கள்.

வடக்கில் ரஷ்யர்கள் ஜெர்மன் போர்முனையின் இடதுபக்கத்தை தரையிலிருந்தும் கடலிலிருந்தும் தாக்கினார்கள். ரஷ்யப் போர்முகத்தில் மற்றவிடங்களிலும் யுத்தம் நடக்கிறது.

*5-தேதி.*

ப்ரிட்டிஷ் போர்முனையில் ஜெர்மானியர்கள் பலமாக எதிர்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

*6-தேதி.*

இட்டாலியர்கள் கார்னோ, ஸெரவுஜியோ என்னும் குன்றுகளைப் பிடித்திருக்கிறார்கள்.

*7-தேதி.*

ப்ரிட்டிஷ் துருப்புகள் தீவ்பால் என்னுமிடத்திலும், இன்னும் சில இடங்களிலும் முன்சென்றிருக்கின்றன. ரஷ்யர்கள் பின்ஸ் சதுப்பு ப்ரதேசத்தில் முன்சென்றிருக்கிறார்கள். ரிகா ப்ரதேசத்தில் ஜெர்மானியர்கள் ரஷ்யர்களை பின்னுக்குத் தாக்கியிருக்கிறார்கள்.

8-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகள் லீப்வீக் ரிடௌட் என்னும் பாதுகாப்பு வேலையில் ஒரு பாகத்தைப் பிடித்திருக்கின்றன.

10-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகள் ட்ரோன்ஸ் காட்டையும் ப்ரெஞ்ச் துருப்புகள் ஹார்டிகோர்ட் க்ராமத்தையும் பிடித்தன. ரஷ்யர்கள் கோவலை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு முன் எதிரிகள் பின்வாங்கி ஓடுகிறார்கள். ரஷ்யர்கள் காசோல்கா, குலிவெட்சி என்னும் இடங்களைப் பிடித்திருக்கிறார்கள். தெற்கு கலீஷ்யாவில் அவர்கள் டிலேடின் என்னுமிடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

11-தேதி.

ப்ரிட்டிஷ் போர்முனையில் யுத்தம் பலமாக நடக்கிறது. ப்ரிட்டிஷ் துருப்புகள் மாமட்ஸ் காடுகள், ஒவிலர்ஸ், லாப்வாஸல் என்னுமிடங்களில் முன் சென்றிருக்கின்றன. ப்ரெஞ்ச் துருப்புகள் பெரோனுக்கு மூக்கால் மைல் தென்மேற்கிலுள்ள லாமெய்ஸொனெட் என்னுமிடத்தைப் பிடித்திருக்கின்றன.

ஜெனரல் ஸ்மட்ஸ் கிழக்கு ஆப்ரிக்காவில் டாங்கா என்னும் ஊரைப் பிடித்தார்.

12-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகள் காண்டால் மெய்ஸன் என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள்.

ஸ்டாக்கோட் நதியோரமாக ஜெர்மானியர்கள் ரஷ்யர்களை பலமாகத் தடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

13-தேதி.

ஜெர்மானியர்களுக்கு உதவித் துருப்புகள் வந்ததனால், அவர்கள் மாமெட்ஸ் காட்டில் இழந்த பாகத்தை பிடித்திருக்கிறார்கள். ரஷ்யர்கள் எர்விராமுக்கு மேற்கில் மாமாக்காட்டேமை மறுபடி பிடித்திருக்கிறார்கள்.

14-தேதி.

ஸ்வீடனின் தென்பாகமாகிய காத்லாண்டுக்குப் பக்கத்தில் ஒரு கப்பல் சண்டை நடந்ததாகச் சொல்லப்படுகிறது.

15-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகள் பாஸெண்டின் லா பெடிட் என்னும் ஊரைப் பிடித்திருக்கின்றன.

17-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகள் டெல்வில் காட்டைப் பிடித்திருக்கின்றன. ரஷ்யர்கள் எர்விராமுக்கும் ட்ரெபிஸாண்டுக்கும் நடுவில் உள்ள பெய்பர்ட் என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள்.

19-தேதி.

பால்டிக் கடலில் ரஷ்யர்களுக்கும் ஜெர்மானியர்களுக்கும் ஒரு கப்பல் சண்டை நடந்ததாகச் சொல்லப்படுகிறது

22-தேதி.

வெர்டேனில் பீரங்கி யுத்தம் நடந்தது. ப்ரிட்டிஷ் துருப்புகள் போரோ காட்டில் ஒரு பாகத்தைக் கைப்பற்றியிருக்கிறார்கள். ரஷ்யர்கள் குமிஸ்கானே என்னும் ஊரைப்பிடித்திருக்கிறார்கள்.

சில சிறு ப்ரிட்டிஷ் யுத்தக்கப்பல்களுக்கும் சில ஜெர்மன் யுத்தக்கப்பல்களுக்கும் பெல்ஜியம் கடல் கரைக்குப் பக்கத்தில் சண்டை நடந்தது. ப்ரிட்டிஷாருக்கு சேதமில்லை.

23-தேதி.

ரஷ்யாவின் அன்யதேச வ்யவஹார மந்த்ரியாகிய மா. ஸாஸனுப் தமது வேலையை ராஜிநாமா செய்துவிட்டார். ப்ரதம மந்த்ரியாகிய மா. ஸ்டார்மரே அவ்வேலையைப் பார்த்துவருவார்.

24-தேதி.

ப்ரிட்டிஷ் போர்முகத்தில் யுத்தம் கடுமையாயிருக்கிறது. ரஷ்யர்கள் ஆர்மீனியாவில் பால் என்னுமிடத்தையும், ஆர்டாஸா, கெல்கிட் என்னுமிடங்களையும் பிடித்திருக்கிறார்கள்.

இட்டாலியர்கள் ரோலி கணவாயைப் பிடித்திருக்கிறார்கள்.

26-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகள் பாஸியர்ஸ் என்னும் ஊரைப் பிடித்திருக்கின்றன. இதுவரையில் மேற்குப் போர்முகத்தில் 26,233 ஜெர்மானியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ரஷ்யர்கள் எர்ஸிங்கான் என்னும் ஊரைப்பிடித்திருக்கிறார்கள்.

29-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகள் டெல்வில் காடு முழுவதையும் பிடித்துக்கொண்டன. லாங்க்வல் முழுவதும் ப்ரிட்டிஷார் வசம் வந்துவிட்டது.

# ஜனோபகாரி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)
**THE PEOPLE'S FRIEND.**
FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE.'

OFFICE OF THE ... SEP 1916 ... MADRAS.

ஜி. எ. வைத்யராமன், பி. எ.,
பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A.,
EDITOR.

புஸ்தகம் 8. Vol. 8. | நள௵, ஆடி௴, JULY—AUGUST, 1916. | ஸஞ்சிகை 7. No. 7.

## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | *Inland.* Rs. A. P. | | *Foreign.* Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Half-yearly ... | 2 0 0 | ... ... | 3 0 0 |
| Sample copy | 0 6 0 | ... ... | 0 8 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | |
|---|---|---|---|
| 1 Page | ... | 5 0 0 | per month. |
| ½ do | ... | 2 8 0 | do |
| ¼ do | ... | 1 4 0 | do |
| 1/10 do | ... | 1 0 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion, republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, George-town, Madras.

## ஜனோபகாரி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபகாரி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | அன்ய நாடு |
|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 0 0 | ... | 6 0 0 |
| ஆறுமாஸத்துக்கு ... | 2 0 0 | ... | 3 0 0 |
| மாதிரி காபி ... | 0 6 0 | ... | 0 8 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | | மாஸம் ஒன்றுக்கு | | 5 0 0 |
| ½ | ,, | ,, | ,, | 2 8 0 |
| ¼ | ,, | ,, | ,, | 1 4 0 |
| 1/10 | ,, | ,, | ,, | 1 0 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேண்டுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நேயர்கள் அறியவேண்டும்

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்

ஜனாபிமானி.

புஸ்தகம் 3.] நளவூ ஆடி மீ. [ஸஞ்சிகை 7.

## THE COST OF THE WAR.

## யுத்தத்தின் செலவு.

தற்போதைய யுத்தத்தில் மருந்து, குண்டுகள், ஆயுதங்கள் இவைகளுக்காகும் செலவு ஏராளமாயிருக்கிறது. ஸோல்ஜர்களுக்கு வேண்டியிருக்கும் ஆகாரம், வைத்ய உதவி முதலியவைகளுக்கும் ஏராளமாய்ச் செலவழிகிறது. இவைகளைத்தவிர அநேக வ்யாபாரக்கப்பல்களும், யுத்தக்கப்பல்களும் நாசமடைகின்றன. லக்ஷக்கணக்கான ஜனங்கள் கொல்லப்பட்டும், ஒருவேலையும் செய்யமுடியாமல் காயப்பட்டும் போகிறார்கள். இப்படி யுத்தத்தில் நேரிடும் பற்பல செய்கைகளால் த்ரவ்ய நஷ்டம் எவ்வளவு ஏற்படுகிறதென்பதை சரியாய்க் கணக்கிட்டுச் சொல்வது கஷ்டமான கார்யமாகும். அப்படிக் கணக்கிட்டாலும் அந்தத் தொகைகளை மனஸில் க்ரஹிப்பது ச்ரமமானது.

இந்த யுத்தத்தில் முதல்வர்ஷத்துக்கு ஏற்பட்டிருக்கும் செலவு எவ்வளவு என்பதைப்பற்றி மிஸ்டர் எட்கார் க்ராம்மண்ட் என்பவர் தெரிவித்த கணக்குகளை ஏற்கனவே 'ஜனாபிமானி'யில் தெரிவித்திருக்கிறோம். அவர் போட்டிருக்கும் மதிப்புகள் ரொம்பக் குறைவென்று ஒரு அமெரிக்கர் சொல்லுகிறார். அந்த அமெரிக்கருடைய கணக்கின்படி முதல் வர்ஷத்திய செலவு பின்வருமாறு.

| | ரூபா. |
|---|---|
| பெல்ஜியம் | 709,31,70,000 |
| ப்ரான்ஸ் | 1,951,38,72,000 |
| ரஷ்யா | 2,503,80,00,000 |
| இங்க்லண்ட் | 1,342,76,40,000 |
| ஆஸ்ட்ரியா-ஹங்கேரி | 1,839,99,60,000 |
| ஜெர்மனி | 2,764,36,80,000 |
| இட்டலி | 347,40,00,000 |
| துருக்கி, பல்கேரியா, ஸெர்வியா முதலியவைகளும், நடுநிலைமைத் தேசங்களின் நஷ்டமும் | 450,00,00,000 |
| மொத்தம். | 11,909,03,22,000 |

அதாவது கிட்டத்தட்ட 12,000 கோடி ரூபாயாகும்.

இந்தத் தொகையைக் கக்ஷிவாரியாகப் பிரித்தால் ஜெர்மன் கக்ஷியின் நஷ்டம் 5,100,00,00,000 ரூபா யாகும். இங்க்லீஷ் கக்ஷியின் நஷ்டம் 6,809,03,22,000 ரூபாயாகும்.

இரண்டாவது வர்ஷத்தில் யுத்தம் நடக்கும் இடங்கள் அதிகமாயின. ஸப்மரீனின் தொந்தரவுகளும் அதிகமாயின. 5-வாரத்துக்குக் கணக்கெடுத்ததில் ஒருநாளுக்கு நான்கு கப்பல்வீதம் நாசம் அடைந்தன. இந்த விகிதப்படியே கப்பல்கள் நாசமடைந்தால் ஒரு வர்ஷத்தில் 40-லக்ஷம் டன்கள் நிறையுள்ள கப்பல்கள் நாசமடைந்திருக்கும். முதல் வர்ஷத்தில் மாத்ரம் 25-லக்ஷம் டன்கள் நிறையுள்ள கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன.

இரண்டாவது வர்ஷத்தில் யுத்தச்செலவு இன்னும் அதிகமாயிருக்கிறதென்று தெரிகிறது. இங்க்லண்ட் விஷயத்தில் மாத்ரம் சென்ற 1915-ம் வர்ஷம் ஏப்ரல்மாஸம் முதல் ஜூன் மாஸம் முடிய தினமொன்றுக்கு 4-கோடி 5-லக்ஷம் ரூபாய் செலவாயிற்று. சென்ற டிஸம்பர் ஜனவரி மாஸங்களில் தினப்படி செலவு 7½-



லக்ஷம் ரூபாயாகும். இது இங்க்லண்டின் இரண்டாவது வர்ஷத்து சராசரிச் செலவாகுமென்று வைத்துக்கொள்ளலாம். ஆகவே இங்க்லண்ட்மாத்ரம் 2,745 கோடி ரூபாய் செலவழிக்குமென்று சொல்லலாம்.

இது முதல் வர்ஷத்தியதைவிட இரண்டு மடங்கு அதிகமானது. மற்ற யுத்ததேசங்களுக்கும் யுத்தச்செலவு இரண்டுமடங்கு அதிகரித்திருக்குமென்பதில் ஸந்தேகமில்லை. ஆகவே 1916-ம் வர்ஷம் ஜூலைமாஸம் 31-தேதியோடு முடிகிற இரண்டுவர்ஷத்திய மொத்த யுத்தச் செலவு 36,000 கோடி ரூபாயாகும்.

| | கோடி ரூபா. |
|---|---|
| முதல்வர்ஷத்திய செலவு உத்தேசமதிப்பு. | 12,000 |
| இரண்டாவது வர்ஷத்திய செலவு | 24,000 |
| இரண்டு வர்ஷத்திய செலவு | 36,000 |

இவ்வளவு பெரிய தொகையை மனஸால் பாவிப்பதுகூட முடியாது. ஆனால் அதை நமது தேசத்துச் செல்வத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

ஸர். ஆர். க்ரிப்பின் என்பவர் இந்தியாவிலுள்ள ஜனங்களில் சராசரியில் ஒவ்வொருவருக்கும் 150 ரூபாய் ஆஸ்தியுண்டென்று தெரிவித்திருக்கிறார். இந்தியாவில் 31 கோடி ஜனங்கள் உண்டென்று வைத்துக்கொண்டால், இந்தியர்களின் மொத்த ஆஸ்தி 4,650-கோடி ரூபாயாகும். இந்தத் தொகையையும் ஐரோப்பிய யுத்தத்தின் இரண்டு வர்ஷச் செலவையும் ஒப்பிட்டுப்பார்த்தால், இந்தியர்களின் மொத்த ஆஸ்தியைப்போல் 8-மடங்குள்ள தொகை செலவழிந் திருக்கிறதென்று தெரியவரும்.

| | கோடி ரூ. |
|---|---|
| யுத்தச் செலவு | 36,000 |
| இந்தியாவின் ஆஸ்தி | 4,650 |

அப்படியானால் யுத்தத்தில் இவ்வளவு அபரிமிதமாய்ச் செலவழிக்கும்படியாக அவ்வளவு ஆஸ்தி ஐரோப்பிய தேசங்களுக்குண்டா என்று ஒரு கேள்வி ஏற்படுகிறது. அந்த தேசங்களுக்கு ஏராளமாய் ஆஸ்தி உண்டென்றே தெரியவருகிறது. அதன் விவரம் வருமாறு.

### தேசங்களின் ஆஸ்தி

(1914-ம் வர்ஷம்)

| | கோடி ரூபாய்கள் |
|---|---|
| க்ரேட்ப்ரிட்டன் | 26,418 |
| ஜெர்மனி | 24,975 |
| ரஷ்யா | 18,048 |
| ப்ரான்ஸ் | 17,700 |
| ஆஸ்ட்ரியா | 16,674 |
| இட்டலி | 6,000 |
| பெல்ஜியம் | 3,600 |
| மொத்தம் | 1,13,414 |

ஆகவே யுத்தத்தில் சேர்ந்துள்ள தேசங்களின் மொத்த ஆஸ்தி 1,13,415 கோடி ரூபாயாகும். இதில் 37,500 கோடி ரூபாய் இரண்டு வர்ஷத்தில் தீர்ந்து போய்விட்டது. அதாவது மூன்றில் ஒரு பாகம் செலவழிந்திருக்கிறது.

இந்த யுத்தத்தில் ஜனச்சேதம் ஏராளமானது. 1915-ம் வர்ஷம் ஜூலை மாஸத்தில் யுத்த தேசங்களின் மொத்த ஸைன்யம் 2 கோடியே 35½ லக்ஷம் பேர்களாகும். இதோடு இட்டலி, பல்கேரியா இவைகளின் ஸைன்யத்தையும், (14 லக்ஷம்) புதிதாய்ச் சேர்ந்திருக்கும் ரஷ்யாவின் ஸைன்யத்தையும் சேர்த்தால் மொத்தம் ஸைன்யங்களின் மதிப்பு 3 கோடியாகலாம். யுத்த ஆரம்பத்தில் ஜனச்சேதம் நூற்றுக்கு 11 முதல் 33 வரையில் இருந்ததென்று மிஸ்டர் எட்கர் க்ராம்மண்ட் என்பவர் தெரிவித்தார். இரண்டு வர்ஷத்துக்கும் சேர்த்துப் பார்த்தால் யுத்தத்தில் ஜனச்சேதம், இறந்தவர்கள், வேலைசெய்ய லாயக்கில்லாதவர்கள் இவர்களை மாத்ரம் கவனித்தாலும், நூற்றுக்கு 40 வீதமிருக்கு மென்னலாம்.

இதன்படி பார்த்தால், 2-வர்ஷத்துக்கு மொத்தம் ஜனச்சேதம் 1 கோடியே 20 லக்ஷமாகும். மிஸ்டர் க்ராம்மண்ட் சொல்லுகிறபடி ஒரு மனிதர் ஸம்பாதிக்கக்கூடிய ஸொத்தின் மதிப்பு சராசரியில் 8,859 ரூபாய் என்று வைத்துக்கொண்டால் ஜனச்சேதத்தால் ஏற்பட்ட நஷ்டம் 10,558 கோடி ரூபாயாகும். வேறு சிலர் இந்த மதிப்பு ரொம்பக் குறைவானதென்று சொல்லுகிறார்கள் அவர்கள் கணக்குப்படி, ஜனச்சேதத்தால் ஏற்பட்ட நஷ்டம் 22,070 கோடி ரூபாயாகிறது. நமது தேசத்தின் மொத்த ஆஸ்தியை 1-என்று வைத்துக்கொண்டால் இந்தத் தொகையானது 5-மடங்காகும்.

முன்னமே நாம் யுத்தத்தால் தேசங்களுக்கு இந்தியாவின் ஆஸ்தியைப்போல் 8 மடங்கு சொத்து நஷ்டமாயிற்றென்று தெரிவித்தோம். இந்த ஜனச்சேத நஷ்டத்தையும் சேர்த்தால் மொத்த நஷ்டம் இந்தியாவின் ஆஸ்தியைவிட 13 மடங்காகும்.

| | கோடி ரூ. |
|---|---|
| மொத்தம் செலவு நஷ்டம் முதலியவை | 58,070 |
| இந்தியாவின் ஆஸ்தி | 4,650 |

# THE BRAIN.

BY A. K. SUNDARA RAJAN.

## மூளை.

தேகத்திலுள்ள எல்லா உறுப்புகளும் இயங்குவதற்கும் இவ்வியக்கத்தினால் நமக்குண்டாகும் ஸகல உணர்ச்சி பேதங்களுக்கும் மூளையே ப்ரதானமானது. அதை ஆன்மாவின் நிலையென்று மனோதத்வ சாஸ்த்ரிகள் கூறுவர். தேகத்திலுள்ள கரணங்கள், தத்வங்கள் முதலிய யாவற்றிலும் அது மிகவும் சிறந்ததென்பது, தேகத்தின் எல்லாப் பாகங்களிலும் மிகவும் திண்ணிய மண்டையோடு அல்லது கபாலத்துக்குள் கடவுள் அதை அமைத்துவைத்திருக்கும் அருமையினாலேயே தெளிவாய் விளங்குகிறது.

“நான் நினைக்கிறது நெஞ்சி லிருக்கிறது, வாயில் வரவில்லை,” “அவன் வயிற்றைக் கிழித்தால் வாயடைக்கும் அக்ஷரங் கிடையாது” என்னும் ஸாதாரண வழக்கச்சொற்களை ஆதாரமாகக்கொண்டு, மூளையினுடைய அருமைப்பாட்டையும், ஸகல எண்ணங்களுக்கும் அதுவே உற்பத்திஸ்தானமென்பதையும் புராதன ஹிந்துக்கள் அறிந்திலரென்று சில நவீன சாஸ்த்ரிகள் கூறுகிறார்கள். லலாடஸ்தானம், பிரம்மரந்திரம், துவாதசாந்தம் என்னும் பதப்ரயோகங்களையும் “எண்சாணுடம்புக்கு சிரஸே ப்ரதானம்” என்னும் பழமொழியின் தத்வார்த்தத்தையும், ஸகல வ்யாதிகளுக்கும் தைல வர்க்கங்களைக் கொண்டு சிரஸில் ப்ரயோகிக்கவேண்டியதென்று ஹிந்துக்களின் ஆயுள்வேதம் முறையிடும் உண்மைகளையும் அவர்கள் உணரவில்லைபோலும்! வினைய எல்லா உறுப்புகளையும் இயக்கத்தக்க ஆத்மநிலையும், உணர்ச்சிஸ்தானமும், ஞானமுதிக்கும் ஆதி பீடமும் சிரஸென்பதை அறிந்தே நம்மவர்கள் சிரஸை ப்ரதானமாகக் கொண்டார்கள்.

விடாது வருந்தி வாசிப்பதினால் மூளையின் சக்தி அதிகரித்துப் புத்தி விசாலப்படுகிறது. அதனால் மூளை எவ்வளவுங் கெட்டுப்போகிறதில்லை. தேக அஸௌக்யத்தினாலும், மனோவ்யாகூலங்களினாலும், பயம், திகில் முதலிய ஸங்கடங்களினாலுமே மூளை வெகுவாய்க் கெட்டுப்போகிறது.

புருசே என்பவர் மூளையைப் பற்றிப் பின்வரும் வ்ருத்தாந்தமொன்றை வெளியிட்டிருக்கிறார்.—சேனையில் காப்டனாயிருந்த தாவானீர் என்பவர் தேகாரோக்யஸ்திதியி லிருக்கையில் கெட்ட ஸமாசாரம் அடங்கிய ஒரு கடிதத்தை வாசிக்கையில் இடிவிழுந்தாற்போல அசைவற்று நின்று, பாரிசவாய்வு கண்டு, பேசச் சக்தியற்றவரானார். சில நாளைக்குப் பின்பு ஸ்வஸ்தமாகி வருகையில், அவருடைய மனைவியி னிடத்திலிருந்து ஒரு கடிதம் வந்தது; அதை வாசித்தவுடனே உதிரம் தலைக்கேறிப் பேச்சற்று, அசைவற்று, அறிவுகெட்டு மூன்றுதினத்தில் இறந்துபோனார். அவருடைய தலையைப் பரிசோதித்துப்பார்க்கையில், தலையிலுள்ள ரத்த நாடிகளில் உதிரம் அடைத்துக்கொண்டு மூளையில் சிறு கட்டிகள் எழும்பியிருந்தன.



162032

இத்யாதி அனுபவ ப்ரஸித்தமான கார்யங்களை வாசிக்கும்போது மூளை கெட்டுப்போவதற்குக் காரணம் மனோவ்யாகூலத்தை விளக்கத்தக்க தோற்றங்களென்றே தெரியவருகிறது. வருந்தி வாசிப்பதினாலேயே மூளை கெட்டுப்போகிறதென்பது சாஸ்த்ர அயுக்தம். தேகத்தை ஆரோக்யஸ்திதியில் வைத்துக்கொண்டும், போஜனம் உட்கொண்டவுடனே ஒருமணிநேரம் வரையில் மூளைக்கு அதிக வேலை தராமலும் மாத்ரம் இருப்போமாகில், எவ்வளவு ப்ரயாஸைப்பட்டு நாம் வாசித்தல் முதலிய மனோவேலைகளைச் செய்துகொண்டுவந்தாலும், மூளை கெட்டுப்போவதற்கு இடமிராது. காலக்ரமம் தப்பிப் போஜனம் உட்கொள்ளுவதினாலும், அமிதமாய்ச் சாப்பிடுவதினாலும், சாப்பிட்டவுடனே ஆலோசனையின்றி மனோ வேலையில் ப்ரவர்த்திப்பதினாலும், வ்யாகூலங்கள் முதலிய ஸஞ்சலங்கள் மனதைக் கவரவொட்டுவதினாலுமே தான் மூளை கெட்டுப்போய் அகால மரணம் நேரிடுகிறது.

மத்யதரைக்கடலில் நேரிட்டிருந்த ஓர் கப்பற்சண்டையிலே அதி வீராவேசத்துடன் போர்புரிந்துகொண்டிருந்த ஒருவன் சிரஸில் குண்டொன்று தாக்கியது. உடனே அவன் ப்ரஜ்ஞையற்றுக் கீழே விழுந்தான். ப்ராணன் முற்றும் நீங்கிய ப்ரேதம்போல் அவனிருக்கிருப்பானாயின் அவனை உடனே அடக்கம் செய்ய கப்பல்களிலிருந்தவர்கள் ப்ரயத்தனப்பட்டேயிருப்பார்கள். ச்வாஸப்பை, ரத்தாசயப்பை முதலியவற்றின் இயக்கக்குறிகள் வெளியே காணப்பட்டபடியால், அவனை அங்கிருந்த ராணுவ வைத்ய பரிசீலர்கள் ஜிப்ரால்டருக்கு அனுப்பினார்கள். அவ்விடத்தில் தேக தத்வ சாஸ்த்ரத்திலே மிகவும் பாண்டித்யம் பெற்ற சில [illegible]கள் பலவாறாக முயன்றும், அவன் அதேஸ்திதியி லிருந்தான். பிறகு அப்பிணியாளனை வைத்யர்கள் இங்கிலாந்துக்கு அனுப்பினார்கள். அவ்விடத்திலே சில மாஸம் வரையில் சரீர அங்க தர்மங்கள் மாத்ரம் இயங்கிக்கொண்டிருந்தும், அவன் பிரக்ஞை தப்பின நிலையிலேயே இருந்தான். இந்நிலைமையிலேயே ஒரு வர்ஷத்துக்கு மேற்பட்டு அவனிருந்தும், எவ்வகைப்பட்ட சிகிச்சையும் அவன் விஷயத்தில் பயன்படவில்லை. இப்படியிருக்கையில், கபால லக்ஷண வித்தையிலே அதிக பாண்டித்யமடைந்து நுட்ப புத்தியைப்பெற்ற ரணவைத்யர் ஒருவர் அப்பிணியாளியின் கபாலத்தைச் சோதித்துப்பார்க்கையில் அவனுடைய மூளையில் ஓர் எலும்புத்துண்டு அழுந்திக்கிடந்ததைக் கண்டார். அவர் அதனை அதற்கேற்ற ரணவைத்யக் கருவியைக்கொண்டு மெல்லத் தூக்கிவிட்டவுடனே, அவனுக்கு ப்ரஞ்ஞைவந்தது. அப்போது அருகிலிருந்த யாவரும் வியக்கத்தக்க அற்புதம் ஒன்று நடந்தது. மேற்கண்டபடி அப்பிணியாளியின் கபாலத்தில் குண்டு தாக்கியபோது அவன் தன் கூட்டாளி ஒருவனை நோக்கி சத்ருக்களின் மரக்கலங்களில் சிலவற்றைப் பிடிப்பதற்கேற்ற வழி வகைகளைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தான். அவன் வசனித்துக்கொண்டிருந்த வாக்யத்தைப் பூர்த்தி செய்வதற்குமுன், இடையில் குண்டு தாக்கிய காரணத்தால், அவனுடைய மூளைக்குப் பங்கம் நேரிட்டபடியினாலே, அவ்வாக்யம் முடிவு பெறாமல் அம்மட்டிலேயே நின்றிருந்தது: மூளையை அழுத்திக்கொண்டிருந்த எலும்புத்துண்டு மேற்கண்டபடி எடுபடவும், அப்பிணியாளி அவ்வாக்யத்தின் எஞ்சிய பாகத்தைச் சொல்லிமுடித்தான். அவ்வாக்யத்தில் எஞ்சி நின்ற பாகம் அவன் வாய்விட்டு வெளிப்பட்டது தான் ப்ரக்

ளை வந்தவுடனே அவனிடத்துண்டாகிய முதற் செய்கை. இதை யாவரும் வியந்தார்கள். இடையில் ஒருவருஷத்துக்கு மேற்பட்டுக் காலம்கழிந்ததைக்குறித்தும், அவனுடைய தேகத்துக்கு விளைந்தனவற்றைக் குறித்தும் அவனுக்கு ஒன்றும் தெரியாது. இடையில் விட்டுப்போன வாக்யத்தை முடிக்குந் தொழிலையுடைய மூளை நரம்புகள் விட்ட குறையை ஒரு வருஷமாகியும் மறவாதிருந்தது ஆச்சரியம்!

சரீரத்தைச்சார்ந்த ஏனைய அங்கங்கள் எவ்வளவு நன்றாய் இயங்கிக்கொண்டிருந்தாலும், ஸகல தோற்றங்களுக்கும் உணர்ச்சிக்கும் மூலாதார பீடமாகிய மூளை மாத்ரம் நல்லஸ்திதியில் இராவிட்டால், மனிதன் ப்ரேதத்துக்கு ஸமானமாவான்.

எ. கே. ஸுந்தரராஜன்.

## ALUMINIUM.

## அல்யூமினியம்.

அல்யூமினியம் என்னும் உலோகம் ஸுமார் 25-வர்ஷங்களுக்கு முன்னால் ரஸாயன சாஸ்த்ரிகளால் கண்டுபிடிக்கப்பட்டது. அதுமுதல் அதன் உபயோகம் நாளடைவில் வ்ருத்தியாகி பற்பல தொழில்களிலும் அது உபயோகிக்கப்பட்டுவருகிறது. ஆரம்பத்தில் அதை தாதுவர்க்கங்களிலிருந்து பிரித்தெடுக்க ரொம்ப செலவாயிற்று. அப்போது அல்யூமினியமானது ஒரு ஒளன்ஸ் முக்கால் ரூபாயாக விற்கப்பட்டு வந்தது. அதாவது ரூபாயெடை 4½-அணாவாக விற்றது. ஆனால் நாளடைவில் அதிகமாகத்தயார் செய்யப்படவே, அதன் விலை குறைந்துபோய் சென்ற 1913-ம் வர்ஷத்தில் ராத்தல் 13-அணாவாக விற்றது.

அல்யூமினியமானது பூமியில் ஏராளமாயிருக்கிறது. களிமண்ணிலுள்ள மூலப்பொருள்களில் முக்யமானது அல்யூமினியந்தான். ஆனால் களிமண் ஸுலபமாய்க் கிடைக்கக் கூடியதாயிருந்தும், அதிலிருந்து அல்யூமினியம் தயார்செய்ய நாளதுவரையில் ரஸாயன சாஸ்த்ரிகளுக்கு ஸாத்யப்படாமலே இருக்கிறது. தற்போது அல்யூமினியம் பாக்ஸைட் என்னும் தாதுப்பொருளிலிருந்து தயார் செய்யப்படுகிறது. இந்த பாக்ஸைட்டும் எல்லாவிடங்களிலும் கிடைப்பதில்லை. இந்தியாவில் மத்யமாகாணங்களில் இந்த தாதுப்பொருள் இருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதை சுத்திசெய்து, இதிலிருந்து அல்யூமினியம் தயார் செய்தால், அது இந்தியா, ஜப்பான், சீனமுதலிய ஆசியாகண்டத்து தேசங்களுக்கு போதுமானதாயிருக்கும். ஆனால் இதுவரையில் எவரும் இந்தியாவிலுள்ள பாக்ஸைட்டிலிருந்து அல்யூமினியம் தயார்செய்ய முயற்சி செய்யவில்லை. இப்போது நாம் உபயோகிக்கும் அல்யூமினியம் எல்லாம் அன்ய தேசங்களிலிருந்தே வருகிறது.

பாக்ஸைட் என்னும் தாதுப்பொருளில் அல்யூமினா என்னும் அல்யூமினிய பஸ்மம் இருக்கிறது. உயர்ந்த பாக்ஸைட்டில் இது 100-க்கு 75-பாகத்துக்கு மேலும் உண்டு. ரொம்ப தாழ்ந்த பாக்ஸைட்டானால் நூற்றுக்கு 31-பாகம் இருக்கும். பாக்ஸைட்டிலிருந்து முதலில் அல்யூமினாவைப் பிரித்தெடுத்து, அல்யூமினாவிலிருந்து மின்ஸார சக்தியால் அல்யூமினியத்தைப் பிரித்தெடுப்பார்கள்.

பாக்ஸைட்டானது ப்ரான்ஸின் தென்பாகத்திலும், அமெரிக்கா ஐக்யநாடுகளிலும், வேறு சில இடங்களிலும் கிடைக்கிறது.

சென்ற 1908-ம் வர்ஷத்தில் ஸுமார் 17,000 டன் அல்யூமினியம்கிடைத்தது. சென்ற 1914-ம் வர்ஷத்தில் 68,200 டன் அல்யூமினியம் கிடைத்தது. உலகத்தில் கிடைக்கும் மொத்த அல்யூமினியத்தில் பெரும்பாகம் அமெரிக்கா ஐக்யநாடுகளில்தான் தயார் செய்யப்படுகிறது. ஸுமார் 25-வர்ஷங்களுக்குமுன் அதாவது 1890-ம் வர்ஷத்தில் அங்கே 27-டன் அல்யூமினியந்தான்



தயார்செய்யப்பட்டது. ஆனால் சென்ற சில வர்ஷங்களாக அத்தொழில் ரொம்ப வ்ருத்தியடைந்திருக்கிறது. அதன்விவரம் வருமாறு:—

| வர்ஷம். | தயார் செய்யப்பட்ட அல்யூமினியத்தின் நிறை டன். |
|---|---|
| 1900 | 3,190 |
| 1905 | 5,060 |
| 1910 | 21,300 |
| 1912 | 29,290 |
| 1913 | 32,300 |
| 1914 | 35,320 |
| 1915 | 64,280 |

இந்த அட்டவணையால் அந்த தேசத்தில் அல்யூமினியம் செய்யும் தொழிலானது, 15-வர்ஷகாலத்தில் 20-மடங்கு வ்ருத்தியடைந்திருப்பதாகத் தெரிகிறது.

ஐரோப்பாவில் உள்ள தேசங்களுள் ப்ரான்ஸில்தான் அதிகமாக அல்யூமினியம் செய்யப்படுகிறது. அதன்விவரம் வருமாறு.

| வர்ஷம். | டன். |
|---|---|
| 1908 | 3,500 |
| 1909 | 5,000 |
| 1910 | 5,400 |
| 1914 | '18,000 |

இப்படி அல்யூமினியம் ஏராளமாக தயார் செய்யப்பட்டு வருவதற்குக் காரணம், அது அநேக கார்யங்களுக்கு ஏராளமாக உபயோகிக்கப்பட்டு வருவதே. அதன் உபயோகங்களில் சிலவற்றை இங்கு எழுதுகிறோம்.

அல்யூமினியமானது லைப்பனின் செய்வதற்கு இன்றியமையாதது. ஏரோப்ளேன்கள் செய்வதற்கும் அது உபயோகப்படுகிறது. மோட்டார் வண்டி செய்வதிலும் அது ஏராளமாய் உபயோகிக்கப்படுகிறது. வெடிகுண்டுகள் தயார் செய்வதிலும், செம்புக்கு பதிலாக தந்திக்கம்பிகள் செய்வதிலும் அதை உபயோகித்து வருகிறார்கள். வீட்டிற்கு வேண்டிய சமையல் பாத்ரங்களும், ஸைன்யங்களுக்கு வேண்டிய சமையல் பாத்ரங்களும் அதனால் செய்யப்பட்டு, வெகுவாய் உபயோகப்படுகின்றன. அநேக தேசங்களில் குண்டுகளுக்கு வேண்டிய ப்யூஸ் என்னும் திரிகளை அதனால் செய்து உபயோகிக்கிறார்கள்.

ஸாமான்களைச் சுற்றுவதற்கு மெல்லிய வெள்ளீயத்தகடுகளை உபயோகித்ததற்கு பதிலாக, இப்போது அநேகர் அல்யூமினியத்தால் செய்யப்பட்ட மெல்லிய தகடுகளை உபயோகிக்கிறார்கள். இதுவர்ணம் செய்வதிலும், நெசவுத்தொழிலிலும், உபயோகப்படுகிறது. அல்யூமினியத்தால் பற்பல குழாய்கள் செய்யப்படுகின்றன. அவைகள் ரொம்ப உறுதியாயிருக்கின்றனவாம். அல்யூமினியம் ரொம்ப லேசான உலோகமானதால், தாம்ரம், பித்தளை, ஆகிய இவைகள் உபயோகப்பட்டுவந்த தொழில்களில் அல்யூமினியத்தை விசேஷமாக உபயோகித்து வருகிறார்கள். யுத்தத்தால் அல்யூமினியத்துக்கு ரொம்ப க்ராக்கி ஏற்பட்டிருக்கிறது. ஸைன்யங்கள் உபயோகிக்கும் பெரிய தகரப் போகணிகள், இப்போது அல்யூமினியத்தாலேயே பெரும்பாலும் செய்யப்படுகின்றன. குண்டுகளில் வைக்கும் திரிகளுக்கும், யுத்தத்துக்கு வேண்டிய மோட்டார் வண்டிகள் செய்வதற்கும் அல்யூமினியம் ஏராளமாய் வேண்டியிருக்கிறது. இதனால் 1913-ம் வர்ஷத்தில் ராத்தல் 9-அணாமுதல் 13-அணாவாக விற்ற அல்யூமினியம் 1915-ம் வர்ஷத்தில் 15-அணாவாக விலை ஏறிவிட்டது. சென்ற வர்ஷத்தில் அது ராத்தல் 1-ரூ. 14-அணாவாக விற்றது.

---

காதல் வெற்றி.

ஹாஸ்யரஸமான நாவல். விலை 4-அணா. ஜனோபிமானி சந்தாதாரர்களுக்கு 3-அணா. ஜீ. எ. வைத்யராமன் & கம்பெனி, மதராஸ்.

## LOVE NEVER LOST.

BY A. V. RAMASWAMI.

## அன்புக்கும் அழிவோ?

(ஆனி மாஸத்து ஸஞ்சிகையில் 276-ம் பக்கத் தொடர்ச்சி.)

இந்த ஸம்பாஷணையை துரைஸாமி உள்ளேயிருந்து கேட்டுக்கொண்டிருந்தான். தன் தாயார் எண்ணத்தை அவர்கள் கலைப்பதற்காக அப்படிப் பேசுகிறார்களென்று அவன் தெரிந்துகொண்டான். செல்லம் அழகில்லை யென்றும், எல்லாம் கல்யாண விஷயத்தைப்பற்றி அடுத்த விசை பார்த்துக்கொள்ளலாமென்றும் சொன்னதும், அவனுக்குத் தன்னைமீறி கோபம் வந்துவிட்டது. "நாம் எவ்வளவு கஷ்டப்பட்டு அவளைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று ப்ரயத்தனப்படுகிறோம். அதை மாற்றுகிறார்கள், பார்த்தாயா" வென்று எண்ணிக்கொண்டு, விரைவாகச் சென்று, அவர்களை வம்பர்களென்றும், பிறர் வாழ்ந்தால் பார்க்க ஸகியாதவர்களென்றும், தன்வீட்டு விஷயத்தில் ஏன் அவர்கள் ப்ரவேசிக்கவேண்டுமென்றும், அவர்களைத் தாறுமாறாகத் திட்டி யனுப்பிவிட்டு, தன் தாயாரிடம் அவர்கள் பேச்சில் நம்பிக்கைவைக்கலாகாதென்று தெரிவித்து, 'கல்யாணத்தை நிறுத்த யோசனை செய்யாதே' யென்று சொன்னான். இந்தச் செய்திகளெல்லாம் செல்லத்தின் காதிற்கு எட்டின. ஒருவேளை ஸுப்பலக்ஷ்மியின் மனம் மாறி எங்கு மறுத்துவிடப் போகிறாளோ வென்றெண்ணி வருத்தப்பட்டாள். கல்யாணம் இப்பொழுதாகி முடிந்ததும் ஸந்தோஷம் பிறந்துவிட்டது.

ராமநாதய்யர் கல்யாணம் நடந்த நான்கு நாட்களிலும் ஊரையழைத்து போஜனம் செய்வித்தார். ஊரிலுள்ளோ ரனைவரும் இதுவரையில் இவ்வளவு பணம் செலவழித்து கல்யாணஞ்செய்தவரைப் பார்த்ததேயில்லை யென்று சொல்லிப் புகழ்ந்தார்கள். இப்படிக் கல்யாணம் மிகவும் விமரிசையாக நடந்தேறியது. செல்லமும் துரைஸாமியும் தமது எண்ணம் நிறைவேறிவிட்டதென்று அகமகிழ்ந்தார்கள்.

### V - அத்யாயம்.

கல்யாணத்திற்கு வந்திருந்தவர்களெல்லாம் ராமநாதய்யர் விருப்பத்தின்படி கொஞ்சநாளிருந்துவிட்டு தத்தம் ஊர்போய்ச் சேர்ந்தார்கள். பள்ளிக்கூடம் திறந்துவிட்டதனால், துரைஸாமியும் பட்டணம் போய்விட்டான். தான் ஊருக்குப் போகுமுன் செல்லத்தினிடம் தனக்கு அடிக்கடி கடிதம் போட்டுக்கொண்டிருக்கும்படி சொல்லிவிட்டுப் போனான். பட்டணம் வந்ததும் பற்பல விதமான அதிக விலையுள்ள பட்டு ரவிக்கைகளும் சேலைகளும் வாங்கி, தன் தாயார்பேருக்கு அனுப்பி, செல்லத்தினிடம் கொடுக்கச் சொன்னான். ஊரிலுள்ளோர் "இன்னும் கல்யாணமாகி பூரா ஒருமாஸமாகவில்லை. அதற்குள் தனது மனைவிக்கு பட்டு பட்டாக புடவைகளும் ரவிக்கைகளும் வாங்கி யனுப்புவதைப் பார்" என்று சொல்லி ஆச்சரியப்பட்டார்கள். செல்லம் தனக்கு ஏதாவதொன்று வேண்டுமென் றெழுதினால் உடனே வாங்கி அனுப்பிவிடுவான். குறைந்தது மாஸத்திற் கொருதடவை வந்துபார்த்துவிட்டுப் போவான். ராமநாதய்யரும், விசாலாக்ஷியும் "அந்தமட்டும் செல்லத்திற்கு நல்ல அகமுடையான் அகப்பட்டானே; பையன் மிகவும் யோக்யன். பெண்டாட்டியை நன்றாக வைத்துக்கொண்டிருப்பான்" என்றுசொல்லி ஸந்தோஷப் பட்டார்கள்.

தினந்தோறும் செல்லம் தன் புக்ககத்திற்குப் போய், தன் மாமியாருக்கு ஒத்தாசையாக சில கார்யங்களைச் செய்துவிட்டு, அங்கேயே இருந்து தலையை வாரிப் பின்னிக்கொண்டு ஸாயங்காலம் வீட்டுக்கு வருவாள். ஸுப்பலக்ஷ்மியும் தன் னெண்ணத்தின்படி செல்லம் தனக்கு நாட்டுப் பெண்ணாக வந்ததை நினைத்துக்கொண்டு, ஸந்தோஷப்பட்டாள். ஒவ்வொருநாள் அவள் செல்லத்தை அகத்திலேயே நிறுத்திக்கொண்டு ராமநாதய்யருக்கு ஸமாசாரம் சொல்லியனுப்பி விடுவாள். இப்படி செல்லம் இங்குமங்குமாக இருந்துவந்தாள். கொஞ்சநாளைக்கெல்லாம் புஷ்பவதி ஆனாள். அதன்பிறகு அவள் வெளியிலெங்கும் போவதில்லை. ஸுப்பலக்ஷ்மி ராமநாதய்யர் வீட்டுக்கு வந்து அவளை அடிக்கடி பார்த்துவிட்டுப் போவாள்.

துரைஸாமிக்கு பீ. ஏ. பரீக்ஷை முடிய எட்டு மாஸமிருந்தது. பரீக்ஷை முடிந்ததும் சாந்திமுகூர்த்தத்திற்கேற்பாடு செய்யலாமென்று ராமநாதய்யர் சொன்னார். ஸுப்பலக்ஷ்மியும் அப்படியே செய்யலாமென்று ஒத்துக்கொண்டாள். செல்லம் பெரியவளானபிறகு வெட்கத்தினால் துரைஸாமிக்கு கடிதமெழுதுவதை நிறுத்திவிட்டாள். அதை யறியாத துரைஸாமி "என்ன செல்லம் கடிதம் போடுவதை நிறுத்திவிட்டாள். வாரத்திற் கொருகடிதமாவது போடாமலிருக்க மாட்டாளே. என்ன காரணமோ தெரியவில்லையே? என்பேரில் ஒருவேளை 'கோபமோ? அதற்கும் காரணமில்லையே. அவள் போடுங் கடிதங்களுக்கெல்லாம் உடனே பதிலெழுதிவிடுகிறேன். ஏதாவது வாங்கி யனுப்பும்படி யெழுதினால் உடனே வாங்கி யனுப்பிவிடுகிறேன்" என்று எண்ணி, தன் தாயாருக்கு அவளிடத்தினின்றும் கடிதம் வராத காரணத்தை உடனே தெரியப்படுத்தும்படி கடிதமெழுதினான். அவன் மீனாம்பாளை, செல்லம் வெட்கத்தினால் கடிதமெழுதுவதில்லை யென்று பதிலெழுதச்சொன்னான். அந்தக் கடிதம் துரைஸாமிக்குச் சேர்ந்ததும் அவன் "கல்யாணமாயும் என்னுடன் ஸஹஜமாகப் பேசிக்கொண்டிருந்த உனக்கு இப்பொழுதானா வெட்கம் வந்துவிட்டது" என்று செல்லத்திற்கு பரிகாஸமாக ஒரு கடிதமெழுதினான். அதன்பிறகு செல்லமும் கொஞ்சம் வெட்கம் தணிந்து, முன்போலவே கடிதமெழுத ஆரம்பித்தாள். நாளும் ஓடிற்று. துரைஸாமிக்கு பரீக்ஷையும் முடிந்தது. அவன் ஊருக்கு வந்தபொழுது செல்லத்திற்குப் பற்பலவித வாஸனை ஸாமான்களும் இன்னும் இதர வஸ்துக்களும் வாங்கிக்கொண்டுவந்தான். கொஞ்சநாளைக்கெல்லாம் ராமநாதய்யர் நல்லநாளாக ஒன்று பார்த்து துரைஸாமிக்கும் செல்லத்துக்கும் மிகவும் விமரிசையாக சாந்திமுகூர்த்தம் செய்தார். அதற்கு நாலுநாளைக்கெல்லாம் துரைஸாமி பரீக்ஷையில் பாஸ் செய்த ஸமாசாரம் தெரிந்தது. துரைஸாமி மேற்கொண்டு படிக்காமல் ஒருதடவை பட்டணத்திற்குப் போய் 125 ரூபாய் சம்பளத்தில் ஒரு வேலையை ஒத்துக்கொண்டு ஸௌகர்யமான வீடாக ஒன்று வாடகைக்கு ஏற்பாடு செய்துவிட்டு, எல்லாரையும் அழைத்துக்கொண்டுபோவதற்காக ஊருக்குவந்தான். நல்லநாள் ஒன்று பார்த்து எல்லாரும் புறப்பட்டார்கள். ஸுப்பலக்ஷ்மி, விசாலாக்ஷியினிடம் சென்று, தான் போய்வருவதாகவும், அவள் தன் கணவனுடன் இன்னும் பத்துநாளில் பட்டணத்திற்கு ஒருதரம் வந்துவிட்டுப் போகவேண்டுமென்றும் சொல்லிவிட்டு வண்டியில் ஏறிக்கொண்டாள். அவளுடன்கூடவே மீனாம்பாளும் ஏறிக்கொண்டாள். துரைஸாமியும் தன் மாமியாரிடம் போய்வருவதாகச் சொல்லிவிட்டு, செல்லத்தை "ஏன், ரெயிலுக்கு நாழிகையாகிறது புறப்படு" என்றான்.

இதுவரையில் செல்லம் தன் பெற்றோர்களை விட்டுப் பிரிந்ததில்லை. இப்பொழுது பெற்றோரை விட்டுப் பிரிகிறோமேயென்று ஒருபக்கத்தில் வருத்தமும், கணவனுடன் சென்று ஸுகமாய் குடித்தனம் செய்யப்போகிறோமேயென்று ஒரு பக்கத்தில் ஸந்தோஷமும், உண்டாயிற்று. தான் வண்டியில் ஏறுமுன் தன் தாயாரிடம் சென்று, நமஸ்காரம் செய்து, தான் போய்வருவதாகச் சொல்லிப் புறப்பட்டாள். அவளும் செல்லத்திற்கு மாமியாரிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்றும், கணவனிடத்தில்

எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்றும் சொன்னாள். செல்லமும் அப்படியே நடப்பதாகச் சொல்லிவிட்டு வண்டியில் ஏறிக்கொண்டாள். துரைஸாமியும் ஏறிக்கொண்டான். ராமநாதய்யரும் ஸ்டேஷன் வரையில் போய்வரக் கருதி ஏறிக்கொண்டார்.

ரெயில் வர சற்றுநேரந்தானிருந்தது. ராமநாதய்யர் அதற்குள் நால்வர்க்கும் டிக்கட்டுகள் வாங்கினார். ரயில் வந்ததும் நால்வரும் ஏறிக்கொண்டார்கள். ராமநாதய்யர் செல்லத்தினிடம் இருபது ரூபாயைக் கொடுத்து "உனக்கு எதற்காவது செலவுக்கு வைத்துக்கொள்" என்று சொல்லி, அடிக்கடி க்ஷேம ஸமாசாரத்தைப் பற்றி கடிதமெழுதும்படி சொன்னார். இதற்குள் ரெயிலும் நகர்ந்தது. ராமநாதய்யர் துரைஸாமியை போய்ச்சேர்ந்ததும் கடிதம் போடும்படி சொல்லிவிட்டு, நின்றுகொண்டு ரெயில் கண்ணுக்கு மறையுமட்டும் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு வீட்டுக்கு வந்துசேர்ந்தார். அன்றையதினம் ராமநாதய்யருக்கும் விசாலாக்ஷிக்கும் வீடு வெறிச்சென்று தோன்றிற்று. அன்று முழுவதும் செல்லத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். சற்று நேரத்திற்கு ஒருதரம் விசாலாக்ஷி ராமநாதய்யரை "இந்நேரத்திற்கெல்லாம் எவ்விடம் போவார்கள்? இந்நேரத்திற்கு வீடு போய் சேர்ந்திருப்பார்களா?" என்று கேட்டுக்கொண்டிருந்தாள். அவளுக்கு அன்றையதினம் காரியத்தின்மேல் புத்தி செல்லவேயில்லை.

ஸாயந்த்ரம் 6-மணிக்கு துரைஸாமியும் மற்ற மூவரும் பட்டணம் வந்து சேர்ந்தார்கள். ஒரு வண்டியை அமர்த்திக்கொண்டு வீடுபோய் சமைத்து சாப்பிட்டு விட்டு நால்வரும் படுத்துத் தூங்கினார்கள். மறுநாள் காலை 10-மணிக்கெல்லாம் செல்லம் சமைத்தாள். துரைஸாமி சாப்பிட்டு விட்டு ஆபீஸுக்கு போய்விட்டான். பிறகு செல்லம் தன் மாமியாருக்கும் மீனும்பாளுக்கும் சாதம் போட்டு தானும் சாப்பிட்டுவிட்டு வீட்டுக் காரியங்களை சீக்ரமே செய்துவிட்டாள். ஸுப்பலக்ஷ்மி செல்லத்தைப்பார்த்து "சற்றுநேரம் படுத்துக்கொள், காரியங்களையெல்லாம் ஸாயங்காலம் வெயில் தாழ்ந்த பிறகு செய்யலாம்" என்று சொல்லி, தான் படுத்துக்கொண்டு தூங்கிவிட்டாள். செல்லத்திற்கு தூக்கம் வரவில்லை, அவளுக்கு கண்ணைக்கட்டி காட்டில் விட்டது போலிருந்தது. நேற்றையதினம் காலை 12 மணிக்கெல்லாம் ஊரிலிருந்தோம், இன்றையதினம் இங்கிருக்கிறோமேயென்று எண்ணிக் கொண்டாள். பெற்றோர்களைப் பார்த்து பத்து வர்ஷமானது போல் தோன்றியது. எப்பொழுது ஸாயங்காலம் வரும்; கணவன் ஆபீஸிலிருந்து வருவானென்று எதிர்பார்த்திருந்தாள். மணி ஐந்தானதும் ராத்ரிக்கு சமைக்க அடுப்பு மூட்டினாள். அதற்குள் அவள் மாமியார் எழுந்து தான் சமைப்பதாகச் சொன்னாள். சற்றுநேரத்திற்கெல்லாம் துரைஸாமி கையில் இரண்டுகுலை தாழம்பூவுடனும், ஒருசெண்டு மல்லிகைப்பூவுடனும், வந்து சேர்ந்தான். ஸுப்பலக்ஷ்மி சமைத்தானதும் செல்லத்திற்கும், மீனும்பாளுக்கும் பூவைத்து நன்றாகப் பின்னிவிட்டாள். ராத்ரி எல்லாரும் சாப்பிட்டானதும் ஸுப்பலக்ஷ்மியும் மீனும்பாளும் தாழ்வாரத்தில் படுத்துக்கொண்டார்கள். துரைஸாமி, செல்லம் இருவரும் அத் தாழ்வாரத்திற்கு பக்கத்திலிருந்த அறையில் படுத்துக்கொண்டார்கள். துரைஸாமியினிடம் செல்லம் தனக்குப் போது போகவில்லையென்றும், அன்று ஒருநாள்போனது ஒருயுகம்போலிருந்ததென்றும் சொன்னாள். மறுநாள் துரைஸாமி ஆபீஸிலிருந்து வந்தபொழுது, பத்து தமிழ் நாவல்களை வாங்கிக்கொண்டுவந்து அவளிடம் கொடுத்து, 'சுதேசமித்திரன்' பத்ரிகைக்கு பணங்கட்டியிருப்பதாகவும் சொன்னான். அதன் பிறகு தினந்தோறும் செல்லம் தன் காரியங்களானதும் முதலில் பேபரைப் பார்த்துவிட்டு பிறகு புஸ்தகத்தை வைத்துக்கொண்டு வாசிப்



பாள். அப்பொழுது அவளுக்கு போதுபோவதே தெரியாமலிருந்தது. நாளாக ஆக எல்லாம் ஸஹஜமாய் விட்டது. தன் பெற்றோர்களுக்கு தான் ஸௌக்யமாயிருப்பதாகவும், அவர்களை ஒருதடவை வந்துவிட்டுப் போகும்படிக்கும், அடிக்கடி கடிதம் எழுதுவாள். ஸுப்பலக்ஷ்மியும் செல்லத்தின்மேல் மிகவும் அன்பாக இருந்தாள். அவளை அநேகமாய் காரியம்செய்ய விடுவதில்லை. செல்லமும் அவளிடம் மிகவும் மரியாதையாகவே நடந்துகொண்டாள். செல்லம் தன் கணவனிடம் மாமியார் தன்னைக் காரியம் செய்யவிடாமல் தானே செய்து கஷ்டப்படுவதாகச் சொன்னாள். அதன்பேரில் அவன் ஒரு சமையல்காரனை வேலைக்கு அமர்த்தினான். அதற்குப் பிறகு செல்லத்திற்காவது, ஸுப்பலக்ஷ்மிக்காவது அதிக வேலையே கிடையாது. இப்படிக் கொஞ்சநாள் செல்லம் ஒருவித கஷ்டமும் மனவருத்தமுமில்லாமல் குறையற்று ஸுகமாக தன் கணவனுடன் கூடிவாழ்ந்து வந்தாள்.

செல்லந் தான் மத்யானங்களில் புஸ்தகங்களை வாசித்துக் காலத்தைப் போக்கிவிடுகிறாள். ஸுப்பலக்ஷ்மி என்ன செய்வது? போய் ஒருமாதமட்டும் அவள் வெளியிலெங்கும் போகாமல் வீட்டிலேயே இருந்துவந்தாள். அதன் பிறகு மத்யானம் சாப்பிட்டானதும் அடுத்தகத்தில் குடியிருந்த காமாக்ஷி யென்னும் பெயர்கொண்ட ஒரு விதந்துவை ஸ்நேகிதம் செய்துகொண்டு அவளிடம்போய் வம்புபேசி காலத்தைக்கழித்து வந்தாள்.

காமாக்ஷிக்கு ஒரேபிள்ளை. அவன்பெயர் ராகவன். அவனுக்கு மதராஸ் பாங்கியில் 50-ரூபாய் சம்பளம். அவன் மகா ஸாது. தன் தாயாருக்கு அஞ்சி நடப்பவன். அவள் சொல்வது தனக்கு நல்லதானாலும், கெட்டதானாலும் உடனே செய்துவிட்டுத் தான் மறுவேலை பார்ப்பான். காமாக்ஷி மிகவும் பொல்லாதவள். அந்தக் காரணத்தினாலேயே எல்லாரும் அவள் பிள்ளைக்கு பெண் கொடுக்க நடுங்கினார்கள். ராகவனுக்கு ரொம்ப நாள் வரையிலும் கல்யாணமாகாமலிருந்து, கடைசியில் கனகம் என்ற பெண் ஒருத்தி மனைவியாக அமைந்தாள். அவளை இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கலாம். பசுங்கிளி போல் அவ்வளவு அழகுடையவள். கனகத்தின் பெற்றோர்கள் அவள் சிறு குழந்தையாயிருந்தபொழுதே இறந்துவிட்டதனால், அவள் தன் மாமன்வீட்டில் வளர்ந்துவந்தாள். அவளுக்கு வயது பதினொன்றானதும், அவள் மாமன் மாப்பிள்ளை தேடி எங்கும் அகப்படாமையால், எப்படியாவது கல்யாணம் செய்துகொடுத்து விடுவோமென்ற எண்ணத்துடன், ராகவனுக்கு மணம்செய்து கொடுத்து விட்டான். கனகம் பெரியவளாய் வீட்டுக்கு வந்தவுடன் காமாக்ஷி தன் முழு அதிகாரத்தையும் செலுத்த ஆரம்பித்தாள்.

ஐயோ பாவம்! கனகத்தின் பெற்றோர்கள் உயிருடனிருந்திருக்கும்பக்ஷத்தில் மனந்துணிந்து ரூபத்தில் லக்ஷ்மியை யொத்த அவளை, ஒரு பசுங்கிளியை குரங்கு கையில் கொடுப்பதைப்போல, அந்த இடத்தில் கொண்டு கொடுத்து ஸம்பந்தம் செய்திருப்பார்களா? ஒருக்காலும் கொடுத்திருக்கமாட்டார்கள். பெற்றோர்களைத் துறந்துவிட்டு நிற்பவர்கள் எவ்வளவு துர்பாக்யமுடையவர்கள் பாருங்கள். கனகம் பூர்வஜன்மத்திற்செய்த தீவினைப்பயனால்தான் தன் பெற்றோர்களைத்துறந்து காமாக்ஷிக்கு நாட்டுப் பெண்ணாக வர நேர்ந்தது. ஜனங்களெல்லாம் "ஐயோ! இவ்வளவு அழகுடைய பெண்ணை எப்படித்தான் மனந்துணிந்து அவள் மாமன், காமாக்ஷியின் தீக்குணங்களெல்லாம் தெரிந்திருந்தும், அவ்விடத்தில் கொடுத்தானோ. தன் பெண்ணாயிருந்தால் இப்படிக் கொடுத்திருப்பானா?" என்று சொல்லி வருத்தப்பட்டார்கள்.

ராகவனுக்கு வாழ்க்கைப்பட கனகத்திற்கு கொஞ்சங்கூட இஷ்டமில்லை. ஆனால் எப்படி மறுத்துச் சொல்வது? அவளென்ன செய்யக்

கூடும்? தனக்காக கணவன் தேடிய மாமனுக்கு தன் துரத்ருஷ்டத்தினால் எங்கும் வரன் அகப்படவில்லை. எப்படியிருந்தாலும் கல்யாணமென்னமோ ஆகவேண்டும். ராகவனைக் கல்யாணம் செய்து கொள்ள இஷ்டமில்லை யென்று தனது மாமனிடம் சொன்னால், அவனுக்கு கோபம் பிறந்து, "உனக்குப் பிடித்தவனைப் பார்த்துக் கலியாணம் செய்துகொள்" என்று சொல்லிவிட்டால் என்னசெய்கிற தென்றெண்ணி, பேசாம லிருந்துவிட்டாள்.

இந்தக் காலத்தில் பெண்களின் அழகையும் புத்தியையும் பார்த்து யார் கல்யாணம் செய்து கொள்ளுகிறார்கள்? மாமனார் எவ்வளவு பணக்காரர், எவ்வளவு ஆஸ்தியிருக்கிறது, எவ்வளவு எதிர் ஜாமீன் கொடுப்பார், கல்யாணமான பிறகு மாப்பிள்ளையின் முடுக்கைக்காட்டி பயமுறுத்தி, எவ்வளவு பணம் பிடுங்கலாம்' என்பதை யோசித்துக் கல்யாணம் செய்து கொள்ளுகிறார்கள். எதிர் ஜாமீன் கொடுக்கும்பக்ஷத்தில் பெண் மூதேவியைப் போலிருந்தாலும் மிக்க அழகாய் விடும். 'மூடபுத்தியை யுடையதாயிருந்தாலும் ஸரஸ்வதியாய்விடும். இந்தக்காலத்தில் இரண்டு மூன்று பெண்களைப் பெற்றுவிடுபவர்களுக்கு வேறு நரகமேயில்லை யென்று சொல்லலாம்; அவ்வளவு கஷ்டங்களையும் அவர்கள் இந்த உலகத்திலேயே அனுபவித்து விடுகிறார்கள். முதலில் மாப்பிள்ளை தேடுவது கஷ்டம். எங்கேயோ ஒருவனைத்தேடிக் கல்யாணம் செய்தால், அவன் ஏழையாயிருக்கும் பக்ஷத்தில் கொஞ்சநாளைக்குள் முன்னிருந்த நிலைமையை முற்றும் மறந்து, தனக்கு வேண்டிய வீண் செலவுகளுக்கெல்லாம் பணம் கொடுக்கும்படி மாமனாரைக் கேட்க ஆரம்பிக்கிறான். கொடுக்காவிட்டால் கோபம் பிறந்துவிடும். உடனே தன் மனைவியை பிறந்தகத்திற்கு அனுப்பி வாழாமல் வைத்துவிடுகிறான். இந்த உலகத்தில் பெண்களைப் பெற்ற எல்லாருமே பணக்காரர்களா யிருக்கிறார்களா? எவ்வளவுபேர் ஸர்வ ஏழைகளாயிருக்கிறார்கள். அவர்களுக்குப் பெண் பிறந்து விட்டால்என்னசெய்வது? பெண்களுக்கு வயதிலோ கல்யாணமாகவேண்டும். இல்லாவிட்டால அபகீர்த்திக்கு ஆளாகவேண்டியிருக்கும். பணமோ கிடையாது. பணமில்லாவிட்டால் மாப்பிள்ளைகளோ அகப்படுவதில்லை. பெண்களாகப்பெற்ற ஸர்வ ஏழைகளாகிய அவர்கள் என்னசெய்வார்கள், பாவம்! அவர்கள் மனம் எந்நிலையிலிருக்கும்? அதை நினைப்பார் ஒருவருமில்லையே! தங்கள் பிள்ளைகளுக்கு எதிர்ஜாமீன் கொடுக்கும்படி கேட்கும் பெற்றோர்கள் தாம் அந்த நிலையிலிருப்பாரானால், தமது மனம் எப்படி வருந்துமென்பதை யோசித்துப் பார்ப்பாரேயானால், வாய்கூசாமல் வரதக்ஷிணை கேட்க இச்சிப்பார்களா? ஒருநாளும் மனமிசையார்கள். இது தவிர, இவ்வுலகில் அநேகமாய் மிக்க பணக்காரர்களுக்கு குழந்தைகள் பிறப்பதில்லை. குடிக்கக் கஞ்சியுமில்லாத தரித்ரதசையி லிருப்பவர்களுக்கே அதிக குழந்தைகள் பிறக்கின்றன. அவைகளும் அநேகமாய் பெண்களாகவே பிறக்கின்றன. அவைகள் ஒவ்வொன்றிற்கும் கல்யாணத்தின்போது பணம் கொடுக்கமுடியுமா?

எப்பொழுதும் பணத்திற்கிச்சிக்காமல் நமது மனதுக்கு இசைந்தவளாக பெண்ணின் அழகையும் புத்தியையும் பார்த்து கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். ஆனால் அப்படிப்பட்டவர்கள் அநேகமாய் இந்த உலகில் ஒருவருமில்லை. எல்லாருமே துரைஸாமியைப்போலிருக்கிறார்களா? எவ்வளவுபேர்கள் பணத்திற்காக ஆசைப்பட்டு கல்யாணம் செய்துகொள்ளுகிறார்கள். "அழகைப்பார்த்து கல்யாணம் செய்துகொள்வது" என்பதொன்றிருந்திருக்கும்பக்ஷத்தில் கனகத்தைக் கல்யாணம் செய்துக்கொள்ள அநேகம்பேர் போட்டியுடன் முன்வந்திருக்கவேண்டும். பணத்துக்காக ஆசைப்படுபவர்கள் அநாதையான கனகத்தை மணம் செய்துகொள்வார்களா? ஆகையால் ராகவனுக்கு மனைவியாகி காமாக்ஷியி



னிடம் அகப்பட்டுக்கொண்டு அவதிப்படவேண்டியதாயிற்று.

காமாக்ஷிக்கு, தாய் தகப்பனற்று அநாதரவாயிருக்கும் ஓர் பெண்ணை படுத்தலாமா என்ற எண்ணம் தோன்றாமல் போனது மிக்க அதிசயமே அந்தப்பெண் மனம் எவ்வாறு தவிக்குமென்பதும் அவளுக்குத் தெரியாமல்போயிற்று. ஒருவேளை தனக்கு ஓர் பெண்ணிருந்து அவளை அவள் மாமியார் படுத்தினால் தெரிந்திருக்கும். அவள் செய்த புண்ய வசத்தினால் அவளுக்கு ஒரு பெண்ணில்லாமல் போயிற்று. அல்லது தான் ஒரு மாமியாரிடமிருந்து பார்த்திருந்தால் தெரிந்திருக்கும். அவள் செய்த அத்ருஷ்ட வசத்தினால் அதுவும் இல்லாமல் போயிற்று. ஏனென்றால் அவள் புக்ககத்திற்குப் போவதற்கு முன்னமேயே அவள் மாமியாரிறந்துவிட்டாள்.

கனகத்திற்கு அவ்வளவு கொடிய மாமியாரிடமிருந்து குடித்தனம் செய்ய நேரிட்டது விஸனிக்கத் தக்கதே. அவளுக்கு ஒருநாள் போவது ஒரு யுகமாயிருந்தது. தினந்தோறும் ராகவன் ஆபீஸிலிருந்து ஸாயங்காலம் வீட்டுக்கு வந்ததும் காமாக்ஷி, கனகம் அப்படிச் செய்தாள், இப்படிச் செய்தாளென்று சொல்லிக்கொடுப்பாள். ராகவனும் ஸமாசாரத்தை யொன்றும் விசாரியாமலே, அகாரணமாக கனகத்தைப் போட்டு புடைத்துவிடுவான். காமாக்ஷி கனகத்திற்கு வயிறு நிறையக்கூட சாதம் போடுவதில்லை. வீட்டு வேலைகளை யெல்லாம் கனகந்தான் செய்யவேண்டும். காமாக்ஷி துரும்பை யெடுத்துப் போடமாட்டாள். வேலைதானொன்றுமில்லையே, பேசாமலிருக்கக்கூடாதா? காலைநீட்டி உட்கார்ந்துகொண்டு கனகத்தை அதிகாரஞ் செய்வாள். இதைச் செய்யவில்லை, அதைச் செய்யவில்லை, யென்று வாயில் வந்தபடி யெல்லாம் திட்டுவாள். காலையில் சாப்பிட உட்கார்ந்தால் "கல்சட்டி நிறைய பழையது எடுத்துக் கொட்டிக்கொள். வாய்க்கு இன்பமாக நிறைய ஊறுகாய் மிளகாயும், நாரத்தங்காய் ஊறுகாயும் போட்டு வைத்திருக்கிறது" என்று சொல்லுவாள்.

கனகமோ அறியாதவள். வீட்டுக் கார்யங்களை யெல்லாம் தானே செய்யவேண்டும். காலையிலெழுந்தவுடன் சாப்பிடாவிட்டால் எப்படிக்கார்யங்களைச் செய்யமுடியும்?

கனகம் தன் புக்ககத்திற்கு வந்த கொஞ்சநாள் வரையில் ராகவன் அவளிடம் மிக்க அன்பாயிருந்தான். தனக்கு அதிக நாள்வரையில் கல்யாணமாகாமலிருந்து கடைசியில் ஓர் அழகான பெண் கிடைத்ததைப்பற்றி ஸந்தோஷங் கொண்டான். இதையெல்லாம் பார்த்த காமாக்ஷி "நமது பிள்ளை தன் பெண்டாட்டியின்மேல் மிக்க அன்பாயிருக்கிறான். இப்படியே நாம் விட்டுவிட்டால் அவள்பேரில் அவன் வைத்திருக்கும் அன்பு முற்றிவிடும். பிறகு நம்மை லக்ஷ்யம் செய்யமாட்டான். ஒருவேளை அவள் பேச்சைக் கேட்டுக்கொண்டு நம்மை அடித்துத் துரத்திவிட்டாலும் விடுவான். நமக்கோ இவனை விட்டால் வேறு கதி கிடையாது. போவதற்குக்கூட வேறு இடமொன்றுமில்லை", என்று எண்ணி, தனக்குத் தெரிந்த ஒரு மூலிகையைக் கொண்டு ராகவனுக்கு மருந்திட்டாள். அதன் பிறகு கொஞ்சங் கொஞ்சமாக ராகவனுக்கு கனகத்தின்மேல் வெறுப்புண்டாகி கடைசியில் அதிகமாய்விட்டது. அவளைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. தன் தாயாரிஷ்டப்படியே நடந்துவந்தான். அவன் பேச்சைக் கேட்டுக்கொண்டு கனகத்தை நன்றாக அடித்துவிடுவான்.

கனகம் பொறுமைசாலியானதால் தனக்குப் போவதற்கு வேறு இடமில்லாமல் கதியற்றிருப்பதை நன்கு அறிந்து, தன் விதியை நொந்துகொண்டு அவர்களிடம் ஆக்ஞைகளுக்கெல்லாம் உட்பட்டு தவறாது நடந்துவந்தாள். சில ஸமயங்களில் அவள், தன் தாய் தந்தையிருக்கும் பக்ஷத்தில் அப்படி தான் கஷ்டப்படப் பார்த்

திருப்பார்களா? அனாதையாய் விட்டோயே யென்று நினைத்துக்கொண்டு கண்ணீர் விட்டழுவாள். தானே தன் குறைகளையெல்லாம் ஒவ்வொன்றாக நினைத்துக்கொள்வாள். "ஐயோ, நான் என் மாமியாரிடத்தில் மிக்க மரியாதையாக நடந்துகொள்கிறேன். என்னை ஏன் அவள் கண்ணில் காணவொட்டாமல் கரிக்கிறாளோ தெரியவில்லையே? அவள் கண்ணுக்கு நான் எதைப்போல் காணப்படுகிறேனோ? நான் எந்தக் காரியங்களை எவ்விதமாகச் செய்தாலும் சண்டைக்கு வருகிறாள். அவளுக்கு என்னை வைத்துக்கொண்டு குடித்தனஞ்செய்ய இஷ்டமில்லையோ என்னமோ! அப்படியானால் வேறொருத்தியை தன் பிள்ளைக்குக் கல்யாணம்செய்து, அவளையாவது என்னைப்போல் படுத்தாமல் வைத்துக்கொள்ளட்டுமே. நான் அவர்களிருவருக்கும் ஊழியம் செய்துகொண்டிருக்கிறேன். என்னை அவர்கள் இதைவிட வருத்தினாலும் நான் அவர்கள் நன்மையைத்தான் கோருவேன். இப்பொழுது மாத்ரமென்ன. நான் ஒரு வேலைக்காரிக்கும் கீழாகத்தான் மதிக்கப்பட்டிருக்கிறேன். என்னைப்பற்றி தன் பிள்ளையினிடம் ஏன் அபாண்டமாகப் பொய்சொல்லி அடிவாங்கி வைக்கிறாளோ தெரியவில்லையே? அரிசி, பருப்பைக்காணோம், இவள்தான் எடுத்து விற்றுவிட்டாளென்கிறாளே. அப்படி யென்றைக்காவது எனக்கு வழக்கமுண்டா? இரண்டுமாதமாக வருவாரும், போவாரும் ஜாஸ்தியல்லவா? அதையவள் கவனிக்காமல் நான் எடுத்து விற்றேனென்று பார்த்ததுபோல் நிச்சயமாகச் சொல்லிவிடுகிறாளே! எண்ணெய் ஆடி இன்னும் 20 நாளாகவில்லை; அதற்குள் குடம் உருண்டுவிட்டதென்று திட்டுகிறாளே. எண்ணெய் ஆடி மூன்று மாதமாகப்போகிறதே, எண்ணெயை யெடுத்து நான் குடித்துவிட்டேனா என்ன? தலைக்குத் தேய்த்துக்கொள்வதும் ஒருமாதத்திற் கொரு தடவைதான். என்னுடைய எண்ணெயெல்லாம் செலவழிந்துவிட்டது பொழுதுபோய் பொழுது விடிந்தால் யாராவது பத்துப்பேர்கள் சாப்பாட்டுக்கு வந்தபடியே யிருக்கிறார்கள். அவர்களுக்கு எட்டுவிதம் உடனே சமயல் செய்யவேண்டும். பண்டங்கள் செலவாகாமல் எப்படிச் சமைப்பது? அவர்களுக்கு சிப்பல்தட்டு, சிப்பல் தட்டாக வடாமும், அப்பளாமுமாகப் போடவில்லையா? எண்ணெய் ஆய்விட்டதென்றால் எப்படி ஆகாமலிருக்கும்? எந்தக் காரணத்தைக் கொண்டாவது என்னை திட்டிக்கொண்டேயிருக்கிறாள். அவளுக்கு அதே தொழிலாய்விட்டது. நான் என்னாலானமட்டும் செட்டாகத்தான் குடித்தனம் செய்கிறேன். நான் என்ன மற்றவர்களைப்போல் அது இல்லை, இது இல்லை என்கிறேனா? விதம் விதமாக பட்டுப்புடவைகள் வேண்டுமென்கிறேனா? மூன்றுரூபாய் மதுரைப்புடவை அகப்படுவதே கஷ்டமாயிருக்கிறது. இப்பொழுது எனக்கு ஒரே புடவைதான் இருக்கிறது; அதுவும்கிழிந்துவிட்டது. தைத்துக் கட்டிக்கொள்ளுகிறேன். 'புடவை கிழிந்துவிட்டது. வேறே வாங்கிக்கொடுங்கள்' என்று கேட்கிறேனா? வாங்கிக்கொடுத்தால் கட்டிக்கொள்ளப் போகிறேன். இல்லாவிட்டால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கப்போகிறேன். இந்தவர்ஷத்திற்குள் அவளானாலும் நாலு நார்மடி வாங்கிக் கட்டிக் கிழித்துவிட்டாள். மற்றவர்களைப்போல் 'அவள் அந்த நகை போட்டுக்கொண்டிருக்கிறாள். இவள் இந்த நகை போட்டுக்கொண்டிருக்கிறாள். எனக்கு அதைப்போல் வேண்டும், இதைப்போல் வேண்டும், காது மூளியாயிருக்கிறது, வயிரத் தோடுவேண்டும், கையில் ஒன்றுமில்லை, தங்கக் காப்புவேண்டும்' என்று கேட்கிறேனா? அதுவும் இல்லை. பிறந்ததுபோலவே யிருக்கிறேன். நாம் வரும்பொழுது என்ன கொண்டுவருகிறோம். போகும்பொழுது என்ன கொண்டுபோகப் போகிறோமென்பதை யெண்ணிக்கொண்டு பேசாமலிருக்கிறேன். இப்படி நான் அவர்களுக்கு ஒரு கஷ்ட-



மும் கொடுக்காமலிருக்கும் பொழுதே என்னை கண்ணில் காணவொட்டேனென்கிறார்களே. என்னைப்போல் இந்தவூரில் அநாதையாக யாரிருக்கிறார்கள். எனது வாழ்நாள் வ்ருதாவாய்ப் போய்விட்டது. இந்த உயிரிருந்தாலென்ன, போனாலென்ன, நான் போயாவது அவர்கள் ஸௌகப்படட்டும்" என்று சொல்லிக்கொண்டே மனமுறிந்து கிணற்றில்விழுந்து சாவோமென்று போவாள். மறுபடியும் "ஐயோ இப்பொழுது கஷ்டப்படுவது போதாதா? கிணற்றில் விழுந்து பேய் பிசாசாகப் பிறந்து அலையவேண்டுமா" என்று நினைத்துக்கொண்டு திரும்பி வந்துவிடுவாள்.

எவ்வளவுதூரம் மனம்நொந்திருக்கும் பக்ஷத்தில் கனகம் தற்கொலை செய்துகொள்ள எண்ணியிருப்பாளென்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். அவள் மிக்க பொறுமைசாலியாயும், புத்தி சாலியாயும் இருந்ததனாலல்லவோ, பின் வருவதை யெண்ணி, அந்தக்கார்யத்தை செய்யக்கூடாதென்று நிறுத்திவிட்டாள். அவள் ஒரு ஸாதாரணப் பெண்ணாயிருந்திருக்கும்பக்ஷத்தில் ஒரு யோசனையுமில்லாமல் கஷ்டங்களைப் பொறுக்க முடியாமல், எங்கேயாவதுவிழுந்து உயிரை மாய்த்துக்கொண்டிருப்பாளல்லவா? காமாக்ஷி தான்செய்த அத்ருஷ்டவசத்தினால்தான் கொலை பாவத்துக்கு ஆளாகாமலிருந்தாள். ரூபத்திலிருந்த கனகத்தை இவ்வாறு கஷ்டங்களுக்குள்படுத்திய கல்நெஞ்சையுடைய காமாக்ஷியினிடம் ஸௌப்பலக்ஷ்மி ஸ்நேகம் வைத்தது செல்லத்தின் அத்ருஷ்டமே யென்று சொல்லலாம்.

## VI - அத்யாயம்.

ஸௌப்பலக்ஷ்மி தினந்தோறும் மத்யானம்சாப்பிட்டானதும் காமாக்ஷி வீட்டுக்குவந்து வம்பு பேசுவது வழக்கமென்று முன்னமேயேசொல்லியிருக்கிறோமல்லவா? அப்பொழுது ஸௌப்பலக்ஷ்மி காமாட்சி வீட்டில் நடக்கும் ஒவ்வொன்றையும் பார்த்துவந்தாள். ஒருநாளிருவரும் வழக்கம்போல் பேசிக்கொண்டிருந்தபோது, காமாட்சி ஸௌப்பலக்ஷ்மியைப் பார்த்து, "நீ பழைய நாளையமனுஷி, மாட்டுப்பெண்ணை வைத்துக்கொண்டு குடித்தனம் செய்யவே தெரியவில்லை. மாட்டுப் பெண்களுக்கு மாமியாரைக் கண்டால் ஸிம்மம்போலிருக்கவேண்டாமா? அவர்கள் கண்ணில் விரலைக்கொடுத் தாட்டவேண்டும். கொஞ்சம் இடம் கொடுத்தால் குதிரை யேறமாட்டார்களா? எங்க கனகத்தைப் பார். என்னைக் காணும்பொழுது அவளுக்கு சிங்கத்தைக் காணுவதுபோலிருக்கும். ஒரு இரைச்சல்போட்டேனானால், எல்லாக் கார்யங்களையும் ஒரு நொடியில் முடித்து விடுவாள். நான் நின்ற இடத்தில் நிற்கமாட்டாள், உன் மாட்டுப்பெண்ணைப் பார். நீ கீழேஉட்கார்ந்தாயானால் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு பேசுகிறாள். ஆகா! மாமியாருக்கு என்ன மரியாதை! நீயும் பார்த்துக்கொண்டு பேசாமலிருக்கிறாயே. உனக்கு வெட்கமாயில்லையா? நானாயிருக்கும்பக்ஷத்தில் அவ்விடத்திலேயே இரண்டுதுண்டாக வெட்டி மடைவாயில் வைத்துவிடுவேன். உன் மாட்டுப்பெண்ணை பார்க்கக்கூட எனக்குப் பிடிக்கவில்லை. இன்றைக்கு நாற்காலியில் உட்காருவாள், நாளைக்கு உன் தலையின்மேலேயே ஏறி உட்கார்ந்து விடுவாள். அவளைச்சொல்வதிலென்ன ப்ரயோஜனம்? நீ கொடுத்திருக்கும் இடம் அவ்வளவு. மாட்டுப் பெண்களை அப்போதைக்கப்போது கொட்டுவாயில் வைத்துக்கொண்டு வரவேண்டாமா? செல்லம் தடிபோலிருக்கும்பொழுது கார்யம் செய்ய எதற்காக மாலம் தண்டத்திற்கு பணங்கொடுத்து பரிசாரகன் வைத்திருக்கிறாய்? பெட்டைக்குட்டிக்கு பேபர் வாசிப்பென்ன? அகம்படையான் வாங்கித் தருகிறானே, அவனைச் சொல்லு. உங்காத்தில் தினம் காலையில் காபி போடுகிறாப்போலிருக்கிறது. எங்காத்தில் அந்தக் கெட்ட வழக்கமே கிடையாது, நாமெல்லாம் காபி குடித்துத்தான் வளர்ந்தோமா என்ன? போனால் போகி

றது. புருஷர்களுக்கு மாத்ரம் போட்டால் போதாதா. பெட்டைக்குட்டிக்கு காபி என்ன? நீ ஒன்றையும் கவனிப்பதில்லைபோலிருக்கிறது. வீட்டில் பெரியவளென்று ஒருத்தி இருந்தால் இவைகளை யெல்லாம் கவனிக்கவேண்டாமா?" என்று பரிகாஸம் செய்தாள். நாம் முன்னமேயே ஸுப்பலக்ஷ்மிக்கு ஸ்வயபுத்திகிடையாது. கேட்பார் பேச்சைக்கேட்பவள் என்று சொல்லியிருக்கிறோமல்லவா? காமாக்ஷி இப்படி யெல்லாம் தனக்கு ஹிதம்போல் சொன்னவுடன் ஸுப்பலக்ஷ்மி, "நமக்குவாஸ்தவமாக மாட்டுப்பெண்ணை வைத்துக்கொண்டு குடித்தனஞ் செய்யத் தெரியவில்லைபோலிருக்கிறது. அவள்மாட்டுப்பெண்ணை அடிக்கடி கண்டிக்கவேண்டுமென்று சொல்லுகிறாளே. அதேபோல் செய்து பார்க்கவேண்டும்" என்று மனதில் எண்ணிக்கொண்டாள். இப்படி அவள் இயற்கை குணமானது சேர்க்கை வாஸனையால் க்ஷணநொடியில் மாறியது.

மறுநாட் காலையில் காபி போட்டபொழுது ஸுப்பலக்ஷ்மி துரைஸாமிக்கும், மீனும்பாளுக்கும் மாத்ரம் கொடுத்துவிட்டு செல்லத்திற்குக் கொடுக்காமலிருந்து விட்டாள். செல்லம், தன் மாமியார் ஒருவேளை மறந்திருக்கக் கூடுமென்றெண்ணி, பேசாம லிருந்துவிட்டாள். ஆனால் 12 மணிக்குமேல் செல்லத்திற்கு சாபி சாப்பிடாததினால் பொறுக்கமுடியாமல் தலையை வலித்தது. ஆகையால் பரிசாரகப் பையனைக் கூப்பிட்டு கொஞ்சம் காபி போட்டுக்கொண்டு வரும்படிச் சொன்னாள். அதற்கு ஸுப்பலக்ஷ்மி இனிமேல் செல்லத்தைக் காபி சாப்பிடக்கூடாதென்றும், பேபர், புஸ்தகம் ஒன்றும் வாசிக்கக் கூடாதென்றும் சொன்னாள். இவைகளைக்கேட்டவுடனேயே செல்லத்திற்கு பயம் பிறந்துவிட்டது. அவளுடனொன்றும் அதிகமாய்ப் பேசாமல் தன் கணவன் வந்தவுடன் தன் மாமியார் செய்தவைகளைச் சொல்லி, அதற்கெல்லாம் காரணம் பக்கத்துவீட்டு காமாக்ஷியாகையால், அவ்விடத்தி லிருந்து உடனே கிளம்ப வேண்டுமென்று சொன்னாள். துரைஸாமியும் மறுநாளே வேறோரிடத்தில் வீடு பார்த்து குடித்தனத்தை அங்கு கிளப்பிவிட்டான். நடந்த ஸமாசாரங்களை கபடமற்ற ஸுப்பலக்ஷ்மி காமாக்ஷியினிடம் சொல்லிவிட்டாள். அவள் "பார்த்தாயா! நான் சொன்னது சரியாகப் போய்விட்டது. பெண்டாட்டி சொல்லைக் கேட்டுக்கொண்டு அதன்படி உடனே வீட்டை மாற்றிவிட்டான். நாளைக்கு உன்னுடன் சேர்ந்து குடித்தனம் செய்யமுடியவில்லையென்று அவனிடம் சொல்லி, உன்னையே அடித்துத் துரத்திவிடுவாள், ஜாக்ரதை," என்றாள். இதைக் கேட்டவுடன் ஸுப்பலக்ஷ்மி மிகவும்பயந்து, ஒருவேளை தன்னை துரைஸாமி அடித்துத் துரத்தி விடுவானோ என்றெண்ணி "என்பிள்ளை அவளிடம் மிகவும் அன்பாயிருக்கிறான். ஆகையால்தான் அவள் சொன்னபடியெல்லாம் கேட்கிறான். முதலில் அவளிடம் அவனுக்கு ஆசையேயில்லாமல் செய்துவிடவேண்டும். அது எப்படி முடியும்?" என்று காமாக்ஷியைக் கேட்டாள். காமாக்ஷி ரகஸ்யமாக தன் பிள்ளையும் முதலில் அப்படித்தானிருந்ததாகவும், தான் அவனுக்கு ஓர் மூலிகையைக்கொண்டு மருந்திட்டபிறகுதான் தன்பேரில் ப்ரியமுள்ளவனானென்றும் சொன்னாள். ஸுப்பலக்ஷ்மி அவளை தனக்கு அந்த மருந்தில் கொஞ்சம் கொடுக்கும்படிக்குக் கேட்டாள். காமாக்ஷி அவளிடம் உருண்டையாக ஏதோ ஒரு மருந்தைக்கொடுத்து, அதை எதிலாவது கரைத்துக் கொடுத்து விடச்சொல்லி, அது உள்ளே போனவுடன் மறுபடியும் கட்டியாய் விடுமென்றும், உள்ளே அது இருக்கும் வரையில் பெண்டாட்டியின்மேல் அன்பாக இருக்கமாட்டானென்றும், அந்த மருந்தின் குணம் இன்னும் இரண்டு நாளிலேயே தெரியுமென்றும் சொன்னாள். ஒன்றும் தெரியாத மூடபுத்தியுள்ள ஸுப்பலக்ஷ்மியும் துரைஸாமிக்குத் தெரியாமல் அந்தமருந்தை



மறுநாள் காலையில் காபியில்கலந்து கொடுத்துவிட்டாள். மருந்து கொடுத்து பதினைந்துநாள் வரையில் துரைஸாமி, செல்லத்தினிடம் முன்னிருந்ததுபோலவே ஆசையாயிருந்தான். அதற்குள் ஸுப்பலக்ஷ்மி "காமாக்ஷி, இரண்டு நாளிலேயே குணம் தெரியுமென்றாளே, பதினைந்து நாள்களாயும் இன்னும் ஒன்றும்தெரியவில்லையே. ஒருவேளை பிள்ளை தன்னை அடித்துத் துரத்திவிடுவானோ" என்று எண்ணிக்கொண்டாள். ஸாதாரணமாய் ஒரு நாளிரண்டுநாளில் குணத்தைத் தெரிவிக்கும் அந்த மருந்துக்கு, துரைஸாமி செல்லத்தின்மேல் விசேஷ அன்புவைத்திருந்ததால், அதை மாற்றி தன் குணத்தைத் தெரிவிக்க பதினைந்து நாளாயிற்று. அதற்கப்புறம், மருந்தின் வேகம் கொஞ்சங் கொஞ்சமாக ஏறியது. ஒருநாள் ஆபீஸிலிருந்து வந்ததும் ஒரு காரணமுமில்லாமலே செல்லத்தை தாறுமாறாகத் திட்டினான். அப்பொழுதே செல்லம் மிகவும் பயந்துவிட்டாள். தனது மாமியார் காமாக்ஷியைக் கொண்டு ஏதாவது செய்துவிட்டாளோ என்று எண்ணினாள். "இதுவரையில் என்னை வாயால் ஒரு வார்த்தையும் சொன்னதில்லை. இன்றைக்கு காரணமே யில்லாமல் வாயில் வந்தபடியெல்லாம் திட்டுகிறாரே. இது என்ன ஆச்சர்யமாயிருக்கிறதே" யென்று நினைத்தாள். தன்பேரில் ஏதாவது குற்றமிருக்கிறதோ என்று யோசித்தாள். ஒன்றும் தெரியவில்லை. தன்னை ஒரு காரணமுமில்லாமல் அடித்தாரே யென்றழுதாள். அன்று ராத்ரி சாப்பிடவில்லை. ஒருவேளை தன்னை பரிசோதிக்கிறாரோ வென்னமோ வென்றெண்ணி நாலைந்துதினம் சும்மா இருந்தாள். அதற்குள் மருந்தின்வேகம் அதிகமாய்விட்டது. அவன்பேரில் எவ்வளவு அன்பு வைத்திருந்தானோ அவ்வளவும் வெறுப்பாக மாறியது. அவளுடன் பேசுவதேயில்லை. ஒருநாள்காலையில் அவள் வருத்தத்துடன் தூணில் சார்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தபொழுது,

அவன் மிகவும் விரைவாகவந்து, அவள் மயிரைப் பிடித்து குலுக்கி, வாசலில் தள்ளி, பிறந்தகத்திற்குப் போகச்சொல்லிவிட்டு, கதவைசாத்தி தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு விட்டான். செல்லம் திடுக்கிட்டாள். வாயைத் திறந்து ஒன்றும் சொல்லவில்லை. தன்மேல் வைத்திருந்த அன்பு எப்படித்தான் மாறிவிட்டதோ என்று ஆலோசித்தாள். ஒருவேளை தன் கணவனுக்கு பைத்யம் பிடித்து விட்டதோ என்றெண்ணினாள். இதுவரையில் செல்லம் தன் பெற்றோர்களுக்கு தன் கணவன் ஒருமாதிரியா யிருக்கிறானென்று கடித மெழுதவில்லை. தன் கஷ்டங்களை அவர்களுக்கு எழுதினால், வருத்தப்படப்போகிறார்களே, ஒருவேளை தன் கணவன் தன்னை பரிசோதிக்கிறானோ, வென்று பேசாமலிருந்துவிட்டாள். தன்னையடித்து வாசலில் தள்ளி, கதவைச்சாத்தினதும், செல்லம் தன்னைப் பரிசோதிக்க வில்லையென்று நன்கு தெரிந்துகொண்டாள். இப்பொழுதும் செல்லம் தன் பெற்றோர்களுக்கு ஸமாசாரத்தைத் தெரியப்படுத்த இஷ்டமில்லாமல், பேசாம லிருந்துவிட்டாள். இவைகளை யறிந்த மூன்றாவது வீட்டிலிருந்த இவள் தோழி அவளைத் தன் வீட்டுக் கழைத்துவந்து சாப்பிடச்சொன்னாள். செல்லம் சாப்பிடமாட்டேனென்று (சொல்லிவிட்டு அழுதுகொண்டு, கீழே படுத்துக்கொண்டுவிட்டாள். அவள் படும் கஷ்டத்தைப்பார்க்க ஸகியாத அவள் தோழி, தன் கணவனிடம் சொல்லி ஊருக்குத் தந்தி கொடுக்கச் சொன்னாள். முன் பின் ஒரு ஸமாசாரமுமில்லாமல் திடீரென்று தந்திவந்து சேர்ந்ததும், ராமநாதய்யரும், விசாலாக்ஷியும் திடுக்கிட்டு அலறிக்கொண்டு மறுரெயிலிலேயே புறப்பட்டு வந்தார்கள். அவர்களைக் கண்டவுடன் செல்லம் தன் வாய்விட்டு அலறி, தான் ஒன்றும் செய்யாம லிருக்கும்பொழுதே தன்னை இப்படி யெல்லாம் செய்துவிட்டதாகச்சொன்னாள். செல்லம் அழுவதைப் பார்த்ததும் அவர்களுக்கு துக்

கம் மேலிட்டது. விசாலாக்ஷி தன்னை யறியாமலே ஸ்வப்பலக்ஷ்மியையும், துரைஸாமியையும் திட்ட ஆரம்பித்தாள். ராமநாதய்யர் மிகவும் பொறுமைசாலி யானதால், தன் வருத்தத்தை யெல்லாம் அடக்கிக்கொண்டு, செல்லத்தை அணைத்துக்கொண்டு, அவளைத் தேற்றி, தன் மனைவியினிடம் "காலம்போகும்; வார்த்தை நிற்கும். வாயைக் கொட்டாதே" என்று பொறுமையாகச் சொன்னார். பிறகு, ராமனாதய்யர் தன் மாப்பிள்ளையை நேராகப் பார்க்க எண்ணி வீட்டுக்குப்போய் கதவைத் தட்டினார். துரைஸாமி உள்ளே யிருந்துகொண்டே கதவைத் திறக்கவில்லை. ராமனாதய்யர் எத்தனை நேரம் நின்றுகொண்டு கதவைத்தட்டினாலும் திறக்காமையால் மன வருத்தத்துடன் செல்லத்தை அழைத்துக்கொண்டு ஊருக்கு வந்து சேர்ந்தார்.

செல்லம் அதன் பிறகு சரியாகவே சாப்பிடுவது கிடையாது. காலையில் சாப்பிட்டால் ராத்ரி சாப்பிடுவதில்லை. ராத்ரியில் சாப்பிட்டால் காலையில் சாப்பிடுவதில்லை. ஒருவருடனும் பேசுவதில்லை. ராத்ரியில் தூங்குவதில்லை. தன் நகைகளை யெல்லாம் கழற்றி உள்ளே வைத்துவிட்டு, கந்தைத் துணியைக் கட்டிக்கொண்டாள். இப்பொழுதும் தன்னையேவெறுத்துக்கொண்டாளே ஒழிய, துரைஸாமியை ஒன்றும் சொல்லவில்லை. இப்பொழுது அவன்பேரில் முன்னைவிட நான்கு பங்கு அதிகமாக அன்புவைத்தாள். அவள் படும் துக்கங்களைப் பார்க்க ஸகியாத பொறுமையுடைய அவள் தகப்பனார் கண்ணில் நீர் ததும்ப அவளிடம் சென்று, "என் கண்ணே! அன்புக்கு அழிவில்லை. நீ அவனிடம் உண்மையான அன்பு வைத்திருந்து, நாங்களும் உன்பேரில் உண்மையான அன்பை வைத்திருக்கும் பக்ஷத்தில், அவன் இன்னும் கொஞ்ச நாளைக்கெல்லாம் உன்னை எப்படியாவது அழைத்துக் கொள்வான். உன் அன்பு இப்படியே நடுவில் அழிந்துவிடாது. மறுபடி நீங்கள் ஒன்றாய்ச் சேர்வீர்கள். இப்படிச் செய்துவிட்டானே யென்று அவனை வெறுக்காதே. கொஞ்ச நாளில் எல்லோர் மனமும் குளிரும். நீ இதை நம்பமாட்டாய். நான் சொல்வது சரியாகும் பார்" என்று சொல்லிவிட்டு மறுபடியும் "அன்புக்கு அழிவில்லை" என்றார்.

தன் மனைவியை அடித்துத் துரத்தினதும், துரைஸாமி தன் தாயாரின்மேல் மிக்க அன்புடையவனாயிருந்தான். செல்லத்தைப்பற்றி மறந்தேவிட்டான். அவளைப்பற்றி நினைக்கவேயில்லை. ஸ்வப்பலக்ஷ்மி தன்னை இனிமேல் துரைஸாமி அடித்துத் துரத்தமாட்டானென்றெண்ணி ஸந்தோஷப்பட்டாள். இப்படி கொஞ்சநாளாயிற்று. காமாக்ஷிக்கு ப்ரமாதமாக ஜ்வரம் வந்துவிட்டது. அதற்கப்புறம் கொஞ்சங் கொஞ்சமாக கால்கைகள் வீங்கின. அந்த வீக்கத்துடனேயே இரண்டுமாதம் மிகவும் கஷ்டத்துடன் படுக்கையிலேயே படுத்துக்கொண்டிருந்து பிறகு இறந்துவிட்டாள். ஊரிலுள்ளோரனைவரும் "காமாக்ஷி இறந்துவிட்டாள். இனிமேல் கனகத்திற்கு நல்ல காலம் பிறந்துவிட்டது. மாட்டுப் பெண்களை படுத்துபவர்கள் திடீரென்று சாவார்களா. பெண் பாவம் பொல்லாதல்லவா. காமாக்ஷியைப் பார். கால்கைகள் வீங்கி ப்ராணன் இழுத்துக்கொண்டு கிடந்தது" என்று சொன்னார்கள். அவர்கள் நினைத்தபடியே காமாக்ஷி இறந்ததும், கனகத்திற்கு நல்லகாலம் பிறந்தது. தன் தாயார் இறந்ததும் தன்னை அன்பாக ஆதரிப்பவர் வேறொருவருமில்லாததை ராகவன் கண்டு, தன் மனைவியின் மேல் கொடூரமாக விருக்கவில்லை. அதிகநாட்களாய் விட்டதினால், மருந்தும் தானாகவேமுறிந்துவிட்டது. பிறகு, இருவரும் ஒத்து வாழ்ந்தார்கள். ஸ்வப்பலக்ஷ்மி ஜனங்கள் சொன்ன வார்த்தைகளை காதில் கேட்டதும், மிகவும் பயந்து 'நாட்டுப் பெண்ணை படுத்துபவர்கள் கால்கைகள் வீங்கி சாவார்களென்கிறார்களே. நான் துரைஸாமிக்கு காமாக்ஷியினிடம் மருந்து வாங்கிக் கொடுத்து செல்லத்தை ஆகவொட்டாமலடித்திருக்கிறேனே. நானும் ஒருவேளை கால்கைகள் வீங்கி சீக்ரம் செத்துப்போய்விடுவேனோ என்னமோ? அப்பொழுது என் குற்றம் வெளியாய்விடுமே' என்று எண்ணி, அந்த மருந்தை மாற்றுவதற்கென்ன செய்யலாமென்று யோசித்தாள். கடைசியில் கும்பகோணத்தில் அவளுக்குத் தெரிந்த ஒரு வைத்யன் ஞாபகம் வந்தது. தன் பிள்ளையினிடம் செலவுக்குப் பணம் வாங்கிக்கொண்டு கும்பகோணம் சென்று, அவனிடம் ரகஸ்யமாக தான் செய்தவைகளை விவரமாக சொல்லி, மருந்தை யெடுக்கவேண்டுமென்று சொன்னாள். அந்த வைத்யன் மருந்திட்டிருப்பதை எடுப்பதில் மிகவும் கெட்டிக்காரன். அவன் ஸ்வப்பலக்ஷ்மியின் மூடபுத்தியைப் பார்த்து வியந்து, ஏதோ கொஞ்சம் பணம் வாங்கிக்கொண்டு, இரண்டு மாத்ரைகளை அவளிடம் கொடுத்து, முற்றின தேங்காயைத் துருவிசாறு எடுத்து, மிதிபாகல் இலைச்சாறும் கொஞ்சம் சேர்த்து, அதில் அந்த மாத்ரைகளைக் கரைத்துக் கொடுத்துவிடும்படி சொன்னான், ஸ்வப்பலக்ஷ்மியும் ஊருக்குத் திரும்பிவந்து அப்படியே செய்தாள். அந்த மாத்ரைகளைச் சாப்பிட்டதும் துரைஸாமி இரண்டு தரம் வாந்தியெடுத்தான். அவள் கொடுத்திருந்த மருந்து அப்படியே உண்டையாக வெளியேவந்து விழுந்தது. அது வெளியே வந்ததும் துரைஸாமி முன்போலானான். அவன் செல்லத்தின்மேல் வைத்திருந்த முழு அன்பும் திரும்பி வந்துவிட்டது. "ஐயோ, என் அருமைச் செல்லத்தை அந்யாயமாகத் திட்டியடித்துஊருக்குஅனுப்பினேனே. எனக்கு ஏன் அவ்வித கெட்ட எண்ணம் உதித்ததோ தெரியவில்லையே" என்று அலறி, மறுரெயிலுக்கே புறப்பட்டு செல்லத்தை அழைத்துப் போக வந்தான். துரைஸாமி ரெயிலைவிட்டிறங்கி மிகவும் வேகமாய் ராமநாதய்யர் வீட்டுக்குவந்து, விசிபலகையில் வருத்தத்துடன் உட்கார்ந்து கொண்டிருந்த செல்லத்தை ஒரே அணைப்பாக அணைத்துக்கட்டி அவள் ச்வாஸங்கூடவிடாதபடி முத்தமிட்டான். திடீரென்று தன் கணவன் வந்துதன்னை அணைத்துக்கட்டினதும் செல்லம் திடுக்கிட்டு, ஒன்றும் சொல்லாமல் அவனை ஒருதரம் தனது கண்களால் ஏறிட்டுப் பார்த்துவிட்டு, அப்படியே மயக்கமாக அவன் கையில் படுத்துக் கொண்டுவிட்டாள். ராமநாதய்யரும், விசாலாக்ஷியும் தோட்டத்திலிருந்து தமது மாப்பிள்ளை உட்கார்ந்திருப்பதையும், அவனது கையில் செல்லம் சோர்ந்து விழுந்திருப்பதையும் பார்த்து நடுநடுங்கி உள்ளே ஓடிவந்தார்கள். அவர்களைக் கண்டதும், துரைஸாமி அப்படியே செல்லத்தை படுக்கவிட்டு விரைவாக ஓடி கீழே விழுந்து இருவருக்கும் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து எழுந்து நின்று, "நான் என்னை யறியாமலே செய்த கார்யங்களுக்கு என்னை மன்னிக்கவேண்டும்" என்று வணக்கமாகக் கேட்டான். ராமனாதய்யரும், "போதாத காலத்தின் விசேஷம்" என்று சொல்லிப் பேசாமலிருந்தார். மறுபடியும் துரைஸாமி, செல்லத்தினிடம் போய், அவளை அணைத்துக் கட்டிக்கொண்டு "செல்லம், செல்லம்" என்று கூப்பிட்டான். அவளும் தூங்கி விழித்துக்கொண்டால்போல் ஆனந்தக் கண்ணீரொழுக எழுந்து உட்கார்ந்தாள். துரைஸாமி அவளைப் பார்த்து "உன்னை நான் இப்படியெல்லாம் செய்துவிட்டேனென்று என்பேரில் கோபித்துக்கொள்கிறாயோ, ஏதோ போதாத காலம். நமது ஆசைக்கு ஒருநாளும் அழிவு வராது, பயப்படாதே" என்று சொல்லி, சற்றுநேரம் முகத்தோடு முகத்தை சேர்த்து வைத்துக்கொண்டிருந்தான். ராமநாதய்யரும் செல்லத்தைப் பார்த்து, "நான் சொன்னது சரியாய்விட்டது பார்த்தாயா. எல்லாருடைய மனமும் குளிர்ந்துவிட்டது", என்று சொல்லி பொறுமையாக "அன்புக்கும் அழிவோ" என்றார். செல்லம் அப்பொழுதுதான் அன்புக்கு அழிவில்லை யென்று தெரிந்துகொண்டாள்

அன்றையதினம் மாப்பிள்ளைக்கு பலமான விருந்து நடந்தது. துரைஸாமி இரண்டுநாள் லீவுக்கு எழுதிவிட்டு மாமியார் வீட்டிலிருந்து, பிறகு செல்லத்தை அழைத்துக்கொண்டு பட்டணம்போய்ச் சேர்ந்தான். ஸுப்பலக்ஷ்மி செல்லத்தை முன்னிருந்தது போலவே ஆசையாக வைத்துக் கொண்டிருந்தாள். துரைஸாமியும் செல்லமும் உடலும் உயிரும் போலவும், நகமும் சதையும் போலவும், நீரும் நிழலும் போலவும், ஒருவரை யொருவர் விட்டுப் பிரியாது வெகு காலம் ஸுகமாக வாழ்ந்தார்கள். சுபம்.

ஏ.. வி. ராமஸாமி.

## EVILS OF DRINK.

BY C. S. SIVARAMAKRISHNA SARMA.

## குடியின் கேடு.

இப்பொழுது நடந்துவரும் மகா யுத்தத்தின் ஸௌகர்யத்தை நோக்கி, ரஷ்யா ராஜாங்கத்தார், யுத்தம் முடிவாகும்வரையில் தங்கள் ராஜ்யத்தில் எங்கும் சாராயம் விற்கக்கூடாதென்று உத்தரவு செய்துவிட்டார்கள். இதனால் ரஷ்யா ராஜாங்கத்தாருக்கு வர்ஷம் ஒன்றுக்கு ஸுமார் 14-கோடி ரூபாய் வருமானம் போய்விட்டது. இதைப்போல் மற்ற ராஜாங்கத்தாரும் உத்தரவு செய்தால், அந்த தேசங்களுக்கும் விசேஷ நன்மையுண்டாகும். சாராயக் குடியை நிறுத்தியதால், ரஷ்யாவின் குடிகளுக்குத் தென்புக்குறைவும் இல்லை; வேலை நிறுத்தங்களும் இல்லை; கலகங்களும் இல்லை; கலகாஸ்பதமான ப்ரஸங்கங்களும் இல்லை; அதைர்யமும் உண்டாகவில்லை. மேலும் தேசமெங்கும் உத்ஸாகமும் ஒற்றுமையும் உண்டாயிருக்கின்றன. இவ்வளவு நன்மையுண்டாகுமென்று மகாவிவேகிகள்கூட எதிர்பார்க்கவில்லை. ரஷ்யாதேசத்துக் குடியானவர்கள் இந்த யுத்தத்துக்கு ஆவேசத்துடன் செல்லுகிறார்கள். விவேகத்தில் உயர்ந்த வகுப்பார் இவர்களை யுத்தத்துக்குப் போகும்படி உத்ஸாகப்படுத்துகிறார்கள். ரஷ்யக் குடிகளுக்கு இந்த யுத்தம் மகா முக்யமான யுத்தம்; தோற்றால் ரஷ்யாவின் நாகரீகம் தாழ்ச்சி அடையும்; ஜயித்தால் உயர்வடையும். யுத்தத்தில் கலந்த மற்ற ராஜாங்கத்தார் கதியும் அவ்வண்ணமே. ரஷ்யாவில் எல்லா சாராயக் கடைகளையும் ஒருமாஸத்துக்கு (ஆரம்பத்தில்) மூடிவிட்டார்கள்; எவ்வித சாராயமும் கிடைப்பது அஸாத்யமாகிவிட்டது. ஆகையால் தெருக்களில் குடிபோதைக் காட்சியே அற்றுப்போயிற்று. சாராயம் குடிப்பதற்காக பிச்சைவாங்கும் பிச்சைக்காரர் கூட்டமும் அதோடு ஒழிந்துபோயிற்று.

லண்டனில் வெளியாகும் டெய்லி நியூஸ் பத்திரிகையில் ஜட்ஜ் ரென்டௌல் (Judge Rentoul) துரை எழுதுகிறதாவது: "லார்ட் கிச்சனர் ஸௌடானில் நடந்த யுத்தத்தில், தன்சேனைக்கு சாராயம்கொடுக்காமல் நிறுத்திவிட்டார். அதைப் போலவே இந்த யுத்தத்திலும் சேனைகளுக்கு யாராவது சாராயம் வெகுமதிகொடுத்தால் அனுப்பப்படமாட்டாது என்றும் ஆஜ்ஞாபித்துவிட்டார். அட்பாரா சண்டையில், சேனைக்காக முன் அனுப்பப்பட்டிருந்த சாராயம் பூராவையும் திருப்பியடித்துவிட்டதால்தான் அந்த யுத்தத்தில் ஜயம் அடைந்தார்."

லார்ட் ராபர்ட்ஸ் மதுபானவிஷயமாய்ச் சொல்லியிருப்பதாவது. "எனக்கு சாராயம் குடியாத ஒரு சேனையைக் கொடு; அதை நான் எங்கும் கொண்டுபோய் நடத்துவேன்".

லார்ட் வுல்ஸ்லி சொல்லியதாவது: "ப்ரயாணப்படுவதற்கு முந்தியும், ப்ரயாணம் போகும்போதும், ப்ரயாணத்துக்குப் பிந்தியும் சேனைகளுக்கு சாராயம் கொடுப்பது நன்மையென்று பழையகாலத்தில் கொண்ட அபிப்ராயம் சுத்தத்தப்பென்று எல்லா தேசத்திலும் சாஸ்த்ரவிசாரணை செய்தவர்கள் ரூபித்திருக்கிறார்கள்." டெல் எல் கபீர் பட்டணத்துக்குப்போன நீண்டராத்ரி ப்ரயாணத்தில் தன் சேனைகளுக்கு சாராயம்



கொடுக்காமலே இருந்துவிட்டார். அவர் சொன்னதாவது. "யுத்தத்துக்காக இயற்றப்பட்ட நமது மகா நவீனமான ஆயுதங்கள் எல்லாவற்றைக் காட்டிலும், சாராயக்குடியால் அதிக ஜனங்கள் கொல்லப்படுகிறார்கள்."

இப்போது இங்க்லண்டின் கப்பல் படைக்குத் தலைவராயிருந்துவரும் அட்மிரல் ஸர். ஜெ. ஆர். ஜெல்லிகோ சொல்லுவதாவது: "நேராக துப்பாக்கி சுடுகிற விஷயத்தில் மகா விசேஷமான தேர்ச்சியடைய வேண்டியதற்கு சாராயக் குடியை விலக்குவது அவச்யமென்று ஒவ்வொருவர் அனுபோகத்திலும் ஏற்பட்டிருக்கிறது". துப்பாக்கி சுடும் வித்தையில் பேர்போன போதகரான காப்டன் ஒகில்வி துரை சொன்னதாவது: "துப்பாக்கி சுடும் திறமை ஸைன்யத்துக்கு ரம் சாராயம கொடுக்க துவக்கின பின் முன்னிருந்ததைவிட 100-க்கு 30 வீதம் குறைந்துவிட்டதாக நாம் பல தடவைகளில் கவனமாய் செய்த பரீக்ஷைகளால் ருசுவாகிறது. இப்படி கொடுத்த சாராயம் ஆள் ஒன்று அரைக்கால் பைண்டு* தான்."

பூசக்ரத்தின் வடமுனைக்கும் தென்முனைக்கும் ஸமுத்ர யாத்ரைசெய்த காப்டன் நான்ஸன், காப்டன் ஷாகில்டன் துரைகள் தங்கள்கூட எவ்வித சாராயமும் கொண்டுபோகவில்லை. இவ்விருவரும் சாராயம் தங்கள் ஜனங்களுக்கு மரணாபத்தான வஸ்துவென்றும் உறுதிகூறியிருக்கிறார்கள்.

நமது சக்ரவர்த்தியின் வைத்யராகிய ஸர் தாமஸ் பார்லோ என்பவரும் இன்னும் நான்கு சிறந்த வைத்யர்களும் சேர்ந்து கையொப்பமிட்டு யுத்தத்தில் உழைக்கும் ஸைன்யங்களுக்கு ஒரு மகஜர் எழுதியனுப்பியிருக்கிறார்கள். அதில் சாராயக்குடியால் விளையும் மகா கொடிய சரீர பாதைகளைப்பற்றி எடுத்துக்கூறி அடியில்கண்டபடி முடித்திருக்கிறார்கள்.

"ஆகையால், உங்களுடைய ஸொந்த ஆரோக்யத்தையும் திறமையையும் நோக்கியே நீங்கள் இந்த யுத்தம் முடிவுபெறும் காலம் வரையிலாவது, சாராயத்தை அடியோடு முற்றிலும் நீக்கிவிடவேண்டுமாய் எங்களால் கூடிய வலுவுடன் வற்புறுத்தி கேட்டுக்கொள்ளுகிறோம்."

1899, 1900 இந்த வருஷங்களில் யுத்தத்தில் சேருவதற்கு முன்வந்த 11,000 பேர்வழிகளில் 8,000 பேர்வழிகள் துப்பாக்கியை சுமக்கவும், ராணுவ தேகப்பயிற்சியின் (டிரில்) களைப்பைத் தாங்கவும் அசக்தர்களாய் இருந்ததாக ஒரு ப்ரஸித்தமான க்ரந்தத்தில்வரைந்து வெளியிடப்பட்ட பிறகு, இங்க்லீஷ் ராஜாங்கத்தார் விழித்துக்கொண்டு இந்த விஷயத்தை நன்கு விசாரித்து அறிக்கை செய்யும்பொருட்டு ஒரு ஸபையை (கமிட்டி) நியமித்தார்கள். இந்த ஸபையார் இதை வெகுகாலம் பரிசீலனை செய்து இதில் விசேஷ அனுபோகமும் ஞானமுமுள்ள 68 ஸாக்ஷிகளை விசாரித்து "சாராயக் குடியானது தேகத்தை பலஹீனப்படுத்துவதற்கு மகா ப்ரபலமான காரணமாகவும், மரணாஸ்பதமான கருவியாகவும் இருப்பதாக" ராஜாங்கத்தாருக்கு அறிக்கைப்பத்ரம் எழுதியனுப்பினார்கள்.

இதைப் பார்த்தாவது உயர்ந்த நாகரீகமென்று சாராயக்குடியைப் பழகும் நமது இந்திய ஸகோதரர்களுக்கு புத்திவந்து இந்த துர் அப்யாஸத்தை அடியோடு விட்டுவிடுவார்களென்று நம்புகிறேன்.

ஸி. எஸ். சிவராமக்ருஷ்ண சர்மா.

* பைண்ட் என்பது பட்டணம் படியால் கால்படிக்கு சற்று மேலாகும்.

ஐரோப்பிய யுத்தம்.

400-பக்கங்கள். 100-போட்டோ படங்கள் விலை 1–8–0

ஜனாபிமானி சந்தாதாரர்களுக்கு ரூபா 1–0–0

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,

மதராஸ்.

## INFECTIVE DISEASES OF CATTLE.

## கால்நடைகளின் தொற்று வ்யாதிகள்.

தொற்று வ்யாதியென்பது வ்யாதிகண்டவர்களுடைய வ்யாதிப்பட்ட பாகமோ அல்லது அவர்களின் மலஜலங்களோ அல்லது ச்வாஸமோ, மற்றவர்களின் மேல் படுவதாலும், வேறு வழிகளாலும், பரவும் வ்யாதியாகும். இந்த மாதிரி வ்யாதி கண்ட கால் நடைகளுக்குப் பரிகாரம் செய்கையில், வ்யாதிப்பட்ட கால்நடைகளுக்கு வைத்யம் செய்வதோடு, அந்த வ்யாதி மற்ற கால் நடைகளிடத்துப் பரவாமலிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது அவச்யமாகும். இந்தியாவில் கால் நடைகளுக்கு உண்டாகும் தொற்று வ்யாதிகளில் முக்கியமானவை; வெக்கை, தொண்டை அடைப்பான், சப்பைநோய், கோமாரி ஆகிய இவைகளாகும். இவைகளில் சில, கால்நடைகளுக்கே யன்றி வேறு ம்ருகங்களுக்கும், மனிதர்களுக்கும் உண்டாவதுண்டு. அநேக ஸமயங்களில் கால்நடைகளுக்கு அம்மை குத்துவதாலும், இனாகுலேஷன் செய்வதாலும் வ்யாதி வராமல் தடுக்கவும், வந்த வ்யாதியை ஸ்வஸ்தம் செய்யவும் கூடும். இப்படி கால்நடைகளுக்கு அம்மை குத்தியும் இனாகுலேஷன் செய்துமிருந்தால், சில ஸமயங்களில் வ்யாதிப்பட்ட கால்நடைகளை தனியான இடங்களில் கட்டி வைக்க வேண்டியதில்லை. இந்த வ்யாதிகள் வ்யாதிப்பட்ட ஒரு மாட்டின்மேல் வேறு மாடுகள் படுவதாலும், வேலையாட்களாலும், வைக்கோல் புல் முதலிய தீவனப் பொருள்களாலும், ஜலத்தாலும், வேறு காரணங்களாலும் பரவக்கூடும். மேலும் வ்யாதி க்ருமிகள் மாட்டுக்கொட்டில்கள், தண்ணீர்த் தொட்டிகள், மாட்டுக்கொட்டில்களில் உள்ள குப்பைகள் ஆகிய இவைகளில் இருக்கக்கூடும். தொற்றுவ்யாதி பரவுவதற்கு இத்தனை மார்க்கங்கள் இருக்கின்றனவென்பதை கால்நடை வைத்திருப்பவர்கள் நன்றாய் கவனித்தால், வ்யாதிகள் பரவாமலிருக்கச் செய்ய ரொம்ப ஜாக்ரதையாயிருக்க வேண்டுமென்பது நன்கு புலப்படும். தொற்று வ்யாதிகள் பரவாமலிருக்க பின்வரும் விஷயங்களை கவனித்தல் அவச்யமாகும்.

1. புதிதாய் வாங்கின எல்லா ம்ருகங்களையும் தொற்று வ்யாதிகளுள்ளனவாகவே எண்ணி, குறைந்தது 10 நாள்களுக்காவது அவைகளை மற்ற கால்நடைகளுடன் சேர்க்காமல் தனியாய்க் கட்டி வைக்க வேண்டும். அப்படித் தனிமையாய் வைத்திருக்கும் காலத்தில், அவைகளைப் பராமரிக்க தனிவேலையாட்கள் நியமிப்பதோடு அவைகளின் தேகத்தை, பூச்சிகள், அழுக்கு இராதபடி, நன்றாய்க் கழுவிவிட வேண்டும். கால்நடைகளை அடிக்கடி பரிசோதிக்க வேண்டும். எதற்காவது காய்ச்சலோ, வேறு வ்யாதியின் குறிகளோ தோன்றினால், இன்னும் அதிக நாள்கள் அவைகளை தனியாய்க் கட்டிவைத்து, எந்த நோய் கண்டதோ அதற்குப் பரிகாரம் உடனே தேடவேண்டும்.

2. கால்நடைகளை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குக் கொண்டு போகையில் அவைகளை இதர கால்நடைகளோடு சேர்ந்திருக்கும்படி விடக்கூடாது. மற்ற கால்நடைகள் இருந்த மந்தைமுதலிய இடங்களில் அவைகளை நிறுத்தவும் கூடாது. கால்நடைகளை வேறிடங்களுக்கு ஓட்டிப்போகும்போதும், சந்தை அல்லது கால்நடைக் காட்சிகளுக்கு ஓட்டிக்கொண்டு போகும்போதும் தொற்று வ்யாதிகள் பரவக்கூடுமாதலால், அப்படி வேறிடங்களுக்கு ஓட்டிப்போன கால் நடைகளை புதிதாய் வாங்கினவைகளாகப் பாவித்து தனியாய்க் கட்டி வைக்க வேண்டும்.

3. கால்நடைகளுக்கு ஏதாவது வ்யாதி தோன்றினால், அது தொற்று வ்யாதியல்லவென்று வ்யக்தமாகத் தெரியும் வரையில், அந்த வ்யாதி தொற்று வ்யாதியென்றே எண்ணவேண்டும். எந்த ம்ருகத்துக்காவது வ்யாதி உண்டாகிவிட்டால், மற்ற ம்ருகங்களுக்கும் வ்யாதிக் குறிகள் தோன்றி யிருக்கின்றனவா என்று நன்றாய் பார்க்க வேண்டியது அவச்யமாகும்.

4. ஒரு வ்யாதி தொற்று வ்யாதியென்று தெரிந்தவுடன், நோய் கண்ட ப்ராணிகளையும், ஸௌக்யமான ப்ராணிகளையும், தனியாகப் பிரித்துவிடவேண்டும். ரொம்ப நல்ல வழியென்னவென்றால் தொற்று வ்யாதியுள்ள இடத்தைக் காலிசெய்துவிட்டு, வெவ்வேறு இடங்களில் சில கால்நடைகளாகப் பிரித்துவைப்பது நல்லது. இது முடியாவிட்டால், தேக ஸௌக்யமான மாடுகளை வேறு நல்ல இடங்களுக்குக் கொண்டுபோய்க் கட்டி, நோய் கண்டவைகளை தொற்று வ்யாதியுள்ள இடத்திலேயே விட்டுவிடவேண்டும். பார்வைக்கு ஸௌக்யமுள்ளவைகளாய்க் காணும் ம்ருகங்களில் சில, ஒரு ஸமயம் வ்யாதியால் பீடிக்கப்பட்டு வ்யாதியின் விஷம் முற்றிக்கொண்டிருக்கும் நிலைமையில் இருக்கக்கூடும். அதாவது அவைகளின் தேகத்தில் வ்யாதி க்ருமிகள் இருக்கக்கூடும்; வ்யாதி முற்றாததால், வ்யாதியின் குறிகள் தெரியாமலிருக்கக்கூடும். அப்படிப்பட்ட ப்ராணிகளை ஸந்தேகமான உருப்படிகளாக எண்ணவேண்டும். இப்படி ஸந்தேகித்த ப்ராணிகளை சில சிறு கூட்டங்களாகப் பிரித்து, தனியான இடங்களில் கட்டிவைக்க வேண்டும். ஏனென்றால் வ்யாதி பிடித்து, முற்றி அதன் குறிகள் வெளிப்படையாகத் தெரிவதற்கு எவ்வளவு நாள்கள் செல்லுமோ அவ்வளவு நாள்கள் கழிந்ததும், வ்யாதியில்லாத ப்ராணிகளைத் தனியாகப் பிரித்துவிடுவது ஸுலபம். வ்யாதி முற்றி அதன் லக்ஷணங்களைக் காட்ட செல்லுங்காலம் ஒவ்வொரு வ்யாதிக்கும் வித்யாஸமாயிருக்கும். அதை யறிந்து, கடைசியாக ஒரு கால்நடைத் தொகுதியில் ஒரு வ்யாதி தோன்றினபிறகு, அது வெளிப்படையாகத் தோன்றுவதற்கு எத்தனை நாளாகுமோ அத்தனை நாள் சென்றபிறகும் அந்தக் கால்நடைத் தொகுதியில் ஒன்றுக்காவது அந்த வ்யாதி தோன்றாமலிருந்தால்தான், அந்தத் தொகுதியிலுள்ள மாடுகளை ஸுகதேகமுள்ளவைகளென்று எண்ணவேண்டும். எந்தத் தொகுதியிலாவது ஒரு மாடு காய்ச்சலாயிருப்பதாகவோ, தீனி தின்னாமலிருப்பதாகவோ தெரிந்தால், அதை அந்தத் தொகுதியிலிருந்து பிரித்து, அது நோய் கண்டதென்று தெரிந்தால், நோய் கண்ட ப்ராணிகளோடு சேர்த்துவிடவேண்டும். அப்படிப் பட்ட மாடு கட்டியிருந்த இடத்தை தொத்து வ்யாதியுள்ள இடமென்று தெரிந்துகொள்ள வேண்டும். அவ்விடங்களில் செருப்பு அல்லது ஜோடுகள் போட்டுக்கொண்டு நடந்தால், அவைகளுக்கு வ்யாதி பரவாமல் தடுக்கும் மருந்து போட்டு சுத்தி செய்யவேண்டும்.

5. ம்ருகங்களை வைத்திருக்கும் ஆஸ்பத்ரிகளுக்கும், வேறு இடங்களுக்கும் எவரும் ஜாக்ரதையோடுதான் போய்வரவேண்டும். கூடுமானால் கால்நடைகள் கட்டியிருக்கும் இடங்களைச் சுற்றி வேலி போடவேண்டும். வ்யாதி கண்ட மாடுகள் உள்ள இடங்களிலிருக்கும் வேலையாட்கள் அவ்விடங்களை விட்டு வெளியில் வரக்கூடாது. அவஸர கார்யங்களுக்காக அவர்கள் வெளியே போகவேண்டி யிருந்தால், அவர்கள் தேகத்தையும் துணிகளையும் க்ருமிஹரமான மருந்தால் சுத்தம் செய்யவேண்டும். வேலையாட்களுக்கும் ம்ருகங்களுக்கும் கொண்டுபோகும் ஆகாரத்தைத் திரும்பவும் அந்த இடத்திலிருந்து கொண்டுவரக்கூடாது. வ்யாதியைப் பரவச்செய்யக்கூடிய நாய், கோழி முதலியவைகளை கால்நடை இருக்கும் இடங்களுக்குள் விடக்கூடாது.

உபயோகமற்ற காய்ந்த குப்பை செத்தைகளை அங்கேயே எரித்துவிடவேண்டும். சாணம், ஈரமான குப்பை முதலியவைகளை கால்நடைகள் கட்டியுள்ள இடத்திலேயே குழிதோண்டிப் புதைத்து விடவேண்டும்.

6. மாடுகள் கட்டியுள்ள இடங்களை ரொம்ப சுத்தியாய் வைத்திருக்கவேண்டும். க்ருமிஹரமான மருந்துகளை தாராளமா யுபயோகிக்க வேண்டும்.

7. வ்யாதிகண்ட, அல்லது, வ்யாதியுள்ளதாக ஸந்தேகித்த மாடுகளை அடிக்கடி கழுவி சுத்தம் செய்து கூடுமானமட்டும் ஸௌக்யமான நிலைமையில் வைத்திருக்கவேண்டும். லகுவாய் ஜீர்ணமாகக் கூடியதும், மலத்தைக் கட்டாததுமான தீனிபோடவேண்டும். கஷ்டப்பட்டு ஜீரணமாகும் தீனியைப்போடுவது கால்நடைகள் இறந்து போவதற்கிடமாகும்.

8. வ்யாதியுள்ள இடங்களில் ஒரு மாட்டுக்கு வ்யாதி கண்டபிறகு ஒரு மாஸம்வரையில் வேறு மாடுகளுக்கு வ்யாதி காணாவிட்டால், அவைகளை வ்யாதியற்ற ம்ருகங்கள் என்று எண்ணி நல்ல இடங்களுக்கு ஓட்டிக் கொண்டு போகலாம். அப்பொழுது நூறு பாகம் ஜலத்தில் ஒரு பாகம் கார்பாலிக் ஆஸிட், பினைல் போன்ற மருந்தைக் கலந்து, அந்த ஜலத்தால் கால்நடைகளைக் குளிப்பாட்டி சுத்தம் செய்யவேண்டும்.

9. தொற்று வ்யாதியால் இறந்த ம்ருகங்களின் பிணங்களை அவ்விடத்திலே முழுவதையும் எரித்துவிட வேண்டும். அதற்குப் போதுமான விறகு கிடைக்காவிட்டால், பூமியில் பள்ளம் தோண்டி பிணத்தைப்போட்டு மேலே சுண்ணாம்புக் கற்களைப்போட்டு அதற்கு மேல் குறைந்தது 4-அடி மண்போட்டு மூடவேண்டும். இதற்குத் தகுந்தபடி குழியை ஆழமாய்த் தோண்ட வேண்டும். தொற்று வ்யாதியால் இறந்த ம்ருகங்களின் தோலை உரித்தெடுக்கக் கூடாது. யாராவது தோலுக்காக குழியை வெட்டிப் பிணத்தை யெடுத்துவிடக் கூடுமென்று தோன்றினால், ம்ருகத்தைப் புதைக்குமுன் யாவரும் அறியும்படி அதன் தோலை ஒன்றுக்கும் உதவாதபடி கெடுத்துவிட வேண்டும். ஆனால் அப்படிச் செய்யும் போது அதன் ரத்தத்தை கீழே சிந்தவிடக் கூடாது.

10. தொத்து வ்யாதிகண்ட இடத்தில் உள்ள கொட்டில் முதலியவைகளில் புதிதாக மாடுகள் கட்டவேண்டுமானால், அந்த இடங்களை க்ருமிஹரமான மருந்துகளால் சுத்தம் செய்யவேண்டும். கொட்டில்களின் சுவர்களையும் தரையையும் சுரண்டி ஜலம்விட்டு அலம்பி மருந்து தெளிக்க வேண்டும். சிறு கொட்டில்களை சுத்தம் செய்வது கஷ்டமாகையால் அவைகளைக் கொளுத்தி விடுவதே நல்லது. கார்பாலிக் ஆஸிட்டை கொதிக்கும் ஜலத்தில் கலந்து க்ருமிஹரமாக உபயோகிக்கலாம். சுண்ணாம்பு ஜலத்தை சுவர்களிலும் பூமியிலும் அதிகமாக உபயோகிக்க வேண்டும்.

11. வ்யாதி கண்ட ம்ருகங்களுக்கு உபயோகித்த ஜேணம் முதலியவைகளையும் மருந்து போட்டு சுத்தம் செய்யவேண்டும். நன்றாய் சுத்தம் செய்ய முடியாத ஸாமான்களா யிருந்தால் அவைகளை எரித்து விடுவதே நல்லது.

## THE RAMZAN.

BY MUHAMMAD MUSTAFA.

### ரம்ஸான்.

ரம்ஸான் மாதத்து முதல் பிறையை பெரியோர்கள், சிறியோர்கள், மவுல்வி, உலமாக்கள் முதலிய இஸ்லாமானவர்கள் மிக்க ஆவலுடன் பார்ப்பார்கள். கூட்டம் கூட்டமாய் மாளிகை மேலும், மேடு முதலிய விடங்களின்மேலும் ஏறிப்பார்த்துக்கொண்டிருப்பது பார்ப்போர்க்கு கண்காட்சியாக தோன்றுகிறது. பல ஹிந்து கனவான்களும் ஆனந்தமாய் புதுப்பிறையைப் பார்த்து களிப்படைவார்கள். இந்தப் பிறையைப் பார்த்ததும் பெருநாள் ஆரம்பித்த தென்று, உலகமெங்கும் முஹம்மதியர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். மேகத்தால் பிறை தெரியாவிட்டால், பார்த்த விடங்களிலிருந்து பலவிடங்களுக்கு தந்திகிடைக்கிறது.



**ரம்ஸான் மேலான மாஸம்.**—இஸ்லாம் மார்க்கத்தின் ஐந்துபெரிய தூண்களில் முப்பது நாள் நோன்பிருப்பது ஒன்று. (இஸ்லாம் மதத்தின் ஐந்து முக்யமான அம்சங்கள் வருமாறு. முதலாவது ஈமான் கொள்ளுதல்: அதாவது நம்மைப் படைத்தவர் ஒருவரென்றும், அவரையே வணங்க வேண்டுமென்றும், (நபிநாயகம் முஹம்மத் முஸ்தபா ரசூலே சல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) தூதர் என்றும் மனதில் உறுதி செய்து அமல் செய்ய வேண்டியது. இரண்டாவது தினந்தோறும் ஆண்டவனை முக்யமாய் 5-நேரங்களில் வணங்கவேண்டும்.

மூன்றாவது ரம்ஸான் மாஸத்தில் நோன்பிருப்பதும், நான்காவது ழகாத்து அதாவது தானம் செய்வதும், ஐந்தாவது மெக்கா யாத்ரை செய்வதுமே.

ஒருசந்தி எல்லோர் பேரிலும் கடமையாக ஏற்பட்டிருக்கிறது. சிறியோர்கள் வாலிப வயதை யடைந்திருக்கவேண்டும்.

ரம்ஸான் என்பதற்கு 'பொசுக்கு' என்பது என்பது பொருள். “செய்தபாவத்தைத் தொலைத்தல் என் றர்த்தம்.” குர் ஆன் ஷரீபில் சொல்லி யிருக்கிற ப்ரகாரம் நோன்பு எல்லோர் பேரிலும் ஏற்பட்டுள்ளது. அரேபியன் ப்ராபெட் (நபிநாயகம் முஹம்மத் முஸ்தபா ரசூலே சல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள்) “இந்த மாஸத்தில் ஸ்வர்க்கத்தின் கதவு திறந்தும், நரகத்தின் கதவு மூடியும், பேய்கள் கட்டியும், போடப்படும்” என்றும் சொல்லி யிருக்கிறார்.

நோன்பு வைப்பதனால் என்ன ப்ரயோஜனம் என்று சிலர் யோசிப்பார்கள். எந்த ஜாதியிலும் ஒரு சந்தியிருப்பது வழக்கமே. இதன்பலன் எல்லோருக்கும் தெரிந்தவையே. தமிழ் மாஸங்களைப்போல் முஹம்மதிய மாஸங்களில் கோடைகாலம், மாரிகாலம் சரியாய் நேரிடுவதில்லை. கோடைகாலத்தில் வெயிலதிகமாகவும், நாள் நீடித்து மிருந்த போதிலும், தாகத்திற்காக, நோன்பாளிகள் ஒரு துளியாகிலும் குடிக்கக் கூடாது. இவ்வளவு கஷ்டமாக இருப்பதனால் பலன் என்ன என்று சிலர் சொல்லக்கூடும்.



நோன்பு இருப்பதனால் பசிக்கொடுமை இன்னதென்று அறியலாம். கல்மன முள்ளவர்களும் ஏழைகளின் பசிக்கொடுமைகளை அறிந்து அன்னதானம் செய்ய மனங் கொள்ளுவார்கள். இரண்டாவது தீயதொழில், தீய எண்ணம், உலகத்தின் ஆசை இவைகளை விட்டு விலக்கி வைக்கிறது. மூன்றாவது நன்மைகளை ஸம்பாதிக்க இதுவே காலமாகிறது.

வ்யாதியஸ்தர்களுக்கும், ப்ரயாணிகளுக்கும், கர்ப்பஸ்த்ரிக்கும், பாலூட்டும் பெண்களுக்கும் நோன்பு மன்னிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் வ்யாதியஸ்தர்களும், ப்ரயாணிகளும் மறுபடி வைக்க வேண்டியது கடனாகிறது. சோம்பேரியாய் எவராகிலும் விட்டுவிட்டால், பலநாள் வரைக்கும் ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டியது.

**இந்த மாஸத்தில் தொழும் விதம்.**—மஸ்ஜிதுகளை பலவர்ண விளக்குகளைக் கொண்டும், பூக்களைக்கொண்டும், வாஸனை த்ரவ்யங்களைக்கொண்டும் அலங்கரிக்கிறார்கள். வழக்கத்தைப்போல் தினந்தோறும் தொழுவதுடன் இஷாவுக்குப் பின்னிட்டு அதாவது கடைசித் தொழுகைக்குப் பிறகு இருபது றகா அத்துகளை* தொழவேண்டும். கனவான்கள், தனவான்கள் ஏழைகள் பலர் ஒன்றுக்கூடி ஸமமாய் ஒருவருக்கொருவர் பக்கத்தில் நின்று கடவுளை த்யானிப்பார்கள். வேதப் புஸ்தகம் (குர்ஆன் ஷரீப்) முழுதும் வாய்ப்பாடமாய் செய்த ஹாபித்† அவர்களைக் கொண்டு தினந்தோறும், குர்ஆன் ஷரீப் 30-பா

* கடவுளை வணங்குவதில், குனிந்தும், உட்கார்ந்து, இருப்பதும், பலவழியாய் ஆண்டவனை வணங்குவதற்கு ஒரு 'றகா அத்து' என்று பெயர்.

† 'ஹாபீத்' என்பது குர் ஆர் ஷரீபு முழுவதையும் வாய்ப்பாடம் செய்தவர்களின் பெயர்.

கத்தில் இரண்டுமூன்று பாகங்களைக் கொண்டு ஓதுவார்கள். பெரியோர்களும், சிறியோர்களும் வேதப் புஸ்தகத்தை வாசித்த வண்ணமாகவே மஸ்ஜிதி லிருப்பார்கள். ரம்ஸானின் 27-வது நோன்பு பெருநாளாகிறது. இந்தநாள் இரவுக்கு லைலதுல்கதர் என்று சொல்லப்படும். இன்றிரவும் ம்ருகம், மாடு, மரம், செடி, முதலியவைகள் கடவுளை வணங்குவதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றிரவு பெரிய மஸ்ஜிதுகளைப் பார்க்க நன்றாயிருக்கும். பல ஹிந்துக் கனவான்களும் வெகுதூரத்திலிருந்து வந்து மகிழ்ச்சியடைகிறார்கள். இன்றிரவு ஒருவரும் நித்ரைக்குப் போகாமல், ஒரே எண்ணத்துடன் கடவுளை வணங்குவார்கள். பலர் ஏழைகளுக்கு அன்னதானமும், பலர் உடைகளையும், மறுநாள் கொடுப்பார்கள். இந்த மாஸத்தில் வரவு செலவு கணக்கைப் பார்த்து, ஜகாத்து பிச்சைக் கொடுக்க வேண்டியது பணமுள்ளவர்களுக்குக் கடமையாக ஏற்பட்டபடியால், அவர்கள் ஏழைகளுக்கும், முடம், குருடு முதலியவர்களுக்கும் தானம் கொடுப்பார்கள்.

ஹிந்துக்களில் குழந்தைகளையும், தீராத வ்யாதிஸ்தர்களையும், சூன்யம் முதலிய பல கஷ்டங்களிலிருந்து நிவர்த்திப்பதற்காக இந்தமாஸத்தில் திரள்திரளாய் மஸ்ஜிதுக்கு அழைத்துவருகிறார்கள். பெரியோர்களும், குரு முதலியவர்களும் பாடம்போட்டு வந்தவர்களை அனுப்புகிறார்கள். இந்த மாஸத்தின் பெருமை ஹிந்துக்களுக்கும் தெரிந்திருக்கிறது. இவ்விதமாய் இம்மாஸமெல்லாம் நடந்து, மறுமாஸம் முதல் பிறையைப் பார்த்து எல்லோரும் ஒரு சந்தியைவிட்டு, ஈதுகாஹ் அதாவது பண்டிகைநாளில் கடவுளை வணங்கக் கட்டப்பட்ட மஸ்ஜிதுக்களில், எல்லோரும், உயர்ந்த துணிகளுடன், கூடியிருப்பது பார்க்கத்தக்கது.

போகும்போதும் வரும்போதும் வேதத்தை எல்லோரும் ஓதி வருவார்கள். ஈதுகாவில் எல்லோரும் தொழுததும் ஏழைகளுக்கு தானம் கொடுத்து வீடு திரும்பிவருவார்கள். சிறியோர்கள் பெரியோர்களையும், இஷ்டக்காரர்களையும் கண்டு நல்வாக்குப்பெற்று இந்நாளை மிக்க ஆனந்தமாய் கழிப்பார்கள்.

முகம்மது முஸ்டாபா.

## INDIAN INDUSTRIAL COMMISSION.

## இந்திய கைத்தொழில் கமிஷன்.

இந்தியாவில் கைத்தொழில்களை அபிவ்ருத்தி செய்வது விஷயமாக இன்னின்ன செய்யலாமென்பதைப்பற்றிப் பரிசீலனை செய்வதற்காக ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டிருப்பதைப்பற்றி நமது நேயர்கள் அறிவார்கள். இப்போது அந்தக் கமிட்டியார் என்னமாதிரியில் பரிசீலனை செய்வார்கள் என்பதைப்பற்றி ஒரு குறிப்பு எழுதி ப்ரசுரம் செய்திருக்கிறார்கள்.

இந்தியாவில் கைத்தொழில்களுக்குக் கிடைக்கக்கூடிய மூலப்பொருள்கள், தேர்ந்த வேலைகள் செய்வதற்கு ஜனங்கள் தகுதியானவர்களா என்பது, தேசத்தில் உத்தேசமாய்க் கிடைக்கக்கூடிய பண ஸௌகர்யம் ஆகிய இவைகளைப்பற்றி ஏற்கனவேயுள்ள தகவல்கள், இந்தியாவில் கைத்தொழில்களை அபிவ்ருத்தி செய்வதற்கு வேண்டிய ஸௌகர்யங்களும் இடமும் இருக்கின்றனவென்பதைக் காட்டப் போதுமானவையாயிருக்கின்றன. இந்த ரொம்ப முக்யமான ஸித்தாந்தத்தை மேற்படி கமிட்டியார் கைத்தொழில் ஸம்பந்தமான விஷயங்களை தீர விசாரித்து நிர்ணயித்துக்கொண்டு, பின்வரும் நோக்கங்கள் நிறைவேறுவதற்காக இன்ன கார்யங்கள் செய்யவேண்டுமென்பதை தெரிவிப்பார்கள்.

1. யாதொரு தொழில்களிலும் உபயோகப்படாமல் கிடக்கும் மூலதனத்தை தொழில்களில் உபயோகப்படும்படி செய்வது.

2. ஜனங்களுக்குத் தொழில்கள் கற்றுக்கொடுத்து, தொழிலாளிகள் அதிகமாக ஆகும்படி செய்தல்.



3. மூலப்பொருள்களை கைத்தொழில்களில் உபயோகிப்பதற்கு அவைகள் ஏற்றவையா என்பதைப் பரீக்ஷிக்கவும், கைத்தொழில்முறைகளை சீர்திருத்தவும் வேண்டி, சாஸ்த்ர ஆராய்ச்சி நடத்துவது.

4. அவ்விதம் ஆராய்ச்சி செய்வதால் கிடைக்கும் விஷயங்களையும், இதர தேசங்களின் அநுபோகத்திலிருந்து கிடைக்கும் விஷயங்களையும் ப்ரசுரம் செய்தல்.

5. கைத்தொழில்களுக்குப் பண உதவி செய்வதற்கும், தொழில் சாலைகளில் செய்த பண்டங்களை விற்பனை செய்வதற்கும் வேண்டிய ஸாதனங்களை வ்ருத்திசெய்தல்.

ஷை கமிட்டியார் கவர்ன்மெண்ட் தஸ்தாவேஜிகளைப் பார்வையிட்டதோடு அநேக அதிகாரிகளோடு கலந்துபேசினதில், இன்னின்ன ப்ரச்னைகள் கமிஷனுடைய யோசனைக்கு வ்ரக்கூடுமென்பதை ஒருவாறு நிர்ணயித்து அவைகளை மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

மாகாண கவர்ன்மெண்டுகள் அவைகளைப்பற்றி ஆலோசித்து அதிகப்படியாக ஏதாவது ப்ரச்னைகளைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்றாலும், அல்லது கீழே குறிப்பிட்டிருக்கும் ப்ரச்னைகளை வேறுவிதமாக மாற்றவேண்டுமென்றாலும், அவ்விதம் செய்து அனுப்பலாம். மாகாண கவர்ன்மெண்டுகளிடமிருந்து பதில்கள் கிடைத்தவுடன் ஷை கமிட்டியார் இன்னின்னவிடத்தில் சுற்று ப்ரயாணம் செய்வதென்பதை நிர்ணயிப்பதோடு, கமிட்டிமுன் ஸாக்ஷி சொல்ல வருகிறவர்களுக்கு உதவியாக கேள்விகள் தயாரித்துக்கொடுப்பார்கள்.

கமிட்டியார் அடுத்த அக்டோபர் மாஸத்தில் மீட்டிங்குகூடி பரிசீலனை செய்யத் தொடங்குவார்கள். அதற்குப் பிறகு கூடிய சீக்ரத்தில் மாகாணங்களில் சுற்று ப்ரயாணம் செய்து, ஒரு கக்ஷியிலும் சேராத ஸாக்ஷிகளையும், அந்தந்த ப்ரதேசங்களிலுள்ள கமிட்டிகள், வேறு ஸ்தாபனங்கள் ஆகிய இவைகளையும், விசாரித்தும், நடந்துவரும் கைத்தொழில்களை நேரில் பார்வையிட்டும் வருவார்கள்.

கமிஷனுக்கு பரிசீலனை செய்ய அதிக காலமில்லாமையால் ஏற்கனவே கைத்தொழில் டிரெக்டரோ, ஆலோசனைசொல்லும் போர்டோ (ஸபையோ) இல்லாத மாகாணங்களில், பற்பல வகுப்பாருக்கும் ப்ரதிநிதிகள் உள்ளதாக ஒரு கமிட்டி உடனே நியமித்தால் ஸௌகர்யமாயிருக்குமென்று தெரிவிக்கிறார்கள். முடியுமானால் ஒரு ஸர்க்கார் உத்யோகஸ்தரை அந்தக் கமிட்டிக்கு உதவியாக நியமிக்கலாம். இந்தமாதிரி சில மாகாணங்கள் ஏற்கனவே செய்திருக்கின்றன.

இப்போது பலர் பல ப்ரச்னைகளைப்பற்றிப் பொதுப்படையாகப் பேசிவருகிறார்கள். அவைகளை பொதுப்படையாக இருக்காமல் வ்யக்தமாக இருக்கும்படி, உதாரணமாக ஒரு குறிப்பிட்ட தொழில் அல்லது நிலைமையில் என்ன செய்ய வேண்டுமென்பதுபோல இருக்கும்படி ப்ரச்னைகளை அமைப்பது மாகாணக் கமிட்டிகளின் கடமையாகும்.

இன்னும் அந்தக் கமிட்டிகள் செய்யவேண்டியவை யாவன: புதிதாகக் கைத்தொழில்கள் ஸ்தாபிக்க, அந்தந்த ப்ரதேசத்தில் கிடைக்கக் கூடியவும், அந்தந்தத் தொழில்களுக்கு ஏற்றவையுமான மூலப்பொருள்களைப்பற்றி ஒரு ஜாப்தாவும், இதே நோக்கத்துடன் உதவி மூலப்பொருள்களாகவோ, முக்யமான மூலப்பொருள்களாகவோ இதர தேசங்களிலிருந்து தருவிக்கக் கூடிய மூலப்பொருள்களின் ஜாப்தாவும் தயாரிக்கவேண்டும், இந்த விஷயங்களையும், கமிட்டிகளுக்குக் கிடைக்கக்கூடிய வேறு விஷயங்களையும் ஆதாரமாக வைத்துக்கொண்டு, அந்தந்த மாகாணத்தின் நிலைமைகளை உத்தேசிக்கையில்

ஆதரிக்கத் தகுந்தவைகள் என்று தோன்றுகிற கைத்தொழில்களுக்கு ஒரு ஜாப்தா தயார் செய்யவேண்டும். இந்த ஜாப்தாவில் ஏற்கனவே பரீக்ஷித்துப்பார்த்த தொழில்களையும் புது தொழில்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதோடு இன்ன தொழில்கள் நன்றாய், லாபகரமாய், நடந்துவருகின்றன வென்றும், அல்லது இன்ன தொழில்களை ஸ்தாபித்தால் நன்றாய் நடந்து வருமென்றும் குறிப்பிட வேண்டும்.

ஸமீபத்தில் ஏதாவது தொழில்கள் நின்று போயிருந்தால் அவைகள் நின்று போனதற்குக் காரணமென்ன வென்பதைப்பற்றி ஸாங்கோபாங்கமாகவும், அவச்யமானால் ரகஸ்ய மாகவும் ஆராய்ச்சி செய்யவேண்டும். இப்படிச் செய்தால் தொழில்கள் நின்று போனதின் காரணங்களை கமிஷனுக்குத் தெரிவிக்கலாம். மேலும் யாரை ஸாக்ஷிகளாக விசாரிக்கலா மென்பதையும் கமிஷனுக்குத் தெரிவிக்கவேண்டும்.

ஷை கமிஷன் சுற்றுப் ப்ரயாணம் செய்யும் போது ஒவ்வொரு மாகாணத்திலும் பின்வருமாறு வேலை செய்வதாக உத்தேசித்திருக்கிறார்கள்.

(1) ஸாக்ஷிகளை விசாரித்தல். (2) ஸௌகர்யப்பட்டால், சில கைத்தொழில் சாலைகளையும், கைத்தொழில் நடக்கும் ஸ்தலங்களையும் போய்ப் பார்வையிடுதல். (3) பிறகு, கமிஷன் மெம்பர்களும், மாகாணக் கமிட்டியாரும் கைத்தொழில் ஆராய்ச்சி விஷயமாய்க்கலந்து பேசுதல்.

இனி கைத்தொழில் கமிட்டியார் கவனிக்கப் போகும் விஷயங்களை சுருக்கிச்சொல்லுகிறோம்.

**கைத்தொழில் டிபார்ட்மெண்டுகள்.**—சில மாகாணங்களில் கைத்தொழில் டிபார்ட்மெண்டுகளும் கைத்தொழில் விஷயங்களை கவனிக்க போர்டுகளும் ஏற்பட்டிருக்கின்றன. வேறு சில மாகாணங்களில் அப்படிப்பட்ட டிபார்ட்மெண்டுகள் ஏற்படுத்த யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். கைத்தறி நெசவுபோன்ற வீட்டுத் தொழில்களை அபிவ்ருத்தி செய்யவும், ஏதாவது தொழிலில்சாஸ்த்ர ஆராய்ச்சிகளை அனுஸரித்து சீர்திருத்தங்கள் செய்ய அந்தந்த ப்ரதேசங்களின் நிலைமை இடங்கொடுக்காமலிருந்து, அந்தத் தொழிலில் அபிவ்ருத்திசெய்ய வேண்டியிருந்தா லதற்காகவும், கைத்தொழில் டிபார்ட்மெண்டுகள் ஏற்படுத்துவது நன்மைதரக் கூடியது. ஆனால் சாஸ்த்ர விஷயங்கள் அதிகமாய்க் கவனிக்கப்படும். பெரிய கைத்தொழில்களை கவனிக்க இந்தியா முழுவதுக்கும் ஒரு கைத்தொழில் டிபார்ட்மெண்ட் ஏற்படுத்துவது யுக்தமாயிருக்கலாம். உதாரணமாக (1) விவஸாயம், உலோகங்கள் தயார்செய்யும் வேலை, சாயவேலை, மருந்து ஆகிய இவைகள் ஸம்பந்தமான ரஸாயன சாஸ்த்ரம்; (2) தோல் ஸம்பந்தமான கைத்தொழில்கள் (3) கண்ணாடி செய்தல்; (4) சர்க்கரை செய்யும் தொழில்கள்; (5) கடுதாசி செய்தல்; (6) எண்ணெய் விதைகள் ஸம்பந்தமான கைத்தொழில்கள் ஆகிய இவைகளை கவனிக்க இந்தியா முழுவதுக்குமாக ஒரு இம்பீரியல் கைத்தொழில் டிபார்ட்மெண்ட் ஸ்தாபிக்கலாமென்று சிலர் சொல்லுகிறார்கள்.

மேலேசொன்னபடி இம்பீரியல் கைத்தொழில் டிபார்ட்மெண்ட் ஸ்தாபிக்க வேண்டுமா; அப்படியானால் எந்த நோக்கத்துடன் ஸ்தாபிக்க வேண்டும்; அதன் அமைப்பு, அதிகாரங்கள் என்ன; மாகாண கைத்தொழில் டிபார்ட்மெண்டுகளின் அமைப்பு எப்படியிருக்கவேண்டும்; ஒவ்வொரு மாகாணத்திலும் கைத்தொழில் விஷயங்களைப்பற்றி கவனிக்க உத்யோகஸ்தர்களல்லாத மெம்பர்கள் சேர்ந்த கைத்தொழில் கமிட்டிகள் ஏற்படுத்த வேண்டுமா; இம்பீரியல் டிபார்ட்மெண்டுக்கும் மாகாண டிபார்ட்மெண்டுக்கும் என்ன ஸம்பந்தம் இருக்க வேண்டியது என்பவைகளைப்பற்றிப் பரிசீலனை செய்யவேண்டியிருக்கும்.

(இன்னும் வரும்.)



## REVIEW OF THE PRESS.

## பத்ரிகை ஆராய்ச்சி.

### A NEW METHOD OF CULTIVATION.

### சாகுபடியில் ஒரு புது முறை.

நெல்பயிர் அறுவடையான பிறகு அடிகட்டைகளில் சில துளிர்ப்பதுண்டு. இவைகளை மாடுகள் மேய்ந்து விடாதபடி பாதுகாத்துவந்தால், அவைகளில் ஒன்றிரண்டு கதிர்வாங்கி கொஞ்சம் நெல் கிடைக்கும். இது எங்கும்ஸாதாரணமானது. ஆனால் சைதாப்பேட்டை தாலூகாவில் சிறுகளத்தூர் க்ராமத்தில் பெருங்கார் என்ற நெல்லைப் பயிரிட்டு அறுவடை செய்த பிறகு, அடிக் கட்டைகளைத் தக்கபடி ஜலம் பாய்ச்சுதல், களையெடுத்தல் முதலியவை செய்து பாதுகாத்து வந்தால், முதல் அறுவடையில் எவ்வளவு மாஸூல் கிடைத்ததோ, அவ்வளவு மாஸூல் அடிக்கட்டை துளிர்த்து வளர்ந்த பயிரிலும் கிடைக்கிறதாம். இவ்விதம் 'கிருஷிகன்' பத்ரிகை எழுதுகிறது.

ஷை க்ராமத்தில் நெல் பயிர்களுக்குச் செய்யும் உழுதல், பசுந்தாளெரு அல்லது ஆடுமாடுகளின் எருப்போடுதல் முதலிய செய்நேர்த்திகளை செய்து டிஸம்பர்மீ 20உக்கு மேல் ஜனவரிமீ 10உக்குள் விதைக்கிறார்கள். மேற்படி விதையை நாற்றுவிட்டு நடுவதானால் வழக்கப்ப்ரகாரம் நாற்றங்கால் தயார்செய்து டிசம்பர் மீ 10உ முதல் 15உக்குள் நாற்றுவிட்டு டிசம்பர்மீ 20உக்கு மேல் 30உக்குள் நட்டுத் தீர்க்கிறார்கள். விதைத்த பயிரானால் 30 நாளைக்கு மேல் 40 நாளைக்குள்ளும், நடுகைப் பயிரானால், 20 நாளைக்குமேல் 30 நாளைகுள்ளும் களைபறிக்கிறார்கள். மேலேகண்ட தேதிக்குப் பின்னால் விதைத்தாலும் நடுகை நட்டாலும் பயிர் பச்சையாய்ப் போகும். அதாவது வளர்ந்துகொண்டே போகுமல்லது அநேக மாதங்களாயினும் கதிர்வாங்காது. மேலும் மேல்காற்றிலும் அகப்பட்டு பயிரழிவடையாகும். மேற்சொன்ன இருதிறப் பயிர்களும் நான்கு அல்லது 4½ மாதங்களில் அறுவடைக்கு லாயக்காகும். இது ஸாதாரணமாய் எல்லாரும் செய்யும் பயிர்.

இந்தப் பயிர் அறுவடையான பின் ஸுமார் 10 நாட்களுக்குத் தண்ணீர் கட்டாமலிருக்க வேண்டும். தண்ணீர் பாய்ந்தாலும் விசேஷ கெடுதியொன்றுமில்லை. அறுவடையான 10 நாட்களானபின் ஸாதாரண நெல் பயிருக்குத் தண்ணீர் கட்டிக்கொண்டு வருவதைப் போல் ஜலம் பாய்ச்சி வருகிறார்கள். ஜலம் பாய்ச்ச ஆரம்பித்த முப்பது அல்லது நாற்பது நாட்களுக் கப்பால் அதாவது அறுவடையான நாற்பது நாட்களுக்கு மேல் 50 நாட்களுக் குள்ளாக ஸாதாரண நாட்டுக்கட்டைக் கலப்பையால் ஒரு சால் உழுகிறார்கள். உழுத ஒருவாரத்திற்கு மேல் களை எடுக்கிறார்கள். பிறகும் வழக்கப் பிரகாரம் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டு வர வேண்டும். முதல் பயிர் அறுவடையானதுபோலவே நாலுமுதல் 4½ மாதத்தில் இந்த இரண்டாவது பயிரும் அறுவடையாவதோடு, முதல் பயிரில் எவ்வளவு மாஸூல் கிடைத்ததோ அவ்வளவு மாஸூல் இந்த பயிரிலும் கிடைக்கிறது. இந்தப் பயிருக்குத் தண்ணீர் கட்டிவருவதும், கட்டைக் கலப்பைகொண்டு ஒரு சால் உழுவதும், ஒரு களைபறிப்பதும் தான் செலவு. இதற்கு எருப்போடும் வழக்கமே கிடையாது. இவ்வளவு குறைந்த செலவில் சரியான பூரா மாஸூல் அகப்படுவது ஓர் சிறந்த முறையல்லவா?

ஜலவஸதியுள்ள மிராசுதார்கள் இந்த நெல்லைப் பயிரிட்டால் இரண்டு பங்கு மாஸூல் அடையலாம். பெருங்கார்விதை வேண்டியவர்கள் பாங்கிப்பேட்டையிலுள்ள மத்ய இலாகா அஸிஸ்டெண்ட் விவஸாய டிரெக்டர் மிஸ்டர் ஜே செல்வரெங்கராஜு அவர்களுக்கு எழுதினால் அவர் வாங்கி அனுப்பக் கூடும். அல்லது சென்னை 'கிருஷிகன்' பத்ராதிபருக்கும் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

### SASTRAS ON WATER.

### ஜலத்தைப் பற்றி சாஸ்த்ரங்கள் சொல்வன.

ஜலமானது மனிதர்களுக்கு முக்யமானவைகளுள் ஒன்றாதலாலும், அது பல கார்யங்களிலும் உபயோகப்படுவதாலும், அது கெட்டதாயிராதபடி நாம் பார்த்துக் கொள்ளவேண்டியது அவச்யமாகும். நமது முன்னோர்களாகிய ரிஷிகள் இதுவிஷயமாக சில விதிகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அந்த விதிகளைத் தொகுத்து 'வித்தியாபானு' வில் ஒரு வ்யாஸம் வெளிவந்திருக்கிறது.

வஸிஷ்டர்.—சுத்தமான ஜலம் அவச்யமாதலாலும், போகிற இடங்களிலெல்லாம் நல்ல ஜலம் கிடைப்பது நிச்சயமில்லாததனாலும், ப்ராமணன் வெளியே

போகும்போது ஒரு பாத்ரத்தில் தீர்த்தம் கொண்டு போகவேண்டும்.

**போதாயனர்.**—கால்களைக் கழுவிக் கொள்ளாமல் குளம் முதலான ஜலாசயங்களில் இறங்கக் கூடாது. ஜலத்திலிருக்கும்போது வஸ்த்ரங்களைத் துவைக்கக் கூடாது; சௌசம் செய்துகொள்ளக்கூடாது. ஜலத்தை வடிகட்டி சுத்திசெய்து குடிக்கவேண்டும். வெளியே போகும்பொழுது ப்ராமணன் ஒரு பாத்ரத்தில் தீர்த்தம் எடுத்துக்கொண்டு போகவேண்டும்.

**விஷ்ணுஸ்ம்ருதி.**—மயிர் முதலான அசுத்தமான வஸ்துக்களோடு கூடி ஓட்டமில்லாமலிருக்கிற ஜலம் அசுத்தமானது. ப்ராணிகள் விழுந்து இறந்துபோன கிணற்றின் ஜலத்தை யெல்லாம் இறைத்து அப்புறப் படுத்தவேண்டும்.

**மனுஸ்ம்ருதி.**—நீரில் ஜல மலபாதைகளைத் தீர்த்துக் கொள்கிறவனுக்கு ப்ராயச்சித்தம் ஏற்பட்டிருக்கிறது. சுத்தமான ஜலம் என்பது சுத்தமான பூமியில் சேகரிக்கப்பட்டதா யிருக்கவேண்டும்; அது சரியான வாஸனை, ருசி, நிறம் ஆகிய இவைகளுடன் கூடி, அசுத்தமான வஸ்துக்களின் ஸம்ஸர்க்கமில்லாததா யிருக்கவேண்டும். மலம், மூத்ரம், எச்சில், அழுக்குத்துணி, அழுக்கு வஸ்துக்கள், விஷம் ஆகிய இவைகளை நீரில் போடக் கூடாது.

**யஜுர்வேத ஆரண்யகம்.**—ஜலத்தில் வாயைக் கொப்புளிக்கக் கூடாது ஜலமல பாதைகளை ஜலத்தில் தீர்த்துக்கொள்ளக்கூடாது. ரத்தம் மயிர், நகம், அஸ்தி (எலும்பு), சாம்பல், அழுக்கு வஸ்த்ரங்கள் ஆகிய இவைகளை ஜலத்தில் போடக்கூடாது.

**யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி.**—எழுவிதமான ஜலங்களைக் குடிக்கக் கூடாது. அவையாவன:—(1) மற்றவர்கள் காய்ச்சிய நீர், (2) நுரையோடிருக்கும் நீர், (3) கலங்கின அழுக்கு நீர், (4) துர்நாற்றம் வீசுகிற நீர், (5) மண் கலங்கிய நீர், (6) உப்பு நீர், (7) குமிழிகளெழும்பும் நீர். கைகால் கழுவினபின் பாக்கியிருக்கும் நீர், சௌசம் செய்துகொண்டபின் பாக்கியுள்ள நீர், மற்றவர்கள் குடித்து மிகுந்த நீர், வண்ணான் துறைக்குப் பக்கத்திலிருக்கும் நீர்; சண்டாளர், கசாப்புக்காரர், சக்கிலியர் முதலான ஹீனஜாதியார் ஸ்நாநம் செய்த நீர், பஹிஷ்டையான ஸ்திரீகள், சாதீட்டுக் கொண்டவர்கள் ஆகிய இவர்கள் ஸ்நானம்செய்த இடத்திலிருக்கும் நீர்—ஆகிய இவைகளை யெல்லாம் மற்றவர்கள் உபயோகிக்கக் கூடாது.

**சதபத ப்ராம்மணம்.**—கண்வலி, தலையில் வ்யாதி, காதில் வ்யாதி, காக்காய் வலிப்பு, க்ஷயரோகம், குஷ்டம், பெரிய அம்மை, வயிற்றுக்கழிச்சல், வாந்திபேதி முதலான தொற்று வ்யாதிகள் ஆகிய இவைகளையுடைய ஜனங்கள் ஸ்நாநம் செய்த ஜலத்தில் மற்றவர்கள் ஸ்நானம் செய்யக்கூடாது.

**ராமாயணம்.**—ஓடுகிற ஜலத்தைக் கெடுப்பதற்காக அதில் விஷத்தைப் போடுவது எவ்வளவு பாபமோ அவ்வளவு பாபம் ராமரைக் காட்டுக்கு அனுப்ப ஸம்மதித்தவன் மீது இருக்கட்டும் என்று பரதர் சொல்லுகிறார். (இதனால் குடிக்கிற ஜலத்தைக் கெடுப்பது பெரிய பாபமென்று அந்தக் காலத்தில் நினைத்திருந்தார்களென்பது விளங்குகின்றது.)

**பாகவதம்.**—சுத்தமான துணியினால் வடிகட்டிச் சுத்திசெய்த ஜலத்தைத் தவிர வேறு ஜலத்தைக் குடிக்கக் கூடாதென்று உத்தவகீதையில் க்ருஷ்ணனுக்கு உத்தவர் உபதேசித்திருக்கிறார்.

## INSTRUCTIONS TO TEACHERS.

## உபாத்யாயர்களுக்குப் போதனைகள்.

1. வகுப்பில் நீர் உம்முடைய இடத்திலேயே இரும். பிள்ளைகள் தத்தம் இடத்தில் இருக்கட்டும். போர்டு பலகையின் வலது பக்கமே உபாத்திக்குத் தகுந்த இடம். 2. வகுப்பில் போதிக்கும்போது போதனையைத்தவிர வேறொன்றையும் எந்தக் காரணத்தினாலும் கவனியாதேயும். 3. வகுப்பு முழுவதையும் கவனித்துப் போதியும்.

4. நீர் யோசனையுடன் கட்டளையிடும்; கட்டளைக்குப் பிள்ளைகள் கீழ்ப்படியாததற்கு முன் வேறு வேலையைத் தொடங்காதேயும்.

5. உமக்கு ஸரியெனத் தோற்றினவாறு வகுப்பின் அபிவ்ருத்திக்கு எந்தக் கார்யமுஞ் செய்யும். சிறுவர்களுடைய பல யோசனையைக் கேளாதேயும் 6. உமக்குக் கோபம் வரவொட்டாமல் காத்துக் கொள்ளும். பிள்ளைகளைத் தண்டிக்க நேரிட்டால் அவர்களுக்கு நலம் உண்டாகும்பொருட்டே யல்லாமல் உம்முடைய கோபம் ஆறும்பொருட்டாகத் தண்டியாதேயும். 7. சிறுவர்களிடம் அடிக்கடி குற்றம் கண்டுபிடியாதேயும். 8. சிறுவர்களை அடிக்கடி தண்டியாதேயும். 9. ஒரே ஸமயத்தில் அநேகரைத் தண்டிக்க வேண்டாம்.



# Departmental Notes.

# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.

## வித்யாவிஷயம்.

### Primary Education in India.

**இந்தியாவில் ப்ரைமரிக் கல்வி.**—1915-ம் வர்ஷத்தில் இந்தியாவெங்கும் கவர்ன்மெண்டாலும் ஸ்தல ஸ்வய ஆட்சி ஸபைகளாலும், கவர்ன்மெண்டின் ஆதரவு பெற்று இதரர்களாலும் நடத்தப்பட்ட ப்ரைமரி பாடசாலைகளின் தொகையும் அவைகளில் வாசித்த குழந்தைகளின் தொகையும் பின் வருமாறு:—

| மாகாணம் | பாடசாலைகள். | பையன்களின் தொகை. |
|---|---|---|
| சென்னை | 26917 | 1144,806 |
| பம்பாய் | 9929 | 594,728 |
| வங்காளம் | 28335 | 1047,262 |
| ஐக்யமாகாணம் | 10513 | 576,547 |
| பஞ்சாப் | 4552 | 228,561 |
| பர்மா | 6029 | 209,605 |
| பேஹார் | 21339 | 601,764 |
| மத்யமாகாணம் | 3727 | 271,886 |
| அஸ்ஸாம் | 3926 | 175,414 |
| வடமேற்கு மாகாணம் | 539 | 25,643 |
| குடகு | 94 | 6,662 |
| டெல்லி | 82 | 5,181 |
| மொத்தம் | 116012 | 488,019 |

**பெண் பாடசாலைகள்.**—மொத்த ப்ரைமரி பெண் பாடசாலைகளின் தொகை 15-ஆயிரத்து 70; அவைகளில் வாசிக்கும் பெண்களின் தொகை 9-லக்ஷத்து 29-ஆயிரத்து 846;

கவர்ன்மெண்டின் ஆதரவு பெறுமல் இந்தியாவெங்கும் நடத்தப்படும் பையன்கள் பாடசாலையின் தொகை 36-ஆயிரத்து 367 ஆகும்; பெண் பாடசாலைகளின் தொகை 2002; இப்பாடசாலைகளிலுள்ள பையன்கள் தொகையும், பெண்களின்தொகையும் முறையே 559, 466; 72, 375.

### A School for Small Industries.

**சிறு தொழில்களை கற்றுக்கொடுக்க ஒரு பாடசாலை.**—மைஸூர் பொருளாதார கான்பரென்ஸ் ஆதரவில் பங்களூரில் ஒரு தொழில் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதில் இங்க் (மைகள்) செய்தல், போட்டோ பிடித்தல், பாய் நெய்தல், மூங்கிலால் ஸாமான்கள் செய்தல், தச்சுவேலை, ஸிரப்புகளும், தலைமயிர் வளர்க்கும் தைலங்களும் செய்தல், தையல்வேலை, சித்ரத் தையல்வேலை, பொம்மை செய்தல், ஆகிய இவைகள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. இவைகளில் பாய் வேலை, மூங்கில் வேலை, தையல் வேலை, பொம்மைசெய்யும் வேலை ஆகிய இவைகள் சிறுவர் சிறுமியர் ஆகிய இருபாலாருக்கும் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. ஸரிகை, சித்ரத்தையல் வேலைகள் பெண்களுக்கு மாத்ரம் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. மற்றவைகள் பிள்ளைகளுக்கு மாத்ரம் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. சிறு கைத்தொழில்களில் தேர்ந்தவரான மிஸ்டர் கே. ஆர். சக்ரவர்த்தி என்பவர் இந்தப் பள்ளிக்கூடத்தை மேற்பார்வை செய்கிறார். இந்தப் பள்ளிக்கூடத்தில் பையன்களுக்கு காலையிலும் மாலையிலும் கற்றுக்கொடுக்கிறார்கள். பெண்களுக்குக் காலையில் மாத்ரம் கற்றுக்கொடுக்கிறார்கள். பெண்களுக்குக் கற்றுக்கொடுக்கப்படும் பாடங்களை குடும்ப ஸ்த்ரீகள் பகற்காலத்தில் 2-மணி முதல் 4-மணிக்குள் போய் கற்றுக்கொள்ளலாம்.

இந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து வாசிக்க சம்பளம் கொடுக்கவேண்டியதில்லை. பெண்களுக்குக் கற்றுக்கொடுக்கும் பாடங்களில் சிலவற்றை அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க ஸ்த்ரீ உபாத்யாயர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்ற பாடங்களையும் கற்றுக்கொடுக்க ஸ்த்ரீ உபாத்யாயர்கள் கிடைத்தவுடன் நியமிக்கப்படுவார்கள்.

### Pay of Elementary School Teachers.

**எலிமெண்டரி ஸ்கூல் உபாத்யாயர்களின் சம்பளம்.**—போர்டு ஸ்கூல்களில் அமர்ந்துள்ள பயிற்சி பெறுத எலிமெண்டரி ஸ்கூல் உபாத்யாயர்களுக்கு இதுவரையில் 8-ரூபாய்க்குக் குறைவாகவே சம்பளம் கொடுக்கப்பட்டுவந்தது. பயிற்சிபெற்ற உபாத்யாயர்கள் வேண்டிய அளவு அகப்படாததால், எலிமெண்டரி ஸ்கூல்களில் இன்னும் பயிற்சி பெறுத உபாத்யாயர்களை நியமிக்கவேண்டியிருப்பதாலும், ரொம்ப குறைவான சம்பளத்துக்கு உபாத்யாயர்கள் கிடைப்பது கஷ்டமாயிருப்பதாலும், இனிமேல் போர்டு ஸ்கூல்களில் பயிற்சி பெறுத உபாத்யாயர்களுக்கு 8-ரூபாய் சம்பளம் கொடுக்கலாமென்று கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள்.

# TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### The Author of Jnanavetti.

**ஞானவெட்டியை இயற்றினவர்.**—ஸித்தர்கள் வெளியிட்டுள்ள தத்வ விஷயங்களில் சிலவற்றைப் பற்றியும் மருத்துவ விஷயங்களில் சிலவற்றைப் பற்றியும் கூறும் ஞானவெட்டி யென்னும் நூல் ஞானமார்க்கத்தை யடைய விரும்பும் சிலரால் பெரிதும் போற்றப்பட்டு வருகிறது. இந்த நூலைச் செய்தவர் திருக்குறளியற்றிய திருவள்ளுவர் என்று பலர் எண்ணுகிறார்கள். ஆனால் திருக்குறளியற்றியவர் வேறு, ஞானவெட்டி எழுதியவர் வேறு என்று 'செந்தமி'ழில் ஒரு நிருபர் எழுதுகிறார். ஏனெனில் ஞானவெட்டியின் ஆசிரியர், ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் ஒப்பற்ற புலமையும் தெய்வத்தன்மையும் பொருந்திய சில பெரியோர்களையும் அவர்கள் இயற்றிய நூல்களையும் தமது 'ஞானவெட்டி' யில் வாய்கூசாது நிந்தித்திருக்கிறார். அச்செய்யுள்களில் முக்யமானவை. ஞானவெட்டி-579 வது, 600 வது செய்யுள்களாகும்.

இந்த செய்யுள்களில் வ்யாஸ பாரதம், கம்ப ராமாயணம், அதிவீராம பாண்டியன் இயற்றிய நைடதம், தேவார திருவாசகங்கள், ஆகிய இவைகள் மக்கட்குப் பயன் படாத பொய்நூல்களென்று சொல்லப்பட்டிருக்கின்றன. கம்பர் 12-ம் நூற்றாண்டிலும், அதிவீராம பாண்டியன் 16-ம் நூற்றாண்டிலும் வாழ்ந்தவர்களென்று ஆராய்ச்சிகளால் தெரியவருகிறது. திருக்குறள் இயற்றிய திருவள்ளுவர் கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராவார். ஆகவே கம்பரும் அதிவீராமபாண்டியரும் திருவள்ளுவருக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பிற்பட்டவராகவேண்டும்.

ஆகவே, மேற்கூறிய கம்பரையும் அதிவீராமபாண்டியரையும் தமது ஞானவெட்டியில் நிந்தித்து எழுதியிருக்கும் ஆசிரியர் திருக்குறளியற்றிய திருவள்ளுவர் என்று சொல்லுதல் சிறிதும் பொருந்தாது. மேலும் திருக்குறளியற்றிய திருவள்ளுவர் வேறு நூல்கள் செய்திருந்தால், திருக்குறளின் உரையாசிரியராகிய பரிமேலழகர், அந்த வேறு நூல்களிலிருந்து ஆங்காங்கு மேற்கோள்கள் எடுத்துக்காட்டி யிருப்பார். அப்படிப் பரிமேலழகர் செய்யாமையால் திருக்குறளியற்றிய திருவள்ளுவர் மேற்படி திருக்குறளைத் தவிர வேறு நூல்களை இயற்றவில்லையென்பது நன்கு விளங்கும்.

மேலும் ஞானவெட்டியின் ஆசிரியர் தமது நூலில் சில பெரியோர்களை நிந்தித்திருப்பதுபோல் வேதத்தையும் அந்தணரையும் நிந்தித்திருக்கிறார். குறளாசிரியர் அவ்விதம் செய்யாரென்பது மேற்படி குறளில் வேதத்தையும் அந்தணரையும் ச்லாகித்து எழுதி யிருப்பதால் நன்கு விளங்கும். இன்னும் ஞானவெட்டியில் எத்தனையோ செய்யுள்கள் பிழையுடையனவாக விருக்கின்றன.

மேற்படி 'செந்தமிழ்' நிருபர் இவ்விதம் எழுதிவிட்டு, ஞானவெட்டியானது ஸுமார் 200 வர்ஷங்களுக்கு முன் தஞ்சாவூர் ஜில்லாவில் கடல் சார்ந்த ப்ரதேசத்தில் இருந்த ஒருவரால் இயற்றப்பெற்றதென்று கூறுகிறார்.

### Sarngadara Samhita.

**சார்ங்கதர ஸம்ஹிதை.**—தற்காலம் ஜனங்கள் ஆயுர்வேதத்தில் அதிக ச்ரத்தை காட்டி வருகிறார்கள். ஸாமான்ய ஜனங்கள் அதில் தக்க தேர்ச்சி யடைய வேண்டுமென்றால், பற்பல நூல்களை வாசிக்கவேண்டியிருக்கும். பலருக்கு இதற்கு அவகாசமிராது. இப்படிப்பட்டவர்களுக் கேற்றதாக ஒரு உயர்ந்த ஸம்ஸ்க்ருத வைத்யநூல் இப்போது ஆயுர்வேத பூஷண பண்டித எம். துரைஸாமி அய்யங்காரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாகியிருக்கிறது. அது சார்ங்கதர ஸம்ஹிதை என்னும் நூலே. அதன் ஆசிரியராகிய சார்ங்கதரன் சொல்லுகிறபடி, "அளவற்ற நூல்களை ஆராய்ந்தறிவதற்கான திறமையில் குன்றியவர்கள், அல்லது அதற்குத்தகுந்த நீண்ட ஆயுளைப் பெறாதவர்கள் இதுகாறும் அகில நூல்களையும் படிப்பதில் தமது சக்தியையும் மீறி முயன்றது போதும். வைத்ய சாஸ்த்ரத்தின் ஸாராம்சமனைத்தையும் இதில் சுருக்கிக் கூறியிருப்பதால், அத்தகைய விவேகிகள் சுருக்கமான இந்நூலைப் படித்தறிய முயலுவது முற்றிலும் யுக்தமாகும்." இந்த நூலில் தக்க வைத்யர்கள் செய்யக்கூடிய அரிய வைத்யமுறைகளேயன்றி, ஸாமான்ய ஜனங்களும் ஸுலபமாய்ச் செய்யக்கூடிய பல வைத்யமுறைகளும் கூறப்பட்டிருப்பதால் இது வைத்யர்களல்லாதவர்களுக்கும் ரொம்பவும் பயன்படும். இது ஸுமார் 300-பக்கங்கள் கொண்டது. மூன்று பாகங்கள் உள்ளது. முதல் பாகத்தில் வைத்ய சாஸ்த்ர ஸம்பந்தமான பொது விதிகளும் ரோகங்களின் வகைகளும், இரண்டாவது பாகத்தில் ஸ்வரஸம், கஷாயம், கல்கம், சூர்ணம், லேஹ்யம், குளிகை, தைலம் முதலிய ஔஷதங்கள் தயார்செய்யும் விதமும், அவை எந்தெந்த ரோகங்களில் உபயோகப்படு மென்பதும், மூன்றாவது பாகத்தில் ஸ்நேகம், வமனம், விரேசன முதலிய பல சிகித்ஸா முறைகளும் கூறப்பட்டிருக்கின்றன. இதன் விலை ரூ 3—0—0. வேண்டுவோர் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, ஹைகோர்ட்டுக் கெதிரில் 3 4, கொண்டிசெட்டித் தெரு, மதராஸ் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.



# SCIENCE AND INVENTION.

## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### A New Method of Irrigation.

**ஒரு புதுமாதிரியான நீர்ப்பாசனம்.**—மழையானது விவஸாயிகளுடைய ஸௌகர்யம்போல் பெய்வதில்லை. சில ஸமயம் ஸ்வல்ப மழையே பெய்கிறது வேறு சில ஸமயங்களில் அதிக மழைபெய்து பயிர்களை நாசம் செய்து விடுகிறது. சில ஸமயங்களில் வேண்டாத போது ஏராளமாய் மழை பெய்கிறது. வேண்டும் போது சில இடங்களில் மழைபெய்யாமலே இருந்து விடுகிறது. மழையின் இயல்பு ஒருபோதும் ஒரே சீராயிருப்பதில்லை. இந்த அஸௌகர்யத்தை உத்தேசித்து அமெரிக்காவில் ஒரு விவஸாயி மழையை எதிர்பார்க்காமலே தமது பயிரை ஸாகுபடி செய்கிறார். ஒரு புது மாதிரியில் தமது பயிருக்கு ஜலம் விடுகிறார்.

அவர் அனுஸரிக்கும் முறையானது இயற்கையாய் மழை பெய்வதைக் கிட்டத்தட்ட ஒத்திருக்கிறது. வயல்களின்நடுவில் பற்பல கம்பங்களை நிறுத்தி, அவைகளின்மேல் தொடர்ச்சியாகக் குழாய்களை அமைத்து வைத்திருக்கிறார். இந்தக் குழாய்களில் கொஞ்சதூரத்துக்கொன்றாக த்வாரங்கள் இருக்கும். அந்த த்வாரங்களில் பித்தளையால் செய்ததும், சிறுத்வாரங்களுள்ளதும், ஜலத்தை மழைபோல் வெளியிடக் கூடியதுமான குழாய் மூடிகள் பொருத்தி யிருக்கும். குளம் அல்லது ஆறுகளிலிருந்து ஜலத்தை இஞ்ஜின்களால் இறைத்து பம்புகளில் பாய்ச்சினால் பித்தளை மூடிகள் வழியாக ஜலமானது மெதுவாய் மழைபெய்வதுபோல பயிர்களின் மேல் விழும். இது சிறு துளிகளாக விழுவதால் மண்ணைக் கெட்டியாக்காமல் பூமிக்குள் சுவறிப் போய் பயிர்களுக்கு உதவுகிறது. இதில் ஜலச்சேதம் ஏற்படுவதற்கில்லை. கனத்து மழை பெய்தால் நிலத்து மண்ணைக் களியாக்கி ஜலம் தங்கும்படி செய்துவிடுகிறது. இந்த ஜலம் ஸூர்யோஷ்ணத்தால் ஆவியாக மாறிப் போய்விட்டால், மேல் மண்ணானது ரொம்ப கெட்டியாகி விடுகிறது. இப்படி மண் ரொம்ப கெட்டியாகி விட்டால் மறுபடி மழை பெய்யும்போது மழை ஜலம் பூமியில் ஊறி வேருக்குப் போக முடிவதில்லை. பெய்த மழை ஜலம் மேலேயே தங்கியிருந்து சீக்ரம் ஆவியாகப் போய்விடுகிறது.

கால்வாய்கள் வெட்டி ஜலம் பாய்ச்சுவதிலும் சில அஸௌகர்யங்கள் இருக்கின்றன. ஜலத்தில் பெரும் பாகம் வீணாய்ப் போய் விடுகிறது. பயிரிடக்கூடிய நிலத்தில் கால்வாய்கள் வெட்ட வேண்டி யிருப்பதால், அந்த நிலம் பயிரிட முடியாமல் வீணாகப் போகிறது. மேலும் இந்த முறையில் அதிக ஜலம் வேண்டியிருக்கிறது. கால்வாய் ஜலத்தில் களைகளினுடைய விதைகள் மிதந்துவந்து பயிர்களுக்குக் கெடுதியுண்டு பண்ணக் கூடும்.

ஆனால் அமெரிக்கவிவஸாயி அனுஸரிக்கும், தலைக்கு மேலிருந்து ஜலம்பாய்ச்சும் முறையில் இந்த அஸௌகர்யங்கள் கிடையா. பயிருக்கு எப்போது ஜலம் வேண்டுமோ அப்போது பாய்ச்சலாம். வேண்டும்போது நிறுத்திக் கொள்ளலாம்.

இந்த முறையில் ஜலம்பாய்ச்சிப் பயிர் செய்வதில் மாஸூல் அதிகமாகக் கிடைக்கிறது. ஸாதாரணமாய் வேறிடங்களில் ஒரு ஏக்கருக்கு 100 முதல் 200 புஷல் வரையில் உருளைக்கிழங்கு மாஸூல் கிடைக்க, இந்த அமெரிக்கருடைய நிலங்களில் ஏக்கருக்கு 625 புஷல் மாஸூல்கிடைக்கிறதாம். அதோடு மற்றவர்கள் ரொம்ப நாள்கழித்து அறுவடைசெய்ய இவர் சீக்கிரம் அறுவடைசெய்து விடுகிறார். முதலில் விற்பனைக்குவரும் புது உருளைக்கிழங்குக்குவிலை அதிகமாதலால், அவருக்குவிலையிலும் நல்ல லாபம் கிடைக்கிறது. இதே மாதிரி மற்ற காய்கறி வகைப் பயிர்களையும், மற்ற விவஸாயிகளைவிட சீக்ரம் அறுவடை செய்து அதிக விலைக்கு விற்று அவர் நல்ல லாபம் அடைகிறாராம். சில சிறு செடிகளுக்கும், பலன்தரும் பருவத்திலிருக்கும் பெரிய செடிகளுக்கும், அதிக பனி உதவாது. அதற்காக அவர், பனியை உள்ளே விடாத விதமாய்த் தயார்செய்த ஒருவகைத் துணியை செடிகளின்மேல் கூடாரம்போல் போட்டு மூடுகிறார். ஸூர்யோஷ்ணமானது ஸல்லாத் துணிபோல் இருக்கும் அந்தத் துணிவழியாகப் போய் செடிக்குதவுகிறது. இரவில் பனி மாத்ரம் செடியை உபத்திரவம் செய்யாமலிருக்கிறது. இதனால் செடிகள் நன்றாய் வளர்ந்து நல்ல மாஸூல் கொடுக்கின்றன.

### Nickel Steel.

**நிக்கல் இரும்பு.**—7 பங்கு இரும்புடன் 1 பங்கு நிக்கலைச்சேர்த்து உருக்கினால் கிடைக்கும் கலப்பு உலோகம் ரொம்ப பாரம் தாங்கக் கூடியது. நூற்றுக்கு 0·55 பாகம் கார்பன் என்னும் சுத்தமான கரி சேர்த்தால், அது ரொம்ப கடினமான உலோகமாகி விடும். அதை மெஷினால் பற்பல உருவங்களாக்கவும் முடியாதாம்.

# SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

### Cold.

**ஜலதோஷம்.**—ஜலதோஷம் பிடித்திருக்கும்பொழுது தொண்டை, தலை முதலிய பாகங்களில் மாத்ரம் நோவாயிருப்பதால் அவற்றிற்கு மாத்ரம் மருந்துபோடுவது வழக்கம். இப்படிச் செய்வதால் தற்காலத்திற்கு அதைச் சாந்தி செய்யலாமென்றாலும் மறுபடி வரவொட்டாதபடி செய்ய முடியாதென்று 'வைத்திய கலாநிதி' யில் ஒரு நிருபர் எழுதுகிறார். ஜலதோஷமென்றால் சீதளம் அதிகப்பட்டிருக்கிறதென் றெண்ணுதல் பிழையாகும். தேஹத்தில் எப்பொழுதும் உஷ்ணம் உண்டாகிக்கொண்டே யிருக்கிறது. இதற்குக் காரணமாகிய ரத்தஓட்டம் ச்வாஸம் முதலியவற்றில் ஏதோ பிசகு இருப்பதனால்தான் ஜலதோஷமுண்டாகிறது. சிலவேளையில் தேஹத்தில் உஷ்ணம் அதிகமாயுண்டாகும். அப்பொழுது அதிகமாயிருக்கும் உஷ்ணம் சர்மத்தின் வழியாய் வேர்வைரூபமாகப் போய்விடும். தேஹத்தில் அதிகமாக உண்டாகும் உஷ்ணத்தை வேர்வைரூபமாக வெளியே போகச்செய்வதுதான் சர்மத்தின் முக்யமான வேலை. ஆகையால் ஜலதோஷம் வாராமலிருக்கச்செய்ய சர்மத்தின் தொழில் சரிவர நடக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டியது. அந்த நிருபர் ஜலதோஷம் வாராமலிருக்க பின்வரும் விஷயங்களைத் தெரிவிக்கிறார். ஒன்றின்மேலொன்றாக அனேக உடுப்புகளைப் போட்டுக்கொள்ளுவதாலும், உள்ளே பட்டு, பருத்தி முதலியவற்றாற் செய்த உடுப்புகளைப் போட்டுக்கொள்ளுவதாலும் வேர்வைக்குத் தடங்கலேற்படும். ரோமத்தாற் செய்யப்பட்ட ஆடைகளை உள்ளே போட்டுக்கொண்டால் வேர்வைக்குத் தடங்கலுண்டாகாது. கெட்டிக்கம்பளிகளைப் போட்டுக்கொள்வதைவிட மெல்லியதானவற்றைப் போட்டுக்கொள்ளுவது நலம். உள்ளே போட்டுக்கொள்ளும் சட்டைகள் வேர்வை தாராளமாய் உண்டாவதைத் தடைசெய்யாதபடி மெல்லியதாக இருக்கவேண்டும். வெளியே போட்டுக்கொள்ளும் சட்டைகள் காலத்துக்குத் தக்கபடி மெல்லியதாகவாவது கெட்டியாகவாவது இருக்கவேண்டும். அதிகமாக உடுப்புகளைப்போட்டுக்கொள்ளுகிறவர்களுக்கு ஜலதோஷம்விசேஷமாகப் பிடிக்கும். தலை, முகம், கழுத்து இம்மூன்றும் குளிருக்கு வாடிக்கைப்பட்டிருப்பதால் இவற்றை மூடுவது அவசியமல்ல. இவற்றை மூடினால் நோயுண்டாகும். தொண்டைக் கட்டிக்கொள்ளாதிருக்கச்செய்ய கழுத்துப்பட்டிகளைச் சுற்றிக்கொள்வது பிசகு. தேஹமுழுவதும் ஒரே ஸுமாராகப் போர்த்திருக்கவேண்டும்; ஒரு பாகத்தை அதிகமாகப் போர்த்துக்கொண்டிருந்தால் அதன் பாகம் பலமற்றுப்போம். வழக்கமாய் ப்ரதிதினமும் வெந்நீரில் ஸ்நாநம் செய்வதைவிட குளிர்ந்த ஜல ஸ்நாநம் செய்வதே மேல். ஜலதோஷம் உண்டாயிருக்கையில் மட்டும் தாங்கக்கூடிய சூடுள்ள ஜலத்தை ஸ்நாநபாநாதிகளுக்கு உபயோகிக்கவேண்டும்.

### Sunflower and Malaria.

**ஸூர்யகாந்திப்பூவும் மலேரியாவும்.**—அமெரிக்க ஐக்ய நாடுகளின் கீழ்பாகத்திலுள்ள பொட்டாமாக் நதிக்கரையில் ஸூர்யகாந்திப்பூவை ஏராளமாய் பயிரிட்டதில், அங்குள்ள சதுப்பு நிலங்களெல்லாம் காய்ந்தபூமியாக ஆனதோடு, மலேரியாவும் ஒழிந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்தியாவில் இவ்விஷயத்தைப் பற்றி ஆராய்ச்சிசெய்து ஸூர்யகாந்தியால் மலேரியாவை ஒழிக்கக் கூடுமென்று நிர்ணயிக்கப்பட்டால், இந்த தேசத்தில் ஸூர்யகாந்திப்பூவை ஏராளமாய்ப் பயிர் செய்ய முயற்சிக்கலாம்.

### Remedy for Falling Hair.

**தலை மயிர் உதிர்வதற்கு சிகித்ஸை**—மா, எலுமிச்சை, நாரத்தை, கொளுஞ்சி, மாதுளை, விளா இவைகளின் வித்துப் பருப்புகளை ஓர் நிறையாய் எடுத்து பசும்பாலில் அரைத்துக் கொதிக்கவைத்து ஒரு மண்டலம் வரை காலையில் சிரவில் தளமிட்டு மாலையில் ஸ்நானம் செய்துவர குணம் கொடுக்கும்.

### Bibbili Churnam.

**பிப்பலீ சூர்ணம்**—திப்பலியை மாத்ரம் சூர்ணம் செய்து (இரண்டு மடங்கு) தேன் கலந்து லேஹ்யம் போல் உட்கொள்ளவும். இதனால் காஸம், ஜ்வரம், விக்கல், ச்வாஸம், ப்லீஹரோகம் இவை தீரும். கண்டத்திற்கு நல்ல வலுவைத்தரும். மேற்கூறிய ரோகங்களில் பாலர்களுக்கு இந்த பிப்பலீ சூர்ணத்தை உபயோகிக்கலாம்.—சார்ங்கதரஸம்ஹிதை.



# LAW.

## சட்டம்.

### Assignment of Decree.

**டிக்ரியை மேடோவர் செய்வது.**—பி என்பவர் வாங்கியிருந்த ஒரு டிக்ரியை 'மேடோவர்' வாங்கிக்கொள்வதாக டி-என்பவர் பி-க்கு ஒரு ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தார். டி-என்பவரால் ஏற்பட்ட சில காரணங்களால் மேடோவர் பூர்த்தியாகாமல் நின்று போயிற்று. இதற்குள் டிக்ரி காலாவதி யாகிவிட்டது. பி-என்பவர் ஒப்பந்தப்படி டி-என்பவர் டிக்கிரியை மேடோவர் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று வ்யாஜ்யம் போட்டார். இதில் ஹைக்கோர்டார் தீர்ப்பு பின்வருமாறு. டிக்ரி காலாவதியாகிவிட்டதால், டிக்ரியை மேடோவர் வாங்கிக்கொள்ளும்படி டி-யைக் கட்டாயப் படுத்துவதற்கில்லை. ஆகவே பி-என்பவர் ஒப்பந்தப்படி தமது கார்யத்தைச் செய்ய முடியாது. டிக்ரி காலாவதியாகாம லிருக்கும்படி வேண்டிய நடவடிக்கைகளைச் செய்திருக்க வேண்டியது பி-என்பவரின் கடமையாகும். 3, லா வீக்லி-553.

### Absconder and Joint Family Property.

**அவிபக்தகுடும்பத்தில் குற்றஞ்செய்து ஓடிப்போனவன் பாகம்.**—அவிபக்த குடும்பத்தைச்சேர்ந்த ஒருவன் குற்றஞ்செய்து அகப்படா விட்டால் குடும்ப ஸொத்தில் அவனுக்குள்ள பாகத்தை கவர்ன்மெண்ட் ஜப்திசெய்யலாம். அப்படிச்செய்தால் அதற்கு ரிஸீவர் நியமித்து பாக வ்யாஜ்ஜியம் செய்யச்சொல்லியோ அல்லது வேறுவிதமாகவோ அந்த பாகத்தைப் பெறலாம். ஜப்திசெய்ததனால், ஓடிப்போனவன் பாகமாகி விட்டதாகவாவது அல்லது அந்த ஸொத்து ஸர்க்காருக்கே ஸொந்தமாகி விட்டதாகவாவது எண்ணக்கூடாது. ஜப்தியிருக்கிறவரையில் ஸர்க்கார் ஸொத்தின்வரும்படியை அடையலாம். அந்த ஸொத்து பூர்வீக ஸொத்தாயிருந்தால் ஜப்திக்குப் பிறகு ஓடிப்போனவனுக்கு பிள்ளைகளும் பிறக்கும்பக்ஷத்தில் ஹிந்துலா ப்ரகாரம் அவர்களுக்கு பங்குகளும் உண்டு.

4 லாவீக்லி 21-ம் பக்கம்.

### A Carpenter as Witness.

**ஒரு தச்சன் சாட்சி சொன்னது.**—ஒரு அடிபிடி கண்டைகேஸில் ஒரு தச்சன் சாட்சியாக வந்தான். குற்றவாளியின் வக்கீல் தச்சனைப்பார்த்து, குற்றவாளி ப்ராதுகாரனை அடித்ததாகச் சொல்லுகிறாயே, அப்படி அடிக்கும்பொழுது நீ, எவ்வளவு தூரத்திலிருந்தாய் என்று கேட்டார். அதற்குத் தச்சன் சரியாய் நாலரையடி ஐந்தரையங்குலம் இருக்குமென்று சொன்னான். அப்பொழுது வக்கீல், அதெப்படி அவ்வளவு திட்டமாகத் தெரியுமென்று தச்சனைக் கேட்கவே, அவன் "யாராவது ஒரு மடையன் கேட்பானென்று அளந்து பார்த்தேன்" என்று சொன்னான்.

### Suit for Interest.

**வட்டிக்கு வ்யாஜ்யம்.**—பந்தக பத்ரத்தில் பந்தக முதல் தொகையை திருப்பிக்கொடுக்கவேண்டிய கெடுவுக்குள் ஒருவித வ்யாஜ்யமும் செய்யக்கூடாதென்றிருந்தால், பந்தகம் வாங்கினவன் வட்டிக்குக்கூட வ்யாஜ்யம் செய்யக்கூடாது. ஆனால் மேல்சொன்னபடி வ்யாஜ்யம் செய்யக்கூடாதென்ற நிபந்தனை இல்லாவிட்டால், முதலைத் திருப்பிக்கொடுப்பதற்கு ரொம்ப கெடுவிருந்தபோதிலும், வட்டிக்குமட்டும் வ்யாஜ்யம் போடலாம்

### Joint Family Property.

**அவிபக்த குடும்பஸொத்து.**—அவிபக்த குடும்பத்தில் ஒரு பாகஸ்தனுடைய பாகத்தை வாங்கின அன்யன் ஒருவன் ஸொத்தைப் பிரித்துவிடவேண்டுமென்று வ்யாஜ்யம் செய்யலாமே ஒழிய அந்த மற்ற பாகஸ்தர்களோடுகூட தானும் ஆளவேண்டுமென்பதற்கு வ்யாஜ்யம் போடக்கூடாது.

### Property Purchased by Widow.

**விதவை வாங்கின ஸொத்து.**—ஒரு விதவை அவளுக்கு ஜீவனும்சத்துக்காக விடப்பட்ட நிலத்தின் ஐவேஜியிலிருந்து வேறு நிலம் வாங்கினால் அந்த நிலம் அவளுடைய ஸ்த்ரீதனமாகுமே ஒழிய, ஜீவனும்சத்துக்காக விடப்பட்ட நிலத்தைச் சேர்ந்ததாகி அதை அடையவேண்டிய ஸொந்தக்காரர்களைச் சேராது.

3 லாவீக்லி 422-ம் பக்கம்.

### Labour in Lieu of Interest.

**வட்டிக்கு பதிலாக வேலைசெய்தல்.**—வாதி ப்ரதிவாதிகளுக்குக் கொடுத்த கடனுக்கு வட்டியாக கடனுக்காக வ்யாஜ்யம் போட்ட தேதிக்கு மூன்று வருஷத்துக்குள் ப்ரதிவாதிகள் வேலைசெய்ததாக வாதி ரூபித்தால், வாதியின் வ்யாஜ்யம் காலாவதியாகமாட்டாது. 3, லாவீக்லி-552.

## SOCIETY AND RELIGION.

## ஜன ஸமூகமும் மதமும்.

### An Innovation in Nattukkottai Caste.

**நாட்டுக்கோட்டை ஜாதியில் ஒரு புதிய வழக்கம்.** நாட்டுக்கோட்டை ஜாதியாரில் சிலர், தலைமயிர் வைத்துக்கொள்ளும் வழக்கத்தை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர முயற்சிசெய்துவருகிறார்கள். எம். சின்னையா செட்டியார் என்பவர் இதைப்பற்றி ப்ரஸங்கித்தும் பத்ரிகைகளில் எழுதியும் வருகிறார். ஸமீபத்தில் தலைமயிர் வைத்துக்கொள்ளவேண்டியதின் அவசியத்தைப்பற்றிப் பின் வரும் பாட்டை வெளியிட்டிருக்கிறார்.

நியாயந்தானோ நீர் சொல்லும்—நம்மன்
ஜாதிக்கடுக்குமோ சொல்லும்.

ஜாதியிலில்லாத வழக்கம்
நீர், செய்துகொண்டுவந்த பழக்கம்
இந்த ஊரிலெங்குமது முழக்கம்
வெகு உறுதியாச்சுது ஒழுக்கம். (நியா)

தலையிற்சிகையிருக்க வேண்டும் அது
சாஸ்திர சம்மதமாகும்.
வழக்கம் வழக்கமென்ற பேச்சு
அதை மாற்றுங்கால மீதாச்சு
உலக நாகரீக மிஞ்சிப்போச்சு நாம்
நகராமலிருப்பது ஏச்சு. (தலை)

நாகரீகமென்ற சொல்லே அது
நல்லதோ கெட்டதோ தொல்லை
சேர்ந்து, நாலுபேர் நடந்தாற் குற்றமில்லை
இன்றேல், நடந்தவர்க்கே வருஞ்சள்ளை. (நியா)

தொல்லையென்று மிதிவில்லை மனித
சுதந்தரமே னமக்கில்லை
பயம் தொடர்ந்து வருத்துவதே தொல்லை அது
தொலைந்துவிட்டாற் குற்றமில்லை. (தலை)

படித்தவர் கொளத்தகும் வேஷம் இதைப்
பலருங்கைக் கொள்வது நாசம் சிறு
பாலர்களுக்குச் சந்தோஷம் நீர்
பண்ணிவைத்ததெல்லாம் மோசம். (நியா)

படித்தவராக நாம் முயல்வோம் அதைப்
பாராட்டா மூடரை யிகழ்வோம் சிகை
வளர்த்துச் சிறந்தவரைப் புகழ்வோம்
நல்ல வழியிற் சென்று அறிவடைவோம். (தலை)

### Religious Rites for Non-Brahmans.

**ப்ராம்மண ரல்லாதவர்களுக்கு சடங்கு முதலியவைகள்.**—ப்ராம்மணர்களல்லாத மற்ற ஜாதியார்கள் தோஷ பரிகாரார்த்தமாகச் செய்யும் கர்மாக்களையும், கல்யாணங்கள் முதலிய சுபகர்மங்களையும், இறந்தவர்களின் பொருட்டுச் செய்யும் கர்மங்களையும் செய்யும்போது, புராணப்படி செய்வதே இதுவரையில் வழக்கமாயிருந்துவருகிறது. ஆயினும் சிலர் ப்ராம்மணர்களைப் போல் நடக்க எண்ணங்கொண்டு வேதோக்தமாய் வேத மந்த்ரங்களைச் சொல்லியே கர்மாக்களை நடத்துகிறார்கள். அதற்கு சில ப்ராம்மணர்களும் ஸம்மதப்படுவதோடு, அப்படி நடத்தும்படி ப்ராம்மணரல்லாதவர்களைத் தூண்டியும் வருகிறார்களென்று ஒரு தனவைசியர் 'வித்யாபானு' வில் எழுதுகிறார். புராணோக்தமாய்ச் செய்யவேண்டிய கர்மாக்களை வேதோக்தமாய்ச் செய்வதால் செய்தவருக்கும் செய்துவைத்தவருக்கும் பாபம் ஸம்பவிக்கிறது. அதோடு கர்மாவைச் செய்தவர் உத்தேசித்த பலனையும் அடைவதில்லை. காலஞ்சென்ற புதுக்கோட்டை மகாராஜா பல ப்ராம்மணர்களைக் கூட்டி, ப்ராம்மணர்களல்லாதவர்களுக்கு வேதோக்தமாய்ச் செய்துவைக்கலாமா, புராணோக்தமாய்த்தான் செய்துவைக்கவேண்டுமா வென்று விசாரித்ததில், புராணவழியேதான் செய்யவேண்டுமென்று அவர்கள் தீர்மானித்தார்கள். அதன்படியே அவர் தன்னாயுள் முடிய நடத்திவந்திருக்கிறார்.

### Elevating the Depressed Classes.

**தாழ்ந்த ஜாதிகளை உயர்த்தல்.**—இந்தியா கவர்ன்மெண்டார் இது விஷயமாய் மாகாண கவர்ன்மெண்டுகளுக்குக் கடிதமெழுதி, அதில் ஒடுக்கப்பட்ட ஜாதிகள் என்று சொல்லப்படும் தாழ்ந்த ஜாதிகளுக்குக் கல்வி கற்பிப்பது, அவர்களுடைய பொருளாதார நிலைமையை உயர்த்துவது, குற்றங்கள் புரியும் ஜாதிகளை, மற்ற ஜனங்களுக்குக் கெடுதி ஏற்படாமல் நல்வழிக்குக் கொண்டுவருவது ஆகிய இவைகள் விஷயமாய் ஒவ்வொரு மாகாணத்திலும் என்னென்ன முயற்சிகள் நடந்து வருகின்றன; இன்னும் என்ன ஏற்பாடுகள் செய்யலாமென்பதைப் பற்றியும், பொது ஜன ஸங்கங்கள் இது விஷயமாய் என்னசெய்து வந்திருக்கின்றன வென்பதைப் பற்றியும் தெரிவிக்கும்படி கேட்டு விட்டிருக்கிறார்கள்.



## HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### Treatment for Burns.

நெருப்புப் புண்களுக்கு சிகித்சை—நெருப்புப் பட்டுக் காயமுண்டானால் சில ஸமயம் தோல் மாத்ரம் கழன்றுவிடுவதுண்டு. கொப்பளங் கிளம்பி நீர் கோத்துக் கொள்வதுமுண்டு. அதிகக் கெடுதி நேரிடவும் கூடும். கபாலத்திலாவது மார்பிலாவது முதுகிலாவது அக்கினிபாதை ஏற்பட்டால் ப்ராணனுக்கு ஹானியுண்டாகலாம். நோயாளிக்கு மயக்க முண்டாகி விட்டால், படுக்கையில் வைத்து கைகால்களுக்குச் சூடுவரும்படி வீஸாவில் வெந்நீர் வார்த்து வீஸாவை மூடிக் கைகால்களுக்கும் ஹ்ருதயத்திற்கும் மேல் ஒற்றடம் கொடுத்துக் கம்பளியைப் போர்த்தி கொஞ்சம் பாலாவது காப்பியாவது உள்ளுக்குக்கொடுக்க வேண்டும்.

ரணங்களில் துணிகளிருந்தால் துணிகளை இழுத்து எடுக்காமல், துணியைக் கத்தரிக்கோலால் கத்தரித்து விடவேண்டும். தெளிவான சுண்ணாம்புநீருடன் தேங்காய் எண்ணெயைக்கலந்து அதில்துணிகளை நனைத்துப் புண்ணில்போடவேண்டும். கொப்புளங்களைக் குத்திவிடக்கூடாது. அப்படியே விட்டால் அவை சீக்ரம் ஆறிவிடும். உருளைக் கிழங்கின் உள்பாகத்தைச் சுரண்டி அதை ஒரு துணியில் பரப்பிப் புண்ணின்மேல் போடலாம். கட்டியிருக்கும் துணி தீப்பற்றிக் கொண்டால், உடனே தீயானது சரீரத்தின் மேல் பக்கமாய் இருக்கும்படி தரையில் படுக்கவேண்டும். அதாவது முன் பக்கத்துத் துணி பற்றிக்கொண்டால் மல்லாக்கப் படுக்க வேண்டும். பின் பக்கத்துணி பற்றிக் கொண்டால் குப்புறப் படுக்க வேண்டும். ஏன் அப்படி செய்ய வேண்டும் என்றால், தீயானது எப்போதும் கீழேயிருந்து மேலே பரவுகின்றது. ஆகையால் நின்றபடியிருந்தால், தீயானது சீக்ரம் மேலே பரவித் தேகம், கழுத்து முகம் இவைகளைச் சுட்டுவிடும். இல்லாவிட்டால் தீயானது தேகத்தின் கீழ்பாகத்தில் இருக்கும்படியாய்ப் படுத்துக் கொண்டால், தீ அணையாமற்போனால் மேலே பரவிக் கைகால்களைச் சுட்டுவிடும். மற்றத் துணிகளும் பற்றிக் கொள்ளும். கீழே படுத்தும் கையில் அகப்படும் துணியால் தீயை அமுக்கி அணைக்கவேண்டும். அந்தத் துணி ஈரமாக இருந்தால் மிகவும் நல்லது. ஒத்தாசை செய்யப்போகிறவர் தீயின் ஸமீபம் போகும்போது ஒரு கம்பளி அல்லது போர்வையைத் தலைக்கு முன்னால் பிடித்துக் கொள்ள வேண்டும். தீப்பிடித்தவுடன் படுத்துவிட வேண்டுமே யொழிய ஓடக்கூடாது.

### Uses of Charcoal.

**அடுப்புக் கரியின் உபயோகங்கள்.**—கண்ணாடி பாத்ரங்கள், வேறு பாத்ரங்கள் ஆகிய இவைகளில் கெட்டநாற்ற மிருந்தால், கரித்தூளால் அதைப்போக்கி விடலாம். முதலில் பாத்ரங்களை மணல், சாம்பல் இவைகளால் தேய்த்து சுத்தம்செய்து, பெரும்பாகம் அழுக்கைப் போக்கின பிறகு, கரியைத் தூளாக்கி அதனால் பாத்ரங்களைத் தேய்த்து ஜலத்தை விட்டு அலம்பி எடுக்கவும். நாற்றமிராது. பல்ஈறுகள் கோளாறடைந்து அதனால் வாயில் நாற்றம் உள்ளவர்கள் பல் துலக்கவும் வாயைக் கொப்புளிக்கவும் நன்றாய்ப் பொடிசெய்தகரித்தூளை உபயோகிப்பது நல்லது. நாற்றம் நீங்குவதோடு, பல்லும் நன்றாய் வெள்ளையாகும். ஜலம் அசுத்தமாயிருந்தால் அதில் கரிக்கட்டையைப் போட்டுவைத்தால் ஜலத்திலுள்ள கெட்டநாற்றங்கள் போய்விடும்.

### Prickly Pear.

**சப்பாத்துக் கள்ளி.**—சப்பாத்துக் கள்ளியை சுண்ணாம்படிப்பதில் உபயோகிக்கலாமென்று முன் ஸஞ்சிகை யொன்றில் எழுதியிருக்கிறோம். தென்னமெரிக்காவில் இதை சுண்ணாம்படிப்பதில் விசேஷமாய் உபயோகிக்கிறார்களாம். சப்பாத்திக் கள்ளியை ஜலம் விட்டு வேகவைத்து குழம்பாய்வரும்பாகத்தை இறுத்து அதில் சுண்ணாம்பு ஜலத்தைக் கலந்து சுவர்களுக்கேயன்றி மரம், செங்கல், இரும்பு முதலியவைகளுக்கும் பூசுகிறார்களாம். சுண்ணாம்பு பளபளப்பா யிருப்பதோடு, மழைபெய்தாலும் கெடுவதில்லையாம். பல வருஷங்கள் வரையில் சுண்ணாம்பு பூசவேண்டி யிருப்பதில்லையாம்.

### Honey in Diabetes.

**நீரிழிவு ரோகத்துக்கு தேன்.**—ஒரு ரஷ்ய வைத்யர் நீரிழிவுரோகத்தால் வருந்திக்கொண்டிருந்த ஒரு நோயாளிகளுக்கு பத்யம் சொல்லுகையில் தற்செயலாய் தேன் சேர்த்துக் கொள்ளச் சொன்னார். அப்படி தேன் சேர்த்துக்கொண்டு வந்ததில் மூத்ரத்தில் சர்க்கரை அதிகமாகாம லிருந்தது. அதன்மேல் வைத்யர் மற்ற நீரிழிவு ரோகிகளுக்கும் தேன் சேர்த்துக் கொள்ளும்படி சொன்னார். நோயாளிகளில் சிலருக்கு மூத்ரத்தில் சர்க்கரை அதிகரிக்காம லிருந்ததோடு, வேறு சிலருக்குக் குறைந்தும் வந்ததாம்.

# AGRICULTURE.
## விவஸாயம்.

### Striga Lutea.

பல்லிப்பூண்டு.--புன்செய் நிலங்களில் வாகுப்பயிரில் பல்லிப்பூண்டு என்று ஒருவகைப் பூண்டு முளைத்து பயிரை ரொம்பவும் நாசம் செய்துவிடுகிறதாக புதுக்கோட்டை விவஸாய இன்ஸ்பெக்டர் மிஸ்டர் கே. ஆர். சங்கரய்யர் தெரிவிக்கிறார். இந்தப் பல்லிப்பூண்டால் அநேகவிடங்களில் விவஸாயிகள் நிலத்தைத் தரிசு போட்டிருப்பதாகவும் தெரிகிறது.

இது ஒரு புல்லுருவி. மரங்களில் புல்லுருவிகள் விழுந்து மரத்தின் ஸாரத்தை உறிஞ்சி வளர்வதை அநேகர் பார்த்திருப்பார்கள். பூமியில் பல்லிப்பூண்டு தனியாக வளர்வதுபோல இருந்தாலும், மண்ணிற்குள் இதன்வேர் தான்யப்பயிரின் வேரை ஒட்டிக்கொண்டு வாகுப்பயிர் வேரின் வழியாய் நிலத்திலிருந்து உணவை மேலே பயிருக்கு போகவொட்டாமல் அப்பயிருணவை பல்லிப் பூண்டிற்கு சேர்க்கிறது. இதனால் தான் செழிப்பாய் வளர்ந்த பயிர்கள் நல்ல மாஸூலைக் கொடுக்காமல் எரிந்துபோனதுபோல் வாடிப்போகின்றன. இதற்கு வெண்மையான பூக்கள் உண்டு. விதைகள் லேசாயும் கடுகைப்பார்க்கிலும் மூன்று நான்கு பங்கு சிறியவையாயு மிருக்கின்றன. ஒன்றிரண்டு செடிகளிலிருந்து ஆயிரக்கணக்கான விதைகள் உண்டாகின்றன. விதைகள் காற்றில் வெகுதூரம் பறந்து போகக்கூடியதால், அநேக பூமிகளில் இப்பூண்டு பரவுவதற்கிட மேற்படுகிறது. உழைப்பாளிகள் நிலத்தில் எவ்வளவு ப்ரயாஸைப்பட்டு களை எடுத்தபோதிலும் வருஷாவருஷம் இது உண்டாகிறது. ஆகையால் ஒரு க்ராமத்தில் உள்ள எல்லா குடியானவர்களும் சேர்ந்து இதைத் தடுப்பதற்கான முறைகளை செய்தால் தான் இப்பூண்டை அடியோடே தொலைக்கலாம்.

இப்பூண்டு அதிகமாய் வளர்ந்து நாசம்செய்யும் நிலங்களில் மூன்று நான்கு வருஷத்திற்கு வாகு, சாமை, கம்பு, சோளம், கேப்பை முதலிய தானியப்பயிர்களை வாகுபடி செய்யாமல், உளுந்து, துவரை, பருத்தி முதலிய இதர தினுஸுகளைப் பயிர்செய்வதே உத்தமமெனச் சொல்லலாம். பூண்டின் விதைகள் மிகச் சிறியவைகளா யிருப்பதால் தூர்தூராய்ப் பிடுங்கியும் களைகொத்தி எடுத்தும் தொலைக்க ப்ரயாஸப்படும். ஆனால் கூலிகள் சலுவாயும் ஸ்வல்ப சம்பளத்திற்கும் கிடைக்கும் பக்ஷத்தில், பல்லிப் பூண்டுகள், பூப்பதற்குமுன், பிடுங்கி நெருப்பில் எரித்துவிட இதனால் உண்டாகும் கெடுதல்கள் மிகவும் குறையும்.

### Citrus Cultivation.

எலிமிச்சை ஸாகுபடி.—எலுமிச்சை, கொளுஞ்சி முதலிய மரங்களைப் பயிர் செய்வதில் பின்வரும் விஷயங்களை கவனிக்கவேண்டும்.

(1) செடிகளை ஆழமாய் நடக்கூடாது.

(2) ஒரு செடிக்கும், மற்றொன்றிற்கு மிடையே சரியான இடைவெளி வேண்டும்.

(3) எவ்வளவு செடிகளை சரியாய் கவனித்துப் பார்த்துவர முடியுமோ அவ்வளவேதான் நடவேண்டியது.

(4) பூச்சிகளடைந்து செடிகளைப் பாழாக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டியது.

(5) சீக்ரத்தில் பலனை எடுக்கவேண்டுமானால் பூமியை நன்றாய் உழவேண்டும்.

(6) களிப்பான பூமியானால் மண்ணை நன்றாய்க் கொத்தி விடவேண்டியது. ஆனால், மரம் காய்த்துக் கொண்டிருக்கும்போது அப்படி மண்ணைப் புரட்டக் கூடாது.

(7) நிலத்திற்கு நல்ல வடிகால் ஏற்படுத்தவேண்டும்.

(8) நல்ல பலன் வேண்டுமென்றால், தாராளமாக எருவிடவேண்டும்.

### Cotton Seed for Cattle.

மாடுகளுக்குப் பருத்திக்கொட்டைத்தீனி.—மாடுகளுக்குப் பருத்திக்கொட்டை நல்ல தீவனமாகும் ஆனால் சிறுகன்றுகளுக்கு அதை உபயோகிக்கக் கூடாது. வைக்கோல்புல் அதிகமாய் அகப்படாத காலங்களில் பருத்திக்கொட்டையைதினம் 2-அல்லது 2½-ராத்தல் வீதம் தீனியாக மற்ற தீவனத்தோடு போட்டால் அதிகச்செலவு ஆகாதென்று சொல்லப்படுகிறது. வளரும் மாடுகளுக்கு பருத்திக்கொட்டை போடுவதால், அவைகளுக்கு தீனி எடுக்க ஆவலுண்டாகி, அவைகள் நன்றாய்க்கொழுத்து வளருகின்றன. இப்படி பருத்திக்கொட்டை அதிகமாய்ப் போடுவதில், வைக்கோலும் கலந்து போடுவதா யிருந்தால் ஸுமார் 100-அல்லது 120-நாட்கள் வரையில் பருத்திக்கொட்டை போடலாம். பச்சை புல் போடுவதாயிருந்தால் 150-நாட்கள் வரையில் தொடர்ச்சியாகப் பருத்திக்கொட்டையைத் தீனியாகப் போடலாம். அதற்குப் பிறகு கொஞ்சகாலம் பருத்திக்கொட்டையை ரொம்ப குறைந்த அளவிலேயே போட்டுவரவேண்டும்.



# CO-OPERATION.
## கோவாபரேஷன்.

### Co-operative Grain Banks.

கோவாபரேடிவ் தான்ய பாங்கிகள்.—சென்ற மாஸத்து 'ஜனாபிமானி'யில் பேஹாரில் உள்ள கோவாபரேடிவ் தான்ய ஸங்கங்களைப் பற்றி எழுதினோம்.

இந்த மாதிரி ஸங்கங்கள் ஐரோப்பாவில் விசேஷமாய் இட்டலி தேசத்திலும், ஸ்பெய்ன் தேசத்திலும் நடந்துவருகின்றன. இந்த தேசங்களில் கவர்ன்மெண்டாரே இவைகளை மேற்பார்வை செய்து ஆதரித்து வருகிறார்கள். இட்டலியில் உள்ள ஸங்கங்கள் 15-ம் நூற்றாண்டு முதல் நடந்து வருகின்றன. இவைகளின் நோக்கம் விவஸாயிகளுக்கு வேண்டியபோது தான்யம் கடன்கொடுப்பதும் முக்யமாய் விதை தான்யம் கடன் கொடுப்பதும்.

ஸ்பெய்னிலுள்ள ஸங்கங்கள் இப்போது ரொம்ப ஏற்பாடாக நடந்து வருகின்றனவாம். அங்கே ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு நிலைவரமான கமிட்டி இருக்கிறது. இதில் ஜில்லா கலெக்டர், அந்த ஜில்லாவின் விவஸாய உத்யோகஸ்தர், ஜில்லா விவஸாய போர்டின் இரண்டு மெம்பர்கள், அந்த ஜில்லாவிலுள்ள 50 பெரிமிராசுதார்களால் தெரிந்தெடுக்கப்பட்ட 2 மிராசுதார்கள் ஆகிய இவர்கள் மெம்பர்களாக இருப்பார்கள். இந்தக் கமிட்டியார் க்ராம பாங்கிகளை மேற்பார்வை செய்வார்கள். ஒவ்வொரு க்ராமத்திலும் பஞ்சாயத்து போன்ற ஒரு ஸபையுண்டு. அதுதான் ஷை பாங்கியை நிர்வாகம் செய்யும். கடனாகக் கொடுக்கப்படும் தான்யத்தை முதலில் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தின்படி தான்யமாகவோ அல்லது பணமாகவோ திருப்பிக் கொடுக்கலாம். அடுத்த மாஸூல் அறுவடையாகும்போது கடனைத் திருப்பிக் கொடுப்பதானால், வட்டிவிகிதம் 100-க்கு 4½ ஆகும். ஸ்வல்ப காலத்துக்கானால் மாஸத்துக்கு 100-க்கு ½ வீதமாகும். க்ராம ஸபைக்குக் கிடைக்கும் லாபத்தில் 6-ல் ஒரு பாகத்தை நிர்வாகச் செலவுக்கு எடுத்துக்கொள்வார்கள். பாக்கி லாபத்தை மூலதனத்தோடு சேர்த்துக்கொள்வது வழக்கம். இதனால் வட்டி விகிதம் குறைவாகும்.

### Co-operation in United Provinces.

ஐக்யமாகாணங்களில் கோவாபரேஷன்.—சென்ற 1914-15-ம் வர்ஷத்தில் ஐக்யமாகாணங்களில் நான்கு கோவாபரேடிவ் கால்நடை இன்ஷூரன்ஸ் ஸங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இவைகள் வெகுவாய் பரீக்ஷார்த்தமாகவே ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. இவைகளுக்கு அவச்யம் வேண்டுமானால் விசேஷ உதவிசெய்வதாக கவர்ன்மெண்டார் வாக்களித்திருக்கிறார்கள். பர்மாவில் இந்த மாதிரி ஸங்கங்கள் நன்றாய் நடந்து வருவதை உத்தேசித்து இந்த மாகாணங்களிலும் இவைகள் த்ருப்திகரமாக நடந்துவரும் என்று கவர்ன்மெண்டார் எதிர்பார்க்கிறார்கள். பர்மாவில் கால்நடை இன்ஷூரன்ஸ் எப்படி நடந்துவருகிற தென்பதை நேரில் அறிந்து வருவதற்காக அம்மாகாணங்களின் ரெஜிஸ்ட்ரார் இந்த வர்ஷம் பர்மாவுக்குப் போவார் என்று தெரிகிறது.

இந்த மாகாணத்தில் விவஸாயத்துக்கு வேண்டிய பொருள்கள் ஸப்ளைசெய்ய ஒரு ஸங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு வேண்டிய அளவு மூலதனம் சேர்ந்திருக்கிறதாம் இந்த ஸங்கம் நல்ல விதைகள் விதைக்கவும், விதைகளை மொத்தத்தில் வாங்கி க்ராம ஸங்கங்களுக்கும் விவஸாயிகளுக்கும் விற்கவும் ஏற்பாடுகள் செய்யப் போகிறதாம்.

### Co-operative Cattle Breeding.

கோவாபரேஷன்முறையில் கால்நடை அபிவ்ருத்தி செய்தல்.—ஐரோப்பாவிலுள்ள ஸ்விட்ஸர்லண்ட் தேசத்தில் கால்நடை வளர்ப்பதற்காகவென்றே 850-ஸங்கங்கள் இருக்கின்றன. இவைகளைத் தவிர காளைகளை வாங்கிவைத்து உபயோகத்துக்குவிட அநேக ஸங்கங்கள் இருக்கின்றன.

கால்நடைகளை வ்ருத்திசெய்ய ஏற்பட்டிருக்கும் கோவாபரேடிவ் ஸங்கங்களின் நோக்கங்கள் பின்வருமாறு:-

(1) நல்ல காளைகளைத் தெரிந்தெடுத்து ஸங்கத்தில் பரிபாலித்துவந்து மெம்பர்களுக்கு உதவுதல். (2) நல்ல பசுக்களையும் கடாரிகளையும் தெரிந்தெடுத்து, அவைகளுக்கு அடையாளமிடுதல். (3) கால்நடை வ்ருத்திக்கென்று ம்ருகங்களைப் பரிபாலித்து வருவது. அவைகளினிடமிருந்து உண்டாகும் கன்றுகளை சரியாய் பராமரித்து வருவது. (4) இன்னமாடு இன்னபலன் தரும் என்பதைப்பற்றி விசாரித்து அறிந்துகொள்ளுவது. (5) கால்நடை வ்ருத்திக்காக வேண்டிய மாடுகளை விற்பதற்கு ஸௌகர்யங்கள் செய்துகொடுப்பது. (6) கால்நடை வ்ருத்திசெய்வது விஷயமாயும், அவைகளுக்குத் தீனிபோடுவது ஸம்பந்தமாகவும் வேண்டிய விஷயங்களை மெம்பர்களுக்குள் பரவச்செய்தல்.

## COMMERCE.

## வ்யாபாரம்.

### Low Wages.

**குறைந்த சம்பளம்.**—கூலியாட்கள் குறைந்த சம்பளத்தில் கிடைப்பதாலேயே, தொழில்சாலையில் செலவு மட்டுப்படுமென்பதற்கில்லை. ஸாதாரணமாய் இந்தியாவில் மண் வெட்ட ஒரு கூலியாளுக்கு 3-அல்லது 4-அணாக் கொடுத்தால் ஒரு சிறிய மண்வெட்டி அல்லது கட்டப்பாறையைக்கொண்டு வெகு தாமஸமாய் மண்வெட்டுகிறான். தொழிலில் தேர்ச்சி யடைந்த தேசங்களிலோ 3-பேர்களுக்கு உயர்ந்த சம்பளம் கொடுத்து ஒரு பெரிய யந்த்ரத்தைக் கொடுத்தால், அந்த யந்த்ரமானது 3-நிமிஷத்துக்கு ஒரு டன் வீதம் பூமியிலுள்ள கனிஜப்பொருள்களை வெட்டி யெடுக்கிறது. இவர்களுடைய வேலையை உத்தேசிக்கையில் இந்தியர்கள் செய்யும் வேலை பூமியை சிறு குச்சியால் தோண்டுவதுபோல இருக்கிறது.

செலவு எவ்வளவு ஏற்படுகிறதென்பதை எவ்வளவு சம்பளம் கொடுக்கப்படுகிறதென்பதைக் கணக்கிட்டுச் சொல்வது கூடாது. ஒரு குறிப்பிட்ட சம்பளத்தில் ஒரு ஆள் எவ்வளவு செய்கிறான் என்பதைப் பார்த்து அதன்மேல் வேலைக்குத்தகுந்த கூலியா, அதிகமான கூலியா என்று பார்க்கவேண்டும்.

தற்போது ஜப்பானியர்கள் இஞ்ஜின்களைத் தாங்களே செய்துவருகிறார்கள். அவர்கள் வேலையாட்களுக்குக் கொடுக்கும் சம்பளம் அமெரிக்காவில் அதேமாதிரி வேலையாளுக்குக் கொடுக்கும் சம்பளத்தைவிட மூன்றிலொரு பாகம் குறைவாயிருக்கிறது. இருந்தாலும், அமெரிக்காவில் உள்ள இஞ்ஜின் செய்யும் தொழில்சாலையில் ஏற்படும் கூலியாள் செலவு ஜப்பானில் ஏற்படும் செலவைவிட மூன்றிலொரு பங்கு குறைவாயிருக்கிறது. இதற்குக் காரணம் அமெரிக்காவில் கூலியாட்கள் செய்யும் வேலை அதிகமாயும் திறமையுள்ளதாயு மிருப்பதே. சீனாவில் ஒரு பருத்தி யந்த்ரசாலையில் வேலையாட்கள் மலிவாகக் கிடைத்தபோதிலும் அதில் செய்யும் சாக்குகளுக்காகும் செலவு, இங்லண்டிலுள்ள லங்காஷையரில் அதிகக் கூலி கொடுக்கும் பருத்தி யந்த்ரசாலையில் சாக்குகளுக்கு ஏற்படும் செலவைவிட அதிகமாகவே இருக்கிறது. குறைந்த சம்பளத்தில் கூலியாட்கள் நியமிப்பதால் அதிக லாபம் கிடைப்பதில்லை. திறமையுள்ளவனும், தொழிலில் நன்றாய்ப் பயிற்சியடைந்தவனுமான வேலையாட்களை நியமிப்பதில் தான் கம்பெனிகளுக்கு லாபமுண்டாகிறது.

### Industrial Progress of Japan.

**ஜப்பானின் கைத்தொழில் அபிவ்ருத்தி.**—ஆதியில் மேல்நாட்டு வ்யாபார விஷயங்களைக் கொஞ்சங்கூட அறியாத ஜப்பான் தேசமானது தற்காலத்திற்கு ஏற்றபடி கைத்தொழில், வ்யாபாரம் முதலியவைகளில் விசேஷமாய் வ்ருத்தியடைந்திருப்பது மிகவும் வியக்கத்தக்கது. ஆகையால் அந்தவிஷயமாக அந்த ராஜாங்கத்தார் தங்கள் குடிகளுக்கு இப்படிப்பட்ட அபிவ்ருத்தியின் பொருட்டு எவ்விதமாய் உதவி செய்தார்கள் என்று தெரிந்துகொள்வது நல்லது. ஆனதுபற்றி, இந்தியா கவர்ன்மெண்டார் கல்கத்தாவிலிருக்கும் இண்டோ ப்ரொபொஸர் ஆப் எகனமிக்ஸ் என்ற உத்யோகம்பெற்ற ப்ரொபெஸர் ஹாமில்டன் என்பவரை ஜப்பானுக்குப் போய் மேற்சொல்லிய விஷயமாக தீரவிசாரித்து ஒரு ரிபோர்ட்டு தயார்செய்ய சில மாஸங்களுக்கு முன்னால் நியமித்திருந்தார்கள். ப்ரொபெஸர் ஹாமில்டன் ஜப்பானுக்கு போய் அங்கே 4-மாஸம் ப்ரயாணம் செய்து ஸமீபத்தில் இந்தியாவுக்குத் திரும்பி வந்திருக்கிறார்.

### Business Enterprise in India.

**இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.**—இந்தியாவில் சென்ற ஜூன்மாஸத்தில் அடியில்கண்ட விவரப்படி 10 ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | ரூ. |
|---|---|---|
| 2 | பாங்கிலேவாதேவி கம்பெனிகள் | 1,20,000 |
| 1 | அச்சடித்து ப்ரசுரம் செய்யுங் கம்பெனி | 2,50,000 |
| 1 | வ்யாபாரக் கம்பெனி (மேலே சொன்னவை தவிர) | 20,000 |
| 3 | தேயிலைத் தோட்டக் கம்பெனிகள் | 8,00,000 |
| 1 | தோட்டக் கம்பெனி (மேலே சொன்னவை தவிர) | 3,00,000 |
| 2 | நிலக்கரிச் சுரங்கக் கம்பெனிகள் | 1,20,000 |
| 10 | | 16,10,000 |



## ECONOMIC PRODUCTS.

## விலையுள்ள பொருள்கள்.

### Sunflower.

**ஸூர்யகாந்தி.**—நமது ராஜதானியில் ஸூர்யகாந்திச்செடி விசேஷமாக அலங்காரார்த்தமாகத்தான் தோட்டங்களில் பயிர் செய்யப்படுகிறது. இந்தப் பயிரால் வேறு ப்ரயோஜனம் நாம் அடைவதில்லை. கிழக்கு ஐரோப்பாவிலும், மத்யஐரோப்பாவிலும் இது விசேஷமாய் ஒரு எண்ணெய் வித்துப்பயிராக ஸாகுபடி செய்யப்படுகிறது. ஸூர்யகாந்தியில் பல தினுஸுகள் உண்டு. அவைகளுள் ரொம்பசலாக்யமானது 'ஜெயண்ட் ரஷ்யன்' என்னும் தினுஸாகும். ஸூர்யகாந்தி எல்லாவித நிலத்திலும் பயிராகும். ஆனால் சோளத்துக்கேற்ற நிலம் இதற்கு ரொம்ப ஏற்றதென்று சொல்லுகிறார்கள். நிலத்தை நன்றாய் உழுது நயமான புழுதியாக்கிவிடவேண்டும். நாள்படாத புதியசாணி எருப்போட்டால் அதிக விதைகள் கிடைப்பதில்லை. விதையும் நன்றாயிருப்பதில்லையாம். ஆகையால், முந்தின பயிருக்கு நல்ல எருவிட்டுப் பயிர்செய்து மாஸூல் எடுத்தபிறகு, ஸூர்யகாந்தியைப் பயிர்செய்தால் ஸௌகர்யமாயிருக்குமாம்.

ஸூர்யகாந்தியிலுள்ள விதையை எடுத்தபிறகு, தாள்களை மாடுகளுக்குத் தீனியாகப்போட்டு, அவைகளின் சாணத்தை நிலத்துக்கு இடுவதால், ஸூர்யகாந்தி பூமியிலிருந்து க்ரஹித்த பயிருணவில் பெரும்பாகம் நிலத்துக்கே சேர்ந்துவிடும். இல்லாவிட்டால், ஸூர்யகாந்தித்தாளை சிறுதுண்டுகளாக நறுக்கி நிலத்தில்போட்டு, உழுதுவிட்டாலும், நிலத்தின்வளமை குறையாமலிருக்கும். ஒரு ஏக்கர் நிலத்துக்கு விதைக்க 15-ராத்தல் ஸூர்யகாந்தி விதை போதும். ஆனால் ரஷ்யாவில் ஒரு ஏக்கருக்கு 46-ராத்தல் விதை உபயோகிக்கிறார்கள். ரஷ்யாவில் ஒரு ஏக்கருக்கு 700-ராத்தல்முதல் 2000 ராத்தல்வரையில் ஸூர்யகாந்திவிதை கிடைக்கிறதாம். ஸாதாரண வளப்பமுள்ள நிலத்தில் 1200-ராத்தல் விதை கிடைக்கும்.

ஸூர்யகாந்திச்செடி பலகார்யங்களுக்கு உபயோகப்படுகிறது. அதை அடியோடு வெட்டி கால்நடைத்தீனியாக உபயோகிப்பதோடு, வெகுகாலம் கெடாமல் பத்ரப்படுத்திவைத்து வேண்டும்போது மாடுகளுக்குப்போடலாம். ரஷ்யாவில் ஸூர்யகாந்தித் தாள்களையும், விதையிலுள்ள உமியையும் அடுப்பெரிக்க உபயோகிக்கிறார்கள். எரித்தபின் கிடைக்கும் சாம்பலிலிருந்து பொடாஷ் என்னும் பொருளைத் தயார்செய்கிறார்கள். சாம்பலிலிருந்து பொடாஷ் தயார் செய்வதற்காக காகஸஸ் ப்ரதேசத்தில் அநேக தொழில்சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஸூர்யகாந்தி விதையின் முக்ய உபயோகம் அதிலிருந்து எண்ணெய் எடுப்பதே. ரஷ்யர்கள் அந்த விதைகளை பச்சையாகவும், வறுத்தும் உப்பிட்டும், நாம் வேர்க்கடலை தின்பதுபோல், தின்கிறார்கள். இந்த விதையை அரைத்து மாடுகளுக்கும், கோழிமுதலிய பறவைகளுக்கும், கூடுகளில் வளர்க்கும் செல்லப் பறவைகளுக்கும் தீனியாகப் போடுகிறார்கள்.

ஸூர்ய காந்திப் பூவிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழில் ரஷ்யாவிலும் மத்ய ஐரோப்பாவிலுந்தான் விசேஷம். இதன் எண்ணெய் வெளுத்த மஞ்சள் நிறமாக இருக்கும். உயர்ந்த எண்ணெய் நெய்க்கு பதிலாகவும், சமையலிலும், உபயோகப்படுகிறது. மட்டமான எண்ணெய் ஸோப் செய்வதற்கும் அடுப்பெரிக்கவும் உதவுகிறது. ஜெர்மனியிலும் ரஷ்யாவிலும் இதை வார்னிஷ் செய்வதில் உபயோகிக்கிறார்களாம். எண்ணெய் எடுத்தபின் நிற்கும் பிண்ணாக்கு மாடுகளுக்கு விசேஷமாய்த் தீனியாக உபயோகப்படுகிறது. ரஷ்யாவிலிருந்து இது ஏராளமாய் டென்மார்க், ப்ரான்ஸ், ஸ்வீடன் முதலிய விடங்களுக்கு ஏற்றுமதியாகிறது.

### Human Hair.

**மனிதர்களின் தலைமயிர்.**—இப்போது நடந்துவரும் யுத்தத்தின் ஆரம்பத்தில் ஜெர்மனி தேசத்திலுள்ள ஹாம்பர்க் என்னும் பட்டணத்திற்கு முப்பது மூட்டை சீனருடைய தலைமயிர் அனுப்பப்பட்டது. அதை நடு வழியில் கைப்பற்றி லண்டன் நகரத்தில் ஏலம் போட்டார்கள். மயிரின் நீளத்துக்குத் தக்கபடி ராத்தல் ஒன்றுக்கு 8 அணா முதல் ரூ. 6—6—0 வரை விலைப்போயிற்றாம். ஜெர்மனி, ஆஸ்ட்ரியா என்னும் இவ்விரண்டு தேசங்களிலும் வ்யாபாரிகள் அதிகமாய் தற்காலத்தில் இந்த மயிரை விலைக்குப் பிடிக்காத காரணத்தினால் சீனாதேசத்து மனிதத் தலைமயிருக்கு விலை இறங்கியிருக்கிறது. ஸாதாரண காலங்களில் ஆஸ்ட்ரியா தேசத்தில்தான் இது அதிகமாய் செலவாகுமாம்.

பெண்களின் தலைமயிர் காற்றுக்குப் பறவாமல் தடுக்க வல்ல வலைகள் செய்யவும், இன்னும் அநேகவித ஸாமான்கள் செய்யவும், உபயோகப்படுகிறது. எண்ணெய் முதலிய வஸ்துக்களை வடிகட்டுவதற்கும், சட்டைகளினிடையில் வைப்பதற்காகவும் தலைமயிர் அதிகமாய் செலவாகிறது.

## BOYS' PAGE.

## பையன்கள் பக்கம்.

**Oddities of the Number Nine.**

**9-என்னும் எண்ணின் விநோதங்கள்.**—9-என்னும் எண்ணால் எந்த எண்ணைக் கொண்டு பெருக்கினாலும் பெருக்கி வந்த தொகையைக் கூட்டினால் 9-ஆகவே இருக்கும். உதாரணமாக 2 × 9 = 18 ; 1 + 8 = 9. 3 × 9 = 27 ; 2 + 7 = 9. 9 × 11 = 99 ; 9 + 9 = 18 ; 1 + 8 = 9. எவ்வளவு பெரிய எண்ணைப் பெருக்கினாலும் கடைசியில் 9-தான் வரும். உதாரணமாக 875 × 9 = 7, 875 ; இதிலுள்ள எண்களைக் கூட்டினால் வருந் தொகை 27 ; இதிலுள்ள தொகையையும் கூட்டினால் 9 வருகிறது.

ஏதாவது ஒரு பெரிய எண்ணை எழுதி, அதை மறுபடியும் தலைகீழாய் எழுதி, இரண்டு தொகைகளிலும் பெரியதிலிருந்து சிறியதைக் கழித்தால், வரும் தொகை 9 அல்லது அதன் பெருக்குத் தொகையாயிருக்கும். உதாரணம். 5071—1705 = 3366. கழித்து வந்த தொகையிலுள்ள எண்ணைக் கூட்டினால் 18 வருகிறது. அதிலுள்ள எண்களையும் கூட்டினால் 9-வருகிறது. இந்த மாதிரி எவ்வளவு பெரிய எண்ணை வைத்துக்கொண்டு கணக்குப் போட்டாலும் கடைசியில் வருவது 9-தான்.

ஏதாவது ஒரு பெரிய எண்ணை எழுதிக்கொள்ளவும். அந்த எண்ணிலுள்ள தனி எண்களைக் கூட்டி, கூட்டி வந்த தொகையை பெரிய எண்ணிலிருந்து கழிக்கவும். கழித்து வந்த மிச்சத்திலுள்ள தனி எண்களைக் கூட்டினால் 9-வரும். உதாரணம். 74345; இதிலுள்ள எண்களைக் கூட்டினால் 23-வருகிறது. 74345 − 23 = 74, 322; 7 + 4 + 3 + 2 + 2 = 18 ; 1 + 8 = 9.

**Laziness.**

**சோம்பேறித்தனம்.**—இல்லாமை சோம்பேறிக்கு உரியது: விஸனத்தைத் தவிர வேறொன்றும் அவனுக்குண்டாவதில்லை.

சோம்பேறித்தனம் சரீரத்துக்கு ஒரு பெரிய வ்யாதி. எப்படியென்றால் அதனால் மிகுந்த பாபமும், விஸனமும், தொந்தரவும் உண்டாகின்றன.

முதலாவது: உடம்பு வணங்காதவன் பிறரிடத்தில் பொய் சொல்வதற்குப் பின் வாங்கமாட்டான். அதற்கு த்ருஷ்டாந்தமாக யாராயினும் அவனை பலான மனிதனிடத்திற்குப் போய் வரும்படி சொன்னால், உடனே அவன் வீட்டிலில்லையென்று சொல்லிவிடுகிறான். யாதாயினும் ஒரு வஸ்து கொண்டுவரும்படி சொன்னால் "அது அகப்படாது; எனக்குத் தெரியும்" என்று சொல்லுகிறான்.

இரண்டாவது: சோம்பேறி தனக்கு உத்ஸாகமாயிருப்பதைத்தான் அனுஸரிப்பான். வேலைக்கு அருகனல்ல. எப்பொழுது தன் வேலையை செய்கிறதில்லையோ, அவன் ஸொத்தும் ஸௌக்யானுபவங்களும் நாளுக்கு நாள் குறையும். கடைசியில் துஷ்டத்தனத்துக்கே அருகனாகிறான்.

மூன்றாவது: சோம்பேறிகள் பிறரை ஆச்ரயித்து அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருப்பார்கள். ஆகையினால் அவர்களடையக்கூடிய வஸ்து ஸமீபத்திலிருந்தபோதிலும், பிறருதவியில்லாமல் அது அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

ஆனதினால் ஒவ்வொரு மனிதனும் தன் தன் அந்தஸ்துக்கு ஸம்பந்தமான வேலையில் முயற்சியுடன் ப்ரவர்த்திக்க வேண்டியது.—விவேக சிந்தாமணி.

**Deep Wells.**

**ஆழமான கிணறுகள்.**— தென்னாப்ரிக்காவிலுள்ள ஒரு கிணறு 8000-அடிக்கு மேல் ஆழமுள்ளதாம். ஜெர்மனியைச் சேர்ந்த அப்பர் ஸைலீஷ்யா நாட்டில் 7350 அடி ஆழமுள்ள கிணறு ஒன்று இருக்கிறதாம். அமெரிக்க ஐக்ய நாடுகளில் பிட்ஸ்பர்க் என்னும் ஊருக்கு 15 மைல் மேற்கில் ஒரு கிணறு இருக்கிறது. அது 7174 அடி ஆழமுள்ளதாம். இது இன்னும் ஆழமாய் தோண்டப்படுமென்று தெரிகிறது. இந்த கிணறு 6775 அடி ஆழத்தில் 145·8 டிக்ரி சூடாயிருக்கிறது. அமெரிக்காவில் 1 மைல் ஆழத்துக்கு மேல் உள்ள கிணறுகள் இன்னும் 2-இருக்கின்றனவாம்.

**A Silver Carriage.**

**வெள்ளி வண்டி.**—பாவ்நகர் மகாராஜா ஒரு லக்ஷ ரூபாய் செலவுசெய்து வெள்ளியினால் ஒரு வண்டி செய்திருக்கிறார். அது பம்பாயிலுள்ள வண்டிப் பேட்டன்ராக்காரர் மிஸ்டர் பெஸ்டான்ஜியால் செய்யப்பட்டிருக்கிறது. இப்போது அது பாவ்நகரில் காட்சிப் பொருள்போல் வைக்கப்பட்டிருக்கின்றது. அதனைப் பார்க்க விருப்பமுடையோர் 4-அணா டிக்கட் வாங்கிக் கொண்டு பார்த்தல் வேண்டும். இவ்வாறு சேரும் பொருள் பம்பாய் யுத்த நிதிக்குச் சேர்க்கப்படும்.



## LADIES' PAGE.

## ஸ்த்ரீகள் பக்கம்.

**A Heroic Woman.**

**ஒரு தைர்யமுள்ள ஸ்த்ரீ.**—இங்கிலண்டிலுள்ள ஒரு ஆஸ்பத்ரியில் டாக்டர் டெய்லர் என்பவர் ஸோல்ஜர்களுக்கு விஷக்காற்றால் ஏற்படும் வ்யாதிகளுக்கு ஒரு மருந்து கண்டுபிடித்தார். ஆனால் அது நல்லமருந்தா அல்லவா என்று நிச்சயிக்க அவ்யாதியால் வருந்தும் ஒரு மனிதர் தேகத்தில் அந்த மருந்தை ரத்தத்தின் மூலமாய்ச் செலுத்தவேண்டும். அதற்குத் தக்க மனிதர் ஒருவரும் கிடைக்கவில்லை. முன்பு இந்தியாவில் ஒரு மாகாணத்துக்கு கவர்னராயிருந்த ஸர் ஹென்ரி டேவிஸ் என்பவருடைய கடைசிப் புத்ரியாகிய மிஸ் மேரி டேவிஸ் என்பவள் இதையறிந்து, தானே அந்த மருந்தைப் பரீக்ஷித்தறிவதாக எண்ணி, விஷக்காற்றை நிறைய உட்கொண்டு, பிறகு டாக்டருக்குச் சொல்லியனுப்பினாள். டாக்டர் வந்ததும், விஷயத்தையறிந்து ஆச்சர்யமடைந்து அவளுக்குத் தாம் கண்டுபிடித்திருந்த மருந்தை ப்ரயோகம் செய்தார். மருந்து பிடித்து அவள் ஸ்வஸ்தமாக சிலமணி நேரம் செல்லும். அதுவரையில் எல்லாருக்கும் கவலையாகவே யிருந்தது. ஏனென்றால் மருந்து பலிக்காவிட்டால் அவள் வீணில் இறந்துவிடுவாள். ஆனால் 24-மணி நேரம் சென்றதும் அவள் ஸ்வஸ்தமடைந்தாள். அவள் தேகம் ரொம்ப பலஹீனமாயிருந்தது. அவள் ஸ்வஸ்தமடைந்ததால் பல ஸோல்ஜர்களுக்கு கதிமோக்ஷ மேற்பட்டது. ஜெர்மானியருடைய விஷக்காற்றால் மரணவஸ்தையிலிருக்கும் ஸோல்ஜர்களுக்கு இம்மருந்தை உபயோகிக்கலாம். தன்னுயிரையும் லக்ஷ்யம் செய்யாமல் இந்த தீரமான செய்கையைச் செய்த இந்தப் பெண்மணிக்கு நமதரசர் வந்தனமளிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

**Infant Mortality.**

**சிசு மரணம்.** -சிசுமரணம் அதிகமாவதற்கு அநேக காரணங்கள் இருக்கின்றனவென்று 'ப்ராக்டிகல் மெடிஸன்' என்னும் வைத்யப் பத்ரிகை எழுதுகிறது. நமது நாட்டில் ஸ்த்ரீகளில் பெரும்பாலார் கல்வியறிவில்லாதவர்களாக இருக்கிறார்கள். பெரும்பான்மையான குழந்தைகளுக்குப் பால் அகப்படுவது கஷ்டம். கிடைத்தாலும், அது சுத்தமாயிருப்பதில்லை. வீட்டின் ஸுகாதாரம் த்ருப்திகரமா யிருப்பதில்லை. ஆகாரவஸதிகள் ரொம்ப சீர்கேடாயிருக்கின்றன. பெற்றோர்கள் ரொம்ப ஏழையாயிருப்பதும் சிசு மரணத்துக்கு ஒரு காரணந்தான். எல்லாவற்றிலும் முக்யமானது தாய் தந்தையரின் அறிவின்மையே. அவர்களுடைய மூடத்தனத்தால் அநேகங் குழந்தைகள் நோய்க்கு ஆளாகின்றன. தாய்மார்களுக்குத் தக்க கல்வி கற்றுக்கொடுத்தால் சிசு மரணம் குறைவுபடுமென்று சொல்லலாம். தற்போது ப்ரிட்டனில் தாய்மார்களுக்கும் சிசுக்களுக்கும் உதவி செய்ய 500 பாடசாலைகள் இருக்கின்றன. இந்தியாவிலும் ஜன நெருக்கமுள்ள பட்டணங்களில் இப்படிப்பட்ட ஸ்தாபனங்களை ஏற்படுத்தி, தாய்மார்களுக்கு குழந்தைகளைப் பராமரிக்கும் முறைகளைக்கற்பிக்க தாதிமார்களை நியமித்தால், இந்தியாவில் சிசுமரணம் குறைவடையக்கூடும்.

சிசு மரணத்தைக் குறைக்க பற்பல தேசங்களில் பற்பலவிதமாய் முயற்சி எடுத்து வந்திருக்கிறார்கள். இங்கிலண்டிலுள்ள ஹட்டர்ஸ்பீல்ட் என்னும் ஜில்லாவில் ஒரு கனவான், ஒரு வர்ஷத்துக்குமேல் ஜீவித்திருக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு பவுன் கொடுப்பதாகச் சொன்னார். அப்படிச் சொன்ன வர்ஷத்தில் 112 குழந்தைகள் பிறந்தன. அவற்றுள் 107 குழந்தைகள் ஒருவர்ஷத்துக்குப் பிறகும் ஜீவித்திருந்தனவாம். ந்யூஸிலண்டில் கவர்ன்மெண்டார் எடுத்துக்கொண்ட முயற்சிகளால் சிசு மரண விகிதம் ரொம்பக் குறைந்துபோய் இப்போது 100-க்கு 5-வீதமாயிருக்கிறதாம்.

**Sugar Ladu.**

**சர்க்கரைலாடு.**—அரைப்படி அரிசியை ஊறவைத்து ஸன்னமாக மாவரைத்து வைத்துக்கொள்ளவேண்டியது. அடுப்பில் பாணலியைப் போட்டு 10-பலம் நெய்யைவிட்டுக் காய்ச்சவேண்டியது. பிறகு அந்த நெய்யில் வைத்திருக்கும் மாவை கொஞ்சம் கொஞ்சமாகப் போடும்படி பக்குவமாய் வறுத்துக்கொள்ளவும். வேறு 10-பலம் நெய்யில் 20-பலம் சீனிச்சர்க்கரையை ஒரு தாம்பாளத்தில் போட்டுப் பிசைந்துகொள்ளவேண்டும். ஜவ்வரிசிப்பொடி கால்பலம், வறுத்தவாதம்பருப்பு 3-பலம், கற்கண்டுதூள் 3-பலம் இவைகளையும் மேலே வறுத்து வைத்திருக்கும் அரிசிமாவையும் தாம்பாளத்தில் வைத்திருக்கிற சர்க்கரை கலந்த நெய்யில்கொட்டி, நன்றாய்ப் பிசைந்து எலுமிச்சங்காயளவு உருண்டைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவேண்டியது.—பெண்கல்வி.

## FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### A Clever Russian Officer.

ஒரு ஸாமர்த்தியமுள்ள ரஷ்யாராணுவ உத்யோகஸ்தர். —லெப்டினண்ட் ஆல்டாப் என்னும் ரஷ்ய ராணுவ உத்யோகஸ்தர் ஒரு ஸமயம் ஆஸ்ட்ரியர்களால் கைதி செய்யப்பட்டு, யுத்தக் கைதிகளோடு வைக்கப்பட்டிருந்தார். அப்படியிருக்கையில் அவர் ஆஸ்ட்ரிய அதிகாரிகளை ஏமாற்ற நினைத்து, தாம் துருக்கியர்களுக்குப் பிறந்தவரென்றும், மகம்மதியரென்றும், துருக்கிய ஸேனையுடன் சேர்ந்து யுத்தம் செய்ய ஆவலாயிருக்கிறதென்றும் ஆஸ்ட்ரிய உத்யோகஸ்தர்களிடம் சொன்னார். அதன் மேல் அவர்கள் அவரை வியன்னாவிலுள்ள துருக்கிய தூதரிடம் அனுப்பினார்கள். துருக்கிய தூதர் அவரைக்கண்டு, அவருடைய பிறப்பு, மதம் ஆகிய இவைகளைப் பற்றிக் கேட்டு, அவர் மகம்மதியர்தானென்று நிச்சயித்து, அவரைப் பற்றி கான்ஸ்டாண்டிநோபிளிலுள்ள துருக்கிய யுத்த மந்த்ரிக்கு எழுதினார்.

அதன்மேல் ஆஸ்ட்ரிய அதிகாரிகளும் துருக்கிய அதிகாரிகளும் அவரை ரொம்ப மரியாதையாக நடத்தினார்கள். துருக்கிய தூதர் அவருக்கு உயர்ந்த குல்லா கொடுத்து அவருக்காக ஒரு விருந்து நடத்தினார். பிறகு அவர் மார்ஷல் வான் டெர்கோல்ட்ஸ் என்னும் பெரிய ஜெர்மன் ஜெனரலைக்கண்டுபேசி, அவருடன் கூட இருந்து போஜனம் செய்துவிட்டு துருக்கிய ஸைன்யத்தில் சேர்ந்து யுத்தம் செய்வதற்காக கான்ஸ்டாண்டிநோபிளுக்குப் புறப்பட்டுப் போனார். போகும்போது ருமேனியா வழியாக ரெயிலில் போக நேரிட்டது. அப்படிப் போகையில் அவருடன் கூடவந்த ஆஸ்ட்ரிய உத்யோகஸ்தர்கள் வேறு பக்கமாகப் பார்த்துக் கொண்டிருக்கையில், அவர் வண்டியிலே நடந்து கடைசி வண்டியின் கடைசிக் கம்பார்ட்மெண்டுக்குப் போய் அங்கிருந்து வண்டியை விட்டிறங்கி, ஸ்டேஷனில் ஒரு வண்டி பேசி ரஷ்ய தூதர் வஸிக்கும் ஆபீஸுக்கும், அங்கிருந்து ரஷ்யாவுக்கும் போய் தமது ஸைன்யத்தில் சேர்ந்து கொண்டார்.

### The Editor and the Subscriber.

பத்ராதிபரும் சந்தாதாரரும்.—ஒரு பத்ராதிபர் தம் சந்தாதார் ஒருவரிடமிருந்து ஒரு புஸ்தகத்தைப் பெற்றுச் சென்றார். அது ஐந்துரூபா விலையுள்ளது. அதைப் படிக்க நேரமின்றி மூன்று வர்ஷம் ஒரு மூலையிற் போட்டுவைத்தார். இதற்கிடையே புஸ்தகம் தந்தவர் கடிதங்கள் அனுப்பி உடனே திருப்பித் தராவிட்டால் கோர்ட்டு மூலமாய் வாங்கப்படுமென்று நோட்டீஸும் கொடுத்துவிட்டார். பார்த்தார் பத்ராதிபர்! அந்த மனுஷ்யன் ஏதேனும் சந்தா பாக்கியுண்டோ என்று கணக்குகளைப் பார்க்கவே ரூ. 4—8—0 வரவேண்டியிருந்தது. அந்தப்பணம் தந்தால் புஸ்தகம் கிடைக்குமென்று எழுதினார். அந்தப் புஸ்தகத்தை அந்த பாக்கிக்கு வி. பி. யில் அனுப்பும்படி கடிதம் வந்தது. பாக்கி ரூ. 4—8—0, புஸ்தக தபாற்செலவு ஆறணா; ஆக ரூ. 4—14—0 க்கு புஸ்தகத்தை வி. பி. யில் அனுப்பினார். வி. பி. பணமும் வந்துவிட்டது. புஸ்தகக்காரன் தான் திரும்பவும் புஸ்தகத்தைப் பெற்றுவிட்டதாகத் தனது நண்பனிடம் சொல்லிக்கொள்ள, அவனது நண்பன் அப்பா! நீ பத்ராதிபரை விரோதம் செய்துகொள்ளாமல் அந்தப் புஸ்தகத்தை அவருக்கே தந்துவிட்டு, இப்போது வி. பி. க்குச் செலுத்திய ரூ. 4—14—0 வுடன் ஒரு இரண்டணாவையும் சேர்த்து ஐந்து ரூபாய்க்குப் புது புஸ்தகமாக வாங்கிக்கொண்டிருந்தால் எவ்வளவோ நலமாயிருக்குமே; பத்ராதிபர் நட்பும் கெடாதே, இவ்வளவு விரோதப்பட்டு இரண்டணா லாபம் தேடியது ஒரு சிறப்பாமா என்று கூறினான். பத்ராதிபரோ, இவ்விதம் பலரிடமிருந்து பல ஸாமான்களை வாங்கி வைத்திருந்தால், அவர்கள் சந்தா பாக்கி தராதபோது அந்த ஸாமானை வி. பி. யில் அனுப்பி வஸூலித்துவிடலாம் என்று தமக்குள் ஸந்தோஷப்பட்டுக் கொண்டார்.

### The Barber's Dog.

அம்பட்டனின் நாய்.—ஒரு அம்பட்டன் ஒருவனுக்கு க்ஷவரம் செய்துகொண்டிருக்கையில் அம்பட்டனின் நாய், அவன் வேலைசெய்வதைக் கவனித்த வண்ணமாகவிருந்தது. இதை கவனித்து க்ஷவரம் செய்துகொள்ள வந்தவன் பரியாரியைப் பார்த்து "நல்லநாய் இது!" என்றான்.

"ஆம் நல்ல நாய்தான்"

"நீ க்ஷவரம் செய்வதை கவனித்துக்கொண்டிருப்பதில் அதற்கு ரொம்ப ஸந்தோஷம் போலும்?"

"அதல்ல ஐயா; பாருங்கள், நான் சில ஸமயம் மயிரைக் கத்தரிக்கும்போது, தவறிப்போய் காதைக் கொஞ்சம் கத்தரித்துவிடுவேன். அதை உத்தேசித்து அது அவ்வளவு கவனமாயிருக்கிறது."



## CURIOSITIES.

## விநோதங்கள்.

### An Infant Marriage.

ஒரு சிசு விவாகம்.—வடக்கே ஸிந்த் மாகாணத்தில் 12 மாஸம் வயஸுள்ள ஒரு ஆண் குழந்தைக்கு 10-வயஸுப் பெண் கல்யாணம் செய்து கொடுக்கப்பட்டதாக ஸமாசாரம் எட்டுகிறது. பெண்ணைப் பெற்றோரும் பிள்ளையைப் பெற்றோரும் மகம்மதியர்களாம். பெண்ணின் தகப்பன் துர்நடத்தையால் தன் ஸொத்தெல்லாவற்றையும் இழந்து பணத்துக்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். கன்யாசுல்கம் ரொம்ப கிடைக்குமென்ற எண்ணத்துடன், அவன் தனது பெண்ணை ஒரு வயஸுக் குழந்தைக்குக் கல்யாணம் செய்து கொடுத்தான். பெண்ணின் தாயார் இதை ஸகியாமல், கோர்ட்டில் பிராதுசெய்தாள். இப்படி அநீதமான கல்யாணங்கள் நடந்தால் கோர்ட்டார் அதில் ப்ரவேசித்து ரத்துசெய்ய மகம்மதிய சட்டம் இடங்கொடுக்கிறது. பெண்ணைப்பெற்ற தாயார்கொடுத்த பிராதை விசாரித்த கோர்ட்டார், இந்தக் கல்யாணம் கொரமானதென்றும், வெறுக்கத் தக்கதென்றும் சொல்லி, கல்யாணத்தை ரத்துசெய்ததோடு, கோர்ட்டுசெலவை பெண்ணின் தகப்பனும் குழந்தையின் தகப்பனும் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்புக்கொடுத்தார்கள்.

### A Dream Come True.

கனவின்பலன் கைமேல்கிட்டியது.—வங்காளத்திலுள்ள ராஜஷாஹி யென்னுமிடத்திலிருந்து ஒரு அதிசய ஸம்பவம் எட்டியிருக்கிறது. உள்ளூர் கலாசாலையில் படிக்கும் கணேந்திர நாத் டேயென்ற மாணவனுக்கு ரங்கப்பூரிலிருந்து ஒரு கடிதம் கிடைத்ததாம். அக்கடிதம் அவனுடைய தாயாரெழுதியது. அக்கடிதத்தில் முதல்நாளிரவு தன் மகன் பத்மாவென்னும் நதியில் ஸ்நானம்செய்து கொண்டிருக்கும்பொழுது முழுகிப்போய் விட்டாற்போல கனாக்கண்டதாகவும், அவ்வாறு அந்நதியில் ஸ்நானஞ் செய்யப்போக வேண்டாமென்றும் எச்சரிக்கைசெய்து எழுதியிருந்தாள். அதை மகன் நம்பிக்கையற்ற வார்த்தை என்று அசட்டைசெய்துவிட்டான். மறுநாள் அவன் கலாசாலை மாணாக்கர்கள் சிலருடன் பத்மாநதியில் ஸ்நானஞ்செய்யப் போனதாகவும், அவன் ஸ்நேகிதர்களால் உதவிசெய்யப்பட்டும் முழுகி இறந்துபோனதாகவும் வடதேசத்து பத்ரிகையொன்றால் வெளியாகிறது.

### Taking Oath in Court.

கோர்ட்டில் ஸத்யம் செய்தல்.—லண்டன் போலீஸ் கோர்ட்டில் ஒரு இந்தியர் ப்ரமாணம் செய்யும்போது, தாம் சொல்லுவது உண்மையென்று ஸ்தாபிப்பதற்காக மெழுகுவர்த்தி தீபமொன்றை வாயால் ஊதி அணைத்துவிடுவதாகச் சொன்னார். இவ்விஷயம் லண்டனிலுள்ள பலருக்கு விநோதமாயிருந்தது. இந்த வழக்கம் இந்தியாவில் ஸாதாரணம்.

சீனதேசத்தில் கோர்ட்டில் ப்ரமாணஞ் செய்வதற்கு மூன்று வழிகளுண்டு. அவைகளில் மேற்கூறிய வழி ஒன்று. சீனர்கள் ப்ரமாணஞ் செய்யும்போது, தாம் சொல்லுவது உண்மையென்று ஸ்தாபிப்பதற்காக ஒரு கோழியின் தலையை வெட்டுகிறதோ அல்லது ஒரு பீங்கான் தட்டை உடைக்கிறதோ, அல்லது ஒரு மெழுகுவர்த்தி தீபத்தை ஊதி அணைத்துவிடுகிறதோ, ஏதாவது ஒன்றை செய்து ப்ரமாணஞ் செய்வார்கள். அதனுடைய தாத்பரியமென்னவென்றால், தாங்கள் மேற்கூறிய மாதிரி ப்ரமாணஞ்செய்து ஏதாவது பொய் ஸத்தியம்செய்யும் பக்ஷத்தில், அதினாலுண்டாகக் கூடிய கஷ்டத்திற்கோ ஸுகத்திற்கோ, பாப புண்யத்திற்கோ தாங்கள் பாத்யப் படுவார்களென்கிற அபிப்ராயம் தான். கோழியின் தலையை வெட்டுவது இங்கிலண்ட் போன்ற நாகரீகமுள்ள தேசத்திற்கு ஏற்றதாயிராததால், லண்டனிலுள்ள ஈஸ்டு எண்டு கோர்ட்டுகளில் ஸாக்ஷியஞ் சொல்லவரும் சீனர்கள், பீங்கான் தட்டுகளை உடைப்பதோ அல்லது மெழுக்குவர்த்தி தீபத்தை அணைத்துவிடுவதோ வழக்கம்.

### A Silent Litigant.

மௌன வ்ரதம்பூண்ட ஒரு வழக்காளி.—ஸமீபத்தில் ஒரு ஸன்யாஸி கல்கத்தாவிலுள்ள ஒரு கோர்ட்டில் ஒரு பையன்மேல் திருட்டுக்குற்றம் சாட்டினார். கோர்ட்டில் அவர் வாயைத்திறந்து பேசவேயில்லையாம். சைகைகளாலேயே விஷயங்களைத் தெரிவித்தாராம். குற்றவாளியும் குற்றம் ருசுவாகி தண்டனையடைந்தான்.

### Pig Gives Birth to an Elephant.

பன்றி யானைக் குட்டியை ஈன்றது.—மதுரையில் ஒரு பன்றி தும்பிக்கையுடைய முகத்தோடும் உருண்டை வடிவமாய் இருந்த குத்தாணிக் கால்களோடும் ஒரு குட்டி போட்டதாகவும், அந்தக் குட்டி இறந்துவிட்டதாகவும் தெரியவருகிறது.

## MISCELLANEOUS NEWS.

## நாநா ஸங்கதி.

### Leaving the World together.

**ஸதிபதிகள் இருவரும் மாண்டது.**—தற்காலம் யூனிவர்ஸிட்டிகள் நடத்தும் பரீக்ஷைகள் ரொம்ப கடுமையாயிருப்பதால் அநேகர் தவறிப்போகிறார்கள். அவர்களில் சிலர் தாங்கள் பரீக்ஷையில் தேறமுடியாமல் போனதைக்குறித்து விஸனப்பட்டு உயிரை மாய்த்துக்கொண்டதாக பற்பல விடங்களிலிருந்து ஸமாசாரமெட்டுகிறது. கல்கத்தாவைச் சேர்ந்த ஹெளராவிலுள்ள ஒரு மாணவன் சிலகாலமாக தனது மாமனுருடைய பொருளுதவியைப்பெற்று பீ.ஏ. பரீக்ஷைக்கு வாசித்துக்கொண்டிருந்தான். இந்த வர்ஷம் அவன் பி.எ. பரீக்ஷையில் தவறிவிட்டான். இதனால் மனம் முறிந்த அந்த மாணவன் ஒருநாள் கடையில் 3 தோலா அபின் வாங்கி வந்து, தானும் தனது பால்ய மனைவியுமாக அதைத் தின்றார்கள். மறுநாள் அவர்கள் குற்றுயிரா யிருந்தபோது பையனது தகப்பன் அதையறிந்து, வேண்டிய வைத்யம் செய்தும் பயன்படாமல் இருவரும் இறந்துபோனார்கள்.

பையனுடைய மனைவி குற்றுயிராயிருக்கும்போது, தானிறந்ததும் தன்னை புருஷனுடன் சேர்த்து தகனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன்மேல், அப்படியே அவள் இறந்ததும் இருவரையும் சேர்த்து தகனம் செய்தார்கள். ராதாராணி யென்னும் அந்தப் பெண் தனது புருஷனிடத்திருந்த அன்பால், புருஷனிறந்தபின் பூமியிலிருக்க மனமின்றி தானும் அபின் தின்று இறந்துவிட்டாள்.

### The Cost of the War.

**யுத்தச் செலவு.**—இந்த மாஸத்து வ்யாஸங்கள் ஒன்றில் இரண்டு வர்ஷத்துக்கு யுத்தத்துக்காகக்கூடிய செலவை ஒருவாறு மதிப்பிட்டு எழுதியிருக்கிறோம். அமெரிக்காவில் வெளியாகும் ஒரு ப்ரபலமான பத்ரிகை ஜூலை மாஸத்தோடு முடியும் 2-வர்ஷத்துக்கு என்ன செலவாயிற்றென்பதைப்பற்றி கணக்குகள் எழுதி வெளியிட்டிருக்கிறது. அந்தப் பத்ரிகையின்படி இதுவரையில் எல்லா யுத்த தேசங்களுக்கும் மொத்தத்தில் 15,000 கோடிரூபாய் செலவழிந் திருக்கிறதென்று தெரிகிறது. இதில் 9,900 கோடி ரூபாய் இங்க்லண்டுக்கும் அதன் நேசஅரசுகளுக்கும் ஏற்பட்ட செலவாகும். 5,100 கோடி ரூபாய் ஜெர்மன் கக்ஷியாருக்கு சேர்ந்த செலவாகும். யுத்த தேசங்கள் இதுவரையில் 12,000-கோடி ரூ. கடன்வாங்கி யிருக்கின்றன. ஏற்கனவே யுத்தத்துக்கு முன் மொத்தத்தில் 8,100 கோடிரூபாய் கடன் இருந்தது. இந்த யுத்தத்துக்காக வாங்கியிருக்கும் கடனையும் சேர்த்தால் அவைகளுக்குள்ள மொத்தம் கடன் 20,100 கோடி ரூபாயாகும்.

யுத்தத்தில் சேராத தேசங்கள் தங்கள் ஸைன்யங்களை சேகரித்து யுத்தத்துக்குத் தயாராக வைத்திருப்பதற்காக 150 கோடி ரூபாய் செலவழித்தன.

### Sanitation Grants.

**ஸுகாதார கிராண்டுகள்.**—மதராஸ் கவர்ன்மெண்டார் இந்த ராஜதானியிலுள்ள சில முனிஸிபாலிடிகளுக்கும், ராமநாதபுரம் ஜில்லாபோர்டுக்கும் ஜலவஸதிக்காகவும் வடிகால் ஏற்பாட்டுக்காகவும் 5,21,534-ரூபாய் க்ராண்டாகக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். இவைகளுள் பெரியகுளம் முனிஸிபாலிடிக்கு ஜலவஸதி சீர்திருத்தத்துக்கு 10,000 ரூபாயும், கொடைக்கானல் ஜல்வஸதிக்கு 1925-ரூபாயும், மதுரையில் ஜலவஸதி ஏற்பாட்டை சீர்திருத்த 1-லக்ஷம் ரூபாயும், நாகப்பட்டணம் ஜலவஸதிக்காக 1357-ரூபாயும், வேலூரின் சாக்கடை வடிகால் வஸதிக்காக 47,400-ரூபாயும், கும்பகோணம் ஜலவஸதி ஏற்பாட்டுக்காக 15,000-ரூபாயும் செங்கல்பட்டில் ஜலவஸதிக்காக 30,000 ரூபாயும், ராமேச்வரத்துக்கு ஜலவஸதி ஏற்படுத்த ராமநாதபுரம் ஜில்லாபோர்டுக்கு 60,000 ரூபாயும் கொடுக்கப்படும்.

### Lalgudi Educational Exhibition.

**லால்குடி வித்யா காட்சிசாலை.**—லால்குடி வித்யா காட்சிசாலை 1916-ம்வருஷம் ஸெப்டம்பர்மாஸம் 16-ம் தேதி காலையில், சென்னை நிர்வாக ஸபையின் மெம்பராகிய கனம் ஸர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயரவர்களால், யுத்தஸகாய நிதிக்காக, திருச்சிக் கோட்டையிலுள்ள நாஷனல் ஹைஸ்கூலிலும் லாலிஹாலிலும் திறக்கப்பட்டு, 6-நாள் நடத்தப்படும். ஸெப்டம்பர்மாதம் 10-ம் தேதிவரைக்கும் திருச்சிக்கோட்டையிலுள்ள லால்குடி வித்யா காட்சிசாலை ஆர்கனைஸருக்கு ஸாமான்களை காட்சியில்வைக்க அனுப்பலாம்

### A Son to the Pudukotth's Raja.

**புதுக்கோட்டை ராஜாவுக்கு புத்ரன் பிறந்தது.**—புதுக்கோட்டை ராஜா மணம் செய்துகொண்டிருக்கும் ஆஸ்ட்ரேலிய ராணிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்திருப்பதாக ஆஸ்ட்ரேலியாவிலுள்ள ஸிட்னியிலிருந்து புதுக்கோட்டை ராஜா தமது திவானுக்கு தந்தியடித்திருக்கிறார்.



## DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

### THE WAR IN EUROPE.

### ஐரோப்பிய யுத்தம்.

ஜூலை௴ 31-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகளும் ப்ரெஞ்ச் துருப்புகளும் சேர்ந்து ஸோம் நதியிலிருந்து டெல்வில் காடுவரையில் எதிரிகளைத் தாக்கின. அவைகள் சில இடங்களில் முன் சென்றிருக்கின்றன. ப்ரெஞ்ச் துருப்புகள் ஹெம் என்னுமிடத்துக்கு வடக்கில் உள்ள காட்டையும், மொனகு தோட்டத்தையும் பிடித்தன.

கோவல்ஸார்னி ரெயில்வே ஸ்டாகாட் நதியைக்கடக்குமிடத்தில் ரஷ்யர்கள் அந்த நதியைத் தாண்டிப்போயிருக்கிறார்கள்.

ஆகஸ்ட்௴ 1-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் ப்ளூரி ப்ரதேசத்தில் முன்சென்று வருகின்றன. இட்டாலியர்கள் அடீஜ பள்ளத்தாக்கிலும் ஆஸ்டிகோ பள்ளத்தாக்கிலும் எதிரியைத் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கிழக்கு ஆப்ரிக்காவில் ப்ரிட்டிஷ் துருப்புகள் டோடோமா என்னுமிடத்தைப் பிடித்திருக்கின்றன.

2-தேதி.

இட்டாலியர்கள் டோஹோமைட் ப்ரதேசத்தில் ப்ரானிபெக்கிஸ் என்னும் க்ராமத்தைப் பிடித்தார்கள். ரஷ்யர்கள் கோவலுக்கு 18 மைல் தூரத்தில் வந்திருக்கிறார்கள்.

ஜெர்மன் கிழக்கு ஆப்ரிக்காவில் ப்ரிட்டிஷ் துருப்புகள் பங்கனி துறைமுகத்தைப் பிடித்திருக்கின்றன.

3-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் ஸோம் நதிக்கு வடக்கில் எதிரியின் பலமாய் பாதுகாக்கப்பட்ட ஒரு இடத்தைப் பிடித்தன.

ஜெர்மானியர்கள் வெர்டேன் ப்ரதேசத்தில் வாக்ஸிலும் செனுயிலும் முன் சென்றார்கள்.

4-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் வெர்டேனில் ப்ளூரி என்னும் க்ராமத்தையும் அதற்குப் பக்கத்திலுள்ள சில பாதுகாப்பு வேலைகளையும் பிடித்தன.

ஸ்டாக்காட் நதியோரமாக பலமாக யுத்தம் நடக்கிறது. ரஷ்யர்கள் ஏர்ஸிசத்துக்கும், டையலக்குக்கும் நடுவிலுள்ள ஆக்ஸட் என்னுமிடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

5-தேதி.

வெர்டேனில் யுத்தம் ரொம்ப கடுமையாய் நடக்கிறது. ப்ரெஞ்ச் துருப்புகள் தியாமாண்டுக்குப் பக்கத்திலுள்ள ராணுவ வேலைகளைக் கைப்பற்றின. ஜெர்மானியர்கள் ப்ளூரி என்னும் க்ராமத்தைப் பிடித்தார்கள். ரஷ்யப் போர்முகத்தில் ப்ராடிக்குத் தெற்கில் யுத்தம் பலமாக நடக்கிறது. ஜெர்மன் கிழக்கு ஆப்ரிக்காவில் பெல்ஜியர்கள் உஜிஜி என்னும் பட்டணத்தைப் பிடித்தார்கள்.

7-தேதி.

ரஷ்யர்கள் ப்ராடிக்கு 20 மைல் தெற்கில் 6 க்ராமங்களையும் சில குன்றுகளையும் 5500 கைதிகளையும் பிடித்தார்கள்.

8-தேதி.

ஜெர்மானியர்கள் போஸியூர்ஸ் என்னுமிடத்தைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். வெர்டேனில் யுத்தம் நடந்து வருகிறது. இட்டாலியர்கள் இஸான்ஸோ போர்முகத்தில் மான்பால்கோனுக்குப் பக்கத்தில் சில எதிரிக் கிடங்குகளைப் பிடித்தார்கள். ப்ராடிக்குத் தெற்கில் ஸிரிக் நதியோரமாக பலமான யுத்தம் நடக்கிறது.

ரஷ்யோ—ஜப்பானிய யுத்தத்தில் போர்ட் ஆர்தரில் சண்டைசெய்த வைஸ்-அட்மிரல் கோல்ட்சாக் என்பவர் ரஷ்யாவின் கருங்கடல் படைக்குத் தலைவராக நியமிக்கப் பட்டிருக்கிறார். இவர் மற்றெல்லா ரஷ்ய அட்மிரல்களையும்விட வயதில் தாழ்ந்தவராம்.

9-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் ஸோம் நதிக்கு வடக்கில் 139-வது குன்றுக்குக் கிழக்கில் முன் சென்று ஹெம் என்னுமிடத்துக்கு வடக்கிலுள்ள ஒரு காட்டைப்பிடித்தன. வெர்டேனில் ரொம்ப கடுமையாக யுத்தம் ஆரம்பித்திருக்கிறது. சில இடங்களைப் பிடிக்க ஜெர்மானியர்கள் ரொம்ப முயன்றும் பயன்படவில்லை.

இட்டாலியர்கள் இஸான்ஸோ போர்முகத்தில் மான்டிஸாபோடினோ, ஸான்மிசெலி என்னுமிடங்களைப் பிடித்திருக்கிறார்கள். அவர்கள் கொரிஸியா என்னும் பட்டணத்தைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ரஷ்யர்கள் தென்கிழக்கு கலீஷ்யாவில் ஸ்டானிஸ்

லாவுக்கு 12 மைல் கிழக்கிலுள்ள துமாக்ஸ் என்னும் பட்டணத்தையும், ஒட்டினியா என்னுமிடத்தையும், ஸ்டானிஸ்லாவுக்கு 12 மைல் தூரத்தில் ஒரு க்ராமத்தையும் பிடித்தார்கள்.

10-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் ஹெம்காட்டில் முன்சென்றன. வெர்டூனில் பலமாக யுத்தம் நடந்தது. ஜெர்மானியர்கள் தியாமாண்டில் சற்று முன் சென்றிருக்கிறார்கள். இட்டாலியர்கள் இஸான்ஸோ நதியைக்கடந்து கொரிஸியாவைப் பிடித்து அக்கரைக்குப்போயிருக்கிறார்கள். 10000-எதிரிகள் கைதிசெய்யப்பட்டார்கள்.

ரஷ்யர்கள் தெற்கு கலீஷ்யாவில் முன்சென்றிருக்கிறார்கள். அவர்கள் ஸ்டானிஸ்லாவுக்கு 6-மைல் தூரத்திலுள்ள டிஸ்மியனிகாவைப் பிடித்திருக்கிறார்கள்.

11-தேதி.

ரஷ்யர்கள் தெற்கு கலீஷ்யாவில் ச்ரிப்ஸின் என்னுமிடத்தைப் பிடித்தார்கள். அவர்கள் கார்ப்பேதியன் மலையில் முன்சென்று வருகிறார்கள்.

12-தேதி.

இட்டாலியர்கள் டோபெர்டோ பீட பூமி முழுவதையும் பிடித்திருக்கிறார்கள். ரஷ்யர்கள் ஸ்டானிஸ்லாவையும், மொனஸ்டர்ஸ்ட்ஸ்காவையும் பிடித்ததோடு, 13000-எதிரிகளையும் கைதிசெய்தார்கள். அவர்கள் துருக்கியில் ட்ரெபிஸாண்டுக்கு மேற்கில் எரிலன் என்னும் பட்டணத்தைப் பிடித்தார்கள். ப்ரெஞ்ச் துருப்புகள் பல்கேரிய எல்லை ப்ரதேசத்துக்குப் பக்கத்திலுள்ள டோரியன் என்னும் பட்டணத்தைப்பிடித்தன.

14-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் ஸோம்நதிக்குத் தெற்கில் 4-மைல் நீளமுள்ள போர்முகத்தில் எல்லா பாதுகாப்பு வேலைகளையும், இடங்களையும் பிடித்ததோடு, மாரிபாஸ் என்னும் க்ராமத்திலும் புகுந்திருக்கின்றன.

இட்டாலியர்களை ஆஸ்ட்ரியர்கள் பலமாகத் தடுத்து வந்தபோதிலும், இட்டாலியர்கள் டிவோலிக்கு வடக்கிலுள்ள 174-வது குன்றைப் பிடித்தார்கள். சென்ற 6-ந் தேதியிலிருந்து இதுவரையில் ரஷ்யர்கள் 15,392எதிரி ஸோல்ஜர்களைக் கைதிசெய்திருக்கிறார்கள். இந்தமாஸம் 1ஆ. முதல் 82202-ஸோல்ஜர்கள் ரஷ்யர்களால் கைதிசெய்யப்பட்டார்கள். ரஷ்யர்கள் போட் ஹேஸ்டே, மாரியூன்போல் என்னும் ஊர்களைப் பிடித்திருக்கிறார்கள்.

ஜெர்மன் கிழக்கு ஆப்ரிக்காவில் ஜெனரல் ஸ்மட்ஸின் துருப்புகள் ஜெர்மானியர்களை மாலாஞண்டோ என்னுமிடத்தில் தோற்கடித்தன.

15-தேதி.

ஆஸ்ட்ரியர்கள் கொரிஸியாவைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். 'லாஸஸு' என்னும் ப்ரிட்டிஷ் டிஸ்ட்ராயர் டச்சுக் கடல்கரையோரமாக டார்ப்பிடோவால் தாக்கப்பட்டோ மிதப்பு வெடிகுண்டால் தாக்கப்பட்டோ மூழ்கிப்போயிற்று.

## INDIAN NEWS.

## இந்திய வர்த்தமானம்.

ஜுலைமீ 26-தேதி.

**மைஸூர் யூனிவர்ஸிட்டி.**—முன்பு மைஸூரில் கௌன்ஸிலராயிருந்த வேலையிலிருந்து விலகியிருக்கும் மிஸ்டர் நஞ்சுண்டய்யா மைஸூர் யூனிவர்ஸிட்டிக்கு முதல் வைஸ்சான்ஸராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

29-தேதி.

**காலஞ்சென்ற ஸர் டின்ஷா தேவார்.**—பம்பாய் ஹைக்கோர்ட்டில் ஜட்ஜாயிருந்த ஸர் டின்ஷா தேவார் சென்ற 4 மாஸ காலமாய் வ்யாதியாயிருந்து இன்று இறந்துபோனார்.

31-தேதி.

**போர்பந்தரில் இலவசக் கல்வி.**—பம்பாய் ராஜதானியைச் சேர்ந்த போர்பந்தர் ஸமஸ்தானத்து மைனர் ராஜாவின் 15-வது வர்ஷ தினத்தின் ஞாபகார்த்தமாக, அந்த ஸமஸ்தானத்தில் ப்ரைமெரிக் கல்வியை இலவசமாகக் கற்றுக்கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

ஆகஸ்டுமீ 5-தேதி.

**லேடி ஹார்டிஞ்ஜ் வைத்ய காலேஜ்.**—லார்ட் ஹார்டிஞ்ஜ் டெல்லியில் வெடிகுண்டால் தாக்கப்பட்டு காயமடைந்த பிறகு ஸ்வஸ்தமடைந்ததன் ஞாபகார்த்தமாக ஒரு நிதி சேர்க்கப்பட்டது. அதற்கு இப்போது 1½ லக்ஷம் ரூபாய் சேர்ந்திருக்கிறது. லார்ட் ஹார்டிஞ்ஜ் அந்தப் பணத்தைக்கொண்டு டில்லியில் ஸ்த்ரீகளுக்காக லேடி ஹார்டிஞ்ஜ் வைத்ய காலேஜும் ஆஸ்பத்ரியும் ஸ்தாபிக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார். 1½ லக்ஷம் ரூபாயின் வட்டியை ஆதாரமாகக்கொண்டு டெல்லியில் லேடி ஹார்டிஞ்ஜ் பேரால் ஒரு காலேஜும் ஆஸ்பத்ரியும் ஸ்தாபிக்கப்படும்.

12-தேதி.

**மிஸ்டர் பாலகங்காதர திலகர்.**—பூனாவாஸியாகிய மிஸ்டர் பாலகங்காதர திலகர் சில வாரங்களுக்கு முன் ராஜத்ரோகமான பிரஸங்கங்கள் செய்ததற்காக கவர்ன்மெண்டார் 40,000 ரூபாய்க்கு நன்னடக்கைக்கு ஜாமீன் கேட்டிருந்தார்கள், அவருடைய கேஸ் பூனாவில் விசாரணை செய்யப்பட்டதில் அதை விசாரித்த ஜில்லா மாஜிஸ்ட்ரேட் ஜாமீன் கொடுக்க வேண்டியதுதான் என்று தீர்மானித்திருக்கிறார்.


# ஜனோபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

**THE PEOPLE'S FRIEND.**

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE.'

ஜி. எ. வைத்யராமன், பி. எ.,
பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A.,
EDITOR.

புஸ்தகம் 8. Vol. 8. நளஹூ, ஆவணிமீ, AUGUST—SEPT. 1916. ஸஞ்சிகை 8. No. 8.


OFFICE OF THE REGISTRAR ... REGISTERED 2[illegible] OCT 1916 MADRAS

## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Half-yearly ... | 2 0 0 | ... ... | 3 0 0 |
| Sample copy | 0 6 0 | ... ... | 0 8 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | |
|---|---|---|---|
| 1 Page | ... | 5 0 0 | per month. |
| ½ do | ... | 2 8 0 | do |
| ¼ do | ... | 1 4 0 | do |
| 1/10 do | ... | 1 0 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion, republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | அந்ய நாடு |
|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 0 0 | ... | 6 0 0 |
| ஆறுமாஸத்துக்கு ... | 2 0 0 | ... | 3 0 0 |
| மாதிரி காபி ... | 0 6 0 | ... | 0 8 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ ,, | ,, ,, | 2 8 0 |
| ¼ ,, | ,, ,, | 1 4 0 |
| 1/10 ,, | ,, ,, | 1 0 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேண்டுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருபநேயர்கள் அறியவேண்டும்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்

ஜனாபிமானி.

புஸ்தகம் 8.] நளஞு ஆவணிமீ. [ஸஞ்சிகை 8.

## LIQUID FIRE IN WAR.

## யுத்தத்தில் த்ரவ ரூபமான நெருப்பு.

தற்போது நடந்துவரும் யுத்தத்தில் எதிரிகளையும் அவர்களுடைய பாதுகாப்பு வேலைகளையும் அழிக்க கையாளப்பட்டு வரும் முக்யமான ஸாதனங்களுள் த்ரவரூபமான நெருப்பென்பது ஒன்று. அதை உபயோகிப்பதனால் எதிரி ஸைன்யங்களும், அவர்களுடைய பாதுகாப்பு வேலைகளும் நாசமடைவதேயல்லாமல், அது எதிரி ஸைன்யங்களுக்குள் பீதியை உண்டாக்கி, அவர்களுடைய மனோதைர்யத்தையும் குறைக்கிறது. த்ரவநெருப்பை உபயோகிக்கும் வழி என்னவென்றால், பம்புகளால், ஸுலபத்தில் தீப்பற்றி எரியக்கூடிய எண்ணெயை இறைத்து குழாய்களின் மூலமாய் வெளிப்படுத்தி வெகுதூரத்தில் போய்விழும்படி செய்து, அப்படி விழும்போது எண்ணெய் தீப்பற்றி எரிந்து, அதுபடும் இடத்திலுள்ளவைகளை நாசம் செய்யும்படி செய்வதே. இந்த ஸாதனமானது ஜெர்மானியர்களால் வெகுவாய்க் கையாளப்பட்டு வருகிறது. த்ரவரூபமான நெருப்பை வெளியிடும் யந்த்ரத்துக்கு ஜெர்மன் பாஷையில் 'ப்ளாம்மன்வெர்பர்' என்று பெயர். ஜெர்மானியர்கள் இதை வெகுகாலத்துக்கு முன்னமே கண்டுபிடித்து பரீக்ஷைசெய்து பார்த்து சீர்திருத்தி யிருக்கிறார்கள். ஆதியில் செய்த யந்த்ரம் எளிதில் தீப்பற்றக்கூடிய எண்ணெயை 40 அல்லது 45 கஜம் தூரத்துக்குத்தான் போகும்படி செய்யக்கூடியதா யிருந்தது. எண்ணெயானது யந்த்ரத்திலுள்ள குழாயிலிருந்து வெளிவரும்போதே அது தீப்பற்றிக்கொள்ளும்படி ஏற்பாடு செய்திருந்ததால், அந்த எண்ணெய் 40 அல்லது 45 கஜம் போவதற்குள் எரிந்துபோய்விடும். ஆகையால் எண்ணெயை அதிக தூரம்போகச்செய்ய முடியாமலிருந்தது. அதன்மேல் ஜெர்மன் நிபுணர்கள் எண்ணெயை யந்த்ரத்திலிருந்து வெளிவந்த வுடனேயே எரியவிடாமல், எண்ணெய் தாக்கவேண்டிய இடம் போனவுடன் தீப்பற்றிக்கொள்ள ஏற்பாடுகள் செய்ய முயன்றார்கள். இந்த ஏற்பாடு செய்தால் எண்ணெய் நடுவழியில் எரிந்து வீணாய்ப்போகாது. அதை அதிகதூரம் போகும்படி செய்யலாம். அது விழுமிடத்தில் அதிகமாய் விழுமாதலால், அது பற்றி எரிந்தால், அதனால் ஏற்படக்கூடிய நாசமும் அதிகமாகும். இந்த ஸௌகர்யங்களை உண்டாக்குவதற்காக, இரண்டு பாரல் (குழாய்)களுள்ள ஒரு பீரங்கி செய்தார்கள். எண்ணெய் வைத்திருக்கும் பாத்ரங்களிலிருந்து எண்ணெயை பம்ப் செய்தால் அது இந்த பாரல்கள் வழியாக வெளியில்போகும். இரண்டு பாரல்களும் ஒன்றின்கீழொன்றாய் அமைக்கப்பட்டன. மேலேயுள்ளது சிறியதாயும், கீழேயுள்ளது பெரியதாயும் இருந்தன. மேலேயுள்ள குழாயை வேண்டிய திசையில் திரும்பும்படி அமைத்தார்கள். எண்ணெயை இரண்டு பாரல்களின் வழியாயும் ஏககாலத்தில் வெளியிடுவார்கள். மேல்பாரலிருந்து வரும் எண்ணெய் வெளிவந்தவுடன் தானாகவே நெருப்புப் பற்றிக்கொள்ளும்படி அமைக்கப்பட்டிருக்கும். அந்தக் குழாயைத் தக்கபடி திருப்புவதால், அதிலிருந்துவரும் எரிகிற எண்ணெயை, வேண்டிய இடத்தில், அடிபாரலிலிருந்து வீசப்படும் எண்ணெயோடு சேரும்படி செய்யலாம். அப்படிச் சேர்ந்தவுடன் பெரியபாரல் எண்ணெய்





த்ரவ நெருப்பு வெளியிடும் யந்த்ரம்.

இரண்டு பாரல்களுள்ள பீரங்கி.

மேல்பாரலிலிருந்து வரும் எரியும் எண்ணெய் கீழ்பாரலிலிருந்து வரும் எண்ணெயுடன் சேருவதைக் காட்டுகிறது.

பற்றிக்கொண்டு அது தாக்கும் இடங்களிலுள்ளவைகளை நாசம்செய்யும். பெரிய பாரல் எண்ணெய் பற்றிக்கொண்டதும், சிறிய பாரலை மூடிவிடுவார்கள். பெரிய பாரலிலிருந்துவரும் எண்ணெய்மாத்ரம் அது சிறியபாரல் எண்ணெயோடு சேர்ந்த இடத்திலிருந்து அதுபோய் விழும் இடம் வரையில் எரிந்துகொண்டிருக்கும். பெரிய பாரலிலிருந்து வரும் எண்ணெய் கொஞ்சதூரம் வரையில் எரியாமலே போவதால் எண்ணெய்ச் சேதம் ஏற்படுவதற்கில்லை. அது போய் விழும் இடத்திலும் நன்றாய் எரிகிறது. அதிக சேதத்தையும் உண்டாக்குகிறது.

ஒரு இடத்தில் எரியும் எண்ணெய் தாக்கும்படிசெய்த பிறகு யந்த்ரத்தைத்தக்கபடி திருப்பி, எண்ணெயை எந்த திசையிலும் போய்விழுந்து அங்குள்ளவைகளை நாசம் செய்யும்படி செய்யலாம். இப்படி மாற்றுவதில் எண்ணெய் எரிவது நின்றுவிடுவதில்லை.

சில ஸமயங்களில் இந்த த்ரவரூபமான நெருப்பை வேறுவிதமாகவும் ப்ரயோகிப்பதுண்டு. முதலில் பெரியபாரலைத் திறந்துவிட்டு நாசம் செய்யவேண்டிய இடத்தை எளிதில் பற்றி எரியக்கூடிய எண்ணெயால் முழுவதும் நனைத்து பிறகு நெருப்புப் பற்றவைக்க உதவும் சிறிய பாரலைத் திறந்துவிட்டு, அந்த இடத்தை எரியவிடுவதுண்டு.

இந்தயந்த்ரத்தில் உபயோகிக்கும்எண்ணெயானது நிலக்கரித்தாரிலிருந்துசெய்யப்படுகிறதாம்.

## PLANTS USEFUL FOR FENCING.

BY Y. S. VENKATARAMANA AIYAR, BA.

## வேலிக்கு உபயோகமாகும் செடிகள்.

ஸாதாரணமாய் ஒவ்வொருவரும் தங்கள் நிலத்தை சுற்றிலும் வேலிபோட்டுக்கொண்டு அனுபவித்து வருகிறார்களென்றாலும், பெரும்பான்மையாக பழவர்க்கத் தோட்டங்களிலும் புன்செய் நிலங்களிலும் தான் நமது நாட்டில் வேலியைக்காண்கின்றோம். தவிரவும் அப்பொழுதுக்கப்பொழுது முள் அடைத்து வேலிபோட்டு கொள்வது வழக்கமாயிருக்கிறது. நெடுநாள் இருக்கும்படியாக வேலிச் செடிகளை பயிர் செய்திருப்பதை பார்ப்பது அரிது. அதிலும் ப்ரயோஜனமுள்ள செடிகளைப் பயிர் செய்திருப்பது மிகவும் அரிது. இக்காலத்திலோ நஞ்சை நிலங்களில் எருவுக்காக பசுந்தாள் பயிர்களை பயிர் செய்வது அதிகமாய் வழங்கி வருகிறது. ஆகையால் நஞ்சை நிலங்களுக்குக்கூட வேலிபோட வேண்டிவரும். இல்லாவிட்டால் அப்பயிர்களை ஆடுமாடுகள் தீவிரமாக மேய்ந்துவிடும். நஞ்சை நிலங்களுக்கு முள் இல்லாததும் விஸ்தார வளர்ச்சி இல்லாததுமான செடிகளை பயிர் செய்ய வேண்டும். மற்ற நிலங்களுக்கு கூடிய வரையில் முள் உள்ளவும், ஆடுமாடு மனிதர் நுழையக்

கூடாதவுமான செடிகளை பயிர் செய்தல் வேண்டும். அப்படிச் செய்வதிலும் கூடியவரையில் நமக்கு லாபத்தை தரக்கூடியதாய் அதாவது அதிலிருந்து நமக்கு வரும்படி கிடைக்ககூடியதாயிருந்தால் ச்ரேஷ்டமல்லவா? மேற்குறித்த பல விஷயங்களுக்கும், உபயோகமாகும் படியான செடிவர்க்கங்களை குறித்துக் கீழே எழுதியிருக்கிறோம்.

1. தாசாணி; செம்பரட்டை, சப்பாத்தி.—(The Shoe-flower, Hibiscus Rosa-sinensis) முள் இல்லை. கத்திரிக்க துளிர்த்து வரும். இதன் புஷ்பம் தோலை கருப்பு நிறமாக்கும். புஷ்பத்தை எண்ணெயில் போட்டு காய்ச்ச எண்ணெய் மணம் மிகும்.

2. வலம்புரி.—(The country-Screwtree, Helictres Isora). இது காடுகளில் அடர்த்தியாய் வளர்ந்திருக்கும். உள்பட்டையிலிருந்து நேர்த்தியான நார் கிடைக்கும். பழமும் வேரும் மருந்துவகையில் உபயோகப்படும். குழந்தை உடல் நோய்களுக்கு பழம் உபயோகப்படும். வடக்கே பழம் 37½ பவுன் நிறைகொண்ட ஸூரத் மணு 1-க்கு ரூ. 3-8-0 க்ரயமாம். விதையிலிருந்து ஸாதாரணமாய் செடிகளை பயிராக்கலாம். சிறு கொடிகள் கிளைகளை சுற்றியிருப்பதால் இது திருகாணிபோலிருக்கும்.

3. காட்டுமிளகு, முள்ளுகரணை. (Toddalia Aculeata) இது ஸாதாரணமாய் வெளியிடங்களில் பரவியிருக்கும் ஒரு முள்புதர். சில இடங்களில் பாறைப் பக்கங்களில் வளர்ந்து அவற்றை மறைத்திருக்கும். பச்சை இலைகளை ஆவியில் காய்ச்ச ஆரஞ்ஜு பழவாஸனையுள்ள ஓர்வித சுத்ததைலமிறங்கும். விதையினின்றும் ஏராளமாய் உற்பத்தி செய்யலாம். கருப்பு த்ராக்ஷைப் பழம் அளவுள்ள மஞ்சள் நிறப் பழமானது காரமுள்ளது.

4. நஞ்சுண்டன், தோருவாட்டு (Balanites Roxburghii) ஸமவெளிகளில் முளைக்கும் முட்செடி. நீண்ட கூரிய முள்ளும் பசுமை நிறமான புஷ்பமுமுள்ளது. குருத்துகளையும் இலைகளையும் ஆடுமாடு தின்னும். பழம் மருந்துவகையில் சேர்ந்தது. மரம் விறகாக உபயோகப்படும். சில ஸமயங்களில் கைத்தடியும் செய்வதுண்டு. எட்டடி வளரவிட்டு கத்தரித்து வந்தால், தோட்டங்களுக்கு முதல்தரமான வேலியாகும். விதையினின்றும் உற்பத்தியாக்கலாம்.

5. கிளுவை.—(Balasamodendron Mokul, Berryi). இதை ஸாதாரணமாய் அநேக இடங்களில் வேலியாகப் பார்க்கலாம். நெடுநாள் தாங்கக்கூடிய வேலியாகும். இதிலிருந்து ஒரு வகை கோந்து எடுத்து விற்பார்கள்.

6. காற்கோடி நிலரேகு.—Zizyphus Nummularia). இது க்ராமங்களை சுற்றியிருக்கும் ஓர் முள்புதர். கவனித்து கத்தரித்து வந்தால் நிரந்தரமான வேலியாகும். இதன் பழத்தை குழந்தைகள் தின்பார்கள்.

7. வலாரி.—(Dodonaea Viscosa) முள் இல்லை. அடர்த்தியாய் வளரும். நஞ்சை நிலங்களிலும் தோட்டங்களின் உட்பிரிவுகளிலும் வேலிபோட உபயோகமுள்ளது. இலைகள் கழனிக்கு எருவாகும். ஏழை ஜனங்கள் இதிலிருந்து விறகு ஒடிப்பார்கள். விறகு நன்றாய் எரியும். நம் தேசத்தின் வடபாகங்களில் வலாரி வேலி அதிகமாயுண்டு. இதினின்று தோட்டக் கருவிகளுக்கு பிடிகளும் கைத்தடிகளும் செய்யலாம். விதையினின்றும் பயிராக்கலாம்.

8. கல்யாண முருங்கை.—(The Indian Coral tree, Erythrina Indica). ஸமவெளிகளிலும் மலைகளின் ஓரங்களிலும் காணலாம். சில இடங்களில் அலங்காரத்திற்காக பயிராக்கப்பட்டிருப்பதுமுண்டு. ஸ்வல்பம் சிறு முள் உண்டு. முப்பது முதல் 45 அடி உயரம் வரை வளரும். வேனிற்காலம் ஆரம்பிக்கும் பொழுது பவழநிறமான புஷ்பங்கள் நிறைய புஷ்பிக்கும். வெற்றிலைக் கொடி, திராக்ஷைக் கொடி இவைகளை ஏற்றுவதற்காக அநேகமாய் பயிரிடப்படும். கிளை வெட்டிவைத்தால் பற்றும். சீக்ரம் வளரும். மரம் வெள்ளை நிறமுடையது. விளையாட்டு கருவிகள் முதலியன செய்ய உதவும். இதை முச்சி மரமெனவும் வழங்குவார்கள். விதையினின்றும் உண்டாக்கலாம்.

9, 10. கின்ன கழற்கோடி. (Caesalpinia Bonducella; (கழற்கோடி) Caesalpinia sepiaria) —ஏராளமாய் வளரக்கூடியன. அதிக முள் உடையன. நுழையக்கூடாதபடி புதராக வளரும். அடிக்கடி வெட்டிக் களையாவிட்டால் அதிகமாய் பரவி இடைஞ்சலைத் தரும்.

11. கடிவேலன், கஸ்தூரிவேலன் (Acacia Farnesiana.)—கருவேலன் போல் மரமாகாமல் சிறிய செடியாகும். மஞ்சள் நிறமுள்ள, வட்டமான இதன் புஷ்பங்கள் அதிக மணமுள்ளன. இதிலிருந்தும் காஸ்ஸி என்னும் ஓர்வகை அத்தர் இறக்கப்படும். இதன்பக்கத்தில் விஷஜந்துக்கள் நெருங்கா. சீராக கத்தரித்து வந்தால் தோட்டங்களுக்கு நேர்த்தியான வேலியாகும். செடியினின்றும் கோந்து எடுக்கப்படும். விதையினின்றும் பயிராக்கலாம்.

13. சீயக்காய் செடி (Acacia Concinna).—சீயக்காயின் உபயோகங்கள் யாருக்கும் தெரிந்தவையே. எண்ணெயையும் அழுக்கையும்போக்க உபயோகப்படும். மருந்தாகவும் உபயோகப்படும். விதையினின்றும் உண்டாக்கலாம். கொடி அதிகமாகப் பரந்து நல்ல வேலியாகும். பக்கத்தில் பெரிய மரங்களை உண்டாக்கி அவைகளின்பேரில் ஏற்றி விடலாம்.

14. மருதாணி (Lawsonia Alba)—துருக்கர்கள் தங்கள் தோட்டத்தில் அதிகமாய்ப் பயிராக்குவார்கள். புஷ்பம் அதிக வாஸனையுள்ளது. அத்தர் இறக்கப்படும். இலைகளை அறைத்து கையில் தடவ சிவப்புசாயம் ஏறும். கவனித்து கத்தரித்து வந்தால் உபயோகமுள்ள வேலியாகும். விதையினின்றும் பயிராகும்.

15. கோணிப் புளியங்காய், கோறுக்காபுள்ளி (The Manilla Tamarind tree, Pithecolobium Dulce).—விறகுக்காகவும் வேலியாகவும் இது ஏராளமாய் பயிர் செய்யப்படும். பாதையோரத்திலிருக்கும் செடிகளை ஆடுகள் இலையில்லாமல் தின்றுவிடும். 5-அடி உயரமானதும் கத்தரித்து வந்தால் நல்லவேலியாகும். பழத்தை சாப்பிடுவார்கள். பெரிய மரமாக வளரக்கூடியது. வேலிபோட மழைகாலத்தில் மண்ணை புரட்டி திட்டுபோட்டு இரட்டை வரிசையாக விதைத்தால் சீக்ரத்தில் நாற்றுகள் கிளம்பிவிடும். வெயில் காலங்களில் கொஞ்சம் நீர் விடுவதும் ஆடுமாடுகள் கடிக்காமல் பார்த்துகொள்வதும் தவிர வேறே உழைப்பு கிடையாது. நல்ல வேலியாகும். மரத்தை வெட்ட வெட்ட நல்ல கிளைப்பு உண்டாகும். ஆகையால் விறகுக்காகவும் பயிரிட்டால் அதிக லாபமுண்டு.

16. சப்பாத்திக்கள்ளி, நாகதாளி. (Prickly Pear, Opuntia Dilleni).—இது யாவரும் அறிந்தது. இதிலிருக்கும் கஷ்டம் என்னவென்றால், வேண்டாத இடங்களிலெல்லாம் முளைத்து அதை கிளறி எடுக்க நேரிடும் செலவும் கஷ்டமும் அதிகப்படும். இது தன்னடியிலிருக்கும் மண்ணை சீர்படுத்தும்.

17. அளிஞ்சி (Alangiuam Lamarckii).—இது ஒரு சிறிய செடி. இதை பயிரிட்டு வேலியாக்கலாம். விறகுக்கு உபயோகப்படும். அமாவாஸையும் ஞாயிற்றுக்கிழமையும் கூடின தினத்தில் நடு இரவில் இந்த செடியைவெட்டி வீட்டிற்கு கொண்டுவந்து வைத்தால் இது பேயை ஓட்டிவிடும் என்று சிலர் அபிப்ராயப் படுகிறார்கள். விதையினின்றும் உண்டாக்கலாமெனினும் தாமஸத்தில் தான் வளரும்.

18. காரைமுள் (Canthium Parviflorum).—இது அதிக முள்ளடங்கிய புதர். இதை ஸாதாரணமாய் எவ்விடத்தும் பார்க்கலாம். பழத்தை தின்பதுண்டு. இலையைக் கஷாயம் போட்டு

உள்ளுக்குக் கொடுத்தால் மலத்தில் இரத்தம் விழுவதை நிறுத்தலாம். கத்தரித்து வந்தால் நல்ல வேலியாகும்.

19. மஞ்சீத் (Indian Madder, Rubia Cordifolia).—இது வேலிக்கு உபயோகமான ஒரு செடி. இதன் வேரினின்றும் ஓர் வகை சிவப்பு சாயம் இறக்கப்படும்.

20. கற்றாழை (The Aloe.) இதில் பலவகைகள் உண்டு. இதைவேலியாக அநேக இடங்களில் பார்க்கலாம். அடர்த்தியான வேலியாகும். நிரம்ப நார் கிடைக்கும். ஆனால் பாம்புகள்சேரும்.

21. களாச்செடி (Carissa Carandas).—எப்பொழுதும் பச்சையாயிருக்ககூடிய முள் செடி. காயும் பழமும் ஊறுகாய்க்கு உபயோகப்படும். கறிவகையாயும் உபயோகமாகும். பழம் இனிப்புள்ளது. வேலியாகப் பயிரிடலாம். புஷ்பம் வாஸனையுள்ளது. விதையினின்னும் பயிராக்கலாம்

22. உண்ணிச்செடி (Lantana Indica).—இது அநேக இடங்களில் காடாக வளர்ந்திருப்பதைக் காணலாம். விதையினின்றும் பயிராக்கலாம். இதன் பழத்தை தின்பதுண்டு. ஒன்று முளைத்து விட்டால் ஆயிரமாக பயிராகிவிடும். சிறு முள் உண்டு. கவனிக்காவிட்டால் அடர்த்தியான வேலியாகி வேண்டாத இடத்தும் பரவி செலவையும் தொந்தரவையும் உண்டாக்கும். இதனிடத்தில் விஷ ஜந்துக்கள் அதிகமாய் நெருங்கும். தான் வளரும் நிலத்தில் இலைகளை உதிர்த்து மண்ணைச் சீர்திருத்தும்.

23. விஷமதாரி (Clerodendron Inerme).—ஆடுமாடுகள் தின்னாது. பெரிய செடிகளாக வளருவதில்லை, பயிராக்குதல் ஸுலபம். நீடித்த நாள் இருக்கக்கூடியது. இலைகளை கஷாயம் போட்டு ஜ்வரத்திற்கு கொடுக்கலாம். வெட்டுத் துண்டுகளாலும் விதையாலும் பயிராக்கலாம். அடர்த்தியாய் வளருகிறது. முள் இல்லை. ஆகையால் எவ்வித வேலிக்கும் முதல்தரமானது.

24. சங்கம் குப்பி (Duranta Ellisia).—இது நல்ல வேலியாகும். கிளைகளை வெட்டிப் பயிராக்கலாம்.

25. திருகுகள்ளி (Euphorbia Tirucalli)
இலைக்கள்ளி ( ,, Nerifolia)
சதுரக்கள்ளி ( ,, Antiquorum)

திருகுகள்ளியில் பால் அதிகமாதலால் பாற்கள்ளி என்றும் கூறுவர். பால் எரிச்சலை யுண்டாக்கும். ஆகையால் ஆடுமாடுகள் நெருங்கா. இம்மூன்றும் வெட்டுத் துண்டுகளினின்றும் கிளைக்கும். மூன்றையும் வேலியாகப் பயிரிடலாம்.

26. வெள்ளைப்புலா (Fluggia Leucopyrus).—இதை நட்டு கத்தரித்து வந்தால் நல்ல வேலியாகும். இதன் குச்சியால் பல் தேய்ப்பதுண்டு. குழந்தைகள் சிறு பழத்தை தின்பார்கள்.

27. காட்டுக்கோட்டை காட்டாமணக்கு (Jatropa Curcas).—செடியில் பால் அதிகம். இந்தப் பால்பற்களுக்குநல்லதென்று குடியானவர்கள் இக்குச்சியில் பல்தேய்ப்பார்கள். இலைகளைக் கஷாயம் போட்டு மேலே தடவினால் பாலை சுரக்கசெய்யும். கொட்டையிலிருந்து எடுக்கப்படும் மஞ்சள் நிறமுள்ள எண்ணெயைச் சாப்பிட்டால், அதிகமாக பேதியாகும். தொந்தரவையும் உண்டாக்கும். ஆடு மாடு தின்பதில்லை. ஆகையால் நல்ல வேலியாகும். கிளைகளினின்றும் துளிர்க்கும்.

28. சிகப்பு அல்லது பவளப்புலா (Breynia Rhamnoides).—இதைப்பயிரிட்டு வேலியாக்கலாம். இது ஓர்புதர். கூரைவேய்வதில் கிளைகள் உபயோகப்படும். உலர்ந்த இலைகளை புகையிலையைப்போல் சுருட்டுப் பிடித்தால் தொண்டை வலி நீங்கும்.

29. பனை (The Palmyra).—மண்ணை பண்படுத்தி நெருக்கமாக கொட்டையைப் போட்டால் அடர்த்தியான வேலியாகும். ஆனால் அதிக நாள் பிடிக்கும்.

30. கரிப்பிலா; விட்டில் (Strebles Asper).—



உஷ்ண ப்ரதேசங்களில் ஸமவெளிகளில் காணலாம். உள்ளங்காலிலும் கைகளிலும் உண்டாகும் புண்களுக்கு இதன் பாலை அடிப்பார்கள். வீட்டுக்கூரையில், இடியினின்றும் காப்பாற்ற கிளைகளை கட்டுவார்கள். ஸீயாம் தேசத்தில் இதன் பட்டையினின்றும் ஒருவகை முரட்டு காகிதம் செய்வார்கள். வேலிக்கு உபயோகப்படும்.

ஓய். எஸ். வேங்கட்டாமணய்யர்.

## CHOLERA AND ITS PREVENTION.

## காலராவும் அதைத் தடுத்தலும்.

எல்லா தொற்று வ்யாதிகளிலும் காலரா என்னும் வாந்திபேதிதான் ரொம்ப கொடுமையானதும், யாவரும் பயப்படக்கூடியதுமான நோயாகும். கோடைகாலம் ஆரம்பமானதும் கோமாபாஸில்லி யென்னும் காலரா க்ருமிகள் வெளிவர ஆரம்பித்து, மழைகாலத்தின் மத்தியில் ரொம்ப சுறுசுறுப்பாய் பரவுகின்றன. இந்தக் காலத்தில் அந்த க்ருமிகளால் அநேக இடங்களில் எண்ணிறந்த ஜனங்கள் நோய்க்காளாகியும் இறந்தும் போகிறார்கள்.

காலராவானது சீக்ரம் பரவக்கூடியதும்,சீக்ரம் நோய்கொண்டவர்களைக் கொல்லக்கூடியதுமாயிருந்த போதிலும், அதை ஸுலபமாக பரவவிடாமல் தடுக்கவும், அது நம்மிடம் வராதபடி தடுக்கவும் கூடும். காலரா வ்யாதியானது வேறு சில வ்யாதிகளைப்போல் காற்றால் பரவக்கூடியதல்ல. ஜலத்தின் மூலமாகத்தான் அது பரவக்கூடியது. ஜனங்கள் குடிப்பதற்கும், ஸ்நானம், சுத்தம் செய்தல் முதலியவைகளுக்கும் உபயோகிக்கும் ஜலத்தின் மூலமாய்த்தான் அது விசேஷமாய்ப் பரவுகிறது. பின்வரும் முறைகளை அனுஸரித்தால் வாந்திபேதி பரவுவதைத் தடுக்க ரொம்ப உபயோகமாயிருக்கும்.

1. காலரா க்ருமியானது ஜலம், பால், ஆகாரம் ஆகிய இவைகள் மூலமாகத்தான் நமது தேகத்தில் புகுகின்றன. ஆகையால் காலராநோய் ப்ரபலமாயிருக்கும் ஸமயங்களில் நாம் உபயோகிக்கும் ஜலத்தையும் பாலையும் காய்ச்சி சுத்தம் செய்தே உபயோகிக்க வேண்டும். புதிதாய்த் தயார் செய்ததும் சூடாயிருக்கிறதுமான ஆகாரத்தையே சாப்பிட வேண்டும். ரொம்ப சுத்தமானதென்று நிச்சயமாய்ச் சொல்லக்கூடாத எந்த ஆகாரத்தையும் பானத்தையும் உபயோகிக்கக்கூடாது.

2. குடலில் உண்டாகிறதும் உணவு ஜீர்ணமாவதற்கு உதவுகிறதுமான காஸ்ட்ரிக் ஜூஸ் என்னும் புளிப்பான பாசக நீரானது காலரா க்ருமிகள் வளருவதைத் தடைசெய்யக் கூடியது. ஆகாரம் சாப்பிடுவதால் பாசக நீர் குடலில் சுரக்கிறதால், காலையில் வெளியே வேலைக்குப் போகுமுன் ஆகாரம் சாப்பிடுவது அவச்யமாகும். காடி, எலுமிச்சம்பழரஸம், புளியிட்ட குழம்பு ஆகிய புளிப்பு வகைகளால் குடலிலுள்ள புளிப்புத்தன்மை குறையாமலிருக்கும்.

3. காலரா பரவியுள்ள காலங்களில் பேதிக்கு மருந்து சாப்பிடக்கூடாது. வயிற்றால் போனால், உடனே மருந்துகொடுத்து அதை நிறுத்தவேண்டும். அஜீர்ணத்தை உண்டாக்கக்கூடிய எந்தப் பழவர்க்கங்களையும், காய்கறிகளையும் உபயோகிக்கக் கூடாது.

4. ரொம்ப வேலைசெய்து ச்ரமப்படுவதும், இரவில் அதிகநேரம் விழித்திருப்பதும் கூடாது. எப்போதும் உத்ஸாகமாகவே இருக்கவேண்டும். காலரா எங்கு வந்துவிடப் போகிறதோ என்று எப்போதும் கவலைப் பட்டுக்கொண்டிருப்பது பிசகு.

5. வீட்டு ஈயானது காலராவை ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டுக்கும், ஒரு மனிதனிடத்திலிருந்து இன்னொரு மனிதனுக்கும் பரவச்செய்வதில் முக்ய காரணமா யிருக்கிறது. ஆகையால் நமது ஆகாரத்தில் ஈ வந்து உட்காராதபடி பார்த்துக்கொள்ளவேண்டியது அவச்யமாகும். காலரா கண்டவருடைய மலத்தில் உட்

கார்ந்த ஈக்கள் நமது ஆகாரத்தின்மேல் வந்து உட்காருவதால், மலத்திலுள்ள நுண்ணிய காலரா க்ருமிகள் ஈக்கள் மூலமாக நமது ஆகாரத்தில் சேர்ந்து விடுகின்றன.

6. அசுத்தந்தான் எல்லா வ்யாதிக்கும் காரணமாகும். ஒவ்வொருவரும் தமது தேகத்தையும் உடைகளையும் சுத்தமாய் வைத்திருப்பதோடு, வீட்டையும் எப்போதும் சுத்தமாய்வைத்திருக்க வேண்டும்.

7. காலராவ்யாதி கண்டவர்களுக்கு சிச்ருஷை செய்தவர்களும், அந்த வ்யாதி கண்டவர் இருக்கும் வீட்டிலுள்ளவர்களும் சாப்பிடுமுன் தங்களுடைய கைகளைக்ருமிஹரமான மருந்துபோட்டு சுத்தம் செய்யவேண்டும். காலரா கண்டவர் இருக்கும் அறையில் இருந்துகொண்டு எதையும் சாப்பிடக்கூடாது. காலரா கண்டவர்களுக்கு உபயோகிக்கும் எந்த பாத்ரத்தையும் தக்கபடி மருந்துபோட்டு சுத்தம் செய்யாமல் பிறர் எவரும் உபயோகிக்கக்கூடாது. காலரா கண்டவர்களுடைய மலஜலங்களை கண்டவிடத்தில் இருக்கவிடக்கூடாது. வாந்தியையும் மலஜலத்தையும் பினைல், சுண்ணாம்பு ஆகிய இவைகளைப்போட்டு மூடவேண்டும். காலரா கண்டவர்கள் உபயோகித்த படுக்கைகளையும் துணிகளையும் ஜலத்தில் போட்டுக் கொதிக்கவைத்தோ, அல்லது சில நாட்கள் வெயிலில் போட்டோ சுத்தம்செய்த பிறகுதான் அவைகளை மற்றவர்கள் உபயோகிக்கலாம். காலரா கண்ட வீட்டிலுள்ளவர்கள் தங்களுடைய ஸொந்த குடங்களையும், யரக்கால்களையும் ஊர்ப் பொதுக்கிணற்றில் போட்டு ஜலம் மொள்ளக்கூடாது. மற்ற ஜனங்களை அவர்களுடைய குடங்களில் ஜலம் எடுக்கச் சொல்லி காலரா கண்ட வீட்டிலுள்ளவர்களுடைய பாத்ரத்தில் ஊற்றச் சொல்லவேண்டும்.

8. குளம் கிணறு முதலிய எல்லா ஜலாதாரங்களையும் அசுத்தமாகாதபடி ஜாக்ரதையாய்ப் பார்த்துக்கொள்ள வேண்டும். அவைகளில் பெர்மாங்கனேட் அப் பொடாஷ் என்னும் மருந்துச் சரக்கு போட்டு சுத்தம் செய்யவேண்டும். ஜலம் வைக்க உதவும் தோல் பைகள், பழைய மண் பாத்ரங்கள் ஆகிய இவைகளை தினந்தோறும் பெர்மாங்கனேட் அப்பொடாஷ் போட்டு சுத்தம் செய்யவேண்டும்.

9. குடி ஜலத்துக்கான கிணறுகளின் சுவர்களின்மேல் எவரும் துணி துவைக்கவும், அதில் நின்றுகொண்டு ஸ்நானம் செய்யவுங் கூடாது.

10. காலராக் காலங்களில் பின்வரும் மருந்துகளைக் கையில் வைத்திருப்பது நல்லது. (1) வாஸனையுள்ள கந்தக த்ராவகம் (Acid Sulphuric Aromt). (2) காம்பொர்டைன் (Camphordyne) (3) ஸ்பிரிட்ஸ் அப் காம்பர் (Spt. Camphor). (4) ப்ராந்தி (Brandy). கொஞ்சம் ஜலத்தில் ஆஸிட் ஸல்ப்யூரிக் ஆரோமாடம் என்னும் வாஸனையுள்ள கந்தக த்ராவகத்தில் 15 துளி விட்டுக் கலக்கி ஒவ்வொரு நாள் காலையிலும் குடித்து வந்தால் காலரா வராமல் தடுத்துக் கொள்ளலாம்.

இந்த யுத்த ஸமயத்தில் பொடாஸியம் பெர்மாங்கனேட் மருந்து ரொம்ப க்ராக்கியாயிருப்பதால், அதற்குப் பதிலாக சுண்ணாம்புக் கற்களை கிணறுகளை சுத்தம் செய்யவும் மலஜலங்களுக்கு மருந்து போடவும் உபயோகிக்கலாம்.

## YAHIL, THE PARIAH.

BY SEETHAPATHI.

## யாஹில் என்னும் பறைச்சி.

சற்றேறக்குறைய 360 வருஷங்களுக்கு முன் ஹிந்துஸ்தானத்தில் ஒரு கொடிய பஞ்சம் தோன்றி ஜனங்கள் மிக வருந்தினார்கள். ஆகாரத்திற்கு தான்யம் கிடைப்பது வெகு துர்லபமாயிருந்தது. அப்படியே கிடைத்தாலும் விலை ரொம்பவும் அதிகமாயிருந்தபடியினால் அவற்றை தனிகர் மாத்ரமேவாங்கி உயிர் பிழைப்பதாயிருந்தது. ஏழைகளை கவனிப்பவர் யாருமில்லாமல் போயிற்று.



அக்காலத்தில் ஒரு நதிக்கரையினருகாமையிலிருந்த ஒரு சிறு குடிசை வாயிலிலுட்கார்ந்துகொண்டு, தலைகுனிந்தவனாய், கண்களில் நீர் பெருக ஒரு பறையன் பின்வருமாறு புலம்பிக்கொண்டிருந்தான். "பகவானே, ஒருவன் ஏழையாய்ப் பிறந்ததனாலேயே உலகத்தார் கேவலமாய் நடத்துவது ந்யாயமோ? அதிலும் பறையனென்றால் அவனை நாயைக்காட்டிலும் தாழ்ந்தவனாக எண்ணுகிறார்களே, ஜனங்கள்! தாழ்மையானவும் ரொம்பவும் கஷ்டமானவுமான வேலைகளை எல்லாம், ஏழைப்பறையன் செய்ய, அதன்பலனாகக் கிடைக்கும் தான்யங்களை அனுபவித்து ஸுகமாய் வாழும் மேன்மக்கள் அவனையே கடோரமாகவும் கேவலமாகவும் நடத்துகிறார்களே! உலக ஸுகங்களை அனுபவிக்க அவனுக்கு எள்ளத்தனையுங் கூடாதென்று விதித்திருக்கிறதா? எவ்வளவோ ச்லாக்யமானதும், எண்ணியறியவும் முடியாத பல ஜன்மங்களில் கிடைப்பதற்கரிதுமான ஒரு மனுஷ்ய ஜன்மத்தை நானடைந்தும், என்னைப்போலவே ஜன்மமெடுத்தும், ஆனால் அவர்கள் செய்த ஒரு புண்யவசத்தால் மேலான ஜாதியில் மாத்ரம் பிறந்த மேன்மக்கள் என்னைத் தங்களுடன் சேர்க்கக் கூடாதென்னும்பொழுது, அவர்கள் தான் மேன்மக்களாவரோ? பகவானே, இக்கொடிய பஞ்சத்தில் என்னையும், என் குடும்பத்தையும் ஆகாரம் கொடுத்து ரக்ஷிக்க உலகத்தில் யாருமில்லாமலா போனார்கள்? வேலைசெய்து ஸம்பாதிக்கவும் சக்தியில்லாததினால், மூன்றுநாளாக சரியான ஆகாரமில்லையே. இனிமேல் என்னால் ஸஹிக்க முடியாது. உலகத்தில் மெய்யான ஸுகம் ஒன்றும் கிடையாது. அதிலும் பறையனுக்கு முற்றிலும் கிடையாது. ஆகையினால் உயிரைமாய்த்துக் கொள்வதைத் தவிர இனி எனக்கு வேறுவழி கிடையாது." என்றிவ்வாறு தன் கஷ்டநிலைமையை நினைத்துப் புலம்பினவனாய் நிமிர்ந்து பார்த்தான். நதிக்கு அக்கரையில் தூரத்தில் யாரோ ஒருவன் குதிரையின்பேரில் வேகமாய் வருவதை கவனித்தான். குதிரை கரை வந்ததும் நிற்குமென்று எண்ணினான். ஆனால் குதிரையோவெனில் கரைவந்ததும் நிற்காமல் ஸாரதியுடன் தண்ணீரில் குதித்தது. நதி பூர்ண ப்ரவாகமாகப் போய்க்கொண்டிருந்தபடியினால் அதிக ஆழமாயிருந்தது. ஆகவே தன் பளுவுடன் கொஞ்சதூரம் நீந்தினதும் சற்றுநேரத்துக்கெல்லாம் முழுகி முழுகி எழுந்திருந்தது. இதை ஸவாரிசெய்பவன் கண்டதும் தண்ணீரில் குதித்தான். அவனும் கொஞ்சதூரம்நீந்தினபிறகு கைகள் சோர்ந்துபோய் தண்ணீரைக் குடிக்க ஆரம்பித்து முழுகி முழுகியெழுந்திருந்தான். இன்னும் இரண்டொரு நிமிஷங்களுக்கெல்லாம் விண்ணுலகம் சென்றுவிடுவான்போலிருந்தது. இவையெல்லாவற்றையும் இக்கரையிலிருந்து பார்த்த உலுவீரன் என்னும் நமது பறையன் தனது கஷ்டத்தை மறந்தவனாய் வேகமாய் ஓடிவந்து தண்ணீரில் குதித்து, தத்தளிப்பவனை மெதுவாகக் கரை கொண்டுவந்து சேர்த்தான். அவனொரு மஹம்மதியனாகக் காணப்பட்டான். பிறகு கொஞ்ச நேரத்திற்குள் பறையன் அவன் சரீரத்தில் சூடேறச்செய்ததினால், மஹம்மதியனுக்கு ப்ரஜ்ஞை வரவும் விழித்துப்பார்த்து, தன் பக்கத்தில் ஒரு பறையன் உட்கார்ந்துகொண்டு தனக்கு சிச்ருஷை செய்வதை கவனித்து ஆச்சரியமடைந்தவனாய் 'நீ யாரப்பா? உன்னைப் பார்த்தால் ஹிந்துமதஸ்தன் மாதிரியாகத் தோன்றுகிறதே. ஹிந்துக்களுக்கு மஹம்மதியர்களைத் தொட்டால் ஆசாரக் குறைவல்லவோ. அப்படியிருக்க, அம்மதத்தைச் சார்ந்த நீ என்னைத் தொட்டுக் காப்பாற்றின காரணமென்ன" என்றான். உலுவீரன் கண்களில் நீர்ததும்பினவனாய், "நீ உரைப்பது வாஸ்தவந்தான். ஹிந்துமதத்திலும் மேன்மக்கள் மாத்ரமே அப்படி ஆசாரங்கொண்டாடுகிறார்களேயொழிய, பறையனுக்கு யாதொன்றும் கிடையாது. பறையனுக்கு தன் மதத்தாருள்

யாதொரு மரியாதையும், கௌரவமும், ஸ்வதந்த்ரமும் கிடையாது என்று விதித்திருக்கிறது. ஆகையினால் அவ்வளவு கேவலமாக நடத்தப்படும் ஒரு பறையனான நானும் ஒரு ஜீவனை மரணத்தினின்றும் தப்புவிக்க பாக்யம் பெற்றிருந்தேனேயென்பதை நினைக்க ரொம்பவும் ஆனந்தமாயிருக்கிறது. ஆகிலும் நீ வேறொருவனால் காப்பாற்றப்பட்டிருந்தால் நலமா யிருந்திருக்கும். பஞ்சத்தின் காரணமாக மூன்று நாளாக பட்டினியினால் வருந்தும் ஒரு அநாதையான பறையனிடம் உனக்கென்ன ஸம்ரக்ஷணை கிடைக்கப் போகிறது. ஈசா! நீ வேறு எவர் கையிலாகிலும் அகப்பட் டிருக்கலாகாதா!" என்றழுதான். மஹம்மதியன் எழுந்திருந்தான். "நீ என்னைக் காப்பாற்றினதின் மூலமாக ஒருக்கால் உனக்கும் நற்காலம் உண்டாகலாம். என் குதிரையும் கரைவந்து சேர்ந்துவிட்டது. அதின் ஜேணத்தில் வேண்டிய ஆகாரமிருக்கிறது. நல்லது, உன் குடிசைக்குச் செல்வோம் வா" என்று சொன்னான். இதற்குள்ளாக தன் பளுவு நீங்கினதும் ஸௌலபமாக கரை வந்துசேர்ந்த குதிரையைப் பிடித்துக்கொண்டு இருவரும் குடிசைவந்து சேர்ந்தார்கள். ஜேணத்திலிருந்த ஆகாரத்தை எல்லாரும் புசித்தார்கள். அன்று மரணத்தினின்றும் பறையன் குடும்பம் தப்பிற்று. ஆனாலும் அன்றிரவு மஹம்மதியனுக்கு கடும் ஜ்வரமும் காய்ச்சலுங்கண்டு படுக்கையில் விழுந்தான். இதைக்கண்டதும் உலுவீரன் ரொம்பவும் வருத்தத்தை யடைந்தான். ஜ்வரம் நாளுக்குநாள் அதிகமாயிற்று. ஆகவே பறையன் தன்னை மரணத்தினின்றும் தப்புவித்த ப்ரபுவுக்கு ஏதாகிலும் ஆபத்து நேரிடாமலிருக்க பகவானை ப்ரார்த்தித்தான். ஜேணத்தில் வேறொரு மூட்டையில் 6000-ரூபாய் நிறைந்த ஒரு பை யிருந்தது. அதினின்றும் பறையன் செலவுக்கு வேண்டுமான பணத்தைமாத்ரமே தினம்எடுத்து கணக்கெழுதி வந்தான். பகவானுடைய அனுக்ரஹத்தால் ஒரு மாஸத்திற்கெல்லாம் மஹம்மதியன் ஸ்வஸ்தமடைந்ததும், தான் வெகுநாள் உலுவீரன் குடிசையில் தங்கிவிட்டதாகத் தெரிந்துகொள்ளவும், 'ஏ உலுவீரா, நான் அதிக நாள் இங்கு தங்கிவிட்டேன். இனிமேலாவது தாமஸமில்லாமல் என் வழி செல்லவேண்டும். ஸ்நேகிதனே! இந்த ஒருமாஸகாலம் உன் நிழலின்கீழ் நான் பெற்ற அன்பையும் ஆதரவையும் ஒருக்காலும் மறக்கமாட்டேன்" என்றான். உலுவீரன், "நான் செய்த காரியம் எவனும் செய்திருக்கவேண்டிய ஒரு கார்யமே தவிர வேறில்லை. மேலும் உங்களாலல்லவோ நானும் என் குடும்பமும் இதுவரையில் உயிர் பிழைத்திருப்பது" என்று பதிலுரைத்தவனாய் தான் செலவழித்த பணத்திற்கு கணக்கையும் பணப் பையையும் கீழே வைத்தான். மஹம்மதியன் சிறிதுநேரம் யோசித்துவிட்டு, 'நல்லது உலுவீரா, நீ யாரை மரணத்தினின்றும் தப்புவித்தாய் தெரியுமா' என்றான். பறையன், "யாரா யிருந்தால் என்ன, பறையனையும் அன்புடன் பார்க்க மனமுள்ள ஒரு ஸ்நேகிதனிருக்கிறான் என்பதே எனக்குப் போதுமானது" என்றான்.

மஹம்மதியன், "மித்ரா, உன் நிழலின்கீழ் ஒருமாதகாலம் வளர்ந்தவன் டில்லி பாதுஷா ஹுமாயூன் சக்ரவர்த்தி. என்னுடைய ராஜ்யத்தை ஒரு துஷ்டன் அபகரித்துக்கொண்டு என்னையும் துரத்திவிட்டபடியால், மற்ற அரசர்களின் உதவியைக்கொண்டு அந்த துஷ்டனை போரில்வென்று மீண்டும் ராஜ்யத்தை யடையுமளவும் நான் இவ்விதமாக ஓரிடமும் நிரந்தரமில்லாமல் திரிந்துகொண்டிருக்க வேண்டியிருக்கிறது. நல்லது, தற்காலம் இதைப் பெற்றுக்கொள். என்னுடைய நற்காலம் மறுபடியும் வந்தால், அப்பொழுது என்னை வந்து பார் என்று சொல்லி, தன் கை விரலில் போட்டிருந்த ஒரு விலையுயர்ந்த மோதிரத்தையும் இரண்டாயிரம் ரூபாயடங்கிய ஒரு பையையும் பறையன் கையில் கொடுத்தான்.



தன் குடிசையில் ஒருமாத காலம் தங்கினவன் டில்லி பாதுஷாவென அறியவரவும் உலுவீரனும் அவன் மனைவியும் ஹுமாயூன் காலில் விழுந்து, "பாதுஷா, எங்களுக்கு தெரியாமல் போயிற்று. நாங்கள் இதுவரையில் நடந்துகொண்டதில் ஏதாவது பிசகிருந்தால் மன்னித்தருள வேண்டும்" என்றுசொல்லி வணக்கமாயிருந்தான். பாதுஷா பறையன் குழந்தைகளை முத்தமிட்டுவிட்டு விடைபெற்றுச் சென்றான்.

உலுவீரனுக்கு யாஹில் என்ற ஒரு பெண் குழந்தையும் இரண்டு ஆண்குழந்தைகளுமிருந்தன. குழந்தைப் பருவத்திலேயே யாஹில் வெகு அழகாயிருந்தாள். வருஷங்கள் செல்லச் செல்ல இன்னும் ரூபவதியானாள். டில்லி பாதுஷா கொடுத்துவிட்டுப்போன த்ரவியத்தைக்கொண்டு உலுவீரன் மாட்டு வ்யாபாரம் செய்து சில வருஷங்களுக்குள்ளாக தனிகனானான். தன் பெண்ணுக்கு ப்ராயம் பதினைந்து ஆனதும், அவள் விவாஹத்தைக்குறித்து பறையன் முயற்சியெடுக்க ஆரம்பித்தான். யாஹிலுடைய மனதை அவன் முதலில் அறியவில்லை.

அவள் பால்யமுதல் தன் ஜாதியாரை ஒருவித வெறுப்புடனேயே பார்த்துவந்தாள். ஏனெனில் பறையனுக்கு உலகத்தில் யாதொரு மரியாதையும் ஸ்வதந்த்ரமு மில்லாமலிருப்பதை கவனித்து மிக்க மனம் நொந்தாள். தன் குலத்தின் ஏழ்மைத்தனத்தையும் தான் அக்குலத்திலிருப்பது தகுதியல்லவென்பதையும் எப்பொழுதும் நினைத்து மனமுருகினாள். பறையரில் யாரையாவது விவாஹம்செய்துகொண்டு தன் ஜாதிக் கட்டுக்குள்ளிருக்க அவளுக்கிஷ்டமில்லை. ஆகையினால், விவாஹத்தைக் குறித்து அவளுடைய எண்ணம் வேறாயிருப்பதை அறியவும் உலுவீரன் ரொம்பவும் கவலையடைந்தான். பறைக் கூட்டத்தில் எத்தனையோ பேர் அவளை விவாஹம் செய்துகொள்ள வந்தார்கள். எல்லோரையும் உதறிவிட்டாள். கௌதமன் என்ற ஒருவன் இவளை மிகவும் நேசித்துவந்தான். குணத்தில் அவன் எவ்வளவோ சிறந்தவனாயிருந்தும், அவன் செய்யும் தொழிலை நினைத்து அவனையும் மறுத்துவிட்டாள். ஒருநாள் யாஹில் நதியில் ஸ்நானம் செய்துகொண்டிருந்த ஸமயத்தில் ஒருமுதலை அவளை விழுங்கவருவதைக் கண்டு அலறினாள். திடீரென்று முதலைக்கும் தனக்கு மிடையில் யாரோ ஒருவன் குதிக்கவும், முதலை அவனைக் கவ்விக்கொண்டது. அவன் யாஹிலைப்பார்த்து 'உனக்காக நான் உயிரைவிட்டேன்' என்றான். அதற்குள் முதலை அவனை ஆழத்தினுள் இழுத்துக் கொண்டு போய்விட்டது. யாஹிலுக்காக உயிரைக்கொடுத்து அவளைக் காப்பாற்றினவன் கௌதமன். இதனால் அவள் அடைந்த விஸனத்துக்கு எல்லையில்லை. ஆனபோதிலுங்கூட தன் பழைய பிடிவாதத்தை மாற்றாமலே யிருந்தாள். ஒருநாளிரவு அவள் படுக்கையில் படுத்ததும் கழுத்தில் ஒரு சர்ப்பம் சுற்றிக்கொண்டது. ஹோவென் றலறினாள். எல்லாரும் பயந்தார்கள். உலுவீரன் பகவானை ப்ரார்த்தித்தான். பாம்பு கழுத்தைவிட்டு தீண்டாமல் இறங்கிப்போயிற்று. இவ்விதம் யாஹில் இரண்டுதடவை மரணத்தினின்றும் ஈசனின் அனுக்ரஹத்தால் தப்பினாள். அதை நினைத்தே அவள் பகவான் தன்னை ஏதோ காரணத்திற்காக இம்மாதிரி காப்பாற்றி வருகிறாரென்று எண்ணினாள். மேலும் தான் உன்னத ஸ்திதியிலிருக்கப்போகிறதாக அவள் மனதில் ஒருவித எட்டின நம்பிக்கை உண்டாயிற்று. பக்கத்து ஊரில் ஒரு பேர்பெற்ற குறிசொல்பவன் இருப்பதாகக் கேள்விப்பட்டு அவனைப் போய்ப் பார்த்தாள். அவள் மேலான ஸ்திதியிலிருக்கப் போவதாகவும், சீக்ரம் பாதுஷா இருக்குமிடம் செல்ல வேண்டுமென்றும் குறிக்காரன் சொன்னான். யாஹில் உடனே தன் எண்ணத்தை தன் தகப்பனிடம் தெரிவிக்கவும், அவனும் அதற்கிணங்கினவனாய் குடும்ப ஸஹிதமாய் டில்லிமாநகர்

வந்து சேர்ந்து ஒரு பெரிய வீடு வாடகைக்கு வாங்கி வெகு கௌரமாக வஸித்து வந்தார்கள்.

யாஹில் தினம் ஸாயங்காலம் வெளியில்போய் வருவதுண்டு. வெகு ஸௌந்தரவதியானதினால் வெகுபேர் அவள்மேல் காதல் கொண்டார்கள். அவர்களுள் மந்த்ரி பெய்ராம்கானுடைய குமாரன் ஒருவன். அவன் மெதுவாக உலுவீரனை ஸ்நேகம் செய்துகொண்டு தினம் அவன்வீட்டுக்கு வந்து போய்க்கொண்டிருந்தான். அவன் யாஹிலை எவ்விதத்திலும் அடையக் கருதியிருந்தான். அவனுடைய எண்ணம் யாஹிலுக்கும் அவள் தகப்பனுக்கும் தெரியாமலிருக்கவில்லை. இப்படியிருக்க, ஒருநாள் மந்த்ரி குமாரன் யாஹில் தனிமையாயிருக்கும் ஸமயத்தில் அவளிடம் வந்து, 'யாஹில், உன்னைக்கண்டது முதல் என் மனம் உன்னையே நாடியிருக்கிறது. அது உனக்குத் தெரியாமலிராது. ஆனால் பகிரங்கமாக உன்னை மணம் முடிக்கிறதென்றால் என் குலத்தார் ஸம்மதியார்கள். ஆகையினால் மணம்முடிக்காமலே உன்னை ரொம்பவும் ப்ரியமாயும் கௌரவமாயும் வைத்துக் கொள்ளலாமென் றெண்ணி யிருக்கிறேன். நீ இதற்கு ஸம்மதப்படுவாயா?" என்றான். யாஹில் இச்சொற்களைக் கேட்டதும் கடுஞ்சினங்கொண்டு ஒரு நிமிஷநேரம் ஆலோசித்துவிட்டு, பிறகு, "மந்த்ரிகுமாரா, நீ ஏதோ உன்னதமான பதவியிலிருப்பதனாலேயே ஜாதியிலும் பதவியிலும் தாழ்ந்த என்னைப்போலொத்தவர்களை என்னமாதிரியாக வேண்டுமென்றாலும் நடத்தலாமென்ற ஸ்வதந்த்ரம் பெற்றிருக்கிறதாக எண்ணவேண்டாம். இதுவரையிலும் நீ என்னுடன்பழகினதிலாவது நான் அவ்வளவு கேவலமாக வழிதவறிப்போவேன் என்ற ஒரு நம்பிக்கையுண்டாக ஏதாவது அறிந்துகொண்டாயா? ஜாதியில் கேவலம் பறைச்சியானாலும், ஸ்த்ரீகளின் கற்பையறிந்துள்ள கௌரவமான புருஷனை மணம்புரிவேனேயல்லாது, ஒரு மந்த்ரி குமாரனுக்கு தாஸியாக யிருப்பேனென்று ஒருக்காலும் நினையாதே. இனிமேல் இதைக்குறித்து என்னிடம் பேசவேண்டாம்" என்றுரைத்துவிட்டு உள்ளே சென்றாள். மந்த்ரி குமாரன் தான்செய்த மதியீனமான காரியத்தை நினைத்து கொஞ்சநேரம் வருத்தப்பட்டு, பிறகு தன் வீடு போய்ச் சேர்ந்தான்.

ஒருநாளிரவு மணி பத்து ஆகியும் வெளியில் போன யாஹில் திரும்பிவரவில்லை. உலுவீரன் பயந்துபோய் தேட ஆரம்பித்தான். எங்கும் அகப்படவில்லை. பொழுதுவிடிந்தும் யாஹிலைக் காணோம். பறையனும் அவன் மனைவியும் கடைசியாக மந்த்ரி குமாரன் ஏதோ விஷமம் செய்திருக்கவேண்டுமென்று நிச்சயித்து, அந்த ஸமயம் ஹுமாயூன்பாதுஷா தன் சத்ருவைவென்று மறுபடியும் ராஜ்யபாரம் செய்து வந்தானாகையால், தாங்கள் முன்னொருகாலத்தில் அவனுக்குச்செய்த உபகாரத்தை நினைத்து ந்யாயம்விசாரிப்பானென்று எண்ணி, உலுவீரன் வேகமாய் பாதுஷாவின் தர்பார் வந்துசேர்ந்து "ந்யாயமில்லையா, ந்யாயமில்லையா" என்றுரக்கச் சத்தமிட்டான். பாதுஷா உடனே அவனை வரவழைத்து, அவன் இன்னானென்று ஞாபகத்துக்கு வரவும் இருகத்தழுவிக் கொண்டபின், அவனது யோகக்ஷேமங்களை விசாரித்தான். உலுவீரன் ஸகலத்தையும் தெரிவித்தான். உடனே ஹுமாயூன், "ஏ மந்த்ரி குமாரா, எழுந்திரு, இந்த அபவாதத்திற்கு என்னபதில் சொல்லுகிறாய்" என்று கோபத்துடன் வினவினான். உடனே மந்த்ரி குமாரன் தன் குற்றத்தை ஒப்புக்கொள்ளவும், சிறைச்சாலையில் அடைக்கப்பட்டான். யாஹில் தகப்பன் வீடுவந்து சேர்ந்தாள். பாதுஷா வெகுநேரம் வரையில் உலுவீரனுடன் பேசிவிட்டு, கடைசியாக "உலுவீரா, நான் உன்னிடம் ஒரு கார்யம் செய்யும்படியாக வேண்டிக்கொள்ளுகிறேன். அதாவது உன்னுடைய மதத்தாருள் உனக்கு யாதொரு ஸ்வதந்த்ரம் இல்லை என்றுவிட்டபடியால், நீ இஸ்லாம் மதத்தை தழுவும்



படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் உனக்கு ஏராளமானஐச்வர்யத்தையும்கொடுத்து ஒரு பெரிய ப்ரபுவாக்க எண்ணியிருக்கிறேன். என்எண்ணத்தைநிறைவேற்றுவாயா?" 'எனவும்' உலுவீரனும் ஸம்மதித்து குடும்பத்துடன் மஹமதியன் ஆனான். சில நாட்களாகியும் மந்த்ரிகுமாரன் சிறைச்சாலையிலிருந்து விடுதலை பெறாததை யாஹில் கேள்விப்பட்டு, தனக்கும் அவனுக்கும் ஆதியிலிருந்த ஒரு நேசத்தை நினைத்து தகப்பனிடம் தன்னபிப்பிராயத்தைத் தெரிவிக்கவும், அவன் பாதுஷாவிடம்சென்று மந்த்ரி குமாரனை விடுதலை செய்யவேண்டும் என்றும், அவனுக்கு யாஹிலிடமிருந்த ஒருஅளவு மிஞ்சிய நேசத்தினால் அவளைத்தூக்கி சென்றிருந்தாலும், வேறு எவ்விதத்திலும் அவளுடைய கற்பு நிலையைக் கெடுக்காததினால், அவள் அவனை மன்னித்துவிட்ட படியால், பாதுஷாவும் அவனை மன்னிக்க வேண்டு மென்று ப்ரார்த்தித்தான். அப்படியே ஹுமாயூனும் தன்னுடைய ஸ்நேகிதனுடைய வேண்டுகோளுக் கிணங்கி தன் மந்த்ரி குமாரனை சிறையினின்றும் விடுவித்து அன்றையதினமே தானுமிருந்து, இருவருக்கும் மணம் முடித்துவைத்தான். யாஹிலும் உன்னத ஸ்திதியைப்பெற்றாள். பறைக்குலம் என்ற தாழ்ந்த ஜாதியினின்றும் அகன்று கொண்டாள். குறிக்காரியின் சொற்களும் பலிதமாயின. யாஹில் தன் கணவனிடம் அநேக புத்ரர்களைப் பெற்று வெகுகாலம் ஸௌக்யமாக வாழ்ந்தாள். இச்சிறு கதையினின்றும் நாம் தெரிந்துகொள்வன யாதெனில், பட்டினியினால் மரணமடைய விருந்த பறையன் பாதுஷாவினால் காப்பாற்றப் பட்டதினால், பகவான் எக்காலத்திலும் தன்னை நாடினவர்களைக் கைவிடுவதில்லையென்பதும், யாஹிலுடைய சரித்ரத்தினால் இனி நடக்கப் போகும் காரியங்கள் சில ஸமயங்களில் நமக்கே ஒருவாறு தெரியவருகின்றன என்பதும், ஹிந்துக்கள் தாழ்ந்த ஜாதிகளை சரிவர நடத்தாவிட்டால் அந்த தாழ்ந்த ஜாதியார்கள் வேறு மதத்தில் சேர்ந்துவிடக்கூடுமென்பதுமே.

ஸீதாபதி.

# ANGER.

BY PANDIT V. SUBRAMANIA AIYAR.

## கோபம்.

'ஆறுவதுசின'மென்பது ஆத்திசூடிசெய்யுள். இதன் தாத்பர்யம் கோபத்தை அடக்கவேண்டுமென்பது. சாந்தமுடைய மனிதனே ஸௌக்யமடைகிறான். சாந்தமடையாதவன் கஷ்டமடைகிறான் என்று சொல்லவும் வேண்டுமோ? கோபம் மனதைத் தன் வசப்படுத்திக்கொண்டு கிளம்பி, அநேக தீச்செயல்களைச் செய்துவிடும். அப்படிப்பட்ட கோபத்திற்கு தான் வசப்படாமலிருப்பவனே பெரியவன். ஒரு பெரிய குளத்தின் கரையை எளிதில் உடைத்து அயல் க்ராமங்களத்தனையையும் பாழாக்கி விடலாம். அப்படிப்பட்ட குளத்தை அவ்வாறு உடைபடாமல் காப்பாற்றுவதல்லவா கடினமானது.

> உள்ளக் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
> கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளந்
> தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
> விடுத்த லரிதோ விளம்பு.

பெரியவர்கள் தமக்கு எவ்வளவு கோபம் வந்தாலும் வெளிக்காட்டாமலும், அதற்கு இடங்கொடுக்காமலும் அடக்கிக்கொள்ளுவார்கள். நான், எனது, என்ற அபிமானம் ஒருவனுக்கு இருந்தால் அவனுக்குத் தொந்திரவு நேரிட்ட ஸமயத்திலும், அவனுடைய பொருள்களுக்கு உபத்ரவம் நேரிட்டபோதும், அவற்றைச் செய்தவரிடத்தில் கோபம் உண்டாகும். உலக அபிமானமற்றவர்கள் எப்பொழுதும் கோபத்தை அடைவதில்லை.

கோபமூர்த்தியா யிருந்து க்ஷத்ரியர்களை 21-தலைமுறை தலை காட்டாம லடித்துக்கொன்ற பரசுராமரை யாவருமறிவார்கள். அவருடைய பிதாவின் பெயர் ஜமதக்னி மஹரிஷி. அவர் ரொம்ப சாந்தமுள்ளவர். அவர் தம்முடைய தகப்பனருடைய ச்ராத்தத்திற்காகப் பால் வாங்கிவைத்திருந்தார். அந்த மஹரிஷியின் பொறு

மையைப் பரீக்ஷிப்பதற்காக தர்ம தேவதை ஒரு கீரிப்பிள்ளையின் ரூபத்தை எடுத்து வந்து, அப்பாலினருகில் சென்று அதனைக் கொட்டிக் குப்புறக் கவிழ்த்துவிட்டது. இக்கார்யம் நடந்து வெகு நாழிகை ஆகியும், மகரிஷி இதைப்பற்றிக் கவனிக்கவில்லை. பால் யாரால் கொட்டப்பட்டது முதலிய விஷயங்களைப் பற்றி விசாரணை ஏற்படவுமில்லை. இதுகண்டு ஸந்தோஷித்த தர்மதேவதை தன் ஸ்வய உருவத்துடன் அம்மஹரிஷி முன்னால் தோன்றி பின்வருமாறு சொல்லிற்று. "ஓ! மஹரிஷியே! உம்முடைய கோப மின்மைக்கு ரொம்பவும் மெச்சினேன்! தங்களுடைய பொறுமையைப் பரீக்ஷிக்க வேண்டியே நான் கீரிப்பிள்ளை யுருவமாய் வந்து பாலைக் கொட்டினேன்! தங்களைப்போல் பொறுமையுள்ள மஹரிஷியை நான் கண்டதில்லை. தங்களுக்கு மேல் உலகத்தில் விசேஷமான நன்மைகள் தயாரா யிருக்கின்றன" என்றது. அதற்கு மஹரிஷி "ஓ! தர்மதேவதையே! எனக்கும் பாலுக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை; நான் பிதுர்க்களுக்கென்று பாலை அப்போதே வைத்துவிட்டதனால், அது எப்படிப் போனாலும் எனக்குக் கோபம் வருவதற்குக் காரணமில்லை; அது பிதுர்க்களைச் சேர்ந்தது" என்றுசொல்லி மௌனமானார். ஆகவே, பெரியவர்கள் எப்பொருள்களின்மீதும் அபிமானம் வைக்காம லிருந்ததனால், அவர்கள் கோபத்தை யடைந்ததில்லை. அவர்கள் தபஸை தனமாக நினைத்துக் காப்பாற்றினார்களேயன்றி, அவர்கள் கோபத்தைக் கைக்கொண்ட தில்லை. இவ் விஷயத்தை தண்டகாரண்யத்தில் ஸ்ரீராமன் வனவாஸம் செய்யப் புறப்பட்டு வந்தபோது மஹரிஷிகள், தம்மைப் போலுள்ள மஹரிஷிகளின் தலைகள் உருண்டு கிடப்பதைக் காட்டி, இவை கொடிய ராக்ஷஸர்கள் செய்த வேலையென்று சொல்லி, தம் கோபத்தினால் அந்த ராக்ஷஸர்களைச் சாம்பலாக்கி விடக்கூடு மாயினும், தபஸைத் தனமாகப் பாவித்ததனால் தாங்கள் பொறுமையுட னிருந்ததாகச் சொன்னார்கள். ஆகவே, கோபங்கொண்டு ஒரு கார்யத்தைச் செய்யத்தக்கவன் கோபம் கொள்ளா திருத்தலே சிறந்ததாகும்.

மிகவும் பலமுடையவர்களைக் கோபிப்பவர் மலையின்மேல் மோதும் மண்பாத்ரம்போல் உடைந்து கெட்டுப்போவார். தமக்கு ஸமானமானவர்களைக் கோபிப்பவர் ஸமபலமுள்ள புலிகள் ஒன்றை யொன்றடித்துக்கொண்டு மடிந்து போவதுபோல் கெட்டுப்போய்விடுவார்கள். தமக்குக் கீழ்ப்பட்டவரைக் கோபிப்பவர், பதினறடி வேங்கை எலியை எதிர்ப்பதற்கு ஸமானமாகும்.

கோபத்தை யடக்குதலே சிறந்தது. த்ரௌபதையை துச்சாஸனன் சபையில்கொண்டுவந்து மானபங்கப்படுத்தியபொழுது பீமனுக்கும் மற்றும் நால்வருக்கும் எழுந்த கோபத்தைச் சொல்லிமுடியுமா? சொத்தை எள்கள்போலாயினார் வறுபட்ட எள்கள் போன்றவர் என்று துர்யோதனதியர் ஏது சொல்லியும் அவர்களுக்குப் பதில் சொல்லாமல் வனவாஸம் செய்யப் புறப்பட்ட பாண்டவர் பொறுமையாய்ப்போனதனால் எந்த விதத்தில் கெட்டுப்போனார்கள். அவ்வாறே கீசகன் த்ரௌபதியைத் தூரத்திக்கொண்டு வந்தபோதும் பீமனுக்குக் கோபம் பொங்கிவழிந்தது. அப்போதும் பூமிதேவிபோன்ற பொறுமையுடைய யுதிஷ்டிரர் ஜாடைகாட்டிப் பீமஸேனன் கோபத்தை சாந்தப்படுத்தினார். அப்படிக் கோபத்தை ஜயித்ததனாலன்றோ தர்மம் பஞ்சபாண்டவர் பக்கத்தில் நின்று பூமியை ஜயித்துக்கொடுத்தது. கோபமானது பாபம், கொலை முதலியவற்றிற்குக் காரணமாதலால், கூடுமான வரையில் கோபத்தை எவரும் மேற்கொள்ளா திருத்தலே நன்மையானது.

பண்டித-வி. ஸுப்ரமண்ய ஐயர்.



# INDIAN INDUSTRIAL COMMISSION.

## இந்திய கைத்தொழில் கமிஷன்.

(ஆடி ௴-த்து ஸஞ்சிகையில் 324-ம் பக்கத்தொடர்ச்சி).

(சென்ற மாஸத்து ஸஞ்சிகையில் கைத்தொழில் கமிஷன் விசாரிக்கப் போகும் ப்ரச்னைகளில் சிலவற்றை எழுதினோம். மற்ற ப்ரச்னைகள் பின்வருமாறு.)

பின்வரும் விஷயங்களைப் பற்றியும் ஸாக்ஷிகளை விசாரிக்கலாம்.

1. தேச நிலைமையின் கணக்கு விவரங்களையும் வ்யாபார விஷயங்களையும் சேகரித்து வெளியிடுவதற்கு இப்போதுள்ள ஏற்பாடானது எவ்வளவு தூரம் ச்லாக்யமானது.

2. முக்யமான கைத்தொழில்களுக்காக, ப்ரத்யேகமான பத்ரிகைகள் ஸ்தாபிப்பதும், பொதுவாய் கைத்தொழில் வ்யாபார விஷயங்களுக்காக பத்ரிகைகள் ஸ்தாபிப்பதும், அல்லது அப்படி ஸ்தாபிப்பதற்கு உதவிசெய்வதும் எவ்வளவு தூரம் ப்ரயோஜனப்படும்?

3. காட்டிலாகா, பூதத்வ இலாகா போன்ற டிபார்ட்மெண்டுகளால் ப்ரசுரம் செய்யப்பட்டு வரும் புஸ்தகங்களால் வ்யக்தமான நன்மைகள் ஏதாவது ஏற்பட்டிருக்கின்றனவா?

4. ஒழுங்காகவும் ஏற்பாடாகவும் நடைபெறுத வீட்டுத் தொழில்களைச் சேர்ந்த விற்பனை ஸாமான்களை பலர் அறியும்படி செய்யவும், விற்கவும் வேண்டி வ்யாபார ம்யூஸியங்களும், விற்பனை ஏஜெண்டுகளும் அல்லது வ்யாபார பண்டக சாலைகளும் ஏற்படுத்துவது யுக்தமா?

5. ஒரு குறிப்பிட்ட காலத்துக்கொருதடவை கைத்தொழில் காட்சிசாலைகள் நடத்துவது.

6. இந்தியாவில் ஒவ்வொரு மாகாணத்தின் கைத்தொழில் வ்யாபார விஷயங்களையும் கவனிக்க மற்ற மாகாணங்களிலும், இந்தியா முழுவதுக்கும், க்ரேட்ப்ரிட்டனிலும், குடியேற்ற நாடுகளிலும், அன்யதேசங்களிலும் வ்யாபார ப்ரதிநிதிகள் ஏற்படுத்துவது.

7. விற்பனைக்கு வரும் பொருள்களின் தாரதம்யத்தை நிர்ணயித்து ஸர்க்காரில் ஸர்ட்டிபிகேட்டுகள் கொடுப்பது; அதற்காக பொருள்களின் தன்மைகளை ஆராய்ச்சிசெய்ய ஆராய்ச்சி சாலைகள் ஏற்படுத்துவது.

8. ட்ரேட்மார்க் என்னும் வ்யாபாரக் குறியீடுகளையும், பேடண்ட் செய்வது விஷயமான சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவருவதையும் பற்றி ஒழுங்குகள் செய்யவேண்டுமா?

9. கைத்தொழில் கம்பெனிகளுக்காக நிலம் வாங்குவது விஷயமாக இப்போதுள்ள சட்டம் எவ்வளவு தூரம் ஏற்றதாயிருக்கிறது.

**கைத்தொழில்களுக்கு ஸர்க்கார் உதவி செய்வது**—கைத்தொழில் முயற்சிகளுக்கு பண உதவியும், சாஸ்த்ரீய யோசனை உதவியும் செய்வது விஷயமாய் உள்ள அனுபோகங்களைப்பற்றி ஸாக்ஷிகளை விசாரிக்கவேண்டும். ஏற்கனவேயுள்ள அல்லது புதிதாய் ஸ்தாபிக்கப்படும் கைத்தொழில்களுக்கு கவர்ன்மெண்டார் எவ்விதம் உதவி செய்யலாம் என்பதைப்பற்றியும் ஸாக்ஷிகளினுடைய அபிப்ராயங்களைக் கேட்கலாம்.

பின் வருமாறு கவர்ன்மெண்டார் கைத்தொழில் முயற்சிகளுக்கு உதவி செய்யலாமென்று சிலர் தெரிவித்திருக்கிறார்கள். இவைகளில் சிலவற்றை அநுஸரித்து கவர்ன்மெண்டார் உதவி செய்திருக்கிறார்கள்.

1. பணம் கடன் கொடுப்பது. இனமாகப் பணம் கொடுப்பது.

2. கவர்ன்மெண்டார் யந்த்ரங்களை வாங்கி கைத்தொழில் கம்பெனிகளுக்கு வாடகைக்குக் கொடுத்து, கைத்தொழில் கம்பெனிகள் குறிப்பிட்ட தடவைகளில் ஒரு குறிப்பிட்ட தொகை வீதம் செலுத்தினபிறகு, அந்த யந்த்ரங்களை கைத்தொழில் கம்பெனிகளுக்கே ஸொந்தமாக விட்டுவிடுவது.

3. ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் கம்பெனிக்கு ஒரு குறிப்பிட்ட வட்டி கிடைக்கும்

படி, குறைந்துபோன வட்டித்தொகையை கம்பெனிக்குக் கொடுப்பது. இந்த ஏற்பாட்டில் இப்படி கவர்ன்மெண்டார் கொடுத் துதவின பணத்தை பின்னால் கம்பெனியினிடமிருந்து வாங்காமலிருந்துவிடுவதும், வாங்கிக்கொள்வதுமுண்டு.

4. ஒரு குறித்த காலம் வரையில் கவர்ன்மெண்டார் கைத்தொழில் கம்பெனிகளிடமிருந்து அவைகள் செய்யும் ஸாமான்களை வாங்கிக்கொள்வதாக உத்தரவாதம் செய்வது.

5. நிலங்கள் வாங்குவதற்கு ஸகாயம் செய்தல்.

6. ப்ரத்யேகமான ரெயில்வே போக்குவரத்து ஸௌகர்யங்களும், ரெயில்வே சார்ஜுகளும் ஏற்படுத்திக்கொடுப்பது.

7. ஸர்க்காரே முதலில் கைத்தொழில்கள் ஸ்தாபித்து நடத்திப் பிறகு அவைகளை ப்ரைவேட் கம்பெனிகளிடம் விட்டுவிடுவது.

8. கவர்ன்மெண்டாரிடமுள்ள தொழில் நிபுணர்களை தொழில் கம்பெனிகளுக்கு உதவுதல்.

இவ்விதம் ஸர்க்கார் உதவி செய்வதில் கவர்ன்மெண்ட் மேற்பார்வை இருக்கவேண்டுமா, அப்படியானால் எந்தெந்த விஷயங்களில் மேற்பார்வை வேண்டும் என்பதைப்பற்றியும் விசாரிக்க வேண்டியிருக்கும். உதாரணமாக, ஸர்க்கார் உதவி இருக்கும் வரையில், கம்பெனிகளின் டிரெக்டர்கள் ஸபையில் ஸர்க்கார் உத்யோகஸ்தர்களை டிரெக்டர்களாக நியமிக்கவேண்டுமா ?

**சாஸ்த்ர கைத்தொழில் வேலை.**—இது விஷயமாய் பின் வரும் விஷயங்கள் கவனிக்கத்தகுந்தவை.

1. பொதுவாகவோ, அல்லது குறிப்பிட்ட கைத்தொழில்களிலோ வேலையாட்களின் திறமையை அதிகப்படுத்த என்ன செய்யலாம்? தொழில் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்ததனால் என்ன ஸௌகர்யங்கள் உண்டாயிருக்கின்றன. வேலை கற்றுக்கொள்ளுபவர்களை தொழில்சாலைகளில் பயிற்றுவிப்பதனால் என்ன நன்மை உண்டாயிருக்கிறது?

2. தொழில் சாலைகளின் ஸூபர்வைஸர்களையும், ஸாமர்த்யமுள்ள மானேஜர்களையும் இன்னும் திறமையுள்ளவர்களாக்க என்ன செய்ய வேண்டும்? மற்ற தேசங்களில் போய் தொழில் நிலைமைகளையும், முறைகளையும் அறிந்து வர இவர்களுக்கு உதவி செய்வதா, அல்லது ப்ரைவேட் கம்பெனிகளிலுள்ள தொழில் நிபுணர்களுக்கு உதவி செய்வதா அல்லது ஸர்க்கார் உத்யோகஸ்தர்களுக்கு உதவி செய்வதா ?

ப்ரத்யேகமான விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்ய உத்யோகஸ்தர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பினதால் என்ன நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றனவென்பதும் கவனிக்கத்தக்கது.

3. கைத்தொழில் டிபார்ட்மெண்டுகள் நடத்தின ஆராய்ச்சிகளால் ஷை டிபார்ட்மெண்டுகள் உள்ள மாகாணங்களின் கைத்தொழில்களுக்கு என்ன குறிப்பிடத்தக்க ஸௌகர்யங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

4. நிரூபணக் கைத்தொழில் சாலைகளால் என்ன அனுபோகம் ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாகாணங்களிலும் எங்கே எவ்விதமான தொழில் சாலைகள் ஸ்தாபிக்கலாமென்பதைப் பற்றியும் அபிப்ராயங்களைக் கேட்டறிந்துகொள்வது நல்லது.

## MEANS OF DEFENCE IN INSECTS.

## பூச்சிகள் விரோதிகளிடமிருந்து காத்துக் கொள்ளும் உபாயங்கள்.

பூச்சிகள் அவைகளினுடைய விரோதிகளினிடமிருந்து காத்துக்கொள்ளக் கையாடும் ஸாதனங்கள் பல உண்டு. அவைகளை இரண்டு பிரிவாய்ப் பிரிக்கலாம். (1) எதிர்க்காமலிருந்து காத்துக்கொள்ளுதல். (2) எதிர்த்துக் காத்துக் கொள்ளுதல். சுற்றுப்புறத்து நிலைமைகளுக்கு ஒத்ததாக பூச்சிகளின் தேகம் அமைந்து இருப்



பதும் ஒருபூச்சி பார்வைக்கு வேறு பூச்சிபோல் இருப்பதும் முதல் வகுப்பைச்சேர்ந்தனவாகும். விஷம் தாக்கும்படி கடித்தல், கொட்டுதல், கொடுக்குகளைப்போல் கொட்டக்கூடிய மயிர் இருப்பது, காரமான அல்லது கெட்ட நாற்றமுள்ள த்ரவபதார்த்தங்களை தாக்கவரும் ப்ராணிகளின்மேல் விடுவது, ஆகிய இவைகள் இரண்டாவது வகுப்பைச் சேர்ந்தவையாகும். இந்த ஸாதனங்களேயன்றி, எதிரி ப்ராணிகள் பூச்சிகளைத் தாக்காதபடி பயமுறுத்தி விரட்டும்படியான வர்ணங்களும் சில பூச்சிகளுக்கு ஏற்பட்டிருக்கின்றன. இந்த ஸாதனங்களைப் பொதுவாக இங்கு விவரிக்கிறோம்.

சில ப்ராணிகள் அவைகள் இருக்கும் இடத்தின் நிறத்துக்கு ஒத்த நிறமுடையனவாகவோ, அல்லது இடத்துக்கேற்ற உருவமுடையனவாகவோ அல்லது நிறமும் உருவமும் அவை இருக்கும் இடத்துக்கு ஒத்தனவாகவோ இருப்பதுண்டு. வேறு சில ஜீவராசிகள் அவை இருக்கும் இடத்துக்கு ஒத்தனவாயிராமல், அந்த இடத்தில் ஸாதாரணமாயிருக்கக்கூடிய வேறு ஜீவராசிகளைப் போலவோ அல்லது உயிரில்லாத பொருள்களைப் போலவோ இருப்பதுண்டு. இன்னும் சில ப்ராணிகள் இரண்டுவிதமாய் இருப்பதாகவும் தோற்றக்கூடும். க்ரீன்விப்ஸ்னேக் என்று ஒருவகைப் பாம்புண்டு. இது பச்சையான நிறமுடையது. அது புதர்களில் இருக்கும்போது அதைக் கண்டுபிடிப்பது கஷ்டம். அதை ச்ரமப்பட்டுக் கண்டுபிடித்தாலும் அது பார்வைக்கு சதுரமான கொடிபோல் தோன்றும்.

சில பூச்சிகள் அபாயம் வருவதாக அறிந்தவுடன், பந்துபோல் சுருண்டு கொள்ளும். பூமியிலிராமல் மரஞ்செடிகள்மேல் இருந்தால், பந்துபோல் சுருட்டிக் கொண்டவுடன் பூமியில் விழுந்து விடும். இதற்கு உதாரணமாக கம்பளிப் பூச்சிகளையும் மரவட்டைகளையும் சொல்லலாம். கம்பளிப்பூச்சி பந்துபோல் சுருண்டு கொண்டால், அதன்மேலுள்ள மயிர்கள் பந்தைச் சுற்றிலுமிருக்குமாகையால், அந்த மயிர்கள் இருப்பது விரோதி ப்ராணிகளினிடமிருந்து காத்துக் கொள்ள ஸாதனமாகிறது. விரோதி ப்ராணிகள் அதைப் பிடித்தாலும், சீக்ரம் பிடிப்பிலிருந்து நழுவிக்கொள்ள முடியும். சில ஜாதி கரப்பான் பூச்சிகள் ஆபத்து நேருமென்று தோன்றினவுடன் பந்துபோல் சுருண்டுகொள்ளக் கூடுமாம்.

வேறு சில பூச்சிகள் மரஞ்செடிகளிலிருக்கும்போது அவைகளை எதிரிகள் கண்டதாக அறிந்தவுடன், பூமியில் விழுந்து அசைவற்றுக் கிடப்பதுண்டு. இதனால் அவைகளை எதிரி ப்ராணிகள் கண்டுபிடிக்க முடிவதில்லை. விளக்குப் பூச்சிகளில் சில ஜாதிகளும், சில வகை வண்டுகளும் வேறு சில பூச்சிவகைகளும் இவ்விதம் செய்வதுண்டு. சில பூச்சிகள் செத்துப்போனவை போலப் பாசாங்கு செய்வதுண்டு.

சில பூச்சிகள் அவைகளுடைய தேக உள் அமைப்புக்கு முற்றிலும் மாறான வேறு தேக உள்ளமைப்புள்ள வேறு பூச்சிகளைப்போல் பார்வைக்கு இருப்பதுண்டு. இந்த ஒற்றுமையானது வெளித்தோற்றம் ஸம்பந்தமான எல்லா விஷயங்களிலும் பூர்த்தியாயிருக்கக்கூடும். வேறு சில பூச்சிகள் ஏகதேசம் மற்ற பூச்சிகளைப்போல் தோற்றுவதுமுண்டு.

ஒருவகை பூச்சிகள் ஒரே மாதிரியான இன்னொருவகைப் பூச்சிகள் போல் வர்ணங்கொள்ளுவதாலும், ஒரே மாதிரியான உருவம் கொள்ளுவதாலும், ஒரே மாதிரியான செய்கைகளைச் செய்வதாலும், அல்லது இந்தத் தன்மைகள் இரண்டு மூன்று சேர்ந்திருப்பதாலும், இரண்டு வகைப் பூச்சிகளுக்கும் வித்யாஸம் தோன்றாமல் போய்விடும். விரோதி ப்ராணிகள் பூச்சிகளை நாசம்செய்யாமலிருப்பதற்காகவே இயற்கையிலேயே இவ்விதம் பூச்சிவகைகளுக்குள் தோற்ற ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது. ஸ்வபாவத்தில் எதிரிகளிட

யிருந்து காத்துக்கொள்ள கொடுக்கு முதலிய தக்க அங்கங்களில்லாத, பூச்சிகள் கொடுக்கு முதலிய ஸாதனங்கள் உள்ள பூச்சிகள்போல் இருப்பது வழக்கம்; அல்லது, எதிரி ப்ராணிகளுக்கு ஏற்ற உணவாகக்கூடிய பூச்சிகள், கெட்ட நாற்றமுள்ள பூச்சிகளைப்போல் தோற்றும்.

இப்படி மற்ற பூச்சிகளைப்போலிருப்பதால் பயன் என்னவென்றால், ஒரு சிறு பறவையோ அல்லது வேறு ப்ராணியோ கொடுக்குள்ள ஒரு பூச்சியைத் தின்னப்போனால், அந்தப் பூச்சி பறவையை ஹிம்ஸை செய்கிறது. அதனால் அந்தப் பறவையானது அதற்கப்புறம் தான்பிடித்த கொடுக்குள்ள பூச்சியையும் பார்வைக்கு அந்தப் பூச்சிபோலிருக்கும் மற்ற பூச்சிகளையும் பிடிக்க முயலுவதில்லை. அவ்விதமே ஒருசிறு பறவை தின்ன அருவருப்பான ஒரு பூச்சியைப்பிடித்து தின்கையில் அது அருவருப்பாயிருப்பதால், அதன்பிறகு அந்த அருவருப்பான பூச்சிவகையைச்சேர்ந்த மற்ற பூச்சிகளையும், பார்வைக்கு அந்தப் பூச்சியைப்போல் தோன்றும் வேறு ஜாதிப் பூச்சிகளையும் அந்தப் பறவை பிடிக்க முயலுவதில்லை. இதனால், வாஸ்தவத்தில் கொடுக்கு முதலிய ஸாதனங்களோ, தின்ன அருவருப்பான குணங்களோ உள்ள பூச்சிகளைப் போலிருக்கும் வேறு பூச்சிகளுக்கு பறவைகளால் விசேஷ கெடுதிகளேற்படுவதில்லை. (இன்னும்வரும்.)

## METHOD OF FRAMING ESTIMATES OF CROPS.

## மாஸூல் மதிப்புகள் தயார் செய்யும் முறை.

இந்தியாவின் நிலைமையைப்பற்றிக் கணக்குகள் தயார் செய்யும் டிபார்ட்மெண்டார் சென்ற 17-வர்ஷ காலமாக இந்தியாவில் விளையும் முக்யமான பயிர்கள் எவ்வளவு ஏகர் நிலத்தில் விளைகின்றன என்பதற்கும், ஒவ்வொரு பயிரிலும் மொத்த மாஸூல் எவ்வளவு கிடைக்கக்கூடுமென்பதற்கும் ஒவ்வொருவர்ஷமும் கணக்குகள் தயார் செய்துவருகிறார்கள். அநேக மாகாணங்களில் உள்ள க்ராம உத்யோகஸ்தர்கள் தங்கள் க்ராமங்களில் ஒவ்வொரு பயிரும் எத்தனை ஏக்கர் நிலத்தில் ஸாகுபடிசெய்யப்படுகிறதென்பதற்கு சரியான கணக்குகள் தயார் செய்கிறார்கள். இப்படி கணக்குகள் தயார் செய்வதெல்லாம் ஸர்வேயாகி நிலங்களுக்கு மாப்புகள் (படங்கள்) தயார் செய்யப்பட்ட ப்ரதேசங்களில் தான். சில இடங்களை ஸர்வே செய்யாததாலும், ஸர்வே செய்த ப்ரதேசங்களில் தக்க க்ராம ஸிப்பந்திகள் இல்லாததாலும், அந்த இடங்களுக்கு சரியான கணக்கு திட்டங்கள் கிடைப்பதில்லை. இவைகள் வெகுவாய் ஜமீன்தாரி நிலங்களும், இனாம் நிலங்களும், ஸர்வே செய்யப்படாத வேறு நிலங்களுமாகும். கணக்குகள் தயார் செய்யப்படாத நிலங்களின் விஸ்தீரணம் நாளுக்குநாள் குறைந்து வருகிறதென்றாலும், மொத்தத்தில் பார்த்தால், அவைகளின் விஸ்தீரணம் இன்னும் அதிகமாகவே இருக்கிறது. இப்படிப்பட்ட ப்ரதேசங்களில் ஒரு பயிர் எவ்வளவு ஏக்கர் நிலத்தில் பயிரிடப்படுகிறதென்பதற்கும், அவைகளில் எவ்வளவு மாஸூல் கிடைக்கக்கூடுமென்பதற்கும் உத்தேசமாய்த்தான் கணக்குகள் போடக்கூடும்.

சரியான கணக்குகள் அகப்படாத அந்த ப்ரதேசங்களுக்கு ஒருதடவை உத்தேசமான விஸ்தீரண கணக்குகள் போட்டுவிட்டால் கீழதிகாரிகள் வர்ஷா வர்ஷம் அந்த கணக்கை பருவகாலத்தின் மாறுபாடுகளுக்கு ஏற்றதாகவும், ஜனங்களுடைய பொருளாதார நிலைமைக்கு ஏற்றதாகவும் மாற்றாமல் கிட்டத்தட்ட அப்படியே அனுப்பிவிடக்கூடும். இதைத் தடுப்பதற்காக, மேற்சொன்ன ப்ரதேசங்களின் நிலைமையையும், அந்த ப்ரதேசங்களைப்போல் உள்ளவும், அவைகளை ஒட்டினாற்போலுள்ளவும், சரியான கணக்குகள் தயார் செய்யப்படுகிறவுமான ப்ரதேசங்களின் நிலைமையையும், ஒப்பிட்டுப்பார்த்தும், கூடுமானவரையில் ப்ரத்யேகமான விசாரணைகள் செய்தும், அந்த ப்ரதேசங்களின் கணக்குகளைத் திருத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.



பயிர்கள் ஸாகுபடியாகும் விஸ்தீரணத்தைக் கணக்கிடுகையில் இரண்டுவிஷயங்களை கவனிக்க வேண்டியிருக்கிறது. (1) ஒரு பயிர் ஸாகுபடி செய்யப்பட்ட விஸ்தீரணத்தைக் கணக்கிடுகையில், அந்தப் பயிர் ஸாகுபடியான மொத்த விஸ்தீரணத்தைக் கணக்கிடுவதா அல்லது, மாஸூல் நன்றாய்விளைந்த நிலங்களின் விஸ்தீரணத்தை மாத்ரம் கணக்கிடுவதா, (2) விஸ்தீரணம் கணக்கிடப்படும் பயிரோடு வேறு பயிர்களும் கலந்து பயிரிடப்பட்டிருந்தால் பயிர்கள் எல்லாம் இருக்கும் மொத்த நிலத்தின் விஸ்தீரணத்தைக் கணக்கிடுவதா அல்லது, கணக்குகள் தயார்செய்யப்படும் பயிர் இருப்பதற்கு வேண்டிய நிலத்தை மட்டும் கணக்கிட்டுச் சொல்வதா? முதல் விஷயத்தைப் பற்றிய பொதுவிதி என்னவென்றால், ஒரு பயிர் விளையவில்லையென்றால் அதிலிருந்து கிடைக்கும்மாஸூல்குறைவுபடுமென்று சொல்லவேண்டுமேயொழிய அது பயிரிடப்பட்ட நிலத்தின்விஸ்தீரணத்தைக்குறைத்துச்சொல்லவேண்டியதில்லையாகையால், ஒரு பயிர் விளைந்தாலுஞ்சரி விளையாவிட்டாலுஞ்சரி, அது பயிரிடப்பட்ட நிலத்தின் விஸ்தீரணத்தைக் கணக்கிட வேண்டியது என்பதே. ஆனால் ஒரு நிலத்தில் ஒரு பயிர் ஸாகுபடிசெய்யப்பட்டு அது சாவியாய்ப் போய், அந்த நிலத்தில் அடுத்தாற்போல் இன்னொரு பயிர் ஸாகுபடிசெய்தால் முதலில் ஸாகுபடிசெய்த பயிருக்குக் கணக்கெடுக்க வேண்டியதில்லை.

இரண்டாவது விஷயத்தில் அனுஷ்டானம்ஒவ்வொரு மாகாணத்திலும் ஒருவிதமாயிருக்கிறது. ஆனால் கணக்குகள் தயார்செய்யும் டிபார்ட்மெண்டுக்கு விஸ்தீரண விவரம் எழுதியனுப்பும்போது ஒரு நிலத்தில் இரண்டு மூன்று பயிர்கள் ஸாகுபடிசெய்யப் பட்டிருந்ததால், கணக்கெடுக்க வேண்டிய பயிர் இருப்பதற்கு மாத்ரம் எவ்வளவு நிலம் வேண்டியிருந்திருக்குமென்பதைக் கணக்கிட்டனுப்ப வேண்டும்.

மாஸூல் மதிப்பைப் போடுவதற்கு, ஒவ்வொரு ப்ரதேசத்திலும் ஸாதாரண நிலைமையில் ஒரு ஏக்கர் நிலத்தில் மாஸூல் எவ்வளவு கிடைக்குமென்பதை அறிந்துகொள்ள வேண்டியது அவச்யம். ஸாதாரண மாஸூலாவது ஸாதாரணமான பருவநிலைமையுள்ள வர்ஷத்தில் ஸாதாரணமான வளமையுள்ள நிலத்தில் ஸாதாரணமாய்க் கிடைக்கக்கூடிய மாஸூலாகும். விவஸாய டிபார்ட்மெண்டார் ஒவ்வொரு ஜில்லாவிலும் பயிரிடப்படும் பயிர்களுக்கு நடுத்தரமான வளப்பமுள்ள நிலங்களில் நீர்ப்பாசனமிருந்தால் ஒரு ஏக்கருக்கு எவ்வளவு மாஸூல் கிடைக்குமென்றும், நீர்ப்பாசனமில்லாவிட்டால் எவ்வளவு மாஸூல் கிடைக்குமென்றும் கணக்கிட்டிருக்கிறார்கள். இந்தக் கணக்குகள் சரியா என்று பார்ப்பதற்கும், வேண்டுமானால் திருத்திக்கொள்வதற்கும் பின்வருமாறு மாஸூல் பரீக்ஷை செய்வதுண்டு. நடுத்தரமான வளப்பமுள்ள நிலத்தைத் தெரிந்தெடுத்து, அதிலொருபாகத்தில் பயிர்களை சாகுபடிசெய்து, பொறுப்புள்ள ஜில்லா உத்யோகஸ்தர்கள் முன்னிலையிலாவது, மாகாண விவஸாய டிபார்ட்மெண்ட் உத்யோகஸ்தர்களின் முன்னிலையிலாவது மாஸூலை அறுத்து நிறுத்துப் பார்ப்பார்கள். இந்த வேலைகள் எவ்விதம் செய்யவேண்டுமென்பதற்கு ஒவ்வொரு மாகாண கவர்ன்மெண்டாரும் ரூல்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த மாஸூல் பரீக்ஷைகளால் தெரியவந்த விஷயங்களை கீழ் அதிகாரிகள் மாகாண விவஸாய டிபார்ட்மெண்டின் தலைவருக்கு அனுப்புவார்கள். அந்தத் தலைவர் அவைகளைப்பற்றி இன்னும் வேண்டிய பரிசீலனைகள் செய்து, முன்புபோட்டிருந்த

மாஸூல் மதிப்பை தக்கபடிமாற்றுவார். ஸாதாரணமாய் இப்படி 5-வர்ஷத்துக் கொருதடவை செய்வதுவழக்கம்.

பயிர்விளைச்சல் மதிப்புப்போடுவதில் கவனிக்க வேண்டிய இன்னொரு விஷயமென்னவென்றால், ஸாதாரண நிலைமையில் ஒரு ஏக்கரில் விளையக்கூடிய மாஸூலில் எவ்வளவுபாகம் கணக்கெடுக்கப்படும் வர்ஷத்தில் விளைந்ததென்பது. இப்படிக் கணக்கிடுவதில் இரண்டு வழிகளிருக்கின்றன. மேற்சொன்ன ஸாதாரண நிலைமையில் ஒரு ஏக்கரில் கிடைக்கக்கூடிய மாஸூலை 100-என்று வைத்துக்கொண்டு, கணக்கெடுக்கும் வர்ஷத்தில் ஒரு நிலத்தில் கிடைத்திருக்கும் மாஸூல் இதில் எவ்வளவு பாகமாகுமென்று மதிப்புப் போடுவது ஒருவழியாகும். இன்னொருவழி யென்னவென்றால், ஸாதாரண மாஸூலை 16-அணாவென்றோ அல்லது அதற்குக் கீழ்ப்பட்ட எண்ணென்றோ வைத்துக்கொண்டு, கணக்கெடுக்கும் வர்ஷத்தில் எத்தனை அணா மாஸூல் கிடைத்திருக்கு மென்று மதிப்பிடுவது. ஸாதாரண நிலைமையில் கிடைக்கும் மாஸூலைக் குறிப்பிட எல்லாவிடங்களிலும் ஒரேவிதமான அளவுகள் வைத்துக்கொள்வதில்லை. ஆனால் மாஸூல் மதிப்புகள் வெளியிடும்போது மாத்ரம் ஸாதாரண மாஸூலை 100-என்றும், கிடைத்த மாஸூல் ஸாதாரண மாஸூலில் இத்தனை பாகமாகுமென்றும் தெரிவிப்பது வழக்கம்.

மேற்சொன்ன மூன்று விஷயங்களையும் அதாவது மொத்த விஸ்தீரணம், ஸாதாரண மாஸூல் விளைவு, குறிப்பிட்ட வர்ஷத்தில் விளைந்த மாஸூலின் அளவு ஆகிய இவைகளை நிர்ணயித்துக்கொண்டால், ஒரு ப்ரதேசத்தில் இவ்வளவு மாஸூல் கிடைத்திருக்குமென்று நிர்ணயித்து விடலாம். உதாரணமாக ஒரு பயிர் ஸாகுபடி செய்யப்பட்ட நிலத்தின் விஸ்தீரணம் 60,000-ஏக்கர்; ஸாதாரண நிலைமையில் அந்தப் பயிரின் மாஸூல் ஏக்கருக்கு 500-ராத்தல்; கணக்கெடுக்கும்வர்ஷத்தில் அந்தப்பயிரில் கிடைத்திருக்கும் மாஸூல் ஸாதாரண நிலைமையில் கிடைத்திருக்கக்கூடிய மாஸூலில் 100-க்கு 80-பாகமாகும். அப்படியானால் அந்தப் பயிரின் மொத்த மாஸூல் $60,000 \times 50 \times \frac{80}{100} = 2,40,00,000$ ராத்தல்.

செங்னை ராஜதானியில் கணக்குகள் சேகரம் செய்யும் முறை பின்வருமாறு. சென்னை ராஜதானியில் மூன்றிலிரண்டு பாகம் ரயத்வாரி நிலங்களாகும். இந்த நிலங்களை சரியாக ஸர்வே செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு ரயத்வாரி க்ராமத்திலுமுள்ள கர்ணன் தமது க்ராமத்தில் ஒவ்வொரு பயிரும் எத்தனை ஏக்கர் நிலத்தில் சாகுபடி யாகிறதென்று ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கு எழுதி யனுப்புகிறார். ரெவின்யூ இன்ஸ்பெக்டர் தமக்கு வந்த கணக்குகளைப் பார்வையிட்டுஎந்தப்பயிருக்குக் கணக்குகள் தயார்செய்ய வேண்டுமோ அந்தப் பயிர் தமது அதிகார ப்ரதேசத்தில் எத்தனை ஏக்கர் நிலங்களில் ஸாகுபடி செய்யப்பட்டிருக்கிறதென்றும், ஒரு ஏக்கருக்கு ஸாதாரண நிலைமையில் கிடைக்கக்கூடிய மாஸூலில் இவ்வளவு பாகம் மாஸூல் அந்த வர்ஷம் கிடைக்குமென்றும் தாசில்தாருக்குத் தெரிவிக்கிறார். தாசில்தாரானவர் தமக்குக் கீழ்ப்பட்ட ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களிடமிருந்து வந்த மாஸூல் விஸ்தீரணக் கணக்குகளை ஒன்றுசேர்த்துக் கூட்டி, தமது ப்ரதேசத்தில் கணக்கெடுக்கப்படும் ஒவ்வொரு பயிரிலும் அந்த வர்ஷத்தில் ஸாதாரண மாஸூலில் இவ்வளவு பாகம் மாஸூலாகக் கிடைக்குமென்று மதிப்பிட்டு விவஸாய டிரெக்டருக்கு அனுப்புகிறார். சென்னை ராஜதானியின் மொத்த விஸ்தீரணத்தில் மூன்றிலொருபாகம் ஜமீன்தாரி நிலமாகும். இதில் ஸ்வல்ப பாகமே ஸர்வே செய்யப்பட்டிருக்கிறது. ஸர்வே செய்யப்பட்டிருக்கும் ஜமீன்தாரி நிலங்களுக்கு மேற்சொன்னது போலவே கணக்குகள் தயார்செய்து அனுப்பப்படும். ஸர்வே செய்யப்படாத ஜமீன்தாரி நிலங்கள் விஷயத்தில் தாசில்தாரோ, ரெவின்யூ இன்ஸ்பெக்டரோ, கணக்கெடுக்கப்படும் பயிர் விளையும் விஸ்தீரணத்தையும் மாஸூலையும் தமக்குத் தெரிந்த விஷயங்களைக்கொண்டும், ஜமீன்தார்களின் உத்யோகஸ்தர்கள் அனுப்பும் ரிபோர்ட்டுகளை வைத்துக்கொண்டும் உத்தேசமாய்க் கணக்கிட்டு விவஸாய டிரெக்டருக்கு அனுப்புகிறார். புதுக்கோட்டை, பங்கனபள்ளி ஆகிய இந்த ஸமஸ்தானத்து கவர்ன்மெண்டுகளும் இதேமாதிரியான கணக்குகள் தயாரித்து விவஸாய டிரெக்டருக்கு அனுப்புகின்றன. விவஸாய டிரெக்டரின் ஆபீஸில் இந்தக் கணக்குகளையெல்லாம் ஒன்றுசேர்த்து மாகாணம் முழுமைக்கும் திட்டம் போடப்படுகிறது.



# REVIEW OF THE PRESS.

## பத்ரிகை ஆராய்ச்சி.

### EVILS OF TOBACCO

### புகையிலையின் கெடுதிகள்

புகையிலையானது ஜீரண சக்திக்காவது, பற்களை நல்ல நிலைமையில் வைப்பதற்காகவாவது, அவைகளின் அசுத்தத்தைப் போக்கடிப்பதற்காகவாவது உபயோகப்படுவதில்லையென்று ஒரு நிருபர் ‘சத்தியவேத பாதுகாவல்’னில் எழுதுகிறார். அவர் அதில் எழுதியுள்ள ஒரு வ்யாஸத்தில் புகையினால் வரும் கெடுதிகளைப்பற்றி விரிவாய் எழுதியிருக்கிறார். மேற்குறித்த நோய்களில் புகையிலை ஓர் அத்யாவச்யமான மருந்தென்று சொல்வதற்கு யிடமில்லை. அது உதவிசெய்கிறதென்பதெல்லாம் ஒரு விதமான ஸுகமே ஒழிய வேறல்ல; புகையிலையை உபயோகிப்பது நமக்கு ஸ்நேகிதர்களை சேகரிப்பதுபோலவும், பசியையும் கஷ்டத்தையும் நிவர்த்திக்கிறது போலவும் தோற்றுவிக்கிறதென்பது வாஸ்தவந்தான். அப்படிப்பட்ட தோற்றம் நிலையானதல்ல. ஆனால் அதனால் வரும் கெடுதியோ ஸ்திரமானது. புகையிலை உபயோகியாதவரின் தேகவளர்ச்சி, புஷ்டி, மார்பின் விசாலம், உள்ளிந்த்ரியங்களின் உறுதிப்பாடு, ஆகிய இவைகளுக்கும், புகையிலையை உபயோகிப்பவருடைய உடலின் கேவல நிலைமைக்கும் உள்ள வித்யாஸமே மேற்கூறிய உண்மையை ஸ்திரப்படுத்தும்.

புகையிலைச் சுருட்டுக் குடிக்கும்போது உண்டாகும் புகையானது சுத்த ஆகாயத்தை ரொம்பவும் கெடுத்துவிடுகிறது. புகையிலை குடிப்பவர்களின் கண்பார்வை சீக்ரம் கெட்டுப்போகிறதென்று தேர்ந்த வைத்ய சாஸ்த்ரிகளெல்லாரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். பில்லியார்ட் விளையாடுகிறவர்களும், பந்தாட்டம் ஆடுகிறவர்களும், துப்பாக்கி வேட்டையாடுகிறவர்களும் புகையிலை உபயோகிக்காமலிருந்தால் விளையாட்டிலும் வேட்டையிலும் ஜயமடையக்கூடுமென்று அவர்களே சொல்லுகிறார்கள். சுருட்டு உபயோகிக்கும் போது பெரும்பாலும் ஒருவித உத்ஸாகம் ஏற்படுகிறதென்பது உண்மையானாலும், அதை உபயோகித்தபிறகு உடனே, முன்னிருந்ததைப் பார்க்கிலும் சோர்வும் சோம்பலும் அதிகமாகின்றன.

சுருட்டுப் புகையைக்காட்டிலும் ஸிகரெட்புகை மிகவும் கொடியது. ஸிகரெட்புகையை சுத்தமான்தோர் கைக்குட்டையில் விட்டுப்பார்க்கக் கைக்குட்டையில் ஏற்படுகிற கறையைக்கொண்டு, ஸிகரெட்டின் கொடுமையை நன்கறியலாம். ஸிகரெட் புகை படுகிற நமது உள்ளிந்த்ரியங்களெல்லாம் இதேவிதமாக கறைபடுகின்றதென்பதை மறந்துவிடக்கூடாது. ஸிகரெட் இத்தனை கெடுதிசெய்யக் கூடியதாயிருப்பதால், சிறுவர்களில் அநேகர் இதனைக் கையாடிவருவது மிகவும் கவலைக்கிடமாயிருக்கிறது: மேலும் இந்த ஸிகரெட் பழக்கம் நம் சிறுவர்களிடத்தில் வரவர வ்ருத்தியாகிக்கொண்டு வருமோவெனப் பயப்படவேண்டியுமிருக்கிறது.

ஸிகரெட் பழக்கம் வ்ருத்தியாக வ்ருத்தியாக நமது பின் ஸந்ததிகளால் நாம் அடைந்துகொள்ளக் கூடியதான அனுகூலங்கள் தடைப்படவேகூடும். ஸிகரெட் பழக்கமுடைய பிள்ளைகள் உத்ஸாகமாய் வேலைசெய்யமாட்டார்களென்பது மட்டுமல்ல, வேலைசெய்வதையே விரும்பமாட்டார்கள். சுருட்டுப்பழக்கமுடைய தகப்பன் அல்லது தாய் ஸிகரெட் பழக்கமுடைய மக்களை அப்பழக்கத்திலிருந்து திருப்புவது கஷ்டம். புகையிலையை உபயோகிப்பதை மக்களிடத்தில் விரும்பாதபெற்றோர் தம்மிடத்தே அந்த துர்ப்பழக்கம் இருக்க விரும்புவது மிகவும் அனுசிதமான காரியமாகும். அன்றியும் சுருட்டுப்பழக்கமுடைய பெற்றோருக்கு ஸிகரெட்டில் ஆவலுடைய பிள்ளைகள் பிறப்பது ஆச்சரியமல்ல. நல்ல வாலிப ப்ராயமுள்ள பிள்ளைகள் வேலைக்குச் சோம்புவதாயிருந்தால், அவரது நடத்தையை அந்தரங்கத்தில் விசாரிக்க, அப்பிள்ளைகள் ஒளிமறைவாய் ஸிகரெட் குடிப்பது தெரியவரும். மதுபானிகளின் ஜீவ்ய சரித்திரத்தைச் சோதித்துப்பார்த்தால், அவர்கள் முதல்முதல் மதுபானத்தையல்ல, புகையிலைப் பழக்கத்தையே தொடங்கியிருப்பார்கள் என்று தெரியவரும். அப்படிப்பட்டவருக்குப் புகைப்பழக்கம் அதிகமாக அதிகமாக மதுப்பழக்கமும் அதிகமாகிக்கொண்டுவரும். ஸிகரெட், மதுபானம், கஞ்சா இந்த மூன்றும் ஏறக்குறைய ஒரே ஸகோதரத்வம் என்று சொல்லலாம்.

தற்காலத்தில் மது, கஞ்சா ஆகிய இவைகளைப் பார்க்கிலும் ஸிகரெட்டே அதிகபழக்கத்தில் இருந்துகொண்டுவருகிறது. கஞ்சாப்புகை எப்படி உடலின் ஸத்

வத்தையும் உள்ளிந்த்ரியங்களின் ஒருமைப்பாட்டையும் கெடுக்கிறதோ, அப்படியே மிதந்தப்பிய ஸிகரெட் புகையும் மேற்சொன்னவற்றை வில்லங்கத்திற்குள்ளாக்குகிறது. புகையிலையைச் சுருட்டாக உபயோகிக்கிறவர்கள்போக, இன்னும் பலர் அதைப் பொடியாக்கி நாசிக்குள்ளும் வாய்க்குள்ளும், பழம்புகையிலை, கருப்புக்கட்டிப் புகையிலை, வெள்ளைப் புகையிலையெனப் பாடுசெய்து தாம்பூலத்தோடு திணித்து வைக்கிறார்கள். புகையிலையைத் தாம்பூலத்தோடு உபயோகிக்கிற வழக்கம் இப்போது வரவரக்குறைந்து வருகிறதானாலும், பொடிபோடும் பழக்கம் வரவர அதிகரிக்கிறதாகத் தெரிகிறது. புகையிலையை எத்தனை பக்வமாய் எந்தச் சாயலாய் உபயோகித்தாலும் அதனால் கெடுதி கெடுதியே.

இளம்பிராயமுடைய பிள்ளைகளின்முன் பெற்றோர்கள் சுருட்டு அல்லது புகையிலை உபயோகிப்பது சிறிதும் உசிதமல்ல. பெற்றோர்களிற் சிலர் சுருட்டுவாங்கிவரத் தங்கள் குழந்தைகளையே கடைக்கு அனுப்புகிறார்கள். சிலர் சுங்கான் (புகை குடிக்கிற குழாய்) பற்றவைக்கிறதும் தம் பிள்ளைகளைக்கொண்டே. மக்களின் ஒழுக்கத்தையும் நாகரீகத்தையும் விரும்புகிற தாய் தகப்பன்மார் இதுவிஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாயிருத்தல் அவச்யமாகும்.

## CULTIVATION OF CHILLIES.

### மிளகாய் சாகுபடி.

ஸமீபத்தில் வெளிவந்த 'கமத்தொழில் விளக்'கத்தில் மிளகாய் சாகுபடியைப்பற்றி ஒரு வ்யாஸம் வெளியாயிருக்கிறது.

ஒழுங்காய் மழைபெய்யும் நிலங்களில் நீர்ப்பாய்ச்சுதல் இல்லாமலும், மற்ற இடங்களில் கிணறுகள், ஆறுகள் மூலமாய் நீர்பாய்ச்சியும் மிளகாய் சாகுபடியாகிறது. மிளகாய்க் கன்றை நடுவதற்கு முன்னால், நிலத்தை பலமுறை ஆழமாய் உழுது நன்றாய் பண்படுத்த வேண்டும். பாசனமின்றி மழை உதவியால் பயிரிடப்படும் நிலங்களில் ஒவ்வொரு கன்றையும் நடுவதற்கு முன் அதன் அடிக்குழியில் ஒரு கை அல்லது இரண்டு கை மட்கிய எருப்போட்டு, அதன் பிறகே கன்றை நடவேண்டும். நீர்ப்பாசனமுள்ள நிலங்களில் எருவை நிலத்தில் கொட்டி உழுதோ கொத்திவிட்டோ எருவை மண்ணோடு நன்றாய்க் கலக்கும்படி செய்யவேண்டும். சில இடங்களில் ஒவ்வொரு கன்றைச் சுற்றிலும் இரண்டு மூன்றுதடவை எருப்போட்டு, கொத்திவிடுவதுண்டு. எவ்விதமாய் எருப்போட்டாலும், எரு மண்ணோடு நன்றாய்க் கலந்துகொள்ளும்படி பார்த்துக்கொள்ளவேண்டியது அவச்யமாகும். நீர்ப்பாய்ச்சுவதற்கு நிலத்தை சிறு சிறு பாத்திகளாகவோ, அல்லது வாய்க்காலும் வரப்புமாகவோ பிரித்துக் கொள்ளலாம்.

மிளகாய் நாற்றுவிடுவதற்கு உயரமான ஓர் நிலத்தை நன்றாய்க் கொத்திப் பண்படுத்தி, மட்டமாக்கி 6 அடி நீளம் 3 அடி அகலம் உள்ள சிறுபாத்திகளாகப் பிரிக்க வேண்டும். ஒவ்வொரு பாத்திக்கும் ஒரு கூடை எருவும், ஒருகூடை சாம்பலும் போட்டு மண்ணோடு நன்றாய்க் கலந்துவிட வேண்டும். மேற்கூறிய அளவுள்ள 20 பாத்திகளுக்கு விதைக்க $1\frac{1}{4}$ ராத்தல் மிளகாய்விதை போதும். இந்த 20பாத்திகளின் நாற்றுகள் ஒரு ஏக்கர் நிலத்தில் நடப்போதுமானவை. விதையை நிலத்தில் தெளித்து, அது மண்ணில் மூடியிருக்கும்படிசெய்து, மண்ணை மட்டமாக்கிக் காலையிலும் மாலையிலும்,ஸ்வல்பமாய் ஜலம்பாய்ச்சிவர வேண்டும். மண்காய்ந்து போகாமலிருக்கவும், இளம்பயிர் வெயிலில் வாடிப்போகாமலிருக்கவும்,பாத்திகளை ஓலையால் அல்லது கீற்றுகளால் மூடிவைப்பது நல்லது. நான்கு அல்லது ஆறுவாரத்தில் மிளகாய் நாற்றுகள் எட்டு அங்குலம் வளர்ந்து பெயர்த்து நடுவதற்கு ஏற்றவையா யிருக்கும். மப்பு மந்தாரமான வேளைகளிலும், ஸாயந்திர நேரத்திலும் நாற்றுகளைப் பிடுங்கி நடவேண்டும். நிலத்தின் தன்மைக்கும், போடும் எருவின் தன்மைக்கும் தக்கவாறு நாற்றுகளை $1\frac{1}{2}$ அடி முதல் 3 அடி தூரத்துக்கு ஒன்றாக நடவேண்டும. குச்சிகளால் குழிகள்செய்து ஒவ்வொரு குழியிலும் 2 நாற்றுகள் வீதம் நடவேண்டும். நீர்ப்பாசன வஸதிகளுள்ள நிலங்களில், பாத்திகள்போடுவதைவிட நிலத்தை வாய்க்காலும் வரம்புமாய் ஒழுங்குபடுத்தி வரம்புகளின் சரிவில் நாற்றுகளை நட்டு நீர் பாய்ச்சுவது உசிதமாகும்.

மிளகாய்ச் செடிகள் பூக்கும் ஸமயத்தில் அவைகளுக்கு தொழுவத்தெரு அல்லது ஆமணக்குப் பிண்ணாக்கை எருவிட்டால் நல்ல பலன்கிடைக்கும். நிலத்தில் தக்க ஈரம் இருக்கும்படி குறித்த நாள்களுக்கு ஒரு தடவையாக ஜலம் பாய்ச்சிவரவேண்டும். அளவுக்கதிகமாக நீர்பாய்ச்சினால் செடிகளும் காய்களும் கெடுதலடையும்.

---



# Departmental Notes.
# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.
## வித்யாவிஷயம்.

**Subjects for Nature Study.**

இயற்கைப்பாடத்துக்கு விஷயங்கள்.–இயற்கைப் பொருட்பாடம் போதிப்பதற்கு வேண்டிய பொருள்களை உபாத்யாயர் தேர்ந்தெடுப்பதைக் காட்டிலும், பிள்ளைகள் கொண்டுவரும் பொருள்களைப்பற்றி போதிப்பதே உத்தமம். பிள்ளைகள் தங்களுக்கு இஷ்டமான பொருள்களைக்கொண்டு வருவார்கள். அதைப் பற்றிக் கேட்கவே அவர்களுக்கு இஷ்டமும் அதிகம். அதனால் அவர்கள் இஷ்டம்போல் பொருள்களைத் தேர்ந்தெடுப்பதே நலம். பிள்ளைகள் தமக்கு இஷ்டமான பொருள்களைத் தேடிக்கொண்டு வரச்சொல்லி, அவற்றைப் பாடசாலையில் சேமித்துவைத்து, அவற்றுள் பிள்ளைகளுக்கு எந்தெந்தக்காலத்தில் எந்தெந்தப் பொருள்களின்மீது விருப்பம் செல்லுகிறதோ அந்தந்தப் பொருளைபற்றியே பேசவேண்டும்.

இப்படிச் செய்வதனால் சில ஸமயங்களில் உபாத்யாயருக்கு ஒருவித இடையூறு நேரிடக்கூடும். அது என்னவெனில், பிள்ளைகள் விரும்பும் பொருளைப்பற்றி உபாத்யாயருக்கு ஒன்றும் தெரியாதிருக்கலாம்.அல்லது அரைகுறையாகத் தெரிந்திருக்கலாம். அப்படி நேரிடுவது நலமே. ஏனெனில் உபாத்யாயர் தமக்குத் தெரிந்த விஷயத்தைமட்டும் போதித்துவிட்டு, தெரியாத விஷயங்களைக் கைநழுவவிடும் துரப்யாஸம் ஒருவாறு நீங்கிவிடும். பிள்ளைகள் மாதிரியாகச் சேர்த்து வைத்துள்ள பொருள்களுள் ஒன்றைப்பற்றியே கேட்பார்கள் என்று தெரிந்திருப்பதனால், அவர்கள் அவ்வப்போது கொண்டுவரும் பொருள்களைப்பற்றிய விஷயங்களை உடனுக்குடன் தெரிந்துகொள்ள உபாத்யாயருக்கு ஊக்கங்கொடுக்கும். பிள்ளைகள் விரும்பும் பொருள்களைப்பற்றி உபாத்யாயருக்குத் தெரியாதகாலத்தில், அந்த விஷயம் தெரியவில்லை என்று பிள்ளைகளிடம் சொல்லுவதனால் உபாத்யாயருக்கு மதிப்புக் குறைவு ஒருகாலும் உண்டாகாது. தெரியவில்லை என்று உபாத்யாயர் சொன்னால் அந்த விஷயம் மிகவும் அருமையானதென்பதைப் பிள்ளைகள் உணர்வார்கள். அதைப்பற்றி ஆராய்ச்சிசெய்யப் பிள்ளைகளும் போட்டி போட்டுக்கொண்டு முயல ஆரம்பிப்பார்கள்.—நல்லாசிரியன்.

**Law Students in Madras.**

சென்னையில் சட்டத்துக்கு வாசிக்கும் மாணவர்கள்.—சென்ற 1915-16-ம் வர்ஷத்தில் சென்னையிலுள்ள லா காலேஜில் 472-மாணவர்கள் சேர்ந்து வாசித்துவந்தார்கள். இவர்கள் சென்னை ராஜதானியிலுள்ள பற்பல ஜில்லாக்களிலிருந்தும் அதையொட்டியுள்ள ஸ்வதேச ஸமஸ்தானங்களிலிருந்தும் வந்தவர்கள். தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்தே ரொம்ப அதிகமான மாணவர்கள் அதாவது 86 மாணவர்கள் வந்தார்கள். அதற்கடுத்தபடியாக மலையாளத்திலிருந்து39-மாணவர்களும், அதற்கும் அடுத்தபடியாக கோதாவரி திருச்சினாப்பள்ளி இந்த ஜில்லாக்கள் ஒவ்வொன்றிலிருந்தும் 30-மாணாக்கர்களும் வந்தார்கள்.இவர்களைத் தவிர ஸ்வதேச ஸமஸ்தானங்களிலிருந்து 33-மாணவர்கள் சட்டம் கற்க சென்னைக்குவந்தார்கள்.

**Madras Women's College.**

சென்னை ஸ்த்ரீகள் காலேஜ்.—சென்றவர்ஷம் ஸ்தாபிக்கப்பட்ட சென்னை கவர்ன்மெண்ட் காலேஜானது முதலில் பரீக்ஷார்த்தமாக 1-வர்ஷத்துக்கு ஏற்படுத்தப்பட்டது. சென்ற ஜூன்மாஸத்தோடு 1-வர்ஷம் முடிந்துபோயிற்று. ஜூலைமாஸம் முதல் இன்னொரு வர்ஷத்துக்கு அதை நடத்தும்படி கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

**Female Education Conference.**

பெண் கல்விக் கான்பரென்ஸ்.—பெண்களுக்குக் கற்றுக்கொடுப்பது விஷயமாகப் பரிசீலனை செய்ய, வரும் ஸெப்டம்பர்மாஸத்தில் ஒரு கான்பரென்ஸைக் கூட்டவேண்டு மென்று கவர்ன்மெண்டார் வித்யா டிரெக்டருக்குத் தெரிவித் திருக்கிறார்கள். அந்தக் கான்பரென்ஸில் சில ஸர்க்கார் உத்யோகஸ்தர்களும் உத்யோகஸ்தர்களல்லாத பலரும் மெம்பர்களாக இருப்பார்கள்.

## TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### Karanthai Tamil Sangam.

**கரந்தை தமிழ் ஸங்கம்.**— தஞ்சாவூரைச்சேர்ந்த கருந்தட்டாங்குடியில் நடந்துவரும் கரந்தை தமிழ் ஸங்கத்தின் 5 - வது வர்ஷ பூர்த்திக்கொண்டாட்டம் ஸமீபத்தில் ராமநாதபுரம் ராஜாவின் அக்ராஸனத்தின் கீழ் இரண்டுநாள் நடைபெற்றது. பற்பலவிடங்களிலிருந்து தமிழ் வித்வான்கள் அதற்கு வந்திருந்து ப்ரஸங்கங்கள் செய்தார்கள். ஆனரபிள் ராமநாதபுரம் ராஜா தமது ஆரம்ப ப்ரஸங்கத்தில் தமிழை ஆதரிப்பவர்கள் இப்போது ரொம்ப குறைவென்றும், மடாதிபதிகள் இது விஷயத்தில் ரொம்பவும் அச்ரத்தையாயிருக்கிறார்களென்றும், முன்பிருந்த மடாதிபதிகள் தமிழ் வித்வான்களை ஆதரித்து வந்தது போல, இப்போதுள்ள மடத்தலைவர்களும் தமிழபிவ்ருத்தியில் அதிக ஊக்கமெடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், கரந்தை தமிழ் ஸங்கத்தார் இதர பாஷைகளிலுள்ள உயர்ந்த புஸ்தகங்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடவேண்டுமென்றும், கவர்ன்மெண்டார் தமிழபிவ்ருத்தி விஷயமாக அதிக ச்ரத்தைக் காட்டினுலொழிய பாஷையின் அபிவ்ருத்திக்கு ஒருபோதும் வழிகளேற்படமாட்டாவென்றும், சொன்னார். இன்னும் அவர், ஸமீபத்தில் ஆரியம் த்ராவிடமென்ற இரண்டு பாஷைகளின் காரணமாய் அநேக விவாதங்கள் ஏற்பட்டுள்ளது யாவரும் அறிந்ததே யென்றும், இவ்விஷயத்தில் அபிப்ராயங்கள் வேறுபட்டுள்ளனவாயினும், தாம் அறிந்தவரை, ஆரியர் த்ராவிடர் என்ற ப்ராமணர் தமிழர் இவர்கள் இருவரும் முற்காலந்தொட்டே ஒற்றுமையுடனேயே ஒருவரையொருவர் தழுவி வந்திருக்கிறார்களென்பதைநிச்சயமாய்ச்சொல்லலாகுமென்றும், அகஸ்தியர் தமிழர், தொல்காப்பியர் தமிழர் என்ற விவாதங்களும், இவர்களின்பேர் முதலிய சொற்களுக்குப் புதிதானமூலம் கற்பித்தலும், இன்னும் இத்தகைய புதுமாறுதல்களை உண்டு பண்ணுதலும் தமிழ்ப்பாஷையின் வ்ருத்திக்கு அனுகூலமானவைகளாகுமென்று தமக்கு தோற்றவில்லையென்றும் சொன்னார்.

### Raja Yoga.

**ராஜயோகம்.**—ஸ்வாமி விவேகாநந்தர் நமது ஹிந்துமதத்தின் தத்வார்த்தங்களை வெளியிட்டுப் பற்பல ப்ரஸங்கள் செய்திருக்கிறார். மதவிஷயங்களில் அதிக ஊக்கம் பரவிவரும் தற்காலத்தில் நம்மில் அநேகர் அவருடைய ப்ரஸங்கங்களை வாசிப்பதில் அதிக ஊக்கங்காட்டி வருகிறார்கள். இங்க்லீஷில் தேர்ச்சியில்லாதவர்களுக்குப் பயன்படும்படியாக சிலர் அந்த ப்ரஸங்கங்களை தேசபாஷைகளிலும் மொழிபெயர்த்து வெளியிட்டு வருகிறார்கள். நமது பார்வைக்கு வந்திருக்கும் ராஜயோகமென்னும் நூல் அத்தகைய மொழிபெயர்ப்புப் புஸ்தகங்களில் ஒன்றாகும். இது ஸ்வாமி விவேகாநந்தர் ராஜயோகத்தைப் பற்றி சிகாகோவில் செய்த 8 ப்ரஸங்கங்களின் தொகுப்பாகும். இதை மொழிபெயர்த்தவர் கோவிலூர் மடாலயம் ஸ்ரீராமகிருஷ்ண ஸ்வாமியாவர். மொழிபெயர்ப்பின் நடை இனிமையாயும் ஸுலபமாயும் இருப்பதோடு, மொழிபெயர்ப்பென்னும் எண்ணம் உதிக்காதவாறு அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது. இதன் விலை அணு 12. வேண்டுவோர் சென்னை கோமளேச்வரன்பேட்டை ஸச்சிதாநந்த அச்சியந்திர சாலைக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

### The Madras Tamil Academy.

**சென்னை தமிழ் ஸங்கம்**—சென்ற 1907-ம் வர்ஷத்தில் இந்த ஸங்கம் ஆரம்பமாயிற்று. ஆரம்பத்தில் அதில் 5-மெம்பர்களே இருந்தார்கள். இந்த ஸங்கத்தின் நோக்கம் தமிழிலுள்ள புராதன நூல்களைப் பற்றி பரிசீலனை செய்வதும், தற்கால நோக்கங்களுக்கேற்றவாறு தமிழ்ப்பாஷையையும் இலக்கியத்தையும் அபிவ்ருத்தி செய்வதுமே. சில வர்ஷங்களுக்குப்பிறகு இந்த ஸங்கத்தின் நோக்கங்களை விசாலப்படுத்தி அவைகளுக்கேற்றவாறு உழைக்கவேண்டுமென்றெண்ணி 1912-ம் வர்ஷத்தில் ஸங்கத்தின் அமைப்பில் சில மாறுபாடுகள் செய்தார்கள். தற்போது இந்த ஸங்கத்தில் 50 மெம்பர்கள் இருக்கிறார்கள். ஸங்கத்தின் மீட்டிங்குகள் சென்னை எழும்பூரில் ஆனரபிள் மிஸ்டர் டி. வி. சேஷகிரி அயயர் வீட்டில் நடைபெறுகின்றன. சென்றவர்ஷத்தில் பல பெயர்பெற்ற வித்வான்கள் அநேக ப்ரஸங்கங்கள் செய்தார்கள். இந்த வர்ஷத்திலும் பல உபன்யாஸங்கள் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த ஸங்கத்துக்கு டாக்டர் ஸர். எஸ். ஸுப்ரமண்ய அய்யர் ப்ரெஸிடெண்டாவர்.

### Vikateswaran.

**விகடேச்வரன்.**—இது ஸெகண்டராபாத்திலுள்ள கே. ஸ்ரீநிவாஸய்யங்கார் இயற்றிய ஒரு சிறு தமிழ்க்கதை. இதன் விலை அணு 2. வேண்டுவோர் கே. ஸ்ரீநிவாஸய்யங்கார் 6740, இமாம்பாவடி தெரு, ஸெகண்டராபாத் என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.



## SCIENCE AND INVENTION.

## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### A Cotton Picking Machine.

**பருத்தியையெடுக்கும் யந்த்ரம்.**—வேலையாட்களுக்குக்கொடுக்கும் கூலி நாளுக்குநாள் அதிகரித்துவருவதால், அமெரிக்காவில் அநேக விவஸாயிகளுக்கு லாபம் குறைந்துகொண்டு வருகிறது. சிலஸமயங்களில் வேலையாட்கள் வேண்டியகாலங்களில் போதுமான அளவு கிடைக்காததால் மாஸூலை அறுவடைசெய்யத் தாமஸமேற்பட்டு, மழையாலும் காற்றாலும் மாஸூல் நாசமடைந்துபோகிறது. மற்ற விவஸாயிகளைவிட பருத்தி பயிரிடும் விவஸாயிக்குத்தான் இந்தக்கஷ்டம் அதிகமாகும். வெடித்த பருத்திப் பஞ்சையெடுக்க கூலியாட்களே வேண்டியிருக்கிறது. அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் நாளுக்குநாள் அதிகரித்துவருகிறது. விதையோடுகூடிய 100-ராத்தல் பருத்தியைச் செடியிலிருந்து பொறுக்க ஒரு ஆளுக்கு 2-ரூபாய் 6-அணு முதல் 3-ரூபாய்க்கு மேலும் கூலிகொடுக்க வேண்டியிருக்கிறதாம். இந்த அஸௌகர்யங்களை உத்தேசித்து அமெரிக்காவில் சிலர் சிலகாலமாக பருத்திபொறுக்கும் யந்த்ரம் கண்டுபிடிக்க முயன்றுவந்திருக்கிறார்கள். ஸமீபத்தில் ஒருவர் ஒரு நல்ல யந்த்ரம் செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த யந்த்ரத்தை பருத்திச்செடிகளுள்ள ஒரு வரிசையின்மேல் ஓட்டினால், அதில் அமைக்கப்பட்டிருக்கும் கருவிகள், செடிக்கு யாதொரு கெடுதலுமேற்படாமல், வெடித்த பருத்திகளைமாத்ரம் பொறுக்கி எடுத்து யந்த்ரத்திலேயே அமைக்கப்பட்டுள்ள ஒரு இடத்தில் சேர்த்துவிடுகிறதாம். இந்த யந்த்ரம் அதிக பாரமாயில்லையாம். இதை வைத்திருப்பவர்கள் வேலையாட்களின் உதவியை எதிர்பார்க்க வேண்டியதில்லை. வேலையும் த்ருப்திகரமாய் நடக்கிறதாம்.

### The Sleep of Fishes.

**மீன்களுடைய தூக்கம்.**—மீன்கள் தூங்குவதே இல்லையென்று பலர் அடிக்கடிசொல்லுவதுண்டு. இயற்கையான நிர்ணயங்களுக்கு மாறான இவ்விஷயம் விசேஷ ஆச்சரியத்துக்கு இடங்கொடுக்கிறது. ஆனால் ப்ரெம் என்னும் ஒருமேல்நாட்டு வித்வான் மீன்கள் மெய்மறந்து தூங்குவதுண்டென்றும், அந்த தூக்க ஸந்தர்ப்பங்களில் அவைகள் ஒருவிதமாக காணப்படுகின்றனவென்றும், அம்மாதிரியாக அவைகள் தோன்றாவிடினுலேயே அவைகள் தூங்குகின்றனவென்று எண்ண வேண்டியதாயிருக்கிறதென்றும் வாதிக்கிறார். மிஸ்டர் ரீஜர்பட்டு என்னும் இன்னொரு வித்வான் பரிசீலனை செய்திருக்கும் விஷயங்களால், மேல்படி ப்ரெம் என்பவர் மீன்கள் தூங்குகின்றன என்று சொல்லும் ஸித்தாந்தம் அநேகமாக ஸ்திரமாகிறது. அவர் கவனித்த விஷயமாவது, மீன்கள் தூங்கும்போது அவைகள் அசைவில்லாமல் இருக்கின்றன. அவைகளுக்கு உணர்ச்சியறிவு குறைந்திருக்கிறது. மீன்கள் பகலிலாவது இராக்காலத்திலாவது நினைத்தபோது தூங்குகின்றன. அப்படித் தூங்குங்காலத்தில் அவைகளின் உடம்பு வால்பக்கமாக சாய்ந்திருக்கும். தலையும் சாய்வாகக் காணப்படுகிறது. இந்த ஸமயத்தில் மூச்சும் குறைந்திருக்கும். சில ஸமயங்களில் முதுகுப்பக்கமாக அவைகள் தூங்குகின்றன. அப்போது அவைகள் வெகுநேரம்வரைக்கும் அசைவில்லாமல் இருக்கின்றன. மீன்கள் விஷயமாய் ஆராய்ச்சிகள் செய்த வேறு வித்வான்களும் மீன்கள் தூங்குகின்றன என்பதை ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

### Preaching Through the Telephone.

**டெலிபோன் மூலமாக மதப்ரஸங்கம் செய்தல்.**—டெலிபோனின் ப்ரயோஜனம் நாளுக்குநாள் அதிகரித்துவருகிறது. அமெரிக்காவில் ஒரு ஸ்த்ரீ ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சற்று தூரத்திலுள்ள தன்னூர் கோவிலுக்குப்போய், அங்கே கிறிஸ்தவகுரு செய்யும் ப்ரஸங்கங்களைக் கேட்க முடியாதவளாயிருந்தாள். ஆனால் அவளுக்கு மதஸம்பந்தமான ப்ரஸங்கங்களைக் கேட்பதில் ஆவலிருந்தது. அதற்காக அவள் கோவிலில் குரு ப்ரஸங்கம் செய்யுமிடத்துக்கும், தன் வீட்டிலுள்ள ஒரு அறைக்கும் ஒரு டெலிபோன் வைத்திருக்கிறாள். அறையில் உட்கார்ந்து டெலிபோன் குழாயைக் காதில் வைத்துக்கொண்டு கேட்டால், கோவிலில் குரு செய்யும் ப்ரஸங்கம் நன்றாய்க் கேட்கிறதாம். டெலிபோன் குழாயைச்சுற்றிலும் நாலைந்துபேர் உட்கார்ந்தாலும் ப்ரஸங்கம் நன்றாய்க் கேட்கிறதாம். இந்த ஸாதனமிருப்பதால் அந்த ஸ்த்ரீ சென்ற 4-வர்ஷகாலமாக கோவிலுக்குப்போகாமலே, கோவிலில் குருசெய்யும் மதபோதனையைக் கேட்டு வருகிறாள்.

# SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

### Facilities for Medical Training.

**வைத்யப் பயிற்சிக்கு ஸௌகர்யங்கள்.**—தற்போது அதிகமான மாணவர்கள் வைத்யப் பயிற்சியடையவேண்டி, ஸர்க்காரால் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் வைத்யப் பள்ளிக்கூடங்களுக்கு மனுப்போடுகிறார்கள். அந்தப் பள்ளிக்கூடங்களில் அதிக மாணவர்கள் சேர்ந்து வாசிக்க இடமில்லாததால், மாணவர்களில் பெரும் பாகத்தார் அவைகளில் சேர்ந்து வாசிக்க முடியாமல் போகிறது. இதை உத்தேசித்து சென்னை கவர்ன்மெண்டார் சென்ற ஏப்ரல்மாஸம் 1-ந்தேதி கீழ்தா வைத்யப் படிப்புக்கு அதிக வஸதிகள் ஏற்படுத்துவது விஷயமாய்ப் பரிசீலனைசெய்து, ப்ரேரணைகள் அனுப்பும்படி ஸர்ஜன் ஜெனரலுக்கு உத்தரவிட்டார்கள். ஸர்ஜன் ஜெனரல் செய்த ப்ரேரணைகளாவன. (1) ராயபுரம் வைத்ய பள்ளிக்கூடத்தில் அதிக மாணவர்களைச் சேர்த்துக்கொள்வது. மாணவர்களுடைய 3-வது, 4-வது வர்ஷ வாசிப்பில், அவர்களை சென்னையிலுள்ள ராயபேட்டை ஆஸ்பத்ரிக்கு அனுப்பி நோயாளிகளைப் பரீக்ஷித்துக் கற்கவேண்டியவைகளை அவர்களுக்குக் கற்பித்தல்; (2) தஞ்சாவூரிலும் விசாகப் பட்டணத்திலுமுள்ள வைத்யப் பள்ளிக்கூடங்களை விருத்தி செய்வது. அவைகளில் அதிக வ்யாதிஸ்தர்கள் தங்கி இருக்கும்படி அதிகமான வ்யாதிஸ்தர் படுக்கைகள் ஏற்படுத்துவது. (3) மேற்குக் கரை ஜில்லாக்களிலுள்ள மாணவர்களின் ஸௌகர்யத்தை உத்தேசித்து, அந்த ப்ரதேசத்தில் ஒரு வைத்யப் பள்ளிக்கூடம் ஸ்தாபிப்பது.

இவைகளில் இரண்டு ப்ரேரணைகளை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவையாவன. ராயபுரம் வைத்ய பாடசாலையில் ஏற்கனவேயுள்ள மாணவர்களைத் தவிர 30 மாணவர்களை அதிகப்படியாக சேர்த்துக்கொள்வார்கள். கள்ளிக்கோட்டையில் ஜூலை மாஸம் 1-ந்தேதியன்று ஒரு வைத்யப் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. இதில் 25 மாணவர்கள் சேர்ந்து வாசிக்கலாம். இந்த இரண்டு ஏற்பாடுகளால் இப்போது வைத்ய ஸ்கூல்களில் சேர்ந்து வாசிக்கக் கூடிய மாணவர்களின் தொகை ஸுமார் 200 ஆகியிருக்கிறது. கவர்ன்மெண்டார் விசாகப்பட்டணம், தஞ்சாவூர் ஆகிய இவ்விடங்களிலுள்ள வைத்யபாடசாலைகளை அபிவ்ருத்தி செய்வதைப் பற்றியும், வேறு இடங்களில் வைத்யப் பள்ளிக்கூடங்கள்ஸ்தாபிப்பதைப் பற்றியும் ஆலோசனைசெய்துவருகிறார்கள். யுத்தத்தால் இந்த ப்ரேரணைகளை முழுவதும் அனுஷ்டானத்துக் கொண்டுவரத் தாமஸமாகலாம்.

### Plantation Coolies and Cold Rice.

**தோட்டவேலை செய்யும் கூலியாட்களும் பழையதும்.**—கூலியாட்கள் காலையில் பழையசோறு தின்றுவிட்டு வேலைக்குப் போகிறார்கள். அப்படிச் சாப்பிடுவதால் அவர்கள் தேகபலமுடையவர்களாகி நன்றாய் வேலை செய்யக்கூடுமென்று அநேகமாய் எல்லாரும் நம்பியிருக்கிறார்கள். ஆனால் மிஸ்டர் ஹோர் என்னும் ஒரு இங்க்லீஷ் நிருபர், பழையது சாப்பிடுவது ஜீர்ண ஸம்பந்தமான வ்யாதிகளுக்கு இடமாகிறதென்றும், முதலில்தோன்றும் வ்யாதிகள் பழையதால் வேரூன்றி விடுகின்றனவென்றும், கூலிகள் திறமையுடன் நன்றாய் வேலைசெய்யவேண்டுமானால் பழையது சாப்பிடும் வழக்கத்தை நிறுத்திவிட வேண்டுமென்றும் ஒரு ஸிலோன் பத்ரிகையில் எழுதியிருக்கிறார்.

'சுதேசமித்திர'னில் ஒரு ஆயுர்வேத வைத்யர் இந்தக் கொள்கையைக் கண்டித்து ஒரு நிருபம் எழுதியிருக்கிறார். அவர் சொல்லுவதாவது. காலையில் பழையது சாப்பிடுகிறவர்கள் அதில் மிக்க குணமிருப்பதாகக் கூறுகிறார்கள். அப்படி உபயோகிப்பவர் பலர் ஆண் பெண் இருதிறத்தாரும் விவஸாயம் முதலிய பல ச்ரமமான வேலைகளை தைர்யத்தோடும் சுறுசுறுப்போடும் செய்துவருவதை நேரிலும் பார்க்கிறோம்.

மிஸ்டர் ஹோர் சொல்வதைப்போல ஜீரணசக்தி குறைந்தவர்களுக்கும் வாததேகிகளுக்கும் குளிர் மிகுதியான காலத்தில் சிலருக்குப் பழையது ஒத்துக்கொள்ளுகிறதில்லை. ஆனால் பழையதைத் தக்கவிதமாகத் தயார் செய்து அன்னத்தில் ஊறியிருக்கும் அமிர்தத்துக்கு ஒப்பான நீராகார ஜலத்தை அதிகாலையில் இறுத்துச் சாப்பிட்டுவந்தால், அது மலஜலங்களை ஸுகமாகப் பிரித்து நாபிக்கமல மூலாதார அழலை மாற்றி வாத பித்த கபங்களைத் தத்தம் நிலையில் நிறுத்தித் தேகாரோக்ய ஸுகத்தைக் கொடுக்கும். சிலருக்கு பழையது மந்தம், மயக்கம், சோம்பல் இவைகளை உண்டாக்கக்கூடும். அப்போது பழையதைக் கொஞ்சம் வெந்நீரில் போட்டு சூட்டுடன் சாப்பிட்டால் யாதொரு கோளாறுகள் உண்டாகமாட்டா. ஆனால் புளித்த பழையதை சாப்பிடலாகாது.



# LAW.

## சட்டம்.

### Leaving Properties for Charity.

**தர்மம் நடத்துவதற்காக ஸொத்துகள் வைத்தல்.**—ஒரு ஹிந்து ஒரு உயில் எழுதி, அதில் எ. என்னும் ஷெடூலில் கண்ட ஸொத்துக்களை ஸுப்ரமண்யன் என்னும் தமது புத்ரனுக்கும், பி. என்னும் ஷெடூலில் கண்ட ஸொத்துக்களை மருதமுத்து என்னும் இன்னொரு புத்ரனுக்கும் கொடுத்து, ஸி. டி. ஷெடூலில் கண்ட ஸொத்துக்களை தர்மத்துக்காக வென்று வைத்தார். ஸி. ஷெடூலில் கண்ட ஸொத்துக்களை ஸுப்ரமண்யன் அனுபவிக்க வேண்டுமென்றும், டி. ஷெடூலில் கண்ட ஸொத்துக்களை மருதமுத்து அனுபவிக்க வேண்டுமென்றும், இருவரும் தர்மத்திற்கென்று எடுத்துவைத்த ஸொத்துக்களுக்காக ஸர்க்காருக்குச் செலுத்த வேண்டிய கிஸ்தியைச் செலுத்தின பிறகு, பாக்கியுள்ள வரும்படியிலிருந்து ஒருவர்மாற்றி ஒருவராக ஒவ்வொரு வர்ஷமும் 250 ரூபாய் செலவு செய்து தர்மத்தை நடத்திவர வேண்டுமென்றும், இந்தச் செலவுகள்போக பாக்கியுள்ள வரும்படியை புத்ரர்கள் தங்களுடைய ஸொந்த செலவுக்கு எடுத்துக்கொள்ள வேண்டியதென்றும், ஸி. டி. ஷெடூலில் கண்ட ஸொத்துக்களை புத்ரர்கள் பராதீனம் செய்யக்கூடாதென்றும் உயிலில் எழுதி வைத்திருந்தார். இன்னும் புத்ரர்கள் மேற்படி தர்மத்தை நடத்தாவிட்டால், உயில் எழுதினவருடைய இரண்டு ஸ்நேகிதர்கள் ஷை தர்மத்தை நடத்திவைத்து, அதற்கு செலவழிக்கும் தொகையை பிள்ளைகளிடமிருந்து வஸூல் செய்யவேண்டு மென்றும் உயிலில் கண்டிருந்தது.

ஸுப்ரமண்யனும், அவருடைய புத்ரர்களில் ஒருவராகிய பொன்னுஸாமியும் இறந்த பிறகு, பொன்னுஸாமியின் மனைவி ஸி. ஷெடூலில் கண்ட ஸொத்துக்களில் பொன்னுஸாமிக்குச் சேரவேண்டிய பாகம் தனக்குச் சேரவேண்டுமென்று ஸுப்ரமண்யனுடைய மற்ற பிள்ளைகளின்மேல் வ்யாஜ்யம் போட்டாள். ஸி. ஷெடூலில் கண்ட ஸொத்துக்கள் தர்மத்தைச் சேர்ந்தவையென்றும், குடும்பத்தாருக்கு அந்த ஸொத்துக்களில் யாதொரு பாத்யமுமில்லையென்றும் ப்ரதிவாதிகள் வாதித்தார்கள். இந்தக் கேஸில் ஹைகோர்ட்டார் தீர்ப்பு என்னவென்றால்; ஸொத்துக்கள் பிள்ளைகளைச் சேர்ந்தவை; ஆனால் அவர்கள் தர்மத்தை நடத்தக் கடமைப் பட்டவர்கள். ஒருவருக்குக் கொடுக்கப்பட்ட ஸொத்து அவருக்கு ஸொந்தமாகக் கொடுக்கப்பட்டதா, அல்லது ஒரு தர்மத்தை நடத்தக் கொடுக்கப்பட்டதா என்பதை நிர்ணயிக்க ஸரியான வழியென்னவென்றால், தர்மம் செய்த பிறகு பாக்கியாயிருக்கும் வரும்படி யாரைச் சேருகிறதென்பதைப் பார்ப்பதே. இங்கே பாக்கி வரும்படி பிள்ளைகளைச் சேருவதால், ஸொத்துக்கள் பிள்ளைகளுக்கு ஸொந்தமென்றும், அவர்கள் தர்மத்தை நடத்தமாத்ரம் கடமைப் பட்டவர்களென்றும் ஏற்படுகிறது. ஸொத்தை ஒருவருக்கு ஸொந்தமாகக் கொடுக்கும்போது, அதைப் பராதீனம் செய்யக்கூடாதென்று நிபந்தனை ஏற்படுத்தியிருந்தால், அந்த நிபந்தனை செல்லாது. ஸொத்தை புருஷ வார்ஸுகனே அனுபவிக்க வேண்டுமென்று உயிலில் கண்டு, அதோடு ஸொத்து அதை அடைந்தவருக்கு ஸொந்தமாக வேண்டுமென்று கண்டிருந்தால், அதனால் ஸ்த்ரீ வார்ஸுகளுக்கு பாதகமேற்படாது.

4 லா வீக்லி 104.

### An Important Decision about Joint Family.

**அவிபக்த குடும்பத்தைப்பற்றிய ஒரு முக்ய தீர்மானம்.**—மிதாக்ஷர சட்டம் அனுஷ்டானமுள்ள ஒரு அவிபக்த ஹிந்து குடும்பத்தைச்சேர்ந்த ஒரு பாகஸ்தர் தான் பாகம் செய்துகொள்ள விரும்புவதாக மற்ற பாகஸ்தர்களுக்குத் தெரிவித்ததோடு, குடும்பத்தில் சேர்ந்திருக்க மறுத்துவிட்டு, பாகம் செய்துகொள்ள வ்யாஜ்யம் போட்டார். வியாஜ்யம் முடிவதற்குள் அவர் இறந்து போய் விட்டார். அதன்மேல் அவரது மனைவி தான் தன் கணவருடைய வார்ஸென்றும், அந்த வ்யாஜ்யத்தைத் தான் நடத்த வேண்டுமென்றும் மனுப்போட்டாள். இதை மற்ற பாகஸ்தர்கள் ஆக்ஷேபித்தார்கள். இந்தக் கேஸ் ப்ரிவி கௌன்ஸிலுக்குப் போனதில், இறந்துபோன பாகஸ்தர் பாகம்செய்துகொள்வதாக வ்யக்தமாய் மற்ற பாகஸ்தர்களுக்குத் தெரிவித்ததனாலேயே, அவர் பிரிகமாகிவிட்டாரென்றும், அவருடைய ஸொத்துக்களும் பாத்யதைகளும் அவருக்குப் பிறகு மற்ற பாகஸ்தர்களைச் சேராமல் அவருடைய வார்ஸாகிய அவருடைய மனைவியைச் சேருமென்றும் ப்ரிவி கௌன்ஸிலில் தீர்ப்பாயிற்று.

4 லா வீக்லி 114.

## SOCIETY AND RELIGION.

## ஜன ஸமூகமும் மதமும்.

### Social Reformers.

**ஆசார சீர்திருத்தக்காரர்கள்.**—ஸமீபத்தில் வெளியான 'பெண்கல்வி' பத்ரிகையில் ஒரு நிருபர் முற்காலத்தில் இருந்த ஆசார சீர்திருத்தக் காரர்களையும் தற்காலத்திய ஆசார சீர்திருத்தக்காரர்களையும் ஒப்பிட்டு தற்காலத்தியவர்களைக் கண்டித்து ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார்.

முற்கால ஆசார சீர்திருத்தக்காரர்கள் ஜனங்களின் நன் மதிப்பைப் பெற்றிருந்தார்கள். ஆசார சீர்திருத்தம் தெய்வீகமானதென்று கருதி நடந்துவந்தார்கள். அவர்கள் என்ன பேசினார்களோ, என்னசெய்தார்களோ அவைகளெல்லாம் அன்போடு கூடியவைகளாயிருந்தன. முற்காலத்திய ஆசார சீர்திருத்தக்காரர்களாகிய மஹான்கள் ஸ்வயநலம் பாராட்டுதல், பொறாமை, கோபம் முதலிய துர்க்குணங்களை அடியோடு விட்டவர்களாய் உயர்ந்த நோக்கத்தோடு வாழ்க்கையைக் கழித்துவந்தார்கள். ஜனங்களும் அந்த மஹான்கள் சொன்னவைகளை உள்ளன்போடு ஏற்று அவைகளை வாழ்க்கையில் அனுஷ்டித்து வந்தார்கள். ஆகவேதான், முற்காலத்தில் ஆசார சீர்திருத்தம் முன்னடைந்து வந்தது.

தற்காலத்திய ஆசாரசீர்திருத்தக் காரர்களோ ஆசார சீர்திருத்தக் கொள்கைகளுக்கு விரோதமாகவே பேசுவதும், எழுதுவதுமாக இருக்கிறார்கள். இவர்கள் அந்தக் கொள்கைகளை முற்றிலும் உணர்ந்தவர்களாகத் தெரியவில்லை. இவர்கள் ஸ்வயநலத்தைக் கருதி கோபத்தோடு பேசுவதும் எழுதுவதுமாக இருக்கிறார்கள். இவர்களிடத்தில் அன்பு என்கிற ஒரு தெய்வீக சக்தி கிடையாது. முரட்டுப் பேச்சுக்களினாலும், ஆர்ப்பாட்டத்தினாலும் ஆசாரசீர்திருத்தம் நிறைவேறிவிடுமென்று நினைக்கிறார்கள். இதனால் இவர்கள் ஜனங்களுடைய நன்மதிப்பைப் பெறமுடியாமலிருக்கிறார்கள். இதனால்தான் தற்காலம் ஆசாரசீர்திருத்தம் ஜனங்களிடம் பரவாமலிருக்கிறது. தாங்கள் ஆசாரசீர்திருத்தக்காரர்கள் என்று சொல்லிக்கொள்ளுபவர்களே "தங்கள் வீடுகளிலுள்ள அற்ப வழக்குகளை சீர்படுத்த முடியாமல் விழிக்கிறதை நாம் அறிந்திருக்கிறோம். நாலைந்துபேர்களடங்கிய ஒரு குடும்பத்தை சீர்படுத்த முடியாதவர்களா ஒரு ஸமூகத்தை சீர்ப்படுத்தப் போகிறார்கள்!"

இப்போது ஒவ்வொரு வகுப்பிலும் பல ஜாதிப்பிரிவுகளும் வித்யாஸங்களும் இருக்கின்றனவென்று போலியாகத் துக்கிக்கிற இவர்கள் போன்றவர்களாலேயே முன் ஒரு காலத்தில் மேற்சொன்ன பிரிவுகளும் வித்யாஸங்களும் ஏற்பட்டு விட்டன. இக்காலத்திய ஆசார சீர்திருத்தக்காரர்களின் செய்கைகளினால் இன்னும் எவ்வளவு ஜாதி உட்பிரிவுகள் ஏற்பட்டு விடுமோவென்று ஒரு பயம் ஜனிக்கிறது. இப்போது, ஆசார சீர்திருத்தக் காரர்களென்று படித்த வகுப்பாருக்குள் ஒரு தனி ஜாதி ஏற்பட்டிருக்கிறதை இவர்கள் மறுக்க முடியுமா?

### The Origin of the Panchamas.

**பஞ்சமர்களின் வரலாறு.**—ஸ்ரீக்ருஷ்ணபகவான் கீதையில் குணங்கள், கர்மங்கள் இவைகளின் வேறுபாட்டுக்கேற்ப நான்கு ஜாதிகளைப் படைத்ததாகச் சொல்லியிருக்கிறார். அப்படியானால் பஞ்சமர்கள் என்று ஒரு ஜாதி ஏற்படுவானேன்? கல்கத்தா ஹைக்கோர்ட்டில் முன்பு ஜட்ஜாயிருந்த சாரதாசரணமித்ரர் இதற்குப் பின்வருமாறு விடைகூறுகிறார். முன்பு ஆர்யர்களல்லாத ஜனங்கள் ஹிந்துமதத்தைத் தழுவினபோது, அவர்கள் சூத்ரஜாதியைச் சேர்ந்து, அந்த ஜாதியில் ஒரு வகுப்பாய் இருந்து வந்தார்கள். அவர்கள் வரவர உயர்வடையவே, அவர்களுக்கு அடுத்தபடியாக ஹிந்துமதத்தில் சேர்ந்த ஆர்யரல்லாத ஜாதியார், முன்பு சேர்ந்த வகுப்பாருக்குத் தாழ்ந்தவர்களாய் சூத்ர ஜாதியின் ஒருவகுப்பாய் இருந்துவந்தார்கள். இப்படியே புதிதாக ஹிந்துமதத்தில் சேர்ந்த ஒவ்வொரு ஆர்யரல்லாத வகுப்பாரும், அதற்கு முந்தி சேர்ந்த வகுப்பாருக்கு தாழ்ந்தவர்களாக இருந்துவந்தார்கள். கடைசியில் சேர்ந்த வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் முதலில் சேர்ந்தவர்களைவிட எவ்விதத்திலும் தாழ்ந்தவர்களாயிருந்தமையால், அவர்கள் ரொம்பத் தாழ்ந்த ஜாதியாக மதிக்கப்பட்டு வந்தார்கள். இவ்விதம் பஞ்சமரென்னும் தாழ்ந்த ஜாதிகள் ஏற்படலாயின.

இதைத் தவிர வேறொருகாரணமுமுண்டு. உயர்ந்த ஜாதி ஆர்யர்களில் சிலர் தங்கள் தர்மத்தை விட்டுவிட்டு தாழ்வடைந்துபோய் சூத்ரர் முதலிய கீழ்ப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களானார்கள். இவர்கள் ஆர்யர்களல்லாத தாழ்ந்த ஜாதிகளாகவே கருதப்பட்டு வந்தார்கள். இதனாலும் தாழ்ந்த வகுப்பாரின் தொகை அதிகமாயிற்று. இவ்விதம் ஒருவடதேசத்துப் பத்ரிகை எழுதுகிறது.



## HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### Coffee as a Disinfectant.

**காப்பி ஒரு க்ருமிஹர மருந்தாவது.**—வறுத்த காப்பிக்கொட்டையைப்பற்றி பரீக்ஷைகள் செய்ததில், அது க்ருமிகளின் வேகத்தைத் தடுப்பதோடு, அவைகளைக் கொன்று விடுகிறதென்று தெரிகிறது. ஒரு அறையில் அழுகிப்போன மாம்ஸம் சிலநாளாக வைக்கப்பட்டிருந்தது. அதனால் அந்த அறையானது ரொம்ப துர்நாற்றமுள்ளதாயிருந்தது. புதிதாய்வறுத்த காப்பிக் கொட்டையுள்ள வறுக்கும் பாத்ரத்தை அந்த அறைக்குள் கொண்டுபோய் சற்றுநேரம் கழித்து அதை வெளியில்கொண்டுவந்து விட்டார்கள். அறையில் இருந்த துர்நாற்றமெல்லாம் போய்விட்டது. இன்னொரு அறைக்குப் பக்கத்தில் கக்கூஸ் இருந்தது. அக்கூஸை சுத்தம் செய்யும்போதெல்லாம், நவாச்சார வாயுவும், ஸல்பரெட்டட் ஹைட்ரஜின் என்னும் விஷவாயுவும் வெளிப்பட்டு, பக்கத்திலுள்ள அறைக்குப்போகும். இதனால் அந்த அறையில் ஷை வாயுக்கள் ஸ்வல்ப அளவில் இருந்துகொண்டு நாற்றமுண்டாக்கி வந்தன. அந்த அறையில் 3-ஔன்ஸ் வறுத்த காப்பிக்கொட்டையை வைத்ததில் நாற்றமெல்லாம் ஓடிவிட்டது. வீட்டின் மற்ற அறைகளில் வறுத்த காப்பிக்கொட்டையை எடுத்துக் கொண்டுபோய் திரும்பிக்கொண்டு வந்ததனாலேயே அங்குள்ள நாற்றம்போய்விட்டது. இப்படிச் செய்து வெகுநேரமான பிறகே கக்கூஸ் சுத்தம் செய்யப்படும், அதுவரையில் கக்கூஸ் நாற்றம் ஏற்படவேயில்லையாம். காப்பிக்கொட்டையை க்ருமிஹரமாக உபயோகிக்கும் முறை பின்வருமாறு. காப்பிக் கொட்டையை நன்றாய் வெயிலில் காயவைத்து, உரலில்போட்டு இடித்துத் தூளாக்கிப் பிறகு மிதமான சூட்டில் இரும்புப்பாத்ரத்தில், வறுத்து, கரும்பழுப்பு நிறமானதும் எந்த அறையை சுத்தம் செய்யவேண்டுமோ அந்த அறையில் வைத்துவிடவேண்டும். சாக்கடைகளிலும், சாக்கடைத் தண்ணீர் தேங்கியிருக்கும் இடங்களிலும் இதைத் தூவினால் அவை சுத்தமாகி துர்நாற்றம் வீசாமலிருக்கும்.

### To Clean Mirrors etc.

**முகம்பார்க்கும் கண்ணாடி முதலியவைகளை சுத்தம் செய்ய.**—முகம்பார்க்கும் கண்ணாடியை சுத்தம்செய்யப் பின்வருமாறு செய்யவும். ம்ருதுவான ஸ்பஞ்ஜை நன்றாய் சுத்தம்செய்து, தூசி, மண் இல்லாதபடி துடைத்து, ஜலத்தில் நனைத்து எடுத்து ஜலமில்லாதபடி பிழிந்து, ஏதாவது ஒரு ஸ்பிரிட்சாராயத்தில் நனைத்தெடுத்து கண்ணாடியின்மேல் தேய்க்கவும். பிறகு கண்ணாடியின்மேல் நயமான சுண்ணாம்புத்தூளை தூவவும். உடனே ஒரு துணியால் சுண்ணாம்புத்தூளை சீக்ரம் துடைத்து எடுத்துவிட்டு வேறு சுத்தமான துணியால் கண்ணாடியை நன்றாய்த் தேய்த்துத் துடைக்கவும். பிறகு ஒரு பட்டுத்துணியால் அதை நன்றாய்த் தேய்த்து விடவும். கண்ணாடி ரொம்ப பெரியதாய் இருந்தால், கண்ணாடியின் ஒருபாதியை முதலிலும் பிறகு மறுபாதியையும் சுத்தம் செய்யவேண்டும். முழுவதையும் ஒரேதடவையில் சுத்தம் செய்வதானால், ஸ்பிரிட் சாராயத்தைத் துடைக்குமுன் அதில் ஒருபாகம் உலர்ந்துபோகும்.

கண்ணாடியின் சட்டத்துக்கு வார்னிஷ் பூசாமலிருந்தால், கண்ணாடியைத் துடைக்கும்போது சாராயமுள்ள ஸ்பஞ்சானது சட்டத்தில் படாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். ஸ்பஞ்சிலுள்ள சாராயம் சட்டத்தின்மேல் பட்டால், அதில் உள்ள கில்ட் வேலை கெட்டுப்போகும். தங்கரேக்கானது எடுபட்டுப்போகும். அல்லது சட்டத்தின் வர்ணம் கெட்டுப்போகும். வார்னிஷ் கொடுக்காத சட்டங்களை பருத்தியால் துடைத்தால் போதுமானது. வார்னிஷ் போட்ட சட்டமானால் ஸ்பிரிட் சாராயத்தால் தேய்த்து சுத்தம்செய்யவும். வார்னிஷ் கொடுத்த கதவுகளையும் இவ்விதமே சுத்தம் செய்யலாம்.

### Relief of Asthma.

**ச்வாஸ காசத்துக்கு வைத்யம்.**—கொஞ்சம் அயடோபாரத்தை (Iodoform)ப் பொடிசெய்து அடி நாக்கில் வைத்து, அது மெதுவாகக் கரையும்படி விட்டால் 5 அல்லது 10 நிமிஷத்துக்குள் ச்வாச காசத்தால் ஏற்படும் உபத்ரவம் நீங்குமாம். பிறகு 1-மணிமுதல் 6-மணிவரையில் கஷ்டம் தோன்றுவதில்லையாம்.

### Lice in the Head.

**தலைப்பேன்.**—ரஸத்தைக் கருவூமத்தைக் சாற்றிலாவது, மேனிச் சாற்றிலாவது அரைத்து பழந்துணியில் தடவி, நிழலில் உலர்த்தி சிரசில் சுற்றிவைக்க மூன்று ஜாமத்துக்குள் பேனெல்லாம் உதிரும்.—பெண்கல்வி.

### To Prevent a Lamp from Smoking.

**விளக்கு புகையாமலிருக்க.**—திரியை காரமான காடியில் நனைத்துப் பிறகு அதை உலர்த்தி விளக்கில் வைத்து எரியவிட்டால், விளக்கு புகையாது.

# AGRICULTURE.

# விவஸாயம்.

### Guinea Grass.

**கினிபுல் என்னும் கொழுக்கட்டைப் புல்.**—இது ஸுலபமாய் வளரக்கூடியதும், மாடுகளுக்குத் தீவனத்துக்கேற்றதுமான ஒரு பயிர். இந்தப் புல் கோடையையும் தண்ணீர் தட்டையும் தாங்கக்கூடு மென்றாலும், கொழுத்த ஈரமும் தண்ணீரும் இருந்தால்தான் புல் அதிகமாய்க் கிடைக்கும். வடிகால் வஸதியுள்ள எல்லா நிலங்களிலும் மரநிழல்களிலும் பயிரிடலாம். நிலத்தை நன்றாய் உழுது ஏகர் ஒன்றுக்கு 30 வண்டி சாணம் குப்பை அடித்து உழுது 3 அடிக்கு ஒருகோடு, நீளத்திலும் அகலத்திலும் இழுத்து கோடுகள் ஸந்திக்குமிடங்களில் வேருள்ள 5, 6 புல் தூறுகளைச் சேர்த்து நடவேண்டும். விதை விதைத்துப் பயிர் செய்யலா மென்றாலும், விதை முளைத்துப் பயிர் வளர வெகுநாள் செல்லுமாதலால், புல் தூறுகளையே நட்டுப் பயிர் செய்வது நல்லது. மேற்சொன்னபடி நட்டு வேரூன்றின பிறகு புல்லிருக்குமிடத்தை முகடுகளாகவும் மத்தியிலுள்ள வெளியைத் தண்ணீர் வாய்க்கால்களாகவும் செய்துவிடலாம். மழைக்காலத்து முதலில் பயிர்செய்ய ஆரம்பிப்பது உத்தமம். ஏனெனில் அதிகமாக தண்ணீர் இறைக்கவேண்டியிராது. ஸுமார் ஒரு வருஷத்துக்கு 8 முறை புல் அறுக்கலாம். அறுத்த பிறகு களை எடுத்துக் கொத்திவைப்பது நலம். பயிர் அடியில் தூறுகட்டி அநேக கிளைகள் வெடிப்பதனால் புல் வரவர அதிகமாகும். ஒரு நிலத்தில் மூன்று வர்ஷம்வரை இப்புல்லை வைத்திருக்கலாம். பின் பேர்த்துவிடவேண்டும். இரண்டாவது மூன்றாவது வர்ஷமும் உரம்போடவேண்டும். இப்படி வளர்க்கப்பட்ட நிலத்திலிருந்து வர்ஷாவர்ஷம் ஏகர் ஒன்றுக்கு 25,000 முதல் 40,000 பவுன் நிறையுள்ள பசும்புல் கிடைக்கிறது.

தோட்டக்கால்களில் எப்பொழுதும் போடக்கூடிய இந்தப் புல்லை தண்ணீர் வாய்க்கால்கள் கரையோரத்திலும் வீட்டுப் பின்புறத்திலும் பயிர்செய்தால், அதிக ப்ரயாஸையின்றித் தினந்தோறும் நமது பசுமாடுகளுக்குப் பசும்புல் கிடைக்கச் செய்யலாம். புதுக்கோட்டையில் சிலர் தங்கள் கறவை மாடுகளுக்கும் குதிரைகளுக்கும் நல்ல புல் தீவனம் கிடைக்கும்பொருட்டு தங்கள் வீட்டின் பின்பக்கத்தில் கிணற்றோரத்தில் இப்புல்லைப் பயிர்செய்து வருகிறார்களாம்.

### Lands for Cattle or Dairy Farms.

**கால்நடை பால் தயிர்ப் பண்ணைகளுக்கு நிலங்கள்:-** கால்நடைப் பண்ணைகளோ, பால் தயிர்ப் பண்ணைகளோ ஏற்படுத்த விரும்புகிறவர்கள் கவர்ன்மெண்டாரிடமிருந்து தர்க்காஸ்து நிலங்களை எவ்விதம் பெறலாமென்பதற்கு ரெவின்யூ போர்டார் சில ரூல்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவைகளை கவர்ன்மெண்டார் அங்கீகரித்திருக்கிறார்கள். ஷை பண்ணைகள் ஏற்படுத்த தர்க்காஸ்து நிலங்கள் வேண்டுவோர் கலெக்டருக்கு மனுப்போடவேண்டும். கலெக்டர் விவஸாய டிரெக்டர் மூலமாக மனுவை ரெவின்யூ போர்டாருக்கு அனுப்புவார். பண்ணை ஏற்படுத்துகிறவர் கேட்கும் நிலம் புறம்போக்கு நிலமாயிருந்தால், அந்த நிலம், பிற்காலத்தில் க்ராமம் அல்லது பட்டணத்தை விசாலமாக்கும்போது வீடு கட்டவேண்டியிருக்குமா என்பதையும், ஊரில் மாடு மேய்வதற்கும், மற்ற ஊர் பொதுக்கார்யங்களுக்கும் போதுமான நிலம் இருக்கிறதா என்பதையும் கவனித்து நிலம் கொடுக்கலாம் கொடுக்கக்கூடாதென்பதை கலெக்டர் ரெவின்யூ போர்டாருக்குத் தெரிவிப்பார். விவஸாய டிரெக்டா தம்மிடம் வரும் மனுவை மேலே அனுப்பும்போது, இன்ன நிபந்தனையின்மேல் நிலங் கொடுக்கலாமென்பதைத் தெரிவிக்கவேண்டும். உதாரணமாகஸ்தாபிக்கப்போகும் பண்ணையில் இத்தனை பசு, காளைமாடுகள் இருக்கவேண்டுமென்பது, கன்றுகளுக்கு விதையெடுப்பது, க்ராமத்து மாடுகளுடன் பண்ணைப் பசுக்களைச் சேராமல் வைப்பது முதலியவைகளைப்பற்றி வேண்டிய நிபந்தனைகளேற்படுத்துவார். நிலம் அடைந்தவர் தமது நிலத்துக்கு வேலிபோட்டு வைப்பதோடு, நிலம் கிடைத்த 12-மாஸத்துக்குள் விவஸாய டிபார்ட்மெண்டார் சொல்லும் புல் வகைகளையோ தீவனப்பயிரையோ பயிர் செய்யவேண்டும். முதல் 5-வர்ஷத்துத் தீர்வை இராது. ஆனால் ஸர்க்கார் ஜலத்தை பாசனத்துக்கு உபயோகித்திருந்தால், வழக்கப்படி தண்ணீர் தீர்வை செலுத்தவேண்டும். 5-வர்ஷத்துக்குப் பிறகு நிலத்துக்கு தீர்வை விதிக்கப்படும்.

### Sheep and Soil Fertility.

**ஆடுகளும் நிலத்தின்வளமையும்.**—வயல்களில் ஆட்டுக்கிடை வைப்பதால் நிலத்தின் செழுமை அதிகரிக்கிறதென்றும், ஆடுகளின் புழுக்கையும் மூத்ரமும் நல்ல எருவாக உபயோகப்படுகிறதென்றும் யாவரும் அறிவார். ஆடுகளால் இன்னொரு உபயோகமும் உண்டு. அதாவது அவைகள் வயல்களிலுள்ள புல்பூண்டுகளை தின்று சுத்தம்செய்கின்றன. இங்க்லண்டில் சில இடங்களில் வயல்களிலுள்ள களைகளை அழிக்க விவஸாயிகள் தங்களுடைய ஆடுகளை விடுவதுண்டு. தங்களுக்கு ஸொந்தமாக ஆடுகள் இல்லாதபக்ஷத்தில், ஆடுகள் வைத்திருப்பவரிடமிருந்து ஆடுகளை ஓட்டிப்போய் அதற்குக் கூலியாக ஆட்டுக்காரருக்கு பிண்ணாக்குக் கொடுப்பதுண்டு. அறுவடையானபின் வயல்களில் ஆடுகளை மேயவிட்டால் களைகள் அழிவதோடு, வயலுக்கு உரமும் ஏற்படும்.



# CO-OPERATION.

# கோவாபரேஷன்.

### A Co-operative Purchase Society.

**ஸாமான் வாங்குவதற்கான ஒரு கோவாபரேடிவ் ஸங்கம்.**—இங்க்லண்டில் உள்ள ஸ்டேபில்போர்ட் என்னும் க்ராமத்திய ஜனங்கள் தங்களுக்கு வேண்டிய ஸாதாரணஸாமான்களை வாங்க ஒருபுதுமாதிரியான ஐக்யஸங்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவ்வூரில் கடைகள் கிடையா. பக்கத்தூர்களிலுள்ள வ்யாபாரிகள் இவ்வூரார் வேண்டும் ஸாமான்களை விற்றுவந்தார்கள். அவர்கள் ஐக்யமுறையில் ஒரு ஸாமான் கடை(ஸ்டோர்) ஏற்படுத்தத் தங்களுக்கு அனுபோகம் போதாதென்று கண்டு, வேறுவிதத்தில் ஸாமான்கள் ஸப்ளைசெய்து கொள்ள எண்ணி ஒரு ஸங்கம் ஸ்தாபித்துக் கொண்டார்கள். அவர்கள் பக்கத்தூர்களில் உள்ள சில வ்யாபாரிகளைக் கண்டு, தங்களூராருக்கு வேண்டிய ஸாமான்களுக்கு சேரவேண்டிய தொகையை ஸங்கத்தார் வாராவாரம் செலுத்திவந்தால், வ்யாபாரிகள் தங்களுக்கு ஸாமான்களைக் குறைந்த விலையில் விற்கமுடியுமாவென்று கேட்டார்கள். சில வ்யாபாரிகள் ஒப்புக்கொள்ளவே ஸங்கத்தார் ஸாமான்வாங்கி ஸப்ளைசெய்ய ஆரம்பித்தார்கள். ஸங்கம் வ்யாபாரம் நடத்தும் முறை பின்வருமாறு.

வ்யாபாரத்தை நான்கு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். மளிகை ஸாமான், ரொட்டி, குதிரை, கால்நடைகளுக்குத் தீவனம், நிலக்கரி. ஆறுமாஸத்துக்கொருதடவை, ஸங்கத்துக்கு ஸாமான்கள் விலைக்குக்கொடுக்க வ்யாபாரிகள் தேவையென்று பத்ரிகைகளில் விளம்பரம் செய்வார்கள். ஸங்கத்துக்கு ஸாமான் ஸப்ளைசெய்யும் வ்யாபாரிகள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்படவேண்டும். அவர்கள் ரொக்கவிலை கொடுத்தால் என்ன விலைவீதம் விற்பார்களோ அந்த விலையில் ஸாமான்கள் கொடுக்க வேண்டும். மொத்தத்தில் ஆர்டர்கொடுப்பதாலும், வாராவாரம் விலைப் பணத்தைக் கொடுத்துவிடுவதாலும், வ்யாபாரிகள் டிஸ்கௌண்ட் தள்ளிக் கொடுக்க வேண்டும். வ்யாபாரிகள் கொண்டு வந்த ஸாமான்களில் ஒவ்வொரு மெம்பருக்கும் எவ்வளவு தேவை யென்று ஏற்கனவே தெரிவிக்கப் பட்டிருக்கிறதோ அதை அந்தந்தமெம்பர் வீட்டில் கொண்டுபோய் கொடுத்துவிடவேண்டும். சென்ற அக்டோபர் மாஸத்தில் அந்த ஸங்கத்துக்கு ஸாமான்கள் ஸப்ளை செய்த வ்யாபாரிகள் பின்வருமாறு டிஸ்கௌண்ட் கொடுத்து வந்தார்கள். மளிகை ஸாமான் 100-க்கு $6\frac{1}{4}$-வீதம்; ரொட்டி 100-க்கு 10 ; தீவனப்பொருள்கள் 100-க்கு $2\frac{1}{4}$-வீதம் ; நிலக்கரி டன்னுக்கு 1-ஷில்லிங் வீதம்: ஸாமான்வாங்கும் ஒவ்வொரு மெம்பருக்கும், மேற்சொன்ன நான்குவகை ஸாமான்களில் ஒவ்வொருவகைக்கும் கணக்கு எழுதிக்கொள்ள ஒரு புஸ்தகம் கொடுப்பார்கள். ஸங்கத்தின் கமிட்டியாரும் ஸெக்ரடரியும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மீட்டின் கூடுவார்கள். அந்த மீட்டிங்கில் ஒவ்வொரு மெம்பரும் ஸங்கத்தினிடம் முந்தின வாரத்தில் வாங்கின ஸாமான்களுக்குப் பணம் செலுத்திவிட்டு, அடுத்தவாரத்துக்கு வேண்டிய ஸாமான்களின் ஜாப்தாவை கணக்குப் புஸ்தகத்தில் எழுதிக் கொடுப்பார்.

ஸங்கத்தார் பணத்தை வஸூல்செய்து, வேண்டிய ஸாமான்களின் ஜாப்தாக்களை ஒன்றுசேர்த்து, அடுத்த நாள் வ்யாபாரிக்கு டிஸ்கௌண்ட் கழித்து செலுத்த வேண்டிய தொகையைக் கொடுத்து, ஸாமான்களின் ஜாப்தாவையும் கொடுத்து விடுகிறார்கள். ஸாமான்களில் கண்ட ஜாப்தாப்படி வ்யாபாரி ஒவ்வொரு மெம்பருக்கும் வேண்டியிருக்கும் ஸாமான்களை அவரவர் வீட்டில் கொண்டுபோய்க் கொடுக்கிறார்.

டிஸ்கௌண்டாகக் கிடைத்த தொகையை ஸேவிங்ஸ் பாங்கில் போட்டுவைக்கிறார்கள். 6-மாஸத்துக்கு ஒருதடவை அந்தத் தொகையை ஸங்கத்தார் பங்குபோட்டுக் கொள்ளுகிறார்கள். அந்தத் தொகையில் ஒருபாகம் ஸங்கச்செலவுக்கும், ஒருபாகம் ரிஸர்வ் பண்டுக்கும் போகின்றன. பாக்கித் தொகையை மெம்பர்கள் ஒவ்வொருவருக்கும் வாங்கின ஸாமான் மதிப்புக்குத் தக்கபடி பிரித்துக்கொடுக்கிறார்கள்.

### Profits and Reserve Fund.

**லாபமும் ரிஸர்வ் பண்டும்.**—சென்ற வர்ஷத்தில் கவர்ன்மெண்டார் எல்லா லிமிடெட் லையபிலிடி கோவாபரேடிவ் ஸங்கங்களிலும் நிகரான லாபத்தில் பாதி பாகத்தை ரிஸர்வ் பண்டில் சேர்த்துவிட வேண்டுமென்று ஒரு உத்தரவு போட்டார்கள். இதனால் பல ஸங்கங்களுக்கு கெடுதல் ஏற்படுமென்று அநேகர் சொல்லி வந்தார்கள். இப்போது கவர்ன்மெண்டார் நிகரான லாபத்தில் கால்பாகத்தை ரிஸர்வ்பண்டில் சேர்த்தால் போதுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள்,

## COMMERCE.

## வ்யாபாரம்.

### Industrial Progress of Japan.

**ஜப்பானின் கைத்தொழில் அபிவ்ருத்தி.**—சென்ற மாஸத்து 'ஜனுபிமானி'யில் ஜப்பானின் கைத்தொழிலபிவ்ருத்தியைப் பற்றி ஆராய்ச்சி செய்யப்போயிருந்த ப்ரொபஸர் ஹாமில்டன் ஸமீபத்தில் இந்தியாவுக்குத் திரும்பி வந்ததாக எழுதினோம்.

அவர் ஜப்பானிடமிருந்து இந்தியா கற்றுக்கொள்ள வேண்டியவைகளைப் பற்றி கல்கத்தா 'ஸ்டேட்ஸ்மன்' பத்ரிகையின் ப்ரதிநிதி ஒருவரிடம் பேசினார். அவர் சொன்னதாவது. இந்த யுத்தத்தால் ஜப்பானுக்கு ஆர்டர்கள் ஏராளமாய் வந்துகொண்டிருக்கின்றன. ஜெர்மனியும் மற்ற ஐரோப்பிய தேசங்களும் யுத்தத்தால் ஸப்ளை செய்ய முடியாமலிருக்கும் பொருள்களை ஸப்ளை செய்யும்படி உலகத்தின் பற்பல பாகங்களிலிருந்து ஜப்பானிய வ்யாபாரிகளுக்கு கடிதங்கள் வருகின்றன. இவ்விதம் ஸாமான்களுக்கு க்ராக்கி ஏற்பட்டிருப்பதானது ஜப்பானின் அபிவ்ருத்திக்கு ரொம்ப ஸௌகர்யமாயிருக்கிறது. ஜப்பானில் ஒரு விசேஷ ஸௌகர்யமென்னவென்றால், மொத்தத்தில் திறமையுள்ள கூலியாட்கள் குறைந்த சம்பளத்துக்கு வேண்டிய அளவு கிடைப்பார்களென்பதே. ஆனால் ஜப்பானில் மூலதனம் அதிகமாய்க் கிடைப்பது கஷ்டம். அதோடு பெரிய தொழில்களை தக்கவிதம் சீராய் நடத்த அங்குள்ளவர்களுக்கு திறமை போதாது.

கவர்ன்மெண்டாரும், வ்யாபாரிகளும், மற்றவர்களுமாக எல்லாவகுப்பாரும் தங்களுடைய பொருளாதார நிலைமையை ஒன்று சேர்த்து ஒழுங்குபடுத்த ரொம்ப முயற்சி எடுத்து வருகிறார்கள். இப்போது யுத்தத்தால் வ்ருத்தியடைந்த தொழில்கள் யுத்தம் நின்று விட்ட பிறகு இடையொன்று அபிவ்ருத்தி தடைபட்டுப் போகுமென்று பயந்து, அதற்கேற்றபடி முன் ஜாக்ரதைகள் எடுத்து வருகிறார்கள். உதாரணமாக, எந்தேசங்களோடு வ்யாபாரம் நீடித்திருக்குமோ அந்த தேசங்களுக்கு வேண்டிய பொருள்களைச்செய்து அங்கே விற்பதில் கவலையெடுத்து வருகிறார்கள். முக்யமாய் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் வ்யாபாரம் ஸ்திரமாய் நடக்க [illegible] செலுத்துகிறார்கள். ஜப்பானியர்களுக்கு சீனாவின் மேல் கவனம் அதிகம். கைத்தொழில்களுக்கு வேண்டிய மூலப்பொருள்களை அடைவதற்கும், அவைகளைக்கொண்டு செய்த ஸாமான்களை விற்பதற்கும் அந்த தேசத்தின்மேலேயே வெகுவாய் லக்ஷ்யம் வைத்திருக்கிறார்கள்.

ஜப்பானிடமிருந்து நாம் தெரிந்துகொள்ளக்கூடிய நீதிகள் என்னவென்றால்; இயற்கை ஸாதனங்கள் ரொம்ப குறைவாயிருந்து, கைத் தொழிலறிவு அடைய வஸதிகள் குறைவாயிருந்தபோதிலும், ஊக்கமும், தொழிலில் ஏற்பாடும் ஒழுங்குமிருந்தால் ரொம்ப முன்னேற்ற மடையலாம் என்பதே. ஜப்பானில் எல்லா விதமான மூலப் பொருள்களையும் ஏதாவது ஒருவகையில் உபயோகித்து வருகிறார்கள். க்ராமாந்தரத்து ஜனங்களும், பட்டணங்களில் உள்ள தாழ்ந்த வகுப்பாருந்தான் கைத்தொழில் வேலைகளில் பெரும்பாகத்தைச் செய்து வருகிறார்கள். இந்தியா கைத்தொழிலில் முன்னேற்ற மடைய வேண்டுமென்றால் ஜப்பான் மாதிரியே கைத்தொழில் விஷயத்தில் உழைக்கவேண்டும். சிறுதொழில்களாய் ஸ்தாபிக்கப்பட்டிருப்பவைகளை மெதுவாக பலப்படுத்தி பெரிய ஸ்தாபனங்களாக உயர்த்த வேண்டும். இதற்கு என்னென்ன ஸௌகர்யங்களும் ஆதரவும் வேண்டுமோ அவைகளைச் செய்து கொடுக்க வேண்டும். தொழிலாளிகளைத் திறமையுள்ளவர்களாக்க வேண்டும். வ்யாபாரிகள் தொழில்களைத் திறமையுடனும் ஒழுங்குடனும் நடத்தவேண்டும்

### Punalar Paper Mills.

**புனலூர் காகிதத் தொழில்சாலை.**—சென்ற 1-வர்ஷ காலமாக கவர்ன்மெண்டார் மேற்பார்வையிலிருந்து வரும் இந்தத் தொழில்சாலையில் சென்றமூன்று மாஸங்களாகத்தான் காகிதம் செய்துவருகிறார்கள். அதுவும் பழுப்புக்காகிதந்தான். இதுவரையில் அங்கே வேலை செய்ய தொழில் நிபுணர் எவரும் தருவிக்கப்படவில்லை. பழைய வேலைக்காரர்களைக் கொண்டுதான் வேலை நடத்தப்படுகிறது. இப்போது அந்தத் தொழில்சாலையில் மூங்கிலிலிருந்து கடுதாசி செய்துவருகிறார்கள். மூங்கிலிலிருந்து மாத்ரம் காகிதம் செய்வதில், காகிதம் சற்று ஒடிந்து போகக்கூடியதாயிருக்கிறது. அந்தத்தொழிலை மேற்பார்வைசெய்துவரும் கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தர் அங்குள்ள யந்த்ரஸாதனங்களைத் திருத்தியமைக்கவும், காகிதத்தின் தன்மையை வ்ருத்திசெய்யவும், இதர மூலப்பொருள்களிலிருந்து காகிதம் செய்ய முடியுமாவென்று பரீக்ஷை செய்யவும் உத்தேசித்திருப்பதாகத்தெரிகிறது.

### An Industrial Exhibition.

**ஒரு கைத்தொழில் காட்சி.**—ஸமீபத்தில் நாகப்பட்டணத்தில் நடக்கப்போகிற தஞ்சாவூர் ஜில்லா கான்பரென்ஸோடு ஒரு கைத்தொழில் காட்சியும் நடத்தப்படும்.



## ECONOMIC PRODUCTS.

## விலையுள்ள பொருள்கள்.

### Cotton Seed Oil.

**பருத்திக் கொட்டை யெண்ணெய்.**—பருத்திக் கொட்டையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் 124 கார்யங்களுக்கு உபயோகப்படுமென்று ஒரு மேல்நாட்டுப் பத்ரிகை எழுதுகிறது. இது தற்போது இந்தியாவில் ஆகாராதிகளில்தான் உபயோகப்படுகிறது. நெய் வ்யாபாரிகள் இதை நெய்க்குக் கலப்படம் செய்ய உபயோகிக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. மேல்நாடுகளில் இதைக்கொண்டு மார்கரைன் என்னும் செயற்கை வெண்ணெய் தயார்செய்கிறார்கள். இந்தத் தொழில் ஹாலண்டில் விசேஷமாய் நடந்துவருகிறது. செயற்கை வெண்ணெய் செய்ய உதவும் பருத்திக் கொட்டை எண்ணெய் உயர்ந்ததாகவும் பரிசுத்தமாயும் இருக்கவேண்டும். இப்படிப்பட்ட எண்ணெய் அமெரிக்காவில் அதிகமாய் தயார்செய்யப்படுகிறது. சென்ற 1914-ம் வர்ஷம் வரையில் இங்கலண்டில் பருத்திக் கொட்டையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் அவ்வளவு சுத்தமாயிராததால், அதை ஸோப் செய்வதிலும், வேறு கைத்தொழில் வேலைகளிலும் உபயோகித்துவந்தார்கள். அந்த வர்ஷத்தில் எண்ணெயை சுத்தப்படுத்த ஓர் புது முறை கண்டுபிடிக்கப்பட்டது. இப்போது இங்லீஷ் எண்ணெய் உணவுப்பொருள்களில் உபயோகிக்கத் தகுந்தபடி உயர்ந்ததாக இருக்கிறதாம். பருத்திக்கொட்டை எண்ணெய் மேற்சொன்ன வேலைகளுக்கேயன்றி சுத்தம்செய்யும் பொடிகள், பட்டியென்னும் லப்பம், மெழுகுவர்த்தி, சர்மபூச உதவும் பொருள்கள், செயற்கைத்தோல், தாவரக்கொழுப்பு, முதலிய பல பொருள்கள் செய்ய உதவுகிறது.

### A Substitute for Jute.

**ஜூட் நாருக்கு பதில்.**—ஜூட் என்னும் ஒருவகை சணல் இந்தியாவில்தான் விசேஷமாய்ப் பயிராகிறது. அதிலிருந்துதான் கோணிப்பைகள் செய்யப்படுகின்றன. யுத்தத்தால் ஜெர்மனிக்கு ஜூட் கிடைப்பதில்லையாகையால், வேறு பொருள்களைக் கொண்டு கோணிகள் தயார்செய்கிறார்களாம். காகிதம் செய்ய உதவும் கூழிலிருந்து ஒருவகை நார் தயார்செய்து, அந்த நாரைக்கொண்டு கோணிப்பைகள் தயார்செய்து உபயோகிக்கிறார்களாம். மேற்குப் போர்முகத்தில் பெரவியர்ஸ் என்னுமிடத்துக்குப் பக்கத்தில் சில ஜெர்மன் கிடங்குகளைப் பிடித்தபோது இந்தப் புது கோணிப்பைகளில் சில கிடைத்தனவாம். இந்தப் பைகள் ஆதியில் சாம்பல் நிறமாயிருந்தனவாம். காற்று மழையாலும், பீரங்கி வெடிமருந்தினாலும் அவைகள் நிறங்கெட்டிருந்தன. இந்த பைகளில் சிலவற்றை ஸ்காட்லண்டிலுள்ள டண்டிக்கு அனுப்பி அவைகளை சோதிக்கச்செய்தார்கள். அவைகளை ஆறுவாரம் ஜலத்தில் ஊறப்போட்டு வைத்திருந்தும், அவைகள் கெடுதலடைய வில்லையாம். அவைகளின் நார் ரொம்ப உறுதியாயிருக்கிறதாம். இந்த நாரை காகிதக்கூழிலிருந்து செய்வதில் செலவு அதிகமாயிருக்குமென்றாலும், அது வங்காளத்து ஜூட் நாரைப்போலவே யிருக்கிறதாம்.

### Oil from Lemon Pips.

**எலுமிச்சம்பழ விதையிலிருந்து எண்ணெய்.**—ஆஸ்ட்ரேலியாவில் எலுமிச்சம் பழத்திலிருந்து லெமன் ஸ்க்வாஷ் என்னும் பானம் செய்யும் தொழில் சாலைகளில் எலுமிச்சம்பழ விதைகள் ஏராளமாகச் சேருகின்றன. இந்த விதைகளைக் காயவைத்து அதிலிருந்து எண்ணெய் எடுக்கலாமென்று சொல்லப்படுகிறது. விதையிலிருந்து நூற்றுக்கு 21 முதல் 23 வரையில் எண்ணெய் கிடைக்குமாம். எண்ணெயானது பார்வைக்கு வெளுத்த வைக்கோல் வர்ணமாயிருக்கிறதாம். கொஞ்சம் கசப்பாயிருக்கிறதாம். கசப்பில்லாதபடி எண்ணெய் எடுக்கவும் முடியுமென்று அவ்விடத்திலுள்ள ஒரு சாஸ்த்ரிபுணர் அபிப்ராயப்படுகிறார். கசப்பில்லாத எண்ணெய் எடுக்க முடியுமானால் அது சாப்பாட்டில் உபயோகமாகுமென்றும், ஸோப்பு செய்ய உபயோகப்படுமென்றும் சொல்லப்படுகிறது..

### Pieces of Leather.

**தோல் துண்டுகளை உபயோகப்படுத்துவது.**—தோலின் துண்டுகளை சிறு துண்டுகளாகக் கிழித்து க்ளோரைட் ஆப் ஸல்பர் என்னும் த்ராவகத்தில் ஐந்தாறு நாட்கள் ஊறப்போட்டுவைத்தால் அவை முறமுறவென்று ஆகிவிடும். பிறகு அவற்றை எடுத்துத் தூளாக்கி ஒருவித பிசினுடன் கலந்து யந்த்ரத்தால் அழுத்தினால் கெட்டியான பலகைகள்போல் ஆகிவிடுமாம். பிறகு அவற்றைக்கொண்டு சீப்புகள் முதலியன செய்யலாமாம்.

## BOYS' PAGE.

## பையன்கள் பக்கம்.

### Good Advice.

**நற்போதனை.**—ஒரு வேலையைச் செய்யும்போது முழுமனதையும் அதிலேயே நிறுத்தி அது முடிந்த பின்பே வேறொரு வேலையைத் தொடங்கவேண்டும்.

பெரியோரைக் கண்டவுடனே முன்பு வந்தனம் செய்யவேண்டும். பிறகு அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு மட்டும் அடக்கமாய் விடையளிக்கவேண்டுமேயன்றி அனுவச்யமான எதையும்பற்றி பேசலாகாது.

ஒருவரிடம் ஸம்பாஷிக்கும்போது அவர்கள் முகத்தைப் பார்த்தே பேசவேண்டும்.

எந்நேரமும் ஒருவரைக் கேலிசெய்வதும், அகஸ்யம் செய்வதும், விகடம் பேசுவதும் அறிவாளிகளுக்கழகல்ல.

ஒன்றைப் படித்துவிட்டதனுலேயே பலனடைந்துவிட்டதாய் ஒருபோதும் நினைக்கலாகாது. அதனுல் ஒருபயனு முண்டாகாது.

படித்ததுபோல் நடக்க முயலவேண்டும். கற்பது கற்றபடி நடப்பதற்காகவே.

நூல்களில் வாசிப்பதைவிட ஆன்றோர் வாக்யம் மிகச் சிறந்தது. ஆதலால் பெரியோர் கூறும் புத்திமதியை அலக்ஷ்யம் செய்யாமல் அதன்படி நடக்கவேண்டும்.

### Akbar's Christian Wife.

**ஆக்பருடைய கிறிஸ்தவ மனைவி.**—கி. பி. 1542 முதல் 1605௵ வரையில் டில்லியில் ஆண்டு வந்த அக்பர் சக்ரவர்த்திக்கு ஒரு கிறிஸ்தவ மனைவி இருந்ததாகத் தோன்றுகிறதென்று கல்கத்தாவிலுள்ள ஒரு இங்லீஷ் வித்வான்சொல்லுகிறுர். அந்த ஸ்த்ரீ இந்தியகிறிஸ்தவச்சியல்லவாம், அர்மீனிய ஜாதியைச் சேர்ந்தவளாம். (அர்மீனியா வென்பது ஆசியா துருக்கியின் வடகிழக்கு பாகத்திலிருக்கிறது. இதிலுள்ள ஜனங்களுக்கு அர்மீனியர் என்று பெயர்.) அந்த ஸ்த்ரீயின் பெயர் மார்யாம் ஸாமானி பேகம். அக்பருக்குப் பிறகு சக்ரவர்த்தியாய் வந்த அவருடைய புத்ரராகிய ஜிஹாங்கியருடைய தாயாருக்கு மார்யாம் ஸாமினியென்று பெயராகையால், அந்த அர்மீனியக் கிறிஸ்தவ ஸ்த்ரீயே ஜிஹாங்கீருடைய தாயா என்று ஒரு ஸந்தேகமுண்டாகிறது. மேலும் அக்பருடைய மூன்ருவது புத்ரனுகிய தன்யால் என்பவருடைய தாயாருக்கு பிபிமார்யாம் என்று பெயராகையால், அந்த கிறிஸ்தவ ஸ்த்ரீயே தன்யாலுக்கும் தாயாக வேண்டுமோ என்றும் ஸந்தேகமேற்படுகிறது.

### Elephant's Fear for Rats.

**யானைக்கு எலியினிடம் பயம்.**—யானைக்கு எலியைக் கண்டால் ரொம்ப பயமாம். இவ்வளவு பெரிய ம்ருகம் ஒரு சிறிய ஜெந்துவாகிய எலியினிடம் பயப்படுவது, ரொம்ப பயங்காளித் தனத்தைக் காட்டுகிறதென்று சிலர் சொல்லுவதுண்டு. ஆனுல் வாஸ்தவத்தில் யானை பயங்காளியல்ல. யானையைக் கட்டிப்போட்டிருக்கும்போது எலியானது அதை ஹிம்ஸை செய்தால் யானை ஒன்றும் செய்யமுடிவதில்லை. எலியானது நள்ளிரவில் யானையின் காலில் உள்ள நகங்களை தின்றுவிடும். அப்போது யானை ஒன்றும் செய்ய முடியாமல் தவிக்கும். கொஞ்சம் நகங்களைத் தின்றுவிட்டாலும் யானை நடக்க முடியாதபடி நொண்டியாய்ப் போய்விடும். இதனுல் தான் யானைக்கு எலியினிடம் பயமுண்டாகி யிருக்கிறதேயொழிய, உண்மையில் யானையை ரொம்ப பயங்காளியென்று சொல்லுவதற்கில்லை. சில காலத்துக்கு முன்பு ஒரு ம்ருகக் காட்சி சாலையிலிருந்த மூன்று யானைகளை எலிகள் ரொம்ப காயப்படுத்தி விட்டதால், அந்த யானைகளைச் சுட்டுவிட வேண்டியதாயிற்றும்

### A Large Bell for Trichy Rock Fort.

**திருச்சி மலைக்கோட்டைக்கு ஒரு பெரியமணி.**—ஸமீபத்தில் திருச்சியிலுள்ள சில வர்த்தகர்கள் அவ்வூர் கிறிஸ்தவ கோவில் மணி யோசையைக் கேட்டு துயில் எழுவது சரியல்லவென்று எண்ணி, மலைக்கோட்டையின் உச்சியில் 5,000 சேர் எடையுள்ள பெரிய மணியைக் கட்ட முயற்சித்து வீட்டுக்கு வீடுசென்று உடைந்த செம்பு, பித்தளைப் பாத்ரங்களும் பணமும் வஸூல் செய்தார்கள். அவைகளின் மதிப்பு 6000 ரூபாயாகும். ஒரு வர்த்தகர் 6000 ரூபாய் கொடுத்து உதவினுராம். மொத்தத் தொகையைக் கொண்டு நாகப்பட்டணம் ரெயில்வே வொர்க் ஷாப்பில் மணிசெய்யப் படுமாம், மணி 5 அடி 6 அங்குலம் உயா மிருக்குமாம்.

### The Hottest Region in the World.

**ரொம்ப உஷ்ணமான ப்ரதேசம்.**—உலகத்திலுள்ள எல்லா இடங்களையும்விட அதி உஷ்ணமான ப்ரதேசம் அமெரிக்கா ஐக்யநாடுகளில் ஒன்ருகிய கலிபோர்னியாவில் டெத்வாலி யென்னும் பள்ளத்தாக்கின் கிழக்கு பாகமாகும். இதில் சென்ற 1913-ம் வர்ஷம் ஜூலை மாஸம் 10 தேதியன்று 134 டிக்ரி உஷ்ணமிருந்ததாம். அவ்விடத்தில் மே மாஸம் முதல் ஆகஸ்ட் மாஸம் முடிய உஷ்ணம் அதிகமாம்.



## LADIE'S PAGE.

## ஸ்த்ரீகள் பக்கம்.

### Females and Jewels.

**ஸ்த்ரீகளும் நகைகளும்.**—ஸ்த்ரீகள் கோவிலுக்கும், உத்ஸவங்களுக்கும் போகும் போதும் ரெயிலில் ப்ரயாணம் செய்யும்போதும், ஸாதாரணமாய் தினந்தோறும் போட்டுக்கொள்ளும் நகைகளோடு அதிகப்படியாக நகைகளைப் போட்டுக்கொண்டு போவது ஸகஜமாயிருக்கிறது. கோவில் உத்ஸவாதிகளிலும், ரெயிலிலும் நகைத்திருட்டு அதிகமாகிவரும் இக்காலத்தில் இவ்வழக்கம் சரியல்லவென்றே சொல்லவேண்டும். புருஷத்துணை யிருக்கும்போதே அநேக நகைத்திருட்டுகள் நடந்துவிடுகின்றன. தற்காலம் அநேக ஸ்த்ரீகள் தனிமையாக புருஷத்துணையின்றி உத்ஸவங்களுக்குப் போவதும் ரெயிலில் ப்ரயாணம் செய்வதும் ஸகஜமாகி வருகிறது. இப்படித் தனிமையாயிருக்கும்போது ஸ்த்ரீகள் அதிக நகைகள் போட்டுக்கொண்டிருப்பது ரொம்ப ஆபத்துக்கிடமாகு மென்பதில் ஸந்தேகமில்லை. ஸமீபத்தில் வடஇந்தியாவில் 14 ரெயில்வே நகைத்திருட்டுகள் நடந்ததாக வடதேசத்துப் பத்ரிகையொன்று எழுதுகிறது. ஆகையால் விவேகமுள்ள ஸ்த்ரீகள் கூடியமட்டும் துணையோடு ப்ரயாணம் செய்வதோடு, ப்ரயாண காலங்களில் தங்களிடம் இன்னின்ன நகைகளிருக்கின்றன வென்பதை பஹிரங்கமாய் விளம்பரம் செய்யாமல், அவச்யமாய் வேண்டிய ஸ்வல்ப நகைகளையே அணிந்துகொள்வது உசிதமாகும். இதைப்பற்றி 'திராவிடாபிமானி'யில் ஒரு குறிப்பு எழுதியுள்ள ஒரு ஸ்த்ரீ நிருபர், பதினுயிரம் ரூபா விலை பெறுமானமுள்ள நகைகளை ஸதா தரித்துக்கொண்டிருந்த ஒரு பெண் புண்யக்ஷேத்ரங்களைத் தரிசித்து வருவ[illegible]ாகத் தன்னைச்சேர்ந்தவர்களுடன் புறப்பட்டபோது கையில் காப்பும், காதில் கம்மலும், கழுத்தில் மாங்கல்யமும் மட்டுமே விளங்க ப்ரயாணப்பட்டு விட்டாளென்றும், தான் அப்பெண்ணை ஸந்தித்தபோது அவள் வெற்றுடம்புடன் நிற்பது நோக்கி, 'உங்களுக்கு என்ன ஆபத்து நேர்ந்ததம்மா, நகைகளையெல்லாம் கடனுக்காகப் பாங்கியில் வைத்துவிட்டீர்களா' வென்று வினவினபோது, அவற்றைக் கள்வர் பயத்துக்கு அஞ்சி வீட்டில் வைத்துவிட்டதாக அப்பெண் தெரிவித்ததாகவும், எழுதி அப்பெண்ணைப்பற்றி ச்லாகித்து எழுதியிருக்கிறுர். அந்தப் பெண்மணியைப்போல் எல்லா ஸ்த்ரீகளும் அவச்யமான நகைகளை மாத்ரம் அணிந்துகொண்டு வெளிக்கிளம்புவது மிகவும் உத்தமமானது.

### Food for Infants.

**குழந்தைகளுக்கு ஏற்ற உணவு.**—இளங்குழந்தைகளுக்கு சுத்தமாகக் காய்ச்சி யெடுத்த பசும்பால் மிகச் சிறந்த ஆஹாரமாகும். பிறந்த ஒருமாஸம் வரையில், (சில ஸமயம் தாய்க்கு விசேஷமாக முலைப்பால் இருந்தால் மூன்று மாஸம் வரையிலும்) தாய்ப்பால் ஒன்றுதான் இயற்கையில் குழந்தையைப் போஷிக்கக்கூடிய உணவு. எட்டாவது அல்லது பத்தாவது மாஸம் வரையில் பசும்பாலும் தாய்ப்பாலும் போதுமானவை. பிறகு நன்ருகப் பக்குவம் செய்த அன்னத்தை வெகு கொஞ்சமாகப் பாலில் கலந்து ஒருவேளை கொடுத்து வரலாம். ஹார்லிக்ஸ், நெவில்ஸ், மெல்லின்ஸ் புட்டுகள் என்கிற செயற்கை உணவுகளை நமது குழந்தைகளுக்கு உபயோகிப்பதை 'வைத்திய கலாநிதி' ஆக்ஷேபிக்கிறது. அவற்றின் குணுதிசயங்களைப்பற்றி செய்யப்பட்டுள்ள விளம்பரங்களைக் கண்டு மதிமயங்கி நமது ஜனங்கள் அவ்வித செயற்கை உணவுகளை வாங்குவதும், அவற்றை நமது சிறு குழந்தைகளுக்கு ஊட்டுவதும் பகுத்தறிவுக்கு ஏற்றனவல்லவென்று அது எழுதுகிறது.

### Miss Guha and the Calcutta High Court.

**மிஸ்குஹாவும் கல்கத்தா ஹைக்கோர்ட்டும்.**—மிஸ் ரெஜினு குஹா என்னும் ஸ்த்ரீ ப்ளீடர் வேலை பார்க்க அனுமதி வேண்டுமென்று கல்கத்தா ஹைக்கோர்ட்டுக்கு விண்ணப்பம் செய்துகொண்டதாக சென்றமாஸத்து 'ஜனுபிமானி' யில் எழுதினேம். அவர் பி.எல். பரீக்ஷையில் தேறினவர். அலிப்பூரிலுள்ள கோர்ட்டுகளில் ப்ளீடர் என்னும் வக்கீலாக இருக்க அனுமதி கேட்டிருந்தார். அவருடைய மனுவை 5 ஜட்ஜுகள் சேர்ந்து விசாரித்தார்கள். அவர்களுடைய அபிப்ராய மென்னவென்ருல், இப்போதுள்ள சட்டத்தின்படி மிஸ்குஹா வக்கீல் உத்யோகம் செய்ய முடியாது. ஸ்த்ரீகளும் வக்கீல் வேலை பார்க்கவேண்டு மென்ருல், அதற்கேற்றபடி சட்டத்தையே மாற்றவேண்டும்.

### Home Industry for Women.

**ஸ்த்ரீகளுக்கு வீட்டுக் கைத்தொழில்கள்.**—சென்னையில் சில காலமாக நடந்துவரும் ஸ்த்ரீ அபேத ஐக்யாகந்த ஸமாஜத்தார் தமது ஸங்கக் கட்டிடத்தில் ஸ்த்ரீகளுக்கு பாவாடைநாடா, கட்டில்நாடா, ஸோல்ஜர்களுக்கு உதவும் ஆர்மிடேப் என்னும் நாடா முதலியவைகள் நெய்யக் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிருர்கள். இது இரண்டு மாஸமாக நடந்துவருவதாகத் தெரிகிறது. இந்தத் தொழில்களை ஒரு ஸ்த்ரீ 15-நாட்களில் கற்றுக்கொள்ளலா மென்றும், தினம் இந்தத் தொழிலால் 1-ரூபாய் வரையில் ஸம்பாதிக்கலாமென்றும் சொல்லப்படுகிறது.

## FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

**A Patient and his Doctor.**

**ஓர் வ்யாதிக்காரனும் அவன் வைத்யனும்.**—ஒருவன் ஒரு வைத்யனுடைய சிகித்ஸையினால் ஸௌகப்பட்டிருந்தான். அவனது அண்டைவீட்டுக்காரன் இவனைப்பார்த்து "என்ன ஸௌக்யமாகி விட்டீர்போலும். வைத்யன் ஒவ்வொருதடவையும் உம்மைப்பார்க்க வரும்போது அவனுக்கு என்ன சம்பளம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டீர்" என்று கேட்டான்.

வ்யாதிக்காரன்—பத்து ரூபாய்.

அண்டைவீட்டுக்காரன்.—வைத்யன் உம்மை எத்தனை தரம் பார்க்கவந்தான்.

வ்யாதி.—இருபதுதரம்.

அண்.—ஐயோ, அப்போது நீர் இருநூறு ரூபா கொடுத்தீர்களோ.

வ்யா.—இல்லையில்லை. பத்து ரூபாய்தான் கொடுத்தேன்.

அண்.—ஏன் பத்து ரூபாய் மாத்ரம்?

வ்யா.—எனக்கு வைத்யஞ்செய்ய அவன் வந்ததெல்லாம் ஒரே தடவைதான். ஆனால் இப்பத்து ரூபாயையும் வாங்க அவன் 19 தடவை வந்தான்.

**The Poet's Reply.**

**கவியின் பதில்.**—ஸேது நாட்டிற்கு அரசராயிருந்த ஸ்ரீ பாஸ்கர ஸேதுபதி அவர்களால் அபிமானிக்கப்பட்ட பலருள் வேம்பத்தூர்ப் புலவர் பிச்சுவையர் ஒருவர். யாதோ ஒரு காரணத்தால் ஸேதுபதி யவர்கள் புலவரை நோக்கி "நீர் என்னிடம் இருப்பது சரியன்று" என வெகுண்டு உரைக்க, அவர் "அரசே! தாம் சொல்வது தவறு. அரசைவிட்டு வேம்பு அகலாதே" என்று ஸமயோசிதமாகக் கூறினராம்.

ஸேதுவேந்தரால் கூட்டப் பெற்ற வித்வத் ஸபைக்கு, இப்புலவர் ஒரு நாள் காலந் தாழ்த்து வந்து, அரசர் பக்கத்திருந்த ஆஸனமொன்றே காலியிருக்கக் கண்டனர் என்றும், தம்போல் வந்தோர் யாவரும் உட்கார இடமின்றி நின்று கொண்டிருந்த ஸமயத்தில், இவர், "அரசுக்குப் பக்கத்தில் வேம்பு இருத்தலே பொருத்தம்" எனக்கூறி ஸபையோர் வியக்க அவ்வாஸனத் தமர்ந்தனர் என்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

**The Teacher and the Pupil.**

**உபாத்யாயரும் பையனும்.**—ஒரு கீழ் வகுப்பு உபாத்யாயர் தன்னுடைய வகுப்பில் யானைப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர் அங்கிருக்கும் பிள்ளைகளைப் பார்த்து "யானையின் தோல் கறுப்பாகவும் கெட்டியாகவு மிருக்கும். நீங்கள் யாராவது யானையின் தோலைப் பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டார். "நான் பார்த்திருக்கிறேன், ஸார்" என்று ஒரு பையன் பலமான குரலுடன் கூவினான். "எங்கே பார்த்திருக்கிறாய்" என்று உபாத்தியாயர் மறுபடியும் வினவ, "யானையின் மேல் பார்த்திருக்கிறேன்" என்று விடை கொடுத்தான்.

**A Useful Instrument**

**ஒரு உபயோகமுள்ள கருவி.**—ஒரு ஸ்த்ரீயின் வாயில் வைத்யன் தர்மாமிட்டர் என்ற உஷ்ண மானியை 4, 5, நிமிஷம் வைத்தெடுத்ததும் அவளுடைய

கிழக்கணவன்:—"ஐயா, அதன் விலை என்ன?"

வைத்யன்:—"ஏன், அது உமக்கெதற்கு?"

கிழவன்:—"அவச்யம் அது எனக்கு வேண்டும். சனியன் புடிச்ச மூளி, அலப்பு வாயைக்காட்டிக் காட்டி லொட லொட என்னு எதாவதுதிட்டி எரிஞ்சுகிண்டே இருக்காவள், அதை வச்சொடனே வாயெத் தொறந்தாளா பாருமே."

**To be Punished for Father's Ignorance**

**தகப்பனுக்குத் தெரியாததற்காக பையன் தண்டனை யடைவது.**—சிறு பையன் (ஸாயந்தரம் வாசித்துக் கொண்டிருந்தபோது தகப்பனைப் பார்த்து):—அப்பா, கங்கைநதி எங்கே உற்பத்தியாகிறது?

தகப்பன்:—எனக்குத் தெரியாது.

பையன்:—உங்களுக்குத் தெரியாதா:-உங்களுக்குத் தெ[illegible]ததற்காக நான் பள்ளிக்கூடத்தில் அடிபடுகிறதா?

**Teaching his Sister.**

**ஸகோதரிக்குக் கல்வி கற்றுக் கொடுத்தது.**—அண்ணன்.—என்ன, தங்கம்! உனக்குக் கூட்டத்தெரியுமா?

தங்கை.—தெரியும்.

அண்ணன்.—நமது கூடம் 10 அடி, தாவாரம் 10 அடி. இரண்டும் எவ்வளவு?

தங்கை.—கூடம் தாவாரம் இரண்டிலும் இரண்டு முறம் குப்பை யிருக்கும்.



## CURIOSITIES.

## விநோதங்கள்.

**The Currency of the West Africans.**

**மேல் ஆப்ரிக்க நாட்டாரின் நாணயம்.**—இந்நாட்டார் கோழிகளை நாணயமாக வழங்கிவருகிறதாகத் தெரியவருகிறது. இப்படியே ஈச்சம் ஓலைகளாலும் புல்லாலுஞ் செய்யப்பட்ட பாய்களும் வழங்கப்பட்டு வருகிறது. அவ்விடத்தில் உப்பு கிடைப்பது அருமையானபடியால் 5-தேக்கரண்டி உப்புக்காக ஒரு கோழியை க்ரயமாகக் கொடுப்பார்களாம். ஒரு கோழியைக் கொடுத்து நீலநிறமும் த்வாரமுமுள்ள நூறு கண்ணாடி மணிகளை வாங்குவார்களாம். இங்கிலண்டில் பதினாயிரம் பவுன் பெறுமதியான ஒரு வைரக்கல்லை அவர்களிடத்தில் கொடுத்து ஒரு கோழிமுட்டையைக்கூட வாங்கமுடியாதாம். அதேனெனில் த்வாரமில்லாத எந்தப்பொருளும் அந்நாட்டாருக்கு உபயோகப்படாதாம். த்வாரமிடப்பட்டிருக்கிற பலவகையான மணிகளையெல்லாம் கோத்து அவர்கள் தங்கள் கழுத்திலும் இடுப்பிலும் ஆபரணமாக அணிந்துகொள்ளுவார்கள். அவற்றின் பருமனுக்கும் வெவ்வேறான நிறத்துக்குந் தக்கபடி அவற்றின் விலை மதிக்கப்படுமாம். மண்ணாலோ மரத்தாலோ பஞ்சலோகத்தாலோ வேறெதனாலோ செய்யப்பட்ட எவ்வித மணிகளும் அத்தேசத்தில் க்ரயமாகிப்போம். அவர்களுக்கு உடையில்லை, சட்டையில்லை, சாயில்லை. கோத்தமணிகளைத் தலையிற் சுற்றிக்கொள்வதுதான் அவர்களுக்குப் பெருமையும் கௌரவதையுமாகும். அவர்களுக்குள் அடிமையாயிருக்கிறவன் அம்மணிகளை வேண்டியமட்டும் தன் கழுத்திலும் மார்பிலும் தரித்துக்கொள்ளலாமேயன்றி சிரஸில் தரித்துக்கொள்ளவே கூடாது. வெண்மையான ஒரு முழம் கலிக்கோ துணிக்கு 5-கோழியும், பரும்படியான சிவப்பு ப்ளானல் ஒரு முழத்துக்கு பத்துகோழியும், மாலுமிகள் தரித்துக்கொள்ளும் ஒரு முழ நீலத்துணிக்கு 8-கோழியும், ஒரு முழ ஆக்ஸ்பார்ட் ஷர்ட்டு துணிக்கு ஆறு கோழியுங் கொடுப்பார்களாம். ஆங்கிலேயர் இத்துணிகளையும், இரும்புக்கம்பி, பித்தளைக்கம்பி, பித்தளை ஆணி முதலியவைகளையும் அந்நாட்டுக்குக்கொண்டு போய்க் கொடுத்து வேண்டியமட்டும் கோழி முதலிய அத்தேசத்துப் பொருட்களை தங்கள் நாட்டுக்கு வாங்கிக் கொண்டு போகிறார்களாம்.-சத்தியவேத பாதுகாவலன்.

**Clever Ruse by Karachi Police.**

**கராச்சி போலீஸாரின் தந்த்ரம்.**—கராச்சியிலிருந்து மங ்காபிருக்கு பொழுதுவிடியுமுன் போகும் மாட்டு வண்டி ப்ரயாணிகளை திருடர்கள் வழிப்பறி செய்கிறார்களென்று அறிந்து, கராச்சி போலீஸ் இன்ஸ்பெக்டர் திருடர்களைப் பிடிக்க ஒரு தந்த்ரம் செய்தார். ஒரு மாட்டுவண்டியைக்கொண்டுவந்து ஒரு போலீஸ்கான்ஸ்டபிளை வண்டியோட்டுபவன்போல் வேஷம் போட்டுக் கொள்ளச்சொல்லி, இன்னொரு போலீஸ் கான்ஸ்டபிளை பஞ்சாப் தேசத்தானைப்போல் வேஷம் போட்டுக் கொள்ளச்சொல்லி, அவர்கள் இருவரையும் வண்டியின் முன்புறத்தில் ஏறச்சொன்னார். இன்னும் மூன்று கான்ஸ்டபிள்களை, ஸ்த்ரீகள் முகத்தை மூடிக்கொள்ளத் தரித்துக்கொள்ளும் முக்காடு போட்டுக் கொள்ளச் சொல்லி, அவர்களையும் வண்டியிலேற்றினார். வண்டி பொழுதுவிடியும் முன்னமேயே மங்காபிருக்கு புறப்பட்டுவிட்டது. அது 4-மைல்தூரம் சென்றதும் மூன்று திருடர்கள் வண்டிக்குப்பின்னால் வந்து வண்டியை நிறுத்தும்படி சொன்னார்கள். வண்டி நின்றதும், திருடர்கள் பஞ்சாபி வேஷம் போட்டிருப்பவனை வண்டியிலிருந்து கீழே இழுத்து, மூன்று ஸ்த்ரீகளையும் கீழே இறங்கி நகைகளைக் கொடுக்கும்படி சொன்னார்கள். ஸ்த்ரீவேஷம் போட்டிருந்தவர்களில் ஒருவன் வண்டியிலிருந்து கீழேஇறங்கி, தனது முக்காட்டை எடுத்து எறிந்தான். உடனே திருடர்கள் அவன்மேல் விழுந்து சண்டைபோட்டார்கள். உடனே மற்ற கான்ஸ்டபிள்களும் திருடர்களோடு சண்டைசெய்து அவர்களைக்கைது செய்தார்கள். அந்தத் திருடர்களுக்கு 2-வர்ஷம் கடுங்காவல் தண்டனை கிடைத்தது.

**Married on the Eve of Execution.**

**கொலைதண்டனை தினத்துக்கு முன் கல்யாணமானது.**—ஐயர்லண்டில் கலகம் நடந்த பிறகு கலகத்தில் ஸம்பந்தப்பட்டவர்களை விசாரணை செய்து சிலருக்குக் கொலைதண்டனை விதித்தார்கள். அவர்களுள் ஒருவன் சென்ற மே மாஸம் கொலைதண்டனை விதிக்கப் பட்டான். ஆயினும் அவன் அதற்கு சற்று நேரத்துக்கு முந்தி ஒரு ஸ்திரீயைக் கல்யாணம் செய்து கொண்டான். அவன் அவஸரமாகக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டி யிருந்ததால், ஜெயிலிலேயே கல்யாணம் நடக்க உத்தரவு கொடுக்கப் பட்டது. அதற்கு முந்தின நாள் ஸாயந்திரந்தான் அவனது மனைவி கல்யாண மோதிரமொன்றை நகைக் கடையில் வாங்கினானாம்.

## MISCELLANEOUS NEWS.
## நாநா ஸங்கதி.

### Village Panchayats in U. P.

**ஐக்யமாகாணங்களில் க்ராமப் பஞ்சாயத்துகள்.**— வடக்கே ஐக்யமாகாணங்களில் க்ராமங்கள் தோறும் க்ரமமாக க்ராமப் பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்க முடியுமா என்பதைப் பற்றி ஆராய்ச்சிசெய்து தெரிவிப்பதற்காக அம்மாகாணத்து கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட கமிட்டியார் ஸமீபத்தில் தங்களுடைய ரிப்போர்ட்டை வெளியிட்டிருக்கிறார்கள். கமிட்டியார் தெரிவிக்கும் ப்ரேரணைகளின் ஸாராம்சம் என்னவென்றால், க்ராமப் பஞ்சாயத்து ஏற்படுத்துவது க்ராமவாஸிகளுக்கு ஸந்தோஷமாக விருக்கும். இந்த பஞ்சாயத்துகளை முதவில் சில தெரிந்தெடுத்த இடங்களில் பரீக்ஷார்த்தமாக ஸ்தாபித்துப் பார்க்கவேண்டும். 25 ரூபாய் மதிப்புவரையிலுள்ள ஸிவில் வ்யாஜ்யங்களையும் அடிபிடி சண்டை, சிறு திருட்டுகள் முதலிய சில்லரைக் க்ரிமினல் வழக்குகளையும் விசாரிக்க அவைகளுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும். அவைகளுக்கு ஸுகாதாரம், கல்வி ஆகிய இந்த விஷயங்களிலும் கொஞ்சம் அதிகாரம் கொடுக்கவேண்டும். அவைகளை ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுக்களே நியமிக்க வேண்டும். அவர் அவைகளுடைய நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதோடு, அவச்யமானபோது அவைகளை ஸஸ்பெண்ட் செய்யவும், நிறுத்திவிடவும் அவருக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும்.

### Water-proof Matches.

**தண்ணீரில் சேதமடையாத தீக்குச்சிகள்.**—தீக்குச்சிகள் தண்ணீரில் விழுந்தாலும் அவைகளை சேதமடையாமல் இருக்கச் செய்யலாயாம். பாரபின் வாக்ஸ் என்று சொல்லும் மெழுக்கை அதிகச் சூடாகாதபடி காய்ச்சவேண்டும். பிறகு தீக்குச்சிகளை அதில் போட்டால் குச்சிகளின் பேரில் அரக்கு பூசினாற்போல் ஆய்விடும். அரக்கு கொஞ்சம் சூடு ஆறின பிறகு குச்சிகளை எடுத்துக் கொள்ளலாம். இவ்விதம் ஜாக்ரதையாகச் செய்த குச்சிகளைத் தண்ணீரில் ஊறவைத்தாலும் அரக்குகளின் தன்மை மாறாது. குச்சிகளை உபயோகிக்க வேண்டுமானால் அவற்றில் ஒன்றை எடுத்து கையினால் தேய்த்தால் அரக்கெல்லாம் விட்டுப்போய் முன் மாதிரிக் குச்சி தோன்றும். அதை உபயோகப் படுத்தலாம்.

---

## DIARY OF THE MONTH.
## மாஸ வர்த்தமானம்.

### THE WAR IN EUROPE.
### ஐரோப்பிய யுத்தம்.

**ஆகஸ்ட்மீ 16-தேதி.**

ரஷ்யர்கள் கார்ப்பேதியன் மலைக்குப் பக்கத்திலுள்ள ஜாப்லோனிகா என்னுமிடத்தைப்பிடித்திருக்கிறார்கள்.

**17-தேதி.**

ப்ரெஞ்ச் துருப்புகள் மாரிபாஸுக்கு வடக்கில் ஒரு மைல் நீளமுள்ள போர்முகத்தில் ஒரு கிடங்குவரிசையைப் பிடித்தார்கள். ஜெர்மானியர் உபயோகிக்கும் மொத்த ஸைன்யத்தில் மூன்றிலிரண்டுபாகம் மேற்குப் போர்முகத்திலிருக்கிறதாம். அங்கே மொத்தம் 122 ஜெர்மன் டிவிஷன்களிருக்கின்றனவாம்.

ரஷ்யர்கள் மேற்கு ஸ்லோடாலிபா என்னுமிடத்தையும் ஜேர்லேட்வினு என்னுமிடத்தையும் பிடித்திருக்கிறார்கள். சென்ற ஜூன் மாஸம் 4-ந்தேதி முதல் ஆகஸ்ட் மாஸம் 12-ந்தேதி வரையில் அவர்கள் 7757 ஆபீஸர்கள், 3,50,845 ஸோல்ஜர்கள், 405 பீரங்கிகள், 1326 மெஷீன் பீரங்கிகள் ஆகிய இவைகளைப் பிடித்திருக்கிறார்கள்.

**18-தேதி.**

ப்ரெஞ்ச் துருப்புகள் பால்கன் ப்ரதேசத்தில் டோரியன் ஏரிக்குப் பக்கத்தில் சில பல்கேரியப் பாதுகாப்பு வேலைகளைப் பிடித்தன, கிழக்கு ஆப்ரிக்காவில் டேரஸ்ஸலாம் என்னுமிடத்துக்கு 31-மைல்வடக்கிலுள்ள பாகாமோடா என்னும் பட்டணத்தை நேசக்கப்பல் படைத்துருப்புகள் பிடித்திருக்கின்றன.

**19-தேதி.**

ப்ரிட்டிஷ் துருப்புகளும் ப்ரெஞ்ச்துருப்புகளும் முன்சென்று வருகின்றன. ப்ரெஞ்ச் துருப்புகள் ப்ளூரியிலிருந்து ஜெர்மானியர்களைத் துரத்திவிட்டன, ரஷ்யர்கள் ஸ்டானிஸ்லாவுக்குத் தெற்கிலுள்ள ஸ்டோரிலிஸ்லி என்னும் ஊரைப்பிடித்தார்கள். எதிரிகள் மொனஸ்டருக்கு 16-மைல்தெற்கிலுள்ள ப்ளோரினு என்னும் ஊரைக் கைப்பற்றியிருக்கிறார்கள்.



**21-தேதி.**

ஸோம் நதிக்கு வடக்கில் ப்ரெஞ்ச் துருப்புகள் மாரிபாஸுக்குப் பக்கத்திலுள்ள காட்டைப் பிடித்தன. அவைகள் ப்ளூரி என்னும் க்ராமம் முழுவதையும் பிடித்திருக்கின்றன. கோவலுக்கு 40-மைல் வடகிழக்கில் ரஷ்யர்கள் 1 க்ராமத்தைப் பிடித்திருக்கிறார்கள். ஜெர்மன் கப்பல்படை வடகடலில் வெளிவந்தன. அப்போது ப்ரிட்டிஷ் யுத்தக்கப்பல்கள் அதிகமாயிருந்ததால் அவைகள் திரும்பி ஓடிவிட்டன. அவைகளைத் தேடப்போன க்ரூஸர்களில் இரண்டு, எதிரி ஸப்மரீன்களால் மூழ்கடிக்கப்பட்டன. ஒரு எதிரி ஸப்மரீன் மூழ்கிப்போயிற்று.

**22-தேதி.**

கார்ப்பேதியன் மலையிலுள்ள ஜாப்லோனிகா கணவாயில் யுத்தம் நடக்கிறது. கிழக்கு ஆப்ரிக்காவில் ஸெண்ட்ரல் ரெயில்வேயிலுள்ள கிடிடிஎன்னும் ஊரை ப்ரிட்டிஷ் துருப்புகள் பிடித்திருக்கின்றன.

**23-தேதி.**

ப்ரிட்டிஷ் துருப்புகள் பால்கன் ப்ரதேசத்தில் ஸிரிஸுக்கு 21-மைல் மேற்கில் அங்கிஸ்டா என்னும் ஊரிலுள்ள ரெயில்வே பாலத்தை நாசம் செய்தன. ஸ்ட்ருமா நதியண்டை பல்கேரியர்களுக்கும் ப்ரிட்டிஷ் ப்ரெஞ்ச் துருப்புகளுக்கும் யுத்தம் நடக்கிறது.

**24-தேதி.**

'ட்யூக் அப் அல்பேனி' என்னும் ப்ரிட்டிஷ் உதவி யுத்தக் கப்பல் இன்று ஒரு ஸப்மரீனால் மூழ்கடிக்கப்பட்டது. 24-பேர்கள் மூழ்கிப்போனார்கள்.

**25-தேதி.**

ப்ரெஞ்ச் துருப்புகள் மாரிபாஸ் க்ராமத்தைப் பிடித்தன. ஸெர்வியர்கள் ஆஸ்ட்ரிவோ ஏரிக்கு வடமேற்கில் 3-மைல் தூரத்திலுள்ள 1506-ம் குன்றைப் பிடித்திருக்கிறார்கள். ரஷ்யர்கள் வான் ஏரிக்கு மேற்கில் மஷ் என்னுமிடத்தைப் பிடித்தார்கள். கிழக்கு ஆப்ரிக்காவில் ப்ரிட்டிஷ் துருப்புகள் கிலோஸா என்னும் ஊரைப் பிடித்தன.

**28-தேதி.**

ருமேனியா ஆஸ்ட்ரியாவின்மேல் யுத்தம் தொடங்கியிருக்கிறது. இட்டலி ஜெர்மனியின் மேல் யுத்தம் தொடங்கியிருக்கிறது.

ரஷ்யர்கள் கார்ப்பேதியன் மலைப்ரதேசத்தில் முன்சென்று வருகிறார்கள். அவர்கள் ஷைடா என்னும் ஊரைப் பிடித்ததோடு பிஸ்டிர்ஸிகா என்னும் நதியின் உத்பத்திஸ்தானத்தண்டை போயிருக்கிறார்கள்.

பல்கேரியர்கள் காவாலா என்னும் க்ரீக் பட்டணத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

ஆஸ்ட்ரோவா ஏரிக்குப்பக்கத்தில் பல்கேரியர்களுக்கும் ஸெர்வியர்களுக்கும் யுத்தம் நடக்கிறது.

**30-தேதி.**

இதுவரையில் ஜெர்மனியில் சீப் அப் தி ஜெனரல் ஸ்டாபாக இருந்த ஜெனரல் வான் பால்கென்ஹெய்னை கெய்ஸர் வேலையிலிருந்து நீக்கிவிட்டார். அவருக்கு பதிலாக ஜெனரல் ஹிண்டன்பர்க் அந்த உத்யோகத்துக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்.

துருக்கி ருமேனியாவின்மேல் யுத்தம் தொடங்கியிருக்கிறது.

ப்ரிட்டிஷ் துருப்புகளும் ப்ரெஞ்ச் துருப்புகளும் முன்சென்றுகொண்டிருக்கின்றன.

இட்டாலியர்கள் காரியோல் குன்றைப் பிடித்திருக்கிறார்கள். ருமேனியப் போர்முகத்தில் ஆஸ்ட்ரியர்கள் பின்வாங்கிப்போயிருக்கிறார்கள்.

**31-தேதி.**

ருமேனியாவின் மந்த்ரியாகிய மா. ப்ராஷ்யானோவின் ஸகோதரராகிய மா. விண்டிலா ப்ராஷ்யானோ அந்த தேசத்து யுத்த மந்த்ரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ரஷ்யர்கள் கார்ப்பேதியன் மலைத்தொடரில் உள்ள ஜாப்லோனிக்கா கணவாய்க்கு வடமேற்கிலுள்ள பான்டிர் மலையைப் பிடித்தார்கள். ருமேனியர்கள் ஹங்கேரியன் எல்லையைத்தாண்டி, மூன்று ஹங்கேரிய பட்டணங்களைப் பிடித்தார்கள்.

**ஸெப்டம்பர்மீ 1-தேதி.**

ருமேனியா பல்கேரியாவின்மேல் யுத்தம் தொடங்கியிருக்கிறது.

கிழக்கு ஆப்ரிக்காவில் ப்ரிட்டிஷ் துருப்புகள் ப்ரோகோரா என்னும் இடத்தைப் பிடித்தன.

**2-தேதி.**

ஜெர்மானியர்கள் கிவின்சிக்கும் போகோர் காட்டுக்கும் மத்தியில் சற்று முன்சென்றார்கள். இட்டாலியர்

கள் அல்பேனியாவில் முன் சென்று வலோனாவுக்கு 33-மைல் கிழக்கிலுள்ள க்வ்லெனி என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள். ரஷ்யர்கள் கார்ப்பேதியன் மலைத் தொடரில் டோம்னாடிக்மலையிலுள்ள சிகரங்களை யெல்லாம் பிடித்திருக்கிறார்கள். ஆஸ்ட்ரியர்கள் ஹெர்மான்ஸ்டாட் என்னும் ரெயில்வே ஜங்க்ஷனையும், ப்ராஸ்ஸோவுக்கு வடக்கிலுள்ள ஸெப்ஸிஸிக்யார்கி என்னும் ஊரையும் காலிசெய்துவிட்டார்கள். க்ரீஸில் கலகம் ஏற்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டும், துருப்புகளும் கலகத்தாருக்கு ஸாதகமாயிருக்கின்றனவாம்.

4-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகள் க்யுன்ஸி யென்னும் க்ராமத்தில் ஒரு பாகத்தையும் கில்லிமாண்ட் என்னும் க்ராமத்தையும் பிடித்தன. ப்ரெஞ்ச் துருப்புகள் ஸோம்நதிக்குப் பக்கத்தில் விபோரட் என்னும் க்ராமத்தையும் ஸ்லியாரி என்னும் க்ராமத்தையும் அவைகளுக்குஇடையிலுள்ள இடங்களையும் பிடித்தன. ஆஸ்ட்ரியர்கள் ருமானியப் போர்முகத்தில் பின்வாங்கியிருக்கிறார்கள். 13-ஜெர்மன் ஆகாயக்கப்பல்கள் இங்க்லண்டின் கிழக்கு ஜில்லாக்களில் பறந்துபோய் வெடிகுண்டுகள் போட்டன. மூன்று ஆகாயக்கப்பல்கள் லண்டனுக்குப் பக்கத்தில் வர முயன்றபோது, ப்ரிட்டிஷ் பீரங்கிகளும் ஏரோப்ளேன்களும் அவைகளைத் தாக்கி, ஒன்றை நாசம்செய்து, மற்ற இரண்டையும் துரத்திவிட்டன. அதிக சேதமில்லை.

5-தேதி.

ருமேனியர்கள் ட்ரான்ஸில்வேனியாவில் முன் சென்றிருக்கிறார்கள். ஜெர்மன் கிழக்கு ஆப்ரிக்காவிலுள்ள டேரஸ்ஸலாம் பட்டணத்தை ப்ரிட்டிஷ் துருப்புகள் பிடித்திருக்கின்றன. ரஷ்யர்கள் ஹங்கேரிய எல்லை ப்ரதேசத்தில் சில குன்றுகளைப் பிடித்தன.

## INDIAN NEWS.

## இந்திய வர்த்தமானம்.

ஆகஸ்ட்மீ 19-தேதி.

**அனந்தபுரம் ஜில்லா கான்பரென்ஸ்.**—அனந்தபுரம் ஜில்லா கான்பரென்ஸ் இன்று ஆனரபிள் மிஸ்டர் ஏ. எஸ். க்ருஷ்ணராவின் அக்ராஸனத்தின் கீழ் கூடிற்று. மிஸ்டர் க்ருஷ்ணராவ் தமது ப்ரஸங்கத்தில் இந்தியா ஸ்வய ஆட்சி பெறவேண்டுமானால் ராஜா[illegible]யில் பல சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்[illegible] ஸ்தல ஸ்வய ஆட்சியில் சில சீர்திருத்தங்கள் செய்யவேண்டு மென்றும், முனிஸிபல் பட்டணங்களில் பையன்களுக்கு இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் கல்வி கற்பிக்கவேண்டுமென்றும், பெண்களுக்கு ப்ரத்யேகமான பாடஜாப்தாக்கள் ஏற்படுத்த வேண்டுமென்றும் சொன்னார்.

21-தேதி.

**இந்திய ஸேனாதிபதி.**—சில மாஸங்களுக்கு முன்னால் மெஸபோடேமியாவில் யுத்தம் நடந்தபோது, ஜெனரல் டௌன்ட்ஷெண்ட் என்னும் தளகர்த்தர் குடல் அமாரவென்னும் இடத்தில் துருக்கியர்களால் முற்றுகையிடப்பட்டு, அவர்களிடம் சரண் அடைந்தார். இவ்விதம் மெஸபோடேமியாவில் ப்ரிட்டிஷாருக்கு அபஜய மேற்பட்டதற்குக் காரணமின்ன தென்பதை விசாரிக்க லண்டனில் ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. அதில் ஸாக்ஷ்யம் சொல்லுவதற்காக இந்திய ஸேனாதிபதியாகிய ஸர்பூச்சாம்ப்டப் இங்க்லண்டுக்குப்போவதால், அவருக்கு பதிலாக ஜெனரல் மன்ரோ என்பவர் இந்திய ஸேனாதிபதியாக நியமிக்கப் பட்டிருக்கிறார்.

25-தேதி.

**இந்திய பத்ரிகைகள் ஸங்கம்.**—இந்திய பத்ரிகைகள் ஸங்கத்தாரின் ப்ரதிநிதிகள்கொண்ட ஒரு டெபுடேஷனை 1910-ம் வர்ஷத்து அச்சுச் சட்டத்தைப் பற்றிக் கண்டுபேச லார்ட் செம்ஸ்போர்ட் ஸம்மதித்திருக்கிறார்.

28-தேதி.

**‘ந்யூ இந்தியா பத்ரிகை’.**—ந்யூ இந்தியா பத்ரிகை டிபன்ஸ் அப் இந்தியா சட்டத்தில்கண்டிருக்கும் ஆக்ஷேபனைக்கு இடமான விஷயங்களை ப்ரசுரித்ததென்று, சென்னை கவர்ன்மெண்டார் அந்த பத்ரிகை செலுத்தியிருந்த ஜாமீன் தொகையைப் பறி முதல் செய்துவிட்டார்கள்.

29-தேதி.

**சென்னை யூனிவர்ஸிட்டி.**—சென்னை யூனிவர்ஸிட்டியின் வர்ஷாந்திரக் கான்வகேஷன் வருகிற டிஸம்பர் மாஸம் 23-ந் தேதி நடைபெறும். நவாப் இமாதுல்மல்க் ஸயத்ஹுஸேன் பில்க்ராமி என்பவர் கான்வகேஷன் அட்ரஸ் ப்ரஸங்கம் செய்வார்.

31-தேதி.

**மிஸ்டர் திலகர்.**—மிஸ்டர் பாலகங்காதர திலகர் நன்னடக்கைக்காக ஜாமீன் கொடுக்கவேண்டுமென்று பூனா மாஜிஸ்டிரேட் உத்தரவு போட்டதை ஆக்ஷேபித்து மிஸ்டர் திலகர் பம்பாய் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார்.

ஸெப்டம்பர் மாஸம் 5-தேதி.

**ஜாம்நகரின் அரசர்.**—ஜாம்நகரின் அரசர் தமது 44-வயது பூர்த்தியானதை முன்னிட்டு தமது ஸம்ஸ்தானத்தில் ஸெக்கண்டரிக் கல்வியை இலவசமாகக் கற்றுக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்.

# ஜனோபிமானி.

(முன்பு ‘பிழைக்கும் வழி’ யென்று வழங்கியது.)
THE PEOPLE’S FRIEND.
FORMERLY KNOWN AS THE ‘PRACTICAL LIFE.’

OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED DEC 1916

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ., பத்ராதிபர்.
G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 8. Vol. 8. நளஹூ, புரட்டாசிமீ, SEPT.—OCTOBER 1916. ஸஞ்சிகை 9. No. 9.

## The People’s Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The ‘People’s Friend’ is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | | | Foreign. Rs. A. P. | | |
|---|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | ... ... | 6 | 0 | 0 |
| Half-yearly ... | 2 | 0 | 0 | ... ... | 3 | 0 | 0 |
| Sample copy | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 Page | ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do | ... | 2 | 8 | 0 | do |
| ¼ do | ... | 1 | 4 | 0 | do |
| 1/10 do | ... | 1 | 0 | 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion, republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, George-town, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் ‘ஜனோபிமானி’யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | | | அந்ய நாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 | 0 | 0 | ... | 6 | 0 | 0 |
| ஆறுமாஸத்துக்கு ... | 2 | 0 | 0 | ... | 3 | 0 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 | 0 | 0 |
| ½ ,, | ,, ,, | 2 | 8 | 0 |
| ¼ ,, | ,, ,, | 1 | 4 | 0 |
| 1/10 ,, | ,, ,, | 1 | 0 | 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேண்டுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருபநேயர்கள் அறியவேண்டும்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்

# ஜனாபிமானி.

புஸ்தகம் 8.] நள௵ புரட்டாசிமீ [ஸஞ்சிகை 9.

## TELEPHONE IN THE ARMY.
## ஸைன்யத்தில் டெலிபோன்.

தற்காலத்தில் டெலிபோன் தந்தி ஏற்பாடில்லாத ஸைன்யம் குருடும் செவிடுமாகுமென்று சொல்லலாம். தூரத்தில் நடக்கும் ஸம்பவங்களையும், தூரத்திலிருப்பவர் தெரிவிக்க விரும்பும் விஷயங்களையும் உடனே அறிந்துகொள்ள டெலிபோன் ஏற்பாடு இல்லாவிட்டால் முடியாது. டெலிபோனானது ஐரோப்பாவில் மேற்கு யுத்தகளத்தில் ரொம்ப ஏற்பாடாகவும் பூர்த்தியாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில் போர்முகமானது வடகடலில் ஆஸ்டெண்டுக்கும் ந்யூபோர்ட்டுக்கும் இடையிலுள்ள ஒரு இடத்திலிருந்து ஸ்விட்ஸர்லண்டின் எல்லை ப்ரதேசம் வரையில் நீண்டிருக்கிறது. இந்தப் போர்முகத்தில் நேச அரசு ஸைன்யங்களும் ஜெர்மன் கக்ஷி ஸைன்யங்களுமாக 70 லக்ஷம் போர்வீரர்கள் இருக்கிறார்கள். இந்த ஸைன்யங்களை நிர்வாக ஸௌகர்யத்தை யுத்தேசித்தும் யுத்த ஸௌகர்யத்தை உத்தேசித்தும் பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். 8 பேர்கொண்ட ஒரு காலாள் படை ஸ்க்வாட் முதல் 40,000 பேர்கள் கொண்ட பெரிய ஆர்மிகோர் என்னும் பிரிவுகள் வரையில் பற்பல ஸேனைப் பிரிவுகள் இருக்கின்றன.

இப்படி ஸைன்யங்கள் பலவாறாகப் பிரிந்திருந்தாலும் ஒவ்வொரு பிரிவிலிருப்பவர்களும் ரொம்ப தூரத்திலுள்ள வேறு ஸைன்யப் பிரிவுகளுடன் டெலிபோன் மூலமாய் ஸுலபமாகப் பேசுவது கூடும். வேண்டுமானால் வடகடலோரமாயுள்ள ஒரு ஸோல்ஜர் ஸ்விட்ஸர் லண்டோரமாக உள்ள ஸோல்ஜருடன் நேருக்கு நேர் பேசுவதுபோல் டெலிபோன் மூலமாய்ப் பேசலாம். இப்படிச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டிருக்கின்றன.

எதிரிக்கு முன் பக்கத்திலுள்ள முதல் வரிசைக் கிடங்குகளிலிருந்தும் அங்கே பூமிக்குள் தோண்டப் பட்டிருக்கும் குகைகளிலிருந்தும் டெலிபோன் கம்பிகள் ஆரம்பிக்கின்றன. கிடங்குகளில் சில அடி தூரத்துக் கொன்றாக அநேக கம்பிகள் இருக்கும். இந்தக் கம்பிகளை அங்கிருந்து வழிக்கிடங்குகள் வழியாகக் கொண்டுபோய் பின்னாலுள்ள இரண்டாவது மூன்றாவது கிடங்கு வரிசைகளோடும், ரிஸர்வ் கிடங்குவரிசைகளோடும் இணைத்திருக்கிறார்கள். கடைசியாக இந்தக் கம்பிகளை இந்தக் கிடங்குகளிலுள்ள ஸைன்யங்கள் சேர்ந்த ராணுவ ஸப்டிவிஷனுடைய ஹெட்க்வார்ட்டர் ஸ்தலத்தில் உள்ள டெலிபோன் ஆபீஸோடு ஸம்பந்தப்படுத்தப் படுத்தியிருக்கிறார்கள். அந்த ஆபீஸில் இந்தக் கம்பிகளை எந்த ஸைன்யப் பிரிவைச் சேர்ந்த கம்பிகளோடு சேர்க்க வேண்டுமானாலும் சேர்த்துவிடலாம். மேலும் இந்தச் சிறு பிரிவுகளின் டெலிபோன் ஆபீஸுகளையும் பெரிய ஸைன்யப் பிரிவுகளின் தலைமை ஸ்தானங்களிலுள்ள டெலிபோன் ஆபீஸுகளோடு ஸம்பந்தப்படுத்தியிருப்பார்கள். இவைகளிலிருந்து பொது ஹெட்க்வார்ட்டர் ஆபீஸுகளுக்கும் டெலிபோன் கம்பிகள் போட்டு அவைகளை ஸம்பந்தப்படுத்தியிருப்பார்கள்.

போர்முனையிலுள்ள டெலிபோனில் ஒரே ஒரு கம்பி இருந்தால் அது ஒரு ஸமயம் எதிரியின் குண்டுகளால் தாக்கப்பட்டு, அறுந்து போகக் கூடுமாதலால், சில இடங்களில் இரண்டு



மூன்று கம்பிகளும் வேறு சில இடங்களில் நான்கு கம்பிகளும், போடுவதுண்டு. மேலும் இந்த டெலிபோன் கம்பி ஏற்பாட்டை ஸமுத்ரத்தின் கீழ் போடப்பட்டிருக்கும் தந்தி ஏற்பாட்டுடன் ஸம்பந்தப்படுத்தியிருக்கிறார்கள். இதனால் ப்ரான்ஸிலுள்ள ப்ரிட்டிஷ் ஸைன்யங்களிலுள்ளவர்கள் இங்க்லண்டிலுள்ளவர்களுடன் பேசுவதும் ஸாத்யமாகிறது.

இப்படி போர்முகமெங்கும் டெலிபோன் கம்பிகள் போடுவது ஸிக்னல் கோர் என்னும் ராணுவப் பிரிவின் வேலையாகும். மின்ஸார உதவியால் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு ஸமாசாரமனுப்புவது ரொம்ப ஸுலபமாயும் சீக்ரமாயுமிருப்பதால், மின்ஸார ஏற்பாடு முற்றிலுமிராமலோ, அல்லது ஸ்வல்பமாகவோ இருந்த முற்காலத்தில் ஸமாசாரங்களை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு அனுப்புவதற்கு உபயோகிக்கப்பட்டுவந்த ஸாதனங்கள் தற்காலம் வெகுவாய்க் குறைந்துவருகின்றன. இருந்தாலும் ஸிக்னல் கோரிலுள்ள யாவரும் பழைய முறைகளில் பயிற்சியடைந்திருக்கிறார்கள்.

சில வர்ஷங்களுக்கு முன்னால் டெலிபோன் ப்ரபலமாயில்லை. அப்போது ஸைன்யங்களின் ஒரு பிரிவுக்கும் இன்னொரு பிரிவுக்கும் ஸமாசாரப்போக்குவரத்து செய்யவேண்டுமென்றால், பகல் காலத்தில் கொடிகளை சில ஸங்கேதங்களை அனுஸரித்து உபயோகித்து வந்தார்கள். ராத்ரிக்காலங்களில் விளக்கு வெளிச்சத்தை உபயோகித்து வந்தார்கள். தற்காலத்தில் இவைகள் ஸ்வல்பதூரத்திலுள்ளவர்களுக்குமட்டுமே ஸமாசாரம் தெரிவிப்பதற்கு உபயோகப்படுகின்றன. அதிலும் முக்யமாய், ஸைன்யங்கள் எதிர்த்து முன்செல்லும்போதும், அல்லது பின்வாங்கிப் போகும்போதும் சிறுஸைன்யப் பிரிவுகளுக்குள் உபயோகப்படுகின்றன.

ஸைன்யங்கள் எதிர்த்து முன் செல்லும்போதும் பின்வாங்கும்போதும், ஸிக்னல் கோரைச் சேர்ந்த ஸிப்பந்திகள் வண்டிகளில் தாம்ரக் கம்பிச் சுருள்களைப்போட்டுக் கொண்டுபோய், கம்பிகளைப் பிரித்துவிட்டு பூமியில் போட்டுக் கொண்டோ, அல்லது மரங்கள் பக்கத்தில் இருந்தால் அவைகளின் கிளைகளிலும், தந்திக் கம்பி ஸ்தம்பங்கள் இருந்தால் அவைகளிலும் சுற்றிக் கட்டிக்கொண்டோ போவார்கள். இப்படியாக போகுமிடமெல்லாம் டெலிபோன் கம்பிகள் போட்டு ஸைன்யங்களுக்குள் ஸமாசாரப் போக்குவரத்து ஏற்படுத்துவார்கள். தாம்ரக் கம்பிகள் போதாமல்போனால் பக்கத்தில் ஸாதாரண முள் கம்பி வேலிகள் இருந்தால், அவைகளில் தங்களுடைய யந்த்ரங்களை இணைத்து, வேலிகளையே டெலிபோன் தாம்ரக்கம்பிகளுக்கு பதிலாக உபயோகிப்பார்கள்.

ஸிக்னல் கோர் என்னும் படையைச் சேர்ந்தவர்கள் ஸமாசாரப்போக்குவரத்துக்காக உபயோகிக்கும் ஸாதனங்களுள் முக்யமானவை மின்ஸாரத்தால் நடத்தப்படும் டெலக்ராப், டெலிபோன் கம்பியில்லாத் தந்தி ஆகிய இவைகளே. இவைகளைத் தவிர பழைய முறைகளாகிய கொடி, தீவர்த்தி, கை விளக்கு, ஸெர்ச்லைட் என்னும் ப்ரகாசமான விளக்கு, ஹெலியோக்ராப் என்னும் ஸூர்ய வெளிச்சத்தால் ஸமாசாரம் அறிவிக்கும் கருவி ஆகிய இவைகளும் இவைகளுக்கேற்பட்டுள்ள ஸங்கேதங்களின்படி ஸமாசாரம் அறிவிக்க உபயோகப்படுகின்றன.

## CATTLE PLAGUE OR RINDERPEST.
## வெக்கை.

வெக்கையென்பது மாடு, ஆடு, ஒட்டகை, அசைபோடும் காட்டு ம்ருகங்கள் முதலியவைகளுக்கு உண்டாகும் ஒரு தொற்று வ்யாதி. பன்றியும் இந்த வ்யாதிக்குள்ளாகக் கூடுமென்று சொல்லப்படுகிறது. இது மனிதருக்கும் குதிரைகளுக்கும் உண்டாவதில்லை. இது இந்தியா முழுவதும் உண்டாவதாகத் தெரிகிறது. ஆனால்

சில ஜில்லாக்களில் இந்த வ்யாதி ரொம்ப ப்ரபலமாயும் மற்ற விடங்களில் ஸாதாரணமாயும் இருக்கிறது. மலையடர்ந்த ஜில்லாக்களில் இந்த வ்யாதியால் எற்படும் கால்நடை மரணம் ரொம்ப அதிகம். அந்த ஜில்லாக்களில் நோய்கண்ட ம்ருகங்களில் 100-க்கு 90 முதல் 100 வரையில் இறந்துபோவதுண்டு. ஸமவெளிகளில் ஸாதாரணமாய் நூற்றுக்கு 40 முதல் 50 வரையில் இறந்து போகின்றன. இந்த நோய் கண்டு ஸ்வஸ்தமடைந்த ப்ராணிகளுக்கு மறுபடியும் இந்த நோய் உண்டாவதில்லை. மாடுகளின் மல ஜலங்கள், வியர்வை, வாயிலிருந்து வரும் ஜலம் முதலியனவகள் மூலமாக இந்த நோய் பரவுகிறது. மாட்டின் தோல் மூலமாகவும் இந்த நோய் பரவலாம். இந்த நோய்க்கு ஆதாரமான விஷம் இருக்கும் மல ஜலங்களின் மேல் வெயில் தாக்குவதாலும், அவை காய்ந்துபோவதாலும், அழுகுவதாலும், க்ருமிஹரமான மருந்துபோடுவதாலும், விஷம் நாசமடையும். இந்த நோய்க்கு ஆதாரமான க்ருமி இன்னதென்று எவரும் இன்னம் கண்டுபிடிக்கவில்லை. இந்த வ்யாதி கண்டு அது நன்றாய் வெளிப்படையாகத் தெரிவதற்கு 3 முதல் 7 நாள் வரை செல்லுகிறது,

**வ்யாதியின் குறிகள்.**—இந்த வ்யாதியின் முதல் குறி என்னவென்றால் மாட்டின் தேகம் ரொம்ப சூடாயிருப்பதே. ஸாதாரணமாய் இந்த வ்யாதியில் தேகம் 104 முதல் 105 டிக்ரி வரை சூடாயிருக்கும். மாட்டின் தேகத்தில் தெர்மாமிட்டர் என்னும் உஷ்ணமானியை வைத்துச் சூட்டின் அளவை அறிந்துகொள்ளலாம். இந்த வ்யாதியில் ஆரம்பத்தில் தெரியக்கூடிய வேறு லக்ஷணங்கள் என்னவென்றால், மாடு மந்தமாயிருப்பது, அதன் வாய் கண் இவைகளின் உள்புறத்தில் வீங்கியிருப்பது, இரை யெடுப்பதில் விருப்பமில்லாமை, அசைபோடாமை, பால் கறப்பது நின்றுவிடுவது ஆகிய இவைகளே. ம்ருகங்களுக்கு மலச்சிக்க லேற்படலாம். அப்போது சாணியைச் சுற்றிலும் பசைபோன்ற ஒரு பொருள் காணப்படும். இரண்டாவது அல்லது மூன்றாவது நாளில் வாயில் நாக்கிற்கு அடியிலும், உதடுகளின் உட்புறத்திலும் சிறு கொப்புளங்கள் உண்டாகும். ம்ருகமானது ஸதா கீழே படுத்துக்கொண்டு, தனது தலையை விலாப்பக்கமாகச் சாய்த்துக் கொண்டிருக்கும். வாயிலிருந்தும் கண்ணிலிருந்தும் ஜலம் வெளிவரும். இதற்குப் பிறகு வயிற்றுப்போக்கு உண்டாகும். அப்போது சாணியானது ரொம்ப துர்நாற்ற முள்ளதாயிருக்கும். அதில் ரத்தமும் சீதமும் கலந்து போகக்கூடும். வாயிலுள்ள சிறு கொப்புளங்கள் ரணமாகிவிடும். மாட்டின் மேல் தோலிலும் கொப்புளங்கள் உண்டாகலாம். முக்யமாய் மாட்டின் மடிப்பக்கத்தில் தான் இவை உண்டாகும். மாட்டுக்கு வயிற்றுப்போக்கு உண்டானதும் தேகத்தின் சூடுகுறைகின்றது. மாடு ரொம்ப பலஹீனமாகி விடுகிறது. பிறகு அது கொஞ்சம் மயக்கமடைந்து அப்படியே சில நாள்களிருந்து 7-வது அல்லது 10-வது நாள் இறந்துபோகிறது. வ்யாதி ரொம்ப கடுமையாயிராவிட்டால், இன்னும் சில நாள் மாடு உயிருடன் இருக்கும். இந்த வ்யாதியில் வயிற்றுப்போக்கு ஏற்படுவதற்கு முன்னால் மாடு இறப்பது ரொம்ப அரிது.

இந்த வ்யாதிக்கு பற்பல மருந்துகள் கொடுத்துப் பார்த்தும் பயன் ஏற்படவில்லை. வயிற்றுப்போக்கை நிறுத்தவேண்டி சில கேஸ்களில் காரமான மருந்துகளைக் கொடுத்ததில் கெடுதலே ஏற்பட்டதாகத் தெரிகிறது. கார்பாலிக் ஆஸிட் பெர்மாங்கனேட் அப்பொடாஷ், அயோடைன் முதலிய மருந்துகளை உள்ளுக்குக் கொடுத்ததில் நோய்கண்ட சில மாடுகள் ஸௌக்யப் பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. கார்பாலிக் ஆஸிட் மருந்து கொடுப்பதாயிருந்தால், ஒருதடவைக்கு $\frac{1}{2}$ ட்ராம் முதல் 1 ட்ராம் வரை மருந்தை பட்டணம் படியால் $1\frac{1}{2}$ படி ஜலத்தில் கரைத்து உள்ளுக்குக் கொடுக்க வேண்டும். பெர்மாங்கனேட் அப்பொடாஷ் மருந்தானால், அதே அளவு ஜலத்தில் 2-ட்ராம் முதல் 4-ட்ராம்வரை பெர்மாங்கனேட் அப் பொடாஷைக் கலந்து உள்ளுக்குக் கொடுக்கவேண்டும். அயோடைன் மருந்தைமாத்ரம் வைத்யரைக் கேட்காமல் கொடுக்கக் கூடாது. வ்யாதியை ஸ்வஸ்தப்படுத்துவதில் முக்யமாய் கவனிக்கவேண்டிய விஷயம், மாடுகளை நன்றாய் பராமரிப்பதும், சரியான ஆகாரம் கொடுப்பதுமே. மாட்டுக்கு வயிற்றுப்போக்கு ஏற்படுவதற்கு முன் அதிககடுமையாயிராத பின்வரும் பேதிமருந்தை அதற்கு உள்ளுக்குக் கொடுக்கலாம். லின்ஸீட் ஆயில் (அதாவது ஆழிவிதையெண்ணெய்) அல்லது ஆமணக் கெண்ணெய் 10-ஔன்ஸ், நல்லெண்ணெய் 10-ஔன்ஸ், க்ரோடன் ஆயில் என்னும் எண்ணெய் 20-துளிகள், இவைகளை ஒன்றாய்க் கலந்து உள்ளுக்கு செலுத்த வேண்டும். ஆடுகளுக்கு இவ்யாதி கண்டால் ஆமணக்கெண்ணெயைச் சேர்க்காமல் அதற்குபதிலாக லின்ஸீட் எண்ணெய் சேர்த்துக் கொள்ளவேண்டும். வயிற்றுக் கடுப்புக்குப்பின், ஏற்படும் தேக பலஹீனத்துக்குப் பின்வரும் மருந்தைக் கொடுக்கலாம். ஆரக்கு சாராயம் 4-ஔன்ஸ், பொடிசெய்த சுக்கு $\frac{1}{2}$-ஔன்ஸ், பொடிசெய்த மிளகு 2-ட்ராம் இவைகளைக் கலந்து, அரிசிமாவைக் கொண்டாவது ஆழிவிதைமாவைக் கொண்டாவது செய்த கஞ்சியோடுகலந்து 4-மணிக்கொரு தடவை உள்ளுக்குக்கொடுக்கவேண்டும். ஜீர்ணம் செய்ய முடியாததும், மட்டமானதுமான தீனியைப்போடக் கூடாது. இளசான பச்சைப்புல்லையாவது அல்லது வேறு இளசான தழைகளையாவது தீனியாகப்போடலாம். கஞ்சியில் கொஞ்சம் உப்பும் சேர்க்கலாம். அல்லது மாட்டுக்கு எட்டக்கூடிய இடத்தில் ஒரு பெரிய கல்லுப்புக்கட்டியை வைத்திருந்தால் மாடு வேண்டுமானால் அதை நக்கிக்கொள்ளும். மாட்டின்தேகம் கதகதப்பா யிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். அவச்யமானால் துணிகளால் அதன்தேகத்தைப் போர்த்திவிடவேண்டும். மாட்டை நிழலில் கட்டிவைப்பதோடு, அது இருக்கும் இடத்தில் போதுமான அளவு காற்றோட்டமிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும்.

நோய்ப்பட்ட மாடுகளோடு சேர்ந்திருந்தால் வ்யாதி உண்டாகுமோ என்று ஸந்தேகித்த மற்ற மாடுகளுக்கு இந்த வ்யாதிக் கேற்பட்ட மருந்தால் இனுகுலேஷன் செய்து விட்டால் அதாவது அம்மைகுத்திவிட்டால் அந்த ஸந்தேகித்த மாடுகளுக்கு இந்த வ்யாதி உண்டாகாது. ஒரு இடத்தில் வெக்கை உண்டானவுடன் கால்நடை வைத்யரை அழைத்துவந்து ஸௌக்யமாயிருப்பதாகத் தோற்றும் எல்லாமாடுகளுக்கும் அம்மைகுத்திவிடுவது நல்லது. அம்மை குத்துவதில் பலமுறைகள் இருக்கின்றன. இந்தியாவில் அனுஷ்டானத்திலிருக்கும் முறை ரொம்ப ஸௌகர்யமானது. இதனால் கால்நடைகளுக்கு ச்ரமம் ஏற்படுவதில்லை. அவைகளுக்குக் காய்ச்சலாவது அல்லது வெக்கைநோயின் வேறு அறிகுறிகளாவது ஏற்படுவதுமில்லை. மாடுகளை வேலை செய்யவிடாமல் கட்டிப்போடவேண்டிய அவச்யமுமில்லை. சினையாயிருக்கும் மாடுகளுக்கும் அம்மை குத்தலாம். அதனால் யாதொரு கெடுதலும் நேராது. அம்மைகுத்தின ம்ருகங்களை வ்யாதிகண்ட ம்ருகங்களோடு சேர்த்துக் கட்டிவைக்கலாம். அப்படிச் செய்வதுதான் நல்லது. ஏனென்றால் அம்மைகுத்தின ம்ருகத்துக்கு வ்யாதி உண்டானால், வ்யாதி கடுமையாயிருப்பதில்லை. அவை ஸ்வஸ்தமடைந்தபிறகு மறுபடியும் ஒருகாலத்திலும் அவைகளுக்கு இந்த வ்யாதி உண்டாவதில்லை.

மாடுகளுக்கு அம்மைகுத்தின பிறகு அவைகள் இருக்கும் இடத்தில் உள்ள வ்யாதி பரவுதற்கேற்ற சாணம் முதலியவைகளை க்ருமிஹர மருந்துபோட்டு சுத்தம் செய்யவேண்டும்,

வ்யாதிவரக்கூடுமென்று ஸந்தேகித்த எல்லா மாடுகளுக்கும் அம்மை குத்தவேண்டியது அவச்யமானது. இல்லாவிட்டால் அந்த மாடுகளுக்கு ஒன்றின்பின் ஒன்றாய் வ்யாதி ஏற்பட்டு, அது பரவி விடக்கூடும்.

## NAVARATHRI—THE CONQUEST OF EVIL.

BY V. SUBRAMANIA AIYAR.

## நவராத்ரி - துஷ்டநிக்ரஹம்.

முன்னுரை. உலகத்தில் முன்னொரு ஸமயத்தில் தீமைகள் உண்டாயின. உலகத்தில் துன்பம் கலவாத இன்பம் இல்லை. இது மாறிமாறி வருவது உலகத்தின் இயற்கை. தீமைகள் அக்காலத்திலிருந்த ராக்ஷஸர்களால் உண்டுபண்ணப்பட்டன. இருள் நிறமுள்ள அந்த ராக்ஷஸர்களுக்குக் கெட்டகார்யங்கள் செய்வதில்தான் வெகு இஷ்டம். அவர்கள் பிறரை யாக யஜ்ஞாதிகள் செய்யவோ, தெய்வபூஜை முதலியன செய்யவோ விடமாட்டார்கள். எங்கே நல்ல கார்யங்கள் நடக்குமோ அங்கே அவர்கள் அவற்றை நடக்கவொட்டாமல் தடுப்பதற்கு ஆஜராயிருப்பார்கள். மொத்தத்தில் அவர்கள் தேவசத்ருக்கள். இப்படி ராக்ஷஸர்கள் அக்காலத்தில் தம் தலைவனான மஹிஷாஸுரனுடன் கொடுஞ்செயல்கள் செய்துவந்தார்கள்.

**தேவியின் இரக்கம்.**—ஜனங்கள் மஹிஷாஸுரனால் வருத்தமடைந்து அலறுவது அவர்களை ஈன்றெடுத்த பராசக்தி ஸ்வரூபிணியாகிய தேவிக்குத் தாங்கவில்லை. ஜனங்களின்மேல் காருண்யம் காட்டக்கருதிய ஈச்வரியானவள் அம்மஹிஷாஸுரனைக்கொன்று தன் ப்ரஜைகளுக்கு ஸுகத்தைக்கொடுக்க வழிதேடினாள். எருமைத்தலைகொண்ட அந்த அஸுரனோ மிக்க வலிவுள்ளவன். அவனைக் கொல்வதென்றால் விசேஷ தெய்வபலம் வேண்டும். ஈச்வரியானவள் அந்த அஸுரனைக் கொல்ல எவ்வளவு கஷ்டப்பட்டாவது, ஈச்வரனின் அநுக்ரஹத்தை யடைய வேண்டுமென்று எண்ணி விசேஷமான பக்தி ச்ரத்தையுடன் ஊசிமுனையில் ஒற்றைக்கால் கட்டைவிரலையூன்றி நின்று ஈச்வரனைக்குறித்துத் தபஸ் செய்தாள். இப்படிக் கடுந்தவமியற்றின தேவியின் முன் ஸம்ஹாரமூர்த்தியாகிய ஸ்ரீமஹாதேவன் தோன்றி, அவருக்கு அம்மஹிஷாஸுரனைக் கொல்லத்தகுந்த படைகள் பலவற்றை ஸந்தோஷத்துடன் கொடுத்து அஸுரனைக் கொல்ல அநுக்ரஹம் செய்து மறைந்தார்.

பரமேச்வரனிடமிருந்து ரௌத்ராம்சம்பெற்ற துர்க்காதேவி, ஆயுதங்கள் தாங்கி, தன் பூதகணங்கள் சூழச்சென்று எருமைத்தலையஸுரனை அங்கம் பொடிபடக்கொன்று உலகத்திற்கு இன்பத்தைத் தந்தாள், என்று புராணம் கூறும்.

**நவராத்ரி.**—இது புரட்டாசி மாஸம் சுக்லபக்ஷம் முதலில் தொடங்கப்படும். இந்நவராத்ரி பண்டிகை 9-நாள் ஹிந்துஸமூகத்தவர் எல்லோராலும் கொண்டாடப்படுகிறது. அதனாலேயே இது நவராத்ரி என்று பெயர்பெறுகிறது. இந்த 9-நாளும் தேவி தபஸ் இருந்ததாக ஐதிகம். பத்தாம்நாள் தேவியானவள் மகிஷாஸுரனைக் கொன்று ஜயம் பெற்ற தினமாதலால், அதை விஜயதசமி என்று அழைக்கிறார்கள். ஆகவே அந்நாளில் தொடங்கின எக்கார்யமும் சுபமாக முடியுமென்று கருதி ஹிந்துக்கள் தங்கள் குழந்தைகளின் அக்ஷராப்யாஸம் முதற்கொண்டு, எல்லா சுபகார்யங்களையும் நாள்பார்க்காமல் அந்த தினத்தில் செய்ய ஆரம்பிக்கிறார்கள். ஒவ்வொரு தொழில்காரனும் அந்த தினத்தில்தான் தன் தொழிலை அப்யஸிக்க ஆரம்பிக்கிறான். சிலம்பம் கற்றுக்கொள்ளுகிறவன் அன்றையதினம் குருவினிடத்தில் காணிக்கை ஸமர்ப்பித்து அத்தொழிலை அப்யஸிக்கிறான். கௌரவர்களின் வில்வித்தையாசார்யராகிய த்ரோணாசிரியர்கூட நூற்றைவர்களுடைய தநுர்வேத வித்தையை விஜயதசமியில் அரங்கேற்றினார்.

**ஹிந்துக்கள் வீடுகளில் பூஜை.**—நவராத்ரியின்



ஆரம்பத்திற்கு முதல் இரண்டு மூன்று மாஸங்களின் முன்னாலேயே, இக்கொண்டாட்டத்திற்கு வேண்டிய ஆயத்தங்கள் ஹிந்துக்கள் வீடுகளில் நடந்தேறும். முன் வருஷங்களைக் காட்டிலும் கைத்தொழிற் பொருள்கள் பலவற்றைச் சேகரித்துவைப்பதில் வீட்டுக்குழந்தைமுதல் பெரியவர் வரையில் கண்ணும் கருத்துமாயிருப்பார்கள். நவராத்ரி ஒன்பது தினங்களும் தேவிக்கு உவந்த தினமாதலால் அந்த நாள்களில் மிகவும் அவச்யமானவைகள் போக மற்ற ஆயுதங்களை உபயோகியாமல் ஹிந்துக்கள் பூஜையில் வைத்துப் போற்றுவார்கள். வீடுகளில் ஸ்த்ரீகள் ஊசியிட்டு அந்நாள்களில் தையல் போடுவதால் தேவி அப்ரியப்படுவள் என்று நினைப்பார்கள். வீடுகளில் அஸந்தர்ப்பங்களான ஸம்பவங்கள் நேர்ந்திருந்தால், இக்கொண்டாட்டம் நடவாமல் நிற்கும்.

**கோலுக்காட்சி சாலை.**—ஹிந்துக்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் கொலுக்காட்சி சாலையொன்று ஏற்படுத்திகாட்சி ஸாமான்களைத் தெய்வமாகப் பாவித்து காலை மாலைகளில் பூஜை செய்வார்கள். நாட்டில் செய்யப்படும் பலவிதமான வர்ணமிட்ட மண்ணினால் செய்யப்படும் பொம்மைகளென்ன, மணிகளினாலும், நெட்டியினாலும், அரக்கினாலும் வெள்ளி பொன் முதலிய உலோகங்களினாலும், தந்தங்களினாலும் வேலைத்திறம் காட்டின பொருள்களென்ன, இவைகளெல்லாம் இக்காட்சி சாலையில் அழகாக வைக்கப்படும். இக்காட்சி சாலையில் பலவித வில் வாள் வேல் போன்ற வீட்டுப் பெரியோர் ஆண்ட ஆயுதங்களென்ன, அவர்களும் அவர்கள் முன்னோர்களும் வாசித்துப் போற்றிவந்த அழகிய சீதாளம் என்னும் பனையோலைகளில் எழுதப்பட்ட பூர்வீகமும் அபூர்வமும் பூஜார்ஹமுமான ஸ்ரீமத் ராமாயண பாரத பாகவதாதி க்ரந்தங்களென்ன, அழகாகப் பைண்டு செய்யப்பட்ட நவீன புத்தகங்களென்ன இவைகளெல்லாம் வெகு அழகாக ஒவ்வொரு புறத்திலும் அலங்கரித்து வைக்கப்படும். காட்சிசாலை வீட்டின் வளமைகளுக்குத் தகுந்தாற்போல் சிறிதாயும் பெரிதாயும் அமைந்திருக்கும்.

**ஸ்த்ரீகள் இதனைக் கொண்டாடும் விதம்.**—நவராத்ரியின் முதல் நாளிலேயே ஸ்த்ரீகள் அப்யங்க ஸ்நானஞ்செய்து பட்டாடை உடுத்திக்கொள்வார்கள். தம் குழந்தைகளுக்கும் அவ்வாறே செய்விப்பார்கள். அன்று ஸுமங்கலிகளுக்கும் ப்ராமணர்களுக்கும் அப்யங்க ஸ்நானம் செய்வித்து பஞ்சபக்ஷ பரமான்னங்களுடன் தம்முடைய புருஷர்களினுடைய ஒத்தாசை மேற்கொண்டு போஜனம் செய்து வைப்பார்கள். ஸாயங்காலங்களில் தம் காட்சி சாலையைப் பார்க்கும்பொருட்டு, ஒவ்வொரு வீட்டு ஸ்த்ரீகளையும் போய் அழைத்து வருவார்கள். நவராத்ரி ஒன்பதுநாளும் ஸ்த்ரீகள் தம் தலை மயிர்களை வாரிச் சீவி முடித்தும், புஷ்பங்கள், நகைகளணிந்துகொண்டும், அலங்காரம் செய்துகொண்டும், குழந்தைகளை அவ்வாறே அலங்காரம் செய்வித்தும், தம் வீட்டுக்கு வந்த ஸ்த்ரீகளைப் பாடச்செய்து தினம் ஒவ்வொரு தினுஸாக தின்பண்டங்கள் செய்து அதை அக்காட்சி சாலையில் கொலு வீற்றிருக்கும் தேவிக்கே அர்ப்பணம் செய்து, ஸ்த்ரீகளுக்கு விநியோகித்து வெற்றிலைப்பாக்கும் மஞ்சள் குங்கும சந்தன தாம்பூலங்களும் கொடுப்பார்கள்.

**புருஷர்கள் கொண்டாடும் விதம்.**—ஹிந்துக்களின் க்ருஹங்களில் புருஷர்களுள் வைதீக ச்ரத்தையுடையவர்கள் ஸ்த்ரீகள் ஏற்படுத்தியிருக்கும் கொலுக்கூடத்தில் தம்மருமையான புஸ்தகங்களைவைத்து அவைகளில் நவராத்ரிக்கு அதிதேவதையாகிய ஸ்ரீ துர்க்கா லக்ஷ்மி ஸரஸ்வதி தேவதைகளை மந்த்ர பூர்வகமாய் ஆவாஹனம் செய்து ஆந்திக விதிப்படி அத்தேவதைகளில் முதல் மூன்றுநாளில் துர்க்கையையும், அடுத்த மூன்று நாட்களில் லக்ஷ்மியையும், அதற்கடுத்த

மூன்று நாட்களில் ஸரஸ்வதியையும் ஆராதிப்பார்கள். சக்தி தேவதையை ஆராதிப்போர் அவ்வொன்பதுநாட்களிலும் ஒரே வேளை போஜனம் செய்து பகலிலும் இரவிலும் அதிதிகளுக்கு போஜனம் செய்வித்து ஈச்வரிக்கு விசேஷ பூஜைகளைச் செய்வார்கள்.

வைதீக ச்ரத்தை அதிகமா யுள்ளவர்களில் சிலர் அவ்வொன்பது நாட்களில் தேவி பாகவதம், தேவி மாஹாத்மயம் என்னும் க்ரந்தங்களை முறைப்படி வாசித்து முடிப்பார்கள். மற்றும் சிலர் அவ்வொன்பது நாட்களில் ராமாயணம் ஸப்த காண்டத்தையும், அதை வாசிக்கும் நியமப்படி வாசித்து முடித்து பலனடைவார்கள். மற்றும் சிலர் ராமாயணத்தை ஸப்த ஸர்க்க நியமனப்படி 9-நாட்களில் பாராயணம் செய்து முடிப்பார்கள்.

**ஸரஸ்வதிபூஜை.**—முன் கூறியபடி துர்க்கா, லக்ஷ்மி, ஸரஸ்வதி தேவதைகளை முறைப்படி ஒன்பது நாளும் ஆராதிக்காதவர்கள் நவராத்ரியில் ஒன்பதாவது நாள் ஸரஸ்வதி தேவியைப் பூஜைசெய்கிறார்கள். இதற்கு ஸரஸ்வதி பூஜையென்று பெயர். அன்றையதினம் ப்ராம்மணர்கள் காலையில் விதிப்படி ஸ்நாநம்முதலியன செய்து மடியுடுத்து ராமாயணம், பாகவதம் முதலிய உயர்ந்த புஸ்தகங்களைப் பூஜையில் வைத்து தேவியைப் பூஜைசெய்கிறார்கள். இந்த நாளை ப்ராம்மணர்கள் விசேஷமான பண்டிகைநாளாகக் கொண்டாடுகிறார்கள். தேவிக்கு அன்றைய நிவேதனம் வெகு ப்ரபலமாயிருக்கும். சிறு குழந்தைகள் அன்றையதினம் தம் பாடபுஸ்தகங்களை ஒழுங்காகவும் அலங்காரமாக வைப்பதில் வெகு கவனம் செலுத்துகிறார்கள். ஒருவர்க்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு நந்தவனங்களிலும் ஆறு குளங்களின் கரைகளிலும் சென்று மாங்கொழுந்து, நெல்லிக்கொழுந்து, மாதுளங்கொழுந்து, விஷ்ணுக்ராந்தம் சிவக்ராந்தம் முதலிய புஷ்பங்கள், வில்வம், துளசி முதலிய தளங்கள் முதலிய பலவேறு வகைப்பட்ட தேவிக்கு ஏற்ற புஷ்பங்களை கொண்டுவருதற்குக் கூட்டம் கூட்டமாய்ப் புறப்படுவது பார்க்க விந்தையாயிருக்கும். அன்று புஸ்தகம் படிப்பதில் அச்ரத்தை காட்டும் பையன்கள் புஸ்தகம் படிக்கக்கூடாதாகையால், நல்லவேளையாய் ஸரஸ்வதிபூஜை வந்ததேயென்று ஸந்தோஷங்கொள்ளுவார்கள். மறுநாள் காலையில் புனர்ப்பூஜையென்று தேவிக்குப் பூஜைசெய்து ஸரஸ்வதிதேவியை யதாஸ்தானம் செய்வார்கள். அன்று பெரியோர்கள் ஏதாவது உயர்ந்த க்ரந்தங்களைப் பாராயணம் பண்ணாமலிருப்பதில்லை. அப்படியே பையன்களையும் வாசிக்கச் செய்வார்கள்.

ப்ராமணரல்லாத மற்றை வருணத்தவர்கள் ஸரஸ்வதிபூஜையை ஆயுத பூஜையெனக் கொண்டாடுவார்கள். வேஷ்டி வெளுக்கிற வண்ணான் முதல்யாவரும் ஆயுத பூஜையைப் பக்தி ச்ரத்தையுடன் கொண்டாடுவார்கள். ஆயுதங்களை மதித்துப் பூஜை செய்யாவிட்டால், ஆயுத தேவதை தம்மை மதியாது என்பதே இவர்களுடைய கொள்கையாகும். அன்றையதினம் ப்ராமணரல்லாத மற்ற ஜாதியார்கள் அவல், கடலை, சர்க்கரை, தேங்காய், பழம், புஷ்பம் முதலியவைகளை அவ்வாயுத தேவதைக்கு நிவேதனம் செய்வார்கள்.

**நவராத்ரி கொலுவினால் விளையும் நன்மைகள்:** நமது முன்னோர்கள் நாம் செய்யும் ஸ்நானம் முதல் எல்லாக் கார்யங்களையும் மதத்தோடு ஸம்பந்தப்படுத்தி வைத்திருக்கிறார்கள். அப்படி வைத்திருப்பவைகளுள் நவராத்ரி யொன்று. இப்படிப்பட்ட நவராத்ரி கொலுவினால் நம் நாட்டிலுள்ள பலவித கைத்தொழில்கள் வ்ருத்தியாகின்றன. தந்த வேலையாளர்கள்; நெட்டி வேலையாளர் முதலிய பல கைத்தொழிலாளிகள் வ்ருத்தியடைய இந்நவராத்ரி கொலு மிகவும் உபயோகமாயிருக்கிறது. இந்நவராத்ரிகொலுவினால் ஸங்கீதம்



வ்ருத்தி யடைகிறது. சித்ரத்தொழில் அக்கொலு முன்னால் தினந்தோறும் விதம் விதமாகப் போட்டுக் காட்டும் கோலத்தினால் வ்ருத்தியடைகிறது. அதனுடன் ஈச்வரபக்தியும் விளையாட்டாய் மனிதர் ஸமூகத்தில் குஞ்சு குழந்தைகள் முதல் வ்ருத்தர் வரையில் உண்டாகி விடுகிறது. நாட்டின் கைத்தொழிலின் வன்மையையும், அது எந்த வகையில் வளர்ச்சியடையவேண்டுமென்னும் விஷயத்தையும் எளிதில் அறிந்துகொள்ள இடமுண்டாகிறது.

**கோயில்களில் பூஜை.**—நவராத்ரிக் காலங்களில் ஹிந்து கோயில்களில் விசேஷமான தீபாலங்காரம் செய்யப்படுகிறது. கோயிலுள்ள விக்ரஹங்களுக்கு விசேஷ அபிஷேகம்செய்து ஸாயங்காலங்களில் நவ நவமான அலங்காரங்கள் செய்கிறார்கள். விஜய தசமியன்று கோயில்களிலுள்ள விக்ரஹங்களை அலங்காரம் செய்து குதிரைகளின்மேல்வைத்து அம்பு போடல் என்ற ஐதீகத்தை யொட்டி ஊரின் வெளிப்புறத்தில் ஊர்வலமாகக் கொண்டுபோய் அம்பு போடும் உத்ஸவத்தை நடத்துவது இந்தியா நாடெங்கும் ப்ரபலமாய் நாளதுவரையில் அநுஷ்டானத்தில் இருந்துவருகிறது.

**ப்ரபலமாகக்கொண்டாடப்படும் ஸ்தலங்கள்.**—நவராத்ரி உத்ஸவத்தை தென்னாடுகளில் கும்பகோணம் முதலிய தேவாலயங்கள் பெருத்தஸ்தலங்களில் விசேஷமாகக் கொண்டாடுகிறார்கள். இவ்வொன்பது நாட்களிலும் அந்த ஸ்தலங்களில் நடைபெறும் நவராத்ரி உத்ஸவத்தையும் காட்சி சாலைகளையும் கவனிக்கவேண்டி அந்த ஸ்தலங்களுக்கு ஹிந்து யாத்ரிகள் வர்ஷவாரியில் போவது வழக்கம்.

**தசராப்பண்டிகை.**—இந்த நவராத்ரிபண்டிகையையே மைஸூர், புதுக்கோட்டை, திருவாங்கூர் முதலிய ஸ்வதேச ராஜ்யங்களில் தசராவாகக் கொண்டாடுகிறார்கள் (மஹிஷாஸுரன் மைஸூர் ப்ராந்தியத்திலேயே வஸித்தான் என்றும் மஹிஷாஸுரன் ஊர் என்பது மைஸூர் என ஆயிற்று என்றும் சிலர்சொல்லுவார்கள்) தசரா என்பது தசராத்ரி என்று பொருள்படும். இங்கே நவராத்ரி என்பதை அப்பாகத்தவர்விஜய தசமியைச் சேர்த்து தசரா அதாவது 10-ராத்ரி என்று சொல்வார்கள். இந்த தசராப்பண்டிகையை அப்பாகத்தவர் விடுமுறை நாளாகக் கொண்டாடுகிறார்கள். அந்த ராஜாங்கத்தார்கள் விசேஷமான அன்னதானங்களும் வேறுதானங்களும் செய்கிறார்கள். இப்படி இந்நாளில் செய்வது அக்ஷயமான பலனைக்கொடுக்கும் என்பது புராண ஸித்தாந்தம். இந்த ராஜாங்கங்கள் தசராவில் அநேக வித்வஸபைகள் கூட்டி அவைகளில் அநேகவித்வான்கள் ப்ரஸங்கங்கள் செய்ய ஏற்பாடு செய்கிறார்கள். ஆகவே பாஷையின் வளர்ச்சிக்கு இது ஒருஸாதனமாகிறது. அந்த ஸபைகளில் வீணை பிடில்முதலிய வாத்யங்களில் வல்லவர்களும் கலைவன்மையைக் காட்டிப் பரிசு பெறுகிறார்கள்.

இப்படி இந்நவராத்ரி பண்டிகையை மதஸம்பந்தப்படுத்தி வைத்தால்தான் இம்மாதிரியான கைத்தொழில் வ்ருத்தி யடையுமென்று நம் முன்னோர் தீர்க்கமான புத்தி வலிமையினால் இவ்விதம் ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். ஹிந்து ஸமஸ்தானங்களில் நவராத்திரி காலங்களில் காளிதேவதை போன்ற தேவதைகளுக்கு பலிகொடுக்கும் பழைய வழக்கம் நவநாகரீகம் மேற்பட்ட இக்காலத்தில் நின்று விட்டது. நவராத்ரிகாலத்தில் ஹிந்து தேசத்திலுள்ள திண்ணைப்பள்ளிக் கூடங்களின் உபாத்யாயர்கள் அம்பிகையைக்குறித்தும் இன்னும் மற்ற தேவதைகளைக்குறித்தும் தெய்வ ஸ்தோத்ரங்களைப் பிள்ளைகளுக்கு போதித்து வைத்திருந்து, அப்பிள்ளைகளை ஆடையாபரணங்களால் அலங்கரித்துக் கோயில்கள்போன்ற பொது ஸ்தலங்களில் அழைத்துக்கொண்டுபோய் ஆடுவித்தும் பாடுவித்தும், பொதுஜனங்களிடமும் பிள்ளைகளின்

பெற்றோர்களிடமும் பரிசுகள் பெறுவதுண்டு.

இங்நவராத்ரிக்கு சரியானபடி ஒத்ததொரு பண்டிகை நவநாகரீகம் பெற்ற ஜப்பான்போன்ற இதர நாடுகளிலும் நாளதுவரையில் அநுஷ்டானத்திலிருந்துவருகிறதாகத் தெரிகிறது.

பண்டித வி. ஸுப்ரமண்ய அய்யர்.

## ALMONDS.

## வாதுமை.

இந்தியர்வில் ஆகாரத்திலும் மருந்துவகைகளிலும் உபயோகிக்கப்படும் முக்யமான பொருள்களில் வாதாம் பருப்பு ஒன்றாகும். வாதுமை இந்தியாவில் விசேஷமாய் விளைவது கிடையாது. அது இயற்கையாய் பயிராகும் ப்ரதேசங்கள் பாரஸீகம், சின்ன ஆசியா, ஸிரியா ஆகிய இந்த இடங்களே. அவ்விடங்களில் அது வெகுகாலந் தொட்டுப் பயிராகி வருகிறது. வாதுமையில் கசப்பு வாதுமையென்றும், தித்திப்பு வாதுமையென்றும் இரண்டு வகையுண்டு. தற்காலம் வாதுமை விசேஷமாய்ப் பயிராகும் தேசங்கள் ஸ்பெய்ன், போர்த்துகல், மொராக்கோ, பாரஸீகம், ப்ரான்ஸ், இட்டலி ஆகிய இந்த தேசங்களே.

வாதுமையானது அதிக உஷ்ணமில்லாததும் போதுமானவளவு மாத்ரம் மழை பெய்வதும், அது பூக்குங்காலமாகிய ஜனவரி பிப்ரவரிமாஸங்களில் பனி அதிகமாய் விழாததுமான இடங்களில்தான் நன்றாய் வளரும். ஸமசீதோஷ்ண ப்ரதேசங்களில் சற்று உஷ்ணமான பாகங்களில் அது நன்றாய் வளருகிறதென்றாலும் நல்ல பலன் கொடுக்குமென்பது நிச்சயமில்லை. ரொம்ப உஷ்ணமான ப்ரதேசங்களில் அது செழித்து வளர்ந்தாலும், அவ்விடங்களில் அதிக ஈரமிருப்பதால் பலன் கொடுக்காமல் போய்விடுகிறது, [illegible] வலம்பமாகவே காய்க்கிறது. [illegible]மாக வாதாம் பருப்புக்கு விலை ஏறிவருகிறது. யுத்தம் நேர்ந்த பிறகு அதன் விலை இன்னும் ஏறியிருக்கிறது. ரொம்ப உயர்ந்த வாதாம் பருப்பு ஸ்பெய்ன் தேசத்தில் தான் பயிராகிறது. அந்த உயர்ந்த பருப்புக்கு ஜார்டன் வாதுமையென்ற பெயர். அந்தப் பருப்பு விசேஷமாய் இங்க்லண்டுக்கும் அமெரிக்க ஐக்ய நாடுகளுக்குந்தான் போகிறது. சென்ற 1914-ம் வர்ஷத்தில் 6,56,829 பவுன் மதிப்புள்ள 1,14,578 அந்தர் வாதுமை இங்க்லண்டில் இறக்குமதி செய்யப்பட்டது.

கசப்பு வாதுமையிலும் தித்திப்பு வாதுமையிலும் ஒரு தைலமிருக்கிறது. அந்தத் தைலத்தை பருப்பிலிருந்து எடுத்து விற்பனை செய்கிறார்கள். தித்திப்பு வாதாம் பருப்பை மிட்டாய் முதலிய தின்பண்ட வகைகளில் உபயோகிக்கிறார்கள். பருப்பை தனியாகத் தின்பதுமுண்டு. தற்காலம் வாதாம்பருப்புக்கு விலை அதிகமாயிருப்பதால், சிலர் பிஸ்டாசியோ என்னும் ஒரு வகை மரத்துப் பருப்பு, வேர்க்கடலைப் பருப்பு ஆகிய இவைகளின் வாஸனையைப் போக்கி, வாதாம் பருப்பின் வாஸனையிருக்கும்படி இவைகளை தயாரித்து, வாதாம் பருப்புக்கு பதிலாக விற்கிறார்கள்.

கசப்பு வதாம்பருப்பிலிருந்து தான் விசேஷமாய் எண்ணெய் எடுக்கிறார்கள். தற்போது கடைகளில் விற்கப்படும் வாதுமை எண்ணெய் சுத்தமான வாதுமை எண்ணெயன்று சொல்வதற்கில்லையாம். பீச், அப்ரிகாட் என்னும் பழங்களின் விதையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயை வாதுமையெண்ணெயென்று விற்றுவிடுகிறார்களாம். ஐரோப்பாவில் செய்யப்படும் 'வாதுமை எண்ணெ' யெல்லாம் இந்த மாதிரி போலி எண்ணெயாகும். வாதுமை யெண்ணெய் இங்க்லீஷ் வைத்யத்தில் களிம்பு, எமல்ஷன் முதலிய மருந்துகள் செய்வதற்கும், வேறு மருந்துகளுக்கு அநுபானமாகவும் உபயோகப்படுகிறது. நமது தேசத்தில் வாதாம் பருப்பு



ஹல்வா செய்வதில் விசேஷமாய் உபயோகப்படுகிறது. யுனானி வைத்யர்கள் பருப்பையும் எண்ணெயையும் மருந்து முறைகளில் உபயோகிக்கிறார்கள், கடைகளில் விற்கும் வாதுமை எண்ணெய் ரொம்ப கலப்படமுள்ளதா யிருப்பதால் நமது தேசத்தில் மருந்துக்கு வேண்டிய எண்ணெய் இங்கேயே பருப்பிலிருந்து எடுக்கப்படுகிறது. பருப்பும் எண்ணெயும் தேகத்துக்கு ரொம்ப குளிமையென்று சொல்லப் படுகிறது. நமது நாட்டில் செல்வவந்தர்கள் வாதாம்பருப்பைப் போட்டுக் காய்ச்சின பாலை உட்கொள்வதுண்டு. சிலர் உஷ்ணமான காலத்தில் பாலையும் வாதாம் பருப்பையும் சேர்த்தரைத்து தலையில் தேய்த்துக்கொள்வார்கள். அப்படிச் செய்வதால் தலையும் கண்களும் குளிர்ச்சி யடைகின்றனவாம்.

## MEANS OF DEFENCE IN INSECTS.

## பூச்சிகள் விரோதிகளிடமிருந்து காத்துக்கோள்ளும் உபாயங்கள்.

(ஆவணிமீ ஸஞ்சிகையில் 362-ம் பக்கத் தொடர்ச்சி.)

சில பூச்சிகள் பறக்கும்போது பகட்டான வர்ணமுடையனவா யிருந்தும், அவைகள் இயற்கையாய் வஸிக்கு மிடங்களில் தங்கியிருக்கும் போது, அவைகளின் வர்ணமும் அவைகளிருக்கும் இடத்தின் வர்ணமும் ஒத்துப்போய், பூச்சிகள் தங்கியிருப்பது எதிரி ப்ராணிகளுக்குத் தெரியாமல் போகிறது. இதனால் அந்தப் பூச்சிகள் எதிரி ப்ராணிகளிடத்தில் அகப்படாமல் தப்பித்துக் கொள்ளுகின்றனவாம். சில பூச்சிகள் எப்பொழுதும் எதிரிகள் வருவதை கவனிப்பதில் ஜாக்ரதையா யிருப்பதாலும், சுறுசுறுப்பா யிருப்பதாலும், சீக்ரம் வேகமாய்ப் பறந்து போகக்கூடியவைகளா யிருப்பதாலும் எதிரிகளிடம் அகப்படாமல் தப்பித்துக்கொள்ளுகின்றன. சில தட்டாரப் பூச்சிகளினுடைய சிறகுகளின் மேற்புறம் ரொம்ப அழகான வர்ணங்கள் கொண்டதாயிருக்கிறது. அந்தச் சிறகுகளின் அடிப்புறம் பகட்டான வர்ணமாயிருப்பதில்லை. அந்தப்பூச்சி உட்காரும்போது, சிறகுகளை ஒன்றுசேர்த்துக் கொள்வதால் பகட்டானபக்கம் மறைந்துபோய் பகட்டில்லாத பக்கம் மாத்ரம் தெரிகிறது. இதைப்போலவே வேறு சிலபூச்சிகளின் சிறகுகளும் இருக்கின்றன. இப்படிப் பறக்கும்போது பகட்டான வர்ணம் தெரிந்து எங்கேயாவது உட்கார்ந்தால், அந்தவர்ணம் தெரியாமல்போவதால், பூச்சியைத் துரத்திவரும் எதிரி ப்ராணிகளுக்கு அந்தப் பூச்சியைக் கண்டுபிடிக்க முடியாமல் போகிறது. இவைகள் எங்கேயாவது தங்கி யிருக்கையில் எதிரி ப்ராணிகள்கண்டுபிடித்துவிட்டால், இவைகள் உடனே கொஞ்சதூரம் பறந்து வேறிடத்தில் உட்கார்ந்துவிடும். இதனால் எதிரி ப்ராணிகள் இவைகளைக் கண்டுபிடிக்க முடிவதில்லை. தின்ன அருவருப்பாயிருக்கும் வேறு சில பூச்சிகள் எப்போதும் பகட்டாகக் காணப்படுவதோடு, எதிரிகளைக் கண்டவுடன் சுறுசுறுப்பாய் ஓடிவிடாமல் மெதுவாக நகருகின்றன. ஒருதரம் இந்த ஜாதிப்பூச்சியைத்தின்னமுயன்ற விரோதி ப்ராணிகள் மறுபடியும் இதுபோன்ற பூச்சிகளைத் தின்ன முயலாவாகையால், இவைகள் இவ்வளவு தைர்யமாயிருக்கின்றன.

சில பூச்சிகளினுடைய சிறகுகளின் ஓரத்தில் அந்தப் பூச்சிகளின் கண்கள், வால், தலை முதலியவைகள்போன்ற உருவங்கள் காணப்படும். அவைகளைப் பிடிக்கவரும் விரோதிப் பூச்சிகள் அந்த உருவங்களைக் கண்டு வாஸ்தவமான தலை அல்லது கண் என்று எண்ணி அவைகளைப் பிடிக்கப்போகும். அந்த உருவங்கள் பூச்சிகள் உயிரோடிருப்பதற்கு அவச்யமாய் வேண்டியிராத ஏதோ பாகத்தில், ஸாதாரணமாக சிறகின் பாகத்தில் இருப்பதால், விரோதி ப்ராணிகள் அவ்வுருவங்கள் உள்ள பாகங்களைக் கடித்தாலும் அந்தப் பூச்சிகள் இறந்துபோகாமல் தப்பித்துக்கொள்ளுகின்றன.

சில பூச்சிகள் தங்களுடைய விரோதிகளின் மேல் கெட்டவாஸனை அல்லது ருசியையுடைய த்ரவங்களையோ, விரோதிகளின்மேல் பட்டால் கெடுதல்செய்யக்கூடிய த்ரவங்களையோ வெளியிடக்கூடியவையாயிருக்கின்றன. இந்த த்ரவங்களை வெளிப்படுத்தும் அங்கங்கள் சில பூச்சிகளில் மார்பின் அடிப்புறத்திலும் சில வண்டுகளின் அடிவயிற்றின் அடிப்பாகத்திலும் அமைந்திருக்கின்றன. சில பூச்சிகள் இந்த அங்கங்களிலிருந்து த்ரவத்தை ரொம்பதூரம் குறிதப்பாமல் பீச்சக்கூடுமாம். பம்பார்டியர் பீட்டில் என்று ஒருவகை வண்டு இருக்கிறது. அது விரோதியின்மேல் த்ரவத்தை வெளியிட்டவுடன், அந்த த்ரவமானது புகையாய்ப்போய், ஒரு சத்தமும் உண்டாகிறது. அது வெளியிடும் த்ரவம் மனிதருடைய தேகத்தில் பட்டாலும் மற்ற ப்ராணிகளின்மேல் பட்டாலும் ரொம்ப எரிச்சலுண்டாகுமாகையால், அப்போது வண்டானது விரோதிகளிடமிருந்து தப்பி யோடிவிடும்.

எறும்புகளில் சில ஜாதிகள் பார்மிக் ஆஸிட் என்ற ஒரு த்ராவகத்தை வெளியிடுகின்றன. இந்த த்ராவகமும் அவைகளின் எதிரிகளுக்குக் கெடுதல் செய்யக்கூடியவை. மாமரத்திலுள்ள முசிடுகள் அம்மரத்திற்கு வருவோர்களை ரொம்பவும் ஹிம்ஸை செய்வது யாவரும் அறிந்தது. அவை கொடுக்குகளால் கொட்டுவதில்லை. பற்களால் தோலைக்கடித்துப் பிடித்துக்கொண்டு அவைகளுடைய அடிவயிற்றிலிருந்து எரிச்சலைக் கொடுக்கும் த்ரவத்தை தோலின்மேல் பீச்சுகின்றன.

கரையான்களுக்கு ஸாதாரண எறும்புகள் ஜன்ம சத்ருக்களாகும். ஆகையால் கரையான்களுக்கும் எறும்புகளுக்கும் சண்டை நேர்ந்துவிட்டால், கரையான் தப்பித்துக்கொள்ள அதற்கு ஒரு வழி ஏற்பட்டிருக்கிறது. கரையானின் தலையில் விஷ த்ரவம் உண்டாக்கும் ஒரு பையிருக்கிறது. இந்தப் பை சில கரையான்களுக்கு தலையிலிருந்து அடிவயிறு வரையில் நீண்டிருப்பதுண்டு. ஒரு கரையானை எறும்பு பிடித்துக்கொண்டால், கரையானானது பையிலிருந்து விஷத்ரவத்தை வெளியிடும். அந்த த்ரவத்தின்மேல் காற்று பட்டதும், கெட்டியான பசையாக மாறிவிடும். இது எறும்பின்மேல் பட்டால் எறும்புக்கு ரொம்ப கஷ்டமுண்டாகும். இன்னொரு கரையான் ஜாதியில் போர் செய்யும் கரையான்களுக்கு ஒரு நீண்ட பை அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பையிலிருந்து ஒரு த்ரவத்தை இரண்டு மூன்று அங்குல தூரத்துக்கு அது பீச்சக்கூடும். இந்த த்ரவமும் காற்றில் பட்டவுடன் கெட்டியான பசையாக மாறி எதிரியின்மேல் தாக்கினவுடன் எதிரிக்கு ஹிம்ஸை உண்டுபண்ணும். சில வண்டுகள் வெளியிடும் த்ரவமானது ரொம்ப காரமாயிருப்பதால் அது சில ப்ராணிகளின்மேல் பட்டவுடன், அந்த ப்ராணிகளின் தோல் கொப்பளித்துவிடும். இப்படிப்பட்ட வண்டுகளைத் தின்பதில் ரொம்ப கஷ்டமிருப்பதால், இவைகளை வேறு ப்ராணிகள் வெகுவாய்த் தின்ன முயலுவதில்லை.

கம்பளிப் பூச்சிகளின் தேகத்தில் உள்ள மயிர்களின் நுனி கொக்கிகளாக அமைந்திருக்கும். மயிர்கள் பூச்சிகளின் தேகத்தில் உறுதியாய் ஒட்டிக்கொண்டிருப்பதில்லை. இழுத்தால் ஸுலபமாய் வந்துவிடும். அவைகள் தேகத்தில் பட்டால், கொக்கிகள் தோலில் புகுந்துகொண்டு மயிர்கள் நம் தேகத்தில் ஒட்டிக்கொள்ளுகின்றன. இந்தக் கொக்கிகளால் எரிச்சலுண்டாகிறது. கம்பளிப்பூச்சியின் விரோதி ப்ராணிகளுக்கும் இதே மாதிரி உபத்ரவம் ஏற்படும். கம்பளிப் பூச்சிகளுக்கு மயிர் இருப்பது இன்னொரு வகையிலும் உபயோகமாகிறது. எறும்புகள் இந்த மயிர்களுக்குள் புகுந்து, பூச்சியின் தேகத்தைத் தின்ன முடியாது.

சில பூச்சிகள் எதிரிகளைக் கண்டவுடன் ஒரு



விதமாக கூச்சலிடுவதால் எதிரிகள் பயந்து ஓடிவிடுகின்றன. சில பூச்சிகளுக்கு கால்களில் நீண்ட முட்களிருக்கின்றன. இவைகள் எதிரிகளை அந்த முட்களால் தாக்குகின்றன. வேறு சில பூச்சிகள் தங்கள் வாயால் விரோதி ப்ராணிகளைக் கடிக்கின்றன. சில பூச்சிகள் அலகு போன்ற ஒரு கருவியால் விரோதி ப்ராணிகளைக் கொட்டி விஷமேறச் செய்கின்றன. ஆனால் கொட்டுவதற்கேற்ற உண்மையான கொடுக்கு எறும்பு, தேனீ, குளவி ஆகிய இந்த ப்ராணிகளுக்குத்தான் உண்டு. இந்த ப்ராணிகள் தங்கள் விரோதிகளிடமிருந்து காத்துக்கொள்வதற்கு கொடுக்குகளை உபயோகப் படுத்துவதேயல்லாமல், இதர ப்ராணிகளை ஆகாரத்தின் பொருட்டு தாக்குவதற்கும் உபயோகப்படுத்துகின்றன. இந்தக் கொடுக்குகள் மேற்சொன்ன பூச்சிகளில் பெண் இனத்துக்கே உண்டு. ஆண் குளவிகளுக்கும் ஆண் தேனீக்களுக்கும் கொடுக்குகள் கிடையா.

சில பூச்சிகள் சிறு கூடுகள் கட்டி அவைகளைத் தங்கள் கூட இழுத்துக்கொண்டு போகின்றன. இவைகளை விரோதி ப்ராணிகள் தாக்க வந்தால் உடனே அந்தக் கூடுகளில் மறைந்துகொள்ளுகின்றன. சில பூச்சிகள் புழுநிலைமையிலிருக்கும் போது அவைகள் தின்னும் வேறு பூச்சிகளின் தோலை மேலே போட்டுக் கொண்டு போகின்றன. இப்படிப் போவதால், அந்தப் புழுக்களின் விரோதிகள் அதன் உண்மையை அறியாமல் ஏமாந்து போகின்றன. இந்தப் புழு தின்னக்கூடிய வேறுபூச்சிகளும் இப்படியே ஏமாந்து போய் புழுக்கு ஆகாரமாகின்றன.

சிலபூச்சிகள், உதாரணமாக மின்மினிப் பூச்சிகள், வேண்டும்போது வெளிச்சத்தைக் காட்டக்கூடியவைகளாக இருக்கின்றன. இவைகள் இரவில்ஸஞ்சரிக்கும்போது அடிக்கடி வெளிச்சம் காட்டிமறைவதால், இதர ப்ராணிகள் இவைகள் இருக்குமிடத்தை அறியமுடியாமல் தவிக்கும்.

## HOW TO GET GOOD SLEEP ?

## நல்ல தூக்கம் வருவதெப்படி ?

மூளைக்கு ஓய்வு கொடுப்பதற்காகவே தூக்கம் அவச்யம் வேண்டியிருக்கிறது. தூங்கும்பொழுது மூளையில் ரத்த ஓட்டம் குறைகிறது. இந்த ரத்த ஓட்டம் அதிகமாயிருந்தால் விழித்துக் கொள்ளவேண்டிவரும். நாம் ஒருமணி நேரத்தில் எவ்வளவு சொல்லமுடியுமோ அதைவிட அதிகமாக ஒருநிமிஷத்தில் கனுக்கள் காண்கிறோம். நமக்கு ஞாபகத்துக்கு வரும் கனவுகளெல்லாம், நாம் தூங்கி எழுந்திருக்கும் ஸமயத்தில் கண்டவைகள். அதனால்தான் நம்முடைய கனவுகள் பாதியிலேயே நின்று விடுகின்றன. ஸ்வப்னங்கள் தவிர தூக்கத்திற்கு வேறுதடைகள் ஏற்படுவதுண்டு. தூக்கம் மிகவும் குறைவாயிருக்கலாம் அல்லது அதிகமாயிருக்கலாம்; என்றாலும் தூக்கம் ஸுகமாயிராமலிருக்கலாம். விசேஷமாக தூக்க மின்மையால்தான் அநேகர் வருந்துகிறார்கள். ஒருவருக்கு எவ்வளவு தூக்கம் வேண்டியதென்பது சொல்லமுடியாத விஷயம். 'ரிவ்யு ஆவ் ரிவ்யூஸ்' பத்ராசிரியரான காலஞ்சென்ற வில்லியம் ஸ்டெட் என்பவர் சில வருஷங்களுக்குமுன், இங்லண்டில் சில ப்ரமுகர்களுக்கு ஒரு சுற்றுக் கடிதமனுப்பி, அவரவர்களுக்கு ஒருநாளைக்கு எவ்வளவு மணிதூக்கம் அவச்யம் என்று கேட்டார். அந்தக் கடிதமும் அதன் பதில்களும் அவருடைய பத்ரிகையில் ப்ரசுரம் செய்யப்பட்டன. அவைகளைப் படித்துப் பார்த்தால் சிலருக்கு ஐந்துமணிநேரம் தூக்கமும், இன்னும் சிலருக்கு ஏழுமணிநேரம் தூக்கமும் அவச்யம் என்று தெரிகிறது. சிலர் 10-அல்லது 9-மணிநேரம் தூக்கம் வேண்டியதென்று சொல்லுகிறார்கள். இரண்டு அல்லது ஒன்றரை மணிநேரம் இடையிடையே தூங்க வேண்டுமென்பது வேறு சிலருடைய அபிப்ராயம். ஆகையால் இதுவிஷயத்தில் கண்டிப்பாய் ஒன்றுஞ் சொல்லமுடியாது. ஸாதாரணமாக

இடதேசமுள்ள மனிதன் ஒருவனுக்கு சராசரி நாளொன்றுக்கு 7-மணிநேரம் தூக்கம் அவச்யமானது என்று சொல்லலாம். தூக்கத்தின் அளவு அவரவர்களுடைய பழக்க வழக்கங்களையும் தொழில்களையும் பொறுத்திருக்கிறது. இந்த விஷயத்தியத்திலுங்கூட கெட்ட வழக்கங்களும் நல்லவழக்கங்களும் இருக்கின்றன. தூக்கத்தின் அளவு அதன் குணத்தைப் பொறுத்தது. நல்ல தூக்கமாக இடையறாது தூங்குவது இடையிடையே விழித்துக்கொண்டு பிறகு தூங்குவதைவிட மேலானது. சிலருக்கு கஷ்டப்பட்டுத் தூக்கம் வருகிறது. சிலர் ஸ்வல்பமாக தூங்கி விடுகிறார்களென்றாலும், சிறிது நேரத்திற்கெல்லாம் விழித்துக் கொள்ளுகிறார்கள். அதன் பிறகு தூக்கம்வராமல் ச்ரமப்படுகிறார்கள். சிலருடைய தூக்கம் கனவு முதலியவற்றால் கெட்டுப்போகிறது. சிலர் தேக அசௌக்யத்தினால் தூக்கமில்லாமல் வருந்துகிறார்கள். நல்ல சரீரமுள்ளவர்களாயிருப்பவர்கள் கூட, மன அமைதியின்மையாலும், வருத்தத்தினாலும், தொந்தரையினாலும் தூக்கமில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். வேலையும் தொந்தரையும் விசேஷமாக சேர்ந்தேவரும். நாகரீகம் மேம்பட்ட தற்காலத்தில் மனிதனுக்கு ஓய்வென்பதில்லை. ஆகையினால் தூக்கமில்லாமலிருப்பது ஓர் ஆச்சர்யமான விஷயமல்ல. ஒருநாள் தூக்கமில்லாவிட்டால் அதனாலடையும் ச்ரமம் எல்லாருக்கும் தெரியும். ஆகையினால், சிலர் தூக்கம் வருவதற்காக வென்ற மருந்துகளை வாங்கிச் சாப்பிடுகிறார்கள். இது ரொம்ப பிசகு. ஏனென்றால், விசேஷமாய் அவைகள் யாவும் பாஷாணங்கலந்தவைகள். தவிர, அந்த மருந்துகள் தூக்கம் வராததற்குள்ள காரணங்களைக் கண்டிப்பதில்லை. நல்ல தூக்கம் வருவதற்கு அனுஷ்டிக்கவேண்டிய விதிகள் முக்யமாக இரண்டுண்டு. ஒவ்வொரு ராத்ரியும் குறித்த நேரத்திற்குப் படுத்துக்கொள்ளவேண்டியது; அப்படியே குறித்த நேரத்தில் காலையில் எழுந்திருக்கவேண்டியது. கண்விழி கொடுத்தபிறகு படுக்கையில் படுத்திருக்கலாகாது. படுத்துக்கொள்ளப் போவதற்கு முந்தி நம்மை உத்ஸாகப்படுத்தித் தூக்கத்தைக் கெடுக்கக்கூடிய எவற்றையும் நினைக்கக்கூடாது; அவைகளை தள்ளிவைத்து விடவேண்டும். படுத்தவுடனே தூங்குகிற வழக்கத்தை அப்யஸிக்கவேண்டியது. அப்படியில்லாமல் எதையாவதுயோசிக்க ஆரம்பித்துவிடுவோமானால், தூக்கம் வராது.

## MEMORY AND HOW TO DEVELOP IT.

BY K. T. SUNDARA RAJAN, B. A., L. T.

## ஞாபகசக்தியும் அதை வ்ருத்தி செய்யும் விதமும்.

ஆனிமீ வெளிவந்த 'ஜனாபிமானி'யில் 262-264 பக்கங்களில் குழந்தைகளை கவனிக்கும்படி செய்வதைக்குறித்து ஆராய்ந்து பார்த்தோம். குழந்தைகளை பாடங்களில் கவனமுள்ளவர்களாய்ச்செய்து, அவர்களை நன்றாய் படிக்கும்படி செய்தபிற்பாடு, அவர்களை எப்படி படித்த பாடங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும்படி செய்வதென்றும், அவர்களுடைய ஞாபகசக்தியை எப்படி மேன்மேலும் வ்ருத்திசெய்வது என்பதைக்குறித்தும் இப்பொழுது ஆராய்ந்து பார்ப்போம்.

ஞாபகசக்தி என்பது எல்லாருக்கும் மிகவும் உபயோகமான சக்திகளில் ஒன்று. இந்த சக்தியில்லாவிட்டால் ஒவ்வொருவருடைய வாழ்நாளும், ஒவ்வொருவரும் செய்யும் லௌகிக, வைதீக விஷயங்களும் வீணாய் முடியும். நேற்றையதினம் எந்த இடத்தில் விட்டோம், இப்பொழுது எதை ஆரம்பிக்கவேண்டுமென்று தெரியாது. அப்படித் தெரியாவிட்டால் ஒவ்வொரு நாளும் அடியைத்தொட்டு ஆரம்பிக்கவேண்டும். நம்முடைய காரியங்களில் நாம் அதிகமாக முன்னுக்கு வரமுடியாது. ஆகையினால் ஞாபகமென்கிற சக்தி



எல்லாருக்கும் மிகவும் உபயோகமுள்ளது. இதை வ்ருத்திசெய்வதற்கு தகுந்த முறைகளிருக்கின்றன.

சிலகாலத்திற்குமுன் நடந்த ஸமாசாரத்தை, கொஞ்சகாலமான பிற்பாடுங்கூட, நடந்தபடியே சொல்லும் சக்திக்கு ஞாபகசக்தி யென்றுபெயர். அது எல்லாருக்கும் ஸ்வபாவமாகவே ஏற்பட்ட சக்திகளில் ஒன்று. அது சிலரிடத்தில் அதிகமாய் வ்ருத்தி யடைந்தும், சிலரிடத்தில் குறைவாயுமிருக்கும். எப்படி ஒருதோட்டம், சரியானபடி பார்க்காவிட்டால், ஒரு பெரிய காடாக ஆகிவிடுமோ, அதேமாதிரியாக குழந்தைகளின் ஞாபகசக்தியை அதிபால்யத்திலேயே சரியான மார்க்கங்களில் திருப்பி, அவர்களை முன்னுக்குக் கொண்டுவராவிட்டால், பிற்பாடு அவர்கள் கஷ்டப்படவேண்டியிருக்கும். ஆகையால் அவர்களுடைய ஞாபகசக்தியை வ்ருத்தி செய்யவேண்டியது உபாத்யாயர்களினுடையவும், பெற்றோர்களினுடையவும் கடமையாகும். அப்படி ஞாபகசக்தியை வ்ருத்தி செய்வதற்கு முக்யமாய் எட்டுவிதமான உபாயங்களிருக்கின்றன.

1. ஞாபகத்தில் நன்றாய் வைத்துக்கொள்ள வேண்டிய பாடங்களை குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு வந்த தினத்தின் முன்பாகத்திலேயே கற்பித்து விடவேண்டும். அவர்கள் மனஸு அப்பொழுது சோர்வடையாமல் மிகவும் தெளிவாக இருக்கும். இந்தக் காரணத்தை உத்தேசித்தே நமது பெரியோர்கள் ஸதா ஞாபகத்திலிருக்கவேண்டியதான வேதாத்யானத்தை அதிகாலையில் எழுந்திருந்து படித்துவந்தார்கள். அப்படிப் படித்துவந்தால் அவர்கள் ஆயுஸ்முடிய மறக்காமலிருப்பார்கள்.

2. ஒருகார்யம் ஸமீபத்தில் நடந்தால் அது எல்லாருக்கும் நன்றாய் ஞாபகமிருக்கும். அதேமாதிரியாக ஸமீபத்தில் நடந்த பாடங்களெல்லாம் பிள்ளைகளுக்கு நன்றாய் ஞாபகமிருக்கும். வருஷ முழுமையும் சும்மாவிருந்துவிட்டு பரீக்ஷைக்கு முன் பாடங்களை எல்லாம் நடத்துவது மிகவும் அஸாத்யமான காரியம். ஆகையால் பரீக்ஷைக்குமுன் பாடங்களை ஸங்க்ரஹமாய்த் திரும்பவும் கற்பிப்பது நல்லது.

3. ஸமாசாரங்களை முதல்முதலில் பிள்ளைகளுக்கு கற்பிக்கும்பொழுது மிகவும் ஜாக்ரதையாயும், மிகவும் அற்புதமாதிரியிலும் கற்பிக்க வேண்டியது அவச்யம். ஏனென்றால் முதல் முதலில் சொல்லிக்கொடுக்கும் ஸமாசாரங்கள் வெகுநாள் ஞாபக மிருக்கும். உதாரணமாக பையன்களை, அவர்கள் பள்ளிக்கூடத்திற்கு முதல் முதலில் வரும்பொழுது பள்ளிக்கூடத்தில் என்ன நடந்துகொண்டிருந்தது என்று கேட்டால், அவர்கள் சரியாகவே பதில் சொல்லுவார்கள். ஏனென்றால் அவர்கள் முதல் முதலில் பார்த்த ஸமாசாரங்களாகையினால், அவர்களுக்கு மனஸில் நல்ல ஞாபகமிருக்கும். இது உபாத்யாயர்களுக்கு மிகவும் ஸாதகமான ஒரு கருவி. ஆகையினால், அவர்கள் தங்கள் ச்ரமத்தை பாராட்டாமல், பையன்களினுடைய நன்மையைக் கருதி தாங்கள் புதிதாய் பாடங்களை கற்பிக்கும்பொழுது, அவர்களுக்கு விளங்கும்படியாயும், அவர்கள் அதை ரஸிக்கும்படியாயும், அவர்கள் முன்படித்ததற்கும் இப்பொழுது அவர்கள் படிப்பதற்கும் உண்டான ஸம்பந்தத்தை எடுத்துக்காட்டியும் கற்பிக்கவேண்டும். இப்படிச் செய்வதினால் பையன்கள் மனஸில் பாடம் சரியானபடி படிந்து, ஞாபகத்தில்பட்டு, மறுபடியும் கேட்டால் அவர்கள் சொல்லும்படியாயும் ஆகும்.

அநேகம் பிள்ளைகளுக்கு இளமைப் பருவத்திலேயே சிலபாடங்களில் உத்ஸாஹமும் மற்றும் சிலபாடங்களில் வெறுப்பும் உண்டாகிறதாக சிலர் அபிப்ராயப்படுகிறார்கள். அது முற்றிலும் பிசகானகொள்கை. ஏனென்றால் உபாத்யாயர்கள் கற்பிக்கும்முறையினால் தான் அவர்களுக்கு

வெறுப்பும், உத்ஸாஹமும் உண்டாகின்றனவே யொழிய வேறொன்றுமில்லை.

4. உபாத்யாயர்கள் ஒரு பாடத்தை புதிதாய் கற்பிக்கும்பொழுது அந்த ஸமாசாரத்தை மிகவும் வ்யக்தமாகவும், தெளிவாகவும், அவர்களுக்கு விளங்கும்படியான தெளிவான நடையிலும் கற்பிப்பதுடன், நடித்துக்காட்ட வேண்டிய இடங்களில் நடித்துக்காட்டியும், ஸம்பாஷணை செய்து காட்டவேண்டிய ஸமயங்களில் ஸம்பாஷணை மூலமாயும், வஸ்துக்களின் படங்களைக் காட்டியும் பாடங்களை கற்பிக்க வேண்டும். கிடைக்குமானால் அந்த பதார்த்தங்களையே கொண்டுவந்து காட்டுவது மிகவும் நல்லது.

5. ஞாபக சக்தியை அதிகப்படுத்த பையன்கள் படித்த பாடங்களை அடிக்கடி திரும்பவும் படிக்க வேண்டும். ஒரு தடவை போனவழியில் மறுபடியும் மறுபடியும் போனால் எப்படி சரியான பாதை ஒன்று ஏற்பட்டு விடுகிறதோ, அதே மாதிரி, ஒருதரம் படித்ததை, அதை மறந்து போவதற்கு முன் மறுபடியும் படித்து வந்தால் விஷயங்கள் மறந்துபோகாமலிருக்கும். அப்படி பிள்ளைகள் படித்து வருகிறார்களாவென உபாத்யார்கள் அடிக்கடி பழைய பாடங்களில் கேள்விகளை கேட்பதுடன் சிறிய பரீக்ஷைகள் மூலமாயும் அறிந்துகொள்ள வேண்டியது.

6. தற்காலத்தில் நடக்கிற ஒரு ஸமாசாரத்தின் நிமித்தம் மற்றொன்று ஞாபகத்துக்கு வரவேண்டுமானால், அந்த இரண்டுக்கும் ஒருவிதமான ஸம்பந்த மிருக்கவேண்டும். ஒன்றுக்கொன்று ஸம்பந்தமுள்ள இரண்டு விஷயங்களில் ஒன்று ஞாபகத்துக்கு வந்தால் மற்றதும் உடனே ஞாபகத்துக்கு வருகிறது. ஞாபக சக்தி அதிகரிக்கச் செய்வதற்கு, பற்பல விஷயங்களுள் ஒன்றுக்கொன்றுள்ள ஸம்பந்தங்களை எடுத்துகாட்ட வேண்டும். "உண்மை பேசுவது நல்லது" என்று ஒரு பாடம் படித்தால், மறுபடியும் அதே மாதிரி பாடம் வந்தால் ஒன்றுக்கொன்றும் மற்றொன்றுக்கு முண்டான ஸம்பந்தத்தை எடுத்துக்காட்டி கற்பிக்க வேண்டும். பிள்ளைகளுக்கு ஒரே காலத்தில் இரண்டும் ஞாபகத்துக்கு வரும்.

7. ஒரு காரியத்தைப் பற்றி சொல்லும் ஸமயத்தில் அதற்கு முன்னும், பின்னும் நடந்த ஸமாசாரங்களைக் குறித்துச் சொன்னால் ஸங்கதிகள் மனஸில் நன்றாய் பதிந்து இஷ்டம்போல் ஞாபகத்துக்கு வரும். ஆகையால் பிள்ளைகளுக்கு பாடம் கற்பிக்கும்போது கற்பிக்கும் விஷயத்துக்கு ஸம்பந்தப்பட்டதாய் அதற்கு முன்னும் பின்னும் உள்ள விஷயங்களையும் எடுத்துக் காட்டவேண்டும்.

8. இரவைக் குறித்து நினைக்கும்போது, இரவுக்கு மிகவும் வித்யாஸமான பகல் ஞாபகத்துக்கு வருகிறது. ஒரு நல்ல காரியத்தை செய்தவனைக் குறித்து வாசித்தால், கெட்ட காரியம் செய்தவனுடைய ஞாபகம் வரும். இது ஞாபக சக்தியின் ஸ்வபாவமாகும். இந்த ஸ்வபாவத்தை யறிந்து உபாத்யாயர்கள் ஒரு குணத்தை அல்லது குணத்தையுடையவனைப் பற்றிப் பேசும்போது, அதற்கு எதிரான குணத்தையும் அந்த குணத்தை யுடையவனையும், இருவர்களுக்குமுள்ள வித்யாஸத்தையும் பற்றிப் பேசினால், ஒரு குணம் அல்லது அந்த குணமுடையவன் ஞாபகத்துக்கு வரும்போது மற்றவையும் ஞாபகத்துக்கு வரும்.

இப்படி மேற்கூறிய எட்டுவித ஸௌகர்யங்களையும் நன்கு அறிந்து ஸமயோசிதமாய் உபயோகிக்க வேண்டியது உபாத்யாயர்களைச் சேர்ந்தது. மேலும் நாம் படித்ததை எல்லாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்வது மிகவும்கஷ்டம். அப்படிக்கு ஞாபகமிருந்தாலும் ப்ரயோசனமில்லை. ஆனதால் ஞாபகசக்தி மனுஷ்யனுக்கு எப்படி முக்யமோ அதேமாதிரி மறந்துபோவதும் முக்யமானதாகும். ஒவ்வொருவரும் படித்ததையும், பார்த்ததையும் கேட்டதையும், அநுபோகத்தில் ஏற்பட்டதையும், முற்றிலும் ஞாபகம் வைத்துக்கொள்வது என்று ஏற்பட்டால் ரொம்ப கஷ்டமாயிருக்கும். மூளையில் தகுந்தபடி இடம் இல்லாமல், மூளையும் கெட்டுப்போய்விடும், முக்யமான ஸங்கதிகள் மனஸில் தங்குகின்றன. மற்றவைகள் மறந்துபோகும். வைத்யர்கள் யார் யாருக்கு எந்த வ்யாதி வந்தது, எப்படி குணமாயிற்று, என்றால் அவர்கள் உடனே சொல்லுவார்கள். அவர்களுக்கு அதில் பழக்கம் அதிகம். மற்றவையெல்லாம் தற்காலத்திற்கு ஞாபகமிருக்கும். அதே மாதிரியாக எல்லோரையும் சொல்லலாம். மூளையானது சோர்வடையாதபடி தகுந்த நிலைமையிலிருப்பதற்காக ஈச்வரனால் கொடுக்கப்பட்ட சக்திகளில் மறந்துபோகும் சக்தியை ஒன்றாகச் சொல்லலாம்.

னீமானிக்ஸ் (Mnemonics) என்பது, ஞாபகம் வைத்துக்கொள்வதற்காக, சில யுக்தியினால் செய்துகொள்ளும் ஏற்பாடு. உதாரணமாக ஆகாய வில்லிலுள்ள வர்ணங்களை ஞாபகம் வைத்துக்கொள்ளுவதற்காக வர்ணங்களைக் குறிக்கும் வார்த்தைகளின் முதல் எழுத்துக்களை சேர்த்து (Vibgyor) விப்ஜியார் என்று ஞாபகம் வைத்துக்கொள்ளுவது வழக்கம்.

விப்ஜியார் (Vibgyor) என்பது வயலட் (Violet), இண்டிகோ, (Indigo), ப்ளூ, (Blue), க்ரீன், (Green), யெல்லோ, (Yellow), ஆரெஞ்ஜ், (Orange), ரெட், (Red), என்னும் ஏழுவித நிறங்களுக்கு குறியாக நிற்கிறது. இப்படி ஞாபகம் வைத்துக்கொள்வதை பூர்வீகர்களான க்ரீஸ் தேசத்தாரும், ரோம் தேசத்தார்களும் மிகவும் கொண்டாடி, மகிழ்ந்து பேசி வந்தார்கள். நவீன மனஸ் தத்வ சாஸ்த்ர வித்பன்னர்கள் இதை கண்டித்துப் பேசுகிறார்கள். நவீன படிப்பு முறையின்படி ஒரு வஸ்துவை, அதைக்கொண்டே ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டுமே தவிர, மற்றொரு வார்த்தைமூலமாய் ஞாபகம் வைத்துக்கொள்ளக்கூடாது. அப்படி வைத்துக்கொண்டால், வேண்டிய ஸமயத்தில் முக்யமான ஸங்கதி மனஸைவிட்டுப் போய்விடும். அதற்கு பதிலாக சரியானபடி ஸங்கதிகள் ஞாபகமிருப்பதற்காக, அவைகளை ஸரியானபடி ஒழுங்கு படுத்தி, ஒன்றின்பின் ஒன்றாயும், காலக்ரமமாயும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று அபிப்ராயப்பட்டு அந்த ப்ரகாரமே தேச சரித்ரத்திலும், பூகோள சாஸ்த்ரத்திலும் பாடங்களைக் கற்பித்து வருகிறார்கள்.

பையன்களும், பெரியோர்களும் மேலும் மேலும் வ்ருத்தி அடைய ஞாபக சக்தி முக்யமானதாகையினால், உபாத்யாயர்களும், பெற்றோர்களும் ஒன்றுசேர்ந்து அதை இளமையிலேயே வ்ருத்திசெய்ய முயலவேண்டியது அவச்யம்.

கே. டி. ஸுந்தரராஜன்.

## THE WOMEN OF JAVA.
## ஜாவா தேசத்து ஸ்த்ரீகள்.

ஜாவா என்பது சிங்கப்பூருக்கு தெற்கிலுள்ள ஒரு பெரிய தீவு. அது டச்சுக்காரருக்கு ஸொந்தமானது. அதிலுள்ள ஸ்வதேச ஜனங்கள் பெரும்பாலும் மகம்மதியர்கள். அவ்விடத்து ஸ்த்ரீகளுக்கு ஸ்வதந்தரம் ரொம்ப உண்டு. அவர்களிடம் அன்பு என்பதும் காதல் என்பதும் கிடையவே கிடையாது. அவ்விடத்தில் கல்யாணம் செய்துகொள்வதற்கு ஏவரும் அதிக ச்ரமப்படவேண்டியதில்லை. 3-ரூபாய் கொடுத்து ஒரு ஸ்த்ரீயைக் கல்யாணம் செய்துகொள்ளலாம். கல்யாணச் சடங்குக்கு $1\frac{1}{2}$-ரூபாய் செலவழித்தால் போதும். இவ்வளவு ஸுலபமாய் ஒரு ஜாவா புருஷனுக்குக் கிடைக்கும் ஸ்த்ரீ அவனிடம் எப்போதும் வஸித்துவருவாள் என்று சொல்லமுடியாது. அவளுக்கு எப்போது இஷ்டமோ அப்போது அவள் $2\frac{1}{4}$-ரூபாய் கொடுத்து தனது புருஷனைவிட்டுப் பிரிந்துவிடலாம்.

அந்த தேசத்தில் ஒரு ஸுல்தான் பேருக்கு மாத்ரம் அரசராக இருந்துவருகிறார். அவருக்கு 400 ‘மனைவிகள்’ உண்டு. அவர்களுள்

மூன்றுபேர்களேபட்டஸ்த்ரீகள். மற்றவர்களெல்லாரும் பேருக்குமாத்ரம் மனைவிகள். இவர்களில் சிலரை ஸுல்தான் கண்ணால்கூடப் பார்த்திருக்கமாட்டார். இத்தனை மனைவிகள் ஸுல்தானுக்கு எப்படிக் கிடைத்தனரென்று ஒரு ஸந்தேகம் பிறக்கலாம். பட்டஸ்த்ரீகள் மாத்ரம் ஸுல்தானுடைய நெருங்கின பந்துக்கள் அல்லது அவரிடம் வேலைபார்க்கும் உயர்ந்த உத்யோகஸ்தர்களுடைய வம்சத்தைச் சேர்ந்தவர்களாவார்கள். மற்ற 397 பேர்களும் பற்பல வகுப்புகளிலிருந்தும் வந்தவர்கள். ஸுல்தானுடைய தயவை அடைய விரும்புகிறவர்கள் எவ்விடத்திலாவது ச்ருங்காரமாக நடக்கக் கூடிய ஒரு பெண்ணைக் கண்டால், அவளுடைய பெற்றோர்களுக்கு 3ரூபாய் கொடுத்து விட்டு, பெண்ணை அழைத்துக் கொண்டுவந்து அந்தப்புரத்தில் சேர்த்துவிட்டு ஸுல்தானிடம் தெரிவித்து ஸுல்தான்கொடுக்கும் பரிசைப்பெற்றுப் போவார்கள். இந்தப் பெண்கள் எந்தக் குடும்பத்தைச்சேர்ந்திருந்தாலும் பாதகமில்லை. ஜாவா தேசத்துஸ்த்ரீகளிடம் அன்பு என்பதும் காதல் என்பதும் கிடையவே கிடையாதென்று சொன்னோம். ஸுல்தானுடைய அந்தப்புரத்திலுள்ள ஸ்த்ரீகளும் அப்படியேதான். அதில் உள்ள ஒவ்வொரு ஸ்த்ரீயும் அரசனுடைய தயவை எப்படி அடைகிறது, எப்போது அதிகாரமும் செல்வாக்குமுள்ளவளாகிற தென்பதிலேயே ஸதா கவனமாயிருப்பாள். ஒவ்வொருத்தியும் அரசனுடைய பட்டஸ்த்ரீகளில் ஒருத்தியாக ஆவதையே உயர்ந்த நோக்கமாக கொண்டிருப்பாள்; அதற்கு அஸ்திவாரம் ஒரு புத்ரனைப்பெறுவதே. ஆனால் புத்ரனைப்பெற்ற ஸாதாரணமனைவிகளெல்லாம் பட்ட ஸ்த்ரீ ஆவதில்லை. பட்டஸ்த்ரீகளில் யாராவது ஒருத்திக்கு புத்ரபாக்ய மில்லாமல் போனால், அப்போது ஸாதாரண மனைவிகளுள் பிள்ளையுள்ள ஒரு ஸ்த்ரீயை பட்டஸ்த்ரீயாக அரசன் ஏற்றுக்கொள்வார்.

ஸுல்தானுக்கு இத்தனை ஸ்த்ரீகள் பேருக்கு மாத்ரம் மனைவிகளாக இருக்கிறார்களே, அவர்களில் அநேகரை அவர் கண்ணால் கூடப்பார்த்ததில்லையே, அவர்களத்தனை பேர்களையும் கல்யாணம் செய்து கொள்வானேன் என்று கேள்வி பிறக்கலாம். ஸுல்தான் யாராவது ஒரு உத்யோகஸ்தனுடைய ராஜபக்திக்காகவோ, அவன் செய்த உயர்ந்தவேலைக்காகவோ அவனுக்குஸன்மானம் செய்யவிரும்பினால், அவர் அந்த உத்யோகஸ்தனுக்கு தமது ஸாதாரண மனைவிகளில் ஒருத்தியை கல்யாணம் செய்து கொடுத்துவிடுவார். ஸுல்தான் சொன்னதை உத்யோகஸ்தனாவது, அந்த உத்யோகஸ்தனுக்கு மனைவியாகத் தெரிந்தெடுக்கப்பட்ட அந்தப்புரத்து 'மனைவி'யாவது ஆக்ஷேபிக்கக்கூடாது. உண்மையில் ஸுல்தானுடைய அந்தப்புரமானது ஒரு கல்யாணக் கடையாகும்.

அந்தப்புரத்திலிருந்து வந்த ஸ்த்ரீ தனது புதிய கணவனிடம் இருந்து வாழ இஷ்டப்படாவிட்டால், அவள் தன்னிடமுள்ள நகைகளையோ, உயர்ந்த ஆடைகளையோ விற்று அந்தப் பணத்திலிருந்து 3-ரூபாய் செலவழித்து தனது புதிய கணவனிடமிருந்து நீங்கிக்கொள்ளலாம். மறுபடியும் அவள் வேறு யாரையாவது கல்யாணம் செய்துகொள்ள விரும்பினாலும் அதற்கு $1\frac{1}{2}$ ரூபாய்க்குமேல் செலவாகாது.

அந்தப்புரத்திலுள்ள ஸ்த்ரீகள் ஒருவரையொருவர் நேசிப்பதில்லை. அவளவள் தன் காரியத்திலே கண்ணாயிருப்பாள். அவர்களுக்கு ரொம்ப ஸ்வாதந்த்ரிய முண்டாகையால், அவர்கள் எப்போது வேண்டுமென்றாலும் அந்தப்புரத்தை விட்டு வெளியே போய்வரலாம். அவர்கள் தங்கள் முகத்தை மூடி முக்காடிட்டுக்கொள்வதில்லை. அங்கே அவர்களைக் காப்பதற்குப் பேடிகளும் கிடையா.

## THE DIRECTION OF INDIAN TRADE IN 1914-15.

## 1914-15-ம் வர்ஷத்தில் இந்திய வ்யாபாரத்தின் போக்கு.

ஸாதாரண காலங்களில் இந்தியா அன்ய தேசங்களுடன் செய்யும் வ்யாபாரத்தின் மதிப்பில் பேர்பாதிக்கு மேற்பட்ட பாகம் அது ஐரோப்பிய தேசங்களுடன் செய்யும் வ்யாபாரத்தின் மதிப்பாகும். ஏறக்குறைய கால்பாகம் ஆசியாவிலுள்ள தேசங்களோடு செய்யும் வ்யாபாரத்தின் மதிப்பாகும். யுத்தம் ஆரம்பித்ததற்கு முந்தின வர்ஷமாகிய 1913-14-ம் வர்ஷத்தில் மொத்த வ்யாபாரத்தில் நூற்று 67-பாகம் ஐரோப்பாவுடன் செய்த வ்யாபாரமாகும். 21-பாகம் ஆசியாவுடன் செய்த வ்யாபாரத்தின் மதிப்பாகும். 8-பாகம் அமெரிக்காவுடன் செய்த வ்யாபார மதிப்பாக இருந்தது. 3-பாகம் ஆப்ரிக்காவுடன் செய்த வ்யாபாரம். 1-பாகம் ஆஸ்ட்ரேலியா, ந்யூஸீலண்ட் ஆகிய இவைகளுடன் செய்த வ்யாபாரமாகும். அந்த வர்ஷத்து இறக்குமதி வ்யாபாரமானது பெரும்பாலும் ஐரோப்பாவுடன்தான் நடந்துவந்தது. மொத்தம் இறக்குமதியில் 100-க்கு 80 பாகம் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு வந்தது. ஆனால் ஏற்றுமதி வ்யாபாரமோ வென்றால் உலகத்திலுள்ள பற்பல கண்டங்களோடும் நடந்துவந்தது. மொத்தம் ஏற்றுமதி வ்யாபாரத்தில் 100-ல் 57-பாகம் ஐரோப்பாவுடனும் 26-பாகம் ஆசியாவிலுள்ள தேசங்களுடனும், 12 பாகம் அமெரிக்காவுடனும் (முக்யமாய் அமெரிக்கா ஐக்யநாடுகளுடனும்), 3-பாகம் ஆப்ரிக்காவுடனும், 2-பாகம் ஆஸ்ட்ரேலியா, ந்யூஸீலண்ட் ஆகிய இந்த தேசங்களுடனும் நடந்தன.

1914-15-ம் வர்ஷத்தில் மொத்த வ்யாபாரத்தில் 100-க்கு

| | | | |
|---|---|---|---|
| 64 | பாகம் | ஐரோப்பா | வுடனும் |
| 22 | ,, | ஆசியா | ,, |
| 9 | ,, | அமெரிக்கா | ,, |
| 3 | ,, | ஆப்ரிக்கா | ,, |
| 2 | ,, | ஆஸ்ட்ரலேஷ்யா | ,, |

நடந்துவந்தன. இறக்குமதியில் நூற்றுக்கு 77-பாகம் ஐரோப்பாவிலிருந்துவந்தன. யுனைடட் கிங்டத்திலிருந்து* மாத்ரம் மொத்தம் இறக்குமதியில் 100-க்கு 67-பாகம் வந்தது. இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான சரக்குகளில் 100-க்கு 55-வீதம் ஐரோப்பிய தேசங்களுக்கும் 100-க்கு 26-வீதம் ஆசியாவிலுள்ள தேசங்களுக்கும் போயின.

இந்தியா இறக்குமதி செய்யும் சரக்குகளில் பெரும்பாகம் யுனைடட் கிங்டத்தி*லிருந்தே வருகின்றன. இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களில் பெரும்பாகம் ப்ரிட்டிஷ் ராஜ்யத்தில் சேராத மற்ற தேசங்களுக்கே போகிறது. உத்தேசமாக இந்தியாவின் மொத்த வ்யாபாரத்தில் 100-க்கு 40-பாகம் யுனைடட் கிங்டத்துடனும், 10 பாகம் ப்ரிட்டிஷ் ராஜ்யத்தின் மற்றபாகங்களுடனும் நடக்கின்றன.

யுத்தத்துக்கு முன்பு இந்தியாவுக்கு ஸாமான்கள் அனுப்பிவந்த 6-முக்யமான தேசங்கள் யுனைடட் கிங்டம், ஜெர்மனி, ஜாவா, ஜப்பான் அமெரிக்க ஐக்யநாடுகள், ஆஸ்ட்ரியா ஹங்கேரி ஆகிய இவைகளாகும். 1913-14-ம்வர்ஷத்தில் மொத்தம் இறக்குமதியில் 100-க்கு 64-பாகம் இங்லண்டிலிருந்தும், 7 பாகம் ஜெர்மனியிலிருந்தும், 6 பாகம் ஜாவாவிலிருந்தும், கிட்டத்தட்ட 3 பாகம் அமெரிக்க ஐக்ய நாடுகளிலிருந்தும், 2 பாகம் ஆஸ்ட்ரியா ஹங்கேரியிலிருந்தும் வந்தன. இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஸாமான்களை வாங்கும் ஆறு முக்யமான தேசங்கள் யுனைடட்கிங்டம் (100-க்கு 24பாகம்) ஜெர்மனி (100-க்கு 10), ஜப்பான் (100-க்கு 9) ப்ரான்ஸ் (100-க்கு 7), பெல்ஜியம் (100-க்கு 5) ஆகிய இவைகளாகும். மேற்கண்ட விவரங்களால் யுனைடட் கிங்டத்துக்கு அடுத்தபடியாக ஜெர்மனியே இந்தியாவிலிருந்து அதிக ஸாமான்கள் வாங்கிப் போகிறதென்பது தெரியவரும். ஜெர்மனியானது இந்தியாவோடு இறக்குமதி வ்யாபாரமும் அதிகமாகச் செய்துவந்தது. 1913-14-ம் வர்ஷத்தில் வெளிநாடுகளிலிருந்து மொத்தம் இறக்குமதியான ஸாமான்களின் மதிப்பு 183 கோடி ரூபாயாகும். இதில் $12\frac{3}{4}$ கோடி ரூபாய் மதிப்புள்ள ஸாமான்கள் ஜெர்மனியிலிருந்து வந்தன. அதே வர்ஷத்தில் இந்தியாவிலிருந்து அயல்நாடுகளுக்குப்போன 249 கோடி ரூபாய் மதிப்புள்ள ஸாமான்களில் $26\frac{1}{4}$ கோடி ரூபாய் மதிப்புள்ள ஸாமான்கள் ஜெர்மனிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அந்த வர்ஷம் ஆஸ்ட்ரியா-ஹங்கேரியிலிருந்து 4 கோடியே 35 லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள ஸாமான்கள் இந்தியாவில் இறக்குமதியாயின. இந்தியாவிலிருந்து அந்த தேசத்துக்கு 10 கோடி ரூபாய் மதிப்புள்ள ஸாமான்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. பெல்ஜியத்திலிருந்து 42 கோடி ரூபாய்க்கு ஸாமான்கள் வந்தன. இங்கிருந்து 12 கோடி ரூபாய் மதிப்புள்ள ஸாமான்கள் அந்த தேசத்துக்கு அனுப்பப்பட்டன. இந்த மூன்று தேசங்களுடன் இந்தியா செய்துவந்த வ்யாபாரமானது இந்தியாவின் மொத்த வ்யாபாரத்தில் நூற்றுக்கு 16 பாகமாகும். இதன் மதிப்பு 69 கோடி ரூபா

* இங்லண்ட், வேல்ஸ், ஸ்காட்லண்ட், ஐயர்லண்ட் இவை நான்கும் சேர்ந்து யுனைடட் கிங்டம் என்று பெயர்பெறும்.

யாகும். ப்ரான்ஸுடன் நடந்த வ்யாபாரத்தின் மதிப்பு 204 கோடி ரூபாயாகும். இந்த நான்கு தேசங்களுடன் நடந்துவந்த வ்யாபாரமானது சென்ற 1914-15-ம் வர்ஷத்தில் நூற்றுக்கு 58 வீதம் குறைந்துபோய்விட்டது. சென்ற பத்து வர்ஷங்களாக ஜப்பான், ஜெர்மனி, ஜாவா ஆகிய இந்த தேசங்களுடன் இந்தியா செய்து வரும் வ்யாபாரமானது அதிகரித்து வந்திருக்கிறது.

யுத்தத்தால் இந்தியா எதிரி தேசங்களோடு செய்து வந்த வ்யாபாரமானது முழுவதும்நின்றுவிட்டது. நேசதேசங்களோடும், நடுநிலைமை தேசங்களோடும் செய்து வந்த வ்யாபாரம் குறைந்து போய்விட்டது. அடியில் கண்ட அட்டவணையில் இந்தியாவின் அன்யதேச வ்யாபாரம் 1913-14-ம் வர்ஷத்தில் எப்படியிருந்ததென்பதும், 1914-15-ம் வர்ஷத்தில் எவ்வளவு குறைந்து போய்விட்டதென்பதும் விவரமாய்க் காட்டப்பட்டிருக்கின்றன.

இதிலுள்ள தொகைகளை அத்தனை லக்ஷம் ரூபாம் என்று வாசிக்கவும்.

| | 1914—15 | | | 1913—14 | | | 1914-15-ல் எவ்வளவு குறைவு. | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இறக்குமதி | ஏற்றுமதி* | மொத்தம் | இறக்குமதி | ஏற்றுமதி* | மொத்தம் | இறக்குமதி | ஏற்றுமதி* | மொத்தம் |
| **நேச தேசங்கள்.** | | | | | | | | | |
| யுனைடட் கிங்டம் | 92,94 | 57,64 | 1,50,58 | 1,17,58 | 58,35 | 1,75,93 | -24,64 | -71 | -25,35 |
| பெல்ஜியம் | 1,63 | 5,27 | 6,90 | 4,26 | 12,10 | 16,36 | -2,63 | -6,83 | -9,46 |
| ப்ரான்ஸ் | 1,76 | 8,84 | 10,60 | 2,69 | 17.72 | 20,41 | -93 | -8,88 | -9,81 |
| ரஷ்யா | 4 | 1,87 | 1,91 | 6 | 2,47 | 2,53 | -2 | -60 | -62 |
| இட்டலி | 1,52 | 6,87 | 8,39 | 2,20 | 7,89 | 10,09 | -68 | -1,02 | -1,70 |
| ஜப்பான் | 4,44 | 15,66 | 20,10 | 4,78 | 22,69 | 27,47 | -34 | -7,03 | -7,37 |
| மொத்தம். | 1,02,33 | 96,15 | 1,98,48 | 1,31,57 | 1,21,22 | 2,52,79 | -29,24 | -25,07 | -54,31 |
| **எதிரி தேசங்கள்.** | | | | | | | | | |
| ஜெர்மனி | 4,65 | 10,20 | 14,85 | 12,66 | 26,42 | 39,08 | -8,01 | -16,22 | -24,23 |
| ஆஸ்ட்ரியா-ஹங்கேரி | 1,29 | 4,53 | 5,82 | 4,29 | 10,01 | 14,30 | -3,00 | -5,48 | -8,48 |
| துருக்கி | 33 | 1,75 | 2,08 | 58 | 3,04 | 3,62 | -25 | -1,29 | -1,54 |
| மொத்தம். | 6,27 | 16,48 | 22,75 | 17,53 | 39,47 | 57,00 | -11,26 | -22,99 | -34,25 |
| **நடுநிலைமை தேசங்கள்** | 29,33 | 68,96 | 98,29 | 34,15 | 88,19 | 1,22,34 | -4,82 | -19,23 | -26,05 |
| மொத்தம் அன்ய தேசக் கடல் வ்யாபாரம் | 1,37,93 | 1,81,59 | 3,19,52 | 1,83,25 | 2,48,88 | 4,32,13 | -45,32 | -67,29 | 1,12,61 |

மேற்கண்ட அட்டவணையால் சென்ற 1914-15-ம் வர்ஷத்தில் இந்தியாவுக்கும் இங்கிலண்டுக்கும் நடந்துவந்த இறக்குமதி வ்யாபாரம் நூற்றுக்கு 21-வீதமும், ஏற்றுமதி வ்யாபாரம் நூற்றுக்கு 1-வீதமும், ஜப்பானிலிருந்துவரும் இறக்குமதியின் மதிப்பு நூற்றுக்கு 7-வீதமும், அந்த தேசத்துக்கு அனுப்பப்படும் ஏற்றுமதிச் சரக்குகளின் மதிப்பு 100-க்கு 31-வீதமும், அமெரிக்க ஐக்யநாடுகளிலிருந்துவரும் இறக்குமதியின் மதிப்பு 100-க்கு 2-வீதமும் அந்த தேசத்துக்கு ஏற்றுமதிசெய்யப்பட்ட ஸாமான்களின் மதிப்பு 100-க்கு 20-வீதமும் குறைந்து போயினவென்று தெரியவரும்.

* இந்தியாவில் இறக்குமதியாகி பிறகு ஏற்றுமதியான சரக்குகளின் மதிப்பும் இதில் சேர்ந்திருக்கிறது.



# REVIEW OF THE PRESS.

## பத்ரிகை ஆராய்ச்சி.

### ENLARGEMENT OF THE SPLEEN AND LIVER IN CHILDREN.

### குழந்தைகளுக்கு வயிற்றிலுண்டாகும் கட்டிகள்.

அநேக குழந்தைகளுக்கு வயிற்றில் கட்டி உண்டாகி அவைகள் இறந்துபோகின்றனவென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். சிலர் குழந்தைகளுக்கு வயிற்றில் புதிதாக ஏதோ கட்டிகள் உற்பத்தியாகின்றனவென்றும், அவற்றில் குலைக்கட்டி, ஆமக்கட்டி, பக்கக் கட்டி எனப் பலவகைகளிருக்கின்றனவென்றும் சொல்லுகிறார்கள். 'வைத்யகலாநிதி'யில் இதைப்பற்றி ஒரு வ்யாஸம் எழுதியிருக்கும் யு. எஸ். ஜகதீசய்யர் என்னும் சென்னை வைத்யர் ஒருவர், இந்தக் கட்டிகள், வயிற்றுக்குள் ஏற்கனவே இருபுறங்களிலும் அமைந்துள்ள மண்ணீரல், கல்லீரல் என்னும் க்ரந்தி ரூபமான அவயவங்கள் சில காரணங்களால் வீங்கிப்போவதாலுண்டான (Enlargement of the spleen and liver) வ்யாதியே தவிர வேறே நூதனமாய் வயிற்றில் ஏற்பட்ட கட்டிகளல்ல, குடலில் உண்டாகும் கட்டிகளுமல்ல, என்கிறார். வயிற்றில் கட்டி உண்டாவதற்குப் பின் வரும் விஷயங்கள் காரணமாயிருக்கின்றன.

(1) ஜாக்ரதைக்குறைவோடு குழந்தைகளுக்கு உணவளித்தல், (2) மிதமிஞ்சி ஆகாரம் கொடுத்தல், (3) கெட்டுப்போன உணவுகளைப்போடுவது, (4) மலேரியா என்னும் விஷமஜ்வர ஸம்பந்தமான விஷக்ருமிகள் பரவியிருக்கும் ப்ரதேசங்களில் வஸித்தல், (5) மண் சாம்பல் முதலியவற்றைத் தின்னுதல், (6) எளிதில் ஜீர்ணமாகக்கூடாத குணமுள்ள உணவுப்பொருள்களைக் கொடுத்தல், (7) ஆரோக்ய முறைகளில் கவனம் செலுத்தாமல் குழந்தைகளை வளர்த்தல், (8) மலச்சிக்கல்.

குழந்தைகளுடைய வயிற்றில் மண்ணீரலும் கல்லீரலும் மிக ம்ருதுவாயிருக்கும். அவை க்ரமமாக நாளடைவில் முதிர்ந்து கடினமாயாகிவரும். அழற்சி தரும் எவ்விதமான வஸ்துவும் ம்ருதுவான அந்த அவயவங்களுக்குப்போனால், அவற்றில் ரத்தவோட்டம் இயற்கையினும் அதிகமாவது வழக்கம். அதனால் அந்த அவயவங்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் பெருக்க ஆரம்பிக்கும். அப்பொழுது அவற்றிற்கு அருகிலுள்ள மற்ற அவயவங்களும் அதனால் ஒருவாறு கஷ்டத்திற்கு உள்ளாகின்றன.

வயிற்றில் கட்டியேற்பட்டால் க்ரமமாகக் காணக்கூடிய குறிகளாவன:—

1. மலச்சிக்கல் உண்டாதல்.
2. வயிறு நாளுக்குநாள் க்ரமமாகப் பெருத்துக் கொண்டு வருதல்.
3. வாந்தி ஏற்படுதல்.
4. காய்ச்சல் ஸம்பவித்தல்.
5. உட்கொண்ட உணவு வயிற்றில் தங்காமல் கக்கப்படுதல்.
6. இரண்டு விலாப்பக்கங்களிலும் அழுத்தினால் வலியுண்டாதல்.
7. தேஹம் பொதுவில் இளைத்துக்கொண்டுவருதல்.
8. உடல் வெளிறிப்போதல்.
9. நாடி நடை வெகு துரிதமாய் அடித்தல்.
10. நித்ரையுண்டாகாமல் எப்பொழுதும் அழுதல்.

குழந்தைகளுக்கு இந்த வ்யாதிகள் ஸம்பவித்தால், அநேகம்பேர் குழந்தை வைத்யத்தில்பேர்போனவர்களென்று சொல்லப்படும் வைத்யர்களிடம் சென்று அவற்றிற்கு சிகித்ஸை செய்வார்கள். பொதுப்படி ஏதோ கட்டி யெண்ணெய் என்று சொல்லப்படுகிற மருந்தெண்ணெயைக் கொடுத்து வருவதால் அந்தக் கட்டிகள் கரைந்து, மலத்தோடு வெளிப்பட்டு விடுகிறதென்பது நமது தேசத்தில் (தென்னிந்தியாவில்) பெரும்பான்மையான ஸாதாரண ஜனங்களுடைய கொள்கை. அந்த எண்ணெய்க்கு விரேசகம்—பேதகம் அல்லது பேதி (Cathartic—Purgative) என்னும் செய்கைக்கு அவச்யமான குணங்களுண்டே யொழிய வேறொன்றுமில்லை. அதனால் குழந்தைகள் சில ஸமயம் மிகவும் மெலிந்துவிடுகின்றன. ஆனால் வயிறு பருத்துப் பொருமலுடன் கூடியிருந்த நிலைமை மட்டும் கொஞ்சம் குறைந்திருப்பதாகக் காணக்கூடும்.

அநேகம் குழந்தைகளுக்குக் குலைக்கட்டி உண்டாயிருப்பதாகவும், அது அநுகூலமாகாதென்றும் கைவிடுகிறார்கள். வ்யாதியின் தத்வத்தை ஆரம்பத்திலேயே நன்றாக ஆய்ந்தோய்ந்து கவனித்து, அதற்கு ஏற்ற ஔஷதங்களைக் கொடுத்து வரும்பக்ஷத்தில், அது ஸௌக்யமாகாமற் போகாது. சிகித்ஸையை எவ்வளவு சீக்ரத்தில் ஆரம்பிக்கக்கூடுமோ அவ்வளவு சீக்ரத்தில் ஆரம்பித்துச் செய்வது உத்தமம். வ்யாதியை முற்ற

விடும்பக்ஷத்தில் அது முடிவில் கெடுதலைத்தான் உண்டு பண்ணும்.

அயம், கொய்னா, நிலவேம்பு இவை முதலியவற்றை, மலச்சிக்கலை நிவ்ருத்திக்கக்கூடிய மருந்துகளோடும், ரத்தத்தைச் சுத்திசெய்து ஜ்வராஹரமான குணங்களையுண்டுபண்ணும் வேறு ஔஷதச் சரக்குகளோடும் கலந்து உபயோகித்துவந்தால் அநுகூலம் உண்டாகும்; "லிவரின்" (Liverine) என்னும் ஒரு மருந்து மேற்கண்ட சரக்குகளைச் சேர்த்துத் தயார்செய்யப்பட்டது. அதனால் இந்த வயிற்றுக்கட்டிகள் நிவ்ருத்தியாவதாக அநுபவத்தில் நன்றாக அறியப்பட்டிருக்கிறது.

இதில் குழந்தைகளின் பெற்றோர்கள் கவனிக்க வேண்டிய சில அம்சங்களை மீண்டும் குறிப்பிடுகிறோம்.

1. சுத்தமான ஆஹாரம், சுத்தமான வாயு இவை அவச்யமானவை.

2. மிதமிஞ்சிய உணவு உதவாது.

3. மலச்சிக்கல் சிறிதும் ஏற்படாமல் கவனிக்க வேண்டும்.

4. எளிதில் ஜீர்ணமாகும் ஆஹாரங்களை ஊட்டிவர வேண்டும்.

5. ஆரோக்யத்திற்கு ஆதாரமான முறைகளை எப்பொழுதும் கவனித்து வரவேண்டும்.

## FAMILY DHARMAS.

## குடும்ப தர்மங்கள்.

ஸமீபத்தில் வெளிவந்த 'பெண்கல்வி' பத்ரிகையில் ஒரு நிருபர் இதைப்பற்றி ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார்.

1. குடும்பத்தில் கலகத்துக்கும் ஒருவர்க்கொருவர் மனஸ்தாபத்துக்கும் காரணமான விஷயங்களைப் பெண்கள் ப்ரஸ்தாபிக்கக்கூடாது.

2. மாமனார் மாமியார் முதலிய பெரியவர்களிடம் மருமகள் விச்வாஸமாயும் மரியாதையாயும் நடந்து கொள்ளவேண்டியது.

3. வீட்டிலுள்ள பெரியோரும் தம் வீட்டுக்குவந்த மருமகளை தம் பெண்ணைப்போல் பாவித்து அவளுடைய ஆஹார வஸ்த்ர ஆபரணாதி ஸௌகர்யங்களை [illegible]படி கவனிக்கவேண்டும். தமது மருமகள் [illegible] வைத்திருக்கும் விச்வாஸத்தினால் மருமகள் [illegible] தாய் வீட்டை மறந்து எல்லாம் தனக்கு புருஷன் [illegible] ஞாபகத்தை அடையும்படி பெரியோர் [illegible]டும். மேலும் மாமனார், மாமியார், புருஷன் முதலியவர்கள் மருமகள் எதிரில் அவளுடைய தாய் வீட்டை நிந்தித்து எந்த விஷயமும் பேசக்கூடாது. அப்படிப் பேசினால் புருஷன் வீட்டாரிடம் வைத்துள்ள மதிப்பும் பக்தியும் மருமகளுக்குக் குறைந்து போகும்: அடிக்கடி மருமகளுடன் வாக்குவாதம்செய்து அவள் வாயை பெருக்கலாகாது.

4. எந்த வீட்டிலுள்ள பெரியோர் தமது மருமகள் தமது வீட்டுக்குக் கொண்டுவந்த சீரைப்பற்றியும், ஸ்த்ரீதனத்தைப்பற்றியும், மருமகளுக்கு அவள் தாய் வீட்டார் போட்டிருக்கும் ஆடையாபரணங்களைப்பற்றியும், குறைகூறிப் பேசுகிறார்களோ அந்த வீட்டில் எப்போதும் கலகமே. சீதேவி அந்த வீட்டில் வாஸஞ் செய்யமாட்டாள்.

5. பெண்கள் தமது கடமைகளை மனச்சோர்வில்லாமல் செய்துவந்தால் கடவுள் அவர்களை நல்வழியில் நடத்தவும், அவர்களுக்குச் ஸகலபாக்யங்களையுங் கொடுக்கவும் ஸித்தமாயிருக்கிறார்.

6. ஏழை எளியவர்களுக்குப் பிச்சையிடும்போது தாம் செல்வர்களாக விருக்கிறோமென்றும், அதனால் இந்த தருமங்களைச் செய்கிறோமென்றும் அகங்கரித்து நினையாமல் "உலகத்திலுள்ள ஐச்வர்யமெல்லாம் ஈச்வரனுடைய பொருளே." என்று மதித்தும், இந்த ஏழை எளியவர்களுக்குக் கொடுக்க நமக்குக் கிடைத்ததே என்று நினைத்தும் பிச்சையிடவேண்டும். காலமறிந்து செய்யும் உதவியினும் மேம்பட்டது எதுவுமில்லை.

7. பெண்கள் தமக்குக் கிடைத்திருக்கும் ஆடை ஆபரணங்களைக் குறித்தும், பிறர் அணிந்துகொண்டிருக்கும் ஆடை ஆபரணங்களைக் குறித்தும் ஒருவர்க்கொருவர் ஸம்பாஷிக்கலாகாது. அவைகளை நித்யமான பொருளாக மதித்தலுமாகாது.

8. பெண்கள் கெட்ட மொழிகளை வசனிக்கலாகாது. ஹாஸ்யம், விகடம், ஏனம், நொடி, தூர்ப்புத்தி, கோட்சொல்லல் முதலிய துராப்யாஸங்களை அடியோடே விட்டுவிடவேண்டும். எந்தப் பெண்களாவது அப்படிப் பேசினால் அந்த இடத்தில் மற்ற பெண்கள் நின்று கொண்டு அந்தப் பேச்சுகளுக்குச் செவி கொடுக்கவும் கூடாது.

9. ஏழைகள், தமது சரீர வலிமைக்கும், ஆரோக்யத்துக்கும் அநுகூலமானதாயும், அதிக விலையில்லாததாயுமுள்ள பதார்த்தங்களைக் கொண்டு ஜீவித்து வரவேண்டும்.



# Departmental Notes.

# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.

## வித்யாவிஷயம்.

### Law Students in Madras.

**சென்னையில் சட்டம் கற்றுக்கொள்ளும் மாணவர்கள்.**—சென்ற மாஸத்து 'ஜநுபிமானி'யில் சென்னையிலுள்ள லா காலேஜில் வாசிக்கும் மாணவர்களைப்பற்றி எழுதினோம். சென்ற வர்ஷம் ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் ஒவ்வொரு சட்ட வகுப்புக்கும் எத்தனை மாணவர்கள் வந்தார்களென்பதை பின்வரும் அட்டவணை நன்கு விளக்கிக் காட்டுகிறது.

வகுப்புகள்.

| | பி. எல் | எப் எல். | ப்ளீடர்ஷிப் | மொத்தம். |
|---|---|---|---|---|
| கஞ்சம் | 4 | 4 | 3 | 11 |
| விசாகப்பட்டணம் | 6 | 5 | 4 | 15 |
| கோதாவரி | 15 | 10 | 5 | 30 |
| க்ருஷ்ணா | 10 | 6 | 5 | 21 |
| குண்டூர் | 4 | 3 | 5 | 12 |
| நெல்லூர் | 1 | 1 | 5 | 7 |
| சென்னை | 4 | 8 | 7 | 19 |
| செங்கல்பட்டு | 4 | 5 | 5 | 14 |
| வட ஆற்காடு | 6 | 5 | 1 | 12 |
| சித்தூர் | 1 | 2 | 4 | 7 |
| தென்னாற்காடு | 6 | 8 | 4 | 18 |
| திருச்சினாப்பள்ளி | 9 | 13 | 8 | 30 |
| தஞ்சாவூர் | 28 | 39 | 19 | 86 |
| மதுரை | 8 | 8 | 0 | 16 |
| ராமநாதபுரம் | 4 | 2 | 2 | 8 |
| திருநெல்வேலி | 7 | 8 | 5 | 20 |
| கோயம்புத்தூர் | 10 | 13 | 5 | 28 |
| சேலம் | 4 | 8 | 6 | 18 |
| கடப்பை | 0 | 0 | 1 | 1 |
| கர்நூல் | 1 | 0 | 0 | 1 |
| பெல்லாரி | 0 | 1 | 4 | 5 |
| அநந்தபுரம் | 0 | 1 | 0 | 1 |
| தென் கன்னடம் | 10 | 7 | 1 | 18 |
| மலையாளம் | 12 | 23 | 4 | 39 |
| நீலகிரி | 0 | 0 | 1 | 1 |

### The Education of Non-Brahmans.

**ப்ராமணரல்லாதவர்களுடைய கல்வி.**— ப்ராமணரல்லாதவர்களுடைய கல்வியை அபிவ்ருத்தி செய்யும் நோக்கத்துடன் சென்னையில் ஸென்ட்ரல் எடுகேஷனல் அஸோஸியேஷன் என்று ஒரு ஸபை ஏற்பட்டிருக்கிறது. இது சென்ற நவம்பர் மாஸம் ஸ்தாபிக்கப்பட்டு, அந்த மாஸமே 1860-ம் வர்ஷத்து 21-வது ஆக்டின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டது. சென்ற மே மாஸம் வரையில் அந்த ஸபையார் 10-ப்ராமணரல்லாத மாணவர்களுக்கு பள்ளிக்கூடச் சம்பளம் கொடுத்துதவினார்கள். தற்போது அவர்கள் இன்னும் அநேக மாணவர்களுக்கு இவ்விதம் உதவிசெய்து வருகிறார்கள். இந்த ஸபையாரின் நோக்கம் மாணவர்களுக்கு பள்ளிக்கூடச் சம்பளம், புஸ்தகங்களுக்குப் பணம், குடியிருக்க வாடகை, பரீக்ஷைக்கு படி முதலியவைகள் கொடுத்து உதவுவதோடு, ப்ராம்மணரல்லாத மாணவர்களுக்கென்று ஹோஸ்டல்கள் கட்டி, அவைகளில் தங்கும் மாணவர்களுடைய கல்வி அபிவ்ருத்தியைப்பற்றி அக்கரை செலுத்துவதே. ப்ராமணரல்லாத மாணவர்களுக்கு ஹோஸ்டல் கட்டுவதற்காக ஒரு முதலியார் வகுப்பு ஸ்த்ரீ ஒரு நிலத்தை இனாமாகக் கொடுத்திருக்கிறாள்.

### Grants for Schools.

**பள்ளிக்கூடங்களுக்கு க்ராண்டுகள்.**— சென்னை கவர்ன்மெண்டார் ஸ்தலஸ்தாபனங்களுக்குகல்விச்செலவுக்காக 16,62,630-ரூபாய் க்ராண்டு கொடுத்திருக்கிறார்கள். இந்தத் தொகையில் கிட்டத்தட்ட 1-லக்ஷம் ரூபாய் எலிமெண்டரி பாடசாலைகளிலுள்ள தேர்ச்சி பெற்ற உபாத்யாயர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்காகும். ஸெகண்டரி பாடசாலைகளிலும், காலேஜுகளிலும் உள்ள உபாத்யாயர்கள், பாஷை போதகர்கள், பண்டிதர்கள் ஆகிய இவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கு 1,02,923-ரூபாய் செலவழிக்கப்படும்.

# TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### Tamil Research.

**தமிழ் ஆராய்ச்சி.**—ஸமீபத்தில் திவான்பகதூர் எல்.டி. ஸ்வாமிக்கண்ணுபிள்ளை பச்சையப்பன் காலேஜ் தமிழ் ஸங்கத்தில் தமிழ் ஆராய்ச்சியைப் பற்றிஒரு ப்ரஸங்கம் செய்தார். அதன் ஸாரம் வருமாறு. தற்காலம் அநேகர் தமிழில் பலவகையான ஆராய்ச்சிகளை நடத்திவருகிறார்கள். அவர்கள் தமிழ் ஒழிந்த வேறு பாஷைகளைப் பற்றியோ, விஷயங்களைப் பற்றியோ ஆராய்ச்சி செய்யப்புகுந்தால் அதில்அவர்கள் ப்ரஸித்தியடைவது கஷ்டம். லாட்டின், க்ரீக், ஸம்ஸ்க்ருதம் முதலியவைகளில் ஆராய்ச்சி நடத்தினால், ஏற்கனவே அறியப்பட்டுள்ள விஷயங்களைவிட அதிகம் ஒன்றும் கண்டுபிடிக்க முடியாது. மறைந்திருக்கும் பூர்வீக க்ரந்தங்களைக் கண்டுபிடித்து அவற்றைப்பற்றிய விஷயங்களை வெளியிடுவதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாது. தற்காலத்து மேல்நாட்டு பாஷைகளில் ஆராய்ச்சி செய்வதும் கஷ்டமானதே. நமக்கு அந்த பாஷைகள் ஸ்வயபாஷையாயிராததால்,அந்த ஆராய்ச்சிகளால் அதிக ப்ரயோஜனமடைய முடியாது. சாஸ்த்ர கலைகளைப் பற்றியோ என்றால், அதிலும் அதிக முன்னேற்றமடைய முடியாது. ஏனென்றால் இந்த வேலைகளில் அதிக ஊக்கமும் ஸ்வபாவமாகவே அதிக விருப்பமும் உடைய அநேகர் தக்க வஸதிகளை யடைந்து வேலைசெய்து வருகிறார்கள். அவர்களுக்குமுன் நாம் சோபிப்பது கஷ்டம்.

ஆனால் தமிழ் ஆராய்ச்சியிலோ அப்படியல்ல. தமிழரல்லாத வேறு பாஷை பேசுகிறவர்கள் எவ்வளவு அதிகமாகத் தமிழ் கற்றாலும், அவர்களுக்கு என்ன ஸௌகர்யங்கள் இருந்தாலுங்கூட தமிழாராய்ச்சியில் முன்னேற்றமடைந்து பொது ஜனங்களுக்கு உதவி செய்வது முடியாது.

தமிழாராய்ச்சியால் என்ன நன்மையென்று சிலர் கேட்கலாம். எத்தனையோ விதங்களில் நன்மைகள் ஏற்படும். முதலாவது தற்போது தமிழானது நன்றாய் அபிவ்ருத்தியடையவில்லையென்பது பலரும் அறிந்த விஷயம். இப்போது ஜனங்கள் பேசுந் தமிழும், எழுதும் தமிழும் நன்றாயில்லை. இப்போது நம்மவர் பேசும் இங்க்லீஷும் எழுதும் இங்க்லீஷும் எவ்வளவு உயர்ந்ததாயிருக்கிறதோ அவ்வளவு உயர்வாகக்கூட நாம் உபயோகிக்கும் தமிழ் இல்லை. தமிழை உயர்த்துவதற்கு பள்ளிக்கூடங்களில் பாஷைப்பாடங்களொழிந்த மற்ற பாடங்களை தமிழிலேயே கற்பிக்க வேண்டும். நமது கருத்துக்களையெல்லாம் தமிழ்ப்பாஷையில்வெளியிட ஸௌகர்ய மேற்படும்படி இந்த பாஷையை அபிவ்ருத்திசெய்ய வேண்டும். இதற்கு தமிழ்பாஷைப் படிப்பை அபிவ்ருத்திசெய்ய வேண்டும். முற்காலத்திய நூல்களைப் படிப்பதிலும் ஆராய்ச்சி செய்வதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

தற்காலம் தமிழ்பாஷையில் தமிழாராய்ச்சிக்கு ஸாதகமாக புஸ்தகங்கள் விசேஷமாயில்லை. இங்க்லீஷ் முதலிய இதர பாஷைகளில் எவ்விஷயத்தையும் பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு ஸாதகமாக என்ஸைக்ளோபீடியா என்னும் விஷய அகராதிகள் இருக்கின்றன. தமிழில் அவ்வித புஸ்தகங்கள் இல்லை. தமிழ்ப்பத்ரிகைகள்தான் விசேஷமாயிருக்கின்றன. அவைகளும் நல்ல நிலைமையில் இல்லை. தமிழபிவ்ருத்திக்குப் பாடுபடுபவர்கள், தமிழ்ப் பத்ரிகைகளின் தொகையைக் குறைத்து சொல் அகராதிகள், விஷய அகராதிகள், ஆராய்ச்சி நூல்கள் முதலியவைகளை வெளியிட முயலவேண்டும்.

### The Chennai Sen Tamil Sangam.

**சென்னை செந்தமிழ் ஸங்கம்.**—சென்னையில் செந்தமிழ் ஸங்கமென்று ஒரு ஸங்கமிருக்கிறது. அது சென்ற ஜூன்மாஸத்தில் ஒரு ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனியாக ரெஜிஸ்டர் செய்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. அதன் மூலதனம் 5000 ரூபா யென்றும் அந்தத் தொகை 5000 பங்குகளாகப் பிரிக்கப்படுமென்றும் தெரிகிறது அந்த ஸங்கத்தின் நோக்கங்கள் பின்வருமாறு. (1) ஒரு உயர்ந்த மாஸப் பத்ரிகையை ஏற்படுத்தி ப்ரசுரிப்பது. (2) தமிழில் உபயோகமான புஸ்தகங்களை வெளியிடுவது. (3) மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பரீக்ஷைக்குப் போக விரும்பும் மாணவர்களை அப்பரீக்ஷைகளுக்குத் தயாராக்குவது. (4) ப்ரஸங்கங்கள் செய்ய ஏற்பாடு செய்வது. (5) தமிழ் பேசப்படும் ப்ரதேசங்களில வாசக சாலைகள் ஏற்படுத்துவது. (6) உயர்ந்த தமிழ்ப் புஸ்தகங்கள் கொண்ட புஸ்தக சாலை ஏற்படுத்துவது. (7) தமிழில் நாடக சாஸ்த்ரத்தை அபிவ்ருத்தி செய்வது. (8) பெண் கல்வியை அபிவ்ருத்தி செய்வது. (9) மேற்கண்ட நோக்கங்கள் நிறைவேறுவதற்காக வேண்டிய மற்ற ஏற்பாடுகள் செய்வது.



# SCIENCE AND INVENTION.

## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### Putting out a Fire with Kerosine.

**கிரோஸினைக்கொண்டு நெருப்பை அவித்தல்.**—"பஞ்சுமூட்டைகள் நெருப்புப் பிடித்துக்கொண்டன. அதைஅவிக்க உம்மிடமுள்ள கிரொஸின் டின்களைவாங்கிவரச்சொன்னா" என்று ஒரு பஞ்சு வ்யாபாரியின் வேலையாள் நம்மிடம் வந்துசொன்னால், வேலையாள் ஏதோ உளறுகிறானென்று எண்ணி, "நீ சொல்வது விளங்கவில்லை. விவரமாய்க் கேட்டுவா" வென்று அவனிடம் சொல்லி யனுப்புவோம். மறுபடியும் அதே வேலையாள் வந்து "நெருப்பு அவிப்பதற்கு கிரொஸின் எண்ணெய்தான் வாங்கிவரச் சொன்னா" என்று வ்யக்தமாய்ச் சொன்னால், அவனுடைய யஜமானனுக்கு பித்தம் அதிகமாய் விட்டதென்றும், யஜமானிடம் வாதாடபயந்து வேலையாள் நம்மிடம் இப்படிக்கேட்கிறானென்றும் எண்ணுவோம். இல்லாவிட்டால், யஜமானன் நம்மை கேலிசெய்ய இப்படிச் சொல்லியனுப்பினானென்றும் எண்ணுவோம். ஆனால் தற்காலம் அமெரிக்காவில் நாம் வஸித்துவந்து அமெரிக்கருடைய சாஸ்த்ரத்தேர்ச்சி இவ்வளவென்பதை நாம் அறிந்திருந்தால், அப்போது நாம் இவ்வளவுதூரம் ஸந்தேகிக்காமல் நம்மிடமுள்ள கிரொஸின் உள்ள டின்களை யெல்லாம் கொடுத்து உதவியிருப்போம். உண்மையில் அமெரிக்காவில் சில விடங்களில் பஞ்சு மூட்டைகளில் நெருப்புப் பிடித்தால், நெருப்பை அவிக்க கிரொஸின் எண்ணெயை உபயோகிக்கிறார்கள். விலை அதிகமான கிரஸினை உபயோகிப்பானேன்,ஜலத்தை ஊற்றி நெருப்பை அவித்துவிடலாமே என்று ஒரு ஸந்தேகம் உண்டாகலாம்.

பஞ்சு ரொம்ப புலபுலவென்றிருக்குமாதலால், அதை ஸாதாரணமாகக் கட்டினால் அது பெரிய மூட்டைகளாகி இடத்தை அடைத்துக்கொள்ளும். அதற்காக பஞ்சை யந்த்ரங்களில் கொடுத்து நன்றாய் அழுத்தி மூட்டைகளாகக் கட்டுவார்கள். மூட்டைகளின்மேல் ஜலத்தை ஊற்றினால் ஜலமானது பஞ்சிற்குள் இரண்டொரு அங்குலந்தான் ஊடுருவிச்செல்லும்; கிரஸினோவென்றால், அது ரொம்ப லேசான த்ரவம். அது பஞ்சிற்குள் நடு மையம் வரையில் லேசாகப்போகும்.

பஞ்சு மூட்டையில் நெருப்புப் பிடித்தால் நெருப்பு கொழுந்துவிட்டெரிவதில்லை. அதுகனிந்து கொண்டே பஞ்சுக்குள் போய் பஞ்சு முழுவதையும் நாசம் செய்து விடுகிறது, பஞ்சு கனியும்போது அதுஅதிக உஷ்ணமாயிருப்பதில்லை, இந்த உஷ்ணமானது கிரஸின் எண்ணெயைப் பற்றவைக்கப் போதாது. ஆகையால் கிரஸினை எரியும் பஞ்சுமூட்டையில் ஊற்றினால் நெருப்பு அவிந்து விடுகிறது. எண்ணெயானது பஞ்சில் நாலா பக்கங்களிலும் போகுமாகையால், மூட்டையில் மத்ய பாகத்தில் உள்ள நெருப்பை அது அவித்துவிடுகிறது. நெருப்பு அணைந்தபிறகு, பஞ்சுமூட்டையை அவிழ்த்து எரிந்துபோன பாகங்களை எடுத்து எறிந்துவிட்டு, மற்ற பஞ்சை பரவலாய்ப் போட்டுவைத்தால் கிரஸினுடைய நாற்றம் சில நாள்களுக்குள் நீங்கிவிடுகிறது. கிரஸின் பட்டதால் பஞ்சுக்கு யாதொரு சேதமும் ஏற்படுவதில்லையாம்.

### Shoes for Walking on Water.

**ஜலத்தில் நடக்க ஜோடுகள்.**—ஒரு இட்டாலிய இஞ்ஜினியர் ஜலத்தில் நடப்பதற்கு உதவக் கூடிய ஜோடுகள் செய்திருக்கிறார். இவற்றிற்கு "ஹைட்ரோஸ்கி" என்று பெயர். இந்த ஜோடுகள் தண்ணீரில் மிதக்கக் கூடிய பாண்டேன் என்று சொல்லப்படும் மிதவைகள்போல இருக்கும். இவைகளில் கால்களை வைப்பதற்குப் பள்ளங்களும் இருக்கும். இவைகளில் ஏறி நின்றுகொண்டு ஒரு துடுப்பால் ஜலத்தைத்தள்ளி சாதுர்யமாய் நடந்து போகலாமாம். இந்த ஜோடுகளை இட்டலியில் அநேகர் வேடிக்கைக்காக உபயோகித்து வருகிறார்கள். ஸைன்யங்களுக்கும் இவைகள் உதவும்படி அந்த இஞ்ஜினியர் இவைகளை மாற்றி அமைக்கப் போகிறதாகச் சொல்லப் படுகிறது.

### The Italian Battle-planes.

**இட்டாலியர்களுடைய பாட்டில் ப்ளேன்கள்.**—இட்டாலியர்கள் உபயோகிக்கும் பாட்டில் ப்ளேன் என்னும் ஆகாயவிமானங்கள் ஆஸ்ட்ரியர்களுடைய ஆகாய விமானங்களைவிட உயர்ந்தவையா யிருக்கின்றனவாம். இட்டாலியர்களுடைய இஸான்ஸோ போர் முனையில் மாத்ரம் 80 பெரிய இட்டாலிய பாட்டில்ப்ளேன்கள் இருக்கின்றனவாம். இவைகளுள் ஒன்றையாவது ஆஸ்ட்ரியர்கள் இன்னும் நாசப்படுத்த வில்லையாம்.

## SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

### Death Rate in Madras City.

சென்னை நகரில் மரண விகிதம்.—சென்ற வர்ஷத்தில் சென்னையில் 18,688-பேர்கள் மரணமடைந்தார்கள். அதற்கு முந்தின வர்ஷமாகிய 1914-ம் வர்ஷத்தில் 24,174-பேர்கள் இறந்துபோனார்கள். சென்ற வர்ஷத்திய மரண விகிதம் சென்னையிலுள்ள பற்பல வகுப்பாருள் பின் வருமாறு இருந்தது.

| | மரண விகிதம் 1000-க்கு இத்தனை. |
|---|---|
| ஐரோப்பியர்கள் | 17·2 |
| ஆங்கிலோ இந்தியர்கள் | 27·3 |
| இந்திய கிறிஸ்தவர்கள் | 29·9 |
| ஹிந்துக்கள் | 36·0 |
| மகம்மதியர்கள் | 42·3 |

இந்தக் கணக்குகளைக்கொண்டு ஹிந்துக்களும் மகம்மதியர்களும் தங்களுடைய ஸுகாதார விஷயத்தில் அச்ரத்தையா யிருக்கிறார்களென்று சிலர் நினைக்கக் கூடும். ஆனால் 'ஹிந்துநேசன்' சொல்லுகிற தென்னவென்றால், ஐரோப்பியர்களும், ஆங்க்லோ இந்தியர்களும், இந்திய கிறிஸ்தவர்களில் ஒரு பகுதியாரும் செல்வ வந்தர்களா யிருப்பதால், அவர்கள் சுத்தமான காற்றும் வெளிச்சமும் உள்ள நல்ல பங்களாக்களில் வஸித்து வருகிறார்கள். வைத்யர்களுக்குப் பணம் கொடுக்கவும் அவர்களுக்கு சக்தி யிருக்கிறது. ஆனால் ஹிந்துக்களும் மகம்மதியர்களும் பெரும்பாலும் ஏழையா யிருப்பதால், அவர்களில் பணக்காரர்களான சிலரைத் தவிர மற்றவர்களெல்லாரும் ஜன நெருக்கடியும் சந்தடியுமுள்ளவும் ஸுகாதாரக் குறைவுள்ளவுமான தெருக்களில் குடியிருக்கவேண்டி யிருக்கிறது. மேலும் வைத்யர்களுடைய உதவியைப் பெறக்கூடாத ஸ்திதியிலிருக்கிறார்கள். இந்தக் காரணங்களால் அவர்களிடம் மரண விகிதம் அதிகமாயிருக்கிறது.

ஹிந்துக்களில் உள்ள பற்பல வகுப்புகளில் மரண விகிதம் பின்வருமாறு:—

| | மரணவிகிதம் 100-க்கு இவ்வளவு என்பது. |
|---|---|
| ப்ராமணர் | 24·2 |
| செட்டி | 29·8 |
| பலிஜா அல்லது நாயுடு | 34·8 |
| முதலியார் | 32·8 |
| யாதவர் | 36·5 |
| பறையர் | 38·5 |
| வன்னியர் அல்லது நாயர் | 39·7 |
| விச்வகுலத்தவர் அல்லது கம்மாளர் | 40·5 |
| பட்டு நூல்காரர்கள் | 43·7 |

இதன்படி பார்த்தால் ப்ராம்மணர்களுக்குள் மரண விகிதம் ரொம்ப குறைவா யிருக்கிறதென்பது தெரிகிறது. இவர்களுள் மரண விகிதம் ஐரோப்பிய மரண விகிதத்தைவிட அதிகமாகவும் ஆங்க்லோ இந்திய மரண விகிதத்தைவிடக்குறைவாகவும் இருக்கிறது. ஐரோப்பியர்கள் முதுமைப் பருவத்தில் ஸ்வதேசத்தை யடைந்து விடுவதால், அவர்களுடைய மரண விகிதத்தை நிஷ்கர்ஷையாக எடுத்துக்கொள்ளக் கூடாதென்று 'வித்யாபானு' எழுதுகிறது. மேலும் அவர்கள் நல்ல பங்களாக்களில் வஸித்து வருகிறார்கள் பிராம்மணர்களோ மற்ற ஜாதிகளைப் போலவே ஸுகாதாரக் குறைவானவும் ஜனநெருக்க முள்ளவுமான இடங்களில் வஸித்து வருகிறார்கள். அப்படியிருந்தும் ப்ராம்மணர்களுக்குள் மரண விகிதம் குறைவாயிருப்பதால், ப்ராம்மணர்கள் ஸுகாதார விஷயங்களை மிகவும் ச்ரத்தையுடன் கவனித்து வருகிறார்களென்று ஏற்படுகிறது.

### Temperance.

மதுபானம் செய்யாமை.—குடியின்மை பெருநன்மை யென்று 'சத்தியவேத பாதுகாவலன்' எழுதுகிறது.

மதுபான விலக்கு(ல்)

| | | |
|---|---|---|
| ஆத்மத்துக்கு | ... | நன்மை |
| அயலுக்குச் | ... | செம்மை |
| தேகத்துக்கு | ... | ஸௌக்யம் |
| செல்வத்துக்கு | ... | முக்யம் |
| மூளைக்குக் | ... | குளிர்ச்சி |
| முயற்சிக்கு | ... | வளர்ச்சி |
| வீட்டுக்கு | ... | பாக்யம் |
| வெளிக்கு | ... | யோக்யம் |
| ஊருக்குச் | ... | செழிப்பு |
| உற்றார்க்குக் | ... | களிப்பு |
| மனைக்குப் | ... | புகழ்ச்சி |
| அறிவோர்க்குக் | ... | கண்யம் |
| அருந்தார்க்குப் | ... | புண்யம் |

### Sithopalathi Churnam.

ஸிதோபலாதி சூர்ணம்.—கல்கண்டு பதினாறு பங்கும், லவங்கப்பட்டை 1-பங்கும், மூங்கிலுப்பு 8-பங்கும், திப்பிலி 4-பங்கும், ஏலக்காய் 2-பங்கும் சேர்த்துச் சூர்ணம் செய்யவும். இதற்கு ஸிதோபலாதி சூர்ணம் என்று பெயர். இதை தேன் அல்லது நெய்யோடு கலந்து உட்கொள்ளலாம். இந்த ஔஷதம் ச்வாஸம், காசம், க்ஷயம், கைகால் எரிச்சல், அக்னி மாந்த்யம், நாக்கின் ருசியின்மை, பார்ச்வசூலை, அரோசகம், ஜ்வரம், ரத்த பித்தம், இவற்றை சீக்ரத்தில் ஸ்வஸ்தம் செய்யும், (சூர்ணத்தை வஸ்த்ரகாளிதம் செய்யவும் கால் பலம் வீதம் உட்கொள்ளவும்)—சார்ங்கதர ஸம்ஹிதை.



## LAW.

## சட்டம்.

### The Hindu Limited Owners Bill.

ஸொத்துக்கு பூரா பாத்யமில்லாதவர்களைப் பற்றிய மசோதா.—ஹிந்து விதவையானவள் தனது புருஷனுடைய ஸொத்தில் பூரா பாத்யமடையாமல் ஒரு குறித்த அளவுள்ள பாத்யதையே அடைகிறாளென்றும், அவளுக்குப் பிறகு அந்த ஸொத்தில், சட்டப்படி வேண்டிய செலவுகளுக்காக விதவை பாராதீனம் செய்ததுபோக பாக்கியுள்ளது, அவளுடைய புருஷனின் வார்ஸுக்குப் போய்ச்சேரு மென்றும், இங்கிலண்டிலுள்ள ப்ரிவி கௌன்ஸிலின் தீர்ப்புகளாலும், இந்தியாவிலுள்ள கோர்ட்டுகளின் தீர்ப்புகளாலும், தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. விதவையின் புருஷன் பட்ட கடன்களைத் தீர்ப்பது, குடும்பத்திலுள்ள ஸ்த்ரீகளுடைய ஸம்ரக்ஷணைக்காகச் செலவு செய்தல், விதவை தன்னுடைய ஸம்ரக்ஷணைக்காகப் பட்ட கடன்களைத் தீர்ப்பது, புருஷன் இறந்த பிறகு செய்யவேண்டிய க்ரியைகளுக்காகப் பட்ட கடன்களைத் தீர்ப்பது, முக்யமான மதஸம்பந்தமுள்ள கார்யங்கள் ஆகிய இவைகளுக்கும் இவைகள் போன்ற மற்ற சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட செலவுகளுக்கும் விதவை தனது புருஷனுடைய ஸொத்து முழுவதையுமோ, அல்லது அதில் ஒரு பாகத்தையோ பராதீனம் செய்தால், அந்தப் பாராதீனம் சட்டப்படி செல்லும்; அது விதவை இறந்தபின் ஸொத்துக்கு வார்ஸாக வருகிறவரைக் கட்டுப்படுத்தும். ஆனால் விதவை ஸொத்துக்களைப் பாராதீனம் செய்த அநேக வர்ஷங்களுக்குப் பிறகு விதவை இறந்தபின் அனந்தர வார்ஸுகள் அப் பாராதீனங்கள் செல்லாதென்று வாதிக்கிறார்கள். அப்போது வெகுகாலமாகிவிடுவதால், பாராதீனத்தைப்பற்றிய ருசுக்களில் பல கிடைப்பதற்கில்லாமல் போகிறது. இதனால் விதவைக்கும் ஸொத்தை அவளிடமிருந்து வாங்குகிறவர்களுக்கும் பாதகமேற்படுகிறது. விதவையானவள் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட அவச்யமான கார்யங்களுக்காக ஸொத்தைப் பாராதீனம் செய்வதாயிருந்தாலும், விற்பனையாகும் ஸொத்தின் பூராக்ரயம் அவளுக்கு கிடைப்பதில்லை. ஏனென்றால் விதவைக்குப் பிறகு அந்த விற்பனையை அனந்தர வார்ஸுகள் ஆக்ஷேபிக்கமாட்டார்கள் என்ற நிச்சயமில்லை யாகையால், ஸொத்தை வாங்குகிறவன் அதிக விலைகொடுக்க முன்வருவதில்லை. ஆகவே விதவையானவள், ஸொத்தில் பூராபாத்யமுடையவன் விற்றால்என்னவிலைக்குப்போகுமோ அதற்குரொம்ப குறைவாகவே அந்த ஸொத்தை விற்கவேண்டியிருக்கிறது. வாங்குகிறவருக்கோ என்றால், விதவை இறந்த பிறகு அனந்தர வார்ஸானவர், அந்த விற்பனையை ஆக்ஷேபிக்கக்கூடும். விற்பனை ந்யாயமானதுதான் என்பதை வாங்கினவரே வெகுகாலத்துக்குப் பிறகு ருபிக்க வேண்டியிருக்கிறது. இங்க்லண்டிலோ வென்றால் ஆயுள் பர்யந்தம் ஸொத்தை அனுபவிக்கமாத்ரம் பாத்ய முடையவர்களும், ஸொத்தில் பூராபாத்ய மில்லாத மற்றவர்களும், ஸொத்தைப் பாராதீனம் செய்ய விரும்பினால், கோர்ட்டாருடைய மேற்பார்வையின் பேரில் அப்படிச் செய்யலாம். அப்படிப் பாராதீனம் செய்வதற்கு முன், ஸொத்துக்கு அனந்தரவார்ஸாக வரக்கூடியவர் எல்லாருடைய முன்னிலையில் விற்பனையைப் பற்றிகோர்ட்டார் விசாரிப்பார்கள். இந்தமாதிரி சட்ட ஸௌகர்யம் இருப்பதால் ஸொத்தை வாங்குகிறவர்களுக்கு பின்னால் கஷ்டங்கள் ஏற்படுவதில்லை. ஸொத்தை விற்கிறவர்களுக்கும் ஸொத்துக்கு பூரா க்ரயம் கிடைக்கிறது. இப்படிப்பட்ட ஸௌகர்யம் இந்தியாவில் உள்ள விதவைகள், பெண்கள் முதலிய ஸொத்துக்குப் பூராபாத்யமில்லாதவர்களுக்குக் கிடையாது. இதை உத்தேசித்து சென்னை சட்ட ஸபையில் மெம்பரான ஆனரபிள் மிஸ்டர் எம். ராமச்சந்த்ரராவ் ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறார். அந்த மசோதாவின்படி ஸொத்துக்குப் பூராபாத்யமில்லாத விதவை, புத்ரி முதலியவர்கள், ஸொத்தை விற்பதற்கு கோர்ட்டில் மனுப்போட்டு அனந்தர வார்ஸுகளை வைத்துக்கொண்டு விற்பதற்கான காரணங்களை விசாரித்துப் பிறகு ஸொத்தை விற்கலாம். விற்றுவந்த பணத்தை கடன்கள் அடைக்கவோ, ஸொத்திலிருந்து கொடுபட வேண்டிய செலவுகளுக்குக் கொடுக்கவோ உபயோகிக்கலாம். ஸொத்துக்குப் பூரா பாத்யமில்லாதவர்கள் இவ்விதம் மனுப்போட்டு, கோர்ட்டாரிடமிருந்து உத்தரவு பெற்று அதன்படி ஸொத்தை விற்றுவிட்டால், அவர் இறக்கும்போது அப்போதுள்ள அனந்தரவார்ஸுகளோ மற்றவர்களோ அந்த விற்பனையை ஆக்ஷேபித்து வ்யாஜ்யம் போடமுடியாது. இப்படி ஏற்படுத்துவதால் அனந்தரவார்ஸு வ்யாஜ்யங்கள் ரொம்ப குறையக்கூடும். ஸொத்தை வாங்குகிறவர்களுக்கு ஸௌகர்ய மேற்படக்கூடும். ஸொத்தை விற்பவருக்கும் அதிக பணம் கிடைக்கும்.

இன்னும் இந்த மசோதாப்படி விதவை புத்ரி முதலியவர்கள் தங்களுக்குக் கிடைத்த ஸொத்தை வேறு ஸொத்துடன் பரிவர்த்தனை செய்யவேண்டுமென்றாலும் கோர்ட்டாரின் அனுமதியின்மேல், பூராவிசாரணை செய்த பிறகு பரிவர்த்தனை செய்யலாம். அப்படியே தகுந்த காரணங்கள் தெரிவித்து கோர்ட்டாரின் அனுமதியின்மேல் ஸொத்தை அடமானம் செய்வதும், குத்தகைக்கு விடுவதும் கூடும். இப்படிக் கோர்ட்டாருடைய அனுமதிபெற்றுச் செய்ததை பின்னால் அனந்தரவார்ஸுகள் ஆக்ஷேபிக்க முடியாது.

## SOCIETY AND RELIGION.

## ஜன ஸமூகமும் மதமும்.

### Vyasa Pournimai.

வ்யாஸ பௌர்ணிமை—இது ப்ரதி வருஷமும் ஆடிமாஸம் வரும். இது ஸன்யாஸிகளுக்கு முக்யம். அன்றையதினம் ஸன்யாஸிகள் க்ஷௌரம் செய்துகொண்டு வ்யாஸர் முதலிய அநேக ரிஷிகளை ஆவாகனம் செய்து பூஜிப்பார்கள். அன்றுமுதல் பிறகு 2-மாதகாலம் அவர்கள் அந்தவிடத்திலேயே இருக்கவேண்டுமே தவிர, வேறு ஊர்களுக்குச் செல்லுதல் கூடாது. அதாவது அவர்கள் மற்ற காலங்களில் க்ராமத்தில் ஒருநாளும் பட்டணமானால் 3-நாளுந் தான் தங்கலாம். அப்படி யிருந்துகொண்டு அவர்கள் ஸஞ்சாரம் செய்துகொண்டே இருக்கவேண்டும் என்று சாஸ்த்ரம் கூறுகிறது. அத்தகைய சாஸ்த்ரம் இந்தக் காலத்தில் மட்டிலும் 2-மாஸம் ஓரிடமும் செல்லக்கூடாதென்றதின் உண்மை யென்னவென்றால், ஸன்யாஸியினால் ஒரு ப்ராணிக்கும் ஹிம்ஸைகூடாது என்பதே. ஆடிமாதம் முதல் வர்ஷாகாலம் ஆரம்பித்துவிடுகிறது. மழையினால் அநேக புழு பூச்சிகள் பூமியில் ஏராளமாய் உண்டாகும். அவைகள் காலிற்பட்டு நசுங்கும். அந்த ஹிம்ஸையும் கூடாது. ஆதல்பற்றியே ஆடி முதல் நான்கு மாஸம் வெளியேறக் கூடாதென்பதை வற்புறுத்தி யிருக்கிறார்கள். இதற்கு சாதுர்மாஸ்ய வ்ரதமென்பார்கள். இப்படி நான்கு மாஸங்கள் ஓரிடம் தங்குவதால் க்ருகஸ்தன் முதலானவர்களுக்கு அஸௌகர்யம் ஏற்படுமென்று 2 மாஸம் இருந்தால் போதும்; 1 பக்ஷம் 1 மாஸத்திற்கு ஸமமென்று ச்ருதி கூறுதலால் 4 பக்ஷம் சேர்ந்தால் 4 மாதமென்று அர்த்தமாகும். அப்போது சாதுர்மாஸ்யம் என்பதற்குப் பொருள் வந்துவிடுமென்று தர்மசாஸ்த்ரக்காரர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதை அனுஸரித்தே இப்போது யதிகள் அனுஷ்டித்து வருகிறார்கள்.

### The One-ness of Hari and Hara.

ஹரி ஹரர்களின் அத்வைதபாவம்.—ஸமீபத்தில் வெளிவந்த 'பூர்ணசந்த்ரோதய'த்தில் ஒரு நிருபர் சிவனும் விஷ்ணுவும் ஒன்றே யென்றும், அவர்களுடைய பல் வேறு நாமங்கள் ஒரே பெயரைத் தெரிவிக்கின்றனவென்றும் எழுதுகிறார்.

ஹரி என்றால் பாபநாசகன், மதுஸூதனன்—மது (காமம்) என்னும் அரக்கனைக் கொன்றவன்; அதாவது காமநாசகன். முகுந்தன்—மோக்ஷத்தைத் தருபவன்.

ருத்ரன்—அஜ்ஞானத்தை நாசஞ்செய்பவன். அந்தகாரி—இருட்டு என்னும் ராக்ஷஸனை வென்றவன்; அதாவது அவிவேகத்தை நாசஞ்செய்பவன். சிவன், சங்கரன்—சுபத்தையும், மோக்ஷத்தையும் தருபவன்.

சிவன் என்ற பதத்திற்கே, மங்களம், ஸௌஹ்ருதம், ஆநந்தம் எனப் பொருளாம். இப்பெயர்களில் சில அக்ஞான நாசத்தையும், சில ஞானோதயத்தையும் விளக்குகின்றன.

ஈசுவரன் மனுஷ்யர்களிடத்தெழும் காமக்ரோதங்களென்னும் தீய எண்ணங்களை முதலில் நாசஞ்செய்து, பின்பு ஞானத்தை அருளி நமக்கு ப்ரஹ்மாநந்தத்தைத் தருவார். அதைப்பற்றியே சிவன் மயானவாஸி எனப்படுவது; காமக்ரோதாதிகளென்னும் மலினங்களை (அழுக்கை) எரித்த மனது என்னும் மயானத்தின்கண் இருப்பவர். இதைத் தெரிந்துகொள்ளாமல் ஸாதாரணமாய் ப்ரேதங்களைச் சுட்டெரிக்கும் சுடலையில் இருக்கிறார் எனக் கருதுவது தவறு.

### Suddhi Sabha.

சுத்தி ஸபை—சென்னையில் சுத்திஸபை என்று ஒரு ஸபை ஸமீபத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதன் நோக்கம் பிறமதஸ்தர்கள் ஹிந்துமதத்தில் சேரப்ரியப்பட்டால், அவர்களை சேர்த்துக்கொள்வதே. இந்த ஸபைக்கு கான்சந்த்ரவர்மா என்பவர் ப்ரெஸிடெண்டா யிருக்கிறார். ஸமீபத்தில் இந்த ஸபையின் ஆதரவில் சென்னையில் 6-பேர்கள் கொண்ட ஒரு மகம்மதிய குடும்பம் ஹிந்துமதத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

### Traveller's Club.

அன்யநாடுகளில் ப்ரயாணம் செய்த இந்தியர்கள் ஸங்கம்.—இப்பெயர் கொண்ட ஸங்கம் ஒன்று சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு சென்னை ஹைக்கோர்ட் ஜட்ஜ் வி. க்ருஷ்ணன் ப்ரெஸிடெண்டாக இருக்கிறார். இந்த ஸங்கத்தின் நோக்கம் இந்தியர்களை அன்யநாடுகளுக்குப்போய் வரும்படி ஆதரிப்பதும், வெளிநாடுகளிலுள்ள இந்தியர்களுக்கு உதவிசெய்வதும், வெளிநாடுகளுக்குப் போய்வந்த இந்தியர்களுக்குள் அதிக போக்குவரத்து ஏற்படுத்துவதுமாகும். இந்தியா, பர்மா, ஸிலோன் ஆகிய இந்த நாடுகளிலிருந்து வெளிநாடுகளுக்குப் போய்வந்த எல்லா இந்தியர்களும் இதில் சேரலாம்.



## HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### Moisture-proof Glue.

ஈரத்தால் பாதிக்கப்படாத வஜ்ரம்.—வஜ்ரத்தை இளகச் செய்தால் கால்படி இருப்பதற்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு வஜ்ரம் எடுத்துக்கொள்ளவும். வஜ்ரம் ரொம்ப உயர்ந்ததாயிருக்கவேண்டும். அதை ஜலத்தில் ஊறப்போடவும். வஜ்ரம் ம்ருதுவான பிறகு ஜலம் அதிகமாயிருந்தால், அந்த அதிகப் படியான ஜலத்தைக் கொட்டிவிடவும். ஜலம் போதாமலிருந்தால், வேண்டிய ஜலம் சேர்த்துக்கொள்ளவும். வஜ்ரத்தை ஸாதாரண முறைப்படிக் காய்ச்சவும். வஜ்ரம் நன்றாய்க் கரைந்துபோனபிறகு மூன்று தேயிலைக் கரண்டி லின்ஸீட் எண்ணெயை (ஆழிவிதை எண்ணெய்) ச்சேர்த்து நன்றாய்க் கிளறவும். ஒரு நாள் முழுவதும் உஷ்ணம் குறையாமல் சூடு கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும். அடிக்கடி கிளறிக்கொடுத்துக் கொண்டிருக்கவேண்டும். சூட்டால் ஜலம் குறைந்துபோய்விட்டால் வேண்டிய அளவு ஜலம் சேர்த்து தக்க பதத்தில் வைத்துக்கொள்ளவும். பிறகு எண்ணெய் மேலே மிதக்காது. இதன்மேல் ஒரு மேஜைக்கரண்டி ஒய்ட்டிங் என்னும் உயர்ந்த சீமைச் சுண்ணாம்புத் தூளைப்போட்டு நன்றாய்க் கலந்து விடவும். இப்படித் தயார் செய்த வஜ்ரம் ஈரத்தால் பாதிக்கப்படாது.

### Destruction of Rats.

எலிகளைத் தொலைத்தல்.—'இண்டியன் மெடிகல் ஜர்னல்' என்னும் பத்ரிகையில் ஒரு நிருபர் எலிகளைத் தொலைப்பதற்குப் பலமுறைகள் தெரிவித்திருக்கிறார். அவைகளில் சிலவற்றை இங்கு எழுதுகிறோம்.

(1) சுவர்களோரமாக உள்ள எலிவளைகளில் தாரைப் பூசிவிட்டால் 24-மணி நேரத்தில் எலிகள் கட்டிடத்தை விட்டு அகன்றுவிடும். தாருள்ள பாத்ரத்தை வளைகளுக்குப் பக்கத்தில் வைத்திருந்தால் எலிகள் அக்கட்டிடத்துக்குள் மறுபடியும் வரமாட்டா.

(2) காஸ்டிக் பொடாஷ் என்னும் சரக்கை வளையைச் சுற்றிலும் போட்டு வைப்பது எலிகளைத் துரத்திவிடும்.

(3) டார்ட்டார் எமடிக் என்னும் மருந்தை ரொட்டியோடு கலந்து எலிகள் வரக்கூடிய இடத்தில் வைத்திருந்தாலும், எலிகள் ஓடிப்போய்விடும்.

(4) க்ளோரைட் அப் லைம் என்னும் மருந்துச் சரக்கை எலிவளைகளில் போட்டால் அதன் வாஸனையைக் கண்டு எலிகள் இருந்தவிடந் தெரியாமல் ஓடிவிடும்.

(5) பூனையை வளர்ப்பதால் எலிகளின் உபத்ரவம் குறைகிறது.

### Preserving Eggs.

முட்டைகள் கெடாமலிருக்க.—ஒரு மேல்நாட்டுப் பத்ரிகை முட்டைகளைக் கெடாமல் பத்ரப்படுத்தி வைக்க ஒரு ஸுலபமான வழி தெரிவிக்கிறது. நான்கு படி நன்றாய்த் தாளித்த சுண்ணாம்பை 20-படி ஜலத்தில் கலக்கவேண்டும். இதை ஒருவாரம் வரையில் தினம் இரண்டு மூன்று தடவை கலக்கிவிடவேண்டும். நான்காவது நாள் ஒருபடி உப்பை அதில் சேர்க்கவேண்டும். வாரக் கடைசியில் ஜலத்தை தெளியவிடவேண்டும். பிறகு தெளிந்த ஜலத்தை இறுத்துக்கொள்ளவேண்டும். முட்டைகளை ஜாடிகளில்வைத்து சுண்ணாம்பு ஜலத்தை ஊற்றி நிரப்பவேண்டும். ஆனால் கோழிகள் முட்டையிட்டவுடன் அம் முட்டைகளை எடுத்து உடனே இந்த ஜலத்தில் பத்ரப்படுத்த வேண்டியது அவச்யமாகும்.

### To Preserve Bright Steel from Rust.

பளபளப்பான எஃகு ஸாமானை துருப்பிடிக்காமல் பாதுகாக்க.—எஃகினால் செய்த எல்லா பளபளப்பான ஸாமான்களின் மேலும் தாளிக்காத சுண்ணாம்பைத் தூவிவைத்திருந்தால் அவைகள் துருப்பிடிக்காமலிருக்கும். அடிக்கடி உபயோகத்திலிராத கத்திகளை பத்ரப்படுத்தப் பின்வருமாறு செய்யவும். கத்திவைக்கும் உறையில் கத்தியில் இரும்பு பாகத்தின் நீளம்எவ்வளவோ அவ்வளவு ஆழம்வரையில் சலித்தெடுத்த (தாளிக்காத) சுண்ணாம்புத்தூளைப்போட்டு, அதில் பிடிவரையில் கத்தியைச் சொருகிவைக்கவும். பிடியானது சுண்ணாம்பில் படக்கூடாது. இப்படிச்செய்தால் கத்தி துருப்பிடிக்காது.

### To Clean Pearls.

முத்தைச் சுத்தி செய்யும் முறை.—முத்துக்களைச் சுத்தி செய்வதில் அராபியரே நிபுணர்கள். இவர்கள் மறுவேனும் அழுக்கேனும் உள்ள முத்துக்களைச் சுத்தி செய்யவேண்டி யிருந்தால் மாவையும் வெண்ணெயையுஞ் சேர்த்து நன்றாய்ப் பிசைந்து முத்துக்களின்மேல் பூசி பட்டினியாயிருக்கும் கோழிகளின் முன்னே அவைகளை போடுவார்கள். கோழிகள் அவற்றை இரையென வெண்ணி உடனே விழுங்கிவிடும். அடுத்தநாள் மலத்துடன் அம்முத்துக்கள் வெளிவரும். அவைகளை எடுத்துக் கழுவினால் மிகவும் பளபளப்பாக யாதொரு மறுவுமின்றிக் காணப்படுமாம்.

# AGRICULTURE.

## விவஸாயம்.

### Liquid Manure.

மூத்ர எரு.—நமது நாட்டு விவஸாயிகள் மாடுகளின் மூத்ரத்தை சரியாய் சேகரித்து வைக்காததால், ரொம்ப உபயோகமான எரு ஸத்து ஏராளமாக வீணாய்ப்போகிறது. மற்றெல்லா ஸத்துக்களையும்விட பொடாஷ் தான் மூத்ரத்தில் அதிகமாயிருக்கிறது. ஸ்காட்லாண்ட் தேசத்தில் சில இடங்களில் செய்த சோதனைகளால் மாட்டு மூத்ரத்தில் எவ்வளவு நைட்ரோஜின் ஸத்து இருக்கிறதோ அதைவிட சராசரியில் இரண்டுமடங்கு அளவு பொடாஷ் ஸத்து இருப்பதாகத் தெரியவருகிறது. மாடுகள் முதலிய கால்நடைகள் தின்னும் தீனியில் உள்ள பொடாஷ் ஸத்தில் பெரும்பாகம் மூத்ரத்தில் கலந்து வந்துவிடுகிறது. மேலும் சாணக்குவியல் களிலிருந்து கசிந்துவரும் த்ரவத்திலும் பொடாஷ் ஸத்து அதிகமாயிருக்கிறது. மாட்டின் மூத்ரத்தையும் சாணியிலிருந்து கசிந்துவரும் த்ரவத்தையும் தக்கபடி சேகரித்து உபயோகித்தால், நிலங்களுக்கு பொடாஷ் எருக்கள் ப்ரத்யேகமாகப் போடவேண்டிய அவச்யமிராது. மேலும் இவைகளில் நைட்ரோஜின் இருப்பதால் நிலத்தில் நைட்ரோஜின் ஸம்பந்தமான எருவும் சேருகிறது. மூத்ர எருவைப் பலவிதங்களில் நிலத்துக்குப் போடலாம். அதை சீக்ரத்தில் க்ரஹித்துக் கொள்ளக்கூடிய தழை குப்பைகளில் கலந்து, அந்தத் தழை குப்பைகளை நிலத்துக்குப்போடலாம். அல்லது மூத்ரத்தில் வேறொன்றும் சேர்க்காமல் நேராய் பூமியில் தெளித்துவிடலாம். எந்தவிதமாய்ப் போட்டாலும் ஒரு நிலத்தில் நாலாபக்கங்களிலும் பரவியிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். சிலர் மூத்ரத்தை எருவாக இட்டால் பயிர் கெட்டுப்போகுமென்று எண்ணுகிறார்கள். ஸ்வல்ப நிலத்தில் அதிகமாய்ப் போட்டால்தான் கெடுதலே யொழிய மிதமான அளவில் போட்டால் கெடுதலேற்படாது.

### Spacing for Cotton Crop.

பருத்திப் பயிரில் ஒன்றுக்கு ஒன்றுஉள்ள தூரம்.—கோவில்பட்டி விவஸாயப் பண்ணையில் சென்ற 5 வருஷங்களாக பருத்திப்பயிர் ஒன்றுக்கு ஒன்று எவ்வளவு தூரத்திலிருப்பது அதிக லாபந்தரக்கூடியதென்பதை அறிய சில பரீக்ஷைகள் செய்துவந்தார்கள். இந்தப் பரீக்ஷைகளால் தெரியவந்த தென்னவென்றால் ஸாதாரணமாக பருத்தியை நெருக்கமாய் நடுவதே அதிக பலன் தரக்கூடியதாயிருக்கிறதென்பதே. பருத்திச்செடிகளை நெருக்கமாய் நட்டால் அவைகள் சீக்ரம் காய்க்க ஆரம்பிக்கின்றன. விவஸாயி தனது பயிர் சீக்ரம் பூத்துக் காய்க்கவேண்டுமா என்பதை ஆராய்ந்து அதற்குத் தகுந்தபடி பயிரை நடவேண்டும். பயிர் சீக்ரம் பூத்துக் காய்க்கவேண்டுமா என்பது விதைக்கும் காலத்தையும், மழையின் நிலைமையையும் பொறுத்திருக்கிறது.

பருத்தி விதைக்குங்காலம் சீக்ரமாயிருந்து, பிறகு பெய்யும் மழையும் ஸ்வல்பமாயிருந்தால், பயிர் சீக்ரம் பூத்துக் காய்த்து வெடிக்கவேண்டியது அவச்யமாகும். நிலத்தில் ஸ்வல்ப அளவே ஈரமிருப்பதால் பயிரின் வேரானது ரொம்ப ஆழம்போகிறது. ஆகையால் இந்த ஈரம் முழுவதும் செலவழிந்து விடுவதற்குள் பயிர் பலன்கொடுக்க வேண்டியது அவச்யமாகிறது. இதற்குப் பயிரை நெருக்கமாய் நடவேண்டும். பருத்தியை சீக்ரம் விதைத்திருந்து, அதற்குப் பிறகு பெய்யும் மழை, அதிகமாயும், டிஸம்பர்மாஸம் வரையில் பெய்துவந்தால், பயிரை விசாலமாய் நடவேண்டும். காலம் தாமஸித்து விதைத்திருந்து, பருவ மழையும் ஸ்வல்பமா யிருந்தால் பயிரை நெருக்கமாய் நடவேண்டும். காலம் தாமஸித்து விதைத்திருந்து பருவ மழையும் அதிகமாயிருந்தாலும் பயிரை இன்னும் நெருக்கமாய் நடவேண்டும்.

### Fodder Crops.

தீவனப் பயிர்கள்.—கால்நடைகளுக்கு தீவனப்பயிர் சோளத்தைப் பயிர்செய்வதைவிட கினிக்ராஸ் என்னும் புல்லைப் பயிர்செய்வது லாபகரமானதென்று கோயம்புத்தூர் விவஸாயப்பண்ணை ரிபோர்ட்டிலிருந்து தெரியவருகிறது. ஸாதாரணமாய்ப் பாசனமுள்ள நிலங்களில் பெரிய மஞ்சள் சோளத்தைப் பயிரிட்டால் நல்ல பலன்கொடுக்கும். ஆனால் கினி க்ராஸ் பயிரிட்டால் அதிக புல் கிடைப்பதோடு, ச்ரமமும் அதிகமில்லையாம். சென்ற 1914-15-ம் வர்ஷத்தில் இந்த இரண்டு தீவனப்பயிரைப்பற்றிக் கணக்கெடுத்ததில் சோளம் பயிரிட்டதில் ஒரு ஏக்கருக்கு 25,400 ராத்தல் சோளத்தட்டை கிடைத்திருக்க, கினிபுல்லில் 33,400-ராத்தல் கிடைத்தது. கினி புல் ஸாகுபடியில் அதிக செலவில்லை. புல்லும் உயர்ந்ததாயிருக்கிறது. மாடு தின்னும்போதும் அதிக சேதம் ஏற்படுவதில்லை.

அந்தப்பண்ணையில் ஸில்வர்பீட் என்று ஒரு பயிரை தீவனப்பயிராக ஸாகுபடிசெய்து வருகிறார்கள். அதில் நல்ல பலன் கிடைத்ததென்று தெரியவருகிறது. அந்த வர்ஷம் அந்தப்பயிரில் ஏப்ரல்மாஸம் முதல் அக்டோபர்மாஸம் முடிய 25,000-ராத்தலுக்கு மேல் கிடைத்ததாம்.

# CO-OPERATION.

## கோவாபரேஷன்.

### Co-operation in Mysore.

மைஸூரில் கோவாபரேஷன்.—1914-15-ம் வர்ஷத்தில் மைஸூரில் 224 கோவாபரேடிவ் ஸங்கங்கள் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டன. அந்த வர்ஷக் கடைசியில் மொத்தம் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்த கோவாபரேடிவ் ஸங்கங்களின் ஸங்க்யை 725. இவைகளுள் 683- நாணய ஸங்கங்களாகும். 38 ஸங்கங்கள் பொருள் வாங்குவது, விற்பது, ஸாமான்கள் செய்வது ஆகிய இந்தத் தொழில்களை மேற்கொண்டிருந்தன.

இதனால் நாணய லேவாதேவிக்கான ஸங்கங்களே மைஸூரில் அதிகமாக இருக்கின்றன வென்பது விளங்கும். இருந்தாலும் மற்ற வேலைகளுக்கான கோவாபரேடிவ் ஸங்கங்கள் கொஞ்சங் கொஞ்சமாய் வ்ருத்தியடைந்துவருகின்றன. தற்போது அந்த ராஜ்யத்தில் யந்த்ர நீர்ப்பாசனத்துக்காக ஒரு கோவாபரேடிவ் ஸங்கமும், சந்தனக்கட்டையில் சித்ரிப்போர்களுக்காக 2-ஸங்கங்களும், நெல்குத்துவது, வெல்லம் காய்ச்சுவது ஆகிய இவைகளுக்காக 2 ஸங்கங்களும், அரக்கு வார்னிஷ் ஸம்பந்தமான கோவாபரேடிவ் தொழில்சாலையொன்றும், அநேக நெசவுகாரர்கள் ஸங்கமும் நடந்து வருகின்றன.

மைஸூரில் ஒரு விசேஷமென்னவென்றால் 5-கோவாபரேடிவ் ஸங்கங்களில் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் பணம் டெபாஸிட் செய்து வருகிறார்கள். இதனால் பிள்ளைகளிடம் செட்டு வ்ருத்தியாகிறது. சென்ற வர்ஷத்தில் 931 சிறுவர் கணக்குகள் இருந்தன. இவைகளின் மொத்தத் தொகை 2569 ரூபாயாகும்.

ஸாமான்கள் வாங்கிவிற்கும் ஸங்கங்களின் தொகை 15. இவைகளிலுள்ள மெம்பர்களின் ஸங்க்யை 8825. இவைகள் 1½ லக்ஷம்ரூபாய்க்கு ஸாமான்கள் வாங்கி விற்றனவாம். இவைகள் இன்னும் அதிகமாக ஸாமான்கள் வாங்கி விற்காததற்குக் காரணம், தொழில் பழக்கமுள்ள கனவான்கள் இவைகளை நடத்த முன்வாராமையே. இவைகளில் இரண்டொன்றை ரெஜிஸ்ட்ராரும் மற்றவைகளை அஸிஸ்டெண்ட் ரெஜிஸ்ட்ராரும் இன்ஸ்பெக்டர்களும் எடுத்து நடத்தி வ்ருத்திசெய்ய வேண்டுமென்று கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள்.

அந்த ராஜ்யத்திலுள்ள நெசவுக்காரர்கள் ஸங்கத்தின் தொகை 19. இவைகளில் 950 மெம்பர்கள் இருந்தார்கள். இவைகளின் நடை முதல் பணம் 36,700 ரூபாயாகும். இவைகள் 1½ லக்ஷம் ரூபாய்க்கு ஸாமான்கள் வாங்கிவிற்றன.

### Co-operative Societies and Sanitation.

கோவாபரேடிவ் ஸங்கங்களும் ஸுகாதாரமும்.—சில மாஸங்களுக்கு முன்னால் கவர்ன்மெண்டார் யூனியனல்லாத பெரிய க்ராமங்களில் உள்ள 20 கோவாபரேடிவ் ஸங்கங்களிடம் அவைகள் வேலை நடத்தும் இடங்களில் ஸுகாதாரத்தை வ்ருத்தி செய்வதற்காக சில தொகைகளை க்ராண்டாகக் கொடுத்தார்கள். இவ்விதம் கொடுக்கப்பட்ட தொகை 17,618 ரூபாயாகும். இந்தத் தொகைகளைப் பெற்ற ஸங்கங்களில் ஒன்று நீங்கலாக மற்றவைகளெல்லாம் தாங்கள் மேற்கொண்ட ஸுகாதார வேலைகளை மொத்தத்தில் த்ருப்திகாமாகவே செய்து முடித்திருப்பதாக கவர்ன்மெண்டார் தெரிவிக்கிறார்கள். நான்கு ஸங்கங்கள் கவர்ன்மெண்டார் கொடுத்த தொகையோடு, ஜனங்களிடமிருந்து இனமாக பணம் வஸூல் செய்து வேலையை நடத்தினவாம். இரண்டு ஸங்கங்களில், ஜனங்கள் கூலியின்றி வேலை செய்தார்களாம். சில ஸங்கங்கள் தாங்கள் முதலில் யோசித்த வேலையை விட்டுவிட்டு, வேறு ஸுகாதார வேலைகளைச் செய்து முடித்தனவாம். இதை கவர்ன்மெண்டார் அங்கீகரித்திருக்கிறார்கள். இந்த ஏற்பாடு இதுவரையில் பரீக்ஷார்த்தமாகவே செய்யப்பட்டு வந்தது. இது த்ருப்திகாமாக நடந்துவந்திருப்பதால், ஜில்லா போர்டுகளின் ப்ரெஸிடெண்டுகள், க்ராம ஸுகாதார வேலைகளை நடத்த, யுக்தமானால், கோவாபரேடிவ் ஸங்கங்களை உபயோகிக்கலாமென்று கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள். இந்த ஸங்கங்களுக்கு ஸுகாதார வேலைகளை நடத்தக்கொடுத்தால், அந்த வேலைகள் முடிந்தபிறகு, தாலுகா போர்ட் ப்ரெஸிடெண்டுகள் அந்த வேலைகளைப் போய்ப் பார்வையிடவேண்டும்.

### Coimbatore Building Society.

கோயம்புத்தூர் கட்டிட ஸங்கம்.—கோயம்புத்தூரில் கோவாபரேடிவ் கட்டிட ஸங்கம் ஸ்தாபிக்கப்பட்டு மூன்றுவர்ஷத்துக்கு மேலாகிறது. இந்த ஸங்கத்தில் 178-மெம்பர்கள் இருக்கிறார்கள். இந்த ஸங்கத்தின் மூலதனம் 6120-ரூபாயாகும். இந்த ஸங்கம் சென்ற வர்ஷத்தில் 41 - வீடுகளை கட்டவும், 4 - வீடுகளை பழுதுபார்க்கவும், 12-வீடுகளை பெந்தகஞ்சனி விருந்து விடுவிக்கவும் பணவுதவி செய்தது. இந்த ஸங்கத்துக்கு அந்தவர்ஷத்தில் ரூ. 919—4—1 லாபமாகக் கிடைத்தது.

# COMMERCE.

## வ்யாபாரம்.

### Business Enterprise in India.

**இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.**—இந்தியாவில் சென்ற ஜூலை மாஸத்தில் அடியில் கண்ட விவரப்படி 8 ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | ரூ |
|---|---|
| 1 பாங்கி லேவாதேவி கம்பெனி | 20,000 |
| 1 அச்சடித்து ப்ரசுரம் செய்யும் கம்பெனி | 50,000 |
| 1 வ்யாபாரக் கம்பெனி (மேலே சொன்னவை தவிர) | 20,000 |
| 2 தேயிலைத் தோட்டக் கம்பெனி | 40,000 |
| 1 நிலக்கரிச் சுரங்கக் கம்பெனி | 16,00,000 |
| 1 சுரங்கக் கம்பெனி(மேலே சொன்னது தவிர) | 30,000 |
| 1 கம்பெனி (மேலே சொன்னவை தவிர) | 45,00,000 |
| | 62,60,000 |

சென்ற 1914-15-ம் வர்ஷத்து ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகளின் ரிபோர்ட்டு ஸமீபத்தில் வெளியாயிற்று. அதன்படி 1914-15-ம் வர்ஷம் வரையில் இந்தியாவில் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகளின் ஸங்க்யை 6,999 ஆகும். இவற்றுள் 2,545 கம்பெனிகள்தான் 1914-15-ம் வர்ஷக் கடைசியில் நடந்துகொண்டிருந்தன. பாக்கிக் கம்பெனிகளில் அநேகம் நின்றுபோய்விட்டன. வேலை ஆரம்பிக்காமலே சில நின்றுவிட்டன. ஆகவே மொத்தம் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட கம்பெனிகளில் நூற்றுக்கு 64-பாகம் நின்றுபோய்விட்டன.

அந்த வர்ஷத்தில் மொத்தம் ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகளின் ஸங்க்யை அதற்குமுந்தின வர்ஷத்திய ஸங்க்யையைவிட 199-குறைவாயிருந்தது.

இந்தியாமுழுவதிலும் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட கம்பெனிகளில் மூன்றிலொரு பாகத்துக்குமேல் வங்காளத்தைச் சேர்ந்தவையாகும். சராசரி ஒவ்வொரு கம்பெனிக்கும் உள்ள செலுத்தப்பட்ட பங்கு மூலதனமானது பம்பாயில் அதிகமாயிருந்தது. இதற்கடுத்தபடியாக பர்மாவில்தான் கம்பெனிகளுடைய பங்குகளிலிருந்து செலுத்தப்பட்ட மூலதனம் அதிகமாயிருக்கிறது.

சென்னை ராஜதானியிலுள்ள கம்பெனிகளின் மூலதனம் சராசரியில் ரொம்ப குறைவாயிருக்கிறது. இதற்குக் காரணம் ஸ்வல்ப அளவில் லேவாதேவி நடத்துகிறவர்கள் அதிகமாக கம்பெனீஸ் ஆக்டின்படி ரெஜிஸ்டர் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள மொத்தம் 475 பாங்கி லேவாதேவிக் கம்பெனிகளில் 192 கம்பெனிகள் சென்னையி லிருக்கின்றன. இந்த சென்னைக் கம்பெனிகளின் மொத்தம் மூலதனம் 202 லக்ஷம் ரூபாய்தான். 8,49,60,000 ரூபாய், செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாக, பாங்கி லேவாதேவி இன்ஷூரென்ஸ் கம்பெனிகளில் போடப்பட்டிருக்கின்றன.

### Playing Cards.

**ஆடும் சீட்டுகள்.**—பெரியவர்களும் சிறுவர்களும் ஆடுவதற்கு உபயோகப்படும் சீட்டுக்கட்டுகள் முன்பு அமெரிக்காவிலிருந்தும் வேறு சில மேல்நாடுகளிலிருந்தும் வந்துகொண்டிருந்தன. யுத்தம் ஆரம்பித்ததற்குமேல் ஜப்பானும் இவைகளை நமது தேசத்து அனுப்பி வருகிறது. அங்கே ஒரு க்ரோஸ் அதாவது 12 டஜன் கட்டுகள் ஸுமார் 5¼-ரூபாய் விலையாம். சில காலத்துக்குமுன் எடுக்கப்பட்ட கணக்கின்படி 5-லக்ஷம் க்ரோஸ் கட்டுகள் அனுப்பும்படி ஜப்பானியர்களுக்கு ஆர்டர்கள் வந்திருந்தனவாம். இவைகளில் ஒருபாகம் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டன. பாக்கியுள்ளவை ஐரோப்பாவுக்குப் போயின. இவைகளில் பெரும்பாகம் யுத்தகளத்தில் உள்ள ஸோல்ஜர்களுக்கு வெகுமதியாகக் கொடுக்க உபயோகிக்கப்பட்டனவாம்.

ஜப்பானிலுள்ள ஒஸாகாபட்டணத்தில்தான் சீட்டுகட்டுக்கள் விசேஷமாய்ச் செய்யப்படுகின்றன. அங்கே மாஸந்தோறும் 6000-க்ரோஸ் கட்டுகள் செய்யப்படுகின்றனவாம்.

இந்தியாவில் பம்பாயிலும் கல்கத்தாவிலும் மாஸம் 2000-பெட்டி சீட்டுக்கட்டுகள் செலவாகின்றனவாம். ஒரு பெட்டியில் 5-க்ரோஸ் சீட்டுக்கட்டுகள் இருக்கும்.

### Government and Industries.

**கவர்ன்மெண்டாரும் கைத்தொழிலும்.**—ஸமீபத்தில் நடந்த இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் வைஸ்ராய் லார்ட் செம்ஸ்பொர்ட், இந்தியா கவர்ன்மெண்டார் சீமையிலிருந்து இரண்டு நிபுணர்களை தருவித்திருப்பதாகத் தெரிவித்தார். அவர்களில் ஒருவர் இயற்கை நீலத்தொழிலை வ்ருத்திசெய்வதைப் பற்றி ஆராய்ச்சிகள் நடத்துவார். இன்னொருவர் தோல்பதனிடும் தொழிலில் நிபுணர். அவர் இந்தியாவிலுள்ள பற்பல காடுகளில் கிடைக்கக்கூடிய தோல் பதனிட உதவும் பொருள்களைப்பற்றி ஆராய்ச்சி செய்து, தோல் பதனிட உதவும் ஸத்துக்களை எடுக்க முயற்சி செய்வார். இதற்காக அவர் ஒரு யந்த்ரமும் கொண்டு வந்திருக்கிறார்.



# ECONOMIC PRODUCTS.

## விலையுள்ள பொருள்கள்.

### World's Cotton Supply.

**உலகத்தின் பருத்தி விளைவு.**—உலகத்தில் மொத்தம் பருத்தி விளைவின் மதிப்பு 2,77,03,000 பேல் (மூட்டை)களாகும். ஒரு பேல் என்பது 500 ராத்தல் கொண்டது. அமெரிக்காவிலிருந்து 1,46,10,000 பேல் பருத்தியும், இந்தியாவிலிருந்து 52,01,000 பேலும், ஈஜிப்டிலிருந்து 15,37,000 பேலும், ரஷ்யாவிலிருந்து 10,75,000 பேலும், சீனாவிலிருந்து 4,00,000 பேலும், மற்ற தேசங்களிலிருந்து 13,40,000 பேலும் கிடைக்கிறது. இந்தக் கணக்குகள் யுத்தத்துக்கு முந்திய வர்ஷமாகிய 1913-14-ம் வர்ஷத்து கணக்குகளாகும். இந்தியாவானது இதில் இரண்டாவதாக இருக்கிறது. ஆனால் பருத்தியின் நயத்தில் அது மற்ற தேசங்களெல்லாவற்றையும் விடத் தாழ்ந்ததா யிருக்கிறது. சிலர் டாக்கா மஸ்லின் 300-ம் நம்பர் நூலில் நெய்யப் படுவதால், இந்தியாவின் பருத்தி மிகவும் உயர்ந்ததென்று சொல்லுகிறார்கள். ஆனால் பம்பாயிலுள்ள ப்ரொபஸர் டாட் என்பவர் டாக்காமஸ்லினுக்கு வேண்டிய பருத்தி அயல் நாடுகளிலிருந்து வந்ததென ஒரு பழைய புஸ்தகத்தில் சொல்லப் பட்டிருப்பதாகச் சொல்லுகிறார். அமெரிக்காவிலுள்ள சார்ல்ஸ்டன் என்னுமிடத்துப் பருத்திதான் ரொம்ப உயர்ந்ததரம். அதற்கடுத்தபடியாக உள்ளது அமெரிக்காவிலுள்ள ப்ளொரிடா, ஜார்ஜியா என்னும் நாடுகளில் விளையும் பருத்தியாகும். இவைகளுக்கும் அடுத்தபடியாக உள்ளது ஈஜிப்ட் தேசத்தில் விளையும் பருத்தியாகும்.

இந்தியாவில் ஒரு ஏக்கருக்கு 100 ராத்தல் பருத்திதான் விளைகிறது. அமெரிக்காவில் 200 ராத்தல் பருத்தி கிடைக்கிறது. ஈஜிப்டிலோ ஏக்கருக்கு 400 ராத்தல் பருத்தி கிடைக்கிறது. அந்த நாட்டில் சில இடங்களில் 800 ராத்தல் பருத்தி வரையில் கூடக் கிடைத்ததுண்டாம்.

இந்தியாவில் பாசன வஸதிகள் வ்ருத்தி செய்யப்பட்டால் பருத்தி ஸாகுபடியை வ்ருத்தி செய்யலாம். தக்கபடி பயிர்செய்தால், மற்ற பயிர்களில் கிடைப்பதைவிட இதில் அதிக லாபம் கிடைக்கும். ஆனால் பருத்தி ஸாகுபடி செய்யும் முறையிலும் பல சீர்திருத்தங்கள் செய்யவேண்டியிருக்கிறது. தற்போது விவஸாயிகள் உபயோகமற்ற விதைகளை உபயோகிக்கிறார்கள். பருத்தி விதைப்பதிலும் பரவலாய்த் தெளித்து விடுகிறார்கள், பஞ்சைப் பொறுக்கும்போது மண், இலைச்சருகுகள் வேறு தூசிகள் இவைகளைப் பிரித்தெடுக்காமல் எல்லாவற்றையும் சேர்த்து எடுக்கிறார்கள். சரியாகக் கொட்டை யெடுப்பதில்லை. மேலும் பருத்தியை ஈரமாக்கும் வழக்கம் இருந்துவருகிறது. பற்பல தினுஸுப் பருத்திகளை ஒன்றாய்ச் சேர்த்துவிடுகிறார்கள். இவைகளோடு நடுவிலிருக்கும் வ்யாபாரிகள் லாபத்தை அடித்துக்கொண்டு போகிறார்கள். இந்தக் குறைகளை நிவர்த்தி செய்தால், பருத்தி ஸாகுபடி வ்ருத்தியாகலாம்.

### Soapnut Tree.

**பூவந்திமரம்.**—இந்தியாவில் விளையும் பூவந்திமரம் அமெரிக்காவிலுள்ள ப்ளொரிடா மாகாணத்தில் நன்றாய் விளையும் என்று கண்டு அமெரிக்கர்கள் ஸுமார் 5-லக்ஷம் பூவந்திமரங்கள் நட்டுப் பயிராக்கியிருக்கிறார்கள். அங்கே பூவந்திக் கொட்டையிலிருந்து ஸோப் ஸத்து எடுக்கிறார்கள். கொட்டையின்மேலுள்ள ஓடுகளை உடைத்து சிறு துண்டுகளாக்கி அதில் 1½ ஔன்ஸ் எடுத்து ஜலம் விட்டுக் காய்ச்சி, அந்த ஜலத்தை இறுத்துக்கொண்டு, சக்கையை மறுபடியும் இரண்டு தடவை முன்போலவே காய்ச்சி ஜலத்தை இறுத்து, மூன்று ஜலத்தையும் ஒன்றாய்ச் சேர்த்து மூன்றிலொரு பங்காகும்படி சுண்டவைக்கிறார்கள். அந்த சுண்டின ஜலம் ஆறிப்போனதும், கொஞ்சம் முட்டையின் வெண் கருவைப்போட்டு, மறுபடியும் காய்ச்சுகிறார்கள். அப்போது மேலேவரும் அழுக்குகளை எடுத்தெறிந்துவிட்டு நன்றாய் சுண்டவைத்துப் பாகுபோல் தயார்செய்து கொள்ளுகிறார்கள். பிறகு அதில் நூற்றுக்கு 15-பங்குவீதம் அல்கஹாலைச் சேர்க்கிறார்கள். அப்படிச் சேர்த்தால் ரொம்ப வெளுப்பான ஸோப் ஸத்து கிடைக்கிறது. இதை உடம்பு தேய்க்க உதவும் ஸாதாரண ஸோப்பு, துணி வெளுக்க உதவும் ஸோப்பு இவைகளுக்குப் பதிலாக ஸகல கார்யங்களிலும் உபயோகிக்கலாமாம்.

### Trade in Rat Skins.

**எலித்தோல் வ்யாபாரம்.**—எலித்தோலை மிகவும் எளிதாக பதன்படுத்தும் வேலையானது ப்ரெஞ்சு திருப்புகளுக்கு கற்றுக் கொடுக்கப்படுகிறது. இப்படிப் பட்ட தோல்களை ஒரு கம்பெனியார் தோல் ஒன்றுக்கு ஒரு அணு வீதம்கொடுத்து வாங்குகிறார்களாம். அது ஸிகரெட் பெட்டிகள், பணப்பைகள், பாகெட் புஸ்தகங்கள் முதலியன செய்ய உதவுகிறது.

# BOYS' PAGE.

## பையன்கள் பக்கம்.

### Don'ts for Boys.

**சிறுவர்கள் செய்யக்கூடாதவைகள்.**—1. கடகட வென்று சத்தம்போட்டு சிரித்தல்.

2. கூட்டங்கள் முடியுமுன் இடையில் குடு குடு வென்று எழுந்திருந்தோடல்.

3 கூட்டத்திலே குசு குசு வென்று பேசிக்கொண் டிருத்தல்.

4. அன்யரைக்கண்டால் அவர்களை உற்றுப் பார்த் துக்கொண்டிருத்தல்.

5. அன்யர் வந்துவிட்டால் அவர்களுக்கு ஆஸனம் கொடாதிருத்தல்.

6. வயோதிகரை உபசாரம் செய்யாதிருத்தல்.

7. ஒருவரும் கேட்டுக்கொள்ளாதிருக்கையில் கூட் டத்திலே சத்தமாய் வாசித்தல்.

8. பெரியோர் கொடுக்கும்] வெகுமதிகளை வந்தனம் சொல்லாமல் வாங்கிக்கொண்டு நடந்துவிடல்.

9. ஸம்பாஷணையில் தன்னையே மேன்மைப்படுத் தித் தற்புகழ்ச்சியாய்ப் பேசுதல்.

10. பிறர் குற்றங்களைப் பாராட்டி சிரித்துப்பரிகா ஸம் பண்ணுதல்.

11. பிறரைக் கூட்டங்களிலே கேலி செய்தல்.

12. தங்கள் வயஸுக்கு மேற்பட்டவர்களை, விசேஷ மாய் பெற்றோரை திருத்தல்.

13. பிறர் பேசி முடிக்குமுன் இடையிலே பேசுதல்.

14. மற்றவர்களிடத்தில் கேட்கப்படும் கேள்விக ளுக்கு தாங்களே படபடென்று மாறுத்தரஞ் சொல்லிக் கொண்டு நிற்புது.

15. போஜனப் பந்தியில் உட்கார்ந்திருக்கையில் முன் கூட்டி கலத்திலே கைபோடல்.

16. முதியோர் பகரும் நல்லாலோசனைகளை அலக்ஷ் யஞ் செய்தல்.

### The Chinese Calendar.

**சீனர்களுடைய பஞ்சாங்கம்.**—சீனதேசத்து கவர்ன் மெண்டார் மேல்நாட்டுப் பஞ்சாங்க முறையை அனு ஸரித்து வருகிறார்கள். ஆனால் அந்த தேசத்து ஜனங் கள் தங்களுடைய முன்னோர்கள் அனுஸரித்து வந்த [illegible] பஞ்சாங்க முறையையே அனுஸரித்து வருகி றார்கள். அது சாந்த்ரமானமாகும். அதாவது சந்த்ர னுடைய கதியை அனுஸரித்தது. அவர்கள் ஒவ்வொரு மாஸத்துக்கும் தனிப் பெயரிடாமல் வர்ஷத்தின் முதல் மாஸத்தை முதல் சந்த்ரன் என்றும், இரண்டாவது மாஸத்தை இரண்டாவது சந்த்ரனென்றும் இப்படியே 12-மாஸங்களுக்கும் இத்தனாவது சந்த்ரன் என்றும் பெயரிட்டிருக்கிறார்கள். அங்கே புது வர்ஷம் ஆரம் பிக்கும் தினம் மேல்நாட்டு முறைக்கு ஒத்துவராது. சென்ற 1915-ம் வர்ஷத்தில் சீனாவின் புதுவர்ஷமா னது பிப்ரவரி மாஸம் 14-ந் தேதியன்று ஆரம்பமா யிற்று. வர்ஷத்தின் 1, 5, 7, 9, 11-வது மாஸங்க ளுக்கு 29-நாள்களும் மற்ற 7-மாஸங்களுக்கு 30-நாள் களும் உண்டு. சில வர்ஷங்களுக்கு ஒரு தடவை வர் ஷத்துக்கு 13-மாஸங்கள் ஏற்படுத்திக்கொள்வார்கள்.

வ்யாபாரிகள் வர்ஷத்தில் சிலநாள்களை கணக்குத் தீர்க்கும் நாள்களென்று வைத்துக்கொண்டிருக்கிறார் கள். இந்த நாள்களில் எப்படியாவது தாங்கள் கொடுக்க வேண்டிய கடன்களைத் திருப்பிக் கொடுக்க முயற்சி செய்வார்கள். இவைகளுள் முக்யமானது வர்ஷக் கடைசி நாளாகும். மற்றவைகள் மூன்றாவது மாஸம் 30-ந் தேதி, 5-வது மாஸம் 5-ந் தேதி, 8-வது மாஸம் 15-ந் தேதி, 9-வது மாஸம் 29-ந்தேதி ஆகிய இவைக ளாகும், மூன்றாவது மாஸம் 30-ந்தேதி, 9-வது மாஸம் 29-தேதி, 12-வது மாஸம் 30-ந்தேதி ஆகிய இவைகள் பெரிய வ்யாபாரிகள் கணக்குத் தீர்ப்பதற்கேற்ற நாள் களாகும். மற்ற தேதிகள் சிறு வ்யாபாரிகளுக்கேற்ற நாள்கள்.

### The Kaiser Labours at Harvest.

**கெய்ஸர் பயிர் அறுவடை செய்தார்.**—ஜெர்மன் சக்ரவர்த்தி ஸமீபத்தில் ஸைலீஷ்யா நாட்டில் உள்ள ஒரு ஊரில் போய் வயலில் மாஸ்டில் அறுவடை செய் தாராம். அவருடன் கூடவந்த ப்ரதம மந்த்ரியும் மற்ற உத்யோகஸ்தர்களுங்கூட கதிர்களை அறுத்துச் சேர்த் தார்களாம். சிறிதுநேரம் வேலைசெய்தபிறகு கெய்ஸர் வேலையாட்களுடன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்து பிறகு போனாராம்.

### Height of Aeroplane Flight.

**ஏரோப்ளேனில் ரொம்ப உயரம் பறப்பது.**—ஸமீ பத்தில் இங்க்லண்டில் ஒரு ஆகாயவிமானி ஏரோப்ளே னில் ஏறி 24,408 அடி உயரம் பறந்தாராம். இதற்கு முன் 1914-ம் வர்ஷத்தில் ஒரு ஜெர்மன் ஆகாயவிமானி 25,756 அடி உயரம் பறந்ததாகச் சொல்லப்படுகிறது.



# LADIES' PAGE.

## ஸ்த்ரீகள் பக்கம்.

### Midwives and Nurses.

**மருத்துவச்சிகளும் நர்ஸுகளும்.**—நமது ராஜதா னியில் ஸ்த்ரீகள் ப்ரஸவிக்கும்போது தக்க வைத்ய உதவியில்லாமலிருப்பதால் அநேக ஸ்த்ரீகளும் அவர்க ளுக்குப் பிறக்கும் சிசுக்களும் இறந்துபோகிறார்கள். இதை யுத்தேசித்து கவர்ன்மெண்டார் தேர்ந்த மருத்து வச்சிகளின் ஸங்க்யையை அதிகப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்போகிறார்கள்.

தற்போதுஸர்க்காரிடம் 400-மருத்துவச்சிகள் வேலை பார்த்து வருகிறார்கள். நமதுராஜதானியில் வர்ஷந்தோ றும் நேரும் ப்ரஸவங்களின் ஸங்க்யையை உத்தேசிக் கையில் மருத்துவச்சிகளின் ஸங்க்யை ரொம்ப குறை வாக இருக்கிறது. இதற்காக கவர்ன்மெண்டார் சென் னையிலுள்ள ஸ்த்ரீ ஆஸ்பத்ரிகளில் அதிகப்படியாக 26-ஸ்த்ரீ மாணவர்களை மருத்துவத்தில் பயிற்சி செய் விக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஏற்கனவே சென் னையில் 64-ஸ்திரீ மாணவர்களுக்குப் படிக்க ஆஸநிக ளிருக்கின்றன. இனி வர்ஷந்தோறும் 100-மருத்து வச்சிகள் பயிற்சியடையக்கூடும். இவர்களில் பெரும் பாலாரை வேலைக்கு எடுத்துக் கொள்வதாக எல்லா ஜில்லா போர்டுகளும் பல முனிஸிபாலிடிகளும் தெரி வித்திருக்கின்றன. வெளியூர்களில் சில இடங்களில் ஸ்த்ரீகளுக்கென்று ப்ரத்யேகமான ஆஸ்பத்ரிகளிருக் கின்றன. இவைகளில் பல தேர்ச்சிபெற்ற ஸ்த்ரீ வைத்யர்களுடைய மேற்பார்வையில் இருக்கின்றன. இப்போது மருத்துவச்சிகள் அதிகமாக வேண்டியிருப் பதால், கூடுமானால் இந்த ஆஸ்பத்ரிகளில் மருத்துவம் படிக்கும் ஸ்த்ரீகளை பயிற்சிசெய்விக்கலாம். ஆகையால் இந்த ஆஸ்பத்ரிகளில் எவற்றில் மருத்துவம் கற்கும் மாணவர்களைப் பயிற்சிசெய்ய ஆஸ்பத்ரி அதிகாரிகள் தயாராயிருக்கிறார்களென்றும், அந்த ஆஸ்பத்ரிகளுள் ஒவ்வொன்றிலும் எத்தனை மாணவர்களை சேர்த்துக் கொள்ளலாமென்றும் கேட்டறியும்படி சென்னை கவர்ன் மெண்டார் ஸர்ஜன் ஜெனராலுக்குத் தெரிவித்திருக்கி றார்கள்.

இவைகளோடு மேல்நாட்டு முறைப்படி வைத்யம் கற்காமல் க்ராமங்களில் மருத்துவம் செய்யும் ஸ்த்ரீ களுக்கு ஸாதாரண வைத்யப்பயிற்சி கொடுத்து, அவர் களைத் தங்கள் தொழிலில் கூடியமட்டும் தேர்ந்தவர்க ளாகச் செய்வதற்கு ஜில்லா போர்டுகளும் முனிஸிபா லிடிகளும் ஜில்லா ஸர்ஜன்களும் கலந்து ஆலோசித்து ஏற்பாடு செய்யவேண்டும்.

சிசு மரணத்தைக்குறைக்க கவர்ன்மெண்டார் இன் னொருவழி தெரிவித்திருக்கிறார்கள். தற்போது ஐரோப் பாவிலும் பம்பாயிலும் ஸுகாதாரம், வைத்யம் இவை கள் தெரிந்த ஸ்த்ரீகள் வீடுதோறும் போய், அங்கே கர்ப்பமாயிருக்கக்கூடிய ஸ்த்ரீகளுக்கு ஸுகாதார விஷ யங்களைக் கற்பித்து ப்ரஸவகாலத்தில் தக்க வைத்ய உதவி புரியக்கூடிய டாக்டர்களைக் கூப்பிடும்படி சொல் லுகிறார்கள். இப்படிப்பட்ட ஏற்பாடு சென்னையில் முன்பு நடந்துவந்து ப்ரயோஜனப்படாமல் போயிற்று. இவ்விஷயத்தைப்பற்றி சென்னை முனிஸிபாலிடியார் மறுபடியும் கவனம் செலுத்தவேண்டுமென்றும், இந்த ஸுகாதார வேலைக்கு வைத்யத்தில் தேர்ச்சியடைந்த ஸ்த்ரீகளை நியமிக்கவேண்டுமோ என்பதை கவனிக்க வேண்டுமென்றும், வெளியூர் முனிஸிபாலிடிகளும் இந்த மாதிரி ஏற்பாடுகள் செய்ய ஸ்கீம் தயாரித்து கவர்ன்மெண்டுக்கு அனுப்பினால் அதைப்பற்றி ஆலோ சிப்பதாகவும் கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார் கள்.

### Red Gourd Chutney.

**பாங்கிப்பீங்க துவையல்.**—சிறு சிறு பிஞ்சுகளாக பாங்கிக் கொட்டைகளை வாங்கிக்கொண்டுவந்து, அவை களைக் கறிக்கு நறுக்குவதுபோல நறுக்கி வேகவைத்து முக்கால் வேக்காடு வெந்தபின், எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும். பின்னிட்டு மிளகாய், கடுகு, உளுத் தம் பருப்பு முதலியவைகளை நெய்யிலோ அல்லது எண்ணெயிலோ வறுத்தெடுத்துக்கொண்டு, மேற்கூறிய ஸாமான்களுக்குத் தகுந்தாற்போல் உப்பு, புளி, பெருங் காயம் முதலியவைகளைச் சேர்த்து, அம்மியில் வைத் தரைத்தெடுத்துக்கொண்டு உபயோகிக்கலாம். இதனை ஆகாரத்துடன் நெய்விட்டுப் பிசைந்து சாப்பிட மிகவும் ருசியைத்தரும். பாங்கிக்காயும் உடம்பிற்குக் குளிர்ச்சி யைத் தரும். இந்தத் துவையலை மற்றச் சாப்பாட் டுக்கு உபகரணமாகவும் உபயோகிக்கலாம்.

### Miss Kamakoti Natarajan.

**மிஸ் காமகோடி நடராஜன்.**—பம்பாயில் நடந்துவ ரும் 'இந்தியன் ஸோஷல் ரிபார்மர்' பத்ரிகையின் அதி பராகிய மிஸ்டர் கே. நடராஜனுடைய புத்ரி மிஸ் காம கோடி நடராஜன் என்பவர் சென்னையில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் கவர்ன்மெண்ட் ஸ்த்ரீ காலேஜில் உதவி சரித்ர போதகராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் பம்பாய் யூனிவர்ஸிட்டியில் பி. ஏ. பரீக்ஷையில் தேறிய வர்.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### Agricultural Mathematics.

விவஸாய கணிதம்.—பன்றி 15,20-வருஷம் வரையில் ஜீவித்திருக்கும். 9,10,11-மாஸப்ராயத்தில் ஈன ஆரம்பிக்கும். ஒரு ஜதை பன்றி மூலமாய், ஈற்றுக்கு 6-வீதம் கணக்கிட்டாலும் 10-வருஷ காலத்திற்குள் 60-லக்ஷம் பன்றிகளுள்ள ஒரு ஸம்ஸாரம் ஏற்படும். ஓரே பன்றிக்கு 2-வருஷத்தில் 4,616-குட்டிகள் உள்ள ஸந்ததி உண்டாயிற்றென்று கேள்விப்படுகிறோம். பன்றிக்குப் பத்துக்குட்டி என்ற வார்த்தை நாம் கேட்டதே. கோடீச்வரராக ஆகவேண்டுமென்று கோருகிறவர்களுக்குப் பன்றி வ்யாபாரமே மிகவும் நல்லது. ஆயிரம் ஏகராநிலம் ஸம்பாதித்து 100-பன்றிகளைக்கொண்டு ஆரம்பித்தால் 5-வருஷத்திற்குள் 475-லக்ஷம் ரூபாய் ஸம்பாதிக்கலாம். இன்ஸ்பெக்டர், ஓவர்ஸியர், ஸூப்ரின்டெண்டுமுதலிய உத்யோகஸ்தர்கள் க்ரமமாய் 200-300-பேர்கள் வேண்டியிருப்பார்கள். வேலைக்காரர்கள் 1,000-பேர் வேண்டியதாயிருக்கும், இவர்கள் எல்லாருடையசம்பளமும் கொடுத்ததுபோக 45-லக்ஷம் லாபமாகும். லக்ஷக்கணக்காகப் பன்றிகளை விக்ரயஞ்செய்வது அஸாத்யமாகையால், அவைகளுடைய கொழுப்பை எடுத்து ஏற்றுமதி செய்தும், கொழுப்பை வத்தி முதலியவைகளுக்கு உபயோகப்படுத்தியும் த்ரவியஞ் ஸம்பாதிக்க வேண்டியது. அவைகளின் தோல்களால் கூட அதிக த்ரவியம் கிடைக்கும். மாம்ஸம், ரத்தம் முதலியவைகளால் அதிகமான பலமுடைய தாய் பூமியானது அபரிமிதமாய் விளையும். புத்திமான்கள் இந்தப் பன்றி வ்யாபாரத்தை பரிகாஸம் பண்ணாமல் செவ்வையாய்க் கணக்குப்போட்டுப் பார்ப்பார்களென்று நம்புகிறோம். ஸந்தேகமிருக்கும் பக்ஷத்தில் ஒரு ஜோடிப் பன்றிகளைத் தமது கொட்டத்திலேயே வளர்த்துப் பார்க்கலாம். விஷ்ணுமூர்த்தி வராகவதாரமெடுத்த மர்மமானது [illegible] விளங்கும்.—இராவிடாபிமானி.

### Brahmans Saluting Non-Brahmans.

ப்ராம்மணர்கள் மற்றவர்களுக்கு வந்தனம் செய்[illegible]—பட்டணத்து அனுபவம்:—ஓய் பாப்பான்! [illegible] கையாலும் கும்புட்டா, நீ மரியாதியில்லாமலே [illegible] வையைத் தாக்குரியே?

ப்ராமணன்.—ப்ராம்மணளுடைய வலது ஹஸ்தத்திலே அக்நி இருக்கு. ஆகையால் சூத்ராளை எடது கையால்தான் ஆசீர்வதிக்க வேணும். வலது கையால் ஆசீர்வாதம் பண்ணினா நீங்க எரிஞ்சு போயுடுவேள்.

ப. அ.—[சிரித்து] என்ன பார்ப்பான்! யாரிட்ட இந்தக் கதை? (கூட இருந்தோரை நோக்கி) இதைக் கேளுங்கய்யா, பாப்பாங்க கையிலே நெருப்பு இருக்காம்!

ப்ரா.—(வெகுண்டு) என்ன ஸந்தேகம்? ஒன்னைப் போலிருந்த ஸந்தேகப் பேர்வழிக்கி மஹான் அப்பய்ய தீக்ஷதர்வாள் நேருக்கு நேராக்கும் காட்டியிருக்கிறார். நெருப்பு இருக்கு காத்திலே, பொய்யே இல்லே. நோக்குத் தெரியாதுன்னு பரிகாஸமா பண்றது. ஏதோ கேடுகாலத்துக்குத்தான் ஒங்களுக்கு இப்படி புத்தி போறது.

ப. அ.—ஸரி. ஸரி. நிறுத்தும். தம்பி சோணுசலம்! அந்த மாடத்துலே, நான் காலமே புடிச்ச எச்சச் சருட்டு வச்சிருக்கேன் கொண்டா. பார்ப்பான் கைலே வச்சுப் பத்துதான்னு பாத்துடுவோம்.—விவேகோதயம்.

### Building Bridges for Germans' use.

ஜெர்மானியர்களுடைய உபயோகத்துக்காகப் பாலங்கட்டினது.—வாலண்டரி ட்ரெய்னிங் கோர் என்னும் படையைச் சேர்ந்த சிலர் பாலங்கட்டும் தொழிலைக் கற்றுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அன்று முழுவதும் பாலங்கட்டுவதே தொழிலா யிருந்தார்கள். வேலை முடிகிறதற்கு ஒரு மணிக்கு முன்னால் கற்றுக்கொடுக்கும் உத்யோகஸ்தர் வேறு வேலையாய்ப் போயிருந்தார். ஸாயந்திரம் பாலங்கட்டுபவர்களைப் போகச் சொல்லுவதற்காக அவர் திரும்பி வந்து, பாலத்தைப் பார்வையிட்டார். உடனே கோபங்கொண்டு அவர் "இந்தப்பாலம் அரைமணியில் விழுந்துவிடுமே. முடிச்சுகளெல்லாம் தப்பாய்க் கட்டி யிருக்கிறீர்களே" என்றார். அதற்கு முடிச்சுகள் போட்டவர்:—அவைகள் சரியாய்த்தானிருக்கின்றன, ஐயா; இந்தப்பாலம் நமக்கல்ல. ஜெர்மானியர்கள் நடந்துபோவதற்காக கட்டப்பட்டிருக்கிறது!"



# CURIOSITIES.

## விநோதங்கள்.

### The Kaiser's Mascot.

கெய்ஸர் வைத்திருக்கும் கவசம்.—கெய்ஸர் சக்ரவர்த்தியினிடம் க்ளோவர் என்னும் செடியின் சிறு கிளையொன்று இருக்கிறது. அதில் நான்கு காய்ந்த இலைகள் இருக்கின்றனவாம். அதை வைத்திருப்பவர்களுக்கு எந்தக் கார்யத்திலும் ஜயமேற்படுமாம். அவருடைய பாட்டனாராகிய 1-வது வில்லியம் ராஜாக இருந்தபோது அவருடைய உத்யோகஸ்தர் ஒருவருடைய புத்ரி இந்தக் கிளையை அரசருடைய தோட்டத்தில் பறித்தாளாம். அந்தக் கிளைக்கு அற்புத சக்தியிருப்பதைக்கண்ட அந்தப் பெண் அதை வில்லியம் அரசருக்குக் கொடுத்தாளாம். வில்லியம் அரசர் 1870-ம் வருஷத்தில் ப்ரான்ஸோடு யுத்தம் செய்தபோது, அதை வைத்திருந்ததால அவருக்கு ஜயம் கிடைத்ததாம். யுத்தம் முடிந்ததும் அரசர் அதை அந்தப் பெண்ணிடம் திருப்பிக்கொடுத்துவிட்டார். தற்போதுள்ள கெய்ஸர் சக்ரவர்த்தி அதைத் தாம் வைத்திருந்தால் எப்போதும் தமக்கு ஜயமேற்படுமென்று எண்ணி அதை அடைந்து எப்போதும் தமது மேல்சட்டையின் உள்பக்கத்துப் பையில் ஜாக்ரதையாய் வைத்திருக்கிறாராம்.

### Economic Management.

செட்டான நிர்வாகம்.—இங்கலண்டிலுள்ள கெண்ட் என்னும் ஜில்லாவில் நார்த்ப்ளீட் என்று ஒரு ஊர் இருக்கிறது. அந்த ஊரிலுள்ள அர்பன் கௌன்ஸில் என்னும் ஸபையார் தாங்கள் எழுதி அச்சிடும் ரிபோர்ட்டுகளில் வாக்யங்களுக்குக் கடைசியிலும் இடையிலும் போடப்படும் க்மா ( , ), முற்றுப்புள்ளி ( . ), ஸெமிகோலன் ( ; ) என்னும் குறிகளை அச்சிடுவதால் செலவு அதிகமாகிறதென்று எண்ணி, தங்களுடைய ரிபோர்ட்டுகளில் அவைகளை உபயோகிக்கக்கூடாதென்று தீர்மானித்திருக்கிறார்களாம். இதனால் அவர்களுக்கு வாரமொன்றுக்கு 1-ரூ. 7½-அணு மிச்சமாகுமாம். அவர்கள் அச்சிடுபவருக்கு 72-வார்த்தைக்கு 5-அணு வீதம் கூலி கொடுக்கிறார்கள். க்மா, முற்றுப்புள்ளி, ஸெமிகோலன் ஆகிய இவைகள் ஒவ்வொன்றும் தனிவார்த்தையாகக் கணக்கிடப்படுகின்றன. இவைகளை அச்சிடுவதால் வர்ஷத்துக்கு 75-ரூ. அதிகச் செலவாகிறதால் அந்த ஸபையார் இவ்விதம் தீர்மானித்திருக்கிறார்களாம்.

### Vegetable Shoes.

தாவர வஸ்துக்களால் செய்யப்பட்ட ஜோடுகள்.—ம்ருகங்களை ஹிம்ஸிக்கக்கூடாதென்றும், அவைகளின் தோல்களால் செய்த ஸாமான்களை உபயோகப்படுத்தக் கூடாதென்றும் சொல்லி அதன்படியே நடந்துவரும் சில மேல்நாட்டு ஜனங்கள் கட்டாபர்ச்சா என்னும் ஒருவகை தாவரப்பொருளால் செய்த ஜோடுகளை உபயோகித்துவருகிறார்கள். கட்டாபர்ச்சா என்பது மலேயா நாட்டில் உள்ள சில ஜாதி மரங்களின் பாலை எடுத்து கெட்டியாக்கி செய்த பொருளாகும். இப்போது ஒரு ஐரோப்பிய கம்பெனியானது மெல்லிய மரச்சட்டங்களை குறுக்கும் நெடுக்குமாக வைத்து நல்ல பசையால் ஒட்டவைத்து அதை ஜோட்டின் அடிப்பாகத்துக்கு உபயோகிக்கிறதாம். இந்த ஜோடுகள் காலஸ்திதி வேறுபாட்டினால் பாதகமடைவ தில்லையாம். மாத்தனுமேன் ஒடிந்துபோவதில்லையாம். காலுக்குப்போட்டுக்கொள்ள ஸௌகர்யமாயிருக்கின்றனவாம்.

### The Mystery of 6.

6-என்னும் எண்ணின் ரகஸ்யம்—6-என்னும் எண்ணுக்கு ஏதோ விசேஷ மிருக்கிறதென்று தெரிகிறது. ஸமீபத்தில் ஜட்லண்டுக்கு ஸமீபத்தில் ஜெர்மன் கப்பல் படைக்கும் ப்ரிட்டிஷ் கப்பல் படைக்கும் நடந்த சண்டை யுத்தம் ஆரம்பித்த 666-ம் நாள் நடந்தது. லார்ட் கிச்சனர் தமது 66-வது வர்ஷத்தில் இறந்து போனார். அவர் இறந்துபோன விஷயம் 1916-ம் வர்ஷம் 6-வது மாஸம் 6-வது நாள் வெளியாயிற்று. லார்ட் கிச்சனர் ஏறியிருந்த ஹாம்ப்ஷைர் கப்பலில் 666-பேர்களே இருந்தார்களாம். 'இது ஆச்சர்யமா யிருக்கிறதென்று' ஒரு ப்ரிட்டிஷ் பத்ரிகை எழுதுகிறது.

### Walking over a Big Fire.

பெரு நெருப்பின்மீது நடத்தல்.—சில தினங்களுக்கு முன் கொச்சியில் ஒருவர் 12-கஜ நீளத்திற்கு [illegible] நெருப்பிட்டுக் கொளுத்தி, அந்த நெருப்பின்மீது நடந்து சென்றார். அவர் "[illegible] வந்து கூறியபடி நெருப்பின்மீது நடந்தேன்; [illegible] தீராதிருந்த நோய் தீர நெருப்பின்மீது நடக்க ப்ரார்த்தனை செய்துகொண்டேன்" என்று தெரிவித்ததாகக் 'லோகோபகாரி' எழுதுகிறது.

## MISCELLANEOUS NEWS.

## நாநா ஸங்கதி.

### Submarine as Merchantman

**ஸப்மரீன்களை வ்யாபாரக் கப்பல்களாக உபயோகிப்பது,**—ப்ரிட்டிஷ் கப்பல் படையானது ஜெர்மனியின் வ்யாபாரக் கப்பல் போக்குவரத்தை முற்றிலும் தடைசெய்து வருகிறது. இதனால் ஜெர்மனிக்கு அன்ய தேசங்களிலிருந்து கடல் வழியாக ஸாமான்கள் வருவது முடியாமல் போயிற்று. இந்த கஷ்டத்தை நிவர்த்திக்க ஜெர்மனியிலுள்ள ஒரு கப்பல் கம்பெனியார் ஸப்மரீன் கப்பல்களைக்கட்டி, அவைகளின் மூலமாய் அன்யதேச வ்யாபாரம் நடத்த உத்தேசித்திருக்கிறார்கள். முதலில் கட்டப்பட்ட ஸப்மரீன் வ்யாபாரக் கப்பல் ''டைச்லண்ட்' என்னும் பெயர்கொண்டது. அது ஜெர்மனியிலுள்ள ப்ரெமர்ஹேவன் என்னும் துறைமுகத்திலிருந்து சென்ற ஜூன் மாஸம் 18-ந் தேதி புறப்பட்டு ஜூலை மாஸம் 9-ந் தேதியன்று அமெரிக்க ஐக்ய நாடுகளின் துறைமுகங்களில் ஒன்றாகிய பால்டிமோர் துறைமுகம் போய்ச் சேர்ந்தது. அந்த ஸப்மரீன் கப்பல் 315 அடி நீளமுள்ளது. அதன் நிறை 791 டன்னாகும். அது ஆயிரம் டன் வரையில் ஸாமான்களை, ஏற்றிக்கொண்டு போகக்கூடும். அது இந்த ப்ரயாணத்தில் 30 லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள 750 டன் சாயச் சரக்குகளையும், ஜெர்மன் கவர்ன்மெண்ட் தபால்கள் அடங்கிய சில மூட்டைகளையும் ஏற்றிக்கொண்டு போயிற்று.

அந்தக் கப்பல் ப்ரமர்ஹேவனிலிருந்து புறப்பட்டுப்போய் ஹெலிகோலண்ட் தீவில் 4-நாள் தங்கிற்றும். அதற்குப் பிறகு ப்ரயாணம் செய்யத்தொடங்கி இங்லீஷ் சானல் என்னும் கடல்வழியாய் மூழ்கிக் கொண்டுபோய் அந்தக் கடலின் அடித்தரையில் 10 மணி நேரம் தங்கியிருந்துவிட்டு பிறகு கொஞ்சதூரம் ஜலத்துக்குள்ளும் பிறகு ஜலத்தின் மேலுமாக ப்ரயாணம்செய்து அமெரிக்காவுக்குப் போய்ச்சேர்ந்தது. அது மொத்தம் 4180-மைல் ஜலத்தில் ப்ரயாணம் செய்தது. அதில் 90-மைல்தான் ஜலத்துக்குள் ப்ரயாணம் செய்தது. ஜலத்தின்மேலே போகும்போது ஏதாவது வேறு [illegible] கண்டவுடன் ஜலத்தில் அமிழ்ந்து கொள்ளுமாம்.

[illegible] தனது ஸாமான்களை அமெரிக்காவுக் [illegible] அதற்கு பதிலாக நிக்கல், ரப்பர் ஆகிய இந்த சரக்குகளை ஏற்றிக்கொண்டு, ஆகஸ்ட் மாஸம் 2-ந்தேதியன்று அமெரிக்காவை விட்டுப் புறப்பட்டு, எதிரியுத்தக்கப்பல்களிடம் அகப்படாமல் ஜெர்மனிக்குத் திரும்பிப்போய்விட்டது. அந்தக் கப்பலில் பீரங்கி முதலியவைகள் ஒன்றும் இல்லாமையால், அதை அமெரிக்கா ஐக்யநாடுகளின் கவர்ன்மெண்டார் வ்யாபாரக் கப்பலாக மதித்து வேண்டிய ஸௌகர்யங்கள் செய்துகொடுத்தார்களாம்.

மேற்சொன்ன ஜெர்மன் வ்யாபாரக் கம்பெனியார் 'ப்ரெமன்' என்று இன்னொரு ஸப்மரீன் வ்யாபாரக் கப்பலையும், வேறுசில ஸப்மரீன் வ்யாபாரக் கப்பல்களையும் கட்டியிருக்கிறார்கள். இவைகளைக் கொண்டு இதரதேசங்களோடு வ்யாபாரம் செய்ய அவர்கள் எண்ணியிருக்கிறார்கள்.

### An Election Set Aside.

**ஒரு எலெக்ஷன் தள்ளுபடி செய்யப் பட்டது.**—சட்டஸபைகளிலும் மற்ற ஸ்தலஸ்தாபன ஸபைகளிலும் மெம்பராவதற்கு அபேக்ஷகராக இருப்பவர், தமக்கு வோட்டுக் கொடுத்தால் இன்ன பள்ளிக்கூடத்துக்குப் பண உதவி செய்வதாகப் பள்ளிக்கூடத்தில் அபிமானம் கொண்டவர்களிடம் சொல்லி வோட்பெறுவது ந்யாயமாகாது. அப்படி வோட் பெற்று எலெக்ஷனானால் அது ரத்தாகி விடலாம். ஸமீபத்தில் பம்பாய் லெஜிஸ்லேடிவ் கௌன்ஸிலுக்கு அபேக்ஷகராக இருந்த ஒரு மகம்மதியர் காண்டேஷ் ஜில்லாவிலுள்ள ஜாம்னர் என்னும் ஊரிலிருக்கும் மகம்மதிய பெண் பாடசாலைக்கு 2000 ரூபாய் கொடுப்பதாகச் சொல்லி அவ்வூரார் வோட்டுகளைப் பெற்றார். இதனால் அவருக்கு அதிக வோட்டுகள் கிடைத்து அவர் சட்டஸபை மெம்பராகத் தெரிந்தெடுக்கப் பட்டார். அவருக்கு அடுத்தபடியாக வோட்டுகள் அடைந்த ஒரு மகம்மதியர் அந்த மாதிரி வோட்பெற்றது சட்டஸபை ரெகுலேஷன் 14-வது ஸெக்ஷன்படி அக்ரமமான முறையாகுமென்று ஆக்ஷேபிக்கவே கவர்ன்மெண்டார் பணம் கொடுப்பதாகச் சொல்லி எலெக்ஷன் பெற்றது செல்லாதென்று தீர்மானித்திருக்கிறார்கள்.

### The Madras Executive Council.

**மதராஸ் நிர்வாக கௌன்ஸில்.**—சென்னை நிர்வாக கௌன்ஸிலின் மெம்பராகிய ஆனரபில் ஸர் ஹாரோல்ட் ஸ்டேவர்ட் ஸமீபத்தில் தமது மெம்பர் ஸ்தானத்திலிருந்து விலகப்போவதால், அவருக்கு பதிலாக மிஸ்டர் கில்மன் மெம்பராக நியமிக்கப்பட்டிருக்கிறார். மிஸ்டர் கில்மன் தற்போது போர்டு [illegible] ஸபையில் நான்காவது மெம்பராக [illegible]



## DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

### THE WAR IN EUROPE.

### ஐரோப்பிய யுத்தம்.

ஸெப்டம்பர்மீ 5-தேதி.

துருக்கியர்கள் கிழக்குப் போர்முகத்தில் யுத்தம்செய்யப் போயிருக்கிறார்கள். 40,000 துருக்கியர்கள் லெம்பர்க்குக்கு வந்திருக்கிறார்களாம்.

6-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் லெபொரெ என்னும் ஊருக்குக் கிழக்கிலும், ஸ்லெரி என்னும் இடத்துக்குக் கிழக்கிலும் முன்சென்று ஓமியகோர்ட் என்னும் க்ராமத்தைப் பிடித்தன.

7-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகள் ல்யூஸ் காடு முழுவதையும் பிடித்திருக்கின்றன. இட்டாலியப் போர்முகத்தில் பனிக்கட்டிவிழ ஆரம்பித்திருக்கிறது.

ஆஸ்ட்ரியர்கள் ட்ரான்ஸில் வேனியாவின் வடக்கில் டாப்ளிகாவிலிருந்து பின்வாங்கிப் போயிருக்கிறார்கள். ப்ரிட்டிஷ் துருப்புகள் கிழக்கு ஆப்ரிக்காவில் கில்வா கிவிஞ்ஜி, கில்வா கிஸ்விவானி என்னுமிடங்களைப் பிடித்திருக்கின்றன.

ஆஸ்ட்ரியர்கள் மாரொஸ் பள்ளத்தாக்கிலும் அலெட்டாவிலும்பின்வாங்கிப் போகிறார்கள். ஜெர்மானியர்களும் பல்கேரியர்களும் ஸிலிஸ்டிரியாவைப் பிடித்தார்கள்.

12-தேதி.

க்ரீஸின் ப்ரதான மந்த்ரியாகிய மா. ஸெய்மிஸ் உத்யோகத்தை ராஜிநாமா கொடுத்துவிட்டார்.

ஆஸ்ட்ரியர்கள் வடக்கு ட்ரான்ஸில்வேனியாவில் பின்வாங்கிப் போகிறார்கள்.

ஸலோனிகா போர்முகத்தில் ப்ரிட்டிஷ் துருப்புகள் ஸ்ட்ருமா நதியைத் தாண்டிப்போய் பல்கேரியர்களைத் துரத்தி யடித்தன.

14-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் பௌசெவெஸ்னிஸ் என்னும் க்ராமத்தையும் அதற்குத் தெற்குள்ள ஒரு க்ராமத்தையும் பிடித்தன. அவைகள் ஸ்லெரிக்கு கிழக்கில் உள்ள 76-வது குன்றையும் பிடித்தன.

15-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் லெப்ரியஸ் என்னும் தோட்டத்தைப் பிடித்தன. ஜெர்மானியர்களும் பல்கேரியர்களும் காவலா என்னும் பட்டணத்தைப் பிடித்தார்கள்.

16-தேதி.

மா. கெலோகெரோபௌலாஸ் என்பவர் க்ரீஸின் ப்ரதம மந்த்ரியாக நியமிக்கப் பட்டிருக்கிறார். அவர் க்ரீஸின் நடுநிலைமையை நிர்வகித்து வருவாரென்று சொல்லப்படுகிறது.

ப்ரிட்டிஷ் துருப்புகள் காம்பின்ஸுக்கும் போவியர்ஸ் பாபாம்ரோடுக்கும் நடுவிலுள்ள இடங்களையெல்லாம் பிடித்தன. ருமேனியர்கள் ட்ரான்ஸில் வேனியாவில் முன் சென்று வருகிறார்கள். டொப்ருட்ஜா ப்ரதேசத்தில் அவர்களும் ரஷ்யர்களும் பின் வாங்கிப் போனார்கள்.

18-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகள் கௌர்ஸலெட், மார்ட்டின் புய்ச், ப்லெர்ஸ் என்னும் க்ராமங்களைப் பிடித்தன. ப்ரெஞ்ச் துருப்புகள் ஸோம்நதியோரமாக வெர்மாண்ட் ஓவிலர்ஸ், பெர்னி என்னும் க்ராமங்களைப் பிடித்தன.

ருமேனியர்கள் ட்ரான்ஸில்வேனியாவில் பெரொஸாஸ், கோஹாலன் என்னும் ஊர்களைப் பிடித்திருக்கிறார்கள். டொப்ருட்ஜா என்னும் ப்ரதேசத்தில் ரஷ்யர்கள் பின்வாங்கி யிருக்கிறார்கள். பல்கேரியர்கள் மொனஸ்டரை நோக்கிப் பின்வாங்குகிறார்கள்.

19-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் டெனிகோர்ட் என்னு மிடத்தைப் பிடித்தன. ப்ரெஞ்சுக்காரர்களும் ரஷ்யர்களும் ஸலோனிகா போர்முகத்தில் ப்ளொரினு என்னும் இடத்தைப் பிடித்தார்கள். ப்ரிட்டிஷ் துருப்புகள் கிழக்கு ஆப்ரிக்காவில் கிண்டி, மிகிண்டானி என்னு மிடங்களைப் பிடித்தன.

20-தேதி.

ட்ரான்ஸில்வேனியாவில் எதிரிகள் ருமேனியர்களை தடுத்து சற்றுப் பின்வாங்கச் செய்தார்கள்.

21-தேதி.

இட்டாலியர்கள் ப்ரெண்டா பள்ளத்தாக்கில் 694-வது குன்றைப் பிடித்தார்கள்.

ஆஸ்ட்ரியர்கள் ட்ரான்ஸில்வேனியாவிலுள்ள ஸ்ட்ரீன் நதிப் பள்ளத்தாக்கில் ருமானியர்களைப் பின்னுக்குத்தள்ளி பெட்ரோஸெனி, ஸுரெனக் என்னுமிடங்களைப் பிடித்தார்களாம்.

25-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகள் கௌஸலெட்டுக்கு கிழக்கில் முன்சென்றன. ஸோம்நதிக்கும் ஆங்கர் நதிக்கும் மத்தியில் கடோமான பீரங்கியுத்தம் நடக்கிறது.

26-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகள் மார்வல், லெஸ்போயுப் என்னும் க்ராமங்களைப் பிடித்தன.

27-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகள் தீப்வல் என்னும் க்ராமத்தையும் காம்பின்ஸ் என்னுமிடத்தையும் பிடித்தன. ருமேனியர்கள் வல்கன் கணவாயில் முன்சென்று கொண்டிருக்கிறார்கள்.

29-தேதி.

கோவலுக்குத் தெற்கில் ரஷ்யர்களை எதிரிகள் தடுத்து வருகிறார்கள். பெட்ரோஸெனிக்கும் வல்கன் கணவாய்க்கும் மத்தியில் ருமேனியர்களுக்கும் ஆஸ்ட்ரியர்களுக்கும் யுத்தம் பலமாக நடந்துவருகிறது.

## INDIAN NEWS.
## இந்திய வர்த்தமானம்.

செப்டம்பர்மீ 8-தேதி.

**ஜெயிலில் வெடிகுண்டுகள் செய்ய முயற்சி செய்தது.**—ராவில்பிண்டி ஸெண்ட்ரல் ஜெயிலிலுள்ள ஒரு கைதி சில ஜெயில் வார்டர்களுடைய உதவியால் வெடிகுண்டுகள் தயார்செய்ய முயற்சித்ததாகத் தெரிகிறது. அந்த ஜெயில் வார்டர்கள் வெடிகுண்டுகள் செய்வதற்கு வேண்டிய ஸாமான்களை ரகஸ்யமாய்க் கொண்டுவந்து கொடுத்தார்களாம். ஆனால் இதை அறிந்த ஜெயில் அதிகாரிகள் கைதியினுடைய அறையைச் சோதித்துப் பார்த்து, வெடிகுண்டு செய்வதற்கான ஸாமான்களைக் கண்டுபிடித்துவிட்டார்கள். கைதியும் அவனுக்கு உதவி செய்த ஜெயில் வார்டர்களும் இந்தக் குற்றத்துக்காக 5-வர்ஷம் கடுங்காவல் தண்டனை யடைந்தார்கள். கைதி லாகூர் ஸதியாலோசனைக் கேஸில் ஸம்பந்தப்பட்டவனும். ஜெயில் ஸூபரிண்டெண்டண்ட் அவர்களை கொடுமையாய் நடத்தினதாகவும் அதற்காக அவரைக் கொலைசெய்ய வெடிகுண்டுகள் செய்ய முயற்சித்ததாகவும் தெரியவருகிறது.

16-தேதி.

**லால்குடி வித்யா காட்சிசாலை.**—லால்குடி வித்யா காட்சிசாலை இன்று திருச்சினாப்பள்ளியில் ஆனரபிள் ஸர். பி. எஸ். சிவஸ்வாமி அய்யரால் திறந்துவைக்கப் பட்டது.

17-தேதி.

**உபாத்யாயர்கள் கான்பரென்ஸ்.**—லால்குடி வித்யா காட்சிசாலையின் ஆதரவில் உபாத்யாயர்களுடைய கான்பரென்ஸ் ஒன்று திருச்சியில் கூடிற்று. ஸப் ஜட்ஜ் எ. எஸ். பாலஸுப்ரமண்ய அய்யர் ப்ரெஸிடெண்டாக இருந்தார். உபாத்யாயர்களுடைய அந்தஸ்து, சம்பளம், எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷையின் ஒழுங்குகள், பாட ஜாப்தாக்கள் முதலிய பல விஷயங்களைப்பற்றித் தீர்மானங்கள் செய்யபபட்டன.

**கவர்னரின் சுற்று ப்ரயாணம்.**—இன்று ஸாயந்திரம் சென்னை கவர்னர் செட்டி நாட்டில் சுற்று ப்ரயாணம் செய்வதற்காக உதகமண்டலத்தை விட்டு ப்ரயாணமானார்.

18-தேதி.

**சென்னை கவர்னர்.**—இன்று சென்னை கவர்னர் இருப்பத்தூருக்கும் தேவகோட்டைக்கும்போய் அங்குள்ள நகரத்தார்களும் மற்றவர்களும் வாசித்துக் கொடுத்த அட்ரெஸுகளைப் பெற்றார்.

19-தேதி.

**சென்னை கவர்னர்.**—இன்று காலையில் சென்னை கவர்னர் தேவகோட்டையில் லேடி பெண்ட்லண்ட் ஸ்திரீகள் குழந்தைகள் ஆஸ்பத்ரிக் கட்டடத்துக்கும் சில்ரண் வைத்யசாலைக்கும் அஸ்திவாரக் கல் நாட்டினார்.

20-தேதி.

**சென்னை கவர்னர்.**—இன்று சென்னை கவர்னர் காரைக் குடிக்குப்போய் அங்கு ஒரு ஹைஸ்கூல் கட்டடத்துக்கும் பெண் பாடசாலைக்கும் அஸ்திவாரக் கல் நாட்டினார்.

பிறகு அவர் கானாடுகாத்தானுக்குப்போய், அங்கே நகரத்தார்களுடைய உபசாரப் பத்ரங்களைப்பெற்று, ஒரு ஸ்த்ரீ ஆஸ்பத்ரிக்கும், பெண்கள் பாடசாலைக்கும் அஸ்திவாரக் கல்கள் நாட்டினார்.

21-தேதி,

**சென்னை கவர்னர்.**—இன்று சென்னை கவர்னர் கானாடுகாத்தானை விட்டுப் புறப்பட்டு கோயிலூர் மார்க்கமாய் மதுரைக்கு வந்து இரவில் உதக மண்டலத்துக்கு புறப்பட்டுப் போனார்.

21-தேதி.

**ஸர் எஸ். பி. ஸின்ஹா.**—வங்காள கவர்னரின் நிர்வாக ஸபையில் மெம்பராயிருந்த ஸர் ஸையத் ஷாம்ஸல் ஹூடாவுக்கு பதிலாக ஸர். எஸ். பி. ஸின்ஹா மெம்பராக நியமிக்கப் பட்டிருக்கிறார்.

23-தேதி.

**தஞ்சாவூர் ஜில்லா கான்ப்ரென்ஸ்.**—இது இன்றையதினம் நாகப்பட்டணத்தில் கூடிற்று. சென்னை வக்கீலாகிய மிஸ்டர் ஸி பி. ராமஸ்வாமி அய்யர் ப்ரெஸிடெண்டாக இருந்து, க்ராமப் பஞ்சாயத்து, ஸ்தலஸ்வய ஆட்சி, கண்ணம்பாடி அணைக்கட்டு, ஜில்லா போர்டு ரெயில்வேக்கள், குடியேற்றம், அச்சுச் சட்டம் முதலியவைகளைப்பற்றிப் பேசினார்.

24-தேதி.

**தஞ்சாவூர் ஜில்லா கான்பரென்ஸ்.**—இது இன்றையதினம் மறுபடியும்கூடி, ரெவின்யூ விஷயங்கள் ஒப்பந்தக்கூலி ஏற்பாடு, ரெயில்வே கஷ்டங்கள், கண்ணம்பாடி அணைக்கட்டு, முதலிய பல விஷயங்களைப் பற்றித் தீர்மானங்கள் செய்தது.

**ஜனசார சீர்திருத்தக் கான்ப்ரென்ஸ்.**—இது இன்று நாகப்பட்டணத்தில் கூடிற்று. தஞ்சாவூர் ஜில்லா ஸர்ஜன் டாக்டர் ஸி. பி. ராமராவ் ப்ரெஸிடெண்டாக இருந்து ஆசார சீர்திருத்தத்தைப் பற்றி ப்ரஸங்கம் செய்தார். பல தீர்மானங்கள் செய்யப் பட்டன.

**நாகப்பட்டணம் கைத்தொழில் காட்சி.**—இன்று மிஸ்டர் வி. பி. மாதவராவ் நாகப்பட்டணத்தில், தஞ்சாவூர் ஜில்லா கான்பரென்ஸால் ஏற்படுத்தப்பட்ட கைத்தொழில் காட்சியைத் திறந்து வைத்தார்.

26-தேதி.

**பர்மியர்களை சேனையில் சேர்த்துக்கொண்டது.**—பர்மா கவர்ன்மெண்டார் பர்மியர்களை சேனையில் சேர்த்துக்கொள்ள ஸம்மதித்து 120 பேர் கொண்ட ஒரு படை சேகரிக்க உத்திரவு போட்டிருக்கிறார்கள்.

30-தேதி.

**மைஸூர் கோவாபரேடிவ் கான்ப்ரென்ஸ்.**—இது இன்றையதினம் மைஸூரில் கூடிற்று. மைஸூர் யுவராஜா இதைத் திறந்து வைத்துப் பேசினார்.


# ஜனபிமானி

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

**THE PEOPLE'S FRIEND.**

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE.'

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 8. Vol. 8. — நளஹு, ஐப்பசிமீ, OCT.—NOVEMBER 1916. — ஸஞ்சிகை 10. No. 10.


## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. | A. | P. | | Foreign. Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | ... ... | 6 | 0 | 0 |
| Half-yearly ... | 2 | 0 | 0 | ... ... | 3 | 0 | 0 |
| Sample copy | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 Page | ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do | ... | 2 | 8 | 0 | do. |
| ¼ do | ... | 1 | 4 | 0 | do |
| 1/16 do | ... | 1 | 0 | 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion, republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | | | அய்ய நாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 | 0 | 0 | ... | 6 | 0 | 0 |
| ஆறுமாஸத்துக்கு ... | 2 | 0 | 0 | ... | 3 | 0 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 | 0 | 0 |
| ½ ,, | ,, ,, | 2 | 8 | 0 |
| ¼ ,, | ,, ,, | 1 | 4 | 0 |
| 1/16 ,, | ,, ,, | 1 | 0 | 0 |

**வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.**

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால், ப்ரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேச்சு தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேண்டுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருபநேயர்கள் அறியவேண்டும்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

ஜனோபிமானி.

புஸ்தகம் 8.] ஸௌஹு ஐப்பசிமீ. [ஸஞ்சிகை 10.

## RUMANIA AND THE WAR.

## ருமேனியாவும் யுத்தமும்.

இரண்டுவர்ஷ காலமாக யுத்தத்தில் சேராமல் தனித்திருந்த ருமேனியா சென்ற ஆகஸ்ட் மாஸம் 27-ந்தேதி யன்று ஆஸ்ட்ரியா ஹங்கேரியின்மேல் யுத்தம்செய்ய ஆரம்பித்துவிட்டது. ருமேனியா இவ்விதம் செய்ததற்கு காரணமின்னதென்பதை அதன் கவர்ன்மெண்டார் வெளியிட்டிருக்கிறார்கள்.

ருமேனியாவானது ட்ரிப்பிள் அல்லையன்ஸ் என்னும் கூட்டுறவில் சேர்ந்திருந்தது. அந்தக் கூட்டுறவு முதலில் ஜெர்மனி, ஆஸ்ட்ரியா, இட்டலி ஆகிய இவைகளுக்குள் ஏற்பட்டதாகும். அதன் நோக்கம் வேறு தேசங்கள் அந்தக் கூட்டுறவைச் சேர்ந்த தேசங்களோடு யுத்தஞ்செய்தால், கூட்டுறவைச்சேர்ந்த மற்ற தேசங்கள் தாக்கப்பட்ட தேசத்துக்கு உதவிசெய்வதும், ஏற்கனவேயுள்ளஉடன்படிக்கைகளின்படி செய்யப்பட்ட ஏற்பாடுகளை மாற்றாமல் பார்த்துக்கொள்வதுமே. இந்த நோக்கங்களை உத்தேசித்துத்தான் ருமேனியா அந்தக் கூட்டுறவில் சேர்ந்துகொண்டது. இந்த யுத்தம் ஆரம்பமானபோது ஆஸ்ட்ரியா ஹங்கேரியானது தான் ஸெர்வியாவின்மேல் யுத்தம் தொடங்கப் போவதாக ருமேனியாவுக்காவது இட்டலிக்காவது தெரியவில்லை. ருமேனியாவானது ஆஸ்ட்ரியா செய்த இந்தக் கார்யத்தில் ஸம்மதப்படவில்லை. சென்ற 1915-ம் வர்ஷம் இட்டலியானது ஆஸ்ட்ரியா ஹங்கேரியின்மேல் யுத்தம் தொடங்கினவுடனேயே ட்ரிப்பிள் அல்லையன்ஸ் என்னும் கூட்டுறவு நின்று போய்விட்டது. இன்னும் ருமேனியா அதில் சேர்ந்திருப்பதற்குக் காரணங்கள் ஒன்றுமில்லை.

ஆஸ்ட்ரியாவின் செய்கைகளால் ருமேனியாவின் முக்யமான உரிமைகளுக்கும் தேசீய நோக்கங்களுக்கும் பாதக மேற்படக் கூடுமாகையால், அது (ருமேனியா) தன்னிஷ்டப்படி நடந்து கொள்ளத் தீர்மானித்துவிட்டது.

ஆஸ்ட்ரியா கவர்ன்மெண்டார் ஸெர்வியாவின் மேல் யுத்தம் தொடங்கினபோது, ஸெர்வியாவில் ஒரு பாகத்தையும் தம் தேசத்தோடு சேர்த்துக்கொள்ளப் போகிற தில்லையென்றும், தேசம் ஸம்பாதிக்க வேண்டியநோக்கம் தங்களுக் கில்லையென்றும் தெரிவித்திருந்தார்கள். ஆனால் ஆஸ்ட்ரியாவானது தான் கொடுத்த வாக்குப்ரகாரம் நடக்கவில்லை. இப்போது இருக்கிற ஸ்திதியைப் பார்த்தால் ருமேனியாவின் பந்தோபஸ்துக்கும் வருங்கால அபிவ்ருத்திக்கும் கெடுத லேற்படக் கூடியதான தேச மாறுபாடுகள் ஏற்படக்கூடுமென்று தெரிகிறது.

மேலும், ட்ரிப்பிள் அல்லையன்ஸில் சேர்ந்திருந்தால் ஆஸ்ட்ரியா ஹங்கேரியிலுள்ள ருமேனியர்களுடைய நிலைமை உயர்வடையுமென்று ருமேனியா கவர்ன்மெண்டார் எண்ணியிருந்தார்கள். ஆனால் சென்ற 30-வர்ஷகாலமாக ஆஸ்ட்ரியா ஹங்கேரியின் கவர்ன்மெண்டார் தம் தேசத்திலுள்ள ருமேனியர்களைத் தாழ்ந்த ஜாதிகளாக எண்ணிப் பலவிதங்களில் ஹிம்ஸித்து வந்தார்கள். யுத்தம் ஆரம்பித்த பிறகாவது ஆஸ்ட்ரியா ஹங்கேரியின் கவர்ன்மெண்டார் ருமேனியர்களின் நிலைமையை உயர்த்துவார்கள் என்று ருமேனியாவின் கவர்ன்மெண்டார் எண்ணினார்கள். ஆனால் ஆஸ்ட்ரியாவோ அவர்களுடைய நிலைமையை உயர்த்துவதற்கு ஆக்ஷேபம் செய்து வந்ததோடு, அவர்களை எதிரிகளினிடம் காப்பதற்கு முடியாமல் கஷ்டங்களுக்கு உள்ளாக்கி வந்தது. ஆகவே ருமேனியாவானது ஆஸ்ட்ரியா ஹங்கேரியின்மேல் யுத்தம் தொடங்கலாயிற்று.



ஸங்க்ரஹமாய்ச் சொல்ல வேண்டுமானால் ருமேனியா யுத்தத்தில் சேர்ந்துகொண்டதற்கு மூன்று காரணங்கள் சொல்லலாம்.

(1) ஆஸ்ட்ரியா ஹங்கேரியிலுள்ள ருமேனியர்கள் யுத்தத்தின் கஷ்டங்களுக்கும் ரஷ்யர்களின் படையெடுப்புக்கும் உள்பட்டிருப்பதைப் பற்றி ருமேனியா கொண்டிருக்கும் கவலை.

(2) ருமேனியா யுத்தத்தில் சேருவதால் யுத்தம் சீக்ரம் முடிந்துபோகுமென்ற நம்பிக்கை.

(3) அதன் தேசீய நோக்கங்கள் நிறைவேறுவதற்கு நேச அரசுகள், அதாவது, ப்ரிட்டிஷ் கக்ஷியார் ரொம்ப ஸாதகமாயிருப்பார்கள் என்ற நம்பிக்கை.

இதன்மேல் ஜெர்மனி, ஆஸ்ட்ரியா, பல்கேரியா, துருக்கி ஆகிய இவைகளும் ருமேனியாவின்மேல் யுத்தம் தொடங்கிவிட்டன.

**ருமேனியாவின் ஸைன்யம்.**—ருமேனியாவில் எல்லா ஆண்களும் ராணுவத்தில் சேரக் கடமைப்பட்டவர்கள். ராணுவ ஸேவகம் செய்ய வேண்டிய மொத்த காலம் 21-வர்ஷமாகும். வாலிபர்களை 21-வது வயஸில் ராணுவத்துக்கு எடுத்துக்கொள்ளுகிறார்கள். முதல் இரண்டு வர்ஷம் பட்டாளத்திலும், பிறகு 5-வர்ஷம் பட்டாளத்தைச் சேர்ந்த முதல் ரிஸர்விலும், பிறகு 10-வர்ஷம் இரண்டாவது ரிஸர்விலும் இருக்கவேண்டும். இவை முடிந்தும் 4-வர்ஷங்கள் மிலீஷ்யா என்னும் ரிஸர்வைச் சேர்ந்தவர்களா யிருப்பார்கள். வர்ஷந்தோறும் 56,200-பேர்களை ராணுவத்துக்கு எடுத்துக்கொள்ளுகிறார்கள். ராணுவத்துக்கு லாயக்கான பாக்கிப் பேர்களை மிலீஷ்யா ரிஸர்வில் சேர்த்துவிடுவார்கள்.

ருமேனியாவின் நிலையான ஸைன்யத்தில் 1,30,000-ஸோல்ஜர்கள் உண்டு. யுத்த காலங்களில் ஸைன்யம் சேகரிக்கும்போது 4-லக்ஷம் முதல் $4\frac{1}{2}$-லக்ஷம் ஸோல்ஜர்கள் வரை கிடைக்கக்கூடும். இந்தத் தொகையோடு, ஸைன்யத்துக்கெடுத்துக்கொள்ளாமல் முதலிலேயே மிலீஷ்யாவில் சேர்க்கப்பட்ட யுத்தத்துக்கு லாயக்கான பேர்களையும், மிலீஷ்யாவிலுள்ள மற்றவர்களையும் சேர்த்தால், 7-லக்ஷம் ஸோல்ஜர்கள் கிடைக்கக் கூடும். பால்கன் தீபகல்பத்திலுள்ள நாடுகளுக்குள் ருமேனியாவுக்குத்தான் ஸேனாபலம் அதிகம்.

**ருமேனியாவின கப்பல் படை.**—ருமேனியாவுக்கு ஒரு கவசமிட்ட க்ரூஸர், 4-மானிடர் என்னும் சிறு யுத்தக்கப்பல்கள், 12-டார்ப்பிடோ போட்டுகள், 12-பீரங்கிப் படகுகள், ஆகிய இவைகள் இருக்கின்றன. இவைகள் வெகுவாய் டான்யூப் நதியில் இருக்கின்றன.

**ருமேனியாவின் அரசர்.**—ருமேனியாவின் அரசருடைய பெயர் பெர்டினண்ட். இவர் தாய் வழியிலும் தகப்பன் வழியிலும் ஜெர்மானியராவர். மேலும் ஜெர்மன் சக்ரவர்த்தியின் வம்சமாகிய ஹோஹன்ஸால்லர்ன் ராஜவம்சத்தைச் சேர்ந்தவர். அவர் ஸாக்ஸி-கோபர்க்-கோதா என்னும் ஜெர்மன் நாட்டின் சிற்றரசருடைய புத்ரியைக் கல்யாணம் செய்துகொண்டார். இவருக்கு இப்போது 50-வயஸாகிறது.

**ருமேனியாவில் முக்யஸ்தர்கள்.**—ருமேனியாவின் ப்ரதம மந்த்ரியின் பெயர் மா. இயான் ஐ. ஸி. ப்ராஷ்யானோ. இவர் 1914-ம் வர்ஷத்தில் இந்த வேலைக்கு வந்தார்.

ருமேனிய ராணுவ உத்யோகஸ்தர்களுடைய தலைவர் ஜெனரல் இலியஸ்கோ என்பவர். இவர் பாரிஸில் ராணுவ விஷயங்களைக் கற்றவர். இரண்டாவது பால்கன் யுத்தத்தில் ருமேனியா பல்கேரியாவின்மேல் படையெடுத்தபோது ரொம்ப ஊக்கத்துடன் யுத்தம் செய்தார். இவ

ருக்கு ராணுவ விஷயங்களில் ரொம்ப பழக்கமுண்டு. ஸைன்யங்களால் ரொம்ப அபிமானிக்கப்பட்டு வருகிறார். ஜெனரல் அவரெஸ்கோ என்பவர் ருமேனியாவின் ஸேனாதிபதியாவார். இவர் 1877-ம் வர்ஷத்து ரஷ்ய-துருக்கி யுத்தத்தில் யுத்தம் செய்திருக்கிறார். இவர் ருமேனியாவிலுள்ள ராணுவ ஸ்கூல்களிலும், இட்டலியில் ட்யூரினில் உள்ள ராணுவ ஸ்கூலிலும் வாசித்து ராணுவ விஷயங்களில் தேர்ச்சி யடைந்தார். இவர் சிலகாலம் யுத்த மந்த்ரியாயும், சீப் அப் தி ஜெனரல் ஸ்டாப் என்னும் ராணுவ உத்யோகஸ்தர்களின் தலைவராகயும் இருந்தார்.

## PINE APPLE.

## அன்னாசிப்பழம்.

அன்னாசிப்பழமானது ரொம்ப குளிர்ச்சியும் இனிமையுமான பழம். அன்னாசிச்செடி அமெரிக்காவின் உஷ்ண ப்ரதேசங்களில் இயற்கையாய் வளரும்செடி. தக்கவிதமாய்ப் பயிரிட்டு, விதைக் கன்றுகளை சரியாய்த் தெரிந்து நட்டு, அதன் தன்மையை வ்ருத்திசெய்திருக்கிறார்கள். பஹாமாஸ்,ஜமெய்க்கா, ஆண்டிகுவா, முதலிய மேற்கு இந்திய தீவுகளில் அன்னாசியை ஒரு முக்யப் பயிராக சாகுபடி செய்துவருகிறார்கள். ஐரோப்பாவுக்கு இந்த இடங்களிலிருந்துதான் விசேஷமாய் அன்னாசிப்பழம் போகிறது.

அன்னாசி பயிர்செய்வதற்கு ஏற்றநிலம் மணல்பாங்கான வண்டல் நிலமாகும். ஆனால் வண்டலில்லாத மணல் நிலத்திலும் அது ஸுமாராக வளரும். செவ்வண்டல் நிலத்தில் நல்ல வடிகால் இருந்தால், அதை நன்றாய்க் கொத்திவிட்டு அதிலும் பயிர்செய்யலாம். இந்தப் பயிருக்கு நல்ல வடிகால் இருக்கவேண்டியது அத்யாவச்யமானது. நிலத்தில் சுண்ணாம்பு ஸத்திருந்தால் பயிருக்கு ரொம்ப நல்லதாகும். உஷ்ண ப்ரதேசங்களில் ஸமவெளிகளிலும் மலைமேலும் அது நன்றாய் விளையும். ஆனால் மலை ப்ரதேசங்களில் விளையும் பழத்தைவிட ஸமவெளிகளில் விளையும் பழம் ரொம்ப உயர்ந்ததா யிருக்கும்.

அன்னாசிச்செடியின் அடியில் உண்டாகும் கன்றுகளிலிருந்து தான் அது விசேஷமாய்ப் பயிர் செய்யப்படுகிறது. இலைகளுள்ள பழத்தின் மேல் பாகத்தையும் விதையிலிருந்து பயிரான கன்றுகளையும் நடலாமென்றாலும், அதிக நிலங்களில் பயிரிடுவதானால், கீழ்க்கன்றுகளிலிருந்து நடுவதே அதிகச் செலவில்லாத வழி.

அதை சாகுபடி செய்வது ஸுலபமானது. நிலத்தை செடி கொடிகள், புல்பூண்டு,களை இவைகளில்லாமல் பண்படுத்தி நன்றாய்க் கொத்தி கிடங்குகளாகப் பிரிக்க வேண்டும். கிடங்கின் ஆழம் 1½-அடி இருக்கவேண்டும். அகலம் 2 அடி இருக்கவேண்டும். குப்பை செத்தை களைகள் முதலியவைகளை கிடங்குகளில்போட்டு மண்ணால் மூடிவிடலாம். கன்றுகளைக் கிடங்குகளில் 3 அடி தூரத்துக் கொன்றாய் நடுவது வழக்கம். அப்படியானால் ஒரு ஏக்கருக்கு 5000 கன்றுகள் நட வேண்டியிருக்கும். ஆனால், செடிகளுக்கு மத்தியில் அதிக இடைவெளியிருப்பது நல்லது. இதனால் அவைகள் நன்றாய் வளருவதோடு, களைகள் எடுப்பதும ஸுலபமாகும். செடிகள் நெருக்கமா யிருந்தால், களை யெடுக்கும்போது அன்னாசி இலைகளிலுள்ள முட்கள் குத்தும். ஆகையால் கிடங்குகளை ஆறடி தூரத்துக்கு ஒன்றாக அமைத்து ஒவ்வொரு கிடங்கிலும் செடிகளை 3 அடி தூரத்துக்கொன்றாய் நடுவது நல்லது. இப்படி நட ஏக்கருக்கு 2500 கன்றுகள் வேண்டியிருக்கும். முதல் வர்ஷத்தில் 2500 பழங்கள் கிடைக்கும். முதல் வர்ஷம் பழம் பறித்தவுடன் ஒவ்வொரு செடியிலும் 4 கன்றுகளைவிட்டு மற்றவைகளை எடுத்துவிட வேண்டும். 2-வது வர்ஷம் 10000 பழங்கள் கிடைக்கும். நன்றாய் மட்[illegible] ஒரு இந்தப் பயிருக்கு ஏற்றது. நன்றாய் [illegible] தொழுவத் தெருவைப் போட்டால் பயிருக்கு கெடுதல்



ஏற்படும். நிலத்தில் களையில்லாதபடி பார்த்துக் கொள்வதோடு, கோடை காலங்களில் க்ரமமாய் ஜலம் பாய்ச்ச வேண்டும். ஒவ்வொரு தடவையும் பழங்களைப் பறித்த பிறகு நிலத்தை நன்றாய்க் கொத்திவிட்டு, மட்கின எருவை ரொம்பப்போட்டு ஜலம்விட வேண்டும். மூன்று நான்கு வர்ஷங்களுக்குப் பிறகு செடிகள் செழுமையாய் வளரமாட்டா. அப்போது அவைகளை வேரோடு பிடுங்கி எறிந்து, புதுச்செடிகளை நட வேண்டும். புதிதாக நடும்போது, கிடங்குகளுக்கு மத்தியிலுள்ள இடைவெளியைக் கிடங்குகளாக அமைத்து அவைகளில் புதுச் செடிகளை நடவேண்டும். இப்படி சில வர்ஷங்களுக்கொரு தடவை இடம்மாற்றி செடிகளை நடுவது அவச்யமானது.

செடிகள் நட்ட 9-வது மாஸத்தில் பழங்களை பறிக்கலாம். வெளியூர்களுக்கு அனுப்புவதாயிருந்தால், பழங்களைச் சற்று காய்வெட்டாக இருக்கும்போதே பறித்துவிடவேண்டும், பழங்களை காம்புடன், கூர்மையான கத்தியால் நறுக்கி எடுக்கவேண்டும். பழங்கள் நசுங்கிப் போகாதபடி கையாளவேண்டியது அவச்யம். அவைகளை நல்ல காற்றோட்டமுள்ள மரப் பெட்டிகளில் வைத்து வெளியூர்களுக்கு அனுப்பலாம்.

நமது ராஜதானியில் இந்தப்பயிரை ஒரு வ்யாபாரப் பயிராக க்ரமமாய் சாகுபடி செய்வது கிடையாது. அங்குமிங்கும் ஸ்வல்ப விஸ்தீரணமுள்ள நிலங்களில் பயிரிடுகிறார்கள். அதற்காக வென்று எதுவும் பாடுபடுவதில்லை. அதனால் நல்ல பழங்கள் கிடைப்பதில்லை. நமது ராஜதானியில் செங்கல்பட்டு ஜில்லாவில் கடல்கரை க்ராமங்களில் மாந்தோப்பு தென்னந்தோப்புகளில் இது பயிர் செய்யப்படுகிறது. இங்கே பயிருக்கு களைபிடுங்குதல், உரமிடுதல் முதலிய எந்த வேலைகளையும் செய்வதில்லை. அன்னாசிப் பயிர் நிழலான இடங்களில் நன்றாய் வளரும். மாந்தோப்புகளிலும், தென்னந் தோப்புகளிலும் வேறு பயிர் ஒன்றும் வளராததலால் அவ்விடங்களில் அன்னாசியைப் பயிரிடுவது நல்லது. இதனால் மா, தென்னை ஆகிய இவைகளுக்கும் ஸௌகர்யம் ஏற்படும், ஏனென்றால், அன்னாசிக்குக் களையெடுத்துக் கொத்தி ஜலம் விட்டு உரமிடுவதால், மாமரங்களுக்கும் தென்னமரங்களுக்கும் உரமும், ஜலமும் கிடைக்கும்.

அன்னாசிப்பழம் தேகத்துக்குக் குளிர்ச்சியானது. அதற்கு அநேக மருந்து குணங்கள் உண்டு. அதன் ரஸத்திலிருந்து ஷர்பத்து செய்யலாம்.பழங்களை சர்க்கரைப் பாகில்போட்டு பத்ரப்படுத்தி வேண்டும்போது உபயோகிக்கலாம். அன்னாசிமடலிலிருந்து உயர்ந்த நார்எடுக்கலாம்,

## EVILS OF DRINKING COFFEE.

## காப்பி குடிப்பதின் கெடுதிகள்.

காப்பி குடிப்பதால் தேகத்திற்குப் பல கெடுதிகள் உண்டாகின்றன. காப்பி ஆகாரப்பொருளல்ல. தேகத்தை புஷ்டியாக்கக்கூடிய ஸத்து அதில் ஒன்றும் கிடையாது. அதில் நாம் சேர்க்கும் பால், சர்க்கரை ஆகிய இவைகளால் தான் ஏதாவது ஆகார ஸத்துக்கள் தேகத்தில் சேரக்கூடும். காப்பியானது ஒரு விஷமாகும். மேலும் அது அபின், சாராயம், புகையிலை ஆகிய இவைகளைப்போல் கெட்ட வாடிக்கையை உண்டாக்கக்கூடிய ஒரு மருந்துப் பொருளாகும். காப்பி குடிக்க ஆரம்பிப்பவர் வரவர அதன்மேல் அதிக ப்ரியங்கொண்டு, பிறகு வாடிக்கையாகக் குடிக்கத் தலைப்படுகிறார்கள். இதில் கெடுதி என்னவென்றால், ஒரு நாள் காப்பி இல்லாமல் போனால், அன்று ஒரு வேலையும் செய்யத்தோன்றாமல் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. தலைவலியும் வேறுவலிகளும் உண்டாகின்றன. மனஸுக்கு ஸமாதான மேற்படாமல் ஸஞ்சல முண்டாகிறது. இதைத் தவிர வேறு கெடுதலொன்றுமில்லையென்று பலர் எண்ணி அதை வாடிக்கையாய்க் குடித்து வருகிறார்கள். அது ஒரு

கொடிய விஷமுள்ளபதார்த்தமென்று பலருக்குத் தெரியாது. இதைக் குடிப்பதால், ஜீர்ணக் கருவிகளும், ஹ்ருதயமும், நரம்புகளும், மூளையும் கெடுதலடைகின்றன. ஆகையால் தேகஸுகத்தை விரும்புகிறவர்கள் இதைக் குடிக்காமலிருக்க வேண்டியது அவச்யமாகும்.

காப்பிக்கொட்டையில் காபீன் என்று ஒரு விஷமும், டான்னின் என்று ஒரு துவர்ப்பான ஸத்தும் இருக்கின்றன. தேயிலையிலும் காபீனைப்போன்ற குணமும் செய்கையும் உள்ள தீன் என்ற விஷஸத்து இருக்கிறது. தினம் காப்பியாவது தேயிலையாவது குடிப்பதால் விஷஸத்துக்கள் தினம் கொஞ்சமாக உடம்பில் சேருகின்றன.

டான்னின் என்ற ஸத்தானது உமிழ்நீராலும் காஸ்ட்ரிக் ஜூஸ் என்னும் பாசகநீராலும் உணவு ஜீர்ணமாவதை தடை செய்கிறது. மேலும், வாயிலிருந்து அன்னாசயத்துக்கு உணவு போவதற்கு ஏற்பட்ட குழாயின் உட்புறத்தில் எரிச்சலை உண்டாக்குகிறது. ஆகாரத்தில் டான்னின் கலப்பதால் ஆகாரம் ஜீர்ணமாகக்கூடாத நிலைமையை அடைகிறது.

காப்பி குடிப்பதால் ஏற்படும் கெடுதிகளை இங்கு ஸங்க்ரஹமாய் எழுதுகிறோம். அதனால் நரம்புகள் பலஹீனம் அடைந்து அஜீர்ண ரோகமும் குன்மமும் உண்டாகும். காப்பி குடிக்கும் வழக்கத்தை விட்டாலொழிய இந்த வ்யாதியை ஸ்வஸ்தப் படுத்துவது அஸாத்யம், காப்பி குடிப்பதால் ஏற்படும் அஜீர்ண ரோகத்தின் குறிகள் என்னவென்றால், வாந்தியெடுக்க மனமேற்படுதல், தலை மயக்கம், உடம்பு வெளுத்து பலம் குறைதல், தலைவலி, உடம்புத் தளர்ச்சி, வயிற்றுவலி, சிலவேளைகளில் அதிஸாரம் ஆகிய இவைகளாகும்.

காப்பி குடிப்பதால் ஹ்ருதயத்துக்கு மிதமிஞ்சிய வேலை ஏற்பட்டு, கடைசியில் அது பலஹீனமாகச் சோர்வடைகிறது.

காப்பி குடிப்பதால் இன்னொரு முக்யமான கெடுதி ஏற்படுகிறது. அதாவது, நரம்புகளும் மூளையும் கெடுதல் அடைவதே. காப்பி குடிப்பதால் நரம்புகள் முதலில் சுறுசுறுப்படைகின்றனவென்றாலும், பிற்பாடு அவைகள் சோர்வடைந்து, ஸ்வாதந்த்ரிய மிழந்து விடுகின்றன. அவைகள் தங்களுடைய குணங்களை இழந்து விடுவதால்தான், நமக்கு தலைவலி முதலிய உபத்ரவங்கள் போய்விட்டன போல் தோன்றுகின்றன. காலக்ரமத்தில் நரம்புகளும் மூளையும் ஸ்வாதீன மற்றுப்போய் தங்கள் வேலைகளைச் செய்ய முடியாமல் போகின்றன. காப்பி குடிப்பதால் தூக்கமின்மை ஏற்படுகிறது. அறிவும் மழுங்கிப்போகிறது.

## DEEPAVALI.

BY PANDIT V. SUBRAMANIA AIYAR.

## தீபாவளி.

தீபாவளி என்பதற்கு தீபத்தின் வரிசை என்று அர்த்தம். தீபத்தை வைத்துக்கொண்டு இந்த ஹிந்து பண்டிகையைக் கொண்டாடுவதினாலேயே இதனை தீபாவளி என்று சொல்கிறார்கள் எனவும் சொல்லுவார்கள். இப் பண்டிகையை ஐப்பசி மாஸம் க்ருஷ்ண பக்ஷம் சதுர்த்தசியன்று வர்ஷவாரியில் ஹிந்துக்கள் கொண்டாடுகிறார்கள். இத்திதியன்று தான் பூர்வத்தில் ப்ராக்ஜோதிஷபுரத்து மன்னனாயிருந்த நரகாஸுரன் என்னும் ராக்ஷஸன் ஸ்ரீ மஹா விஷ்ணுவாகிய ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவினாலே ஸம்ஹரிக்கப்பட்டான். இந்நரகாஸுரன், ஸ்ரீ மஹா விஷ்ணுவுக்கு பூமாதேவியினிடத்துப் பிறந்த புத்ரன். பூமியைப் பாயாய்ச் சுருட்டிக்கொண்டு ஒரு அஸுரன் ஒரு ஸமயத்தில் பாதாள லோகத்தில் போய் மறைந்துகொண்டான். அப்போது திருமால் வராஹாவதாரஞ்செய்து பூமியைத் தன் கொம்பினால் குத்தி எடுத்தார். அப்போது அத்திருமாலின் ஸ்பரிசத்தால் பூமிதேவிக்குப் பிறந்தவன் நரகன். இவன் அந்த ஸமயத்தில் அவ்விருவர்க்கும் பிறந்தமையால் அஸுரனானான். இவன் ப்ராக்ஜோதிஷம் என்ற பட்டணத்திலிருந்துகொண்டு, ஸகல ப்ராணிகளையும் மிகவும் உபத்ரவித்தான். தேவர், ஸித்தர், கந்தர்வர் முதலியவர்களுடைய கன்னிகைகளையும், ராஜாக்களின் பெண்கள் பலரையும், தான் மணந்து கொள்வதாகக் கொண்டுபோய், அவர்களைச் சிறை வைத்தான். இவன் வருணபகவானது குடையையும், மந்திரகிரியின் சிகரமான ரத்ன பர்வதத்தையும், தேவர்களின் தாயான அதிதி தேவியின் குண்டலங்களையும், கவர்ந்துபோனான். இந்த்ரலோகத்தில் இந்த்ரனுக்கு ஸொந்தமான ஐராவதம் என்ற வெள்ளை யானையையும் இவன் தன் நகரம் கொண்டுபோய் சேர்க்க ப்ரயத்தனப் பட்டான். அந்த ஸமயத்தில் இந்த்ரன் ரக்ஷகனாகிய ஸ்ரீ க்ருஷ்ணபரமாத்மாவிடம்போய் அஞ்சி முறையிட்டான். அப்போது பகவான் இந்த்ரனுக்கு அபயம் கொடுத்து தமது வாகனமாகிய கருடனை வரவழைத்தார். உடனே பூமி தேவியின் அம்சமான ஸத்யபாமையுடன் கூட அவர் கருடன்மேலேறி ப்ராக்ஜோதிஷ நகரத்தில் ப்ரவேசித்தார். அந் நகரத்திலுள்ள முரன் முதலிய அஸுரர்களையும் கடைசியாக நரகாஸுரனையும் சக்ராயுதத்தால் ஸம்ஹரித்தார்.



இப்படி அவ்வஸுரன் கொல்லப்படும்பொழுது அவன் பூர்வ ஞானத்துடன் திருமாலிடத்து ஒரு வரத்தை யாசித்தான். தான் இறந்த தினத்தை பூமியிலுள்ளார் யாவரும் திருவிழாவாகக் கொண்டாட வேண்டுமென்றும், அன்றைய தினத்தில் பஞ்சபஞ்ச உஷத்காலத்தில் அப்யங்க ஸ்நாநம் பண்ணுபவர் கங்கா ஸ்நான பலத்தை யடைய வேண்டுமென்றும், அன்று புது ஆடை தரித்து ஜனங்கள் குதூகலமாய்க் காலங் கழிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான். ஸ்ரீ பகவானும் அவ்வாறே யாகுகவென்று வரம் கொடுத்தார். அன்றுமுதல் இன்று வரையில் அவ்வநுஷ்டானம் ஹிந்து ஜன ஸமூகத்தில் வழக்கத்திலிருந்து வருகிறது. இது இப்பண்டிகையைப்பற்றிய புராண வரலாறு. அன்றைய தினத்தில் அஸுரபாதை நீங்கி ஸுகம் உண்டானதால் உலகத்தவர் அந்த தினத்தைக் குதூகலமான தினமாகக் கொண்டாடுகிறார்கள் என்று சொல்லுதலிலும் பிசகிராது.

கொண்டாடும்முறை.—அன்றையதினம் ஸூர்யன் உதயமாகு முன்னமேயே ஹிந்துக்கள் எல்லாரும் எழுந்திருந்து எண்ணெய் தேய்த்துக்கொண்டு ஸ்நானம் செய்வது வழக்கம். ஸ்நானம் பண்ணினதும் சிறியவர் முதல் பெரியவர் வரையில் புதுவஸ்த்ரங்களைக்கட்டிக்கொள்ளுகிறார்கள்.

ஒவ்வொரு வீட்டிலும் புதிதாக விவாகமான மாப்பிள்ளைகளை வீட்டுக்கு அழைத்து அவர்களுக்கு வஸ்த்ராபரணங்கள் வெகுமதி யளிப்பதுண்டு. அது தவிர விருந்துச் சாப்பாடும் அவ் வீடுகளில் பலமாய் நடக்கும்.

தீபாவளி ஸமயம் ஹிந்துக் குழந்தைகள் குதூகலமாய்க் காலம் கழிக்கும் காலமாகும். சீனதேசத்துக் கைத்தொழிற் பொருள்களாகிய சீனி வெடிகள் என்ற படாசுக்கட்டுகள் சுடுவதில் குழந்தைகள் காலம் போக்குவார்கள். உண்டைவெடிகள், வெண்காய வெடிகள் முதலியன செய்ய முயலும் பிள்ளைகள் இத்தீபாவளி காலத்தில் ஆபத்துக்குள்ளாகிச் சில வேளைகளில் முக்யமான தம் உறுப்புக்களையும் இழப்பதைக் காணப் பரிதாபமா யிருக்கும். இக் காலத்தில் தான் வீட்டில் வேலை பார்க்கும் கணக்குப்பிள்ளை முதலானவர்களுக்கு மிராசுதாரர்கள் எண்ணெய் முதல் தீபாவளிக்கு வேண்டிய பல ஸாமான்களையும் உலுப்பையாகக் கொடுத்துதவி, அன்றையதினம் கட்டிக்கொள்ளவேண்டிய புதிய ஆடைகளையும் பரிசாகக் கொடுப்பார்கள். ஏழை ஜனங்களும் கடன் வாங்கியாவது தீபாவளிக் கொண்டாட்டத்தை சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். தீபாவளிக் கொண்டாட்டம் ஹிந்துக் குடும்பங்களில் எதிர்பாராத வருத்தம் தரும்

ஸம்பவங்கள் அவ் வர்ஷத்தில் நேர்ந்திருந்தா லொழிய நிறுத்தாமல் கொண்டாடப்படும்.

அன்றையதினம் அப்யங்க ஸ்நாநம் கங்கா ஸ்நாந பலனாகவே, அந்த ஸ்நாநத்தைப் பண்ணி விட்டுக் காவேரி தீரவாஸிகள் விடியற்காலையில் காவேரியில் ஸ்நாநம் பண்ணப்போவார்கள். இந்த ஸ்நாநங்கள் செய்தபிறகு ஒருவருக்கொருவர் கங்கா ஸ்நாநம் ஆயிற்றா என்று கேட்டுக்கொள்ளும் வழக்கமும், அவர்கள் கங்கா ஸ்நாநமுமாயிற்று; காவேரி ஸ்நாநமும் ஆயிற்று என்று சொல்லிக்கொள்ளும் வாடிக்கையும் கேட்க ஆநந்தமாகவே இருக்கும். இப்படிப்பட்ட ஸந்தோஷ ஸமாசாரத்தை ஒருவருக்கொருவர் வீடுகளுக்குப்போய் விசாரிக்கும்போது நடக்கும் தாம்பூலம் கொடுக்கும் மரியாதையும் மிகுதியும் கொண்டாடத் தக்கது. அன்றைய அப்யங்க ஸ்நாநத்திற்கு முந்தி ஸ்திரீக்கள் ஒவ்வொருவரும் அநேக பக்ஷணங்கள் தயாரித்து வைத்திருந்து அவைகளை பகவானுக்கு நிவேதனம்பண்ணி ஸ்நாநம் பண்ணுவார்கள். ஸ்நாநத்திற்குப் பிறகு நெய்யில் ஸம்யுக்தப்படுத்திக் கிளறி வைத்திருக்கும் மருந்தையும், பின்பு பகவானுக்கு நிவேதிக்கப்பட்டு வைத்திருக்கும் பக்ஷணங்களையும் குதூகலமாய் உட்கொள்ளுவார்கள்.

பண்டித வி. ஸுப்ரமண்ய அய்யர்.

# CO-OPERATION AMONG ANIMALS.

## ம்ருகங்களுக்குள் ஐக்ய பாவம்.

காட்டில் வஸிக்கும் அநேக ஜாதி ம்ருகங்கள் கூட்டங்கூட்டமாய் வஸிப்பதில் ப்ரியமுள்ளவையாயிருக்கின்றன. அதோடு அவைகளில் பல ஒன்றுக்கொன்று உதவியாயுமிருக்கின்றன. இப்படி உதவிசெய்வதிலும் அவைகள் சில ஒழுங்குகளுடன் நடப்பதாகத் தெரிகிறது.

மான், ஸீப்ரா என்னும் வரிக்குதிரை முதலிய [illegible] ஜாதி ம்ருகங்கள் எப்போதும் கூட்டமாய் மேய்ந்துகொண்டிருக்கும். இவைகளுக்கு கண், காது முதலிய இந்த்ரியங்கள் ரொம்ப கூர்மையாயிருப்பதால், விரோதி ப்ராணிகள் வருவதை சீக்ரமறிந்து, ஒன்றுக்கொன்று தெரிவித்து, சீக்ரமே ஓடிப்போய் எதிரி ப்ராணிகளிடமிருந்து தப்பித்துக்கொள்ளுகின்றன.

காட்டெருமை, காட்டுப்பசு, காட்டுக்குதிரை முதலிய ம்ருகங்களை புலிபோன்ற ரொம்ப பலமுடைய ப்ராணிகள் எதிர்க்கவந்தாலும், அவைகள் ஒன்றுசேர்ந்துகொண்டு அந்த விரோதிகளைத் தாக்கித் தொந்தரை செய்யும். அவைகள் கூட்டமாய் மேய்ந்துகொண்டிருக்கும்போது அவைகளுடைய குட்டியை ஏதாவது விரோதி ப்ராணி பிடிக்க முயன்றால், அந்த ம்ருகங்கள் இந்த விரோதியைச் சுற்றிக்கொண்டு, மாடுகளானால் கொம்புகளால் முட்டியும், குதிரைகளானால் கால்களால் உதைத்தும், உபத்ரவப்படுத்தும். மேற்கு இந்திய தீவுகளில் ஓனேஜர் என்று ஒருவகைக் காட்டுக்கழுதைகள் இருக்கின்றன. இவைகள் கூட்டமாய் மேய்ந்துகொண்டிருக்கையில், ஏதாவது விரோதி ப்ராணி வந்துவிட்டால், எல்லாம் ஒன்றுசேர்ந்து விரோதி ப்ராணியை வளைத்துக்கொண்டு கால்களால் நன்றாய் உதைக்கும். மேற்சொன்ன ப்ராணிகளிடம் ஸ்வயநலம் என்பது கிடையாதுபோலும். அவைகளுள், பலமற்ற ப்ராணிகளைக் காப்பாற்றுவதில் மற்ற பலமுள்ள ப்ராணிகளெல்லாம் ரொம்ப ஊக்கமாயிருக்கின்றன. இந்த ம்ருகங்கள் விரோதி ப்ராணிகளைத் துவையலாடாமல் திரும்புவதில்லை.

ஆப்ரிக்காவின் சில பாகங்களில் உள்ள மாடுகள் மனிதர்கள் வசமடைந்து பழக்கமடைந்திருந்தபோதிலும், அவைகள் பகல் பொழுதில் ஸ்வயேச்சையாய்த் திரியும்போது ஏதாவது விரோதி ம்ருகம் அவைகளின் ஸமீபம் வந்துவிட்டால், அது உயிரோடு திரும்புவது அரிதாம். எல்லாமாடுகளும் ஒன்றுசேர்ந்துகொண்டு, விரோதியைத்தாக்கி, அதை உருத்தெரியாமல் பிண்டம் பிடித்துவிடுமாம்.



பாபூன் என்னும் குரங்குகளும் இவ்விதமே ஒற்றுமையாயிருந்து எதிரியைத் தாக்குமாம். இவைகளுள் ஆண் குரங்குகள் ரொம்ப பலமுடையவை இவைகள்தான் எதிரிகளைத் தாக்கும். ஒரு ஸமயம் ஒரு வேட்டைக்காரர் ஆப்ரிக்காவிலுள்ள ஸோமாலிலாண்டில் வேட்டையாடிக்கொண்டிருக்கையில், புது ஜாதியென்று தோன்றின ஒரு பாபூன் குரங்கைக்கண்டார். அது தனியாயிருந்தது. அதை அவர் சுட்டார். அது காயமடைந்ததே தவிர சாகவில்லை. உடனே அது சத்தமிட்டது. அந்த சத்தத்தைக் கேட்டு தூரத்திலிருந்த பல ஆண் பாபூன் குரங்குகள் வேட்டைக்காரரை நோக்கி ஓடிவந்தன. ஆனால் அவர் இவ்விதம் குரங்குகள் வரும் என்று அறிந்திருந்ததால், உடனே தமது குதிரையை வேகமாய் ஓட்டிக்கொண்டு ஓடிவிட்டார்.

பாபூன் குரங்குகள் தங்களுடைய பாதுகாப்பு விஷயமாக ரொம்ப ஏற்பாடுகள் செய்துகொள்கின்றனவாம். அவைகளுக்குள் தலைவர்கள் உண்டு. விரோதிகள் எங்கேயாவது வருகிறார்களா என்று பார்க்க தங்களுள் சிலவற்றை வேவுகாரர்களாக அனுப்புவதுண்டு. சில குரங்குகளைப் பாராக்காரர்களாக சில இடங்களில் இருக்கச்சொல்வதுமுண்டாம். வேட்டைக்கு வரும் நாய்கள் இவைகளிடம் அகப்பட்டால், உயிருடன் திரும்புவது அபூர்வம். பாபூன்கள் ஒரே நொடியில் அவைகளை கொன்றுவிடும். இந்த பாபூன்கள் ஒவ்வொன்றுமே ரொம்ப பலமுடையது. இவைகள் ஒன்றுசேர்ந்து மனிதர்களைத் தாக்கினால் மனிதர்களிடம் துப்பாக்கியிருந்தாலும், அவர்கள் தப்புவது கஷ்டம்.

சில இடங்களில் ஓநாய்கள் தீனிக்காக இதர ப்ராணிகளை வேட்டையாடுகையில், அவைகளுள் சிலவற்றை வேட்டையில்கலக்காமல் நிறுத்திக்கொண்டு, வேட்டையாடுகின்றன. முதலில் வேட்டையாடினவை களைத்துப்போனால் நிறுத்தப்பட்டிருப்பவை வேட்டைக்குப் போகும்.

சில ப்ராணிகள் ஒன்றுகூடி ரொம்ப புத்தி சாதுர்யமாக வேலைசெய்கின்றன. பெலிகன் என்று ஒருவகை நீர்க்கோழிகள் ஜலத்தில் அரை வட்டமாக நின்றுகொண்டு தமக்கெதிரில் உள்ள மீன்களையெல்லாம் கரைப் பக்கமாய் ஓட்டிக்கொண்டுபோய், அதிக ஆழமில்லாததும் ஸ்வல்ப விஸ்தீரணமுள்ளதுமான இடத்தில் விரட்டி, அவைகளைப் பிடித்துத் தின்னுமாம். இப்படிச் செய்வதனால் அந்த நீர்க்கோழிகளுக்கு பகுத்தறியும் சக்தி இருக்கிறதென்று ஏற்படுகிறது.

பீவர் என்னும் ஒருவகை ப்ராணிகள் வீடுகள் கட்டி வஸிக்கின்றன. அவைகள் வெகுவாய் ஆற்றங்கரையோரமாக இருக்கும். அவைகள் ஆற்றின் குறுக்கே அணைகள் போடும். அவ்விதம் அணைபோடுவதற்கு வேண்டிய மரங்களை தூரத்திலுள்ள காடுகளிலிருந்து வெட்டி, மரங்களிருக்கும் இடத்துக்கும் ஆறுகளுக்கும் கால்வாய்கள் தோண்டி, அவைகளில் ஜலத்தை விட்டு, மரங்களை ஜலத்தில் மிதக்கவிட்டு, ஸுலபமாய் ஆற்றங்கரைக்குக் கொண்டுபோகுமாம். அவைகள் கட்டும் குடிசைகள் சில ஸமயம் இரண்டு மாடிகள் உள்ளனவாயிருப்பதுண்டு.

அநேக ப்ராணிகள், தாங்கள் வேலையில் கவனமாயிருக்கும்போது எதிரிகள் வருவதை கவனிக்க, தமது இனத்தைச் சேர்ந்த சில ப்ராணிகளை பாராக் காரர்களாக நியமிப்பதுண்டு. அந்த வேலை சிலருக்கு மாத்ரம் சாச்வதமான வேலையாயிராமல், ஒன்றுமாற்றி ஒன்று அந்தவேலையை ஏற்றுக்கொள்ளும். பாரா வேலையிலிருக்கும் ப்ராணிகள் அந்த வேலையிலிருக்கும் வரையில் தீனி எடுப்பதேயில்லை, அவைகள் எதிரிகள் வருகின்றனவா என்பதை கவனிப்பதிலேயே கண்ணாயிருக்கும். பாராவைக்கும் ப்ராணிகளாவன:—பாபூன் என்னும் குரங்குகள், காட்டெருமைகள், காட்டு வெள்ளாடு, செம்மறியாடு, லாமா என்னும் ஒருவகை ம்ருகம், பல்வா என்னும் ஒருவகை மான்; ஸீல் என்னும் ஜலத்

தில் வஸிக்கும் ஒருவகை ம்ருகம், காட்டு வாத்துகள், கொக்குகள், நெல்தின்னும் பறவைகள், எறும்புகள், கறையான்கள் முதலியன.

நெல் வயலில் இறங்கி நெல் கதிர்களை அழிக்கும் பறவைகள் நாலாபக்கமும் பார்த்து மனிதர் எவரும் ஸமீபத்தில் இல்லையென்று அறிந்த பிறகே வயலில் இறங்கும். அவைகள் எல்லாமே வயலில் இறங்குவதில்லை. இரண்டொரு பறவைகள் அருகிலுள்ள மரங்களில் இருந்துகொண்டு பாரா இருக்கும். யாராவது மனிதன் வருவதைக் கண்டுவிட்டால் அந்தப் பாராப்பறவைகள் சத்தமிடும். உடனே எல்லாப்பறவைகளும் பறந்து ஓடிப்போகும். இப்படி இவைகள் திடீரென்று ஓடிவிடுவதால், அவைகளைச் சுட்டுக் கொல்வது ப்ரயாஸமாயிருக்கும்.

தேனீக்கள், எறும்புகள், கறையான்கள் ஆகிய இவைகளும் புத்திசாலித்தனமாக நடக்கிறதாகத் தெரிகிறது. அவைகள் தங்களுடைய பல வேலைகளைச் செய்ய ப்ரத்யேகமாக சிலரை நியமித்துக்கொள்கின்றன. வேலைசெய்யும் எறும்புகள் தீனி கொண்டுவருவது முதலிய வேலைகளையே செய்கின்றன. சண்டை செய்யும் எறும்புகள் போர்த்தொழிலைத் தவிர வேறு தொழில்களை கவனிப்பதில்லை.

சில எறும்புஜாதிகள் வீண் ச்ரமப்படாமல் தங்கள் வேலையை ஸுலபமாக்கிக் கொள்வதுமுண்டு. அவைகள் தின்பதற்கு வேண்டிய காளான்களைப் பயிரிட வட்டமான இலைகளை சேகரிக்க வேண்டியிருக்கிறது. இதற்காக சில எறும்புக் கூட்டங்கள் மரங்களின்மேல் ஏறிப்போய் இலைகளை பறித்துக் கீழே தள்ளும். மரத்தின் கீழுள்ள வேறு எறும்புக்கூட்டங்கள் கீழேவிழுந்த இலைகளை வளைக்கு இழுத்துக்கொண்டுபோகும். இப்படிச் செய்வதால் வேலை [illegible] நடக்கிறது. இதனால் எறும்புக்கு [illegible] சக்தி உண்டென்று ஏற்படுகிறது.

## ARAB WEDDING CUSTOMS.

## அரபியர்களுடைய விவாக வழக்கங்கள்

அரபியர்களுள் விவாகங்கள் திங்கள்கிழமையன்றையதினம் ஆரம்பமாகும். அன்றையதினந்தான் விவாகத்துக்கான கார்யங்கள் முதல் முதல் ஆரம்பமாகும். மாப்பிள்ளையானவன் அன்றையதினம் அஸ்மானகிரியை (பந்தல்போன்ற விரிப்பை) பெண்வீட்டுக்கு அனுப்புவான். அடுத்த வியாழக்கிழமை பெண்ணானவள் புக்ககம்போகும்போது அந்த அஸ்மானகிரியின்கீழ் நடந்து போவாள். மாப்பிள்ளை பணக்காரனாக இருந்தால், அஸ்மானகிரியுடன், ஒரு சாக்கு மருதாணித் தழையும், இரண்டு மூன்று ஆட்டுக்குட்டிகளும் எண்ணெயும் தான்யமும் அனுப்புவான். இவைகளோடு, பெண்வீட்டில் நடக்கும் ஸ்த்ரீகளுடைய விருந்துக்கு வேண்டியிருக்கும் மற்ற ஸாமான்களையும் அனுப்புவான். மருதாணியானது அரபிய ஸ்த்ரீகளுக்கு ரொம்ப ப்ரியமான பொருளாகும். இந்த சீர்களை தம்பட்டம் முதலிய வாத்யங்களுடன் பெண் வீட்டுக்கு அனுப்புவான். சீர்கள் பெண்வீட்டுக்கு வந்ததும் ஒருவிசித்ரமான ஸம்பவம் நடக்கும். கல்யாணப்பெண்ணை உயர்ந்த கருப்புப் பட்டால் போர்த்தி, இரண்டு ஸ்த்ரீகள் அவளை இரண்டு பக்கமும் இருந்துகொண்டு கெட்டியாகப் பிடித்துக்கொள்ளுவார்கள். இன்னொரு ஸ்திரீ கல்யாணப்பெண்ணைப்பார்த்து நின்றுகொண்டு, கல்யாணப்பெண் பார்ப்பதற்காக ஒரு கண்ணாடியைக் காட்டுவாள். இவர்கள் இதே நிலைமையில் மருதாணிச்சாக்கண்டை போவார்கள். அங்கே போனதும் கல்யாணப்பெண் மருதாணிச் சாக்கின்மேல் 7-தடவை உட்கார்ந்து எழுந்திருப்பாள். இப்படிச் செய்வதால், கல்யாணமானபின் வதூவரர்களுக்கு அத்ருஷ்டம் ஏற்படுமாம். இந்தவழக்கம் வெகுகாலமாக நடந்துவருகிறது.



மறுநாள் அதாவது செவ்வாய்க்கிழமையன்று, கல்யாணப்பெண்ணைச் சேர்ந்த ஸ்த்ரீகள் மருதாணியை அரைத்து, பெண்ணின் தலையிலும் அவளுடைய கைகளிலும் தடவுவார்கள். இதானதும், பெண்ணை ஓரிடத்தில்உட்காரவைத்து அவளுடைய தோழிகள் அவளைச் சுற்றி நின்றுகொண்டு, ஒவ்வொருவராக அவளுடைய தலையில் கையைவைத்து, அவள்ரொம்ப தர்மஞ்செய்திருக்கிறாளென்றும், ரொம்ப காருண்யமுள்ளவளென்றும், ஏழைகளுக்கு ஆகாராதிகளும் துணிகளும் கொடுத்து உதவியிருக்கிறாளென்றும், சொல்லி, அவளுடைய நற்குணங்களைப்பற்றி புகழ்ந்து பேசுவார்கள். அவர்கள் சொல்வன பொய்யாயிருந்தாலுஞ்சரி மெய்யாயிருந்தாலுஞ் சரி பாதகமில்லை. அந்த ஸமயம் அவளை நற்குணங்களுள்ளவளென்று சொல்ல வேண்டியது முக்ய கருத்து.

புதன்கிழமை ஸாயந்த்ரம் மறுபடியும் தோழிமார்கள் மருதாணியை அரைத்து பெண்ணின் கையில் முழங்கைவரையில் தோல்தெரியாதபடி மூடிவிடுவார்கள். கால்களிலும் உள்ளங்காலிலும் மேற்புறத்திலும் தடவி, மருதாணியால் ஜோடு போட்டுக் கொண்டிருக்கிறமாதிரி செய்வார்கள்.

இந்த மூன்றுநாளும் கல்யாணப்பெண் தோழிமார்களுக்கு விருந்து செய்வாள்.

வியாழக்கிழமையன்றையதினந்தான் விசேஷநாளாகும். அன்றையதினந்தான் கல்யாணம் நடக்கும். அன்று காலையில் கல்யாணப் பெண்ணுக்கு ஸ்நானம் செய்வித்து உடம்பு முழுவதும் வாஸனைகளைப்பூசுவார்கள். அன்றுஸாயந்த்ரம் ஆறுமணிக்கு அவளை மாப்பிள்ளை வீட்டுக்கு கூட்டிக்கொண்டு போவார்கள். அவள் போகும்போது அவள் தலைக்குமேல் மாப்பிள்ளை அனுப்பிய அஸ்மானகிரியை சிலர் பிடித்துக்கொண்டு போவார்கள். மாப்பிள்ளை வீட்டுக்குப்போனதும், அவளை ஆடையாபரணங்களால் அலங்கரிப்பதற்காக ஒரு அறைக்கு அழைத்துப்போவார்கள். அந்த அறைக்குள் அவள் போனதும், ஜலம் நிறைந்துள்ள ஒரு மட்பாத்ரத்தை அவள் உடைக்கவேண்டும். அப்படி செய்தால்தான் அவளுக்கு அத்ருஷ்டம் உண்டாகுமாம். பிறகு அவளுடன் வந்த ஸ்த்ரீகள் அவளுக்கு உயர்ந்த பட்டாடைகளை உடுத்திக்கொள்ளக் கொடுத்து, சிறந்த நகைகளைப் போட்டுவிடுவார்கள். இவைகளெல்லாம் மாப்பிள்ளை கொடுக்கவேண்டிய சீராகும். இந்த வைபவத்துக்காக மாப்பிள்ளையானவன் பிறரிடமிருந்து பலநகைகளை இரவல் வாங்கியிருப்பான். அவனுக்கு ஸொந்தமான நகைகள் ஸ்வல்பந்தானிருக்கும். கல்யாணப் பெண்ணை இவ்விதம் அலங்கரித்த பிறகு அவளை ஒரு பெரிய பட்டு அல்லது பருத்தத் துணியால் தேகம் தலை முழுவதும் மூடிவிட்டு, மற்ற ஸ்த்ரீகள் அறையை விட்டு வெளிவந்து விடுவார்கள். இதற்குள்ளாக கல்யாணத்துக்கு வரவேண்டிய பந்துமித்ரர்கள் ஆண்பெண் இருபாலாரும் வந்து சேர்ந்திருப்பார்கள். ஸ்த்ரீகள் ஒரு தனி அறையில் கூடிக்கொண்டு விருந்து சாப்பிட்டு ஸந்தோஷமாய்க் காலம் கழிப்பார்கள். இதற்கு முன்னமேயே மாப்பிள்ளையானவன் மசூதிக்குப் போய் கடவுளைத் தொழுதுவிட்டு தன் ஸ்நேகிதர்களுடன் பாடிக்கொண்டு உல்லாஸமாய் வீட்டுக்குத் திரும்பி வருவான். அவனுடைய ஸ்நேகிதர்கள் வேறொரு அறைக்கு விருந்துக்குப் போய்விடுவார்கள். மாப்பிள்ளை தனியாக கல்யாணப்பெண் இருக்கும் அறைக்குச் செல்வான். அங்கே போனபிறகு மாப்பிள்ளையும் கல்யாணப்பெண்ணும் பேருக்கு ஒரு சர்க்கரைக் கட்டியை எடுத்து மற்றவர் வாயில்வைப்பார்கள். இதன் தாத்பர்யமென்னவென்றால், அன்று ஆரம்பமாகும் அவர்களுடைய கல்யாண வாழ்க்கையானது அந்த சர்க்கரையைப்போல் இன்பமயிருக்குமென்பதே. பிறகு மாப்பிள்ளை [illegible] சில நகைகளையும் தங்க நாணயங்களையும் பெண்ணுக்கு சீராகக்கொடுப்பான்.

கல்யாணத்துக்கு வந்த விருந்தாளிகள் இரவில் வெகுநேரம் வரையிலும் விருந்திலும் பாட்டிலும் காலங்கழிப்பார்கள். சில ஸமயம் விடியும் வரை வேடிக்கையாகக் காலங் கழிப்பதுமுண்டு.

மறுநாள் முதல் 7-நாள் வரையில் கல்யாணப் பெண்ணின் ஸ்நேகிதிகள் அவளைப் பார்க்க வருவார்கள். 7-வது நாள் அவள் தனது தோழிமார்களுக்கும் மற்ற ஸ்த்ரீகளுக்கும் ஒரு பெரிய விருந்து செய்வாள். பிறகு 40 நாள் சென்றதும் அவள் தனது ஸ்நேகிதிகளுக்கு மறுபடியும் விருந்து செய்வதுண்டு. இதோடு கல்யாண வைபவம் முடிகிறது.

தேசாந்த்ரிகளாய் பாலைவனங்களில் திரிந்து ஜீவிக்கும் பெடுவின் அராபியர்களுள்ளும் கல்யாணம் மேற்சொன்ன மாதிரியே நடந்தேறும். ஆனால் அவர்களுக்குள் இரண்டொரு வேடிக்கையான வழக்கங்கள் இருந்து வருகின்றன. உதாரணமாக, அந்த ஜாதியில் கல்யாணத்தினத்தன்று மாப்பிள்ளையானவன் ஒரு பட்டுக் குட்டையில் வாதுமை முதலிய பருப்புகள், மிட்டாய்கள், இனிய தின்பண்டங்கள், ஆகிய இவைகளை கட்டி அதை பெண்ணுக்கு வெகுமதியாகக் கொடுக்கவேண்டும். மாப்பிள்ளையும் பெண்ணும் ஸந்திக்கும் அறையில் ஒரு ஜோடி பழைய ஜோடு வைத்திருப்பார்கள். இருவரும் உள்ளே போனதும் அவர்கள் ஆளுக்கு ஒரு ஜோட்டை எடுத்துக் கொள்வார்கள். யார் முதலில் மற்றவரை ஜோட்டால் அடிக்கிறாரோ அவரே பிற்காலத்தில் மற்றவரை அடக்கியாளுவாரென்று ஐதிகம். அன்றையதினம் நடக்கிறபடியே பிற்காலத்தில் வதூவரர்களுடைய வாழ்க்கையிலும் நடக்குமென்று அந்த ஜாதியாருள் எல்லாருக்கும் நம்பிக்கையாம்.

கல்யாணமானபிறகு 7-நாள்கள்வரையில் மாப்பிள்ளையானவன் யாதொரு வேலையுமின்றி ஸ்நேகிதர்களுடன் தோட்டம் துறவுகளில் சுற்றித் திரிந்து ஸந்தோஷமாயிருப்பான். ஆனால் 7-வது நாள் அவன் ரொம்ப ஜாக்ரதையாக இருக்க வேண்டும். அவனுடைய ஸ்நேகிதர்கள் ஏதாவது தந்த்ரம்செய்து ஏமாற்றப் பார்ப்பார்கள். அவர்களுடைய சூதுக்குஅகப்படாமல் தப்பினால், உடனே தன் வீட்டுக்கு ஓடிப்போய் ஸௌக்யமா யிருக்கலாம். ஏமாந்து அவர்களிடம் அகப்பட்டுவிட்டாலோ, அவர்கள் அவனது உடைகளைப் பிடுங்கிக்கொண்டு, அவனை நன்றாய் அடித்து விடுவார்கள். அவர்களுக்கு நல்ல விருந்துசெய்து உபசரித்ததற்கு இதுதான் அவனுக்குக் கிடைக்கும் ப்ரதியுபகாரம் போலும். இருந்தாலும் இது நெடுநாளா யிருந்துவரும் வழக்கமாதலால், அந்த ஜாதியார் இதைச் செய்யாமலிருப்பது கிடையாது.

## DUTIES IN NIGHT IN RELATION TO HEALTH.

## இரவில் கவனிக்கவேண்டிய ஸுகாதார விதிகள்.

ஆயுர்வேத நூல்களில் நம்முடைய ஆகாராதி விஷயங்களைப் பற்றியும், ஸ்நானம், உடை, படுக்கை, தூங்குதல் முதலிய விஷயங்களைப்பற்றியும் பற்பல விதிகள் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளை கவனித்து நடந்து வந்தால் நமது தேக ஸௌக்யம் கெடாதென்று பலர் அபிப்ராயப் படுகிறார்கள். இரவில் ஒவ்வொருவரும் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதைப்பற்றி சரகர் முதலானோர் கூறி யிருக்கும் விதிகளில் சிலவற்றை ஸங்க்ரஹமாய் எழுதுகிறோம்.

பாவப்ரகாச் என்னும் க்ரந்தத்தில் ஸந்த்யா காலத்தில் பின்வரும் கார்யங்களை விலக்கிவிட வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது - சாப்பிடுதல், ஸம்போகம், தூங்குதல், வாசித்தல், ப்ரயாணம் ஆகிய இவைகள். இந்நேரத்தில் சாப்பிடுவதால் பல வ்யாதிகள் ஏற்படக்கூடும். ஸம்போகத்தால் விபரீத லக்ஷணங்களுள்ள குழந்தைகள் பிறக்கும், அல்லது கர்ப்பம் சிதைந்துபோகலாம், தூக்கத்தால் தரித்ரம் வீட்டில் வந்தடைகிறது. வாசிப்பதால் ஆயுள் குறைந்துபோகும். இந்நேரத்தில் ப்ரயாணம் செய்தால் ஆபத்துகள் நேரிடும்.



இரவில் முதல் ஜாமத்தில் அதாவது அஸ்தமித்து 3-மணிக்குள் போஜனம் செய்யவேண்டும். ஆகாரத்தைக் கொஞ்சம் குறைவாகவே சாப்பிடவேண்டும். லகுவாய் ஜீர்ணமாகாததும் மஸ்தூனதுமான ஆகாரத்தை சாப்பிடக்கூடாது.

ராத்ரி தயிர் சேர்த்துக்கொள்ளக் கூடாதென்பது சரகருடைய ஸித்தாந்தம். (சரகஸம்ஹிதை; ஸூத்ர ஸ்தானம் 7-வது அத்யாயம்) அதை உபயோகிக்க வேண்டுமென்றால், அதனுடன் நெய், சர்க்கரை, பச்சைப்பருப்பின் ரஸம், தேன், நெல்லிக்காய்ச் சாறு ஆகிய இவைகளுள் ஏதாவது ஒன்றைக் கலந்து உபயோகிக்கலாம். தயிரை சுடப்பண்ணி உபயோகிக்கக் கூடாது. இரவில் தயிரை உபயோகிப்பதால் கப தோஷங்களும் வேறு தொந்தரைகளும் உண்டாகும். ஆகையால் இரவில் தயிர் சோத்துக்கொள்ளாமலிருப்பதே நல்லது.

தயிரை நெய்யுடன் கலந்து சாப்பிடுவதால் வாயு சமனமடைகிறது. பித்தம் குறைவுபடாமலிருக்கிறது. உணவும் சரியாக ஜீர்ணமாகிறது. தயிரில் சர்க்கரை கலந்து உண்பதால் தாகம் தீரும். தேகத்திலுள்ள எரிச்சல் நிற்கும். பச்சைப்பருப்பு ரஸத்துடன் சேர்த்த தயிரை சாப்பிடுவதால், ரத்தங்களிலுள்ள தோஷம் குறைவடைவதோடு தன் நிலைமாறின வாயுவை சரியான நிலைமைக்குக் கொண்டுவரும். தேனோடு கலந்து சாப்பிடுவதால் வாய்க்கு ருசியாயிருப்பதோடு, வாத பித்த கபங்களும் ரத்தமும் தோஷமடையாமலிருக்கும். நெல்லிக்காய்ச் சாறுடன் சேர்த்துச் சாப்பிடுவதால், தேகத்தில் சேர்ந்திருக்கக்கூடிய கெட்ட வஸ்துக்களை அப்புறப்படுத்தும். தயிர் உபயோகிப்பதற்குச் சொன்ன மேற்கண்ட விதிகளைமீறி நடந்தால், காய்ச்சல், ரத்தம் விஷத்தன்மை யடைவது, குஷ்டம், காமாலை, பலஹீனம் முதலிய வ்யாதிகள் உண்டாகக்கூடும்.

படுத்துக்கொள்ளும் அறை ஈரமில்லாமல் சுத்தமாயும் நல்ல காற்றோட்டமுள்ளதாயு மிருக்க வேண்டும். காற்றோட்ட மில்லாததும், ஈரமானதும் இருட்டானதுமான அறைகளில் தூங்கக்கூடாது. தெற்குப் புறத்தில் கதவும் ஜன்னலுமுள்ள அறைகள் தூங்குவதற்கு ச்லாக்யமானவை. கட்டிலில் படுத்துத் தூங்குவதே ச்லாக்யமானது. அதனால் மூன்று தாதுக்களும் கெடுதலடையாமலிருக்கும். கட்டில் அல்லது விசுபலகையின் மேலுள்ள பலகையில் துணி, மெத்தை முதலியவைகள் விரிக்காமல் வெறும்பலகையில் படுத்துக்கொள்வதால் வாதம் கெடுதலடையும். பூமியில் படுத்துக்கொள்வது தேக ஸுகத்துக்கு ஏற்றது. பஞ்சு மெத்தையில் படுத்துத் தூங்குவதால் நிலைபுரண்ட வாத கபங்கள் சரியான நிலைமைக்கு வரும். படுக்கையானது சுத்தமாயும் ம்ருதுவாயு மிருக்கவேண்டும். அப்படிப்பட்ட படுக்கையில் படுத்துக் கொள்வதால் ஸுகமான தூக்கம் வருவதோடு, தேகக் களைப்பு நீங்கி சரீரபலமும் வீர்யமும் வ்ருத்தியாகும்.

தூங்கும்போது ச்ரமம் கொடுக்கும் படுக்கையில் படுத்துக்கொள்வதால் பலகெடுதல்கள் ஏற்படும். ஆகையால் நல்லபடுக்கையில் படுக்கவேண்டியது முக்யமானது. கொசுவலைகளால் கொசுக்கடி இல்லாமலிருப்பதோடு, பல்லி, பாம்பு, தேள் முதலியவைகளின் உபத்ரவமும் நேராமலிருக்கும். வலை சுத்தமாயிருப்பதோடு, வேண்டிய நீளம், அகலம், உயரமுள்ளதாயிருக்கவேண்டும். வலைக்குள் காற்று நன்றாய்ப்போகும்படி வலை மெல்லியதாயிருக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் தனித்தனி படுக்கை யிருக்கவேண்டியது அவச்யமாகும். இரண்டுபேர் ஒருபடுக்கையில் படுத்துக்கொள்ள வேண்டியிருந்தால் ஒவ்

வொருவருக்கும் தனித்தனி தலையணையிருக்க வேண்டும்.

எந்தத் திசையில் தலைவைத்துப் படுக்கவேண்டுமென்பதைப் பற்றி கார்க்யர் பின்வருமாறு சொல்லியிருக்கிறார். தன் வீட்டில் கிழக்குப் புறமாக தலைவைத்துக் கொள்ளவேண்டும். தெற்கில் வைத்துக்கொள்வதும் நல்லதே. ஏனென்றால் தெற்கில் தலைவைத்துப் படுத்துக்கொள்வதால் ஆயுஸு வ்ருத்தியடையும். அயலூரில் கிழக்குப் பக்கம் தலைவைத்துக் கொள்ளவேண்டும். மேற்கில் ஒருபோதும் தலைவைத்துக் கொள்ளக்கூடாது.

விசிறுவதால் வரும் காற்று குளிர்ச்சியானது. களைப்பாற்றக் கூடியது. தேக எரிச்சல், மிதமிஞ்சிய களைப்பு, ப்ரஜ்ஞையற்றிருத்தல் ஆகிய இந்த ஸந்தர்ப்பங்களில் விசிறுவதால் குணமுண்டு. பனையோலை விசிரிதான் ரொம்ப நல்லது. இதனால் வரும் காற்றால் வாத பித்த கபங்களென்னும் மூன்று தோஷங்களும் சாந்தமடையும். மூங்கில் சிம்புகளால் செய்த விசிறியை உபயோகிக்கக்கூடாது. அதனால் வரும் காற்று உஷ்ணமாயிருப்பதோடு, ரக்தத்துக்கு எரிச்சலையுண்டுபண்ணும். பனையோலை விசிறியைத் தவிர, பிரம்பு, மயிலிறகு, சவரி மான்மயிர் இவைகளால் செய்த விசிறிகளையும் உபயோகிக்கலாம்.

## THE INCOME AND WEALTH OF GREAT BRITAIN.

## இங்க்லண்டின் செல்வமும் வருமானமும்.

தற்காலம் இங்க்லண்டானது இந்த யுத்தத் துக்காக தினந்தோறும் கோடிக் கணக்காகச் [illegible] வருகிறது. தற்போது அதன் [illegible] சராசரி 1½ - கோடி ரூபா [illegible]. இதனால் அந்த தேசத்துக்கு வர [illegible] அதிகமாகி வருகிறது. வரப்போகிற 1917-ம் வர்ஷம் மார்ச்சு மாஸத்தோடு அதற்கு மொத்தத்தில், அதாவது பழையகடன்களையும் புதுக்கடன்களையும் சேர்த்து, 5,160 கோடி ரூபாய் கடன் ஆகுமென்று தெரிகிறது. இதில் 1200 கோடி ரூபாய் இங்க்லண்டின் நேச தேசங்களுக்கும், அதைச் சேர்ந்த குடியேற்ற நாடுகளுக்கும் கடனாகக் கொடுக்கப்பட்டிருப்பதால், அதைக் கழித்துவிட்டால், நிகரான கடன் 3960 கோடி ரூபாயாகும். இதுமாதிரி இவ்வளவு கடன் இங்க்லண்டுக்கு முன்பு ஒருபோதும் ஏற்பட்டதில்லை. இவ்வளவு கடனையும் இங்க்லண்ட் தாங்கக்கூடுமா என்று ஸந்தேகமுண்டாகலாம். இங்க்லண்டின் வரவுசெலவு மந்த்ரியாகிய மிஸ்டர் மெக்கன்னா, இங்க்லண்டின் வருமானத்தை உத்தேசிக்கையில் இந்தக் கடன் தாங்கக்கூடாத பெருந்தொகை யல்லவென்கிறார்.

இங்க்லண்ட், ஸ்காட்லண்ட், வேல்ஸ் என்னும் மூன்று தேசங்களிலுமுள்ள ஜனங்களின் மொத்த ஆஸ்தி 22,500 - கோடி ரூபாயாகும். இப்படி தேசத்திலேயே இருக்கும் ஸொத்தைத் தவிர ப்ரிட்டிஷ் ஜனங்கள் இதர தேசங்களில் தொழில் துறைகளில் ஏராளமாகப் பணம் போட்டிருக்கிறார்கள். இப்படிப் போட்டப்பட்டிருக்கும் தொகை 6000கோடி ரூபாயாகுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

ப்ரிட்டிஷ் ஜனங்களுடைய வருமானம் யுத்தத்துக்கு முன்னால் 1913-14-ம் வர்ஷத்தில் 3,150 கோடி ரூபாயாகுமென்றும், யுத்தம் நடக்கும் இந்த ஸமயத்தில் 4000 கோடி ரூபாயாகுமென்றும் ஒரு நிபுணர் தெரிவித்திருக்கிறார். வேறு ஒருவர் 4500 கோடி ரூபாயாகுமென்று தெரிவித்திருக்கிறார். இந்தத் தொகை சற்று அதிகமென்றே சொல்லலாம். ப்ரிட்டிஷாரின் வர்ஷாந்த்ர வருமானம் 3900 கோடி ரூபாயாகுமென்று சொல்லுவதில் தவறு அதிகமொன்றுமில்லை. அப்படியானால் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டினுக்கு வரும் மார்ச்சுமாஸம் முடிய ஏற்படக்



கூடிய மொத்தக்கடனானது கிட்டத்தட்ட ப்ரிட்டிஷ் ஜனங்களின் ஒருவர்ஷ வரும்படிக்கு சரியாகிறது. ஆகவே கவர்ன்மெண்டின் கடன் தாங்கக்கூடாதபடி அவ்வளவு அதிகமான கடனல்லவென்று சொல்லலாம்.

ப்ரிட்டிஷ் ஜனங்களினுடைய மொத்த ஸொத்தின் மதிப்பு 22500கோடி ரூபாயென்று மேலே சொன்னோம். ஒரு இங்க்லீஷ் பொருளாதார கணித வித்வான் ப்ரிட்டிஷாருடைய ஸொத்தின் மொத்த மதிப்பு 25500 கோடி ரூபாய்க்குக் குறைவில்லையென்கிறார். இங்கு ஸொத்தென்றது நாம் வஸிப்பதற்கும், பயிர் செய்வதற்கும், தொழில் வ்யாபாரம் நடத்துவதற்கும் வேண்டியிருக்கும் நிலத்தின் மதிப்பும், கைத்தொழில்சாலைகள், ரெயில்வேக்கள், யந்த்ரங்கள், கடைகள், வீடுகள், இவைகளுக்கு வேண்டு மேஜை, அலமாரி, நாற்காலி முதலிய தட்டுமுட்டு ஸாமான்கள் ஆகிய இவைகளுக்காகப் போட்டிருக்கும் முதலே. இந்த ஸொத்துக்களெல்லாம் வ்யாபாரத்துக்கான பொருள்களைச் செய்வதற்கும், அதன் மூலமாய் வரும்படி அடைவதற்குமே உபயோகப்படும். ஆனால் ப்ரிட்டிஷார் பணம் போட்டிருக்கும் தொழில் துறைகளில் பொருள் உற்பத்திக்கும் வருமானத்துக்கும் குறைவில்லை.

இப்படிப் பணத்தை பற்பல வழிகளில் போட்டிருக்கும் ஒரு தேசத்தார் தங்களுடைய வரும்படிக்குமேல் செலவழிக்கவேண்டி யிருந்தால், தொழில்களிலும் நிலத்திலும் போட்டிருக்கும் பணத்திலிருந்து அதிகமாக எதையும் ரொக்கமாக்கிச் செலவழிக்க முடியாது. ப்ரிட்டிஷ் ஆஸ்தியில் பெரும்பாகம் தொழில் சாலைகளிலும் யந்த்ரங்களிலும் போடப்பட்டிருக்கிறது. இந்த யுத்தகாலத்தில் இவைகளில் முன்னைவிட இரண்டு மூன்று பங்கு அதிகமாக வேலை நடந்துவருகிறது. கப்பல் வ்யாபாரத்திலும் ஏராளமான தொகைபோடப் பட்டிருக்கிறது. இதிலும் இந்த யுத்த ஸமயத்தில் ஸாதகமே ஏற்பட்டிருக்கிறது. கப்பல் வ்யாபாரத்தால் தேசத்தின் வருமானம் குறைவுபடாமலிருப்பதோடு பணநிலைமையும் கெடாமலிருந்து வருகிறது. விவஸாயத்திலும் ஏராளமான தொகை போடப்பட்டிருக்கிறது. இதனாலும் ப்ரிட்டிஷ் ஜனங்களுக்கு வேண்டிய மொத்த ஆகாரப் பொருள்களில் ஒரு பாகம் கிடைத்து வருகிறது.

ஆகவே ப்ரிட்டிஷ் ஜனங்களின் ஸொத்தில் பெரும்பாகம் பொருள் உற்பத்தி செய்வதற்கான துறைகளில் போடப்பட்டிருக்கிறது. அந்த ஸொத்தை வேறு கார்யங்களுக்கு உபயோகிப்பதென்பது முடியாத கார்யம்.

தற்போது யுத்தத்தில் உள்நாட்டில் இப்போது கிடைத்துவரும் வரும்படியைவிட அதிகமாய் செலவு செய்யவேண்டியிருப்பதால் அதற்கு வெளிதேசங்களில் போட்டிருக்கும் பணத்தையே நம்பி யிருக்கவேண்டும். இப்படி வெளிநாடுகளில் பணம் போட்டிருப்பதால் தான் இந்த யுத்தத்தில் அமெரிக்கா ஐக்ய மாகாணங்களில் இங்க்லீஷ்க்காரர்களுக்கு ஸௌகர்யமாகக் கடன் கிடைத்து வருகிறது

இனி நமது தேசத்தின் செல்வ நிலைமையைப் பற்றிக் கூறுவோம். நமது தேசம் ரொம்ப ஏழையான தேசமென்று அநேக ப்ரமுகர்களும் பொருளாதார வித்வான்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இங்கேயுள்ள ஜனங்களில் ஒவ்வொருவருக்கும் சராசரியில் வர்ஷத்துக்கு என்ன வரும்படி கிடைக்கிறது என்பதைப் பற்றிப் பலர் பலவிதமாக அபிப்ராயப்படுகிறார்கள். ஆனால் ரொம்ப உயர்ந்த மதிப்பின்படி பார்த்தாலும் ஒரு இந்தியருடைய வர்ஷவரும்படி 30 ரூபாய்க்கு மேலில்லையென்று தெரிகிறது. ஆனால் இங்க்லண்டிலோ என்றால், ஒவ்வொருவருக்கும் சராசரி வர்ஷவரும்படி 675 ரூபாயாகும். அதாவது, இந்தியருடைய வரும்படியைவிட 23

மடங்கு அதிகமாகும். இந்தியர்களுடைய சராசரி வரும்படி சென்ற 30 வர்ஷகாலமாக கொஞ்சமும் உயராமல் ஒரேமாதிரியாக இருக்கிறது. இங்க்லண்டிலோ வென்றால் 70 வர்ஷத்துக்கு முன்னால் வந்த வரும்படியைவிட இப்போது 5-மடங்கு அதிகமாகக் கிடைத்துவருகிறது.

கைத்தொழிலில் அபிவ்ருத்தி ஏற்பட்டிருக்கும் மற்ற தேசங்களிலும் ஜனங்களின் வருமானம் அதிகமாயிருக்கிறது. வருமானம் அதிகமாகி யிருப்பதற்கேற்ப ஜனத்தொகையும் அதிகமாகி யிருக்கிறது.

இந்தியர்கள் இவ்வளவு ஏழையாயிருப்பதால் அவர்கள் பஞ்சத்தாலும், வ்யாதியாலும் கஷ்டமடைகிறார்கள்.

## THE DYE INDUSTRY.
## சாயத்தொழில்.

யுத்தத்துக்கு முன்னால் இந்தியாவுக்கு வேண்டியிருக்கும் சாயத்தில் பெரும்பாகம் ஜெர்மனியிலிருந்தே வந்துகொண்டிருந்தது. யுத்தம் ஆரம்பித்ததும் ஜெர்மனியிலிருந்து சாயம் வருவது நின்றுபோய்விட்டது. இதனால் நமது தேசத்து நெசவுத் தொழிலுக்கு ரொம்ப பாதக மேற்பட்டிருக்கிறது, ஜெர்மனியிலிருந்து சாயங்கள் தருவித்துக்கொண்டிருந்த இங்க்லண்ட், அமெரிக்காபோன்ற மற்ற தேசங்களும் சாயமில்லாமல் கஷ்டப்படுகின்றன. எல்லா தேசங்களிலும் சாயமில்லாமல் நெசவுத் தொழிலுக்கு பாதக மேற்பட்டிருப்பதோடு, சாயம் உபயோகிக்கப்படும் இதர கைத்தொழில்களும் ரொம்ப கஷ்டத்துள்ளாகி யிருக்கின்றன. சித்ரவேலைகளுக்கு உதவும் வர்ணங்கள் தயார் செய்தல், காகிதம் செய்தல், அச்சடிக்கும் மை செய்தல், தோலுக்கு ஜப்பான் வார்னிஷ் பூசுதல், மோட்டார் வண்டிகளும் கோச் வண்டிகளும் செய்தல், முத்திரை வைக்கும் அரக்கு செய்தல், ஸோப் செய்தல், இஞ்ஜினீயரிங் ஸம்பந்த[illegible] வேலைகள், செல்லுலாய்ட் என்னும் போஸி தந்தம்போன்ற பொருள் ஸம்பந்தமான தொழில்கள், முதலிய பல தொழில்கள் சாயமில்லாமல் கஷ்டப்படுகின்றன. இத்தனை தொழில்கள் சாயத்தை நம்பியிருப்பதால் சாயத்துக்கு ஜெர்மனியை நம்பியிராமல் ஒவ்வொரு தேசத்தாரும் தாங்களே ஸொந்தத்தில் சாயத் தொழிலை ஸ்தாபிக்கவேண்டியது அவச்யமாகிறது.

சாயத்தொழில் ஸ்தாபிக்கவேண்டியது அவச்யமென்பதற்கு இன்னொரு முக்ய காரணமுமிருக்கிறது. யுத்தகாலங்களில் சாயத்தொழில் சாலையை ஒருவாரம் அல்லது 10-நாளில் வெடிமருந்துச்சாலையாக மாற்றிவிடக்கூடும். இரண்டு தொழிலுக்கும் கொஞ்சதூரம் வரையில் ஒரே ஸாமான்களே வேண்டியிருக்கின்றன. ஒரே முறைகளே அனுஸரிக்கப்படுகின்றன. ஆகையால் ஸமாதான காலங்களில் வ்யாபாரத்துக்கும் தொழில்களுக்கும் உபயோகப்படும்படியான சாயத்தொழில் சாலைகளை ஸ்தாபித்து அபிவ்ருத்தி செய்துவிட்டால், யுத்த ஸமயத்தில் வேண்டும்போது வெடி மருந்துகள் செய்யும் சாலைகளாக மாற்றிவிடலாம். இதனால் வெடிமருந்துகளை முன்னாடியே ஏராளமாக சேகரித்து வைத்துக் கொள்ளவேண்டிய அவச்யமில்லை. அப்படி ஏராளமாய் சேகரித்து வைத்துக்கொள்வதும் ஸாத்யப்படாத கார்யம். ஆகையால் இந்த ஸௌகர்யங்களை உத்தேசித்தே சில தேசங்கள் சாயத் தொழிலை ஸ்தாபிக்க முயற்சி எடுத்து வருகின்றன. ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டாரும் இந்த நோக்கத்துடன் 'ப்ரிட்டிஷ் டைஸ் லிமிடெட்' என்ற புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட சாயத்தொழில் கம்பெனிக்கு 1½ கோடி ரூபாய்க்குமேல் பணங் கொடுத்து ஆதரித்திருக்கிறார்கள். இந்தக் கம்பெனிக்கு இதுவரையில் சேர்ந்திருக்கும் மூலதனம் 1¼ கோடி ரூபாய்க்கு மேலாகும். ஆக இதன் நடை முதல் பணம் 2¾ கோடி ரூபாயாகும்.



ஜெர்மனியானது 120 கோடி ரூபாய் செலவழித்து சாயத்தொழிலை ஏற்படுத்தியிருக்கிறது. அந்த தேசத்தில் நிலக்கரித்தாரிலிருந்து சாயங்கள்மட்டும் கிடைப்பதே யல்லாமல், வேறு உபபொருள்களும் கிடைக்கின்றன. உபபொருள்களை விலைப்படுத்தினால்தான் அந்த லாபத்தைக் கொண்டு சாயத்தை மலிவாய் விற்கக்கூடும். ஆகவே சாயத்தொழில் ஸ்தாபிப்பதென்றால் லேசான கார்யவல்ல. அதற்கு ஏராளமாய்ப் பணம்வேண்டியிருப்பதோடு, வெகுகாலம் சாயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டியிருக்கும். தொழிலை ரொம்ப ஒழுங்காக நடத்தவேண்டியிருக்கும்.

மேலேசொன்ன ப்ரிட்டிஷ் சாயக் கம்பெனியார் காலக்ரமத்தில் ஜெர்மனியார் செய்யும் சாய தினுஸுகளையெல்லாம் செய்துவிடக் கூடுமென்று நம்பிக்கை தொண்டிருக்கிறார். சில மாஸங்களுக்கு முன் வந்த விவரப்படி அந்தக் கம்பெனியில் இன்னும் யந்த்ரங்களே ஸ்தாபிக்கப்படவில்லையாம். லண்டன் 'டைம்ஸ்' பத்ரிகையில் ஒரு நிருபர் ரொம்ப ஏற்பாட்டோடு நடந்துவரும் ஜெர்மன் சாயத்தொழில் கம்பெனிகளோடு, இந்தச் சிறுகம்பெனி எப்படி போட்டி போட்டு அபிவ்ருத்தியடையுமோ தெரியவில்லை யென்கிறார். இன்னும் அவர் ரொம்ப ஊக்கத்துடன் இந்த கம்பெனியை நடத்தி ஆராய்ச்சிக்கும் பரீக்ஷைவேலைகளுக்கும் ஏராளமாய்ப் பணம் செலவுசெய்து, இந்தத் தொழிலை ரொம்பப் பெரிய தொழிலாக நடத்தினால்தான் இது முன்னுக்கு வரமுடியுமென்றும், நாளது வரையில் இவ்வளவு ஏற்பாடாக நடத்த யாதொரு முயற்சியும் செய்வதாகத் தெரியவில்லை என்றும் சொல்லுகிறார்,

## AREA AND YIELD OF CROPS IN INDIA.
## இந்தியாவில் பயிர்கள் சாகுபடியாகும் விஸ்தீரணமும் மாஸூலும்.

இந்தியாவின் நிலைமையைப்பற்றிக் கணக்கு விவரங்கள் தயார் செய்யும் டிபார்ட்மெண்டார் (டிபார்ட்மெண்ட் அப் ஸ்டடிஸ்டிக்ஸ்) ஸமீபத்தில் 1915-16-ம் வர்ஷத்தில் இந்தியாவில் முக்யமான பயிர்கள் எவ்வளவு நிலத்தில் சாகுபடி செய்யப்பட்டன வென்பதற்கும், அவைகளின் மாஸூல் எவ்வளவென்பதற்கும் கணக்குகள் உத்தேசமாய்த் தயார் செய்து வெளியிட்டிருக்கிறார்கள். இந்தமாதிரிக் கணக்குகள் சென்ற 17-வர்ஷகாலமாகத் தயார் செய்யப்பட்டு ப்ரசுரமாகி வருகின்றன. ஆதியில் இந்தக் கணக்குகள் தயார் செய்தபோது எந்த ப்ரதேசங்களில் பயிர்கள் ரொம்ப அதிகமாகவும், வ்யாபாரத்துக்கேற்ற அளவிலும் பயிர் செய்யப்பட்டனவோ அந்த விடங்களிலுள்ள பயிர்களுக்கு மாத்ரம் விஸ்தீரணம், உத்தேச மாஸூல், ஆகிய இவைகளைக் கணக்கிட்டு வந்தார்கள். முக்யமில்லாத பாகங்களில் ஏதாவது பயிர்கள் சாகுபடியானால் அவைகளைப் பற்றிய கணக்குகளை சேர்த்துக் கொள்வதில்லை. காலம் செல்லச் செல்ல, முக்யமில்லாத பாகங்களில் விளையும் பயிர்களுக்கான கணக்குகளையும் கொஞ்சங் கொஞ்சமாகச் சேர்த்துவந்தார்கள். இப்போது பருத்தி, கோதுமை, ஜூட் ஆகிய இந்தப் பயிர்கள் இந்தியா முழுவதிலும் எவ்விடங்களில் ஸுமாராய் பயிராகின்றனவோ அவைகளுக்கெல்லாம் கணக்கெடுக்கிறார்கள். ஆனால் இந்தக் கணக்குகளில் பலுசிஸ்தானம், காஷ்மீர், நேபாளம், ஸிக்கிம் ஆகிய இந்த ப்ரதேசங்களில் விளையும் பயிர்களுக்கான கணக்குகளைச் சேர்ப்பதில்லை. மற்றப் பயிர்கள் விஷயத்தில் ப்ரிட்டிஷ் இந்தியா முழுவதுக்கும் கணக்குகள் எடுக்கிறார்கள். இந்தக் கணக்குகளில் ஸ்வதேச ஸமஸ்தானத்துக் கணக்குகள்

சேருவதில்லை. சில பயிர்களுக்குமாத்ரம் ஹைதராபாத், பரோடா ஆகிய இந்த ஸமஸ்தானங்களில் கணக்குகள் சேருகின்றன. கீழே சில முக்யமான பயிர்களைப்பற்றிய கணக்கு விவரங்களை எழுதுகிறோம்.

**நெல்.**—இது ஸாதாரணமாய் டிஸம்பர் ஜனவரி மாஸங்களில் அறுவடையாகிறது. வங்காளம், பேஹார், ஒரிஸ்ஸா, சென்னை, பர்மா, மத்ய மாகாணங்கள், பேரார், ஐக்யமாகாணங்கள், ஆஸ்ஸாம், பம்பாய், ஸிந்து மாகாணம், குடகு ஆகிய இந்த மாகாணங்களில்தான் நெல்லைப்பற்றிய கணக்குகள் தயார் செய்யப்படுகின்றன. இந்த மாகாணங்களில் நெல் சாகுபடியாகும் ப்ரதேசம் மொத்தம் ப்ரிட்டிஷ் இந்தியாவில், நெல் சாகுபடியாகும் ப்ரதேசத்தில் நூற்றில் 99-பாகமாகும். பம்பாய் ராஜதானியிலுள்ள ஸ்வதேச ராஜ்யங்களைத் தவிர மற்ற ஸ்வதேச ஸமஸ்தானங்களில் நெல் சாகுபடியாகும் ப்ரதேசங்களுக்கு கணக்குகள் தயார்செய்வதில்லை. மேற்சொன்ன ப்ரதேசங்களில் 1915-16-ம் வர்ஷத்தில் நெல் சாகுபடியாகியிருந்த ப்ரதேசத்தின் மொத்த விஸ்தீரணம் 7,67,92,000 ஏக்கராகும். அதற்கு முந்தின வர்ஷமாகிய 1914-15-ம் வர்ஷத்தில் 7,66,25,000 ஏக்கராகும்.

பம்பாய் ராஜதானியில் மழைக்குறைவாலும், அஸ்ஸாமில் வெள்ளத்தாலும் பயிர் கொஞ்சம் சேதமடைந்தது. மற்ற இடங்களில் மழையானது மொத்தத்தில் பயிருக்கு ஸாதகமாகவே இருந்தது. 1915-16-ம் வர்ஷத்தில் கிடைத்திருக்கக் கூடுமென்று மதிப்பிட்ட மாஸூல் 3,28,77,000 டன் நெல்லாகும். அதற்கு முந்தின வர்ஷம் 2,72,42,000 டன் நெல்லாகும். வேறு சில ப்ரிட்டிஷ் மாகாணங்களில் ஸுமார் 7,60,000 ஏக்கர் நிலம் நெல் சாகுபடியிலிருந்தது. இந்த நிலங்களுக்குக் கணக்குகள் தயார் செய்யவில்லையாகையால், இவைகளுக்காக இந்த வர்ஷத்திய மொத்த மாஸூலோடு, 3,00,000 டன் அதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஆகவே மொத்தம் ப்ரிட்டிஷ் இந்தியாவில் கிடைத்த நெல் மாஸூல் 3,31,77,000 டன் நெல்லாகும்.

**கரும்பு.**—இந்தப் பயிர் பிப்ரவரிமாஸம் முதல் மே மாஸம் வரையில் நடப்படுகிறது. நவம்பர் மாஸம் முதல் ஜனவரி மாஸம் வரையில் வெட்டப்படுகிறது. ஐக்ய மாகாணங்கள், பேஹார் ஒரிஸ்ஸா, பெங்கால், அஸ்ஸாம், பஞ்சாப், வடமேற்கு எல்லை மாகாணம், பம்பாய், ஸிந்து, மதராஸ், மத்யமாகாணங்கள், பேரார் ஆகிய இந்த மாகாணங்களிலிருந்து தான் கரும்பு சாகுபடி கணக்குகள் வருகின்றன. பம்பாய் ராஜதானியிலுள்ள ஸ்வதேச ஸமஸ்தானங்களும் பரோடா ஸமஸ்தானமும் தவிர மற்ற ஸ்வதேச ஸமஸ்தானங்களில் கரும்பு சாகுபடியைப் பற்றி கணக்குகள் தயாரிப்பதில்லை. சென்ற 1915-16-ம் வர்ஷத்தில் 23,75,000 ஏக்கர் நிலங்களில் கரும்பு சாகுபடியாகியிருந்தது. இந்த விஸ்தீரணம் அதற்கு முந்தின வர்ஷத்தியதைவிட 100-க்கு 3 பங்கு அதிகமானது. 1915-16-ம் வர்ஷத்திய கரும்பு மாஸூல் அதற்கு முந்தின வர்ஷத்தியதை விட நூற்றுக்கு 7 பங்கு அதிகமாயிருந்ததென்று மதிப்பிட்டிருக்கிறார்கள். 1915-16-ம் வர்ஷத்தில், 26,36,000 டன் கரும்பும், 1914-15-ம் வர்ஷத்தில் 24,62,000 டன் கரும்பும் கிடைத்திருக்குமென்று மதிப்பிடப் பட்டிருக்கிறது.

**பருத்தி.**—சென்ற 1915-16-ம் வர்ஷத்தில் பருத்தியானது 1,79,67,000 ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்யப்பட்டது. அதற்கு முந்தின வர்ஷமாகிய 1914-15-ம் வர்ஷத்தில் 2,45,95,000 ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்யப்பட்டது இப்படி சாகுபடி விஸ்தீரணம் குறைந்துபோனதற்குக் காரணம் 1914-15-ம் வர்ஷத்தில் பருத்தி விலை ரொம்ப கம்மியாயிருந்ததும், சில மாகாணங்களில் பருவ மழை சரியாய் பெய்யாமல் போனதுமே. பஞ்சாபின் மேற்கு பாகம்,



பர்மா, ஆஜ்மீர்-மீர்வாரா, ரஜபுதனம், பம்பாய் ராஜதானியின் வடபாகங்கள் ஆகிய இவைகளில் மழையில்லாமல் பயிருக்கு ரொம்ப சேதம் ஏற்பட்டது. மற்ற விடங்களில் பருவ நிலைமை மொத்தத்தில் நன்றாகவேயிருந்தது. 1915-16ம் வர்ஷம் கிடைத்திருக்கும் என்று மதிப்பிடப்பட்ட பருத்தி மாஸூல் 38,19,000 பேல்களாகும். பேல் என்பது 400 ராத்தல் பருத்திகொண்டது. இந்த மாஸூல் அதற்கு முந்தின வர்ஷத்திய மாஸூலைவிட 100-க்கு 27-பங்கு குறைவானது. இந்தக் கணக்கில் இந்தியாவில் பருத்தி பயிராகும் எல்லா ப்ரதேசங்களுடைய கணக்குகளும் அடங்கியிருக்கின்றன.

**எள்.**—ப்ரிட்டிஷ் இந்தியாவில் மொத்தம் எள் பயிராகும் விஸ்தீரணத்தில் நூற்றுக்கு 70-பாகத்துக்கு கணக்குகள் கிடைத்திருக்கின்றன. பாக்கியுள்ள எள் பயிராகும் நிலங்களுக்குக் கணக்குகள் எடுப்பதில்லை. கணக்குக்கு வந்தமட்டில், சென்ற 1915-16-ம் வர்ஷத்தில் 51,70,000 ஏக்கர் நிலத்தில் எள் பயிரிடப்பட்டது. அதற்கு முந்தின வர்ஷத்தில் 55,65,000 ஏக்கர் நிலத்தில் எள் பயிராயிற்று.

சென்ற வர்ஷத்தில் சென்னை ராஜதானி, மத்ய மாகாணங்கள், பேரார், ஒரிஸ்ஸா, ஹைதராபாத், ஐக்ய மாகாணங்கள் ஆகிய இந்த இடங்களில் பருவநிலைமை எள் பயிருக்கு ஸாதகமாயிருந்தது. மற்ற இடங்களில் ஸாதகமாயிருக்கவில்லை. பஞ்சாப், ஸிந்து, ஆஜ்மீர்-மீர்வாரா, பம்பாய் ராஜதானியில் பெரும் பாகம், ஆகிய இவைகளில் மழைக் குறைவாலும், பெங்கால், பம்பாயில் சில பாகங்கள், ஐக்யமாகாணங்களின் சில பாகங்கள் ஆகிய இவைகளில் அதிக மழையாலும் பயிருக்கு கெடுதலேற்பட்டது. அந்த வர்ஷம் கிடைக்குமென்று மதிப்பிடப்பட்ட எள் மாஸூல் 5,01,000 டன்னாகும். அதற்கு முந்தின வர்ஷத்தில் 5,55,000 டன் கிடைத்திருக்குமென்று மதிப்பிட்டிருந்தார்கள். ஆகவே 1915-16-ம் வர்ஷத்திய எள் மாஸூல் அதற்கு முந்திய வர்ஷத்தியதைவிட நூற்றுக்கு 9-பங்கு குறைவாகும். மொத்தம் இந்தியாவில் எள் சாகுபடியாகும் நிலத்தில் 100-க்கு 78-பாகத்துக்கு மாத்ரம் கணக்குகள் எடுப்பதால் கணக்குகள் எடுக்காத மற்ற பாகங்களில் விளையும் எள் மாஸூலுக்காக மேற்சொன்ன மாஸூல் மதிப்போடு நூற்றுக்கு 22 அதிகம் சேர்த்துக்கொண்டால் மொத்தம் இந்தியாவில் விளையும் எள் மாஸூலின் மதிப்பு ஏற்படும்.

**வேர்க்கடலை.**—வேர்க்கடலையானது மே மாஸம் முதல் ஆகஸ்ட் மாஸம் வரையில் விதைக்கப்படுகிறது. நவம்பர் மாஸம் முதல் ஜனவரி மாஸம் வரையில் மாஸூல் எடுக்கிறார்கள். சென்னை, பம்பாய், அதிலுள்ள ஸ்வதேச ராஜ்யங்கள், பர்மா ஆகிய இந்த மாகாணங்களில் தான் வேர்க்கடலை சாகுபடிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டன. இந்த மூன்று மாகாணங்களிலும் 1915-16-ம் வர்ஷத்தில் 19,35,000 ஏக்கர் நிலம் வேர்க்கடலை சாகுபடியிலிருந்தது. இது அதற்கு முந்தின வர்ஷத்தியதைவிட நூற்றுக்கு 20-வீதம் குறைவாகும். 1915-16-ம் வர்ஷத்தில் 10,11,000 டன் வேர்க்கடலை கிடைத்திருக்குமென்று மதிப்பிட்டிருக்கிறார்கள். இது அதற்கு முந்தின வர்ஷத்தியதைவிட 100-க்கு 7-பங்கு அதிகமாகும்.

## EDUCATION IN VARIOUS COUNTRIES.

## நானாதேசங்களில் கல்வி நிலைமை.

நமது தேசத்தில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் தொகை ரொம்ப குறைவாயிருக்கிறதென்றும், மூலாதாரப் படிப்பை இலவசமாகவும் கட்டாயமாகவும் கற்பிக்கவேண்டுமென்றும், ராஜாங்கத்தார் கல்விக்காக அதிகப் பணம் செலவழிக்க வேண்டுமென்றும், பலர் குறை சொல்லி வருகிறார்கள். அயல்நாடுகளில் பலவற்றின் கல்விநிலைமையை உத்தேசிக்கும்போது

நமது தேசத்தில் கல்வி இன்னும் வ்ருத்தியடைய வேண்டுமென்று தெரிகிறது. உலகத்திலுள்ள பற்பல தேசங்களில் கல்விநிலைமை எப்படியிருக்கிறதென்பதை கீழே சுருக்கமாய் எழுதுகிறோம். அதைக்கொண்டு நமது தேசம் கல்வி விஷயத்தில் என்ன நிலைமையிலிருக்கிறதென்று அறியலாம்.

## ஐரோப்பாவிலுள்ள தேசங்களின் கல்வி நிலைமை.

ஆஸ்ட்ரியாவில் சிறுவர்களுக்கு மூலாதாரப் படிப்பை இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் கற்றுக்கொடுக்கிறார்கள். பள்ளிக்கூடம் போகக் கூடியவர்களில் நூற்றுக்கு 96-பேர்கள் வீதம் பாடசாலையில் படிக்கிறார்கள். வ்யாபாரம், கலைகள், ஸங்கீதம், கைத்தொழில்கள் முதலியவைகளைக் கற்பிக்க அநேக பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. கவர்ன்மெண்டார் 8-யூனிவர்ஸிட்டிகளையும் 7-உயர்ந்த தொழில் சாஸ்த்ர பள்ளிக்கூடங்களையும் நிர்வகித்துவருகிறார்கள்.

**ஹங்கேரி.**—இதிலும் சிறுவர்களுக்கு மூலாதாரப் படிப்பை இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் கற்றுக்கொடுக்கிறார்கள். மூன்று வயஸு முதல் 6-வயஸு வரையிலுள்ள குழந்தைகளுக்காகவென்று அநேக குழந்தைப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. 6-வயஸு முதல் 12-வயஸு வரையிலுள்ள சிறுவர்களுக்கு தனியாக கீழ்தர எலிமெண்டரி பாடசாலைகளும், 12-வயஸு முதல் 15-வயஸு வரையிலுள்ளவர்களுக்குத் தனியாக பாடசாலைகளும் உண்டு. இவைகளில் வாசித்தபிறகு உயர்தர எலிமெண்டரி பாடசாலைகள் என்ற பள்ளிக்கூடங்களில் சேர்ந்து வாசிக்கவேண்டும். இவைகளில் ஆண்பிள்ளைகள் மூன்று வர்ஷங்களும் பெண்கள் 2-வர்ஷங்களும் வாசிக்கவேண்டும். இவைகளுக்குமேல் ஸிட்டி ஹைஸ்கூல்களென்ற உயர்தர வித்யாசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. [illegible] வாசிக்கக்கூடியவர்களின் தொகையில் 100-க்கு 78-பேர்கள் பள்ளிக்கூடங்களில் வாசிக்கிறார்கள்.

**இட்டலி.**—இந்த தேசத்தில் 1914-ம் வர்ஷத்தில் எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்கு பாதகமாய் ஒருசட்டம் செய்யப்பட்டதால், கல்வி அபிவ்ருத்திக்கு ஒரு ஸாதகம் ஏற்பட்டிருக்கிறது. அங்கே சிறுவர்களுக்கு இலவசமாயும் கட்டாயப்படுத்தியும், ப்ரைமெரிக் கல்வி கற்றுக் கொடுக்கிறார்கள். வெவ்வேறு தொழில்கள் கற்றுக்கொடுக்க ப்ரத்யேகமான பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. 17-யூனிவர்ஸிட்டிகள் ஸர்க்காரால் நிர்வகிக்கப்பட்டுவருகின்றன. இவைகளைத்தவிர 4-வேறு யூனிவர்ஸிட்டிகளும் இருக்கின்றன.

**க்ரீஸ்.**—இந்த தேசத்தில் எலிமெண்டரிக் கல்வி இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் கற்றுக்கொடுக்கப்படுகிறது.

**டென்மார்க்.**—இங்கு கல்வி ரொம்ப ஏற்பாடாகவும் ஒழுங்காகவும் கற்றுக்கொடுக்கப்படுகிறது. 7-வது வயஸுமுதல் 14-வது வயஸு வரையில் பிள்ளைகளுக்கு இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் கல்வி கற்றுக் கொடுக்கிறார்கள். பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்குக்குறைவில்லை. விசேஷமான பாடங்களைக் கற்பிக்க தனிப் பள்ளிக்கூடங்கள் ஏராளமாயிருக்கின்றன. கோபன்ஹேகன் என்னும் ராஜதானிப் பட்டணத்தில் ஒரு யூனிவர்ஸிட்டியிருக்கிறது. அதில் 2000 மாணவர்கள் இருக்கிறார்கள். அதைச்சேர்ந்த லைப்ரரியில் 2 லக்ஷம் புஸ்தகங்கள் இருக்கின்றன.

**துருக்கி.**—இந்த நாட்டில் பிள்ளைகளுக்கு (பேருக்குமாத்ரம்) கட்டாயப்படுத்தியும், இலவசமாயும் ப்ரைமெரிக் கல்வி கற்றுக்கொடுக்கிறார்கள். மகம்மதியர்களல்லாதவர்கள் தங்களுடையஸொந்தப்பள்ளிக்கூடங்களில்வாசிக்கலாம். மகம்மதியர்கள் மசூதிகளையொட்டி ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பள்ளிக்கூடங்களில் சேர்ந்துதான் வாசிக்கவேண்டும். அங்கே மதஸம்பந்தமான கல்விதான் விசேஷம்.

**நார்வே.**—இதிலும் சிறுவர்களுக்கு இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் ப்ரைமெரிக் கல்வி கற்றுக் கொடுக்கிறார்கள். பள்ளிக்கூடங்களிலுள்ள பையன்களின் தொகை ரொம்ப அதிகமாம்.

(இன்னும் வரும்).



# REVIEW OF THE PRESS.
# பத்ரிகை ஆராய்ச்சி.

## SHEDDING TEARS.
## கண்ணீர் விடுதல்.

ஆனந்தம் பொங்கும்போதும், துக்கம் அடைக்கும்போதும், சிரிக்கும்போதும் நாம் கண்ணீர் விடுவது கண்களுக்கு நன்மை யுண்டாக்குகிறதென்று ஒரு ஆயுர்வேத வைத்யர் 'வைத்திய கலாநிதி'யில் ஒரு வ்யாஸத்தில் எழுதியிருக்கிறார். மிளகாய் முதலிய காரமான பதார்த்தங்கள் நாவில் படும்போதும் கண்களில் நீர் பெருகுகிறது. இதுவும் கண்களுக்கு நல்லதாம்.

கண்ணீரானது கண்களுக்கு ஸாதகமாக இயற்கையிலேயே ஏற்பட்ட ஒரு உபகரணமாகும். நாம் ஸ்நானம் செய்யும்போதாவது, முகத்தைக் கழுவும்போதாவது நமது கண்களைத் திறப்பதுகிடையாது. உடலின் மற்ற பாகங்களை சுத்தம்செய்யும்போது கண்களைமாத்ரம் சுத்தம்செய்யாமல் வெகுவாய் விட்டுவிடுகிறோம். ஆகையால் கண்கள் சுத்தமடைவதற்காகவே கடவுள் கண்ணீர் என்பதை ஏற்படுத்தி வைத்திருக்கிறார்.

அப்படியானால் கண் சுத்தமாவதற்காக இறந்துபோனவர்களை நினைத்துக்கொண்டு அழவாவது அழவேண்டும், தானிதற்குமுன் கண்ட ஆச்சரியங்களை எண்ணியெண்ணி சிரிக்கவாவது சிரிக்கவேண்டும், காரமாவது உறைக்க வேண்டுமோவென்றால் அது அவச்யமில்லை. இதை ஒட்டின ஒரு நுட்பமான விஷயம் சொல்லவேண்டியிருக்கிறது; அதைச் சொல்லிவிட்டால் விஷயம் தெளிவாகிவிடும். அதாவது: நமது கண்கள் எப்போதும் இடைவிடாமல் சுத்தம் செய்விக்கப்பட்டே வருகின்றன. நல்ல நித்ரையில் கண்கள் அசைவற்றிருக்கும்போதுமாத்ரம் என்னமோ தெரியாது, மற்றக் காலம்முழுவதும் ஒவ்வொரு நிமிஷமும் கண்கள் சுத்தியடைந்து வருகின்றன. கண்களின் மேல் இமையானது ஒவ்வொருதரம் அசைவுபெற்று மூடித்திறக்கும்போதெல்லாம் கண்கள் சுத்தியடைகின்றன. நம்முடைய ப்ரயத்னமின்றியே ஒவ்வொரு நாளும் ஒவ்வொருநாழிகையும் ஒவ்வொரு விநாடியும் நமது கண்கள் சுத்தப்படுத்தப்பட்டு வருகின்றனவாம். "வேண்டுமானால் ஒரு பரீக்ஷை பார்க்கலாம். புருவங்களின் இரண்டு வெளிக்கோடியிலும் விரலைவைத்துப் பாருங்கள்; கெட்டியான எலும்பு தட்டுப்படுகிறதல்லவா? அந்த எலும்பின் கீழ்ப்பக்கமாகக் கண்ணுக்கும் அவ்வெலும்புக்கும் மத்தியில் பைபோல் மெல்லியதாகக் கொஞ்சம் இடம் இருக்கிறதல்லவா? கண்களை அலம்புவதற்கு வேண்டிய நீரை இந்தப் பையானது சேர்த்து வைத்துக்கொள்வதால் இதை ஒரு நீர்ப்பை அல்லது ஒரு சிறு நீர்த்தொட்டியென்று சொல்லலாம். இப்படியாக ஒவ்வொரு கண்ணுக்கும் ஒவ்வொரு நீர்ப்பை உண்டு. இந்த நீர்ப்பையிலிருந்து கண்ணுக்குக் குறுக்கே ஜலத்தைக் கொண்டுபோவதற்காக ஏழு எட்டு ஸன்னமான நீர்க்குழல்கள் இருக்கின்றன. இக்குழல்களின் வழியாய் கண்ணீரானது இடைவிடாமல் ஓடிக்கொண்டே மெதுவாகக் கண்ணை சுத்தம்செய்துகொண்டிருக்கிறது. குறுக்காக அந்நீரானது ஓடி எங்கே போகிறதென்றால், கண்ணுக்குள்ளேயிருக்கும் ஒரு பையில்போய் விழுந்து, அதன்வழியாக மூக்கில் இறங்கிவிடுகிறது. மூக்கு எப்படி சுத்தியாகுமென்றாலோ அது நாம் செய்துகொள்ளவேண்டிய காரியம்.

"கண்ணீர் என்பது இப்படிப்பட்டதாயினும் அது கண்ணைவிட்டு வெளியேறி சொட்டுச் சொட்டாகக் கீழே விழுகிறவரையில், அதைக் கண்ணீர்விடுதல் என்று வழங்குவதில்லை. அழும்போதும் சிரிக்கும்போதும் நாக்கில் காரம் உறைக்கும்போதுந்தான் கண்ணீர் விடுதல் உண்டாகும். இதற்கு என்னகாரணம் என்றால்—சிரிப்பும், அழுகையும் மனவெழுச்சியை உண்டு பண்ணுகின்றன மனவெழுச்சி உண்டானவுடனே கண்களின் நீர்ப்பைகளிலிருந்து நீர் அதிகமாகப் பெருகுகிறது; இந்த அதிக நீரைக்கொண்டுபோக நீர்க்குழல்களுக்குச் சக்தியில்லாமையால் மிகுந்த நீரானது கண்களிலிருந்து நேராகக் கீழே விழுகின்றது."

மிளகாய் சாப்பிடும்போது கண்ணீர்விடக் காரணமென்னவென்றால், மிளகாயின் பரமாணுக்கள் நிறைந்திருக்கும். கண்ணுக்குள் செல்ல, கண்ணை அவைகளிலிருந்து காப்பதற்காக நீர்ப்பையிலிருந்து அதிக நீர் ஓடி வருகிறது. மிளகாய் மாத்ரமல்ல; வேறெந்தப் பொருள், மண்ணோ, தூசியோ, கண்ணில்விழுந்தாலும் கண்ணில் ஜலம் ததும்பும்.

மேலும், மூக்கினால் நடக்கிற காரியமும் கொஞ்சமுண்டு. காரம் சாப்பிடும்போது கண்ணைக் கெட்டியாக மூடிக்கொண்டாலும் மூக்கு மாத்ரம் திறந்து இருக்கு

மானால் அவ்வஸ்துவின் சில பரமாணுக்களாவது கண்ணுக்குள் போய்ச் சேராமலிரா. அது ஏன் என்றால், கண்ணிலிருந்து மூக்கின் வழியாய் கீழ்த்வாரம் இருக்கிறதுபோல மூக்கிலிருந்து கண்ணுக்கு மேல் த்வாரம் உண்டு. அதன் வழியாக காரமானவஸ்துக்கள் கண்ணுக்குள் போகின்றன. இந்த அனுபவம் மூக்குத்தூள் உபயோகிப்பவர்களுக்கு ப்ரத்யக்ஷமாயிருக்கும்.

“ஆனதுபற்றி ஸந்தோஷம், துக்கம் இவைகளினால் உண்டாகும் கண்ணீருக்கும், காரம் சாப்பிடுவதினால் உண்டாகும் கண்ணீருக்கும் பேதமுண்டு. பின்னது, தூசி கண்ணில் விழுந்தால் எப்படியோ அதுபோல, மிளகாயின் பரமாணுக்கள் கண்ணுக்குள் புக, அவைகளினால் கண்ணுக்குத் தீங்குவராமலிருக்கும் பொருட்டு கண்ணீர் ஓடிவருகிறது. முன்கூறியதோ, ஸுக துக்கங்களினால் மனஸு தாபமடைந்து உணர்ச்சிமேலிட்டு அதனால் நீர்ப்பெருக்கு உண்டாகி நீர்க்குழல்களின் வழியாகச் செல்லக்கூடிய ஜலம்போக மிகுதியாக நிற்பது கீழே விழுகிறது. லஜ்ஜை உண்டாகும் வேளையில் அதனுடைய உணர்ச்சியானது, ரத்தாசயத்தைத் தாக்கி, ரத்தத்தை முகத்தினுள் ஓடிவரும்படி செய்து, முகம் சிவப்பதும், பயம் தோன்றும்போது முகத்திலுள்ள இரத்தத்தைப் போக்கடித்து முகம் வெளுத்துப்போவதும் நாம் கண்டிருக்கிறோமல்லவா? இவ்வாறாகவே ஸுக துக்கங்களினால் உண்டாகும் உணர்ச்சியானது தலைக்கொண்டு கண்ணீர் அதிகமாகமாறி, நீர்க்குழல்கள் கொள்ளுமளவு போக, மிச்சமுள்ளது கன்னத்தில் வழிந்தோடும்.

## FEEDING THE INFANTS.

### குழந்தைகளுக்கு உணவு அளிக்கும் விதம்.

சிறு குழந்தைகள் திடமாயிருந்தால் அநேக தொத்து வியாதிகளிலிருந்து தப்பித்துக் கொள்ளுவதுமல்லாமல், பெரியவர்களான பிற்பாடும் ஸுலபமாக அவர்கள் வ்யாதியினால் பீடிக்கப்படாமலிருப்பார்கள். ஆகையால் தாய்மார்கள் குழந்தைகளை மூன்று வயது வரையில் சிரத்தையுடன் காப்பாற்றிவிட்டால் பிற்பாடு அவர்களுக்கு தொந்தரவு அநேகமாய் ஏற்படாது. குழந்தைகளுக்கு தேகபலத்தையும் வளர்ச்சியையும் கொடுக்கக்கூடியது அவர்கள் உட்கொள்ளும் ஆகாரமே. குழந்தைகளின் ஆகாரமானது அந்தந்த வயதுக்குத் தகுந்ததாகவும் புஷ்டியைக் கொடுக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டியது. இது விஷயமாய் டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாள் [illegible] சிலவிவரங்கள் தெரிவித்திருக்கிறார்.

(1) குழந்தை பிறந்தவுடன் அதற்கு சரியான ஆகாரம் அதனுடைய தாயாரின் மார்பிலிருந்து ஊறும் சீம்பால்தான். அந்த சீம்பாலுக்கோ குழந்தையின் மலத்தைக் கழிக்கிற சக்தியும் சிசுவுக்கு நல்ல பசியை உண்டாக்குங் குணமும் அமைந்திருக்கிறது. நம்மவர்கள் இதுதெரியாமல் பிறந்த குழந்தைக்கு செவ்வெண்ணையும் தண்ணீர் கலந்த பசும்பாலையும் புகட்டுகிறார்கள். அது மிகப் பிசகு. (2) குழந்தை பிறந்த ஆறுமணிக்குப் பிறகு சிசுவைத் தாயார் பால்குடிக்கச் செய்ய வேண்டியது. (3) முதல் மூன்று மாஸம் இரண்டு மணிக்கு ஒருதரம் பகலிலும் நாலுமணிக்கு ஒருதடவை இரவிலும் முலைப்பால் கொடுத்துவர வேண்டியது. (4) மூன்றுமாஸத்திலிருந்து ஆறுமாஸம் வரையில் பகலில் இரண்டரைமணி நேரத்திற்கு ஒருதரமும், இரவில் நாலுமணிக்கு ஒருதரமும் கொடுக்க வேண்டியது. (5) ஆறுமாதத்திலிருந்து ஒன்பது மாதம் வரையில் பகலில் மூன்றுமணிக்கு ஒரு தரமும் இரவில் 4 மணிக்கு ஒரு தடவையும் பால்கொடுக்க வேண்டும். இரவு 11 மணியிலிருந்து காலை ஏழுமணிவரையில் பால்கொடுக்கக்கூடாது. இந்த நேரத்தில் குழந்தை ஒருவித தொந்தரவும் இல்லாமல் நித்திரை செய்யவேண்டும். (6) ஒன்பதுமாஸத்திலிருந்து ஒரு வர்ஷம் வரையில் பகலில் நாலுமணிக்கு ஒருதரமும், இரவில் மேல்சொன்ன படியும் செய்யவேண்டியது. ஒன்பதுமாதம் அல்லது ஒரு வர்ஷத்திற்குப் பிறகு குழந்தையை பால் மறக்கடிக்க வேண்டியது. நடுவில் குழந்தைகள் அழுதால் வெய்யிற்காலத்தில் தாகத்தினாலும், மழைக்காலத்தில் குளிரினாலும் அழுவது ஸகஜம். இதைத் தவிர உடம்பில் அசௌக்யம் ஏற்பட்டாலும் குழந்தைகள் அழும். இதை அறியாமல் சில தாய்மார்கள் குழந்தை அழும் போதெல்லாம் பசியினால் அழுகிறதென்று நினைத்து கண்டபடி உணவைக் கொடுக்கிறார்கள். இதனால்தான் குழந்தைகளுக்கு அஜீரணம், வயிற்றுப்போக்கு முதலியவை உண்டாகின்றன. தாய்ப்பாலுக்கு ஸமானமான ஆகாரம் இதுவரையில் ஒருவராலும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆகவே திடசரீரமுள்ள தாய்மார்கள் எப்போதும் முலைப்பால் கொடுத்தே வளர்க்கவேண்டும். குழந்தைகளுக்கு வேண்டிய பால் இல்லாத தாய்மார்கள், புஷ்டியான ஆகாரத்தாலும் மருந்துகளாலும் பால் சுரக்கச்செய்து குழந்தைகளுக்குப்பால் கொடுக்கவேண்டியது அவச்யம். ஆனால் தாய்க்கு காசம், ரத்தக்குறைவு, அஜீர்ணம், வயிற்றுப்போக்கு, ஹ்ருதய வ்யாதி முதலிய வ்யாதிகளிருந்தால் தாய்ப்பால் குழந்தைகளுக்கு ஏற்றதல்ல. இந்த ஸந்தர்ப்பங்களிலும், தாய்மார்களுக்கு பால் இல்லாதபோதும், பசும்பாலையே உபயோகிக்க வேண்டியிருக்கும். பசுவின் பால்தான் தாய்ப்பாலுக்கு அடுத்தபடியாக குழந்தைக்கு ஏற்றது.



# Departmental Notes.

# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.

## வித்யாவிஷயம்.

### Government and Education.

கவர்ன்மெண்டாரும் கல்வியும்.—சில வர்ஷங்களுக்குமுன் அதிகாரப் பிரிவினையைப்பற்றிப் பரிசீலனைசெய்த கமிட்டியார் கல்வி விஷயமாய் சில ப்ரேரணைகள் செய்திருந்தார்கள். அவைகளாவன: ஸ்தல ஸ்தாபனங்கள் விசேஷமாக ப்ரைமெரிக் கல்வியைப் பற்றியே கவனம் செலுத்தவேண்டும். ப்ரைமெரி ஸ்கூல்கள் விஷயமாகத் தக்க கவனம்செலுத்தி, ப்ரைமெரிக் கல்வியை அபிவ்ருத்தி செய்திருக்கும் ஸ்தலஸ்தாபனங்கள், வேண்டுமானால், தேச பாஷையில் நடந்துவரும் மிடில்ஸ்கூல்கள் விஷயத்துக்காகவும் பணம் செலவழிக்கலாம். இங்க்லீஷ் பாஷை கற்பிக்கும் ஸெகண்டரி ஸ்கூல்களுக்காகும் செலவை கவர்ன்மெண்டாரே பொறுத்துக்கொள்ளவேண்டும். இந்த ப்ரேரணைகள் விஷயமாய் இந்தியா கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கும் அபிப்ராய மென்னவென்றால், தற்போது ஸ்தல ஸ்தாபனங்கள் ஸெகண்டரி ஸ்கூல்களை நிர்வகித்து வருவதில், அவைகள் ஸெகண்டரி ஸ்கூல்களுக்கு அதிக பணம் செலவழித்து ப்ரைமெரிக் கல்விக்குக் குறைவாகச் செலவழிக்க நேரிடுகிறது. இதை உத்தேசித்து இந்தியா கவர்ன்மெண்டார் கமிட்டியார் சொல்லியிருக்கும் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இருந்தாலும் பணமுடையான இந்த ஸமயத்தில் அந்தக் கொள்கைகளை அனுஷ்டானத்துக் கொண்டுவருவதற்கில்லாமலிருக்கிறது. அந்தந்த மாகாணத்தில் வேறு ஏற்பாடுகள் செய்யாதவரையில் ஸெகண்டரி ஸ்கூல்களுக்கு ஆகும் செலவை ஸ்தல ஸ்தாபனங்களே பொறுத்துக்கொண்டு வரவேண்டும். ஆனால் ஸெகண்டரி ஸ்கூல்களுக்கு அதிகமாகச் செலவு செய்து ப்ரைமெரி ஸ்கூல்களுக்குப் பணம் குறைத்துச் செலவழிக்க மார்க்க மேற்படாதபடி இன்னின்ன கல்விக்கு இவ்வளவு பாகம் செலவழிக்கவேண்டுமென்று ரூல்கள் ஏற்படுத்தவேண்டும். பண ஸௌகர்ய மேற்பட்டபிறகு ஸெகண்டரி கல்விக்காகும் செலவை மாகாண கவர்ன்மெண்டுகள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

### Training for Public Life.

பொது ஜன வேலைக்குத் தயாராவது.—பொது ஜன வேலைகளில் அதிக ஊக்கமெடுத்துப் பாடுபட விரும்பும் வாலிபர்கள் புராதன பாஷைகளைப் படிப்பதில் அதிக காலம் செலவழிக்கக்கூடாது. பூகோள சாஸ்த்ரத்தில், ராஜாங்கங்களின் அமைப்பைப்பற்றியும் வ்யாபாரத்தைப் பற்றியும் சொல்லும் பாகங்களை தெரிந்திருக்க வேண்டும். தாய்ப்பாஷையைத் தவிர வேறு ஐரோப்பிய பாஷை தெரிந்திருக்கவேண்டும். ஐரோப்பிய தேசசரித்ரமும் இங்க்லண்டின் தேச சரித்ரமும் தெரிந்திருக்கவேண்டும். பொருளாதார சாஸ்த்ரத்தையும் துரைத்தன ஏற்பாட்டையும் நன்றாய்க் கற்கவேண்டும். நவீன சாஸ்த்ரங்களில் ப்ரக்ருதி சாஸ்த்ரம், ரஸாயன சாஸ்த்ரம், மின்ஸார சாஸ்த்ரம், இந்த சாஸ்த்ரங்களுக்கு உதவும் கணிதசாஸ்த்ரம் ஆகிய இவைகளின் முக்ய அம்சங்களும் தெரிந்திருக்க வேண்டும். எந்த வேலையும் செய்யக் கைவரும்படி ஏதாவது தொழில்களில் பழக்கமடைந் திருக்கவேண்டும்.

### Sanskrit Schools in Tinnevelly Dt.

திருநெல்வேலி ஜில்லாவில் ஸம்ஸ்க்ருத பாடசாலைகள்.—திருநெல்வேலி ஜில்லாவில் சத்ரம் பண்டிலிருந்து அந்த ஜில்லா போர்டால் நிர்வகிக்கப்பட்டு வரும் ஸம்ஸ்க்ருத ஸெக்ண்டரி பாடசாலைகள் ஐந்தாகும். அவைகளில் 190 மாணவர்கள் வாசித்து வந்தார்கள். அந்த ஜில்லாவில் கல்லிடைக் குறிச்சியிலுள்ள ஸம்ஸ்க்ருத பள்ளிக்கூடத்தை ஒரு காலேஜாக உயர்த்தவேண்டுமென்று சேரமாதேவி தாலுகா போர்டார் ஒரு ப்ரேரணை செய்து கவர்ன்மெண்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

### Institute of Commerce and Accountancy.

வ்யாபாரம், தொழில், வ்யாபாரக் கணக்குகள் இவைகளுக்கான பள்ளிக்கூடம்.—சென்னையில் வ்யாபார விஷயங்களையும், தொழில்கள் வ்யாபாரம் ஆகிய இவைகள் ஸம்பந்தமான கணக்குகளையும் கற்பிக்க ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபிப்பதைப்பற்றிப் பரிசீலனைசெய்ய சென்னை கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டி நியமிக்கப் போகிறதாகத் தெரிகிறது.

# TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### Scientific Terms in Tamil

**தமிழில் சாஸ்த்ரீய பதங்கள்.**—மேல் நாட்டு நவீன் சாஸ்த்ரங்களை தமிழில் மொழிபெயர்க்க விரும்புகிறவர்கள் சாஸ்த்ரபதங்களுக்குத் தமிழில் தக்க ப்ரதிபதங்கள் இல்லாமல் கஷ்டப்படவேண்டியிருக்கிறது. ஒரே மேல்நாட்டு வார்த்தைக்குப் பலர் பல ப்ரதிபதங்களை தமிழில் நூதனமாய் கற்பித்துக் கொள்ளுகிறார்கள். உதாரணமாக, ஸப்மரீன் என்னும் வார்த்தைக்கு சிலர் நீர்க்கீழ்க் கப்பல் என்றும், கீழ் நீர்க்கப்பலென்றும்; நீர் மூழ்கிகள் என்றும், பல ப்ரதிபதங்கள் சிருஷ்டிக்கப்பட்டு வழக்கத்திலிருந்து வருகின்றன. 'ட்ரெஞ்ச்' என்னும் வார்த்தைக்கு கிடங்கு, அரண், மறைகுழி அரண் என்று சில ப்ரதிபதங்கள் ஏற்பட்டு, உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

இன்னும் ஒரே வார்த்தையானது அநேக பொருள்களைக் கொடுத்துவருகிறது. உதாரணமாக ஆகாசம் என்பது ஸூக்ஷ்மமான ஈதர் (ether) என்பதையும், நீலநிறமான ஆகாசத்தையும் (Sky), அதே வார்த்தை ஆகாயம் எனத் திரிந்து அசையாத நிலைமையிலுள்ள காற்றையும் (air) குறிக்க உபயோகிக்கப்படுகிறது.

வாயு என்னும் பதமானது, கீல்வாயு, (Rheumatism) வாத பித்த கபம் என்னும் த்ரிதோஷங்களில் ஒன்றாகிய வாதம், அசையாமலிருக்கும் காற்று (air), ப்ராணவாயு, கரியமில வாயு முதலிய குறிப்பிட்ட வாயுக்கள் (gas) ஆகிய இவைகளைக் குறிப்பிட எழுதுவோரின் மனோ பாவப்படி உபயோகப்படுகிறது. இப்படி இன்ன இங்க்லீஷ் அல்லது வேறு அயல்நாட்டுப் பதத்துக்கு இன்ன தமிழ் ப்ரதிபதந்தான் உபயோகிப்பதென்ற நியமமில்லாததால், தமிழில் உபயோகிக்கப்படும் பதம் இன்ன அர்த்தத்தில் வழங்குகிறதென்று தெரியாமல் எழுதினவிஷயமும் சரியாக விளங்குவதில்லை. இங்க்லீஷ் அல்லது வேறு அன்யபாஷை தெரிந்தவர்கள் இப்படித் தமிழில் எழுதப்பட்டதை வாசிப்பதைவிட இங்க்லீஷ் அல்லது வேறு அன்ய பாஷைகளில் எழுதியுள்ளதை வாசிப்பதே நல்லதென்று எண்ணி, பெரும்பாலும் தமிழில் எழுதியுள்ள நூதனக் கருத்துக்களடங்கிய நூல்களைப் புறக்கணித்து விடுகிறார்கள். ஆகவே தமிழில் ப்ரதிபதங்களை சிருஷ்டிப்பதில் ஒரு வரையறையும் ஒழுங்கும் இருக்கவேண்டியது அவச்யமாகிறது. இதை உத்தேசித்து சேலத்தில் சில தமிழபிமானிகள் தமிழ் சாஸ்த்ரீய பத ஸங்கம் என்று ஒரு ஸபை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த ஸபையார், தமிழில் மொழிபெயர்க்க வேண்டிய அன்ய பதங்களை சேகரித்து, அவைகளுக்கு தற்கால ப்ரயோகத்துக்காக ப்ரதிபதங்கள் தெரிந்தெடுத்து, அவைகளைப் பற்றி வித்வான்கள் சொல்லும் அபிப்ராயங்களை சேகரித்துக் கடைசியில் அன்யபதங்களுக்கு சரியான தமிழ் ப்ரதி பதங்களை நிர்ணயித்து, அவைகளை யெல்லாம் சேர்த்து ஒரு அகராதியாக வெளியிடப்போகிறார்கள். இதற்காக அவர்கள் ஒரு மாஸாந்தரப் பத்ரிகையும் வெளியிட்டு வருகிறார்கள். முதல் ஸஞ்சிகையில் இப்படிப்பட்ட ஆராய்ச்சியின் அவச்யம் குறிக்கப்பட்டிருப்பதோடு, கணித ஸம்பந்தமான சில தமிழ் ப்ரதிபதங்களும், தமிழ் ப்ரதிபதங்கள் நிர்ணயிக்கவேண்டியிருக்கும் சில இங்க்லீஷ் பதங்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

### Tamil Style.

**தமிழ் நடை.**—ஸமீபத்தில் வெளிவந்த 'இந்தியன் ரெவ்யூ' பத்ரிகையில் ரெவரண்ட் ஏச். எ. பாப்லி என்பவர் செய்யுள் நூல்களை அச்சிடுவதில் சில சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்கிறார். செய்யுளின் அடிகளை சீர்களாகப் பிரித்து அச்சிடாமல், அவைகளில் உள்ள வார்த்தைகளைப் பிரித்து அச்சிட வேண்டும். இதனால் செய்யுளின் அர்த்தம் ஸுலபமாய் விளங்குவதோடு, வாசிப்பவர்க்கு ஸந்தி பிரிக்கவேண்டிய கஷ்டமிராது. வேண்டுமான இடங்களில் முற்றுப்புள்ளி, காமா முதலிய குறிகளையும் உபயோகிக்கலாம்.

கடினஸந்திகளை உபயோகிக்கும் வழக்கத்தை நிறுத்திவிடவேண்டும். கடினஸந்திகளால் வாசிப்பவர்மனம் கலக்க மடைகிறது. வசன நடையில் எந்த் ஸந்திகள் உபயோகப் படுகின்றனவோ அவைகளை மாத்ரம் செய்யுள் நடையில் உபயோகிக்க வேண்டும். இவ்விதம் அவர் எழுதியிருக்கிறார்.

### Registers in Elementary Schools

**எலிமெண்டரி ஸ்கூல்களில் ரெஜிஸ்டர்கள் வைக்கும் விதம்.**—இப்பெயர் கொண்ட ஒரு சிறு புஸ்தகமொன்று திருச்சினாப்பள்ளியிலுள்ள ஆர். வி போர்டிங் அண்ட் ட்ரெய்னிங் பாடசாலையில் வெளியாயிருக்கிறது. இதில் அட்மிஷன் ரெஜிஸ்டர், அட்டெண்டன்ஸ் ரெஜிஸ்டர், பிள்ளைகள் சம்பள ரெஜிஸ்டர் முதலிய 11 ரெஜிஸ்டர்களின் விவரங்களும், அவைகளிலுள்ள காலங்களின் விவரங்களும், அவைகளைப் பூர்த்திசெய்யும் விதமும் எழுதப்பட்டிருக்கின்றன. இவைகளில் சிலவற்றில் மாதிரிக்கு சில காலங்கள் பூர்த்திசெய்து காட்டப்பட்டிருக்கின்றன. இந்தப் புஸ்தகம் எல்லா உபாத்யாயர்களுக்கும் பயன்படும். இதன் விலை 1 அணு 6 பைதான். வேண்டியவர்கள் மேற்கண்ட ஸ்கூல் ஹெட்மாஸ்டருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.



# SCIENCE AND INVENTION.

## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### If the Bottom of the Sea Gave Way.

**கடலின் அடித்தரை இடிந்து விழுந்துவிட்டால்:**—வானம் இடிந்தவிழுந்து விட்டாலும், நாம் நிற்கும் தரை இடிந்து உள்ளே போய்விட்டாலும் என்ன நேரிடுமென்பதைப்பற்றி சிறுவர்கள் பலமாக யோசனை செய்வதுண்டு. அதை நாம் இதுவரையில் குழந்தைகளுடைய பேச்சு என்று எண்ணிவந்தோம். நாம் நிற்கும் தரையும், ஸமுத்ரத்தின் அடித்தரையும் ரொம்ப கெட்டியல்லவென்றும், அவைகள் இடிந்து விழுந்து பூமியின் உள்புறம் போய்விடக் கூடுமென்றும், அபபடி ஸமுத்ரத்தின் தரை இடிந்துபோய்விட்டால் ஒரு பெரிய அக்னிப்ரளயம் நேருமென்றும், அப்போது நாம் வஸிக்கும் இந்த பூமியும், அதிலுள்ள மனிதர் முதலிய சராசரங்களும், அழிந்து போய் ஒரு நெருப்பு கோளமாக மாறிவிடுமென்றும் ஒரு ப்ரெஞ்ச் வித்வான் சொல்லுகிறார். இதற்கு அவர் சொல்லும் காரணமென்னவென்றால், பூமியின் உள்புறமானது பெரும் நெருப்பாக இருக்கிறது. அந்த நெருப்புக்குமேல் அதைச் சூழ்ந்துகொண்டு, நாம் நிற்கும் தரையும், ஸமுத்ரத்தின் அடித்தரையும் இருக்கின்றன. இந்தத் தரைகள் கெட்டியா யில்லாமல் மெல்லியதாயிருக்கின்றன. ஸமுத்ரத்தின் அடித்தரை இன்னும் மெல்லிய படையாக இருக்கிறது.

பூமியின் உள்புறத்திலிருக்கும் நெருப்புமயமானபொருளினால் ஏற்படும் சில மாறுபாடுகளால், ஸமுத்ரத்தின் அடித்தரை, அதாவது, பூமியின் மேற்புறமாகிய மண்படை விரிந்து இடிந்து உள்ளே விழுந்துவிட்டால், உடனே ஸமுத்ரத்தின் அடித்தரையில் ஏற்படும் இடைவெளியின் வழியாக ஸமுத்ர ஜலம் பூமிக்குள் போய் அங்குள்ள பெரும் நெருப்பில் விழும். நெருப்பின் உஷ்ணத்தால் ஜலமானது ப்ராணவாயுவாகவும் ஹைட்ரொஜின் என்னும் ஜலவாயுவாகவும் பிரிந்துவிடும். ஜலவாயு உடனே பற்றிக்கொண்டு எரியும். ப்ராணவாயு பக்கத்திலிருப்பதால் ஜலவாயு அதிக உக்ரமாய் எரிந்து வரவர வ்ருத்தியாகி உலகமுழுவதையும் நாசம் செய்துவிடும். மனிதர் உள்பட ஜீவராசிகளெல்லாம் அழிந்துவிடும். பிறகு பூமியில் சில மாறுபாடுகள் ஏற்பட்டுக் கடைசியில் அது ஒரு நெருப்பு கோளமாக மாறிவிடும். இப்படிப்பட்ட ஸம்பவங்கள் அடிக்கடி இந்த ப்ரபஞ்சத்தில் நேருகிறதாக மேற்சொன்ன வித்வான் சொல்லுகிறார். நக்ஷத்ரமண்டலத்தில் பூமியைப்போல் அநேக க்ரகங்கள் அடிக்கடி இப்படிப்பட்ட ப்ரளயத்தை யடைகின்றனவாம்.

### Keeping the Food Warm.

**ஆகாரத்தை சூடாக வைத்திருப்பது.**—அமெரிக்காவிலுள்ள ஒரு ஆஸ்பத்திரிக் கட்டிடத்தில் இரண்டு மூன்று மாடிகள் இருக்கின்றன. சமையல் கட்டிடத்திலிருந்து இரண்டாவது மூன்றாவது மாடிகளிலுள்ள வ்யாதியஸ்தர்களுக்கு ஆகாரத்தைக் கொண்டுபோய் அவர்களுக்கு பரிமாறுவதற்குள் ஆகாரம் ஆறிக்குளிர்ந்து போய் வந்தது. இந்த அஸௌகர்யத்தை உத்தேசித்து, அந்த ஆஸ்பத்ரியின் மானேஜர் ஒரு புதிய ஆகார வண்டி தயார்செய்திருக்கிறார். அந்த வண்டியில் ஆகாரத்தைச் சூடாக வைத்திருக்க ஒரு மின்ஸார ஸாதனம் அமைத்திருக்கிறார். சமையல் தயாரானவுடன், வண்டியிலுள்ள ஸாதனத்துக்கு மின்ஸார ஸம்பந்த மேற்படுத்தி அதில் ஆகாரமுள்ள தட்டுகளைவைத்து வண்டியை மூடி, அந்த வண்டியை இரண்டாவது மூன்றாவதுமாடிகளுக்கு ஏற்றிக்கொண்டுபோவார்கள். ஆகாரத்தைப் பரிமாறும் வரையில் மின்ஸாரத்தால் உஷ்ணம் ஏற்படுமாகையால் ஆகாரம் சூடாகவே இருக்கும். ஆகாரத்தைப் பரிமாறினபின் மின்ஸார ஸம்பந்தத்தை நிறுத்திவிட்டு, காலியான வண்டியைக் கொண்டுபோய் விடுவார்கள். ஆகாரம் கொடுக்கத் தாமஸமேற்படுமானால் மின்ஸார ஸம்பந்த மிருந்து கொண்டே இருக்கும். இந்த வண்டியை மின்ஸார வெளிச்சம் உபயோகிக்கப்படும் எந்தவிடத்திலும் உபயோகிக்கலாமாம். மின்ஸார விளக்குகளிலுள்ள கண்ணாடிகளைக் கழற்றிவிட்டு, விளக்கின் அடிப்பாகத்தோடு, வண்டியிலிருக்கும் கம்பிகளைச் சேர்த்துவிட்டால், அதனால் வண்டியிலுள்ள ஆகாரத்தை சூடாக வைத்திருக்க உதவும் ஸாதனம் சூடுகொண்டுவிடும்.

### Winding Watches by Electricity.

**கடியாரங்களுக்கு மின்ஸார உதவியால் சாவி கொடுத்தல்.**—ந்யூயார்க்கிலுள்ள ஒரு கடியாரக் கம்பெனியார் தங்களிடமுள்ள 700 கடியாரங்களுக்கு தினம் சாவி கொடுக்க பல ஸிப்பந்திகளை நியமித்து வந்தார்கள். இப்போது அவர்கள் மின்ஸார யந்த்ரத்தால் ஸுலபமாக கடியாரங்களுக்கு சாவிகொடுத்து வருகிறார்களாம்.

# SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

### Birth and Death Rate in India.

**இந்தியாவில் ஜனன மரண விகிதம்.**—அடியில் வரும் அட்டவணையில் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாகாணத்திலும், ஜனன மரண விகிதமும் சிசு மரண விகிதமும் ஆயிரத்துக்கு இவ்வளவு என்பது குறிக்கப் பட்டிருக்கிறது. இந்தக்கணக்குகள் 1915-ம் வர்ஷத்தியவை.

| | ஜனன விகிதம். | மரண விகிதம். | சிசுமரண விகிதம். |
|---|---|---|---|
| ஐக்யமாகாணங்கள் | 43·48 | 30·04 | 205·54 |
| பம்பாய் | 37·10 | 26·12 | 172·00 |
| சென்னை | 31·19 | 21·97 | 186·53 |
| வங்காளம் | 31·80 | 32·83 | 218·93 |
| பேஹார் ஒரிஸா | 40·49 | 32·23 | 185·93 |
| அஸ்ஸாம் | 33·60 | 30·86 | 201·89 |
| மத்யமாகாணங்கள் | 47·95 | 35·91 | 259·72 |
| பஞ்சாப் | 43·60 | 36·33 | 188·57 |
| பர்மா | 35·13 | 27·99 | 219·35 |
| வடமேற்குஎல்லை | 31·73 | 23·61 | 166·25 |
| டெல்லி | 48·35 | 29·22 | 220·89 |

ஐரோப்பிய தேசங்களில் ஜனன மரணவிகிதம் 1000-க்கு எவ்வளவென்பது அடியில்கண்ட அட்டவணையால் தெரியவரும். கணக்கு விவரங்கள் 1912-ம் வர்ஷத்தியவை.

| | ஜனன விகிதம். | மரண விகிதம். |
|---|---|---|
| யுனைடட்கிங்டம் | 23·9 | 13·8 |
| இங்க்லண்ட்வேல்ஸ் | 23·8 | 13 3 |
| ஸ்காட்லண்ட் | 25·9 | 15·2 |
| ஐயர்லண்ட் | 23·0 | 16 5 |
| ஆஸ்ட்ரியா | 31 3 | 20·5 |
| பெல்ஜியம் | 22·6 | 14 8 |
| டென்மார்க் | 26 7 | 13·0 |
| பின்லண்ட் | 29·1 | 16·3 |
| ப்ரான்ஸ் | 19·0 | 17 5 |
| ஜெர்மனி | 28·3 | 15·6 |
| ஹாலண்ட் | 28·1 | 12·8 |
| ஹங்கேரி | 36·3 | 23·3 |
| இட்டலி | 32 4 | 18·2 |
| நார்வே | 25·4 | 13·4 |
| ப்ரஷ்யா | 28 9 | 15·5 |
| ருமேனியா | 43·4 | 22·9 |
| ஸெர்வியா | 380 | 21·1 |
| ஸ்பெய்ன் | 32·6 | 21·8 |
| ஸ்வீடன் | 23·7 | 14·2 |

### How to Avoid Pneumonia.

**நீயூமோனியா என்னும் க்ஷயரோகம் வராதபடி பார்த்துக்கோள்வது.**—ந்யூமோனியா என்னும் க்ஷயரோகமானது லங்க்ஸ் என்னும் நுரையீரல் ஒரு க்ருமியால் வீங்கிப்போய் அதனுல் உண்டாவது. இந்த வ்யாதி மேற்சொன்ன நுண்ணிய க்ருமியால் ஒருவரிடமிருந்து மற்றொருவரிடம் பாவுகிறது. நல்ல திடசரீரமுள்ளவர்களுடைய மூக்கிலும், தொண்டையிலும் இந்த வ்யாதி க்ருமி சேர்ந்துவிட்டால், அவர்களுக்கு ஸாதாரண ஜலதோஷம்மாத்ரம் உண்டாகும். ஆனுல் தேகம் மெலிந்து திடசரீரமில்லாதவர்களுடைய மூக்கிலும் தொண்டையிலும் இந்த வ்யாதி க்ருமிகள் சேர்ந்தால், மேற்சொன்ன க்ஷயரோகம் உண்டாகி ரொம்ப ஹிம்ஸை யுண்டுபண்ணும். ரொம்ப கஷ்டப்பட்டு வேலைசெய்வதும், ரொம்ப அதிகமாக விளையாட்டுகள் விளையாடுவதும், ந்யூமோனியா உண்டாவதற்கு அனுகுணமாயிருப்பவை. ஆகையால் வேலையிலும் விளையாட்டிலும் மிதந்தப்புதல் பிசகு. மிதமிஞ்சி அதிகமாகச் சாப்பிடுவதும். மிதமிஞ்சி மாம்ஸ ஆகாரம் சாப்பிடுவதும் தேகத்தின் வீர்யத்தைக் குறைத்து வ்யாதி ஸுலபமாய் உண்டாகும்படி செய்துவிடும். அதிகமான சாராய வகைகள் குடிப்பதால் விஷக்ருமிகள் வ்ருத்தியடைய ஹேதுவாகும். கெட்ட காற்ருல்தான் விசேஷமாய் ந்யூமோனியா பாவுகிறது. குளிர்காலங்களில்கூட காற்று தாராளமாய் வரும்படி ஜன்னல்களை திறந்துவைத்துப் படுப்பவர்களுக்கு அநேகமாய் ஜலதோஷம் வருவதில்லை. அப்படி ஜலதோஷம்வந்தாலும் சீக்ரம் ஸ்வஸ்தமாகிவிடும். அது க்ஷயரோகமாகமாருது. பலஹீனமான வயோதிகர்களும் சிறுவர்களும் ஜலதோஷமுள்ளவர்களுடன் சேருவது கூடாது. ஏனென்ருல், தேக பலமுள்ளவர்களுக்கு வரும் ஜலதோஷமானது தேகம் பலஹீனமானவர்களிடம் பாவி அவர்களுக்கு ந்யூமோனியாவை உண்டாக்கும்

### A New Disease.

**ஒரு புதுவகைநோய்.**—புதுக்கோட்டையைச் சேர்ந்த கொன்னம்பதியில் ஒரு புதுமாதிரியான நோய் தோன்றியிருக்கிறது. இந்த நோயினுல் பீடிக்கப்பட்டவனுக்குத் திடீரென்று சீதளம் ஏற்படுகிறது; உடனே அதிக ஜ்வரமுண்டாகிறது; பிறகு தேகம் பருத்து விடுகிறது; சரீரத்தில் பருத்த பருக்கள் கிளம்புகின்றன; இந்தப் பருக்கள் முதலில் சிகப்பு நிறமாக இருந்து பிறகு கறுப்புநிறமாக மாறுதலடைகின்றன; உடனே நோயாளி இறந்து விடுகிருன். இந்த நோய், 2-அல்லது 3-நாட்கள்தான் இருக்கிறது.



# LAW.

## சட்டம்.

### Breach of Contract and Damages.

**ஒப்பந்தத்தை மீறுவதும் நஷ்ட ஈடும்.**—ஏ-என்பவரும் பி-என்பவரும் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அந்த ஒப்பந்தத்தின்படி பி-என்பவர் 50. ரூபாய் ஏ-யினிடம் டெபாஸிட்டாக கொடுத்தார். ஒப்பந்தத்தை மீறிநடந்தால் அதனுல் ஏற்படும் நஷ்டத்துக்காக டெபாஸிட் செய்த 500 ரூபாய்தான் ஈடாய் எடுத்துக்கொள்ளுகிறதென்று ஒப்பந்தத்தில் ஒன்றும் எழுதப்படவில்லை. பிறகு பி-என்பவர் ஒப்பந்தத்தை மீறிநடந்தார். அப்படியானுல் ஏ-என்பவர் டெபாஸிட் செய்த ரூ 500-ஐ மாத்ரம் அடையாமல் ஒப்பந்தம் மீறி நடந்ததால் ஏற்பட்ட பூரா நஷ்டத்துக்கும் ஈடு அடையலாம்.

### Trade Debts and Joint Family.

**வ்யாபாரக் கடன்களும் அவிபக்த குடும்பமும்.**—ஒரு அவிபக்த ஹிந்து குடும்பத்தின் தலைவர் குடும்ப வ்யாபாரம் நடத்திவந்தார். அதில் சில கடன்கள் ஏற்பட்டன. அதற்காக அவர் குடும்ப ஸொத்தை பந்தகம் வைத்தார். பந்தகம் வாங்கினவர் பணத்துக்காக வ்யாஜ்யம் போட்டால் பெந்தகம் வைக்கப்பட்ட ஸொத்தில் அவிபக்த குடும்பத்திலுள்ள மைனர்களுக்குள்ள பாகத்தையும் கட்டுப்படுத்தலாம். ஏனென்ருல் குடும்பக் கடன்களை அடைக்க குடும்ப ஸொத்துகளை பந்தகம் வைப்பதற்கு குடும்பத்தலைவருக்கு அதிகாரமுண்டு.

### Adoption by Minor Widow.

**மைனர் விதவை ஸ்வீகாரம் செய்து கொள்வது.**—11-வர்ஷம் 3-மாஸம் வயஸுள்ள ஒரு ஹிந்து மைனர் விதவை யுக்தா யுக்தத்தை கவனியாமல் உயிலின்படி நியமிக்கப்பட்ட தனது கார்டியனுகிய தனது தகப்பனுருடைய புத்ரனை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டால் அது சட்டப்படி செல்லாது. ஆணுனுலும் சரி, பெண்ணுனுலும் சரி ஹிந்து சட்டத்தின்படி ஹிந்துவானவர் 15-வது வயஸு முடிந்த பிறகே மேஜராகவும் யுக்தா யுக்தம் அறியக் கூடியவராகவும் ஆகிருர்.

### Widow's Right to Maintenance.

**விதவைக்கு ஜீவனும்சம்பெற பாத்யம்.**—அவிபக்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த ஒரு விதவைக்கு ப்ரத்யேகமாக ஸொத்துகள் இருந்தபோதிலும் அவள் ஜீவனும்சத்துக்கு வ்யாஜ்யம் போடலாம். ப்ரத்யேகமான ஸொத்துக்களால் கிடைக்கும் வருமானத்தால் ஜீவனும்ச விகிதம் குறையலாமேயொழிய ஜீவனும்சம் கேட்பதற்கே பாத்யமில்லையென்று சொல்வதற்கில்லை.

### Acquisitions of Father and Joint Family.

ஒரு அவிபக்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த தகப்பனுர் தனது தொழிலில் பொருள் ஸம்பாதித்தார். அவருடைய மகன் அந்தத் தொழிலில் ஸ்வல்பம உதவி செய்துவந்தான். அப்படியானுல் அவர் ஸம்பாதித்த ஸொத்து அவிபக்த குடும்ப ஸொத்தாகாது.

### Adopted Son among Sudras.

**சூத்ரர்களில் ஸ்வீகார புத்ரன்.**—சூத்ர ஜாதியில் ஒருவர் ஒரு பையனை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்ட பிறகு அவருக்குப் பிள்ளை பிறந்தால், பிறந்த பிள்ளைக்குக் கிடைக்கும் ஸொத்தில் கால்பாகந்தான் ஸ்வீகாரம் செய்யப்பட்ட பையனுக்குக் கிடைக்கும்.

### Archaka Inam.

**அர்ச்சக இனும்.**—ஒரு அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்த தலைமுறை தத்வமான அர்ச்சக இனும் நிலத்தின் வரும்படியிலிருந்து வாங்கப்பட்ட நிலமானது அந்த அர்ச்சக இனுமைப்போலவே அவிபக்த குடும்பத்தைச்சேர்ந்ததாகும்.

### Dissolution of Partnership.

**பங்காளிப் பிரிவினை.**—வ்யாபாரத்தில் பங்காளிகளுக்குள் பிரிவினையாவதற்காக வ்யாஜ்யம் போட்டால், அந்த வ்யாஜ்யத்தில் ஒரு பங்காளிக்கு உள்பங்காளிகளிருக்கும்பட்சத்தில் அவர்களை வ்யாஜ்யத்தில் சேர்க்க வேண்டியதில்லை. அப்படி சேர்க்கவும் கூடாது.

IV. லாவீக்லி 10-ம் பக்கம்.

### The Madras High Court.

**சென்னை ஹைக்கோர்ட்.**—சென்னை ஹைக்கோர்ட் ஜட்ஜுகளில் ஒருவராகிய ஆனரபிள் மிஸ்டர் ஜஸ்டிஸ் குமாரஸ்வாமி. சாஸ்த்ரி ஸிவில் ப்ரொஸீஜர் கோடைத் திருத்துவதற்கான கமிட்டியில் மெம்பராய் நியமிக்கப்பட்டிருக்கிறபடியால், அவருக்கு பதிலாக சென்னை ராஜதானியில் ஜில்லா கோர்ட்டு ஜட்ஜாயிருந்த ஜே. ஸி. பர்ன்ஸ் என்பவர் அடிஷனல் ஜட்ஜாக நியமிக்கப்பட்டிருக்கிருர்.

## SOCIETY AND RELIGION.

## ஜன ஸமூகமும் மதமும்.

### A Thiya Priest and Social Reform.

**ஒரு தீய குருவும் ஜனஸமூக சீர்திருத்தமும்.**—மேற்குக் கடற்கரையிலுள்ள தீயர் வகுப்பாரின் குருவாகிய ஸ்ரீநாராயண குருஸ்வாமி என்பவர் ஸமீபத்தில் கள்ளிக்கோட்டையில் அநேக பெரிய மனிதர்களைக் கூட்டி ஓர் ப்ரஸங்கம் செய்தார். அதன் ஸாராம்சம் வருமாறு.

எந்த வகுப்பிலும் எந்த ஜாதியிலும் தாய் தகப்பனில்லாத ஏழைப் பிள்ளைகளை படிக்கவைக்கவேண்டி, முக்யமான விடங்களில் அவர்களுக்காக ஸ்கூல்கள் ஏற்படுத்தவேண்டும். புத்திசாலிரான பிள்ளைகள் பண உதவியில்லாமல் படிப்பை நிறுத்தும்படி நேரிட்டால் அவர்களுக்கு வேண்டிய உதவிசெய்யவேண்டும். உதவியற்ற விதவைகளுக்கும் தரித்ரர்களுக்கும் வேண்டிய உதவிசெய்யவேண்டும். ஏழைகளுக்கும் நோயாளிகளுக்கும், முக்யமான நகரங்களில் தர்ம ஆஸ்பத்ரிகள் கட்டவேண்டும். பகலில் கூலிவேலை செய்கிறவர்களுக்கு மாலைப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தவேண்டும். மதஸம்பந்தமான விஷயங்களை உபதேசிக்க ஸன்யாஸிகளை நியமிக்கவேண்டும். ப்ரம்மச்சாரிய ஆச்ரமங்களை ஏற்படுத்தவேண்டும். மதஸம்பந்தமான பாடசாலைகளையும், பொது சமாசாரங்களைப் படித்து அறிந்துகொள்ளக்கூடிய இடங்களையும், மதஸம்பந்தமான ப்ரஸங்கங்கள் நடைபெறுகிற ஹால்களையும், பத்ரிகைகளையும், வ்ருத்தி செய்யவேண்டும். ஏழைகளுக்குக் கைத்தொழிற் சாலைகளை ஏற்படுத்த வேண்டும். ப்ராம்மணர்களுக்கு ப்ரம்மவித்தையாகிய வேதபுராண சாஸ்த்ரங்களை கற்க ஸம்ஸ்க்ருத பாடசாலைகளை அங்கங்கே ஏற்படுத்தவேண்டும். புலையர், மரவர், குறவர்கள் இப்பேர்ப்பட்ட கீழ் வகுப்பார்களுக்குள் கல்வியை வ்ருத்தி செய்யவேண்டும். மேல்கண்ட விஷயங்களுக்காக ஒரு பண்டு ஏற்படுத்தப்பட்டது. அனேகம் கனவான்கள் ஏராளமாய்ப் பணம் கொடுத்திருக்கிறார்கள். வஸூல் செய்யப்பட்ட பணத்திலிருந்து ஆலபிழையில் யோகமடம் ஒன்றும், குருமந்திரம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டு, அவ்விடத்தில் ராப்பள்ளிக்கூடங்களும் ப்ரஸங்கங்களும் நடைபெற வேண்டிய ஸௌகர்யங்களெல்லாம் செய்ய ஏற்பாடாய் விட்டது. கண்ணனூரில் பெற்றோரை யிழந்த பிள்ளைகளை ஆதரிக்கவும் அவர்களுக்கு கல்விகற்பிக்கவும் ஒரு கட்டடத்தை வாங்கியிருக்கிறார்கள். இவைகளை கவனிக்க இரண்டு ஸெக்ரிடெரிகளை நியமித்திருக்கிறார்கள்.

### Bridegroom Price.

**வரதக்ஷிணை.**—இப்போது பெண்ணுள்ளவர்களைக் கஷ்டப்படுத்திவரும் வரதக்ஷிணைப்பிசாசு நூதனமாகத் தோன்றியதல்லவென்று 'ஜனோபகாரி'யில் வெளிவந்திருக்கும் ஒரு வ்யாஸத்தால் தெரிகிறது. ஸுமார் 500 வர்ஷங்களுக்கு முன்பும் இந்த வழக்கம் இருந்துவந்ததென்றும், அதோடு கன்யாசுல்கமும் வழக்கத்திலிருந்ததென்றும் தெரிகிறது. களஞ்சியம், கமலபாதம், மருதம், மங்கலம், அரையபாடி, கண்ணமங்கலம், அகத்தேரிப்பட்டு, எறுதபாடி, குடியாத்தம், வல்லம் முதலியவைகள் சேர்ந்த ஒரு ப்ரதேசத்துக்கு படைவீட்டு ராஜ்யமென்று பெயராம். விஜயநகரத்தில் ஸ்ரீவீர ப்ரதாப தேவராய மஹாராஜா ஆண்டுவந்தகாலத்தில் கி. பி. 1424—ம் வர்ஷத்தில் பங்குனி மாஸத்தில் படைவீட்டு ராஜ்யத்து மஹாஜனங்கள் விரிஞ்சிபுரத்தில்கூடி அதுமுதல் ப்ராம்மணர்களில், கன்னடியர், தமிழர், தெலுங்கர், இலாடர் முதலிய உட்பிரிவில் விவாகம் பண்ணும்போது கன்யாதானமாகச் செய்ய வேண்டுமென்றும், கன்யாசுல்கமாவது வரதக்ஷிணையாவது கொடுக்கக்கூடாதென்றும், அப்படி செய்பவர்கள் ராஜ தண்டனைக்கு உள்படுவதோடு, ஜாதிப்ரஷ்டம் செய்யப்படுவார்கள் என்றும் தீர்மானித்தார்கள். இந்தத் தீர்மானம் விரிஞ்சிபுரத்தின் கோபுரத்தில் கல்லில் செதுக்கப்பட்டிருக்கிறதாம்.

### Temperance in Native States.

**ஸ்வதேச ஸமஸ்தானங்களில் மதுவிலக்கு.**—சில முக்யமான ஸ்வதேச ஸமஸ்தானங்களின் கவர்ன்மெண்டார் மதுபானத்தைக் குறைக்கும் விஷயமாய் அனுதாபம் காட்டிவருகிறார்கள். நிஜாம் அரசர் தமது ஸமஸ்தானம் முழுவதிலும் மொஹரம் நடக்கும் 10-நாளும் மதுபானங்கள் விற்கக்கூடாதென்று உத்தரவு போட்டார். அந்த ஸமஸ்தானத்தின் தலைநகராகிய ஹைதராபாத்தில் சாராயக்கடைகள் ஒருபோதும் இருக்கக்கூடாதென்று சட்டம் ஏற்பட்டிருக்கிறது. பங்களூரிலும் மற்ற இடங்களிலும் நடக்கும் கைத்தொழில் காட்சிகளிலும் மற்ற காட்சிகளிலும் இனிமேல் சாராயக்கடைகள் வைப்பதும், சூதாட்டம், ஸதிர் முதலியவைகள் நடத்துவதும் நிறுத்தப்படுமென்று மைஸூர் கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள். திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் சென்ற 7-வர்ஷத்திற்குள் சாராயக் கடைகளின் தொகை 7050-லிருந்து 2273-க்கு வந்திருக்கிறது. அதாவது நூற்றுக்கு 68-வீதம் குறைந்துபோயிருக்கிறது. பரோடாவில் கவர்ன்மெண்டார் மதுபானத்தைக் குறைக்கும் விஷயமாய் என்ன செய்திருக்கிறார்களென்றால், எந்த விடத்திலாவது ஜனங்களில் 100-க்கு 60-பேர்கள் அவ்விடத்தில் சாராயக்கடைகள் வைக்கக்கூடாதென்று தீர்மானித்தால், அங்கே சாராயக்கடைவைக்க அநுமதிகொடுப்பதில்லை.



## HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### To Clean Cane Bottom Chairs.

**அடியில் பிரம்புபின்னிய நாற்காலிகளை சுத்தம் செய்ய.**—அடியில் பிரம்பு பின்னிய நாற்காலிகளைச் சுத்தம்செய்ய, பிரம்பின் அடிப்பாகம் மேற்புறமிருக்கும்படி நாற்காலியைத் திருப்பிவைத்துக்கொண்டு, சுடு ஜலத்தை ஸ்பஞ்சில் எடுத்து பிரம்பு பாகங்களை அலம்பிவிடவும். பிரம்பு நன்றாய் நனைந்துபோகும்வரையில் அலம்பவேண்டும். நாற்காலி ரொம்ப அழுக்கடைந்திருந்தால், ஸோப் உபயோகிக்கவேண்டும். பிறகு நாற்காலியைத் திறந்த வெளியிலாவது அல்லது காற்று நன்றாய் வீசும் இடத்திலாவது வைத்துக் காயவிடவேண்டும். இப்படிச் செய்வதால் நாற்காலி வாங்கினபோது பிரம்புபாகம் எவ்வளவு விறைப்பாயிருந்ததோ அப்படியே ஆகிவிடும். ஆனால் பிரம்புச் சிம்புகள் அறுந்திருந்தால் ரொம்ப விறைப்பாயிராது.

### To Clean Chamois.

**ஷாமாய்த் தோலை சுத்தம்செய்ய**—மூக்குக் கண்ணாடிகளைத் துடைப்பதற்கும், வேறு வேலைகளுக்கும் உபயோகப்படும் ஷாமாய்த் தோலை சுத்தம்செய்யவேண்டுமானால், இளஞ்சூடான வெந்நீரில் ஒரு சிட்டிகை ஸோடாப் பொடியைப்போட்டு, அந்த ஜலத்தை சுத்தம் செய்ய உபயோகிக்கவேண்டும் மற்ற துணிகளைசுத்தம் செய்வதுபோலவே இதையும் ஸோப்பால் இளஞ்சூடான நீரைக்கொண்டு சுத்தம்செய்யவும் தோலைநன்றாய் சுத்தம்செய்து அலசினபிறகு, அதை இரண்டு கைகளாலும் நன்றாய்த் தேய்க்கவேண்டும். பிறகு அதை உலர்த்தவேண்டும். அது நன்றாய்க் காய்ந்துபோகுமுன், அதை நான்கு மூலைகளிலும் பிடித்து இழுத்து சுருக்கமில்லாமல் செய்துவிடவேண்டும். இப்படி சுத்தம் செய்வதால், தோல் ம்ருதுவாக இருக்கும்.

### Storing Clothes.

**உடுப்புகளை பத்ரப்படுத்தி வைத்தல்.**—உபயோகத்திலிராத உடுப்புகளை பத்ரப்படுத்திவைக்க ந்யூஸ்பேபர் தாள்களைக் கொண்டு பெரிய பைகள் தைக்கவேண்டும். உடுப்புகள்மாட்டும் ஸ்டாண்டுகளில் உடுப்புகளைமாட்டி அந்த உடுப்புகளின்மேல் லாவண்டர் ஆயில் என்னும் தைலத்தைத் தெளித்து, அவைகளை ஸ்டாண்டுகளோடு பைகளில் வைத்து, பைகளின் வாயைத் தைத்துவிட வேண்டும். ஸ்டாண்டுகளின் கொக்கிகள்மாத்ரம் வெளியில் தெரியவேண்டும். பிறகு பைகளை ஆணிகளில் தொங்கவிட்டு வைக்கவேண்டும் இப்படி பத்ரப்படுத்திவைத்தால், உடுப்புகளில் தூசியாவது பூச்சிகளாவது சேரா.

### Examining Diamonds.

**வைரங்களை சோதித்தல்.**— வைரங்களினுடைய லக்ஷணங்களை சோதிக்குமுன் அவைகளின்மேல் மூச்சுவிட்டால் அவைகள் சிறிதுநேரம் ப்ரகாசம் குறைந்திருக்கும். அப்போது அவைகளிலுள்ள மாசு மறுக்களை ஸுலபத்தில் கண்டுபிடிக்க முடியும். வைரத்தின்மேல் மூச்சுவிட்டால் அது வாஸ்தவமான வைரமானால் சீக்ரம் ப்ரகாச மடையும். போலி வைரம் சற்றுத் தாமஸித்து தெளிவடையும்.

### To Clean Brass.

**பித்தளையை சுத்தம் செய்ய**— பித்தளையால் செய்த ஸாமான்களையும் நகைகளையும் சுத்தம் செய்ய வேண்டுமானால், நவச்சாரத்தை நன்றாய்ப் பொடி செய்து, சிறிது ஜலம்விட்டு ஈரமாக்கி, அதைக்கொண்டு பித்தளை ஸாமான்களின்மேல் தேய்த்து, பிறகு அவைகளை கரித்தணலின்மேல் காட்டி சூடாக்கவும். பிறகு தவிட்டாலும், சாக் (சீமைச்சுண்ணாம்பு) தூளாலும் தேய்க்கவும். ஸாமான்கள் ப்ரகாச மடையும்.

### Remedy for Falling Hair.

**தலைமயிர் உதிர்வதற்கு மருந்து**—மா, எலுமிச்சை, நாரத்தை, கொளுஞ்சி, மாதுளை, விளா இவைகளின் வித்துப்பருப்புகளை ஸமநிறையாயெடுத்து பசும்பாலை விட்டு அரைத்துக் கொதிக்கவைத்து ஒருமண்டலம் வரையில் காலையில் சிரஸில் இட்டு மாலையில் ஸ்நாணம் செய்துவர குணங்கொடுக்கும்.

### To Prevent Snakes from Entering a House.

**வீட்டில் பாம்பு வாராதபடி செய்ய.**—வீட்டில் பாம்பு வரக்கூடிய மரங்களிலும், சுவர்களிலும், சந்து பொந்துகளிலும் கார்பாலிக் ஆஸிட்டையாவாவது; தாரை (கீல்) யாவது தடவினால் பாம்பு அவ்வீட்டில் வாராதாம். தாரைவிட கார்பாலிக் ஆஸிடானது பாம்புக்கு ரொம்ப ஆபத்து உண்டாக்கக்கூடியது. வீட்டில் வந்திருக்கும் பாம்பைத் துரத்தவும் கார்பாலிக் ஆஸிடை உபயோகப்படுத்தலாம்.

# AGRICULTURE.

## விவஸாயம்.

### The Cattle Farm at Ganeshkund.

கணேசகந்திலுள்ள கால்நடைப்பண்ணை.—பம்பாய் கவர்னர் லார்ட் வில்லிங்டன் இந்தியாவுக்கு வந்ததும் பம்பாயிலுள்ள கணேசகந்தில் தமக்கு சொந்தமாக ஒரு கால்நடைப்பண்ணை ஸ்தாபித்தார். இப்போது அதில் 100-மாடுகளுக்குமேல் இருக்கின்றன. அந்தப் பண்ணையிலுள்ள மாட்டுக்கொட்டில் அமெரிக்க முறையில் கட்டப்பட்டிருக்கிறதாம். அதை யொட்டி ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பால்சாலை உயர்ந்த மாதிரியில் நடந்துவருகிறதாம். சென்ற ஸெப்டம்பர் மாஸம் 21-ந் தேதியன்று பம்பாய் கவர்னர் அந்தப் பண்ணையில் அதிகப்படியாயிருந்த 15-மாடுகளை விற்றார். அவைகள் 3400-ரூபாய்க்கு விலைப்போயின. பல சிற்றரசர்கள் கால்நடை ஏலத்துக்குவந்திருந்தார்கள். 7-மாஸம் சினையாயிருந்த ஒரு பசு 340-ரூபாய்க்கு விலைப்போயிற்று. இதை ரட்லம்ஸமஸ்தானத்து மன்னர் வாங்கினார். இன்னொரு மாடு, 6-மாஸம் சினையாயிருந்தது. அதை இஞ்சால்காரஞ்ஜியின் சிற்றரசர் 300-ரூபாய்க்கு வாங்கினார். மூன்றுவயதுள்ள ஒரு காளைக்கன்று 300-ரூபாய்க்கு விற்கப்பட்டது. அதை வாட்வான் ஸமஸ்தானத்து சிற்றரசர் வாங்கினார்.

### Ginger.

இஞ்சி.—இதை ஆவணி முதல் கார்த்திகை வரையில் அல்லது மார்கழி மட்டும் பயிர் செய்யலாம் ஒரு அடி தூரத்தில் நடவேண்டும். வெண்மைநிறமான இஞ்சியை இரண்டு அங்குல தூரத்தில் நடுவது நல்லது. மஞ்சள்நிறமான இஞ்சிக்கு அதிக இடந்தேவை. நடும்போது இதைப் பழைய பசுஞ்சாணியால் மூடிவிடுவது அதிக ப்ரயோசனந்தரும். பன்னிரண்டு அல்லது பதினைந்து தினங்களில் இலைகள் தோன்றும். மேல் மண்ணைக் கிளறிவிடுவது ரொம்ப அவசியம். நிலத்தின் தன்மைக்கேற்றபடி லாபமுண்டு. ஏழுமாதத்திற்குள் கிழங்குகள் முற்றிவிடும். வெண்ணிற இஞ்சி குணத்தில் விசேஷமானது. மெல்லிய நீண்ட இலையுள்ள இனத்தில்தான் வேர்க்கொம்பு அல்லது காய்ந்த இஞ்சி செய்வார்கள். இந்த நோக்கத்திற்காகச் செடிகள் காய்ந்துபோகுமட்டும் கிழங்குகளை நிலத்திலேயே விட்டுவிடுவார்கள். பின்பு கிழங்குகளைக் கிளறி எடுத்து மேல் தோலைச்சீவி வெய்யிலில் காயவிடுவார்கள்.—சத்திய வேத ப்ரகாசவலன்.

### Agricultural Farms.

விவஸாயப் பண்ணைகள்.—சென்ற 1915-ம் வர்ஷம் ஆரம்பத்தில் இந்தியா முழுவதிலும் ஸர்க்காரால் நிர்வகிக்கப்பட்டுவந்த விவஸாயப் பண்ணைகளின் தொகை 117-ஆகும். இவைகள் விவஸாய ஆராய்ச்சிக்கும், நிரூபண வேலைக்கும் உபயோகப்பட்டுவருகின்றன. ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள விவஸாயப் பண்ணைகளின் தொகை பின் வருமாறு.

| மாகாணம். | பண்ணைகளின் தொகை. |
|---|---|
| சென்னை | 11 |
| மத்ய மாகாணங்கள் | 14 |
| ஐக்ய மாகாணங்கள் | 21 |
| பஞ்சாப் | 6 |
| பர்மா | 11 |
| அஸ்ஸாம் | 5 |
| பெங்கால் | 8 |
| பம்பாய் | 34 |
| பேஹார் ஒரிஸா | 7 |
| மொத்தம் | 117 |

### Manuring Paddy.

நெல்பயிருக்கு எருவிடுதல்.—கோயம்புத்தூர் விவஸாயப் பண்ணையின் ரிபோர்ட்டில் நெல்பயிருக்கு எருவிடுவதைப்பற்றி சிலவிஷயங்கள் வெளியாயிருக்கின்றன. நெல்பயிருக்கு தழையெருபோன்ற ஜாஸ்தி இடமடைக்கும் இந்த்ரிய வஸ்துவை எருவாகப் போடவேண்டியது அவச்யமாகும். இந்த எருவோடு பாஸ்பாரிக் ஆஸிட் ஸத்துள்ள எருவைப்போட்டால் பலன் அதிகமாகலாம். பொட்டாஷ் ஸத்துள்ள எருவால் நெல்பயிருக்கு நன்மை ஏற்படுவதில்லை.

### Kolukkattai Grass.

கொழுக்கட்டைப்புல்.—சென்ற ஆவணி மாஸத்து ஸஞ்சிகையில் கினிபுல் என்பது கொழுக்கட்டைப்புல் என்று பொருள்படும்படி எழுதப்பட்டிருந்தது. கினி புல் வேறு, கொழுக்கட்டைபுல் வேறு. கொழுக்கட்டைப்புல்லானது கோயம்புத்தூர் ஜில்லா காங்கயம் ப்ரதேசத்தில் பயிராகும் புல். அது புஞ்சையில் தனியாகவும் வேறு பயிர்களோடு கலந்தும் பயிர் செய்யப்படுகிறது.



# CO-OPERATION.

## கோவாபரேஷன்.

### A Co-operative Manure Society.

ஒரு கோவாபரேடிவ் எரு ஸங்கம்.—தஞ்சாவூர் ஜில்லாவின் பெரும்பாகத்திலுள்ள நிலங்களில் முக்யமான பயிருணவு ஸத்துக்களில் ஒன்றாகிய பாஸ்பாரிக் ஆஸிட் என்னும் ஸத்து குறைவாயிருக்கிறது. இது விசேஷமாய் மன்னார்குடிக்கு மேற்கிலிருந்து நாகப்பட்டணம் ரெயில்வே பாதைக்குத் தெற்கேயும் நன்னிலம் நாகப்பட்டணம் தாலுக்காக்களிலும் மாயவரத்திலும் சீயாழித் தாலுக்கா மேற்பாதியிலும் குறைவாக இருக்கிறது. இப்படி நிலத்திலுள்ள ஸத்துக் குறைவை நிவர்த்திசெய்ய ஏற்பாடுகள் செய்யவேண்டி அந்த ஜில்லாவில் ஒரு கோவாபரேடிவ் எரு ஸங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இப்போது அதில் 20 பேர்களுக்கு மேல் மெம்பர்களாயிருக்கிறார்கள்.

இந்த ஸங்கத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:—

எலும்பு, எலும்பு ஸத்துள்ள உருண்டை கற்கள், மீன் உரம், பிண்ணாக்கு, ஸூப்பர்பாஸ் பேட் என்று சொல்லப்படும் கரையக்கூடிய பாஸ்பாரிக் ஆஸிட் உரம், பசுந்தாள் ஆகிய இவைகளையும் இன்னும் இதர எருக்களையும் வாங்குவது, அவ்வெருக்களை சுத்தப்படுத்துவது, அவைகளை கலப்பது, எலும்புத்தூள், பாஸ்பாரிக் ஆஸிட் ஸத்துள்ள பாறைத்தூள் முதலிய தயார்செய்யப்பட்ட எருக்களை ரொக்கத்திற்குமெம்பர்களுக்கு விற்பது, இந்த நோக்கங்களை அபிவிருத்திசெய்வதற்கு வேண்டிய இதரவிஷயங்களைச் செய்வது, ஆகிய இவைகள் இந்த ஸங்கத்தின் நோக்கங்களாகும்.

இந்த ஸங்கத்தார் 5 டன் எலும்புவாங்கவும், 1 டன் பாஸ்பாரிக் நாட்யூல்ஸ் அதாவது எலும்பு ஸத்துள்ள பாறைகள் வாங்கவும் தீர்மானித்திருக்கிறார்கள். இந்த ஸங்கத்தில் நான்கு பறையர்கள் மெம்பர்களாய் சேர்ந்துகொண்டிருப்பதோடு, அவர்கள் இப்போது எலும்பு சேகரம்செய்து கொண்டிருக்கிறார்களாம்.

திருச்சினாப்பள்ளி ஜில்லா பெரம்பலூர் தாலுகா வேட்டத்தூரில் 11-சதுர மைலில் எலும்பு ஸத்துள்ள பாறை கற்கள் இருக்கின்றன. கோயம்புத்தூரிலுள்ள ஸ்டென்ஸ் அன்ட்கோ என்கிற கம்பெனிக்காரர்கள் மாதம் ஸுமார் 100-டன் கற்கள் டன் 1-க்கு ரூ. 15-மேனிக்கு வாங்கி தூள்செய்கிற யந்த்ரத்தினால் தூள் செய்து தூளை டன் 1-க்கு ரூ. 45-ஸுமாருக்கு விற்கிறார்கள். தஞ்சை ஜில்லா ஐக்ய எருஸங்கத்தாரும் இக்கற்களை தருவித்துத் தூள்செய்து மெம்பர்களுக்கு எலும்புஸத்து உரமாக விற்பதாகவும் உத்தேசித்திருக்கிறார்கள்.

### Co-operative Dispensary.

ஒரு கோவாபரேடிவ் வைத்யசாலை.—வடக்கே பேஹார் ஒரிஸ்ஸா மாகாணங்களிலுள்ள பட்வா என்னும் ஊரில் ஒரு கோவாபரேடிவ் வைத்யசாலை ஸ்தாபிக்கப்பட்டு நடந்துவருகிறது. அந்த ஊரைச் சுற்றிலுமுள்ள க்ராமங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் 16-ஸங்கங்கள் ஒரு யூனியனைச் சேர்ந்துகொண்டிருக்கின்றன. இந்த யூனியனில் சேர்ந்திருக்கும் ஸங்கங்களிலுள்ள மெம்பர்கள்தான் இந்த வைத்யசாலை ஸங்கத்தில் சேரலாம். ஒவ்வொரு மெம்பரும் ப்ரவேசக்கட்டணமாக ஒரு ரூபாயும் வர்ஷந்தோறும் சந்தாவாக ஒரு ரூபாயும் செலுத்தவேண்டும். அப்படிச் செலுத்திச் சேரும்மெம்பர்கள், தங்களுக்காவது தங்கள் குடும்பத்தாருக்காவது வ்யாதி வந்தால் செலவில்லாமல் வைத்யருடைய ஆலோசனையையும் மருந்தையும் பெறலாம். ஆனால் வைத்யரை வீட்டுக்கு அழைக்கவேண்டுமானால் அதற்கு 1-ரூபாயும் வண்டிச்செலவும் டாக்டருக்குக் கொடுக்க வேண்டும். மெம்பரில்லாதவர்கள் வைத்யசாலையில் பணங்கொடுத்தே மருந்து வாங்க வேண்டும். ஏழைகளுக்கு இனாமாக வைத்யம் செய்யப்படுகிறது. இந்த வைத்யசாலைக்கு ஒரு ஸப் அஸிஸ்டண்ட் ஸர்ஜன் நியமிக்கப்பட்டிருக்கிறார். இது சென்ற ஏப்ரல் மாஸம் 19-ந்தேதியன்று ஸ்தாபிக்கப்பட்டது. சென்ற ஜூலைமாஸம் 18-ந்தேதி வரையில் 393-மெம்பர்களும் 740-மெம்பர்களல்லாதபேர்களும் வைத்யசாலையில் மருந்து பெற்றார்கள். மெம்பர்கள் அல்லாதவர்களில் 519-பேர்களுக்கு இனாமாக மருந்து கொடுக்கப்பட்டது. மற்றவர்கள் (231) பணங்கொடுத்து மருந்து வாங்கிக்கொண்டார்கள். இந்த வைத்யசாலையைப்பற்றி அந்த மாகாணத்து கோவாபரேடிவ் ரெஜிஸ்ட்ரார் ச்லாகித்து ரிபோர்ட் எழுதியிருக்கிறார்.

## COMMERCE.

## வ்யாபாரம்.

### The Indian Industrial Conference.

**இந்திய கைத்தொழில் கான்பரென்ஸ்.**—இந்திய கைத்தொழில் கான்பரென்ஸ் இன்னமாதிரி வேலை செய்ய வேண்டுமென்பதைப் பற்றி ஒரு நிருபர் 'பஞ்சாபி' பத்ரிகையில் பின்வருமாறு எழுதுகிறார்.

(1) பல தொழில்களை ஸ்தாபிப்பதற்கு ஸ்கீம்களும், உத்தேசச் செலவு மதிப்புகளும், விவரங்களும் செலவின்றி தயாரித்து தொழிலபிமானிகளுக்கு உதவுவது. (2) இந்தியாவில் வ்ருத்தி செய்ய வேண்டியிருக்கும் தொழில்களையும் கலைகளையும் கற்பதற்கு மாணவர்களை இந்தியாவிலும் அன்யதேசங்களிலும் உள்ள வித்யா ஸ்தாபனங்களுக்கு அனுப்புவதற்காக ஒரு பெரிய நிதி ஸ்தாபிப்பது. (3) பரீக்ஷார்த்தமாக சில உபயோகமான கைத்தொழில்களை நடத்தி, அவைகள் வ்ருத்தியடைந்த பிறகு அவைகளை தொழிலபிமானிகளிடம் கொடுத்துவிடுவது. (4) வ்யாபாரம் கைத்தொழில் விஷயங்களைப்பற்றிய கணக்குகளைத் தயாரித்து வைப்பது. (5) கைத்தொழில் ஸம்பந்தமான விஷயங்களைப்பற்றி துண்டுப்பத்ரிகைகளும் பத்ரிகைகளும் ப்ரசுரிப்பது. (6) கான்பரென்ஸில் வெளியாகும் விஷயங்களை தேசபாஷைகளில் மொழிபெயர்த்து வெளியிடுவது. (7) சாஸ்த்ரம், விவஸாயம், பொருளாதாரம், கைத்தொழில் ஆகிய இவைகள் ஸம்பந்தமான புஸ்தகங்களை சேகரித்து ஒரு புஸ்தகசாலை (லைப்ரரி) ஸ்தாபிப்பது. (8) சாஸ்த்ரீய ஸம்பந்தமான விஷயங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்ய ஸௌகர்ய மேற்படும்படி ஆராய்ச்சி சாலைகள் ஏற்படுத்துவது.

### Indian Traders and Japan.

**இந்திய வ்யாபாரிகளும் ஜப்பானும்.**—இந்திய வ்யாபாரிகள் முன்போல ஜப்பானிடமிருந்து வ்யாபார ஸாமான்கள் தருவிக்காமல், அவைகளை விற்பனைக்குத் தயாரிப்பதற்கு வேண்டிய பாதிதயாரான ஸாமான்களை வாங்கத் தலைப்பட்டிருக்கிறார்களென்று ஜப்பானியர்கள் குறைசொல்லுகிறார்கள். இந்தியர்கள் ஜப்பானிடமிருந்து வாஸனைப் பொருள்களை வாங்குவதில்லையாம். ஆனால் அவைகளை வைப்பதற்கு வேண்டிய வீஸாக்களை இப்போது ரொம்ப அதிகமாக வாங்கிவருகிறார்கள். மேலும் இந்தியர்கள் முன்போல் ஜப்பானிடமிருந்து ஸோபபுகள் அதிகமாய்த் தருவிப்பதில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் ஜப்பானிலிருந்து, அவைகளைச் சுற்றுவதற்கு வேண்டிய அச்சடித்த கடுதாசிகளும் வேறு உபகரணங்களும் தருவிக்கத் ஆரம்பித்திருக்கிறார்களாம். இது நமது தேசத்துக் கைத்தொழிலுக்கு ஒரு நல்ல அறிகுறியே.

### Business Enterprise in India.

**இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.**—இந்தியாவில் சென்ற ஆகஸ்ட் மாஸத்தில் அடியில் கண்ட விவரப்படி 21 ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | ரூ. |
|---|---|---|
| 2 | பாங்கி லேவாதேவி கம்பெனிகள் | 1,50,000 |
| 1 | இன்ஷ்யூரென்ஸ் கம்பெனி | 1,00,000 |
| 11 | வ்யாபாரக் கம்பெனிகள் | 3,46,39,000 |
| 3 | ஜூட்மில் கம்பெனிகள் | 1,88,50,000 |
| 1 | அரிசிமில் கம்பெனி | 75,000 |
| 1 | தேயிலைத் தோட்டக் கம்பெனி | 1,50,000 |
| 1 | தோட்டக் கம்பெனி (மேலே சொன்னது தவிர) | 12,00,000 |
| 1 | சுரங்கக் கம்பெனி | 50,000 |
| 21 | மொத்தம் | 5,52,14,000 |

### Sandalwood Oil Factory.

**சந்தனத் தைலச்சாலை.**—சந்தனக் கட்டையிலிருந்து தைலம் இறக்குவதற்காக மைஸூர் ஸமஸ்தானத்து கவர்ன்மெண்டார் சிறு தொழில்சாலையொன்று பரீக்ஷார்த்தமாய் ஸ்தாபித்திருப்பதாக சென்ற வைகாசி மாஸத்து ஜனுபிமானியில் எழுதியிருந்தோம். இப்போது அந்தத் தொழில்சாலையில் மாஸம் ஒன்றுக்கு லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள சந்தனத் தைலம் இறக்கப் படுகிறதாம். வேலை ஆரம்பித்து கொஞ்ச காலந்தானாயிற்றென்றாலும், இதற்குள் யந்த்ரம் முதலியவைகளுக்குப் போட்டிருந்த முதல் பணம் கிடைத்துவிட்டதென்று தெரிகிறது. இப்போது மைஸூரில் இன்னொரு சந்தனத்தைல சாலை பெரியதாய் ஸ்தாபிக்கப் பட்டு வருகிறது.

### Tanur Soap Factory.

**தானூர் ஸோப் தொழில்சாலை.**—ஸர்க்கார் மீன் இலாகாவின் ஆதீனத்தில் தானூரில் ஸ்தாபிக்கப் பட்டிருந்த ஸோப் தொழில்சாலையானது கள்ளிக் கோட்டைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அந்தத் தொழில் சாலையை வ்ருத்திசெய்வதற்காக கவர்ன்மெண்டார் 75,000 ரூபாய் உதவி செய்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய புது யந்த்ரங்களும் தருவிக்கப் பட்டிருக்கின்றன. இந்தத் தொழில்சாலையானது எண்ணெய், ஸோப், ஆகிய தொழில்களில் நிபுணரான மிஸ்டர் எ. கே. மேனனுடைய மேற்பார்வையில் நடந்துவரும்.



## ECONOMIC PRODUCTS.

## விலையுள்ள பொருள்கள்.

### Soya Bean.

**ஸோயா அவரை.**—இது மன்சூரியாவில் விளையும் ஒருவகை அவரையாகும். ஸுமார் 8-வர்ஷங்களுக்கு முன்பு இதன் பெயர் ப்ராபல்யமடைந்தது. இதன் குணகுணங்களைப் பரீக்ஷித்த அநேக நிபுணர்கள் இது பற்பல கார்யங்களுக்கு உபயோகப்படுமென்று தெரிவித்திருக்கிறார்கள்.

ஸோயா அவரை உபயோகப்படும் விதங்களாவன:—மாம்ஸத்துக்கு பதிலாய் உபயோகித்தல், சோக்கலேட்டுக்குபதிலாய் உபயோகித்தல், மாவு செய்வது, செயற்கைப்பால், செயற்கைக்கொம்பு, பாலடைக்கட்டி, ஆகிய இவைகள் செய்தல், காப்பிக்கொட்டைக்குப்பதிலாக உபயோகிப்பது, நீரிழிவு ரோகிகளுக்கேற்ற பிஸ்கோத்துகளும் வேறு ஆகாரங்களும், குழம்பு முதலிய ஆகாரங்களும், பணியாரங்களும் செய்தல், மாடுகளுக்குத் தீனி தயாரித்தல், எண்ணெய், பிண்ணாக்கு, உரங்கள் ஆகிய இவைகள் செய்தல்.

ஸோயா எண்ணெய் பின் வரும் ஸாமான்கள் செய்வதில் உபயோகமாகிறது. டைனமைட் முதலிய வெடி மருந்துகள், ஸோப்புகள், செயற்கை ரப்பர், வார்னிஷ், சாயங்கள், உடம்பு தேய்த்துக்கொள்ளும் பொடி, ஜலம் ஒட்டக்கூடாத துணி, கடுதாசிக்குடைகள், கடுதாசி லாந்தர்கள், யந்த்ரங்களை சுத்தம் செய்ய உதவும் எண்ணெய்கள்.

ஸோயா அவரை 2-அங்குலம் நீளமுள்ள காயாகும். ஸோயாச்செடி இரண்டு அல்லது மூன்றடி உயரமுள்ளது. இந்தப்பருப்பில் முக்யமாய் மஞ்சள், பச்சை, கருப்பு என மூன்று தினுஸுகள் உண்டு. மஞ்சள் பருப்பில்தான் ஆகார ஸத்துக்கள் அதிகம். அதுதான் வெளிநாடுகளுக்கு விசேஷமாய் ஏற்றுமதியாகிறது. பருப்பிலிருந்து நூற்றுக்கு 16-முதல் 19-பாகம்வரை எண்ணெய் கிடைக்கிறது.

### Honey and its Uses.

**தேனும் அதன் உபயோகமும்.**—இயற்கையிலேயுண்டாகும் தேன் இருவகைப்படும். அவையாவன, (1) புஷ்பங்களிலிருந்துண்டாவது (2) இலைகளின்மேல் கொசு, முதலியவைகளால் சேகரித்து வைக்கப் பெற்றது. தேனில் நாலுபங்கு சர்க்கரையும் ஒரு பங்கு தண்ணீரும் கலந்திருக்கிறது.

தேன் நம்முடைய வீடுகளில் பலவிதமாய் உபயோகப்படுகிறது. அதை உணவோடுசேர்த்தும், தனியாகவும் உட்கொள்ளுகிறோம். அதைமருந்துவகைகளில் மருந்துச் சரக்குகளில் ஒன்றாகவும், அனுபானமாகவும், ரொட்டி, கடலைகள், சோறு, தோசை முதலியவைகளுடன் கலந்தும் சாப்பிடுகிறார்கள். அமெரிக்கா ஐக்யநாடுகளில், லெமனேடுடனும், பழங்களின் ரஸங்களிலிருந்து செய்யும் வேறுபானங்களுடனும் தேனைக்கலந்து சாப்பிடுகிறார்களாம்.

பழ வர்க்கங்களைத் தேனிலிட்டு பத்திரப்படுத்தி வைத்து பழங்கள் அகப்படாதகாலங்களில் உபயோகிப்பதுமுண்டு.

சில பணியாரங்களில் உபயோகப்படும் வெல்லப்பாகுக்குப் பதிலாய் தேனைச்சேர்த்தால் ஒருவித நல்ல வாஸனை யேற்படுமாம்.

### Saw Dust.

**ரம்பத்தூள்.**—ரம்பத்தூள் பற்பல கார்யங்களுக்கு உபயோகப்படுகிறது. அவைகளுள் ஒன்று வீடு கட்டுவதில் கான்க்ரீட் என்னும் ஜெல்லியில் சேர்ப்பதே; சில இடங்களில் அதை கான்க்ரீட்டோடு சேர்த்து, வீடுகளின் தரையில் காரை போடுவதற்கு பதிலாக உபயோகிக்கலாம். இன்னும் அது சட்டிகள் முதலிய மட்பாத்ரங்கள், த்வாரங்களுள்ள செங்கல், ஓடுகள் ஆகிய இவைகள் செய்ய உபயோகப்படுகிறது. அதிக த்வாரமுள்ள செங்கல்லும் ஓடும் செய்யவேண்டுமானால் நூற்றுக்கு 35-பாகம் மரத்தூளை களிமண்ணோடு சேர்த்து செங்கல்லும் ஓடும் அறுக்கவேண்டும். கொஞ்சம் த்வாரங்கள் போதுமென்றால், நூற்றுக்கு 2-பாகம் மரத்தூள் உபயோகித்தால் போதும். இப்படித் தயார்செய்த செங்கல்லை ரம்பத்தால் அறுக்க முடியும். அதில் ஆணிகள் அடிப்பதும் ஸுலபம்.

### Kaing Grass.

**கெய்ங் என்னும் புல்.**—பர்மாவில் வளரும் இந்தப் புல் கடுதாசி செய்வதில் உபயோகப்படக்கூடுமென்று தெரிகிறது. இதிலிருந்து கடுதாசிக்கூழ் செய்வது ஸுலபமாயும் அதிக் செலவில்லாமலுமிருக்கிறதாம். காற்றில் உலர்த்தப்பட்ட 100-பாகம் புல்லிலிருந்து 39-பாகம் வெளுக்கப்படாத காகிதக்கூழ் கிடைக்குமாம்.

# BOYS' PAGE.

## பையன்கள் பக்கம்.

### Depth of the Pacific Ocean.

**பஸிபிக் ஸமுத்ரத்தின் ஆழம்.**—இதன் ஸராஸரி ஆழம், மற்ற ஸமுத்ரங்களின் ஸராஸரி ஆழத்தைவிட அதிகம். இதன் ஸராசரி ஆழம் 12,600-அடியாகும். இதன் மேற்குபாகம் கிழக்குபாகத்தைவிட அதிக ஆழமுள்ளது. வடபாகம் தெற்குபாகத்தைவிட அதிக ஆழமுள்ளது. ஜப்பானுக்கும் குரைல் தீவுகளுக்கும் கிழக்கில் 400-மைல் நீளத்துக்கு இந்த ஸமுத்ரம் ரொம்ப ஆழமுள்ளது. இதில் ரொம்ப ஆழமானபாகம் 27,990-அடியுள்ளது. இதற்கு டஸ்கோராராடீப் (டீப் = பள்ளம்) என்று பெயர். ந்யூஸிலண்டின் கிழக்கிலுள்ள ஆல்ட்ரிச் டீப் என்னும் இடமும் ரொம்ப ஆழமுள்ளது. இது உயர்ந்தது 30,390-அடி ஆழமுள்ளது. பிலிப்பைன் தீவுகளுக்குக் கிழக்கேயுள்ள குவாம்திவிலிருந்து ஸாண்ட்விச் தீவுகளுக்கு வடமேற்கிலுள்ள மிட்வேதிவுக்கு நடுவில் ஓரிடத்தில் 31,614-ஆழமிருக்கிறதாகக் கண்டறிந்திருக்கிறார்கள். மற்றெல்லா இடங்களையும்விட, பிலிப்பைன் தீவுகளில் ஒன்றாகிய மிண்டாநேவோ என்னும் தீவின்கரையோரமாக உள்ள ப்ளாண்ட் டீப் என்னும் இடந்தான் ரொம்ப ஆழமானது. இந்த இடத்தை 'ப்ளானெட்' என்னும் ஒரு ஜெர்மன் கப்பல் 1912-ம் வர்ஷம் ஆழம் சோதித்தது. இதன் ஆழம் 32086-அடியாகும். அதாவது 6-மைல் 406-அடியாகும். அந்தக் கப்பலின் பெயராலேயே அந்த இடம் வழங்குகிறது.

### Wooden Horse that Walks.

**நடக்கக்கூடிய மரக்குதிரை.**—பெரியவர்களும் சிறியவர்களும் விளையாட்டாக ஏறிப்போவதற்கு ஏற்றதாக ஒரு மரக்குதிரை அமெரிக்காவில் செய்யப்பட்டு பல இடங்களில் உபயோகிக்கப்பட்டு வருகிறது. இந்த மரக்குதிரையின் கால்கள் உடல்பாகத்தில் வேண்டியபடி அசையக்கூடிய விதமாக பொருத்தப்பட்டிருக்கின்றன. மனிதர்களுடைய தொடையும் கீழ்க்காலும் முழங்காலில் இணைக்கப்பட்டிருக்கிறதுபோல, மரக்குதிரையின் கால்களும் தக்கவிதமாய் இணைக்கப்பட்டிருக்கின்றன. குதிரையின் மேற்பாகத்திலுள்ள ஒரு பிடியைத் தக்கவிதமாய்த் திருப்புவதால் குதிரை முன்கால்களும் பின்கால்களும் ஒன்றன்பின் ஒன்றாய் முன்னால் செல்லுகின்றன. இதனால் குதிரை முன் செல்லுகிறது. பிடியை தக்கவிதமாய்த் திருப்புவதால் குதிரை மிரண்டு பின்னுக்குப் போகும்படியும், தலையைத்திருப்பும்படியும், வேறுசேஷ்டைகள் செய்யும்படியும் செய்யலாம். இந்த மரக்குதிரைமேல் பெரியவர்கள் ஏறியிருப்பதைப்பார்க்க விநோதமாயிருக்குமென்றும், அமெரிக்காவிலுள்ள அநேகர் விடுமுறைநாள்களில் அவைகளில் ஏறிக்கொண்டு க்ராமாந்தரங்களுக்குப்போய் வேடிக்கையாகக் காலங்கழித்து வருகிறார்களாம்.

### A Parrot 120 Years Old.

**120-வயஸிருந்த ஒரு கிளி.**—காக்கி பென்னட் என்னும் 120-வயஸுள்ள ஒருகிளி ஸமீபத்தில் ஆஸ்ட்ரேலியாவில் இறந்துபோயிற்றாம். அது 1796-ம் வர்ஷத்தில் ஸிட்னியென்னும் பட்டணத்தில் பிறந்தது. அதன் கடைசி யஜமானி 120-வர்ஷங்களுக்குமுன் அதைமுதலில் அடைந்தவருடைய ஐந்தாம்தலைமுறைப் பேர்த்தியாகும். ஆகவே இந்தப் பறவை அதன் யஜமானியினுடைய வம்சத்தில் 5-தலைமுறையைத் தெரிந்திருந்தது. ரொம்ப வயஸானதால் அதன் தலை விகாரமாய்விட்டதாம். அதன் தோல் மடிப்பு விழுந்துவிட்டதாம். மேல் அலகு மற்றதைவிட ரொம்ப நீண்டு போயிற்றாம். அவ்வளவு வயஸாகியும் அது சுறுசுறுப்புக் குறையாமல் உத்ஸாகமாய் வீட்டுக்கு வந்தவர்களுடன் பேசி உபசரித்துவந்ததாம்.

### New Side Car for Land and Water.

**நீரிலும் நிலத்திலும் உபயோகிக்கக்கூடிய ஸைட் கார்.**—மோட்டார் ஸைக்கிலில் இரண்டுபேர் சவாரி செய்வதற்காக ஸைட்கார் என்று ஒரு வண்டி பக்கவாட்டில் அமைக்கப்பட்டிருக்கிறது. மேல்நாட்டில் ஒருவர் ஸைட்காரை ஒரு புதுமாதிரியில் அமைத்திருக்கிறார். அது பார்வைக்கு ஒரு தோணிபோலிருக்கிறதாம். அதில் இரண்டுபேர்கள் உட்காரலாமாம். எங்கேயாவது குளம் குட்டைகளிருந்தால், அந்த ஸைட்காரை சக்ரத்திலிருந்து கழற்றி, ஜலத்தில் விட்டு, அதில் உட்கார்ந்துகொண்டு, படகில் போவதுபோல் ஜலத்தில் போகலாமாம்; தேகாப்யாஸத்துக்காவது, உல்லாஸத்தை உத்தேசித்தாவது குளங்களில் படகோட்ட விருப்பமிருந்தால், மோட்டார் ஸைக்கிலில் ஏறிக் குளத்துக்குப்போய், ஸைட்காரைக்கழற்றி படகுக்குப் பதிலாக உபயோகிக்கலாம்.



# LADIES' PAGE.

## ஸ்த்ரீகள் பக்கம்.

### Sleep of Infants.

**குழந்தைகளின் தூக்கம்.**—குழந்தைகள், பிறந்த சில மாஸங்கள் வரையில் வெகு நேரம் தூங்கவேண்டியது அவச்யமாகும். மூன்று மாஸம் முடிய, 18 அல்லது 20 மணி நேரம் தூங்கவேண்டும். மூன்று வயஸு வரையில் காலையிலும் பிற்பகலிலும் குறிப்பிட்ட நேரத்தில் சிறிது நேரம் தூங்கவேண்டியது அவச்யமாகும். குழந்தைகளை கையில் அல்லது தோளின்மேல் போட்டு தூங்கப்பண்ணிப் பழக்கக்கூடாது.

குழந்தை அமைதியாய்ப் படுத்துத் தூங்கிக்கொண்டிருப்பது, அது தேக ஸௌக்யத்துடன் இருப்பதற்கடையாளமாகும். ஏதாவது வ்யாதியால் பீடிக்கப்பட்டிருந்தால் அதற்கு தூக்கம் சரியாக வராது. நாள்பட்ட அஜீர்ணம், அடிக்கடி இரவில் ஆஹாரம் கொடுப்பது, ஈரமான பாதங்கள், ரொம்ப அடர்த்தியாகப் போர்த்திவிடுவது, ரொம்ப குறைவாகப் போர்த்திவிடுவது, படுக்கும் அறையில் கெட்ட காற்றிருப்பது ஆகிய இவைகளால் குழந்தைகளின் தூக்கம் கெட்டுப்போகும். விழித்துக்கொள்ளும்போதும் அழும்போதும் எப்போதும் குழந்தையைத் தொட்டிலிலிருந்து எடுக்கக்கூடாது. குழந்தையைத் தூங்கப்பண்ணத் தொட்டிலில்போட்டுக் குலுக்கியாட்டக்கூடாது. வைத்யரைக்கேட்காமல் குழந்தைக்கு தூக்கம் வருவதற்கான மருந்துகொடுப்பது முற்றிலும்பிசகு. குழந்தை இரவில் சரிவரத்தூங்காவிட்டால், அதற்குக்காரணமின்னதென்பதையறிந்து, காரணத்தைப்போக்க முயலவேண்டும்.

குழந்தையின் மூத்ர மலவிஸர்ஜனங்களால் அசுத்தமாய்ப்போன துணிகளை அப்போதைக் கப்போது எடுத்துவிட்டு புதுத் துணிகளில் குழந்தையை விடவேண்டும். குழந்தை படுத்துத் தூங்கும் அறை காற்றோட்டமுள்ளதாயிருக்க வேண்டும் ஆனால் அறைக்குள் காற்று வேகமாய் வீசக்கூடாது.

### Advice to Women.

**ஸ்த்ரீகளுக்கு நற்போதனை.**—பெண்கள் பிறர் மனம் வருந்தும்படியான எந்த மொழிகளையும் பேசலாகாது. பெண்கள் தமது வீட்டுக்கு வரும் ஸ்த்ரீகள் அல்லது பெண்களை முகமலர்ச்சியுடன் உபசரித்து உட்காரும்படிசெய்து, தமது காரியங்களை சற்றுநேரம் நிறுத்திவிட்டு, வந்தவர்களின் காரியத்தை நிதானித்துக்கேட்டு, உடனே அதற்குத் தக்க மறுமொழிகளைச் சொல்லி வந்தவர்களை மரியாதையுடன் குங்குமம் தாம்பூலம் கொடுத்தனுப்பவேண்டும். வந்தவர்களை அனாவச்யமாய்க் காக்கவைக்க கூடாது.

ஆடை, ஆபரணங்களை பெண்கள் சுத்தமாய் வைத்திருப்பதுடன், அவைகளை உபயோகப்படுத்தாத ஸமயங்களில் பெட்டிகளில் பத்ரமாய் வைத்திருக்க வேண்டும். கண்டவிடங்களில் சிதறிக்கிடக்கும்படி போடலாகாது.

ஏழைகள், தமது சரீர வலிமைக்கும், ஆரோக்யத்துக்கும் அனுகூலமானவையும் அதிக விலையில்லாதவையுமான பதார்த்தங்களைக்கொண்டு ஜீவித்து வரவேண்டும்.

ஏழை, செல்வர் என்ற இருதிறத்தாரும் ஸுகாதாரத்துக்கு அனுகூலமாக எப்போதும் பரிசுத்தமான ஆஹாரத்தையும் நீரையும், காற்றையும், வஸ்த்ரத்தையும், படுக்கையையும், வாஸஸ்தலத்தையும் தேடிக்கொள்ள வேண்டும்.

"புலியைக் கண்டு பூனை தனக்கு சூடிட்டுக்கொண்ட" தென்ற கதையைப்போல், செல்வரைக் கண்டு எளியவர் வஸ்த்ர ஆபரணங்களுக்கும் மற்ற செலவுகளுக்கும் அதிக பொருளை வ்யயம் செய்யக் கூடாது.—பெண் கல்வி.

### The Late Mrs Rockfeller.

**ராக்பெல்லர் கோடீச்வரரின் மனைவி.**—உலகத்திலுள்ள ப்ரபலமான கோடீச்வரர்களில் ஒருவரும், ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனி என்னும் கிரஸின் எண்ணெய்க் கம்பெனியின் ஸொந்தக்காரருமாகிய ராக்பெல்லருடைய மனைவி கொஞ்சகாலத்து முன்பு இறந்துபோனதாக ஸமாசாரம் எட்டுகிறது. அவர் தாம் ஏற்கனவே கொடுத்துள்ள கோடிக்கணக்கான நன்கொடைத் தொகைகளுடன், சென்னை ஸ்த்ரீகள் காலேஜுக்கு ரூ 75,000-க்கு மேலான தொகையும், பஞ்சாபிலுள்ள ஓர் ஸ்த்ரீ வைத்ய காலேஜுக்காக ரூபா 15,000-யும், தென்னிந்தியாவில் ஓர் விசேஷ ஸ்த்ரீ வைத்ய சலாசாலை ஸ்தாபிக்கப்படுவதின் நிமித்தம் 1½-லக்ஷம் ரூபாயும், கொடுத்துவிட்டுப் போனதாகத் தெரியவருகிறது.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### Suitable for them.

**அவர்களுக்குத் தகுந்ததே.**—செட்டுத்தனமுள்ள ஓர் ப்ரபுவின் குமாரத்திக்கு விவாகம் நடந்தது. சடங்குக ளெல்லாம் முடிந்து மணமகனும் பெண்ணும் புக்ககத் துக்குச் சென்றபின் வீட்டில் மிஞ்சிய காய்கறிகள் அழுகிக் கெட்டுப்போகும் ஸமயமாயிருந்தது. ப்ரபு காலையில் தோட்டத்தைப் பார்க்கச் சென்றார். அங்கு சில வேலையாட்களைப் பார்த்ததும் காய்கறிகளின் ஞாப கம் வந்து அவ்வேலையாட்களை யழைத்து காய்கறிகளை அவர்களிடம் கொடுத்தார். மறுநாள் அவ்வேலையாட் களை சந்திக்கையில் அவர்களிடமிருந்து புகழ்ச்சிபெற எண்ணி, அவர்களைப் பார்த்து 'நேற்றுக் காய்கறிகளை சாப்பிட்டீர்களா?' என்று ப்ரபு கேட்டார்.

"ஆம், எஜமானே, நீங்கள் நன்றாயிருக்கவேண்டும்" என்று வேலையாட்கள் பதில் சொன்னார்கள்.

"அவை எப்படி இருந்தன? நன்றாயிருந்தனவா?" என்று மறுபடியும் ப்ரபு கேட்டார்.

"ஆமா, எஜமாங்களே, அது எங்களுக்குத் தகுந்தது தான்."

"சரி, அது உங்களுக்குத் தகுந்ததென்றால்—"

"இல்லேங்கோ, அதுகள் இன்னும் கொஞ்சம் நன்றா யிருந்தால் எங்களுக்குக் கிடைக்காது; இன்னும் கொஞ்சம் கெட்டுப்போனால் எங்களுக்கும் உதவாது."

### In the Thick of the Fight.

**யுத்தம் உக்ரமாய் நடக்குமிடத்தில் சண்டைசெய் தல்.**—பல வர்ஷங்களுக்குமுன் ப்ரிட்டிஷாருக்கும் ஆப் கானியர்களுக்கும் நடந்த சண்டையொன்றில் ஒரு ஸம யம் யுத்தம் பலமாய் நடந்துகொண்டிருக்கையில், ஒரு ஐரிஷ் ஸோல்ஜர் புறங்காட்டி ஓடுவதை அவனுடைய காப்டன் பார்த்தான். மறுநாள் காப்டன் ஐரிஷ் ஸோல் ஜரைக் கூப்பிட்டு, "பாட் (இது ஐரிஷ்காரரின் பொ துப்பெயர்), நேற்று நீ சண்டையில் செய்த கார்யத் தைக் கண்டு எனக்கு ஆச்சர்யமுண்டாயிருக்கிறது. நீ அப்படிச் செய்யலமா?" என்றார்.

"என்ன, ஐயா," என்று ஸோல்ஜர் கேட்டான். "சண்டைக்குப் போகுமுன் நீ, சண்டை எங்கேரொம்ப உக்ரமாய் நடக்கிறதோ அங்கேயிருந்து சண்டை செய்வதாய் வாக்களித்திருக்க, நேற்று நீ புறங்காட்டி யோடினதை நான் கண்ணால் பார்த்தேனே." என்று காப்டன் சொன்னார்.

உடனே அந்த ஐரிஷ் ஸோல்ஜர் "புறங்காட்டி ஓடி னேனு! நீங்கள் என்னவோ நினைத்துக்கொண்டு சொல் லுகிறீர்கள். நான் ஓடவே யில்லை. நான் செய்த வாக்குத் தத்தம் ஞாபகத்துக்கு வந்தது. உடனே எந்த இடத்தில் சண்டை பலமாய் நடக்கிறதென்று பார்க்க நான் பரபரப்பாய் ஓடினேன். அதைக்கண்டு நீங் கள் புறங்காட்டி ஓடினதாக எண்ணிக்கொண்டீர்கள்' என்றான்.

### The Teacher and the Pupil.

**உபாத்யாயரும் மாணவனும்.**—கணிதபோதகரொ ருவர் ஓர் நாள் தன் மாணக்கருள் ஒருவனைப் பார்த்து, "ஒன்றில் இருபத்தைந்தாவது பாகம் என்றால் அர்த்த மென்ன?" என்று கேட்டார். அதற்கு அவன் "ஐயா! எனக்கு ஞாபகமில்லை," என்றான். உடனே போத கர் கோபாவேசராய், "மூடா! உன்னை இருபத்தைந்து ஸ்நேகிதர்கள் ஒரே ஸமயத்தில் பார்க்கவந்திருப்பதாக நினைத்துக்கொள். அந்த ஸமயம் அவர்களுக்குக் கொடுப்பதற்கு ஒரேயொரு கிச்சிலிப்பழந்தான் இருப் பதாக வைத்துக்கொள். அப்படியானால் நீ என்ன செய்வாய்? என்று கேட்டார். அவன் சற்றுயோசித்து, "அவர்கள் எல்லோரும் போகும் வரையும் பார்த்தி ருந்து பின்பு நானே சாப்பிட்டு விடுவேன்," என்றான்.

### Never Beat Youngsters.

**இளையவர்களை ஒருபோதும் அடிக்கக்கூடாது.**—

பையன்:—அப்பா! அன்றையதினம் என்க்கு, இளைய வர்களை ஒருபோதும் அடிக்கக்கூடாதென்றீர்களே.

தந்தை:—ஆம்! அப்படித்தான். இளையவர்களை ஒரு போதும் அடிக்கக்கூடாது.

பையன்:—அப்பா! தயவுசெய்து என் உபாத்யாயருக்கு ஒருகடிதமெழுதித்தாருங்கள். ஒருநாளாவது நான் அவ ருக்கு இளையவனென்று அவர் எண்ணுவதேயில்லை.

### The Desert.

**பாலைவனம்.**—உபாத்யாயர்:—"பாலைவனம்" என் றால் என்ன?

மாணவன்:—யாதொன்றும் முளைக்காத இடம்.

உபாத்யாயர்:—ஒரு உதாரணம் சொல்?

மாணவன்:—(சற்று நேரம் யோசித்து) என்க தாத் தா தலை.



# CURIOSITIES.

## விநோதங்கள்.

### Marriage Superstitions.

**விவாக ஸம்பந்தமான மூடநம்பிக்கைகள்.**—ரொம்ப நாகரீகம் வாய்ந்ததென்று சொல்லப்படும் இங்கிலண்டி லும்விவாக ஸம்பந்தமாய் அநேக குருட்டு நம்பிக்கைகள் இருந்து வருகின்றன. கல்யாணத்துக்காக மணமகள் மோதிரமணியும்போது, அந்த மோதிரத்தில் வைரம் பதித்திருந்தால் ஸதிபதிகள் எப்போதும் நேசமாயிருக்க மாட்டார்களாம். ஈஸ்டர் நாளுக்கு முந்தின 40 நாட் களுக்கு லெண்ட் என்று பெயர். இந்தநாட்களில் கல்யா ணம் செய்துகொண்டால் ஸதிபதிகளுக்கு துரத்ருஷ் டம் ஏற்படும். மே மாஸத்தில் கல்யாணம் செய்துகொண் டால் தரித்ரம் உண்டாகும். மனைவி வெகு காலம் புரு ஷனுடனிருக்க மாட்டாள். கல்யாணத்துக்கு வந்தி ருப்பவர்கள் வயலட் புஷ்பத்தை சூட்டிக்கொள்ளக் கூடாது. ஏனென்றால் அது மரணத்தைக் குறிக்கும் புஷ்பமாகும்.

மணமகள் பசுமையான உடைகள் தரிப்பது துக்கத் துக்கு இடமாகும். இன்னும் அவள் கல்யாணத்தின் போது முத்துக்களை அணிவதும், உடைதரித்துக் கொண்டபின் கண்ணாடியில் தன்னைப் பார்ப்பதும், கோவிலுக்குப் போகும்போது திரும்பிப் பின்னால் பார்ப்பதும் கூடாது. ஸ்காட்லண்டில் டிஸம்பர் மாஸம் 31-ந் தேதி கல்யாணத்துக்கு எடுத்ததல்ல. இங்கிலண் டில் பிப்ரவரி மாஸம் 14-ந் தேதி கல்யாணங்கள் விசே ஷமாய் நடக்கும். பெண், மாப்பிள்ளை ஆகிய இவர்க ளுடைய ஜன்மதினத்தன்று கல்யாணம் நடந்தால், ரொம்ப அத்ருஷ்டம் ஏற்படும். ஸதிபதிகள் கோவி லுக்குப் போகும்போது ஆகாயத்தில் பக்ஷிக்கூட்டங் கள் பறந்து போவதைப் பார்த்தால் அநேக குழந்தை கள் பிறக்கும். கல்யாணத்தின்போது பெண் வெள்ளை யுடை தரிப்பது நல்லது. மற்ற நிறங்களை நீக்கிவிட வேண்டும். கல்யாணவண்டியில் சாம்பல் நிறமான குதிரைகள் பூட்டப்பட்டிருந்தால் அத்ருஷ்ட மேற் படும்.

கல்யாணதினத்தில் ஸூர்யன் ப்ரகாசமாயிருப்பது அத்ருஷ்டத்தைக்காட்டும். சந்த்ரன் கலை நிரம்பியிருக்கும் தினத்தில் கல்யாணம் நடப்பதுநல்லது. அந்ததேசத்தில் சில இடங்களில் வதூவரர்கள் பெண்வீட்டை விட்டுப் புறப்பட்டுப்போகும்போது பக்கத்திலிருப்பவர்கள் பழஞ் ஜோடுகளை வதூவரர்கள் மேல் எறிந்து வழக்கம். இது வெகுகாலமாய் நடந்துவருகிறது. இதனால் ஸ்த்ரீ புரு ஷர்களுக்கு வாழ்க்கையில் இன்பம் உண்டாகுமாம்.

கல்யாணத்துக்கு வந்திருப்பவர்கள் இரட்டைப்படை யாயிராமல் ஒற்றைப்படையா யிருந்தால், வந்த விருந் தாளிகளுள் யாராவது ஒருவர் அந்த வர்ஷம் இறந்து போய் விடுவார்.

### Curious Births.

**விசித்ர ப்ரஸவங்கள்.**—திருச்சூருக்கு அருகேயுள்ள ஒரு க்ராமத்தில் ஓர் இழுவஜாதி ஸ்த்ரீ விகாரஸ்வரூப் முள்ள ஒரு குழந்தையைப் பெற்றாளாம். அது அடுத்த நாளே இறந்துபோயிற்றாம். அதற்கு பெரிய தலையும், சிறிய வாலுமிருந்தனவாம். அதன் வாய் பெரிய மனி தர்களுக்கு இருப்பதுபோல் பற்களுடைய தாயிருந்த தாம். அதன் அழுகைச் சப்தம் விபரீதமாயும், கழுத் திற்குமேல் குரங்கு வடிவமாயுமிருந்ததாம்.

கல்கத்தாவைச் சேர்ந்த பரீட்பூர் ஜில்லாவிலுள்ள மதன்பாரா என்னும் க்ராமத்தில், ஒரு பெரிய தனவர் தரின் குடும்பத்தில் ஒரு ஆச்சர்ய ஸம்பவம் நடந்தது. ஸமீபத்தில் அந்த குடும்பத்திலுள்ள யஜமானனுடைய மருமகளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அது பிறந்ததும் தாயானவள் வெகு அவதிப்பட்டுக் கொண் டிருந்தாள். பக்கத்திலிருந்தவர்கள் இரட்டை ப்ரஸவ மாயிருக்குமோ என்று தயங்கி இருந்தார்கள். இந்த ஸமயத்தில் அந்தப் பெண்ணானவள் ஆண் குழந்தையு மில்லாமல் பெண் குழந்தையுமில்லாமல் ஒரு ஆமை யைப் பெற்றாளாம். அதற்கு நான்கு கால்களிருந்தன வாம். ரூபத்தில் தண்ணீர் ஆமை என்ன ரூபமோ அப்படியே யிருந்ததாம். சில மணி நேரங்கள் வரை யில் ஆண் குழந்தையும் அந்த ஆமையும் உயிரோடிருந் தனவாம். பிறகு, இரண்டும் இறந்துவிட்டனவாம். சென்ற வர்ஷத்திலேயும் அதே பெண்ணுக்கு ஒரு குழந்தையும் ஒரு குரங்கும் பிறந்தனவாம். அவைக ளும் இறந்துவிட்டனவாம். அதற்கு முந்தின வர்ஷத் தில் அதே பெண் ஒரு ஆண் குழந்தையையும் மீன் ரூபம் போன்ற ஒரு நாக கன்னிகையையும் பெற்றா ளாம். இவைகளும் இறந்து விட்டனவாம்.

இந்த ஆச்சர்ய ஸமாசாரத்தை தன் கண்ணால் பார்த்த ஒரு நிருபர் கல்கத்தாவிலுள்ள 'பங்காளி'ப் பத்ரிகைக்கு எழுதியிருக்கிறார்.

**மீன் பிடிக்குஞ் செடி.**—அமெரிக்காவில் சில இடங் களில் மீன்பிடிக்குஞ் செடி யிருக்கிறதாம். அது சிறு மீன்களைத் தன்னிடத்திலிழுத்து, திடீரென்று அம் மீன்களைப் பற்றிக்கொள்ளுகிறதாம்.

## MISCELLANEOUS NEWS.

### நாநா ஸங்கதி.

**Wealthy Municipalities.**

பணம் பெருத்த முனிஸிபாலிட்டிகள்.—ஜனங்கள் எவ்வளவு தனிகர்களாகவும், ஏழைகளாகவு மிருக்கிறார்களோ, அப்படியே முனிஸிபாலிட்டிகளில் சில பணம் பெருத்தவையாயும், சில அதிக வருமான மில்லாதவையாயுமிருக்கக் காண்கிறோம். சென்னை ராஜதானியில் 60 முனிஸிபாலிடிக ளிருக்கின்றன. அவைகளில் அதிக வருமான முடையது மதுரை முனிஸிபாலிட்டியாகும். வர்ஷவாரியில் அதற்குக் கிடைப்பது 7-லட்சம் ரூபாய்க்கதிகமாகும். எல்லாமுனிஸிபாலிடியிலும் ஸ்வல்பவருமான முடையது தாராபுரம் முனிஸிபாலிட்டியேயாகும். ஏனெனில் அதற்குக் கிடைப்பது வர்ஷவாரியில் 30,000-த்துக் கதிகமில்லை. அதற்கும் கீழ்ப்பட்ட வருமான முள்ளது ஹோஸ்பேட்டை முனிஸிபாலிட்டி. சிற்சில முனிஸிபாலிட்டிகளின் செலவு வருமானத்தை யொட்டினாற்போலவே சற்றேறக்குறையவிருக்கும். ஆகவே, பணக்கையிருப்பைப்பொறுத்தமட்டில்எந்தமுனிஸிபாலிட்டியும்தனத் தன்மைகொண்டாட முடியாது. பணம்பெருத்த முனிஸிபாலிட்டிகளென்று கூறப்படுவன சிலவற்றை அதனதன் வர்ஷாந்த வருமானத்துடன் அடியிற் குறிப்பிட்டிருப்பதைக் காண்க.—

| முனிஸிபாலிட்டி | வர்ஷவருமானம் |
|---|---|
| மதுரை | ரூ. 7, 44, 890 |
| திருச்சிராப்பள்ளி | 3, 73, 270 |
| சேலம் | 309, 470 |
| உதகமண்டலம் | 2, 93, 380 |
| வேலூர் | 2, 48, 670 |
| கும்பகோணம் | 2, 39, 740 |
| பல்லாரி | 2, 29, 830 |
| மஸூலிப்பட்டணம் | 2, 95, 900 |
| நாகப்பட்டணம் | 2, 20, 510 |
| காகிநாடா | 2, 20, 120 |
| தூத்துக்குடி | 2, 09, 940 |
| கூடூர் | 1, 91, 590 |

**Special Trains for Emigrants.**

வெளிநாடுகளி லிருந்துவரும் கூலியாட்களுக்குத் தனிவண்டிகள்.—பினாங்கு, சிங்கப்பூர் முதலிய இடங்களிலிருந்து அடிக்கடி கூலியாட்கள் இந்தியாவுக்குத் திரும்பி வருகிறார்கள். இவர்கள் நாகப்பட்டணம் துறைமுகத்திலிறங்கி அங்கிருந்து தங்களுடைய ஊர்களுக்குப் போவார்கள். அவர்கள் தங்களுடைய ஊர்களுக்கு ப்ரயாணம்போக ரெயில்வண்டிகளில் போகும்போது, வண்டிகளில் ரொம்ப நெருக்கிட மேற்படுவதோடு, ஸாதாரண ப்ரயாணிகளுக்கேற்பட்ட வண்டிகள் காலதாமஸமாய்ப் போகின்றன. இந்த அஸௌகர்யங்களை உத்தேசித்து தென்னிந்திய ரெயில்வே டிஸ்ட்ரிக்ட் ட்ராபிக் ஸூபரிண்டெண்டண்ட் மிஸ்டர் ஹண்டர் என்பவர் கூலியாட்கள் வருந்தினத்தில் அவர்களுக்காக ப்ரத்யேக வண்டிகள்விட உத்தேசித்திருக்கிறார். இதற்காக அவர் திரும்பிவரும் கூலியாட்களுடைய ஸங்க்யைப்பற்றியும் இதரவிஷயங்களைப்பற்றியும் நாகப்பட்டணத்தில் கூலியாட்களை இறக்கிவரும் மதுரா கம்பெனியினிடம் விசாரித்து ரிபோர்ட் செய்ய ஒரு ட்ராபிக் இன்ஸ்பெக்டரை நியமித்திருக்கிறார்.

**A New German Bomb**

ஒரு புது ஜெர்மன் வெடி குண்டு.—ஜெர்மானியர் இப்போது ஒரு புதுவகையான வெடிகுண்டு கண்டு பிடித்திருக்கிறார்கள். அது வெடிக்கும்போது அதில் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் துண்டுகள் பக்கவாட்டாய்ப் போய்ப் பாவுகின்றனவாம். 30-கஜம் விசாலத்திற்கு அவ்விதம் பாவுகின்றனவாம். பின்ஸ்க் சதுப்பு நிலங்களில் ரஷ்யப்படைகள்மேல் அநேக ஜெர்மானிய ஆகாயக் கப்பல்கள் அவ்வகையான புது வெடிகுண்டுகளைப் போட்டன. அவ்விடங்களில் அகழரண்களாவது காவல்செய்யப்பட்ட குழிகளாவது தோண்டுவது கூடாத கார்யமானபடியால், ஆகாயத்திலிருந்து விழுந்து வெடிக்கும் வெடிகுண்டுகளுக்குத் தப்பித்துக் கொள்ள வழியில்லை. ஆகையால் அநேக ரஷ்யர்கள் மாண்டார்கள்.—சத்தியவேத பாதுகாவலன்.

**A Silent Howitzer.**

சத்தமில்லாத 'ஹவிட்ஸர்' பீரங்கி.—'ஹவிட்ஸர்' என்பது ஒரு பெரிய பீரங்கி. அதிலிருந்து குண்டுகள் வெளிப்படும்போது செவிடுபடும்படியான பலத்த சத்தமுண்டாகும். இப்போது இட்டாலியர் ஒரு புது மாதிரியான ஹவிட்ஸர் தயார்செய்திருக்கிறார்களாம், அதிலிருந்து குண்டுகள் வெளிவந்து தாக்கி வெடிக்கும் வரையில் சத்தமுண்டாவதே யில்லையாம்.



## DIARY OF THE MONTH.

### மாஸ வர்த்தமானம்.

**THE WAR IN EUROPE.**

ஐரோப்பிய யுத்தம்.

அக்டோபர்மீ 3-தேதி.

ருமேனியப் போர்முகத்தில் ரஷ்யர்கள் ரஷ்டக் என்னுமிடத்துக்குப் பக்கத்தில் டான்யூப் நதியைக் கடந்து எதிரியைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

4-தேதி.

இட்டாலியர்கள் ப்ரெண்டா பள்ளத்தாக்கில் குல்ட்ரியன் சிகரத்தைப் பிடித்தார்கள். ட்ரான்ஸில்வேனியாவில் போசராஸுக்கு வடக்கில் எதிரிகள் பின்வாங்கியிருக்கிறார்கள். பல்கேரியர்கள் மொனாஸ்டரை நோக்கிப் பின்வாங்குகிறார்கள். நம்மவர்கள் ஸெர்வியப் போர்முகத்தில் சில ஊர்களைப்பிடித்திருக்கிறார்கள்.

5-தேதி.

ஜூலைமாஸம் முதல் இதுவரையில் ப்ரிட்டிஷார் 26,735 எதிரி ஸோல்ஜர்களைக் கைது செய்திருக்கிறார்கள். கோவலுக்குத் தென்மேற்கில் பலமான யுத்தம் நடக்கிறது. ருமேனியர்கள் வல்கன் கணவாயில் பின்வாங்கியிருக்கிறார்கள்.

7-தேதி.

ப்ராஸோவுக்கு வடமேற்கில் போகாராஸ் ப்ரதேசத்தில் ருமேனியர்கள் பின்வாங்கியிருக்கிறார்கள்.

9-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகள் லெஸார்ஸ் என்னும் க்ராமத்தைப் பிடித்திருக்கின்றன. ருமேனியர்கள் பின்வாங்கி கார்ப்பேதியன் மலையிலுள்ள ஸௌகர்யமான இடங்களுக்குப் போயிருக்கிறார்கள். ஜெர்மானியர்கள் ப்ராஸ்ஸோவையும் ஆஸ்ட்ரியர்கள் ஸெகெலிஉட்வார்க்கெலி என்னும் ஊரையும் பிடித்ததாகச் சொல்லுகிறார்கள். ஸெர்வியர்கள் டெப்ரோஜாலி குன்றையும், ப்ரெஞ்சுக்காரர்கள் கிரேஷாவாவையும் பிடித்திருக்கிறார்கள்.

10-தேதி.

ஜெர்மானியர்கள் ருமேனியபோர்முகத்தில் டொட்ரிவால் என்னுமிடத்தையும் ஸ்விஸ்டௌ என்னும் ஊருக்கு வடமேற்கில் டான்யூப் தீவையும் பிடித்தார்கள். ஜெர்மன் ஸப்மரீன்கள் அமெரிக்காவின் கரையோரமாக 9-வ்யாபாரக் கப்பல்களை மூழ்கடித்தன.

11-தேதி.

பல்கேரியர்கள் ஸ்ட்ருமா நதியோரமாயுள்ள காவ்டர்மா, ஆர்மெண்டி, ஹாஸ்நடார் என்னும் ஊர்களைக் காலிசெய்துவிட்டார்கள். ப்ரிட்டிஷ் துருப்புகள் ப்ரொஸெனிக், டோபலோவா என்னும் ஊர்களைக் கைப்பற்றியிருக்கின்றன.

12-தேதி.

இட்டாலியர்கள் கார்ஸோ போர்முகத்தில் நோவாவில்லா என்னும் ஊரைப் பிடித்தார்கள்.

14-தேதி.

ருமேனியர்கள் வட ட்ரான்ஸில்வேனியாவில் தங்களுடைய நாட்டின் எல்லையை நோக்கிப் பின்வாங்குகிறார்கள்.

17-தேதி.

ப்ரெஞ்சுத் துருப்புகள் ஸெய்லிஸெய்லிஸ்ஸல் என்னும் க்ராமத்தில் ஒரு பாகத்தைப் பிடித்தன.

19-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் ஸெய்லிஸெய்லிஸ் க்ராமம் முழுவதையும் பிடித்திருக்கின்றன. ரஷ்யப் போர்முகத்தில் லட்ஸ்குக்குத் தென்மேற்கில் உக்ரமான யுத்தம் நடக்கிறது. கார்ப்பேதியன் மலைகளில் பனிக்கட்டி விழுந்துகொண்டிருக்கிறது.

20-தேதி.

ஸெர்னா நதிக்கு இடதுபுறத்தில் உள்ள ப்ராட் என்னும் க்ராமத்தை ஸெர்வியர்கள் பிடித்திருக்கிறார்கள்.

ஜெர்மனியிலிருந்து அமெரிக்காவுக்குப் புறப்பட்டுப் போன ப்ரெமன் என்னும் ஜெர்மன் ஸப்மரீன் கப்பல் மூழ்கிப்போயிருக்குமென்று நம்பப்படுகிறது.

21-தேதி.

டொப்ருஜா போர்முகத்தில் ருமானியர்கள் தங்களுடைய இடது பக்கத்தில் சற்றுப் பின்வாங்கினார்கள். ஸெர்வியர்கள் லெவிஸோ க்ராமத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

ஆஸ்ட்ரியாவின் ப்ரதம மந்த்ரியாக கௌண்ட்ஸ்டர் ஒரு ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது ஒரு புஸ்தக வ்யாபாரி அவரை சுட்டுக்கொன்றான்.

23-தேதி.

ரஷ்யோ-ருமேனியத் துருப்புகள் டொப்ருஜாவில் பின்வாங்கி யிருக்கின்றன. ஜெர்மானியர்கள் டஸ்லா

என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்களாம். ஸெர்வியர் கள்மொனுஸ்டருக்கு 12 மைல்தென்மேற்கிலுள்ள பால் டென்வி என்னும் க்ராமத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

24-தேதி.

ஜெர்மன் கக்ஷித்துருப்புகள் ருமேனியாவில் கான்ஸ் டான்ஸா என்னும் ஊரைப் பிடித்திருக்கின்றன.

25-தேதி.

ப்ரெஞ்சு துருப்புகள் டௌமண்ட் கோட்டையும் க்ராமத்தையும், பிடித்தன. ஜெர்மானியர்கள் ப்ராஸ் ஸோவுக்குத் தெற்கில் ப்ரெடியல் என்னும் இடத்தை பிடித்தார்கள். ரஷ்ய-ருமேனியத் துருப்புகள் காரமுரட் என்னுமிடத்துக்குப் பின்வாங்கி யிருக்கின்றன. ஜெர்மானியர்கள் டான்யூப் நதிக்கரையிலுள்ள ரஷோவா என்னும் ஊரையும்ஸெர்னேவாடா-கான்ஸ்டான்ஸா ரெயில்வேயில் உள்ள மெட்ஜிடியி என்னும் ஊரையும் பிடித்திருக்கிறார்கள்.

26-தேதி.

ருமேனியர்கள் வல்கன் கணவாயில் பின்வாங்கி யிருக்கிறார்கள். அவர்கள் ஸெர்னேவாடா என்னும் ஊரைக் காலிசெய்துவிட்டார்கள்.

28-தேதி.

ப்ரெடியலுக்குத் தெற்கே 5-மைலில் ருமேனியர்களுக்கும் எதிரிகளுக்கும் யுத்தம் நடக்கிறது. ருமேனியர்கள் வல்கன் கணவாயில் பின் வாங்கியிருக்கிறார்கள். அவர்கள் டொப்ருஜாவில் ஹார்ஸோவா—காஸாப்கார் ஊருக்கு வடக்கில் பின்வாங்கிப்போகிறார்கள்.

நவம்பர் 1-தேதி.

முன்பு ஜெர்மனியிலிருந்து சாயங்களை ஏற்றிக்கொண்டு அமெரிக்காவுக்குப்போன 'டைச்லண்ட்' என்னும் ஜெர்மன் ஸப்மரீன் கப்பல் மறுபடியும் அமெரிக்காவுக்குப் போயிருக்கிறது. அது 750 டன் சாயச் சரக்கை ஏற்றிக்கொண்டு ந்யூலண்டன் துறைமுகத்துக்கு போயிற்று. அது மொத்தம் 100 மைல் தூரத்துக்கு ஜலத்தில் மூழ்கி ப்ரயாணம் செய்ததாம்.

2-தே

ஜெர்மானியர்கள் வாக்ஸ் கோட்டையைக் காலி செய்துவிட்டார்கள்.

## INDIAN NEWS.

### இந்திய வர்த்தமானம்.

அக்டோபர்மீ 13-தேதி.

**யுத்தத்துக்குப் பிறகு ராஜாங்க அமைப்பில் சீர் திருத்தங்கள்.**—ராஜப்ரதிநிதி சட்டஸபையிலுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களில் 19 பேர்கள்யுத்தத்துக்குப் பிறகு இந்திய ராஜாங்க அமைப்பில் இன்னின்ன சீர் திருத்தங்கள் செய்யவேண்டுமென்பதைப்பற்றி ஒரு மெமோராண்டம் தயார்செய்து வைஸ்ராய்க்கு அனுப்பியிருக்கிறார்கள்.

18-தேதி.

**'ந்யூ இந்தியா' அப்பீல்.**—சென்னை 'ந்யூ இந்தியா' பத்ரிகையினிடமிருந்து சீப் ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ரேட் ஜாமீன்கேட்பதற்குப் போட்ட உத்தரவையும் கொடுத்த ஜாமீனை கவர்ன்மெண்டார் பறிமுதல் செய்ததையும் ஆக்ஷேபித்து மிஸஸ் பெஸண்ட் போட்டிருந்த அப்பீல்கள் இன்று தள்ளுபடி செய்யப்பட்டன.

20-தேதி.

**ஸிலோனில் கட்டாய ராணுவஸேவகம்.**—ஸிலோனில் உள்ள ப்ரிட்டிஷ் குடிகளில் 18-வயஸுக்குமேல் 55-வயஸுவரையில் உள்ள எல்லா ஆண்களும் ராணுவத்தில் சேரவேண்டுமென்று ஒருசட்டம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

24-தேதி.

**ஒரு புதுவகையான கொள்ளை.**—இன்றிரவு கல்கத்தாவில் ஐரோப்பியரைப்போல் உடைதரித்திருந்த இரண்டுபேர்கள் பணம் எண்ணிக்கொண்டிருந்த ஒரு கூலி ஸர்தார்வீட்டில் புகுந்து, அவன் சூதாடிக்கொண்டிருந்தானென்றும், ஆகையால் அவன் அந்தப் பணத்தைக் கொடுத்துவிட்டுக் கைதியாக வேண்டுமென்றும் சொல்லி, பணத்தை வாங்கிக்கொண்டு அவனைப் பிடித்துக் கொண்டு ஒருசந்தின் வழியாய்ப்போய், அவனை இருட்டில் விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். அந்த ஸர்தார் இதைப் போலீஸாருக்குத் தெரிவித்திருக்கிறான்.

30-தேதி.

**இந்திய சிற்றரசர்கள் கான்பரென்ஸ்.**—இந்தக் கான்பரென்ஸ் இன்றையதினம் கூடிற்று. ஸுமார் 40-சிற்றரசர்கள் வந்திருந்தார்கள். வைஸ்ராய் கான்பரென்ஸைத் திறந்துவைத்துப்பேசினர்.


# ஜனபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

**THE PEOPLE'S FRIEND.**

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE.'

OFFICE OF THE REGISTRAR OF ... 12 FEB 1917 MADRAS

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ., பத்ராதிபர். — G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 8. Vol. 8. — நளஹூ, கார்த்திகைமீ, NOV.—DEC 1916. — ஸஞ்சிகை 11. No. 11.


## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'Peoples' Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. | A. | P. | | Foreign. Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | ... ... | 6 | 0 | 0 |
| Half-yearly ... | 2 | 0 | 0 | ... ... | 3 | 0 | 0 |
| Sample copy | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 Page | ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do | ... | 2 | 8 | 0 | do |
| ¼ do | ... | 1 | 4 | 0 | do |
| 1/10 do | ... | 1 | 0 | 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion, republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | | | அந்ய நாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 | 0 | 0 | ... | 6 | 0 | 0 |
| ஆறுமாஸத்துக்கு ... | 2 | 0 | 0 | ... | 3 | 0 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 | 0 | 0 |
| ½ ,, | ,, ,, | 2 | 8 | 0 |
| ¼ ,, | ,, ,, | 1 | 4 | 0 |
| 1/10 ,, | ,, ,, | 1 | 0 | 0 |

**வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.**

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால், ப்ரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். ஸுலபம் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேண்டுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை க்ருபை நேயர்கள் அறியவேண்டும்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# ஜனாபிமானி.

புஸ்தகம் 8.] நள௵ கார்த்திகை௴. [ஸஞ்சிகை 11.

## THE POVERTY OF INDIA.

## இந்தியாவின் தரித்ர நிலைமை.

### இந்தியரின் சராசரி வருமானம்.

போனமாஸத்து ஸஞ்சிகையில் இங்க்லண்டின் செல்வத்தைப்பற்றி எழுதினபோது இந்தியாவின் செல்வ நிலைமையைப்பற்றியும் எழுதியிருந்தோம். கணக்கு விவரங்களில் பெயர் பெற்றவர் ராபர்ட் கிப்பன் என்பவர் இந்தியாவிலுள்ள ஜனங்களின் மொத்த வருமானம் 900-கோடி ரூபாய் என்று கணக்கிட்டிருக்கிறார். இந்தியாவின் ஜனத்தொகை $31\frac{1}{2}$ - கோடி யாகையால் சராசரியில் ஒரு இந்தியருடைய வர்ஷ வருமானம் 30-ரூபாயாகிறது. முன்பு இந்தியாவின் வரவு செலவு மெம்பராயிருந்த லார்ட் க்ரோமரும், முன்பு வைஸ்ராயாயிருந்த லார்ட் கர்ஸனும் கிட்டத்தட்ட இதேமாதிரியாக மதிப்புகள் போட்டிருக்கிறார்கள். இந்த மதிப்புகளெல்லாம் இந்தியாவிலுள்ள ப்ரிட்டிஷ் உத்யோகஸ்தர்கள் தயாரித்துள்ள கணக்கு ஆதாரங்களின்மேல் போடப்பட்டவைகளென்றே எண்ணவேண்டும். இந்திய கணக்கு விவர நிபுணர்களும், இங்க்லண்டிலுள்ள சிலரும் இந்த மதிப்புகளை ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த மதிப்புகள் ரொம்ப அதிகமானவை யென்றும், இந்தியர்களுடைய வருமானம் இன்னும் ரொம்ப குறைவென்றும், அவர்கள் சொல்லுகிறார்கள். இருந்தாலும், உத்யோகமுறையில் கிடைத்த இந்த மதிப்புப்படி இந்தியருடைய வருமானம் 30-ரூபாயென்றே வைத்துக்கொள்வோம்.

ஆனால் ஒவ்வொரு இந்தியனும் 30 - ரூபாய் ஸம்பாதிக்கிறதாக எண்ணக் கூடாது. இது சராசரி மதிப்பே தவிர வேறில்லை சிலருக்கு 30 - ரூபாயைவிட அதிகமாக வரும்படி கிடைத்துவரும். சிலருக்கு குறைவாகக் கிடைத்துவரும். எத்தனையோ கோடி ஜனங்களுக்கு வர்ஷ வரும்படி 30 - ரூபாயிலும் குறைவாயிருக்கிறது. எத்தனையோ பேர்களுக்கு வரும்படி யென்பதே கிடைப்பதில்லை. அவர்கள் பிச்சை வாங்கியும், திருட்டுத்தொழில் புரிந்தும், காலந் தள்ளுகிறார்கள். இருந்தாலும், ஒவ்வொரு இந்தியருக்கும் 30-ரூபாய் கிடைக்கிறதென்றே வைத்துக்கொண்டு, ஜெயில்களிலுள்ள கைதிகளுக்காகும் செலவையும், ஸாதாரண ஜனங்களின் வரவு செலவையும் ஒத்திட்டுப்பார்ப்போம்.

### ஜெயில் கைதிகளுக்காகும் செலவு.

எந்த தேசத்திலும் ஜெயில்களிலுள்ள கைதிகளுக்கு ஸௌகர்யமும் ஸுகமும் ஏற்படும்படி ஆகாரம், படுக்கை முதலிய வஸதிகளைக்கொடுப்பதில்லை. கைதிகள் சாகாமலிருக்கவும், தேகம் கெடாமலிருக்கவும், கொடுத்த வேலைகளைச் செய்ய திறமை இருக்கவும் வேண்டிய வஸதிகள் மாத்ரம் செய்வது வழக்கம். ஜெயிலில் கைதிகளுக்குக் கிடைக்கும் வஸதிகளாவது ஸாதாரண இந்தியர்களுக்குக் கிடைக்கின்றவா என்று பார்ப்போம்.

ஜெயில் நிர்வாகத்துக்காக ஏற்படும் வேறு செலவுகளை கவனிக்காமல், கைதிகளுக்கு ஆகாரம், படுக்கை, துணி, வைத்யச்செலவு ஆகிய இவைகளை மாத்ரம் எடுத்துக்கொள்வோம். அடியில்வரும் கணக்கில் 4 இந்திய மாகாணங்களில் மேலேகுறித்த அம்சங்களில் ஒவ்வொரு கைதிக்கும் வர்ஷத்தில் சராசரியில் என்ன செலவாயிற்று என்பது காட்டப்பட்டிருக்கிறது.



| மாகாணம். | ஆகாரம். ரூ. அ. பை. | படுக்கை துணி. | வைத்யம். | மொத்தம். |
|---|---|---|---|---|
| மத்ய மாகாணங்களும் பேராரும் | 31-4-9 | 4- 2-11 | 2- 1- 4 | 37-9- 0 |
| ஐக்ய மாகாணங்கள். | 41-3 0 | 4- 7- 3 | 2-11- 8 | 48-5-11 |
| பேஹார் ஒரிஸ்ஸா. | 43 9-9 | 4-10-10 | 6-13- 1 | 55-1- 8 |
| பெங்காள். | 47-7-0 | 6- 2- 3 | 7-10-10 | 61-4- 1 |

இந்தக் கணக்குகளால் மத்ய மாகாணங்களில் செலவு குறைவென்று தெரிகிறது. ஆயினும் இந்த நான்குவகைச் செலவுகளுக்கு மாத்ரம் 37-9 0 ரூபாயாயிற்று. அதாவது, ஒரு இந்தியருடைய வரும்படிக்குமேல் 7 ரூ. 9 அ. அதிகச் செலவு ஆயிற்று. இந்தியருக்கு சராசரியில் கிடைப்பதாகச் சொல்லப்படும் முப்பது ரூபாய் வரும்படியானது மத்ய மாகாணங்களிலுள்ள ஒரு கைதியின் சாப்பாட்டுச் செலவுக்குக் கூடப் போதவில்லை. மற்ற மாகாணங்களிலும் சாப்பாட்டுச் செலவு மாத்ரம் 30 ரூபாயைவிட ரொம்ப அதிகமா யிருக்கிறது.

### இந்தியர்களுக்காகும் செலவு.

ஆனால் சிலர், இந்தியர்களின் ஜனத்தொகையில் பெரியவர்களேயன்றி குழந்தைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றனவென்றும், ஜெயில் கணக்கில் குறிக்கப்பட்டிருக்கும் தொகையானது வயது வந்த பெரிய கைதிகளுக்காகும் செலவென்றும் சொல்லக்கூடும். பொதுவாய்ச் சொல்லுமிடத்து, வளரும் குழந்தைகள் பெரியவர்கள் சாப்பிடுவதை விட ரொம்பக் குறைவாய்ச் சாப்பிடுவதில்லையென்று சொல்லலாம். ஜெயிலில் சராசரியில் ஒரு கைதிக்கு ஆகும் செலவானது மேலே சொன்ன 30 ரூபாய் வரும்படியைவிட ரொம்ப அதிகமாகவே யிருக்கிறது. மத்ய மாகாணங்களில் 7-ரூ 9-அணு அதிகம். ஐக்ய மாகாணங்களில் ரூ. 18-5-11 அதிகம். பேஹார் ஒரிஸ்ஸா மாகாணங்களில் ரூ. 25-1-8 அதிகம். பெங்காளத்தில் ரூ. 31-4-1 அதிகம். மேலும் கைதிகளல்லாத மற்ற இந்திய ஜனங்களுக்கு அட்டவணையில் கொடுத்திருக்கும் மூன்றுவகைச் செலவுகளைத் தவிர வேறு பல செலவுகள் உண்டு. அவர்கள் தங்களுக்கு வீடு கட்டிக் கொண்டு அவைகளைப் பழுது பார்க்க வேண்டியிருக்கிறது. ஸ்த்ரீகளுடைய ப்ரஸவகாலத்தில் மருந்து முதலியவைகளுக்காகச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. சிறுவர் சிறுமியர்களுக்குக் கல்வி கற்பிக்கச் செலவு செய்யவேண்டி யிருக்கிறது. மத ஸம்பந்தமான சடங்குகளுக்கும், பிள்ளை பிறப்பு, கல்யாணம், சாவு முதலியவைகளுக்கும், செலவு செய்யவேண்டும். அவரவர்கள் மத ஸம்பந்தமான உத்ஸவாதிகளைக் கொண்டாட வேண்டியிருக்கிறது. புண்யஸ்தல யாத்ரைக்காகவும், குடும்ப விஷயமாயும், பந்துக்கள் விஷயமாயும் பிற ஊர்களுக்குப் போவதற்காகவும் செலவு ஏற்படுகிறது. இவைகளுக்கெல்லாம் ஏதாவது தொகை செலவழியாமலிராது. இதையும், சாப்பாடு, துணி, வைத்யம் இவைகளுக்காகும் செலவையும் சேர்த்தால், 30-ரூபாய்க்கு மேல் ரொம்ப ஆகுமென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

### வரவுக்கேற்ற செலவு.

வரும்படி சராசரியில் 30 ரூபாய்தானே, அதற்குமேல் செலவாகிறதே, இந்த அதிகப் பணம் இந்தியர்களுக்கு எவ்விதத்தில் செலவுக்

குக் கிடைத்து வருகிறது, என்று கேட்கலாம். அவர்களுக்கு அதிக வரும்படிக்கு மார்க்கமொன்றும் கிடையாது. அதற்காக அவர்கள் அரை வயிறு கால்வயிறு சாப்பிட்டும், கந்தைத் துணிகளை உடுத்தியும் காலங்கழிக்கிறார்கள் மாடுகள் கட்டுவதற்குக்கூட யோக்யமில்லாத குடிசைகளில் காலந் தள்ளிவருகிறார்கள். இதுவுமில்லாத பலர் தெருவில் வெளியில் படுத்துகாலங் கழிக்கிறார்கள். படிப்புக்குச் செலவழிக்கப் பணமில்லாததால், கல்வியென்பது பெரும்பான்மையான இந்தியர்களுக்குக் கிடைப்பதேயில்லை. அவர்களுக்கு வ்யாதி வந்தாலோ வைத்யரைத் தேடுவதில்லை. அத்ருஷ்டமிருந்தால் ஸ்வஸ்தமாகுமென்று எண்ணிக்கொள்ளுகிறார்கள். சிலர் கிடைக்கும்வரையில் பணம் கடன் வாங்குகிறார்கள். சில குடும்பங்கள் தலை முறை தலைமுறையாகக் கடனில் மூழ்கிக் கிடக்கின்றன. சிலர் தங்களுடைய பந்துக்களுக்கு பாரமாக இருந்து காலங்கழிக்கிறார்கள். பணமில்லாமல் கஷ்டப்படுகிறவர்களில் தைர்யமுள்ளவர்கள் திருடிப் பிழைக்கிறார்கள். இன்னும் தைர்யமாயும் கெட்ட நடத்தையுள்ளவர்களாயு மிருப்பவர்கள் பெருந்தீவட்டிக் கொள்ளையிட்டுப் பிழைக்கிறார்கள்.

### வறுமையின் கேடுதிகள்.

தரித்ரத்தால் ஜனங்களுக்கு ஏற்படும் கஷ்டங்களும் தீங்குகளும் அநேக முண்டு. அவையாவன. ஆகாரக்குறைவு, பலஹீனம், அல்பாயுஸு, தொற்றுவ்யாதிகள், அகால மரணம், உடுக்கப் போதுமான வஸ்த்ரமில்லாமை, தேக அசௌக்யம், முற்றின வ்யாதிகள், ஜனங்கள் குற்றங்கள் செய்வது, குடியிருக்க தக்க வஸதிகள் இல்லாமை, வெயில், மழை முதலியவைகளால் தேகத்துக்கு உபாதி ஏற்படுவது, படிப்பின்மை, அஞ்ஞானம், ஸுகாதாரக் குறைவு, மூடநம்பிக்கைகள் மனஸில் ஏற்படுவது, ஜனங்கள் பயந்த ஸ்வபாவமுடையவர்களாகி விடுவது, விதியை நம்புவது, பிச்சையெடுப்பது, பிறருக்கு பாரமாயிருப்பது, அதனால் கௌரவத்தையும், ஆண்மைத்தனத்தையும் இழந்துவிடுவது முதலியவைகளாகும்.

இப்படி ஜனங்கள் ஏழையாயிருப்பதால் அவர்களை அபிவ்ருத்திக்குக் கொண்டுவருவதும் ச்ரமமாயிருக்கிறது. ஸுகாதாரமும் கல்வியும் வ்ருத்தியடையவேண்டுமென்றால் அதற்கு பணம் செலவழித்தாக வேண்டும். பணம் எங்கிருந்து வரும்? ஜனங்களோ ஏழைகள். அவர்கள் அதிகவரி கொடுக்கமுடியாது. இப்போதுள்ள வரும்படியைக்கொண்டு ஸர்க்கார் கொஞ்சங் கொஞ்சமாய் ஜனங்களுடைய நிலைமையை உயர்த்த முயற்சிகள் செய்யவேண்டும்.

## NANA SAHIB AND THE MASSACRE OF CAWNPORE.

## நாநாஸாகிபும் கான்பூரில் நடந்த பெருங்கொலையும்.

வட இந்தியாவிலிருந்த இந்திய ஸைன்யங்கள் 1857-ம் வர்ஷத்தில் ப்ரிட்டிஷாருக்கு விரோதமாகக் கலகம்செய்த விஷயம் சரித்ரம் வாசித்தவர்கள் யாவருக்கும் ஞாபகமிருக்கும். அப்போது இங்க்லீஷ் கவர்ன்மெண்டுக்கு விரோதமாக கான்பூர், லக்னௌ, மீரட், டெல்லி முதலிய இடங்களில் இருந்த இந்தியஸைன்யங்கள் இங்க்லீஷ் ஸைன்யங்களை எதிர்த்து சண்டை செய்தன.

### கான்பூர் கலகம்.

இங்கு நாம் கான்பூரில் நடந்த விஷயங்களை மாத்ரம் சொல்லுகிறோம். இந்த ஊரில் கலகம் நடந்தகாலத்தில் ப்ரிட்டிஷாரின் கீழ் 3 ரெஜிமெண்ட் இந்திய காலாள்படையும், 1 ரெஜிமெண்ட் இந்திய குதிரைப்படையும், ஒரு கம்பெனி இந்திய பீரங்கிப்படையும், 200-பேர்கள் கொண்ட ப்ரிட்டிஷ் படையும் இருந்தன. இப்பாய்க்கலகம் முதலில் மீரட்டில் நடந்தது. அந்தக் கலகம் ஏற்படுவதற்கு முன்னமேயே கலக ஸம்பந்தமான வதந்திகள் கான்பூரிலிருந்த இந்தியத் துருப்புகளுக்குள் பரவின. கலகம் ஏற்பட்ட விஷயம் அவர்களுக்குத் தெரிந்ததும், அவர்களுக்குள்ளும் கலகம் ஏற்படும்போ லிருந்தது. அப்போது அந்த ஸைன்யங்களுக்குத் தலைவராயிருந்த ஜெனரல் வீலர், இந்திய ஸைன்யங்கள் கலகம்செய்தால் அதை அடக்க 200 ப்ரிட்டிஷ் துருப்புகள் போதாவென்று எண்ணி, லக்னௌவிலுள்ள இங்க்லீஷ் படைக்குத் தந்தியடித்து ஸைன்யங்கள் அனுப்பும்படி கேட்டார். ஆனால் அங்கிருந்து 50 ப்ரிட்டிஷ்வீரர்கள்தான் வந்தார்கள். அதன்மேல் ஜெனரல் வீலர் கான்பூருக்கு 12-மைல் தூரத்தில் பித்தூர் என்னும் ஊரிலிருந்த நாநா ஸாகிபுவை உதவிக்கு ஸைன்யங்கள் அனுப்பும்படி கேட்டுக்கொண்டார்.

### நாநாஸாகிப்.

நாநாஸாகிப் என்பவரை தண்டுபண்ட் என்றும் சொல்வார்கள். பூனாவில் ஆண்டுவந்த பீஷ்வா வம்சத்தில் கடைசியான பாஜீராவை ப்ரிட்டிஷார் ராஜ்யத்திலிருந்து தள்ளி பென்ஷன் கொடுத்துவிட்டபிறகு, பாஜீராவ் நாநாஸாகிப்பை பால்யவயஸிலேயே ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டார். பாஜீராவ் இறந்தபிறகு நாநாஸாகிப் அவருடைய ஸொத்துக்களும், பென்ஷனும் தமக்குக் கிடைக்கவேண்டுமென்று ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டிடம் வாதாடினார். ஆனால் அவருக்கு பாஜீராவின் ஸொத்துக்கள் கிடைத்தனவேயன்றி, பென்ஷன் கிடைக்கவில்லை. இதனால் அவருக்கு ப்ரிட்டிஷாரிடம் மனஸ்தாபம் ஏற்பட்டது. ஜெனரல் வீலர் உதவிசெய்ய வேண்டுமென்று கேட்டதும், அவர் (நாநாஸாகிப்) 300-வீரர்களுடன் ப்ரிட்டிஷாருக்கு உதவி செய்யவந்தார். அதன்மேல் ஜெனரல் வீலர் லக்னௌவிலிருந்துவந்த வீரர்களையும் கான்பூரிலிருந்து இன்னும் 50-வீரர்களையும் லக்னௌவுக்குத் திருப்பி யனுப்பிவிட்டார். ப்ரிட்டிஷ்படை குறைந்ததும், இந்திய ஸைன்யங்கள் கலகம்செய்ய ஆரம்பித்து, ஸேனாதிபதிக்கு அடங்காமல், அந்தப் பட்டணத்திலிருந்த கஜானாவைக் கொள்ளையடித்து, ப்ரிட்டிஷ் ஜனங்களிருந்த வீடுகளைத் தாக்கி நாசம் செய்து, ஜெயிலைத்திறந்து அங்கிருந்தவர்களை விடுதலைசெய்துவிட்டு, டில்லிக்குப் புறப்பட்டன.

### நாநாஸாகிப் பீஷ்வா பட்டம் தரித்தது.

அதுவரையில் இங்க்லிஷ்காரருக்கு ஸ்நேகம் பாராட்டிவந்த நாநாஸாகிப் விரோதம்பாராட்டி, டெல்லிக்குப் புறப்பட்டுப்போன இந்திய ஸைன்யங்களைத் திரும்பிவரும்படி தூண்டி, அவர்களுக்கு தலைவராயிருந்து, பீஷ்வா என்ற பட்டம்பூண்டு அவர்களோடு, இங்க்லீஷ் படைகள் இருந்த இடத்தை முற்றுகைபோட்டார். முற்றுகை 19-நாள் நடந்தது. ஜெனரல் வீலருக்கு இந்த முற்றுகையில் பலத்தகாயங்கள் ஏற்பட்டதோடு, அவர் ஆஸ்பத்ரியிலேயே இருக்க நேரிட்டது. ப்ரிட்டிஷாரது ஆகாரப் பொருள்கள் ரொம்பக் குறைவடைந்து விட்டன. ஆகவே, ஜெனரல் வீலர் இனிமேல் ஒன்றும் செய்யமுடியாதென்றெண்ணி, மற்ற ப்ரிட்டிஷ் ஜனங்களுடன் நாநாஸாகிபிடம் சரணமடைய நிச்சயித்தார். நாநாஸாகிப் அவர்களை கங்கையில் படகுகளில் ஏற்றி அல்லகபாத்துவரையில் பத்ரமாய் கொண்டுபோய் விடுவதாக வாக்களிக்க, அவர்கள் சரணமடைந்தார்கள்.

### பழையநூல்களிலுள்ள விவரங்கள்.

இதற்குமேல் என்ன நடந்ததென்பதைப் பற்றி நாம் இதுவரையில் வாசித்த சரித்ர புஸ்தகங்களில் சொல்லி யிருப்பதென்னவென்றால், ப்ரிட்டிஷ் ஜனங்கள் ஸுமார் 450 பேர்கள் சரணமடைந்து, கங்கையில் படகுகளில் ஏறிப் போனதும், நாநாஸாகிப் அவர்களைச் சுடும்படி உத்தரவு செய்தார்; அநேக ப்ரிட்டிஷ் ஜனங்கள் கொல்லப்பட்டுப் போனார்கள்; பாக்கிப்பேர்கள் கைதிசெய்யப்பட்டார்கள்; அவர்களில் ஆண்க

ளெல்லாம் அப்போதே கொல்லப்பட்டார்கள்; ஸ்த்ரீகளையும் குழந்தைகளையும் கான்பூரில் ஓரிடத்தில் சிறையில் வைத்து சிலநாள்கழித்து அவர்களையும் கொலைசெய்துவிட்டார்கள்; இவைகளையெல்லாம் செய்யும்படி உத்தரவிட்டவர் நாநாஸாகிப் ஆவர்;—என்பதே.

## புதிய விவரங்கள்.

ஆனால் கான்பூரில் சரணமடைந்த ப்ரிட்டிஷ் ஜனங்களில் 4 பேர்கள் நீங்கலாக மற்றவர்கள் யாவரும் கொலைசெய்யப்பட்டு இறந்துபோனது வாஸ்தவமென்றாலும், அதற்கு நாநாஸாகிப் காரணமல்லவென்றும், இந்தக் கொலை விஷயத்தில் நாநாஸாகிப் நிரபராதியென்றும் இப்போது கிடைத்துள்ள ஒரு புஸ்தகத்தால் தெரிகிறது. கான்பூர் முற்றுகையிலகப்பட்டமிஸ்ஸஸ் ஹார்ட்டெஸ்டட் என்னும் ஐரோப்பிய ஸ்த்ரீ கலகத்தில் தானடைந்த கஷ்ட நிஷ்டூரங்களைப்பற்றி ப்ரெஞ்ச் பாஷையில் ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறாள். அந்த புஸ்தகமானது,பெர்ஷியன் பாஷையில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. மேற்குறித்த புஸ்தகம் அதுதான். அதில் கூறப்பட்டுள்ள விஷயம் பின்வருமாறு.

ஜெனரல் வீலர் சரணமடைந்ததும் மிஸ்ஸஸ் ஹார்ட்டெஸ்டெட்டும் அவளுடைய குழந்தைகளும் நானாஸாகிப்பால் அனுப்பப்பட்ட ஒரு வண்டியிலேறி கங்கைநதிக் கரைக்குப்போய்ச் சேர்ந்தார்கள். மற்ற ப்ரிட்டிஷ் ஜனங்களும் நதிக்கரைக்கு வந்தார்கள். நாநாஸாகிப் அவர்களுக்கு யாதொரு கெடுதலும் ஏற்படாதபடி பார்த்துக்கொள்வதாக வாக்களித்திருந்தார். எல்லாரும் படகுகளில் ஏறிக்கொண்டார்கள். படகுகள் நதியின் மத்தியில் போய்ச் சேர்ந்தவுடன் நதிக்கரையிலிருந்த பீரங்கிகள் திடீரென்று படகுகளைத்தாக்க ஆரம்பித்தன. அநேகர் குண்டுகளால் தாக்கப்பட்டு மடிந்தார்கள். பல படகுகளில் குண்டுகள் தாக்கி த்வாரம் உண்டாய் மூழ்கிவிட்டன. சில படகுகள் காற்றினால் அடிக்கப்பட்டு கரைக்கு வந்தன. கரையிலேறினவர்களில் பலரை கலகக்காரர்கள் கொன்றுவிட்டார்கள். அந்த ஸமயம் நாநாஸாகிபும், அவருடைய உத்யோகஸ்தர்களில் சிலரும் அங்குவந்து கொலையைக் கண்டதும், ஒரு சைகைசெய்யவே, எல்லா கலகக்காரர்களும் கொலையை நிறுத்திவிட்டு தங்கள் கத்திகளை உறையில்போட்டுக்கொண்டார்கள். பிறகு நாநாஸாகிப் எல்லா ப்ரிட்டிஷ் ஜனங்களையும் கைதுசெய்து கான்பூரில் ப்ரிட்டிஷ் வீரர்கள் வஸித்துவந்த ஒரு கட்டிடத்தில் இருக்கச்செய்து ஆகாராதி எல்லாவித ஸௌகர்யங்களையும் கொடுத்துவர ஏற்பாடு செய்தார். இவ்விதம் கைதுசெய்யப்பட்டவர்கள் ஆண் பெண் இருபாலரும் சேர்ந்து 108 பேர்கள் இருந்தார்கள். ஆனால் ப்ரிட்டிஷ் ஜனங்களில் எவரும் கட்டிடத்தை விட்டு வெளியேறக்கூடாதென்று கண்டிப்பாக உத்தரவிட்டிருந்தார்.

## படகுகளைத் தாக்கினதற்குக் காரணம்.

நதியில் போய்க்கொண்டிருந்த படகுகளைச் சுட்டது அவருடைய உத்தரவின்பேரில் நடந்ததல்ல. கலகக்காரர்கள் அவருடைய யோசனையைக் கேட்காமல் செய்ததாகும். அதற்குக் காரணம் என்னவென்றால், ஜெனரல் வீலர் கான்பூரில் கஷ்டப்படுவதையறிந்த ஜெனரல் ஹாவ்லக் அவரைக் காப்பாற்றுவதற்காக கான்பூரண்டை வந்துகொண்டிருந்தார். அப்போதுதான் ஜெனரல் வீலரும் மற்ற ப்ரிட்டிஷ் ஜனங்களும் படகுகளில் ஏறிப்போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது என்ன காரணத்தாலோ ஹாஸ்பிடலிலிருந்த வெடிமருந்துச்சாலை தீப்பற்றிக்கொண்டது இதையறிந்த இந்தியர்கள் இங்க்லீஷ்காரர்களில் சிலர் நாநாஸாகிபுடன் இன்னும் சண்டைசெய்ய எண்ணங்கொண்டு ஹாவ்லக் வருவதை எதிர்பார்த்து ஹாஸ்பிடலிலேயே தங்கிவிட்டதாக எண்ணிக்கொண்டு, எல்லாப் ப்ரிட்டிஷ் ஜனங்களையும் கொன்றுவிடவேண்டுமென்று தீர்மானித்து அவ்விதமே செய்தார்கள்.



உண்மையான விஷயம் நாநாஸாகிபுக்குத் தெரிந்து, கான்பூரிலிருந்த ப்ரிட்டிஷ் ஜனங்கள் மோசக் கருத்தாய் ஒன்றும் செய்யவில்லையென்று அவர் அறிந்ததும், அவர் கொலையை நிறுத்தும்படி உத்தரவு செய்தார்.

## இங்க்லீஷ் ஸ்த்ரீகளின் முட்டாள்தனம்: பெருங்கொலை.

ப்ரிட்டிஷ் கைதிகள் 15 நாள் அந்தக் கட்டிடத்தில் தங்கியிருந்தார்கள். அவர்கள் வெளியிலுள்ளவர்களோடு கடிதப் போக்குவரத்து செய்யக்கூடாதென்று நாநாஸாகிப் கண்டிப்பாய் உத்தரவு செய்திருந்தார். ஆனால் சில இங்க்லீஷ் ஸ்த்ரீகள் முட்டாள் தனமாக வெளியிலிருந்த சில உளவாளிகளுடன் கடிதப் போக்குவரத்து செய்தார்கள். வெளியிலிருந்த உளவாளிகள் கடிதங்களில் கற்களைக்கட்டி கட்டிடத்துக்குள் எறிந்தார்கள். இப்படி சிலநாள் சென்றதும், நாநாஸாகிபின் துருப்புகளை ப்ரிட்டிஷ் துருப்புகள் தோற்கடித்தன. அதற்கு மறுநாள் நாநாஸாகிப் கட்டிடத்திற்கு வந்து ரகஸ்யக் கடிதங்கள் எழுதிவந்த நான்கு ஸ்த்ரீகளை தம்முன் கொண்டுவரும்படி உத்தரவு செய்தார். அவர்களைப் பிடித்துக்கொண்டுபோய் அவர் முன் நிறுத்தினதும் அவர்களை கொலைசெய்ய உத்தரவிட்டார். அதன் மேல் பட்டணத்து ஜனங்கள் அந்தக் கட்டிடத்தைச் சுற்றிக்கொண்டு எல்லாரையும் கொன்றுவிட்டார்கள். மறுநாள் அவர்களுடைய பிணங்கள் அந்தக் கட்டிடத்திலிருந்த ஒரு கிணற்றில் போடப்பட்டன.

# MALIGNANT SORE THROAT.

# தொண்டையடைப்பான்.

## வ்யாதியின் தன்மை.

தொண்டையடைப்பான் என்பது ம்ருகங்களுக்கும், பக்ஷிகளுக்கும் உண்டாகும் ரத்த ஸம்பந்தமான ஒரு தொற்றுநோய். இது ஒருவகை க்ருமியால் உண்டாகிறது. இந்த வ்யாதி பல வகைப்பட்டது. மாடுகளுக்கு உண்டாகும் தொண்டையடைப்பானைப்பற்றி இங்கு எழுதுகிறோம்.

தொண்டையடைப்பான் வ்யாதி பசுமாடுகளை விட எருமைகளுக்குத்தான் விசேஷமாய் உண்டாம். இந்த வ்யாதி இந்தியாவில் எங்குமுண்டு. தாழ்ந்த சதுப்பு நிலங்களிலும், ஸுகாதாரக் குறைவான இடங்களிலுந்தான் விசேஷமாய்க் காணப்படுகிறது. இந்த வ்யாதிக்குக் காரணமான க்ருமியானது இயற்கையாகவே மண்ணிலும், ஜலத்திலும் இருந்துவருகிறது. அது ஆகாரம், பானம் இவைகள் மூலமாகவும், மாடுகளின் மேலிருக்கக்கூடிய காயங்கள் மூலமாகவும் மாடுகளுடைய தேகத்தில் புகுந்து வ்யாதியை உண்டாக்குகிறது. பூச்சிகள் கடிப்பதாலும் இந்த வ்யாதி பரவக்கூடுமென்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் இவ்விஷயம் இன்னும் ரூபிக்கப்படவில்லை. ஸுகாதாரக்குறைவான நிலைமையில் வளர்க்கப்படும் எல்லா மாடுகளுடைய தேகத்திலும் வ்யாதிக்காதாரமான விஷம் சேருகிறதென்று சொல்லலாம். அப்படிச் சேர்ந்த விஷம் அதிகமாயிருந்தாலுஞ் சரி, மாட்டின் தேக வீர்யம் குறைந்துபோயிருந்தாலுஞ்சரி, விஷமானது பலமடைந்து வ்யாதியையுண்டாக்கும்.

இந்த வ்யாதியின் விஷத்தை ஸ்வல்ப அளவில் ஸுகதேகமுள்ள மாடுகளுக்கு உள்ளுக்குக் கொடுத்தால், அவைகளுக்கு யாதொரு கெடுதலும் நேருவதில்லை. அப்படி விஷமுட்கொண்ட ம்ருகங்களுக்கு பிற்பாடு இந்த வ்யாதிகள் உண்டாவதில்லையென்று சொல்லப்படுகிறது. ஒருதரம் இந்த வ்யாதிவந்து தப்பித்துக்கொண்ட மாடுகள் பொதுவாய் ஆயுள்பர்யந்தம் இந்த வ்யாதியால் மறுபடியும் பாதிக்கப்படுவதில்லை. கன்றுக் குட்டிகளுக்குத்தான் இந்த வ்யாதி விசேஷமாய் வருகிறது. வ்யாதிகண்ட மாடுகளில் நூற்றுக்கு 75 முதல் 90 வரை இறந்துபோய்விடும். விஷம் தேகத்தில் சேர்ந்து அது வ்யாதியை உண்டாக்குவதற்கு 1 முதல் 3 நாள்கள் வரையில் செல்லலாம்.

### வ்யாதியின் அறிகுறிகள்.

வ்யாதியின் அறிகுறிகள் பலவகைப்பட்டனவாயிருக்கின்றன. ஆனால் இந்தியாவில் இந்த வ்யாதியில் ஸாதாரணமாய் ஏற்படும் அறிகுறிகளென்னவென்றால், கடுமையான ஜ்வரமும், கஷ்டப்பட்டு மூச்சுவிடுதலுமே. மூக்கு, வாய் முதலியவைகளிலுள்ள ஜவ்வுகளில் வெளியில் தெரியக்கூடிய பாகங்கள் வீங்கியிருக்கும். வாயிலிருந்து உமிழ்நீர் வடியும். தொண்டையும் அதை யொட்டிய பாகங்களும் வீங்கி சூடாயிருப்பதோடு வலியையுமுண்டாக்கும் விசேஷமாய் இந்த வீக்கம் தொண்டையைச் சுற்றித்தான் இருக்கும். ஆனால் சில ஸமயங்களில் தலையும் கழுத்தும் முன்னங்கால்களும் வீங்கியிருப்பதுண்டு. நாக்கானது ரொம்ப வீங்கியிருப்பதோடு ஊதா வர்ணமாயிருக்கும். அது வாயிலிருந்து வெளிவந்திருக்கக்கூடும். மாடு வரவர மூச்சுவிடமுடியாமல் ரொம்ப கஷ்டப்பட்டுக் கொண்டிருந்து வ்யாதிக் குறிகள் தோன்றி 12-முதல் 48-மணி நேரத்துக்குப் பிறகு இறந்து போகும். சில ஸமயங்களில் வ்யாதிக்குறி தோன்றின இரண்டொருமணி நேரத்துக்கெல்லாம் இறந்துபோவது முண்டு. சில ஸமயம் இந்த வ்யாதியால்திடீரென்று இறந்துகிடப்பதுமுண்டு.

சில மாடுகளுக்கு இந்த வ்யாதியின் அறிகுறிகள் வேறு விதமாகவும் இருக்கும். மாட்டின் குடல்கள் ரொம்ப வீங்கிப்போய் வயிற்று வலியும், அதிஸாரமும், ரத்தக்கடுப்பும் உண்டாகும். இவைகளோடு தொண்டை ஸம்பந்த உபத்ரவங்கள் இருந்தாலும் இருக்கும்.

### சிகித்ஸை.

இதுவரையில் இந்த வ்யாதிக்குதக்க மருந்து கிடைக்கவில்லை. ஆனால் கார்பாலிக் ஆஸிட் (½ ட்ராம் முதல் 1-ட்ராம் வரையில்), பினைல் (½ ஔன்ஸ் முதல் 1-ஔன்ஸ் வரையில்), பெர்மாங்கனேட் அப்பொடாஷ் 2-முதல் 4-ட்ராம் வரையில்) ஆகிய இவைகளில் ஒன்றை நிறைய ஜலத்தில் கலந்து உள்ளுக்குக் கொடுப்பதால் சில கேஸ்களில் நன்மை ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. ஐயோடைன் மருந்தும் குணங்கொடுக்கக் கூடியதென்று தெரிகிறது. இந்த வ்யாதி வெகு சீக்ரம் மாடுகளைக் கொன்றுவிடுவதால், வைத்யம் செய்வது கஷ்டமாயிருக்கிறது. வ்யாதி ரொம்ப கடுமையாயில்லாத கேஸ்களில் மருந்து உள்ளுக்குக் கொடுக்கமுடியுமானால், பின்வரும் பேதிமருந்தை உள்ளுக்குக் கொடுக்கலாம். லின்ஸீட் ஆயில் (அதாவது ஆளிவிதை யெண்ணெய்) அல்லது ஆமணக்கெண்ணெய் 10-ஔன்ஸ், நல்லெண்ணெய் 10-ஔன்ஸ், க்ரோட்டன் ஆயில் என்னும் எண்ணெய் 20-துளிகள், இவகளை ஒன்றாய்க்கலந்து உள்ளுக்குச் செலுத்தவேண்டும். இதற்குப் பிறகு நான்குமணிக்கு ஒருதடவை பின்வரும் மருந்துகளில் ஏதாவது ஒன்றைக் கொடுக்க வேண்டும்.

(1) ஆரக்கு சாராயம் — 4 ஔன்ஸ்.
பொடிசெய்த சுக்கு — ½ ஔன்ஸ்.
பொடிசெய்த மிளகு — 2 ஔன்ஸ்.

இவைகளை ஒன்றுசேர்த்து, பட்டணம்படியால் கால்படி கஞ்சியில் கலந்து உள்ளுக்குக் குடிக்கக் கொடுக்கவும்.

(2) ஸல் அம்மோனியக் என்று சொல்லப்படும்நவச்சாரம் — ½ ஔன்ஸ்.
பொடிசெய்த சுக்கு — ½ ஔன்ஸ்.
பொடிசெய்த எட்டிக்கொட்டை — 1 ட்ராம்.

இவைகளை ஒன்றுசேர்த்து பட்டணம்படியால் ¼ படி ஆறின கஞ்சியில் கலக்கி நான்கு மணிக்கு ஒருதடவையாக அவச்யமான வரையில் உள்ளுக்குக் கொடுக்கவும். மாட்டுக்கு குடிப்பதற்கு தனிக்கஞ்சியும் கொடுக்கலாம்.

### வ்யாதிவராமல் தடுத்தல்.

இந்த வ்யாதி உண்டாகாமல் தடுக்கப் பின்வரும் விஷயங்களை கவனித்து நடப்பது நல்லது. வ்யாதி கண்ட மாடுகளை தனியாய்க் கட்டி வைத்து வ்யாதியை குணப்படுத்தவேண்டிய ப்ரயத்னங்கள் செய்யவேண்டும். வ்யாதிகண்ட மாடுகளின் சாணம், மூத்ரம், ரத்தம் ஆகிய இவைகளில் வ்யாதி க்ருமிகள் இருப்பதால் அவைகளைத் தக்கவிதத்தில் அப்புறப்படுத்தி விடவேண்டும். இறந்துபோன மாடுகளை எரித்தாவது புதைத்தாவது விடவேண்டும். இந்த வ்யாதி வராமல் தடுப்பதற்கு சுத்தமான தீனி, சுத்தமான ஜலம், சுத்தமான கொட்டில்கள் ஆகிய இவைகள் முக்யமான ஆதாரங்களாகும். சில மேய்ச்சல் தரைகளில் சில மாஸங்களில் இந்த வ்யாதி உண்டாவதாக தெரியவந்திருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் மாடுகளை விடக்கூடாது. அவைகளுக்கு வேலிபோட்டு மாடுகள் போகாதபடி செய்வது நல்லது. புல், வைக்கோல்போர், இவைகளை உயர்ந்த பூமியில் போட்டு வைத்திருக்க வேண்டும். வ்யாதி க்ருமிகள் இவைகளில் சேராதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். அநேக க்ராமங்களில் மழை பெய்யும்போது மாட்டுக்கொட்டில்களிலிருந்தும் எருக்குவியல்களிலிருந்தும் வடிந்தோடும் ஜலம் அந்த க்ராமங்களிலுள்ள குளங்களில் போய்ச் சேருவதுண்டு. அந்த ஜலத்தைக் குளங்களுக்குப் போகவிடாமல் வேறு இடங்களில் போய் விழும்படி செய்யவேண்டும். இதுவும் கஷ்டமான கார்யமல்ல. அநேக இடங்களில் மழை பெய்தவுடன் இந்த வ்யாதி தோன்றுவதற்குக் காரணம் மாட்டுக் கொட்டில்களிலிருந்தும் எருக்குவியல்களிலிருந்தும் வடிந்தோடும் மழைஜலம் குளங்களில் கலந்து, குளத்து ஜலம் ரொம்ப விஷத்தன்மையடைவதே யென்று சொல்லலாம். ஸாதாரணமாய் எருக்குவியல்களில் இந்த வ்யாதியின் விஷம் இருந்துகொண்டிருப்பது நிச்சயம். இந்த வ்யாதியிலிருந்து ஸமீபத்தில் ஸ்வஸ்தமடைந்த எருமை மாடுகளை, மாடுகள் ஜலங்குடிக்கும் குளங்களில் விழுந்து புரளும்படி விடக்கூடாது.

### மாடுகளுக்கும் அம்மைகுத்தல்.

பசுமாடுகளுக்கும் எருமை மாடுகளுக்கும் இந்த வ்யாதி வராதபடி அம்மை குத்தலாம். இதனால் அநேக மாஸங்கள் வரையில் அவைகளுக்கு இந்த வ்யாதி வரமாட்டாது. வ்யாதி உண்டாகக்கூடிய காலம் வருவதற்கு சில வாரங்கள் முந்தியே, மாடுகளுக்கெல்லாம் இந்த வ்யாதிக்கான அம்மை குத்திவிட்டால், வ்யாதி மும்மரமாயிருக்குங்காலம் முழுவதும் மாடுகளுக்கு வ்யாதி ஏற்படாமலிருக்கும். வ்யாதி மும்மரமாயிருக்கும்போதும், வ்யாதி வராத மாடுகளுக்கு ஒரு வகை அம்மைப்பாலைக் குத்துவதால் ஸ்வல்ப காலத்துக்கு அவைகளுக்கு வ்யாதி உண்டாகாமல் செய்யலாம். இந்த அம்மை குத்துவதற்கான மருந்துகள் பசுக வைத்ய இலாகாவால் முக்தேஸார் என்னும் பட்டணத்தில் தயார்செய்யப்பட்டு வருகின்றன.

## KARTHIKAI.

BY PANDIT V. SUBRAMANIA AIYAR.

### கார்த்திகை.

க்ருத்திகை நக்ஷத்ரத்தில் சில ஊர்களிலும், பரணி நக்ஷத்ரத்தில் சில ஊர்களிலும் கார்த்திகை உத்ஸவத்தைக் கொண்டாடுகிறார்கள். ஹிந்துக்களில் எல்லா ஜாதியாரும் வர்ஷம் ஒருமுறை கார்த்திகை மாஸத்தில் வரும் க்ருத்திகா நக்ஷத்ர தினத்தைக் கொண்டாடுவார்கள். ஹிந்துக்களில் விஷ்ணு கோயில்களிலும், சிவன் கோயில்களிலும், கார்த்திகை திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. அன்று கோயில்களில் ஈச்வரனுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்தும், பிம்பங்களை வாகனங்களில் வைத்து அலங்கரித்தும், உத்ஸவம் நடத்துகிறார்கள்.

### சொக்கப்பானை.

அன்றையதினம் ஐயனார், பிடாரி, மாரியம்மன் கோயில்கள் முதற்கொண்டு எல்லாக் கோயில்களிலும் சொக்கப்பானை கொளுத்துவார்கள்.

சொக்கப்பானை என்றால் காய்ந்த பனை மட்டைகளை கோபுரம்போல் உயர்த்தியாய்க் கட்டி எரிப்பது. சுட்கப்பனை என்பதே சொக்கப்பானை என்று ஆயிற்று.(சுஷ்கம்-காய்ந்துபோனது.)ஸாயங்கால வேளையில், கோயில் தேவதையை அந்த சொக்கப்பானைக்கு எதிரே கொண்டுவந்து நிறுத்தி, அதைக் கொளுத்துவார்கள். அப்படி சொக்கபானையைக் கொளுத்த, அதிலிருந்து விழும் கரியை ஹிந்துக்கள் நெற்றியில் ரக்ஷையாகத் தரித்துக்கொள்வார்கள். சொக்கப்பானையில் எரிந்துபோன கழிகளையும் பனைமட்டைகளையும் எடுத்துப்போய் தம் வீட்டுத் தோட்டத்தில் பயிரிட்டிருக்கும் அவரைப் பந்தல், புடலைப் பந்தல்களுக்கும் ரக்ஷையாக அவைகளின் மீது போட்டுவைப்பது நாளதுவரையில் இத்தேசத்தில் வழக்கத்திலிருந்து வருகிறது. அப்படிச் செய்வதனால் தோட்டப் பயிர்களின்மீது பிடித்து வருத்தும் பூச்சி, புழுக்கள் நிவாரணமாகி, அப்பயிர்கள் நல்ல பலனைத் தரும் என்று நம்மவர்கள் நம்பி அப்படிச் செய்கிறார்கள்.

## புராணகதை.

ஸர்வ ஸம்ஹார ப்ரளய காலத்தில் எல்லாவற்றையும் தொலைத்து ஒரேஜலமான ஸமுத்ரத்தில் சேஷ பர்யங்கத்தில் ஸ்ரீமந் நராயண மூர்த்தி நித்ரை செய்துகொண்டிருந்தார். அப்படிச் சில காலம் சென்றபின் பகவானுக்கு உலகத்தை ச்ருஷ்டிக்க மனமுண்டாயிற்று, அப்போது தம் நாபியிலிருந்து முளைத்தெழுந்த தாமரைப் புஷ்பத்தில் ப்ரம்மாவை இச்சையினாலுண்டாக்கினார். அந்த மூர்த்திக்கு ப்ரம்ம பதவியையும் அவர் வஸித்திருக்க ப்ரம்ம லோகத்தையும் அவருக்குக் கொடுத்தருளினார். சில காலம் சென்ற பிறகு, ப்ரும்மாவுக்கு தான் என்கிற மமதை தலைக்கேறிற்று. அப்படி யிருக்கையில் ஒரு நாள் விஷ்ணுவானவர் ப்ரம்ம ஸபைக்குப் போக நேரிட்டது. அப்போது தகப்பனார் வரவைக் கண்ட ப்ரும்மா அவரை நல் வரவேற்று உபசரிக்கவேண்டியிருக்க, அப்படிச் செய்யாமல், மதோன் மத்தனா யிருந்தார். இது கண்ட விஷ்ணு சிறுவனாகிய பரம்மாவுக்கு வந்த புதிய யோக்யதை யென்ன வென்று கேட்டார். ஸகல உலகங்களையும், விஷ்ணுவுள்பட ஸகலரையும், தாம் ச்ருஷ்டிப்பதாகவும், தன் ச்ருஷ்டியிலடங்கியுள்ள ஸ்ரீ மஹா விஷ்ணுவே தம்மை நமஸ்காரம் பண்ணவேண்டுமென்றும் ப்ரம்மா சொன்னார். இப்படி யொருவர்க்கொருவர் வார்த்தை முற்றி சண்டை உண்டாயிற்று.

அப்போது பரமேச்வரர் அங்கு வந்து தோன்றி, விவாதமென்னவென்று அவர்களைக் கேட்டார். அதற்கு விஷ்ணு, ஆதிகர்த்தா தான் என்றும், தாம் ப்ரம்மாவை உற்பத்தி செய்த தகப்பன் என்றும், அதனால் பிள்ளையாகிய ப்ரம்மா தமக்கு நமஸ்காரம் செய்யவேண்டுமென்றும், அப்படிச் செய்யாததால் தமக்குக் கோபம் வந்ததென்றும் சொன்னார். ப்ரும்மாவோ, தாம் தான் ஆதிகாரணமென்றும், அநேக உப ப்ரும்மாக்களையும், ஒவ்வொரு அண்டத்தையும் காக்க அநேகாயிரம் விஷ்ணுக்களையும் உண்டுபண்ணினவரென்றும், ஆகவே தம்மை விஷ்ணுவே வணங்கவேண்டுமென்றும் சொன்னார்.

## பரமசிவன் செய்த மத்யஸ்தம்.

அப்போது பரம சிவன் நீங்களேன், வீணில் சண்டையிடுகிறீர்கள். நான் ஆகாயத்திற்கும் பூமிக்குமாக ஒரு உருவமெடுப்பேன். அவ்வுருவத்தின் தலைப்பாகத்தின் நுனியை ஒருவரும், அடிப்பாகத்தின் வேரை யொருவரும் தேடிப் பிடியுங்கள். யார் முதலில் இரண்டிலொன்றைக் கண்டு பிடித்து வருகிறார்களோ, அவரே பெரியவர் என்றார். அம்மாதிரி இருவரும் செய்ய ஸம்மதித்தார்கள். அப்போது ஈசன் ஆகாயத்திற்கும் பூமிக்கு அடியிலுமாக ஒரே தேஜோ ரூபராய் தமது விச்வ ரூபம் காட்டி நின்றார். அவ்வுருவத்தின் அடியை மஹாவிஷ்ணுவும், முடியை ப்ரும்மாவும் தேடிப்பிடிக்க



முயன்றார்கள். ஈச்வரருடைய விச்வ ரூபத்தின் அடியைக் கண்டுபிடிப்பதற்காக விஷ்ணுவானவர் பன்றி உருவம் எடுத்து பூமியைத் தோண்டி வெகு தூரம் கீழே போயும், ஈச்வரனுடைய அடிகாணப்படவில்லை.

ப்ரும்மாவானவர் அன்னபக்ஷி உருவம் எடுத்து, வெகுகாலம் உயரப்பறந்து அந்த உருவத்தின் தலையைக் காண முயன்றார். வெகுதூரம் போயும் முடிவு காணப்படவில்லை. அப்போது ஈச்வரனுடைய தலையிலிருந்து ஒரு தாழம்பூ கீழே விழுந்து பூமிக்கு வந்து கொண்டிருந்தது. அதைக்கண்ட ப்ரும்மா, அதைப் பார்த்து "ஏ தாழம்பூவே, நீ எங்கிருந்து வருகிறாய் ?" என்று கேட்டார். அதற்கு தாழம்பூ "நான் ஈச்வரனுடைய தலையில் சூட்டப்பட்ட பூ. நான் அங்கிருந்து நீக்கப்பட்டு, வெகு காலமாக பூமிக்குவந்து கொண்டிருக்கிறேன்" என்று சொல்லிற்று. அதன்மேல் ப்ரும்மா, தான் வந்த கார்யத்தைத் தெரிவித்து, தானும் அதனுடன் திரும்புவதாகவும், தேவ ஸபையில், தான் சிவனுடைய முடியைக் கண்டதைப் பார்த்ததாகத் தாழம்பூ சொல்லவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். தாழம்பூவும் அதற்கு ஸம்மதிக்கவே, இருவரும் ப்ரும்ம லோகத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

தாழம்பூவானது, ப்ரம்மா ஈச்வரனுடைய சிரஸைக் கண்டதைத் தான் பார்த்ததாக அங்கு கூடியிருந்த தேவர்கள் மத்தியில் சொல்லிற்று. கீழேபோன மகாவிஷ்ணுவும் இன்னும் ஸகல தேவர்களும் இதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது ஈச்வரன் ஜோதி மயமான அக்னி கோளத்திலிருந்தும் வெளிப்பட்டு, தன்னினும் மிக்கான் ஒருவனில்லை யென்றும் சொல்லி நின்றார். பிறகு ஈச்வரன் தன்னுடைய முடியை ப்ரம்மா பார்த்ததாக அஸத்யம் சொன்ன தாழம்பூவுக்கு சாபத்தைக் கொடுத்து, தன் ஜோதிஸ்வரூப தர்சனத்தை யாவருக்கும் காட்டி, விஷ்ணு ப்ரும்மா இவர்களைவிடதானே உயர்ந்த அந்தஸ்துடையவர் என்ப தெரியப் படுத்தினார்.

## திருவண்ணாமலை.

இம்மாதிரி ஈச்வரன் ஜோதிஸ்வரூபம் காட்டியதையே திருவண்ணாமலைப் பக்கத்திலுள்ளவர்கள் கார்த்திகையென்று திருவிழாவாகக் கொண்டாடுகிறார்கள். திருவண்ணாமலையில் ஈச்வரன் மலையுருவமாக இருப்பதாக ஐதீகம். கார்த்திகை மாஸத்தில் பரணி நக்ஷத்ரத்தில் ஈச்வரன், ப்ரம விஷ்ணுக்களுக்கும், ஸகல தேவதைகளுக்கும், தமது ஜோதி ஸ்வரூபத்தைக் காட்டியதாகப் புராணம் கூறும். ஆகவே, அங்கு பரணி தீபம் ப்ரதானமாகக் கொண்டாடப்பட்டு பரணி தீபத்தை அந்த க்ஷேத்ரத்தில் ஏற்றி, ஆராதனம் செய்கிறார்கள். அந்த தீபத்துடன் ஸாயங் காலத்தில் அருணாசலேச்வரர் தமது திருக்கோயிலை வலம் வந்து, அண்ணாமலை ஸமீபம்சேர, மலையின் உச்சியில் ஏற்கனவே ஏற்றிவைத்திருந்த தீபத்தைச் சுற்றியிடப்பட்ட திரையைநீக்கி, அதற்குக் கர்ப்பூர ஹாரத்திசெய்து, தீபதரிசனம் செய்துவைக்கிறார்கள். இந்த தீபம் அநேக மைல் சுற்றளவுக்குத் தெரியும். அந்த க்ஷேத்திரத்தில் க்ருத்திகா நக்ஷத்ரத்தின் முன் 8-நாட்களில் ப்ரமோத்ஸவம் நடைபெறும் ஏழாவது நாளான க்ருத்திகா நக்ஷத்ரத்தில் ஈச்வரன் ரதாரோகணமாய், இறங்கியபிறகு தீபோத்ஸவம் நடைபெறும். பஞ்சலிங்கங்களுள் அருணாசலம், சோணசைலம், அண்ணாமலை என்னும் பரியாய நாமங்கொண்ட க்ஷேத்ரம் ஜோதி

* மலையின்மீது ஒரு பெரிய தொட்டியில் நெய்யை ஏராளமாய்க் கொட்டி, மத்தியில் ஒருபெரிய திரியை இட வெகு ஜனங்கள் அன்று காலைமுதல் மாலைவரையில் நெய்யுடன் மலைக்கும் பூமிக்குமாய்ப் போனவண்ணமா யிருப்பார்கள். இந்த தீபம் நெடுநாட்கள்வரையில் அணையாமல் எரியும். இந்த தீபம் நடுவில் மழையினால் அணைய நேரிட்டால் அதை அபசகுனமென்று அப்பாகத்தவர் எண்ணுவார்கள்.

லிங்க க்ஷேத்ரமெனப்படும். அன்றைய தினம் அந்த க்ஷேத்ரவாஸிகளுள்பட யாவரும் காலையில் ஸ்நானம்செய்து தீபதரிசனம்வரையில் உபவாஸமிருந்து, தீபதர்சனம் செய்த பின்தான் போஜனம் செய்வார்கள்.

### மற்றைய ஊர்கள்.

வ்ருச்சிகராசியில் ஸூர்யன் ப்ரவேசிக்கும் கார்த்திகை மாஸத்தில் ஆலயங்களிலும் தேவதைகள் வஸிக்குமிடங்களிலும் தீபம் ஏற்றுவது நல்ல பலனைத்தரும். அதற்காக எக்கோயில்களிலும் இம்மாஸம் முடிய இந்த தீபோத்ஸவத்தைக் கொண்டாடுகிறார்கள். ஆனால் க்ருத்திகையும் பௌர்ணமியும் கூடிய தினத்தில் அதை விசேஷித்துக் கொண்டாடுகிறார்கள். அன்றையதினம் பிடாரி கோயில் முதலிய எல்லாக் கோயில்களிலும் ஈச்வர பிம்பங்கள் முதலியவைகளுக்கு விசேஷ அபிஷேகாதி ஆராதனைகள் நடத்துவார்கள். 1008 - என்று கணக்கு வைத்துக்கொண்டு கணக்குவழக்கில்லாமல் கோயில்கள் முழுவதும் தீபாலங்காரம் செய்வார்கள். தனவந்தர்கள் நெய்யையும் மற்றையோர்கள் இலுப்பை எண்ணெயையும் தீபங்களுக்கு உபயோகிப்பார்கள். பக்தியுள்ளவர்கள் பஞ்சுத் திரியையும், தாமரைத்தண்டின் நூலையு முபயோகிப்பார்கள். ஸர்வாந்தர்யாமியாகிய பகவான் ஜோதிரூபமாக எங்கும் விளங்குகிறார் என்பதைக் காட்டவேண்டி வீடுகளிலும், வீடுகளின் புறக்கடையிலிருக்கிற குப்பைமேடுகளிலும், கிணறுகளிலும், நடைபாவிகளிலும், மாட்டுக்கொட்டில்களிலும் தீபாலங்காரம் செய்வார்கள்.

### ஸ்த்ரீகள் கொண்டாடும்விதம்.

ஸ்த்ரீகள் விலையுயர்ந்த புடவைகளைக் கட்டிக்கொண்டு தலைகளை ஒழுங்காகச் சீவிமுடித்து நகைகள் அணிந்து, மாலையில் பொரி, அவல் முதலியவற்றைப் பக்வப்படுத்தி வெல்லப்பாகில் உருண்டைபிடித்து அவைகளையும், தேங்காய், பழம் முதலியவற்றையும் வைத்து பக்தியாய் தீபங்களுக்கு நிவேதனம் செய்கிறார்கள். அந்த தீபங்களை வரிசையாய் வைத்து வணங்கி பிறகு தீபங்களை இடந்தோறும் கொண்டுவைப்பார்கள். அன்று ஸ்த்ரீகள் தம்பிறந்த வீடுகளிலிருந்து தீபத்திற்குரிய எண்ணெய், நைவேத்யத்துக்குரிய உபகரணங்கள், தீபங்கள் முதலியவற்றை வரிசைகளாகப் பெறுவதுண்டு.

### ஆற்றோட்டத்தில் தீபாலங்காரம்.

காவேரி தீரவாஸிகளிற் ப்ராமண ரல்லாத மற்ற வகுப்பார் கார்த்திகைமாஸத்தில், காவேரியின் நீரோட்டத்தில் வாழையிலைத் தொன்னைகளில் நெய் ஊற்றி, திரியிட்டு, தீபமேற்றி, ஸாயங்கால வேளைகளில் தீபங்களுக்கும் காவேரிக்கும் பூஜை நிவேதனங்கள் செய்து பிறகு தீபங்களை ஆற்றில் மிதக்கவிடுவார்கள். காவேரியம்மன் இந்த மாஸத்தில் இருட்டில் ஸமுத்ரராஜனிடம் சேராமல் தீபாலங்க்ருதையாய்ச் சேருகிறாள் என்பது ஐதீகம்.

### சிறுவர்கள் கொண்டாடும் விதம்

ஹிந்துச் சிறுவர்களும் சிறுமிகளும் தீபாவளியில் செய்வதுபோலவே வாணம் மத்தாப்புகள் கொளுத்தியும், சீனிவெடிகள் என்ற படாசுகளை வெடித்தும் குதூகலிப்பார்கள். காவேரி ப்ராந்தியத்திலுள்ள சிறுவர்கள் சிறுமிகள் காட்டாமணக்குக் கழிகளில் துணியைச்சுற்றி எண்ணெயிலோ நெய்யிலோ நனைத்துப் பற்றவைத்து அந்த தீவட்டியில் குங்கிலியப் பொடிகளைப் போட்டு அது ப்ரகாசமாய் எரிவதைப்பார்த்துக் களிப்பதுண்டு. வடதேசத்துச் சிறுவர்கள் சிறுமிகள் கார்த்திகையை மற்றொரு விதமாகக் கொண்டாடுவார்கள். பனைமரத்தின் பூவைக் கொண்டுவந்து வெயிலில் காயவைத்து, தீயில் கருக்கி, அதை சிறிதுகாலம் பூமியில் புதைத்து வைத்தெடுத்து, பொடிசெய்து கொள்ளுகிறார்கள். பிறகு மெல்லிய துணியில் அவற்றை



மூட்டையாகக்கட்டி அதை மூன்று பிரிவுகளுள்ள காட்டாமணக்குக்கழியிலோ, மற்றெந்த பச்சைக் கழிகள் மூன்றின் மத்தியிலோ வைத்து கட்டிக் கொள்வார்கள். ராத்ரி காலத்தில் அம்மூட்டைகொண்ட கார்த்திகை என்று சொல்லும் அந்த வாணத்தில் தீப்பற்றவைத்து, அதில் கயிறுகட்டித் தெருவில்நின்று 'கார்த்திகையோ கார்த்திகை, மாவலியோ மாவலி' என்று பாடிக்கொண்டு, அக்கார்த்திகையைச் சுற்றுவார்கள். பொறிகள் ஏராளமாய் சுற்றுபவரைச் சுற்றி விழுவது பார்ப்பதற்கு அலங்காரமாயிருக்கும். இப்படிப்பட்ட கார்த்திகை யாட்டத்தால் சில வேளைகளில் கூரைவீடுகள் தீப்பற்றிக்கொள்வதுமுண்டு.

## CO-OPERATIVE HOUSING

## கோவாபரேஷன் முறையில் வீடு கட்டுதல்.

### கட்டிட ஸங்கங்களின் அவச்யம்.

அதிக பணக்காரர்களாயில்லாத நடுத்தர வகுப்பு ஜனங்கள் பெரிய பட்டணங்களில் குடியிருக்க ஸௌகர்யமான வீடுகளில்லாமல் கஷ்டப்படவேண்டி யிருக்கிறது. அதிக வாடகை கொடுத்து விசாலமான வீடுகளில் வஸிப்பதற்கு அவர்களுக்கு சக்தி யிருப்பதில்லை. ஜன நெருக்கடியும், ஸுகாதாரக் குறைவுமுள்ள தெருக்களில் ஸௌகர்யக் குறைவான வீடுகளில் குடியிருக்கவேண்டி யிருக்கிறது. அதோடு கொடுக்கவேண்டிய வாடகையும் ரொம்ப அதிகமாயிருக்கிறது. இவர்களுக்கே இப்படியானால் ஏழைகள் படும் பாட்டைப்பற்றி சொல்லவேண்டியதில்லை.

இந்த அஸௌகர்யங்களை உத்தேசித்து சில ஜனோபிமானிகள் ஏழைகளுக்கும் மத்யதர வகுப்பார்களுக்கும் தக்க வீடுகள் கட்டிக்கொடுக்க முயற்சி எடுத்து வருகிறார்கள். இதற்காக அவர்கள் கோவாபரேடிவ் கட்டிடஸங்கங்கள் ஸ்தாபித்து வருகிறார்கள். ஜனநெருக்கமில்லாததும், ஸுகாதார வஸதிகளுள்ளதுமான இடத்தில் அதிக வாடகையில்லாமல் வீடு கட்டிக்கொடுப்பதே இந்த ஸங்கங்களுடைய நோக்கமாகும்.

### கட்டிட ஸங்கங்களில் சேரக்கூடியவர்கள்.

ஆனால் இந்த முயற்சிகள் பலிதமாகவேண்டுமென்றால் ஜனங்களுக்குள் இதைப்பற்றி ஊக்கமேற்படவேண்டும். அதிக வாடகையாலும் ஜனநெருக்கத்தாலும் கஷ்டப்படுகிறவர்களும், கல்வியபிவ்ருத்தியால் நல்ல வீடுகளில் குடியிருக்கவேண்டுமென்ற விருப்பம் ஏற்பட்டு, இல்லாக்குறையால் அதற்கேற்றபடி தகுந்த வீடுகளில் குடியிருக்க முடியாமல் தவிப்பவர்களுந்தான் அநேகமாய் கோவாபரெடிவ் கட்டிட ஸங்கங்களில் சேர்ந்து ஊக்கத்துடன் உழைக்கக்கூடும். ஜனஸமூக வாழ்க்கையில் குடியிருப்பு விஷயமாய் இந்த சீர்திருத்தம் செய்ய விரும்பும் எவரும் ஒரு கட்டிட ஸங்கம் ஸ்தாபிக்கவேண்டுமானால், முதல் முதலில் நல்ல வீடுகள் வேண்டுமென்று எண்ணுகிறவர்களைத் தெரிந்து, அவர்களைச் சேர்த்துக்கொண்டு கட்டிட ஸங்கம் ஆரம்பிக்கவேண்டும். அப்படி சேருபவர்கள் காலத்தையும் பொருளையும் கவனிக்காமல், நல்ல வீடுகள் அமைத்துக்கொள்ளும் விஷயத்தில் ஊக்கத்துடன் வேலை செய்யக்கூடியவர்களாயிருக்கவேண்டும்.

### இந்தியாவுக்கேற்ற கட்டிட ஸங்கம்.

கோவாபரெடிவ் கட்டிட ஸங்கங்களில் பல மாதிரிகள் இருக்கின்றன. பின் விவரிக்கப்போகும் முறை இந்தியாவுக்கு ரொம்ப ஏற்றதென்று பம்பாய் கோவாபரெடிவ் ஸங்கங்களின் ரெஜிஸ்ட்ராராகிய மிஸ்டர் யூபாங்க் என்பவர் தெரிவிக்கிறார். இதில் முக்யக் கொள்கை யென்னவென்றால், வாடகைக்கிருப்பவர்களே வீடுகளை தங்களுக்குள் பொதுவில் ஸொந்தமாக வைத்துக்கொள்ளுவார்கள். இந்தமுறை இங்கிலண்டில் த்ருப்திகரமாக அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது. ஸொந்தத்தில் வீடுவாங்க சக்தியில்லாத ஜனங்

களுக்கு இந்த கோவாபரேஷன் ஏற்பாடு ரொம்ப ச்லாக்யமாகும்.

இந்த மாதிரி ஸங்கத்தில் சேரும் மெம்பர்கள், தங்களுக்கு குடியிருக்கவேண்டிய ஒரு வீடு அல்லது பல வீடுகளை வாங்குவதற்காகும் தொகையில் ஒரு பாகத்தை பங்குத் தொகையாகச் செலுத்தவேண்டும். வீட்டின் க்ரயத்தில் இது போக பாக்கிப் பணத்துக்கு ஸங்கத்தார் ஸாதாரணக் கடன் வாங்கவேண்டும். அல்லது கட்டிடங்களை ஈடுவைத்துக் கடன் வாங்கவேண்டும். ஸங்கத்தார் கட்டும் வீடுகள் ஸங்கத்து மெம்பர்களுக்குப் பொதுவில் ஸொந்தமாக இருக்குமேயொழிய, ஒவ்வொரு மெம்பரும் குடியிருக்கும் வீடு அந்த மெம்பருக்கு ஸொந்தமாகமாட்டாது. எல்லாருக்கும் பொதுவில் ஸொந்தமாயிருப்பதால் யாவரும் வீட்டை நல்ல ஸ்திதியில் வைத்துக்கொள்ள முயலுவார்கள். ஸாதாரண வீடுகளில் வீட்டுக்குடையவர் ஸொந்த லாபத்தை உத்தேசித்து அதிக வாடகை ஏற்படுத்துவதுபோலில்லாமல் மெம்பர்களுக்குக் குறைந்த வாடகையையே ஏற்படுத்திக்கொள்வார்கள். இதை அடிக்கடி உயர்த்தவும் வேண்டியிராது. மெம்பர்கள் எப்போதும் வீட்டில் குடியிருக்கவேண்டுமென்பதுமில்லை. எந்த மெம்பராவது வெளியில் போகவேண்டுமென்றால், தமது பங்குகளை தாமிருந்த வீட்டுக்கு வருபவருக்கு விற்றோ, அல்லது ஸங்கத்துக்கே விற்றோ, அல்லது வேறு மெம்பர்களுக்கு விற்றோ பணம் பெறலாம்.

### எங்கே நிலம் வாங்குவது ?

இந்தமாதிரி ஸங்கங்கள் வீடுகட்ட எவ்விடத்தில் நிலம் தெரிந்தெடுக்க வேண்டுமென்பதைச் சொல்லுகிறோம். ஸாதாரணமாக இந்த கோவாபரேஷன் முறையில் வீடு கட்டுவதற்கு பட்டணங்களை யடுத்தாற்போலுள்ள க்ராமங்களில் நிலம் வாங்குவதுதான் நல்லது. அப்படிப்பட்ட இடங்களிலும் திறந்த வெளிகள் உள்ளதாகப் பார்த்து வாங்கவேண்டும். மிஸ்டர் யூயாங்க் இது விஷயமாய்ச் செய்த ஒரு ப்ரஸங்கத்தில், நிலங்களை முதலில் விலைகொடுத்து வாங்குவதால் அதிக பணச்செலவு ஏற்படுமாகையால், பெரிய பட்டணங்களின் அபிவ்ருத்திக்காக ஏற்பட்டிருக்கும் இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்ட் என்னும் அபிவ்ருத்தி ஸபைகளிடமிருந்தாவது, நகர நிர்மாணக் கமிட்டிகளிடமிருந்தாவது நிலங்களை 99-வர்ஷத்துக்கு வாடகையில் வாங்கி வர்ஷந்தோறும் வாடகை செலுத்தி வருவதுதான் நல்லது என்று சொல்லுகிறார்.

நிலம் தெரிந்தெடுப்பதில் இன்னும் சில விஷயங்களை கவனிக்கவேண்டும். முதலாவது, அந்த ஸ்தலங்களிலிருந்து மெம்பர்கள் உத்யோகம் பார்க்கும் பட்டணங்களுக்குப் போகத்தக்க வஸதிகள் இருக்கின்றனவா என்று பார்க்கவேண்டும். அதாவது, ரெயில்வண்டி, ட்ராம் முதலியவைகளுக்கு பக்கமா, அவைகளுக்குக் கொடுக்கவேண்டிய சார்ஜுகள் குறைவாயிருக்கின்றனவா என்று பார்க்கவேண்டும். மெம்பர்கள் அதிகவாடகைகொடுக்க இஷ்டப்படாமல் வெளியூர்களுக்கு வரும்போது, அதனால் ஏற்படும் வாடகை லாபத்துக்குமேல் ரெயில் வண்டிச் சார்ஜு ஏற்படுமானால் அவ்விடங்களில் குடியிருப்பதால் அவர்களுக்கு பண விஷயத்தில் லாபமொன்றுமில்லை.

இரண்டாவது, வீடு கட்டும் ஸ்தலத்துக்குப் பக்கத்தில் கடைகள் இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும்.

மூன்றாவது, மெம்பர்களின் குழந்தைகள் வாசிப்பதற்குப் பக்கத்தில் பள்ளிக்கூடங்கள் இருக்கவேண்டும்.

நான்காவது, வீடுகட்டும் இடமானது ஸுகாதாரமுள்ளதாய் திறந்த வெளியாக இருப்பதோடு, வைத்யசாலை, உல்லாஸத் தோட்டம், புஸ்தகசாலைகள் ஆகிய இவைகளும் ஸமீபத்திலிருக்கின்றனவா என்பதைக் கூடியமட்டும் கவனிக்க வேண்டும்.



ரொம்ப விஸ்தீரணமுள்ளதாக நிலங்களை வாங்கி வீடுகள் கட்டினால், பிற்பாடு முனிஸிபாலிட்டியாரை அவ்விடத்துக்கு புதுரோடுகள் போடும்படிக்கும், விளக்குகள் போடும்படிக்கும் கேட்டுக்கொள்ளலாம். மேற்சொன்ன பல விஷயங்களில் ரொம்ப முக்யமாய் கவனிக்க வேண்டியது நிலத்தின் க்ரயம் அல்லது வாடகையே.

### பணத்தைச் சேகரிக்கும் வழி.

நிலம் வாங்கவும், வீடுகள் கட்டவும், காம்பவுண்ட் சுவர்கள், கேட்டுகள், தோட்டங்கள், வழிகள் இவைகள் போடவும், ஸங்கத்துக்கு ரொம்ப பணம் வேண்டியிருக்கும். ஸங்கத்தின் மெம்பர்கள் வெகுவாய்ப் பணக்காரர்களாயிருக்கமாட்டார்களாகையால், இவைகளுக்கு மூலதனம் சேர்ப்பது கஷ்டமாயிருக்கும். பணம் சேகரிப்பதற்குப்பின் வழிகளை கவனிக்கவேண்டும்.

(1) மெம்பர்கள் செலுத்தும் ப்ரவேசக் கட்டணம்.

(2) பங்கு மூலதனத்தில் செலுத்தப்பட்ட பாகம். ஸாதாரணமாய் மெம்பர்கள் தங்கள் பங்குப் பணத்தை ஒரு வர்ஷத்திற்குள் தவணைவாரியாகச் செலுத்துவது ஸௌகர்யமாக இருக்கும். ஸங்கத்தின் மெம்பர்கள் ஆறுமாஸம் பங்குப் பணம் செலுத்தின பிறகு கட்டிடங்களைக் கட்ட ஆரம்பிக்கவேண்டும். ஒரே தடவையில் பங்குப்பணத்தைச் செலுத்தும்படி மெம்பர்களைத் தூண்டுவதற்காக, அப்படிச் செலுத்துகிறவர்கள் கட்டப்படும் வீடுகளில் எந்த வீடு, அல்லது ஒரே வீடானால் அதில் எந்த பாகம், அவர்களுக்கு வேண்டுமோ, அதை அவர்கள் தெரிந்தெடுத்துக் கொள்ளும்படி விடலாம்.

(3) ஸங்கத்தின் ஸொத்தின் பேரில் கடன்கள் வாங்குவது. இந்தக் கடன்களை மெம்பர்களல்லாதவர்களிடமிருந்தும் வாங்கலாம்.

(4) 5 வர்ஷத்துக்குக் குறையாத ஒரு தவணையில் திருப்பிக் கொடுப்பதாகச் சொல்லி, பொது ஜனங்களிடமிருந்தும், ஸங்கத்தின் அபிமானிகளிடமிருந்தும், வேறு கோவாபரெடிவ் ஸங்கங்களிடமிருந்தும் டெபாஸிட்டுகளும் கடன்களும் பெறுவது. ஸாதாரணமாக இந்தக் கட்டிட ஸங்கங்கள் ஸ்வல்பகாலத்தவணையில் கடனும் டெபாஸிட்டும் வாங்கினால், அவைகளை திருப்பிச் செலுத்துவது கஷ்டமாயிருக்குமாதலால் மேற்சொன்னபடி, குறைந்தது 5-வர்ஷத்துக்குத் தவணை ஏற்படுத்திக் கொள்வது அவச்யமாகும்.

(5) ஜனங்களுக்கு வீடுகட்டிக் கொடுப்பதில் ஊக்கங்காட்டும் முனிஸிபாலிடிகளிடமிருந்தும், வேறு பொது ஸ்தாபனங்களிலிருந்தும் ஸ்வல்ப வட்டியில் நீண்டகாலத் தவணையில் கடன் வாங்குவது.

இப்படிக் கடன்கள் வாங்குவதற்கு ஸங்கங்கள் காட்டக்கூடிய ஜாமீன் பங்கு மூலதனந்தான். இந்த பங்கு மூலதனமானது ஆரம்பத்திலேயே, மொத்தம் வேண்டியிருக்கும் மூலதனத்தில் அரைக்கால் பாகமாவது இருக்கவேண்டும்.

### வர்ஷாந்தரச் செலவு.

இவ்விதம் ஆரம்பத்தில் வேண்டியிருக்கும் பணத்தைத்தவிர, வர்ஷந்தோறும் ஆகும் செலவு இவ்வளவு என்பதை மதிப்பிட்டு, அந்தச் செலவுகளுக்கும் பணம் ஸம்பாதிக்கவேண்டும். வர்ஷவாரியில் ஆகும் செலவுகளாவன. (1) நிலம் வாடகைக்கு எடுத்துக் கொண்டிருந்தால், அதற்கு வாடகை. (2) முனிஸிபல் வரிகள், தண்ணீர் வரி; (3) வீடுகளைப் பழுது பார்ப்பதற்காகும் செலவு. (4) ரிஸர்வ்பண்ட் அல்லது கடனை ஒழிப்பதற்கான பண்ட், அதாவது, வர்ஷந்தோறும் ஒரு தொகை கடனடைப்பதற்காக வென்று எடுத்து வைப்பது. (5) தீவிபத்துகளுக்காக வீடுகளை இன்ஷூர் செய்யச்செலவு. (6) வீடுகளின் காம்பவுண்டு, வழிகள், தோட்டங்கள் ஆகிய இவைகளுக்கு விளக்குப்போடுவது. ஸங்கத்திற்கு வேண்டிய கடுதாசி பேனா முதலியவைகளை வாங்குவது. (7) ஸங்கம் வாங்கிய கடன்கள், டெபாஸிட்டுகள் முதலியவைகளுக்கு வட்டி. (8) மெம்

பர்கள் எடுத்துக்கொண்டிருக்கும் பங்குகளுக்கு டிவிடெண்டுகள். (9) சில்லரைச் செலவுகளுக்கு வேண்டிய பணம். இந்த வர்ஷாவாரிச்செலவுகளுக்காகும் தொகை முழுவதையும் மெம்பர்களிடமிருந்து குடியிருப்பு வாடகையாக வஸூல் செய்யவேண்டும். இந்த வர்ஷாவாரிச் செலவை மதிப்புப்போடும்போது, மதிப்பைக் குறைவாய் போட்டிருந்தால் அதற்கு ஈடுசெய்யும்படிக்கும், வீடுகள், அல்லது ஸங்கம் கட்டினது ஓரே வீடானால் அறைகள், காலியாய்ப்போனால், அதனால் ஏற்படும் வாடகை நஷ்டத்துக்கு ஈடுசெய்யும்படிக்கும் மெம்பர்களின் மாஸ வீட்டுவாடகையைத் தக்கபடி ஏற்படுத்த வேண்டும்.

## LIVING ARTILLERY.

## ஜீவராசிகளின் 'பீரங்கிகள்.'

மனிதர்கள் செய்யும் யுத்தத்தில் பலவகைப்பட்ட ஆயுதங்களும் யந்த்ரங்களும் உபயோகப்பட்டு வருகின்றன. ப்ராணிகளின் இயல்பை கவனித்துப் பார்த்தால், அந்த யந்த்ரங்களும், ஆயுதங்களும், ப்ராணிகள் சத்ருக்களை எதிர்க்க உபயோகிக்கும் ஸாதனங்களை மூலாதாரமாகக் கொண்டு செய்யப்பட்டவை என்று தோன்றுகிறது. மனிதர்கள் உபயோகிக்கும் கத்திகள், குத்துவாள், பட்டாக்கத்தி ஆகிய இவைகள், ம்ருகங்களுடைய நகங்கள், பற்கள், கொம்புகள் ஆகிய இவைகளை ஆதாரமாகக்கொண்டு தக்கவிதமாக மாறுபாடுகள் அமைத்துச் செய்யப்பட்ட ஆயுதங்கள் என்று சொல்லலாம். எதிரிகளிடமிருந்து தப்பித்துக்கொள்ளவோ, அல்லது எதிரியினிடம் அவனுக்குத் தெரியாதபடி போகவோ, அவனுக்குத் தெரியாமலிருக்கும்படி தங்கள் தோற்றத்தையும் தங்களுடைய யந்த்ரங்களையும் மறைத்துக்கொள்ள வீரர்கள் செய்யும் தந்திரங்களெல்லாம், ப்ராணிகள், தங்களுடைய எதிரிகளிடமிருந்து தப்பி யோடுவதற்காகவும், தாங்கள் தின்னும் ப்ராணிகளுக்குத் தாங்கள் அவைகளைப்பிடிக்க வருவது தெரியாமலிருக்கவும் இயற்கையிலேயேஏற்பட்டுள்ள ஸாதகமான வர்ணங்களை அநுஸரித்துச் செய்யப்பட்டவைகளாகும். இந்த வர்ண ஸாதகங்களைப்பற்றி விரிவாய் ராக்ஷஸ௵ ஐப்பசிமீ, மாசிமீ, நள௵ வைகாசிமீ-த்து ஸஞ்சிகைகளில் விவரித்திருக்கிறோம்.

போர்வீரர்கள் பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் வேறு ஸாதனங்களையும் உபயோகித்து அவைகளிலிருந்து குண்டுகளையும் த்ரவப்பொருள்களையும் விஷக்காற்றுகளையும் வெளியிட்டு, எதிரிகளைக் கொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட ஸாதனங்கள் ப்ராணி வர்க்கத்திலுங்கூட உபயோகிக்கப்பட்டு வருகின்றன. இங்கு ப்ராணி வர்க்கத்தின் 'பீரங்கி'போன்ற ஸாதனங்களை விவரிக்கிறோம்.

### பீரங்கிகளின் தன்மை.

ஜீவராசிகள் உபயோகிக்கும் பீரங்கிபோன்ற ஸாதனங்கள் வெகுவாய் அவைகளுடைய அங்கங்களிலேயே அமைந்திருக்கின்றன. வெளியில் எறியவேண்டிய பொருள்களும் வெகுவாய் அவைகளாலேயே அவைகள் தேகத்தில் தயார் செய்யப்படுகின்றன. ப்ராணிகள் எதிரிகளின் மேல் ப்ரயோகிக்கும் பொருள்கள் வெகுவாய் விஷ த்ரவங்களே. அவைகள் எரிச்சலைக் கொடுக்கக்கூடியவையாயோ, அல்லது வேறுவிதத்தில் கஷ்டமுண்டாக்கக் கூடியவையாயோ இருக்கும். அவைகள் ரொம்ப வேகத்துடன் வெளிவரக்கூடியவை. எறும்பு முதலிய ஜந்துக்கள் ப்ரயோகிக்கும் விஷத்ரவங்களைப்பற்றி சென்ற புரட்டாசி மாஸத்திய 'ஜநாபிமானி' யில் எழுதியிருக்கிறோம்.

### மலம் பீச்சுதல்.

வட அமெரிக்காவில் ஸ்கங்க் என்று ஒரு சிறு ம்ருகம் இருக்கிறது. அது அழகாயிருக்கும். அதன் மயிரடர்ந்ததோல் ரொம்ப உயர்ந்தது. அநேகர் அதன் தோலை உத்தேசித்து அதை



வளர்த்துவருகிறார்கள். அதை யாராவது தொந்தரை செய்யவந்தால் அது ஓடிப்போவதில்லை. அதனால் அது ஸாதுவான ப்ராணியென்று எண்ணி அதன்கிட்டப்போனால், அது உடனே தன் ஆஸன த்வாரத்திலிருந்து ரொம்ப கெட்ட நாற்றமுள்ள ஒரு த்ரவத்தை வெளிப்படுத்தும். அந்த த்ரவம் போகக்கூடிய தூரம் 6-அடி முதல் 18-அடி வரையிலுமாகும்.

அந்தத்ரவம் தேகத்திலும் துணிகளிலும் பட்டால், நாற்றம் வெகுகாலமானாலும் போவதில்லை. உயர்ந்த வாஸனை த்ரவ்யங்களை தேகத்தில் ரொம்பப் பூசிக்கொண்டாலும் நாற்றம் மாறுவதில்லையாம். துணிகளை பூமியில் நாள் கணக்காக மண்ணில் புதைத்துவைத்தால்தான் மறுபடி உடுத்திக்கொள்ள யோக்யமாகும்.

### துப்புதல்.

தென்னமெரிக்காவில் லாமா என்று ஒரு ம்ருகம் இருக்கிறது. அது ஒட்டக இனத்தைச் சேர்ந்தது. அது தன் எதிரிகளின் முகத்தில் தன் வாயிலுள்ள ஆகாரம் கலந்த எச்சிலைத் துப்புமாம். இப்படி திடீரென்று எச்சில் முகத்தில் விழுவதால், எதிர்க்கும் ப்ராணிகள் திகைத்து ஆச்சர்யமடையும். ஆனால் அந்த எச்சிலானது அஸங்க்யமா யிருக்குமே யொழிய கெடுதலொன்றும் செய்யக்கூடியதல்ல.

சில நீர்க்கோழிகளும் இவ்விதமே எதிரிகளின் மேல் கெட்ட நாற்றமுள்ள எச்சிலைத் துப்புவதுண்டாம்.

சில பாம்புகள் வேறு ப்ராணிகள் தங்களை எதிர்க்கவந்தால், அவைகளைக் கடிக்காமல் வாயிலுள்ள பையிலிருந்து ஒருவித த்ரவத்தைப் பீச்சிவிட்டு ஓடிவிடுமாம். இந்தத்ரவம் யாதொரு வர்ணமுமில்லாமலிருக்கும். இது மூக்கிலும் கண்ணிலும் பட்டால் எரிச்சலை உண்டாக்கும்.

### வருணாஸ்த்ரம்.

ஷூட்டிங்பிஷ், என்று ஒரு மீன் ஜாவாவில் இருக்கிறது. அது ஸுமார் 8 அங்குலம் நீளமுள்ளது. அது ஆற்றின் கரை யோரமாகப் பறந்துவரும் ஈக்களையும் வேறு பூச்சிகளையும் பிடித்துத் தின்னும்.

ஜலத்தின்மேல் பறந்துவரும் பூச்சிகளைக் கண்டதும் அந்த மீன் வாய்நிறைய ஜலத்தை உட்கொண்டு, ஜில்ஸ் என்னும் ச்வாஸக் கருவிகளைச் சுருக்கிக்கொண்டு, அதனால் வாயிலுள்ள ஜலத்தை பூச்சிகளின்மேல் விழும்படி சரியாய்க் குறிபார்த்துப் பீச்சும். திடீரென்று ஜலம் பூச்சிகளின்மேல் விழுந்ததும், அவைகள் ஒன்றும் செய்ய முடியாமல் ஜலத்தில்விழும். உடனே அந்த மீன் அவைகளைப் பிடித்துத் தின்றுவிடும். அந்த மீன் பீச்சும் ஜலமானது 3-அடி முதல் 5-அடி தூரம் வரையில் போகக்கூடியதாம்.

### கிடங்குயுத்தம், மண்மாரி.

அமெரிக்காவில் ஆண்ட்லையன் என்று ஒரு புழு இருக்கிறது. அது கால் அல்லது அரையங்குலம் நீளமிருக்கும். அது மணலில் கிரஸின் எண்ணெய்விட உதவும் புனலைப்போல ஒரு குழிதோண்டி, அதன் மத்தியில் தன்தேகத்தைப் புதைத்துத் தலைமாத்ரம் வெளியில் தெரியும்படி உட்கார்ந்துகொண்டிருக்கும். எறும்பு அல்லது ஏதாவது சிறிய பூச்சி பள்ளத்தின் கரையண்டை போனால், மணல் சரிந்து பள்ளத்தில்விழும். உடனே கீழேயிருக்கும் ஆண்ட்-லையன் அந்த எறும்பின்மேல் மணலை வாறி எறிந்து அதை கரையில் ஏறவிடாதபடி செய்துவிடும். எறும்பு கண் தெரியாமல் குழப்பமடைந்துவிடும். பிறகு அந்த ஆண்ட்-லையன் அந்த எறும்பைப் பிடித்து அதன் தேகத்திலிருந்து சாறான பாகத்தை குடிக்கும். இந்தப் புழுவின் தலையில் மணலைவாறி எறிவதற்காக மண்வெட்டிபோன்ற ஒரு அங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது.

### வெடிக்கும் த்ரவம்.

பம்பாடியர் சாபர் என்று ஒருவகைப் பூச்சி தன்னைத் துரத்திவரும் எதிரி ஜந்து ரொம்ப

கிட்டவந்துவிட்டால், தனது ஆஸன த்வாரத்திலிருந்து ஒரு துளி த்ரவம் வெளிப்படுத்துகிறது. த்ரவம் வெளிவந்தவுடன் வெடிகுண்டு போல் சத்தமிட்டு வெடிக்கிறது, இதைக்கேட்ட விரோதி ஜந்துக்கள் பயமடையும். இதற்குள் பூச்சி தப்பி ஓடிவிடும்.

### சேதித்த அங்கம் அஸ்த்ரமாவது.

ஸ்டார் பிஷ் என்ற ஒரு ஜலஜந்து தன்னை எதிர்க்கும் ப்ராணிகளை பயமுறுத்துவதற்காக செய்யும் வேலை ரொம்ப ஆச்சர்யமானது. விரோதியை பயமுறுத்தத் தீர்மானித்ததும், அதன் வயிற்றிலுள்ள குடலானது அது ஒட்டிக்கொண்டிருக்கும் இடங்களிலிருந்து அறுந்துபோகிறது. பிறகு அந்த ஜந்து தனது உடலை நெருக்கிக்கொள்ள, அறுபட்ட குடலின் பாகம் ஆஸன த்வாரத்தின் வழியாக வெளிவந்து, எதிரி ப்ராணியின்மேல் போய் விழுகிறது. இதைக்கண்ட எதிரி ப்ராணி பயந்து, அந்த ஜலஜந்துவை ஒன்றும் செய்யாமல் போகிறது. இப்படி குடலைப் போக்கடித்துக்கொண்டதால், அந்த ஜலஜந்துக்குக் கெடுதலென்றாலும், அதற்கு சீக்ரம் குடல் வளர்ந்து விடுகிறதாம்.

## EDUCATION IN VARIOUS COUNTRIES.

## நானாதேசங்களில் கல்விநிலைமை.

(ஐப்பசி மாசத்து 'ஜனாபிமானி' யில் 444-ம் பக்கத் தொடர்ச்சி.)

**பல்கேரியா.**—இந்த நாட்டில் ப்ரைமெரி பாடசாலைகளில் கீழ்வகுப்புகளில் சம்பளம் கிடையாது. உயர்ந்த வகுப்புகளுக்கு சம்பளம் உண்டு, ப்ரைமெரிக் கல்விக்காகும் செலவில் மூன்றில் இரண்டுபாகத்தை கவர்ன்மெண்டார் கொடுத்து உதவுகிறார்கள். பாடசாலைக்குவரும் மாணவர்களின் தொகை த்ருப்திகரமா யிருக்கிறது. ஸெகண்டரி கல்விக்காகும் செலவில் பாதிபாகத்தை ஸர்க்கார் ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.

**பெல்ஜியம்.**—இதில் ப்ரைமெரிக் கல்வி இலவசமாயும் கட்டாயப் படுத்தியும் கற்றுக்கொடுக்கப்படுகிறது.

**போர்த்துகல்.**—இங்கு ப்ரைமெரிக் கல்வி இலவசமாயும், பேருக்கு மாத்ரம் கட்டாயப்படுத்தியும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இங்கே 100-க்கு 75-பேர் வீதம், ஜனங்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. இங்கே ராணுவ விஷயங்களையும் கப்பல்படை விஷயங்களையும் கற்றுக்கொடுக்க ப்ரத்யேகமான பள்ளிக்கூடங்கள் உண்டு.

**ப்ரான்ஸ்.**—இதில் கல்வி கற்பிக்கும் முறையானது ரொம்ப உயர்வடைந்திருக்கிறது. ப்ரைமெரிக் கல்வியானது இலவசமாயும் கட்டாயப் படுத்தியும் கற்றுக்கொடுக்கப்படுகிறது. தொழில் வ்யாபாரங்களைக் கற்றுக்கொடுக்க ப்ரத்யேகமான பள்ளிக்கூடங்கள் ஏராளமா யிருக்கின்றன. இந்த தேசத்தில் 19-யூனிவர்ஸிட்டிகள் இருக்கின்றன.

**மாண்டிநிக்ரோ.**—இதில் ப்ரைமெரிக் கல்வி இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் கற்றுக்கொடுக்கப்படுகிறது.

**யுனைடட் கிங்டம்.**—இங்க்லண்ட், ஸ்காட்லண்ட், வேல்ஸ், ஐயர்லண்ட் ஆகிய இந்த நான்கு தேசங்களும் சேர்ந்து இப்பெயர் பெறும். இந்த தேசங்களில் சிறுவர்களுக்கு இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் எலிமெண்டரி கல்வி கற்பிக்கிறார்கள். சென்ற 1912-ம் வர்ஷத்தில் 86-லக்ஷம் மாணவர்களுக்குமேல் எலிமெண்டரி ஸ்கூல்களில் வாசித்துக்கொண் டிருந்தார்கள். (இதன் ஜனத்தொகை $4\frac{1}{2}$-கோடி ஆகும்). கல்விக்காக கவர்ன்மெண்டார் மொத்தம் ஸர்க்கார் வரும்படியில் நூற்றுக்கு 8. 20-பாகம் அதாவது 23-கோடி ரூபாய் செலவு செய்தார்கள். இதைத் தவிர ஸ்தலஸ்தாபனங்கள் $17\frac{1}{2}$-கோடி ரூபாய் செலவு செய்தன. இந்த ராஜ்யத்தில் 19-யூனிவர்ஸிட்டிகள் இருக்கின்றன.

**ரஷ்யா.**—இதில் கல்வி ரொம்ப அபிவ்ருத்தியடையவில்லை. 16-கோடி ஜனத்தொகையுள்ள



இந்த தேசத்தில் சென்ற 1911-ம் வர்ஷத்தில் 60-லக்ஷம் மாணவர்களே பள்ளிக்கூடங்களில் வாசித்தார்கள். ரஷ்யாவின் ஒரு பாகமாகிய பின்லண்டில் பிள்ளைகளுக்குக் கட்டாயப்படுத்தியும் இலவசமாயும் எலிமெண்டரிக் கல்வி கற்றுக் கொடுக்கிறார்கள். அங்கே பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குக் குறைவில்லை.

**ருமேனியா.**—இந்த தேசத்தில் பிள்ளைகளுக்கு ப்ரைமெரிக் கல்வி இலவசமாயும் (பேருக்கு மாத்ரம்) கட்டாயப்படுத்தியும் கற்றுக் கொடுக்கிறார்களென்றாலும், போதுமானவளவுபள்ளிக்கூடங்கள் இல்லாமையால் 100-க்கு 60-பாகம் ஜனங்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களா யிருக்கிறார்கள்.

**லக்ஸம்பர்க்.**—இது ப்ரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் பெல்ஜியத்துக்கும் மத்தியிலுள்ள ஒரு ஸ்வயாதீனமுள்ள சிறு நாடு. இங்கு சிறுவர்களுக்கு இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் கல்வி கற்றுக்கொடுக்கிறார்கள். கல்வி இங்கே ரொம்ப அபிவ்ருத்தி யடைந்திருக்கிறது.

**ஜெர்மனி.**—இங்கே ஒவ்வொரு வகுப்பாரும் ஸுலபமாய்க் கல்வி கற்றுக்கொள்ளும்படி கல்வி முறை அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கே எழுதப் படிக்கத் தெரியாதவர்களின் தொகை ரொம்ப குறைவு. சென்ற 1907-ம் வர்ஷத்தில் ராணுவத்துக்கு வந்த வாலிபர்களுள் 1000-ல் 2-பேருக்குத்தான் எழுதப் படிக்கத் தெரியவில்லையாம். இங்கேயும் பிள்ளைகளுக்கு இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் ப்ரைமெரிக் கல்வி கற்பிக்கிறார்கள். பள்ளிக்கூடம் போகக்கூடியவர்களில் 100-க்கு 95-பேர்கள் பள்ளிக்கூடங்களில் வாசித்து வருகிறார்கள். வேலை செய்து ஜீவிக்கும் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு ஸெகண்டரிப் படிப்புக்காக ப்ரத்யேகமான ஸாயந்திரப் பள்ளிக்கூடங்கள் உண்டு. ஸெகண்டரி கல்வியை மேற்பார்வை செய்ய ப்ரத்யேகமான மூசாண போர்டுகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த தேசத்தில் 21-யூனிவர்ஸிட்டிகள் இருக்கின்றன. விவஸாயம், வ்யாபாரம், சுரங்கவேலை, காட்டு நிர்வாகம், ஸங்கீதம் முதலிய பல பாடங்கள் கற்பிக்க ப்ரத்யேகமான பாடசாலைகள் ஏராளமா யிருக்கின்றன.

**ஸெர்வியா.**—இதில் ப்ரைமெரிக் கல்வி இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் கற்றுக்கொடுக்கப்படுகிறது. ஆனால் அநேகமாணவர்கள் வாசிக்க வருவதில்லை. 1910-ம் வர்ஷத்தில் மொத்தம் ஜனத்தொகையில் 100-க்கு 17-பேர்களே எழுதப் படிக்கத் தெரிந்தவர்களா யிருந்தார்கள்.

**ஸ்பெய்ன்.**—இதில் ப்ரைமெரி கல்வி வெகுவாய் இலவசமாயும் பேருக்கு மாத்ரம் கட்டாயப்படுத்தியும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இங்கே 9-யூனிவர்ஸிட்டிகள் உண்டு. இவைகளில் சென்ற 1911-ம் வர்ஷத்தில் 15,750 மாணவர்கள் இருந்தார்கள்.

**ஸ்விட்ஸர்லண்ட்.**—இங்கேயும் பிள்ளைகளுக்கு இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் கல்வி கற்பிக்கிறார்கள். இந்த தேசத்தில் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் அபூர்வம். ஸெகண்டரி படிப்பும் ரொம்ப அபிவ்ருத்தி யடைந்திருக்கிறது. ஸ்யூரிச்சிலுள்ள டெக்னிகல் ஹைஸ்கூலில் சென்ற 1911-ம் வர்ஷத்தில் 1333-மாணவர்கள் வாசித்தார்கள். இந்த தேசத்தில் 7-யூனிவர்ஸிட்டிகள் இருக்கின்றன.

**ஸ்வீடன்.**—இங்கே கல்வி ரொம்ப முன்னேற்றமடைந்திருக்கிறது. ஸெகண்டரி ஸ்கூல்கள் ஏராளமாயுண்டு. சாஸ்த்ர தொழில் ஸ்கூல்களும் கப்பலோட்டுவதைக் கற்பிக்கும் ஸ்கூல்களும் அநேகம் இருக்கின்றன.

**ஹாலண்ட்.**—இதில் பிள்ளைகளுக்குக் கட்டாயப்படுத்தியும்இலவசமாயும் ப்ரைமெரிக்கல்வி கற்பிக்கிறார்கள். பள்ளிக்கூடங்களுக்குப் போகக்கூடியவர்களில் 100-க்கு 95 பேர்கள் பள்ளிக்கூடம் போகிறார்கள். ஸெகண்டரி ஸ்கூல்கள் நல்ல நிலைமையிலிருக்கின்றன. இவைகளில்

மாணவர்களுக்கும் குறைவில்லை. தொழில் சாஸ்த்ரக் கல்வி ரொம்ப உயர்வடைந்திருக்கிறது. இந்த தேசத்தில் ஆறுயூனிவர்ஸிட்டிகள் இருக்கின்றன. அவைகளுள் ஒன்றில் தொழில் சாஸ்த்ரங்கள் கற்பிக்கப்படுகின்றன.

### ஆஸ்ட்ரலேஷ்யா.

ஆஸ்ட்ரேலியா.—இது ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் ஒன்று. இது ஆறு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவைகளின் கல்வி நிலைமை வருமாறு:—

ந்யூ ஸௌத் வேல்ஸ்.—இந்த மாகாணத்தில் இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் ப்ரைமெரிக் கல்வி கற்றுக்கொடுக்கிறார்கள். கவர்ன்மெண்டார் நிர்வகித்துவரும் ப்ரைமெரி பாடசாலைகளிலும், உயர்தர பாடசாலைகளிலும் 1906-ம் வர்ஷம் முதல் சம்பளம் வஸூல் செய்வது கிடையாது. அந்த நாட்டில் நிகரான ஸர்க்கார் வரும்படியில் நூற்றுக்கு 8·20 பாகம் கல்விக்காக செலவாகிறது.

(2) விக்டோரியா.—இந்த மாகாணத்திலும் இலவசமாகவும்,கட்டாயப்படுத்தியும்ப்ரைமெரிக் கல்வி கற்றுக்கொடுக்கிறார்கள். ஸெகண்டரி கல்வியை பொது ஜனங்களே கவனித்து வருகிறார்கள்.

(3) தெற்கு ஆஸ்ட்ரேலியா.—இந்த மாகாணத்திலும் எலிமெண்டரி கல்வியை இலவசமாயும் கட்டாயமாகவும் கற்றுக்கொடுக்கிறார்கள். ஸர்க்கார் வரும்படியில் நூற்றுக்கு 5-பாகம் எலிமெண்டரிக் கல்விக்காக செலவழிக்கப்படுகிறது. உயர்தரப் படிப்பை பொது ஜனங்களே கவனித்துவருகிறார்கள்.

(4-6.) க்வீன்ஸ்லண்ட், டாஸ்மேனியா, (இது ஆஸ்ட்ரேலியாவுக்கு உள்பட்ட ஒரு தீவு), மேற்கு ஆஸ்ட்ரேலியா.—இந்த மாகாணங்களிலும் ப்ரைமெரி கல்வி இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் கற்றுக்கொடுக்கப்படுகிறது.

ந்யூஸீலண்ட் இது ஆஸ்ட்ரேலியாவுக்குப் பக்கத்திலுள்ள ஒரு ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடாகும். இங்கு இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் கல்வி கற்றுக்கொடுக்கிறார்கள். மதஸம்பந்தமான கல்வி கற்றுக்கொடுப்பதில்லை.

### ஆசியாவிலுள்ள முக்யமான தேசங்கள்.

சீனு.—இந்த தேசத்தில் தேசீய முறையில் வெகுகாலமாகக் கல்வி கற்பிக்கப்பட்டுவந்தது. தற்போது மேல்நாட்டு முறையில் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அங்கே அடிக்கடி பள்ளிக்கூடங்கள் புதிதாக கிளம்புகின்றனவாம்.

நேபாளம்.—இது இந்தியாவின் வடபாகத்தில் உள்ள ஸ்வயாதீனமுள்ள ஒரு ஸ்வதேச ராஜ்யம். இதில் ராஜாங்கத்தார் மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வி கற்றுக்கொடுக்கிறார்கள்.

பாரஸீகம்.—இதில் கல்வியின் நிலைமை ரொம்ப சீர்கேடாயிருக்கிறது.

ஜப்பான்.—இங்கே பிள்ளைகளுக்கு கீழ்தர ப்ரைமெரிப் படிப்பை இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் கற்றுக்கொடுக்கிறார்கள். பள்ளிக்கூடத்துக்குப் போகக்கூடியவர்களில் நூற்றுக்கு 82 பேர்கள் பள்ளிக்கூடங்களில் சேர்ந்து வாசிக்கிறார்கள். உயர்தர ப்ரைமெரி பாடசாலைகளில் ஸ்வல்ப சம்பளம் உண்டு. இவைகளில் பள்ளிக்கூடத்துக்குப் போகக்கூடியவர்களில் 100-க்கு 55-பேர்கள் சேர்ந்து வாசிக்கிறார்கள். கைத்தொழில்கள், வ்யாபாரம், மற்ற கலைகள் ஆகிய இவைகளுக்காக ப்ரத்யேகமான பாடசாலைகள் இருக்கின்றன. இந்த தேசத்தில் 4 ஸர்க்கார் யூனிவர்ஸிட்டிகள் இருக்கின்றன. இவைகளுள் ஒன்றில் வைத்யமும் இஞ்ஜினியரிங்கும் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. இவைகளைத் தவிர யூனிவர்ஸிட்டி அந்தஸ்துள்ள வேறு வித்யாஸ்தாபனங்களும் சில இருக்கின்றன.

ஸையாம்.—இந்த தேசத்தில் எழுதப்படிக்க தெரியாதவர்கள் அபூர்வம். கவர்ன்மெண்டார் கல்வி பயிவ்ருத்திக்காக வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொண் டிருப்பதோடு, மடங்களில் அநுஷ்டானத்திலிருந்துவரும் கல்வி முறையை அபிவ்ருத்தி செய்ய ரொம்ப முயற்சிகள் செய்துவருகிறார்கள்

(இன்னும் வரும்.)



# REVIEW OF THE PRESS.

## பத்ரிகை ஆராய்ச்சி.

### THE DUTIES OF WOMEN.

### ஸ்த்ரீகளின் கடமைகள்.

ஹிந்துக்களின் தர்ம சாஸ்த்ரங்களில் புருஷர்களுடைய கடமைகளைப்பற்றி விரிவாய்ச் சொல்லியிருப்பதோடு, அங்கங்கே ஸ்த்ரீகளின் கடமைகளைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளைத்தவிர வாத்ஸ்யாயனர் என்ற ஒரு ரிஷி ஸ்த்ரீகளின் கடமைகளைப் பற்றி தனியாக ஒரு க்ரந்தம் எழுதியிருக்கிறார். ஸமீபத்தில் வெளிவந்த 'ஆர்யதர்மம்' பத்ரிகையில் ஒருவிருபர் இந்த நூலிலுள்ள ஸூத்ரங்களை மொழிபெயர்த்து அவைகளின் தாத்பர்யங்களையும் விரிவாய் எழுதி யிருக்கிறார். அவைகளை இங்கு சுருக்கமாய் எழுதுகிறோம்.

"பார்யையானவள் வேரூன்றின விச்வாஸம் உடையவளாய் தேவனைப்போல் பதியை அனுஸரிக்க வேண்டும்."

பார்யை,ஏகசாரிணி, ஸபத்னீ என்று இரண்டுவிதம். ஏகசாரிணி யென்றால், எந்தப் புருஷன் ஒரே ஸ்த்ரீயை விவாகம் செய்தவனே அவனை உடையவள். அநேக ஸ்த்ரீகளை விவாகம் செய்த புருஷனை அடைந்தவளுக்கு ஸபத்னீயென்று பெயர். இங்கு சொல்லப்படுவன ஏகசாரிணியின் கடமைகளாகும். பார்யை என்றால் விதிப்படி பாணிக்ரஹண ஸம்ஸ்காரம் பெற்றவள்.

"புருஷனுடைய அபிப்ராயப்படி குடும்ப சிந்தையை தன்னிடம் வைத்துக்கொள்ளவேண்டும்."

குடும்ப சிந்தையில் உங்களுக்கு ஸாமர்த்யமில்லை யென்று பார்யை புருஷனை அலக்ஷ்யம் செய்துவிட்டு நடத்தக்கூடாது. அவனுக்கு விரோதமாயும் நடக்கக்கூடாது.

"வீட்டை சுத்தமாயும், மெழுகிப், பெருக்கப்பட்ட ஸ்தானமுடையதாயும், நானாவித புஷ்பங்களோடு கூடியதாயும் வழவழப்பான அறைகளோடு கூடியதாயும், பார்க்க அழகாயும், மூன்று காலங்களில் பூஜாகர்மங்களோடு கூடியதாயும், தேவபூஜையோடு கூடியதாயும் வைத்துக்கொள்ளவேண்டும்."

"இதைக்காட்டிலும் க்ரஹஸ்தர்களுடைய மனஸைக் கவரச்செய்வது வேறொன்றுமில்லை."

"குருக்களிடத்தும், வேலைக்காரர்களிடத்தும், புருஷனுடைய ஸஹோதரர்களிடத்தும், அவர்களுடைய பர்த்தாக்களிடத்தும், யோக்யதைக்குத் தக்கபடி தக்க மர்யாதை செலுத்தவேண்டும்."

குருக்களென்றால் மாமனார் மாமியார் முதலானவர்கள். உபாஸிக்கப்படாத குருக்களும், அனுக்ரஹிக்கப்படாத வேலைக்காரர்களும், ஸ்நேகம் வைக்கப்படாத நாத்தனார்மார்களும், மர்யாதை செய்யப்படாத அவர்களுடைய புருஷர்களும், அநேகமாய் நாயகனுக்கு பார்யையிடத்தில் அத்ருப்தி உண்டாகும்படி செய்துவிடுவார்கள்.

"சுத்தமான இடங்களில் கீரைப் பாத்திகளையும், கரும்பு, ஜீரகம், கடுகு, ஓமம், சதபுஷ்பம், தமாலம், இவைகளையும் பயிரிடச் செய்யவேண்டும். செண்டு மல்லிகை, கெல்லி, மல்லிகை, ஜாதி, மருதாணி, வனமாலிகை, தகரம், நந்தியாவட்டை, செம்பரத்தை முதலிய புஷ்பச்செடிகளையும், மற்றும் ஏராளமாய்ப் பூக்கும் மரங்களையும், வாலகம், விளாமிச்சை, கேதாரம் முதலிய மரங்களையும் வைத்துத் தோட்டத்தை சுத்தமாய் வைக்கச்செய்யவேண்டும். தோட்டத்தின் நடுவில் கிணற்றையாவது, குளத்தையாவது, வாய்க்காலையாவது வெட்டச் செய்யவேண்டும்.

"பிக்ஷுகி, ச்ரமணை, க்ஷபணை, இந்த்ரஜாலக்காரி, ஜோதிஷம் சொல்லுபவள், வசீகர யந்த்ரமுள்ளவள் இவர்களோடு சேரக்கூடாது."

பிக்ஷுகி என்றால் பிச்சை யெடுப்பவள், ச்ரமணை, க்ஷபணை என்பவர்கள் பௌத்த ஸந்யாஸம் பெற்ற ஸ்த்ரீகள். மேற்சொன்ன ஸ்த்ரீகள் பல வழிகளால் பார்யையினுடைய மனஸைக் கலைத்துக் கெட்ட புத்திகள் போதித்து, நடத்தை கெடும்படி செய்துவிடக் கூடுமாகையால் இப்படிப்பட்டவர்களுடன் ஸகவாஸம் வைத்துக்கொள்ளக்கூடாது.

"சாப்பாட்டில் நாயகனுக்கு இது விருப்பமுள்ளது, இது வெறுக்கத்தக்கது, இது பத்யம், இது அபத்யம் என்றும் அறியவேண்டும்."

"வெளியில் நாயகனுடைய சப்தத்தைக் கேட்டவுடன் என்ன கார்யம் வேண்டுவாரோ என்று வீட்டின் மத்தியில் தயாராய் இருக்கவேண்டும்."

“ ஏகாந்தமான விடத்தில் நாயகனுடைய முன்னிலையில் ஆபரணமில்லாதவளா யிருக்கக்கூடாது.”

“ரொம்பச்செலவையும் கெட்டவழியில் செலவையும் செய்யும் கணவனை ஏகாந்தத்தில் போதிக்கவேண்டும்.”

“ கல்யாண காலத்தில் மாப்பிள்ளை இறங்கியிருக்கும் வீடு, பெண்ணுக்கு விவாகம் நடக்கும் வீடு, இவைகளுக்கும், யாகம், கோயில் இவைகளுக்கும் போவதானாலும், தோழிமார்களோடு கூட்டம் கூடுவதானாலும் புருஷனுடைய உத்தரவைக் கேட்டே செய்யவேண்டும்.” ஏனென்றால் கல்யாண வீடுகள் முதலியவைகளில் ஸ்த்ரீகளைக் கண்டு களிப்பதற்காக காமுகர்கள் கூடி வேடிக்கைபோல் மனதில் தோன்றின வார்த்தைகளைப் பேசுவார்களாகையால் அங்கே புருஷனுடைய உத்தரவில்லாமல் போனால் அவருக்கு ஸந்தேகம் உண்டாகும்.

“ எல்லா க்ரீடைகளிலும் நாயகனுக்கு அனுகூலமாகவே ப்ரவர்த்திக்கவேண்டும்.” க்ரீடை என்றால் விளையாட்டுகள். ஸ்த்ரீகள் மரப் பாச்சிகளை வைத்து சில தினங்களில் உத்ஸவம்போல் கொண்டாடுவார்கள். ஒருநாள் உத்ஸாகத்தினால் புஷ்பாலங்காரம் செய்துகொள்வார்கள். ஒருநாள் தித்யான்னங்களைச்செய்து நிலவில் சாப்பிடவோ, நதிக்கரையில் சாப்பிடவோ விரும்புவார்கள். கோலாட்டம் கும்மி முதலியவைகளில் ஆசை கொள்ளுவார்கள். இவைகளிலெல்லாம் கணவனும் உத்ஸாகம் கொள்ளும்படி செய்துகொள்ள வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் வீணில் செலவு செய்கிறாளென்று புருஷன் அத்ருப்தி கொள்வான்.

## NOTES OF LESSONS.

## பாடக் குறிப்புகள்.

ஒரு பள்ளிக்கூடத்தில் பல வகுப்புகளிருந்து அவைகளுக்கெல்லாம் பொதுவில் ஒரே உபாத்யாயரிருந்தால், அவர் ஒவ்வொரு வகுப்பிலும் கற்பிக்கும் ஒவ்வொரு பாடத்துக்கும் தினந்தோறும் பாடக்குறிப்புகள் தயாரிக்கவேண்டுமா? அப்படியானால் எவ்விதமான பாடக் குறிப்புகள் தயாரிப்பது என்பதைப்பற்றி ஒரு நிருபர் ‘சற்குரு’வில் ஒரு கேள்வி கேட்டிருந்தார். அதற்கு அந்தப் பத்ரிகையின் அதிபர் பின்வருமாறு பதில் எழுதியிருக்கிறார்.

(1) பாடக் குறிப்புகளை ப்ரதிதினமும் எழுவது அத்யாவச்யமே; ஆயினும் ஒவ்வொரு பாடத்துக்கும் குறிப்புக்களை யெழுத ஸாத்யப்படாது. அவ்வாறு எழுதியே தீரவேண்டுமென்ற கேட்போர் உபாத்யாயருடைய கஷ்டத்தை அறியாதவர்களாவார்.

(2) கால அட்டவணையிலே குறித்திருக்கும் விஷயத்தை உபாத்யாயர் தம் குறிப்புக்களிற் குறித்து வைப்பதால் யாதொரு ப்ரயோஜனமுமில்லை. குறிப்புக்கள் உபாத்யாயருக்கு ஓர் உதவியாயிருக்கவேண்டும். எப்படியெனில்,— சில பாடங்களைப் போதிப்பதற்கு விஷயம் வேண்டியதாயிருக்கும். விஷயத்தை சில முக்யமான தலைப்பின்படி குறித்துவைத்தல் நலம். வேறு சில பாடங்களுக்கு விஷயம் எளியதாயிருந்தாலும், போதிக்கும் விதம் கஷ்டமாயிருக்கும். ஆதலால் முன்னாலேயே அதைப்பற்றி ஆலோசித்து, உபகரணங்களை ஸித்தப்படுத்தி வைப்பது அவச்யமாகும். சொல்லப்போகும் பாடங்களை முன்னதாக ஒருமுறை சிந்தித்துக்கொண்டு பாடசாலைக்கு வரும் உபாத்யாயர், பாடங்களைத் தெளிவாயும் பிள்ளைகளுக்கு உத்ஸாகம் உண்டாகும்படியும் போதிப்பாரென்பதற்குச் ஸந்தேகமு முண்டோ?

(3) பாடக்குறிப்புக்கள் போதனாமுறைப் பாடசாலைகளில் எழுதும் விரிவான குறிப்புக்களைப்போ லிருக்க வேண்டும் என்னும் அவச்யமே இல்லை. சில ஸமயங்களில் பாடத்தின் நோக்கத்தை மாத்ரம் எழுதிவைத்தால் போதும். பாடக்குறிப்பானது நமது ஆராய்ச்சிக்குத் துணையேயன்றி வேறல்ல. மேற்படி பத்ராதிபர் மாதிரிக்கு சில குறிப்புகளை எழுதியிருக்கிறார்.

### பாலர் வகுப்பு.

I. வாசகம்.—உகாரத்துக்குக்குறி ு என்று கற்பித்தல்.

பதங்கள்—குடம்
முள்
பட்டு
பருத்தி

[முறை—முன்பு கற்பித்த முறை.]

II. கையெழுத்து—[குறிப்பு வேண்டியதில்லை.]

III. கதை—நேற்றுச் சொன்ன கதையைப் பிள்ளைகளைத் தாமே சொல்லச் செய்தல்.

IV. பாட்டு—[குறிப்பு வேண்டியதில்லை.]

V. கணிதம்—9 + 3 = 12 என்று கற்பித்தல்.

முறை—$9 + 3 = (9 + 1) + 2$
$= 10 + 2$
$= 12$

உபகரணம் — விதைகளை உபயோகப்படுத்தாமல், பிள்ளைகளை வரிசையாய் நிற்கச்செய்து, 3-இலிருந்து 1-போவதை நடித்துக்காட்டி, முறையை பாலர்களுடைய மனதில் நிலைபெறச் செய்தல்.

VI. சித்ரம்—(ஸ்லேட்) பலகையின் உருவப்படத்தை வரைதல்.

VII. ஸம்பாஷணை—டை கதையைப்பற்றி.

VIII. ட்ரில்—முன் கற்றுக்கொடுத்த அப்யாஸங்களைச் செய்யச் செய்தல்.

VI-க்கு அடியில் ‘ஸ்லேட்’ என்ற ஒரு பதம் மாத்ரங்குறித்து வைத்தால் போதும். VIII-க்குக் குறிப்பே வேண்டியதில்லை. புது அப்யாஸங் கற்பிக்கையில் தான் குறிப்புத்தேவை.



# Departmental Notes.

# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.

## வித்யாவிஷயம்.

### Education in England.

**இங்க்லண்டில் கல்வி.**—இங்க்லண்ட் மற்ற தேசங்களைப்போல் அபிவ்ருத்தி யடைவதற்கு ஏற்றவிதமாக இங்க்லண்டின் கல்வி முறையை சீர்திருத்தவேண்டுமென்று அந்த தேசத்தில் பலர் முறையிட்டு வந்ததின் பயனாக, அந்த தேசத்து ப்ரதம மந்த்ரியாகிய மிஸ்டர் ஆஸ்க்வித் கல்வி முறையைப்பற்றி பரிசீலனை செய்வதற்காக இரண்டு கமிட்டிகள் நியமித்திருக்கிறார். நவீன சாஸ்த்ரங்களைக் கற்பிக்கும் விஷயத்தில் என்ன நோக்கங்களுடனும், முறைகளுடனும் கற்பிக்கவேண்டுமென்பதை ஒரு கமிட்டியார் பரிசீலனை செய்வார்கள். இன்னொரு கமிட்டியார் ஸெகண்டரி ஸ்கூல்களிலும், யூனிவர்ஸிட்டிகளிலும் தற்காலத்திய பாஷைகளை அதாவது ப்ரெஞ்ச், ஜர்மன் முதலிய பாஷைகளைக் கற்பிக்கும் விஷயமாய், என்ன நோக்கங்களும் முறைகளும் அனுஸரிக்க வேண்டுமென்பதைப்பற்றிப் பரிசீலனை செய்வார்கள். இங்க்லண்டில் பற்பல பாடங்களைப்பற்றிய விஷயங்களை கவனிக்க தனித்தனி ஸபைகள் இருக்கின்றன. ஸமீபத்தில் பூர்வீகபாஷைகள், இங்க்லீஷ், பூகோளசாஸ்த்ரம், தேசசரித்ரம், தற்காலத்திய பாஷைகள் ஆகிய இவைகளுக்கான ஸபைகள் ஒன்றுகூடி, கல்வி விஷயத்தை சீர்திருத்துவதில் பின்வரும் விஷயங்களை கவனிக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றன.

(1) கல்வி ஏற்பாட்டை சீர்திருத்துவதில் மனித இயல்பைப்பற்றிய படிப்பும் சாஸ்த்ரப்படிப்பும் அபிவ்ருத்தியடைய ஏற்பாடுசெய்யவேண்டும்.

(2) பிள்ளைகள் பால்ய வயதிலேயே ஒருபாடத்தில் மாத்ரம் விசேஷத் தேர்ச்சியடைய முயற்சிசெய்து, மற்றபாடங்களை கவனிக்காமல்விடுவது பொதுவாய்க் கல்வியபிவ்ருத்திக்கு ரொம்ப கெடுதலாயிருப்பதோடு, அந்தந்த பாடத்தில் தேர்ச்சி ஏற்படுவதற்கும் தடையாயிருக்கும்.

(3) மனித இயல்பைப்பற்றிய கல்வியில் கற்பிக்க வேண்டிய பாடங்களாவன:—பாஷை, இலக்கியம், பூகோள சாஸ்த்ரம், தேசசரித்ரம். பிள்ளைகளுக்கு தக்க வயஸு வந்தபிறகு ஸொந்த தேசத்தைப்பற்றிய இவ்விஷயங்களையே யன்றி, இதர தேசங்களைப் பற்றிய பாஷைகள், இலக்கியம், பூகோளம், சரித்ரம் இவைகளையும் வேண்டிய அளவு கற்பிக்கவேண்டும்.

(4) கல்விச் சீர்திருத்தத்தில் முக்யமாய் கவனிக்க வேண்டியது மனிதர்களுடைய மனதையும் நடத்தையையும் சரிவரப்பயிற்சி செய்வித்து, ஸ்வயேச்சையான நாட்டின் ப்ரஜைகளாகப் பழக்கிவிடவேண்டும். பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் தொழில் கல்வி கற்பிக்கும் போதும் மேற்கூறிய நோக்கங்களுக்கு ஏற்றதாகக் கற்பிக்கவேண்டும்.

### Literary Activity in India.

**இந்தியாவில் வெளியாகும் புஸ்தகங்கள்.**—ஸமீபத்தில் வெளியான கணக்குகளின்படி இந்தியாவிலுள்ள மற்றபாகங்களைவிட வங்காளத்தில்தான் அதிக புஸ்தகங்கள் ப்ரசுரம் செய்யப்பட்டனவென்று தெரிகிறது. அந்த மாகாணத்தில் 2,962 புஸ்தகங்கள் ப்ரசுரம் செய்யப்பட்டன. சென்னையில் 2,549 புஸ்தகங்களும், பம்பாயில் 1,917 புஸ்தகங்களும் வெளியாயின. மற்ற மாகாணங்களில் இன்னும் குறைவாய் வெளியாயின. மற்ற வகைகளைவிட மதஸம்பந்தமான புஸ்தகங்கள்தான் ரொம்ப அதிகமாயிருந்தன. இன்னின்ன விஷயங்களைப்பற்றி இத்தனை புஸ்தகங்கள் வெளியாயினவென்பது அடியில் குறிக்கப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| மதம் | 4015 |
| செய்யுளும் நாடகமும் | 2271 |
| இலக்கியம் | 1711 |
| கதைகள் | 833 |

இங்க்லீஷில் வெளியான புஸ்தகங்களின் தொகை 2615. அதற்கடுத்ததாக வங்காளி பாஷையில் 2294 புஸ்தகங்கள் வெளியாயின. தமிழில் 1425 புஸ்தகங்களும், ஸமஸ்க்ருதத்தில் 499 புஸ்தகங்களும் வெளியாயின.

# TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### Tamil Style.

**தமிழ் நடை.**—இண்டர் மீடியேட் பரீக்ஷைக்கு வாசிக்கும் மாணவர்கள் தமிழ் வ்யாஸம் எழுதுவதில் இன்னின்ன நியமங்களைப் பின்பற்ற வேண்டுமென்பதை தீர்மானஞ்செய்ய சிலவர்ஷங்களுக்குமுன் சென்னை யூனிவர்ஸிட்டியால் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அந்தக் கமிட்டியார் அது விஷயமாய் சில தீர்மானங்கள் செய்தார்கள். ஸமீபத்தில் தஞ்சாவூரிலுள்ள கரந்தை தமிழ்ச்சங்கத்தார் ஒரு மீட்டிங்கூடி, மேற்சொன்ன கமிட்டியார் செய்த தீர்மானங்களைக் கண்டித்து சில தீர்மானங்கள் செய்திருக்கிறார்கள். அவைகளாவன. மேற்சொன்ன யூனிவர்ஸிட்டி கமிட்டியில் பற்பல அபிப்ராய பேதங்களை எடுத்துச்சொல்லத்தகுந்த மெம்பர்கள் இல்லை. கமிட்டியார் காலேஜுகளிலுள்ள பண்டிதர்களையும் தமிழ்ச்சங்கங்களையும், க்யாதிபெற்ற வித்வான்களையும் ஆலோசனை கேட்காமல், தமிழ் நடையைப்பற்றி ஒரு முடிவுசெய்தது விஸனிக்கத் தக்கது. இண்டர்மிடியேட் பரீக்ஷையில் மாணவர்கள் கொச்சையான தமிழில் வ்யாஸம் எழுதலாமென்று கமிட்டியார் ஏற்படுத்தியிருப்பது நல்ல தமிழ்நடையில் தேர்ச்சி ஏற்படுவதற்குத் தடையாயிருக்கிறது. தமிழ் நெடுங்கணக்கில் யாதொரு மாறுபாடும் செய்யக்கூடாது. அன்ய பாஷைகளிலிருந்து வரும் வார்த்தைகளை தமிழ்பாஷையின் அமைப்பை அனுஸரித்தே தமிழில் உபயோகிக்க வேண்டும். அன்ய பாஷைகளிலுள்ள சப்தங்களைக் காட்டுவதற்காக புது எழுத்துகள் ஏற்படுத்தி உபயோகிப்பது தமிழ்பாஷையின் இயல்பைக் கெடுத்துவிடுவதோடு, தமிழ் இலக்கணத்தையும் கெடுத்துவிடும். இரண்டு தனிவார்த்தைகளுக்கு இடையில் ஸந்திகளை இஷ்டமானால் உபயோகிக்கலாமென்று கமிட்டியார் தீர்மானித்திருப்பதை ஸங்கம் ஆக்ஷேபிக்கிறது.

### Sarada Vilas Sabah.

**சாரதா விலாஸ ஸபை.**—புதுக் கோட்டையைச் சேர்ந்த ராமச்சந்த்ரபுரத்திலுள்ள சாரதா விலாஸ ஸபையின் வர்ஷாந்தரக் கொண்டாட்டம் ஸமீபத்தில் நடைபெற்றது. அந்த ஸபை நாட்டுக்கோட்டைச் செட்டி ஜனங்களால் ஸ்தாபிக்கப்பட்டு நடந்துவருகிறது.

இந்தக் கொண்டாட்டத்தின்போது மகிபாலன்பட்டி மிஸ்டர் கதிரேசன் செட்டியார் ஒரு முக்யமான தீர்மானங் கொண்டுவந்தார். அதாவது, தமிழர்களுக்குள் தமிழபிவ்ருத்தி ஏற்படுவதற்கு பெரிய இங்க்லீஷ் அகராதிகளின் மாதிரியில் தமிழில் ஒரு பெரிய சொல்லகராதியும், தமிழ் ஆசிரியர்களுடைய ஜீவ்யசரித்ரங்களடங்கிய ஒரு அகராதியும் தயார் செய்யவேண்டியது அவச்யம். இதற்கு வேண்டியபணம் சேகரிக்க வேண்டும். தற்காலம் பெரிய தமிழ் வித்வானாக இருக்கும் மகாமகோபாத்யாய ஸ்வாமிநாதய்யரை இந்த புஸ்தகங்கள் எழுதுவதை மேற்பார்வை செய்யும்படி கேட்டுக்கொள்ளவேண்டும். இந்தத் தீர்மானம் ஸபையோர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

### Sayings of Muhammad.

**மகான் முகம்மது நபீ அவர்களின் உபதேச ரத்னம்.**—இது எம். எ. மலீக் ஸாகிபால் அரபி, பார்ஸி, உர்து முதலிய பாஷைகளிலுள்ள இஸ்லாம் மதத்திய நூல்களிலிருந்து தொகுக்கப்பட்ட நூலாகும். இதில் இஸ்லாம் மதத்தை ஸ்தாபித்து நிலைநிறுத்திய முகம்மதுநபி அவர்களின் உபதேசங்கள் விரிவாய் எழுதப்பட்டிருப்பதோடு, அவருடைய ஜீவ்ய சரித்ரமும், அவருடைய ப்ரஸங்கங்களும் அடங்கியிருக்கின்றன. இஸ்லாம் மதத்தின் இயல்பை யறிய விரும்புகிறவர்களுக்கு இது ஒரு நல்ல புஸ்தகமாகும். இதன் விலை அணு 10. வேண்டுவோர் ரங்கூன் நவீன கதா புஸ்தகசாலைக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

### Saroja.

**ஸரோஜா.**—சாதலே காதல் என்னும் பெயர் பூண்ட நாவலொன்று வரப் பெற்றோம். இதை இயற்றியவர் கே. பி. சேஷாத்ரி அய்யங்கார். இது சிறிய கதையேயானாலும் தக்கவிதமாய் எழுதப்பட்டிருக்கிறது. மேல்நாட்டு ஆசாரத்தைத் தழுவி ஸ்த்ரீ புருஷர்கள் தங்களுடைய நடையுடை பாவனைகளை மாற்றிக்கொள்வது கூடாதென்பதே கதையின் கருத்து. இதன்விலை 5-அணா. வேண்டுவோர் சென்னை முத்யாலுப்பேட்டை ஹைஸ்கூல் உதவி உபாத்யாயராயிருக்கும் இதன் ஆசிரியருக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளவும்.



# SCIENCE AND INVENTION.

## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### A Helmet that Shoots.

**துப்பாக்கியுள்ள தொப்பி.**—போலீஸ்காரர்களும், ஸோல்ஜர்களும், போக்கிரிகள், திருடர்கள் முதலியவர்களைப் பிடிக்க முயலும்போது சில ஸமயம் ஆபத்துக்குள்ளாகிறார்கள். அந்த ஸமயங்களில் அவர்கள் ஸமயோசிதமாக தங்களுடைய ரிவால்வர்களை உபயோகித்துத் தங்களை ஆபத்துக்களிலிருந்து காத்துக்கொள்ள வேண்டியிருக்கும். எவ்வளவுக்கெவ்வளவு சீக்ரமாய் துப்பாக்கியை உபயோகிக்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு ஸௌகர்யம். சில ஸமயம் கைதிகளைப் பிடித்துக்கொண்டு போகும்போது இரண்டு கைகளாலும் கைதிகளைப் பிடித்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கும். அப்போது தனக்கு ஏதாவது ஆபத்துநேரும் என்று தோன்றினால், தன் சட்டைப்பையிலுள்ள ரிவால்வர் துப்பாக்கியை எடுத்துச்சீக்ரமாகசுடமுடியாது. சுடுவதற்குத் தாமஸம் ஏற்பட்டால் சிலஸமயம் போலீஸ்காரனுடைய உயிருக்கே ஆபத்தாய் முடியும். இந்த அஸௌகர்யங்களை நிவர்த்தி செய்வதற்காக அமெரிக்காவில் ஒரு கம்பெனியார் போலீஸ்காரர்கள் தரித்துக்கொள்ள ஒரு புதுவகையான தலைச்சீரா செய்திருக்கிறார்கள். அதன் நுனியில் ஒரு சிறு ரிவால்வர் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த ரிவால்வரைச் சுடுவதற்கு மருந்து ஒன்றும் வேண்டியதில்லை. காற்றின் உபயோகத்தால் இதைச் சுடலாம். இந்தத் துப்பாக்கியின் வாய்க்குழாய் மாத்ரம் தலைச்சீராவுக்கு வெளியில் நீட்டிக்கொண்டிருக்கும். அதன் மற்ற பாகங்களெல்லாம் தலைச்சீராயின் உள்ளே அமைக்கப்பட்டிருக்கின்றன. வெளியில் நீட்டிக்கொண்டிருக்கும் துப்பாக்கிக்குழாயிலிருந்து ஒரு கண்ணாடி ஸாதனம் தொங்கும். இதன்மூலமாய் எதிரிகளைப்பார்த்து சரியாய்ச் சுடலாம். அகஸ்மாத்தாக துப்பாக்கி சுடாமலிருப்பதற்காக வேண்டிய ஸாதனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

வாயினாலேயே துப்பாக்கியைச் சுடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் இதில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதைத் தரித்துக்கொள்ளும் போலீஸ்காரன் போக்கிரி யாராவது தன்னை ஹிம்ஸிக்க வருகிறதைக் கண்டால், போக்கிரியிருக்கும் பக்கமாக முகத்தைத் திருப்பிக்கொண்டு ஸுலபமாக துப்பாக்கியை ப்ரயோகிக்கலாம். கையால் ஒன்றும் செய்யவேண்டியதில்லை.

### Purification of Air by Leaves.

**இலைகளால் ஆகாயம் சுத்தமடைவது.**—இலைகள் இடைவிடாமல் ஆகாயத்திலுள்ள கரியமலவாயுவை க்ரஹித்து உட்கொண்டு, ப்ராணவாயுவைவெளியிட்டு, காற்றை சுத்தம்செய்கின்றன. ஒருமரமானது 12 மனிதர்கள் ச்வாஸித்து வெளியிட்ட கரியமிலவாயுவை க்ரஹித்துக் கொண்டு காற்றைசுத்தப்படுத்தக்கூடுமாம். ஒருமனிதன் 24-மணி நேரத்தில் 240 படி கரியமிலவாயுவை வெளியிடுவான். இலைகளின் மேற்புறமும் அடிப்புறமும் சேர்ந்து மொத்தம் ஒரு சதுரகஜம் பரப்புள்ள இலைகள் 24-மணி நேரத்தில் ஆகாயத்திலிருந்து 2·4 படி கரியமலவாயுவை க்ரஹிக்கக் கூடும். ஆகவே 100 சதுரகஜம் பரப்புள்ள இலைகள் ஒரு மனிதன் வெளியிடும் கரியமிலவாயுவை க்ரஹித்து காற்றை சுத்தப்படுத்தும். ஆனால் ஸாதாரண வளர்ச்சியுள்ள ஒரு மரத்தின் இலைகளின் மேற் பரப்பும் அடிப்பரப்பும் சேர்ந்து அநேக சதுர கஜங்கள். இருக்குமாதலால், மனிதர் வெளியிடும் கரியமலவாயுவை இலைகள் அப்போதைக்கப்போது உட்கொண்டு காற்றை சுத்தமாக வைக்கின்றன.

### Heavy Firing & Animals.

**பெரிய பீரங்கி வேடியும் ம்ருகங்களும்.**—பீரங்கி வெடியின் சப்தத்தைக் கேட்டு அநேக ம்ருகங்களும் பறவைகளும் பயந்து ஓடிப்போவதாகத் தெரியவருகிறது. ப்ரான்ஸிலும் பெல்ஜியத்திலும் சண்டை ஆரம்பித்தவுடன் காட்டுப்பன்றி, காடி ஆகிய இவைகள் சண்டை நடக்காத பிரான்ஸின் வேறு பாகங்கள், ஸ்விட்ஸர்லண்ட், லக்ஸம்பர்க் ஆகிய இவைகளுக்கு ஓடிப்போய்விட்டனவாம். இந்த ம்ருகங்களுக்கு காது ரொம்ப நன்றாய்க் கேட்குமாம். இவைகளுக்குப் பிறகு மான்கள் ஓட ஆரம்பித்தனவாம். ரொம்ப பயந்த ஸ்வபாவமுள்ளதென்று சொல்லப்படும் முயல் மாத்ரம் எங்கும் ஓடாமல் இருந்த ப்ரதேசத்திலேயே இருந்து வருகிறதாம். ஓநாய்கள் ரொம்ப பயந்த ஸ்வபாவமென்று தெரிகிறது. அவைகள் சண்டை ஆரம்பித்ததும் பிணங்களைக்கூட லக்ஷ்யம் செய்யாமல் பயந்தோடிவிட்டனவாம். பறவைகளுள் வானம்பாடி முதலிய பாடும் பக்ஷிகளும், ஆந்தைகளும், காக்கைகளும், ராஜாளிகளும், வெடிசத்தத்துக்கு பயப்படாமல் இருக்கின்றனவாம்; மற்ற பக்ஷிகள் வெகுவாய் வேறிடங்களுக்கு ஓடிவிட்டனவாம்.

# SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

### Live to be One Hundred.

**சதஞ்ஜீவியாயிருத்தல்.**—100-வயஸு ஜீவித்திருக்க எண்ணுகிறவர்கள் பின்வரும் விதிகளை கவனித்து நடக்கவேண்டும்.

(1) ஒவ்வொரு நாளும் இரவில் 8 மணி நேரம் தூங்குதல் (2) வலது பக்கம் திரும்பிப் படுத்துத் தூங்குதல் (3) படுக்கையறையின் கதவுகளைத் திறந்துவைத்துப் படுத்துக்கொள்ள வேண்டும். (4) சுவரின் ஓரமாய் படுக்கைபோட்டுக் கொள்ளாமல் சுவருக்கும் படுக்கைக்கும் சற்று இடைவெளி விட்டு படுக்கையைப் போட்டுக்கொள்ள வேண்டும். (5) காலையில் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்யாமல், நமது தேகம் எவ்வளவு சூடோ அவ்வளவு சூடுள்ள ஜலத்தில் ஸ்நானம் செய்யவேண்டும், (6) காலையில் ஆகாரம் சாப்பிடுமுன் தேகப்பயிற்சி செய்யவேண்டும். (7) மாம்ஸ ஆகாரம் குறைவாய்ச் சாப்பிடவேண்டும். அதுவும் நன்றாய்ப் பக்வமாகியிருக்க வேண்டும். (8) பெரியவர்கள் பால் குடிக்கக்கூடாது. (9) தைலவர்க்கப் பொருள்களை யதேஷ்டமாய் சாப்பிடவேண்டும். (10) மயக்கமூண்டுபண்ணும் ஆகாரம் பானங்களை உபயோகிக்கக்கூடாது. (11 நாய் பூனை முதலிய செல்ல ப்ராணிகளை அறைகளுக்குள்—விடக்கூடாது. இந்த ம்ருகங்களின்மேல் வ்யாதி க்ருமிகள் இருக்கும். (12) கூடியமட்டும் க்ராமாந்தரங்களில் வஸிக்கவேண்டும். (13 குடிக்கும் ஜலம் சுத்தமாயிருக்கவேண்டும். வீடுகளில் ஒரு இடமும் ஈரமாயிருக்கக்கூடாது. சாக்கடைகளை அடிக்கடி சுத்தம்செய்யவேண்டும். (14) எப்போதும்ஒரே வேலையைச் செய்துகொண்டிராமல் அடிக்கடி வெவ்வேறு வேலைகளைச் செய்யவேண்டும். (15) அடிக்கடி ஸ்வல்ப காலம் விடுமுறை யெடுத்துக்கொண்டு வேலைசெய்யாமலிருக்க வேண்டும். (16) வீண் ஆசைகளை ஒழிக்க வேண்டும். (17) கோபத்தை ஒழிக்கவேண்டும்.

### Treatment for Burns.

**நெருப்புக் காயங்களுக்கு சிகித்ஸை.**—நெருப்புத் தணலினால் உண்டாகும் ரணங்களின் மேல் விசேஷமான ஔஷதங்களைப் போடவும், பந்தனங்களைக் கட்டவும் வேண்டிய அவச்யமில்லை, அவ்விதம் அக்னி ஸம்பந்தத்தினால் உண்டான ரணத்தின்மேல் நன்றாகப் பொடித்த போரிக் பௌடரை முழுதும் பரப்பி, அதன்மேல் கட்டு முதலானவைகளையிடாமல் திறந்து வைத்திருக்க வேண்டும். அவச்யமாயிருந்தால், வலியைக் குறைப்பதற்காக ஏதேனும் சமனௌஷதத்தை உட்கொள்ளக் கொடுக்கலாம். இருபத்திநான்கு மணி நேரத்தில் நாம்பு முனைகளின் மேல்பாகங்களில் ரத்தநீர் வந்து சூழ்ந்து அவற்றை மூடிவிடும். அவ்விடத்தை முரட்டுத்தனமாகப் பிடித்துக் கஷ்டப்படுத்தாத வரையில், அந்த ரணத்தினால் விசேஷமான வலி யுண்டாவதில்லை-என்று ஒரு மேல்நாட்டு வைத்யர் கூறுவதாக 'வைத்ய கலாநிதி' எழுதுகிறது.

### A Cheap Filter.

**ஒரு மலிவான வடிகட்டும் கருவி.**—குடி ஜலத்தை வடிகட்டிக் குடிக்க பின்வருமாறு செய்யலாம். பெரிய பூந்தொட்டியொன்றை வாங்கி, அதன் அடியில் உள்ள த்வாரத்தில் ஒரு ஸ்பஞ் அதாவது கடல்பஞ்சை வைத்து அடைத்து, தொட்டியின் அடியில் மூன்று நான்கு அங்குலம் பொடிசெய்த கரியைப்போட்டுப் பரப்பி, தொட்டியில் நிறைய ஜலத்தை ஊற்றவும். சுத்த ஜலத்தைதவைக்க உதவும் ஒரு தொட்டியின்மேல் குறுக்கே இரண்டு மூன்று குச்சிகளைவைத்து அந்தக் குச்சிகளின்மேல் தொட்டியை வைக்கவேண்டும். ஜலமானது கரித்தூளின் வழியாக வந்து சுத்தமாய் அடியிலிருக்கும் தொட்டியிலிறங்கும். கரித்தூளை மூன்று மாஸத்துக்கு ஒருதடவை அப்புறப்படுத்தி மறுபடியும் புதுக்கரித்தூளை உபயோகிக்க வேண்டும். பழைய ஸ்பஞ்ஜை அடிக்கடி எடுத்துவிட்டு புது ஸ்பஞ்ஜ் வைக்க வேண்டும்.

### Uses of Pepper.

**மிளகின் உபயோகங்கள்.**—இது காரமுடையது. ஜீர்ணத்தை யுண்டாக்கும்; இருமல், ஜலதோஷம், உடம்புவலி, பாண்டு, குன்மம், வாயு, அரோசகம், பைத்யம் முதலியவைகளைப் போக்கடிக்கும். இதை அதிகமாக உபயோகித்தால் உடம்பெரிச்சல், தாகம், கைகாலெரிச்சல் முதலியவைகளையுண்டாக்கும். இது உபயோகப்படாத மருந்து அதிகமாகயில்லை.



# LAW.

## சட்டம்.

### Juvenile Offenders.

**பால்ய குற்றவாளிகள்** [illegible]றவர் குற்றம் புரிந்தால் அவர்களை ஜெயிலுக்கு அனுப்புவது யுக்தமா என்பதைப்பற்றி கவர்ன்மெண்டார் சிலகாலமாக ஆலோசனை செய்துவந்தார்கள். ஜெயில் நிர்வாக ரிபோர்ட்டுகளைப் பற்றியும் க்ரிமினல் கோர்ட்டு கணக்குகளைப்பற்றியும் பரிசீலனைசெய்யும்போது கவர்ன்மெண்டார், சிறுவர்களை ஜெயிலுக்கு அனுப்புவதும், விசாரணை செய்வதற்குமுன் அவர்களை ரிமாண்டில் வைப்பதும் சரியல்லவென்றும், இப்போதுள்ள சட்டங்களில் சிறுவர்களைத் தக்கவிதமாய் நடத்த வேண்டிய நிபந்தனைக ளிருப்பதால், அவைகளின்படி நடக்க வேண்டுமென்றும் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். இதனால் ஜெயிலுக்கு அனுப்பப்படும் சிறுவர்களின் தொகை சற்றுக் குறைந்துபோயிருக்கிறது, இருந்தாலும் குற்றம்புரியும் சிறுவர்களைத் திருத்துவதற்கென்று ஒரு சட்டஞ் செய்தால் நல்லதென்று கவர்ன்மெண்டார் எண்ணி குற்றம்செய்யும் சிறுவர்களுக்காக ஒரு சட்டம் செய்யப்போகிறார்கள்.

அதன் நிபந்தனைகள் என்னவென்றால்,

(1) 14-வயஸுக்குள்பட்ட சிறுவர்கள் குற்றம்புரிந்தால் அவர்களை ஜெயிலுக்கு அனுப்பக்கூடாது. 14-வது வயஸுமுதல் 16-வயஸுவரையில் உள்ள சிறுவர்களை ஜெயிலுக்கு அனுப்பும்விஷயத்தில் சில நிபந்தனைகள் ஏற்படுத்தப்படும். (2) சிறுவர்களை விசாரிப்பதற்காக ப்ரத்யேகமான கோர்ட்டுகள் ஸ்தாபிக்கப்படும். (3) குற்றம்புரிந்த சிறுவர்களை ஏற்று, அவர்களுக்குக் கல்வியும் தொழில்களும் கொடுத்துப் பழக்கி சீர்திருத்துவதற்கான பாடசாலைகளும் கைத்தொழில் பாடசாலைகளும் ஸ்தாபிக்கப்படும்.

இதோடு, சிறுவர்களுடைய பெற்றோர்கள் அல்லது கார்டியன்களுடைய அசட்டையால்தான் சிறுவர்கள் குற்றம்செய்யும்படியாயிற்று என்று தெரிந்தால், சிறுவர்களுக்குப் போடும் அபராதத்தை பெற்றோர்கள் அல்லது கார்டியன்கள் செலுத்தவேண்டுமென்று சட்டத்தில் விதிக்கப்படும்.

### Pannayal Service in lieu of Interest.

**வட்டிக்கு பதிலாக பண்ணையாள் வேலை செய்வது.**—வாதி ப்ரதிவாதிக்கு ஒரு தொகை கடன்கொடுத்திருந்தார். இதற்காக ப்ரதிவாதி தமது பண்ணையாட்களில் மூன்றுபேர்களை வாதியிடம் வேலைசெய்ய அனுப்ப வேண்டுமென்றும், அவர்கள் செய்தவேலை கடனுடைய வட்டிக்கு சரியாகுமென்றும், பண்ணையாட்கள் சரியாக வேலைசெய்யாவிட்டால், ப்ரதிவாதி கடனை திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்றும் நிபந்தனை ஏற்படுத்திக்கொண்டார். இந்த ஏற்பாட்டின்படி சிலகாலம் நடந்தபிறகு அந்த பண்ணையாட்கள் வாதியிடம் வேலைசெய்யாமல் நின்றுவிட்டார்கள். அதன்மேல் கடனைத் திருப்பியடைவதற்காக, கடன் கொடுத்த 3-வர்ஷத்துக்குப் பிறகு வாதி வ்யாஜ்யம் போட்டார். இந்தக்கேஸில் ஹைகோர்ட்டார் தீர்ப்பு என்னவென்றால், இந்த நடவடிக்கை மனிதர்களை அடகுவைப்பதாக ஏற்படுவதால், அந்த ஒப்பந்தம் ஜனஸமூக வாழ்க்கைக்கு ஒத்ததல்ல. ஆகையால் இது செல்லாது. பண்ணையாட்கள் வேலை செய்தது கடன் பத்ரம் காலாவதியாகாமலிருக்க வட்டிசெலுத்தினதாக மாட்டாது. கடன்பத்ரம் ஏற்பட்ட 3-வர்ஷத்துக்குள் வ்யாஜ்யம் கொண்டுவராததால், பத்ரம் காலாவதியாகி விட்டது.

### Sub-mortgage.

**உள் அடமானம்.**—ஒருவர் தமது நிலத்தை மற்றொருவருக்கு அடமானம் வைத்தார். அடமானம் வாங்கினவர் அதை இன்னொருவருக்கு உள் அடமானம் வைத்தார். முதலில் அடமானம்வைத்தவர் உள் அடமானம் இருப்பது தெரியாமல் முதல் அடமானக்கடனை அடமானம்வாங்கினவருக்குத் திருப்பிச்செலுத்திவிட்டால், உள் அடமானம் செல்லாது. முதலில் அடமானம் வைத்தவர் உள் அடமானம் இருப்பதை யறிந்துதான் முதல் கடனை அடைத்தார் என்று ரூபித்தால் உள் அடமானம் செல்லும் 4 லாவீக்லி 502

### Reversioner and Alienation by Widow.

**அனந்தரவார்ஸும் விதவைசெய்த பராதீனமும்.**—ஒரு விதவைசெய்த பராதீனத்தை ஆக்ஷேபித்து வ்யாஜ்யம்போட விரும்பும் ஒரு தூர அனந்தரவார்ஸானவர், அப்படி வ்யாஜ்யம் நடத்துமுன் நெருங்கின அனந்தரவார்ஸுகள் வ்யாஜ்யம் போடுவதற்கான பாத்யதையை இழந்துவிட்டதாகவோ, அல்லது, வ்யாஜ்யம் போடுவதற்கு அவர்களுக்குள்ள பாத்யதையைக் காலாவதியாகும்படி விட்டதாகவோ ரூபிக்க வேண்டும்.

## SOCIETY AND RELIGION.

## ஜன ஸமூகமும் மதமும்.

### SONGS ON LORD SUBRAMANYA.

ஸ்ரீ சிவஸுப்ரமண்ய நாமாவளி.

1. சரவணபவனே பரதெய்வம்
தாணியிலவனே மெய்த்தெய்வம்.
2. பக்தர்க்கிரங்கும் விசுவாசன்
பழனிப்பதிவாழ் முருகேசன்.
3. முருகன்திருவடி தரிசனமே
முத்திக்கொருதுணை யறிமனமே.
4. சரவணபவகுக வெனவருயே
சத்தியஞானத் திருவுளமே.
5. பவப்பிணியொழிந்திடு மருந்துண்டு-அது
பன்னிருதிருக்கரன் திருத்தொண்டு.
6. கதிர்வடிவேலன் திருவடியே
கதிதரும்துணையதை நீ பிடியே.
7. வாழ்வினைப்பொய்யென மதிமனமே
மயிலனைமெய்யெனத் துதிதினமே.
8. சண்முகசுந்தர வேலவனே
சங்கரியீன்றருள் பாலகனே.
9. சீரலையாய்வரு தேசிகனே
மூரலைவாய்வுள்ளி நாயகனே.
10. சங்கரனுதல்வளர் கண்மணியே
எங்களையடிமைகொள் ஷண்முகனே.
11. மரகதமயின்மிசை வருமுருகா
முராஹரிதனக்கொரு திருமருகா.
12. அறுமுகன்திருவடி மலர்மறவோம்
அவனியிலேயினி யாம்பிறவோம்.
13. அரகரமுருகா வெனத்தொழுவோம்
அளவிலானந்தத் துட்னெழுவோம்.
14. கந்தனை வன்பினை செய்யுங்கள்
சிந்தனையவனடி வையுங்கள்.
15. வேலாயுதனை வேண்டுங்கள்
வெய்யபிறவியைத் தாண்டுங்கள்.
16. வடிவேலா வடிவேலா
வள்ளிமணாளா வடிவேலா.
17. குமரேசா குமரேசா
குஞ்சரிநேசா குமரேசா.
18. முருகேசா முருகேசா
முகுந்தன்மருகா முருகேசா.
19. சரவணபவகுக சரவணபவகுக
சரவணபவகுக வ[illegible]னே. (சர)
20. திரிபுரதகனனுக் கருமறை யுரைதரும்
அரஹரா சிவசிவ ஷண்முகனே. (சர)
21. மரகத மயின்மிசை யடியவ ரிடர்பட
வருமுராஹரிதிரு மருமகனே. (சர)

'இந்துநேச'னில் வாகவி திரு அ. ஸுப்ரமண்யபாரதி.

### Marriage among Nattukkottai Chetties.

**நகரத்தார்களுக்குள் விவாகம்.**—தர்மத்தை அனுஸரித்து சத்ரம், பாடசாலை, ஆலயத்திருப்பணி, ப்ராம்மண ஆராதிப்பு முதலிய நற்கருமங்களைச் செய்துவரும் நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் தங்களினத்தில் செய்யும் விவாகத்தையும் விசாரித்து நடத்த வேண்டியிருக்க, அதில் மட்டும் எந்த வகுப்பார்களையும் பின்பற்ருமலும், சாஸ்த்ரத்தையும், ஆரோக்யத்தைத்தந்து ஸுக ஜீவிகளாக இருக்க ஏற்பட்டிருக்கும் வைத்ய சாஸ்த்ரத்தையும் புறக்கணித்துத் தங்கள் ஆண்பெண்களுக்கு விவாகம்முடிக்கிருர்களென்று ஒருவ்ருபர் 'வித்தியாபானு'வில் எழுதுகிருர். எப்படியென்ருல், மிகப் பணம் படைத்தவர்கள் வீட்டிலுள்ள பெண்கள் 15,20, வயதி ஆனவர்களாக இருந்தாலும், அப்பெண்களை 8,10,12, வயதிற்கதிகப்படாத ஆண்களுக்குப் பாணிக்ரஹணஞ் செய்ய ஸம்மதித்து நடத்திவிடுகிருர்கள் தாயாரும் பிள்ளையும், அக்காளுந் தம்பியும், பாட்டியும் பேரனும், என்று மதிக்கும்படி இந்த வினத்து தம்பதிகள் பலரிருப்பதை ஸகலரும் பார்க்கலாம். ஸமீபத்திலிரண்டு விவாகங்கள் நடந்தன. ஒரு பெண்ணிற்கு வயது 20. இன்னொரு பெண்ணுக்கு வயது 16. பையன்களுக்கு வயது முறையே 12, 14 தான்.

மேற்சென்ன ஙிருபர் இப்படிப்பட்ட விவாகங்களில், பையன்கள் பெரியவர்களாவதற்குமுன் மனைவிகள் கிழப்பருவ மடைந்து விடுவதோடு, அநேக வசைமொழிகளுக்கு ஆளாக வேண்டியிருக்கிறதென்றும், சிறுவர்கள் வயது வந்தபின் பற்பலவிதத்தில் கெட்டுப் போக நேரிடுகிறதென்றும், ஆகையால் இத்தகைய விவாகங்களை நிறுத்திவிட்டு, மற்ற ஜாதியாரைப்போல் பெண்ணை அவளைவிட வயதில் பெரிய பையன்களுக்குக் கல்யாணம் செய்துகொடுக்க வேண்டுமென்றும் எழுதுகிருர்.



## HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### Fixing Blades of Knives in Handles.

**கத்திகளை பிடிகளில் பொருந்திவைக்க.**—பிடிகளில் கத்திகளைப் பொருத்தி வைப்பதற்கு, பிடிகளில் த்வாரம் செய்து, அந்த த்வாரத்தில் பின் வரும் பசைகளுள் ஒன்றை ஊற்றவேண்டும். பிறகு கத்தியின் இரும்புப் பிடியை த்வாரத்துக்குள் செலுத்திவிட்டால் பசை நன்ருய்ப் பிடித்துக் கொள்ளும்.

(1) 4 பாகம் ரோசனம், 1 பாகம் தேன் மெழுகு; இவை இரண்டையும் சேர்த்துருக்கி நன்ருய்ப் பொடி செய்த செங்கல்தூள் 1 பாகம் சேர்த்து பிடியின் த்வாரத்தில் ஊற்றவும். இதை உபயோகிப்பதில் கத்தியானது தந்தம் முதலியவைகளால் செய்யப்பட்ட பிடியில் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளும்.

(2) ரோசனத்தோடு கொஞ்சம் பொடிசெய்த சாக்கட்டியாவது, தாளித்த சுண்ணும்புத் தூளாவது, கலந்து பிடியிலுள்ள த்வாரத்தில் நிறையப்போட்டு, கத்தியின பிடிபாகத்தைச் சூடாக்கி த்வாரத்தில் பொருத்தவும். கத்தி ஆறினதும், அது பிடியில் நன்ருய் ஒட்டிக் கொண்டிருக்கும்.

(3) 1 ராத்தல் ரோசனம், 8 ஔன்ஸ் கந்தகம் இவைகளை ஒன்ருய்ச் சேர்த்து உருக்கி கட்டிகளாக வார்த்து, ஆறினபிறகு பொடிசெய்து வைத்துக்கொள்ளவும். இதில் ஒரு பாகம் எடுத்து ½ பாகம் அரப்பொடியோ, செங்கல்தூளோ, நயமான மணலோ சேர்த்து பிடியின் த்வாரத்தில் பேரிட்டு நிரப்பவும். கத்தியின் அடிப்பாகத்தை நெருப்பில் காய்ச்சி, பிடியின் த்வாரத்தில் சொருகவும். இரண்டும் ஒட்டிக்கொள்ளும்.

### Cementing BrokenParts of Wooden Articles

**ஒடிந்தமரஸாமானை ஒட்டுதல்.**—மரஸாமான் உடைந்தால் அல்லது முறிந்தால் 3- அவுன்ஸ் வஜ்ரத்தை ஒரு பித்தளைப் பாத்ரத்தில் ஊறவைத்து ஒரு நாள் சென்றபின், அடுப்பில் இருப்புச் சட்டியில் ஜலம் கொதிக்கவைத்து அந்த ஜலத்துக்குள் முன் சொல்லிய வஜ்ரப் பாத்ரத்தை வைத்துக்காய்ச்சி, அரை அவுன்ஸ் சீமைச் சுண்ணும்பையும் அரை அவுன்ஸ் மாத்தூளையும் வஜ்ரத்தில் போட்டுக் கலக்கி ஒடிந்த மர ஸாமானின் இரண்டு பாகத்தையும் சூடுகாட்டி வஜ்ரக் கலவையை ஒட்டவேண்டிய விடத்திற் பூசி ஒட்டிவைத்துக் காயவைத்தால் நன்ருய் ஒட்டிப்பிடிக்கும்.—ஸகலகலாவல்லி.

### Destruction of Flies.

**ஈக்களைக்கொல்ல ஒரு உபாயம்.**—ஈக்களைக் கொல்ல மெஸபொடோமியாவில் அனுஷ்டிக்கப்பட்ட ஒரு உபாயத்தை மிஸ்டர் மாக்ஸ்வெல் லெப்ராய் என்பவர் ஒரு பத்ரிகையில் எழுதியிருக்கிருர். பாஷாணத்தையும் வெல்லத்தையும் ஜலத்தில் கரைத்து அந்த ஜலத்தில் ஒரு சாக்கை நனைத்துத் தொங்கவிட்டால், உடனே அதன்மேல் ஈக்கள் மொய்த்து, விஷத்தை நக்கி மாண்டு போகின்றனவாம்.

### A Tooth Powder Recipe.

**கருவேலங்காய்ப் பற்பொடி.**—நன்ருய் முற்றிக் காய்ந்த கருவேலங்காய்களை வெயிலிலுலர்த்தி, விதைகளை வேருக்கி, காயின் தோல் சதை இவைகளை கல்லுரலில்போட்டு இடித்து சூர்ணமாக்கி அதைப் பற்பொடியாக உபயோகிக்கலாம். இந்தச் சூர்ணம் துவர்ப்புடையதாகையால், இது பல்லுக்கும் ஈறுகளுக்கு மத்தியில் உண்டாகும் பூச்சிகளை வேரோடற்றுப் போகும்படிசெய்யும். இதற்கு அதிகசெலவும் இல்லை. பல்வலியால் அவஸ்தைப்பட வேண்டியதுமில்லை.—நடேசன்.

### Cracked Dishes.

**விரிந்துபோன பீங்கான் தட்டுகள்.**—விரிந்திருக்கும் பீங்கான் தட்டுகளை வேறொரு பாத்ரத்தில் வைத்து தட்டுகள் மூழ்கும்படி, பாத்ரத்தில் வேண்டியவளவு பாலைவிட்டு 45 மணிநேரம் பாலைக் கொதிக்கவைத்தால், விரிசல்கள் பசைபோட்டு ஒட்டினதுபோல் ஒட்டிக் கொள்ளுமாம். இப்படி செப்பனிட்ட தட்டுகள் புதுத்தட்டு எவ்வளவு காலம் உபயோகப்படுமோ அவ்வளவு காலம் உபயோகப்படுமாம்.

### New Boots.

**புது பூட்ஸுகள்.**—புது பூட்ஸுகளுக்கு வார்னிஷ் பூசுமுன் ஒரு எலுமிச்சம்பழத்தை அறுத்து அதில் ஒரு மூடியை எடுத்து அதனுல் ஜோட்டின்மேல் தேய்க்க வேண்டும். தோல் ஈரமில்லாதபடி உலர்ந்தபிறகு வார்னிஷ் பூசினுல் ஜோடுபளபளப்பாயிருக்கும்.

### To Clean Lamp Chimneys.

**விளக்குச்சிம்னிகளைத் துடைக்க.**—ஸமாசாரப் பத்ரிகைத்தாளில் ஒரு துண்டெடுத்து அதில் கொஞ்சம் கிரொஸின் எண்ணெயைவிட்டு, அந்தக் கடுதாசியால் சிம்னியைத்துடைத்தால், அது சுத்தமாகிவிடும்.

# AGRICULTURE.

## விவஸாயம்.

### Seed Stores.

**விதை ஸ்டோர்கள்.**—இந்த மாஸம் நடந்த சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் ஆனரபிள் மிஸ்டர் கே. ஆர். வி. க்ருஷ்ணராவ், விவஸாயிகளுக்கு நல்ல விதைகளை ஸப்ளைசெய்வதற்காக விவஸாய டிபார்ட்மெண்டாலும், கோவாபரெடிவ் ஸங்கங்களாலும் நிர்வஹிக்கப்பட்டுவரும் விதை ஸ்டோர்கள் எத்தனையென்றும், எந்தெந்த ஜில்லாக்களில் எத்தனை ஸ்டோர்கள் இருக்கின்றனவென்றும், சென்றவருஷத்தில் அவைகளால் எவ்வளவு விதை விவஸாயிகளுக்குக் கொடுக்கப்பட்டனவென்றும் தெரிவிக்கும்படி கவர்ன்மெண்டாரைக் கேட்டார். அதற்கு கவர்ன்மெண்டார் பின்வருமாறு பதில் சொன்னார்கள். எத்தனை ஸ்டோர்களிருக்கின்றனவென்பதற்கும் அவைகள் எந்தெந்த ஜில்லாக்களில் இருக்கின்றனவென்பதற்கும் பூர்த்தியான விவரங்கள் கவர்ன்மெண்டாரிடம் இல்லை. கவர்ன்மெண்டார் நிர்வகித்துவரும் 10-விவஸாயபண்ணைகளிலிருந்தும் விதைகள் விவஸாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றன. இவைகளைத் தவிர பருத்திவிதை ஸப்ளைசெய்வதற்காக, கர்நூல், பெல்லாரி, திருநெல்வேலி, ராமநாதபுரம், மதுரை ஜில்லாக்களிலும், பசுந்தாள் உரப்பயிர் விதைகளை ஸப்ளைசெய்வதற்காக தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, திருச்சிநாப்பள்ளி, தென்னாற்காடு, செங்கல்பட்டு முதலிய ஜில்லாக்களிலும் டிபோக்கள் இருக்கின்றன. எந்தெந்தவிடத்தில் விதைகள் வேண்டியிருக்குமோ அங்கங்கே இவைகள் ஸ்தாபிக்கப்படுமாதலால், இவைகளின் ஸங்க்யையும் இடமும் அடிக்கடிமாறும். இவைகளோடு திருநெல்வேலி, தென்னாற்காடு ஜில்லாக்களிலுள்ள கோவாபரெடிவ் ஸங்கங்கள் மூலமாகவும், மதுரை, கும்பகோணம் ஆகிய இவைகளிலுள்ள விவஸாய ஸங்கங்களின் மூலமாகவும் கவர்ன்மெண்டார் விதைகள் ஸப்ளைசெய்து வருகிறார்கள். 8 கோவாபரெடிவ் ஸங்கங்கள் விதைகள் ஸப்ளை செய்துவருகின்றன. இந்த ஸங்கங்கள் திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம், தஞ்சாவூர், தென்னாற்காடு, செங்கல்பட்டு ஜில்லாக்களில் இருக்கின்றன.

1915-16-ம் வர்ஷத்தில் விவஸாய டிபார்ட்மெண்டார் ஸப்ளைசெய்த விதைகளின் அளவு, கணக்குகள் கிடைத்தமட்டில், பின்வருமாறு

| | | |
|---|---|---|
| பருத்தி | 3,61,018 | ராத்தல் |
| பசுந்தாள் பயிர் | 1,70,515 | ,, |
| நெல் | 42,394 | ,, |
| கரும்பு | 69,808 | கழிகள் |
| அவுரி | 19,528 | ராத்தல் |
| மற்றவைகள் | 2,775 | ,, |

இந்தக் கணக்குகளில் பருத்தி, பசுந்தாள் பயிர் விதைகளுக்கான கணக்குகள் பூர்த்தியானவை. மற்றவை பூர்த்தியானவையல்ல.

கோவாபரெடிவ் ஸங்கங்கள் ஸப்ளைசெய்த விதைகளின் அளவு பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| நெல் | 50 | ரூபா மதிப்புள்ளது |
| பருத்தி | 34,728¾ | ராத்தல் |
| சோளம் | 1000 | படி |
| உளுந்து | 10 | படி |
| நந்தியால் அவுரி | 5 | மூட்டைகள் |
| காக்கிநடா அவுரி | 1 | மூட்டை |

### Green Manure and Swamp Paddy.

**பசுந்தாள்பயிரும் நன்செய் நெல்பயிரும்.**—தஞ்சாவூர் ஜில்லாவில் நெல்பயிருக்கு தழையெருப் போடுவதில் அனுஸரிக்கும் வழக்கமென்னவென்றால், நாற்று நடுவதற்கு பத்துநாள்களுக்குமுன் பசுந்தாள் பயிரை வெட்டி பச்சையாக அப்படியே நிலத்தில் போட்டு மிதித்து அழுகவைக்கிறார்கள். இது ஒருநல்ல முறையென்று, பசுந்தாள்பயிரை எருவாகப்போடுவது விஷயமாய் மங்கநல்லூர் விவஸாயப் பண்ணையில் செய்த பரீக்ஷைகளால் தெரியவருகிறது. இன்னும் தழையைப்போட்டு மிதிக்குமுன் எக்கருக்கு 5-ராத்தல்வீதம் சுண்ணாம்பை உபயோகித்தால் தான்யம் அதிகமாகக் கிடைக்கிறதாம்.

### Pigs and Cotton Seed.

**பன்றிகளும் பருத்திக்கொட்டையும்.**—பன்றிகளுக்குப் பருத்திக்கொட்டையை ஆகாரமாகக் கொடுத்துவந்தால் சில வாரங்களில் அப்பன்றிகளுக்குக் கண் தெரியாமற் போவதோடு, அவைகள் நொண்டியும் ஆகின்றனவாம்.—க்ருஷிகன்.



# CO-OPERATION.

## கோவாபரேஷன்.

### Co-operation in Madras.

சென்னையில் கோவாபரேஷன் — இந்தியாவிலுள்ள பல மாகாணங்களில் கோவாபரேஷனைப் பற்றிய கணக்குகளை ஆராய்ந்து பார்த்தால் நமது ராஜதானி பல அம்சங்களில் வேறு மாகாணங்களை விடத் தாழ்ந்ததாயிருக்கிறதென்று தெரியவருகிறது. சிறிய மாகாணங்களாகிய ஆஜ்மீர் மீர்வாரா, குடகு, பரோடா ஸமஸ்தானம் ஆகிய இவைகளைக் கணக்கில் சேர்க்காமல் பார்ப்போம். ஏனென்றால் இவைகள் ஸ்வல்ப விஸ்தீரணமும் ஜனத்தொகையுமுள்ளனவாயிருப்பதால், இவைகளில் சில ஸங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டாலும் கோவாபரேஷன் அதிகமாக அபிவ்ருத்தியடைந்திருப்பதாகத் தோற்றும். ஆகையால் பெரிய மாகாணங்களை மாத்ரம் கவனிப்போம்.

பஞ்சாபில் மொத்த விஸ்தீரணத்தில் 1000 சதுர மைலுக்கு 33 வீதம் ஸங்கங்கள் இருக்கின்றன. ஐக்ய மாகாணங்களில் 26 ஸங்கங்கள் இருக்கின்றன. வங்காளத்தில் 25 ஸங்கங்கள் இருக்கின்றன. ஆனால் சென்னை ராஜதானியிலோ 1000 சதுரமைல் விஸ்தீரணத்துக்கு 11 ஸங்கங்கள் வீதந்தானிருக்கின்றன.

ஜனத்தொகைக் கணக்கின்படி பார்த்தாலும் சென்னை ராஜதானி தாழ்ந்ததாகவே இருக்கிறது. பஞ்சாபிலும், மத்ய மாகாணங்களிலும் 1-லக்ஷம் ஜனங்களுக்கு 17 வீதம் ஸங்கங்கள் இருக்கின்றன. சென்னை ராஜதானியிலோ, 1-லக்ஷம் ஜனங்களுக்கு 4-வீதந்தானிருக்கிறது. மொத்தம் ஜனத்தொகையில் ஒரு லக்ஷம் பேருக்கு 795-பேர்கள் வீதம் பஞ்சாப் மாகாணத்தில் மெம்பர்களிருக்கிறார்கள். பம்பாய் ராஜதானியில் லக்ஷத்துக்கு 439 பேர்கள் மெம்பர்களிருக்கிறார்கள். சென்னை ராஜதானியிலோ லக்ஷத்துக்கு 287 பேர்கள்தான் கோவாபரெடிவ் ஸங்கங்களில் மெம்பர்கள்.

கோவாபரெடிவ் ஸங்கங்களின் மொத்த நடை முதல் பணம் இதுவரையில் நமது ராஜதானியில்தான் அதிகமென்று எண்ணிவந்தோம். ஆனால் இப்போது பஞ்சாபில் மற்ற மாகாணங்களில் விட அதிகமாயிருக்கிறது. பஞ்சாபின் நடை முதல் பணம் ரூ. 1,91,39,000; சென்னை ராஜதானியின் நடை முதல் பணம் ரூ. 1,42,10,000. இந்த விவரங்களைப் பார்த்தால் நமது ராஜதானி கோவாபரேஷனில் இன்னும் அபிவ்ருத்தியடையவேண்டுமென்று தெரிகிறது.

### Co-operative Water Supply.

**கோவாபரேஷன் முறையில் ஜலம் பாய்ச்சுதல்.**—வடக்கே ஐக்யமாகாணங்களில் சிலகோவாபரெடிவ் ஸங்கங்கள் அவைகளிலிருக்கும் மெம்பர்களுடைய நிலங்களுக்குக் கோவாபரேஷன் முறையில் ஜலம்பாய்ச்ச ஏற்பாடுகள் செய்துவருகின்றன. அங்குள்ள ஸுல்டான்பூர் ஜில்லாவில் இரண்டு மூன்று க்ராம ஸங்கங்கள் இதற்காக ஒன்று சேர்ந்துகொண்டிருக்கின்றன. இந்த ஏற்பாட்டின்படி க்ராமங்களுக்குப் பக்கத்தில் ஓடும் கும்தியென்னும் நதியிலிருந்து பம்புகளால் ஜலம் இறைத்து, க்ராமங்களுக்குக் கொண்டுபோய் மெம்பர்களுடைய நிலங்களுக்குப் பாய்ச்சுவார்கள். இந்த ஏற்பாட்டுக்காகும் யந்த்ரங்கள் முதலியவற்றின் செலவை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொள்வார்கள். கவர்ன்மெண்டார் இதற்குசெலவழிக்கும் தொகையைஸங்கங்களிடமிருந்து தவணைவாரியாக வஸூல் செய்துகொள்வார்கள். ஸங்கத்தார், மெம்பர்கள் உபயோகிக்கும் ஜலத்துக்கு ஒரு தீர்வை விகிதம் ஏற்படுத்திக்கொண்டு, மெம்பர்கள் நீர்பாய்ச்சும் நிலங்களின் விஸ்தீரணத்துக்குத் தகுந்தபடி பணம் வஸூலிப்பார்கள்.

இந்த மாகாணத்தின் மேற்கு ஜில்லாக்களிலும் இப்படிப்பட்ட கோவாபரேஷன் முயற்சிகள் ஆரம்பமாயிருக்கின்றனவாம்.

### Co-operation in Allahabad.

**அலஹாபாத்தில் கோவாபரேஷன்** — அலஹாபாத்திலுள்ள ஜில்லா கோவாபரெடிவ் பாங்கின் வர்ஷாந்தர மீட்டிங் ஸமீபத்தில் நடைபெற்றபோது, ஸங்கத்தார் தர்மகார்யங்களுக்காக எடுத்து வைத்திருக்கும் 129-ரூ. சொச்சத்தைக்கொண்டு உயர்ந்த விதைக்கோதுமை வாங்கி விவஸாயிகளுக்கான கோவாபரெடிவ் ஸங்கங்களின் மெம்பர்களில் சிலருக்கு இனாமாகக் கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள். விவஸாயத் தொழிலில் அமர்ந்திருக்கும் மெம்பர்களை விதைப்பதற்கு உயர்ந்த விதைகளை உபயோகிக்கும்படி தூண்டவே இந்தத் தீர்மானத்தின் நோக்கமாகும். அந்தஸங்கத்தார் தங்களிடம் உள்ள வியாபாரிகளுடைய நன்மையை உத்தேசித்து ஒரு ப்ராவிடெண்ட் பண்டு ஸ்தாபிக்கப் போகிறார்கள்.

மெம்பர்களுக்கு விவஸாய கருவிகளும் உயர்ந்த விதை தான்யங்களும் வாங்கி விற்பதற்காக அந்த ஊரில் ஒரு விவஸாய ஸங்கமொன்று சீக்ரம் ஸ்தாபிக்கப்படுமென்று தெரிகிறது.

# COMMERCE.

## வ்யாபாரம்.

### Twelve Business Principles.

**12-வ்யாபார நீதிகள்.**—(1) எந்தத் தொழில் அல்லது வ்யாபாரம் ஆரம்பிக்கவேண்டுமென்றாலும், அதை நல்ல நிலைமையில் நடத்துவதற்கு எவ்வளவு மூலதனம் வேண்டியிருக்குமோ அது கையிலில்லாதவரையில் தொழிலாரம்பிக்கக்கூடாது.

(2) இன்ன இடத்தில் தொழில் நடத்தினால் நமக்கு சௌகர்யமாயிருக்குமென்று எண்ணி அந்த இடத்தில் தொழிலாரம்பிக்கக் கூடாது. எந்த இடத்தில் தொழில் ஏற்படுத்த வேண்டுமோ அவ்விடத்தின் நிலைமை தொழிலுக்கு ஏற்றதா என்பதை ஆராய்ந்து பார்த்து, சரியாயிருந்து தொழில் வ்ருத்தியடையுமென்று தோன்றினால் மட்டும் அந்தவிடத்தில் தொழிலாரம்பிக்கவேண்டும்.

(3) தொழில் ஸ்தாபிப்பதற்கு இடம் தெரிந்தெடுப்பதில் இடத்தின் வாடகை குறைவாயிருப்பதுதான் லாபகரமானதென்று எண்ணக்கூடாது. அவ்விடத்துக்கு வாடிக்கைக்காரர்கள் ஸுலபமாய் வரக்கூடுமோ என்பதை கவனிக்கவேண்டும். வாடிக்கைக்காரர்கள் வரக்கூடிய இடத்தில் தொழில் நடத்தினாலும், வாடிக்கைக்காரர்களுடைய வீடுவீடாய்ப் போய் வ்யாபாரம் நடத்தலாமென்று எண்ணுவதும் பிசகு. அதிகமான வாடிக்கைக்காரர்கள் சௌகர்யமாகக் கடைக்கு வரக்கூடிய இடத்தில் அதிக வாடகை கொடுத்தாவது வீடு எடுத்துக்கொள்வதுதான் நல்லது. அடிக்கடி வாடிக்கைக்காரர்களைத் தேடிப்போவதில் காலம் வீணாய்ப் போகவிடுவதைவிட சௌகர்யமான இடத்தில் அதிக வாடகை கொடுப்பது நல்லது. ஆனால் தொழிலின் அளவுக்குத் தக்கபடி வாடகை மிதமாயிருக்கவேண்டும்.

(4) கடன் வைத்துக்கொள்வது நல்லதல்ல, ஆனால் கடனுக்குப் பயந்து புது யந்த்ரங்கள் வாங்காமல் பழையவைகளையே வைத்துக்கொள்வது சலாக்யமானதல்ல. புது யந்த்ரங்கள் வாங்குவது நல்லதே.

(5) நஷ்டம்வந்த கம்பெனிகளையும், லாபம்வராவில்லையென்றெண்ணி முதலாளிகள் விற்றுவிட எண்ணியிருக்கும் தொழில்களையும் விலைக்கு வாங்குவது கூடாது. அவைகளிலுள்ள பழைய சரக்குகளை விற்பது கஷ்டமாயிருக்கும்.

(6) பிற வ்யாபாரிகளை யோக்யமானவர்களென்றே எண்ணி யிருக்கவேண்டும். வாடிக்கைக்காரர்கள் மற்ற வ்யாபாரிகளைப்பற்றிச் சொல்லும் குற்றம் குறைகளையெல்லாம் நம்பிவிடக்கூடாது.

(7) வாங்க வருகிறவர்களிடம் மரியாதையாய் நடந்து கொள்ளவேண்டும். ஒரு ஸாமானுக்கு இன்னொரு ஸாமான் கொடுத்தும், ஒன்றைப்போலவே இன்னொரு ஸாமான் இருக்கிறதென்று சொல்லியும் அவர்களை ஏமாற்றக்கூடாது. அவர்களிடம் நமக்குத் தெரிந்த வ்யாபார ரகஸ்யங்களைச் சொல்லக்கூடாது.

(8) தெரியாதவர்களுக்கு ரொக்கத்துக்கே விற்க வேண்டும். எல்லாருக்கும் கூடியமட்டும் குறைவாகவே கடனுக்குக் கொடுக்கவேண்டும். அதிக காலத்துக்குக் கடனை வஸூலிக்காமலிருந்தால், பத்துக்கு ஒருவர் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுக்காமல்போவார். பாக்கி 9 பேர்களால் வரும் லாபத்தைவிட அதிகமாகவே அந்த பத்தாவது பேர்வழியால் நஷ்டமேற்படும்.

(9) ஸாமர்த்யமுள்ள வியக்திகளை வேலைக்கு வைத்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு நல்ல சம்பளம் கொடுக்க வேண்டும். அவர்களை நன்றாய் நடத்திவந்தால், அவர்கள் நமது வ்யாபாரம் வ்ருத்தியடைவதில் ஊக்கங்கொள்வார்கள்.

(10) வ்யாபாரத்துக்கு வேண்டிய ஸாமான்களை ரொக்கத்துக்கு வாங்கவேண்டும். அப்படி ரொக்கம் கொடுத்து வாங்குவதற்காக கமிஷன் தள்ளிக்கொடுக்கும்படி கேட்கவேண்டும்.

(11) என்னலாபம் கிடைத்து வருகிறதென்பதைப் பிறரிடம் சொல்லக்கூடாது. சொன்னால் வ்யாபாரிகளுக்குள் போட்டி ஏற்படும்.

(12) வ்யாபாரம் நிலைத்துவிட்டால், பிசுனாரித்தனமாயிராமல், மற்ற வ்யாபாரிகளும் லாபமடையட்டும் என்றுவிடவேண்டும்.

### Use of Waste.

கழிக்கப்பட்ட பொருள்களை உபயோகிப்பது—இதுவரை ஏராளமாய் ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த கழிக்கப்பட்ட பருத்தியிலிருந்து மட்டமான துணிகள், போர்வைகள், துண்டுகள் முதலியவைகள் நெய்வதற்காக பம்பாயில் ஒரு புது மில் ரெஜிஸ்டராகி யிருக்கிறது இதன் மூலதனம் 20 லக்ஷம் ரூபாயாகும். இந்த மில்லின் பெயர் ப்ரீமியர் மில்ஸ், லிமிடெட். இதில் 590 தறிகள் வேலை செய்யுமாம்.



# ECONOMIC PRODUCTS.

## விலையுள்ள பொருள்கள்.

### Tobacco Ash

புகையிலைச் சாம்பல்.—புகையிலைச் செடியின் எல்லா பாகங்களிலும் பொட்டாஷ் என்னும் ரஸாயனப் பொருள் ரொம்ப இருக்கிறது. புகையிலையின் இலைப்பாகம் மாத்ரம் சுருட்டு முதலியவைகள் செய்ய உபயோகப்படுகிறது. பாக்கியாயுள்ள காம்பும் அடித்தண்டும், சுருட்டு முதலியவைகள் செய்வதில் ஏற்படும் கழிவுப் பொருளும் அநேகமாய் வீணாகப்போகின்றன. இப்போது அமெரிக்காவில் வீணாகப்போகும் இந்தப் பாகங்களை பொடாஷ் செய்வதில் உபயோகித்துவருகிறார்கள்.

இலையிலும் பொடாஷ் இருக்கிறதென்றாலும் அதை சுருட்டு, ஸிகரெட்டு முதலியவைகளுக்கு உபயோகிப்பதால், அதிலுள்ள பொட்டாஷ் வீணாகப்போகிறது. இப்போது இங்கிலண்டில் ஒருவர் அதில் உள்ள பொட்டாஷையும் சேகரம்செய்ய முயற்சி செய்யவேண்டுமென்கிறார். சுருட்டைக் குடிப்பதால் கிடைக்கும் சாம்பலும், குடிக்காமல் விட்டுவிடும் பாகமும் சேர்ந்து மொத்தம் சுருட்டின் நிறையில் 100-க்கு 30 பாகமாகிறது. இந்த சாம்பலிலிருந்து ஐந்திலொருபாகம் பொட்டாஷ் என்னும் பொருள் கிடைக்குமாம். அதாவது 100 பாகம் புகையிலையில் 6 பாகம் பொட்டாஷ் கிடைக்கும். 100 பாகம் புகையிலைச் சாம்பலில் 20 பாகம் பொடாஷ் கிடைக்கும்.

இப்போது ஜனங்கள் சுருட்டுக் குடிப்பதில் இந்த சாம்பலைப் பற்றி கவனிப்பதில்லையாகையால் இந்த முக்யமான பொருள் வீணாகிவருகிறது. சற்றுச்ரமமெடுத்து புகையிலைச் சாம்பலை சேகரிக்கத்தக்க ஏற்பாடுகள் செய்தால் வீணாய்ப்போகும் இந்தச் சாம்பலிலிருந்து பொட்டாஷ் எடுக்க ஏற்பாடு செய்யலாமென்று மேற்சொன்ன கனவான் தெரிவிக்கிறார். மேலும் இந்தப் புகையிலைச் சாம்பலில் 100-க்கு [illegible] [illegible] இருக்கிறது. இதுவும் [illegible] உபயோகப்படுமாம்.

ஒவ்வொருவரும் உபயோகிக்கும் சுருட்டு முதலியவைகளிலிருந்து விழும் சாம்பலை சேகரிப்பது ஸாத்யமல்லவென்று பலருக்குத் தோன்றலாம். அந்தந்த தேசத்தில் இது அதிக ச்ரமமாயிருக்காதென்று தோன்றுகிறது. ஹோட்டல்களுக்கும் சிற்றுண்டிக் கடைகளுக்கும், பொது ஸ்தலங்களுக்கும் வரும் ஜனங்கள் சுருட்டு, ஸிகரெட்டு குடித்தால் அவைகளிலிருந்து சாம்பல் விழுவது நிச்சயம். சுருட்டுக்குடிக்கும் அறையில் சாம்பலைத் தரையில் விழவிடுவது அறையைக் கெடுத்துவிடுமாகையால், அதற்காக தட்டுகள் அங்கங்கே வைத்திருப்பதுண்டு. அவைகளில் விழும் சாம்பலை தூரக்கொட்டிவிடுகிறார்கள். இப்போது செய்யவேண்டியதெல்லாம் என்னவென்றால், தட்டுகளிலுள்ள சாம்பலை ஒரு பெரிய தொட்டியில் கொட்டிச் சேர்க்க வேண்டியதே. இதனால் ஹோட்டல்காரர்களுக்கு லாபம் கிடைத்து வருவதோடு, வீணாய்ப்போகும் சாம்பலை உபயோகிக்கவும் மார்க்கமேற்படும். வீடுகளில் விழும் காய்கறிக் குப்பைகளிலும், கடைத்தெருக்களில் விழும் காய்கறிக் குப்பைகளிலும் பொட்டாஷ் இருக்கிறது. இவைகளையும் சேகரித்தால் இரண்டிலிருந்தும் பொட்டாஷ் தயார்செய்யலாம். இதற்காகத் தொழில் ஸ்தாபிப்பதால் ஜனங்களுக்கு வேலை [illegible] தோடு, இங்கிலண்டுக்கு வேண்டியிருக்கும் [illegible] அத்தனை பொருள்களை ஜெர்மனிபோன்ற அன்ய தேசங்களிலிருந்து வரவழைக்க அவசியமேற்படாது. தற்போது இங்கிலண்டில் உபயோகப் படுத்தும் சுருட்டு, புகையிலை இவைகளின் நிறை 44,589 டன் ஆகும். இதிலிருந்து 13,349 டன் சாம்பல் கிடைக்கும். இந்த சாம்பலிலிருந்து $7\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள 2,672 டன் பொட்டாஷ் கிடைக்கும் [illegible]. எல்லா சாம்பலையும் சேகரிக்க முடியாதானால், இந்த மதிப்புத் தொகையில் கொஞ்சங் குறைவு ஏற்படலாம்.

### A Substitute for Jute.

சணலுக்கு ப்ரதி.—இப்போது சணலுக்குப் பதிலாக ஒரு நார்ச்செடி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு உரினா லோபட்டா என்று பெயர். [illegible] மடகாஸ்கர், பிரேஸில் முதலிய [illegible] [illegible] வளருகிறது. [illegible] [illegible] சணலைப்போலவே [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] செய்யவும், [illegible] [illegible] உபயோகப்பட்டு வருகிறது. மடகாஸ்கர் [illegible] இதை சாஸ்த்ரோக்தமாய் பயிர்செய்ய ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

## BOYS' PAGE.

## பையன்கள் பக்கம்.

**Miniature Railways**

**ரொம்ப சிறிய 'ரெயில்வேக்கள்.**—நமது நாட்டுச் சிறுவர்கள் சிறுமிகள் விளையாட்டு ரெயில் வண்டிகளையும், மோட்டார் வண்டிகளையும் வாங்கி விளையாடுகிறார்கள். இவைகள் சாவிகொடுத்தால் தான் ஓடும்.

ஆனால் வாஸ்தவமான ரெயில் வண்டிகளுக்கு சாவி கொடுப்பதில்லை. நீராவியின் விசையால் அவை ஓடுகின்றன. வாஸ்தவத்துக்கு ஒத்துவராத வண்டிகள் சில காலமானதும், சிறுவர்களுடைய மனதைக் கவராமல் போகின்றன. மேலும் அவைகள் சீக்ரம் கெட்டுப் போகின்றன. இங்கிலண்டிலுள்ள சிறுவர்களில் சிலர் இந்தப் பொய்வண்டிகளில் ப்ரியங்கொள்ளாமல் நீராவியால் ஓடக்கூடிய வாஸ்தவமான வண்டிகளை விளையாடுவதற்கு உபயோகிக்கிறார்கள். இந்தச் சிறுவர்கள் பெரும்பான்மையாய் ப்ரபுக்களின் பிள்ளைகளே. வண்டிகள் சிறியவைகளாக இருக்குமேயொழிய மற்றபடி அமைப்பில் பெரிய வண்டிகளுக்கும் இவற்றிற்கும் வித்யாஸம் வெகுவாய் இருப்பதில்லை. அவர்களுடைய பெரிய தோட்டங்களில் இந்த வண்டிகள் ஓடுவதற்காக இருப்புப் பாதைகளையும், மற்ற உபகரணங்களையும் அமைத்து, அவைகளில் இந்தவண்டிகளைவிட்டு வேடிக்கையாகக் காலங் கழிப்பதுண்டு. இந்த வண்டிகள் ஸ்வல்ப பாரமுள்ள ஸாமான்களையும் இழுக்கக்கூடியவை.

சில பெரிய கனவான்கள் இவைகளைவிட சற்றுபெரியனவாய் வண்டிகள் செய்யச்சொல்லி, அவைகளுக்குத் தமது பண்ணைகளில் பாதைகள் அமைத்து, அவைகளில் வண்டிகளை விட்டு, தமது பண்ணையின் ஒரு பாகத்திலிருந்து இன்னொரு பாகத்துக்கு ஸாமான்கள் ஏற்றிக் கொண்டுபோக உபயோகிக்கிறார்கள். இன்னும் சிலர் தமது பண்ணைகளுக்கும் ரெயில்வேஸ்டேஷன்கள், நிலக்கரிச் சுரங்கங்கள், செங்கல் காளவாய்கள் முதலியவைகளுக்கும் வண்டிகள் விட்டு ஸாமான்களை ஸுலபமாகக் கொண்டுபோகிறார்கள். இப்போது ஸ்காட்லண்டில் ஓர் ஊரில் ஒரு ரொம்ப சிறிய இருப்புப்பாதை பொது ஜனங்களின் உபயோகத்துக்காகப் போடப்பட்டிருக்கிறது. அதன் அகலம் $1\frac{1}{4}$ அடிதான். இது உலகத்திலுள்ள ஸதாரண இருப்புப்பாதைகளெல்லாவற்றையும் விடக் குறுகலானது. நமது தேசத்தில் 2-அடி அகலத்துக்குக் குறைவான இருப்புப்பாதையில்லையாது. தென்னிந்திய இருப்புப்பாதை 3-அடி $3\frac{3}{8}$ அங்குலம் அகலமுள்ளது. இதற்கு மீட்டர் கேஜ்என்று பெயர். சென்னை தென்மராட்டா ரெயில்வே $5\frac{1}{2}$ அடி அகலமுள்ளது. இதற்கு ப்ராட்கேஜ் என்றுபெயர்.

**Waves in Sea.**

**கடலில் அலைகள்.** — கடல்களில் புயல்காற்று அடிக்கும்போது, அலைகள் ஏற்பட்டு ஜலத்தில் மிதக்கக்கூடிய பொருள்களை அங்குமிங்கும் தள்ளுகின்றன. அலைகளால் ஜலத்தின் மேலுள்ள பொருள்களேயன்றி, ஜலத்தின் கீழுள்ள பொருள்களும் இருந்தவிடம் விட்டு பெயருகின்றனவாம். அலை எவ்வளவு உயரமிருக்கிறதோ அதைப்போல் 350 மடங்கு ஆழம்வரையில் ஜலம் அசைகிறது. அவ்வளவு ஆழம்வரையில் உள்ள பொருள்களும் இடம் விட்டுப் பெயருமாம். உதாரணமாக, பெருங்காற்று அடித்து 20-அடி உயரமுள்ள அலைகள் உண்டானால், $1\frac{1}{4}$-மைல் ஆழத்துக்கும் ரொம்ப கீழுள்ள பொருள்கள் அலைகளால் பாதிக்கப்படும். சில ஸமயங்களில் இந்த அலைகளால் ஸமுத்ரத்தின் கீழ் போடப்பட்டிருக்கும் தந்திக் கம்பிகள் இடம் விட்டுப் பெயர்ந்திருப்பதாகத் தெரியவந்திருக்கிறது. ஜலமட்டத்துக்கு ஸமீபத்தில் தான் அலையின் வேகம் அதிகமாகத் தெரியுமேயொழிய ரொம்ப ஆழத்தில் அதன் வேகம் அதிகமாய்த் தெரியாது. ரொம்ப கனமான பொருள்கள் அதிக ஆழத்தில் இருந்தால் அலைகளால் இடம் பெயரமாட்டா.

**A Balloon Train.**

**பெலூன் ரயில்.** -ஜெர்மனியைச் சேர்ந்த ஸால்ஸ்பரி என்னும் ப்ரதேசத்திலுள்ள மலைபபாங்கான விடங்களில் ரெயில் வண்டிகள் பெலூன் என்னும் புகைக்கூடு கட்டிச் செலுத்தப்படுகின்றனவாம். அந்த பெலூன்கள் ரயில் வண்டிகளை வாராவதி முதலியன இல்லாத விடங்களில் லேசாகத் தூக்கிக்கொண்டு செல்லுகின்றனவாம். அந்த வண்டிகளில் 10-பேரே ஏற வேண்டுமாம்—லோகோபகாரி.

**A Spoonful of Honey.**

**ஒரு கரண்டி தேன்.**—ஒருவன் ஒரு கரண்டி தேன் சாப்பிடும்போது, அந்த ஒரு கரண்டி தேன் உண்டாவதற்கு எவ்வளவு வேலையும், ப்ரயாஸமும் அலைச்சலும் ஏற்பட்டனவென்பதை நினைக்கிறதில்லை. ஒரு ராத்தல் தேனுக்காகத் தேனீக்கள் அறுபத்திரண்டாயிரம் புஷ்பங்களிலிருந்து தேன் எடுக்கவேண்டும். அப்படித் தேன் எடுக்க இருபத்தெட்டு லட்சம் தரம் தேனீக்கள் அப்புஷ்பங்களிடம் போகவேண்டும்.—தினசரி சத்தியம்.



## LADIES' PAGE.

## ஸ்த்ரீகள் பக்கம்.

**Female Education.**

**பெண் கல்வி.**—பெண் கல்வியைப்பற்றி சுதேசமித்திரனில் எழுதும் ஒரு நிருபர், பெண்களுக்கு கல்வி கற்பிக்கும் காலத்தைப்பற்றியும், கல்வியின் நோக்கத்தைப் பற்றியும் பின்வருமாறு எழுதுகிறார். பெண்கள், இளமையிற்கல், என்ற ஔவையின் சொற்படி, சீக்ரத்திலேயே கல்வியைக் கற்க முற்படவேண்டும். வயதான பிறகு வீட்டுக் கார்யங்களும், ஸம்ஸார வாழ்க்கையும் படிப்புக்கு விரோதத்தையுண்டுபண்ணும். பள்ளிக்கூடத்தைவிட்ட பிறகும் கூட அவர்கள் ஓய்வுகாலங்களில் நற்குணத்தைப் போதிக்கும்படியான சரித்ரங்களைப் படித்து நல்வழியில் பொழுதுபோக்கவேண்டும். நமது ஸ்த்ரீகள் பதிவ்ரதா தர்மம் முதலிய தருமங்களைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்கும், நற்குண நற்செய்கைகளையுடையவர்களாயிருப்பதற்கும், மானம் மரியாதையுடன் இருப்பதுடன், யாரையாவது கண்டவுடன் ஓட்டம் பிடிப்பதே மணியமாகக்கொண்ட சிலபோலி வழக்கங்களை யகற்றுவதற்கும், ஒரு பேச்சு சொன்னால் அதற்கு அநாகரீகமாக சிலவசவுகளை உபயோகப்படுத்தி ஊரெல்லாம் கேட்கும்படிச் சண்டைபிடிக்காமல், தம்முடைய கணவருடன் ஒத்துவாழ்வதற்கும், அவர்களுக்குத் துக்கம்வந்தகாலத்தில் தாமும் உண்மையாகத் துக்கப்பட்டும், ஸந்தோஷம் வந்தகாலத்தில் தாமும் ஸந்தோஷப்பட்டும் நடப்பதற்கும், தங்கள் குழந்தைகளைத் தகுந்த வழியில் வளர்த்து அவர்களை நன்னடக்கையுள்ள பிள்ளைகளாகச்செய்வதற்கும், தங்களுக்குத் துக்கம் வந்துவிட்டால் புராணம் இதிஹாஸம் முதலிய புஸ்தகங்களை வாசித்து, அவற்றில் கூறப்பட்ட மாதர்களின் கஷ்டங்களுக்குத் தாங்கள் படுகிற கஷ்டங்கள் ஈடாகுமா என்று தங்களைத் தாங்களே தேற்றிக்கொள்வதற்கும், நற்பெயரெடுப்பதற்கும், கடவுளுடைய சக்தியையும் குணங்களையும் அறிந்து அவரை எப்போதும் போற்றிப் புகழ்வதற்கும் கல்வி இன்றியமையாத ஸாதனமாகும் என்பதில் தடையே இல்லை. ஆன்கயால் பெண்களில் ஒவ்வொருவரும் கல்வி கற்கவேண்டுவது அவசியம்.

**Women Prisoners.**

**ஸ்த்ரீ கைதிகள்.**—இந்தியாவிலுள்ள ஜெயில்களில் குற்றவாளிகளாக அடைக்கப்படும் ஸ்த்ரீகளுள் விதவைகளே அதிகமென்று தெரியவருகிறது. சென்ற வர்ஷத்தில் வங்காளத்து ஜெயில்களில் 792 ஸ்திரீகள் கைதிகளா யிருந்தார்கள். இவர்களில் 235 பேர்கள் கல்யாண மானவர்கள். 7 பேர்கள் கல்யாணமாகாதவர்கள். 273 பேர்கள் விதவைகள். 187 பேர்கள் கெட்ட நடத்தைக்காரிகள். பேஹார் மாகாணத்தில் மொத்தம் 750 ஸ்த்ரீ கைதிகளில் 361 பேர்கள் விதவைகளாம். ஐக்ய மாகாணத்தில் இருந்த 963 ஸ்த்ரீ கைதிகளில் 420 பேர்கள் விதவைகளாம்.

இப்படி ஸ்த்ரீ கைதிகளில் விதவைகள் அதிகப்பட்டிருப்பது மிகவும் பரிதபிக்கத்தக்கது. இதற்கு முக்ய காரணங்கள் அவர்களின் தரித்ர நிலைமையும் பொதுவாக இந்தத் தலைமுறையில் ஸ்த்ரீகளுக்கும் புருஷர்களுக்கும் ஸன்மார்க்க போதனை இல்லாமையுமே என்று 'பெண்கல்வி' எழுதுகிறது.

**Cocoanut Thosai.**

**தேங்காய்த் தோசை.**—கால்படி பச்சரிசியை சுத்த ஜலத்தில் ஊறவைத்து அரைமணி நேரத்துக்குப் பிறகு அதை ஆட்டுக் கல்லில் அரைத்து எடுத்துக் கொள்ளவும். பிறகு முற்றின தேங்காய்த் துருவல் 12 பலம், அரைப்பலம் உப்பு இவை இரண்டையும் சேர்த்து நன்றாய் அரைத்து எடுத்து, மாவுடன் கலந்து மற்ற தோசைகளைப்போல் வார்த்துக் கொள்ளவும்.

**Baby's Sore Mouth.**

**குழந்தைகளின் வாயிப் புண்.**—குழந்தைகளின் வாய், நாக்கு, பல்லீறு இவைகள் புண்ணாயிருந்தால் ஒரு தேயிலைக்கரண்டி நன்றாய்ப் பொடிசெய்த வெண்காரத்தை ஒரு மேஜைக்கரண்டி தேனுடன் சேர்த்து நன்றாய்க் கலந்து, அதில் கொஞ்சம் விரலால் எடுத்து, வாயின் உள்புறத்திலோ, நாக்கிலோ, பல்லீறிலோ தடவினால் குணமுண்டாகும்.

**Women in Banks.**

**பாங்கிகளில் ஸ்த்ரீகள்.**—இங்கிலண்டில் ஆண்கள் ஸைன்யத்துக்குப் போய் விடுவதால், கம்பெனிகளில் ஸ்த்ரீகளை அதிகமாக வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த தேசத்திலுள்ள ஒரு பாங்கிக் கம்பெனியார் தமது ஸ்த்ரீ உத்யோகஸ்தர்களில் ஒருவரை அந்த பாங்கியின் கிளையாபீஸ் ஒன்றுக்கு மானேஜராக நியமித்திருக்கிறார்கள். வேறு கிளைகளிலுள்ளவர்களும் ஸைன்யத்துக்குப் போய்விட்டால் என்ன செய்கிறதென்று, முப்பது நாற்பது ஸ்த்ரீ உத்யோகஸ்தர்களை மானேஜர்கள் போன்ற பொறுப்புள்ள உத்யோகங்களுக்குத் தயாராக்கிக் கொண்டுவருகிறார்கள்.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### Devotion to Duty.

**கடமையைச் செய்வதில் சிரத்தை.**—ஸோல்ஜர்கள் தங்களுடைய அதிகாரிகள் இடும் உத்தரவுகளை நிறைவேற்றுவதில் ரொம்ப கவனமாயிருக்கவேண்டும். சில வேளைகளில் ஆபத்து நேரிடும் என்று தெரிந்தும் அவ்வாபத்துக் காலங்களில் கொடுத்த வேலையை செய்யாமல் விட்டுவிடுவதால் அதிகாரிகள் கோபித்துக் கொள்ள மாட்டார்கள் என்று தோன்றினாலுங்கூட, ஸோல்ஜர்கள் தங்கள் வேலையைவிட்டு வருவதில்லை. இவ்விதம் நடப்பது சில ஸமயம் விநோதமாகவும் இருக்கும். 1860-ம் வர்ஷம் அமெரிக்காவில் உள்நாட்டில் ஜனங்களுக்குள் கக்ஷிகளேற்பட்டு யுத்தம் நடந்தபோது, ஒரு கக்ஷியைச்சேர்ந்த ரெஜிமெண்டில் இருந்த ஒரு ஐரிஷ்காரன் ஒரு தீவின் கடற்கரையில் பாரா வேலையில் நியமிக்கப்பட்டான். அவன் செய்யவேண்டியிருந்த வேலையென்னவென்றால், குறிப்பிடப்பட்ட இரண்டு இடங்களுக்கும் இடையில் அவன் துப்பாக்கிஸகிதமாய் நடந்துகொண்டுபோகவேண்டியது. யாராவது அவ்வழியாய்ப் போகவந்தால், அவர் அவ்வழி போவதற்கு ஏற்பட்ட ஸங்கேத வார்த்தையைச் சொல்லவேண்டும். உரத்துச் சொன்னால் ஸங்கேதம் பலருக்குத் தெரிந்துவிடுமாதலால், அவ்வழி போக விரும்புகிறவர் அந்த ஸங்கேத வார்த்தையை பாராக்காரனிடம் ரகஸ்யமாக காதோடு காதாய்ச் சொல்லவேண்டும். இப்படியாக உத்தரவு பெற்ற ஐரிஷ்காரன் தனக்கு ஏற்பட்ட இடத்தில் நடந்துகொண்டிருந்தான். ஸமுத்ர ஜலம் பெருகிவரலாயிற்று. முதலில் அவனுடைய பூட்ஸுகளை நனைத்தது. பிறகு அவன் கணுக்காலளவு பெருகிற்று. அப்போதும் அவன் அவ்விடத்தைவிட்டு அசையாமல் ஜலத்தில் நடந்துகொண்டிருந்தான். ஜலம் வரவரக்கரையில் பெருக ஆரம்பித்தது. பிறகு முழங்கால் வரையிலும், அப்புறம் தொடைவரையிலும் ஜலம் உயர்ந்தது. அப்போதும் அவன் ஜலத்தில் குறிப்பிட்ட இடங்களுக்கு மத்தியில் நடந்துகொண்டிருந்தான். யாராவது தன் வேலையை ஒப்புக்கொள்ள வருவாரென்று வெகுநேரம் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். ஸாயங்காலமாகிப் பிறகு அஸ்தமித்து இருட்டாகி சந்திரனும் உதயமாகிவிட்டான். ஜலம் இடுப்புவரையில் உயர்ந்துவிட்டது. அப்பொழுதும் அந்த ஐரிஷ்காரன் தனது கடமையை விட்டுவிட நினைக்கவில்லை. தனது மேலதிகாரிகள் தான் அங்கிருப்பதை மறந்துவிட்டார்கள் என்று எண்ணினான்.

கொஞ்சநேரத்துக்குப் பிறகு அந்த ரெஜிமெண்டைச் சேர்ந்த கார்ப்பொரல் என்னும் உத்யோகஸ்தன் உதவிப் பாராக்காரனுடன் அங்கு வந்தான்.

ஐரிஷ்காரன்.—“யாரது?”

கார்ப்பொரல்.—“உதவி பாராக்காரர்.”

ஐரிஷ்காரர்.—அப்படியானால் இங்குவந்து ஸங்கேத வார்த்தையைச் சொல்லு?

கார்ப்பொரல்.—என்ன, என்னைத் தண்ணீரில்வந்து சாகச் சொல்லுகிறாயா? நான் அங்கு வரமுடியாது. நீ இங்கே வா?”

ஐரிஷ்காரன்.—“நான் வரமுடியாது. என் வேலையை ஒருவர் ஒப்புக்கொள்ளுகிற வரையில் இவ்விடத்தைவிட்டுப் போகக்கூடாதென்று லெப்டினண்ட் சொல்லியிருக்கிறார்.”

கார்ப்பொரல்.—“அப்படியானால் நீ ராத்ரி முழுவதும் அங்கேயே இரு. நான் போகிறேன்” என்றுசொல்லிவிட்டுதிரும்பினான். உடனே ஐரிஷ்காரன் “போவாயா? நில். இல்லாவிட்டால் உன்னை சுட்டுவிடுவேன். ஸங்கேத வார்த்தை சொல்லாமல் ஒருவரும் இவ்வழியாகப் போகக்கூடாது. அந்த வார்த்தையையும் காதோடுதான் சொல்லவேண்டும். இதுதான் எனக்கு உத்தரவு. அதை நிறைவேற்றியே தீருவேன்” என்று சொல்லித் தனது துப்பாக்கியை எடுத்து ரவை போடுவதற்காக சத்தம் செய்தான். இதைக் கேட்டதும் கார்ப்பொரலுக்குப் பயம் பிடித்தது. உடனே அவன் ஜலத்தில் இறங்கிவந்து ஸங்கேத வார்த்தையைச் சொல்லி ஐரிஷ்காரனுடன் காம்புக்குப் போய்ச் சேர்ந்தான்.

### Politeness.

**வணக்கம்.**—ஒரு வீரன் போர்க்களத்தில் சண்டைசெய்துகொண்டிருக்கையில் தனக்கெதிரில் ஒரு பீரங்கிக் குண்டு வருவதை யறிந்து ஸமயம் பார்த்துத் தலைகுனிந்தான். குண்டானது அவன் தலைமேல் பறந்துபோய் அவனுக்குப் பின்பக்கம் நின்றுகொண்டிருந்த வீரனைத் தாக்கி வீழ்த்திற்று. உடனே தலைகுனிந்த வீரன் பக்கத்திலிருந்தவனைப் பார்த்து, “பார்த்தாயா, வணக்கத்தால் எவரும் கெட்டுப்போவதில்லை” என்று சொன்னான்.



162032

# CURIOSITIES.

## விநோதங்கள்.

### The Inexaustible Bread.

**எடுக்க எடுக்கக் குறையாத அப்பம்.**—குஷ்டரோகத்தை ஸுலபமாய் குணமாக்கக்கூடியதும் ஆச்சர்யமான தன்மைகள் உள்ளதுமான ஒரு அப்பம் தற்போது பல ஜனங்களுக்கு உபயோகமாகி வருகிறதென்று ‘சுதேசமித்திர’னில் விருதை சிவஞானயோகி என்னும் நிருபர் எழுதுகிறார். இதன் வரலாற்றைப்பற்றி அவர் கேள்விப்பட்டதை பின்வருமாறு தெரிவிக்கிறார். ஒரு குஷ்டரோகி மதுரைஜில்லா பெரியகுளம் தாலூகாவிலுள்ள சுருளி மலைக்குப்போய் தனக்கிருந்த நோயாலுண்டாகிய துன்பத்தைப் பொறுக்கமாட்டாமல், உச்சியிலிருந்து உருண்டு சாகமுயன்றான். அப்பொழுது அங்கொரு வித்தர்தோன்றி ‘என்மூன் தற்கொலை செய்துகொள்ளாதே. இந்த அப்பத்தைக் கொண்டுபோய் ஒரு திட்டச்சட்டியிலிட்டு அதன் மேல் 5 பலம் கருப்புக் கட்டியைத் தட்டிப்போட்டு அரைப்படி தண்ணீர்விட்டு மேற்சட்டியால்மூடி உரியில் தொங்கவிட்டு அதன்கீழ் செம்மண்ணால் மெழுகி சர்க்கரை நைவேத்யத்தோடு காலைமாலை ஸாம்பிராணிப் புகை கொடுத்து ஒருவாரங் கழித்து அடுத்த வெள்ளிக்கிழமையில் திறந்து பார்த்தால் அப்பம் 2 ஆகும். புதிதாய்த் தோன்றிய அப்பத்தை வேறொருவருக்குக் கொடுத்து விடவேண்டும். அதுவும் அப்படியே யிரட்டிக்கும். மேல்படி அப்பம் ஒருவாரம் ஊறிய கருப்புக்கட்டி சேர்ந்த நீரைக் காலை மாலை உட்கொள்ளுக. இவ்வாறு 5 வாரம் மேல்படி அப்பம் ஊறிய நீரையுட்கொள்ள உன் நோய் குணமாகும். பிற்பாடு இந்த அப்பத்தை வேறொருவருக்குக் கொடுத்துவிடலாம். மேற்கண்டபடிசெய்ய ஒவ்வொரு அப்பமும் வாரந்தோறும் இரட்டித்துக் கொண்டேவரும். இந்நீர் சாப்பிடுகிறவர்களுக்கு குஷ்டமும் அது ஸம்பந்தமான நோய்களும் 5-வாரத்தில் குணப்படும். விலை வாங்கக் கூடாது. பெண்கள் தொடக்கூடாது. பயப்படாதே போ என்று சொல்லி ” மறைந்தாராம். அவன் அப்படியே செய்து குஷ்டநோய் ஸ்வஸ்தமாகி ஸந்தோஷமடைந்ததாயும் அப்ப நீரைக் குடித்த வேறு சிலரும் குணமடைந்ததாயும் அவரும் முறைப்படி மேல்படி அப்பத்தை திட்டச்சட்டியில் ஒருவாரம் வைத்து தூபம் சர்க்கரை நைவேத்யஞ் செய்துவந்தாராம். மறு வெள்ளிக்கிழமை பார்க்கும்போது [illegible] அப்பமும் புதிதாய்த்தோன்றிய அப்பமும் ஸம்பந்தித்திருந்தமையால் எடுக்கும்போது கிழிந்து முன் அப்பம் உடைந்துபோயிற்று. நன்றாயிருந்ததை வேறொருவருக்குக் கொடுத்துவிட்டு உடைந்துபோனதைச் சட்டியிலிட்டு கருப்புக்கட்டி போட்டுத் தண்ணீர்விட்டு மறுவாரம் பார்க்க புதிதாயுண்டான அப்பம் மிக நேர்த்தியாயிருந்தது. அப்பம் கெடுவதில்லை. பூசணம் பூப்பதில்லை. நாற்றமில்லை, புளிப்பு மாத்ரமிருக்கிறது. இந்த அற்புதத்தை ஒவ்வொருவரும் பார்க்கலாம். வேண்டியவர்களுக் கனுப்பவுந் தடையில்லையென்று அவர் சொல்லுகிறார்.

### An Underground Building.

**பூமியின்கீழ் ஒரு நிலவறை.**—கொச்சி ஸமஸ்தானத்தை யடுத்த சித்தூர் என்ற இடத்தில் நிலத்தை வெட்டுகையில் பூமியின் அடியில் ஸலவைக் கல் போன்ற பாறை யொன்று தென்பட்டதாம். அதை வெட்டினிகொண்டு பிளக்கவே அந்த ஸலவைக்கல் உடைந்து ஒரு வழி கொடுத்தது. அதன் மார்க்கமாகப் பூமிக்குள் போகையில் ஒரு பாதாள குகை தென்பட்டதாம். அதனுள்ளே நான்கு தூண்கள் நிறுத்திய மண்டபங்கள் தென்படுகின்றனவாம். அதிலிருந்து க்ரமண் நிரம்பிய இரண்டு தோண்டிகள் கண்டெடுத்தார்களாம். பின்னும் பல அபூர்வங்கள் காணப்படுகின்றனவாம். அதை நிர்மாணித்தவர் யாரோ தெரியவில்லை.

### A Curious Birth.

**ஓர் அதிசயப் பிறவி.**—கோயம்புத்தூர் ஜில்லாவைச் சேர்ந்த தாராபுரம் தாலூகாவுக்கு அருகிலுள்ள [illegible]னுதபாளையம் என்ற க்ராமத்தில் ஓர் வெள்ளாள ஸ்திரீ ஸமீபத்தில் ஒரே தடவையில் 4 குழந்தைகளைப் பெற்றாளாம். அக்குழந்தைகளில் பெண் குழந்தை 3. ஆண் குழந்தை 1. ஆண்குழந்தை பிறந்தவுடனே இறந்துபோயிற்று.

### A Tank Visited by a Devil.

**பூதம்வந்து பார்க்கும் ஒரு குளம்.**—கல்கத்தாவைச் சேர்ந்த ஒரு குளத்தை ஒருபூதம் வர்ஷத்திற்கு ஒருமுறைவந்து பார்த்துப்போகிறதாம். அது வந்துபோகும்போது அதில் ஒருவன் வீழ்ந்து இறந்துபோகிறான். இதுவரையில் அதில் 25 பேர்கள் விழுந்து இறந்திருக்கிறார்களாம். ஸமீபத்தில் ஒரு மகமதியன் அதில் விழுந்திறந்தானாம்.

JL
m211,N095B
N6·8

## MISCELLANEOUS NEWS.

## நானா ஸங்கதி.

### Newspapers & the Public.

**பத்ரிகைகளும் ஜனங்களும்.**—நம்மவரில் பலர் பத்ரிகைகளின் கடமை என்ன, நோக்கமென்ன என்பதைத் திட்டமாய்த் தெரிந்திருக்கவில்லை. ஆதலால், அவர்கள் பலவாறு பேசுகிறார்கள். அப்படிப் பேசுகிறவர்களைப் பற்றி ஒரு ஆங்கில பத்ரிகை பின்வருமாறு எழுதியிருக்கிறது. "பத்ரிகை ப்ரசுரித்தல் மிக ஸந்தோஷமான தொழில். ஏனெனில், அதில் ராஜதந்த்ரத்தைப் பற்றி அதிகமா யெழுதியிருந்தால் ஜனங்கள் அதை விரும்பார்கள்; குறைவாயிருந்தால் அதுவுங்கூடாதென்பார்கள்; அச்செழுத்துச் சிறிதாயிருந்தால் வாசிக்க முடியாதென்பார்கள்; தந்தி ஸமாசாரங்களைப்போட்டிருந்தால் அவைகளெல்லாம் பொய்யென்பார்கள்; அவைகளை விட்டு விட்டால் அரசாட்சியாருக்கு பயந்துபோடவில்லை, துணிவில்லை என்பார்கள். சில கேலிகளை எழுதியிருந்தால், ஸரஸக்காரன் என்பார்கள்; ஸரஸவார்த்தைகள் இல்லாவிட்டால் கிழப்பிணமென்பார்கள்; எதையாவது நடந்தபடி எழுதினால், முக்யமானதை எழுதினால் போதாதா, என்றும் நாம் முக்யமானவைகளைப் போட்டால் அதிக மெழுதச் சோம்பேறியென்றும், மற்றப்பத்ரிகைகளில் வாசித்ததுதானென்றும், சொல்வார்கள்; பொது நலத்துக்கு உழைத்தவர்களைப்பற்றி புகழ்ந்தெழுதினால், நாம் அவர் பக்ஷமாய்ச்சேர்ந்துவிட்ட பக்ஷபாதகக்காரர் என்றும், அப்படி எழுதாவிட்டால், பாங்கறியாத காடியென்றும் சொல்வார்கள். மாதர்களை த்ருப்திசெய்யும் ஒரு வ்யாஸத்தை ப்ரசுரித்தால், புருஷர்கள் எரிந்து விழுவார்கள்; அவரவர் மனம்போல் எழுதாவிட்டால் பத்ரிகை தம் வீட்டில் வைத்திருக்கத்தக்க தல்லவென்பார்கள்; நாம் கோவிலுக்குப்போனால், அது பாசாங்கேயென்பார்கள்; கோவிலுக்குப் போகாவிட்டால், மோசக்காரரும் மகா கெட்டவரு மென்றும் சொல்வார்கள். நாம் ஆபீசிலிருந்து வேலையைக் கவனித்துவந்தால், நாம் மற்றவர்களோடு கலந்திருக்க ப்ரியமற்ற [illegible]யென்பார்கள்; நாம் வெளியேபோனால், வேலையைக் [illegible]னிப்பதில்லை, ஊர்சுற்றுகிறார் என்பார்கள். கடன்காரர் கணக்கைத் தீர்க்காவிட்டால், அவரை நம்பப்படாதென்பார்கள். கணக்கைத் தீர்த்துவிட்டாலோ, அதிகப் [illegible]காரராய்விட்டோம் என்பார்கள்."—சத்திய வேத பா[illegible].

### Pandit Bishan Narain Dhar.

**பண்டித விஷ்ணு நாராயண தார்.**—காங்க்ரெஸ் அபிமானிகளில் ஒருவரும், 1911-ம் வர்ஷம் இந்தியன் நாஷனல் காங்க்ரெஸுக்கு ப்ரெஸிடெண்டாயிருந்தவருமான பண்டித விஷ்ணு நாராயண தார் இந்த மாஸம் 18-ந்தேதி லக்னௌவில் இறந்ததைக் கேட்டு விஸனிக்கிறோம். அவர் சென்ற சில வர்ஷங்களாக தேக அஸௌக்யமாயிருந்தார் சில மாஸங்களுக்கு முன்னால் அவர் தேகம் குணமடையுமென்று பலர் நம்பியிருந்தார்கள். அதனால்வருகிற டிஸம்பர்மாஸத்தில் லக்னௌவில் கூடப்போகிற காங்க்ரெஸின் உபசரணைக் கமிட்டிக்கு அவர்சேர்மனாக நியமிக்கப்பட்டிருந்தார் ஆனால் அவர் வரவர ஸுகக்குறைவு அடைந்துவந்ததால், ஸமீபத்தில் அந்த சேர்மன் ஸ்தானத்தை அவர் ராஜிநாமாக் கொடுக்க நேரிட்டது. பண்டிதர் வெகுகாலமாக காங்க்ரெஸ் விஷயங்களிலும் ராஜரீக விஷயங்களிலும் ஊக்கம் காட்டி வந்திருந்தார் அவர் தமது அபிப்ராயங்களை தைர்யமாயும் தெளிவாயும் எடுத்துரைப்பவர். அவர் 1914-ம் வர்ஷத்தில் வைஸ்ராய் சட்டஸபையில் மெம்பராகவும் இருந்தார்.

### Telegraph Charges.

**தந்தி சார்ஜுகள்.**—தற்போது தந்தியிலாகாவிலிருந்து அநேக உத்யோகஸ்தர்கள் போர்முனைக்குப்போயிருப்பதால், தந்தி யனுப்பும் வேலையை சரிவர நிர்வகிப்பது கஷ்டமாயிருந்து வருகிறது. ஆகையால் இந்த இலாகாவில் வேலை நெருக்கடி ஏற்படாமலும், தந்திகள் கொடுப்பது அதிகரிக்காமலுமிருக்கவும் வேண்டி, கவர்ன்மெண்டார் தந்திவிகிதங்களை, வரும் டிஸம்பர்மாஸம் 1-ந்தேதி முதல் உயர்த்தப்போகிறார்கள். அந்தத் தேதிமுதல் 'ஆர்டினரி' தந்தி அதாவது அவஸரமில்லாத தந்தி யனுப்புவதற்கு 12 வார்த்தை வரையில் 8-அணா சார்ஜ் ஆகும். அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் அரை அணா சார்ஜாகும். மற்ற அவஸரத் தந்திக்குச் சார்ஜ் முன்போலவே.



## DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

### THE WAR IN EUROPE.

### ஐரோப்பிய யுத்தம்.

நவம்பர் மீ 3-தேதி

ஜெர்மானியர்கள் வெர்டூனில் வாக்ஸ் கோட்டையை காலிசெய்து விட்டார்கள்.

4-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகள் ஸலோனிக்கா போர்முகத்தில் ஸ்ட்ருமா நதிக்கரையில் அலிப்ஸா என்னும் ஊரைப் பிடித்தார்கள்.

6-தேதி.

'அரேபியா' என்னும் ப்ரிட்டிஷ் தபால் கப்பல் இன்று மத்யதரைக் கடலில் மூழ்கடிக்கப்பட்டது.

ப்ரெஞ்ச் துருப்புகள் வெர்டூன் ப்ரதேசத்தில் டாமலூப், வாக்ஸ் என்னும் க்ராமங்களைக் கைப்பற்றியிருக்கின்றன. இட்டாலியர்கள் கார்ஸோ பீடபூமியில் வால்கோவானியக் குன்றைப் பிடித்தார்கள்.

7-தேதி.

எதிரிகள் டொப்ருஜாப் போர்முகத்தில் பின்வாங்கியிருக்கிறார்கள்

8-தேதி,

ப்ரெஞ்ச் துருப்புகள் மேற்குப் போர்முகத்தில் ஆப்ளெய்ன்கோர்ட், ப்ரெஸ்ஸோர் என்னும் க்ராமங்களைப் பிடித்தன.

9-தேதி.

ரஷ்யர்கள் டோர்னுவாட்ராவுக்கு தெற்கில் ட்ரான்ஸில்வேனியாவில் 5 மைல் முன்னே சென்றிருக்கிறார்கள்.

10-தேதி

ருமேனியர்கள் டொப்ருஜாவில் முன்சென்று ஹிர்ஸோவா பட்டணத்தை மறுபடியும் பிடித்துக்கொண்டார்கள்.

11-தேதி.

ரஷ்யர்கள் ஸ்க்ரோபாப் என்னுமிடத்திலும் டோர்னுவாட்ராவுக்குத் தெற்கிலும் பின்வாங்கி யிருக்கிறார்கள். ருமேனிய-ரஷ்ய துருப்புகள் ஸொர்னுவாடாவுக்கு மேற்கில் டொரியா என்னும் ஊரைப் பிடித்திருக்கின்றன.

13-தேதி.

ருமேனியர்கள் ஜ்யூல் பள்ளத்தாக்கில் பின்வாங்கியிருக்கிறார்கள். அவர்கள் டொப்ருஜாவில் டொபாலா என்னும் ஊரையும் கெஸ்டார் என்னும் துறைமுகத்தையும் பிடித்திருக்கிறார்கள்.

14-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகள் ஆன்கர்நதி ப்ரதேசத்தில் ஸெண்ட்பியர் விவியன் என்னும் க்ராமத்தைப் பிடித்தன. ஜெர்மானியர்கள் ருமேனியாவில் காம்பலான்குக்கு வடமேற்கிலுள்ள காண்டிஸ்டி என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள். ஆர்லோவுக்கு வடகிழக்கில் பலமான யுத்தம் நடக்கிறது.

15-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகள் போமண்ட்ஹாமல், போகோர்ட் என்னும் க்ராமங்களைப் பிடித்திருக்கின்றன. ருமேனியர்கள் ட்ராகோஸ்லாவ் ப்ரதேசத்தில் பின்வாங்கியிருக்கிறார்கள். இப்போதுள்ள நிலைமை என்னவென்றால் எதிரிகள் ருமேனியாவில் வல்கன் கணவாயிலிருந்து 13 மைலும், ராட்டர்ட்டம் கணவாயிலிருந்து 16 மைலும் டர்ஸ்பெர்கர் கணவாயிலிருந்து 5 மைலும் உள்ளுக்குப் போயிருக்கிறார்கள்.

16-தேதி.

ருமேனியர்கள் ராட்டர்ட்டம் கணவாய்க்குத் தெற்கிலும் ஜ்யூல் பள்ளத்தாக்கிலும் பின்வாங்கி யிருக்கிறார்கள். ஸெர்வியர்கள் ஸெவி என்னும் க்ராமத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

17-தேதி.

ருமேனியர்கள் அல்யூடா நதியின் இடது கரையிலும் ராட்டர்ட்டம் கணவாயிலும், ஜ்யூல் பள்ளத்தாக்கிலும் பின்வாங்கி யிருக்கிறார்கள். பல்கேரியர்கள் மொனஸ்டருக்குப் பின் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஸெர்வியர்கள் டிபாவல் என்னும் க்ராமத்தையும், ப்ரிட்டிஷார் காக்ராக்கா என்னும் க்ராமத்தையும் பிடித்திருக்கிறார்கள். ஜெர்மானியர்கள் ஸமீபத்தில் பின்லண்ட் வளை குடாவில் டார்ப்பிடோக் கப்பல்களைக்கொண்டு ரஷ்யர்களை தாக்கினதில் 6 டார்ப்பிடோக் கப்பல்களை இழந்தார்களென்று நம்பப்படுகிறது.

18-தேதி.

ருமேனியர்கள் அலூடா நதி ப்ரதேசத்திலும் ஜ்யூல் பள்ளத்தாக்கிலும் பின்வாங்கியிருக்கிறார்கள். ப்ரிட்-

டிஷ் துருப்புகள் ஸ்ட்ருமா நதிக்கரையில் மூன்று க்ராமங்களைப் பிடித்தன.

20-தேதி.

ஜெர்மானியர்கள் தாங்கள் தெற்கு ட்ரான்ஸில்வேனியாக் கணவாய்களிலிருந்து வல்லேச்சியா மாகாணத்து ஸமவெளிகளில் புகுந்துவிட்டதாகவும், டிர்காப்பூ என்னும் இடத்தில் நடந்த சண்டையில் ஜயித்து ஆர்ஸோவா—க்ரெய்யாவோ ரெயில்வேயுக்குப் போய்விட்டதாகவும் சொல்லுகிறார்கள். ப்ரெஞ்சு துருப்புகளும், ஸெர்வியத் துருப்புகளும் மொனஸ்டரைப் பிடித்திருக்கின்றன.

21-தேதி.

ஆஸ்ட்ரியா தேசத்து சக்ரவர்த்தியாகிய ப்ரான்ஸிஸ் ஜோஸப் இன்று ஸாயந்திரம் இறந்துபோனார்.

21-தேதி.

நேசத்துருப்புகள் மொனஸ்டருக்கு வடக்கில் எதிரிகளைத் துரத்திப்போய் அதற்கு 6 மைல் தூரத்திலுள்ள க்ராமங்களைப் பிடித்திருக்கின்றன.

22-தேதி.

ஜெர்மானியர்கள் ருமேனியாவில் க்ரெய்யாவோ என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள். ஸெர்வியர்கள் மொனஸ்டருக்கு 15 மைல் கிழக்கிலுள்ள ராபெ என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள். நேசத்துருப்புகள் மொனஸ்டருக்கு 14 மைல் மேற்கே ப்ரெஸ்பா ஏரிக்கரையிலுள்ள க்ருஷ்னி என்னும் ஊரைப் பிடித்திருக்கின்றன.

24-தேதி.

ரஷ்யாவின் ப்ரதம மந்த்ரியாயிருந்த மா. ஸ்டூர்மர் வேறு உத்யோகத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு பதிலாக மா. ட்ரெபாப் ப்ரதம மந்த்ரியாக நியமிக்கப் பட்டிருக்கிறார்.

## INDIAN NEWS.

## இந்திய வர்த்தமானம்.

நவம்பர்மீ 1-தேதி.

மிஸஸ் பெஸண்ட்.—மத்ய மாகாணங்கள், பேராரின் கவர்ன்மெண்டார் அந்த மாகாணத்துக்குள் மிஸஸ் பெஸண்ட் ப்ரவேசிக்கக் கூடாதென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

2-தேதி.

புதிய இந்திய ஸேனாதிபதி. இந்தியாவின் புதிய ஸேனாதிபதியாகிய ஸர்சார்ல்ஸ் மன்ரோ இன்று மெஸபொடேமியாவிலிருந்து பம்பாய் வந்து சேர்ந்தார்.

9-தேதி.

மிஸ்டர் திலகர்.—மிஸ்டர் பால கங்காதர திலகர் ராஜத்ரோகமான ப்ரஸங்கங்கள் செய்தாரென்று அவரிடம் பூனா மாஜிஸ்ட்ரேட் நன்னடக்கைக்கு ஜாமீன் வாங்கியிருந்ததை ஆக்ஷேபித்து, அவர் பம்பாய் ஹைகோர்ட்டில் போட்டிருந்த அப்பீல் அவருக்கு ஸாதகமாயிற்று. ஹைகோர்ட்டார் மாஜிஸ்ட்ரேட்டின் ஆர்டரை மாற்றிவிட்டு, அவர் செலுத்தியிருந்த 40,000 ரூபாய் ஜாமீனை அவருக்குத் திருப்பிக் கொடுத்துவிடும்படி உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

10-தேதி.

பிஜித்தீவில் இந்தியர்கள்.—இந்தியா கவர்ன்மெண்டார் கேட்டுக்கொண்டதன்மேல், பிஜித்தீவிலுள்ள லெஜிஸ்லேடிவ் கௌன்ஸிலில் ஒரு இந்தியருக்கு ஸ்தானம் இருக்கும்படி, அதன் அமைப்பை ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் மாற்றியிருக்கிறார்கள். அந்த ஸ்தானத்துக்குவரும் இந்தியர் ப்ரிட்டிஷ் ப்ரஜையா யிருப்பதோடு, ஸர்க்கார் உத்யோகம் வகிக்காதவராயிருக்க வேண்டும்

23-தேதி.

சென்னை யூனிவர்ஸிட்டி கான்வகேஷன்.—இன்று சென்னை யூனிவர்ஸிட்டிப் பரீக்ஷைகளில்தேறிய மாணவர்களுக்குப் பட்டங்கள் கொடுக்கப்பட்டபோது நவாப் ஸையத் ஹுஸேன் பில்க்ராமி கான்வகேஷன் ப்ரஸங்கம் செய்தார். அவர் தமது ப்ரஸங்கத்தில் யூனிவர்ஸிட்டிகளால் ஏற்பட்டிருக்கும் நன்மைகள், முற்காலத்திய கல்வி நிலைமை, மாணவர்களுக்கு புத்திமதி முதலிய விஷயங்களைப்பற்றி ப்ரஸ்தாபித்தார்.

பரோடாவில் ப்ரதிநிதி ஸபை.—பரோடாவின் அரசர் அந்த ஸமஸ்தானத்தில் ஜனங்களின் ப்ரதிநிதி ஸபை ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றும், அதற்கு திவான் ப்ரெஸிடெண்டாக இருப்பாரென்றும், அந்த ஸபையில் ப்ரதிநிதிகள் பொதுஜன க்ஷேமத்தைப்பற்றிய விஷயங்களுக்கு ஆலோசனைகள் சொல்லலாம் என்றும், மெம்பர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல டிபார்ட்மெண்டுகளின் தலைவர்கள் ஸபையில் வந்திருக்க வேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார். ஸபையின் முதல் மீட்டிங் 1917-ம் வர்ஷம் ஜனவரி 3-ந்தேதி கூடும். ஸபை நடக்கும் நாட்களில் மெம்பர்கள் ஸமஸ்தானத்தின் விருந்தாளிகளாக இருப்பார்கள்.

**12-inch Skoda Howitzer in Transit.**

ஒரு 12-அங்குல ஸ்கோடா ஹவிட்ஸர்.

இதை பாகங்களாகப் பிரித்து மோட்டார் வண்டிகளில் ஏற்றி யிருக்கிறார்கள்.



**Krupp Gun.**

க்ருப் பீரங்கி.

இது ரெயில் வண்டிகளில் ஏற்றப்பட்டிருக்கிறது.

# ஜனாபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

**THE PEOPLE'S FRIEND**

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE.'

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ., பத்ராதிபர். | G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 8. Vol. 8. | நள௵, மார்கழி௴, DEC 1916—JAN 1917. | ஸஞ்சிகை 12. No. 12.

## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'Peoples' Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. | A. | P. | | Foreign. Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | ... ... | 6 | 0 | 0 |
| Half-yearly ... | 2 | 0 | 0 | ... ... | 3 | 0 | 0 |
| Sample copy | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 Page ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do ... | 2 | 8 | 0 | do |
| ¼ do ... | 1 | 4 | 0 | do |
| $\frac{1}{16}$ do ... | 1 | 0 | 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion, republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, George-town, Madras.

## ஜனாபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனாபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | | | அந்ய நாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 | 0 | 0 | ... | 6 | 0 | 0 |
| ஆறுமாஸத்துக்கு ... | 2 | 0 | 0 | ... | 3 | 0 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | | 5 | 0 | 0 |
| ½ ,, | ,, | ,, | 2 | 8 | 0 |
| ¼ ,, | ,, | ,, | 1 | 4 | 0 |
| $\frac{1}{16}$ ,, | ,, | ,, | 1 | 0 | 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால், ப்ரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாஸியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேண்டுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நேயர்கள் அறியவேண்டும்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# ஜனாபிமானி.

புஸ்தகம் 8.] நள௵ மார்கழி௴ [ஸஞ்சிகை 12.

## BIG GUNS IN THE WAR.

## யுத்தத்தில் உபயோகப்படுகிற பெரிய பீரங்கிகள்.

தற்போது நடக்கும் யுத்தத்தில் பீரங்கிகளே அதிகமாய் உபயோகப்பட்டு வருகின்றன. யுத்த ஆரம்பத்தில் ஜெர்மானியர்கள் பெல்ஜியத்தின் மேலும், ப்ரான்ஸின்மேலும் படையெடுத்துப் போனபோது, பெரிய பீரங்கிகளைக்கொண்டு, அந்த தேசங்களிலுள்ள பெரிய கோட்டைகளை வெகு சீக்ரத்தில் நாசஞ்செய்து விட்டார்கள். ரஷ்யர்கள் முதலில் ப்ரஷ்யாவின் கிழக்கு பாகத்திலும், ஹங்கேரியிலும் முன் சென்றபோது, அவர்களை ஜெர்மானியர்கள் துரத்தி யடித்த போதும் பெரிய பீரங்கிகளே அவர்களுக்கு ஸாதகமா யிருந்தன. இந்த யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னால் ஜெர்மனி ஆஸ்ட்ரியாவைத் தவிர மற்ற தேசங்களெல்லாம் பெரிய ஹவிட்ஸர்களை (பெரிய பீரங்கிகள்) தரைச் சண்டைக்கு உபயோகிக்க இஷ்டப்படவில்லை. ஆறு அங்குல ஹவிட்ஸரைவிட பெரிய பீரங்கியை உபயோகித்தால், போர்க்களத்தில் அதை அங்குமிங்கும் ஸுலபமாய்க் கொண்டுபோக முடியாதென்று அபிப்ராயமிருந்து வந்தது. 6-அங்குல ஹவிட்ஸரில் உபயோகிக்கப்படும் குண்டு 120-ராத்தல் உள்ளது.

ஜப்பானியர்கள்தான் ரஷ்யர்களோடு செய்த யுத்தத்தில் முதல் முதலில் பெரிய பீரங்கிகளை உபயோகித்தார்கள். ஜெர்மன் ராணுவ நிபுணர்கள் இந்த விஷயத்தை வைத்துக்கொண்டு, பெரிய பீரங்கிகள் தயார் செய்ததோடு, அவைகளைப் போர்க்களத்தில் ஸுலபமாய் அங்குமிங்கும் கொண்டுபோக வேண்டிய ஏற்பாடுகளும் செய்தார்கள். இவ்விதமே ஆஸ்ட்ரியாவிலும் பெரிய பீரங்கிகள் தயார் செய்யப்பட்டன.

ஜெர்மானியர்களும் ஆஸ்ட்ரியர்களும் உபயோகிக்கும் பெரிய பீரங்கிகளில் எத்தனை வகைகளிருக்கின்றனவென்று திட்டமாய்ச் சொல்லுவதற்கில்லை. ஜெர்மானியர்கள் லீயெஜ் கோட்டைகளையும், நாமூர் கோட்டைகளையும் தாக்க 12-அங்குல பீரங்கிகளை உபயோகித்ததாகச் சொல்லப்படுகிறது. இவைகளிலிருந்து வெளிவரும் குண்டுகள் 800 முதல் 1000 ராத்தல் வரை கனமுள்ளவை. இவைகள் போகக்கூடிய தூரம் 8-மைலாகும். இவைகளைத் தவிர, ஜெர்மானியர்கள் 17-அங்குல பீரங்கிகளும் தயார் செய்து உபயோகிக்கிறார்களென்று தெரிகிறது. $20\frac{1}{2}$-அங்குல பீரங்கிகள் தயார்செய்ய முயற்சி செய்துகொண்டிருப்பதாகவும் தெரிகிறது. ஜெர்மானியர்கள் உபயோகிக்கும் பெரிய பீரங்கிகள் க்ரூப் பீரங்கித் தொழில்சாலையில் செய்யப்படுகின்றன.

ஆஸ்ட்ரியர்கள் உபயோகிக்கும் பெரிய பீரங்கிகளுக்கு 'ஸ்கோடா' ஹவிட்ஸர்கள் என்று பெயர். அவைகள் பொஹீமியாவில் பில்ஸன் என்னும் பட்டணத்திலுள்ள ஸ்கோடா பீரங்கித் தொழில்சாலையில் செய்யப்படுகின்றன. இந்தத் தொழில்சாலையில் 12-அங்குல பீரங்கிகளும் 17-அங்குல பீரங்கிகளும் செய்யப்படுகின்றனவாம். லீயெஜ், நாமூர், மாபீஜ், கிவெட், ஆண்ட்வெர்ப், ப்ரெஸிமிஸல் ஆகிய இந்தப் பட்டணங்களின் கோட்டைகளைத் தாக்குவதற்கு 12-அங்குல ஸ்கோடா பீரங்கிகள் உபயோகிக்கப் பட்டனவென்று சொல்லப்படுகிறது. இவைகளைக்கொண்டு ரொம்ப தூரத்திலிருந்து குறி தவறாமல் தாக்கலாமாம்.



ஜெர்மானியர்கள் ஆண்ட்வெர்ப் கோட்டைகளைத் தாக்கினபோது, $7\frac{1}{2}$-மைல் தூரத்திலிருந்துகொண்டு ஒரு கோட்டையிலிருந்த ஒரு பீரங்கி யிருக்குமிடத்தை படங்களின் மூலமாக அறிந்து, ஸ்கோடா பீரங்கி யொன்றால், அந்தக் கோட்டை பீரங்கியைத் தாக்கினார்கள். ஸ்கோடாபீரங்கியின் குண்டு குறி தவறாமல் போய் ஆண்ட்வெர்ப் கோட்டை பீரங்கியின்மேல் வைக்கப்பட்டிருந்த குபோலா என்னும் கனமான இரும்புக் கவசத்தைத் துளைத்து பீரங்கியையும் நாசம் செய்துவிட்டதாம். இந்தக் குபோலாவை, அதில் அகப்பட்ட குண்டின் பாகத்துடன், ஜெர்மன் சக்ரவர்த்தி ஆஸ்ட்ரிய ராணுவ ம்யூஸத்துக்கு கொடுத்தனுப்பி யிருக்கிறாராம்.

12-அங்குல ஸ்கோடா பீரங்கியிலிருந்து வெளிவரும் குண்டு 858-ராத்தல் நிறையுள்ளது. அது போகக்கூடிய தூரம் $7\frac{1}{2}$ மைலாகும்.

இந்த பீரங்கியில் ஒரு விசேஷமென்னவென்றால், அதை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குக் கொண்டுபோவது ரொம்ப ஸுலபம். அதை சில பாகங்களாகப்பிரித்து 3-மோட்டார் வண்டிகளில் ஏற்றிக்கொண்டு போகலாம். அந்த வண்டிகளில் ரப்பர் டையர்கள் உபயோகிப்பதில்லை. இரும்புப் பட்டாக்களே உபயோகிக்கிறார்கள். இந்த வண்டிகள் மணிக்கு $12\frac{1}{2}$-மைல் வேகம் போகக்கூடியவை.

வேண்டிய இடத்துக்கு வண்டிகளைக்கொண்டு போனவுடன், பீரங்கியின் பாகங்களை ஒன்று சேர்த்து சுடுவதற்குத் தயாராக்க 40-நிமிஷத்துக்கு மேலாகாது. சில ஸமயங்களில் 24-நிமிஷத்திற்குள் பீரங்கியின் பாகங்களை தயாராகப் பூட்டியிருக்கிறார்களாம்.

இந்த பீரங்கியை எதிரிகள் பிடித்துவிடுவார்களென்று பயப்படவேண்டியதில்லை. ஓரிடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பீரங்கியை, பாகங்களாகப் பிரித்து மோட்டார் வண்டிகளில் ஏற்ற 40-நிமிஷம் செல்லும். பீரங்கி குண்டு போய் விழும் இடத்துக்கும் பீரங்கி வைத்திருக்கும் இடத்துக்கும் $7\frac{1}{2}$ மைல் தூரமிருக்குமாகையால், எதிரித் துருப்புகள் $7\frac{1}{2}$ மைல் கடப்பதற்குள், பீரங்கியை மோட்டார்வண்டிகளில் ஏற்றிக்கொண்டு போய்விடலாம்.

இந்த பீரங்கிகளைக் கொண்டு ரொம்பவேகமாகவும் சுடலாமாம். ஒரு நிமிஷத்துக்கு ஒரு தடவைவீதம் சுடலாமாம். இது கோட்டைகளைத் தாக்குவதற்கேயன்றி போர்க்களத்தில் ஸைன்யங்களைத் தாக்குவதற்கும் உபயோகப்படும். ஸைன்யங்கள் நெருக்கமாய்ப் போய்க்கொண்டிருக்கும்போது, இந்த பீரங்கிகளால் தாக்கினால் துருப்புகள் முழுவதும் நாசமடையும். சில காலத்துக்கு முன்னால் போலண்டில் ரஷ்ய பீரங்கிப் படையொன்றும் காலாள்படையில் பெரும்பாகமும் இவ்விதம் நெருக்கமாய்ப் போய்க்கொண்டிருக்கையில், ஸ்கோடா குண்டு ஒன்று விழுந்து எல்லாவற்றையும் நாசம் செய்துவிட்டது. சிலஜனங்கள் வெடித்த குண்டின் துண்டுகளால் தாக்கப்பட்டு இறந்தார்கள். மற்றவர்கள் குண்டுக்குத் தப்பினாலும், குண்டிலிருந்து வெளிப்பட்ட மூச்சடைக்கும்காற்றுகளால் இறந்து போனார்கள்.

17-அங்குல ஸ்கோடா பீரங்கியில் 2800 ராத்தல் நிறையுள்ள குண்டுகள் உபயோகிக்கப்படும். இதன் குண்டுகள் விழுமிடத்திலிருந்து சுற்றுப் புறத்தில் 150-கஜம் தூரத்துக்குள் யார் இருந்தாலும் இறந்துபோவது நிச்சயம். ஆனால் இந்த பீரங்கியை 12-அங்குல பீரங்கிகளைப்போல் அவ்வளவு ஸுலபமாக ஓரிடத்திலிருந்து இன்னோரிடம் கொண்டுபோக முடியாது.

இதுபோன்ற பெரிய பீரங்கிகளை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குக் கொண்டுபோக, முன் சொன்னபடியே பீரங்கிகளை பாகம் பாகமாகப் பிரித்து இவைகளுக் கென்று ஏற்பட்ட பெரிய மோட்டார் வண்டிகளில் ஏற்றிக் கொண்டுபோவார்கள். இந்த வண்டிகளின் சக்கரங்களுக்கும் ரப்பர் பட்டா போடாமல் இரும்புப் பட்டா போடுவார்கள். இப்போது சில காலமாக இவைகளுக்கு பதிலாக ரெயில்வேக்களை உபயோகிக்கிறார்கள். பீரங்கிகளை எங்கே இறக்கவேண்டுமோ அந்த இடம் வரையிலும் இருப்புப் பாதைகள் போடுகிறார்கள். சில ஸமயம் பீரங்கிகளை பாகங்களாகப் பிரிக்காமல், அப்படியே ரெயில்வண்டியில் ஏற்றி, வேண்டிய இடத்துக்குக் கொண்டுபோய், அங்கே வண்டியிலிருந்தே பீரங்கியைச் சுடுகிறார்கள்.

ஆஸ்ட்ரிய பீரங்கிகளிலிருந்தும் ஜெர்மன் பீரங்கிகளிலிருந்தும் வெளிவரும் குண்டுகள் ஸாதாரணமாய் 8-மைல் தூரம் போகுமென்றாலும், சில பீரங்கிகளின் குண்டுகள் இன்னும் ரொம்ப தூரம் போகக்கூடியவையென்று தெரியவருகிறது. சில காலத்துக்கு முன்னால் ஜெர்மானியர்கள் டன்கர்க்கைத் தாக்கினபோது, குண்டுகள் 22-மைல் தூரத்திலிருந்து வந்து அந்தப் பட்டணத்தில் விழுந்தனவாம். இந்த குண்டுகள் உபயோகிக்கப்பட்ட பீரங்கிகள் 12-அங்குலம் அல்லது 15-அங்குலம் குறுக்களவுள்ளவையாம்.

பீரங்கிகள் உபயோகப்படக்கூடிய காலம் எவ்வளவு என்பதை நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. யுத்தத்துக்கு முன்னால் ரொம்ப பெரிய கப்பல் படை பீரங்கிகளிலிருந்து 100 தடவை சுடலாமென்று பலர் அபிப்ராயப் பட்டார்கள். இப்போது அதே பீரங்கிகள் 200 அல்லது 300 தடவை சுடக்கூடுமென்று சொல்லப்படுகிறது. அதற்குப் பிறகு அவைகளின் குறி தப்பிப்போகிறதாம்.

இந்த யுத்தத்தில் 12-அங்குல ஸ்கோடா பீரங்கியை 400 தடவை சுட உபயோகித்திருக்கிறார்களாம். ஒரு ஸமயம் இந்த பீரங்கிகளில் ஒன்றை பரீக்ஷார்த்தமாய் 600 தடவை ப்ரயோகித்தும், பீரங்கி வாய் குறிதப்பும்படி தேயவில்லையாம்.

யுத்தம் ஆரம்பித்தபோது ப்ரிட்டிஷ் கக்ஷியைச் சேர்ந்த தேசங்களிடம் மேற்சொன்னவை போன்ற பெரியபீரங்கிகள் ஒன்றும் கிடையாது. யுத்தக் கப்பல்களில் தான் பெரிய பீரங்கிகள் அமைக்கப்பட்டிருந்தன. ஜெர்மானியர்கள் பெரிய பீரங்கிகளைக் கொண்டு தாக்க ஆரம்பித்ததும் நேசக்கக்ஷியார் கப்பல் பீரங்கிகளை சில ஸந்தர்ப்பங்களில் உபயோகிக்க முயற்சி செய்ததோடு, உடனே பெரிய பீரங்கிகள் தயார்செய்ய முயன்றார்கள். நேசக்கக்ஷியார் சென்ற மூன்று நான்கு மாஸங்களாக சில போர்முனைகளில் ஜயமடைந்ததற்குக் காரணம் அவர்கள் செய்து உபயோகித்த பெரிய பீரங்கிகளே யென்று சிலர் அபிப்ராயப் படுகிறார்கள். அவர்கள் உபயோகிக்கும் பீரங்கிகளின் வாய் அளவு இன்னதென்று திட்டமாய்ச் சொல்லமுடியாதென்றாலும், ப்ரெஞ்ச் இருப்புகளால் 16½, 14, 12-அங்குல குண்டுகள் உபயோகிக்கப் பட்டிருப்பதைப் பார்த்தால், ப்ரெஞ்சுக்காரர்கள் எவ்வளவு சீக்ரத்தில் அத்தனை அங்குலம் குறுக்களவுள்ள பீரங்கிகள் தயார் செய்திருக்கிறார்களென்பது தெரியவரும்.

இங்க்லீஷ்காரர்கள் ப்ரெஞ்ச் பீரங்கிகளைப் போல் பெரிய பீரங்கிகள் தயார் செய்யவில்லையென்று சொல்லப்படுகிறது. இருந்தாலும் எதிரிகளுடன் ஸமாளிக்கக் கூடிய அளவு பெரியவையான பீரங்கிகள் அவர்களிடம் உண்டு.



## GREEN MANURING.
## பசுந்தாள் உரமிடுதல்.

இப்போது சிலகாலமாக நமது ராஜதானியில் பசுந்தாள் உரமிடும் வழக்கம் அதிகரித்து வருகிறது. இந்தவழக்கத்தால் விவஸாயிகளுக்கு வெகுவாய் அதிக பலனே கிடைத்துவருகிறதென்னலாம். ஆனால் பசுந்தாள் பயிரை நிலத்தில் மடக்கின பிறகு, மழைபெய்யாமல் போய் ஜலத்தட்டு ஏற்பட்டால், அது நன்றாய் அழுகாமல் அதிக மாஸூல் கிடைக்காதபடி செய்து விடுகிறது. இன்னும் சில ஸமயங்களில் மாஸூல் ஸாதாரணமாய்க் கிடைப்பதைவிட ரொம்பவும் குறைந்தும் போய்விடுகிறது. தழையெரு உபயோகிப்பதில் அது நன்றாய் மட்குவதற்கு ஜலத்தையே எதிர்பார்த்திருக்கவேண்டியிருப்பதாலும், சிலஸமயம்மழைக்குறைவாலஜலத்தட்டு ஏற்படுகிறபடியாலும், அதனால் உள்ள மாஸூலுக்கே மோசம்வரக்கூடுமாகையாலும், மழையை எதிர்பார்க்காமல் தழையெருவை கெடுதல் ஏற்படாதபடி உபயோகிக்க முடியுமா என்றுபார்க்க வேண்டும். அவ்விதம் கெடுதலேற்படாதபடி தழையெருவைத் தயாரித்து உபயோகிக்கலாமென்று, வடக்கே பூஸாவிலுள்ள விவஸாய ஆராய்ச்சிப் பண்ணையில் செய்த பரீக்ஷைகளால் தெரியவருகிறது.

அங்கே அனுஸரித்த முறை பின் வருமாறு. சடம்பு முதலிய பசுந்தாள் பயிர்களை வெட்டி வயல்களில் உபயோகிப்பதற்குமுன்னால் வயல்களோரமாய் குழிகள்தோண்டவேண்டும். மழைக்காலமாயிருந்தால் அவைகளில் ஜலம் பாய்ந்து நிரம்பிவிடும். ஆனால் அதிகஜலம் சேரும்படி விடக்கூடாது. இல்லாவிட்டால் குழிகளுக்கு ஜலம்விட வேண்டும்.

பசுந்தாள் பயிர்களை வெட்டி சேகரித்து குழிகளில் போட்டு மிதித்து 24-மணி முதல் 48-மணி வரையில் விட்டுவைக்கவேண்டும். பிறகு தழையை எடுத்து பெரிய குவியலாகப்போட்டு மட்கவிடவேண்டும். குவியல் போடுவதில் முதலில் தழையை கொஞ்சம் உயரம் பரப்பி, அதன்மேல் குழியிலுள்ள ஜலத்தைத் தெளித்து, அதன்மேல் குழியின் அடியிலிருந்து மண்ணெடுத்து பரவலாய்ப் போட்டு, மண்ணின்மேல் தழையும் தழையின்மேல் மண்ணுமாகப் போட்டு குவியலாக்கவேண்டும். தழைகளுக்கு ஜலம் தெளிக்கவேண்டியது அவசியம். இதற்கு குழியிலுள்ள ஜலத்தையே உபயோகிக்கவேண்டும். ஏனென்றால், தழையை ஜலத்தில் ஊறப்போடுவதில் தழையிலுள்ள நைட்ரொஜனில் ஒரு பாகம் அம்மோனியா என்ற வாயுவாக மாறி ஜலத்தில் சேர்ந்துகொள்ளுகிறது. இந்த ஜலத்தை உபயோகிக்காவிட்டால் அதிலுள்ள நைட்ரொஜன் ஸம்பந்தப்பட்ட அம்மோனியா எருவில் கலக்காமல் வீணாகப் போய்விடும். இவ்விதம் குவியலாகப் போட்டபின் இன்னும் குழிமண்ணை எடுத்து தழைக் குவியலின்மேல் தழை தெரியாதபடி எல்லாப் பக்கங்களிலும் படையாகப் பூசவேண்டும். இப்படித் தயார்செய்த குவியலை அப்படியே தழைக்குத் தக்கபடி சிலவாரங்கள் விட்டுவைத்தால் உள்ளேயுள்ள தழையெல்லாம் மட்கி நல்ல எருவாகி விடும். மேல் மண்படை காய்ந்துபோய் விரிசல் ஏற்படாதபடி அதன்மேல் அடிக்கடி ஜலம் தெளித்து வரவேண்டும்.

அவுரி, சடம்பு முதலிய கோதுப்பயிர்களை முதலில் ஜலத்தில் ஊறப்போட்டால், அந்தப் பயிர்களிலுள்ள நைட்ரொஜன் வாயு ரொம்ப அதிகமாக வெளிக்கிளம்பி வீணாய்ப்போகும். ஆகையால் அவைகளை ஜலத்தில் நனைக்காமலே குவியலாய்ப்போட்டு அவைகளின்மேல் ஜலத்தைத் தெளித்து மண் பூசிவிட வேண்டும்.

இந்த முறைகளின்படி தயார்செய்யும் தழையெரு ரொம்ப நன்றாய் மட்கியிருக்கவேண்டுமானால், புதுச்சாணத்தை ஜலத்தில் கரைத்து, இரண்டுவிதக் குவியல்களிலும் அதாவது ஜலத்தில் ஊறப்போட்ட தழையிலும் ஊறப்போடாத

தழையிலும், சாணி ஜலத்தைத் தெளித்தால் தழைநன்றாய்மட்கியிருக்கும்.

இவ்வித முறைகளால் என்ன ஸாதகங்கள் ஏற்படுகின்றன என்பதை விவரிப்போம்.

1. இந்த மட்கின எருவானது, அதுபோட்டவுடன் சாகுபடிசெய்யப்படும் முதல் பயிருக்கே உபயோகப்படுகிறது. அதாவது, பயிர்கள் இந்த எரு முழுவதையும் க்ரகித்துக்கொள்ளுகின்றன. பழையமுறைப்படி தழையைமிதிப்பதால் தழை நன்றாய் மட்குவதில்லையாகையால், முதலில் சாகுபடி செய்யப்படும் பயிருக்கு தழை எருவின் எல்லா ஸாரமும் கிடைப்பதில்லை. சில ஸமயம் முதல்பயிரில் லாபமேற்படாமல், அடுத்து சாகுபடி செய்யப்படும் பயிரில்தான் தழை பெருவால் ப்ரயோசன மேற்பட்டு அதிக மாஸூல் கிடைக்கும்.

புதுமுறையில் தயார்செய்யப்பட்ட எருவால் மாஸூல் அதிகம் கிடைக்குமென்பது பூஸாவில் செய்த பின்வரும் பரீக்ஷையால் நன்றாய் விளங்கும். அங்கே ஒவ்வொன்றும் ஸுமார் 4 ஸெண்ட்விஸ்தீரணமுள்ள மூன்றுநிலங்களில் ஓட்ஸ் என்னும் தான்யம் பயிரிடப்பட்டது. ஒருநிலத்தில் எருவேபோடவில்லை. அந்த நிலத்தில் சடம்புப் பசுந்தாள் பயிராக சாகுபடிசெய்யப்பட்டிருந்தது. அந்தப்பயிரை வெட்டும்போது நின்ற அதன் வேர்களும் அடிக்கட்டையில் மீதி பாகமுந்தான் உரமாக உபயோகப்பட்டிருக்கும். இன்னொரு நிலத்தில் சடம்புப்பயிரை பழையமுறைப்படி மண்ணில்போட்டு உழுதார்கள். மூன்றாவது நிலத்தில் புதுமுறைப்படி மட்கவைத்த சடம்புப்பயிரை உபயோகித்தார்கள். இந்த நிலத்தைவிட இரண்டுமடங்கு விஸ்தீரணமுள்ள நிலத்தில் விளைந்த சடம்புப்பயிர்த்தழையையும் புதுமுறையில் மட்கவைத்து இந்நிலத்தில் எருவாகப்போட்டார்கள். இப்படி அதிகமாக எருப்போடுவதே ச்லாக்ய மென்று [illegible]. இந்த மூன்று நிலங்களின் ஒவ்வொன்றிலும் ஏக்கருக்கு எவ்வளவுவிதம் மாஸூல் கிடைத்ததென்பது அடியில்வரும் கணக்கால் தெரியவரும்.

| | தான்யம் ராத்தல். | வைக்கோல். ராத்தல் |
|---|---|---|
| எருப்போடாதது. | 885 | 2820 |
| சடம்புப் பயிரை போட்டு உழுதது. | 960 | 2835 |
| மட்கவைத்த சடம்புப் பயிர் போடப்பட்டது. | 1540 | 2970 |

சடம்புப்பயிரை நிலத்தில் போட்டு உழுவதைவிட மட்கவைத்த எருவை உபயோகிப்பதால் நூற்றுக்கு 50- க்கு மேல் தான்யம் கிடைக்கிறதென்று தெரியவருகிறது. இன்னொரு விசேஷமென்னவென்றால் தான்யம் அதிகமாய்க் கிடைத்தும் வைக்கோலின் நிறை அதிகமாகவில்லை.

2. சடம்பைப் பழையமுறையில் உபயோகிப்பதில் ஒரு அஸௌகர்ய மிருக்கிறது. சடம்பை உபயோகிக்கும் பயிருக்கு அந்தச் சடம்பால் ப்ரயோஜன மேற்பட வேண்டுமென்றால், அது நன்றாய் மட்குவதற்கு பூமியில் ஈரமிருக்கவேண்டும். ஒரு ஸமயம் தாமஸமாய் தழையை உபயோகித்தால், பிற்பாடு எங்கு மழைத்தட்டால் வேண்டியவளவு ஈரமில்லாமல் போகுமோ என்று பயந்து, சடம்புப் பயிர் நன்றாய் வளருவதற்கு முன்னாலேயே அதை வெட்டி பூமியில் வேண்டிய அளவு ஈரமிருக்கும்போதே போட்டு மிதித்துவிடுகிறார்கள். ஏனென்றால் சடம்பு பூர்த்தியாக வளர்ந்திருந்தால் அது நன்றாய் மட்குவதற்கு அதிக காலம் செல்லும். அது மட்கும்போது பூமியிலுள்ள ஈரத்தை ஆவியாக வெளியில் விட்டுவிடும். அந்த ஸமயம் மழை பெய்யாவிட்டால் ஈரம் குறைந்துபோய் நன்றாய் மட்காது. இவ்விதம் சடம்புப் பயிரை நன்றாக வளருவதற்கு முன்னால் வெட்டிவிடுவதால், நிலத்துக்கு அதிக நைட்ரோஜன் சேருவதற்கில்லை. பத்துவாரமான சடம்புப்



பயிரில் எவ்வளவு நைட்ரோஜன் இருக்கிறதோ அதில் முக்கால்பாகம் நைட்ரோஜன்தான் 6-வாரமான சடம்புப்பயிரில் இருக்கிறது. ஆகவே இப்போதுள்ள முறையால் நாம் நிலத்துக்கிடும் நைட்ரோஜனில் மூன்றில் ஒருபாகம் நைட்ரோஜனை உபயோகிக்கத் தெரியாமல் வீணாக்கிவருகிறோம். மேலும் 10-வாரம் வளர்ந்த பயிர், அளவில் அதிகமாயிருக்கு மாதலால் அதைப் போடுவதால் நிலத்தில் எவ்வளவு இந்த்ரியவஸ்து சேருகிறதோ அதைவிட 5-ல் ஒருபாகம் குறைவான இந்த்ரிய வஸ்துவே 6-வாரம் வளர்ந்த பயிரை உபயோகிப்பதால் நிலத்தில் சேருகிறது. ஆகவே நிலத்துக்கு அதிக நைட்ரோஜன் ஸத்து போடுவதற்கும், அதிக இந்த்ரியவஸ்து சேரும்படி செய்வதற்கும் புதுமுறையை அனுஷ்டிப்பதுநல்லதென்று தோன்றுகிறது.

3. கொஞ்சம்ஜலத்தட்டு ஏற்பட்டால் பழைய முறைப்படி சடம்பைப்போட்டு உழுவதில் மாஸூல் குறைந்துபோவதுபோல, மட்கின சடம்புப் பயிரை உபயோகிப்பதில் மாஸூல் குறைந்துபோவதில்லையென்று பூஸாவில்செய்த பரீக்ஷைகளால் தெரிகிறது.

4. பூரா மழைத்தட்டு ஏற்பட்டு, நிலத்தில் ஈரம் குறைந்துபோனால், மட்கின எருவை உபயோகிக்காமல் வைத்திருந்து அடுத்த பயிருக்கு உபயோகிக்கலாம்.

5. நன்றாய் மட்கின எருவை உபயோகிப்பதால் பயிர்களுக்கு அவைகளின் வளர்ச்சியில் ஆரம்பகாலத்திலேயே வேண்டிய பயிருணவு அதிகமாய்க் கிடைக்கும். பயிர் சிறியதாயிருக்கும்போதே அதற்கு ஸுலபமாய் க்ரஹிக்கக்கூடிய பயிருணவு அதிகமாய் இருக்கவேண்டும். அப்படிக் கிடைத்தால்தான் பயிரில் அதிக தான்யம் பிடிக்கும். சடம்புப் பயிரை நிலத்தில் போட்டு உழுவதால் அது மட்குவதற்கு அதிக காலஞ் செல்லும். பிறகு அதனால் வைக்கோல் அதிகமாகுமே யொழிய தான்யம் அதிகமாகக் கிடைக்காது. இந்தக் குறை புதிய முறையை அனுஸரித்தால் ஏற்படாது.

## PRIDE WILL HAVE A FALL.

BY. R. HARI ROW.

## அஹம்பாவம் அழிவுறும்.

அநேக வர்ஷங்களுக்கு முன் தென் இந்தியாவில் சேர, சோழ, பாண்டிய அரசர்கள் அரசாண்டு வந்தகாலத்து, பாண்டியதேசத்துத் தலைநகராய் விளங்கிவந்த மதுரை மாநகரில் வித்வஜன கோலாஹலன் என்றோர் ஸம்ஸ்க்ருத வித்வான் பாண்டியதேசத்து ஸமஸ்தான வித்வானாக இருந்தான். வித்வானென்ற நாமம் அவனுக்கே தகும்; படிப்பில் நிபுணன்; அவனைக்கண்டு அந்த ப்ரதேசத்திலிருந்த எல்லா வித்வான்களும் அஞ்சுவார்கள். அவ்வாறு கருடன் நிழலைக்கண்டு பயந்தோடும் பாம்பைப் போல அஞ்சி, எல்லா வித்வான்களும் அவனுக்கு வர்ஷா வர்ஷம் கப்பம் செலுத்தி வந்தார்கள்.

இது இப்படியிருக்க, ஸ்ரீ வைஷ்ணவ சமயாசாரியர்களுள் மகிமை தங்கிய யமுனைத்துறைவர் பத்துப் பன்னிரண்டு ப்ராய மிருக்கும்போது, பாஷ்யாசாரியார் என்ற ஓர் உபாத்யாயருடைய பள்ளிக்கூடத்தில் கல்விபயின்று வந்தார்.

பாஷ்யாசாரியார், தினமும், தாமும் தமது மாணவர்களும் சாப்பிடுவதற்கு வீட்டுக்குப் போகும்பொழுது, யாராவது ஒரு பையனை பள்ளிக்கூடத்திற்கு காவலாய் வைத்துவிட்டுப் போவது வழக்கம். ஒருநாள் வழக்கம்போலவே போயிருந்தபொழுது, யமுனார்யர் காவலாய் நின்றுகொண்டிருந்தார். அவரிடம் அப்பொழுது யாரோ ஒருவன் வந்து, "உங்கள் உபாத்யாயரான பாஷ்யாசாரியார் எவ்விடம் இருக்கிறார். உள்ளிருந்தால் வரச் சொல்லும்." என்று கேட்டான். யமுனார்யர், "ஐயா! இந்தக்[illegible]

[illegible]இல் நமது குருவைத் தேடிவந்த காரணம் என்ன? நீர் யார் சொல்லும். பிறகு நான் உபாத்யாயரை வரும்படி சொல்லுகிறேன்." என்று புதிதாக வந்தவனை வினவினார்.

"பிள்ளாய்! நான், எண்திசையிலும் புகழ்பெற்ற வித்வஜ்ஜன கோலாஹலனின் வேலைக்காரன்; வரிதண்டுவோன். உங்கள் குருவானவர் சென்ற நாலைந்து வர்ஷகாலமாய் வரிசெலுத்தவில்லை. அதை வஸூல் செய்துகொண்டு வரும்படி என்னை அனுப்பியிருக்கிறார்." என்று பதிலுரைத்தான்.

"ஐயா, அப்படியே இருக்கட்டும். வித்வஜ்ஜனகோலாஹலனுக்கு மற்ற பண்டிதர்கள் யாவரும் வரி செலுத்துவானேன்?" என்று யமுனார்யர் கேட்க, அவன், "எங்கள் யஜமானன் எல்லா வித்வான்களிலும் சிறந்தவர்; ஆகையால் ஏடும் எழுத்தாணியும் எடுத்தவர்களெல்லோரும் வரிதர வேண்டுமென்று உத்திரவு" என்று பதில் சொன்னான்.

"நமது குருவாகிய பாஷ்யாசாரியாரைப் போல இவனும் ஓர் வித்வான்தானே. இவனுக்காவது மற்ற வித்வான்கள் வரி செலுத்தவாவது" என்று மனதில் எண்ணி, "பாஷ்யாசாரியார் வரி செலுத்தமாட்டேனென்று சொல்லிவிட்டாரென்று பதில் கூறுவாயாக" என்று சொல்லி, யமுனார்யர் வரிதண்டுவோனை அனுப்பிவிட்டார்.

வரிதண்டுபவன் சிறிது தூரம் சென்றானோ இல்லையோ, பாஷ்யாசாரியாரும் வந்து சேர்ந்தார். குரு வந்தவுடன் யமுனார்யர், வரிதண்டுவோன் வந்ததையும், அவன் கேட்டதையும், அவனுக்குத்தான் பதில் சொல்லி யனுப்பியதையும் சொன்னார்.

அப்பொழுது பாஷ்யாசாரியாருக்கு வந்த கோபமும், பயமும் சொல்லவும் முடியுமோ? "ஐயோ, அறியாப் பாலனே! இவ்வளவு பதில் [illegible]விட்டாயே! அந்த வித்வான் கோபக்காரனாயிற்றே! ஒருகுற்றமும் செய்யாதவர்கள் மேலேயே கோபங்கொண்டு, தண்டனை விதிக்கிற அவன் என்னை விட்டுவிடப் போகின்றானா? என் வாழ்நாட்கள் முடிந்தன! இனிமேல் சாவே! என்ன செய்வேன்! என்ன செய்வேன்!" என்று துக்கிப்பாரானார்.

அதற்கு யமுனார்யர் சொல்லுவார், "எனது குருவே! பெருமதங்கொண்ட அந்த வித்வானை நான் போய் வென்று வருகிறேன். நீர் போக வேண்டாம். நீர் அச்சத்தை விடும். ஸாதாரணமாய் உம்மைப் போல வித்வானொருவன், வரி தண்டுவதோ வித்வான்களிடத்திலிருந்து? 'இவனென்ன அரசனோ? வருவது வரட்டும்' என்று துணிந்துதான் நான் பதில் சொன்னேன். குருவே"

குருவானவர் நகைத்து, "யமுனார்யா! நீயாவது அவனை விவாதத்தில் வென்றுவிடவாவது! அவன் படிப்பு எங்கே, உன் படிப்பு எங்கே? மலைக்கும் மடுவுக்கும் போலேயல்லவா யிருக்கிறது." என்று இருவரும் வார்த்தையாடிக்கொண்டிருந்தார்கள்.

இங்கு இவ்வாறிருக்க, அவ்வரி தண்டுவோன் தனது யஜமானனிடம் நடந்ததை யறிவித்தான். வித்வஜ்ஜன கோலாஹலனுக்குக் கோபம் கிளம்பிற்று. உடனே வரி தண்டுபவனிடம் "இவ்வாறு பதில் சொல்லும்படி துணிவுகொண்ட அப்பாஷ்யாசார்யாரை நான் வாதுக்கு அழைத்து வரச்சொன்னதாகச் சொல்லி கையுடன் அழைத்துவா" என இடி இடிப்பதுபோல பதிலுரைத்தான்.

இந்த ஸமாசாரத்தை பாஷ்யாசாரியாரிடம் வரி தண்டுவோன் வந்துசொல்ல, அவர் அடியற்ற பனைபோல சாய்ந்தார்; அவர், அடிவயிற்றில் இடி விழுந்தாற்போலத் தயங்கினார்; மூர்ச்சித்தார்; பேசமுடியாத பூதம்போல பதில் கூறாது நின்றார். "ஐயோ! யமுனார்யா! எனக்குக் கேட்டை விளைவித்தாயே! இதிலிருந்து எவ்வாறு கரையேறுவேன்!" என்று துக்கித்து, ஓவென்று கதறி அலறினார். யமுனார்யர், "ஐயா, சும்மா இரும்" என்று குருவை ஸமாதானப்படுத்தி, வரி தண்டுவோனிடம் திரும்பி, "நீ சென்று அந்த வித்வானை இங்கு வரச்சொல். இல்லாவிட்டால், பாஷ்யாசார்யார் மரியாதையோடு அழைத்தாலொழிய வரமாட்டார் என்று சொல்லிவிடு" என்று பதில் சொல்லி அனுப்பிவிட்டார்.



அப்படியே கொஞ்ச நாழிகைக்குப் பிறகு பல்லக்கும், மேளதாளமும் வந்து சேர்ந்தன. பாஷ்யாசார்யாருக்கு பதிலாக யமுனார்யரே வித்வஜ்ஜன கோலாஹலனை வென்றுவரப் புறப்பட்டார்.

மதுரையின் ராஜவீதிவழியே யமுனார்யர் பல்லக்கில் ஏறி வருவதை தனது உப்பரிகை மேல் உலாவிக்கொண்டிருந்த அரசன் கண்டு, நகைத்தான். நகைத்ததைக்கண்ட அருகிலிருந்த அரசி "காதல! நீர் நகைத்ததற்கு காரணம் என்ன?" என கேட்க அரசன் "இதோ, இப்பல்லக்கில் வரும் பாலகனைக் கண்டாயா? இவன், நமது ஸமஸ்தான வித்வானாகிய வித்வஜ்ஜன கோலாஹலனைக் கல்வியில் வென்றுவிடுவதாகக் கூறிவருகிறான். இச்சிறுபையன் அவனைவெல்லவாவது! என்ன பேதமை!" என்று பதிலுரைத்தான்.

ஆனாலோ ராஜபத்னி யமுனார்யரின் முகத்தின் தேஜஸைக் கண்டு, மிகவும் கெட்டிக்காரன் என்பதற்கு தடையேயில்லை என்று எண்ணி, தனது காதலனை நோக்கிக் கூறுவாள். "அரசே! நீங்கள்கொண்ட எண்ணத்தை விட்டுவிடுங்கள். இச்சிறு பையன் நமது வித்வானை வென்றுவிடுவான் என்பதற்குச்சிறிதேனும்ஸந்தேகமில்லை."

இந்த விவாதம் கடைசியில் பந்தயத்தில் வந்து முடிந்தது. அரசன் தனது மனைவியை நோக்கி "நீ அவ்வளவு புகழ்ந்து கூறும் அப் பையன் தோல்வியடைவானாகில் என்ன செய்வாய்?" என, அவள் "நான் உமது தாஸிக்குத் தாஸியாக இருந்து அவளிடம் ஊழியம்செய்து வருவேன். இது நிச்சயம்" என்றாள். அரசனும் "அப்பையன் ஜயித்துவிடுவானேயானால் எனது ராஜ்யத்தில் பாதி கொடுத்துவிடுகிறேன்" என்று சபதஞ் செய்தான்.

அரண்மனை ஸபாமண்டபத்தில் அநேக கல்விமான்கள் வந்து கூடினார்கள். அரசனும், அரசியும் ஸிம்மாஸனத்தின்மேல் உட்கார்ந்திருந்தார்கள். யமுனார்யரும் வந்து சேர்ந்தார். அவர் வடிவைக் கண்டு வித்வஜ்ஜன கோலாஹலன் நகைத்து, அவரை எளிதில் வென்றுவிடலாம் என்று அஹம்பாவங்கொண்டு "சிறுபிள்ளாய்! உனக்கு ஹரிச்சுவடி தெரியுமோ? எழுத்துக் கூட்டி வாசிக்கத் தெரியுமோ? சிறு பையனாயிருக்கின்ற நீயா கல்வியில் புலியாகிய என்னைவென்று விடப்போகிறாய்?" என்று கேட்டான். அதற்குப் பதிலாக யமுனார்யர், "ஐயா! யான் சிறுவன் என்று என்னைப் பழிக்கிறீரே. 'கல்விக்குக் கரையில்லை' என்பதேபோல் கல்விக்கு எல்லை ஏதேனுமுண்டோ? நான் அறியா மூடனென்றும், நீர் படிப்பில் மஹா பாண்டித்யமுடையவர் என்றும் வீண் அஹம்பாவங்கொண்டிருக்கிறீரே, அதை விட்டுவிடும். இப்போதாவது 'சிறியோரெல்லாம் சிறியருமல்லர்? பெரியோரெல்லாம் பெரியருமல்லர்' என்ற வாக்கை அறியீரோ? அகஸ்தியமுனிவர் ஸமுத்ரத்தை உட்கொள்ளவில்லையா? பெரியமலையானது சம்மட்டியால் உடைபடாமல் ஒரு சிறு உளியால் துண்டு துண்டாய் உடைபடவில்லையா? இருக்கட்டும். நேரமாகிறது. வீண்வார்த்தை வேண்டாம். வாது செய்வோம் வாரும். என்னைத் தாழ்மையாய்ப் பேசுவதால் உமக்குவரும் லாபம்யாதோ?" என்றார்.

வித்வஜ்ஜன கோலாஹலன் யமுனார்யருடன், தர்க்கம், சாஸ்த்ரம் இவற்றில் கேள்விகேட்டு வாதம்செய்ய, அவர், அவைகளில் அஸாத்யமாய் [illegible] தர்க்கமும், சாஸ்த்ரம் [illegible]

செய்ய ஆரம்பித்தால் வெகுநாள் செல்லும். அதுவேண்டாம். ஆகையால் வாதத்தை நீரே முதலில் வேறெந்த விஷயத்தைப்பற்றியாவது பேசும்" என்று சொன்னார்.

யமுனார்யரும், "உங்கள் இஷ்டப்படியே செய்வோம். நாம் ஆம் என்று சொல்லும் மூன்று கேள்விகளை, நீர் அல்லவென்று மறுப்பீராகில் நம்மை ஜயித்ததாகஒப்புக்கொள்வோம். உமக்கு ஸம்மதந்தானா ?" என்றார்.

முதற் கேள்வி:—வித்வஜன கோலாஹலனும் அதற்கு ஸம்மதிக்கவே யமுனார்யர் அவனை நோக்கி, "ஐயா ! உமது தாயார் மலடியல்ல அதாவது புத்ரவதி என்கிறோம். நீர் அவள் புத்ரவதியல்ல வென்று மறுத்துவிடும் பார்ப்போம்" என்றார். வித்வஜனகோலாஹலனோ நெடுநேரம் யோசித்துப் பார்த்தான். தான் அவள் வயிற்றிலிருந்துபிறந்திருக்க அவள்மலடியென்று எவ்வாறு கூறுவது ? ஊரார் நகையார்களா? இதென்ன கஷ்டம்" என்று நினைத்து வெகுநேரம் மயங்கினானே யொழிய பதில் சொல்லவில்லை.

இரண்டாம் கேள்வி:—"இதோ இங்கு வீற்றிருக்கும் அரசர் தர்மவானென்கிறோம். அவர் தர்மவானல்ல என்று மறும்." என்றார் யமுனார்யர். மறுபடியும் வித்வான் தனது புத்திக் கெட்டியவரையில் யோசனை செய்து பார்த்தான். "இப்போது இங்குள்ள அரசனை தர்மவானல்ல என்று சொல்ல என் நா எவ்வாறு எழும்? அவ்வாறு சொல்லுவேனேயானால் அவன், 'நன்றியறிவில்லாதவனே ! உன் வாழ்நாட்களை யெல்லாம் இங்கேயே கழித்தும், என்பணத்தை யெல்லாம் கொள்ளைகொண்டும், என்னை தர்மவானல்ல என்று கூறுகிறாயே,' என்று என்னைத் துண்டந்துண்டமாய் வெட்டி யெறிந்துவிடமாட்டானோ ?" என்று எண்ணினார். பதில்சொல்லத் தெரியாமல் ஏங்கினார்.

மூன்றாம் கேள்வி:—"இந்த ராஜபத்னி பதிவ்ரதை, அவள் பதிவிரதை யல்ல என்று மறுக்கக்கூடுமானால் மறுத்துவிடும் பார்ப்போம்" என்று வினவினார் யமுனார்யர்.

வித்வானுக்கு ஒன்றும் தெரியவில்லை. "இம் மூன்று கேள்விகளுக்கும் தகுந்த உத்தரம் சொல்லத் தெரியவில்லையே ! நமது படிப்பு என்ன படிப்பு ! எல்லாம் வீணே ! இப்பையன் நம்மை வென்றான் என்றால் அதைவிட அவமானம் வேறு ஏதாவதுண்டோ ? அரசி பதிவ்ரதை யல்ல என்று எவ்வாறு சொல்வது ! அவள் பதிவ்ரதா சிரோமணியானவளே !" என்று ஏங்கினார். தமக்கு அடக்கம் என்பது இல்லாததைப் பற்றி விஸனமடைந்தார். தமக்கு விருதுகள் முதலியவை எதற்காக என்று எண்ணி, அவைகளை யமுனார்யரின் முன் வைத்து, அவைகளை அங்கீகரிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

அரசன், யமுனார்யரின் கல்வித்திறத்தைக் கண்டு ஆச்சர்யமடைந்து, "கல்வியில் சிறந்தவரே, இம்மூன்று கேள்விகளையும் எங்கள் வித்வானால் மறுக்கமுடிய வில்லையே. உம்மால் மறுக்கமுடியுமோ ?" என்று வினவ அவர் பின்வருமாறு பதில் சொன்னார்.

1.—உமது தாய் புத்ரவதி என்பதற்கு மறுப்பு"—

"வாழையானது ஒரு குலை ஈனுவதுபோல இந்த வித்வானுடைய தாய் இவரொருவரை மாத்ரம் பெற்றதனால், "ஒருபிள்ளையும் பிள்ளையல்ல, ஒரு மரமும்தோப்பல்ல" என்ற பழமொழிப்படியே அவள் வாழை மலடியாதலால் புத்ரவதி யல்லள்."

2.—"ராஜா தர்மவான்" என்றதற்கு மறுப்பு—,

"ராஜா ராஷ்ட்ரக்ருதம் பாபம்" என்ற நீதி வாக்யப்படியே தேசத்தார் செய்த பாபம் அரசனை சேருமாதலால் ராஜா தர்மவானல்லன்."

3.—"ராஜபத்னி பதிவ்ரதை" என்றதற்கு மறுப்பு—,



"கரு உற்பத்தியால் சந்த்ரனுக்கும், விளையாட்டாற் கந்தர்வனுக்கும், தீபனவ்ருத்தியால் அக்னிக்கும், முன்பு ஸ்வாதந்த்ரியப்பட்டு, பின்பு மணம் செய்துகொள்பவனுக்கு உரியவளாகின்ற காரணத்தாலும், மணஞ்செய்யுங்காலத்தில் அக்னி, வருணன் முதலிய பஞ்ச தேவர்களுக்கு அவள் ஸமர்ப்பிக்கப்படுதலாலும் ஸ்திரீக்குப் பதிவ்ரதாபங்கம் வருகிறது" என்றார். பாண்டியதேசத் தரசனும் தான் சபதஞ்செய்தவாறே யமுனைத்துறைவருக்கு பாதி ராஜ்யத்தையும் கொடுத்தான்.

ஆர். ஹரி ராவ்.

## THE VILLAGE INDUSTRIES OF INDIA.

## இந்தியாவின் க்ராமக் கைத்தொழில்கள்.

இந்தியாவிலுள்ள கைத்தொழி லபிமானிகளில் சிலர், இந்தியாவின் தொழில் நிலைமை வ்ருத்தியடைய வேண்டுமானால், யந்த்ரங்களால் வேலைநடக்கும் கைத்தொழில் சாலைகள் அதிகரிக்க வேண்டுமென்றும், யந்த்ரங்கள் உபயோகிக்கப்படாத வீட்டுக் கைத்தொழில்களால் தேசத்தின் தொழில் நிலைமை வ்ருத்தியடையாதென்றும் எண்ணுகிறார்கள். ஐரோப்பாவில் பெரிய தொழில்சாலைகள் ஏற்பட்டதனால் க்ராமக் கைத்தொழில்கள் நாசமடைந்ததுபோல, இந்தியாவிலும் க்ராமக் கைத்தொழில்களும் காலக்ரமத்தில் இருந்தவிடந் தெரியாமல் மறைந்துபோகுமென்று அவர்கள் எண்ணுகிறார்கள். இந்தக் கொள்கை எவ்வளவுதூரம் சரியென்று பார்ப்போம்.

இந்தியாவிலுள்ள பெரிய பட்டணங்களில் கைத்தொழில் சாலைகள் ஸ்திரமாய் ஏற்பட்டு இப்போது 30 வர்ஷங்களுக்கு மேலாகிறது. அது முதல் நாளதுவரையில் யந்த்ர சக்தியால் நடைபெற்றுவரும் மில்லுகளின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது. அப்படியிருந்தும் இந்த ஒரு தலைமுறை காலத்தில் இந்த தேசத்தின் பொருளாதார அமைப்பில் அவைகளால் பெரிய மாறுபாடுகள் ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை. இந்தியாவிலுள்ள 31½ கோடி ஜனங்களில் 3½ கோடி ஜனங்களே கைத்தொழில்கள்செய்து ஜீவனம்செய்கிறார்கள். இந்த 3½ கோடியில் 1 கோடியே 70 லக்ஷம் பேர்கள்தான் வேலைசெய்யும் ஜனங்கள். பாக்கி 1 கோடியே 80 லக்ஷம் பேர்கள் வேலைசெய்யாமல் வேலைசெய்து ஜீவிப்பவர்களை அண்டியிருந்து அவர்கள் ஸம்பாத்யத்திலிருந்து சாப்பிடுகிறவர்கள். வேலைசெய்யும் ஒரு கோடியே 70 லக்ஷம் ஜனங்களிலும் 8-லக்ஷத்து 23 ஆயிரம் ஜனங்கள்தான் யந்த்ர சக்தியால் நடைபெறும் மில்லுகளில் வேலை செய்கிறார்கள். பாக்கி 16,69,200 பேர்கள் சிறிய கைத்தொழில் சாலைகளிலும் வீட்டுக் கைத்தொழில்களிலும் அமர்ந்திருக்கிறார்கள். முப்பது வர்ஷமாக பெரிய தொழிற்சாலைகள் நடந்துவந்தும், மொத்தம் ஜனத்தொகையாகிய 31,50 லக்ஷம் ஜனங்களில் 10 லக்ஷம்பேர்கள் கூட மில்லுகளில் போய் வேலைசெய்யாமலிருப்பதால் இந்தியா ஒரு ப்ரத்யேகமான நிலைமையிலுள்ளதென்றும், இங்லண்ட் முதலிய தேசங்களின் நிலைமையைக்கொண்டு இந்தியாவின் நிலைமையை ஒப்பிட்டுப் பார்ப்பது சரியல்லவென்றும் ஏற்படுகிறது.

இருந்தாலும், ஒழுங்குடனும் ஏற்பாடுடனும் நடந்துவரும் பெரிய தொழில்சாலைகளினுடைய போட்டியால் க்ராமக் கைத்தொழில்கள் கொஞ்சங்கொஞ்சமாய் க்ஷீணித்து வருகின்றனவென்பதில் ஸந்தேகமில்லை. ஆனால் ரொம்ப மெதுவாகவே க்ஷீணித்துக்கொண்டு வருகின்றன. இதற்குக் காரணம் மற்ற தேசங்களில்லாத ப்ரத்யேகமான நிலைமைகள் இந்தியாவிலிருப்பதே. இவைகளுள் முக்யமான காரணம், ஜாதி ஏற்பாடே. இதனால் சேணியனுப் பிறந்தவனை ஜனங்கள் நெசவு தொழில்காரன் என்று

அவனை அந்த தொழிலில் ஆதரித்து அவனுடைய தொழிலை ஸ்திரப்படுத்துகிறார்கள். அப்படியே குயவனைப் பிறந்தவன் மண்பாண்டம் செய்யும் தொழிலில் ஜன ஸமூகத்தின் ஆதரவைப்பெற்று தன் ஜாதித் தொழிலில் நிலைபெறுகிறான். நமது தேசத்தில் ஜாதிக்கட்டுப்பாடு ரொம்ப பலமானது. ஒரு ஜாதியில் பிறந்தவன் மற்ற ஜாதித் தொழிலைச் செய்வதும், மற்ற ஜாதித் தொழிலகாரர்களோடு ஸம்பந்தம் செய்வதும், அவர்களோடு கூடிக் குலாவுவதும் கூடாதகார்யமாகும். ஆகவே, ஒரு தொழிலாளி வேறு தொழிலை நாடி பட்டணத்துக்குப்போனால், அவன் தன் ஜாதி ஜனங்களை விட்டுத் தனிமையாயிருக்க நேரிடுவதோடு, சில ஸமயம் தன் ஜாதிக்கட்டிலிருந்து விலக்கப்படுவதுமுண்டு. ஸாதாரணமாய் ஒரு தொழிலாளிக்கு ஒரு வீடும், தொழிலுக்கு வேண்டிய ஆயுதங்களும் இருப்பதுண்டு. இதோடு அவனுடைய முன்னோர்கள் அவனுக்கு தொழில் ரகஸ்யங்கள் சில கற்றுக் கொடுத்திருப்பார்கள். அவன் தன் க்ராமத்திலேயே யிருந்தால், அவனை வாடிக்கையாக வேலைக்குக் கூப்பிட சில ஜனங்களிருப்பார்கள். இந்த நான்குந்தான் அவனுக்கு ஆஸ்தியென்று சொல்லலாம். வேறு தொழிலுக்குப் போனாலும், வேறு பட்டணங்களுக்குப் போனாலும், இந்த ஆஸ்தியை அங்கு எடுத்துக் கொண்டு போகமுடியாது. அதாவது ஒரு தொழிலுக்கு உபயோகப்படும் ஆயுதங்களும் தொழில்முறைகளும் மற்ற தொழில்களுக்கு உபயோகப்படமாட்டா. முன்பு அவனை ஆதரித்தஜனங்கள் அவனைப் புதுத்தொழிலில் ஆதரிப்பார்களென்பதிற்கில்லை. வேறு ஊர்களுக்குப்போனால் வீடும் வாடிக்கைக்காரர்களும் அந்த வேறு ஊர்களுக்கு வரமாட்டார்கள். ஆகவே அவன் இந்த ஸௌகர்யங்களை விட்டு வேறு தொழிலைச் செய்யப்போவதும், பட்டணங்களுக்குப் போவதும் கஷ்டம்.

மேலும், தொழிலாளிகளுக்கு ஸ்வயேச்சையாயிருப்பதில் ப்ரியமதிகம். ஒரு தொழில் சாலையிலிருந்து அங்குள்ள அமுலுக்குக் கீழ்ப்படிந்து, தொழில்சாலைக்கு குறிப்பிட்ட நேரத்துக்கு வந்து, வேலை செய்வதென்றால், அவர்களுக்கு ரொம்பவும் பிடிக்காது. இது இந்தியத் தொழிலாளிகளுக்கு மாத்ரம் சொன்னதல்ல. உலகத்திலுள்ள எல்லா தேசத்திலும் தொழிலாளிகள் இவ்விதமே யிருக்கிறார்கள்.

இந்தியர்கள் பெரிய மில் தொழில்சாலைகளுக்கு அதிகமாய்ப் போகாததற்கு இன்னொரு காரணமும் சொல்லலாம். அதாவது, ஸ்வயேச்சையாயிருக்கும் தொழிலாளிகளை ஸ்வயேச்சையைவிட்டு அதிகச் செலவும் அஸௌகர்யமுமுள்ள பட்டணங்களில் வஸிக்கத் தூண்டும்படி மில்லுகளில் அதிக சம்பளம் கொடுப்பதில்லை.

சில இடங்களில் ஜனங்களுடைய விருப்பு வெறுப்புகளாலேயே க்ராமத் தொழில்கள் க்ஷீணிக்காமல் நடந்து வருகின்றன. பொதுவாய் ஜனங்களுடைய நடை உடைபாவனைகள் சீக்ரம் மாறுவதில்லை யாகையால், அநேக ஜனங்கள் மில்லுகளில் நூதன மாதிரிகளில் செய்யப்படும் துணி முதலியவைகளை வாங்காமல், நாட்டுப்புறத்தில் பழைய மாதிரியில் செய்யப்படும் ஸாமான்களையே வாங்க இஷ்டப்படுகிறார்கள். இன்னும் சில வேலைகளுக்கு தொழிலாளி ஜனங்களுக்கு பக்கத்திலிருந்து வேலை செய்வதே யுக்தமாயிருக்கிறது. உதாரணமாக, கொல்லன், தச்சன், கொல்லத்துக்காரன், குயவன், வண்டி செய்பவன் ஆகிய இவர்களைச் சொல்லலாம்.

மேலும், அநேக ஸ்வதேச ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் கடைத்தேறாமல் போனதனால் யந்த்ரசக்தியால் நடைபெறும் மில்லுகள் விருத்தியடைவது தடைபட்டுப்போயிற்று. மில்லு யந்த்ரசாலைகள் அதிகமாகாமல்போகவே, அவைகளால் ஏற்படக்கூடியபோட்டியும் அதிகமாகாமல்



போய் க்ராமக் கைத்தொழில்கள் ரொம்ப க்ஷீணிக்காமலிருந்துவருகின்றன. ஆகவே இத்யாதி காரணங்களால் க்ராமத் தொழிலாளி லாபம் குறைந்துபோனாலுங்கூட தனது பரம்பரையான தொழிலை விட்டுவிடாமல் இருந்து வருகிறான். வரும்படி ரொம்ப குறைந்துபோய் சோற்றுக்குக் கதியில்லாமல் போனால்தான் வேறு தொழில்களைத் தேடிப் போகிறான்.

சிறு தொழில்களை க்ஷீணிக்கவிடாமல் செய்ய வேண்டியது அவச்யம். இதற்கு இரண்டு கார்யங்கள் செய்யவேண்டும். அவையாவன, கல்வியும், ஏற்பாடாக வேலை நடத்துவதுமே.

கல்வியென்றால் இலக்கண இலக்கியங்களில் பயிற்சி யென்று அர்த்தமல்ல. ஒவ்வொரு தொழிலாளிக்கும் அந்தந் தொழிலின் நுட்பங்கள் முழுவதையும் கற்றுக்கொடுக்கவேண்டும். க்ராமங்களில் அவர்களுக்காகப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்து, அவர்களுடைய சக்திக்கும் தொழிலுக்கும் ஏற்ற நூதனமானவும் சீர்திருந்தியவுமான யந்த்ர ஸாதனங்களால் ஏற்படும் பலாபலன்களை எடுத்துக்காட்ட வேண்டும். ச்ரமத்தைக் குறைக்கக்கூடிய யந்த்ரங்களின் நன்மைகளை சிறுவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். தேசத்தில் ஒரு முக்யமான ஸ்தலத்தில் ஒரு தொழில் ஆராய்ச்சிசாலை ஏற்படுத்தி, புதிய தொழில்களையும் யந்த்ரங்களையும் பரீக்ஷித்துப் பார்த்து, எது தொழிலாளிகளுக்கு ஏற்றதென்று நிர்ணயித்து, அப்படி நிர்ணயித்த நூதன முறைகளையும் யந்த்ரங்களையும் க்ராமத் தொழில் பள்ளிக்கூடங்கள் மூலமாக தொழிலாளிகளுக்குத் தெரியப்படுத்த வேண்டும். தொழில் ரகஸ்யங்களை விசாரித்தறிந்து அவைகளால் எல்லா தொழிலாளிகளும் நன்மையடையும்படி செய்யவேண்டும்.

தொழில்களுக்கு வேண்டிய மூலப்பொருள்களை வாங்குவதற்கும், தொழில்களை நடத்த பணம் தேடுவதற்கும், செய்த ஸாமான்களை விற்பதற்கும், தொழிலாளிகளுக்குள் ஒற்றுமையும் ஒழுங்கும் வேண்டியிருக்கிறது. இவைகளுக்கு கோவாபரேஷன் ஏற்பாடு ரொம்ப ச்லாக்யமானது. பம்பாய் ராஜதானியில் நெசவுக்காரர்களுக்கென்று 31-கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. இந்த ஸங்கங்களின் நோக்கங்கள் என்னவென்றால், மெம்பர்களுக்கு வேண்டியிருக்கும் நூல், சாயம், கருவிகள் முதலியவைகளை மொத்த விலைக்குவாங்கி மெம்பர்களுக்குக் கொடுப்பது, நெசவுக்காரர்களுக்கு கடன் கொடுப்பது, வ்யாபாரம அதிகமாய் நடக்காத காலங்களில் மெம்பர்கள் நெய்யும் துணிகளை விற்றுக் கொடுப்பது ஆகிய இவைகளே. நெசவுக்காரர்களுடைய அறிவின்மையாலும், அச்ரத்தையாலும் இந்த ஸங்கங்கள் ரொம்ப முன்னேற்ற மடையவில்லை. ஆனால் சில இடங்களில் சில ஸங்கங்கள் நன்றாய் நடந்து வருகின்றனவென்று தெரிகிறது. தொழிலாளிகளுக்குள் கல்வியும் கோவாபரேஷனைப்பற்றிய ஞானமும் பரவினால் நெசவுத்தொழில் க்ஷீணதசை யடையாமல் நிலைபெற்றிருக்குமென்று சொல்லலாம். இதுபோலவே மற்ற தொழில்களும் க்ஷீணிக்காமலிருக்கும்.

## EDUCATION IN VARIOUS COUNTRIES.

## நானாதேசங்களில் கல்விநிலைமை.

(கார்த்திகை மாஸத்து ஜனாபிமானியின் 484-ம் பக்கத் தொடர்ச்சி)

### ஆப்ரிக்காவிலுள்ள முக்யமான தேசங்கள்.

அபிஸ்ஸீனியா.—இது ஆப்ரிக்காவின் வடகிழக்கிலுள்ள ஒரு தேசம். இதில் ஜனங்களுக்குக் கல்வி ரொம்பப் போதாது. அந்த தேசத்தில் புஸ்தகங்களும் பூஜ்யம்.

ஈஜிப்ட்.—தற்காலத்துக்கேற்ற கல்வி இந்த தேசத்தில் ஸ்வல்பமாகவே அபிவிருத்தி யடைந்துவருகிறது. ஆனால் வெகுகாலமாக அங்குள்ள தேசபாஷைப் பள்ளிக்கூடங்களில் சிறுவர்கள் ப்ரைமெரிக் கல்வி பயின்றுவந்திருக்கிறார்கள்.

தென்னாப்ரிக்கா.—இதன் ஒரு பாகமாகிய கேப்காலனி 118-ஸ்கூல் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பிரிவும் ஒரு ஸ்கூல் போர்ட் என்னும் ஸபையின் ஆதீனத்திலிருக்கிறது. அங்கே ஐரோப்பியக் குழந்தைகளுக்கெல்லாம் கட்டாயப்படுத்தி கல்வி கற்றுக்கொடுக்கிறார்கள். ஸ்வதேசிகளுக்கு ப்ரத்யேகமான பள்ளிக்கூடங்களும், தொழில் பள்ளிக்கூடங்களும் உண்டு. கேப் டவுன் என்னும் முக்ய பட்டணத்தில் ஒரு யூனிவர்ஸிட்டி உண்டு.

### வட அமெரிக்காவிலுள்ள தசங்கள்.

அமெரிக்கா ஐக்ய நாடுகள்.—இதன் ஜனத்தொகை 10 கோடியே 10 லக்ஷமாகும். இந்த தேசத்தில் பள்ளிக்கூடங்கள் ரொம்ப இருக்கின்றன. ஒரு வீட்டாராவது பள்ளிக்கூடம் ரொம்ப தூரத்திலிருக்கிறதே என்று கவலைப்படவேண்டியதில்லை. எல்லா இடங்களிலும் பள்ளிக்கூடங்கள் உண்டு. சில இடங்களில் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்குப் போய்வர ஏற்படும் வண்டிச் செலவை ஸர்க்காரே பொறுத்துக் கொள்ளுகிறார்கள். அங்குள்ள பெரும்பான்மையான நாடுகளில் 9 வயஸு முதல் 15 வயது வரையிலுள்ள பிள்ளைகள் கட்டாயம் பள்ளிக்கூடம் போகவேண்டுமென்று சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். வர்ஷந்தோறும் 10 லக்ஷம் மாணவர்கள் ஹைஸ்கூல்களில் சேருகிறார்கள். ப்ரத்யேகமான விஷயங்களைக் கற்பிப்பதற்கும் தொழில்களில் பயிற்சி கொடுப்பதற்கும் ஏராளமான பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இவைகளுக்கு மாணவர்கள் அதிகமாகப் போய்வருகிறார்கள். சென்ற 1910-ம் வர்ஷத்தில் ஸர்க்கார் பள்ளிக்கூடங்களுக்குப்போன மாணவர்களின் தொகை 1,28,27,307. காலேஜுகளிலும் யூனிவர்ஸிட்டிகளிலும், தொழில் சாஸ்த்ரகலாசாலைகளிலும் வாசித்த மாணவர்களின் தொகை [illegible].

கனடா.—இது ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளுள் ஒன்று. இதன் ஜனத்தொகை 72 லக்ஷமாகும். இங்கே 23,000 எலிமெண்டரி ஸ்கூல்களும் ஸெகண்டரி ஸ்கூல்களும் இருக்கின்றன. இவைகளில் மொத்தம் 10 லக்ஷம் மாணவர்களுக்கு மேல்வாசிக்கிறார்கள். சிறுவர்களுக்கு எலிமெண்டரி ஸ்கூல்களில் கட்டாயப் படுத்திக் கல்வி கற்றுக் கொடுக்கிறார்கள். அங்குள்ள யூனிவர்ஸிட்டிகளின் தொகை 20. இவைகளில் 1911-ம் வர்ஷத்தில் 10,000 மாணவர்கள் சேர்ந்து வாசித்தார்கள். அங்கே யூனிவர்ஸிட்டிகளைச் சேர்ந்த காலேஜுகளின் தொகை 40. இவைகளில் 30,000 மாணவர்கள் உண்டு.

மெக்ஸிகோ.—இதில் அரசாட்சியே நிலைவரமில்லை. அங்குள்ள ஸ்வதேசிகளும், ஸ்வதேசிகளுக்கும் ஐரோப்பியர்களுக்கும் பிறந்தவர்களும் வெகுவாய் எழுதப்படிக்க அறியார்கள். இவர்களின் தொகை மொத்தம் ஜனத்தொகையில் 100 க்கு 80 பாகமாகும். இங்கு ப்ரைமெரிக்கல்வி இலவசமாகும். பேருக்கு மாத்ரம் கட்டாயப்படுத்தி கல்வி கற்பிக்கவேண்டுமென்று சட்டமிருக்கிறது.

### மத்ய அமெரிக்காவிலுள்ள நாடுகள்.

காடிமாலா.—இதில் ப்ரைமெரிக் கல்வி இலவசமாயும் பேருக்கு மாத்ரம் கட்டாயப்படுத்தியும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. மொத்தம் ஜனத்தொகையில் 100 - க்கு 75 பேர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியாது.

கோஸ்டா ரிகா.—இதில் ப்ரைமெரிக்கல்வி இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்குக் குறைவில்லை. எழுதப்படிக்கத் தெரியாதவர்களின் தொகை குறைந்து வருகிறது.

நிகராகுவா.—இதில் ப்ரைமெரிக் கல்வி இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் கற்றுக்கொடுக்கப்படுகிறது. ஆனால் அதிக மாணவர்கள் பள்ளிக்கூடங்களுக்கு வருவதில்லை. இந்த நாட்டின் கிழக்கு பாகத்தில் கல்வி அபிவ்ருத்தியடையவில்லை.



பனாமா.—இதில் ப்ரைமெரிக் கல்வி இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் கற்றுக் கொடுக்கிறார்கள்.

ஸால்வடோர்.—இதில் ப்ரைமெரிக் கல்வி இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

ஹாண்டுராஸ்.—இதில் ப்ரைமெரிக் கல்வி இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. எழுதப்படிக்கத் தெரிந்தவர்களே பார்லிமெண்டுக்கு ப்ரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கலாம்.

### மேற்கு இந்திய தீவுகள்.

க்யூபா.—இது ஒரு குடியரசு நாடு. இதில் ப்ரைமெரிக் கல்வி இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் கற்றுக்கொடுக்கப் படுகிறது. பள்ளிக்கூடம் போகக்கூடிய வயஸுள்ளவர்களில் 100-க்கு 82 பேர்கள்வீதம் பள்ளிக்கூடம் போகிறார்கள்.

ஹெய்ட்டி:—இது மேற்கு இந்திய தீவுகளில் ஒன்றின் மேற்குபாகமாம்: இது ஒரு குடியரசு நாடு. (மற்றபாகம் டாமினிகன் குடியரசு நாடு.) இதில் ப்ரைமெரிக்கல்வி இலவசமாயும் பேருக்கு மாத்ரம் கட்டாயப்படுத்தியும் கற்றுக்கொடுக்கப்படுகிறது.

டாமினிகன் குடியரசு.—இது மேற்கு இந்திய தீவுகளில் ஒன்றின் கிழக்கு பாகமாகும். இது ஒரு குடியரசு நாடு (மற்றபாகத்தின் பெயர் ஹெய்ட்டி.) இதில் சிறுவர்களுக்குக் கட்டாயப்படுத்தியும் இலவசமாயும் ப்ரைமெரிக் கல்வி கற்பிக்கிறார்கள். அநேக தொழில் பள்ளிக்கூடங்களும் போதனா முறைப்பாடசாலைகளும் உண்டு.

### தென்னமெரிக்காவிலுள்ள நாடுகள்.

அர்ஜென்டைன் ரிபப்ளிக்.—இங்கே 6-வயஸு முதல் 14-வயஸுவரையிலுள்ள பையன்களுக்கு ப்ரைமெரிக் கல்வி இனாமாகவும் (பேருக்குக்) கட்டாயப்படுத்தியும் கற்பிக்கிறார்கள். பள்ளிக்கூடத்துக்குப் போகக்கூடிய வயஸுள்ளவர்களில் 100-க்கு 45 வீதம் பள்ளிக்கூடத்தில் வாசிக்கிறார்கள்.

ஈக்வேடார்.—இதில் ப்ரைமெரிக்கல்வி இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் கற்றுக்கொடுக்கப்படுகிறது. இங்கே பல தொழில் பள்ளிக்கூடங்களும், உபாத்யாயர்கள் பயிற்சி பெற பல பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன.

உருகுவே.—இதில் ப்ரைமெரிக் கல்வி இலவசமாயும் பேருக்கு மாத்ரம் கட்டாயப்படுத்தியும் கற்றுக்கொடுக்கப் படுகிறது.

கொலம்பியா.—இங்கே சிறுவர்களுக்கு இலவசமாகக் கல்வி கற்றுக்கொடுத்தாலும், பள்ளிக்கூடத்துக்கு வரும்படி கட்டாயப்படுத்துவதில்லை. இருந்தாலும் பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்குக் குறைவில்லை.

சிலி:—இதில் ப்ரைமெரிக் கல்வி இலவசமாகும். கட்டாயப்படுத்துவதில்லை. ஆனால் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள்தான் பார்லிமெண்டுக்கு வோட்கொடுக்கலாமென்றிருக்கிறதால், பள்ளிக்கூடத்துக்குப் போகிறவர்களின் தொகை குறைவாயில்லை. ஸெகண்டரி கல்விக்காக கவர்ன்மெண்டார் 77 கல்விச்சாலைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். வ்யாபாரம், தொழில் முதலியவைகளைக் கற்பிக்க பல பாடசாலைகள் இருக்கின்றன. ஸிலி பட்டணத்தில் உள்ள புஸ்தக சாலையில் 1,40,000 புஸ்தகங்கள் உண்டு.

பராகுவே.—இது தென்னமெரிக்காவிலுள்ள ஒரு குடியரசுநாடு. இங்கு ப்ரைமெரிக் கல்வி இலவசமாய்க் கற்றுக்கொடுக்கப் படுகிறது. ஆனால் கட்டாயப் படுத்துவதென்பது பேருக்குத்தான்.

பெரு.—இதிலும் ப்ரைமெரிக் கல்வியானது இலவசமாயும் கட்டாயப்படுத்தியும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. பள்ளிக்கூட வயஸுள்ள

வர்களில் 100-க்கு 20 பேர் பள்ளிக்கூடங்களில் வாசிக்கிறார்கள்.

போலிவியா. — இதில் முனிஸிபாலிடிகளில் மாத்ரம் சிறுவர்களுக்கு இலவசமாயும் பேருக்கு மாத்ரம் கட்டாயப்படுத்தியும், ப்ரைமெரிக்கல்வி கற்றுக்கொடுக்கிறார்கள். ஸுமார் 50,000 மாணவர்கள்தான் வாசிக்கிறார்கள். ஸுமார் 1,500 மாணவர்கள்தான் ஸெகண்டரி ஸ்கூல்களில் வாசிக்கிறார்கள். இந்த நாட்டின் ஜனத்தொகை 22-லக்ஷமாகும்.

ப்ரேஜில். — இது தென்னமெரிக்காவிலுள்ள ஒரு பெரிய குடியரசுநாடு. இங்கு ப்ரைமெரிக் கல்வி இலவசமாகக் கற்றுக்கொடுக்கப்படுகிறது. ஆனால் பிள்ளைகளை பள்ளிக்கூடத்துக்கு வரும்படி கட்டாயப்படுத்துவதில்லை. ஆனால் கல்வி அபிவ்ருத்தியடைந்து வருகிறதாகத் தெரிகிறது. 21-வயஸான ஆண்கள் எழுதப் படிக்கத் தெரிந்திருந்தால்தான் ஜனப்ரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கலாமென்று சட்டம் செய்திருக்கிறார்கள்.

வெனிஸுலா. — இதில் ப்ரைமெரிக் கல்வி இலவசமாயும் பேருக்குமாத்ரம் கட்டாயப்படுத்தியும் கற்றுக்கொடுக்கப் படுகிறது.

இந்தியா.

நமது தேசத்தில் பிள்ளைகளுக்கு இலவசமாயாவது கட்டாயப்படுத்தியாவது ப்ரைமெரிக் கல்வி கற்றுக்கொடுப்பதில்லை. நமது தேசத்துக் கல்வி நிலைமையைப் பற்றிய விவரங்கள் வருமாறு:

ஸ்வதேச ராஜ்யங்கள் உள்பட இந்தியா முழுவதிலுமுள்ள ஜனங்களின் ஸங்க்யை, 1911-ம் வர்ஷத்து ஜன ஸங்க்யைக் கணக்குப்படி 31,51,56,396. இதில் ப்ரிட்டிஷ் இந்தியாவில் உள்ளவர்களின் தொகை 24,42,67,542. ஸ்வதேச ராஜ்யங்களில் உள்ளவர்களின் தொகை 7,08,88,854.

இந்தியா முழுவதிலுமுள்ள ஜனத்தொகையில் [illegible] 100-பேருக்குத்தான் எழுதப் படிக்கத் தெரியும். பிறரிடமிருந்து வரும் கடிதங்களை வாசிக்கவும், அவைகளுக்கு பதிலெழுதவும் தெரிந்தவர்களையே இங்கு எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாகக் கணக்கிட்டிருக்கிறது. மொத்தம் ஆண்களில் 1000-க்கு 106 பேருக்கு எழுதப் படிக்கத் தெரியும். ஸ்த்ரீகளில் 1000-க்கு 10-பேர்களுக்குத் தான் எழுதப்படிக்கத் தெரியும்.

15-வயஸுக்குள்பட்ட குழந்தைகளைக் கணக்கில் சேர்க்காமல் பார்த்தால், 15-வயஸுக்கு மேற்பட்ட ஆண்களில் 1000-க்கு 149 பேர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியும். 15-வயஸுக்கு மேற்பட்ட ஸ்த்ரீகளில் 1000-க்கு 13 பேர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியும்.

ப்ரிட்டிஷ் இந்தியாவில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் தொகை அதிகமாயிருக்கிறது. இதில் ஆண்களில் ஆயிரத்துக்கு 113 பேர்களும் ஸ்த்ரீகளில் 1000-க்கு 11-பேர்களும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். ஸ்வதேச ஸமஸ்தானங்கள் முழுவதையும் சேர்த்துப் பார்த்தால் ஆயிரத்துக்கு 79-ஆண்களும், 8 ஸ்த்ரீகளுமே எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாயிருக்கிறார்கள்.

ப்ரிட்டிஷ் இந்தியாவில் உள்ள கல்வி ஸ்தாபனங்களில் வாசிக்கும் மாணவர்களின் மொத்தத் தொகை 1913-14-ம் வர்ஷத்தில் 75,35,565. இவர்களுள் 64,31,200 பேர்கள் ஆண்மாணவர்கள். பெண் மாணவர்களின் தொகை 11 லக்ஷத்துக்கு மேலிருந்தது. மொத்தம் வித்யா ஸ்தாபனங்களின் தொகை 1,85,584. இவைகளில் 18,370 பள்ளிக் கூடங்கள் ஸ்த்ரீகளுக்கானவை.

இந்தியாவிலுள்ள ஐந்து யூனிவர்ஸிட்டிகளையும் சேர்ந்த 197 கலாசாலைகளில் மொத்தம் 47,337 மாணவர்கள் இருந்தார்கள். இவர்களின் விவரம் வருமாறு.



| காலேஜுகளின் விவரமும் தொகையும். | | மாணவர்களின் தொகை |
|---|---|---|
| 126 | பி. எ., எம். எ. பரீக்ஷைகளுக்குத் தயாராக்கும் காலேஜுகள் | 37,603 |
| 24 | கீழ்த்திசைக் கல்விக் காலேஜுகள் ... | 1669 |
| 21 | சட்ட காலேஜுகள் ... | 4055 |
| 4 | வைத்யம் ... | 1676 |
| 4 | இஞ்ஜினியரிங் ... | 1211 |
| 13 | போதனுமுறை ... | 703 |
| 3 | விவஸாயம் ... | 156 |
| 1 | கால்நடை வைத்யம் ... | 172 |
| 1 | வ்யாபாரம் ... | 92 |
| 197 | மொத்தம். | 47,337 |

காலேஜுகளிலும் ஸெகண்டரி ஸ்கூல்களிலும், குறிப்பிட்ட விஷயங்களைக் கற்பிக்க ஏற்பட்டுள்ள பாடசாலைகளிலும் வேறு உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும் வாசித்தவர்களின் தொகை ஆண்கள் 12,76,760; பெண்கள் 1,13,203. ப்ரைமெரி ஸ்கூல்களில் வாசித்தவர்களின் தொகை ஆண்கள் 51,50,966; பெண்கள் 9,00,584.

இந்தக் கணக்குகளால் மொத்தம் ஆண்மாணவர்களில் 100-க்கு 24-பேர்களும் பெண்மாணவர்களில் 100-க்கு 12 பேரும் உயர்தரக் கல்வி கற்கிறார்கள் என்று தெரியவருகிறது.

ப்ரிட்டிஷ் இந்தியாவில் பள்ளிக்கூடம் போகக்கூடிய வயஸுள்ள ஆண்களில் நூற்றுக்கு 33 பேர்களும் பெண்களில் 100-க்கு 6 பேர்களும் பள்ளிக்கூடத்தில் வாசித்து வருகிறார்கள்.

ப்ரிட்டிஷ் இந்தியாவில் சென்ற 1913 14-ம் வர்ஷத்தில் கல்விக்கான மொத்தச் செலவு 10,04,48,709 ரூபாயாகும். இதின் விவரம் வருமாறு.

| | ரூ. |
|---|---|
| மாகாண கவர்ன்மெண்டுகளின் செலவு ... | 36,45,441 |
| லோகல் பண்டிலிருந்து செலவானது ... | 1,47,96,608 |
| முனிஸிபாலிடிகளால் செலவு ... | 37,83,709 |
| மாணவர்கள் கொடுத்த சம்பளம். | 2,67,07,223 |
| வேறு வரும்படிகளால் செலவு. | 1,87,06,811 |
| மொத்தம் | 10,04,48,709 |

சென்ற 1913-14-ம் வர்ஷத்தில் காலேஜுகள், பள்ளிக்கூடங்கள் ஆகிய இவைகளைச் சேர்ந்தவையாய் 3,879 ஹாஸ்டல்கள் இருந்தன. இவைகளில் 1,29,607 மாணவர்கள் தங்கியிருந்தார்கள்.

அந்த வர்ஷம் பாடசாலைகளில் கல்விகற்பித்து வந்த உபாத்யாயர்களின் தொகை 2,45,544: விவரம் வருமாறு.

| | உபாத்யாயர்கள் |
|---|---|
| ப்ரைமெரி ஸ்கூல்கள் | 1,90,768 |
| மிடில் ஸ்கூல்கள் | 27,803 |
| ஹைஸ்கூல்கள் | 22,270 |
| காலேஜுகள் | 1,703 |

# ARUDRA DARSHANAM.

BY PANDIT V. SUBRAMANIA AIYER.

## ஆருத்ரா தர்சனம்.

ஆருத்ரா என்ற நக்ஷத்ரம் தமிழில் திருவாதிரை என வழங்கும். இந்த நக்ஷத்ரம் ஈச்வரனுக்கு விசேஷமான நக்ஷத்ரம் என்று சொல்லப்படும். ஆகவே இந்த தினம் விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது. மாஸாமாஸம் இந்த நக்ஷத்ரதினத்தை ஹிந்துக்களில் சிலர் வ்ருததினமாகக் கொண்டாடுவார்கள். என்றாலும், மார்கழி மாஸத்துத் திருவாதிரை நக்ஷத்ரம் ஹிந்துகோயில்களில் விசேஷமாகக் கொண்டாடப்படும். அன்றையதினம் சிவன் கோயிலில் நடராஜ விக்ரஹத்திற்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடக்கும். மார்கழி மாஸத்தை பகவான் தாம் கொண்டாடும் மாஸமாக கீதையில் சொல்லியிருக்கிறார். மார்கழி மாஸத்தில் வ்யதீபாதம், ஏகாதசி முதலிய தினங்கள் சிறந்தனவாகக் கொண்டாடப் படுவதுபோல திருவாதிரை நக்ஷத்ரமும் கொண்டாடப்படும். சிதாகாசம் என்ற சிதம்பர க்ஷேத்ரத்திலும், ஹாலாஸ்ய க்ஷேத்ரமென்னும் மதுரையிலும், திருப்பெருந்துறை போன்ற சிறந்த சிவக்ஷேத்ரங்களிலும் திருவாதிரை உத்ஸவம் மிகவும் விசேஷமாக அநுஷ்டானத்திலிருந்து வருகிறது. இந்த க்ஷேத்ரவாஸிகள் அன்றையதினத்தில் உஷத்காலத்தில் ஸ்நானம் முடித்தும், தம்முடைய நித்ய பூஜைகளை ஒழுங்காக முடித்தும், சிவன் கோயில்களில் ஸ்ரீநடராஜ மூர்த்திக்கு நடக்கும் அபிஷேக ஆராதனைகளைத் தரிசிக்கப் போய, பின்னர் வெகுநேரம்கழித்து, பகவானுக்கு நிவேதனமான வெல்லக்களியைஉண்டு உபவாஸமாயிருந்து வ்ருதாநுஷ்டானம் செய்கிறார்கள்.

### சிதம்பர க்ஷேத்ரம்.

சிதம்பர க்ஷேத்ரத்தில் திருவாதிரை நக்ஷத்ரத்தை தரிசன நாள் என்று கொண்டாடுவார்கள். நடன ஸபாபதியாகிய பகவான் அன்று நந்தனாருக்கு முக்திகொடுத்ததாகவும், அன்றைய தினம் பகவான் தர்சனம் தருவதாகவும் ஐதிகம் சொல்லப்படுகிறது. நந்தனாரின் சரித்ரம் பின்வருமாறு.

### நந்தனார் சரித்ரம்.

கொள்ளிடக் கரையின் மேற்கே ஆதனூர் என்ற ஊரில் பறைச்சேரியில் நந்தனார் என்ற சிவபக்தர் பிறந்தார். இவர் இளம்பிராயம்முதல் சிவன்கோயில்களுக்கு கைங்கரியங்கள் செய்வதையே தொழிலாக கொண்டிருந்தார். சிவன் கோயில்களில் பேரிகைக்கு தோல்கள், அக்கோயில்களில் உபயோகமாகும் வீணைத் தந்திகளுக்கு வேண்டிய நரம்புகள், ஈச்வரார்ச்சனைக்கு வேண்டிய கோரோசனைகள் முதலியவற்றைச் சேகரித்துக்கொடுக்கும் கைங்கர்யங்களை இவர் செய்து சிவபக்தியினால் மிக்கவரானார். ஆதனூரின் பக்கத்தில் திருப்புன்கூர் * என்ற சிவ க்ஷேத்ரமுண்டு. அந்த க்ஷேத்ரத்தினி லுள்ள பகவானை வழிபடுவதற்கு ஆதனூரி லிருந்து நந்தனார் அந்த க்ஷேத்ரத்தில் வந்து சேர்ந்தார். அந்த ஊர்க் கோவிலில் ஈச்வரன் எதிரே ரிஷபம் உயரமாய்ப் படுத்திருக்க, ஈச்வரபிம்பம் கோயிலின் வெளியேநின்று தரிசித்த இவருக்குப் புலப்படவில்லை. அதை அறிந்த ஈசுவரன் நந்தியைக்கூப்பிட்டு, நந்தனார் எந்நாளும் வாராதபக்தனென்று அவனுடைய குணங்களெல்லாவற்றையும் எடுத்துச்சொல்லி "சற்றே விலகி இரும் பிள்ளாய், சந்நிதானம் மறைக்குதாம்" என்று சொல்லி நந்தியை அவ்விடத்தை விட்டு விலகிநிற்கச் செய்தார். [இன்னும் திருப்புன்கூர் க்ஷேத்ரத்தில் ஈச்வர ஸந்நிதானத்தில் நந்தி விலகி யிருப்பதைப் பார்க்கலாம்] இப்படி அந்த க்ஷேத்ரத்தையும் மற்றெல்லா க்ஷேத்ரங்களையும் தர்சனம் செய்துகொண்டு ஆதனூரில் சிவபக்திசெய்துகொண்டு வஸித்து வரும்நாளில் அவருக்கு திருவாதிரை நாளில் சிதம்பரக்ஷேத்ரத்திலுள்ள நடராஜரை தர்சனம் செய்யவேண்டுமென்று எண்ண முண்டாயிற்று. அவ்விஷயமாய் நந்தனார் தான் வேலைசெய்யும் பண்ணைக்கு யஜமானனாகிய ப்ராம்மணரிடம் மிகவும் ச்ரமப்பட்டு உத்தரவு பெற்றார்.

நந்தனாரும் குறித்த தினத்தில் சிதம்பர க்ஷேத்ரம் சென்றார். தன் ஜாதித் தன்மையை உத்தேசித்து சிதம்பர க்ஷேத்ர எல்லை தாண்டி உட் புகுவதற்கில்லையே யென்று தான் அங்கு போனநாளன்றிரவு மிகவும் வருந்தினார். பகவான் பக்தனுடைய வருத்தத்தைப்பார்த்து மனமிரங்கி, தில்லை மூவாயிரவர்களின் கனவில் தோன்றி, நந்தனாரின் நிலைமையைச் சொல்லி, அவர்களெல்லாரையும் போய் நந்தனாரை அக்நி ப்ரவேசம் செய்வித்து அழைத்துவரும்படி ஆக்ஞாபித்தார். அவ்விஷயத்தை அவ்விதமே ஸ்வப்னத்தில் நந்தனார்க்கும் ஈச்வரன் தெரிவித்தார். சாலையில் தில்லை மூவாயிரவர்கள் நந்தனாரிடம் சென்று, பகவான் ஆக்ஞையைத் தெரிவித்து, அவரை அக்நி ப்ரவேசம் செய்வித்து, பகவத் ஸந்நிதானம் சேர்த்தார்கள். ஸ்ரீ நடராஜ மூர்த்தியும் அத்தனை பேரும் பார்த்திருக்க தம்முடைய தர்சனத்தை உத்தேசித்துவந்த நந்தனார்க்கு திருவாதிரை யன்றையதினம் தர்சனம் தந்து, தம்முடன் இறண்டறசேர்த்துக் கொண்டார். அன்று இந்த தர்சனம் கண்டோர் மோக்ஷ ஸாம்ப்ராஜ்யத்தைப் பெற யோக்யதை யுடையவர் என்பதை நந்தனார் சரித்ரம் நன்றாகத் தெரிவிக்கும்.

### தென்னிந்தியா வாஸிகளின் வ்ருதாநுஷ்டானம்.

சிதம்பர க்ஷேத்ரத்திலுள்ள தில்லை மூவாயிரவர்களும் பிறரும், திருவாதிரைநக்ஷத்ரத்தன்று ஸ்ரீ நடராஜனுடைய அபிஷேகாராதனைகளை தரிசனம் செய்து, அம் மூர்த்தியின் திருவுலா தர்சனத்தைக் கண்ட பிறகு, ஈச்வர நிவேதனமான வெல்லம் கலந்த களியிற் சிறிது அருந்தி, அன்று உபவாஸமிருந்து, மறுநாள் பாரணை பண்ணுவார்கள். பச்சைப் பயிற்றை வறுத்து அதை வறுத்தெடுத்த அரிசியின் மாவில் கலந்து, அதில் வெல்லமிட்டுத் தேங்காய்த் துருவலிட்டு களியாகக் கிண்டப்படுவதே திருவாதிரைக் களியாகும். வாழைக்காய் முதலிய 7 வகை காய்கறிகளைச் சேர்த்து எழு கறிக்கூட்டென்று தயார்செய்து திருவாதிரைக்களியுடன் உபயோகிப்பார்கள். அன்றையதினம் ஈச்வர நிவேதனமான களி கொஞ்சந் தான் சாப்பிடவேண்டுமென்று குறிப்பிட "திருவாதிரை

* [illegible]ச்வரன் கோவிலுக்கு மேற்கில் உள்ளது.



ஒருவாய்க்களி" என்று பழமொழியும் வழங்குகிறது.

### தாருகாவனத்து ரிஷிகளும் ஈச்வரனும்.

தாருகாவனத்தில் மகரிஷிகள் கர்மமார்க்கத்தை ப்ரதானமாகக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு ஞானத்தை யுண்டுபண்ண வேண்டி, ஈச்வரன் பிட்சையாண்டி வேஷம் தரித்து, ரிஷிபத்னிக ளிருக்குமிடம் சென்றார். மஹாவிஷ்ணு மோஹினி உருவத்துடன் ரிஷிகள் இருக்குமிடம் சென்றார். இப்படி மேற்கூறிய இரண்டு மூர்த்திகளும் முறையே ரிஷிகள் ரிஷிபத்னிகளின் வ்ருதங்களைக் கெடுத்தார்கள். இது கண்ட ரிஷிகள் மேற்கூறிய இரண்டு மூர்த்திகளின் மேல் கோபித்து, பரமேச்வரனைக் கொல்ல ஆபிசார யாகம் செய்தார்கள். அதில் முதலில் மானையும், இரண்டாவதாக யானையையும், மூன்றாவதாகப் புலியையும், நான்காவதாக அக்னியையும் அவர்கள் எழுப்பி ஈச்வரன்மேல் ஏவினார்கள். ஈச்வரன் மானைக் கையிலே தரித்தார். யானையை உரித்துப் போர்த்துக்கொண்டார். புலித்தோலை ஆடையாக இடுப்பில் அணிந்துகொண்டார். கையில் அக்னியைத் தாங்கிக் கொண்டார். இப்படிப்பட்ட திருக்கோலத்துடன் பகவான் நர்த்தனம் செய்ய ஆரம்பித்தபோது, தாருகாவன க்ஷேத்ரம் தாங்கவில்லை. ஆகவே அந்நடனத்திற்கு ஏற்றஸ்தலம் தில்லையேயெனவும், அந்நாள் திருவாதிரை நக்ஷத்ரமே யெனவும் ஸ்ரீ பகவான் அங்கு கூடின முப்பதுமுக்கோடி தேவதைகளிடத்தும் சொன்னார். அவர் சொன்ன வார்த்தைப்படியே அந்நடனம் திருவாதிரை யன்று ஸ்ரீ மஹாவிஷ்ணுவை யுள்ளிட்ட தேவதைகள் முன்னிலையில் திருவாதிரை நக்ஷத்ர தினத்தில் ஸ்ரீ சிதம்பர க்ஷேத்ரத்தில் பக்தர்களின் காட்சியின் நிமித்தமும் அவர்கள் மோட்சத்தை அடையும் நிமித்தமும் ஸ்ரீ நடராஜ மூர்த்தியினால் நடித்துக் காண்பிக்கப்படுகிறது. அன்றையதினம் பல பக்தர்கள் முக்தி பெற்ற தினமாக இருக்கிறது. ஆதலால், மாஸந்தோறும் வரும் ஆருத்ரைகளினும், மார்கழிமாஸ ஆருத்ரையும், அன்றைய அபிஷேகாராதன தரிசனங்களும் சிறந்தனவாக கொண்டாடப்படுகின்றன. இம்மாதிரி உத்ஸவங்களை மதுரையில் வெள்ளியம்பலத்தில் வீற்றிருக்கும் நடராஜாவுக்கும் நடத்துகிறார்கள். திருப்பெருந்துறை க்ஷேத்ரத்திலும் இவ்வாறே கொண்டாடப்படுகிறது.

### மற்றை க்ஷேத்ரங்கள்.

மேற்கூறிய சிதம்பரம் மதுரை நீங்கலாக வேறு க்ஷேத்ரங்களிலும் உள்ள நடராஜ பிம்பங்களுக்கும் அன்றையதினம் விசேஷ அபிஷேகங்கள் முதலியன செய்வித்து உத்ஸவம் கொண்டாடுகிறார்கள். சில ஊர்களில் அன்றைய தினம் நடராஜ விக்ரஹத்தையும் சிவகாமி அம்மனையும் பரிவார தேவதைகளையும் ஊர்வலம் கொண்டு வருகையில், திடீரென ஓரிடத்தில் அம்மனைமட்டும் கோயிலுக்கோ, அல்லது சற்று தூரம் ஒதுக்குப் புறத்திலோ கொண்டுபோய் விடுகிறார்கள். அப்போது ஸ்ரீ ஸுந்தரமூர்த்தி நாயனாரது அலங்கரித்த விக்ரகம் பகவானுக்கும் அம்மனுக்கும் இடையில் நின்று ஸமாதான வார்த்தைகள் சொல்லி அம்மனுக்கும் ஸ்வாமிக்கும் இடையில் நேர்ந்த மனஸ்தாபங்களைத் தீர்த்து வைக்கும் மாதிரியான ஒரு ஸம்பவம் நடத்திக் காட்டப்படுகிறது. ஸ்ரீ ஸுந்தரமூர்த்திநாயனார் எது சொல்லியும் கேளாத ஸ்ரீ சிவகாமி அம்மன் ஸாமகானத்தினால் வசீகரப்படுத்தப்பட்டு ஈசுவரனின் பக்கம் போய்ச் சேருகிறாள்.

## CONSTIPATION.

## மலச்சிக்கல்.

மலச் சிக்கலென்பது ஸாதாரணமாய் அடிக்கடி மனிதர்களுக்கு ஏற்படும் வ்யாதிகளில் ஒன்று. தேகத்திலுள்ள வேறு வ்யாதிகளின் அறிகுறியே ஒழிய தன்மட்டில் அது ஒரு வ்யாதியாகாதென்று பலர் அபிப்ராயப் படுகிறார்கள். ஆனால் வெகுகாலமாக அதை ஒரு வ்யாதியாகவே பாவித்து டாக்டர்கள் அதற்கென்று ப்ரத்யேகமான மருந்துகள் கொடுத்து வருகிறார்கள்.

இன்னவிதமாய் மலப்ரவர்த்தியானால் மலச் சிக்கலில்லை, இன்னவிதமாய் மலப்ரவர்த்தியானால் மலச்சிக்கலென்று பொதுவான வரையறை ஒன்றும் ஏற்படுத்த முடியாது. ஒவ்வொருவருடைய தேகநிலைமையைப் பார்த்துத்தான் அவரவர்களுக்கு மலச்சிக்கல் இருக்கிறதா இல்லையாவென்று சொல்லவேண்டும். சிலருக்கு இரண்டு நாள்களுக்கு ஒருமுறை மல ப்ரவர்த்தியாவது ஸகஜமாயிருந்தும் அவர்களுடைய தேகஸௌக்யம், தினம் இரண்டுமுறை க்ரமமாக மலப்ரவர்த்தியாகும் ஜனங்களுடைய தேகஸௌக்யத்தைவிடத் தாழ்ந்ததாக இருப்பதில்லை.

மலச்சிக்கலேற்படுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவைகளுள் முக்யமானவை வெளிக்குப் போகத் தோன்றும்போது அதை அடக்குவதும், க்ரமமாய் மலப்ரவ்ருத்தியாவதற்காகவென்று அடிக்கடி மருந்துகள் சாப்பிடுவதுமே.

சிலர் வேலையில் கவனமாயிருந்துகொண்டு மலத்தை அடக்கிக்கொள்கிறார்கள். வேறு சிலர் காலம் சரியாயிராததால் அடக்கிக் கொள்ளுகிறார்கள். பெரிய ஆபீஸ்களிலும் பள்ளிக்கூடங்களிலும் கக்கூஸுகளுக்குப் போகிறவர்கள் அதிகம். அவ்விடங்களில் அதிகமான ஜனங்களுக்கு வேண்டியபடி கக்கூஸுகள் போதாமலிருப்பது ஸகஜம். அதனால் பலர் காத்திருக்க வேண்டியிருக்கிறது. அப்படி காத்திருப்பவர்களுக்கு சிறிது நேரம் சென்றதும் மறுபடி வெளிக்குப்போக அவஸரமில்லாமல்போய் காலக்ரமத்தில் மலச்சிக்கலேற்படுகிறது.

தினந்தோறும் க்ரமப்படி மலப்ரவ்ருத்தி ஏற்படுவதற்காக மருந்து சாப்பிடுவதால் பிற்பாடு குடல் ஸம்பந்தமாக வ்யாதிகள் ஏற்படக்கூடும்.

சாப்பாட்டு நேரத்தில் போதுமான அளவு ஜலம் குடிக்காமலிருப்பதாலும், அதிகமான அளவில ஜலம் குடிப்பதாலும் மலச்சிக்கலேற்படுவதுண்டு. குறைவாய் ஜலம் குடித்தால் மலம் கெட்டியாய்ப் போய்விடும். அதிகஜலம் குடிப்பதால் குடலிலுள்ள உணவை ஜீர்ணம் செய்ய உதவும் கஸட்ரிக் ஜூஸ் எனனும் பாசக நீர் வேகம் குறைந்துபோய், உணவை சரியாய் ஜீர்ணம் செய்வதில்லை. இதனால் ஜீர்ணமாகாத ஆகாரம அடிக்குடலில்போய் உபத்ரவமுண்டாக்கி சரியாய் மலப்ரவர்த்தியாகாமல செய்துவிடுகிறது.

குடலின் உள்பாகமானது அமைப்பில் மாறுபாடடைவதாலும், அதில் தசைகள் அதிகமாக வளருவதாலும், அன்ய வஸ்துக்கள் தங்குவதாலும் மலம் தடைபடக்கூடும். மலச்சிக்கலைப் போக்கடிக்க முதல் முதலில் செய்யவேண்டிய கார்யமென்னவென்றால், மலப்ரவர்த்திக்காக மருந்து சாப்பிடும் வழக்கமிருந்தால் அதை முதலில் நிறுத்திவிடுவதே. மேலும் மலப்ரவர்த்திக்காக ஆஸன த்வாரத்தில் குழாய்வைத்து பீச்சும் வழக்கத்தையும் நிறுத்திவிடவேண்டும். இந்த மருந்துகளையும் குழாய்களையும் உபயோகிப்பதால் தற்கால சாந்தியாக ஸ்வல்ப நன்மை ஏற்படுகிறதென்றாலும், அவைகள் மலச்சிக்கலின் காரணத்தைப் போக்குகிறதில்லை. காலம் செல்லச்செல்ல இம்மருந்துகளை மேன்மேலும் உபயோகிக்கும்படி ஏற்பட்டுவிடுகிறது. கடைசியில் ரொம்ப வீர்யமுள்ள மருந்துகளை உபயோகித்தாலொழிய சரியாய் மலப்ரவர்த்தி யாவதில்லை. குழாயை உபயோகிப்பதினால் காலக்ரமத்தில் குடல் கோளாறடைந்து பலமிழந்துவிடுகிறது.

ஒவ்வொருவரும் தமது தேக நிலைமையை தக்க வைத்யர்களைக்கொண்டு பரிசீலனை செய்து தமக்கு ஏற்ற ஆகாரம் இன்னதென்று தெரிந்து அவைகளையே புஜித்துவரவேண்டும். ஆனால் பொதுவாய்ச் சொல்லுமிடத்து, மலச்சிக்கலுள்ளவர்கள் காய்கறிகள், தான்யங்கள், பழங்கள், நெய், எண்ணெய் முதலிய கொழுப்பு வஸ்துக்களாகிய இவைகளை உபயோகிக்கவேண்டும். எண்ணெய், நெய் இவைகளை அதிகமாய் உபயோகிப்பது நல்லது.

காலையில் சாப்பிடுவதற்குமுன்னொரு சிட்டிகை உப்புப்போட்ட வெந்நீரைக் குடிப்பதால் மலச்சிக்கல் குணமடையக்கூடும். வேறு கோளாறுகள் ஏற்படாமலிருந்தால் சாப்பாட்டு நேரத்துக்கு இடையில் தண்ணீரை யதேஷ்டமாய்க் குடிக்கலாம்.

தினந்தோறும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வெளிக்குப் போவதென்று வைத்துக்கொண்டு, அந்த நேரத்தில் கக்கூஸுக்குள் போய்விட்டாவது வரவேண்டும்.

மலச்சிக்கலுள்ளவர்கள் தினம் தேகப்பயிற்சி செய்துவந்தால் வ்யாதி ஸ்வஸ்தமாகக்கூடும். தேகப்பயிற்சியால் குடல் சுறுசுறுப்படைந்து தனது வேலைகளை சரிவரச் செய்யும். ஆனால் தேசத்தின் ஒருபாகம்மட்டும் அபிவ்ருத்தியடையும்படி தேகப்பயிற்சி செய்யக்கூடாது. தேகத்தின் எல்லா பாகங்களுக்கும் சரிவரப் பயிற்சி ஏற்படவேண்டும். மேலும எவ்வளவு தாங்கக்கூடுமோ அவ்வளவு தேகப்பயிற்சிதான் செய்யவேண்டுமேயொழிய, தேகத்தை ச்ரமப்படுத்திக்கொண்டு அதிக தேகப்பயிற்சி செய்யக்கூடாது.

தேகத்தில் வேறு ஏதாவது கோளாறு இருக்கிறதாவென்று வைத்யர்களைக்கொண்டு சோதிக்கச்செய்து தக்க சிகித்ஸைகள் செய்யவேண்டும். தக்க வைத்யர்களைக்கொண்டு தேகநிலைமையைத் தெரிந்துகொள்ளாமல் கண்ட பேதிமருந்துகளைச் சாப்பிடுவது உசிதமல்ல.



# REVIEW OF THE PRESS.

## பத்ரிகை ஆராய்ச்சி.

### CASSAVA.

### ஆள்வள்ளிக்கிழங்கு

இப்பயிரானது குளிர்ச்சியான தேசங்களில் சரியாய் உண்டாகாது. உஷ்ணதேசங்களில் தான் சரியானபடி வளர்ந்து தக்க மாஸூல் கொடுக்கிறது. வருஷத்தில் குறைந்தது எட்டுமாஸ காலமாவது மூடுபனியில்லாத தேசங்களில் தான் வளரும். மூடுபனியிருந்தால் வளரவே வளராது. வளர்ந்தாலும் வளர்ச்சி குன்றும், சரியான மாஸூலும் கிடைக்காது. வருஷத்திற்கு 14 முதல் 16 அங்குல மழையுள்ள தேசங்களில் கூட ஸாதாரணமாய்ப் பயிரிடலாம். செடி வேர்பிடித்து வளரும் வரையில் தண்ணீர்பாய்ச்சியாவது அல்லது மழையின் ஈரத்திலாவது வளர்ந்துவிட்டால் பின்பு தண்ணீர் தேவையில்லை.

ஜாதிகள்:—இதில் தித்திப்பு ஜாதியென்றும் கசப்பு ஜாதியென்றும் இரண்டு தினுஸுகள் உண்டு. தித்திப்பு ஜாதி கசப்பு ஜாதியைவிட கடினமாயிருக்கும்.

தகுந்த நிலங்கள்:—மணற்பாங்கான கொழுத்த படுகை நிலம் மிகவும் சிறந்ததாகும். புதிதாய் காடுகள் வெட்டி சீர்திருத்திய நிலங்களும், சவுக்கு முதலிய செடிகளை வைத்து வெட்டியநிலமும் ச்லாக்யமானவைதான். வேறு எந்தப்பயிருக்கும் லாயக்கில்லாத மணல் நிலத்தில்கூட இது நன்றாய் வளரும். களிப்பு நிலங்களில் இப்பயிர் சரியாய் வளராது. வளர்ந்தாலும் குறைவான மாஸூல்தான் கொடுக்கும். மேலும் அக்குறைவான மாஸூலை வெட்டியெடுப்பதுகூட களிப்பான நிலமாதலால் கஷ்டமாயிருக்கும்.

நடுகை:—இந்தப்பயிரின் கிளைகளை அடிப்புறமும் நுனிப்புறமும் நீக்கிவிட்டு மத்தியிலுள்ள பாகத்தில் அரும்புகளுள்ளதும் 4 முதல் 8 அங்குல நீளமுள்ளதுமான துண்டுகளாக வெட்டி நடவேண்டும். மழைகாலத்திற்கு சற்று முன்பு நடுவதுதான் ச்லாக்யமாகும். தண்ணீர் இறைவாகும் நிலங்களில் வருஷத்தின் எந்தப் பாகத்திலாவது நடலாம். இதை வயலில் ஸமதளமான பாத்திகள் கட்டி நடுவதுதான் நல்லது: 4 அடி தூரத்தில் 2 அல்லது 3 துண்டுகளாக நடுவது நல்லது. வளமான நிலமாயிருந்தால் சற்றுதூரத்திலும், வளமில்லாத நிலமாயிருந்தால் ஸமீபத்திலும் நடவேண்டும். இப்பயிருக்கு மண் தென்னுபுழுதியாகும்படி உழவேண்டுமே தவிர, ஆழமாய் உழக்கூடாது. ஏனெனில் ஆழமாய் உழுதால் வேர்கள் பூமிக்குள் இறங்கி கிழங்குகள் பள்ளத்தில் கட்டும். அப்போது மாஸூலெடுப்பது கஷ்டமாய்முடியும். இப்பயிர் நிலத்திலுள்ள ஸத்துக்களையெல்லாம் சாப்பிட்டுவிட்டு நிலத்தை உபயோகமில்லாததாக்கிவிடுமென்று சாஸ்த்ரீகர் சொல்லுகிறார்கள். ஆனால் அநுபோகத்தில் சாஸ்த்ரீகர் சொல்வது தவறு என்று பரிஷ்காரமாய்த் தெரிகிறது. இப்பயிருக்கு வெடியுப்பு ஸம்பந்தமான எருக்கள் தேவையேயில்லை. சாம்பல் காரஸத்துதான் அவச்யம். ஏக்கருக்கு 8 முதல் 10 டன் நிறையுள்ள சாணியெருவும் விறகெரித்த சாம்பலுந்தான் சிறந்தவை.

பின்செய் நேர்த்தி:—நட்ட 8 முதல் 15 நாட்களில் முளைகிளம்பும். ஈரம்போகாதபடி அடிக்கடி மேல்மண்ணைக் கிளறி பொலு பொலுப்பாய் வைக்கவேண்டும். நட்ட இரண்டு மூன்று மாஸங்கள் வரையில் களைகளில்லாமல் அப்புறப்படுத்தி வந்தால், பின் பயிரின் நிழலில் களைகள் இயற்கையாக உண்டாகமாட்டா. ஐந்தாவது ஆறாவது மாஸத்தில் ஒருதரமும், எட்டாவது ஒன்பதாவது மாஸத்தில் ஒருதரமும் மண் அணைக்கவேண்டும்.

தென்னம்பிள்ளைகள் வைக்குமிடங்களிலும் சவுக்கு வைக்குமிடங்களிலும் மா, பலா, முதலியன வைக்குமிடங்களிலும் இதைக் கலப்புப்பயிராய்ச் செய்வது நல்லது. ஒரே நிலத்தில் இப்பயிரையே திரும்பத் திரும்ப இடக்கூடாது. பயிர்மாற்றல் அவசியம். (எப்பயிருக்குமே அப்படித்தான்) நில இயல்புக்கும் சீதோஷ்ண பேதங்களுக்கும் தக்கபடி 8 முதல் 15 மாதங்களில் அறுவடைக்கு லாயக்காகும்:

மாஸூலெடுத்தல்:—மணற்பாங்கான நிலங்களில் செடியைப்பிடித்து பலமாய் இழுத்தால் கிழங்குடன் வந்துவிடும். அப்பால் கிழங்கைமட்டும் வெட்டியெடுத்துக்கொள்ளலாம்.

கேவலமான நிலங்களில் ஏக்கர் ஒன்றுக்கு 2 முதல் 2½ டன்னும், வளமான நிலங்களில் ஏக்கர் ஒன்றுக்கு 15 டன் கிழங்கும் அகப்படுகிறது. கசப்புஜாதியிலிருந்து அதிகமான மாஸூல் கிடைப்பதால், இக்கிழங்கிலிருந்து மாவு எடுத்து விற்பனை செய்வோர் கசப்பு ஜாதியையே பயிர் செய்கிறார்கள்.—கிருஷிகன்.

## THE DUTIES OF WOMEN.

### ஸ்த்ரீகளின் கடமைகள்.

சென்றமாஸத்து 'ஜனாபிமானி'யில் ஸ்த்ரீகளின் கடமைகளைப் பற்றி சில விஷயங்களை 'ஆர்ய தர்மம்' பத்ரிகையிலிருந்து எழுதினோம். இப்போது இன்னும் சில வற்றை எழுதுகிறோம்.

"கணவனுக்குப் பிறகு படுத்துக்கொள்ளவேண்டும். முதலில் எழுந்திருக்கவேண்டும். தூங்குகிறவனை எழுப்பக்கூடாது."

"சமையலறை நன்கு ரக்ஷிக்கப்பட்டு பார்வைக்கு அழகாயுமிருக்க வேண்டும்."

நன்கு ரக்ஷிக்கப்பட்டு என்றால் இதர மனிதர்கள் பார்வையில் அது படாமல் இருக்கவேண்டு மென்பது கருத்து.

"மூலம் செய்பவளா யிருக்கக்கூடாது"

மூலமென்றால் வசப்படுத்துதல். மணி மந்த்ர ஔஷதங்களால் புருஷனை வசப்படுத்த முயலக்கூடாது.

"இதைக்காட்டிலும் அவநம்பிக்கைக்கு இடமுள்ளது வேறொன்றுமில்லை"

"கெட்டபேச்சையும், கெட்ட பார்வையையும், வேறு மனிதனிடத்தில் ரகஸ்யம் பேசுதலையும், வாசலில் நிற்பதையும், வாசலில் பார்ப்பதையும், தோட்டங்களில் பேசுவதையும், ஏகாந்த ஸ்தலத்தில் அதிகநேரமிருப்பதையும் ஸ்த்ரீ விட்டுவிடவேண்டும்."

"தனது சரீரத்திலுள்ள வியர்வை, பல்லின்மலம், அதனாலுண்டாகும் துர்நாற்றம் ஆகிய இவைகளை அப்போதைக்கப்போது சுத்தம்செய்து கொள்ளவேண்டும்."

"அதிகமாய் ஆபரணமணிதல், பலதினுஸு புஷ்பங்கள் தரித்துக்கொள்ளல், பலவித வாஸனை த்ரவ்ய மணிதல், சந்தனம் முதலியவற்றால் ப்ரகாசித்தல், நல்ல வஸ்த்ரமுடுத்தல் முதலியன நாயகனை ப்ரியப்படுத்தும் வழிகளாகும். லேசாயும் ம்ருதுவாயும் அழகாயும் இருக்கும் பட்டு உடுத்தல், கொஞ்சமாய் ஆபரணமணிதல், வாஸனை பூசிக்கொள்ளல், கொஞ்சமாய் சந்தனம் பூசிக்கொள்ளல், புஷ்பங்கள் தரித்தல் முதலியன நாயகனோடு உல்லாஸமாயிருக்க ஏற்பட்ட வேஷம்."

கணவன் மெச்சும்படி அதிக ஆபரணம் முதலியன அணிந்து அவனைப் பிரியப்படச் செய்யவும், பிறகு உல்லாஸத்துக்காக கொஞ்சமாக ஆபரணம் முதலிய அணிவதும் இங்கு குறிக்கப்பட்டபோதிலும், இப்படித்தான் செய்ய வேண்டுமென்று இங்கு நியமம் கூறியதாகாது. இவைகளைக் கூறியதன் முக்யக் கருத்து எவ்விதம் நடந்தால் நாயகனுடைய மனஸுக்குஸந்தோஷம் ஏற்படுமோ அதை அறிந்து காலதேச வர்த்தமானத்துக்குத் தக்கவாறு செய்யவேண்டுமென்பதே.

"நாயகனால் அனுஷ்டிக்கப்பட்ட வ்ருதம், உபவாஸம் முதலியவைகளைத் தானுமனுஷ்டித்து அவனை அனுஸரிக்க வேண்டும்." நாயகனால் அனுஷ்டிக்கப்படும் வ்ருதம் முதலியவைகளையே தானுமனுஷ்டிக்க வேண்டுமென்றதனால், தானாக எந்த வ்ருதத்தையாவது உபவாஸத்தையாவது நடத்த யோக்யதை யற்றவளென் றேற்படுகிறது.

"மண், மூங்கில், கட்டை, தோல், உலோகம் முதலியவைகளால் செய்யப்பட்ட பாத்ரம் முதலிய ஸாமான்களை அந்தந்தக் காலங்களில் சரியான விலைக்கு வாங்கி வைக்கவேண்டும்."

அதாவது அவைகளின் உபயோக காலத்தில் வாங்கிக்கொள்வோமென்று பேசாமலிருந்தால் ஒரு ஸமயம் அந்த ஸாமான்கள் கிடைக்கமாட்டா. கிடைத்தாலும் விலை அதிகமாகும். ஆதலால் அவைகள் கிடைக்கும் காலத்திலேயே வாங்கி சேர்த்து வைத்துக்கொள்வது புத்திசாலித்தனமாகும்.

"அப்படியே உப்பு, எண்ணெய், வாஸனைத்ரவ்யம், சுரைக்குடுக்கைப் பாத்ரம், ஔஷதம், கிடைக்காத வஸ்து இவைகளை வாங்கி வீட்டில் மறைவான இடத்தில் வைத்துக் காப்பாற்ற வேண்டும்."

ஏனெனில் இவைகளை வெளிச்சமுள்ளதும் அதிக காற்று வீசும்படியானதுமான இடத்தில் வைத்தால் பதார்த்தங்கள் கெடுதலடைவதுடன், அநேகர் த்ருஷ்டியில் படும்போது, த்ருஷ்டிதோஷமும் ஏறும். மற்றுமவர்கள் இவைகளைப் பார்த்து வீணாய் விருப்பங்கொள்வார்கள். அப்போது மருந்து முதலியவைகளுக்கு சக்தி குறையுமென்பது தத்வமறிந்த பெரியோருடைய கொள்கை, கற்பூரம், வாஸனை த்ரவ்யங்கள், இவைகள் வெளியிலிருந்தால் வாஸனை போய்விடும்.

"சாப்பாடு, மருந்து முதலியவைகளுக்கு வேண்டிய கிழங்கு, காய்கறிகள், பச்சிலைகள் முதலியவைகளைச் சரியானபடி வளர்ப்பதற்காக சரியான காலத்தில் விதை எடுத்துக் காப்பாற்றவேண்டும். அப்படியே சரியான காலத்தில் விதைக்க வேண்டும்"

"தனக்கிருக்கும் ஸொத்தின் விசேஷத்தையும் தன்னுடைய ஸாமர்த்யத்தையும் அப்படியே பர்த்தா தன்னிடம் சொன்ன ரகஸ்யத்தையும், பர்த்தாவுக்கு ரகஸ்யமான அதாவது மறைக்கத்தக்க சில அவகுணங்களிருந்தால் அவைகளையும் பிறரிடம் தெரியப்படுத்தக்கூடாது. அப்படித் தெரியப்படுத்தினால் பிறர் பரிகாஸம் செய்யவும், சத்ருக்கள் ஏதேனும் கெடுதல் செய்யவும், அதன் மூலமாய் நாயகனுக்குத் தீராக்கோபம் ஏற்படவும் கூடும்.



# Departmental Notes.

# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.

## வித்யாவிஷயம்.

**Education of Defective Children.**

**ஊனமுள்ள குழந்தைகளின் கல்வி.**— குருடு, செவிடு, ஊமை முதலிய ஊனங்கள் உள்ள குழந்தைகளின் கல்வி விஷயமான ஏற்பாடுகள் தற்போது ரொம்ப குறைவாய் இருப்பதாக இந்தியா கவர்ன்மெண்டார் அபிப்ராயப்படுகிறார்கள். சென்ற ஜன ஸங்கையைக் கணக்குகளின்படி 5-வயஸு முதல் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளுள் 41,558 பேர்கள் குருடர்களென்று தெரிகிறது. 58,804 பேர்கள் செவிடும் ஊமையுமாவார்கள். இவர்களுடைய கல்விக்காக இந்தியா முழுவதிலும் 18 பாடசாலைகளே இருக்கின்றன. இவைகளில் 500 பிள்ளைகளுக்குக் கல்வி கற்றுக்கொடுக்கப்படுகிறது. ஆகவே இவர்களுடைய கல்வி விஷயத்தில் அதிக ஊக்கம் எடுத்துக்கொள்ள வேண்டியது அவச்யமென்று ஏற்படுகிறது. இந்தியா கவர்ன்மெண்டார், இது தர்மஸ்தாபனங்கள் கவனிக்கவேண்டிய விஷயமென்றும், தர்மசிந்தனையுள்ள ஜனங்கள் இது விஷயத்தில் ச்ரத்தையெடுத்து பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்க வேண்டுமென்றும், கவர்ன்மெண்டார் ஊனமுள்ளவர்களுக்காக ஸ்தாபிக்கப்படும் பள்ளிக்கூடங்களுக்கு பண உதவிசெய்வார்களென்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

**A Muhammadan College at Vaniambady.**

**வாணியம்பாடியில் மகம்மதியர்களுக்கு ஒரு காலேஜ்.**—தென்னிந்தியா மகம்மதியக் கல்விச் சங்கம் கான்பரென்ஸ் ஸமீபத்தில் வாணியம்பாடியிலே நடந்தபோது ஹைதராபாத் வித்யாதிகாரி வாணியம்பாடி ஹைஸ்கூலைக் காலேஜாக்கி விடவேண்டுமென்றும், அதற்குத் தாம் தம்மாலியன்ற பொருளுதவியைச் செய்ய சித்தமாயிருப்பதாயும் தெரிவித்தார். அப்போது அந்தக் கான்பரென்ஸ் கூட்டத்திலேயே ஹைஸ்கூலைக் காலேஜாய் உயர்த்துவதற்காக 55,000 ரூபாய் கையொப்பம் செய்யப்பட்டது.

இப்போது நிஜாம் அரசர் காலேஜ் கட்டிடச் செலவுக்கு ரூ. 25,000 கொடுப்பதாய் வாக்களித்திருப்பதுமல்லாமல், மாஸம் தோறும் காலேஜை நடத்தும் செலவிற்கு ரூ. 1000 கொடுப்பதாயும் வாக்களித்திருக்கிறார்.

**Trained and Untrained Teachers.**

**பயிற்சியடைந்த உபாத்யாயர்களும் பயிற்சியடையாதவர்களும்.**—சென்னை ராஜதானியிலுள்ள எலிமெண்டரி பள்ளிக்கூடங்களில் சென்ற மார்ச்சு மாஸம் 31-ந்தேதியில் 18,726 பயிற்சியடைந்த உபாத்யாயர்களும், 34,064 பயிற்சியடையாத உபாத்யாயர்களும் இருந்தார்கள். ஸெகண்டரி பள்ளிக்கூடங்களில் 3,686 பயிற்சியடைந்த உபாத்யாயர்களும், 2057 பயிற்சியடையாத உபாத்யாயர்களும் இருந்தார்கள்.

சென்ற மார்ச்சுமாஸத்தில் நமது ராஜதானியில் 14 ஸெகண்டரி போதனா முறைப் பாடசாலைகளும், 64 எலிமெண்டரி போதனாமுறைப் பாடசாலைகளும் இருந்தன. 8 ஸெகண்டரி போதனா முறைப் பாடசாலைகளில் எலிமெண்டரி க்ரேட் உபாத்யாயர்களைப் பயிற்சி செய்விக்க வஸதிகளிருக்கின்றன.

**Expenditure on Education.**

**கல்விக்கு ஆகும் செலவு.**—மற்ற எல்லா தேசங்களையும்விட அமெரிக்கா ஐக்ய நாடுகளில் தான் கல்விக்காக அதிகம் செலவாகிறது. அங்கே மொத்த ஜனத்தொகையில் ஒவ்வொருவருக்கும் 12-ரூபாய் வீதம் செலவு செய்யப்படுகிறது. ஸ்விட்ஸர்லண்டில் தலைக்கு 10½-ரூபாய் வீதம் செலவுசெய்கிறார்கள். மற்ற தேசங்களின் விவரம் வருமாறு:—ஆஸ்ட்ரேலியா 8 ரூ 7 அணா; இங்லண்டும் வேல்ஸும் 7 ரூ. 8 அணா; கனடா 7 ரூ. 5 அணா; ஸ்காட்லண்ட் 7 ரூ. 8½ அணா; ஜெர்மனி 5 ரூ. 2 அணா; ஐயர்லண்ட் 4 ரூ. 13 அணா; ஹாலண்ட் 4 ரூ. 12½ அணா; ஸ்வீடன் 4 ரூ. 13 அணா; பெல்ஜியம் 4 ரூபாய்; நார்வே 3 ரூ. 15 அணா; ப்ரான்ஸ் 3 ரூ. 10 அணா; ஆஸ்ட்ரியா; 2 ரூ. 5½ அணா; ஸ்பெய்ன் 1 ரூ. 6 அணா; இட்டலி 1 ரூ. 8½ அணா; ஸெர்வியா 14 அணா; ஜப்பான் 15 அணா; ரஷ்யா 7½ அணா; ப்ரிட்டிஷ் இந்தியா ஒரு அணாவுக்கும் குறைவு.

# TAMIL LITERATURE.
## தமிழ்க் கல்வி.

### Truth Often Unwelcome at First.

**உண்மை முதலில் ஒருவர்க்கும் பிடியாது:—**

1. மருவிய வயாவிற்கால மிடையற
வருந்தா நிற்கும்
ஒருவறக் கடிகைதோறு முதித்தலா
லொவ்வோ ருண்மை
தருமதி நிறையுமுன்னந் தாய்வயிற்
றுதித்த சேய்போல்
உருவது குறைந்து தோன்று
முதித்த வவ்வுண்மை மாதோ.

வயா - ப்ரஸவவேதனை; காலம் - காலமென்னும் கன்னை; கடிகை - நாழிகை; மதி - மாஸம்; சேய் - குழந்தை; மாதோ - அசை.

2. தாய்மடிச் சுருண்டு தங்குஞ் சருப்பமொன்
றதனை யேய்ப்ப
தீயவவ் வுருவங் கண்டு சிந்தையி
லயர்ந்து மற்றீ
தேயநங் குலத்துக் கீன மிழைக்கவந்
துற்ற தாய
மாயமொன் றென்ன வஞ்சி மாழ்குவர்
மனத்து மாதோ.

3. சிலரதைக் கழுத்தனையத் திருகுமி
னென்பர் சில்லோர்
குலைவுற வணைவிடாது கொல்லுமி
னென்ப ரேனும்
நலிவற வுயிர்த்து நின்று நவில்பல
காத்து மாறி
முலைபல செவிலி யூட்ட முசிப்பற
வளரு மன்றே.

குலைவுற - அழியும்படி; முசிப்பு - தளர்ச்சி;

4. வரவர வளர்ந்து மேனி வடிவற
நிறைந்த தாகி
வெருவுறு முடல மெல்ல விளங்கிநல்
லழகு தோன்ற
மருவிய பாந்தண் மேனி மறைந்துநல்
வனப்பு வாய்ந்து
திருமலி தெய்வ மென்னத் திகழ்ந்திடுஞ்
சிறப்பி னன்றே.

வெருவுறு முடலம் - அருவருப்பான தேகம்; பாந்தண்மேனி - பாம்பைப்போன்ற கோரமான ரூபம்;

5. மற்றநாட் பிறந்த காலை வைதறப்
பழிதோர் யாரும்
முற்றிய மகிழ்ச்சி யோடு முனிவா
வெதிர்கொண் டேகிப்
பற்றரும் பாந்த ளென்னப் பயந்தெறிந்
திதருங் கையால்
உற்றுறத் தழுவி யோம்ப வுயருமவ்
வுண்மை தானே.

கருத்து:—உலகத்தில் ஒவ்வொரு நாழிகையிலும் ஒருண்மை பிறக்கிறது. அது பிறக்கும்போது குறை மாஸத்தில் பிறந்த குழந்தைபோல் அவலக்ஷணமாய் பாம்புபோன்ற கோரரூபமுடையதாயிருக்கும். பாம்பு பிறந்தவுடன் சுற்றத்தார் வெறுத்து அதைக்கொல்ல யத்தனிப்பதுபோல் முதலில் அருவருப்பாய்த் தோன்றும் உண்மையைப் பலர் பரிஹஸித்து ஆதரிக்காமல் விட்டுவிடுவார்கள். ஆனால் அந்த உண்மையானது பிறரால் ஆதரிக்கப்பட்டு நிலைபெற்று காலக்ரமத்தில் அதன் அழகை வெளிப்படுத்தும். அப்போது முன்பு அதை உதாஸீனம் செய்தோர் யாவரும் அதைப் போற்றுவார்கள்.

### Tiruvalluvar.

**திருவள்ளுவர்:**—திருக்குறளை எழுதிய திருவள்ளுவர் பஞ்சமஜாதியைச் சேர்ந்தவரல்லரென்று சென்னை கிறிஸ்தவ கலாசாலை தமிழ்பபண்டிதர் மிஸ்டர் டி. பி. கனகஸுந்தரம்பிள்ளை சொல்லுகிறார். தற்காலம் பறையர்களுடைய குருக்களுக்கு பொதுப்பெயராய் வழங்கும் வள்ளுவனென்னும் சொல் ஆதியில்ஒருவருடைய இடுகுறிப் பெயரா யிருந்ததென்றும், ஒரு ஜாதியின் பொதுப்பெயராக வழங்கவில்லையென்றும் அவர் அபிப்ராயப்படுகிறார். பறையர்கள் தெய்வபாஷையாகிய ஸம்ஸ்க்ருதத்தை வாசிக்கக்கூடாதென்று முன்பு கட்டுப்பாடு இருந்தாலும், திருவள்ளுவர் ஸம்ஸ்க்ருதத்திலுள்ள பல அர்த்த சாஸ்த்ரங்களை நன்கு யறிந்திருந்ததாக அவர் நூலால் தெரியவருகிறதாலும், அவர் தாழ்ந்த குலத்தில் உதித்தவரல்லவென்று சொல்லவேண்டும். இன்னும் மிஸ்டர் பிள்ளை சொல்லுவதென்னவென்றால் திருவள்ளுவர் மைலாப்பூரில் வஸித்தாரென்று சொல்வதும் தவறாகும். மதுரைக்குத்தெற்கில் ஏதோ ஒரு ஊரில் வஸித்துவந்தாரென்று திருவள்ளுவமாலையால் தெரியவருகிறது.

### Govindan.

**கோவிந்தன்:**—இது ப்ராம்மண ஸமூகத்தின் குறைகளை விரிவாய் எடுத்துக்காட்டும் ஓர்நாவல். இதில் விஷயங்கள் தெளிவாகவும் இனிய நடையிலும் எழுதப்பட்டிருக்கின்றன. ஹாஸ்யரஸமும் இடையிடையே கலந்துள்ளது. கோவிந்தன் என்னும் வாலிபன் உலக வாழ்க்கையின் அநித்யத்தை அறிந்து அதைவிட்டுவிடத் தீர்மானித்துக் கடைசியில் துறவியாகி உலகமாகிய மாயையிலிருந்து விடுபட்டான் என்பதே இந்தக் கதையின் ஸாரமாகும். இதன் விலை அணா 10. வேண்டுவோர் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி 3-4. கொண்டிசெட்டித் தெரு என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.



# SCIENCE AND INVENTION.
## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### The Torpedo Aeroplane.

**டார்ப்பிடோ குழாயுள்ள ஏரோப்ளேன்.**—ஸெப்பலின்களை ஒழிப்பதற்காக இரண்டு இஞ்ஜினியர்கள் புதுவகையான ஏரோப்ளேன் ஒன்று செய்திருக்கிறார்கள். ஏரோப்ளேனின் முன்பாகத்தில் பலமாய் வெடிக்கக்கூடிய கன்காட்டன் என்னும் வெடிமருந்து வைக்கப்பட்டிருக்கும். ஏரோப்ளேனில் ஓட்டுகிறவர் உட்காரும் இடமானது வேண்டும்போது கீழே விழும்படி அந்த விமானத்தின் மற்ற பாகங்களோடு சேர்க்கப்பட்டிருக்கும். அதற்கென்று ஏற்பட்ட ஒரு பொத்தானை அமிழ்த்தினால் ஆஸனம் தனியாகக் கீழே விழுந்துவிடும்.

ஏரோப்ளேனில் ஏறிப்போகிறவர் தமது தோளில் குடைபோல் விரியக்கூடியதும், மெதுவாய்க் கீழே விழுவதற்கு உபயோகப்படுவதுமான பாரச்சூட் என்னும் குடையைக் கட்டிக்கொண்டிருப்பார். ஏதாவது ஸெப்பலின் வருகிறதென்று தெரிந்ததும், அவர் தமது புது ஏரோப்ளேனில் ஏறிக்கொண்டு ஆகாயத்தில் பறந்து, ஸெப்பலின்மேல் மோதும்படி தமது விமானத்தைச் செலுத்துவார். ஸெப்பலினுடைய ஸமீபம் போனதும் அவர் தமது ஆஸனத்தைக் கீழே தள்ள பொத்தானை அமிழ்த்துவார். உடனே அவர் ஆஸனத்துடன் கீழே விழுந்ததும் அவருடைய தோளிலுள்ள குடைவிரிந்துகொள்ளும். அந்தக் குடையின் உதவியால் அவர் பூமியில் மெதுவாய் இறங்குவார். அவர் விட்டுவந்த ஏரோப்ளேன் நேரேபோய் ஸெப்பலின் மேல் மோதும். மோதினதும் அதன் முன்பாகத்திலுள்ள வெடிமருந்து வெடித்து ஸெப்பலினை நாசம் செய்துவிடும்.

இந்தப்புதுவகை ஏரோப்ளேனைச்செய்ய அதிகசெலவாகாதாம். இது மணிக்கு 150-மைல் வேகம் போகக்கூடியது. இதில் 100-ராத்தல் கன்காட்டன் கொண்டுபோவார்கள்.

### If this Earth should Stop.

**இந்தப்பூமி அசைவற்று நின்றால்.**—நாம் வஸிக்கும் இந்த பூமியானது தன்னைத்தானே சுற்றிக்கொண்டு ஸூர்யனையும் சுற்றிக் கொண்டிருக்கிறது. இது உருண்டை வடிவமாயிருக்கிறதென்றாலும் வட த்ருவத்திலும் தென் த்ருவத்திலும் சற்று தட்டையாயிருக்கிறது. பூமி ஆதியில் முழுவதும் உருண்டையாக இருந்திருக்கலாமென்றும், அது ஸதா சுற்றிக்கொண்டிருப்பதால் கால க்ரமத்தில் நீண்ட வட்டமாக மாறியிருக்கிறதென்றும் சிலர் சொல்லுகிறார்கள். பூமி தன்னைத்தானே சுற்றுவது நின்றுவிட்டால் சில நாட்களுள் இப்போது நடந்துவரும் யுத்தம் நின்றுவிடுமென்று ஒரு வித்வான் சொல்லுகிறார்.

பூமியின் சுழற்சி நின்றவுடன், பூமியிலுள்ள கெட்டிப்பொருளான மண், கல், முதலியவைகளாலான மலை, மேடு, பள்ளங்கள் அப்படியே உருவத்தில் மாறுபடாமல் இருக்கும். ஆனால் ஸமுத்ர ஜலம் மாத்ரம் பூமிக்கு உருண்டைவடிவம் ஏற்படும்படி வடக்கையும் தெற்கையும் நோக்கி ஓடுமாம். இதனால் வடக்கு த்ருவத்திலும் தெற்கு த்ருவத்திலும் 45,000 அடி ஆழமுள்ள ஜலம் சேருமாம். இதனால் ஐரோப்பாவிலுள்ள தேசங்களெல்லாம் மூழ்கிவிடும். ஸ்பெய்னில் ஸிராநிவாடா என்னும் மலைமாத்ரம் ஒரு தீவாகத் தெரியும். பிரன்னீஸ் மலையில் இரண்டொரு உயர்ந்த சிகரங்கள் தவிர மற்ற பாகமெல்லாம் ஜலத்தில் அமிழ்ந்துவிடும். அந்த சிகரங்கள் சிறு தீவுகளாகக் காணப்படும் ஸிஸிலித் தீவில் எட்னா என்னும் எரிமலையைத் தவிர மற்ற பாகமெல்லாம் அமிழ்ந்துவிடும். ஐரோப்பாவிலுள்ள மற்ற தேசங்களெல்லாம் முற்றிலும் மூழ்கிவிடும். அப்போது சண்டைநடக்கக் காரணமே யிராது.

### The Velocity of wind.

**காற்றின் வேகம்.**—சென்ற நவம்பர்மாஸம் 10-ந் தேதியன்று சென்னையிலும் கிழக்குக்கரையோரமாயுள்ள வேறிடங்களிலும் புயல்காற்றடித்தபோது, காற்று ரொம்ப வேகமாய் வீசிற்று. நடுராத்திரி 12 மணி முதல் 1 மணி வரையில் மணிக்கு 31 மைல் வீதம் வீசிற்றென்று சென்னை மீடியரலாஜிகல் ஆபீஸில் கணக்கெடுக்கப்பட்டது. 1-மணி முதல் 2-மணி வரையில் 35 மைல் வேகமாம், 2 மணி முதல் 3 மணி வரையில் 28 மைல் வீதம் வீசிற்று 3 மணி முதல் 4 மணி வரையில் 26 மைல் வேகமிருந்தது. 4-மணி முதல் காலை 5-மணி வரையில் மணிக்கு 20 மைல் வேகம் வீசிற்றாம்.

ஆகவே அன்றடித்த காற்றின்வேகம் 20 மைல் முதல் 40 மைல் வரையிலாகும். இவ்வளவு வேகத்துடன் அடிக்கும் காற்றுக்கு கேல் என்று இங்கிலீஷில் சொல்லுவதுண்டு. 'ஸ்டார்ம்' என்று சொல்லப்படும் பெரும்புயல்காற்று மணிக்கு 40 மைல் முதல் 80 மைல் வரை வேகமுடையது. ஹாரிகேன் என்று சொல்லப்படும் ப்ரசண்டமாருதக் காற்று 80 மைல் முதல் 150 மைல் வேகமுடையது.

## SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

**Nathaichoory.**

**நத்தைச்சூரி என்றொரு வித்து.**—கோவில் பட்டி தாலுக்கா சிவகிரியிலுள்ள ஸா. தக்ஷிணாமூர்த்தி மூப்பனார் பின்வருமாறு நமக்கு எழுதுகிறார். நத்தைச்சூரி யென்பது காடுகளில் தனியே முளைக்கும் ஒருசெடி. ½ அடி உயரம் கொடிபோல் பல கிளைகளுடன் வளருகிறது இலைதுவரை இலைபோன்றது. கொஞ்சம் கனமும் ஸ்வல்ப நீர்ஸத்துமுள்ளது. காய்கள் மிளகு பரிமாண முள்ளவை. விதைகள் ஜீரகப் பரிமாண முள்ளவை. சப்பிக்கொட்டையைப்போல பிளவுபட்டு பொருந்தியுள்ளது.

இது நமது பூர்வீக வைத்யகர்த்தாவாகிய அகஸ்திய மகாமுனிவரால் சொல்லப்பட்ட வைத்ய காவ்யங்களில் ப்ரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதன் விதையை வெய்யில் வருத்து, உரலிலிட்டு இரும்புலக்கையால் பொடிசெய்து சலித்து எடுத்து ப்ரதிதினமும் காலையில் நபர் 1-க்கு வெருகடி ப்ரமாணம் அதாவது மூன்றுவிரலால் கிள்ளுமளவு எடுத்து ¼ படி ஜலத்தில் கொதிக்கவைத்து வடிகட்டி சர்க்கரை சேர்த்து ஸமமாக பசுவின்பால் கலந்து சாப்பிட்டுவரும் பக்ஷத்தில் தாது வ்ருத்தியையும் ரத்தசுத்தியும் தருவதுடன், நீரிறைப்பு, மேகம் முதலிய வ்யாதிகளைப் போக்கடிக்கிறதென்று பழமையான ஏட்டு ப்ரதிகளிலிருந்து தெரிகிறது. இந்தப் பக்கத்திலுள்ள அநேகர் இதை உபயோகித்து வருகிறார்கள்.

இதனால் காப்பியைக்காட்டிலும் அதிக உத்ஸாகம் உண்டாகிறது ஆனால் காப்பியால் ஏற்படுகிற மூத்ர ரோகங்கள் ஏற்படுவதில்லை. தேகபலமும் உண்டாகிறது. சிரங்கு முதலிய தோலைப்பற்றிய வியாதிகளை வராமலிருக்கின்றன. இது அநுபோகமான கைகண்ட மருந்தாயும் ஆகாரமாயுமுள்ளது.

இவ்விதையை பொடிசெய்து விஞ்சை லேகியம் என்று சிலவைத்யர்கள் செய்துகொடுப்பதில், நரம்புதளர்ச்சிநீங்கி தேகபலம் உண்டாகிறது. இதை வேரை, குழியம்மியிலிட்டு அரைத்து, உருண்டை செய்து 5 வேளை சாப்பிடும் பக்ஷத்தில் அரையாப்பு என்று சொல்லப்பட்ட வ்யாதி அடியோடே நீங்கிவிடும். சாப்பிடும்பொழுது செத்தவிடு கொஞ்சம் எடுத்து அதில் மறைத்துமூடி சாப்பிடவேண்டும். காப்பி குடிப்பதினுண்டான கெடுதியை யுத்தேசித்து ஸுமார் 10-வருஷமாக இவ்வூரில் பல குடும்பத்தவர்கள் பூராவும் சாப்பிட்டுவருவதில், மேலான குணமுள்ளதாகவிருக்கிறது. வேண்டியவர்கள் சங்கரநயினார் கோவில் தாலூக்கா, சிவகிரி, வாஸுதேவ நல்லூர், புளியங்குடி, கோவில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, பேட்டைமுதலிய விடங்களிலுள்ள வ்யாபாரிகளிடம் தேவையானது பெற்றுக்கொள்ளலாம். இப்பொழுது சிவகிரி வ்யாபாரிகளிடம் போதுமான விதை இருக்கிறது.

**Water Drinking at Meals.**

சாப்பிடும்போது ஜலம் குடித்தல்.—ஸமீபத்தில் 22-வயதுள்ள ஒருவர் மொத்தத்தில் ஒருநாளுக்கு பக் சாப்படியால் 2-படி ஜலம்வீதம் 5-நாள் சாப்பாட்டோடு ஜலம் குடித்து வந்ததில், அவருடைய நிறையில் 2-ராத்தல் அதிகமாயிற்றென்று ஒருடாக்டர் சொல்லுகிறார். சாப்பிடும்போது ஜலம் குடிப்பதால் ஜீர்ணம்செய்யும் த்ராவகங்கள் அதிகமாய் சுரக்கின்றனவென்றும், ஆகாரம் சீக்ரம் உடலில் சேருகிறதென்றும், ஆகாரத்திலுள்ள எண்ணெய்ப்பொருள்கள் நன்றாய் ஜீர்ணமாகின்றனவென்றும் அந்தடாக்டர் அபிப்ராயப்படுகிறார். ஜீர்ணத்ராவகங்களில் ஜலம் கலப்பதால் அந்தத்ராவகங்களின் வீர்யம் குறைவதில்லை. ஆகவே ஒவ்வொருவரும் சாப்பாட்டு நேரத்தில் ஜலம்குடிப்பது நல்லதெனறும், ஆனால் ஆகாரத்தை நன்றாய் மென்று விழுங்கவேண்டுமென்றும் அவர் சொல்லுகிறார்.

**Barley Conji**

பார்லிகஞ்சி.—பார்லி என்னும் வாற்கோதுமைக் கஞ்சிக்கு ஸந்தர்ப்பணம் என்னும் குணமிருப்பதால், அது தாதுக்களுக்குக் குளிர்ச்சியை உண்டாக்கும் நல்ல உணவாகக் கருதப்படுகிறது. மலபந்தத்தினாலாவது, மூத்ரம், வியர்வை நன்கு வெளிப்படாமல் ஏதேனும் தடையுறுவதினாலாவது உடலிற் சேர்ந்துவிடும் நீரால் வெவ்வேறு வ்யாதிகள் அல்லது அவைகளின் ஸம்பவிக்கையில், வாற்கோதுமைக் கஞ்சியை உட்கொண்டுவந்தால், மலபந்தத்தை நிவ்ருத்திசெய்து, மூத்ரத்தையும் தாராளமாக வெளிப்படுத்திவரலாம். நீர்க்கோவை முதலிய வ்யாதிகளில் இதைவிசேஷமாக உணவாய் உபயோகிக்கச் செய்வதுவழக்கம். வ்யாதியில்லாதவர்கூட இக்கஞ்சியைப் பகல் போஜனத்திற்கும் இராப்போஜனத்திற்கும் இடையில் உட்கொண்டு வருவது ஆரோக்யத்தை வ்ருத்திசெய்வதற்கு அநுகூலமாயிருக்கும்—வைத்தியகலாநிதி.



## LAW.

## சட்டம்.

**Mortgage**

அடமானம்.—ஒருவர் இன்னொருவருக்கு ஸொத்தின்மேல் பணங் கடன் கொடுத்திருந்தார். கடனை வஸூலிக்க வ்யாஜ்யம் போட்டதில் கடன்கொடுத்தவர் அடமான ஸொத்தை ஏல விற்பனைசெய்து கடனை அடையவேண்டுமென்றும், விற்பனைத்தொகை டிக்ரி தொகையைவிடக் குறைவாயிருந்தால், பாக்கித்தொகைக்கு அடமானம் வைத்தவருடைய மற்ற ஸொத்துகளை விற்பனைசெய்து தொகையைப் பெறலாமென்றும் கோர்ட்டார் டிக்ரி போட்டார்கள். பிறகு அடமான ஸொத்தை விற்றதில், விற்றுவந்த பணம் டிக்ரித் தொகைக்குக் குறைவாயிருந்தது. பாக்கி டிக்ரித் தொகையை வஸூலிக்க டிக்ரியை நிறைவேற்றவேண்டுமானால், அடமானஸொத்தை ஏலத்துக்குக் கொண்டுவந்து விற்று, இவ்வளவு பாக்கியென்று எப்போது நிர்ணயிக்கப்படுகிறதோ அந்த தேதியிலிருந்து 12-வர்ஷத்துக்கு மேற்படாத ஒரு காலத்துக்குள் நிறைவேற்று மனுபோடவேண்டும். டிக்ரி ஏற்பட்ட தேதியிலிருந்து 12-வர்ஷத்துக்குள் பாக்கித்தொகைக்கு நிறைவேற்று மனுபோடவேண்டுமென்பது கட்டாயமல்ல—4 லாவீக்லி 507.

**Promissory Note.**

ப்ராமிஸரி நோட்.—ப்ராமிஸரி நோட் எழுதிக்கொடுக்கையில், பணம் கொடுத்தவருக்கோ, அல்லது அந்தநோட்டைத் தம் வசம் வைத்திருப்பவருக்கோ பணத்தைத் திருப்பிச் செலுத்திவிடுவதாக எழுதினால், அது செல்லாது. ஏனென்றால் அவ்விதம் நோட் எழுதிகொடுப்பது கூடாதென்று இந்தியன் பேபர் கரன்ஸி ஆக்டால் விதிக்கப்பட்டிருக்கிறது. அவ்விதம் எழுதப்பட்ட ப்ராமிஸரி நோட்டை ஆதாரமாக வைத்து பணம் வாங்க வ்யாஜ்யம் போட்டால், அது செல்லாது.

ப்ராமிஸரி நோட்டை வைத்திருப்பவருக்குக் கேட்டவுடன் பணம் செலுத்துவதாக எழுதிக்கொடுக்கும் அதிகாரம் கவர்ன்மெண்டாருக்குத்தான் உண்டு. அந்த அதிகாரத்தை அநுஸரித்துத் தான் கவர்ன்மெண்டார் கரன்ஸி நோட்டுகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். கரன்ஸி நோட்டானது அதை வைத்திருப்பவருக்குக் கேட்டவுடன் பணம் செலுத்துவதாக கவர்ன்மெண்டார் எழுதிக்கொடுத்திருக்கும் ப்ராமிஸரி நோட்டாகும். 4 லாவீக்லி, 261

**Deed of Gift and Registration.**

தான சாஸனமும் அதை ரெஜிஸ்டர்செய்தலும்.—தான சாஸனபத்ரம் எழுதிவைத்த ஒருவர் இறந்துபோனபிறகு அந்தப் பத்ரத்தை தானம் வாங்கினவர், இறந்துபோனவருடைய வார்ஸின் ஸம்மதம் பெறாமலே ரெஜிஸ்டர் செய்தாலும் தானபத்ரம் செல்லும்.

தானம் செய்வதில் தானம் கொடுப்பவர் செய்யவேண்டியதெல்லாம் என்னவென்றால், தானபத்ரத்தை எழுதிக் கையெழுத்துப் போடவேண்டியதே. அப்படி எழுதிவிட்டபிறகு, அவர் அதை ரெஜிஸ்டர்செய்ய ஸம்மதப்படாவிட்டாலுங்கூட கட்டாயப்படுத்தி அதை ரெஜிஸ்டர் செய்யலாம். அப்படி ரெஜிஸ்டர் செய்த பத்ரம், அது எழுதப்பட்ட தேதிமுதல் அமுலுக்கு வரும்.

**Exchange of Property.**

ஸொத்து பரிவர்த்தனை.—வாதி ஒரு நிலம் விஷயமாக ப்ரதிவாதிக்கு ஒரு பரிவர்த்தனை பத்ரம் எழுதிக்கொடுத்திருந்தார். ஆனால் அந்தப் பத்ரம் ரெஜிஸ்டர் செய்யப்படவில்லை. எழுதிக்கொடுத்த பிறகு வாதி நிலத்தைப் ப்ரதிவாதி வசம் ஒப்புவித்தார். ப்ரதிவாதி அந்த நிலத்தின் மேல் ஒரு நல்ல கட்டிடம் கட்டினதோடு அதைக் கட்டும்போது அவர் வாதிக்கு நிலத்துக்காக கொஞ்சம் பணம் கொடுத்திருந்தார். ஆனால் வாதி சிலகாலத்துக்குப்பிறகு பரிவர்த்தனை பத்ரம் ரெஜிஸ்டராகாததால் ப்ரதிவாதிக்கு ஸொத்தில் பாத்யதை ஏற்படவில்லையென்று சொல்லி, நிலம் தமக்குச் சேரவேண்டுமென்று வ்யாஜ்யம் போட்டார். இந்தக்கேஸில் ஹைகோர்ட்டார் நிலம் வாதிக்கு சேரவேண்டியதென்று தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள்.

**Partition Without the Consent of Sons.**

புத்ரர்களின் ஸம்மதத்தைக் கேட்காமல் பாகம் செய்வது.—தகப்பனார் புத்ரர்களுடைய ஸம்மதத்தைக் கேட்காமலே குடும்பஸொத்தை பாகம் செய்யலாம். குடும்ப ஸொத்து பிதுரார்ஜித ஸொத்தாயிருந்தால் ஸொத்தை எல்லாருக்கும் ஸமமாக பாகம் செய்யவேண்டும். தகப்பனாருடைய ஸ்வயார்ஜித ஸொத்தாயிருந்தால், பாகங்கள் ஸமமாக இருக்கவேண்டுமென்பதில்லை.

## SOCIETY AND RELIGION.

## ஜன ஸமூகமும் மதமும்.

**Lord Subramanya.**

**ஸுப்ரமண்யஸ்வாமி.**—ஸுப்ரமண்ய ஸ்வாமியின் ஸ்வரூப தத்வத்தைப்பற்றியும், நாமாவளி தத்வத்தைப் பற்றியும் ஒரு நிருபர் 'லோகோபகாரி' பத்ரிகையில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

**ஸ்வரூப தத்வம்:—**

(1) ஆறுமுகம்:—இவை ஈசன் நான்குதிசைகளோடு மேல் கீழ் என்னும் திசைகளுஞ் சேர்ந்து ஆறு திசைகளிலும் வ்யாபகமானவர் என்று தெரிவிக்கின்றனவாம்.

(2) பன்னிரண்டு கைகள்:—பத்துக் கைகள் கர்ம காண்டத்தையும், ஒருகை பக்தி காண்டத்தையும், ஒருகை ஞானகாண்டத்தையும் காட்டுகின்றன. எப்படியென்றால் ச்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோபவம், அநுக்ரகம் என்னும் பஞ்சக்ருத்யங்களும், ஞான சக்தி, இச்சாசக்தி, க்ரியாசக்தி, ஆதிசக்தி, பராசக்தி என்னும் பஞ்ச சக்திகளும் பத்துக்கைகளாம். வரத ஹஸ்தம் பக்தியையும், அபயஹஸ்தம் ஞானத்தையுங் காட்டுகின்றனவாம்.

(3) பன்னிரண்டு கண்கள்:—துவாதச ஆதித்யர்களாம்.

(4) இரண்டு பாதங்கள்:—ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளாம்.

(5) வேல்:—அஜ்ஞான நிவர்த்தக சக்தியாம்.

**நாமாவளி தத்துவம்:—**

(1) ஷண்முகன்:—ஸர்வ வ்யாபகன்.

(2) ஸ்கந்தன்:—காமம், க்ரோதம் முதலிய உட்பகைவர்களை நாசஞ் செய்பவன்.

(3) ஸுப்ரமண்யன். — மேலானதாகிய ப்ரஹ்ம ஞான ஸ்வரூபன்

(4) "சரவணபவ"ன்:—ச-ர-வ-ண-ப-வ என்னும் ஆறெழுத்துக்களும் மூலாதாரம் முதலிய ஆறுதாரங்களைக் குறிக்கு மெழுத்துக்களாகும். ஆதலால் சரவணபவன் என்பது ஆறுதாரங்களிலும் அதுகதமா யிருப்பவனெனப் பொருள்படும்.

(5) குகன்:—ஹ்ருதயா காசத்தில் வெளிப்படுபவன். அநாஹத சரவணத்தில் உற்பூதமானவன். சரவண என்பது நான்காவது ஆதாரமாகிய அநாகதம் அல்லது ஹ்ருதயமும்.

(6) குமாரன்:—குத்ஸிதமாகிய துர் வாஸனைகளை நாசஞ் செய்பவன். உலகத்தில் மேலானதாகிய மோக்ஷத்தை யளிப்பவன்.

(7) சக்திதரன்:—மகாவாக்ய உபதேசமாகிய அஜ்ஞான நிவர்த்தக சக்தியை யுடையவன்.

(8) சிகிவாஹனன்:— அஞ்ஞானத்தை யடக்கிக் கொண்டிருப்பவன். சிகி-மயில்.

இவ்விதமே இவருடைய திருநாமங்களெல்லாவற்றிற்கும் அந்தரார்த்தங்களுண்டு.

**The Eternal Bliss.**

மோக்ஷம்.—"நீ உன்னை ஆறு விஷயங்களினின்றும் தற்காத்துக் கொள்ளக்கடவாய். நான் உன்னுடைய மோக்ஷத்திற்காக உத்தரவாதமாயிருக்கிறேன்.

(1) பேசும்போது உண்மை பேசு.

(2) கொடுத்த வாக்கை துரிதமாய் தவறுமல் நிறைவேற்று.

(3) உன் நம்பிடிமானத்தைக் கடைத்தேற்ற கொஞ்சமும் தளர்வுறுதே.

(4) மனத்தாலும் செய்கையாலும் சுத்தமாயிருக்கக் கடவாய்.

(5) நீதிக்கேடென்னதும் வசைக்கு இடமானதுமான வஸ்துவை உனது ஹஸ்தங்கள் தொடாதிருக்கக் கடவது.

(6) ஸமஸ்த ஸ்ருஷ்டிகளிடமும் ஸமமான இரக்கம் காட்டிவா.—மாகான் முகம்மது நபி அவர்களின் உபதேச ரத்னம்.

**The Oraons**

**ஓரான் என்னும் ஜாதியார்.**—வடக்கே சோட்டா நாக்பூர் என்னும் ப்ரதேசத்திலுள்ள ஓரான் என்னும் ஜாதியார் ரொம்ப தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்களிடம் மூடநம்பிக்கை அதிகமுண்டு. அவர்கள் சிலகாலமாக தங்களுடைய நிலைமையை சீர்திருத்த முயன்றுவருகிறார்கள்.

சென்ற 1915-ம் வர்ஷம் ஜூலைமாஸத்தில் அவர்களுள் சிலர், இனி தங்கள் ஜாதியில் ஒருவரும் மதிபானங்கள் குடிக்கக்கூடாதென்று கட்டுப்பாடு செய்துகொண்டார்கள். இந்த மதுவிலக்கு ஏற்பாடு வரவர அதிகரித்து சென்ற வர்ஷக் கடைசியில் ஓரான் ஜனங்கள் பூரா்வும் மதுபானம் செய்வதை நிறுத்தி விட்டார்கள். அதுமாத்ரமல்ல. அவர்கள் மாம்ஸம், மீன் ஆகிய இவைகளையும் விலக்கிவிட்டார்கள். இன்னும் மாம்ஸத்தின் ஞாபகத்தை உண்டுபண்ணும் சிவப்பான காய்கறிகளையும் அவர்கள் இப்போது தொடுவதில்லையாம்.



## HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

**Sand Paper.**

**உப்புக் கடுதாசி.**—மராமான்கள் தொடுவதற்கு வழவழப்பா யிருப்பதற்காக அவைகளின் மேல் உப்புக் கடுதாசியால் தேய்ப்பது வழக்கம். உப்புக் கடுதாசிகள் பலவகைப்படும். அவைகள் செய்யும் விதம் வருமாறு. இதற்குக் கடுதாசி ரொம்ப உறுதியானதாக இருப்பதோடு, ஸுமாராய் கெட்டியாகவும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இதைக்கொண்டு செய்யப்படும் உப்புக்கடுதாசி விறைப்பாயிராது. உப்புக் கடுதாசி செய்ய, கடுதாசியோடு கண்ணாடி அல்லது மணலும், வஜ்ரமும் வேண்டும்.

மணல் ரொம்ப சுத்தமாயிருப்பதோடு, அதன் ஓரங்கள் கூர்மையாயிருக்கவேண்டும். ஆற்றங்கரையிலும் கடற்கரையிலும் உள்ள மண், உருண்டையா யிருக்கும். அதை அப்படியே உபயோகிக்கக்கூடாது. ஆகையால் அந்த மண்ணைப் பெரியதாகச் சலித்தெடுத்து, அதைத் தூளாக்கினால் அதற்கு சொரசொரப்பு அதிகமாயிருக்கும். கண்ணாடியை உபயோகிக்க வேண்டுமானால், கொஞ்சம் பச்சை நிறமுள்ள கண்ணாடித் துண்டுகளை சேகரித்து இரும்பு உரலில் போட்டு இடிக்கவேண்டும். நன்றாய்த் தூளான பிறகு எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

வஜ்ரம் மட்டமா யிராமல் உயர்ந்ததா யிருக்கவேண்டும். இதைக் காய்ச்சி வைத்துக்கொள்ளவேண்டும். கடுதாசியில் பூசின பிறகு வஜ்ரம் காய்ந்தபின் சற்று வளைத்து கொடுக்கக்கூடியதாயிருக்கவேண்டும். வஜ்ரம் ஒடியக்கூடியதாயிருந்தால் அதைக் காய்ச்சின பிறகு கொஞ்சம் க்ளிஸரினோ, தேன்பாகோ சேர்த்தால் வஜ்ரம் நல்ல பதமடையும்.

உப்புக் கடுதாசி செய்யவேண்டிய கடுதாசியை ஒரு மேஜையின்மேல் சுருங்கலில்லாமல் வைத்து அதன் மேல் ஒருபக்கம் வஜ்ரத்தை மெல்லிய படையாகப் பூசவேண்டும். பூசினதும், மணலை வஜ்ரத்தின் மேல் தூவவேண்டும். தூவி அப்படியே விட்டுவிட்டால், மணல் வேண்டிய அளவுக்கு வஜ்ரத்தில் ஒட்டிக்கொண்டுவிடும். வஜ்ரம் காய்ந்தபிறகு, கடுதாசியை உதறினால் அதிகப்படியான மணல் கீழே விழுந்துவிடும்.

கண்ணாடித் தூளை உபயோகிக்கப் பின்வருமாறு செய்யவும். முன்போல் கடுதாசியில் வஜ்ரத்தைத்தடவி சூடான பலகையின் மேலோ இரும்பின் மேலோ வைத்து, பொடி செய்த கண்ணாடியை ஒரு சல்லடையில் கொட்டி மெல்லிய கண்ணாடித்தூள் வஜ்ரத்தில் விழும்படி சலிக்கவும். கடுதாசியை கொஞ்சநேரம் அப்படியே விட்டுவைத்தால், வஜ்ரம் கண்ணாடித்தூளோடு சேர்ந்து கெட்டியாக யிருக்கும். பிறகு கடுதாசியை உதறினால் அதிகப்படியான கண்ணாடித்தூள் கீழே விழுந்துவிடும். இந்தத் தூளை மறுபடியும் உப்புக் கடுதாசிசெய்ய உபயோகித்துக் கொள்ளலாம். இவ்விதம் தயார்செய்யப்படும் உப்புக்கடுதாசி கடையில் விற்கப்படுவதை விட உயர்ந்ததா யிருக்கும். உயர்ந்த வேலைக்கு உபயோகப்படுத்த ரொம்ப நயமான உப்புக்கடுதாசி வேண்டுமானால் ரொம்ப நயமான தூளை உபயோகிக்க வேண்டும். இதற்கு ரொம்ப நெருக்கமான கண்கள் உள்ள சல்லடைகளை உபயோகப்படுத்த வேண்டும்

**Bleeding Wounds.**

**ரத்தம் வரும் காயங்கள்.**—தோல் கிழிக்கப்பட்டு ரத்தம் வடியும் காயங்களுக்கு ரத்தம் அதிகமாய் வடியாமலிருக்கும்படியாகக் உடனே காயம்பட்ட இடத்தை விரலால் அமுக்கிக்கொண்டு, ரத்தத்தை நிறுத்திவிடவேண்டும். ஜாஸ்தியாக வடியுமானால் மாசிக்காய்த் தூளையாவது, படிக்காரத் (சீனக்காரம்) தூளையாவது பச்சைத் தண்ணீரில் போட்டு ஒருசுத்தமான துணியை அந்த ஜலத்தில் நனைத்து மூன்று நான்கு மடிப்பாக மடித்துச் செவ்வையாகக் காயத்தின் வாயில்போட்டுக் கெட்டியாக அமிழ்த்தி அச்சிறுதுண்டின்மேல் சற்றுப் பெரியதான ஒரு சிறு துண்டை மடித்துப் போட்டு இதன்மேல் அதைவிடப் பெரியதான சிறு துண்டு மடித்துப்போட்டு இரத்தம் வடியாதபடி அமுக்கிக் கட்டி முடிச்சுப் போட்டுவிடவேண்டும். உடனே வைத்யரிடம் கொண்டுபோகவேண்டும். ரத்த மதிகமாகக் கொட்டிவிட்டால் ப்ராணனுக் கபாயம் நேரிடும். ஆகையால் ரத்த மதிகமாக வடியவிடக்கூடாது. நமது தேகத்தில் இரண்டு வித ரத்தநாடிக ளிருக்கின்றன: சுத்தமான ரத்தம் ஓடுகிற நாடிகள், அசுத்தமான ரத்தம் ஓடும் நாடிகள். சுத்தமான ரத்தம் அதிகச் சிவப்பாயிருக்கும். அசுத்தமானதோ கருஞ் சிவப்பா யிருக்கும். சுத்தமான ரத்த உடைப்பை நிறுத்த அமுக்கிப் பிடித்து ரத்தம் பீறிட்டடிக்கு மிடத்தைத் தூக்கி உயரத்தில் வைக்கவேண்டும். அசுத்தமான இரத்தத்தை நிறுத்த நோயாளியை உட்காரவாவது படுக்கவாவது செய்யவேண்டும். ரத்தம் ஓடிவருமிடத்தை உயரத்தில் தூக்கிவைக்கவேண்டும். காயம்பட்ட பாகத்தைத் தாங்கிக்கொள்ளலாம் - என்று ஒரு பத்ரிகை எழுதுகிறது.

# AGRICULTURE.

# விவஸாயம்.

## Cost of Paddy Cultivation.

நெல் ஸாகுபடிக்காகும் செலவு.—பர்மாவிலுள்ள ஒரு விவஸாயப் பண்ணையின் ரிபோர்ட்டில் நெல்ஸாகுபடிக்கு செலவு இன்ன ஆகுமென்பது பின்வருமாறு கணக்கிடப்பட்டிருக்கிறது. கூலியாட்களுக்கு ஆகும் செலவு, அந்த ஊரில் கூலியாட்களுக்குக் கொடுக்கப்படும் கூலி விகிதத்தின்மேல் போடப்பட்டிருக்கிறது. உழுதல் முதலிய மாடுகள் செய்யவேண்டிய வேலைகளுக்காகும் செலவை, பிறர் மாடுகளை உழ வாங்கிக்கொண்டால், என்ன கூலி கொடுக்கப்படுமோ அதை அனுஸரித்துப் போடவில்லை. ஒரு ஜோடி காளைமாடுகள் 200 ரூபாய் விலையென்றும், அவை 5 போகங்களுக்கு வேலைக்கு வருமென்றும் வைத்துக் கொண்டு, ஒருபோகத்துக்கு அவைகளுக்காகும் செலவு 40-ரூபாய், 200 ரூபாய்க்கு வட்டி இவைகளைச் சேர்த்து, ஒரு ஏக்கருக்கு உழவு முதலியவைகளுக்கு இன்ன செலவாகுமென்று மதிப்பிடப் பட்டிருக்கிறது.

| வேலை | ஒரு ஏகருக்காகும் செலவு | | |
|---|---|---|---|
| உழுதல் பரம்படித்தல் முதலியன ரூ. | 3 | 8 | 0 |
| களையெடுத்தல் | 0 | 10 | 0 |
| நாற்றுப்பிடுங்குதல் | 1 | 0 | 0 |
| நாற்றங்காலிலிருந்து வயலுக்கு நாற்றுகளைக் கொண்டுபோவது | 0 | 8 | 0 |
| நாற்று நடுதல் | 4 | 0 | 0 |
| அறுவடை செய்தல் | 5 | 0 | 0 |
| போரடித்தல் | 5 | 11 | 0 |
| ஆகமொத்தம் | 20 | 5 | 0 |

இவைகளோடு, வரப்புகளை சரிப்படுத்துவது, நீர் பாய்ச்சுதல் ஆகிய இவைகளுக்காக நூற்றுக்கு 1-வீதம் சேர்த்துக் கொண்டால், மொத்தம் செலவு 21-ரூபாய் ஆகும். விதை நெல், எரு இவைகளுக்காகும் செலவு, நாற்றங்காலுக்காகும் செலவு ஆகிய இவைகளை இந்தக் கணக்கில் சேர்க்கவில்லை. எல்லாம் சேர்த்துப் பார்த்தால், உழுகிறவன் கணக்குப்பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாதென்னும் பழமொழி சரியென்று தோன்றும்.

## Powdering Bones without Machines.

யந்த்ர ஸகாயமில்லாமல் எலும்பைத் தூள்செய்தல்.—ஸமீபத்தில் வெளிவந்த 'க்ருஷிகனில்' ஒருவர் யந்த்ர ஸகாயமில்லாமல் எலும்பைத் தூள் செய்து எருவாக உபயோகிக்க இரண்டு முறைகள் தெரிவிக்கிறார். அது வருமாறு. முதல் முறை ஒரு அளவு எலும்பை எடுத்து அதில் மூன்றில் ஒருபாகம் கரியோடு சேர்த்து மூத்ரத்திலாவது அல்லது தண்ணீரிலாவது ஊறும்படி செய்து முழுமையும் களி மண்ணால் மூடிவைத்திருந்தால், கோடையில் மூன்று மாதத்திலும், குளிர்காலத்தில் ஆறுமாதத்திலும் எலும்பு கருகிவிடும். இப்படிப்பட்ட கருகின எலும்பு எருவை நெல்வயலுக்கு ஏகர் 1-க்கு ஸுமார் 250 பவுண்டு வீதம் போடவேண்டும்.

இரண்டாவது முறை.—வயல்களில் 4-அங்குலம் ஆழம் களியை பரப்பி அதன்பேரில் 6-அங்குலம் எலும்பைப் பரப்பி அதன்மேல் 3-அங்குலம் சுண்ணாம்புக்கல் அல்லது கிளிஞ்சில்களை பரப்பிவிடவேண்டும். இப்படி அடுக்கு அடுக்காய் அடுக்கி கொஞ்சம் உயரம் உயர்ந்தவுடன் மண்ணால் மூடிவிடவேண்டும், இப்படியே வயல்களில் நன்றாக குப்பல்கள் உண்டாக்கவேண்டும். இந்தக் குப்பல்களில் த்வாரங்கள் உண்டாக்கி அவைகளில் தண்ணீரை ஊற்றினால் சுண்ணாம்புநீறு பூத்து குவியல்களில் சூடு உண்டாகிவிடும். பிறகு இரண்டு மாதம் கழித்துப் பார்த்தால் எலும்புகள் நொறுங்கிப் போயிருக்கும். இப்படி நொறுங்கிப் போயிருக்கும் எலும்புகளை வயல்களில் பரப்பிவிடலாம்.

## The Value of Earthworms.

மண்ணுண்ணிப் பாம்பின் உபயோகம்.—மண்ணுண்ணிப் பாம்பால் நிலத்தின் வளமை வ்ருத்தியாகிறதென்று சொல்லப்படுகிறது. இந்தப் புழுக்கள் செய்யும் வேலைகள் என்னவென்றால் மண்ணின் மேல் பாகத்திலுள்ள செடிகளின் பாகங்களை அழிக்கின்றன. இதனால் செடியின் பாகங்கள் அடையாய்ப் போகாமலிருக்கின்றன. புழுக்கள் மண்ணை உட்கொண்டு ஜீர்ணம் செய்வதால், மண் நயம்டைகிறது. இவை மேல்மண்ணையும் கீழ்மண்ணையும் ஒன்றோடொன்று கலக்கின்றன. செடியுணவுப் பொருள்களை மண்ணோடு சேர்த்து, பாக்டீரியா என்னும் நுண்ணிய க்ருமிகள் மண்ணை சீர்திருத்தம்படி செய்கின்றன. மண்ணுண்ணிப் பாம்பால் சீர்திருந்திய நிலம் மழைத்தட்டால் கெடுதலடையாது. அந்த நிலத்தில் பயிர்கள் ஆழமாய் வேர் விடும். நிலத்திலுள்ள செடியுணவானது செடி ஸுலபத்தில் க்ரகித்துக்கொள்ளக்கூடிய நிலைமையையடையும்.



# CO-OPERATION.

# கோவாபரேஷன்.

## Agricultural Co-operation in Germany.

ஜெர்மனியில் விவஸாய கோவாபரேஷன்.—சென்ற நான்கு வர்ஷங்களில் ஒவ்வொரு வர்ஷ ஆரம்பத்திலும் ஜெர்மெனியில் விவஸாய கோவாபரேஷனுடைய நிலைமை எப்படியிருந்ததென்பது அடியில்வரும் அட்டவணையால் நன்கு விளங்கும்.

| விவரம். | 1912 | 1914 | 1915 | 1916 |
|---|---|---|---|---|
| ஸெண்ட்ரல் ஸங்கங்கள் ... | 98 | 98 | 97 | 97 |
| ஸேவிங்க்ஸ் பாங்கிகளும் கடன் கொடுக்கும் ஸங்கங்களும் ... | 16,627 | 17,374 | 17,718 | 18,781 |
| விற்பனை ஸங்கங்கள் ... | 2,409 | 2,632 | 2,718 | 2,883 |
| பால் தயிர் விவஸாயிகளின் ஸங்கங்கள் ... | 3,488 | 3,537 | 3,586 | 3,588 |
| மற்ற ஸங்கங்கள் ... | 3,654 | 4,035 | 4,306 | 4,353 |
| மொத்தம்... | 26,576 | 27,676 | 28,458 | 28,652 |

ஜெர்மனியில் விவஸாயங்களின் யூனியன் ஒன்று பெரியதாக இருக்கிறது. சென்ற ஜனவரி மாஸம் முதல் தேதியில் 18,810-விவஸாய ஸங்கங்கள் அதே யூனியனில் மெம்பர்களாக இருந்தன. அதாவது மொத்தம் விவஸாய ஸங்கங்களில் 63⅓-பாகம் யூனியனில் சேர்ந்திருந்தன. இவைகளுள் ஸெண்ட்ரல் ஸங்கங்கள் 60-ஆகும். ஸேவிங்க்ஸ் பாங்கி கடன் ஸங்கங்கள் 11,653, பால் தயிர் ஸங்கங்கள் 2,268, மற்ற ஸங்கங்களின் தொகை 2514.

## Collective Purchase.

மொத்தத்தில் வாங்குவது.—ஐரோப்பாவின் வடக்கேயுள்ள நார்வே தேசத்தில் விவஸாயிகளுக்கு வேண்டிய விதைகள், எருக்கள் ஆகிய இவைகளை வாங்கிக் கொடுக்க பல ஸங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அங்கே விவஸாயிகள் தனித்தனியாக வாங்குவதில் விலை யதிகமாவதோடு, சரக்கும் மட்டமாயிருக்கிறதென்று கண்டு, அவைகளை வாங்க கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஸ்தாபித்துக்கொண்டிருக்கிறார்கள். ஸங்கங்கள் சிறியனவாக இருந்தால் அவைகளும் அதிக விலைகொடுத்து மட்டமான சரக்குகளை வாங்க நேரிடுகிறதென்று கண்டு, சிலகாலமாக ஸங்கங்கள் இதற்காக வென்று யூனியன்களாகச் சேர்ந்து கொண்டிருக்கின்றன. இந்த யூனியன்கள் ஸங்கங்களுக்கு வேண்டிய விதைகளையும் எருக்களையும் மொத்தத்தில் விலை குறைவாயும் நல்லதாயும் வாங்கி, வேண்டிய ஸங்கங்களுக்கு விற்கின்றன. இந்த ஸங்கங்கள் வாங்கின சரக்குகளை மெம்பர்களுக்குக் கொடுக்கின்றன. இந்த மாதிரி செய்வதால் ஏற்படும் லாபத்தை ரிஸர்வ் பண்டாக வைத்துக் கொள்ளுகிறார்கள். எந்த ஸங்கமாவது அது வாங்கின சரக்குகளுக்கு காலம் தவறாமல் பணம் செலுத்துகிறதோ அதற்கு, லாபத்தில் ஒரு சிறுபாகம் கொடுக்கப்படும். இந்த மொத்த வ்யாபாரத்தில் ஏதாவது நஷ்டம் நேர்ந்தால், அதை ஸங்கங்களுக்குள் அவைகள் வாங்கின சரக்குகளின் மதிப்பின்பேரில் பாகம் செய்து கொள்வார்கள்.

இப்படிப்பட்ட யூனியன்கள் நார்வேயில் பல இருக்கின்றன. இவைகளில் ஒன்றில் 574-ஸங்கங்களும் 16,588-மெம்பர்களும் இருக்கிறார்கள். இந்த மெம்பர்கள் 8-மாகாணங்களைச் சேர்ந்தவர்கள்.

## State Aid to Building Societies.

கட்டிட ஸங்கங்களுக்கு ஸர்க்கார் உதவி.—சென்ற வர்ஷம் நவம்பர் மாஸத்தில் பம்பாய் கவர்ன்மெண்டார் 1912-ம் வர்ஷத்து கோவாபரேடிவ் ஸொஸைடிஸ் ஆக்டின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்ட கட்டிட ஸங்கங்களுக்கு, கோவாபரேடிவ் ஸங்கங்களின் ரெஜிஸ்ட்ரார் சிபார்சு செய்தால் கவர்ன்மெண்டார் பணம் கடன் கொடுத்து உதவுவதற்கு இந்தியா கவர்ன்மெண்டார் ஸம்மதிக்க வேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டாரைக் கேட்டிருந்தார்கள். இந்தியா கவர்ன்மெண்டார் இவ்விதம் கட்டிட ஸங்கங்களுக்கு உதவி செய்வதில் தங்களுக்கு ஸம்மதமில்லையென்றும், அவைகள் ஸெண்ட்ரல் பாங்கிகளிலிருந்தும், கோவாபரேடிவ் ஸங்கங்களுக்குக் கடன் கொடுப்பதற்கென்று ஏற்பட்டிருக்கும் வேறு ஸ்தாபனங்களிலிருந்தும் கடன் பெறவேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

# COMMERCE.

## வ்யாபாரம்.

### Overtime and Fatigue

குறிப்பிட்ட நேரத்துக்குமேல் வேலைசெய்தலும், களைப்பும்.—தொழில்சாலைகளிலுள்ள வேலையாட்கள் தினந்தோறும் ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கு வந்து ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கு வீட்டுக்குப் போகிறார்கள். அவர்களுக்கு ஒவ்வொரு வாரத்திலும் ஞாயிற்றுக்கிழமை ரஜா உண்டு. ஞாயிற்றுக்கிழமை ரஜா கொடுக்காமல் அவர்களை அன்றையதினம் வேலை செய்யச் சொன்னால், அவர்களுக்கு தேகச்ரமம் ரொம்ப ஏற்படும். வேலைசெய்த பிறகு அன்று இரவு போதுமான அளவு ச்ரமபரிகாரம் செய்துகொள்ள முடியாமல் போய், களைப்பு கொஞ்சம் இருந்துகொண்டே இருக்கும். இப்படி ச்ரமம் இருப்பதால், அவர்கள் மறுநாள் திறமையாய் வேலைசெய்யமுடியாது. அவர்கள் செய்யும் வேலையின் அளவும் குறைவாயிருக்கும்.

சில தொழில் சாலைகளில் வேலையாட்களை தினந்தோறும் ஸாதாரணமாய் எவ்வளவுநேரம் வேலைசெய்ய வேண்டுமோ அதைவிட அதிக காலம் வேலைசெய்யச் சொல்வதுண்டு. இப்படி சேர்ந்தாற்போல் ஒவ்வொரு நாளும் வேலை செய்யச்சொல்வதால் வேலையாட்களுக்கு ச்ரமம் அதிகமாகும். ஒருநாள் விட்டு ஒருநாள் அதிகப்படியாக வேலை செய்யச்சொன்னால் ச்ரமம் அதிகம் ஏற்படாது. வாரத்தின் முதலில் அதிகப்படியாக வேலை செய்வதால் ஏற்படும் ச்ரமத்தைவிட வாரத்தின் கடைசிபாகத்தில் அதிக நேரம் வேலை செய்யச் சொல்லுவதால் வேலையாட்களுக்கு அதிக ச்ரமம் ஏற்படும். குறித்த காலத்துக்குமேல் வேலை செய்யச் சொல்லுவது வேலையாட்களின் தேகஸௌக்யத்துக்குக் கெடுதலாகும். மேலும் வேலை குறைவாகச் செய்யப்படுமாதலால், தொழில் சாலைக்கு வீண் பண நஷ்டமும் ஏற்படக்கூடும்.

### Fortunes from Advertising.

விளம்பரம் செய்வதால் பெருத்தலாபம் கிடைப்பது.—ப்ரிட்டிஷ் வ்யாபாரிகள் விளம்பரம் செய்வதில் ஏராளமாய்ப் பணம் செலவழிக்கிறார்கள். அப்படி அதிகப் பணம் செலவு செய்தும் அதிக லாபமேயடைந்து வருகிறார்கள். அவர்களில் சிலருக்கு லக்ஷம், 10 லக்ஷக் கணக்காய் லாபம் கிடைத்துவருகிறது. பீயர்ஸ் ஸோப் செய்துவிற்ற மிஸ்டர் டி. ஜே. பாரட் என்பவர் 60 லக்ஷம் ரூபாய் லாபம் அடைந்தார். இநோஸ் ப்ரூட் ஸால்ட் என்னும் மருந்து செய்த ஜேம்ஸ் க்ராஸ்லி இநோ என்பவர் 2½ கோடி ரூபாய் ஸம்பாதித்தார். டாக்டர் வில்லியம்ஸ் பிங்க் பில்ஸ் என்னும் மருந்து செய்து விற்றவர் 2 கோடி ரூபாய் ஸம்பாதித்தார். க்ஷய ரோக நிவாரண மருந்து ஒன்று விற்ற மிஸ்டர் ஜார்ஜ் ஹாண்டிஸைட் என்பவர் 22 லக்ஷம் ரூபாய் ஸம்பாதித்தார். நக்கட் பூட்பாலிஷ் என்னும் ஜோடுகளுக்கு பாலிஷ் தயார்செய்து விற்ற மிஸ்டர் ஹென்றி சார்ல்ஸ் லேன் என்பவர் 16 லக்ஷம் ரூபாய் ஸம்பாதித்தார். இன்னும் எத்தனையோ பேர்கள் லக்ஷக்கணக்காகவும் கோடிக் கணக்காகவும் ஸம்பாதித்து வருகிறார்கள். இவர்கள் விளம்பரத்துக்கு பணம் செலவழிக்கப் பின் வாங்குவதில்லை.

### An Industrial Syndicate.

ஒரு கைத்தொழில் ஸபை.—ஸமீபத்தில் லக்நோ ஜான்ஸியில் நடந்த கைத்தொழில் கான்பரென்ஸில் ராய்பகதூர் லாலா பிஷம்பர் நாத் என்பவர் கைத்தொழிலை அபிவ்ருத்தி செய்ய கைத்தொழில்களில் பணம் போட இஷ்டமுள்ளவர்கள் சேர்ந்ததாய் ஒரு ஸபை ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார். அதன் மூலதனம் 10 லக்ஷ ரூபாயாக இருக்கவேண்டும். முதலில் ஒருலக்ஷம் ரூபாய் வஸூலித்தால் போதும். இந்த ஸபையார் கைத்தொழில் டிரெக்டருடன் சேர்ந்து வேலை செய்யவேண்டும். யாராவது ஒருவர் ஒரு தொழில் ஸ்தாபிக்க இஷ்டப்பட்டு, அந்தத் தொழிலுக்காக ஸ்கீம் தயார்செய்து கைத்தொழில் டிரெக்டருக்குத் தெரிவித்தால், அதை டிரெக்டர் பரிசோதனை பண்ணி, அந்தத் தொழிலில் பணம் போடலாமா போடக்கூடாதா என்பதை ஸபையாருக்குத் தெரிவிக்க வேண்டும். தொழிலில் பணம் போடலாமென்றால், அந்த ஸபையார் தொழில் ஏற்படுத்த விரும்புகிறவர் எவ்வளவு தொகை போடுகிறாரோ, அவ்வளவு தொகை வரையில் அவருக்குக் கடன் கொடுக்கலாம். இதனால் தொழிலேற்படுத்த விரும்புகிறவருக்கு பணக்கஷ்டம் குறையுமென்று லாலாபிஷம்பர்நாத் அபிப்ராயப்படுகிறார்.



# ECONOMIC PRODUCTS

## விலையுள்ள பொருள்கள்.

### The Plantain

வாழை.—வாழைப்பழமும் காயும் தேகத்தை போஷிக்கக்கூடிய சிறந்த உணவுகளாகும். மாம்ஸத்திலுள்ள உணவு ஸத்துக்களைவிட வாழையில் அதிக உணவு ஸத்துக்கள் உண்டு. இதில் த்ராவகங்களும், உப்புகளும், ஜலமும் இருப்பதோடு, ஆல்புமன் என்னும் சதையை வளரச்செய்யும் ஸத்து 100-க்கு 4⅛ பாகமும், கொழுப்புப் பொருள் 6-பாகமும், சர்க்கரை 7 பாகமும் இருக்கின்றன. சுட்ட வாழைக்காய் சீக்ரம் ஜீர்ணமாகக்கூடியது. வாழைக்காயை நறுக்கி வெயிலில் காயவைத்து, மாவாக்கி, ரொட்டிசெய்து, வாயுவில் பொருமலும், குடலில் புளிப்பும் உள்ள அஜீர்ணரோகிகளுக்கு உபயோகிப்பதுண்டு. நாள்பட்ட அதிஸாரத்திலும், ரத்தபேதியிலும் வாழைப்பழம் ரொம்ப நல்லதென்று சொல்லப்படுகிறது. வாழைப்பழம் 1-ஔன்ஸ், கொட்டைநீக்கிய புளி ½-ஔன்ஸ், உப்பு ¼-ஔன்ஸ் இவைகளை நன்றாய்க்கலந்து கலந்தவுடன் உள்ளுக்குக் கொடுக்கவேண்டும். தினம் இரண்டு மூன்று தடவை கொடுக்கவேண்டும். நாலைந்து தடவை சாப்பிட்டாலே வ்யாதி குணமாகிவிடுமாம். இந்த மருந்து சாப்பிட அருவருப்பாயிருப்பதில்லை. யாதொரு கெடுதியும் செய்வதில்லை. குழந்தைகளுக்குக்கூட பயமில்லாமல் கொடுக்கலாம். குழந்தைகளுக்கு மருந்தின் அளவைக் குறைக்கவேண்டும். வங்காளத்து ஜனங்கள், வயிற்றுக்கடுப்பு ஆரம்பித்தவுடன் வாழைப்பழத்தை பழைய புளியுடன் நன்றாய்ச் சேர்த்து மருந்தாகக் கொடுப்பது வழக்கம். பழைய தேன்பாகையாவது கற்கண்டையாவது கலந்து உள்ளுக்குக்கொடுப்பது வழக்கம்.

வாழைக்காயை நன்றாய் வேகவைத்து தயிர்கலந்து மத்தித்து, உப்பு அல்லது சர்க்கரைகலந்து உபயோகித்தாலும் வயிற்றுக்கடுப்பும், அதிஸாரமும் நீங்கும். வடவங்காளத்தில் சில இடங்களில் ஜனங்கள் வாழையின் இலைகளையும் பட்டைகளையும் எரித்துச் சாம்பலெடுத்து அதை ஜலத்தில் கரைத்து வடிகட்டி அந்த ஜலத்தை காய்கறிகளுக்கு உப்புக்கு பதிலாக உபயோகிப்பதுண்டாம். குடல் புளிப்புக்கும், சொரிகரப்பானுக்கும், இந்த சாம்பல் ஜலம் வற்றி பக்வம் செய்த க்ஷாரம் நல்லதென்று சொல்லப்படுகிறது.

### Paper Pulp from Cotton Stalk.

பருத்தித் தாள்களிலிருந்து கடுதாசிக்கூழ்.—பருத்தித் தாள்களிலிருந்து கடுதாசி செய்யலாமென்று அமெரிக்காவில் பலர் சொல்லி வருகிறார்களென்று மார்கழி மாஸத்து 'ஜனோபிமானி'யில் தெரிவித்தோம். வடக்கே மத்யமாகாணங்களில் எல்லிச்பூரில் உள்ள ஜி. என். ஸகஸ்ரபுத்தே என்பவர் பருத்தித் தாள்களிலிருந்து கடுதாசி செய்வது கூடுமா என்பதை அறியும்பொருட்டு, ஒரு கட்டுத்தாள்களை அந்த மாகாணங்களின் விவஸாய டிரெக்டருக்கு அனுப்பி, அவ்விஷயத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்யும்படி கேட்டுக்கொண்டார். அந்த மாகாணங்களின் விவஸாய டிபார்ட்மெண்டைச் சேர்ந்த விவஸாய ரஸாயனி அதைப்பற்றி ஆராய்ச்சிசெய்ததில் பச்சையான பருத்தித் தாள்களிலிருந்து கடுதாசி செய்வதற்கு உதவக்கூடிய கூழ் செய்யலாமென்று தெரிவித்திருப்பதோடு, மாதிரிக்கு கடுதாசியும் செய்து அனுப்பியிருக்கிறார். பச்சைப் பருத்தித் தாள்களில் நூற்றுக்கு 42·4 பாகம் நாரும், 10·3 பாகம் ஜலமும், 4·8 பாகம் தாதுப்பொருள்களும் இருக்கின்றனவாம். நார்ப்பொருள் நல்லதாயிருப்பதோடு வெண்மையாயுமிருக்கிறதாம்.

### Ghee.

நெய்.—இந்தியாவிலுள்ள ஜனங்களில் நாலில் ஒரு பாகம் பேர்கள் நெய் உபயோகிக்கிறார்கள். மொத்தமாய் இந்தியாவில் செலவாகும் நெய் 2,61,000 டன் என்று சொல்லலாம். தற்போது பாலும் நெய்யும் ரொம்ப க்ராக்கியாகவிற்பதால், அநேக ஜனங்கள் நெய் உபயோகிக்க முடியாமல் நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய் முதலியவைகளை ஆகாராதிகளில் உபயோகிக்கிறார்கள். லங்கையில் தேங்காயெண்ணெய் சாப்பாட்டில் ரொம்பவும் உபயோகப்படுகிறது. தற்போது பருத்திக்கொட்டை எண்ணெய் உபயோகத்துக்கு வந்துகொண்டிருக்கிறது. அதன்குணங்கள் எப்படியிருந்தாலும், ரொம்ப மட்டமான நெய்யைவிட அது மலிவாயிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

# BOYS' PAGE.

## பையன்கள் பக்கம்.

### Names of the Days of the Week.

நாட்களின் பெயர்.—ஒவ்வொரு வாரத்துக்கும் 7-நாள்கள் உண்டென்றும் ஒரு நாளுக்கு 24-மணி உண்டென்றும் யாவரும் அறிவர். மணிக்கு ஹோரை என்று ஒரு பெயர் உண்டு. ஒவ்வொரு ஹோரைக்கும் ஒவ்வொரு க்ரஹம் அதிபதியாக இருக்கிறது. க்ரஹங்கள் ஹோரைகளின் மீது பின்வரும் முறைப்படி ஆட்சி செலுத்தும். 1. ஸூர்யன், 2. சுக்ரன், 3. புதன், 4. சந்த்ரன், 5. சனி, 6. குரு, 7. அங்காரகன். அதாவது ஸூர்யனுக்குப் பிறகு சுக்ரனும் சுக்ரனுக்குப் பிறகு புதனும் இவ்விதமே மற்ற க்ரஹங்களும் மேற்சொன்ன வரிசைப்படி ஆட்சி செலுத்தும். வாரத்தின் முதல்தினம் ஞாயிற்றுக்கிழமை. அந்த தினத்திற்குள்ள இருபத்துநான்கு ஹோரைகளுக்கும் மேற்சொல்லிய க்ரஹங்கள் முறைப்படியே ஒவ்வொரு ஹோரைக்கு ஒருவராக யஜமானராகிறார்கள். அன்றையதினத்தின் கடைசி ஹோரையாகிய 24-வது ஹோரைக்கு புதன் யஜமானனாகிறான். அதற்கு அடுத்த ஹோரையாகிய மறுநாள் முதல் ஹோரைக்கு சந்த்ரன் யஜமானனாகிறான். அதனால்தான் வாரத்தின் இரண்டாவது நாள் சந்திரன் பெயரை வைத்து திங்கட்கிழமையெனப்பட்டது. திங்கள்-சந்த்ரன். இவ்வாறே மற்றைய க்ரஹங்களும் ஸூர்யோதய காலத்தில் ஆட்சிபெற்றிருக்கும் க்ரகத்தின் பெயரை ஏற்கலாயின—என்று ஒரு நிருபர் 'நல்லாசிரிய'னில் எழுதுகிறார்.

### The Distance of the Horizon.

அடிவானத்தின் தூரம்.—ஒருவர் இருக்கும் இடத்திலிருந்து அடிவானம் எவ்வளவு தூரத்திலிருக்கிறதென்பதைக் கண்டுபிடிக்க ஒரு ஸுலபமான வழியிருக்கிறது. ஸமுத்ரக்கரையிலிருந்தால் பூமியிலிருந்து பார்ப்பவருடைய கண் எவ்வளவு உயரமிருக்கிறதென்று கணக்கிடவேண்டும். வேறு இடங்களிலிருந்தால் அவ்விடம் ஸமுத்ரமட்டத்திலிருந்து எவ்வளவு உயரமிருக்கிறதென்று கணக்கிட்டு, அதோடு, அவ்விடத்திலிருந்து கண்ணுக்கு உள்ள உயரத்தையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். இவைகளை மைலாக்கிக்கொண்டு வரும் தொகையை 8000-த்தால் பெருக்கி, பெருக்குத் தொகைக்கு வர்க்கமூலம் கண்டுபிடிக்கவும். வரும் தொகை அடிவானத்தைப் பார்ப்பவர் இருக்குமிடத்துக்கும் அடிவானம் இருப்பதாய்த் தோன்றுமிடத்துக்கும் உள்ள தூரமாகும். உதாரணம். நிற்பவருடைய கண் ஸமுத்ர மட்டத்துக்குமேல் 10-அடி உயரத்திலிருக்கிறது. அடிவானம் எவ்வளவு தூரம்? 10-அடி $=\frac{1}{528}$ மைல்; $8000 \times \frac{1}{528} = 15{\cdot}15$ மைல். இதன் வர்க்க மூலம் கிட்டத்தட்ட 4-மைல் ஆகும். ஆகவே அடிவானம் கிட்டத்தட்ட 4 மைல் தூரத்திலிருப்பதாக ஏற்படுகிறது.

### The Mikado.

ஜப்பான் சக்ரவர்த்தீ.—ஜப்பான் சக்ரவர்த்திக்கு மல் யுத்தம் நன்றாய்த் தெரியுமாம். பால்யத்தில் அவர் நாட்டிலுள்ள பல அந்தஸ்திலுமுள்ள வாலிபர்களோடு மல்யுத்தம் செய்து தமது திறமையை வ்ருத்தி செய்து வந்தாராம். பால்யத்தில் அவர் தமது தகப்பனருடன் ஒரு ஸமயம் மல்யுத்த வேடிக்கை பார்க்கப் போய் தாமும் அதில் கலந்துகொண்டு, மற்றவாலிபர்களுடன் மல்யுத்தம் செய்தார். அவர் தம்மை எதிர்த்த வந்த எல்லாரையும் தோற்கடித்துவிட்டார். உடனே ஒரு குடியானவனுடைய மகன் மல்களத்தில் ப்ரவேசித்து இளவரசரைப் போருக்குக் கூப்பிட்டான். இளவரசர் நன்றாய்த் தோற்கடிக்கப்பட்டார். குடியானப்பையனே, இளவரசரைத் தோற்கடித்ததால், அவர் கோபங்கொண்டு, பின்னால் ராஜாவான பிறகு தன்னைக் கஷ்டப்படுத்தக் கூடுமேயென்று மனங் கலங்கியிருந்தான். இளவரசரின் தந்தை அந்தப் பையனை அழைப்பித்து, தம்பீ, இனிமேல் நீ என் மகனுடைய தோழர்களில் ஒருவராயிரு. அவனுடன் கூடப் பள்ளிக்கூடத்தில் தங்கியிருந்து வாசித்து வா. ஏனென்றால், அவன் பட்டத்துக்கு வந்தால், உன்னைப் போன்றவர்களுடைய உதவி அவனுக்கு ரொம்பவும் வேண்டியிருக்கும்." என்றார். அதுமுதல் இளவரசரும் குடியானப் பையனும் ரொம்ப 'நேசமாயிருக்கத் தொடங்கினார்களாம்.

### Mattress Raft.

மெத்தையால் செய்யப்பட்ட தெப்பம்.—அமெரிக்காவில் ஒரு புதுவகையான தெப்பம் உபயோகத்திலிருந்து வருகிறது. அது காற்றடைத்த மெத்தையாகும். அதை ஸமுத்ரத்தில் போட்டு, அதில் ஜனங்கள் உட்கார்ந்துகொள்ள, அது ஜலத்தில் மூழ்காமல் அலைகளால் தள்ளப்படுகிறது. ஜலத்தில் அலைகளால் ஏற்படும் மேடுபள்ளங்களில் அது ஏறி இறங்குவது வேடிக்கையாயிருக்கிறதாம். இது கடற்கரையோரமுள்ள ஜலத்தில் போவதற்கு மாத்ரம் உபயோகப்படும். இதில் இரண்டு மூன்று பேர்கள் ஏறிக்கொள்ளலாம்.



# LADIES' PAGE.

## ஸ்த்ரீகள் பக்கம்.

### Music for Girls.

பெண்களுக்கு ஸங்கீதம்.—பெண்களுக்கு ஸங்கீதம் கற்றுக்கொடுத்திருந்தால், வரதக்ஷிணை அதிகமாய்க் கொடுக்கவேண்டியிராதென்றும், தக்கவரன் கிடைக்குமென்றும் சிலர் எண்ணி தங்கள் பெண்களுக்கு ஸங்கீதம் கற்றுக்கொடுக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். சில பெண்களுக்கு சிக்ஷாக்ரமம் சரியாயிராமல் போவதால், அவர்கள் ஹார்மோனியம் இல்லாமல் பாட்டுப் பாட முடியாதவர்களாகவும், ஆயிரம் பாட்டுக்கு அடி மட்டும் தெரிந்தவர்களாகவும், பாட்டுப்பாடென்றால் பாட்டு நோட்டு வீட்டிலிருக்கிறதென்று சொல்லுகிறவர்களாகவும் ஆகிவிடுகிறார்கள். ஹார்மோனியம் ஸங்கீத அப்யாஸத்துக்கு ஏற்ற உபகரணமல்லவென்று பலர் அபிப்ராயப்பட்டாலும், பாலர்களுக்கு அதைக் கொண்டு கற்றுக்கொடுப்பதில் பாதகமில்லையென்று ஒரு நிருபர் 'சுதேசமித்ர'னில் எழுதுகிறார். ஆனால் சிலர் ஹார்மோனியத்தோடு சேர்ந்துபாடி அப்யஸித்தால் சரியான ஞானமுண்டாகாமல் ஹார்மோனியமின்றிப் பாட அசக்தர்களாகிவிடுகிறார்கள் என்று சிலர் சொல்லுகிறார்கள். அதனால் ப்ரதம சிக்ஷைமட்டுமே ஹார்மோனியத்தில் ச்ருதியை வைத்துக்கொண்டாவது, உபாத்யாயர் வாசித்துக்கொண்டாவது கற்பிக்கலாம். ஸரளி அலங்கார கீதங்கள் குழந்தைகளுக்கு பாடமான பிற்பாடு பிடில், அல்லது வீணையை பாலர்கள் உபயோகப்படுத்தக் கற்பிக்கவேண்டும் என்பது அந்த நிருபரின் அபிப்ராயம். அவர் பெண்களுக்கு ஸங்கீதம் கற்றுக்கொடுப்பதைப்பற்றி சில குறிப்புகள் எழுதியிருக்கிறார்.

நம் வீட்டுப் பெண்களுக்கு 6-வது வயது முதற்கொண்டே ஸங்கீதம் அப்யஸிப்பதற்குத் தக்க காலமாகும். 6-வயது முதல் 9-ம் பிராயம் வரையில் பால சிக்ஷையென்றே கூறலாம்.

ப்ரதமத்தில் குழந்தைகளுக்கு, ஸரளி வரிசை அப்யாஸங்களில் கொஞ்சமேனும் ப்ரியமிராது. உபாத்யாயர் எவ்வளவு ச்ரமப்பட்டபோதிலும் பயன்படாது. முதன் முதலில் ஸரளி வரிசைகளைக் கற்பிக்காமல், ஸ்வரசேர்க்கைகளாலுண்டாகும் இனிய வர்ணமெட்டமைந்த சிறுபாட்டுகளைக் கற்பிக்கவேண்டும். உதாரணம் ஸ்ரீ புரந்தர விட்டலதாஸால் செய்யப்பட்ட சிறு கீதங்கள், ஜாஸ்தி ஸங்கதிகளில்லாத [illegible] வான், சாமாசாஸ்த்ரிகள், பட்டணம் ஸுப்ரமண்யய்யர் கீர்த்தனங்கள் முதலியவற்றுடன் இடையிடையே ஸரளி அப்யாஸங்களும் செய்துகொண்டு வரவேண்டியது. "ஸரளி வரிசைகளை பாலர்களுக்கு மாயாமாளவகௌளராகத்தில் சொல்லிக்கொடுப்பதா, சங்கராபரண ராகத்தில் சொல்லிக்கொடுப்பதா என்பதைப்பற்றி அநேகர் முந்தியே விவகரித்திருக்கிறார்கள். என்னுடைய அபிப்ராயத்தில் மாயமாளவ கௌளவுராகமே தகுந்த ராகமாகும்."

தினந்தோறும் அரைமணி நேரத்துக்குமேல் ஸங்கீதம் கற்றுக்கொடுக்கக்கூடாது. ஒரே குருவின் மூலமாய் ஸங்கீதம் கற்றுக்கொள்ள வேண்டுமே ஒழிய அடிக்கடி உபாத்யாயரை மாற்றக்கூடாது.

### Fenugreek Curry.

வெந்தயக் கறி.—வெந்தயத்தைக் கறிசெய்து உபயோகித்தால் தேகத்தின் அழலை மாற்றும். அதைக் கறிசெய்ய குறைந்தது நாலைந்து மணிநேரம் ஜலத்தில் ஊறப்போடவேண்டும். முதல் நாள் இரவு ஊறப் போட்டு மறுநாள் கறிசெய்ய உபயோகிப்பது நல்லது.

ஊறவைத்த ஜலத்தை இறுத்துவிட்டு, மறுபடி புது ஜலம் அளவாய் விட்டு அடுப்பில் வைத்து வேகவிடவேண்டும். நன்றாக வெந்த பிறகு, வேகவிட்ட ஜலத்தை ஒட்ட இறுத்துவிட்டு தனியாய் எடுத்துவைத்துக் கொள்ளவேண்டும். வெந்தயத்துக்கு சரியளவாகவோ அதற்குக் கொஞ்சம் மேலாகவோ துவரம்பருப்பையும் நன்றாக வேகவைத்து எடுத்து தனியாக வைத்துக் கொள்ளவேண்டும். நல்ல தேங்காய் ஒன்றைத் துருவி எடுத்துக்கொள்ளவேண்டும். பிறகு அடுப்பில் பாணலியை வைத்து தக்க அளவு நெய்விட்டுக் காய்ந்தபிறகு அதில் பெருங்காயத்தை போட்டு பொரித்தபின், மிளகாய் வற்றல், தோல் நீக்கிய உளுத்தம்பருப்பு முதலியவற்றையும் பொன்நிறமாக வறுத்துக்கொண்டு, மிகவும் ஸன்னமாய் பொடிசெய்த உப்பை வேகவைத்தெடுத்து வைத்த வெந்தயத்துடன் கலந்து, அதையும், தேங்காய்த்துருவல், பருப்பு முதலியவைகளையும் வாணலியில் கொட்டி கலந்துகொடுத்து; சிறிதுநேரம் கழித்து கறியை வேறு பாத்ரத்தில் எடுத்து வைத்துக்கொள்ளவும். வாணலியில் இப்பதார்த்தம் வேகும்போது சிறிது சர்க்கரையையும் சேர்க்க, பதார்த்தம் பின்னும் சிறிது இனிமையாயிருக்கும்.

## FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

**The French Soldier.**

**ப்ரெஞ்ச் போர்வீரன்.**—ப்ரெஞ்ச் போர்வீரர்கள் யுத்த விஷயமாய் ஒருவித ஸ்தோத்ரபாடம் தயார்செய்திருக்கிறார்கள்.

1. இந்த யுத்த விஷயமாய் இரண்டில் ஒன்று நிச்சயம். ஒன்று, உன்னை ஸர்க்கார் போருக்கு எடுத்திருக்கவேண்டும். அல்லது உன்னை விட்டுவிட்டிருக்கவேண்டும்.

2. உன்னைப் போருக் கழைக்காவிட்டால், நீ கவலைப்படவேண்டியதில்லை. உன்னைப் போருக்குக் கூப்பிட்டிருந்தாலோ, இரண்டு விஷயங்களில் ஏதாவது ஒன்று நடப்பது நிச்சயம். ஒன்று போர்முனைக்குப் பின்னால் இருப்பாய் அல்லது போர்க்களத்திலேயே இருப்பாய்.

3. போர்க்களத்துக்குப் பின்னால் இருந்தால், அதைப்பற்றி நீ விசாரப்படவேண்டியதில்லை. போர்க்களத்திலேயே இருந்தால் இரண்டில் ஒன்று நிச்சயம். ஒன்று நீ ஆபத்தில்லாத இடத்தில் இருப்பாய் அல்லது ஆபத்துக்கிடமான இடத்தில் நீ இருக்கவேண்டும்.

4. பத்ரமான இடத்தில் இருந்தால், அதைப்பற்றி நீ விசாரப்படவேண்டியதில்லை. ஆபத்துக்கிடமான இடத்தில் இருந்தால், இரண்டிலே ஒன்று நிச்சயம். அதாவது காயப்பட்டு வீழ்ந்திருப்பாய் அல்லது உனக்குக் காயம் ஏற்பட்டிராது.

5. காயம் ஏற்படவில்லையென்றால், அதைப்பற்றி நீ வருத்தப்படவேண்டியதில்லை. காயம் பட்டிருந்தால் ஒன்று பலமான காயம் ஏற்பட்டிருக்கவேண்டும். அல்லது காயம் ஸ்வல்பமாயிருக்கும்.

6. ஸ்வல்பமான காயமாயிருந்தால் அதைப்பற்றி நீ விசாரப்படவேண்டியதில்லை. காயம் பலமாயிருந்தால் ஒன்று நீ பிழைத்துக்கொள்வாய் அல்லது நீ இறப்பாய். பிழைத்துக்கொண்டால் நீ விசாரப்படவேண்டியதில்லை. நீ இறந்துவிட்டாலோ, விசாரப்பட உன்னாலாகாது.

**The Jutkawalla.**

ஜட்கா வண்டிக்காரன்—"மறந்து செத்தான் வாழைக்குலைவருமா?" என்பதுபோல ஐயர்லாண்டில் ஒரு விநோதம் நடந்தது. ஒரு ராணுவ உத்யோகஸ்தர் ஒரு குதிரை வண்டிக்காரனை ஸ்டேஷனுக்கு விடும்படி கேட்டார். அதற்கு அவன் 'என் குதிரை ஓடுகிறதேயில்லை. ஓடினாலோ நிற்பதேயில்லை' என்றான். ராணுவ உத்யோகஸ்தர் அது யுத்தத்தில் பழகின கிழட்டுக் குதிரையென்று நினைத்து யுத்தபரிபாஷையில் 'சார்ஜ்' என்று கூவவே அது வேகமாக ஓடிற்று. குறித்த இடம் நெருங்கியதும் 'ஹால்ட்' (நில்) என்று கூவினார். குதிரையும் நின்றுவிட்டது. வண்டிக்காரன் தனக்கு வாடகை வேண்டாமென்றும் அந்த வார்த்தைகளைக் கற்றுக்கொடுத்தால் போதுமென்றும்கூற, அவ்விதமே கற்பித்துவிட்டு ராணுவ உத்யோகஸ்தர் சென்றார். மறுநிமிஷம் இரண்டு துரைசானிகள் அவ்வண்டியில் ஏறினார்கள். குதிரைக்காரன் 'சார்ஜ்' என்று கூவவே குதிரையும் ஓடிற்று. வண்டிக்காரன் அதிக ஸந்தோஷமடைந்துவிட்டான். அந்த ஸந்தோஷத்திலே குதிரையை நிறுத்துவதற்குச் சொல்லவேண்டிய வார்த்தையை மறந்துவிட்டான். வண்டி குறிப்பிட்ட ஸ்டேஷனுக்கருகே வந்ததும், உள்ளிருந்த துரைசானிகளைப்பார்த்து 'லேடிகளே! நீங்கள் குதித்துப் போகவேண்டியதுதான். என்னிடமுள்ள குதிரை நிற்பதற்குச் சொல்லவேண்டிய வார்த்தையை நான் மறந்துவிட்டேன் என்றானாம். 'துணைவிடாயமணி.'

**Accustomed to it.**

பழகிப்போய் விட்டது.—ஒரு ப்ராயமான இரண்டு பெண்பிள்ளைகளும் ஒரே வண்டியில் ப்ரயாணம் செய்ய நேரிட்டது. பெண்பிள்ளைகளிருவரும் ஒருவரோடொருவர் வாதாடி இரைச்சல் போட்டுக்கொண்டிருந்தார்கள். கடைசியில் ஒருத்தி ப்ராயமானவரைப் பார்த்து "நாங்கள் பேசுவதால் உங்களுக்குத் தலைவலி எடுக்கவில்லையா?" என்று வினவினாள். அதற்கவர் "கொஞ்சமேனு மில்லை. நானும் கலியாணம் செய்துகொண்டேன். 25 வருஷகாலமாய் மனைவியும் வீட்டிலிருக்கிறாள்." என்றார்.

**"By order"**

உத்தரவுப்படி முடிந்தது.—சென்ற வர்ஷம் கோயம்புத்தூரில் கவர்ன்மெண்டார் சில கிணறுகள் வெட்ட ஸங்கல்பம் செய்தார்கள். உத்தரவுக் கடிதத்தில் இன்ன ஆழம் வெட்டினால் ஜலம் கிடைக்குமென்று எண்ணி ஒரு குறிப்பிட்ட ஆழம் வெட்டவேண்டும் என்று தெரிவித்திருந்தார்கள். ஓவர்ஸியர்கள் உத்தரவுப்படி குறிப்பிட்ட ஆழம் வெட்டினார்கள், ஜலம் வரவில்லை. அதற்குமேல் வெட்டாமல் கிணறுகளுக்கு கோத்ரமான கைப்பிடிச் சுவர்களும், ராட்டினங்களும் போட்டுவிட்டு, ஏற்பாடு செய்துவிட்டார்கள். ஜலம் வராவிட்டால் கிணறு என்ன ப்ரயோஜனம்?



## CURIOSITIES.

## விநோதங்கள்.

**The Inexhaustible Bread.**

**எடுக்கக் குறையாத அப்பம்.**—சென்ற மாஸத்து ஸஞ்சிகையில் இந்த அப்பத்தைப்பற்றி சில விவரங்கள் கொடுத்தோம். இந்த அப்பத்தில் உண்டான நீரை சாப்பிட்டு மதுரையில் ரோகப் புண்களால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தவர்களில் சிலர் குணமடைந்தாரென்றும் எட்டயபுரம் ஜமீன் சிரஸ்ததார் ஸ்ரீநிவாஸய்யங்கார் அப்பத்தில் ஒன்றை வாங்கிவந்து முறைப்படி சட்டியில்வைத்திருந்து, அதிலிருந்த நீரையெடுத்து சாப்பிட்டதில், அவருக்கு நெடுநாளாக இருந்த வாய்ப்புண் மறைந்ததென்றும், எட்டயபுரம் குடியம்மாள் என்பவள் 5 வாரம் சாப்பிட்டதில் அவ்வம்மாள் உடலெங்குமிருந்த வெண்குஷ்டம் இப்பொழுது சிறிது இடங்களில் சிவந்தும் சில இடங்களில் கறுத்துமிருக்கிறதென்றும், ஆனால் தேகத்திலிருந்த எரிச்சல் பலவீனம் முதலியவை குணப்பட்டு ஸுகமாயிருக்கிறாளென்றும், ஸ்ரீ நூர் சிவஞானயோகி தங்களாற் சேர்விப்பட்டு குடியம்மாளை நேரிற்பார்த்து யுண்மையென்றறிந்ததாக 'சுதேசமித்திர'னில் எழுதியிருக்கிறார். இன்னும் அவர் தெரிவிப்பதாவது.—"அப்பம் ஜலத்தில் புளித்த அல்வாபோ லிருக்கிறது. மென்றவுடன் கரையாமல் முறுகின சர்க்கரைப் பாகுபோல் வெகுநேரம்வரையில் இருக்கிறது. வயிற்றிலுள்ள ஆகாரத்தைச் சரிக்கச்செய்து அடிக்கடி அப்பம் உண்டாகிற்று. அப்ப நீர் குடித்தவர்களுக்கும் உடனே அப்பமுண்டாகிறது. புளிக்கிறது. தகஷிணமூர்த்திஐயர் என்பவர் 3 வாரமாய்ச் சாப்பிட்டு வருவதாயும் தனக்கு ஜீரணசக்தி அதிகப்பட்டிருப்பதோடு தேகத்தில் பலமுண்டாகி வருவதாயும் சொன்னார்." கேட்பவருக்கு இந்த அப்பத்தை அனுப்பத் தயாராயிருப்பதாக மிஸ்டர் சிவஞானயோகி தெரிவிக்கிறார். அவரது விலாஸம், விருதுபட்டி, திருநெல்வேலி ஜில்லா.

**The Kaiser and a Blacksmith.**

**கெய்ஸரும் கொல்லனும்.**—கெய்ஸர் பிறந்த நாளிலேயே அதே நேரத்திலேயே பிறந்த ஒரு கொல்லன் ஜெர்மனியில் பிரன்ஸ்லா என்னும் ஊரில் இருக்கிறானாம். இந்தக் கொல்லனும் ஜெர்மன் சக்கரவர்த்தினியின் பெயரைக்கொண்ட ஒரு ஸ்த்ரீயைக் கெய்ஸர் விவாக தினத்தன்றே மணஞ்செய்துகொண்டானாம். இந்தக் கொல்லனுக்கும் ஒவ்வொருவராக ஆறு பிள்ளைகளும் கெய்ஸருக்குக் குழந்தைகள் பிறந்த ஸமயத்திலேயே பிறந்தனவாம் கடைசியாகக் கெய்ஸருக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தபொழுது இவனுக்கும் ஒரு பெண் குழந்தை பிறந்ததாம்.

**Curious Stones.**

**விநோதக் கற்கள்.**—பாலக்காடு தாலுகாவைச் சேர்ந்த மான்ஹளூர் அம்சத்தில் ஓர்வித கற்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது. அதைப் பரிசோதித்துப் பார்த்ததில் பண்டைக்காலத்திய சில சவக்குழிகளில் கிடைக்கும் ஓர்வகை மணிகளைப்போலக் காணப்படுகின்றன. அதின் குணங்களில் ஒன்று என்னவென்றால், அக்கல்லை ஒரு துணியால் மூடி நெருப்பில் போட்டால் அத்துணியில் தீப்பிடிக்காது. அக்கற்களின் மாதிரிகள் சென்னை கவர்ன்மெண்டு பொருட்காட்சி சாலைக்கு அனுப்பிக்கப்பட்டிருக்கின்றன.—வைசியமித்திரன்.

**Writing with the Foot.**

காலாலெழுதுகிறவன்—ஏரநாடு தாலுக்கா எட்டாவண்ணையில், ஒரு தனவந்தர் குடும்பத்தில் பிறந்த 7-வயதுள்ள மாப்பிள்ளை ஜாதிச் சிறுவனுடைய கைகளிரண்டும் பிறப்பிலிருந்தே இயங்கும் சக்தியற்றுப்போயின. ஆனால் அவன் தன்னுடைய கால்களால் எழுத அப்யாஸஞ் செய்துவந்தான். இப்போதவன் மாப்பிளாக் கலாசாலையில் வாசித்து வருகிறானாம்.

**Horsemobile.**

**குதிரையுள்ள மோட்டார் வண்டி.**—அமெரிக்காவில் ஒருவர் ஒரு புதுவகையான மோட்டார் வண்டி செய்திருக்கிறார். அந்த வண்டியில் மரத்தால் செய்யப்பட்ட பெரிய குதிரையொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. வண்டியில் போகும்போது அவர் குதிரையில் ஏறி உட்கார்ந்துகொண்டு, குதிரையின் முன்பில் உள்ள ஒரு சக்கரத்தால் மோட்டார் வண்டியை வேண்டிய பக்கம் திருப்புவார்.

**Giant Vegetables**

**ப்ரும்மாண்டமான கறிகாய்கள்.**—ஸமீபத்தில் இங்லண்டில் வெஸ்ட்மின்ஸ்டரில் தோட்டப் பொருட்காட்சி நடந்தபோது 20½-அங்குலம் சுற்றளவுள்ள ஒரு வெங்காயம் காட்சியில் வைக்கப்பட்டிருந்ததாம். நிலத்தில் வளர்ந்துகொண்டிருந்த ஒரு சிறு ஆப்பிள்மரத்தைப் பிடுங்கி ஒரு புஷ்பத் தொட்டியில் வைத்து காட்சிக்கு கொண்டுவந்திருந்தார்கள். அதில் ஒரே ஒரு ஆப்பிள் பழந்தான் காய்த்திருந்தது. ஆனால் அதன் சுற்றளவு 16-அங்குலமாம். உயரம் 5½-அங்குலமாம். இது ரொம்ப பெரிய பழமென்று சொல்லப்படுகிறது.

## MISCELLANEOUS NEWS.

### நானா ஸங்கதி.

**A Great Cyclone.**

**ஒரு பெரும் புயல் காற்று.**—சென்ற நவம்பர்மாஸம் 22-ந்தேதியன்று ஒருபெரிய புயல்காற்று வீசி அநேக இடங்களில் பெரும் ஜனச்சேதத்தையும் பொருள் நஷ்டத்தையும்உண்டாக்கிவிட்டது. அன்றையதினம்சென்னையில் மழைக் காற்று ரொம்ப பலமாயடித்தது. இரவில் அது பெரும் சுழல்காற்றாகமாறி அநேக இடங்களில் மரங்களைப் பெயர்த்து, டெலிபோன் கம்பிகளையும் ட்ராம்வே கம்பிகளையும் அறுத்துவிட்டது. சில வீடுகள் இடிந்து விழுந்துவிட்டன. ஹார்பரில் இருந்த ஒரு தீபஸ்தம்பமும் (லைட்ஹௌஸ்) அதற்கு அஸ்திவாரமாகப் போட்டிருந்த 5000-டன் கனமுள்ள கான்க்ரீட் பாறையும் புயல்காற்றால் அடியோடு பெயர்ந்து ஸமுத்ரத்தில் விழுந்துவிட்டன. தீபஸ்தம்பத்தில் இருந்த 3-பேர்களில் 2-பேர்கள் இறந்து போய்விட்டார்கள்.

சென்னைக்குத் தெற்கில் உள்ள ப்ரதேசங்களிலும் அன்று புயல்காற்று உக்ரமாகவே இருந்தது. அன்று சென்னையிலிருந்து புறப்பட்டுப்போன 5-ம் நம்பர் எக்ஸ்ப்ரெஸ் ரெயில்வண்டி பாக்கம் ஸ்டேஷனில் நின்றுகொண்டிருக்கையில், காற்றடித்து எஞ்ஜின் தவிர மற்ற வண்டிகளெல்லாம் லைனிலிருந்து கீழே விழுந்துவிட்டன. இன்னொரு ஸ்டேஷனில் போட்மெயில் வண்டியும் காற்றடித்து கீழே விழுந்துவிட்டது. இரண்டு வண்டிகளிலும் சில ஜனங்கள் காயமடைந்தார்கள். ஆனால் ஜனச்சேதமொன்றுமில்லை. காற்று பலமாய் அடித்ததோடு, அநேக இடங்களில் வெள்ளமதிகமாகி ரெயில்பாதையில் அநேக இடங்களில் உடைப்பெடுத்து விட்டது. தந்திக் கம்பிகள் அநேக இடங்களில் அறுந்துபோயின. தந்திக்கம்பங்கள் விழுந்துவிட்டன. இதனால் ஒரு ஸ்டேஷனில் நடக்கும் ஸமாசாரம் இன்னொரு ஸ்டேஷனுக்குத் தெரிவது முடியாமல் போயிற்று.

புயல்காற்று தென்னாற்காடுஜில்லாவிலும் புதுச்சேரியிலும்தான் ரொம்பகடுமையாயிருந்தது. அநேக ஊர்களில் வீடுகள் இடிந்துவிழுந்து அதனால் பல ஜனங்கள் மாண்டார்கள். சாலைகளிலுள்ள மரங்கள் வேரோடு பெயர்க்கப்பட்டு விழுந்து ரஸ்தாக்களையடைத்துவிட்டன. பல இடங்களில் குளங்கள்உடைப்பெடுத்து அதனாலும் ஜனங்களும் கால்நடைகளும் இறந்துபோனார்கள். கடலூர், விழுப்புறம், திண்டிவனம், செஞ்சி இந்தத் தாலுகாக்களில் புயல்காற்று ரொம்ப கடுமையாயிருந்தது. இதில் ரொம்ப கஷ்டமடைந்தவர்கள் பறையர்கள். புதுச்சேரி பட்டணத்தில் அநேக வீடுகளும் குடிசைகளும் இடிந்து விழுந்துவிட்டன. அவைகளில் அகப்பட்டு அநேகர் இறந்துபோனார்கள். பலர் காயமடைந்தார்கள். மற்ற விடங்களில் போலவே தந்திக்கம்பிகளும், டெலிபோன் கம்பிகளும் அறுக்கப்பட்டுப் போயின. கவர்ன்மெண்டார் புதிதாகக் கட்டியிருந்த சாராயத் தொழில்சாலைக் கட்டிடம் இடிந்துவிழுந்து நாசமாகிவிட்டது. அந்தப் பட்டணத்துக்கு ஸமீபத்திலுள்ள முத்தியாலுப்பேட்டையில் அநேகமாய் எல்லா வீடுகளும் விழுந்துவிட்டன. புதுச்சேரியில் 304-பேர்கள் புயல்காற்றுக்கு இரையானார்கள். புதுச்சேரி கவர்ன்மெண்டார் ஜனங்களின் கஷ்ட நிவர்த்திக்காக 1½-லக்ஷரூபாய் ஸாங்க்ஷன் செய்ததோடு, புதிதாய்ப் போட இருந்த ஒரு வரியையும் நிறுத்திவிட்டார்கள்.

தென்னாற்காடு ஜில்லாவில் மொத்தம் 978-பேர்கள் இறந்துபோனதாகத் தெரிகிறது. திண்டிவனம் தாலுகா 583; விழுப்புரம் 328; செஞ்சி 59; கடலூர் 8 ஆக மொத்தம் 978.

**Reduction in Passenger Train Service.**

**ப்ரயாணிகளுக்கான ரெயில் வண்டிகள் குறைக்கப்படும்.**—தற்போது ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இங்கிலண்டிலுள்ள ரெயில்வேஸம்பந்தமான தொழில்சாலைகளை யுத்த ஸாமான்கள் செய்ய எடுத்துக்கொண்டதால், அங்கிருந்து இந்தியாவுக்கு ரெயில்வே ஸாமான்கள் வருவது கஷ்டமாயிருக்கிறது. ஆகையால்ரெயில்வே போர்டாரும் ரெயில்வே கம்பெனிகளின் ஏஜெண்டுகளும் சேர்ந்து ஒரு கான்பரென்ஸ் கூடி ப்ரயாணிகளுக்காக விடப்படும் வண்டிகளைக் குறைக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். ஸாமான் வண்டிகள் முன்போலவே விடப்படும். அவைகளில் குறைவு ஏற்படாது. இதனால் ரெயில் வண்டிகளில் ஏற்படும் தேய்ந்துபோகும் பாகங்கள், உடைசல்கள் இவைகள் குறைந்துபோகுமென்று அவர்களுடைய அபிப்ராயம். இந்தத் தீர்மானம் அடுத்த பிப்ரவரி மாஸம் முதல் தேதி முதல் அமுலுக்குவரும்



## DIARY OF THE MONTH.

### மாஸ வர்த்தமானம்.

**THE WAR IN EUROPE.**

**ஐரோப்பிய யுத்தம்.**

*நவம்பர் 24௳*

'ப்ரெமர்காவில்' என்னும் ஆஸ்பத்ரிக் கப்பல் மத்யதரைக்கடலில் மூழ்கடிக்கப்பட்டது. ஜெர்மானியர்கள் ஆர்ஸோவாவைப் பிடித்ததாகவும் டான்யூப் நதியைப் பலவிடங்களில் கடந்திருப்பதாகவும் சொல்லுகிறார்கள். இட்டாலியர்கள் மொனஸ்டருக்கு மேற்கே நிட்கோபோலி என்னும் ஊரைப்பிடித்திருக்கிறார்கள்.

'இம்பெரிட்ஸா மேரியா' என்னும் ரஷ்ய யுத்தக் கப்பலில் தீப்பிடித்து,மருந்துச்சாலை வெடித்து, மூழ்கிவிட்டதாம்.

*25-தேதி.*

நேசத்துருப்புகள் ருமேனியாவில் கான்ஸ்டான்ஸாவுக்கு வடக்கே சில க்ராமங்களைப் பிடித்திருக்கின்றன. ப்ரெஞ்ச் துருப்புகள் மொனஸ்டருக்குப் பக்கத்தில் டாப்ரிமிர் என்னும் ஊரையும் ஸெர்வியர்கள் பெர்லவ் என்னும் ஊரையும் பிடித்திருக்கிறார்கள்.

*27-தேதி.*

ஜெர்மானியர்கள் ஸிம்னிட்ஸாவுக்குப் பக்கத்தில் டான்யூப் நதியைக்கடந்து அலெக்ஸாண்ட்ரியாவுக்குப் பக்கத்தில் வந்திருக்கிறார்கள்.

*28-தேதி.*

ருமேனியாவில் அல்யூடா நதி ப்ரதேசம் முழுவதும் ஜெர்மானியர்கள் வசமிருக்கிறது. அவர்கள் அலெக்ஸாண்ட்ரியாவைப் பிடித்திருக்கிறார்கள்.

*29-தேதி*

ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள் தென்மேற்கு ருமேனியாவில் முன்சென்றுகொண்டிருக்கின்றன. அவைகள் ஆர்ஜெஸ் என்னும் நதியோரமாயுள்ள குர்டியாட் ஆர்காஸ் என்னுமிடத்தையும் கிர்கிவோ என்னும் ஊரையும் பிடித்திருக்கின்றன

*30-தேதி.*

ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள் ருமேனியாவில் பிடெஸ்டி என்னும் ஊரைப் பிடித்திருக்கின்றன. டான்யூப் நதியைக்கடந்த எதிரித் துருப்புகள் புகாரெஸ்டை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றன.

*டிஸம்பர் 1-ந்தேதி.*

ஆஸ்ட்ரோ ஜெர்மன் துருப்புகள் காம்பொலாங்கைப் பிடித்திருக்கின்றன. ரஷ்யர்கள் கார்ப்பேதியன் மலையில் கிர்லிபாபாவுக்குக் கிழக்கில் சற்று முன் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

*2-தேதி.*

எதிரிகள் புகாரெஸ்டுக்கு 18-மைல் தெற்கிலுள்ள கோமனா என்னும் ஊரைப்பிடித்திருக்கிறார்கள்.

*4-தேதி.*

பெர்ஷியாவிலுள்ள ஸுல்டானபாடுக்குப் பக்கத்தில் ரஷ்யர்கள் எதிரிகளைத் தோற்கடித்து காரா நதிக்கப்புறம் துரத்திவிட்டார்கள். புகாரெஸ்டுக்கு வடமேற்கில் ருமேனியர்கள் பின்வாங்கி டிடு என்னுமிடத்துக்குப் பக்கத்தில் வந்திருக்கிறார்கள்

ஆஸ்ட்ரியா-ஹங்கேரியின் வரவுசெலவு மந்த்ரியாயிருந்த பாரன் பூரியனுக்கு பதிலாக கோன்ராட் ராஜகுமாரர் வரவுசெலவு மந்த்ரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

*5-தேதி.*

எதிரிகள் ருமேனியாவில் டிர்கோயிஸ்டியா என்னுமிடத்தைப் பிடித்து ருமேனியர்களைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டிருக்கிறார்கள். ஸெர்வியர்கள் க்ருனிட்ஸாவுக்கு வடக்கில் உள்ள பலமான பாதுகாப்பு வேலைகளெல்லாவற்றையும் பிடித்துவிட்டார்கள்.

*6-தேதி.*

மிஸ்டர் ஆஸ்க்வித் ப்ரதம மந்த்ரி வேலையை ராஜிநாமா செய்துவிட்டார்.

மிஸ்டர் லாய்ட் ஜார்ஜ் இங்கிலண்டின் ப்ரதம மந்த்ரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

*7-தேதி.*

ருமேனியர்கள் புகாரெஸ்டைக் காலிசெய்துவிட்டார்கள்.

ரஷ்யர்கள் கார்ப்பேதியன் மலையில் ஜாப்லோனிக் கணவாயில் சற்றுப் பின்வாங்கியிருக்கிறார்கள். ஜெர்மானியர்கள் புகாரெஸ்ட், ப்ளோயஸ்டி, ஸினைய ஆகிய இடங்களைப் பிடித்திருக்கிறார்கள்.

*9-தேதி*

ருமேனியத் துருப்புகள் பின் வாங்கிக்கொண்டிருக்கின்றன.

*10-தேதி*

இங்கிலண்டின் மந்த்ராலோசனை ஸபையில் [illegible] பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. யுத்த [illegible]

162032

மாய் நடத்தவேண்டு மென்ற எண்ணத்துடன் இது வரை யுத்தமந்த்ரியாயிருந்த மிஸ்டர் லாய்ட் ஜார்ஜ் மந்த்ராலோசனை ஸபைக்குள் ஒரு யுத்தக்கௌன்ஸில் ஏற்படுத்தவேண்டு மென்றும், அதில் ப்ரதம மந்த்ரி மெம்பரா யிருக்கக்கூடா தென்றும், ஆனால் அந்த கௌன்ஸில் செய்யும் தீர்மானங்களை ப்ரதமமந்த்ரி இஷ்டப்படாவிட்டால் ரத்து செய்துவிடலாமென்றும் சொன்னார். ப்ரதமமந்த்ரியாகிய மிஸ்டர் ஆஸ்க்வித் இதற்கு ஸம்மதிக்கவில்லை. அதன்மேல் மந்த்ராலோசனை ஸபையில் விவாதம் ஏற்படவே மிஸ்டர் ஆஸ்க்வித் ராஜிநாமா கொடுத்துவிட்டார். மந்த்ராலோசனை ஸபையும் கலைந்துவிட்டது. சக்ரவர்த்தி அதன்மேல் மிஸ்டர் போனர்லா என்னும் கனவானைக் ப்ரதமமந்த்ரியா யிருக்கும்படி சொன்னார். அவர் அதற்குஸம்மதிக்காமல் போகவே, அரசர் மிஸ்டர் லாய்ட் ஜார்ஜையே ப்ரதம மந்த்ரியா யிருக்கும்படி கேட்டுக்கொண்டார். அவர் ஸம்மதித்து மந்த்ராலோசனைஸபை சேர்த்திருக்கிறார்.

மிஸ்டர் லாய்ட் ஜார்ஜ் ப்ரதமமந்த்ரியாவார். மிஸ்டர் ஏ. ஜே. பால்பார் அன்யதேசவ்யவகார மந்த்ரி, லார்ட் டெர்பி யுத்தமந்த்ரி, ஸர் எட்வர்ட் கார்ஸன் கப்பல் படை மந்த்ரி. இவர்களைத் தவிர வேறு தேசவிஷயங்கள் புலவற்றையும் கவனிக்கப் பல மந்த்ரிகள் உண்டு.

லாய்ட் ஜார்ஜ் விரும்பினபடியே ஒரு யுத்த கௌன்ஸில் ஏற்பட்டிருக்கிறது. அதில் லாய்ட் ஜார்ஜ், லார்ட் கர்ஸன், மிஸ்டர் ஹெண்டர்ஸன், லார்ட் மில்னர், மிஸ்டர் போனர்லா இவர்கள் மெம்பர்களாயிருப்பார்கள்.

ஜெனரல் வான் ஹென்ரீச் புகாரெஸ்டுக்கு கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

11-தேதி

ருமேனியர்கள் பின்வாங்கிப் போகும்போது எண்ணெய்க் கிணறுகளையும் அவைகளைச் சேர்ந்த தொழில் சாலைகளையும் நாசம் செய்துகொண்டு போகிறார்கள். பல்கேரியர்கள் ஸெர்னவாடாவுக்கும் ஸிலிஸ்ட்ரியாவுக்கும் நடுவில் டான்யூப் நதியைக் கடந்திருக்கிறார்கள்.

13-தேதி.

ஜெர்மானியர்கள் ருமேனியாவில் முன்சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தநாட்டில் மிஸில், உர்ஸியேனி என்னுமிடங்களைப்பிடித்திருக்கிறார்.

ஜெர்மனியும் அதைச் சேர்ந்த நாடுகளும் ஸமாதானத்துக்கான பேச்சுகள் பேசத் தயாராயிருப்பதாக [illegible]களுக்குத் தெரிவித்திருக்கின்றன.

14-தேதி.

ருமேனியர்களும் ரஷ்யர்களும் ருமேனியாவில் பின்வாங்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள். ஜெர்மனியில் வெளியான ஜனச்சேத ஜாப்தாவின்படி காயம்பட்டவர்கள், இறந்தவர்கள், கைதியாக்கப்பட்டவர்கள் ஆகிய இவர்களின் தொகை 39,21,869 ஆகும். இதில் 9,46,027 பேர்கள் இறந்துபோய்விட்டார்கள். 2147,39 பேர்கள் கைதிகளாக்கப்பட்டார்கள்.

15-தேதி.

புகாரெஸ்ட் - ஸெர்னவோடா ரெயில்வேக்குத் தெற்கிலுள்ள ருமேனியாவின் பாகமுழுவதும் ஜெர்மானியர் பிடித்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். எதிரிகள் மொனஸ்டரைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

16-தேதி.

வெர்டேன் போர்முனையில் ப்ரெஞ்ச் துருப்புகள் சில க்ராமங்களையும், ராணுவ பாதுகாப்பு வேலைகளையும் எதிரிகளிடமிருந்து பிடித்திருக்கின்றன. ஜெர்மானியர்கள் ருமானியாவில் ஸூலிக் என்னுமிடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

18-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் வெர்டேனில் பெஸோன்வாக்ஸ் என்னும் க்ராமத்தைப் பிடித்திருக்கின்றன. எதிரிகள் ருமேனியாவில் புஸாவ் நதியைக் கடந்திருப்பதோடு ப்ரெய்லா என்னும் பட்டணத்துக்கு 30 மைல் கிட்டத்தில் வந்துவிட்டார்கள். டொப்ருஜாவில் ரஷ்யர்களும் ருமேனியர்களும் பின்வாங்கிப் போகிறார்கள்.

21-தேதி.

ஜெர்மானியர்கள் ருமேனியாவில் ப்ரெய்லிக்குத் தெற்கில் 25-மைல் கிட்டத்தில் வந்துவிட்டார்கள்.

22-தேதி.

ருமேனியர்கள் டொப்ருஜாவில் பின்வாங்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

23-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகள் ஸூயஸ் கால்வாய்க்குக் 90-மைல் கிழக்கில் உள்ள எல்அரிஷ் என்னுமிடத்தைப் பிடித்திருக்கின்றன.

26-தேதி.

ரஷ்யத் துருப்புகளும் ருமேனியத் துருப்புகளும் டொப்ருஜாப்ரதேசத்தைக் காலி செய்துவிட்டன. எதிரிகள் ப்ரெய்லாவுக்கு 20-மைல் தூரத்திலிருக்கின்றன. ப்ரெய்லாவுக்கு 8-மைல் கிழக்கில் [illegible] என்னுமிடத்தில் டான்யூப் நதியின் மேலுள்ள பாலத்தை எதிரிகள் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

8L
M211, N0935
N0S.2